வெளியீடு—27-7-1967

# தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்

## பணித்துறை வெளியீடு

புதன்கிழமை, 1967 மார்ச் 15.

தொகுதி I—எண் 1.

©
தமிழக அரசு
1967

சட்டப் பேரவைத் துறை,
சென்னை-9.

விலை. 50 காசுகள்.

★ தமிழ்நாடு ... 600 008. ★

D
V2\,31 N67
N67.1;2

138203

## தமிழகச் சட்டப் பேரவை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் நான்காவது
சட்டப் பேரவையின் முதல் கூட்டத்தொடர்.

### புதன்கிழமை, 1967 மார்ச் 15.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில், காலை 11 மணி அளவில், மதிப்பிற்குரிய தாற்காலிக பேரவைத் தலைவர் (திரு. பி. கே. மூக்கையா தேவர்) தலைமையில் பேரவை கூடியது.

### I. உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல் *.

**மதிப்பிற்குரிய தாற்காலிக பேரவைத் தலைவர் (திரு. பி. கே. மூக்கையா தேவர்) :** மதிப்பிற்குரிய உறுப்பினர்களே, அண்மையில் நடைபெற்ற நான்காவது பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப் பெற்று, தமிழகச் சட்டச் சபையின் உறுப்பினர்களாக வந்திருக்கும் உங்கள் அனைவரையும் பெரு மகிழ்ச்சியுடன் நான் வரவேற்கிறேன்.

சபாநாயகரை இச்சபை தேர்ந்தெடுக்கிற வரையில் செய்ய வேண்டிய முன் அலுவல்களை நிறைவேற்றுவதற்கென, என்னை இச்சபையின் தற்போதைய தலைவராக மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் நியமித்தமைக்கு, அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

உறுப்பினர்களாகிய நாம், இச்சபையின் அலுவல்களை ஏற்று நடத்துவதற்குமுன், அதற்குரிய உறுதிமொழியை எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியை நிறை வேற்றவும் கவர்னரவர்கள் என்னை நியமித்துள்ளார்கள்.

இச்சபையின் மரபுப்படி, முதலில்—மதிப்பிற்குரிய அமைச்சர் களையும், அடுத்து—கட்சிகளின் தலைவர்களையும், அடுத்து—முன்னாள் அமைச்சர்களையும், இறுதியில்—மற்ற உறுப்பினர்களையும், அவர்கள் பெயர்களின் ஆங்கில அகர வரிசைப்படி, உறுதிமொழி எடுத்துக் கொள்ளுவதற்கென சட்டசபைச் செயலாளர் அழைப்பார். அவ்வாறு அழைக்கப்பெறும் உறுப்பினர்கள், இருவர் இருவராக வந்து, தங்கள் தேர்விற்கான சான்றிதழ்களைச் சட்டசபைச் செயலாளரிடம் கொடுக்க வேண்டும்.

உறுதிமொழி பொறித்துள்ள இதழில், "கடவுளறிய உறுதி கூறுகிறேன்" அல்லது "உளமாற உறுதி கூறுகிறேன்" என்று உள்ளது. இதில் அவரவர்கள் விரும்பும் ஏதாவதொரு முறையை ஏற்று, உறுதிமொழி எடுத்துக்கொள்ளலாம்.

---

* 25-ம் பக்கத்தில் உள்ள இணைப்பைக் காண்க.

இவ்வுறுதிமொழி பொறித்த இதழைப் பெற்று, அதன்படி உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும். பின்பு, இங்கு வைக்கப் பட்டுள்ள பதிவேட்டில் கையொப்பம் இடுதல் வேண்டும்.

உறுதிமொழி எடுக்கும் சடங்கு புனிதமானது. எனவே, இது முழுதும் நிறைவேறும் வரை, எல்லா உறுப்பினர்களும் சபையில் அமர்ந்திருக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாளை மறுநாள், சபாநாயகர், உதவி சபாநாயகர் தேர்தல் இச் சபையில் நடைபெறும். அதற்கான நியமனத் தாள்களை நாளை நண்பகல் 12 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பித்தல் வேண்டும்.

இப்பொழுது உறுப்பினர்களைச் செயலாளர் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுவதற்கென அழைப்பார்.

(பின்னர், செயலாளர் உறுப்பினர்களை உறுதிமொழி எடுத்துக் கொள்ளும்படி அழைத்தார்.)

கீழ்க்கண்ட உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்:—

1. மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்
2. மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி
3. மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்
4. மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி
5. மதிப்பிற்குரிய டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து
6. மதிப்பிற்குரிய திரு. செ. மாதவன்
7. மதிப்பிற்குரிய திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
8. மதிப்பிற்குரிய திரு. மா. முத்துசாமி
9. திரு. எ. பாலசுப்ரமணியன்
10. திரு. ஆ. கு. சுப்பையா
11. * திரு. மா. பொ. சிவஞானம்
12. † * டாக்டர் ஹபிபுல்லா பேக்
13. * திரு. கோ. பூவராகன்
14. * திரு. ஏ. சிதம்பரநாத நாடார்
15. * திரு. எம். அப்துல் கபூர் சாகிப்
16. திரு. சி. பா. ஆதித்தனார்
17. திரு. எஸ். அக்னிராஜு
18. திரு. து. ப. அழகமுத்து
19. திரு. சோ. அழகர்சாமி
20. திரு. மு. அலங்காரம்
21. திரு. மு. ஆனந்தன்
22. திரு. கு. (ஆண்டி என்ற) குருசாமி



23. திரு. சி. வி. எம். அண்ணாமலை
24. திரு. வி. டி. அண்ணாமலை
25. திரு. ஆர். என். அரங்கநாதன்
26. திரு. இராம. அரங்கண்ணல்
27. திரு. அ. பொ. அரசு
28. திரு. அ. ஆறுமுகம்
29. திரு. எஸ். ஆறுமுகம்
30. திரு. வி. அருணாசலம்
31. திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி
32. திரு. டி. எஸ். ஆதிமூலம்
33. திரு. எம். சி. பாலன்
34. திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்
35. திரு. இல. பலராமன்
36. திரு. செ. பாலசுப்ரமணியன்
37. திரு. ஜெ. பெல்லி கவுடர்
38. திரு. கோ. பாரதி மோகன்
39. திரு. எம். பூபதி
40. திரு. கே. போஜன்
41. திரு. கரு. சிமைச்சாமி
42. * திரு. இ. அ. சிதம்பரம் பிள்ளை
43. திரு. சி. கே. சின்னராஜி கவுண்டர்
44. திரு. மு. சின்னசாமி
45. திரு. பி. எஸ். தனுஷ்கோடி
46. திரு. ந. தருமலிங்கம்
47. திரு. சு. ம. துரைராஜ்
48. திரு. என். துரைபாண்டியன்
49. திரு. பி. துரைராஜ்
50. திரு. சு. துரைசாமி
51. திரு. ஜி. ஆர். எட்மண்ட் பர்ணாண்டோ
52. திரு. இரெ. இளம்வழுதி
53. * திரு. பி. எஸ். எல்லப்பன்
54. திரு. எல். கணேசன்
55. திரு. எஸ். கணேசன்
56. திரு. வ. ஜார்ஜ்
57. திரு. கே. இரா. ஞானசம்பந்தன்
58. * திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்
59. திரு. எம். கோபால்
60. திரு. கே. ஆர். கோவிந்தன்

61. புலவர் கா. கோவிந்தன்
62. திரு. சி. கோவிந்தராஜன்
63. திரு. சொ. கோவிந்தராசன்
64. திரு. வி. எஸ். கோவிந்தராசன்
65. திரு. கே. கோவிந்தராசுலு
66. திரு. ஆ. கோவிந்தராசன்
67. †* திரு. எச். வி. ஹாண்டே
68. திரு. டி. இராசரத்தினம்
69. * திரு. ஜே. ஜேம்ஸ்
70. திருமதி கே. பி. ஜானகி அம்மாள்
71. * திரு. பி. ஜயராஜ்
72. திரு. கி. ஜெயராமன்
73. திரு. பி. ஜெயாராமன்
74. திரு. ஆ. கு. மூர்த்தி
75. * திரு. ர. கனகசபை
76. திரு. செ. கந்தசாமி கவுண்டர்
77. திரு. மு. கந்தசாமி படையாச்சி
78. திரு. எம். ஆர். கண்ணன்
79. திரு. எம். கண்ணப்பன்
80 * திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்
81. திரு. ஆ. கருப்பையா
82. திரு. ஆர். கருப்பையா
83. * திரு. பி. ஜி. கருத்திருமன்
84. திரு. தே. கேசவலு
85. திரு. என். கிட்டப்பா
86. திரு. கொ. கோதண்டம்
87. திரு. வி. கே. கோதண்டராமன்
88. †* திரு. கே. எஸ். கோதண்டராமையா
89. திரு. கு. கிருஷ்ணமூர்த்தி
90. திரு. சி. கிருஷ்ணமூர்த்தி
91. திரு. மு. கிருஷ்ணமூர்த்தி
92. திரு. அ. கிருஷ்ணன்
93. திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்
94. திரு. நா. கிருட்டினன்
95. * திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்
96. திரு. கே. என். குமாரசாமி
97. திருமதி சு. குப்பம்மாள்
98. * திரு. ப. மகாதேவன்



99. திரு. பெ. மலைச்சாமி
100. திரு. வீ. மலைக்கண்ணன்
101. திரு. கே. பி. எஸ். மணி
102. திரு. எம். எஸ். மணி
103. திரு. வி. எஸ். எஸ். மணி
104. திரு. இரா. மாணிக்கவாசகம்
105. திரு. பி. எஸ். மணியன்
106. திரு. அ. மாரிமுத்து
107. திரு. ஏ. ஆர். மாரிமுத்து
108. திரு. மூ. மாரிமுத்து
109. †* திரு. டி. மார்ட்டின்
110. திரு. என். மருதாசலம்
111. * திரு. சா. மெய்யப்பன்
112. திரு. எம். மேதா
113. * திரு. பி. எம். முனுசாமி கவுண்டர்
114. திரு. ரா. ரா. முனுசாமி
115. திரு. ஏ. முனியாண்டி
116. திரு. முனு. ஆதி
117. புலவர் க. முருகையன்
118. திரு. க. முருகேசன்
118. திரு. க. முருகேசன்
120. திரு. வெ. முனுசாமி
121. * திரு. கே. கே. முத்தையா
122. திரு. மு. முத்தையா
123. திரு. எஸ். முத்துலிங்கம்
124. திரு. பு. செ. முத்துச்செல்வன்
125. திரு. நா. நாச்சிமுத்து
126. திரு. பா. நாகலிங்கம்
127. திரு. ஆர். நாகசுந்தரம்
128. திரு. ஆர். நல்லமுத்து
129. திரு. க. ர. நல்லசிவம்
130. * திரு. தோ. மு. நல்லசாமி
131. * திரு. சி. நஞ்சன்
132. திரு. ஏ. சி. நரசிம்மன்
133. திரு. இரா. நாராயணன்
134. திரு. மு. க. து. நடராசன்
135. திரு. ஜி. நடராசன்

136. திரு. ஈ. எம். நடராசன்
137. திரு. எஸ். பி. பச்சையப்பன்
138. திரு. சி. பழனி
139. திருமதி வீ. ப. பழனியம்மாள்
140. * திரு. பழனிவேல் ராஜன்
141. திரு. எம். பன்னீர்செல்வம்
142. திரு. பி. என். பரமசிவ கவுண்டர்
143. * திரு. எஸ். பரமசிவம்
144. * திரு. ஏ. ஒய். எஸ். பரிசுத்த நாடார்
145. திரு. எ. பட்டாபி நாயுடு
146. * ஹாஜி ம. மு. பீர் முகமது
147. திரு. பெ. பெரியசாமி
148. * திரு. எ. ஆர். பெருமாள்
149. புலவர் பொ. பொன்னம்பலம்
150. †* திரு. ஆர். பொன்னப்ப நாடார்
151. திரு. டி. பொன்னுமலை
152. திரு. ஏ. எம். ராஜா
153. திரு. க. மு. ராசகோபால்
154. † * திரு. ஆர். விஜய ரகுநாத தொண்டமான்
155. திரு. எஸ். ஏ. ராஜமன்னார்
156. திரு. என். இராசாங்கம்
157. திரு. மா. இராசாங்கம்
158. திரு. டி. ஏ. ராஜவேலு
159. திரு. ரா. ராமச்சந்திர துரை
160. திரு. க. ந. ராமச்சந்திரன்
161. திரு. எஸ். ராமச்சந்திரன்
162. * திரு. எஸ். ராமலிங்கம்
163. * திரு. க. இராமமூர்த்தி
164. திரு. மு. ராமன்
165. திரு. ஓ. பி. ராமன்
166. திரு. வ. க. ராமராசன்
167. திரு. ஈ. ராமசாமி
168. * திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்
169. திரு. எஸ். ஜே. ராமசாமி
170. திரு. மு. இரத்தினசபாபதி
171. திரு. ரா. ரெத்தின தேவர்
172. திரு. கே. சகாதேவ கவுண்டர்



173. திரு. கே. என். சாமிநாத கவுண்டர்
174. திரு. என். சங்கரய்யா
175. திரு. பி. எஸ். சந்தானம்
176. திரு. மா. பா. சாரதி
177. திரு. பெ. சீனிவாசன்
178. * திரு. அ. செல்லா கவுண்டர்
179. திரு. சி. சேதுராமன்
180. திரு. மு. சண்முகம்
181. திரு. அ. ப. சண்முகசுந்தரம்
182. திரு. வி. எஸ். சண்முகம்
183. திரு. தொ. க. சிறைமீட்டான்
184. திரு. க. ந. சிவபெருமாள்
185. திரு. மு. ச. சிவசாமி
186. * திரு. எஸ். சிவசுப்ரமணியன்
187. திரு. ந. சோமசுந்தரம்
188. திரு. பெ. சௌந்தரபாண்டியன்
189. * திரு. ந. சௌந்தரபாண்டியன்
190. திரு. இரா. சௌந்தரராஜு மூப்பனார்
191. * திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி
192. * திரு. ஏ. அ. சுப்பராஜா
193. திரு. கே. வி. சுப்பையா
194. * திரு. எ. ஆர். சுப்பையா முதலியார்
195. திரு. ஏ. லெ. சுப்ரமணியம்
196. திரு. எம். சுப்ரமணிய கவுண்டர்
197. * திரு. இ. எம். சுப்பிரமணியம்
198. திரு. சுரேந்திரன்
199. * திரு. த. சி. சுவாமிநாத உடையார்
200. திரு. வை. சுவாமிநாதன்
201. * திரு. பா. தம்பி நாயக்கர்
202. திரு. டி. தங்கப்பன்
203. திரு. வி. தவமணி தேவர்
204. திரு. ந. தீர்த்தகிரி
205. * திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்
206. திரு. தி. சி. திம்மராய கவுண்டர்
207. * திரு. டி. டி. எஸ். திப்பையா
208. திரு. ஆ. துரையரசன்
209. திரு. எஸ். கே. வடிவேலு

210. திரு. என். வரதராஜன்
211. திரு. மு. வேதாசலம்
212. திரு. ந. வீராசாமி
213. சி. வே. வேலப்பன்
214. திரு. ஏ. வெள்ளத்துரை
215. திரு. பி. வேலுசாமி
216. †* திரு. பி. வெங்கடசாமி
217. திரு. கா. வேழவேந்தன்
218. திரு. தா. விஜயராஜ்
219. †* திரு. கே. விநாயகம்
220. திரு. செ. கோ. விசுவநாதன்
221. * திரு. எம். வில்லியம்

* கடவுள் பெயரால் உறுதிமொழி எடுத்துக்கொண்ட உறுப்பினர்கள்.

† ஆங்கிலத்தில் உறுதிமொழி எடுத்துக்கொண்ட உறுப்பினர்கள்.



மதிப்பிற்குரிய தாற்காலிக பேரவைத் தலைவர் (திரு. பி. கே. மூக்கையா தேவர்) : இத்துடன் உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ளும் சடங்கு முடிவடைகிறது. இன்று உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத உறுப்பினர்கள் எனது அறையிலோ அல்லது நாளை மறுநாள் இந்த அவையிலோ உறுதிமொழி எடுத்துக் 12-30 பிற
கொள்ளலாம். உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத உறுப்பினர்கள் பகல்.
சபாநாயகர் தேர்தலில் கலந்துகொள்ள முடியாது என்பதை நான் நினைவூட்டுகிறேன்.

இந்தப் பேரவை இன்று இத்துடன் ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் நாளை மறுநாள், அதாவது 1967-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17-ஆம் தேதி, வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## II.—பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

1. *Notification published in the* Fort St. George Gazette, *dated the* 28*th September* 1966, *regarding division of Sithayankottai, Ayampalayam and Chinnalapatti town panchayats in Madurai district into wards and determination of number of members to be returned by each ward.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

2. *Notification issued with Roc. No.* 78690/64-F1. *of Director of Rural Development, dated the* 15*th September* 1966, *regarding the inclusion of certain area within the jurisdiction of the Nandivaram Village Panchayat of Chingleput taluk and district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

3. *Notification issued with G.O. Ms. No.* 3277, *Agriculture, dated the* 11*th October* 1966, *de-notifying the North Arcot district for the regulation of chillies trade under the Madras Agricultural Produce Markets Act,* 1959. [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act* 23 *of* 1959).]

4. *Notification issued with letter No. Rc. SB.I.* 55900/66, *dated the* 23*rd August* 1966, *of the Collector of North Arcot District relating to the removal of Sri K. Rangasamy Kandar from the office of the President of Kilnachipattu Panchayat in Tiruvannamalai taluk of North Arcot district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

5. *Notification issued with letter No. Rc. SB.I.*72128/66, *dated the* 23*rd August* 1966, *of the Collector of North Arcot district relating to the removal of Sri A. Chinnathambi Kandar from the office of the President of Kalasthambadi Panchayat in Tiruvannamalai taluk*

*of North Arcot district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

6. *Notification issued with letter No. Rc. SB. I.* 77254/66, *dated the* 30*th August* 1966, *of the Collector of North Arcot district, relating to the removal of Sri V. Periathambi, from the office of the President of Pudupalayam Panchayat in Polur taluk of North Arcot district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

7. *Notification issued with letter No. N.B.I.* 40490/66, *dated the* 23*rd August*, 1966 *of the Collector of North Arcot district, relating to the removal of Sri Velu Reddiar from the office of the President of Paranji Panchayat in Arkonam taluk of North Arcot district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

8. *Notification issued with letter No.* 1/75861/66, *dated the* 31*st August* 1966 *of the Collector of North Arcot, relating to the removal of Sri N. K. Mohanavel Reddiar from the office of the President of Nagavedu Panchayat in Arkonam taluk in North Arcot district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

9. *Notification issued with G.O. Ms. No.* 3287, *Agriculture, dated the* 11*th October* 1966, *making the Madras Collection of Statistics Rules*, 1966. [*Laid on the Table of the House under section* 14 (3) *of the Collection of Statistics Act*, 1953, (*Central Act XXXII of* 1953).]

10. *Notification issued with G.O. Ms. No.* 3040, *Revenue, dated the* 14*th October* 1966, *making an amendment to the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Rules*, 1965, *relating to the manner of payment of compensation under the Act.* [*Laid on the Table of the House under section* 48 (5) *of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act*, 1963 (*Madras Act* 30 *of* 1963).]

11. *Notification issued with G.O. Ms. No.* 2728, *Home, dated the* 16*th August* 1966, *regarding exemption of tax leviable under the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act*, 1952 *in respect of passengers, luggage of goods carried in certain vehicles belonging to the Andhra Pradesh State Road Transport Corporation, Hyderabad and plying on temporary permits between Madras and Tirupathi.* [*Laid on the Table of the House under section* 16 (5) *of the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act*, 1952 (*Madras Act XVI of* 1952).]

12. *Notification issued with G.O. Ms. No.* 3316, *Agriculture, dated the* 12*th October* 1966, *relating to the establishment of a market at Tirunelveli to provide facilities for the purchase and sale of groundnut.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agriculture Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]



13. *Notification issued with Roc. No.* 71587/64-*F*-1., *dated the* 13*th August* 1966, *regarding inclusion of certain areas within the jurisdiction of the Agrahara Talaiyur Panchayat of Sankari taluk, Salem district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

14. *Notification issued with Roc. No.* 39829/66-*F*-1., *Director of Rural Development, dated the* 1*st August* 1966 *regarding inclusion of certain areas within the Avadi township.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

15. *Notification issued with G.O. Ms. No.* 4319, *Industries, Labour and Housing, dated the* 27*th October* 1966, *making certain amendments to the Madras Small-Scale and Cottage Industries Loans and Subsidy Rules*, 1956 *published at pages* 439 *to* 453 *of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated the* 29*th August* 1956. [*Laid on the Table of the House under section* 19 (*d*) *of the Madras State Aid to Industries Act*, 1922 (*Madras Act V of* 1923).]

16. *Notification issued with G.O. Ms. No.* 1796, *Industries, Labour and Housing (Labour), dated the* 19*th April* 1966, *regarding exemption of women workers engaged in Beedi industry in Tirunelveli district from licensing provision.* [*Laid on the Table of the House under section* 41 (3) *of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act*, 1958 (*Madras Act XXXII of* 1958).]

17. *Notification issued with Roc. No.* 82242/66-*F*-5, *dated the* 9*th* ugust 1966, *regarding extension of relevant provisions relating to* uilding *Regulations to Karamadai Town Panchayat in Avanashi* luk *of Coimbatore district with effect from* 1*st September* 1966. aid *on the Table of the House under section* 179 (4) *of the Madras* nchayats *Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

18. *Notification issued with G.O. Ms. No.* 3170, *Revenue, dated* 7*th November* 1966, *appointing the* 15*th day of December* 1966, *as date on which certain provisions of the Madras Inam Estates* olition *and Conversion into Ryotwari) Act*, 1963 *shall come into* e *in the inam estate of Kalasthiriyendal in Aruppukottai taluk of* nanathapuram *district.* [*Laid on the Table of the House under* ion 73 (5) *of the Madras Inam Estates (Abolition and Conversion Ryotwari) Act*, 1963 (*Madras Act* 26 *of* 1963).]

19. *Notification issued with G.O. Ms. No.* 3065, *Revenue, dated* 17*th October* 1966, *making an amendment to the Revenue Department Notification II*-1 *No.* 723 *of* 1965, *dated the* 15*th February* 1965, *published at pages* 285–290 *of Part II—Section* 1 *of the* Fort St. George Gazette, *dated the* 17*th February* 1965. [*Laid on the Table of the House under section* 48 (5) *of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act*, 1963 (*Madras Act* 30 *of* 1963).]

20. *Notification issued with G.O. Ms. No.* 3066, *Revenue, dated the* 17*th October* 1966, *making an amendment to the Revenue Department Notification II*-1 *No.* 725 *of* 1965, *dated the* 15*th February* 1965, *published at pages* 287–290 *of Part II—section* 1 *of the* Fort St. George Gazette, *dated the* 17*th February* 1965. [*Laid on the Table of the House under section* 73 (5) *of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1963 (*Madras Act* 26 *of* 1963).]

21. *Notification issued with Memorandum No.* 110901. *A. II*/66-2, *Agriculture, dated the* 25*th October* 1966, *making an amendment to the late Food and Agriculture Department Notification S.R.O. No.* 2164 *of* 1965, *dated the* 23*rd April* 1965, *published at pages* 927–929 *to Part II—Section* 1 *of the* Fort St. George Gazette, *dated the* 19*th May* 1965. [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

22. *Notification issued with G.O. Ms. No.* 2980, *Home, dated the* 6*th September* 1966, *making an amendment to the Madras Motor Vehicles Rules*, 1940, *published at pages* 1 *to* 40 *of the* Fort St. George Gazette (*Extraordinary*), *dated the* 30*th March* 1940, *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

23. *Notification issued with letter N.B.* 1. 84498/66, *dated the* 27*th September* 1966 *from Collector of North Arcot, Vellore, removing Sri G. Loganathan from the office of the President of Asanallikuppam Panchayat in Arkonam taluk of North Arcot district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

24. *Notification issued with G.O. Ms. No.* 3434, *Agriculture, dated the* 25*th October* 1966, *regarding cancellation of the late Food and Agriculture Department Notification II*-1 *No.* 4215 *of* 1965, *dated the* 16*th August* 1965, *published at page* 1882 *of Part II—Section* 1 *of the* Fort St. George Gazette, *dated the* 22*nd September* 1965, *for the regulation of trade in paddy in Ramanathapuram district.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

25. *Notification issued with G.O. Ms. No.* 3435, *Agriculture, dated the* 25*th October* 1966, *relating to the establishment of a market at Thitagudi in South Arcot district for the purposes of the Madras Agricultural Produce Markets Act*, 1959, *in respect of groundnut, gingelly and cotton.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

26. *Notification issued with G.O. Ms. No.* 2742, *Rural Development and Local Administration, dated the* 30*th November* 1966 *appointing with effect on and from the* 1*st December* 1966 *Sri K. Arunachalam as the Chairman of the Madras State Bhoodan Yagna*



*Board and certain other members specified in the notification as members of that Board.* [*Laid on the Table of the House under section* 28 (3) *of the Madras Bhoodan Yagna Act*, 1958 (*Madras Act XV of* 1958).]

27. *Notification issued with G.O. Ms. No.* 2777, *Rural Development and Local Administration, dated the* 3*rd December* 1966, *regarding appointment of Chairman of the Madras State Bhoodan Yagna Board and its members with some modifications to the notification issued in G.O. Ms. No.* 2742, *Rural Development and Local Administration, dated* 30*th November* 1966. [*Laid on the Table of the House under section* 28 (3) *of the Madras Bhoodan Yagna Act*, 1958 (*Madras Act XV of* 1958).]

28. *Notification published in the* Fort St. George Gazette, *dated the* 28*th September* 1966, *regarding division of Keeranur Town Panchayat in Madurai district and determination of number of members to be returned by each ward.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

*29. *Notification published in the* Fort St. George Gazette *Extraordinary, dated the* 14*th November* 1966, *relating to the corrections to the Delimitation of Parliamentary and Assembly Constituencies Order No.* 9. [*Laid on the Table of the House under section* 10 *of the Delimitation Commission Act*, 1962 (*Central Act* 61 *of* 1962).]

30. *Notification issued with G.O. Ms. No.* 1904, *Public (Services-A), dated the* 7*th September* 1966, *making an amendment to the Madras Public Service Commission Regulations*, 1954 *regarding inclusion within the Commission's purview, the post of Statistical Inspectors in Labour and Factories Department.* [*Laid on the Table of the House under section* 320 (5) *of the Constitution of India.*]

31. *Notification issued with G.O. Ms. No.* 1895, *Public (Services-A), dated the* 6*th September* 1966, *making an amendment to the Madras Public Service Commission Regulations*, 1954, *regarding exclusion from the Commission's purview, the post of Special Officer for Tamil Development in Directorate of Tamil Development.* [*Laid on the Table of the House under section* 320 (5) *of the Constitution of India.*]

32. *Notification issued with G.O. Ms. No.* 2827, *Agriculture, dated the* 1*st September* 1966, *declaring certain areas specified in the notification to be notified areas for the purposes of the Madras Land Improvement Schemes Act*, 1959. [*Laid on the Table of the House under section* 44 (3) *of the Madras Land Improvement Schemes Act*, 1959 (*Madras Act* 31 *of* 1959).]

33. *Notification issued with G.O. Ms. No.* 2822, *Agriculture, dated the* 30*th August* 1966, *declaring certain areas of Chingleput district to be notified areas for the purposes of the Madras Land Improvement Schemes Act*, 1959. [*Laid on the Table of the House under section* 44 (3) *of the Madras Land Improvement Schemes Act*, 1959 (*Madras Act* 31 *of* 1959).]

34. *Notification issued with G.O. Ms. No.* 3430, *Food and Agriculture, dated the* 18*th October* 1965, *declaring certain areas of the Kanyakumari district to be notified areas for the purposes of the Madras Land Improvement Schemes Act,* 1959. [*Laid on the Table of the House under section* 44 (3) *of the Madras Land Improvement Schemes Act,* 1959 (*Madras Act* 31 *of* 1959).]

35. *Notification issued with G.O. Ms. No.* 3434, *Food and Agriculture, dated* 18*th October* 1965, *declaring certain areas of South Arcot district to be notified areas for the purposes of the Madras Land Improvement Schemes Act,* 1959. [*Laid on the Table of the House under section* 44 (3) *of the Madras Land Improvement Schemes Act,* 1959 (*Madras Act* 31 *of* 1959).]

36. *Notification issued with G.O. Ms. No.* 4012, *Food and Agriculture, dated the* 16*th December* 1965, *declaring certain areas of the Coimbatore district to be notified areas for the purposes of the Madras Land Improvement Schemes Act,* 1959. [*Laid on the Table of the House under section* 44 (3) *of the Madras Land Improvement Schemes Act,* 1959 (*Madras Act* 31 *of* 1959).]

37. *Notification issued with G.O. Ms. No.* 4059, *Food and Agriculture, dated the* 20*th December* 1965, *declaring certain areas of North Arcot and Chingleput districts specified in the notification to be notified areas for the purposes of the Madras Land Improvement Schemes Act,* 1959. [*Laid on the Table of the House under section* 44 (3) *of the Madras Land Improvement Schemes Act,* 1959 (*Madras Act XXXI of* 1959).]

38. *Notification issued with G.O. Ms. No.* 1674, *Rural Development and Local Administration, dated the* 6*th July* 1966, *regarding inclusion of certain areas specified in the schedule of the notification within limits of the Madurai Municipality.* [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act,* 1920 (*Madras Act V of* 1920).]

39. *Notification issued with G.O. Ms. No.* 1938, *Public (Services-A), dated the* 14*th September* 1966, *making an amendment to the Madras Public Service Commission Regulations,* 1954, *regarding the inclusion of the post of Junior Electrical Inspectors within the Commission's purview.* [*Laid on the Table of the House under section* 320 (5) *of the Constitution of India.*]

40. *Notification issued with G.O. Ms. No.* 2671, *Rural Development and Local Administration, dated the* 22*nd November* 1966, *declaring certain areas of the Chingleput district specified in the notification to be Development districts with the names noted against each.* [*Laid on the Table of the House under section* 14 (3) *of the Madras District Development Councils Act,* 1958 (*Madras Act XVIII of* 1958).]



41. *Notification issued with G.O. Ms. No.* 3920, *Food and Agriculture, dated the* 7*th December* 1965, *declaring certain areas of the South Arcot district to be notified area for the purposes of the Madras Land Improvement Schemes Act,* 1959, *together with an erratum published in the* Fort St. George Gazette, *dated the* 6*th July* 1966, *issued in Memorandum No.* 158/*B. VI*/66-6, *Agriculture, dated the* 25*th April* 1966 *to the Food and Agriculture Notifications Nos.* 68 *and* 69 *of* 1965, *dated the* 7*th December* 1965. [*Laid on the Table of the House under section* 44 (3) *of the Madras Land Improvement Schemes Act,* 1959 (*Madras Act* 31 *of* 1959).]

42. *Notification issued with G.O. Ms. No.* 1798, *Education, dated the* 29*th September* 1966, *specifying butter-oil and rolled wheat for the purposes of the Madras Gift Goods (Unlawful Possession) Act,* 1961. [*Laid on the Table of the House under section* 6 *of the Madras Gift Goods (Unlawful Possession) Act,* 1961 (*Madras Act* 49 *of* 1961).]

43. *Notification issued with G.O. Ms. No.* 1141, *Education, dated the* 27*th June* 1966, *approving the list of all the parks and play-fields set out in the schedule of the notification in the area within the jurisdiction of the Allinagaram Municipality of Madurai district.* [*Laid on the Table of the House under section* 14 (3) *of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act,* 1959 (*Madras Act* 26 *of* 1959).]

†44. *Notification published in the* Fort St. George Gazette *Extraordinary, dated the* 15*th December* 1966, *relating to the corrections to the Delimitation of Parliamentary and Assembly Constituencies Order No.* 9. [*Laid on the Table of the House under section* 10 *of the Delimitation Commission Act,* 1962 (*Central Act* 61 *of* 1962).]

45. *Notification issued with G.O. P. No.* 3045, *Revenue, dated the* 15*th October* 1966, *making certain amendments to the Madras Irrigation (Levy of Betterment Contribution) Rules,* 1966, *published at pages* 112–118 *of the Rules. Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated the* 22*nd February* 1956, *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 13 (2) *of the Madras Irrigation (Levy of Betterment Contribution) Act,* 1955 (*Madras Act III of* 1955).]

46. *Notification issued with G.O.P. No.* 3256, *Revenue, dated the* 21*st November* 1966, *regarding exemption of tax payable under the Madras General Sales Tax Act,* 1959, *in respect of the sales of compost manure manufactured by the Municipal Corporation of Madras, any Municipal Council, Panchayat Union Council or Panchayat in the State of Madras.* [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act,* 1959 (*Madras Act* 1 *of* 1959).]

47. *Notification issued with G.O. Ms. No.* 2300, *Agriculture, dated the* 12*th July* 1966, *establishing a market at Takkolam in the North Arcot district for the purposes of the Madras Agricultural*

61. *Notification issued with G.O. Ms. No.* 3566, *Home, dated the* 18*th October* 1966, *making an amendment to the Madras Motor Vehicles Rules*, 1940, *published at pages* 1 *to* 40 *of the* Fort St. George Gazette *Extraordinary, dated the* 30*th March* 1940. [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

62. *Notification issued with G.O. Ms. No.* 2365, *Home, dated the* 18*th July* 1966, *making an amendment to the Madras Motor Vehicles Rules*, 1940, *published at pages* 1 *to* 40 *of the* Fort St. George Gazette *Extraordinary, dated the* 30*th March* 1940 *for provision of first Aid Box.* [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

63. *Notification issued with G.O. Ms. No.* 2564, *Home, dated the* 2*nd August* 1966, *making an amendment to the Madras Motor Vehicles Rules*, 1940, *published at pages* 1 *to* 40 *of the* Fort St. George Gazette *Extraordinary, dated the* 30*th March* 1940. [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

64. *Notification issued with G.O. P. No.* 3205, *Revenue, dated the* 14*th November* 1966, *making certain amendments to rule* 9 *of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Rules*, 1965, *published at pages* 26–63 *of Part V of the* Fort St. George Gazette *Extraordinary, dated the* 15*th February* 1965. [*Laid on the Table of the House under section* 73 (5) *of Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1963 (*Madras Act XXVI of* 1963).]

65. *Notification issued with G.O. Ms. No.* 3227, *Home, dated the* 23*rd September* 1966, *making an amendment to the Madras Motor Vehicles Rules*, 1940, *published at pages* 1 *to* 40 *of the* Fort St. George Gazette, *dated the* 30*th March* 1940 *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

66. *Notification issued with G.O. Ms. No.* 3616, *Agriculture, dated the* 16*th November* 1966, *making an amendment to the Madras Agricultural Produce Markets Rules*, 1962, *regarding enhancement of age of retirement of Duffadars, Peons, Office boys.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act XXIII of* 1959).]

67. *Notification issued with G.O. Ms. No.* 3488, *Home, dated the* 13*th October* 1966 *regarding collection of quarterly tax in respect of the luxury coach bearing registration No. PYS* 1604 *belonging to Sri K. Muthusamy, Salem, at concessional rate.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

68. *Notification issued with G.O. Ms. No.* 2642, *Rural Development and Local Administration, dated the* 18*th November* 1966, *making an amendment to the Madras Public Buildings (Licensing)*



*Rules*, 1966, *published with Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A*-158, *dated the* 4*th February* 1966, *at pages* 125 *to* 132 *of Part V of the* Fort St. George Gazette, *dated the* 16*th February* 1966. [*Laid on the Table of the House under section* 25(4) *of the Madras Public Buildings (Licensing) Act*, 1964 (*Madras Act* 13 *of* 1964).]

69. *Notification issued with G.O. Ms. No.* 3278, *Agriculture, dated the* 11*th October* 1966, *directing the Tirunelveli Market at Thisayanvalai in Tirunelveli district to provide facilities for purchase and sale of cotton, groundnut and chillies.* [*Laid on the Table of the House under section* 29(4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act XXIII of* 1959).]

70. *Notification issued with G.O. Ms. No.* 3576, *Agriculture, dated the* 9*th November* 1966, *regarding the intention of exercising control over the purchase and sale of groundnut in the Chingleput district excluding the taluks of Saidapet and Sriperumbudur.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act XXIII of* 1959).]

71. *Notification issued with Roc. No. K.* 19.69343/*G*/66, *dated the* 20*th October* 1966, *removing Sri V. Gurusamy from the Office of the President of Ponmeni Town Panchayat, Madurai taluk of Madurai district.* [*Laid on the Table of the House under section* 179(4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

72. *Notification issued with Roc. No. K.* 1965090/*G*/66, *dated the* 9*th October* 1966, *removing Sri K. Karuppanan from the Office of the President of Virupaksh Panchayat in Palni taluk of Madurai district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

73. *Notification issued with Roc. No. K.* 19/76389/*G*/66, *dated the* 22*nd October* 1966, *removing Sri V. Pandaram from the Office of the President of Keelakottai Panchayat in Tirumangalam taluk of Madurai district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

74. *Notification issued with G.O. Ms. No.* 2264, *Public (Services-A), dated the* 25*th October* 1966, *making an amendment to the Madras Public Service Commission Regulations*, 1954, *regarding exclusion from the Commission's purview the post of Manager, Tourist Bungalow, Ootacamund.* [*Laid on the Table of the House under section* 320(5) *of the Constitution of India.*]

75. *Notification issued with G.O. Ms. No.* 3116, *Home, dated the* 16*th September* 1966, *exempting from payment of tax leviable in respect of the vehicle bearing registration No. MDH* 4202 *belonging to the UNICEF.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

*Produce Markets Act,* 1959, *in respect of groundnut and paddy.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act* 23 *of* 1959).]

48. *Notification issued with G.O. Ms. No.* 1745, *Education, dated the* 17*th September* 1966, *approving the list of all the parks and play-fields set out in the schedule of the notification in the area within the jurisdiction of the Bodinayakanur Municipal Council of the Madurai district.* [*Laid on the Table of the House under section* 14 (3) *of the Madras Parks, Play-fields and Open Spaces* (*Preservation and Regulation*) *Act,* 1959 (*Madras Act* 26 *of* 1959).]

49. *Notification issued with G.O. Ms. No.* 1744, *Education, dated the* 17*th September* 1966, *approving the list of all the parks and play-fields set out in the schedule of the notification in the area within the jurisdiction of Srivilliputhur Municipal Council of the Ramanathapuram district.* [*Laid on the Table of the House under section* 14 (3) *of the Madras Parks, Play-fields and Open Spaces* (*Preservation and Regulation Act,* 1959 (*Madras Act* 26 *of* 1959).]

50. *Notification issued with G.O. Ms. No.* 3318, *Revenue, dated the* 29*th November* 1966, *making an amendment to the Madras Minor Inams* (*Abolition and Conversion into Ryotwari*) *Rules,* 1965, *published at pages* 1–25 *of Part V of the* Fort St. George Gazette *Extraordinary, dated the* 15*th February* 1965. [*Laid on the Table of the House under section* 48 (5) *of the Madras Minor Inams* (*Abolition and Conversion into Ryotwari*) *Act,* 1963 (*Madras Act* 30 *of* 1963).]

51. *Notification issued with G.O. Ms. No.* 2402, *Public* (*Tamil Development-I*), *dated the* 17*th November* 1966, *relating to the introduction of Tamil in the offices and hospitals under Medical Department.* [*Laid on the Table of the House under section* 6 *of the Madras Official Language Act,* 1956 (*Madras Act XXXIX of* 1956).]

52. *Notification issued with Roc. No.* 5576/66, *L.* 5, *dated the* 1*st April* 1966 *of the Collector of Thanjavur removing Sri K. Daniel, from the office of the President of Madapuram Panchayat in Mayavaram taluk of Thanjavur district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

53. *Notification issued with G.O. Ms. No.* 3528, *Home, dated the* 15*th October* 1966 *exempting from payment of tax leviable in respect of the vehicle bearing registration No. MSR* 2310, *belonging to the United Nations Development Programme, Madras.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

54. *Notification issued with G.O. Ms. No.* 3324, *Revenue, dated the* 29*th November* 1966, *regarding exemption of tax payable under the Madras General Sales Tax Act,* 1959, *in respect of sales of goods by canteen and shop run by the Central Leprosy Teaching and Research*



*Institute, Tirumani, Chingleput district.* [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act,* 1959 (*Madras Act* 1 *of* 1959).]

55. *Notification issued with G.O. Ms. No.* 3013, *Revenue, dated the* 11*th October* 1966, *making a rule to the Madras Leaseholds* (*Abolition and Conversion into Ryotwari*) *Act,* 1963, *in regard to the determination of proportionate amount to be deducted.* [*Laid on the Table of the House under section* 50 (5) *of the Madras Leaseholds* (*Abolition and Conversion into Ryotwari*) *Act,* 1963 (*Madras Act* 27 *of* 1963).]

56. *Notification issued with G.O. Ms. No.* 2920, *Rural Development and Local Administration, dated the* 22*nd December* 1966, *authorising the Director of Rural Development, Madras, in respect of Panchayat Union Councils and the Collectors in respect of Town Panchayats to exercise the powers vested in the Government under sub-section* (3) *of section* 113 *of the Madras Panchayats Act,* 1958. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

57. *Notification issued with Roc. No.* 55862/65-*F*5, *dated the* 13*th October* 1966, *in regard to the extension of certain provisions of the Madras Panchayats Act,*1958, *with effect on and from the* 15*th November* 1966 *within the jurisdiction of the Tallakulam Town Panchayat of the Madurai district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

58. *Notification issued with G.O. Ms. No.* 3068, *Home, dated the* 14*th September* 1966, *making an amendment to the Madras Motor Vehicles Rules,* 1940, *published at pages* 1 *to* 40 *of the* Fort St. George Gazette *Extraordinary, dated the* 30*th March* 1940. [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act,* 1939 (*Central Act IV of* 1939).]

59. *Notification issued with G.O. Ms. No.* 2932, *Home, dated the* 1*st September* 1966, *exempting from payment of tax leviable in respect of the car bearing registration No. MDK* 2156 *belonging to UNICEF and assigned to the District Medical Officer, Kanyakumari at Nagercoil.* [*Laid on the Table of the House under section* 11(2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

60. *Notification issued with G.O. Ms. No.* 2934, *Home, dated the* 1*st September* 1966, *exempting from payment of tax leviable in respect of the car bearing registration No. MDH* 4160, *belonging to the UNICEF and assigned to the Chingleput Medical College Hospital, Chingleput.* [*Laid on the Table of the House under section* 11(2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

76. *Notification issued with G.O. Ms. No.* 2811, *Home, dated the* 22*nd August* 1966, *making certain amendments to the Madras Motor Vehicles Rules*, 1940, *published at pages* 1 *to* 40 *of the* Fort St. George Gazette *Extraordinary, dated the* 30*th March* 1940. [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

77. *Notification issued with G.O. Ms. No.* 3265, *Revenue, dated the* 21*st November* 1965, *appointing the* 15*th day of December* 1966, *as the date on which certain provisions of the Madras Inam Estates* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963. [*Laid on the Table of the House under section* 73 (5) *of the Madras Inam Estates* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963 (*Madras Act XXVI of* 1963).]

78. *Notification issued with G.O. Ms. No.* 2984, *Revenue, dated the* 7*th October* 1966, *making certain rules under section* 62 (2) *of the Madras Inam Estates* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963. [*Laid on the Table of the House under section* 73 (5) *of the Madras Inam Estates* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963 (*Madras Act XXVI of* 1963).]

79. *Notification issued with G.O. Ms. No.* 2416, *Revenue, dated the* 20*th July* 1966 *regarding settlement of Minor Inams in certain taluks of Thanjavur district taken over under the Madras Minor Inams* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963. [*Laid on the Table of the House under section* 48 (5) *of the Madras Minor Inams* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963 (*Madras Act XXX of* 1963).]

80. *Notification issued with G.O. Ms. No.* 2529, *Revenue, dated the* 4*th August* 1966, *regarding settlement of Minor Inams in certain taluks of Thanjavur district other than those in Pattukottai, Orathanad and Arantangi taken over under the Madras Minor Inams* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963. [*Laid on the Table of the House under section* 48 (5) *of the Madras Minor Inams* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963 (*Madras Act XXX of* 1963).]

81. *Notification issued with Roc. No.* 29884/65, *F*-5, *Director of Rural Development, dated the* 25*th June* 1966, *declaring that the provisions of the Madras District Municipalities Act*, 1920, *specified in the schedule to the notification and the rules framed thereunder shall be extended to and be in force in the entire area of certain panchayats in Papanasam taluk of Thanjavur district with effect from* 1*st August* 1966. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

82. *Notification issued with Roc. No.* 29884/65, *F*-5, *dated the* 25*th June* 1966, *regarding extension of certain provisions of the Madras District Municipalities Act*, 1920, *with effect from* 1*st August* 1966 *in the entire area of the Millatur Town Panchayat in Papanasam taluk of Thanjavur district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]



83. *Notification issued with G.O. Ms. No.* 1743, *Education, dated the* 17*th September* 1966, *approving the list of all the parks and play-fields set out in the schedule of the notification in the area within the jurisdiction of the Udumalpet Municipal Council.* [*Laid on the Table of the House under section* 14 (3) *of the Madras Parks, Play-fields and Open Spaces* (*Preservation and Regulation*) *Act*, 1959 (*Madras Act XXVI of* 1959).]

84. *Notification issued with Roc. No.* 87922/63-*F*5, *dated the* 13*th November* 1966, *regarding extension of certain provisions of the Madras District Municipalities Act*, 1920, *specified in the schedule to the notification, in the entire area of the Kattumannarkoil Town Panchayat in South Arcot district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

85. *Notification issued with G.O. Ms. No.* 3328, *Agriculture* (*Co-operation*), *dated the* 14*th October* 1966, *making an amendment to rule* 12 *of the Madras Pawnbrokers Rules*, 1944. [*Laid on the Table of the House under section* 22 (4) *of the Madras Pawnbrokers Act*, 1943 (*Madras Act XXIII of* 1943).]

86. *Notification issued with G.O. Ms. No.* 2864, *Rural Development and Local Administration, dated the* 14*th December* 1966, *making an amendment to the rule relating to the payment of travelling allowances to Chairmen, Vice-Chairmen and members of Municipal Councils published at the pages* 840 *to* 841 *of Part I-A of the* Fort St. George Gazette, *dated the* 23*rd August* 1932. [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act*, 1920 (*Madras Act V of* 1920).]

87. *Notification issued with G.O. Ms. No.* 4549, *Industries, Labour and Housing* (*Industries*), *dated the* 21*st November* 1966, *regarding molasses import and export out of India by the A.V.R. and Company, Madras and the continuance of permission relating thereto.* [*Laid on the Table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act*, 1937 (*Madras Act X of* 1937).]

88. *Notification issued with No. N.B.* 1-76483/66, *dated the* 10*th October* 1966, *removing Sri. K. Kanniah Naidu from the office of the President of the Pakkam Village Panchayat, Gudiyatham taluk, North Arcot district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958.)]

89. *Notification issued with No.* 74794/66-*D*4, *dated the* 1*st November* 1966, *removing Sri G. A. Kaliappan from the office of the President of the Ganapathy Town Panchayat, Coimbatore taluk and district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

90. *Notification issued with Roc. No.* 51984/64-*F*5, *dated the* 13*th April* 1966, *regarding extension of relevant provisions relating to Building Regulations to Ponmeni Town Panchayat, in Madurai taluk of Madurai district with effect from* 1*st May* 1966. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

91. *Notification issued with G.O. Ms. No.* 2621, *Public* (*Tamil Development-I*), *dated the* 20*th December* 1966, *directing that with effect on and from the first day of January* 1966, *Tamil shall be used in the offices specified in the notification in respect of communication sent from them to any person other than those specified in the notification.* [*Laid on the Table of the House under section* 6 *of the Madras Official Language Act*, 1956 (*Madras Act XXXIX of* 1956).]

92. *Notification issued with G.O. Ms. No.* 3474, *Revenue, dated the* 17*th December* 1966, *appointing the* 16*th day of January* 1967, *as the date on which certain provisions of the Madras Inam Estates* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963 *to come into force in the inam estates specified in the notification.* (*Laid on the Table of the House under section* 73 (5) *of the Madras Inam Estates* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963 (*Madras Act XXVI of* 1963).]

93. *Notification issued with G.O. Ms. No.* 3352, *Revenue, dated the* 3*rd December* 1966, *regarding the constitution of an additional Area Committee for all temples situtaed in the North Arcot district, Kancheepuram and Madras and revision of the territorial jurisdiction of the Area Committees.* [*Laid on the Table of the House under section* 116 (3) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959 (*Madras Act XXII of* 1959).]

94. *Notification issued with G.O. R. No.* 1640, *Revenue, dated the* 8*th November* 1966, *for the waiver of show tax in respect of one cinema show to be organised by the Public* (*Information and Publicity*) *Department at the theatres in Madras City and in the Districts as noted in the notification in connection with the celebration of the Children's Day on the morning of the* 14*th November* 1966. [*Laid on the Table of the House under section* 16 (4) *of the Madras Entertainments Tax Act*, 1939 (*Madras Act X of* 1939).]

95. *Notification issued with G.O. Ms. No.* 2161, *Home, dated the* 30*th June* 1966, *exempting from the payment of the tax leviable under the Madras Motor Vehicles Taxation Act*, 1931 *on reciprocal arrangement based on single-point taxation in respect of Transport Vehicles plying on inter-State routes between Madras and Pondicherry States with effect on and from the* 1*st July* 1966. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

96. *Notification issued with G.O. Ms. No.* 3798, *Home, dated the* 7*th November* 1966 *making certain amendments to the Madras Motor Vehicles Rules* 1940, *published at pages* 1 *to* 40 *of the* Fort St. George



Gazette *Extraordinary, dated the* 30*th March* 1940. [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

97. *Notification issued with G.O. Ms. No.* 3520, *Home, dated* 14*th October* 1966, *making an amendment to the Motor Vehicles Rules* 1940, *published at pages* 1 *to* 40 *of the* Fort St. George Gazette *Extraordinary, dated the* 30*th March* 1940, *in regard to the assignment of new registration mark.* [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

98. *Notification issued with G.O. Ms. No.* 2405, *Revenue, dated the* 19*th July* 1966 *regarding leasehold villages notified and taken over under Section* 1(3) *of the Madras Leaseholds* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963 *in the taluks of Saidapet and Ponneri in the Chingleput district with effect on and from* 25*th March* 1965. [*Laid on the Table of the House under section* 50(5) *of the Madras Leaseholds* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963 (*Madras Act* 27 *of* 1963).]

99. *Notification issued with Government Memo. No.* 51427 *T*2/66-3, *Revenue, dated the* 29*th August* 1966 *making an amendment to the Revenue Department Notification II-1 No.* 5525 *of* 1965, *published at page* 2388 *of Part II– Section 1 of the* Fort St George Gazette, *dated the* 8*th December* 1965. [*Laid on the Table of the House under section* 67(4) *of the Madras Estates* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1948 (*Madras Act XXVI of* 1948).]

100. *Notification issued with Government Memo. No.* 8333 *T*1/66-2, *Revenue, dated the* 26*th October* 1966 *regarding appointment of Settlement Officers and Assistant Settlement Officers.* [*Laid on the Table of the House under section* 26 (2) *of the Madras* (*Transferred Territory*) *Ryotwari Settlement Act*, 1964 (*Madras Act* 30 *of* 1964); *Section* 28(5) *of the Kanyakumari Sreepandaravaka Lands* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1964 (*Madras Act* 31 *of* 1964); *Section* 32(5) *of the Madras* (*Transferred Territory*) *Thiruppuvaram Payment Abolition Act*, 1964 (*Madras Act* 32 *of* 1964); *Section* 48(5) *of the Madras Minor Inams* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963 (*Madras Act* 30 *of* 1963) *and under section* 34 *of the Madras* (*Transferred Territory*) *Jenmikaram Payment Abolition Act*, 1964 (*Madras Act* 39 of 1964).]

101. *Notification issued with G.O. Ms. No.* 8, *Rural Development and Local Administration, dated the* 2*nd January* 1967, *making an amendment to the Madras Panchoyat Union Councils' Contracts* (*Mode and Conditions*) *Rules*, 1961, *published at pages* 754 *to* 760 *of Part V of the* Fort. St. George Gazette, *dated the* 12*th July* 1961. [*Laid on the Table of the House under section* 179(4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

## B. Reports, Notifications and Other Papers.

1. *Notification issued with G.O. Ms. No.* 3639, *Industries, Labour and Housing, dated the* 7*th September* 1966, *making an amendment to the Madras Partnership* (*Registration of Firms*) *Rules*, 1932, *published with Law* (*General*) *Department Notification No.* 868, *dated the* 1*st December* 1932, *at pages* 1925 *to* 1928 *of Part I of the* Fort St. George Gazette, *dated the* 13*th December* 1932 *under section* 71 *of Indian Partnership Act*, 1932 (*Central Act IX of* 1932).

2. *Notification issued with Government Memo. No.* 159978-*E. III*/65-9, *dated the* 24*th October* 1966, *making the Prohibition of Fishing in Conserved Area Rules*, 1965, *under the Indian Fisheries Act*, 1897 (*Central Act IV of* 1897).

3. *Notification issued with G.O. Ms. No.* 4622, *Industries, Labour and Housing, dated the* 29*th November* 1966, *making certain amendments to the Madras Partnership* (*Registration of Firms*) *Rules*, 1932, *published with Law* (*General*) *Department Notification No.* 86689 *dated the* 1*st December* 1932, *at pages* 1925 *to* 1928 *of Part I of the*, Fort St. George Gazette, *dated the* 13*th December* 1932, *under sub-section* (2) *of section* 71 *of the Indian Partnership Act*, 1932 (*Central Act IX of* 1932).

4. *Notification issued with Government Memo. No.* 8162 *T1*/66-3, *Revenue, dated the* 26*th October* 1966 *regarding the issue of an errata to the Revenue Department Notification II*-1 *No.* 2586 *of* 1966, *dated the* 8*th June* 1966, *published at pages* 974—981 *of Part II–Section* 1 *of the* Fort St. George Gazette, *dated the* 22*nd June* 1966.

* Despatched to Members on 29th December 1966.
† Despatched to Members on 9th January 1967.



### இணைப்பு

[(*) 1-ம் பக்கத்தைப் பார்க்கவும்].

தாற்காலிக பேரவைத் தலைவராக நியமிக்கப்பட்ட சட்டப் பேரவை உறுப்பினர், மதிப்பிற்குரிய திரு. பி. கே. மூக்கையா தேவர் அவர்கள் 1967, மார்ச் 13-ம் தேதி கிண்டியிலுள்ள கவர்னர் மாளிகையில் கவர்னர் முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்.

# தமிழகச் சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1967 மார்ச் 17.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை பத்து மணி அளவில் மதிப்பிற்குரிய தாற்காலிக சபாநாயகர் (திரு. பி. கே. மூக்கையா தேவர்) தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் நட்சத்திரக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அந்த உரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 1. உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல் *

**மதிப்பிற்குரிய தாற்காலிக பேரவைத் தலைவர் திரு. பி. கே. மூக்கையா தேவர்:** இன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளபடி முதல் அலுவல் ஏற்கனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள், உறுதிமொழி எடுத்துக்கொள்வது ஆகும்.

சட்டசபை விதிகளின்படி சபாநாயகர், துணைச் சபாநாயகர் பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்டவர்களும், அவர்களின் பெயரை நியமனம் செய்பவர்களும் அதை ஆதரிப்பவர்களும் உறுதிமொழி எடுத்திருக்க வேண்டும். எனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்களை இப்பொழுது உறுதிமொழி எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*[பிறகு துணைச் செயலாளர் உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத உறுப்பினர்களை உறுதிமொழி எடுத்துக்கொள்ளுமாறு அழைத்தார்கள்.]*

திரு. வி. சின்னசாமி அவர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

## 2. பேரவைத் தலைவர் தேர்தல்

**மதிப்பிற்குரிய தாற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. பி. கே. மூக்கையா தேவர்):** சபையின் அடுத்த அலுவல் அரசியல் அமைப்பின் 178-வது பிரிவின்கீழ் சபாநாயகர் தேர்தல் ஆகும். அப்பதவிக்கு வேட்பாளர்களின் நியமனச் சீட்டுகள் சட்டசபை செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளன. சட்டசபை விதிகளின் 4 (4) விதியின்படி, சபாநாயகர் பதவிக்கு நியமனம் செய்யப்பெற்றவர்கள், நியமனம் செய்தவர்கள், அதை ஆதரித்தவர்கள் ஆகியவர்களின் பெயர்களை நான் முதன் முதலில் இந்த அவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம் :—

முதலாவதாக நியமனம் செய்யப்பெற்றவர் திரு. சி. பா. ஆதித்தனார். அவரை நியமனம் செய்தவர் திரு. இரா. நெடுஞ்செழியன்; ஆதரித்தவர் திரு. மு. கருணாநிதி.

* 46-ம் பக்கத்திலுள்ள இணைப்பைக் காண்க

[தாற்காலிக பேரவைத் தலைவர்] [1967, மார்ச் 17

இரண்டாவதாக நியமனம் செய்யப்பெற்றவர் திரு. சி. பா. ஆதித்தனார். நியமனம் செய்தவர் திரு. எம். எஸ். சிவசாமி; ஆதரித்தவர் திரு. ம. எல். சுப்பிரமணியம்.

மூன்றாவதாக நியமனம் செய்யப்பெற்றவர் திரு. கே. எஸ். கோதண்டராமையா. நியமனம் செய்தவர் திரு. சௌந்தி சுந்தர பாரதி; ஆதரித்தவர் திரு. வ. ஆர். பெருமாள்.

சபாநாயகர் பதவிக்கு நியமனம் செய்யப்பெற்றவர்களின் எண்ணிக்கை ஒன்றுக்கு மேற்பட்டு இருப்பதால் சட்டசபை விதிகளின்படி இரகசிய வாக்கெடுப்பு மூலம் அவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இப்போது செயலாளர் ஆங்கில அகர வரிசையில் உறுப்பினர்களை அழைப்பார். சபை மண்டபத்தில் ஒழுங்கும், அமைதியும் நிலவ மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அவரவர்கள் இடத்திலேயே இருக்க வேண்டுமென்றும், செயலாளரால் அழைக்கப்படும்பொழுது ஒவ்வொருவராக வரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

செயலாளர் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வாக்குச் சீட்டைக் கொடுப்பார். எனக்கு இருபுறமும் உள்ள ஒதுக்கு இடத்திற்குச் சென்று, நீங்கள் தேர்ந்தெடுக்க விரும்பும் வேட்பாளரின் பெயருக்கு எதிரில் வாக்குச் சீட்டில் ஐயத்திற்கு இடம் இன்றி பெருக்கல் குறியை இடவேண்டும். அதன்பின் அச்சீட்டை மடித்து செயலாளரின் மேஜை மீது வைக்கப்பட்டுள்ள வாக்குப் பெட்டியில் போட்டுவிட்டு உறுப்பினர்கள் தங்கள் இடத்திற்குச் சென்று அமருதல் வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் தாற்காலிக சபாநாயகர் அவர்களே, இப்போது நடக்க இருக்கும் சபாநாயகர் தேர்தலில் நாங்கள் கலந்து கொள்வதற்கு இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

The members of the Congress Legislature Party will abstain from voting in the election of the Speaker.

மதிப்பிற்குரிய தாற்காலிக பேரவைத் தலைவர் (திரு. பி. கே. மூக்கையா தேவர்) : இங்குள்ள காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் தலைவர், தாங்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளப்போவதில்லை என்பதாக மொத்தத்தில் தெரிவித்தார்கள். சட்டசபைக் காரியதரிசி அவர்கள் வரிசையாக பெயர்களைப் படித்து வருவார்கள், அவரவர்களின் பெயர் வரும்போது இது போல வாக்கெடுப்பில் கலந்துகொள்ள விரும்பாத உறுப்பினர்கள் தனித்தனியாக இப்படித் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பின்னர் சட்ட மன்றப் பேரவை துணைச் செயலாளர் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பெயர்களை ஆங்கில அகர வரிசைப்படி படித்தார். உறுப்பினர்களும் ஒவ்வொருவராக வந்து வாக்களித்தனர்.)



1967, மார்ச் 17]

(வாக்கெடுப்பிற்குப் பிறகு)

மதிப்பிற்குரிய தாற்காலிக பேரவைத் தலைவர் (திரு. பி. கே. மூக்கையா தேவர்) : எனக்கும் வாக்களிக்கும் உரிமையிருந்தும், அதற்கான அனுமதி இருந்தும், இந்தச் சபையில் நடுநிலைமையைக் காக்கவேண்டுமென்பதையொட்டி நான் இந்த வாக்கெடுப்பிலிருந்து விலகியிருக்க விரும்புகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எட்டு உறுப்பினர்கள் இன்னும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லையென்று செயலாளர் கூறுகிறார்கள். வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத அங்கத்தினர்கள் இன்னும் 5 நிமிடங்களுக்குள் கலந்து கொள்ளலாம்.

(ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு)

மதிப்பிற்குரிய தாற்காலிக பேரவைத் தலைவர் (திரு. பி. கே. மூக்கையா தேவர்) : ஐந்து நிமிட காலம் முடிந்து விட்டது. இத்துடன் வாக்கெடுப்பு முடிவடைகிறது.

இப்பொழுது வாக்குச் சீட்டுகள் எண்ணப்படும். திரு. நா. ப. அழகமுத்து அவர்களையும், டாக்டர் ஹாண்டே அவர்களையும் அறிவிப்பாளர்களாக நியமிக்கிறேன்.

(பின்னர் வாக்குச் சீட்டுகள் எண்ணப்பட்டன. அறிவிப்பாளர்கள் தாற்காலிக சபாநாயகரை அணுகி அவரிடம் வாக்குச் சீட்டுகள் எண்ணிக்கையைத் தெரிவித்தனர்.)

மதிப்பிற்குரிய தாற்காலிக பேரவைத் தலைவர் (திரு. பி. கே. மூக்கையா தேவர்) : இப்பொழுது வாக்குகள் எண்ணப்பட்டுவிட்டன. மொத்தம் பதிவான வாக்குகள் 175 அவற்றிலே செல்லாத வாக்கு 1. திரு. சி. பா. ஆதித்தனார் 153 வாக்குகளும், திரு. கே. எஸ். கோதண்டராமையா 21 வாக்குகளும் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

இத்துடன் என்னுடைய அலுவல்கள் முடிவடைகின்றன. இப்பொழுது சபையின் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள மதிப்பிற்குரிய திரு. சி. பா. ஆதித்தனார் அவர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொண்டு அவர்களை இச் சபாநாயகர் இருக்கையில் வந்து அமருமாறு உங்கள் அனைவரின் சார்பில் அழைக்கிறேன்.

சபாநாயகர் அவர்களைச் சபை முதல்வரும், எதிர்க்கட்சித் தலைவரும் அழைத்து வந்து அவர் இருக்கையில் அமரச் செய்வார்கள். சபாநாயகர் இருக்கையில் அமருவதற்கு வரும் நேரத்தில் எல்லா உறுப்பினர்களும் எழுந்து நின்று அவர் அமர்ந்த பின் எல்லோரும் தங்கள் தங்கள் இடத்தில் அமரவேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*[1967, மார்ச் 17*

*(பேரவை முதல்வரும், எதிர்க்கட்சித் தலைவரும், பேரவைத் தலைவரை அழைத்துவந்து அவர் இருக்கையில் அமரச் செய்தார்கள்.)*

### 3. துணைப் பேரவைத் தலைவர் தேர்தல்

**பேரவைத் தலைவர்** : பேரவையில் அடுத்த அலுவல், 'துணைச் பேரவைத் தலைவர் தேர்தல்' ஆகும். பதவிக்கான நியமனத்தாள்கள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளன. சட்டப் பேரவை விதிகளின் 5 (4) விதியின்படி, துணை பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பெற்ற உறுப்பினர்கள் பெயர்களையும், அவர்களை நியமனம் செய்தவர்கள், அதை ஆதரித்தவர்கள் ஆகியோரின் பெயர்களையும் நான் முதலில் அறிவிக்கிறேன். அவை பின்வருமாறு :—

நியமனம் பெற்றவர்: 1. புலவர் கா. கோவிந்தன்.

நியமனம் செய்தவர் : திரு. ஆர். என். அரங்கநாதன்.

ஆதரித்தவர் : திரு. எஸ். முருகையன்.

நியமனம் பெற்றவர்: 2. புலவர் கா. கோவிந்தன்.

நியமனம் செய்தவர்: திரு. வி. டி. அண்ணாமலை.

ஆதரித்தவர்: திரு. பி. எஸ். சந்தானம்.

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப்பட்டிருப்பதால், நான் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் துணைப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று அறிவிக்கிறேன். அவர்களுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 4. பேரவைத் தலைவருக்கும் துணைப் பேரவைத் தலைவருக்கும் பாராட்டுரைகள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : கனம் சபாநாயகர் அவர்களே, தமிழ் நாட்டின் சட்டசபைக்குச் சபாநாயகராகத் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்காக என் கட்சியின் சார்பாக மனமார்ந்த பாராட்டுதலையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தச் சட்டசபையில் பாரம்பரியமாக ஏற்கனவே சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நல்ல விதிகளையும், ஒழுங்கையும், கண்ணியத்தையும், கௌரவத்தையும் காப்பாற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதேமாதிரி இன்று சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தாங்களும் இந்தச் சட்டசபையின் கண்ணியத்தையும், கௌரவத்தையும் காப்பாற்றுவீர்கள் என்பது மட்டுமல்லாமல், இந்தத் தேர்தலிலே அவர்கள் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடனேயே அவர்கள் எந்தக் கட்சியையும் சேர்ந்தவரல்ல எல்லாக் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டவர், நடுநிலைமையுடன் நல்ல தீர்ப்புக்களை வழங்கிப் பாரபட்சமற்ற முறையிலே சட்ட சபையின் நடவடிக்கைகளையும் நடத்துவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. சட்ட சபை நல்ல முறையில் நடத்தப்படவேண்டுமென்றால் எல்லோருடைய ஒத்துழைப்புடன்தான் நடத்தப்படவேண்டும்.



*1967, மார்ச் 17]* *[திரு. பி. ஜி. கருத்திருமன்]*

என்னுடைய கட்சியைப் பொறுத்த அளவில் தங்களுக்கும், சட்ட சபைக்கும் எங்கள் ஒத்துழைப்பு இருக்கும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன். ஜனநாயகம் சரியாகத் தழைக்கவேண்டு மென்றால் இந்தச் சபையிலே எதிர்க்கட்சிக்கு அதிகப் பொறுப்பும், பங்கும் உண்டு என்பதைச் சபாநாயகர் அவர்கள் அறிவார்கள். எதிர்க்கட்சியினருடைய உரிமைகளை நிச்சயமாகப் பாதுகாப்பார் கள் என்று நம்புகிறோம். உரிமைகளைப் பாதுகாப்பது மட்டுமல்ல, எங்களுடைய கடமைகளை நல்ல முறையில் நிறைவேற்றுவதிலேயும் தாங்கள் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தங்க ளுக்கு என் கட்சியின் சார்பிலே நல் வாழ்த்துக்களையும், பாராட்டு தலையும் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்** : கனம் சபாநாயகர் அவர் களே, எங்கள் கட்சியின் சார்பாக முதல் முதலிலே உங்களை வாழ்த்துவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்ததற்காக மிகவும் சந்தோ ஷப்படுகிறேன். தாங்கள் நீண்ட நாட்களாகத் தமிழ் நாட்டு அரசியலில் பங்கு கொண்டிருக்கின்றீர்கள். பெரும் சேவையைச் செய்திருக்கிறீர்கள். அதோடு மட்டுமல்ல, தாங்கள் நிறையப் படித்தவர்கள். வெளிநாட்டு சட்ட மன்ற நடவடிக்கைகளைப் பற்றியெல்லாம் நன்றாக அறிந்தவர்கள். சட்டமும் தெரிந்தவர் கள். அதற்கு மேல் நல்ல பண்பும் பக்குவமும் பெற்றவர்கள். ஆகவே இந்தச் சபையினுடைய நிலையை, மரபை; உரிமையை நிலை நாட்டுவதிலே முதல்வராக, பாதுகாவலராக இருப்பீர்கள் என்ற முழு நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அதோடு, எங்கள் கட்சியின் சார்பாகப் போட்டியிடும் நிலைமை வந்ததற்குக் காரணம் ஜன நாயக உரிமைகளை நாம் முறைப்படி உணர்ந்து நடந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கம்தான். ஆகவே, போட்டியைப் போட்டி யாக நினைக்காமல் அதை ஒரு ஜனநாயக முறை என்ற அளவிலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு. இன்று நம் நாட்டில் ஜனநாயக முறைகளைப் பின் பொறுத்து வெளிநாடுகளில் உள்ள ஜனநாயக முறைகளைப் பின் பற்றி வருகிறோம். அந்த முறையில் நம்முடைய நாட்டுப் பண்புக் கேற்றபடி அந்தக் காலத்தில் சென்ட்ரல் பார்லிமெண்டில் விக்தல் பாய் பட்டேல் அவர்கள் உலகத்திற்கே எடுத்துக் காட்டாக விளங் கும் வகையில் சபையை நடத்தி வந்தார்கள். பாராளுமன்றத்தின் நாயகத்திற்கே நாயகமாக அவர்களுடைய பெருமை இருந்தது. அதே போன்று தங்களுடைய பண்பு, சட்ட நிபுணத்துவம் அத்தனை யும் சேர்ந்து இந்தச் சபையின் பெருமையை நிலைநாட்டுவீர்கள், இந்த நாட்டு மக்களின் பெருமையையும் நிலைநாட்டுவீர்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு இந்தச் சபையில் எதிர்க்கட்சிக்காரர்களுக்கு அதிகப் பங்கு உண்டு. அரும் கட்சியிலே இருப்பவர்கள் கூடப் பிறந்த சகோதரர்கள் போல இருந்தாலும், நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கிற நிலையில் அதிகப் பொறுப்பு இருக்கிறது. மக்களுடைய எண்ணங்களைப் பிரதி பலிக்கக்கூடிய இந்தச் சபையில் எதிர்க் கட்சிகளுக்கு அதிகப்

[திரு. பி. கே. மூக்கையா தேவர்] [1967, மார்ச் 17

பங்கு இருக்கிறது. எதிர்க்கட்சிக்காரர்களுக்கு—"ஃப்ரீ அண்டு ஃப்ராங்க் எக்ஸ்பிரஷன்"—மக்களுடைய உரிமைகளை பிரதிபலிப்பதற்கு அதிக உரிமை இருக்கிற காரணத்தால் அதிகமாக அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட பாதுகாவலராகத் தாங்கள் இருப்பீர்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து எங்கள் கட்சியின் சார்பாக முழு ஒத்துழைப்பையும் தருகிறோம் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட புலவர் கோவிந்தன் அவர்களுக்கும் எங்கள் கட்சியின் சார்பாக மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** மன்னிக்க வேண்டும். எங்கள் நண்பர் புலவர் கோவிந்தன் அவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்த மன்றத்தின் உறுப்பினராக இருந்து நல்ல தமிழ் மணம் கமழுகிற முறையிலே சுத்தத் தமிழிலே பேசுகிற பெருமையைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களைப் பற்றி அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. அவர் உதவிச் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமை நம் எல்லோருடைய பெருமையும் ஆகும். அந்தப் பெருமை பெற்ற அவர்களையும் பாராட்டுகிறேன்.

* **திரு. எ. பாலசுப்ரமணியம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான்காவது பொதுத் தேர்தலுக்குப் பின்னர் புதிதாக அமைந்திருக்கும் இந்தச் சட்டமன்றத்திற்குத் தாங்கள் தலைவராகவும், புலவர் கோவிந்தன் அவர்கள் உதவித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் குழுவின் சார்பாக எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்ட மன்றத்தின் சகல தரப்புப் பிரிவுகளின் உரிமைகளையும் சமமாகப் பாவித்து, பாதுகாத்து செயலாற்றுவீர்கள் என்ற முழு நம்பிக்கையோடு மீண்டும் எனது குழுவின் சார்பாகப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** கனம் சபாநாயகர் அவர்களே, தாங்கள் இந்தச் சபையின் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக எங்கள் கட்சியின் சார்பாக வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக சட்டமன்றத்தின் பெருமை, கவுரவம் எவ்வளவு உயர்வான முறையில் மதிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்களுடைய தலைமையில் இந்தச் சபையின் கவுரவமும், பெருமையும் காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. தாங்கள், பெரிய கட்சிகள், சிறிய கட்சிகள் என்ற பாகுபாடு அற்ற முறையில் எல்லாக் கட்சிகளுக்கும் சம சந்தர்ப்பத்தைக் கொடுத்து உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே முறையிலே உதவி சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட புலவர் கோவிந்தன் அவர்களுக்கும் பாராட்டுதலையும், வாழ்த்துதலையும் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**Dr. HABIBULLA BAIG :** Mr. Speaker, Sir, it is a great privilege for me to congratulate you on this happy occasion of your being elected as Speaker of this House. You are a Barrister, you have made an extensive tour of various foreign countries



1967, மார்ச் 17] [Dr. Habibulla Baig]

and you have gained a lot of experience. You are a journalist and an able Parliamentarian. We are happy that you have attained the Chair of the Speaker of this House. After you attained the Chair of the Speaker of this House, you are a non-party man, and I hope you will treat us all as members of one family and give us an equal opportunity to express our views in this House. I assure you, Sir, that we will co-operate with you in conducting the deliberations of this House. I hope that you will maintain the high dignity and decorum of this House during your tenure of this high office. On behalf of myself and the Muslim League Party I congratulate you.

I congratulate also the Deputy Speaker on his being elected as Deputy Speaker of this House. I hope that he also will maintain the high dignity and decorum of this House. I assure him also that we will co-operate with him during the tenure of his office. On behalf of myself and the Muslim League Party I congratulate him.

* **திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் சபாநாயகர் அவர்களே, தாங்கள், இந்தச் சபையின் சபாநாயகராகப் பொறுப்பேற்றுக் கொண்டமைக்காக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பாராட்டுதல்களையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே போன்று உதவி சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புலவர் கோவிந்தன் அவர்களுக்கும் பாராட்டுதலையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சபையினுடைய கண்ணியத்தைப் பாதுகாக்கக்கூடிய முறையில் அன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவராக இருந்து அரிய யோசனைகளைச் சொல்லி வந்தவர்கள் இன்று முதலமைச்சராக அமர்ந்திருக்கிறார்கள். சிறிய கட்சியாக இருந்தாலும், அந்தக் கட்சிச் சொல்லக்கூடிய யோசனைகளைக் கேட்கக் கூடிய ஜனநாயகப் பண்பு நிறைந்தவர்கள் இன்று முதலமைச்சராக இருக்கிறார்கள் என்பதைக் காண நாம் மிகவும் பெருமைப்படுகிறோம். நம்முடைய சட்ட மன்றத்தின் மரபுக்கேற்ப திரு. சிவ ஷண்முகம் பிள்ளை போன்றவர்கள் சபாநாயகராக இருந்து நல்ல பணியாற்றி வந்திருக்கிறார்கள். அதே போன்று தாங்களும் இந்தச் சட்டமன்றத்தின் மரபைக் காப்பாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. தாங்கள் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கும், புலவர் கோவிந்தன் அவர்கள் உதவி சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கும் என்னுடைய சார்பிலும், என்னுடைய கட்சியின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. க. ர. நல்லசிவம் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, தாங்கள் நீண்ட நாளைய அரசியல்வாதியாவீர்கள், சுதந்திரத்தைப் பாதுகாக்கின்ற பத்திரிகைத் துறையில் நீண்ட நாளைய அனுபவம் இருப்பதால் ஜனநாயக மரபைப் போற்றிக் காப்பாற்றுகின்ற காவ

[திரு. க. ர. நல்லசிவம்] [1967, மார்ச் 17

லராக நீங்கள் இருப்பீர்கள் என்பதிலே சந்தேகமே கிடையாது. சமீப காலத்தில் சமூகத்தின் அடித் தளத்தில் இருக்கின்ற மக்கள் எல்லாம் விழிப்பும் எழுச்சியும் பெற்று இன்றைக்குப் புதிய மாறு தலை உண்டு பண்ணியிருக்கிறார்கள். கடந்த கால ஜனநாயக மரபு களுக்கும், இன்றைக்கு இருக்கக்கூடிய, வருகின்ற, வளர்ச்சி பெறுகின்ற மரபுகளுக்கும் ஒரு புதிய அடிப்படையான மாறுதல் வரப்போகிறது. அந்த மாறுதல்களை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு சுதந்திர உணர்வுகளை, ஜனநாயக மரபுகளை நாம் மேலும் மேலும் வளர்ச்சியுறச் செய்வதற்கான முயற்சியை எடுத்துக் கொள் வதில் நீங்கள் முன்னோடியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல. ஜனநாயக மரபுகள், சுதந்திர உணர்வு இவைகள் வெறும் சட்டப் புத்தகங்களுக்குள் மாத்திரம் அல்லது விதிகளுக்குள் மாத்திரம் அடங்கியுள்ள ஒன்றல்ல. மனிதனின் சிந்தனைப் போக்கில் மாறுதல் ஏற்படும்போது சுதந்திரம் பற்றிய கண்ணோட்டம் வளர்கிறது, அதையனுசரித்து இந்த சுதந்திர வளர்ச்சியையும், ஜனநாயகப் பண்புகளையும் புதுக் கண்ணோட்டத் தோடு பார்த்து அவை வளர்வதற்கான உதவிகளைத் தாங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, கடந்த நாட்கள் வரையில் இச்சட்டசபையில் சிறந்த அங்கத்தினராகப் பணியாற்றி வந்த நம் மதிப்பிற்குரிய புலவர் கோவிந்தன் அவர்கள் இன்று உதவி சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். தங்கள் இருவருக்கும் சம்யுக்த சோஷியலிஸ்ட் கட்சி சார்பில் வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. ம. பொ. சிவஞானம்:** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, துணை அவைத் தலைவர் அவர்களே, இன்று மிகச் சிறந்த முறையில் பெரும்பாலான வாக்குகளைத் தாங்கள் பெற்று லும் தேர்தலுக்குப் பிறகு எல்லாக் கட்சியினருடைய ஒருமித்த ஆதரவைப் பெறுகிறீர்கள் என்பதற்கு அடையாளமாக ஆளும் கட்சித் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கை கொடுத்து தங்களை ஆசனத்தில் அமர்த்திய சடங்கானது இந்த நாட்டில் நீண்ட நெடுங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் பார்லி மெண்டரி முறையை தேர்தலுக்குப் பிறகு ஏற்றுக்கொண்டு இங்கே எல்லோருக்கும் தலைவராகத் தங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒரு விநாடி நடந்த அந்தச் சடங்கு நமக்கு நினைப்பூட்டு கிறது. அந்த முறையில் தங்கள் தலைமைப் பதவிக் காலம் சிறந்து விளங்க வேண்டும் என்று விரும்புகிறவர்களில் நானும் ஒருவன். குறிப்பாக, தமிழ்நாட்டுக்கு மட்டும் அமைந்துள்ள இந்த மன்றத் தில் தமிழ் இனத்தின் மிகப் பெரும்பாலான பண்புகளைப் பிரதிபலிக் கும் வகையில் பல ஜனநாயக மரபுகள் அமைந்திருக்கின்றன. அது தங்கள் காலத்தில் தொடரப்படும் என்ற நம்பிக்கை எங்களுக் குண்டு. கடந்த காலத்தில் எதிர்க்கட்சிகள் எப்படி நடத்தப்பட் டிருந்தாலும் இந்த மன்றத்தில் அதைவிடச் சிறந்த முறையில்,



1967, மார்ச் 17] [திரு. ம. பொ. சிவஞானம்]

அதை விடப் புனிதமான மரபுகளை நிலைநிறுத்தும் முறையில் தங்கள் தலைமைக் காலத்தில் எதிர்க் கட்சிகள் நடத்தப்படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. தங்கள் ஆசனத்திற்கு மேல் உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தி அடிகளின் உருவப் படம் வைக்கப்பட்டிருக்கிறது. தங்களுக்கு எதிரே உலகப் பேரறி ஞர் வள்ளுவர் பெருந்தகையின் திரு. உருவப் படம் வைக்கப்பட் டிருக்கிறது. அந்த இரண்டு பெரியோர்களின் ஆத்மீக உணர்வுகளைப் பின்பற்றி நாம் நடக்கிறோம் என்ற நம்பிக்கையோடும் நடப்போம் என்ற உறுதியோடும் அத் திரு உருவப் படங்கள் வைக்கப்பட்டிருக் கின்றன. அந்த திரு உருவப் படங்கள் சில பல கொள்கைகளை நமக்கு மட்டுமல்லாமல் உலகத்திற்கே போதித்த பேரறிஞர்களின் திரு உருவப் படங்களாகும். அந்தக் கொள்கைகள், போதனைகள், சாதனைகள் ஆகிய இவற்றைப் பிரதிபலிக்கும் முறையில் இந்த மன்றத்தைத் தாங்கள் நடத்திச் செல்லவேண்டுமென்று பிரார்த் தித்து தங்களுக்கு எனது ஆதரவையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிறந்த தமிழ்ப் புலவர் ஒருவர், வெறும் புலமை மட்டுமல்லாமல் புலமைக்கேற்ற திறமையும் பெற்றவர், ஏற்கனவே இந்த மன்றத்தில் இருந்து பெற்ற அனுபவத்தோடு வள்ளுவர் கூறி யிருப்பது போன்று காலம் அறிதல், இடம் அறிதல் என்ற நிலையில் எல்லா அறிதலையும் தெரிந்தவர், இந்த அவையின் துணைத் தலைவ ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது நமக்கெல்லாம் விசேஷ மகிழ்ச்சியை அளிக்கிறது என்பதில் ஐயமில்லை. அவர்களுக்கும் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு ஐந்தாண்டுக் காலம் இந்த மன்றம் அவர்களின் வழிகாட்டி மூலம் சிறப்பாக நடக்கும் என்ற நம்பிக்கையோடு முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. கே. பி. எஸ். மணி:** கனம் சட்டமன்றத் தலைவர் அவர் களே, தாங்களும், புலவர் கோவிந்தன் அவர்களும் சபாநாயகராக வும் உதவிச் சபாநாயகராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது இந்த நாட்டில் பாலும் தேனும் ஓடும் என்ற கருத்தோடு இருக்கிற மக்க ளுக்கு முதலில் நடந்த இந் நிகழ்ச்சி பாலும் தேனும் கலந்ததாகும் என்று நாங்கள் கருதுகிறோம். காரணம், இதுவரையில் இருந்த சபாநாயகர்களில் மிக அதிகமாகப் படித்த முதல் சபாநாயகர் தாங்கள் தான். வெளி நாடுகளுக்குச் சென்று அடைந்துள்ள நல்ல அனுபவமும், நல்ல ஆராய்ச்சித் திறனும் கொண்டவர் தாங்கள். உண்மையிலேயே சொந்த முயற்சியில், சொந்த சொத் தில் இந்த நாட்டு மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்யவேண்டு மென்று செய்ய முன்வந்த முன்னோடிகளில் தாங்கள் ஒருவர். அதே போல் தமிழ்த் தாயின் தவச் செல்வனாக இருக்கிற புலவர் அவர்கள் தமிழில் திறமையும், அனுபவமும் மிக்கவராவார். தமிழை தேனுக்கி தங்கள் பரந்த வெள்ளை உள்ளம் என்ற பாலில் அதைக் கலந்து சபைக்குக் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்குண்டு.

[திரு. கே. பி. எஸ். மணி] [1967, மார்ச் 17

அதோடு மட்டுமல்ல, புதிதாக இன்று குடியரசுக் கட்சி சார்பில் ஒரு அபேட்சகனைப் பதிவு செய்து கொண்டிருக்கிறேன். அந்த முறை புதிதாக இருந்தாலும் நிச்சயமாக அந்தப் போக்கு இந்த நாட்டிலுள்ள பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பேராதரவாக உருவாகவேண்டும் என்றும் அவர்களின் குரல்களை எழுப்புவதற்கு தனிப்பட்ட முறையில் இது ஒரு இயக்கமாக இருக்கவேண்டுமென்ற கருத்தில் என்னை அவ்விதம் பதிவு செய்து கொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, எங்கள் ஆதரவு எப்போதும் உங்களுக்கு இருக்கும் என்றும், எங்களைப் போன்ற சிறுபான்மையினருக்கு சிறிய கட்சிகளுக்கு தங்களது ஆதரவைக் கொடுத்து எங்கள் குரல் சட்டசபையில் ஒலிக்க சந்தர்ப்பம் கொடுத்துதவவும் பெரிய கட்சியாக இருக்கிற ஆளும் கட்சியில் இருக்கின்றவர்கள் எங்களை ஆதரிக்கும்படிக் கேட்டுக்கொண்டு இந்தச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்து, அமர்கிறேன்.

*மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே, துணை அவைத்தலைவர் அவர்களே, நல்ல மாட்சிமைபட்ட, வரலாற்றுச் சிறப்பும் பெருமையும் கொண்டு விளங்குகிற இப்பேரவையின் அவைத்தலைவராகத் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமை கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இப்பேரவை நல்ல சீரிய மரபுகளைப் பன்னெடும் காலமாகக் காப்பாற்றி வருவதில் கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறது. உலகோரும், இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள பல அரசியல் அறிஞர்களும் பாராட்டும் அளவிற்கு நல்ல முறையில் பணியாற்றிவரும் இந்த அவையில் தாங்கள் அவைத் தலைவராக அமர்ந்திருப்பது உள்ளபடியே பெருமைக்குரிய ஒன்றாகும். தாங்கள் அவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் பொதுவாக அமர்ந்து இந்த அவையின் சட்ட ஒழுங்குகளை நல்ல முறையில் நிறைவேற்றி புகழையும், பெருமையையும் இந்த அவைக்கு மேலும் மேலும் பெற்றுத் தருகிற வகையில் பணியாற்ற தாங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தது போல தாங்கள் அவைத்தலைவர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு அரசியல் கட்சி உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டு நின்று அத்தகைய பணிகளில் ஈடுபட வேண்டிய பெரும் பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினராக தாங்கள் இருந்தாலும் இந்த நொடியிலிருந்து தாங்கள் அப்படி ஒரு உறுப்பினர் என்பதை மறந்துவிட்டு, இந்த அவையில் உள்ள அத்தனை பேர்களுக்கும் நடுநிலையில் இருந்து தீர்ப்பு வழங்கும் பொறுப்பில் தாங்கள் இருக்கிறீர்கள் என்ற முறையில் புதுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். நுகத்தடியின் பகலாணி எப்படி நடுநின்று இரண்டு பக்கமும் சமமாக இருந்து வண்டி நடைபெற்றுச் செல்ல உதவி புரிந்து வருகிறதோ அந்த நுகத்தடி பகலாணி போன்று நின்று பணியாற்ற



1967, மார்ச் 17] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வேண்டிய சீரிய பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். தாங்கள் நல்ல அறிவு, அனுபவம், ஆற்றல், திறனைப் பெற்றிருக்கிறீர்கள். நல்ல தமிழ் கொழிக்கும் நெல்லைச் சீமையில் பிறந்து, நல்ல வளம் கொழிக்கும் திருச்சி சீமையில் பயின்று, லண்டன் சீமையில் பார்-அட்-லா பட்டம் பெற்று, மலேசியா சீமையில் வாழ்வை நடத்தி, சென்னைச் சீமைக்கு வந்து நல்ல தமிழ் பரப்பும் பணியை, நல்ல கருத்துக்களை மக்களிடையே வழங்கும் பணியில் ஈடுபட்டு இப்போது இந்த அவையின் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொள்கிற நிலைக்கு வந்திருக்கிறீர்கள். தாங்கள் பெற்றிருக்கிற பல்வேறு அனுபவம் தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ள பொறுப்பை நல்ல முறையில் நடத்துவதற்குப் பேருதவி புரிவதாக அமையும். லண்டன் சீமையில் பார்-அட்-லாவிற்கு படித்தபோது செய்தித் தாள்களுக்கு கட்டுரைகள் பல வழங்கி அதன் மூலம் ஈட்டிய பொருளைக் கொண்டே தங்கள் படிப்பை முடித்துவிட்டவர்கள் என்ற வரலாற்றினைப் பார்க்கும்போது தாங்கள் அங்கு தங்கியிருந்தபோது பாராளுமன்றங்களில் தாயகம் என்று கூறப்படும் ஹௌஸ் ஆஃப் காமன்ஸின் நடவடிக்கைகள்பற்றி அறிந்திருப்பதால், அதற்குப் பிறகும் பல முறை உலக நாடுகளைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பினை தாங்கள் பெற்றிருக்கும் காரணத்தினால், தங்கள் அனுபவத்தின் மூலம் இந்த மன்றத்தை மேலும் பொலிவோடும், வலிவோடும் நடத்திச் செல்லவும், இந்த மன்றத்திற்கு மேலும் பெரும் புகழும் தேடித் தருகிற வகையில் தங்கள் அனுபவம் அமையவும் வாய்ப்பு ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. தாங்கள் இந்த மன்றத்தினை நடத்திச் செல்லுகின்ற அளவுக்கு 12-00 ந.ப
நல்ல சட்ட நுணுக்கங்களை நன்றாக அறிந்திருக்கிறீர்கள். அதற்கேற்ற நல்ல அனுபவத்தையும் பெற்றிருக்கிறீர்கள். தாங்கள் ஏழை எளிய மக்களுக்காக பாடுபடுகின்ற அத்தகைய பரிவு உணர்வோடு நின்று பாடுபட்டு வந்திருக்கிறீர்கள். அந்த முறையிலே பல மன்றங்களில் கூறப்படுகிற கருத்துக்களின் தாரதம்யத்தை உணர்ந்து, அவற்றை எடைபோட்டுப் பார்த்து, இந்த மன்றத்தை சட்டத்தினுடைய அடிப்படையில் நடத்திச் செல்ல அக்கறையும், ஆர்வமும் காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை அவை உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் இருக்கிறது என்பது பெருமகிழ்ச்சி தரத்தக்கதொன்று. இதுவரையில் அரசியல் கட்சியில் மாறுபாடு இருந்தாலும், ஜனநாயகத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி இருக்க வேண்டியது இன்றியமையாதது. பணியாற்ற இருந்தாலும், கருத்து வேறுபாட்டுக்கு மதிப்பு அளித்து ஒருவருக்கொருவர் காட்ட வேண்டிய அன்பையும், ஒருவருக்கொருவர் காட்டவேண்டிய அருளையும், பற்றையும், நட்பையும், உறவையும் காப்பாற்றித் தருவதற்கு தங்களுடைய தன்மை மிக்க பயன்படும் என்ற உறுதியை நான் கொள்கிறேன். இந்த மன்றத்தின் உறுப்பினர்கள் அத்தனை பேர்களுடைய உரிமைகளையும் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு தங்கள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் இருக்கும், செல்லும்,

மாறும், மறையும். ஆனால் இந்த மன்றம் என்றென்றும் நின்று நிலைபெறவேண்டிய ஒன்று. அந்த வகையிலே இந்த மன்றத்தினுடைய சிறப்பையும், பெருமையையும் காப்பாற்றுவதிலே தங்களுடைய அறிவும் ஆற்றலும், அனுபவமும் மிக்க நல்ல முறையில் பயன்படும் என்ற நம்பிக்கை உண்டு. அதற்கேற்ற திறன் அத்தனையையும் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல, நல்ல தமிழ் ஆர்வம் கொண்டு, தமிழ் வளரவேண்டும் என்று அக்கறை கொண்டு பாடுபட்டு வந்திருக்கிறீர்கள். தமிழ் ஆட்சி மொழியாக ஆகவேண்டும் என்பதிலே அக்கறையோடும், தமிழ் ஆட்சி மேலும், மேலும் வளம் பெறவும், தமிழிலே இந்த சட்டமன்றத்தின் நடவடிக்கைகள் பெரும் பகுதி மாறுவதற்கு வழிகளைக் காண வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டிருக்கிற நிலையில், தாங்கள் இந்த அவையின் தலைவராக வந்திருப்பது மிக்க மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். அதே போல் பேராதரவு பெற்று, தங்களுக்கு உறுதுணையாக இருக்கும் முறையில் மாண்புமிக்க உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் துணை அவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது மிக்க மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

தாங்கள் இந்த மன்றத்தில் ஏற்கனவே இருந்து நல்ல பழக்கமும், பயிற்சியும் பெற்றிருக்கிறீர்கள். மேலவையிலிருந்து பணியாற்றியிருக்கிறீர்கள். துணை அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மாண்புமிக்க உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்களும் இந்த மன்றத்தில் சென்ற ஐந்தாண்டு காலமாக இருந்து மன்றத்தின் நடவடிக்கைகளில் பயிற்சியும், பழக்கமும் பெற்றிருக்கிறார்கள். தாங்கள் இருவரும், நல்ல பழக்கம் பெற்றவர்களும், பயிற்சி பெற்றவர்களும் இங்கே அவைத் தலைவராகவும், துணை அவைத்தலைவராகவும் அமர்ந்திருப்பது மிக்க மகிழ்ச்சிக்குரிய ஒன்று. தாங்களும் நல்ல தமிழ் ஆர்வம் கொண்டவர்கள். துணை அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற புலவர் கோவிந்தன் அவர்களும் ஆழ்ந்த தமிழ்ப் பற்றும், நல்ல எழுத்து வன்மையும், சொல் வன்மையும் பெற்று, நல்ல தமிழ் வளரவேண்டும் என்பதிலே அக்கறை செலுத்தக்கூடியவர்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிக்க உறுப்பினர் திரு. கருத்திருமன் அவர்களும் நல்ல தமிழ்ப் பற்றுடையவர்கள். ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் நல்ல தமிழ்ப் பற்றுடையவர்கள், அவைத் தலைவர் அவர்களும், துணை அவைத்தலைவர் அவர்களும் நல்ல தமிழ்ப் பற்றுடையவர்கள், இந்த மன்றம் நல்ல தமிழ் மணம் கமழ்கிற அளவுக்கு வளர்ந்து செல்லும் என்ற உறுதி ஏற்பட்டிருக்கிற நிலைமை மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அந்த முறையிலே தொடர்ந்து பணியாற்றுவதற்கு தங்களுடைய வழி காட்டுகின்ற தன்மை நல்ல முறையில் பயன்படும் என்ற நம்பிக்கை உண்டு. தாங்கள் அவைத் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால் அவை மிக்க சிறப்பாக நடைபெறும், சட்ட ஒழுங்கு காப்பாற்றப்பட, முறைகள் மேற்கொள்ளப்பட, மரபுகள் காப்பாற்றப்பட, உரிமைகள் காப்பாற்றப்பட, அந்த வகையிலே தங்களுடைய சீரிய தலைமை பயன்படும் என்ற நம்பிக்கையினுடைய அடிப்படையில் எனது உளமார்ந்த



வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும், போற்றுதல்களையும் தங்களுக்கும், புலவர் கோவிந்தன் அவர்களுக்கும் தெரிவித்து, இந்த அவையினுடைய முதல்வர் என்ற முறையிலே என்னுடைய ஒத்துழைப்பை தங்களுக்குத் தரவும், உங்களுடைய ஒத்துழைப்பை இந்த மன்றத்தில் இருக்கின்ற அத்தனை பேர்களுக்கும் தரவுமான சூழ்நிலை வளரும் என்று கூறி, எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, தாங்களும், துணைத் தலைவராக புலவர் கோவிந்தன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பெற்று, அவையினுடைய பல்வேறு தரப்பட்ட நண்பர்களாலும் வெகுவாக பாராட்டப்பெற்று, இறுதியில் தங்களுடைய ஆணைக்கு கட்டுப்பட்டு நடக்கிறோம் என்பதனை தெரிவிக்கின்ற முறையில் என்னுடைய வாழ்த்துக்களையும் தங்களுக்கு நான் அளிக்கின்ற கட்டத்திலே இன்று இருக்கிறோம். தாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற சட்டமன்றத் தலைவர் பதவியில் இதற்கு முன்னாலே அமர்ந்திருந்தவர்கள் எல்லாம் இந்த நாட்டின் வரலாற்றுக்கு, அதிலும் சிறப்பாக பாராளுமன்ற வரலாற்றுக்கு புகழ்மிக்க அத்தியாயங்களைச் சேர்த்திருக்கிறார்கள். தங்களுடைய காலத்திலும் தங்களுடைய துணைத் தலைவராக அமர இருக்கிற புலவர் கோவிந்தன் அவர்கள் காலத்திலும் அந்தக் கீர்த்தி மிக்க வரலாற்றில் இன்னும் பல புதிய அத்தியாயங்கள், புகழ்மிக்க அத்தியாயங்கள் சேர்க்கப்படும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. அதற்கேற்ற பயிற்சியும், அதற்காக தேவைப்படுகின்ற பண்புகளும் தங்களுக்கு நிரம்ப இருக்கின்றன என்பதனை நாடு நன்றாக அறிந்திருக்கிறது. பாராளுமன்ற முறையில் நல்ல பயிற்சி பெற்றிருக்கிறீர்கள். பாராளுமன்றம் செம்மையாக நடத்தப்படுகிற நாடுகளிலெல்லாம் எந்தெந்த முறையிலே அந்த முறைகளை செம்மைப்படுத்தியிருக்கிறார்கள் என்பதனையும் நீங்கள் நேரடியாக அறிந்து வந்திருக்கிறீர்கள். தங்களுடைய சிறந்த அறிவும், தாங்கள் பெற்றிருக்கிற அனுபவ அறிவும் இந்தச் சபையினுடைய மாண்பினை உயர்த்துவதற்கு மெத்த பயன்படும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.

துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் புலவர் கோவிந்தன் அவர்கள் தரணியில் மற்ற பல நாடுகளெல்லாம் ஆட்சி முறை அமைத்துக்கொள்ளாத காலத்திலே, உலகமே பார்த்து மெச்சத் தக்க விதத்தில் மாண்புமிக்க வகையில் அரசியலை நடத்தி வந்த தமிழகத்தின் அருமை பெருமைகளை இலக்கிய வாயிலாகவும் வரலாறுகள் வாயிலாகவும் நன்றாக அறிந்திருப்பவர்கள். எந்த முறையிலே அவைகள் நடத்தப்படவேண்டும் என்பதைப்பற்றி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே அறிந்த தமிழகத்தின் தனிப் பெருமையை, அதனுடைய கருத்துக் கருவூலங்களை இலக்கியங்கள் மூலமாக நன்றாக அறிந்திருக்கிறார்கள். கருத்துக் கருவூலங்களின் மூலம் அறிந்திருக்கின்ற அந்த எண்ணங்களை கடந்த ஐந்தாண்டுகளில் இந்த அவையின் உறுப்பினராக இருந்தபோது மேலும்

[திரு. சி. என். அண்ணுதுரை] [1967, மார்ச் 17

செம்மைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்தச் சட்ட மன்றத்தின் துணைத் தலைவராக அமர்வது நமக்கெல்லாம் நல்ல வாய்ப்பினை அளிப்பதாக அமைந்திருக்கிறது.

இந்த அவையிலே பல்வேறு கட்சியினராக நாம் இருந்தாலும், சட்டமன்ற முதல்வராக இருக்கிற நண்பர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் சொன்னபடி, எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற நண்பர் கருத்திருமன் அவர்களும், சட்ட மன்றத் தலைவர் அவர்களும், துணைத் தலைவர் அவர்களும் தமிழ்ப்பற்று உள்ளவர்கள். தமிழ்ப் பற்றுடையவர்கள் மட்டுமல்ல, நாம் ஒருவருக்கொருவர்கூட ரொம்பப் பற்றுக்கொண்டவர்கள். ஆகையினுல் இந்த அவையின் நடவடிக்கைகளில் எந்தவிதமான முரண்பாடுகள், சிக்கல்கள் ஏற் படுவதற்கு வழியில்லை. வழியில்லாதது மட்டுமல்ல. ஏற்கனவே நல்ல முறைகளை இந்த அவை எடுத்துக்காட்டியிருக்கிறது. நம்மில் பலர் இங்கு புதிதாக வந்திருந்த போதிலும், மொத்தமாகப் பார்க்க போனுல், நாம் வழிவழியாக வந்தவர்களே தவிர, வழிதவறி வந்தவர்கள் அல்ல. ஆகவே, இந்த அவையின் நடவடிக்கைகளில் எந்தவிதத்திலும் வழித் தவறிச் சென்று, தங்களுக்கு நாங்கள் எந்த விதமான சிக்கலையும் ஏற்படுத்தமாட்டோம் என்பதை நான் இந்த நேரத்தில் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். சில நேரத்தில் ஆர்வத்தின் காரணமாக நேர்வழி நடக்காது, தவறி இப்பக்கம் அப்பக்கம் சிறிது நாங்கள் சாய நேரிட்டாலும், எங்களை தடுத்து நிறுத்தி நல்வழி நடத்திச் செல்லவேண்டிய பெரும் பொறுப்பு தங்களுக்கு இருக்கிறது. அந்தப் பொறுப்பை தாங்கள் செம்மையாக நிறைவேற்றுவீர்கள் என்று எங்களுக்குள்ள நம்பிக் கையை நாங்கள் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, தங்களுக்கு என்னுடைய நல் வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் தங்களுடைய உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும் என்று எடுத்துச் சொன்னுர்கள். அவர் கள் எடுத்துச் சொன்னபொழுது, அதையே நானும் இந்த அவையி லே 1957-ல் சொன்ன நிலைமை என்னுடைய நினைவுக்கு வந்தது. நான் அந்த ஐந்து வருடங்களில்—பெருமையோடு சொல்லிக் கொள்வேன்—எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்தாலும், அப்பொழுது சட்டமன்றத் தலைவராக இருந்த, மறைந்த பெரியார் டாக்டர் யு. கிருஷ்ணுராவ் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்த நாங்கள் யாரும் வருத்தப்படத்தக்க விதத்தில் ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்பதனை நான் நினைவு கூர்ந்துகொண்டு, மறைந்த அந்தப் பெரியாருக்கு இந்த நேரத்தில் என்னுடைய அஞ்சலியை செலுத்திக் கொள்கிறேன். அப்படிப்பட்ட சிறந்த மரபு இந்த அவையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. நான் அன்று சொன்னது என் நினை வுக்கு வருகிறது. ‘நாங்கள் எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கிறோம். சிறிய கட்சியாக இருக்கிறோம், தாங்கள் மருத்துவத் துறையிலே வல்லவர், இளைத்தவர்களுக்கு நீங்கள்தான் தக்க மருந்தைத் தர வேண்டும்’ என்று நான் சொன்னேன். அதையே இன்றையதினம் எதிர்க்கட்சிகளின் சார்பிலே தங்களுக்கு நான் சொல்லவில்லை.



1967, மார்ச் 17] [திரு. சி. என். அண்ணுதுரை]

ஒரு நல்ல பழமொழி உண்டு. கடுகு சிறுத்தாலும் காரம் போகாது. ஆகையினுல் அவர்கள் இளைத்திருக்கிறார்கள் என்று நான் சொல்ல மாட்டேன். எங்களை வழிநடத்திச் செல்ல அவர் களும் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய உரிமைகளை பாதுகாப்ப தில் தாங்கள் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள் என்பதில் அவர் களுக்கு எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. எனக்கும் எந்தவித மான ஐயப்பாடும் இல்லை. ஆகவே, எல்லோருடைய பாராட்டுதல் களுக்கும் உரியவர்களாக இந்த சட்டமன்றத்தின் தலைவராகவும், துணைத் தலைவராகவும் அமர்ந்திருக்கிற நம்முடைய சட்டமன்றத் தலைவர் அவர்களுக்கும், துணைத்தலைவர் அவர்களுக்கும் நான் என்னுடைய உளம் கனிந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டு, நாங்கள் அவர்களுடைய ஆணைகளுக்கு கட்டுப்பட்டு நடப்போம் என்ற உறுதியையும் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன்** : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே இந்த மன்றத்திலே தலைவர் ஆக, அனுபவமும், அறிவும் பெற்ற தாங்கள் அமர்ந்திருக்கும் நிலையைக் கண்டு நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். அப்படிப்பட்ட உங்களுக்கு துணை நிற்கக் கூடிய வாய்ப்பு எனக்கு வாய்த்ததற்குப் பெருமை கொள்கிறேன். "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற மொழிக்கு ஏற்ப தொண்டாற்றுவதையே விரும்பிச் செய்துவந்திருக்கும் எனக்கு, இந்த மன்றத்தின் துணைத் தலைவராக உயர்பதவி அளித்த மன்ற உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன். மன்ற உறுப்பினர்கள் உதவியோடு: இந்த மன்றத்தின் பெருமையையும், மாண்பையும் காக்கும் நிலையில் தங்களுக்கு துணை நிற்பேன் என்று கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்** : பெருமதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அண்ணு அவர்களுக்கும், மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை முதற்கண் தெரிவிக்கிறேன். இந்தச் சட்ட மன்றத்திலே ஆளும் கட்சியின் அவை முதல்வராகிய திரு. நெடுஞ்செழியன் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவராகிய நண்பர் கருத்திருமன் அவர்களும், என்னை அழைத்து வந்து, இந்த இருக்கையிலே அமர்த்தியது மட்டு மல்லாமல், அன்போடு பாராட்டி பேசிய சொற்களுக்காகவும் நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கும் ஏனைய எதிர்க் கட்சித் தலைவர்களுக்கும்—திரு. மூக்கையா தேவர் அவர்களுக்கும், திரு. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும், திரு. மாரிமுத்து அவர் களுக்கும், திரு. பெய்க் அவர்களுக்கும், திரு. சுப்பையா அவர்களுக்கும், திரு. நல்லசிவம் அவர்களுக்கும், திரு. மா. பொ. சி. அவர்களுக்கும், திரு. மணி அவர்களுக்கும்—நமது அவை முதல்வர் திரு. நெடுஞ்செழியன், பெருமதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களுக்கும் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னை அழைத்துக்கொண்டு வந்து, இந்த இருக்கையில் அமர்த்தியபோது, இருபது ஆண்டுகளுக்கு முன்னுல் இந்த அவையிலே நடந்த நிகழ்ச்சி என்னுடைய நினைவிற்கு வந்தது.

அப்பொழுது, நண்பர் திரு. சிவசண்முகம் பிள்ளை சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களை இப்படி இரு கைகளையும் பற்றி, அவை முதல்வரும், எதிர்க்கட்சித் தலைவரும், அழைத்துக் கொண்டு வந்து, இதே ஆசனத்தில் அமர்த்தியபோது, அதைப் பார்த்துக்கொண்டிருந்த எனக்கு வாயாரச் சிரிப்பு வந்தது. அந்தச் சடங்கைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, இருபது ஆண்டுகளுக்குப் பிறகு அதே முறையில் என் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு வந்து அமர்த்துவார்கள் என்று நான் கனவி லும், கற்பனையில் கூட சிந்திக்கவில்லை. இந்த சடங்கைக் கண்டு சிரித்தவன் அதே நிலை எனக்கு ஏற்படும்போது, இந்த சம்பிரதாயச் சடங்கின் பொருள் எனக்கு இப்பொழுது விளங்குகிறது. மன்ற முதல்வர் என் கையைப் பிடித்து வரும்போது, ஆளும் கட்சிக்கும், ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும் என்னுடைய கடமையை உணர்த்துவதாக இருந்தது. அதே போல எதிர்க் கட்சியின் சார்பாக எதிர்க்கட்சித் தலைவர் மற்றொரு கையைப் பிடித்தபோது, எதிர்க்கட்சிக்கு நான் செய்ய வேண்டிய கடமையை உணர்த்துவதாக இருந்தது. என்னுடைய கடமைகளை உணர்த்து வதற்காகவே இரு கைகளையும் பற்றிக்கொண்டு வந்து, இந்த ஆசனத்தில் அமர்த்தினார்கள் என்று நினைக்கிறேன்.

அவர்கள் என்னைப் பற்றி சிறப்பாகச் சொன்னார்கள். உங்கள் முன்னால் நான் எடுத்துக்கொள்ளும் சபதம் ஒன்றுதான். இந்த மன்றத்திலே நான் இருக்கும் வரை, அதாவது இந்தச் சபையை நடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு என்னிடம் இருக்கும் வரை, தராசு முனை சாயாமல், ஒரு கட்சிக்கும் இன்னொரு கட்சிக்கும் பாகுபாடு இல்லாமல் ஒரு உறுப்பினருக்கும், மற்றொரு உறுப்பின ருக்கும் வேறுபாடு இல்லாமல் நடந்துகொள்வேன் என்ற சபதத்தை உங்கள் முன்னால் எடுத்துக்கொள்ளுகிறேன்.

இந்தச் சபையில் 233 உறுப்பினர்கள் இருக்கின்றோம். அதிலே ஆளும் கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் 137 பேர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் 49 பேர்களும், சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்கள் 22 பேர்களும், இடதுசாரி கம்யூனிஸ்ட்கள் 11 பேர்களும், பிரஜா சோஷலிஸ்ட்டு கள் 4 பேர்களும், முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்தவர்கள் 3 பேர்களும், சம்யுக்த சோஷலிஸ்ட்கள் 2 பேர்களும், வலதுசாரி கம்யூனிஸ்ட்கள் 2 பேர்களும், தமிழரசுக் கழக நண்பர் ஒருவரும், சுயேச்சை உறுப்பினர்கள் 2 பேர்களும், ஆக 233 பேர்களைக் கொண்ட இந்தச் சபையை நடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பை எனக்கு நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். நண்பர் கே. பி. எஸ். மணி அவர்கள் பேசும்போது சொன்னார்கள், 'சுயேச்சையாக வந்திருந்தாலும், குடியரசுக் கட்சி உறுப்பினராக இருந்து அந்தக் கட்சியைச் சேர்ந்தவராக அவையில் அங்கம் வகிக்கிறேன்' என்று. அதே நேரத்தில் நான் அவர்களுக்கு சொல்ல விரும்புவது, ஒருவராக இருந்தாலும், 130 பேர்களாக இருந்தாலும், ஒரு கட்சிக்குக் கொடுக்கக்கூடிய உரிமைகள்



அத்தனையும் அவர்களுக்கு உண்டு. இந்தச் சந்தர்ப்பத்திலே 1952-ம் வருஷத்திலே சபாநாயகராக இருந்த திரு. சிவசண்முகம் அவர்கள், நீதிக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரே இருந்தாலும் கூட, அவருக்கும் ஒரு கட்சிக்கு உள்ள எல்லா உரிமைகளும் உண்டு என்று சொல்லியிருக்கிறார். திரு. கே. பி. எஸ். மணி அவர் களுக்கும் அந்த மேற்கோள் பொருந்தும் என்பதைத் தெரிவிக் கிறேன்,

இந்தச் சபையை நடத்திச் செல்லும் பொறுப்பை நீங்கள் எனக்கு வழங்கும்போது, பல அறிவுரைகளைச் சொன்னீர்கள். அவைகளுக்காக நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சபையை நடத்திச் செல்வது எப்படி என்று நினைக்கும்போது ஒரு வகையில் மிகுந்த மலைப்பாக இருந்தபோதிலும் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கும்போது, அது எளிதாகவே இருக்கும் என்று எதிர் பார்க்கிறேன். ஏனெனில், இந்தச் சபைக்கு தெளிவான விதிகள் இருக்கின்றன. இருநூற்று நாற்பத்தொன்பது பிரிவுகளைக் கொண்ட விதிகள் அடங்கிய புத்தகத்தை நீங்கள் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள். மேலும், நன்றாக அனுபவம் உள்ள, திறமை உள்ள உறுப்பினர்கள் சபையிலே இருக்கிறார்கள். எதிர்க் கட்சி தலைவராக இருந்து, 1957-லிருந்து 1962-வரை எதிர்க் கட்சியில் இருந்து பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இங்கே வீற்றிருக்கிறார்கள். 1962-முதல் 1967-வரை எதிர்க் கட்சித் தலைவ ராக இருந்து பணியாற்றிய திரு. நெடுஞ்செழியன் அவர்கள் இந்த மன்ற முதல்வராக இருக்கிறார்கள். அதேபோல ஆளும் கட்சியில் இருந்து பணியாற்றியிருக்கும் நண்பர் திரு. கருத்திருமன், இங்கே எதிர்க் கட்சியிலே தலைவராக வீற்றிருக்கிறார்கள். அவர்கள் எதிர்க் கட்சி எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக இருப்போம் என்று சொல்லியுள்ள வாக்குறுதி என் கவனத்திற்கு வருகிறது. ஆகவே, இந்தச் சபையை நடத்திச் செல்லுவதில், நல்ல ஆதரவு எனக்கு இருக்கும் என்பதில் எனக்கு ஐயப்பாடு இல்லை. சபையின் உரிமையையும், உறுப்பினர்களின் உரிமைகளையும் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.

இப்பொழுது என்னை 'ஸ்பீக்கர்' ஆகத் தேர்ந்தெடுத் திருக்கிறீர்கள். 'ஸ்பீக்கர்' என்று சொன்னால், 'பேசுகின்றவன்' என்று பொருள். ஆனால், இங்கே ஸ்பீக்கருடைய கடமை பேசாமல் இருப்பதுதான். (சிரிப்பு) நான் வேறு சில பாராளுமன்றங்களைப் பார்த்திருக்கிறேன். இங்கிலாந்து தேசப் பாராளுமன்றத்திற்கும் சென்று பார்த்திருக்கிறேன். அங்கே சபாநாயகர் வந்து உட்கார்ந்து, கடைசியாக எழுந்து போகிற வரையிலும் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் எழுந்து போவதையும் பார்த்திருக்கிறேன். அந்த முறையில், இன்றைக்கு மட்டுமே எனக்குப் பேசுவதற்கு உரிமை. (சிரிப்பு). 'பேசுகிறவன்' என்று பெயர் இருந்தும் பேசாம லிருக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [1967, மார்ச் 17

சட்டசபையை நடத்திக்கொண்டு போகும்போது, நமது விதி 61-இன்படி, இந்த நடவடிக்கைகள் ஆங்கிலத்திலும் இருக்கலாம், தமிழிலும் இருக்கலாம். ஆனால், என்னுடைய விருப்பமெல்லாம், கூடிய வரையில் இந்த நடவடிக்கைகளையெல்லாம் தமிழிலேயே நாம் நடத்திச் செல்லவேண்டும் என்பது. (ஆரவாரம்). இங்கே தமிழ் தெரியாதவர்கள் இருக்கிறார்கள் என்றால், அல்லது தமிழில் பயிற்சி இல்லாதவர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் ஆங்கிலத்திலே பேசலாம்; அவர்களுக்கு அந்த உரிமை உண்டு என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எதிர்க் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் பேசும்போது, "எங்களுடைய உரிமையைப் பறிக்கவேண்டாம்" என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்வது இதுதான். இன்றைக்கு ஆளுகின்ற கட்சியிலே இருக்கின்றவர்கள் முன்பு எதிர்க்கட்சியின் உரிமைக்காகப் போராடியவர்களாகையால், அந்த உரிமை எதுவுமே பறிக்கப்படமாட்டாது. அதே சமயம் எதிர்க்கட்சி என்றால் அதற்குத் தனியாகச் சலுகையும் கிடையாது என்பதையும் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இத்துடன் இன்றைய அலுவல்கள் முடிவடைகின்றன. இந்த அவை இன்று இத்துடன் ஒத்திவைக்கப்படும். மாலை ஐந்து மணி அளவில் மேலவை, பேரவை ஆகிய இரண்டும் சேர்ந்த கூட்டம் நடைபெற இருக்கிறது. சட்டப் பேரவை மீண்டும் நாளை 1967-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ஆம் தேதி சனிக்கிழமையன்று காலை 8-30 மணிக்குக் கூடும் என்று நான் அறிவிக்கிறேன்.

SRI K. VINAYAKAM : Mr. Speaker, Sir, on a point of information. The rules of procedure of this House has not been circulated.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : விதிப்புத்தகம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் கொடுக்கப்படும். எவ்வளவு சீக்கிரம் கொடுக்கப்பட முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் கொடுக்கப்படும்.

இத்துடன் இப்பேரவை ஒத்திவைக்கப்படுகிறது.

12-22 பி.ப. பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

5. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

102. *Notification issued with G.O. Ms. No. 4259, Home, dated the 15th December 1966, making certain amendments to the Madras Cinemas (Regulation) Rules, 1957, published at pages 79 to 104 of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated the 30th January* 1957. [*Laid on the Table of the House under section* 10 (3) *of the Madras Cinemas (Regulations) Act*, 1955 (*Madras Act IX of 1955*).]



*1967, மார்ச் 17]*

* 102-A. *Notification published in the Fort St. George Gazette* Extraordinary, *dated 10th and 24th January 1967 relating to the corrections issued to the Delimitation Order No. 9, in Orders Nos. 9-D and 9-E respectively. [Laid on the Table of the House under section 10 of the Delimitation Commission Act, 1962 (Central Act* 61 *of* 1962).]

103. *Notification issued with G. O. Ms. No.* 2351, *Public (Services-A) Department, dated the 7th November 1966, making an amendment to the Madras Public Service Commission Regulations,* 1954, *published with Public (Services) Department Notification No.* 50, *dated the 5th May 1954 at pages 759-763 of Part I of the* Fort St. George Gazette, *dated the 9th June 1954, as subsequently amended relating to the redesignation of the post of Officer-in-charge, State Information Centre. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]*

104. *Notification issued with G.O. Ms. No. 2680, Rural Development and Local Administration, dated the 22nd November 1966, making an amendment to the Rural Development and Local Administration Department Notification III No. 1241 of 1966, dated the 30th August 1966 published at page 1762 of Part III of the* Fort St. George Gazette, *dated the 28th September 1966. [Laid on the Table of the House under section 25 (4) of the Madras Public Buildings (Licensing) Act, 1965 (Madras Act 13 of 1965).]*

105. *Notification issued with G.O. Ms. No. 2895, Rural Development and Local Administration, dated the 19th December 1966, directing that the proceedings relating to the general revision of assessment books in respect of the Municipalities specified in the schedule be stayed for a further period of one half-year commencing on and from the 1st April 1967. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]*

## இணைப்பு.

உறுப்பினர்கள் திரு. எஸ். அழகுத் தேவரும், திரு. சு. சீனிவாசனும் மதிப்பிற்குரிய சபாநாயகரின் அறையில், சபாநாயகர் முன்னிலையில் 1967 மார்ச் 16-ம் தேதி உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

உறுப்பினர் திரு. ஜே. எஸ். இராசு 1967 மார்ச் 17-ம் தேதி மதிப்பிற்குரிய சபாநாயகர் அறையில், சபாநாயகர் முன்னிலையில் உறுதி மொழி எடுத்துக் கொண்டார்.

# தமிழகச் சட்டப் பேரவை.

## சனிக்கிழமை, மார்ச் 18, 1967.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 8-30 மணி அளவில் மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர், திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் நட்சத்திரக்குறி (*) யிடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. அறிவிப்புகள்.

### (அ) அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் நியமனம்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** இன்று கேள்விகள் இல்லை. அடுத்தாற்போல் நான் இந்தச் சட்டப்பேரவைக்குத் தெரிவிக்க வேண்டிய அறிவிப்பு ஒன்றுள்ளது. தமிழக சட்டப்பேரவை விதிகளின் 193-வது விதியின் 1-வது உட்பிரிவின்கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை, அலுவல் ஆய்வுக் குழு (பிஸினஸ் அட்வைசரி கமிட்டி) உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்
2. மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்—அவை முதல்வர்
3. மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி
4. மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்
5. திரு. அ. ப. அழகமுத்து
6. திரு. பி. ஜி. கருத்திருமன்
7. திரு. கே. விநாயகம்
8. திரு. பி. கே. மூக்கையா தேவர்
9. திரு. அ. பாலசுப்பிரமணியன்
10. திரு. ஆ. கு. சுப்பையா
11. திரு. ஏ. ஆர். மாரிமுத்து
12. திரு. க. ர. நல்லசிவம்
13. டாக்டர் ஹபிபுல்லா பேக்
14. திரு. ம. பொ. சிவஞானம்

இந்தக் குழுவின் எல்லாக் கூட்டங்களிலும் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் கலந்துகொள்ள அனுமதி உண்டு. இந்தக் குழுவின் முதற் கூட்டம் இன்று காலை 10 மணியளவில் பேரவைத் தலைவர் அறையில் நடைபெறும் என்று அறிவிக்கிறேன்.

[1967, மார்ச் 18

## 2. கவர்னர் பேருரையின் மீது விவாதம்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : கவர்னர் அவர்களுடைய உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை, திரு. எம். எஸ். மணி அவர்கள் முன்மொழிவார்கள்.

* **திரு. எம். எஸ். மணி** : கனம் மன்றத் தலைவர்களே, "கவர்னர் அவர்களுக்கு நன்றியுரை கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கவேண்டும்";

"1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் தேதியன்று இரண்டு சபைகளும் சேர்ந்த சட்டப்பேரவையின் கூட்டத்தில் கவர்னர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு* தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**திரு. மு. சண்முகம்** : நான் அதை வழிமொழிகின்றேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த திரு. எம். எஸ். மணி அவர்கள் இப்பொழுது பேசுவார்கள்.

* **திரு. எம். எஸ். மணி** : மன்றத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் நேற்று இந்த மாமன்றத்தில் ஆற்றிய உரையின்போது தற்போது நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற அனைவருக்கும் தன்னுடைய பாராட்டுதலையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து இருக்கிறார்கள். அப்படிப் பாராட்டுதலும், வாழ்த்துக்களும் அவர்கள் தெரிவிக்கின்ற நேரத்திலே சென்ற தடவை தேர்தலிலே வெற்றிபெற்று இந்தத் தடவையும் தேர்தலிலே போட்டியிட்டு வெற்றிபெற்றவர்களுக்குப் பாராட்டுதலையும், புதிதாக 1967 தேர்தலிலே வெற்றிபெற்றவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்திருக்கிறார்கள். அதே நேரத்திலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 1962 தேர்தலில் வெற்றிபெற முடியாதவர்கள் பலர் இன்றையதினம் 1967 தேர்தலிலே வெற்றியடைந்திருக்கிறார்கள். 1962 தேர்தலிலே வெற்றிபெற முடியாதவர்கள் அதற்குப் பிறகு நல்ல முறையிலே பணியாற்றியதால் இப்பொழுது வெற்றி பெற்றிருக்கிறார்களென்று கருதுகிறேன். நான்காவது பொதுத் தேர்தல் குறித்து கவர்னர் அவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் தேர்தலை அகில உலகம் பூராவும் கூர்ந்து கவனித்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உள்ளபடியே நடைபெற்றது மிகப் பெரிய தேர்தல்தான். அதுவும் தமிழகத்தைப் பொறுத்த அளவிலே யார் ஆட்சிக்கு வருவார்கள் என்ற சர்ச்சை நாடு பூராவும் இருந்தது. எந்தக் கட்சி வெற்றிபெறும் என்பதை அகில உலகம் பூராவும் கூர்ந்து கவனித்தது. இந்தத் தேர்தல்

* 135–141-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது. கவர்னர் பேருரையின் தமிழாக்கம் 141–150-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1967, மார்ச் 18] [திரு. எம். எஸ். மணி]

ஜனநாயக முறையிலே நடைபெற்றதோடு மட்டுமல்லாமல் எந்த
விதமான அசம்பாவிதமும் ஏற்படாமல், மற்ற மாநிலங்களைப்
போன்று எந்தவிதமானத் தொந்தரவும் இல்லாமல் அமைதியாக
நடைபெற்றதற்குக் காரணம் எதிர்க்கட்சியும், ஓரளவு ஆளுங்கட்சி
யும்தான் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள
ஆசைப்படுகிறேன். அவ்வளவு கண்ணியமாக நடைபெற்ற காரணத்
தால்தான் வேண்டத்தகாத, விரும்பத்தகாத விளைவுகள் பெரிய
அளவிற்கு எதுவும் ஏற்படவில்லை. நான்காவது பொதுத் தேர்தலி
லே உள்ளபடியே முன்பு எதிர்க்கட்சியாக இருந்தவர்கள் இன்றைய
தினம் ஆளுங்கட்சியாக மாறியிருக்கிறார்கள். ஆளுங்கட்சியாக
அன்றையதினம் இருந்தவர்கள் இன்றையதினம் எதிர்க்கட்சியாக
மாறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சம்பவம் ஏற்படக்கூடிய
சூழ்நிலை இருக்கிறதென்று இதற்கு முன்னாலே எங்கள் கட்சியைச்
சேர்ந்த தலைவர்கள் எடுத்துச் சொன்ன நேரத்திலே அப்பொழு
திருந்த ஆளுங்கட்சியினர் கவனிக்காமல் இருந்தார்கள். மக்களு
டைய குறைகளை நாங்கள் எடுத்துச்சொன்ன நேரத்திலே அதற்கு
மதிப்புத் தராத நிலை இருந்து வந்தது. ஆனால் எங்களுக்கு ஒரு
நம்பிக்கை இருந்தது. நாங்கள் அப்பொழுது, அந்தப் பக்கத்திலே
இருக்கிறவர்கள் இந்தப் பக்கத்திற்கு மாறுவார்கள், இந்தப் பக்கத்
திலே இருக்கிறவர்கள் அந்தப் பக்கத்திற்கு மாறுவார்கள் என்று
சொன்ன நேரத்திலே கூட அவர்கள் அதைப்பற்றி ஏளனம் செய்து
சிரித்தார்கள். மக்களுடைய நம்பிக்கை எங்களிடம் இருந்தது.
ஆளுங்கட்சி எதிர்க்கட்சியாகவும், ஆளும்
அருகேல்தான் இன்று எதிர்க்கட்சி
கட்சி எதிர்க்கட்சியாகவும் மாறியிருக்கிறது. அகில இந்தியா
விலேயே எந்த ஓர் அரசியல் கட்சியும் வெற்றி பெறாத அளவுக்கு
மிகப் பெரிய வெற்றியை மக்கள் தேடித் தந்திருக்கிறார்கள்.
தமிழகத்தைப் பொறுத்த அளவிலே பாராளுமன்றத்திற்குப்
போட்டியிட்ட எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள்
போட்டியிட்டார்களோ அத்தனை பேர்களும் வெற்றிபெறக்கூடிய
முறையிலே மக்கள், டில்லியிலே நம்முடைய குறைகளை எடுத்துச்
சொல்வதற்கு போட்டியிட்ட அத்தனைபேர்களையும் தேர்ந்தெடுத்து
பெரிய ஒரு வெற்றி வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள் அவர்களுக்
கெல்லாம் நான் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத்
தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு மட்டுமல்ல; கடந்த கால நிலைமைகளைப் பற்றியும்
கவர்னர் பெருமான் அவர்கள் சூசகமாக குறிப்பிட்டார்கள்.
கடந்த பத்தாண்டு காலமாக காங்கிரஸ் கட்சி வேறு எந்தக்
கட்சியும் ஆட்சிக்கு வர முடியாத அளவுக்கு இந்த நாட்டிலே
ஆட்சி நடத்திக்கொண்டிருந்தது. அவர்கள் ஆட்சி நடத்திக்
கொண்டிருக்கிற நேரத்திலேயே தேர்தல் முறைகளைப் பற்றிய பல
குறிப்புகளைச் சொன்னோம். அந்தக் குறிப்புகளை அன்றையதினம்
அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த ஆட்சியின் நிலைமையை
பொட்டி அப்போது அரசாங்க ஊழியர்கள் எப்படி பணியாற்றி
ஞர்களோ அதைப் போலவே இன்றையதினம் அரசாங்கத்திற்கு
நல்ல முறையில் ஒத்துழைப்புத் தருகிறார்கள் தேர்தல் நேரத்தில்
பொதுவாக அரசாங்க ஊழியர்கள் எந்தவித அரசியலிலும் சம்பந்

தப்படாமல் நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுக்கு இந்த நேரத்திலே பாராட்டுதலை தெரிவிக்க விரும்புகிறேன். பாராட்டுதலைத் தெரிவிக்கின்ற நேரத்தில், ஓரிரு இடங்களில் சிறு சிறு தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். தேர்தலுக்கு முன்னாலே அரசாங்கம் எல்லா கலெக்டர்களுக்கும் ஒரு தாக்கீது அனுப்பியிருந்தார்கள். தேர்தல் முடிகிற வரையில் எந்த அதிகாரியையும் மாற்றக்கூடாது என்பதுதான் அந்த உத்தரவு. ஆனால் திருச்சி நகரத்தைப் பொருத்தமட்டில் தேர்தல் அதிகாரியாக இன்னார் வர வேண்டும் என்று அங்கு போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் ஒருவர் விரும்பியதன் பேரில் அன்றையதினம் இருந்த அரசாங்கம் அவர் குறிப்பிட்ட அதிகாரியை தேர்தல் கமிஷனராக அங்கே கொண்டு வந்து போட்டார்கள். அதற்காக கலெக்டரிடத்தில் நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்தோம். கலெக்டர் அவர்கள் 'நீங்கள் என்ன கோரிக்கையை விரும்புகிறீர்கள்' என்று கேட்டதற்கு நாங்கள் அந்த அதிகாரியிடத்தில் ஓட்டுப் பெட்டிகளை ஒப்படைக்கக்கூடாது என்றும், மற்றும் பிரசைடிங் ஆபீசர் போன்ற அதிகாரிகளை நியமிக்கும் பொறுப்பு அவரிடம் இருக்கக்கூடாது என்றும் எடுத்துச் சொன்னோம். அதன்படி கலெக்டர் அவர்கள் ஏற்பாடு செய்த காரணத்தால் தேர்தல் அங்கு நல்ல முறையில் நடந்தது. இந்த அதிகாரி நியமனத்தைப் பற்றி நாங்கள் இந்த அரசாங்கத்துக்கும், மத்திய அரசாங்கத்துக்கும், தேர்தல் கமிஷனுக்கும் தந்திகள் கொடுத்தும்கூட பலன் இல்லாமல் போய் விட்டது. ஆகவே, எதிர்காலத்திலே இப்படிப்பட்ட குற்றங்களைக் களைந்தெறிய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் அவர்கள் புதிய அரசாங்கத்தைப் பற்றிச் சொல்லு கின்றபோது, புதிய அரசாங்கம் எல்லோருடைய ஆதரவையும், ஆலோசனைகளையும் பெற்று ஆட்சி நடத்துகிறது என்று குறிப்பிட்டார்கள். உள்ளபடியே ஒரு அரசியல் கட்சிக்கு இருக்க வேண்டிய கண்ணியம் நம்முடைய அரசாங்கத்துக்கு இருக்கிறது. அரசாங்கப் பொறுப்பு கைக்கு வந்தவுடன் நாட்டிலே உள்ள அறிஞர்கள், அனுபவசாலிகள் அத்தனை பேருடைய ஆலோசனைகளையும், ஆதரவையும், அன்பையும் பெற்று ஆட்சியை நடத்துவது உள்ளபடியே பாராட்டத்தக்கது என்பதைக் கவர்னர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இதற்கு முன்னாலே காங்கிரஸ் ஆட்சி இருந்தது. அப்போது நாங்கள் எதிர்க்கட்சியிலிருந்து மக்களுடைய குறைகளை எடுத்துச் சொன்ன நேரத்தில் கவனிக்காமல் விட்டு விட்டார்கள். எதிர்க் கட்சியினர் புள்ளிவிவரங்களைக் கேட்கிற நேரத்தில் அன்றைய அரசாங்கம் தவறான புள்ளிவிவரங்களைக் கொடுத்தது. டெவலப் மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் கொடுத்த பதிலுக்கும், அரசாங்கம் கொடுக்கக்கூடிய புள்ளிவிவரத்திற்கும் சம்பந்தம் இல்லையே என்று எடுத்துச் சொன்ன நேரத்தில் அதிலே அக்கறை காட்டாமல் இருந் தார்கள். ஆனால், இன்றுள்ள அரசாங்கம் எதிர்க்கட்சிகள் எதைச் சொன்னாலும் அதிலே உண்மையிருக்கிறதா என்று கண்டறியும்





என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்று புள்ளிவிவரத்தை தவறாகக் கொடுத்ததும் விலைவாசி உயர்வுக்கு ஒரு காரணமாக இருந்தது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக, தினசரி ரேடியோவில் சொல்லக்கூடிய விலைக்கும் கடையில் விற்கும் விலைக்கும் சம்பந்தமே இல்லாமல் இருந்தது. ரேடியோவில் சொல்லுகின்ற விலையை வைத்து கடைகளில் கேட்கின்ற நேரத்தில் தகராறுகள் ஏற்படக் கூடிய நிலைமைகள் ஏற்பட்டன. இதைப் பற்றி அன்று எடுத்துச் சொன்ன நேரத்தில் அரசாங்கம் அதைப் பற்றிக் கவனிக்கவில்லை. அந்த நிலைமைகள் எல்லாம் இன்றையதினம் மாறும் என்ற நல்ல நம்பிக்கை இருக்கிறது.

அதைப்போல் நம்முடைய நாட்டிலே உள்ள மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள். அந்தப் போராட்டம் ஏன் நடை பெற்றது, எதற்காக நடைபெற்றது, அந்த மாணவர்களைக் கூப்பிட்டு விசாரிக்க வேண்டாமா என்றெல்லாம் மிகத் தாழ்மையோடு அமைச்சரவையைப் பார்த்துக் கேட்டோம். ஆனால் அதை அலட்சியம் செய்தார்கள். வந்த மாணவர்களைச் சந்திக்க மறுத் தார்கள். அந்த மாணவர்களுக்குக் களங்கம் ஏற்படுகிற வகையில், யாரோ பிரியாணி வாங்கிக் கொடுத்ததாகச் சொன்னார்கள். அதனுடைய விளைவுதான் ஆட்சி மாறுவதற்கு ஒரு காரணமாக அமைந்தது என்பதை இன்றையதினம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, மக்கள் பட்டினியால் செத்தார்கள் என்று சொன்ன நேரத்தில் அன்றையதினம் உணவு அமைச்சராக இருந்த வர்கள் 'அவ்வாறு செத்ததை நாங்கள் பார்க்கவில்லை' என்று சொன்னார்கள். பட்டினியால் செத்தார்கள் என்று சொன்னால் உடனடியாகச் சாவதில்லை; சிறுகச் சிறுகத்தான் உயிர் போகும். அதைப்போலவே, இந்த மன்றத்திலே இன்றையதினம் இருக்கிற நண்பர் நல்லசிவம் அவர்கள், அன்று தன்னுடைய தொகுதியைப் பற்றிய ஒரு குறிப்பைச் சொன்னார்கள். 'என்னுடைய தொகுதியில் பெண்கள் உணவுக்கு வழி இல்லாமல், வேலை கிடைக்காத காரணத் தால் தலையில் இருக்கும் முடியை அமெரிக்காவிலிருந்து வாங்க வருபவர்களுக்கு விற்பனை செய்கிறார்கள்' என்று எடுத்துச் சொன்ன நேரத்தில் அன்று ஆளும் கட்சியில் இருந்தவர்கள் சிரித் தார்களே தவிர, நம்முடைய நாட்டு மக்களின் பரிதவிப்பை உணர வில்லை.

இந்த நிலைமைகள் எல்லாம் போக நாம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு மத்திய சர்க்கார் நமக்கு நல்ல உதவிகளைச் செய்யவேண்டும். இன்றைக்கு இருக்கின்ற அரசியல் அமைப்பு முறையில், மாகாண சர்க்கார் சுயேச்சையாக ஏதும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறது. அதை நம்முடைய சர்க்கார் மாற்றியமைக்க முயலவேண்டும். நல்ல அதிகாரங்களைப் பெற வேண்டும். சுயேச்சையாகச் செயல்படுகிற அளவுக்கு நிலைமைகளை உண்டு பண்ண வேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்த நாட்டு மக்கள் எல்லோராலும் பேசப்படுகிற உணவுப் பிரச்சினையைச் சமாளிக்க முடியும். இந்த உணவுப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு

எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்வோம் என்று முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த வகையில் அது முதல் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்பட்டு, நம்முடைய மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு கொண்டு போனால் லாரியைப் பறிமுதல் செய்வதோடு மட்டுமல்ல; கொண்டு போகிறவர்கள் யாரோ அவர்களுக்கு அபராதம் போடுவதோடு கூட சிறைத் தண்டனையும் கொடுத்தால்தான் பயம் ஏற்படும் என்ற நிலையில் ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன. கடந்த நான்கு, ஐந்து தினங்களில் மூன்று லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புள்ள தானியங்களைக் கைப்பற்றி இருக்கிறது. இப்படிப்பட்ட நிலை அன்றையதினம் இருந்திருந்தால் உணவுப் பண்டங்கள் கள்ள விலையில் விற்கப்படாமல் இருந்திருக்க முடியும்; வெளி மாநிலங்களுக்கும் கள்ளத்தனமாகச் சென்றிருக்காது. அவ்வாறு கள்ளத்தனமாக எடுத்துச் செல்லுகின்றவர்கள் அத்தனை பேரும் தங்களுக்கு வேண்டியவர்கள் என்ற காரணத்தால் அன்றையதினம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் விட்டு விட்டார்கள். இன்றையதினம் அவர்களுக்கெல்லாம் பயம் ஏற்பட்டிருக்கிற காரணத்தால் வெளியே தானியங்கள் செல்லுகின்ற நிலைமை இல்லை. வெளி மாநிலங்களுக்கு அரிசி தேவைப்பட்டால் அரசாங்கத்தின் மூலம் அனுப்பலாம்; இந்தச் சபையோ, மந்திரி சபையோ எவ்வளவு அனுப்ப வேண்டுமென்று முடிவு செய்து அனுப்பலாம. அப்படிப்பட்ட முறையில் கேரள முதலமைச்சர் பதவியேற்ற சில தினங்களுக்குள் நம்முடைய முதலமைச்சர் அவர்களைச் சந்திக்கும் நிலைமை ஏற்பட்டது. திரு. ஏ. கே. கோபாலன் அவர்களும் அந்த நிலைமையை எடுத்துச் சொல்லுகின்ற நிலைமை ஏற்பட்டது. இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே இங்கே உள்ள நிலைமை என்னவென்றால் கேரளாவுக்கு அரிசி கடன் கொடுக்க வேண்டியிருக்கிறது. முன்னாலே இருந்த அரசாங்கம் பட்ட கடனை இன்றையதினம் தீர்க்க வேண்டியிருக்கிறது. அந்த வகையில் பார்த்தால் கிட்டத்தட்ட 18,000 டன் அரிசி அவர்களுக்கு நாம் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதையும் கொடுப்பது என்று நாங்கள் இருக்கிறோம். அதே நேரத்தில் நம் நிலைமை பற்றியும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இங்கு கொள்முதல் செய்யப்படுகிற நிலைமை பற்றி நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். கொள்முதல் செய்கிற நிலைமையில் முன்பிருந்த நிர்ப்பந்தம், முன்பிருந்த பலவந்தம் எவ்வளவு என்று எண்ணிப் பார்க்கவேண்டும். முன்பு யாரை நிர்ப்பந்தப்படுத்தி, யாரை பயமுறுத்தி வாங்கினார்கள்? அரை ஏக்கர், ஒரு ஏக்கர் வைத்திருந்தவர்களை நிர்ப்பந்தப்படுத்தி வாங்கினார்கள். ஆனால், இன்றையதினம் அவர்களிடம் கொஞ்சம் மரியாதையாக வசூல் செய்யவேண்டும், அவர்கள் இந்த நாட்டு மக்கள் என்ற எண்ணத்தில் வசூலிக்கவேண்டுமென்று இன்றையதினம் தாக்கீது பிறப்பித்திருப்பதாக நான் அறிகிறேன். ஏனெனில் ஒரு ஏக்கருக்கு 12 மூட்டை என்று வைத்துக் கொள்வோம். 12 மூட்டை லெவி கேட்டார்கள். ஆனால் 12 மூட்டை விளையவில்லை என்றால், எட்டு மூட்டைதான் விளைந்தது என்று சொன்னால் நான்கு மூட்டை விலைக்கு வாங்கிக் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் அன்று இருந்தது. ஆனால் இன்றையதினம் அந்த நிலையை மாற்ற வேண்டு





மென்று அதை மாற்றுவதற்கு சாதகமாக அரை ஏக்கர், ஒரு ஏக்கர் என்று வைத்திருப்பவர்களுக்கு இன்றையதினம் கொஞ்சம் பாதுகாப்பு இருக்கிறது. அதிகமான எண்ணிக்கை உள்ள நிலம் இருக்கிறவர்களிடமிருந்து அதிகமாக வசூல் செய்யவேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. அப்படி வசூல் செய்தால்தான் இன்றைய தினம் நாட்டு மக்களுக்கு நல்ல அரிசியை, குறைந்த விலையில் கொடுப்பதற்கு ஒரு நல்ல நிலை ஏற்படும். அதே நேரத்தில், தேர்தல் நேரத்தில் நாம் ஒன்றை கவனித்தோம். மக்களுடைய வோட்டுகளை பெற வேண்டும் என்பதற்காக இதற்கு முன்னால் இருந்த காங்கிரஸ் சர்க்கார் ஒரு முறையைக் கையாண்டது. அன்றையதினம் லெவி முறையில் நெல் கொள்முதல் செய்யவேண்டாம் என்று தாக்கீது பிறப்பித்து விட்டது. இன்றையதினம் கோடவுனிற்குச் சென்று பார்க்கிறபோது அரிசி ஸ்டாக் இல்லை, ஒரு நாளைக்குத்தான் அரிசி இருக்கிறது. 500 டன்தான் இருந்தது. அதுவும் கெட்டுப் போய் இருந்தது. இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் நாம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். தேர்தல் வருகிறது என்று சொன்னால் சட்டத்தைத் தளர்த்துவதும் தேர்தல் முடிந்த பிறகு சட்டத்தை கடுமையாக்குவது என்ற பாலிசியை முன்பிருந்த அமைச்சரவை மேற்கொண்டிருந்தார்கள். அவற்றையெல்லாம் இன்றையதினம் மாற்றியமைப்பதற்கு ஒரு வழிவகை இருக்கிறது என்பதைத்தான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். விலைவாசி நாட்டில் உயர்ந்து கொண்டேயிருக்கிறது. விலை ஏறிக்கொண்டே போகிறது. அதைத் தடுக்க வேண்டுமென்று அன்றையதினம் இருந்த அமைச்சரவையை பல நேரத்தில் நாங்கள் கேட்டுப் பார்த்தோம். அதற்கு அன்றையதினம் அமைச்சரவை சொன்ன பதில் சூப்பர் மார்க்கட்ஸ் வைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். சூபர் மார்க்கட்ஸ் சென்னையில், திருச்சியில், கோவையில் வைக்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள். இப்படி சூப்பர் மார்க்கட்ஸ் வைக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் விலையை குறைக்க முடியுமா என்று கேட்டோம். சூப்பர் மார்க்கட்ஸ் வைத்தார்களே தவிர நிலைமை என்ன என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். திருச்சியிலே ஒரு சூப்பர் மார்க்கட் வைத்தார்கள். அது வைத்ததற்குப் பிறகு அங்கு ஜவுளிகள், மற்றப் பண்டங்களை வாங்க மக்கள் போனார்கள். ஒரு ஃபின்லே வேட்டி 11 ரூபாய் என்று சொன்னால் 11 ரூபாய்க்கு ஒரு ஜோடி வேட்டி கொடுத்தார்கள். அங்கு வந்திருந்த வேட்டிகளை ஜோடியாக வைத்திருந்தார்கள். 11 ரூபாய்க்கு ஒவ்வொரு ஜோடி வேட்டி கொடுத்து விட்டார்கள். வியாபாரம் தெரியாதவர்களை அங்கு போட்ட காரணத்தினால் ஒரு வேட்டி 11 ரூபாய் என்று தெரியாது 11 ரூபாய்க்கு ஒரு ஜோடி கொடுக்கிற நிலைமை ஏற்பட்டது. அதேபோல்தான் வாசனைத் திரவியங்களும். அதேபோல்தான் மற்ற பண்டங்களும். இப்படி விற்று ஏராளமான நஷ்டம் ஏற்பட்டது. அது மட்டுமல்ல. இன்றையதினம் அங்கு போட்டிருக்கிற அதிகாரிகள், சிப்பந்திகள் இவர்களின் சம்பளம் மற்றவைகளை கணக்குப் பார்த்தால் நாள் ஒன்றுக்கு 15,000 ரூபாய்க்கு விற்பனையானால்தான் அவர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியும் நஷ்டம் ஏற்படாமல்— லாபம் கிடைக்கா விட்டாலும் கவலையில்லை, நஷ்டம் ஏற்படாத நிலை ஏற்படும். ஆனால்

நிலைமை என்ன? நாள் ஒன்றுக்கு 10,000 ரூபாய் அளவிற்கு விற்பதற்கு வழியில்லை. அதே நேரத்தில் நாள் ஒன்றுக்கு 10,000 ரூபாய் அளவிற்கு விற்பனையாக வேண்டும் என்றால் எவ்வளவு ஸ்டாக் வேண்டும்? எவ்வளவு மூலதனம் போடவேண்டும்? அந்த மூலதனத்தைப் போடாமல் இன்றையதினம் தினசரி 10,000 ரூபாய்க்கு விற்பனையை எதிர்பார்த்தால் அது எப்படி முடியும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். எனவே அதில் கவனம் செலுத்தவேண்டும்.

அடுத்தபடியாக, கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் வேளாண்மைக்கு முதல் இடம் கொடுத்து வேளாண்மை பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். வேளாண்மையைப் பொறுத்தவரையில் இன்றையதினம் தஞ்சை மாவட்டத்தில் ஏ.டி.டி. 27 என்ற தானியத்தைப் பயிரிடுகிறார்கள். அது அதிகப்படியான விளைச்சலைத் தருகிறது. அதேபோன்று கோவைப் பகுதியில் ஸி.ஓ. 25 என்ற தானியத்தைப் பயிரிடுகிறார்கள். இவை பயிரிடுகிற நிலை பற்றி கவனிக்கவேண்டும். ஏ.டி.டி. 27 என்பதற்கு எவ்வளவுக்கெவ்வளவு அதிகப்படியாக உரம் போடுகிறோமோ அந்த அளவிற்கு விளைச்சலை கவனிக்கவேண்டும். ஏ.டி.டி. 27 என்பதற்கு எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக விளைகிறதோ அதேபோன்று அதைவிடக் கீழான நிலைமைக்குப் போய் விடுகிறது. ஆகவே நல்லவிதத்தில் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்றால் நல்ல தரமான உரங்களை தரவேண்டும். உரம் தேவை என்று கேட்கப்படுகிறபோது உள்ள படியே கூட்டுறவு முறையில் அல்லது பஞ்சாயத்து யூனியன் மூலம் உரங்கள் நல்லமுறையில் கொடுக்கப்படவில்லை என்று பல புகார்கள் அன்றையதினம் ஆளும் கட்சியில் இருந்தவர்களே கூறினார்கள். விவசாயத்தைப் பெருக்குவதற்கு தரமான விதைகளை விவசாயி களுக்கு கொடுக்கவேண்டும். ஆனால் பொறுக்கு விதைகள் கொடுக்கிறோம், பொறுக்கு விதைகள் கொடுக்கிறோம் என்று அன்றையதினம் குறிப்பிட்டார்கள். ஆனால் அந்த விதைகளை வாங்கிப் பார்க்கிறபோது அந்த விதைகளைப் பொறுக்க வேண்டிய நிலைதான் இருந்தது, காரணம் அவ்வளவு பதர் இருந்தது. யார் யார் தங்களுக்கு வேண்டியவர்களோ அவர்களிடம் இருந்து அவற்றை கொள்முதல் செய்தார்களே தவிர சுத்தமான விதைகளா, தரமான விதைகளா என்று பரிசீலனை செய்வதில்லை. அதன் காரண மாகவும் பலயிடங்களில் விளைச்சல் மோசமாகவிருந்தது. ஆகவே விவசாய உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்றால் விவசாயி களுக்கு நல்ல தரமான விதைகள், தரமான உரங்கள் கொடுக்கப்பட வேண்டும். நல்ல உரங்கள் கொடுக்கவேண்டுமென்று சொல்லும் போது மத்திய அரசாங்கத்திலிருந்து கிடைப்பதில் பற்றாக்குறை இருக்கிறது. கேட்ட அளவிற்கு இன்றையதினம் உரம் கிடைப்ப தில்லை. அதேநேரத்தில் நம் நாட்டிலிருந்து ஏராளமான அளவிற்கு பிண்ணாக்கு இன்றையதினம் வெளிநாடுகளுக்குச் செல்கிறது. இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நம் கப்பல்களில் நிறைய பிண்ணாக்கு செல்கிறது. அங்கு சென்று அது உரமாக்கப்படுகிறது. அதை நாமே பயன்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன். அவற்றை நம் வயல்களில் போடாமல் வெளி





நாடுகளுக்குச் செல்கிற காரணத்தால் இன்றையதினம் அது அவர்
களுக்கு நல்லமுறையில பயன்படுகிறது. ஆகவேதான் உரத்தை
நம் நாட்டில் தயார் செய்யவேண்டும் என்பதை கவர்னர் பெருமான்
அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி உரத்தை நம்
தமிழகத்தில் தயார் செய்து இந்த நாட்டு விவசாயிகளுக்கு, உழவர்
களுக்கு அதைக் கொடுக்கவேண்டும். விவசாயம் செய்கிற உழவர்
களுக்கு நல்லமுறையில் கடன் வசதி செய்து கொடுக்கவேண்டும்.
அப்படி கடன் வசதி செய்து கொடுக்க பல தொகைகளை ஒதுக்கி
யிருக்கிறோம் என்று சொன்னாலும் விவசாயிகளுக்கு நேரடியாக
நல்லமுறையில் அது கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு நேரடி
யாக கிடைப்பதில்லை. இடையில் பலர் அதை அபகரித்துக் கொள்
கிறார்கள் என்றெல்லாம் குறிப்பிட்டோம். அந்த நிலையெல்லாம்
மாற்றப்படவேண்டும் என்று கவர்னர் பெருமான் அவர்கள் குறிப்
பிட்டிருக்கிறார்கள். உள்ளபடியே அந்த நிலை இன்றையதினம்
மாறிக் கொண்டேயிருக்கிறது. கவர்னர் பெருமான் அவர்கள் தம்
உரையில் சேலம் உருக்காலைபற்றி சொல்லியிருக்கிறார்கள். சேலம்
உருக்காலைபற்றி இந்த மாமன்றத்தில் மூன்று, நான்கு ஆண்டு
களாகப் பேசிப் பார்த்தோம். சேலம் உருக்காலை வந்து விடும்,
நிச்சயமாக வந்துவிடும், அப்படி வராவிட்டால் ராஜிநாமா செய்
வோம், அதற்காக முயற்சிகள் எடுக்கிறோம், அதற்கான பேச்சு
வார்த்தைகள் நடக்கிறது, ஜப்பானில் இருந்து வந்திருக்கிறார்கள்,
வெளிநாடுகளில் இருந்து வந்து பார்க்கிறார்கள் என்றெல்லாம்
பேசிக் கொண்டிருந்தார்களே தவிர இந்த மன்றத்தில் அதற்காக
அனைவரும் சேர்ந்து நல்லதொரு முடிவை அன்றையதினம் எடுக்க
முடியவில்லை. ஆக, சேலம் உருக்காலை நிச்சயமாக நமக்கு
வேண்டும், அதற்காக இந்தச் சர்க்கார் பாடுபடும். ஆளும் தரப்பில்
இருந்து மட்டுமல்லாது எதிர்தரப்பில் இருந்தும் அதற்கு நல்ல
ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிதாக இன்றையதினம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்
டிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். அதன் நிலைமை பற்றி
எண்ணிப் பார்க்கவேண்டும். மந்திரிசபை அமைத்தவுடன்
ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள எங்கள் ஒப்பற்ற
தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் முதலில் தங்கள் சம்பளத்தை
பாதியாக குறைத்துக் கொள்வோம் என்று குறிப்பிட்டார்கள்.
இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், பொது மக்களின் பிரதி
நிதிகளாக வந்திருக்கிற நிலையில் ஆயிரம் ரூபாயா என்று மக்கள்
எண்ணுகிற அளவிற்கு இருக்கக் கூடாது, ஆகவே அதைக்
குறைத்துக் கொள்ளவேண்டும், ஆடம்பரங்களைக் குறைத்துக்
கொள்ளவேண்டும் என்பதற்காக சம்பளத்தைக் குறைத்துக்
கொண்டார்கள். இப்படி சம்பளத்தைக் குறைத்துக் கொண்டு
சென்னையில் குடும்பம் நடத்த முடியுமா என்பது வேறு. அப்படிச்
செய்திருப்பது ஏழை எளிய மக்களைப்போல் இருக்கவேண்டும்
என்பதற்காகத்தான். அது மட்டுமல்ல. அன்றையதினம்
ஆடம்பரக் கார்களை வாங்கினார்கள். ஏழைகளின் பிரதிநிதிகளாக
இருக்கிற நாம் 75,000 ரூபாய்க்கா கார் வாங்கவேண்டுமென்று
அன்று கேட்டோம். ஆனால் அதற்கு சரியான பதில் இல்லை. ஏதோ
ஒரு பதில் கொடுக்கப்பட்டது. ஒருவர் வாங்கியதைப் பார்த்து

[திரு. எம். எஸ். மணி] [1967 மார்ச் 18

இன்னொரு அமைச்சரும் வாங்கினூர். ஆனுல் இன்றையதினம் அத்தகைய ஆடம்பர கார் ஒரு அமைச்சருக்கும் இல்லை. சாதாரண கார்களில்தான் வருகிறூர்கள். ஏழை மக்கள், இப்படிப்பட்ட பெரிய காரிலா பவனி வருவது என்று நினைப்பார்கள். ஆகவே, அந்த வகையில் சாதாரண கார்களே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கூடுமானவரையில் எந்த அளவிற்கு வசதிகளைக் குறைத்துக் கொள்ளவேண்டுமோ அந்த அளவிற்கு குறைத்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பணத்தை மிதப்படுத்தி, ஆடம்பரச் செலவுகள், ஆர்பாட்டச் செலவுகள், வீண் விரயங்கள் இவற்றைத் தவிர்த்து—தங்கள் கட்சிக்காரர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும் என்பதற்காக சில இலாகாக்கள் உற்பத்தி செய்ததை அதையெல்லாம் இன்றையதினம் குறைத்து அந்தப் பணம் மக்களுக்குப் பயன்படுகிற அளவில் இந்த அரசாங்கம் நல்ல வழிவகைகளைக் காணும் என்று நம்புகிறேன். ஆகவேதான் நாங்கள் ஒரு புதிய பாடத்தைக் கற்றுக்கொண்டிருக்கிறோம். இன்று நாட்டிலே 19
முற்பகல் 9-00 ஆண்டுகாலமாக ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சி இந்தியா பூராவிலும் தனக்கு இருக்கிற பலத்தையெல்லாம் செலவழித்தும் இந்தத் தேர்தலிலே தோல்வி கண்டு விட்டது என்றூல், அப்படிப்பட்ட காங்கிரஸே தோல்வி கண்டு விட்டது சாதாரணமாகத் தமிழகத்திலே இருக்கிறவர்கள் தவறூன வழியில் சென்றூல் நமக்கும் அந்தப் பாடம் பொருந்தும் என்பதால் நல்ல முறையில் ஆட்சி அமைய பாடுபடுவோம் என்று கவர்னர் அவர்கள் சூசகமாகச் சொல்லியிருக்கிறூர்கள். அப்படிப்பட்ட கவர்னர் உரைக்கு எங்கள் கட்சியின் சார்பிலும், என் சார்பிலும் நன்றி தெரிவித்து இந்தத் தீர்மானத்தை முன் மொழிகிறேன், வணக்கம்.

* திரு. மு. சண்முகம்: கனம் அவைத் தலைவர் அவர்களே, தோழர் எம். எஸ். மணி அவர்கள் முன்மொழிந்து கவர்னர் பெருமான் அவர்கள் உரைக்கு நன்றியுரை அளிக்கும் தீர்மானத்தை நான் வழி மொழிந்து இரண்டொரு கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கவர்னர் பெருமான் அவர்கள் உரையிலே அவர்கள் குறிப்பிட்டபடி நடைபெற்ற தேர்தல் இந்த நாட்டு மக்களுடைய பொறுப்புணர்ச்சியை வெளிப்படுத்தக் கூடிய முறையிலே மக்கள் தாங்கள் இந்த நாட்டு ஆட்சியின் பொறுப்பை எப்படி பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஒரு உணர்வை அறிந்த முறையிலே இந்தத் தேர்தலை நடத்தியிருக்கிறூர்கள் என்று அவர்கள் குறிப்பிட்டதைப் பற்றி நான் பெரிதும் பாராட்டுகிறேன். குறிப்பாக, தமிழகத்திலே உள்ள மக்கள் நடைபெற்ற ஆட்சியின் நிலைமைகளை நன்கு உணர்ந்து, அந்த ஆட்சியினூலே நலன்கள் எதும் இல்லை என்று உணர்ந்து, மக்களின் நலனுக்காகப் பாடுபடும் ஆட்சி தேவை என்று உணர்ந்து, அந்தக் காரணத்தினூலே தங்களுக்கெனத் தேடிக் கொண்ட ஆட்சியை அவர்கள் பெரிதும் பாராட்டியிருப்பதைப் பற்றியும் நான் கவர்னர் அவர்களுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1967 மார்ச் 18] [திரு. மு. சண்முகம்]

கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலே ஆட்சியினர்
வகுத்த திட்டங்கள் பெரிதும் எதிர்பார்த்த அளவுக்குப் பலன்
அளிக்கவில்லை என்பதை அவர்கள் உரையிலே ஒப்புக்கொண்டிருக்
கிறூர்கள் என்பதற்காக அவர்கள் உரைக்குப் பாராட்டுதல் தெரி
வித்துக்கொள்ள விரும்புகிறேன். திட்டங்கள் பல வகுக்கப்
பட்டிருந்தும் கூட, அவைகள் ஏன் பலன் அளிக்க கூடிய வகையில்
செயல்படுத்தப்படவில்லை என்பதற்கான காரணங்களை அவர்கள்
கூறியிருக்கிறூர்கள். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலேயும்
அரசினர் பல பெரிய திட்டங்களை வகுத்தும், கோடிக்கணக்கான
ரூபாய்கள் செலவிட்டும் கூட, எதிர்பார்த்த அளவுக்குப் பலன்
கிடைக்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டதைப்பற்றி பெரிதும்
அவர்களைப் பாராட்டுகிறேன். எதிர்காலத்தில் மக்களுக்குப் பயன்
படும் அளவில் அரசு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள
வேண்டுமென்று அறிவுரை வழங்கியிருப்பதால், இன்றைய
அமைச்சரவை அந்தப் பொறுப்பை உணர்ந்து, மக்களுக்குப் பலன்
அளிக்கும் வகையில் ஆட்சியை மேற்கொள்ளும் நிலைமை இருக்
கிறது என்பதை கவர்னர் பெருமான் அவர்களுக்கு இந்தச்
சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அரசியல் துறையிலே மிக முக்கிய பிரச்னை, மக்களிடத்திலே
எழுச்சியை ஏற்படுத்தியிருக்கக் கூடிய பிரச்னை உணவுப் பிரச்னை
என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அரசாங்கம் மேற்
கொண்டிருக்கும் பல முயற்சிகளிலே, உற்பத்தி விஷயத்தில்
எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலன் அளிக்கும் வகையில், எதிர்
பார்த்த அளவு பலன் அளிக்கவில்லை என்று அரசு ஒப்புக்கொண்
டிருக்கிறது. அதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளில், விவசாயி
களின் நிலைமைகளில் அவர்கள் வாழ்க்கையை நடத்துவதிலும்,
உணவுப் பொருள்கள் உற்பத்தியில் குறைந்த செலவில் சீரிய
முறையில் உற்பத்தி செய்வதற்கு வழிவகைகள் அரசினர் திட்டங்
களில் அமைக்கப்பட்டிருந்தாலும், அவைகள் பயன்படக் கூடிய
முறையிலே செயல்படுத்தப்படாமல், விவசாயிகள் குறைந்த
செலவில் உற்பத்தியைப் பெருக்க வழிவகைகளைக் காண முடியாது
குறைபாடுகள் இருந்து வந்தன. அவைகளைப் போக்க இன்று
ஆட்சியிலே இருக்கிற அமைச்சரவை வேண்டிய முயற்சிகளை
எடுத்துக்கொள்ள வழிவகைகளை மிகவும் ஊக்கத்தோடு கவனிக்க
வேண்டும், அதில் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது
என்பதை கவர்னர் பெருமான் அவர்களுக்கு கவனப்படுத்த ஆசைப்
படுகிறேன்.

இன்றைய விவசாயிகளின் நிலைமையை கவனிக்கும்போது,
அவர்கள் வாழ்க்கையை நடத்துவதிலும், விளைபொருள்கள்
உற்பத்தியை மேற்கொள்ளுவதிலும் அதிகச் செலவில் தங்கள்
வாழ்க்கையை நடத்தும் நிலைமை இருக்கிறது. இதாப் பொருள்
களைப் பெறுவதிலும், உற்பத்திக்கு வேண்டிய பொருள்களைப்
பெறுவதிலும் குறைந்த செலவில் வாழ்க்கையை நடத்திப்
பொருள்களைப் பெறுவதற்கில்லாத நிலைமை இருந்து வருகிறது.
குறைந்த செலவிலே வேண்டிய வசதிகளைப் பெறுவதற்கு நிலையான
வழிகளை அரசாங்கம் செய்து வந்த வழிவகைகள் எந்த விதத்திலும்

பயன்பட்டதாகத் தெரியவில்லை. இந்த அமைச்சரவையில் பொறுப்பை மேற்கொண்டிருக்கிறவர்கள், விவசாயிகளின் உணவுப் பொருள் உற்பத்திச் செலவினங்களில் எந்தெந்த வகையில் குறைந்த வகையில் செலவினங்கள் ஏற்படவேண்டுமோ அதற்கான வழிகளைப் பரிசீலனை செய்து வருகிறார்கள் என்ற உறுதியை கவர்னர் பெருமான் அவர்களுக்கு அமைச்சரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாயிகளுக்காக விதைப் பண்ணைகள் வைத்து நடத்துவதிலே அரசாங்கம் மேற்கொண்டிருக்கிற முயற்சியில் இருக்கக் கூடிய குறைகளைப்பற்றி விவசாயிகளிடமிருந்து நான் அறிந்துள்ளவற்றை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயிகளின் தேவைக்காக ஏற்படுத்தப்பட்ட விதைப் பண்ணைகள் உண்மையில் பலன் தரக்கூடிய வகையில், நலன் தரக் கூடிய வகையில் இல்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இது விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து அறியப்படும் குறைபாடு ஆகும். இவைகளைப் பற்றி அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லப்பட்டிருந்தும் அவைகள் மீது கவனம் செலுத்தப்படவில்லை. விவசாயிகளுக்கு உதவி செய்வதற்காக விதைப் பண்ணைகள் ஏற்பட்டன; ஆனால் அவைகளால் பெறக் கூடிய பலன் சிறு அளவுக்குக்கூட இல்லாத முறையில் அவைகள் செயல்பட்டு வந்தன. விதைப் பண்ணைகளில் உண்மையான விதைகள் உற்பத்தி செய்யப் படவில்லை. உற்பத்தி ஆகக் கூடிய விதைகள் கூட பலன் தராத வகையில் உற்பத்தி செய்யப்பட்டு வந்திருக்கின்றன. இதிலே முக்கியமாக கவனம் செலுத்தி, விதைகளை நல்ல முறையில் உற்பத்தி செய்து கொடுக்க முக்கியமாக கவனம் செலுத்த வேண்டியதில் இந்த அமைச்சரவைக்குப் பொறுப்பு அதிகமாக உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்த முறையில் இந்த அமைச்சரவை கவனம் செலுத்தும் என்று கவர்னர் பெருமான் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உணவுப்பொருள்கள் விலைவாசி உயர்வு பற்றி இதுவரையில் அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகளில், கட்டுப்பாடுத் திட்டங்கள் மூலமாக எந்த வகையிலும் ஒழுங்கு செய்ய முடியாது இருந்தது. இந்த அமைச்சரவை பொறுப்பை மேற்கொண்டதிலிருந்து, தங்களுக்கு மக்களால் கொடுக்கப்பட்ட தீர்ப்பின் காரணமாக, விலைவாசி உயர்வை ஒழுங்கு படுத்தக் கடமைப்பட்டுள்ளவர்கள் என்றாலும், மிகவும் சிக்கலான பிரச்னையாக இருப்பதால், அவர்கள் கடமைப்பட்டுள்ளவர்களாக இருந்தாலும் மத்திய அரசின் உதவியின்றி இந்தப் பிரச்னையை விரைவிலே சுலபமான வழியில் தீர்க்க முடியாது என்பதை கவர்னர் பெருமான் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதைப் பாராட்டுகிறேன். அந்த வகையில் விலைவாசிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இந்த அமைச்சரவை எடுத்துக்கொள்ளும் முயற்சியில் மத்திய அரசாங்கத்திடமிருந்து வேண்டிய உதவிகளை கவர்னர் பெருமான் அவர்கள்



தன்னுடைய செல்வாக்கினால் பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கை
இருக்கிறது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உணவுப்
பொருள் கொள்முதல் திட்டங்களிலே இதுவரையில் அரசு பின்
பற்றி வந்த செயல்பாடுகள் பெரும்பாலும் விவசாயிகளுடைய
நலன்களை பாதிக்கக் கூடிய அளவிலே அமைந்திருந்தன, அவை
அந்த முறையிலேதான் கையாளப்பட்டு வந்தன என்ற பெருங்
குறையை நாம் விவசாயக் குடிமக்களிடமிருந்து கேள்விப்பட்
டிருக்கிறோம். கொள்முதல் திட்டங்களிலே ஒழுங்கான முறைகளை
கையாள்வதிலே மிகுந்த சிக்கல்கள் இருந்து வருகின்றன என்பது
உண்மை. அரசாங்கத்தின் கட்டுப்பாடு திட்டங்களை நிறை
வேற்றுவதில் அவர்கள் ஒத்துழைக்கக் கூட முடியாத நிலைமை
இருந்த சூழ்நிலைதான் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு
தடையாக இருந்தது என்பதை அரசாங்கம் மறுத்துவிடுவதற்
கில்லை. விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் உபயோகத்திற்குப்
போக உபரியாக இருக்கக்கூடிய தானியங்களை வலுவிலே அரசாங்
கத்திற்கு விற்பதற்கு முன்வரக்கூடிய மனப்பான்மையை அவர்கள்
பெறுவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கைகளையும், முயற்சி
களையும் எடுத்துக்கொள்ளும். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு
எந்த வகையிலும் இடையூறு இல்லாமல் அவர்களே வலுவிலே
வந்து மக்களின் உபயோகத்திற்காக தங்களிடமுள்ள உபரி தானி
யங்களை வழங்க முன்வரும் மனப்பான்மையை கொள்வதற்குத்
தக்க வகையில் பலவித சலுகைகளை இந்த அரசாங்கம் அவர்
களுக்கு அளிப்பதற்கு முயற்சி எடுப்பது பற்றி பரிசீலனைக்கு
எடுத்துக்கொண்டிருக்கிறது. பொது மக்களுக்கும், விவசாயப்
பெருங்குடி மக்களுக்கும் அவர்கள் எந்த நிலைமையை எதிர்பார்க்
கிறார்கள் என்பதற்கேற்ப அதற்கு வேண்டிய வழிவகைகளையும்
செய்வதற்கு அவர்கள் உணவுப் பொருள் உற்பத்தியை அதிகமாகப்
பெருக்குவதற்கு வேண்டிய வகைகளிலும் முயற்சிகளை எடுத்துக்
கொள்வதற்கு இந்த அமைச்சரவை முன்வரும் என்பதை இந்த
அமைச்சரவை சார்பிலே பொதுமக்களுக்கும் நான் இந்த சந்தர்ப்
பத்திலே கவர்னர் பெருமான் உரையை அனுசரித்து தெரிவித்துக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயக் காரியங்களுக்கு சிறிய பாசன
வசதித் திட்டங்கள் சம்பந்தமாக சென்ற ஆட்சியிலே மக்களால்
பல குறைபாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தும்கூட, அவர்களால்
பெரிய திட்டங்களில் செலுத்தப்பட்ட கவனம் சிறிய பாசன வசதி
களுக்கு போதுமான அளவில் செலுத்தப்படவில்லை என்பதை
நான் கூறாமல் இருக்கமுடியவில்லை. பெரிய திட்டங்களும்
மக்களுக்கு அவசியம் என்று கருதினாலும்கூட, சிறிய பாசனத்
திட்டங்கள்தான் நேரடியாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு
பயன் தரக்கூடியவை என்பதை இந்த அமைச்சரவை கவனத்தில்
எடுத்துக்கொண்டு, எதிர்காலத்தில் சிறிய பாசனத் திட்டங்களில்
அதிக கவனம் செலுத்தி விவசாயிகள் நலன் பெறக்கூடிய பாசன
வசதிகளைத் தேடிக்கொடுப்பார்கள் என்ற உறுதிப்பாட்டை நான்
இந்த அமைச்சரவையின் சார்பிலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்
படுகிறேன்.

[திரு. மு. சண்முகம்] [1967 மார்ச் 18

சென்ற ஆட்சி, வரவு-செலவுத் திட்டத்தில் பற்றாக்குறைக்காக வரி உயர்வை ஏற்படுத்தியபொழுது, ரூபாய் 1¾ கோடி துண்டு விழுவதைச் சரிக்கட்டுவதற்காக வரி உயர்வை ஏற்படுத்திய பொழுது, அது சரியல்ல என்று நாங்கள் சொல்லியும், வேறு வழியில்லை ரூபாய் 1¾ கோடி துண்டு விழுவதைச் சரிகட்டுவதற்கு என்பதாகக் கருதி வரி உயர்வை ஏற்படுத்தினார்கள். ஆனால், கூடிய விரைவிலேயே அதையே அந்த அரசாங்கம் தள்ளுபடி செய்யக் கூடிய நிலைமை ஏற்பட்டது. தேர்தல் சந்தர்ப்பத்தில் அப்படிச் செய்வது தேவை என்று தோன்றி அதே ஆண்டிலே அவர்களே அந்த வரி உயர்வைக் குறைப்பதற்கான நிலைமை ஏற்பட்டது. அம் மாதிரி நிலைமையை அவர்கள் உணர்ந்ததுபற்றி நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறத்தான் வேண்டியிருக்கிறது. இருந்தாலும் கூட நிலவரி விதிப்பிலே ஒரு ஒழுங்கான முறை கையாளப்படவேண்டும் என்பது உண்மை. இந்த அமைச்சரவை இதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, மக்களுடைய நல்வாழ்வுக்கு வேண்டிய வகையிலே அதைத் திருத்தி அமைப்பார்கள் என்பதை நாம் நம்பலாம். அதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய உதவியும் தேவைப்படும், அதையும் அவர்கள் தேடித் தருவார்கள் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

கூட்டுறவு இயக்கம் சம்பந்தப்பட்ட மட்டில் கவர்னர் பெருமான் அவர்கள் குறிப்பிட்டிருப்பது மிகவும் முக்கியமானது. மக்களுடைய வாழ்க்கைத் துறையிலே எந்தத் துறையும் கூட்டுறவு முறை மூலம்தான் மனிதனுடைய வாழ்க்கைத்தரம் அமைய வேண்டும் என்பதில் நான் முழுநம்பிக்கை கொண்டவன். எந்தத் துறையிலும் கூட்டுறவு இயக்கம் மூலம் வழிவகைகள் செய்யப்பட்டு, மக்களுடைய தேவைகளையெல்லாம் கூட்டுறவு இயக்கம் மூலம் அவர்கள் பெறுவதற்கு வேண்டிய அமைப்பு ஏற்பட்டால்தான், உண்மையில் மனித சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வு உள்ள நிலைமைகள் சரிக்கட்டப்பட்டு, சோஷலிஸ சமுதாயம் நாட்டில் அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. அரசாங்கம் இதிலே முக்கியமாக கவனம் செலுத்த வேண்டும். கூட்டுறவுத் துறையில் சட்ட விதிகளெல்லாம் பெரும்பாலும் சீர்திருத்தப்பட்டு அமுலுக்குக்கொண்டுவரக்கூடிய நிலையில் தான் இருக்கிறது என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பல விதிகள் திருத்தப்பட வேண்டும், அனுபவத்திற்குத் தக்க முறையில் விதிகள் அமைய வேண்டும். இன்றைய நிலைமையில் கூட்டுறவு இயக்கத்திற்காக அமைக்கப்பட்ட சட்ட திட்டங்களில் பல குறைபாடுகள், அனுபவத்திற்கு ஒத்து வராத முறைகள் கூட இருந்து வருகின்றன. அவைகளெல்லாம் திருத்தப்பட்டு, அனுபவத்திற்குத் தக்க முறையில் கூட்டுறவு சட்டத்திட்டங்கள் அமையுமானால், மனித சமுதாயத்தினுடைய வாழ்விலே பல துறைகளிலும் அவைகள் சீர்திருத்தப்பட்டு நல்வாழ்வு பெறக்கூடிய வகையிலே அவர்களுக்கு வழி காட்டும். கூட்டுறவு இயக்கத்தின் மூலம்தான் மனித சமுதாயத்திற்கு நல்வாழ்வு அளிக்க முடியும் என்பதை நான் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அவைகள்



1967 மார்ச் 18] [திரு. மு. சண்முகம்]

பரிசீலனை செய்யப்பட்டு, சீர்திருத்தப்பட்டு, திருத்தப்பட்டு, கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் அமைய வேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கவனப்படுத்த ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரம் வழங்கும் திட்டம் மிக மிக முக்கியமானது. விவசாயக் காரியங்களுக்கு மின்சாரம் வழங்கப்படுவது பற்றி நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். விவசாயக் காரியங்களுக்கு மின்சாரம் வழங்கப்படுவதில் கையாளப்படும் முறைகளினால் விவசாயிகளுக்கு பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முதலில் முழு நேரத்திலும், விவசாயிகளுக்கு தேவைப்படும் பொழுது மின்சாரத்தை அவர்கள் பயன்படுத்தும் முறையில் வழி வகை செய்யப்பட்டது. ஆனால், நாளடைவிலே முழு நேரத் திட்டமானது கைவிடப்பட்டது. நாடு முழுவதற்கும் தாங்கள் மின்சாரம் கொடுத்து வழங்கினோம் என்ற ஒரு பெயரை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரு சிறிய கருத்தில், அவர்கள் எல்லா கிராமங்களுக்கும் வழங்க வேண்டும் என்ற ஒரு தவறான கருத்து கொண்டு, மின்சாரம் வழங்கப்படும் முறையை திருத்தி அமைத்து, முழு நேரமும் மின்சாரத்தை விவசாயிகள் பெறமுடியாத நிலையில் அந்தத் திட்டம் மாற்றி அமைக்கப்பட்டு குறித்த நேரத்திற்கு மட்டும் விவசாயக் காரியங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது. விவசாயிகள் தங்களுக்குத் தேவைப்பட்ட நேரத்தில் பயிர்களுக்கு தண்ணீர் இறைக்க மின்சாரம் கிடைக்கவேண்டும். அல்லது, குறித்த நேரத்தில்தான் மின்சாரம் கிடைக்கும் என்ற முறை விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படுத்தும், விளைபொருள்கள் மிகவும் பாதிக்கப்படும், உற்பத்தி பாதிக்கப்படும் என்பதை அந்த அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. ஆகவே, மின்சாரம் வழங்கும் திட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டும். மின்சாரம் எந்த நேரத்திலும் விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய அளவுக்கு மின்சாரம் வழங்கும் திட்டம் அமைக்கப்பெற்றால்தான், உணவு உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகள் தூண்டப்படுவார்கள். குறித்த நேரத்தில் மின்சாரம் வழங்கப்படும் என்ற நிலை இல்லாமல் எந்த நேரத்திலும் விவசாயக் காரியங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான வழிவகைகளை இந்த அரசாங்கம் மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன்.

எல்லா வகைகளிலும் ஆட்சித் துறையிலே சீர்திருத்தங்கள் செய்யக்கூடிய பல குறைபாடுகள் இருந்து வருகின்றன என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. இதன் விளைவுதான் சென்ற தேர்தலில் பொதுமக்கள் கூறி இருக்கும் ஒரு முடிவான விடையாகும். ஆகவே, இந்த அரசு அதை உணர்ந்து செயலாற்ற கடமைப்பட்டிருக்கிறது. இதற்கு மத்திய அரசாங்கத்தின் உதவியும் மிகவும் தேவைப்படுகிறது என்பதை ஒருவரும் மறுப்பதற்கில்லை என்பதை கவர்னர் பெருமான் உரையிலேயே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, இந்த அரசினுடைய செயல்பாடுகள் மக்களுக்கு எதிர் காலத்தில் பயன் அளிக்கும் வகையில், பொருளாதாரத்தில் சீர்பாடு ஏற்படும் வகையில் கையாளப்படவேண்டும். அந்தப் பணியில்

மத்திய அரசினுடைய உதவி மிகவும் தேவைப்படும், அந்த உதவியை தன்னுடைய செல்வாக்கினால் இந்த அரசிற்குத் தேடிக் கொடுத்து இந்த ஆட்சியோடு அவர்கள் ஒத்துழைப்பு இருக்கும் என்கிற நம்பிக்கையுடன் இந்த உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்**: இனிமேல் பேசுகின்ற மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கால்மணி நேரம், அதாவது 15 நிமிட நேரம், என்கிற கால வரம்பிற்குள் பேசவேண்டும். இந்தக் கால வரம்பு இந்த மன்றத்தில் நடைமுறையில் இருந்து வருகின்ற வழக்கத்தைப் பின்பற்றியதுதான். பிறகு, 10 மணிக்கு நடைபெறவிருக்கும் அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கு இணங்க கால வரம்பைக் கூட்டுவதோ, குறைப்பதோ செய்யலாம். அடுத்தாற்போல, மதிப்பிற்குரிய திரு. டி. எம். நல்லசாமி அவர்கள் பேசுவார்கள்.

***திரு. தோ. மு. நல்லசாமி**: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமானின் உரைமீது எங்கள் கட்சியின், என்னுடைய, சில கருத்துக்களை எடுத்துச்சொல்ல முன் வருகிறேன். அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இதே மன்றத்திலே தனிநபர் தீர்மானத்தின் மூலமாக நிலத்தின் மேலான எல்லா வரிகளையும் ரத்து செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினார்கள் என்பது என்னுடைய ஞாபகம். அப்படிப் பூரண வரிவிலக்குக் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்திய திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஆட்சிக்கு வந்திருக்கும் இந்த நேரத்தில் விவசாயிகள் நிலவரி பூராவும் நீங்கிவிடும் என்று எதிர்பார்த்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. நான் சார்ந்துள்ள காங்கிரஸ் கட்சி நெடு நாளாகவே நிலவரியை ரத்து செய்யவேண்டும் என்கின்ற கொள்கையைக் கொண்டிருந்தது. அதற்கு இணங்க, அந்தக் கட்சியின் ஆணைக்கு இணங்க, கடந்த ஆண்டு காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது நிலவரியை ரத்து செய்யவேண்டும் என்கின்ற முயற்சி எடுக்கப்பட்டது. அதன் விளைவாகத்தான் நிலத்தின் மேல் இருந்துவந்த, 'லாண்ட் ரெவின்யூ ஸர்சார்ஜை' நீக்கினார்கள். அதோடு மட்டுமல்லாமல், 'லாண்ட் ரெவின்யூ'-வையே, நிலவரியையும் ரத்து செய்வதற்கான வழிவகைகளைக்காண, அதற்கென்று ஒரு ஸ்பெஷல் ஆபீசரை, தனி அதிகாரியை நியமித்து, அவரிடம் அந்தப் பொறுப்பும் விடப்பட்டது. நிச்சயமாக அடுத்த பசலியில் இருந்து ரத்து செய்யப்படும் என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டு இருப்பதில் ஆச்சரியம் இல்லை. அப்படி இருந்தும்கூட, அன்றைக்கு பூரண வரிவிலக்கை வற்புறுத்திய திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தும், நிலவரிக்கு விலக்கு அளிப்பதில் போதிய ஆர்வம் காட்டாமல் இருக்கும் நிலையைத்தான் காண்கிறோம். நிலவரியை நீக்குவதற்கு படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கவர்னர் பெருமான் உரையில், 'பேஸ்ட் புரோக்ராம்' என்ற முறையில் முயற்சி எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலிருந்து நான் தெரிந்து கொள்வது,





வருகிற பசலி ஆண்டில் கூட நிலவரி ரத்து செய்யப்படமாட்டாது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. இது பெரிய ஏமாற்றமாகும். நிலக்கிழார்களுக்கும், இன்னும் மற்றபடி நிலத்தை வைத்துக் கொண்டு இருப்பவர்களுக்கும் ஏமாற்றமாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த கொள்கை விளக்கத்தில், கல்லூரிப் படிப்பை இலவசமாக்குவது பற்றி குறிப்பிடப்படவில்லை. முன்பு ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசாங்கம் கல்வியை எல்லா மக்களுக்கும் இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்ற சீரிய முயற்சியில், ஆரம்பப் பள்ளிக்கூடத்திலிருந்து உர் நிலைப் பள்ளி வரை இலவசமாகச் செய்தார்கள். அந்த வகையில் படிப்படியாக கல்லூரிப் படிப்பிற்கும் இலவசமாக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். அதன் விளைவாக, வரும் ஆண்டிலிருந்து பி.யு.ஸி. என்கின்ற புதுமுக வகுப்பிற்கும் மக்களுக்கு இலவசமாகக் கல்வி கொடுக்கும் வழியைச் செய்ய வேண்டும் என்று முன் வந்தார்கள். அப்படிப்பட்ட நல்ல முயற்சி இப்பொழுது என்னவாயிற்று என்று இந்த உரையில் எதுவும் குறிப்பிடப்படாதது வருந்தத்தக்கது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விலை வாசிகளைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமாக, இன்றைக்கு ஆட்சிப் பீடத்தில் இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் காலத்தில் மிகவும் அழுத்தம் திருத்தமாக விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவோம் என்று கூறியவர்கள், இன்றைக்குக் கவர்னர் பெருமானின் உரையின் வாயிலாக, என்ன செய்யப் போகிறார்கள் என்பதனை வகைப்படுத்திக் குறிப்பிட்டார்கள் இல்லை. உற்பத்திப் பெருக்கத்தால்தான் பண்டங்களின் விலை உயர்வைத் தடுக்க முடியும். அதற்கேற்ற வகையில் திட்டங்களை உருவாக்க வேண்டும் என்று பொருள்படும்படி நான் சார்ந்திருந்த காங்கிரஸ் கட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது. இந்தச் சந்தர்ப்பத்திலே விலைவாசிகளின் ஏற்றத்தின் காரணம் என்ன என்பதனைச் சிந்திக்க வேண்டும். வளர்ச்சி பெற்றிருக்கின்ற எல்லா உலக நாடுகளிலும் விலைவாசி ஏற்றம் அடைந்து வந்துள்ளதும், அதேபோல நம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியாலும், ஏற்பட்ட எதிர்பாராத இன்னல்களையும் ஞாபகப்படுத்திக் கொண்டால்தான் உண்மை தெரிய வரும். பாதுகாப்பிற்காக மத்திய சர்க்கார் ஆண்டுதோறும் சுமார் 350 கோடி வரையில் செலவிட்டு வந்தார்கள். எதிர்பாராத அன்னிய படை எடுப்பின் காரணமாக 350 கோடிக்குப் பதிலாக, சுமார் 850 கோடி வரை செலவு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஏராளமாக பாதுகாப்பிற்காக செலவிட்ட அதே நேரத்திலே, நம்முடைய திட்டச் செலவுகளையும் குறைத்துக்கொள்ள முடியாத நிலைமை நிர்ப்பந்தம் ஏற்பட்டது. திட்டச் செலவுகளைக் குறைத்தால், போர் முனையிலும் சக்தி வேண்டும், நாட்டிலும் வளர்ச்சி குன்றாமல் இருக்கவேண்டும் என்கிற காரணத்தினால், திட்ட வளர்ச்சியின் வேகத்தைக் குறைத்துக்கொள்ள நாம் ஆளுகின்ற கட்சித்

தரப்பிலும் எதிர்தரப்பிலும் இரண்டு விதமான எண்ணம் இருக்க வில்லை. திட்ட வளர்ச்சியும் அதிகமாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஆகையினால்தான், பாதுகாப்பையும், திட்ட வளர்ச்சியையும் குறைக்காமல் பார்த்துக்கொள்ளும அந்த நிலையில் அதிகப்படியான தொகைகளை செலவிடும் அந்த நிலையில் ஓரளவு பொருளாதாரச் சரிவு ஏற்பட்டது உண்மை. அவ்விதம் ஏற்பட்ட விலைவுகளை, அசௌகரியங்களை நாட்டு மக்கள் எதிர் நோக்க வேண்டியிருந்தது. திட்டங்கள் நல்லபடியாக, அதிகமாக, வளர்ச்சியடையும் வகையில் செலவுகள் செய்யப்பட்டன, பாது காப்பின் பொருட்டு செலவிடப்பட்டன என்றால், அதன் விளைவாக மக்கள் கையில் பூராவாக பணப் புழக்கம் ஏற்பட்டதால் வாங்கும் சக்தி அதிகமாக ஏற்பட்டது. வாங்கும் சக்தி அதிகமாக ஏற்பட்டதால், பண்டங்கள் கிராக்கி ஆகும் சூழ்நிலை ஏற்பட்டது, என்பதை இந்த உரையிலே நச்சு வட்டம் ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த நச்சு வட்டத்தை அகற்றிவிடு வதற்கு எத்தகைய முறைகளை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த உரையின் வாயிலாகத் தெளிவுபடுத்தவில்லை.

அடுத்தபடியாக, இந்த உரையில் உணவு நெருக்கடியைத் தீர்த்து வைப்பது பற்றியும், உணவுப் பண்டங்களை வினியோகிப்பது, அவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்துவதுபற்றியும் இந்த அமைச் சரவை என்னென்ன செய்ய இருக்கிறது, என்னென்ன திட்டங்கள் இட்டு இருக்கின்றன என்று குறிப்பிடத் தவறியிருக்கிறது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்னால், தேர்தல் காலத்தில் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் இன்னின்ன காரியங்களைச் செய் வோம், ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுப்போம் என்றும், இன்னும் பல நீண்ட வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. இன்னும் பல வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன, பெரிய கார்கள் வேண்டாம், சம்பளமே வேண்டாம், என்பன போன்ற வாக்குறுதிகள் கொடுக் கப்பட்டன. ஆனால் இன்றைக்கு நிலைமை முற்றிலும் மாறாக இருப் பதையும், பாதிச் சம்பளம் எடுத்துக்கொள்வதையும் பார்க் கின்றோம். உணவுப் பிரச்சினையைப்பற்றிச் சொல்லும்போது, வினியோகத்தைத் தாராளமாக்க வேண்டும், அப்பொழுதுதான் மக்களுக்கு வேண்டிய அரிசியைக் கொடுக்க முடியும் என்று குறிப் பிட்டார்கள். அப்படிக் குறிப்பிட்டவர்கள் இன்றைக்கு ஆட்சிப்
முற் பகல் 9-30 பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் மக்கள் ஆறுதல் பெறும் வண்ணம் தங்கள் கொள்கையைத் திட்டவட்டமாகத் தெரிவித் திருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். உற்பத்தியாளர் களுக்குப் போதிய ஊக்கம் அளிக்கும் வகையிலும், வாங்கி உண்பவர்களுக்கு நியாயமான விலையில், நல்ல தரமான அரிசி கிடைக்கச் செய்யும் வகையிலும் தாங்கள் உணவு கொள்கை சம்பந்தமாக நிறைவேற்றப் போகும் திட்டத்தைச் சொல்லியிருக்க வேண்டும். நல்ல தரமான விதைகளை விநியோகிப்பது பற்றியும், பாசன வசதிகளைப் பெருக்குவது பற்றியும், அதிகப் பலன் தரக் கூடிய ஏ.டி.டி. 27, சி.ஓ. 25 ஆகியவற்றைப் பெருக்கி வழங்குவது பற்றியும், கொள்முதல் விஷயத்தில் உற்பத்தியாளர்களுடைய நலன் பாதிக்கப்படாமல், அதே சமயம் வாங்கி உண்பவர்களின்





நிலைமையையும் கவனத்தில் கொண்டு—சிறு நிலச்சுவான்தார் களுக்கு தொந்தரவு கொடுக்காமல் இன்றைக்கு ஆளும் கட்சியில் உள்ளவர்கள் சொல்கின்ற முறையில் 'டாக்ட்புலாக' ( tactfui -ஆக) மூதுகைத் தட்டிக்கொடுத்து கொள்முதல் செய்யவேண்டும் என்பதைப் பற்றியும் காங்கிரஸ் இந்த மாநிலத்தை ஆட்சி செய்து கொண்டிருந்தபோதே சொல்லி வந்ததுதான். இதனை இந்த மன்றத்தில் தங்கள் மூலமாக நான் சமர்ப்பிக்கும்போது—இன்றைய தினம் கவர்னர் ஆற்றிய உரையை முந்தினவற்றோடு ஒப்பிட்டுப் பார்த்தால் வார்த்தைகளில் வேண்டுமானால் மாறுபட்டு இருக்க லாமே ஒழிய, கருத்து, அர்த்தம் எல்லாம் ஒன்றுதான் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உணவுக் கொள்கை சம்பந்தமாக ஸோனல் கவுன்சில்ஸ் சிறப் பாகப் பணியாற்றச் செய்வது, சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு நல்லதாக இருக்கும் என்று பொருள்பட கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது. தென்மண்டல உணவுக்கொள்கை நடைமுறையில் கொண்டுவரப்பட்டபோது அது தமிழக மக்களுக்குப் பாதகமாக இருந்த காரணத்தினால்தான் எங்களது ஆட்சியில் கைவிடப் பட்டது. கேரள மக்களின் வாங்கும் சக்தி அதிகம், அந்த மாநிலத்தில் உற்பத்தியாகும் பண்டங்களோ அந்நியச் செலா வணியைச் சம்பாதித்துக் கொடுக்கின்றன. ஆகவே, பல்வேறு துறையில் அங்கே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறவர்களுக்கு வருமானம் அதிகம். அதேசமயத்தில் உணவு அங்கே பெருவாரியாக உற்பத்தியாவதில்லை—அது டெபிசிட் ஸ்டேட். ஆகவே உணவுப் பண்டங்கள் என்றால் என்ன விலை வேண்டுமானாலும் கொடுத்து வாங்கத் தயாராய் இருக்கிறார்கள். ஆகவே, தென்மண்டலம் என்று அமைக்கப்பட்டிருந்த காலத்தில் தமிழ் நாட்டில் இருந்த உணவுப் பண்டங்கள் கேரளத்திற்கு ஓடிக்கொண்டே இருந்த காரணத்தினால்தான் நான் சார்ந்துள்ள கட்சி முன்பு அதைக் கைவிட்டார்கள் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இன்றையதினம் ஆட்சியில் இருக்கக்கூடிய அமைச்சரவை மீண்டும் தென்மண்டலம் பற்றி எண்ணும்போது அதனால் தமிழகத்திற்குப் பாதகம் விளையாதவண்ணம் செயல்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, ஒன்று சொல்ல விரும்புகிறேன். புதிதாக ஆட்சிப் பொறுப்பில் ஏறியிருக்கக்கூடியவர்கள் நல்லாட்சியை ஏற்படுத்தி, எல்லாத் துறையிலும் மக்களுக்கு சிறந்த தொண்டு செய்ய வேண்டு மென்ற ஆவலை இந்த மன்றத்திலும் சரி, வெளியிலும் சரி உணர்த்தி வருகிறார்கள். அப்படிப்பட்ட ஆவல், எண்ணத்தைக் கொண் டிருக்கக் கூடிய அவர்களுக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். தங்களுடைய ஆவலை செயலாக்குவதற்கு அவர்கள் எத்தகைய புதிய புதிய முயற்சிகளை மேற்கொண்டாலும் அதனை வரவேற்கத் தயாராய் இருக்கிறோம். அவர்கள் நாட்டு மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு எடுத்துக்கொள்கிற முயற்சிகள் யாவற்றுக்கும் நாங்கள் பூரண ஒத்துழைப்பு கொடுப்போம்

என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொண்டு, எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த கனம் சபாநாயகருக்கு நன்றியறிதலைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. வி. எஸ். எஸ். மணி:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில் நான்காவது பொதுத் தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்றுள்ளதைப் பாராட்டியுள்ளார்கள். மக்கள் பெரும் மாறுதலை ஆட்சியில் ஏற்படுத்தியுள்ளார்கள். காரணம் அருமைத் தாய்மார்கள், மாணவர்கள் கடந்த ஆட்சியில் பட்ட கஷ்டங்களை நினைத்து அந்த ஆட்சியை மாற்றித்தான் தீரவேண்டுமென்ற நல்ல முடிவிற்கு வந்தார்கள். அந்தத் தாய்மார்களுக்கும், மாணவர்கள் சமூகத்திற்கும் என் கட்சியின் சார்பாக பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடந்த பொதுத் தேர்தலில் எந்தவிதமான அசம்பாவிதமும் இல்லாமல் உலகப் பெரும் அதிசயமாக அரசியலில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியுள்ளார்கள். இதற்குக் காரணமே சென்ற ஆட்சியின் கொடுமைதான். அந்த ஆட்சியில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பலவிதமான அதிருப்தி காரணமாகத்தான் இந்தப் பெரும் மாற்றத்தையே ஏற்படுத்தியுள்ளார்கள். மக்களுடைய பேராதரவு காரணமாகத்தான் நாங்கள் ஆட்சிப் பீடத்தில் ஏறியுள்ளோம் என்பதை மனதில் கொள்ளவேண்டும். எங்களுடைய அடிப்படையான நோக்கமே மக்களுக்குக் குறைந்த விலையில் நல்ல தரமான உணவுப் பண்டங்கள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதுதான். அதை நாங்கள் தலையாய கடமையாகக் கொண்டுள்ளோம். இருந்தும் தேர்தல் காலத்தில் ரூபாய்க்கு 3 படி அரிசி தருவதாகச் சொன்னீர்களே, எங்கே 3 படி அரிசி என்பதாக தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டவுடனேயே ஒரு காங்கிரஸ்காரர் என்னிடம் வந்து கேலியாகப் பேசினார்கள். அன்றைக்கு 1952-ல் திரு. ராஜாஜி அவர்கள் பதவி ஏற்றவுடனேயே கண்ட்ரோல்களை எடுத்தார் என்றால் காரணம் போதுமான உணவுப் பண்டங்கள் கையிருப்பில் வைத்துக்கொண்டது. ஆனால் இன்றைக்குள்ள நிலைமை என்ன? முந்திய காங்கிரசு கட்சியினரின் ஆட்சி ஏற்படுத்தியுள்ள நிர்வாக ஊழல்களையே சரி செய்ய நமக்கு அவகாசம் வேண்டும். தேர்தலுக்கு முன்னால் காங்கிரஸ் ஆட்சி கொள்முதலையே சரியாக நடத்தவில்லை. அதன் காரணமாக கையில் ஸ்டாக் கிடையாது. நிர்வாக ஊழல்களை சரி செய்யாமல், கையில் போதுமான ஸ்டாக் இல்லை என்கிற நிலையில் கண்ட்ரோல்களை எடுத்துவிட்டால் நிலைமை என்ன ஆவது? எங்கே 3 படி அரிசி என்று கேட்பது கேலிக் கூத்தாக இருக்கிறதே தவிர—நாட்டின் நிலைமையை உணர்ந்து பேசுவதாக இல்லை. அதற்காக நாங்கள் மக்களுக்கு என்ன என்ன நன்மைகளைச் செய்யவேண்டுமோ அவற்றைச் செய்யாமல் போவதில்லை. மக்களது கஷ்டங்களை நீக்குவதுதான் எங்கள் தலையாய கடமை. எனவே, அறுவடைக் காலத்திலே நல்ல முறையிலே கொள்முதல் அவர்கள் செய்யவில்லை. அதனாலேதான் ஸ்டாக் பொசிஷன் நல்ல முறையில் இல்லை. அவர்கள் கொள்முதல் நல்லமுறையிலே செய்திருந்தால் ஸ்டாக்



நிறைய இருந்திருக்கும். கண்ட்ரோலைக் கூட ஓரளவுக்கு எடுத்திருக்கலாம். ஆனால் அவ்வாறு இப்பொழுது உடனடியாகச் செய்ய முடியாததற்குக் காரணம் சென்ற ஆட்சியின் போக்கு, கொள்கை, இவைதான் காரணம். மக்கள் இன்று உணவுக் கொள்கையில் புரட்சிகரமான மாறுதலை எதிர்பார்க்கிறார்கள். நிச்சயமாக இந்த ஆட்சி உணவுப் பிரச்னையைத் தீர்க்கும் என்பதை நான் மக்களுக்கும் இந்த மன்றத்திற்கும் தெரிவித்துக் கொள்கிறேன். (Tapping the rich) டேப்பிங் தி ரிச் என்று அறிஞர் அண்ணா அவர்கள் பேசினார்கள்; (tapping the rich land owners and patting the small land owners ) டேப்பிங் தி ரிச் லேண்ட் ஓனர்ஸ் அண்ட் பேட்டிங் தி ஸ்மால் லேண்ட் ஓனர்ஸ் என்று அவர்கள் அழகான சொற்களிலே ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அதை காங்கிரஸ்காரர்கள் கேலி செய்யக்கூடிய முறையிலே பேசுகிறார்கள். மக்களை ஏமாற்ற முடியாது. ஏதோ மேடையிலே பேசலாம், நிர்வாகத்திலே பயன் இல்லை என்ற முறையிலே கேலி பேசுகிறார்கள். அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பெரிய மிராசுதார்களிடம் அதிகமாகக் கொள்முதல் செய்து, ஏழை விவசாயிகளைத் துன்புறுத்தாமல் இருக்கலாம் என்று சொன்னார்கள். இதிலே என்ன தவறு இருக்கிறது? இந்த விதமான தீவிரமான கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டிய அவசியம் சென்ற ஆட்சியினுடைய குறைதான் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நகரங்களிலே ரேஷன் முறையும், கிராமங்களிலே கொள்முதலும் இருப்பது கொஞ்சம் கசப்பாகத்தான் இருக்கும். கூடிய விரைவிலே நல்ல முறையிலே நிர்வாகத்தை நடத்தி குறைந்த விலைக்கு அரிசி கிடைக்கச் செய்ய முடியும். ஃபேர் ரெண்ட் ஆக்டின்படி பெரிய நிலச்சுவான்தார்களுக்கு 40 சதவீதமும், உழவர்களுக்கு 60 சதவீதமும் என்று இருக்கிறது. அந்த முறைப்படி 60 சதவிகிதம் கொடுத்துவிடுகின்றபொழுது அவர்களிடம் அதிகமாகக் கொள்முதல் செய்வது கடினமாக இருக்கும். அதிகமாகக் கொள்முதல் செய்ய முடியாது. அதோடு 100-க்கு 90 பேர்கள் குறைந்த நிலமுள்ள நிலச்சுவான்தார்கள்தான் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து கொள்முதல் செய்யாமல் அறவே நீக்கிவிட்டால் போதுமான நெல்லே கிடைக்காது. ஆகவே, இதையெல்லாம் நல்ல முறையிலே யோசித்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமென்று அமைச்சரவையை நான் கேட்டுக்கொள்கிறேன். உர விநியோகம் பற்றிக்கூட இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. உரங்கள் சென்ற ஆட்சியிலே நல்ல முறையிலே விநியோகிக்கப்படவில்லை. கூட்டுறவு சொசைட்டிகள் மூலமாக ஃபெர்டிலைசர் உரம் நல்ல முறையிலே விநியோகிக்கப்படவில்லை. கூட்டுறவு சொசைடிகளிலே தலைமை வகிக்கக்கூடியவர்கள், எல்லாம் ஆட்சியாளர்களின் கட்சியை சேர்ந்தவர்கள்தான் இருந்தார்கள். பிரசிடெண்ட்கள், செகரட்டரிகள் எல்லோரும் சுயநலத்திற்காகத்தான் அவற்றைப் பயன்படுத்தினார்களே தவிர, மக்களுக்குப் பயன்படக்கூடிய விதத்தில் செயல்படவில்லை. இதையெல்லாம் நம்முடைய அரசாங்கம் சீர்திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நெசவுத் தொழில்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். உழவுத் தொழிலுக்கு அடுத்தபடியாக இருப்பது நெசவுத் தொழில்தான். அதற்கான ஊக்கம் கொடுக்கப்பட வேண்டும். எந்தவிதத்திலும் கைத்தறி நெசவாளர்கள் புறக்கணிக்கப்படக் கூடாது என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். அவர்களுக்கு எல்லா விதங்களிலும் ஆதரவு கொடுக்க வேண்டும். எந்தத் துறையிலேயும் அவர்களைப் புறக்கணிக்கக் கூடாது என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The hon. Member, Dr. H. V. Hande will now speak.

* DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, at the very outset I wish to congratulate the Dravida Munnetra Kazhagam Party on its coming to power and giving us an excellent galaxy of brilliant men in the Treasury Benches. Sir, as a person who has been intimately connected with the problems of the poor, I have had several occasions to find that the general feeling of the public has been very, very heart-breaking. There was, a few months ago, a feeling even to the extent of desperation among the public that things would not change. The desperation was to such a great degree that but for democracy and for the General elections, the situation would have been explosive. Such an explosive situation has been converted into a very peaceful and orderly transfer of power. To this greatest act in this 20th century and in this Sub-Continent, the maximum credit straightaway goes to the leaders and organisers of the D.M.K. Party. In this particular context when I wish to speak a few words on the Governor's Address, I want to make it very clear at the outset that I wholeeartedly support and welcome the Governor's Address.

Not only I but also all the members of our Party are very happy to know that the Governor's Address has been laid on a very, very nice temper and a number of excellent points have been brought out in the Governor's Address. My congratulations to the Members of the Treasury Benches for this.

Sir, I have also had the great pleasure and privilege of sharing the wisdom of smart replies and the excellent conservations of the Hon. Speaker when I had the occasion of sitting next to him for nearly three years in the Upper House. Now I am very happy to see that a brilliant person like you has had this opportunity to preside over this House and we are all very grateful to you for the way in which you have started conducting the proceedings of this House.

Now, Sir, coming to the subject-matter, there have been a number of points raised in the Governor's Address. In the very beginning, mention has been made about the elections. There is a sentence that has crept into the Governor's Address, viz.,

'I consider it specially significant that this general election should have gone off peacefully and without any untoward incident, particularly in our State.'





I know what prompted the Governor to bring out this particular sentence. The credit for this peaceful and orderly election straightaway goes to the D.M.K. Party and its leaders who when addressing their audience, asked them to control themselves and remain very peaceful. But I am sorry to bring to the attention of this House that in spite of the tremendous efforts of the present ruling Party which was then the Opposition Party, there were quite a number of untoward incidents which, to a large extent, impaired the peaceful elections here and there. For those incidents, the then ruling Party must be held squarely responsible. That is my humble submission to this House. But for the fact that a number of workers and a number of leaders exercised extreme patience, things would have been very explosive. I know, as a person contesting from a City constituency, how many times, my election workers came and told me heart-breaking things. They came and told me, 'Look here, how many times do you want us to put up with these things. You always tell us and our own leaders tell us to exercise patience but how long can we exercise patience. We have been physically manhandled and we have been subjected to all sorts of abuses and insults. How long can we tolerate all these things?' I still remember those words told by my Swatantra Party workers also. Then I had to tell them, that even when their own leaders were facing danger, they were exercising patience. That was the way we conducted ourselves. Everybody knows the series of incidents that took place and the explosive situation that developed in a number of constituencies just on the eve of the elections. Sir, I request this Government to look into this matter and see that at least in future when we will be having a number of elections, the persons who are responsible for those faults are booked straightaway. I also implore everyone in this Government to see that such untoward incidents do not take place in future.

Then, Sir, because of the paucity of time, I have to skip over several points. Now I want to refer to the food problem. The most important thing is that unless production of food increases, there is no solution. The only solution for the millions of families starving, is increase in production. Unless we address ourselves seriously to this task, whatever rules and regulations that we may bring forwarded, will be of no avail. Now the question is, how can we increase production? Can we increase production by having controls?

I wish to stress very clearly that the most important disincentive to increase in production, in other words the most important factor that prevents increase in production, is controls. That has been the plank on which my Party has been built; that has been the plank on which Sri N. G. Ranga, the Chairman of the Party to which I belong, started the Krishikar Lok Party when he was in Madras. I know the Hon. the Chief Minister is very much concerned with the food problem. We have an excellent Food Minister whose speeches even as a Member of the Opposition have been very excellent and I have been an admirer him even from then. But the question is how he is going to translate his brilliant

ideas into a reality. He cannot do it with the help of officials. Officials come between the ideas and their translation into a reality. The moment there is procurement unfortunately there is harassment and that is the greatest disincentive to the producer. Most of the farmers are afraid of the officials. I know that when a Minister comes and makes an inspection, everything will be very fine there. But the moment he leaves, officials begin to harass the farmers. I am not blaming anybody. If I were an official, my mind also will work in the same single-track direction. The most important incentive to increase production is the abolition of control. The most important factor that the Hon. Food Minister should take into account is this. He will be guided in administration mostly by the officials. The officials have been trained in a particular direction for the last twenty years like the horses provided with blinds and they have developed a single-track mind. They have been trained to think in the same routine way. Therefore I request the Hon. Food Minister not to rely too much on the advice of officials. Officials are there only to execute the policies and decisions on policies must be taken by the Ministry. Members of the Legislature of the party in power and the other parties are in intimate contact with the masses and the small ryots. Therefore it is most important that the Food Minister does not depend too much on officials. For Heaven's sake let not the officials affect the policy decisions. There is a lurking fear in my mind that, if the Ministry is a little less cautions, there is the possibility of the Ministry being loaded with ideas by the Secretariat, which means that they will immediately loss their individuality and original judgment, and may simply follow whatever the officials say as an easy way of escapism from problems. The ministry followed the advice of the officials when Congress was the ruling party. They used phrases like 'marketable surplus' and 'marginally surplus'. We hear the same slogans and the same expressions again and again. We are deluded by these expressions. The farmers are simply scared by the jeepwallas and the officers. I can tell the Ministers that whatever their orders are, the officers will not follow the policy of tapping the rich. The moment an officer sees a rich man or a landlord, he comes down and acts according to the wishes of the landlord. It should be made very clear that the small landlord should not be put into trouble. The very clamour or rush for procurement is itself a disincentive. A number of ryots are giving up the villages and running to the cities to eke out their livelihood. The farmers are getting disgusted. Why should we go on tilling the soil and be answering these officials who come and trouble us—this is how they feel. Therefore in whatever we do, we must take care to see that it does not provide a disincentive. We must bear in mind that the small farmer is the backbone of our agriculture. He is very sensitive.

In this connection I would like to offer one solution. We have had very good relationship with Kerala. Kerala is a deficit State and it is our duty to help our neighbours. But at the same time let us have some profitable friends. Andhras are our profitable friends Eventhough the Ministry in the Andhra State belongs



to a different party, let us try to develop friendship with that State and it will be very useful for us in solving our food problem. I request the Hon. Food Minister to ponder over this carefully.

There has been a ban on the movement of paddy from village to village, taluk to taluk and district to district. All these barriers must be removed. All the four Southern States must be combined into one zone. That is the one solution that I can offer. Kerala will be ready to accept this, because it will be profitable to it. Andhra may or may not accept it. We must sit across the table and discuss. The former Minister for Indutries was constantly saying that no agreement could be reached regarding the resumption of the State Transport bus service between Madras and Tirupati. But, the then Chief Ministers of both the States sat across the table and came to an agreement within a few minutes. The benevolent Chief Minister of Madras, who has earned the love of the masses, should discuss with the Chief Minister of Andhra and come to an agreement. Madras State wants Nellore rice. We can send our Kuruvai rice to Kerala. There is a great demand for Krishna rice also. Import of Andhra rice is a better method than the adoption of police methods to make the merchants, who have been hoarding stocks and holding the State radsom, to disgorge their boarded stocks Businessmen have not realised their duty towards the public. Businessmen are businessmen and the only method of correcting them and making them come down on their knees is to introduce competition. When there is competition, businessmen will bring all the stocks lying with them into the market and that will bring down the prices.

Therefore, the only method is to see that rice from Nellore or Krishna comes to the Madras State. That is the only solution. 1-00 முற் பகல்.

(மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் தலைமை)

Sir, I shall finish my speech in five minutes. With regard to the Salem Steel Plant, there are a number of problems. As far as I know, the investigation with regard to the Salem Steel Plant, is not complete. We have been kept in the dark all these years and we have been told that the investigation has been completed. I have got reliable information that the investigation for the Steel Plant is not yet complete. I request the Hon. Minister to find out why the investigation has not been completed. I am also given to understand that it has not been decided whether it should be a pellet plant or a full scale steel plant. There is a method by which pellets could be manufactured by putting the raw iron ore into the furnace. So, I request the Hon. Minister to apply his mind immediately and see that the question of the exact type of the steel plant is finalised immediately. Otherwise, the Central Ministry will go on dodging the issue for a long time and will also raise the problem of foreign exchange. The foreign exchange required will not be more than Rs. 15 or 20 crores and the Central Ministry must be able to give it from the taxes collected from us.

Now the Central Ministry is collecting Central Excise, customs income-tax and other taxes. It must be the duty of the Centre to see that a fair portion of the tax amount is given to the States. To this task, the State Government must address itself and see that at least the foreign exchange to the extent of Rs. 15 to 20 crores is given. After all, we want only a small plant and we are not asking for a big plant. The entire production of steel in this country is about six million tons, at least on paper. I do not know how much it is actually produced. I think it is about $4\frac{1}{2}$ million tons. Some of the steel plants are not working properly. Now all that we ask for is a small plant to produce ·25 million tons, that is 1/24th of the entire steel production in the country. If we start with .25 million tons, we can increase it to half a million tons later on. Therefore, the most important thing is that this Government should convince the Central Government that it is only a small plant and that it can be run efficiently by them. The Central Government are now putting a premium on the efficiency of States and they are denying to them certain rights and facilities which other inefficient States are getting. That should not be the case. The attitude of the Central Government should not act as a disincentive for those States working harder. It is better that they the Central Government should give us better facilities and devote more attention to us. In this connection, I would request the Hon. Chief Minister to instruct the Members of the Parliament belonging to this State—there are nearly 30 to 35 Members who will obey to impress upon the Central Government that at least a portion of the Central Excise should be given to us. Also, a portion of the income-tax which is one of the biggest sources of income for the Central Government must be given to us. If necessary, they can send a delegation and tell the Central Ministers about the need for a portion of these taxes and also the necessary foreign exchange for the Salem Steel Plant. With these words, I once again assure the Hon. Ministers sitting on the Treasury Benches that they will always have our co-operation. We are prepared to give our constructive suggestions. Sometimes our ideologies and those of the Ruling Party may vary but that would not stand in the way of our co-operation. In this connection, I wish to quote the statement of Mr. Voltair made a few centuries ago—' I will fight every inch of the battle disagreeing with you, but you also have a right to say what you want to say '. In the same way I request the Treasury Benches to look at us and examine whether our suggestions are worthwhile and see that as for as possible they are implemented because they are good irrespective of from whom **they come.**

* **திரு. எஸ். ஆறுமுகம்:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையை ஆதரித்து என் கருத்துக்களை இங்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் அவர்கள் தமது உரையில் இந்த அரசாங்கத்தின் கொள்கைகளை விளக்கிக் காட்டியிருக்கிறார்கள், வரவேற்கத்தக்க வகையில். கவர்னர் அவர்கள் ஆற்றியுள்ள உரையில் எங்கள் சர்க்கார் திட்டம் பூராவும் இதில் இடம்



பெற்றிருக்கிறது என்று எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் திரு. நல்லசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்ற சர்க்கார் நடைமுறையில் ஏற்று நடத்திய கொள்கைகளை பிரதிபலிக்கிற வகையில்தான் இந்த உரை அமைந்திருக்கிறது என்பதை முதலில் உணர வேண்டும். அந்த வகையில் இந்த உரை சென்ற சர்க்காரின் நடைமுறைக் கொள்கைகளைத்தான் பிரதிபலிக்கின்றன. இடைக்கால பட்ஜெட்டை, வரவு செலவுக் கணக்குகளைக் கொண்டு வருகிறபோதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் என்ன, நாட்டு மக்களுக்கு நாங்கள் என்னென்ன செய்யப் போகிறோம் என்பதுபற்றி தெளிவாகக் குறிப்பிடப்படும்.

கவர்னர் அவர்கள் தமது உரையில், நான்காவது பொதுத் தேர்தல் அமைதியாக நடைபெற்றிருப்பதைப்பற்றி பாராட்டி யிருக்கிறார்கள். பல மாவட்டங்களில் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் காட்டிய அன்பு வழி காரணமாகவும், ஜனநாயகத்திற்கு மதிப்பு கொடுத்து, தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லி மக்களின் வாக்குகளைப் பெற்று பொறுப்பேற்கும் நிலையில் வந்திருக் கிறோம். இதற்கு முன்பு ஆண்டு கொண்டிருந்த சர்க்கார் சில இடங்களில் நடந்து கொண்டது, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வர்கள் பல தொகுதிகளில் பல அட்டகாசங்கள் செய்தார்கள்; அதை அனுபவித்தவர்கள் நாங்கள் என்பதை என்னால் சொல்லாமல் இருக்கமுடியாது. இன்று முதல் அமைச்சராக இருக்கக் கூடிய எங்கள் தலைவருக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர் களுக்கும் தேர்தல் நேரத்தில் ஏற்பட்டவைகளை நாங்கள் மறந்து விடுவதற்கில்லை. அதுமட்டுமல்ல. திருச்சியில், முன்னாள் அமைச்சர் ராமைய்யா அவர்கள் போட்டியிட்ட தொகுதியில் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களுக்கு ஏற்பட்ட சம்ப வங்கள் எங்களுக்குத் தெரியும். அதேபோல் பரங்கிமலைத் தொகுதியிலும் தேர்தலுக்கு முன்னால் நடைபெற்ற கலவரங்கள், தேர்தலுக்குப் பின்னால் இப்போதும் கூட ஏற்படக் கூடிய சம்பவங்கள் எல்லாவற்றையும் பார்க்கிறபோது முன்பிருந்த எதிர்க்கட்சிக்காரர்கள்தான் ஜனநாயகத்திற்கு மதிப்பு கொடுத்து, மக்களை மதித்தார்கள் என்பது தெரியவரும். ஆனால், முன்னாலே ஆண்டுகொண்டிருந்த காங்கிரஸ் கட்சி ஜனநாயகத்திற்கு மதிப்புக் கொடுக்காமல் சர்வாதிகாரப் போக்கில் நடந்துகொண்டது என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, உணவுப் பிரச்னையை எடுத்துக்கொண்டால் இந்த திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் அதை முதல் படியாக கவனிப்போம், உணவுப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் நாட்டு மக்களுக்கு மன நிறைவு அளிக்கும் வகையில் அதை கவனிப்போம் என்று கூறியிருக்கிறார்கள். முன்னால் இருந்த காங்கிரஸ் கட்சி மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் விவசாயத் துறையிலும், உணவுப் பிரச்னையிலும் முக்கிய கவனம் செலுத்தாத காரணத்தினால், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பிறகும் இந்த நாட்டிலே இவ்வளவு பெரிய பஞ்சம் ஏற்பட்டது என்பதை உணர்ந்து நாட்டு மக்கள்

பொதுத் தேர்தலில் வாக்கு அளித்ததை மனதில் வைத்துக்கொண்டு இன்றைய தினம் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற அமைச்சரவையும், முதல் அமைச்சர் அவர்களும் என்ன சொல்லுகிறார்கள் என்றால், முதலில் உணவுப் பிரச்னையை கவனிப்போம், உணவுப் பிரச்னை உடனடியாக கவனிக்கப்படவேண்டிய முக்கியமான பிரச்னை என்று சொல்லுகிறார்கள். நிச்சயமாக நடைமுறையில் எங்கள் சர்க்கார் நாட்டு மக்களுக்கு உணவுப் பிரச்னையில் நல்ல வழியைக் காட்டி அவர்கள் மன நிம்மதி பெறும் அளவுக்கு நடக்கக் கூடிய திட்டத்தைத் தீட்டி அமல் நடத்துவார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல, கொள்முதல் பற்றிக் குறிப்பிட்டிருந்தாலும், கவர்னர் உரையில் குறிப்பிட்டிருப்பது நடைமுறையில் இது வரையில் இருந்து வந்த ஏற்பாடு என்றும், உணவுப் பிரச்னையை நன்றாக ஆராய்ந்து திடமான கொள்கையைச் சர்க்கார் அறிவிக்கும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் இந்த சர்க்கார் இந்த நாட்டு விவசாயப் பெருங்குடி மக்கள், சிறிய நிலச்சுவான்தார்கள், நாட்டு மக்கள் எல்லோரும் நிம்மதி பெறுகிற வகையில் நல்ல கொள்கையை வகுத்துத் தரும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவது பற்றி கவர்னர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். விலைவாசிகளைக் கட்டுப் படுத்துவது மாநில சர்க்காரினால் மட்டும் முடியாது, மத்திய சர்க்காருக்கும் இதிலே பங்கு உண்டு என்று தெளிவுபட எடுத்துக் காட்டி சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு பிரச்னைகளை மூடி மறைக்காமல் தெளிவுபடுத்தியிருப்பதற்காக அமைச்சரவைக்கும் கவர்னர் அவர்களுக்கும் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் வகையில் தமிழக சர்க்கார், திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார், மத்திய சர்க்காரோடு அழுத்தம் திருத்தமாக வாதாடி, விலைவாசியைக் கட்டுப் படுத்த விரைவிலே நம் கொள்கையை மத்திய சர்க்காரிடம் எடுத்து உரைக்கவேண்டும், அதற்கான ஆக்கப் பணியை நம் சர்க்கார் மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொண்டு கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருப்பதைப் பாராட்டுகிறேன்.

அதே போல கள்ளக் கடத்தலைத் தீர்க்க திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அதைத் தான் கவர்னர் அவர்களும் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரைக்கும், இந்த சர்க்கார் பக்கம் இருக்கக் கூடிய மக்களும், இந்த சர்க்காரை ஆதரிக்கக் கூடியவர்களும், நடுத்தர மக்கள், ஏழை மக்கள், தொழிலாளர்கள் ஆதரித்ததன் வகையிலும், கூட்டணிக் கட்சித் தோழர்களும் ஆதரித்ததன் வகையிலும், இப்படிப்பட்ட நிலையில் இருப்பதால் கள்ளக்கடத்தலைத் தடுக்கும் நடவடிக்கைகளை கடுமையாக்குவோம், அதனுடைய விளைவுகளை கள்ளக் கடத்தலை ஏற்பவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று





கவர்னர் அவர்கள் கூறுகிறார்கள் என்றால் இந்த சர்க்கார் நாட்டு மக்களிடத்திலே, ஏழை மக்களிடத்திலே, அவர்களுடைய ஆதரவைப் பெற்ற காரணத்தினால் அவர்களிடம் தயவாக நடந்து கொள்ளும், பணக்காரர்கள் தயவை, பெரிய வியாபாரிகள் தயவை இந்த சர்க்கார் நாடாது, ஏழை மக்களுடைய வழியில் செல்லும் என்ற வகையில்தான் சொல்லியிருக்கிறார்கள். கள்ளக்கடத்தலைத் தடுக்கும் நடவடிக்கைகளைப் பொறுத்த வரையில் நானும் என் கருத்தைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் நடவடிக்கை எடுக்கும்போது எந்த பணக்காரர்களுக்கும், பெரிய வியாபாரிகளுக்கும் பயப்படப் போவதில்லை என்று தெரிந்திருந்தாலும், உறுதி நம்மிடத்திலே இருந்தாலும், கள்ளக் கடத்தலைச் செய்கிறவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கவேண்டும்; கடுமையான தண்டனை என்று சொல்லும்போது, ஜென்ம தண்டனையாவது விதிக்கவேண்டும். அப்படிப்பட்ட தண்டனை விதிக்கும் வகையில் சட்டத்தை இயற்றினால் தான் உற்பத்தியாகும் பொருள்கள் பதுக்கி வைக்கப் படுவதைத் தடுக்கவும், வேறு அண்டை மாநிலங்களுக்கு கள்ளத் தனமாகக் கடத்தப்படுவதைத் தடுக்கவும் முடியும். அப்போது தான் உற்பத்தியாகும் பொருள்கள் பரவலாக எல்லா மக்களுக்கும் போய்ச் சேரும் வகையில் இருக்கும். ஆகையால் கடுமையான தண்டனை விதிக்கும் வகையில் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, நிலவரி நீக்கத்தைப் பற்றி கனம் உறுப்பினர் நல்லசாமி அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். நிலவரி நீக்கத்திற்கு காங்கிரஸ் கட்சிதான் வழி வகுத்தது என்பதை ஒத்துக்கொள்ள முடியாது. திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருக்கும்போது இதே மன்றத்தில் பல தீர்மானங்களைக் கொடுத்து வாதாடியிருக் கிறோம். அப்போதெல்லாம் செய்யாதவர்கள் தேர்தல் காலத்தில் மக்கள் வாக்குகளை வாங்கவேண்டும் என்று சர்சார்ஜை மட்டும் எடுத்துவிட்டு, நில வரி நீக்கத்தைப் பற்றி வருகிற சர்க்கார் ஆராயும் என்று அப்போது இருந்த அமைச்சர்கள் சொன்னார்கள். அதைத் தான் இப்போது ஆட்சிக்கு வந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை ஆராய்ந்துகொண்டிருக்கிறது. நிலவரியைப் பொறுத்த வரையில் சாதாரண ஏழை மக்கள் மீது, சாதாரண விவசாய மக்கள் மீது இருக்கும் வரியை நீக்கவேண்டும் என்று கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருப்பது எங்கள் கட்சி யாகும். அந்த வகையில் இப்போது ஆராய்ந்துகொண்டிருக்கிற குழு தன்னுடைய அறிக்கையை அமைச்சரவைக்குத் தந்த பிறகு, எந்த வகையில் நிலவரியை நீக்குவது என்று முடிவு எடுத்து, கண்டிப்பாக அதை ரத்து செய்யும் வகையில் எங்கள் சர்க்கார் இருக்கும்; நிச்சயமாக ஏழை விவசாயிகளுக்கு உதவி புரிவோம் என்று உறுதியோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதே போல, சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தைப் பற்றிக்கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு 1967-68-ம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட்டில் இந்த சர்க்கார் முக்கியத்துவம்

கொடுக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்த வரையில் முன்பு இருந்த ஆட்சி அதிகமாக அக்கறை எடுத்துக்கொள்ளாத காரணத்தினால் இந்த நிலைமை இருக்கிறது. நம்முடைய சர்க்கார் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில், ஏழை விவசாயிகள் முன்னேறும் வகையில், உணவுப் பொருள்கள் உற்பத்தியில் முன்னேற்றம் ஏற்படும் வகையில் நடவடிக்கைகளை எடுக்கும் என்று கூறி, கவர்னர் அவர்களுடைய உரையைப் பாராட்டி, இந்த அளவுக்கு என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள துணைச் சபாநாயகர் அவர்கள் அனுமதித்ததற்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ப. மகாதேவன் :** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமானின் உரையின் மீது விவாதம் செய்வதிலே எனக்கும் ஒரு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கவர்னர் பெருமானின் உரையிலே பாராட்டுதலுக்குரிய பல அம்சங்கள் இல்லையென்றாலும்கூட, ஒரு காரணத்திற்காக இந்த உரையைப் பாராட்ட வேண்டியிருக்கிறது. கவர்னர் பதவியே தேவையில்லை, அது அவசியமில்லாதது, அர்த்தமற்றது என்று ஒரு காலத்தில் சொல்லி வந்தவர்கள் ஆளும் கட்சியில் அமர்ந்தபோது தாங்களாகவே மாற்றிக்கொண்ட அந்த மாற்றத்திற்காகவாவது எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் ஒருவர் பேசும்போது கிண்டலாகவும், கேலியாகவும் காங்கிரஸ்காரர்கள் மூன்று படி அரிசியைப் பற்றிக் கேட்கிறார்கள் என்று கூறினார்கள். நாங்கள் எந்தக் கிண்டலும், கேலியும் பேசக் கூடிய மரபில் உள்ளவர்கள் அல்ல. காங்கிரஸ் கட்சியின் நோக்கம் ஒரு மாதிரி எதிர்க்கட்சியாகப் பணி புரிந்து காட்டவேண்டும் என்பதுதான். அந்த நோக்கத்தோடுதான் இந்தப் பணியில் இறங்கத் தீர்மானித்திருக்கிறோம். இதே மன்றத்தில் இன்றைய உணவு அமைச்சர் முன்பு ஒருநாள் இளைத்துப் போன இட்டிலியாரை அழைத்துவந்து காட்டிய ட்ரமாட்டிக் டாக்டிக்ஸ் எல்லாம் மக்கள் மனதில் இருக்கும் என்று எண்ணுகிறேன். தேர்தல் காலத்தில் மட்டுமல்ல, நான்கு வருஷங்களாக மக்களை நம்ப வைத்து, ரூபாய்க்கு ஐந்து படியில் ஆரம்பித்து, நாளாக நாளாக நான்கு படியாக ஆகி, முக்காலும் மூன்று படி கொடுப்போம் என்று சொல்லி, படிப்படியாக இறங்கி, ரூபாய்க்கு ஒரு படி கொடுப்போம் என்று சொன்னதை நம்பிய மக்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களாகிய நாங்களும் அதை நம்பினோம் என்றால், அது லாப நோக்கு. ரூபாய்க்கு மூன்று படி அரிசி என்பது யாரும் நம்ப முடியாத காரியம் என்றாலும், அமைச்சர்கள் மூன்று படி போடுவதாக இருந்தால் நாங்களும் சாப்பிடத்தான் செய்வோம்; அந்த





நோக்கத்துடன் எதிர்பார்க்கிறோம். நாட்டிலே நோட்டுகள் இரட்டிப்பு செய்துகொடுக்கிறோம் என்று சொல்வதை நாம் பார்க்கிறோம். முதலில் ரூ. 100-ஐ ரூ. 200-ஆக ஆக்கித்தரலாம். பிறகு ரூ. 1,000-ஐ ரூ. 2,000-ஆக இரட்டித்துத்தரலாம். பிறகு ரூ. 10,000-ஐ வாங்கிக்கொண்டு ஊரைவிட்டே கடந்து செல்லக்கூடிய நிலைமையையும் நாம் பார்த்திருக்கிறோம். மக்களிடையே நாங்கள் அமைச்சராவோம், அமைச்சரவை அமைப்போம் என்று சொல்லக்கூடிய பொறுப்பான கட்சித் தலைவர்கள் சொன்ன பொழுது அதை நம்புகிறோம். நம்பிக்கை தரக் கூடிய பேச்சு என்று கருதித்தான், அவசரப்படாதீர்கள், 6 மாதங்கள் அவகாசம் கொடுக்கலாம்' என்று சொல்லியிருக்கிறோம். முதல் அமைச்சர் அவர்கள் 'காங்கிரஸ் தலைவர்களே 6 மாதம் அவகாசம் கொடுத்திருக்கிறார்கள், கட்சியிலுள்ளவர்கள் ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்' என்று கூறியிருக்கிறார்கள். நாங்கள் உண்மையாக ஆத்திரப்படவில்லை; நினைவுப்படுத்தும் நோக்கத்தோடு தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கவர்னர் அவர்களின் உரையில் அதைப்பற்றி ஒன்றும் கூறப்படவில்லை என்ற குறையை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நிலவரியைப் பற்றிப் பேசும்பொழுது, கனம் திரு. ஆறுமுகம் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் கொள்கையில் நிலவரியை ரத்து செய்வது என்பது இருந்ததில்லை என்று சொன்னார்கள். அண்ணல் காந்திஜி அவர்களின் காலத்திலேயே 1937-ல் கூடிய எங்கள் மகாநாட்டுத் தீர்மானங்களில் நிலவரியை ரத்து செய்யவேண்டும், ஏழை விவசாயிகளுக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்ற நோக்கங்கள் இருந்திருக்கின்றன. கனம் சுதந்திரா கட்சி அங்கத்தினர்களும் அதைப்பற்றி சொன்னாலும் கூட, அவர்கள் எங்களோடு காங்கிரஸில் இருந்த காலத்தில், 1937-ம் ஆண்டு முதலிலிருந்தே அந்தக் கொள்கை இருந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 'ஏன் அந்தக் கொள்கையை நிறைவேற்றவில்லை 19 ஆண்டு காலமாக? என்று கேட்கலாம். மண்ணுக்கும் நிலத்தை வைத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் உள்ள தொடர்பு, அடையாளச் சின்னமாக நிலவரி இருந்தது. 'சாவரின் ரைட்' அடையாளச் சின்னமாக இருந்தது. நிலத்தை வைத்திருப்பவர்களுக்கு மற்றவர்களுக்கு எடுத்துக் காட்ட, அவர்களுடைய உரிமையை நிலைநாட்டுவதற்கு அது ஒரு சின்னமாக இருந்த காரணத்தினால் மக்களிடையே கூட சிறிது பயம் இருந்தது. நிலவரி முழுவதையும் எடுத்துவிட்டால், அவர்களுடைய நிலைமை என்ன ஆகுமோ என்ற பயம் இருந்தது. அதைப்பற்றி நினைத்தோம். ஆனால், அதைப்பற்றி சிந்திக்க சிந்திக்க, அதனால் ஏற்படும் தீமைகளை விட நன்மைகள் அதிகமாக இருக்கின்றன என்ற காரணத்தினால், நாங்கள் ஆளும் கட்சியாக இருந்த காலத்திலேயே உடனே அமுலுக்கு கொண்டுவர வேண்டுமென்று கருதி, இந்தப் பசலி ஆண்டிலிருந்து அது அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்று முன்பிருந்த முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். அவர்கள் வெறும் பேச்சுக்காகச்

சொல்லவில்லை, நடைமுறையில் கொண்டுவருவதற்காகத் தான் சொன்னார்கள். அந்த முறையில் பார்க்கும் பொழுது ஒரு நல்ல மாற்றத்தை, ஏழை விவசாயிகளுக்கு வாழ்வு அளிக்கக் கூடிய அந்த விரும்பத்தக்க அம்சங்கள் கவர்னர் பெருமான் உரையிலே இடம் பெறும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள்; அந்த மாற்றம் வேண்டும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள்; ஆனால் அதுபற்றி கவர்னர் பெருமான் உரையில் குறிப்பிடாதது மக்களுக்கு ஏமாற்றத்தைத்தான் கொடுக்கிறது.

கவர்னர் பெருமான் உரையிலே விலைவாசி உயர்வைப்பற்றி பெரும் பகுதி ஒதுக்கியிருந்தபோதிலும், அதில் மக்கள் நம்பிக்கைக்கு உகந்த அம்சம் எதுவுமில்லை என்பதைத் தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். "நாடு எங்கணும் பற்பல பகுதிகளில் பரவியுள்ள வறட்சி காரணமாக, தானிய உற்பத்தி பெரிதும் குன்றிய ஒரு தேசிய பொருளாதார அமைப்பின் ஒரு பகுதியாக நாம் இயங்கி வருகிறோம். எனவே, பண்ட வழங்கல் நிலையில் ஏற்படும் நெருக்குதல் காரணமாய், விலைவாசிகளில் ஏற்படும் ஏற்றமும் நாட்டின் பற்பல பகுதிகளில் பற்பல வகையாய் எதிரொலிக்கும். உற்பத்தி சாதாரண நிலையிலிருந்தாலும், வழங்கல் முறையில் குறைபாடுகள் இருந்தால் அவை காரணமாகவும் பெருத்த இன்னல்கள் விளையும்" என்று கவர்னர் பெருமான் உரையில் கூறப்பட்டிருப்பது வானொலிப் பெட்டியில் கால அறிவிப்பு போல் தான் தோன்றுகிறது. அதைவிட சொல்லப் போனால் புயல் அறிவிப்புக்கு எச்சரிக்கை போல், அபாய அறிவிப்பு போல் தோன்றுகிறது. நாட்டினருக்கு நம்பிக்கை ஊட்டக் கூடியதாக இல்லை. அடுத்த வரியில் "உற்பத்தியாளர்களுக்குப் போதிய ஊக்கம் அளிக்கும் வகையிலும், சமுதாயத்தில் மிக எளிய நிலையில் உள்ள மக்களுக்கு, நியாய விலைகளில் நல்ல அரிசி கிடைக்கச் செய்யும் முறையிலும் சிறந்ததோர் உணவுக் கொள்கையை நாம் உருவாக்க வேண்டும்" என்ற பகுதியைப் பார்த்தால் நம்பிக்கை ஊட்டுவதாகத் தெரிகிறது. நாள்தோறும் வீட்டுப் பக்கத்தில் வந்து 'நல்ல காலம் பிறக்கப் போகிறது, நல்ல காலம் பிறக்கப் போகிறது' என்று அறிவிக்கும் முறையில் தான் அது இருப்பதாகத் தோன்றுகிறது. நல்ல முறையில் நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நாங்கள் கவர்னர் பெருமான் உரையில் ஒன்றை எதிர்பார்த்தோம். அது இல்லாமல் ஏமாற்றம் அடைந்தோம். அதாவது, புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி என்ற திட்டம் அப்பொழுது ஆளும் கட்சியாக இருந்த எங்கள் அமைச்சர்களால் அறிவிக்கப்பட்டிருந்தது. அது 1967 ஜூனிலிருந்து நிச்சயமாக அமுலுக்கு வரும் என்ற செய்தியை எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அது நிச்சயமாகச் செய்யவேண்டிய ஒன்று. நாட்டு மக்களுக்கு இலவசமாக கல்வி கொடுத்த பெருமை தமிழ் நாட்டுக்கு உண்டு. அதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். மற்ற மாநிலங்களும் அது குறித்து வியந்தன. அந்த முறை படிப்



படியாக வளரவேண்டும் என்ற நிலையில், அன்று ஆளும் கட்சியாகிய எங்கள் கட்சி தங்களுடைய சோஷலிஸக் கொள்கையின் அடிப்படையிலே ஏற்றத் தாழ்வை போக்கவேண்டி, எல்லோருக்கும் கல்வி கற்பிக்கவேண்டும், ஏழை பணக்காரன், ஜாதிமத பேதம் இல்லாமல் என்று கருதி, புகுமுக வகுப்பிலும் இலவசக் கல்வி அளிக்கவேண்டும் என்று எங்களது ஒப்பற்ற தலைவர் திரு. காமராசர் அவர்கள் சொன்னதை கருத்தில் கொண்டு, அமைச்சர் அவையிலே அமைச்சர் எல்லோரும் சேர்ந்து தீர்மானித்து அவ்வாறு செய்யப்படவேண்டும் என்று முடிவு செய்யப்பட்ட காரியம். ஆனால் அதுபற்றி ஒன்றும் கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் இடம் பெறவில்லை. சிறப்பாக மாணவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், மாணவர்களின் படிப்பு சம்பந்தமாக பெருந்தொல்லைகளை அனுபவிக்கும் பெற்றோர்களுக்கு இது மிகுந்த நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும். இதை 1967-ல் அவர்கள் எதிர்பார்த்தார்கள். அதுபற்றி கவர்னர் உரையில் குறிப்பிடாதது ஏமாற்றம் அளிக்கிறது என்று நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, மாண்புமிகு கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் தொழில் வளத் திட்டங்களைப்பற்றி அதிகம் காணோம். தொழில்களைப்பற்றிய நிலைமைகளைக் குறித்தும் எதுவும் சொல்லப்படவில்லை. பின்தங்கிய வகுப்பினர்களுக்கு அளிக்கக் கூடிய சலுகைகளைப் பற்றியும் ஒன்றும் காணோம். நெசவுத் தொழிலாளிகளைப்பற்றியும் ஒன்றும் காணோம். இப்படி பலதரப்பட்ட தொழிலாளர்கள் வாழ்வு வளம் பெறுவதற்கான ஒரு திட்டமும் இந்த உரையில் இடம் பெறவில்லை. சோஷலிஸம் என்று ஆளும் கட்சி சொல்லிக் கொண்டிருந்தும், விரும்பத்தக்க விதத்தில் ஒன்றும் கூறப்படவில்லை. விஞ்ஞான சோஷலிஸம் என்று சொல்லுகிறார்கள். விஞ்ஞானத்தைப்பற்றியோ அல்லது சோஷலிஸத்தைப் பற்றியோ கவர்னர்பெருமான் உரையில் எதுவும் காணாமல் இருப்பதற்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு, சில காரியங்களுக்காவது பாராட்டுவதற்கு ஒரு வாய்ப்பினைக் கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

***திரு. என். சங்கரய்யா** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, உறுப்பினர்களே, நண்பர்களே, நேற்றைய தினம் இந்த மாநிலத்தினுடைய கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையைப் பற்றி இந்திய கம்யூனிஸ்டு கட்சி மார்க்ஸிஸ்டு குழுவின் சார்பாக முதல் முதலில் பேசுவதற்கு நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய நான் என்னுடைய கட்சியின் சார்பாக இந்த உரையைப் பற்றிய பின்வரும் கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்னால் தெரிவித்துக் கொள்ள நான் முன்வருகிறேன். 1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலிலே மக்கள் அளித்த தீர்ப்பு கடந்த 20 ஆண்டு காலத்தில் இந்த மாநிலத்தில் ஆட்சி புரிந்த ஒரு ஆளும் கட்சியை மாற்றி, திராவிட முன்னேற்றக் கழக மந்திரிசபை ஏற்படுத்தியது கடந்த காலத்திலே காங்கிரஸ் ஆட்சியாளர்கள் செய்யத் தவறியது அல்லது செய்ததிலே

[திரு. என். சங்கரய்யா] [1967, மார்ச் 18

மக்களுக்கு விரோதமாக இருந்த கொள்கைகள், நடைமுறைகள் இவற்றின் விளைவுகள் தான் என்பதை இந்தப் பொதுத்தேர்தல் மீண்டும் உத்திரவாதம் செய்திருக்கிறது, நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. பொதுத் தேர்தலில் மக்கள் தங்களுடைய தீர்ப்பைத் தெளிவாக அளித்திருக்கிறார்கள். அரசாங்கத்தை மாற்றி மக்களுடைய பிரச்னைகளைத் தீர்க்கக்கூடிய அத்தகைய கொள்கைகளை கையாளக் கூடிய ஆட்சி ஏற்பட வேண்டும் என்று நம்முடைய மாநில மக்கள் மிகத் தெளிவாகத் தீர்மானித்திருக்கிறார்கள். அதற்காக அவர்களை நான் மிகவும் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது இந்த மாநிலத்தில் அமைச்சர் பதவி ஏற்றிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக மந்திரி சபை எங்களது கட்சியோடு ஒரு தோழமைக் கட்சியாக செயல்படக்கூடிய ஒரு கட்சி ; நட்புறவோடு இந்த மந்திரி சபையையும், அதனுடைய ஆட்சியையும் நாங்கள் பார்க்கிறோம் என்பதை நான் முதன் முதலில் இந்தச் சட்ட சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தேர்தலின் பொழுது இரண்டு கட்சிகளுக்கும் இடையிலே ஏற்பட்டிருந்த ஒத்துழைப்பு மேற்கொண்டும் நீடிக்கும். இந்த சட்டமன்றத்தின் வாழ்விலும் திராவிட முன்னேற்றக் கழக மந்திரிசபைக்கு நாங்கள் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை அளிப்போம். இன்று சட்டசபை மொழியிலே எதிர்க்கட்சிகளின் வரிசையில் நாங்கள் அமர்ந்திருந்தாலும், ஒரு சுயேச்சையான கட்சியாக செயல்பட்டாலும், ஆக்கபூர்வமான யோசனைகளைத் திராவிட முன்னேற்றக் கழக மந்திரி சபைக்கு அளிப்போம். இந்தப் பொதுத் தேர்தலில் தமிழக மக்களுக்கு எந்தக் குறைந்த நிவாரணம் அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டதோ, எதை மக்கள் இந்தப் புதிய மந்திரிசபையினிடமிருந்து எதிர்பார்க்கிறார்களோ, அந்த நிவாரணம் மக்களுக்குக் கிடைப்பதற்காக எங்களுடைய ஊக்கத்தையும் ஒத்துழைப்பையும் அளிப்போம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய கட்சி எதிர்புறத்தில் அமர்ந்திருந்தாலும், மந்திரி சபையை எதிர்க்கும் கட்சி அல்ல. சட்டபூர்வமான சம்பிரதாயப்படி இன்றைக்கு நாங்கள் இந்த எதிர் வரிசையில் அமர்ந்திருந்தாலும், தமிழ் நாட்டுமக்களுக்கு இந்தத் தேர்தலின்போது நாங்கள் இரண்டு கட்சிகளும் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு, கூட்டுறவு முறையிலே ஒத்துழைப்பு அளித்து, அவைகளை நிறைவேற்றுவதற்கு நாங்கள் முயற்சிகளைச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்ட மன்றத்திலே வரக்கூடிய பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட வரையில், ஒவ்வொரு பிரச்சினையையும், அது மக்களுக்கு சாதகமானதா அல்லது பாதகமானதா என்பதை உரைகல்லாக வைத்துக்கொண்டு செயல்படுவோம், என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முற் பகல் 10-30 இந்த கவர்னர் உரையிலே, மந்திரி சபைக்கு பிரச்சினைகளை ஆராய சற்று அவகாசம் தேவை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் மாநில அரசாங்கத்திற்கு அதிகப்படியான அதிகாரங்கள்



1967, மார்ச் 18] [திரு. என். சங்கரய்யா]

தேவை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு அம்சங்களையும் ஒப்புக் கொள்ளுகிறோம். மாநிலத்திலே புதிதாக ஏற்பட்டிருக்கிற மந்திரி சபைக்கு பிரச்சினைகளை ஆராய்ந்து அறிந்து கொள்ள அவகாசம் தேவைதான். அந்த அடிப்படையில் நான் பின் வரும் பிரச்சினைகளை இந்த மந்திரி சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். கவர்னர் உரையிலே, வளங்கொழு அரசின், வெல்பேர் ஸ்டேட்டின், கொள்கைகளை நிறைவேற்றும் வகையிலும், அதற்கான நிர்வாக இயந்திரம் செவ்வனே இயங்குவதற்குத் தேவைப்படும் இன்றியமையாச் சீர்திருத்தங்களைச் செயல் படுத்தவும் இவ்வரசாங்கம் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்யும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே போல, உணவுப் பிரச்சினையை சமாளிப்பது பற்றியும், நில வரியைப் படிப்படியாக போக்குவது, உற்பத்தியைப் பெருக்குவது சம்பந்தமாகவும் உரையில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த மாநிலத்தில் கூட்டுறவு இயக்கத்தில் தேவையான சீர்திருத்தங்கள் பற்றி வற்புறுத்தப் பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் நாங்கள் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம். விவசாயத் துறையிலும் தொழில் துறையிலும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த புதிய அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் நாங்கள் மனப்பூர்வமான ஒத்துழைப்பைத் தருவோம் என்று தெரிவிக்கிறேன். அதே சமயத்தில், பின் வரும் கோரிக்கையையும் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். நான்காவது பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த வெற்றியைக் கொண்டாடும் போது, முதலாவதாக மக்கள் சொல்வது, "ஐயா, புதிய ஆட்சிக்கு ஆதரவு அளித்து, புதிய அரசாங்கம் ஏற்படுகிறது. அவர்களிடம், உணவுப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணவேண்டும் என்று நீங்கள் சட்டசபையில் தெரிவிக்க வேண்டும்" என்பதுதான் அவர்களுடைய தலையாய விருப்பமாக இருக்கிறது. இந்த மந்திரி சபை சொல்லக் கூடிய கொள்கைப்படி கொள்முதல் நடத்தப்போவதைப் பாராட்டி ஆதரிக்கிறேன். நகர சபைகள் இருக்கும் இடங்களிலும், மேஜர் பஞ்சாயத்துக்கள் இருக்கும் இடங்களிலும் உள்ள மக்களுக்கு உணவுப் பங்கீடு செய்வதை நம்முடைய இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நகர சபை, மேஜர் பஞ்சாயத்துக்கள் ஏரியாக்களில் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 12 அவுன்ஸ் வீதம் கொடுக்க வேண்டும் என்றால், அதற்கு 12 லட்சம் டன் அரிசி மாநிலத்தில் கொள்முதல் செய்யப்பட வேண்டும். சுமார் ஒரு கோடிப்பேர் வரைக்கும் இந்தத் திட்டத்தின் கீழே கொண்டு வரப்பட்டால், ஓரளவு நியாயமான முறையில் அரிசியும், உணவுத்தானியங்களும் கொடுக்க வசதியாக இருக்கும். சிலர் கூறுகிறார்கள், கண்ட்ரோல்களையே உடனடியாக எடுத்துவிட்டால் நன்மையாக இருக்கும் என்று. நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன், இரண்டு ஆண்டுகளுக்கு முன் இந்த கண்ட்ரோல்கள் இல்லை ; அன்றைக்கு இருந்த அரசாங்கம் கொள்முதல் தேவையில்லை என்று சொல்லி வந்தது ; பிறகு, உணவு தானியங்கள் இல்லாததால், சென்னையிலும் இன்னும் மற்ற இடங்களிலும் விலைவாசி ஏற்றத்தால் நெருக்கடி

நிலைமை ஏற்பட்டதால், ஏதோ தயக்கத்தோடு கொள்முதலை நடத்தியது. இன்றைக்கு சம்பா அறுவடையாகி, தானியங்கள் கிடைக்கின்றன. இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் அரசாங்கம், அந்த தானியங்களைச் சேகரிக்கத் தக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் மிகப் பயங்கரமான உணவு நெருக்கடி ஏற்படும் என்று எங்கள் கட்சியின் சார்பாகத் தெரிவிக்கிறேன். அந்த நிலையில் சிறுநிலச் சொந்தக்காரர்கள் எந்த விதமான வற்புறுத்தலுக்கும் உள்ளாகாமல் இருக்க, 3 ஏக்கர் நஞ்சையோ, அதற்குத்தக்கவாறு புஞ்சையோ வைத்திருப்பவர்களுக்கு கொள்முதலிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். மூன்று முதல் ஐந்து ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு, ஏதாவது லெவி முறையில் கொடுக்க வேண்டும் என்று வகுத்து ஐந்து ஏக்கருக்கு மேல் நஞ்சை வைத்திருப்பவர்களிடம், அவர்களுடைய சொந்தத் தேவைக்கும் விவசாயத்திற்கும் போக பாக்கி இருக்கும் மார்க்கெட்டபிள் சர்ப்ளஸை, உபரி தானியங்களை கொள்முதல் செய்யவேண்டிய பொறுப்பை செவ்வனே நிறைவேற்ற முடியும் என்று அமைச்சரவைக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அதே போல, மற்றொரு முக்கியமான பிரச்சினை விவசாயத் தொழிலாளிகள். உதாரணமாகப் பார்த்தால், தமிழ் நாட்டில் லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் வேலையில்லாத நிலையில் இருக்கிறார்கள். நம்முடைய உணவு உற்பத்தித் திட்டத்திலேயே, இப்படி வேலையில்லாமல் இருக்கக் கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கும் வகையில் விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் ஆக்க பூர்வமான வகையில் செயல்பட்டு, உணவுப் பிரச்சினையையும் தீர்க்க இந்த மேன் பவரை, மனித சக்தியை உபயோகிக்கும் செயலில் ஈடுபடவேண்டும்.

அதே போல, குத்தகைக்காரர்கள் நடைமுறையில் நிலையான வார உரிமை, ஃபிக்ஸிடி ஆப் டென்யூர், பெறுவதற்கு அவசர உணர்வோடு அந்த பிரச்சினையைக் கவனிக்க வேண்டும் என்று அமைச்சரவைக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அதே போலத் தான் தமிழ் நாட்டில் விவசாயத் தொழிலாளர்களுக்கு மனைக் கட்டுகள் சொந்தமாக்கப்பட வேண்டும். அரசாங்கத்தின் கைவசமுள்ள தரிசு நிலங்களை, அவற்றின் கணக்குகளை எடுத்துப் பார்த்து, அவற்றில் சாகுபடிக்கு லாயக்கானவற்றை விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கினால் உற்பத்தியைப் பெருக்க உதவியாக இருக்கும். குறிப்பாக, அரசாங்கத் தரிசுகளை ஏராளமாக ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கிறார்கள். பெரும் நிலச் சொந்தக்காரர்களும், நிலம் உள்ளவர்களும், அப்படிப்பட்ட நிலங்களை சர்க்கார் விவசாயத் தொழிலாளர்களுக்கு அளித்தால், மாநிலத்திலுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்வதோடு மட்டுமின்றி, உணவு உற்பத்திக்கும் ஆர்வம் ஏற்படும் என்பதனை அமைச்சரவைக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.



அடுத்து, கவர்னர் உரையில் தொழில் துறையில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிபற்றி எந்தவிதமான குறிப்பும் இல்லை. உதாரணமாக, கோயம்புத்தூரில் பல மில்கள் மூடப் பட்டிருக்கின்றன. ஆகவே, அப்படிப் பட்ட மில்களைத் திறக்க, அந்தத் தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்க, அதை ஒரு அவசரப் பிரச்சினையாக எடுத்து, திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் நாட்டிலே இப்பொழுது என்ஜினியரிங் தொழிலில் மூலப் பொருள் கிடைக்காத நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அதைத் தீர்க்கவும் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தத் தொழிலாளர்களுக்கும் வாழ்வு அளிக்க வேண்டும். கவர்னர் உரையில் விவசாய உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதே சமயத்தில் தொழில் வளர்ச்சியடைந்திருக்கும் இங்கே தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கவும், அவர்களுடைய உழைப்பையும் உற்பத்தியையும் பெருக்குவதற்கும், ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்து கைத்தறித் தொழிலாளர்களுடைய வாழ்வில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஸ்டாக் தேங்கி இருப்பதால் லட்சக்கணக்கான குடும்பங்கள், அல்லலுற்று இருக்கிறார்கள். அவர்கள் அல்லல் படும்போதெல்லாம், அவர்களுக்கு உறுதுணையாக நின்று பணியாற்றி இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும், இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியும். அப்படிக் கைத்தறிக்காரர்களுக்கு என்று உழைக்கும் பாரம்பரியம் நமக்கு உண்டு. அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் கொடுக்க வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நண்பர்களே, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக முதல் அமைச்சர் கனம் அண்ணாத்துரையைத் தலைவராகக் கொண்ட இந்த அமைச்சரவை உணவுப் பண்டங்கள் மீது விதித்து இருக்கும் விற்பனை வரியை குறைத்தோ அல்லது நீக்குவதன் மூலமாகவோ நடவடிக்கை எடுத்தால் விலைவாசியைத் தடுத்து நிறுத்துவதற்கு ஓரளவு உதவியாக இருக்கும். அந்த நிலையையும் இன்றைக்கு அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோல திராவிட முன்னேற்றக் கட்சியின் தேர்தல் அறிக்கையில் தமிழக மாநில அரசுக்குப் போதுமான நிதி வருவாயை அதிகப்படுத்திக்கொள்ள பஸ் போக்குவரத்தைப் படிப்படியாக மாநில அரசே மேற்கொள்ளும் என்கிற கொள்கையை குறிப்பிட்டிருந்தார்கள். அதையும் பரிசீலனை செய்து, அதன் மூலம் அதிகப்படியான வருமானத்தைப் பெறுவதற்கு அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கக் கூடியது அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கக்கூடிய நிலங்களில் குடியிருக்கக்கூடியவர்களை பல்வேறு உத்தரவுகளின் மூலமாக வெளியேற்றி வருவதுதான். முனிசிபாலிட்டிகள், மேஜர் பஞ்சாயத்துக்கள் ஆகிய இடங்களில் உள்ள சர்க்கார் நிலங்களில் இருந்து திடீரென்று இப்படிப் பலர் வெளியேற்றப்படுவார்களானால், அவர்கள் எங்கே போவார்கள்? அந்தப் பிரச்சினையை திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை நல்ல முறையில் பரிசீலனை செய்து இதற்கு நல்லதொரு பரிகாரம் காணவேண்டும். அதற்கிடையில் அரசாங்கப் புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வருகிற எந்தக் குடிமகனும் அந்த நிலத்தில் இருந்து வெளியேற்றப்படக்கூடாது என்கிற அவசர உத்தரவையாவது பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் யார் யார் மீது வழக்குகள் தொடரப்பட்டனவோ அவற்றை எல்லாம் இந்த அரசாங்கம் வாபஸ் பெற்றிருப்பதற்காகப் பாராட்டுகிறேன். மேலும் அந்தப் போராட்டத்திலே பலர் சுடப்பட்டிருக்கிறார்கள். பலர் மரணம் அடைந்திருக்கிறார்கள். 1942-ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய விடுதலைப் போராட்ட காலத்தில் கூட இத்தனைபேர்கள் தமிழ் நாட்டில் சுடப்படவில்லை. ஆயினும் இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்திலே ஏராளமான பேர்கள் சுடப்பட்டு உயிர் இழந்திருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்களுக்கு எந்த எந்த வகையில் நஷ்ட ஈடு கொடுக்கலாம் என்பதைப் பற்றியும் இந்த திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை ஆழ்ந்து சிந்திக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோலத்தான் இந்த நிர்வாகத்தில் அரசாங்கம் போலீஸ் இலாக்காவுக்கு ஒரு உத்தரவை அளிக்கவேண்டும். சந்தேக கேஸ்கள் என்பதாகப் போட்டு பல பேர்களை இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் போலீஸ் ஸ்டேஷனிலேயே அடைத்து வைக்கின்ற கொடுமை நிறுத்தப்படவேண்டும். வழக்குகளைப் பதிவு செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு பதிவு செய்யக் கூடாது. ஆகவே சந்தேக கேஸ்கள் என்பதாக பல பேர்களைப் பிடித்து போலீஸ் ஸ்டேஷனில் அடைக்கிற நிலைமையை நிறுத்த இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றின் மூலம் ஸ்தல நிர்வாகத்தை நடத்த அரசாங்கம் முன் வருவதை வரவேற்கிறேன். மக்களின் பிரதிநிதிகள் அந்த அந்த மாவட்டங்களின் நிர்வாக சம்பந்தப்பட்ட பற்பல பிரச்சினைகளிலும் கலந்துகொண்டு பங்கு பெறும்படியான வாய்ப்பை மாவட்ட ஆட்சியாளர்கள் ஏற்படுத்தித்தரவேண்டும் என்பதையும் இந்த அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

நண்பர்களே, இறுதியாக நிர்வாகத்துறையில் தமிழ் மொழியை எல்லாக் கட்டங்களிலும் பங்குகொள்ளச் செய்கிறபோது— மாவட்ட அளவிலும் சரி, மேல் நிலையிலும் சரி தமிழிலேயே





அனுப்பப்படுகிற கடிதங்கள் சரியான முறையில் பரிசீலனை செய்யப்பட்டு அதன்பேரில் சரியான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்கிற சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் இந்த அமைச்சரவை என்று கேட்டுக்கொள்கிறேன். வேறு விஷயங்களைப் பற்றி என் கட்சியில் இருந்து பேசக்கூடியவர்கள் பின்னால் குறிப்பிடுவார்கள் என்று தெரிவித்துக்கொண்டு இத்துடன் நான் முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மதிப்பிற்குரிய துணைப்பேரவைத்தலைவர்** : உறுப்பினர்கள் பேசும் போது, 'நண்பர்களே' என்பதாக நேர்முகமாக அழைக்காமல், தெரிவிக்கின்ற கருத்துக்களை பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. ஆ. துரையரசன்**: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய கவர்னர் பெருமான் அவர்கள் உரை நிகழ்த்தி, அதன் மீது பேசுகின்ற வாய்ப்பை எங்களுக்கு அளித்தமைக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நடந்து முடிந்த நான்காவது பொதுத் தேர்தல் எவ்வளவு அமைதியுடனும், கண்ணியத்துடனும், நல்ல கட்டுப்பாட்டுடனும், கடமை உணர்ச்சியுடனும் கட்டிக்காக்கப்பட்டு நடைபெற்றது என்பதை கவர்னர் பெருமான் தம்முடைய உரையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். தமிழகத்தில் இருபது ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆட்சி செய்து வந்த காங்கிரஸ் கட்சியை அகற்றுவதற்குக் காரணமாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம், குறிப்பாகக் கூட்டணித் தோழர்கள், அவற்றின் வெற்றிக்கு அரும்பாடுபட்ட லட்சக்கணக்கான வாக்காளப் பெருமக்கள், அருமை கழக ஊழியர்கள், மாணவ சமுதாயம், தாய்மார்கள் அத்தனைபேர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே ஆளும் தரப்பில் இருந்து பேசிய பல நண்பர்கள் தேர்தலுக்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழகம் அளித்த வாக்குறுதிகள் இந்த அவையில் நிறைவேற்றப்படுமா? என்ற ஐயத்தை எழுப்பினார்கள். கராச்சியில் காங்கிரஸ் கட்சியினரால் போடப்பட்ட தீர்மானம் காற்றில் விடப்பட்டது போல அல்லாமல் காஞ்சீபுரத்துத் தீர்மானங்கள் அத்தனையும் நிச்சயமாக கழக ஆட்சியில் படிப்படியாக நிறைவேற்றப் படும் என்பதை இந்த மன்றத்தின் வாயிலாக எதிர்க் கட்சியில் இருக்கிறவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

நமது அமைச்சரவையை இந்த நேரத்தில் வேண்டிக்கொள்வது 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று இருப்பதை உடனடியாக 'தமிழ் நாடு' என்று மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்பதேயாகும். இப்போது நமது தமிழ்நாட்டிலே ரேடியோ நிலையங்கள் ஆகாசவாணி' என்று ஒலிபரப்புகின்றன. அதைமாற்றி

[திரு. ஆ. துரையரசன்] [1967, மார்ச் 18

'வானொலி' என்று அறிவிப்பதற்கு மத்திய அரசுக்கு நம் அரசு ஆலோசனை சொல்லும், சொல்ல வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நிலவரி நீக்கம் சம்பந்தமாக ஐயப்பாடுகள் ஏற்பட்டிருப்பதாகவும், காரைக்குடியில் போடப்பட்ட தீர்மானம் காங்கிரஸ் கட்சி பதவிக்கு வந்திருந்தால் நிச்சயமாக நிறைவேற்றப்பட்டிருக்கும் என்பதாகவும் எதிர்தரப்பில் இருந்து சொன்னார்கள். பதவிக்கு வந்திருந்தால் காரைக்குடியில் போட்ட தீர்மானத்தையும் காங்கிரஸ் கட்சியினர் காற்றில் பறக்கவிட்டிருப்பார்கள் என்பதை நாட்டுமக்கள் தெளிவாகத் தெரிந்துகொள்வார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இந்த அவையில் பணியாற்றிவந்த காலத்தில் இந்தச் சபையில் கொண்டுவந்த தீர்மானங்கள், பேசிய பேச்சுக்கள், எடுத்து வைத்த கருத்துக்கள் அனைத்தும் படிப்படியாக கழக ஆட்சியில் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். தேர்தல் நடந்து முடிந்து 15 நாட்களாகின்றன. இம்மாதம் 6-ஆம் தேதி தான் புதிய அமைச்சரவை•பொறுப்பேற்றிருக்கிறது. 7-ம் தேதியே, ரூபாய்க்கு 3 படி அரிசி எங்கே? என்று கேட்டால் மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன் "இருபதாண்டு ஆட்சியில் நீங்கள் என்ன செய்தீர்கள்? உங்களால் ஏற்படுத்தப்பட்ட சீரழிவை படிப்படியாகத்தான் போக்க முடியும், நிச்சயமாக இந்த அமைச்சரவை படிப்படியாக தங்களுடைய வாக்கை நிறைவேற்றியே தீருவார்கள்" என்று தெரிவித்துக் கொள்கிறேன். நிச்சயமாக நிலவரி சம்பந்தமாக—அதற்காக நியமிக்கப்பட்டிருக்கிற ஒரு அதிகாரியைக் கொண்ட குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்த பிறகு—அதைப் பரிசீலனை செய்து நிலவரியை எடுப்பதோடு ஏழை மக்களுக்கு இந்த அரசு வாழ்வளிக்கும் என்பதில் ஐயப்பாடு இல்லை. மற்றும் கள்ளமார்க்கெட், பதுக்கல் சம்பந்தமாக இந்த அரசின் கொள்கை விளக்கப்பட்டிருக்கிறது. இப்போதே அதனால் ஏற்பட்டிருக்கிற பலனைப் பார்க்கிறோம், பத்திரிகை வாயிலாக. பதுக்கல்காரர்கள் மெள்ள மெள்ள, தங்களுடைய போக்கை மாற்றிக்கொள்கிற நிலைமை நிச்சயமாக தமிழகத்தில் உருவாகும் என்று நினைக்கிறோம். நண்பர் திரு. ஆறுமுகம் எடுத்துச் சொன்னதுபோல பதுக்கல்காரர்களுக்கு ஆயுள் தண்டனை அளிக்கக்கூடிய வகையில் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. ஏற்கனவே இந்த மன்றத்தில் கள்ள நோட்டு அடிக்கின்றவர்களை சுட்டுக்கொல்ல வேண்டும் என்று குறிப்பிட்டபோது ஜனநாயகத்தில் அப்படிச் செய்ய முடியாது என்பதாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். என்னைக் கேட்டால் பதுக்கல்காரர்கள், கள்ள நோட்டு அடிக்கிறவர்கள் ஆகியோர் அத்தகைய தண்டனைக்கு உள்ளாக்கப்படுகிற நிலைமை கூடப் பொருந்தும். கள்ளநோட்டுப் புழக்கம் நாட்டில் ஏராளமாக இருப்பதாக ஒற்றர்களின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஒருசில இடங்களில் முன்பு ஆளும் கட்சியில்



7, மார்ச் 18] [திரு. ஆ. துரையரசன்]

ந்தவர்களின் தலையீடு காரணமாக பிடிக்கப்பட்ட கேஸ்கள் —றக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக காரைக்குடியில் மகாநாடு நடைபெற்ற நேரத்தில் கூட உயர்ந்த நிலையில் உள்ள மனிதர் இரவோடு இரவாகக் கைதுசெய்யப்பட்டு விடியற்காலைக்குள் விடுதலை செய்யப்பட்டதையும் பார்த்தோம். காரைக்குடி மகாநாட்டுக்குப் பிறகு இரண்டு ரூபாய் நோட்டுக்கள் செல்லத்தக்கதல்ல என்பதான நிலைமை உருவாயிற்று. இன்னும் ஏராளமான கள்ள நோட்டுக்கள் புழக்கத்தில் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. நமது முதல் அமைச்சர் அவர்கள் இவ்விஷயத்தில் தீவிரமாகக் கவனம் செலுத்தி, கள்ள நோட்டு அடிக்கின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைப் பிடித்துக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு தங்கள் மூலமாக ஒரு வேண்டுகோளைச் சமர்ப்பிக்கிறேன். கடந்த இருபது ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சி ஆண்டு வந்தது. புதுக்கோட்டை, கிழக்கு இராமநாதபுரம், பட்டுக்கோட்டை, அறந்தாங்கி போன்ற வறண்ட பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுக்க 1946-ஆம் ஆண்டிலேயே சிலட்டூரில் நடந்த மகாநாட்டில் காவேரித் தண்ணீரைக் கொண்டுவர நிச்சயமாக நடவடிக்கை எடுத்துக்கொள்வதாக அறிவித்தார்கள்.

இந்த நாட்டை இதுவரை ஆண்டுவந்த காங்கிரஸ் கட்சியினர் இதைப்பற்றியெல்லாம் தொடர்ந்து இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்டும் கேளாக் காதினராகத்தான் இருந்தார்கள். என்னுடைய வட்டாரத்தைப்பற்றி மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை •அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய வட்டாரத்தைப்பற்றி பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவசியம் இல்லை. அவர்கள் என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். பொதுவாக அவர்கள் தமிழகத்திற்குச் சொந்தமென்றிருந்தாலும்கூட நான் குறிப்பிட்ட இந்த இடங்களைப்பற்றிச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இந்த இரண்டு மூன்று இடங்கள் அந்தமான் தீவுகளைப் போல் காட்சியளிக்கின்ற பரிதாபமான நிலை இருக்கிறது. காலத்தே மழை பெய்யவில்லையென்றால் அந்த இடங்களிலே உள்ளவர்கள் அங்கேயிருந்து தஞ்சை வடபகுதிக்குச் சென்று வாழ்க்கை நடத்தக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, விரைவிலே காவிரித் தண்ணீரைக் கொண்டுவரக்கூடிய நிலைமையை ஏற்படுத்தவேண்டும். என்னுடைய பகுதி நீண்ட நெடுங்காலமாக ஜமீன்தார்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாகவே இருந்திருக்கிறது. ஜமீன் ஒழிப்புக்குப் பிறகு நூற்றுக்கணக்கான ஏரிகள் மராமத்துச் செய்யப்படவில்லை. அதைப்பற்றி நான் கடந்த ஐந்தாண்டுக் காலமாக இந்த மன்றத்திலே எடுத்துச்சொல்லியபொழுது நிதி நிலை வசதியில்லை, நிதி நிலை வசதியில்லை என்றுதான் சுட்டிக்காட்டினார்களே ஒழிய வேறு ஒன்றும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. நூற்றுக்கணக்கான ஏரிகள் மராமத்துச் செய்யப்படாமலேயே

[திரு. பி. வேலுசாமி] [1967, மார்ச் 18

காரியமாற்றுவார்கள் என்ற நல்ல நம்பிக்கையில் அந்தத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அந்த வகையில் சீக்கிரமாக, உடனடியாக அவர்களுடைய கஷ்டங்களைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை எடுத்து அவர்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவு உற்பத்தி முறையில் சில புதிய விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. ரேஷனில் கொடுக்கப்படும் அரிசியானது ஏற்கனவே இரண்டு முறை வேக வைக்கப்பட்டு, ரைஸ் மில்லிலே இரண்டு சமையல் ஏற்கனவே ஆகி மூன்றாவது சமையலாக வீட்டிலே நடக்கிறது. அந்த அரிசிக்குப் புதிய புதிய கலர்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த அரிசியைச் சாப்பிடுகின்றவர்களுக்குப் புதிய புதிய வியாதிகள் வரக்கூடிய சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன. அதையும் உடனடியாகத் தீர்ப்பது சிறப்பாக இருக்கும். போராசையின் காரணமாக அரிசி மில்காரர்கள் நிறைய தண்ணீரைத் தெளித்து மூட்டையாகக் கட்டி வைத்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட சமூக விரோதமான காரியத்திலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அரிசியிலே கல்லைக் கலப்பதும் சர்வ சாதாரணமாகி விட்டது. புரொக்யூர்மென்ட் செய்யப்படும்போது பெரிய இடங்களில் எல்லாம் நெல்லோடு 'பாலை'யையும் சேர்ந்து அளந்து விடுகிறார்கள். போராசையின் காரணமாக இவ்வாறு செய்கிறார்கள். இதைத் தடுப்பதற்கும் வழி செய்வது சிறப்பாக இருக்கும். அரிசி மில்காரர்கள் செய்யும் கொடுமையை உடனடியாகத் தடுக்க வேண்டும். நிலச்சீர்திருத்தம் என்ற பெயரால் சாதாரண விவசாயிகள் பெற்றிருக்கின்ற கொடுமைகளிலிருந்து அவர்களுக்கு விடுதலையளிக்கும் காரியத்திலே புதிய சர்க்கார் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளிகள் புதிய சர்க்காரிடம் நிறைய நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். தங்களுக்கு எல்லாவிதமான நலன்களும் ஏற்படும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். ஓராண்டு காலமாக ஐந்து மில்கள் மூடப்பட்டு 20,000 தொழிலாளிகளுக்கு மேல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையில் உடனடியாக அரசாங்கம் தலையிட்டு அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு வணக்கத்தைக் கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. சி. வி. எம். அண்ணாமலை: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, முதல் முதலிலே சட்ட மன்றத்திற்கு வந்தவன் என்ற முறையில் என்னுடைய பணிவு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றையதினம் கவர்னர் அவர்கள் ஆற்றிய சிறப்புரையை வரவேற்கின்ற வகையிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நாட்டினுடைய ஏழை விவசாய மக்களுடைய துயரைப் போக்கவும், விலைவாசி ஏற்றத்தைக் குறைக்கவும் தமிழக அரசு எத்தகைய சீரான திட்டங்களை மேற்கொள்ள இருக்கிறது



1967, மார்ச் 18] [திரு. சி. வி. எம். அண்ணாமலை]

என்பதை கவர்னர் அவர்கள் இரத்தினச் சுருக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். கவர்னர் அவர்களுடைய உரையைப் பாராட்டிப் பேசுகின்ற எங்களுடைய கட்சி உறுப்பினர்களுக்கு மறுப்புத் தெரிவிக்கின்ற வகையில் காங்கிரஸ் சார்புடைய கனம் உறுப்பினர் திரு. நல்லசாமி அவர்கள் பேசும்போது, 'விவசாயிகளைப் பற்றியும், ஏழைகளைப் பற்றியும் மிகைப்படுத்திப் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள்' என்றும் 'விவசாயிகளுக்கு விதிக்கப்பட்ட நில வரியை ரத்து செய்ய வேண்டுமென்று முன்னைய அரசு திட்டமிட்டு இருந்தது; அதை நிறைவு செய்கின்ற வகையில் கவர்னர் பெருமான் அவர்கள் உரை காணப்படவில்லை என்பதற்காக வருந்துகிறேன்' என்றும் சொன்னார்கள். உண்மையிலேயே, இந்த நாட்டை 20 ஆண்டு காலமாக ஆண்டு வந்த காங்கிரஸ் அரசு, கட்சியின் ஆதிபத்தியத்தை நிலைநிறுத்துவதற்கும் அந்தக் கட்சியினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குமே ஆட்சி செய்ததோ என்று கருதத்தக்க அளவுக்கு ஆட்சி செய்ததின் காரணமாகத் தான் இந்த நாட்டின் ஏழை நடுத்தர மக்கள் எல்லாம் ஜனநாயகத்தைப் பிரதிபலிக்கும் வகையில், ஜனநாயகத்தைக் காக்க வேண்டுமென்ற சீரிய நெறியில், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதனுடன் தோளோடு தோள் உரசி நின்ற தோழமைக் கட்சிகளுக்கும் மகத்தான வாக்குகளைத் தந்து அரசை நிறுவுவதற்கான நல்ல வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள். அந்த வாய்ப்பினைத் தந்த பெருமக்களுக்கெல்லாம் இந்தச் சந்தர்ப்பத்திலே என் மனம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளும் அதே நேரத்தில் ஒன்றை நான் கூற ஆசைப்படுகிறேன்.

நம்மை நீண்ட நெடும் காலமாக ஆண்டு வந்த காங்கிரஸ் ஆட்சியாளர்கள் இந்த நாட்டு மக்களுக்கு அள்ளித் தந்த வாக்குறுதிகள் ஏராளம், ஏராளம்; எண்ணற்றவை; ஏட்டில் அடங்க முடியாத அளவுக்குத் தந்தார்கள். ஆனால், அவற்றை நிறைவேற்றத் தவறிவிட்டார்கள். இந்த நாட்டிலே இருந்த வாக்காளப் பெருமக்கள், குடிமக்கள் அத்தனை பேரும் அந்த வாக்குறுதிகளிலே நம்பிக்கை இழந்த நிலையில் இந்த நாட்டிலே ஒரு புதிய அரசை, புதிய திருப்பத்தை, ஏழைகளுடைய அரசை, நிறுவ வேண்டுமென்ற உணர்வோடு நடைபெற்ற தேர்தலில் முடிவு கூறியிருக்கிறார்கள். நாகரிகத்தின்பாற்பட்டு மதிப்புக்குரிய கவர்னர் அவர்கள், அமைதியான முறையில் தேர்தல் நடைபெற்றது என்று குறிப்பிட்டிருந்தாலும் எத்தனை இடுக்கண்களை திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களும், தோழமைக் கட்சி வேட்பாளர்களும், தங்கள் தங்கள் உயிர்களுக்கு ஜவாப்தாரி, பொறுப்பு அற்ற நிலையில் அகப்பட்டுத் தவித்ததை இந்த நாடு அறியும்; நல்ல மனம் இருந்தால் நீங்களும் அறிவீர்கள். ...ர்கள். சொன்ன

உண்மையான ஒன்றை நான் சுட்டிக்காட்ட ஆ...ஞர் அண்ணா மதிப்புக்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் வருந்...ந்திய துணைக் கூடாது. என்னைப் போன்ற பல பேர் பாதிக்கப்... என்று நான் இந்த மன்றத்திற்கு ஐந்து ஆண்டு காலத்தி...பாரும் கருதமாட்... ...சியும் எளிமையும்,

வருவதற்கு வாய்ப்பைப் பெற்றிருந்தும் அந்த வாய்ப்பு ஆளும் கட்சியால் பறிக்கப்பட்டவன், அது குறித்துக் கவலைப்படவில்லை. ஜனநாயகம், சட்டம், அரசியல், நீதி, அமைதி என்பதெல்லாம் இந்த நாட்டை ஆண்டு வந்த காங்கிரஸ் கட்சிக்கு அப்பாற்பட்ட தன்மையில், அந்தக் கட்டுப்பாடு, நீதி, அமைதி, ஒழுங்கு ஆகியவற்றையெல்லாம் எதிர்க்கட்சிகள் மட்டுமே கடைப்பிடித்து ஒழுக வேண்டுமென்ற முறையில், காங்கிரஸ் கட்சி அத்தனையையும் மீறிய தன்மையில், சட்ட வரம்புகளை மீறிய தன்மையில், கட்டுப்பாடுகளை மீறிய தன்மையில், தர்மத்தை மீறி, அறத்தை மீறி எத்தனையோ காரியங்களைச் செய்துதான் 1962 தேர்தலானாலும் சரி, அதற்கு முந்தி 1957-ம் ஆண்டு தேர்தலானாலும் சரி, அவர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இப்போது நடைபெற்ற 1967-ம் ஆண்டுத் தேர்தலிலும் எத்தனையோ இடுக்கண்களைத் தாண்டித்தான் மக்கள் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று ஏழைப் பங்காளர்களாகிய எங்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். இந்த நாட்டு ஏழை மக்களின் இருண்டுபோன வாழ்வுக்கு விளக்கேற்றி வைக்கும் முதற்குடிமகன் அறிஞர் அண்ணா அவர்கள்தான்; அவர்கள் தலைமையில் பணியாற்றும் தொண்டர்கள் சட்ட மன்றத்திற்குச் சென்றால்தான் இருண்டு போன மக்களுக்கு நல்வாழ்வு அமையும் என்ற நம்பிக்கையோடு பெருவாரியான வாக்குகளைத் தந்து இந்த மன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நல்ல எண்ணங் கொண்ட மக்களைப் பாராட்டுகிறேன்.

இந்த நாட்டின் முதுகெலும்பாக இருப்பவர்கள் விவசாயிகள். விவசாயிகள் வளம் பெற்றால்தான் எல்லோருடைய வாழ்விலும் ஒளி வீசும். விவசாயிகளுடைய வாழ்க்கை வளம் பெற்றால்தான் இந்த நாட்டினுடைய ஏழை பாட்டாளி மக்கள், நடுத்தர மக்கள் அத்தனை பேருடைய நல்வாழ்வையும் பேண முடியும். விவசாயத் துறையில் முன்பிருந்த அரசுக்கு அழுத்தந்திருத்தமான பற்றும் நம்பிக்கையும் இருந்திருந்தால் விவசாயத் தொழில் விஞ்ஞான முறையில் எந்த அளவுக்கு மேலோங்கியிருக்க வேண்டும், அதற்கான நல்லதொரு வாய்ப்பு உருவாகியிருக்க வேண்டுமென்பதை எல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

நான் சென்ற ஜூன் மாதத்தில் காஞ்சிபுரத்தில் உள்ள விவசாயப் பண்ணையில் நான்கு மூட்டை கிச்சலி சம்பா விதை நெல் வாங்கினேன். என்னைப்பற்றி நான் சொல்லிக் கொள்வதால் அது நல்லதொரு உபமானத்தை எடுத்துக் காட்டும் என்ற முறையில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான்கு மூட்டை விதை நெல் வாங்கினேன். வாங்கி முதல் நான்கு மூட்டை விதை நெல்லையிட்டு சிறப்புரை... டுத்து நாற்று நட்டு அதற்கு வேண்டியதைச் செய் ...தி கதிர் முன்னே வந்துவிட்டது, பாதி பயிராக சொல்ல விரு... எனக்கு விஷயம் புரியவில்லை. ஓடோடிச் சென்றேன் இந்த நாட்டு அதிகாரிகளிடம். 'ஐயா! தரமான விதை; நல்ல போக்காயும், ... விதை என்றெல்லாம் குறிப்பிட்டீர்களே! அதை எத்தகைய சீ... எனக்கு இந்த கதி ஏற்பட்டிருக்கிறதே! இதைப்





பாருங்கள்' என்று சொன்னேன். 'சல்பேட் போடுங்கள், பின் நன்கு மேலே ஓங்கி வளரும், கதிர் ஒன்றாகும்' என்றார்கள். அதையும் பார்த்தேன். எல்லாம் பழுத்து காய்ந்து போய், மடிந்து மணாேறி மண்ணாகப் போய்விட்டது. பிறகு எடுத்து கதிர்தான் அறுவடை செய்யும் நிலைக்கு வந்தது. தமிழகத்தில் பெய்த பெரு மழை காரணமாகவும், அடித்த புயல் காரணமாகவும் அறுவடை நெல்லைப் பெற முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டு விட்டேன். நல்ல தரமான விதைகள் கொடுக்கப்பட்டிருந்தால், உரிய காலத்தில் அதை வைத்துப் பயிரிட்டிருந்தால் புயல் அடித்திருந்த போதிலும் இவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்காது. பொதுக்கு விதை நெல் என்று சொல்வதெல்லாம், அதைக் குறிப்பிட்ட சில விவசாயிகளிடம் விலை பேசி வாங்கிக் கொள்கிறார்கள். அதற்கு அதிகவிலை கொடுத்து வாங்குகிறார்கள். பச்சை நெல்லை சரியான காய்ச்சலுக்குப் போட்டு வைக்காதவர்களிடம் அதிக விலையில் வாங்குவது, தங்களுக்கு வேண்டியவர்களிடம் இருந்து அதைப் பெறுவது, அதற்காக அதிகாரிகளை உசுப்புவது என்ற நிலையில் சென்றகால சர்க்கார் இருந்தது. எதிர்காலத்தில் நடைபெற இருக்கிற தமிழக அரசானது தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையின் கீழ் நன்கு நடக்க இருக்கிறது. ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்ட சட்டமன்ற, நிர்வாக அமைப்பு முறைகளில் மாசுபடும் அளவிற்கு இருபது ஆண்டுகளாக இங்கு இந்த மன்றத்தில் உருவாக்கப்பட்ட திட்டங்களை நல்லமுறையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செயல்படுத்தவொட்டாமல் ஒரு கட்சிக்காரர்களின் ஆதிக்கமாக இருந்துவந்தது. அவர்களின் ஊடுருவல் பிரதிபலிக்கிற தன்மையைத்தான் எடுத்துக் காட்டியது. அந்த நிலை மாறவேண்டுமென்று இதே மன்றத்தில் எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் 1957-ல் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்போது நான் ஓர் பார்வையாளராக இருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். போலீஸ் துறை மான்யத்தின் மீது அவர்கள் பேசினார்கள். அதாவது, 'அமைச்சர் பெருமக்களே உங்களை மதிக்கிறேன், உங்கள் ஆற்றலை மதிக்கிறேன், காவல் துறை என்ற துறை இருக்கிறதே அத்துறை கறை படியாது நியாயமாக இருக்க வேண்டும். அத்துறை நீதியின் உச்சியில் இருக்கவேண்டும். அத்துறை விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டிருப்பதாக இருக்க வேண்டும். விருப்பு வெறுப்பிற்கு அப்பாற்பட்ட தன்மையில், கட்சிகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட தன்மையில், பற்றற்ற தன்மையில் குற்றம் புரிபவர்களைத் தண்டிக்கும் வகையிலும், இழப்பிற்கு ஆளாகக் கூடியவர்களுக்கு கை கொடுத்து காப்பாற்றும் தன்மையிலும் அத்துறையை ஆக்குங்கள்' என்று அன்று சொன்னார்கள். இன்று ஆளுகிற பொறுப்பை எங்கள் அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். சொன்ன வாக்குகளை நிறைவேற்றுவதில் எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு ஈடாக தமிழக மண்ணிலே—ஏன்? இந்திய துணைக் கண்டத்திலேயே—ஒருவரும் இருக்க மாட்டார்கள் என்று நான் சொன்னால் அதை மிகைப்படுத்திக் கூறுவதாக யாரும் கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அடக்க உணர்ச்சியும் எளிமையும்,

[திரு. சி. வி. எம். அண்ணாமலை] [1967, மார்ச் 18

எளிய வாழ்க்கை நடத்தி காட்டும் எங்கள் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிற இந்த அரசு நிச்சயமாக ஏழை எளியவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் இருளை நீக்கி அவர்களுக்கு நல்வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்கும், நல்ல வாய்ப்புக்களை ஏழை எளியவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் என்று இச்சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இங்கு சட்டமன்றத்தில் பேசப்படுகிற முறைகளில் முன்னுக்குப் பின் முரணாக ஏதாவது இருந்தாலும் பயிற்சி காரணமாக பிறகு திருத்திக் கொள்வோம் என்ற உணர்வோடு கொள்ளுதல் வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். 'ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடுவதாக வாக்கு கொடுத்தார்கள், ஆனால் அப்படி போடுவதற்குரிய வாய்ப்பு பற்றி கவர்னர் அவர்கள் உரையில் ஏன் சேர்க்கப்படவில்லை' என்ற ஒரு வினாவை எழுப்பிய அந்த அருமை உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், எங்கள் தேர்தல் வெளியீட்டை, அறிக்கையை அருள்கூர்ந்து உங்களுக்கு ஓய்வு கிடைக்கும்போது அமைதியாக படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தால் ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடுவோம் என்று நாங்கள் கூறவில்லை. ஏழை பாட்டாளி மக்களின் நல்வாழ்விற்காக நல்ல சீரிய திட்டங்களைச் சமைப்போம், வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடும் கோலத்தை மாற்றுவதற்குரிய திட்டத்தை உருவாக்கிக் கொடுப்போம், இல்லாமையைப் போக்கி பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை உருவாக்கிக் கொடுப்போம் என்றெல்லாம்தான் தேர்தல் தீர்மானத்தில் தெரிவித்திருக்கிறோமே தவிர ஆட்சிக்கு வந்தால் மூன்று படி அரிசியை ஒரு ரூபாய் நோட்டைப் பெற்றுக் கொண்டு கொடுப்போம் என்று கூறவில்லை. 1962-ல் கூறியிருக்கிறோம். அப்போதிருந்த ரூபாயின் மதிப்பை எண்ணிப் பார்க்க வேண்டும். ரூபாயின் மதிப்பைக் குறைத்த குற்றத்திற்கு உரியவர்கள் உங்கள் கட்சித் தலைவர்கள்தான் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ரூபாயின் மதிப்பைக் குறைத்து விட்டார்கள். அதனால் பண்டங்களின் மதிப்பு உயர்ந்துவிட்டது. ரூபாயின் மதிப்பு உயர்ந்தால்தான் பண்டங்களின் விலை குறையும். அன்று சொன்னபடி பார்த்தால், இன்று ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதாக அமைந்துவிட்டால் 1962-ல் இருந்த ரூபாய் மதிப்புப்படி ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடுவது போலாகும். அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க, அதற்கான திட்டத்தை உருவாக்க நீங்களும் உறுதுணை புரியவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பெருமைக்கு நீங்களும் நாங்களும் உரியவர்களாவோமென்றும் கூறிக் கொண்டு கவர்னர் பெருமானின் இந்த சீரிய உரையை வரவேற்கிறேன் என்று கூறி விடைபெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. பி. எம். முனுசாமி கௌண்டர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் விவாதத்தில் இருந்து வரும் கவர்னர் பெருமான் அவர்களின் உரைமீதுள்ள விவாதத்தில் கலந்து



ஷ்1967, மார்ச் 18] [திரு. பி. எம். முனுசாமி கௌண்டர்]

கொண்டு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக கவர்னர் பெருமான் அவர்களின் உரை ஆரம்பத்தில் பழைய அங்கத்தினர்களையும், புதிய அங்கத்தினர்களையும் வரவேற்று எல்லோருக்கும் நல்வாழ்த்து கூறியுள்ளார்கள். அதற்காக புதிதாக வந்திருப்பவர்களும், பழையவர்களும் கலந்து கொண்டு எங்கள் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். நான்காவது பொதுத் தேர்தல் நல்லமுறையில் நடந்தது என்பதைப் பற்றி விரிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். கவர்னர் அவர்களின் உரையில் அது காணப்படுகிறது என்றாலும் மந்திரி சபையின் ஒரு திட்டம்தான், அவர்களின் நோக்கத்தைத்தான் அது எடுத்துக் கூறுகிறது என்பதுதான் அர்த்தம். பொதுத் தேர்தல் நல்ல முறையில் நடந்திருக்கிறது என்றால் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நேர்மையான முறையில் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பாராட்டக் கூடிய முறையில் அவ்விதம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மிக மிக உண்மை. எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் குறிப்பிட்டதைப் பார்க்கும்போது, ஏதோ எல்லாவிதமான அசம்பாவிதங்களும் நடைபெற்றன, எதிர்க்கட்சிக்காரர்களுக்கு தவிர்க்கப்பட்ட முறையில் சர்க்கார் ஆட்சியில் இருப்பவர்கள் நடந்து கொண்டார்கள் என்ற முறையில் பேசினார்கள். ஒன்றை மட்டும் மனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். சர்க்கார் கட்சியில் இருக்கக் கூடியவர்கள் அது மாதிரியாக நடந்திருப்போமானால், அப்போது எதிர்க் கட்சியாக இருந்தவர்கள் தற்போது ஆளும் கட்சியாக மாறக்கூடிய வாய்ப்பே ஏற்பட்டிருக்க முடியாது. அந்த ஒன்றை மாத்திரம் உணர்ந்துகொண்டால், ஜனநாயகம் நல்ல முறையில் நடந்திருக்கிறது என்பது தெரியும். ஜனங்களுக்குப் பிடிக்காததைச் செய்தால் உண்மையிலேயே சர்க்காரை மாற்றக் கூடிய நிலை ஏற்படும் என்ற அர்த்தத்தில் செய்திருப்பதை வரவேற்கிறேன். அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. அதே ரீதியில் மக்களுக்கு என்னென்ன கொள்கையில், என்னென்ன அடிப்படையில் நன்மை, பணி செய்கிறோம் என்பதையும், நாம் எந்த முறையில் ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி தற்போது சட்டசபைக்கு வந்திருக்கிறோம், ஆளக்கூடிய கட்சியில் இருக்கிறோம் என்பதையும் உற்று நோக்கும் காலத்தில், கனம் உறுப்பினர் அண்ணாமலை அவர்கள் ரூபாய்க்கு மூன்று படி அரிசி என்று சொல்லவே இல்லை என்று சொன்னார்கள். தேர்தல் காலத்தில் எங்களைப் போன்றவர்கள் இரவு பகலாக கிராமங்களில் சுற்றிப் பார்க்கும்போது, கிராம மக்கள் அபிலாஷைகளைத் தெரிவித்தார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுப்போம் என்று சொன்னதை நன்கு மனதில் கொண்டார்கள். மூன்று படி கிடைத்தால் நல்லது என்றும் சிலர் கொண்டார்கள். விவசாயிகள், மூன்று படி போடுவது என்றால் நஷ்டம் அடைவோம் என்று அவர்கள் அறிவார்கள். அந்த விதத்தில் பார்க்கும்போது உண்மையிலேயே தேர்தல் காலத்தில் என்ன என்ன வாக்குறுதி கொடுத்தோமோ அதை நிறைவேற்றுகிற வகையில் கொள்கையை நிறைவேற்றுவதுதான் உண்மையான அரசுக்கு

அழகே தவிர, சொல்லுவது ஒன்று, செய்வது வேறு ஒன்று என்று இருக்கக் கூடாது. கவர்னர் அவர்களுடைய உரையிலேயும் எல்லாவித அம்சங்களையும் குறிப்பிட்டிருந்தால் அதை வரவேற்றிருப்போம், நன்றி செலுத்தியிருப்போம். ஆனால், மாறுபட்ட நிலையில் காங்கிரஸ் சர்க்கார் இருபது ஆண்டுகள் ஆண்டு கொண்டிருந்தபோது அவர்கள் என்ன திட்டங்களைக் கொண்டிருந்தார்களோ அதேதான், அதே வார்த்தைகள்தான் இதிலே குறிப்பாகக் கண்டிருக்கிறதே தவிர, நவீன முறையில் வேறு ஒன்றும் இதில் இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிகிறது. இதைத்தான் பல அங்கத்தினர்களும் எடுத்துச் சொன்னார்கள். உதாரணமாகச் சொல்லுகிறேன், நிலவரியை எடுத்துக் கொள்வோம். கடந்த தேர்தலுக்கு முன் சர்சார்ஜை எடுத்து விடுகிறோம் என்று அது எடுக்கப்பட்டது. ஆனால், அதே நேரத்தில் நிலவரியை அடுத்த பசலியில் எடுக்கப் போகிறோம் என்றார்கள். நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். அது பரிசீலனையில் இருந்துகொண்டு வந்திருக்கிறது. இன்றைக்கு புதிய சர்க்கார் அமைந்திருக்கும்போது அந்த முடிவைத் தெரிவிக்காததால் அதிக அளவுக்கு உள்ள விவசாயிகள், சிறு நிலம் வைத்திருக்கிறவர்களுக்கெல்லாம் ஏமாற்றம் ஏற்பட்டு விட்டது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். நில வரியைப் பொறுத்த வரையில் திட்டவட்டமாகக் கொள்கையைக் குறிப்பிட்டிருந்தால் வரவேற்கக் கூடிய நிலையில் இருந்திருக்கும். அதை விட்டு சிறு நிலக்கிழார்களை நிலவரிச் சுமைப் பிடிப்பிலிருந்து விடுவிக்க படிப்படியாகத் திட்டம் வகுக்கப்படும் என்று வழ வழா என்று இருக்கிறதே தவிர, திட்டவட்டமான நிலை குறிப்பிடப்படவில்லை. இந்த மாதிரி நிலவரி மட்டுமல்லாமல், உணவுப் பிரச்னையை எடுத்துக்கொண்டாலும், உணவுப் பிரச்னையைப் பொறுத்த வரையில் திட்டவட்டமான முறையில் இந்தக் கொள்கைகளைக் கையாளுகிறோம் என்ற நிலைமையையும் எடுத்துச் சொல்லவில்லை. தற்போது நம் மராமத்து அமைச்சராக வீற்றிருக்கும் கனம் கருணாநிதி அவர்கள் கூட, 6—3—1967-ல் அவர்கள் எதிர்க்கட்சியில் அங்கத்தினராக வீற்றிருக்கும்போது, அவர்களே கவர்னர் உரையில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். என்ன ? "உணவு நிலைமையைச் சமாளிப்பதற்கு சர்க்கார் உணவுப் பெருக்கத்திற்குத் திட்டங்கள் செய்ய வேண்டும். இந்த சர்க்கார் கையில்லாத ஊமையின் நிலையில்தான் இருக்கிறார்கள். தங்களுடைய நிலைமை என்ன என்று சொல்ல முடியாமல் ஊமையாக இருந்து சுட்டிக்காட்டுவதற்கும் கையற்ற முறையில் இருந்துகொண்டிருந்தால் உணவுப் பற்றாக்குறையை எப்படிப் போக்க முடியும்" என்று அவர்கள் எடுத்துச் சொல்லியிருப்பதை ஞாபகமூட்ட ஆசைப்படுகிறேன். அந்த நிலையில் . . .

**திரு. எஸ். ஆறுமுகம்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், கனம் அங்கத்தினர் அவர்கள் சர்க்காரைப் பார்த்து கையாலாகாத சர்க்கார் என்று சொல்லுவது பார்லிமெண்டினுடைய . . .





**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்:** ஒரு உறுப்பினர் சொன்னதைத்தான் கனம் அங்கத்தினர் எடுத்துச் சொல்லுகிறார்களே தவிர, அவர்கள் "கையாலாகாத சர்க்கார்" என்று கூறவில்லை.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய முனுசாமி கவுண்டர் அவர்கள், 'கையாலாகாத சர்க்கார்' என்று சொல்லவில்லை. அவர் எழுதி வைத்துக்கொண்டிருப்பதைப் படிக்கும் போது அந்த மாதிரி தெரிந்ததே தவிர, "கையில்லா ஊமையர்" என்று சங்க இலக்கியத்தில் வருகிறது, அதைக் குறிப்பிட்டுக் கூறியிருந்ததைத்தான் கூறினார்கள். (ஆர்வாரம்.)

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்:** ஒரு உறுப்பினர் கூறியதை எடுத்துக் கூறுகிற நேரத்தில், அவர் கூறிய வார்த்தைகளை அப்படியே எடுத்துக் கூறுவது முறையே தவிர, அப்படியில்லாமல் எடுத்துக் கூறினால் மாறுபட்ட நிலையில் கருத்துக் கொள்ளக்கூடிய நிலைமை உண்டாகும். அப்படியே எடுத்துக் கூறுகிற நிலையை மட்டும் கனம் உறுப்பினர்கள் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. எம். முனுசாமி கௌண்டர்:** நான் எடுத்துக் கூறியதைச் சரியாகத்தான் கூறினேன். "தங்களுடைய நிலைமை என்ன என்று சொல்ல முடியாமல் ஊமையாக இருந்து சுட்டிக்காட்டுவதற்கும் கையற்ற முறையில் இருந்துகொண்டிருந்தால்" என்ற குறிப்பே தவிர வேறு ஒன்றும் இல்லை. இந்த நிலையில் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தவர் தற்போது அமைச்சராக வந்திருப்பது நம் அதிர்ஷ்டம் தான். ஏனென்றால் அவர்கள் 1957-ல் சொன்னதை மனதில் கொண்டு நல்ல முறையில் பணியாற்றினால் நாங்களெல்லாம் வரவேற்போம், சந்தேகமே வேண்டாம். அந்த முறையில் திட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றினால் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களாகிய நாங்களும் வரவேற்போம். ஏனென்றால் மக்களுக்கு நல்லது செய்யக் கூடிய நிலை ஏற்பட்டால் அதை எல்லோரும் விரும்புவார்களே தவிர மக்களுக்குப் பாதகம் செய்யவேண்டுமென்று சொல்லக் கூடியவர்கள் ஒருவரும் இல்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும். எனக்கும் அதே மாதிரி எண்ணம்தான்.

(மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, இந்த விலைவாசியைக் குறைக்கவேண்டும் என்றால் உணவு உற்பத்தியை அதிகமாக்கவேண்டும் என்பது சர்க்காருடைய நோக்கம். ஏற்கெனவே காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கும்போது அவர்களும் அதையே பின்பற்றினார்கள், சொல்லி வந்தார்கள். கடந்த 20 ஆண்டு புள்ளிவிவரங்களை, பேச்சுக்களை, வரவு-செலவுத் திட்டங்களைப் பார்க்கும்போது, ஒவ்வொரு இடத்திலேயும் விலைவாசி குறைய உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகப் படுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களே தவிர

வேறு இல்லை. அதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, விவசாயிகளுக்கு கூட்டுறவு முறையில் கடன் உதவி, கிணறுகள் வெட்டிக்கொடுப்பது, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் வசதிகளைச் செய்வது, ஏ.டி.டி. 27 விதைகளை உபயோகிப்பது, உரங்களைக் கொடுப்பது என்று கூறியிருப்பது எல்லாம் புதிதல்ல, ஆகவே, திருப்பித் திருப்பிச் சொல்லுவதாக இருக்கிறதே தவிர வரவேற்கக் கூடிய திட்டங்கள், கொள்கைகள் இல்லை என்று நன்கு எடுத்துக் காட்டுகிறது. புதிதாக வந்திருக்கிறவர்கள் நல்ல முறையில் மேலும் பரிசீலனை செய்து எந்தெந்த வழிகளில் நாம் செய்தால் இந்த விலைவாசியைக் குறைக்க முடியும், ஜனங்களுக்கு நன்மை பயக்கும் நிலை ஏற்படும்--ரூபாய்க்கு மூன்று படி போடுவது சாத்தியமா என்பது வேறு; தேர்தல் காலத்தில் ஓட்டு வாங்க பல வாக்குறுதிகளைக் கொடுத்திருப்போம், பல விஷயங்களைச் சொல்லியிருப்போம்—குறைந்த விலைக்கு பொருள்கள் மக்களுக்கு எந்த அளவுக்குக் கிடைக்கச் செய்ய முடியும் என்பதைப் பார்க்கவேண்டும். மக்களுக்கு ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுக்க முடியுமா என்றும் யோசித்துப் பார்க்க வேண்டும். அதோடு கூட உணவு உற்பத்தியைப் பெருக்கும்போது, நம் திட்டங்களில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதையும் நன்கு ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும் என்பதைக் கூட கனம் அங்கத்தினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். பல விஷயங்களை நம் கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் சொல்லாமல் விட்டு விட்டது வருந்தத் தக்கதாக இருக்கிறது. ஏனென்றால், நம் தமிழ் நாடானது விவசாய நாடாக இருந்தாலும், இருபது ஆண்டுகளாக, முன்பு இருந்த காங்கிரஸ் சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சி காரணமாகத் தொழில்வளம் பெருகி வந்திருக்கிறது. புதிய அமைச்சரவை ஏற்பட்ட பிறகு தொழில் வளம் மேலும் ஏற்பட என்ன செய்ய இருக்கிறது என்று ஒரு வார்த்தை கூட இல்லை. ஏதோ சேலம் ஸ்டீல் ப்ளான்ட் ஒன்றை மாத்திரம் குறிப்பிட்டிருப்பதிலே, அதைத்தான் முயற்சிக்கப் போகிறோம் என்றால் அந்த ஒன்று மட்டும் தமிழகத்திற்குப் போதுமா என்று பார்க்கவேண்டும். அதோடுகூட தொழிலாளர்களுக்குப் பல தொழில்களில் வேலையில்லாத் திண்டாட்டம் இருந்து வருகிறது என்பதைப் பார்க்கும்பொழுது, தொழிலாளர்களுக்கு எந்த நிலையில் வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றி, தொழிலாளர்களைப்பற்றி ஒரு வார்த்தைகூட குறிப்பிடவில்லை. தமிழகத்தில் பிற்போக்கான சமூகத்தினர் அதிகமாக இருக்கின்றனர், தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். கடந்த 20 ஆண்டுகளில் எந்த நிலையில் கல்வி அளித்தோம், காங்கிரஸ் சர்க்கார் செய்து வந்த சாதனைகள் என்ன என்றெல்லாம் பார்க்கும் பொழுது, பிற்போக்கான சமூகத்தினர்களுக்கும், தாழ்த்தப் பட்ட சமூகத்தினர்களுக்கும் வசதி இல்லாத மக்களுக்கு நல்ல நிலையில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு யோசனைகள் ஒன்றுமே இல்லை. காங்கிரஸ் சர்க்கார் மறுபடியும் ஆட்சிக்கு வருமானால், பி.யு.ஸி. வகுப்பிலும் இலவசக் கல்வி அளிப்போம்





என்பதைத் தெரிவித்திருந்தார்கள். ஆனால் தற்பொழுது புதிய அரசு அதைப்பற்றி எந்த விதமான வார்த்தையும் சொல்லவில்லை கவர்னர் பெருமான் அவர்கள் உரையில்; இது மிகவும் வருந்தத் தக்க விஷயம். நல்ல காரியங்கள் எது செய்வது என்றாலும், ஏழை மக்களுக்கு, குறிப்பிட்ட கல்வி, பொருளாதாரத் துறையில் பின்னடைந்திருக்கும் யாரையும் விடாமல், பொதுவாக தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய எல்லா மக்களுக்கும் நன்மை பயக்கக் கூடிய வகையில், தமிழ் நாட்டு முன்னேற்றத்திற்கு எந்தத் திட்டங்களை வகுத்தாலும் அவை நல்லது என்று எங்களுக்குப் படும்பொழுது அவைகளை ஆதரிப்போம் என்பதை திட்ட வட்டமாகச் சொல்லிக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்**: அடுத்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. அ. ப. சண்முகசுந்தரம் அவர்கள் உரையாற்றுவார்கள்.

**திரு. அ. ப. சண்முகசுந்தரம்**: பெருமதிப்பிற்குரிய சட்டசபைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையை வரவேற்கும் வகையிலே எனது கருத்துக்கள் சிலவற்றை நான் கூற விரும்புகிறேன். கவர்னர் அவர்கள் உரையிலே உணவு உற்பத்தி பெருக்கத்தைப்பற்றி குறிப்பிட்டும், அதற்காக விவசாயிகளுக்கு ஊக்கம் அளிப்பதைப்பற்றியும் அந்த உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த கவர்னர் உரையைப் பார்க்கும்பொழுது உண்மையிலே இது விவசாயிகளுடைய அரசாங்கம் என்பது நன்கு விளங்கும். உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு ஏற்ற முறையிலே உரங்கள் விநியோகம் செய்யப் படவேண்டும் என்றும் அதில் குறிப்பிட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய கனம் மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் கடந்த ஆட்சியில் கூட உரங்கள் விநியோகிப்பதைப் பற்றி தாங்களும் குறிப்பிட்டிருக்கிறோம், இது ஒன்றும் புதிது அல்ல என்று சொன்னார்கள். ஆனால் உணவு உற்பத்தி பெருக்கத் திற்கு ஏற்ற முறையிலே இந்த உர விநியோகம் சரியான முறை யிலே அமையவில்லை, நல்ல முறையில் விநியோகிக்கப்படவில்லை என்று காங்கிரஸ் உறுப்பினர்களேகூட சென்ற சட்ட சபையில் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இந்த உர விநியோகத்தைப்பற்றி நாம் கூறும்பொழுது, எனக்கு முன்னால் பேசிய திரு. எம். எஸ். மணி அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஏ.டி.டி. 27 போன்ற புதிய ரக விதைகளுக்கு, புதிய ஹைபிரிட் விதைகளுக்கு உரம் மிகமிக அவசியம். உரம் நல்ல முறையில் போதிய அளவு கொடுக்கப்படாவிட்டால், சாதாரணமாக விதைகளின் மூலம் கிடைக்கும் உணவு உற்பத்திதான் இந்தப் புதிய ரக ஹைபிரிட் விதைகளிலிருந்தும் கிடைக்கும். நல்ல முறையில் உரங்களை நாம் கொடுத்தால், சாதாரண ரக விதைகளிலிருந்து கிடைக்கக்கூடிய விளைச்சலை விட இரண்டு மடங்கு அதிக விளைச்சல் புதிய ரக ஹைபிரிட் விதைகளிலிருந்து நமக்கு நிச்சயம் கிடைக்கும்.

அப்படி உரங்கள் கிடைக்காத நேரத்தில் புதிய ரக விதைகளுக்காக நடவு முதலான வகைகளில் அதிகம் செலவாகிறது, அதற்கு உரம் தக்க சமயத்தில் கிடைக்காவிட்டால், உணவு உற்பத்தி பாதிக்கப் படுவதோடுகூட, அதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். அந்த முறையில் உரங்கள் தகுந்த சமயத்தில் கிடைப்பதற்கு மத்திய அரசாங்கத்தி லிடமிருந்து நம்முடைய அரசாங்கம் நல்ல முறையில் கேட்டு வாங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பரம்பிக்குளம் ஆளியார் திட்டத்தின்கீழ் தண்ணீர் பாசனத்திற் காக நஞ்சைக்கு தீர்வை ரூ. 25, புஞ்சைக்கு தீர்வை ரூ. 15 என்று தண்ணீர் தீர்வை போடப்பட்டிருக்கிறது. பக்கத்தில் இருக்கிற அமராவதி திட்டத்தின் கீழுள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு நஞ்சைக்கு ரூ. 15, புஞ்சைக்கு ரூ. 9 என்று தண்ணீர் தீர்வை விதிக்கப்படுகிறது. அமராவதி அணைக்கட்டின் கீழ் 25,000 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்கிறது. அதே நேரத்தில் பரம்பிகுளம் ஆளியார் திட்டத்தின் கீழ் 2½ லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறு கிறது. இரண்டரை லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு பாயக்கூடிய அவ்வளவு அதிக நிலங்கள் உள்ள பகுதிகளிலே தண்ணீர் தீர்வை அதிகமாக இருப்பதின் காரணத்தினால், விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இந்த தண்ணீர் தீர்வையையும் குறைத்து அமராவதி அணைக்கட்டின் கீழுள்ள நிலங்களுக்கு விதிக்கப்படுவது போல் அதே தீர்வையைத் தான் விதிக்கவேண்டும்; அதற்கு வேண்டிய வழிவகைகளை இந்த அமைச்சரவை செய்ய வேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பரம்பிக்குளம் ஆளியார் திட்டம் பகுதியிலே விவசாயிகள் நிலங்களை அபிவிருத்தி செய்வதற்காகக் கடன் வழங்கு வதற்கு ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டது. அப்படி ஒதுக்கப்பட்ட தொகையில் இப்பொழுது ஒரு கோடி ரூபாய்தான் செலவழிக்கப் பட்டிருக்கிறது. இன்னும் ரூ. 9 கோடி செலவழிக்கப்படவேண்டும். இந்தப் பணம் மிகவும் துரிதமான முறையில் செலவழிக்கப் பட்டால்தான் நீர்ப்பாசன வசதியால் நாம் எதிர்பார்த்த பலனை அடைய முடியும். சென்ற அரசாங்கத்தினிடம் இதுபற்றி விவசாயி கள் சங்கம் அடுத்து அடுத்து எடுத்துச் சொல்லியும் அதுபற்றி கவனிக்காமல் இருந்து விட்டார்கள். இப்பொழுது ஆட்சியில் அமர்ந்திருக்கும் நமது அரசாங்கம் இதை நல்ல முறையில் கவனித்து, விரைவிலே கடன் விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்காக அந்தப் பகுதியில் உள்ள கூட்டுறவு நில அடமான பாங்கின் டைரக்டராக அந்தப் பகுதியிலே உள்ள எம்.எல்.ஏ. இடம் பெறவேண்டும் என்று நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பூச்சி மருந்து விநியோகம் செய்வதிலே, கோவை மாவட்டத்தில் நிலக்கடலைக்கும், பருத்திக்கும் முதல் இடம் கொடுத்து, பாதி விலைக்கு பூச்சி மருந்து கொடுக்கிறார்கள்.



மற்றபடி சோளம், கம்பு போன்ற இதர தானியங்களுக்கு இந்த பூச்சி மருந்து பாதி விலையிலே கொடுக்கப்படுவதில்லை. நிலக் கடலைக்கும், பருத்திக்கும் கொடுப்பது போலவே, மற்ற தானியங் களுக்கும் அதே மாதிரி ஒரே சீராக பாதி விலையில் பூச்சி மருந்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நம்முடைய அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையிலே உணவு உற்பத்தி அதிகரிப்பதற்கான திட்டங்களை நல்ல முறையிலே இந்த அரசாங்கம் இயற்ற முன்வரும் என்று குறிப்பிட்டிருக்கும் கவர்னர் உரையை பாராட்டி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** அடுத்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது அவர்கள் உரையாற்று வார்கள்.

* **ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது:** அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையின் மீது இந்திய தேசீய மைனாரிடி மக்களின் ஸ்தாபனமான முஸ்லிம் லீகின் பிரதிநிதியாக நான் மிக்க மகிழ்வோடு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில் நம்முடைய நாட்டிற்கு இன்றியமையாத தேவையான விவசாயம் சம்பந்தமாக மிக அதிகமாக விளக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் பாராட்டத் தக்க ஒன்று என்று நான் கருதுகிறேன். அதே நேரத்தில் 20 ஆண்டு காலமாக இந்த நாட்டின் ஆட்சியை தங்கள் கையில் வைத்து ஆட்டிப் படைத்தவர்கள், ஏழை பங்காளிகள் என்று தங்களைச் சொல்லிக்கொண்டவர்கள் எந்த அளவுக்கு நம்முடைய கையில் ஆட்சி மாறுகிறபொழுது இந்த நாட்டிலே விவசாயத் திற்குரிய இந் நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கும்பொழுது, உண்மையிலே வெட்கமும் துக்கமும் ஏற்படு கிறது. விவசாயிகளின் நலனுக்காக, நம்முடைய நாட்டில் விவசாயத் துறைக்கு வேண்டிய பல்வேறு திட்டங்களின் பெயரால் பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அவைகளெல்லாம் முறை யாக செலவழிக்கப்பட்டவையா என்று பார்த்தால், இல்லை. அதனால் அடைந்திருக்கிற லாபம் எந்த அளவுக்கு என்று சீர்தூக்கிப் பார்க்கிறபொழுது, எந்த அளவுக்கு நாட்டில் விவசாயத் துறையில் உணவு உற்பத்திக்காக பொருள் பயன்பட வேண்டுமோ, அந்த அளவுக்குப் பயன்படவில்லை. சிறிய விவசாயிகளுக்கு பயன்தர வேண்டும் என்ற பெயரால் நீர்ப்பாசனத் துறையிலே மேடு தட்டிப் போன குளங்களை செப்பனிடுவதற்கும், தூர்ந்த நிலையில் உள்ள ஏரிகளை மராமத்து செய்வதற்கும் நம்முடைய திட்டங்களுக்கான பணங்கள் செலவழிக்கப்பட்டு இருக்கின்றனவா என்று பார்த்தால், அதுவும் இல்லை. இந்த நிலையில் தான் நீண்ட நெடுங்காலமாக விவசாயத் துறைக்கு பயன்படாத முறையிலே, விளைச்சலுக்கு உறுதுணையாக இல்லாத முறையிலே இருந்து வந்த ஒரு ஆட்சி இந்த நாட்டு மக்களால் மாற்றப்பட்டு, புதியதோர் ஆட்சி அறிஞர் அண்ணா அவர்களுடைய சகாப்தமாக தோன்றியிருக்

[ஹாஜி ம. மு. பீர் முஹம்மது] [1967 மார்ச் 18

கிறது. அப்படித் தோன்றியிருக்கிற சூழ்நிலையில் சென்ற ஆட்சி விவசாயத் துறையைப் பொறுத்த வரையிலே எதை எதை அவர்கள் செய்வதற்கு விட்டுவிட்டார்களோ, எந்த முறையை கையாண்ட காரணத்தினால் விவசாயத் துறை அபிவிருத்தி அடையவில்லையோ, அவைகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, சிந்தித்துப் பார்த்து, இந்த ஆட்சி சிறந்த முறையில் செயல்படும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இரண்டாவது தொழிலாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் இருக்கும் தொழில் கைத்தறி நெசவுத் தொழில். அதைப் பொறுத்த வரையில் இன்றைய நிலையில் அறிஞர் அண்ணா அவர்களுடைய அமைச்சரவைக்கு அதிகமாக எடுத்துக் கூற வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், கைத்தறி சவுளியின் உற்பத்தியில் தேக்கம் ஏற்பட்டு, அந்தத் தொழிலாளர்களுக்கு நெருக்கடி ஏற்பட்ட காலத்தில், முதுகிலே துணி மூட்டைகளைத் தூக்கிச் சென்று நாட்டு மக்களைக் கூவி அழைத்து விற்று அதன் மூலம் கைத்தறி உற்பத்தியில் ஏற்பட்ட தேக்கத்தைத் தீர்த்தவர்கள் அறிஞர் அண்ணாவும், அவர்களுடைய அமைச்சரவையைச் சார்ந்த பெருமக்களும் என்று நினைக்கும்போது மகிழ்வு அடைகிறேன். இரண்டாவது தொழிலாக இருக்கும் கைத்தறி தொழில் சம்பந்தமாக கவர்னர் உரையில் குறிப்பிடப்படவில்லை. கைத்தறிக்கு, கைத்தறித் தொழிலுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைத் தீர்க்க வேண்டிய, நிவர்த்திக்க வேண்டிய நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையிலும் தனியார்த் துறையிலும் சிக்கி நிற்கும் மக்களுக்கு நல்லதொரு வகையில் அறிஞர் அண்ணாவும், அவருடைய அமைச்சரவையைச் சார்ந்திருக்கும் பெருமக்களும் பரிகாரம் தேடுவார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அது மட்டுமின்றி, நம் மாநிலத்தில் பூமிக்குள் மண்ணில் புதைந்து கிடக்கின்ற பொருள்களை வெட்டி எடுத்து, அதன் மூலம் இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற பசிப்பிணியையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் நீக்கி, நாட்டுக்கும் மக்களுக்கும் தேவைப்படும் மூலதனங்களை எந்த எந்த வகைகளில் கொண்டு வரலாம் என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். சென்றகால, நிகழ்கால சிந்தனைச் சந்திப்பில் நிற்கின்ற அறிஞர் அண்ணா அவர்களும், அவருடைய அமைச்சரவையைச் சார்ந்த பெருமக்களும் நல்ல முறையில் செயல்படுவார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு.

நம்முடைய நாட்டில் சென்ற காலத்தில் சுகாதாரத் துறைக்கும் பிற துறைக்கும் செலவு செய்யப்பட்ட பணங்களெல்லாம், அபிவிருத்திக்குப் பயன்படாது ஒரு கட்சியைப்பலப்படுத்தவே செலவழிக்கப்பட்டிருக்கிறது. பல குக்கிராமங்களிலும் மருத்துவ மனைகளே கிடையாது. அப்படி மருத்துவ மனைகள் இருந்தால், அங்கே பிணி என்ன என்று கண்டுபிடிக்க மருத்துவர்கள் இல்லை. சில மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் இருந்தாலும், அங்குள்ள பிணிக்குக் கொடுக்க மருந்து இல்லை. மருத்துவர்கள் இல்லாத மருத்துவ



1967, மார்ச் 18] [ஹாஜி ம. மு. பீர் முஹம்மது]

மனைகளும், மருந்து இல்லாத மருத்துவ மனைகளும் மலிந்திருக்கின்றன. இந்த மருத்துவத் துறையில் உள்ள கேடுகளைச் சீர் செய்ய சென்ற கால அமைச்சரவையால் ஏற்படுத்தப்பட்டவைகளையெல்லாம், எப்படி நீக்குவது என்பதுபற்றிய விளக்கம் இந்த உரையில் இடம் பெறவில்லை. இருப்பினும், அறிஞர் அண்ணாவின் சிந்தனையில் இவை இடம் பெற்று இருக்கின்றன. ஆகவே இவை ஓரளவு பரிகரிக்கப்படும் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு.

நாட்டின் விடுதலைக்கு முன்பும், விடுதலை அடைந்த பின்னரும் இந்தச் சட்ட மன்றத்தைப் பொறுத்தவரையில், சிறந்த எதிர்க் கட்சியாக பெருமையோடு பணியாற்றியது. இந்திய யூனியன் முஸ்லீம் லீக் என்பதை அறிஞர் அண்ணாவும், அவர்களுடைய அமைச்சரவையில் இருப்பவர்களும் அறிவார்கள். அந்த பாரம்பரியத்தை பின்பற்றி, ஜனநாயக முறையில் நாட்டு மக்கள் விருப்பத்திற்கிணங்க, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இந்த அமைச்சரவைக்குச் சிறந்த முறையில் ஒத்துழைப்புத் தரும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். வெறும் எதிர்க் கட்சியாக இல்லாமல், எதிரிக் கட்சியாகவும் இல்லாமல், அறிஞர் அண்ணாவிற்கும், அவருடைய அமைச்சரவையில் உள்ள பெருமக்களுக்கும் ஆதரவுக் கட்சியாக இருந்து, காலத்தின் கண்ணாடியாகப் பணி புரிந்து, குறைகளையும், நிறைகளையும் அறிஞர் அண்ணாவின் அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து, நாட்டு மக்களுக்கு நற்றொண்டு நாங்கள் செய்வோம் என்று சொல்ல விரும்புகிறேன்.

சென்ற 20 ஆண்டு காலமாக மைனாரிடி சமுதாயத்தைத் திட்டமிட்டு பிற்படுத்தி இருக்கிறார்கள் என்பதை வருத்தத்தோடு தெரிவிக்கிறேன். அந்த உண்மையை புதிய அமைச்சரவையில் இருக்கின்ற, அறிஞர் அண்ணா அவர்களும், அவருடைய சகாக்களும் அறிவார்கள். மைனாரிடி சமுதாயத்தைச் சேர்ந்த நாங்கள் அரசியல் அராஜகத்தைத் தொடர்ந்து எதிர்த்து வந்திருக்கிறோம் என்ற காரணத்தால் திட்டமிட்டு பிற்படுத்தப்பட்ட நிலையிலே பல்வேறு துறைகளிலும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். அவற்றைப் பரிசீலித்து, பிற்படுத்தப்பட்ட நிலைகளை நிவர்த்திக்க, மைனாரிட்டி, சமுதாய மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய அறிஞர் அண்ணா அவர்களும், அவருடைய அமைச்சரவையைச் சார்ந்த பெருமக்களுக்கும் உறு துணையாக இருப்பார்கள் என்று பூரணமாக நம்புகிறேன்.

"மதி" யையும், "நிதி" யையும், நல்லறக் கருத்துக்கள் செழித்துக் கொழிக்கின்ற "நாவலரை"யும், "மாதவ"த்தையும், முத்தான "சாமி" யையும் "சாதிக்" என்றால் உண்மை என்று பொருள். உண்மையைச் சாதிக்கும் "பாஷா" வையும் நித்தியமாகிய "சத்தியத்தையும்" துணையாகக் கொண்டிருக்கின்ற அறிஞர் அண்ணாவின் அமைச்சரவை இந்த நாட்டிற்கும், இந்த நாட்டு

மக்களுக்கும், 20 ஆண்டு காலமாக சாபக்கேடாக இருந்த காங்கிரஸ் ஆட்சியினால் ஏற்பட்ட இன்னல்களை நீக்கி, நன்மைகள் பல நல்க இறைவன் அருளைப் பிரார்த்தித்து அமர்கின்றேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த கவர்னர் பெருமான் உரையில் பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. இப்பொழுது இருக்கும் நிலையில் அவ்வளவுதான் எழுத முடியும். கஷ்டமான சூழ்நிலை. இந்திய சர்க்காருக்கும், ராச்சிய சர்க்காருக்கும் இருக்கும் பொறுப்புக்கள் உரிமைகள் பற்றி இந்த உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயத் துறையில் நல்ல கவனம் செலுத்த வேண்டும் என்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி பல பேர்களும் பேசியிருக்கிறார்கள். உர விநியோகம், விதை விநியோகம், அதையெல்லாம் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நல்ல முறையில் செயலாக்க பாடுபட வேண்டும்.

கூட்டுறவுத் துறையைப்பற்றி, விசாரணை நடத்த கமிட்டி போட்டு, அதிலே இருக்கும் ஊழல்களைப் போக்குவதற்கு அமைச்சரவை முன்வந்திருப்பது ஒரு முக்கியமான விஷயம். இந்த நாட்டிலுள்ள கூட்டுறவுத் துறையைப்பற்றி 1958-லேயே ஒரு பில் தயாராகி, செலக்ட் கமிட்டிவரை போய், அதற்குப் பிறகு, பல காரணங்களால் கைவிடப்பட்டு, பழைய ஊழல்களுக்கே இடம் கொடுக்கும் நிலையில் அந்தப் பழைய சட்டம் இருந்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி விரிவாகப் பேசவேண்டிய அவசியம் இல்லை. அந்தச் சட்டத்தை நல்ல முறையில் திருத்தி அமைக்க நல்ல சட்டம் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

ஸோனல் கவுன்சில் பற்றி ஒரு பாராவில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் இப்பொழுது இருக்கக்கூடிய ராச்சிய சர்க்கார்களுக்குள்ள அதிகாரங்கள் குறைந்துவிட்டது. ஆகவே, இனி கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் நம் பேரில் வைத்திருக்கும் நம்பிக்கை அடிப்படையில் அந்த அதிகாரங்களைப் பெற்று செயல் ஆற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் டெல்லியில் நன்றாக வாதாடி, ஸோனல் கவுன்சிலுக்கு அதிகப்படியான அதிகாரத்தைப் பெற்று காரியங்களை நடத்த வேண்டும். முக்கியமாக ஆந்திராவில் பல ஜீவ நதிகள் இருக்கின்றன. அவற்றின் தண்ணீரை காவிரியோடு இணைத்து தேசம் பூராவும் ஒன்று என்பதை, காங்கிரஸ் சர்க்கார் வாயளவில் செய்ததை, நம்முடைய இந்தச் சர்க்கார் செயலளவில் செய்து காட்டி, அப்படிப்பட்ட பெரிய காரியம் இந்த திராவிட முன்னேற்றக் கழக சகாப்தத்தில் சாதிக்க வேண்டும், அதற்காகப் பாடுபட வேண்டும், அதற்காக முதல் அமைச்சர் பிரயாசைப்பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் ஸோனல் கவுன்சில் வைத்திருப்பதன் அர்த்தம் சரியாகப் புரியும், அதனால் நன்மை கிடைக்கும் என்று தெரிவிக்கிறேன். ஆகவே, தெற்கு இராஜ்யங்கள்—மூன்று, நான்கு—ஒற்றுமையாக வேலை செய்தால் உணவுப் பிரச்சினையில் உள்ள





கஷ்டங்களை கணிசமான முறையில் நிவர்த்தி செய்து கொள்ளலாம். இப்போது முக்கியமாக உணவுப் பிரச்னையைப்பற்றி ஒன்றை வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம்முடைய ராஜ்யம் ஒரு சர்ப்ளஸ் ஸ்டேட். உண்மையில் இது இன்றைக்கு சர்ப்ளஸ் ஸ்டேட்டாக இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி—உங்கள் பதிலில் தெளிவுபடுத்திவிட வேண்டுமென்று விரும்புகிறேன். தேர்தல் காலத்தில் நாம் மக்களுக்கு என்ன வாக்குறுதி அளித்தோம் என்பதை மறந்துவிடுவதற்கில்லை. காரணம் இந்தப் பொதுத் தேர்தலை தேர்தல் என்று சொல்வதற்கில்லை. தேர்தல் நடந்தது என்று சொல்வதைக் காட்டிலும் சைக்கிளோன் நடந்தது நடந்தது என்று சொல்வதைக் காட்டிலும் சைக்கிளோன் நடந்தது நம்பிக்கை வைத்து தங்கள் மேலான வாக்குகளை அளித்திருக்கிறார்கள். காங்கிரஸ் சர்க்கார் ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்றாலும் முக்கியமாக உணவுப் பிரச்சினை, விலைவாசிப் பிரச்னை இவற்றைக் கருத்தில் கொண்டு மக்கள் அவர்களுக்கு எதிரிடையாகத் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். ஆகவே இன்றைய தினம் உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஏனோ தானோ என்று பழைய காங்கிரஸ் சர்க்கார் பின்பற்றிய கொள்கையையே பின்பற்ற முற்பட்டால் அது உங்களுக்கும் சரி, உங்களுக்குத் துணையாக இருந்த எங்களுக்கும் சரி மக்கள் மத்தியில் ஒரு மரியாதையை உண்டு பண்ணாது. ஆகவே இப்பிரச்னையில் தயங்காது நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். டீகண்ட்ரோல் செய்துவிட வேண்டும். வேண்டுமானால், இரண்டு மூன்று மாதம் அவகாசம் எடுத்துக் கொள்ளுங்கள். டீகண்ட்ரோல் செய்து, ப்ரீ மூவ்மெண்டுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். பார்டர்களை கண்காணித்துக்கொண்டு ஜில்லாக்கள்தோறுமாவது ப்ரீ மூவ்மெண்டு ஏற்படுத்தியாக வேண்டும். அப்போதுதான் உணவுப் பொருள்களைப் பொறுத்த வரையிலுமாவது விலைவாசி இறங்கக்கூடும். மற்ற பொருள்களைப் பொருள்களின் விலைவாசியைப்பற்றிச் சொல்வதற்கு இது சரியான இடமில்லை என்று நினைக்கிறேன். இந்திய சர்க்கார் என்று கூடச் சொல்லமாட்டேன்—அங்குள்ள காங்கிரஸ் சர்க்காரின் தவறான கொள்கைகளின் விளைவாகத்தான் இன்று தேசம் பூராவிலும் விலைவாசிகளின் கொடுமை அதிகரித்துவிட்டது. அதை இப்போது விஸ்தாரமாகப் பேசுவதில் பிரயோசனமில்லை. சென்டரில் பெரிய மாற்றம் ஏற்பட்டாக வேண்டும். இப்போது நான் சொல்வது நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் உணவுப் பிரச்சினை சம்பந்தப்பட்ட வரையிலாவது இந்த அரசு பழைய போக்கிலேயே போகாமல் புதிய போக்கை துணிவாக, தைரியமாக மேற்கொள்ள வேண்டும். நமது அண்டை ராஜ்யமான மைசூர் ஒரு டெபிசிட் ஸ்டேட். அங்கே கூட பார்மலாக ரேஷன் இருக்கிறதே தவிர, இங்கேயுள்ள கொடுமை அங்கே கிடையாது. ஆகவே, நம்முடைய கொடுமையை அகற்ற தைரியமாக இந்தக் கட்டுப்பாடுகளை நீக்கிவிட வேண்டும். முக்கியமாக கம்யூனிஸ்ட் கட்சி மெம்பர்கள்கூடச் சொல்கிறார்கள். மூன்று எக்கரா, அதற்கு கீழ்ப்பட்டுள்ள சிறு நிலச்சுவாந்தாரர்களுக்கு விலக்கு அளித்துவிட்டு

அதற்கு மேற்பட்டவர்களிடம் இருந்து லெவி முறையில் சர்ப்ளஸ் ஸ்டாக்கை வாங்கிக்கொள்ளலாம். இதைத்தான் நீங்களும் செய்வதாகச் சொல்லிக்கொண்டிருந்தீர்கள். ஆகவே, தாமதெய்து கொள்முதல் கொள்கையில் மூன்று ஏக்கரா, அதற்கு உட்பட்டவர்களுக்கு விலக்கு அளிக்க ஜில்லாக் கலெக்டர்களுக்கு உத்தரவிட வேண்டும். நாம் இந்த விஷயத்தில் ஜில்லாக் கலெக்டர்களிடம் யோசனை கேட்டுக்கொண்டிருந்தால் பிரயோசனம் இல்லை. நாமேதான் நல்ல முடிவுக்கு வந்து, இவற்றை நிறைவேற்ற அவர்களுக்கு உத்தரவிட வேண்டும். அதில் ஒன்றும் குடி மூழ்கிவிடப் போவதில்லை. இந்திய சர்க்காரின் தவறான கொள்கைகளினால்தான் உணவுக் கட்டுப்பாடே வந்தது. விலைவாசி தாறுமாறாக ஏறிக்கொண்டே போயிற்று. தங்கள் தவறை மறைக்க ராஜ்யங்கள் உணவுப் பொருளை கொள்முதல் செய்து விநியோகிக்க வேண்டும் என்று ராஜ்யங்களுக்கு அவர்கள் ஆலோசனை கூறினார்கள். அதனால் விலைவாசி குறைந்துவிடும் என்பதாக ஊகமாகத்தான் நினைத்துக்கொண்டு தலையிட்டார்கள். அவர்கள் பேச்சை இங்கே இருந்த காங்கிரஸ் சர்க்காரும் கேட்டுத்தான் இந்த நிலைக்கு வந்தது. விலைவாசி ஏற்றத்திற்கு ஜனத்தொகை பெருக்கம்தான் காரணம் என்பது போலி சால்ஜாப்பு. விலையைக் கட்டுப்படுத்த சூப்பர் மார்க்கெட் ஒன்றும் பயன்படாது. இவற்றை எல்லாம் நாளாவட்டத்தில் இந்தச் சர்க்கார் நீக்கிவிட வேண்டும்.

உணவுப் பிரச்சினையைப் போலவே நமது ராஜ்யத்தில் மிகவும் முக்கியமான பிரச்சினையாக இருப்பது கைத்தறி நெசவாளர் பிரச்சினை. உணவுப் பிரச்சினைக்கு அடுத்தபடியாக இதைச் சொல்லலாம். கைத்தறி நெசவாளர்களைப்பற்றி கவர்னர் உரையில் ஒன்றும் காணப்படவில்லை என்றாலும் உங்கள் கவனத்தில் இல்லை என்று சொல்லமாட்டேன். கூட்டுறவுத் துறை சம்பந்தமாகப் பரிசீலிக்க எப்படி ஒரு கமிஷனை அவ்விலாக்கா அமைச்சர் அவர்கள் நியமித்திருக்கிறார்களோ, அதுபோல கைத்தறியாளர்களுடைய பிரச்சினையையும் தீர்க்க ஒரு அதிகாரியைப்போட்டு பரிசீலனை செய்து ஒரு ரிப்போர்ட் தயார் செய்யவேண்டும். அதன் பேரில் நாம் எடுத்துக்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் ஓரளவு அவர்களுக்கு நிவாரணம் அளிக்க உதவியாக இருக்கும். அதற்கும் இந்த மந்திரிசபை ஒரு முக்கியத்துவம் கொடுத்து கவனிக்க வேண்டும்.

அதுபோலவே, பீடித் தொழிலாளர்களுடைய நிலைமையையும் நாம் கவனிக்க வேண்டும். பீடித் தொழில் என்றால் லேசாகக் கருதிவிட வேண்டாம். பெரிய லட்சாதிபதிகள் எல்லாம் அத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். சக்ரவர்த்திகள்கூட ஈடுபடுகிறார்கள். வடாற்காடு ஜில்லாவில் பீடித் தொழிலாளர்களுக்கு நல்ல கூலி இருக்கிறது என்று சொன்னாலும் இப்போதுள்ள பஞ்சநிலைக்குக் காணாது. ஆயிரம் பீடிக்கு 2½ ரூபாய் கொடுக்கிறார்கள். அதே நேரத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் இன்றைய தினம் இருபதாயிரம் முப்பதாயிரம் பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.





இருந்தும் இன்றையதினம் அந்த மாவட்டத்தில் ஆயிரம் பீடிக்கு ஒரு ரூபாய்தான் கூலி கொடுக்கப்படுகிறது. அதே சமயம் சில பண்டில்களைக் கமிஷன் என்ற முறையில் என்றுமேலும் எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். இன்றைய தினம் சம்பளம் 15 ரூபாய் என்றால் பஞ்சப்படி 60 ரூபாய் என்று மற்ற துறைகளில் எல்லாம் இருக்கிற நிலைமையில் பீடித் தொழிலாளர்கள் மட்டும் அன்று இருந்த நிலைமையிலேயே இருக்கிறார்கள். ஆகவே பீடித் தொழிலாளர்களுடைய நிலைமையை உயர்த்துகின்ற வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு, கூலி உயர்வதற்கு ஆவன செய்யவேண்டும்.

அதற்கடுத்தபடியாக, நிலவரி ரத்து. தேர்தல் சமயத்தில் நிலவரியை எடுத்துவிடுகிறோம் என்று அவர்கள் சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள். போனவர்கள் பெரிய மனிதர்கள். நிலவரி எடுப்பதைப்பற்றி நாமும்தான் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். மாட்டைக் காட்டி, மணடையைக் காட்டுகிற மாதிரி நாம் இன்றைய தினம் நிலவரி ரத்து என்பதாகச் சொல்லி, அந்த சர்சார்ஜ், இந்த சர்சார்ஜ் என்று இருப்பதை மட்டும் எடுப்பதில் பயன் இல்லை. இந்த நாட்டில் உள்ள மக்கள் நம்மிடம் அமோகமாக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். உலக சரித்திரத்திலேயே 25 பேர்களை நிறுத்தி 25 பேர்களும் வெற்றிபெற்றது என்பது இல்லை என்று சொல்லும் அளவுக்குப் புகழ் பெற்றிருக்கிறீர்கள். அந்த மாதிரி மக்களிடத்தில் நம்பிக்கையைப் பெற்ற நீங்களும், உங்களுக்குப் பின்னால் இருக்கிற சுதந்திராக் கட்சியும் நல்ல முறையில் நாட்டில் நடமாட வேண்டும். சொன்னபடி நாம் நடந்துகொள்ளவில்லை என்றால்—காங்கிரஸ் கட்சிக்கே இந்த கதி ஏற்பட்டது என்றால் நம் கதி என்னாகும் என்பதைக் கவனிக்கவேண்டும். ஆகவே, நல்ல முறையில், சீரிய முறையில் செய்து, இந்த மந்திரி சபை ஒரு பிரமாதமான மந்திரி சபை, இந்தியாவிலேயே இது தான் முதன்மையான மந்திரி சபை என்ற சிறப்பு ஏற்படக்கூடிய முறையில் ஒரு நல்ல பெயரை மக்களுக்கும், உங்களுக்கும் எங்களுக்கும் வாங்கித் தர வேண்டுமென்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** கனம் சட்ட மன்றத் தலைவரவர்களே, இந்த கவர்னர் உரையை வரவேற்று அதன்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கவர்னர் அவர்கள் உரையிலே முதற் பக்கத்திலே முதல் பாராவிலே 'பழைய சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு எனது பாராட்டுக்கள்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அடுத்த பாராவிலே தேர்தலைப்பற்றிச் சொல்லும் போது, '... அமைதியாகவும் விரும்பத்தகாத எவ்வித நிகழ்ச்சிகளின்றியும் நடைபெற்றது நாம் சிறப்பாகப் பாராட்ட வேண்டிய தொன்றாகும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிச் சிறப்பாக பாராட்ட வேண்டிய காரணம்

[திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்] [1967, மார்ச் 18

என்ன ? சென்ற முறை வந்து, இந்த முறையும் வந்திருக்கக்கூடியவர்களில் நானும் ஒருவன், பாதுகாக்கப்பட்ட பழையவர்களுக்கும் பாராட்டு தெரிவிக்கவேண்டுமென்ற காரணத்தால்தான், அவர்கள் இதைச் சுட்டிக்காட்டுவதற்காக எங்களையெல்லாம் கலந்து பேசாமலே நிலைமைகளை புரிந்துகொண்டு அவ்வாறு சொல்லியிருப்பதற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உரையிலே முழுக்க முழுக்க விவசாயத்திற்கு முதலிடம் கொடுக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு முதலிடம் கொடுத்ததெல்லாம் என்ன ஆயிற்று என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயத்திற்கும், தொழிலுக்கும் பல கோடி ரூபாய்கள் செலவிட்டும் அது ஏழைகள் யாருக்கும் பயன்படவில்லையென்ற கருத்தை காலஞ்சென்ற நேரு பிரான் முதல் இன்றைய கவர்னர் அவர்கள் வரையில் நினைவுபடுத்திக்கொண்டு, அதை மக்களுக்கு உறுதிப்படுத்திக்கொண்டும் இருக்கிறார்கள். அந்த முறையிலேதான் இதைக் கூறியிருக்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுக் காலமாகவே நீடித்து நெருக்கடியான வறட்சி நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். 30—4—1966-லே ஒரு பெரும் புயல்; 3—11—1966-லே ஒரு கொடிய புயல். இந்தப் புயல்களாலே பாதிக்கப்பட்ட பெரும் பகுதி தென் ஆற்காடு மாவட்டத்தை பொறுத்த அளவிலே திண்டிவனம், செஞ்சி தாலுகாக்கள் ஆகும். நூற்றுக் கணக்கான ஏரிகள் உடைபட்டன ; வீடூர் அணை உடைபட்டது. பஞ்சாயத்து ரோடுகள், பஞ்சாயத்து யூனியன் ரோடுகள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன ; பஞ்சாயத்துப் பள்ளிகளும், அரசாங்கப் பள்ளிகளும் பள்ளிகளா, வேறு என்னவா என்று சொல்லத்தக்க அளவில் இடம் மாறிவிட்டன ; பயிர்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிட்டன. எனது வானூர் தொகுதியிலே மூன்று பெரிய ஆபத்துக்கள் வந்து மக்களை பெரிய அவதிக்குள்ளாக்கிவிட்டன. அவைகளில் ஒன்று, நூற்றுக்கணக்கான ஏரிகள் உடைந்து விவசாயம் பாதிக்கப்பட்டு சாவி போகமாக ஆகிவிட்டது சில கிராமங்களில். இரண்டு, வீடூர் நீர்த்தேக்கம் உடைந்து பல கிராமங்களையே அடித்துக்கொண்டுபோய் கடலிலே சேர்த்து விட்டது. மூன்று, உடைந்த ஏரிகள் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணமுள்ள கழுவெளி பரப்பிலே நீர்த்தேக்கத்தை உண்டு பண்ணி ஒரு மாதமாக நீர் தேங்கிய காரணத்தால் பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நஞ்சை நிலங்கள் எல்லாம் பாழாகிவிட்டன. பெரும்புயல் இரண்டு வந்துவிட்ட காரணத்தாலே திண்டிவனம் தாலுகாவை, முன்பு இங்கே திண்டிவனம் தொகுதி எம்.எல்.ஏ.-வாக இருந்தவர் திரு. எ. தங்கவேலு என்பவர் பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யவேண்டுமென்று வற்புறுத்தினார். அதற்கு அப்போதிருந்த அமைச்சர் திரு. கக்கன் பாதிக்கப்பட்டதை ஏற்றுக்கொண்டாலும், அதைப் பஞ்சப் பிரதேசமாக பிரகடனப் படுத்த முடியாது என்று அழகாகச் சொல்லிவிட்டார்கள்,



1967, மார்ச் 18] [திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்]

அங்கேயுள்ளவர்களுக்கு ஒரு வசதியும் கிடையாது, மிகவும் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே, நம்முடைய காலத்திலேயாகிலும் அதைச் செய்யவேண்டுமென்று நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

பொதுமக்களின் வேதனை வெந்து தணலாகிக் கொண்டிருக்கிற இடம் அது. அணைக்கட்டுகள் உடைந்து கழுவெளி ஓரங்களில் உள்ள 20 கிராமங்கள் வரையில் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் பாதுகாக்கின்ற அளவில், அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கின்ற அளவிலே அதைப் பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனம் செய்து அந்தப் பகுதியிலே வாழுகின்ற மக்களுக்கு நல்ல வாய்ப்பும் வசதியும் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு மிகவும் பயன் அளிக்கக்கூடிய ஒரு முக்கியமான திட்டம் கிருஷ்ணா—கோதாவரி நீர்த்தேக்கத் திட்டம். அதை 1952-லே அறிமுகப் படுத்தப்பட்டு, பிறகு அப்பொழுது முதலமைச்சராக இருந்த திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்களால் அது வற்புறுத்தப் பட்டு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைவிடப்பட்டு 1962-லேயிருந்து 1966 வரை இந்த மன்றத்திலேயும் என்னால் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் குறிப்பாக வட ஆற்காடு, செங்கல்பட்டு, தென் ஆற்காடு மாவட்டங்களுக்கு வந்தால் ஒழிய விவசாயத்தைப் பெருமளவில் பெருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் இந்த மூன்று மாவட்டங்களும் வறட்சி மாவட்டங்கள். அதனால்தான் அந்தக் காலத்திலேயே உணர்ந்து கூறியிருக்கிறார்கள். வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு கிருஷ்ணா, கோதாவரித் தண்ணீரைப் பயன்படுத்த வேண்டுமென்று. இப்படிப் பல திட்டங்கள் உருவாக்கப்பட்டு கைவிடப்பட்டன. இந்தத் திட்டத்தை ஆந்திர மாநிலத்தோடு பேச்சு வார்த்தைகள் நடத்தி அதன் மூலம் எவ்வளவு துரிதமாக காரியங்கள் செய்ய முடியுமோ, அவற்றையெல்லாம் பூர்த்தி செய்யவேண்டுமென்பதையும் நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

நடுத்தர நீர்ப்பாசனத்தைப்பற்றிக் குறிப்பிடக் காணோம். சிறிய நீர்ப்பாசனத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறிய நீர்ப் பாசனத்தில் குறிப்பாக எங்கள் பகுதியிலே உள்ள ஏரிகள் எல்லாம் தூர் எடுக்காமல் அப்படியே கிடக்கின்றன. புயலினாலே இன்னும் மோசமான நிலைமையிலே இருக்கின்றன. ஆகவே பி.டபிள்யூ.டி. ஏரிகளாக இருந்தாலும் சரி, மைனர் இரிகேஷன் ஏரிகளாக இருந்தாலும் சரி, ஃபுட் புரடக்ஷன் ஏரிகளாக இருந்தாலும் சரி, ஊற்று குட்டைகளாக இருந்தாலும், வாங்கிகளாக இருந்தாலும் சரி தூர் எடுப்பதற்கு இந்த ஆண்டிலேயே வழிவகை செய்யவேண்டும். புதிய கிணறுகள் வெட்டுவதற்கு கடன் கொடுக்கப்படுகிறது. பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் கடன் வசதி செய்துதர வேண்டும். அந்தக் கடன்கள் தேவைப்படுகிறவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று பார்க்க வேண்டும். வசதி உள்ளவர்களுக்குத்தான் கிடைக்கிறதே தவிர அந்தக் கடன்கள் எல்லாம் வசதியில்லாதவர்களுக்குக் கிடைப்பதில்லை, நீண்ட

நெடுங்காலமாக இதைப் பற்றிச் சொல்லிவந்திருக்கிறோம். சொல்லிக்கொண்டு வருவதை நீடிக்க வேண்டாம் என்பதையும் ஞாபகப்படுத்துகிறேன்.

மின்சாரத்தைப்பற்றிக் கடைசிப் பக்கத்திலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். என்னுடைய பகுதியிலே 1962-லேயிருந்து 10, 20 கிராமங்களுக்குத்தான் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பல காரணங்களைச் சொன்னார்கள். கம்பியில்லை என்கிறார்கள். கம்பி வந்த பிறகு கம்பம் இல்லை என்று சொல்கிறார்கள். இரண்டும் ஒன்று சேர்ந்து வராது என்கிறார்கள். அதற்குக் காரணம் கையிலே பணம் இல்லை என்கிறார்கள். இதையே மாற்றி மாற்றிச் சொல்லிக்கொண்டிருந்தவர்கள் இனிமேல் என்ன சொல்லப் போகிறார்களோ தெரியவில்லை. விவசாயிகள் விரைவில் மின்சாரத்தைப் பெறுவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

உர விநியோகத்தைப்பற்றிச் சென்ற ஆண்டிலும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். தற்போதும் கவர்னர் உரையில் நைட்ரஜன் உர வகை பற்றியும், பாஸ்பர உர வகை பற்றியும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. நைட்ரஜன் உரம் 1.35 லட்சம் கேட்டதற்கு 86,000 டன் மட்டுமே கிடைத்தது என்றும், பாஸ்பர உரம் 60,700 டன் கேட்டதற்கு 27,000 டன் அளவிற்கே கிடைத்தது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படிப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தால், இந்த உரங்களை எல்லாம் நம்முடைய நாட்டிலேயே உற்பத்தி செய்யவேண்டுமென்று நினைப்பதோடு அரசாங்கமும் அந்தக் கருத்தைக் கொண்டிருப்பதனால், நம்முடைய நாட்டிலே உரத்தை உற்பத்தி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். உரத்தை விவசாயிகளுக்கு வழங்கும்போது கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வழங்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் நியாயமான விலையில் தேவைப்படுகிற நேரத்தில் விவசாயிகளுக்கு உரத்தை விநியோகிக்கிறார்களா என்று பார்த்தால் இது வரை கொடுக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும். இனியாவது வேண்டிய நேரத்தில் கொடுக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற கார்த்திகை, ஐப்பசி மாதங்களில் விவசாயிகள் எல்லாம் திண்டிவனம் தாலுகா ஆபீசில் வந்து உரம் வேண்டுமென்று கேட்க, நெல் கொண்டு வந்தால்தான் உரம் கொடுப்போம் என்று அதிகாரிகள் சொன்னார்கள். 'எங்களிடம் மட்டும் நெல் கேட்கிறீர்களே, ஓப்பன் மார்க்கட்டில் 35 ரூபாய்க்கு விற்கப்படுகிற உரங்களை 75 ரூபாய்க்கு விற்கிறார்களே, அவர்கள் எல்லாம் எந்த நெல்லைக் கொடுத்துவிட்டு உரத்தை வாங்கிப் போனார்கள்' என்று கேட்டதற்கு அதிகாரிகள் தங்களுக்கு அதைப் பற்றித் தெரியாது என்றும், நெல் கொண்டுவந்தால்தான் உரம் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு என்றும் கூறினார்கள். அதைப்பற்றி பிறகு கலெக்டர் அவர்களிடத்திலும், தாசில்தார் அலுவலகத்திலும் முறையிட்ட பிறகு உர விநியோகத்திலே ஓரளவு மாற்றம் ஏற்பட்டது. உரம் தேவைப்படுகிற காலத்தில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.





குறிப்பாக, கூட்டுறவு இலாகா இன்றையதினம் நாட்டிலே கொள்ளைக் கூட்டமாக இருக்கிறதே தவிர, விவசாயிகளுக்கு, மக்களுக்குத் தேவைப்படுவனவற்றை பெற்றுத் தரக்கூடிய இயக்கமாக இல்லை யென்பதைக்கூற விரும்புகிறேன். சட்ட அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டுறவு இலாகாவைப் பற்றி மறு பரிசீலனை செய்து எவ்வளவு சீக்கிரத்தில் சீர்படுத்த வேண்டுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் சீர்படுத்தினால் விவசாயிகள் பயன் பெறமுடியும்.

என்னுடைய பகுதியில் கூட்டுறவுச் சங்கங்கள் பல இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களாக இருப்பவர்கள் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஆளே இல்லாத நிலைமையில் யார் யாருக்கோ கடன் கொடுத்ததாக எழுதி பணத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு கிராமத்தில் ஒன்றரை லட்சம் ரூபாய் பணம் விநியோகிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. ஆனால் அந்தக் கிராமத்தில் யாருக்கும் கடன் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் பல கணக்குகள் தாறுமாறான நிலையில் இருக்கின்றன. இந்த மாதிரித் தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் தண்டனை பெறும்படி செய்வதற்கான அளவுக்கு மாற்றங்கள் தேவை. ஆனால் தவறு செய்தவர்கள் தப்பிக்கவும், ஒன்றுமறியாதவர்கள் மீது அந்தக் குற்றங்கள் சுமத்தப்படவுமான நிலைமைகள் கூட இருக்கின்றன. யார் உண்மையான குற்றவாளி என்று அறிந்து தண்டிப்பதற்கும், மற்றவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் அளவிலும் மாற்றங்கள் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், அதற்கு எங்களாலான ஒத்துழைப்பைக் கொடுக்க எப்போதும் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, விவசாயிகளுக்குக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் அந்தக் கடன்கள் அந்த விவசாயிகளுக்குப் போய்ச் சேருவதில்லை. பல முறை அதைப் பற்றி இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இன்றைக்குக் கல்வியமைச்சராக அமர்ந்திருப்பவர்களுக்கும் ஞாபகம் இருக்குமென்று கருதுகிறேன். என்னுடைய வானூர் தொகுதியிலே, பாண்டிச்சேரியைச் சேர்ந்த அரவிந்த ஆசிரமத்தினர் அரசாங்க அதிகாரிகளைக் கொண்டு புறம்போக்கு நிலங்களை கைவசப்படுத்திக் கொண்டதோடு சர்க்காரிலிருந்து 8½ லட்சம் ரூபாய் இதுவரை கடனாகவும் வாங்கியிருக்கிறார்கள். ஆனால், அதே சமயத்தில் ஒரு விவசாயி நிலத்தைச் சீர்திருத்த வேண்டுமென்று 200, 300 ரூபாய் கடன் கேட்டால் அந்த நிலத்தைப் பல அதிகாரிகள் வந்து பரிசோதனை செய்கிறார்கள். அதற்காகத்தான் பயன்பட்டனவா என்று பார்க்கிறார்கள். ஆனால் 8½ லட்சம் ரூபாய் கடன் பெற்ற அந்த ஆசிரமத்தினர் இதுவரை எவ்வளவு உற்பத்தி செய்தார்கள், எந்த அளவுக்கு உற்பத்தியான நெல்லை மக்களுக்கு விநியோகித்திருக்கிறார்கள்

என்பதை மட்டும் தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். உணவு
உற்பத்தி என்று சொல்லிக்கொண்டு இப்படி பல லட்சக் கணக்கான
ரூபாயை பலதரப்பட்டவர்கள் எடுத்துக் கொண்ட காரணத்தால்
தான் உண்மையான பலன் விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை,
மக்களுக்குக் கிடைக்கவில்லை என்ற கருத்தை அமைச்சரவைக்குக்
கூறி, இந்த வாய்ப்பையும், சந்தர்ப்பத்தையும் வழங்கிய சபா
நாயகர் அவர்களுக்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் கூறி
முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே,
உயர்திரு கவர்னர் அவர்களுடைய உரையைப் பொதுவாக நான்
ஆதரிக்கிறேன். ஆதரிக்கக்கூடிய அதே நேரத்தில் அதிலே மக்க
ளுக்குச் செய்ய வேண்டிய, என்னென்ன பிரச்சினைகளைப் பற்றி
சேர்க்கப்படவில்லை என்பதை எனக்கு முன்பு பேசிய ஆளுங்கட்சி
யைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் குறிப்
பிட்டதைப் போல் நானும் ஒருசில பிரச்சினைகளை எடுத்துக்
காட்ட விரும்புகிறேன்.

கடந்த 20 ஆண்டுகளாக ஆட்சி பீடத்திலிருந்த காங்கிரஸ்
ஆட்சி மக்கள் விரோதப் போக்கைக் கையாண்ட காரணத்தால்
தான், இந்தத் தேர்தலில் மக்கள் அந்த ஆட்சியைத் தூக்கியெறிந்து
விட்டு புதிய ஆட்சியைப் பீடத்தில் அமர்த்தக்கூடிய அளவுக்கு
நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் மக்களைப் பாராட்
டாமல் இருக்க முடியாது. நம்முடைய பெருமதிப்புக்குரிய
முதலமைச்சர் அவர்களும் கூட, இன்றைக்கு மக்கள் இருப
தாண்டுக் காலமாக இருந்த ஆட்சியைத் தூக்கியெறியச் செய்ததன்
காரணம் என்ன என்று பார்த்து, அவர்கள் வாழ்க்கைத் துறையில்
செய்ய வேண்டியது என்ன என்ற முறையில், முதல் முதலாகச்
செய்ய வேண்டியது என்ன என்று ஆராய்ந்து, உணவுப் பிரச்சினை
யில் முதல் முதலாகக் கவனம் செலுத்துவதாகக் கூறியிருக்
கிறார்கள். அதை நாம் பாராட்டித்தான் ஆகவேண்டும். இப்போது
எங்கே ஒரு படி, எங்கே மூன்றுபடி என்று கேட்டுவிட்டால்
போதாது. வெள்ளையன் ஆட்சி இருந்த காலத்திலே—அன்றைக்கு
நானும் காங்கிரஸ்காரர் தான்—1931-ம் ஆண்டிலே கராச்சி
திட்டத்தில் மகாத்மா காந்திஜியின் தலைமையின்கீழ் போட்ட
திட்டங்கள் என்னென்ன ? அவற்றிலே ஒன்றாவது இந்த 20 ஆண்டுக்
கால ஆட்சியிலே கடைப்பிடிக்கப்பட்டதா என்பதைச் சிந்திக்க
வேண்டும். அப்படிச் சிந்தித்து இப்போது வந்திருக்கக்கூடிய
சர்க்காருக்குப் போதுமான அளவுக்கு அவகாசம் கொடுத்து, அதற்
கான ஆலோசனைகளையும் கொடுக்கவேண்டும். அந்த நிலைமையில்
நாம் இருக்கிறோமே தவிர, அதை ஏன் செய்யவில்லை, இதை ஏன்
செய்யவில்லை என்று கேள்வி கேட்கிற நிலைமை இப்போது இல்லை,
பின்னால் இருக்கிறது

ஆகவேதான் இன்றைக்கு என்னென்ன செய்யவேண்டும், என்
னென்ன செய்யப் போகிறார்கள் என்பதைச் சொல்லக் கூடிய நிலை
யில், இன்று மக்கள் பிரதானமாக எதிர்பார்க்கக் கூடிய பிரச்னை
உணவுப் பிரச்னை. உடனடியாக குறைந்த விலையில் உணவு கிடைக்க





வேண்டும், போதுமான அளவிற்கு உணவு கிடைக்கவேண்டும்,
அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த சர்க்கார் செய்வார்கள்,
செய்ய முடியும் என்றுதான் மக்கள் உண்மையில் நம்புகிறார்கள்.
அதேபோன்று வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்கியாக
வேண்டும். இன்று இருக்கக்கூடிய லஞ்ச ஊழல்களையும் போக்கிக்
யாகவேண்டும். இப்பிரச்சினைகள்பற்றித்தான் மக்கள் நினைத்துக்
கொண்டு சர்க்காரை நம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை
நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே, உணவு உற்பத்தியைப்
பெருக்குவதில் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். இன்று உணவு
பெருகி இருக்கக்கூடிய நிலையில் அதிக விலை கொடுத்தால் எவ்வளவு
மூட்டைகள் வேண்டுமானாலும் கிடைக்கக்கூடிய அளவிற்கு ஒரு
நிலைதான் இருக்கிறது. பதுக்கல், கள்ளக்கடத்தல் போன்ற பிரச்
சினைகளில் தீவிரமான, கடுமையான, தயவுதாட்சண்யம் இல்லாமல்
வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்றில்லாது நடவடிக்கைகள்
எடுக்கவேண்டும். பாரத யுத்தத்தில் பயப்படக்கூடிய நிலையில்
இருந்த அர்ஜுனனிடம் கிருஷ்ண பரமாத்மா சொன்னதன் பிறகு
அவர் எந்த நிலையை எடுத்தாரோ அதே போன்று தயவு
தாட்சண்யம் இல்லாமல் கண்டிப்பான நடவடிக்கைகளை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமக்கு முன்னால் தீர்க்க
வேண்டியிருக்கும் பல பிரச்னைகள் குறித்து எதிர்க் கட்சித்
தலைவர்கள்கூட கலந்து ஆலோசித்து, முக்கியமாக உணவுப்
பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஒரு முடிவுக்கு வருவதுதான்
நலமாகும். இன்றையதினம் போதுமான உரம் கிடைக்கவில்லை
என்று சொல்லப்படுகிறது. அதிக விலை கொடுத்தால் எவ்வளவு
வேண்டுமானாலும் கிடைக்கும் என்ற நிலை இருக்கிறது. பத்திரிகை
களில் இன்று பார்க்கிறோம், 2,000 மூட்டை பதுக்கி வைத்திருந்
ததை திடீரென்று கண்டு பிடிக்கக்கூடிய அளவிற்கு நிலை இருப்
பதை, 2,000 மூட்டை என்றால் உரம் கிடைக்கவில்லை என்று
சொல்லிவிட முடியாது. அந்த உரத்தைக்கூட இன்று எப்படி
யெல்லாம் பயன்படுத்துகிறார்கள் என்று பார்க்கவேண்டும்.
விவசாயத்திற்கு உரம் கிடைப்பதில்லை. கள்ளச் சாராயம்
காய்ச்ச உரம் கிடைக்கிறது. சல்பேட்டைக் கொண்டு
போய் கள்ளச் சாராயம் காய்ச்சுவதால் அதிக லாபம் கிடைக்
கிறது என்ற அடிப்படையில் அப்படிச் செய்கிறார்கள். சல்பேட்
தண்ணீரில் நெல்லை ஊற வைத்து எடை அதிகம் கொடுக்கக்
கூடிய ஒரு நிலை இருப்பதால் அப்படிப்பட்ட மோசமான ஒரு
வழியும் கையாளப்படுகிறது. உரத்தில் வெள்ளை உப்பைக் கலந்து
விற்பனை செய்யும் நிலையும் இருக்கிறது. இன்று பாலில் தண்ணீர்
கலந்தால் கடுமையான தண்டனை விதிக்கப்படுகிறது. விஷமுள்ள
உணவை உட்கொண்டு மயக்கம் அல்லது செத்தான் என்றால்
கடுமையான தண்டனை விதிக்கப்படுகிறது. அதேபோன்று உரத்
தோடு உப்பைக் கலந்து விற்பனை செய்கிறான் என்றால் கோடிக்
கணக்கான மக்களுக்கு உணவு தேவைப்படும்போது நிலத்தை
கொலை செய்யக் கூடிய அளவிற்கு, மீண்டும் அந்த நிலத்தில்
விவசாயம் செய்ய முடியாத நிலையை ஏற்படுத்துகிறவர்களுக்கு
அவர்களை அப்படியே சுட்டுத் தள்ளினால்கூட ' அது பெரிய குற்ற

மாகாது. இப்படிச் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அடுத்தபடியாக நிலத்திற்கு உச்சவரம்பு கட்டியதாக சொல்லப்படுகிற சட்டம் இருக்கிறது. அதில் மிச்சம் ஒன்றும் கிடையாது. அத்தனை நிலத்தையும் அவரவர்களே சொந்தமாக்கிக் கொள்ளும் தன்மையில் மோசமான அளவிற்கு அச்சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தச் சட்டத்தை மாற்றியமைக்கக் கூடிய அளவிற்கு இன்றைய சர்க்கார் முன்வந்தாகவேண்டும். ஒரு மனிதனுக்கு என்னதான் வசதிகள் இருந்தாலும், தண்ணீரும் காற்றும் இல்லை என்றால் அவனால் உயிர்வாழ முடியாது. அதேபோன்று விவசாயிகளுக்கு என்னதான் வசதிகள் செய்து கொடுத்தாலும் தண்ணீர் வசதி இல்லை என்றால் விவசாயமே நடக்காது. தஞ்சை ஜில்லாவிற்கு அடுத்தபடியாக வட ஆற்காடு ஜில்லாவில்தான் நெல் உற்பத்தி அதிகம் என்று ஏற்கனவே இருந்த ஆட்சியின் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த ஜில்லாவில் தண்ணீர் வசதி கிடையாது. நீர்ப்பாசன வசதியும் கிடையாது. இருந்தாலும் கரெண்ட் வசதியைக் கொண்டு பம்ப் செட்கள் வசதியை வைத்துக்கொண்டு கிணறுகள் வெட்டி, அதைப் பயன்படுத்தி உற்பத்தி செய்து வருகிறார்கள். அந்த ஜில்லாவில் வெள்ளைக்காரன் காலத்தில் ஒரு சட்டத்தைப் போட்டார்கள், பாலாறு பேசின் சட்டம் என்ற அந்தச் சட்டம், விவசாயத்தைக் கொலை செய்யக் கூடிய சட்டமாகும். விவசாயிகளையும் கொலை செய்யும் சட்டமாகும் அது. பெரிய விவசாயிகளுக்குச் சாதகமான சட்டமாகும் அது. இன்றைக்கும் அது இருந்து கொண்டிருக்கின்றது. அதை தூக்கி எறிந்தாகவேண்டும். ஆந்திராவில் இருக்கக்கூடிய கிருஷ்ணா, கோதாவரி தண்ணீரை, கடலில் சென்று கலந்து வீணாகப் போய்க் கொண்டிருப்பதை, பாலாற்றில் கொண்டு வருவதற்கான ஏற்பாட்டையும் தீவிரமாக எடுத்துக் கொள்ளவேண்டும். சென்ற இருபது ஆண்டு காலமாக எல்லா மாநிலங்களிலும், மத்திய ஆட்சியிலும் காங்கிரஸ் கட்சி தான் ஆண்டு வந்தது. ஆனால் தண்ணீர் கொடுப்பதில் தேசியம் கிடையாது. தண்ணீர் கொடுப்பதில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருந்ததே கிடையாது இதுவரைக்கும். ஆனால் ஒன்றைக்கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்று கேரளாவில் இருக்கக்கூடிய முதல் அமைச்சர் திரு. நம்பூதிரிபாட் ஆட்சிபீடத்தில் இருந்தபோதுதான் அங்குள்ள தண்ணீரை நம் தமிழ்நாட்டிற்குக்கொண்டு வருவதற்குள்ள நிலைமை ஏற்பட்டது. அதுகுறித்து திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இந்தச் சபையிலேயே பேசியிருக்கிறார்கள். அதேபோன்று கடலில் வீணாகப் போகக்கூடிய தண்ணீரை இங்கு கொண்டுவருவதற்குள்ள அளவிற்கு மத்திய சர்க்காரோடு போராடிப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபடவேண்டும். அதேபோன்று பம்ப் செட்ஸ் வாங்குவதற்கு அல்லது கிணறுகள் வெட்டுவதற்குக் கடன் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறதே, அப்படிப் பணமாகக் கொடுப்பது தவறு என்பது என் அபிப்பிராயம். சர்க்காரே பம்ப் செட்டாகவோ அல்லது மோட்டாராகவோ கொடுத்து உதவி செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும். அதேபோல்





100, 200 ஏக்கரில் நல்ல பாங்கான இடத்தில் பெரிய கிணறுகளை வெட்டி, அதில் பம்ப் செட்ஸ் போட்டு 200 ஏக்கர்கள் பாயக்கூடிய வாய்ப்பு வசதிகள் செய்துகொடுத்து, வரிப் பணத்தைப் போல் போட்டு வசூல் செய்ததற்குப் பிறகு அவர்களிடம் ஒப்படைக்கும் அளவிற்கு ஒரு திட்டம் இருந்தால் நலமாக இருக்கும் என்பது என் அபிப்பிராயம். ஸ்டேட் ட்ரேடிங் முறையில் உணவு விநியோகம் செய்யும் பொறுப்பை ஏற்பது ரொம்பவும் நல்லது. மதிப்பிற்குரிய ஆதிமூலம் அவர்கள் கூறியதுபோல் தனி வியாபாரிகளிடம் விட்டால், அவர்கள் தங்கள் லாபத்தைப் பெருக்கிக் கொள்ளும் அடிப்படையில் விட்டோம் என்று சொன்னால் பழைய குருடி கதவைத் திறடி என்று சொல்வதுபோல் பழைய சர்க்கார் இருந்த வழி போனால் நிலைமை மோசமாகப் போய் விடும். சிறிய நீர்ப்பாசன வசதிகளை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதற்கான வசதிகள் இருக்கின்றன என்பது என் அபிப்பிராயம். குடியாத்தம் தாலூகாவில் மோர்தானா டாம் கட்டும் வகையில் வெள்ளைக்காரன் காலத்தில் ஒரு திட்டம் போட்டிருந்தான். 1954-ல் நடைபெற்ற உபதேர்தலின்போது, திரு. காமராஜ் அவர்கள் அங்கு போட்டியிட்டபோது என்ஜினியரிங் இலாகாவைக் கொண்டு அப்போதே கட்டி முடிக்கிறமாதிரி ஒரு நாடகம் கூட நடத்திக் கடைசியாக பாலாறு பேசின் ரூல்ஸ்படி நாம் கட்ட முடியாது என்று அது கைவிடப்பட்டது. ஆகவே பாலாறு பேசின் சட்டத்தை தகர்க்கவேண்டும், மோர்தானா டாமைக் கட்டி முடிக்கவேண்டும் என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதேபோன்று தீவிரச் சாகுபடி செய்வதிலும் தீவிர முயற்சி எடுத்தல் வேண்டும். விவசாயத்திற்கு உரம் மட்டுமல்ல, விதைகளும் தேவைப்படுகின்றன. இது வரை அவற்றை மார்க்கெட்டிங் சொஸைட்டி மூலம் வாங்கிக் குறைந்த விலைக்கு விநியோகம் செய்யும் நிலை இருந்தது. நான் கேள்விப்படுகிறேன், ஒரு உத்தரவு போட்டு ரெகுலேட்டட் மார்க்கட் மூலம் அல்லாமல் செய்து தஞ்சை ஜில்லாவில் ஏழு ஆபீஸ்கள் மூடப்பட்டு நூற்றுக்கணக்கான பேர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாக அறிகிறேன். ஆகவே, அது சம்பந்தமாகவும் தீவிரக் 12-30 பிற்பகல்.
கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இந்த விவசாயம் சம்பந்தப்பட்ட பிரச்னையிலே தீவிரக் கவனம் செலுத்தி உணவுப் பொருள்கள் விநியோகம் செய்வதிலே குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்க உடனடியாக ஏற்பாடு செய்தாக வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கூட்டுறவு இலாகா சம்பந்தப்பட்ட வரையிலே, இன்றைக்குப் பரிசிலனை செய்வதற்காக வேண்டி, நிலைமையைக் கண்டறிய குழு அமைக்கப் போகிறோம் என்று சொல்லப்பட்டிருப்பது என்னைப் பொறுத்தவரையில் அது வரவேற்கக் கூடியதாக இல்லை. காரணம் என்ன என்றால், இன்றைக்கு ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கக் கூடிய ஜில்லா சென்ட்ரல் பாங்கிலும், ஜில்லா கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைட்டியிலும், வேறு கூட்டுறவு சொஸைட்டிகளிலும் மிகப்பெரிய அளவுக்கு ஊழல்கள் மலிந்திருக்கின்றன என்பது

தான். அதற்குக் குழு அமைக்கப்படுகிறது என்று இந்த நோத்தில் சொல்லிவிட்டால், சென்ற காலத்தில் காங்கிரஸ் ஆட்சி இருந்த போது நிலத்திற்கு உச்ச வரம்பு கொண்டுவரப் போகிறோம், உச்ச வரம்பு கட்டப் போகிறோம் என்று சொல்லி . . .

**மதிப்பிற்குரிய திரு. செ. மாதவன்:** கனம் சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு சங்கங்களைப்பற்றிய சட்டத்திலும், அது பற்றிய விதி முறைகளிலும் நடைமுறைகளிலும் மாற்றம் செய்வதற்காகத்தான் குழு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தவறுகள் நடந்திருப்பதில், மிஸ்அப்ராப்ரியேஷன் கேஸஸ் பெண்டிங்காக இருப்பதாகத் தகவல் இருக்கிறது. அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். குழு அமைப்பதானது எந்த அளவுக்கு நடை முறைகளை மாற்றுவது என்பதுபற்றிப் பரிசீலனை செய்வதற்காகத்தான்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** அதைத்தான் நான் சொல்லுகிறேன். குழு ஏற்படுத்துவதற்குப் பதில் உடனடியாக அதிகாரிகளைப் போட்டு எல்லா இடத்திலும் விசாரணை செய்து, நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். குழு என்று அமைத்தால் மாதக் கணக்கில், வருஷக் கணக்கில் போகும். பீடித் தொழிலாளர்கள் சம்பந்தமாக, மினிமம் வேஜஸ் கமிட்டி என்று போட்டு 1½ வருஷங்கள் ஆகின்றன, ஒன்றும் செய்யவில்லை. அந்த மாதிரி போகக் கூடாது. விசேஷ அதிகாரிகளைப் போட்டுத் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் ஊழலைப் போக்கும் அளவுக்கு ஆரம்ப நடவடிக்கையாக இருக்க முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொழில் வளத்தைப்பற்றி ஏற்கனவே எனக்கு முன் பல பேர்கள் கூறியிருக்கிறார்கள். பல மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. சர்க்காரே முடியுமானால் எடுத்து நடத்தக்கூடிய அளவுக்கு உடனடியாகத் தீவிர நடவடிக்கையில் இறங்கியாகவேண்டும். அதே மாதிரித்தான் கைத்தறி நெசவுத் தொழிலாளர் நிலைமை கூட இருக்கிறது. இன்ஸென்ட்டிவ் போனஸ் பல தொழில்களில் கொடுக்கிறார்கள். இதற்கு ஏற்கனவே கொடுத்துக்கொண்டு வந்த அந்த போனஸெல்லாம் கூட நிறுத்தப்பட்ட காரணத்தினால் நான் அந்தத் தொழிலே பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது மாத்திரமல்ல, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு இல்லாதது மாத்திரமல்ல, குறிப்பாகத் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் [illegible] உபயோகப்படுத்தும் அளவுக்குக்கூட தயாராகாத நிலை இருக்கிறது. இது குறித்து மத்திய சர்க்காரிடம் போராடியாக [illegible] வேண்டும்

தொழிலாளர் நலன்களைப் பொறுத்தவரையில் ஏற்கனவே இருக்கிற சட்டங்களின் அடிப்படையில் கூட பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் போனஸ் 6 மாதம், 7 மாதம், 8 மாதம் என்று வாங்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அதைக் கட்டுப்





படுத்தி, இந்த அளவுக்குத்தான் வாங்கமுடியும், அதற்கு மேல் கிடைக்காது என்ற மோசமான நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பது மாத்திரமல்ல, பஞ்சப் படியைக் கூடக் குறைக்கும் அளவுக்கு முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன, வேலையைவிட்டு நீக்கும் அளவுக்கு முயற்சிகள் இருந்துகொண்டு வருகின்றன என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே இது போன்ற விஷயங்களிலே தொழிலாளிகளும் பாதிக்கப்படாத தன்மையில் பாதுகாப்பான சட்டங்களை அமல் நடத்தவேண்டும். குறிப்பாக, பீடித் தொழிலாளர்களுக்காக வெளாடி 1958-ம் ஆண்டில் சட்டத்தை நிறைவேற்றினாலும், ஊறுகாய்ப் பானையில் போட்ட மாதிரி அது ஊறிக்கொண்டு இருக்கிறது. இன்றைக்கு வந்திருக்கிற சர்க்கார் உடனடியாக அதை அமல் நடத்தவேண்டும் என்பது மாத்திரமல்ல, மினிமம் வேஜஸ் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறதே, அதனுடைய ரிப்போர்ட்டை உடனடியாகக் கொண்டுவர கவனம் செலுத்தவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இன்னும் பல விஷயங்கள் இருக்கின்றன. அவற்றைப் பற்றி அந்தந்தப் பிரச்னைகள் வரும்போது சொல்லிக் கொள்ளுகிறேன் என்று சொல்லிக் கடைசியாக ஒன்றே ஒன்று மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆந்திராவிலிருந்து நம் தமிழ் நாட்டோடு சேர்ந்த பல பகுதிகள் இருக்கின்றன. அவைகள் சேர்ந்து 7-3 வருஷங்கள் ஆகின்றன. ரோடு வசதி கிடையாது, குடி தண்ணீர் வசதி கிடையாது, மற்ற எந்த வசதிகளும் கிடையாது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் இதைப் போல 40—50 கிராமங்கள் இருக்கின்றன. அந்த மக்கள் மிகப் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால், ஆந்திராவிலிருந்து சேர்ந்திருக்கிற அந்தப் பகுதிகளுக்கு விசேஷச் சலுகையாக அதற்குப் பணம் ஒதுக்கப்பட்டு, ரோடு வசதி, குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. பெ. மலைச்சாமி:** பெருமதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, தங்களுக்கும் அன்புகெழுமிய சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நேற்றைய நாள் நடந்த மேன்மைதங்கிய கவர்னர் உரைபற்றி நானும் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று எண்ணுவதற்கு முன்னாலே, என்னைப் போன்றவர்கள் இந்த மன்றத்திற்குப் புதியவர்கள், இந்த மன்றம் ஒரு மலர்த் தோட்டமானால், இந்த மலர்த் தோட்டத்திலே பாராளுமன்ற அனுபவம் பெற்ற பல மலர்கள் உண்டு, என்னைப் போன்றவர்கள் கட்டவிழாத அரும்பைப் போன்றவர்கள். மலர்கள் மத்தியில் அரும்புகள் போல எங்களையும் தயவு செய்து இணைத்துக்கொள்ளுங்கள் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

[திரு. பெ. மலைச்சாமி] [1967, மார்ச் 18

கவர்னர் பெருமான் பேருரையில் முதலில் அவர்கள் குறிப்பிட்ட
படி, உலகத்தின் கண்களையே இழுத்த தேர்தல் நமது தமிழகத்திலே
நடைபெற்ற தேர்தல். ஃப்ரெஞ்சு நாட்டிலே ஏற்பட்ட புரட்சியில்
படைக் கலன்களைக்கொண்டு மன்னனை வீழ்த்தினர்கள் என்று
வரலாறு சொல்லும். ஆனால், இங்கே அமைதியான புரட்சியைத்
தமிழக மக்கள் உருவாக்கியிருக்கிறார்கள். 20 ஆண்டுக்காலம் ஆட்சி
நடத்திய காங்கிரஸ் தோற்று விட்டது என்று சொல்லுவதை விட,
மக்களாட்சி காப்பாற்றப்பட்டு விட்டது என்று சொல்லவேண்டும்.
உலகத்திலே ஏற்பட்ட புரட்சிகள் ஆயுதங்களால் ஏற்பட்ட
புரட்சிகள். " Battle taxes are replaced by ballot boxes "
என்பதற்கேற்ப (போர்க்கருவிகள் வாக்குப் பெட்டிகளால்
மாற்றப்பட்டுள்ளது). தமிழகத்தைப் பொறுத்த வரையில் வாக்குச்
சாவடிகள் ஒரு அமைதியான புரட்சியை உருவாக்கி விட்டன.
இதற்கு மேலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஏக தலைவர்
அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், ஏழை மக்களின்
இதயத்தைத் தன் கையிலே கொண்டு வாழ்கிறவர்கள். ஏழை
மக்களின் கால்களைச் சுற்றி வளர்ந்தது திராவிட முன்னேற்றக்
கழகம். நாங்கள் இங்கே ஏற்றிருப்பதைப் பதவியாக ஏற்றுக்
கொள்ளவில்லை. இதைப் பெரிய பொறுப்பாக ஏற்றுக்
கொள்கிறோம். காரணம், தமிழகத்தின் பண்பாட்டையும்,
தமிழகத்தின் இனிமையையும், தமிழகத்தின் நாகரிகத்
தையும் கொண்டு விளங்கிவரும் கட்சி திராவிட
முன்னேற்றக் கழகக் கட்சி. நம் இல்லத்திலே எத்தனையோ மின்
விளக்குகள் இருந்தாலும், வானத்தில் உள்ள வட்ட நிலாவின்
ஒளி சாரளத்தின் வழியே வரும்போது அந்த நிலவொளியை
ஒட்டியிருக்க விரும்புகிறோம். அந்த வகையில் பல அமைச்சரவை
பதவி ஏற்றாலும் அண்ணா அவர்கள் வானத்திலே வருகிற
வெள்ளிவளைப் போன்றவர். மேலும் நான் முன்னே
சொன்னதுபோலத் தமிழகத்தின் பண்பாட்டையும், தமிழகத்தின்
நாகரீகத்தையும் ஒட்டி வளர்ந்தது திராவிட முன்னேற்றக் கழக
இயக்கம். எனவே கவர்னர் பேருரையில் தேர்தலின்போது
எந்த விதமான அசம்பாவிதமும் இல்லை என்று சொன்னார்கள்.
அசம்பாவிதங்கள் நடந்திருக்கும், ஆனால் அவற்றைத் தடுத்து
நிறுத்தியவர்கள் எங்கள் தலைவர்தான். காரணம் மாற்றுக்
கட்சிக்காரர்கள் அடித்தால் வாங்கிக்கொள்ளுங்கள், தலையைத்
தாருங்கள் என்றால் தாருங்கள், தமிழனின் தன்மையை விட்டு
ஓடிவிடாதீர்கள் என்று ஆணையிட்ட காரணத்தினால்தான்
அசம்பாவிதங்கள் நடக்கவில்லை. எங்கள் தொகுதியில் போலீஸ்
அமைச்சர் பவனி வந்த நேரத்தில் போலீஸ்காரர்கள் கொடுத்த
தொல்லைகளை எங்களால் விவரித்துச் சொல்ல முடியாது. போலீஸ்
காரர்கள் கொடுத்த தொல்லைகள் பல. தமிழின் முதல் எழுத்தை
நாம் எண்ணிக்கொள்வோம். தமிழில் உயிர் எழுத்து, மெய்
எழுத்து என்று பிரித்திருக்கிறார்கள் இலக்கண ஆசிரியர்கள்.
உயிர் எழுத்து இல்லாமல் மெய் எழுத்து இயங்காது. உயிர்
எழுத்தில் முதலாக இருப்பது அகரம். அகரத்தை முதலாகக்
கொண்ட பெயர் கொண்டவர் எங்களது பேரறிஞர் அண்ணா
அவர்கள். எனவேதான் உயிர் எழுத்து இல்லாமல் மெய் எழுத்து



1967, மார்ச் 18] [திரு. பெ. மலைச்சாமி]

இயங்காது. பேரறிஞர் அண்ணா அவர்களின் இயக்கம் இல்லாமல்
தமிழகம் இயங்காது என்று நாட்டு மக்கள் அறிவித்துவிட்டார்கள்.
கொடுமைகள் நிகழ்ந்த நேரத்தில் முன்னேற்றக் கழகம்
மக்களுக்குப் பணி செய்யக் கடமைகளை மேற்கொண்டிருக்கிறது.

கவர்னர் அவர்கள் உரையில் வேளாண்மைத் துறையைப்
பற்றியும், உழவியல் நிலைமையைப்பற்றியும் எடுத்துக் கூறியிருக்
கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்
உழவுத் தொழிலில் பண்பட்டவர்கள், நாங்கள் கலப்பை எப்படி
இருக்கும், கொழு எப்படி இருக்கும், நுகம் எப்படி இருக்கும்,
தடி எப்படி இருக்கும், மாடுகள் எப்படி இருக்கும் என்று தெரியா
தவர்கள் அல்ல. உழவுக்கும் கலப்பைக்கும் உள்ள தூரத்தையும்,
எந்த நெருக்கத்தில் எப்படிக் கட்டினால் மாடுகளுக்குத் தொல்லை
வராது என்ற நிலைமைகளையும் நாங்கள் தெளிவாக அறிந்து கொண்
டிருக்கக் கூடியவர்களாக இருக்கிறோம். பாராளுமன்ற முறையில்
வேண்டுமானால் பக்குவம் இல்லாமல் இருக்கலாம். ஆனால்
நிலத்தைப் பண்படுத்துவதிலே நாங்கள் அதிகம் அறிந்தவர்களாக
இருக்கிறோம். கவர்னர் அவர்கள் சொன்னார்கள், தமிழகத்தைப்
பொறுத்த அளவிலே எத்தனை சிக்கல்கள் இருந்தாலும், இந்தப்
புதிய அரசு உணவுச் சிக்கலை முதலில் எடுத்துக்கொள்ளும். 20
ஆண்டுக்காலமாக ஆட்சியை நடத்தி வந்த ஒரே கட்சி ஐந்தாண்டுத்
திட்டங்களைத் தீட்டினோம் என்று சொல்லிக்கொண்டு வந்தது.
ரஷ்ய நாட்டில் ஸ்டாலின் தீட்டினான் ஐந்தாண்டுத் திட்டங்களை,
நாங்களும் தீட்டினோம் என்றார்கள். உறவினர்கள் இறந்துபட்டால்
கிராமப் பகுதி மக்கள் உடன் அழுதுகொண்டு செல்வார்கள்.
அப்பொழுது இறந்துபட்டவரின் உண்மையான உறவினர்கள்தான்
உண்மையாக அழுதுகொண்டு செல்வார்கள். மற்றவர்கள் போலி
யாக அழுதுகொண்டு செல்வார்கள். "ஊரார் சிரிப்பாகண்டு
ஒப்புக்கழுகு நண்டி, வாயை வந்து பொத்துங்கடி வகை கெட்ட
பெண்டுகளா" என்பது போல, அவர்களுக்காகப் போடப்பட்ட
திட்டம், உண்மைக்காகப் போடப்பட்ட திட்டமல்ல என்ற நிலையில்
தான் ஐந்தாண்டுத் திட்டங்கள் அமைந்திருந்தன. ஐந்தாண்டுத்
திட்டங்களில் பலன் இறுதியிலே உழவர்கள் கைக்குப் போகவில்லை.
எனவேதான் நாட்டிலே உணவுச் சிக்கல்களும், உணர்வுச் சிக்கல்
களும் ஏற்பட்டன. இந்த இரண்டு சிக்கல்களின் இடையே
ஜனநாயகத்தைக் காப்பாற்றும் நிலை ஏற்பட்டது.

வேளாண்மைத் துறையிலே கவர்னர்பெருமான் அவர்கள் முதன்
முதலாகக் கொள்முதல் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். எங்களது
முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், ஏழைகளைக்
கெஞ்சிக் கேட்கவேண்டும். சற்று அதிகமாக வசதி உள்ளவர்களைக்
கடிந்து கேட்கவேண்டும் என்று சொன்னார்கள். கடந்த காங்கிரஸ்
ஆட்சியில் எனது தொகுதியில் நடந்த ஒரு கொடுமையான நிலை
மையை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நத்தம்
கோவில்பட்டி என்ற கிராமத்தில் கருப்பண்ண பிள்ளை என்ற ஒரு
விவசாயி 1 ஏக்கர் 21 செண்டு நிலம் வைத்திருக்கிறார். 1 ஏக்கர்
21 செண்டு நிலத்திற்குத் தண்ணீர்ப் பாசன வசதி இல்லை. ஆற்றுக்
கால் பாசனம் இல்லை, கால்வாய் பாசனம் இல்லை. கவலைத் தண்ணீர்

[திரு. பெ. மலேச்சாமி] [1967, மார்ச் 18

இறைத்துத்தான் நீர் பாய்ச்சிப் பயிர் செய்யவேண்டும். அந்த 1
ஏக்கர் 21 செண்டு நிலத்தில் கண்டுமுதல் செய்த 11 மூட்டை நெல்லை
வீட்டுக்கு எடுத்துக்கொண்டுவந்தார். மகனுக்கு தை மாதம்
திருமணம், ரூ. 600 கடன். இந்த நிலையில் உள்ள அந்த விவசாயி
வண்டியில் 11 மூட்டை நெல்லை வீட்டிற்குக் கொண்டுவருகிறார்.
அரசாங்க அதிகாரிகள் அங்கே சென்றார்கள். வண்டியை நிறுத்தி
னார்கள், நெல் உங்களுக்குச் சொந்தம் இல்லையே, எங்களுக்குத்தான்
சொந்தம் என்று அதட்டினார்கள், ஏழை விவசாயி தன் குடும்பம்
உள்ள கடுமையான நிலையை விளக்கிச் சொல்லியும், அந்த
அதிகாரிகள் கேட்கவில்லை. 11 மூட்டை நெல்லையும் தரவேண்டும்
என்று வற்புறுத்தினார்கள். விவசாயி கெஞ்சிச் சொன்னார் 3
மூட்டை நெல் தருகிறேன் எடுத்துக்கொள்ளுங்கள் என்று. இதை
அதிகாரிகள் மறுத்த உடனே, தனது எட்டுக் குழந்தைகளையும்
அழைத்து வந்து மனைவியையும் அழைத்து வந்து வண்டிக்கு
முன்னாலே படுக்க வைத்து, தானும் படுத்து வண்டியை
எங்கள் மீது ஏற்றிவிட்டு நெல்லை எடுத்துக் கொள்
ளுங்கள் என்று சொன்ன காலம் காங்கிரஸ் ஆட்சிக் காலம்.
இனிமேல் அந்த நிலைமைகள் ஏற்படாது என்று ஏழை விவசாயிகள்
எதிர்பார்க்கிறார்கள். எனவே கொள்முதலைச் சீராக நடத்தவேண்டும்
என்று அமைச்சர் அவை கூறிய கருத்துக்களை கவர்னர் அவர்கள்
கூறியிருக்கிறார், நான் அதை ஆதரிக்கிறேன்.

மேலும் விவசாயிகளுக்குப் பயன்படுகிற முறையிலே சிறிய
நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுத்தால், உரம், விதைகள்
இவற்றை விநியோகித்தல், அது போன்ற மற்ற வசதிகளை
விவசாயிகளுக்குச் செய்துகொடுத்தல் அவசியம் என்ற முறையில்,
புதிய அரசு செம்மையாகச் செயல்படும். ஓவிய வல்லுநர் அழகான
வானவில்லைத் தீட்டிக்காட்டவேண்டுமென்றால், ஒவ்வொரு வண்ண
மும் பயன்படவேண்டும். பச்சை ஒரு வண்ணம், சிவப்பு ஒரு
வண்ணம், இப்படி வண்ணங்கள் கிடைத்தால் மட்டும் போதாது,
மறையாத, தரமான வண்ணங்களாக இருத்தல் அவசியம். காங்கி
ரஸ்காரர்கள் ஆட்சியில் வண்ணங்கள் கிடைத்தன, ஆனால் முழுமை
யாகவும், செம்மையாகவும் கிடைக்கவில்லை. எனவே ஒரு விவசாயி
உற்பத்தித் திறன் என்ற ஒரு வானவில்லைத் தீட்ட வேண்டுமானால்,
பாசன வசதி வண்ணம் வேண்டும், உரம், விதை போன்ற பல ரக
வண்ணங்கள் வேண்டும். தேவையான வண்ணங்கள் யாவும்
ஏழை விவசாயிகளுக்குச் சீராகக் கிடைத்தால்தான் இந்திய
நாட்டிலே விவசாயி முன்னேறமுடியும். அமெரிக்கா போன்ற
நாடுகளில் 100-க்கு 10, 12 பேர்கள் உழவுத் தொழிலில் ஈடுபட்டி
ருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் தமிழகத்தை,
இந்தியாவைப் பொறுத்த அளவிலே, கிட்டத்தட்ட 75 விழுக்காடு
உழவுத் தொழில் ஈடுபட்டிருக்கிறார்கள். அமெரிக்க நாட்டிலுள்ள
விவசாயி உற்பத்தி செய்யும் உற்பத்திப் பொருள் மூலம் அமெரிக்க
நாட்டில் 22 பேர்களுக்கும் உணவு கொடுத்து, வெளிநாடுகளில் 3
பேர்களுக்கும் உணவு கிடைப்பதாகத் தெரியவருகிறது.
அமெரிக்க நாட்டில் இருக்கிற அரசு புதிய விஞ்ஞான முறைகளில்



1967, மார்ச் 18] [திரு. பெ. மலேச்சாமி]

உழவுக்கு ஆக்கம் தருகிறது. புதிய முறைகள் நல்ல பயன்களைத்
தருகின்றன. ஆனால் இந்திய அரசு இதற்கு முன்னாலே உழவின்
பெருமையைப்பற்றி பேசினார்கள். ஆனால் உழவன் வாழ்க்கை
பற்றிச் சிந்திக்கவில்லை. அதன் காரணமாகத்தான் உணவுச் சிக்கல்
நாட்டில் தலை விரித்தாட ஆரம்பித்துவிட்டது.

கூட்டுறவு அமைச்சர் அவர்கள் நல்ல அனுபவம் பெற்றவர்கள்.
உலகத்தில் மனிதன் எங்கே தொடங்கினான் என்று கேட்டால்
இலேமூரியா கண்டத்தில் என்று சொல்கிறார்கள். ஊழல் எங்கே
தொடங்கியது என்றால் கூட்டுறவு முறையில் தொடங்கியது என்று
சொல்லலாம். இந்த நாட்டில் கூட்டுறவுத் துறையில் அவ்வளவு
ஊழல்கள் மலிந்துவிட்டன. சட்ட அமைச்சர் அவர்கள் அனுபவம்
உடையவர்கள். கூட்டுறவுத் துறையிலுள்ள நிலைமைகளைப்பற்றித்
தெளிவாக அறிந்தவர்கள். விவசாயிகள் அதிகமாகத் தொடர்பு
கொண்டிருப்பது கூட்டுறவு இயக்கம். கனம் உறுப்பினர் திரு.
பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னதுபோல, சில தலைவர்களுக்காக
அது பயன்படுகிறதே தவிர, தனிப்பட்ட உழவர் பெருமக்களுக்குக்
கூட்டுறவு இயக்கம் பயன் தருவதில்லை. உர வகைகள் வழங்கு
வதிலே, வெளியில் யூரியா ஒரு படி ரூ. 2½-க்கு விற்கப்படுவதன்
காரணமாக, மார்கெடிங் சொசைடி போன்ற இயக்கங்கள் ஒரு
குறிப்பிட்ட கட்சியின் ஐக்கியமாக மாறிவிட்டது. அங்கு அரசியல்
நுழைந்து, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பயன் தரக்கூடிய
அளவுக்கு கூட்டுறவு இயக்கம் நடைபெறவில்லை. கூட்டுறவு
இயக்கத்தின் தத்துவம் அனைத்தும் மக்களுக்கு எளிதாகக்
கிடைக்கக் கூடிய வாய்ப்பும், வசதியும் இருக்கவேண்டும்.
அம்மாதிரி நன்மை பயக்கும் வகையில் நல்ல வசதிகளை இனிமேல்
இந்த அரசு செய்து தரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவது மிகவும்
இன்றியமையாதது. என்னுடைய தொகுதியைப் போன்ற
வறட்சிப் பகுதிகள் ஏராளமாக இருக்கின்றன. கிட்டத்தட்ட 10
ஆண்டுகளுக்கு முன்னால் எனது தொகுதியில் பெரிய அருவி நீர்த்
தேக்க திட்டம் காங்கிரஸ் ஆட்சியினால் போடப்பட்டு, தேர்தல்
காலத்தில் கூட அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை.
தண்ணீரைச் சரியாகப் பாதுகாக்காமல் ஒழுகிக்கொண்டிருக்கக்
கூடிய நிலைமை இருக்கிறது. புதிய அரசு சிறிய நீர்ப்பாசன
வசதிகளை அதிகம் செய்து தருவதற்கு முன்வந்தாக வேண்டும்.
ஊராட்சி ஒன்றியப் போன்ற துறைகளில் 10 ஏக்கருக்கு மேல்
பாசனவசதி தருகின்ற குளங்களைத்தான் வெட்டித்தருகிறார்கள்.
10 ஏக்கருக்குக்கீழே இருக்கின்ற கண்மாய்களை வெட்டித் தருவ
தில்லை. இதிலே இன்னும் அதிகமான அக்கறை செலுத்தவேண்டும்
என்று புதிய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, கவர்னர் அவர்களது பேருரையிலே உணவுத் துறைக்கு
முக்கியத்துவம் அளித்து, வேளாண்மைத் துறைக்கு முக்கியத்
துவம் அளிக்க, தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற புதிய ஆட்சி
அதற்கு வேண்டிய வழிவகைகளை வகுத்தமைக்கு நான் பாராட்டி,
விடை பெற்றுக்கொள்கிறேன். வணக்கம்.

[1967, மார்ச் 18

*. திரு. செ. பாலசுப்ரமணியன் : கனம் சபாநாயகர் அவர்களே, ஐயா, கவர்னர் பெருமானின் பேருரைமீது, நன்றி தெரிவித்து திரு. மணி அவர்கள் கொண்டுவந்துள்ள இத் தீர்மானத்தை எஸ். எஸ். பி.-யின் சார்பில் நாங்கள் முழு மனதோடு ஆதரிக்கிறோம் என்று தெரிவிக்கிறேன். ஆதரிக்கிறோம் என்று சொன்னால், ஏதோ கவர்னர் பெருமானின் பேருரை நாங்கள் எதிர்பார்த்த அளவிற்கு இருக்கிறது, எங்களுடைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்கிறது என்பது அல்ல பொருள். புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் சர்க்காரோடு ஒத்துழைத்து, மக்களுடைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் என்கிற எண்ணத்தில் சொல்லுகிறேன். இப்பொழுதுதான் அரசாங்கம் பதவி ஏற்று இருக்கிறது. கொஞ்சகாலம் ஆகவேண்டும். சென்ற 19 ஆண்டுக் காலமாக காங்கிரஸ் அரசு ஏற்படுத்திவிட்டுச் சென்றிருக்கும் ஊழல்களைப் பார்த்துச் சிந்தித்து, அவற்றிற்குப் பரிகாரம் கண்டுபிடித்து, மக்கள் பிரச்னைகளைப் பரிசீலித்துத் தீர்வுகாண அவகாசம் கொடுக்கவேண்டும் என்பதில் நாங்கள் முழு ஆதரவு கொடுக்கிறோம். இந்த கவர்னர் உரை எங்களைப் பொறுத்த வரையில் திருப்தி அளிக்கவில்லை. குறிப்பாக மக்கள் ஓட்டுச் சீட்டின் மூலம் ஏற்படுத்திவிட்ட மாபெரும் புரட்சிக்குப் பிறகு, மக்கள் சர்க்கார் முழு பொறுப்பு ஏற்றிருக்கும் இந்த நிலையில், கவர்னர் பெருமான் உரை ஆற்றுகிறார் என்றால், அவர் தானாகவே நினைத்து, எழுதிப் படிக்கிறார் என்பதில்லை. அவர் உரை என்பது அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம்தான், இந்த அமைச்சரவையின் கொள்கைப் பிரகடனமாகத்தான் அமைகிறது. அந்த ரீதியில், இந்த உரையை நண்பர் கரூர் உறுப்பினர் திரு. டி. எம். நல்லசாமி சொன்னதுபோல, அன்றைக்குக் காங்கிரஸ் ஆட்சியில் அளித்த கவர்னர் உரைக்கும், இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் இந்தக் கவர்னர் உரைக்கும் பெரிய வித்தியாசம் எதுவும் காண முடியவில்லை. உண்மைதான், பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள நாளாகும். ஆகவே அவகாசம் கொடுக்க வேண்டும் என்பதை நான் ஆதரிக்கிறேன்.

பொதுவாக இந்த தேசத்திலே, மிகப் பெரிய பிரச்னை மக்களின் பிரச்சினை உணவுப் பிரச்சினைதான். ஆனால் ஜீவாதாரப் பிரச்சினைகளை, அரசியல் கட்சிகள் பொதுவான பிரச்சினைகளாகக் கொண்டு வார்த்தை ஜாலங்கள் நடக்கின்றனவே தவிர, பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண என்னென்ன காரியங்களைச் செய்திருக்கிறோம் என்று எந்தக் கட்சியும் சிந்தித்ததாகக் கிடையவே கிடையாது. உணவுப் பிரச்சினையை எடுத்துக்கொண்டால், அந்தப் பிரச்சினையில் உற்பத்தி அதிகரிக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டே வந்திருக்கிறோம். காங்கிரஸ் கட்சியும் சரி, மற்றக்கட்சிகளும் சரி உணவுப் பிரச்சினையில் உற்பத்தி பெருகவேண்டும் என்பதைப் பற்றி கொள்கையளவில், விளக்கமாகவும், பொதுவாகவும் பேசி வருகிறார்கள். ஆனால், உணவு உற்பத்தி அதிகரிக்க, விவசாயிகளுக்கு நிலம் சொந்தமாக்கப்பட்டதா என்பது ஒன்று. இரண்டாவதாக, உணவு உற்பத்தி அதிகமாக அதிகப்படுத்தினால்



1967, மார்ச் 18] [திரு. செ. பாலசுப்ரமணியம்]

லாபம் கிடைக்கும். சமூகத்தில் மற்றவர்களைப்போல, தானும் வாழ்க்கை வசதிகளை அனுபவிக்கமுடியும் என்கிற உத்தரவாதம் இருக்கிறதா என்று பார்ப்போமேயானால், நிச்சயமாக இல்லை. காங்கிரஸ் கட்சி தோற்றதற்குக் காரணம், காங்கிரஸ் கட்சியின் திட்டங்கள் பிரமாதமாக இருந்தாலும், செயல்படுவதில் கோளாறுகள் இருந்ததுதான் என்று நினைக்கிறேன்.

லாண்ட் சீலிங் ஆக்டை எடுத்துக்கொண்டு பார்த்தால், அந்த சட்டம் விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும் என்பதற்காகக் கொண்டுவரப்பட்டது. ஆனால், எனக்குத் தெரிந்தவரையில், தமிழ் நாட்டில், எந்தப் பெரிய விவசாயினுடைய நிலமும் பிடுங்கப்பட்டதாகக் கிடையவே கிடையாது. ஆகவே, இப்பொழுது இருக்கும் அரசாங்கம், ஏற்கனவே காங்கிரஸ் கட்சியினால் போடப்பட்ட சட்டங்களில் என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை ஆராய்வது ஒன்று; இரண்டாவதாக, அந்தச் சட்டங்களை அமுல்படுத்துவதில் என்னென்ன சிக்கல்கள் இருக்கின்றன என்று ஆராய்ந்து அமல் நடத்துவது என்பவற்றில் கவனம் செலுத்தினால் நன்றாக இருக்கும். லாண்ட் சீலிங் ஆக்டிலிருந்து பெரிய பெரிய நிலப் பிரபுக்கள் தப்பிவிட்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு ஆயிரக்கணக்கான ஏக்கர்தான் உபரியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தின்கீழ் உச்ச வரம்பு வைக்கப்பட்டது. அதன்படி அதிகமாகவே வந்திருக்கவேண்டும். ஆகவே, உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று சொல்லும்போது, முதல் நடவடிக்கையாக, நில உச்ச வரம்பை, 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதை மாற்றி, குறைந்த பட்சம், கனம் முதல் அமைச்சர் ஏதோ ஒரு பிரசங்கத்தில் சொன்னதுபோல, 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராக நிர்ணயிக்க நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும். அது மட்டுமல்ல, லாண்ட் சீலிங் ஆக்டில் பற்பல விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேச்சல் தரைக்கு, தோப்புகளுக்கு, கரும்பு விவசாயத்திற்கு, இப்படியெல்லாம் விதிவிலக்குக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த விதிவிலக்குகள் எந்தக் காரியத்துக்காகக் கொடுக்கப்பட்டதோ அந்தக் காரியங்கள் நிறைவேற்றப்படாமல் வேறுவகையில் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. தோப்புகள் என்று விலக்களிக்கப் பட்ட நிலங்களில் நெல் விவசாயம், கரும்புக்கு என்று விலக்கு அளித்த நிலத்தில், கம்பு, சோளம் பயிர் செய்யப்படுவது என்று இருக்கிறது. இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, சட்டத்தை நல்ல முறையில் அமல் நடத்துவதில், இந்த அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கோருகிறேன்.

அடுத்தபடியாக, உர விநியோகம்பற்றிப் பொதுவாகச் சொன்னார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு உரம் அவசியமானது. விவசாயிக்கு வேண்டிய வசதிகளைச் சரிவரச் செய்துகொடுத்தால், தமிழ் நாட்டில் இருக்கும் விவசாயிகள் உலக விவசாயிகளைவிட பின்தங்கிவிட மாட்டார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

[திரு. செ. பாலசுப்ரமணியம்] [1967, மார்ச் 18

கவர்னர் பெருமான் உரையில் உணவு கண்ட்ரோலைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. உணவு கண்ட்ரோல் சம்பந்தப்பட்ட வரையில், அதில் இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று ஸ்டாசுட்டரி ரேஷன், அதாவது சட்டப்பூர்வமானப் பங்கீட்டு முறை, அது பெரிய மாநகரங்களில் அமலாக்கப்பட்டு வருகிறது. சென்னை, கோவை, மதுரை போன்ற மாநகரங்களில் அந்த முறை அமலாக்கப்படுகிறது. மற்ற இடங்களில் நியாய விலைக் கடைகள் வைத்து உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன. சென்னை நகரத்தில் இருக்கின்ற ரேஷன் முறை, கிராமப்புரங்களில் இல்லை. நிலம் இல்லாத ஒரு விவசாயி அல்லது சாதாரண மனிதன் அந்த வகையில் உணவுப் பொருள் அடைவதில்லை. அவனைப் பொறுத்தவரையில், பிரச்சினை கடினத்தன்மை உள்ளதாக இருக்கிறது. சென்னை நகரத்தைக் காட்டிலும் கிராமப்புரத்தில் கடினமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பற்றாக் குறையாக உள்ள கோயம்புத்தூர் ஜில்லாவில் உணவுப் பண்டங்கள் கடுமையாக இருக்கின்றன. தஞ்சாவூரில் இருப்பதை விட கடுமையாகத்தான் இருக்கிறது. உதாரணமாகச் சொல்லப் போனால், ஈரோட்டில் சிறிய படி அரிசி ரூ. 1-60-க்கு விற்கிறது. தேர்தலுக்குப் பிறகு பதுக்கல் செய்து வைத்திருந்தவர்கள், தங்கள் தங்கள் கையில் இருந்த தானியத்தை விற்கத் தலைப்பட்டார்கள். அவர்கள் நினைத்தார்கள், புதிய அரசாங்கம் வந்துவிடும், அவர்கள் மாறுதல் செய்யப் போகிறார்கள், கண்ட்ரோலை எடுத்துவிடுவார்கள் என்கிற நம்பிக்கையோடு பதுக்கிவைத்திருந்த தானியத்தை விற்றதன் காரணமாக விலை குறையத் தொடங்கியது. ஆனால், முதல் அமைச்சர் வெளியிட்ட முதல் அறிக்கையிலேயே, காங்கிரஸ் அரசாங்கத்தின் உணவுக் கொள்கையையே தாங்களும் பின்பற்றப் போவதாக அறிவித்தவுடன், முன்பு இருந்த விலையை விட அதிகமாகி விட்டது. ரேஷன் என்று கொண்டு வந்தால், அது ராச்சியம் முழுவதற்கும் ஸ்டாச்சுட்டரி ரேஷனாகக் கொண்டுவரவேண்டும். விவசாயிகள், கிராம மக்கள் அவ்வளவு பேர்களுக்கும் கார்டுகள் கொடுத்து ரேஷன் கொண்டு வரவேண்டும். சென்னை நகரத்தில் மட்டும் ரேஷன் என்று வைத்து விட்டு, கிராமங்களில் மற்ற இடங்களில் அரிசி கிடைக்காத நிலைமை உண்டாக்குவது சரியாகாது. ஒன்று உபரி தானியத்தை வெளி முறையில் வசூல் செய்து எல்லோருக்கும் விநியோகம் செய்ய வேண்டும் அல்லது ஜில்லாவிற்கு ஜில்லா இருக்கும் கண்ட்ரோலை எடுக்கவேண்டும். அப்படி இல்லாமல், இரண்டுங்கெட்டான் நிலையில் வைப்பது கேடுவிளைவிக்கும் என்பதை உணரவேண்டும். ஒரு பக்கத்தில் ரேஷன், கண்ட்ரோல், மறு பக்கத்தில் ஒன்றும் இல்லை என்பதால், மக்கள் தொல்லைக்கு ஆளாகிறார்கள். தஞ்சையில் ஒரு படி அரிசி ஒரு ரூபாய்க்கு விற்கின்ற அதே நேரத்தில், ஈரோட்டில் ரூ-2க்கு விற்கின்ற நிலைக்கு நாட்டை ஆளாக்காதீர்கள்.

கவர்னர் பெருமான் உரையில் சென்டர்-ஸ்டேட் ரிலேஷன்ஷிப் என்பது பற்றிக் காணப்படுகிறது. ராச்சியங்களின் உரிமைகள் பற்றிச் சொல்லப்படுகிறது. அதைப் பொறுத்தமட்டில் கவர்னர்



1967, மார்ச் 18] [திரு. செ. பாலசுப்ரமணியம்]

பேருரையில் அது ஏன் சேர்க்கப்பட்டது என்று தெரியவில்லை. அரசியல் சட்டப்படி, இந்திய சர்க்காருடைய, மத்திய சர்க்காருடைய அதிகாரங்கள் சம்மந்தப்பட்டவை சில, இரண்டாவது ராச்சியங்களுடைய அதிகாரங்கள் சம்பந்தப்பட்டவை. அது ஸ்டேட் லிஸ்டில் இருப்பவை. இவை இரண்டும் போக மூன்றாவது, கங்கரண்ட் லிஸ்ட் என்பதில் இருக்கும் காரியங்களைப் பொறுத்தவரையில், இந்திய அரசும், ராச்சிய சர்க்காரும் சேர்ந்து ஒன்றாகச் செயல்படவேண்டும். மத்திய சர்க்காரும் காங்கிரஸ், மாநில சர்க்காரும் காங்கிரஸ் என்கிற அடிப்படையில் இருந்தபோது, அப்படி ஏகபோகமாக இருந்த போது, ராச்சிய சர்க்கார் அதிகாரங்களை மத்திய சர்க்காரே எடுத்துக் கொண்டு விட்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் பிளானிங் கமிஷன் என்று வைத்துக்கொண்டு, இங்கே காவிரியில் பாலம் கட்ட வேண்டும் என்றால் கூட, அவர்களுக்குக் காவடி எடுக்கும் நிலையை உண்டாக்கிவிட்டிருந்தார்கள். ஆகவே, இந்த நிலையில் ராச்சிய சர்க்கார்களுக்கு அரசியல் அமைப்பில் உறுதி செய்யப்பட்ட ஸ்டேட் லிஸ்ட் சம்பந்தப்பட்டவரை, துணிவோடு செயலாற்றினால் போதும், கங்கரண்ட் லிஸ்ட் பொறுத்தவரையில் இரண்டு பேரும் சேர்ந்து செயல்படுவதைப்பற்றி பின்னால் பார்த்துக்கொள்ளலாம். முன்பு காங்கிரஸ் அரசாங்கம் தன் அதிகாரங்களை காங்கிரஸ் மத்திய அரசுக்கு விட்டுக் கொடுத்து விட்டது.

நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். தேர்தலுக்கு முன்பு இருந்த நிலைமாறி, தேர்தலுக்குப் பிறகு, பல்வேறு கட்சிகளுடைய அரசாங்கங்கள் ராச்சியங்களில் ஏற்பட்டிருக்கின்றன. பீகார், வங்காளம், ஒரிசா, தமிழ்நாடு, கேரளம், பஞ்சாப் போன்ற மாநிலங்களில் மாற்றுக் கட்சிகளின் அரசாங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, நம்முடைய கனம் முதல் அமைச்சர் இந்த மாநிலங்களின் முதல் அமைச்சர்களைக் கூட்டி, மாநிலங்களின் அதிகாரங்களைப் பெறுவதற்கு என்னென்ன வழிவகைகள் என்பதை ஆராய, வழி காட்டினால் நன்றாக இருக்கும், அதனால் உருப்படியான பலனும் ஏற்படும்.

ஒன்றை மட்டும் மீண்டும் மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சி ஒரு மாபெரும் ஸ்தாபனம்; மகாத்மா காந்தியால் கட்டி வளர்க்கப்பட்டது. இந்தத் தேசத்திற்குச் சுதந்திரம் பெற்றுத் தந்த பெரிய ஸ்தாபனம். அப்படிப்பட்ட கட்சியே மக்களால் கைவிடப்பட்டிருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். அதற்கான காரணம் என்ன என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்கள், மக்கள் பிரச்சினைகளைச் சிந்தித்துப்பார்க்காமல், சமூகத்தில் சிறுபான்மை பிற
யோரான ஒரு 5 சத விகிதம் மக்கள், ஐரோப்பிய நாகரிகத்தில் பகல் 1-00.
திளைத்து நிற்க, அதற்கான திட்டங்களைப் போட்டு, அவற்றைச் செயல்படுத்திவந்ததோடு, மக்களுடைய பிரச்சினைகளையும் கவனியாமல் இருந்து விட்டார்கள். ஆகவே அந்தத் தவறை நீங்களும் செய்யாமல், இன்றைய தினம் நாட்டின் அடித்தளத்தில்

இருக்கிற அத்தனை தாழ்த்தப்பட்ட மக்களும் வாழ்க்கை துறையில், பொருளாதாரத் துறையில் மேம்பாடு காண்பதற்கு நல்லபல திட்டங்களைப் போட்டு இந்தியாவில் உள்ள மற்றப் பகுதி களுக்கு வழிகாட்டியாகத் திகழுங்கள். உங்களுடைய இத்தகைய சிறிய திட்டங்களுக்கு எங்கள் கட்சியின் முழு ஆதரவையும் தருவோம் என்று தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. மு. ச. சிவசாமி: சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையில் நடந்து முடிந்த தேர்தல் மிக அமைதியாக நடைபெற்றது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். அதைக் கண்டு எனக்கு முன்னால்பேசிய காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்தல் அமைதியாக நடைபெற்ற காரணத்தினால் தான் முன்பு எதிர்க் கட்சியாக இருந்தவர்கள் இன்றைக்கு மெஜாரிட்டி கட்சியாக ஆட்சிப் பொறுப்பில் வரமுடிந்தது என்று கூறினார்கள். அந்தக் கருத்தை நான் ஏற்பதற்கில்லை. என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவில் காங்கிரஸ் வேட்பாளருக்கு வேலை செய்த தொண்டர்கள் என்னுடைய வெற்றிக்குப் பாடுபட்ட தொண்டர்களை அடித்து, வெட்டி, ஜீப் காரில் கொண்டுபோய் ஒரு காட்டில் போட்டிருக்கிறார்கள். அங்கே இருந்த போலீஸ்காரர் களும்--அடிப்பட்டவர்கள், வெட்டுப்பட்டவர்கள் இவர்களுக்குப் பாதுகாப்பாக இல்லாமல், அடித்தவர்கள் மீதும், வெட்டியவர்கள் மீதும் கேஸ் போடாமல் அடிபட்டவர்கள் வெட்டுப்பட்டவர்கள் மீதும் கேஸ் போட்டிருக்கிறார்கள். அந்த வழக்குகள் தொடர்ந்து இன்னமும் நடைபெற்று வருகிறது. ஆகவே பாரபட்சமற்ற காங்கிரஸ் நிர்வாகத்தினால் தான் தி.மு.க. வெற்றிபெற்றது என்று சொல்வதற்கில்லை. எங்களது வெற்றிக்கு முக்கிய காரணம் ஆளும் கட்சியினரிடம் ஏற்பட்ட வெறுப்புதான். அவர்களுடைய ஆட்சியில் பற்பல கஷ்டங்களுக்கு உள்ளான மக்கள் ஆட்சி மாற்றத்தினாலாவது நல்ல பலன் கிடைக்காதா என்று எண்ணிய காரணத்தினால்தான் எதிர்க்கட்சியாக இருந்த நாங்கள் ஆளும் கட்சியாக மாறமுடிந்தது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரியைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர் திரு. மாதவன் பிள்ளை அவர்கள், கவர்னர் பதவியே கூடாது என்ற கொள்கை உடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இன்றைய தினம் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்து, பாராட்ட முன் வந்திருக்கிறார்கள் என்று கூறினார். திராவிட முன்னேற்றக் கழகத் தின் கொள்கை இன்றையதினம் வரை கவர்னர் பதவியையே நாம் விரும்பவில்லை. ஆனால், அரசியல் அமைப்புக்கு உட்பட்டு பார்லிமெண்டரி முறையில் ஆட்சி செலுத்த ஒப்புக்கொண்டிருக்கிற போது அரசியல் அமைப்புச் சட்டப்பிரகாரம்தான் செயல்படக் கடமைப்பட்டிருக்கிறோம். நாங்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தை மத்திய சர்க்காரில் திருத்தச் செய்து, கவர்னர் பதவியே வேண்டாம் என்று முடிவு செய்கின்ற வரையில் நாம் கவர்னர் உரைக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





கவர்னர் பெருமான் தம் உரையின் பெரும்பகுதியில் விவசாயப் பிரச்சினைகளைப் பற்றியே கூறியிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப் பத்தில் நான் சார்ந்து இருக்கிற ஆளும் கட்சியின் கவனத்திற்கு ஒரு சில பிரச்சினைகளைக் கொண்டுவர விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் இருக்கிற மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி ஆறுகளின் நீரில் இதுவரை நாம் ஏறக்குறைய பதினெந்து சதவிகிதம்தான் உபயோகப்படுத்திக் கொண்டு வருகிறோம். எஞ்சிய பகுதி தண்ணீரையும் உபயோகப்படுத்திக்கொள்ள— இன்னும் பல அணைக்கட்டு, கால்வாய்த் திட்டங்களைப்போட நாம் முன்வந்தாக வேண்டும். இன்றையதினம் நம்முடைய மாநிலத்தில் ஒரு கோடி, அறுபது லட்சம் ஏக்காராதான் நஞ்சை, புஞ்சை நிலங் களாக விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. விவசாயம் செய்வதற் குரிய —ஏறக்குறைய 20 லட்சம் ஏக்கரா நிலங்கள் விவசாயம் செய்யப்படாமல் சர்க்கார் புறம்போக்கு நிலங்களாக இருக்கின்றன. இப்படி புறம்போக்கு நிலங்களாக இருக்கக்கூடியவற்றை நில மில்லாத விவசாயிகளிடத்தில் கொடுத்து—ஐந்தாண்டுகள் சாகுபடி செய்ய வேண்டும், அதற்குப் பிறகு எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் அவை அவர்களுக்கே உரிமையாக்கப்படும் என்கிற முறையைக் கொண்டுவந்தால் இந்த 20 லட்சம் ஏக்கரா மூலமாக இன்னும் அதிக உணவுப் பொருளை எதிர்பார்க்கலாம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக நான் அங்கம் வகிக்கின்ற தூத்துக்குடி தொகுதியில் தண்ணீர் இல்லாமல் இப்போது குளங்கள் வறண்டு கிடக்கின்றன. நான் இங்கே வந்த பிறகு பல தந்திகள் வந்தன. அவற்றை மராமத்து இலாக்கா அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுபோய், அவர் தொலைபேசி மூலமாக அங்குள்ள என்ஜினியர்களுக்குச் சொல்லி இப்போது தண்ணீர் விடுகிறார்கள் என்று நினைக்கிறேன். இப்படிச் சாதாரண நடைமுறையிலே அதிகாரிகள் எத்தனை முறை சென்று பார்த்தாலும் கேட்காது, பின்னர் அமைச்சரிடம் வந்து உத்தரவு பெறுவது, பின்னர் தண்ணீர் விடுவது என்றால் விவசாய உற்பத்தியை எப்படிப் பெருக்க முடியும்? திட்டவட்ட மான முறைகளை ஏற்படுத்தி உற்பத்தியைப் பொறுத்தவரையில் அதைப் பாதிக்கும் வகையில் யார் நடந்து கொண்டாலும் கடுமை யான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆயிரத்து இருநூறு ஏக்கரா நஞ்சை நிலம் பொதியும், பயிருமாக அங்கே இருக்கிறது. எட்டு நாட்களாக குளங்களில் தண்ணீர் இல்லை என்றால், மாவட்ட கலெக்டரிடம் விவரத்தைக் கூறியும் பதினைந் தாம் தேதி வரையில் தண்ணீர் விடவில்லை என்றால் உணவுப் பிரச் சினையை எப்படித் தீர்க்க முடியும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். குளத்திற்குத் தண்ணீர் இல்லை என்று கூறியவுடனேயே தண்ணீர் அனுப்புவதற்குரிய ஏற்பாட்டைச் செய்தால்தான் நாம் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

என்னுடைய தொகுதி கடற்கரைப் பகுதி. அது பயிர் செய்ய முடியாத மணற்பாங்கான பிரதேசம். வெளியில் இருந்து வரக் கூடிய அரிசியைக் கொண்டுதான் அந்தப் பகுதி மக்கள் வாழ்ந்தாக

[திரு. மு. ச. சிவசாமி] [1967, மார்ச் 18

வேண்டும். கடுமையான நடவடிக்கை மூலம் இப்போது வெளியில் இருந்து வந்த அரிசி தடைப்படுத்தப்பட்டுவிட்டது. உள் பகுதியிலும் விளைச்சல் இல்லை. முன்பு ஒரு படி $1\frac{1}{2}$ ரூபாயாக இருந்தது இப்போது $2\frac{1}{2}$ ரூபாயாக ஆகிவிட்டது. அதனால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதை உணவு அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டு உடனடியாக அந்தப் பகுதி மக்களுக்கு அரிசி கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். குறைந்த பட்சம் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு அரிசி கொண்டு போகப்படுவதைத் தடுக்காது, நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில் அரிசி எந்தப் பகுதியில் இருந்து எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் போகலாம் என்கிற ஏற்பாட்டையாவது செய் தால்தான் தூத்துக்குடி, திருநெல்வேலி போன்ற பகுதிகளில் இன்றைக்குள்ள அரிசிப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

அடுத்து, விவசாய பாங்கை எடுத்துக் கொண்டால் முன்பு எந்த நேரத்திலும் கடன் வாங்கிக் கொள்ளலாம் என்று இருந்தது. ஆனால் 1965-ஆம் ஆண்டில் தீவிர விவசாயக் கடன் திட்டத்தின் அடிப் படையில் எல்லா விவசாயிகளும் பயிர்த்தொழில் செய்கின்ற நேரத் தில் மொத்தமாக மனுச் செய்துகொண்டு, கடன் பெற்று, அறு வடைக் காலத்தில் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று ஒரு திட்டத் தைச் செய்தார்கள். இதனால் கிராமத்தில் உள்ள விவசாயிகள் அத்தனைபேரும் மனுச் செய்துகொண்டு, அந்த மனுக்களை மொத்த மாகப் பரிசிலனை செய்து கடன் வழங்குவது என்கிறபோது—அறு வடை காலமே வந்துவிடுகிறது. இதனால் விவசாயிகளுக்குக் காலத்தில் பணம் கிடைக்காது—சாகுபடி வேலைகள் பாதிக்கப்படு கின்றன. ஆகவே விவசாயக் கடன் வழங்குவதில் ஏற்படுத்தப் பட்ட புதிய திட்டத்தை உடனே ரத்து செய்ய உத்தரவிடவேண்டும். பழைய முறைப்படியே கடன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். விவசாய பாங்குகளுக்குக் கடன் வழங்குவதில் வேண்டுமென்றே காலதாமதம் செய்து வருகிற மத்திய பாங்க் அதிகாரிகள் மீது நடவடிக்கை உடனே எடுத்துக்கொள்ள வேண்டும். விவசாய பாங்குகள் இதர ஷெட்யூல் பாங்குகளைப் போல இயங்க உடனடி யாகச் சட்டத் திருத்தத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பங்குத் தொகையைச் சீராக்கி, ஸ்டேட் பாங்க் மூலம் கடன்பெற வசதி செய்யவேண்டும். கூட்டுறவு மத்திய பாங்க் மூலமாக கடன் பெறுவதில் 50 சதவிகிதம் விவசாய பாங்குகளிடம் இருக்கும் வகையில் சட்டத்தை அமைக்க வேண்டும். உடனடியாக அதிகாரி களையும், விவசாய பாங்க் தலைவர்களையும், எம்.எல்.ஏ.க்களையும் கொண்ட கமிட்டி ஏற்படுத்தி இன்றைக்குள்ள சீர்கேடுகளை ஆராய்ந்து சொர்மைப்படுத்த ஆவன செய்ய வேண்டும். விவசாய மக்களுக்குத் தங்க நகைகளின் பேரில் கடன் வழங்கவும் வகை செய்ய வேண்டும். கடன் வழங்குவதில் காலதாமதத்தைத் தவிர்த்து, எளிதான முறை ஏற்பட வேண்டும். நம்முடைய தென்னகத்திலே இருக்கிற நூற்பாலைத் தொழிலாளர்கள் பெரிய தொல்லைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். 'லே ஆப்' என்ற



1967, மார்ச் 18] [திரு. மு. ச. சிவசாமி]

சாக்கை வைத்துக் கொண்டு பெரும்பகுதித் தொழிலாளர்களை வேலையிலிருந்து கழித்துவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. தூத்துக்குடி ஆர்.வி.மில்ஸ், ஸ்பின்னிங் மில்ஸ் இவற்றை எடுத்துக் கொண்டால் அதிகமான வேலைப் பளுவை தொழிலாளர்களின்மேல் சுமத்தி, தங்களுக்குச் சாதகமான முறையில் அவர்களுக்கு நிறையச் சம்பளம் கொடுக்காமல் மூன்றில் ஒரு பகுதியினரை வேலையிலிருந்து நீக்கிவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. இதை நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

தமிழகத்திலே இராமநாதபுரத்திலும், தூத்துக்குடியிலும்தான் சங்கு குளித்தல் இருக்கிறது. தூத்துக்குடியிலே சங்கு குளிக்கப் படுகிறது. அங்கே வருகின்ற சங்குகளையெல்லாம் சர்க்கார் நேரடி யாக ஏலத்திற்கு விடாமல் எடுக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் தனிப்பட்டவர்கள் லட்சக்கணக்கான ரூபாய்க்கு ஏலம் எடுத்து சங்கு குளிப்பவர்களுக்குச் சங்கு ஒன்றுக்கு அவர்கள் 75 பைசா கூலி கொடுக்கிறார்கள். ஆனால் முந்தைய சர்க்கார் தூத்துக்குடியில் சங்கு குளிக்கிறவர்களுக்கு, ஒரு சங்குக்கு ஏறக் குறைய 42 பைசாதான் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் வருஷத் தில் மூன்று மாதம்கூட இருக்காது. அப்படிப்பட்ட தொழில் 50, 60 அடி ஆழத்திற்குத் தண்ணீரில் மூழ்கி தங்களுடைய உயிரைப் பணயம் வைத்துத் தொழிலைச் செய்கிறார்கள். அவர்களுக்குத் தனியார் கொடுப்பதைப் போல 75 பைசா கொடுத்தால்தான் அவர் களுடைய வாழ்க்கை வளம்பெறும், அதற்கான புதிய திட்டத்தை வருகின்ற வரவு செலவுத் திட்டத்திலே மீன்வள இலாகா அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்ததாக குடும்பக் கட்டுப்பாடு திட்டம் ஒன்று இருக்கிறது. முந்தைய அரசாங்கத்தார் கங்காணி முறை (கேன்வாசிங் சிஸ்டம்) வைத்திருக்கிறார்கள். தெருவில் போய்க் கொண்டிருக்கின்றவர்களை யெல்லாம் ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்விட்டால் 10 ரூபாய், 20 ரூபாய் நன்கொடை கொடுக்கிறார்கள். நான் பார்த்திருக் கிறேன். என் வீட்டிற்கு எதிர் வீட்டில் உள்ள 75 வயது காளியப்ப நாடார் என்பவரை சாத்தூர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் இரண்டாவது முறையாக கங்காணி முறையின் அடிப்படையில் ஆப்பரேஷன் செய்திருக்கிறார்கள், செப்டிக் ஆகி அவர் இறந்து விட்டார். அதே மாதிரி திருச்செந்தூரில் உள்ள நாலுமாவடி என்ற ஊரில் 16 வயது நிரம்பாத பையனை சாத்தூர் ஆஸ்பத் திரிக்குக் கொண்டு போய் குடும்பக் கட்டுப்பாடு ஆப்பரேஷன் செய்யப்பட்டது. இப்படி யெல்லாம் முந்தைய அரசாங்கம் செய்த தவறுகளை உடனடியாகக் கவனம் செலுத்தி, அப்படிப்பட்ட கொடுமைகள் நிகழாவண்ணம் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையில் உணவுப் பிரச்சினையைப் பற்றியும் ஐந்தாண்டுத் திட்டப் பிரச்னைபற்றியும் உற்பத்திப் பிரச்னைபற்றியும் கூறியிருக்கிறார்கள். இதையெல்லாம் நம்முடைய அமைச்சரவை நிச்சயமாக நிறைவேற்றித் தருவார்கள். காங்கிரஸ் உறுப்பினர்கள் 3 படி அரிசி எங்கே எங்கே என்று கேட்கிறார்கள்.

ஆளும் கட்சியைப்பற்றி விமர்சிக்கின்ற நேரத்தில் தேர்தல் காலத்
தில் அந்தக் கட்சி வெளியிட்ட தேர்தல் அறிக்கையை வைத்துக்
கொண்டுதான் பேசவேண்டுமே தவிர யாரோ எங்கேயோ பேசி
யதை வைத்துச் சொல்ல முடியாது. இருபது ஆண்டுகளில் மூன்று
படியாக இருந்த அரிசியை முக்கால் படியாக ஆக்கியவர்கள்
இப்படிக் கேட்டால் என்ன பொருள்? மூன்று படி அரிசி கொடுப்
போம் என்பது குறிகோளே தவிர, அது தேர்தல் அறிக்கையல்ல.
தேர்தல் அறிக்கையில் விலைவாசியைக் குறைப்போம் என்று கூறி
யிருக்கிறோம். இருபது ஆண்டுகளாக ஆக்கப் பொறுத்தீர்கள்,
இரண்டு மாதங்கள் ஆறப் பொறுத்திருங்கள். அதற்குப்பின்னால்
விலைவாசி உயர்ந்திருக்கிறதா, குறைந்திருக்கிறதா என்று பார்க்க
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

* திரு. பி. ஜயராஜ்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே,
நேற்றைய தினம் கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையின்
மீது எனது கட்சியினுடைய கொள்கைகளையும், திருத்தங்
களின் மூலமாக இரண்டொரு கருத்துக்களையும் சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன். கவர்னர் அவர்களுடைய உரையில் அவர்கள்
ஆளுங் கட்சியினுடைய கொள்கைகளை பிரதிபலிக்கக்கூடிய முறை
யில்தான் உரை நிகழ்த்தினார்கள். அந்த உரையில் ஏழை எளிய
வர்கள், பாமர மக்கள் இவர்களுடைய உரிமைகள் எல்லாம் இடம்
பெறவில்லை. கைத்தொழில், கல்வி போன்ற முக்கிய அம்சங்களும்
அவர்களுடைய உரையில் இடம்பெறவில்லை. காரணம் என்ன?
இந்த நாட்டு மக்களுக்குப் புதிய அரசாங்கம் என்ன செய்யப்
போகிறது என்று எதிர்பார்க்கிற நோக்கில் ஏழை மக்களுடைய
உரிமைகள் இடம் பெறவில்லை. இருபது ஆண்டுக் காலமாக இருக்
கின்ற காங்கிரஸ் ஆட்சியை ஒரேயடியாக மாற்றியமைக்க வேண்டு
மென்றுதான் மக்கள் வாக்களித்துவிட்டார்கள் என்று உற்சாக
மாகச் சொன்னார்கள். இந்த நாட்டில் ஜனநாயகம் தழைக்க,
என்ன என்ன காரியங்கள் செய்யவேண்டுமென்று மக்கள் நம்பினார்
களோ அதையெல்லாம் செய்தார்கள். இருபது ஆண்டுகளில்
மாற்றம் ஏற்படவில்லையா? கல்வி, மின்சாரம் போன்ற துறை
களில் எல்லாம் வளர்ச்சி ஏற்படவில்லையா? அப்படி வளர்ச்சி
ஏற்பட்டதன் காரணமாகத்தான் இதிலேயும் ஒரு புதியதை
உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் மக்களுக்கு தோன்றியது.
புதியதொரு மாறுதலைச் செய்ய வேண்டும் என்றுதான் செய்
தார்கள். மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை எந்த அளவுக்கு
நிறைவேற்றப்போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான்
பார்க்க வேண்டும். சாத்தான்குடி உறுப்பினர் அவர்கள் இரண்டு
மாதங்கள் பொறுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள்
6 மாதமும் தவணை கொடுத்திருக்கிறோம். நாட்டு மக்களுக்குக்
கொடுத்த வாக்கை நிறைவேற்றுகிறார்களா என்று பார்க்க
வேண்டும். நாங்களும் மக்களுக்கு ஐந்து ஐந்தாகத்தான் நாங்கள்
சொன்னதை நிறைவேற்றினோம். அதேமாதிரி நீங்களும் ஐந்து
ஐந்தாக கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும். அதைவிட்டு
விட்டு யாரோ எங்கோயோ சொன்னார்கள். கட்சியின் தேர்தல்





பிரகடனத்தில் இருக்கிறதா என்றெல்லாம் கேட்பது முறையா
என்று பொறுப்புள்ள அமைச்சர்களாக இருக்கின்றவர்கள்
சிந்தித்துப் பார்க்க வேண்டும். ரூபாய்க்கு மூன்று படி அரிசி
கொடுப்போம் என்று சொன்னார்களா இல்லையா? அதை நிறை
வேற்ற வேண்டும். கொடுக்க முடியுமா முடியாதா என்பது வேறு
விஷயம். நடைமுறையிலே எந்த எந்தத் திட்டங்களைத் தீட்டி
பொதுமக்களுக்கு மூன்று படி, ஒரு படி என்றார்களே, அதை
நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால் உணவுப் பிரச்னை முக்கிய
மானது. பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்பார்கள்.
அதைப்போல பசி வருகின்றபொழுது, ஏதாவது இடையூறு வரு
கின்றபொழுதுதான் மாற்ற வேண்டுமென்ற எண்ணம் வருகிறது.
கொள்கை ரீதியாக நீங்கள் பல திட்டங்கள் செய்வீர்கள் என்ற
முறையில் மக்கள் விரும்பவில்லை. அரிசி கிடைக்கவில்லை, மூன்று
படி தருகிறேன் என்று சொல்கிறார்கள், நிறைவேற்றுவார்கள்
என்ற எண்ணத்தில்தான் விரும்பியிருக்கிறார்கள். இதை நீங்கள்
நிறைவேற்ற வேண்டும். நாங்களா சொன்னோம் என்று
இப்பொழுது சொன்னால் அது முறையாகாது. கவர்னர் அவர்கள்
சொல்லியிருக்கிறார்கள், உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதில் மத்திய
சர்க்கார்தான் ஈடுபடவேண்டும். மூன்று படி, ஒரு படி கொடுக்க
முடியாது என்று சொல்லிவிட முடியாது. கொடுக்க முடியும் என்று
சொல்லியது அமைச்சர்களுக்கும், அந்தக் கட்சியில் உள்ளவர்
களுக்கும் தெரியும். அவர்களும் உணவுப் பிரச்னையில் மத்திய
அரசாங்கத்தை அணுக வேண்டுமென்பதைப் புரிந்து கொண்டிருக்
கிறார்கள். ஆகவே இந்த நாட்டு மக்களுக்குக் கொடுத்த
வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.

நிலவரியை அறவே எடுத்து விடுவதாக காங்கிரஸ் கட்சி
அரசாங்கத்தால் முறையாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.
அப்போதே 25 சதவிகித உபரி வரியை நீக்கிவிடுவதாகவும் சொன்
னார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நில வரியை நீக்கி விடுவோம்
என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் சொல்லியிருக்
கிறார்கள். ஆகவே, நீங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குத்தகைதாரர் சட்டத்தில் இருக்கும் பொத்தல்களை நீக்கும்
வகையில் மாற்றுத் திட்டத்தைக் கொடுக்கப் போவதாகவும்
கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் காணப்படுகிறது. தஞ்சை
ஜில்லாவின் நிலப் பரப்பின் பெரும்பகுதி மடாலயங்களுக்கும்,
தேவாலயங்களுக்கும் சொந்தமாக இருக்கின்றன. மடாலயங்கள்,
தேவாலயங்கள் துறை பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும்
அமைச்சர் அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அங்கு
விவசாயிகளிடமிருந்து குத்தகை என்ற முறையில் எழுதி வாங்கிக்
கொண்டு இரண்டு ஆண்டு காலமாக மழை பெய்யாத காரணத்தால்
விளைச்சல், உற்பத்தி அதிகம் இல்லாத நிலையில் குத்தகைக்கு நெல்
கொடுக்கவில்லையென்று கூறி அவர்களை நிலத்திலிருந்து வெளி
யேற்றுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. எந்த விதமான வெளி
யேற்றமும் கூடாது என்பதற்காக ஒரு ஆர்டினன்ஸ் போட்டிருக்

[திரு. பி. ஜயராஜ்] [1967, மார்ச் 18

கிறார்கள். இந்த நிலையைக் கல்வியமைச்சர் அவர்கள் அறிவார்கள். முதலமைச்சர் அவர்களுடைய சந்திரமோகன், நீதிதேவன் மயக்கம் என்ற நாடகங்களை நான் பார்த்திருக்கிறேன். அதிலே இந்தக் குறைபாடுகளைப் பற்றியெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகள் எல்லாம் வெறும் நாடகமாக இல்லாமல் நல்ல பலன் தரத்தக்க அளவுக்கு மக்களுக்கு வாக்களித்தது போல் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய அமைச்சர்களில் பெரும்பகுதியின் தஞ்சை மாவட்டத்தின் கிராமப் புறங்களைப் பற்றி அறியாதவர்களாக இருக்க முடியாது. ஏழைத் தொழிலாள மக்களுக்கு அன்றாடப் பிரச்சினைகளிலேயே பல கஷ்டங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நீக்குவதற்கு வழி செய்ய வேண்டும். தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரை விவசாயத் தொழிலாள மக்களுடைய குத்தகைதாரர் சட்டத்தை ஆய்ந்து பார்த்து பரிசீலனை செய்து திருத்தி மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்று கூறி, இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** நண்பர் அவர்கள் நிலப் பிரச்சினையைப் பற்றிப் பேசிக் கொண்டு வந்த தொடர்பில் என்னுடைய இரண்டு நாடகங்களைப் பார்த்ததாகச் சொன்னார்கள். அந்த இரண்டு நாடகங்களிலும் நிலப் பிரச்சினை இல்லை. நிலப் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிற நாடகம் 'சந்திரோதயம்' என்னும் நாடகம். அதனை நண்பர் காண்பதற்கேற்ற முறையில் மறுபடியும் நடிப்பதற்கில்லையே என்று வருந்தப்படுகிறேன். அவர்கள் பார்க்காத நாடகத்தைப் பற்றி இவ்வளவு அழகாக விமர்சனம் செய்ததற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

## 1. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

### (இ) கவர்னர் பேருரைக்கான நன்றியறிவிப்புத் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொடுத்தல்

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இன்றைய கூட்டம் முடிவடைவதற்கு முன்பு சில அறிவிப்புகளை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியதாக இருக்கிறது.

கவர்னர் அவர்களின் பேருரைக்கான நன்றி அறிவிப்புத் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் ( Amendments ) கொடுக்க விரும்புகிறவர்கள், அத்திருத்தங்களைச் சட்டப் பேரவைச் செயலாளரிடம் 20—3—1967 திங்கட்கிழமை நன்பகல் 12 மணிக்குள் கொடுக்க வேண்டும்.

### (உ) அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானங்கள்

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேறிய



1967 மார்ச் 18] [பேரவைத் தலைவர்]

தீர்மானத்திற்கிணங்க, இப் பேரவையின் அலுவல்கள் இப்போது நான் அறிவிக்கின்ற நிகழ்ச்சி வரிசைப்படி நடைபெறும் :

| | |
|---|---|
| 20—3—1967 திங்கட்கிழமை | (1) 1967-68-ம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையின் முன் வைப்பார்கள். (2) கவர்னர் பேருரைமீது விவாதம். |
| 21—3—1967 செவ்வாய்க் கிழமை | (1) 1966–67-ம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கையை பேரவை முன் வைத்தல். (2) 1967-68-ம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் மீது விவாதம். |
| 22—3—1967 புதன் கிழமை | விடுமுறை நாள். |
| 23—3—1967 வியாழக்கிழமை | (1) செலவினங்கள் கணக்கின்மீது வாக்கெடுப்பு. (2) நிதி ஒதுக்கு மசோதாவை அறிமுகம் செய்தல். |
| 24—3—1967 வெள்ளிக் கிழமை | விடுமுறை நாள். |
| 25—3—1967 சனிக் கிழமை | (1) 1966-67-ம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கை மீது விவாதமும் வாக்கெடுப்பும். (2) நிதி ஒதுக்கு மசோதாவை அறிமுகம் செய்தல். |
| 26—3—1967 ஞாயிற்றுக் கிழமை | விடுமுறை நாள். |
| 27—3—1967 திங்கட் கிழமை | (1) நிதி ஒதுக்கு மசோதாக்கள்—விவாதமும் நிறைவேற்றுதலும். (2) கவர்னர் பேருரை மீது விவாதம். |
| 28—3—1967 செவ்வாய்க்கிழமை; 29—3—1967 புதன் கிழமை | கவர்னர் பேருரைமீது விவாதம் |

ஒவ்வொரு நாளும் சட்டப் பேரவை காலை 9 மணியிலிருந்து மாலை 1-30 மணி வரை நடைபெறும்.

இந்த நிகழ்ச்சி நிரல் அச்சடிக்கப்பட்டு எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்படும்.

[பேரவைத் தலைவர்] [1967, மார்ச் 18

இப்போது இன்றைய கூட்டம் முடிவடைந்து மீண்டும் 20-3-1967 காலை 9 மணிக்கு பேரவை கூடும். வணக்கம்.

பிற்பகல் 1-28 பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

3. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

**A. Statutory Rules and Orders.**

*Nil*

**B. Reports, Notifications and other Papers.**

* 6. Governor's Address to the Members of the Legislature on 17th March 1967 (English and Tamil).



APPENDIX I.

[*Vide* item 2 on page 48 ]

Address by the Governor of Madras.

Hon'ble Members of the Legislature,

It is my pleasant privilege to welcome you all to this Joint Session of the new Legislature. To those Members of the old Legislature who have been re-elected. I offer my felicitations. To many others who have been newly elected, I specially extend my best wishes for active and fruitful service in the cause of the people of the State.

2. The Fourth General Election in our country on which the eyes of the entire world had been focussed is just over. I consider it specially significant that this general election should have gone off peacefully and without any untoward incident, particularly in our State. The keen interest which the people have evinced in exercising their franchise as evidenced by the heavy figures of voting, affords striking proof that democracy has struck deep roots in our country and that the people are now fully conscious that they are arbiters of their own destinies. The peaceful manner in which the people have voted a new Government to power and the smooth transfer of responsibility for conduct of affairs of the State from one political party to another, bear eloquent testimony to the political maturity of our people. The large body of public servants of all ranks who were connected with the conduct of elections in some capacity or other have, by and large, conducted themselves with a commendable sense of detachment and impartiality. My Government fully appreciate the contribution which a contended and politically neutral body of civil servants can make to the promotion of the welfare of the people of the State and will do all that lies in their power to uphold and cherish the traditions which have been evolved, while endeavouring at the same time to introduce those essential reforms which are needed to make the administrative machinery a more potent instrument for the achievement of the ends of a welfare State.

3. The Government have assumed office on the basis of policies and programmes calculated to remove the many genuine grievances of the people. These policies will now have to be worked out in detail with the help of experts in different departments of Government and got ready for implementation. The Government will obviously take a little time to take stock of the present situation and hammer out concrete programmes for fulfilling the hopes which have been roused. On the general problems which our country faces along with other under developed countries such as inadequate production, low level of savings and investment and glaring inequalities of wealth and income have been superimposed the special difficulties caused by the admittedly disappointing performance during the Third Plan period both on agricultural and industrial fronts in spite of massive outlays in financial terms. Unprecedented droughts for two consecutive years have aggravated

the situation. The shortfall in attainment of physical targets under vital sectors has accentuated the rise in prices, causing considerable hardship to the poorer sections of the society and people with fixed incomes. The Government are aware that within the framework of a Federal Constitution, in which the State Government have to function, the responsibility for the overall direction of economic policy rests with the Central Government and that, therefore, the State Government acting in isolation cannot make any measurable impact on the problem of rising prices. While it will be the endeavour of the State Government to keep in close touch with the Central Government and assist in the evolution and implementation of policies which are calculated to increase production, improve distribution and generally relieve the persistent pressure on prices, they also feel that the time has come when they should be clothed with more powers so as to enable them to translate the aspirations of the people into actualities. There is today a growing urge for federalism in practice.

4. My Government are also aware that in many fields such as food production and distribution active co-operation of the State Governments in the region termed as South Zone will prove fruitful. It would also explore in consultation with other States in the region possibilities of exploiting the natural resources of the region for the common good. As a first step towards promoting inter-State co-operation in such matters, my Government will take the initiative in activising the Zonal Councils which have been set up under the States' Reorganisation Act.

5. While, for the solution of the many problems which face our economy, patient preparatory work is needed, Government are aware that the solution of the food problem can brook no delay. Seasonal conditions have been generally good in the current year and it is expected that the actual production in 1966-67 would have registered considerable improvement over the preceding year and would at least have reached the level recorded in 1964-65, which was the best year of the Third Plan period. But we are functioning as part of a national economy which is facing serious shortfall in production of cereals due to widespread drought in many parts of the country. The pressures on supplies and consequent rise in prices are therefore bound to be communicated with varying degrees of intensity to the different parts of the country. Even with normal production, defective distribution can lead to serious difficulties. We have to evolve a food policy which will provide adequate incentives to the producers and assure supplies of wholesome rice to the poorer sections of the society at fair prices. But meanwhile, with the long-term crop already under harvest coming up for sale, the Government have recognised the urgent need for keeping up procurement of marketable surpluses and arrange for their orderly distribution in areas in respect of which they have assumed rationing commitments. The Government are, therefore, directing the district executive staff to proceed with procurement on the lines already chalked out, while actively exploring the desirability and feasibility of fresh lines of approach. The immediate objective is



that Government should have in their possession adequate quantities of foodgrains to see them through the lean months which lie ahead of us before another good monsoon and improved agricultural production programmes have their full impact in terms of increased production all round. My Government are fully aware that procurement at controlled prices does involve a measure of sacrifice particularly for the small farmers. Government would take steps to see that the bigger landholders do bear their due share of the burden involved in delivering the marketable surplus to the Governmental agency commensurate with their capacity for bearing such a burden. People who have a surplus have an obligation to the society. The Government will endeavour to instil this sense of social obligation so that the rich look upon their wealth as giving them an opportunity for serving the society and not indulge in ostentatious living. The Government will take every care to see that there is no discrimination in implementing the procurement programme and that the hardship to the smaller producer in particular is minimised to the utmost. The Government are also confident that by keeping up essential supplies to the vulnerable sections of the society such as industrial workers, landless agricultural labourers and people with fixed incomes, they can contain the rise in prices and in due course, bring about a significant reduction in costs all round which will in turn help to provide the agriculturists essential inputs at fair prices. We have to break the vicious spiral of rising prices and rising costs at some point and it is this Government's firm belief that a reduction in prices of foodgrains through increased production, improved distribution and other means can make a significant contribution to relieving the problem of rising prices, which has been plaguing the Indian economy in the last ten years. Here again, the problem of Central-State relationship assumes a new significance. Placed as they are today, the States with their limited resources find it extremely difficult to meet the needs of the people. Taking note of the widespread discontent among the people, the Centre should come forward in a big way to assist the States in implementing their policy of holding the prices, particularly of foodgrains.

6. The one relieving feature of the difficulties which we are facing on the food front is that they have helped to focus the attention of the administration and the people on the over-riding importance of augmenting agricultural production. There is widespread recognition that a greater emphasis on agricultural production in our earlier Plans would have helped to avert the serious situation we are facing today. Prudence demands that we should draw on our experience in the recent past and take steps now at least to bring about a perceptible improvement in agricultural production through concentration on quick-yielding schemes. The Government recognise that propagation of improved seeds, extension of facilities for irrigation and larger supplies of fertilisers in right quantities and in right time, hold the key to increased production. In this three-pronged programme, the State Government can to some extent on their own tackle successfully the problems relating to multiplication and distribution of improved seeds, including the

what essential readjustments in priorities are necessary. It should be stressed that the rate of growth of the State's economy will not be determined solely by the outlays in the State Plan. Investments of the Central and private sectors in the State will be of even greater significance in promoting economic growth. The State Government would press its case for a fair share of the investments in the Central sector through the implementation of certain major industrial projects such as the Salem Steel Plant whose economic and technical feasibility is beyond all doubt.

12. In the light of the situation emerging after the Fourth General Elections, there is need to emphasise the federal character of our Constitution and restore States to the position originally visualised for them under the Constitution. The States can no longer be passive spectators in the process of formulation and implementation of the Plan but should play a more active part. The Planning Commission would itself seem to have recognised to some extent the need for giving the States a larger role in the Fourth Plan period. It has recently decided on certain proposals for transfer of schemes hitherto treated as Centrally Sponsored to the State sector. But there is need for carrying this process further and assigning a more dominant position to the States in sectors such as agricultural production, education and public health which under the Constitution fall within the ambit of the States. The present role of the Central Ministries concerned with these subjects will have to be reviewed and the tendency, which has become pronounced in recent years, of Central Ministries interfering in fields wholly within the competence of States through financial and other sanctions, kept in check. After all, the resources of the Centre form part of the national pool to be drawn on both by the Centre and States according to the relative priorities of their programmes. The use of Central loans and grants to promote the pet schemes of Central Ministries has only served to distort these priorities and has often led to a wasteful utilisation of the nation's scarce resources.

13. The main business of the Legislature at this sitting will be consideration of the Interim Budget for 1967-68 and the passing of a Vote on Account for covering anticipated expenditure during the first four months of the ensuing financial year. The keynote of the Interim Budget and the Interim Annual Plan embodied in it will be to maintain the tempo of progress in different sectors unimpaired, pending a detailed review of the draft Fourth Plan and the issues of policy connected therewith, by the Government. The results of the review and the final Plan as emerging from such a review will be fully reflected in the regular budget to be presented to the Legislature some time in June 1967.

14. While there may be genuine and honest difference of opinion on certain aspects of the Plan, there has always been and there should continue to be agreement among all enlightened sections of public opinion in the State on the lines on which the State's economy should be strengthened. There can be no difference of opinion whatever on the need for augmenting agricultural production or building up of power potential or expanding essential





social services like education, medical relief and public health. I would plead for the continuance of a spirit of understanding and co-operation among all sections in this House so as to facilitate the progress of the State in these fields. The Legislators who have preceded you have set high standards of debate and discussion and have earned special appreciation by virtue of the dignity and decorum with which they conducted the deliberations even in moments of stress and strain. We have already set an example to the rest of the country in maintaining high democratic traditions and we are called upon now to live up to them and further improve on them. In this House we find today on the treasury bench men who have just secured the popular mandate in abundant measure facing an opposition rich with experience in administration for a long number of years. I am sure that in these circumstances there would emerge purposeful co-operation between members of different political persuasion in the general task of promoting the welfare of the people. Democracy is but an exercise in pooling the abilities and capabilities of contending elements for the common cause. I am sure that through such united efforts you would make a lasting contribution to the progress of the State and assure a better life for our people, a life full of hope and happiness, peace and prosperity.

## இணைப்பு I.

( 48 ம் பக்கத்தில் உள்ள அடிக் குறிப்பைக் காண்க)

(கவர்னர் பேருரையின் தமிழாக்கம்)

மாண்புறு சட்டப் பேரவை உறுப்பினர்களே,

புதிய சட்ட மன்றத்தின் இக் கூட்டு அவைக்கு உங்கள் அனைவரையும் பூரிப்போடு வரவேற்பதை ஒரு பெரும் பேறாகக் கருதுகின்றேன். மீண்டும் இம் முறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பழைய சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு எனது பாராட்டுக்கள். இந்த மாநில மக்களுக்குப் பயன்படும் வகையில், ஊக்கத்தோடும் ஆக்கத்தோடும் பணியாற்றும் வண்ணம் புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள ஏனைய பல உறுப்பினர்களுக்கும் சிறப்பாக எனது நல்வாழ்த்துக்கள் உரியவாகுக.

2. உலகம் முழுமையும் உள்ள எல்லோருடைய கண்களையும் கவர்ந்து நின்ற நம் நாட்டின் நான்காவது பொதுத் தேர்தல் இப்பொழுது முடிவடைந்துள்ளது. இத் தேர்தல் குறிப்பாக நமது மாநிலத்தில், அமைதியாகவும் விரும்பத்தகாத எவ்வித நிகழ்ச்சிகளின்றியும் நடைபெற்றது நாம் சிறப்பாகப் பாராட்ட வேண்டியதொன்றாகும். இத் தேர்தலில் மக்கள் அளித்துள்ள பெருவாரியான வாக்குகள், தங்கள் வாக்குரிமையைச் செலுத்துவதில் அவர்களுக்குள்ள பேரார்வத்தைக் காட்டுவதுடன், நமது நாட்டில் குடியாட்சி வேரூன்றிவிட்டது என்பதையும், தங்கள் வருங்கால வாழ்வைத் தாங்களே வகுத்துக்கொள்ள முடியும் என்பதை மக்கள் முற்றிலும் உணர்ந்துள்ளார்கள் என்பதையும் புலப்படுத்துகின்றன. புதியதொரு அரசாங்கத்தை அமைதியான

hight-yielding strains such as ADT-27 and CO-25. It also lies in their power to promote energetic measures for extension of facilities for irrigation through minor irrigation and lift irrigation programmes. Even in the interim Plan for 1967-68, which will be shortly coming up for consideration before the Legislature, the State Government have endeavoured to provide reasonably adequate resources for maintaining the tempo of these programmes. But improved seeds and irrigation facilities can produce the best results only if we can simultaneously also take steps to assure the farmers fertilisers to the full extent required. It is in this respect that we are almost wholly dependent on the Central Government. This Government cannot help pointing out that the Central Government's performance in this vital sphere has been disappointing and has caused considerable discontent among the farmers. Supplies of fertilisers even in the current year have been inadequate and halting with the result that against our indent for allotment of 1·35 lakhs tonnes of nitrogen, we have received an allotment of only a little over 86,000 tonnes. In respect of phosphatic fertilisers too, against our target of 60,700 tonnes the supplies received aggregate only to 27,000 tonnes. The initial conservatism of farmers in regard to use of fertilisers has been completely overcome. The farmer is keen to-day to adopt all modern and scientific methods of agriculture and it is for the administration to respond by arranging for all essential inputs. But our programmes such as those relating to high yielding varieties will be of no avail, if timely and adequate supplies of fertilisers are not forthcoming. If such supplies are assured, the State Government would on their part take effective steps to investigate and remove all defects in the distribution of fertilisers to the farmers and thus redress one of their long-standing grievances.

7. The State Government will, therefore, place prominently before the Central Government, the importance of production of fertilisers within the country and press them to make such essential adjustments as may be necessary in the fourth Plan under finalisation, in order to accord higher priority to production of fertilisers. The production of fertilisers in the country will involve a time-lag and in the meanwhile it is necessary to arrange for larger imports of fertilisers which should be looked upon as maintenance imports vital for realising the full production potential of our farmers.

8. While recognising the importance of supplies of essential inputs for modern and scientific agriculture, we should also not overlook the importance of the human factor. The farmers particularly those with small holdings should have adequate incentives for increased production. It is in this context that the policy of my Government in regard to land revenue assumes special significance. In response to pressure of public opinion as voiced in the legislature and outside, the surcharge on land revenue has already been abolished. This is not enough. The present Government feel that there should be a phased programme for relieving the small landholders from the rigours of land revenue. They will take concrete decisions in this regard in time for the next fasli.



9. Our programmes for augmenting agricultural production cannot succeed fully unless we pay attention also to the problems of cultivating tenants. The Government will undertake a review of existing legislation relating to tenancy so as to plug the loopholes and ensure fixity of tenure to cultivating tenants in actual practice.

10. Increased production also calls for streamlining of the present arrangements for provision of credit to the farmers. While the Government recognise that co-operatives are the best agency for canalising credit to the farmers, they also realise that there is considerable scope for improvement in the working of the co-operatives at all levels. In arranging for larger flow of funds through the co-operatives to meet the requirements of the farmers, we should also take care to ensure that the funds are properly utilised and reach the most deserving people. The small farmer feels, and not without reason, that the co-operative organisation is far removed from him and often subject to political pulls and pressures which work against him. The present state of affairs, which has kept a large number of small farmers out of the benefits of co-operative organisation, should not be allowed to persist. The Government, therefore, propose to set up a Committee to study the working of co-operative organisation in the State and formulate proposals for its reform and reorganisation on sound lines. Through such reforms the Government, in whom the people have expressed overwhelming confidence, will seek to mobilise the enthusiasm and energy of the farmers and secure their purposeful co-operation with the agricultural extension machinery in reaching the targets of agricultural production. The Government would also seek to associate the Panchayats and Panchayat Unions fully in this process of getting the farmers emotionally involved in the developmental programmes.

11. Agricultural production programmes should form the sheet-anchor of the Fourth Plan which is yet to be finalised. Hon'ble Members are aware of the difficulties and uncertainties which have so far held up the finalisation of the Fourth Plan, though the first year of the Fourth Plan is already over. The shape and size of the Fourth Plan will to a large extent depend on the prospects of foreign aid. The first year of the Fourth Plan has been largely devoted to keeping up the execution of programmes carried over from the Third Plan and concentrating on certain essential programmes of agricultural production. Even for the next year, we have at present prepared only an interim plan keeping in view our own limited resources and the Central assistance made available at this stage. The details of the interim plan will be presented to you along with the Interim Budget for 1967-68 at this sitting. The overriding principle on which the interim plan is based is that developmental programmes already under execution should not in any manner suffer. The Planning Commission has accorded tentative approval for the State's Fourth Plan with an outlay of Rs. 564 crores of which the Central assistance will be of the order of Rs. 250 crores. The Government will soon apply its mind to the Plan as tentatively finalised and see whether any, and if so,

முறையில் ஆட்சிபீடத்தில் அமர்த்தியிருப்பதும், நமது மாநிலத்தின் ஆட்சிப்பொறுப்பு, ஓர் அரசியல் கட்சியிடமிருந்து வேறோர் அரசியல் கட்சிக்கு மிக இணக்கமாக மாற்றப்பட்டிருப்பதும் நமது மக்கள் அரசியல் துறையில் எந்த அளவிற்கு முதிர்ச்சி பெற்றுள்ளனர் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக அமைவனவாகும். இத் தேர்தல்களை நடத்தித் தருவதில் ஏதேனும் ஒரு வகையில் ஈடுபட்டிருந்த பல்வேறு நிலைகளில் உள்ள எண்ணற்ற அரசாங்க ஊழியர்கள், பொதுவாகவே பாராட்டத் தக்க வகையில் சார்பின்றியும், பற்றுநீக்கியும் தங்கள் கடமைகளை ஆற்றியுள்ளனர். உளநிறைவும் அரசியல் கட்சிச் சார்புமற்ற அரசாங்க ஊழியர்கள், நமது மாநில மக்களின் நலனை மேலும் சிறக்கச் செய்வதில் பெரும் பங்கு வகிக்க முடியும் என்பதை எனது அரசாங்கம் முற்றிலும் உணர்ந்துள்ளது. மற்றும், நிர்வாகத் துறையில் உருவாகியுள்ள நன்மரபுகளைப் போற்றி வளர்க்கவும், அதே சமயத்தில் வளங்கெழு அரசின் (Welfar e State) கொள்கைகளை நிறைவேற்றும் வகையில் நிர்வாக யந்திரம் செவ்வனே இயங்குவதற்குத் தேவைப்படுகிற இன்றியமையாச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்தவும் இவ்வரசாங்கம் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்யும்.

3. மக்களின் உண்மையான பல குறைகளை நீக்குவதற்கான கொள்கைகளையும், திட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு இப் புதிய அரசாங்கம் ஆட்சியில் அமர்ந்துள்ளது. அரசாங்கத்தின் பற்பல துறைகளைச் சேர்ந்த வல்லுநர்களின் உதவியுடன் தீர ஆலோசித்தே இக் கொள்கைகளைச் செயலாக்க வேண்டியுள்ளது. எனவே, தற்போதைய நிலையை உள்ளவாறு உணர்ந்து, மக்கள் உள்ளங்களில் தோற்றுவிக்கப்பட்ட நம்பிக்கைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய திட்டவட்டமான வேலைத் திட்டங்களை வகுப்பதில் புதிய அரசாங்கத்துக்குச் சிறிது காலம் தேவைப்படும். குன்றிய உற்பத்தி, குறைந்த சேமிப்பு, தாழ்ந்த முதலீடு, செல்வ நிலையிலும் வருவாய் வளத்திலும் கண்கூடாகக் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் போன்ற, வளர்ச்சி குன்றிய நாடுகளில் பொதுவாகவே நிலவும் சிக்கல்களோடு, மூன்றும் திட்டக் காலத்தில் வேளாண்மைத் துறையிலும் தொழில் துறையிலும் பெருந்தொகைகள் முதலீடு செய்யப்பட்டிருந்தும் நமது சாதனைகள் ஆறுதல் அளிக்கும் வகையிலே அமைந்திருக்கவில்லையென ஒப்புக்கொள்ள வேண்டிய சூழ்நிலை காரணமாய் ஏற்பட்ட இடையூறுகளும் சேர்ந்துவிட்டன. முன் என்றுமில்லாவண்ணம் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் நீடித்த வறட்சியால் நிலைமை மேலும் சீர்கேடு அடைந்தது. முக்கியத்துறைகளில் நமது சாதனைகள் குறிக்கோள் அளவுக்குக் குறைந்ததால் விலைவாசிகள் மேலும் உயர்ந்தன. இதனால் சமுதாயத்தில், மிக எளிய நிலையில் உள்ளவர்களும், நிலையான வருவாய் உடையவர்களும் பெரிதும் இன்னலுற்றனர். "கூட்டு அரசியல் அமைப்பு முறை" (Federal Constitution) ஒன்றிற்குட்பட்டு மாநில அரசாங்கம் இயங்க வேண்டிய நிலையில் உள்ளது. நாடு முழுவதற்கும் ஏற்றதொரு பொருளாதாரக் கொள்கையை



நெறிமுறைப் படுத்தும் பொறுப்பு மத்திய அரசாங்கத்தைச் சார்ந்தது. எனவே, மாநில அரசாங்கம் தனித்த முறையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் விலைவாசிகள் ஏற்றச் சிக்கலுக்குத் தீர்வுகாணும் வகைகள் பெருமளவில் முன்னேற்றம் காணமுடியாத ஒரு நிலை இருப்பதையும் இவ்வரசாங்கம் உணர்ந்துள்ளது. உற்பத்தியைப் பெருக்குவதிலும் பண்டங்களின் வழங்கல் முறையை மேம்படுத்துவதிலும் விலைவாசிகள் மீது இடைவிடாமலுள்ள நெருக்குதலைப் பொதுவாகத் தளர்த்துவதற்கு ஏற்ற கொள்கைகளை உருவாக்கி, அவற்றை நிறைவேற்றுவதிலும் மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு உதவி புரிவதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும். எனினும், மக்களின் விருப்பங்களை நடைமுறையில் நிறைவேற்றுவதற்குத் தனக்கு மேலும் அதிகாரங்கள் வழங்குவதற்கான ஏற்ற தருணம் வந்து விட்டது என்றும் மாநில அரசாங்கம் கருதுகிறது. கூட்டு ஆட்சி, நடைமுறையில் மலர வேண்டும் என்ற எண்ணம் இன்று எங்கும் மேலோங்கியுள்ளது.

4. மற்றும், உணவு உற்பத்தி, வழங்கல் போன்ற பல துறைகளிலே தென்மண்டலத்தில் அடங்கியுள்ள மாநில அரசாங்கங்கள் முழு ஒத்துழைப்புடன் செயலாற்றினால், அதனால், பெரும் பயன் விளையும் என்பதை எனது அரசாங்கம் உணர்ந்துள்ளது. இம் மண்டலத்தின் இயற்கை வளங்களைப் பொதுவான நன்மைக்குப் பயன்படுத்தும் வழிவகைகளைப்பற்றியும் ஏனைய மாநிலங்களோடு கலந்து முடிவு செய்யும். இத்தகைய பணிகளில் பிற மாநிலங்களின் ஒத்துழைப்பை மேலும் வளர்க்கும் முறையில் முதற்படியாக, எனது அரசாங்கம் "மாநிலங்கள் சீரமைப்புச் சட்டத்தின்" கீழ் நிறுவப்பட்டுள்ள மண்டலக் குழுக்கள் (Zonal Councils) விறு விறுப்பாகப் பணியாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

5. நமது பொருளாதாரத்தை எதிர்நோக்கியுள்ள பல சிக்கல்களைத் தீர்ப்பதற்கான அடிப்படை வேலைகளைப் பொறுமையாக மேற்கொள்ள வேண்டியிருப்பினும், உணவுச் சிக்கலைத் தீர்க்கும் பணியை ஒருகணமும் தள்ளிப் போட முடியாது என்பதை அரசாங்கம் முற்றும் உணர்ந்துள்ளது. நடப்பு ஆண்டில் பருவநிலை பொதுவாகவே சாதகமாக உள்ளது. சென்ற ஆண்டைவிட, 1966–67-ல் உணவு உற்பத்தி பெரிதும் உயர்ந்திருக்க வேண்டுமென்றும், மூன்றும் திட்டக் காலத்தில் உற்பத்தியில் சிறந்த ஆண்டான 1964-65-ம் ஆண்டின் உற்பத்தியளவிற்காவது உற்பத்தி எட்டுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், நாடு எங்கணும் பற்பல பகுதிகளில் பரவியுள்ள வறட்சி காரணமாக, தானிய உற்பத்தி பெரிதும் குன்றிய ஒரு தேசியப் பொருளாதார அமைப்பின் ஒரு பகுதியாக நாம் இயங்கி வருகிறோம். எனவே பண்ட வழங்கல் நிலையில் ஏற்படும் நெருக்குதல் காரணமாய், விலைவாசிகளில் ஏற்படும் ஏற்றமும் நாட்டின் பற்பல பகுதிகளில் பற்பல வகையாய் எதிரொலிக்கும். உற்பத்தி சாதாரண நிலையிலிருந்தாலும், வழங்கல் முறையில் குறைபாடுகள் இருந்தால் அவை

காரணமாகவும் பெருத்த இன்னல்கள் விளையும். உற்பத்தியாளர்களுக்குப் போதிய ஊக்கம் அளிக்கும் வகையிலும், சமுதாயத்தில் மிக எளிய நிலையில் உள்ள மக்களுக்கு, நியாய விலைகளில் நல்ல அரிசி கிடைக்கச் செய்யும் முறையிலும் சிறந்ததோர் உணவுக் கொள்கையை நாம் உருவாக்க வேண்டும். ஆனால், இதற்கிடையில் இப்போது அறுவடையாகி வரும் சம்பா நெல் விற்பனைக்கு வருவதால், பங்கீட்டு முறையில் உணவுப்பொருள்களை வழங்க அரசாங்கம் மேற்கொண்ட பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில், உபரி நெல்லைக் கொள்முதல் செய்வதும் உடனடியான தேவை என்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளது. விரும்பத்தக்கதும் நடைமுறைக்கு ஏற்றதுமான புதுமுறைகளை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. அதுவரை, ஏற்கெனவே வகுத்துள்ள வழியில் கொள்முதல் செய்யுமாறு மாவட்ட நிர்வாகப் பணியாளர்களுக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. மற்றுமொரு நல்ல பருவமழையாலும், உணவுப் பெருக்கத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் நிறைந்த பலனை அளிப்பதற்கு முன்பும் இடையே உள்ள தட்டுப்பாடான மாதங்களில் (lean months) அரசாங்கத்திடம் போதிய அளவில் உணவு தானியங்கள் இருப்பில் இருக்க வேண்டுமென்பதுதான் இதன் உடனடியான நோக்கமாகும். கட்டுப்பாட்டு விலைகளில் கொள்முதல் செய்வதால், குறிப்பாகச் சிறு குடியானவர்கள் ஓரளவிற்குத் தியாகம் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது என்பதை எனது அரசாங்கம் முற்றிலும் உணர்ந்துள்ளது. பெரும் நிலக்கிழார்கள் விற்பனை செய்ய வேண்டிய உபரி நெல்லை அரசாங்க நிறுவனங்களிடம் ஒப்படைக்கும் பொழுது, தங்களின் பங்கு அளவிற்கேற்ற சுமையினைத் தாங்கும் வண்ணம் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். உபரி தானியங்கள் வைத்திருப்பவர்கள் அதைச் சமுதாயத்திற்கு உதவக் கடமைப்பட்டவர்கள். பொது நலம் பேணித் தொண்டு செய்வதற்குக் கிடைத்த ஓர் அரிய வாய்ப்பாகவே செல்வார்கள். தங்களுக்குக் கிட்டிய செல்வத்தைக் கருத வேண்டுமேயல்லாது, ஆடம்பர வாழ்க்கை நடத்துவதற்கல்ல என்னும் சமுதாய நெறி உணர்வை அவர்கள் உள்ளத்தில் பதிய வைக்க அரசாங்கம் முயலும். அரசாங்கம் ஒருதலைப்பக்கமாகக் கொள்முதல் திட்டத்தைச் செயல்படுத்தாது உரிய முறையிலே பணியை நிறைவேற்றும். குறிப்பாகச் சிறிய குடியானவர்களுக்கு இயன்ற வரையில் இடையூறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளும். தொழிலாளர்கள், நிலமற்ற உழவுப் பணியாளர்கள், நிலைத்த வருவாய் பெறுவோர் போன்று சமுதாயத்தில் எளிதில் அல்லலுக்கு ஆளாகும் பிரிவினர்க்கு இன்றியமையாப் பொருள்களைத் தங்கு தடையின்றி வழங்கி வருவதன் மூலம் விலைவாசி ஏற்றத்தைத் தவிர்க்க முடியும் என்றும், நாளடைவில் எல்லாத் துறைகளிலும் விலைகளைப் பெருமளவுக்குக் குறைக்க முடியும் என்றும், இதனால் உழவர்களுக்கு இன்றியமையாத தேவைப்பொருள்கள் நியாயவிலைகளில் கிட்டுமென்றும் அரசாங்கம் உறுதியாக நம்புகிறது. விலைவாசி ஏற்றம், உற்பத்திச் செலவின உயர்வு என்கிற இந்த நச்சு வட்டத்தை நாம் எங்கேனும் ஓரிடத்தில் தகர்த்துத்தான்





ஆகவேண்டும். கடந்த பத்தாண்டுகளாக இந்தியப் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து வருகிற இவ்விலைவாசி ஏற்றச் சிக்கலுக்கு, உணவு உற்பத்தியைப் பெருக்கியும் வழங்கல் முறையைச் செவ்வைப்படுத்தியும் ஏனைய வழிகளிலும், தீர்வு காணலாம் என்பது இந்த அரசாங்கத்தின் உறுதியான நம்பிக்கையாகும். மீண்டும் இங்கே மத்திய-மாநில அரசாங்கங்களின் உறவு புதிய வகையில் முக்கியத்துவம் பெறுகிறது. இன்றுள்ள சூழ்நிலையில், மாநில அரசாங்கங்கள் தங்களுக்குள்ள சொற்ப நிதி வளங்களைக் கொண்டு மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வது மிகக் கடினமாயுள்ளது. எங்கணும் மக்களிடையே உள்ள கசப்பு உணர்ச்சியைக் கண்ணுற்று, விலைவாசி ஏற்றத்தை, குறிப்பாக உணவு தானிய விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கும் மாநில அரசாங்கங்களின் கொள்கையை நிறைவேற்ற மத்திய அரசாங்கம் அவைகளுக்கு உதவிபுரிய முன்வரவேண்டும்.

6. உணவுத் துறையில் நம்மை எதிர்த்து நிற்கும் இன்னல்கள் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க வேண்டிய தேவையை நிர்வாகத்திற்கும் மக்களுக்கும் எடுத்துக்காட்டியுள்ளன என்பதுதான் நமக்கு ஆறுதலளிக்கும் ஓர் அறிகுறியாகும். நமது முன்னைய திட்டங்களில் வேளாண்மை உற்பத்திக்கு மேலும் அதிக முக்கியத்துவம் அளித்திருந்தால், இன்று நம்மை எதிர் நோக்கியுள்ள கடும் உணவு நிலைமையைத் தவிர்த்திருக்கலாமென்ற கருத்து பரவலாகவே நிலவி நிற்கிறது. ஆனால், அண்மையில் நமக்குக் கிட்டிய அனுபவங்களின் படிப்பினையை யொட்டி விரைந்து பலன் தரும் திட்டங்களில் நாட்டம் செலுத்தி, இப்போதாவது நமது வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுவதே அறிவுடைமையாகும். தரமான வித்துக்களைப் பெருக்குதல், பாசன வசதிகளை விரிவுபடுத்துதல், உரவகைகளை உரிய காலத்தில் உரிய அளவுகளில் வழங்குதல் போன்ற செயல்களே, உணவு உற்பத்திப் பெருக்கத்திற்குத் திறவுகோல் என்பதை அரசாங்கம் உணர்கிறது. இந்த மும்முனைத் திட்டத்தில் இப்போது அதிக விளைச்சல் தருகிற நெல் ரகங்களான ADT M-27, CO -25 என்பவை உட்பட, தரமான வித்துக்களைப் பெருக்கி வழங்குவதற்கான சிக்கல்களுக்கு ஓரளவிற்கு மாநில அரசாங்கமே வெற்றியோடு தீர்வுகாண முடியும். சிறுபாசனத் திட்டங்கள், இறைவைப் பாசனத் திட்டங்களின் வாயிலாகப் பாசன வசதிகளை விரிவுபடுத்துவதற்குச் சுறுசுறுப்பான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதும் மாநில அரசாங்கத்தின் கையிலிருக்கிறது. சட்டப் பேரவையின் ஆலோசனைக்கு விரைவில் வரக்கூடிய 1967-68-ம் ஆண்டின் இடைக்காலத் திட்டத்தில்கூட மாநில அரசாங்கம் இத்தகைய திட்ட வேலைகள் விறுவிறுப்பாய் நடப்பதற்கு வேண்டிய நிதி வசதிகளை வகை செய்து தர முயன்றுள்ளது. ஆனால், உழவர்களுக்குத் தேவைப்படும் முழு அளவிற்கு உரவகைகள் உறுதியாகக் கிடைக்க நாம் கூடவே நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால்தான் தரமான வித்துக்கள், பாசன வசதிகள் மூலம் நமக்கு நல்ல பயன்கள் கிட்டும். இவ்வகையில்தான் நாம் மத்திய அரசாங்கத்தைப் பெரிதும்

சார்ந்திருக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். முக்கியமான இத் துறையில் மத்திய அரசாங்கத்தின் செயல் ஏமாற்றமளிப்பதாயும், உழவர்களிடையே பெருமளவில் கசப்பை ஏற்படுத்தியுள்ளதென் பதையும் நாம் சுட்டிக்காட்டாமல் சும்மா இருப்பதற்கில்லை. நடப்பு ஆண்டில்கூட உரவகைகள் போதிய அளவிற்கு வழங்கப் படவில்லை. நைட்ரஜன் உர வகைகளை 1.35 லட்சம் டன் வழங்கும் படிக் கேட்டதற்குச் சுமார் 86,000 டன் மட்டுமே கிட்டியுள்ளது. பாஸ்பா உரவகையில் கூட, நமது குறிக்கோள் அளவு 60,700 டன் ஆக நிற்க, மொத்தம் 27,000 டன் அளவிற்கே நமக்குக் கிடைத்துள்ளது. உரவகைகளைப் பயன் படுத்துவதில் உழவர்களிடையே தொடக்கத்தில் காணப்பட்ட தயக்கம் இப்போது முற்றிலும் அகன்று விட்டது. இன்று உழவர் கள் வேளாண்மையில் புதிய விஞ்ஞான முறைகளைக் கையாள மிக்க ஆர்வம் காட்டி வருகின்றனர். இன்றியமையாத எல்லா உரவகை களையும் அவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆனால், உரிய காலத்தில் போதிய அளவிற்கு உரவகைகள் கிடைக்க வகை செய்யாவிட்டால், விளைச்சலைப் பெருக்கும் புதிய ரக விதைகளைப் பொறுத்த நமது திட்ட வேலை களால் பலனில்லை. உரவகைகள் உறுதியாகக் கிடைத்தால், மாநில அரசாங்கம் தன்னைப் பொறுத்த வரையில், உழவர்களுக்கு உர வகைகள் வழங்கும் நிலையை ஆராய்ந்து எல்லாக் குறைபாடு களையும் நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளைத் திறம்பட மேற்கொண்டு, உழவர்களின் நீண்டநாளைய குறைகளில் ஒன்றைப் போக்க முடியும்.

7. எனவே, உரவகைகளை முற்றிலும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டிய தேவையை மத்திய அரசாங்கத்துக்கு முக்கிய மாய் எடுத்துச் சொல்வதோடு, இப்போது முடிவு செய்யப்பட்டு வரும் நான்காம் திட்டத்தில் உர வகைகளின் உற்பத்திக்கு மேலும் முதன்மையிடம் அளிக்கும் வகையில் இன்றியமையாச் சரிக்கட்டல் களைத் திட்டத்தில் செய்யுமாறும் நமது மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்தும். நம் நாட்டிலேயே உர வகைகளை முழுவதும் உற்பத்தி செய்யக் கொஞ்சகாலம் செல்லும். இதற் கிடையில் உர வகைகளை அதிக அளவில் இறக்குமதி செய்வதற்கு வகை செய்ய வேண்டும். நமது உழவர்கள் தங்கள் முழு ஆற்றலை யும் உற்பத்தித் திறனில் ஈடுபடுத்துவதற்கு இந்த உர இறக்குமதி கள் இன்றியமையாதவையெனக் கருதப்பட வேண்டும்.

8. நவீன முறையிலும் விஞ்ஞான வகையிலும் வேளாண்மை செய்வதற்கு இன்றியமையாத, உர வகைகள் வழங்குதல் போன்ற பணிகள் அவசியமென்று உணரும்போது, இப்பணிகளின் பின்னணி யிலே நிற்கும் மாந்தரை நாம் புறக்கணிப்பதற்கில்லை. உழவர்கள், குறிப்பாக சிறு நிலக்கிழார்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏற்றவகையில் அவர்களுக்குப் போதிய உற்சாகமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். இந்தச் சூழலில்தான் எனது அரசாங்கத்தின் நிலவரிக் கொள்கை தனிச்சிறப்பு வாய்ந்த ஒன்றாகத் திகழ்கிறது. பொதுமக்களின் கருத்துக்கு இணங்க, சட்டப் பேரவையின்





அகத்தேயும் புறத்தேயும் தெரிவிக்கப்பட்ட மக்களின் கருத்து நெருக்குதலுக்குப் பணிந்து நில மேல்வரி (Land Revenue 'Surcharge) ஏற்கெனவே அகற்றப்பட்டுவிட்டது. ஆனால், இது மட்டும் போதாது. சிறு நிலக்கிழார்களை, நிலவரிச் சுமையின் பிடிப்பிலிருந்தும் விடுவிப்பதற்குப் படிப் படியான திட்ட மொன்றும் வகுக்கப்பட வேண்டும். இது குறித்து அடுத்த பசலிக்குள் திட்டவட்டமான முடிவுகளை அரசாங்கம் மேற் கொள்ளும்.

9. பயிரிடும் குத்தகைக்காரர்களின் இடர்பாடுகளில் நாம் நாட்டம் செலுத்தினாலொழிய வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய நமது திட்ட வேலைகள் முழு வெற்றியைத் தர மாட்டா, தற்போதைய நிலவாரச் சட்டத்தில் உள்ள பொத்தல்களை அடைத்து, பயிரிடும் குத்தகைக்காரர்கள், நடைமுறையில் நிலை யான வார உரிமை ( Fixity of Tenure ) பெறுவதற்கு உறுதி யான வகை செய்யும் பொருட்டு அரசாங்கம் அச் சட்டத்தை மறு பரிசிலனை செய்யும்.

10. உற்பத்தி பெருக வேண்டுமென்றால், உழவர்களுக்குக் கடன் வசதி அளிப்பதற்கான தற்போதுள்ள ஏற்பாடுகளைச் சீராக்க வேண்டும், நேர்மைப் படுத்த வேண்டும். உழவர்களுக்குக் கடன் வசதிகள் வழங்குவதற்குக் கூட்டுறவு நிறுவனங்களே சிறந்த கருவி களாகும் என்பதை அரசாங்கம் உணர்ந்தாலும், எல்லா நிலை களிலும் கூட்டுறவு நிறுவனங்களின் பணியை மேம்பாடுறச் செய்வ தற்குப் போதிய வாய்ப்பு இருக்கிறது என்பதையும் அது அறிந் துள்ளது. உழவர்களின் கடன் தேவைகளைக் கூட்டுறவு நிறுவனங் களின் வாயிலாக நிறைவு செய்வதற்காக மேலும் அதிக நிதி வசதிக்கு ஏற்பாடு செய்கையில், இப்பணம் சரிவரப் பயன்படுத்தப் படுகிறதாவென்றும், சாலத் தகுதியுள்ளவர்களுக்குக் கிட்டுகிறதா வென்றும் நாம் உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும். சிறுநிலக் கிழார்கள் கூட்டுறவு நிறுவனத்திற்கும் தங்களுக்கும் மிகத் தொலைவு என்றும், அடிக்கடி தங்களுக்கு எதிராகச் செயல்படுகிற அரசியல் ஈர்ப்புச் சக்திகளுக்கு இந்த நிறுவனம் உட்பட்டதென்றும் கருதுகின்றனர். அவ்வாறு அவர்கள் கருதுவதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. பெரும் பாலான சிறு குடியானவர்களுக்குக் கூட்டுறவு நிறுவனத்தின் நன்மைகள் கிட்டா வகையில் உள்ள இன்றையச் சூழல் தொடர்ந்து நீடிக்கவிடக் கூடாது. எனவே, நமது மாநிலத்தில் கூட்டுறவு நிறுவனத்தின் வேலையை ஆராய்ந்து நல்ல முறைகளில் அதைச் சீர் திருத்தி அமைப்பதற்கான செயற் குறிப்புகளை வகுப்பதற்கான குழு ஒன்றை நிறுவ வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது. பொதுமக்களின் நம்பிக்கையைப் பெரு மளவில் பெற்றுள்ள இந்த அரசாங்கம் இத்தகைய சீர்திருத்தங் களின் வாயிலாக ,வேளாண்மை உற்பத்தியின் உயர்ந்த குறிக்கோள் களை எய்துவதில், உழவர்களின் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் ஒன்று திரட்டி, வேளாண்மை வளர்ச்சிப் பணியாளர்களுடன் அவர் கள் பயனுறு முறையில் ஒத்துழைக்கும் வகையில் ஆவன செய்யும். வளர்ச்சித் திட்ட வேலைகளில் உழவர்கள் ஆர்வத்தோடு ஈடுபடும்

இந்தப் பணியில் முற்றிலும் ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி மன்ற ஒன்றியங்களும் கலந்துகொள்ளும் வண்ணம் அரசாங்கம் முயற்சியினை மேற்கொள்ளும்.

11. இன்னும் இறுதி செய்யப்படாமல் உள்ள நான்காம் திட்டத்தில் வேளாண்மை உற்பத்தித் திட்ட வேலைகளே அடிப்படையாக அமையும். நான்காம் திட்டத்தின் முதல் ஆண்டு ஏற்கெனவே முடிந்திருப்பினும், அத்திட்டத்தை முடிவு செய்வதற்கு இதுவரை இயலாமற் போனதற்குரிய இடையூறுகளையும் நிச்சயமற்ற சூழ்நிலைகளையும் குறித்து மாண்புறு உறுப்பினர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். நான்காம் திட்டத்தின் வடிவும் அளவும், அந்நிய நாடுகளில் உதவியைப் பெறக்கூடிய சாத்தியக்கூறுகளைப் பெருமளவுக்குப் பொறுத்துள்ளன. நான்காம் திட்டத்தின் முதல் ஆண்டில் பெரும்பாலும் மூன்றாம் திட்டத்தில் நிறைவேற்றப்படாமல் நின்றுபோன திட்டங்களை நிறைவேற்றுவதிலும், வேளாண்மை உற்பத்தி குறித்த சில இன்றியமையாத திட்டப் பணிகளில் நாட்டம் செலுத்துவதிலுமே செலவழிக்கப்பட்டுள்ளது. வரையறைக்குட்பட்ட நமது சொந்த நிதி ஆதாரங்களையும், இந்த நிலையில் கிடைக்கக்கூடிய மத்திய உதவியின் அளவையும் கருத்திற் கொண்டு, அடுத்த ஆண்டிற்கான இடைக்காலத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளோம். இடைக்காலத் திட்டத்தின் விவரங்கள் இக் கூட்டத் தொடரில் 1967–68-ம் ஆண்டுக்குரிய இடைக்கால வரவு-செலவுத் திட்டத்துடன் உங்கள்முன் வைக்கப்படும். ஏற்கெனவே நிறைவேற்றப் பட்டு வரும் வளர்ச்சித் திட்ட வேலைகளுக்கு எவ்விதத்திலும் இடையூறு நேரக் கூடாது என்கிற ஒரே கொள்கையின் அடிப்படையில் இந்த இடைக்காலத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 564 கோடி ரூபாய் முதலீடு செய்ய வகை செய்கிற நமது மாநில நான்காம் திட்டத்திற்கு திட்டக் கமிஷன் தற்காலிகமாகத் தனது ஒப்புதலை வழங்கியுள்ளது. இதில் 250 கோடி ரூபாய் அளவிற்கு மத்திய உதவி கிட்டும். தற்காலிகமாக இறுதி செய்யப்பட்டுள்ள இத் திட்டத்தைக் குறித்து அரசாங்கம் விரைவில் ஆலோசித்துத் திட்ட வேலைகளுக்கு அளிக்கப்படும் முறைவைப்பில் (Priorities) இன்றியமையாத சரிக்கட்டல்கள் எவற்றையேனும் செய்ய வேண்டுமா? அப்படிச் செய்தால் எவற்றைச் செய்ய வேண்டும் என்பதைக் குறித்து முடிவு செய்யும். மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி விதம் மாநிலத் திட்டத்தில் செய்துள்ள முதலீடுகளைக் கொண்டு மட்டுமே முடிவு செய்யப்படுவதில்லை என்பதை வலியுறுத்திச் சொல்ல வேண்டும். பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதில், மத்திய அரசாங்கத் துறையிலும், தனியார் துறைகளிலும் மாநிலத்தில் செய்யப்படுகிற முதலீடுகள் மேலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். பொருளாதார முறையிலும் தொழில் நுட்ப வகையிலும் ஐயத்திற்கு இடமின்றி மேற்கொள்ளலாமென்று முடிவு செய்யப்பட்ட சேலம் உருக்காலை போன்ற பெரிய தொழில் திட்டங்கள் சிலவற்றை நிறைவேற்றுவதன்மூலம் மத்திய அரசாங்கத் துறைகளில் இம் மாநிலத்திற்குரிய நியாயமான பங்கு முதலீடு செய்யப்பட வேண்டுமென்பதை மாநில அரசாங்கம் வற்புறுத்தும்.



12. நான்காவது பொதுத் தேர்தல்களுக்குப் பிறகு உருவாகியுள்ள நிலைமைக் கிணங்க, நமது அரசியல் அமைப்பின் கூட்டாட்சி இயல்பை வலியுறுத்திச் சொல்ல வேண்டிய அவசியமும், அரசியலமைப்புச் சட்டத்தில் மாநிலங்களின் நிலை எப்படியிருக்க வேண்டுமென்று முதலில் கருதப்பட்டதோ அந்த நிலையை அளிக்க வேண்டிய அவசியமும் இன்று தோன்றியுள்ளன. திட்டத்தைத் தீட்டுவதிலும், செயலாற்றுவதிலும் மாநிலங்கள் இனியும் செயலற்ற பார்வையாளர்களாக இல்லாமல், சுறுசுறுப்பான பங்குகொள்பவர்களாக மாறவேண்டும். நான்காம் திட்டக் காலத்தில் மாநிலங்களுக்கு மேலும் பெரும்பங்கு அளிக்க வேண்டிய அவசியத்தைத் திட்டக் கமிஷனே ஓரளவுக்கு ஒப்புக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதுவரையில் மத்திய அரசாங்கம் ஊக்குவிக்கும் திட்டங்கள் என்று கருதப்பட்டு வந்த சில திட்ட வேலைகளை மாநில அரசாங்கத்துறைக்கு மாற்றுவதற்கான சில செயற்குறிப்புகள் (Proposals) மீது அண்மையில் திட்டக் கமிஷன் முடிவு செய்திருக்கிறது. இந்த நடைமுறையை மேலும் விரிவுபடுத்தி அரசியல் அமைப்பில் மாநிலங்களின் பொறுப்புக்குட்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிற வேளாண்மை உற்பத்தி, கல்வி, பொதுச் சுகாதாரம் போன்ற எல்லாத் துறைகளிலும் மாநிலங்களுக்கு மேலும் முக்கிய பங்கு அளிப்பதற்கான தேவை ஏற்பட்டுள்ளது. இந்தத் துறைகளுக்குச் சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சகங்களின் தற்போதைய பணியை மறு ஆய்வு செய்து, மாநிலங்களின் அதிகார வரம்பிற்குள் முற்றும் அடங்குகிற துறைகளில் மத்திய அமைச்சகங்கள் கடந்த சில ஆண்டுகளில் நிதி வரையறைகளையும் ஏனைய வரையறைகளையும் விதிப்பதன் வாயிலாக அதிகமாய்த் தலையிடத் தொடங்கியுள்ள இப் போக்கினைக் கட்டுப்படுத்த வேண்டும். நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஈட்டிய செல்வத்தின் திரட்சியே மத்திய அரசாங்கத்தின் நிதிவளம். எனவே, இந் நிதி வளத்தை மத்திய–மாநில அரசாங்கத் திட்டங்களின் முறைவைப்பிற்கிணங்க அதனைப் பகிர்ந்து கொள்வதுதானே முறை? மத்திய அமைச்சகங்கள் தங்கள் 'செல்லத் திட்டங்களை' (Pet Schemes) வளர்ப்பதற்கு, மத்தியக் கடன்களையும், மானியங்களையும் பயன் படுத்துவதால் திட்ட முறைவைப்புகள் திரிக்கப்பட்டு நாட்டின் அரிய நிதி ஆதாரங்கள் பயனற்ற முறையிலே கையாளப்படுவதற்குத்தான் பெரிதும் வழிகோலியுள்ளது.

13. சட்டப் பேரவையின் இக் கூட்டத் தொடரில் 1967–68-ம் ஆண்டின் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தை ஆராய்ந்து, வருகிற நிதி ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கு எதிர்பார்க்கப்படும் செலவினங்களுக்குக் கணக்கு வாக்களிப்பு (Vote on Account) வழங்க வகை செய்வதே அதன் முக்கிய அலுவலாகும். அரசாங்கம் நான்காம் திட்ட வரைவினை விரிவாக மறு ஆய்வு செய்து அது குறித்த கொள்கைகள் மீது முடிவு செய்கிற வரையில், பற்பல துறைகளின் வளர்ச்சி வேகம் தடைப்படாமலிருக்கும் படிப் பார்த்துக் கொள்வதுதான் இடைக்கால வரவு-செலவுத் திட்டம். அதில் அடங்கியுள்ள இடைக்கால ஆண்டுத் திட்டம்—

[1967, மார்ச் 18

இவற்றின் அடிப்படைக் கருத்தாகும். இம் மறு ஆய்வின் முடிவுகளும், அந்த ஆய்வின் காரணமாக உருவாக்கப்படும் இறுதித் திட்டமும் 1967 ஜூலை மாத வாக்கில் சட்டப் பேரவையின் முன் சமர்ப்பிக்கப்படவிருக்கும் முறையான வரவு-செலவுத் திட்டத்தில் முற்றிலும் எதிரொலிக்கும்.

14. திட்டத்தின் சில கூறுகளைப்பற்றி உண்மையான கருத்து வேறுபாடுகள் இருப்பினும், நமது மாநிலப் பொருளாதாரத்தை எந்த முறைகளில் உறுதிப்படுத்த வேண்டுமென்பது குறித்து தெள்ளிய மக்கட் பிரிவினரிடையே உடன்பாடு நிலவி வந்துள்ளது. அத்தகைய உடன்பாடு தொடர்ந்து நீடிக்க வேண்டும். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதன் அவசியம் குறித்தோ நமது மின்சாரத் திறனை உயர்த்தும் தேவையைக் குறித்தோ, கல்வி, மருத்துவ வசதி, பொதுச் சுகாதாரம் போன்ற இன்றியமையாச் சமூகப் பணிகளை விரிவுபடுத்துவதன் அவசியம் குறித்தோ கருத்து வேறுபாடு எதுவும் இருப்பதற்கில்லை. இத்துறைகளில் இந்த மாநிலத்தின் அரசியல் வாழ்வில் ஈடுபட்டுள்ள பற்பல பிரிவினரிடையே ஆக்கவகையில் ஒத்துழைப்பும் ஒத்த உணர்வும் நிலவ வேண்டுமென நான் வேண்டிக் கொள்ளுகிறேன். இதற்கு முன்பிருந்த சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்கள் வாதங்களிலும், சொல்லாடல்களிலும் உயரிய தரங்களை வகுத்துக் கொண்டு, நெருக்கடியான நேரங்களிலும் கண்ணியமாகவும் பெருமதிப்புடனும் வாதங்களை நடத்திச் சென்றதால் சிறந்த பாராட்டுதலுக்கு உரியவர்களாய்த் திகழ்ந்தார்கள். உயரிய குடியாட்சி மரபுகளை வளர்ப்பதில் நாம் ஏற்கெனவே நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு உதாரணமாகச் செயல்பட்டிருக்கிறோம். அந்த மரபுகளுக்கேற்ப நடந்து கொள்வதுடன், அவற்றை மேலும் வளர்க்கவும் இன்று நாம் அழைக்கப்பட்டுள்ளோம். அண்மையில் இம் மாநில மக்களின் நம்பிக்கையைப் பெருமளவில் பெற்றுள்ளவர்கள் இம் மன்றத்தின் ஆட்சிப்பலகையில் அமர்ந்திருப்பதையும், பல ஆண்டுகளாக நிர்வாகத் துறையில் முதிர்ந்த அனுபவம் பெற்றுள்ளவர்கள் எதிர்க் கட்சியினராக வீற்றிருப்பதையும் இன்று காண்கிறோம். இந்தச் சூழலில் மக்களின் நலனை வளர்க்கும் பொது முயற்சியில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களிடையே பயன் தரும் வகையில் ஒத்துழைப்புக் கிட்டுமென நான் உறுதியாக நம்புகிறேன். பொதுநன்மைக்காகப் போட்டியிடும் பல சக்திகளின் ஆற்றல்களையும் திறன்களையும் பொது நன்மைக்காக ஒன்றுதிரட்டிச் செயலில் ஈடுபடுத்துவதுதான் குடியாட்சியின் உயர்ந்த குறிக்கோளாகும். இத்தகைய ஒன்றுபட்ட முயற்சிகளின் வாயிலாக, நமது மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு நிலையான பணி ஆற்ற முடியும் என்றும், நமது மக்களுக்கு நம்பிக்கையும் மகிழ்ச்சியும், அமைதியும் ஆன்ற வளமும் நிறைந்த [illegible] வாழ்வை உறுதியாக்க முடியும் என்றும் நம்புகிறேன்

# தமிழகச் சட்டப் பேரவை

## திங்கட்கிழமை, 1967 மார்ச் 20.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் திரு. சி. ப. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## நீத்தார் நினைவுக் குறிப்பு.

## திரு. சண்முக இராஜேஸ்வர சேதுபதி—முன்னாள் உறுப்பினரும் முன்னாள் அமைச்சரும்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்** : இன்றைய அலுவல் தொடக்கத்தில் நீத்தார் நினைவுக் குறிப்பு ஒன்றுள்ளது. 1946-ம் ஆண்டு முதல் 1952 வரை தென் நிலச்சுவாந்தார் தொகுதியிலிருந்தும் 1952 முதல் 1967 வரை இராமநாதபுரம் தொகுதியிலிருந்தும் இந்த அவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினராகவும் 1952 முதல் 1957 வரை இம்மாநில அமைச்சராகவும் விளங்கிய திரு. சண்முக இராஜேஸ்வர சேதுபதி அவர்கள் இம்மாதம் 4-ம் தேதி அன்று காலமான செய்தியை இந்த அவைக்கு மிக்க வருத்தத்துடன் அறிவிக்கின்றேன். இந்த அவையின் சார்பாக நம் ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்திற்கு நான் தெரிவிக்கிறேன். மறைந்த திரு. சண்முக இராஜேஸ்வர சேதுபதி அவர்களுக்கு நாம் மரியாதை செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் எல்லோரும் ஒரு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(பேரவை உறுப்பினர்கள் ஒரு நிமிட நேரம் மௌனமாக எழுந்து நின்றனர்.)

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்** : அடுத்த அலுவல், கேள்வி நேரம். மதிப்பிற்குரிய அமைச்சர் விடை அளிப்பதற்கு கேள்விகள் இல்லை. ஆகவே, அடுத்த அலுவல், 41-வது சட்டப் பேரவை விதிக்கிணங்க ஓர் அவசர முக்கிய காரியத்தை மதிப்பிற்குரிய திரு. எம். சி. பாலன் அவர்கள் மதிப்புக்குரிய விவசாய அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் அவருடைய இருப்பிடத்தில் இல்லாத காரணத்தினால் நம் பேரவை விதிகளின்படி அவர் கொடுத்துள்ள இந்த அறிவிப்பு திரும்பப் பெற்றுக்கொண்டதாகக் கருதப்படும். It will be deemed to have been with drawn. அடுத்த அலுவல், அரசினர் தீர்மானங்கள்.

## 2. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** அரசினர் தீர்மானங்கள், ஒன்றன்பின் ஒன்றாக நான்கு தீர்மானங்கள் உள்ளன. மதிப்பீட்டுக் குழு பற்றிய தீர்மானத்தை மதிப்பிற்குரிய மன்ற முதல்வர் லீடர் ஆஃப் தி ஹௌஸ், கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, "தமிழ் நாடு சட்டசபை விதிகளைச் சேர்ந்த 164-வது விதியின்கீழ், 1967-68-ம் ஆண்டுக்குரிய மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினைந்து உறுப்பினர்களை, மதிப்பிற்குரிய சபாநாயகர் நிச்சயிக்கும் தேதியன்று இச்சபை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இப்போது கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை நிறைவேற்றுவதா இல்லையா என்பது அவை முன் வைக்கப்பட்டுள்ள கேள்வி. இதுபற்றி விதிகளின்படி குரல் வாயிலாக உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும். தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்று கருதுகிறவர்கள் குரல் வாயிலாக "ஆம்" என்று கூறலாம். ('ஆம்' என்ற குரல்கள்.) தீர்மானத்தை எதிர்ப்பவர்கள் இருந்தால் 'இல்லை' என்று சொல்லுங்கள். 'இல்லை' என்பவர்கள் இல்லை. எனவே மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டதாக அறிவிக்கின்றேன்.

## 3. அறிவிப்புக்கள்.

### (அ) மதிப்பீட்டுக்குழுவிற்கான தேர்தல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல் நடத்துவதற்கு ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி அவைத் தலைவர் வகுத்துள்ள விதிகளுக்கிணங்க வேட்பாளர்களின் நியமனத் தாள்கள் 23—3—1967 வியாழக்கிழமை காலை 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாள்கள் 23—3—1967 வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 25—3—1967 சனிக்கிழமை மூன்று மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய எண்ணிக்கை அதாவது பதினைந்துக்கு மேற்படுமாயின் 27—3—1967 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.



## 2. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

### (இ) பொதுக் கணக்குக் குழுவிற்கான தேர்தல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** அடுத்து, பொதுக் கணக்குக் குழு, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி பற்றி மதிப்பிற்குரிய மன்ற முதல்வர் அவர்கள் லீடர் ஆஃப் தி ஹௌஸ், கல்வி அமைச்சர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டசபை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியின் கீழ் 1967--68-ம் ஆண்டுக்குரிய பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினைந்து உறுப்பினர்களை, மதிப்பிற்குரிய சபாநாயகர் நிச்சயிக்கும் தேதியன்று இச்சபை தேர்ந்தெடுக்கும்", என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை நிறைவேற்றுவதா இல்லையா என்பது இந்த சபை முன் வைக்கப்பட்டுள்ள கேள்வி. இதுபற்றி குரல் வாயிலாக உறுப்பினர்கள் வாக்களிக்கவேண்டும். தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்று கருதுகிறவர்கள் "ஆம்" என்று குரல் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் (ஆம் என்ற குரல்கள்.) எதிர்ப்பவர்கள் இருந்தால் என்று சொல்லுங்கள். "இல்லை" "இல்லை" என்பவர்கள் இல்லை). மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டதாக அறிவிக்கிறேன்.

## 3. அறிவிப்புக்கள் (தொடர்ச்சி).

### (இ) பொதுக் கணக்குக் குழுவிற்கான தேர்தல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** பொதுக் கணக்குக் குழு தேர்தல் ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி அவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளுக்கிணங்க வேட்பாளர்களின் நியமனத் தாள்கள் 23—3—1967 வியாழக்கிழமை காலை 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனத்தாள்கள் 23—3—1967 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 25—3—1967 சனிக்கிழமை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய எண்ணிக்கைக்கு, அதாவது பதினைந்துக்கு மேற்படுமாயின் 27—3—1967 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

## 2. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

### (உ) உரிமைக் குழுவிற்கான தேர்தல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** உரிமைக் குழு, ப்ரிவிலேஜஸ் கமிட்டி பற்றிய தீர்மானத்தை மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் லீடர் ஆஃப் தி ஹௌஸ் கொண்டு வருவார்கள்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டசபை விதிகளைச் சேர்ந்த 183-வது விதியின்கீழ், 1967-68-ம் நிதியாண்டுக்குரிய உரிமை பற்றிய குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பன்னிரண்டு உறுப்பினர்களை, மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் தேதியன்று இச்சபை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை நிறைவேற்றுவதா இல்லையா என்பது அவை முன் வைக்கப்பட்டுள்ள கேள்வி. இதுபற்றி குரல் வாயிலாக உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும். தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்று கருதுகிறவர்கள் "ஆம்" என்று கூறுங்கள். ('ஆம்' என்ற குரல்கள்.) எதிர்ப்பவர்கள் இருந்தால் இல்லை என்று சொல்லுங்கள். 'இல்லை' என்பவர்கள் இல்லை, ஆகவே, மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டதாக அறிவிக்கிறேன்.

## 3. அறிவிப்புக்கள் (தொடர்ச்சி).

### (உ) உரிமைக் குழுவிற்கான தேர்தல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** உரிமைக் குழுவிற்குத் தேர்தல் நடத்துவதற்கு ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி அவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளுக்கிணங்க வேட்பாளர்களின் நியமனத்தாள்கள் 23—3—1967, வியாழக்கிழமை காலை 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். 23—3—1967 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 25—3—1967 சனிக் கிழமை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது பன்னிரண்டுக்கு மேற்படுமாயின் 27—3—1967, திங்கட் கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

## 2. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

### (எ) பேரவையினர் வசதிக் குழுவிற்கான தேர்தல்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** "தமிழ்நாடு சட்டசபை விதிகளைச் சேர்ந்த 221-வது விதியின்கீழ், 1967–68-ம் நிதியாண்டுக்குரிய பேரவையினர் வசதிக் குழுவின் உறுப்பினர்



களாய் இருக்கும்படி பதினேழு உறுப்பினர்களை மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் தேதியன்று இச்சபை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(தீர்மானம் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களால் பேரவையின் குரல் வாக்குக்கு விடப்பட்டு, அவையின் முடிவைத் தெரிவிக்கும் நேரத்தில்.)

## 4. ஒழுங்குப் பிரச்சினை.

### பேரவையின் முடிவை அறிந்து அறிவிக்கும் முறை.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, I am rising on a point of order. Whenever a motion is put to the vote, in the Parliament or Assembly, the Hon. Speaker determines the number of persons who are for it and the number of persons who are against it. If the largest number of persons happen to say 'Aye', then it is the practice for the Hon. Speaker to say 'Ayes have it' and not 'Noes do not have it'. So, it is proper that we should say ஆம have it.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் சுட்டிக்காட்டியது போன்று, தீர்மானம் வந்தவுடனே தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்படுகிறது என்று தெரிவித்தால் அப்போது தீர்மானத்தை ஆதரிக்கக் கூடிய உறுப்பினர்கள் "ஆம்" என்று சொல்லுவார்கள், எதிர்க்கக் கூடியவர்கள் "இல்லை" என்று சொல்லுவார்கள். அப்போது தாங்கள் "ஆம்' அதிகம், 'ஆம்' அதிகம், 'ஆம்' அதிகம்" என்று மூன்று தரம் சொல்லி முடித்துவிடலாம் என்று நினைக்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** மதிப்பிற்குரிய மன்ற முதல்வர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்த்து "இல்லை" என்று சொல்லுவதற்கு ஒருவராவது இருந்தால், பெரும்பான்மை, சிறுபான்மை பார்த்து சபையின் முடிவைச் சொல்ல வேண்டும். ஆனால், "இல்லை" என்று சொல்லுவதற்கு ஒருவருமே இல்லாவிட்டால், அப்படியே தீர்மானத்தை நிறைவேற்றிவிடலாம். குரல் வாயிலாக வாக்குகளைத் தீர்மானப்படுத்தும் போது "ஆம்" என்ற குரல்கள் அதிகமாக இருந்து, "இல்லை" என்ற குரல்கள் குறைவாக இருந்தால் "'ஆம்' என்பவர்கள் பெரும்பான்மை" என்று சொல்லி பிறகு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். "இல்லை" என்று சொல்லுவதற்கு ஒருவருமே இல்லாமலிருந்தால், அதைச் சொல்லவேண்டும் என்ற அவசியம் இல்லை.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, I am sorry to interrupt the Chair often and I do not think it is an offence. Even if nobody says 'No' and everbody says 'Aye', it is the duty of the Chair to say 'Ayes have it' Ayes have it' and 'Ayes have it'. No even once but thrice it has to be announced and then only the House has to accept it as a thing which has not been opposed.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, காமன்ஸ் உறுப்பினர் சுட்டிக்காட்டியது போன்று " Ayes have it ", " Ayes have it ", " Ayes have it ". என்று சொல்லுவதிலே மெஜாரிட்டி, மைனாரிட்டி பார்த்து சொல்லுவது போல " ' ஆம் ' அதிகம், ' ஆம் ' அதிகம், ' ஆம் ' அதிகம் " என்று மூன்று தடவைகள் சொல்லலாம். " தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்படுகிறது " என்று சொல்லும்போது உறுப்பினர்கள் " ஆம் " என்றோ, " இல்லை " என்றோ சொல்லுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அந்த முறையில் " இல்லை " என்பவர்கள் அதிகமானால் " ' இல்லை ' அதிகம், ' இல்லை ' அதிகம், ' இல்லை ' அதிகம் " என்று சொல்லலாம்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இந்த நடைமுறையை இப்போது மன்ற முதல்வர் அவர்கள் சொன்னபடியே முடித்துக் கொள்வோம். ஏனென்றால், நடைமுறையை முதன்முதலாக நாமே முடிவு செய்கிற காரணத்தினால், எப்படிச் செய்வது என்று முடிவு செய்கிற அதிகாரம் அவைக்கு இருக்கிறது. அப்படியே செய்யலாம் என்று கருதுகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

### 3. அறிவிப்புக்கள் (தொடர்ச்சி).

#### (எ) பேரவையினர் வசதிக் குழுவிற்கான தேர்தல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** பேரவையினர் வசதிக் குழுவிற்குத் தேர்தல் நடத்துவதற்கு, ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி அவைத் தலைவர் வகுத்துள்ள விதிகளுக்கிணங்க வேட்பாளர்களின் நியமனத் தாள்கள் 23-3-1967, வியாழக்கிழமை, காலை 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்படவேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத்தாள்கள் 23-3-1967, வியாழக்கிழமை, பிற்பகல் 3-00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 25-3-1967, சனிக்கிழமை, 3-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய எண்ணிக்கைக்கு அதாவது, பதினொன்றுக்கு மேற்படுமாயின் 27-3-1967, திங்கட்கிழமை, காலை 9 மணிக்கும் பிற்பகல் 1-00 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

#### (ஐ) ஒத்திவைப்புத் தீர்மானங்களை அனுமதித்தல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** சில ஒத்திவைப்புத் தீர்மானங்கள் என்னிடம் கொடுக்கப்பட்டுள்ளன. அவைக்குக் கொண்டு வரும் முன்னர் என் அனுமதி பெறவேண்டும். அனுமதி பற்றிய என் முடிவுகளை நாளை தெரிவிக்கிறேன்.





### 5. 1967-68-ம் ஆண்டு இடைக்கால நிதிநிலை அறிக்கை— பேரவையின்முன் வைத்தல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இப்போது பெருமதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் 1967-68-ம் ஆண்டிற்குரிய இடைக்கால நிதி நிலை அறிக்கையை அவைமுன் வைத்து உரையாற்றுவார்கள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

புதிய சட்டப் பேரவையின் முன், எனது முதல் வரவு-செலவுத் திட்டத்தை வைக்கும் ஒரு வாய்ப்பினை, நான் பெரும் பேறாகக் கருதுகிறேன். இப்பொழுது சபை முன் வைக்கப்படுகின்ற 1967-68-ம் ஆண்டுக்குரிய இந்த வரவு-செலவுத் திட்டம் இடைக்கால வரவு-செலவுத் திட்டமேயாகும். ஆயினும், அரசியலமைப்பின் விதித் துறைகளுக்கிணங்க, வரவு-செலவு மதிப்பீடுகள் ஆண்டு முழுவதற்குமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த வரவு-செலவுத் திட்டம் இதற்கு முன்னரே அரசாங்கம் ஏற்றுக்கொண்ட பொறுப்புக்களுக்கும் கொள்கைகளுக்கும் இணங்க, புதிய அமைச்சரவை இக் கொள்கைகளையும் திட்ட வேலைகளையும் விரிவாக மறு ஆய்வு செய்கிறவரையில், ஏற்கெனவே நிறைவேற்றப் பட்டு வரும் வளர்ச்சித் திட்ட வேலைகளும் அரசாங்க அலுவலும் எவ்வித இடையூறுமின்றிச் செயல்படும் வகையிலே தயாரிக்கப் பட்டுள்ளது. 1967-68-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வரும் ஆண்டில் அரசாங்கத்தின் பற்பல துறைகள் நிறைவேற்றுவதற்கு ஆவலாக உள்ள "இரண்டாம் பகுதித் திட்டங்கள்" அல்லது "புதுத் திட்டங்கள்" என்று வழங்கப் படுகிற எவற்றிற்கும் வகை செய்யப்படவில்லை. இந்தத் திட்டங் களைப்பற்றி இன்றைய அரசாங்கம் ஆலோசித்த பின்னர், நிதி வசதிக்கேற்ப அவற்றிற்கு வகை செய்ய வேண்டியிருக்கும். எனவே, 1967-68-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு களை மீண்டும் புதிதாக ஆலோசித்து, புதுத் திட்டங்களுக்கும் புதுக் கொள்கைகளுக்கும் வகை செய்யும் முறையில் அவற்றை மாற்றியமைத்து 1967 ஜூன் திங்கள் வாக்கில் சட்டப் பேரவை யின் முன் அரசாங்கம் வைக்கும். இந்த வரவு-செலவு மதிப்பீடுகள் ஆண்டு முழுவதற்குமாகத் தயாரிக்கப்பட்டுள்ளபோதிலும், வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள முழு மானியங்களுக்குரிய முதலீடுகள் இக் கூட்டத் தொடரில் சட்டப் பேரவையின் முன் வைக்கப்பட மாட்டா என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின்மீது பொது விவாதம் நடந்த பின்னர் அடுத்த நிதியாண்டின் முதல் நான்கு மாதங்களில் எதிர் பார்க்கப்படும் செலவினங்களுக்குக் "கணக்கு வாக்களிப்பு" (Vote on Account) வேண்டப்படும். 1965-66-ம் ஆண்டின் இறுதிக் கணக்குகள், 1966-67-ம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடு கள், இப்பொழுது தயாரிக்கப்பட்டுள்ள 1967-68-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்—ஆகிய இவற்றைக் குறித்துச்

சுருக்கமாக விளக்குகிற "வெள்ளை அறிக்கை" ஒன்று ஏனைய "வரவு-செலவுத் திட்ட ஆவணங்களுடன் (Budget documents) மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. எனவே, அவற்றைக் குறித்து நான் விரிவாகப் பேசாமல், வரவு-செலவுத் திட்ட மதிப் பீடுகளின் முக்கியமான சில அம்சங்களை மாத்திரம் உங்கள் நாட்டத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

2. பற்பல அரசாங்கத் துறைகள் 1966 அக்டோபர், டிசம்பர் திங்களுக்கு இடையே அனுப்பிய புள்ளி விவரங்களின் அடிப் படையில், நடப்பு ஆண்டின் திருத்த மதிப்பீடுகள் தயாரிக்கப் பட்டுள்ளன. இவற்றின் வாயிலாக வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு களில் வருவாய்க் கணக்கில் எதிர்பார்த்த 31 லட்சம் ரூபாய் சொற்ப உபரித்தொகைக்கு மாறாக, 745 லட்சம் ரூபாய் அளவிற்குத் துண்டு விழுமென இப்பொழுது தெரிகிறது. வருவாய்க் கணக்கில் இவ்வளவு பெரிய துண்டு விழுந்தபோதிலும், வருவாய்க் கணக்கு, கடன் கணக்கு, மூலதனக் கணக்கு, பொதுக் கணக்கு ஆகிய இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்க்குமிடத்து நமது மாநிலத்தின் மொத்த நிதிநிலை சரிக்கட்டப்படும் என்றும், வரவு-செலவு மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட அதே அளவுத்தொகை முடிவான ரொக்க இருப்பாக நிற்குமென்றும் தெரிகிறது. வரவு-செலவுத் திட்டம் நிறைவேறிய பின்னர் மேற்கொண்ட பற்பல முடிவுகளும் நிகழ்ச்சிகளும் வருவாய்க் கணக்கில் இப்பொழுது காணப்படுகிற இந்த நலிந்த நிலைக்குக் காரணங்களாகும். நமது மாநிலத்தின் நிதி நிலையை இங்ஙனம் பாதிப்பதற்குக் காரணமாக இருந்த சில முக்கியமான முடிவுகளைக் குறித்து மிகவும் சுருக்க மாகக் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசாங்கப் பணியாளர் களுக்கு அக விலைப்படி வீதங்கள் உயர்த்தப்பட்டதன் விளைவாக மாநில அரசாங்கமும், தல நிர்வாக மன்றப் பணியாளர்கள், மானியம் பெறும் பள்ளியாசிரியர்கள் உட்பட, தனது பணியாளர் களுக்கு அகவிலைப்படி வீதங்களை அதைப்போன்று இரண்டு முறை உயர்த்த வேண்டி வந்தது. 1966 ஜூன் 1-ம் தேதியிலிருந்து செயலுக்கு வந்த முதல் அகவிலைப்படி வீத உயர்வின் காரணமாக, ஒரு முழு ஆண்டில் 306 கோடி ரூபாயும், நடப்பு ஆண்டில் 2.7 கோடி ரூபாயும் செலவாகும். 1966 டிசம்பர் 1-ம் தேதியிலிருந்து செயலுக்கு வந்த இரண்டாவது அகவிலைப்படி வீத உயர்வின் காரணமாக, ஒரு முழு ஆண்டில் 5.9 கோடி ரூபாயும், நடப்பு ஆண்டில் மட்டும் சுமார் 1.5 கோடி ரூபாய் அளவிற்கும் செலவாகும். உணவு தானியங்கள்மீது இதற்குமுன் விதிக்கப்பட்டு வந்த ஒரு சத விகித பலமுனை விற்பனை வரி 1966 ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து அகற்றப்பட்டதன் விளைவாகவும் 1.5 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது. நிலவரி குறித்துப் பின்னால் விரிவான முடிவு எடுக்கப்படுகிற வரையில், 25 சத விகித நில மேல்வரி (Land Revenue Surcharge) நீக்கப்பட்டதன் காரண மாகவும் ஏறக்குறைய 1·5 கோடி ரூபாய் அளவிற்கு

* 223–305 பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





வருவாய் இழப்பு ஏற்பட்டது. 1966–67-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கையில், மத்திய அரசாங்கத்தின் கூடுதல் வரி விதிப்புகள் காரணமாக மாநில அரசாங்கத்தின் பங்காக 3·5 கோடி ரூபாய் கிட்டுமென்று நாம் எதிர்பார்த்தோம். 1966-67-குரிய ஆண்டுத் திட்டத்தை முடிவு செய்யுங் காலையில், திட்டக் கமிஷனுடன் இவ்வரசாங்கம் நடத்திய வாதங்களின்போது அவர்கள் தெரிவித்த தொகைதான் இது. நடப்பு ஆண்டுக்குரிய மத்திய அரசாங்க வரவு-செலவுத் திட்டச் செயற்குறிப்புகளில், மாநிலங்களுக்குக் கூடுதல் நிதி ஆதாரங்கள் கிடைக்கும் வகையில் இரண்டு வரி விதிப்பு நடவடிக்கைகள் அடங்கியிருந்தன. ஒன்று, மத்திய விற்பனை வரியை 2 சத விகிதத்திலிருந்து 3 சத விகிதத்திற்கு உயர்த்துவது. மற்றொன்று, மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய யூனியன் ஆயத் தீர்வை விதங்களில் (Union Excise Duties) மாற்றங்கள் செய்வது பற்றியதாகும். மத்திய விற்பனை வரியிலிருந்து இப்பொழுது சுமார் ஒரு கோடி ரூபாய் மட்டுமே கூடுதல் வருவாய் கிடைக்குமென்று, யூனியன் ஆயத் தீர்வைகளை உயர்த்தியதன் மூலம் கிடைக்கும் கூடுதல் வருவாயில் நமது பங்குக்கு சுமார் 70 லட்சம் ரூபாய் மட்டுமே கிடைக்குமென்றும் இப்போதுள்ள நமது கணக்குகளின் வாயிலாக அறிகிறோம். எனவே, முதலில் நாம் எதிர்பார்த்த தொகையான மூன்றரைக் கோடி ரூபாய்க்கு எதிராக, மத்திய அரசாங்கத்தின் கூடுதல் வரி விதிப்பில் நமது பங்குக்கு மொத்தத்தில் ஒரு கோடியே எழுபது லட்சம் ரூபாய் மட்டுமே கிடைக்கும். மற்றும், நமது பொருளாதார வளர்ச்சி விகிதம் மந்தப் பட்டிருப்பதன் காரணமாக, மாநில வரியினம் நமக்குப் பங்கு கிடைக்கவேண்டிய மத்திய வரியினம்—இவற்றின் வளர்ச்சி வீதம் மூன்றும் திட்டக்காலத்தில் முதல் சில ஆண்டுகளில் இருந்ததை விட நடப்பு ஆண்டில் மிகக் குறைந்திருக்கிறது என்பதையும் நான் இங்கு வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இவை யனைத்தும் ஒன்று சேர்ந்ததால், திருத்த மதிப்பீடுகளில் இப் பொழுது கனிசமான வருவாய்ப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. மேலும், இதற்கு முந்திய ஆண்டுகளில் ஏற்பட்டதைப் போலவே, திருத்த மதிப்பீடுகளில் இப்பொழுது வகை செய்துள்ள நிதி ஒதுக்கங்களுக்குமேல், இறுதித் திருத்த நிதி ஒதுக்க நிலையில். செலவினங்களில் சற்றுக் கூடுதல் ஏற்படலாம் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால், இந்தக் கூடுதல் செலவினங்களை இயன்ற அளவு குறைப்பதற்காக நாம் நாட்டம் செலுத்தி வருகிறோம். அப்படி இன்றியமையாத வகையில் கூடுதல் செலவினம் ஏதாவது ஏற்படுமானால், வருவாய் இனங்களில் ஏற்படும் வளர்ச்சியைக் கொண்டு சரிக்கட்டிவிடலாமென்று எதிர்பார்க் கிறோம். இவற்றால் நமது மாநிலத்தின் இறுதி நிதிநிலை மாற்ற மில்லாமல் ஏறக்குறைய அதே அளவில் அமையுமென்றும் நம்புகிறோம். திருத்த மதிப்பீடுகளுக்குமேல் ஏற்படும் செலவின அதிகரிப்பின் அளவை இம் மன்றத்தின் முன் நான் நாளை வைக்க விருக்கும் இறுதித் துணை மதிப்பீடுகளில் காணலாம்.

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 20

3. 375 லட்ச ரூபாய் வழிவகை நிதி முன்பண (Ways and Means Advance) நிலுவையைச் சேர்த்து 735 லட்ச ரூபாய் ரொக்க இருப்போடு, அதாவது 360 லட்ச ரூபாய் நிகர இருப்போடு, நல்ல முறையில் இந்த ஆண்டு தொடங்கியதெனினும், வழிவகை நிதி நிலையிலும் இந்த ஆண்டு சிக்கல் நிறைந்ததாகவே இருந்து வந்துள்ளது. மூலதனக் கணக்கில் செலவு அதிகரித்ததனாலும், பல்வகை மூலதன வரவினங்களில் பாதகமான சில போக்குகள் ஏற்பட்டதனாலும் நடப்பு ஆண்டில் நமது வழிவகை நிதி நிலையில் இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. சீன ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து மாநில அரசாங்கம், தல நிர்வாக மன்றங்களின் பணியாளர்கள், அரசாங்கம் மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கள் உட்பட, மாநில அரசாங்கப் பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதிக்குச் செலுத்தும் சந்தாத் தொகைகளின் வீதங்களை உயர்த்தியிருந்தது. இப் பணியாளர்களின் முறையீடுகளுக்கிணங்க, 1966, ஜூன் திங்களிலிருந்து இத் திட்டத்தை அரசாங்கம் கைவிட்டது. இதனால் நடப்பு ஆண்டில் தொடக்க மதிப்பீடுகளுக்கு மேல் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு நிகர வருவாயினத்தில் குறைவு ஏற்பட்டது. 1966–67-ம் ஆண்டுக்குரிய மதிப்பீடுகளைத் தயாரிக்கையில், மாநில அரசாங்கம் 14 கோடி ரூபாய் வெளிச் சந்தைக் கடன் (Open Market Loan) ஒன்றை வெளியிடும் என்றும் எதிர்பார்த்தோம். ஆனால், அதன் பின்னர் பணச் சந்தையில் நிலவிய நிலைமைகளையொட்டியும், ரிசர்வ் பாங்கியின் அறிவுரைக் கிணங்கவும் இந்தக் கடன் வெளியீட்டை 13 கோடி ரூபாய் அளவுக்குக் குறைத்துக்கொள்ள வேண்டியிருந்தது. மேலும், இதற்கு முந்திய ஆண்டுகளில் இருந்ததைப்போல, சிறு சேமிப்பின்கீழ் கிட்டிய தொகையிலும் தொடக்க மதிப்பீடுகளுக்குமேல் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. இத்தகைய நலிந்த போக்குகள் நீடித்த போதிலும், ஏற்கெனவே ஒத்துக்கொண்டபடி மத்திய உதவி நமக்குக் கிடைக்குமென்று நாம் எதிர்பார்த்த நிலையில் மாற்றம் ஏதும் இல்லாமலிருந்தால், நடப்பு ஆண்டில் குறைந்த அளவு இறுதியிருப்புடன் நமது கணக்குகளைச் சரிக்கட்ட முடியுமென்று நாம் எதிர் பார்க்கிறோம். மற்றும் ரிசர்வ் பாங்கியிலிருந்து அனுமதியில்லாத அதிகப்பற்று (over drafts) ஏதும் இன்றி, இந்த ஆண்டுக் கணக்கினை முடிக்க முடியுமென்ற உறுதியான நம்பிக்கையும் நமக்கு இருக்கிறதென்பதை இம் மன்றம் மகிழ்ச்சியுடன் வரவேற்குமென்று நினைக்கிறேன்.

4. இந்தப் பின்னணியில்தான் அடுத்த ஆண்டுக்குரிய வரவு-செலவுதிட்ட மதிப்பீடுகளை ஆய்வு செய்யவேண்டும். அடுத்த ஆண்டிற்குரிய வருவாய் இனங்களை மதிப்பிடுகையில், விற்பனை வரி, மோட்டார் வண்டிகள் வரி, மின்சார நுகர்வு வரி போன்ற நீட்சித் திறன்பெற்ற (elastic) மாநில நிதி ஆதாரங்களின்கீழ் வளர்ச்சி வீதம் நியாயமான அளவிற்கு உயருமென்று எதிர்பார்த்து அவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்டுள்ளோம். நிலவரிக் கொள்கையின் எதிர்காலம் குறித்து அரசாங்கம் இன்னும் முடிவு



1967 மார்ச் 20] [திரு. சி. என். அண்ணாதுரை]

செய்யவில்லை. நிலவரி நீக்கத்தைப் பற்றிய எல்லா அம்சங்களையும் குறித்து ஆராய்வதற்கென்று நியமிக்கப்பட்ட சிறப்பு அலுவலரின் அறிக்கை அண்மையில்தான் கிட்டியுள்ளது. சிறப்பு அலுவலரின் அறிக்கையை ஆராய்ந்து அதன்மீது முடிவுகள் எடுக்க அரசாங்கத்துக்குச் சிறிது காலம் செல்லும். இந்தச் சூழலில், ஏற்கெனவே ரத்து செய்யப்பட்ட நில மேல்வரி வசூலை மட்டும் தள்ளிவிட்டு, நிலவரியின்கீழ் வழக்கமாகக் கிடைக்கும் வசூல் தொகைகளை நிதித்துறை கணக்கில் எடுத்துக்கொண்டுள்ளது. ஆகவே, நிலவரியின் எதிர்காலத்தைக் குறித்து அரசாங்கம் எடுக்கும் முடிவுகள் சட்டப் பேரவையின்முன் வைக்கவிருக்கும் முறையான வரவு-செலவுத் திட்டத்தில் மட்டுமே காணப்படும். வருவாய்க் கணக்கில் செலவினங்களைப் பொறுத்த வரையில் வளர்ச்சித் தலைப்புகள் அல்லாத ஏனைய தலைப்புகளில் மிகக் குறைந்த அளவு செலவின் அதிகரிப்புக்காக மட்டுமே இந்த நிலையில் வகை செய்துள்ளோம். திட்டத்தின் பகுதியான வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவு செய்வதற்காக நிதி சேமிக்கும் வகையில், வளர்ச்சித் தலைப்பின் கீழுள்ள பேணுதல் செலவினங்களில்கூட (Maintenance Expenditure) அதிகரிப்புக் குறைந்த அளவிலேயே வகை செய்யப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் 1967-68-க்குரிய வரவு-செலவுத் திட்டத்தின் வருவாய்க் கணக்கில் வரவினங்கள் 204.39 கோடி ரூபாயாகவும், செலவினங்கள் 211.99 கோடி ரூபாயாகவும் மதிப்பிடப்பட்டுள்ளன. இதனால் 760 லட்சம் ரூபாய் வருவாய்க் கணக்கில் துண்டு விழுகிறது. இது நடப்பு ஆண்டில் எதிர்பார்க்கப்படுகிறபடி, வருவாய்க் கணக்கில் விழும் 745 லட்ச ரூபாய் துண்டினைவிடச் சற்றே உயர்ந்துள்ளதெனினும், இத் துண்டு கணிசமானதுதான். நடப்பு ஆண்டில் அகவிலைப்படி வீதங்களை இரண்டாவது தவணையாக உயர்த்தப்பட்டமையே இதற்குப் பெரும்பாலும் காரணமாகும். மூலதனக் கணக்கிலும் பொதுக்கணக்கிலும் கிடைக்கும் நிகர வரவினங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டாவது வரவு-செலவுத் திட்டத்தை முழுமையாகச் சமன்படுத்த முடியுமெனின், வருவாய்க் கணக்கில் ஏற்பட்டுள்ள இப் பற்றுக்குறையைப்பற்றி நாம் பெருங்கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் இங்கும் நமது மதிப்பீடுகள் 885 லட்சம் ரூபாய் அளவிற்கு மாறுதலை இறுதிக் கையிருப்பைக் (Negative closing cash balance) காட்டுகின்றன. பெரிய வெளிச்சந்தைக் கடன் ஒன்று அடுத்த ஆண்டில் திருப்பித் தரவேண்டிய தவணைக் காலத்தை அடைகிறது. இதன்கீழ் 10.47 கோடி ரூபாய் திருப்பித் தர வேண்டியிருக்கிறது. இந்திய ரிசர்வ் பாங்கியைக் கலந்தாலோசித்து அண்மையில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டையொட்டி அடுத்த ஆண்டில் பதினெட்டு கோடி ரூபாய் புதிய வெளிச் சந்தைக் கடன் ஒன்றை நாம் திரட்ட முடியும் என நம்புகிறோம். தவணைக் காலம் முடிவடைந்த கடன்களைத் திருப்பிச் செலுத்திய பின், இதில் 7.53 கோடி ரூபாய் அளவிற்கு மட்டுமே எஞ்சி நிற்கும். நடப்பு ஆண்டில், திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை எதுவுமில்லாமலேயே 13.24 கோடி ரூபாய் அளவிற்கு நாம் கடன் எழுப்ப முடிந்தது என்பதை நினைவு கூர்ந்தால், பொதுக் கடன் தலைப்பில்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 20

மட்டும் 5·71 கோடி ரூபாய் அளவுக்கு நடப்பு ஆண்டைவிட அடுத்த ஆண்டில் நிலைமை பாதகமாயிருப்பது புலனாகும். இந்த ஒன்று மட்டுமே அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் சமநிலையின்மைக்குப் பெரிதும் காரணமாயிருக்கும்.

5. வருவாய்க் கணக்கில் விழுகிற துண்டையும் மொத்தக் கணக்குகளில் விழுகிற துண்டையும் இந்த நிலையில் அடைக்காமல் விடுகிறோம். நான்காம் திட்டத்தின் முதலாண்டு முடிவடையும் தறுவாயில் இருப்பினும், நான்காம் திட்டம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்பதை இம் மன்றம் நன்கு அறியும். மூன்றும் திட்டக் காலத்தில் நிறைவேற்ற முடியாமற்போன திட்டங்களுக் காகவும் இன்றியமையாத சில வேளாண்மை உற்பத்தித் திட்டங் களுக்காகவும் கல்வி, மருத்துவ உதவி, பொதுச் சுகாதாரம் போன்ற சமூகப் பணிகளின்கீழ், தவிர்க்க முடியாத சில செலவின அதிகரிப்புகளுக்காகவுமே பெரும்பாலும் வகை செய்து, 1966-67-க் குரிய ஆண்டுத் திட்டத்தைத் தயாரித்திருந்தோம். மாநில அரசாங்கங்களுடன் அண்மையில் தொடர்ச்சியாக விவாதங்கள் நடத்திய திட்டக் கமிஷன் நமது மாநில நான்காம் ஐந்தாண்டுத் திட்ட வரைவிற்குத் தற்காலிக ஒப்புதல் வழங்கியுள்ளது. மாநில நான்காம் திட்டத்தில் ஒதுக்கக் கருதியுள்ள முதலீடு 564 கோடி ரூபாய் அளவில் உள்ளது. இதில் மத்திய அரசாங்கம் 250 கோடி ரூபாய் அளவிற்கு உதவியளிக்கும். எஞ்சிய 314 கோடி ரூபாயை மாநில அரசாங்கமே திரட்ட வேண்டும். இவ்விவாதங்களுக்குப் பின்னர், மத்திய அரசாங்கம் ஊக்குவிக்கும் சில திட்டங்களின்கீழ் ஒதுக்கியுள்ள முதலீடுகளை, மாநில அரசாங்கத் துறைக்கு அவற்றிற் கான நிதி ஆதாரங்களோடு மாற்றுவது குறித்து, திட்டக் கமிஷன் சில முடிவுகளைச் செய்துள்ளது. இந்த நடைமுறையின் மூலம் பற்பல மாநிலங்களுக்குக் கிடைக்கக்கூடிய கூடுதல் தொகைகளைக் கணக்கிட்டு திட்டக் கமிஷன் இன்னும் தெரிவிக்கவில்லை. அவ்வாறு ஏற்படும் மாற்றங்களையும் சேர்த்தால், நமது மாநிலத்தின் நான்காம் ஐந்தாண்டுத் திட்ட முதலீடு 600 கோடி ரூபாய்க்குக் குறையாமல் இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஆயினும், நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் தேசிய வளர்ச்சி மன்றத்தால் (National Development Council) இன்னும் முறையாக ஏற்கப்பட வில்லை. மாநில நான்காம் ஐந்தாண்டுத் திட்ட வரைவினை நமது மாநில அரசாங்கம் விரைவாக மறு ஆய்வு செய்து முறைவைப்பு களில் (priorities) இன்றியமையாத எந்தச் சரிக்கட்டல்கள் தேவையென்பதை ஆலோசிக்கும். இந்த மறு ஆய்வின் பகுதியாக, திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மாநில அரசாங்கத்திற்குத் திரட்டு இற நிதி வசதிகள் எவையென்பதைக் குறித்துப் புதிதாக ஆய்வு செய்யும். இந்த ஆய்விற்கு இயல்பாகவே கொஞ்சகாலம் செல்லு மாதலால், இதன் முடிவுகள் சட்டப் பேரவையின்முன் வைக்கப் படவிருக்கும் முறையான வரவு-செலவுத் திட்டத்தில்தான் காணப் படும்.



1967 மார்ச் 20] [திரு. சி. என். அண்ணாதுரை]

6. தேசிய அளவில், திட்டத்திற்குரிய நிதி ஆதாரங்கள் குறித்து உறுதியற்ற நிலைமை இன்னும் நீடிக்கிறது. வெளிநாட்டு உதவி கிடைக்கும் சாத்தியக்கூறுகளைப் பற்றி நமக்குத் தெளிவாகத் தெரிந்தால்தான் இந்த உறுதியற்ற நிலைமை மறையும். இந்த நிலையில் திட்டக் கமிஷன் மாநில அரசாங்கங்களை 1967-68-க்கு இடைக் காலத் திட்டம் ஒன்றை மட்டுமே தயாரிக்கும்படிக் கேட்டுள்ளது. இந்த இடைக்காலத் திட்டத்தில் வேளாண்மை உற்பத்தித் திட்டங்களுக்காகவும், ஏற்கெனவே கிட்டியுள்ள வெளி நாட்டு உதவியுடன் செயலாற்றப் பட்டுவரும் பாசனத் திட்டங் களுக்காகவும், மின்சாரத் திட்டங்களுக்காகவும் வகை செய்ய வேண்டும் எனத் திட்டக் கமிஷன் கூறியுள்ளது. சமூகப் பணிகள் உட்பட ஏனைய துறைகளுக்கு மாநில அரசாங்கங்களே தங்களால் இயன்ற அளவுக்கு நிதி வகை செய்துகொள்ளும்படியும் விட்டுவிடப் பட்டுள்ளது. தற்போதுள்ள வரி விகிதங்களின் அடிப்படையில், மத்திய அரசாங்கமும் பாராளுமன்றத்தின் முன் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தை மட்டுமே சமர்ப்பிக்கும். அடுத்த ஆண்டிற் குரிய நமது மாநிலத் திட்டத்திற்காக மத்திய அரசாங்க இடைக் கால வரவு-செலவுத் திட்டத்தில் 35 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது நடப்பு ஆண்டிற்காக ஏற்றுக்கொண்ட உதவித் தொகையைக் காட்டிலும் கணிசமாகக் குறைவானதாகும். இத்தகைய சூழ்நிலைகளில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு வரும் திட்ட வேலைகளின் விரைவைத் தணிக்காமல், அவற்றைச் சீர்குலைவின்றி நடத்திக் கொண்டு போவதன் அவசியத்தை மனதிற் கொண்டு, அடுத்த ஆண்டுக்குரிய திட்டத்தின் முதலீடுகளை எவ்வளவு தூரம் குறைக்க லாமென்று நாம் ஆலோசித்திருக்கிறோம். நடப்பு ஆண்டுத் திட்டத் தின் திருத்த முதலீடு ஏறக்குறைய 80 கோடி ரூபாயாகும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கவனித்திருக்கலாம். குறைந்த அளவு வளர்ச்சி வேகத்தை ஏற்றுக்கொண்டாலும், சமூகப் பணிகளின்கீழும் ஏனைய துறைகளிலும் இன்றியமையாத சில புதிய திட்டங்களுக்கு மட்டும் அனுமதி வழங்கினாலும்கூட, அடுத்த ஆண்டுத் திட்டத்தின் அளவு ஏறக்குறைய 90 கோடி ரூபாய் அளவில் நிர்ணயிக்கப்பட்டிருக்கவேண்டும். நிதி வசதி களில் தற்போதுள்ள இடையூறுகளை ஏற்றுக்கொண்ட பின்னரும் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில், திட்ட வேலைகளுக்காக ஒதுக்க வேண்டிய நிதியளவு 75.78 கோடி ரூபாய்க்குக் குறைவாக இருக்க முடியாதென்று நாங்கள் கருதியுள்ளோம். நிதியளவினை இதற்கும் கீழ் குறைத்தால், மின்சாரம், பாசனம், வேளாண்மை உற்பத்தி போன்ற துறைகளில் முக்கியமான திட்டங்களின் விரைவு பெரிதும் பாதிக்கப்பட்டு, ஏற்கனவே செய்துள்ள முதலீடுகளிலிருந்து விரைவில் பயன் கிடைப்பதும் தடைப்படும். இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் அடங்கிய இத்தகைய சுருங்கிய திட்டத்தை நிறைவேற்றக்கூட நிதி ஆதாரங்களில் கோடி ரூபாய் அளவிற்குத் துண்டு விழுகிறது. புதிய திட்டங் களுக்கு வகை செய்து சிறுபாசனம், கிராம மின்சார வசதி

போன்ற முக்கியமான திட்டங்களின்கீழும் செய்துள்ள வெட்டுக்களையும் ஈடுசெய்து, செயல்படுத்துவோமானால் இத்துண்டு மேலும் விரிவடையும். இரண்டு பொதுக் கருத்துக்களை மனதிற் கொண்டு நான் துண்டு விழும் வகையிலுள்ள ஒரு திட்டத்தை வகுத்துள்ளோம். நடப்பு ஆண்டின் இறுதிக் கணக்குகளையொட்டி 1967-68-க்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் திருத்தப்படும் பொழுது, குறிப்பாக இந்த இடைக்காலத்தில் நமது பொருளாதார நிலையில் அபிவிருத்தி ஏற்பட்டால், நமது நிதி வசதி நிலையில் ஓரளவுக்கு மேம்பாடு ஏற்படும் என்று எதிர் பார்க்கிறோம். இரண்டாவதாக, மத்திய அரசாங்கத்தின் முறையான வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப் படுகையில், மாநிலத் திட்டத்திற்கான மத்திய அரசாங்க உதவித் தொகையைக் கூட்டியே தீர வேண்டியிருக்கும். ஐந்தாண்டுக் காலத்திற்கு ஒப்புக்கொண்ட 250 கோடி ரூபாய் மொத்த மத்திய உதவியில், 18 முதல் 19 சத விகிதம் வரையிலாவது திட்டத்தின் இரண்டாவது ஆண்டில் கிட்டுமென்று நாம் சாதாரணமாக எதிர்பார்க்கவேண்டும். எண்ணூர் அனல் மின்சாரத் திட்டம், பரம்பிக்குளம்-ஆளியாறு நீர் மின்சாரத் திட்டம் போன்ற நமது முக்கியமான திட்டங்களுக்கான வேலை மூன்றாம் திட்டக் காலத்திலேயே தொடங்கிவிட்டதால், இவற்றின் கீழ் செய்ய வேண்டிய முதலீடுகள் அடுத்த ஆண்டில் உச்ச நிலையை அடையும். இந்தத் திட்டங்களை நிறைவேற்றும் வேகத்தைத் தடைப்படுத்துவது நாட்டின் நலனுக்கு உகந்ததல்ல. சிறு பாசனம், கிராம மின்சார வசதி—இவற்றின்கீழ் நாம் செய்துள்ள நிதி ஒதுக்கீடுகளும் நடப்பு ஆண்டில் செய்துள்ளவற்றைக் காட்டிலும் மிகக் குறைவாக உள்ளன. வேளாண்மை உற்பத்தியின்கீழ் நமது குறிக்கோள் அளவுகளைச் சாதிக்கவேண்டு மென்றால், நடப்பு ஆண்டில் எட்டிய அளவிற்காவது இவற்றை உயர்த்த வேண்டியிருக்கும். அடுத்த ஆண்டுத் திட்டத்தின் இந்த அம்சங்களையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும்போது, கூடுதல் மத்திய நிதி உதவி அளிக்கப்பட்ட வேண்டுமென்ற நமது வாதம் மேலும் உறுதியடையும். இக் கருத்தை மிக வன்மையோடு எடுத்துக்காட்டி, கூடுதல் நிதி உதவியை வலியுறுத்திக் கேட்டோம். அத்தகைய கூடுதல் நிதி உதவியின் மூலம் 1967-68-க்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இறுதியாக விழும் துண்டில் பெரும் பகுதி அடைபட வேண்டும்.

7. நமது பொருளாதாரத்தின் இன்றைய நிலையில் சமன் செய்யப்பட்ட வரவு-செலவுத் திட்டம் (Balanced Budget) எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் முற்றிலும் உணர்ந்துள்ளோம். இன்றைய இடர் மிகுந்த விலைவாசி நிலையில், பற்றாக்குறை நிதி முறை (deficit financing) சிறிதும் நீடிக்கக்கூடாது. ஆனால், மாநில வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள தற்போதைய பற்றாக்குறை நிலைக்கு, அரசாங்கத்தின் கட்டுக்கு அப்பாற்பட்ட சில சூழ்நிலைகள் காரணமாகும். ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு வரும் திட்ட வேலைகளுக்குக் கிட்டும் மத்திய





உதவியின் அளவு பெரிதும் குறைக்கப்பட்டிருப்பதன் நேரடி விளைவுதான் இந்தப் பற்றாக்குறை நிலை. இவ்வாறு மத்திய உதவியின் அளவு குறைக்கப்படுவது, மத்திய அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்திற்கு நிவாரணம் அளித்து, சமன் படுத்திய வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க மத்திய அரசாங்கத்திற்கு உதவுகிறது. ஆனால், நடைமுறைக்கு ஒவ்வாது மாநிலங்களுக்கு வழங்கப்படும் மத்திய உதவியை வெட்டுவதன்மூலம் மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை நிதிநிலையைக் குறைந்த அளவில் வைத்திருக்க முற்படுவதும், நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப வேலைத் திட்டங்களை மாற்றி யமைக்கவேண்டிய கடினமான பணி முழுவதையும் மாநிலங்களின்மீதே சுமத்துவதும் சரியல்ல. திட்ட வேலைகளையும முறைவைப்புகளையும் பெரிதும் மாற்றியமைப்பதன்மூலமாகவே பற்றாக்குறை நிதிநிலையைத் தவிர்க்க முடியும். இந்த நடைமுறையில் மத்திய அரசாங்கத் திட்டங்களையும், திட்டத்தில் அடங்காத மத்திய அரசாங்கச் செலவினங்களையும்கூட பரிசீலனை செய்ய வேண்டும். மாநில அரசாங்கங்களின் நிதி வசதிகள், மத்திய அரசாங்க நிதி வசதிகள் உட்பட நாட்டின் நிதி வசதிகளை மத்திய அரசாங்கமும் திட்டக் கமிஷனும் மொத்தமாக எடுத்துக்கொண்டு, அவற்றின் முழுப் பலன்களையும் அடையும்வண்ணம் மத்திய திட்டத்துக்கும் மாநிலத் திட்டங்களுக்கும் இடையே அவற்றை மேலும் நியாயமாக எவ்வாறு பகிர்ந்தளிக்க முடியும் என்பதை ஆராயவேண்டும். வேளாண்மை உற்பத்தியை, விரைந்து பலனளிக்கும் திட்டங்களின் வாயிலாகப் பெருக்கி விலைவாசிகளின் மீதுள்ள நெருக்குதலை நீக்குவதே இன்று நம் முன்னுள்ள அவசரத் தேவையாகும். வேளாண்மை வளர்ச்சிக்குத் தொடர்புள்ள திட்ட வேலைகள் பெரும்பாலும் மாநிலத் திட்டங்களின் வரம்புக்குள் அடங்குகின்றன. இந்தத் திட்ட வேலைகளைக் குறைப்பது அறிவுடைமையாகாது. 1967-68-ம் ஆண்டுக்குரிய முறையான திட்டத்தைத் திட்டக்கமிஷன் தயாரிகக முற்படுகையில், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்டு மத்திய அரசாங்கத் துறையிலும் மாநில அரசாங்கத் துறையிலும் உள்ள திட்ட வேலைகளின் உரிய முறை வைப்புகளைப் பற்றி ஒருதலைச்சார்பின்றி முடிவு செய்து, மாநிலங்கள்மிக முதன்மை வாய்ந்த திட்டங்களை நிறைவேற்றும் வகையில் அவைகளுக்குப் போதிய நிதி வசதிகளை வழங்கும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. இந்த நடைமுறையில் மத்திய அரசாங்கத் துறையில் குறைந்த முக்கியத்துவம் பெற்ற சில திட்டங்களைப் பின்தள்ளிப்போட நேரிட்டாலும் ஒத்திப்போட நேரிட்டாலும் அந்தகைய ஒரு நடவடிக்கையை எடுக்க நாம் தயங்கக்கூடாது.

8. திட்டத்தின் கட்டுக்கோப்பிற்குள், உண்மை நிலையை அடிப்படையாகக் கொண்டு, மாநிலங்களுக்கு அதிகமாக நிதி வசதிகளை வழங்குவதன் மூலமாகவே, மாநில அரசாங்கங்கள் ரிசர்வ் பாங்கியிலிருந்து அதிகப் பற்று வாங்கும் சிக்கலுக்குத் தீர்வுகாண முடியும். இச்சிக்கல் குறித்து விறுவிறுப்பான பொது விவாதமும்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 20

சொல்லாடலும் நிகழ்ந்திருக்கின்றன. மாநிலங்கள் தங்கள் நிதிநிலைகளை மிக்க விழிப்போடு நிர்வகிப்பது தேவை என்பதை நாம் குறைத்துச் சொல்லவில்லை. மற்றும், மாநிலங்கள் வளர்ச்சித் திட்டங்களுக்கு வேண்டிய நிதி வசதிகளைத் திரட்டிக் காப்பதற்குத் தங்களால் இயன்ற எல்லாவற்றையும் செய்யவேண்டும் என்பதையும் நாம் குறைத்துச் சொல்லவில்லை. கண்ணும் கருத்தும் கலந்து நிதி நிர்வாகத்தை வளர்க்கும் தங்களுடைய எல்லா முயற்சிகளிலும் மத்திய அரசாங்கத்துடன் நாங்கள் முற்றிலும் ஒத்துழைப்போம். என்றாலும், நிதி விவகாரங்களில் மிக மேம்பட்ட ஒழுங்கைக் கடைப்பிடிக்கிற ஒரு மாநிலம், ஒப்புதல் பெற்ற திட்டங்களை நிறை வேற்றுவதில் இடருற்றால், மத்திய அரசாங்கமும் திட்டக் கமிஷனும் அதன் இடர்ப்பாடுகளை, குறிப்பாக இந்த இடர்ப் பாடுகள் தற்காலிகமானவை என்று தெரியும்போது, அவற்றைச் சமாளிக்கும் வகையில் உதவி செய்ய முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதிகப்பற்று வாங்கும் இப் பிரச்சினையை, அத்தகைய உதவி மனப்பாங்கோடும், அரசியல் மூதறிவோடும் அணுகாமல், வெறும் கணக்கு வழக்குப் பிரச்சினையாகவோ அல்லது கொடுக்கல் வாங்கல் பிரச்சினையாகவோ கருதினால், மாநிலங்களின் வளர்ச்சி வேலைகள் பெறிதும் இடருறும்.

9. மாநிலங்களின் சொற்ப நிதி வசதிகளின்மீது அதிக நெருக் கத்தை உண்டாக்குகிற காரணங்களுள், மாநில அரசாங்கப் பணி யாளர்களின் அகவிலைப்படி வீதங்களை அடிக்கடிச் சரிக்கட்டல் செய்ய வேண்டிய நிலையை நாம் புறக்கணிக்க முடியாது. விலை வாசிகள் உயர்ந்து கொண்டே போகும்போது இச் சரிக்கட்டல்கள் இன்றியமையாதவை—முற்றிலும் நியாயமானவை. 1965-66 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ள அகவிலைப்படி வீத உயர்வுகளெல்லா வற்றையும் நான்காம் நிதிக் கமிஷன் கணக்கில் எடுத்துக்கொண் டுள்ளது. ஆனால், நிதிக் கமிஷனின் முடிவுகள் 1966 ஏப்ரல் 1-ம் தேதியில் இருந்து செயலுக்கு வரத் தொடங்கியதற்கு முன்ன தாகவே மத்திய அரசாங்கம் அகவிலைப்படி வீதங்களை மற்று மொரு முறை உயர்த்த முன்வந்தது. அதன் பின்னர் கஜேந்திர காட்கர் கமிஷனின் இடைக்கால அறிக்கையில் அடங்கியிருந்த பரிந்துரைகளுக்கிணங்க மத்திய அரசாங்கம் தன் பணியாளர்களின் அகவிலைப்படி வீதங்களை மேலும் உயர்த்த ஒப்புக்கொண்டது. நமது மாநில அரசாங்கமும் அதை ஒட்டி அகவிலைப்படி வீதங்களை உயர்த்த வேண்டியிருந்ததால், இந்த இரண்டு உயர்வுகளின் இணைந்த விளைவு அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் வருவாய்க் கணக்கிலும் மொத்தமாகவும் விழுகின்ற துண்டில் எதி ரொலிக்கிறது. நிதிக் கமிஷனின் தீர்ப்பிலிருந்து மாநில அரசாங் கத்துக்குச் சேர்ந்துவரும் கூடுதல் நிதி வசதிகள் இதற்கு முந்திய திட்டக் கால அளவில் ஏற்பட்ட நிறுவனங்களுக்காகவும் பணிகளுக் காகவும் பொறுப்பேற்றுக்கொண்ட செலவினங்களைச் சரிக்கட்டு வதற்காகவே வழங்கப்பட்டுள்ளன. இதனால் மொத்தத்தில், பெரும்பாலான மாநிலங்கள், திட்டத்தில், அடங்காத



1967 மார்ச் 20] [திரு. சி. என். அண்ணாதுரை]

கணக்கின்மீது (Non-Plan Account) எத்தகைய உபரியோ பற்றாக் குறையோ இல்லாமல் செயல்படுகின்ற நிலையிலேயே நிதிக் கமிஷனின் ஏற்பாடுகள் அமைந்துள்ளன. ஆனால், திட்டத்திற்குப் புறம்பான இனங்களில் புதிதாக எழும் பொறுப்புக்களை மாநிலங்கள் ஏற்றுச் சமாளிப்பதற்கான ஏற்பாடுகளுக்கு இப்பொழுது வகை செய்யப்படவில்லை. இன்றைய ஏற்பாடுகளில் உள்ள இப் பெரிய குறைபாட்டினை நான்காவது நிதிக் கமிஷன் உணர்ந்துள்ளது. ஆனால், இப்பிரச்சினை அதன் ஆய்வு வரம்பிற்கு அப்பாற்பட்டதாக இருப்பதால், எந்தவிதமான தீர்வையும் அதனால் எடுத்துக்கூற முடியவில்லை. நிதிக் கமிஷனின் தீர்ப்பு முடிவாகாமலிருக்கிற நிலையில் மாநில அரசாங்கப் பணியாளர் களின் அகவிலைப்படி வீதங்களின் காரணமாக ஏற்படும் கூடுதல் செலவினத்திற்காக மாநிலங்களுக்குப் போதிய நிதி வசதியை ஒதுக்க வேண்டிய தேவை குறித்து மீண்டும் கஜேந்திர காட்கர் கமிஷனின் முன்பு நாங்கள் வலியுறுத்திக் கூறியுள்ளோம். மாநில அளவில் நிதி நிர்வாகத்தைக் கடினமாக்கியுள்ள நெடுநாளைய இந்தச் சிக்கலுக்கு நியாயமான—நீடித்த தீர்வு ஒன்றைக் கமிஷன் தனது இறுதி அறிக்கையில் தெரிவிக்குமென நான் நம்புகிறேன்.

10. 1967–68-க்குரிய முறையான திட்டத்தைத் தயாரித்து ஜூன் திங்கள் வாக்கில் சட்டப் பேரவையின் முன் வைக்கத் தற்போதைய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். அதற்குள் மாநிலத் திட்டத்திற்குக் கிடைக்கக்கூடிய மத்திய உதவியின் அளவு தெளிவாகத் தெரிந்துவிடும். அதற்கப் பால் நமது மக்களின் உள்ளத்தில் அரும்பியுள்ள ஆவல்களையும் நம்பிக்கைகளையும் இன்னும் திறம்பட நிறைவேற்ற முற்படும் ஒரு திட்டத்தை மன்றத்தின் முன் வைக்க முடியும் என்ற என்னுடைய நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு, 1967–68-க்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இம் மன்றம் ஏற்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## 6. கவர்னர் பேருரையின்மீது விவாதம் (தொடர்ச்சி)

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: பெருமதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் அவைமுன் வைத்த 1967–68-ம் ஆண்டின் இடைக்கால நிதி நிலை அறிக்கையின் மீது நாளை விவாதம் நடை பெறும். அடுத்த அலுவல் கவர்னர் அவர்களின் பேருரையின் மீது விவாதம் இரண்டாம் நாளாக இன்று தொடர்ந்து நடை பெறும். இன்னும் ஏறத்தாழ 100 உறுப்பினர்கள் பேசவேண்டி யிருப்பதால் இன்று உரையாற்றல்களில் மதிப்பிற்குரிய உறுப்பினர் களுக்கு கால வரம்பு 10 நிமிடம் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். முந்திய நாள் போலவே நான் இந்த மணியை அடிக்காமல் இருப்பதற்கு மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முதலில் மதிப்பிற்குரிய சௌடி. சுந்தரபாரதி அவர்கள் உரை யாற்றுவார்கள்.

[1967 மார்ச் 20

* **திரு. சௌடி. சுந்தரபாரதி:** கனம் சபாநாயகர் அவர்களே,
**கடந்த 17—3—1967** அன்று கவர்னர் அவர்கள் வாயிலாக நாம்
நமது அரசாங்கத்தினுடைய புதிய கொள்கையைப் பற்றிய
உரையைக் கேட்டோம். எனக்கு முன்பு பேசிய சில அங்கத்தினர்கள்
**புதிதாக சொல்லப்பட்டுள்ள இந்தக் கொள்கைகளிலே தெளிவான
கொள்கை விளக்கங்கள் காணப்படவில்லை,** திட்டங்கள் காணப்பட
வில்லை என்பதைப்பற்றி குறை கூறினார்கள். இந்தக் கொள்கை
விளக்கத்தை ஒரு இடைக்கால கொள்கை விளக்கமாக நாம்
எடுத்துக் கொள்ளவேண்டுமே அல்லாது முழுக் கொள்கை விளக்க
மாக எடுத்துக்கொள்ள முடியாது. ஏனென்று கேட்டால், புதிய
மந்திரி சபை தனது கொள்கைகளையும், திட்டங்களையும் திர்ண
யித்துக்கொள்வதற்கு இன்னும் சற்று காலதாமதம் ஆகும். இது
இடைக்கால பட்ஜெட்டைப் போல, இடைக்கால உரையாகத்
தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மிகப் பணிவோடு
கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த உரையில் பல விஷயங்கள்
சொல்லப்படாமல் விட்டுப்போயிருக்கலாம். பல விஷயங்கள்
தெளிவாக சொல்லப்படாமல் விட்டுப்போயிருக்கலாம். அவற்றைப்
பற்றியெல்லாம் இனிமேல் வரக்கூடிய சந்தர்ப்பங்களில் நாம்
தெளிவான ஒரு விளக்கத்தைக் கேட்க முடியும், காண முடியும்
என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முதலாவதாக கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில்
**சமீபத்தில்** நடந்த நான்காவது பொதுத் தேர்தலைப்பற்றி மிகவும்
நன்றாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தப் பொதுத் தேர்தல் ஒரு
சாதாரண பொதுத் தேர்தல் அல்ல என்பதை நான் குறிப்பிட
விரும்புகிறேன். இந்தப் பொதுத் தேர்தல் மூலம் ஒரு பெரிய
மாறுதல், ரெவல்யூஷன் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. மக்கள் ஒரு
ஊமைப் புரட்சியை நடத்தியிருக்கிறார்கள்—மிகவும் நல்ல முறை
யில் ஒரு ஊமைப் புரட்சியை (ஸ்பீச்லெஸ் ரெவல்யூஷன்)
தமிழ் நாடு மட்டுமல்லாது, இந்தியா பூராவுமே மக்கள் நடத்தி
யிருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். ஏனென்று
கேட்டால் நம்முடைய மக்கள், கவர்னர் அவர்கள் குறிப்பிட்டது
போல், தங்கள் வருங்கால வாழ்வை தாங்களே வகுத்துக்கொள்ள
முடியும் என்பதை முற்றிலும் உணர்ந்துள்ளார்கள். மக்கள் தங்கள்
வருங்காலத்தை நிர்ணயித்துக்கொள்ள தாங்களே தகுதியுள்ளவர்
**கள்** என்பதை நன்றாக அறிந்துள்ளார்கள். அதற்கு உதவியாக பல
பெருந் தலைவர்கள் இருந்தார்கள். அத்தகைய பெரியவர்களை நாம்
இந்தத் தருணத்தில் நினைவு கொள்ளவேண்டும். மக்கள் தங்களது
உரிமையைப் பாதுகாத்துக்கொள்ள தங்களது வருங்காலத்தை
**தாங்களே நிர்ணயித்துக்கொள்ள** முடியும் என்பதை அவர்களுக்கு
எடுத்துக்காட்டிய மகான் நமது மாமேதை ராஜாஜி என்பதை
**நான் இந்த** சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன். மக்கள்
அடிமையைப் போல இல்லாமல், அவர்கள் ஆளும் கட்சிக்கு
அடங்கி நடக்க வேண்டும் என்பது இல்லாமல், தங்களுடைய
குறைகளை அவர்கள் போக்கிக்கொள்ள முடியும், தங்களுக்கு



1967 மார்ச் 20] [திரு. சௌடி. சுந்தரபாரதி]

இருக்கக்கூடிய கஷ்டங்களை போக்கிக்கொள்வதற்கு அவர்களுக்குச்
சந்தர்ப்பம் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி, மக்களை நல்ல
பாதையிலே திருப்பிவிட்ட பெருமை அவரைச் சாரும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இத்தேர்தலில் குறிப்பாக
மாணவர்களுடைய ஒத்துழைப்பை நான் குறிப்பிட விரும்பு
**கிறேன்.** மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்பது
பொதுவான கொள்கையாக இருந்தாலும், அவர்கள் இதில்
அரசியலில் ஈடுபட்டதாகாது. நம்முடைய நாட்டில் ஜனநாயகம்
காப்பாற்றப்படவேண்டும், அப்படி காப்பாற்றப்படுவதற்கு அவர்
களுடைய பங்கை இந்தப் பொதுத் தேர்தல் பொறுத்த அளவில்
அவர்கள் செலுத்தினார்கள். அதனால் மாணவர்கள் அரசியலில்
ஈடுபட்டார்கள் என்று அர்த்தம் ஆகாது. அவர்கள் ஆற்றிய
பணியை நாட்டு மக்களுக்கு ஜனநாயகத்தை வளர்ப்பதற்கு,
காப்பாற்றுவதற்கு, அவர்கள் தந்த தொண்டாகத்தான் எடுத்துக்
கொள்ளவேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்
கொள்ள விரும்புகிறேன். மாணவர்கள் ஆற்றிய தொண்டிற்காக
நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக நான் இங்கு குறிப்பிட விரும்புவது ஒரு முக்கி
யமான விஷயம். அரசாங்கத்திற்கு இருக்கிற முக்கியமான
கடமைகள் மக்களுக்கு நல்ல முறையில் உணவைத் தேடிக்
கொடுப்பது, உடைகளை நல்ல முறையில் வழங்குவது, இருக்க
இடம், கல்வி முதலியவற்றை அவர்களுக்கு வழங்குவது என்பது
மட்டுமல்லாமல், ஜனநாயகத்தைக் காப்பாற்ற மக்களுக்கு எவ்
வாறு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறதோ, அதே மாதிரி சர்க்காருக்கும்
சமமான சந்தர்ப்பம் இருக்கிறது, அந்தக் கடமையும் பொறுப்பும்
அரசாங்கத்திற்கும் இருக்கிறது என்பதை நான் இந்த சமயத்தில்
நினைவூட்ட விரும்புகிறேன். இந்த மாநிலத்தில் முன்பு இருந்த
அரசாங்கம் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதிலே தவறியிருக்
**கிறது.** கடந்த அரசாங்கமானது இந்த மாநிலத்தில் ஆட்சி செய்த
காலத்தில் இரண்டு நகரசபைகளைக் கலைத்திருக்கிறது. திருநெல்
வேலி, அருப்புக்கோட்டை நகரசபைகளில் ஜனநாயகத்தைக்
கொலை செய்தார்கள். அப்படி கொலை செய்யப்பட்ட ஜன
நாயகத்தை காப்பாற்றி, அந்தக் குறையை நிவர்த்தி செய்ய
வேண்டிய ஒரு பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது
என்பதை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். சென்ற
ஆட்சியின் வீழ்ச்சிக்கு அதுவும் ஒரு முக்கியமான காரணம்
என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அரசாங்கம் ஜனநாய
கத்தைக் கொலை செய்ததை மக்கள் மறந்துவிடவில்லை என்பதை
தேர்தல் முடிவு நன்றாக எடுத்துக் காட்டுகிறது. இப்பொழுது
இருக்கக்கூடிய அரசாங்கம் சீக்கிரம் அதை மறுபரிசீலனை செய்து
**என்ன** நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப் பற்றி சொல்ல
**வேண்டும்** என்பது என்னுடைய தாழ்மையான விண்ணப்பம்.
**இது ஒன்றும் பெரிய காரியம்** அல்ல. இதில் எந்த விதமான ஒரு
பெரிய கஷ்டமும் இல்லை, சட்டப் பிரச்னை, சட்ட சிக்கல் எதுவும்

இல்லை. அரசாங்கம் நினைத்தால் உடனே மாற்றம் செய்ய முடியும், நிலைமையை மாற்றி கலைக்கப்பட்ட நகரசபைகளை செயல்பட வைக்க முடியும். அது தான் நல்லது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நமது உணவுக் கொள்கையைப்பற்றி ஒரு சில வார்த்தைகளை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசாங்கமானது இடையில் இருக்கக்கூடிய நேரத்திலே சற்று அவகாசம் எடுத்துக்கொண்டு அதைப்பற்றி தீவிரமாக ஆலோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். முன்பு இருந்த கொள்கையே நீடித்து வருகிறது என்பதைத் நான் இப்பொழுது இருக்கக்கூடிய விளக்க உரையிலிருந்து நாம் காண்கிறோம். அரசாங்கம் இன்னும் சற்று தீவிரமாக சிந்தித்திருந்தால் நன்றாக இருக்கும். முன்பிருந்த அரசாங்கத்தின் கொள்கை தற்போது 'ஷுகர் கோட்டட் ப்ரொக்யூர்மெண்டு பாலிஸி' யாக உருவெடுத்துள்ளது. அத்தகைய பாலிசியையே மீண்டும் நீடித்தால் அதை மக்கள் எவ்வளவு தூரம் எடுத்துக் கொள்வார்கள் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதற்குப் பதிலாக அரசாங்கம் தீவிரமாக சிந்தித்து, ப்ரொக்யூர்மெண்டு பாலிசி அல்லாது, ப்ரீ மார்க்கெட் பாலிசியை கடைப்பிடிக்குமானால், அது மிகவும் நல்லது என்று நினைக்கிறேன். தமிழ் நாட்டு அரசு தமிழ் நாட்டை விட்டு அரிசி வெளியே போகாமல் இருப்பதற்காக பார்டரை ஸீல் செய்வதற்கு வேகமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள். எப்பொழுது பார்டரை இந்த அரசாங்கம் அடைத்துவிட்டதோ, அதற்குப் பின்பு நம்முடைய மாநிலத்திலிருந்து அரிசி வெளியே செல்வதற்குக் காரணம் இல்லை. அரிசியைப் பெறவேண்டும் என்பது தான் பிரச்னையே ஒழிய வேறு பிரச்னை முக்கியமானது அல்ல. பதுக்கப்பட்ட அரிசியை நாம் எப்படி பெறவேண்டும் என்பதற்குக் கடுமையான சட்டத்தைப் போட்டு, அவைகளைப் பெற்று ஜனங்களுக்குக் கொடுக்க செயல்படலாம். தமிழ் நாட்டிலே இருக்கும், தானியத்தை கொள்முதல் மூலம் தான் வாங்கவேண்டும் என்கிற அவசியம் இல்லை. கடுமையான சட்டங்கள் மூலம் பதுக்கல் செய்பவர்களிடமிருந்து அரிசியையும், தானியங்களையும் நாம் பெற முடியும். நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் முக்கியமாக மக்களுடைய அன்பைப் பெற்று இருக்கிறோம். அதைத் துணைக்கொண்டு பதுக்கல்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, அரிசியையும் நெல்லையும் வெளியிலே கொண்டு வரவேண்டும். அதற்கு இப்பொழுது இருக்கும் ப்ரொக்யூர்மெண்ட் பாலிசிதான் அவசியம் என்பது இல்லை. அந்த முறையில் அரசாங்கம் பரிசீலனை செய்து செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, தன்னுடைய கஷ்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, மத்திய சர்க்காருக்கும், தனக்கும் இருக்கும் அதிகார வரம்புகள் பற்றிக் குறிப்பிடக் கூடிய நிலையில், அந்த சிக்கல் இருந்து கொண்டேதான் இருக்கும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அதிகார வரம்புப் பிரச்சினையை ஒரு புருஷன் பெண்சாதிச்





சண்டையாகத்தான் கருதவேண்டுமேயன்றி, ஏதோ தாயாதிச் சண்டைபோலக் கருதிக் கொள்ளக் கூடாது என்று தெரிவிக்க விரும்புகிறேன். மாநில சர்க்காரை மனைவியாக எடுத்துக் கொண்டால், மத்திய சர்க்காரை புருஷனாக எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த முறையில் இந்த பிரச்சினையை அணுகினால் நாட்டிற்கு நலமாக இருக்கும். நாட்டிற்கு நன்மை செய்ய முடியும். இந்தச் சண்டையை வேறு வகையில் எடுத்துக் கொள்ளாமல், நல்ல முறையில் சுமுகமாகத் தீர்த்துக்கொள்வதற்குத் துரிதமாக முயற்சி எடுத்துக்கொண்டால், அதற்கான ஆலோசனையைச் செய்தால் நலமாக இருக்கும்.

அடுத்து, ஒரு சில விஷயங்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தேர்தல் நடந்த நேரத்தில், முன்பு இருந்த அரசாங்கம் சில உத்தரவுகளைப் போட்டிருந்தது. இப்பொழுது வந்திருக்கும் அரசாங்கம் அந்த உத்தரவுகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும். தேர்தல் சமயத்தில் 15-ம் தேதிக்குப் பிறகு போட்ட எல்லா உத்தரவுகளையும் இந்த அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால், அவை எந்த முறையில் நிறைவேற்றப்பட்டன என்று இப்பொழுது சொல்வதற்கில்லை. எந்த நியாயமான உட்கருத்தோடு போடப்பட்டது என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. ஆகவே அவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, தேர்தல் காலத்தில், சில தொகுதிகளில் தேர்தல் முடிவுகள் உடனுக்குடன் தெரிவிக்கப்படாமல், தாமதமாகவே அறிவிக்கப்பட்டன. அப்படி தாமதப்படுத்தி அறிவிக்கப்பட்டதற்கு என்னென்ன காரணங்கள் என்பதையும் பரிசிலனை செய்து இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டியது இந்த அரசாங்கத்தின் கடமை என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, விவசாயத்தைப் பொறுத்தவரையில், பூமிக்கு அடியில் இருக்கும், சப்-சாயில் வாட்டரை எடுத்து மக்களுக்குப் பயன்படச் செய்ய எந்த எந்த வகைகளில் செயல்படவேண்டும் என்று பரிசிலனை செய்ய வேண்டும். இன்றைக்கு நம் மாநிலத்தின் எல்லா இடங்களிலும் பாசனவசதி செய்து தண்ணீர் கொடுக்க முடியாது. அப்படிப்பட்ட பல இடங்கள் இருக்கின்றன. குறிப்பாக இராமநாதபுரம் பகுதியில் பாசனவசதிகள் அதிகமாக இல்லை. ஆகவே, பூமிக்கு அடியில் உள்ள தண்ணீரைமேலே கொண்டு வந்து, எப்படிப் பயன்படுத்த முடியும் என்பதற்கான நடவடிக்கை எடுத்தால், அந்த மக்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க முடியும், மக்களுக்குச் சேவை செய்யமுடியும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, கைத்தறியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்லி என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன். மில்லுக்கும், கைத்தறிக்கும் போட்டி உணர்ச்சி இருக்கிறது. அந்தப் போட்டி உணர்ச்சியை நல்ல முறையிலே திருப்புவதில் கவனம் செலுத்

[திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி] [1967 மார்ச் 20

அதற்கான காரியத்தைக் கட்டாயம் செய்யும். திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே கவர்னர் என்ற அமைப்புக்கு விரோதமாக இருக்கிறது என்று யாரும் கருதவேண்டாம். அண்மையில் பழைய சுப்ரீம் கோர்ட் நீதிபதி திரு. டி. எல். வெங்கட்டராமையா பம்பாயில் பேசுகிறபோது, ஒரு கருத்தை வெளியிட்டார்கள். ராஷ்டிரபதி மூலமாகச் செயல்படும் யூனியன் சர்க்கார் ராஜ்யங்களின் கவர்னர்களை நியமிப்பது அரசியல் அமைப்பின் சமஷ்டித் தன்மைக்கு இசைவானதுதானா என்ற கேள்வியைப் பம்பாயில் எழுப்பியிருக்கிறார்கள். அதோடு கட்சி சார்பற்ற நபர்களையே ராஜ்ய கவர்னர்களாக நியமிப்பதற்கான ஒரு சம்பிரதாயத்தை உருவாக்க வேண்டிய அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்திருக்கிறார்கள். அதோடு தம்முடைய கட்சிக்கு ஆதரவு திரட்டுவதற்காக ஒரு கவர்னர் தம்முடைய பதவியை உபயோகித்தார் என்று சிறிது காலத்திற்கு முன்னால் பரவலாகக் குறை கூறப்பட்டது, என்பதைச் சுட்டிக் காட்டி, இந்தக் கவர்னர் அமைப்பு மாறவேண்டுமென்பதற்குள்ள அவசியத்தை அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தத் தன்மையில் பார்க்கிறபோது பழைய பிரிட்டிஷ்காரர்கள், நியாயவான்கள், நேர்மையானவர்கள் என்பதற்கு வரலாற்றில் இடம் இருக்கிறது. ராபர்ட் கிளைவிற்குப் பிறகு லார்டு வாரன்-ஹேஸ்டிங்ஸ் பொறுப்பேற்றார். அவர்தான் வெள்ளையரின் முதல் கவர்னர்-ஜெனரல். இந்தியாவில் பத்தாண்டுகள் பணியாற்றிய பிறகு அவர் இங்கிலாந்து சென்றார். அவர் மீது எழுப்பப்பட்ட புகார்களுக்காக வெள்ளைக்கார அரசாங்கம், நம்முடைய நாட்டவர் என்ற பாரபட்சம் காட்டாது, அவர் மீது விசாரணை நடத்தினார்கள். அந்த விசாரணை ஏழு வருஷங்கள் நடைபெற்றன. 'ட்ரையல் ஆஃப் வாரன் ஹேஸ்டிங்ஸ்' என்பது நம்முடைய மாணவர்களுக்கு ஆங்காங்கே பாடப்புத்தகமாக இருப்பதையும் பார்க்கிறோம். அந்த அளவுக்குக் கடந்த காலத்திலே வெள்ளையர்கள் காட்டிய நியாய உணர்ச்சி கூட இந்தக் காலத்திலே காங்கிரஸ் சர்க்காரிலே, கவர்னர் அமைப்பிலே இல்லையென்ற காரணத்தால் தான் திராவிட முன்னேற்றக் கழகம் சிந்தித்து இந்த அமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் . . .

திரு. கே. விநாயகம் : ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் சார் .

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : இன்பர்மேஷன் எல்லாம் கடைசியில் கேட்கலாம், நான் இப்போது அதற்கு இடம் கொடுக்கப் போவதில்லை.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : இப்பொழுது 'பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்' என்று கேட்பதற்கு விதிகளில் வழி இல்லை. இன்பர்மேஷன் வேண்டுமென்றால் கேள்வி மூலம் கேட்க வேண்டும். ஒருவர் பேசிக் கொண்டிருக்கும்போது பேசுகிறவர் ஒப்புக் கொண்டாலொழிய இடைமறித்துப் பேசமுடியாது.



திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : பிரிட்டிஷ்காரர்களிடத்திலே இருந்த நேர்மையுணர்ச்சி கூட இந்திய அரசாங்கத்திலே இந்த விஷயத்தைப் பொறுத்தவரை இல்லாத காரணத்தால்தான், இந்த முறை மாற்றியமைக்கப்பட வேண்டுமென்ற எங்களுடைய கருத்துக்களைப் பழைய சுப்ரீம் கோர்ட் நீதிபதி திரு. வெங்கட்டராம அய்யர் அவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல; நம்முடைய மாநிலத்தின் சட்ட நிபுணர் திரு. எம். கே. நம்பியார் அவர்கள் சமீபத்திலே கவர்னர் அமைப்பைப்பற்றி என்ன கூறியிருக்கிறார் என்றால், மத்திய அரசாங்கம் கவர்னர்களை நியமிக்கின்ற காரணத்தால், மத்திய அரசாங்கத்தின் கட்டளைகளுக்கு அடிபணிந்து செயலாற்றுகிற நிலையில் கவர்னர்கள் இருப்பதாகவும், கட்சி ஆட்சி முறையில் வந்த கவர்னர்களுக்கு ஓரளவு விஸ்வாசம் இருப்பது சகஜம் என்ற காரணத்தால், அது சமஷ்டி அரசியல் அமைப்பில் விரும்பத்தக்க அம்சம் அல்ல என்றும் கூறியிருக்கிறார். கவர்னர்கள் மத்திய சர்க்காரின் ஏஜெண்டுகளாக இருக்கக்கூடாது; அவர்கள் ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். இந்தக் கருத்து அடிப்படையில்தான், மக்களுக்குத் தெரிவிக்கின்ற அடிப்படையில்தான் நாங்கள் முன்பு பகிஷ்காரம் செய்தோமே தவிர, அதைத் திருப்பித் திருப்பிச் செய்து கொண்டிருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை.

அரசியல் சட்டத்திலேயே ஆளும் கட்சியாக இருக்கிறவர்கள் செய்கிற முறை, எதிர்க்கட்சியினர் செய்யவேண்டிய முறைகள் என்று இரண்டும் இருக்கின்றன. நேற்று வரை நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம், இனி பேச வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள்தான் பேச வேண்டும், நாங்கள் காரியம் செய்யவேண்டும். அந்த அளவுக்குக் காலம் மாறுபட்டிருக்கிற காரணத்தால்தான் கவர்னர் உரையின் மீது இந்த விவாதம் நல்ல கண்ணியமான முறையில், சிறப்பான முறையில் நடைபெறுவதற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்பாடு செய்து, இன்றையதினம் நடந்து கொண்டிருக்கிறது.

இந்த அடிப்படையில் அமைந்திருக்கிற இந்தப் புதிய அரசாங்கம் எந்த அளவுக்குச் செயல்படும் என்பதைப்பற்றிக் கேட்கும் முறையில், நம்முடைய காங்கிரஸ் நண்பர்கள் 'கொடுத்த வாக்குறுதிகள் எங்கே? மூன்று படி அரிசி எங்கே? இதற்கெல்லாம் நாங்கள் ஆறு மாத கால அவகாசம் கொடுத்திருக்கிறோம்' என்றெல்லாம் பேசினார்கள். ஆறு மாத கால அவகாசம் தந்தாலும் சரி, தராவிட்டாலும் சரி, அதைப்பற்றி நாங்கள் ஒன்றை கவலைப்படவில்லை. ஆனால், இந்த மன்றத்திலே நாங்கள் உறுதியாகச் சொல்ல முடியும், திராவிட முன்னேற்றக் கழகம் என்னென்ன உறுதி மொழிகளைச் சொல்லியதோ அவற்றையெல்லாம் இந்த அரசாங்கம் இந்த ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாகக் கட்டாயம் நிறைவேற்றியே தீரும்.

[திரு. பி. எஸ். மணியன்] [1967 மார்ச் 20

500 ஏக்கரா நிலம் சாகுபடி செய்யப்பட்டு வந்தது.
அந்த ஊற்றுத் தண்ணீரைக் கொண்டு 500 ஏக்கரா
நிலத்தைப் பண்படுத்தி விவசாயம் செய்துவந்த நிலையை நேரில்
சென்று பார்த்தால் தெரியும். ஆனால், ஏனோ தெரியவில்லை, அங்கி
ருக்கக்கூடிய அந்தனை வாய்க்கால்களிலும் சிமெண்டு போட்டு,
இலட்சக்கணக்கான ரூபாய் செலவழித்து, ஊற்றுப் பாசனத்தைத்
தடுத்து நிறுத்தி, 500 ஏக்கராவில் விளைச்சலைத் தடுக்கக்கூடிய
சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. விவசாய உற்பத்தியைப் பெருக்க
வேண்டும் என்று திட்டங்கள் போடுகிற நேரத்திலே, ஒரு லட்சம்
ரூபாய் செலவழித்தால் எவ்வளவு பயன் ஏற்படும் என்று கணக்
கிடுவதை விட்டுவிட்டு, வாய்க்கால்களுக்கு சிமெண்ட் போடுவது,
அணைக்கட்டுத் திட்டத்தை மாற்றியமைப்பது, இருவருக்குச்
சாதகமாக ஆக்குவது போன்ற செயல்களிலே சட்ட மன்ற உறுப்
பினர்கள் அரசாங்கத்தைத் தவறான வழிகளிலே ஈடுபடுத்திய
காரணத்தால்தான், விவசாயத் திட்டங்களுக்கு அதிகமாகச்
செலவழித்தும் கூடப் பலன் ஏற்பட முடியவில்லை என்பதை நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகளுக்குத் தேவையான அளவுக்குக் கடன் வசதி
கிடைக்கக்கூடிய நிலையிலே, விவசாயிகளுக்கு உண்மையான
விவசாயிகளுக்கு, நிலத்திலே பயிர் செய்யக்கூடிய விவசாயி
களுக்கு நேரடியாகக் கடன் வசதிகள் போய்ச் சேருகின்ற நிலை
யிலே, ஏற்பட்டிருக்கும் நில அடமான பாங்குகளோடு அவர்கள்
நேரடித் தொடர்பு வைத்துக்கொள்ள முடியாத நிலையிலே
நாகர்கள் போன்றவர்கள் நில அடமான பாங்குகளுக்கும்
விவசாயிகளுக்கும் நடுவே இருக்கிறார்கள். இந்தத் தவறான
நிலையை மாற்றவேண்டுமானால், அந்தந்தத் தொகுதியில் இருக்கும்
சட்ட மன்ற உறுப்பினர்கள் நில அடமான பாங்குகளோடு
அதிகமான அளவுக்குத் தொடர்பு வைக்கக்கூடிய ஒரு அருமை
யான சந்தர்ப்பத்தை நம்முடைய அரசாங்கம் ஏற்படுத்திக்
கொடுக்கவேண்டும் என்பதை மிகப் பணிவோடு நான் தெரிவிக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

உர விநியோகம் கூட்டுறவு சொசைட்டி மூலமாகவும் மற்ற
சொசைட்டி மூலமாகவும் நடைபெற்று வருகிறது. இந்த
நிலையில், பஞ்சாயத்துத் தேர்தல் நேரத்தில் ஒவ்வொரு ஊரிலும்
இருக்கக்கூடிய கோஷ்டி மனப்பான்மையை வைத்துக்கொண்டு,
கிராமங்களிலே ஒருகோஷ்டியைச் சேர்ந்தவர்களுக்குத்தான்
உரம் கிடைப்பதும், இன்னொரு கோஷ்டியைச் சேர்ந்தவர்களுக்கு,
அதாவது எதிர்ப்பு கோஷ்டியைச் சேர்ந்தவர்களுக்கு உரம் போன்
றவை கிடைக்க முடியாத நிலையும் இருப்பதை அரசாங்கத்தின்
கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகின்றேன். நல்ல விதை
களும், நல்ல உரங்களும் விவசாயிகளுக்கு நேரடியாகக் கிடைக்கக்
கூடிய ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதையும் நான்
மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.



1967 மார்ச் 20] [திரு. பி. எஸ். மணியன்]

இன்றைய அரசாங்கம் சென்ற அரசாங்கத்தினுடைய
இத்தகைய தவறான போக்குகளின் விளைவுகளை நடைமுறையில்
அனுபவித்திருக்கக்கூடிய பெரும் தலைவர்களைக் கொண்ட அரசாங்
கமாக இருக்கிறது. இந்த அரசாங்கம் கடந்த அரசாங்கத்தி
னுடைய இதுபோன்ற சிறு சிறு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்
டிருக்கக் கூடிய விவசாயிகள், தொழிலாளர்கள், குறிப்பாகக்
கைத்தறி நெசவாளர்கள் ஆகியவர்களுடைய பிரச்சினைகளிலே
தலையிட்டு ஆவன செய்ய வேண்டும்.

கைத்தறி நெசவாளர் பிரச்சினை நாடு முழுதும் நிரம்பியிருக்
கைத்தறி நெசவாளர் பிரச்சினையாக இருக்கிறது. கரை போட்ட
க்கக்கூடிய பெரிய பிரச்சினையாக இருக்கிறது. கரை போட்ட
வேஷ்டி, துண்டுகள், சேலைகள் போடுவதற்குக் கைத்தறிக்கு
அனுமதியும், அவைகள் மில்களுக்குக் கொடுக்கப்படாத நிலையும்
உண்டாகுமானால், கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கைத்
தரம் உயருவதற்கு ஒரு நல்ல அமைப்பாக அமையும் என்று
நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கவர்னர் பெருமானுடைய உரையிலே நாட்டு மக்களுக்கு நல்ல
எதிர்காலத்திற்கான நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கை
யைச் செயல்படுத்தத் திறமைமிக்க நம்முடைய பெரும் தலைவர்,
அண்ணா அவர்கள் முதலமைச்சராக வீற்றிருக்கிறார்கள். இந்த
நாட்டுக்கு நல்லதொரு எதிர்காலம் இருக்கும் என்ற நம்பிக்கை
யோடு, கவர்னர் பெருமானுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும்
தீர்மானத்தை ஆதரித்து, என்னுடைய உரையை முடிக்கின்றேன்.
வணக்கம்.

* திரு. டி. மார்டின் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே,
மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின்
மீது விவாதம் நடத்துகின்ற நேரத்தில் இதில் கலந்துகொள்ள
எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக முதற்கண் நான் என்னுடைய
நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஒரு கட்சி ஏற்கனவே ஆட்சி பீடத்தில் இருந்து, பின்பு அது
மறுபடியும் ஆட்சிக்கு வருகின்றபோது, கவர்னர் பெருமானின்
உரையை மக்கள் கவனிப்பது உண்டு. ஆனால், பல காலம் எதிர்க்
கட்சியாகப் பணியாற்றிய பின்பு, ஆட்சி பீடத்திற்கு முதன் முறை
யாக வருகின்றபோது, நிகழ்த்தப்பெறும் கவர்னர் உரையை
மக்கள் மிகவும் விருப்பத்தோடும் ஆவலோடும் பார்ப்பார்கள். அவ்
விதமாக, கவர்னர் பெருமானின் இந்த உரையைக் கவனித்துப்
பார்க்கின்றபோது மக்களெல்லோரும் பெருத்த ஏமாற்றம் அடைந்
திருக்கிறார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.
இந்த உரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடத்தப்
படுகிற உரையா என்று கூட ஒரு சந்தேகம் தோன்றுகிறது.
காரணம் என்னவென்றால், திராவிட முன்னேற்றக் கழகம் 1967-ல்
தன்னுடைய தேர்தல் அறிக்கையில் பல மிகவும் அவசியமான பணி
களையும் திட்டங்களையும் கூறியிருக்கிறது. அந்த அறிக்கையில்
கண்டுள்ள பணிகள், திட்டங்கள் பலவற்றைப்பற்றி மேன்மை
தங்கிய கவர்னர் பெருமான் உரையில் எந்த விதமான அறிகுறியும்
இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. டி. மார்டின்] [1967 மார்ச் 20

கடல் கடந்து, தமிழகத்தை விட்டுப் பிற நாடுகளுக்குச் சென்ற தமிழ் பேசும் நம் மக்கள் அங்கு மிகுந்த இன்னல்களுக்கு ஆளாகி, தங்களுடைய குடியுரிமையையும் இழந்து, தாயகத்திற்குத் திரும்பி வருகிறார்கள். திரும்பி வருகிற அவர்களுக்கு மறுபடியும் வாழ்க்கை நடத்துவதற்கான வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்துவதற்குரிய திட்டங்களோ அல்லது தொழில் வாய்ப்புக்குரிய வசதிகளோ கவர்னர் பெருமானுடைய இந்த உரையில் இருக்குமா என்று பார்த்தால் யாதொருவிதமான அடையாளத்தையும் நாம் கண்டு கொள்ள முடியவில்லை. நம்முடைய முதல்வர் முன்பு ஒரு முறை கூறியிருக்கிறார். "கடல் நீர் ஏன் உப்பானது? அது கடல் கடந்த தமிழர்கள் வடித்த கண்ணீர்" என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால், நான் சொல்லுகிறேன்—கடல் கடந்து சென்றபோது அவர்கள் வடித்தது கண்ணீர், இப்பொழுது அவர்கள் திரும்பி வருகிறபோது வடிப்பது செந்நீர். அவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்கள் எதுவுமே கவர்னர் பெருமான் அவர்களின் உரையில் இல்லை என்பதை நான் இந்தச் சபையில் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன். குறிப்பாக, நெல்லை மாவட்டத்தில் என்னுடைய தொகுதியான சாத்தான்குளம் தொகுதியிலும் கடல் கடந்து சென்று, பின்பு அங்கிருந்து திருப்பியனுப்பப்பட்ட மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுடைய நிலை கவனிக்கப்படவேண்டும்.

அடுத்தாற்போல், கிராமப் புறங்களில் உள்ள நடுத்தர மக்களும், ஏழைகளும் கடன் சுமையால் மிகவும் அவதிப் பட்டுக்கொண்டு இருப்பதை நீக்கி ஒரு குறைந்த கால அளவுக்காவது அவர்களுக்கு விமோசனம் அளிக்கக்கூடிய நிலைமையில் கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவரப் போவதாக தங்களுடைய தேர்தல் அறிக்கையில் அவர்கள் கூறியிருந்தார்கள். அதைப் பற்றியும் எந்த விதமான அறிகுறியும் இல்லை. ஆனால், மிகவும் அவசர அவசரமாக அரசாங்கம் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதாவது, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றவர்களுக்கு மன்னிப்பு அளித்து விடுதலை செய்யும் அந்த உத்தரவைப் பொறுத்த வரையில் இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தி எதிர்ப்புப் போராட்டம் முதலில் தமிழ்நாட்டில் மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டதாக இருந்தாலும், நாளடைவில் அந்தப் போராட்டம் சமூக விரோதிகளின் கையில் சிக்கி, வன்முறை தாண்டவமாடியது. வன்முறை தாண்டவமாடியது என்றால், பொதுச் சொத்துக்களுக்கெல்லாம் சேதம் விளைவிக்கப்பட்டது. இரயில்வேக்களுக்குச் சேதம்; தபாலாபீஸ்களுக்குச் சேதம்; இன்னும் பொதுச் சொத்துக்களெல்லாம் சேதத்திற்கு உள்ளாக்கப் பட்டன. அதோடு, பிறருடைய உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்கக்கூடிய பொறுப்பில் உள்ள, அதற்காகப் பணி யாற்றக்கூடிய போலீஸ் அதிகாரிகளும், போலீஸ்காரர்களும் மிகவும் கொடுமையான சித்தரவதைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். பொதுமக்களுக்கும், அவர்களது உயிர், உடைமைகளுக்கும் பாதுகாப்புக் கொடுக்கும் பணியில் ஈடுபட்ட போலீஸ்காரர்கள், போலீஸ் அதிகாரிகள் தங்கள், தங்கள் உயிருக்குப் பாதுகாப்பு தேடிக்கொள்ள முடியாது போய்விட்டது, அத்தகைய அவல நிலையில் எத்தனை பேர் மாண்டார்கள் என்கிற



1967 மார்ச் 20] [திரு. டி. மார்டின்]

சோக சம்பவத்தை நாம் மறக்கவில்லை. ஆனால், இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடக்கின்றபோது நம்முடைய ஆட்சித் தலைவர்—திராவிட கட்சித் தலைவராக இருந்தவர்—அன்றைக்கு என்ன சொன்னார்கள்? 'வன்முறையைக் கண்டிக்கிறேன். இந்தப் போராட்டத்திற்கும், எங்களுக்கும் சம்பந்தம் இல்லை' என்று அறிவித்தார்கள். அப்போது அந்தப் போராட்டத்தின் பொறுப்பை ஏற்கவில்லை. ஆனால் இன்றைக்கு ஆட்சிப் பீடத்தில் ஏறியவுடனே இந்திப் போராட்டத்தில் தொடரப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்கிக்கொள்கிறபோது, மாணவர்கள், இளம் குழந்தைகள் திடீரென்று ஆத்திரத்தில் செய்துவிட்டார்கள், அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்கிக்கொள்வது என்றால் ஒருவகை ; ஆனால் திட்டமிட்டுச் சதிசெய்து, கொலை, தீ இடுதல் ஆகிய சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்கள் மீதான வழக்குகளை வாபஸ் பெற்று, அவர்களை மன்னித்து விடுதலை செய்வதானது நியாயமாக நடக்கக்கூடிய அரசியல் நிலைமையில் குந்தகம் ஏற்படுத்தும் ஓர் அறிகுறி என்றே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று அந்தக் கைதிகளை விடுதலை செய்கின்ற நேரத்தில் காங்கிரஸ் ஆட்சியில் பதவி ஏற்றவுடன் அப்போதிருந்த அரசியல் கைதிகளை விடுதலை செய்யவில்லையா என்று கேட்கலாம். குறிப்பாக அன்றைக்கு நடந்த போராட்டம் அந்நியனை இந்த நாட்டை விட்டு விரட்டுவதற்காக நடத்தப்பட்ட போராட்டம். அந்தப் போராட்டத்திற்கு மகாத்மா காந்தி அடிகள் பொறுப்பேற்றிருந்தார்கள். ஆனால் இன்று ஆட்சிப் பீடத்தில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி எதிர்ப்புப் போராட்ட வன்முறைச் செயல்களுக்குப் பொறுப்பு எடுக்கவில்லை என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் உணவு உற்பத்தியைப்பற்றிச் சொல்லும்போது கடல் வளத்தை மறந்துவிட்டார்கள். அவர்களுடைய தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட முக்கியமான திட்டங்களில் ஒன்று, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், சூரிய வெப்பத்தை விஞ்ஞான முறையில் பயன்படுத்திக்கொள்ளும் திட்டம், மற்றும் திராவிட முன்னேற்ற கழக திட்டமாகிய கடல் பாசியை அல்வா கிண்டும் திட்டம், கடல் ஆமையைப் பிடித்து, பக்குவப்படுத்தி, கறி சமைத்து அயல் நாட்டுக்கு அனுப்பி அந்நியச்செலாவணி பெற்று அர்ஜன்டைனா அரிசியை இறக்குமதி செய்யும் திட்டம் ஆகியவற்றை இன்று பார்க்க முடியவில்லை. வேதனைமிக்க சம்பவம், அவர்களது தேர்தல் அறிக்கையில் அவர்கள் பதவிக்கு வந்தவுடன் கவர்னர் பதவி ஒழிப்புக்கான பணியைத் தொடர்ந்து ஆற்ற, வெற்றி காணப் பாடுபடப்போவதாகவும், அதற்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பை நாடுகிறோம் என்றும் கூறினார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் பதவிக்கு வந்தவுடனே அந்தக் கொள்கையை மிகவும் அநாயாசமாக காற்றில் பறக்கவிட்டுவிட்டார்கள். அதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை ஓர் அறிக்கைவிடவேண்டும். தேர்தலுக்கு முன்னால் தாங்கள் சொன்ன எந்த எந்தத் திட்டங்களை இப்போது கைவிட்டுவிட்டார்கள் என்பதை விளக்க வேண்டும்.

இன்னும் என்ன என்ன திட்டங்களைக் கைவிடப்போகிறோம் என்றும் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டு மக்கள் மன்றத்திற்குச் சமர்ப்பித்தால் மிகவும் நன்மையாக இருக்கும் என்று கூறிக் கொண்டு மேன்மைதங்கிய கவர்னர் பேருரை விவாதத்தில் கலந்து கொள்ள வாய்ப்பு அளித்ததற்காக அவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. பி. எஸ். தனுஷ்கோடி : கனம் சபைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரை மீது பேசுகின்ற நேரத்தில் சில விஷயங்களைச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன். கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பாக இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்களுடைய மேம் பாடு குறித்து ஒன்றும் குறிப்பிடவில்லை என்றாலும், இந்த அமைச் சரவை அவர்களது முன்னேற்றம் குறித்து பற்பல திட்டங்களிலும் போதுமான கவனம் செலுத்தும் என்றே நம்புகிறேன். கடந்த 20 வருடகால காங்கிரஸ் ஆட்சியில் தீண்டாமை ஒழிப்புச் சட்டம் கடுமையாக இருந்ததே தவிர, நடைமுறையில் சரியான வகையில் அமல் செய்யப்படவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் மிகக் கேவல மான முறையில்தான் நடத்தப்பட்டு வந்தார்கள். பொதுக் கிணறுகளில் தண்ணீர் எடுக்க அனுமதிக்கப்படவில்லை. பொது இடங்களில், பொதுச்சாலைகளில் அவர்கள் சுதந்திரமாக நடக்க அனுமதிக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, இன்றைய தினம் பல்லாயிரக்கணக்கான தாழ்த்தப்பட்டவர்கள் விவசாயக் கூலி களாக இருக்கிறார்கள். அவர்கள் எதிர்பார்த்தது எல்லாம் 1931-ஆம் வருட கராச்சி தீர்மானத்தில் காங்கிரஸ்காரர்கள் கூறியதுபோலச் செய்வார்கள், அதனால் தாழ்த்தப்பட்ட வர்களின் வாழ்க்கையில் மலர்ச்சி ஏற்படும் என்பதுதான். ஆனால் அந்தத் தீர்மானம் காற்றில் விடப்பட்டது. தாழ்த்தப்பட்ட வர்களுடைய பொருளாதார நிலை உயர்த்தப்பட்டதா, அவர் களுடைய வாழ்க்கையில் மலர்ச்சி ஏற்பட்டதா என்றால் இல்லை. குறிப்பாக எங்கள் தஞ்சை மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்க ளுடைய நிலை எப்படி இருக்கிறது என்று சொன்னால், கடந்த இருபது வருட காங்கிரஸ் ஆட்சியில் குடியிருக்கக்கூட இட மில்லாத ஓட்டாண்டிகளாகத்தான் இருந்து வரும் நிலை இருக் கிறது. பெரிய நிலப் பிரபுகளுக்குச் சொந்தமான இடங்களில் அவர்கள் தயவைக்கொண்டு குடியிருப்பதும், அவர்கள் கோபத் திற்கு ஆளாகி வெளியேற்றப்படுவதும், குடிதண்ணீர் வசதியின்றி நடைபாதை வசதியின்றி அவர்கள் படுகிற அல்லல்கள் சொல்ல முடியாது. அதுமாத்திரமல்ல, இன்றையதினம் அந்த ஜில்லாவில் பல மடங்களும், கோயில்களும், அவற்றின் டிரஸ்டிகளும் தாழ்த்தப்பட்ட மக்களை பலவகையில் சீரழித்து வருகிறார்கள். மடங்களையும், கோவில்களையும், ஆளுகின்ற டிரஸ்டிகள் இன்றைய தினம் அந்த மாவட்டத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களைச் சுரண்டி வருகிறார்கள். இன்றையதினம் இந்தச் சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுத்து தாழ்த்தப்பட்ட மக்களது வாழ்க்கை உயர்வு அடைய, அவர்களுக்கு நல்வாழ்வளிக்க முன்வரவேண்டும்.





குறிப்பாக, 20 வருட காங்கிரஸ் ஆட்சியில் ஒரு கட்சி சர்வாதி காரம் நடத்திருக்கிறதே தவிர, தாழ்த்தப்பட்ட மக்கள் நிலை உயர வில்லை. பொதுத்தேர்தல் மூலமாக அந்த நிலைக்கு முடிவு கட்டி விட்டார்கள். இந்த நல்லாட்சியில் தங்கள் நிலை எல்லா வகையிலும் முன்னேற்றம் அடையும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். கோயில், மடங்கள் போன்ற இடங்களில் எல்லாம் இவர் களையும் சரிசமமாகப் போடவேண்டும். சாரி நந்தம் போன்ற இடங்களில் உள்ளவர்களுக்கு குடியிருப்பு மனை பட்டா செய்து 10-30 மு.ப.
தரப்பட வேண்டும். பெரு நிலக்காரர்களின் பிடியில் இருந்து அவர்களை விடுவிக்க வேண்டும். இதைக் கவனத்தில்கொண்டு உடனே செய்தாக வேண்டும். குடியிருப்பு மனைக் கட்டுகள் எல்லாம் அவர்களுக்குச் சொந்தமாகக் கூடிய அளவிலே நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் புதிய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். மனைக்கட்டுகள் வழங்கு வதிலும், ஹாஸ்டல் நடத்துவதிலும் அரிஜனங்களுக்கு மான்யங்கள் வழங்குவதிலும் தவறுகள் ஏற்படுகின்றன. குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. அதையும் மாற்றி யமைக்க வேண்டும். எங்கள் ஜில்லாவிலே பல்லாயிரக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்கள் இருக்கின்றன. அவற்றைத் தாழ்த்தப் பட்ட மக்கள், விவசாயத் தொழிலாளர்கள் இவர்களுக்குப் பகிர்ந்தளித்துக் கொடுப்பதன் மூலம் உணவுப் பிரச்னையைத் தீர்க்க முடியும், விவசாய அபிவிருத்தியைத் தீவிரப்படுத்த முடியும்.

எங்களுடைய ஜில்லாவிலே இருக்கக்கூடிய விவசாயத் தொழி லாளர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. காலையில் வேலைக்குச் சென்றால் பேரம் பேசவேண்டிய நிலைமைதான் இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியிலே அவர்களுக்குக் கூலி நிர்ணயச் சட்டம் கொண்டுவந்தார்கள். ஆனால், அவர்கள் கொண்டுவந்தது எங்கள் ஜில்லாவை நீக்கி மற்ற ஜில்லாக்களுக்குத்தான் கொண்டு வந்திருக்கிறார்கள். எங்கள் ஜில்லாவிலே இருக்கக்கூடியவர் களுக்குக் கொண்டுவரப்படவில்லை. இதையும் கவனித்து, அந்த ஜில்லாவிலே இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி நிர்ணயம் செய்ய ஒரு சட்டம் கொண்டுவரும் இந்தப் புதிய அரசாங்கம் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

எங்கள் ஜில்லாவைப் பொறுத்தமட்டில் கிழக்குக் கடற்கரை ஓரமாக இருக்கக்கூடிய நிலங்கள் அத்தனையும் வடிகால் வசதிகள் இல்லாமல் இருக்கக்கூடிய காரணத்தால், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாழாகிவிடக்கூடிய நிலை இருக்கிறது. இதையும் புதிய அரசாங்கத்தினுடைய மதிப்பிற்குரிய மராமத்து அமைச்சர் அவர்கள் அந்த ஜில்லாவிலுள்ள மராமத்துப் பணிகளைக் காலத் தோடு கரைகளைப் பலப்படுத்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேற்றைய தினம் சின்னஞ் சிறு மிராசுதார்களிடமிருந்து தபால் வந்திருக்கிறது. ஏப்ரல் மாதம் விவசாய காலம். அங்கே இப்பொழுதுதான் அறுவடை முடிந்திருக்கிறது. இன்றைய தினமே உடைந்த கரைகளைப் பலப் படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கவேண்டும். விவசாயம் பெருகு வதற்கும், உற்பத்தியைப் பாதிக்காமல் பார்த்துக் கொள்வதற்கும்

இந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும், இந்தக் கோரிக்கைகளை மக்கள் வைத்திருக்கிருர்கள். தண்ணீர் வருவதற்கு முன்பாகவே காலத்தில் மராமத்து செய்யக்கூடிய வேலைகளைச் செய்ய வேண்டும். புதிய அரசாங்கத்திற்கு என்னுடைய கட்சி உதவிகர மாகவும், பக்கபலமாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஏ: வி. பி. ஆசைத்தம்பி:** மதிப்பிற்குரியச் சட்ட மன்றத் தலைவரவர்களே, அண்மையிலே நடைபெற்ற தேர்தலில் தமிழக அரசியலில் ஒரு மாபெரும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. அதனு டைய விளைவால் கிழக்குப் பக்கம் ஆளுங்கட்சியாக அமர்ந்திருக்க வேண்டியவர்கள், இன்றைய தினம் பரிதாபகாமாக எதிர்க்கட்சி வரிசையிலே உட்கார்ந்திருக்கிருர்கள். இதே மன்றத்திலே பழைய முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் அடிக்கடி பேசுகின்ற பொழுது, இந்த நாட்டிலே நல்ல ஒரு எதிர்க்கட்சி இல்லையே என்ற அவர்களுடைய கவலையைத் தெரிவித்திருக்கிருர்கள். அவர் இந்தச் சமயத்திலே இந்தச் சபையிலே இல்லாவிட்டாலும்கூட, அவருடைய கட்சியைச் சார்ந்தவர்கள் அவருடைய கவலையைப் போக்க நல்ல ஒரு எதிர்க்கட்சியாக நடப்பார்கள் என்று நம்புகிறேன். எதிர்க் கட்சிக்கு உள்ள அழகு, உள்ளதை உள்ளபடி பேசவேண்டுமே தவிர, எதையும் திருத்தியோ அல்லது மாறுபடுத்தியோ பேசுவது அழகான செயல் அல்ல.

திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் வந்தவுடனே மொழிப் போராட்டத்திலே ஈடுபட்டுச் சிறைசென்ற தியாகிகளை விடுதலை செய்யும்படியும், அது சம்பந்தமான வழக்குகளை எல்லாம் வாபஸ் பெறும்படியும் உத்திரவிட்டிருப்பதை நல்ல எதிர்க்கட்சியாக இருக் கிறவர்கள் கட்டாயம் வரவேற்றிருக்க வேண்டும். காரணம், சுதந்திரப் போராட்ட காலத்திலே அதிலே ஈடுபட்டு அதனலே தூக்குமேடை வரைக்கும் சென்றவர்களைக்கூட அவர்கள் விடுதலை செய்ததை அவர்கள் மறந்து இருக்க முடியாது. அதையும் அவர்களே குறிப்பிட்டார்கள். சுதந்திரப் போராட்டமும், மொழிப் போராட்டமும் அவ்வளவு வேறுபட்ட காரியங்கள் அல்ல. இரண்டும் ஒன்றுதான். செய்கிற ஆட்கள்தான் மாறியிருக் கிருர்கள். அதனலே பொதுவாக இருக்கிற நியாயம் மாறிவிட முடியாது.

தமிழக அரசியலிலே ஏற்பட்டிருக்கிற பெரிய மாறுதலை ஒரு பெரிய திருப்பம் என்றுதான் சொல்லவேண்டும். ஆங்கிலத்திலே "ஹிஸ்டரி ரிப்பீட்ஸ் இட்ஸெல்ஃப்" என்று சொல்வார்கள். அதைப்போல தமிழக அரசியலிலே வரலாறு திரும்பி இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றிக் காங்கிரஸ்காரர்கள் தேர்தல் காலத்திலே பேசுகின்றபொழுது, அவர்களுடைய பிறப்பு என்ன, வளர்ப்பு என்ன, அவர்களுக்கு என்ன யோக்கியதை இருக் கிறது என்றெல்லாம் தாக்குறைவாகப் பேசினர்கள். ஆனல் திராவிட முன்னேற்றக் கழகம் எந்தப் பாரம்பரியத்தைச் சேர்ந்தது என்பதை வரலாற்றைத் திருப்பிப் பார்த்தால் நிச்சய மாக அவர்கள் புரிந்து கொள்வார்கள். காங்கிரஸ்காரர்களுக்கு



முன்பு நாடாண்டது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பரம்பரையாகும். உங்களுக்கு எல்லாம் நன்ருகத் தெரியும், இதே சட்ட மன்றத்திலே 1920-லிருந்து 1937 வரையில் பிரிட்டி ஷாரோடு மிகத் திறமையாக இரட்டை ஆட்சி நடத்தி உலகம் பூராவும் பெயர் பெற்றவர்கள் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள். அந்தக் கட்சியின் வழிவழி வந்தவர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத் தைச் சேர்ந்தவர்கள் என்பதை நான் பெருமையாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பனகல் அரசரும், தியாகராயரும், டாக்டர் நாயரும் எந்தப் பரம்பரையில் உதித்தவர்களோ, அந்தப் பரம்பரையில் வந்தவர்கள்தான் நாங்கள். அந்த ஜஸ்டிஸ் கட்சி யினுடைய ஆட்சியை 1937-லே காங்கிரஸ்காரர்கள் கைப்பற்றி ஞர்கள். அது நேற்றுவரை காங்கிரஸ் கையில் இருந்தது. அதை 1967-லே நாங்கள் மீண்டும் கைப்பற்றியிருக்கிறேம். அந்த அளவிலே சரித்திரம் திரும்பியதற்கு அடையாளம்தான் நீங்கள் எதிர்க்கட்சியின் வரிசையில் உட்கார்ந்திருக்கிறீர்கள். ஆகவே நீங்கள் நல்ல எதிர்க்கட்சியாக நடக்கவேண்டுமென்று சொன்னல் உள்ளதை உள்ளபடி பேசி, மக்களிடத்திலே மாற்றிப் பேசாத நிலையிலே செயல்படவேண்டும். இதே மன்றத்திலே கவர்னர் உரையை பகிஷ்கரித்ததைச் சுட்டிக்காட்டி, "நீங்கள் ஏன் இன்றைய தினம் கவர்னர் உரைக்கு ஆதரவாகப் பேசுகிறீர்கள்?" என்று கேட்கிருர்கள். கவர்னர் பதவி எந்தக் காலத்திலே எதற் காக ஏற்படுத்தப்பட்டது என்பதை அறிந்துகொள்ள வரலாறு படிக்கவேண்டும். கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவுக்குள் புகுந்து சண்டைபோட்டு, 1757-லே பிளாஸிச் சண்டைக்குப் பிறகு பிரிட்டிஷார் ஆட்சி இந்தியாவிலே வேரூன்றியதற்கு பிறகு, இங்கி லாந்திலிருந்து வந்த ஒருவர் இந்தியாவிலிருந்துகொண்டே ஆட் சியை நடத்தவேண்டுமென்ற அடிப்படையில் அனுப்பப்பட்ட முதல் கவர்னர் ராபர்ட் கிளைவ் என்பவர். எனவே அந்த முறையில்தான் கவர்னர் என்பவரை நியமித்தார்கள். இதிலேயிருந்து பார்த்தால் கவர்னர் இன்னொரு அரசாங்கத்தின் ஏஜெண்ட் அல்லது கங்காணி என்பதுதான் பொருள் என்பது தெளிவாகும். அந்த அளவில் ஏஜெண்ட் முறையும், கங்காணி முறையும் சுதந்திர நாட்டில் இருக்கக்கூடாது என்ற அடிப்படையில்தான் திராவிட முன் னேற்றக் கழகத்தின் அமைப்பு அதை எதிர்த்து வந்திருக்கிறதே தவிர, வேறு எந்தக் காரணத்திலேயும் கவர்னர் பதவியை நாங்கள் எதிர்க்கவில்லை.

அது மாத்திரமல்ல. ஆதிக்கவாதிகளின் ஏஜெண்டுகளாக இருப் பதைப் போலவே இந்த நாட்டிலே கவர்னர்கள் செயல்பட்டு வரு கிருர்கள் என்பதற்கு ஆதாரங்கள் பல இருக்கின்றன. 1757-ல் கிழக் கிந்தியக் கம்பெனி இந்தியாவிலே கவர்னர் முறையை உண்டாக்க ஏற்பாடு செய்ததைப் போலவே 1947-ல் கிழக்கிந்தியக் கம்பெனி அல்ல, வடக்கு இந்தியக் கம்பெனி கவர்னர் என்ற அமைப்பை இந்த நாட்டிலே ஏற்படுத்தியது. இந்த முறை ஜனநாயகத்திற்கு விரோதமானது, சுதந்திரத்திற்கு விரோதமானது என்ற அடிப் படையிலேதான் திராவிட முன்னேற்றக் கழகம் இதை எதிர்த்து வந்தது. இதற்கும், சட்டபூர்வமாக என்ன செய்ய வேண்டுமோ

உணவுப் பிரச்சினை சம்பந்தப்பட்டமட்டில் என்னென்ன செய்ய வேண்டுமென்ற விவரங்களைப்பற்றி இந்த உரையிலேயே பேசு வதற்கு நேரம் இல்லை. இருந்த போதிலும், சுருக்கமாகச் சொல்லு கிறேன். எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் அத்தனை பேரும் கடவுளின் பெயரில் பிரமாணம் எடுத்தவர்கள். சாஸ்திரத்திலே நம்பிக்கை வைத்தவர்கள். அப்படிப்பட்டவர்களிடத்திலே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எந்தத் தன்மையிலே இருக்கும், இந்த ஆட்சியிலே என் னென்ன நடைபெறும் என்பதைப்பற்றி சாஸ்திர அடிப்படையில் எட்டு அம்சங்கள் நடைபெறப் போகிறது என்பதை வரையறுத்து கணக்கு மூலமாகக் காட்டியிருக்கிறார்கள். அவை :—

(1) திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் நன்றாக, வெற்றி கரமாக, ஸ்திரமாக நடைபெறும்.

(2) பல தொழில்கள் ஆரம்பமாகி மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்கும்.

(3) போலீஸ், இரகசிய போலீஸ், மக்கள் வியக்கும் வகையில் அரிய பெரிய சாதனைகளைச் செய்யும் (இப்போதே பார்க்கிறோம்).

(4) கொள்ளை, கொலை முதலிய குற்றங்கள் மறைந்து மக்கள் நிம்மதியாக வாழ்வார்கள்.

(5) திராவிட முன்னேற்றக் கழக அரசாங்க ஆதரவில் துவக் கப்படும் தொழில்கள் முன்னேறும்.

(6) தனியார் தொழிலுக்கு நல்ல ஆதரவு கிடைக்கும். குடியானவர்கள் குறை கவனிக்கப்பட்டுச் சீர்படுத்தப்படும்.

(7) லஞ்ச ஒழிப்பில் அனைவரும் மகிழும்படி வெற்றி கிடைக்கும்.

(8) உணவுப் பிரச்சினை மக்கள் திருப்திப்படும் அளவுக்குச் சமாளிக்கப்படும். நொய்யரிசி ரூபாய்க்கு மூன்றுபடி கிடைக்கும். இவ்வாறு ஒரு ஜோதிடர் நேற்றையதினம் ஒரு பத்திரிகையில் கணித்துக் காட்டியிருக்கிறார். அதிலே நம்பிக்கையுள்ளவர்கள் அதைப் படித்து ஆறுதலடையும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஜோதிடத்தை நம்பிக் கொண் டிருக்கவில்லை. இந்த அரசாங்கம் நல்ல பல திட்டங்களைக் கொண்டிருக்கிறது. உடனடியாக இந்த நாட்டு மக்களுக்குச் செய்யக் கூடிய அளவுக்கு உள்ள நிலைமைகள் எப்படி இருக்கின்றன என்பதைப் பார்த்தாக வேண்டும். மேல்சபையிலே பேசுகிறபோது, நிர்வாகத் திறமை பெற்றவரும் பார்லிமெண்டரி முறையில் அனுபவம் பெற்றவருமான டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்கள், " நீங்கள் எந்தக் காரியத்தைச் செய்வதாக இருந்தாலும் அவசரப்படாமல் செய்யுங்கள், ஆறு மாதமல்ல, அதற்கு மேல் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள் " என்ற அறிவுரையைக் கூறியிருக்கிறார்கள். இந்த அடிப்படையில் பார்க்கும்போது நாம் இந்த நாட்டினுடைய அரசாங்கம் எந்த நிலைமையில் இருக்கிறது





என்பதைப் பார்த்தாக வேண்டும். காரணம், 20 ஆண்டுகளாகக் காங்கிரஸ் அரசாங்கம் குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருந்த நிலைமைக்குப் பிறகு இந்த அரசாங்கம் வந்திருக்கிறது. இருக்கின்ற நிலைமைகளை எல்லாம் பார்த்து விட்டு, படிப் படியாக, ஒவ்வொரு காரியமாகத்தான் செய்ய முடியும். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக அரசு மக்களுக்குச் சொன்ன ஒவ்வொரு காரியத்தைப்பற்றி யும் கட்டாயம் கவனித்து உரிய காலத்தில் வேண்டுவன செய்யும். ஆகையால் காங்கிரஸ்காரர்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. காங்கிரஸ்காரர்கள் ஏதாவது மக்களிடத்திலே மாட்டி விட்டு விடலாம் என்று நினைக்கவும் தேவையில்லை. அந்தக் காரியம் அவர்களால் நடக்காது என்பதையும் இந்த இடத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருப்பதைப் பார்த்து உள்ளபடியே இந்தியா பூராவிலும் ஓரளவுக்கு அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அச்சத்திற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்து எங்கே மறுபடி யும் திராவிட நாடு கொள்கையை வலியுறுத்துவார்களோ என்ற பயம் ஏற்பட்டிருப்பதுதான். மதிப்புக்குரிய திரு. சுப்பிரமணியம் அவர்களும், மற்றவர்களும் அந்த பயத்தை எழுப்பியிருக்கிறார்கள். எங்கள் கட்சியின் முதல்வரும், பொதுச் செயலாளருமான அறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள் 'அந்தப் பிரச்னையைத் தூக்கி வைத்துவிட்டோம்' என்று. உள்ளபடியே தூக்கி வைத்திருக்கிறார்கள், இல்லையென்று சொல்லவில்லை. திராவிட நாடு பிரச்னைக்கு உயிர் கொடுக்கப்படுவது எங்கள் கையில் இல்லை. வடக்கில் இருக்கிற மத்திய சர்க்கார் கையில் இருக்கிறது. இந்த நாட்டு மக்கள் விருப்பப்படி மொழிப் பிரச்சினை தீர்க்கப் பட்டாக வேண்டும்.

இந்த நாட்டு மக்கள் விருப்பப்படி, இந்த மாநிலத்தில் வேறு கட்சி ஆட்சியாயிற்றே என்ற பாகுபாடு காட்டாமல் நடந்தாக வேண்டும். அந்த அளவிற்குப் பாரபட்சம் இல்லாது இந்த அரசாங்கத்தை மத்திய அரசாங்கம் நடத்துமானால் இந்தப் பிரச்னைக்கு உயிரே வராது. ஆகவே, இந்தப் பிரச்னைக்கு உயிர் கொடுப்பதும் கொடுக்காததும் நம் கையில் இல்லை, வடக்கே ஆளுகிறவர்கள் கையில்தான் இருக்கிறது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் பற்றி அந்தப் பயம் யாருக்குமே தேவை யில்லை.

அண்மையில் இருக்கிற இலங்கையில் நாம் வெற்றி பெற்றவுடன் அங்கு பழைய பிரதம மந்திரியாக இருந்த சிரிமாவோ பண்டார நாயகா அவர்கள் பதறியடித்துக் கொண்டு ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் இந்த மன்றத்தின் மூலம் ஆறுதல் சொல்வோம். திராவிட முன்னேற்றக் கழகத்தினால் இலங்கைக்கோ அல்லது இலங்கை அரசுக்கோ எந்தவிதமான பாதகமும் ஏற்பட்டு விடாது. அந்த அளவிற்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் கருத்துகூட பாயாது. இதை

[திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி] [1967 மார்ச் 20

பன்முறை நாங்கள் எடுத்துக் கூறியிருக்கிறோம். இன்னொன்று கூடச் சொல்வேன், தூது கோஷ்டி ஒன்றை ஏற்படுத்தி இலங்கைக்கு அனுப்பி எங்களைப்பற்றிப் பயப்படாதீர்கள் என்று சொல்வது மட்டுமல்லாது, அங்கு நாடற்றவர்களாக இன்றைக்கு நிர்கதியாக இருக்கிற இலட்சக்கணக்கான தமிழர்களின் பிரச்னைக்கு ஒரு புது முடிவு காண நாம் பாடுபட்டாக வேண்டும். அந்த அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழகம் எல்லாப் பிரச்னைகளையும் கவனிக்கும். அது மட்டுமல்ல, இந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் கட்டாயம் உயர்த்தும். இந்த நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த காலத்தில் சொன்ன ஒவ்வொன்றையும் கவனத்தில் வைத்துக்கொண்டு ஒன்றன்பின் ஒன்றாகச் செய்து இந்த அரசாங்கம் இன்னும் 20, 25 ஆண்டுகளுக்கு எவராலும் அசைக்கமுடியாத அளவிற்கு இதே ஆட்சி தொடர்ந்து நீடிக்கும் (ஆரவாரம்) என்று சொல்லிக்கொண்டு கவர்னர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: கனம் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1963-ம் ஆண்டிலிருந்து கவர்னர் அவர்களின் உரையைப் பார்த்தால் ஒரே சம்பிரதாயமாகவே இருந்து கொண்டிருக்கிறது. அதிக உற்பத்திக்கு வழி செய்யவேண்டும் என்ற கோரிக்கை இருந்துகொண்டே இருக்கிறது. இப்போதுள்ள உரையிலும் அது இருக்கிறது. காரணம் புது சர்க்கார். ஆகவே, பழைய சர்க்காரின் கொள்கைகள் கொஞ்ச காலமாவது இருக்க வேண்டும் என்பது அவர்கள் அபிப்பிராயம். அந்த நிலையில் அவர்கள் அபிப்பிராயத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக உற்பத்தியைப் பெருக்கவேண்டும் எப்படிப் பெருக்குவது? மூன்று, நான்கு காரணங்கள் சொல்லியிருக்கிறார்கள். விதை உற்பத்தியை அதிகமாக்கவேண்டும், நீர்ப்பாசன வசதியை அதிகப்படுத்த வேண்டும், உரம் கூடுதல் கொடுக்கவேண்டும், என்று பழைய பல்லவியே சொல்லப் படுகிறது. கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகளாக இந்தப் பல்லவியையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை ஒருவித நன்மையும் ஏற்படவில்லை. அதற்கு முக்கிய காரணம், சர்க்காரின் போக்குகூட என்று வருத்தத்துடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நிர்வாகத்தில் பல சிக்கல்கள் இருக்கின்றன. வேளாண்மைப் பொருள்கள் உற்பத்தியை எடுத்துக் கொண்டால், ஒரு பக்கம் விவசாய இலாகா, ஒரு பக்கம் ரெவின்யூ இலாகா, ஒரு பக்கம் நீர்ப்பாசன இலாகா, இந்த மூன்று சேர்ந்து தான் அதிகமாக உற்பத்தி செய்யமுடியும். இப்போது இருக்கக் கூடிய முறையை மாற்றுவதற்கு வழி செய்யவேண்டும். ஒன்றின் கீழ் வரும்போது உற்பத்தி அதிகமாகும். ஆகவே அக்ரிகல்ச்சரல் போர்ட் என்று ஒன்று இருந்தால் நலம். எலக்ரிசிட்டி போர்டை எடுத்துக் கொள்ளுங்கள். மேல் இடத்திற்கு வராமல் காரியங்கள் செய்ய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அக்ரிகல்ச்சரல் போர்ட் என்று ஒரு போர்ட் இருந்தால் நலமாக இருக்கும்.



1967 மார்ச் 20] [திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்]

இன்று சீசனல் ஃபோர்காஸ்ட் சரியாகச் செயல்படவில்லை. அது சரியாகச் செயல்பட்டால்தான் என்ன பருவத்தில் என்ன செய்ய முடியும், என்று அறிந்து வேலை செய்ய வாய்ப்பு ஏற்படும். க்ராப் ஃபோர்காஸ்ட் இருக்கிறது, ஒரு சமயத்தில் பம்பர் க்ராப் என்று கூறுகிறார்கள். முடிவில், எதிர்பார்த்தபடி க்ராப் இல்லை என்று சொல்கிறார்கள். இதற்கும் ஏதாவது ஒரு வழி செய்யவேண்டும். ஃபுட் பட்ஜட் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. என்ன வருகிறது, என்ன இருப்பு இருக்கிறது, எப்படி விநியோகம் செய்கிறார்கள், ஃபுட் பட்ஜட் யார் பொறுப்பில் இருக்கிறது பார்த்தால் தெரியவில்லை. ஒரு சமயத்தில் பத்து லட்சம் வரும் என்கிறார்கள், பின்னர் எதிர்பார்த்தபடி வரவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே ஃபுட் பட்ஜட் மிகவும் அவசியம். விவசாய இலாகாவைத் தனியாக இயங்க விடவேண்டும். இன்று விவசாய இலாகா கலெக்டர் பொறுப்பில் இருக்கிறது, ப்ளாக் லெவல் பொறுப்பில் இருக்கிறது. இப்படிப் பல இணைப்புகளில் இருப்பதால்தான் அது சரியாகச் செயல்பட முடியாமல் இணைப்புகளில் இதையும் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

இரிகேஷனை எடுத்துக்கொண்டால் ரீ ஆர்கனைசேஷன் அவசியம். இன்று அது நாலைந்து இலாகாக்கள் கையில் இருந்து கொண்டிருக்கிறது. ஃபுட் ப்ரொடக்ஷன் டிப்பார்ட்மெண்ட், மேஜர் இரிகேஷன், மைனர் இரிகேஷன், ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் என்றெல்லாம் ஐந்தாறு இலாகாக்கள் இருக்கின்றன. மேஜர் இரிகேஷன், மைனர் இரிகேஷன் என்று இரண்டாகப் பிரித்தால் நன்கு செயல்படும். ரீ மாடலிங் ஸ்கீம் அவசியம். ஸில்ட் கிளியரன்ஸ் அவசியம்.

கடன் வசதி கொடுப்பது கூட்டுறவு இலாகா மூலம் செயல்படக் கூடிய நிலை இருக்கிறது. கூட்டுறவு இலாகாபற்றி 1961-ல் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அதில் பாரம்பரை பாக்கியதை வைத்துக்கொண்டு இருக்கிற தலைவர்கள் இரண்டு பேருக்கு மேல் இருக்கக்கூடாது என்ற விதி கொண்டுவரப்பட்டது. ஆனால் மசோதா சட்டசபைக்கு வரும்போது பல நண்பர்கள், பாரம்பரை தலைவர்களாக இருப்பவர்கள் எதிர்ப்பைக் காண்பித்ததால் அது கைவிடப்பட்டது. அப்போது மதிப்பிற்குரிய திரு. கல்யாண சுந்தரம் அவர்கள் மதிப்பிற்குரிய கனம் திரு. கோவிந்தன் அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள், பாரம்பரை பாக்கியத்தை வைத்துக்கொள்ளக்கூடாது என்று, ஆறு ஆண்டுகளுக்கு மேல் ஒருவர் தலைவராக இருக்கக்கூடாது, புது ப்ளட் வேண்டுமென்று சொல்லப்பட்டது. அப்பொழுது பரம்பரை பாக்கியதை உள்ள 10, 12 தலைவர்கள் சட்டசபையில் இருந்ததினால் அது கைவிடப்பட்டது. ஆகவே, கூட்டுறவு இலாகா நன்கு செயல்பட வேண்டுமென்றால், 1961-ம் ஆண்டுச் சட்டத்தைப் பரிசீலனை செய்ய சட்டத்தில் கைவிடப்பட்ட விதிகளைமட்டும் அமல் நடத்தினால் போதும். கூட்டுறவு என்பது ஒரு குடும்பத்தின் பாக்கியத்தை என்று இருக்கக் கூடாது. கடன் வசதி கொடுப்பதும் காம்பட்டிட்டிவ் லைனில் இருக்கவேண்டும். கூட்டுறவு முறையில்மட்டும் என்

செய்ய வேண்டும்? ஏன் ஷெட்யூல்ட் பாங்குகளுக்குக் கொடுக்கக் கூடாது? ஷெட்யூல்ட் பாங்குகளுக்குச் சில பாதுகாப்புகள் கொடுக்கப்பட்டு பாங்குகள் மூலமும் செயல்பட வழி செய்ய வேண்டும். அக்ரிகல்ச்சரல் பைனான்ஸ் கார்ப்பரேஷன் இருக்கிறது யாருக்கு அதனால் பிரயோஜனம்? 50,100 ஏக்கர் என்று வைத்து கார்ப்பரேஷன் என்று வைத்து, கடன் வாங்கலாம், லிமிட்டெட் கன்ஸேன்ஸ் வாங்கலாம். ஆனால் ஏழைகளுக்கு அதனால் பயனில்லை. ஆகவே, அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டும்.

விலைவாசி சம்பந்தப்பட்டமட்டில் ரூபாய்க்கு ஒரு படி. அரிசி உற்பத்தி செய்யலாம், அதில் கஷ்டம் இல்லை. நாற்பது ரூபாய்க்கு வாங்கப்பட்ட நெல் சர்க்கார் கணக்குப்படி 68 கே. ஜி. அரிசி கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். 70 பைசா, அவர்கள் கணக்குப்படி ஒரு கிலோவுக்கு அடக்க விலை 70 பைசா. சர்க்கார் ஒரு குவிண்டால் அரிசியை ரூ. 74-68-க்கு விற்கச் சொல்கிறார்கள். அதில் ரூ. 4-68 லாபம் கிடைக்கிறது. 74-க்கு வாங்கி சில்லறைக்கு 78-க்கு விற்கச் சொல்லுகிறார்கள். சில்லரை வியாபாரிக்கு ரூ. 3-32 கிடைக்கிறது. இதுபோக சரக்கு இருக்கிறது. தவிடை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. ஒரு மூட்டை தவிடு 4 அல்லது 5 ரூபாய்க்கு விற்கிறார்கள். இன்றுவரை தவிடை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. மில்லர்களுக்கு மட்டும் ஏன் அதிகச் சலுகை கொடுக்கவேண்டும்? இதை யோசிக்கவேண்டும். எல்லோரும் சமம் என்று சொல்கிறோம். பெரிய நிலச்சுவான்தார்கள் சொல்கிறோம், தனவந்தர்கள்பற்றிச் சொல்கிறோம். எல்லோரும் ஒன்று என்று சொல்கிறோம். ஆனால் ஏன் மில் முதலாளிகளின் அதிக வளர்ச்சிக்கு வழி செய்கிறோம்? எல்லோரும் ஹல்லிங் செய்ய அதிகாரம் கொடுக்கலாம். ஆந்திராவில் 5 ஹார்ஸ் பவர் வைத்து விவசாயி தன் குடிசையிலேயே தான் உற்பத்தி செய்யும் நெல்லை ஹல்லிங் செய்து அரிசியாக கொடுக்கிறான். மானேஜ்மெண்ட் எக்ஸ்பென்டிச்சர் கிடையாது. 40 ரூபாய்க்கு நெல் வாங்கி கமிஷன் 1 ரூபாய் டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ் 50 பைசா, ஹல்லிங், ஹாண்ட்லிங் (handling) 28 பைசா, கிட்டங்கி வாடகை 6 பைசா, அறவைக் கூலி ரூ. 1.36, சாக்கு ரூ. 1-20 பைசா, பின்னர் போனஸ் என்று எல்லாம் சேர்ந்து 47-40 ஆகிறது. சர்க்காருக்கு லாபம் க்விண்டாலுக்கு ரூ. 4-68, சில்லரை வியாபாரிகளுக்கு 8-58 கிடைக்கிறது. எல்லாம் சேர்ந்து ரூபாய் 13-24 ஆகிறது. உற்பத்தி ஆகக்கூடிய இடத்தில் வாங்கும் விலை ரூ. 40. மக்களுக்குப் போய்ச் சேரும்போது ரூ. 13 வித்தியாசத்தில் அதிகமாகப் போகிறது, ரூ. 40-க்கு ரூ. 13 என்றால் 27 சத விகிதம் ஆகிறது. இதை ஏன் குறைக்கக் கூடாது? இதைக் குறைத்தால் வாங்கக் கூடியவர்களுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. எல்லோரும் ஹல்லிங் செய்ய வாய்ப்பு அளிக்க வேண்டும். அந்த மாதிரி ஆந்திராவில் வைத்திருக்கிறார்கள். மூன்று ஏக்கர் நிலம் வைத்திருக்கிறவர்கூட ஹல்லர் வைத்துக் கொள்ளலாம். அந்த இடத்திலேயே நெல்லுக்குப் பதில் அரிசி யாகக் கொடுக்கலாம். எல்லோரும் ஹல்லிங் செய்யக் கூடிய



நிலையில் வைத்தால் அரிசியாகக் கிடைக்கும் ஃப்ரீ மார்க்கெட் வந்துவிடும். ஒரு ரூபாய்க்கு ஒரு படி சர்வசாதாரணமாகக் கொடுக்கலாம். இதை உடனடியாகச் சர்க்கார் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டில் மது விலக்கு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். மது விலக்கு இல்லவே இல்லை. ஊர் தவறாமல் 10 வீட்டுக்கு ஒரு டீக் கடை இருக்கிறது. என்ன டீக்கடை? அரிஷ்டம். எங்கே போனாலும் இருக்கிறது. நம் ரூபாய் எங்கே போகிறது? மலையாளத் திற்குப் போகிறது. இது ரேகக்னைஸ் செய்யப்பட்டது. அரிஷ் டங்கள் பரிசோதனை செய்ய ஒரு கமிட்டி இருக்கிறது. ஊர் தவறாமல், நூறு வீடுகள் இருக்கக்கூடிய இடத்தில்கூட லாரியில் கொண்டுவந்து போடுகிறார்கள். சம்பிரதாய மதுவிலக்கு, பேப்பரில் மது விலக்குச் சட்டம் இருக்கிறதே தவிர நடைமுறையில் இல்லை. எளியவர்கள் பணம் அன்னிய இடத்திற்குப் போகிறது. தப்பித மான நிலைமைக்குப் போகிறது. உடம்பு கெட்டுப் போகிறது. என்ன, சட்டம் இருக்கிறதாகவே தெரியவில்லை. விதிப்படி நட வடிக்கை எடுக்கவேண்டும். நாட்டில் நன்மையைக்கோரி நாட்டின் வளர்ச்சிக்காகத் தியாகம் செய்து நான் இந்த இடத்திற்கு வந்திருக் கிறேன். இந்துக் கட்சி, அந்தக் கட்சியென்று கட்சி முக்கியம் இல்லை. நாடு முன்னேற வேண்டும். இப்போது ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் அமோக வெற்றியுடன் வந்திருக்கிறார்கள். இந்தக் காரியங்களை உடனடியாகச் செய்தால் ஏழை மக்கள் ஆதரிப்பார்கள்.

இண்டஸ்ட்ரீஸை எடுத்துக்கொண்டால், ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் என்று சொல்லுகிறார்கள், லார்ஜ் ஸ்கேல் இண்டஸ்ட் ரீஸ் கார்பரேஷன் என்று சொல்லுகிறார்கள். நான் அபிஷியலுக்கு அங்கு இடமில்லை. மக்களுக்கு மதிப்பில்லை. சட்ட சபைக்கு ஒரு வித அதிகாரமும் கிடையாது. ஏனென்றால் எல்லாம் அதிகாரிகள் பொறுப்பில் இருக்கின்றன. கார்ப்பரேஷன்கள் பூராவும் அதிகாரி கள் பொறுப்பில் இருக்கின்றன. அதுபோக, சில இலாகாக்களை எடுத்துப் பாருங்கள். டெக்னிகல் ஹெட்டை ஏன் முதன்மையாக வைக்கக்கூடாது என்று யோசிக்கவேண்டும். எந்த இலாகாவும் முன்னேறவேண்டுமானால், இலாகாத் தலைமைப் பதவியில் ஆராய்ச்சி சம்பந்தப்பட்டவர்கள், டெக்னிஷியன்ஸ் இருக்க வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். நிர்வாகத்திற்கு யாரை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம், ஆனால் டெக்னிக்கல் சப்ஜெக்ட்டுக்கு டெக்னிக்கல் ஹெட் தான் இருக்கவேண்டும் என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. மு. சின்னசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 17-ம் தேதி கவர்னர் பெருமகனார் ஆற்றிய உரைக்கு நன்றி செலுத்தி, அவைமுன் வைக்கப்பட்டிருக்கும் தீர்மானத்தை ஆதரித்து, அதையொட்டி என்னுடைய கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. மு. சின்னசாமி] [1967 மார்ச் 20

நடந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு பொறுப்பு வாய்ந்த எதிர்க் கட்சியாக அமர்ந்திருக்கிற நண்பர்கள் கவர்னர் உரை மீது நாட்டுக்கு ஏற்ற கருத்தினைச் சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன், ஆனால் ஏமாந்து விட்டேன் என்று சொல்லித்தான் ஆக வேண்டும்.

மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் கடந்த இந்திப் போராட்டம் காரணமாகத் தண்டனை அடைந்தவர்களை விடுதலை செய்தது பற்றியும், தியாகங்கள் செய்ததைப் பற்றியும் களங்கம் ஏற்படும் வகையில் கூறியதற்கு வருத்தப்படுகிறேன். மதிப்புக்குரிய நண்பருக்கு நான் ஒன்று எடுத்துச் சொல்லுவேன். 1942-ம் ஆண்டு தேசியப் போராட்டத்தில் நான் கொஞ்சம் பங்கு கொண்டவன் என்ற வகையில், அனந்தப்பூரிலிருந்து அடோனி வரையில் அத்தனை ரயில்களையும் கவிழ்த்தவன் என்ற முறையில் மூன்று நான்கு ரெயில்வே ஸ்டேஷன்களை அழித்தவன் என்கிற முறையில், நூற்றுக்கணக்கான இராணுவ வீரர்களைக் குண்டுகள் வீசி அழித்தவன் என்ற முறையில், மதிப்புக்குரிய உறுப்பினர்களுக்கெல்லாம் ஒருசில செய்திகளை முன்வைக்க ஆசைப்படுகிறேன்.

(மதிப்பிற்குரிய துணைப் பேரவைத்தலைவர் தலைமை)

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சிறையிலிருந்து வெளி வந்ததும் 1942-ம் ஆண்டு ஏற்பட்ட அத்தனை வன்முறைச் செயல்களுக்கும் நான் முழுப் பொறுப்பை ஏற்கிறேன் என்று நேச பக்தர்களுக்கு வாக்குக் கொடுத்தார்கள். இந்த நாட்டிலே, இந்த மன்றத்திலே முதல் அமைச்சராக அமர்ந்திருக்கிற எங்கள் அண்ணா அவர்கள், வன்முறைச் செயல்கள் நடந்த பிறகு, மிகப் பொறுப்போடு, எதிர்காலத்தில் மாணவர்கள் உள்ளங்களில் ஒரு வன்முறை எண்ணம் ஏற்படக் கூடாது என்பதற்காக, அதற்கெல்லாம் நான் பொறுப்பு இல்லை என்று அறிவித்தார்கள். அதை நாம் மறந்தாலும் சரித்திரம் மறக்காது என்று நான் மரியாதையாகச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல: இந்த மன்றத்திலேயே, காலம் சென்ற ஆந்திர கேசரி பிரகாசம் அவர்கள் முதல் அமைச்சராக இருந்த நேரத்தில் ரெயில்வே ஸ்டேஷன்களை அழித்த நேரத்தில், போலீஸ் ஸ்டேஷன்களை கொளுத்திய நேரத்தில், போலீஸ்காரர்களை அங்கம் அங்கமாக வெட்டிய நேரத்தில், அவர்களுக்கெல்லாம் மன்னிப்புக் கொடுத்தார்கள் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அது மட்டுமல்லாமல், ஆந்திர நாட்டிலே, ஆந்திர நாட்டிலே என்று வேண்டுமென்றே சொல்லவில்லை, உரிய முறையில் சொல்ல விரும்புகிறேன், விவசாயிகள் போராட்டம் நடந்தபோது தூக்கு தண்டனை பெற்ற நண்பர்களுக்கு, காங்கிரஸ் கட்சி அரசியல் ஏற்ற போது, இதே மன்றத்தின் சார்பில் மன்னிப்புக் கொடுத்த சூழ்நிலையை ஞாபகப்படுத்துகிறேன்.

துரதிர்ஷ்டவசமாக எனக்கு எதிரிலே இருப்பவர்களில், 1935-ல் நான் பார்த்தவர்கள் யாரையும் என் எதிரிலே பார்க்கவில்லை, 1939-ல் நான் பார்த்தவர்கள் யாரையும் என் எதிரிலே பார்க்கவில்லை; 1942-ம்



1967 மார்ச் 20] [திரு. மு. சின்னசாமி]

ஆண்டு ஆகஸ்ட் மாதம், 8-ம் தேதி பம்பாய் நகரத்தில் "க்விட் இண்டியா" தீர்மானம் நிறைவேற்றும்போது, நான் மிகப் பெருமையோடு சொல்லுவேன், எங்கள் தோழமைக் கட்சியும், தமிழ் பேசும் தலைவரான ம.பொ.சி. அவர்களைப் பார்த்தேனே தவிர, இந்தத் திருமுகங்களைப் பார்த்தேன் இல்லை என்று சொல்லித்தான் ஆக வேண்டும். "என் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்று சொல்லிய வார்த்தை உண்மையானால், மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பது சரியான கருத்து என்று சொன்னால், இந்த நாட்டிலே 'எம்மொழிப் போராட்டம்' நடக்கும்போது, அதை தேசியப் போராட்டம் என்று கூறுது, மொழிப் போராட்டம் என்றோ, வேறு குறுகிய நோக்கத்தில் போராட்டம் என்றோ சொன்னால், இப்போது கிடைத்திருக்கிற தண்டனையை விட அந்தத் தமிழ் தாய் வேறு தண்டனை கொடுப்பார்கள் என்று சொல்லித்தான் ஆகவேண்டும்.

இந்த மன்றத்திலே மற்றும் ஒரு வேதனைப்படும் செய்தி. மிகப் பெரும் தலைவர் ஒருவர் சொன்னார், இந்த நாட்டின் அரசியல் அதிகாரத்தை படுத்துக்கொண்டே பிடிப்பேன் என்று. அந்த முயற்சியில் மிகப்பெரும் தோல்வி கண்ட பிறகு, டில்லி மாநகரத்திற்குச் சென்று, "மறைந்த மாமனிதர் நேரு பெருமகனார் கொடுத்த வாக்குறுதியை முறையாகச் சட்டமியற்றியிருந்தால், நான் பிறந்த தமிழகத்தில் தோல்வியுற்றிருக்க மாட்டேன், காங்கிரஸ் கட்சிக்குத் தமிழகத்தில் துன்பகரமான தோல்வி ஏற்பட்டிருக்காது" என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். இந்தப் பெரிய மனிதர் மறைந்த மாமனிதர், 'இந்தி பேசாத நிலங்கள் விரும்புகிற வரையில் ஆங்கிலம் இருக்கும் ' என்று சொன்னார்களே, அந்த வாக்குறுதியை இரண்டு ஆண்டுகளுக்கு முன், அகில இந்திய ஆளும் கட்சியின் தலைவர் என்ற முறையில், தன்னுடைய செல்வாக்கினைப் பயன்படுத்தி, அந்தச் சட்டத்தை அன்றே கொண்டுவந்திருந்தால் இந்த நாட்டிலே இந்த சரித்திரம் காணாத, 1942-ம் ஆண்டிலே காணாத இந்த மிகப் பெரிய தேசியப் போராட்டம் நடப்பதற்கு வாய்ப்பில்லாமல் போயிருக்கும், வாழப் பிறந்தவர்கள் 200-க்கும் அதிகமானவர்கள் செத்து மடிந்திருக்கமாட்டார்கள், சில ரெயில்வே ஸ்டேஷன்கள் கொளுத்தப்பட்டிருக்கமாட்டா. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு பொட்டி ஸ்ரீராமுலு அவர்கள் இறந்தார்கள் ஆந்திர மாநிலம் தனியாகப் பிரிக்கப்படவேண்டும் என்பதற்காக. இந்த மன்றத்தில் அப்பொழுது காங்கிரஸ் ஆட்சி அதிகாரத்தில் இருந்தது. அன்றைய முதலமைச்சர் டெலிபோசி மூலம் இது மானப் பிரச்னை, மொழிப் பிரச்னை, இனப் பிரச்னை எனவே போலீஸ் நிர்வாகம் குறுக்கிடாமல் இருக்கவேண்டும் என்று அவசர அவசரமாக ஒரு செய்தி விடுத்தார். அந்தப் பெரிய மனிதர் இன்று எங்களோடு இருக்கிற காரணத்தினால், அதற்கு அரசியல் மரியாதை இருக்குமோ, என்னவோ தெரியாது. நான் ஒன்று சொல்லுவேன். ரூ. 17 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் சேதப் படுத்தப்பட்டன ஆந்திரத்தில் என்பதை தயவு செய்து கவனத்தில்

கொள்ளவேண்டும். அப்பொழுது மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்
கள் முதல் அமைச்சராக இருந்தார்கள். ஆந்திரத்தில் விறு
கொண்டு எழுந்த இளமக்கள் மத்திய ஆட்சிக்குச் சொந்தமான
சொத்துக்கள் அனைத்தையும், திட்டம்போட்டு ரூ. 17 கோடி மதிப்
புள்ள சொத்துக்களை சேதப்படுத்தினார்கள். மிகவும் பெருமை
யோடு சொல்வேன், பொறுப்போடு சொல்வேன், அப்பொழுது
ராஜாஜி அவர்கள் முதல் அமைச்சராக இருந்த காரணத்தினால்
தான் ஒரு துப்பாக்கியிலிருந்து ஒரு குண்டு கூட வெளிவரவில்லை
என்பதை பொறுப்புள்ள எதிர்க்கட்சி நண்பர்கள் கவனத்தில்
வைக்கவேண்டும். எனவே மன்னிப்பு என்பது தமிழ் பேசும்
சமுதாயத்தின் தேசியப் பண்பு.

நான் ஒரு செய்தியை விடுப்பேன். இந்திய ஒருமைப்பாடு,
இந்திய யூனியன், இந்திய கூட்டாட்சியாக இந்தியக் குடிமக்கள்
இருக்கவேண்டுமா, இல்லையா என்ற பிரச்னையை, மதிப்பிற்குரிய
திரு. ஆசைத்தம்பி அவர்கள் எடுத்துக்காட்டியதுபோல, டெல்லி
யில் இருக்கிற பெரியோர்கள் அவசர அவசரமாக முடிவு செய்தாக
வேண்டும். இந்திய துணைக்கண்டத்தில், இந்திய அரசியலமைப்பு
அதிகாரச் சட்டத்திற்கு உட்பட்ட நிலப்பரப்பில், இந்திய சுப்ரீம்
கோர்ட்டு ஆணைகளுக்கு உட்பட்ட நிலப்பரப்பில் பம்பாய் மாகா
ணத்தில், பம்பாய் நகரத்தில் தாராவி வட்டத்தில், தமிழ பேசுகிற
சமுதாயம் என்ற ஒரு காரணத்தினால், சிவசேனா என்ற அமைப்பின்
கீழே குறுகிய நோக்கம் கொண்டு, மொழி வெறி பிடித்து, இன
வெறி பிடித்து பாஷை வெறி பிடித்து தமிழ் பேசும் மக்கள்
சிவசேனா என்ற அமைப்பினால் மானபங்கம் செய்யப்படுகிறார்கள்.
எதிர்க்கட்சி நண்பர்கள் இதை ஒரு பெரிய பிரச்னையாக எடுத்துக்
கொண்டு, அவர்கள் தாய் விடாகிய டெல்லியிலுள்ள பெரியவர்
களிடம் சொல்லி, பம்பாய் தமிழர்களுக்கு பாதுகாப்பு கொடுப்ப
தற்கு அவசர அவசரமான நடவடிக்கையில் ஈடுபடும்படி நான்
பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

உணவுப் பிரச்னையைப்பற்றி கவர்னர் பெருமான் அவர்கள்
அதிக அக்கறை கொடுத்து பேசிய பேச்சுக்கு, நானும் வாராவாரம்
வாங்கிச் சாப்பிடுகிற குடிமகன் என்ற முறையில், ஏழைகளின்
சார்பில் பெரு மகிழ்ச்சியோடு நன்றி செலுத்திக்கொள்கிறேன்.
அதோடு கூட இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.
உணவு சம்பந்தமான பிரச்னை இந்த நாட்டில் இயற்கையாக ஏற்
பட்டது அல்ல. உணவுப் பஞ்சம் வேண்டுமென்றே திட்டமிடப்
பட்டு இந்த நாட்டிலே நிலப்பிரபுக்கள், முதலாளிகள் ஆகியோர்
களுக்கு சாதகமாக ஆட்சி புரியவேண்டும் என்ற கொள்கையின்
அடிப்படையினால் செயற்கையாக ஏற்பட்ட பஞ்சம் என்பதை
நான் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கடந்த
ஆட்சியில் இருந்த நண்பர்கள் கொடுத்த புள்ளிவிவரப்படி தமிழகத்
தைப் பொறுத்தமட்டில் 37 லட்சம் ஏகர் பாசனத்தின் கீழ் கொண்டு
வரப்பட்டது. இருந்தும் எதிர்பாராத ஏமாற்றம் ஏற்பட்டது.
தமிழகத்திலும், இந்திய துணைக்கண்டத்திலும் உணவுப் பஞ்சம்
ஏற்பட்டதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பதைக்
குறிப்பிட விரும்புகிறேன். உதாரணமாக 10 ஆண்டுகளுக்கு முன்பு





தமிழகத்தில் எத்துணை லட்சம் ஏகர் நிலத்தில் கரும்பு உற்பத்தி
செய்யப்பட்டது, 10 ஆண்டுகளுக்குப் பிறகு எத்துணை லட்சம் ஏகர்
நிலத்தில் கரும்பு உற்பத்தி அதிகமாக செய்யப்படுகிறது என்ப
தற்குக் கணக்கு எடுத்துப் பார்த்தால், எனது கூற்றுக்கு சான்று
கிடைக்கும். கரும்பை உற்பத்தி செய்கின்ற நிலங்கள் அனைத்தும்
நல்ல நஞ்சை நிலங்களாகும். நல்ல நஞ்சை நிலங்களில் ஏன்
கரும்பை உற்பத்தி செய்கின்ற அவசியமான சூழ்நிலை ஏற்பட்ட
தென்றால், விவசாய உணவு உற்பத்தி செய்வதிலே நட்டம் ஏற்படு
கிறது, வியாபாரப் பொருள்கள் உற்பத்தி செய்வதிலே கொஞ்சம்
லாபம் வருகிறது என்ற ஒரே காரணம் தான் அதற்கு உண்டு
என்பதை ஆளும் கட்சி மனச்சாட்சியோடு ஒப்புக் கொண்டு தான்
ஆகவேண்டும். அது மாத்திரம் ஒரு முக்கியமான காரணம் அல்ல.
நிலச்சீர்திருத்தம் கொண்டு வருவதற்கு 1½ மாதங்களுக்கு முன்பு
பெருநிலக்கிழார்கள் ஆட்சி செலுத்துபவரை அணுகி 'ஏனைய்யா,
சட்டம் கொண்டுவருவதற்கு முன்பு எங்களுக்கு ஏதாவது ஒரு
வழிவகை செய்யக் கூடாதா?' என்று கெஞ்சிக் கேட்க, தலைவரும்
வழிவகை சொன்னார்: சர்க்கரை மில் தொடங்குவதற்கு லைசென்ஸ்
கொடுத்து, ஆரூரான், பேரூரான் ஆலைகள் என்று ஏற்படுத்தி,
அதிலே 40,000 50,000 ஏகர் கூட்டாகக் கொண்டு வந்து உங்களுக்கு
பாதுகாப்பு தருகிறேன் என்ற ஒரு ஷரத்தும் 10 ஏக்கரில் 10
மாங்கன்றுகளை வைத்து, மாந்தோப்பு என்று எழுதிவிட்டால்
நீங்கள் தப்பித்துக்கொள்ளலாம் என்ற ஒரு ஷரத்தும் அதில் சேர்க்
கப்பட்டது. எனது மாவட்டத்தில் நெய்யாற்றங்கரையில் 7
ஆயிரம் ஏகர் அற்புதமான நிலம் இம்மாதிரி நிலையில் தப்பித்துக்
கொண்டிருக்கிறது. நான் மன்றத்தின் மரியாதைக்காக சொந்தக்
காரரின் பெயரைச் சொல்ல விரும்பவில்லை: புதியதாக சர்க்கரை
ஆலைகள் தொடங்குவதற்கு லைசென்ஸ் கொடுத்து, அந்த ஆலைகளில்
உற்பத்தியாகிற இந்திய சர்க்கரையை அமெரிக்க நாட்டிற்குக்
குறைந்த விலைக்கு விற்று, அங்கே இருந்து பிச்சைக்காரர்கள்
போல் கோதுமையைப் பெறும் திட்டம் 20 ஆண்டுகாலமாக ஆண்டு
சென்ற சர்க்கார் போட்ட திட்டம். அதன் விளைவு தான் இந்த
நாட்டில் உணவுப் பஞ்சத்திற்குக் காரணமே தவிர, வேறு ஒன்று
மில்லை.

மற்றும் ஒரு செய்தி குறிப்பிட விரும்புகிறேன். பாலாண்
வட்டம், ஆப்பக்கூடல் என்ற பகுதியில்-எதிர்க்கட்சித் தலைவர்
அவர்களுக்கு புள்ளிவிவரம் நன்றாகத் தெரியும். உள்ள சர்க்கரை
ஆலையிலிருந்து மத்திய சர்க்காருக்கு ஆண்டு தோறும் ரூ. 60
லட்சம், 70 லட்சம் வரியாகப் போகிறது: 15 சர்க்கரை ஆலைகள்
தமிழகத்தில் இருக்கின்றன. எனவே சராசரி ஆண்டு ஒன்றுக்கு
மத்திய சர்க்காருக்கு சர்க்கரை ஆலைகளின் மூலம் கலால் வரி
(எக்சைஸ் வரி) வாயிலாக ரூ. 9 கோடி, 10 கோடி வருமானம்
போய்ச் சேருகிறது. லட்சக் கணக்கான ஏகர் நிலங்களில் நெல்
விளைச்சலைக் குறைத்து, கரும்பை உற்பத்தி செய்வதால், மத்திய
சர்க்காருக்கு வரி அதிகமாகப் போய்ச் சேருகிறது. மாநில சர்க்
கார் வருவாயையும் குறைத்து, நெல் விளையும் கணக்கினையும்
குறைத்து, வேண்டுமென்றே இந்த நாட்டில் உணவுப் பஞ்சத்தை

**உண்டாக்கிறார்கள்,** உருவாக்கிறார்கள் என்று சொல்வதைத் **தவிர**
வேறு வழி இல்லை. எனவே இந்த ஆட்சி இந்த வேற்றுமையைப்
போக்கி, துணிவோடு காரியங்கள் ஆற்றுவதற்கு, இந்த உணவுப்
பிரச்னையைத் தீர்ப்பதற்கு எதிர்க்கட்சி நண்பர்கள் தோழமை
**உள்ளத்தோடும்,** நாட்டுப்பற்றோடும் ஒத்துழைக்கவேண்டும் **என்று**
**எதிர்க்கட்சித்** தலைவர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.
என்னுடைய துரதிருஷ்டம் நான் இப்பொழுது பேசுகிறேன்.
முதலாவதாகப் பேசியவர்களுக்கு 15 நிமிஷம், பிறகு இரண்டாம்
நாள் பேசுகிறவர்களுக்கு 16 நிமிஷம், மூன்றாவது நாள் பேசுகிற
**வர்களுக்கு 5 நிமிஷம்** என்று ஒருவருக்கொருவர் வித்தியாசம்
**இருக்கிறது** என்றால், மன்றத்தில் இருப்பதால் ஹைகோர்ட்டில்
ரிட் போட முடியாது. எனவே எனது கருத்துக்கள் இன்னும்
ஒன்றிரண்டைக் கூறிக்கொள்ள முடியாத சூழ்நிலையில் இன்னொரு
சந்தர்ப்பத்தில் உணவுப் பிரச்னை சம்பந்தமாக ஐந்து திட்டங்களை
**சமர்ப்பிக்க விரும்புகிறேன்** என்று கூறி, விடைபெறுகிறேன்.
**வணக்கம்:**

* **திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** பெருமதிப்பிற்குரிய
மன்றத் தலைவர் அவர்களே, மேன்மைதங்கிய கவர்னர் பெருமான்
அவர்கள் ஆற்றிய உரையை ஒட்டி பலபேர்களும் பலவிதமாக
இதுவரையில் கருத்துக்களையெல்லாம் சொல்லி பேசியிருக்கிறார்கள்.
மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் உரையிலே சில
முன்னுக்குப்பின் முரணான கருத்து வேறுபாடுகள் இருப்பதை
எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதுவரையில் விவசாய **உணவு**
உற்பத்தி குறைந்ததற்குக் காரணம் என்ன, என்னவெல்லாம் செய்
தால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதைப்பற்றியும்
எனது சிற்றறிவுக்கு எட்டியவரையில் சுருக்கமாகக் கூற விரும்பு
கிறேன். கவர்னர் பெருமான் உரையிலே ஐந்தாவது பாராவில்
"உற்பத்தியாளர்களுக்குப் போதிய ஊக்கம் அளிக்கும் வகையிலும்,
சமுதாயத்தில் மிக எளிய நிலையில் உள்ள மக்களுக்கு, நியாயவிலை
களில் நல்ல அரிசி கிடைக்கச் செய்யும் முறையிலும் சிறந்ததோர்
உணவுக் கொள்கையை நாம் உருவாக்கவேண்டும்" என்று குறிப்
பிட்டிருக்கிறார்கள். அதை விட வரவேற்கத்தக்க அம்சம்
வேறொன்றும் இல்லை. உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை
யும், உண்போர்களுக்குக் குறைந்த விலையும் என்கிற வகையில் ஒரு
திட்டம் உருவாக்கப்பட்டால், அது மிக மிக வரவேற்கத்தக்கதாக
இருக்கும். ஆனால், அதற்கு அடுத்த பாராவிலேயே கூறுகிறார்கள்,
கொள்முதல் செய்வதில் சிறுநிலக்கிழார்களும், பெருநிலகிழார்
களும், தியாகம் செய்யவேண்டும் சுமக்கவேண்டும் என்று. இதி
லிருந்து பார்த்தால், உற்பத்தியாளர்களுக்கு குறைந்த விலைதான்
கிடைக்குமோ என்று தோன்றுகிறது. முதலிலே ஊக்கம் அளிக்கப்
படும் என்று சொல்லிவிட்டு, பின்னால், தியாகம் செய்ய வேண்டும்,
சுமக்க வேண்டும் என்று சொல்வதிலிருந்து, உற்பத்தியாளர்களுக்கு
குறைந்த விலையேதான் கொடுக்கப்படுமோ என்ற ஐயம் எழுகிறது.
அதற்கு அவர்கள் ஒப்பவேண்டும் என்றும் சொல்லப் பட்டிருக்
கிறது. உற்பத்தியாளர்களுக்கு இது ஊக்கம் கொடுக்கக் கூடியது
தானா என்பதைச் சற்று சிந்தித்துப்பார்க்க வேண்டும். இந்த





நாட்டிலே யார் யார் எந்த எந்த பொருள்களை உற்பத்தி செய்தா
லும், அசல் விலைக்குக் கீழே கொடுக்க யாருக்கும் முடியாது, அப்படி
வாங்கிக்கொள்ள யாருக்கும் உரிமை கிடையாது. அன்றைக்கு
காங்கிரஸ் கட்சி குடியானவர்களைக் கசக்கிப் பிழியும் காரியங்களைச்
செய்து கொண்டு வந்தது. இன்றும் இன்றைக்கும் அப்படிப் பட்ட
காரியங்களையே செய்தால், அவர்கள் பெற்ற கதியே இங்கும் வர
லாம். ஆகவே, குடியானவர்கள் அசலுக்குக் கீழே குறைந்த விலைக்
குக் கொடுக்கவேண்டும் என்றால் அதைப் பற்றிச் சிந்திக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஊக்கம் அளிக்கப்
பட்டால் உற்பத்தி பெருகும். ஆனால், ஊக்கத்தைக் குறைக்கும்
வகையில் ஏதாவது செய்யப் பட்டால் உற்பத்தி குறையத்தான்
செய்யும்.

மேலும், கவர்னர் உரையிலே, தொழிலாளர்கள், நிலமற்ற
உழவுப்பணியாளர்கள், நிலைத்த வருவாய் பெறுவோர் போன்று
சமுதாயத்தில் எளிதில் அல்லலுக்கு ஆளாகும் பிரிவினருக்கு
இன்றியமையாப் பொருள்களைத் தங்குதடையின்றி வழங்குவதன்
மூலம் விலைவாசியைத் தடுக்க முடியும் என்று கூறப்பட்டு இருக்
கிறது. அப்படி இவர்களைக் காப்பாற்ற வேண்டியிருப்பதால், உற்
பத்தியாளர்கள் குறைந்த விலையில் கொடுக்கக் கடமைப்பட்டிருக்
கிறார்கள் என்று பேசப்படுவது நன்றாகத் தெரிகிறது. உண்மையி
லேயே இன்றைக்கு தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலா
ளர்கள், பெரும்பாலும், கிராமங்களிலிருந்து பட்டணத்தைத் தேடி
வந்தவர்கள். சிறு நிலக்கிழார்களும், விவசாயக் கூலிகளும்
கூலிக்கு வேலை கிடைக்காமல், அந்த நிலையில் நகரத்தை நோக்கி
வந்து இங்கே நல்ல வருவாய் பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.
அவர்கள் கிராமங்களில் வாழ முடியாமல்தான் இங்கே வந்திருக்
கிறார்கள். அப்படிக் கிராமத்தில் இருக்கும் மக்கள் குறைந்த
ஊதியத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கும் நிலையில், சிறுநிலக்
கிழார்களையும் பாதிக்கும் வகையில், அசலுக்குக் கீழே கொடுக்க
வேண்டும் என்பது அங்குள்ள உற்பத்தியைப் பாதிக்கும் நிலையை
உண்டாக்கும். அப்படிச் செய்தால், விவசாயத் தொழிலாளர்
களும், ஊதியத்தை நாடி கெட்டுப் பட்டணம் சேர் என்ற முறையில்
நகரத்தை நாடி வந்தால், சோற்றுப் பஞ்சம் தலைவிரித்தாடாமல்
என்ன செய்யும் என்பதைச் சிந்திக்க வேண்டும். ஆகவே, அவர்
களுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும் என்கிற வகையில், அவர்
களுக்கு நியாயமான விலை கிடைக்கவேண்டும். வாங்குவோர்
களும் கஷ்டப்படாமல் என்ன செய்ய வேண்டும் என்பதை பரி
சீலனை செய்ய வேண்டும். இந்தக் கட்டுப்பாடு, கொள்முதல் இவை
யெல்லாம் இருப்பதால் தான் இடைத்தரகர்கள் கொள்ளை அடிக்
கும் வாய்ப்பு இருக்கிறது. வாங்கும் விலைக்கும், விற்கும் விலைக்கும்
அதிகமான ஏற்றத்தாழ்வு இருக்கிறது. உற்பத்தியாளர்களுக்கு
ஆதாயம் கிடைக்காமல், உற்பத்தியான தானியங்களும் நாசம்
அடையும் வகையில் இருக்கும் கோளாறுகள் அகற்றப்பட
வேண்டும். ஆகவே, அரசாங்கம் அந்தத் துறையில்; உற்பத்தியாளர்
களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், அதே நேரத்திலே உண்
போருக்கு குறைந்த விலையில் பொருள்கள் கிடைக்கவும், நடுத்தர
கர்கள் கொள்ளை அடிக்கும் வாய்ப்பு இல்லாமலும் செய்யக் கூடிய

திட்டத்தை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட திட்டம் எங்கள் மனதிற்குப் பட்டவரையில், இந்த கட்டுப்பாடு, கண்ட்ரோல் இவைகள் கூடாது, இவற்றை எடுத்து விடவேண்டும் என்பதுதான். இந்தக் கட்டுப்பாடு களும், கொள்முதலும் இருக்கும் வரையில், நியாயமான விலை விவ சாயிகளுக்குக் கிடைக்காது. ஒரு செய்தியை நேற்றைய பத்திரி கையில் பார்த்தோம். கனம் முதல் அமைச்சர் வியாபாரிகளிடம், அவர்கள் ரூபாய்க்கு ஒரு பட்டணம் படி அரிசி போடுவதானல், கண்ட்ரோலை எடுத்துவிடுவதாகச் சொன்னதாக பத்திரிகையில் படித்தோம். உண்மையிலேயே வியாபாரிகளுடைய இஷ்டம் போல் விட்டால் ஒரு வேளை அந்த விலைக்கு வந்தாலும் வரலாம். ஆனல், கண்ட்ரோல்கள் இருக்கும்வரை அந்த நிலை வரவே வராது. ஒரு காலத்தில், ஒரு மூட்டை அரிசி விற்றால், கோணிப்பைதான் மிஞ்சும்; வேறு லாபமே கிடையாது. அப்படிப் பட்ட காலமும் இருந்தது. 1942-லே கள்ளிக்கோட்டையில் நான் வியாபாரம் செய்திருக்கிறேன். இரண்டு அந்தர் சர்க்கரை மூட்டை விற்றால் இரண்டு அணா தான் லாபம் கிடைக்கும். அப்படியெல்லாம் வியாபாரிகள் இங்கும் விற்று கஷ்டப்பட்டிருக்கிறார்கள். கொள்ளை லாபம் அடிப்பதற்குக் காரணம், இந்தக் கட்டுப்பாடுகளும், கண்ட் ரோல்களும் தான். உற்பத்தி செய்பவனைத் தண்டனை. அதை வாங்கி நாசம் செய்பவனுக்கு ஊதியம். இவை நீடிக்கும் வரை எந்தவிதமான முன்னேற்றமும் வராது. ஊக்கம் ஏற்படாது. உற்பத்தியில் அக்கறை ஏற்பட்டால்தான் ஊக்கம் வரும். எதையும் வெறும் பேச்சுக்களால் மட்டும் சாதித்து விடமுடியாது. கண்ட் ரோலும் கட்டுப்பாடும் ஒழிந்தால் ஒழிய உற்பத்தி பெருகாது. உற்பத்தியும் பெருகி, நாசம் ஆகாமல் இருக்கும். உற்பத்தியாளர் களுக்கு கட்டுப்படியாகும் விலை கொடுத்தால் தான் அவர்கள் ஊக்கத்துடன் விவசாயத்தில் ஈடுபடுவார்கள். இல்லையென்றால்; தானிய விவசாயத்திற்குப் பதிலாக வேறு வகையில் விவசா யத்தைச் செய்யத் தலைப்படுவார்கள். தானிய உற்பத்தி நடக்காது.

உற்பத்தியைப் பெருக்குவதற்கு, நிலச் சீர்திருத்தச் சட்டம் மேலும் நல்ல முறையில் அமுலாக்கப் படவேண்டும் என்கிற பேச்சுக்கள் எழுகின்றன. காங்கிரஸ் ஆட்சியாளர்கள் 30 எக்கர் என்று சட்டம் போட்டார்கள். அது அதிகமானது; அதை 15, 10 எக்கர் என்று ஆக்கினால் நன்றாக இருக்கும் என்பதை பல பகுதி களிலிருந்தும் பேசியிருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்த வர்களும்; மற்ற சில கட்சிகளைச் சார்ந்தவர்களும், என், எங்களைத் தவிர எல்லோரும் என்றே சொல்லலாம். இந்த மன்றத்திலேயும் இன்னும் பல இடங்களிலும் பேசுகிறார்கள். உண்மையிலேயே, இங்கே பேசுவது ஏதோ பொதுமேடைப் பேச்சோ, அல்லது திண்ணைப் பேச்சோ இல்லை. இங்கே பேசும் போது நியாயத்திற்கும், சட்டத்திற்கும் கட்டுப்பட்டுப் பேசவேண்டும் அல்லது நடை முறையிலே எல்லா வகையிலும் நேர்மைக்குக் கட்டுப்பட்டு பேசவேண்டும். முன்பு 30 எக்கர் என்று சட்டம் செய்து, நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் மூலம் குடியானவர் களுடைய ஜீவாதார உரிமைகளைப் பறித்தது நியாயமல்ல, அரசியல்





சட்டத்திற்குப் பொருந்தாது, என்று இந்திய உயர் நீதிமன்றம்
அழுத்தம் திருத்தமாக தீர்ப்புக் கொடுத்திருக்கிறது. உச்ச வரம்பு
வைப்பது என்பது ஜீவாதார உரிமையைப் பறிப்பதற்கும், அது
சட்ட விரோதமானது என்று சென்ற பெப்ருவரி மாதம் 27-ம் தேதி
தலைமை நீதி மன்றத்திலே தீர்ப்பு கூறப்பட்டிருக்கிறது. ஒரே
மொத்தமாக நடந்துபோன எல்லாக் காரியங்களையும் ரத்து செய்
தால் நெருக்கடி உண்டாகுமே என்று, (doctrine of prospectine)
overruling) என்று முறைப்படி, செய்த தவறுகளை
மன்னித்து விட்டோம், இனிமேல் நாளைக்குச் செய்தால் நிச்சய
மாக அது உயர் நீதி மன்றத்தில் அனுமதிக்கப் படமாட்டாது,
சட்டத்தில் அப்படிச் செய்ய இடம் இல்லை, செய்தால் கண்டிப்போம்
என்று அழுத்தம் திருத்தமான வார்த்தைகளில் தீர்ப்புக் கொடுத்
திருக்கிறார்கள். நாம் சட்ட சபையிலே சட்டத்திற்குக் கட்டுப்பட்டு
நடக்கவேண்டும். (மணியடிக்கப்பட்டது.) தயவு செய்து இன்னும்
ஒரு ஐந்து நிமிஷம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். முன்னால் பேசியவர்களுக்கெல்லாம் கொடுத்திருக்கிறீர் மு.
களே. இங்கு சட்ட மன்றத்திற்கு வந்த நாமெல்லோரும் சட்டத் 11-
திற்குக் கட்டுப்பட்டு நடப்பதாகப் பிரதிக்ஞை எடுத்துக்கொண்
டிருக்கிறோம். ஆகவே, நாம் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க
வேண்டியவர்களாக இருக்கிறோம். நீதி முறைக்கும் நாம் கட்டுப்
பட்டவர்கள். ஆனல், நடை முறைக்கு ஒவ்வாத விஷயங்களெல்
லாம் கூடப் பேசப்படுகின்றன. எது சொன்னாலும், அது சட்டத்
திற்கு ஒப்பதா, நீதிக்கு ஒப்பதா, நடைமுறைக்கு சாத்திய
மானதா என்பதையெல்லாம் சிந்தித்துத்தான் இங்கே பேச
வேண்டும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன்.

குடியானவர்கள் கஷ்டப்பட்டுப் பரம்பரையாகச் சம்பாதித்த
சொத்துக்குப் பத்து ஏக்கர், பதினைந்து ஏக்கர் என்று உச்ச வரம்பு
வைக்கப்படுமானல், அப்பொழுது ஏற்படுகிற நிலையைக் கவனிக்க
வேண்டும். பதினைந்து ஏக்கர் என்றால், பத்தாயிரம் ரூபாய் வரும்படி
தரக்கூடிய தரமான பூமியாகச் சில இடங்களில் இருக்கலாம். சில
இடங்களில் கந்தாயத்திற்குக் கூடக் கட்டாத பூமியாகவும் இருக்
கலாம். இன்னும் பல துறைகளில், எத்தனையோ முறைகளில்
நேர்மை இல்லாமலும் நேர்மையோடும் எளிதாகவும் விளையாட்டாக
வும் எத்தனையோ லட்சக்கணக்கான ரூபாய் சம்பாதித்து, பெரு
வாழ்வு வாழ வாய்ப்புக்களெல்லாம் இருக்கும்போது பரம்பரையாக
இருந்துவரும் ஒரு உரிமையை மாற்றியமைப்பதென்பது குடியான
வர்களுக்கு இழைக்கும் துரோகமாகும் என்று நான் தெரிவித்துக்
கொள்ளுகின்றேன்.

உர விநியோகம் சம்பந்தமாக ஒரு வார்த்தை கூற விரும்பு
கிறேன். இங்கு உர விநியோகம் ஒழுங்காக இல்லை, வீரிய
(ஹைப்ரிட்) விதைகளை உபயோகப்படுத்தினால்தான் நம் நாட்டில்
மிக நன்றாக உற்பத்தி பெருகும் என்றும், உர விநியோகம் மிக
இன்றியமையாதது என்றும், ஏராளமான உரம் தேவை என்றும்,
மத்திய அரசாங்கத்தாலே கூட ஒழுங்காகக் கொடுக்கப்படுவது
இல்லை என்றும் கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில் கூறி

[திரு. நா. கிருஷ்ணசாமி கவுண்டர்] [1967 மார்ச் 20

யிருக்கிறார்கள். உண்மையிலேயே, இந்தத் துறையில் எல்லாவற்றை
யும் அரசாங்கமயமாகவே ஆக்கிவிடாமல் தனியாருக்கும் வாய்ப்பும்
வசதியும் கொடுத்திருந்தால் நன்றாக இருக்கும். கிடைக்கும
உரமோ குறைவு. கிடைக்கும் உரமும் நேர்மையான முறையில்
போகாமல், கள்ள மார்க்கெட்டில்தான் வாங்க வேண்டியிருக்கிறது.
விவசாயத்தைப் பெருக்குவதற்கான பொருள்களைக் குடியான
வர்கள் கள்ள மார்க்கெட்டில் அதிக விலை கொடுத்து வாங்கி,
தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களைக் குறைந்த விலைக்கு விற்க
வேண்டிய நிலையானது நிச்சயமாக மாற வேண்டும்.

வீரிய விதையைப் பொறுத்த மட்டில், நானும் ஒரு உற்பத்தி
யாளன் என்ற முறையில் என்னுடைய அனுபவத்தை ஓரண்டொரு
வார்த்தைகளில் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். சாதாரண
மாக ஒரு ஏக்கரில் விளைகிற உற்பத்தியைப் போல் மூன்று மடங்கு
வீரிய விதைகளின் மூலம் உற்பத்தியாகிறது என்பது உண்மை
தான். நானும் செய்து காட்டி இருக்கிறேன். சாதாரண விவசாயி
களுக்கும் வாய்ப்புக் கொடுக்கவேண்டும் என்று கேட்டபோது பல
பேருக்குச் சலுகை கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டு ஐம்பது
ஏக்கரில விதை உற்பத்தி செய்வதற்காக, நாஷனல ஸீட் கார்ப்ப-
ரேஷன் மூலமாக நமது விவசாய இலாகாவினர் எனக்கு அனுமதி
வழங்கினார்கள். அனுமதி வழங்கி சென்ற நான்கு மாதங்களுக்கு
முனபே ஐம்பது ஏக்கருக்கான விதைக்காக ரூபாய் 3,250 கட்டும்படி
பணித்தார்கள். அதன்படி ரூபாய் 3,250 கட்டிவிட்டேன். ஆனால்,
இன்றுவரை பணம் கட்டியதற்கான அக்னாலெட்ஜ்மென்ட் கூடப்
பெறாமல் நான் இருக்கிறேன். பணத்திற்கான டிராஃப்ட் வாங்கி
அனுப்பிவிட்டேன். பணம் வந்து சேர்ந்தது என்பதற்குக்கூட
பதில இல்லை. எனக்குத் தெரிந்தவரை, பல ரிமைண்டர்களுக்கும்
பதில் இல்லை. "இன்று அது விதைக்கவேண்டிய காலமும் தவறி
விடடது; விதை வேண்டாம" என்று தந்தி கொடுக்கவேண்டிய நிலை
ஏற்பட்டுவிட்டது. ஒரு கிலோ வீரிய விதைச் சோளம் இருக்கு
மானால் ஆயிரம் கிலோ உற்பத்தி செய்ய முடியும். ஒரு ஏக்கருக்கு
மூன்று கிலோ வீரிய விதையே போதுமானது. பல ஆயிரக்கணக்
கான கிலோ வீரிய விதை உற்பத்தி செய்யக்கூடிய வசதி தடைபட்
டிருக்கிறது என்பதற்காகத்தான் நான் இதை எடுத்துக் கூறு
கிறேன். நேற்று கோவைக்குப் போயிருந்தேன். அங்கிருக்கும்
நேஷனல் ஸீட் கார்ப்பரேஷன அதிகாரி—கோவையிலே உள்ளவர்—
அதிகமாக ஏரோப்ளேனில் பறந்துகொண்டிருப்பார். அவர் டெலி-
போனில் கூப்பிட்டு, "இங்கே இன்னும் 200 ஏக்கருக்கு வேண்டிய
விதை இருப்பு இருந்துகொண்டிருக்கிறது" என்று சொன்னார்.
ஆனால் கொடுக்கவில்லை. நேஷனல் ஸீட் கார்பொரேஷன் ஒழுங்
காகப் பணி புரியாத காரணத்தால், தமிழ்நாட்டிலுள்ள குடியான
வர்கள் நாசமடையக் கூடிய நிலை ஏற்படுகிறது. விதை உற்பத்தி
தடைப்பட்டு, நாட்டில் உணவு உற்பத்தி பெருமளவிற்குப் பாதிக்கப்
படுகிறது என்று சொல்லிக்கொண்டு, எனக்கு அதிகம் பேச தற்
சமயம் வாய்ப்பு இல்லாமற்போனாலும், இவ்வளவு நேரம் பேச
அனுமதித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு விடைபெறு
கிறேன். வணக்கம்.



1967 மார்ச் 20]

* திரு. எம். பூபதி: அன்புகெழுமிய உதவி சபாநாயகர் அவர்
களே, தங்களுக்கும், அமைச்சர்களுக்கும், சக அங்கத்தினர்
களுக்கும் முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்
கொள்ளுகின்றேன்.

தமிழ்நாட்டு கவர்னர் உரை மீது பல அன்பர்கள் பல்வேறு
கோணங்களிலிருந்து போற்றிப் புகழ்ந்து விமரிசனம் செய்துள்
ளார்கள். எங்கள் கம்யூனிஸ்டுக் கட்சி (மார்க்ஸிஸ்டு)க் குழுவின்
உப தலைவர் திரு. சங்கரையா அவர்கள், எங்கள் கட்சி, ஏனைய
தோழமைக் கட்சிகள் ஆகியவைகளின் ஆதரவுடன் திராவிட
முன்னேற்றக் கழகத்தினரால் அமைக்கப்பட்ட மந்திரிசபைக்கு
ஆக்கபூர்வமான ஆலோசனைகளைத் தெரிவிக்கும்போது, அவை
யெல்லாம் கன்ஸ்ட்ரக்டிவ் க்ரிடிஸிஸம்ஸ் என்ற வகையில் எடுத்துக்
கொள்ளப்படவேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

நம் நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தல் உலகம் முழுவதும்
உள்ள மக்களின் கவனத்தைக் கவர்ந்தது என்பது யதார்த்த
உண்மையாகும். அவ்வாறு நடந்த தேர்தலில் ஒரு மாபெரும்
புரட்சிகரமான மாற்றத்தை நமது தேச மக்கள் உருவாக்கியுள்ளார்
கள். இப்புரட்சிகரமான மாற்றத்தில் தமிழ்நாட்டு மக்களும் பங்கு
கொண்டுள்ளார்கள். இந்த மாற்றத்திற்கு உறுதுணையாக இருந்த
பல இலட்சக்கணக்கான ஆசிரியர்கள், குமாஸ்தாக்கள், பல்வேறு
ஊழியர்கள் ஆகிய எல்லோருக்கும் நமது மன்றம் நன்றியறிதலைத்
தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளது. அதே சமயத்தில்,
இந்த மாற்றத்திற்கு உறுதுணையாக இருந்த தாய்மார்கள், மாணவ
மணிகள் முதலிய அத்துணை பேர்களுக்கும் நன்றிசெலுத்த இம்
மன்றம் கடமைப்பட்டுள்ளது. காங்கிரஸ் ஆட்சியின் கொடுமை
களுக்கு ஆளாகி உயிர்நீத்த எண்ணற்ற தியாகிகளுக்கும் இம்
மன்றம் சிறந்த அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. அதே
சமயத்தில், தேர்தல் காலத்தில் நடந்த அநியாயங்களையெல்லாம்
மறந்து விடாமல் அவற்றிற்கேற்ற நடவடிக்கைகளையும் இம்மன்றம்
எடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளது. இத்தேர்தலில் இந்திய
மக்கள் புரட்சிகரமான மாற்றத்தை உருவாக்கிய அதே சமயத்தில்
நமக்குப் புரட்சிகரமான சில கடமைகளையும் நிறைவேற்றவேண்டு
மென்று பணித்துள்ளார்கள். அதாவது, உடனடியாக நமக்கு வயி
றார உண்ண உணவு வேண்டும், அதுவும் போதுமான அளவு உணவு
கிடைத்தாகவேண்டும் என்ற நிலையிலே மக்கள் நம்மை எதிர்நோக்கி
யிருக்கிறார்கள். ஆகவே, இந்த அமைச்சு அதற்குப் பொறுப்
பேற்று, தக்க முறையிலே நடவடிக்கை எடுக்கும் என்று நான்
கருதுகிறேன்.

எனக்கு முன் பேசிய எங்களுடைய தலைவர் திரு. சங்கரையா
அவர்கள், கொள்முதல் திட்டத்தை எவ்வாறு உருவாக்குவது,
அதற்கு என்ன என்ன நடவடிக்கை எடுப்பது சாலச் சிறந்ததாக
இருக்கும் என்பதைத் தெளிவாக்கி உள்ளார்கள். அந்த முறையிலே
நடவடிக்கை எடுப்பதோடு, அதே சமயத்தில், பல ஆயிரக்கணக்கான

ஏக்கர் நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன என்பதையும் கருத்திற
கொண்டு, அவற்றையெல்லாம் ஏழை எளியவர்களுக்கும், விவசாயக்
கூலிகளுக்கும் கொடுத்து, அவர்களுக்குப் போதுமான நிதி
உதவி செய்து, அவைகளிலே விளைச்சலை உருவாக்க நடவடிக்கை
எடுக்க வேண்டும். அதே சமயத்தில், எனக்கு முன் பேசிய தோழர்
திரு. சின்னசாமி அவர்கள், கரும்பு சாகுபடியைப்பற்றித் தெளி
வாக எடுத்துச் சொன்னார்கள். அவைகளையும் எந்த அளவுக்குக்
குறைத்தாக வேண்டும் என்பதையும் சற்று நிதானமாகச் சிந்தித்
தாக வேண்டும். நமக்குத் திட்டமிட்ட பொருளாதாரம் மிகவும்
அவசியம். உண்மையிலேயே நமது தமிழ்நாட்டில் எத்தனை மக்கள்
இருக்கிறார்கள், இத்தனை மக்களுக்கு எவ்வளவு உணவு கொடுத்தாக
வேண்டும், ஆகவே, அதற்குவேண்டிய எந்த அளவிற்குப் பயிர்த்
தொழில் செய்தாகவேண்டும் என்று கணக்கெடுத்து, அதற்குரிய
திட்டத்தை உடனடியாக அமல் செய்வதற்கு நமது அமைச்சு நட
வடிக்கை எடுக்கவேண்டும், அப்பொழுதுதான் மக்கள் நம்மிடத்
திலே எதிர்பார்க்கின்ற காரியத்தை நாம் செவ்வனே செய்ய முடியும்
என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

உணவுக்கு அடுத்தபடியாக மிக முக்கியமானது தொழில். அதில்
சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் நிலை, அந்த விஷயத்தைப்
பற்றி கவர்னர் அவர்கள் உரையில் விடப்பட்டுள்ளது. ஏன் விடப்
பட்டிருக்கிறது என்றால், உண்மையிலேயே மேற்கொண்டு சிந்தனை
செய்து, அதற்கு நல்லதோர் விடை காணவேண்டும் என்று
அமைச்சு நினைத்திருக்கலாம். குறிப்பாகத் தமிழ்நாட்டிலே
மான்செஸ்டர் என்று சொல்லத்தக்க அளவிற்கு இருப்பது கோவை
ஜில்லாவாகும். பல ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான
தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளைக் கொண்டது
கோவை ஜில்லா, அதுவும் குறிப்பாக பஞ்சாலைத் தொழிலாளர்கள்
நிறைந்திருக்கிற பிரதேசம். அந்தப் பிரதேசத்தில் இன்றைக்
கிருக்கும் நிலையைக் குறித்து ஒவ்வொருவரும் சற்று சிந்தித்து,
அதற்குத் தக்க நடவடிக்கையை அமைச்சு எடுப்பதற்கு நாம்
உதவி செய்தாகவேண்டும். பல்வேறு மில்கள் மூடப்பட்டிருக்
கின்றன. பல மில்கள் மாதக்கணக்காக மூடிக்கிடக்கின்றன. பல
மில்கள் வருஷக் கணக்காக மூடிக் கிடக்கின்றன. வாசுதேவன் மில்
சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டது,
அது ஒரு வருஷம் ஒன்பது மாதங்களாக மூடிக் கிடக்கின்றது.
கம்போடியா மில் 1,300 தொழிலாளர்களைக் கொண்டது. அது ஒரு
வருஷம் மூன்று மாதங்களாக மூடிக் கிடக்கின்றது. ஜனார்த்தன
மில் 900 தொழிலாளர்களைக் கொண்டது. அது பதினொரு
மாதங்களாக மூடிக் கிடக்கின்றது. காளீஸ்வரா மில் 1,800
தொழிலாளர்களைக் கொண்டது. அது ஆறு மாதங்களாக மூடிக்
கிடக்கின்றது. சோமசுந்தரா மில் 1,500 தொழிலாளர்களைக்
கோதண்டராம மில் மூன்று மாதங்களாக மூடிக் கிடக்கின்றது.
கோதண்டராம மில் மூன்று மாதங்களாக மூடிக் கிடக்கின்றது
ரங்க விலாஸ் மில், திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் ஆகியவைகளும்
மூடிக்கிடக்கின்றன. இவற்றில் 1,200-க்கு மேல் தொழிலாளர்கள்





வேலை செய்கின்ற மில்கள் மூடிக் கிடக்கின்றன. இவ்வாறு பல
ஆயிரக் கணக்கான குடும்பங்கள் இன்றைக்கு உண்ண உணவு
இல்லாமல் திண்டாடுகின்ற நிலை கோவை ஜில்லாவில்
ஏற்பட்டுள்ளது.

கோவையில் இருக்கும் டெக்ஸ்டூல் என்று சொல்லப்படுகிற
இன்ஜினீரிங் தொழிலில் ஈடுபட்டிருக்கிற ஒரு கம்பெனியில் பல
ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்தார்கள். இப்
பொழுது அவர்களில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்
கெல்லாம் 'வேலையிலிருந்து நீக்கப்படுவீர்கள்' என்று சொல்லி
நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'நோ ஒர்க்' என்று சொல்லி
வேலை இல்லாத நிலையை அவர்களுக்கு உருவாக்கியிருக்கிறார்கள்.
வேலைக்குச் செல்லுகிறவர்களுக்கும் முறையாகச் சம்பளம் கொடுப்
பதில்லை. மூன்று மாதங்களுக்கு மேல் சம்பளம் கொடுக்காத நிலை
அங்கு இருக்கிறது. டெக்ஸ்டூல்ஸ் கம்பெனிக்குத் தொழிற்சங்கம்
நோட்டீஸ் கொடுத்து, முறையாக ஸ்டிரைக் அங்கே நடந்துகொண்
டிருக்கிறது. நேற்றையதினம் அவசரமாகத் தந்தி வந்துள்ளது.
அந்த டெக்ஸ்டூல் கம்பெனியில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட தொழி
லாளர்களுக்கு வேலை இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இம்
மாதிரியாகப் பல கோடிக் கணக்கான பணத்தை அள்ளிக் கொடுக்
கும், வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களும் அவர்களுடைய
குடும்பங்களும் பட்டினி கிடக்கும் அவல நிலை ஏற்பட்டிருக்கிறது.
இதை உடனடியாக நமது அமைச்சு கவனித்து தக்க நடவடிக்கை
எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதேசமயத்தில் இம்மாதிரி இந்த மில்கள் எல்லாம் என்ன அடிப்
படையான காரணங்களை வைத்துக்கொண்டு மூடிக் கிடக்கின்றன
என்பதை பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். முதலாளிகள்
ஊதாரித்தனமான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு அதனால்
மில்கள் மூடிக்கிடக்கும்படியான நிலையை உண்டுபண்ணிவிட்டார்
கள். காரணம் என்ன என்று எங்களுக்குத் தெரியும். அவர்கள்
எக்கச்சக்கமாக சம்பாதித்துவிட்டார்கள். சம்பாதித்த காசை
மீண்டும் தொழில் துறையில் போட விரும்பவில்லை. மேலும் அதிக
மான எக்ஸைஸ் ட்யூடி போடுகிறார்கள், பஞ்சு கிடைக்கவில்லை என்
றெல்லாம் சொல்லுகிறார்கள். இதைப்பற்றி நமது அரசு மத்திய
அரசுக்கு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. ஆகவே,
மாநில சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுத்தாக வேண்டும். எங்க
ளுடைய யோசனைகள் எல்லாம். சர்க்காரும் முதலாளிகளும், தொழி
லாளர்களும் பொறுப்பேற்று அந்த மில்களை நடக்கும்படிச் செய்
தால் உண்மையிலே நல்ல முறையில் அவற்றின் நிர்வாகத்தை
நடத்த முடியும். இல்லாவிடில் அவர்கள் போய்க்கொண்டிருக்கிற
ஊதாரித்தனத்திலிருந்து அவர்களாகவே விடுபடப் போவதில்லை.
கங்கள் கையிலே தேவைக்கும் அதிகமாகச் சம்பாதித்து வைத்துக்
கொண்டுவிட்டார்கள். அவர்கள் மறுபடியும் பணத்தை அந்தத்
தொழிலில் முதலீடு செய்யத் தயாராக இல்லை. ஏனென்றால் எதிர்

காலத்தில் என்ன ஆகுமோ என்ற பயத்தினால் அந்த நிலை ஏற்பட்
டிருக்கிறது. குறிப்பாக, இப்பொழுது ஏற்பட்டிருக்கும் புதிய
சர்க்கார் இதைப் பரிசிலனையில் எடுத்துக் கொண்டு இந்த நிலையை
மாற்றியமைத்தாக வேண்டும்.

அடுத்து, சேலம் உருக்காலை விஷயம் நமக்கு எல்லாம் நன்றாகத்
தெரியும். இதற்கு எவ்வளவோ முட்டுக்கட்டைகள் நிற்கின்றன.
டாடா போன்ற பெரிய கம்பெனிகளின் நிர்ப்பந்தங்கள் இதற்குத்
தடையாக பின்னாலே நிற்கின்றன என்பதை நான் அறிகிறேன்.
இந்த அரசு அதைக் கொண்டு வந்தாக வேண்டும்.

அதே சமயத்தில் நமது அமைச்சர் அவர்களுக்குக் கைத்தறித்
தொழிலாளர்கள் பிரச்சினை புரியாமல் இல்லை. அவர்களுடைய பாது
காப்புக்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் குறைந்
தது 5 லட்சத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுவிடும்
என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதை நம்
முடைய அரசாங்கம் மத்திய சர்க்காரிடத்திலே எடுத்துச் சொல்லி,
இன்னும் அதிகமான உதவியைப் பெற—கண்டிப்பாகப் பெற—
முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கான நிர்பந்தத்தைக்
கொடுக்காமல் மத்திய சர்க்காரிடம் இருந்து, பெறுவது என்பது
முடியாது.

நான் ஒரு சின்ன உதாரணம் கொடுக்க முடியும். சென்னை
மாநகராட்சி, கோவை மாநகராட்சி இங்கே ஒரு மாற்றம் வந்த
போது, அந்தப் பொறுப்பை ஏற்று, சில பல திட்டங்களை நம் கட்சி
கொண்டுவந்தபோது மாநில சர்க்கார் நமது முயற்சிகளுக்கு
குறுக்கே கட்டி நின்றார்கள். அதையும் எதிர்த்து தைரியமாக போரா
டிய காரணத்தினால்தான் மாநில அரசாங்கத்திலிருந்து நமக்கு
உரிய பங்கினை ஓரளவாவது பெற முடிந்தது. இப்போது அமைந்
திருக்கும் புதிய சர்க்கார் இதேபோல நமக்குரிய பங்கினைப் பெற
முயற்சி செய்தால், மத்திய சர்க்கார் அவர்களே பணிந்து வருவார்
கள். நமக்குரிய பணத்தை அவர்கள் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்
தம் ஏற்பட்டுவிட்டது. மத்திய சர்க்காரிடத்திலிருந்து நாம் அதிக
மான நிதியைப் பெற வேண்டும். இன்று இந்தியாவிலே ஏற்பட்டி
ருக்கிற நிலைமை—இன்று மாகாணங்களிலே ஏற்பட்டிருக்கிற நிலை
மையை ஆராய்ந்து பார்த்தால் மாகாண சர்க்கார்களுக்கு மத்திய
சர்க்கார் பணிந்து வர வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. நமது
சர்க்கார் பல்வேறு நடவடிக்கைகளை தைரியமாக எடுத்து, அதன்
மூலமாக நாட்டு மக்களுக்கு—தமிழ்நாட்டு மக்களுக்கு நன்மை
களைச் செய்ய முடியும். அதற்கான நடவடிக்கைகளைச் செய்ய
வேண்டும்.

அடுத்தபடியாக, நமக்கு மிகமிக இன்றியமையாதது குடிநீர்
(ப்ரொட்டெக்டெட் வாட்டர்). இது மிக மிக அவசியம். இது
குறிப்பாக சென்னை நகரத்தில் மட்டுமல்ல—தமிழ் நாட்டில் எல்லா
நகர மன்றங்களுக்கும் தேவையானது. ஆகவே, இதைச் செய்வ
தற்கு தகுந்த நடவடிக்கை எடுத்தாக வேண்டும். கோவையில்





இருக்கிற சிறுவாணி தண்ணீர் திட்டம் முக்கியமானது. இந்தியா
விலேயே முதல்தரமான தண்ணீர் இந்த சிறுவாணி தண்ணீர்.
அந்தத் தண்ணீரைக் குடித்தாலே போதும், பசியே அடங்கிவிடும்
என்பார்கள். இந்தத் திட்டத்தை இதுவரை நடத்தவில்லை. இதை
நிறைவேற்றாது காங்கிரஸ் சர்க்கார் 15 ஆண்டுகளாக ஊறப்போட்டு
விட்டது. இந்தத் திட்டத்தைச் செய்வதற்கு சுமார் 2 கோடி
ரூபாய் மட்டுமே செலவாகும். நமது சென்னை நகரத்திற்குக்கூட
இதுபோன்ற குடி நீர்த் திட்டம் மிகவும் பிரதானமானது. இம்
மாதிரியான நல்ல திட்டங்களைத் தீட்டியாக வேண்டுமென்று நான்
பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைய தினம் கள்ளக் கடத்தல், அநியாயமான சேமிப்பு,
உணவிலே கலப்படம் போன்ற பல்வேறு முறைகேடுகள் நடந்து
வருகின்றன. ஜிப்ஸம் கற்களை அரிசியுடன் கலக்கிறார்கள். இம்
மாதிரியான உணவு கலப்படத்தினால் எண்ணற்ற மக்கள் வேதனைப்
படுவது மட்டுமல்ல—அது ஆரோக்கியத்திற்கும் கேடானது.
இதற்கு இந்தப் புதிய சர்க்கார் தக்க நடவடிக்கைகள் எடுத்தாக
வேண்டும். இவ்வாறு கள்ளக் கடத்தலுக்கும் அநியாயமான சேமிப்
புக்கும், உணவுக் கலப்படத்திற்கும் உதவியாக இருப்பவர்களுக்கு
ஜன்ம தண்டனையோ, கடுமையான சிறைத் தண்டனையோ கொடுத்
தால்தான் அவற்றைத் தடுத்து நிறுத்த முடியும் என்று கூறிக்
கொள்ளுகிறேன்.

மேலும், சிறையிலே வாடுகின்ற எண்ணிறந்த சிறைக் கைதி
களுக்கு நல்லதோர் முறையிலே, ஒரு நல்ல மாறுதலை ஏற்படுத்
தியாக வேண்டும். சிறைகள் எல்லாம் இன்றைக்கு—சிறைக்குப்
போகிறவர்கள் மறுபடியும் பக்காத் திருடர்களாக மாறி வருகிற
நிலைமையிலேதான் உள்ளன. சிறைக்குப் போகிறவர்கள் திருந்தி
வந்தால் அவர்களுக்கும் நாட்டுக்கும் நல்லது. அம்மாதிரி அவர்கள்
திருந்துவதற்கு உண்டான வசதிகள் அங்கே செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், சிறையிலே பலர் பல
காரணங்களுக்காக ஜன்ம தண்டனை பெற்று வருகிறார்கள். அவர்
களுடைய தண்டனைகளை ஆராய்ந்து பார்த்து, தண்டனைகளைக்
குறைத்து அவர்களை விடுதலை செய்தாக வேண்டும். பல ஆயிரக்
கணக்கான பேர்களை விடுதலை செய்தாக வேண்டும். அரசாங்கம்
ஆராய்ந்து பார்த்தால் இதை நன்றாகச் செய்ய முடியும். ஜனநாயக
அரசாங்கம் ஏற்பட்டுள்ளது. ஒரு நல்ல மாற்றம் ஏற்படும் என்று
எதிர்பார்க்கும் மக்களிடத்திலே, நாம் இப்படிச் செய்வது
நம்பிக்கையை ஊட்டும்.

கடைசியாக, ஒரு வருந்தத்தக்க விஷயம். இப்போது கள்ளச்
சாராயம் காய்ச்சுதல் கிராமங்களில் எல்லாம் நடந்து கொண்டிருக்
கிறது. எங்கு பார்த்தாலும் அது பரவலாக அதிகரித்து விட்டது.
இதற்கு ஒரு நல்ல திட்டத்தை அமல்படுத்த வேண்டும். தற்போது
கண்டிப்பாக இதைச் செய்தாக வேண்டும். ஓர் ஊரில் இரண்டு
பேர் குடிக்கிறார்கள் என்று சொன்னால், அதை விற்பனை செய்வ
தற்குப் பல வாலிபர்கள் அதை எடுத்துக் கொண்டு போகிறார்கள்.

எடுத்துச் செல்கிற வாலிபர்கள் பலர் அதைக் குடித்துப் பார்க்கிறார்கள். நாளடைவில் அவர்களும் குடிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இந்தச் சாராயத்திலே பல்வேறு பொருள்களையெல்லாம் கலக்கிறார்கள். ஸ்பிரிட்டுகள் எல்லாம் உபயோகப்படுத்துகிறார்கள். வார்னீஷ்களையும் சேர்க்கிறார்கள். நமது சுகாதார மந்திரி அவர்கள் ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போனால் பார்க்கலாம். அங்கே எத்தனை பேர்கள் கள்ளச் சாராயத்தைக் குடித்த காரணத்தினால் குடல் நோயினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை. ஆகவே, இவைகளை மாற்றுவதற்கு நாம் தக்க நடவடிக்கை எடுத்து, அடியோடு நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. வீ. மலைக்கண்ணன்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, நான் கவர்னர் பெருமான் அவர்கள் பேருரையின்மீது நன்றிகூறும் தீர்மானத்தை ஆதரிக்கும் முகத்தான் இன்றைய விவாதத்தில் கலந்துகொண்டு என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தேர்தலில் வெற்றி பெற்று வந்திருக்கும் இந்தச் சட்ட மன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கவர்னர் அவர்கள் தம் உரையில் வாழ்த்தினமைக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது நடந்து முடிந்த தேர்தல், நல்ல அமைதியாகவும், நல்லிணக்கமாகவும் நடந்து முடிந்ததாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். தேர்தலின்போது ஆங்காங்கே பரவலாக நாம் விரும்பத்தகாத பல நிகழ்ச்சிகள் நடந்தாலும், ஆளும் கட்சியின் சார்பாக அங்கங்கே பல குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டன என்றாலும் பொதுவாக அமைதியைக் காத்து நாங்கள் நடந்தோம். ஆனால் இந்தத் தேர்தல் இவ்வளவு அமைதியாக நடந்ததற்கு சுதந்திரா கட்சிப் பிரமுகர் திரு. ஹாண்டே அவர்கள் கூறியதைப் போல் மிகவும் முக்கியமான காரணம் தென்னகத்து காந்தி என்று போற்றப்படும் அறிஞர் அண்ணா அவர்கள்தான். அவருடைய பேச்சும் எழுத்தும், அவர் அடிக்கடி கூறிய அறிவுரைகளும்தான் நமது தோழர்களுக்கு வழிகாட்டியது. தேர்தல் நடந்து முடியும் வரைக்கும் ஆளும் கட்சியினரும், அவர்களைச் சார்ந்தவர்களும் நம்மீது ஏசிக்கொண்டு போனாலும், மேலே இடித்துக்கொண்டு போனாலும் கொஞ்சம் சகித்துக் கொண்டு போங்கள். இப்போது நமக்கு எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று நம் தோழர்களுக்குக் கூறியிருந்தார். தோழர்களும் அவருடைய சொல்லுக்குக் கட்டுப்பட்டிருந்தார்கள். ஆகவேதான், தேர்தல் அமைதியாக நடந்தது. இந்தத் தேர்தல் சூறாவளிபோல் புயல்போல் வீசியது என்றெல்லாம் சொன்னாலும் நான் அப்படிச் சொல்ல மாட்டேன். கடந்த பத்தொன்பது ஆண்டுகளாக இந்த ஆட்சியில் ஏற்பட்டிருக்கும் ஊழல், ஊதாரித்தனம், மந்தம், நாட்டம், முறைக்கேடு ஆகிய அனைத்தும் இந்த நாட்டு மக்களுடைய மனத்திலே அலை பாய்ந்து கொண்டிருந்தது. அவர்களும் 1967-ம் ஆண்டு வரட்டும், எப்போது தேர்தல் வரும் என்று காத்துக் கொண்டிருந்தார்கள்.



தங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் ஆளும் கட்சிக்கு ஒரு நல்ல பாடத்தைக் கற்றுக் கொடுத்து, இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு ஆதரவு அளித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அரசாங்கத்தை அமைத்தவுடன், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களின் மீதான வழக்குகளை வாபஸ் பெற்றது பற்றி திரு. மார்ட்டின் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். மக்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கையை எடுத்து வைக்கிறபோது, அரசாங்கம் அதை பலாத்காரத்தின் மூலமாக ஒடுக்க முற்படுகிறபோது தான் எந்தப் போராட்டமும் வன்முறைச் செயல்களுக்கு மாறிவிடுகிறது. சுதந்திரப் போராட்ட காலத்திலேயே வங்காளத்தில் என்று நினைக்கிறேன் சௌரிசௌரா என்ற ஊரில் போலீஸ் அதிகாரிகளையே ஓர் அறையில் அடைத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கொளுத்தி விட்டார்கள். காங்கிரஸ் அரசாங்கம் அவர்களுக்கு விடுதலை அளித்துவிடவில்லையா? தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது போலீசு அதிகாரிகள் எரித்துக் கொல்லப்பட்டதை நான் சரியான செயல் என்று வாதம் செய்யமாட்டேன். நான் காஞ்சீபுரம் கல்லூரியில் பயின்றவன். போராட்டம் எந்த முறையில் துவங்கப்பட்டாலும் அடக்குமுறை அளவு மீறுகிறபோது அது வன்முறைச் செயல்களுக்கு மாறிவிடுகிறது. வன்முறைச்செயல்களை நான் நேர்மையானது ஆக்கமாட்டேன். ஆயினும் எந்தப் போராட்டமாக இருந்தாலும் நிலைமை எப்படியோ வந்துவிடுகிறது. ஒரு நாட்டை ஆளவேண்டுமானால் முதலில் அந்த நாட்டு மக்களின் மொழியை அழித்துவிடு, அந்த மக்கள் உனக்கு எப்போதும் அடிமையாகி விடுவார்கள் என்று சொல்வார்கள். அந்தவகையில் நம்முடைய மொழியை அழித்து விடக்கூடிய அபாயத்தைச் சுட்டிக்காட்டி அதை மக்கள் எதிர்க்கிறபோது வன்முறை மூலம் அரசாங்கம் அதை ஒடுக்கிவிட முற்பட்டதே மக்களது எழுச்சியாயிற்று. நாடும், நாட்டு மக்களும், நாட்டு மொழியும் நம்முடைய கட்சியைவிட முக்கியமானவை என்பதை உணர்த்தி நல்ல ஜனநாயக மரபை உண்டு பண்ணியிருக்கிறார்கள். அந்த மரபுக்கு ஏற்ற வகையில் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றப்போகும் நாம் கோரிக்கையை எடுத்து வைத்த போராட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் மீதான வழக்கை வாபஸ் பெற்றது ஜனநாயக வளர்ச்சியின் மறுமலர்ச்சியாகும்.

நாட்டில் நல்ல நிர்வாகம் நடைபெறவும், அரசாங்கம் வகுத்துக் கொடுக்கும் கொள்கையில் நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்கள் செவ்வனே செயல்படவும் இந்த ஆட்சி துணை நிற்கும் என்பதை நமது மேன்மைமிக்க கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது அதிகாரிகள் சொத்தையும் அல்ல, சோடையும் அல்ல. ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் கொள்கைகளை வகுத்துக் கொடுத்துவிட்டுத் தலையிடாது, நேர்மையான நிர்வாகம் நடைபெற

அனுமதித்தால் திறமையும், அனுபவமும் உடைய அதிகாரிகள் செவ்வனே செயல்படுவார்கள். நாடு பயன்பெறும். ஆனால் காங்கிரஸ் ஆட்சியில் இருந்த நிலைமை என்ன? எந்த அதிகாரி நேர்மையாக நடந்துகொள்கிறாரோ அவரை நாடுவிட்டு நாடு கடத்தும் நிலை இருந்திருந்தால் நாடே கடத்தியிருப்பார்கள். ஆனால் 63 மூட்டை சீனியைப் பிடித்துவிட்டார்கள் என்றால் காரிய தரிசி ஆப்பிரண்டாக இறக்கப்பட்டார். நேர்மையாளர்களை மாவட்டம் விட்டு மாவட்டமும், தாலுக்காவிட்டு தாலுக்காவும் மாற்றி அடித்த தொல்லைகளை நாம் மறந்துவிட முடியாது. எப்படி நிர்வாகத்தில் நேர்மை இருந்திருக்க முடியும்? அதனால் தான் நிர்வாகத்தில் எல்லாக் கட்டங்களிலும் ஊழல் மலிந்தன. இன்றைக் குள்ள அரசாங்கம் நேர்மையானவர்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கும் என்கிறபோது நான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கொள்முதல் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். இராம நாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஐந்தாறு ஏக்கரா புஞ்சை உள்ளவர்களுக்குக் கூட சாப்பாட்டுக்கு போதுமான நெல் விளைவதில்லை. அவர்களிடம் இரண்டு மூட்டை கொடு, மூன்று மூட்டை கொடு என்று லெவி போட்டு கொள்முதல் செய்வது சரியல்ல. எப்படியும் விவசாயச் செலவு, மற்ற குடும்பச் செலவுகளை உத்தேசித்து அவர்களிடம் நெல் இருந்தால் அவர்களே இரண்டு மூன்று மூட்டை விற்க முன் வந்துவிடுவார்கள். அவர் களிடம் கட்டாயக் கொள்முதல் என்று வேண்டாம். இருபது ஏக்கரா, முப்பது ஏக்கரா என்றால் நீர்வளம், நிலவளம் பார்த்து அவர்கள் இத்தனை மூட்டை கொடுக்கலாம் என்பதாகச் சொல்ல லாம். ஆகவே இந்தக் கொள்முதல் கொள்கை நீர்வளம், நிலவளம் எல்லாம் பார்த்து நடைமுறையில் சாத்தியமாக இருக்கும் வகையில் அமைக்க மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நம் அரசாங்கத்தைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திட்டத்தின் பலன் திட்டவட்டமாகக் கிடைக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. இது போற்றுவதற்குரிய அம்சமாகும். நாம் செலுத்துகிற ஒவ்வொரு காசும் பயன் அளிக்கத்தக்க வகையில் செலவிடப்பட வேண்டும். அரை வயிற்றுக்குச் சோறு இல்லாதபோது ஆறுவித ஊறுகாய் எவ்வாறு போடுவது என்ப தாகப் புத்தகம் போட்டு 3 ரூபாய் விலையிட்டு விற்பது எல்லாம் ஊதாரித்தனம் இல்லையா? 'தன்னைப்பெற்ற தாய் தெருவிலே பிச்சை எடுக்கும்போது, கும்பகோணத்திலே பசு தானம் வழங்கின' கதையாகத்தான் இவை இருக்கின்றன. அத்தகைய புத்தகம் தேவையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பஞ்சாயத்துகளில் தென்னை வளர்ப்பதற்கு பணம்---பணம் விரய மாயிற்றே தவிர தென்னையும் இல்லை, அதைச் சுற்றி போடப்பட்ட வேலியும் இல்லை. இத்தகைய வீண் விரயங்களை எல்லாக் கட்டத் திலும் தவிர்க்க நம் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். வறட்சியான பகுதிகளுக்கு நீர்ப்பாசனத் திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்து முன்வந்தால் எத்தனையோ ஏக்கரா சாகுபடி





செய்யப்படும். எங்கள் மாவட்டத்தில் மட்டும் தண்ணீர்விட்டால் ஐந்தாயிரம் ஏக்கரா விளைச்சல் செய்ய முடியும். வைகைக்கால் திட்டம் இருக்கிறது. போட்ட திட்டங்கள் நிறைவேற்றித்தரப் பட வேண்டும்.

கூட்டுறவுத் துறை பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு கூட்டுக்கொள்ளையர்களின் கூடாரமாக மாறியிருக கிறது. அதைப்பற்றிப் பரிசீலனை செய்ய ஒரு குழு அமைக்கப் பட்டிருப்பதை வரவேற்று நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நெசவாளர் பிரச்சினையில் ஓடுகின்ற ஒவ்வொரு தறிக்கும் 500 ரூபாய் முன்பு கொடுத்தார்கள். அது இப்போது 250 ஆகக் குறைந்திருக்கிறது. இது ரிசர்வ் பாங்க் உத்தரவின் மூலமாகக் கொடுக்கப்படுகிறது. காரணம் பாக்கி லட்சம் ரூபாய் கொடுத் தால் அதில் இருபதாயிரம், முப்பதாயிரம் பல இனங்களில் அதற் காகப் போடப்பட்டிருக்கும் மத்திய பாங்க் கவர் ஷ்யூரிடியாக சேர்த்துக்கொள்வதாகச் சொல்லப்படுகிறது. 500 ரூபாய் என்றால் அது கூட முழுவதும் கிடைக்காத காரணத்தினால் நெசவாளப் பெருமக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். அதுபற்றியும் இந்த அரசு பரிசீலனை செய்து நெசவாளர்கள் துயரத்தைத் துடைக்க நல்ல பல நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

எங்கள் இராமநாதபுரம் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. திரு. துரையரசன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இராமநாதபுரம் கிழக்கு, புதுக்கோட்டை, அறந்தாங்கி போன்ற வறண்ட பகுதிகள் பயனடையுமாறு அவற்றுக்குச் சிறப்புத் திட்டம் போட வேண்டும் என்பதை வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். எங்கள் பகுதியில் எத்தனையோ பாதை இல்லா ஊர்கள், இருபது மைல்கள் நடந்துபோய் பஸ் சாலையைப் பிடிக்கவேண்டும். பிடித் தாலும் பஸ்ஸுக்கு டிக்கெட் கிடைப்பது கஷ்டம். நானே பல மைல்கள் நடந்து வந்து பஸ் பிடிக்க வேண்டும். இந்த மாதிரி பகுதி களுக்கு இந்த அரசு சிறப்புத் திட்டம் தீட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. நா. துரைபாண்டியன்: கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இன்று கவர்னர் பெருமான் உரையின் மீது சில வார்த்தைகள் பேசுவதற்கு எனக்கு அனுமதி அளித்த உங்களுக்கு நன்றி. உண்மையிலேயே கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையை ஆளும் கட்சியினர் ஆதரித்துப் பேசினாலும் நாங்கள் ஆதரித்துப் பேசவும், எதிர்த்துப் பேசவும் முடியாத வகையில் அந்த உரை அமைந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஏனென்றால் முன்பு காங்கிரஸ் மந்திரி சபை இருக் கும்போது கவர்னர் உரை எப்படி இருந்ததோ அதேமாதிரிதான் இன்றும் இருக்கிறது. பொது மக்கள் அத்தனைபேரும் அரசாங்கம் மாறியிருக்கிறது, ஆகவே கொள்கையிலும் மாற்றம் இருக்கும் என்று அந்த உரையை எதிர்பார்த்தார்கள். இன்று அவர்கள் என்ன சொல்லிக் கொள்கிறார்கள் என்றால் " அவாளுக்கு இவாள் எழுந்து

உண்பார்கள் " என்ற முறையில் தான் அரசாங்கம் அமைந்திருக் கிறது என்பதாக மக்கள் மத்தியில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இன்று நாங்களும் அந்த உரையைப் பற்றி அதிகம் பேசாமல் இருந்தாலும் கூட முன்னால் இருந்த சர்க்கார் எதுவும் செய்யவில்லை, ஆகவே என்ன பேசுவதற்கு இருக்கிறது என்கி றார்கள். நாட்டில் ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது என்று, ஏற்றத் தாழ்வை ஒழிப்பதற்கு அடிப்படை கல்விதான் என்ற முறையில் இதற்கு முன் இருந்த அரசாங்கம் எந்த மாநிலத்திலும் செய்யாத பல காரியங்களைச் செய்தார்கள். எந்த மாநிலத்திலேயும் பத்தாவது வகுப்பு வரை இலவசப் படிப்பு இல்லை. ஆனால் நம்முடைய மாநிலத்தில் பத்தாவது வகுப்புவரை இலவசப் படிப்புக்கொடுத்தார்கள். அதன் காரணமாகத்தான் தாழ்த்தப் பட்ட மக்கள், பிற்பட்ட சமூகத்தினர் இவர்களிலே பலர் படித்து

நண்பகல். 12-00 உத்தியோகத்தில் இருக்கிறார்கள். நாம் சுதந்திரம் அடைவதற்கு முன்னதாகப் பார்த்தோமானால் எந்த ஜில்லாவை எடுத்துக் கொண் டாலும் சரி, கல்லூரி இருக்கிறதா இல்லையா என்ற சந்தேகம் தான் இருந்தது. எந்தத் தாலூகாவிலும் ஹைஸ்கூல் இல்லாமல் இருந்தது, ஒரு சில இடங்களைத்தவிர. அப்படி ஒரு ஹைஸ்கூல் இருந்தமானால் அது மதத்தின் அடிப்படையில் இருக்கக்கூடிய ஹைஸ்கூலாகத்தான் இருக்கும். ஆனால் இன்றைக்கு மூன்று மைல்களுக்கு என்ற அளவில் ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது. ஆகவே, இந்த முறையில் அன்றைய ஆளுங்கட்சி கல்வியை ஏற்றத்தாழ்வு இல்லாமல் மக்கள் பெற்று முன்னேறுவதற்கு இலவசப்படிப்பை அளித்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஆனால் இந்தச் சர்க்கார் புகுமுக வகுப்பில் சம்பளம் இல்லாமல் கல்வி கற்கச் செய்யுமா, செய்யாதா என்பதற்கான குறிப்பு ஒன்றையும் காணோம். சிறிய விவசாயிகளுக்கு நிறையச் சலுகைகள் கொடுப்பதாக அறிக்கையில் இருக்கிறது. திரு. ஏ. ஆர். எஸ். முதலியார் அவர்கள் குறிப்பிட்டதுபோல் இது ஒரு வழக்கமான பாணியாகத்தான் இருக்கிறதே தவிர, திட்டத்தில் வேறு ஒன்றும் செய்யப்படவில்லை. நான் ஆளுங் கட்சியின் உறுப் பினராக இருந்தபோது இதே மன்றத்திலே சொன்னேன், சிறிய விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்காகச் சட்டம் இருக்கிறது. நிலம் இல்லாத விவசாயிகளுக்கு 5 ஏக்கர் பட்டா கொடுக்கிறார்கள். பட்டாவிலே பின்புறத்திலே ஒரு குறிப்பும் எழுதிவிடுகிறார்கள், ஐந்து வருஷத்திற்குள் கிணறு வெட்டி விவசாயம் செய்யவேண்டும். இல்லாவிட்டால் பட்டா ரத்து செய்யப்படும் என்று எழுதியிருக் கிறார்கள். அப்படி ஐந்து ஏக்கர் பூமியைப் பெற்ற அந்த விவசாயி விவசாயம் செய்வதற்காக இரண்டாயிரம் ரூபாய் கடன் கொடுக் கிறார்களே, பெற்றுக்கொள்ளலாம் என்று சொல்லுகின்ற நோக்கிலே அவர்கள் நாலாயிரம் ரூபாய்க்கு அவர்களிடம் ஜாமீன் கேட்கி றார்கள். வேறு எந்தவிதமான நிலமும் இல்லாத காரணத்தால் தான் ஐந்து ஏக்கர் நிலம் கொடுக்கிறோம். அவர்கள் இரண்டாயிரம் ரூபாய் கடன் கேட்கும்பொழுது அதற்கு நாலாயிரம் ரூபாய் ஜாமீன் கேட்டால் அவர்கள் எங்கிருந்து கொடுக்க முடியும்? இந்தச் சர்க்கார் உண்மையிலே சிறிய நிலக்காரர்களுக்கு நல்ல





திட்டம் செய்வார்களேயானால் அவர்களுக்கு கிணறு வெட்டிக் கொடுத்து, பம்புசெட் போட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட் டுக்கொள்கிறேன். அப்படிசெய்தால்தான் உணவுப் பிரச்சினையை தீர்க்க முடியும், என்பது எனது குறிக்கோள். இந்தச் சர்க்கார் திட்ட வட்டமாக, சிறிய விவசாயிகள், இத்தனை ஏக்கர்களுக்குக் குறைவாக வைத்திருக்கின்றவர்களிடத்திலே ப்ரக்யூர்மெண்ட் செய் வது கிடையாது என்று ஒரு அறிக்கையின் மூலம் சொல்லிவிட வேண்டும். இதையெல்லாம் நம்பித்தான் மக்கள் உங்களுக்கு அதிக மாக ஓட்டளித்தார்கள். தமிழ்நாட்டு மக்கள் வேறு எங்கேயும் இருப்பதைப்போல் அல்லாமல், அங்கும் இங்குமாக ஆடிக்கொண் டிருக்கிற ஒரு அரசாங்கத்தை அமைக்காமல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஸ்திரமான ஒரு ஆட்சியை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே உங்களிடமிருந்து மக்கள் . . .

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** பேசும்போது 'உங்கள்' என்று சொல்ல வேண்டாம். ஆளுங் கட்சி என்று சொல்லுங்கள் அல்லது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்று சொல்ல வேண்டும்.

**திரு. நா. துரைபாண்டியன் :** சபாநாயகர் மூலமாக உங்க ளுக்குச் சொல்லிக்கொள்கிறேன். . . .

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** யார் மூலமாகவும் 'உங்கள்' என்று சொல்லவேண்டாம்.

**திரு. நா. துரைபாண்டியன் :** ஆகவே, இந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைத் தமிழ்நாட்டில் பொதுமக்கள் ஏற்படுத்தியதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடுகூட ஆளுங்கட்சியின் அங்கத்தினராக இருக்கின்ற திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் பேசுகின்ற பொழுது, "25 வருஷம் வரை எங்களை யாரும் அசைக்க முடியாது" என்று அகங்காரத்தோடு சொன்னார்கள். நான் அதைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். பிரான்ஸ் வருத்தத்தோடு நாட்டிலே லூயி XIV என்ற அரசன் ஆண்டுவந்தான். அவன் 'ஐ ஆம் தி ஸ்டேட்' என்று ஆணவத்தோடு சொன்னான், அவனே பின்னால் தூக்கியெறியப்பட்டான். ஆகவே, உங்கள் . . .

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** மீண்டும் 'உங்கள்' என்று சொல்லாதீர்கள்.

**திரு. நா. துரைபாண்டியன் :** ஆளுங்கட்சியில் 138 பேர்கள் இருந்தாலும்கூட அவர்கள் எப்படி ஓட்டுப் பெற்றார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஆளுங்கட்சியாக இருப்பவர்களோடு மற்றக் கட்சிகளும் சேர்ந்து கூட்டுக் கட்சியாகப் பலர் சேர்ந்து வெற்றிபெற்றிருக்கிறார்கள். வருங்காலத்தில் ப்ராக்யூர்மெண்ட் செய்யமாட்டார்கள் என்று விவசாயிகள், நிலச்சுவான்தார்கள் நினைத்தார்கள். பெரிய பெரிய மில் அதிபர்கள் கூட அவர் களுடன் கூட்டுச் சேர்ந்தார்கள். பொதுமக்கள், அன்றாடம் அரிசி வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் எல்லாம் அரிசி கண்ட்ரோல் இல்லாமல்

தாராளமாகக் கிடைக்கும் என்று நினைத்தார்கள். அப்படியிருக்கும் பொழுது இப்பொழுதே சட்டசபையிலே ஒருவர் மூன்று படி என்று நாங்கள் சொல்லவே இல்லை என்கிறார். மேல்சபையில் மூன்று படி கொடுப்பதுதான் எங்கள் லட்சியம் என்று ஒருவர் சொல்கிறார். லட்சியம் தவறினால் நாங்கள் ஆட்சியில் இருக்கமாட்டோம் என்று சொல்கிறார்கள். யோசித்துப் பார்ப் போமானால் அவர்கள் என்ன சொன்னார்கள். முதலில் வெள்ளை யர்கள் இந்த நாட்டைக் கொள்ளையடித்தார்கள். அவர்களுக்குப் பிறகு கொள்ளையர்கள் ஆண்டார்கள். நீங்கள் அவர்களுக்கு ஓட்டுப்போட்டால் பானையிலே இருக்கிற நாலு அரிசி உங்களைப் பார்த்து நகைக்காதா? என்றெல்லாம் கனிவாகப் பேசி, இனிய குரல் எழுப்பியதால்தான் மக்கள் இவர்களுக்கெல்லாம் ஓட்டளித் தார்கள். கூட்டுக் கட்சியாகச் சேர்ந்ததால்தான் அவர்கள் இன்றைக்குப் பெரிய ஆளுங்கட்சியாக வந்திருக்கிறார்கள். சபைக்கு வந்தபிறகு ஒருவர் கண்ட்ரோல் என் இருக்க வேண்டும் அதை அவிழ்த்துவிட வேண்டுமென்று சொல்கிறார். ஒருவர் வேண்டாமென்கிறார். ஒருவர் கோவாப்ரேடிவ் முறை நாட்டில் இருக்கக் கூடாது என்று சொல்கிறார், அது கொள்ளையரின் கூடாரம் என்று ஒருவர் சொல்கிறார். இப்படியெல்லாம் இல்லாமல் திட்டவட்டமாக தங்களுடைய கொள்கை என்ன என்பதை அவர்கள் மக்கள் மத்தியிலே சொல்லக்கூடிய நிலை வரவேண்டும். இன்று காலையிலேகூட பேப்பரில் பார்த்தோம். பல இடங்களிலே பதுக்கல் வேட்டைகள் நடைபெற்றிருக்கின்றன. அதை நாங்கள் வரவேற்கிறோம். அதே மாதிரி கொள்ளையடிப்பவர்கள், பதுக்கல் காரர்கள், கள்ள நோட் அடித்தவர்கள் இவர்கள் எல்லாம் முன்பு ஆளுங்கட்சியை தான் வந்து அண்டுவார்கள். இந்த மாநிலத் திலே எத்தனை பதுக்கல்காரர்கள், கள்ளப் பணம் வைத்திருக் கிறவர்கள் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அப்படிப்பட்டவர்களும் இவர்களுடன் கூட்டுச் சேர்ந்திருக் கிறார்கள். தேர்தல் நிதியாகவும் தந்திருக்கலாம். ஆகவே அவர்களை யெல்லாம் பாரபட்சம் இல்லாமல் கண்டிப்பான முறையில் தண்டிக்க வேண்டும். உண்மையிலேயே அவர்கள் அப்படிச் செய்வது நாட்டுக்கு நல்லமுறையில் நன்மை செய்தால் திரு. ஏ. வி. பி ஆசைத்தம்பி சொன்னதைப்போல் 25 வருஷம் அல்ல, இந்த நாடு இருக்கும்வரை இவர்கள் இருக்கலாம். பார பட்சம் இல்லாமல் நடந்துகொள்ள வேண்டும்..

கரும்புத் தோட்டம் என்ற பெயரில் பலர் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை வாங்கி வைத்திருக்கிறார்கள். ஒரு உறுப்பினர் பேசும்பொழுது கரும்பு உருவாக்கிறார்கள் என்று சொன்னார்கள். கரும்பு உருவாக்கவில்லை. கரும்புத் தோட்டம் என்ற பெயரில் பல ஆயிரக்கணக்கான காடுகளை அவர்கள் வைத்திருக்கிறார்கள். மடாதிபதிகள் பல ஆயிரக்கணக்கான நிலங்களை வைத்திருக் கிறார்கள். கோயிலுக்குத் தண்ணீர் விடுவது என்று சொல்லி 100 கிராமங்களை வைத்திருக்கிறார்கள். கோயிலுக்கு மோர் இடுவது என்று சொல்லி ஆயிரக்கணக்கான நஞ்சை நிலங்கள் வைத்திருக் கிறார்கள். இதையெல்லாம் மாற்றியமைத்து பொதுமக்களுக்கு





நன்மை செய்வீர்கள் என்று நம்பித்தான் ஓட்டளித்திருக்கிறார்கள். ஆகவே இந்த அரசாங்கம் வெகு சீக்கிரத்திலேயே இவற்றை யெல்லாம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கிலாந்து நாட்டிலே அமெரி என்ற மந்திரி இருந்தார். நாம் சுதந்திரத்திற்காகப் போராடியபோது, சுதந்திரம் கேட்டபொழுது அவர் "இல்லை" என்று பதில் சொன்னார். 'இல்லை, இல்லை' என்றே பதில் சொன்னார். அதனால் இங்கே அமெரி என்றால் இல்லை யென்றே அர்த்தம் வந்துவிட்டது. அதேமாதிரி இங்கேயும் ஏற்படக் கூடாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கனம் அமைச்சர் கருணாநிதி தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். போக்குவரத்தை தேசியமாக்குவோம் என்று சொல்லியிருக் கிறீர்களே அதில் நஷ்டம் வந்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டதற்கு பல பல மாநாடுகளை நடத்தினால் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். நஷ்டம் வந்தாலும் அரசாங்கம் அதை ஏற்று நடத்தும் என்று சொல்லி அந்த சக்தி என்னிடத்தில் இருக் கிறது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதே மாதிரியாக நமது உணவமைச்சர் அவர்கள் முன்பு இங்கே சின்ன இட்லியைக் கொண்டுவந்து காண்பித்தவர்கள், இப்பொழுது பெரிய இட்லியாக நமக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கும்பொழுது அவர்களும் கனம் திரு. கருணாநிதி அவர்கள் சொல்லியதுபோல் அவர்களும் ஒரு படி அல்லது 3 படி தருவோம் என்று தெளிவாக அறிக்கை விட வேண்டும். விவசாயிகளுக்கு நஷ்டம் வந்தாலும் அதைச் செய்தே தீருவேன் என்று அவர்கள் சொல்லியே தீர வேண்டும். கரும்புத் தோட்டம் என் போடுகிறார்கள் என்றால் . . . (மணியடிக்கப்பட்டது).

திரு. சோ. அழகர்சாமி : மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, நடந்து முடிந்த நான்காவது பொதுத் தேர்தல் ஒரு பெரிய மாறுதலை நாட்டிலே ஏற்படுத்தியிருக்கிறது. ஒரே கட்சி ஆட்சி இந்த மாநிலத்தில் மாறியிருப்பதோடு, மற்ற பல மாநிலங் களிலும் பல்வேறு கட்சியினர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், கவர்னர் பெருமான் உரையிலே 'மாநில அரசின் தேவைகளை மத்திய அரசு வெறுப்பு விருப்பின்றி நிறைவேற்ற வேண்டும்' என்று வற்புறுத்தப்பட்டுள்ள அம்சம் வரவேற்கத்தக்கது. அதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, மதிப்பிற்குரிய கவர்னர் பெருமானுடைய 14 பாராக்கள் கொண்ட உரையில், 10 பாராக்களில் விவசாயம், உணவு, விலைவாசி பிரச்சினைகளைப் பற்றி மிகத் தெளிவாகக் கூறப் பட்டிருக்கிறது. இது அந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் காட்டுவதாக இருக்கிறது. விவசாயத்தைப் பற்றியும், உற்பத்திப் பெருக்கத்தைப் பற்றியும், கூறப்பட்டிருப்பதிலே விவசாயி களுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவது பற்றி பழைய பரிகாரங்களேதான் கூறப்பட்டிருக்கின்றனவே தவிர, புதிதாக எந்த பரிகாரமும் கூறப்படவில்லை என்பதை வருத்தத்தோடு

[திரு. சோ. அழகர்சாமி] [1967 மார்ச் 20

தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக, கிராம ஏழை விவசாயிகளுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படுத்தத் தக்க விதத்தில், நிலச் சீர்திருத்தச் சட்டம், இனாம் ஒழிப்புச் சட்டம் ஆகியவற்றைச் சீர்திருத்துவதுபற்றி கவர்னருடைய உரையில் ஒன்றும் கூறப்படவில்லை. உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பல முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிற நிலையில் இதற்கு முன்பு என்ன கூறப்பட்டதோ அதே முறையில்தான் இப்போதும் கூறப்பட்டிருக்கிறது. உரங்கள் கொடுப்பதைப் பற்றியும், பொறுக்கு விதைகள் கொடுப்பதைப் பற்றியும் மற்ற உதவிகளைக் கொடுப்பதைப் பற்றியும் வழக்கம்போல் கூறப்பட்டிருக்கிறதே தவிர, அந்த விவசாயிகள் பலன் பெறும் வகையில் அடிப்படையான மாறுதல்களை பற்றி ஒன்றும் கூறவில்லை.

பொதுவாக, விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம், அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை விற்கக் கூடிய காலத்தில் குறைந்த விலைக்கு விற்று அவர்கள் விற்று முடிந்த பிறகு அதன் விலை பல மடங்கு கூடி விடுகிற தன்மைதான். எங்கள் தாலுகாவை எடுத்துக் கொண்டால் விவசாயிகளில் பெரும்பகுதியினர் பருத்தி, மிளகாய் வற்றல், மல்லி ஆகிய பொருள்களை விற்கக்கூடிய காலத்தில் சென்ற வருஷம் மிளகாய் வற்றலை 300 ரூபாய்க்குக் கொடுத்தார்கள்; அவர்கள் விற்ற பின்னர் அதன் விலை 800 ரூபாய், 900 ரூபாய் அளவுக்கு உயர்ந்து விட்டது. அவர்கள் தங்கள் தேவைக்குப் பின்னர் வாங்க வேண்டிய நேரத்தில் அதன் விலை மிகவும் உயர்ந்து நிற்கிறது. பருத்தியும் அதே மாதிரிதான். ஒரு குவின்டாலை 140 ரூபாய்க்கு விற்று விட்டு பிறகு அவர்கள் மாட்டுக்குத் தேவையான பருத்திக் கொட்டையை 100 ரூபாய், 140 ரூபாய் என்று கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்காத காரணத்தால்தான் அவர்கள் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

தற்போது விவசாயிகள் பெருத்த கடன் சுமைக்கு ஆளாகி இருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்கள், மற்ற ஸ்தாபனங்கள் கடன்கள் வழங்கி வந்தாலும் கூட போதாத நிலைமையில் லேவாதேவிக்காரர்களிடம் சிக்கி முன் கடன்களைக் கட்ட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கடன்களை யெல்லாம் திரும்பச் செலுத்த முடியாத நிலைமையில் தங்களுடைய விவசாயத்தைச் செழுமையாக நடத்த முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கொடுக்கப் படுகிற கடன்கள், சர்க்காரிலிருந்து கொடுக்கக் கூடிய கடன்கள் ஆகியவற்றைச் சிறிய விவசாயிகள் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. இன்று சர்க்காரிலிருந்து கிணறு வெட்டுவதற்கோ, பம்பு செட்டு வைப்பதற்கோ கொடுக்கப்படுகிற தொகை எல்லாம் சிறு விவசாயிகளுக்கு, ஐந்து எக்கர், பத்து எக்கருக்குக் குறைவாக உள்ள விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. உதாரணமாக, கிணறு வெட்டுவதற்கு ஐயாயிரம் ரூபாய் கடன் கொடுக்கப்படுவதாக வைத்துக் கொண்டால், அந்தத் தொகையைப் பெறுவதற்கு அவர்



1967 மார்ச் 20] [திரு. சோ. அழகர்சாமி]

களுக்கு ஏழாயிரம் ரூபாய் சொத்து மதிப்பு இருக்க வேண்டுமென்று கூறப்படுகிறது. ஏழாயிரம் ரூபாய் சொத்து மதிப்பு இருக்க வேண்டுமென்று சொன்னால் 20, 30 ஏக்கர் வரை இருந்தால் தான் அந்த மதிப்பு வருவதாகச் சொல்லுகிறார்கள். அந்த நிலையில் சிறு விவசாயிகள் அந்தக் கடனைப் பெற்று நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. அதே போன்று சிறு விவசாயிகளுக்கு விவசாயத்திற்குத் தேவையான மற்றப்பொருள்கள் நியாயமான விலையில் கிடைப்பதற்கு உத்தரவாதமாக, குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய வேண்டும். அப்படிச் செய்வது வாங்கிச் சாப்பிடக்கூடிய மக்களுக்குக் குறைந்த விலையில் நெல் கிடைக்கச் செய்ய வேண்டும். இடையில் உள்ள கொள்ளை லாபக்காரர்கள் அதிகமான லாபத்தை அடைவது தடுக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சபாநாயகர் அவர்கள் மூலமாக அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

உணவுக் கொள்முதலைப் பொருத்தும், விநியோகத்தைப் பொருத்தும் முன்னாலே இருந்த காங்கிரஸ் அரசு கடைப்பிடித்த அதே வழி முறைகளைத்தான் இந்த அரசும் கடைப்பிடிப்பதாக அறிகிறேன். எந்த உணவுக் கொள்முதலால் காங்கிரஸ் மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டு அவர்கள் ஆளும் கட்சி வரிசையி லிருந்து எதிர்க்கட்சி வரிசைக்குப் போகக்கூடிய நிலை ஏற்பட்டதோ அதே உணவுக் கொள்முதலைத் தொடர்ந்து செய்யும் படி இந்த அரசு உத்தரவிட்டுள்ளதை என்னால் வரவேற்க முடிய வில்லை.

இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகமும் மற்ற காங்கிரஸ் அல்லாத எதிர்க்கட்சி களும் சேர்ந்து சென்ற நவம்பர் 6-ம் தேதி, நாட்டில் உணவு நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் ஒரு கிளர்ச்சியை நடத்தினார்கள். அப்போது, ஐந்து எக்கருக்குக் குறைவாக உள்ள சிறுநிலச் சொந்தக்காரர்களிடமிருந்து எந்த விதமான கொள்முதலையும் செய்யக் கூடாது என்று கொள்கை வகுத்தோம். அதற்கு மாறாக இன்று கட்டாயமாகக் கொள்முதல் செய்யும் நிலை நீடிக்கப்பட் டிருக்கிறது. அப்போது குறைந்தபட்சம் 12 அவுன்ஸ் விநியோ கிக்க வேண்டுமென்ற அடிப்படையில் கிளர்ச்சி நடத்தினோம். ஆகவே, பழைய முறையில் கொள்முதல் செய்வதை மாற்றி, தியாகம் செய்யக்கூடிய சிறு விவசாயிகள் மேலும் மேலும் தியாகம் செய்து கொண்டிருக்க வேண்டுமென்ற நிலை ஏற்படாமல் அவர் களிடமிருந்து கொள்முதல் செய்வதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் பெரும் நிலச் சொந்தக்காரர்களிடத்தில் இருந்து கட்டாயமாகக் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கை களைப் பற்றி இந்த உரையில் இல்லை. அவர்கள் தர்மோபதேசத் தினால் திருந்தமாட்டார்கள். இயேசு காலத்தில் இருந்து இன்று வரை நாம் கண்ட வரலாற்று உண்மை அது. ஆகவே, பெரிய நிலச்

சொந்தக்காரர்களிடத்தில் இருந்து கொள்முதல் செய்வதைத் தங்களுடைய உறுதியான கொள்கையாக இந்த அரசாங்கம் கடைப் பிடிக்க வேண்டுமென்று அமைச்சரவையைக் கேட்டுக் கொள் கிறேன். உணவு விநியோகத்திலும் பழைய அரசின் கொள்கையைப் புதிய அமைச்சரவை தொடரக் கூடாது. நகரப் பகுதி மக்களுக்கு 12 அவுன்ஸ் அரிசி கொடுக்கும் வரையில் சைக்கிள்களில் வைத்து, தலைச் சுமையாகக் கொண்டு வரக்கூடிய அரிசியைத் தடுக்காமல் அனுமதிக்க வேண்டும்.

மதிப்பிற்குரிய எங்கள் ஜில்லா கனம் அங்கத்தினர் சிவசாமி அவர்கள் கூறியதுபோல் அங்கிருந்து வரும்போது கிலோ ரூபாய் 1.20 பைசாவாக இருந்தது இன்று இரண்டு ரூபாயாகிவிட்டது. இப்படி விலை உயர்ந்தால் எப்படிப் பிழைப்பது என்று மக்கள் கவலையோடு இருக்கிறார்கள். ஆகவே உடனடியாக நியாய விலையில் அரிசியை விநியோகம் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதோடு அரிசி கொள்முதல் விநியோகக் கொள்கையில் காங்கிரஸ் சர்க்கார் கொள்கையிலிருந்து மாறுபட்ட முறையில் குறைந்த நிலக்காரர்களுக்கு விதிவிலக்கு அளிப்பதோடு அதிகப்படியாக நிலம் வைத்திருப்பவர்களிடம் இருந்து கட்டாயக் கொள்முதல் செய்து நகரங்கள் மேஜர் பஞ்சாயத்துக்கள் போன்ற இடங்களி லுள்ள மக்களுக்கு விநியோகம் செய்யும் வரையில் ஒரு இடத்தி லிருந்து தலைச் சுமையாகவோ அல்லது சைக்கிளிலோ போகக் கூடிய அரிசி போன்ற உணவுப் பொருள்களைத் தடுப்பது சரியாகாது. அப்படித் தடுக்காமல் இருக்க வேண்டும்.

கடைசியாக, எங்கள் நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நெசவாளர்களின் பிரச்னை ஒரு பெரிய பிரச்னை. அது பற்றி கவர்னர் அவர்கள் உரையில் ஒன்றும் காணப்படவில்லை. இன்று நெசவாளர்களின் பிரச்னை பெரியதொரு பிரச்னையாக இருக்கிறது. நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உற்பத்தி செய்துள்ள துணிகள் தேக்கம் அடைந்து விற்பனை யாகாமல் நூலின் விலையும் அதிகமாகியுள்ளதால் மாதம் பத்து அல்லது பதினைந்து நாட்களுக்குத்தான் நெசவாளர்களுக்கு வேலை கிடைக்கிறது. அப்படிக் கிடைக்கக் கூடியதற்கும் நாள் ஒன்றுக்கு 12 அணா அல்லது ஒரு ரூபாய்தான் கூலி கிடைக்கிறது. அதனால் நெசவாளர்கள் மிகவும் கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். எதிர் காலத்தில் அந்தத் தொழிலே நசித்துப் போய்விடக் கூடிய ஆபத்து இருக்கிறது. ஆகவே, குறைந்த விலையில் நூல் கிடைக்கவும், உற்பத்தி செய்யப்பட்டு தேங்கி உள்ள ஜவுளிகளை சர்க்காரே வாங்கி விற்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஆளும் பொறுப்பை ஏற்றிருக்கிற ஒரு கட்சியின் புதி தாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினன் நான் என்ற போதிலும் மதிப்பிற்குரிய நமது மாநில கவர்னர் அவர்களின் உரையில் பொதிந்துள்ள கருத்துக்கள், மக்களின் தேவைகளை அறிந்து கடமைகளை உணர்ந்து தெரிவிக்கப்பட்டவை என்பதை அறிந்து





ான் மகிழ்ச்சியடைகிறேன். இருபது ஆண்டுகள் ஒரு குறிப்பிட்ட ட்சி ஆண்டபின் பொறுப்பேற்றிருக்கும் புதியதொரு கட்சியைச் ார்ந்த அமைச்சர்களுக்குள்ள சங்கடமான நிலைமையை நான் றிவேன். மதிப்பிற்குரிய கவர்னர் அவர்கள் இந்தச் சர்க்கார் ஒரு டைக்கால பட்ஜெட்டைத் தயாரிக்கும் என்று குறிப்பிட்டிருக் றார்கள். இந்த நேரத்தில், கனம் அவைத் தலைவர் அவர்களே, ங்கள் மூலமாக நான் ஒரு யோசனையைத் தெரிவித்துக் கொள்ள ிரும்புகிறேன். தேர்தல்கள் பிப்ரவரியில் முடிந்து மார்ச்சில் புதிய மைச்சரவை ஏற்படுகின்றபோது அந்த நிதி ஆண்டு முடி தற்குள் அடுத்த நிதி ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை வசர அவசரமாகத் தயாரிக்கின்ற நெருக்கடியான நிலை புதிய ந்திரிசபைக்கு ஏற்படுகிறது. பழைய கட்சியே ஆளுங்கட்சியாக ந்து பழைய நிதியமைச்சரே மீண்டும் நிதியமைச்சரானால் சிரமம் டையாது. ஆனால் வேறு கட்சி ஆட்சிக்கு வருமானால் பழைய ரசாங்கத்தின் திட்டங்களையும் நிதி நிலைமையையும் ஆராய்ந்து திய வரவு செலவுத் திட்டத்தைக் கொண்டு வருவது என்பது கவும் சிரமமான காரியம். அதனால் தேர்தல் நடைபெறும் ண்டில் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் புதிய அரசாங் த்திற்கு அவகாசம் தருகின்ற வகையில் நிபுணர்களிடம் கலந்து சி ஒரு புதிய முறையை வகுக்க வேண்டுமென்று நமது மைச்சர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் விலைவாசி உயர்வைப் பற்றியும், ணவுப் பிரச்னையைப் பற்றியும் கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக் றார்கள். விலைவாசி உயர்வுக்குப் பொதுப்படையாக வியாபாரிகளைக் றை கூறி வருவதே பழைய அரசாங்கத்தின் வேலையாக இருந் து. ஆனால், மத்திய அரசாங்கத்தின் பணவீக்கம் ஏற்படுத்து ின்ற பொருளாதாரத் திட்டங்களும், நாட்டில் பரவலாக நடை ற்று வந்த கள்ள நோட்டு உற்பத்தியும், கள்ளக் கணக்குகளும் ான் விலைவாசி உயர்வுக்கு முட்பெரும் காரணங்கள் என்பதை ழைய அரசாங்கம் உணரத் தவறிவிட்டது. கள்ளப் பணம் பாரிப்பவர்களைக் கண்டு பிடித்து தயவு தாட்சண்யமின்றி அவர் ளைத் தண்டிக்க வேண்டும் என்று நான் கனம் அமைச்சர்களைக் கட்டுக் கொள்கிறேன். போலீசார் பழைய பைல்களைத் தேடிப் டித்து இந்தக் குற்றத்தை யார் செய்திருந்தாலும் அவர்களைக் ற்றவாளிக் கூண்டில் ஏற்றத் தயங்கக் கூடாது. இனியும் யாரும் வ்விதக் குற்றங்களை செய்யாமலிருக்கும்படி பார்த்துக் கொள்ள வண்டும். பணவீக்க பொருளாதாரத் திட்டங்களைப் பொறுத்த ை மத்திய அரசுதான் கவனிக்க வேண்டும். மத்திய அரசின் வறான பொருளாதாரத் திட்டங்களை அவ்வப்போது சுட்டிக்காட்ட மது மாநில அரசாங்கம் தயங்கக் கூடாது.

உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில் அரசாங்கம் திகாரிகள் தருகின்ற புள்ளிவிவரங்களை முழுக்க முழுக்க நம்பி டக் கூடாது. இந்த ஆண்டு நல்ல மழை பெய்திருந்தபோதிலும் ற்பத்தி சென்ற ஆண்டின் உற்பத்தியில் 60 சதவீதம்தான் ஏற்பட் ருக்கின்றது என்று விவசாயிகள் கூறுகிறார்கள். இதற்கான ாரணங்களை அரசாங்கம் ஆராய வேண்டும். உணவுச் சிக்கலைத்

தீர்க்கும் பணியை ஒரு கணமும் தள்ளிப் போட முடியாது என்பதை அரசாங்கம் முற்றும் உணர்ந்து அதைப் போக்குவதற்குரிய வகையாகிய உழவர்களுக்கு இன்றியமையாத் தேவைப் பொருள்கள் நியாய விலைகளில் கிடைத்தற்குரிய வழிவகையினை முறையாக வகுக்கும் என்று கூறியுள்ள செய்தி, "நோய் நாடி நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்" என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழிக்கேற்ப செயல்படும் நல்லரசு நமக்கமைந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது, தரமான வித்துக்களைப் பெருக்குதல் மூலம், பாசன வசதிகளை விரிவு படுத்துவதாலும், உரவகைகளை உரிய காலத்தில் உரிய அளவில் வழங்குதல் போன்ற செயல்கள் இனி செவ்விய முறையில் செயல்படும் என்பதாலே தொல்லைகள் அகலும், துயர் கதை மறையும், வாழ்வாங்கு வாழும் உயர்நிலை கிடைக்கும் என்று மகிழும் நாள் நமக்கு கிடைத்துள்ளது.

"உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர்
உண்டி முதற்றே உணவின் பிண்டம்"

என்பது புறநானூற்றுப் பாடல். இது அரசியலாரை உண்டி கொடுக்க வேண்டுகின்றது. இதை உணர்ந்த இந்நாள் அரசு உழவுத் தொழில் சீர்படுதல் ஒன்றாலேயே தமிழகம் நலம் பெறும் என உணர்ந்து உரையில் முழுமையும் உழவுத் தொழில் மேம்பாட்டையே இந்நாள் தேவையெனச் சிறப்பாகக் கூறியுள்ளது போற்றத்தக்க கருத்தாகும். நல்ல உரம் தகுந்த நேரத்தில் தகுந்த அளவில் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டும் என்று கவர்னர் அவர்கள் கூறியிருப்பதை நான் வரவேற்கிறேன். ஐந்தாவது பாராவில் கண்டுள்ளபடி அரசாங்கத்தின் நம்பிக்கை வீண் போகாமலிருக்க வேண்டுமானால் இதைச் செய்ய வேண்டும்.

உணவுக் கொள்கையில் அரசாங்கம் ஒரு நிலையான முடிவை எடுத்துவிடக் கூடாது. அதற்குக் காலவரையறையும் வைக்கக் கூடாது. உணவுப் பொருள் உற்பத்திக்கேற்ப அவ்வப்போது கொள்கையை மாற்ற அரசாங்கம் தயங்கக் கூடாது.

கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்குச் செய்யக்கூடிய நன்மைகள் பல இருக்கின்றன. கடந்த காலத்தில் கூட்டுறவு என்ற போர்வையில் பொதுப் பணத்தைக் கொள்ளையடித்தவர்களையும், உரம் என்கிற பெயரில் வெறும் மண்ணை விவசாயிகளுக்கு விற்றவர்களையும் அதற்கு உடந்தையாக இருந்த கூட்டுறவாளர்களையும் கோர்ட்டில் நிறுத்தினால் கூட்டுறவு இயக்கம் இனி வெற்றி பெறும். கூட்டுறவு இயக்கத்தை ஆராய ஒரு குழுவை நியமிக்கப் போவதாக கவர்னர் அவர்கள் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது. கடந்த காலத்தில் கூட்டுறவு இயக்கம் ஆளும் கட்சியின் வளர்ச்சிக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பல ஊழல்கள் மறைக்கப் பட்டு பொது மக்களின் பணமும் அரசாங்கத்தின் பணமும் வீணாக்கப்பட்டிருக்கிறது.





உணவு விஷயத்தில் மத்திய சர்க்காரின் பிடியில் மாநிலங்கள் சிக்கிக்கொண்டிருப்பது நம்முடைய கூட்டாட்சி முறையில் ஒரு பெரிய துரதிருஷ்டமாகும். மத்திய சர்க்காரிலிருப்பவர்கள் திறமையை மதிப்பதுமில்லை, பிரத்தியட்ச நிலையை உணருவதுமில்லை. மாநில அரசாங்கங்களுக்கு உணவுத் துறையில் இன்னும் அதிகமாக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்பதை காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் மதிப்பிற்குரிய எஸ். கே. பாட்டீலும், சஞ்சீவி ரெட்டியாரும் பேசியிருப்பது பத்திரிகைகளில் வந்திருக்கிறது. காலம் கடந்த ஞானோதயம். அந்த ஞானோதயம் காலம் கடந்தாவது ஏற்பட்டது நன்மைக்கே. மத்திய அரசாங்கத்திடம் நம் அரசாங்கம் இதற்காக வாதாட வேண்டும்.

மத்திய—மாநில அரசாங்க உறவுகள் பற்றி நான் இந்த நோக்கில் சிறிது குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசாங்கம் இன்றைக்கு மாநில அரசாங்கங்களை பஞ்சாயத்துக்கள் அல்லது முனிசிபாலிட்டிகளின் நிலைமைக்குத் தாழ்த்தியுள்ளது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று கவர்னர் அவர்கள் வலியுறுத்தியிருப்பதை நான் வரவேற்கிறேன்.

நாட்டின் பொருளாதாரச் சீர்குலைவு இருபதாண்டுகளில் ஏற்பட்டதாகும். ஒரு சில நாட்களில் இதைப் புதிய அரசாங்கம் சீராக்கிவிட முடியாது. அதுவும் மத்திய அரசாங்கம் தன் தவறுகளை உணர்ந்து பரிகாரம் தேடினாலன்றி பொருளாதாரம் சீர்படாது. தமிழ்நாட்டில் புதிய அரசாங்கத்திடமிருந்து பல நன்மைகளை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அவற்றை உடனடியாக இல்லாவிட்டாலும் படிப்படியாக இந்த அரசாங்கம் செய்யும் என்ற நம்பிக்கை இருக்கிறது. நூல் விலையேற்றத்தைப் பற்றி எனக்கு முன் உரையாற்றிய நண்பர் சொன்னதுபோல் அதையும் கவனித்து ஆவன செய்ய வேண்டும். மதிப்பிற்குரிய கவர்னர் அவர்கள் தமிழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சென்னைக்குத் தமிழ்நாடு என்று அரசியல் சட்டபூர்வமாகப் பெயர் வைப்பதுபற்றி தம் உரையில் கூறியிருப்பார்களானால் அவரது உரை இன்னும் சிறப்பானதாக அமைந்திருக்கும். வணக்கம்.

* திரு. ரா. ரெத்தின தேவர் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 17-ம் தேதி அன்று மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்கள் தமது உரையில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து. பேசியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக கிழக்கு ராமநாதபுரம் பகுதி, குறிப்பாக முதுகுளத்தூர் தொகுதி விவசாயத்தைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள மக்கள் வாழும் பகுதி. இது அமைச்சர்களுக்கும் நன்கு தெரியும். அந்தப் பகுதி மக்கள், எங்கள் தலைவர் முத்துராமலிங்க தேவர் அவர்களின் காலத்தில் இருந்து 19 ஆண்டுகளாக எதிர்ப்பிலே ஓட்டளித்த மக்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும். சென்ற காங்கிரஸ் ஆட்சியில் எந்த விதமான நல்ல காரியமும் முதுகுளத்தூர் தொகுதியில் செய்யவில்லை என்பதும் தெரியும். காங்கிரஸ் ஆட்சியின்போது சென்ற 1957-ம் ஆண்டிலே, காங்கிரஸ்காரர்களால் பயங்கரமான கலவரம் ஒன்று அந்தப்

[திரு. ரா. ரெத்தின தேவர்] [1967 மார்ச் 20

பகுதியில் தூண்டப்பட்டு, பல பொய்யான வழக்குகளைப் போட்டு அந்தப் பகுதியிலுள்ள அரிசன மறவர் மக்கள் சிறைகளில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இது அரிசன நல அமைச்சருக்கும், முதல் அமைச்சருக்கும் நன்றாகத் தெரியும். இப்போது உள்ள அமைச்சர்கள் இரு சாரார்களையும் விடுதலை செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

கலவரத்தைக் கிளப்பிய காங்கிரஸ்காரர்கள், செக்யூரிட்டி மெசரில் என்று சொல்லி, ரோடு போடப் போகிறோம் என்று சொல்லி பணத்தை ஒதுக்கியும் எந்தவிதமான நல்ல காரியமும் செய்யவில்லை. அந்தத் தொகையை காங்கிரஸ்காரர்களே காண்ட்ராக்ட் எடுத்து தவறு செய்துவிட்டார்கள் என்று தெரிகிறது. எங்கள் பகுதியில் நல்ல சாலைகளைப் போடவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அந்தப் பகுதியில் இரண்டு ஆறுகள் ஓடுகின்றன. முனிவர் போல் உள்ள, நாராயண காவேரி சிருதமான் கால்வாய் சுமார் 500 கண்மாய்களுக்குத் தண்ணீர் பாய்வதற்கு வசதி அளிக்கக்கூடிய ஆறுகளைக் கடந்த காலத்தில் எங்கள் பகுதியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில் அதற்கெல்லாம் செவி சாய்க்கவில்லை. அந்த ஆறுகள் 500 கண்மாய்களுக்குப் பாசன வசதி அளிக்கும் நிலையில் இருப்பதால் அதைச் சீர்ப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முதுகுளத்தூர் பகுதியில் எந்தவிதமான சாலையும், மற்றபடி சிறு குளங்கள், குடி தண்ணீர் வசதிகூட இல்லாத காரணத்தினால் அது மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அதை நல்ல முறையில் இந்த அரசினர் கவனித்து அவைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

அதே மாதிரி அந்தப் பகுதியிலே ஒரு ஆண்டு விவசாயம் இரண்டு ஆண்டுகளுக்குக் காணக்கூடிய பூமிகளாக இருப்பதால், அவைகளுக்கு நல்ல முறையில் தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும். சில குளங்கள் தூர் எடுக்காமல் மோசமாக இருக்கிறது. அவைகளைத் தூர் எடுக்க வேண்டும். கிணறுகள் வெட்டுவதிலும் விவசாயிகள் பாதி வெட்டி, பாதி வெட்டாமல் அரைகுறையாக இருந்து அதைச் செய்ய முடியாமல் இருப்பதால், கடன்கள்
பி.ப. 12-30 கொடுத்து நல்ல முறையில் ஊக்குவிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டு நான் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திருமதி கே. பி. ஜானகியம்மாள்: மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, இரு தினங்களுக்கு முன்னால் கவர்னர் ஆற்றிய உரையின்மீது எனக்குப் பேசுவதற்கு இன்று சந்தர்ப்பம் அளித்தமைக்கு முதற்கண் என்னுடைய வணக்கம்.

கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில், இந்த நாட்டில், முக்கியமாகத் தமிழகத்தில் இன்று மக்கள் முன்னால் இருக்கக்கூடிய பிரச்னையாகிய உணவுப் பிரச்னையில் விவசாயத்திற்குத்தான் முக்கியமாக முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப்



1967 மார்ச் 20] [திருமதி. கே. பி. ஜானகியம்மாள்]

பார்க்கிறோம். அந்த அடிப்படையில் விவசாயத்திற்கு நல்ல பொறுக்கு விதைகள் கொடுப்பதும், நீர்ப்பாசன வசதிகளை விருத்திப் படுத்துவதும், அதிகமாக இதிலே கொண்டுவரப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இன்று முக்கியமாக விவசாயத்திற்கு உரம், பொறுக்கு விதைகள், நீர்ப்பாசனம் ஆகியவைகள் மட்டும் என்று எடுத்துக் கொண்டால்—விவசாயத்தைப் பெருக்குவதற்கு அவை ஒரு முக்கிய காரணம்தான்—அது மட்டும் போதாது. விவசாயத்திலே அதிகப்படியான உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால், இன்றைக்கு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயி கையில் நிலம் இருக்க வேண்டும். அந்தப் பிரதான அம்சம் இதிலே விடப்பட்டிருக்கிறது என்பது எனது கருத்து. தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான விவசாய பெருங்குடி மக்கள் கையகலம் உழுவதற்கு நிலமின்றித் தவிக்கும் நிலை இருக்கிறது. அதே நேரத்தில் தரிசு நிலமாக இருக்கக்கூடிய நிலங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் இருப்பதைப் பார்க்கிறோம். உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்ற அந்த நோக்கத்திலே தரிசு நிலங்களாக இருக்கக்கூடிய நிலங்களை உடனடியாக இன்றைய அரசு நிலமற்ற விவசாயிகளுக்குக் கொடுப்பது என்பது உற்பத்திப் பெருக்குக்கு முக்கியமான அம்சமாக இருக்கும் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதே மாதிரியாக இன்று நாட்டில் முக்கியமான உணவுப் பிரச்னையில் இன்றைக்குக் கொள்முதல் செய்ய வேண்டிய அவசியம் உண்டாகிறது. கொள்முதல் செய்யும் நேரத்தில், எனக்கு முன்னால் பேசிய பல நண்பர்கள் குறிப்பிட்ட மாதிரி, நீண்டகாலமாகக் கூறி வந்திருக்கிறபடி, சிறு நிலச்சுவான்தார்களை, விவசாயிகளைத் தொந்தரவு செய்யாது 2 ஏக்கர், 3 ஏக்கர், 5 ஏக்கர் வைத்திருப்பவர்களைப் பொறுத்தவரையில் கட்டாயக் கொள்முதல் இல்லாமல், இஷ்டபூர்வக் கொள்முதல் என்று வைத்து, அதற்கு மேல் அதிகமாக வைத்திருப்பவர்களைப் பொறுத்தவரையில் கட்டாயக் கொள்முதல் அவசியம் செய்ய வேண்டும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது தேர்தல் காலத்தில் செய்திருந்தது என்ன? தேர்தல் காலத்தை முன்னிட்டு கொள்முதல் கைவிடப்பட்டிருந்தது என்பதை அறிவோம். இன்று அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டு, மக்களுக்கு இம்மாதிரியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்கு முக்கிய காரணம் அந்தக் காங்கிரஸ் ஆட்சிதான். ஏனென்றால், தேர்தலில் எப்படியாவது ஓட்டு வாங்கவேண்டுமென்று அறுவடை செய்யக் கொள்முதல் செய்வதிலே, அப்போதுதான் கொள்முதல் செய்தால்தான் வருங்கூடிய காலம், அப்போது கொள்முதல் செய்தால்தான் அப்படி இருந்தும் காலத்தில் அரிசி விநியோகம் செய்யமுடியும். கொள்முதலை ஒத்தி வைத்து, மக்களைப் பற்றி அக்கறை இல்லாமல், மக்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்று கொள்முதலை நிறுத்திவிட்டார்கள். இன்று என்ன கூறுகிறார்கள் என்றால், தேர்தல் முடிந்து புதிய ஆட்சி ஏற்பட்டிருக்கிறபோது 20 ஆண்டுகளில் செய்ய முடியாத காரியங்களையெல்லாம் சாதாரணக் காரியத்தைக்கூட செய்யத் தவறியவர்கள், 20 நாட்கள்கூட ஆகும் முன்னர் "எங்கே மூன்று படி அரிசி?" என்று கேட்கிறார்கள்

என்பதைப் பார்க்கும்போது வருத்தமாக இருக்கிறது. உண்மையாக இன்றைக்கு மூன்று படி அரிசி கேட்கிறவர்களை ஏன் தேர்தலுக்கு முன்னால் கொள்முதலையே நிறுத்தினீர்கள் என்று கேட்கலாம். எவர் கேட்டாலும் கேட்கட்டும். இப்போது நம் முன்னால் இருக்கக் கூடிய கடமைகளைத் தவிர்க்க முடியாது. இப்போது 5 ஏக்கர்களுக்கு மேல் இருக்கிறவர்களிடம் கட்டாயக் கொள்முதல் செய்தாக வேண்டும். அது தவிர்க்க முடியாதது என்ற நிலைமைக்கு வந்திருக்கிறோம். ஆகவே கொள்முதல் செய்யக் கூடிய காலத்தில், 20 ஆண்டுக்காலமாக இருந்த பெரும் நிலச்சுவான் தார்கள் உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வந்த நேரத்தில் வேண்டியவர்களுக்குப் பிரித்துப் பட்டா மாறுதல் செய்து கொண்டவர்கள், பழத்தோட்டம், மேய்ச்சல் தரை, சர்க்கரை ஆலைக்கு என்று எழுதி வைத்து பல முறைகளில் நிலத்தைப் பங்கீடு செய்துகொண்டிருக்கிறவர்கள், நிலம் தங்களுடைய கையில் இருந்தாலும் விளைந்த உணவுத் தானியத்தை தாராளமாக மக்களுக்கு வினியோகம் செய்யும் எண்ணம் இல்லாமல் பதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் இப்போது நமக்குத் தாராளமாக வினியோகிப்பர் என்ற நம்பிக்கையில்லை. அப்படியென்றால் கட்டாயமாகக் கொள்முதல் செய்துதான் தமிழக மக்களுக்கு உணவுப் பிரச்னையைத் தீர்க்க முடியும் என்று சொன்னால், இன்றைய நிலப்பிரபுக்களை மட்டும் நம்பியில்லாமல், கொள்முதலுக்குச் செல்லும் அதிகாரிகளை மட்டும் நம்பியில்லாமல், ஆங்காங்கு கமிட்டி அமைத்து, சட்ட மன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து போர்டு தலைவர்கள், மற்றும் பொது ஜனக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எல்லோரையும் சேர்த்து ஒரு கமிட்டி அமைத்து, அதிகாரிகள் கொள்முதலுக்குச் செல்லும்போது அவர்களுக்குத் துணையாக இந்தக் கமிட்டியினரும் சென்று உதவக் கூடிய முறையில் ஒரு பொது ஜனக் கண்காணிப்புக் கமிட்டியாக அமைத்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்தால்தான் பதுக்கல் பொருள்களை வெளியில் கொண்டுவர முடியும், பதுக்கல் பேர்வழிகள் தப்பிக்க முடியாது என்ற நிலையை ஏற்படுத்த முடியும். அந்தத் திசையில் கவனம் செலுத்த வேண்டுமென்று அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, தமிழகத்தில் முக்கியமாக இருக்கக் கூடிய பிரச்னை விவசாயத் தொழிலுக்கு அடுத்தபடியாக, கைத்தறி தொழிலாளர்கள் பிரச்னைதான். தமிழகத்தில் 6 லட்சம் கைத்தறித் தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். குறிப்பாக மதுரை நகரத்தில் 1½ லட்சம் கைத்தறித் தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். மோட்டா ரகத் துணி ஏழைஎளிய மக்கள் வாங்கி உபயோகிக்கும் துணி. மோட்டா ரக 20-ம் நெம்பர் நூல் ஒரு ராத்தலுக்கு 25 ரூபாயி லிருந்து 30 ரூபாய் ஆக உயர்ந்திருக்கிறது, அதாவது ரூபாய் 5 அதிகமாயிருக்கிறது. இம்மாதிரி நூல் விலை ஏறிவிட்டதன் காரணமாக அவர்களுடைய தறி சரியாக ஓடாமலும், அதனால் வேலையில்லாமல் பலவிதமான சிரமங்களுக்கு ஆளாகி, கைத்தறித் தொழிலாளர்கள், தொழிலே நசிந்து போகும்படியான நிலைமையில் பல பேர்கள் இருக்கிறார்கள். இம்மாதிரி கஷ்டத்திற்கு உள்ளாகிக்





கொண்டிருக்கிற மக்களுக்குச் சென்ற கால அரசு ஒரு காரியம் செய்தது. இப்படித் துன்பப்படக்கூடிய கைத்தறித் தொழிலாளர் மக்களுக்கு 7,000 விசைத் தறிகளைக் கொண்டு வரவேண்டும் என்ற ஒரு எண்ணத்தை முன்வைத்திருந்தது. இன்றைக்கு இருக்கக் கூடிய தி.மு.க. அரசு, மக்கள் ஆதரவு பெற்ற அரசு, இப்படித் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்ட காலத்தில், அவர்களுடைய நன்மைக்காக கைத்தறித் துணி நெசவுத் தொழில் பாதிக்கப் படாத வகையில், கிராமம் கிராமமாகச் சென்று கைத்தறித் தொழிலாளர்களுடைய ஆதரவைத் திரட்டிய கட்சி இன்று ஆட்சிக்கு வந்திருக்கிறது, அவர்கள் எதிர்கால வாழ்வு நலம் பெற, அவர்கள் எதிர்பார்க்கின்ற கைத்தறித் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யும் நமது அரசு ஏற்பட்ட பிறகு, விசைத் தறிகள் 7,000 தறிகள் இந்த நாட்டில் புகுவதுபற்றி கவர்னர் பெருமான் உரையில் எந்த விதமான விஷயத்தையும் குறிப்பிடவில்லை. விசைத் தறி பற்றி நமது அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சென்ற கால அரசு இந்த நாட்டு மக்களுக்கு முன்னால், தமிழக மக்களுக்கு முன்னால் பலவிதத் திட்டங்கள் வைத்திருந்தார்கள். சமுதாய நலத் திட்டம், ப்ளாக் டெவலப் மெண்டு திட்டம், மாதர்கள் சங்கம் இப்படிப்பட்ட திட்டங்களை வைத்திருந்தார்கள். மாதர் சங்கங்கள் தமிழகத்தில் எப்படி வேலை செய்கின்றன என்று பார்த்தால், எந்த அளவுக்கு சாமான்ய மக்களுக்கு அந்தத் திட்டங்கள் பயன்படுகின்றன என்று பார்த்தால், அதிகமாகச் சுற்றுலா செல்லுவதற்குத்தான் பயன் படுகின்றன. கார்களை வைத்துக்கொண்டு கடவுள் பக்தி இருக்கக் கூடியவர்கள், ஆலயங்களுக்குச் செல்வதற்கும் மேலும் விசேஷ இடங்களுக்குச் சென்று பார்வையிடுவதற்கும் பயன்படுகிறதே தவிர, அவைகளினால் மக்களுடைய பொருளாதார வாழ்வு வளம் பெற ஏதாவது வழி உண்டா என்றால், இல்லையென்றுதான் கூற வேண்டும். பெண்களுக்குத் தகுந்தமாதிரி ஒவ்வொரு மாவட்டத் திலும் ஏதாவது ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். இன்றைக்கு பெரும்பாலன தாய்மார்களும், சகோதரிகளும் துன்ப நிலைமையில் இருக்கிறார்கள். கூலி விவசாயிகளும் சரி, நகரத்தில் வாழக்கூடிய ஒரு சில படித்த மத்திய குடும்பங்களைச் சேர்ந்தவர் களும் சரி, ஏழை எளிய மக்கள் வேலையின்றி, கூலியின்றி, செய்வது அறியாது தவிக்கக்கூடிய நிலைமையில் இருப்பதால், வருங்காலத் தில் அமல்படுத்தக்கூடிய திட்டங்களை மாவட்டங்களிலும் சரி, நகரங்களிலும் சரி, அவரவர்களுக்குத் தனியாகத் தொழில் கிடைக் கக்கூடிய நிலைமையில் உத்திரவாதம் ஏற்படுவதற்கு நல்லதோர் திட்டமாக வகுத்து அந்தத் திட்டத்தின் மூலம் ஏற்கனவே செயல் படாதிருந்த, மக்களுக்கு பயன் அளிக்க முடியாமல் இருந்த திட்டங்களை மாற்றி அமைத்து எதிர்காலத்தில் இப்படிப்பட்ட மக்களுக்கு நல்ல தொழில் வாய்ப்பு இருக்கக்கூடிய முறையில், நமது அரசு செயல்பட வேண்டும் என்று நான் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ரூபாய்க்கு மூன்று படி அரிசி வேண்டும் என்று கேட்கக்கூடிய நண்பர்கள், இன்னும் 6 மாத அவகாசம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தேர்தல் காலத்தில் வாக்குறுதி கொடுத்தார்கள், நிறைவேற்றவில்லை என்று சொல்லுகிறார்கள், நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். இந்தியா விடுதலை பெற்ற பொழுது நேருஜி அவர்கள் இந்த நாட்டில் தாங்கள் ஆட்சிக்கு வந்ததும் கள்ள மார்க்கெட்காரர்களைத் தூக்கிலிடுவோம் என்று கூறினார்கள். கடந்த 20 ஆண்டு காலமாக கள்ளமார்க்கெட்காரர்களை எங்கேயாவது நாட்டில் கழுவில் ஏற்றினார்களா என்றால், இல்லை. அவர்கள் 20 ஆண்டு காலமாக மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் பல பல நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. அந்த நிலையில், 3 படி அரிசி கொடுப்போம் என்று சொன்னதை 20 நாட்களில் வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று குறை கூறுகிறார்கள் என்பது பெரிதும் வருந்தத்தக்க விஷயம். ஏற்கனவே இருக்கக்கூடிய நிலைமைகள் மக்களுக்கு நன்றாகத் தெரியும். மக்கள் தெரிந்துதான் அவர்களை எதிர்க்கட்சியினராக ஆக்கியிருக்கிறார்கள். இனிமேல் எதிர்காலத்திலாவது நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவர்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நேரத்தில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் கொடுத்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. வி. டி. அண்ணாமலை: பெருவணக்கத்திற்குரிய தமிழக சட்ட மன்ற துணைச் சபாநாயகர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய தமிழக கவர்னர் அவர்கள் ஆற்றிய பேருரையை ஆதரிக்கும் முகத்தான் என்னுடைய கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கவர்னர் பெருமான் உரையில் விவசாயத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து, ஏரு, உரம் இவைகளைப்பற்றியெல்லாம் தீவிர கவனம் செலுத்தப்படும் என்று கூறப்பட்டிருப்பதுபற்றி நான் மிகவும் பாராட்டுகிறேன். நாட்டிலே இருக்கிற உணவுப் பஞ்சத்தைத் தீர்க்கவேண்டுமென்றால் சிறுநிலக்கிழார்கள், ஏழை எளிய விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய ஒரு சில திட்டங்களை உருவாக்க வேண்டும். அம்மாதிரி திட்டங்கள் உருவாக்கப்படும் என்று கூறியிருப்பதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

இதிலே மிகவும் முக்கியமானது தமிழ் நாட்டிலே தமிழ் மணம் கமழ வேண்டுமென்பது. ஆகாசவாணி என்ற வார்த்தை மாற்றப்பட்டு வானொலி என்று அமைக்கப்பட வேண்டும் என்று நீண்ட நாட்களாக மக்கள் விரும்புகிறார்கள். ஆனால், கவர்னர் அவர்கள் உரையில் அதைப்பற்றி ஒன்றும் காணவில்லை. தவிர, தமிழ் நாடு என்ற பெயர் ஆங்கிலத்தில் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்றுதான் இருக்கிறது. ஆங்கிலத்தில் மெட்ராஸ் ஸ்டேட் என்று இருப்பது ஆங்கில இலக்கணப் பிழை என்பது அனைவரும் நன்றாக அறிந்த உண்மை. இருந்தபோதிலும், தமிழ் நாடு தமிழகம் என்ற பெயரில்லை. தமிழ் மொழி மட்டுமல்ல, வேறு எந்த மொழியில் இருந்தாலும், தமிழகம், தமிழ் நாடு என்று மாற்றி அமைக்க வேண்டும் என்பதுபற்றி விரிவாகக் கூட கவர்னர் அவர்களின் உரையில் ஒரு வார்த்தையும் இல்லை என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.





கிராமங்களிலே கைத்தறி நெசவாளர்கள் பெரும்பாலாக வசிக்கிறார்கள். "தேங்கிக் கிடக்கின்ற கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதற்கு, கதருக்கு இந்த அரசாங்கம் என்னென்ன சலுகைகள் அளித்திருக்கிறதோ, அந்த சலுகைகளெல்லாம் கைத்தறித் துணிகளுக்கும் வழங்கப்பட்டு, கைத்தறித் தொழிலாளர்கள் கண்ணீர் துடைக்கப்படும் என்று இந்தப் பேருரையில் சேர்க்கப்பட வேண்டும்" என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் நாட்டிலிருக்கிற கடலோர பாகங்களில், நீர் வளத்தைப் பயன்படுத்தி, கடல் நீரில் இருக்கிற மீன்களை உணவுக்காக விஞ்ஞான ரீதியில் பயன்படுத்தி, அதற்கான ஆராய்ச்சிக் கூடங்களையும் ஏற்படுத்த வேண்டும். கடல் உட்பாகத்தில் இருக்கிற தாவர வர்க்கங்களை பயன்படுத்தி புரத சத்துக்கள் நிறைய இருக்கிற உணவுகளைத் தயாரித்து, இன்றைக்கு இருக்கிற உணவுப் பற்றாக் குறையைப் போக்க வேண்டும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராம மக்களுக்குள்ள பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும். கிராம மக்கள் முன்னேற்றுவதற்கு வழிவகைகள் செய்யப்பட வேண்டும். கிராமங்களில் இருக்கிற பனை மரங்கள், தென்னை மரங்கள், ஈச்ச மரங்கள் இவைகளைப் பயன்படுத்திக் கொண்டு, இவைகளிலிருந்து மது இறக்காவிட்டாலும், உணவு வகைக்காக மதுவை இறக்கி, அவைகளிலிருந்து ஈஸ்டு உணவு சத்துப் பொருள்களை எடுத்து, மக்களுக்குத் தேவையான உணவு சத்துக்களைத் தயாரிப்பதற்கு ரசாயன சாலைகளை (லெபொரடரீஸ்) அமைக்க வேண்டும். கிராமப் பகுதிகளில் இருக்கிற பலவகையான மரங்களை இம்மாதிரி சத்துள்ள உணவைத் தயாரிப்பதற்கு உபயோகிப்பதன் காரணமாக, கிராம மக்களுடைய பொருளாதாரம் அபிவிருத்தி அடைகிறது. அதுமட்டுமல்ல. கிராமங்களில் இத்தியாதி மரங்களை அதிகம் வைத்துப் பயிரிடுவதற்கு இது ஒரு வாய்ப்பாகவும் அமையும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழகத்தைச் சார்ந்த புதுவை தமிழக மாநிலத்தைச் சேர்ந்த ஒரு திட்டாக அமைந்திருக்கிறது. தமிழ் பேசுகிற மக்கள், அங்கே சுதந்திரமாக வாழ விரும்புகிறார்கள். அங்குள்ள தமிழ் மக்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையில் அதை அண்டைய மாநிலமாகிய தமிழகத்தோடு சேர்ப்பதற்கு எல்லா முயற்சிகளையும் கவர்னர் அவர்கள் மூலம் நமது அரசு எடுத்துக் கொள்ளவேண்டும். நம்முடைய ஆட்சியானது அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்து, புதுவையிலே இருக்கிற தமிழர்கள், தனியாக இருக்கிற தமிழர்களை

தமிழர்களோடு சேர்த்து, பரந்த தமிழகமாக ஆக்குவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக, தேசிய கீதம் என்கிற நாட்டுப்பாடல் இருக்கிறது. அது எல்லா நேரங்களிலும், எல்லாக் காலங்களிலும், உபயோகிக்கப்பட்டு வருகிறது. தேசிய கீதம் என்பதை மாற்றி, நாட்டுப் பாடல் அல்லது நாட்டு வாழ்த்து என்று அமைத்து, ஜன கண மன என்பதை தமிழில் பாமர மக்களும் புரிந்துக்கொள்ளும் வகையில், தூய தமிழில் ஆக்கி, சேவை செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு, இவைகளை யெல்லாம் செய்தால் தமிழ் மக்கள் இந்த கவர்னர் பேருரையை சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி போன்று நினைத்து, ஆதரவு கொடுப்பார்கள் என்று கூறிக்கொண்டு முடிக்கிறேன்.

* **திரு. எம். சுரேந்திரன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது கவர்னர் அவர்கள் உரை நிகழ்த்தியதில், நடந்து முடிந்த தேர்தலைப் பற்றி மிகவும் பாராட்டியிருக்கிறார்கள். நடந்து முடிந்த தேர்தல் அமைதியாக நடந்தது பாராட்டுதலுக்குரியது தான். இருந்தாலும், நம்முடைய பண்பையும் இந்தச் சபையின் பெருமையையும் வெளிபடுத்துவதற்காகத்தான் அந்த வார்த்தைகள் பயன்படுகிறது என்று பணிவோடு சொல்ல விரும்புகிறேன். இந்தத் தேர்தலிலே, அனைவரையும் பாராட்டுவதற்குப் பதிலாக கடந்த காலத்திலே ஆளும் கட்சியாக இருந்தவர்களைப் பாராட்டாமல் விட்டு விட்டு இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால், தேர்தல் காலத்தில் ஆளும் கட்சிக்கு எதிராக மற்ற கட்சிகள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து ஓட்டுகள் சிதராமல் இருக்கவேண்டும் என்று ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் செய்த செயலை அவர்கள் பாராட்டியிருக்க வேண்டும், அதற்குப் பதிலாக, ஆளும் கட்சிக்கு எதிராக இருப்பவர்களை கழுதை மேல் செல்வதைப் போலப் பொம்மைபோட்டு, தலைவர்களை இழிவு படுத்தி, சுவரொட்டிகளை வெளியிட்டார்கள். அதிலிருந்தே அவர்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொள்ளவில்லை என்பது வெளியாயிற்று. மற்ற கட்சிகளை இழிவாக நினைக்கிறவர்கள் என்பதை இன்றைக்கும் சுவர்களில் ஒட்டப்பட்டிருக்கும் சுவரொட்டிகள் வெளிப்படுத்திக்கொண்டு இருக்கின்றன. மேலும், அன்றைக்கு ஆளும் கட்சியாக இருந்த கட்சியின் பெரும் தலைவர் என்று மதிக்கப் படுகிறவர், இந்தத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று விட்டால், பிறகு 25 வருஷங்களுக்கு அதை அசைக்க முடியாது என்று கூறினார்கள். அம்மாதிரி ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் சொல்லமாட்டார்கள். அடுத்து, அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால், சைனாவில் நடப்பதைப் போல், கலகம் நடக்கும் என்றும் கூறினார்கள். இவைகளெல்லாம், இந்த நாட்டிலே இருக்கின்ற காங்கிரஸ் அணியில் உள்ளவர்களுடைய எண்ணங்களைத் தூண்ட, அவர்களுடைய அணியில் இருப்பவர்





களுக்கு ஊக்கமளிக்க தேர்தலில் குறிப்பிட்ட வார்த்தைகளாக இருக்க வேண்டும். எப்படி இருந்தபோதிலும், இவை யெல்லாம் ஜனநாயகத்திற்கு உகந்தவை அல்ல, ஆழ்ந்த அநுபவத்தின் மீது சொல்லப் பட்டவை அல்ல. இதன் காரணமாக பல இடங்களில் பல விதமான குழப்பங்கள் உண்டாக்க முயற்சிகள் நடந்தன. ஆனால், எதிர்க் கட்சிகள் வோட்டுக்கள் சிதராமல் இருக்க வேண்டும், வோட்டுக்கு இருக்கும் சக்தியை வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு, மிக்க அடக்கத்துடன், பொறுமையுடன், சகிப்புத் தன்மையுடன், குழப்பங்களைச் சமாளித்தார்கள் என்று சொல்ல வேண்டும். முன்னால் எப்படி நடந்து இருந்த போதிலும், தேர்தலின் போது என்னென்ன நடந்திருந்த போதிலும், மாநிலத்தின் நன்மையைக் கருதி, புதிய அமைச்சரவையின் தலைவரான முதல் அமைச்சர் காங்கிரஸ் அணியில் பழைய மந்திரிகளையும் கண்டு பேசினார்கள். அதனால், அவர்களுடைய பண்பும், நாகரிகமும், மாநிலத்தின் வருங்கால கௌரவத்தை உயர்த்த இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு உணர்கிறோம். இந்த உண்மையை இன்றைக்கு எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் அனைவரும் உணர வேண்டும். வருங்காலத்தில் நல்ல பணிகளில் அவர்கள் ஈடுபட முயற்சிப்பார்கள் என்று நம்புகிறேன். ஜனநாயகத்திலும், சோஷலிசத்திலும் நம்பிக்கைகொண்டு செயல்படுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

உணவுப் பிரச்சினை பற்றி கவர்னர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு நாட்டில் இருக்கின்ற எல்லாவித பிரச்சினைகளிலும், முதல் பிரச்சினை, அவசரப் பிரச்சினை, உணவுப் பிரச்சினைதான் என்பதை இந்த அமைச்சரவை உணர்ந்திருக்கிறது என்பதுதான் கவர்னர் வாயிலாகச் சொல்லப்பட்டது. அதைப் பாராட்டுகிறோம். உணவுப் பிரச்சினை மிகச் சிக்கலான நிலையில் இருக்கிறது என்பதை பலருடைய பேச்சிலிருந்தும் புரிந்து கொள்ள முடிகிறது. பற்றாக்குறை இருக்கிறதோ இல்லையோ, சில இடங்களில் சட்ட பூர்வமான ரேஷனும், சில இடங்களில் குடும்பக் கார்டுகளும் இன்னும் சில இடங்களில் நியாய விலைக் கடைகளும், இப்படி இரண்டு மூன்று விதமான முறைகளைப் பார்த்து, ஜனங்களால் எதையும் புரிந்துக்கொள்ள முடியவில்லை. அந்த வகையில் காரியங்கள் நடைபெறுகின்றன. இதைச் சீர்திருத்த வேண்டும். உணவு என்று சொல்லும்போது, எல்லோருக்கும் ஒரே மாதிரியான வயிறும், ஒரே மாதிரியான பசியும் தான் இருக்கிறது. பணம் இல்லாதவனுக்கும், பணம் இருப்பவனுக்கும் ஒரே மாதிரித்தான். ஆகவே, உணவுப் பங்கீட்டு முறையில் ஒரே மாதிரியான அமைப்புத்தான் இருக்க வேண்டும். அது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் படுகிற உண்மை. இன்றைக்கு இருக்கும் நிலையிலே, அந்தக் காரியத்தைச் செய்ய விளைச்சலை யெல்லாம் ஒரேயடியாக சர்க்காரே எடுத்துக்கொண்டு விநியோகம் செய்ய வேண்டும். ஆனால், அதற்கான நிர்வாக அமைப்போ ஏற்பாடுகளோ தயாராக இல்லாததால் அதைப் பின்னால் வைத்துக்கொள்ளலாம் என்று கருதி, அந்நிய இராச்

[திரு. எம். சுரேந்திரன்] [1967 மார்ச் 20

யெங்களுக்கு, கேரளா போன்ற அண்டை ராச்சியங்களுக்கும் மற்ற இடங்களுக்கும் போகாமல் தடுக்க, கடுமையான உத்தரவுகளைப் போட்டு இருந்தாலும், அந்த நிலையை மாற்றி, அந்த எல்லைகளிலும் ரேஷன் கொண்டுவந்து விட்டாலும் நலமாக இருக்கும். சில நகரங்களில் மட்டும் ரேஷனை வைத்து விட்டு, எல்லைகளை விட்டு விட்டால், வியாபாரிகளும், தரகர்களும் இஷ்டம் போல நடக்க உதவியாகப் போய்விடுகிறது. ஆகவே, தானியங்கள் அடுத்த இராச்சியங்களுக்குப் போகாமல் தடுக்க, எல்லையிலிருந்து 3, 4 அல்லது 5 மைல் தூரம் வரை சட்ட பூர்வமான ரேஷன் வைத்து விட்டால், தானியங்களும் போகாது, உணவுப் பொருள்களின் விலையும் குறைவதற்கு வாய்ப்பு உண்டாகும். அந்த வகையில் பரீட்சித்துப் பார்த்து, தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று நினைக்கிறேன். ஆகவே, இன்றைக்கு இருக்கும் முறை விலை ஏறுவதற்கும் கூட காரணமாக இருக்கிறதா என்பதையும் பரிசீலனை செய்ய வேண்டும். ஜில்லாவிற்கு ஜில்லா போகக் கூடாது என்று மட்டும் சொன்னால், அதனால் கள்ளத்தனமாக இடைத்தரகர்கள் கொண்டு போகவும், வியாபாரிகளுக்கு கெட்ட பெயர் ஏற்படுவதற்கும் காரணமாக இருக்கிறது. அதோடு விலையும் கூடிக் கொண்டே இருக்கிறது. ஆகவே, தடைகளை நீக்கிவிடுகிறது என்பது சரிதானா. அப்படிச் செய்தால் லாபகரமாக இருக்குமா என்பதைப் பார்க்க வேண்டும். இருந்தாலும், இன்றைக்கிருக்கும் நிலையில் நாம் பரிகாரம் காணவேண்டுமென்றால், தடைகளை நீக்க வேண்டும் என்று அதிகமானவர்கள் விரும்புகிறார்கள். அந்தத் தடைகளை நீக்குவது என்று சொன்னால், அதுவே ஆபத்தாக முடியக் கூடாது
பிற்பகல் 1-00 என்பதற்காக, வெளி ராஜ்யங்களுக்குப் போகின்ற எல்லைகளைப் பத்திரப்படுத்தி, எல்லைக்குள்ளே நாலைந்து மைல்களுக்குள் ரேஷன் முறையை வைத்துவிட்டால், இன்னும் சற்று அதிகப் பாதுகாப்பு இருக்கும். உணவைப் பொறுத்த வரையில் விநியோக முறையில் இந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது நல்லது. விநியோக முறை மட்டும் போதாது. கொள்முதலைப் பற்றியும் தீர்மானிக்க வேண்டும். கொள்முதல் முறை மிகவும் சிரமமானதாக, மிகவும் பளு உள்ளதாக, சங்கடங்கள் உள்ளதாக, அதிருப்தியை உண்டு பண்ணுவதாக இருக்காமல், எளிய வழியில் கொள்முதல் செய்ய வசதிகளை உண்டாக்க வேண்டும். உற்பத்தியாளர்களுக்குத் தேவையான தானியத்தை வைத்துவிட்டு, பாக்கியிருப்பதை எடுப்பது என்ற நிலையை உண்டாக்குவதென்பது மிகவும் யோசித்துச் செய்ய வேண்டிய வேலையாகும். இம்மாதிரி பல பிரச்சினைகள் இருக்கின்றன. உணவுக் கொள்முதல், விநியோகம் இரண்டையும் செய்து விட்டு, உணவு உற்பத்தியை மறந்துவிடக் கூடாது. அதிலே பல திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. என்னுடைய யோசனையையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இப்பொழுது சிவாஜிமா என்ற பெயரில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது. முப்பது, நாற்பது வருஷங்களாக விவசாயம் செய்து கொண்டிருந்தும், அந்த நிலத்தின் பேரில் உரிமை இல்லாததால், அரசாங்கம் கொடுக்கும் உதவிகள் அவர்களுக்குப் பயன்படுவதில்லை. அதனால்



1967 மார்ச் 20] [திரு. எம். சுரேந்திரன்]

அந்த நிலத்தை வைத்திருப்பவர்களுக்கே அதற்குரிய பட்டா கொடுத்துவிட வேண்டும். அது தவிர, மேட்டூர் அணை இருக்கிறது. அந்த அணை கட்டிப் பல வருஷங்கள் ஆகின்றன. அந்தப் பகுதியில் இருக்கும் நிலம் மாமரத்து இலாக்காவின் கணக்கிலே இருக்கும் நிலம். அங்கே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது. விவசாயம் செய்கிறவர்களுக்குத் தண்ட வரி போடுகிறார்கள். இதில் அவர்களுக்கு உரிமை இல்லாமல் இருக்கிறது. அம்மாதிரி நிலங்களைப் பொறுத்தும் வகை செய்ய வேண்டும். அதே போன்று இரயில்வேக்குச் சொந்தமான நிலங்களும் காட்டிலாக்காவிற்குச் சொந்தமான நிலங்களும் ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலங்கள் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படலாம். அந்த நிலங்களை எடுத்து, சாதாரண விவசாயிகளுக்கு அளித்தால் இன்னும் அதிகமாக அந்த நிலங்களை எடுத்து. உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். இதுபோன்று பல பிரச்சினைகளை நுணுக்கமாகக் கவனித்துச் செய்ய வேண்டும்.

இன்றைக்கிருக்கும் நிர்வாக அமைப்பை எடுத்துக் கொண்டால், திட்டம் போடும்போது, கிராம முன்சீப், கிராம கணக்குப் பிள்ளை ஆகியவர்கள் தரும் புள்ளி விவரங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு திட்டம் போடுகிறார்கள். அந்தப் புள்ளி விவரங்கள் எப்போதும் சரியாக இருப்பதில்லை. ஆகவே, அதை மட்டும் நம்பிக் கொண்டு காரியங்கள் செய்யாமல், வேறு இயந்திரங்களை உண்டாக்கி சரியான முறையிலே கணக்கெடுப்பதற்கான வழிவகையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நெசவுத் தொழிலாளர்கள், பஞ்சாலைத் தொழிலாளர்கள், இதர தொழிலாளர்கள், வீட்டு மனைப் பிரச்னை, போலீஸ் நிர்வாகம், குடி தண்ணீர்ப் பிரச்னை ஆகியவையும் கவர்னர் உரையில் இருந்திருந்தால் அது இன்னும் நன்றாக இருந்திருக்கும். அரசியலில் உள்ள ஒரு கட்சி, நாளைக்கு ஆட்சிக்கு வரப்போகிறோம் என்கிற கட்சி தனக்கென்று ஒவ்வொரு விஷயத்திலும் ஒரு கொள்கை வைத்திருக்கக்கூடும். அந்தக் கொள்கைகள் கவர்னர் உரையில் வந்திருக்க வேண்டும். அப்படி வரும்படியாகச் செய்திருந்தால் நல்லதாக இருந்திருக்கும். அது மகிழ்ச்சியளிக்கத்தக்கதாக இருந்திருக்கும். கவர்னர் உரையில் பல விஷயங்கள் சேர்க்கப்படாமலிருந்தாலும், காரியங்கள் செய்யாமலிருக்கப் போவதில்லை. காரியங்கள் செய்யும் போது, சிறு சிறு விஷயமாக இருந்தாலும், அவையும் முக்கியம் தான். சிறிய விஷயங்கள் தான் அதிகத் தொல்லை உண்டுபண்ணக் கூடும்.

நிர்வாக இயந்திரங்களை மாற்றியமைக்க வேண்டும். இன்றைக்கிருக்கும் நிர்வாக இயந்திரம் வெள்ளைக்காரர்கள் காலத்தில் இருந்த இயந்திரமாகும். அது மிகவும் பழுதாய்விட்டது; மோசமாய் விட்டது. சுதந்திரம் வந்ததற்குப் பிறகு, மாற்றியமைப்பதற்கான காரியத்தைக் காங்கிரஸ் ஆட்சி செய்யவில்லை. அதை நாட்டுப் பற்றுள்ள இயந்திரமாக, நாட்டு மக்களுடைய இயந்திரமாக மாற்றியமைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு கவர்னர் உரையில் முக்கியமான இன்னும் சில அம்சங்கள் சேர்ந்

யெங்களுக்கு, கேரளா போன்ற அண்டை ராச்சியங்களுக்கும்
மற்ற இடங்களுக்கும் போகாமல் தடுக்க, கடுமையான உத்தரவு
களைப் போட்டு இருந்தாலும், அந்த நிலையை மாற்றி, அந்த
எல்லைகளிலும் ரேஷன் கொண்டுவந்து விட்டாலும் நலமாக
இருக்கும். சில நகரங்களில் மட்டும் ரேஷனை வைத்து விட்டு,
எல்லைகளை விட்டு விட்டால், வியாபாரிகளும், தரகர்களும் இஷ்டம்
போல நடக்க உதவியாகப் போய்விடுகிறது. ஆகவே, தானியங்கள்
அடுத்த இராச்சியங்களுக்குப் போகாமல் தடுக்க, எல்லையிலிருந்து
3, 4 அல்லது 5 மைல் தூரம் வரை சட்ட பூர்வமான ரேஷன்
வைத்து விட்டால், தானியங்களும் போகாது, உணவுப் பொருள்
களின் விலையும் குறைவதற்கு வாய்ப்பு உண்டாகும். அந்த
வகையில் பரீட்சித்துப் பார்த்து, தக்க நடவடிக்கை எடுக்கலாம்
என்று நினைக்கிறேன். ஆகவே, இன்றைக்கு இருக்கும் முறை
விலை ஏறுவதற்கும் கூட காரணமாக இருக்கிறதா என்பதையும்
பரிசீலனை செய்ய வேண்டும். ஜில்லாவிற்கு ஜில்லா போகக்
கூடாது என்று மட்டும் சொன்னால், அதனால் கள்ளத்தனமாக
இடைத்தரகர்கள் கொண்டு போகவும், வியாபாரிகளுக்கு கெட்ட
பெயர் ஏற்படுவதற்கும் காரணமாக இருக்கிறது. அதோடு
விலையும் கூடிக் கொண்டே இருக்கிறது. ஆகவே, தடைகளை
நீக்கிவிடுகிறது என்பது சரிதானா, அப்படிச் செய்தால் லாப
கரமாக இருக்குமா என்பதைப் பார்க்க வேண்டும். இருந்
தாலும், இன்றைக்கிருக்கும் நிலையில் நாம் பரிகாரம்
காணவேண்டுமென்றால், தடைகளை நீக்க வேண்டும் என்று
அதிகமானவர்கள் விரும்புகிறார்கள். அந்தத் தடைகளை
பிற்பகல் 1-00 நீக்குவது என்று சொன்னால், அதுவே ஆபத்தாக முடியக் கூடாது
என்பதற்காக, வெளி ராஜ்யங்களுக்குப் போகின்ற எல்லைகளைப்
பத்திரப்படுத்தி, எல்லைக்குள்ளே நாலைந்து மைல்களுக்குள் ரேஷன்
முறையை வைத்துவிட்டால், இன்னும் சற்று அதிகப் பாதுகாப்பு
இருக்கும். உணவைப் பொறுத்த வரையில் விநியோக முறையில்
இந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது நல்லது. விநியோக
முறை மட்டும் போதாது. கொள்முதலைப் பற்றியும் தீர்மானிக்க
வேண்டும். கொள்முதல் முறை மிகவும் சிரமமானதாக, மிகவும்
பளு உள்ளதாக, சங்கடங்கள் உள்ளதாக, அதிருப்தியை உண்டு
பண்ணுவதாக இருக்காமல், எளிய வழியில் கொள்முதல் செய்ய
வசதிகளை உண்டாக்க வேண்டும். உற்பத்தியாளர்களுக்குத் தேவை
யான தானியத்தை வைத்துவிட்டு, பாக்கியிருப்பதை எடுப்பது
என்ற நிலையை உண்டாக்குவதென்பது மிகவும் யோசித்துச் செய்ய
வேண்டிய வேலையாகும். இம்மாதிரி பல பிரச்சினைகள் இருக்
கின்றன. உணவுக் கொள்முதல், விநியோகம் இரண்டையும் செய்து
விட்டு, உணவு உற்பத்தியை மறந்துவிடக் கூடாது. அதிலே பல
திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. என்னுடைய யோசனையை
யும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இப்பொழுது சிவாஜிமா
என்ற பெயரில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது.
முப்பது, நாற்பது வருஷங்களாக விவசாயம் செய்து கொண்டிருந்
தும், அந்த நிலத்தின் பேரில் உரிமை இல்லாததால், அரசாங்கம்
கொடுக்கும் உதவிகள் அவர்களுக்குப் பயன்படுவதில்லை. அதனால்





அந்த நிலத்தை வைத்திருப்பவர்களுக்கே அதற்குரிய பட்டா கொடுத்துவிட வேண்டும். அது தவிர, மேட்டூர் அணை இருக்கிறது. அந்த அணை கட்டிப் பல வருஷங்கள் ஆகின்றன. அந்தப் பகுதியில் இருக்கும் நிலம் மாமத்து இலாக்காவின் கணக்கிலே இருக்கும் நிலம். அங்கே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது. விவசாயம் செய்கிறவர்களுக்குத் தண்ட வரி போடுகிறார்கள். இதில் அவர்களுக்கு உரிமை இல்லாமல் இருக்கிறது. அம்மாதிரி நிலங்களைப் பொறுத்தும் வகை செய்ய வேண்டும். அதே போன்று இரயில்வேக்குச் சொந்தமான நிலங்களும் காட்டிலாக்காவிற்குச் சொந்தமான நிலங்களும் ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலங்கள் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படலாம். அந்த நிலங்களை எடுத்து, சாதாரண விவசாயிகளுக்கு அளித்தால் இன்னும் அதிகமாக அந்த நிலங்களை எடுத்து, உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். இதுபோன்று பல பிரச்சினைகளை நுணுக்கமாகக் கவனித்துச் செய்ய வேண்டும்.

இன்றைக்கிருக்கும் நிர்வாக அமைப்பை எடுத்துக் கொண்டால், திட்டம் போடும்போது, கிராம முன்சீப், கிராம கணக்குப் பிள்ளை ஆகியவர்கள் தரும் புள்ளி விவரங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு திட்டம் போடுகிறார்கள். அந்தப் புள்ளி விவரங்கள் எப்போதும் சரியாக இருப்பதில்லை. ஆகவே, அதை மட்டும் நம்பிக் கொண்டு காரியங்கள் செய்யாமல், வேறு இயந்திரங்களை உண்டாக்கி சரியான முறையிலே கணக்கெடுப்பதற்கான வழிவகையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நெசவுத் தொழிலாளர்கள், பஞ்சாலைத் தொழிலாளர்கள், இதர தொழிலாளர்கள், வீட்டு மனைப் பிரச்னை, போலீஸ் நிர்வாகம், குடி தண்ணீர்ப் பிரச்னை ஆகியவையும் கவர்னர் உரையில் இருந்திருந்தால் அது இன்னும் நன்றாக இருந்திருக்கும். அரசியலில் உள்ள ஒரு கட்சி, நாளைக்கு ஆட்சிக்கு வரப்போகிறோம் என்கிற கட்சி தனக்கென்று ஒவ்வொரு விஷயத்திலும் ஒரு கொள்கை வைத்திருக்கக்கூடும். அந்தக் கொள்கைகள் கவர்னர் உரையில் வந்திருக்க வேண்டும். அப்படி வரும்படியாகச் செய்திருந்தால் நல்லதாக இருந்திருக்கும். அது மகிழ்ச்சியளிக்கத்தக்கதாக இருந்திருக்கும். கவர்னர் உரையில் பல விஷயங்கள் சேர்க்கப்படாமலிருந்தாலும், காரியங்கள் செய்யாமலிருக்கப் போவதில்லை. காரியங்கள் செய்யும் போது, சிறு சிறு விஷயமாக இருந்தாலும், அவையும் முக்கியம் தான். சிறிய விஷயங்கள் தான் அதிகத் தொல்லை உண்டுபண்ணக் கூடும்.

நிர்வாக இயந்திரங்களை மாற்றியமைக்க வேண்டும். இன்றைக்கிருக்கும் நிர்வாக இயந்திரம் வெள்ளைக்காரர்கள் காலத்தில் இருந்த இயந்திரமாகும். அது மிகவும் பழுதாய்விட்டது; மோசமாய் விட்டது. சுதந்திரம் வந்ததற்குப் பிறகு, மாற்றியமைப்பதற்கான காரியத்தைக் காங்கிரஸ் ஆட்சி செய்யவில்லை. அதை நாட்டுப் பற்றுள்ள இயந்திரமாக, நாட்டு மக்களுடைய இயந்திரமாக மாற்றியமைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு கவர்னர் உரையில் முக்கியமான இன்னும் சில அம்சங்கள் சேர்ந்

திருந்தால் நலமாக இருந்திருக்கும் என்று சொல்லிக் கொண்டு, அன்னாருடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

(மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் தலைமை.)

பிற பகல் 1-00 ***திரு. ஆர். விஜய ரகுநாத தொண்டமான்:** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களின் உரையின் மீது நடக்கும் விவாதத்தில் பங்கு கொள்ள எனக்கு வாய்ப்பு அளித்ததற்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இரண்டு நாட்களாக கவர்னர் பெருமானின் உரை மீது விவாதம் நடக்கிறது. இந்த விவாதத்தைப் பார்க்கும்போது, ஆளுங்கட்சியில் இருப்பவர்கள், தாங்கள் ஏதோ எதிர்க் கட்சியிலே இருப்பவர்களைப் போல் பேசிக்கொண்டு வருகிறார்கள். இப்பொழுது அவர்கள் ஆளுங்கட்சியிலே இருப்பதை மறந்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். முன்பு எதிர்க் கட்சியிலே இருந்தபோது, காங்கிரஸ் கட்சிக் கொள்கையை எதிர்த்து அவர்கள் பேசிக்கொண்டு வந்தார்கள். இப்பொழுது ஆளுங்கட்சியாக வந்தவுடனே, அவர்கள் செய்யும் சாதனைகளையும், அவர்கள் தீட்டிய திட்டங்களையும் சொல்லி எங்களுக்கும் மக்களுக்கும் விளக்கம் செய்தால் அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, கவர்னர் பெருமானின் உரையிலே சில புரட்சிகரமான மாறுதல்களை நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், அதைப் பார்க்கும்போது, முன்பு காங்கிரஸ் தீட்டிய திட்டங்களே அந்த உரையில் திரும்ப வந்திருக்கின்றன. அதிலே அவர்களும் நம்பிக்கை கொண்டு, அந்தத் திட்டங்களையே மறுபடியும் அந்த உரையில் சேர்த்திருப்பதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, கவர்னர் பெருமானின் உரையில் விவசாயத்திற்கு முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். அப்படி விவசாயத்திற்கு முதலிடம் கொடுக்கும்போது, பிற்பட்ட பகுதிகளுக்கும், வறண்ட பகுதிகளுக்கும் அவர்கள் நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். உதாரணமாக, என்னைத் தேர்ந்தெடுத்த புதுக்கோட்டை தொகுதியில் இம்மாதிரியான நீர்ப்பாசன வசதிகள் அவசியமாக இருக்கின்றன. இதை அரசாங்கம் அவசியமாகச் செய்து கொடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

புதுக்கோட்டை முன்பு சமஸ்தானமாக இருந்தபோது, அப்பொழுதிருந்த திவான் அப்பொழுது ஆண்டுகொண்டிருந்த அன்னிய அரசாங்கத்திடம், புதுக்கோட்டைப் பகுதிக்குக் காவிரித் தண்ணீரைக் கொண்டுவருவது பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். அப்பொழுது இருந்தது அன்னிய அரசாங்கமானதால், பேச்சு வார்த்தைகளின் முடிவில் கையை விரித்துவிட்டார்கள். ஆனால், இப்பொழுது உள்ள அரசாங்கத்தை நான் கேட்டுக்





கொள்வது இதுதான். எப்படியாவது காவிரித் தண்ணீரையோ அல்லது அமராவதிக் கால்வாயையோ புதுக்கோட்டைக்குக் கொண்டுவந்து, புதுக்கோட்டை விவசாய மக்களுடைய வாழ்க்கை வளம்பெறச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

புதுக்கோட்டை சமஸ்தானமாக இருந்து, அது இந்திய யூனியனோடு இணைந்த சமயத்தில், புதுக்கோட்டையை ஒரு ஜில்லா தலைநகரமாக ஆக்கவேண்டும் என்று எங்களுக்கு ஒரு அவா இருந்து கொண்டிருந்தது. ஆனால், பல சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள் காரணமாக அதை எங்களுக்கு முடிக்க முடியவில்லை. இப்பொழுது அரசாங்கம் அதை நன்றாகப் பரிசீலனை செய்து, அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். புதுக்கோட்டையில் அரசாங்க அலுவலகங்களுக்கு வசதியான கட்டடங்கள், மருத்துவ மனைகள், கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள் இருப்பது அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரிந்திருக்கும். மற்ற ஜில்லாக்களைப் போல், புதுக்கோட்டையும் ஜில்லாத் தலைநகரமாக ஆக்கப்படுவதற்குத் தகுதியான இடம் என்பதை நான் இங்கே வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில் பிற்பட்ட மக்களுக்கு எந்தவிதமான சலுகையும் காட்டப்படவில்லை. அவர்களுக்கு முன்பு இருந்த சலுகையும் இதில் குறிப்பிடப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அந்தப் பிற்பட்ட மக்களுக்கு முன்பு கொடுத்து வந்த சலுகைகளை விடாது, மேலும் தொடர்ந்து கொடுப்பதோடு, இன்னும் அதிக சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

முன்பு காங்கிரஸ் அரசாங்கம் நில வரியை அடியோடு ரத்து செய்யவேண்டும் என்று சொல்லி வந்தது. ஆனால், தேர்தலுக்குப் பிறகு அரசாங்கம் மாறியதால் இப்பொழுது வந்திருக்கும் அரசாங்கம் "அதைப் படிப்படியாக நாங்கள் செய்வோம்" என்று சொல்லுகிறார்கள். படிப்படியாக, தாமதமாகச் செய்தால் விவசாயிகளிடையே பல குழப்பங்கள் ஏற்படக்கூடும்; அதனால் விளைச்சலும் குறைவுபடும். ஆகவே, இதை நன்றாக அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். காங்கிரஸ் அரசாங்கம் அப்பொழுது சொன்னது போல, ஒரே சமயத்தில், ஒரே கட்டத்தில் இந்த நில வரியை ரத்து செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

***திரு. ஆலடி அருணா:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் ஆற்றியிருக்கின்ற உரையின்மீது நன்றி கூறும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசவும், இந்த மேலான அவைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளவும் நான் ஆசைப்படுகிறேன். இப்போது ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற

திராவிட முன்னேற்றக் கழகமும், அதனை ஆதரிக்கின்ற பிற எதிர்க்
கட்சிகளும்—கடந்த இருபதாண்டுகளாக, 'நாட்டில் ஏற்பட்டிருக்
கும் விலைவாசியேற்றத்தைக் கட்டுப்படுத்துங்கள், வேலையில்லாத்
திண்டாட்டத்தைப் போக்குங்கள், தொழிலாளியின் துயரத்தைத்
துடையுங்கள், பாட்டாளியின் பசியை நீக்குங்கள், உழவர் பெருங்
குடி மக்களுடைய நிலையை உயர்த்துங்கள்' என்று அப்போது
இருந்த ஆளும் கட்சியைப் பார்த்துக் கண்ணீர் வடித்துக் கூறினேம்,
கரங்கூப்பிக் கேட்டோம். சிரமங்களை எடுத்துச் சொன்னேம். எங்க
ளில் சிலரை நரபலி காணிக்கையாகக் கொடுத்துக் கேட்டோம். அப்
பொழுதெல்லாம் ஆளும் கட்சியினர் ஆணவமாகப் பதிலளித்தனர்.
அலட்சியமாகப் பேசினர். இறுமாந்து எங்கள் வேண்டுகோளை
எள்ளி நகையாடினர். ஆனால், இன்றைய தினமோ, ஏமாற்றத்தின்
காரணமாக, எதிர்பாராத தோல்வியைத் தழுவிக் கொண்ட
காங்கிரஸ் கட்சியினர், நாங்கள் ஆட்சிக்கு வந்து இருபது தினங்
களுக்குள் 'எங்கே உங்களுடைய திட்டங்கள்? எங்கே உங்களுடைய
தேர்தல் கால வாக்குறுதிகள்? எங்கே உங்களுடைய மூன்றுபடி
அரிசி?' என்றெல்லாம் பேசுகிருர்கள். இதற்காக நான் ஆச்சரியப்
படவில்லை.

இப்போது எதிர்வரிசையில் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள்
அமர்ந்திருக்கிருர்கள். அவர்கள் இப்படி தங்கள் ஆட்சிக் காலத்
தில் செய்யாததை—செய்ய முயற்சி எடுத்துக்கொள்ளாததை—
நம்மைப் பார்த்துக் கேட்கிருர்களே என்று திராவிட முன்னேற்றக்
கழகத்தைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் அச்சப்படவில்லை. ஆனால்,
அவர்கள் ஆளும் பொறுப்பை ஏற்றிருந்த சமயத்தில், நாட்டில் ஒரு
நல்ல எதிர்க்கட்சி இல்லையே என்று மிகவும் வருத்தப்பட்டார்கள்.
எதிர்க்கட்சி என்றால் இப்படி இருக்க வேண்டும்—இன்னின்ன
முறையில் பேச வேண்டும்—இன்னின்ன முறையில் நடக்க
வேண்டும் என்று இலக்கணத்தை வகுத்துக் கொடுத்தார்கள். இதை
மனதிற்கொண்டுதானே, என்னவோ இந்த நாட்டு மக்கள் காங்கிரஸ்
கட்சியினரையே எதிர்க்கட்சி வரிசையில் அமர்த்தி, எதிர்க்கட்சி
யின் நல்லிலக்கணத்தைக் கடைப்பிடிக்குமாறு செய்திருக்கிருர்கள்.
எதிர்க்கட்சியின் நல்லிலக்கணத்தைத் தாங்கள் கடைப்பிடித்துக்
காட்டும் சந்தர்ப்பம் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியினரின் பேச்சு
அவர்கள் கூறிய இலக்கணத்தை ஒட்டியதாக அமையவில்லை.
காங்கிரஸ் கட்சி நண்பர்கள் கடந்த காலத்தில் தாங்கள் செய்த
தவறுகள் என்ன? அதனால் ஏற்பட்ட விபரீத விளைவுகள் என்ன?
என்ற உண்மைகளை உணர்த்தி, நாடும், நல்லோரும் நலம்பெற
மாற்று யோசனைகள், மாமருந்தன்ன திட்டங்களை இந்த மாமன்றத்
தின் கவனத்திற் கொண்டு வந்தார்கள் என்றால், எதிர்க்கட்சியினர்
எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கு நல்லிலக்கணமாக
அமையும். ஆனால் எதிர்க்கட்சியினர் பழையபடியே தங்கள் நிலை
களை மறந்து, 'எங்கே மூன்று படி அரிசி' என்று முந்தாணியை
விரிக்கின்ற பாவனையில் பேசிக் கொண்டிருந்தால் எதிரில்தான்
இருக்கிருர்களே தவிர, எதிர்க்கட்சியாக விளங்கவில்லை என்று
மக்கள் எண்ணுவார்கள்.





கவர்னர் அவர்களது உரையில், மாநிலங்களுக்கு அதிகப்படியான
அதிகாரம் வழங்க வேண்டுமென்று கேட்கிற காலம் வந்துவிட்டது
என்று கூறியிருக்கிருர். இது தமிழக வரலாற்றின் புதிய பொன்
னேட்டில் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சியாகும். மாநில
அரசுக்கு அதிக அதிகாரம் தருகின்ற காலம் வந்துவிட்டால், அதன்
மூலமாக, ஜனநாயகத்தின் உதவியால் சோஷலிச சமுதாயத்தை
நிச்சயமாக நாம் ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.
நம் நாட்டில் சோஷலிசத்தை நன்முறையில் உருவாக்க வேண்டு
மென்றால், அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவியாமல் பரவலாக்கப்
பட வேண்டும். உள்ளாட்சி நிறுவனங்கள்கூட பாராளுமன்றத்தைப்
போல நல்ல முறையில் அதன் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள
வேண்டும். அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டுமென்ற கருத்தை
ஜார்ஜ் பெர்னுர்ட்ஷா அவர்கள்,

" A democratic State cannot be a social democratic State unless it has in every centre of the population a local governing body as thoroughly democratic in its constitution as the Central Parliament. "

என்று கூறியுள்ளார்.

உள்ளாட்சி நிறுவனங்களுக்கே இப்படி என்றால், மாநில
ஆட்சிக்கு எவ்வளவு அதிகாரம் இருக்க வேண்டும்? இப்படி மாநில
ஆட்சிக்கு அதிகப்படியான அதிகாரங்கள் கொடுக்கப்பட
வேண்டும் என்பதைப்பற்றிப் பல உத்தமர்கள் தங்களுடைய கருத்
தைத் திறம்பட வெளியிட்டுள்ளார்கள். இந்தக் கருத்தைத் நம்
முடைய அண்டை மாநிலமான கேரளத்தின் முதன்மந்திரி திரு.
நம்பூதிரிபாட் அவர்களும் ஆதரிக்கிருர்கள். இதே கருத்தை
மாநிலத்தின் முதல்வரும் கூறியிருக்கிருர்கள். நமது மதிப்பிற்
குரிய பாராளுமன்றத்தின் தலைவராக பொறுப்பு ஏற்றிருக்கும்
திரு. சஞ்சீவ ரெட்டி அவர்களும் ஆதரிக்கிருர்கள். இந்த கருத்து
தமிழகத்தில்தான் முதன்முதலில் பிறந்து இருக்கிறது. இந்தக்
கருத்தை உருவாக்கித் தந்த கவர்னர் அவர்களைப் பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

பெர்டினண்டு லாஸ்லி குறிப்பிட்டுள்ளதைப்போன்று கவர்னர்
அவர்கள் நல்ல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து, இந்த மாநிலம்
வெல்பேர் ஸ்டேட்டாக இருக்க வேண்டுமென்பதில் அதிக அக்கறை
கொண்டுள்ளது என்கிற அளவுக்குப் பல கருத்துக்களைக் குறிப்பிட்
டார்கள். ஏழை பாட்டாளி மக்களுக்கும், ஏனைய தொழிலாளர்
களுக்கும் நல்வாழ்வு தரவேண்டுமென்ற எண்ணத்தை இந்த அரசு
உறுதியாக மேற்கொண்டிருக்கிறது என்பதை இது குறிப்பிடுகிறது.

அடுத்து, என்னுடைய மாவட்டத்தில் சுமார் 75 ஆயிரம் பீடித்
தொழிலாளர்கள் இருக்கிருர்கள். பீடித் தொழிலாளர் பிரச்சினை
பற்றி திரு. டி. எஸ். ஆதிமூலம் அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சியைச்
சேர்ந்த ஓர் உறுப்பினரும் இந்த மன்றத்தில் நன்றாக விளக்கினார்
கள். இதுவரை இந்தத் தொழிலாளர்கள் முதலாளித்துவத்தின்
கொடுமைக்கும், சட்டவிரோதமான செயலுக்கும், சுரண்டலுக்கும்

[திரு. ஆலடி அருணா] [1967 மார்ச் 20

பலியாகி, வாயில்லாப் பூச்சிகளாக வாழ்ந்து வருகிறார்கள். குறிப்பாக, இந்த மன்றத்தில் ஒரு கம்பெனியின் சட்ட விரோதப் போக்கு களைப்பற்றித் தெளிவாக எடுத்துக்கூற விரும்புகிறேன்.

தென் மாவட்டங்களைப் பொறுத்தவரையில் முக்கூடலில் ஒரு பெரிய பீடிக் கம்பெனி உள்ளது. அதனை பீடிச் சக்கரவர்த்தி என்று கூட அழைக்கிறார்கள். த. பி. சொக்கலால் ராம்சேட் பீடி பாக்டரி என்பது அதன் பெயர். இந்தக் கம்பெனியில் ஏறத்தாழ 30 ஆயிரம் பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஆயிரம் பீடிக்கு ஒரு ரூபாய் 37 பைசாதான் சுற்றுக் கூலி என்று பெறுகிறார்கள். ஆனால் அதே சமயம் 150 பீடிகள் எக்ஸ்ட்ராவாக போடு பண்டல் என்று வைத்து ஒரு ரூபாய் 37 காசுக்கு 1,150 பீடிகள் சுற்றித் தர வேண்டும் என்கிறார்கள். அரசாங்கம் பீடித் தொழிலாளர்களுக்கு 1957-ல் குறைந்தபட்சக் கூலி ஆயிரத்திற்கு ஒரு ரூபாய் 37 காசு கூலி கொடுக்க வேண்டுமென்று நிர்ணயித்தது. இந்தக் கூலியை அந்தக் கம்பெனி 1962 வரைக்கும் கொடுக்காமல் ஏமாற்றி வந்தது. 1962 தேர்தலுக்குப் பிறகுதான் அரசாங்கம் நிர்ணயித்துள்ள கூலியைக் கொடுக்க முன்வந்தது. அப்போதும் 1,150 பீடி கொடுத்தால்தான் அதாவது ஆயிரம் பீடிக்கு 150 பீடி அதிகமாகக் கொடுத்தால்தான் ஒரு ரூபாய் 37 காசு கொடுக்கிறார்கள். ஆயிரத்திற்கு 150 பீடிகள் அதிகமாக வாங்குவதன்மூலம் இந்தக் கம்பெனி மாதம் ஒன்றுக்கு 70 ஆயிரம் ரூபாய் கூலி மோசடி செய்து வருகிறது. அந்தக் கம்பெனி மாதம் 70 ஆயிரம் ரூபாய் கூலி மோசடி செய்கிறது என்றால், வருடத்திற்கு 8 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய். 1957-லிருந்து இதுவரை அந்தக் கம்பெனி எவ்வளவு கூலி மோசடி செய்து வருகிறது என்பதை இந்த மாமன்றமே கணிக்கட்டும். இதை இந்த அரசாங்கம் ஆராய்ந்து பார்த்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த கம்பெனியின் தயாரிப்பு கிளைகள்தான் தேர்தல் காலத்தில் காங்கிரஸ் கட்சிக்குப் பின்பலமாக இருந்தது. பணம் கொடுத்ததோடு, காங்கிரஸ் கட்சியின் தேர்தல் காரியாலயங்களாகப் பயன்படுத்தி வந்தது. இந்தக் கம்பெனியில் ஏற்கெனவே பல தொழில் தகராறுகள் இருந்து வந்தன. அவை நீண்ட நெடுநாட்களாகத் தீர்க்கப்படாமல் ஏழைத் தொழிலாளரின் வாழ்க்கையைக் கசக்கிப் பிழிந்து கொண்டு இருக்கிறது. இவைகளைப்பற்றி நான் சம்பந்தப்பட்ட பல அதிகாரிகளை நேரில் சந்தித்துப் பேசியுள்ளேன். நான் சென்னை வந்து, திரு. அன்பழகன் அவர்களை உடன் அழைத்துக் கொண்டு, அப்போதிருந்த தொழில் மந்திரி திரு. வெங்கட்ராமன் அவர்களிடம் நேரில் கூறி தக்க பரிகாரம் வேண்டுமென கேட்டுள்ளேன். அதன் பின்னரும் நானும், சில பாதிக்கப்பட்ட தொழிலாளர்களும் நெல்லை மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு முன்பு கம்பெனியின் போக்கை எதிர்த்து அடையாள உண்ணாவிரதம் இருந்தோம். இத்தனை நடவடிக்கைகளுக்குப் பின்னரும் சட்ட விரோதச் செயல்கள் தடுக்கப்படுமா? அக்கிரமம் நின்றதா?

இப்படி பீடித் தொழிலாளர்களது கூலியை மோசடி செய்து வருகிறவர்கள்மீது நடவடிக்கை எடுத்து, பீடித் தொழிலாளர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிப்பதற்கு இப்போது ஆட்சிப்



மார்ச் 20] [திரு. ஆலடி அருணா]

றுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக்
ம் வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. நம்முடைய ஆட்சியில்
; தொழிலாளர் பிரச்சினைக்கு நியாயம் கிடைக்குமென்று
லை மாவட்ட மக்கள் நினைக்கிறார்கள். ஆகவே, பீடித் தொழி
ர்களுக்குப் பாதுகாப்பு ஆக இருக்கும் நல்லதோர் சட்டத்
; கொண்டுவரவும், போடு பண்டல் கமிஷன் முறையை ஒழித்
ட்டவும் இந்த அரசுக்கு இந்த மாமன்றம் துணைபுரியும் என்று
நம்புகிறேன்.

புடுத்து, விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு நல்ல
தகளைக் கொடுப்பதற்கும், நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கிக்
டுப்பதற்கும் கவர்னர் அவர்கள் தம் உரையில் அதிக முக்கியத்
ம் கொடுத்துப் பேசியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்
றன்.

நான் பணிவுடன் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால்,
பத்தியைப் பெருக்குவதில் புதிய முறைகளைக் கையாள்வது ஒரு
ற—இருக்கிற பாசன வசதிகளைச் சீர்செய்து ஒழுங்குபடுத்திக்
பாற்றுவது மற்றொரு முறை.

இன்றைய தினம் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில்
க்கக்கூடிய குளங்கள் ஒழுங்காக மராமத்துச் செய்யப்பட்டால்,
மடங்கு விளைவைப் பெருக்க முடியும். இன்றைக்கு அங்குள்ள
ங்கள் சரியான முறையில் மராமத்து செய்யப்படாத காரணத்
ல், மழைகாலத்தில் வெள்ளம் வந்தாலும் அந்தக் குளங்களில்
ம்பும் நீர் போதுமானதாக இருப்பதில்லை. சாகுபடி காலத்தில்
ண்ணீர் இல்லாது சாகுபடி பாதிக்கப்படுகிறது. குறிப்பாக
லங்குளம் தொகுதியை எடுத்துக்கொண்டால், மேலப்பாவூர்
ம், கீழப்பாவூர் குளம், நாகல் குளம், ஆண்டி குளம், மேல
தப்ப குளம், கீழபட்டமுடையார் குளம், சிவலார் குளம்,
லார் குறிச்சி குளம் ஆகிய குளங்கள் வெட்டப்பட்ட அந்த
லில் இருந்து இன்றையதினம் வரை மராமத்து செய்யப்படா
கிடக்கின்றன என்பதாக அங்குள்ள விவசாயப் பெருங்குடி
கள் சொல்கிறார்கள். அந்தக் குளங்களை மராமத்து செய்து
டுத்து, அந்தப் பகுதியில் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி
ய்துத் தரப்பட வேண்டும் என்பதாக இந்த அமைச்சரவையின்
னத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அண்மையில் தேர்தலுக்குச் சில தினங்களுக்கு முன்னால்
ன்னுடைய தொகுதிக்கு அடுத்துள்ள தொகுதியில் அப்போ
ருந்த அமைச்சரவை இராமநதி திட்டத்தை ஆரம்பித்திருக்
றார்கள். அந்தத் திட்டத்தால் பெத்தநாடார்பட்டி, திப்பணம்
ட்டி, ஆவுடையானூர் ஆகிய பகுதிகளிலுள்ள குளங்களுக்குத்
ண்ணீர் வரத்து தடைபட இருக்கிறது. அந்தத் திட்டத்தை
ங்கள் பகுதி பாதிக்கப்படாத வகையில் திருத்தி ஒழுங்குபடுத்த
வண்டும் என்பதாக இந்த அமைச்சரவையைக் கேட்டுக்
தாள்கிறேன்.

[திரு. ஆலடி அருணா] [1967 மார்ச் 20

மூன்றாவது திட்டத்தின் கீழ் ஆலங்குளம் கால்வாய்த் திட்டம் வெட்டப்பட்டிருக்கிறது. அது சரியான முறையில் வெட்டப்படாத காரணத்தினால் குளத்திற்கு வர வேண்டிய தண்ணீர் இன்றையதினம் ஊருக்குள் போய்ச் சூழ்ந்துகொள்கிறது. அதை நல்ல முறையில் தடுப்புச் சுவர் எழுப்பி குளத்திற்குத் தண்ணீர் வரும்படியாக மராமத்து செய்துதர வேண்டும் என்பதை அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அப்போதுதான் ஆலங்குள வட்டார விவசாயிகள் பெரிதும் பயன் அடைவார்கள்.

கவர்னரது உரையில்—விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த மாநிலங்களுக்கு அதிகாரம் தேவை என்பது சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. கவர்னர் அவர்களது உரை, கூட்டாட்சியை நடைமுறைப்படுத்த வேண்டியதன் நியாயங்களை வலியுறுத்தியும், மாநிலங்களுக்கு இன்னும் அதிகப்படியான அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. கடந்த காலத்தில் மத்திய அரசு மாநிலங்களுக்கு உரம் வழங்குவதில் நடந்துகொண்ட தவறினைக் குறிப்பிடுகிறது. மத்திய அரசின் துணையின்றி மாநில அரசாங்கங்கள் விலைவாசியைக் கட்டுப்படுத்துவது கடினமான செயல் என்பதையும் சுட்டிக் காட்டுகிறது. மூடி மறைக்கப்பட்ட மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தோல்வியை நாட்டிற்கு உணர்த்தியிருக்கிறது. எனவே கவர்னரது உரை மத்திய அரசாங்கத்திற்கு தாக்கீது, காங்கிரஸ் அல்லாத பிற மாநிலங்களுக்கு வழிகாட்டி, தமிழக மக்களுக்குப் புதிய வாழ்வளிக்கும் தலைவாயின் திறவுகோல் என்று விளக்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** மதிப்பிற்குரிய சபைத்தலைவர் அவர்களே, இன்று மேன்மைதங்கிய கவர்னர் அவர்களது உரையின் மீது பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தமைக்காக தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1962-ஆம் ஆண்டிலே இன்றைக்கு ஆளும் கட்சியில் இருப்பவர்கள் எதிர்க்கட்சியில் இங்கே இருந்தபோது கவர்னர் உரை நிகழ்த்த வருகையில்—கவர்னர் பதவி என்பது நாட்டுக்குத் தேவை இல்லை என பகிஷ்காரம் செய்தவர்கள் 'ஆட்டுக்குத் தாடி, நாட்டுக்குக் கவர்னர்' எனக் கூறியவர்கள் இன்றைக்கு கவர்னர் அவர்களது உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை முன் மொழிந்தார்கள். இப்படி ஆட்சிக்கு வந்த பிறகு தான் உண்மையை உணர்ந்திருக்கிறார்கள். அவர்கள் நன்றி தெரிவிக்கும் பிரேரணையை நான் வரவேற்கிறேன். அவர்கள் கவர்னருக்கு நன்றி மொழிந்தமையைக் குறித்து என் பாராட்டுதலையும், கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கவர்னர் தம் உரையில் "இத்தேர்தலில் மக்கள் அளித்துள்ள பெருவாரியான வாக்குகள் தங்கள் வாக்குரிமையைச் செலுத்துவதில் அவர்களுக்குள்ள பேரார்வத்தைக் காட்டுவதுடன், நமது நாட்டில் குடியாட்சி வேரூன்றிவிட்டது என்பதையும், தங்கள் வருங்கால வாழ்வைத் தாங்களே வகுத்துக்கொள்ள முடியும் என்பதை மக்கள் முற்றிலும் உணர்ந்துள்ளார்கள் என்பதையும்



1967 மார்ச் 20] [திரு. ரா. ராமச்சந்திர துரை]

புலப்படுத்துகின்றன. புதியதொரு அரசாங்கத்தை அமைதியான முறையில் ஆட்சிப்பீடத்தில் அமர்த்தியிருப்பதும், நமது மாநிலத்தின் ஆட்சிப்பொறுப்பு, ஓர் அரசியல் கட்சியிடமிருந்து வேறோர் அரசியல் கட்சிக்கு இணக்கமாக மாறப்பட்டிருப்பது, நமது மக்கள் அரசியல் துறையில் எந்த அளவிற்கு முதிர்ச்சி பெற்றுள்ளனர் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமைவனவாகும்" என்று கூறியுள்ளார்கள். இதற்கு முன் எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர், கடந்த பத்தொன்பது ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் ஜனநாயகம் நல்லமுறையில் பாதுகாக்கப்படவில்லை, மக்களுக்கு நல்லதொரு முறையில் உரிமைகள் வழங்கப்படவில்லை என்று கூறிவந்த நிலைமாறி ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதை ஓர்வகையில் ஒப்புக்கொண்டமைக்கு என் கட்சியின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கவர்னர் அவர்கள் தம் உரையில் "நாடு முழுவதற்கும் ஏற்றதொரு பொருளாதாரக் கொள்கையை நெறிமுறைப்படுத்தும் பொறுப்பு மத்திய அரசாங்கத்தைச் சார்ந்தது; எனவே மாநில அரசாங்கம் தனித்த முறையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் விலைவாசிகள் ஏற்றச் சிக்கலுக்குத் தீர்வு காணும் வகைகள் பெருமளவில் முன்னேற்றம் காணமுடியாத ஒரு நிலை இருப்பதை இவ்வரசாங்கம் உணர்ந்துள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார். இப்படி திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இடம் மாறிய காரணத்தினாலோ, என்னவோ உண்மையை ஒப்புக்கொண்டதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவுப் பிரச்சினையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தேர்தலுக்கு முன்பு மக்கள் மத்தியில் பேசிய நேரத்தில், தாங்கள் பதவிக்கு வந்தால் ரூபாய்க்கு 5 படி அரிசி கொடுப்போம் என்று சொல்லி, பிறகு 4 படியாகக் குறைத்து, அடுத்து 3 படியாகக் குறைத்து பேசியிருக்கிறார்கள். கடைசியில் 12—2—1967 அன்று தஞ்சையில் நடைபெற்ற கூட்டத்தில் நமது மதிப்பிற்குரிய மராமத்து இலாகா அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் "நாங்கள் பதவிக்கு வந்தவுடனேயே அவசரச் சட்டம் போட்டு ரூபாய்க்கு ஒரு படி அரிசியாவது கொடுப்போம்" என்று கூறியிருக்கிறார்கள்.

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** தஞ்சையில் நடைபெற்ற கூட்டத்தில் 12-ஆம் தேதி பேசும்போது "மூன்று படி என்பது எங்கள் லட்சியம். அந்த லட்சியத்தை அடைய முடியாவிட்டாலும் ரூபாய்க்கு 1 படி அரிசியாவது கிடைக்க வழிசெய்வோம்" என்று கூறினேனே தவிர, அவசரச்சட்டம் போட்டுக் கொடுப்போம் என்று பேசவில்லை என்பதை கனம் அங்கத்தினருக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, அண்மையில் மலேயாவில் இருந்து வெளிவருகிற தமிழ்

முரசு என்ற பத்திரிகையில் தஞ்சையில் கனம் மராமத்து இலாக்கா அமைச்சர் பேசிய பேச்சு வெளியாகியிருக்கிறது. அந்தப் பத்திரிகையில் வந்திருப்பதை நான், தாங்கள் அனுமதித்தால், படித்துக்காட்டுகிறேன்.

(பத்திரிகையை படிப்பதற்கு எடுத்தார்)

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** பத்திரிகையை சபையில் படிக்கக் கூடாது, அதில் வந்துள்ள செய்தியைத்தான் தொகுத்துச் சொல்ல வேண்டுமென்பது சபையின் விதி என்று நினைக்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** பத்திரிகையை சபையில் படிக்கக்கூடாது என்பதுதான் விதி. அதில் வந்துள்ள செய்தியின் சுருக்கத்தைத் தொகுத்து மதிப்பிற்குரிய உறுப்பினர் தம் பேச்சைத் தொடர்ந்து பேசும்போது குறிப்பிடலாம். The hon. Member should not read from the newspaper but extracts from it could be read.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** பேப்பரிலே வந்திருக்கிறது அண்மையிலே. இரண்டு நாட்களுக்கு முன்பாக பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர், அறந்தாங்கித் தொகுதி உறுப்பினர், எனது உறவினர், திரு. துரையரசன் அவர்கள் பேசியபொழுது மூன்று படி கொடுப்போம் அதற்காக முயற்சிகள் செய்வோம் என்று சொன்னார்கள். அடுத்து, திரு. சி. வி. எம். அண்ணாமலை என எண்ணுகிறேன், அவர்கள் பேசும் பொழுது இன்றைய தினம் ரூபாய் டிவேல்யுயேஷன் ஆன காரணத் தினாலே, கொடுக்கக்கூடிய ஒரு படி அரிசியை மூன்று படியாகக் தருத வேண்டுமென்று கூறினார்கள். (மணியடிக்கப்பட்டது).

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** குறிப்பிட்ட நேரம் முடிந்து விட்டபடியால், இப்பொழுது பேசிக்கொண்டிருக்கிற அங்கத்தினர் திரு. ராமச்சந்திர துரை அவர்கள், மறுமுறை (27—3—1967, கவர்னர் பேருரையின்மீது விவாதம் நடைபெறுகின்றபோழுது உரையாற்றுவார்கள்.

பிற் பகல். 1-30 இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைந்தன. மீண்டும் நாளை காலை 9-00 மணியளவில் பேரவையின் கூட்டம் நடைபெறும் வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.





## (7) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

* 107. *Notification issued with G.O. Ms. No. 68, Revenue, dated the 11th January 1967, appointing Sri R. Muniswamy Pillai, No. 30, Ballard Street, Sembiam, Perambur, Madras-11, as a Member of the Area Committee, Madras in the vecancy caused due to the demise of Sri B. Parameswaran. [Laid on the Table of the House under section 116 (3) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act 22 of 1959).]*

108. *Appropriation Accounts of the Government of Madras for the year 1965–66 and Audit Report, 1967. [Laid on the Table of the House under Article 151 (2) of the Constitution of India. ]*

109. *Finance Accounts of the Government of Madras for the year 1965–66. [Laid on the Table of the House under Article 151 (2) of the Constitution of India.]*

### B. Reports, Notifications and Other Papers.

* 7. *The Madras Legislature (Prevention of Disqualification) Ordinance, 1966 (Madras Ordinance 4 of 1966).*

# இணைப்பு.

[158-ம் பக்கத்தைக் காண்க.]

## 1967-68-ம் ஆண்டு இடைக்கால வரவு செலவுத் திட்டம் குறித்த வெள்ளை அறிக்கை.

1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 20-ம் தேதியன்று சட்ட மன்றப் பேரவையில் சமர்ப்பித்தது.

## பாகம் I.

## நிதி நிலை மதிப்புரை.

1957–58 கணக்குகள் முதல் 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் வரையில் நிதி நிலை பற்றிய சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

(ரூபாய் லட்சத்தில்)

| இனம். | 1957-58. | 1958-59. | 1959-60. | 1960-61. | 1961-62. | 1962-63. | 1963-64. | 1964-65. | 1965-66. | 1966-67. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966-67. திருத்த மதிப்பீடு. | 1967-68. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| ரெவின்யூ வருவாய் .. | 62,56 | 69,95 | 81,11 | 92,03 | 92,18 | 1,17,97 | 1,34,77 | 1,53,88 | 1,72,80 | 1,88,72 | 1,92,17 | 2,04,39 |
| ரெவின்யூ கணக்கில் செலவு. | 59,15 | 68,35 | 80,58 | 91,09 | 1,01,79 | 1,21,81 | 1,35,00 | 1,51,30 | 1,80,66 | 1,88,41 | 1,99,62 | 2,11,99 |
| ரெவின்யூ உபரி (+) அல்லது பற்றுக்குறை (—). | +3,41 | + 1,60 | +53 | +94 | —9,61 | —3,84 | —23 | +2,58 | —7,86 | +31 | —7,45 | —7,60 |
| வழிவகை முன் பண நிலுவை மொத்தம். | — | — | .. | .. | 1,39 | .. | .. | 3,10 | 3,75 | 3,75 | 3,75 | 4,60 |
| இறுதி இருப்பு .. | —36 | 3,28 | 10,56 | 10,15 | 2,44 | 25 | 1,83 | 7,35 | 7,35 | 40 | 40 | —8,85 |



1965–66 கணக்குகள் ரூ. 7,86 லட்சம் ரெவின்யூப் பற்றுக்குறையைக் காட்டுகின்றன. அந்த ஆண்டின் திருத்த மதிப்பீட்டில் எதிர்பார்க்கப்பட்ட ரூ. 7,87 லட்சத்தை அது அனுசரித்துள்ளது. ஆண்டு இறுதியில் ரூ. 7,35 லட்சம் இறுதி ரொக்க இருப்பு இருந்தது. நிலுவையாயிருந்த வழிவகை முன் பணங்களைக் கருத்தில் கொண்டால், ரூ. 3,60 லட்சம் இறுதி ரொக்க இருப்பு உள்ளது.

நடப்பு ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரெவின்யூக் கணக்கில் ரூ. 31 லட்சம் அளவிற்கு உபரியும், ரூ. 40 லட்சம் இறுதி ரொக்க இருப்பும் எதிர்பார்க்கப்பட்டன. வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 31 லட்சம் என்ற அளவிற்கு ஓரளவு உபரி இருக்குமென எதிர்பார்க்கையில், நடப்பாண்டின் திருத்த மதிப்பீடு ரூ. 7,45 லட்சம் ரெவின்யூப் பற்றுக்குறையைக் காட்டுகிறது. நடப்பு ஆண்டில் அகவிலைப்படி வீதங்கள் இருமுறை அதிகரிக்கப்பட்டதே ரெவின்யூப் பற்றுக்குறை அதிகரிக்கும் என்று எதிர்பார்ப்பதற்கு முக்கிய காரணமாகும். நடப்பாண்டின் முடிவில் ரூ. 40 லட்சம் ரொக்க இருப்பு இருக்கும் என்று தோன்றுகிறது.

1967–68 மதிப்பீடுகளில் புதிய வேலைத் திட்டங்களுக்கான அல்லது II-ம் பாக வேலைத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. 1967 ஜூன் மாதம் சமர்ப்பிக்கப்படவிருக்கிற முறையான வரவு-செலவுத் திட்டத்தில் தான் புதிய வேலைத் திட்டங்கள் கண்டிருக்கும்.

1967–68 இடைக்கால வரவு-செலவுத் திட்டம் ரூ. 7,60 லட்சம் ரெவின்யூப் பற்றுக்குறையையும், (—) ரூ. 8,85 லட்சம் இறுதி ரொக்க இருப்பையும் காட்டுகின்றது.

## பாகம் II.

## 1965–66, 1966–67 ஆண்டுகளின் நிதி நிலை, 1967–68-ல் எதிர்பார்க்கப்படும் நிதி நிலை குறித்து விரிவான ஆய்வு.

### பிரிவு I.

### 1965–66 கணக்குகள்.

1965–66 கணக்குகள் ரூ. 7,86 லட்சம் ரெவின்யூப் பற்றுக்குறையைக் காட்டுகின்றன. திருத்த மதிப்பீட்டில் எதிர்பார்த்த ரூ. 7,87 லட்சம் என்ற புள்ளி விவரத்தை அது பெரிதும் அனுசரித்துள்ளது.

பெருந்தலைப்புகளின்கீழ் ரெவின்யூ வருவாய்கள் அதிகரித்திருப்பது கீழே கண்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது :—

(ரூபாய் லட்சத்தில்.)

| | 1965–66 திருத்த மதிப்பீடு. | 1965–66 கணக்குகள். |
|---|---|---|
| ரெவின்யூ வருவாய்— | | |
| மத்திய வரிகளில் பங்கு .. .. .. .. | 20,56 | 20,66 |
| இந்திய அரசினிடமிருந்து உதவி மானியங்கள் .. | 23,09 | 23,70 |
| மாநில வரிகள் .. .. .. .. .. | 81,20 | 85,57 |
| கடனுக்குரிய வட்டி முதலிய வரவுகள் .. .. | 13,38 | 13,77 |
| வரிகள் நீங்கலாக ஏனைய வருவாய் .. .. | 26,68 | 29,10 |
| மொத்தம் .. | 1,64,91 | 1,72,80 |

2. "மத்திய வரிகளில் பங்கு" என்பதன்கீழ் வரவுகள் ஓரளவுதான், அதாவது, ரூ. 10 லட்சம்தான் அதிகரித்துள்ளன. மத்திய அரசினின் உதவி மானியங்களில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. விரைவுத் திட்டங்களுக்காகவும் முன் நடவடிக்கைக்குரிய திட்டங்களுக்காகவும் அதிகமான உதவி கிடைத்ததாலும், திட்ட வேலைகளுக்காக எதிர் பார்த்த அளவைக் காட்டிலும் நிதி உதவி விரைவாகக் கிடைத்ததாலும் மேற்குறிப்பிட்ட அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

3. முக்கிய மாநில வரிகள் சம்பந்தமான நிலைமை கீழே உள்ள விவர அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது :—

| | 1965–66 திருத்த மதிப்பீடு. | 1965–66 கணக்குகள். |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| வேளாண்மை வருமான வரி .. .. .. | 1,35 | 1,23 |
| நில வரி .. .. .. .. .. .. | 8,05 | 9,13 |
| வண்டிகள் மீது வரி .. .. .. .. | 13,30 | 13,31 |
| பொது விற்பனை வரி .. .. .. .. | 28,67 | 29,95 |
| மத்திய விற்பனை வரி .. .. .. .. | 6,80 | 7,15 |
| மோட்டார் எண்ணெய் வரி .. .. .. | 3,85 | 3,85 |
| கேளிக்கை வரி .. .. .. .. .. | 4,39 | 5,12 |
| மின்சாரத் தீர்வை .. .. .. .. | 3,79 | 4,34 |
| முத்திரைத் தாள்கள் .. .. .. .. | 7,88 | 8,15 |
| பத்திரப் பதிவு .. .. .. .. .. | 1,67 | 1,80 |
| மொத்தம் .. | 79,75 | 84,03 |

"நில வரி" என்பதன் கீழ் ரூ. 1,00 லட்சத்திற்கு மேற்பட்டு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. முதற்கண் வருவாயை மிதப்போக்காக மதிப்பிட்டதும், நிலவரி பாக்கிகளை வசூல் செய்யத் தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டது இந்த அதிகரிப்புக்கு காரணங்களாகும். "மின்சாரத் தீர்வை" என்பதன் கீழ் எதிர்பார்த்ததைவிட ஏராளமான வருவாய் கிடைத்துள்ளது. 1965 டிசம்பர் 1-ம் தேதி முதல் மின்சாரம் பயன்படுத்தப்படுவதன் மேல் விதிக்கப்படும் வரி உயர்த்தப்பட்டதே அதற் குக் காரணம். பொது விற்பனை வரி என்பதன் கீழ் வருவாய் அதிகரித்துள்ளது வரி கொடுக்காமல் தப்புவதைத் தடுக்கவும், வரி வசூல்களை விரைவுபடுத்தவும், தீவி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதும், 1965 டிசம்பர் 1-ம் தேதி முதல் வ வீதங்கள் உயர்த்தப்பட்டதும் அதற்குக் காரணங்களாகும். "கேளிக்கை வரி" என் தன் கீழும் அதிகமான வருவாய் கிடைத்துள்ளது. தல அதிகார சபைகள் அ கரித்த வீதங்களில் மேல் வரி விதித்ததே அதற்குக் காரணமாகும். அந்த அதிகரித் வரவுகளுக்கு இணையாக "76. ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்பதன் கீழ்ச் செலவு அதிகரித்துள்ளது. "முத்திரைத் தாள்" என்பதன் கீழ் காணப்படும் அதிகமான வரவுகள் முழுதும் மாநில அரசாங்கத்தைச் சேர்ந்தது அல்ல நிதியாண்டு முடிவதற்கு முன்பு, எதிர்பார்த்த அளவுக்கு தல அதிகார சபைகளின் பங்கு சரிக்கட்டப்படாமல் இருந்தது உயவிற்கு ஓரளவு காரணமாகும்.



4. "வரி நீங்கலான ஏனைய வருவாய்" என்பதன்கீழ், கீழ்க்கண்ட முக்கிய இனங்களில் அதிக மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.—

| | 1965–66 திருத்த மதிப்பீடு. | 1965–66 கணக்குகள். |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| கடனுக்குரிய வட்டி முதலிய வரவுகள் .. .. | 13,38 | 13,77 |
| நீதி நிர்வாகம் .. .. .. .. .. | 97 | 1,22 |
| போலீஸ் .. .. .. .. .. .. | 40 | 51 |
| கல்வி .. .. .. .. .. .. | 72 | 91 |
| மருத்துவம் .. .. .. .. .. | 1,27 | 1,13 |
| கால்நடை வளர்ப்பு .. .. .. .. | 19 | 31 |
| கூட்டுறவு .. .. .. .. .. .. | 41 | 59 |
| பொதுப் பணிகள் .. .. .. .. .. | 1,07 | 1,52 |
| ஒய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகாலச் சலுகைகளும். | 49 | 33 |

மருத்துவம், ஒய்வு ஊதியமும் ஒய்வு, காலச் சலுகைகள் என்பவை நீங்கலாக மேற்சொன்ன எல்லா இனங்களிலும் வசூல்கள் அதிகரித்துள்ளன. "கடனுக் குரிய வட்டி முதலிய வரவுகள்" என்பதன் கீழ் வருவாய் அதிகரித்துள்ளது. "கடன்கள்—வெளியூர் நகராட்சிகள்", "குடியானவர்களுக்கு முன் பணங்கள்", "கூட்டுறவுச் சங்கங்களுக்கும், நில அடமான பாங்குகளுக்கும் கடன்கள்" ஆகிய தலைப்புகளின் கீழ் வட்டி வசூல்கள் அதிகமாகக் கிடைத்ததே அதற்குக் காரணம். அதற்கிணையாக, முந்திய ஆண்டோடு ஒப்பிடுகையில், மாநில அரசாங்கம் கடன் களையும், முன் பணங்களையும் அகதிமாக வழங்கின. மாஜிஸ்டிரேட்டுகள் விதிக்கும் அபராதங்கள் என்பதன் கீழ், ஏற்கனவே எதிர்பார்த்ததை விட அதிக வருவாய் கிடைத்துள்ளது. அதன் காரணமாக "நீதி நிர்வாகம்" என்பதன் கீழ் அதி கரிப்பு ஏற்பட்டுள்ளது. "கல்வி" என்பதன்கீழ், குறிப்பிடத்தக்க அளவு வருவாய் அதிகரித்துள்ளது. "உதவித் தொகை" என்பதன்கீழ் ரூ. 4 லட்சமும், "அதிகமாக செலுத்திய தொகைகளை வசூலித்தல்" என்பதன்கீழ் ரூ. 3 லட்சமும் "செய்த பணி களுக்காக வசூலிக்கும் தொகை" என்பதன் கீழ் ரூ 4 லட்சமும், "பல்வகை" என்பதன் கீழ் ரூ. 9 லட்சமும் அதிகரித்துள்ளன. பயனற்றுப் போனவை என்று முடிவு செய்யப்பட்ட பல வண்டிகளை விற்றதன் காரணமாக "போலீஸ்" என்பதன் கீழ் வருவாய் அதிகரித்துள்ளது. அதிகமாகச் செலுத்திய தொகைகள் கணிசமான அளவுக்கு, அதாவது, ரூ. 16 லட்சம் அளவுக்கு வசூலிக்கப்பட்டதன் காரணமாக, "கூட்டுறவு" என்பதன் கீழ் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. "பொதுப் பணிகள்", என்பதன் கீழ் வருவாய் அதிகரித்துள்ளதற்குக் காரணம், "பொதுப் பணிகள்", "ஏனைய இனங்கள்" என்பதன்கீழ், திருத்த மதிப்பீட்டில் எதிர்பார்த்ததை விட அதிக வரவுகள் கிடைத்ததே யாகும். "ஓய்வூதியமும், ஓய்வுக் கால சலுகைகள்" என்பதன்கீழ்க் குறைவு ஏற்பட்டுள்ளது. வாணிகத் துறைகளுக்கு சம்பந்தப்பட்ட ஓய்வூதியச் செலவுகளை சரிக்கட்டாததே அதற்குக் காரணமாகும்.

"மருத்துவம்" என்பதன் கீழ் வருவாய் குறைந்துள்ளது. தொழிலாளர் அரசாங்க இன்ஷூரன்ஸ் திட்டங்களின் செலவுக்காக தொழிலாளர் அரசாங்க இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷனிடமிருந்து முதலில் எதிர்பார்த்ததை விடக் குறை வான தொகைகள் கிடைத்ததே அதற்கு முக்கிய காரணமாகும்.

5. ரெவின்யூக் கணக்கில் செலவின்கீழ் முக்கிய மாறுதல்கள் கீழே காட்டப் பட்டுள்ளன :—

| | 1965–66 திருத்த மதிப்பீடு. | 1965–66 கணக்குகள். |
|---|---|---|
| | ( ரூபாய் லட்சத்தில்.) | |
| வரி வசூல்கள் செலவுகள் .. .. .. .. | 3,60 | 3,55 |
| கடனுக்குரிய வட்டி .. .. .. .. | 16,12 | 15.94 |

[1967 மார்ச் 20

| | 1965–66. திருத்த மதிப்பீடு. | 1965–66. கணக்குகள். |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்) | |
| வளர்ச்சிப் பணிகளின் கீழ் வராத சாதாரணச் செலவு. | 38,88 | 42,00 |
| அபிவிருத்திச் செலவு .. .. .. .. | 1,14,30 | 1,19,17 |
| மொத்தம் .. | 1,72,90 | 1,80,66 |

“வரி வசூல்” என்பதன் கீழும் “கடனுக்குரிய வட்டி முதலிய செலவுகள்” என்பதன் கீழும் மாறுதல்கள் சொற்பமே, அவை பற்றி குறிப்பாக எதுவும் சொல்வதற்கில்லை.

6. “வளர்ச்சிப் பணிகளின்கீழ் வராத ஏனைய சாதாரணச் செலவு” என்பதன்கீழ் சுமார் ரூ. 3,12 லட்சம் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதைக் கணக்குப் போக்கு காட்டுகின்றது. முக்கிய மாறுதல்கள் வருமாறு :—

| | 1965–66 திருத்த மதிப்பீடு. | 1965–66 கணக்குகள். |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| பொது நிர்வாகம் .. .. .. .. .. | 9,18 | 9,60 |
| சிறைச்சாலைகள் .. .. .. .. .. | 1,79 | 1,93 |
| போலீஸ் .. .. .. .. .. .. | 8,49 | 9,46 |
| பஞ்சத் தணிப்பு .. .. .. .. .. | 73 | 94 |
| எழுது பொருள்-அச்சுத்துறை .. .. .. | 1,83 | 2,03 |
| ஏனைய பல்வேறு இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. | 4,59 | 5,34 |
| சிறப்புச் செலவுகள் .. .. .. .. | 92 | 1,07 |

7. “பொது நிர்வாகம்” என்பதன் கீழ் பல்வேறு இனங்களில் செலவு அதிகரித்துள்ளது. ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கூடுதலான பணியாளர்கள் குறித்து அதிகச் செலவு பிடித்ததும், உணவுப் பொருள்களின் விலைகள் பொதுவாக அதிகரித்ததும் “சிறைச்சாலைகள்”, என்பதன் கீழ்ச் செலவு அதிகரித்ததற்கு முக்கிய காரணங்களாகும். “போலீஸ்” சம்பந்தமாக அதிகச் செலவு ஏற்படுவதற்குக் காரணம், ஆயுதம் தாங்கிய சிறப்புப் போலீஸ் படையினருக்காக அதிகச் செலவு பிடித்ததும், திருத்த மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ளதற்கு மேற்பட்டு வண்டிகள் வாங்கியதும் காரணங்களாகும். இந்திய அரசினிடமிருந்தும் ஏனைய மாநிலங்களினிடமிருந்தும் போலீஸ் படையினருக்காக பெறும் தொகைகள் குறைந்துள்ளதும் (ரூ. 28 லட்சம்) மேற்கூறிய செலவு அதிகரித்ததற்குக் காரணமாகும். பஞ்சத் தணிப்பு என்பதன்கீழ்ச் செலவு அதிகரித்துள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் புயல் நிவாரண வேலைகளைக் கவனிக்க சிறப்புப் பணியாளர்களை நியமிக்க அதிக நிதி தேவைப்பட்டது. அந்த ஆண்டில் இதற்கு முன் கண்டறியாத புயலும் கடல் கொந்தளிப்பும் இராமேசுவரத் தீவையும், கிழக்குக் கடற்கரையையும் தாக்கியபோது நாசமடைந்த நீர் பாசன ஆதாரங்கள், சாலைகள், கட்டடங்கள் ஆகியவற்றைப் பழுதுபார்த்து பழைய நிலைக்கு கொண்டுவருவதற்காகவும், அதிக நிதி ஒதுக்கப்பட்டது. இயற்கை உற்பாதங்களால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீனள துறை நெறியாளர் அனுமதித்த ரொக்க உதவியைச் சரிக்கட்டவும், அதிக நிதி ஒதுக்கப்பட்டது. இக்காரணங்களால்தான் “பஞ்சத் தணிப்பு” என்பதன் கீழ்ச் செலவு அதிகரித்துள்ளது. எழுதுபொருள்கள் குறித்த செலவு அதிகரித்துள்ளதாலும் அரசாங்க அச்சகத்தின்பொருட்டு பொது நடை முதல் செலவுகள் அதிகரித்ததாலும் “எழுதுபொருள்-அச்சுத்துறை” என்பதன்கீழ்ச் செலவு அதிகரித்துள்ளது. “76. பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடு



1967 மார்ச் 20]

களும்” என்பதன்கீழ்ச் செலவு அதிகரித்துள்ளதற்குக் காரணம் கேளிக்கை வரியின் மீது தல அதிகார சபை விதித்த மேல் வரியை அதிக அளவுக்கு அவற்றிற்கு வழங்கியதே காரணமாகும். அதற்கு இணையாக “கேளிக்கை வரி” என்பதன்கீழ் வருவாய் அதிகரித்துள்ளது. சிவில் வழங்கல் துறையின் விவகாரங்களின் அளவு விரிவடைந்ததன் காரணமாக “சிறப்புச் செலவுகள்” என்பதன் கீழ்ச் செலவு அதிகரித்துள்ளது. “சிறப்பு வருவாய்” என்பதன்கீழ் அதிகரிப்பு ஏற்பட்டதன் காரணமாக மேற்படி செலவு அதிகரிப்பு முழுதும் சரிக்கட்டப்படுகிறது.

8. “அபிவிருத்திச் செலவு” என்பதன்கீழ், ரூ. 4,87 லட்சம் அதிகரித்துள்ளது கவனிக்கத் தக்க விஷயமாகும். அதிக மாறுதல்கள் காணப்படும் அபிவிருத்தி தலைப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1965–66 திருத்த மதிப்பீடு. | 1965–66 கணக்குகள். |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| மருத்துவம் .. .. .. .. .. .. | 9,64 | 10,33 |
| வேளாண்மை .. .. .. .. .. .. | 8,69 | 10,68 |
| சமுதாய மேம்பாட்டுத் திட்டம் .. .. .. | 7,24 | 7,53 |
| ஹரிஜனங்கள், ஆதிவாசிகள் நலன் .. .. | 5,48 | 5,86 |
| பொதுப் பணிகள் .. .. .. .. .. | 10,42 | 11,87 |
| சாலைப் போக்குவரத்து .. .. .. .. | 7,90 | 8,31 |
| கீழ்க்கண்ட இனங்களில் குறைவேற்பட்டுள்ளது— | | |
| கல்வி .. .. .. .. .. .. | 38,38 | 37,85 |
| கால்நடை வளர்ப்பு .. .. .. .. | 3,51 | 3,31 |
| தொழிலாளரும் வேலை வாய்ப்பும் .. .. | 2,10 | 1,88 |

“மருத்துவம்” என்பதன்கீழ், குடும்பக் கட்டுப்பாட்டு விரைவுத் திட்டம் காரணமாக அதிகச் செலவு பிடித்தது. மருந்துகளின் விலைகளும் உணவுப் பொருள்களின் விலைகளும் அதிகரித்தன. மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கு கூடுதலான சாதனங்கள் வாங்கப்பட்டன. இக் காரணங்களால் “மருத்துவம்” என்பதன் கீழ்ச் செலவு அதிகரித்துள்ளது. வேளாண்மையைப் பொறுத்தவரையில், முக்கியமாக, பல்வேறு பயிர்களை பாதிக்கிற நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு ஏராளமான அளவிற்கு பூச்சிக் கொல்லி மருந்துகளை வாங்க வேண்டிவந்தது. இதனால் செலவு அதிகரித்தது. அத்துடன், யந்திரங்கள், யந்திரக் கலப்பைகள் குறித்த செலவின் பெரும்பகுதியாகிய ரூ. 100 லட்சத்திற்கு மேற்பட்ட தொகை பின்னர் கடன்கள், முன்பணங்கள் எனக் கருதப்பட்டது. எனினும், நிதியாண்டின்போது அது சரிக்கட்டப்படவில்லை. இதன் காரணமாக “வேளாண்மை” என்பதன் கீழ்ச் செலவு அதிகரித்தது. சமுதாய மேம்பாட்டுத் திட்டச் செலவு அதிகமாகியது. மத்திய அரசினர் ஊக்குவிக்கும் திட்டங்கள், மக்களுக்கு வேலை வாய்ப்பு, சாலைகள், ஆகியவற்றின் மீது ஏற்பட்ட செலவைச் சரிக்கட்ட பஞ்சாயத்து யூனியன்களுக்கு முதற்கண் மதிப்பிட்டதைவிட அதிகமான மானியங்கள் வழங்கப்பட்டதே அதற்குக் காரணமாகும். “ஹரிஜனங்கள், ஆதிவாசிகள் முதலியோர் நலன்” என்பதன் கீழ் ஹரிஜன மாணவர்களுக்காகப் புதிய விடுதிகள் துவக்கவும், பராமரிக்கவும் அதிகச் செலவுப் பிடித்தது. கல்வி உதவிச் சம்பளம் பெறத் தகுதி உள்ள வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினர் ஆகியோரிடமிருந்து கல்வி உதவிச் சம்பளம் கேட்டு வரும் விண்ணப்பங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கக் கூடுதல் தொகை தேவைப்பட்டது. இக் காரணங்களால் இத் தலைப்பின்கீழ்ச் செலவு அதிகரித்தது. “சாலைப் போக்குவரத்து” என்பதன்கீழ்ச் செலவு அதிகரித்துள்ளது. தமிழ்நாடு அரசாங்க பஸ் போக்குவரத்து விரிவுபடுத்தப்பட்டது. முக்கியமாக நீண்ட தூர பஸ் போக்குவரத்து விரிவுபடுத்தப்பட்டதும், அதன் விளைவாகக் கூடுதல் பணியாளர்களை

[1967 மார்ச் 20

நியமித்ததும் கூடுதலான சாதனங்களை வாங்கியதும் அதற்குக் காரணங்களாகும். "கல்வி" என்பதன்கீழ்ப் பல இனங்களில் செலவு குறைந்துள்ளது. படிகள், சில்லறைச் செலவுகள், பிற செலவுகள் இவை பொருட்டு மாவட்ட உயர் நிலைக் கல்வி நிதிகளுக்கு வழங்கிய மொத்த மானியம்தான் அதிக மாறுதலைக் காட்டும் ஒரே ஒரு இனமாகும்.

பல்வேறு விரைவுத் திட்டங்களின்கீழ்ச் செலவு குறைந்ததால் "கால்நடை வளர்ப்பு" என்பதன்கீழ்க் குறைவான செலவே ஏற்பட்டுள்ளது. பல்வேறு கைப்பணி யாளர்கள் பயிற்சி திட்டங்களுக்காக எதிர்பார்த்ததைவிட குறைந்த செலவு பிடித்ததே, "தொழிலாளரும் வேலை வாய்ப்பும்" என்பதன்கீழ்க் குறைவு ஏற்பட்டதற்கு முக்கிய காரணமாகும்.

9. மூலதனச் செலவுகளில் ஏற்பட்டுள்ள முக்கிய மாறுதல்கள் வருமாறு :—

| | 1965–66 திருத்த மதிப்பீடு. | 1965–66 கணக்கு கள். |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| பாசனம் (வாணிகத் தன்மையுள்ளது) .. .. | 8,06 | 7,81 |
| பொதுப் பணிகள் .. .. .. .. .. | 6,26 | 5,80 |
| தொழில், பொருளாதார வளர்ச்சி .. .. | —81 | 5,94 |
| ஏனைய வேலைகள் .. .. .. .. .. | 5,21 | —1,72 |
| அரசாங்க வாணிகத் திட்டங்கள் .. .. .. | 23,18 | 10,57 |

"பாசன வேலைகள் (வாணிகத்தன்மை உள்ளவை)" என்பதன்கீழ், பரம்பிக் குளம்-ஆளியாறு திட்டத்திற்காக ரூ. 75 லட்சம் கூடுதல் செலவு பிடித்தது. எனினும், சித்தார் பட்டணங்கால் திட்டத்திற்காக ஒதுக்கிய தொகைகளைச் செலவிட முடியவில்லை. இதன் காரணமாக மொத்தச் செலவு குறைந்துள்ளது. பொதுப் பணிகளைப் பொறுத்த வரையில் மாறுதல்கள் பல்வேறு இனங்களின்கீழ் ஏற் பட்டுள்ளன. இம் மாநிலத்திலுள்ள நான்கு கூட்டுறவு நூற்பு ஆலைகளின் பங்கு மூலதனத்திற்கு வழங்கும் தொகை உயர்த்தப்பட்டது. அரிசி ஆலைகளை நிறுவு வதற்காக சில கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கும் அதிக பங்கு மூலதனம் வழங்கப்பட்டது. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் (ரூ. 5 லட்சம்) ஆகியவற்றிற்கும் பங்கு மூலதனத்துக்காக அதிகத் தொகை வழங்கப்பட்டது. அத்துடன், வேளாண்மை விளைபொருள்களை நேரடியாகக் கொள்முதல் செய்யும் வேலையை மேற்கொள்கிற சில ஆரம்ப விற்பனைச் சங்கங்களின் பங்கு மூலதனத்துக்கு வழங்கும் தொகையும் அதிகரிக்கப்பட்டது. இக் காரணங்களால் "தொழில் வளர்ச்சி" என்பதன்கீழ்ச் செலவு அதிகரித்துள்ளது. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப்பகுதியில் உள்ள நிலங் களை மீட்டு நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்கென நிதி உதவி செய்யும் திட்டத்தை நிறைவேற்ற தமிழ்நாடு மத்திய நில அடைமான பாங்கு எழுப்பிய சிறப்பு மேம் பாட்டுக் கடன் பத்திரங்களில் அரசாங்கத்தின் பங்கு நிமித்தம் ரூ. 5 லட்சம் தொகை யையும் அரசாங்கம் வழங்கியுள்ளது. இத்துடன், இந்திய அரசினர் கல்கத்தாவில் நிறுவியுள்ள மத்திய மீனளக் கார்ப்பொரேஷனில் ரூ. 3 லட்சம் அளவிற்கு அரசாங்கம் பங்குகளை எடுத்துள்ளது. சிறு தொழில் கார்ப்பொரேஷனுக்கு மாற்றப்பட்ட இருப்பு களின் மதிப்புக்கு நிகராக வரவுகளை (ரூ. 6·69 கோடி) சரிக்கட்டாததன் காரணமாகவும் செலவு அதிகரித்துள்ளது. "ஏனைய வேலைகள்" என்பதன்கீழ் எதிர்பார்க்கப்படும் வரவு இச் செலவு அதிகரிப்பால் சரிக்கட்டப்படுகிறது. ஏனைய வேலைகள் என்பதன் கீழ்ப் பல இனங்களின்கீழ்ச் செலவு குறைந்துள்ளது. குறைந்த வருமான அரசாங்க ஊழியர்களுக்கான மத்திய அரசின் வாடகை, வீட்டு வசதித் திட்டம் குறித்த செலவு குறைந்துள்ளது (ரூ. 32 லட்சம்). இந்தியா-நார்வே திட்டத்தின்கீழ் ரூ. 25 லட்சமும், சிறு ஆயுதங்கள் தயாரிப்புத் திட்டத்திற்கான நீர் வழங்கு திட்டத்தின்கீழ் ரூ. 10 லட்சமும் குறைந்துள்ளது. தமிழ்நாடு சிறு தொழில் கார்ப்பொரேஷனின் பங்கு மூலதனத்துக்கு என தொகை வழங்குவதற்கான ரூ. 4,00 லட்சம் தொகையைக் கணக்குச் சரிக்கட்டல் மூலம் "தொழில் வளர்ச்சி மூலதனச் செலவு" என்னும்



1967 மார்ச் 20]

தலைப்புக்கு திரும்ப எழுதப்பட்டதாலும், ரூ. 2.69 கோடி "கடன்கள், முன் பணங்கள்" என்னும் தலைப்புக்கு மாற்றப்பட்டதாலும் செலவு மிகக் குறைந்து காணப்படுகிறது.

அரிசி, கோதுமை, முதலியவற்றை வாங்குவதில் அதிகச் செலவு ஏற்பட்டதால் அரசாங்க வாணிகத் திட்டங்களைப் பொறுத்த வரையில் செலவு அதிகரித்துள்ளது. ஆயினும், அரிசி, கோதுமை, கோதுமைப் பண்டங்கள் முதலியவற்றை விற்றதன் மூலம் அதிகத் தொகைகள் கிடைத்ததாலும், அரசாங்க வாணிக விவகாரங்கள் சம்பந்தமாக பிற வருவாய்கள் கிடைத்ததாலும் நிகரச் செலவு குறைந்துள்ளது.

10. கடன்கள், வைப்பீடுகள், செலுத்திய தொகைகள்—

| | 1965–66 திருத்த மதிப்பீடு. | 1965–66 கணக்கு கள். |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| இந்திய அரசினிடமிருந்து பெற்ற கடன்கள் (வரவுகள்). | 56,62 | 58,28 |
| இந்திய அரசினருக்குக் கடன்களைத் திருப்பிக் கொடுத்தல். | 22,68 | 22,33 |
| நிதியிடப்படாக் கடன் .. .. .. .. | 2,24 | 2,22 |
| சுயேச்சை அதிகார சபைகளிடமிருந்து கடன்கள் .. | 23,95 | 13,83 |
| சுயேச்சை அதிகார சபைகளிடமிருந்து பெற்ற கடன் களைத் திருப்பிக் கொடுத்தல். | 59 | 59 |
| பொதுமக்களிடமிருந்து எழுப்பப்பட்ட கடன்கள் .. | 14,44 | 14,45 |
| பொதுமக்களிடமிருந்து பெற்ற கடன்களைத் திருப்பிக் கொடுத்தல். | 76 | 51 |
| (நிதியிடப்படாக் கடன் நீங்கலாக) வைப்புத் தொகைகள், செலுத்திய தொகைகள் இவற் றின்கீழ் நிகரச் செலவு. | 5,35 | 6,19 |
| வழிவகை முன்பணம் .. .. .. .. | 65 | 65 |

"சிறு சேமிப்பில் பங்கு" என்பதன்கீழ்ச் சுமார் ரூ. 1·22 கோடி வருவாய் அதிகமானதாலும், "உரங்களையும், விதைகளையும் வாங்கி வழங்குவதற்கான குறுகிய காலக்கடன்" என்பதன்கீழ் ரூ. 0·91 கோடி வருவாய் அதிகமானதாலும் "மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன் உதவித் தொகை" என்பதன்கீழ அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்திய அரசிடமிருந்து பெற்ற சில கடன்கள் விஷயமாக அவற்றைத் திருப்பித் தருவது குறித்து எவ்வித நிபந்தனைகளும் நிச்சயிக்கப்படவில்லை. எனவே, திருப்பிச் செலுத்த வேண்டிய தொகையைக் குறித்து சரியாக மதிப்பிடுவது கடினமானதாய் உள்ளது. திருத்த மதிப்பீட்டில் அதிகமான மதிப்பீடு கண்டிருப் பதற்கு இதுவே காரணமாகும்.

இந்திய ஸ்டேட் பாங்கு ரூ. 20 கோடி கடன் கொடுக்கும் என்று முதலில் எதிர்பார்த்தோம். ஆனால், இந்திய ஸ்டேட் பாங்க் ரூ. 10 கோடி மட்டுமே கொடுக்க ஒப்புக்கொண்டது. இத் தொகை மட்டுமே கிடைத்ததால் "சுயேச்சை அதிகார சபைகளிடமிருந்து பெற்றக் கடன்கள்" என்பதன்கீழ்க் கடன் உதவி குறைந்துள்ளது.

தமிழ்நாடு மின்சார போர்டு இந்திய ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பொ ரேஷனிடமிருந்து ரூ. 2 கோடி கடன் தொகை பெற்றதால் "வைப்பு தொகை களும், செலுத்திய தொகைகளும்" என்பதன்கீழ் வரவு அதிகரித்துள்ளது. இத் தொகை, 1965–66-ம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் காட்டப்படவில்லை. ஏனைய பல்வேறு தலைப்புகளின்கீழ் குறைவு ஏற்பட்டுள்ளதால் இந்த அதிகரிப்பு ஓரளவு சரிக்கட்டப்பட்டுள்ளது.

[1967 மார்ச் 20

## பிரிவு II.

### 1966–67 திருத்த மதிப்பீடும் 1967–68 வரவு-செலவு திட்ட மதிப்பீடும்.

நடப்பு ஆண்டுக்கான திருத்த மதிப்பீடும், அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடும் குறித்து இப் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. ரெவின்யூக் கணக்கின்கீழ் வருவாய், செலவு, எதிர்பார்க்கப்படும் இறுதி ரொக்க இருப்பு ஆகியவற்றை கீழே காணலாம் :—

| | 1965–66 கணக்குகள். | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966–67 திருத்த மதிப்பீடு. | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| ரெவின்யூ வருவாய்— | | | | |
| மத்திய வரிகளில் பங்கு .. | 20,66 | 27,79 | 29,35 | 30,20 |
| மத்திய அரசினர் வழங்கும் உதவி மானியங்கள். | 23,70 | 24,04 | 21,79 | 20,48 |
| மாநில வரிகள் .. | 85,57 | 92,57 | 95,63 | 1,03,37 |
| கடன் குறித்த வட்டி முதலிய வரவுகள். | 13,77 | 18,70 | 15,83 | 19,45 |
| வரிகள் நீங்கலான வருவாய். | 29,10 | 25,62 | 29,57 | 30,89 |
| மொத்தம் .. | 1,72,80 | 1,88,72 | 1,92,17 | 2,04,39 |
| ரெவின்யூக் கணக்கில் செலவு— | | | | |
| வரிகள் வசூல் .. .. | 3,55 | 3,60 | 3,76 | 3,79 |
| வளர்ச்சிப் பணிகளின்கீழ் வராத ஏனையச் செலவு. | 57,94 | 63,48 | 70,41 | 77,43 |
| அபிவிருத்திச் செலவு .. | 1,19,17 | 1,21,33 | 1,25,45 | 1,30,77 |
| மொத்தம் .. | 1,80,66 | 1,88,41 | 1,99,62 | 2,11,99 |
| ரெவின்யூப் பற்றுக்குறை (—) அல்லது உபரி (+). | —7,86 | +31 | —7,45 | —7,60 |
| இறுதி ரொக்க இருப்பு .. | 7,35 | 40 | 40 | —8,85 |

2. நடப்பு ஆண்டில் அகவிலைப்படி வீதங்கள் இருமுறை உயர்த்தப்பட்டன. 1966 ஜூன் 1 முதல் அனுமதி வழங்கப்பட்ட முதல் அக விலைப்படி வீத உயர்வு முழுவதற்கும் திருத்த மதிப்பீட்டில் அந்தந்த தலைப்புகளின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. 1967 ஜனவரி 1-ம் தேதி முதல் அனுமதிக்கப்பட்ட இரண்டாவது அக விலைப்படி வீத உயர்வுக்காக "71. பல்வகை" என்பதன்கீழ் ஒரு மொத்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டின் இறுதியில் எதிர்பார்க்கப்படும் ரொக்க இருப்பு, இந்திய ரிஸர்வ் பாங்குடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள குறைந்த அளவுத் தொகையாகும். (நிலுவையாய் உள்ள ரூ. 3,75 லட்சம் என்ற அனுமதிக்கப்பட்ட வழிவகை முன் பணத்துடன் ரூ. 40 லட்சம்.) இப்போது அடுத்த ஆண்டுக்காக உத்தேசித்துள்ள மதிப்பீடுகள் (—) ரூ. 8,85 லட்சம் என்ற இறுதி ரொக்க இருப்புக்கு வழி கோலும்.



1967 மார்ச் 20]

3. மத்திய வரிகளில் பங்கு குறித்த விவரம் வருமாறு :—

| | 1965–66 கணக்குகள். | 1966–67 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966–67 திருத்த மதிப்பீடு. | 1967–68 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| வருமான வரியில் பங்கு .. | 10,01 | 10,88 | 11,45 | 11,01 |
| மத்திய ஆயத் தீர்வையில் பங்கும், கூடுதல் ஆயத் தீர்வையில் பங்கும். | 10,06 | 16,23 | 17,54 | 18,63 |
| வாரிசு வரியில் பங்கு .. | 59 | 68 | 36 | 56 |
| மொத்தம் .. | 20,66 | 27,79 | 29,35 | 30,20 |

இம் மதிப்பீடுகள், இந்திய அரசு அனுப்பிய விவரங்களின் அடிப்படையில் அமைந்துள்ளன. முந்திய ஆண்டுகளின் நிலுவைகளை வசூலித்ததால், வருமான வரியில் அதிகரிப்பும் முந்திய ஆண்டுகளில் அதிகமாக செலுத்தியத் தொகையை வசூலித்ததால் வாரிசு வரியில் குறைவும் திருத்த மதிப்பீட்டில் ஏற்பட்டுள்ளன.

4. இந்த ஆண்டிலும், அடுத்த ஆண்டிலும் இந்திய அரசினரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் உதவி மானியங்கள் குறித்த விவரங்கள் வருமாறு:—

| | 1965–66 கணக்குகள். | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966–67 திருத்த மதிப்பீடு. | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| திட்ட வேலைகள்— | | | | |
| மத்திய அரசின் உதவி பெறுபவை. | 16,47 | 10,67 | 9,70 | 7,50 |
| மத்திய அரசு ஊக்கு விப்பவை. | 3 | 2,73 | 3,33 | 3,00 |
| விரைவுத் திட்டம் .. | 74 | .. | 14 | 98 |
| முன்னோடி நடவடிக்கை | 24 | .. | 5 | 47 |
| ஹரிஜனங்கள், ஆதி வாசிகள் ஆகியோர் நலன் குறித்த மானியங்கள். | 14 | 7 | 10 | 9 |

| (1) | 1965–66. கணக்குகள். (2) | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு (4) | 1967–68 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| மதிய உணவுத் திட்டத்திற்காக மானியங்கள். | 1,01 | 70 | 8 | 8 |
| ரயில்வே பிரயாணிக் கட்டண வரிகளில் பங்குக்குப் பதிலாக உதவி மானியம். | 81 | 94 | 94 | 94 |
| தனி மானியம் .. .. | 3,00 | 6,84 | 6,84 | 6,84 |
| மத்திய சாலை நிதி .. | .. | 10 | 11 | 10 |
| திட்டத்தில் சேராத இனங்களுக்கான மானியங்கள். | 1,20 | 1,99 | 50 | 48 |
| மொத்தம் .. | 23,70 | 24,04 | 21,79 | 20,48 |

திட்ட வேலைகளுக்காக எதிர்பார்க்கப்படும் மானியங்கள், தனித் தனித் திட்டங்களுக்குரிய உதவிப் பாணியின் அடிப்படையில் அமைந்துள்ளன. மேலும், அவற்றில் முந்திய ஆண்டுகளுக்கு சம்பந்தப்பட்ட பாக்கிகளும் அடங்குகின்றன.

மதிய உணவுத் திட்டத்துக்கான மானியங்கள் குறித்தத் திருத்த மதிப்பீடு மிகவும் குறைந்துள்ளது. ஏனென்றால், இத் திட்டத்திற்கான செலவு பொறுப்பேற்ற செலவாகக் கருதப்பட்டுள்ளது. எனவே, இதற்கு மத்திய அரசினர் உதவி கிடைக்காது.

1966–67 முதல் 1970–71 வரை உள்ள ஐந்தாண்டுக் கால அளவில் திட்டத்தில் சேராத இனங்கள் குறித்த ரெவின்யூப் பற்றாக்குறையைச் சரிக்கட்டுவதற்காக, நான்காவது நிதிக் கமிஷன் பரிந்துரைத்து, இந்திய அரசினால் ஒப்புக்கொள்ளப்பட்டபடி, இம் மாநிலத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 6·84 கோடி கிடைக்கிறது. இத் தொகை, இந்திய அரசியலமைப்பின் 275 (i) பிரிவின் விதித் துறையின்கீழ் இம் மாநிலம் பெறும் தனி மானியமாகும்.

கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பு, கிராமத் தொழில்கள் போன்ற திட்டத்தில் சேராத சில வேலைகள், மூன்றும் திட்டத்திற்கு புறம்பாக ஒதுக்கியுள்ள நிதி உதவியுடன், இப்போது நான்காவது திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளது. "திட்டத்தில் சேராத இனங்களுக்குரிய ஏனைய மானியங்கள்" என்பதன் கீழ் 1966–67 திட்ட மதிப்பீட்டை விட திருத்த மதிப்பீடு குறைந்துள்ளதற்கு இதுவே காரணமாகும்.

1967–68 திட்ட மதிப்பீடு, 1966–67 திருத்த மதிப்பீட்டை அனுசரித்து உள்ளது.

5. மாநில வரிகள் பற்றிய நிலை வருமாறு :—

| (1) | 1965–66 கணக்குகள். (2) | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| வேளாண்மை வருமான வரி | 1,23 | 1,40 | 1,26 | 1,36 |
| நிலவரி (பாசன வருவாய் உட்பட). | 9,13 | 9,45 | 8,24 | 8,51 |
| மாநில ஆயத் தீர்வைகள் .. | 49 | 43 | 40 | 43 |
| வண்டிகள் மீது வரி .. | 13,31 | 14,00 | 14,01 | 14,77 |
| பொது விற்பனை வரி .. | 29,95 | 34,00 | 35,50 | 38,65 |
| மத்திய விற்பனை வரி .. | 7,15 | 7,35 | 8,60 | 9,63 |
| மோட்டார் எண்ணெய் வரி | 3,85 | 4,55 | 4,60 | 5,00 |
| கேளிக்கை வரி .. .. | 5,12 | 4,64 | 5,57 | 5,66 |
| பந்தய வரி .. .. | 64 | 58 | 70 | 78 |
| மின்சாரத் தீர்வைகள் .. | 4,34 | 6,38 | 6,06 | 6,58 |
| ஏனைய இனங்கள் .. .. | 41 | 45 | 1 | 75 |
| முத்திரைத் தாள்கள் .. | 8,15 | 7,62 | 8,74 | 9,31 |
| பத்திரப் பதிவு .. .. | 1,80 | 1,72 | 1,94 | 1,94 |
| மொத்தம் .. | 85,57 | 92,57 | 95,63 | 1,03,37 |



1966–67 திருத்த மதிப்பீட்டில் "நிலவரி" என்பதன்கீழ் குறைவு ஏற்பட்டுள்ளது. அதற்கு காரணங்கள் வருமாறு :—

(1) 1965 டிசம்பரில் நிலவரியின்மீது விதிக்கப்பட்ட மேல்வரி நீக்கப்பட்டது.

(2) ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் பொதுத் தேர்தல்கள் சம்பந்தப்பட்ட வேலையில் நிர்வாகப் பணியாளர்கள் ஈடுபட்டிருந்ததால், வரி வசூல் செய்வது குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஏனைய இனங்கள் என்பதன்கீழ் நகர நில வரி முக்கிய இனமாகும். 1966–67-க்காக நிச்சயிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1965–66 கணக்குகளை அனுசரித்துள்ளது. ஆயினும், நடப்பு ஆண்டில், நகர நில வரிச் சட்டத்தை உயர் நீதி மன்றம் ரத்து செய்தது. எனவே, வரி வசூல்கள் நிறுத்தப்பட்டன. ஒரு திருத்தச் சட்டம் இப்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. அது செயலாக்கப்பட்டு வருகின்றது. 1967–68 திட்ட மதிப்பீடு, அடுத்த ஆண்டில் எதிர்பார்க்கப்படும் இயல்பான வரவுகளுக்கு வகை செய்கின்றது.

ஏனைய மதிப்பீடுகள், வருவாய்களின் இயல்பான வளர்ச்சிக்கு வகை செய்கின்றன.

6. வரி நீங்கலான ஏனைய வருவாய்கள் குறித்த விவரங்கள் வருமாறு :—

| வரி நீங்கலான வருவாய்கள். | 1965–66 கணக்குகள். | 1966–67 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966–67 திருத்த மதிப்பீடு. | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| கடனுக்குரிய வட்டி முதலிய வரவுகள். | 13,77 | 18,70 | 15,83 | 19,45 |
| நீதி நிர்வாகம் .. .. | 1,22 | 95 | 1,18 | 1,18 |
| சிறைச்சாலைகள் .. .. | 42 | 52 | 42 | 47 |
| போலீஸ் .. .. .. | 51 | 36 | 42 | 43 |
| பல்வகைத் துறைகள் .. | 45 | 42 | 49 | 53 |
| கல்வி .. .. .. | 91 | 62 | 94 | 96 |
| மருத்துவம் .. .. | 1,13 | 1,10 | 1,44 | 1,60 |
| பொதுச் சுகாதாரம் .. | 17 | 17 | 21 | 14 |
| வேளாண்மை .. .. | 3,84 | 3,94 | 4,96 | 5,86 |
| கால்நடை வளர்ப்பு .. | 31 | 18 | 26 | 27 |
| கூட்டுறவு .. .. .. | 59 | 42 | 47 | 48 |
| தொழில்கள் .. .. | 3,40 | 1,16 | 1,32 | 1,36 |
| சமுதாய வளர்ச்சி திட்டங்கள் | 7 | 5 | 5 | 7 |
| பல்வகை, சமூக வளர்ச்சி நிறுவனங்கள். | 34 | 30 | 33 | 33 |
| பாசனம் .. .. .. | 20 | 19 | 16 | 16 |
| பொதுப் பணிகள் .. .. | 1,52 | 1,14 | 1,35 | 1,30 |
| மோட்டார், நீர்வழிப் போக்கு வரத்துத் திட்டங்கள். | 7,96 | 8,39 | 9,04 | 9,22 |
| ஓய்வூதியம், ஓய்வு கால அனுகூலங்கள். | 33 | 49 | 48 | 50 |
| எழுதுபொருள்-அச்சுத்துறை | 54 | 52 | 55 | 56 |
| காட்டு வளம் .. .. | 2,81 | 2,66 | 2,84 | 2,83 |
| பல்வகை .. .. .. | 1,08 | 87 | 1,20 | 1,17 |
| பங்கீட்டுத் தொகைகள் .. | 17 | 10 | 16 | 15 |
| பல்வகைச் சரிக்கட்டல்கள் .. | 1 | 1 | 2 | 1 |
| ஏனைய சிறப்பு வருவாய்கள். | 1,12 | 1,06 | 1,28 | 1,31 |
| மொத்தம் .. | 42,87 | 44,32 | 45,40 | 50,34 |

"கடனுக்குரிய வட்டி முதலிய வரவுகள்" என்பதன்கீழ் 1966–67 திருத்த மதிப்பீடு குறைந்துள்ளது. மின்சார போர்டின் ஆதாரங்கள் குறித்த கடைசி மதிப்பீட்டின் அடிப்படையில், மின்சார போர்டிடமிருந்து குறைவான தொகையையே வசூலிக்க இயலும் என்று எதிர்பார்த்ததே அதற்கு காரணமாகும். வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 11,00 லட்சம் ரூபாய் கிடைக்கும் என்று மதிப்பிட்டிருக்க, ரூ. 7,12 லட்சம் மட்டுமே கிடைக்குமென தோன்றுகிறது.

பல்வேறு தொழிலாளர் அரசாங்க இன்ஷூரன்ஸ் திட்டங்களுக்காக தொழிலாளர் அரசாங்க இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷனிடமிருந்து அதிக வரவுகள் எதிர்பார்க்கப்படுவதே "மருத்துவம்" என்பதன்கீழ் திருத்த மதிப்பீடு அதிகரித்துள்ளதற்கு முக்கிய காரணமாகும்.

கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் அதிக வருவாய் எதிர்பார்க்கப்படுவதே "வேளாண்மை" என்பதன்கீழ் திருத்த மதிப்பீடு அதிகரித்துள்ளதற்கு முக்கிய காரணமாகும்.—

(1) தரமான விதைகளை வழங்குதல்.

(2) செடிப் பாதுகாப்பு திட்டம்.

(3) எண்ணெய் வித்துக்கள் மேப்பாட்டுத் திட்டம்.

நிகரான செலவுத் தலைப்புகளின்கீழ் அதிக செலவுகள் காணப்படுகின்றன. தமிழ் நாடு அரசாங்க பஸ் போக்குவரத்துத் துறைக்கு சம்பந்தப்படும் புள்ளிவிவரங்கள் பிறிதோர் இடத்தில் கூறப்பட்டுள்ளன. சிவில் சப்ளைஸ் விவகாரங்கள் அதிகரித்துள்ளதால் "சிறப்புச்" செலவுகள் " என்பதன்கீழ் திருத்த மதிப்பீடும், திட்ட மதிப்பீடும் அதிகரித்துள்ளன.

7. வரி வசூல் குறித்த செலவுகள் பற்றிய விவரம் வருமாறு :—

| இனங்கள். | 1965–66 கணக்குகள். | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966–67 திருத்த மதிப்பீடு. | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| கார்ப்பொரேஷன் வரி நீங்கலாக ஏனைய வருமான வரிகள். | 15 | 15 | 13 | 10 |
| நிலவரி .. .. .. | 98 | 1,03 | 1,13 | 1,19 |

| இனங்கள். | 1965-66 கணக்குகள். | 1966-67 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966-67 திருத்த மதிப்பீடு | 1967-68 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் லட்சத்தில.) | | |
| வண்டிகள்மீது வரிகள் .. | 29 | 25 | 30 | 30 |
| விற்பனை வரி .. .. | 1,12 | 1,04 | 1,12 | 1,10 |
| ஏனைய வரிகளும் தீர்வைகளும். | 11 | 12 | 16 | 15 |
| முத்திரைத் தாள்கள் .. | 25 | 32 | 23 | 24 |
| பத்திரப் பதிவு கட்டணங்கள். | 65 | 69 | 69 | 71 |
| மொத்தம் .. | 3,55 | 3,60 | 3,76 | 3,79 |

சர்வே, நிலவரி ஏற்பாட்டினால் ஏற்பட்ட அதிகரித்த செலவே, "நிலவரியின்" கீழ் செலவு அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும். விற்பனை வரித் துறையின் மாவட்ட அலுவலகப் பணியாளர்களை கூடுதலாக நியமித்ததால் "விற்பனை வரியின்" கீழ் செலவு அதிகரித்துள்ளது. பொது முத்திரைத் தாள்கள் விற்பனையின் பேரிலான தள்ளுபடியின்மீது குறைவான செலவு எதிர்பார்க்கப்படுவதால் "முத்திரைத் தாள்கள்" என்பதன் கீழ்க் குறைவு ஏற்பட்டுள்ளது.

8. வளர்ச்சிப் பணிகளின்கீழ் வராத இனங்களின்மீது எதிர்பார்க்கப்படும் செலவு விவரங்கள் வருமாறு :—

| இனங்கள். | 1965-66 கணக்குகள். | 1966-67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966-67 திருத்த மதிப்பீடு. | 1967-68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் லட்சத்தில.) | | |
| கடனுக்குரிய வட்டி முதலிய செலவுகள். | 15,94 | 19,50 | 20,74 | 23,47 |
| கடன் குறைப்பு அல்லது தவிர்ப்பு நிதி ஒதுக்கம். | 1,43 | 5,74 | 6,89 | 7,72 |
| மாநிலச் சட்டப் பேரவையும் தேர்தல்களும். | 40 | 48 | 59 | 30 |
| பொது நிர்வாகம் .. .. | 9,60 | 9,37 | 9,49 | 9,46 |
| நீதி நிர்வாகம் .. .. | 1,99 | 1,96 | 2,08 | 2,10 |
| சிறைச்சாலைகள் .. .. | 1,93 | 1,83 | 1,58 | 1,62 |
| போலீஸ் .. .. | 9,46 | 8,46 | 9,84 | 9,43 |
| பல்வகைத் துறைகள் .. | 83 | 85 | 91 | 92 |
| பஞ்சத் தணிப்பு .. .. | 94 | 61 | 95 | 61 |



| இனங்கள். | 1965-66 கணக்குகள். | 1966-67 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966-67 திருத்த மதிப்பீடு. | 1967-68 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| ஓய்வூதியமும், ஏனைய ஓய்வு அனுகூலங்களும். | 3,49 | 3,56 | 3,36 | 3,52 |
| அரசியல் காரண ஓய்வுத் தொகைகளும், முன்னாள் சமஸ்தான மன்னர்களுக்கு அளிக்கும் உதவித் தொகைகளும். | 3 | 3 | 2 | 3 |
| எழுதுபொருள்-அச்சுத்துறை. | 2,03 | 1,85 | 1,99 | 2,01 |
| பல்வகை .. .. .. | 3,43 | 3,36 | 4,95 | 9,16 |
| இதர பல்வகை உதவித் தொகைகளும், ஒதுக்கீடுகளும். | 5,34 | 4,88 | 5,74 | 5,81 |
| சிறப்புச் செலவுகள் .. | 1,07 | 1,00 | 1,27 | 1,26 |
| தேசீய நெருக்கடியையொட்டிய செலவு. | 3 | .. | 1 | 1 |
| மொத்தம் .. | 57,94 | 63,48 | 70,41 | 77,43 |

9. கடனுக்குரிய வட்டி முதலிய செலவுகள் அதிகரித்துள்ளன. பொது மக்களிடமிருந்து எழுப்பிய கடன்கள், இந்திய அரசினிடமிருந்து பெற்ற கடன்கள், சுயேச்சை அதிகார சபைகளிடமிருந்து பெற்ற கடன்கள் ஆகியவற்றின்மீது வட்டி செலுத்த வேண்டிய பொறுப்பு அதிகரித்து வருவதை இது காட்டுகிறது.

கடன் குறைப்பு—தவிர்ப்புக்கான தொகை ஒதுக்குவதற்காக வகை செய்கையில் நான்காவது நிதிக் கமிஷன் பரிவுரை கருத்தில் வைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

போலீஸ் படையினர் தமது கடமையை ஆற்ற விரைவாக பல இடங்களுக்குச் செல்லும் பொருட்டு புதிய மோட்டார் வண்டிகள் வாங்க அதிக நிதி ஒதுக்கியதே "போலீஸ்" என்பதன்கீழ் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதற்கு முக்கிய காரணமாகும். இம் மாநிலத்திற்கு வெளியில் முன்பு பணியாற்றிவந்த ஆயுதம் தாங்கிய சிறப்புப் போலீஸ் படையினர் திரும்புவதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் புயலால் ஏற்பட்ட சேதங்களை பழுது பார்ப்பதற்கான நிவாரண வேலைகளின் பொருட்டு செலவு பிடித்ததே "பஞ்சத் தணிப்பு" என்பதன்கீழ்ச் செலவு அதிகரித்ததற்குக் காரணம் ஆகும். இத் தலைப்பு, "பஞ்சத் தணிப்பு" என்று கூறப்பட்டாலும், இயற்கை உற்பாதங்களால் நேரிடும் இடர்ப்பாடுகளுக்கு நிவாரணம் அளிப்பதற்காகச் செய்யும் எல்லாச் செலவும் இத் தலைப்பின்கீழ்ப் பற்று எழுதப்படுகின்றது. பல்வகை என்ற தலைப்பின்கீழ் கணிசமான அளவுக்கு செலவு அதிகரித்துள்ளது. நடப்பாண்டில் அரசாங்க ஊழியர்களுக்கு இரண்டாவது முறையாக அதிகரித்த அகவிலைப்படி வீதத்தை அனுமதித்ததற்காக திருத்த மதிப்பீட்டில் ரூ. 1,48 லட்சமும், திட்ட மதிப்பீட்டில் ரூ. 5,62 லட்சமும் ஒரு மொத்தமாக நிதி ஒதுக்கப்பட்டதால் "பல்வகை" என்பதன்கீழ் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. தல அதிகார சபைகள் கேளிக்கை வரி மீது விதிக்கும் மேல்வரியின் அதிகமான அளவை அவற்றிற்கு வழங்கியதால் "பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்" என்பதன் கீழ் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதற்கு இணையாக கேளிக்கை வரி என்னும் ரெவின்யூத் தலைப்பின் கீழ் அதிகரிப்பு காணப்படுகின்றது.

சிவில் சப்ளைஸ் துறை விவகாரங்களின் அளவு அதிகரித்ததால் "சிறப்புச் செலவுகள்" என்பதன்கீழ் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

[1967 மார்ச் 20

10. தல அதிகார சபைகளுக்கு வழங்கிய இணை மானியங்கள் குறித்த விவரம் வருமாறு :—

| இனங்கள். | 1965–66 கணக்கு கள். | 1966–67 வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966–67 திருத்த மதிப்பீடு. | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| வீட்டு வரி இணை மானியம் .. .. | 89 | 1,09 | 85 | 90 |
| தல மேல்வரி இணை மானியம் .. .. | 1,99 | 1,90 | 2,00 | 2,00 |
| மொத்தம் .. | 2,88 | 2,99 | 2,85 | 2,90 |

11. பல்வேறு வளர்ச்சி தலைப்புகளுக்காக நிச்சயிக்கப்பட்ட மதிப்பீடுகள் வருமாறு :—

| இனங்கள். | 1965–66 கணக்கு கள். | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 1966–67 திருத்த மதிப்பீடு. | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| விஞ்ஞானத் துறைகள் .. .. .. | 7 | 6 | 8 | 7 |
| கல்வி .. .. .. .. .. | 37,85 | 44,97 | 44,31 | 47,04 |
| மருத்துவம் .. .. .. .. | 10,33 | 10,88 | 10,85 | 11,43 |
| பொதுச் சுகாதாரம் .. .. .. | 3,62 | 5,04 | 4,64 | 4,81 |
| ஹரிஜனங்கள், ஆதிவாசிகள் நலன் .. | 5,86 | 6,16 | 7,25 | 7,50 |
| வேளாண்மை .. .. .. .. | 10,68 | 9,75 | 12,31 | 13,34 |
| கால்நடை வளர்ப்பு .. .. .. | 3,31 | 3,33 | 3,47 | 3,30 |
| கூட்டுறவு .. .. .. .. .. | 2,84 | 2,68 | 2,79 | 2,50 |
| தொழில்கள் .. .. .. .. | 6,57 | 2,35 | 2,38 | 2,50 |
| சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் .. .. | 7,53 | 6,45 | 6,38 | 6,43 |
| தொழிலாளரும், வேலை வாய்ப்பும் .. | 1,88 | 2,19 | 2,01 | 2,23 |
| பாசனப் பராமரிப்பு .. .. .. | 7,08 | 7,26 | 7,69 | 7,88 |
| பொதுப் பணிகள் .. .. .. .. | 11,87 | 9,91 | 10,43 | 10,55 |
| பொதுப் பணிகளுக்கான மூலதனச் செலவு. | .. | 9 | 4 | 6 |
| மோட்டார் போக்குவரத்து .. .. | 8,31 | 8,70 | 9,28 | 9,53 |
| காட்டு வளம் .. .. .. .. | 1,37 | 1,51 | 1,54 | 1,60 |
| மொத்தம் .. | 1,19,17 | 1,21,33 | 1,25,45 | 1,30,77 |



1967 மார்ச் 20]

அதிக முக்கிய இனங்களின்கீழ்ச் செய்துள்ள நிதி ஒதுக்கங்கள் கீழே விளக்கப் பட்டுள்ளன :—

12. **கல்வி.**—பல்வேறு தலைப்புகளின்கீழ் உத்தேசச் செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| இனங்கள். | 1965–66 கணக்கு கள். | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966–67 திருத்த மதிப்பீடு. | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| பல்கலைக் கழகக் கல்வி .. .. .. | 1,93 | 1,84 | 2,05 | 2,03 |
| உயர்நிலைக் கல்வி— | | | | |
| அரசாங்க உயர்நிலைப் பள்ளிகள் .. | 67 | 77 | 73 | 82 |
| அரசாங்க உயர்நிலைப் பள்ளிகளல்லாத உயர்நிலைப் பள்ளிகளுக்கு மானியம். | 6,13 | 5,32 | 5,73 | 6,00 |
| உயர் நிலைக் கல்விக்காக தல அதிகார சபைகளுக்கு மானியம். | 5,70 | 7,10 | 8,49 | 8,71 |
| மொத்தம்—உயர்நிலைக் கல்வி .. | 12,50 | 13,19 | 14,95 | 15,53 |
| தொடக்கக் கல்வி— | | | | |
| அரசாங்க தொடக்கப் பள்ளிகள். | 61 | 76 | 70 | 76 |
| பஞ்சாயத்து யூனியன் அல்லாத பகுதிகளில் உள்ள பள்ளி களுக்கு மானியங்கள். | 3,90 | 6,26 | 4,93 | 4,93 |
| தலக் கல்வி மானியம் .. .. | 5,31 | 6,11 | 5,25 | 5,60 |
| நிலவரி ஒப்படை .. .. .. | 2,65 | 2,68 | 2,68 | 2,68 |
| கல்வித் துணை மானியம் .. .. | 2,39 | 2,55 | 2,60 | 2,77 |
| அகவிலைப்படி குறித்த மானியம் .. | 2,15 | 4,49 | 4,47 | 5,76 |
| மொத்தம்—தொடக்கக் கல்வி .. .. | 17,01 | 22,85 | 20,63 | 22,50 |
| சிறப்புக் கல்வி— | | | | |
| அரசாங்கச் சிறப்புப் பள்ளிகள் .. | 67 | 71 | 69 | 71 |
| அரசாங்கப் பள்ளிகளல்லாத சிறப்புப் பள்ளிகளுக்கு மானியங்கள். | 24 | 27 | 23 | 23 |
| மொத்தம்—சிறப்புக் கல்வி .. | 91 | 98 | 92 | 94 |

| இனங்கள். | 1965-66 கணக்குகள். | 1966-67 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966-67 திருத்த மதிப்பீடு. | 1967-68 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| பல்வகை— | | | | |
| நிர்வாகமும் மேற்பார்வையும் .. .. | 59 | 55 | 60 | 61 |
| உபகாரச் சம்பளங்கள் .. .. .. | 8 | 11 | 11 | 11 |
| தேசிய மாணவர் படை .. .. | 60 | 62 | 59 | 64 |
| மதிய உணவு .. .. .. .. | 1,68 | 1,94 | 1,70 | 1,70 |
| ஏனைய இனங்கள் .. .. .. | 1,12 | 1,11 | 1,29 | 1,22 |
| மொத்தம்—பல்வகை .. .. | 4,07 | 4,33 | 4,29 | 4,28 |
| தொழில் நுட்பக் கல்வி .. | 1,43 | 1,78 | 1,47 | 1,76 |
| பெரு மொத்தம்—கல்வி .. | 37,85 | 44,97 | 44,31 | 47,04 |

13. "அரசாங்க உயர்நிலைப் பள்ளிகள் அல்லாத உயர்நிலைப் பள்ளிகளுக்கு மானியம்" என்பதன்கீழ் 1965–66-க்கான செலவுகள் அதிகரித்துள்ளதற்குக் காரணம், விதிகளையொட்டி வழங்கப்படும் மானியங்களின் பாக்கிகளைக் கொடுத்ததே யாகும் (ரூ. 84 லட்சம்). அகவிலைப்படி வீதங்கள் அதிகரித்ததன் காரணமாக திட்ட மதிப்பீட்டை விட திருத்த மதிப்பீடு அதிகரித்துள்ளது.

"உயர்நிலைக் கல்விக்காக தல அதிகார சபைகளுக்கு மானியங்கள்" என்பதன் கீழ், முன்னுள் மாவட்டக் கழகப் பள்ளிகளுக்கான உயர்நிலைக் கல்விக் குரிய ஒரு மொத்த மானியங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. கட்டிடத் திட்டங்களுக் காக கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது (+ 58 லட்சம்). சில நகராட்சி கணக்குகளுக்கு முன்னதாக மானியங்கள் வழங்க ரூ. 31 லட்சம் அதிகரித்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இக்காரணங்களாலும் ஏனைய சில காரணங் களாலும் திட்ட மதிப்பீட்டைக் காட்டிலும் திருத்த மதிப்பீடு உயர்ந்துள்ளது.

திட்ட மதிப்பீட்டைத் தயாரிக்கையில், மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் திட்டத்தின் பாகமாக, கட்டிடம் கட்டும் வேலையும், மேசை, நாற்காலி போன்ற சாமான்களுக்கு ஏற்பாடு செய்யும் வேலையும் மேற்கொள்ளப்படும் என்று எதிர் பார்க்கப்பட்டது. எனவே, திட்ட மதிப்பீட்டில் அவற்றிற்கென நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. ஆயினும், தற்போதைய வரையறைகள் தொடர்ந்து இருக் கின்றன. கட்டிடம் கட்டும் வேலையானது "ஆரம்பப்பள்ளிகளுக்காகக் கட்டி டங்கள் கட்டுதல்" என்னும் முறையானத் திட்ட வேலையுடன் இணைக்கப் பட்டுள்ளது. இதுவும், கூடுதலான மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது குறித்து முதலில் அதிகமாக மதிப்பிட்டதும், ஏனைய சில விஷயங்களும் "தலக் கல்வி மானியம், பஞ்சாயத்து யூனியன் பகுதிகள் அல்லாத பகுதிகளில் உள்ள பள்ளி களுக்கு மானியம்" என்பதன்கீழ் குறைவேற்பட்டதற்குக் காரணங்களாகும்.

14. "பொதுச் சுகாதாரம்" என்பதன்கீழ் குறைவு ஏற்பட்டுள்ளது. நில நீர் ஆராய்ச்சி—சர்வே, ஏனைய நான்காவது திட்ட வேலைகள் ஆகியவற்றிற்காக குறைவாகச் செலவு பிடித்ததே அதற்கு முக்கிய காரணமாகும். வேளாண்மை என்பதன்கீழ், கீழ்க்கண்ட வளர்ச்சித் திட்டங்களுக்காக திருத்த மதிப்பீட்டிலும், வரவு-செலவு திட்ட மதிப்பீட்டிலும், அதிகமான நிதி ஒதுக்கம் செய்யப்பட் டுள்ளது :—

(i) குழாய்க் கிணறுகள், வடிமுனைக் கிணறுகள் அமைத்தலும், இயந்திரக் கலப்பைகளைத் தவணை முறையில் கொள்முதல் செய்தலும்.



(ii) நெல் விதைகளையும், ஏனைய விதைகளையும் பெருக்குதல்.

(iii) பயிர்கள், செடிப் பாதுகாப்புத் திட்டங்கள்.

கல்வி உதவிச் சம்பளங்களுக்காக அதிக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. "ஹரிஜனங்கள், ஆதிவாசிகள் நலன்" என்பதன்கீழ் இதனால் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. "பாசனம்" என்பதன்கீழ் திருத்த மதிப்பீடும் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடும் அதிகரித்துள்ளன. பாசன வேலைகளைப் பராமரிக்க அதிகச் செலவு பிடித்ததே அதற்குக் காரணம். "அனுமதத்துக் கணக்கு" விவகாரங்களின் கீழும், நெடுஞ்சாலைகள்-கிராமப் பணிகள் துறையின் பராமரிப்பு வேலைகளின் கீழும் அதிகரிப்பு ஏற்பட்டதன் காரணமாக, "பொதுப் பணிகள்" என்பதன்கீழ் செலவு அதிகரித்துள்ளது. "மோட்டார் போக்குவரத்து" என்பதன்கீழ் அதிகரிப்புக் குக் காரணம், தமிழ்நாடு அரசாங்க பஸ் போக்குவரத்துத் துறையின் நடைமுதல் செலவுகள் மொத்தத்தில் அதிகரித்ததேயாகும்.

15. தமிழ்நாடு அரசாங்க பஸ் போக்குவரத்து நிறுவனத்தின் வரவுகள், செலவுகள் குறித்த விவரம் வருமாறு :—

| | 1965-66 கணக்குகள். | 1966-67 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966-67 திருத்த மதிப்பீடு. | 1967-68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| ரெவின்யூ வருவாய்— | | | | |
| டிக்கட்டுகள் விற்பனை— | | | | |
| சென்னை .. .. .. .. | 4,69 | 4,60 | 5,30 | 5,40 |
| நீண்டதூர மார்க்கம் .. .. | 1,35 | 2,15 | 1,57 | 1,62 |
| கன்னியாகுமரி .. .. .. | 85 | 86 | 1,00 | 1,05 |
| வட்டி .. .. .. .. | 24 | 19 | 27 | 29 |
| ஏனைய வரவுகள் .. .. .. | 83 | 59 | 90 | 86 |
| மொத்தம் .. | 7,96 | 8,39 | 9,04 | 9,22 |
| மூலதன வருவாய்— | | | | |
| பஸ்கள், ஏனைய பொருள்கள் விற்பனை .. | .. | .. | 7 | .. |
| கீழ்க்கண்டவற்றிலிருந்து பெற்றது— | | | | |
| (i) அபிவிருத்தி நிதி .. .. | 5 | 5 | .. | .. |
| (ii) தேய்மான சேம நிதி .. .. | 63 | 1,00 | 1,15 | 1,66 |
| மற்றவை .. .. .. .. | 7 | 2 | 2 | 2 |
| மொத்தம் .. | 75 | 1,07 | 1,24 | 1,68 |
| ரெவின்யூக் கணக்கில் செலவு— | | | | |
| நிர்வாகச் செலவுகள் .. .. .. | .32 | 3,14 | 3,56 | 3,71 |
| வரிகள் .. .. .. .. .. | 1,14 | 1,28 | 1,54 | 1,33 |
| ஊதியங்கள் .. .. .. .. | 1,22 | 1,23 | 1,28 | 1,39 |
| தேய்மான சேம நிதிக்குத் தொகை .. | 1,16 | 1,39 | 1,22 | 1,33 |
| வட்டி .. .. .. .. .. | 47 | 53 | 52 | 57 |

| (1) | 1965–66 கணக்குகள். (2) | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| **ரெவின்யூக் கணக்கில் செலவு—தொடர்ச்சி.** | | | | |
| மோட்டார் வண்டிகள் பராமரிப்பு நிறுவனம். | .. | 6 | 6 | 11 |
| ஏனைய இனங்கள் .. .. .. | 1,00 | 96 | 1,10 | 1,09 |
| மொத்தம் .. | 8,31 | 8,59 | 9,28 | 9,53 |
| மூலதனக் கணக்கில் செலவு— | | | | |
| பஸ்கள் வாங்குதல் .. .. .. | 1,81 | 1,80 | 1,65 | 2,16 |
| நிலங்கள், கட்டிட விலை .. .. | 36 | 20 | 21 | 11 |
| ஏனைய இனங்கள் .. .. .. | 17 | 14 | 14 | 14 |
| மொத்தம் .. | 2,34 | 2,14 | 2,00 | 2,41 |
| ரெவின்யூக் கணக்கில் லாபம் (+) அல்லது நஷ்டம் (—). | — 35 | — 20 | — 24 | — 31 |
| மோட்டார் வண்டிகள் பராமரிப்பு நிறுவனத்துக்கான வரவுகள், செலவுகள் இவற்றைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் ரெவின்யூக் கணக்கில் லாபம் (+) அல்லது நஷ்டம் (—). | — 35 | — 14 | — 18 | — 20 |

16. பல்வேறு மூலதனத் தலைப்புகளின்கீழ் உத்தேசிக்கப்பட்ட செலவுகளைக் கீழ்க்கண்ட அட்டவணை காட்டுகிறது :—

| மூலதனச் செலவுகள். (1) | 1965–66 கணக்குகள். (2) | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| நில உடைமையாளர்களுக்கு இழப்பீடு கொடுத்தல். | 3 | — 2 | 2 | — 1 |
| பொதுச் சுகாதார அபிவிருத்திக்கான மூலதனச் செலவு. | — 21 | — 32 | 12 | 12 |
| வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சித் திட்ட மூலதனச் செலவு. | 34 | 35 | 38 | 46 |
| பயன்கொள்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மூலதனச் செலவு. | 10 | .. | .. | .. |
| தொழில், பொருளாதார வளர்ச்சிக்கான மூலதனச் செலவு. | 5,94 | 3,02 | 2,88 | 3,56 |
| பாசன மூலதனச் செலவு (வாணிகத் தன்மையுள்ளவை). | 7,81 | 5,95 | 4,79 | 4,62 |
| பாசன மூலதனச் செலவு (வாணிகத் தன்மையற்றவை.) | 2,98 | 3,37 | 3,22 | 2,63 |



| மூலதனச் செலவுகள். (1) | 1965–66 கணக்குகள். (2) | 1966–67 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| பொதுப் பணிகளுக்கான மூலதனச் செலவு. | 5,80 | 5,53 | 5,69 | 4,41 |
| ஏனைய வேலைகளுக்கான மூலதனச் செலவு. | — 1,72 | 4,63 | 4,70 | 3,45 |
| மோட்டார் நீர்வழிப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு. | 1,58 | 1,07 | 76 | 72 |
| காட்டுவள மூலதனச் செலவு .. .. | 72 | 81 | 78 | 56 |
| அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு. | 10,57 | 2,68 | 3,32 | 57 |
| மொத்தம் .. | 33,94 | 27,07 | 26,66 | 21,09 |

புதிய திட்டங்களுக்காக அல்லது II-ம் பாகத் திட்டங்களுக்காக, இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கம் செய்யப்படவில்லையாதலால், பல்வேறு தலைப்புகளின்கீழ்ச் செலவு குறைவாகக் காணப்படுகிறது. மேற்சொன்ன திட்டங்கள், தனியாக பரிசீலனை செய்யப்பட்டு, முறையான வரவு-செலவுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

17. நீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றுதல் திட்டங்களுக்காக அதிகரித்த செலவுக்கு நிகராக அதிக அளவில் இருப்புகள் வாங்கி சேர்க்க வேண்டியிருந்ததால் பொதுச் சுகாதாரத்தின்மீதான மூலதனச் செலவு அதிகரித்துள்ளது.

1966–67-ல், நீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றுதல் திட்டங்களுக்காக செலவு செய்ய ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 4,50 லட்சமாகும். அதன் விவரங்கள் வருமாறு :—

| திட்டங்கள். (1) | 1965–66 கணக்குகள். (2) | 1966–67 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| கிராமப்புறங்களில் நீர் வழங்குவதற்கான திட்டங்கள். | 63 | 80 | 1,20 | 1,10 |
| நகர்ப்புறங்களில் நீர் வழங்குதலும், கழிவு நீர் அகற்றும் திட்டங்களும். | 1,44 | 1,70 | 1,80 | 1,70 |
| மாநகராட்சி நீர் வழங்கு திட்டங்களும், கழிவு நீர் அகற்றும் திட்டங்களும். | 1,53 | 1,70 | 1,50 | 1,60 |
| மொத்தம் .. | 3,60 | 4,20 | 4,50 | 4,40 |

18. 1966–67 திட்ட மதிப்பீட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் 1966–67 திருத்த மதிப்பீடு "பாசன (வாணிகத் தன்மை உள்ளது) மூலதனச் செலவு" என்பதன்கீழ் குறைந்துள்ளது. சித்தார்பட்டணங்கால், ராமநதி, கடனு, கோமுகி நதி ஆகிய திட்டங்களுக்கென குறைவான செலவு பிடித்ததே அதற்குக் காரணமாகும். ஆனால் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம், மணிமுக்தா நதித் திட்டம் ஆகியவற்றிற்காக அதிக செலவு பிடித்ததால் மேற்சொன்ன செலவு குறைவு ஓரளவிற்கு சரிக்கட்டப்படுகிறது.

19. பல்வேறு பாசனத் திட்டங்கள் குறித்த செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| திட்டங்கள். (1) | 1965–66 கணக்குகள். (2) | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் .. .. | 5,56 | 2,75 | 3,11 | 2,50 |
| பாலாறு அணைக்கட்டுக்கு மேம்பாடுகள் .. | 6 | .. | .. | .. |
| சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டம், II-ம் நிலை. | 3 | .. | .. | .. |
| சித்தார்பட்டணங்கால் .. .. .. | 1,29 | 2,33 | 1,23 | 1,26 |
| கோமுகி நதி .. .. .. .. | 41 | 17 | 1 | .. |
| மணிமுக்தா நதி .. .. .. .. | .. | 10 | 24 | 41 |
| தஞ்சாவூர்க் கால்வாய்களுக்கு நவீன வசதிகள் செய்தல். | .. | .. | .. | 10 |
| வைகை வாய்க்கால்களை நவீன முறையில் அமைத்தல். | .. | 10 | .. | 5 |
| மற்ற திட்டங்கள் .. .. .. .. | 46 | 50 | 20 | 30 |
| மொத்தம்—வாணிகத் தன்மையுள்ள பாசனத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு. | 7,81 | 5,95 | 4,79 | 4,62 |
| மொத்தம்—வாணிகத் தன்மையற்ற பாசனத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு. | 2,98 | 3,37 | 3,22 | 2,63 |

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம், சித்தார்பட்டணங்கால், மணிமுக்தா நதி ஆகிய திட்டங்களுக்காக தேவைப்படும் அளவுக்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அத் திட்டங்கள் நடந்தேறி வருகின்றன.

20. அரசாங்க வாணிகத் திட்டங்களின் கீழ் உத்தேசிக்கப்பட்ட மதிப்பீடுகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| (1) | 1965–66 கணக்குகள். (2) | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| உரங்கள் வாங்குதல் .. .. .. | 1,79 | — 10 | .. | .. |
| சென்னை பால் வழங்குத் திட்டம் .. .. | 10 | 46 | 38 | 44 |
| மதுரை பால் வழங்குத் திட்டம் .. .. | 20 | 20 | 28 | 12 |
| உணவுத் தானியங்களில் அரசாங்க வாணிகம். | 8,54 | 2,11 | 2,68 | .. |
| ஏனைய இனங்கள் .. .. .. .. | — 6 | 1 | — 2 | 1 |
| மொத்தம் .. | 10,57 | 2,68 | 3,32 | 57 |



பெருந்தலைப்பின்கீழ் உள்ள மதிப்பீடுகள், பல்வேறு அரசாங்க வாணிக விவகாரங்கள் காரணமாக மாநில நிதிகளில் உத்தேச நிகர பற்றைக் குறிக்கின்றன. இத் தலைப்பின்கீழ்க் கேட்கப்படும் மொத்த நிதி ஒதுக்கம் அரசாங்க வாணிக விவகாரங்களின் அளவை பிரதிபலிக்கின்றது. இங்கு கண்டுள்ள நிகர புள்ளி விவரம், குறிப்பிட்ட ஒரு நிதியாண்டில் இந்த விவகாரங்களின் மூலம் இம் மாநிலத்தின் வழிவகை நிலையில் ஏற்படும் விளைவைக் காட்டுகிறது.

நடப்பு ஆண்டிலும், அடுத்த ஆண்டிலும் உர இருப்புகளை மேலும் அதிகரிக்கும் வாய்ப்பில்லை. ஏனென்றால் இப்போது உரங்கள் குறித்து பற்றுக்குறை நிலை நிலவுகின்றது. எந்த அளவுக்கு இருப்புகளை பெற்றாலும் அதிக தாமதம் இல்லாமல் அவற்றை விற்றுவிட இயலும்.

அரிசி, தினை வகைகள் இவற்றில் அரசாங்கம் இப்போது நடத்தும் வாணிக விவகாரங்கள் இந்திய ஸ்டேட் பாங்கிடமிருந்து ரொக்க-கடன் வசதிகள் மூலம் ரூ. 15 கோடி அளவுக்கு தற்போது சரிக்கட்டப்படுகிறது. பருப்பு வகைகள், சர்க்கரை முதலிய ஏனைய பண்டங்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்கென இதுவரை மாநில நிதிகளிலிருந்தே முழுவதும் நிதி வழங்கப்பட்டு வந்துள்ளது. 1966–67 திருத்த மதிப்பீடான ரூ. 2,68 லட்சம், நடப்பு நிதியாண்டின் முடிவில் பயன்படுத்திய கூடுதலான நிகர மூலதனத்தைக் குறிப்பிடுகின்றது. இந்த நிலையில், 1967–68 ஆண்டுக்காக அரசாங்க உணவுத் தானிய வாணிகத்துக்காக, மதிப்பீட்டில் நிகர நிதி ஒதுக்கம் எதுவும் காட்டப்படவில்லை. 1968 மார்ச் 31-ம் தேதியன்று இருக்கும் இருப்புகளின் மதிப்பு, 1967 மார்ச் 31-ம் தேதி அன்று இருக்கும் அதே மதிப்பாக இருக்கும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் இது அமைந்துள்ளது.

21. பல்வேறு கடன்கள், முன் பணங்கள் ஆகியவற்றின் கீழ் நிதி ஒதுக்கங்கள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| (1) | 1965–66 கணக்குகள். (2) | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| கடன்களும் முன்பணங்களும்— | | | | |
| சென்னை மாநகராட்சி .. .. .. | 1,57 | 1,58 | 1,37 | 1,15 |
| மாநில வீட்டு வசதி வாரியம் .. .. | 3,36 | 2,14 | 2,18 | 2,25 |
| தல ஸ்தாபனங்கள் .. .. .. | 2,18 | 1,91 | 2,33 | 1,94 |
| சிறு துறைமுக நிதிகள் .. .. | 3 | 40 | 6 | 29 |
| குடியானவர்களுக்கு முன் பணங்கள்— | | | | |
| தக்காவி, சமுதாய வளர்ச்சிக் கடன்கள். | 1,90 | 1,17 | 1,35 | 1,17 |
| உரங்கள் .. .. .. .. | 14 | 1,00 | 1,50 | 1,00 |
| புதிய கிணறு உதவித் திட்டம் .. .. | 3,19 | 2,72 | 4,72 | 3,00 |
| மண்வளப் பாதுகாப்பு .. .. .. | .. | 37 | 49 | 40 |
| பருத்தி சாகுபடியாளர்கள் .. .. | .. | 10 | 10 | 10 |
| வடிமுனைக் குழாய்க் கிணறுகள் .. | .. | 31 | 34 | 20 |
| பொங்கு ஊற்று நீர்க்கிணறுகள் .. | .. | 30 | 28 | 30 |
| வாடகைக் கொள்முதல் திட்டத்தின்கீழ்க் கடன்கள். | 1,43 | 1,00 | 1,75 | 75 |
| காய்கறி உற்பத்தி .. .. .. | .. | 7 | .. | .. |
| தோட்டக்கலை அபிவிருத்தி .. .. | .. | 5 | 5 | 5 |
| முந்திரி, தென்னைச் சாகுபடி .. .. | .. | 18 | 18 | 23 |
| ஏனைய இனங்கள் .. .. .. | .. | 20 | 19 | 20 |
| கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள் .. | 2,07 | 1,14 | 1,83 | 74 |
| தொழில்களுக்கு அரசாங்க உதவி குறித்த சட்டத்தின்கீழ்க் கடன்கள். | 57 | 50 | 64 | 58 |

| (1) | 1965–66 கணக்குகள். (2) | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருந்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| குடியானவர்களுக்கு முன் பணங்கள்—தொடர்ச்சி. | | | | |
| மின்சார போர்டுக்குக் கடன்கள் .. | 15,00 | 13,35 | 9,75 | 9,34 |
| தேசிய கடன் உபகாரச் சம்பளத் திட்டம். | 25 | 30 | 37 | 35 |
| பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கலாச்சார, கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குக் கடன்கள். | 28 | 20 | 23 | 24 |
| இடங்குக் கார்ப்பொரேஷன் .. .. | .. | .. | 4 | 4 |
| ஏனையக் கடன்கள் .. .. .. | 9,37 | 3,35 | 6,05 | 2,97 |
| மொத்தம் .. | 41,34 | 32,34 | 35,80 | 27,29 |
| வரவுகள் .. | 11,08 | 8,11 | 9,54 | 8,29 |
| நிகரச் செலவு .. | 30,26 | 24,23 | 26,26 | 19,00 |

22. சென்னை மாநகராட்சியின் முக்கிய சுகாதாரத் திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு அதற்கு கடன்கள் வழங்க நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சிக்கு வழங்க உத்தேசித்துள்ள கடன்கள், முன் பணங்கள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| (1) | 1965–66 கணக்குகள். கடன். (2) | மானியம். (3) | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. கடன். (4) | மானியம். (5) | 1966–67 திருத்த மதிப்பீடு. கடன். (6) | மானியம். (7) | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. கடன். (8) | மானியம். (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் லட்சத்தில்.) | | | | | |
| நகர சாலைகள் அபிவிருத்தி. | 7 | 8 | 5 | 15 | 7 | 11 | .. | .. |
| மேல் பாலங்கள் முதலியன கட்டுதல் .. .. | 25 | 25 | 18 | 10 | 16 | 9 | .. | .. |
| நீர் வழங்கு-கழிவுநீர் அகற்றும் வேலைத் திட்டங்கள். | 1,15 | 38 | 1,09 | 60 | 90 | 60 | 1,10 | 50 |
| நகர அமைப்புத் திட்டங்கள். | 5 | .. | 4 | 5 | 3 | .. | 5 | .. |
| ஏனைய பொதுச் சுகாதாரப் பணிகள் .. .. | 5 | .. | 9 | .. | 10 | .. | .. | .. |
| ஏனைய இனங்கள் .. .. | .. | .. | 13 | .. | 11 | .. | .. | .. |
| மொத்தம் .. | 1,57 | 71 | 1,58 | 90 | 1,37 | 80 | 1,15 | 50 |



இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில், நகர சாலைகளுக்கு மேம்பாடுகள் செய்வதற்கென 1967–68 திட்ட மதிப்பீடு குறித்து தொகை எதுவும் ஒதுக்கப்பட வில்லை. ஏனென்றால், நகர சாலைகள் குறித்த செயற் குறிப்புகள், நிலை நிதிக் குழு, அமைச்சரவை இவற்றின் ஒப்புதலுக்காக, முந்திய ஆண்டுகளைப் போலவே II-ம் பாக வேலைத் திட்டங்களாக வரும். அவற்றிற்கு ஒப்புதல் அளிக்கப்படுவதன் மேல் முறையான வரவு-செலவுத் திட்டத்தில் அவை சேர்க்கப்படும்.

23. பல்வேறு வேலைத் திட்டங்களுக்காக மாநில வீட்டு வசதி போர்டுக்கு வழங்க உத்தேசித்துள்ள கடன்கள், மானியங்கள் குறித்த விவரம் வருமாறு :—

| (1) | 1965–66 கணக்குகள். (2) | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| சேரி ஒழிப்பு— | | | | |
| மானியங்கள் .. .. | 62 | 60 | 60 | 63 |
| கடன்கள் .. .. | 95 | 36 | 36 | 38 |
| குறைந்த வருமானத் தொகுதியினர் வீட்டு வசதித் திட்டம். | 38 | 18 | 18 | 45 |
| நடுத்தர வருமானத் தொகுதியினர் வீட்டு வசதித் திட்டம். | 40 | 10 | 20 | 20 |
| வாடகை வீட்டு வசதித் திட்டம். | .. | 35 | 45 | 50 |
| பெருமளவு நில ஆர்ஜிதம் | 1,25 | 95 | 43 | 30 |
| இயந்திரச் சூளை நிறுவுதல் | 6 | 10 | .. | 10 |
| கான்க்ரீட் தயாரிக்கும் தொழிற்சாலை. | .. | 10 | — | 20 |
| உலக நாடுகள் தொழில் சந்தை. | .. | .. | 50 | .. |
| ஏனைய வகைப் பணிகள். | 32 | .. | 6 | .. |
| மொத்தம் .. | 3,98 | 2,74 | 2,78 | 2,76 |

24. நீர் வழங்கு-கழிவு நீர் அகற்றும் திட்டங்களுக்காகவும், துப்புரவாளர்கள், குப்பை கொட்டுவோர் ஆகியவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காகவும் தல அதிகார சபைக்கு அதிகமான கடன் உதவி வழங்கியதே, திட்ட மதிப்பீட்டை விட திருத்த மதிப்பீடு அதிகரித்துள்ளதற்கு முக்கிய காரணமாகும். "உரங்களுக்கான முன்பணங்கள்" என்பதன்கீழ், நடப்பு ஆண்டின்போது அத்திட்டம் விரைவாக நிறைவேற்றப்பட்டதன் காரணமாக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 1967-68 திட்ட மதிப்பீடு 1966–67 திட்ட மதிப்பீட்டை அனுசரித்துள்ளது. புதிய கிணறு மானியத் திட்டம் நடப்பாண்டில் மும்முரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் காரணமாக திட்ட மதிப்பீட்டை விட திருத்த மதிப்பீடு சுமார் 2 கோடி ரூபாய் அதிகரித்துள்ளது. 1965–66 கணக்குகளில் கண்டுள்ள அதிகரிப்பும் இந்த அதிகரிப்பு நியாயமானதுதான் என்று காண்பிக்கிறது. தவணைக் கொள்முதல் முறைக்காக வழங்கும் கடன் குறித்தும் இதே விளக்கம் பொருந்தும். கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் என்பதன்கீழ், திட்ட மதிப்பீட்டை விட திருத்த மதிப்பீடு அதிகரித்துள்ளது. விலைவாசிகள் உயராமல் இருப்பதற்காக பயன்கொள்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு கடன் வழங்கியதும், தமிழ்நாடு கூட்டுறவுப் பாங்க் அதன் வேளாண்மை நிதியை அதிகரிக்க கடன்கள் வழங்கியதும் (ரூ. 60 லட்சம்) மேற்சொன்ன அதிகரிப்புக்கு அதிக காரணங்களாகும்.

25. தமிழ்நாடு மின்சார போர்டின் மின்சாரத் திட்டங்களுக்கு வழங்கிய நிதி உதவி குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| (1) | 1965–66 கணக்குகள். (2) | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்). | | |
| திட்டச்செலவு .. .. | 25,84 | 23,71 | 27,00 | 28,60 |
| மின்சார போர்டின் ஆதாரங்கள்— | | | | |
| (a) ரொக்க இருப்புகள், தேய்மான சேமநிதி முதலியவற்றிலிருந்து தொகை பெறுதல் .. | .. | 6,36 | 12,95 | 13,96 |
| (b) பொதுமக்களிடமிருந்து எழுப்பப்பட்ட கடன்கள் முதலியன .. .. | .. | 4,00 | 4,30 | 5,30 |
| (c) மாநில அரசாங்கத்திடமிருந்து பெற்ற கடன்கள் .. .. | 15,00 | 13,35 | 9,75 | 9,34 |
| மொத்த ஆதாரங்கள் .. | 15,00 | 23,71 | 27,00 | 28,60 |

1965–66 முடிவில் தமிழ்நாடு மின்சார போர்டிடம் ரூ. 5,15 லட்சம் ரொக்க இருப்பு இருந்தது. நடப்பு ஆண்டின்போது போர்டு தனது ரொக்க இருப்பிலிருந்து தொகைகளை எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. நடப்பாண்டின் முடிவில் ரூ. 1,31 லட்சம் ரொக்க இருப்பு இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அளவிற்கு போர்டுக்கு வழங்கும் கடன் உதவி குறைந்துள்ளது. இதன் காரணமாக 1966–67 திட்ட மதிப்பீட்டைவிட திருத்த மதிப்பீடு குறைந்துள்ளது. மின்சாரத் தீர்வைகள் மூலம் வருவாய்கள் திருத்த மதிப்பீட்டில் குறைந்துள்ளது. மின்சார வெட்டு செய்யப்பட்டதும், நெசவாலைகள் மூடப்பட்டதால் தொழில்துறை மின்சாரத்தை உபயோகித்தது குறைந்ததும், போதிய மழை பெய்ததால் வேளாண்மைக் காரியங்களுக்காக மின்சாரத்தைப் பயன்படுத்துவது குறைந்ததும் அதற்கு முக்கிய காரணங்களாகும்.

26. கடன், வைப்புத்தொகை குறித்த வரவுகள்-செலவுகள் பற்றிய விவரம் வருமாறு :—



| (1) | 1965–66 கணக்குகள். (2) | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| வரவுகள்— | | | | |
| இந்திய அரசினரிடமிருந்து பெற்ற கடன்கள்— | | | | |
| (1) திட்ட வேலைகள்— | | | | |
| மத்திய அரசின் உதவி பெறுபவை. | 34,56 | 28,80 | 27,06 | 27,50 |
| மத்திய அரசு ஊக்குவிப்பவை .. .. | 66 | 67 | 3,85 | 3,60 |
| வரவுகள்—தொடர்ச்சி. | | | | |
| இந்திய அரசினரிடமிருந்து பெற்ற கடன்கள்—தொடர்ச்சி. | | | | |
| (1) திட்ட வேலைகள்—தொடர்ச்சி. | .. | | | |
| விரைவுத் திட்டம் .. | 2,46 | .. | 82 | .. |
| முன்னோடி வேலை .. | 1,30 | .. | .. | .. |
| (2) திட்டத்தில் சேராத வேலைத் திட்டங்கள். | 2,17 | 1,34 | 7,12 | 2,66 |
| (3) சிறுசேமிப்பில் பங்கு | 9,72 | 6,00 | 6,00 | 7,00 |
| (4) அரசாங்க உர வாணிகம் .. .. | 4,26 | 6,00 | 6,20 | 6,00 |
| (5) பூச்சிக் கொல்லி மருந்துகள், விதைகள் ஆகியவற்றில் அரசாங்க வாணிகம் .. | 1,15 | .. | 1,08 | 1,64 |
| (6) வழி-வகை முன் பணங்கள் .. .. | 2,00 | .. | .. | .. |
| மொத்தம் .. | 58,28 | 42,81 | 52,13 | 48,40 |
| பொதுமக்களிடமிருந்து பெற்ற கடன்கள் .. | 14,45 | 14,00 | 13,24 | 18,00 |
| சுயேச்சை அதிகார சபைகளிடமிருந்து கடன்கள் .. | 13,83 | 4,76 | 20,68 | 17,07 |
| வைப்பீடுகள், செலுத்திய தொகைகள் இவற்றின் கீழ் நிகர வரவுகள் .. | 8,41 | 13,69 | 7,12 | 11,93 |
| செலவுகள்— | | | | |
| இந்திய அரசினருக்குத் திருப்பிக் கொடுத்தவை— | | | | |
| (1) திட்ட நிதி உதவி, ஏனையக் கடன்கள் .. | 16,17 | 12,97 | 12,97 | 16,54 |
| (2) உரக்கடன்கள் .. | 2,15 | 6,62 | 8,55 | 10,03 |
| (3) பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கும், விதைகளுக்கும் கடன்கள். | .. | .. | 1 | 2,95 |
| (4) குந்தா திட்டத்துக்கான கடன் .. | 1,33 | 1,38 | 1,38 | 1,41 |
| (5) சிறு சேமிப்பு .. | 68 | 2,48 | 2,48 | 2,43 |
| (6) வழி-வகை முன் பணங்கள் .. .. | 2,00 | .. | .. | .. |
| மொத்தம் .. | 22,33 | 23,45 | 25,39 | 33,36 |

| (1) | 1965-66 கணக்குகள். (2) | 1966-67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966-67 திருத்த மதிப்பீடு. (4) | 1967-68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| சுயேச்சை அதிகார சபைகளுக்குத் திருப்பிக் கொடுத்தவை .. .. | 59 | 68 | 14,11 | 15,79 |
| பொதுமக்களிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிக் கொடுத்தல் .. .. | 51 | .. | 25 | 10,47 |
| பொதுமக்களிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிக் கொடுத்தல் உட்பட, மாநிலங்களுக்கிடையிலே கடன் தீர்ப்பு ஏற்பாடுகள். | 12 | 14 | .. | 14 |

27. திட்ட வேலைகளுக்காக இந்திய அரசினரிடமிருந்து பெறும் கடன் உதவி திட்ட மதிப்பீட்டு புள்ளிவிவரங்களைக் காட்டிலும் 1966-67 திருத்த மதிப்பீட்டில் ரூ. 2·26 கோடி அதிகரிப்பைக் காட்டுகின்றது. மத்திய அரசினர் ஊக்குவிக்கும் திட்டங்களுக்கு உதவித் தொகை பாக்கிகளை பெற முடியுமென்று எதிர்பார்த்ததும், விரைவுத் திட்டங்களுக்கு உதவி கிடைக்குமென்று எதிர்பார்த்ததும் இதற்கு முக்கிய காரணங்களாகும்.

திட்டத்தில் சேராத வேலைகள் என்பதன்கீழ் மிகுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில், இந்திய அரசினரிடமிருந்து கீழ்க்கண்ட சிறப்பு வரவினங்களுக்கு கணக்குக் காட்டப்பட்டுள்ளதே அதற்கு காரணமாகும்.

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| புயல், வறட்சி நிவாரண வேலைக்கு கடன் .. | 2,14 |
| பாடியில் தொழில் கண் காட்சிக்கு கடன் .. | 75 |
| திட்ட உதவிக்கான பாக்கிகள் .. .. | 2,00 |
| மொத்தம் .. | 4,89 |

இவை மீளாயின வரவுகளாதலால் 1967-68 திட்ட மதிப்பீட்டில் இயல்பான வரவுகளுக்கு மட்டுமே புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

28. வைப்புத் தொகைகள், செலுத்திய தொகைகள் (நிகரம்) என்பதன் கீழ் 1966-67 திருத்த மதிப்பீட்டிலும் 1967-68 திட்ட மதிப்பீட்டிலும் ஏற்பட்ட மாறுதல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—



| (1) | 1966-67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (2) | 1966-67 திருத்த மதிப்பீடு. (3) | 1967-68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | |
| வைப்புத் தொகைகளும் முன்பணங்களும்— | | | |
| 1. வட்டிபெறும் வைப்புத்தொகைகள்— | | | |
| (a) அரசாங்கத் துறைகளின் (வாணிகத் தன்மை உள்ளவை) தேய்மான சேம நிதிகளும், ஏனைய நிதிகளும் .. .. .. .. | +0·47 | −0·20 | −0·64 |
| (b) தமிழ்நாடு மின்சாரபோர்டு வைப்பு தொகைகள் .. .. .. | −0·06 | −3·84 | −0·56 |
| வைப்புத் தொகைகளும் முன்பணங்களும்—தொடர்ச்சி. | | | |
| I. வட்டிபெறும் வைப்புத் தொகைகள்—தொடர்ச்சி. | | | |
| (c) மாநில வீட்டு வசதி போர்டு வைப்புத் தொகைகள் .. .. | .. | +0·20 | .. |
| 2. வட்டியில்லாத வைப்புத் தொகைகள்— | | | |
| I. பஞ்சத் தணிப்பு நிதி .. .. | +0·51 | −0·85 | +0·51 |
| II. ஜமீன் முறை ஒழிப்பு நிதி .. | −0·04 | −0·05 | −0·04 |
| III. கரும்புத் தீர்வை நிதி .. .. | +0·65 | +0·62 | +0·53 |
| IV. ஏனையவை— | | | |
| (a) ஏனைய வைப்புக் கணக்குகள்— | | | |
| (i) நாட்டாண்மை நிதி வைப்புத் தொகைகள் .. .. | +1·99 | +1·92 | +1·93 |
| (ii) மாநில கதர்-கிராமக் கைத் தொழில்கள் சபையின் வைப்புத் தொகைகள் .. .. | +0·20 | +0·25 | .. |
| (iii) சிவில் வைப்புத் தொகைகள் .. .. | +2·24 | +1·31 | +1·78 |
| (iv) ஏனையவை .. .. | .. | .. | .. |
| (b) வட்டியில்லா முன் பணங்கள். | −0·04 | −0·32 | −0·32 |
| (c) அனுமத்து .. .. .. | −0·05 | +0·30 | .. |
| (d) பல்வகை அரசாங்கக் கணக்குகள் .. .. | −0·11 | −0·23 | +4·02 |
| 3. செலுத்திய தொகைகள் .. .. | −0·06 | −0·08 | −0·20 |
| 4. வருங்கால வைப்பு நிதி முதலியன (நிகரம்) .. .. .. .. | +2·20 | +1·55 | +1·50 |
| 5. கடன் கரைப்பு நிதி (நிகரம்) .. | +5·74 | +6·54 | +3·39 |
| மொத்தம் .. | +13·49 | +7·12 | +11·93 |

29. முந்திய பாராக்களில் கண்டுள்ள முக்கிய புள்ளிவிவரங்களிலிருந்து கிடைக்கும் வழிவகை நிலைமை குறித்த சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| (1) | 1965-66 கணக்குகள். (2) | 1966-67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966-67 திருத்த மதிப்பீடு. (4) | 1967-68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| **ரெவின்யூ கணக்கு.** | | | | |
| ரெவின்யூ வரவுகள் .. | 1,72,80 | 1,88,72 | 1,92,17 | 2,04,39 |
| ரெவின்யூக் கணக்கில் செலவு .. .. .. | 1,80,66 | 1,88,41 | 1,99,62 | 2,11,99 |
| ரெவின்யூப் பற்றுக்குறை (−) அல்லது உபரி (+) .. | −7,86 | +31 | −7,45 | −7,60 |

| (1) | 1965–66 கணக்குகள். (2) | 1966–67 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| | எல்லாக் கணக்குகளும். | | | |
| வரவுகள்— | | | | |
| ஆரம்ப இருப்பு .. | 7,35 | 40 | 7,35 | 40 |
| ரெவின்யூ உபரி .. | .. | 31 | .. | .. |
| இந்திய அரசினரிடமிருந்து பெற்ற கடன்கள் .. | 58,28 | 42,81 | 52,13 | 48,40 |
| பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் .. | 14,45 | 14,00 | 13,24 | 18,00 |
| சுயேச்சை அதிகார சபைகளிடமிருந்து பெற்ற கடன்கள் .. .. | 13,83 | 4,76 | 20,68 | 17,07 |
| வழிவகை முன்பணங்கள். | 65 | .. | .. | 85 |
| வைப்புத் தொகைகள் .. | 8,41 | 13,69 | 7,12 | 11,93 |
| மொத்தம் .. | 1,02,97 | 75,97 | 1,00,52 | 96,65 |
| செலவுகள்— | | | | |
| ரெவின்யூப்பற்றுக்குறை. | 7,86 | .. | 7,45 | 7,60 |
| மூலதனச் செலவு .. | 33,94 • | 27,07 | 26,66 | 21,09 |
| இந்திய அரசினரிடமிருந்து பெற்ற கடன்களைத் திருப்பித் தருதல் .. | 22,33 | 23,45 | 25,39 | 33,36 |
| கடன்களும் முன்பணங்களும் (நிகரம்) .. | 30,27 | 24,23 | 26,26 | 19,00 |
| சுயேச்சை அதிகார சபைகளிடமிருந்து பெற்ற கடன்கள் .. .. | 59 | 68 | 14,11 | 15,79 |
| பொதுமக்களிடமிருந்து பெற்ற கடன்களைத் திருப்பித் தருதல் முதலியன .. .. | 63 | 14 | 25 | 8,66 |
| இறுதி இருப்பு .. | 7,35 | 40 | 40 | – 8,85 |
| மொத்தம் .. | 1,02,97 | 75,97 | 1,00,52 | 96,65 |

## பிரிவு III.

### 1966–67 திருத்தத் திட்டமும், 1967–68 இடைக்காலத் திட்டமும்.

திட்டக் கமிஷன் முதற்கண் ஒப்புக்கொண்டபடி நடப்பாண்டில் திட்ட வேலைகளுக்கான செலவு ரூ. 75·33 கோடியாகும். இது இவ்வாறு இருக்க, ரூ. 79·35 கோடி செலவாகுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது, [3-வது திட்ட வேலைகள் சம்பந்தமாக பொறுப்பேற்ற (Committed Expenditure) செலவாகிய ரூ. 17 கோடி அச் செலவில் அடங்காது].

அடுத்த ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, திட்ட வேலைகளின் செலவு ரூ. 75·78 கோடியாய் இருக்குமென்று மதிப் பிடுகின்றது. அடுத்த ஆண்டிற்கான திட்ட வரைவுக்குத் திட்டக் கமிஷன் இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை. தற்போதுள்ள வேலைத் திட்டங்களை தடையேது மில்லாமல் நிறைவேற்றப்படுவதற்கு இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.



திட்டக் கமிஷனுடன் விவாதங்கள் நடத்திய பிறகும், இந்திய அரசாங்கத்தின் முறையான வரவு-செலவுத் திட்டத்தில் கிடைக்கக்கூடிய கூடுதலான மத்திய உதவியையொட்டியும், அடுத்த ஆண்டுக்கான திட்டம் மேற்கொண்டும் விரிவு படுத்தப்படும்.

வளர்ச்சிப்பணித் தலைப்புகளின்கீழ் முதலில் கணக்கிடப்பட்ட செலவு, பின்னர் திருத்தியமைக்கப்பட்ட செலவு குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| வளர்ச்சிப் பணித் தலைப்பு. (1) | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (2) | 1966–67 திருத்த மதிப்பீடு. (3) | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்). | |
| 1 வேளாண்மை உற்பத்தி .. .. | 3,69 | 4,27 | 4,48 |
| 2 சிறுபாசனம் .. .. .. .. | 7,62 | 10,19 | 5,77 |
| 3 கால்நடை வளர்ப்பு .. .. .. | 1,05 | 96 | 76 |
| 4 பால்பண்ணையும், பால் வழங்கலும் .. | 78 | 86 | 64 |
| 5 மீனளம் .. .. .. .. | 1,05 | 1,10 | 67 |
| 6 காட்டுவளம் .. .. .. .. | 54 | 64 | 29 |
| 7 மண்வளப் பாதுகாப்பு .. .. | 1,13 | 92 | 86 |
| 8 கிடங்கு, விற்பனை வசதி .. .. | 18 | 17 | 3 |
| 9 சமுதாய வளர்ச்சி .. .. .. | 4,34 | 4,21 | 5,30 |
| 10 கூட்டுறவு .. .. .. .. | 98 | 84 | 26 |
| 11 பாசனம் .. .. .. .. | 5,70 | 4,62 | 4,39 |
| 12 உள்நாட்டு நீர் வழிகள் .. .. | .. | .. | 5 |
| 13 மின்சாரத் திட்டங்கள் .. .. | 23,70 | 27,00 | 28,60 |
| 14 பெரிய, நடுத்தரத் தொழில்களும், கனிப் பொருள்களும் .. .. | 1,62 | 1,33 | 3,21 |
| 15 கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் .. .. .. .. | 3,92 | 4,66 | 3,28 |
| 16 சாலைகள் .. .. .. .. | 1,48 | 1,73 | 1,23 |
| 17 மோட்டார் போக்குவரத்து .. .. | 99 | 70 | 59 |
| 18 சிறு துறைமுகங்கள் .. .. .. | .. | .. | .. |
| 19 சுற்றுலா .. .. .. .. | 3 | 2 | 2 |
| 20 பொதுக்கல்வி .. .. .. .. | 5,06 | 4,24 | 4,65 |
| 21 தொழில் நுட்பக்கல்வி .. .. .. | 1,63 | 1,58 | 1,35 |
| 22 கலாச்சாரத் திட்டங்கள் .. .. | 3 | 3 | 3 |
| 23 சுகாதாரம்— | | | |
| நீர் வழங்கு-சுகாதாரத் திட்டம் நீங்கலான திட்டங்கள் .. .. .. | 2,84 | 2,19 | 2,05 |
| நீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றுதல். | 3,75 | 3,72 | 3,87 |
| 24 வீட்டு வசதியும் நகர்ப்புற வளர்ச்சியும். | 1,02 | 94 | 87 |
| 25 நகர அமைப்பும் நகர்ப்புற வளர்ச்சியும். | 31 | 21 | 10 |
| 26 பின்தங்கிய வகுப்பினர் நலன் .. | 1,17 | 1,60 | 1,72 |
| 27 சமூக நலன் .. .. .. .. | 16 | 6 | 6 |
| 28 தொழிலாளரும் தொழிலாளர் நலனும் | 52 | 52 | 60 |
| 29 பொதுமக்கள் ஒத்துழைப்பு .. .. | 1 | 2 | 1 |
| 30 பல்வகை— | | | |
| புள்ளி விவரம் .. .. .. | 7 | 1 | 3 |
| செய்தி—விளம்பரம் .. .. .. | 2 | 1 | 1 |
| மொத்தம் .. | 75,39 | 79,35 | 75,78 |

## 1965-66-ம் ஆண்டிலிருந்து 1967-68-ம் ஆண்டு

### A. ரெவின்யூக் கணக்கில்

வருவாய்.

| கணக்குத் தலைப்பு. | 1965-66 கணக்குகள். | 1966-67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966-67 திருத்த மதிப்பீடு. | 1967-68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| **I. தமிழ்நாட்டின் தொகு நிதி.** | | | | |
| A. வரிகள், தீர்வைகள், வரி வருவாயின் இதர முக்கிய தலைப்புகள்— | | | | |
| IV. கார்ப்பொரேஷன் வரி நீங்கலாக மற்ற வருமான வரிகள்— | | | | |
| வருமான வரியில் பங்கு .. .. .. | 10,01·27 | 10,88·00 | 11,45·00 | 11,01·00 |
| வேளாண்மை வருமான வரி .. .. | 1,22·73 | 1,40·00 | 1,26·00 | 1,36·00 |
| V. வாரிசு வரி .. .. .. .. .. | 58·91 | 68·00 | 35·86 | 55·98 |
| IX. நில வரி— | | | | |
| மொத்த வருவாய் .. .. .. .. | 9,12·84 | 9,45·36 | 8,23·71 | 8,50·69 |
| (கழிக்கவும்)—நில வரியில் பாசனத்துக்குரிய பகுதி .. .. .. .. .. | —2,36·34 | —3,12·00 | —2,90·00 | —2,90·00 |
| நிகர வருவாய் .. | 6,76·50 | 6,33·36 | 5,33·71 | 5,60·69 |
| X. மாநில ஆயத் தீர்வைகள் .. .. .. | 49·02 | 42·62 | 40·47 | 43·19 |
| XI. வண்டி வரிகள் .. .. .. .. | 13,31·11 | 14,00·25 | 14,00·60 | 14,76·60 |
| XII. விற்பனை வரி— | | | | |
| மத்திய விற்பனை வரிச் சட்டம் மூலம் வருவாய் .. .. .. .. .. | 7,15·69 | 7,35·00 | 8,60·00 | 9,63·00 |
| தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மூலம் வருவாய் .. .. .. .. .. | 29,94·86 | 34,00·00 | 35,50·00 | 38,65·00 |
| தமிழ்நாடு மோட்டார் எண்ணெய் வரி விதிப்புச் சட்டம் மூலம் வருவாய் .. .. .. | 3,84·83 | 4,55·00 | 4,60·00 | 5,00·00 |
| மொத்தம் .. | 40,95·38 | 45,90·00 | 48,70·00 | 53,28·00 |
| XIII. இதர வரிகளும் தீர்வைகளும்— | | | | |
| கேளிக்கை வரி .. .. .. .. | 5,12·37 | 4,63·56 | 5,57·56 | 5,65·57 |
| குதிரைப் பந்தய வரி .. .. .. | 63·61 | 58·50 | 69·86 | 77·67 |
| மின்சாரக் கட்டண வருவாய் .. .. | 4,33·45 | 6,37·58 | 6,05·57 | 6,58·19 |
| இதர இனங்கள் .. .. .. .. | 41·36 | 45·04 | 1·05 | 75·05 |
| மொத்தம் .. | 10,50·79 | 12,04·68 | 12,34·04 | 13,76·48 |
| XIV. முத்திரைத் தாள்கள்— | | | | |
| மொத்த வரவுகள் .. .. .. .. | 12,11·29 | 11,63·24 | 12,74·69 | 13,76·69 |
| (கழிக்கவும்)—தல அதிகார சபைகள் சொத்து மாற்றத்தின்மேல் விதித்து வசூலிக்கும் நிகரத் தொகையை அவற்றிற்கு கொடுத்தல் .. .. .. .. | —3,96·16 | —4,01·00 | —4,01·00 | —4,46·00 |
| நிகர வரவுகள் .. | 8,15·13 | 7,62·24 | 8,73·69 | 9,30·69 |
| XV. பத்திரப் பதிவுக் கட்டணங்கள் .. .. | 1,80·52 | 1,71·89 | 1,93·58 | 1,93·68 |
| B. கடனுக்குரிய வட்டி முதலிய வரவுகள்— | | | | |
| XVI. வட்டி—வாணிகத் துறைகளிடமிருந்து பெறும் வட்டி .. .. .. .. | 4,65·58 | 5,15·17 | 5,12·49 | 5,49·53 |
| இதர வட்டி வருவாய்கள் .. .. .. | 9,10·96 | 13,54·66 | 10,70·84 | 13,95·72 |
| மொத்தம் .. | 13,76·54 | 18,69·83 | 15,83·33 | 19,45·25 |
| ஆக மொத்தம் .. | 1,07,57·90 | 1,19,70·87 | 1,20,36·28 | 1,31,47·56 |





## வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு வரை நிதிநிலைச் சுருக்கம்.

### வரவு-செலவு அறிக்கை.

செலவு.

| கணக்குத் தலைப்பு. | 1965-66 கணக்குகள். | 1966-67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966-67 திருத்த மதிப்பீடு. | 1967-68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| **I. தமிழ்நாட்டின் தொகு நிதி.** | | | | |
| A. வரிகள், தீர்வைகள், மற்ற முக்கிய வருவாய்கள் வசூல்— | | | | |
| 4. கார்ப்பொரேஷன் வரி நீங்கலாக மற்ற வருமான வரிகள் .. .. .. | 11·69 | 14·98 | 13·22 | 10·17 |
| 9. நில வரி .. .. .. .. .. | 97·90 | 1,02·44 | 1,13·15 | 1,18·89 |
| 10. மாநில ஆயத்தீர்வைகள் .. .. .. | 0·04 | * | * | * |
| 11. வண்டிகள்மீது வரிகள் .. .. .. | 29·02 | 25·31 | 30·33 | 30·11 |
| 12. விற்பனை வரி .. .. .. .. | 1,12·09 | 1,03·92 | 1,12·25 | 1,10·13 |
| 13. இதர வரிகளும் தீர்வைகளும் .. .. | 11·07 | 11·91 | 15·53 | 14·87 |
| 14. முத்திரைத் தாள்கள் .. .. .. | 25·20 | 32·07 | 23·47 | 24·46 |
| 15. பத்திரப் பதிவுக் கட்டணங்கள் .. .. | 64·80 | 69·38 | 68·63 | 70·54 |
| B. கடனுக்குரிய வட்டி முதலிய செலவுகள்— | | | | |
| 16. கடன்கள், இதர பொறுப்புகள் மீது வட்டி.. | 15,94·13 | 19,49·45 | 20,74·16 | 23,47·44 |
| 17. கடன் குறைப்பு அல்லது தவிர்ப்புத் தொகை ஒதுக்கம் .. .. .. .. .. | 1,43·47 | 5,74·13 | 6,88·86 | 7,72·12 |
| C. நிர்வாகப் பணிகள்— | | | | |
| 18-B. மாநில, யூனியன் ஆட்சிப் பகுதி சட்டப் பேரவை .. .. .. .. .. | 19·15 | 17·90 | 17·60 | 19·74 |
| 18-C. தேர்தல்கள் .. .. .. .. | 20·51 | 29·52 | 41·28 | 10·51 |
| 19. பொது நிர்வாகம் .. .. .. .. | 9,59·71 | 9,36·69 | 9,49·16 | 9,46·30 |
| 21. நீதி நிர்வாகம் .. .. .. .. | 1,98·83 | 1,95·99 | 2,08·19 | 2,10·11 |
| 22. சிறைச்சாலைகள் .. .. .. .. | 1,93·39 | 1,83·37 | 1,58·27 | 1,61·59 |
| 23. போலீஸ் .. .. .. .. .. | 9,46·10 | 8,45·71 | 9,83·86 | 9,42·81 |
| 26. பல்வகைத் துறைகள் .. .. .. | 82·90 | 84·75 | 90·53 | 92·08 |
| D. சமூக வளர்ச்சிப் பணிகள்— | | | | |
| 27. விஞ்ஞானத் துறைகள் .. .. .. | 7·27 | 6·37 | 8·27 | 7·07 |
| 28. கல்வி .. .. .. .. .. | 37,85·13 | 44,97·25 | 44,30·96 | 47,04·24 |
| 29. மருத்துவம் .. .. .. .. | 10,32·80 | 10,88·03 | 10,85·20 | 11.43·30 |
| 30. பொதுச் சுகாதாரம் .. .. .. | 3,62·07 | 5,04·58 | 4,63·71 | 4,80·39 |
| 31. வேளாண்மை .. .. .. .. | 10,67·97 | 9,75·02 | 12,30·93 | 13,34·13 |
| 33. கால்நடை வளர்ப்பு .. .. .. | 3,30·85 | 3,33·06 | 3,46·90 | 3,30·18 |
| 34. கூட்டுறவு .. .. .. .. .. | 2,84·33 | 2,68·49 | 2,79·39 | 2,50·33 |
| 35. தொழில்கள் .. .. .. .. | 6,56·65 | 2,34·99 | 2,38·32 | 2,50·22 |
| 37. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசீய வளர்ச்சிப் பணித் திட்டங்கள், தல மேம்பாட்டுப் பணிகள் .. .. .. .. | 7,52·72 | 6,45·21 | 6,37·81 | 6,42·79 |
| 38. தொழிலாளரும் வேலை வாய்ப்பும் .. | 1,88·56 | 2,19·15 | 2,01·07 | 2,23·16 |
| 39. பல்வகை, சமூக, வளர்ச்சி நிறுவனங்கள் முதலியவை .. .. .. .. | 5,85·64 | 6,15·80 | 7,24·15 | 7,49·86 |
| ஆக மொத்தம் .. | 1,35,66·99 | 1,45,65·47 | 1,52,35·50 | 1,59,97·54 |

*"12. விற்பனை வரிகள்" என்பதன் கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

[1967 மார்ச் 20

A. ரெவின்யூக் கணக்கில்

வருவாய்—தொடர்ச்சி.

| கணக்குத் தலைப்பு. | 1965–66 கணக்குகள். | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966–67 திருத்த மதிப்பீடு. | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| முன் பக்கப்படி .. | 1,07,57·90 | 1,19,70·87 | 1,20,36·28 | 1,31,47·56 |
| **I. தமிழ்நாட்டின் தொகு நிதி—தொடர்ச்சி.** | | | | |
| C. நிர்வாகப் பணிகள்— | | | | |
| XVII. நிதி நிர்வாகம் .. .. .. .. | 1,21·80 | 94·66 | 1,17·94 | 1,18·00 |
| XVIII. சிறைச்சாலைகள் .. .. .. | 42·35 | 51·98 | 41·97 | 46·92 |
| XIX. போலீஸ் .. .. .. .. .. | 51·00 | 36·30 | 41·60 | 42·86 |
| XXI. பல்வகைத் துறைகள் .. .. .. | 45·32 | 41·65 | 48·69 | 52·99 |
| D. சமூக வளர்ச்சிப் பணிகள்— | | | | |
| XXII. கல்வி .. .. .. .. .. | 91·20 | 62·02 | 93·61 | 95·91 |
| XXIII. மருத்துவம் .. .. .. .. | 1,12·52 | 1,10·22 | 1,11·16 | 1,59·61 |
| XXIV. பொதுச் சுகாதாரம் .. .. .. | 16·66 | 17·39 | 20·95 | 13·93 |
| XXV. வேளாண்மை .. .. .. .. | 3,84·40 | 3,94·57 | 4,96·26 | 5,85·79 |
| XXVII. கால்நடை வளர்ப்பு .. .. | 30·65 | 17·67 | 25·88 | 26·59 |
| XXVIII. கூட்டுறவு .. .. .. .. | 59·33 | 41·57 | 46·66 | 47·96 |
| XXIX. தொழில்கள் .. .. .. | 3,39·93 | 1,15·60 | 1,32·14 | 1,35·98 |
| XXXI. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசீய வளர்ச்சிப் பணித் திட்டம், தல மேம்பாட்டு வேலைகள் .. .. .. .. | 6·78 | 4·67 | 5·21 | 6·81 |
| XXXII. பல்வகை சமூக வளர்ச்சி நிறுவனங்கள் .. .. .. .. .. | 33·41 | 30·06 | 33·23 | 33·41 |
| E. பல நோக்க நதித் திட்டங்கள், பாசன, மின் சக்தித் திட்டங்கள்— | | | | |
| XXXIV. பாசன, நீர்வழி, கரை உயர்த்து, வடிகால் வேலைகள் (வாணிகத் தன்மையுள்ளவை)— | | | | |
| நேரடி வரவினங்கள் .. .. .. ; மறைமுக வரவினங்கள் (நிலவரியில் பணிகளுக்குரிய பகுதி) .. .. .. | 1,41·37 | 1,90·65 | 1,70·38 | 1,71·59 |
| நிகர வரவுகள் .. | 1,41·37 | 1,90·65 | 1,70·38 | 1,71·59 |
| XXXV. பாசன, நீர்வழி, கரை உயர்த்து, வடிகால் வேலைகள் (வாணிகத் தன்மையற்றவை)— | | | | |
| நேரடி வரவினங்கள் .. .. .. | 5·13 | 4·56 | 5·58 | 5·04 |
| மறைமுக வரவினங்கள் (நிலவரியில் பணிகளுக்குரிய பகுதி) .. .. .. | 1,09·77 | 1,35·58 | 1,29·90 | 1,29·90 |
| மொத்தம் .. | 1,14·90 | 1,40·14 | 1,35·48 | 1,34·94 |
| ஆக மொத்தம் .. | 1,23,49·52 | 1,33,20·02 | 1,35,90·44 | 1,48,20·85 |



1967 மார்ச் 20]

**வரவு—செலவு அறிக்கை**—தொடர்ச்சி.

**செலவு**—தொடர்ச்சி.

| கணக்குத் தலைப்பு. | 1965–66 கணக்குகள். | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966–67 திருத்த மதிப்பீடு. | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| முன் பக்கப்படி .. | 1,35,66·99 | 1,45,65·47 | 1,52,35·50 | 1,59,97·54 |
| **I. தமிழ்நாட்டின் தொகு நிதி—தொடர்ச்சி.** | | | | |
| DD. ரெவின்யூக் கணக்கில் சமூக—வளர்ச்சிப்பணிகளுக்கான மூலதனக் கணக்கு— | | | | |
| 40. தொழில் வளர்ச்சிக்கான மூலதனக் கணக்கு. | .. | .. | .. | .. |
| E. பல்நோக்கு வேலைத் திட்டங்கள், பாசன, மின்சார வேலைத் திட்டங்கள்— | | | | |
| 43. பாசன, நீர்வழி, கரை உயர்த்து, வடிகால் வேலைகள் (வாணிகத் தன்மையுள்ளவை). | 5,12·46 | 5,43·01 | 5,55·54 | 5,86·57 |
| 44. பாசன, கப்பற்கலை, கரை உயர்த்து, வடிகால் வேலைகள் (வாணிகத் தன்மையற்றவை) .. | 1,95·40 | 1,83·02 | 2,13·31 | 2,01.47 |
| EE. ரெவின்யூக் கணக்கில் பல நோக்கு நதித் திட்டங்கள், பாசன, மின்சாரத் திட்டங்களுக்கான மூலதனக் கணக்கு.— | | | | |
| 48. பாசன, நீர்வழி, கரை உயர்த்து, வடிகால் வேலைகள் .. .. .. .. | .. | .. | .. | .. |
| F. பொதுப் பணிகள் (சாலைகள் உட்பட) பல்வகைப் பொது அபிவிருத்தித் திட்டங்கள்— | | | | |
| 50. பொதுப் பணிகள்— | | | | |
| பொதுப் பணிகள், நெடுஞ்சாலைத் துறைகள் .. .. .. .. .. | 9,32·68 | 7,35·40 | 7,68·48 | 8,03·94 |
| உதவி மானியங்கள் .. .. .. | 2,53·95 | 2,55·75 | 2,73·95 | 2,50·81 |
| மொத்தம் .. | 11,86·63 | 9,91·15 | 10,42·43 | 10,54·75 |
| FF. ரெவின்யூக் கணக்கில் (சாலைகள் உட்பட) பொதுப் பணிகளுக்காகவும் பல்வகை பொது அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும் மூலதனக் கணக்கு. | | | | |
| 52. பொதுப் பணிகளுக்கான மூலதனச் செலவு. | .. | 9·17 | 3·79 | 6·03 |
| G. போக்குவரத்து (சாலைகள் நீங்கலாக)— | | | | |
| 57. மோட்டார், நீர்வழிப் போக்குவரத்துத் திட்டங்கள் .. .. .. .. .. | 8,31·03 | 8,70·36 | 9,28·36 | 9,52·87 |
| GG. ரெவின்யூக் கணக்கில் (சாலைகள் நீங்கலாக) போக்குவரத்து வசதிகளுக்கான மூலதனக் கணக்கு. | | | | |
| 60. சாலை-நீர்வழிப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு .. .. | .. | .. | .. | .. |
| I. பல்வகை— | | | | |
| 64. பஞ்சத் தணிப்பு .. .. .. .. | 94·37 | 61·14 | 94·74 | 61·14 |
| 65. ஓய்வூதியமும் இதர பதவி ஓய்வு அனுகூலங்களும் .. .. .. .. .. | 3,40·51 | 3,53·34 | 3,29·47 | 3,45·08 |
| 66. பிரதேச, அரசியல் காரண ஓய்வூதியங்கள். | 0·29 | 0·03 | 0·03 | 0·03 |
| 67. முன்னாள் இந்திய சமஸ்தான மன்னர்களுக்கு ஓய்வூதியங்களும் படிகளும் .. .. | 2·34 | 2·52 | 2·42 | 2·42 |
| ஆக மொத்தம் .. | 1,67,30·02 | 1,75,79·21 | 1,84,05·59 | 1,92,07·90 |

[1967 மார்ச் 20

**A. ரெவின்யூக் கணக்கில்**

வருவாய்—தொடர்ச்சி.

| கணக்குத் தலைப்பு. | 1965–66 கணக்குகள். | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966–67 திருத்த மதிப்பீடு. | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| முன் பக்கப்படி .. | 1,23,49·52 | 1,33,20·02 | 1,35,90·44 | 1,48,20·85 |
| **I. தமிழ்நாட்டின் தொகு நிதி—தொடர்ச்சி.** | | | | |
| F. பொதுப் பணிகள் (சாலைகள் உட்பட) பல்வேறு பொதுவளர்ச்சித் திட்டங்கள்— | | | | |
| XXXVII. பொதுப் பணிகள் .. .. .. | 1,52·35 | 1,14·21 | 1,35·33 | 1,30·40 |
| G. போக்குவரத்து (சாலைகள் நீங்கலாக)— | | | | |
| XLIII. மோட்டார்—நீர்வழிப் போக்குவரத்துத் திட்டங்கள் .. .. .. .. .. .. | 7,95·94 | 8,38·94 | 9,04·34 | 9,21·78 |
| I. பல்வகை— | | | | |
| XLVIII. ஓய்வூதியங்கள், இதர பதவி ஓய்வு சலுகைகளுக்காக உதவித் தொகை வரவுகள் .. .. .. .. .. .. | 33·20 | 49·19 | 48·37 | 49·63 |
| XLIX. எழுதுபொருள்—அச்சுத் துறை .. | 53·79 | 51·69 | 55·03 | 56·07 |
| LI. காட்டுவளம் .. .. .. .. | 2,80·78 | 2,66·50 | 2,84·29 | 2,83·09 |
| LII. பல்வகை .. .. .. .. .. | 1,07·91 | 87·24 | 1,19·85 | 1,17·45 |
| J. உதவித் தொகைகளும் பல்வேறு சரிக்கட்டல்களும்— | | | | |
| LV. மத்திய ஆயத் தீர்வைகளில் மாநிலப் பங்கு .. .. .. .. .. | 10,06·18 | 16,23·00 | 17,54·06 | 18,63·24 |
| LVI. மத்திய அரசினர் உதவி மானியங்கள் .. | 23,69·83 | 24,03·75 | 21,79·31 | 20,48·26 |
| LVII. மத்திய, மாநில, யூனியன் நேரடி ஆட்சிப் பகுதி அரசாங்கங்களுக்கிடையே பல்வகைச் சரிக்கட்டல்கள் .. .. .. .. | 0·90 | 1·06 | 1·75 | 1·21 |
| LVIII. வாணிக, இதர நிறுவனங்களிடமிருந்து பங்கீடு தொகை முதலியன .. .. | 17·31 | 10·01 | 15·90 | 15·31 |
| LIX. இதர பலவகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. .. .. .. .. | .. | .. | .. | .. |
| K. சிறப்பு இனங்கள்— | | | | |
| LX. சிறப்பு வரவினங்கள் .. .. .. | 1,11·80 | 1,06·23 | 1,28·12 | 1,31·50 |
| LXI-A. தேசிய நெருக்கடி சம்பந்தமான வருவாய் .. .. .. .. .. | 0·34 | .. | .. | .. |
| மொத்தம்—வருவாய் .. | 1,72,79·85 | 1,88,71·84 | 1,92,16·79 | 2,04,38·79 |
| கூடுதல் வரி விதிப்புக்கான மொத்த வரவினம் .. .. .. .. .. | .. | .. | .. | .. |
| **பெரு மொத்தம்—வருவாய்** .. | 1,72,79·85 | 1,88,71·84 | 1,92,16·79 | 2,04,38·79 |
| **செலவுக்கு மேற்பட்டுள்ள வருவாய் அல்லது உபரி.** .. .. .. .. .. | .. | 30·66 | .. | .. |



1967 மார்ச் 20]

**வரவு-செலவு அறிக்கை**—தொடர்ச்சி.

செலவு—தொடர்ச்சி

| கணக்குத் தலைப்பு. | 1965–66 கணக்குகள். | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966–67 திருத்த மதிப்பீடு. | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் லட்சத்தில்) | | |
| முன் பக்கப்படி .. | 1,67,30·92 | 1,75,79·21 | 1,84,05·59 | 1,92,07.90 |
| **I. தமிழ்நாட்டின் தொகு நிதி—தொடர்ச்சி.** | | | | |
| I. பல்வகை—தொடர்ச்சி. | | | | |
| 68. எழுதுபொருள்—அச்சுத் துறை .. .. | 2,02·73 | 1,85·26 | 1,98·90 | 2,00·73 |
| 70. காட்டுவளம் .. .. .. .. | 1,37·47 | 1,51·51 | 1,54·22 | 1,59·95 |
| 71. பல்வகை .. .. .. .. .. | 3,43·45 | 3,35·41 | 4,95·58 | 9,15·54 |
| II. ரெவின்யூக் கணக்கின் உள்ள பல்வகை மூலதனக் கணக்கு— | | | | |
| 72. ஓய்வூதியத்தை மொத்தத் தொகையாக மாற்றுதல் .. .. .. .. .. | 8·11 | 2·37 | 6·59 | 6·49 |
| J. உதவித் தொகையும் பல்வகைச் சரிக்கட்டல்களும்— | | | | |
| 76. இதர பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். | 5,33·80 | 4,87·58 | 5,73·51 | 5,81·32 |
| K. சிறப்பு இனங்கள்— | | | | |
| 77. சிறப்புச் செலவுகள் .. .. .. | 1,07·35 | 99·84 | 1,26·43 | 1,26·22 |
| 78-A. தேசிய நெருக்கடி சம்பந்தப்பட்ட செலவு .. .. .. .. .. | 3·41 | .. | 1·38 | 0·59 |
| பெரு மொத்தம்—ரெவின்யூக் கணக்கில் செலவு. | 1,80,66·34 | 1,88,41·18 | 1,99,62·20 | 2,11,98·74 |
| வருவாய்க்கு மேற்பட்ட செலவு அல்லது பற்றுக்குறை .. .. .. .. .. .. | 7,86·49 | .. | 7,45·41 | 7,59·95 |
| **ரெவின்யூக் கணக்குக்குப் புறம்பாயுள்ள மூலதனச் செலவு.** | | | | |
| 92. ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டதன்மேல் நிலச் சொந்தக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் இழப்பீடு கொடுத்தல் .. .. | 2·56 | — 1·50 | 2·00 | — 1·00 |
| 94. பொதுச் சுகாதார மேம்பாட்டுக்கான மூலதனச் செலவு .. .. .. .. | — 20·92 | — 31·94 | 12·01 | 11·91 |
| 95. வேளாண்மை வளர்ச்சிக்காகவும், ஆராய்ச்சிக்காகவும் உரிய திட்டங்களின் மூலதனச் செலவு .. .. .. .. .. | 34·25 | 34·43 | 37·89 | 46·24 |
| 95-A. பயன்கொள்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மூலதனச் செலவு .. .. | 9·68 | 0·19 | .. | .. |
| 96. தொழில், பொருளாதார வளர்ச்சிக்கான மூலதனச் செலவு .. .. .. .. | 5,93·97 | 3,02·43 | 2,88·11 | 3,55·66 |
| 99. பாசனம், நீர்வழி, கரை உயர்த்து, வடிகால் வேலைகள் (வாணிகத் தன்மையுள்ளவை) .. | 7·81·23 | 5,94·73 | 4,79·02 | 4,62·39 |
| 100. பாசனம், நீர்வழி, கரை உயர்த்து, வடிகால் வேலைகள் (வாணிகத் தன்மையற்றவை) .. | 2,98·43 | 3,36·76 | 3,21·97 | 2,63·02 |
| 103. பொதுப் பணிகளின் மூலதனச் செலவு | 5,80·01 | 5,53·35 | 5,68·89 | 4,40·59 |
| 109. இதர பணிகளின் மூலதனக் கணக்கு .. | — 1,72·45 | 4,63·18 | 4,69·76 | 3,44·57 |
| 114. மோட்டார், நீர்வழிப் போக்குவரத்துத் திட்டங்களின் மூலதனச் செலவு .. .. | 1,58·53 | 1,06·53 | 76·62 | 71·84 |
| 119. காட்டுவளத்திற்கான மூலதனச் செலவு .. | 71·90 | 80·91 | 77·92 | 56·53 |
| 120. ஓய்வூதியத் தொகையை மொத்தமாக்கிக் கொடுக்கும் செலவு .. .. .. | .. | .. | .. | .. |
| 124. அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு .. .. .. .. | 10,57·08 | 2,67·97 | 3,31·82 | 57·17 |
| 125. எதிர்பாராச் செலவு நிதிக்கு நிதி ஒதுக்குதல் .. .. .. .. .. .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 33,94·27 | 27,07·04 | 26,66·01 | 21,08·92 |

[1967 மார்ச் 20

**B. வருவாய்**

**வருவாய்.**

| கணக்குத் தலைப்பு. (1) | 1965–66 கணக்குகள். (2) | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| **I. தமிழ்நாட்டின் தொகு நிதி.** | | | | |
| செலவைவிட அதிக வருவாய் .. .. .. | .. | 30·66 | .. | .. |
| O. பொதுக் கடன்— | | | | |
| I. தற்காலிகக் கடன்— | | | | |
| கருவூல உண்டியல்கள் .. .. | .. | .. | .. | .. |
| இதர தற்காலிகக் கடன்கள் .. .. | 47,19·39 | 60,00·00 | 94,55·00 | 1,21,00·00 |
| II. நிலையான கடன் .. .. .. .. | 14,41·87 | 14,00·00 | 13,24·32 | 18,00·00 |
| III. மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்— | | | | |
| A. வழி வகை முன்பணங்கள் .. .. | | .. | .. | .. |
| B. உரம் வாங்கி வழங்கக் குறுகிய காலக் கடன்கள் .. .. .. | | 6,00·00 | 6,20·00 | 6,00·00 |
| C. பூச்சிக்கொல்லி மருந்துகள், விதைகள் வாங்கக் குறுகிய காலக் கடன்கள் .. .. .. .. .. | | .. | 1,08·00 | 1,64·00 |
| D. சிறு சேமிப்புப் பங்கின்பேரில் கடன்கள் .. .. .. .. .. | 58,28·09 | 6,00·00 | 6,00·00 | 7,00·00 |
| E. ஏனைய கடன்கள் .. .. | | | | |
| F. உணவு தானியக் கொள்முதலுக்கான விசேஷ கடன் .. .. | | 30,81·00 | 38,85·51 | 33,76·00 |
| கனடா கொடுக்கும் உதவியின்கீழ் குந்தாத் திட்டத்துக்காகக் கொடுக்கப்படும் பொருள்கள், சாதனங்கள் ஆகியவற்றின் மதிப்பு .. .. .. .. | | | | |
| IV. ஏனைய கடன்கள் .. .. .. | 13,83·31 | 4,76·00 | 20,67·62 | 17,07·50 |
| மொத்தம் .. | 1,33,75·66 | 1,21,57·00 | 1,80,60·45 | 2,04,47·50 |
| Q. மாநில அரசாங்கத்தினால் கொடுக்கும் கடன்களும் முன்பணங்களும்— | | | | |
| குடியானவர்களுக்குக் கொடுக்கும் முன்பணங்கள் .. .. .. .. .. | | 3,67·20 | 3,58·92 | 3,53·12 |
| தமிழ்நாடு கூட்டுறவு மத்திய நில அடைமான பாங்குக்கும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கார்ப்பொரேஷனுக்கும் குறுகிய காலக் கடன்கள் .. .. .. .. .. | 11,07·77 | .. | .. | .. |
| தொழில் வளர்ச்சிக்கு அரசாங்க உதவிச் சட்டத்தின் படிக்கான கடன்கள் .. .. .. | | 28·37 | 22·03 | 22·91 |
| ஏனைய கடன்கள் (தல அதிகார சபைகள், அரசாங்க ஊழியர்கள் முதலானோருக்கு) .. | | 4,15·56 | 5,73·21 | 4,53·37 |
| மொத்தம் .. | 11,07·77 | 8,11·13 | 9,54·16 | 8,29·40 |
| R. மாநிலங்களுக்கிடையே கடன் தீர்ப்பு ஏற்பாடுகள்— | | | | |
| வட்டி பெறும் அரசாங்கக் கடன்கள்— | | | | |
| தமிழ்நாடும் கேரளமும் .. .. .. | 0·56 | .. | .. | 1,51·11 |
| தமிழ்நாடும் இந்திய அரசும் .. .. .. | .. | .. | .. | 0·63 |
| தமிழ்நாடும் மைசூரும் .. .. .. | .. | .. | .. | 43·04 |
| மொத்தம் .. | 0·56 | .. | .. | 1,94·78 |
| மொத்தம்—I. தமிழ்நாட்டின் தொகு நிதி .. | 1,44,83·99 | 1,29,98·79 | 1,90,14·61 | 2,14,71·68 |
| **II. தமிழ்நாட்டின் எதிர்பாராச் செலவு நிதி.** | .. | .. | .. | .. |
| **III. தமிழ்நாட்டின் பொதுக் கணக்கு** | | | | |
| S. நிதியிடப்படாக் கடன்— | | | | |
| மாநில வருங்கால வைப்பு நிதிகள் .. .. | 4,54·57 | 4,40·40 | 4,94·35 | 5,13·55 |
| சேமிப்பு பாங்கு வைப்புத் தொகைகள் .. | 4·42 | 4·13 | 4·59 | 4·59 |
| மொத்தம் .. | 4,58·99 | 4,44·53 | 4,98·94 | 5,18·14 |



1967 மார்ச் 20]

**செலவின் அறிக்கை.**

**செலவு.**

| கணக்குத் தலைப்பு. (1) | 1965–66 கணக்குகள். (2) | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| **I. தமிழ்நாட்டின் தொகு நிதி.** | | | | |
| வருவாய்க்குமேல் அதிகச் செலவு .. .. .. | 7,86·49 | .. | 7,45·41 | 7,59·95 |
| மூலதனச் செலவு .. .. .. .. .. | 33,94·27 | 27,07·04 | 26,66·01 | 21,08·92 |
| O. பொதுக் கடனைத் தீர்த்த வகையில்— | | | | |
| I. தற்காலிகக் கடன்— | | | | |
| கருவூல உண்டியல்கள் .. .. .. | .. | .. | .. | .. |
| இதர தற்காலிகக் கடன்கள் .. .. | 46,54·39 | 60,00·00 | 94,55·00 | 1,20,15·00 |
| II. நிலையான கடன் .. .. .. .. | 50·92 | .. | 24·74 | 10,47·17 |
| III. இந்திய அரசினிடமிருந்து பெற்ற கடன்— | | | | |
| A. வழி வகை முன்பணங்கள் .. .. | | .. | .. | . |
| B. உரங்கள் வாங்கி வழங்கக் குறுகிய காலக் கடன்கள் .. .. .. | | 6,61·64 | 8,55·61 | 10,03·00 |
| C. பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கும் விதைகளுக்கும் குறுகிய காலக் கடன்கள் .. .. .. | 22,33·19 | .. | 0·65 | 2,95·00 |
| D. சிறு சேமிப்புப் பங்கின்பேரில் கடன்கள். | | 2,48·18 | 2,48·18 | 2,43·06 |
| E. இதரக் கடன்கள் .. .. .. | | 12,97·00 | 12,97·00 | 16,54·00 |
| கனடா கொடுக்கும் உதவியின்கீழ் குந்தாத் திட்டத்துக்காகக் கொடுக்கப்படும் பொருள்கள் சாதனங்கள் ஆகியவற்றின் மதிப்பு .. .. | | 1,38·09 | 1,38·09 | 1,40·93 |
| IV. இதரக் கடன்கள் .. .. .. .. | 59·38 | 67·48 | 14,10·64 | 15,78·98 |
| மொத்தம் .. | 69,97·88 | 84,12·39 | 1,34,29·94 | 1,79,77·14 |
| Q. மாநில அரசாங்கம் கொடுக்கும் கடன்களும் முன் பணங்களும்— | | | | |
| குடியானவர்களுக்குக் கொடுக்கும் முன்பணங்கள் .. .. .. .. .. | 6,66·62 | 7,97·78 | 10,95·42 | 7,36·74 |
| தமிழ்நாடு கூட்டுறவு மத்திய நில அடைமான பாங்குக்கும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கார்ப்போரேஷனுக்கும் குறுகிய காலக் கடன்கள் .. .. .. .. .. | .. | .. | .. | .. |
| தொழில்களுக்கு அரசாங்க உதவி குறித்த சட்டத்தின்கீழ்க் கடன்கள் .. .. .. | 57·22 | 49·90 | 63·59 | 42·86 |
| மற்றைய கடன்கள் (நாட்டாண்மைக் கழகங்கள், அரசாங்க ஊழியர்கள் முதலானோருக்கு) .. | 34,10·61 | 23,86·59 | 24,21·04 | 19,50·00 |
| மொத்தம் .. | 41,34·45 | 32,34·27 | 35,80·05 | 27,29·60 |
| R. மாநிலங்களுக்கிடையே கடன் தீர்ப்பு ஏற்பாடுகள்— | | | | |
| தமிழ்நாடும் கேரளமும் .. .. .. | 6·53 | 14·00 | 0·30 | 14·00 |
| தமிழ்நாடும் மைசூரும் .. .. .. | 5·66 | .. | .. | .. |
| தமிழ்நாடும் இந்திய அரசும் .. .. .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 12·19 | 14·00 | 0·30 | 14·00 |
| மொத்தம்—I. தமிழ்நாட்டின் தொகு நிதி .. | 1,53,25·28 | 1,43,67·70 | 2,04,21·71 | 2,35,89·61 |
| **II. தமிழ்நாட்டின் எதிர்பாராச் செலவு நிதி** .. | 2·50 | .. | .. | .. |
| **III. தமிழ்நாட்டின் பொதுக் கணக்கு.** | | | | |
| S. நிதியிடப்படாக் கடன்— | | | | |
| மாநில வருங்கால வைப்பு நிதி .. .. | 2,31·67 | 2,17·59 | 3,37·90 | 3,62·37 |
| சேமிப்பு பாங்கு வைப்புத் தொகைகள் .. .. | 5·28 | 6·53 | 5·68 | 5·68 |
| மொத்தம் .. | 2,36·95 | 2,24·12 | 3,43·58 | 3,68·05 |

B. வருவாய்

வருவாய்—தொடர்ச்சி.

| கணக்குத் தலைப்பு. (1) | 1965–66 கணக்குகள். (2) | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| **III. தமிழ்நாட்டின் பொதுக் கணக்கு—தொடர்ச்சி.** | | | | |
| T. வைப்புத் தொகைகளும் முன்பணங்களும்— | | | | |
| I. வட்டியுடன்கூடிய வைப்புத் தொகைகள்— | | | | |
| அரசாங்க வாணிக நிறுவனங்களின் தேய்மான நிதிகளின் வைப்புத் தொகைகளும், பிற வைப்புத் தொகைகளும் .. .. .. | 4,70·99 | 1,80·41 | 1,60·39 | 1,52·45 |
| தமிழ்நாடு மின்சார போர்டு நிதியின் வைப்புத் தொகைகள் .. .. .. .. .. | 59,53·02 | 60,38·00 | 70,90·00 | 74,10·00 |
| மாநில வீட்டு வசதி போர்டின் வைப்புத் தொகைகள் .. .. .. .. .. .. | 7,78·99 | 8,25·00 | 8,65·00 | 8,85·00 |
| மாநிலச் சிறு தொழில் கார்ப்போரேஷன் .. | .. | 4,50·00 | 5,57·00 | 5,66·00 |
| தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கார்ப்போரேஷன். | .. | 2,00·00 | .. | .. |
| வேளாண்மை-தொழில் கார்ப்போரேஷன் .. | .. | 75·00 | 50·00 | 10·00 |
| **II. வட்டியற்ற வைப்புத் தொகைகள்—** | | | | |
| (A) கடன் கரைப்பு நிதிகள்— | | | | |
| கடன் குறைப்பு அல்லது தவிர்ப்புத் தொகை ஒதுக்கம்— | | | | |
| கடன் கரைப்பு நிதிகள் .. .. .. | 1,61·27 | 5,92·62 | 6,95·61 | 7,75·98 |
| மற்ற நிதி ஒதுக்கங்கள் .. .. .. | .. | .. | .. | .. |
| கடன் கரைப்பு நிதியின் முதலீட்டுக் கணக்கு. | .. | .. | .. | 53·69 |
| (B) சேம நிதிகள்— | | | | |
| பஞ்சத் தணிப்பு நிதி— | | | | |
| A. பஞ்சத் தணிப்பு நிதி .. .. .. | 51·11 | 51·07 | 51·07 | 51·06 |
| B. முதலீட்டுக் கணக்கு .. .. .. | 11·10 | .. | .. | 0·10 |
| ஜமீன் முறை ஒழிப்பு நிதி— | | | | |
| வெளியிலிருந்து மாற்றம் .. | .. | .. | .. | .. |
| வட்டி வரவுகள் .. .. .. .. | 2·08 | 1·92 | 1·92 | 2·21 |
| முதலீட்டுக் கணக்கு .. .. .. | 10·88 | .. | .. | 28·11 |
| கடன் பத்திர விற்பனை லாபம் .. .. | .. | .. | .. | 0·38 |
| தேய்மானச் சேமநிதி—அரசாங்க வாணிகத் தன்மையற்ற நிறுவனங்கள் .. .. | 2·52 | 2·88 | 2·89 | 3·63 |
| தேய்மானச் சேம நிதி—சாலைப் போக்கு வரத்து .. .. .. .. .. | 1,24·73 | .. | 49·25 | .. |
| முதலீட்டுக் கணக்கு .. .. .. | .. | .. | .. | .. |
| வர்த்தக நிலையங்களின் இன்ஷூரன்ஸ் நிதி .. .. .. .. .. | —0·17 | 0·01 | 0·02 | 0·02 |
| இந்து சமய-அறக்கட்டளைகள் நிதி .. | 35·55 | 36·53 | 29·59 | 32·44 |
| முதலீட்டுக் கணக்கு .. .. .. | .. | 0·51 | 0·51 | 2·43 |
| கரும்புத் தீர்வை நிதி .. .. .. | 77·34 | 1,00·00 | 90·00 | 95·00 |
| மாநில வேளாண்மைக் கடன் நிவாரண-உத்தரவாத நிதி .. .. .. | .. | 2·92 | 2·95 | 2·69 |
| (C) இதர வைப்புத் தொகைக் கணக்குகள்— | | | | |
| நாட்டாண்மைக் கழக நிதி வைப்புத் தொகைகள்— | | | | |
| மாவட்ட நிதிகள் .. .. .. .. | 37·97 | 19·00 | 12·00 | 10·00 |
| நகராட்சி நிதிகளும் இதர நிதிகளும் .. | 61,87·75 | 58,09·38 | 64,54·51 | 66,51·50 |
| இதர பல்வகை நிதிகள்— | | | | |
| மாநில கதர்—கிராமத் தொழில் சபை வைப்புத் தொகைகள் .. .. | 5,37·58 | 5,52·00 | 6,93·00 | 7,72·00 |
| வெவ்வேறு துறையின் வைப்புத் தொகைகளும், நீதி நிர்வாக வைப்புத் தொகைகளும்— | | | | |
| சிவில் வைப்புத் தொகைகள் .. .. | 1,44,30·89 | 93,50·15 | 1,80,89·96 | 1,87,49·78 |
| ஆக மொத்தம் .. | 2,88,73·60 | 2,42,87·43 | 3,48,95·70 | 3,62,54·47 |



செலவின அறிக்கை—தொடர்ச்சி.

செலவு—தொடர்ச்சி.

| கணக்குத் தலைப்பு. (1) | 1965–66 கணக்குகள். (2) | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| **III. தமிழ்நாட்டின் பொதுக் கணக்கு—தொடர்ச்சி.** | | | | |
| T. வைப்புத் தொகைகளும் முன்பணங்களும்— | | | | |
| I. வட்டி பெறும் வைப்புத் தொகைகள்— | | | | |
| அரசாங்க வாணிக நிறுவனங்களின் தேய்மான நிதிகளின் வைப்புத் தொகைகளும், பிற வைப்புத் தொகைகளும் .. .. .. | 3,39·78 | 1,08·22 | 2,05·86 | 2,05·97 |
| தமிழ்நாடு மின்சார போர்டு நிதியின் வைப்புத் தொகைகள் .. .. .. .. | 56,50·00 | 60,44·00 | 74,74·00 | 74,66·00 |
| மாநில வீட்டு வசதி போர்டு .. .. .. | 8,36·81 | 8,25·00 | 8,45·00 | 8,85·00 |
| மாநிலச் சிறு தொழில் கார்ப்பொரேஷன் .. | .. | 4,50·00 | 5,82·00 | 5,66·00 |
| தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கார்ப்பொரேஷன் .. .. .. .. .. | .. | 2,00·00 | .. | .. |
| வேளாண்மை—தொழில் கார்ப்பொரேஷன் | .. | 1,00·00 | .. | 20·00 |
| **II. வட்டியற்ற வைப்புத் தொகைகள்—** | | | | |
| (A) கடன் கரைப்பு நிதிகள்— | | | | |
| கடன் குறைப்பு அல்லது தவிர்ப்புத் தொகை ஒதுக்கம்— | | | | |
| கடன் கரைப்பு நிதிகள் .. .. .. | 45·66 | 11·71 | .. | 4,24·72 |
| மற்றைய நிதி ஒதுக்கங்கள் .. .. | 6·78 | 6·78 | 6·78 | 3·86 |
| கடன் கரைப்பு நிதியின் முதலீட்டுக்கணக்கு. | 24·85 | .. | 34·52 | 62·58 |
| (B) சேம நிதிகள்— | | | | |
| பஞ்சத் தணிப்பு நிதி— | | | | |
| A. பஞ்சத் தணிப்பு நிதி .. .. | 10·84 | .. | 1,36·18 | .. |
| B. முதலீட்டுக் கணக்கு .. .. | 11·25 | .. | .. | .. |
| ஜமீன் முறை ஒழிப்பு நிதி .. .. | 6·13 | 6·00 | 6·50 | 6·50 |
| முதலீட்டுக் கணக்கு .. .. .. | 11·03 | .. | .. | 28·49 |
| தேய்மானச் சேம நிதி—அரசாங்க வாணிகத் தன்மையற்ற நிறுவனங்கள் .. .. | 6·87 | 6·32 | 7·00 | 7·39 |
| தேய்மானச் சேம நிதி—சாலைப் போக்கு வரத்து .. .. .. .. .. | 1,24·83 | .. | .. | .. |
| முதலீட்டுக் கணக்கு .. .. .. | .. | .. | 49·25 | .. |
| வர்த்தக நிலையங்களின் இன்ஷூரன்ஸ் நிதி | .. | .. | .. | .. |
| இந்து சமய அறக்கட்டளைகள் நிதி .. | 26·48 | 32·79 | 28·93 | 31·48 |
| முதலீட்டுக் கணக்கு .. .. .. | .. | .. | 0·19 | .. |
| கரும்புத் தீர்வை நிதி .. .. .. | 23·47 | 34·55 | 27·54 | 41·82 |
| மாநில வேளாண்மைக் கடன் நிவாரண-உத்தரவாத நிதி .. .. .. | .. | .. | .. | .. |
| (C) இதர வைப்புத் தொகைக் கணக்குகள்— | | | | |
| நாட்டாண்மைக் கழக நிதி வைப்புத் தொகைகள்— | | | | |
| மாவட்ட நிதிகள் .. .. .. .. | 33·86 | 21·00 | 28·00 | 25·00 |
| நகராட்சி நிதிகளும் இதர நிதிகளும் .. | 59,44·12 | 56,07·90 | 62,46·03 | 64,43·03 |
| இதர பல்வகை நிதிகள்— | | | | |
| மாநிலக் கதர்-கிராமத் தொழில் சபை வைப்புத் தொகைகள் .. .. | 5,36·00 | 5,32·00 | 6,68·00 | 7,72·00 |
| துறையின் வைப்புத் தொகைகளும் நீதி நிர்வாக வைப்புத் தொகைகளும்— | | | | |
| சிவில் வைப்புத் தொகைகள் .. .. | 1,43,28·26 | 91,26·41 | 1,79,59·33 | 1,85,71·37 |
| ஆக மொத்தம் .. | 2,79,67·02 | 2,31,12·68 | 3,43,05·11 | 3,55,61·21 |

[1967 மார்ச் 20

B. வருவாய்

வருவாய்—தொடர்ச்சி.

| கணக்குத் தலைப்பு. | 1965–66 கணக்குகள். | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966–67 திருத்த மதிப்பீடு. | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| முன் பக்கப்படி .. | 2,88,73·60 | 2,42,87·43 | 3,48,95·70 | 3,62,54·47 |
| III தமிழ்நாட்டின் பொதுக்கணக்கு—தொடர்ச்சி. | | | | |
| T. வைப்புத் தொகைகளும் முன் பணங்களும்—தொடர்ச்சி. | | | | |
| II வட்டியற்ற வைப்புத் தொகைகள்—தொடர்ச்சி. | | | | |
| C. இதர வைப்புத் தொகைக் கணக்குகள்—தொடர்ச்சி. | | | | |
| இதர கணக்குகள்— | | | | |
| மத்திய சாலை நிதியிலிருந்து உதவித் தொகை .. .. .. .. | 24·70 | 10·00 | 11·00 | 10·00 |
| இந்திய மத்தியப் பருத்திக் குழு கொடுக்கும் மானிய வைப்புக் கணக்கு .. .. | 2·66 | 2·79 | .. | .. |
| இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம் கொடுக்கும் மானிய வைப்புக் கணக்கு .. | 3·16 | 8·85 | 11·98 | 11·33 |
| இந்திய எண்ணெய் வித்து மத்தியக் குழு கொடுக்கும் மானிய வைப்புக் கணக்கு .. | 2·88 | 1·89 | .. | .. |
| இந்தியப் புகையிலை மத்தியக் குழு கொடுக்கும் மானிய வைப்புக் கணக்கு .. | .. | 0·27 | .. | .. |
| இந்திய கரும்பு மத்தியக் குழு கொடுக்கும் மானிய வைப்புக் கணக்கு .. .. | 0·83 | 0·18 | .. | .. |
| தேயிலை மத்திய சபை கொடுக்கும் மானிய வைப்புக் கணக்கு .. .. .. | .. | 0·01 | .. | 0·01 |
| இந்தியத் தேங்காய் மத்தியக் குழு கொடுக்கும் மானிய வைப்புக் கணக்கு .. | 0·17 | 0·32 | .. | .. |
| இந்திய முந்திரி-வாசனைப் பொருள் மத்தியக் குழு அளிக்கும் மானிய வைப்புக் கணக்கு. | 0·36 | 0·59 | .. | .. |
| பாக்கு மத்தியக் குழு கொடுக்கும் மானிய வைப்புக் கணக்கு .. .. .. | .. | 0·03 | .. | .. |
| இதர பல்வகைக் கணக்குகள் .. .. .. | 2·27 | .. | .. | .. |
| உணவு உற்பத்தி முனைப்புத் திட்டத்திற்காக ஃபோர்டு ஸ்தாபத்தினர் அளிக்கும் மானிய வைப்புக் கணக்கு .. .. .. .. | .. | 15·00 | .. | .. |
| தேசியக் கூட்டுறவு அபிவிருத்தி—கிடங்குகள் சபை அளிக்கும் மானிய வைப்புக் கணக்கு .. | .. | 11·74 | .. | .. |
| தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கார்ப்பரேஷன் அளிக்கும் மானிய வைப்புக் கணக்கு .. | 30·88 | 4·24 | 9·32 | 12·56 |
| ஆக மொத்தம் .. | 2,89,41·51 | 2,43,43·34 | 3,49,28·00 | 3,62,88·37 |



1967 மார்ச் 20]

செலவின அறிக்கை—தொடர்ச்சி.

செலவு—தொடர்ச்சி.

| கணக்குத் தலைப்பு. | 1965–66 கணக்குகள். | 1966–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1966–67 திருத்த மதிப்பீடு. | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| முன் பக்கப்படி .. | 2,79,67·02 | 2,31,12·68 | 3,43,05·11 | 3,55,81·21 |
| III. தமிழ்நாட்டின் பொதுக் கணக்கு—தொடர்ச்சி. | | | | |
| T. வைப்புத் தொகைகளும் முன்பணங்களும்—தொடர்ச்சி. | | | | |
| II. வட்டியற்ற வைப்புத் தொகைகள்—தொடர்ச்சி. | | | | |
| (C) இதர வைப்புத் தொகைக் கணக்குகள்—தொடர்ச்சி. | | | | |
| இதர கணக்குகள்— | | | | |
| மத்திய சாலை நிதியிலிருந்து உதவித் தொகை. | 24·70 | 10·00 | 11·00 | 10·00 |
| இந்திய மத்தியப் பருத்திக் குழு கொடுக்கும் மானிய வைப்புக் கணக்கு. | 1·86 | 2·79 | .. | .. |
| இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் கொடுக்கும் மானிய வைப்புக் கணக்கு .. | 3·48 | 8·85 | 11·98 | 11·33 |
| இந்திய எண்ணெய் வித்து மத்தியக் குழு கொடுக்கும் மானிய வைப்புக் கணக்கு .. | 3·45 | 1·89 | .. | .. |
| இந்திய புகையிலை மத்தியக் குழு கொடுக்கும் மானிய வைப்புக் கணக்கு .. .. .. | .. | 0·27 | .. | .. |
| இந்தியக் கரும்பு மத்தியக் குழு கொடுக்கும் மானிய வைப்புக் கணக்கு .. .. .. | 1·31 | 0·18 | .. | .. |
| தேயிலை மத்தியச் சபை கொடுக்கும் மானிய வைப்புக் கணக்கு .. .. .. .. | .. | 0·01 | .. | 00·1 |
| இந்தியத் தேங்காய் மத்தியக் குழு கொடுக்கும் மானிய வைப்புக் கணக்கு .. .. .. | 0·03 | 0·32 | .. | .. |
| இந்திய முந்திரி-வாசனைப் பொருள் மத்தியக் குழு அளிக்கும் மானிய வைப்புக் கணக்கு .. | .. | 0·59 | .. | .. |
| பாக்கு மத்தியக் குழு கொடுக்கும் மானிய வைப்புக் கணக்கு .. .. .. .. | .. | 0·03 | .. | . |
| இதர பல்வகைக் கணக்குகள் .. .. .. | 0·83 | .. | .. | .. |
| முனைப்புத் திட்டத்திற்காக ஃபோர்டு ஸ்தாபனத்தினர் கொடுக்கும் மானியவைப்புக் கணக்கு.. | .. | 15·00 | .. | .. |
| தேசியக் கூட்டுறவு அபிவிருத்தி—கிடங்குகள் சபை அளிக்கும் மானிய வைப்புக் கணக்கு .. | .. | 11·74 | — | — |
| தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கார்ப்பொரேஷன் வழங்கும் மானிய வைப்புக் கணக்கு .. | 34·63 | 4·24 | 9·32 | 12·56 |
| ஆக மொத்தம் .. | 2,80,37·31 | 2,31,68·59 | 3,43,37·41 | 3,55,95·11 |

வருவாய்—தொடர்ச்சி.

B. வருவாய்

| கணக்குத் தலைப்பு. (1) | 1966–66 கணக்குகள். (2) | 1967–67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| முன் பக்கப்படி .. | 2,89,41·51 | 2,43,43·34 | 3,49,28·00 | 3,62,88·37 |
| III. தமிழ்நாட்டின் பொதுக் கணக்கு—தொடர்ச்சி. | | | | |
| T. வைப்புத் தொகைகளும் முன்பணங்களும் தொடர்ச்சி.— | | | | |
| III. வட்டியற்ற முன்பணம்— | | | | |
| துறைவாரியான முன்பணம் .. .. .. | 3,74·93 | 3,82·75 | 3,95·61 | 3,95·63 |
| நிலையான முன்பணம் .. .. .. .. | 1·21 | 0·50 | 0·63 | 0·63 |
| பாகிஸ்தான் அரசினருடன் கணக்கு .. .. | .. | .. | .. | .. |
| ரிசர்வ் பாங்குடன் கணக்கு .. .. .. | 0·16 | 0·22 | 0·14 | 0·14 |
| IV. அனுமதத்துக் கணக்குகள்— | | | | |
| ரொக்க இருப்பு முதலீட்டுக் கணக்கு .. .. | 4,01·60 | .. | 21,51·01 | .. |
| காசோலைகளும் பில்களும் .. .. .. | 35,65·94 | 31,74·00 | 48,18·00 | 48,18·00 |
| துறைவாரியான கணக்குகளும் அதைப் போன்ற இதர கணக்குகளும் .. .. .. | 34·51 | 16·31 | 80·20 | 80·20 |
| இதர அனுமதத்துக் கணக்குகள் .. .. | 21,45·37 | 18,86·04 | 19,12·34 | 22,06·10 |
| V. பல்வகை - | | | | |
| பல்வகை அரசாங்கக் கணக்கு .. .. .. | 1,00·74 | 11·71 | .. | 4,24·72 |
| மொத்தம் .. | 3,55,65·97 | 2,98,14·87 | 4,42,85·93 | 4,42,13·79 |
| U. செலுத்திய தொகைகள்— | | | | |
| ஒரே அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவருக்கு அல்லது தேசீயத் தணிக்கை துறைத் தலைவருக்கு கணக்குக் காட்டுகிற அதிகாரிகளுக் கிடையில் பணம் செலுத்துதலும் சரிக் கட்டுதலும் .. .. .. .. .. | 97,44·90 | 91,95·57 | 89,25·90 | 89,39·36 |
| இந்திய ரிசர்வ் பாங்கியில் செலுத்தியவை .. | — 5·43 | .. | — 0·06 | .. |
| (ரயில்வே அல்லாத) மத்திய அரசு, மாநில அரசாங்கங்களுக்கிடையே சரிகட்டுதல் கணக்கு. | — 95·27 | .. | .. | .. |
| ரயில்வேத் துறையுடன் சரிக்கட்டுதல் கணக்கு .. | — 0·03 | .. | — 0·01 | .. |
| பாதுகாப்புத் துறையினருடன் சரிக்கட்டுதல் கணக்கு .. .. .. .. .. | — 0·19 | .. | — 0·01 | .. |
| தபால் தந்தித் துறையினருடன் சரிக்கட்டல் கணக்கு .. .. .. .. .. | — 8·49 | .. | — 0·01 | .. |
| மாநிலங்களுக்கிடையே அனுமதத்துக் கணக்கு .. | — 0·84 | .. | .. | .. |
| மொத்தம் .. | 96,34·65 | 91,95·57 | 89,25·81 | 89,39·36 |
| மொத்தம்—III. தமிழ்நாட்டின் பொதுக் கணக்கு. | 4,56,59·61 | 3,94,54·97 | 5,37,10·68 | 5,36,71·29 |
| மொத்தம்—எல்லா கணக்குகள்—வரவுகள். | 6,01,43·60 | 5,24,53·76 | 7,27,25·29 | 7,51,42·97 |
| X. ஆரம்ப ரொக்க இருப்பு .. .. .. | 7,34·65 | 40·00 | 7,34·94 | 40·00 |
| பெரு மொத்த .. .. | 6,08,78·25 | 5,24,93·76 | 7,34,60·23 | 7,51,82·97 |





செலவின அறிக்கை—தொடர்ச்சி.

செலவு—தொடர்ச்சி.

| கணக்குத் தலைப்பு. (1) | 1966–67 கணக்குகள். (2) | 1965–66 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1966–67 திருத்த மதிப்பீடு. (4) | 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| முன் பக்கப்படி .. | 2,80,37·31 | 2,31,68·59 | 3,43,37·41 | 3,55,95·11 |
| III. தமிழ்நாட்டின் பொதுக் கணக்கு—தொடர்ச்சி. | | | | |
| T. வைப்புத் தொகைகளும் முன் பணங்களும்—தொடர்ச்சி. | | | | |
| III. வட்டியற்ற முன்பணம்— | | | | |
| துறைவாரியான முன்பணம் .. .. .. | 4,04·88 | 3,85·35 | 4,26·53 | 4,26·41 |
| நிலையான முன்பணம் .. .. .. | 1·51 | 2·00 | 1·96 | 1·96 |
| பாகிஸ்தான் அரசினருடன் கணக்கு .. .. | 0·08 | 0·08 | 0·08 | 0·08 |
| ரிசர்வ் பாங்கியுடன் கணக்கு .. .. .. | 0·17 | 0·21 | 0·14 | 0·14 |
| IV. அனுமதத்துக் கணக்குகள்— | | | | |
| ரொக்க இருப்பு முதலீட்டுக் கணக்கு .. .. | 3,89·90 | .. | 21,51·01 | .. |
| காசோலைகளும் பில்களும் .. .. .. | 36,78·84 | 32,04·00 | 48,58·00 | 48,48·00 |
| துறைவாரியான கணக்குகளும் அதைப்போன்ற இதர கணக்குகளும் .. .. .. | 37·53 | 16·31 | 80·20 | 80·20 |
| இதர அனுமதத்துக் கணக்குகள் .. .. | 24,05·88 | 18,61·13 | 18,42·73 | 21,76·17 |
| V. பல்வகை— | | | | |
| பல்வகை அரசாங்கக் கணக்கு .. .. .. | 93·42 | 23·00 | 23·00 | 23·00 |
| மொத்தம் .. | 3,50,49·52 | 2,86, 0·67 | 4,37,21·06 | 4,31,51·07 |
| U. செலுத்திய தொகைகள்— | | | | |
| ஒரே அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவருக்கு அல்லது தேசீயத் தணிக்கைத் துறைத் தலைவருக்கு கணக்குக் காட்டுகிற அதிகாரிகளுக்கிடையில் பணம் செலுத்துதலும் சரிக்கட்டுதலும் .. .. .. | 96,26·04 | 92,01·27 | 89,45·90 | 89,59·36 |
| இந்திய ரிசர்வ் பாங்கியில் செலுத்தியவை .. | — 0·79 | .. | —0·09 | .. |
| (ரயில்வே அல்லாத) மத்திய அரசு, மாநில அரசாங்கங்களுக்கிடையே சரிக்கட்டுதல் கணக்கு .. | — 86·21 | .. | — 11·93 | .. |
| ரயில்வே துறையுடன் சரிக்கட்டுதல் கணக்கு .. | — 0·07 | .. | .. | .. |
| பாதுகாப்புத் துறையினருடன் சரிக்கட்டுதல் கணக்கு .. .. .. .. .. | — 0·53 | .. | .. | .. |
| தபால் தந்தித் துறையினருடன் சரிக்கட்டல் கணக்கு .. .. .. .. .. | — 8·50 | .. | .. | .. |
| மாநிலங்களுக்கிடையே அனுமதத்துக்கணக்கு .. | — 0·88 | .. | .. | .. |
| மொத்தம் .. | 95,29·06 | 92,01·27 | 89,33·88 | 89,59·36 |
| மொத்தம்—III. தமிழ் நாட்டின் பொதுக் கணக்கு. | 4,48,15·53 | 3,80,86·06 | 5,29,98·52 | 5,24,78·48 |
| மொத்தம்—எல்லா கணக்குகள்—செலவுகள். | 6,01,43·31 | 5,24,53·76 | 7,34,20·23 | 7,60,68·09 |
| X. இறுதி ரொக்க இருப்பு .. .. .. | 7,34·94 | 40·00 | 40·00 | — 8,85·12 |
| பெரு மொத்தம் .. | 6,08,78·25 | 5,24,93·76 | 7,34,60·23 | 7,51,82·97 |

## தமிழ்நாடு ரெவின்யூக் கணக்கில் வருவாயும், செலவினமும்—தொடர்ச்சி.

(ரூபாய் லட்சத்தில்.)

### அ. வருவாய்—தொடர்ச்சி.

| பெருந் தலைப்புகள். | 1938–9. | 1958–9. | 1959–60 | 1960–1. | 1961–2. | 1962–3. | 1963–4. | 1964–5. | 1965–6. | 1966–7. திட்ட மதிப்பீடு. | 1966–7. திருத்த மதிப்பீடு. | திட்ட மதிப்பீடு 1967–8. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| நேரடி வருவாய் * .. .. .. .. | 1·99 | 2·26 | 2·35 | 2·24 | 2·52 | 2·93 | 2·10 | 2·88 | 5·13 | 4·56 | 5·58 | 5·04 |
| பொதுப்பணிகள் .. .. .. .. | 25·12 | 1,10·45 | 1,40·81 | 1,42·25 | 1,13·86 | 1,20·68 | 1,14·56 | 1,24·34 | 1,52·35 | 1,14·21 | 1,35·33 | 1,30·40 |
| மின்சாரத் திட்ட (மொத்த) வருவாய் .. .. | 42·51 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| (கழிக்கவும்)—நடைமுதல் செலவுகள் .. .. | —24·81 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| நிகர வருவாய் .. .. | 17·70 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| மோட்டார், நீர்வழிப் போக்குவரத்துத் திட்டங்களின் மொத்த வருவாய்கள். (b). | .. | 2,27·55 | 2,51·46 | 3,15·14 | 3,69·27 | 4,34·80 | 5,18·73 | 6,23·65 | 7,95·94 | 8,38·94 | 9.04·34 | 9,21·78 |
| (கழிக்கவும்)—நடைமுதல் செலவுகள் .. .. .. | .. | —1,99·48 | —2,19·58 | —2,95·03 | —3,46·89 | † | † | † | † | † | † | † |
| நிகர வருவாய் .. .. | | 28·07 | 31·88 | 20·11 | 22·38 | 4,34·80 | 5,18·73 | 6,23·65 | 7,95·94 | 8,38·94 | 9,04·34 | 9,21·78 |





| பெருந் தலைப்புகள். | 1938–9. | 1958–9. | 1959–60 | 1960–1. | 1961–2. | 1962–3. | 1963–4. | 1964–5. | 1965–6. | 1966–7. திட்ட மதிப்பீடு. | 1966–7. திருத்த மதிப்பீடு. | திட்ட மதிப்பீடு 1967–8. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஓய்வு ஊதியம், ஏனைய ஓய்வு கால சலுகைகள் ஆகியவை குறித்த உதவித் தொகைகளும் வசூல் தொகைகளும். | 2·88 | 9·26 | 4·33 | 15·30 | 16·39 | 30·40 | 24·62 | 25·76 | 33·20 | 49·19 | 48·37 | 49·63 |
| எழுதுபொருள்-அச்சுத் துறை .. .. .. | 3·96 | 19·07 | 18·70 | 22·01 | 39·60 | 42·06 | 43·45 | 54·70 | 53·79 | 51·69 | 55·02 | 56·06 |
| காட்டுவளம் ‡ .. .. .. .. | 45·63 | 1,30·63 | 1,69·24 | 1,99·35 | 2,52·28 | 2,22·86 | 2,59·03 | 3,07·62 | 2,80·78 | 2,66·50 | 2,84·29 | 2,83·09 |
| பல்வகை .. .. .. .. .. | 14·58 | 2,56·63 | 3,69·39 | § 5,93·03 | 99·80 | 1,35·04 | 86·35 | 1,29·07 | 1,07·91 | 87·24 | 1,19·85 | 1,17·45 |
| மத்திய ஆயத் தீர்வையில் மாநிலத்தின் பங்கு .. | ‖ | ‖ | ‖ | ‖ | 6,55·49 | 8,78·76 | 9,40·43 | 8,80·44 | 10,06·18 | 16,23·00 | 17,54·06 | 18,63·24 |
| மத்திய அரசினரின் உதவி மானியங்கள் .. | .. | 5·25 | 4·31 | 8·36 | 10,66·80 | 14,85·85 | 16,70·30 | 18,97·35 | 23,69·83 | 24,03·75 | 21,79·31 | 20,48·26 |
| மத்திய, மாநில, யூனியன் நேரடி ஆட்சிப் பகுதி அரசாங்கங்களிடையே பல்வகைச் சரிக்கட்டுதல்கள். | ·27 | 1·56 | ·35 | 1·40 | 1·05 | 1·03 | 1·04 | ·85 | ·90 | 1·06 | 1·75 | 1·21 |
| வாணிக, ஏனைய நிறுவனங்களிடமிருந்து பங்கு வீதங்கள் முதலியன. | .. | .. | .. | .. | (d) | 4·77 | 10·07 | 10·96 | 17·31 | 10·01 | 15·90 | 15·31 |
| ஏனைய பலவகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் .. | .. | .. | .. | .. | .. | .. | 0·04 | .. | .. | .. | .. | .. |
| சிறப்பு வருவாய்கள் .. .. .. .. | .. | 29·69 | 5·34 | 1·59 | 1·07 | 1·07 | 0·89 | 35·24 | 1,11·80 | 1,06·23 | 1,28·12 | 1,31·50 |
| சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணி, தல மேம்பாட்டு வேலைகள் ஆகியவற்றிலிருந்து வருவாய்கள். | .. | 1,89·38 | 2,01·10 | 2,69·65 | ¶ | ¶ | ¶ | ¶ | ¶ | ¶ | ¶ | ¶ |
| சிவில் பாதுகாப்பு .. .. .. .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | ·34 | .. | .. | .. |
| பெரு மொத்தம் .. | 16,13·45 | 69,95·07 | 81,10·65 | 92,03·27 | 92,17·84 | 1,17,96·75 | 1,34,76·77 | 1,53,88·27 | 1,72,79·85 | 1,88,71·84 | 1,92,16·79 | 2,04,38·79 |

### ஆ. ரெவின்யூக் கணக்கில் செலவினம்.

| பெருந் தலைப்புகள். | 1938–9. | 1958–9. | 1959–60 | 1960–1. | 1961–2. | 1962–3. | 1963–4. | 1964–5. | 1965–6. | 1966–7. திட்ட மதிப்பீடு. | 1966–7. திருத்த மதிப்பீடு. | திட்ட மதிப்பீடு 1967–8. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கார்ப்பரேஷன் வரி நீங்கலாக ஏனைய வருமான வரிகள். | .. | 4·85 | 11·21 | 11·21 | 11·60 | 12·07 | 12·77 | 13·44 | 14·69 | 14·98 | 13·22 | 10·17 |
| நில வரி .. .. .. .. .. | 25·36 | 1,72·83 | 1,68·78 | 1,75·05 | 1,06·70 | 64·31 | 64·95 | 70·97 | 97·90 | 1,02·44 | 1,13·15 | 1,18·89 |
| ஆயத் தீர்வைகள் .. .. .. .. | 32·18 | 6·24 | 5·53 | 5·41 | ** | ** | ** | 0·04 | 0·04 | ** | ** | ** |
| மோட்டார் வண்டிச் சட்டங்கள் குறித்த செலவு—தல அதிகார சபைகளுக்குக் கொடுக்கப்படும் தொகை .. .. .. .. | 72·77 | 60·31 | 60·21 | 54·26 | †† | †† | †† | †† | †† | †† | †† | †† |
| ஏனைய துறைச் செலவு .. .. .. | 2·29 | 13·09 | 13·24 | 12·90 | 15·15 | 14·15 | 17·51 | 17·96 | 29·02 | 25·31 | 30·33 | 30·11 |
| விற்பனை வரி .. .. .. .. .. | .. | 50·24 | 51·04 | 56·36 | 65·39 | 71·08 | 76·66 | 93·50 | 1,12·09 | 1,03·92 | 1,12·25 | 1,10·13 |

* நிலவரி அடங்கவில்லை.

† 1962 எப்ரல் 1-ம் தேதி முதல் செலவினமாகக் காட்டப்பட்டுள்ளது.

‡ இத் துறைகளுக்குச் சம்பந்தப்படுகிற மேம்பாட்டு திட்டங்களுக்காக மத்திய அரசினரிடமிருந்து கிடைக்கிற உதவித்தொகை மத்திய அரசினர் உதவி மானியம் என்பதின்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

§ கம்பெனி வரி மாற்றம் காரணமாக வருமான வரியில் பங்கு குறைவதனைச் சரிகட்ட மத்திய அரசினரிடமிருந்து பெற்ற மானியத்தின்பொருட்டு ரூ. 3,03·83 லட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

‖ "மத்திய ஆயத் தீர்வைகள்" என்பதன்கீழ் காட்டப்பட்டுள்ளது.

¶ "XXXI.—சமுதாய வளர்ச்சித் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம், தல மேம்பாட்டு வேலைகள்" என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

** "விற்பனைவரி" என்பதன்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

†† "ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்" என்பதன்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

(b) 1949–50-க்கு முன்பு, வரவுகள் "பல்வகை" என்னும் ரெவின்யூத் தலைப்பின்கீழ்ச் சேர்க்கப்பட்டன. நடைமுதல் செலவுகள் "பல்வகை" என்னும் செலவுத் தலைப்பின்கீழ்க் காட்டப்பட்டன.

(d) "XXIX. தொழில்கள்" என்பதன்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

# இணைப்பு I.

**[1957–58 முதல் உள்ள கணக்குகள் 1956 நவம்பர் 1-ம் தேதி முதல் செயலுக்கு வந்த மாநிலங்களின் சீரமைப்பு அடிப்படையில் அமைந்தது.]**

தமிழ்நாடு ரெவின்யூக் கணக்கில் வருவாயும் செலவினமும்.

| பெருந் தலைப்புகள். | 1938–9. | 1958–9. | 1959–60. | 1960–1. | 1961–2. | 1962–3. | 1963–4. | 1964–5. | 1965–6. | 1966–7. திட்ட மதிப்பீடு. | 1966–7. திருத்த மதிப்பீடு. | திட்ட மதிப்பீடு 1967–8. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| | | | | | | (ரூபாய் லட்சத்தில்.) | | | | | | |
| அ. வருவாய். | | | | | | | | | | | | |
| ...திய ஆயத் தீர்வைகள் .. .. .. | .. | 5,88·53 | 6,02·51 | 6,09·04 | * | * | * | * | * | * | * | * |
| ...போரேஷன் வரி நீங்கலாக ஏனைய வருமான வரிகள்— | | | | | | | | | | | | |
| வருமான வரியில் பங்கு .. .. .. .. | 22·50 | 6,36·72 | 6,66·29 | 7,34·11 | 7,87·20 | 7,74·49 | 9,72·44 | 10,04·79 | 10,01·27 | 10,88·00 | 11,45·00 | 11,01·00 |
| வேளாண்மை வருமான வரி .. .. .. | .. | 86·55 | 1,53·49 | 1,34·48 | 1,41·51 | 1,16·21 | 1,35·15 | 1,42·86 | 1,22·73 | 1,40·00 | 1,26·00 | 1,36·00 |
| ... வரி .. .. .. .. .. | .. | 25·18 | 30·26 | 29·32 | 40·49 | 37·33 | 38·47 | 59·76 | 58·91 | 68·00 | 35·86 | 55·98 |
| ...வேக் கட்டண வரி .. .. .. .. | .. | 70·37 | 84·43 | 89·77 | † | † | † | † | † | † | † | † |
| ...— | | | | | | | | | | | | |
| ...த்திற்குரிய பகுதி உட்பட மொத்த வருவாய். | 7,00·78 | 6,67·34 | 7,04·62 | 7,40·21 | 6,83·32 | 7,13·38 | 8,92·37 | 8,45·10 | 9,12·84 | 9,45·36 | 8,23·71 | 8,50·69 |
| ...யத் தீர்வை .. .. .. .. | 3,72·23 | 22·63 | 22·94 | 24·68 | 33·09 | 38·30 | 40·71 | 40·46 | 49·02 | 42·62 | 40·47 | 43·19 |
| ...டி வரி .. .. .. .. .. | 81·22 | 4,99·58 | 5,49·51 | 6,05·10 | 7,02·72 | 10,19·06 | 12,33·59 | 12,99·99 | 13,31·11 | 14,00·25 | 14,00·60 | 14,76·60 |
| ...பனை வரி .. .. .. .. .. | .. | 14,76·11 | 16,74·53 | 19,11·53 | 21,25·61 | 24,80·09 | 27,01·73 | 35,30·15 | 40,95·38 | 45,90·00 | 48,70·00 | 53,28·00 |
| ...ய வரிகளும் தீர்வைகளும் .. .. .. | 3·19 | 2,07·50 | 2,22·20 | 2,45·64 | 2,78·93 | 4,58·40 | 6,73·16 | 8,23·88 | 10,50·79 | 12,04·68 | 12,34·04 | 13,76·48 |
| ...த்திரைத் தாள்கள் .. .. .. .. | 1,73·37 | 3,91·81 | 4,77·80 | 4,52·97 | 5,21·74 | 5,48·21 | 6,68·21 | 7,75·21 | 8,15·13 | 7,62·24 | 8,73·69 | 9,30·69 |
| ...த்திரப் பதிவு .. .. .. .. .. | 32·70 | 86·26 | 1,04·51 | 1,06·90 | 1,13·14 | 1,24·16 | 1,51·43 | 1,61·90 | 1,80·52 | 1,71·89 | 1,93·58 | 1,93·68 |
| ... .. .. .. .. .. | 19·73 | 4,94·96 | 6,07·48 | 7,08·82 | 8,29·59 | [11,64·84 | 11,21·65 | 12,37·46 | 13,76·54 | 18,69·83 | 15,83·33 | 19,45·25 |
| ...நிர்வாகம் .. .. .. .. .. | 15·39 | 56·07 | 52·39 | 60·36 | 72·07 | 85·32 | 87·03 | 94·90 | 1,21·80 | 94·66 | 1,17·94 | 1,18·00 |
| ...ச்சாலைகள் .. .. .. .. .. | 5·98 | 24·08 | 30·99 | 35·59 | 30·92 | 42·87 | 41·19 | 45·65 | 42·35 | 51·98 | 41·97 | 46·92 |
| ...லீஸ் .. .. .. .. .. .. | 5·66 | 22·58 | 23·82 | 29·51 | 39·37 | 37·06 | 31·39 | 43·27 | 51·00 | 36·30 | 41·60 | 42·86 |
| ...கைத் துறைகள் .. .. .. .. | 7·62 | 1,19·07 | 1,56·57 | ‡ | 59·50 | 36·07 | 38·51 | 39·47 | 45·32 | 41·65 | 48·69 | 52·99 |
| ...முகங்களும் கப்பல் வழி காட்டலும் .. | 44·67 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| ...வி ‖ .. .. .. .. .. .. | 8·35 | 1,79·59 | 2,02·65 | 2,68·82 | 48·50 | 48·27 | 1,54·72 | 1,09·93 | 91·20 | 62·02 | 93·61 | 95·91 |
| ...த்துவம் ‖ .. .. .. .. .. | 10·25 | 73·90 | 83·84 | 85·60 | 79·77 | 78·58 | 94·60 | 1,02·50 | 1,12·52 | 1,10·22 | 1,44·16 | 1,59·61 |
| ...ாதுச் சுகாதாரம்‖ .. .. .. .. | 2·59 | 68·05 | 1,18·50 | 1,85·78 | 16·66 | 12·26 | 13·97 | 28·34 | 16·66 | 17·39 | 20·95 | 13·93 |
| வேளாண்மை ‖ .. .. .. .. .. | 3·12 | 1,62·16 | 2,33·09 | 2,48·54 | 1,91·75 | 2,26·68 | 2,80·74 | 3,30·32 | 3,84·40 | 3,94·57 | 4,96·26 | 5,85·79 |
| ...ல்நடை வளர்ப்பு ‖ .. .. .. .. | 1·02 | 18·27 | 23·18 | 15·18 | 11·49 | 21·51 | 16·95 | 19·06 | 30·65 | 17·67 | 25·88 | 26·59 |
| ...ட்டுறவு ‖ .. .. .. .. .. | 4·18 | 72·43 | 1,25·62 | 2,03·55 | 37·62 | 36·29 | 35·04 | 36·90 | 59·33 | 41·57 | 46·66 | 47·96 |
| தொழில்கள்‖ .. .. .. .. .. | 18·85 | 2,17·03 | 2,79·19 | 2,84·83 | 1,84·51 | 2,95·84 | 3,46·90 | 4,88·86 | 3,39·93 | 1,15·60 | 1,32·14 | 1,35·98 |
| ...தாய மேம்பாட்டுத் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணி, தல மேம்பாட்டு வேலைகள்.‖ | § | § | § | § | 29·28 | 2·12 | 2·57 | 3·81 | 6·78 | 4·67 | 5·21 | 6·81 |
| ...வகை—சமூக மேம்பாட்டு நிறுவனங்கள்.‖ .. | .. | .. | .. | 1,98·60 | (a) | 27·46 | 23·62 | 30·24 | 33·41 | 30·06 | 33·23 | 33·41 |
| ...ங்கனம்— | | | | | | | | | | | | |
| ...டி வருவாய்¶ .. .. .. .. | 6·31 | 10·62 | 11·08 | 10·61 | 11·52 | 11·70 | 9·02 | 10·60 | 14·80 | 14·23 | 10·28 | 11·49 |
| ...(கழிக்கவும்)—நடைமுறை செலவுகள் .. .. | —38·39 | —64·57 | —78·64 | —91·56 | —1,23·70 | † | † | † | † | † | † | † |
| நிகர வருவாய் .. | —32·08 | —53·95 | —67·56 | —80·95 | —1,12·18 | 11·70 | 9·02 | 10·60 | 14·80 | 14·23 | 10·28 | 11·49 |

* "மத்திய ஆயத் தீர்வையில் மாநிலப் பங்கு" என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

† " LVI. மத்திய அரசின் உதவி மானியங்கள்" என்பதன் கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

‡ " பல்வகை சமூக, வளர்ச்சி நிறுவனங்கள் " என்பதன் கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது. (1960–61 கணக்குகளில் ரூ. 38·65 லட்சம்.)

§ "LIA. சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணிகள், தல மேம்பாட்டு பணிகள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வருவாய் " என்பதன் கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

‖ இத் துறைகள் சம்பந்தப்பட்ட மேம்பாட்டு திட்டங்களுக்காக மத்திய அரசினரிடமிருந்து கிடைக்கும் உதவித்தொகை " LVI. மத்திய அரசினரிடமிருந்து கிடைக்கும் உதவி மானியம் " என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

(a) "XXI. "பல்வகைத் துறைகள் " என்பதன் கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

¶ நிலவரி அடங்கவில்லை.

தமிழ்நாடு ரெவின்யூக் கணக்கில் வருவாயும், செலவினமும்—தொடர்ச்சி.

(ரூபாய் லட்சத்தில்)

ஆ. ரெவின்யூக் கணக்கில் செலவினம்—தொடர்ச்சி.

| பெருந் தலைப்புகள். (1) | 1938–9. (2) | 1958–9. (3) | 1959–60. (4) | 1960–61. (5) | 1961–2. (6) | 1962–3. (7) | 1963–4. (8) | 1964–5. (9) | 1965–6. (10) | 1966–7. திட்ட மதிப்பீடு. (11) | 1966–7. திருத்த மதிப்பீடு. (12) | திட்ட மதிப்பீடு. 1967–8. (13) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏனைய வரிகளும் தீர்வைகளும்— | | | | | | | | | | | | |
| தல அதிகார சபைகளுக்குக் கொடுக்கப்படும் தொகை | .. | 1,36·53 | 1,50·08 | 1,66·72 | * | * | * | * | * | * | * | * |
| ஏனைய துறைச் செலவு | 0·64 | 2·36 | 2·13 | 2·03 | 2·23 | 4·03 | 5·64 | 8·53 | 11·07 | 11·91 | 15·53 | 14·87 |
| முத்திரைத் தாள் | 4·72 | 20·84 | 24·17 | 27·12 | 27·99 | 24·33 | 31·22 | 31·62 | 25·20 | 32·07 | 23·47 | 24·46 |
| பத்திரப் பதிவு | 29·13 | 37·74 | 40·20 | 43·73 | 45·88 | 48·34 | 50·06 | 55·50 | 64·80 | 69·38 | 68·63 | 70·54 |
| கடன்கள், ஏனைய பொறுப்புகளின்மீது வட்டி | 58·54 | 4,54·97 | 5,18·23 | 6,96·03 | 7,81·81 | 9,03·76 | 11,28·86 | 12,91·27 | 15,94·13 | 19,49·45 | 20,74·16 | 23,47·44 |
| (கழிக்கவும்)—வாணிகத் துறையினருக்கு மாற்றப்பட்ட வட்டி | —1,07·54 | —2,20·94 | —2,41·04 | —2,68·32 | —2,95·26 | aa | aa | aa | aa | aa | aa | aa |
| சாதாரண வருவாயிலிருந்து கொடுக்கப்பட்ட நிகரத் தொகை | —49·00 | 2,34·03 | 2,77·19 | 4,27·71 | 4,86·55 | 9,03·76 | 11,28·86 | 12,91·27 | 15,94·13 | 19,49·45 | 20,74·16 | 23,47·44 |
| கடன் குறைப்பு அல்லது தவிர்ப்புத் தொகை ஒதுக்கம் | 5·13 | 2,85·30 | 3,22·37 | 3,84·25 | 99·72 | 1,06·57 | 1,23·90 | 1,25·96 | 1,43·47 | 5,74·13 | 6,88·86 | 7,72·12 |
| மாநிலச் சட்டப் பேரவையும், தேர்தல்களும் | † | † | † | † | 7,20·59 | 26·10 | 20·14 | 27·45 | 39·66 | 47·42 | 58·88 | 30·25 |
| பொது நிர்வாகம் | 2,76·70 | 5,11·94 | 5,44·06 | 5,94·15 | | 6,75·72 | 6,95·46 | 8,20·72 | 9,59·71 | 9,36·69 | 9,49·16 | 9,46·30 |
| நீதி நிர்வாகம் | 90·63 | 1,35·58 | 1,38·02 | 1,47·92 | 1,57·93 | 1,62·85 | 1,67·37 | 1,73·27 | 1,98·83 | 1,95·99 | 2,08·19 | 2,10·11 |
| சிறைச்சாலைகள் | 23·22 | 1,04·61 | 1,22·80 | 1,41·03 | 1,37·70 | 1,52·71 | 1,45·37 | 1,72·03 | 1,93·39 | 1,83·37 | 1,58·27 | 1,61·59 |
| போலீஸ் | 1,60·96 | 5,46·94 | 5,79·50 | 6,07·21 | 6,60·36 | 6,83·11 | 6,75·84 | 7,53·09 | 9,46·10 | 8,45·71 | 9,83·86 | 9,42·81 |
| பல்வகைத் துறைகள் ‡ | 21·11 | 3,29·93 | 4,02·58 | 5,01·06 | 4,59·19 | 58·11 | 66·44 | 74·17 | 82·90 | 84·75 | 90·53 | 92·08 |
| விஞ்ஞானத் துறைகள் | 0·96 | 3·27 | 3·53 | 4·50 | 4·83 | 5·32 | 6·64 | 7·83 | 7·27 | 6·37 | 8·27 | 7·07 |
| கல்வி | 2,61·98 | 12,21·99 | 15,14·70 | 18,38·74 | 23,46·48 | 25,76·01 | 27,41·46 | 31,73·86 | 37,85·13 | 44,97·25 | 44,30·96 | 47,04·24 |
| மருத்துவம் | 98·14 | 4,41·59 | 4,91·54 | 5,48·71 | 6,49·67 | 7,47·45 | 8,20·24 | 8,57·72 | 10,32·80 | 10,88·03 | 10,85·30 | 11,43·30 |
| பொதுச் சுகாதாரம் | 26·57 | 85·05 | 1,91·59 | 2,82·43 | 2,17·86 | 2,10·84 | 2,41·41 | 2,89·43 | 3,62·07 | 5,04·58 | 4,63·71 | 4,80·39 |
| வேளாண்மை | 20·62 | 2,31·22 | 2,96·58 | 3,44·67 | 4,16·74 | 5,41·45 | 6,81·90 | 8,42·18 | 10,67·97 | 9,75·02 | 12,30·93 | 13,34·13 |
| கால்நடை வளர்ப்பு | 12·85 | 73·70 | 97·05 | 1,23·01 | 1,48·73 | 1,69·32 | 1,89·01 | 2,21·95 | 3,30·85 | 3,33·06 | 3,46·90 | 3,30·18 |
| கூட்டுறவு | 13·82 | 1,68·38 | 2,05·05 | 2,08·76 | 2,27·20 | 2,41·27 | 2,29·59 | 2,68·39 | 2,84·33 | 2,68·49 | 2,79·39 | 2,50·33 |
| தொழில்கள் | 27·54 | 3,17·94 | 4,36·11 | 3,57·20 | 3,73·61 | 5,51·37 | 4,94·87 | 6,30·39 | 6,56·65 | 2,34·99 | 2,38·32 | 2,50·22 |
| சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், தேசீய வளர்ச்சிப் பணி, தல மேம்பாட்டு வேலைகள் | § | § | § | § | 5,43·80 | 6,40·10 | 6,68·65 | 6,80·65 | 7,52·72 | 6,45·21 | 6,37·81 | 6,42·79 |
| தொழிலாளரும் வேலை வாய்ப்பும் | ‖ | ‖ | 7·78 | ‖ | 35·07 | 36·42 | 1,28·94 | 1,50·18 | 1,88·56 | 2,19·15 | 2,01·07 | 2,23·16 |
| பல்வகை—சமூக, மேம்பாட்டு நிறுவனங்கள் | .. | .. | .. | .. | ¶ | 4,41·91 | 4,80·21 | 5,30·44 | 5,85·64 | 6,15·80 | 7,24·45 | 7,49·86 |
| பாசனம்—மூலதனக் கணக்கு வைத்துள்ள வேலைகள் மீதான வட்டி | 87·59 | 1,99·07 | 2,15·99 | 2,36·45 | 2,59·97 | 3,95·72 | 4,39·38 | 4,67·51 | 5,12·46 | 5,43·01 | 5,55·54 | 5,86·57 |
| பாசனம்—சாதாரண வருவாயிலிருந்து செலவு செய்யப்பட்ட ஏனைய ரெவின்யூ செலவு | 39·09 | 1,01·03 | 1,09·02 | 1,25·08 | 1,73·02 | 1,73·44 | 1,76·07 | 1,64·86 | 1,95·40 | 1,83·02 | 2,13·31 | 2,01·47 |
| பாசனம் முதலிய வேலைகளை நிறைவேற்றுதல் | 1,25 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| பொதுப்பணிகள் | 1,19,70 | 5,68·13 | 6,88·15 | 6,93·25 | 8,88·86 | 9,23·03 | 10,00·34 | 9,60·05 | 11,86·63 | 9,91·15 | 10,42·43 | 10,54·75 |
| பொதுப்பணிகளுக்கான மூலதனச் செலவு | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 9·17 | 3·79 | 6·03 |
| மோட்டார், நீர்வழிப் போக்குவரத்துத் திட்டங்கள். | .. | ** | ** | ** | ** | 4,29·56 | 5,35·81 | 6,50·50 | 8,31·03 | 8,70·36 | 9,28·36 | 9,52·87 |
| மின்சாரத் திட்டங்களின் மூலதனச் செலவின்பேரில் வட்டி | 18·92 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| பஞ்சத் தணிப்பு | 16·04 | 57·11 | 70·69 | 73·73 | 35·19 | 19·53 | 58·38 | 72·09 | 94·37 | 61·14 | 94·74 | 61·14 |
| ஓய்வூதியமும், ஏனைய ஓய்வுகால சலுகைகளும் | 97·12 | 1,35·02 | 1,40·85 | 1,56·08 | 1,91·60 | 2,57·89 | 3,56·16 | 3,39·48 | 3,40·51 | 3,53·34 | 3,29·47 | 3,45·08 |
| பிரதேச, அரசியல் காரண ஓய்வூதியங்கள் | .. | 0·02 | 0·01 | 0·02 | 0·37 | 0·33 | 0·60 | 0·33 | 0·29 | 0·03 | 0·03 | 0·03 |
| முன்னாள் சமஸ்தான மன்னர்களுக்கு உபகாரத் தொகைகளும் படிகளும் | .. | 0·69 | 0·73 | 0·73 | 8·03 | 2·48 | 3·73 | 2·37 | 2·34 | 2·52 | 2·42 | 2·42 |
| எழுதுபொருள்—அச்சுத் துறை | 27·07 | 1,03·87 | 1,21·38 | 1,42·62 | 1,38·03 | 1,35·42 | 1,65·91 | 1,64·21 | 2,02·73 | 1,85·26 | 1,98·90 | 2,00·73 |
| காட்டு வளம் | 40·17 | 61·21 | 70·43 | 77·49 | 84·27 | 91·47 | 1,06·15 | 1,26·82 | 1,37·47 | 1,51·51 | 1,54·22 | 1,59·95 |
| பல்வகை | 4·45 | 1,12·60 | 1,61·28 | 1,31·69 | 2,18·94 | 2,83·69 | 2,82·51 | 3,19·35 | 3,43·45 | 3,35·41 | 4,95·58 | 9,15·.. |

* "ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்" என்பதன்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

† "பொது நிர்வாகம்" என்பதன்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

‡ பிற்பட்ட வகுப்பினர்களுக்கான சலுகைகள் உட்பட ஹரிஜனங்கள், ஆதிவாசிகள் முதலியவர்கள் நலனுக்கான கீழ்க்கண்ட செலவு இதில் அடங்கும்.
1,58·15 2,13·41 2,35·94 3,06·26 3,62·83

§ " 63–b. சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், தேசீய வளர்ச்சிப் பணி, தல மேம்பாட்டுப் பணிகள் " என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

‖ " 47. பலவகைத் துறைகள் " என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

¶ " 26. பலவகைத் துறைகள் " என்பதன்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

** சென்னை மாநகர பஸ் போக்குவரத்தின் நடைமுறை செலவுகள் 1949–50முதல் 1961–62 வரையில் வருவாயிலிருந்து கழிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளன.

aa 1962 ஏப்ரல் 1-ம் தேதி முதல் " XVI. வட்டி " என்பதன்கீழ் வரவுகளாகக் காட்டப்படுகிறது.

### தமிழ்நாடு ரெவின்யூக் கணக்கில் வருவாயும் செலவினமும்—தொடர்ச்சி.

(ரூபாய் லட்சத்தில்.)

#### ஆ. ரெவின்யூக் கணக்கில் செலவினம்—தொடர்ச்சி.

| பெருந் தலைப்புகள். | 1938–9. | 1958–9. | 1959–60. | 1960–1. | 1961–2. | 1962–3. | 1963–4. | 1964–5. | 1965–6. | 1966–7. திட்ட மதிப்பீடு. | 1966–7. திருத்த மதிப்பீடு. | திட்ட மதிப்பீடு, 1967–8. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| இழப்பீடுத் தொகையை மொத்தத் தொகையாக மாற்றுதல் | .. | 10·96 | 4·55 | 5·63 | 3·06 | 6·48 | 6·08 | 4·47 | 8·11 | 2·37 | 6·59 | 6·49 |
| பல்வகை உதவித் தொகைகளும் ஒதுக்கீடுகளும் | .. | .. | .. | .. | 2,14·62 | 2,90·75 | 3,94·48 | 4,49·24 | 5,33·80 | 4,87·58 | 5,73·51 | 5,81·32 |
| இதரச் செலவினங்கள் | .. | 2·69 | 9·70 | 2·95 | 2·18 | 2·34 | 9·03 | 30·98 | 1,07·35 | 99·84 | 1,26·43 | 1,26·22 |
| தேசிய நெருக்கடி சம்பந்தப்பட்ட செலவு | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 3·41 | .. | 1·38 | 0·59 |
| சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணிகள், தல மேம்பாட்டு வேலைகள் | .. | 2,86·47 | 3,07·88 | 3,97·57 | * | * | * | * | * | * | * | * |
| பெருமொத்தம் | 16,09·72 | 68,35·37 | 80,57·70 | 91,09·43 | 1,01,79·11 | 1,21,80·83 | 1,34,99·74 | 1,51,29·80 | 1,80,66·34 | 1,88,41·18 | 1,99,62·20 | 2,11,98·74 |
| ரெவின்யூ உபரி (+) அல்லது பற்றுக்குறை (—). | +3·73 | +1,59·70 | +52·95 | +93·84 | —9,61·27 | —3,84·08 | —22·97 | +2,58·47 | —7,86·49 | +30·66 | —7,45·41 | —7,59·95 |

* 37. சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணிகள், தல மேம்பாட்டு வேலைகள்" என்பதன் கீழ் காட்டப்பட்டுள்ளது.



## இணைப்பு II.

[1953-4 முடிய உள்ள கணக்கில் ஆந்திரப் பகுதிகளின் கணக்கும் சேர்ந்திருக்கிறது. 1956–7 முதல் உள்ள கணக்கு 1956 நவம்பர் 1-ம் தேதி முதல் செயலுக்கு வந்த மாநிலங்களின் சீரமைப்பைக் கருத்தில் கொண்டு கணக்கிடப்பட்டிருக்கிறது.]

### மூலதனச் செலவின் விவரம்.

(ரூபாய் லட்சத்தில்.)

#### அ. பாசன, நீர்வழி முதலிய திட்டங்கள்.

| திட்டத்தின் விவரம். | உத்தேசச் செலவு. | 1946–7–1959–60. | 1960–1. | 1961–2. | 1962–3. | 1963–4. | 1964–5. | 1965–6. | மொத்தம் 1946–7—1965–6. | 1966–7. திட்ட மதிப்பீடு. | 1966–7. திருத்த மதிப்பீடு. | திட்ட மதிப்பீடு, 1967–8. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| கீழ் பவானித் திட்டம் | 9,96·00 | 10,32·45 | 1·48 | 1·52 | —·61 | 2·69 | —2·39 | .. | 10,35·14 | 1·47 | —10·26 | —2·89 |
| மேட்டூர் கால்வாய்கள் திட்டம் | 2,67·00 | 1,81·64 | ·14 | ·48 | 3·99 | ·23 | ·03 | ·03 | 1,86·54 | 1·32 | —·01 | 1·31 |
| மலம்புழாத் திட்டம் | 4,42·00 | 4,38·73 | .. | .. | .. | .. | .. | .. | 4,38·73 | .. | .. | .. |
| மணிமுத்தாறு திட்டம் | 3,98·00 | 5,32·87 | —7·50 | —3·30 | —2·27 | —·79 | —·87 | 1·66 | 5,19·80 | —·73 | —·60 | ·02 |
| ஆரணியாறு திட்டம் | 1,04·00 | 99·97 | —·37 | ·01 | —·01 | ·01 | ·01 | .. | 99·62 | .. | .. | .. |
| வாளையாறு திட்டம் | 1,00·00 | 99·17 | .. | .. | .. | .. | .. | .. | 99·17 | .. | .. | .. |
| மங்கலம் திட்டம் | 88·65 | 59·65 | .. | .. | .. | .. | .. | .. | 59·65 | .. | .. | .. |
| அமராவதித் திட்டம் | 2,97·00 | 3,27·44 | —·53 | —1·02 | —1·50 | ·79 | —·55 | .. | 3,24·63 | ·01 | ·06 | —·01 |
| வைகை நீர்த் தேக்கத் திட்டம் | 3,00·00 | 1,53·60 | 28·87 | 1·20 | 5·73 | 8·86 | 5·21 | 0·42 | 2,03·89 | .. | ·78 | ·02 |
| சாத்தனூர்த் திட்டம் | 2,89·00 | 2,43·10 | 2·22 | ·99 | 19·81 | 14·03 | 6·05 | ·17 | 2,86·37 | —·50 | —·66 | ·24 |
| கிருஷ்ணகிரித் திட்டம் | 1,84·00 | 1,59·98 | —·31 | —·49 | —·19 | —1·47 | —·43 | 3·68 | 1,60·77 | ·99 | ·01 | —·02 |
| கட்டளை உயர்மட்டக் கால்வாய் திட்டம் | 1,56·65 | 1,73·70 | 48·57 | 2·83 | 1·74 | 1·48 | ·34 | —2·83 | 2,25·83 | ·04 | ·78 | .. |
| புள்ளம்பாடிக் கால்வாய்த் திட்டம் | 1,42·43 | 1,68·96 | 21·95 | 7·01 | 4·12 | 2·33 | 1·17 | 3·60 | 2,09·14 | ·14 | ·95 | .. |
| வீடூர் நீர்த் தேக்க திட்டம் | 61·37 | 58·68 | 1·15 | —3·46 | ·91 | —1·32 | 0·70 | ·47 | 57·13 | ·49 | ·14 | ·40 |
| மீன்கரை நீர்த் தேக்கத் திட்டம் | 49·56 | 0·47 | .. | .. | .. | .. | .. | .. | ·47 | .. | .. | .. |
| பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் | 48,00·00 | 1,52·76 | 2,73·76 | 4,13·27 | 4,42·56 | 5,77·31 | 6,32·41 | 5,55·61 | 25,47·68 | 2,75·00 | 3,11·08 | 2,50·00 |
| நெய்யாறு II-ம் நிலை | .. | 25·90 | 26·11 | 28·42 | 23·29 | 6·81 | —1·35 | —·08 | 1,09·10 | ·02 | ·14 | .. |
| பாலாறு அணைக்கட்டுத் திட்டத்திற்கு மேம்பாடு செய்தல். | .. | .. | .. | 5·34 | 14·52 | 14·33 | 11·54 | 5·90 | 51·63 | 2·16 | 3·43 | 6·03 |

## மூலதனச் செலவின விவரம்—தொடர்ச்சி.

(ரூபாய் லட்சத்தில்)

| திட்டத்தின் விவரம். (1) | உத்தேச செலவு. (2) | 1946-7—1959-60. (3) | 1960-1. (4) | 1961-2. (5) | 1962-3. (6) | 1963-4. (7) | 1964-5. (8) | 1965-6. (9) | மொத்தம் 1946-7—1965-6. (10) | 1966-67. திட்ட மதிப்பீடு. (11) | 1966-67. திருத்த மதிப்பீடு. (12) | திட்ட மதிப்பீடு, 1967-8. (13) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **இ. தொழில் வளர்ச்சித் திட்டங்கள்.** | | | | | | | | | | | | |
| ...கோணு தோட்டங்கள் | .. | 1,24·19 | 2·96 | 2·24 | 1·72 | 1·68 | 1·61 | 1·68 | 1,36·08 | 1·70 | 2·81 | 2·00 |
| ...ளா சோப்பு நிறுவனம் | .. | 1·30 | .. | .. | .. | .. | .. | .. | 1·30 | .. | .. | .. |
| ...சாங்கத் தொழில்-பொறியியல் பட்டறை | .. | 0·98 | .. | .. | 0·18 | 0·05 | 0·05 | 0·19 | 1·45 | 0·08 | 0·03 | .. |
| ... எண்ணெய்த் தொழில் | .. | 1·70 | .. | .. | .. | .. | .. | .. | 1·70 | .. | .. | .. |
| ...ர்னே தாவர நெய்த் தொழிற்சாலை | .. | 12·61 | .. | .. | .. | .. | .. | .. | 12·61 | .. | .. | .. |
| ...ங்கப் பட்டுத் தொழிற்சாலை | .. | 3·84 | .. | .. | .. | .. | .. | .. | 3·84 | .. | .. | .. |
| ...தொழிற் பயிற்சிப் பள்ளிகள் | .. | 58·06 | .. | .. | .. | .. | .. | .. | 58·06 | .. | .. | .. |
| ...கு ஊற்றுக் கிணறுகள் | .. | 19·20 | 4·96 | 2·73 | 9·19 | 2·56 | .. | .. | 38·66 | .. | .. | .. |
| ...ங்கூர் உரங்கள்—இரசாயனங்கள் கம்பெனி பங்கு. | .. | 21·00 | .. | .. | .. | .. | .. | .. | 21·00 | .. | .. | .. |
| ...வு மொத்த விற்பனை பண்டகசாலைகளில் ...கள். | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 32·00 | .. |
| ..., தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கார்ப்பரேஷனில் பங்குகள். | .. | 1,21·65 | .. | .. | .. | .. | 25·00 | 25·00 | 1,71·65 | 25·00 | 25·00 | .. |
| ...நாரா இரசாயனப் பொருள் உற்பத்தி ...ில் பங்குகள் | .., | 10·00 | .. | .. | .. | .. | .. | .. | 10·00 | .. | .. | .. |
| ...இடங்குக் கார்ப்பரேஷனில் பங்குகள் | .. | 10·00 | 1·00 | .. | 3·00 | 5·00 | 6·00 | 6·00 | 31·00 | 14·75 | 9·75 | 1·00 |
| ...ச் சர்க்கரைத் தொழிற்சாலைகளில் பங்குகள். | .. | 36·50 | .. | 25·00 | 15·00 | 7·50 | 5·00 | 10·00 | 99·00 | 35·00 | 27·50 | .. |
| ...ிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷனில் பங்குகள். | .. | .. | .. | .. | .. | .. | .. | 75·77 | 75·77 | 1,40·00 | 1,00·00 | 3,00·00 |
| ...ாண்மைத் தொழில் கார்ப்பரேஷனில் பங்குகள். | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 5·00 | 25·00 | 10·00 |
| ...ையப் பங்குகள் | .. | 1,00·96 | 84·00 | 69·72 | 1,03·15 | 92·31 | 1,15·42 | 66·69 | 6·31·75 | 79·05 | 55·97 | 42·65 |
| தொழிலாளர்களுக்கு வீடு கட்டுதல் | .. | 45·53 | 16·59<br>—7·02 | 12·42<br>—4·44 | 14·17<br>—5·12 | 15·90<br>—3·23 | 9·63<br>—1·01 | 9·71<br>4·27 | 98·86 | 20·29<br>—1·54 | 18·76<br>—3·91 | 9·00<br>—4·73 |
| தொழில்பேட்டைகள் | .. | 1,15·55 | 55·46 | 26·75 | 10·73 | 11·79 | 1,46·89 | 43·76 | 4,10·93 | 56·01 | 59·03 | 50·00 |
| சிறுசகத் தொழில்களும், கிராமத் தொழில்களும். | .. | 1,92·51 | 10·89 | 55·75 | 1,41·30 | 2,17·55 | 87·09 | 96·77 | 8,01·86 | 19·62 | 39·63 | 36·86 |
| எழுதுபொருளும் அச்சுத்துறையும் | .. | 9·26 | 0·07 | 0·76 | .. | .. | .. | .. | 10·09 | .. | .. | .. |
| வீட்டு வசதித் திட்டங்களுக்காக மொத்தமாக நில ஆர்ஜிதம் செய்தல். | .. | .. | 8·68 | 0·20 | .. | .. | .. | .. | 8·83 | .. | .. | .. |
| ட்ராக்டர் வாடகைத் திட்டங்கள் | .. | .. | .. | 11·25 | 17·47 | 9·26 | 2·24 | 18·01 | 58·23 | 13·84 | 25·00 | 13·50 |
| ஆவடியில் உள்ள பாதுகாப்புப் படைத் தொழில்களுக்கென நீர்வழங்குத் திட்டங்கள். | .. | .. | .. | 7·35 | 9·04 | 25·17 | 13·15 | 1·14 | 55·85 | .. | 0·42 | .. |
| திருச்சிராப்பள்ளியில் உள்ள சிறு ஆயுதங்கள் தயாரிப்புத் தொழிற்சாலைக்காகத் தண்ணீர் வழங்கு திட்டம். | .. | .. | .. | .. | .. | .. | .. | 22·09 | 22·09 | 1·03 | 0·47 | 0·30 |
| தொழில்களுக்குத் தண்ணீர் வசதிகளை அபிவிருத்தி செய்ய ரெட்ஹில்ஸ் அருகில் நில ஆர்ஜிதம். | .. | .. | .. | .. | .. | .. | 18·51 | 79·09 | 88·60 | 60·00 | 25·00 | 18·00 |
| ...னைய இனங்கள் | .. | 2,24·14 | .. | 15·39 | 10·92 | 45·29 | 80·98 | —26·11 | 3,50·61 | 2,64.26 | 2,60·41 | 1,71·65 |
| மத்திய அரசின் வாடகை வீட்டுவசதித் திட்டம் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 31·57 | 45·00 | 50·00 |
| மொத்தம் | .. | 11,08·98 | 1,77·56 | 2,24·62 | 3,30·75 | 4,30·83 | 5,10·56 | 4,21·52 | 32.04·82 | 7,65·61 | 7,57·87 | 7,00·23 |
| **ஈ. மோட்டார் போக்குவரத்துத் திட்டங்களின் மூலதனச் செலவு.** | | | | | | | | | | | | |
| தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்து | .. | 3,25·40 | 71·24 | 62·90 | 14·66 | 1,56·47 | 1,55·50 | 1,58·53 | 9,44·70 | 1,06·53 | 76·62 | 71·84 |

## மூலதனச் செலவின விவரம்—தொடர்ச்சி.

| திட்டத்தின் விவரம். | உத்தேசச் செலவு. | 1946–67—1959–60. | 1960–61. | 1961–62. | 1962–63. | 1963–64. | 1964–65. | 1965–66. | மொத்தம் 1946–67—1965–66. | 1966–67. திட்ட மதிப்பீடு. | 1966–67. திருத்த மதிப்பீடு. | திட்ட மதிப்பீடு 1967–68. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| | | | | (ரூபாய் லட்சத்தில்). | | | | | | | | |
| **உ. பொதுப் பணிகளுக்கான மூலதனச் செலவு.** | | | | | | | | | | | | |
| கட்டிடங்கள் | .. | 11,66·83 | 3,23·43 | 4,06·98 | 4,28·97 | 3,49·97 | 3,00·05 | 3,05·77 | 32,82·00 | 3,02·74 | 3,22·07 | 2,22·84 |
| சாலை வேலைகள் (பணியாளர், இயந்திரங்கள், தளவாடங்கள் உட்பட). | .. | 3,03·91 | 1,29·89 | 1,55·33 | 1,97·57 | 1,90·52 | 2,56·77 | 2,29·79 | 14,63·78 | 1,71·01 | 1,70·17 | 1,35·34 |
| குடிநீர் வழங்க தல அதிகார சபைகளுக்கு மானியங்கள். | .. | 26·77 | —2·14 | —2·14 | —2·14 | —2·14 | —2·14 | —2·13 | 13.94 | —2·14 | —2·13 | —2·13 |
| சாலை வேலைகளுக்காக தல அதிகார சபைகளுக்கு மானியங்கள். | .. | 49·70 | —3·96 | —3·96 | —3·96 | —3·81 | —3·94 | —3·96 | 26·11 | —3·95 | —3·96 | —3·96 |
| பணியாளர்களுக்கான வீதாச்சாரச் செலவுகள். | .. | 48·13 | 22·84 | 23·63 | 54·16 | 52·54 | 59·01 | 50·54 | 3,10·85 | 85·69 | 83·33 | 88·50 |
| மொத்தம் | .. | 15,95·34 | 4,70·06 | 5,79·84 | 6,74·60 | 5,87·08 | 6,09·75 | 5,80·01 | 50,96·68 | 5,53·35 | 5,68·89 | 4,40·59 |
| **ஊ. ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.** | | | | | | | | | | | | |
| முன்பண இழப்பீடும் இடைக்காலத் தொகைகளும் கொடுத்தல். | .. | 7,09·69 | 1,25·59 | 16·45 | 12·55 | 4·64 | 4·89 | 2·56 | 8,76·37 | —1·50 | 2·00 | —1·00 |
| **எ. காட்டுவள மூலதனச் செலவு.** | | | | | | | | | | | | |
| காட்டுவள வேலைகள் | .. | 68·65 | 29·25 | 32·99 | 51·37 | 63·30 | 59·01 | 71·90 | 3,76·47 | 80·91 | 77·92 | 56·53 |
| **ஏ. பொதுச் சுகாதார மேம்பாட்டுக்கான மூலதனச் செலவு.** | | | | | | | | | | | | |
| சுகாதார வேலைகள் (இருப்புகள்) | | —26·97 | 38·25 | 42·18 | 31·92 | —3·77 | —13·78 | —19·59 | 48·24 | —31·21 | 13·14 | —13·14 |
| கிராம நீர்வழங்குத் திட்டங்கள் | .. | 1,73·02 | 61·16 | 21·69 | 1·52 | 1·30 | 0·18 | —·96 | 2,57·91 | ·08 | 0·5 | ·03 |
| தேசிய—நீர்வழங்கு சுகாதாரத் திட்டம் | .. | 85·24 | —5·88 | 7·40 | 14·03 | 2·71 | 1·63 | ·89 | 1,06·02 | ·05 | ·18 | .. |
| நீர் வழங்கலுக்காக சென்னை மாநகராட்சிக்கு மானியங்கள். | .. | 15·94 | —1·26 | —1·26 | —1·26 | —1·26 | —1·26 | —1·26 | 8·38 | —1·26 | —1·26 | —1·26 |
| கிணறுகளை ஆழப்படுத்தல் | .. | 4·19 | 2·99 | 5·19 | 3·67 | 4·44 | .. | .. | 20·48 | ·40 | .. | .. |
| மொத்தம் | .. | 2,51·42 | 95·26 | 75·20 | 49·88 | 3·42 | —13·23 | —20·92 | 4,41·03 | —31·94 | —12·01 | —11·91 |
| **ஐ. வேளாண்மை மேம்பாடுகள், ஆராய்ச்சிக்கான மூலதனச் செலவு.** | | | | | | | | | | | | |
| அரசாங்க விதைப் பண்ணைகளுக்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்தலும் ஏனைய இனங்களும். | .. | 6·11 | 1·08 | 4·16 | 4·30 | 3·17 | 24·20 | 34·25 | 77·27 | 34·43 | 37·89 | 46·24 |

மூலதனச் செலவின் விவரம்—தொடர்ச்சி.

| திட்டத்தின் விவரம். | உத்தேசச் செலவு. | 1946–7—1959–60. | 1960–1. | 1961–2. | 1962–3. | 1963–4. | 1964–5. | 1965–6. | மொத்தம் 1946–7—1965–6. | 1966–67. திட்ட மதிப்பீடு. | 1966–67. திருத்த மதிப்பீடு. | திட்ட மதிப்பீடு 1967–8. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| (ரூபாய் லட்சத்தில்.) | | | | | | | | | | | | |
| அ. பாசன, நீர்வழி முதலிய திட்டங்கள்—தொடர்ச்சி. | | | | | | | | | | | | |
| [illegible] நீர்த்தேக்கத் திட்டம் II-ம் நிலை. | .. | .. | .. | 5·11 | .. | .. | .. | 3·37 | 3·48 | ·55 | 1·10 | ·90 |
| [illegible]நதித் திட்டம் | .. | .. | .. | .. | .. | . | .. | .. | .. | 10·00 | ·50 | ·50 |
| [illegible] பட்டணங்கால் | .. | .. | .. | .. | .. | 0·75 | 73·95 | 1,29·17 | 2,03·87 | 2,33·00 | 1,23·03 | 1,26·50 |
| [illegible] கால்வாய்க்குத் நவீன வசதிகள் [illegible]தல். | .. | .. | .. | .. | 0·1 | .. | .. | .. | ·01 | 10·00 | .. | 5·00 |
| [illegible] கால்வாய்க்கு நவீன வசதிகள் செய்தல். | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 10·00 |
| [illegible] நதி | .. | .. | .. | .. | .. | 26·02 | 44·79 | 41·25 | 1,12·06 | 16·70 | 1·39 | —·36 |
| [illegible]ஆறு | .. | .. | .. | .. | .. | 4·90 | 40·20 | 34·82 | 79·92 | 24·90 | 18·87 | 11·21 |
| [illegible] மூக்தா நதி | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 10·00 | 23·68 | 40·77 |
| [illegible] நீர்த்தேக்கத் திட்டம் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 16·00 | .. | 5·00 |
| [illegible]ப்புச் சிறு பாசனத் திட்ட வேலைகள்—[illegible], குளச் சீர்திருத்தத் திட்டம் உட்பட. | .. | 7,96·38 | 1,70·59 | 1,77·30 | 2,18·92 | 2,73·58 | 2,22·74 | 2,60·47 | 21,19·98 | 3,06·80 | 3,03·98 | 2,46·15 |
| [illegible]யப் பாசனத் திட்டங்கள் (உரிய பயனளிப்பவையும், உரிய பயனளிக்காதவையும்). | * | 3,88·25 | 47·66 | 28·20 | 3·24 | 24·98 | 52·03 | 38·22 | 5,82·58 | 29·93 | 18·90 | 21·34 |
| ஆந்திரா, மைசூர், மாநிலங்களுக்கு மாற்றப்பட்ட பாசனத் திட்டங்கள். | .. | 18,73·97 | † | .. | .. | .. | .. | .. | 18,73·97 | .. | .. | .. |
| [illegible]யாளர்களுக்கும், இயந்திரச் சாதனங்களுக்[illegible], பிடித்த வீதாச்சாரச் செலவு. | .. | 42·80 | —·29 | 3·14 | 4·06 | 6·68 | 4·03 | 3·73 | 64·15 | ·10 | 3·92 | 2·80 |
| மொத்தம் .. | 86,75·66 | 70,10·47 | 6,13·50 | 6,66·55 | 7,38·34 | 9,62·18 | 10,89·61 | 10,79·66 | 1,21,60·31 | 9,31·49 | 8,00·99 | 7,25·41 |

ஆ. மின்சாரத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு. ‡

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மோயாறு நீர் மின்சாரத் திட்டம் .. .. .. | .. | 4,08·47 | .. | .. | .. | .. | .. | .. | 4,08·47 | .. | .. | .. |
| பைகாரா நீர் மின்சாரத் திட்டம் .. .. .. | .. | 13,82·83 | .. | .. | .. | .. | .. | .. | 13,82·83 | .. | .. | .. |
| மேட்டூர் நீர் மின்சாரத் திட்டம் .. .. .. | .. | 12,89·21 | .. | .. | .. | .. | .. | .. | 12,89·21 | .. | .. | .. |
| பாபநாசம் நீர் மின்சாரத் திட்டம் .. .. | .. | 10,94·49 | .. | .. | .. | .. | .. | .. | 10,94·49 | .. | .. | .. |
| பெரியாறு நீர் மின்சாரத் திட்டம் .. .. .. | 10,48·00 | 3,54·68 | .. | .. | .. | .. | .. | .. | 3,54·68 | .. | .. | .. |
| குந்தா நீர் மின்சாரத் திட்டம் .. .. .. | .. | 2,21·66 | .. | .. | .. | .. | .. | .. | 2,21·66 | .. | .. | .. |
| சென்னை அனல் மின்சாரத் திட்டம் .. .. | .. | 16,01·60 | .. | .. | .. | .. | .. | .. | 16,01·60 | .. | .. | .. |
| ஏனைய சிறிய திட்டங்கள் .. .. .. .. | .. | 62·08 | .. | .. | .. | .. | .. | .. | 62·08 | .. | .. | .. |
| ஆந்திரா, மைசூர் மாநிலங்களுக்கு மாற்றப்பட்ட திட்டங்கள். | .. | 15,69·08 | .. | .. | .. | .. | .. | .. | 15,69·08 | .. | .. | .. |
| தல அதிகார சபைகள், தனியார்க் கம்பெனிகள், இவற்றின் மின்சார நிறுவனங்களை பெறுவதற்கு இழப்பீடாகக் கொடுக்க மொத்தமாக ஒதுக்கப்பட்ட தொகை. | .. | 41·27 | .. | .. | .. | .. | .. | .. | 41·27 | .. | .. | .. |
| மொத்தம் .. | 10,48·00 | 80,25·37 | .. | .. | .. | .. | .. | .. | 80,25·37 | .. | .. | .. |

* பூர்த்தியான, நடந்தேறி வருகின்ற பல வேலைகள் அடங்குகின்றன. எனவே உத்தேசச் செலவு கொடுக்கப்படவில்லை.

† தற்போதைய தமிழ்நாட்டிற்குச் சம்பந்தப்பட்டதல்ல.

‡ 1957 ஜூலை 1-ம் தேதி முதல் தமிழ் நாடு மின்சார போர்டு செய்த செலவு.

## இணைப்பு II-அ.

**தமிழ் நாட்டின் ரெவின்யூக் கணக்கில் சேராத மூலதனச் செலவினம்—பெருந்தலைப்பில் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.**

(ரூபாய் லட்சத்தில்.)

| பெருந்தலைப்புகள். | 1946-67— 1959-60. | 1960-61. | 1961-62. | 1962-63. | 1963-64. | 1964-65. | 1965-66 | 1966-67. திட்ட மதிப்பீடு. | 1966-67. திருத்த மதிப்பீடு. | திட்ட மதிப்பீடு 1967-68. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| ஜமீன்தாரி ஒழிப்பினால் நிலக்கிழார் முதலியவர்களுக்கு இழப்பீடு கொடுத்தல். | 7,09·70 | 1,25·59 | 16·45 | 12·56 | 4·64 | 4·89 | 2·56 | —1·50 | 2·00 | —1·00 |
| பொதுச் சுகாதார மேம்பாட்டிற்கான மூலதனச் செலவு. | 2,56·15 | 95·26 | 75·20 | 49·88 | 3·42 | —13·23 | —20·92 | —31·94 | 12·01 | 11·91 |
| வேளாண்மை மேம்பாடு-ஆராய்ச்சி மூலதனச் செலவு. | 6·11 | 1·08 | 4·17 | 4·30 | 3·17 | 24·20 | 34·25 | 34·43 | 37·89 | 46·24 |
| பயன்கொள்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மூலதனச் செலவு. | .. | .. | .. | .. | .. | 12·43 | 9·68 | ·19 | .. | .. |
| தொழில் பொருளாதார வளர்ச்சிக்கான மூலதனச் செலவு. | 6,40·30 | 1,14·51 | 96·46 | 1,23·06 | 1,06·54 | 1,55·59 | 5,93·97 | 3,02·43 | 2,88·11 | 3,55·66 |
| பாசனம் முதலிய வேலைகளுக்கான மூலதனச் செலவு (வாணிகத் தன்மையுள்ளவை). | 54,77·23 | 4,04·72 | 4,71·66 | 5,13·44 | 6,62·31 | 8,12·18 | 7,81·23 | 5,94·73 | 4,79·02 | 4,62·39 |
| பாசனம் முதலிய வேலைகளுக்கான மூலதனச் செலவு (வாணிகத் தன்மையற்றவை). | 3,73·75 | 1,82·67 | 1,94·89 | 2,34·90 | 2,99·87 | 2,77·43 | 2,98·43 | 3,36·76 | 3,21·97 | 2,63·02 |
| பொதுப்பணிகளுக்கு மூலதனச் செலவு. | 15,96·11 | 4,70·06 | 5,79·84 | 6,74·60 | 5,87·13 | 6,09·75 | 5,80·01 | 5,53·35 | 5,68·89 | 4,40·59 |
| மின்சாரத் திட்டங்களுக்கு மூலதனச் செலவு. | 72,41·11 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| ரெவின்யூக் கணக்கில் சேராத மற்ற வேலைகளுக்கு மூலதனச் செலவு. | 5,44·47 | 1,26·55 | 1,28·16 | 2,07·69 | 3,24·29 | 3,54·97 | —1,72·45 | 4,63·18 | 4,69·76 | 3,44·57 |
| மோட்டார், நீர் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு. | 3,11·96 | 71·24 | 62·90 | 14·66 | 1,56·47 | 1,55·50 | 1,58·53 | 1,06·53 | 76·62 | 71·84 |
| காட்டு வள மூலதனச் செலவு .. | 68·65 | 29·25 | 32·99 | 51·36 | 63·31 | 59·01 | 71·90 | 80·91 | 77·92 | 56·53 |
| அரசாங்க வாணிபத் திட்டங்களின் மேல் மூலதனச் செலவு. | —26,51·42 | 77·31 | 98·80 | 7·50 | 1,52·96 | 2,94·92 | 10,57·08 | 2,67·97 | 3,31·82 | 57·17 |
| எதிர்பாராச் செலவு நிதிக்கு நிதி ஒதுக்கம். | .. | .. | .. | .. | .. | 3,50·00 | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 1,45,74·13 | 16,98·24 | 17,61·52 | 18,93·95 | 23,64·11 | 30,97·64 | 33,94·27 | 27,07·04 | 26,66·01 | 21,08·92 |



## இணைப்பு III.

**கடன் நிலையைக் காட்டும் பட்டியல்.**

**(i) மக்களிடமிருந்து பெற்ற கடன்கள்.**

(ரூபாய் லட்சத்தில்.)

**அ. 1953-ம் ஆண்டு அக்டோபர் 1-ம் தேதிக்கு முன் பெற்ற கடன்கள்.**

| வெளியிட்ட காலம். | கடன் விவரம். | வெளியிட்ட மொத்தத் தொகை. | 1953-ம் ஆண்டு செப்டம்பர் 30-ந் தேதியில் செல்லாகாத கடன். | 1956-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் தேதியில் செல்லாகாத கடன். | 1966-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதியில் செல்லாகாத கடன். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| செப்டம்பர் 1937-ம் ஆண்டும், செப்டம்பர் 1940-ம் ஆண்டும். | 1952-ம் ஆண்டு 3 சத வீதக் கடன்—முதல், இரண்டு வெளியீடுகள். | 2,33·54 | 0·80 | 0·28 | 0·10 |
| செப்டம்பர் 1938 .. | 1953-ம் ஆண்டு 3 சத வீதக் கடன். | 1,51·29 | 15·20 | 0·48 | 0·21 |
| ஜூன் 1939 .. .. | 1959-ம் ஆண்டு 3 சத வீதக் கடன். | 1,50·00 | 1,23·96 | 1,23·96 | 0·30 |
| செப்டம்பர் 1942 .. | 1955-ம் ஆண்டு 3 சத வீதக் கடன். | 1,25·00 | 1,23·25 | 0·15 | 0·02 |
| ஷை 1943 .. .. | 1956-ம் ஆண்டு 3 சத வீதக் கடன். | 1,25·10 | 1.25·10 | 3·12 | 0·06 |
| ஆகஸ்டு 1944 .. .. | 1958-ம் ஆண்டு 3 சத வீதக் கடன். | 1,10·00 | 1,07·95 | 1,07·92 | 0·10 |
| செப்டம்பர் 1945 .. | 1960-ம் ஆண்டு 3 சத வீதக் கடன். | 3,00·00 | 2,78·44 | 2,78·44 | .. |
| ஷை 1946 .. .. | 1961-ம் ஆண்டு 2¾ சத வீதக் கடன். | 4,09·30 | 3,81·77 | 3,81·77 | 0·11 |
| ஜூலை 1950 .. .. | 1960-ம் ஆண்டு 3 சத வீத திட்ட வளர்ச்சிக் கடன் பத்திரங்கள். | 4,39·75 | 4,38·25 | 4,38·25 | 0·34 |
| செப்டம்பர் 1951 .. | 1962-ம் ஆண்டு 3½ சத வீதக் கடன். | 3,01·49 | 3,01·49 | 3,01·49 | 0·24 |
| ஆகஸ்டு 1952 .. .. | 1964-ம் ஆண்டு 4 சத வீதக் கடன். | 5,24·81 | 5,24·81 | 5,24·81 | 11·11 |
| ஜூலை 1953 .. .. | 1963-ம் ஆண்டு 4 சத வீதக் கடன். | 10,33·71 | 10,33·71 | 10,33·71 | 12·15 |
| | மொத்தம்—அ. .. | 39,03·99 | 34,54·73 | 31,94·38 | 24·74 |

**ஆ. 1953-ம் ஆண்டு அக்டோபர் 1-ம் தேதி முதல் 1956-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் தேதி வரை பெற்ற கடன்கள்.**

(ரூபாய் லட்சத்தில்.)

| வெளியிட்ட காலம். | கடன் விவரம். | வெளியிட்ட மொத்தத் தொகை. | 1956-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் தேதியில் செல்லாகாத கடன். | 1966-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதியில் செல்லரகாத கடன். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| ஆகஸ்டு 1955 .. | 1967-ம் ஆண்டு 4 சத வீதக் கடன். | 10,47·17 | 10,47·17 | 10,47·17 |
| செப்டம்பர் 1956 .. | 1968-ம் ஆண்டு 4 சத வீதக் கடன். | 13,83·56 | 13,83·56 | 13,83·56 |
| | மொத்தம்—ஆ. .. | 24,30·73 | 24,30·73 | 24,30·73 |

[1967 மார்ச் 20

## கடன் நிலையைக் காட்டும் பட்டியல்—தொடர்ச்சி.

### (i) மக்களிடமிருந்து பெற்ற கடன்கள்—தொடர்ச்சி.

#### இ. 1956-ம் ஆண்டு நவம்பர் 1-ம் தேதிக்குப் பிறகு பெற்ற கடன்கள்.

| வெளியிட்ட காலம். | கடன் விவரம் | வெளியிட்ட மொத்தத் தொகை. | 1966-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதியில் செல்லாகாத கடன். |
|---|---|---|---|
| (1) | | (3) | (4) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) | |
| ஜூலை 1958 .. .. | 1970-ம் ஆண்டு 4¼ சத வீதக் கடன் .. .. | o,55·57 | 5,55·57 |
| ஆகஸ்டு 1959 .. .. | 1971-ம் ஆண்டு 4 சத வீதக் கடன் .. .. | 8,72·75 | 8,72·75 |
| ஆகஸ்டு 1960 .. .. | 1969-ம் ஆண்டு 4 சத வீதக் கடன் .. .. | 12,20·72 | 12,20·72 |
| செப்டம்பர் 1961 .. .. | 1972-ம் ஆண்டு 4¼ சத வீதக் கடன் .. .. | 10,44·00 | 10,44·00 |
| ஆகஸ்டு 1962 .. .. | 1974-ம் ஆண்டு 4½ சத வீதக் கடன் .. .. | 13,25·39 | 13,25·39 |
| ஆகஸ்டு 1964 .. .. | 1976-ம் ஆண்டு 4¾ சத வீதக் கடன் .. .. | 14,33·32 | 14,33·32 |
| ஆகஸ்டு 1965 .. .. | 1977-ம் ஆண்டு 5½ சத வீதக் கடன் .. .. | 14,44·27 | 14,44.27 |
| செப்டம்பர் 1966 .. .. | 1978-ம் ஆண்டு 5½ சத வீதக் கடன் .. .. | 13,24·32 | .. |
| | மொத்தம்—இ. .. | 92,20·34 | 78,96·02 |

### (ii) திரும்பப் பெற முடியாத சிறப்புக் கடன்கள்.

| | மொத்தத் தொகை. |
|---|---|
| | ரூபாய். |
| (1) 1796—1807-ம் ஆண்டுகளுக்கிடையில் வெளியிடப்பட்ட 8 சத வீதக் கடன்களில் நான்கு பத்திரங்கள். | 1,33,000 |
| (2) 1795—1817-ம் ஆண்டுகளுக்கிடையில் வெளியிடப்பட்ட 6 சத வீதக் கடன்களில் இரண்டு பத்திரங்கள். | 10,500 |
| (3) 1817-ம் ஆண்டில் பெறப்பட்ட 6 சத வீத வட்டி வீதத்தை உடைய வைப்புத் தொகை | 41,770 |
| (4) 4 சத வீத வட்டி வீதத்தை உடைய ஒரு வைப்புத் தொகை (இப்போது இத்தொகை சென்னை ஸ்டான்லி மருத்துவ மனைக்கு அறக் கட்டளையாக வைக்கப்பட்டிருக்கிறது). | 66,878 |
| மொத்தம்—(ii) .. | 2,52,148 அல்லது 2.52 லட்சம். |

### சுருக்கம்.

(மக்களிடமிருந்து பெறும் கடன்களும், திரும்பப் பெற முடியாத சிறப்புக் கடன்களும்.)

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| (1) 1953-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் தேதிக்கு முன்பு மக்களிடமிருந்து பெற்ற கடனில் செல்லாகாத நமது பங்கு. | 24·74 |
| (2) 1953-ம் ஆண்டு அக்டோபர் 1-ம் தேதிக்குப் பிறகும், 1956-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் தேதிக்கு முன்பும் மக்களிடமிருந்து பெற்ற கடனில் செல்லாகாத நமது பங்கு. | 19,78·61 |
| (3) 1956-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதிக்குப் பிறகு எழுப்பப்பட்ட கடன்கள் .. | 78,96·02 |
| | 98,99·37 |
| (4) 1956-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் தேதிக்கு முன்பு திருவாங்கூர்-கொச்சி மாநிலம், மக்களிடமிருந்து பெற்ற கடனில் நமது பங்கு. | 21·21 |
| (5) மக்களிடமிருந்து பெற்ற கடன் வகையில், 1966-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதியில் மொத்தப் பொறுப்பு. | 99,20·58 |
| (6) மக்கள் தொகை வீதாசாரத்தில் திரும்பப் பெற முடியாத கடன்கள் குறித்து நமது பங்கு. | 1·29 |
| (7) மக்களிடமிருந்து பெற்ற கடன்கள், திரும்பப் பெற முடியாத சிறப்புக் கடன்கள், **இவை காரணமாக 1966- மார்ச் 31-ம் தேதியன்று மொத்தப் பொறுப்பு.** | **99,21·87** |



1967 மார்ச் 20]

## மத்திய அரசினிடமிருந்தும், சுயேச்சை அதிகார சபைகளிடமிருந்தும் பெற்ற கடன்களில் 1966 மார்ச் 31-ம் தேதியன்று செல்லாகாமல் உள்ள கடன்களைக் காட்டும் அறிக்கை.

(1956 நவம்பர் 1-ம் தேதிக்கு முன்புள்ள கால அளவுக்கான புள்ளிவிவரங்கள், மக்கள் தொகை வீதாச்சாரப்படி, சீரமைத்த தமிழ் நாட்டின் தற்காலிகப் பங்கைக் குறிக்கிறது.)

### அ. தமிழ்நாடு அரசாங்கம் பெற்றுள்ள கடன்கள்.

| | 1966 மார்ச் 31-ம் தேதியன்று இருந்த செல்லாகாக் கடன்களில் தமிழ்நாட்டின் பங்கு. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் லட்சத்தில்.) |
| மாகாண சுயாட்சிக்கு முற்பட்ட மொத்தக் கடன் .. .. .. .. .. | 1,12.75 |
| 1947 ஆகஸ்டு 15-ம் தேதியிலிருந்து 1953 செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரையில் பெற்ற கடன்கள். | 14,08.50 |
| 1953 அக்டோபர் 1-ம் தேதியிலிருந்து 1956 அக்டோபர் 31-ம் தேதி வரையில் பெற்ற கடன்கள். | 5,61.09 |
| 1956 நவம்பர் 1-ம் தேதியிலிருந்து 1966 மார்ச் 31-ம் தேதி வரையில் பெற்ற கடன்கள் | 2,48,48·77 |
| மொத்தம்—அ. .. | 2,69,31.11 |

### ஆ. முன்னாள் திருவாங்கூர்-கொச்சி அரசாங்கம் பெற்ற கடன்கள்.

600 008
138203
D
V211,31 N67
N67·1,2

| | 1956 நவம்பர் 1-ம் தேதிக்கு முன்பு முன்னாள் திருவாங்கூர்-கொச்சி மாநில அரசாங்கம் எழுப்பிய கடன்களில் செல்லாகாமலுள்ள கடனில் தமிழ் நாட்டின் பங்கு. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் லட்சத்தில் ) |
| மாகாண சுயாட்சிக்கு முற்பட்ட கடன் .. .. .. .. .. .. .. | 1·41 |
| 1947 ஆகஸ்டு 15-ம் தேதி முதல் 1956 அக்டோபர் 31-ம் தேதி வரையில் பெற்ற கடன்கள், | 17,98 |
| மொத்தம்—ஆ. .. | 19.39 |

### இ. சுயேச்சை அதிகார சபைகளிடமிருந்து பெற்ற கடன்களில் செல்லாகாமலுள்ள கடன்கள் (1966 மார்ச் 31-ம் தேதியன்றிருந்தபடி).

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| தேசியக் கூட்டுறவு வளர்ச்சி—கிடங்குச் சபையிடமிருந்து பெற்ற கடன்கள் .. .. | 3,07.51 |
| இந்திய ரிசர்வ் பாங்கினைச் சேர்ந்த தேசிய வேளாண்மைக் கடன் (நீண்ட கால விவகார) நிதியிலிருந்து கடன்கள். | 3,45.22 |
| அகில இந்தியக் கதர்-கிராமத் தொழில்கள் கமிஷனிடமிருந்து பெற்ற கடன்கள் .. | .20 |
| இந்திய ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனிடமிருந்து பெற்ற கடன்கள் .. .. | 9,78.94 |
| இந்திய ஸ்டேட் பாங்கியிடமிருந்து கடன்கள் .. .. .. .. .. .. .. | 10,00·00 |
| மொத்தம்—இ. .. | 26,31.87 |
| **பெரு மொத்தம்—அ+ஆ+இ ..** | **2,95,82.3** |

## பல்வேறு திட்டங்களுக்காக மத்திய அரசினரிடமிருந்து பெற்ற கடன்கள், 1966 மார்ச் 31-ம் தேதியன்றுள்ளபடி செல்லாகாக் கடன்கள் இவை பற்றிய சுருக்கம்.

| தொடர் எண், கடன் பற்றிய விவரம். (1) | 1966 மார்ச் 31-ம் தேதியன்றிருந்த செல்லாகாக் கடன்கள். (2) |
|---|---|
| | ரூ. |
| **கடன்கள்.** | |
| 1. சுயாட்சிக்கு முற்பட்ட கடன் .. .. .. .. .. .. .. .. | 1,12,75,433 |
| 2. கொச்சி துறைமுக வேலைகளுக்கான கடன்கள் .. .. .. .. .. | 1,41,139 |
| 3. கைத்தறி, கதர்த் தொழில் வளர்ச்சிக்கான கடன்கள் .. .. .. .. | 4,17,28,212 |
| 4. விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்கான கடன்கள் .. .. .. .. .. | 67,47,591 |
| 5. உதவித் தொகையுடன் நிறைவேற்றப்படும் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்திற்கான (தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி உட்பட) கடன்கள். | 1,22,90,619 |
| 6. மின்சக்தி வசதிகள் விஸ்தரிப்புக்கான கடன்கள் .. .. .. .. .. | 2,72,95,852 |
| 7. சிறு சேமிப்பு வசூல்களைப் பங்கிடும் திட்டத்தின் கீழ்க் கடன்கள் .. .. .. | 33,66,03,925 |
| 8. சிறு ரகத் தொழில்கள் வளர்ச்சிக்காகக் கடன்கள் .. .. .. .. .. | 6,78,17,226 |
| 9. அதிக உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ்க் கடன்கள் .. .. .. .. | 11,73,53,226 |
| 10. சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ்க் கடன்கள் .. .. .. .. .. | 7,27,92,629 |
| 11. தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்தின் கீழ்க் கடன்கள் .. .. .. .. | 17,97,527 |
| 12. தொழில் நுட்பக் கூட்டுறவு உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பொருள்கள், சாதனங்கள் விலை காரணமாகக் கடன்கள்—சமுதாய வளர்ச்சித் திட்டம், கிராம மின்சார வசதித் திட்டம், குழாய்க் கிணறுத் திட்டம். | 64,81,653 |
| 13. பால் பண்ணை வளர்ச்சித் திட்டத்திற்காகக் கடன்கள் .. .. .. .. | 23,118 |
| 14. காட்டு வள, மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான கடன்கள் .. .. .. | 3,21,67,320 |
| 15. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களினால் குடியிருப்புக்கள் கட்டப்படும் பொருட்டுக் கடன்கள். | 12,65,296 |
| 16. குறைந்த வருமானத் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கடன்கள் | 3,29,08,570 |
| 17. தேசிய நீர் வழங்கல்—சுகாதாரத் திட்டங்களின் கீழ்க் கடன்கள் .. .. .. | 1,87,62,204 |
| 18. பாசனம், மின்சக்தி முதலியவை போன்ற பல்வகை மேம்பாட்டுக் காரியங்களுக்கானக் கடன்கள். | 85,09,42,838 |
| 19. பாசனத் திட்டங்களுக்காகும் செலவிற்கு நிதியளிப்பதற்காகக் கடன்கள் .. .. | 95,13,749 |
| 20. பற்றுக்குறைப் பகுதிகளில் நிலையான மேம்பாடுகள் செய்யும் திட்டத்துக்காகக் கடன்கள். | 3,75,88,906 |
| 21. போலீஸ் வீட்டு வசதித் திட்டங்களுக்காகும் மூலதனச் செலவுக்காக நிதியளிக்கும் பொருட்டுக் கடன்கள். | 2,76,17,728 |
| 22. கூட்டுறவு வளர்ச்சிக்காகக் கடன்கள் (கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் பங்கு கொள்வதற்கான கடன்கள் உட்பட). | 55,01,298 |
| 23. சிறிய துறைமுகங்கள் வளர்ச்சிக்கான கடன்கள் .. .. .. .. .. | 69,44,163 |
| 24. பஞ்சத் தணிப்பு வேலைகளுக்கான கடன்கள் .. .. .. .. .. | 58,29,535 |
| 25. புயல் நிவாரண வேலைகளுக்கான கடன்கள் .. .. .. .. .. | 1,30,46,251 |
| 26. சேரி மேம்பாட்டுத் திட்டத்திற்கான கடன்கள் .. .. .. .. .. .. | 1,46,45,726 |
| 27. கைப் பணிகள் வளர்ச்சிக்கான கடன்கள் .. .. .. .. .. .. | 79,88,026 |
| 28. பட்டுத் தொழில் வளர்ச்சிக்கான கடன்கள் .. .. .. .. .. .. | 4,32,337 |
| **கடன்கள்—தொடர்ச்சி.** | |
| 29. தரமான விதைகளைப் பெருக்கி வழங்குவதற்கான திட்டத்தின்கீழ்க் கடன்கள் .. | 2,01,438 |
| 30. கயிறு தயாரிப்புத் தொழில் வளர்ச்சிக்கான கடன்கள் .. .. .. .. | 6,85,205 |
| 31. குடியேற்றத் திட்டத்தின்கீழ்க் கடன்கள் .. .. .. .. .. .. | 77,169 |
| 32. மத்திய அரசினர் ஊக்குவிக்கும், மத்திய அரசினரின் உதவி பெறும் மருத்துவ-பொதுச் சுகாதாரத் திட்டங்களுக்கான கடன்கள். | 13,05,67,131 |
| 33. மாநில மேம்பாட்டுத் திட்டங்களுக்கான (வேளாண்மை முதலியன) கடன்கள் .. | 17,39,75,606 |
| 34. கைத்தறிகளை விசைத் தறிகளாக மாற்றுவதற்கான கடன்கள் .. .. .. | 2,035 |
| 35. நில ஆர்ஜித மேம்பாட்டுத் திட்டங்களுக்கான கடன்கள் .. .. .. .. | 69,45,739 |
| 36. ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்திற்கு வழங்கிய வழி-வகை முன்பணம் கடனாகக் கருதப்படுகிற வகையில். | 13,47,16,628 |
| 37. கொழும்புத் திட்டத்தின்கீழ் குந்தா திட்டத்திற்காக வழங்கப்பட்ட பொருள்கள்—சாதனங்கள் விலை குறித்த கடன்கள். | 4,37,91,120 |
| 38. பெரிய, நடுத்தரத் தொழில்கள் வளர்ச்சிக்கான கடன்கள் .. .. .. .. | 10,21,058 |
| 39. கிராம வீட்டு வசதித் திட்டங்களுக்கான கடன்கள் .. .. .. .. .. | 25,95,113 |
| 40. பதப்படுத்தும்—பாதுகாக்கும் யந்திரங்களை நிறுவுவதற்கான கடன்கள் .. .. | 5,383 |
| 41. மெட்ரிக் முறை எடைகள்—அளவைகளை மேற்கொள்வதற்கான கடன்கள் .. | 8,21,202 |
| 42. வீடு கட்டும் காரியங்களுக்காக அனைத்திந்திய அதிகாரிகளுக்குக் கடன்கள் .. | 17,80,933 |
| 43. சென்னை பால் வழங்கு திட்டத்திற்கான கடன்கள்—நியுஜிலாந்து உதவி .. .. | 7,32,204 |
| 44. கால்நடை பராமரிப்பு, பால் பண்ணை, மீனளம் ஆகிய திட்டங்களுக்கான கடன்கள் | 2,62,90,528 |
| 45. பழ உற்பத்தி மேம்பாட்டுக்கான கடன்கள் .. .. .. .. .. .. | 84,900 |
| 46. நிலமில்லாத தொழிலாளர்களை மீண்டும் குடியமர்த்துவதற்கான கடன்கள் .. | 45,492 |
| 47. கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்க வேலைத் திட்டங்களுக்குக் கடன்கள் வழங்குதல். | 72,56,700 |
| 48. கிராமங்களுக்கு மின்சார வசதிக்கான கடன்கள் .. .. .. .. | 22,00,00,000 |
| 49. பொது மக்களிடமிருந்து எழுப்பிய கடன்களிலிருந்து கடன்கள் வழங்குதல் .. | 13,00,00,000 |
| 50. பொற்கொல்லர்கள் புனர்வாழ்விற்காகக் கடன்கள் .. .. .. .. .. | 2,27,52,800 |
| 51. ஏனைய வழி-வகை முன் பணங்கள் .. .. .. .. .. .. .. | 1,92,000 |
| 52. பாரத் சேவக் சமாஜத்திற்காக மேசை, நாற்காலி போன்ற பொருள்களைத் தயாரிப்பதற்குக் கடன்கள். | 3,056 |
| 53. தேசியக்கடன்—உபகாரச் சம்பளத் திட்டத்தின் கீழ்க் கடன்கள் .. .. .. | 50,51,760 |
| 54. கிராமதான—பூதானப் பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள் வழங்குதல் | 6,75,450 |
| 55. கிராமத் தொழில்களின் மும்முர வளர்ச்சிக்கான கடன்கள் .. .. .. .. | 21,73,000 |
| 56. சிறப்பு வளர்ச்சித் திட்டத்திற்கான கடன்கள் (விரைவுத் திட்டம்) .. .. .. | 1,18,08,428 |
| 57. பர்மாவிலிருந்து தாயகம் திரும்பி வரும் இந்தியர்களுக்கு உதவியையும், மறு வாழ்வையும் அளிப்பதற்கான நடவடிக்கைகள். | 1,02,75,500 |
| பெரு மொத்தம் .. | 2,69,50,49,775 |

# தமிழகச் சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1967 மார்ச் 21.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் நட்சத்திரக் குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** பேரவையின் முதல் அலுவல் கேள்வி பதில். மதிப்பிற்குரிய அமைச்சர்கள் பதில் சொல்வதற்குக் கேள்விகள் இல்லை.

## 1. அறிவிப்பு.

### ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—அனுமதித்தல் குறித்த நடைமுறை.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** ஒரு சில ஒத்திவைப்புத் தீர்மானங்கள் (Adjournment Motions) என்னிடம் கொடுக்கப் பட்டுள்ளன. அவைகளைப்பற்றி என்னுடைய அறிவிப்பு ஒன்று உள்ளது. சபையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கொண்டு வருகிற தீர்மானங்களை அனுமதிப்பதா இல்லையா என்பதைப் பொறுப்புணர்ச்சியோடு கவனிக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன். அவையின் நடவடிக்கைகளைத் தள்ளி வைக்க வேண்டுமென்ற தீர்மானங்கள் அவையின் அன்றாட நடவடிக்கை களைப் பாதிக்கக்கூடியவை. ஆகையால், மிக முக்கியமானவை என்று கருதி, இப்படிப்பட்ட தீர்மானங்களையொட்டி நடைமுறை (Procedure) இன்னது என்று வரையறுக்க மன்ற உறுப்பினர் களின் முதல்வர் அவர்கள் (Leader of the House) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் (Leader of the Opposition) ஆகியோருடன் கலந்து ஆலோசித்து நான் எடுத்த முடிவுகளைத் தெரிவிக்கிறேன்.

43-வது விதிக்கிணங்க ஒத்திவைப்புத் தீர்மானத்தை கொண்டு வருகிற மதிப்பிற்குரிய உறுப்பினர், தீர்மானத்தை அவைக்குக் கொண்டு வருவதற்கு முன்னால் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்றாக வேண்டும். பேரவைத் தலைவரை அவருடைய அறையில் சந்தித்து, தீர்மானத்திற்கு அனுமதி பெறுவது பற்றி விவாதிக்கப் போதிய வாய்ப்புக் கொடுக்கப்படும்.

அதன் பின் 45-வது விதிப்படி தீர்மானத்தின் வாசகத்தைச் பேரவைத் தலைவர் இந்த அவையில் படித்துத் தீர்மானம் அனுமதிக் கப்பட்டுள்ளதா இல்லையா என்ற தீர்ப்பைத் தெரியப்படுத்துவார்.

அதைப் பற்றிய விவாதம் எதுவும் இந்த அவையில் நடைபெறாது. விதிகளுக்கிணங்க, மன்ற முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் ஒப்புதலுடன் ஒத்தி வைப்புத் தீர்மானத்தையொட்டிய இந்த நடைமுறை (Procedure) செயலாக்கப்படும் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு நான் அறிவித்துக் கொள்கிறேன்.

## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) வருஷநாடு மலைப்பிரதேசத்தில் விவசாயிகள் வெளியேற்றப்படுதல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய வாசகத்தை நான் அப்படியே படிக்க வேண்டுமென்று இப்போது நடைமுறை தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

"மதுரை மாவட்டத்தில் வருஷநாடு மலைப் பிரதேசத்தில் 14 கிராமங்களில் போலீசாரும், வன இலாகா அதிகாரிகளும் பலவந்தமாக விவசாயிகளைக் கிராமங்களை விட்டு வெளியேற்றுகின்றனர். சொந்த உழைப்பின் மூலம் பண்படுத்தி, நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டுவந்து பல ஆண்டுகாலமாக விவசாயம் செய்து வருகின்றனர். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அழிந்துவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் அரசினர் தலையிட்டு உடனே வெளியேற்றுகின்ற நடவடிக்கைகளைத் தடை செய்யவேண்டும்" என்று கோரி தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். இதைப் பற்றிய என்னுடைய தீர்ப்பு—

இது அரசினரின் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்டது. ஆகவே, விதிகளின்படி இதற்கு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வர முடியாது. மேலும், இதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் விவாதிக்க வாய்ப்பு இருக்கிறது. கவர்னர் உரையின்மீது பேசும்போது இதைப் பற்றிக் குறிப்பிடலாம். ஆகவே, பேரவைத் தலைவருடைய அனுமதி இந்தத் தீர்மானத்திற்குக் கொடுக்கப்படவில்லை என்று அறிவிக்கிறேன்.

### (இ) இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றிய கோப்புகள் திடீரென்று மறைதல்.

MR. SPEAKER : Now, let us take up the notice of Adjournment Motion given by hon. Member Dr. H. V. Hande. The notice reads as follows :—

"I wish to adjourn the business of this House to discuss a matter of urgent public importance, namely, the sudden missing of a few files immediately after the announcement of the election results and before the present Ministry assumed office. The files are mostly connected with the anti-Hindi agitation that took place in 1965."





On this my ruling is as follows :—

Although I admit that the matter raised in the notice does not relate to the day-to-day administration of the Government, it is in the nature of eliciting information. The hon. Member will have an opportunity to refer to this matter in the course of the discussion on the Interim Budget, or he may even call the attention of the Honourable Minister concerned under rule 11 of the Assembly Rules, or he may give a short notice question and get the answers. Therefore, it is not necessary to adjourn the business of the House to discuss this particular matter. The Honourable Member will certainly have an opportunity to discuss this matter in the course of the discussion on the Interim Budget. So, I withhold my consent to the Hon. Member to move the Adjournment Motion.

அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1966-67ம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகளை (**Final** Supplementary Estimates) அவை முன் வைத்து உரையாற்றுவார்கள்.

## 3. ஒழுங்குப் பிரச்சினைகள்.

### (அ) பத்திரிகையிலிருந்து குறிப்புகள் படித்தல்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப விரும்புகிறேன். நேற்று ஒரு கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்படியான சந்தர்ப்பத்தில் பத்திரிகையில் இருந்து சில குறிப்புகளை வாசித்தார்கள். எனக்குத் தெரிந்தவரை அதைப் பொருத்து சட்ட விதிமுறைகள் எப்படி இருக்கின்றன என்றால் எந்த அங்கத்தினரும் சட்டசபையில், பத்திரிகைகளிலிருந்து எடுத்து படிப்பதற்கு விதிகள் இருக்கின்றன என்பதுதான். பத்திரிகைகளிலிருந்து குறிப்புகளை எடுத்துச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. நேற்று எங்கள் கட்சி அங்கத்தினர் அவர்கள் பத்திரிகையிலிருந்து எடுத்துச் சொன்னது சட்ட வரம்புக்கு உட்பட்டது, சட்ட நியாயந்தான் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, பத்திரிகைக் குறிப்புகளை வாசிப்பதற்கு எல்லா அங்கத்தினர்களுக்கும் உரிமையுண்டு; அதிலே எந்த விதமான ஒழுங்குப் பிரச்சினையும் எழுப்ப அவசியம் இல்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : Mr. Speaker, Sir, I may be permitted to say a few words regarding this matter. The relevant rule is rule 68 of the Assembly Rules and it runs thus :

A member present at a sitting of the House, and not speaking shall not read any newspaper except in connection with the [illegible]s of the House.

**கடனுக்குரிய வட்டி முதலிய செலவுகள், 1961–62 முதல் 1967–68 வரை.**

| (1) | கணக்குகள், 1962–63. (2) | கணக்குகள், 1963–64. (3) | கணக்குகள், 1964–65. (4) | கணக்குகள், 1965–66. (5) | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, 1966–67. (6) | திருத்த மதிப்பீடு, 1966–67. (7) | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, 1967–68. (8) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| அ. வட்டி— | | | | | | | |
| பொது மக்களிடமிருந்து எழுப்பிய கடன்களுக்கான வட்டி (நிகரம்) .. .. | 2,87·49 | 3,21·20 | 3,24·73 | 3,82·12 | 4,78·33 | 4,75·57 | (a)5,49·23 |
| கடனில் தள்ளுபடி .. .. | 3·53 | 0·05 | 3·63 | 7·22 | 5·00 | 19·87 | 30·00 |
| இந்திய ரிஸர்வ் பாங்க் கொடுத்த வழிவகை முன் பணத்தின் மீது வட்டி .. .. .. | 5·54 | 31·03 | 2·64 | 48·67 | 20·00 | 40·00 | (b)40·00 |
| புதிய கடன் எழுப்புதல் முதலியவற்றிற்கான செலவு. | 2·86 | 1·79 | 2·38 | 4·33 | 3·62 | 3·32 | 3·98 |
| இந்திய அரசு கொடுத்த கடன்களுக்கான வட்டி | 5,28·07 | 6,52·62 | 8,26·49 | 9,82·48 | 12,65·40 | 12,70·00 | (c)14,27·00 |
| சுயாட்சி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்களுக்கான வட்டி .. | 18·36 | 32·59 | 40·60 | 52·24 | 71·92 | 1,36·50 | 1,57·35 |
| வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி .. .. . | 38·43 | 46·42 | 54·97 | 68·71 | 76·04 | 83·95 | 97·42 |
| தேய்மான சேமநிதி, ஏனைய வட்டி பெறும் வைப்புத் தொகைகளுக்கான வட்டி. | 19·48 | 43·31 | 35·83 | 48·36 | 29·14 | 44·95 | 42·45 |
| மொத்தம் .. | 9,03·76 | 11,28·86 | 12,91·27 | 15,94·13 | 19,49·45 | 20,74·16 | 23,47·43 |
| நிகர மொத்தம்—அ.—ஆ. .. | 9,03·76 | 11,28·86 | 12,91·27 | 15,94·13 | 19,49·45 | 20,74·16 | 23,47·43 |
| ஆ. கடன் கரைப்பு நிதி— | | | | | | | |
| பொது மக்களிடமிருந்து எழுப்பிய கடன்களின் கடன் தேய்மான நிதிக்கு உதவித் தொகை .. .. .. | 1,00·24 | 1,08·96 | 1,04·95 | 1,26·46 | 1,48·13 | 1,48·12 | (d)1,55·20 |
| பொதுக்கடன் கரைப்பு நிதிக்கு உதவித் தொகை .. | 6·33 | 14·94 | 21·01 | 17·00 | 4,26·00 | 5,40·74 | (e)6,16·92 |
| மொத்தம்—ஆ. .. | 1,06·57 | 1,23·90 | 1,25·96 | 1,43·46 | 5,74·13 | 6,88·86 | 7,72·12 |
| பெரு மொத்தம்—கடன் செலவுகள் (நிகரம்) .. | 10,10·33 | 12,52·76 | 14,17·23 | 17,37·59 | 25,23·58 | 27,63·02 | 31,19·55 |

குறிப்பு.—(a) 1966-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் எழுப்பிய புதிய கடன்மீது ஒரு முழு ஆண்டிற்கான வட்டிக்கு நிதி ஒதுக்கம் செய்துள்ளதால் மதிப்பீடு அதிகரித்துள்ளது.

(b) ரிஸர்வ் பாங்கிலிருந்து பெறக்கூடிய குறுகிய காலக் கடன்களுக்கான வட்டிச் செலவு குறித்து ஒதுக்கிய மொத்தத் தொகை.

(c) 1966–67-ல் கிடைக்கும் கடன்களுக்காகக் கொடுக்கத்தக்க கூடுதல் வட்டி இந்த அதிகரிப்புக்குக் காரணமாகும்.

(d) நடப்பு ஆண்டில் எழுப்பிய புதிய கடனுக்காக் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்துள்ளதால் மதிப்பீடு அதிகரித்துள்ளது.

(e) இந்த நிதியில் சேர்ந்துள்ள தொகைகள், கடனைத் தீர்க்கவேண்டிய காலம் முடியும்போது கடனின் எஞ்சிய தொகையை முழுவதும் கொடுத்துத் தீர்க்கப் போதுமானவையாகும் என்று நான்காவது திட்டக் கமிஷன் கருத்துத் தெரிவித்துள்ளது. இந்த பரிவுரையைக் கருத்தில் கொண்டு, 1966–67-ல் கடன் கரைப்பு நிதிக்குக் கொடுக்கும் தொகையை அரசாங்கம் அதிகரித்துள்ளது.



## இணைப்பு—IV.

**தமிழ் நாட்டின் சில மூலதனப் பொறுப்புகள் இருப்புகள் ஆகியவற்றைக் காட்டும் அறிக்கை.**

| (1) | 1966 மார்ச் 31-ம் தேதி யன்று இருந்த பொறுப்புகள். (2) | எதிர்பார்க்கப்படும் பொறுப்புகள் 1966–67-ல். (3) | எதிர்பார்க்கப்படும் பொறுப்புகள் 1967–68-ல். (4) | 1968 மார்ச் 31-ம் தேதி யன்று இருக்குமென்று எதிர்பார்க்கப் படும் மொத்தப் பொறுப்புகள். (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| பொறுப்புகள். | | | | |
| கடன்கள்— | | | | |
| இந்திய அரசுக்குக் கொடுக்க வேண்டியவை .. | 2,69,50·50 | 26,73·95 | 15,04·01 | 3,11,28·46 |
| பொது மக்களிடமிருந்து எழுப்பப்பட்ட கடன்கள். | 99,20·58 | 12,99·57 | 9,47·61 | 1,21,67·76 |
| திரும்பப் பெற இயலாத சிறப்புக் கடன்கள் .. | 1·29 | .. | .. | 1·29 |
| ஏனைய தற்காலிகக் கடன்கள் .. .. .. | 3,75·20 | .. | 85·00 | 4,60·00 |
| ஏனைய கடன்கள் .. .. .. .. | 26,31·87 | 6,56·98 | 1,28·51 | 34,17·36 |
| ஏனைய பொறுப்புகள். | | | | |
| மாநில வருங்கால வைப்பு நிதியும் சேமிப்பு வைப்புத் தொகைகளும் .. .. .. | 17,73·82 | 1,55·36 | 1,50·09 | 20,79·27 |
| மொத்தம்—பொறுப்புகள் .. | 4,16,53·06 | 47,85·86 | 28,15·22 | 4,92,54·14 |

| (1) | 1966 மார்ச் 31-ம் தேதி யன்று இருந்த இருப்புகள். (2) | எதிர்பார்க்கப்படும் இருப்புகள். 1966–67-ல். (3) | எதிர்பார்க்கப்படும் இருப்புகள். 1967–68-ல். (4) | 1968 மார்ச் 31-ம் தேதி யன்று இருக்குமென்று எதிர்பார்க்கப் படும் மொத்த இருப்புகள். (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| இருப்புகள்— | | | | |
| வழங்கப்பட்ட கடன்கள் (அரசாங்கத்துக்குச் சேர வேண்டியவை) .. .. .. .. | 90,39·95 | 16,50·89 | 9,66·21 | 1,16,57·05 |
| மின்சார போர்டுக்குக் கடன்கள் .. .. | 1,75,59·10 | 9,75·00 | 9,34·00 | 1,94,68·10 |
| மூலதனச் செலவு .. .. .. .. | 2,12,65·27 | 23,34·19 | 20,51·75 | 2,56,51·21 |
| ரொக்க இருப்பும் முதலீடுகளும் .. .. | 12,83·50 | —6,14·37 | —9,18·19 | —2,49·06 |
| மொத்தம்—இருப்புகள் .. | 4,91,47·82 | 43,45·71 | 30,33·77 | 5,65,27·30 |

| (1) | 1966 மார்ச் 31-ம் தேதி யன்று இருந்த இருப்புகள். (2) | எதிர்பார்க்கப்படும் இருப்புகள் 1967 மார்ச் 31-ம் தேதியன்று. (3) | எதிர்பார்க்கப்படும் இருப்புகள் 1968 மார்ச் 31-ம் தேதியன்று. (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | |
| பொறுப்புகளுக்கு மேற்பட்டு அதிகமாயுள்ள இருப்புகள் .. .. | 74,94·76 | 70,54·61 | 72,7[illegible]·16 |

I would also invite the attention of the House to two passages in May's 'Parliamentary Practice'. On page 443 of the book, it is said :

" *Reading of books, etc.*

Members are not to read books, newspapers or letters in their places. This rule, however, must now be understood with some limitations; for although it is still irregular to read newspapers, any books and letters may be referred to by Members preparing to speak, but not to be read, for amusement or for business unconnected with the debate."

There is also another passage on page 441 which runs as follows :—

" *Citing documents not before the house.*

Another rule or principle of debate may be here added. A Minister of the Crown is not at liberty to read or quote from a despatch or other State paper not before the House, unless he be prepared to lay it upon the table. This restraint is similar to the rule of evidence in courts of law, which prevents counsel from citing documents which have not been produced in evidence. The principle is so reasonable that it has not been contested; and when the objection has been made in time, it has been generally acquiesced in. It has also been admitted that a document which has been cited ought to be laid upon the table of the House if it can be one without injury to the public interests. A Minister who summarizes a correspondence but does not actually quote from it, is not bound to lay it upon the table. The rule for the laying of cited documents cannot be held to apply to private letters or memoranda."

I would like to get a ruling from the Chair whether reading of an extract from a newspaper in connection with the business of the House is in order.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** அவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளிலிருந்து குறிப்புகளைத் தருவது பற்றி விதிகள் எப்படியிருந்தாலும் என் கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒரே செய்தியை ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு வகையிலே அவர்கள் வெளியிட்டிருக்கக்கூடும், சிறு சிறு மாறுதல்களோடு. ஒரு உறுப்பினர் ஒரு பத்திரிகையைப் படித்து அதனுடைய கருத்து இதுதான் என்று சொல்லுகிற நேரத்தில், இன்னொரு உறுப்பினர் இன்னொரு பத்திரிகையைப் படித்துக் காட்டி, அதற்கு நேர்மாறான அல்லது அதிலிருந்து சற்று விலகிய கருத்தைக் கொள்ளும்படியாகச் செய்ய முடியும். ஆகவேதான், கூடுமானவரையில் பத்திரிகைக் குறிப்புகளை நாம் பயன்படுத்துவதை வெகுவாகக் குறைத்துக் கொண்டால் சிக்கலற்றதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். மற்றபடி, கனம் நண்பர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னபடி அதற்கு விதிமுறைகள் எல்லாம் இடம் தருவதாகயிருக்கலாம். நம்முடைய கனம் எதிர் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்களுக்குத் தெரியும்.



பாராளுமன்றத்தில் பத்திரிகையை எடுத்தவுடன் பாராளுமன்றம் முழுவதும் "பத்திரிகையைப் படிக்காதீர்கள், பத்திரிகையைப் படிக்காதீர்கள்" என்றுதான் சொல்லுவார்கள். ஆனால் டெல்லி வெகு தொலைவில் இருக்கிறது, ஆகவே இப்போது வேறுவிதமாகச் சொல்லக்கூடும். என் அபிப்பிராயம் விதி முறைகள் எப்படியிருந்தாலும் பத்திரிகைகளில் வருகிற செய்திகளை நாம் விரிவாகப் படிப்பதற்கு முன்னால் மற்றவர்களுக்கும் அதே பத்திரிகையை, அதே குறிப்பைப் படிக்க வாய்ப்பு கிடைக்காது என்ற காரணத்தினால் கூடுமானவரையில் அதைத் தவிர்ப்பது நல்லது என்று நான் கருதுகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** பத்திரிகையிலிருந்து படிப்பதைப் பற்றிய என்னுடைய தீர்ப்பை 27-ம் தேதி சொல்லலாம் என்று கருதிக் கொண்டிருந்தேன். ஆனால் இன்றையதினம் அப்பிரச்சினை எழுப்பப்பட்டு விட்டதால் என்னுடைய தீர்ப்பை இப்போதே சொல்லிவிடுகிறேன். பத்திரிகைகளிலிருந்து படிப்பது பற்றி நம் விதிகள் மிகத் தெளிவாக இருக்கின்றன. "கேள்விகள்" என்ற அத்தியாயத்தில் 31-வது ரூல் 4-வது உட்பிரிவில் எந்தக் கேள்விகள் கேட்டாலும் கேள்வி கேட்கும்போது கேள்வியிலே பத்திரிகைகளிலிருந்து சுருக்கமோ அல்லது முழுமையாகவோ எதையும் எடுத்துக் கூறக்கூடாது, கேள்வி நேரத்தில் என்றும் 63-வது விதிப்படி பேசுகிறவர்கள் தவிர உட்கார்ந்திருக்கும் உறுப்பினர்கள் யாரும் பத்திரிகையை எடுத்துப் படிக்கக்கூடாது என்றும் உள்ளது. ஆனால் பேசுகிறவர் எந்த அளவிற்குப் பத்திரிகைகளிலிருந்து மேற்கோள் எடுத்துக் காட்டலாம் அல்லது படிக்கலாம் என்பதுபற்றி ஏற்கனவே நம் சட்டமன்றத்தில் தீர்ப்பு இருக்கிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் "தீர்ப்பு எப்படியிருந்தாலும்" என்று சொன்னார்கள்; தீர்ப்பு அவர்கள் சொன்னபடியே தான் முன்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. பத்திரிகைகளிலிருந்து ஏதாவது குறிப்பை வாசிப்பதற்கு ஆட்சேபணை கிடையாது. உரிமை உண்டு என்றாலும் பத்திரிகைகளிலிருந்து குறிப்புகள் வாசிப்பதை மிகவும் குறைத்துக் கொள்ளவேண்டும் என்று இதற்கு முன்னால் சபாநாயகராக இருந்த திரு. சிவஷண்முகம் பிள்ளை அவர்கள் மார்ச் 6-ம் தேதி கீழ்க்கண்டவாறு தீர்ப்பு கூறியிருக்கிறார்கள் :—

" Papers are not allowed to be read here "

ஒரு பத்திரிகையை முழுமையாக வாசிக்கக் கூடாது.

" I will allow the hon. Member to read extracts "

குறிப்புகளை வாசிக்கலாம். ஆனால் குறைத்து here and there மிகக் குறைத்து. மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் மிகக் குறைவாகவே இங்கும் அங்கும் ஏதாவது தேவைப்பட்ட நேரத்தில் பத்திரிகைகளிலிருந்து சுருக்கமாக வாசிக்கலாம். ஆனால் நேற்று மதிப்பிற்குரிய உறுப்பினர் படிக்கத் தொடங்கியது ஒரு வெளிநாட்டுப் பத்திரிகை. வெளிநாட்டுப்

பத்திரிகைகள்பற்றிய தீர்ப்பு வேறு விதமாக இருக்கிறது. வெளி நாட்டுப் பத்திரிகைகள் அல்லது வெளிநாட்டிலிருந்து வெளியிட்ட புத்தகங்களிலிருந்து எந்த உறுப்பினராவது ஏதாவது வாசிக்க விரும்பினுல் அந்தப் பத்திரிகையை அல்லது அந்த புத்தகத்தை பேரவைத் தலைவரிடம் முன்கூட்டி காண்பித்து அனுமதி பெற்றுக வேண்டும். இதுதான் தீர்ப்பு என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்த அலுவல் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஃபைனல் சப்ளிமெண்டரி எஸ்டிமேட்ஸ். . .

THIRU K. VINAYAKAM : Another point of order.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** அந்த பாயின்ட் ஆஃப் ஆர்டர் பற்றிய விவாதம் முடிந்து விட்டது.

(இ) பேரவை நடவடிக்கைகளில் ' வினு நேரம் ' இல்லாமை.

THIRU K. VINAYAKAM : I wish to raise a point of order on another subject. Question time is the most lively hour in the Assembly and it is a prerogative which has been enjoyed by the Members of the House.

THIRU RAMA. ARANGANNAL : A point of order on this point of order.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** பாயிண்ட் ஆஃப் ஆர்டரை எப்பொழுதும் எழுப்பலாம்.

THIRU K. VINAYAKAM : The Hon. Speaker announced that there were no questions for to-day. May I know whether the Members have not submitted any questions to be answered or the Ministry is not prepared to answer them or the officers have not brought them to the notice of the Ministers? It is not as if the Members are at fault. The Ministers are at fault.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் . . . .

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** அதற்குப் பதில் சொல்ல வேண்டிய கடமை என்னுடையது. உறுப்பினர் அவர்கள் கேள்வி நேரத்தின் முக்கியத்துவத்தைப்பற்றிச் சொன்னுர்கள். அதை நான் உணர்ந்திருக்கிறேன். ஆனுல் 34-வது விதியை அவர்கள் படித்துப் பார்த்தால் கேள்வி அனுப்பிய பிறகு 19 நாட்கள் ஆகும் அதற்குப் பதில் சொல்வதற்கு என்று இருக்கிறது. ஆகவே 19 நாட்கள் ஆன பிறகுதான் மதிப்பிற்குரிய அங்கத்தினர் கால தாமதமாகிவிட்டது என்று கூற முடியும். நான்கு நாட்கள் செயலாளரிடமும் 15 நாட்கள் சம்பந்தப்பட்ட இலாகாவிடமும் இருக்கலாம். ஆகவே 19 நாட்களுக்குப் பிறகுதான் பதில் கொடுக்க முடியும் என்றிருப்பதால் உறுப்பினர்களுக்கு ஏதாவது அவசரமான கேள்வி இருக்கும் என்றுல் குறுகிய கால நோட்டீஸில் கேள்வி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன். அடுத்த அலுவலை தொடர்ந்து நடத்தலாம்.

THIRU K. VINAYAKAM : On a point of personal explanation.



(உ) உறுப்பினர்கள் அவரவர்க்குரிய இடங்களிலிருந்து பேசுதல்.

* **திரு. இராம. அரங்கண்ணல் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர். நம் சபை மரபுப்படி எந்த ஒழுங்குப் பிரச்னையை அல்லது பிரச்னைகளை எழுப்பவேண்டுமென்று சொன்னுலும் உங்களால் ஒதுக்கப் பட்டுள்ள இடத்திலிருந்து, அந்த இடத்திலிருந்துதான் அந்தப் பிரச்னையை எழுப்பவேண்டும். ஆனுல் எந்த இடத்திலிருந்து கனம் உறுப்பினர் அப்பிரச்னையை எழுப்பினுர்கள்? எந்த விதிக் குட்பட்டு எழுப்பினுர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் அவரவர்கள் இடத்திலிருந்து பேசவேண்டுமென்று விதிகள் இருக்கின்றன. (ஆரவாரம்.) மதிப்பிற்குரிய உறுப்பினர் 'சொந்த விளக்கம் கூற விரும்புகிறேன்' என்றுர்கள். சொந்த விளக்கம் எப்போது கூறலாம் என்றுல் அவர்களைப்பற்றி யாராவது பேசியிருந்தால் கூறலாம். அவர்களைப்பற்றி நான் பேசிய காரணத்தினுல் அவர்கள் சொந்த விளக்கத்தைச் சொல்ல நான் அனுமதிக்கிறேன்.

### 4. சொந்த விளக்கம்—வினு நேரம் இல்லாமை குறித்து.

THIRU K. VINAYAKAM : I was glad to know from the Chair that at least ninteen days would have to elapse before the answer could be got ready so as to enable the Minister to reply. This Assembly came into being on the 1st March and I have given notice of questions on that very day. To-day is 21 I believe, twenty days have elapsed and a reasonable time has been given to the Government. I would like to know why they are not in a position to got the answers.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** கேள்விகள் அனுப்ப ஒரு உறுப்பினருக்கு உரிமை எப்போது இருக்கிறது என்றுல், அவர் பிரமாணம் எடுத்து சபையின் உறுப்பினராக ஆன பிறகுதான் அவருக்கு உரிமையென்று விதியிருக்கிற காரணத்தினுல், அதற்குப் பிறகு 19 நாட்கள் ஆகியிருந்தால் அவர் தனியாக என்னிடம் தெரிவித்தால், அவசரப்படுத்தி கேள்விகளுக்குப் பதில் கிடைக்க ஏற்பாடு செய்ய நான் தயாராக இருக்கிறேன்.

இப்போது அடுத்த அலுவல். 1966–67-ம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை அவையின் முன் வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றுவார்கள்.

### 5. 1966–67-ம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகள்— பேரவையின் முன் வைத்தல்

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணுதுரை :** சட்டமன்றத் தலைவர் அவர்களே,

1966-67-ம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை மன்றத் தின்முன் வைக்கின்றேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான விவர அறிக்கை ஒன்றும் மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மானியக் கோரிக்கையில்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 21

மொத்தம் ஏறக்குறைய 63 கோடி ரூபாய் ஒதுக்கும்படி வேண்டப்படுகிறது. ஆனால், இதில் சுமார் 16 கோடி ரூபாய் மட்டுமே வருவாய், மூலதனக் கணக்குகளில் அடங்குகிறது.

2. இப்போது வேண்டப்படும் இந்த உயரிய நிதி ஒதுக்கத்தில் பெரும்பகுதி நேற்று சபைமுன் வைக்கப்பட்ட திருத்த மதிப்பீடுகளில் எதிரொலித்துள்ளதைக் காணலாம். நிதி ஆண்டின் முதல் நான்கு திங்கள்கள் அல்லது சில சமயங்களில் முதல் ஆறு திங்கள்களைப் பற்றிய கணக்குகளின் அடிப்படையில், அக்டோபர், டிசம்பர் திங்கள்களுக்கிடையே இத் திருத்த மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன. பல்வேறு அரசாங்கத் துறைகள், ஜனவரி, பிப்ரவரி திங்கள்களில் தங்கள் தேவைகளை மறு ஆய்வு செய்து மதிப்பீடுகளை மீண்டும் அரசாங்கத்துக்கு அனுப்புகின்றன. இந்த நடைமுறையில் கூடுதல் நிதி வழங்குமாறு கேட்கப்படுவதில் சிலவற்றை ஒப்புக்கொண்டு வகை செய்ய வேண்டியிருக்கிறது. இப்போது சபை முன்புள்ள இறுதித் துணை மதிப்பீடுகள் பற்பல துறைகளில் அண்மையில் ஏற்பட்ட செலவுப் போக்கை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டவையாகும். இவை இதற்கு முந்திய ஆண்டுகளில் இருந்தது போலவே, திருத்த மதிப்பீடுகளுக்கு மேல் ஓரளவு உயர்வினைக் குறிக்கின்றன. இந்த இறுதித் துணை மதிப்பீடுகளில் புயல் துயர் தணிப்பு வேலைகள், பொதுத் தேர்தல்கள் நடத்துவது ஆகியவற்றிற்கு ஆன செலவுகள் சம்பந்தமாக ஏற்பட்ட உயர்வினையும் குறிக்கின்றன.

3. இப்போது வேண்டப்படும் நிதி ஒதுக்கத்தில் பெரும்பகுதி, பொதுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதைப்பற்றியது என்பதை இம் மன்றம் கவனித்திருக்கும். இதற்கென்று 47.65 கோடி ரூபாய் வகை செய்யக் கருதப்பட்டுள்ளது. இதில் உண்மையாக 3.06 கோடி ரூபாய் அளவிற்குத்தான் செலவின் உயர்வு ஏற்பட்டுள்ளது. எஞ்சிய தொகை, நடப்பு ஆண்டிலிருந்து செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள புதிய கணக்கு முறையின் காரணமாக இந்த நிதி ஒதுக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இப் புதிய நடைமுறையினால் இந்திய ரிசர்வ் பாங்கியிடமிருந்து மாநில அரசாங்கம் அதிகப்பற்றாக (Over draft) வாங்கும் தொகையில் குறைப்பு ஏற்படும் ஒவ்வொரு தடவையும், அந்தக் குறைப்பு தமிழ்நாடு தொகு நிதியிலிருந்து (Consolidated Fund of Madras) இந்திய ரிசர்வ் பாங்கிற்குச் செலுத்தப்படவேண்டிய தொகையாகக் கருதப்படுகிறது. இதற்குமுன் அவ்வாறு திருப்பிச் செலுத்தப்படும் தொகையை இடையில் ஏற்படும் மாறுதல்கள் ஒவ்வொன்றினையும் கணக்கிடாமல், திங்கள் முடிவிலிருக்கும் நிலைமையை ஒட்டியே கணக்கிடுவது வழக்கமாய் இருந்தது. தணிக்கைத் துறையின் கருத்துரைகளுக்கிணங்க ஏற்பட்டுள்ள இந்தப் புதிய நடைமுறையின் காரணமாக, அதிகப் பற்றாக வாங்கும் பணத்தையும் வழிவகை முன்பணங்களையும் திருப்பிச் செலுத்துவதற்கான தொகை பெரியதாக்கிக் காட்டப்படுகிறது. இதன்படி, இந்தத் தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கும்படி வேண்டப்படுகிற தொகைக்கு



1967 மார்ச் 21] [திரு. சி. என். அண்ணாதுரை]

நிகராக, வரவுகள் தலைப்பில் இந்திய ரிசர்வ் பாங்கியிடமிருந்து பெறுகிற தற்காலிகக் கடன்கள் என்ற தலைப்பின்கீழ் வரவு வைக்கப்படும். ஆதலால் இந்த நிதி ஒதுக்கலினால் மாநில அரசாங்கத்தின் நிதி ஆதாரங்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டாவென்று கூற விரும்புகிறேன். நடப்பு நிலவரப்படி நிதி ஆண்டின் இறுதியில் இந்திய ரிசர்வ் பாங்கியிடமிருந்து அதிகப் பற்று வாங்க வேண்டிய நிலையில் இருப்பதாகத் தெரியவில்லை என்பதை நான் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

4. வருவாய்க் கணக்கில் வகை செய்துள்ள தொகையில் பெரும்பகுதி, 1966 டிசம்பரிலிருந்து அரசாங்கப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள அகவிலைப் படி வீதங்களில் ஏற்பட்டுள்ள உயர்வினைக் குறிக்கிறது. 1966 ஜூன் திங்களில் ஒப்பளிப்பு வழங்கிய அகவிலைப் படி வீதங்களின் உயர்வுக்கென "71-பல்வகை" என்கிற தலைப்பின்கீழ் முதல் துணை மதிப்பீடுகளில் செய்திருந்த மொத்த நிதி ஒதுக்கமானது, இப்பொழுது அந்தந்த வரவினத் தலைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. நான்காவது பொதுத் தேர்தல்களை நடத்தியதற்கான செலவுகளும் இந்த உயர்வுகளின் ஒரு பகுதியைக் குறிக்கின்றன. போலீஸ், பொது நிர்வாகம், வேளாண்மை, பொதுப் பணிகள் போன்ற தலைப்புகளின்கீழ் வருவாய்க் கணக்கில் முக்கியமாக உயர்வுகள் ஏற்பட்டுள்ளன. போலீஸ், பொது நிர்வாகம் இவற்றின்கீழ் ஏற்பட்டுள்ள உயர்வுகள் அகவிலைப் படி உயர்வையும், பொதுத் தேர்தல்கள் குறித்து ஏற்பட்ட பயணப்படிச் செலவுகள், எதிர்பாராச் சில்லறைச் செலவுகள் இவற்றிற்கான உயரிய செலவுகளையும் முக்கியமாகக் குறிக்கின்றன. தரமான வித்துக்கள் திட்டம், பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு வகைசெய்தல் போன்ற முக்கியமான சில திட்ட வேலைகளுக்கு அதிகச் செலவு ஆனதால், வேளாண்மையின்கீழ் செலவினம் உயர்ந்துள்ளது. இது ஓரளவுக்கு அந்தந்த வருவாய்த் தலைப்பில் கிடைத்துள்ள அதிக வருவாயின் மூலம் சரிக்கட்டப்பட்டுள்ளது. புயலால் சேதமடைந்த கட்டடங்களைச் செப்பனிடுவதற்கான செலவு காரணமாக பெரும்பாலும் பொதுப்பணிகளின்கீழ் செலவின உயர்வு ஏற்பட்டுள்ளது.

5. மூலதனக் கணக்கில் ஏற்பட்டுள்ள உயர்வில் பெரும்பகுதி, உணவு தானியங்களில் அரசாங்க வாணிபத்தைக் குறிக்கிறது. மாநில அரசாங்கம் கோதுமையிலும் கோதுமைப் பண்டங்களிலும் அதிக அளவில் வாணிபம் நடத்துவதால், இந்த உயர்வு ஏற்பட்டுள்ளது. விற்பனைமூலம் அதிக வரவுகள் கிடைத்துள்ளதால் இந்த உயர்வு சரிக்கட்டப்பட்டுள்ளது.

6. துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள ஏனைய செயற்குறிப்புகளைப்பற்றி விவர அறிக்கையில் கொடுத்துள்ள விரிவான விளக்கக் குறிப்புகள் தவிர, சிறப்பாகக் குறிப்பிட்டுச் சொல்லுவதற்கு வேறு முக்கிய கருத்து எதுவுமில்லை என்று கூறி, இத்துணை மதிப்பீடுகளை இம் மன்றம் ஏற்கவேண்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

[1967 மார்ச் 21

## (6) 1967–68-ம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டம்— பொது விவாதம்

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** 1967–68-ம் ஆண்டுக்குரிய இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் இப்பொழுது நடைபெறும். நேரம் மிகக் குறைவாகவே இருக்கிறது. 12-30 மணி அளவில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியாக வேண்டும். அதன் பின் மாண்புமிகு முதலமைச்சர் உரையாற்றியாக வேண்டும். ஆகவே, இதற்கு இடையில் இருக்கும் படியான நேரத்தில், ஒரு உறுப்பினர் 10 நிமிடங்கள் பேசுவதாக இருந்தாலும் மொத்தம் 12 பேர்களுக்கு மட்டுமே பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும் நிலைமை இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். பன்னிரண்டு உறுப்பினர்களைத் தவிர மேற்கொண்டு உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இல்லையே என்று வருந்த வேண்டாம். எல்லோரும் கவர்னர் அவர்களின் உரைமீது பேசிக்கொள்ளலாம். இப்போது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் உரையாற்றுவார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, 1967–68-ம் ஆண்டுக்குரிய இடைக்கால நிதி நிலை அறிக்கையின் மீது எனது கருத்துக்களைக் கூறுவதற்கு முற்படுகிறேன்.

இந்த விவாதத்தில் கலந்துகொள்ளும் முன்னதாக, முதன் முதலிலே இந்த பட்ஜெட் உரையிலே ஆக்கமான பல புதிய கருத்துக்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். நான்காவது பொதுத் தேர்தலுக்கு முன்னதாக மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் முறையிலே புரட்சிகரமான திட்டங்களை இந்த பட்ஜெட்டிலே எதிர்பார்த்தோம். ஆனால், இந்த பட்ஜெட்டிலே புதிதாக எதுவும் காணவில்லை, புரட்சிகரமான மாற்றமும் வரவில்லை என்று முதன்முதலிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆங்கிலத்தில் சொல்லுவார்கள் "Old wine coming in new bottles" என்று அந்த முறையிலே தான் இந்த பட்ஜெட்டானது இருந்துகொண்டே இருக்கிறது.

இந்த பட்ஜெட்டின் மீதான விவாதத்திலே கலந்துகொள்ளுகிற நான் முதன்முதலிலே நிலவரிக் கொள்கையைப் பற்றி எடுத்துக் கூறுவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன். காங்கிரஸ் அரசாங்கம் இந்த நிலவரிக் கொள்கையைப் பற்றிய கருத்தை இந்த மன்றத்தின் முன் வைத்தது. இந்த நிலவரிக் கொள்கையைப் பற்றி ஆய்வதற்கு நியமிக்கப்பட்ட ரெவின்யூ போர்டு அங்கத்தினர் இதைப் பற்றி ஒரு அறிக்கையையும் அரசாங்கத்தின் கவனத்திற்குச் சமர்ப்பித்தார். அந்த அறிக்கையை இந்த அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருப்பதாக இந்த பட்ஜெட் அறிக்கையிலே நான் பார்த்தேன். அதைப் பற்றி விரிவான ஆராய்ச்சி நடத்தி இறுதியான முடிவை இன்னும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. அந்த முடிவை மேற்கொண்ட பிறகு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை தொகுத்துக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.



1967 மார்ச் 21] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இந்த நிலவரியை ரத்து செய்யவேண்டுமென்று எல்லா அரசியல் கட்சியினரும் இந்த மன்றத்திலும் வெளியிலும் எடுத்துக் கூறினார்கள். குறிப்பாக காங்கிரஸானது தொன்றுதொட்டே இந்த நிலவரியை ரத்து செய்யவேண்டுமென்று பன்முறை எடுத்துக் கூறி வந்திருப்பதை இந்த மன்றத்தில் உள்ள எல்லோரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இந்த நிலவரியைப் பொறுத்த அளவிலே இது ஏழை விவசாயிகளை அதிகமாக பாதிக்கக்கூடிய ஒரு வரி என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தாங்கும் தலையிலேதான் வரியை சுமத்தவேண்டும் என்ற சாதாரண நியதி இருந்த போதிலும், இன்று நில சீர்திருத்தம் வந்த காரணத்தினால் பெரிய நிலச்சுவான்தார்கள் ஒழிக்கப்பெற்றுவிட்டார்கள். ஆனாலும், நில சீர்திருத்தத்தினால் பரிபூரணமான வெற்றி அடைந்துவிட்டோம் என்று யாரும் நினைப்பதற்கு இல்லை. சுமார் 5,000 ஏகருக்கு மேலாக உபரியான நிலத்தைத்தான் நாம் நில சீர்திருத்த காண்கிறபொழுது, நிலச் சீர்திருத்த சட்டத்தினால் நாம் எவ்வளவு முற்பகல். 9-30
காண்கிறபொழுது, நிலச் சீர்திருத்த சட்டத்தினால் நாம் எவ்வளவு
வெற்றி காண்போம் என்று நினைத்தோமோ அந்த அளவுக்கு வெற்றி காணவில்லை. சோஷலிஸ சமதர்மத்தை நம்பியிருக்கிற ஆளும் கட்சியினராகிய நீங்களும், சமதர்மத்திற்காக அயராது உழைத்துக்கொண்டிருக்கிற ஒரு கட்சியாக நாங்களும் இருக்கிற காரணத்தினாலும், இந்த நிலவரியை இந்தப் பசலியிலிருந்து கண்டிப்பாக நிறுத்தம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை தாங்கள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நில வரியைப் பொறுத்தவரையிலே சாதாரண ரிகார்டு மெயின்டென்ஸ்-க்கு வேண்டிய அளவாவது அதை நீடித்து வைக்க வேண்டுமா வேண்டாமா என்ற ஒரு கருத்து பல பகுதிகளிலிருந்தும் கூறப்படுகிறது. லாண்டு ரிகார்டு மெயின்டெனன்ஸ் சம்பந்தமாக பல சிக்கல்கள் ஏற்படும். பட்டாவானது ஒரு சாதாரண விவசாயிக்கு ஒரு புனிதமான டாகுமெண்டு அல்லது தஸ்தாவேஜு என்று சொன்னால் அது மிகையாகாது. அதை சரியான முறையில் பராமரிப்பதற்காக என்னென்ன வழிவகைகள் செய்யவேண்டும் என்பதை அரசாங்கம் உற்று கவனிக்கவேண்டும் என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்று புதியதாக அதிகாரத்திற்கு வந்த அமைச்சரவை 'ஆஸ்டெரிடி' என்ற பெயரால் பல சீர்திருத்தங்களைச் செய்தார்கள். சிறு கார்களில்தான் தாங்கள் யாத்திரை செய்யவேண்டும், மற்றும் சம்பளங்களைக் குறைக்கவேண்டும் என்றெல்லாம் அவர்கள் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த சீர்திருத்தங்கள் பொறுத்த வரையிலே எல்லா இலாகாக்களும் இவை அமுல் நடத்தப்பட்டால்தான் நல்லது என்று கருதுகிறேன். அரசாங்கத்தின் கையில் பல்லிதமான சிப்பந்திகள் இருக்கிறார்கள். பல இலாகாக்களில் இன்று அதிகமான சிப்பந்திகள் இருக்கிறார்கள். சிக்கனம் என்ற முறையிலே,

என்னென்ன வழிமுறைகளைக் கையாளவேண்டும் என்பதை சிந்திப்பது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். பிளாக் டெவலப்மெண்டில் இருக்கிற பல பிரச்னைகள் பற்றியும் இன்று அதிகாரத்தில் இருக்கிற கட்சி அன்று பல ஆட்சேபணைகளையும் தெரிவித்தார்கள். இந்த பிளாக் டெவலப்மெண்டைப் பொறுத்த அளவில் என்னென்ன சீர்திருத்தங்கள் அவர்கள் செய்யப்போகிறார்கள் என்பதையும் இந்த பட்ஜெட் உரையிலே நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், இது இடைக்கால பட்ஜெட் ஆகையால் ஜூலை மாதத்தில் இதைப்பற்றி பல நல்ல அம்சங்கள் இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டே இருக்கிறோம். ஏதோ அவகாசக் குறைவினால் அதைப்பற்றியெல்லாம் விரிவாக அவர்களுடைய கருத்துக்களை இந்த மன்றத்தில் இப்பொழுது சமர்ப்பிக்கவில்லை என்று தான் நான் கருதுகிறேன். ஆதலால், இந்த இலாகாவிலே இருக்கிற பல துன்பங்களையும், சிக்கல்களையும் அகற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்தபடியாக, நான் கூறுவதற்கு முற்படுவது உணவு பிரச்னை, உணவுப் பிரச்னையைப் பொறுத்த அளவிலே இந்த மன்றத்திலும், மன்றத்திற்கு வெளியேயும் தேர்தல் காலத்தில் இப்பொழுது ஆளும் கட்சியாக இருக்கிற நீங்கள் பல வாக்குறுதிகளைக் கொடுத்தீர்கள். அதை நீங்கள் என்ன முறையிலே நிறைவேற்றப் போகிறீர்கள் என்பதை நீங்களே சற்று நிதானமாக சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்று உணவுக் கொள்முதல் செய்கின்ற முறையிலே பல மாற்றங்களை மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். "டிகண்டிரோல்" செய்வார்கள் என்று வியாபாரிகள் அத்தனை பேர்களும் முனைந்திருந்தார்கள். அவர்கள் இன்று பெருத்த ஏமாற்றத்தில் இருக்கிறார்கள் என்பதையும் பத்திரிகை வாயிலாக நாம் கண்டு கொண்டோம். முதல் அமைச்சர் அவர்களை அவர்கள் அணுகி கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டும் என்று வேண்டிக் கேட்டபொழுது, முதல் அமைச்சர் அவர்கள் மூன்று வருடகாலம் வரையிலாவது வியாபாரிகள் ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்ற விலைக்கு அரிசி விற்பதற்கு முன்வந்தால், இதைப்பற்றி ஆலோசிக்கப்படும் என்று எடுத்துக்கூறினார்கள் என்று நாம் அறிகிறோம். அன்று எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் காலத்தில் சுவரொட்டிகள் மூலம் பல காரியங்களைச் செய்வதாக பிரசாரம் செய்தார்கள். குறிப்பாக எங்கள் பகுதியில் ஒட்டியிருந்த சுவரொட்டியைப்பற்றி சொல்வது சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். 'தனி ஒரு மனிதனுக்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று கூறி இன்னும் காங்கிரஸ் ஆட்சியா என்று சுவரொட்டிகளை பல இடங்களில் சித்தரித்து வைத்திருந்தார்கள். அந்த மாதிரியான சுவரொட்டிகள் இருந்தன என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எல்லா மனிதர்களுக்கும் உணவு கொடுக்க





வேண்டிய பொறுப்பும், கடமையும் அரசாங்கத்தைச் சார்ந்தது என்பதை நாங்களும் உணர்ந்துகொண்டிருக்கிறோம். ஆனால், இன்று இருக்கிற உணவு பங்கீட்டு முறை மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிறது என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏதோ பாமிலி கார்டு சிஸ்டம் என்ற முறை இன்று அமுல் நடந்து கொண்டிருக்கிறது. அதிலிருந்து கிடைக்கிற உணவுப் பொருள்கள் சாதாரண மக்களுக்கு போதிய அளவிலே கிடைப்பதற்கில்லை, அதிலும் காலாகாலத்தில் கிடைப்பதில்லை என்பதையும் தங்களுடைய கவனத்திற்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏதோ பிச்சை கொடுப்பது மாதிரி கொஞ்சம் உணவு கிடைக்கிறது என்று பொது மக்கள் தேர்தல் காலத்தில் என்னிடம் பல தடவையும் எடுத்துக்கூறினார்கள். அந்த மாதிரியான பற்றாக்குறையை தவிர்ப்பதற்கு அரசாங்கம் உருப்படியான திட்டங்களை செய்வார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம், அதைச் செய்வார்கள் என்று நம்புகிறோம். அப்படியானால்தான் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியும் என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த உணவுப் பங்கீட்டு முறையிலே சட்டபூர்வமான பல கஷ்டங்கள் இருக்கின்றன. குறிப்பாக நான் கேரள ராஜ்யத்தின் எல்லைப் பகுதியிலிருக்கிற ஒரு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த ஒரு நபர். அந்தப் பகுதியிலே உணவு தானியங்களை ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குக் கொண்டு போகக்கூடாது என்று இன்று சட்டபூர்வமாக வரையறுத்து வைத்திருக்கிறார்கள். ஆனால் நிலத்திலிருந்து அறுவடை செய்து களத்திற்குக்கொண்டு போகவேண்டுமானாலும், இன்று இருக்கிற சட்டப்படி வேண்டுமானால் பிராஸிக்யூஷன் நடத்தலாம். அதே மாதிரி வீட்டிலே இருக்கிற உணவு தானியங்களை வெளியே களத்திற்கு கொண்டு போட்டால், அதற்காகவும் சட்டபூர்வமாக வேண்டுமானால் பிராஸிக்யூஷன் நடத்தலாம். இத்தகைய பல கஷ்டங்கள் இன்று இருக்கின்றன. இந்த கஷ்டங்களைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் வேண்டிய திருத்தங்களைச் செய்யவேண்டும் என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். நிலத்திலிருந்து வீட்டிற்குக் கொண்டு போவதற்கும், வீட்டிலிருந்து வெளியே தன்னுடைய சொந்த உபயோகத்திற்குக் கொண்டு போவதற்கும் இந்தச் சட்டம் சரியான முறையில் திருத்தி அமைக்கப்பட்டால்தான் இன்று இருக்கிற கஷ்டமான நிலையைப் போக்க முடியும். பல செக் போஸ்டுகள் அமைந்திருக்கின்றன ராஜ்ய எல்லையில். கேரள ராஜ்யமும், தமிழ் நாடும் இடை இடையே கிடக்கிற காரணத்தினால், இந்த செக் போஸ்டுகளினால் பொது மக்களுக்கு பெருந் தொல்லைகளும், துன்பங்களும் விளைகின்றன. இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் கேரள ராஜ்யத்திற்கு தானியங்களைக் கடத்திச் செல்வதற்கு தடங்கல் ஏற்படுவதற்கு தீவிர முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் பத்திரிகை

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1967 மார்ச் 21

வாயிலாக அறிகிறோம். அதற்கு முன்னாலும் அங்கு பலவிதமான செக்போஸ்டுகள் மூலமாகவும், அரசாங்க சிப்பந்திகள் மூலமாகவும் நல்ல முறையிலே பல காரியங்கள் செய்து வந்திருக்கிறார்கள். இந்த உணவு தானியங்களை அண்டைய கேரள ராஜ்யத்திற்கு கடத்திச் செல்வதன் காரணமாக எங்கள் பகுதியிலே உணவு தானியங்கள் போதுமான வகையில் பல கஷ்டங்கள் இருந்து கொண்டே இருக்கின்றன. கள்ள வியாபாரிகள், கடத்தல் வியாபாரிகள் பல பேர்கள் கேரள ராஜ்யத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அவ்வளவு பேர்களும் இந்தப் பகுதியிலே வந்து தலைச் சுமையாகவும், சைக்கிள்களிலும் தானியங்களை கடத்திச் செல்லும் சாதாரண நிகழ்ச்சி அந்தப் பகுதியிலே இருந்துகொண்டே இருக்கிறது. அதை தவிர்ப்பதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்திருக்கிறது. நமது முதல் அமைச்சர் அவர்களும், கேரள முதல் அமைச்சர் அவர்களும் இந்த உணவுக் கொள்கை சம்பந்தமாக ஏதோ பேச்சு வார்த்தைகள் நடத்தியதன் மூலம் 18,000 டன் உணவு கேரள ராஜ்யத்திற்குக் கொடுப்பதற்கு வாக்குறுதி கொடுத்தார்கள் நமது முதல் அமைச்சர் அவர்கள் என்று பத்திரிகைகளில் செய்தியை நாம் காண்கிறோம். கேரள இராச்சியத்திற்கு உணவு கொடுப்பதைக் கொடுக்க வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால், தானியங்களைக் கடத்திச் செல்லுவதற்கு கேரள அரசாங்கத்தின் சிப்பந்திகள் உடந்தையாக இருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். நமது சர்க்கார் முதலிலே தமிழகத்திலே இருக்கும் பிரஜைகளுக்கு உணவு கொடுக்க வேண்டியதுதான் இந்த அரசாங்கத்தின் தலையாய கடமை என்பதை உணர்ந்திருக்கிறார்கள் என்றே நம்புகிறேன். ஆகவே, இந்த மாதிரிக் கஷ்டமான நிலையிலும், நக்கபடியான முறையில் தானியங்களை விநியோகிக்க ஆவன செய்ய வேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் உணவு தானியக் கொள்கையில் ஏதோ மாற்றம் வருவதாகவும், தென் மண்டலங்களை புனர் அமைப்புச் செய்யப் போவதாகவும் பத்திரிகையில் படித்தோம். அப்படி தென் உணவு மண்டலத்தை புனர் அமைப்புச் செய்வது தமிழகத்திற்கு நன்மையைப் பயக்குமா என்பதைப் பற்றி தாங்கள் நிதானமாக சிந்திக்க வேண்டும், அது தங்களுடைய ஆழ்ந்த சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். உணவு மண்டலங்கள் முன்பும் இருந்தன. ஆனால், அப்போது இருந்த அரசாங்கம் அது சரியானது அல்ல என்று தீர்மானித்து அதைக் கைவிட்டு விட்டது. தமிழகத்திலே உணவு ஒரு வேளை சற்று மிகுதியாக இருந்தபோதிலும், அண்டை மாநிலமான கேரளாவில் பற்றாக் குறை இருக்கிறது. அப்படிப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதிக்கு இந்தப் பகுதியிலிருந்து கடத்திக்கொண்டு போவதில் முனைகிறார்கள். அதுவல்லாமல் இந்தப்



1967 மார்ச் 21] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

பற்றாக்குறை மாநிலத்தோடு நாமும், மிகுதியாக இருக்கின்றவர்களும், உணவு மண்டலத்தில் ஒன்று சேர்ந்தால், அது தமிழகத்திற்குத் தீமையைத்தான் விளைவிக்கும் என்பதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்றைக்குப் பார்க்கப் போனால், கேரள மக்களுக்கு வாங்கும் சக்தி அதிகமாக இருக்கிறது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்திலே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அதுவல்லாமல், இந்த உணவு மண்டலத்தை மறுமுறையும் ஆரம்பிப்பது பொருத்தமானதுதானா என்பதையும் இந்த சந்தர்ப்பத்திலே யோசிக்க வேண்டும் என்று கூற விரும்புகிறேன். ஆந்திராவிலிருந்து நமக்கு எவ்வளவு உணவுப் பண்டங்களை வரவழைக்க முடியுமோ அவ்வளவு பண்டங்களையும் வரவழைக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் நம் பகுதி மக்களுக்கு உணவு சரியான வகையில் கொடுக்க முடியும். தேர்தல் காலத்தில் மக்களுக்கு பற்பல வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள். அப்படி தேர்தல் சமயத்தில் கொடுப்பதும் சகஜம் தான். ஆனால் இப்பொழுது தேர்தல் முடிந்து விட்டது. அதிகாரத்திலும் இருக்கின்ற இந்த அமைச்சரவை அவைகளைப் பற்றி நல்ல முறையில் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்; அப்படி ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய நிலை இருக்கிறது. கண்ட்ரோல்கள் வேண்டுமா வேண்டாமா, என்பதைப் பற்றி கொள்கை அளவில் அரசாங்கம் முடிவு செய்வதும் அவர்களுடைய கடமை என்பதையும் நாங்கள் உணருகிறோம். அவர்கள் மத்திய சர்க்காரோடு கலந்து ஆலோசித்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், அதுதான் சிறந்ததாக இருக்கும். மத்திய சர்க்கார் 1971-லிருந்து வெளிநாடுகளிலிருந்து உணவுப் பண்டங்களை இறக்குமதி செய்வதை நிறுத்தி விடுவோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு உணவுப் பற்றாக் குறைகள் இருக்கிறது. எல்லா மாநிலங்களோடும் சேர்ந்து மத்திய சர்க்கார் தன் காரியத்தைச் செய்தாக வேண்டும்.

அடுத்தபடியாக விலைவாசியைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். விலைவாசிகள் விஷம் போல ஏறிக்கொண்டு இருக்கின்றன. ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பாக, திராவிட முன்னேற்றக் கழகம் விலைவாசிப் போராட்டம் நடத்தியதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். 1952-53-ல் இருந்த விலைவாசியை விட இன்றைக்கு பன்மடங்கு அதிகமாகியிருந்துக் கொண்டு இருக்கிறது. அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் மிக்க அதிகமாகி இருக்கிறது. அப்படி விலைவாசிகள் உயர்ந்திருக்கின்ற காரணத்தினால், எவ்வளவுதான் நாம் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முயற்சிகள் எடுத்தாலும், வெற்றி பெறவில்லை என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். விலைவாசிகளைக் கட்டுப்படுத்த இந்த அரசாங்கம் என்னென்ன காரியங்களை மேற்கொள்ளப்போகிறது என்பதை நாங்கள் இந்த உரையில் எதிர்பார்த்தோம். ஆனால், உருப்படியாக எதையும் காணவில்லை. அதனால் பொது மக்களும், நாங்களும் மிக்க ஏமாற்றம் அடைந்

திருக்கிறோம் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். விலைவாசியைக் கட்டுப்படுத்துவது என்றால், நம் ஐந்தாண்டுத் திட்டங்களோடு விலைவாசியும் சேர்ந்திருக்கிறது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். நம்முடைய நான் காவது ஐந்தாண்டுத் திட்டம் என்னென்ன அளவில் இருக்க வேண்டும் அதற்காக அரசாங்கம் என்னென்ன வகைகளில் செலவு செய்யப் போகிறார்கள், அதனால் எவ்வளவு எப்படி பண வீக்கம் ஏற்படும் என்பதையெல்லாம் இப்பொழுது விவாதிக்க நான் விரும்பவில்லை. ஆனால் பண வீக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதை மட்டும் பொருளாதார நிபுணர்கள் ஒப்புக்கொண்ட விஷயம் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். விலைவாசிகளைக் கட்டுப் படுத்த இந்த அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை, முயற்சிகளை செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். விலை வாசிகளைக் கட்டுப் படுத்த ஒரு வழியை அரசாங்கம் கடைப்பிடிக்கலாம். பொது மக்களிடமிருந்து கடன் வாங்குவது என்பது ஒரு முக்கிய அம்ச மாகக் கொள்ளலாம் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்டவிரும்புகிறேன்.

அடுத்தபடியாக, 'ஆஸ்டெரிடி' என்கிற முறையிலே, அரசாங்க இலாகாக்களிலே செலவினங்களைக் குறைக்க வழி காணலாம் என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அப்படிச் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நினைக்கின்றேன். சுமார் ஒன்பது கோடியளவில் அரசாங்க சிப்பந்திகளுக்கு விலைவாசி ஏற்றத்தை முன்னிட்டு கிராக்கிப் படி கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் அதனால் திருப்தியடைந்தார்கள் இல்லை. ஏனென்றால், விலைவாசிகள் கூடுதலாகிக் கொண்டே இருக்கிறது. குறிப்பாக பட்டணங்களில் வாழும் என்.ஜி.ஓக்கள் வாழும் அவல நிலையை அரசாங்கம் நல்ல முறையிலே கவனிக்க வேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் 'பிக்ஸட் இன்கம் க்ரூப்' இல் இருக்கிறவர்கள். அப்படி இருக்கிற அவர்களுடைய வருவாய் காரணமாக அவர்களுக்கு தேவையான அத்யாவசியப் பண்டங்களை வாங்குவதற்கு அவர்களுக்குக் கஷ்டம் இருக்கிறது. அவர்களுக்குக் குறைந்த விலையில் அத்யாவசியப் பண்டங்களை கொடுப்பது சிறந்ததாக இருக்கும் என்று தோன்று கிறது. அதைப் பரிசிலனை செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நினைக்கிறேன். அக விலைப்படியை அவர்களுக்குக் கூட்டிக் கொடுப்பதற்குப் பதிலாக, பண்டங்களை 'சப்ஸிடைஸ்ட் ரேட்' களில் கொடுப்பது நல்ல வழியாக இருக்கும் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். சிலோன் கவர்மெண்டில் உணவு தானியங்களுக்கு ஸப்ஸிடி கொடுத்து வந்தார்கள். அதிகமாகப் பணத்தைக் கொடுத்து வாங்கி, தன்னுடைய சிப்பந்திகளுக்கு குறைந்த விலையில் கொடுத்து வந்தது. அதே முறையை இந்த அரசாங்கமும் கையாள முடியுமா என்பதையும் பரிசீலனை செய்யலாம் என்று சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். அது பற்றி நிபுணர்களை வைத்துப் பரிசீலித்துப் பார்ப்பது சாலச் சிறந்ததாக இருக்கும்.



இன்னும் பார்க்கும்போது, விலைவாசிகளைக் கட்டுப்படுத்தினால் தான், வளருகின்ற திட்டமிட்ட பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் காணமுடியும். அப்பொழுதுதான் திட்டமிட்ட முன்னேற்றத்தில் நல்ல ரிடர்ன் கிடைக்கும் என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, புதிதாக எந்த வரியும் இல்லை. ஆனால், புதிதாக வரிகள் இல்லை என்றாலும், ஒரு வேளை வருகின்ற பட்ஜெட்டில் புதிதாக வரி ஏதாகிலும் வருகின்றதோ என்னவோ என்று பொது மக்கள் உற்றுக் கவனித்துக் கொண்டே இருப்பார்கள். நிலவரியை ரத்து செய்வதால் இந்த அரசாங்கத்திற்கு எட்டுக் கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும். அதே மாதிரி, உணவுப் பண்டங்கள் மீதுள்ள விற்பனை வரியை ரத்து செய்வதால் ஒரு கோடி சில்லரை ரூபாய் இந்த அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது. இன்னும் பற்பல காரியங் களையும் செய்வதற்கு இந்த அரசாங்கத்திற்கு வழி வகைகள் இருக் கின்றன. அந்த மாதிரித் துண்டு விழும் பணத்தை என்னென்ன முறைகளில் ஈடு செய்யப் போகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள மக்கள் ஆவலாக இருக்கிறார்கள். அடுத்த பட்ஜெட்டிலே தங்களுடைய கருத்துக்களை இந்த அரசாங்கம் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

நாம் இந்த பட்ஜட்டைப் பார்க்கும் போது, அவர்களுக்கு போதிய அவகாசம் இல்லை என்கின்ற காரணத்தினால், அதிகாரிகள் தயாரித்துத் தந்த பட்ஜட்டை குறுகிய காலத்திற்கென்று, இந்த மன்றத்தின் முன் சமர்ப்பிக்க வேண்டிய சட்ட நிர்ப்பந்தம் காரணமாக சமர்ப்பித்திருக்கிறார்கள். பின்னாலும், புதிதாக இன்னும் எந்த வரியையும் போடாமல் மக்களை சுபிட்சமான பாதையில் நடத்திச் செல்ல வேண்டும், அதற்கு இந்த அரசாங்கம் கடமைப் பட்டிருக்கிறது.

இன்னொரு காரியத்தையும் இந்த பட்ஜட்டிலே எதிர் பார்த் தோம். தேர்தலுக்கு முன்பாக பல தொழில் ஸ்தாபனங்களை, போக்குவரத்துப் போன்ற இனங்களை தேசீயமாக்கப் போவதாக, இன்றைக்கு ஆட்சியில் அமர்ந்திருக்கும் கட்சிக்காரர்கள் சொன் னார்கள். பல இடங்களில் அப்படிச் சொன்னார்கள். பஸ் போக்கு வரத்தை தேசீயம் ஆக்கவேண்டும், பெரும் தொழில் ஸ்தாபனங் களை தேசீயம் ஆக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்படிக் குறிப்பிட்டிருந்த போதிலும், பல திட்டங்களைத் தீட்டியிருந்த போதிலும், வெற்றிபெற்று அரசாங்கத்தில் இருக்கும் இப்பொழுது, இந்த பட்ஜட் உரையிலோ, அல்லது அவர்களுடைய கொள்கை விளக்கத்திலோ எதையும் காணவில்லை. இவையெல்லாம் தேசீயம் ஆக்கப்படும் என்று எதிர்பார்த்திருந்த சில நபர்களுக்கு பெரும் ஏமாற்றமாக இருக்கும் என்று கருதுகிறேன். தேசீயம் ஆக்க வேண்டுமா அல்லது தேசீயம் ஆக்க வேண்டாமா என்பதைப் பற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டுவது இந்த அரசாங்கத்தின் கடமை என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1967 மார்ச் 21

நீங்கள் தோழமை கொண்டுள்ள கூட்டணியில் உள்ள ஒரு கட்சி தேசியமாக்குவதை வன்மையாக, முழு மூச்சுடன் எதிர்க்கிறார்கள் என்பதையும் பார்க்கிறோம். ஆனால், நான் சொல்ல விரும்புவது; தேசியமாக்குவதற்கு இன்னும் காலம் ஆகவில்லை என்பதுதான். தேசியமயமாக்குவதற்கு இன்னும் காலம் இருக்கிறது. நமக்கு இன்று பல பிரச்சினைகள் இருக்கின்றன. முதல் பிரச்சினை உணவுப் பிரச்சினையாகும். முதலாவதாக உணவுப் பிரச்சினைக்கு ஒரு பரிகாரம் கண்டால்தான் மற்ற பிரச்சினைகளுக்குச் செல்வது சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, தேசிய மயமாக்கும் பிரச்சினையிலே காலத்தை விரயம் செய்யாமல், முதன் முதலில் அத்தியாவசியப் பண்டங்களை மக்களுக்குக் காலா காலங்களில் கிடைக்க வழி செய்தாக வேண்டும். அதற்கு இந்த அரசாங்கம் முனைந்து ஆவன செய்யவேண்டும் என்பதைத்தான் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்டி வலியுறுத்த விரும்புகிறேன்.

நீண்ட பிரசங்கத்தை நிகழ்த்த வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. ஒரு விஷயத்தை நமது தொழில் அமைச்சர் அவர்களுடைய சிந்தனைக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்றே கருதுகிறேன். பல தொழில் ஸ்தாபனங்கள், குறிப்பாகப் பஞ்சாலைகள் சரியான நிலைமையில் இயங்காமல் இருந்துகொண்டே இருக்கின்றன. கன்யாகுமரி மாவட்டத்தில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலையானது இருக்கிறது. அதிலே இரண்டு ஷிப்ட் தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. மூன்றாவது ஷிப்டை இயக்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் கேட்டோம். அதற்கு வேண்டிய துரித நடவடிக்கைகளைச் செய்துதர வேண்டும் என்பதையும் தொழில் அமைச்சர் அவர்களிடம் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வியைப் பொறுத்து ஒரு வார்த்தை பேசிக்கொண்டு உரையை முடித்துவிடலாம் என்று நான் நினைக்கிறேன். கல்விக்கு அதிக முக்கியத்துவம் அரசாங்கம் கொடுத்திருக்கிறது. புதுமுக வகுப்பிலே கல்வி இலவசமாக இருக்குமா, இருக்காதா என்பதைப்பற்றி அரசாங்கத்தின் விரிவான கொள்கை விளக்கத்தை நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், அதைப்பற்றி அறிகுறி காணவில்லை.

எங்கள் மாவட்டத்திலே கட்டாயக் கல்வி என்று இருந்தாலும், பல பள்ளிக்கூடங்கள் இன்று அவல நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்குக் கட்டட வசதி இல்லாமல் இன்று பல ஷெட்களை அமைத்துப் பள்ளிக்கூடங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. இந்தப் பள்ளிக்கூடங்களில் எல்லாம் காலா காலங்களில் ஓலை கட்டாததன் காரணமாகப் பள்ளிக்கூடங்கள் என்றே சொல்ல முடியாத நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. எதிர்க் கட்சித் தாப்பில் எங்களோடு போட்டியிட்டவர்களெல்லாம், "காங்கிரஸ் அரசாங்கம் இதைக் காலா காலத்தில் செய்யவில்லை, செய்ய வேண்டியதைச் செய்யத் தவறிவிட்டது" என்று எங்கள்மீது



1967 மார்ச் 21] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

குற்றச்சாட்டுகளைத் தெரிவித்தார்கள். ஆனால், அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு இந்த அரசாங்கம் ஆளாகாமல் இருக்கவேண்டும். ஆதலால், இம்மாதிரி ஷெட்களிலே அமைந்திருக்கிற பள்ளிக்கூடங்களை நல்ல கட்டடங்களில் உடனடியாக நிறுவுவதற்குக் கல்வியிலே ஆர்வம் படைத்த கல்வி அமைச்சரவர்கள் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்கள் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

பொதுவாக, இந்த பட்ஜெட்டிலே புதுக் கொள்கை ஒன்றும் இல்லை என்று நான் முதன் முதலில் கூறினேன். புதுக் கொள்கைகளைப் பொது மக்களும் இந்த மன்றமும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அவர்களுடைய விரிவான பட்ஜெட் வருகின்றபோது அந்த விவாதத்திலே மறுபடியும் கலந்துகொள்ளலாம் என்று கருதி என்னுடைய உரையை இத்துடன் முடிக்கின்றேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கத்தை மட்டும், இதிலே கலந்து கொள்ள இருக்கிற மற்ற உறுப்பினர்களுடைய வசதிக்காகத் தெரிவித்துவிடுவது நல்லது என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், இப்பொழுது பேசிய மதிப்பிற்குரிய திரு. பொன்னப்ப நாடார் அவர்களே இந்த விஷயத்தில் கொஞ்சம் குழப்பம் அடைகிறார்கள் என்றால், அது தொடர்ந்து இருக்குமோ என்ற அச்சத்தினால் அந்த விளக்கத்தைத் தருகிறேன்.

நாங்கள் அளித்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்திலோ அல்லது கவர்னர் உரையிலோ தென் உணவு மண்டலத்தைக் குறித்து எந்த விதமான கருத்தும் அறிவிக்கப்படவில்லை. அதிலே, தென் இராச்சியங்களுக்கிடையே தோழமை உணர்வு இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பது, ஏற்கனவே இருக்கின்ற 'ஸோனல் கவுன்ஸிலை'ப்பற்றி. அதை நம்முடைய உறுப்பினர்கள், தென் உணவு மண்டலத்தை நாங்கள் கொண்டுவர இருக்கிறோம் என்று எண்ணிக்கொண்டு, அது வேண்டுமா, வேண்டாமா என்றெல்லாம் பேசினார்கள். நம்முடைய நண்பர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அந்தக் குழப்பத்திற்கு ஆளாக மாட்டார்கள் என்று நான் கருதினேன். அவரே அந்தக் குழப்பத்திற்கு ஆளாகியிருக்கிறபோது, விளக்கத்தைத் தரவேண்டும் என்பதற்காக இந்த விளக்கத்தைத் தந்திருக்கிறேன். தென் உணவு மண்டலத்தைக் கொண்டு வருவதா, இல்லையா என்பதைப்பற்றி நாங்கள் எந்தக் கருத்தினையும் சொல்லவில்லை. பத்திரிகையிலே பார்த்திருப்பீர்கள். அந்தத் தென் உணவு மண்டலம் வரவேண்டும் என்று கேரள முதல் அமைச்சர் திரு. நம்பூதிரிபாத் அவர்கள் கூட விரும்பவில்லை.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** அடுத்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் உரையாற்றுவார்கள்.

* **திரு. இராம. அரங்கண்ணல்:** மன்றத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாக, நண்பர் திரு. நல்லசாமியைப் போன்றவர்களும், நண்பர் திரு. பொன்னப்ப நாடாரைப் போன்றவர்களும் எதாவது

பேசிக் கேட்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு இருந்தது. அந்த ஆவலைப் பூர்த்தி செய்கின்ற விதத்திலே, கவர்னர் உரையின் மீது விவாதத்தைத் தொடங்கிய பொறுமையான நண்பர் திரு. நல்லசாமி அவர்களும், இன்றையதினம் நம்முடைய நிதி நிலை அறிக்கையின் மீது விவாதத்தைத் தொடங்கிய நண்பர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களால் தெரிவிக்கப்பட்ட—காங்கிரஸ் கட்சியின் சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களெல்லாம் ஒரே விதமான கருத்துக்களாகத்தான் இருக்கின்றன. "ஆட்சிப் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொண்டு விட்டீர்கள், ஏற்றுக்கொண்டுவிட்ட உங்களிடமிருந்து புதுமையான பல திட்டங்களை நாங்கள் எதிர்பார்த்தோம், அந்த விஷயங்கள் எல்லாம் இல்லையே, இல்லையே" என்ற கருத்தினைத்தான் அவர்கள் அத்தனை பேரும் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

இன்றையதினம் நம்முடைய முதலமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கை எப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கை என்பதனை நாமெல்லாரும் நன்ருக உணர்வோம். காரியங்கள் தொடர்ச்சியாகவும், குந்தகமில்லாமலும் நடைபெறவேண்டும் என்ற நோக்கத்தோடு, அடுத்த நான்கு மாதங்களுக்கான நிதி நிலை அறிக்கை தான் இது. ஆனல், மரபுப்படி, நான்கு மாதங்களுக்கென்று நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்க முடியாது என்ற காரணத்தினுல், ஓராண்டு காலத்திற்கு என்று இந்த நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கைகளிலே புரட்சிகரமான கருத்துக்கள் எங்கே? ஆக்கமான யோசனைகள் எங்கே? என்றெல்லாம் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த அளவில் நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். நாங்கள் என்ன என்ன உறுதிமொழிகளை மக்களுக்கு அளித்தோமோ, எந்த எந்தக் காரியங்களை ஏற்று நடத்துவோம் என்று இத்தனை ஆண்டுக்காலம் சொல்லி வந்தோமோ, அவைகளையெல்லாம் ஒருமுகப்படுத்தித் 'தேர்தல் பிரகடனம்' என்று எங்களுடைய பெருமைக்குரிய மாநாட்டிலே நாங்கள் வைத்து மக்களுடைய ஒப்புதலைப் பெற்று, அதற்குப் பிறகு தான் இன்றையதினம் ஆட்சி மன்றத்திலே வந்து அமர்ந்திருக்கிறோம். அப்படி நாங்கள் தந்திருக்கிற தேர்தல் பிரகடனத்திலுள்ள விஷயங்களை நாங்கள் மறந்துவிட மாட்டோம். அப்படி யாராவது மறந்துவிடுவோம் என்று கருதினுல், அந்தச் சமயத்தில், அன்புள்ள எதிர்க்கட்சியினர் கொஞ்சங்கூடத் தயங்காமல் அல்லது அச்சம் காட்டாமல் அவைகளை எங்களுக்கு இடித்துரைப்பதை நான் மிக மிக வரவேற்கிறேன். நம்முடைய அமைச்சர்களும் வரவேற்பார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்முடைய நண்பர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், விவசாய வரி நீக்கத்தைப்பற்றி நாங்கள் எதிர்பார்த்தோமே, ஏனே அதுபற்றி எந்தக் கொள்கையையும் சொல்லவில்லையே என்று சொன்னார்கள். காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் அதே கருத்தை எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களுக்குக் கவனமூட்ட விரும்புகிறேன். 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் தேதி, இதே மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு தீர்மானம் நாங்கள் கொண்டுவந்தோம். என்ன தீர்மானம் என்ருல், ஐந்து ஏக்கருக்குக் குறைந்த நிலம் வைத்திருக்கிறவர்களுக்கு நில வரி நீக்கம் வேண்டும், எல்லா சர்ச்சார்ஜ்களும் போகவேண்டும் என்று தனி நபர் தீர்மானத்தைக் கொண்டுவந்து நாங்கள் இங்கே வாதாடினேம். வாதாடிய நேரத்தில், அந்தத் தீர்மானத்தின் மீது வாக்குகள் கூட இங்கே எடுக்கப்பட்டன. வாக்குகள் எடுக்கப்பட்ட நேரத்தில், விவசாய வரியை நீக்கவேண்டும் என்று இப்பொழுது இவ்வளவு வேகமாகப் பேசிய திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அன்றையதினம் அந்தத் தீர்மானத்தை ஆதரித்து ஓட்டுப்போட்டார்களா? நண்பர் நல்லசாமி போன்றவர்கள் அந்தத் தீர்மானத்தை அன்றையதினம் ஏன் ஆதரிக்காமல் விட்டார்கள்? அன்றையதினம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 63 உறுப்பினர்கள் அந்தத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்து, அந்தத் தீர்மானத்தை நிறைவேறவொட்டாமல் தடுத்திருக்கிருர்கள் என்பதை நான் கவனமூட்ட ஆசைப்படுகிறேன்.





இன்னும் ஒன்று. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த அளவில், நாங்கள் இன்றைய தினம் அமைத்துச் செயல்பட்டு வருவது புதிய அமைச்சரவை தான்; அதை நாங்கள் வெட்கமில்லாமல் ஒத்துக் கொள்ளுகிறோம்; நிர்வாகத்திற்குப் புதியவர்கள் தான் நாங்கள். அதை வெளிப்படையாக எடுத்துச் சொல்லுவதிலே எந்த விதமான தயக்கமும் எங்களுக்கு இல்லை. புதியவர்களே தவிர, பொறுப்புக்களை உணராதவர்கள் அல்லர் நாங்கள். என்ன என்ன பொறுப்புக்களை நிறைவேற்றுவோம் என்று எங்களுடைய தேர்தல் அறிக்கையில் நாங்கள் எடுத்துச் சொன்னேமோ அவற்றை அடக்கத்தோடு, நம்முடைய காரியங்களைச் செம்மைப்படுத்தி, நல்ல பண்பாட்டை உருவாக்குகின்ற வகையிலே, அரசியல் நாகரிகத்தை வளர்க்கின்ற வகையிலே திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபட்டுக்கொண்டு வந்திருக்கிறது. அந்தக் காரியங்களிலே அதே வகையில் தொடர்ந்து ஈடுபடும் என்று நாங்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். அதன் முதல் எடுத்துக்காட்டாகத்தான் முதல் நடவடிக்கையாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு 'ஊழியம் செய்யவேண்டும்' என்கிற உயர்ந்த குறிக்கோளோடு, மலர்ந்துள்ளது என்பதை எங்களுடைய பெருந்தலைவர், நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள்.

இத்தனை ஆண்டுக் காலமும், அதாவது கடந்த இருபதாண்டு முற் பகல்
காலமாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தவர்கள் 10-00
மந்திரி பதவி என்ருல் ஏதோ, அது ஆடம்பரப் பதவி என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். அமைச்சர் பதவி என்பது அழகாக ஆடம்பரமாக நாட்டிலே விழாக்கோலத்திலே உலா வருகின்ற பதவி, தாங்களே அமைச்சர் பதவி என்ற மாளிகைக்குச் சொந்தக்காரர்கள் என்று கருதி வந்தார்கள்.

[திரு. இராம. அரங்கண்ணல்] [1967 மார்ச் 21

ஆனால், இன்று தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் நாங்கள் நாட்டு மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பதில் முன்னணியில் இருப்போம். ஆட்சிக்குப் புதியவர்கள் என்றாலும், நாங்கள் பொறுப்பையுணராதவர்கள் அல்ல. பொது வாழ்வில் அமைச்சர்கள் என்பவர்கள் மக்களின் முதல்தர தொண்டர்களாகப் பணியாற்ற வேண்டுமென்று அண்ணல் காந்தியடிகள் கூறினார்கள். அந்த முறையிலேதான் நாங்கள் நாட்டு மக்களின் தொண்டர்களாக, பதவிப் பொறுப்பை ஏற்றிருக்கிறோம். நாங்கள் ஆடம்பரத்தைக் கட்டிக் காப்பதற்கோ, ஆணவத்தை வளர்ப்பதற்கோ, வேண்டியவர்களுக்குச் சலுகை செய்வதற்காகவோ, நாட்டுக் கஜானாவை எப்படி எப்படியெல்லாம் கரைக்கலாம் என்று திட்டம் போடவோ வந்திருப்பவர்கள் அல்ல. "அப்படிப்பட்ட எண்ணம் வளரக்கூடாது. அதை மாற்ற வேண்டும். அமைச்சர்கள் என்போர், தாங்கள் சமுதாயத் தொண்டர்களாகக் கருதி பொறுப்புக்களைத் திறம்பட வகித்துப் பணியாற்ற வேண்டுமென்று" எங்கள் பெருந்தலைவர் அவர்களால் வலியுறுத்தப்பட்டு வருகிறது. அதன் முதல் நடவடிக்கையாகத்தான் எங்களுடைய அமைச்சர்கள் தங்கள் சம்பளத்தை 500 ரூபாய் என்று குறைத்துக்கொண்டார்கள். தலைவர் அவர்களே, தாங்களும் இந்த முடிவினை ஏற்று தங்களுடைய சம்பளத்தை 500 ரூபாய் என்று குறைத்துக்கொள்ள முன்வந்திருப்பதை உண்மையிலேயே நான் பாராட்டுகிறேன். இது சம்பந்தமாக எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து யாராவது ஒரு நண்பர் ஒரு பாராட்டுச் சொல்லையாவது உதிர்ப்பார் என்று எதிர்பார்த்தேன். அவர்கள்தான், காந்தி அடிகளுடைய நல்லெண்ணத்தை மறந்து வெகுநாளாயிற்றே! ஆகவே பாராட்டுகின்ற நினைவு எப்படி வரும்? அவர்கள் யாருமே ஒரு குறிப்புக்கூட சொல்லவில்லை.

அமைச்சர்கள் பெரிய கார்களை வைத்துக்கொள்ளக் கூடாது என்றும் முடிவு எடுத்திருக்கிறோம். இதன் அடிப்படையான முக்கிய காரணம், சாதாரண ஜனங்கள் அமைச்சர்களை முதல்தர தொண்டர்கள் என்ற முறையிலேயே எண்ணி அவர்களிடத்தில் பழக வேண்டும், அமைச்சர்களும் மக்களோடு மக்களாகப் பழகினால்தான் அவர்களுடைய அன்றாடப் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு, மக்களின் வாழ்க்கையை வளப்படுத்த முடியும். இப்படி மக்களை நல்ல முறையிலே அணுக வேண்டுமென்ற அடிப்படையில்தான் எங்கள் பெருந்தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் முதல்வழி சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர்கள், என்றும் மக்களை விட்டு தூர விலகிச் சென்று விடக்கூடாது என்பதே எங்களுடைய முதல்தரமான எண்ணமாகும். ஆகவேதான் ஆடம்பரமான பெரிய கார்களையும்கூட எங்கள் அமைச்சர்கள் விலக்கிவிட்டார்கள்.

இன்றையதினம், கனம் உறுப்பினர்கள், சபையில் பல பிரச்சினைகளைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நாடு எப்படி இருக்கிறது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. கடந்த இருபதாண்டு காலத்தில் மக்கள் எண்ணிறந்த இடர்பாடு



1967 மார்ச் 21] [திரு. இராம. அரங்கண்ணல்]

களைத் தாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. வெள்ளையன் வெளியேறிய நேரத்தில் மாநில அரசு மத்திய அரசுக்கு 4 கோடி ரூபாய்க்குத்தான் கடன்பட்டிருந்தது. ஆனால் இன்றையதினமோ, நாம் மத்திய சர்க்காருக்கு 235 கோடி ரூபாய் அளவில் கடன் கொடுக்க வேண்டிய கட்டத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறோம். கடன் 235 கோடி என்பது மட்டும் அல்ல. அந்தக் கடன் தொகைக்கு நாம் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 8 கோடி ரூபாய் அளவில் வட்டி கட்ட வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அந்தப் பொறுப்பை உணர்ந்துதான் இந்த அரசு ஆட்சியை ஏற்று இருக்கிறார்கள்.

மாநிலத்தில் ஏற்படும் வீணான செலவுகளைக் குறைக்க வேண்டுமென்றும், அவசியமற்ற பல செலவுகளைத் தவிர்க்க வேண்டுமென்றும் சொல்லி, காங்கிரஸ் சர்க்கார் நமது ராஜ்யத்தில் சிக்கனச் சீரமைப்புக் குழு (ஹை பவர் கமிட்டி) என்ற ஒரு குழுவை ஏற்படுத்தினார்கள். சிக்கனச் சீரமைப்புக் குழு என்ன செய்தது என்று பார்த்தால், சென்னைமாநகரில் ஏற்படுத்தப்பட்டிருந்த சர்க்கார் நியாயவிலை விறகுக் கடைகளை மூடிவிடலாம் என்று ஒரு தீர்மானம்; அடுத்து, வெயிட்ஸ் அண்டு மெஷர்ஸ் சம்பந்தமாக ஒரு இலாகா இருந்தது. அதையும் மூடிவிடலாம் என்று ஒரு தீர்மானம். ஆக, இந்த இரண்டு தீர்மானத்தைப் போட்டதைத் தவிர அந்தச் சிக்கனச் சீரமைப்புக் குழு என்ன செய்தது என்றே தெரியவில்லை. இப்போது அந்தக் குழு இருக்கிறதா, இல்லையா என்கிற விவரம் தெரியாது. இன்றையதினம் உண்மையிலேயே நாங்கள் நிர்வாகத்தில் சிக்கன நடவடிக்கையை மேற்கொள்வதோடு, பல நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நம்முடைய அமைச்சர்கள் தங்களுடைய சம்பளத்தை 500 ரூபாயாகக் குறைத்துக் கொண்டார்கள். ஆனால் மாதத்திற்கு இரண்டு ஆயிரம், இரண்டாயிரத்து ஐநூறு, மூவாயிரம் என்று சம்பளம் வாங்குகிற அதிகாரிகள் இருக்கிறார்கள். கடந்த இருபதாண்டுக் காலத்தில் காங்கிரஸ் கட்சி ஏராளமான பல இலாக்காக்களைச் சிருஷ்டித்து, ஏராளமான அதிகாரிகளை உலாவ விட்டுவிட்டுப் போய் இருக்கிறார்கள். இவைகளை யெல்லாம் சீர்திருத்த வேண்டுமென்று சொன்னால் திடீரென்று ஆட்சிக்கு வந்த முதல் நாளே, மாறுநாளே செய்துவிட முடியாது. அதிகாரிகளை வீட்டுக்கு போ என்று அனுப்பிவிட முடியாது. பல பிரச்சினைகள் இருக்கின்றன. மத்திய சர்க்காரில் இன்றையதினம் நிதிமந்திரியாக இருக்கக்கூடிய திரு. மொரார்ஜி தேசாய் அவர்களின் தலைமையில் நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் போட்டார்கள். அந்தக் கமிஷனின் முடிவு என்னவென்று தெரியவில்லை. திரிசங்கு சொர்க்கத்தில்தான் இருந்து வருகிறது. இந்தச் சர்க்காரைப் பொறுத்தவரையில் நான் சொல்லிக்கொள்வது என்னவென்றால், சிக்கன முறைகள், நிர்வாகச் சீர்திருத்தம் ஆகியவை பற்றி ஆழ்ந்து பரிசீலனை செய்தாக வேண்டும். நாட்டு மக்கள் அதிகமாக நம்மிடம் எதிர்

[திரு. இராம. அரங்கண்ணல்] [1967 மார்ச் 21

பார்க்கிறார்கள். அவர்களுக்குப் பாடுபடுவதற்காகவே நமது கழகத்தைத் துவக்கி வளர்த்து வருகிறோம். இந்த அரசின் ஆட்சிக்கு, சர்க்கார் ஊழியர்கள் தங்களுடைய பூரண ஒத்துழைப்பைத் தருவதற்கும், நிர்வாகத்தைத் திறம்பட நடத்தித் தரவும் நல்லெண்ணம் கொண்டிருப்பதை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். இந்த நல்ல பாரம்பரியத்தை வளர்க்க வேண்டுமென்றும் கருதுகின்றேன். கடந்த ஒரு வார காலத்தில் பதுக்கல்காரர்களிடமிருந்து 12 ஆயிரம் மூட்டைகள் அதிகாரிகள் கைப்பற்றி இருக்கிறார்கள். இப்படி போலீஸ் அதிகாரிகளும், மற்ற அதிகாரிகளும் உற்சாகத்தோடு பணியாற்றுவதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதே சமயத்தில் ஒவ்வொரு இலாகாவிலும் பல துறைகளில், பல விஷயங்களில் செலவுகள் அதிகமாகி இருக்கின்றன. அந்தந்த இலாக்காத் தலைவர்கள், என்னென்ன முறைகளில், எப்படி எப்படி வீண் செலவுகளைக் குறைக்கலாம் என்பதை ஆராய்ந்து பார்த்து, வீண் செலவைக் குறைத்துக் கொள்ள முன்வர வேண்டும். அதிகாரிகள் என்றால், அமெரிக்காவில் இருந்தோ, ஆப்பிரிக்காவில் இருந்தோ வந்தவர்கள் அல்ல. அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகள்தான். அவர்கள் உத்தியோகத்தில் இருக்கின்ற காரணத்தால், தாங்கள் நாட்டு மக்களுடைய முதல்தர ஊழியர்கள் என்ற உணர்வு பெற்று பணியாற்ற முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலவரியை எடுப்பதைப்பற்றி இடைக்கால நிதி நிலை அறிக்கையில் ஒன்றுமே சொல்லவில்லையே என்று சிலர் குறிப்பிட்டார்கள். "நிலவரியின் எதிர்காலத்தைக் குறித்து அரசாங்கம் எடுக்கும் முடிவுகள் சட்டப் பேரவையின் முன் வைக்கவிருக்கும் முறையான வரவு செலவுத் திட்டத்தில் மட்டுமே காணப்படும்" என்று மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் இடைக்கால பட்ஜெட் உரையில் குறிப்பிட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். இதுபற்றி தக்க நேரத்தில், தகுதியான பதில் எல்லோருக்கும் நல்ல பதில் அமைச்சரிடமிருந்து கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

ஆனால் ஒன்றை நாம் இன்றையதினம் மறந்துவிடக் கூடாது. விலைவாசி ஏற்றத்தைச் சமாளிக்க அரசாங்கத்தின் கடைநிலை ஊழியர்கள், என்.ஜி.ஓ.-க்கள் தங்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று கோருகிறார்கள். 1962-ம் ஆண்டு சமர்ப்பித்த நிதிக் கமிஷன் அறிக்கையிலேயே குறிப்பிட்டிருந்தார்கள். மத்திய அரசு ஊழியர்களுடைய சம்பள உயர்வு, பஞ்சப்படிக்கு ஏற்ப, நமது மாநில அரசு ஊழியர்களுடைய சம்பளம், பஞ்சப்படி அளிக்கப்பட வேண்டும் என்பதாக தங்களுக்குச் ஸிட்டி காம்பன்ஸேட்டரி அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்றும் நமது ஊழியர்கள் கேட்கிறார்கள். அரசாங்க ஊழியர்களுடைய குறைகளையெல்லாம் நிச்சயமாக இந்த அரசாங்கம் கவனிக்கும். இன்னும் ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏற்கெனவே, அரசாங்க ஊழியர்களுக்கு அளித்துள்ள பஞ்சப்படி உயர்வினால்



1967 மார்ச் 21] [திரு. இராம. அரங்கண்ணல்]

நமது மாநில அரசுக்கு 5 கோடி ரூபாய் அதிகச் செலவு ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் நிலவரி நீக்கம் ஏற்படுவதால் கூடுதலாக 8 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட இருக்கிறது. இந்த 8 கோடி ரூபாய் நஷ்டம் மட்டும் அல்ல. நமது ரெவின்யூ டிபார்ட்மெண்டில், 11,753 கிராம முனிசிப்புகள் இருக்கிறார்கள். 11,374 கர்ணங்கள் இருக்கிறார்கள். 15,380 தலையாரிகள் இருக்கிறார்கள்; 15,581 வெட்டிகள் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களினால் நமக்கு ஆண்டுதோறும் 1 கோடியே 64 லட்சம் ரூபாய் செலவு ஆகிவருகிறது. இவர்களுடைய பணியை பஞ்சாயத்துக்களோடு இணைக்க வேண்டுமென்ற பிரச்சினை இருக்கிறது. அவைகளை எல்லாம் கவனித்து அதுபற்றிய நல்ல முடிவை அரசாங்கம் எடுக்கும் என்று சொல்கிறேன்.

நம்முடைய சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் பக்கிங்காம் கால்வாய், கூவம் கால்வாய் சம்பந்தமான திட்டம் இருக்கிறது. அதற்கு ஏறக்குறைய சுமார் 4 கோடி ரூபாய் செலவாகும் என்று கருதப்படுகிறது. இதுசம்பந்தமாக நமது மதிப்புமிக்க மராமத்து மந்திரி அவர்கள் தன்னுடைய ஜூன் மாதவாக்கில் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தில் வகை செய்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக, கைத்தறிப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால், நமது மாநிலத்தில் கிட்டத்தட்ட 20 லட்சம் நெசவாளர்கள் இருக்கிறார்கள். இவர்களில் கூட்டுறவுத் துறையில் சுமார் 2 லட்சம் பேர்கள்தான் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகளையும் கவனத்தில் கொண்டு நல்ல வழிவகை காண வேண்டும். அதேநேரத்தில் நிதிப் பற்றுக்குறையும் இருந்து கொண்டிருக்கிறதென்பதை யாரும் மறுக்க முடியாது. நம்முடைய நிதிப்பற்றுக்குறையைச் சமாளிக்க நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன்.

முன்பு இருந்த சர்க்காரில், அடுத்து வருகிற நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதி சேகரிப்பதுபற்றி ஆலோசித்தபோது, டெல்லியிலுள்ள 'நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலிடம்' யோசனை கேட்டபோது அவர்கள் சொன்னார்கள். 'நம் தமிழ் நாட்டை மூன்று பக்கமும் கடல் சூழ்ந்திருக்கிறது. ஆகவே, நாம் கடல் வாணிபத்தைப் பெருக்கிக் கொண்டால் தமிழ்நாட்டின் ஏற்றுமதிப் பொருள்களின் மூலமாக அதிக வருவாயைப் பெற முடியும். நம்முடைய சர்க்கார் வரிகளை மட்டும் நம்பிக்கொண்டு காலத்தைத் தள்ள முடியாது. தமிழ்நாட்டிலிருந்து கிட்டத்தட்ட 80 கோடி ரூபாய்க்குப் பொருள்களை ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறோம். 1966-67-க்குள் இந்த 80 கோடி ரூபாய் 100 கோடி ரூபாய்க்கு உயர்த்தப்பட வேண்டும். அதற்கு அடுத்த ஆண்டில் 125 கோடி ரூபாயாக இது வளர வேண்டுமென்று' முன்னாள் தொழில் மந்திரியாக இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். எடுத்துச் சொன்னது மட்டுமல்ல; இரண்டாண்டு

[திரு. இராம. அரங்கண்ணல்] [1967 மார்ச் 21

காட்டலாம். அவற்றை மனப்பூர்வமாக வரவேற்க காத்து இருக்கிறோம். அதேநேரம் நாட்டு மக்களின் நன்மைக்காக இந்த அரசு எடுத்துக் கொள்கிற நல்ல நடவடிக்கைகளை அனைத்துக்கும் இந்த மன்றத்தில் உள்ளவர்கள் அனைவரும் தங்கள் ஒத்துழைப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு தன் மேலான நோக்கமாக தன் இதயத்தில் கொண்டுள்ள அடக்க உணர்வு, தன்னடக்கமான உணர்வு, மக்களின் நன்மையையே கொண்ட தன்னலமற்ற உணர்வு வாழ்க, வளர்க என்று வாழ்த்தி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, at the very outset I wish to congratulate our Chief Minister on the first budget that he has presented to the House. In fact, for a number of years people were dreaming that the old Leader of the Opposition, 'Anna' as he is popularly known, would one day come forward and present his budget to the House. We were then thinking that it would be only a dream and would not become a reality. Because of the will of the people, that dream has been converted into a hard, stark reality. I congratulate the Chief Minister on presenting an excellent budget without taxing the people any further than what they have already been taxed. In this connection I wish to offer a few remarks which, I am sure, the Chief Minister and the Members on the Treasury Bench will bear in mind before they frame the regular budget to be presented in June or July and before they have discussion with the Chief Ministers of other States. It is a well known fact that the most important question to which a budget must address itself is : how to reduce the spiralling prices. The goal of every budget, whether it be of the State Government or the Central Government must be to reduce prices and increase production. Unless production is increased, prices will not be reduced. In other words, price reduction and increased production are twin problems interconnected with each other.

Another thing I would like to point out in connection with the reduction of prices is this. The most important factors that contribute to increase in prices are deficit financing, reckless overdrafts and borrowings from the Central Government and the public. These are the three pillars on which price spiralling is built.

As regards deficit financing, the Government, Central or State, must so frame the budget as to avoid deficit financing as far as possible. So far, the history has been that the State and the Centre have been competing with each other in framing a deficit budget. The idea behind deficit financing is this. Even if the State Governments produced budgets with a maximum amount of deficit finance, they thought they could get away with it by resorting to Reserve Bank borrowings and the Central Government condoned it. In fact there is a complaint from the Central Government that a number of States have resorted to a large amount of borrowings. Unless these borrowings, especially the Reserve Bank borrowings are cut down, there is no escape from spiralling prices.



1967 மார்ச் 21] [Dr. H. V. Hande]

In fact I brought this to the notice of the previous Ministry and there was serious altercation and exchange of words between me and the then Minister for Industries. When I charged the then Ministry about this extraordinary deficit financing, the former Leader of the Upper House and the Minister for Industries got angry with me and said, 'This hon. Member is talking without any relevancy to the facts'. Now we find that the facts are coming out in this Budget speech. I am happy that the present Hon. Chief Minister has come out boldly. In fact such a discrepancy has crept even in the last year's Budget when there was shown a surplus of Rs. 31 lakhs. Now suddenly in this year's Budget we find that there is a deficit of about Rs. 7½ crores. I am quite sure that the credit for bringing out these facts goes to the present Ministry because they have given orders to the Secretariat to furnish these figures frankly and fearlessly. This method of approach has brought out the unfortunate facts into limelight. But for this, we would have been under the impression that everything is going on well and that we have a surplus budget. Now in this year's Budget we find a deficit of about Rs. 7½ crores which is not a small amount. It is a very big amount.

Now, coming to the most important point, the State should never rely too much on the Centre. Immediately there must be an understanding on that point. I want to strike a note of warning that hereafter the State Ministries and the Central Ministry will be run by different parties and the State-Central relationship will definitely suffer and undergo damage. I am quite sure that the Hon. the Chief Minister will very seriously consider this point Just imagine for one moment that there is some confusion in the Central Government owing to the crossing of the floor by a few Congress Members of the Parliament. That has happened in Pondicherry and Haryana. Also, when we frame our Budget, we must always rely on ourselves, without depending too much on the Central Government. After all, the Central Government are looking to the foreign countries for aid and this has been the routine process. States are putting the blame on the Centre and the Centre is looking helplessly to the foreign countries. Even some responsible person in New Delhi has gone to the extent of making a disparaging statement that the Food Ministry of the Central Government consists of two wings the foreign department and the internal department. One wing is in charge of free supply of food from the foreign countries and the other wing addresses itself to muster some food from the States internally. This is a pathetic state of affairs in which the Centre is placed and which the States should not forget. That is why I request the Hon. Chief Minister to impress upon the other Chief Ministers and also the Finance Minister of the Government of India that they should not compete with each other. Let the States not compete with each other in this business of overdraft. Let not the States compete in deficit financing. Now the Centre is very weak and this point the hon. Members of the House must remember. The Centre of to-day is not the Centre of old. Therefore, whatever

[Dr. H. V. Hande] [1967 மார்ச் 21

Budgetary proposals we frame, must have a bearing with reality and must be based in such a manner that we do not rely too much on the Centre. For instance, even with regard the Fourth Plan, we have an outlay of Rs. 564 crores, but what is the amount that is earmarked for from the Centre? It is only Rs. 250 crores. If we divide Rs. 250 crores by five, we have to get Rs. 50 crores every year. But I find that they are going to give only Rs. 35 crores which is less than Rs. 15 crores which they had originally promised. In other words, they have promised Rs. 250 crores for the whole Plan period but they may not be able to give that amount and they may say that they could not do so due to some extraordinary factors. So, I request the Hon. Chief Minister to take proper care of this factor when he frames the regular Budget and do not rely too much on the Centre. We cannot take the Centre for granted because I am very, very nervous about the way the Central Government are going to do about their business. Also, when the States are not prepared to resort to deficit financing, they cannot expect the Central Government to resort to deficit financing to give the share of the States and that is a dangerous thing to do, whether it is the Central Government or the State Government. The immediate result will be that there will be very serious consequences, viz., spiralling of prices.

Finally, due to paucity of time, I will refer only to the way in which we can help the employees of the Secretariat. I have been stressing for the past several years that the employees of the Secretariat must be very well looked after because they are the hub of the entire State activities. When I was a Member of the Upper House, I also requested the then Chief Minister to see that the Secretariat employees were properly looked after. There is a feeling among the employees of the Secretariat and there is a serious grievance that they have not been looked after well all these years and that they have not been given compensatory allowance. After all, Madras has been declared A Class City, and the State Government employees expect that they must be given allowances on a par with the Central Government employees. I request the Hon. Chief Minister to apply his mind to this particular proposition and see that there is no disparity in the allowances. If this is done, there will be excellent co-operation from the Secretariat staff and the staff in other State Government offices in the City. This co-operation has already begun to show itself within the short period since the Hon. Chief Minister has assumed office. After all, the compensatory allowance would not involve more than one crore of rupees and that is my rough estimate. In fact, when I asked the then Chief Minister, Mr. Bhaktavatsalam, how much it would cost to the exchequer, he replied that they were not even prepared to furnish the figures, by calculating the actual expenditure to the exchequer. That was the reply given by him. But I am confident that the present Ministry and the Hon. Chief Minister will sympathetically consider this matter and straightaway grant the compensatory allowance. The moment it is granted, the whole administration of the State will be completely toned up and the whole



1967 மார்ச் 21] [Dr. H. V. Hande]

Government staff will be thankful for this small act of the Government and will be grateful to them. This will have wonderful effect which will ultimately bring about excellent co-operation between the employees of the Government and the Treasury Benches. With these words, I commend the Budget speech made by the Hon. Chief Minister.

**திரு. கொ. கோதண்டம்:** பெருமதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்காக இருக்கிறேன். குறிப்பாக இன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற இந்த வரவு செலவுத் திட்டம் உண்மையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் அடித்தளத்திலேயிருந்து வந்திருக்கிற நாங்கள் மக்களுக்கு நல்ல முறையில் சேவை செய்ய வேண்டுமென்ற அடிப் படையிலேதான் அமையும் என்ற கருத்தை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே அண்மையிலே ஏற்பட்ட புயல் பயங்கரங்களைப்பற்றி நான் இந்தச் சபையின் முன் வைக்க விரும்புகிறேன். 3—11—1966 தேதியன்று ஏற்பட்ட புயலின் காரணமாக என்னுடைய தொகுதியைச் சேர்ந்த இடங்களிலேயும், இடைக்கநாடு பகுதிகளிலும் பெரும் சேதங்கள் ஏற்பட்டு அங்கே ஏறக்குறைய 30 சதுர மைல் விஸ்தீரணத்திற்கு 10 லட்சம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது; 3,200 வீடுகள் படு நாசமடைந் திருக்கின்றன.

(மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் தலைமை)

அதற்கு இதுவரையில் இருந்த சர்க்கார் எந்தவிதமான நடவடிக் கையும் எடுக்காமல் 40 ரூபாய் கொடுத்ததோடு நிறுத்தியிருக் கிறார்கள். இன்னும் நான் விரிவாகச் சொல்ல வேண்டுமென்றால் அங்கே வாழுகின்ற மக்கள் இன்னும் 15 ஆண்டு காலத்திற்கு எந்த விதமான நலனும் வாய்ப்பும் வசதியும் பெறமுடியாத அளவிற்கு மிகவும் மோசமான நிலையிலே இருக்கிறார்கள். அதையும் நம்முடைய சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்பு கிறேன்.

அதே போல், புயல் ஏற்பட்ட நேரத்திலே 72 ஏரிகள் உடைபட் டிருக்கின்றன. அந்த ஏரிகள் உடைபட்டதன் காரணமாக மதுராந் தகம் பகுதி நல்ல செழுமையான பகுதியாக இருந்தாலும் கூட, தற்போது அறுவடை திருப்திகரமான நிலையில் இல்லை என்பதை விவசாயிகள் எடுத்துக் கூறுகிறார்கள். அந்த ஏரிகள் தற்போது தாற்காலிகமாகப் பழுது பார்க்கப்பட்டிருக்கின்றன. அதை நல்ல முறையில் பழுது பார்க்கப்படுவதற்கும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

நீண்ட நெடுங்காலமாக மதுராந்தகம் ஏரி சரித்திர காலப் புகழ் பெற்று இருந்தாலும் கூட, இதுவரை அந்த ஏரி தூர் வாரப்பட வில்லை. இதைப் பற்றி இந்த மன்றத்தில் பல முறை எழுப்பப் பட்டும் இதுவரை கவனிக்கப்படவில்லை. குறிப்பாக, மதுராந்தகம்

ஏரியைத் தூர் வாருவதன் காரணமாக 22 கிராமங்களுக்கு மேற்பட்ட பகுதிகள் பாசன வசதி பெற வழி ஏற்படும்.

அடுத்தபடியாக, விவசாயிகளைப் பொருத்துக் கொடுக்கப்படுகிற எந்தக் கடன்களும், வசதிகளும் அவர்களுக்குக் காலாகாலத்தில் கிடைப்பதில்லை. ஐ.எம்.எஸ். பர்மிட் என்று சல்பேட் உரத்திற்காக கொடுக்கக்கூடிய பர்மிட் மூன்று மாத காலம் ஆகியும் இன்னும் கிடைக்கவில்லை என்று விவசாயிகளிடம் இருந்து அறிகிறேன். இனி மேலாவது கொடுக்கப்படுகிற கடன்கள் உரிய காலத்தில் கொடுக்கப்படுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

கூட்டுறவுத் துறையைப் பொருத்தவரை தனிப்பட்டவர்களிடத்தில் சிக்கிக் கொண்டிருக்கும் காரணத்தால் சாதாரண ஏழை எளிய மக்கள் எந்தவிதமான நன்மையும் பெற முடியாத நிலை இருக்கிறது. கூட்டுறவுத் துறை விவசாய மக்களுக்கும் ஏழை மக்களுக்கும் பயன்படும் வகையில் சட்டத்தின் மூலமாகத் திருத்தி அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல கோயில்கள், தர்ம ஸ்தாபனங்கள் வசம் இருக்கின்ற நிலத்திலுள்ள விவசாயிகளின் நிலைமையைப்பற்றிச் சொல்லவே முடியவில்லை. கோயில் நிலங்கள் தர்ம ஸ்தாபன நிலங்களில் விவசாயிகளிடத்தில் இருந்து வாங்குகின்ற வாரங்கள் ஒருவிதமாகவும், எழுதுகின்ற கணக்குகள் வேறு மாதிரியாகவும் இருப்பதாக அறிகிறேன். அப்பேர்ப்பட்ட தர்ம ஸ்தாபனங்களின் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று எங்கள் பகுதிகளில் இருக்கும் மக்களின் முக்கியமான பிரச்சினை குடிதண்ணீர்ப் பிரச்சினை. இந்தப் பிரச்சினை இதுவரை தீர்க்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஜி.எஸ்.டி. ரோடு அருகாமையில் இருக்கின்ற கிராமங்களில் உள்ள தாய்மார்கள் இரண்டு, மூன்று மைல் சென்று குடிதண்ணீரை எடுத்து வரவேண்டிய நிலைமை இருக்கிறது. அப்பேர்ப்பட்ட கிராமங்களில் ஊற்றுக் குழாய்கள் (போரிங் வெல்ஸ்) அமைத்து அங்குள்ள பெருங்குடி மக்களுக்கும், ஆதித் திராவிட மக்களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மரம் ஏறும் தொழிலாளர்கள் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அவர்களுக்கு, பதனீர் இறக்கக்கூடிய காலத்தில், குறித்த காலத்திற்குள்ளாக இதுவரை லைசென்ஸ் கொடுக்கப்படவில்லை. குறித்த காலத்தில் லைசென்ஸ் கிடைக்காத காரணத்தால், ஆறு மாதங்களில் மூன்று மாதங்கள்தான் அவர்களால் வேலை செய்ய முடிகின்றது. ஆகவே, அந்த லைசென்சைப் குறித்த நேரத்தில் கொடுப்பதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்தைப் பொருத்தவரை, கொடுக்கப்படுகின்ற கடன்கள் காலாகாலத்தில் கொடுக்கப்பட வேண்டும். அதே போன்று உரங்கள் காலாகாலத்தில் கொடுக்கப்பட வேண்டும். கடந்த



ஆண்டு என்னுடைய தொகுதியில் பூச்சி மருந்துகள் கூட காலத்தில் கிடைக்காமல் அதிகமான அளவுக்குப் பயிர்கள் பூச்சியடித்து நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பெருமழை, புயல் காரணமாக வளமான பகுதி என்று சொல்லப்படுகிற மதுராந்தகம் தன்னிறைவைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலைமை அடைந்திருக்கிறது, அந்தப் பகுதியில், குறிப்பாக இடகளுடு பகுதியைப் பொருத்தவரை, இருந்த தென்னை மரங்களும், மாமரங்களும் தரையோடு தரையாயிருக்கின்றன என்று சர்க்காருடைய அறிக்கையிலேயே கூறியிருக்கிறார்கள் " It will take some decades to have the original look of Malabar " என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் 20 ஆண்டுகளுக்கு 15,000-க்கு மேற்பட்ட மக்களுக்கு எந்த விதமான வழியும் இல்லாமல் போய்விட்டது. அவர்கள் இன்று வெட்ட வெளியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களுக்குப் பதினைந்து ஆண்டு காலத் தவணையில் கடன் கொடுத்து அந்தக் கடனை ஐந்தாண்டுகளுக்குப் பிறகு தென்னை பலன் கொடுக்கும் நேரத்தில் வசூல் செய்து கொள்ள ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உடைப்பட்டுப் போன 72 ஏரிகள் தாற்காலிகமாகத்தான் பழுது பார்க்கப்பட்டிருக்கின்றன. அவை நிரந்தரமாகப் பழுது பார்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுராந்தகம் ஏரியை உடனடியாக தூர் வாருவதற்கான ஏற்பாடுகளைச் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் செய்து தருவார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து இந்த வாய்ப்பை அளித்த மன்றத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து**: கனம் உதவித் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நிதிநிலை ஆண்டு அறிக்கையைப் பார்க்கின்றபோது வருகின்ற வருஷத்திலே எவ்வளவு கஷ்டமான நிலையைப் புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் அமைச்சரவை சமாளிக்க வேண்டியிருக்கிறது என்பதைப் பார்க்கும் போது மிகவும் கஷ்டமான ஒரு பணியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று தான் கூற வேண்டும். பதவியில் இருப்பது வெளியில் இருப்பவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சிகரமாகப் பட்டாலும், இன்றைக்கு இருக்கிற நிலையிலே மிகவும் கஷ்டமான ஒரு பணியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்றுநான் கருத வேண்டும்.

இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் 7½ கோடி ரூபாய் துண்டு விழுகிறது. இந்தத் துண்டை எப்படிச் சரிக்கட்டப் போகிறார்கள், எப்படிச் சரிக்கட்ட முடியும் என்பதைப் பார்க்கிறபோது, புதிய வரியினால் சரிக்கட்ட வேண்டும், அல்லது மத்திய அரசாங்கத்திடம் இருந்து பெறும் தொகையை மானியமாகப் பெறுவதன் மூலமாகச் சரிக்கட்ட வேண்டும். இன்றைய நிலையில் புதிய வரிகளைப் போட மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். அதே சந்தர்ப்பத்தில் மேலும் மேலும் புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்களுடைய பொருளாதார நிலை உயர வேண்டுமென்ற எண்ணமும்

[திரு. இராம. அரங்கண்ணல்] [1967 மார்ச் 21

காலத்திற்கு முன்பே 'எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில்' என்றும் அப்பாதைய முதலமைச்சர் தலைமையில் ஏற்படுத்தப் பட்டது.

சென்னையிலே 1967 டிசம்பரில் ஒரு இண்டஸ்ட்ரியல் ஃபேர் (தொழில் சந்தை) நடைபெறும் என்றும், அந்தச் சந்தையில் சுமார் 50 வெளிநாடுகள் பங்குகொள்ளும் என்றும் சொன்னார்கள். அதற்கான ஏற்பாட்டைச் செய்ய ஒரு கோடி ரூபாய்க்கு மேல் கொடுத்தோம். நான் அதை எடுத்துச்சொல்வதற்குக் காரணம் அந்த இண்டஸ்ட்ரியல் ஃபேரை நாம் நல்ல முறையில் நடத்த வேண்டும். நம்முடைய நாட்டுப் பொருள்கள் தோலிலிருந்து, இன்னும் பலப்பல பொருள்களைப் பிற நாட்டவர் காணச் செய்து, நமது ஏற்றுமதி பெருக தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். கைத்தறி சம்பந்தமாக முன்பு 'ப்ளீடிங் மெட்ராஸ்' அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தது. இன்றைய தினம் அமெரிக்காவிலும், மற்ற நாடுகளிலும் நமது கைத்தறித் துணிகளுக்கு மார்க்கெட் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் பிரெஞ்சு நாட்டில் இருப்பவர்கள் நம்முடைய கைத்தறியை விரும்புவதாகவும், அதேமாதிரி ருஷ்யா நாட்டில் இருக்கிறவர்கள் நம் நாட்டின் கைத்தறித் துணியை விரும்புவதாகவும், மேலும் நம் நாட்டில் உள்ள பலபொருள்களை விரும்புவதாகவும் அறிகிறேன். ஆகவே, நாம் இந்த விஷயத்தில் ஒரு சிறப்பான தனிக் கவனம் செலுத்த வேண்டும். அடுத்து, தொழில் வளர்ச்சியின் மூலம், மாநில அரசுக்கு வருமான வழி காண வேண்டும். ஐந்தாண்டுத் திட்டப்படி போடப்பட்டிருக்கிற திட்டங்களையெடுத்துப் பார்த்தால், மூன்றுவிதமாக இருக்கிறது. ஒன்று சென்டிரல் செக்டாரில் இருப்பது, மற்றொன்று ஸ்டேட் செக்டாரில் இருப்பது. மூன்றாவது பிரைவேட் செக்டார். இந்த மூன்று இனங்களிலும் என்ன என்ன தொழில்கள் இருக்கலாம் என்பதை வரையறுத்திருக்கிறார்கள். அதை எடுத்துப் பார்த்தால் எந்த எந்தத் துறைகளின் மூலம் வருவாய் கிடைக்கிறதோ அவற்றை எல்லாம் சென்டிரல் செக்டாரிலேயே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக நெய்வேலி, ஐ. ஸி. எப்-கோச் பாக்டரி, எண்ணூர் நிலையம் இப்படியாக இருக்கிறது. இவற்றின் மூலம் மத்திய அரசாங்கத்திற்கு வருவாய் வரக்கூடியதாக இருக்கிறது. ஆனால் ஸ்டேட் செக்டாருக்கு ஒதுக்கியிருக்கிறவைகளைப் பார்த்தால் சமுதாயத்திற்கு நலம் செய்கின்ற வருவாய் இல்லாது செலவினம் மட்டும் அதிகமாக இருக்கின்ற இனங்கள்தான் இருக்கின்றன. கல்வி, சுகாதாரம் இப்படியாக இருக்கிறது. நம்மிடம் இருப்பது எல்லாம் ஒன்றிரண்டு நூற்பாலைகள், பஸ் டிரான்ஸ்போர்ட் போன்றவைதான், கடந்த இரண்டு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் பிரைவேட் செக்டார் எத்தனை வளர்ச்சி அடைந்திருந்தாலும் அவற்றின் மூலம் நமக்கு வருமானம் வரக்கூடியது இல்லை. இருப்பினும் பிரைவேட் செக்டாருக்கு ஏராளமான பொருள் வசதி கிடைக்கும் வகையில் அவற்றுக்கு முன்பு இருந்த காங்கிரஸ் ஆட்சியில் பலவகையான நிதி ஆதாரங்கள் தான் தேடித்



1967 மார்ச் 21] [திரு. இராம. அரங்கண்ணல்]

தரப்பட்டிருக்கின்றன. பிரைவேட் செக்டாருக்கு உதவி செய்வதற்காக இண்டஸ்டரியல் கார்ப்பரேஷன் ஏற்படுத்தப்பட்டது. அது மட்டும் போதாது என்று இண்டஸ்ட்ரியல் பாங்கை திரு. டி. டி. கே. அவர்கள் ஏற்படுத்தித் தந்தார்கள். எல். ஐ. ஸி. வேறு ஏராளமான பணத்தைத் தருகிறது. இருந்தும் பிரைவேட் செக்டாரில் இருந்து அரசாங்கத்திற்கு கணிசமான வருமானம் கிடைக்கிறதா என்றால் இல்லை என்றே தோன்றுகிறது. இவற்றை எல்லாம் நல்ல முறையில் பரிசீலனை செய்து நான்காவது திட்டம் அமைக்கப்பட வேண்டும் என்பதாக இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த அரசு உரியவகையில் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி நம்முடைய நியாயமான பங்கினை எல்லாத் துறையிலும் பெறவேண்டும். இன்னும் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டுமானால் நான்காவது நிதிக் கமிஷனுக்கு, சென்ற சர்க்கார் ஒரு ரிப்போர்ட் சமர்ப்பித்தது. அந்த ரிப்போர்ட்டினை எல்லோரும் எடுத்துப் படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுவும் குறிப்பாக இப்போதுள்ள எதிர்க்கட்சியினர் படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதில் இருக்கிற கருத்துக்களை நாமோ, எங்கள் கட்சியில் இருக்கிறவர்களோ எடுத்துச் சொன்னால் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று பேச ஆரம்பித்துவிட்டார்கள் என்று சொல்லக் கூடும், டெல்லி, தமிழ்நாடு என்ற பேச்சு ஆரம்பமாகிவிட்டது என்று சொல்லக் கூடும். ஆனால் முன்பு இருந்த பக்தவத்சலம் மினிஸ்ட்ரியே மிக மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய சர்க்காரின் வருமான ஆதாரங்களாக இருக்கிற எக்ஸைஸ் ட்யூடியை எடுத்துக் கொண்டாலும், இன்கம் டாக்ஸை எடுத்துக் கொண்டாலும், ரயில்வே வருமானத்தை எடுத்துக் கொண்டாலும் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உரிய பங்கினைத் தந்தாக வேண்டும் என்பதை வற்புறுத்தியிருக்கிறது. இன்றைக்கு ரயில்வே துறை மூலமாகக் கிட்டத்தட்ட ஓர் ஆண்டுக்கு நமது மாநிலத்தில் மட்டும் பிரயாணிகள் மூலமாக 80 கோடி ரூபாய் பணம் கிடைக்கிறது. ஆனால் நம் அரசுக்கு ரயில்வே துறையிலிருந்து கிடைப்பது எல்லாம் 80 லட்சம் ரூபாய்க்குக்கூட வருவதில்லை. இப்படிப்பட்ட நிலையை மாற்ற இதுபோன்ற எல்லாத் துறைகளையும் எடுத்துப் பார்த்து ஆராய்ந்து நமது மாநில அரசுக்குக் கிடைக்க வேண்டிய உரிய பங்கினைப் பெறுவதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

இன்றையதினம் இந்த மாநிலத்திலே பதவி ஏற்றிருக்கிற புதிய அரசுக்கு பல பொறுப்புகள் இருக்கின்றன. கடந்த இருபது ஆண்டுக் காலமாக வளர்க்கப்பட்ட விஷ விருட்சத்தை வேரோடு அழித்துவிட்டு சமதர்ம சமுதாய அரசை ஏற்படுத்தியாகவேண்டும். இந்த அரசு நிச்சயமாக ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையில் இதனை நல்லவர்கள் வாழ்த்துகிறார்கள். நாட்டவர்கள் ஆதரவு அளிக்கிறார்கள். மக்களாட்சி மலர்ந்திருக்கிறது. இது எகாலத்தாற்றம் [illegible] தென்றல்கள் இருந்தால் எதிர்க் கட்சியில் உள்ள நீங்கள் இடித்துக்

டம் அணுகித்தான் ஆகவேண்டும். இந்தத் தொகையைச் சேர்க் காமல் துண்டு விழுந்திருக்குமானால் அந்த 684 லட்சம் ரூபாயைக் குறைத்து பாக்கித் தொகையை ஈடுகட்ட வேண்டும். ஆகவே இதைச் சர்க்கார் புனர்பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளை அறிக்கையில் 1967-ல் குடியானவர்களுக்கு முன்பணம் கொடுப்பதில் ரூபாய் 358.92 லட்சம் என்றும், 1967-68-க்கு ரூபாய் 353.12 லட்சம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விவசாய உற் பத்தியைப் பெருக்க வேண்டும் என்றிருக்கிறபோது அதிலெல்லாம் போய்க் குறைக்கக் கூடாது. ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அடுத்த ஆண்டுத் திட்டத்தில் 75 கோடிதான் செலவு செய்ய முடியும் என்று கூறப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு 75 கோடி ரூபாய்க்கு ப்ளானிங் கமிஷன் அனுமதி கொடுத்தாலும் 79 கோடி ரூபாய் அள விற்குச் செலவு செய்திருக்கிறார்கள். நடப்பாண்டிலும் இன்னும் அதிகப்படியாக செலவழிக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். இதில் மகிழ்ச்சிக்குரிய செய்தி விவசாயத்திற்கு அதிகப்படியான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. மின்சாரத்திற்கும் தொகையைக் குறைக்கவில்லை. ஆகவே, எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு புது வரிகள் விதிக்காமல் பழைய வரிமுறைகளில் இருந்து வருவாயைப் பெருக்கியும், மத்திய சர்க்காரிடமிருந்து மான்யங் களைப் பெற்றும் துண்டைச் சரிகட்ட வேண்டும்.

பஸ்களை தேச உடமையாக்குவோம் என்று சர்க்காரிலிருந்து சட்டபூர்வமாக அறிவிக்கப்படாவிட்டாலும் அமைச்சரவை பதவி யேற்றுக்கொள்ளும்போது இந்தக் காரியத்தைச் செய்வோம் என்று கூறியிருக்கிறார்கள். அப்படி பஸ்களை தேசியமயமாக்குவதற்கு மத்திய சர்க்கார் அல்லது ப்ளானிங் கமிஷன் அனுமதி அளிப்பார் களா என்பது சந்தேகம். இருந்தாலும், நம் வாக்குறுதியை நிறை வேற்ற மத்திய சர்க்காரிடம் அல்லது ப்ளானிங் கமிஷனிடம் எடுத்துச் சொல்லி நாங்கள் இதை எங்கள் சொந்தப் பொறுப்பில் செய்கிறோம் என்று கூறி வாதாடி அதற்கான நடவடிக்கைகளை உடனடி எடுத்துக் கொள்ள வேண்டும். அஸெட்ஸ் அன்ட் லயபிலிட் டீஸைப் பார்க்கும்போது ஆஸ்தியை விட பொறுப்பு அதிகம் இல்லை என்றாலும் சதவிகிதம் அதிகமாயிருக்கிறது. இருந்தாலும், இம் மாதிரி தேசியமாக்குவதற்கு மக்களிடம் கடன் பெறுவதில் தவ றில்லை. ஆக, பொது மக்களிடமிருந்து கடன் நிச்சயமாக உங்க ளுக்குக் கிடைக்கும் என்ற அளவில் பஸ்களை தேசியமாக்க அதற் காகும் செலவை பொதுமக்களிடமிருந்து கடனாகப் பெற்று திருப் பிக் கொடுத்துவிட முடியும் என்ற நம்பிக்கையில் மத்திய சர்க்கா ரிடமும், ப்ளானிங் கமிஷனிடமும் வாதாடி உடனடியாக பஸ்களை தேசியமயமாக்குவதற்குள்ள திட்டத்தை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச அவகாசம் அளித்த உதவித் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.





**திரு. என். கிட்டப்பா:** பெருமதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய கனம் முதல் அமைச்சர் அவர்கள் நம் அவை முன் அளித்துள்ள வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் தர்ம புரம், திருவாவடுதுறை போன்ற ஆதீனங்களுக்குள்ள கோவில் களுக்குச் சொந்தமான நிலங்களை சில தனிப்பட்ட வசதி படைத்த வர்கள் மொத்த குத்தகைக்கு எடுத்து தங்கள் சுய லாப அடிப் படையில் சாகுப்படிக்கு வெவ்வேறாகப் பிரித்துக் கொடுத்து பல விவசாயிகளிடம் வேலை வாங்கி வருகிறார்கள். ஆனால் பாடுபடுகிற உண்மையான விவசாயிகளுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய லாபம் கிடைப்பதில்லை என்பது மட்டும் அல்ல, அவர்களை எந்த நேரத்திலும் நிலத்தை விட்டு வெளியேற்ற நியாயவாரச் சட்டத்தில் அநியாயமாக இடம் வைக்கப்பட்டிருக்கிறது. நியாயவாரச் சட் டப்படி உள்குத்தகைதாரர்களுக்குச் சாகுபடி உரிமை செல்லாது என்ற வாசகங்கள் மூலம் உண்மையில் சாகுபடி செய்கிறவர்களின் தலையின் மேல் ஆபத்து காத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே உள் குத்தகைதாரர்கள் என்ற பெயரில் உள்ள உண்மையான விவசாயி களைக் காப்பாற்ற அவர்களுக்குச் சாகுபடி உரிமைகளை நிலைநாட்டித் தரவேண்டும். நியாயவாரச் சட்டத்திலுள்ள ஓட்டை உடைசல்களை நீக்க வேண்டும். மாயவரம் மணல்மேடு பகுதியில் உள்குத்தகை வைத்திருந்த விவசாயிகள் பலர், நூற்றுக்கணக்கில் நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். சாகுபடி செய்தவர்கள் அவர்கள் தான் என்ற உண்மை கிராம கர்ணிகர் அடங்கலில் பதிவு செய்யப் பட்டிருப்பதிலிருந்து தெரியவரும். இருந்தும், அவர்கள் இன்று வெளியேற்றப்பட்டு வருகிறார்கள். நம் அரசாங்கம் இந்தச் சட் டத்தை மறுபரிசீலனை செய்து வெளியேற்றப்பட்ட சாகுபடி தாரர்களுக்கு மீண்டும் மறுவாழ்வு அளிக்க வேண்டும். இப்போது பாசனத்திற்கு உள்ள துணை வாய்க்கால்கள் பழைய காலத்தில் வெட்டப்பட்டவை. பழைய நாட்களில் புன்செய்யாக இருந்தது தற்போது நன்செய்யாக மாற்றப்பட்டிருக்கிறது. ஒருபோக நன்செய் நிலங்கள் இரண்டு போகமாகவும், இருபோக நிலங்கள் முப்போகமாகவும் மாற்றப்பட்டிருக்கின்றன. ஆகவே முன்பு பாசனத்திற்குக் கிடைத்த தண்ணீர் இப்போது நிச்சயம் போதாது. மேலும் பல வாய்க்கால்கள், ஆறுகள் தூர் எடுக்காமல் நீண்டகால மாகவிடப்பட்டிருக்கிறது. சாகுபடிக்கு வேண்டிய அளவு தண்ணீர் இப்போது கிடைப்பதில்லை. எனவே, புதிய வாய்க்கால்களை வெட்டுதல், பழைய வாய்க்கால்களை ஆழப் படுத்துதல், கண் மாய்களை விரிவு படுத்துதல், தலைப்புகளை அமைத்தல், தூர் எடுத்தல் போன்ற மராமத்து வேலைகளை, கோடைக்காலமாகிய தற்போது உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாயூரம் தொகுதியில், மணல்மேடு பகுதியில் மண்ணியாறு பாசனம் சரியாக இல்லாத காரணத்தினால் 2,000 ஏக்கர் நிலங்கள் இரண்டு ஆண்டுகள் காலமாக மகசூல் கிடைக்காமல் தரிசாகக் கிடக்கின்றன. அவைகளுக்கு நல்ல நிலைமையை உருவாக்கித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1967 மார்ச் 21

வலிவடைந்து கொண்டிருக்கிறது. ஒரு பக்கத்தில் மக்களுடைய
எண்ணங்களைச் செயலாற்றும் வகையில் புதிய காரியங்களைச்
செய்ய வேண்டும். மறு பக்கத்தில் புதிய சுமையை மக்களிடத்தில்
சுமத்தாமல் இருக்க வேண்டும். இந்த நிலையில் இந்த நிதிநிலை
அறிக்கையைக் கவனிக்க வேண்டியிருக்கிறது.

1965-66-லே 786 லட்சம் ரூபாய் துண்டு விழுந்திருக்கிறது.
அந்தத் துண்டை எப்படிச் சரிக்கட்டியிருக்கிறார்கள் என்றால்,
1965-66-ல் இருந்த கடைசி இருப்பை, ரொக்க வசதி இருப்பைக்
கொண்டு துண்டு விழுந்ததைச்சரிக்கட்டியிருக்கிறார்கள். மேலும்
1966–67-ல் ரொக்க இருப்பு 40 லட்சமாகக் குறைந்திருக்கிறது.
அதற்கு முன் ஆண்டிலே ரொக்க இருப்பு 745 லட்சமாக இருந்தது.
ஒரு பக்கத்தில் ரெவின்யூவில் துண்டு விழும் தொகையைச் சரிக்
கட்டும்போது நிதிநிலை ரொக்க வசதியை எப்படிப் பெருக்க
முடியும் என்று பார்க்கும்போது அதுவும் சிரமமான காரியத்தில்
தான் இருக்கிறது. எந்த அளவுக்கு நாம் மக்களிடத்தில் இருந்து
கடன் வாங்க முடியுமோ அந்த அளவுக்கு வாங்கியாகிவிட்டது.
எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுப் பெற
வேண்டிய நிலைமையில் மத்திய அரசாங்க நிதிநிலை எந்த அள
வுக்குச் சாத்தியமாக இருக்குமென்பதையும் உணர்ந்து கொள்ள
முடியும். இன்றைக்கு அவர்களுடைய ரொக்க வசதி கணக்கைப்
பார்க்கின்றபோது குறைவு 880 லட்சம் ரூபாய். பல ஆண்டு
களுடைய பட்ஜெட்டை எடுத்துப் பார்த்தால் ரொக்க வசதி
இருப்பு 40 லட்சத்திற்கும் குறைவாக இருந்தது கிடையாது. ரிசர்வ்
பாங்கு ஒப்பந்தப்படி 40 லட்சமாவது கையிருப்பு இருக்க
வேண்டும்.

ஆகவே, கையிருப்புக் குறைவு 880 லட்சம் ரூபாய் இருப்பதை,
அப்படி வசதிக் குறைவு ஏற்பட்டிருப்பதைச் சரிக்கட்ட ரிசர்வ்
பாங்க் நமக்கு அனுமதி அளிக்கும் என்று நான் கருதுகிறேன்.
இந்த ஆண்டு பொது மக்களிடமிருந்து 18 கோடி ரூபாய் கடன்
பெறவேண்டுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு
13-24 கோடி ரூபாய் கடன் பெற்றிருக்கிறோம். ஆகவே எந்த அள
விற்கு ரிசர்வ் பாங்க் இதற்கு அனுமதியளிக்கும் என்று தெரிய
வில்லை. இந்தச் சங்கடமான நிலையில் கடன் வாங்கி ரெவின்யூவைச்
சரிக்கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்கா
ரிடமிருந்து நாம் அதிகம் வரிப் பங்கைப் பெற வேண்டும். பக்கத்து
மாநிலங்களில் சர்க்கார் ஊழியர்களின் கிராக்கிப்படியை மத்திய
சர்க்காரின் கிராக்கிப் படியின் அளவிற்கு, அதற்குச் சமமாக
உயர்த்த முடிவு செய்திருக்கிறார்கள். அதன் எதிரொலி நம் ராஜ்
யத்திலும் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே, இப்படி பல
இனங்களில் அதிகப்படியான செலவை நாம் மேற்கொள்ள வேண்டி
யிருக்கிறது. இன்றைக்கு நிலவரிக் குறைப்பு என்ற பிரச்னை
முன்பே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்று நிலவரிக் குறைப்பு
பக மிக அவசியமான ஒரு திட்டம். நம் நாட்டில் ஏற்பட்டுள்ள
விவசாய உற்பத்திக் குறைவுதான் இன்றைக்கு இம்மாதிரி நாட்டில்



1967 மார்ச் 21] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

ஏற்பட்டுள்ள பொருளாதார சீர்குலைவிற்குக் காரணமாக இருக்க
முடியும் என்பதுதான் எல்லோருடைய அபிப்பிராயமுமாகும்.
ஆகவே, விவசாய வரியை நிலத்தின் பேரிலுள்ள வரியைக்
குறைப்பது அல்லது எடுத்துவிடுவது என்பது மிக அத்தியா
வசியமான செயலாகும். அப்படி அதை எடுத்துக் கொள்கிறபோது
நமக்கு விழும் துண்டு அதிகமாகிறது. இப்படிப்பட்ட துண்டுகளை
எல்லாம் சரிக்கட்ட வேறு ஏதாவது வழிவகையை இந்தச் சர்க்கார்
கண்டுபிடித்தாக வேண்டும். விவசாய மக்களின் மேல் மறைமுக
மான வரிகள்—இன்டயரக்ட் டாக்ஸஸ்—எந்த அளவிற்குப் போட
முடியுமோ அவற்றைப் போட்டாகிவிட்டது. டயரக்ட் டாக்ஸஸ்
சரியான முறையில் வசூலாகவில்லை. மத்திய சர்க்காரிடமிருந்து
கிடைக்கிற மரண வரியை எடுத்துக் கொண்டால் நம் ராஜ்யத்
திற்குக் கிடைத்துள்ள தொகை மிக மிகக் குறைவு. பொருளாதார
சமத்துவத்தை ஏற்படுத்த மத்திய சர்க்காரால் ஏற்படுத்தப்
பட்டது மரண வரி. இந்த ஆண்டு நமக்கு கிடைக்கக் கூடிய தொகை
56 லட்சம்தான் என்று எதிர்பார்க்கிறோம். அதைப் பார்க்கும்
போது எந்த அளவிற்கு பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்த
இந்த மரண வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது என்பதைப்
பார்க்கும்போது வருத்தப்படாமல் இருக்க முடியாது. ஆகவே
இந்தமாதிரி வரிகளிலிருந்து தப்புகிறவர்களிடம் இருந்து ஒழுங்
கான முறையில் வரிகளை வசூலிப்பதில் முயற்சி எடுத்துக் கொள்ள
வேண்டும். அதே சமயத்தில் சாதாரண மக்களின் தலையில் போடக்
கூடிய வரிகள் குறைக்கப்பட வேண்டும்.

அதுமட்டுமல்ல. இன்று மதுவிலக்கு பற்றி நம் முதல் அமைச்சர்
அவர்கள் கூறியிருக்கிறார்கள், தீவிரமாக அமலாக்குவேன் என்று.
நாட்டில் ஒழுங்கும், சாதாரண மக்களின் நிலை உயர வேண்டும்
என்றும் அந்தக் கருத்தில்தான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்
என்று எண்ணுகிறேன், அதை வரவேற்கிறேன். இந்த நாட்டில்
யாரும் குடிக்காமல் இருக்கவில்லை என்பதுதான் என் அபிப்
பிராயம். என் அனுபவத்தில், நான் தெரிந்து கொண்ட அளவில்
குடிக்கிறவர்கள் குடித்துக் கொண்டுதான் இருக்கிறார்களே தவிர
குடிக்காமல் இருக்கவில்லை. ஆகவே. இந்த மதுவிலக்குச் சட்
டத்தை நாம் புனர்பரிசீலனை செய்ய வேண்டும். ஏனெனில் கோடிக்
கணக்கான ரூபாய்களை மக்களின் நலனுக்காக என்று விட்டு வைக்
கிறோம். ஆகவே, ஒரு கமிட்டி போட்டு மதுவிலக்கு எந்த அள
விற்கு வெற்றி பெற்றிருக்கிறது. இல்லை வெற்றி பெறவில்லையா
என்பதைப் பரிசீலனை செய்து அதன் பேரில் நடவடிக்கைகள்
எடுக்கவேண்டும்.

ரெவின்யூக் கணக்கில் துண்டு விழுவதை ஈடுகட்ட மத்திய சர்க்
காரிலிருந்து 6½ கோடி ரூபாய் இந்த ஐந்தாண்டுக் காலத்தில்
நமக்குக் கிடைக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த 684 லட்சம்
ரூபாய் இந்தக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா
இல்லையா என்பதை அறிந்து கொள்ளமுடியவில்லை. அப்படி அதை
கணக்கில் எடுத்துக் கொண்டும் அதற்கு மேல் இந்தத் துண்டு விழுந்
திருக்கிறது என்றால் அந்தத் துண்டை சரிக்கட்ட மத்திய சர்க்காரி

[திரு. என். கிட்டப்பா] [1967 மார்ச் 21

இன்னொரு விஷயத்தை அரசாங்கத்தின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பல இடங்களில் நிலங்களைச் சொந்த சாகுபடிக்கு வைத்து இருப்பவர்கள் அரசாங்கக் கடன உதவியால் வடிமுனை குழாய்க் கிணறுகளை வைத்து இன்ஜின்கள் வைத்து ஒரு போக நிலங்களை இரு போக நிலங்களாக்கி, இரு போக நிலங்களை முப்போக நிலங்களாக்கி நல்ல லாபத்தை அடைகிறார்கள். அதனால் நல்ல விளைச்சல் ஏற்படுகிறது என்றால் அது குறித்து அத்தனை பேர்களும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அதைப் போல உதவிகள் சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு 2 ஏக்கர், 3 ஏக்கர் வைத்துக் கொண்டுள்ள சிறு நிலச் சொந்தக்காரர்களுக்குக் கிடைப்பதில்லை. அத்தகைய வடிமுனைக் குழாய்க் கிணறுகளை வைத்துத் தண்ணீர் இறைக்க வசதி செய்து பாசன வசதியை உருவாக்கித் தந்து அதற்கான முதலீட்டை அரசாங்கமே செய்து, அத்தகைய தொகையை ஆண்டு இறுதியில் வாடகையாக அவர்களிடமிருந்து ஈட்டிக் கொள்ளலாம் என்று இந்த மன்றத்தின் மூலமாக முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தப் பேருதவியைச் செய்தால், சிறு நிலச் சொந்தக்காரர்களும் விவசாயிகளும் நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்க ஏதுவாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

வட்டார வளர்ச்சி என்ற பெயரால் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தால் பொது மக்களுடைய வரிப் பணம் ஏராளமாக விரயமாக்கப்படுகிறது என்ற எண்ணம் பொது மக்களிடம் ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்கள் செய்யும் மராமத்து வேலைகளை நமது அரசாங்கம் மறு பரிசீலனை செய்யும் என்று நம்புகிறேன்.

விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிற உரங்கள், கடன்கள் முதலியவற்றை முறைப்படுத்தி சேதாரம் அன்னியில் காலாகாலத்தில் அவர்களுக்குக் கிடைக்க வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நடுத்தர மக்களும், ஏழை விவசாயிகளும் தங்களுடைய உடனடித் தேவைகளைச் சரி செய்துகொள்ள தட்டுமுட்டுச் சாமான்களையும் மற்றவைகளையும் நகரப் புரத்தில் உள்ள வட்டிக் கடைகளில் வைத்து பணம் வாங்கும்போது அவர்கள் வட்டியை வரம்பு மீறி, அதிகமான அளவுக்குப் பெறுகிறார்கள். இந்த நிலைமையைச் சர்க்காருடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருவதோடு, இதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் மாயூரம், நாகை, சிதம்பரம் போன்ற கடலோரப் பகுதிகளில் சில பேர்கள் கள்ள வாணிபம் நடத்தி 10-12 ஆண்டுகளாக அத்தகைய வாணிபத்தில் ஈடுபட்டு வருகிறவர்கள், குறுகிய காலத்தில் பெரும் பணக்காரர்களாக, கோடீஸ்வரர்களாக ஆகிவிட்டார்கள் என்று நாட்டு மக்கள் பரவலாகப் பேசிக்கொள்வது மட்டுமல்லாமல் அந்தப் பகுதியில் அவர்களுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய மாட மாளிகைகள், கூட கோபுரங்கள், அரண்மனைகள் என்ற பெயரால் இருக்கக்கூடியவைகள் எடுத்துக் காட்டாக இருக்கிற



1967 மார்ச் 21] [திரு. என். கிட்டப்பா]

காரணத்தினால், அத்தகைய நபர்கள்மீது அனுப்பப்படுகிற புகார்களை ஒழுங்காக விசாரணை செய்து, அவர்களுடைய கணக்கு வழக்குகளைக் கவனிக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பொதுவாக பட்ஜெட் பிரசங்கம் என்று சொன்னால் பண வரவு-செலவை மாத்திரம் பேசுவது அல்ல. அதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு, மற்றும் சில விஷயங்களையும் சொல்லிவிட வேண்டுமென்பது சம்பிரதாயம். அந்த அடிப்படையில் நான் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமாக, இதற்கு முன் இருந்த காங்கிரஸ்காரர்கள் ஒரு
பெரிய அதிர்ஷ்டசாலிகள் என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால்
சர்க்காரை ஒரு சிரமமான நிலையில் வைத்துவிட்டு அவர்கள்
எலெக்ஷனில் ஜெயித்து பதவிக்கு வந்திருந்தால், ஜனங்களுக்கு
ஒன்றும் செய்ய முடியாத நிலையில் ரொம்பவும் கஷ்டமான நிலை
யில் இருந்திருப்பார்கள். இப்பொழுது அவர்களுக்குக் கொஞ்சம்,
நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் ப்ரீத்திங் டைம் என்று
சொல்லுவார்களே அந்த மாதிரி அவர்களுக்கு மூச்சுவிட அவகாசம்
கிடைத்த மாதிரி இருக்கிறது. இதை நான் ஏன் சொல்லுகிறேன்
என்றால், இப்போது உள்ள மந்திரி சபைக்கு அவ்வளவு கஷ்டங்கள்
இருக்கின்றன என்று சொல்லுவதற்காகத்தான். ஆகவே, இந்தக்
கஷ்டங்களுக்கு மத்தியிலே ராஜ்ய சர்க்காரானாலும் சரி, மத்திய
சர்க்காரானாலும் சரி, அவர்கள் என்ன பட்ஜெட்டை விசேஷமாகப்
போட்டு நன்மை செய்துவிடப் போகிறார்கள் என்பது ஜனங்
களுக்குத் தெரியும். அதாவது நரி மேலே விழுந்து பிடுங்காமல்
போனால் சரி என்ற நிலைமையில்தான் இந்தியாவில் உள்ள 50
கோடி ஜனங்களும் இருக்கிறார்கள். புது வரிகள் வந்து விழுந்து
விடக் கூடாது. அதாவது ஜூன் மாதம் பட்ஜெட் என்று
சொல்லப்படுகிறதே, மத்திய சர்க்கார் ஆனாலும் சரி, ராஜ்ய சர்க்
கார் ஆனாலும் சரி, அப்போது ஆட்டம் பாம்கள் வந்து விழுந்து
விடாமல் இருக்க வேண்டும்—அது தான் ஜனங்களுடைய பிரார்த்
தனை. மத்திய சர்க்காரிலே 20 வருஷங்களுக்கு முன்னால் 100
கோடி ரூபாய் அளவுக்குப் பட்ஜெட் இருந்தது. இன்று பத்திரிக்
கைகளில் பார்த்தால் பட்ஜெட்டின் அளவு 3,000 கோடி ரூபாய்க்கு
இருக்கிறது. அதிலும், 3,000 கோடி ரூபாய் பட்ஜெட்டில் இன்னும்
புது வரிகள்கூடப் போட வேண்டி வரலாம். இன்க்ரீஸ்ட்
எக்ஸ்பென்டிச்சர் 350 கோடி ரூபாய் அளவுக்கு வருகிறது.
என்று இந்திய சர்க்காரின் நிதி அமைச்சர் திரு. மொரார்ஜி அவர்
கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலைமையில், இந்திய சர்க்கா
ரின் அதிகாரத்திற்கு உட்பட்டு போலி அதிகாரங்களை வைத்திருக்
கிற ராஜ்ய சர்க்கார் என்ன செய்துவிட முடியும் என்று நினைக்கும்
போது வருத்தமாக இருக்கிறது. ஆகவே, இந்த அமைச்சரவை
பிரமாதமாகக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நினைத்தாலும்

[திரு. டி. எஸ். ஆதிமூலம்] [1967 மார்ச் 21

நீதி நிலைமை இடம் கொடுக்காது. ஆகவே, சர்க்காரைக் கையில் வைத்துக் கொண்டு ஜனங்களுக்கு வேறு என்னென்ன சேவைகள் செய்யலாமோ, செய்ய முடியுமோ அவைகளை யெல்லாம் செய்ய வேண்டுமென்று பொதுப்படையாகச் சொல்ல விரும்புகிறேன். உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் இன்றைக்குச் சட்டங்கள் சில இருக்கும். திறமையான சர்க்கார் என்று சொன்னால், ஜனங் களுக்குக் காலத்திற்கு ஏற்ப நல்ல சில சட்டங்களைச் செய்ய வேண்டும். அந்த முறையில் முக்கியமாக இப்போது இருக்கக் கூடிய சட்டங்களில் டிஃபெக்ட்டிவ் சட்டங்களாக இருக்கக்கூடிய வைகளை யெல்லாம் நீக்கிவிட்டு, நல்ல சில சட்டங்களை ஜனங் களுடைய நன்மைக்காகச் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். அதிலே முக்கியமானது, பீடித் தொழிலைப் பற்றி அன்று சொன்னேனே அப்படி ஒரு சட்டம். இப்படி பலப்பல இருக்கும். அதை நாளாவட்டத்தில் இந்தச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வரப் பார்க்கிறோம்.

அதே மாதிரி கைத்தறி நெசவாளர் பிரச்னை. இப்படிப்பட்ட வைகளை யெல்லாம் நாம் சாமார்த்தியமாகக் கையாண்டு, ஜனங்களுக்கு ஒரு நிவாரணம் தேடித் தருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். பல தீர்மானங்களை இந்தச் சட்ட சபையில் நிறை வேற்றி இந்திய சர்க்காருக்கு அனுப்பி வாதாட வேண்டும். அவை களில் முக்கியமாகக் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

எல்லாவற்றிலும் முக்கியமானது உணவு விஷயம். இந்த அரசு போக்குவரத்துகளை இப்போது ஏகப்பட்ட கெடுபிடியாகச் செய்து, எங்கு பார்த்தாலும் புது மந்திரி சபையினால் நிலைமைகள் சீர்திருந்தும் என்று ஜனங்கள் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக ஏற் பட்டு, அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. எனக்கு என்னுடைய தொகுதியிலிருந்து அநேக லெட்டர்கள் வருகின்றன. விலையானது நாளுக்கு நாள் ஏறுகிறது. எங்கு பார்த்தாலும் செக்போஸ்ட்டுகள் என்று வைத்து, முன்பு இருந்த காங்கிரஸ் சர்க்காரைவிட கெடு பிடி அதிகமாக ஆகியிருக்கிறது, ஜனங்களுக்குத் தொந்தரவு அதிக மாக ஆகியிருக்கிறது என்றெல்லாம் லெட்டர்கள் வந்திருக்கின்றன. ஆகவே, இந்த உணவு விஷயத்தில் நீங்கள் ரொம்பவும் வெளிப்பாக இருக்க வேண்டும். ஜில்லாவுக்குள்ளே போக்குவரத்தைக் கெடுபிடி செய்யாமல் தாராளமாகப் போகலாம், வரலாம் என்ற ஒரு நிலைமைக்கு ஒரு உத்தரவை அதி சீக்கிரமாகப் போட வேண்டும். இல்லாவிட்டால், மாறுதலை விரும்பிய ஜனங்களுக்கு அவர்களுக்குத் தகுந்த பரிகாரம் கிடைக்காமல், அதிருப்தியும், கோபமும் ஜாஸ்தி யாகும் என்று நான் தாழ்ந்த மனப்பான்மையுடன் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். முக்கியமாக, மூன்று ஏகராவுக்குக் கீழுள்ள விவசாயிகளுக்கு விதி விலக்கு அளித்துவிடுங்கள். அந்த நெல்லைக் கொண்டு போய், அந்த உணவு தானியத்தைக் கொண்டு போய் அவர்கள் இந்து மகாசமுத்திரத்திலோ அல்லது வங்காள விரிகுடாக் கடலிலோ கொட்டிவிடப் போவதில்லை, நாட்டிற்குள் தான் பரிமாறப் போகிறார்கள். முக்கியமாக நான் ஒன்று சொல்லிக்



1967 மார்ச் 21] [திரு. டி. எஸ். ஆதிமூலம்]

கொள்வேன். மெட்ராஸ், கோயம்புத்தூர் இப்படிப்பட்ட இடங் களில் சட்டபூர்வமான ரேஷன் அமுலில் இருக்கிறது. மற்றும கிராமாந்திரப் பகுதிகளிலும், மற்ற இடங்களிலும் 'இன்பார்மல் ரேஷனிங்' இருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் இப்படிச் சிறு நிலச் சுவான்தார்களிடமிருக்கும் உணவு தானியங்களை வெகுவாக உப யோகிப்பார்கள். கள்ள மார்க்கெட்டில் ரூ. 2-க்கு மேல் விலை என்று சொன்னால், இப்படிப் போக்குவரத்து கொஞ்சம் சிரமம் இல்லாமல் இருந்தால், சுலபமாக ரூ. 1-60, 1-70 என்ற முறையில் ஒரு படிக்கு 30, 40 பைசா கணிசமாகக் குறைந்த விலைக்குக் கிடைக்கும். அரசாங்கத்திற்கு அவர்கள் பாதி அளவாவது வாழ்த்துக் கூறுவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

தவிர, விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று அடிக்கடி பேசிக் கொண்டிருக்கிறார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்துவது என்பது நம்முடைய கையில் இல்லை. இந்திய சர்க்காருடைய கொள்கையில்தான் மாறுதல் ஏற்பட வேண்டும். அதற்கு நாளா வட்டத்தில் நாஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் முதல் மந்திரிகள் கூடும்பொழுதுதான் அதைப்பற்றி யோசித்து, அந்தத் தீமைகளுக்கெல்லாம் பரிகாரம் தேட வேண்டும். அப்படி யில்லாமல் இங்கே வந்து சட்ட சபையில் பேசுவதில் யாதொரு அர்த்தமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கொண்டு சோஷலிசம் என்று அடிக்கடி இங்கே பேச சில பேர்கள் எத்தனித்தார்கள். சோஷலிசம் என்பது நல்ல வார்த்தை தான். அதாவது ஏழைகளுக்கு வாழ்வு அளிப்பது என்பது. ஆனால் அப்படி பேசிக்கொண்டே மறைமுகமாக எங்களை ஏடாபுடத்தில் கொண்டு வந்து விட்டுவிடுவார்கள். ஏதோ இருப்பதற்குள்ளே நல்ல காரியங்களை ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். இம்மாதிரி வார்த்தைகளில், சுலோகங்களில் ஒன்றும் மயங்கிவிடாதீர்கள். இப்பொழுது இருக்கப்பட்ட முறையிலே அதைச் செய்துவிடவும் முடியாது. ஆகவே, அம்மாதிரி ஒரு பிரச்னையில் ரொம்பவும் கவனம் செலுத்தினால், மக்கள் மத்தியில் அதிருப்திதான் ஏற்படும். பஸ் டிரான்ஸ்போர்ட்டை நாஷனலைஸ் செய்து விடுவோம் என்ற புது வார்த்தைகளினால் மயக்கம் கொண்டு, அதை நாங்கள் செய்து விடுவோம், இதை நாங்கள் செய்துவிடுவோம் என்று சொல்லி விடாதீர்கள். இவற்றை யெல்லாம் இரண்டு வருஷங்களுக்கு ஒத்திவைத்து, முக்கியமாக இருக்கும் உணவுப் பிரச்னை விஷயத்தை முதலில் கவனியுங்கள். நல்ல புல சில்லரைச் சட்டங்களை மக்க ளுடைய நன்மைக்காகச் செய்வதையும் நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். இப்பொழுது இருக்கிற நிலைமையில் மந்திரியில் இருக் கிற நிதி அமைச்சர் அவர்கள் ரொம்பக் கடுமையாக இருப்பார். ஆகவே, வருங்காலத்தில் 'ஆஸ்டெரிடி டிரைவ்' என்று சொல்லு வார்களே சிக்கனம் என்பதில் ஜாக்கிரதையாக இருந்து இந்திய சர்க்காரிடமிருந்தும், ரிசர்வ் பாங்கியிலிருந்தும், ஜாஸ்தி கடன் [illegible] சர்க்கார் நடத்த வேண்டும். மந்திரி [illegible]

[திரு. டி. எஸ். ஆதிமூலம்] [1967 மார்ச் 21

களுடைய சம்பளத்தையும், மற்றும் ஸ்பீகருடைய சம்பளத்தையும் குறைத்துக் கொண்டதை நான் வரவேற்றாலும், இதெல்லாம் கடலில் காயம் கரைத்த மாதிரி தான். ரூ. 200 கோடி பட்ஜெட்டில் இது ஒரு பெரிய சிக்கனமாகாது. ஆகவே, ரூ. 30 கோடி, 40 கோடி சிக்கனத்தைக் கண்டுபிடிப்பதற்கு முக்கியமாக யோசனை செய்யுங்கள். இப்பொழுது இருக்கப்பட்ட நிலைமையில் சிக்கனம் இல்லாவிட்டால், ஒன்றும் செய்ய முடியாது. ரூ. 190 கோடி போன வருஷம் பட்ஜெட்; இந்த வருஷம் ரூ. 200 கோடிக்கு மேலாக போயும், பழையபடி ரூ. 7 கோடி பற்றாக்குறை வருகிறது என்று சொன்னால், இதற்கு விலைவாசியினால் ஏற்பட்ட ஆரம்பம் தான் காரணம். வருங்காலத்தில் நீங்கள் ஜூன் மாதத்தில் பட்ஜெட் கொடுக்கும்பொழுது, விலைவாசியைக் குறைப்பது பற்றி கவனம் செலுத்த முடியாவிட்டாலும் வருவாய் இல்லை என்று புது வரிகளைத் தயவுசெய்து போட வேண்டாம். மேலும் ஜனங்களுக்கு வசதியான வாழ்வை அளிப்பதற்கு இந்தப் புது பட்ஜெட்டிற்குள் முக்கியமாக உணவு போக்குவரத்து கண்ட்ரோல்களை எடுத்துவிடுவதற்கு வேண்டிய ஆயத்தத்துடன் இப்பொழுதே வேலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. என். சங்கரய்யா :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மாநில அரசாங்கத்தினுடைய உயர்திரு. முதல் அமைச்சர் அவர்கள் இந்த அரசாங்கத்தினுடைய இடைக் கால வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துப் பேசிய உரையின் மீது சில கருத்துக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த பட்ஜெட் உரையிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், சமீப காலத்தில் மாநில அரசாங்க அலுவலர்களுக்கும், மற்றும் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கும் இரண்டு தடவைகளில் பஞ்சப்படியை உயர்த்திக் கொடுக்க வேண்டியிருந்த காரணத்தினால், ஒரு முழு ஆண்டுக்கு இந்த இரண்டு தடவைகளில் கொடுக்கப்பட்டிருக்கும் பஞ்சப்படி மட்டும் சேர்த்து ரூ. 9 கோடி 50 லட்சம் கொடுக்கப்படவேண்டியிருக்கிறது என்பதை நம்முடைய மாநில சட்ட மன்றம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதே போல மத்திய அரசாங்கத்தினிடமிருந்து மத்திய அரசாங்கத்தினுடைய விற்பனை வரி விகிதத்திலிருந்தும், மத்திய அரசாங்கம் விதித்திருக்கக்கூடிய யூனியன் எக்சைஸ் வரியிலிருந்தும் மாநில அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய பங்குத் தொகையாக நடப்பு ஆண்டிலே ரூ. 3½ கோடி எதிர்பார்த்தோம். ஆனால் உண்மையிலே கிடைக்கப் போவது ரூ. 1 கோடி 70 லட்சம்தான். ஆகவே, இந்த இனத்திலே துண்டு விழுகிறது என்பதும் இந்த நடப்பு ஆண்டிலே வரவு செலவுத் திட்டத்தில் நாம் கவனிக்க வேண்டிய அம்சங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதோடு கனம் சபாநாயகர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் மாநில அரசாங்கத்தினுடைய வரவு இனங்களானாலும் சரி, மத்திய அரசாங்கத்தினுடைய வரவு இனங்களானாலும் சரி, மத்திய அரசாங்கத்தினிட





1967 மார்ச் 21] [திரு. என் சங்கரய்யா]

மிருந்து மாநில அரசாங்கத்திற்குப் பங்காகப் பெறவேண்டிய வரவு இனமானாலும் சரி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் நடப்பு ஆண்டில் இந்த வருமான இனங்கள் மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதுதான் இன்றைக்கு நம்முடைய சட்ட மன்றத்தில் உள்ளவர்கள் கவனிக்க வேண்டிய விஷயம் என்று நான் கருதுகிறேன். ஆகவே நாடு பூராவிலும், நம்முடைய மாநிலத்திலும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய நடப்பு ஆண்டிலே, 1966-67 ஆண்டிலே வருவாய் இனங்கள் குறைந்திருக்கின்றன என்று சொன்னால், நாட்டு மக்கள் கையிலே அவர்களுடைய வருமானம் குறைந்து இருக்கிறது, அவர்களுடைய வாழ்க்கைத்தரம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அது எடுத்துக் காட்டுகிறது. அதைப்போல கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறு சேமிப்பு மூலம் எதிர்பார்த்த அளவுக்கு சேமிப்பு கிடைக்கவில்லை என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய பொருளாதார வளர்ச்சி மந்தப்பட்டதன் காரணமாக மாநில மத்திய அரசாங்கத்தினுடைய வரிகளின் மூலமாக வரக்கூடிய வரவு இனங்கள் குறைந்ததோடு, சிறு சேமிப்பு கிடைக்க வேண்டிய அளவு, எதிர் பார்க்கப்பட்ட அளவு கிடைக்கவில்லை. இது எதை எடுத்துக் காட்டுகிறது என்றால், விலைவாசி உயர்வின் காரணமாக வாழ்க்கைக்கு அத்தியாவசியமாக உள்ள பண்டங்களை வாங்கமுடியாத நிலைமையிலுள்ள மக்கள் சிறு சேமிப்பில் ஈடுபடுவதற்கு அவர்கள் கையில் பணம் மிஞ்சவில்லை என்பதைத் தான் எடுத்துக் காட்டுகிறது. ஆகவே, நம்முடைய மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் திட்டக் கமிஷன் மூலமும் தேசீய வளர்ச்சிக் கவுன்சிலில் நம்முடைய மாநில அரசாங்கம் பங்கு எடுத்துக் கொள்ளக்கூடிய நேரத்திலும் இந்த அம்சங்களை யெல்லாம் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, நாட்டில் விலைவாசியைக் கட்டுப்படுத்தினால் தான் மக்களுடைய உணவுப் பிரச்னை தீர்க்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட விலைக்கு உணவு கிடைக்கும்படிச் செய்தால் தான், அரசாங்க ஊழியர்களுக்குப் பஞ்சப்படி உயர்த்துவது என்ற பிரச்சனை திரும்பத் திரும்ப ஏற்படாமல் இருக்கும். விலை உயர்ந்து போகக்கூடிய நேரத்தில் அதற்கேற்றபடி பஞ்சப்படியை உயர்த்திக் கொண்டே போகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், நாட்டினுடைய பொருளாதாரம் சீர்குலைக்கப்படும் என்பதை நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தினிடம் வலியுறுத்திச் சொல்ல வேண்டும் என்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோலத்தான், இன்றைக்கு யோசனை செய்து பார்த்தால், நடப்பு ஆண்டில் வெளிச்சந்தை கடனாக 14 கோடி ரூபாய் பெறுவதாக இருந்து, ரிசர்வ் பாங்கியின் ஆலோசனையின் பேரில், 13 கோடியாக வாங்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ரிசர்வ் பாங்கியிலிருந்து நம்முடைய அரசாங்கம் நடப்பு ஆண்டில் எந்த விதமான அதிகப் பற்றும் இல்லாமல் நடந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். கனம் முதல் அமைச்சருடைய பட்ஜெட் உரையின் எட்டாவது பாராவில் மத்திய சர்க்காருக்கும், மாநில அரசாங்கத்

[திரு. என் சங்கரய்யா] [1967 மார்ச் 21

திற்கும் இருக்கக் கூடிய இந்த நிதி உறவுகளைப் பற்றிக் குறிப்பிடும் போது, ரிசர்வ் பாங்கியிலிருந்து அதிகப் பற்று வாங்கும் இந்தப் பிரச்சினையை ஒரு சாதாரணமான கணக்கு வழக்குப் பிரச்சினையாகவோ அல்லது கொடுக்கல் வாங்கல் பிரச்சினையாகவோ பார்க்காமல், அதை ஒரு அரசியல் பிரச்சினையாகப் பார்த்து, நல்ல முறையில் அவர்கள் மாநில சர்க்காருக்கு உதவ முன் வரவேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ரிசர்வ் பாங்கு அதிகப்படியான பற்று அளிக்கும் என்பதை நான் வரவேற்கிறேன். அதேபோல, இன்றைக்குப் பார்த்தால், முதல் அமைச்சருடைய உரையிலே விற்பனை வரியிலிருந்தும், மேலும், மின்சார நுகர்ச்சி வரியிலிருந்தும் வரும் தொகைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே நான் முதல் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது என்னவென்றால், மாநிலத்தில் இருக்கக் கூடிய சாதாரண வியாபாரிகள், இன்றைக்கு இருக்கக் கூடிய விற்பனைவரிச் சட்டப்படி, வருஷம் ஒன்றுக்கு 10,000 ரூபாய்க்கு வியாபாரம் செய்தால், அவர் வரி கட்ட வேண்டும். அதிகப்படியாக சின்னஞ்சிறு வியாபாரிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த விற்பனை வரியை நல்ல முறையில் பரிசீலனை செய்து, சாதாரண சின்ன வியாபாரிகளுக்கு இந்த வரியிலிருந்து நீக்கம் ஏற்படும் வகையில் காரியம் செய்தால் நலமாக இருக்கும். அப்படிச் செய்யும் போது, பெரிய வியாபாரிகளுக்கு வரியை அதிகப்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்தால் வரவேற்கத் தக்கதாக இருக்கும். சின்ன வியாபாரிகள் அதை வரவேற்பார்கள். அவர்களுக்கும் நிவாரணம் கொடுத்ததாக இருக்கும். உதாரணமாக வருஷத்திற்கு 30,000 ரூபாய் வியாபாரம் செய்யக் கூடிய சிறிய வியாபாரிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க மாநில சர்க்கார் பரிசீலனை செய்ய வேண்டும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அப்படிச் செய்வதை சிறு சிறு வியாபாரிகள் வரவேற்பார்கள் என்பதை இந்தச் சமயத்தில் முதல் அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய மதிப்பிற்குரிய சுதந்தராக் கட்சி உறுப்பினர், நண்பர் திரு. ஆதிமூலம் அவர்கள், நரி சும்மா இருந்தால் போதும், மேலே விழுந்து பிறாண்டாமல் இருந்தால் போதும் என்பது போல இந்த அரசாங்கம் சும்மா இருந்தால் போதும் என்றார்கள். மாநிலத்திலே இருக்கும் பெரும் தனம் வைத்திருப்பவர்கள் அவ்வாறு எதிர்பார்க்கலாம். அரசாங்கம் மேலே விழுந்து பிறாண்டாமல் இருந்தால் போதும், அவர்களுக்கு தங்கள் வாழ்க்கையை நடத்த கையில் இருப்பு இருப்பதால் அப்படி நினைப்பார்கள். ஆனால் மாநிலத்திலே மிகப் பெரும்பாலான மக்கள் அவர் சொல்வது போல நரி விழுந்து பிறாண்டாமல் இருந்தால் போதும் என்று இருக்கமாட்டார்கள். அவர்கள் விஷயத்தில் நரி மேலே விழுந்து பிறாண்டாமல் இருந்தால் மட்டும் போதாது, இல்லாதவர்களுக்குத் தேடியும் கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட பொறுப்பு மாநில அரசாங்கத்திற்கும் இருக்கிறது என்பதை நண்பர் ஆதிமூலத்தின் பிரியமான கவனத்திற்குக் கொண்டு வாவிரும்புகிறேன்.



1967 மார்ச் 21] [திரு. என் சங்கரய்யா]

அதே போல பஸ் போக்குவரத்தை தேசியமாக்குவது பற்றியது. அதைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறோம். ஆளும் கட்சியாக இருக்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சொற்பொழிவுகளிலும் அந்த அம்சம் காணப்பட்டது. இன்றைக்கு நமக்குச் செலவினங்கள் மிக அதிகமாக இருக்கிறது. வருமானத்தை பெருக்குவதற்கு பஸ் போக்குவரத்தைத் தேசியமாக்குவது நியாயமானதே. அதில் ஒன்றும் புரட்சிகரமானது என்று சொல்லக் கூடியது இல்லை. கடந்த காலத்தில் ஸர். சி. பி. ராமசுவாமி அய்யர், பொருளாதாரத் துறையில் பழங்காலக் கருத்துக்களை கொண்டிருந்தவர். திருவாங்கூரிலே திவானாக இருந்த போது பஸ்களை அரசாங்கத்தில் எடுத்துக் கொண்டு நடத்தியதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆகவே, அது ஒரு சாதாரணமான, ரொடீன் நடவடிக்கைதான். முதலாளித்துவ ராச்சியங்களின் வருமானத்தைப் பெருக்க எடுக்கும் சகஜமான நடவடிக்கைதான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, இன்றைக்கு சமுதாயப் பணிகளைச் செய்ய அரசாங்கம் இதிலிருந்து கிடைக்கும் வருமானத்தை படிப்படியாகப் பெருக்கிக் கொள்வது அத்தியாவசியமானது.

அதேபோல, கனம் முதல் அமைச்சர் உரையில் வரக்கூடிய மதிப்பீடுகளை நிதி இலாகா கணக்குப் போட்டு இவ்வளவு நிலவரி கிடைக்கும் என்று கணக்குப் போட்டிருக்கிறார்கள். அதையும் சேர்த்திருக்கிறார்கள். அடுத்த மாநில பட்ஜெட்டை ஜூன் மாதத்தில் சமர்ப்பிக்கும் போது, நிலவரியை நீக்குவது பற்றி அரசாங்கத்தின் முடிவைத் தெரிவிப்பார்கள் என்று நினைக்கிறேன். அந்தத் துறை பற்றிக் குறிப்பிடும் போது, நில வரியிலிருந்து விலக்கு அளிக்கும் போது, பெரும் நிலச் சொந்தக்காரர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. சமுதாயத்தில், கிராமப் புறங்களில் சொந்த உழைப்பினாலும், குடும்பத்தாரோடும் விவசாயம் செய்பவர்கள் இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கும், அவர்கள் போன்ற சிறுநில உற்பத்தியாளர்களுக்கும், நிலவரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று சொல்லும் போது, மற்றபடி பெரும் நிலச் சொந்தக்காரர்களுக்கு அப்படி விலக்கு அளிக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. இதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். விவசாயத் துறையில் இருக்கும் பெரும் நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து இந்த வரியை வசூல் செய்வது நியாயமானது என்பதை நிபுணர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் பெரு நிலச் சொந்தக்காரர்கள் சம்மந்தப்பட்ட வரையில் இந்த நில வரியோடு விவசாய வருமான வரியையும் இணைத்து, அப்படிப் பட்ட வரியை முறைப்படுத்தி வசூல் செய்யக் கூடிய ஒரு புதிய முடிவு எடுத்தால், அரசாங்கத்தினுடைய வருமானத்தை நல்ல முறையில் அமைக்கலாம் என்பதை கூறிக் கொள்ள விரும்ப இறேன். அதேபோல, கனம் சபாநாயகர் அவர்களே, ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் குறிப்பிட்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

கனம் முதல் அமைச்சருடைய உரையில், மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் இவர்களுடைய நிதிநிலை பற்றி ஆலோசனைகளை மாநில அரசாங்கம் தேசிய வளர்ச்சி கவுன்சிலிலும், திட்ட கமிஷனிலும் வற்புறுத்தும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். கனம் அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் சென்னையில் பாங்கு ஊழியர்கள் கூட்டத்தில், பாங்குகளை தேசியமாக்குவதில் தங்களுடைய கட்சி ஆதரிக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அப்படிச் செய்தால் மத்திய சர்க்காரோ, மாநில சர்க்காரோ தங்கள் செலவினங்களுக்கு வகை காண முடியும். நாட்டு மக்களுடைய பணம் பாங்குகளில் டிபாசிட் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தை நாட்டின் நலனுக்காக பயன் படுத்த முடியும். மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் அந்தத் தொகைகளை மக்களுடைய நலனுக்காக உபயோகிக்க முடியும். அப்படி எடுத்துக் கொண்டால், இன்றைக்கு வெளி நாட்டு வியாபாரத்தை இந்திய சர்க்கார் மேற்கொண்டால், அதிகமான லாபம் கிடைக்கும். மத்திய சர்க்காரும், மாநில சர்க்கார்களும் நிதிநிலையில் முன்னேற்றம் காணமுடியும்.

இறுதியாக 1967-68 பட்ஜெட்டை வருகின்ற ஜூன் மாதத்தில் கனம் முதல் அமைச்சர் இந்தச் சபையில் சமர்ப்பிக்கும் போது இவற்றையெல்லாம் தக்க முறையில் பரிசீலித்து, வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, நிதி நிலை அறிக்கையின் மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன். என்னுடைய பகுதியில் இருக்கக்கூடிய இரண்டொரு பிரச்சினைகளைக் குறித்து அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

விவசாயிகளுடைய நிலை மிகவும் மோசம் அடைந்திருப்பதைக் கண்டு, அவர்களைத் தட்டிப் பாராத நிலையைக் கண்டு, இப்பொழுது அவர்களைத் தட்டிக்கொடுக்கும் நிலை ஏற்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய உரம், கடன் ஆகியவைகளை மிக எளிதான முறையில், மிகவும் விரிவான முறையில் அருள்கூர்ந்து செயல்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். விவசாயத்திற்கு மின்சார பம்ப் செட் பொருத்தியிருக்கும் நிலையில், அவர்களுக்குத் தேவையான மின்சாரத்திற்கான கட்டண விகிதத்தைக் குறைக்க வழிவகை செய்ய வேண்டும். விவசாய பம்ப் செட்களுக்கு வழங்கும் மின்சாரத்திற்காகக் கட்டண விகிதத்தைக் குறைப்பதனால் ஏற்படும் இழப்பை, ஆலை முதலாளிகளிடத்தில் அதிகக் கட்டணம் பெற்றுச் சரிக்கட்டிக்கொள்ளவேண்டும் என்ற ஆலோசனையையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உணவு உற்பத்தித் திட்டம் என்ற தலைப்பில், சிறிய பாசனத் திட்டங்கள் விவேகமாகவும் விரைவாகவும் செயல்படத் தூண்டவேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இராசயன உரங்களைக் கூட்டுறவுத் துறையின் மூலம் கொடுக்கச் செய்திருக்கும் நிலையில், மேல் மட்டத்தில் உள்ள பெரியவர்கள் வருகிற உரங்களை யெல்லாம் பல பேர்களின் பேரில்



பில் போட்டுவிட்டு, அந்த உரம் அத்தனையையும் தாங்களே வைத்துக் கொண்டு; பிறகு அதிக விலைக்கு விற்கிறார்கள். அதைக் கண்காணிக்கும் வகையில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை விரைவுபடுத்துவதோடு விரிவுபடுத்தவேண்டும். அத்துடன், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான வைத்திய வசதியும் கிட்டுவது இல்லை. கிராமப் புறங்களில் மூன்று நான்கு படுக்கைகள் உள்ள பிரசவ விடுதிகளையாவது ஏற்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அரிசனங்களுக்கு எந்தப் பிரசவ வசதியும் கிடைப்பதில்லை. கொடுக்கப்படும் மருந்துகளின் அளவையும், தரத்தையும் உயர்த்தி வழங்கவேண்டும். அரிசனங்களுக்கு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பகுதியிலும் ஒன்றிரண்டு கல்யாண மண்டபங்களையாவது கட்டிக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டும் என்று நான் விழைகிறேன். குடியிருப்புக்கான மனை வழங்குவதிலும் தீவிர கவனம் செலுத்தவேண்டும். கூட்டுறவு சங்கங்களின் தேர்தலை இரண்டு ஆண்டுகளுக்கு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது நடத்த வேண்டும். எவர்சில்வர், பித்தளை போன்றவைகளைக் கொண்டு செய்யப்படும் சாமான்களின் போட்டியினால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் குலாலர்கள், உடையார்கள் போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களை ஈடேற்றும் வகையில் வாய்ப்பும் வசதியும் செய்து கொடுக்கப்படவேண்டும். அத்துடன், தேர்தல் நேரங்களில் பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்ட நிலையில் உள்ளவர்களுக்கெல்லாம் தக்க வழிவகை செய்ய வேண்டும். ஆசிரியர் சமுதாயத்தை வேண்டுமென்றே பழி வாங்கும் நிலை இன்று உருவாகியிருக்கிறது. அது மட்டுமல்ல, பல கிராமங்களுக்குக் காங்கிரஸ்காரர்களுடைய மூலதனத்தில் பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அவர்கள் வேண்டுமென்றே, ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி, 'கழகத்திற்கு ஓட்டுப் போட்டவர்கள், ஆகவே அவர்களை பஸ் விடச் சொல்லுங்கள்' என்று அகம்பாவமான பேச்சைப் பேசும் நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலையையும் அரசாங்கம் கவனித்து, ஆவன செய்யவேண்டும். இந்த வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து உரையை முடிக்கின்றேன்.

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் :** மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஆர். கருப்பையா அவர்கள் இப்பொழுது பேசலாம்.

* **திரு. ஆர். கருப்பையா :** அன்புக்கும் பண்புக்கும் உரிய துணைத் தலைவர் அவர்களே . . .

**மதிப்பிற்குரிய துணைப்பேரவைத் தலைவர் :** சபாநாயகரை விளிக்கும் போது, "அன்புக்கும் பண்புக்கும் உரிய" என்ற சொற்களைச் சேர்த்து விளிக்கக் கூடாது. "சபாநாயகர் அவர்களே" என்று மட்டும் விளிக்க வேண்...

[1967 மார்ச் 21

* **திரு. ஆர். கருப்பையா :** துணைச் சபாநாயகர் அவர்களே, இன்றைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் மிகவும் சிக்கலான நாட்களிலே ஆட்சியை ஏற்றுள்ளது, அந்தக் கட்சிக்கு தொந்தரவும், சில சிக்கல்களும் உள்ளன என்று பலர் பேசுகிறார்கள். உண்மையிலேயோ இந்த நாடு இப்பொழுது மிக நல்ல நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆட்சிக்கு வந்திருக்கிற நாள் நல்ல நாள் என்றே சொல்ல வேண்டும். சென்ற இருபது ஆண்டுக் காலமாக நாட்டை நல்ல முறையில் காங்கிரஸ் ஆட்சி செய்துவந்ததன் விளைவாக, நாட்டிலே நல்ல நிலைமைகள் ஏற்பட்டிருக்கிற இந்த நேரத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற இன்றைய ஆட்சியாளர்கள் உண்மையிலேயே பாக்கியசாலிகள் என்று தான் சொல்ல வேண்டும். அதே போன்று இந்த நாட்டு மக்களும் உண்மையிலேயே மிகவும் நல்லவர்கள் என்று சிறப்புக்குரியவர்கள் என்றுதான் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இத்தகைய நல்ல சூழ்நிலையில் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் இந்த ஆட்சியாளருக்கு, நாட்டு மக்கள் மேலும் மேலும் நல்ல நிலையில் வருவதற்காக என்ன என்ன செய்யவேண்டும் என்பதைக் குறித்து ஒரு சில செய்திகளை (விஷயங்களை) இங்கே குறிப்பிட்டு விடை பெற நான் விரும்புகிறேன்.

இந்த நாட்டின் வருமானம் சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இப்பொழுது பல மடங்கு அதிகரித்திருக்கிறது. அதை விடச் செலவும் அதிகரித்திருக்கிறது என்பது நாடறிந்த உண்மை. நாட்டின் வருவாயை விடச் செலவு அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்னவென்றால், நாம் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, அணைகட்டுகளை கட்டி ரோடுகள் போன்றவற்றை அமைத்திருப்பது தான். அதன் காரணமாக இப்பொழுது கட்டியுள்ள அணைக் கட்டுகளும், தீட்டியுள்ள திட்டங்களும் பயன் தரும் காலம் இதுவே ஆகும். இந்த நாட்டிலே நல்ல நிலை நிலவி வருகிறது. இதே போன்று எப்பொழுதும் இருந்துவர, இப்போதைய ஆட்சியாளர்கள் ஆவன செய்யவேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பல தொல்லைகள் என்றுமே இருந்து வந்திருக்கின்றன. ஆனால், இங்கே ஒரு சிலர்தான் விவசாய மக்களுடைய தொல்லைகளை வெளிப்படுத்துகிறார்கள். பலர் விவசாயப் பெருங்குடி மக்களைப்பற்றிக் குறிப்பிடுவது கூட இல்லை. விவசாயப் பெருங்குடியிலே பிறந்த என்னைப் போன்றவர்கள், விவசாயிகள் அன்றாடம் அனுபவித்து வருகிற தொல்லைகளைக் கண் கூடாகப் பார்த்து வருவதால் அவைகளைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். இரண்டு, மூன்று ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயி அந்த நிலத்தைக் குத்தகைக்கு விட்டுவிட்டு, சென்னைக்கு வந்து, நல்ல வேலை அல்ல என்று நினைக்கிற ஓட்டல் தொழிலாளியாக வேலை பார்க்கிறான் என்றால், அவனுடைய நிலையை எண்ணிப் பார்க்கவேண்டும். உண்மையிலேயே விவசாயத்தில் வருமானம் இருக்குமானால், அவன் அந்த நிலைக்கு வந்திருக்க மாட்டான். அப்படிப்பட்ட நிலை மாறவேண்டுமானால், விவசாயிகளுக்கு நல்ல



1967 மார்ச் 21] [திரு. ஆர். கருப்பையா]

ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கவேண்டும். விவசாய நாடு என்று நாம் பெருமையுடன் பேசிக்கொள்ளுகிற இந்த நாடு உண்மையிலேயே முன்னேறவேண்டுமானால், விவசாய உற்பத்திப் பொருள்கள் உண்மையிலேயே பெருக வேண்டுமானால், விவசாயிகளுக்கு நல்ல உற்சாகம் அளிக்கவேண்டும்; விவசாயம் வருமானமுள்ள ஒரு தொழிலாக மாற்றியமைக்கப்படவேண்டும். இந்த நிலை ஏற்பட்டால்தான் நாட்டு மக்கள் நன்றாக வாழமுடியும்; விவசாயப் பெருங்குடி மக்கள் நிலை உயர முடியும். ஐந்து ஏக்கருக்கு உட்பட்டு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு நல்ல வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். அதன் காரணமாகப் பல லட்சக் கணக்கான ரூபாய் நாட்டுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும், அதைப் பொருட்படுத்தாது, அந்த நஷ்டத்தை வேறு வகையில் சரிப்படுத்தி விவசாயிகளுக்கு நல்ல ஆதரவு தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நேற்று ஒரு நண்பர் பேசும்போது, பல லட்சக்கணக்கான ஏக்கர் கரும்பு சாகுபடியின்கீழ் வந்ததன் காரணமாக, உணவு உற்பத்தி பெருகவில்லை என்று சொன்னார்கள். உண்மைதான். கரும்பு பயிரிட்டால் லாபம் அதிகமாகக் கிடைக்கிறது. நெற் பயிர் வைத்தால் அவ்வளவாக இல்லை. நெற் பயிர் வைத்தால் ஏக்கருக்கு ரூ. 400 வரும். கரும்பு பயிர் வைத்தால் ஏக்கருக்கு ரூ. 1,200 வரும். விவசாயி என்ன செய்வான்? எந்த விவசாயியும் கரும்புக்குப் பதிலாக நெல் பயிரிட்டு, தனக்கு வர இருக்கிற லாபத்தை குறைத்துக் கொள்ள விரும்பமாட்டான். எனவே விவசாயிகளினுடைய நிலை உயர வேண்டுமானால், ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயப் பெருங்குடி மக்களிடத்திலிருந்து அரசாங்கம் நெல் கொள்முதல் செய்வதில்லை என்ற முறையை வகுக்கவேண்டும். அப்படிக் கொள்முதல் செய்தாலும், ஏக்கருக்குக் குறைந்தது இரண்டு மூட்டைக்கு மேல் கொள்முதல் செய்யக் கூடாது. மீதமுள்ள நெல்லை விவசாயி மார்க்கெட்டில் கொண்டு போய் மார்க்கெட் விலைக்கு விற்க அனுமதி தரவேண்டும். அப்படிச் செய்தால்தான் நெல் பயிரிட்டு வரும் விவசாயிகளுக்கு ஊக்கம் ஏற்பட முடியும். நாடு முன்னேற வேண்டுமானால், விவசாயிகள் முன்னேறவேண்டும். விவசாய மக்கள் முன்னேறவில்லையானால், விவசாய மக்களுக்கு ஆட்சியின்மீது வெறுப்போ, அதிருப்தியோ ஏற்பட்டால், அந்த ஆட்சி கவிழ்த்தான் செய்யும். மேன்மை தங்கிய அமைச்சர்களும் மற்றவர்களும் இதைக் குறிப்பாகப் புரிந்து கொண்டு, விவசாயிகளுக்கு நல்ல திட்டங்களைத் தீட்டி, ஏழை விவசாயிகளின் நிலை உயர வசதிகள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

என் தொகுதியாகிய அரியலூர் பகுதியில் 'காமரசவல்லி' என்கிற ஒரு பிர்க்கா இருக்கிறது. அது மூன்று யூனியனில் சம்பந்தப் பட்டுள்ளது. மூன்று யூனியன்களில் தொடர்புள்ள பிர்க்காவாக இருப்பதால் அது எந்த வகையிலும் முன்னேற வாய்ப்பில்லாமல் இருக்கிறது. நடைபாதைக்குக் கூட வசதி இல்லாமலிருக்கிறது. இருந்தவர் நடந்து செல்லலாமே தவிர, சைக்கிளில் போக முடியாது.

[திரு. ஆர். கருப்பையா] [1967 மார்ச் 21

சிறு தூற்றல் போட்டால் கூட, சைக்கிளைத் தூக்கிக் கொண்டுதான் போகவேண்டும். சைக்கிளை விட்டுக்கொண்டு செல்ல முடியாது. எனவே ஆளுங் கட்சியினர் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப் போல, பின் தங்கிய பகுதிகளைத் தனியாக எடுத்துக்கொண்டு அத்தகைய பகுதிகள் முன்னேற, அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் அருகிலுள்ள நகரத்துடன் தொடர்பு கொள்ள, அவர்களுடைய விவசாயப் பொருள்களை விரைவில் கொண்டு சென்று விற்பனை செய்ய வழி வகுத்துக் கொடுத்து, ரோடு வசதியும்; மின்சார வசதியும் செய்து கொடுக்கவேண்டும். காமரசவல்லி பிர்க்காவானது எல்லா வகையிலும்பின்தங்கியிருப்பதால், அதைப் பல வகையிலும் முன்னுக்குக் கொண்டுவர ஆட்சியாளர்கள் வழிவகை செய்யவேண்டும் என்ற என்னுடைய பணிவான எண்ணத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, சென்ற மாதம் 15-ம் தேதியன்று சென்னையிலும், மற்றும் வெளியூர் பத்திரிகைகளிலும் தேர்தல் சமயத்தில் ஒரு அறிக்கை வெளி வந்துள்ளது. தினத்தந்தியிலே என்று நான் நினைக்கிறேன். அதில் திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லியிருக்கிறது. 'ஓட்டுப் போடும் முன் ஒரு கணம் சிந்திப்பீர்' என்று தலைப்பிட்டு. 'ரூபாய்க்கு ஒரு படி அரிசி உடனே கிடைக்கும்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. விலைவாசிகள் குறைகிற வரையில் அமைச்சர்கள் சம்பளம் வாங்க மாட்டார்கள் என்பன போன்றவை குறிப்பிடப்பட்டிருந்தன. இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன், அமைச்சர்கள் தங்கள் சம்பளத்தைப் பாதியாகக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனினும் விலைவாசி குறைகிற வரையில் சம்பளமே வாங்காது இருந்திருந்தால் நாங்கள் அதைப் பாராட்டியிருப்போம். விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தர வேண்டும். எங்கள் அரியலூர் தொகுதியில் பல ஏரிகள், மராமத்து செய்யப்படாமல் தூர்ந்துபோய் இருக்கின்றன. அவைகள் 50 ஆண்டுகளுக்கு முன்னரே மராமத்து செய்யப்பட்டன. இப்போது கடந்த 15, 20 ஆண்டுகளுக்கு மேல் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக திருமழபாடி பிர்க்காவிலுள்ள 'கண்டிராதித்தம் ஏரி' அவசியம் வண்டல் எடுக்கப்படவேண்டும். வாய்க்கால் வழியாகத் தண்ணீர் வரும்போதே தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. இந்த ஏரியில் வண்டலை எடுத்து நல்ல முறையில் கண்காணித்து வந்தால், குறைந்தது 25 நாட்களுக்கு அதிகமாக பயன்படும் தண்ணீரை தேக்கி தட்டுப்பாடு ஏற்படும்பொழுது விவசாயிகள் ஒரு மாதம் வரையில் அந்த ஏரியில் தேங்கி உள்ள தண்ணீரைப் பயன் படுத்திக்கொள்ளலாம். எனவே கனம் அமைச்சர் அவர்கள் அந்த பகுதியினரை விசாரித்து ஆவன செய்யும்படி வேண்டுகிறேன். நேற்று பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஆசைத்தம்பி அவர்கள், 'இன்னும் 25 ஆண்டுகளுக்கு எங்களை அசைக்க முடியாது' என்றார். நான் சொல்கிறேன். 'என்றுமே நீங்களே இருங்கள்' என்று. நீங்கள் ஆட்சியை நன்றாகச் செலுத்தவில்லையானால், இரண்டு ஆண்டிற்குள்ளேயே மக்கள் கூறுவார்கள். நீங்கள்



1967 மார்ச் 21] [திரு. ஆர். கருப்பையா]

தேவையா இல்லையா என்பதை மக்களே தங்களுக்கு வேண்டிய மாறுதலைச் செய்துகொள்வார்கள். இன்றையதினம் மக்கள் மிகத் தெளிந்த நிலையில் உள்ளார்கள். கனம் அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் இந்த விவசாயிகள் நிலை உயரவும், நாட்டு மக்களுக்கு கொடுத்துள்ள வாக்குறுதிகளை மதித்து நடக்கவும் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இதற்கு முன் பேசிய உறுப்பினர் தங்களைப் பார்த்து, 'அன்புக்கும் பண்புக்கும் உரிய உதவி சபாநாயகர் அவர்களே' என்று ஆரம்பித்தார். அவர் அவ்வாறு அழைக்கக்கூடாது என்று தாங்கள் ரூலிங் கொடுத்தது, அப்படிச் சொன்னது பார்லிமெண்டரி முறைக்கு முரணானது என்றா? சட்ட சபை விதிகளுக்கு மாறானது என்றா? அல்லது தங்கள் அடக்கமான பண்பின் காரணமாகவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்**: இந்த மன்ற உறுப்பினர்கள் யாரும் சபாநாயகரின் தனிப்பட்ட சலுகையைப் பெறும் வகையில், அவரது அன்பை ஈர்த்துவிடும் வகையில் அழைக்கக் கூடாது. ஆகவே, எவ்வித அடைமொழியும் இன்றி சபாநாயகரை விளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. ஆ. கு. சுப்பையா**: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற வரவு செலவுத் திட்டத்தில் சுமார் 760 லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது. நம்முடைய நாட்டிற்கு பெரும் பகுதியான வருமானங்கள் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய விவசாயிகளிடமிருந்துதான் வந்து கொண்டிருக்கின்றன. இம்மாதிரி, வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழுவதை ஈடுகட்ட வழிவகை காணும் இதே நேரத்தில், அரசாங்கம் நிலவரியை எடுத்துவிட உத்தேசித்திருப்பதாக முதல் அமைச்சர் அவர்களும் கூறியிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே ஆட்சி நடத்திய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த மன்றத்தின் முன்னால் ஒரு அறிக்கையை சமர்ப்பித்தார்கள். அவர்கள், 'பூரா நிலங்களுக்கும் நிலவரியை ரத்து செய்யப் போகிறோம், அவ்வாறு செய்கின்ற பொழுது சுமார் 7½ கோடியிலிருந்து 8 கோடி ரூபாய் வரையில் நஷ்டம் ஏற்படும்' என்று கூறினார்கள். ஒருவேளை அவர்கள் அப்படிக் கூறியது தேர்தலுக்கோ, வேறு என்ன காரியத்திற்கோ எனக்குத் தெரியாது.

அன்றையதினம் வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னால் எதிர்க்கட்சியினர் சார்பிலிருந்து, நிலவரியை குறைக்க கோரி ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டதை அன்று ஆளும் கட்சியினர் தோற்கடித்தார்கள். அன்றையதினம் நாங்கள் சொல்லியிருப்பது என்னவென்றால், சிறுநிலச் சொந்தக்காரர்களுக்கு வரியை ரத்து செய்ய வேண்டுமென்பதுதான், அது பொருத்தமாக

[திரு. ஆ. கு. சுப்பையா] [1967 மார்ச் 21

வும் இருக்கும். இப்படியாக இன்றையதினம் பொறுப்பு ஏற்றிருக்கக்கூடிய அமைச்சரவை அந்த ஆலோசனையை எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அவ்வாறு அந்த ஆலோசனைகளை ஏற்றுக்கொள்கின்றபொழுது, வருவாய் குறைகிறது என்று சொன்னால், அதை ஈடு கட்டுவதற்கு வேறு யோசனைகளைச் செய்யலாம். அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் எடுத்துவிட்டார்கள். தற்போது அதிகமாக தானியங்கள் விளைந்துகொண்டிருந்த நிலங்களில் எல்லாம் கரும்பு பயிரிடுகிறார்கள். அதனால் அவர்களுக்கு அதிகமான வருவாய் வந்து கொண்டிருக்கின்றன. அப்படி கரும்பு போன்ற பணப்பயிர் வைக்கும் விவசாயிகளிடமிருந்து ஒரு குறிப்பிட்ட வரியை வருமான வரியாக வசூல் பண்ண முடியுமா என்று ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விவசாயம், உணவு உற்பத்தி சம்பந்தமாக தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே இருந்த அரசும் இம்மாதிரியான யோசனைகளை நிறைய வெளியிட்டது. உரங்களை வழங்குவது, பூச்சி மருந்துகள் வழங்குவது முதலியவைகளின் மூலமாக உணவு நெருக்கடியைத் தீர்க்க முடியும் என்று அவர்களும் பல ஆலோசனைகளைக் கூறி வந்தார்கள். அவர்கள் கூறியதோடு இருந்து விட்டார்கள். அதை அமல் நடத்தும்போது தவறுகள் செய்து வந்திருக்கிறார்கள். அதன் காரணமாக, விவசாய வளர்ச்சிக்காகச் செலவழிக்கக் கூடிய அந்தத் தொகை ஒழுங்காகச் செலவழிக்கப்படாமல் பெரியதொரு நஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று உதாரணமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் 14 லட்சம் எக்கரில் தானியம் விளைகிறது. அந்த மாவட்டத்தில் இன்று எடுத்துக்கொண்டால் மூன்று, நான்கு லட்சம் எக்கர் நிலங்களுக்கு சரியான வடிகால் வசதி இல்லாமல், தண்ணீரில் மூழ்கி பயிர்கள் பாழாகிறது. விவசாயம் செய்தவர்கள் பெரிய அளவில் நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அந்த நஷ்டத்தைப் போக்க வேண்டுமென்று கடந்த பத்தாண்டு காலமாக தஞ்சை மாவட்டத்திலிருந்து வந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறியதன் பலனாக தஞ்சை மாவட்ட வடிகால் திட்டத்திற்கு 12 கோடி ரூபாயைச் செலவழிக்கப் போவதாகப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தினார்கள். அதை ஆட்சியினர் செய்தார்களா, இல்லையா என்பதுபற்றி இன்றையதினம் பொறுப்பு ஏற்றிருக்கக்கூடிய அமைச்சரவை சொல்வார்களானால், அது மக்களுக்கு கட்டாயம் திருப்திகரமாய் இருக்கும். உணவுக் கஷ்டத்தை ஓரளவுக்கு நாம் போக்கமுடியும். ஏனென்றால் 3½ லட்சம் எக்கர் நிலத்தில் விளையும் தானியங்கள் எல்லாம் பாழாகி விடுகிறது. இந்த 'வடிகால் வசதித் திட்டத்தை இந்த அரசு செய்ய முனைந்தால்' தஞ்சை மாவட்டத்திலிருந்தே அந்த பற்றாக்குறை உணவைப் பெறலாம் என்று எதிர்பார்க்கலாம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.



1967 மார்ச் 21] [திரு. ஆ. கு. சுப்பையா]

அடுத்து, மன்னார்குடி வடவார் பாசனம் என்று ஒரு பாசன ஆறு இருக்கிறது. இதனால் 15 ஆயிரம் எக்கர் நிலம் பாசனம் அடையும். இந்தப் பாசனத் திட்டத்தை நிறைவேற்றித் தரும்படி அரசாங்கத்திற்கு நாங்கள் சொல்லாத நாளே கிடையாது; அவர்களுக்குத் தூது வராத வருஷமும் இல்லை. அதன் பின்னர், இதற்கு அடையாள நிதி ஒதுக்கமாக கொஞ்சம் தொகையை ஒதுக்கியிருந்தார்கள். அந்தத் தொகையையும் செலவழிக்கப்படாமலேயே வைத்துவிட்டார்கள். இன்றைய நிலையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் சுமார் பத்து கிராமங்களில் மேலும் பதினைந்தாயிரம், இருபதாயிரம் ஏக்கர் நிலங்களில் பாசன வசதி செய்ய முடியும். இந்த வடவாற்றில் மழைக் காலங்களில் அதிகமாக வரக்கூடிய தண்ணீர் சேதமாகிவிடுகிறது. இதைத் தடை செய்து, சுந்தரக்கோட்டை, எடையர் நத்தம், வள்ளூர், திருமகோட்டை, மரவகாடு கிராமங்களுக்குப் பாசனம் கொடுக்கமுடியும்.

இரண்டாவதாகத் தஞ்சை மாவட்டத்தில் மின்சார விஸ்தரிப்பு மூலமாக பாசனக் கிணறுகள் தோண்ட ஐந்தாயிரம் ரூபாயில் இருந்து ஏழாயிரம் ரூபாய் வரை கடன் கொடுக்கிறார்கள். அவ்வாறு கொடுக்கின்ற கடனை வாங்கி, விவசாயிகள் கிணறைத் தோண்டினாலும் மின்சார விஸ்தரிப்புச் செய்து கொடுப்பது கிடையாது. மின்சார விஸ்தரிப்புத் தடையாக இருப்பது இன்றையதினம் அந்த மாவட்டத்தில் தனியார் துறையிடம் மின்சார விஸ்தரிப்புக் கம்பெனிகள் இருப்பதுதான். இன்னமும் அவர்கள் தங்கள் இஷ்டத்திற்கு உரித்தான கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்புக் கொடுப்பதில்தான். ஈடுபடுகிறார்கள். அரசாங்கம் தீவிரமாக விவசாய உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று சொன்னால், தனியார்களிடம் இருக்கும் மின்சாரக் கம்பெனிகளை உடனடியாக மேற்கொள்வதுதான் சிறந்ததாக இருக்கும். இதற்கு முன்னால் இருந்த அரசாங்கமும் அப்படிச் செய்வதாக ஒரு வாக்குறுதியை இந்தச் சட்டமன்றத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதை நிறைவேற்றவில்லை. இந்தப் புதிய அரசாங்கம் அந்த வாக்குறுதியை நிறைவேற்றி, தஞ்சை மாவட்டத்தில் உள்ள தனியார் நிறுவனங்களை எடுத்துக்கொண்டு நல்லமுறையில் மின்சார விஸ்தரிப்புப் பணியைச் செய்துகொடுக்கவேண்டும்.

அடுத்து, விவசாயிகள் சம்பந்தப்பட்டவரை குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் இன்றைக்கு அந்தச் சட்டம் நடைமுறையில் இல்லை என்றே சொல்லலாம். அந்தச் சட்டம் எல்லாம் முடமாக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்படுகிற கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. மேலும் சென்ற இரண்டாண்டுகளாக ராஜ்யத்தில் ஏற்பட்டிருந்த வறட்சியின் காரணமாக, வெள்ளம், புயல் காரணமாக விவசாயிகள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை அப்போது இருந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, குத்தகைப் பாக்கிக்காக நிலத்திலிருந்து வெளியேற்றப்படாதிருக்க ஒரு சட்டத்தைக்கொண்டு வந்து நிறைவேற்றுகிறார்கள். அந்தச் சமயத்தில் கூட நான் ஆலோசனை சொன்னேன். அந்த

[திரு. ஆ. ரு. சுப்பையா] [1967 மார்ச் 21

ஆலோசனையை அரசாங்கம் ஏற்கவில்லை. இன்று நிலைமையென்ன வென்று சொன்னால் விவசாயிகள் குத்தகையை அளக்கத் தயாராய் இருந்தாலும், நிலச்சுவான்தார்கள் அளந்துகொள்வது கிடையாது, அளந்து வாங்கிக்கொள்ள முடியாது என்கிறார்கள். இரண்டாண்டு இப்படி வாங்கிக்கொள்ளாது இருந்துவிட்டு, அப்புறம் குத்தகைப் பாக்கிக்காக முனிசீப் கோர்ட்டில் வழக்குப் போட்டு நிலத்தை விட்டு வெளியேற்றுகிறார்கள். பாக்கிக்காக மற்ற நிலங்களில் சாகுபடி செய்த தானியத்தை ஜப்தி செய்துவிடுகிறார்கள். இத்தகைய அபாயகரமான நிலைமை தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறது. மற்ற மாவட்டங்களிலும் இதே நிலைமைதான் இருக்கும் என்று நினைக்கிறேன். நெல்லை வாங்கிக்கொள்ள மறுத்தால் ரெவின்யு கோர்ட் என்று இருந்தது. அங்கே போய் நியாயம் சொல்லலாம். இப்போது அதையும் கலைத்துவிட்டார்கள். ஏதாவது விவகாரம் ஏற்பட்டால் ஆர்.டி.ஓ.-விடம் சொல்லலாம் என்றார்கள். அதற்கும் தக்க விதிமுறைகளை ஏற்படுத்தவில்லை. ஆர்.டி.ஓ.-வுக்கும் அதிகாரம் வழங்கவில்லை. இதுபற்றியும் முதல் அமைச்சர் அவர்கள் கவனித்துப் பார்த்து இப்பிரச்சினைகளுக்கு நல்ல பரிகாரம் தேடவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். குத்தகை பாக்கி என்றால், மடங்கள், தேவஸ்தான நிலங்கள், நிலக்காரர்கள் ஆகிய எல்லா இடங்களிலும் நிறைய பாக்கி இருந்து கொண்டிருக்கிறது. விவசாயிகள் இன்றையதினம் கடன்காரர்களாகத்தான் இருக்கிறார்கள். கடன் ஒத்தி வைப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதுகூட உதவியாக இருக்கும். குத்தகைப் பாக்கியைத் தள்ளுபடி செய்து கொடுக்கமுடியுமா என்பதையும் யோசனை செய்யவேண்டும். கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் தீவிர விவசாய திட்டத்தின்கீழ் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அந்தக் கடன் வசூலை ஒத்திவைப்பது நியாயமாக இருக்கும். அதுபற்றியும் ஒரு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குடியிருப்பு மனை சம்பந்தமாகவும்—குடியிருப்பு பாதுகாப்பு மசோதா இருக்கிறதே தவிர, அந்தச்சட்டப் பிரகாரம் எந்தவித மான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குடியிருப்பு மனைகளில் இருந்து பலவிடங்களில் வெளியேற்றம் நடந்துகொண்டுதான் இருக்கிறது. அந்தச் சட்டம்கூட இவ்வாண்டோடு காலாவதி யாகிறது. அதை நீட்டித்தாக வேண்டும். மேலும் ஏழை விவசாய ஹரிஜன மக்கள் இன்றையதினம் குடியிருந்து வருகிற நிலங்களை அவர்களுக்கே சொந்தமாக்கச் சட்டம் கொண்டுவரவேண்டும். அப்படிச் செய்வது பெரிய உதவியாக இருக்கும். அத்தகைய ஏழை எளிய பாட்டாளி மக்கள் எல்லோரும் சேர்ந்துதான் உங்களை இன்றையதினம் பதவியில் அமர்த்தியிருக்கிறார்கள். அந்த மக்கள் இன்றையதினம் குடியிருந்து வருகிற மனைக்கட்டுகளை அவர்களுக்கே நீங்கள் சொந்தமானதாகச் செய்வது மிகவும் நன்மையாக இருக்கும்.



1967 மார்ச் 21] [திரு. ஆ. ரு. சுப்பையா]

அடுத்து நெல்லை மாவட்டத்தில் சென்ற வருஷம் கோவில்பட்டித் தாலுக்காவில் இரண்டு பசலி நெல் தானியம் விளையாமல் போய் விட்டது. அதன் காரணமாக 1374-ஆம் பசலி நிலவரியை ஒத்தி வைக்கவேண்டுமென்று கோரினார்கள். ஒத்திவைக்கப்பட்டது. 1375-ஆம் பசலியிலும் கட்ட முடியாது போய்விட்டது. 1376-ல் இரண்டு பசலிகளுக்கும் சேர்த்து வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதனால் அந்த தாலுக்கா விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இந்த அரசாங்கம் அந்த வசூலை தயவு செய்து ஒத்தி வைக்கவேண்டும் அல்லது தள்ளுபடியாவது செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உச்ச வரம்புச் சட்டம். இதைப்பற்றி நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களே, 'இது உச்ச வரம்புச் சட்டம் இல்லை. மிச்ச வரம்புச் சட்டம்' என்றார்கள். இன்று இந்த சட்டத்தை மாற்றி, ஓட்டைகளை அடைத்து உபரியாக எடுக்கும் நிலங்களை நிலமில்லாத ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமாகத்தான் உணவு உற்பத்தியைப் பெருக்கமுடியும்.

அடுத்து, பூச்சி மருந்து—தேவையானபோது பூச்சி மருந்து கொடுக்கத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இதுவரை பூச்சி மருந்து தேவைப்படுகிறபோது விவசாயிகள் வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்குச் சென்றால் பூச்சி மருந்து இருக்காது. அது போலவே உரம் கேட்டால் இருக்காது. தேவையில்லாத சமயத்தில் கொடுப்பார்கள். உரவிலையும் அதிகமாக விற்றுக்கொண்டிருக்கிறது. இவற்றில் எல்லாம் கவனம் செலுத்தி—எப்படி முதல் அமைச்சர் அவர்கள் விவசாயத்திற்கும், விவசாய உற்பத்திக்கும் முதலிடம் கொடுத்திருக்கிறார்களோ—அதுபோல அவை சம்பந்தப்பட்ட காரியங்களிலும் அதிகக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அவை சம்பந்தப்பட்ட இலாக்கா நல்ல முறையில் செயல்பட வகை செய்யவேண்டும். இந்த ஆட்சியில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு போதுமான பாதுகாப்பும், உத்தரவாதமும் அளிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. பெ. பெரியசாமி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது முதலமைச்சர் அவர்களுடைய உரையிலே உணவுக்கு முதன்மையான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. தமிழகத்தின் நடுப்பகுதியில் உள்ள எனது மாவட்டமாகிய சேலம் மாவட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்திலும் உள்ள உழவர்கள் மரவள்ளிக் கிழங்கையும், குச்சிவள்ளிக் கிழங்கையும் அதிகமாகப் பயிர் செய்கிறார்கள். இந்தக் கிழங்கு உணவு வகையில் ஒன்றாகும். சேலம் மாவட்டத்தில் 500 க்கு மேற்பட்ட ஜவ்வரிசி மில்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மில்லிலும் 200-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஆகவே,

வரிடம் சென்று கேட்டபொழுது அவர் போலீசால் தடியடிப்பட்ட அவருடைய முதுகைத் தடவிப் பார்த்துக்கொண்டார். இப்படியாக அவர்கள் இதுவரை காட்டு தர்பார் நடத்தியிருக்கிறார்கள். பல மோசமான சம்பவங்களை நடத்தியிருக்கிறார்கள். தயைசெய்து இப்படிப்பட்ட சம்பவங்களுக்கெல்லாம் ஒரு நீதி விசாரணை நடத்த வேண்டுமென்று இந்தச் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அப்போதுதான் இந்த நாட்டில் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட துர்ப்பாக்கிய சம்பவங்கள் நடைபெறுமல் தடுக்க முடியும். திருச்சியிலே திரு. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்கள் செய்த தவறு என்ன? அவர் என்ன அரசியல்வாதியா? மாணவர்கள்மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டார்களே என்று சொன்னதற்காக அவரைக் கொட்டடியில் தள்ளிவிட்டார்கள். மதிப்பிற்குரிய அமைச்சராக இருக்கின்ற திரு. கருணாநிதி அவர்கள் செய்த தவறு என்ன? இப்பொழுது மதிப்பிற்குரிய சபாநாயகராக இருக்கின்ற திரு. ஆதித்தனார் அவர்களைச் சிறையிலே போட்டார்கள், அவர்கள் செய்த தவறு என்ன? இவ்வளவையும் செய்துவிட்டு நீங்கள் மக்களிடம் ஓட்டுக்கேட்டால் மக்கள் உங்களை மறந்துவிடுவார்களா? போலீஸார் உங்கள் நண்பன் என்று சொன்னார்கள். 'ஐ ஆம் ஹியர் டு ஹெல்ப் யு' என்று சொன்னார்கள். கிட்டே நெருங்கினால் தடியால் தாக்கினார்கள், ஓடினால் சுட்டார்கள். குண்டுக் காயத்தோடு அவர்களை லாக்கப்பில் அடைத்து, நீ ஏன் அங்கே வந்தாய் என்று வழக்கு வேறு போட்டிருக்கிறார்கள் நிரபராதிகள் மீது இப்படியெல்லாம் செய்துவிட்டு ஓட்டுகளைக் கேட்டால் பொது மக்கள் கொடுப்பார்களா? அப்படியிருந்தும் அவர்களுக்கு ஓட்டுக்கொடுத்திருக்கிறார்கள், நியாயமாகப் பார்த்தால் அவர்கள் டெபாசிட்டுகள் இழந்து இருக்கவேண்டும். பொது மக்கள் உங்களிடம் கருணை காட்டிவிட்டார்கள்.

[மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் தலைமை]

மற்றும் அதிகாரம் எந்தெந்த வகையில் இதுவரை துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது என்பதற்கு இரண்டொரு சம்பவங்களைச் சொல்ல விரும்புகிறேன். திருச்சியில் பி.ஏ. டு கலெக்டரைத் தேர்தல் சமயத்தில் கட்டாயப்படுத்தி லீவ் எடுக்கச் சொன்னார்கள். அவர் தி.மு.க. பற்றுள்ளவர் என்று திருச்சி காங்கிரசார் சொன்னதற்காக அவரைத் தொலை தூரத்திற்கு மாற்றி விட்டார்கள். முன்னாள் மந்திரி ராமையா அவர்களுக்கு வேண்டியவர்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்த மன்றத்தின் முன்னால் இல்லாத அதிகாரி மீது குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. அவர் இல்லாத இந்தச் சபையில் அவரைப்பற்றி அபாண்டமான பழி சொல்வது சரியா என்ற ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** யாரையும்பற்றிப் பெயர் சொல்லாமல் தாங்கள் எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லலாம்.





**திரு. ஆர். நாகசுந்தரம்:** உர மோசடி செய்தார் என்பதற்காக அவரைப் பிடித்துக் கொடுத்தார் என்பதைத் தவிர அவர் செய்த தவறு என்ன? ஏதாவது லஞ்சம் வாங்கினாரா? மதுரையில் போக்குவரத்தைச் சரி செய்ய காரை நிறுத்திக் கடமையைச் செய்த போலீஸ்காரரை மாற்றி விட்டார்கள். இன்று அத்தகைய நிலை இல்லை. காலமெல்லாம் காத்திருந்து வாக்காளர்கள் அமைதியான புரட்சியை நடத்தி ஆட்சியை மாற்றியிருக்கிறார்கள். வருங்காலத்திலே எங்களுடைய கொள்கைகளுக்கேற்ப அதிகாரிகள் நல்ல முறையிலே நடந்து கொள்ளுவார்கள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைச் சார்ந்த கனம் உறுப்பினர் அவர்கள் இடைக்கால பட்ஜெட்டின் மீது பேச வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மன்மதன் எரிந்தானா, இல்லையா என்பதைப்பற்றி மாலை 6 மணி முதல் 8 மணி வரை வைத்துக்கொள்ளலாம், இங்கே தேவையில்லை என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். நாகசுந்தரம்:** இன்று நாட்டிலே பல இடங்களிலே பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் உர மூட்டைகள், நெல் மூட்டைகள் எல்லாம் வெளியே கொண்டுவரப்படுகின்றன. அதைப் பார்க்கும் போது உள்ளபடியே வருங்காலத்திலே மூன்று படி அரிசி போடுவதற்கான வழி ஏற்படும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. ஆனால் அதிகாரிகள் நம்மைப் புரிந்து கொள்ளாமல், இன்று திருச்சியில் புத்தூர் அக்கிரகாரத்தில் உள்ள வீடுகளுக்குச் சென்று சொந்த உபயோகத்திற்கு வைத்திருந்த 5, 10, மூட்டைகளைக் கைப்பற்றுவதாகச் செய்தி வருகிறது. அன்புகூர்ந்து ஆட்சியாளர் அது பற்றிக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த உரையை இந்த அளவிலே முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. சகாதேவ கண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, வணக்கம். 1967-68 பட்ஜெட்டிலே புதிய மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை. பழைய கணக்குகளைப் புதிய ஏடுகளில் எழுதியிருக்கிறார்கள். 'நிலவரியை ரத்து செய்வதை நாங்கள்தான் தீர்மானமாகக் கொண்டுவந்தோம்; அப்போது 'காங்கிரஸ் அங்கத்தினர்கள் எதிர்ப்புக் காட்டினார்கள்' என்று தி.மு.க. அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தையே இப்போது நான் கேட்கிறேன். வருகிற ஜூலை 1967-ல் நிலவரியை ரத்து செய்யப் போவதாக ஏற்கனவே உள்ள அரசாங்கம் அறிவித்திருந்தது. இப்போது ஆளும் கட்சியிலுள்ளவர்கள் திட்டவட்டமாக 1967 ஜூலையில் நில வரி ரத்து செய்யப்படும் என்று உரையில் அறிவிக்கவில்லை. இதனால் ஏழை விவசாய மக்கள் பெரிதும் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

வரப்போகும் கல்வி ஆண்டிலிருந்து பி.யு.சி. வகுப்புக்குக் கட்டணத்தை ரத்து செய்யப்போவதாக முன்பு அறிவிக்கப்

[திரு. கே. சகாதேவ கண்டர்] [1967 மார்ச் 21

பட்டது. இப்போது பட்ஜெட்டிலோ அல்லது கவர்னர் உரையிலோ அதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தலுக்கு முன்னாலே வாய்ச் சொல் வீரர்கள் பல திட்டங்களை மக்கள் முன்னாலே சமர்ப்பித்தார்கள். ஆட்சிக்கு வந்த பிறகும் மீண்டும் மீண்டும் சட்டசபையிலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு அங்கத்தினர், ஜோதிடத்திலே நம்பிக்கை இல்லாதவர். ஜோதிடக்காரர் கூறிய எட்டு அம்சங்களைக் குறிப்பிட்டுள்ளார். அதிலே எதையாவது ஒன்றை நிறைவேற்றுவார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இந்த ஐந்தாண்டுக் காலத்தில் தாங்கள் சொன்ன திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதாகவும், ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுப்பதை நான் மனப் பூர்வமாக வரவேற்கிறேன். ஆனால் அதற்கு முன்னால் இந்த ஆண்டிலேயே ஏழை மக்கள் பசி தீரும் வகையில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்க அரசாங்கம் முன் வருமா என்று கேட்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சாத்தனூர் அணைக்கட்டிலே மெயின் வாய்க்கால் 16-3-1967 அன்று உடைந்து விட்டதாகத் தொகுதி மக்களிடம் இருந்து கடிதம் வந்திருக்கிறது என்பதை விவசாய அமைச்சர் அவர்கள் கவனத்திற்கும், மராமத்து அமைச்சர் அவர்கள் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். அந்த மெயின் வாய்க்கால் 1½ மைல் தூரம் வந்த பிறகு நிலங்களுக்குத் தண்ணீர் போக கிளைகளாகப் பிரியும் இடத்தில் கால்வாய் உடைந்து விட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. அந்த அணையிலிருந்து 20,000 எக்கர்—10,000 ஏக்கர் நஞ்சையும், 10,000 எக்கர் புஞ்சையும் பயிராகி வருகிறது. இந்த நிலையில் தண்ணீர் இல்லையென்றால் அத்தனையும் சாவியாகப் போய்விடும். அந்தப் பயிர்கள் பாழாகாமல் காப்பாற்றத் தீவிர நடவடிக்கையை உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று விவசாய அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். சாத்தனூர் அணையிலிருந்து 22,000 எக்கர் பாசன வசதி பெற முடியும். ஆனால் தற்போது 20,000 எக்கர்தான் பாசன வசதி பெறுகிறது. அதற்குக் காரணம் போதிய அளவுத் தண்ணீரை விடமுடியாமல், நடு நடுவே சிறு சிறு பாலங்கள் இருப்பதுதான். ஆகவே, அந்தப் பாலங்களை எல்லாம் உடைத்து விட்டு அதிக உயரத்தில் பாலங்களைக் கட்டி போதிய அளவுத் தண்ணீரை விட்டு அந்தப் பகுதியை உணவு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. முனு. ஆதி: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். கடந்த ஐந்தாண்டுக் காலமாக வரவு செலவுத் திட்டத்திலே இல்லாத ஒரு புதிய மறுமலர்ச்சி இந்த வரவு



1967 மார்ச் 21] [திரு. முனு. ஆதி]

செலவுத் திட்டத்திலே இருக்கிறது என்பதைப் பெருமையாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், குறிப்பாக, நாட்டிலே உள்ள பெரும் பஞ்சம், விலைவாசி உயர்வு ஆகியவற்றைத் தடுக்கும் வகையில் உணவுப் பிரச்சினைக்கு முதலிடம் தந்துள்ள இந்த வரவு செலவுத் திட்டம் நாட்டு மக்கள் வரவேற்கத்தக்க அளவில் அமைந்திருக்கிறது. விவசாயிகள் உரம் இல்லாமலும், விவசாயத்திற்கு வேண்டிய மற்றப் பொருள்கள் இல்லாமலும் கடந்த பல ஆண்டுகளாக வேதனைக்குள்ளாகிக்கொண்டு வந்தார்கள். அதற்கெல்லாம் இனிமேல் விமோசனம் ஏற்படும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்கள். இந்த நாட்டில் சாதாரணமாக சட்ட திட்டங்கள் வகுக்கப்படுவதைப் பற்றி மக்கள் அக்கறை கொள்வதில்லை. நடைமுறையில் அனுகூலம் கிடைக்கிறதா என்றுதான் பார்க்கிறார்கள் என்று சட்ட மன்ற உறுப்பினர்கள் பல பேர் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

ஊராட்சி மன்றங்களின் தலைவர்களும், அதை வைத்திருக்கிற ஒன்றியப்புத் தலைவர்களும், வாக்குக் கேட்கச் செல்லும்போது சட்ட மன்ற உறுப்பினர்களின் வேலைகள் என்ன என்று தெரியாமல் எங்கள் ஊரில் விளக்குகள் இல்லை, நல்ல பாதைகள் இல்லை, தண்ணீர் வசதி இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, ஒன்றிப்பு மன்றங்களின் குறைகளை அரசு கவனித்து அக்குறைகளைப் போக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சார வசதிகளைப் பொறுத்து அந்தந்த கிராமங்களின் பொறுப்புகளை அரசாங்கமே ஏற்று, வரவு செலவு மட்டுமல்ல, நிதி அனுமதிக்குமானால், அந்த மின்சாரச் செலவினங்களை அரசாங்கமே ஏற்று நடத்தலாம். இப்போது மாச்சிங் கிரான்ட் தருகிறார்கள். அந்த மாச்சிங் கிரான்டை நிறுத்திவிட்டு எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுத்தால் மக்களுக்கு நல்ல பலன் கிடைக்கும். அரசாங்கம் இதை உடனடியாகக் கவனிக்க வேண்டும். ஒன்றிப்பு யூனியன்களுக்குத் தரக்கூடிய சர்க்கார் மான்யம், கடன் இவை அதிகமாகப் போதவில்லை. ஆங்காங்கு லிங்க் ரோட்ஸ் போடுவதற்குக் கூட பணவசதி போதவில்லை. ஒரு கிராமத்திற்கு மற்ற கிராமங்களிலிருந்து கட்டை வண்டி போகக்கூட நல்ல போதிய பாதை வசதியில்லை. ஆக, 373 பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிய, சேர்மன் மாநாடு ஒன்று கூட்டி, பாதைகள் அமைத்துக் கொடுக்க நிதி ஒதுக்கினால் நல்லது. விவசாயிகள் ஒன்று தவறுதலாக நினைக்கிறார்கள். பூச்சி வந்துவிட்டது என்றால் அதைப் போக்க மருந்து அடியுங்கள் என்றால், மருந்து அடித்தால் போகாது, கள்ளுக்கடை வைத்தால்தான் போகும் என்று சொல்கிறார்கள். அவர்கள் சொல்வது, மரங்களிலுள்ள கள்ளை இறக்காவிட்டால் அங்கிருந்து பூச்சி வந்து பரவி விடுமாம். அந்த நம்பிக்கையை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. மதுவிலக்குப்பற்றி எங்கள் தலைவர் சொல்வதை நான் வரவேற்கிறேன். ஆக அவர்களின் தவறான அபிப்பிராயத்தை, கள்ளை இறக்காவிட்டால் பூச்சிகள்

இந்தத் தொழிலுக்கும், மரவள்ளிக் கிழங்கு பயிருக்கும் பாது காப்பு அளித்து உற்பத்தியைப் பெருக்க ஆவன செய்யவேண்டு மென கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் ஸ்டார்ச் மாவு நம் நாட்டில் நெசவாலைகளுக்குப் பயன்படுகிறது. இந்த மாவுக்குப் பதிலாக வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் மாக்காச் சோளம் போன்ற உணவுதானியங்களை ஆலைகளில் ஆலையாசர்கள் வட மாநிலத்திலே பயன்படுத்துகிறார்கள். அதைத் தடுத்து அதை உணவிற்குப் பயன்படுத்தவும், இந்த ஸ்டார்ச்சு மாவை நெசவாலைகளுக்குப் பயன்படுத்தவும் நம்முடைய அரசாங்கம் மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளவேண்டும். ராசிபுரம் குடி தண்ணீர் திட்டம் நிறைவேறி ஆறு மாதம் ஆகிறது. அதற்காக 24 லட்சம் ரூபாய் வரை செலவுசெய்து இரண்டு வருஷங்கள் ஆகியும், இன்னும் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை. ஆகவே அதை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது மாவட்டமாகிய சேலம் மாவட்டத்திலும், எனது தொகுதியாகிய ராசிபுரம் தொகுதியிலும் கைத்தறித் தொழிலாளர்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். தற்போது அந்தத் தொழில் மிகவும் மோசமான நிலையிலே உள்ளது. காரணம் என்னவென்றால் மில்காரர்களின் போட்டியும் நூலின் விலை உயர்ந்து விட்டதும்தான். உதாரணமாக கடந்த நவம்பர் மாதத்திற்கும் இப்போதைக்கும் பார்த்தால் 10 ராத்தல் கட்டு ஒன்றுக்கு 10 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை ஏறியிருக்கிறது. அதற்கு 25 சதவிகிதம் உயர்த்தியதினாலே அது மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே, உடனடியாக நூல் விலையைக் குறைக்கவும், வேஷ்டி, சேலை போன்ற ரகங்களைக் கைத்தறிக்கே ஒதுக்குமாறும் நான் கேட்டுக்கொள்கிறேன். ராசிபுரம் நகரசபை உயர்நிலைப் பள்ளியை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று கோருகிறேன். கொல்லி மலை அடிவாரத்தில் நீர்ப்பாசனத் திட்டங்கள் நீண்ட நெடுங்காலமாக ஆலோசனையிலேயே இருந்து வருகின்றன. அதை உடனடியாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

* **திரு. ஆர். நாகசுந்தரம்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய திரு. அரங்கண்ணல் அவர்கள், எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் நம்மை இதுவரை பாராட்டவில்லையே என்று குறைபட்டுக் கொண்டார்கள். ஆளுங்கட்சியாகிய நாம் மருமகள். எதிர்க்கட்சி மாமியார் போன்றவர்கள். இருபது ஆண்டுகளாகக் குடும்பத்தினை நடத்திவிட்டு இப்பொழுது சாவியை எங்களிடம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களாகச் சாவியை மனமுவந்து கொடுக்கவில்லை. கிழடு தட்டி, கண்தெரியாமல், சாமான்களைக் கண்டபடி போட்டுவிட்டதைப் பார்த்துத்தான் பொதுமக்கள் அந்தச் சாவியைப் பிடுங்கி மருமகளிடம் கொடுத்து உள்ளார்கள். என்னதான் நல்ல முறையில் நடந்துகொண்டாலும், மாமியார் வாயிலிருந்து நல்ல மருமகள் என்று ஒரு வார்த்தைகூட வராது. அதே சமயம் வெளியேபோய் என்னுடைய மருமகளைப் போன்று உண்டா என்றும் சொல்வார்கள். ஆகவே, எதிர்க்கட்சியினர் நம்மைப்பற்றி ஒரு நல்ல வார்த்தைக்கூடச் சொல்லமாட்டார்கள்.





நம்மைச் சரியான வழியிலே கொண்டுசெல்லும் நல்ல மாமியாராக இருக்கவேண்டும். ஒரு சில கொடுமைக்கார மாமியார்களைப்போல் இருக்காதீர்கள் என்று காங்கிரஸ்காரர்களைக் கேட்டுக்கொள்கிறேன். புதிதாக ஒன்றும் காணப்படவில்லை என்று எதிர்க்கட்சியிலே உள்ள திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறினார்கள். இந்த பட்ஜெட் சென்ற அக்டோபர்-டிசம்பரிலே தயார் செய்யப்பட்டது. அடுத்து ஜூன் மாத பட்ஜெட்டிலே இந்த மந்திரிசபையின் கொள்கைகள் இருக்கும், அதுதான் ஓரளவுக்கு இந்த மந்திரி சபையைக் கட்டுப்படுத்தும் என்பதையும் நான் எதிர்க்கட்சி நண்பர்களுக்குத் தெரிவிக்கிறேன். இந்த பட்ஜெட்டைத் தயாரித்த அதிகாரிகள், சிப்பந்திகள் எங்களது கொள்கைகளைப் புரிந்துகொண்டு, எங்கள் கொள்கைகளுக்கு ஏற்ப பட்ஜெட்டைத் தயார் செய்வார்கள். ஆனால் இதுவரையில் அதிகாரிகள், சர்க்கார் ஊழியர்கள், போலீசார், ஆசிரியர்கள், இதர சிப்பந்திகள் எல்லாம் கதர்ச் சட்டை போட்டவர்களை, மண்டலங்களை, எம்.எல்.ஏ.க்களை எல்லாம் கண்டு நடுநடுங்கிக்கொண்டிருந்தார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது. உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். திருச்சியிலே காமராஜ் வளைவு ஒன்றைக் கட்டினார்கள். நான் அதை எதிர்த்து வழக்கு நடத்தினேன். அதற்குச் சாட்சியாக மாவட்ட போலீஸ் அதிகாரி ஒருவரைப் போட்டேன். அவர் என்னிடம் வந்து, என்ன காரியம் செய்தீர்கள், நான் உண்மையாகச் சாட்சி சொன்னால் என்னை "திப்ருகாருக்கு" மாற்றி விடுவார்களே இந்த ஆட்சியாளர்கள் என்று சொன்னார். மாவட்ட அதிகாரிகளுக்கே இந்த நிலையென்றால், இன்னும் சாதாரண ஊழியர்களுக்கு என்ன கஷ்டங்கள் இருந்திருக்கும், அவர்கள் என்ன பாடுபட்டிருப்பார்கள் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். திருச்சியிலே காங்கிரஸ் சேர்மன் தேர்தலில் முனிசிபல் ஊழியர்கள், சிப்பந்திகள் கதர் சட்டையைப் போட்டுக்கொண்டு தோளோடு தோள் நின்று வேலை செய்தார்கள். அவர்களுக்கு எதிராக இருந்தவர்களையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டி பல அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. நல்லவேளையாக ஆட்சி மாறிவிட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் என்ன தடை செய்யப்பட்ட கட்சியா? அவர்கள் இவ்வளவு வன்கொலைகளைச் செய்த நிலையிலே இருந்திருக்கிறார்கள். சிலபல மாதங்களுக்கு முன்னாலே போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்தும், காக்கை குருவிகளைச் சுடுவதைப்போல் இந்த நாட்டு மக்களைச் சுட்டுக் கொண்டிருந்தார்கள். வரம்புமீறி மாணவர்களுடைய தாழிட்ட ஹாஸ்டல்களிலே நுழைந்து, போலீஸார் தடியடி, கண்ணீர்ப்புகை இவையெல்லாம் பிரயோகித்திருக்கிறார்கள். இந்த நாட்டில் தடியடிபடாத நபரே இல்லை. பார் அசோஷியேஷனில் ஹிந்தியை எதிர்த்துத் தீர்மானம் போட்டதினாலே பல வக்கீல்கள் தடியடிக்கு ஆளானார்கள். சென்னையிலே நான் காமராஜ் வளைவு வழக்கைத் தாக்கல் செய்ய வந்தேன். பல வக்கீல்களைச் சந்தித்தேன். அவர்கள் என்னிடம், ஐயா, காமராஜரை எதிர்த்து வழக்கா, முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இன்னொரு

பயிரில் வந்து இறங்கி நாசப்படுத்துகிறது என்ற தவறான எண்ணத்தைப், போக்குவதற்கு ஒரு பிரசாரக் குழு இருந்தால் அல்லது அவ்வெண்ணத்தைப் போக்குவதற்கான வகையில் ஒரு அமைப்பை ஏற்படுத்தினால் நல்லது. ஆகவே, அது குறித்து அரசு தன் கவனத்தைச் செலுத்துவது நலமாக இருக்கும். இப்போது இருக்கிற வேகத்தைப் பார்க்கிறபோது, என்னுடைய மாவட்டத்தில் பதுக்கல் மூலம் ஆயிரக்கணக்கான மூட்டைகள் கிடைத்து விட்டன என்பதைப் பார்க்கிறபோது, நாட்டில் பல லட்சக்கணக்கான மூட்டைகள் பதுக்கல் இருக்கும் என்பதை மக்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆங்காங்குள்ள அமைப்புகளின் மூலமாக ஆட்சிக்கு வேண்டிய ஒத்துழைப்புத் தருவதற்கு வேண்டிய பணியில் இறங்கியிருக்கிறது. அதற்கும் அரசு ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று தங்கள் மூலமாக முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆங்காங்கு பட்டியல் தயாரித்து வருகிறோம். 300, 500, 1,000, 2,000 என்று பதுக்கி வைத்துள்ள பட்டியலை நாங்கள் சேகரித்து வருகிறோம். முன்னமேயே அதற்கான நிலையை உருவாக்கியதால் பதுக்கல் வைத்திருப்பவர்கள் இப்போது அதை வெளியே எடுத்தாலும் ஆபத்து என்ற நிலையில் இருக்கிறார்கள். எவ்வளவு வைத்திருக்கிறாய், ஏன் முன்னமேயே கொடுக்கவில்லை என்ற கேள்விகளுக்குப் பயந்து வெளியே கொண்டுவர முடியாமல் பதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மன்றக் கூட்டம் முடிந்த பிறகு எல்லாவிடங்களிலும் கழகத் தோழர்கள் முனைந்து எங்கெங்கு பதுக்கல் இருக்கிறது என்று பார்த்து அவற்றை எடுத்துத்தர தயார். இதை வைத்துக்கொண்டு பார்க்கும்போது நாட்டில் பற்றாக்குறை இல்லை. பதுக்கல் பேர்வழிகள் காரணமாகத்தான் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். நம் முதல் அமைச்சர் அவர்கள் விவசாயத்திற்கும், உணவு பிரச்னைக்கும் முதல் இடம் தந்திருக்கிறார்கள். நம் முதல் அமைச்சர் அவர்கள் முறையாக வகுத்துத் தந்திருக்கும் இந்த வரவு செலவுத் திட்டத்தை படித்தவர்களும், பொருளாதார நிபுணர்களும் பாராட்டக் கூடிய அளவிற்கு இருப்பதோடு, இருக்கிற சின்னஞ்சிறு குறைகளைப் படிப்படியாக நீக்க இந்த அரசு முனையும் என்ற நம்பிக்கை இருக்கிறது. பதுக்கல்காரர்களை படிப்படியாக நாங்கள் பிடித்துக் கொடுக்கிறோம்; அதற்கு அரசு ஒத்துழைப்புத் தர வேண்டும். ஆக, இந்த வரவு செலவுத் திட்டம் வரவேற்கத் தக்க வகையில் இருப்பதைத் தெரிவித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. பெல்லி கவுடர்:** அவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தின் மக்கள் சார்பிலும், இம்மன்றத்தின் புதிய உறுப்பினன் என்ற முறையிலும், முதலில் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து, மதிப்பிற்குரிய தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து, எங்கள் நீலகிரி மாவட்டத்தின் ஒன்றிரண்டு குறைகளை இம்மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். நீலகிரி மாவட்டம் நெல் விளையாத பகுதி





யாகையால் கோவை மாவட்டத்திற்கும், நீலகிரிக்கும் இடையில் அரிசி கொண்டு போகத் தற்போதுள்ள தடையை நமது அரசாங்கம் விரைவில் நீக்கி, அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களையும், அரசாங்க ஊழியர்களையும், தோட்டத் தொழிலாளர்களையும், ஏழை எளியவர்களையும் ஆறுதல் அடையச் செய்யவேண்டுமென்று பணிவன்போடு வேண்டிக்கொள்கிறேன். அடுத்தபடியாக, அங்குள்ள மக்கள் தாங்கள் போட்டு வளர்த்த மரங்களைத் தங்கள் சொந்த உபயோகத்திற்காக ஒரு ஏக்கர் அல்லது அரை ஏக்கர் மரங்களை வெட்டியெடுக்க தற்போதுள்ள தடையிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று அரசினரைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, கோத்தகிரி குடிநீர் பிரச்னையைப்பற்றிப் பல ஆண்டுகளாக அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லியும் அங்குள்ள குடிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே, மேற்கண்ட நீர், நெருப்பு, அரிசி ஆகிய குறைகளை நமது அரசாங்கம் தீர்த்து வைப்பதோடு, புதிய ஆட்சியை மலரச் செய்வதற்குத் துணை புரிந்த பொது மக்கள் நீலகிரி மலை உச்சியிலிருந்து சென்னை கோட்டையைப் பார்த்து நல்ல செய்தி வரும் என்று நம்பியிருக்கும் மக்களுக்கு நல்வாழ்வளிக்க வேண்டுமெனப் பணிவன்போடு கேட்டுக்கொண்டு புதிய அரசை ஏற்றுக் கொண்ட அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் நல்வாழ்த்தினை வழங்கி கடந்த பொதுத் தேர்தலில் ஒத்துழைப்பைத் தந்த தமிழக மக்களுக்கும், மாணவ மணிகளுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. பி. ஜெயராமன்:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிற நேரத்தில் நான் அடைகிற மகிழ்ச்சிக்கு அளவேயில்லை என்று சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டு மக்களிடம் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லி அந்தக் கருத்துக்களை மக்கள் உணர்ந்து இன்றையதினம் இந்த ஆட்சி பீடத்தில் இந்த அமைச்சரவையை அமர்த்தியிருக்கிற மக்களுக்கு நன்றி சொல்லாமல் இருக்க முடியாது. இந்த நாட்டு மக்கள் இன்னொன்றையும் உலகத்திற்கு அறிவித்திருக்கிறார்கள் என்பதுபற்றிப் பெருமைப்படுகிறேன். என்ன செய்திருக்கிறார்கள் என்றால், இந்த நாட்டிலே ஒரு பணநாயகம் ஆண்டு கொண்டிருந்தது, பணத்தைக்கொண்டு வோட்டு வாங்கிக்கொண்டிருந்தார்கள். அந்த நிலையை மாற்றி இந்த நாட்டில் நல்ல கருத்துக்களுக்குத்தான் இடம் உண்டு, நல்லவர்களுக்குத்தான் இடம் உண்டு, பணத்திற்கு இந்த நாட்டில் இடமில்லை என்று சொல்லி வாக்காளப் பெருமக்கள் ஜனநாயகத்திற்கு வாக்களித்து நல்லதோர் ஆட்சியை அமைக்க வேண்டுமென்று நினைந்த நாட்டு மக்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம்

[திரு. பி. ஜெயராமன்] [1967 மார்ச் 21

இருபது ஆண்டுகளாக ஆட்சி பீடத்தில் இருந்தவர்கள் இந்த இடைக்கால பட்ஜெட்டில் எதுவும் இல்லை என்று குறைபடுகிற அளவிற்குக் கூறுகிறார்கள். உள்ளபடியே கேட்கிறேன். இந்த இருபது ஆண்டுக் காலத்தில் நாட்டிலுள்ள ஏழை மக்கள்பற்றி, நாட்டிலுள்ள கொடுமைகள்பற்றி, நாட்டிலுள்ள அல்லல்கள்பற்றி எடுத்துக் கூறியவர்களைக் காங்கிரஸ் வரிசையில் பார்க்கவில்லை. அப்பேர்ப் பட்டவர்களுக்கு இன்றையதினம் நாட்டு மக்கள் மீது கருணை பிறந்திருக்கிறது என்று சொன்னால் அதைப் பாராட்டுகிறேன். உள்ள நிலைமைகளை உணர்ந்து மக்களுடைய கொடுமைகளைத் தீர்க்க வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டதற்காக மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அந்த மகிழ்ச்சியோடு இன்றைக்கு அமைந்திருக்கிற அமைச்சரவையை எண்ணிப் பார்க்கிற நிலையில் மகாத்மா காந்தி அவர்கள் நினைத்த எண்ணங்களை, அவருடைய கனவுகளை நினைவாக்குகிற அளவிற்கு மகாத்மா காந்தி அவர்களின் வாரிசாக இன்றைக்குத் தமிழகச் சட்டமன்றத்தில் அமைச்சரவை அமர்ந்திருக்கிறது. மகாத்மா காந்தி அவர்கள் சென்ற வழியைக் கடைப்பிடிக்கிற அளவிற்கு எங்கள் தலைவர், எங்கள் இதயங்களில் குடியேறியுள்ளவர் எங்களுக்குக் காட்டுகிற வழியைப் பின்பற்றிச் செல்வோம். எங்கள் அறிஞர் அண்ணா அவர்களின் அமைச்சரவைக்குக் காங்கிரஸ்காரர்கள் ஆதரவு தந்து தமிழக மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கிற அளவிற்கு, அமைச்சரவைக்கு எக்கேடும் விளைவிக்காத அளவிற்குப் பண்போடும், பாசத்தோடும் ஆதரவு தந்து ஒத்துழைத்தால் நாட்டிலுள்ள மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்யலாம். அதை விட்டுவிட்டு நாம் குதர்க்கங்களைப் பேசிக்கொண்டிருந்தால் வீணாகக் காலத்தைக் கழித்துக்கொண்டு போவோம். நாங்கள் காங்கிரஸ்காரர்களை எங்கள் எதிரிகளாகக் கருதவில்லை. நான் என்னுடைய தொகுதியில் கூட அந்த முறையில்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். அவர்களை நண்பர்களாகவே கருதி, அவர்களும் மக்களுக்கு நல்லவைகளைச் செய்யவேண்டும் என்ற எண்ணத்தோடு இருக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். இந்த அளவோடு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி விடை பெறுகிறேன். வணக்கம்.

* **திரு. பி. ஜி. கருத்திருமன் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் இந்த நிதி நிலை அறிக்கையிலே பேச எழும் சந்தர்ப்பத்திலே ஒரு புது அனுபவம், புது உணர்ச்சியும் கூட, என்னிடத்திலே தோன்றுகிறது. அது ஏன் என்று சட்ட மன்றத்திலே இருக்கிறவர்கள் அனைவருக்கும் தெரியும், பாக்கி இருக்கக் கூடிய பொது மக்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே இத்தகைய நிலையைப் பொது மக்கள் அளித்த வாய்ப்பினுக்கு எங்கள் கட்சியின் சார்பாக நன்றியறிதலைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

சட்ட மன்றத்தில் இந்தப் பக்கம் இருக்கும் வாயிலாக, என் பக்கத்தில் இருக்கும்படியான திருவள்ளுவர் படத்தின் கீழே இருக்கும்படியான வாசகத்தை நான் படித்துப் பார்த்தேன். அந்த



1967 மார்ச் 21] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

வாசகப்படி, இந்தக் கட்சியில் இருந்தாலும் சரி, ஆளும் கட்சியில் இருந்தாலும் சரி, அவர்களும் நிச்சயமாக அதைக் கடைப்பிடிப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை என்று சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்"

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சொல்லிலே, ஏதாவது பேசுவதாக இருந்தால், அது பயனுடைய சொல்லாக இருக்கவேண்டும். "சொல்லற்க பயனிலாச் சொல்"—பயனில்லாத சொல்லைச் சொல்லக் கூடாது. சட்ட சபையிலே மட்டுமல்லாமல், வெளியிலே கூட, மக்களிடத்திலே இருக்கும் நிலையிலும் கூட அப்படிப்பட்ட பயனுள்ள சொல்லைத்தான் சொல்லவேண்டும். மக்களிடத்திலே எவ்வளவோ சொல்லியிருக்கலாம். தேர்தல் என்றால் பல வாக்குறுதிகளைக் கொடுத்திருப்போம், விஞ்ஞாபனத்தைக் கொடுத்திருப்போம். எவ்வளவோ சொல்லியிருந்தாலும், எது சாத்தியம், எது சாத்தியம் இல்லை என்று இப்போதாவது முறைப்படி உணர்ந்தால் நல்லது என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் இடைக்கால பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருக்கும், முதலமைச்சரும் நிதி அமைச்சருமான அண்ணா அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. முதல் பாராட்டு என்ன என்றால், எடுத்துக்காட்டாக சம்பளத்தைப் பாதியாகக் குறைத்துக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். சம்பளத்தைக் குறைத்துக் கொண்ட நேரத்தில் இருக்கிற செலவினங்களையும் குறைத்துக் கொண்டால் இன்னும் பாராட்டுதலுக்கு ஆளாவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அதுமட்டுமல்ல, இந்த இண்டரிம் பட்ஜெட் ஏற்கனவே இருந்து வந்த சர்க்காரின் தொடர்பே தவிர, அறுந்து போன சங்கிலி அல்ல. இந்தப் பெருமைகளிலெல்லாம் அந்தச் சர்க்காருக்குப் பங்கு உண்டு என்பதைச் சிலர் ஏற்றுக்கொள்ளலாம் சிலர் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம், குறிப்பாக முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் இது வரையில் நடந்த ஆட்சி தவறான ஆட்சி, அலங்கோல ஆட்சி, விஷவிருட்ச ஆட்சி என்று கூறினார்கள். அந்த அலங்கோல ஆட்சியின், விஷவிருட்ச ஆட்சியின் அனுபவங்களை, ஏற்பட்ட பெரிய பொருளாதார முன்னேற்றங்களைக் குறிப்பிட நான் விரும்புகிறேன். பத்து வருஷங்களுக்கு முன்னாலே, தமிழகத்திலே வரும்படி என்ன என்றால், 62 கோடி ரூபாய். இப்போது அவர்கள் கையிலே 204 கோடி ரூபாய்களை ஒப்படைத்திருக்கிறோம். இதுதான் அலங்கோல ஆட்சியின் பயன், அராஜக ஆட்சியின் பயன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (திரு. இராம. அரங்கண்ணல்: இந்தப் பணம் ஏது? மக்கள் கொடுத்ததுதானே?) ஆம். மக்கள் கொடுத்ததுதான். நாங்கள் சொன்ன திட்டங்களில் குறை இருக்கலாம். நாங்கள் செய்ததெல்லாம் சரியானது என்று சொல்லத் தயாராக இல்லை. இப்போது இருக்கும்படியான நிலையில் 62 கோடி ரூபாயாக இருந

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 மார்ச் 21

தை மாற்றி இப்போது 204 கோடி ரூபாயாகக் கொடுத்திருக்கிறோம் என்றால் இதற்கு ஏற்கனவே இருந்த சர்க்கார் பொறுப்பு. அது மாத்திரமல்லாமல் சிறப்பான யந்திரத்தைக் கொடுத்திருக்கிறோம் என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். பாரத தேசத்திலேயே சென்னை மாநிலத்தில் உள்ள நிர்வாக யந்திரம் சிறப்பான யந்திரம், இங்கே உள்ள சர்க்கார் ஊழியர்கள் சிறந்தவர்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். இதை நான் எதிர்க் கட்சியிலிருந்து சொல்லுகிறேன். ஆளும் கட்சியிலிருந்து அத்தாட்சி கொடுக்க அவர்கள் தயாராக இல்லை. சிக்கல்களை நீக்கிப் பயனுள்ள வகையில் முடிந்த வரையில் சிறந்து நடந்திருக்கிறது சென்னை சர்க்கார்தான் என்றால், இதை நாம் சொல்லவில்லை, மத்திய அரசாங்கத்தினர் சொல்லியிருக்கிறார்கள். உலகத்தில் இருக்கிற பேரறிஞர்களெல்லாம் சொல்லும்படியான அத்தாட்சியைச் சொல்ல விரும்புகிறேன்.

அதோடு இண்டரிம் பட்ஜெட்டில் ஒன்றும் காணவில்லை என்று சொன்னபோது, பொறுத்திருங்கள் என்று சொன்னார்கள். வாஸ்தவம்தான். நிச்சயமாகப் பொறுத்துக்கொண்டிருப்போம், காத்துக்கொண்டிருப்போம். எங்கள் கட்சியின் நோக்கம் என்ன என்றால், மக்களுக்குப் பணி புரிவதுதான். எங்கள் கட்சி ஆளும் கட்சியாக இருக்கவேண்டும் என்பது கிடையாது. எதிர்க் கட்சியாக இருக்கிற எங்களுக்கு ஏற்கனவே எதிர் நீச்சல் அடித்துப் பழக்கம் உள்ளது. சூரியன் மறையாத பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, அகிம்சை, சத்தியம் ஆகிய ஆயுதங்களால் வெளியேற்றினோம். அத்தகைய சக்தி பெற்றவர்கள். எதிர்க் கட்சியின் இலக்கணத்தை தயவு செய்து எங்களிடம் கூற வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போதும்கூட மனம் இளைக்கவில்லை, உயர்வோடுதான் இருக்கிறோம். எங்களுடைய முழு ஆதரவையும் சர்க்காருக்கு அளிக்கிறோம். கனம் உறுப்பினர் அரங்கண்ணல் அவர்கள் சொன்னார்கள், "20 வருஷங்களாக விஷ விருட்சம் பரவி விட்டது, அதைக் களைந்தெறிய வேண்டும்" என்று. நான் வருத்தப்படுகிறேன். விஷ விருட்சம் என்று சொன்னாலும் இந்த விருட்சம் உயர்வான கனியைக் கொடுக்குமே தவிர வேறு கொடுக்காது. விஷ விருட்சமானால், அந்த விஷ விருட்சத்தின் கனிகளை, அவற்றின் அன்பை, ஆதரவை, முதலமைச்சர் அவர்கள் நாடுகிறார்கள் என்றால், அவர் களின் பெருந்தன்மைக்குப் பாராட்டைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது நம்முடைய குறிக்கோள் என்ன? பொது மக்களுடைய வாழ்வு நல்வாழ்வாக இருக்கவேண்டும். அதற்கு எந்தக் கட்சியில் இருந்தாலும் ஆட்சேபனை இல்லை. சட்டசபையில் இருந்தாலும் பரவாயில்லை, சட்டசபையில் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. மகாத்மா காந்தியடிகள் எவ்வளவோ நிர்மாணத் திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நாட்டு மக்கள் நல்வாழ்வு பெற எத்தனையோ காரியங்கள் இருக்கின்றன. அந்தக் காரியங்



1967 மார்ச் 21] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

களைச் செய்து மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற முடியும். எங்கள் குறிக்கோள் ஆட்சியில் இருக்கவேண்டும் என்பதல்ல. மக்களுடைய அன்பும் ஆதரவும் முக்கியமே தவிர, ஆட்சியில் இருக்க வேண்டும் என்பதல்ல. மகாத்மா காந்தியடிகள் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு அதைப் பெற்றது மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்காகத்தான். அந்த நோக்கத்திற்கு அரும்பாடுபட எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இன்னும் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சில வாக்குறுதிகள் முன்னால் சட்ட சபையில் கொடுக்கப்பட்டன. இப்போது ஆளும் கட்சியாக உள்ளது இந்தப் பக்கத்தில் இருந்தது அப்போது. அவர்கள் சொன்னார்கள், நாங்கள்தான் கொண்டு வந்தோம், காங்கிரஸ்காரர்கள் ஏற்கவில்லை என்று சொன்னார்கள். அக்டோபர் மாதம் என்று நினைக்கிறேன், அந்தச் சமயத்தில் முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள், காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொண்ட கொள்கை அடிப்படையில் நிலவரியை ரத்து செய்யவேண்டும் என்ற முறையில் செய்த அறிக்கையைப் படிக்க வேண்டும். நாங்கள்தான் செய்தோம் என்ற நிலையில் ஒரு தனியார் தீர்மானம் கொண்டு வந்தார்கள். சட்ட சபையில் தனியார் தீர்மானம் எந்த நிலையில் இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். நாங்களும் தீர்மானங்கள் கொண்டுவரப் போகிறோம். அதில் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்று பார்க்கலாம், அப்படி ஏற்றுக் கொள்வார்களானால் அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது பொது மக்கள் அதிகமாக எதிர்பார்க்கிறார்கள் என்றால், நடந்த தேர்தலில் அரிசியை வைத்து அரசியல் நடந்திருக்கிறது. திட்டவட்டமாகச் சொல்லுவேன் அரிசி அரசியலில் கலந்துவிட்டது. என்னென்ன வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன என்பதில், நீங்கள் கொடுத்தீர்களா, நாங்கள் கொடுத்தோமா என்பது அல்ல. ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நீங்கள் உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தை மக்கள் முன் வைத்தீர்கள், நாங்களும் வைத்தோம் எங்கள் விஞ்ஞாபனத்தை. உங்கள் விஞ்ஞாபனத்தை மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதை நிறைவேற்றுவதில் நாங்கள் பூரண ஒத்துழைப்பைக் கொடுக் 1
கிறோம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். உங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு மிக்க ஆதரவு கொடுத்து மக்கள் சுபீட்சத்தை எதிர்பார்க்கிறார்கள் என்றால், நாங்கள் நல்ல எதிர்க் கட்சியாக இருந்துகொண்டு, 'ஹெல்த்தி கிரிடிஸிஸம், கன்ஸ்ட்ரக்டிவ் ப்ரொகிராம்' என்று சொல்வார்களே அந்த நிலையில் நாங்கள் பணியாற்ற முன்வந்திருக்கிறோம். இடைக்கால பட்ஜெட் பொது மக்களுக்குப் பெரிய ஏமாற்றத்தைக் கொடுக்கும் என்ற நிலைதான் இருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் முன்னாலே சொல்லியிருக்கிறார்கள். 'நாங்கள் கடந்த காலத்தில் சர்க்கார் செய்த நல்ல காரியங்களை நிச்சயம் எடுத்து நடத்துவோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். முதலில் சர்க்காரை எடுத்தார்கள், நிலவரியை ரத்து செய்கிறோம் என்று சொன்னார்கள். தனியார் தீர்மானம் கொண்டு

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 மார்ச் 21

வந்தார்கள் அப்பொழுது இவர்கள். நிலவரி மட்டுமல்ல, பாக்கியிருக்கும்படியான ஏனைய வரிகளையும் ரத்து செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். நிலவரியை மட்டும் ரத்து செய்யவேண்டும் என்பதற்கு அப்பொழுது இருந்த சர்க்கார் வேண்டாம் என்று சொல்லவில்லை. செஸ், தண்ணீர் தீர்வை போன்ற வரிகளை எடுக்க வேண்டும் என்பதற்குத்தான் அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இன்றைக்கு இருக்கும்படியான நிலையிலே

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** 1965-ம் ஆண்டில் நிலவரி ஸர்சார்ஜ் 25 சதவிகிதம் உயர்த்தப்பட்டபொழுது, எதிர்க் கட்சியினர் அத்தனை பேர்களும் அன்று அதை எதிர்த்தோம். அது தனியார் தீர்மானம் அல்ல. எதிர்க்கட்சியினர் என்ற வகையில் அத்தனை பேர்களும் அதை எதிர்த்தபோதிலும், ஆளும் கட்சி அதைப் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் அப்பொழுது அப்படி நடந்துகொண்டார்கள் என்பதை ஞாபக மூட்ட விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பின்னால் அதை நாங்கள் எடுத்து விட்டோம். அப்பொழுது இருந்த நிலைமையில் அப்படிச் செய்தோம். நீங்களும் அதைப் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். அதையெல்லாம் பற்றி இப்பொழுது பேசவேண்டியதில்லை. இப்பொழுது சட்டமன்றத்தில் சொல்லும்படியான நிலைக்குச் சொல்கிறேன். அதோடு மட்டுமல்ல. இன்னும் என்ன பெருத்த ஏமாற்றம் ?

"The Report of the Special Officer appointed to consider the question of abolition of land revenue in all its aspects has just been received. It will take a little time for the Government to consider the Report of the Special Officer and take decisions thereon. The Finance Department has in these circumstances assumed normal collections under land revenue, leaving out only the proceeds of the surcharge on land revenue, which has been repealed."

என்று முதல் அமைச்சர் அவர்கள் தனது உரையில் கூறியிருக்கிறார். அதாவது இப்பொழுது எடுக்கப்பட்ட சர்சார்ஜை மட்டும் விட்டு விட்டு, பாக்கி இருக்கும்படியான நிலவரியை வசூல் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்பதுதான் எனக்குத் தெரிந்த வரையில் இடைக்கால பட்ஜெட் உரையிலிருந்து நான் புரிந்து கொண்டது. அதை எடுக்க வேண்டும், பொது மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதுதான் நிலை.

இன்னொன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 'அரிசியை வைத்து அரசியல்' என்று சொன்னேன். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் மட்டுமல்ல; இந்த மன்றத்தில் 10 வருஷம் பணியாற்றியிருக்கிறேன். பாராளுமன்றத்தில் ஐந்து வருஷம் பணி செய்யும்படி மக்கள் என்னைப் பணித்தார்கள். விவசாயி என்ற முறையிலும் விவசாயத்தில் அனுபவமுள்ளவன் என்ற முறையிலும் ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எந்த சர்க்கார் செய்த காரியமாக இருந்தாலும் கூட, அதை எதிர்த்தும்,



1967 மார்ச் 21] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

கண்டித்தும் கூடச் சொல்லும்படியான ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருக்கிறது. இப்பொழுது இருக்கக்கூடிய நிலை என்ன? இப்பொழுது அரிசிப் பற்றாக்குறை. மக்களுக்குத் தேவையான அரிசி கொடுக்க வேண்டும். கொடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. சர்க்கார் கட்சியில் இருக்கும்படியான விவசாயம் தெரிந்தவர்களை, விவசாயம் தெரிந்த திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களை நான் கேட்பேன். உண்மையாக விவசாயம் செய்பவர்கள் சில காரியங்கள் சாத்தியமா, சாத்தியம் இல்லையா என்பதைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். பத்து வருஷங்களுக்கு முன்பு ரூ. 62 கோடி வருமானம் என்று சொன்னார்கள் இப்பொழுது ரூ. 204 கோடி வருவாய். விவசாயி என்ற முறையில் 20 வருஷங்களுக்கு முன்னால் ஒரு ஏக்கர் நிலத்திற்கு உற்பத்திச் செலவு என்ன என்ற புள்ளிவிவரத்தையும், அதே போல் இப்பொழுது இருக்கும்படியான புள்ளி விவரத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். சர்க்கார் கொடுக்கும்படியான விலை முன்னால் எவ்வளவு? இப்பொழுது எவ்வளவு? எந்தச் சர்க்காராக இருந்தாலும் சரி, கொடுக்கப்படுகிற விலை நியாயமான விலையா? விவசாயிகளுக்குக் கட்டுபடியாகின்ற விலையா? விவசாயிகளுக்கு லாபகரமான விலையா? என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 1939-ல் ஒரு ஏக்கரில் நெல் சாகுபடி செய்ய, எல்லாம் சேர்ந்து சாகுபடிச் செலவு ரூ. 35. இப்பொழுது ஒரு ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்வதற்கு செலவு ரூ. 350 அல்லது ரூ. 400 ஆகிறது. பட்டணங்களில் இருக்கிற—லிவிங் இண்டெக்ஸ்—வாழ்க்கைத் தரத்தின் புள்ளிவிவரத்தை எடுத்துக்கொண்டு பேசுகிறோமே தவிர, விவசாயிகளின் குறைகளை நினைக்கிறோமா? விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு எவ்வளவு அதிகம் என்பதை சிந்தித்துப் பார்க்கிறோமா? என்றால், இல்லை என்றுதான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அப்பொழுது உற்பத்திச் செலவு ரூ. 35, இப்பொழுது ரூ. 350 அல்லது ரூ. 400 ஆகிறது. 1939-ம் ஆண்டில் விவசாயிக்கு என்ன விலை கிடைத்ததோ அதற்கு கூடான அந்த விலை இப்பொழுது அவனுக்குக் கிடைக்கவில்லை. விவசாயிகளுக்கு வேண்டிய ஊக்கத்தை நாம் உண்டாக்கவில்லை. இதைத்தான் நாம் முக்கியமாக கவனிக்கவேண்டும். இந்தச் சர்க்காராக இருந்தாலும் சரி, எந்தச் சர்க்காராக இருந்தாலும் சரி, எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளெல்லாம் விவசாயிகளுக்கு அனுகூலமான நிலையிலே இல்லை. இப்பொழுது சர்க்கார் கட்சியில் இருக்கும் சில நண்பர்கள் குறிப்பிட்டார்கள். 'நாங்கள் பதுக்கலை எடுத்துவிட்டோம், 12,000 மூட்டைகள் சிக்கிவிட்டன' என்று சொன்னார்கள். பதுக்கலை நான் ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பதுக்கலை எடுக்க பறிமுதல் எடுப்பதில் ஆட்சேபணை இல்லை. பதுக்கலை எடுக்க பகுதிகளிலிருந்து என்னிடம் சில புகார்கள் வந்திருக்கின்றன. அங்கு எவை நல்ல புகார்கள், எவை கெட்ட புகார்கள் என்று தெரிந்து பிறகு சொல்ல ஆசைப்படுகிறேன். பதுக்கல் என்றால் என்ன? விவசாயி என்ன திருடனா? புகார்களையெல்லாம் ஆராய்ந்து விவசாயியை எந்த சர்க்காராக இருந்தாலும் சரி, திருடனை நடத்து

வதுபோல், கொலைக்குற்றம் புரிந்தவனை நடத்துவதுபோல் நடத்தினால், அந்த ஆட்சி நன்றாக இருக்க முடியாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயி திருடன் என்ற நிலை, அந்த மனப்பான்மை, போகவேண்டும். பதுக்கல் என்றால் என்ன? இருக்கும்படியான நெல்லை வாங்கி வியாபாரத்திற்கு என்று ஒரு இடத்தில் தனியாக வைத்துக்கொண்டிருந்தால், அதற்குத் தான் 'ஹோர்டிங்' என்று பெயர். ஆளும் கட்சியிலிருக்கிற விவசாயம் தெரிந்த அங்கத்தினர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு வருஷம் பூராவுக்கும் விவசாயிக்கு பண்ணைச் செலவுக்கு, கூலிச் செலவுக்கு நெல் வேண்டும். அந்த நெல்லை வைத்துக்கொண்டிருக்கலாம். பெரிய பண்ணை என்றால் 30 ஆட்கள் இருப்பார்கள். ஒரு மாதத்திற்கு ஒரு குவிண்டால் நெல் என்றால், 30 பேர்களுக்கு 30 குவிண்டால்; வருஷம் ஒன்றுக்கு 400 குவிண்டால் நெல் இருப்பு அவர்கள் வைத்துக்கொண்டிருக்கலாம். விவசாயி நெல்லை வைத்துக்கொள்ளாமல், எல்லாவற்றிற்கும் பணத்தை வைத்துக்கொண்டு செலவு செய்ய முடியாது. கொள்முதலில் தீவிர கவனம் செலுத்துங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை. கொள்முதலை நான் எதிர்ப்பவனல்ல. கொள்முதல் வேண்டும். 1951-54-ல் கட்டாயக் கொள்முதலை பற்றி இந்த அவையிலே நான் சொல்லும்பொழுது அதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஓரளவுக்குக் கொள்முதல் இருக்கவேண்டும். கொள்முதலைப்பற்றி சொல்லும்பொழுது, ஏழைகளை தாஜா பண்ண வேண்டும், பணக்காரர்களிடம் கண்டித்து வாங்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் நடைமுறையில் எப்படி விஷயம் இருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். நமது சென்னை மாகாணத்தில் 20 லட்சம் பட்டாதார்கள் இருக்கிறார்கள். அவர்களில் 5 எக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரத்தைப் பார்த்தால், 20 லட்சம் பட்டாதார்களில் 18,50,000 பட்டாதார்கள் 5 எக்கருக்கு உள்ளே நிலம் வைத்திருப்பவர்கள். நான் ஒன்று சொல்லுகிறேன். ஐந்து ஏக்கர், 3 எக்கர் நிலம் வைத்திருப்பவர்களை விட்டுவிடலாம் என்று சொன்னால் கொள்முதல் நிச்சயம் நடக்காது. பாக்கி 10 சதவிகிதம் உள்ள பட்டாதார்களைப் பொறுத்தவரையிலும் எல்லா நெல்லையும் அவர்களிடமிருந்து வாங்கிக்கொள்ளலாம் என்ற நிலையை வைத்துக்கொண்டாலும், பயன் இல்லை. அவர்களுடைய செலவுக்கு வேண்டிய நெல்லை விட்டுவிட்டுத்தான் எடுக்கவேண்டுமே தவிர, எல்லா நெல்லையும் எடுத்துக்கொள்வதற்கு சட்டம் இடம் கொடுக்காது. நான் கொள்முதல் வேண்டாம் என்று சொல்லவில்லை. அதே நேரத்தில் விவசாயிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கும்படியான திட்டங்கள் இருக்கவேண்டும். இருக்கும்படியான நிலையில், எந்த விவசாயியாக இருந்தாலும் சரி, தேசத்தினுடைய நலனைக் கருதி, இருக்கும்படியான சூழ்நிலையைக் கருதி, எல்லோரும் தியாகம் செய்யுமாறு எங்களுடைய கட்சி சார்பாகக் கேட்டுக்கொண்டு, அந்த விஷயத்தில் உங்களுக்கு ஆதரவு கொடுக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன். கட்டாயக் கொள்முதல் மூலம்





எந்த சர்க்காருக்கும் கெட்ட பெயர் தான் வரும். கிராமத்தில் கணக்குப் பிள்ளை, மணியக்காரர் தான் 'அவைலபிள் சர்ப்ளஸ்' எவ்வளவு என்று தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய இஷ்டத்திற்கு விடும்படியான நிலைமை தான் இருக்கிறது. ஒருவருக்கு ஒரு இடத்தில் 10 ஏக்கர் இருந்தால் 'அவைலபிள் சர்ப்ளஸ்' 10 மூட்டை என்று சொல்வார். இன்னொரு இடத்தில் அவருக்கு வேண்டாதவராக இருந்தால், அதே 10 ஏக்கர் வைத்துக்கொண்டிருப்பவர் 100 மூட்டை கொடுக்கவேண்டும் என்று சொல்வார். 'அவைலபிள் சர்ப்ளஸ்' எவ்வளவு என்பதை நிர்ணயிப்பதில் தான் இந்த சிரமங்கள் எல்லாம் வருகின்றன. குத்து மதிப்பாக, லெவி சிஸ்டம் என்ற முறையில், ஒரு ஏக்கர் நெல் சாகுபடி செய்பவர்கள் குறைந்தது ஒரு மூட்டை சர்க்காருக்குக் கொடுக்க வேண்டும், இரண்டு ஏக்கர் வைத்திருப்பவர்கள் 2 மூட்டைகள் வீதம் சர்க்காருக்குக் கொடுக்கவேண்டும், மூன்று ஏக்கர் வைத்திருப்பவர்கள் 3 மூட்டைகள் வீதம் கொடுத்தாக வேண்டும், 10 ஏக்கர் வைத்திருப்பவர்கள் 10 மூட்டைகள் வீதம் கொடுக்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தி, பாக்கியிருக்கும்படியான நெல்லை அவர்கள் இஷ்டத்திற்கு வெளி மார்க்கெட்டில் விற்பதற்கு விட்டு விட்டால்தான், இந்தப் பிரச்னை ஓரளவுக்கு தீரும் என்பதே என்னுடைய ஆலோசனை என்று இந்த சர்க்காருக்கு சமர்ப்பித்துக் கொள்ள விரும்புகிறேன். கட்டாயக் கொள்முதலை எந்த நிலையில் எடுத்துக்கொண்டாலும், அது சரியாக நடக்காது. ஒரு டார்கெட் வைத்து, டார்கெட்டை நிறைவேற்றும் வகையில் காரியங்கள். . .

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** காங்கிரஸ் திட்டமா இந்தக் கொள்முதல் திட்டம்? அதைத்தான் நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதையும்விட நீங்கள் அதிகமாகச் செய்யவேண்டும்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** அருள்கூர்ந்து இன்னொருவர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது இடையூறு செய்யவேண்டாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஆகவே, இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொருவரிடமும் ஒரு ஏகரா பூமிக்கு ஓரளவுக்கு பெறவேண்டும். இப்பொழுது இருக்கும்படியான விலை எப்பேற்பட்ட விலை? ஒரு ஏக்கருக்கு உற்பத்திச் செலவு எவ்வளவு ஆகிறது? பட்டணம் படி ஒரு படி அரிசி உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு உற்பத்திச் செலவு ஆகிறது? என்று சர்க்கார் கட்சியில் இருக்கும் விவசாயம் தெரிந்தவர்களைக் கேட்கிறேன். ஒரு பட்டணம் படி அரிசி உற்பத்தி செய்ய விவசாயிக்கு ஒரு ரூபாய் செலவு ஆகிறது என்று புள்ளி விவரம் கணக்கிடப்பட்டிருக்கிறது. தொண்ணூறு பைசா அல்லது ஒரு ரூபாய் உற்பத்திச் செலவு ஆகும்படியாக இருந்தால் விவசாயிக்கு லாபகரமான விலை, கட்டுபடியாகும்படியான விலை என்ன? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, நான் என்ன கேட்டுக்கொள்கிறேன் என்றால் விவசாயிகளை வாழச் செய்யுங்கள் என்று கேட்கவில்லை; வாழவிடுங்கள் என்றுதான் கேட்கிறேன். விவசாயிகள் வாழ்ந்தால்தான், நாட்டில் உற்பத்தி

பெருகும்; நாட்டில் உற்பத்தி பெருகினால்தான் சுபிட்சம் ஏற்படும் என்ற நிலையைக் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அண்டை ராஜ்யமான கேரளாவில் பற்றாக்குறை இருக்கிறது. அது ஒரு பற்றாக் குறையான மாநிலம். ஆளும் கட்சிக்காரர்கள் சொன்னார்கள், காங்கிரஸ்காரன் கடன் வைத்து விட்டுப் போய் விட்டான், அதனால்தான் நாங்கள் இப்பொழுது 18,000 டன் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று. தயவு செய்து அப்படி எதையும் சொல்ல வேண்டாம். நாங்கள் எந்தக் கடனையும் வைக்கவில்லை. ஆனாலும், முதல் அமைச்சர் கொடுக்க முன் வந்ததைப் பாராட்டுகிறேன். அந்த ராஜ்யம், இந்த ராஜ்யம் என்ற பாகுபாடு ஒன்றும் இல்லை. பாரத தேசம் பூராவும் ஒன்று; அதில் எந்த ராஜ்ய மக்களாக இருந்தாலும் உதவி செய்ய வேண்டியது தான். ஆனால், அதே சந்தர்ப்பத்திலே நான் முதல அமைச்சருக்கு ஒரு வேண்டுகோளைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கேரளாவிலிருந்து நமக்கு வரவேண்டியது அதிகமாக இருக்கிறது. மேற்கு நோக்கிப் போகும் தண்ணீரெல்லாம் வீண் விரயமாகிப் போகிறது. அரபிக் கடலிலே போய் விழுகிறது. யாருக்கும் உபயோகமில்லை. அப்படிப் போகும் தண்ணீரை நம் மாநிலத்திற்குக் கொடுத்து உதவ வேண்டும் என்று முயற்சிகள் எடுக்கப்பட்டு, சில விஷயங்களில் அக்ரிமெண்டு ஆகியிருக்கிறது. அதிகமாக வீணாகிப் போகும் தண்ணீரை நம் மாநிலத்திற்கு அவர்கள் கொடுத்தால், 18,000 டன் என்ன, 1,88,000 டன் கூட விளைவித்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அப்படிச் செய்தால் நன்றாக இருக்கும். பிரதிப்பலனைக் கூடக் கேட்கவில்லை. அவர்களுக்கு உபயோக மில்லாமல் வீணாகிப் போகும் தண்ணீரை நம் பகுதிக்குத் திருப்பி விட்டால் நம் மாநிலத்தில் சிற்சில பகுதிகள் சிறும் செழிப்பும் அடைந்து தமிழ் நாடு அண்டை மாநிலங்களுக்கு உதவக்கூடிய சூழ்நிலை உண்டாகும். அப்படிப்பட்ட முயற்சி எடுப்பதில், காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஆதரவு கொடுக்கத் தயாராக இருக் கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே, அந்த விஷயத்தில் நம் அரசாங்கம் கண்டிப்பாக இருந்து, அவர்களிட மிருந்து தண்ணீரைப் பெற ஆவன செய்ய வேண்டும். பரம்பிக் குளம்—ஆளியாறு பிராஜெக்டில் கூட கொடுக்கப்பட்ட வாக்குறுதி காப்பாற்றப்படவில்லை. ஆளியாறு பக்கத்தில் அவர்கள் வேலை கள் தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த விஷயத்தில் கண்டிப்பாக இருந்து செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த வகையில் அவர்கள் நம் மாநிலத்தின் நன்மையைக் கருதி செயல்பட்டால், 18,000 டன் அரிசி மட்டுமல்லா மல், இன்னும் அவர்களுக்கு வேண்டியதையெல்லாம் உற்பத்தி செய்து கொடுக்க நம் மாநில விவசாயிகள் தயார் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கேரளாவிற்கு மட்டு மின்றி, வேறு எங்கே, எந்தப் பகுதியில் பற்றாக்குறை இருந்தாலும் நாம் உதவி செய்யத் தயாராக இருக்கிறோம். ஆகவே, அந்தப் பகுதி தண்ணீரை நமக்குப் பயன்படுத்தும் வகையில் செயல்பட வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.





அது மட்டுமல்லாமல், இப்பொழுது இருக்கும் பிரச்சினைகளில் உணவுப் பிரச்சினைதான் முக்கியமானது. விவசாயத் துறையை எடுத்துக் கொண்டால், மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப்பார்த் தால், நம் மாநிலம்தான் அதிகமான முன்னேற்றம் அடைந்திருக் கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். மொத்தம் வினியோ கிக்கப்பட்டிருக்கும் ஐந்து லட்சம் மின்சார பம்பு செட்டுகளில், தமிழகத்தில் மட்டும் இரண்டு லட்சத்திற்கும் மேலான பம்பு செட்டு கள் வினியோகிக்கப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும் பற்றாக் குறை இருக்கிறது. இன்னும் திட்டங்களைத் தீவிரமாக எடுத்து நடத்த வேண்டும். சிறிய பாசனத் திட்டங்களையும், இன்னும் பெரிய பாசனத் திட்டங்களையும், எதுவானாலும் சரி, அவற்றையெல்லாம் தீவிரமாக நடத்தவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த நிலையில் சிறிய பாசனத் திட்டமானாலும், பெரும் பெரும் திட்டங்களானாலும் சரி, அவற்றை எடுத்து நடத்தி, அவற்றை நிறைவேற்றுவதன் மூலம், விவசாய உற்பத்தியைப் பெருக்க ஆக்க மும் ஊக்கமும் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

அதிகமாகப் பேச வேண்டியவை இருக்கின்றன. ஆனாலும், முதல் அமைச்சரும் பேச வேண்டியிருக்கிறது. மேலும் தொடர்ந்து பேச சந்தர்ப்பங்கள் நிறைய இருக்கின்றன. இப்பொழுது இருக்கும் இண்டெரிம் பட்ஜெட்டில் அதிகமாக ஒன்றும் இல்லை என்று நினைத்தாலும், தொடர்ந்து ஏற்கனவே பணிபுரிந்த நிர்வாகஸ்தர்கள் இருக்கிறார்கள், அவர்களும் ஒத்துழைத்து நல்ல பட்ஜெட்டாக செய்ததற்காகப் பாராட்டுகிறேன். புகார்களை எதிர்ப்பாகச் சொல்லவில்லை; ஆனால், நல்ல காரியங்களைச் செய்யும் போது குறைகளை எடுத்துக்காட்ட வேண்டும் என்று சொல்லு கிறேன். பதுக்கல், பதுக்கல் என்று சொல்லும்போது—எனக்கும் புகார்கள் வந்திருக்கின்றன—பதுக்கல் செய்பவர்களெல்லாம் விவசாயிகள் என்றும், காங்கிரஸ்காரர் வீடுகளாகப் பார்த்துச் செய்வதாகவும் தெரிகிறது. திராவிட முன்னேற்றக் கழகக்காரர் களிடம் பதுக்கல் இல்லையா? அல்லது அவர்களில் விவசாயிகளே இல்லையோ என்னவோ, தயவுசெய்து முதல் அமைச்சர் அதைக் கவனிக்க வேண்டும். 5,000 மூட்டை பதுக்கலை போலீசார் எடுத் திருக்கிறார்கள். இதை நான் ஏன் எடுத்துச் சொல்லுகிறேன் என்றால், விவசாயிகள் செய்யும் தொழிலையே இது பாதிக்கும் என்கிற அச்சத்தோடு சொல்லுகிறேன். அரிசி விலை இன்றைக்கு ஏறிக்கொண்டே இருக்கிறது. ஆனால் உற்பத்திச் செலவு என்ன வாகிறது? ஒரு ஏக்கருக்கு ஆதாயம் என்ன கிடைக்கும்? 100, 200 கூடக் கிடைப்பது இல்லை. ஆனால், அதே நிலத்தில் கரும்பு போட் டால் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. பருத்தி போட் டால் 700 ரூபாய் கிடைக்கிறது. வேறு எந்தப் பயிரைச் செய் தாலும் அதிக ஆதாயம் வருகிறது, தொல்லையும் இல்லை. அந்த நிலையில் விவசாயி நெல் சாகுபடி செய்வானா? வேறு பயிரைச் சாகுபடி செய்வானா? என்று எண்ணிப்பார்க்க வேண்டும். இவ்வளவு தொந்தரவுகளும், கஷ்டங்களும் இருக்கும் நிலையில்,

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 மார்ச் 21

விவசாயி ஊக்கத்தோடு வேறு பணப்பயிர் செய்தால் நிலைமை என்ன ஆகும்? இன்னும் அதிகமான பற்றாக்குறை ஏற்படும் நிலைதான் உருவாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். விவசாயிக்கு லாபகரமான பயிரைத்தான் அவன் செய்வான். இதைப்பற்றி நான் பாராளுமன்றத்திலும் சொல்லியிருக்கிறேன். நிறைய விலை கொடுத்து உற்பத்தி செய்யச் சொல்லுகிறீர்களா? அல்லது விலையை குறைத்து, அளந்து கொடுத்துச் செய்யச் சொல்லுகிறீர்களா? உங்களுக்கு எது வேண்டும்? என்பதை நீங்கள் கொள்கை அடிப்படையில் தீர்மானம் செய்ய வேண்டும். எத்தனை படி என்பதல்ல பிரச்சினை. எத்தனை படி வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளலாம். மூன்று படி என்ன? நாலு படி வேண்டுமானாலும் போடுங்கள். வரவேற்கிறேன்; நானும் வாங்கிப் பொங்கிச் சாப்பிடுகிறேன். நான் விவசாயி என்கிற நிலையில் கூறுகிறேன். ஒரு விவசாயிக்கு வேண்டிய அத்தனை பொருள்களையும் நீங்கள் கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும். ஒரு படியா, மூன்று படியா என்பதல்ல பிரச்சினை. உற்பத்தியாளருக்குக் கட்டுபடியாகும் விலையைக் கொடுக்க வேண்டும். அன்றைக்கு, பருத்திக்கொட்டை 2 ரூபாய் ஆக இருந்தது, இன்றைக்கு ரூபாய் 35. அதே போல பிண்ணாக்கு 1½ ரூபாய் ஆக இருந்தது, இன்றைக்கு ரூபாய் 35. ஒரு ஜோடி மாடு அன்றைக்கு ரூபாய் 200ஆக இருந்தது, இன்றைக்கு 2,500 ரூபாய் ஆக இருக்கிறது. இதையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து போடப்பட்ட திட்டங்கள் இருக்கின்றனவா? இதைப்பற்றியெல்லாம் யாராவது பேசுகிறார்களா? விவசாயி எப்படி இருக்கிறான் என்றால், அன்றைக்கு ஒரு சோல்ஜரைப்பற்றி unwept unhonoured and unsung என்று சொல்லப்பட்டது போல, இன்றைக்கு விவசாயியைப்பற்றி பேச ஒருவரும் கிடையாது. அதிகமாகக் கொடுங்கள், கொடுங்கள் என்றுதான் கேட்கிறோமே தவிர, என்ன வேண்டும் என்று யாரும் கேட்பதில்லை. தேசத்திலேயே ஒரு மெத்தனமான போக்குப் பரவி வருகிறது. எதற்கும் உரிமை இருக்கிறது. ஆனால், கடமைபற்றி யாரும் பேசுவதில்லை. அப்படி ஒரு மெத்தனமான போக்குப் பரவி வருகிறது. அந்தப் போக்கு தேசத்திற்கு நல்லதல்ல; அது நல்ல போக்கு அல்ல என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கல்லூரி மாணவன் என்ன நினைக்கிறான்? படிக்காமலே பாஸ் செய்ய வேண்டும் என்று நினைக்கிறான். உபாத்தியாயர் என்ன நினைக்கிறார்? சொல்லிக் கொடுக்காமலேயே சம்பளம் வேண்டும் என்று நினைக்கிறார். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் வேலை செய்யாமலேயே டி.ஏ. கொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். விவசாயியும் இந்த நிலைக்கு விலக்கல்ல. உழைக்காமலே ஒரு மூட்டைக்கு ரூபாய் 200 கிடைக்கவேண்டும் என்று நான் நினைக்கிறேன். இத்தகைய மனப்பான்மை நல்லதல்ல. எதுவும் சுலபமாகக் கிடைக்க வேண்டும் என்று நினைக்கின்ற மனப்பான்மை இருந்தால் இந்த தேசம் என்றைக்கும் சுபிட்சத்தை நாடிப் போகப் போவதில்லை. எல்லோரும் உழைக்க வேண்டும், கடமையைச் செய்ய வேண்டும், பிறகு உரிமையைக் கேட்கவேண்டும். அப்பொழுதுதான் தேசம் நல்ல நிலைக்கு உயர முடியும்.



1967 மார்ச் 21] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

“எல்லோரும் எல்லாப் பெரும் செல்வம் எய்தலாலே,
இல்லாரும் இல்லை, உடையாரும் இல்லை”

என்கின்ற சுபிட்சத்தை நோக்கிப் போகவேண்டும் என்று கூறிக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. இராம. அரங்கண்ணல் சொந்த முறைமை விளக்கம் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களை நான் அனுமதிக்கிறேன். அவர்கள்தான் பேசும்போது எந்த புதிய கருத்தையும் புகுத்தக் கூடாது என்றும், அவர்கள் பேசுவதை சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு, அனுமதிக்கிறேன்.

*** திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது நான் விஷ விருட்சம் என்றதைக் குறிப்பிட்டார்கள். நான் விஷ விருட்சம் என்று குறிப்பிட்டது காங்கிரஸ் கட்சியையோ அல்லது வேறு கட்சியையோ அல்ல. கடந்த இருபது ஆண்டு காலத்தில், வளர்ந்திருக்கிற வறுமையையும், இல்லாமையையும், போதாமையையும், ஊழல்களையும், லஞ்சத்தையும், குறிப்பிட்டேனே அல்லாது எந்தக் கட்சியையும் குறிப்பிடவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, விஷ விருட்ச ஆட்சி என்று அவர்கள் குறிப்பிட்டார்கள் என்பதால் சொன்னேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** இப்பொழுது பெரு மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் இறுதி உரை ஆற்றுவார்கள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் பேரில் பேசிய உறுப்பினர்கள் அவ்வளவு பேரும், அவர்கள் வேறு வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களானாலும், என் கவனத்தில் வைக்க வேண்டும் என்று பல பல கருத்துக்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஒரே வகையான கருத்தைச் சொல்லி இருந்தால், என்னுடைய வேலை எளிதாகியிருக்கும். ஆனால், பல் வேறு உறுப்பினர்களும் பல் வேறு விதமான கருத்துக்களைக் கொடுத்தது மட்டுமல்லாமல், ஒரு உறுப்பினர் தான் சார்ந்திருக்கும் கொள்கையின்படி நின்று கொடுத்த கருத்திற்கும், மற்றொரு உறுப்பினர் கொடுத்த கருத்திற்கும் ஏற்பட்டிருக்கிற முரண்பாட்டிற்கு இடையே சிக்கிக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். ஆனால், சிக்கிக் கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான், உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் அந்தக் கருத்துக்களுக்குச் சம நிலை கண்டு ஆராய்ந்து அதைச் செயல் முறைக்குக் கொண்டு வர வேண்டும் என்று நினைக்கிறேன்.

முதலிலே நான், எதிர்க்கட்சித் தலைவராக உள்ள என்னுடைய மதிப்புமிக்க நண்பர் அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும். நான் அவர்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 21

களிடமிருந்து இந்த விதமான ஒத்துழைப்பான பேச்சைத்தான் எதிர்பார்த்தேன். நான் எதிர்பார்த்ததைவிட அதிகமான அளவில் அவர்கள் கனிவோடும், ஒத்துழைப்பு மனப்பான்மையோடும் இன்றையதினம் பேசியிருக்கிறார்கள். ஒரு முதிர்ந்த அரசியல்வாதி இந்த வகையிலேதான் பண்பாக இருப்பார்கள் என்பதனை என்னுடைய பக்கத்திலே உள்ளவர்கள் மட்டுமல்லாமல், அவர்களுடைய பக்கத்திலே உள்ளவர்களும் அறிந்து, அதன்படிச் செயல்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிடுவது தேவை என்று கருதுகிறேன். இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவராக உள்ள நண்பர் திரு. கருத்திருமன் அவர்கள், விவசாயத்தைப் பற்றியும், விவசாயச் செலவைப் பற்றியும், அது கட்டுப்படியாகக்கூடிய அளவுக்கு விலை கிடைக்காவிட்டால் விவசாயிகள் வேறு தொழிலுக்குச் சென்றுவிடுவார்கள், வேறு பயிர்களுக்குப் போய்விடுவார்கள் என்பதைப் பற்றியும் எடுத்துச் சொல்வது எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலே அல்ல. அவர் எப்போதும், விவசாயத்தைப்பற்றிப் பேசுகிற நேரத்தில், இதே கருத்தைத்தான் வலியுறுத்திக்கொண்டு வருகிறார்கள். ஏனென்றால், அந்தக் கருத்திலே அவர்களுக்கு அப்பழுக்கற்ற நம்பிக்கை இருக்கிறது. நானும் அவருமாகச் சேர்ந்து 1957 முதற்கொண்டு இந்தச் சட்ட மன்றத்தில் இருந்த நேரத்தில், அவர்கள் இதே விதமான பேச்சைத்தான் பேசினார்கள். அப்பொழுது இங்கே அமைச்சராக இருந்த கனம் சுப்பிரமணியம் அவர்களும் நானும் வேடிக்கையாகக் கூடப் பேசிக் கொள்ளுவோம். "இப்பொழுது நாம் இரண்டு பேரும் ஒன்றாகச் சேர்ந்து கொள்ளலாம்" என்று பேசிக்கொள்ளுவது வாடிக்கை. ஏனென்றால், நாங்கள் நாட்டிலுள்ள விவசாயிகளுக்குள்ள குறைபாடுகளை அறிந்துகொள்ள வேண்டுமானால், கஷ்டங்களை அறிந்து கொள்ள வேண்டுமானால், நண்பர் திரு. கருத்திருமன் அவர்களைத்தான் அளவுகோலாக வைத்துக்கொள்ளுவது வாடிக்கை. அவர் நல்ல விவசாயி; விவசாயத் துறையிலே அதிக அனுபவம் பெற்றவர். ஒரே ஒரு குறை. நண்பர் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச்சொல்லிய முறைப்படி, விவசாயத் துறையிலே ஈடுபட்டிருக்கிற அனைவரும் நடந்துகொள்ள வேண்டும். எல்லோரும் தியாக மனப்பான்மையோடு நடக்கவேண்டும் என்று அவர்கள் குறிப்பிடுவதை எல்லா விவசாயிகளும் கையாளுவார்களானால், இந்த நாட்டுப் பிரச்சினை இவ்வளவு சிக்கலுள்ளதாக இருக்காது. இதைத் தொடர்ந்து நான் கொள்முதலைப் (ப்ரொக்யூர்மென்ட்) பற்றிக்கூடப் பேச விரும்புகிறேன்.

கொள்முதலை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஆதரித்து இருக்கிறார்கள். ஆனால் இதிலே ஏற்பட்டுவிட்ட சங்கடம் என்னவென்றால், கொள்முதலைப் புகுத்திய நேரத்தில், எதிர்க்கட்சியிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகமும் அதை ஆதரித்திருக்கிறது. இப்படி நாட்டிலே உள்ள இரண்டு பெரிய கட்சிகள் ஆதரித்ததோடு மட்டுமல்லாமல், கம்யூனிஸ்டுக் கட்சியும் கொள்முதலை ஆதரித்திருக்கிறது. 'கொள்முதல் வேண்டாம்'



1967 மார்ச் 21] [திரு. சி. என். அண்ணாதுரை]

என்று சொல்லுவதற்குப் பல கட்சிகள் இருந்தாலும், இந்த 3 கட்சிகள் சேர்ந்து கொள்முதலை ஒரு நடைமுறைக்குக் கொண்டு வந்தபோதிலும், அப்பொழுதிருந்த காங்கிரஸ் அரசாங்கம், 'கொள்முதல் என்பது ஒரு சமூகக் கடமை' என்பதைப் பொது மக்களிடத்திலே எடுத்துச் சொல்லுவதில் தவறு செய்து விட்டார்கள். அதே தவறை நாங்களும் செய்தோம். கொள்முதல் தேவைதான் என்பதை மக்களிடம் எடுத்துச் சொல்ல நாங்களும் தவறிவிட்டோம். அதை இன்றையதினம் சொல்லுவதற்குக் காரணம், அதே தவறான வரலாற்றில் புதிய அத்தியாயத்தை இரண்டு பேரும் எழுதிக்கொண்டிருக்கவேண்டாம் என்பதற்காகத் தான். கொள்முதல் நியாயந்தான் என்பதை ஒத்துக்கொள்ளுகிற கட்சிகள் சமூகத்திலே அணுகி, கொள்முதல் என்பது ஒரு இடைக் கால ஏற்பாடே தவிர, நிரந்தரமான ஏற்பாடு அல்ல என்பதையும், சர்க்கார் உணவுப் பிரச்சினை விஷயத்தில் தலையிடுவதைத் தங்களுடைய கொள்கையாகக் கொள்ளவில்லை என்பதையும். அப்படித் தலையிடுவதற்கு வேண்டிய அவசியத்தைப் பல்வேறு வகுப்புகள் —வகுப்புகள் என்று குறிப்பிடும்போது ஜாதிகளை நான் குறிப்பிட வில்லை, இந்தச் சமூகத்திலே உள்ள பல்வேறு தொழில் பிரிவினரைக் குறிப்பிடுகிறேன்—உண்டாக்கிவிட்ட காரணத்தினாலேதான் சர்க்கார் இதிலே குறுக்கிட வேண்டியிருக்கிறது என்பதையும், இந்த ஏற்பாட்டிற்குச் சமூகம் முழுவதும் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, ஒரு கட்சி அல்லது ஒரு கட்சியினால் நடத்தப் படுகிற அரசாங்கம் மட்டும்தான் பொறுப்பாளி என்று கருதக் கூடாது என்பதையும் நாம் எடுத்துச் சொல்வோமானால், நல்லதை ஆதரித்துப் பழக்கப்பட்ட நம்முடைய மக்கள் இதற்கும் தங்களுடைய பேராதரவை நிச்சயமாகத் தருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், கள்ளக் கடத்தல் காரர்கள் அல்லது பதுக்கல்காரர்கள் இவர்களிடத்திலே எடுக்கப் படுகிற நடவடிக்கைகளைப்பற்றித் தமக்கு வந்திருக்கிற பகார்களை ஆராய்ந்து என்னிடத்திலே சொல்லுவதாகக் குறிப்பிட்டார்கள். அவர்கள் அப்படி ஆராய்ந்து, ஏதாகிலும் நடவடிக்கை தவறான நடவடிக்கை என்று என்னிடத்தில் மெய்ப்பித்துக் காட்டுவார்களானால் நிச்சயமாக அப்படிப்பட்ட தவறான நடவடிக்கை ஏற்படா வொட்டாமல் நான் பார்த்துக்கொள்வேன். ஆனால், பதுக்கல்காரர்களின் சுபாவத்தையும் அவர்கள் இந்த நேரத்தில் உணர்ந்து கொள்ளவேண்டும். பதுக்கல்காரர்களும் பிடிபடுகிறபோதுதான் புதுப் புதுக் கட்சிகளைத் தேடுவார்கள். இதுவரையில் காங்கிரஸ் கட்சியிலே இல்லாதவர்கள் கூட, அவர்கள் பதுக்கல்காரர்களாக இருந்து பிடிபட்டவுடனே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரை அணுகி, 'நான் நீண்ட நாளாகக் காங்கிரஸ், ஆனால் வெளியிலே தான் தெரியாது. நான் காங்கிரஸ் என்று பார்த்துத்தான் பிடிக்கிறார்கள்' என்று சொல்லலாம். ஆகையால், அந்த நேரத்தில் அவர்கள் போட்டுக்கொண்டு வருகிற கதர்ச் சட்டை சலவை

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 21

செய்ததா? புதிதா? என்பதை மட்டுமாவது பார்த்துக்கொண்டு, அந்தப் புகார்களை என்னிடத்தில் கொண்டுவரவேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றும், இந்த இடைக்கால நிதி நிலை அறிக்கை விஷயத்தில் இவ்வளவு விரிவான விவாதம் நடக்கும் என்று நான் உள்ளபடியே எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால், படிக்கிறபோது எனக்கே மிகவும் சங்கடமாக இருந்தது. 'வெறும் வரவு செலவுக் கணக்கைப் படிக்கிறோம்; பற்றாக்குறையைச் சொல்லுகிறோம்; துண்டு விழும் பட்ஜெட்டைப்பற்றிச் சொல்லுகிறோம்; நாம் முதன் முதலில் மன்றத்தில் பேசுகிறபோதே இதைத்தானே பேசவேண்டி வருகிறது' என்று கூட வருத்தப்பட்டேன்; கவலைப்பட்டேன். ஆனால், என்னுடைய நண்பர்கள், பாராளுமன்றப் பயிற்சி பெற்ற நம்முடைய நண்பர்கள், இந்தக் கணக்கு வழக்குத் தகவலைக்கூட மிகவும் சுவையுள்ளதாக்கியிருக்கிறார்கள். அதைப் பார்த்த பிறகுதான், கணக்கு வழக்கில்கூட இவ்வளவு சுவை இருக்கிறதே என்று மகிழ்ச்சி அடைந்தேன். ஏனென்றால், பள்ளிக்கூடத்தில் கணக்கு விஷயத்தில் நான் அவ்வளவாகக் கவனம் செலுத்தியதில்லை. ஆனால், கடைசி வரையில் அப்படியிருந்தேன் என்று அர்த்தம் அல்ல; இறுதி வகுப்பில் நூற்றுக்கு 85 மார்க் வாங்கினேன். கணக்கு விஷயத்தில் நான் அக்கறை கொள்ளவில்லை என்று சொன்னவுடனேயே எதிர்த் தரப்பில் உள்ளவர்கள், "ஆகா! அதனால்தான் இந்தக் கணக்கிலே இவ்வளவு தவறு" என்ற முடிவுக்கு வந்துவிடவேண்டாம். (சிரிப்பு). முதலிலே அவ்வளவு பயிற்சி பெறாமல் இருந்தேன். ஆனால், தேவைப்பட்டபோது, நான் அதிலே பயிற்சி பெற முடிந்தது. அப்படிப்பட்ட பயிற்சியை இங்கே இருப்பதன் மூலமாக மட்டுமல்ல, எனக்கு எதிரிலே வீற்றிருக்கிற எல்லா நண்பர்கள் மூலமாகவும் பெற விரும்புகிறேன். நான் காங்கிரஸ் கட்சியிலே உள்ள தலைவர்களையும் வேறு கட்சியிலே உள்ள தலைவர்களையும் நேரடியாகச் சந்தித்துப் பேசியது வெறும் உபசாரத்திற்காக அல்ல. அல்லது, அப்படி நான் அவர்களைப் பார்ப்பதன் மூலம் அவர்கள் தங்களுடைய கருத்துக்களை விட்டுவிடுவார்கள், அல்லது என்னுடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்ற நப்பாசையினால் அல்ல. ஒரு சிறந்த பாராளுமன்ற மரபு முறை ஆதரிக்கப்பட வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல. உங்களுடைய சிறந்த ஒத்துழைப்பை நான் பெற விரும்புகிறேன். எங்களிடத்தில் நீங்கள் சென்ற தடவை—நாங்களும் எதிர்க்கட்சியினராக இருந்தபோது—ஒத்துழைப்பைக் கேட்டீர்கள். நாங்கள் இந்தத் தடவை உங்களுடைய ஒத்துழைப்பைக் கேட்கிறபோது, எங்களுக்கு அப்பொழுது இல்லாத ஒரு சாதகம் உங்களுக்கு இப்பொழுது இருக்கிறது. நாங்கள் எதிர்க் கட்சியாக முன்னால் இருந்தபோது, நிர்வாகத்திலே அனுபவம் இல்லாத எதிர்க்கட்சியாக இருந்தோம். இப்பொழுது எதிர்க்கட்சியாக அமர்ந்திருக்கிற நீங்கள் நிர்வாகத்திலே அனுபவம் பெற்ற எதிர்க்கட்சியினர். ஆகையால், நீங்கள் ஒத்துழைப்பது என்றால், உங்களுக்கு நிர்வாகத்திலே கிடைத்த அனுபவம், அதிலே ஏற்பட்ட சிக்கல்கள், அந்தச் சிக்கல்களை நீக்கு



1967 மார்ச் 21] [திரு. சி. என். அண்ணாதுரை]

வதற்கான வழிமுறைகள், இவைகளையெல்லாம் நீங்கள் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள், அதை நீங்கள் எனக்குத் தரவேண்டும் என்ற முறையிலேதான் நான் உங்களிடத்திலே ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன். நான் எதிர்பார்க்கின்ற அளவுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை பெறத்தக்க விதத்தில் பெரும்பாலான காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பேசியதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஓரிரு பேச்சுக்களில் கொஞ்சம் வேகம் இருந்திருக்கலாம். எங்கள் பக்கத்தில், வெற்றி பெற்றுவிட்டோம் என்ற மகிழ்ச்சி இன்னும் அடங்காத நிலை. உங்கள் பக்கத்தில் சிலபேரிடத்தில், இருந்தது போய்விட்டதே என்ற ஏக்கத்தை நீக்கிக்கொள்ளாத நிலைமை. ஒருவர் இருவர் நீக்கிக் கொள்ளலாம். என்னைப் பொறுத்தவரையில், நான் இது கிடைத்துவிட்டதே என்ற ஏக்கத்திலே இருக்கிறவனே தவிர, மகிழ்ச்சியிலே இருக்கிறவன் அல்ல என்பதை என்னை முழுக்க முழுக்க உணர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நன்றாக அறிவார்கள். எங்கள் பக்கத்திலே, வெற்றிபெற்று விட்டோம் என்ற கொஞ்சம் மகிழ்ச்சியிலே உள்ளவர்கள், "எங்களை 25 வருஷங்களுக்கு அசைக்க முடியாது" என்று பேசினார்கள், உங்கள் பக்கத்தில் ஏக்கமுள்ளவர்கள், "விட்டேனா பார்" என்றார்கள். ஆனால், இரண்டுமே தேவையற்ற நாதங்கள்; இது வரவே வராது என்று எதிர்பார்க்க முடியாது. இவ்வளவு பெரிய பொதுத் தேர்தலுக்குப் பிறகு இவ்வளவு சீக்கிரத்திலே ஜுரம் இறங்கி விட்டதே, அதுதான் ஆச்சரியமே தவிர, இங்குமங்குமாகச் சிலவிடத்தில் கொஞ்சம் காய்ச்சல் காணப்படுவது, என்னைப் பொறுத்த வரையில், ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஆனால், நாளாவட்டத்தில் சரிப்பட்டு விடவேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் போது நீங்கள் நினைக்கலாம், 'இந்த இடைக்கால பட்ஜெட் துண்டு விழுகிற பட்ஜெட்; துண்டு விழுகின்ற பட்ஜெட்டைக் கொடுக்கலாமா'? என்று யாரும் அதிக அளவு ஆத்திரப்பட மாட்டார்கள். நேற்றைய செய்தித்தாளில் 7 கோடி ரூபாய்க்குத் துண்டு விழுகிற நமது மாநில பட்ஜெட் பற்றிய செய்தி வெளியாகியிருக்கும்போது, அதன் மறு பக்கத்திலேயே மத்திய சர்க்கார் நிதி மந்திரி 350 கோடி ரூபாய்க்குத் துண்டு விழும் பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருக்கும் செய்தியும் வந்திருக்கிறது. சகல துறைகளிலும் அனுபவம் பெற்ற திரு. மொரார்ஜி தேசாயே 350 கோடி ரூபாய்க்குத் துண்டு விழுகிற பட்ஜெட்டைத் தந்திருக்கிறபோது, எல்லா அனுபவத்தையும் பெற்றுக்கொள்ள வந்திருக்கிற நாங்கள் ரொம்பக் குறைவான துண்டு விழுகிற பட்ஜெட்டைத்தானே கொடுத்திருக்கிறோம் என்பதற்குப் பாராட்ட வேண்டும். 'துண்டா? விழுந்து விட்டதா? என்று சொல்வதற்கில்லை. நாட்டின் நிர்வாகத்தில் இடைக்காலத்தில் விழும் துண்டும் நிரந்தரமான துண்டு என்று கருதிவிட முடியாது. விழுகின்ற துண்டைச் சரிக்கட்ட இடைக்காலத்தில் வேறு வரிவிதிப்பு வரக்கூடும் என்ற

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 21

அச்சம் ஏற்படாமலும், கூடுமான வரையில் விழுகின்ற துண்டை எந்த வகையில் சரிக்கட்டலாம் என்பதில்தான் என் கவனம் முழுமையும் சென்றிருக்கிறது. இந்த 7 கோடி ரூபாய்த் துண்டைச் சரிகட்ட என்னென்ன வகையில் வரிகள் போடலாம் என்பதாக என் மனம் அலையவில்லையென்பதை உணர்ந்து நீங்கள் ஆறுதல் பெற வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இந்தத் துண்டு விழுகிற நிலைமைக்கு, என்னுடைய எதிர்க்கட்சி நண்பர் சொன்ன மாதிரி, ‘இந்த இடைக்கால பட்ஜெட்டில் துண்டு விழுகிற நிலைமைக்கு என்னென்ன காரணங்கள் என்பதை மறைக்காதீர்கள்’ என்றபடி நான் நிச்சயம் மறைக்க மாட்டேன். ஆகையால் இந்தத் துண்டுக்கும் இன்றைக்கு எதிர்க் கட்சியில் இருக்கக்கூடிய நீங்கள் தான் காரணம். அதையும் மறந்துவிடக் கூடாது. இந்தத் துண்டு விழுவது பெருமையா, சிறுமையா என்ற குணாதிசயத்தைப்பற்றி நான் குறிக்கப் போவதில்லை. இந்தத் துண்டு விழுவதற்குக் காரணம் என்ன என்கிற விஷயத்தை நீங்கள் எடுத்துக்கொண்டால் தான் அதற்குள் புகவேண்டி நேரிட்டது. இல்லையென்றால் வான வெளியைச் சுற்றி மற்றவற்றைச் சிந்திக்கலாம்.

எப்போதும் ஒரு நாட்டின் நிர்வாகத்தில் ஒரு சர்க்கார் மாறி இன்னொரு சர்க்கார் வருவது என்பது, ஒரு புத்தகத்தில் 66-வது பக்கம் படித்து முடித்த பிறகு 67-வது பக்கத்திற்குப் போவதைப் போன்றதே தவிர, ஒரு புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, இன்னொரு புதிய புத்தகத்தை எடுத்துக் கொள்வது என்று அர்த்தமல்ல. இந்தஅரசாங்கத்தினுடைய புது பட்ஜெட்டில் ஒரு புதிய புத்தகத்தைப் பார்க்கலாம். கனம் பொன்னப்ப நாடார் அவர்கள் இந்த இடைக்கால பட்ஜெட்டைப்பற்றிப் பேசும்போது ‘Old wine in a new ottle’ என்பதாக, பாட்டில்தான் மாற்றப்பட்டிருக்கிறதே தவிர, உள்ளேயிருப்பது பழைய ஒயின்தான் என்றார்கள். அந்த ஒயின் அவர்கள் தயாரித்ததுதான். சமயத்தில் பாட்டிலுக்கு மூளி ஏற்படும்போது வேறு பாட்டிலில் மாற்ற வேண்டிய நிலையும் ஏற்படுவதைப்போல இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே பாட்டிலைப்பற்றி அவர்கள் கவலைப்பட வேண்டாம். நான் தயாரிக்கக்கூடிய பட்ஜெட் வருகிற ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் உங்கள் மத்தியில் சமர்ப்பிக்கப்படும். நிச்சயம் அது போதை தரக்கூடியதாக இராது. கொஞ்சம் மருந்தாக இருக்கலாம்; சிறிது உணவாகவும் இருக்கலாம். அதற்கு அவர்கள் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் இந்த இடைக்கால பட்ஜெட்டில் துண்டு விழுந்தது எதிர்க்கட்சியில் உள்ளவர்களால்தான் என்றாலும், அது அவர்களுடைய நிர்வாகக் கோளாறினால் ஏற்பட்டதல்ல. ஒரு சர்க்காருடைய பட்ஜெட்டில் துண்டு நிர்வாக ஊழலினால் விழும். ஆகாத செலவுகளினால் துண்டு விழும். அநாவசியத் திட்டங்களினால் துண்டு விழும். இங்கே விழுந்திருக்கிற துண்டு அப்படிப் பட்ட வகையில் விழுந்த துண்டாக இருந்தால் நான் சபாநாயகரின் அனுமதியைப்பெற்று இன்னும் கொஞ்சம் அரைமணி நேரத்தைக்



1967 மார்ச் 21] [திரு. சி. என். அண்ணாதுரை]

கூட்டி காரசாரமாகப் பேசலாம். விழுந்திருக்கிற துண்டு இயற்கையாகவே ஏற்பட்டுத் தீரவேண்டிய நிலையில் ஏற்பட்டதாகும். நமது சர்க்கார் அலுவலகத்தில் பணியாற்றி வருபவர்களுடைய திறமையைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன கருத்தை நான் முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன். அவர் ஆளும் கட்சியில் இருந்த பொழுது இப்படிச் சொன்னார்களோ, என்னமோ, நான் எதிர்க் கட்சியில் இருந்தபோதும் சொல்லி வந்திருக்கிறேன். இன்றைய தினம் ஆளும் கட்சிக்கு வந்தபிறகும் நமது சர்க்கார் அலுவலகத்தில் பணியாற்றுகிறவர்கள் நமது முழுப் பாராட்டுதலுக்கும் உரியவர்கள் என்று சொல்லுகிறேன், அவர்கள் அரசாங்கத்தினிடம் ஊதியம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். விலைவாசி ஏற்றத்தினால் அவர்கள் பாதிக்கப்படுகிறபோது, அவர்களுக்கு நாம் ஊதிய உயர்வு, பஞ்சப்படி ஆகியவற்றைக் கூட்டிக் கொடுப்பதுதான் நியாயமாகும். நண்பர் கருத்திருமன் அவர்களுக்குத் தெரியும். பாராளுமன்றத்தில் இந்தப் பஞ்சப்படி என்ற வார்த்தையையே மாற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். இப்போது மாற்றப் படும். இது பஞ்சப்படி அல்ல. கெஞ்சிக் குனிந்து கேட்கும் பிச்சையல்ல; அவர்கள் அரசாங்கத்திடம் வேலை செய்து கூலி பெறுகிறார்கள். அரசாங்க நிர்வாகத்தின் விளைவாக விலைவாசிகள் தாறுமாறாக ஏறுகிறபொழுது, அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். மற்ற மற்றப் பண்டங்களின் விலை உயர்வுக்குத் தக்க அளவு எங்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுங்கள் என்று அவர்கள் கேட்பது நியாயம். நாம் அவர்களுக்குக் கொடுப்பது நியாயப்படி. அவர்கள் கேட்கின்ற நியாயத்திற்கேற்ப, நிதிநிலைமை மட்டும் வசதியாக இருந்திருந்தால் என்னைவிட தாராள மனப்பான்மை உடையவர்கள் யாரும் இருக்க முடியாது. ஆகையால் அவர்களுக்குத் தரப்பட்ட ஊதிய உயர்வு அல்லது நியாயப்படி காரணமாக ஏற்பட்ட ஒரு நிலைமையினால்தான் நமக்கு விழுந்துள்ள 7 கோடி ரூபாய் துண்டில் மிக முக்கியமான அளவு 6.68 என்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இரண்டு முறை அவர்களுக்கு நியாயப்படியை உயர்த்திக்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த முறையில் செய்யப்பட்டிருக்கிற காரியத்தின் விளைவாக விழுந்திருக்கிற துண்டு நியாயம் மட்டும் அல்ல. இந்தத் தடவை கேரளத்திலே அமைந்திருக்கிற அரசு சமர்ப்பித்துள்ள பட்ஜெட்டிலும் துண்டு விழுந்திருக்கிறது. கேரளத்தில் 6.68 கோடி அளவுக்குத் துண்டு விழுகின்ற பட்ஜெட்டை வெளியிட்டிருக்கிறார்கள். மேற்கு வங்காள சர்க்கார் 6.40 கோடி அளவுக்குத் துண்டு விழுகின்ற பட்ஜெட்டை வெளியிட்டிருக்கிறார்கள். பீகாரில் 3.06 கோடி என்ற அளவுக்குத் துண்டு விழுகிற பட்ஜெட்டை வெளியிட்டிருக்கிறார்கள். குஜராத்தில் 1.30 கோடி அளவுக்குத் துண்டு விழுகிற பட்ஜெட்டை வெளியிட்டிருக்கிறார்கள். எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு. ஹாண்டே ஒரிஸாவைப்பற்றிச் சொன்னார்கள். அந்தத் தகவல் எனக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் துண்டு விழுகின்ற பட்ஜெட்டைச் சரிகட்டி கொடுத்திருப்பார்களானால், அவர்கள் எவ்வாறு சரிக்கட்டினார்கள் என்கிற அந்த

வித்தையைக் கற்றுக்கொள்ள ஒரு முறை ஒரிஸாவுக்குச் சென்று வர வேண்டுமென்று நானும் விரும்புகிறேன். இன்று நமது பட்ஜெட்டில் துண்டு விழுந்திருப்பது வருந்தத்தக்கது அல்ல.

ஆனால், இதிலே முக்கியமான ஒரு பிரச்சினையைப்பற்றி அடுத்த முறையாகிலும் நமது மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமக்குத் தேவைப்படுகின்ற திட்டங்கள், நம்மால் ஒத்துக்கொள்ளப்பட்ட திட்டங்கள், அல்லது அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள், நாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையான திட்டங்கள், இவற்றை எடுத்துச் செயல்படுத்துகிறபோது நிதிநிலை பற்றாக்குறை ஏற்படுமானால், நமக்கு வேறு ஏதாவது இடையூறுகள் ஏற்படுமானால், அந்த இடையூறுகளை—பற்றாக்குறையை—நீக்குவது மத்திய சர்க்காரின் இன்றியமையாத கடமை என்பதைக் கட்சிப் பாகுபாடு இல்லாமல் நாம் வலியுறுத்த வேண்டும். நம்முடைய டாக்டர் அவர்கள் குறிப்பிட்டார்கள், 'அடிக்கடி மத்திய சர்க்காரிடம் பணத்திற்குப் போகாதீர்கள்' என்பதாக. நீண்ட காலமாக அரசியல் வட்டாரத்தில் ஒரு தவறான கருத்து உலவுகிறது. மத்திய சர்க்கார் என்கிறபோது, மத்திய சர்க்கார் பணம் என்று தனியான கணக்கில் பணம் எதுவும் இல்லை. நாட்டினுடைய பணம்தான் ஒரு வகையில் மத்திய சர்க்காரிடத்தில் போகிறது. இன்னொரு வகையில் மாநில சர்க்கார்களுக்குப் போகிறது. மத்திய சர்க்காரின் பணம் என்று தனியாக எதுவும் இல்லை. ஆகையால் இன்றைக்கு யாரும் மத்திய சர்க்கார் தங்களுடைய சொந்தக் கணக்கிலிருந்து பணம் கொடுப்பதாகக் கருதத் தேவையில்லை. நம்முடைய நாட்டின் பணத்தில் ஒரு பகுதியை அவர்கள் முடக்கியிருக்கிறார்கள். அப்படி முடக்கி வைத்திருக்கிற பணத்தில்தான் ஒவ்வொரு மாநில அரசும் பணம் கொடுங்கள் என்று கேட்கின்றன. அப்படி மாநில அரசுகள் கேட்கின்ற நேரத்தில் அந்தத் தொகைக்குக் கணக்குப் பார்ப்பதை விட முன்னாலே வாங்கியதைக் கொடுத்தார்களா? முன்னாலே வாங்கியதற்கு வட்டி கட்டினார்களா? குறிப்பிட்ட தவணைத் தொகையைக் கட்டினார்களா? என்று பார்ப்பதைவிட—"Not only from the Accountant's point of view or the Banker's point of view"—'நாட் ஒன்லி' என்றுதான் குறிப்பிட்டேன்—'நாட் அட் ஆல்' என்று குறிப்பிடவில்லை. காரணம், கணக்கே பார்க்க வேண்டாம் என்று சொல்லவில்லை. அது ஒன்றை மட்டுமே கருத்தில்கொண்டு பார்க்காமல் முன்னேற்றகரமான திட்டங்களை எந்த அரசு நடத்திக்கொண்டு வருகிறதோ, அந்த அரசுக்குச் சற்று சலுகைகளையும், வசதிகளையும் கூட்டித் தருவதை மத்திய சர்க்கார் தங்கள் கடமையாகக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட கொள்கையைக் கொண்டிருப்பார்களேயானால், நமக்கு இத்தகைய இக்கட்டான நிலைமை இவ்வளவு வேகமாக வந்திருக்காது. ஆகையால் இதுபற்றி மத்திய சர்க்காரிடத்தில் நாம் பேசுவதற்கான வாய்ப்புக் கிடைக்கிற நேரத்தில் இந்தச் சபை முழுவதன் பிரதிநிதியாக நான் பேச





வதற்கு நீங்கள் அனுமதித்து எனக்கு ஆதரவு தர வேண்டுமென்று உங்களை நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இதை ஒரு கட்சியின் கோரிக்கை என்று எடுத்துக்கொண்டு போவதை விட, இந்தச் சட்டமன்றத்தின் கோரிக்கை என்று எடுத்துக் கொண்டுபோய் வாதாடினால் நிச்சயமாக அதற்கு நல்ல பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை வைத்திருக்கிறேன். இத்தகைய துண்டு விழுகின்ற நிலைமையை, பற்றாக்குறை ஏற்படுவதை, நீக்குவதற்கான முயற்சிகளில் நீங்கள் எல்லாம் என்னோடு ஒத்துழைக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த இடைக்கால பட்ஜெட் விவாதத்திலே கலந்துகொண்ட எல்லா உறுப்பினர்களும் சொன்ன கருத்துக்களை நான் வெகு கவனமாகக் குறித்து வைத்திருக்கிறேன். குறித்து வைத்துக் கொண்டதன் நோக்கம் இன்றைக்கே ஒவ்வொன்றுக்கும் உடனடியாகப் பதில் சொல்ல வேண்டும் என்பது அல்ல. உண்மையிலே நான் ஏராளமான பல புத்தகங்களைப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களை பேசும்போது மிக எளிதில் எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பிட்ட கருத்துக்களையெல்லாம் நான் ஒழுங்குப்படுத்திப் பார்ப்பேன். உறுப்பினர்கள் பேச்சிலேயேகூட முன்னுக்குப் பின் முரண்பட்ட கருத்து ஏதாவது இருந்தால் அதைத் தனியாக அவர்களிடத்தில் எடுத்துச் சொல்வேன். என்னுடைய பேச்சில் இன்றையதினம் உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்ன விஷயத்தைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லையே என்று யாரும் கவலைப்படத் தேவையில்லை. அவைகளையெல்லாம் நான் என் மனதில் குறித்து வைத்திருக்கிறேன். அவற்றையெல்லாம் பரிசீலனை செய்து எந்தெந்த முறையில், நல்ல கருத்துக்களை யார் சொல்லியிருந்தாலும் அவற்றைச் செயலாக்குவதற்கு நான் தயங்க மாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நமது இடைக்கால பட்ஜெட்டிலே 7.70 கோடிக்கு எப்படித் துண்டு விழுந்திருக்கிறது என்ற விவரத்தை மட்டும் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். சர்க்கார் ஊழியர்களுக்கு இரண்டாவது முறையாக ஊதியத்தைக் கூட்டிக் கொடுத்திருப்பதன் காரணமாக 5.9 கோடி ரூபாய் நாம் அதிகம் செலவழிக்க வேண்டி வந்தது. நம்மிடமிருந்து மத்திய சர்க்காரிடம் போய்ச் சேருகின்ற வருமான வரியில் நமக்குக் கிடைக்க வேண்டிய அளவு குறைந்திருப்பது 0.4 கோடி ரூபாய். அதாவது 4 லட்சம் ரூபாய். அதைப்போலவே மத்திய சர்க்கார் நமக்குக் கொடுக்க வேண்டிய தொகையிலிருந்து குறைத்துவிட்டிருப்பது 2·2 கோடி ரூபாய். இந்தவகையில்தான் இந்தத் துண்டு விழுந்திருக்கிறதே தவிர ஏதாவது நிர்வாகத்தில் உள்ள கோளாறினால் ஏற்பட்டிருக்குமானால், நண்பர் சொன்னமாதிரி அந்த இலாகாவையே எடுத்துவிடலாமா? இந்த இலாகாவையே எடுத்துவிடலாமா? என்பதில்தான் என் மனம் சென்றிருக்கும். ஆயினும் அதைப்பற்றியே நான் கவனம் செலுத்தப் போவதில்லையென்று நினைத்துவிட வேண்டாம். அதைப்பற்றியும் கொஞ்சம் கவனம் செலுத்த விரும்புகிறேன்.

அடுத்து, ஒரே ஒரு விஷயத்தைப்பற்றிக் கொஞ்சம் விரிவான முறையில் சொல்ல வேண்டிய நிலைமை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் பேசும்போது, "நாங்கள் எங்களுடைய கட்சியிடத்திலும் சொன்னோம். பல காலமாகச் சொல்லி வருகிறோம். எங்கள் கட்சி அரசாங்கம்தான நடைபெற்று வந்திருக்கிறது என்றாலும், இதுவரை நாங்கள் சொன்ன காரியம் நடக்கவில்லை. உங்கள் ஆட்சியிலாவது எங்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். நீங்கள்தான் நிறைவேற்றிக் கொடுப்பீர்கள் என்று மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்" என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். யாரோ ஒருவர் சாத்தனூர் திட்டத்தைப்பற்றிச் சொன்னார். புதுக்கோட்டை இளைய அரசர் கூட 'நீண்ட காலமாக இருந்து வருகிற பிரச்சினை இது, நீங்கள் இதை விரைவில் நிறைவேற்றித்தர வேண்டும்' என்று குறிப்பிட்டார். அவர்களுடைய கோரிக்கையில் குறிப்பிட்ட இரண்டு வார்த்தைகள் எப்படிப் பொருந்தும் என்பது எனக்குப் புலப்படவில்லை. நெடுங்காலமாக இருந்து வருகிற பிரச்சினை என்கிறார்கள். விரைவாக முடித்துக் கொடுங்கள் என்கிறார்கள். கொஞ்சம் நல்லெண்ணத்தோடு சொல்வதாக இருந்தால் தனித்தனியாக என்னிடம் வந்து அந்தப் பிரச்சினையை எடுத்துச் சொல்லி விவாதித்து அதை நிறைவேற்றுவதில் உள்ள சிக்கல்களை நீக்குவதற்கு எனக்கு உதவியாக இருக்கலாம். எல்லோரையும் சொல்லவில்லை. அந்தப் பட்டியலில் எனது நண்பர் கருத்திருமனைச் சேர்க்கவில்லை. புதிதாக வந்தவர்கள், தட்டிக்கொடுக்கலாம், ஓடினால் விழட்டும் என்று கருதிச் சொன்னார்களோ என்னமோ, என்னுடைய இயற்கையான சுபாவமே பல காரியங்களைச் செய்யாது விடுவேனே தவிர, செய்கிற காரியம் நல்லதாக அமையும். செய்கிற காரியம் தவறான காரியமாக இருக்கக் கூடாது என்பதில் நான் பயிற்சி பெற்றவன். விரைவாகச் செய்யுங்கள் என்று அவர்கள் குறிப்பிட்டதை நான் எப்படி எடுத்துக் கொள்கிறேன் என்றால், அந்தக் காரியத்தைச் செய்வதற்கு நிர்வாகத் திறமை பெற்ற அவர்களால் எவ்வளவு காலம் ஆகக் கூடுமோ அதைவிட விரைவாகச் செய்யுங்கள் என்று குறிப்பிடுகிறார்கள் என்றே எடுத்துக்கொள்கிறேன். நாளையோ, அதற்கு அடுத்த நாளோ அந்தக் காரியங்களைச் செய்துவிடுவேன் என்பதாக ஒன்றும் நான் வாக்களிப்பதற்கு இல்லை.

அடுத்து, எதிர்க்கட்சியினர் பேசும்போது மக்கள் எங்களிடம் ஏதோ ஏமாற்றம் அடைந்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். மக்கள் எங்களிடம் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்களா? அல்லது மக்களிடம் நீங்கள் ஏமாற்றம் அடைந்திருக்கிறீர்களா?—மக்கள் எங்களிடம் ஏமாற்றம் அடைந்திருப்பதாகப் பேசுவது நாட்டுக்கு நல்லது அல்ல. 'என்னிடத்தில் அவர்களுக்கு ஏமாற்றம் இல்லை; உங்களிடத்தில்தான் அவர்கள் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள்' என்று நான் சொல்ல முடியும். இப்படி நாம் ஒருவருக்கொருவர் மாற்றி மாற்றிச் சொல்லிக் கொண்டிருந்தால், 'ஏதடா, நம்மை ஏமாற்றாத ஆட்களே கிடையாதுபோல் இருக்கிறது' என்கிற தவறான





எண்ணம் மக்களிடத்தில் பரவிவிடும். நேற்றையதினம் பேசும்போதுகூட, எதிர்க்கட்சியிலிருந்த நாங்கள் எங்களது குரல் வளத்தாலும், பேச்சுத் திறமையாலும் மக்களைக் கவர்ந்துவிட்டோம் என்று ஒருவர் குறிப்பிட்டார். இந்த இரண்டும் எங்களுக்கு மட்டும் ஆண்டவன் கொடுத்த வரப்பிரசாதம் அல்ல. எதிர்க்கட்சித் தலைவர் என்ன குரல் வளத்தில் குறைந்தவரா? நாளையோ, மறுநாளோ நீங்கள் நண்பர் விநாயகம் அவருடைய பேச்சைக் கேட்கப் போகிறீர்கள். அவர் என்ன குரல் வளத்தில் சளைத்தவரா? அவரது குரல் சாதாரணக் குரலா? குரல் வளத்தாலும், வசீகரமான பேச்சாலும் நாங்கள் மக்களைக் கவர்ந்து விட்டோம் என்று நீங்கள் சொல்வது தவறான கணக்கு. இத்தனை காலமாக வளர்ந்து வளர்ந்து அதைத்தான் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறீர்கள். நாங்கள் வளர வளர, எங்களுடைய வளர்ச்சிக்கான உண்மைக் காரணத்தைத் தெரிந்துகொள்ளாமல் 'அடுக்கு மொழியால் வளருகிறார்கள், தமிழால் வளருகிறார்கள், சுவையான பேச்சால் வளருகிறார்கள், அழகான பேச்சால் வளருகிறார்கள்' என்று சொல்லி வந்தீர்கள். அதே தவறை இப்போதும் செய்யாதீர்கள் என்று நான் உங்களுக்கு நண்பன் என்ற முறையில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'அரிசியால் வளர்ந்தோம்' என்று சொன்னார்கள். மக்கள் ஏமார்ந்துவிட்டார்கள் என்றார்கள். கேரளத்தில் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறவர்கள் ரூபாய்க்கு 3 படி அரிசி தருகிறேன் என்றா சொன்னார்கள்? ஒரிஸாவில் ரூபாய்க்கு 3 படி அரிசி என்றா சொன்னார்கள்? மேற்கு வங்காளத்தில் ரூபாய்க்கு 6 படி அரிசி என்றா சொன்னார்கள்? அங்கெல்லாம் எப்படி காங்கிரஸ் ஆட்சி வீழ்ச்சியுற்றது? அடித்திருப்பது புயல் என்று சொன்னார்கள். அது புயல் அல்ல என்றாலும், ஒரு கட்சி சர்க்காரை, இன்னொரு கட்சி சர்க்காரோடு ஒப்பிட்டு பார்த்துக்கொள்கிற சந்தர்ப்பத்தை மக்கள் விரும்பியிருக்கிறார்கள். அதனால் இந்த ஆட்சி மாற்றம் ஏற்பட்டதே தவிர உங்களுடைய தகுதியைப் பார்த்து, உங்கள் திறமையைப் பார்த்து நீங்கள் தகுதியற்றவர்கள் என்று உங்களைப் பதவியிலிருந்து விலக்கியிருப்பதாக, நான் என்ன—உங்கள் பகைவனும்கூடச் சொல்லமாட்டான். எப்போதாவது, ஏதாவது கூட்டத்தில் நீங்கள் பகிரங்கமாக எங்களைத் தாக்கிப் பேசினால் அதற்கு வேறுவகையில் எங்கள் தரப்பிலிருந்து பேசுபவர்கள் வாதத்திற்காக வேண்டுமானால் கூறலாம். இன்றையதினம் உண்மையைச் சொல்லப்போனால், மக்கள் எங்களிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார்களோ, அதைவிடப் பன்மடங்கு உங்களிடத்தில் அதிகமாக எதிர்பார்த்தார்கள். எங்களிடத்தில் சோறு கிடைக்காதா என்றுதான் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் உங்களிடத்திலோ தேனும் பாலும் ஓடும் என்று எதிர்பார்த்தார்கள். உங்களது ஆட்சியிலே தேனும் பாலும் ஓடும், குடம் ஒன்றுதான் பாக்கி—எடுத்துக்கொண்டு வரலாம் என்று பார்த்தார்கள். இப்படி நாங்கள் உங்களையும், நீங்கள் எங்களையும் பற்றிக் குறிப்பிட்டுக்கொண்டு பேசலாம் ஆனால் பயன் இராது. நீங்கள் 20 வருடம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தீர்கள். நாங்கள் ஒரு ஐந்து வருடம்தான் வேலை செய்யட்டுமே என்பதாக நீங்கள் உங்களது அனுபவத்தை,

நிர்வாகத் திறனை எங்களுக்கு எடுத்துச்சொல்லி நாம் இருவரும் இணைந்து நாட்டு நலனுக்குப் பணியாற்ற உதவ வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்ளுகிறேன். என்னுடைய நண்பர், எதிர்க்கட்சித் தலைவரை நண்பர் என்றே அழைத்துவிடுகிறேன், சில சந்தர்ப்பங்களில் எதிர்க்கட்சித் தலைவர் என்று சொல்லவும் மறந்துவிடுகிறேன், அதற்காக அவர் வருத்தப்படமாட்டார் என்று நம்புகிறேன். எனது நண்பர் தம்முடைய உரையை முடிக்கும் போது ஒரு வாசகம் சொன்னார்கள். 'இது அவ்வளவும் அரிசியும் அரசியலும் கலந்ததுதான்' என்று சொன்னார்கள். ஒரு நாட்டினுடைய மக்கள் அடிப்படையாகக் கேட்பது சோறு. யாரோ ஒரு சைவர் சொன்னதாக நினைவு. அந்தச் சைவரிடம் 'சொக்கப்பர் எங்கே இருக்கிறார்?' என்று கேட்டதற்கு, 'சோற்றில் இருக்கிறார்' என்று சொன்னாராம். சோற்றிலே சிவலிங்கமே இருக்கும்போது அரசியல்வாதிகள் இருப்பதில் ஒரு தவறும் இல்லை. ஆகையால் சோற்றுப் பிரச்சினையைத் தீர்ப்பதை இந்த அரசு தன்னுடைய முக்கியமான கருத்தாகக் கொண்டிருக்கிறது.

அடுத்து, நிலவரி நீக்கப் பிரச்சினையைப்பற்றி விரிவாகச் சொல்லப்பட்டது. "நாங்கள் நிலவரியை நீக்கிவிடுவது என்று அறிவித்துவிட்டோம். நீங்கள் அந்தக் கொள்கையை ஆதரிக்கின்றவர்களாயிற்றே. அப்படியிருக்க, உங்களுடைய இடைக்கால பட்ஜெட்டிலே அதைப்பற்றி என் ஒன்றும் காணோம்?" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்பொழுது என்னுடைய பக்கத்திலே உள்ளவர்கள் 'நாங்கள் சொன்னபொழுது நீங்கள் என்ன செய்தீர்கள்?' என்று கேட்டார்கள். வேறு யாராகவாவது இருந்தால் நாங்கள் அப்படிச் சொல்லவில்லையென்று சொல்லுவார்கள். ஆனால் என்னுடைய நண்பர் திரு. கருத்திருமன் அவர்கள், 'ஆமாம்; அப்படித்தான் அப்பொழுது சொன்னோம்; இப்பொழுது இப்படிச் சொல்கிறோம்' என்று சொன்னார்கள். அது நேர்மையான அரசியல். காங்கிரஸ்காரர்கள் சர்சார்ஜைப் போடும்போது நாங்கள் வேண்டாமென்று சொன்னோம்—கேட்கவில்லை, அதை நீக்கவில்லை. அப்பொழு திருந்த முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் என்ன என்ன சொன்னார்கள் என்பதெல்லாம் என்னிடத்திலே இருக்கிறது. ஆனால் கடிகாரம் என் எதிரிலே இருந்து நேரத்தை நினைவுபடுத்துகின்ற காரணத்தாலே நான் எல்லாவற்றையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இங்கே உள்ள அனைவரும் அவற்றைப் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், 'நிலவரியை எடுத்துவிட்டால் எல்லாம் தீர்ந்துவிடும் என்று கருதுகிறார்கள், அது தவறு' என்று சொல்லியிருக்கிறார். வேறு பல சூழ்நிலைகளின் காரணமாக சர்சார்ஜை எடுக்கப்பிறகு என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள், காங்கிரஸ் கட்சியினரிடம் சர்சார்ஜை எடுத்துவிட்டால் மட்டும் போதாது, நிலவரி முழுவதையும் எடுத்துவிட வேண்டும் என்று வாதாடியிருப்பார்கள். 1966-ம் வருடம், நவம்பர் இரண்டாம் தேதியன்று திரு. பக்தவத்சலம் அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். அதற்கு காங்கிரஸ்காரர்கள் கட்டுப்பட்டவர்கள். • அதிலே, 'நான் நிலவரியை எடுத்து



விடுகிறேன், ஆனால்'. . என்று தொடர்ந்து சிலவற்றைக் குறிப்பிடுகிறார். நம்முடைய நண்பர்கள் இந்த 'ஆனால்' என்ற வார்த்தைக்குப் பிறகு உள்ளதை விட்டுவிடுகிறார்கள். 'அதிலே ஏற்பட்டுள்ள துண்டுக்காக அரிசி வியாபாரம், நெல் வியாபாரம் அத்தனையையும் சர்க்கார் மேற்கொள்ளும். அப்படி சர்க்கார் மேற்கொண்டால் அதிலே கிடைக்கிற வருமானத்தை வைத்துக்கொண்டு இந்த 13 கோடியைச் சரிக்கட்டலாம்.' ஸ்டேட் ட்ரேடிங் ஆப் ஃபுட் கிரெய்ன்ஸ், லேண்ட் ரெவின்யூ என்ற இந்த இரண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது. இது முன்பிருந்த முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களுடைய கருத்து மட்டும் அல்ல. காங்கிரஸ் கட்சியினுடைய கருத்தும் அதுதான்.

'The Tamilnad Congress Committee, after a consideration of these two important problems in their various aspects, has recommended to Government to examine ways and means of abolishing land revenue coupled with State Trading in agricultural produce.'

நிலவரியை அடியோடு எடுத்து விடுங்கள் என்பதைக் கவனப்படுத்தி, 'எங்கள் சர்க்கார் சொன்னது' என்று சொந்தம் கொண்டாடுகிறவர்கள் இரண்டுக்கும் கட்டுப்பட்டவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. இரண்டுக்கும் கட்டுப்பட்டவர்கள் நீங்கள் என்பதை உணரவேண்டும். நிலவரியை எடுத்துவிட வேண்டும் என்பதில் காங்கிரஸ் சர்க்கார் எந்த அளவுக்கு வேகமாக இருந்தது என்பதைத் திரு. பக்தவத்சலம் அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

'We should also bear in mind the need to provide for the continued maintenance of the existing framework of land records and registration which is of gerat value to the Government for purposes of economic planning and is of even greater value to the ryot as a record of his rights and title to land.'

ஆக, முன்னாலே இருந்த உங்களுடைய சர்க்கார் நிலவரியை எடுத்து விடுகிறோம் என்று வாக்குறுதி அளிக்கவில்லை. ஏனென்றால் பட்டா மாறுதல்கள், பட்டா குளறுபடிகள் இவற்றை எப்படித் தீர்க்கமுடியும் என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். கடைசியாக நம்முடைய நண்பர் திரு. கருத்திருமன் அவர்கள் சொன்னார்கள்', எனக்கு இதிலே இருந்து தெரிவது என்னவென்றால் இந்தத் தடவை நிலவரி வாங்கப்போகிறீர்கள்' என்றார்கள். உண்மை. என்னைவிடப் பெரியவரும், முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலமும் அந்த மாதிரித்தான் சொல்கிறார்கள். உயர்தர அதிகாரிகளை அமைத்து இதைப் பரிசீலித்துப் பாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அந்த அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அப்பொழுது, 'நாங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். அதை ஆராய்ந்து ஜூலை மாதத்தில் ரிப்போர்ட் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 21

'The Report will be submitted by the Special Officer in time for the new Government to consider and take decisions by July 1967, i.e., commencement of next fasli year 1377.'

ஆகையினால், நம்முடைய நண்பர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னபடி நாங்கள் பழைய ஒயினை புதிய பாட்டிலிலே **பிடித்துக்** கொடுத்திருக்கிறோமே தவிர அதிலே ஒன்றும் **சேதாரம் ஏற்பட்டுவிடவில்லை.** சட்ட மன்றத்திலே நீங்கள் எடுத்து வைத்த எல்லாக் கருத்துக்களையும் நான் ஆராய்ந்து பார்க்க விரும்புகிறேன். ஐந்து ஏக்கருக்குக் குறைந்து நிலம் வைத்திருக்கின்றவர்களுக்கு நிலவரி இல்லாமல் செய்யவேண்டுமென்று நான் விரும்புகிறேன். **கம்யூனிஸ்டுகளும் அதை ஆதரித்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி** நண்பர்களும் அதை ஆதரிப்பதிலே சில சிக்கல்கள் இருக்கலாம். பாராளுமன்றத்திலே இருக்கின்ற முறையை இங்கேயும் புகுத்த வேண்டுமென்று நான் நினைக்கிறேன். அங்கே கன்சல்டேடிவ் **கமிட்டி என்று** நிரந்தரமாக **வைத்திருக்கிறார்கள்.** அக்ரிகல்சருக்கு ஒரு கன்சல்டேடிவ் கமிட்டி, இண்டஸ்ட்ரீஸுக்கு ஒரு **கன்சல்டேடிவ்** கமிட்டி, எஜுகேஷனுக்கு ஒரு **கன்சல்டேடிவ் கமிட்டி** என்று போட்டு எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து, அக்கறை உள்ளவர்கள் உட்கார்ந்து, பேசினால் நல்லது. இங்கே பேசினால் பேசும்பொழுது காரம் குறைந்துவிடுமோ என்ற பயம் இருக்கும். ஆனால் நாம் எத்தனை வருஷத்திற்குத்தான் காரத்தை நம்பிக்கொண்டிருப்பது? காலம் ஆக ஆக, வயது ஏறிக் கொண்டே போகிறது. காரத்தைக் குறைத்து மனம்விட்டுப் பேசமுடியும் அந்தக் கமிட்டியில். ஐந்து ஏக்கருக்குக் குறைந்த அளவு நிலம் உள்ளவர்களுக்கு நிலவரியை எடுத்துவிடலாம் என்று ஒருவர் சொல்லலாம். ஐந்து ஏக்கர் ஏன், மூன்று ஏக்கர் என்று வைத்துப் பார்க்கலாமே என்று ஒருவர் சொல்வார். ஏழு ஏக்கர் வரை நிலவரியை எடுத்துவிடலாமே என்று நானே பேசுவேன். ஆகவே பாராளுமன்றத்திலே இருப்பதைப் போன்று கன்சல்டேடிவ் கமிட்டி இங்கேயும் வைப்பது நல்லது. நண்பர் திரு. கருத்திருமன் அவர்களுக்கும் அதைப்பற்றித் தெரியும். அங்கே அது நல்ல முறையிலே பயன்பட்டது. இங்கேயும் சில குழுக்களை அமைக்கலாம் என்று கருதுகிறேன். அதன் மூலம் சரியான முறையில் செம்மையாகப் பயன்பெறமுடியும் என்ற நம்பிக்கைகொண்டு இந்த **இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின்** மீது நீங்கள் தெரிவித்த **கருத்துக்களை** மனதிலே கொள்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் சொன்னார்கள் 'அரிசியும் அரசியலும்' என்று. அதைப்பற்றி ஒரு நாளைக்கெல்லாம் அந்தக் கமிட்டியிலே நாம் தீவிரமாகப் பேசலாம். ஆகவே, இந்தக் கட்சியை மக்கள் வெறுக்கும்படிச் செய்யலாமா, அந்தக் கட்சியை வெறுக்கும்படிச் செய்யலாமா என்பதிலே நாம் நம்மை ஈடுபடுத்திக்கொள்ளாமல், மக்கள் நீண்ட நெடுங்காலமாகக் கஷ்டப்படுகிறார்கள், ஏமாற்றத்திற்கு ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள், அவர்களுடைய துயரங்களையும், துன்பங்களையும் துடைக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு நாம் எல்லாம் பணியாற்றவேண்டும். பாதிச் சம்பளமாகக் குறைத்துக்கொண்டார்கள், முழுச் சம்பளமே வாங்காமல் இருந்-



1967 மார்ச் 21] [திரு. சி. என். அண்ணாதுரை]

தால் நல்லது என்று சொன்னார்கள். உறுப்பினருக்கு ரூ. 250 கிடைக்கின்றது. நான் அதற்குப் பதிலாக வேறு ஒன்று சொல்வேன். நாடு நெருக்கடியான நிலையில் இருக்கிறது, அந்த நெருக்கடி நிலை தீரும்வரை சம்பளம் இல்லாமலே வேலை செய்வோம் ஒரு நிபந்தனையோடு. உறுப்பினர்கள் நெருக்கடி தீருகிற வரையில் 100 ரூபாய் என்ற அளவிலே பெருந்தன்மையுடன் குறைத்துக் கொள்வதற்கு முன்வருவார்களானால் நானும் என்னுடைய நண்பர்களும் உறுப்பினர் சம்பளத்தை மட்டும் பெற்றுப் பணியாற்றத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்பற்றிச் சொன்ன நண்பர் இங்கே இப்பொழுது இல்லை. மிகவும் சந்தோஷத்தோடு போயிருப்பார். 'சிக்கலிலே அண்ணாத்துரையை நிறுத்திவிட்டோம், என்ன செய்வார் என்று பார்க்கலாம்?' என்ற முறையிலே நினைத்துக்கொண்டிருப்பார். 500 ரூபாய் சம்பளத்தில் உறுப்பினர் என்ற முறையில் 250 ரூபாய் பெற்றால், மேலும் 250 ரூபாய்தான் குறையும். எவ்வளவு குறைந்தாலும் அதற்குத் தகுந்தாற்போல் செலவைக் குறைத்துக்கொள்வதற்கு நான் பழக்கப்பட்டவன். நண்பர் திரு. கருத்திருமன் அவர்களுடைய **மாவட்டத்தைச் சேர்ந்த பெரியார் அவர்களிடம் நான் பல** பாடங்களை முழுவதும் பெறாவிட்டாலும், சிக்கன விஷயத்தில் நிரம்பப் பாடம் பெற்றிருக்கிறேன். ஆகவே, வெறும் 250 ரூபாய் என்பதாலே எனக்குக் கஷ்டம் இல்லை; என்னுடைய நண்பர்களுக்கும் கஷ்டம் இல்லை.

ஆனால் நாங்கள் அந்தத் தியாகத்தைச் செய்கிறபோது, எங்களை பிற்பகல் 1–30.
மட்டும் ஜனங்கள் சுட்டிக்காட்டி "இதோ போகிறார்களே இவர்கள் தியாகிகள்; இந்த நேரத்திலே கூட அவர்கள் எல்லாம் இவ்வளவு வாங்குகிறார்களே" என்று உங்கள் பேரிலே பழி வரக்கூடாது என்பதற்காகத்தான் 100 ரூபாயாகக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு உறுப்படியான திட்டத்தைக் காங்கிரஸ் கட்சியில் நிறைவேற்றிக் கொண்டு வருவார்களானால் நிச்சயமாக அதைக் கவனித்து நிறைவேற்ற முன் வருவேன் என்று உறுதியளித்து, நல்ல கருத்துக்களைக் கூறிய அனைவருக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, சிறந்த ஒத்துழைப்போடு நாம் இந்த மன்றத்தினுடைய நடவடிக்கைகளை நடத்திச் செல்வோம் என்ற உறுதியைப் பெற்று அமர்கிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. 23—3—1967 வியாழக்கிழமை காலை 9 மணி அளவில் இந்த பேரவையின் கூட்டம் மீண்டும் நடைபெறும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### 7. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

* 110. *Notification issued with G.O. Ms. No. 2453, Rural Development and Local Administration, dated the 20th October 1966, making an amendment to the Rules relating to the Issue and Disposal of Audit Reports of Panchayat Union Councils published with the Rural Development and Local Administration Department notification S.R.O. No. A-123 of 1962, dated the 1st February 1962 (Notification No. 7) at page 32 of Supplement to Part V of the Fort St. George Gazette, dated the 14th February 1962, as subsequently amended. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

### B. Reports, notifications and other papers.

* 8. *Demands for Grants and Detailed Budget Estimates for the year 1967–68 (Volumes I to IV).*

* 9. *White Paper on the Interim Budget for 1967–68 and Appendices thereto (English and Tamil).*

* 10. *Detailed Budget Estimates of Revenue for the year 1967–68.*

* 11. *Notice of Demands for Advance Grants during the year 1967–68 (English and Tamil).*

* 12. *Vote on Account for Expenditure in 1967–68.*

* 13. *Annual Financial Statement (Budget) of the Government of Madras Summary of the Financial Position from 1965–66 (Accounts) to 1967–68 (Budget) (English and Tamil).*

* 14. *Statement of Posts and Scales of Pay for the year 1967–68.*

* 15. *Speech of the Chief Minister presenting the Budget for the year 1967–68 (English and Tamil).*

Placed on the Table of the House on 20th March 1967.

## தமிழகச் சட்டப் பேரவை.

### வியாழக்கிழமை, மார்ச் 23, 1967.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு:—ஒரு உரையின் தொடக்கத்தில் நட்சத்திரக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) கோவைப் பஞ்சாலைகளில் ஆள் குறைப்பு.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்** : முதல் அலுவல், கேள்விகள்—பதில்கள். மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வதற்குக் கேள்விகள் இல்லை. ஆகவே அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானங்கள். என்னிடம் மூன்று ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஒன்று, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. எ. கே. சுப்பையா அவர்களின் ஒத்திவைப்புத் தீர்மானம்.

"கோவையில் பஞ்சாலைகளில் நிகழ்ந்து வரும் ஆள்குறைப்பு, வேலையின்மை, சம்பளக் குறைப்பு போன்ற முதலாளிகளின் நடவடிக்கைகளால் ஆயிரக்கணக்கான பஞ்சாலைத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பீளமேடு ஸ்ரீரெங்கவிலாஸ் மில்லில் 1—1—1967 முதல் வேலை செய்த நாட்களுக்கு சம்பளம் கொடுக்கத் தவறியதுமன்றி 1—4—1967 முதற்கொண்டு ஆள்குறைப்பு நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வளவு முக்கியமான பிரச்சினையில் அரசினர் தலையிட்டு தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று வற்புறுத்துவதற்காக, இந்த ஒத்திவைப்பு பிரேரணைக்கு அனுமதி கோருகிறேன்."

என்று அவர் கடிதம் எழுதியுள்ளார்.

இந்தத் தீர்மானம் அரசினரின் அன்றாட நடவடிக்கைகளுக்கு உட்பட்டது என்று இந்தத் தீர்மானத்தின் சொற்களே காட்டுகின்றன. இரண்டாவதாக, இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் என்ற தொழில் விவகாரச் சட்டம் இருக்கிறது. தொழில் விவகாரச் சட்டப்படி தீர்க்கக் கூடிய பிரச்சினைகள் ஒத்திவைப்புத் தீர்மானப் படி கொண்டுவரக் கூடாது என்பது நம் விதிகளில் காணப்படுகிறது. இந்தக் காரணத்தினாலும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு பேரவைத்தலைவர் அனுமதி கொடுக்கவில்லை என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1967, மார்ச் 23

அரிசிக்கு மேல் வழங்கும் வகையில் கொள்முதல் பணிகள் மும்முரப்படுத்தப்பட்டன. துரதிருஷ்டவசமாக, கொள்முதல் முறையைச் செயல்படுத்துவதில் பற்பல மாவட்டங்களில் பற்பல வழிமுறைகள் பின்பற்றப்பட்டதன் காரணமாக, இம்முறையில் இடத்திற்கு இடம் வேறுபாடு இருப்பதாகப் புகார்கள் வந்தன. இதன் விளைவாக நிலக்கிழார்கள், குறிப்பாக சிறுநிலக்கிழார்கள், உற்பத்தியாளர்கள் மீது விதிக்கப்படும் எந்தவிதமான கட்டாயக் கொள்முதல் முறையையும் வரவேற்கவில்லை. அதே சமயத்தில், பொது மக்கள் அரசாங்கப் பங்கீட்டுக் கடைகளை நீடிக்கும் படியும் அவைகளில் நியாயமான அளவிற்கு அரிசி வழங்கவேண்டுமென்றும் கோருகிறார்கள். இவ்விரண்டும் ஒன்றுக் கொன்று முரண்பட்டிருந்தாலும் இன்றுள்ள நிலைமை இதுதான்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றவுடன், பெரு நிலக்கிழார்களிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டிய தேவையை வலியுறுத்தியது. பத்து ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களிடம் உள்ள விற்பனைக்குரிய உபரி நெல் முழுவதையும் கொள்முதல் செய்யவேண்டுமென்று சிவில் சப்ளைஸ் பணியாளர்களுக்கு அறிவித்துள்ளது. ஒரு ஏக்கருக்கும் அதற்குக் குறைந்தும் நிலம் வைத்திருப்பவர்களிடம் கொள்முதல் செய்வதை அறவே நிறுத்தவேண்டும் என்றும் கருதப்படுகிறது என்பதை இந்த மன்றத்திற்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் சுமார் 13 லட்சம் நில உரிமையாளர்கள் கொள்முதலிலிருந்து விதிவிலக்குப் பெறுவார்கள் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் இப்போது சம்பா நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருவதால் ஒரு ஏக்கர் முதல் பத்து ஏக்கர் வரை நிலம் வைத்திருப்போர் மீது கொள்முதல் செய்யும் வகையில் கலெக்டர்கள் தயாரித்துள்ள முறையைத் திடீரென்று மாற்றுவதோ அல்லது ஒரேபடித்தான கொள்முதல் முறையைச் செயல்படுத்துவதோ குறித்து ஆலோசிக்க முடியாத நிலையில் உள்ளோம். அவ்வாறு செய்தால், ஒரே மாவட்டத்தில் ஒரே மாதிரியான நிலைமைகளில் நிலங்கள் வைத்துள்ள இருதொகுதி மக்களுக்கிடையே வேறுபாடு செய்வதாகப் புகார்கள் வருவதற்கு இடமளிக்கும். எனவே தான், அடுத்த அறுவடைக் காலத்திலிருந்து சட்டபூர்வமான கொள்முதல் முறையைச் செயல்படுத்தி, ஒருபடித்தான முறையைக் கொண்டுவர முயற்சி செய்யலாமென்று கருதப்படுகிறது. அதே சமயத்தில் ஏழை மக்களின்பால் அரசாங்கத்திற்குள்ள பொறுப்பினின்றும் ஒதுங்கி, உணவுப் பங்கீட்டுத் துறையில் தனக்குள்ள பொறுப்புகளைக் குறைத்துக் கொள்ள இது ஏற்ற தருணமன்று. ஏனெனில், ஏற்கனவே சில பற்றாக்குறைப் பகுதிகள் குடும்பக் கார்டு ஏற்பாட்டின்கீழ் வருவதால் நகரப் பகுதிகளுக்கு மட்டுமின்றி, ஏனைய பற்றாக்குறைப் பகுதிகளுக்கும் உணவு வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகவுள்ளது. கொள்முதல் முறையை நீட்டிக்கும் அதே சமயத்தில் இப்பொறுப்புக்



1967, மார்ச் 23] [திரு. கே. ஏ. மதியழகன்]

களினின்றும் ஒதுங்கி நிற்பதற்கு இது ஏற்ற காலமன்று அவ்வாறு செய்தால் தங்கள் பொறுப்புக்களை ஏற்க மறுக்கிறார்கள் என்று கூறுவதற்கு இடமளிக்கும்.

கொள்முதல் விலக்கு வரையறையை உயர்த்தி அதிக நிலம் வைத்துள்ளவர்களிடமிருந்து கொள்முதல் செய்வதை மும்முரப் படுத்துவதுடன், இதுவரை பின்பற்றி வந்த கொள்முதல் கோட்பாடுகளைத் திரும்பச் செயல்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதற்படியாக, மாநில எல்லையோரங்கள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டன. இதனால் மாநிலத்திற்குள்ளேயே அதிக நெல் புழக்கத்துக்கு வரும். மொத்த விளைச்சலில் 20 சதவிகிதம் மட்டுமே கொள்முதல் செய்வதென்று மதிப்பிட்டிருந்தாலும், அதிக நிலம் வைத்து இருக்கின்ற நிலக்கிழார்களிடம் குறிப்பாக இந்த மாருலில், முக்கியமாய் தேர்தலுக்கு முந்திய மாதங்களில் அறிவிக்கப்படாத நெல் இருப்புகள் ஏராளமாய் முடக்கி வைக்கப்பட்டுள்ளனவென்று இடைவிடாமல் தகவல்கள் கிடைத்துள்ளதால், அவற்றை வெளிக் கொணர எதிர்பாராச் சோதனைகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. இவ்வரசாங்கம், அதிகாரத்தை ஏற்றது முதல் அவ்வாறு கைப்பற்றிய நெல்லின் விவரங்களின் மொத்தத் தொகுப்பை இந்த மன்றத்திற்குச் சமர்ப்பிக்கிறேன்—

23-ம் தேதி, இன்றைய தினம் விடியகாலை 3 மணி வரையிலே இப்படி, எதிர்பாராத சோதனைகள் மூலமாக இந்த அரசாங்கம் நெல், அரிசியை வெளிக்கொண்டு வருவதற்காக எடுத்த நடவடிக்கைகளின் விவரம் பின்வருமாறு :—

செங்கற்பட்டு மாவட்டத்தில் 4856 குவிண்டால் நெல்லும், 189 குவிண்டால் அரிசியும் கொண்டு வரப்பட்டுள்ளது.

வட ஆற்காடு மாவட்டத்தில் 81 குவிண்டால் நெல்லும், 48 குவிண்டால் அரிசியும் கொண்டுவரப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டத்தில் 49.36 குவிண்டால் நெல்லும், 41.53 குவிண்டால் அரிசியும் கொண்டு வரப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் 1333.25 குவிண்டால் நெல்லும், 117.29 குவிண்டால் அரிசியும் கொண்டுவரப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் இந்தச் சோதனைகளின் மூலம் நெல் கொண்டு வரப்படவில்லை. அரிசி மட்டும் 5.6 குவிண்டால் கொண்டு வரப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 101 குவிண்டால் நெல்லும், 15.46 குவிண்டால் அரிசியும் இந்தச் சோதனைகளின் மூலம் அகப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 1223.75 குவிண்டால் நெல்லும், 2.45 குவிண்டால் அரியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1967, மார்ச் 23

சேலம் மாவட்டத்தில் 290.75 குவிண்டால் நெல்லும், 111 குவிண்டால் அரிசியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் 4.56 குவிண்டால் நெல்லும், 17 குவிண்டால் அரியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 21 குவிண்டால் நெல்லும், 156 குவிண்டால் அரியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இன்றைக்கு விடியற்காலை 3 மணி வரையில் தமிழ் நாட்டில் பல இடங்களில் நடைபெற்ற சோதனைகளின் முழு விவரத்தையும் இந்த மன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறேன். இதுவரையில் ரூ. 5,61,868 பெறுமான தானியங்கள் இந்த சோதனைகளின் மூலம் கைப்பற்றப் பட்டுள்ளன. அதோடு மொத்தத்தில் 8407.29 குவிண்டால் நெல் லும், 807.07 குவிண்டால் அரிசியும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மாவட்ட எல்லையோரங்களில் உள்ள சோதனைச் சாவடிகள், மாநில எல்லையோரங்களிலுள்ள சோதனைச் சாவடிகள் இவை அனைத்திலும் சோதனை முறைகள் இறுக்கமாக்கப்பட்டுள்ளன. சோதனை நிலையங்கள் மொத்தம் பின்வருமாறு: இன்டர் ஸ்டேட் செக் போஸ்ட்டுகள் 112 இடங்களிலும், இன்டர் டிஸ்டிரிக்ட் செக் போஸ்டுகள் 188 இடங்களிலும், இன்டர் டாலுக் செக் போஸ்டுகள் 74 இடங்களிலும், மொத்தம் 374 இடங்களில் நம்முடைய செக் போஸ்டுகள் நிறுவப்பட்டுள்ளன. மாநில எல்லையோரங்களில், மாவட்ட எல்லையோரங்களில் உள்ள சோதனைச் சாவடிகளின் விவரத்தை நான் இதன் மூலம் இந்த மன்றத்திற்கு அறிவித்துக் கொள்கிறேன். இதோடு நீரின் வழியாகப் போகும் போக்கு வரத்துக்களும் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கென தனியே நியமிக்கப்பட்டுள்ள சிவில் சப்ளைஸ் துணைக் கமிஷனர் ஒருவரின் கீழ் நிறைவேற்று ஆயம் (என்ஃபோர்ஸ் மெண்ட் செல்) ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது. வணிகர்கள், கள்ளச் சந்தைக்காரர்கள், பதுக்கல்காரர்கள் ஆகியோர்மீது கண்காணிப்பு செய்வதே இவ்வாயத்தின் முக்கிய பணியாகும். இது இயங்கத் தொடங்கிவிட்டால்; கள்ளச் சந்தைக்கான இடங்கள் மறையுமென்றும், நெல், அரிசி இவற்றில் திட்டமிட்ட கடத்தல் முயற்சிகள் கட்டுப்படுத்தப்படுமென்றும் எதிர்பார்க்கிறோம். இத் தீமையை முளையிலேயே கிள்ளியெறிய இவ்வரசாங்கம் விரும்பு கிறது. பங்கீட்டுக் கார்டுகளுக்கு மிக ஒழுங்காகவும், உறுதியாகவும் உணவு தானியங்கள் கிடைக்க வகை செய்யப்படும். அதே சமயத்தில் சட்டபூர்வமான பங்கீட்டு முறையின் கண்டிப்புகள் மேலும் திறம்பட நிறைவேற்றப்படும். சட்ட பூர்வமான பங்கீட்டு முறையைத் திறம்பட நிறைவேற்று வதற்காக, சென்னை மாநகரை வட கோட்டம், தென் கோட்டம் என இரு கோட்டங்களாகப் பிரித்து, இவ்விரண்டினையும் நிர்வகிக்க தற்போதுள்ள ஒரு துணைக் கமிஷனருக்கு மாறாக இரு துணைக் கமிஷனர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



1967, மார்ச் 23] [திரு. கே. ஏ. மதியழகன்]

புதியதோர் ஊக்கமும் சுறுசுறுப்பும் ஈந்து சிவில் சப்ளைஸ் துறை முழுவதும் ஒரு புத்துருவம் பெற்று பணியாற்றும் வகையில் நகரில் புதிய அதிகாரிகளின் அணி ஒன்று நியமிக்கப்பட்டு வருகின்றது. இது தொடக்கமேயாகும். நாளடைவில் உணவு நிர்வாகத்திற்குப் புத்துயிர் அளித்து, உணவுச் சிக்கல்களை உடனுக்குடன் திறம்பட கவனிக்கவேண்டும் என்ற உணர்வை ஊட்டும் வகையில் இது மேலும் பரிசீலிக்கப்படும்.

போலீஸ் கண்காணிப்பு ஆயம் (போலீஸ் விஜிலன்ஸ் செல்) இனிமேல் திறம்படப் பணியாற்றும். அதன் நோக்கத்தை நிறை வேற்றுவதில் அது முற்றிலும் பயன்படுத்தப்படும். இதைப் போலவே, எல்லையோரச் சோதனைச் சாவடிகளில் உள்ள பணியாளர்கள் திறம்படப் பணியாற்றும் முறையில் அவர்களைக் கண்காணிக்குமாறும், அரிசி, ஏனைய இன்றியமையாப பொருள்கள் இவற்றின் விலைவாசிகளின் ஏற்றத்தை விழிப்புடன் பார்த்து வருமாறும், விலைவாசிகளின் ஏறுமுகத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கலெக்டர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

நெல், அரிசி (இருப்புக்களை அறிவித்தல், கேட்டுப் பெறல்) ஆணையின் விதித்துறைகள் [The Madras Paddy and Rice (Declaration and Requisition of Stocks) Order] இன்னும் மும்முரமாகச் செயல்படுத்தப்படும். நாற்பது குவிண்டால் நெல் அல்லது 25 குவிண்டால் அரிசிக்கு மேல் வைத்துள்ளவர்கள், அவ்வாறு வைத் திருக்க நேர்ந்த தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் தங்களிடமுள்ள இருப்புக்களை அறிவிக்கக் கடமைப்பட்டவர்களாவர். சமூக விரோத சக்திகளுக்கும், இதுவரை சில சிறப்புரிமைகளையும் ஆதர வையும் பெற்று வந்துள்ள நிலக்கிழார் பிரிவினருக்கும் இந்த நடவடிக்கைகளால் தொல்லை சிறிது நேர்ந்தாலும், சமுதாயத்தில் ஏழை மக்களுக்கு நியாய விலைகளில் உணவு தானியங்களை வழங்க அரசாங்கத்திற்குள்ள பொறுப்பை நிறைவேற்றுவதையே நோக்க மாகக் கொண்டுள்ள இந்த நடவடிக்கைகளுக்குப் பொதுமக்கள் உளமாரத் தங்கள் ஒத்துழைப்பினைத் தருவார்கள் என்று நம்பு கிறோம்.

பொதுவாக விலைவாசி உயர்வைத் தடுப்பதற்காக, முன்னாள் அர சாங்கம் துவரம் பருப்பு, கடலை எண்ணெய் போன்ற பண்டங்களில் வாணிகம் செய்யும் வகையில் இத்துறையில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. இவ்விரு பண்டங்களின் வாணிகத்தில் அரசாங் கம் நுழைந்ததால், சிறிது காலத்திற்கு இப்பண்டங்களின் விலை வாசிகளையும் இறங்கும்படிச் செய்தது. ஆனால், இதன் விளைவு தற்காலிகமானதே. எனவே, அரசாங்கம் பெருமளவில் வாணிகத் தில் ஈடுபடுவதா அல்லது அரிசி நீங்கலாக ஏனைய எந்தப் பண்டத் திலும் வாணிகம் செய்வதை அறவே அகற்றுவதா—இந்த இரண்டில் எவ்வழியைப் பின்பற்றுவது என்கிற கேள்வி இப்போது அரசாங் கத்தின் நாட்டத்தில் உள்ளது. இது குறித்து விரைவில் முடிவு செய்யப்படும்.

### 3. வாக்கெடுப்பு—நடைமுறை விளக்கம்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : அடுத்தபடியாக, மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு என்ற அலுவலுக்குப் போகும் முன்பு, இப்போது வாக்கெடுப்பு எப்படி நடத்துவது என்பதைப் பற்றி என்னுடைய தீர்ப்பு ஒன்றை முதலிலே அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த அவையில் வாக்கெடுப்பு நடத்துகிறபோது என்னுடைய முடிவை மூன்று முறைகள் அறிவிக்க வேண்டுமென்று ஒரு ஒழுங்குப் பிரச்னையை மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் எழுப்பினார்கள். வாக்கெடுப்புக்கு என்ன நடைமுறை என்பது நமது சட்டப் பேரவை விதிகளில் 71-வது விதியில் கூறப்பட்டிருக்கிறது

'The Speaker shall put the question to the vote of the House and shall decide it by voices. If the opinion of the Speaker is challenged, he shall take the votes of the House by division என்று சுருக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதை விரிவாகத் தெளிவுபடுத்தியிருக்கிறது : 17-ம் பதிப்பு, 408-ம் பக்கத்தில். அதில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்றால், முதலில்—

The Speaker, rising from the chair, states or reads the question to the House, beginning with "The question is . . .". The Speaker takes the sense of the House by desiring that "As many as are of that opinion say, 'Aye'" and "As many as are of the contrary opinion say, 'No.'". Then the Speaker expresses his opinion thus. "I think the 'ayes' have it" or "I think the 'noes' have it." If the House is silent, the question is said to be agreed to. If any party challenges the opinion, the Speaker clears the lobby and starts the process of counting which is termed a division.

முடிவை ஒரு முறை அறிவித்துவிட்ட பிறகு அதை மாற்றுவதற்குப் பேரவைத்தலைவருக்குக்கூட அதிகாரம் கிடையாது. எனவே, அதையே மறுமுறையும் கூறவேண்டும் என்பது பொருள் அற்றதாக இருக்கிறது. நமது நடைமுறைகளில், இங்கிலாந்தில் உள்ள பாராளுமன்ற நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்பது அரசியல் சட்டப்படி அரசியல் சட்டத்தின் 194-வது விதியின்படி—என்னுடைய கடமையாக இருக்கிறது. இன்று தமிழ்நாட்டில் மேலவையிலும் நடந்து வருகிற நடைமுறை இப்போது நான் கூறியபடி தான் இருக்கிறது. ஒன்று மட்டும் உறுப்பினர்களுக்கு வாக்குறுதி சொல்கிறேன். உறுப்பினர்கள், வாக்குகளை எண்ணிப் பார்த்து முடிவு கூறவேண்டுமென்று விரும்பினால், அதற்கு முழுவாய்ப்பு கொடுக்கப்படும். இப்போது அடுத்த அலுவல்—மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.



### 4. ஒழுங்குப் பிரச்சினை.

**சட்டப் பேரவை உறுப்பினர் அல்லாத நிதி இலாக்கா பொறுப்பை வகித்தல்.**

* **திரு. பி. ஜி. கருத்திருமன்** : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். சபாநாயகர் அவர்களே, நான் கொண்டுவரும் ஒழுங்குப் பிரச்னை என்னவென்றால், இப்போது நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் திரு. அண்ணாதுரை அவர்கள் மந்திரிசபை அமைத்துள்ளார்கள். நிதி இலாகாவைப் பொறுத்தமட்டிலும் நம் மரபு என்னவென்றால், இந்தச் சபையைச் சேர்ந்த ஒரு உருப்பினர்தான் அந்தப் பொறுப்பை ஏற்கவேண்டும் என்பது. பாராளுமன்றத்திலும் சரி, இங்கேயும் சரி, அந்த மரபு காக்கப்பட்டு வருகிறது. ஆனால், கான்ஸ்ட்டிட்யூஷன் பிரகாரம் யார் வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கப்படாமல் ஆறு மாதங்கள் வரையில் அமைச்சராக இருக்கலாம் என்ற மரபை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நேற்று பத்திரிகைகள் வாயிலாக முதலமைச்சர் அவர்கள் மேல்சபை உறுப்பினராக ஆகின்றார் என்று அறிந்து சந்தோஷப்படுகிறேன். இந்த மரபு காக்கப்பட வேண்டும் என்று 1952-ம் வருஷம் திரு. ராஜாஜி அவர்கள் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது—தேர்ந்தெடுக்கப்பட்டுக் கூட மேல்சபைக்கு வராமல் நியமனம் மூலம் மேல்சபையில் இருந்தார் என்று சொல்லலாம்—நிதிப் பொறுப்பு இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடம் கொடுக்கப்பட்டது. பாராளுமன்றத்தில்கூட, திருமதி இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு மறுபடியும் பொதுத் தேர்தலுக்கு நிற்கவேண்டும் என்று நின்று வந்திருக்கிறார். இப்போது முதலமைச்சர் அவர்கள் தேர்தலுக்கு நின்றால் நிச்சயம் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவார் என்பதில் சந்தேகம் கிடையாது. முதலமைச்சர் அவர்களுக்கு மக்கள் ஆதரவு இருக்கிறது என்பதில் ஆட்சேபம் கிடையாது. திரு. காமராஜ் அவர்கள் வந்தபோது . . .

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்** : மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒழுங்குப் பிரச்னை இருந்தால் சொல்லவேண்டும். ஒழுங்குப் பிரச்னை என்பது ஒன்று அவையின் நடைமுறைபற்றி இருக்க வேண்டும்; இல்லையென்றால், அவையின் விதிகளைப் பற்றி இருக்க வேண்டும். இரண்டும் இல்லாதவற்றைப் பற்றிப்பேசுவதைத் தங்கள் உரையின் போது பேசவேண்டுமே தவிர, ஒழுங்குப் பிரச்னையைக் கொண்டு வந்து பேசுவது சரியல்ல. ஒழுங்குப் பிரச்சினை பற்றிய நமது விதிகள் மிக மிகத் தெளிவாக இருக்கின்றன. ஒன்று அவையின் அன்றாட நடவடிக்கைகள் பற்றி இருக்கவேண்டும் அல்லது அவையின் விதிகளைப் பற்றி இருக்கவேண்டும். இரண்டையும் பற்றி இல்லாத பிரச்னைகள் ஒழுங்குப் பிரச்னைகளாக ஆகமாட்டா. அவைகளைப்பற்றி கவர்னர் உரையின்மீது பேசும்போது தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[1967, மார்ச் 23

### 5. 1967-68-ம் ஆண்டிற்கான முன் மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

### A. ரெவின்யூக் கணக்கில் செலவு.

### கோரிக்கை எண் I—நிலவரித் துறை.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** அடுத்து, மானியக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு. முதலிலேயே உறுப்பினர்களுக்கு ஒன்று தெரிவித்துவிடக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது பேரவையின் 155-வது விதியின்படி, இன்று ஒரு மணி அளவில், சரியாக ஒரு மணிக்கு, ஒரு நிமிடம் முன்னும் இல்லாமல் ஒரு நிமிடம் பின்னும் இல்லாமல், அந்த நேரத்தில் விவாதம் முடிந்திருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, மானியக் கோரிக்கைகள் அத்தனையும் ஓட்டுக்கு விடப்படவேண்டும். ஆகவே, இந்த மானியக் கோரிக்கைகளைப் பற்றி விவாதிக்க ஒரு மணி வரையில் அவகாசம் இருக்கிறது. இதிலே 47 கோரிக்கைகள் இருக்கின்றன; அவைகளுக்கு வெட்டுத் தீர்மானங்களும் 47 இருக்கின்றன. ஆகவே குறிப்பிட்ட இரண்டொரு கோரிக்கைகளைப் பற்றி அதிக நேரம் விவாதித்து, மற்ற கோரிக்கைகள்மீது உள்ள வெட்டுத் தீர்மானங்களை விவாதம் இல்லாமலேயே ஓட்டுக்கு விடவேண்டும் என்ற நிலையில் இருக்கிறேன்; அப்படியே செய்வேன் என்று அறிவிக்கிறேன். முதலாவது கோரிக்கை, நிலவரித் துறை—இதைப் பற்றி விவாதம் அரை மணி நேரம் நடைபெறும். அடுத்து, பதின்மூன்றுவது கோரிக்கை, கல்வி—அதைப் பற்றி விவாதம் அரை மணி நடைபெறும். அடுத்தாற்போல் பதினாறுவது கோரிக்கை, உணவு—வேளாண்மைத் துறை—அதைப் பற்றி அரை மணி நேரம் விவாதம் நடைபெறும். இதற்குத்தான் நேரம் இருக்கிறது என்று நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். இப்போது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் நிலவரித் துறை என்ற கோரிக்கையின் கீழ் 43,02,000 ரூபாய் அரசாங்கத்திற்கு வழங்கவேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வருவார்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரைப்படி, கீழ்க் கண்ட கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன்.—

"கோரிக்கை எண் —நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் 43,02,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்".

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் அவைமுன் வைக்கப்படுகிறது. இதற்கு வெட்டுத் தீர்மானங்கள் கொண்டுவர அனுமதிக்கிறேன்.

**Sri R. PONNAPPA NADAR:** Sir, I move—

"That the allotment of Rs. 43,02,000 under Demand No. I. Land Revenue Department, be reduced by Rs. 100'—to discuss about the failure of the Government to make provision for the total abolition of basic land revenue in our State.



1967, மார்ச் 23]

**திரு. ஆ. கு. சுப்பையா:** ஐயா, நிலவரி அமைப்புகளை மாற்றியமைப்பது குறித்து வந்துள்ள தனி அதிகாரி அவர்களின் அறிக்கையைச் சபை முன்பு வைத்து விவாதிக்க, "கோரிக்கை எண் I நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற 43,02,000 ரூபாயில் 100 ரூபாய் குறைக்கவேண்டும்" என்ற என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர் வெட்டுத் தீர்மானத்தை முன்மொழியும்போது அதை ஒருவர் ஆமோதிக்கவேண்டாமா என்று அறிய விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** வெட்டுத் தீர்மானங்களை ஆமோதிக்கவேண்டியதில்லை என்று நமது பேரவையின் விதிகளில் கூறப்பட்டுள்ளது. அடுத்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், நிலவரியைத் தள்ளுபடி செய்வதுபற்றி விவாதிக்க "கோரிக்கை எண் I—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற 43,02,000 ரூபாயில் 100 ரூபாய் குறைக்கவேண்டும்" என்ற என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** ஐயா, நிலவரிமுறையை மாற்றி அமைத்து சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு அறவே நிலவரியை ரத்து செய்வது குறித்து விவாதிக்க, "கோரிக்கை எண் I—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற 43,02,000 ரூபாயில் 100 ரூபாய் குறைக்கவேண்டும்" என்ற என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

கோவில்பட்டி தாலுகாவில், ஒத்திவைக்கப்பட்ட முன் பசலிகளுக்குரிய வரி பாக்கிகளை ரத்து செய்யவேண்டுமென்று கோர, மு.ப. 9-30
"கோரிக்கை எண் I—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற 43,02,000 ரூபாயில் 100 ரூபாய் குறைக்க வேண்டும்" என்ற என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** இப்பொழுது, மூழு முதல் தீர்மானமும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்தில் இருக்கின்றன. வெட்டுத் தீர்மானங்களை வழிமொழிய வேண்டிய அவசியமில்லை என்பது நம்முடைய பேரவையின் விதிகளில் 69-வது விதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்பொழுது மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசுவார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** சார், இந்த அவையின்முன் வைக்கப்பட்டிருக்கும் இந்த வெட்டுத் தீர்மானத்தைப் பற்றி எங்கள் கட்சியின் சார்பில் கூறும்போது, கடந்த தின விவாதத்தின் போது முதல் அமைச்சர் எடுத்துக் கூறினார்கள்—நில வரியை

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1967 மார்ச் 23

ரத்து செய்ய வேண்டும் என்று முன்னாள் அமைச்சரவை தீர்மானித்து, முன்னாள் முதலமைச்சர் அறிக்கை ஒன்றை வைத்த தாகவும், அதோடு ஸ்டேட் ட்ரேடிங்கை சர்க்கார் எடுக்க வேண்டும் என்று தொகுத்து வைத்திருப்பதாகவும் கூறினார்கள். இந்தத் தீர்மானம் மிக முக்கியமான தீர்மானம் என்பதை தங்களு டைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பல்லாண்டு காலமாக விவசாயிகள் கடனிலேயே பிறந்து, கடனிலேயே வளர்ந்து, கடனி லேயே மாண்டுகொண்டிருக்கும் சூழ்நிலைதான் இந்திய நாட்டிலே யே இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமை மாறுவதற்கு நில வரியை ரத்து செய்தாக வேண்டும். இது பற்றி காங்கிரஸ் மகாசபைக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு காந்திஜியின் காலந் தொட்டே தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்தியாவில், இந்த நில வரியை ரத்து செய்தால்தான் விவசாயிகளுக்கு நல்ல வழி பிறக்கும். இந்த நில வரி அநியாயமானது என்பதை முன்பிருந்த அரசாங்கம் கண்டு கொண்டிருந்தது. அந்தக் காரணத்தினால், அது சில நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டது. சற்று காலம் தாழ்ந்து வந்தது என்கின்ற ஆட்சேபணையை பல உறுப்பினர் களும் எடுத்துக் காட்டினார்கள். நில வரியைப் பொருத்தவரையில், வருமான அடிப்படையில் இந்த வரியை மாற்றி அமைப்பது என்பது யோசிக்க வேண்டிய விஷயம். அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் முறையிலா அல்லது வேறு முறையிலா என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்ப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். நில வரியை மாற்றுவது ஒன்று, நீக்கம் செய்வது வேறு ஒன்று என்று இருந் தாலும், இதை என்ன முறையில் அமல்படுத்த வேண்டும் என்ப தைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சட்டபூர்வமாகச் செய்ய வேண்டும் என்றால், அதைப் பொறுத்தவரையில், உன்னத அதிகாரி யின் அறிக்கை அரசாங்கத்திற்குக் கொடுத்திருப்பதாகவும், அதை ... படித்துக்கொண்டிருப்பதாகவும், இறுதி முடிவு எடுக்க வில்லை என்றும் குறிப்பிடப்பட்டது. விரைவில் படித்து அதற்கு வேண்டிய சட்டத்தை அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் கொண்டு வருவார்கள் என்று பொதுமக்களும் ஆவலோடு எதிர்பார்க் கிறார்கள், நாங்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நிலவரி நீக்கமானது, காலத்தில் செய்யப்பட்டால் பொது மக்களுக்கு செய்கின்ற பெரும் பேருதவியாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்; சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். ஆகவே, அதற்கான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கிறேன். குறிப்பாக விவசாயிகளுக்கு, அவர்களுடைய உற்பத்தியைப் பெருக்குவதற்கு இந்த நில வரி ரத்து சிறந்த வழி முறையாக இருக்கும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். அதேபோலத்தான் விற்பனை வரியும். உணவுப் பண்டங்கள் மீது இருந்த வரியை, விற்பனை வரியை எப்படி ரத்து செய்தார்களோ அதேமாதிரி இந்த நில வரியையும் உடனடியாக ரத்து செய்ய வேண்டும், அதற்கான சட்டம் அடுத்த சட்டப் பேரவைக் கூட்டத்தில் கட்டாயம் கொண்டு வரப் படும் என்று எதிர்பார்த்து என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.



1967, மார்ச் 23]

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : இப்பொழுது பெருமதிப்பிற் குரிய உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் பேசுவார்கள்.

*** திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, இப்பொழுது
நண்பர் பொன்னப்ப நாடார் அவர்கள் நிலவரி சம்பந்தப்பட்ட
வெட்டுப் பிரேரணைமீது பேசும்போது, நேற்றையதினம் எந்தக்
கருத்து ஆளும் தரப்பிலிருந்து சொல்லப்பட்டு, பதில் கொடுக்கப்
...டதோ அதே கருத்தை வெட்டுப் பிரேரணையாகத் தந்து பேசி
...நக்கிறார்கள். கொள்கையளவில் நில வரியை நீக்குவது சம்பந்த
...க ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் எந்தவிதமான
...த்து வேற்றுமையும் இல்லை. ஆனால், அவர்கள் தரப்பிலிருந்து
...ட்டுப் பிரேரணை மீது பேசும்போது அது சம்பந்தமாக ஆக்க
...வமான யோசனைகளை எடுத்துச் சொல்வார்கள் அவர்கள்
...ர்ந்த வழக்கறிஞர், ஆகவே, சட்டபூர்வமான யோசனைகளைக்
...டுப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால், அரைத்த
...வையே அரைப்பது போல, கவர்னர் உரை மீது நடந்த
வாதத்தின்போது சொன்னது போலவே, சர்க்கார் தவறி
...ட்டது என்று குற்றம் சாட்டும் மனப்பான்மையை வெளிப்
...த்திய கருத்து இருந்தது குறித்து வருத்தப்படுகிறேன்.
...ாள்கையளவில் நிலவரி குறைப்பு பற்றி நாம்
...ல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். முன்பு இருந்த
...ரசு என்னென்ன செய்திருக்கிறது என்பதைப் பற்றியும்
...றிவோம். 1962-ல் காங்கிரஸ், ஆட்சிபீடத்தில் ஏறிய காலத்தில்
...மார் 7 கோடி ரூபாய் நில வருமானமாக இருந்தது. ஆனால்,
...ந்தாண்டு காலத்தில் 1966வரை காங்கிரஸ் அரசு நிலவரித்
...றையில் என்னென்ன வரிகள் போட்டிருக்கிறது என்பதைப்
...ார்க்க வேண்டும். சர்சார்ஜ் சர்சார்ஜ் என்று சொல்லி, 7 கோடி
...லிருந்து இன்றைக்கு 12 கோடியாக உயர்த்தியிருக்கிறது
...என்பதை தமிழ் நாட்டிலுள்ள எந்த விவசாயியும் மறந்துவிட
...டாது என்று விவாதிக்கப்பட்டதும், காங்கிரஸ் ஆளும் கட்சித்
...ட்டத்திலேயே பிரச்சினைகள் கிளம்பி, சர்சார்ஜை வைக்கக்
...டாது என்று விவாதிக்கப்பட்டதும், காங்கிரஸ் ஆளும் கட்சித்
...லைவர் அதற்கு வரிபோடுவது நியாயம்தான், ஏன் வரி போடு
...றோம் தெரியுமா, விவசாயிகளுக்கு பள்ளிக்கூடங்கள் கட்டிக்
...கொடுக்கிறோம், ஆஸ்பத்திரிகள் கட்டி வைக்கிறோம், இதற்கெல்லாம்
...ணம் வேண்டாமா, அதனால்தான் வரி போடுகிறோம் என்று
...சொன்னார்கள். இதே மன்றத்திலே ஆளும் கட்சித் தலைவர்
...விவசாயிகளுக்கு வரி போடுவது எப்படி நியாயமானது என்று
...சொன்னது கவனத்தில் இருக்கிறது. அது ஒருபுறம் இருந்த
...போதிலும், இன்றையதினம் நாங்கள் கொள்கை அளவில் நிலவரி
...குறைப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இப்போதுள்ள எதிர்க்
...கட்சிகளும் ஏற்றுக்கொள்ளுகின்றன என்பதைக் கண்டு மிக மிக
...மகிழ்ச்சி அடைகிறேன். நம்முடைய நிதி நிலை அறிக்கையிலேயே
நம்முடைய முதல் அமைச்சரவர்கள் அதைப்பற்றி விளக்கமாக
...எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். " நில வரியின் எதிர்காலத்தைக்
குறித்து அரசாங்கம் எடுக்கும் முடிவுகள் சட்டப் பேரவையின்

### (இ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி உட்கோட்டத்தில் கட்டாய நெல் கொள்முதல்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : அடுத்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவர அனுமதி கோரி கடிதம் எழுதியுள்ளார். அந்தத் தீர்மானத்தின் வாசகம் பின்வருமாறு :—

"மதுரை மாவட்டம், உசிலம்பட்டி உட்கோட்டத்தில் கட்டாய நெல் கொள்முதல் செய்யும் பொதுவருவாய்த் துறை அதிகாரிகள் மக்களை மிரட்டி, மற்றும் பல துன்பங்களை இழைத்து சிறு விவசாயி களிடம் அவர்கள் சொந்த உபயோகத்திற்கு வைத்திருக்கும் தானியங்களை பூராவும் எடுத்துச் செல்கிறார்கள். அதனால் மக்கள் பீதியுற்று, அதிகாரிகளின் அடக்குமுறைக்கும், பயமுறுத்தலுக்கும் பயந்து, தங்கள் ஊர்களை விட்டு ஓடும் நிலையில் உள்ளனர். ஆகவே மக்கள் அமைதியாக வாழும் நிலை அங்கு சீர்குலைந்துள்ளது" என்று ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கோரியுள்ளார்.

இந்தத் தீர்மானத்தில் கண்டுள்ள பிரச்சினை அரசினரின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டது என்பதல்லாமல் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பு வேறு இருக்கும் போது அனுமதி கொடுக்க முடியாது. இதுபற்றிப் பேசுவதற்கு, இன்னும் கவர்னர் உரையின் மீதுள்ள விவாதம் மூன்று நாட்கள் இருக்கின்றன. மேலும், இன்டரீம் பட்ஜட், இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின் மீதுள்ள விவாதமும் இருக்கிறது. இந்தக் காரணங்களினால் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு நான் அனுமதி கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (உ) கோவைப் பஞ்சாலைகளில் கதவடைப்பும், தொழிலாளரின் வேலையின்மையும்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : அடுத்து, மற்றொரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. எம். பூபதி அவர்கள் கொண்டுவருவதற்கு பேரவைத்தலைவரின் அனுமதியைக் கோரியுள்ளார்கள். அதன் வாசகம் பின் வருமாறு :

"கோவையில் பல மாதங்களாக மூடிக்கிடக்கும் (1) கம் போடியா, (2) ஜனார்த்தன, (3) காளீஸ்வரா, (4) சோமசுந்திரா, (5) வாசுதேவா, (6) ஸ்ரீரங்கவிலாஸ் ஆகிய பஞ்சாலைகளைக் கதவடைப்புச் செய்துள்ளதால் 7,000 தொழிலாளர்கள் வேலை யில்லாமல் பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பட்டினி கிடந்துவரும் விஷயத்தைப்பற்றி விவாதிக்கவும், 6,000-க்கு மேல் வேலை செய்யும் டெக்ஸ்டூல் தொழிற்சாலையில் மூன்று மாத காலமாக சம்பளம் கொடுக்காததால், தொழிலாளர் வேலை நிறுத்தம் நடந்து வருவதைப்பற்றி விவாதிக்கவும்" என்ற தீர்மானத்திற்கு அனுமதி கோரியுள்ளார்.

இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் என்று சொல்லக் கூடிய தொழில் விவகாரச் சட்டத்தால் தீர்க்கப்படக் கூடிய



காரியங்களுக்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரக் கூடாது என்பது 'மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டீஸ்' என்ற புத்தகத் தில் 368-வது பக்கத்தில் கூறியிருக்கிறது. இதை உறுப்பினர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதோடு இதுபற்றிய விவாதத்திற்கு இன்னும் கவர்னர் உரை மீது மூன்று நாட்கள் விவாதம் நடக்க இருக்கிற காரணத்தினால் மதிப் பிற்குரிய உறுப்பினர் அதன் மீது பேசுவதற்கு அவகாசம் இருக் கும் என்று கருதி இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வர நான் அனுமதி கொடுக்கவில்லை என்பதை இந்த அவைக்குத் தெரி வித்துக் கொள்கிறேன்.

### 2. அவசர முக்கியப் பிரச்சினை குறித்து கவன ஈர்ப்பு—விலைவாசி ஏற்றம், கள்ளக் கடத்தல், பதுக்கல் ஆகியவற்றைத் தடுத்தல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்** : இந்தப் பேரவையின் 41-வது விதிக்கிணங்க அவசரமும், முக்கியமான பிரச்னை ஒன்றை மதிப்பிற்குரிய உறுப்பினர் மா. இராசாங்கம் அவர்கள் மதிப்பிற் குரிய உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**திரு. மா. இராசாங்கம்** : மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர் களே, உணவு நெருக்கடியை தீர்ப்பது, விலைவாசியைக் கட்டுப் படுத்துவது, உணவு, உரப் பொருள்களின் கள்ளக் கடத்தல், பதுக் கல் ஆகியவற்றைத் தடுப்பது குறித்து, அரசாங்கம் தமிழகம் முழு வதும் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* **மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்** : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, முந்திய அரசாங்கத்தின் உணவுக் கொள்கையைக் குறித்து இவ்வரசாங்கம் விழிப்புடன் மறு ஆய்வு செய்துள்ளது. 1964 முதல் உணவு தானியக் கொள்முதல், வழங்கல் முறை குறித்துப் பின்பற்றிய கொள்கையில் உற்பத்தியாளர்கள் மீது கருத்தளவிலேயே கொள்முதல் விதிக்கப்பட்டது. அவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட முடை இருப்புகளை Buffer stocks கொண்டு குறிப்பிட்ட சில பற்றாக்குறைப் பகுதிகளுக்கு உணவு வழங்கும் பொறுப்பு மேற்கொள்ளப்பட்டது. சட்டபூர்வமான பங்கீட்டுப் பகுதிகளிலும், உரிய முறையில் இல்லாத பங்கீட்டுப் பகுதிகளிலும் எளிதில் அல்லலுக்குட்படும் நிலையில் உள்ள பொது மக்கள் அனைவருடைய தேவைகளையும் நிறைவேற்றும்பொருட்டு நாளடைவில் மிக மும்முரமாகக் கொள்முதல் செய்யும் வகையில் இக்கொள்கை படிப்படியாக உருவாக்கப்பட்டது. இதனால் அர சாங்கக் கட்டுப்பாட்டுக் கடைகளின் வாயிலாக உணவு தானியங் களை வழங்க ஆண்டுதோறும் சுமார் 6½ லட்சம் முதல் 7 லட்சம் டன் அரிசி வரை தேவைப்படுகிறது. ஒரே மண்டல அமைப்பிற் குப் பின்னர், இத்தேவைகளை நிறைவேற்றுவதோடு, இந்திய அரசாங்கத்தோடு ஒப்புக்கொண்டதற்கிணங்க, அரிசி விளைச்சல் குறைந்த கேரளா, மைசூர் மாநிலங்களுக்கு ஒரு லட்சம் டன்

[திரு. இராம. அரங்கண்ணல்] [1967 மார்ச் 23

முன் வைக்கவிருக்கும் முறையான வரவு-செலவுத் திட்டத்தில் மட்டுமே காணப்படும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, நிலவரியை நீக்குவது சம்பந்தமாக பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஏதோ இரவிலே யோசித்து, காலையிலே உத்தரவு போடுவது என்பதான பிரச்சினை அல்ல அது. அது சம்பந்தமாக பலருடைய ஆலோசனைகளையும் பெறவேண்டியிருக்கிறது. ஆலோசனைகள் இருப்பவர்கள் அத்தகைய ஆலோசனைகளைக் கொடுக்கலாம். எதிர்க்கட்சியில் இருப்பவர்களும் இவைகளைப்பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனைகள் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரசாங்கம் கவனமாக யோசித்து, பஞ்சாயத்து போர்டுகளோடு இணைக்கலாமா என்கின்ற பிரச்சினையும் இருக்கிறது. அரசாங்கம் ஒரு முடிவு எடுக்கிறது என்றால், அது ஒரு மாதத்திற்கு, இரண்டு அல்லது மூன்று மாதத்திற்கு பொருந்தக்கூடிய முடிவாக இல்லாமல் நீண்ட காலத்திற்கு மக்களுக்கு பயன்படும் முறையில் செய்ய வேண்டும். எந்தக் காரியத்தைச் செய்தாலும், ஆழ்ந்து சிந்தித்து நல்ல காரியங்களை பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் செய்வார்கள் என்று சொல்லி, வெட்டுப் பிரேரணையை நண்பர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் வலியுறுத்த மாட்டார்கள் என்று கருதி, கொள்கையளவில் அபிப்பிராயபேதம் இல்லை என்பதைக் குறிப்பிட்டு, என் உரையை முடிக்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அடுத்து, மதிப்பிற்குரிய திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் உரையாற்றுவார்கள்.

* திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : பெருமதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நிலவரியை எடுக்க வேண்டும் என்கிற பிரச்சினையைப் பொருத்தமட்டில் பலவிதமான கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. நீண்ட நாட்களாக காங்கிரஸ் ஆட்சியாளர்கள் நிலவரியை எடுக்கிறோம், அதோடு தானியக் கொள்முதலையும் அரசாங்கமே எடுக்கும் என்றும் சொன்னார்கள். அந்தத் துறையில் ஏற்படும் நஷ்டத்தை ஈடுசெய்வதற்கு தானிய வியாபாரத்தை எடுக்கப் போவதானால், நிலவரியை இரண்டு மூன்று முறை அதிகப்படுத்தினாலும் கூட பரவாயில்லை. அதைக் காட்டிலும் பல மடங்கு கஷ்டங்களும் நஷ்டங்களும் நிச்சயமாகக் குடியானவர்களுக்கு வரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

சாதாரணமாக இப்பொழுது கொள்முதல் செய்கின்ற முறையிலே, ஒரு மூட்டைக்குப் பதினைந்து ரூபாயிலிருந்து இருபது, இருபத்தைந்து ரூபாய் வரை கொள்முதல் விலைக்கும் விற்பனை விலைக்கும் மத்தியிலே இருக்கிறது. விற்பனை செய்கின்ற அத்தனை தானியங்களையும் அரசாங்கமே எடுத்துக் கொள்ளுவது என்றால், இந்த நில வரியைப் போல் நூறு மடங்கு அவன் கொடுக்க வேண்டி வரும். ஆகையால், நிச்சயமாக நில வரியை எடுத்து விட்டு நம்முடைய அரசாங்கத்தினுடைய பொருளாதார நிலையை வேறு வகையிலே சரிக்கட்ட வகை இருந்தாலல்லது, இந்தத் துறையிலே நில வரியை எடுப்பது மிகவும் தவறு என்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.



1967 மார்ச் 23] [திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்]

மேலும், ஐந்து ஏக்கர் வரையுள்ள சிறு நிலச்சுவான்தார்களுக்கு மாத்திரம் விதி விலக்குக் கொடுக்கவேண்டும் என்ற பிரச்சினையும் வருகிறது. சிறு நிலச்சுவாந்தார்கள் என்று வைத்துக்கொண்டால் இன்று நம் நாட்டில் இருக்கின்ற நிலத்திலே சுமார் 80 சத விகித நிலங்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டியிருக்கிறது. பாக்கியுள்ள 20 சத விகித நிலத்திற்காக இவ்வளவு பெரிய அரசாங்க இலாக்காவை வைத்துக் கொண்டிருப்பதனால், நிலவரி வருவாயைக் காட்டிலும் பல மடங்கு அதிகச் செலவு ஏற்படும். ஆகையால், மிக மிகச் சிந்தித்து ஆலோசித்து, இந்தக் கருத்துக்களையெல்லாம் கவனத்தில் கொண்டு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அடுத்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் திருமதி ஜானகி அம்மாள் அவர்கள் பேசுவார்கள்.

* திருமதி கே. பி. ஜானகி அம்மாள் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த நிலவரி சம்பந்தமாக தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய சில விஷயங்களைப்பற்றிச் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம் என்ற நோக்கத்தில் சில வார்த்தைகள் கூறலாம் என்று நான் நினைக்கிறேன்.

பொதுவாக, நிலத்திற்கு வரி விதிப்பது என்பது அந்த நிலத்தினுடைய தரத்தைப் பொருத்த விஷயமாகும். பல ஆண்டுகளுக்கு முன்னால் நிலத்தினுடைய தரத்தைப் பிரிக்கும்போது, எம்மாதிரியான நிலம் என்று மண் வளத்தை எல்லாம் பரிசோதனை செய்து தரம் பிரிக்கப்பட்டிருப்பதைத் தவிர, சமீப காலத்தில் அதைப் பற்றி எந்தவிதமான முயற்சியும் கிடையாது. ஆகவே, முதலில் நிலத்தின் தரத்தைச் சரியாகக் கணித்து, மதிப்பீடு செய்து, அதன் பிறகு நிலத்திற்குத் தீர்வை விதிப்பது என்ற முறையை அரசாங்கம் கையாளுவது உதவியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதற்கடுத்தபடியாக, நிலத்திற்குத் தீர்வை விதிப்பது என்பதில் கென்று சர்க்கார் நிலவரி முழுவதையும் ரத்து செய்வது என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. ஆனால், அது சட்டபூர்வமாக அமலுக்கு வரவில்லை என்பது தெரியும். அம்மாதிரி விதிக்கக் கூடிய நேரத்தில், நிலத்தின் தரத்திற்குத் தக்கபடி நில வரி, அதைபடுத்து தண்ணீர்த் தீர்வை, செஸ், சர்சார்ஜ், அபிவிருத்தி வரி இப்படியெல்லாம் ஒரே நிலத்தின்மீது பலவிதமான வரி விதிப்புகள் இருக்கின்றன. அதில் எந்த வரியை அந்த சர்க்கார் ரத்து செய்வது என்று முடிவு செய்தது என்பது தெரியாது. இந்த நிலையில் நான் என்ன அபிப்பிராயப்படுகிறேன் என்றால், இந்தத் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஏழை எளிய விவசாயிகளுடைய வாழ்வு வளம் பெறவேண்டும் என்ற முறையில், ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கும் விவசாயிகளைப் பொருத்த சகல விதமான வரிகளையும் ரத்து செய்யவேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கு இந்த நாட்டின் உணவு உற்பத்தியில் அக்கறையும், அபிவிருத்தி ... அபேப்படியான விசேஷப் பொறுப்பும் ஏற்பட முடியும். ஆகவே,

[திருமதி கே. பி. ஜானகியம்மாள்] [1967 மார்ச் 23

தண்ணீர்த் தீர்வை உட்பட எல்லாவிதமான வரிகளையும் ஐந்து ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்திருப்பவர்களுக்கு வஜா செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஐந்து ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கக்கூடிய விவசாயிகளுடைய நிலத்தைப் பொருத்த வரையில், அவர்களுடைய நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானத்திற்குத் தகுந்த அளவிற்கு உயர்வு வரி விதிப்பது என்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கிறவர்களுக்குச் சகலவிதமான வரிகளையும் ரத்து செய்வதன் காரணமாக துண்டு விழக்கூடிய நிலைமைகளைக்கூட ஐந்து ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களுக்கு, அவர்களுடைய வருமானத்திற்குத் தகுந்தமாதிரி உயர்வு வரி போடுவதன் மூலமாகச் சரிக்கட்டிக் கொள்ளலாம். அதனால், அரசாங்கத்தின் வருமானமும் பாதிக்கப்படமாட்டாது: வருமானத்திற்குத் தகுந்த உயர்வு வரி என்ற அடிப்படையில் பெரு நிலச்சுவாந்தார்களும் பாதிக்கப்படமாட்டார்கள். அம்மாதிரி எந்த மக்களையும் பாதிக்காதமுறையில் வரி விகிதம் இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

விவசாயிகளைப் பாதிக்கக்கூடிய சிறு விஷயம் ஒன்று இருக்கிறது. அதைச் சர்க்கார் இதுவரையில் கவனிக்காமலிருக்கிறது. நான் குறிப்பிடப்போவது ஒரு சிறிய விஷயமாக இருந்தாலும், அதனால் பெரிய பாதிப்பு விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதுதான் கூட்டுப் பட்டா முறை இன்னும் இருந்து கொண்டிருப்பது. ஒரு கிராமத்தில் 100 குடும்பங்கள் இருக்கின்றன என்றால் அந்த நூறு குடும்பங்களுக்கும் சேர்ந்து பதினைந்து பட்டாக்கள்தான் இருக்கும். ஒரு குடும்பத் தலைவர் இறந்து பதினைந்து, இருபது ஆண்டுகள் ஆகியிருந்தாலுங்கூட, அவனுடைய பெயரில் இருக்கக்கூடிய பட்டாவை மகனுடைய பெயரில் மாற்றுவது கிடையாது. அதன் காரணமாக, இன்றைக்குச் சர்க்காரால் கொடுக்கக்கூடிய கூட்டுறவு சொஸைட்டி கடனோ, மாடு வாங்குவதற்கான கடனோ அல்லது நில அபிவிருத்திக்காகக் கொடுக்கக்கூடிய கடனோ, மற்ற எந்தவிதமான சலுகையோ, கூட்டுப் பட்டாவில் இருக்கக்கூடிய விவசாயி அனுபவிக்க முடிவதே இல்லை. அப்படிப்பட்ட நிலைமைகாரணமாக, பல்லாண்டுகளாக கூட்டுப் பட்டாவாக இருக்கக்கூடிய முறையில், சிறு விவசாயிகள் மிகப் பெரிய அளவு பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, உடனடியாக சர்க்கார் மறு பரிசீலனை செய்து, ஆங்காங்கு இருக்கக்கூடிய ரெவினியூ அதிகாரிகளின் மூலம், எந்த எந்தக் கிராமங்களில் கூட்டுப் பட்டாக்கள் இருக்கின்றனவோ, எந்த எந்தக் கூட்டுப் பட்டாக்களைத் தனிப் பட்டாக்களாகப் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்று மனுச் செய்துகொள்ளுகிறார்களோ. அங்கெல்லாம் ரெவினியூ அதிகாரிகள் நியாயமான முறையில் கூட்டுப் பட்டாக்களைத் தனிப் பட்டாக்களாக மாற்றிக் கொடுப்பது என்ற நிலைமையை உடனடியாக ஏற்படுத்தினால், இதுவே விவசாயிகளுக்குப் பேருதவியாக



1967 மார்ச் 23] [திருமதி கே. பி. ஜானகியம்மாள்]

இருக்கும். இது சிறிய விஷயந்தான் என்றாலும், கிராம மக்களை அரித்துத் தின்று கொண்டு வந்திருக்கிற விஷயமாகும். கூட்டுப் பட்டா முறையை வைத்துத்தான் அங்கங்கே இருக்கக்கூடிய கிராம அதிகாரிகள் கூட்டுப் பட்டாவில் இருக்கக்கூடிய ஒவ்வொருவரிடமிருந்தும் தனித் தனியாக வரி வசூல் செய்யக்கூடிய நிலைமையும் இருந்துகொண்டிருக்கிறது. ஒரு கூட்டுப் பட்டாவில் நான்கு பெயர்கள் இருந்தால், அந்த நான்கு பேர்களிடமிருந்தும் தனித் தனியாக அந்த பட்டாவுக்கு உரிய வரி வசூல் செய்யக் கூடிய நிலைமையும் ஆங்காங்கு காணப்படுகிறது. அரசாங்கத்திற்குச் சேர வேண்டியது ஒரு வரிதான் என்றாலும், சாதாரண கிராம விவசாயிகளுடைய அறியாமையைப் பயன்படுத்தி இப்படிப்பட்ட தவறான காரியங்களெல்லாம் நடப்பதற்கு இந்தக் கூட்டுப் பட்டா முறை இடம் அளிக்கிறது. ஆகவே, கூட்டுப் பட்டாவைத் தனிப் பட்டாவாக மாற்றியமைக்கும் ஏற்பாட்டை உடனடியாகச் செய்யவேண்டியது அவசியம் என்று நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டம் வந்த பிறகு கூட நிலத்தில் குத்தகைதாரர்கள் விவசாயம் செய்கிறார்கள் என்றால், யார் விவசாயம் செய்கிறார்கள் என்று பதிவு செய்வதற்கு எந்தவிதமான பொறுப்பும் சர்க்கார் எடுத்துக் கொள்வதில்லை. ஏனென்றால், விவசாயி குத்தகை வாரத்திற்கு உழுகிறான் என்றால், அந்த விவசாயியின் பெயர் கிராம அடங்கலில் பதிவு செய்யப்படுவது என்பது கிடையாது. அடங்கலில் பதிவு செய்யாததால், அந்த விவசாயி விவசாயம் செய்கிறானு என்பது தெரியாது. நிலச்சுவாந்தாரும் பரம்பரையாக அந்த விவசாயிதான் உழுகிறான் என்பதைக் கணிக்க குத்தகைச் சீட்டு எழுதிக் கொடுப்பதும் கிடையாது. அப்படி எழுதிக் கொடுக்காத காரணத்தினால், எந்த விவசாயி ஒரு நிலத்தைச் சாகுபடி செய்கிறான் என்பதை அந்தக் கிராமக் கர்ணம் அடங்கலில் பதிவு செய்யவேண்டும் என்பது விதி. ஆனால், அதை எந்தக் கிராமக் கர்ணமும் செய்வது கிடையாது. அம்மாதிரி ஒரு நடவடிக்கையை கண்டிப்பாகச் செய்யவேண்டும் என்று நான் விரும்புகிறேன். இது சின்ன விஷயம் தான் என்றாலும், இது செய்யப்பட வேண்டியது அவசியம். கிராமத்தில் குத்தகை, வாரத்திற்குச் சாகுபடி செய்யக்கூடிய விவசாயியின் பெயர் அந்தந்தக் கிராம ரெவினியூக் கணக்கு எழுதக்கூடிய அடங்கலில் இருக்க வேண்டும். எந்த விவசாயி இன்னாருடைய நிலத்தைச் சாகுபடி செய்கிறான் என்பதைக் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு விவசாயியும் என்ன என்ன பயிர் சாகுபடி செய்கிறான் என்று கிராம அதிகாரிகள் கணக்கு எடுக்கின்ற தருணத்தில், அவர்களுடைய பெயர்களையும் அடங்கலில் பதிவு செய்து வைத்துக்கொள்ளுவது, கிராம அதிகாரிகளுடைய பொறுப்பு என்ற முறையிலே இதைச் செய்ய வேண்டும் என்ற கருத்தில் இதை இந்த நேரத்தில் சபையினுடைய கவனத்திற்கு

அடுத்தபடியாக, இன்றைக்கு கிராம அதிகாரி கர்ணம். இம்மாதிரி இருக்கக்கூடியவர்களை நாம் அரசாங்கத்தின் முழு நேர ஊழியர்களாக அங்கீகரித்திருந்த போதிலும் கூட அவர்களை முழு நேர அரசாங்க ஊழியர்களாக ஏற்றுக்கொண்டு அதற்குத் தக்க ஊதியத்தை அவர்களுக்கு நிச்சயம் செய்திருக்கிறோமா என்றால், இல்லை. அதன் காரணமாக, அந்தக் கிராம அதிகாரிகள் பெரு நிலச்சுவாந்தார்களின் செல்வாக்கிற்கு உட்பட்டு, பல காரியங்களில் தவறு செய்யக்கூடிய நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அம்மாதிரி இருக்கக்கூடிய கிராமக் கர்ணம் அதிகாரிகள், போன்றவர்களை நம்முடைய அரசாங்கம் முழு நேர ஊழியர்களாக நியமித்து, அவர்களுக்குத் தகுந்த ஊதியம் கொடுக்க வகை செய்ய வேண்டும். இம்மாதிரி நிலையை ஏற்படுத்துவது, கிராம மக்களுக்கும் சரி, நமது அரசாங்கத்தின் எதிர்காலத்திற்கும் சரி, மிகவும் அவசியமாகும். இது ஒரு சிறிய விஷயமாக இருந்தாலும், இது அஸ்திவாரத்தைப் பலப்படுத்தக்கூடிய ஆதாவான நடவடிக்கையாக இருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கு எனது வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு எனது உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அடுத்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சுரேந்திரன் அவர்கள் பேசுவார்கள்.

*** திரு. எம். சுரேந்திரன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நிலவரி சம்பந்தமாக மிகச் சூடான விவாதங்கள் எழுந்து கொண்டிருக்கின்றன. நில வரியை ரத்து செய்ய வேண்டுமென்ற கருத்து இன்றைக்கு, நேற்றைக்குத் தோன்றியது அல்ல. சுதந்திரப் போராட்டக் காலத்திலேயிருந்து தோன்றி வந்துள்ள கருத்து இது. ஆனால் சுதந்திரம் பெற்று ஆட்சிப் பீடத்திலே அமர்ந்தவர்கள் இந்தக் கருத்தைச் செயலாக்காமல் தயங்கிக் கொண்டே இருந்தார்கள். இந்தத் தேர்தல் கால சந்தர்ப்பத்திலே அவசரம் அவசரமாக காரைக்குடியிலே கூடி, நிலவரியை ரத்து செய்துவிடுவோம் என்று ஒரு தீர்மானம் போட்டு, கடந்த தேர்தல் பிரசாரத்திற்கு ஒரு வலுவை உண்டாக்கிக் கொள்வதற்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. அப்படி நில வரியை ரத்து செய்துவிடுவது என்று ஒட்டு மொத்தமாகச் சொல்வதில் அர்த்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நிலம் அதிகமாக வைத்திருப்பவர்கள், தங்களுடைய அறுவடையை தங்களுடைய தேவை போக மற்றவற்றை மார்க்கெட்டிலே விற்று லாபம் சம்பாதிக்கிறவர்களுக்கு இந்த வரியை ரத்து செய்வது என்பது பரிசு வழங்குவது போலாகி விடுகிறது. ஆகவே, ஒட்டு மொத்தமாக வரியை ரத்து செய்வது என்பதைவிட சிறு நிலக்காரர்களுக்கு தங்களுடைய உழைப்பின் மூலமே உற்பத்தியைச் செய்கின்றவர்களுக்கு தங்களுடைய உழைப்பின் மூலமே குடும்பத்தை நடத்துகிறவர்களுக்கு எந்தவிதமான வரியும் இல்லாமல் இருப்பது என்ற ஓர் அடிப்படையான அம்சமாக வைத்துக்





கொள்ள வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால் சொந்த நிலத்திலே உழைக்கிறவர்களுக்கு எந்த விதமான ஒரு வரியும் இருக்கக் கூடாது. உழைக்கின்றவர்களுக்கு நிலவரி மட்டுமல்ல; நீர்வரி கூட கூடாது என்று தோன்றுகிறது. தாங்கள் கடுமையாக உழைப்பதன் மூலமே தாங்கள் சுதந்திரமாக வாழ முடியும் என்ற நம்பிக்கையை உழைக்கின்ற மக்களிடத்தில் உண்டாக்குவதே சோஷலிசத்தின் அடிப்படையானது. சோஷலிசத்தை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதன் அடிப்படையாக நாம் கொள்ள வேண்டியது என்னவென்றால், எந்த உழைப்பாளிக்கும் எந்த விதமான வரியும் இருக்கக்கூடாது என்ற அடிப்படையை மனதில் வைத்துக்கொண்டு, வரியை ரத்து செய்வது சம்பந்தமாக யோசனை செய்ய வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. உழைப்பாளிகளுக்கு மதிப்புக் கொடுக்கின்ற ஒரு சமுதாயத்தில் சோஷலிச சமுதாயம். இதனால் ஏற்றத்தாழ்வுகளும் மற்றக் கெடுதல்கள் போன்ற அம்சங்களும் மறைந்துவிடும். உழைப்பாளிகளுக்கு மதிப்புக் கொடுக்கும் இந்த அரசாங்கம் இந்தக் காரியங்களை உடனடியாகச் செய்ய வேண்டும்.

இன்னொரு பக்கத்தில் பார்த்தால், நிலத்திலே விளைகின்ற உணவுப் பொருள்கள் இப்போது அதிகமாகத் தேவைப்படுகின்ற நேரம் இது. உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிற விவசாயிகளுக்கு நல்ல உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். எவ்வளவு அதிகமாக உணவு உற்பத்தியைப் பெருக்க முடியுமோ அவ்வளவு உணவு உற்பத்தியையும் பெருக்க வேண்டும். இப்போதிருக்கிற நிலைமையில்; நிறைய உற்பத்தி செய்ய வேண்டுமென்று சட்டம் போட்டுச் செய்வது சரியானது அல்ல. உணவு உற்பத்தி அதிகம் செய்கின்றவர்களுக்கு வரியிலிருந்து ரத்து செய்வது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. இந்தச் சர்க்கார் ஒட்டு மொத்தமாக எல்லோருக்குமே வரியை ரத்து செய்வது என்பது சரியானது, நியாயமானது, நீதியானது அல்ல. நீதியான காரியங்களைத்தான் இந்தச் சர்க்கார் செய்ய வேண்டும். குறிப்பாக உழைக்கின்ற எந்த மக்களுக்கும் எந்தவிதமான தடையும் இருக்கக்கூடாது, எந்தவிதமான இடைஞ்சலும் இருக்கக்கூடாது. உழைத்துச் சாகுபடி செய்யும் மக்கள் சுதந்திரமாக சாகுபடி செய்வதற்குத் தூண்டுகோலாக நம்முடைய வரி முறைகளை மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகும். இந்த ரெவின்யூ வருமானத்தைப் பார்த்தால் கிட்டத்தட்ட 13 கோடி ரூபாய் வரி வந்துகொண்டிருப்பதாகக் கணக்குச் சொன்னார்கள். இந்த வரி ஒழிப்பின் மூலம் கிட்டத்தட்ட 8 கோடி ரூபாய் துண்டு விழும். இதை எப்படி ஈடு செய்வது என்று யோசிக்கும்போது அதிகமான வருமானம் வருகிறவர்களுக்கு அதிகமான வரியைப் போடுவதில் எவ்விதமான தயக்கமும் காட்டக் கூடாது. அதிகமாக லாபம் சம்பாதிப்பவர்கள்மீது இந்த வரியைப் போட்டு ஈடு செய்யும் முயற்சியிலே ஈடுபட வேண்டும். ஆகவே, இந்த அரசாங்கம் இந்த வகையிலே; இந்தப் பிரச்சினையைக் கவனித்து வ—

காலத்தில் காரியங்களைச் செய்யும் என்ற நம்பிக்கையில், என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஆர். கனகசபை** : கனம் சபாநாயகர் அவர்களே, எனக்கு முன் பேசிய நண்பர் அவர்கள் பேசியதையொட்டி நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அவர் "சிறு விவசாயிகளுக்கு நிவாரணம் இருக்க வேண்டும், பெரிய விவசாயிகளுக்கு வரி போடலாம்" என்று சொன்னார்கள். சுமார் 20, 25 ஆண்டுகளுக்கு முன்னால், சுதந்திரம் வருவதற்கு முன்னால் பிரிட்டிஷ் அரசாங்கத்திலே நிலவரியை எடுத்துவிட்டு, விற்பனை வரி போடுவது என்று தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கை இருக்கிறது அரசாங்கத்தில். அம்மாதிரி விளைபொருள்கள் மீது விற்பனை வரி விதித்தால சற்று முன் பேசியவர் சொன்னபடி, யார் அதிகமாக நிலம் வைத்திருந்து, விளைபொருள்களை விற்பனைசெய்கிறார்களோ அவர்களுக்கு வரி இருக்கும். அதிகமாக விற்பதற்கு ஒன்றும் இல்லாதவர்களுக்கு வரி செலுத்த வேண்டிய அவசியம் இருக்காது. தானாகவே நிவாரணம் கிடைத்துவிடும். அதோடு, இப்போது உணவுப்பொருளாகிய நெல் பயிரிடுவோர்கள் எல்லோருக்கும் தெரியும்; விவசாயத்திலே வருமானம் அதிகக் குறைவாக வருகின்றது. மற்ற 'கமர்ஷியல் கிராப்ஸ்' (பணப் பயிர்) பயிரிடுவோர்களுக்கு அதிகமாக வருமானம் கிடைக்கின்றது. விற்பனை வரி விதித்தால் அதிகமான வருமானம் வருகிறவர்கள் அதிகமான வரி செலுத்த வேண்டியிருக்கும். குறைந்த வருமானம் உள்ளவர்கள் குறைவாக வரி செலுத்தலாம். அதோடு அரசாங்கம் இப்பொழுது விவசாயப் பொருள்களை வியாபாரம் செய்வதென்று எடுத்துக் கொள்வதனால் விற்பனை வரி விதிப்பு சுலபமாகவும் இருக்கும். ஆகவே, இந்த அரசாங்கம் அந்த அறிக்கையைப் பரிசீலனை செய்து இந்த லேண்ட் ரெவின்யூவை எடுத்துவிட வேண்டுமென்று சொல்கிறபோது, அதனால் துண்டு விழும் தொகைக்கு இது ஈடு கட்டிக் கொள்ளும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

MR. SPEAKER : The hon. Member, Dr. H. V. Hande will now speak.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, at the very outset I wish to express very clearly that we fully endorse the views expressed by me hon. Friend Sri Rama Arangannal. In fact I know that the Dravida Munnetra Kazhagam is very, very clear about it and that they will make every effort to abolish the land revenue. If our memories are quite sharp, we will remember that in the last Legislature, it was the D.M.K. Party which was again and again stressing the necessity for the abolition of the land revenue both in this House and in the Upper House. There was such a heated discussion on the part of the Opposition that even the pleasure of a division was denied in the Upper House on this particular issue. Therefore, I want to make it clear that we fully





endorse the views expressed by the hon. Member, Sri Rama Arangannal and we fully sympathise with the difficulties expressed by him in bringing that into effect immediately.

Now, Sir, I want to express one or two points in this respect. Our Party, Swatantra Party has very clearly indicated that the land revenue must be abolished *in toto* and I fully subscribe to the view that we should as far as possible, try to bring very speedily the abolition of the land revenue. Unless this is brought about, the farmers will be put to great trouble and unless we give encouragement and incentive to the farmers, production will come down. So, in the interest of production and in the interest of the reduction of the cost of rice and other things, we want immediately the abolition of the land revenue. I am quite confident that the Hon. Ministers for Food and Agriculture will put their heads together and see that this is done immediately. Here again, I want to strike a note of caution. There is a linking of the abolition of the land revenue with the State Trading in foodgrains which we want to oppose very clearly. We will be very happy if State Trading in foodgrams will bring in extra revenue. But our contention is that the Government will not be able to get Rs. 11 or 12 crores that they expect to get. This policy of linking the abolition of the land revenue with the State Trading in foodgrains had been laid down by the previous Ministry. These two things do not go together. State trading in foodgrains will not bring even one additional rupee of revenue to the Government. That is my contention and the submission of my Party also. We firmly think that State trading in foodgrains will bring about a loss. If it is linked up with this additional loss, it will be a dangerous loss to the Government. That is my humble submission. 10-00 மு.ப.

THE HON. THIRU C. N. ANNADURAI : With your premission, Sir, I may inform the Member that I was explaining to the House the previous day the theory enunciated by the previous Government and not by this Government.

DR. H. V. HANDE : I am very happy and grateful to the Chief Minister for this clarification. I was only afraid because of the pressure put by the Members of the Congress Party. I will be very happy if land revenue is abolished and this State trading is not at all thought of even by the Food Ministry.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It should not be taken that it is not under the consideration of the Government. What our Chief Minister said day before yesterday was only what the former Chief Minister said, viz., that the Government linked up State trading in foodgrains with the abolition of land tax.

DR. H. V. HANDE : I wish to conclude by saying that we fully endorse the policy laid down by the D.M.K., and at the same time we fully appreciate the difficulties with which they are faced. We only hope that the abolition of land tax will be brought about as early as possible, and in this effort the Government will have the full support of the Swatantra Party.

* **திரு. எஸ். அழகிரிசாமி :** மேன்மை மிக்க சபாநாயகர் அவர்களே, இப்போதுள்ள நிலவரி அமைப்பு முறையில் சிறு நிலச் சுவாந்தார்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் இருந்து பார்த்து வந்தால் பலயிடங்களில் எத்தனை சிறிய நிலக்காரர்கள் நிலவரியைக் கட்ட முடியாமல் தங்கள் நிலங்களையே ஏலத்தில் போகவிட்டிருக்கிறார்கள் என்பது தெரியும். ஆகவே இன்றைய தினம் இந்த அமைச்சரவை வகுக்கின்ற கொள்கையில் 5 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்குக் குறைவாக நிலமுள்ளவர்களின் நிலத்தின் மீது விதிக்கப்படுகிற நிலவரி அமைப்பு முறை அறவே அகற்றப்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வறண்ட பகுதியாகிய எங்கள் கோயில்பட்டி தாலுகாவில் 1374-ஆம் பசலியில் மகசூலே இல்லாமல் போய் விட்டது. அந்தத் தாலுகாவில் இருந்த விவசாய மக்கள் அந்தப் பசலிக்கான வரியை வசூல் செய்யாது ஒத்தி வைக்கவேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கத்திற்குச் செய்துகொண்டார்கள். அரசாங்கம் அந்தப் பசலிக்கான வரி வசூலை ஒத்தி வைத்தது. திரும்ப சென்ற பசலி வரியோடு சேர்த்து மிக கெடுபிடியான முறையில் அதிகாரிகள் வசூல் செய்ய இப்போது முற்பட்டார்கள். வண்டி மாடுகள், பண்டபாத்திரங்கள் கூட நிலவரிக்காக ஜப்தி செய்யப்பட்டது. அப்பொருள்களை அன்றைய அரசாங்கம் பல முறை ஏலத்திற்கு கொண்டு வந்தும் மக்கள் அதை பகிஷ்கரித்தபின் வசூலை நிறுத்தி ஜப்தி செய்த பொருள்களை அரசாங்கமே அந்த மக்களிடம் திரும்பக் கொண்டு வந்து சேர்த்தது. இந்த ஆண்டும் அந்தத் தாலுகாவில் அதிகமாக மழை பெய்ததன் காரணமாக விவசாயிகள் கஷ்டப்பட நேரிட்டிருக்கிறது. மகசூல் 25 சத விகிதத்திற்கும் குறைவாகப் போய் இருக்கிறது. ஆகவே, அந்தத் தாலுக்காவில் 1374, 76-ம் பசலிகளுக்கான நிலவரியை இந்த அமைச்சரவை வஜா செய்துவிட வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். பாலசுப்பிரமணியம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்றபோது ஒரு குறிப்பிட்ட பிரச்னையை மட்டும் அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். புதிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் சாகுபடிக்கு வருகிற நிலங்களுக்கு நீர்ப்பாசன அபிவிருத்தி வரி என்ற அடிப்படையில் ஒரு வரியைப் போட காங்கிரஸ் அரசாங்கம் தீர்மானித்திருந்தது. அந்த அடிப்படையில் விதிக்கப்பட்டுள்ள வரி இவ்வாண்டு முதல்தான் எங்கள் பகுதியில் வசூலுக்கு, அமல் வர இருக்கிறது. நீர்ப்பாசன அபிவிருத்தி வரியைப் பற்றிய அடிப்படைப் பிரச்சினையை நான் இப்போது எழுப்ப விரும்பவில்லை. இதுபோன்ற வரி மற்ற மாநிலங்களிலும் விதிக்கப்படுகிறது. பிளானிங் கமிஷன் கூட புதிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் போடும்போது, இத்தகைய வரியை விதிக்கலாம் என்பதாக ஆலோசனை தெரிவித்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் சென்ற காலத்தில் பஞ்சாப் அரசாங்கம் இதுபோன்ற வரிவிதிப்பைப் பற்றி ஆராய்ந்து முடிவு





கட்டுவதற்கு தர்பார்சிங் கமிட்டியைப் போட்டது. அவர்கள் இதைப்பற்றி ஆராய்ந்து—நீர்ப்பாசன அபிவிருத்தி வரி என்று போடுவது தேவையே இல்லை, அதற்கு நியாயமும் இல்லை என்று முடிவு செய்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அமைச்சரவையின் கவனத்தையும் கவரவேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். ஆனால் இப்போது நாங்கள் வேண்டிக்கொள்வது எல்லாம் உடனடியாக நீர்ப்பாசன அபிவிருத்தி வரியை நீக்கிவிடுங்கள் என்பது அல்ல. கீழ்பவானி பாசனப் பிரதேசங்களை எடுத்துக் கொண்டால் நீர்ப்பாசன அபிவிருத்தி வரியை இவ்வாண்டு முதல்தான் வசூல் செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். கீழ்பவானி பாசனத் திட்டத்தின் கீழ் $2\frac{1}{4}$ லட்சம் ஏக்கரா பயன்படும் என்றாலும்—சென்ற இரண்டாண்டுகளாகத் தண்ணீர்விடவில்லை. இந்த வருடமும் அதுவும் இரண்டாம் போகத்திற்குத்தான் தண்ணீர்விடப்பட்டது. அதுவும் ஒற்றை மாறு முறைப்படி $1\frac{1}{4}$ லட்சம் ஏக்காராவுக்குத்தான் இரண்டாம் போகத்திற்கு மட்டும் தண்ணீர்விட்டார்கள், இன்னும் அறுவடை கூட ஆகவில்லை. சென்ற வருடமும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அந்த வரி வசூலுக்கு டிமாண்ட் நோட்டீஸ் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக எனது கட்சித் தலைவர் திரு. நல்லசிவம் அவர்களும், திராவிட முன்னேற்றக் கட்சி உறுப்பினர்களும், சுதந்திராக் கட்சி உறுப்பினர்களும் கனம் முதல் அமைச்சர், கனம் ரெவின்யூ அமைச்சர் ஆகியவர்களிடத்திலே ஒரு விண்ணப்பம் கொடுத்திருந்தோம். அதாவது இந்த நீர்ப்பாசன அபிவிருத்தி வரி என்பதை இந்த அமைச்சரவை பின்னால் நன்கு பரிசீலனை செய்து எந்த ரூபத்தில் வைத்துக்கொள்ளலாம் என்பதை முடிவு செய்து கொள்ளலாம் என்று. இவ்வாண்டு அந்த கீழ் பவானி பிரதேசத்தில் இந்த நீர்ப்பாசன அபிவிருத்தி வரியை வசூல் செய்யாது நிறுத்தி வைக்க உடனடியாக உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, நில வரி மானியத்தின் மீது பேசிய எல்லா உறுப்பினர்களும் இந்தச் சர்க்கார் நல்லமுறையில் சிந்திக்கத்தக்க நல்ல பல கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிற கருத்துக்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு துறையில் இருந்து பார்க்கிறபோது அவையாவும் மெத்த நியாயமானதாகப் படுகிறது. அதிலே ஒருவர் நியாயமாகவும், இன்னொருவர் அநியாயமாகவும் பேசினால் உடனடியாக நாம் எது நியாயம் என்பது பற்றித் தீர்ப்புச் சொல்லிவிடலாம். ஆனால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நியாயத்தை வலியுறுத்தும்போது அவற்றில் எது தலைசிறந்த நியாயம் என்பதைத் தீர்மானித்துக்கொள்வதில் சர்க்காருக்குச் சற்றுக் காலதாமதம் ஆகும் என்பதை இந்தக் கருத்துக்களை வலியுறுத்தியவர்கள் உணர்வார்கள். அதனால்தான் சென்ற தடவையே நான் இங்கே வலியுறுத்தினேன். இவற்றை சட்டமன்றத்தில் விவாதிப்பது மட்டும் பயன் இல்லை. இந்தப்

பிரச்சினைகளைப் பற்றி நாம் கன்சல்டேடிவ் கமிட்டிகளிலேயே நல்லமுறையில் பரிசீலனை செய்து முடிவு செய்யவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள நீங்கள் எனக்கு அனுமதி அளிப்பீர்கள் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறேன். இந்த நிலவரி ரத்து பிரச்சினையைப் பொறுத்த வரையிலும் எல்லா உறுப்பினர்களும் விவசாயத்திற்கு நாம் ஊக்கம் அளிக்கவேண்டுமானால் நில வரியை ரத்து செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். விவசாயத்திற்கு ஊக்கம் அளிப்பது மட்டும் அல்ல; உணவுப் பொருள் சாகுபடி செய்துகொண்டிருக்கிறவர்களுக்கு விவசாயத் துறையில் போதிய வருமானம் இல்லாததால் வர்த்தகப் பயிர்கள் வைக்கப் போய்விடுகிறார்கள் என்பதைப் பற்றியும் வலியுறுத்தியிருக்கிறார்கள். சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு மட்டும் வரி விலக்கு அளிப்பதா, வரியிலிருந்து எல்லா பெருநிலக்காரர்களுக்கும் சேர்த்து ஒட்டு மொத்தமாக விலக்கு அளிப்பதா என்கிற பிரச்சினையில் மாறுபாடான கருத்து எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக நிலவரி ரத்து என்கிறபோது நிலவரிக்கு உள்ளாக என்ன என்ன வரிகள் அடங்கிக் கிடக்கின்றன என்பதும் இங்கே விவாதிக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் தரப்பில் இருந்து தரப்பட்டிருக்கிற வெட்டுப்பிரேரணையில் அவர்கள் தெளிவாக பேசிக் லாண்டு டாக்ஸ் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், மற்ற உறுப்பினர்கள் சிறு நிலக்காரர்களுக்கு எல்லாவிதமான வரிகளையும் எடுத்துவிடவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பொதுவாக, இதிலே அதற்கென்று தயாரிக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையை நாங்கள் விரைவாகக் கவனித்து, நடவடிக்கையிலே ஈடுபடவேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். அந்த அறிக்கை இப்பொழுதுதான் சர்க்காருடைய பரிசீலனைக்கு வந்திருக்கிறது என்று முன்னாலே குறிப்பிட்டேன். ஆனால் இதற்கு ஏன் இவ்வளவு காலதாமதம், விரைவிலேயே முடிக்கலாமே என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். நான் கூட ஏன் நாம் இவ்வளவு காலம் தாமதிக்கிறோம் விரைவிலேயே நடவடிக்கை எடுக்கக்கூடாதா என்று யோசித்தேன், ஆனால், அடுத்த கணமே அவர் சொன்ன அடுத்த வார்த்தையை நினைத்துப்பார்த்தேன். அவர் அடுத்ததாகச் சொன்னார், காந்தியார் காலத்திலிருந்து இது சொல்லப்பட்டு வந்திருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி காந்தியார் காலத்திலிருந்து இருந்து வருகிற பிரச்சினையை இரண்டொரு நாட்களிலேயே தீர்த்துவிடவேண்டுமென்று அவர் சொல்வது அவர் என்னுடைய திறமையின் மேல் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுமென்று நினைக்கிறேன். காந்தியார் காலத்திலிருந்து இருந்துகொண்டு வருகிற இந்தப் பிரச்சினை, காந்தியார் காலத்திலிருந்து சொல்லிக்கொண்டு வரப்படுகின்ற இந்த நிலவரிப் பிரச்சினை கட்டத்திற்கும் கட்டம் அதிகரித்துக் கொண்டு வருகிறதே தவிர, கொஞ்சம்கூடக் குறையவில்லை. பேசிக் லேண்ட் ரெவின்யூ, இன்னும் மற்ற வரிகளையெல்லாம் உயர்த்தியது நிலவரியை ரத்து செய்யவேண்டுமென்ற ஒரு கருத்தைப் பக்கத்திலே வைத்துக்கொண்டுதான் செய்யப்பட்டிருக்கிறது. நிலவரியைப் பொறுத்தவரையில், நிலத்திற்கு வரி வேண்டாம் என்று





நீண்ட காலமாகச் சொல்லிக்கொண்டு வரப்பட்டது. நீர்வரியைப் பொறுத்தவரையில் சொல்லும்பொழுது, வானம் பொழியுது, பூமி விளையுது, எதற்காக வரிக் கட்டவேண்டுமென்று கட்டபொம்மனே சொன்னான் என்ற அளவிற்கு இன்னும் வரிக்குறைப்பிலே தீவிரமாக இருக்கலாம். அதிலே தப்பு ஒன்றுமில்லை. ஆனால் நீர்ப்பாசன வசதிகளுக்காகச் செய்யப்படுகின்ற பல முயற்சிகளையும் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்காக பல இடங்களில் நீர்நிலைகளைப் பழுது பார்த்து நல்ல முறையிலே வைத்துக்கொண்டிருப்பதற்கு ஏற்படக்கூடிய செலவினங்களையும் கருத்திலே வைத்துத்தான் நீர்வரிப் பிரச்சினையைப்பற்றி நாம் யோசிக்க முடியும். அறிக்கையைக் கொடுத்துவிட்டார்களே, உடனடியாக நடவடிக்கையெடுக்கக் கூடாதா என்று கூறுகின்றவர்கள் அறிக்கையிலே நிலவரி, அதைபொட்டிய எல்லா வரிகளையும் எடுத்துவிடலாம் என்று சொல்லப்பட்டிருக்குமோ என்ற சந்தேகத்திலோ அல்லது அதிகாரிகளே எடுத்துவிடவேண்டுமென்று சொல்லிவிட்டார்களே, இன்னும் ஏன் காலதாமதம் என்ற கருத்திலேதான் அப்படிச் சொல்லியிருப்பார்களென்று நான் நினைக்கிறேன். ஆகவே, அந்த அறிக்கையைப் பற்றி முழுக்க இந்தச் சபையிலே எடுத்துச் சொல்வதற்கு முன்னதாக நான் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற ஒன்றை மட்டும் சொல்லிவிடலாம் என்று விரும்புகிறேன்.

'The Report of the Special Officer does not recommend the abolition of the entire land revenue.'

எனவே, எல்லா நிலவரிகளையும் உடனடியாக ரத்துசெய்யவேண்டுமென்று அந்த அறிக்கையிலே சொல்லப்படவில்லை. அந்த அறிக்கைக்குள்ளாகவே என்ன செய்யமுடியுமோ அதை எப்படிச் செய்யலாம் என்பதைப்பற்றித்தான் நான் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். நம்முடைய மாநிலத்திலே மொத்த நிலவரி 13.21 கோடி ரூபாய்க்குக் கிடைக்கிறது. இதிலே டிரை அசெஸ்மெண்ட் மூலம் கிடைப்பது 2.32 கோடி ரூபாய்; வாட்டர் ரேட், அதாவது நீர்ப்பாசன வரியின் மூலம் கிடைப்பது 5.36 கோடி ரூபாய்; மிஸ்சலேனியஸ் அதாவது பல்வகையிலே கிடைக்கின்ற வரி 0.83 கோடி ரூபாய்; லோக்கல் செஸ் அண்ட் லோக்கல் சர்சார்ஜ், உள்ளாட்சி மன்றங்கள் மூலம் 4.70 கோடி ரூபாய்; ஆக மொத்தம் 13.21 கோடி ரூபாய் என்ற அளவுக்கு வந்துகொண்டிருக்கிறது. ஆனால், நாங்கள் எந்த முறையைக் கையாளவேண்டுமென்பதிலே கருத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறோம். ஒரேயடியாக 15 கோடி ரூபாய் அளவுக்கு வரிகளை எடுத்துவிட்டு, அதன் மூலம் துண்டுவிழத்தக்க விதத்தில் நடவடிக்கையிலே ஈடுபட்டுவிட்டால் அப்படித் துண்டு விழுகின்ற தொகையை இன்னொரு துறையிலே ஈட்டி அதைச் சரிக்கட்டுவதற்கு வழியிருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அப்படிச் செய்தால், 13 கோடி ரூபாய் வருமானத்தை அடியோடு நிறுத்திவிட்டு, ஒரு துண்டு விழுகின்ற பட்ஜெட்டாகவேதான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள் என்று காங்கிரஸ் நண்பர் பொன்னப்ப நாடார் அவர்கள் கேட்பார்கள். 13 கோடி ரூபாய் வரையில் இழப்பு வருகிறதே, ஒரு புத்திசாலித்தனமான

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967, மார்ச் 23

சர்க்காராக இருந்தால் அதை எப்படி ஈடுகட்டுவது என்று யோசித்திருக்கக் கூடாதா என்று கேட்பார்கள். ஒரேயடியாக எடுத்துவிட்டு வேறு துறையிலிருந்து அந்த வருமானத்தைப் பெறுவதற்கு வழியிருக்கிறதா என்று ஆராய்கிறோம். அல்லது, ஒரு வருடத்திலே 2 கோடி ரூபாய்; அடுத்த வருடத்திலே 3 கோடி ரூபாய்; அதற்கடுத்த வருடத்திலே 5 கோடி ரூபாய் என்ற அளவிற்குப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டு வருவோமா என்றும் ஆராய்கிறோம். இந்த இரண்டிலே எது நடைமுறைக்கேற்றது என்று கருதுகிறோமோ அந்த முறையைக் கையாளலாம் என்று நினைக்கிறேன். இதைப்பற்றிய குறிப்பு அடுத்த ஜூன், ஜூலையிலே அறிவிக்க இருக்கின்ற வரவு-செலவுத் திட்டத்திலே இருக்கக்கூடும். ஆகவே, இதிலே அவசரப்பட வேண்டும் என்று நினைக்கிறவர்கள், இதிலே இருக்கின்ற சிக்கல்களை அறிந்திருப்பார்களேயானால் அதிகமாக இதை இந்த அளவுக்கு வலியுறுத்த மாட்டார்கள் என்றே கருதுகிறேன்.

நம்முடைய கம்யூனிஸ்ட் உறுப்பினர் திருமதி ஜானகி அம்மாள் அவர்கள் மிகவும் முக்கியமான ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். நீண்ட காலத்திற்கு முன்னாலே நிலத்திற்குத் தரத்தைப் பிரித்திருக்கிறார்கள்; அதே தரம் இன்னும் இருக்க வேண்டுமா? தரத்தைப் புதிதாக நிர்ணயம் செய்யவேண்டாமா என்பதை நல்ல முறையிலே ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதிலே சர்க்கார் கவனத்தைச் செலுத்தும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது அவர்கள் முழுக்க முழுக்க திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிலவரியைப் பற்றிய கருத்தை ஆதரிப்பதாகத் தெரிவித்தார்கள். நாங்களும் அவர்களும் ஒத்துப்போவதில் யாருக்கும் ஆச்சரியம் இருக்காது என்று நினைக்கிறேன். ஆனால் ஒரே ஒரு சுதந்திரா கட்சி உறுப்பினர் மட்டும் சற்று மாறுபட்ட கருத்தைச் சொன்னார்கள். நிலவரியை எடுத்துவிட வேண்டுமென்று முடிவுசெய்யும்பொழுது பெரிய நிலச்சுவான்தார்கள், சிறிய நிலச்சுவான்தார்கள் என்று பிரிப்பது எதற்காக, எல்லோருக்கும் சேர்த்துத்தானே எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதிலே சர்க்காருக்கு இருக்கின்ற நெருக்கடி என்னவென்றால், பெரிய நிலச்சுவான்தார் என்பவர் கண்ணுக்குத் தெரிகிறார். ஆனால் அவரிட்டே போய்ப் பார்த்தால் நிலத்திற்கு வேண்டிய, தஸ்தாவேஜுகள் இல்லை. உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்த நேரத்தில் பொதுவாக பெரிய நிலச்சுவான்தார்கள் போலியாகப் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்துகொண்டார்கள் என்பது ஊரறிந்த ரகசியம். டெல்லியிலே நிதியமைச்சராக இருந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களே

'The big landowners have made other arrangements and have made the land Ceiling Act ineffective. என்று சொன்னார்கள். பெரிய நிலச்சுவான்தார்கள் இந்தச் சட்டத்தை வலிவற்றதாக்கிவிட்டார்கள் என்று பழைய நிதி மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். பெரிய நிலச்சுவான்



1967, மார்ச் 23] [திரு. சி. என். அண்ணாதுரை]

தார்களைத் தேடிக் கொண்டு போனால் அவர்களைப் பார்க்கிறபொழுது தான் பெரிய நிலச்சுவான்தார் என்று தெரிகிறதே தவிர, இருக்கிற நிலத்தைக் கேட்டால்,—இந்த மன்றத்திலே ஒரு உறுப்பினர் முன்பு ஒன்று சொன்னார்கள், திரு. கருத்திருமன் அவர்களுக்கும் தெரியும், அவர் 30 ஏக்கர் ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றால் எனக்கு இன்னும் 5 ஏக்கர் வேண்டும் என்று கேட்டார். ஆனால் அவர்களுக்கு உண்மையிலேயே இன்னும் ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. இந்த மாதிரி நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவந்த நேரத்திலேயே கட்சி மாச்சரியம் வைத்துக்கொள்ளாமல் நல்ல முறையில் நிறைவேற்றப் பட்டிருந்தால் இன்று பெரிய நிலச்சுவான்தார்களைத் தேடிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருக்காது. ஒரு உறுப்பினர் பேசும்பொழுது இந்த நாட்டில் விவசாயிகள் 100-க்கு 80 பேர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். போன வாரத்தில் நான் என்னுடைய நண்பர் ஒருவருடைய மூன்று நிகழ்ச்சிகளில் ஒரே நாளில் கலந்து கொண்டேன். காலையிலே வியாபாரிகள் சங்கத் திலேதான் ஒரு வியாபாரி என்ற முறையிலே குறிப்பிடுவதாகச் சொன்னார். மாலையிலே நிலச்சுவான்தார்கள் கூட்டத்திலே பேசு கின்ற பொழுது தான் ஒரு விவசாயி என்ற முறையிலே பேசுவதாகக் கூறினார்கள். மாலையிலே மற்றொரு இடத்திலே கூட்டுறவாளர்கள் கூட்டத்திலே பேசும்பொழுது தான் கூட்டுறவுக்குரிய இடத்தின் மூலம் பேசுகிறேன் என்றார்கள். விவசாயிகள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் எல்லாம் விவசாயிகளா? நண்பர் கருத்திருமன் அவர்கள் ஒரு விவசாயி, ஆட்சேபணையில்லை. ஆனால் உண்மை யிலேயே விவசாயம் செய்கிறவர்கள் விவசாயிகளா, அல்லது விவசாயிகளை வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் விவசாயி களா என்பதைப்பற்றித் தீவிரமாக யோசிக்க வேண்டும். விதைப் பாடு காலத்திற்குப் போவது இல்லை, ஆனால் அறுவடைக் காலத் திற்குப் போவார்கள். விதைப்பாடுக்கும் அறுவடைக்கும் போவ தில்லை, இப்படிப்பட்டவர்களும் விவசாயிகள்தானா? குறைந்த அளவுக்கு விளைச்சல் பெறுகின்றவர்கள், மற்றவர்கள் எவ்வளவு விளைச்சல் என்று கேட்டால் எவ்வளவு என்று சொல்வதற்குக்கூட தயக்கப்படுகிற அளவுக்குக் குறைவாக விளையக்கூடிய நிலத்தை யுடையவர்கள் இருக்கிறார்கள். விவசாயிகள் என்பதற்கு முதலில் விவசாயக் கூலிகள் என்றும், இரண்டாவதாக, சிறு நிலம் வைத்துக்கொண்டு விவசாயம் செய்கிறவர்கள் என்றும், மூன்றாவ தாக, விவசாயத்தைத் தங்கள் வருவாயாகப் பயன்படுத்திக் கொள்கிறவர்கள் என்றும் மூன்று தரத்திலே நாம் பார்க்க வேண்டும்.

அம்மையார் அவர்கள் நிலத்திற்குத் தரம் பார்க்க வேண்டு மென்று சொன்னார்கள். 'விவசாயி' என்ற வார்த்தைக்கே தரம் பார்க்க வேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் பார்த்து எந்த வகையிலே நாம் அவர்களுக்குள்ள வருமானத்தைக் கணக் கெடுப்பது என்பதிலே நிறைந்த சிக்கல்கள் இருக்கின்றன. அந்தச் [illegible] எல்லாம் காட்டி இதை நாம் தள்ளிப் போட விரும்ப

இல்லை. அந்தச் சிக்கல்களை எல்லாம் உணர்ந்து என்னோடு ஒத்துழைத்து கருத்துக்களைத் தர வேண்டுமென்பதற்காகத்தான் நான் இந்த முறைகளைப்பற்றித் தெரிவித்திருக்கிறேன். அப்படியானால் இதைச் செய்யப் போவதில்லையா என்று யாராவது கேட்பார்களேயானால், படிப்படியாக, நிலவரிப் பிரச்சினையில் தீர்வு காணபதற்கு இந்தச் சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்ளும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். படிப்படியாக என்று சொல்லும்போது சில பேருக்கு என்னவோ போல் இருக்கும் இவ்வளவுதானு! இவர்கள் படிப்படியாகத்தான் போகப் போகிருர்களா? ஒரேயடியாகப் போக மாட்டார்களா என்ற எண்ணம் தோன்றும். படிப்படியாகச் செல்ல வேண்டுமென்பதைப் போன்ற உறுதியான முறை உலகத்திலே வேறு எதுவும் இல்லை. படிப்படியாகச் செல்வதால்தான் நாம் எடுத்துக் கொள்ளுகின்ற காரியத்திற்கு நல்ல உறுதிப்பாடு ஏற்பட முடியும். படிப்படியான முறையில் 13 கோடி ரூபாயை இழந்து விடுவதாக இருந்தால், படிப்படியாக அந்த இழப்பைச் சரிக்கட்ட வழிவகைகள் என்ன என்று பார்த்துப் பார்த்துச் செய்ய வேண்டும். முன்பு மதுவிலக்கைக் கொண்டு வந்த நேரத்தில் அதனுடைய இழப்பைச் சரிக்கட்ட விற்பனை வரி கிடைத்தது. இந்த மன்றத்திலே முன்னலே இருந்தவர்கள் அந்த விற்பனை வரியைக் காமதேனு என்று குறிப்பிட்டார்கள். அப்படி ஏதும் காமதேனு இல்லாது போனாலும் ஹொசூர் பசு அளவுக்காவது கிடைக்கிறதா என்று பார்க்க வேண்டும். பார்த்துப் பார்த்து எவ்வளவு குறைப்பது என்று வழிவகை கண்டுபிடிக்க வேண்டும். இந்தத் தொடர்பிலேதான் ஸ்டேட் டிரேடிங்கைப் பற்றி முன்னலே இருந்த அமைச்சரவை குறிப்பிட்டதை நான் எடுத்துச் சொன்னேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் நல்ல முறையில் அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். "நீங்கள் ஸ்டேட் டிரேடிங் மூலம் ஏராளமான பணம் வரும் என்று கருதுகிறீர்கள், வருவதாக இருந்தால் இவ்வளவுதான். 'வராது' எழுதி வைத்துக் கொள்ளுங்கள்" என்ருர். ஏற்கனவே எழுதி வைத்திருப்பதைப் பார்க்கும்போது அவர்கள் சொன்னதுதான் தெரிகிறது. இந்த ஸ்டேட் டிரேடிங்கினுல் முன்னலே பணம் வரவில்லை என்ற காரணத்தால் எப்போதுமே வர முடியாது என்று இருக்கக் கூடாது. வருவதற்கு வழி செய்ய முடியுமா என்று நாம் பார்க்க வேண்டும். ஸ்டேட் டிரேடிங் இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அதிலே முடிவு கட்டிவிடாது அதைப்பற்றிய சிந்தனையை நீடிக்க விரும்புகிறேன்.

ஸ்டேட் டிரேடிங் மூலமாக மட்டுமல்ல—நண்பர் கருத்திருமன் அவர்களுக்குத் தெரியும்—பாராளுமன்றத்தில் கிராப் இன்ஷூரன்ஸ் பற்றிய ஒரு திட்டம் விவாதத்தில் இருக்கிறது. அந்த கிராப் இன்ஷூரன்ஸ் திட்டத்தின் கீழ் நிலச் சொந்தக்காரர்கள் வருவார்களானல் நிலவரியைப் போல் பத்து மடங்கு பணம் வரும். ஆகவே, எந்தெந்த விதத்தில், நில வரியைக் குறைப்பதால், எடுத்துவிடுவ





தால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை ஈடுகட்ட முடியும் என்பதைப் பற்றி வெகு தீவிரமாக யோசித்து, அப்படி யோசிக்கிற நேரத்தில் கனம் உறுப்பினர்கள் எடுத்துச்சொன்ன எல்லாக் கருத்துக்களுக்கும் உரிய மரியாதை கொடுத்து அவற்றைப் பற்றியெல்லாம் ஆலோசித்து நாங்கள் முடிவு எடுக்க இருக்கிருேம் என்பதற்கு உறுதியளித்து, என்னுடைய இந்த விளக்கத்தோடும், வேண்டுகோளுக்கும் பிறகு வெட்டுப் பிரேரணைகளை வலியுறுத்த வேண்டாமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அடுத்து, முழுமுதல் தீர்மானத்தின் மீதும், வெட்டுத் தீர்மானங்கள் மீதும் வாக்களிப்பு.

முதலில் வெட்டுத் தீர்மானங்கள் மீது மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும். முதல் வெட்டுத் தீர்மானம் திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களுடைய தீர்மானம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை நான் வற்புறுத்தவில்லை.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : திரு. பொன்னப்ப நாடார் தம்முடைய வெட்டுத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு இந்த அவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களுடைய தீர்மானம், அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : திரு. சுப்பையா அவர்கள் அவருடைய இரண்டாவது வெட்டுப் தீர்மானத்தைத் வற்புறுத்துகிருர்களா?

திரு. ஆ. கு. சுப்பையா : நான் என்னுடைய வெட்டுப் பிரேரணையை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : திரு. சுப்பையா தம்முடைய தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுவதற்கு இந்த அவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : அவர்களுடைய தீர்மானம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : திரு. கோதண்டராமன் அவருடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிருர்களா?

திரு. வி. கே. கோதண்டராமன் : நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லை.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : திரு. கோதண்டராமன் தம்முடைய வெட்டுத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ள இந்த அவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : திரு. சுப்பையா அவர்கள் அவரது நான்காவது வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறார்களா?

**திரு. ஆ. கு. சுப்பையா** : நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லை.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : திரு. சுப்பையா தம்முடைய வெட்டுத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு இந்த அவை அனுமதியளிக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : திரு. சுப்பையா அவர்கள் அவரது ஐந்தாவது வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறார்களா?

**திரு. ஆ. கு. சுப்பையா** : நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லை.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்** : திரு. சுப்பையா தம்முடைய தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு இந்த அவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

**திரு. ஆ. கு: சுப்பையா** : அவர்களின் வெட்டுத் தீர்மானம் அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : நிலவரித் துறை பற்றிய மானியக் கோரிக்கை தீர்மானம், முழு முதல் தீர்மானம்—

'**கோரிக்கை எண் I** நிலவரித் துறை, என்ற தலைப்பின்கீழ், ரூ. 43,02,000-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் இப்போது இந்த அவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதா இல்லையா என்பது இந்த அவையின் முன் வைக்கப்பட்டுள்ள கேள்வி. இந்தத் தீர் மானத்திற்கு ஆதரவாக உள்ளவர்கள் 'ஆம்' என்று குரல் கொடுக்க வேண்டும்; எதிர்ப்பவர்கள் 'இல்லை' என்று சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

'ஆம்' என்பவர்கள் அதிகம் என்று கருதுகிறேன். ஆம் என்ப வர்கள் அதிகம்; ஆகவே, இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தாக அறிவிக்கிறேன்.

**கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.**





## கோரிக்கை எண் II—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : இரண்டாவது, மோட்டார் வண்டிச் சட்டத்தின் நிர்வாகம் பற்றிய முழு முதல் தீர்மானம். ரூ. 10,03,600-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டுமென்ற தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர் கள் கொண்டு வருவார்கள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை** : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி கீழ்க்கண்ட கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன்—

"கோரிக்கை எண் II—'மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்' என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,03,600-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்கவேண்டும்."

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : இதற்கு சில வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆறாவது வெட்டுத் தீர்மானத்தை திரு. சுப்பையா அவர்கள் அவைமுன் வைக்க விரும்புகிறார்களா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய தீர்மானங்கள் என்னென்ன என்று ஏற் கனவே முடிவு செய்யப்பட்டிருக்கிற காரணத்தால் ஒவ் வொன்றையும் தனித்தனியாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்** : வெட்டுப் பிரேரணை களை பற்றிக் கட்சித்தலைவர்களுடன் கலந்து முடிவு எடுக்கும் போது குறிப்பிட்ட வெட்டுப் பிரேரணைகளை மட்டும் வற்புறுத் துவது என்று முடிவு செய்யப்பட்ட நிலையில் மற்றவை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகின்றன என்ற அடிப்படையில் எடுத்துக் கொள்ளவேண்டும். அந்த முறையில் மூன்று கோரிக்கைகளை மட்டும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்யப் பட்டிருப்பதால் மற்றக் கோரிக்கைகளின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகின்றன என்ற கருத்தின் அடிப்படையில் முடிவு எடுக்கலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : நமது மதிப்பிற்குரிய அவை முதல்வர் அவர்கள் சொன்னது மாதிரி ஏற்கனவே தீர்மானம் செய்யப்பட்ட மூன்று மானியக் கோரிக்கைகளின் பேரில் மட்டும் தனித்தனியே கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு பாக்கி இருப்பதைப் பொருத்த வரை ஒரு மணிக்கு கில்லெட்டின் செய்யும்படியான முறையை அனுசரிக்க வேண்டுமென்று கனம் சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1967, மார்ச் 23

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : இரண்டாவது மானியக் கோரிக்கை தீர்மானத்தின் மீதுள்ள வெட்டுத் தீர்மானங்கள் 6-ல் இருந்து 14 வரை உள்ள வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன. இந்த அவையின் முன் வைக்கப்பட்டுள்ள முழு முதல் தீர்மானம் :—

"கோரிக்கை எண் II—'மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,03,600-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்" என்பது. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதா இல்லையா என்பது இந்த அவைமுன் வைக்கப்பட்டுள்ள கேள்வி. இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக உள்ளவர்கள் 'ஆம்' என்ற குரல் கொடுக்க வேண்டும் என்றும், எதிர்ப்பவர்கள் 'இல்லை' என்று சொல்லுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆம் என்று கூறியவர்கள் அதிகம் என்று கருதுகிறேன். ஆம் என்றவர்கள் அதிகம்; எனவே, இந்த முழு முதல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டதாக அறிவிக்கிறேன். கோரிக்கை நிறைவேற்றப்பட்டு மானியத் தொகை வழங்கப்பட்டது.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : அடுத்து, பொது விற்பனை வரியும் ஏனைய தீர்வைகளும் என்ற மானியக் கோரிக்கை தீர்மானத்தை மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

முற்பகல் 10-30 **மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இதில் மூன்று முக்கியமான பிரச்னைகளைப் பற்றி மட்டும், நிலவரி, கல்வி, வேளாண்மை ஆகிய மூன்றைப் பற்றி மட்டுந்தான் இங்கு வெட்டுப் பிரேரணைகள் கொண்டுவர இருப்பதால் முதலிலே அந்த மூன்றையும் முடித்துவிட்டு இறுதியில் மற்ற எல்லாவற்றையும் மொத்தமாக எடுத்துக் கொள்ளலாமா என்று அறிய விரும்புகிறேன். பதின்மூன்றாவதாகவுள்ள கல்விபற்றி சபை முன் சொல்ல அனுமதி வேண்டுகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : அவை முன் வைக்கப்பட்டுள்ள வரிசையை மாற்றி கோரிக்கை எண் பதின்மூன்றாகவுள்ள கல்வி பற்றிய கோரிக்கையை முதலில் எடுத்துக்கொள்ள அவை அனுமதிக்க வேண்டுமென்று அதுபற்றி ஒரு சிறு தீர்மானத்தை மன்ற முதல்வர் அவர்கள் கொண்டுவரும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

### 6. அரசாங்கத் தீர்மானங்கள்.

### (அ) அவை அலுவல் வரிசையில் மாற்றம்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்** : "கோரிக்கை எண் 13-வதாக இருக்கிற கல்வி மானியக் கோரிக்கையை மற்ற மானியக் கோரிக்கைகளுக்கு முன்னால் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை அவையின் முன் வைக்கிறேன்.

தீர்மானம் அவை முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.



1967 மார்ச் 23]

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : 13-வது கோரிக்கை, கல்வி என்ற தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இந்த அவை இப்போது தீர்மானித்திருக்கிறது. அதன்படி, கல்வி பற்றிய கோரிக்கை தீர்மானத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ரூ. 15,83,61,800-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டுமென்ற தீர்மானத்தை அவர்கள் கொண்டு வருவார்கள்.

### 5. 1967-68-ம் ஆண்டிற்கான முன் மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் XIII— கல்வி.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை** : கவர்னர் அவர்களின் பரிவுரைப்படி கீழ்க்கண்ட தீர்மானத்தை அவை முன் வைக்கிறேன்:—

"கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,83,61,800-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்".

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : இதில், முதல் வெட்டுத் தீர்மானத்தை மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. கே. விநாயகம் அவர்கள் கொண்டுவருவார்கள்.

*Sri K. VINAYAKAM : Mr. Speaker, Sir, I move the following cut motion standing in my name :—

'That the allotment of Rs. 15,83,61,800 under Demand No. XIII—Education, be reduced by Rs. 100'

to discuss about the failure of Gavernment to announce that complete fee concession would be given to all students irrespective of incomes of their parents and irrespective of the communities to which they belong at the P.U.C. level of University education from the academic year 1967-68.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : என் பெயரில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை நான் முன்மொழிகிறேன்.

"பாடசாலைக் கட்டிடங்கள் விஷயமாக விவாதிக்க" கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 15,83,61,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : முழு முதல் தீர்மானம், வெட்டுத் தீர்மானங்கள் இவை மீது இப்போது விவாதம் நடைபெறும். முதலில் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் பேசுவார்கள்.

*Sri K. VINAYAKAM : Mr. Speaker, Sir, I am fully conscious that this is only an Interim Budget and the Government want only a Vote on Account. But an important aspect has got to be emphasised even at this stage because usually the colleges in the State of Madras open in the month of June and the previous Ministry had committed itself to the policy, almost obtained the

consent of the public—that the P.U.C. tuition fees would not be collected from any students irrespective of the community to which they belong or irrespective of their parental income.

Mr. Speaker, Sir, there were days when education was consiered to be a luxury, much more so the University education. Education makes a person perfect and gives ample oppotunity to realise the best in himself. The Congress Party which was in power for many years, had launched upon a laudable programme and almost achieved monumental and stupendous successs in this field. Then elementary education was denied to the poor people of the State but after assuming Office, the Congress Party brought forward almost a legislation to the effect that there should be a compulsory elementary education scheme. Now, what is the achievement? Not less than 80 or 90 per cent of the school-going children have been brought under the ambit of elementary education. There are not many villages which could not boast of an elementary school. So, it had achieved the first stage of spreading the education. Illiteracy has almost been liquidated in our State. as far as the beginning of education is concerned. Later on to attract more children to the school, they have given facilities like mid-day meals, free uniforms and other concessions so that the weaker sections of the Nation could be benefited by the educational programme. Later on, they have opened innumerable high schools in different places, without even sticking to the principle that there should be at least a distance of three miles between the schools. That only shows that the previous Government were so keen that everybody should be brought under education. Education, in these days, Mr. Speaker, is almost of primary necessity as food, clothing, housing, etc., are. Such being the case, it was the endeavour of the previous Government that even persons who could not aford university education should be brought into that field and with that view, the previous Government announced that from the acedemic year, viz., 1967–68, they would throw open the university education free at the Pre-University level for all students. Now, especially, the students belonging to the backward classes, scheduled castes, etc., have already been enjoyin free education at the University level, if not entirely free but at least concessions they have been enjoying as far as fees are concerned. But the students who have been denied free education at the University level are forward communities like Brahmins, Vellalas and others. Such people should not be discriminated against as far as university education is concerned. That was the intention of the previous Government and they had made it clear that when they came to power, they would throw open Pre-University education free to all students in this State.

Now, the Hon. Chief Minister has made an announcement that he is not giving any indication of the shape of things to come in the Interim Budget and he has cautioned us to be patient and wait till their laudable scheme is launched upon. But my fear is that it will be too late to announce whether they are going to throw it open for all communities at this level and also they



should not come forward to tell us that it is too late to consider his programme at this stage and this can possibly be considered at the next academic year. Such being the case, I am now requesting the Government to say, whether they are going to accept this proposal. When they come forward with the regular Budget, they can adumbrate this scheme but still they should give an indication with regard to it because the entire State is awaiting the announcement with regard to what is going to be their policy as far as this aspect is concerned.

Much more fear has been created in our minds with regard to the admissions to the technical colleges like Medical College and the Engineering College and various other technical institutions. Now, students belonging to the backward classes, scheduled castes and other weaker sections of the society are being given some concessions as far as admissions are concerned. But I seen to have read somewhere a statement made by our Hon. Chief Minister that admissions to these tehnical institutions would be cinsidered purely on merits only. I may be wrong. The Chief Minister nods his head to give the impression that he has not made that statement. If he has not made that statement, I congratulate him for sticking on to the old principle which is at any rate a good principle to be followed. But on the other hand if he falls a prey to the temptation to regulate admissions on merit, woe unto our nation. A lot of backward class students will be at a very great disadvantage and they will not think of going anywhere near the portals of the college.

As far as the quality of education is concerned, there are no two opinions. With the wide spread of education and the indiscriminate opening of high schools, primry schools and colleges, the quality has considerably gone down. The Education Minister, who is an educationist himself, would take particular care to see whether the quality could be considerably improved. Our State is known for its efficiency as far as education is concerned. That should not suffer at any cost.

* திரு. எம். எஸ். மணி : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. விநாயகம் அவர்கள் கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரணை மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ளச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

(மதிப்பிற்குரிய துணைப் பேரவைத்தலைவர் தலைமை)

இந்த வெட்டுப் பிரேரணையை கொள்கை அளவில் நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், இப்போது இருக்கிற நிலைமையையும், முன்னே இருந்த நிலைமையையும் நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். பி.யு.சி. வரை இலவசக் கல்வி கொடுக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் எண்ணமாக இருக்கும் என்று கருதுகிறேன். இப்போது 1,500 ரூபாய்க்கு உட்பட்ட வருமானம் உள்ளவர்களுக்குத்தான் ஸ்காலர்ஷிப் கொடுப்பது என்பது நடை

முறையில் இருந்து வருகிறது. அதை 2,000 ரூபாயாக உயர்த்தலாமா என்பது இந்த அரசாங்கத்தின் எண்ணமாக இருக்கும் என்று நினைக்கிறேன். இதற்கு முன்னால் இருந்த அமைச்சரவை இங்கே இருந்தபோது. அந்தத் தொகையை 2,000 ரூபாய் அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று நாங்கள் கேட்டபோது அன்றைய தினம் மறுத்துவிட்டார்கள். நடைமுறையில் 2,000 ரூபாய் வரையில் ஸ்காலர்ஷிப் கொடுக்க வேண்டும் என்று வந்தால் இன்னும் பல பேர்கள் சலுகை பெற முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் இப்போது இருக்கும் முறையில் இல்லாதவர்களுக்கு உதவி செய்வதும், இருப்பவர்களிடமிருந்து பணம் வசூலிப்பதும் ஆன நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையில் நாளடைவில் கல்வியில சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே, இந்தக் கல்வியின் நிலைமை பற்றிச் சொல்லும் போது, பகலுணவுத் திட்டம் என்று ஒரு திட்டம் இருக்கிறது. அது நடை முறையில் சரிவரச் செயல்படவில்லை என்று அன்றையதினம் குறிப்பிட்டோம். அதன் காரணமாக ஆசிரியர்கள் வெளியில் வசூல் செய்யும் வேலைக்குப் போய் விடுகிறார்கள், அதனால் கல்வியின் தரம் குறைகிறது என்று குறிப்பிட்டோம். இலவச உடை பற்றியும், சீருடை பற்றியும் நான் குறிப்பிடும்போது யார் யாரோ உடைகள் தைத்துக் கொடுப்பதை முதல் அமைச்சரோ மற்றவர்களோ வழங்கும் நேரத்தில், 4,000 குழந்தைகளுக்கு முதலமைச்சர் இலவச உடை கொடுத்தார் என்று செய்தி வரும். வெளிநாடுகளில் அதை ஆங்கிலத்தில் ட்ரான்ஸ்லேட் செய்து, அந்த நாட்டின் முதலமைச்சர் 4,000 பேர்களுக்கு இலவச உடை கொடுத்திருக்கிறார்கள் என்று செய்தி வரும். பெற்றோர்கள் பணத்தில் குழந்தைகளுக்குத் துணி தைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கல்வியின் தரம் உயர அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, தேர்தலுக்காகப் பயன்படுத்தி வந்த முன்பு இருந்த நிலைமை இருக்கக் கூடாது என்று எண்ணுகிறேன். தற்போது கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டேட்மெண்ட் கூட கொடுத்திருக்கிறார். இந்த வாக்குறுதிகள் எப்போது கொடுக்கப்பட்டன? தேர்தலுக்கு முன்னாலே, காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய தலைவர் சொன்னார், பி.யு.சி. வரை இலவசக் கல்வி கொடுக்கலாம் என்று இருக்கிறேன் என்று. அப்போது இருந்த முதலமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட எண்ணம் இருக்கிறது என்று சொன்னார். இந்த வாக்குறுதி தேர்தலையொட்டிக் கொடுக்கப்பட்டதே தவிர, உள்ளபடியே அது நடைமுறைக்கு வரவேண்டுமென்று எண்ணம் இருந்தால், அதைத் தேர்தலுக்கு முன்னேயே செய்திருக்க முடியும்.

இப்போது இருக்கிற நிலைமை என்ன? அவர்கள் ஆட்சி செய்தபோது ஒரு குவின்டாலுக்கு நெல்லுக்கு 4 ரூபாய் போனஸ் கொடுத்தார்கள். அதைப் போல ஒரு கிலோ அரிசிக்கு ஐந்து காசு குறைவாக அவர்கள் கொடுக்கிறார்கள். இதெல்லாம் தேர்தலையொட்டி. அதன் காரணமாக சர்க்கார் கஜானா கொஞ்சம் காலியாகி



இருக்கிறது. நாங்கள் சொல்லுவது, நிலச்சுவாந்தார்களுக்கும், மற்ற விவசாயிகளுக்கும், உற்பத்திச் செலவைக் குறைக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, நான்கு ரூபாயைக் கூட்டிக் கொடுப்பதாலோ அல்லது ஒரு கிலோ அரிசிக்கு ஐந்து பைசா குறைப்பதாலோ பயன் தருமா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகவே, பொருளாதார நிலைமையை எண்ணிப் பார்க்கும்போது, பொருளாதாரச் சீரழிவு ஏற்பட்டிருக்கிறது. அதைச் சீர்செய்து கொண்டு இந்தச் சர்க்கார் மேலும் நல்ல காரியங்களைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிற காரணத்தினால் தான் நான் இந்த உதாரணத்தைச் சொன்னேன். ஆகவே, இந்தச் சர்க்காருக்கும் அந்த எண்ணம் இருக்கிறது. பி.யு.சி. வரையில் இலவசக் கல்வி கொடுக்க வேண்டுமென்பதிலே, எப்படிச் செய்யலாம் எப்படிச் சரிக் கட்டலாம் என்பதிலே கவனம் செலுத்துவார்கள் என்று சொல்லி இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன்.

* DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, I wish to offer a few remarks on the cut motion moved by Sri K. Vinayakam. Many Members in this House remember the hardships that the previous Ministry had to face when they made education free up to the secondary stage level. A number of teachers were put to extraordinary hardships. Large amounts of money that the Government were getting had to be foregone, and the Government had to tax further to make good the loss of revenue. I request the Members to take this not as an academic discussion but as a practical proposition. Whenever we give a concession like this, the question that presents itself is: How are we going to make good the loss of revenue? Just as the Chief Minister stated a few minutes ago, with regard to the land revenue the same problem arises even in regard to education. My submission is: why should we not allow the rich man to pay the money that he is willing to pay? At least let there be no bar to payment by the rich man. Let poor people not pay the amount. Why should the rich man who is willing to pay be prevented from paying the amount? Let that money be transferred to the teachers. The pay of the teachers and lecturers should be borne in mind. The teachers and lecturers are the most ill-paid, especially when we take into consideration the extraordinary quality of education that they have to impart and the calibre that is demanded from the lecturers. Lecturers should have secured a high percentage of marks and possess high academic qualifications. They have to infuse enthusiasm, maintain discipline and see that good education is imparted. When secondary education was made free, teachers suffered many hardships. They were not getting enough money, and for one or two years many teachers had a cut in their pay. Therefore when we press the Govenment to make educatino free at the Pre-University level, we must be very carefull. The suggestion is allright as a vote catching device. But as practical administrators we should put our heads together and see whether it is a practical measure at all. I consider this is an impractical measure. Rich men should not be given the concession of free education. Why should they be given the concession

when they have got a lot of money? When secondary education was made free, convent schools were started and they collected fees. If only fees had been collected in the high schools from the rich people, probably we would have got a little more revenue from the Education Department and that money could have been transfered to the poor teachers.

That is why, I request this House to consider this aspect and see that the quality of education should not suffer. I am for giving free education to the poor people and I want to emphasize that point. But at the same time, I am not supporting the proposition that free education should be given to the rich people. What is the real problem in education? The real problem is the question of having a large number of colleges. The problem is that in June or July there is a terriffic rush and every Member of the Legislature knows the situation when their houses will be stormed with a large number of persons who will say, 'Please give us a chance'. How can we give a chance as we have nothing to do in this matter. Still the people have got hope that we will be able to arrange some admissions. Therefore, we must remember that the present problem is not a question of giving free education at the University level. The present problem is to have enough number of high schools and colleges. Now, there are not enough number of colleges. Each boy has to apply for half a dozen colleges. He has to pay an application fee of Rs. 5 for six colleges and that comes to Rs. 30 for application forms. There are so many colleges which make a fabulous profit because the supply is much less than the demand. So, we must consider all these aspects and understand that this is not a question of raising slogans. We can put more words into our slogans but whether they are capable of being implemented, is the question. It is all right to raise slogans on the platform and a party can take credit that they have suggested free education at the University level. But they must consider whether it can be implemented in actual practice. Also, why should the advantage of free education go to the rich men? I would rather suggest that a party of that money should be transferred for giving help to the poor persons. With these words of caution, I would request the hon. Member, Sri Vinayakam, to withdraw his cut motion.

* திரு. கே. இரா. ஞானசம்பந்தன் : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கல்வி என்று சொல்லும்பொழுது முதன் முதலில் ஆரம்பப்பள்ளிகளை நமது அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு சில விஷயங்களைச் செய்ய வேண்டும். இன்றைய தினம் ஆரம்பப்பள்ளிகள் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் இருப்பதினால் அந்தப் பள்ளிகள் சரிவர நடைபெறவில்லை என்பது மட்டுமல்ல. அந்தப் பள்ளி ஆசிரியர்கள் அங்கு இருக்கக்கூடிய லோகல் பாலிடிக்ஸ் புகுந்து பலவிதமான இன்னல்களுக்கு ஆளாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. எனவே, என்னைப் பொறுத்தவரையில் அரசுக்கு நான் என்ன சொல்வேன் என்றால், ஆரம்பப் பள்ளிகளை சர்க்காரே எடுத்து நடத்துவது மிக மிக அவசியம். அப்பொழுது



தான் அவை திறமையாக நடைபெறுவது சாத்தியம் என்று நான் கருதுகிறேன். உதாரணமாக சமீபத்தில் தேர்தலின்பொழுது அன்று ஆளும் கட்சியாக அமர்ந்திருந்தவர்கள் தங்கள் செல்வாக்கை உபயோகப்படுத்தி ஆசிரியர்களை பல கஷ்டங்களுக்கு உள்ளாக்கினார்கள். அதைப்பற்றி பேசுவதற்குச் சந்தர்ப்பம் இல்லாத காரணத்தினால், அதற்கு விளக்கம் அதிகம் தேவையில்லை. ஆரம்பப் பள்ளிகளை உடனே அரசு எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஹையர்கிரேடு ஆசிரியர்களைப்பற்றி நிச்சயம் கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியம். அவர்கள் சர்வீஸ் முடிவதற்குள் அவர்களுக்கு ஊதிய உயர்வு மிகவும் குறைவு. ஹையர் கிரேடு ஆசிரியர்கள் 2, 3 ஆண்டுகள் பணி செய்துவிட்டால், அதற்குப் பிறகு ஒரு சாதாரண டெஸ்டு வைத்து, அவர்களை செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அந்த மாதிரி செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் இன்றையதினம் பல பேர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் போஸ்டில் வேலை செய்கிறார்கள். அதன் காரணமாக அவர்களுக்குப் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே, செகண்டரி கிரேடு ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், எந்த போஸ்டில் அவர்கள் வேலை செய்தாலும், அவர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகவே கருதப்படவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிப்பது மிகவும் அவசியம் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றையதினம் எஸ்.ஈ.ஓ.-வாக ரெவின்யூ இலாகாவில் வேலை செய்கிறவர்களை நியமனம் செய்கிறார்கள். அவர்களில் அநேகம் பேர்களுக்கு கல்வியைப் பற்றி அதிகம் தெரியாது என்று நான் கருதுகிறேன். அந்த நிலையில் அவர்கள் பள்ளிகளில் குறுக்கிட்டு கல்வி சம்பந்தம் இல்லாத பொதுவான நிர்வாகக் காரியங்களில் தலையிட்டு தொந்தரவு கொடுக்கிறார்கள். ஆகவே, எஸ்.ஈ.ஓ.-க்களாக நியமனம் செய்யும்பொழுது ஆசிரியர்களுக்கு உயர்வு கொடுத்து அவர்களை நியமனம் செய்யும்படியான ஒரு நடைமுறையை இந்த அரசு கையாள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதிய உணவு பற்றி ஏற்கனவே கனம் அங்கத்தினர் திரு. மணி அவர்கள் தெளிவாகப் பேசினார்கள். மதிய உணவு திட்டம் 'ஃபைல்யூர்'. மத்திய உணவுக்காக சர்க்கார் கொடுப்பது, 6 பைசா, 2 பைசா பஞ்சாயத்து போர்டு கொடுப்பது, 2 பைசா பப்ளிக் கலெக்ஷன் மூலம் ஆக 10 பைசா செலவு செய்து மதிய உணவு கொடுக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு பப்ளிக் கலெக்ஷன் பண்ண முடியவில்லை. சில பஞ்சாயத்து போர்டுகள் 2 பைசா கொடுப்பதில்லை. ஆகவே, ஆசிரியர்கள் 6 பைசாவுக்கு உணவு கொடுத்து, கணக்கில் 10 பைசா என்று எழுதுகிறார்கள். டெப்யூடி இன்ஸ்பெக்டர் கணக்கை கிளியராக வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள், வாஸ்தவமாக மத்திய உணவுத் திட்டத்தை அமல் நடத்துவதில் ஆசிரியர்களுக்கு மிகவும் சிரமம்

ஏற்படுகிறது. அதைப்பற்றி இந்த அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் சர்க்காரே மதிய உணவுக்காக 10 பைசா கொடுத்துவிட்டு, ஆசிரியர்களுக்குத் தொந்தரவு இல்லாமல் செய்தால், அவர்கள் பள்ளி வேலைகளை இன்னும் தெளிவாகச் செய்வதற்கு நலமாக இருக்கும். ஆகவே, அம்மாதிரி 10 பைசா சர்க்காரே கொடுக்க வேண்டும் என்ற ஒரு நிர்வாக உத்தரவை உடனே பிறப்பிப்பதோடு, அது சம்பந்தமாக என்ன செய்வது என்பது பற்றி அரசு நன்றாக யோசித்து, பின்பு தெளிவான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது தான் இந்த அரசுக்கு என்னுடைய ஆலோசனை.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு ஸ்காலர்ஷிப். ஹரிஜன மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வராவிட்டால், மாணவர்கள் பரீட்சை எழுத முடியாது என்று பல இடங்களில் பிரின்சிபால்கள் கூறுவதாகத் தெரிகிறது. அதுபற்றி இந்த அரசு உடனே கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும், பாட புத்தகங்கள் ஜூன் மாதம் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டாலும் ஆகஸ்டு மாதம் வரையில் கிடைப்பதில்லை. அதனால் சிலபஸ்படி கோச்-அப் பண்ணமுடியாத நிலை ஏற்படுகிறது. உடனே பாட புத்தகங்கள் கிடைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பாட புத்தகங்களை அரசே அச்சிட்டு உடனே விநியோகம் செய்யும்படி ஏற்பாடு செய்யவேண்டும், அல்லது குறிப்பிட்ட காலத்திற்குள் பாட புத்தகங்கள் எல்லோருக்கும் கிடைக்கும்படியான நிலை ஏற்படுவதற்கு உடனே உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மானேஜ்மெண்டு பள்ளிக்கூடங்கள். அது நிச்சயம் ஒரு பிசினஸ். எனவே, என்னுடைய தாழ்ந்த அபிப்பிராயம் என்னவென்றால், மானேஜ்மெண்டு பள்ளிகளை சர்க்காரே ஏற்று நடத்த வேண்டும். அதுதான் சரியான முறையில் நிர்வாகம் நடத்துவதற்கும், கல்வி அபிவிருத்தி ஏற்படுவதற்கும் உத்திரவாதமாக இருக்கும் என்று கருதுகிறேன். எனவே, மானேஜ்மெண்டு பள்ளிகளைப் பொறுத்த வரையில், அவற்றை சர்க்காரே எடுத்து நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அட்மிஷன் பற்றிய நிலை சர்க்காரில் இருக்கக் கூடிய மதிப்பிற்குரிய அமைச்சர்களுக்கும், மற்றவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அதுவும் ஒரு மாணவர் மருத்துவக் கல்லூரியில் சேருவது அவ்வளவு சுலபம் அல்ல. மாணவர் திறமையாகப் படித்தாலும், அதிகமாக மார்க்குகள் வாங்கி யிருந்தாலும், எம்.பி. பி.எஸ். பட்டப் படிப்பிறகு சேரவேண்டுமென்றால், சிபார்சு இல்லாவிட்டால் சேர்க்க முடியாது என்பது நேற்றையதினம் வரையில் காங்கிரஸ் சர்க்கார் ஆட்சியில் இருந்த நிலை. நம்முடைய சர்க்கார் இதில் கவனம் செலுத்தி, இந்த வருஷத்திலாவது நிச்சயம் மாணவர்களுக்கு உற்சாகம் ஊட்டவேண்டும். திறமையான மாணவர்களுக்கு எந்த சிபார்சும் இல்லாமல், நிச்சயம் மருத்துவக் கல்லூரியிலும் சரி, என்ஜினியரிங் கல்லூரியிலும் சரி, அட்மிஷன் கிடைக்க



வேண்டும், நிச்சயமாக திறமையுள்ள மாணவர்களுக்கு இடம் உண்டு என்ற நம்பிக்கை மாணவர்கள் சமுதாயத்திற்கு ஏற்பட வேண்டும். எந்த விதமான சிபார்சும் இல்லாமல் திறமையின் அடிப்படையில் மாணவர்களுக்கு அட்மிஷன் கிடைக்கும் என்ற உத்திரவாதத்தை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுப்பது மிகவும் அவசியம்.

பாலிடெக்னிக் சம்பந்தப்பட்டவரை பிரைவேட் கன்சர்னும் இருக்கிறது, கவர்ன்மெண்டு நடத்துவதும் இருக்கிறது. கவர்ன்மெண்டு நடத்துகிற பாலிடெக்னிக்களில் நிர்வாகம் எப்படி நடக்கிறது என்பதை கனம் கல்வி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். என்னுடைய தொகுதியில் நாகப்பட்டணத்தில் சர்க்கார் நடத்தும் பாலிடெக்னிக் ஒன்று இருக்கிறது. அங்கே பிரின்சிபால் மாணவர்களுடைய உறவு சம்பந்தமாக தேர்தல் சமயத்திலே பல தகராறு நடந்திருக்கிறது. எனக்கு அதுபற்றி மனுவும் வந்திருக்கிறது. நான் கல்வி அமைச்சர் அவர்களைத் தனியாக சந்தித்து அதுபற்றி தனியாகப் பேசுகிறேன். சர்க்கார் நடத்துகிற பாலிடெக்னிக்களுடைய நிர்வாகம் சம்பந்தமாக தெளிவாகப் பரிசீலனை செய்து, நிர்வாகத்தைச் சரிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பிரைவேட் பாலிடெக்னிக்களைப் பொறுத்த வரையில், கவர்னிங் அதாரிடியை வேண்டுமானால் அவர்களுக்குக் கொடுத்துவிடலாம். மற்றபடி செலக்ஷன் மற்ற விஷயங்கள் சம்பந்தமாக அவர்களிடம் அதிகாரங்கள் இருப்பதினால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. அம்மாதிரி பிரைவேட் பாலிடெக்னிக்கள் சம்பந்தப்பட்டவரையிலும் கூட, செலக்ஷன் கமிட்டி அதிகாரத்தை சர்க்காரே எடுத்துக்கொண்டு, சர்க்கார் பிரதிநிதிகளையும் மற்றும் அங்கு இருக்கக்கூடிய பொது ஜனங்களின் பிரதிநிதிகளையும் கொண்ட செலக்ஷன் கமிட்டி அமைப்பது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். கவர்னிங் அதாரிடியை வேண்டுமென்றால் பிரைவேட் கன்சர்னுக்கு விட்டுவிடலாம். அம்மாதிரி நடைமுறையை வகுப்பதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இம்மாதிரி விதத்தில் கல்வி சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பது மிக மிக அவசியமும் அவசரமுமான விஷயம் என்பதை மீண்டும் வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து ஆரம்பப் பள்ளிகளை சர்க்காரே எடுத்துக்கொள்ள வேண்டும். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு டிரான்ஸ்பர் மற்ற விஷயங்களில் பல சிரமங்கள் இருக்கின்றன. எந்த ஆசிரியர் எங்கே வேலை செய்யவேண்டும் என்பது நிச்சயம் கிடையாது. பஞ்சாயத்து யூனியன் தலைவருக்குப் பிடிக்கவில்லை என்றால், ஆசிரியர் வேறு இடத்திற்கு மாற்றப்படுகிறார். மேலும், கிராமப் புறங்களில் ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பது அவசியம். ஒன்றிரண்டு இடங்களில் ஃபீமேல் டீச்சர்களுக்கு குவார்ட்டர்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் கிராமப்

களில் வேலை செய்யும் பொழுது, அவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளைச் சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும். பணப் பிரச்னையாக இருந்தபோதிலும், அதற்குச் சர்க்கார் உத்திரவாதம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வது அவசியம். எனவே, இந்த விதத்தில் ஆரம்பத்திலிருந்தே சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது என்னுடைய கருத்து என்று கூறிக்கொண்டு, எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரி-
மூற் பகல் 11-30 வித்துக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கே. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு உதவி சபா நாயகர் அவர்களே, இங்கு கொண்டு வந்திருக்கும் வெட்டுப்பிரேரணைகளுக்கு அவசியம் இல்லை என்பதைக் குறிப்பிட்டு, சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு பொறுப்பு ஏற்றுள்ள நம்முடைய அரசாங்கம் கற்றறிந்த மேதையை முதல்வராகக் கொண்டு அமைந்திருக்கிறது. ஆகவே, படிப்பிற்கு மேலும் மேலும் சலுகைகள் ஓங்குவதற்கும், படித்தவர்களுக்கு உதவிகள் செய்வதற்கும் ஆவன செய்வார்கள் என்று நம்பலாம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். புகுமுக வகுப்பிற்கு கடந்த கால அரசு தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியை எந்த அளவு நடைமுறையில் நிறைவேற்ற முடியுமோ அந்த அளவிற்கும், இன்னும் மற்ற வழிகளிலும் வசதிகளை நிச்சயம் செய்வார்கள். அதோடு கூட உயர்நிலைப் பள்ளிகளிலும் உள்ள குறைபாடுகளை நிவர்த்திக்க தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். கடந்த கால அரசு செய்த தவறுகளை நேரிடையாக அனுபவித்தவன் என்கிற முறையில் அவற்றைச் சொல்ல முற்படுகிறேன். லாங்வேஜ் டிபார்ட்மெண்டில், மொழித் துறையில் தான் அப்படிப் பட்ட குறைகள் இருக்கின்றன. கல்லூரிப் பேராசிரியர்களிலே கிரேட் 1, கிரேட் 2 என்று மொழித் துறையில் அமைத்திருக்கிறார்கள். கிரேட் 1 பேராசிரியர் எந்தப் பணியைச் செய்கிறார்களோ, ஒருவாரத்திற்கு 13 மணி நேர வேலை செய்கிறார்கள். அதே போலத்தான் கிரேட் 2 ஆசிரியரும் செய்கிறார்கள். வெள்ளைக்கார அரசாங்கம் நடந்த காலத்திலே வெறும் வித்துவான் பாஸ்செய்துவிட்டு ஆசிரியராக வந்து வேலை செய்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள் சென்னை மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் மூன்று நான்குபேர்கள் தான் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் ட்யூடர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தைவிட ரூ. 50 குறைவாகக் கொடுக்கப்படுகிறது. அந்தக் குறையைத் தவிர்க்க வேண்டும், நிவர்த்திக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். ட்யூடர் என்பவர் வாரத்திற்கு 6 மணிநேரம் தான் வேலை செய்கிறார். அவர் திருத்த வேண்டிய நோட்டுகளும் குறைவு. ஆனால், அந்தக் கல்லூரியில் இருக்கும் தமிழ் ஆசிரியருக்கு, தமிழ் ஆட்சிமொழியாக இருக்கும் இந்த நாளில், தமிழர்கள் ஆட்சிசெய்யும் இந்த நாளில், அந்த ட்யூடரையும் விடக் குறைவான சம்பளம் என்பது மிக்க வருந்தத்தக்க நிலை. அந்த நிலைமையைப் போக்க தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நம்முடைய சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிக்





குறைதீர்க்கபட வேண்டிய ஆசிரியர்கள் மாநிலத்திலேயே இரண்டு, மூன்று பேர்கள்தாம் இருப்பார்கள். அவர்களுடைய குறைகளை நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, அரசாங்கக் கல்லூரிகளில் தரம் குறைந்திருப்பதையும், தனியார் நடத்தும் கல்லூரிகளில் அதற்கு மாறுபட்ட நிலை இருப்ப தையும் கடந்த கால ஆட்சியில் பார்த்தோம். தனியார் கல்லூரி களில் சிறப்பிற்குக் காரணம் என்ன? அரசாங்கக் கல்லூரிகளில் தேவையில்லாமல், அடிக்கடி திடீர் திடீர் என்று மாற்றம் செய்வது தான் காரணம். கல்லூரிகளில் பார்த்திருக்கிறோம், மூன்று மாதங் கள் கூடத் தொடர்ந்து ஒரு ஆசிரியர் வகுப்புகளை நடத்த விடுவ தில்லை. வகுப்புக்கள் கான்சல் செய்யப் பட்டு மாணவர்கள் ஆசிரி யர்கள் இல்லாமல் போவார்கள். அப்படிப்பட்ட நிலை இருந்தால், தரம் எப்படி இருக்கும் என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். இனிமேல் வரும் நாட்களிலாவது, அப்படிப் பட்ட நிலைகள் வராமல், தேவையில்லாமல் ட்ரான்ஸ்பர்கள், அதாவது மாற்றங்கள் செய்வதைக் குறைக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இந்த மொழித்துறையில் உள்ளவர்களை கடந்த கால அரசு அவமானப்படுத்தும் வகையில் காரியங்கள் செய்திருக்கிறார் கள். தமிழ் ஆசிரியர் பொதுக்கல்லூரிக்கு முதல்வராக எல்லாத் தகுதிகளும் இருந்தும், திருச்சி போன்ற நகரங்களில், பெரியார் ஈ. வே. ரா. கல்லூரி போன்றவைகளில் முதலில் பிரின்சிபாலாகப் போட்டு, சிறிது காலம் கழித்து, அவர்களைக் கல்லூரி பேராசிரிய ராகவே போட்டிருக்கிறார்கள். அந்தக் குறை நிவர்த்திக்கப்பட வேண்டும்.

அடுத்து, கல்லூரிகளில் இருக்கும் எல்லா ஆசிரியர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அந்த வகையில், அகில இந்தியாவிலும் இருக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரேவிதமான சம்பளம் கொடுக்கப் படவேண்டும் என்கின்ற வகையில், யுனிவர் சிடி கிராண்ட்ஸ் கமிஷன் செய்த ஏற்பாட்டின் அடிப்படையில் எல் லோருக்கும் சம்பள விகிதத்தை அமைக்க நம்முடைய அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

சில இடங்களில், தகுதி இல்லாதவர்களை கல்வித் துறைக்கு அதிகாரிகளாகப் போட்டிருக்கிறார்கள். அவற்றை மதிப்பிற்குரிய கல்வி அமைச்சரவர்களே நேரிடையாகப் பார்த்திருக்கிறார்கள். அந்தக் குறையையும் நிவர்த்திக்க வேண்டும்.

வெட்டுப் பிரேரணைகளுக்கு அவசியம் இல்லை என்று கூறி, அமைச்சர் கொண்டு வந்திருக்கும் பிரேரணையை ஆதரித்து, கருத்துக்கள் சொல்ல அனுமதி கொடுத்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

* திரு. டி. மார்ட்டின் : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரணை மீது பேச சந்தர்ப்பம் கொடுத்த தங்களுக்கு முதற்கண் நன்றி தெரிவிக்கிறேன். தமிழகத்தின் முன்னாள் முதல

மைச்சராக யிருந்த தலைவர் காமராஜ் ஆட்சியில் ஆரம்பப் பள்ளி முதல் ஹைஸ்கூல் வரைக்கும் மாணவர்கள் பீஸ் சலுகை அடைந்து படிக்கும் வசதியைச் செய்திருந்தார்கள். அது மட்டும் போதாது என்று கருதி, கல்லூரி வரைக்கும் அந்த மாணவர்கள் பீஸ் இல்லாமல் படிக்க ேண்டும் என்று விரும்பி, அந்தச் சமயத்தில் சர்க்காரில் முதல்வராக இருந்த கனம் பக்தவத்சலம் அவர்களிடம் அதனைச் செய்யுமாறு கூறினார்கள். அவர்களும் அதை ஒத்துக்கொண்டார்கள். அந்த முறையை தலைவர் காமராஜ் அவர்கள் விரும்பிச் சொன்னார்கள், அன்று அரசில் இருந்த முதல்வரும் ஒத்துக்கொண்டார்கள். நடைமுறையில் கொண்டு வருவதற்கு ஒத்துக்கொண்டார்கள். எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன். தலைவர் காமராஜ் அவர்கள் சொல்லியவற்றை ஓரளவு செய்துதான் வந்திருக்கின்றார்கள். அவர்கள் அதிகம் கல்வி பயிலாதவர்கள். ஆனபோதிலும், கல்வியைப் பற்றி அதிகம் அக்கறை கொண்டவர்கள். கல்விக்காக எதுவேண்டுமானாலும் செய்ய வேண்டும் என்று பணியாற்றியிருக்கிறார்கள். தலைவர் காமராஜ் அவர்கள் கல்விக்குச் செய்திருக்கும் நன்மைகளைவிட, நாங்கள் ஆட்சிக்கு வந்தால், கல்வியைப் பற்றி அதிகம் தெரிந்த நாங்கள், அதிகமான கல்விச் சலுகைகளைக் கொடுப்போம் என்று சொன்னார்கள். அதே நேரத்தில் கல்லூரியில் பி.யு.சி. படிப்பிற்குக் கட்டணம் இல்லாமல் வசதியைச் செய்து கொடுக்க உடனடியாக எதையும் செய்ய முன்வரவில்லை. இதற்குச் சிந்தனை செய்ய அதிக நேரம் வேண்டுமா என்பதை எண்ணிப் பார்க்கும் போது, உண்மையிலேயே வருத்தப்படவேண்டியிருக்கிறது. காரணம் என்னவென்றால், நம்முடைய சமுதாயத்தில் இருப்பவர்கள் எல்லோரும் பணக்காரர்கள் இல்லை. ஏழைகள்தாம் அதிகமானவர்கள் என்பது நான் சொல்லி இன்றைக்கு ஆட்சி நடத்துகிறவர்களுக்குத் தெரியவேண்டியதில்லை. அடிக்கடி பொதுக்கூட்டங்களில் சொல்லுகிறார்கள், நாங்கள் மாளிகையை சுற்றிவருவதில்லை, மண் குடிசைகளைத்தான் அதிகமாகச் சுற்றி வருகிறோம் என்று. மண் குடிசைகளில் வாழ்பவர்கள் தாம் இன்றைக்கு ஏராளமானவர்கள் மேல் படிப்பிற்குப் போக முடியாமல் அவதிப்படும் நிலைமையைக் கண்கூடாகக் காண்கிறோம். கல்லூரிப் படிப்பிற்குப் போகமுடியாமல் இருக்கிறார்கள். மாணவர்களில் பலர் தாய் தந்தைகள் மிக்க வசதியுள்ளவர்களைக் கொண்டவர்கள் இல்லை. பலர் அகதிகளாக இருக்கிறார்கள். அப்படிப் பட்ட அனாதை நிலையில் மேல் படிப்பிற்கு வசதிகள் கிடையாது. அனாதை இல்லங்களிலும் நன்றாகத் திறமையானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மேல் படிப்புக்குப் போக வசதி கிடையாது. அல்லல்படுகிறார்கள். திறமை இருக்கிறது. இருந்தாலும், கல்லூரிக்குப் போகும் வசதி படைத்திருக்கவில்லை. பீஸ் கட்டமுடியாத நிர்ப்பந்தமான நிலை இருக்கிறது. ஆர்பனேஜில் படிக்கும் பிள்ளைகளுக்கு அதனை நடத்துவோர் அவர்களிடம் உள்ள அளவிற்குப் படிப்பைக் கொடுக்கிறார்கள். மேற்கொண்டு படிக்க வேண்டும் என்றால் மிக்கக் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்ட விடுதிகளில் இருக்கும் மாணவர்களுக்காவது உதவியளிக்க வேண்டும் என்று



கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி ஒரு உத்தரவு போட்டால் கதி பற்ற மாணவர்கள் கல்லூரிப் படிப்பு படிக்க முடியும். அப்படிப் பட்ட கல்வி ஸ்தாபனங்களுக்கு மானியமும், அதோடு கடனும் கொடுத்து உதவ வேண்டும். அதோடு சர்க்காரில் இருக்கும் புறம் போக்கு நிலங்களை அப்படிப்பட்ட கல்லூரிகளுக்குக் கொடுத்தால், அந்த நிலங்களை அவர்கள் நல்ல முறையில் பயன் படுத்தி, நல்ல வருமானம் வரக்கூடியதாக மாற்றிக் கொள்வார்கள். அப்படிப் பட்ட கல்லூரிகளுக்கு அரசாங்கம் உதவியளித்தால், கட்டணம் இல்லாமல் செய்தால் அந்த மாணவர்களாவது கட்டணம் இல்லா மல் படிக்க உதவியாக இருக்கும். இந்தக் கல்லூரிப் படிப்பிற்கு பீஸ் இல்லாமல் இருக்கும் நிலை கண்டிப்பாக வரும் என்று பொது மக்கள் எல்லோரும் எதிர் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள் ஆகவே, இன்றைக்கு ஆட்சி நடத்துகிறவர்கள், அரசில் உள்ளவர்கள் இந்தச் சலுகையைத் தரவில்லை என்றால் பொதுமக்கள் மிக்க ஏமாற்றம் அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கல்லூரிகளைப் பற்றிக் குறிப்பிடும் போது,

"There are Principals without vision, libraries without books laboratories without equipments, students without discipline".

என்று முன்பு ஒருவர் குறிப்பிட்டார். அதுபோன்று, இன்று அநேக கல்லூரிகளில், லைப்ரரிகளில் தகுந்த புத்தகங்கள் இல்லை, லாபரட்டரிகளில் தகுந்த கருவிகள் இல்லை, ப்ரின்சிபால்களாக இருக்கக்கூடியவர்களுக்கு மாணவர்களை எந்த விதமாக நடத்திச் செல்ல வேண்டும் என்ற நிலைமை தெரியாமலிருக்கிறது. மாணவர்கள் தங்களுடைய கடமையையும் ஒழுக்கத்தையும் மறந்து சிற்சில சமயங்களில் வெளிவந்துவிடுகிறார்கள். இவற்றிலெல்லாம் கவனம் செலுத்தி, கல்வியில் ஒரு அடிப்படையான சீர்திருத்தம் தேவை என்பதை இந்தச் சபையில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கல்வியில் சீர்திருத்தம் தேவை என்று சொல்லுகிற போது, கல்வி நிபுணர்களைக் கொண்ட ஒரு கமிட்டி ஏற்பாடு செய்து, அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்று ஆட்சியாளர்கள் சொல்லலாம். எடுத்தற்கெல்லாம் கமிட்டி, கமிட்டி என்று நாம் சொல்லிக் கொண்டிருந்தால் உடனடியாக எந்தச் சீர்திருத்தமும் செய்ய முடியாமல் போய்விடும் என்று தெரிவித்துக்கொண்டு, கற்றறிந்த ஒரு முதல்வர் இன்று ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற நிலையில், அவர்கள் எதற்கும் உடனடியாக ஒரு தீர்மானத்தையும் ஒரு முடிவையும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இறுதியாக, கல்வியைப் பொறுத்த மட்டில், புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி அளிக்கும் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொண்டு, இந்த வெட்டுப் பிரேரணையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த கனம் துணைச் சபாநாயகர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, உரையை முடிக்கின்றேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது எனது சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1967 மார்ச் 23

பொதுவாகக் கல்வியிலே தரம் குறைந்திருக்கிறது என்று எங்கும் பேசப்படுகிறது. இந்தத் தரக் குறைவு எப்படி ஏற்படுகிறது என்பதை நாம் கவனித்தால், ஆரம்பப்பள்ளியிலிருந்துதான் இது தொடங்குகிறது என்று நாம் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆரம்பப் பள்ளி நிலையிலே ஆசிரியர்களுக்கு இருக்கின்ற குறைகள் நிவர்த்திக்கப்பட வேண்டும். அவர்களுக்குத் தங்களுடைய குடும்பங்களைப் பற்றியோ, வேறு விஷயங்களைப் பற்றியோ உள்ள தொல்லைகளைச் சிந்திப்பதற்கான நிலை இல்லாமல், அவர்களுக்கு எல்லா விதச் சௌகரியங்களும் இருக்குமானல், பள்ளிகளிலே இளம் மாணவர்களுக்குப் பாடங்களை நல்ல முறையில் சொல்லிக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே, ஆரம்ப ஆசிரியர்களுடைய குறைகள் நீக்கப்பட வேண்டும். அவர்களுடைய ஊதியம் அதிகரிக்கபபட வேண்டும். அது மட்டுமல்லாமல், கிராமங்களில் இருக்கின்ற ஆசிரியர்கள் வீட்டு வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படும் நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும்போது, மிகவும் உள்நிலையில் இருக்கும் கிராமங்களில் ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கான காரியங்களைத் துரிதமாக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆசிரியர்-மாணவர்கள் விகிதாசாரம் மிக அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த விகிதாசாரம் குறைக்கப்பட வேண்டும். ஒரு ஆசிரியருக்கு 25 மாணவர்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்ற முறையிலே விதிகளை மாற்றியமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மதிய உணவுத் திட்டத்தைப்பற்றிச் சபையில் எல்லோரும் குறிப்பிட்டார்கள். மதிய உணவு அளிப்பது மிக முக்கியமான காரியம். ஆனல், மதிய உணவு அளிக்கும் விஷயத்தில் ஆசிரியர்கள் அதிக நேரம் செலவிட வேண்டியிருக்கிறது. ஆகவே, மதிய உணவு அளிக்கும் திட்டத்திற்கு ஆகும் செலவுத் தொகை பூராவையும் சர்க்காரே மேற்கொள்ள வேண்டும். அல்லது, கிராமத்தில் புறம்போக்கு நிலங்கள் இருக்குமானல், அவற்றைப் பள்ளிகூடத்திற்கு மதிய உணவுத் திட்டத்திற்காக 'அஸைன்மெண்ட்' செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்னும் ஒரு படி மேலும் செல்லலாம். கிராமத்திலுள்ள பெரு நிலச்சுவான்தார்களிடத்திலே தானமாகக் கூடக் கேட்டு வாங்கி, இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கலாம்.

உயர்நிலைப் பள்ளிகள் பல இடங்களில் பெருவாரியாக ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன என்றாலும், அவைகளுக்குப் போதுமான கட்டட வசதி இல்லை. லாபரடரி வசதிகளும் போதுமான அளவிற்கு இல்லை. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் நியமிப்பதற்கு வேண்டிய ஆசிரியர்கள் கிடைப்பதில்லை. உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் பயிற்சியும் தேவைக்கேற்ற விகிதாசாரத்தில் இல்லை. பயிற்சிக்கான வசதியையும் அதிகப்படுத்த வேண்டும். அத்துடன் உயர்நிலைப் பள்ளிகளில் லாபரடரி வசதிகளையும் அதிகப்படுத்த வேண்டும். பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் கிடைப்பதில் குறை இருக்கிறது. ஆகவே, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளையும் நாம் ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. இந்தக்



1967 மார்ச் 23] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

குறைகளையெல்லாம் நாம் கீழ் நிலையில் சரிசெய்யவில்லையென்றால், கல்வியின் தரம் மேலே குறையத்தான் செய்யும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். கல்வியில் தரக் குறைவு இருக்குமானல், அது தேசத்தின் நிலையைப் பாதிக்கும் என்பதில் கொஞ்சங்கூட சந்தேகம் இல்லை.

தமிழைப் போதனு மொழியாகக் கொண்டுவர முயற்சிக்கப்படு கிறது. இதைச் சற்றுவேகமாகச் செய்ய வேண்டும். ஏனென்றால், உயர்நிலைப்பள்ளி நிலையில் தமிழின் மூலம் பாடம் கற்றுக்கொண்ட மாணவர்கள் கல்லூரி நிலையில் ஆங்கிலத்தின் மூலம் உள்ள பாடங் களைப் புரிந்து கொள்ளுவதற்கு மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே கல்லூரி நிலையிலும் தமிழைப் போதனு மொழியாகக் கொண்டுவருவதற்கு இன்னும் அதிக நேரம் எடுத்துக் கொள்ளாமல், விரைவிலேயே கொண்டுவருவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் தலைமை)

புதிதாகக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படும்போது எங்கு பார்த்தா லும், கலைக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுவதற்குப் பதிலாகத் தொழிற் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அரசாங்கம் முன் உரிமை தரவேண்டும். மேலும் மேலும் தொழிற் கல்வியை மாண வர்களுக்கு அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அதிலே அதிக கவனம் செலுத்த வேண்டும். மேலும் மேலும் கலைக் கல்லூரிகளையே ஆரம்பிப்பதனல், எழுத்தர் வேலைக்குரியவர் களையே தயார் செய்வதைவிட, தொழிற் கல்விப் பயிற்சி அளிப் பதன் மூலமாக பயிற்சி பெற்ற மாணவர்கள் தாங்களாகவே சிறு சிறு தொழில்களை ஆரம்பித்து, வாழ்க்கை வசதியைப் பெருக்கிக் கொள்ளுவார்கள். ஆகவே, தொழிற் பயிற்சிக் கல்லூரிகளை அதிகம் ஏற்படுத்தி, கலைக் கல்லூரிகள் ஏற்படுத்துவதைக் குறைத் துக்கொள்ளலாம். இந்த வகையில் சர்க்கார் சிந்தித்து ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

படிக்க வேண்டும் என்ற எண்ணம் மக்களிடத்திலே பரவலாக ஏற்பட்டிருக்கிற காரணத்தால், ஆண்டுக்காண்டு மாணவர்கள் தொகையும் அதிகரித்துக் கொண்டு வருகிறது. மாணவர்கள் தொகை அதிகரிக்கும்போது, பிற்பட்ட நிலையில் இருக்கும் மாணவர்களுடைய தொகையும் அந்த விகிதாசாரத்தில் வேக மாகப் பெருகிக் கொண்டு வருகிறது. ஆனல், பிற்பட்ட மாணவர் களுக்கும் அரிசன மாணவர்களுக்கும் கல்லூரிப் படிப்புக்காக ஒதுக்கப்படும் உதவித் தொகை ஏற்கனவே இருந்த நிலையிலேயே இருந்து கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் தொகை குறைந்திருக்கிறது. அந்தக் குறைவு ஏற்படா வண்ணம் ஆண்டுதோறும் மாணவர்களின் எண்ணிக்கை உயர்வுக் கேற்ற அளவிற்கு, உதவித் தொகையும் மானியத் தொகையும் அதிகமாக ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளு கின்றேன்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1967 மார்ச் 28

பட்டுக்கோட்டைப் பகுதியில் மகளிர் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று அப் பகுதி மக்கள் விரும்புகிறார்கள். அது மட்டுமல்லாமல், தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றையும் அங்கு ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று நினைக்கிறேன். தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை அங்கு ஏற்படுத்துவதோடு, பாலிடெக்னிக் ஒன்றையும் அங்கு ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : கல்வி பற்றிய இந்த மானியக் கோரிக்கையின் மீது மாண்பு மிகு முதல் அமைச்சர் அவர்கள் இப்பொழுது இறுதி உரையாற்றுவார்கள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை** : தலைவர் அவர்களே, கல்விக்கான மானியக் கோரிக்கையின் பேரில் இங்கே கனம் உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்ன கருத்துக்களைப் பார்க்கும்போது, இதிலே வெட்டுப் பிரேரணை என்ற பெயராலே சொல்லப்பட்டிருந்தாலும், இருப்பதைவிட அதிகமான அளவிற்குப் பணம் செலவழிக்க வேண்டும் என்ற கருத்தோடுதான் அந்த வெட்டுப் பிரேரணை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மிக முக்கியமாக இதிலே குறிப்பிட்டது, “பி.யு.சி. வகுப்பிற்கு நீங்கள் உடனடியாக இலவசம் ஆக்குவதற்கு என்ன வழி செய்யப் போகிறீர்கள்? முன்னாலே இருந்த துரைத்தனம் அந்த வாக்களித்திருக்கிறதே?” என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அதற்குப் பதில் சொல்லுகிறபோது, அந்த பதிலைக் கொண்டு, பி.யு.சி. வகுப்புக்கு இலவசமாக இருக்கப் போவதில்லை என்ற முடிவிற்கு வர வேண்டாம்; அது தனிப் பிரச்சினை. ஆனால், முன்னாலே இருந்த சர்க்கார் அப்படி ஏதாகிலும் வாக்களித்திருக்கிறதா, சர்க்கார் துறையிலே, என்று பரிசீலனை செய்து பார்த்ததில், அந்த விதமாக எந்த விதமான உத்தரவும் இல்லை. வெளியிலே அந்தக் கட்சியைச் சார்ந்த தலைவர்கள், “பி.யு.சி. வகுப்புக்கு இலவசம் ஆக்கப் போகிறோம்” என்று பேசியிருப்பது தவிர, ‘சர்க்கார்’ என்ற துறையிலிருந்து அதற்கான உத்தரவோ, திட்டமோ, ஏற்பாடோ, நிதி ஒதுக்கலோ எதுவும் செய்யப்படவில்லை. இதை நான் சொல்வதாலேயே அவர்கள் அப்பொழுது வாக்களிக்கவில்லை, ஆகையால் இப்பொழுது இதை நான் செய்யப் போவதில்லை என்று அவசர முடிவிற்கு வரவேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். கனம் காமராஜர் அவர்கள் கல்வி விஷயத்திலே காட்டிவந்த ஆர்வத்தை அவர்கள் பாராட்டினார்கள். அதற்காகக் கனம் காமராஜரைப் பாராட்டுவதில் நான் எந்த அளவிற்கும் காங்கிரஸ் உறுப்பினருக்குப் பின்வாங்கியவன் அல்ல. அவர்கள் கல்வித் துறையில் ஆர்வத்தை காட்டி நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொன்ன நேரத்தில் காங்கிரஸ்காரர்களைவிட நான் அதிகம் பாராட்டியிருக்கிறேன். ஆனால் தேர்தல் கூட்டங்களிலே, “நீங்கள் அதிகமாகச் செய்வதாகச் சொன்னீர்களே?” என்று குறிப்பிட்டார்கள். தேர்தல் பேச்சுக்களை அவர்கள் இங்கே குறிப்பிட்ட காரணத்தினால் சொல்ல வேண்டியிருக்கிறது. இருக்கிற பள்ளிக்



1967 மார்ச் 28] [திரு. சி. என். அண்ணாதுரை]

கூடங்களை எல்லாம் நாங்கள் மூடிவிடுவோம் என்பதாக காங்கிரஸ் மேடையில் பேசப்பட்ட காரணத்தினால், ‘நாங்கள் பதவிக்கு வந்தால் கல்வித் துறைக்கு அதிகமாகச் செலவழிப்போம். கல்வித் துறையை நல்ல முறையில வளர்ப்போம்’ என்பதாகச் சொன்னோம். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அந்தப் பிரசாரத்தின் ஒரு பகுதியைச் சொல்லி இன்னொரு பகுதியை விட்டுவிட்டார்கள். ஒரு கதையில் ‘ஒருவன் இடறி விழுந்தான்’ என்கிற ஒரு வாக்கியம் இருக்கலாம். அந்த வாக்கியத்தை முன்னால் உள்ளவற்றோடு சேர்த்துப் பார்த்தால்தான் ‘பிறவிக் குருடன் துணை இல்லாமல் சென்றான். இடறி விழுந்தான்’ என்ற முழுக் கதை தெரியும். ‘அவன் இடறி விழுந்தான்’ என்கிற ஒரு வாக்கியத்தை மட்டும் வைத்துப் பார்த்தால, ‘வேறு வழியில் இடறி விழுந்தானோ?’ என்ற சந்தேகம் எழும். அதுபோல, பிரசாரத்தின் ஒரு பகுதியைத்தான் அவர்கள் சொன்னார்கள். அது முழுக் கதை அல்ல. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இருக்கிற பள்ளிக்கூடங்களை மூடி விடுவோம் என்று காங்கிரஸ் மேடையில் குறிப்பிடப்பட்ட காரணத்தினால்தான் காமராஜரை வரவேற்றுவிட்டு, கல்வித்துறையில் இந்த மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிற முன்னேற்றங்களைத் தெரிவித்து. “நாங்கள் பதவிக்கு வந்தால் எதுவும் கெட்டுவிடும் என்று கருதாதீர்கள். எந்த நாகரீக சர்க்கார் பதவிக்கு வந்தாலும் ஆண்டுக்கு ஆண்டு கல்வித்துறையில் ஏற்பட்டு வருகிற வளர்ச்சியைக் கெடுத்துவிட மாட்டார்கள். அதுவும் அத்தகைய சந்தேகத்தை என்னிடத்திலா காட்டுவது?” என்று குறிப்பிட்டேன். அதுவும் அதைப்பற்றிப் பேச்சு வந்ததால் இந்த அவையிலே சொல்கிறேன்.

இன்னொன்று இந்த விவாதத்தில் வந்தது. கல்வியின் தரமும், மாணவர்களின் தரமும் வெகுவாகக் குறைந்துவிட்டது என்று பல உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லிக் குறைபட்டுக் கொண்டார்கள். தரம் குறைந்து வந்தால் உண்மையிலேயே நான் வருத்தப்படுவேன். தரம் குறைந்து வருகிறது; தரம் குறைந்து வருகிறது என்று சொல்லும்போது, நாம் எதைத் ‘தரம்’ என்று நிர்மாணித்துக்கொண்டிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்ப்போமானால், என்னைப் பொறுத்தவரையில், நான் மாணவனாக இருந்தபோது பொது அறிவைக் கற்றுக்கொள்வதற்கு இருந்த வாய்ப்புகளைவிட, இன்றிருக்கிற மாணவர்களுக்குப் பொது அறிவைக் கற்றுக்கொள்கிற வாய்ப்பு அதிகம். பொது அறிவைப் பொறுத்தவரையில் மாணவர்களின் தரம் உயர்ந்தே இருக்கிறது என்று கருதுகிறேனே ஒழிய, தரம் குறைந்திருப்பதாக நான் கருதவில்லை. ஆங்கிலத்திலே ஒரு வித குறையும் இல்லாமல் எழுதினால் நல்ல தரம் என்று சிலர் சொல்வார்கள். பேசுகின்ற பொழுது தாராளமாக பேசினால் நல்ல தரமென்று சிலர் சொல்வது உண்டு. ஆசிரியர் பாடம் நடத்தும்போது எழுகின்ற சந்தேகங்களுக்கே எழுந்து கேள்வி கேட்காமல் இருந்தால், அதுவும் ஒரு தரம் என்று கருதப்பட்டிருக்கிறது. நமது உறுப்பினர்கள் எந்தத் தரத்தை மனதில் வைத்துக் கொண்டு பேசினார்களோ எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்தவரையில், முந்திய நிலைமுறையைச்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 23

நாம் இலவசக் கல்வி என்று தத்துவ ரீதியாக சொல்கிறபோது, பணம் இல்லையென்பதற்காக ஒரு மாணவன் மேலே படிப்பதற்குரிய வாய்ப்பை இழந்துவிடக் கூடாது, இலவசமாகவாவது கல்வியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். பணம் கொடுத்து படிக்க முடியாத ஏழைமை நிலைமை காரணமாக ஒருவன் கல்லூரிப் படிப்புக்கு வர முடியாதுபோய்விட்டால், அது நாட்டுக்கே நஷ்டம். அப்படிப்பட்ட ஏழை மாணவர்கள் விஷயத்தில் பி.யு.சி. யில் இலவசக் கல்வி தரவேண்டியதாகத்தான் இருக்கும். ஆகவே இந்த அடிப்படையை வைத்து ஏழை-பணக்காரன் என்ற வித்தியாசம் பார்க்க வேண்டாம். மொத்தமாக பி.யு.சி. கல்வியை இலவசமாகச் செய்துவிடலாம் என்று சொன்னார்கள். பாகுபாடே பார்க்காமல் இருப்பது நல்லதுதான். சில விஷயங்களில் பாகுபடுத்தத்தான் வேண்டியிருக்கிறது. நெல்லும் பதரும் ஒன்றாகத்தான் இருக்கும். நெல்லைப் பாகுபடுத்திப் பார்க்கத்தான் வேண்டும். கல்லும் அரிசியும் ஒன்றாகத்தான் இருக்கும். கல்லை அரிசியிலிருந்து விலக்கத்தான் வேண்டும். ஒரு திட்டத்தை மேற்கொள்கிறபோது நல்லதும் கெட்டதும் கலந்தே இருக்கும். கெட்டதை நீக்கத்தான் வேண்டும் என்பதை நிலவரியைப் பற்றிப் பேசுகின்றபோது சில உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். அதை வலியுறுத்துகின்ற வகையில்தான் டாக்டர் ஹாண்டே அவர்கள் நம்மைக் கேட்டார்கள். "பணம் படைத்தவர்கள் பணம் கொடுத்துப் படிக்க முன்வருகிறபோது ஏன் வேண்டாம் என்று கூறுகிறீர்கள்?" என்று கேட்டார்கள். ஆகையால்தான் அந்தக் கருத்தையும் இதற்கான முறையை வகுக்கின்ற நேரத்தில் நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இன்னொன்று, பல விஷயங்களைப்பற்றி கனம் உறுப்பினர்கள் வலியுறுத்துகின்றபோது, ஆசிரியர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுப்பது, குடியிருப்பதற்கு வேண்டிய வீடுகளைக் கட்டிக் கொடுப்பது, கல்லூரியில் இலவசப்படிப்பு, புதிய கல்லூரிகளைத் திறப்பது, கல்லூரிகளுக்கான கட்டடங்களை எழுப்பித் தருவது, ஆரம்பப் பள்ளியில் மதிய உணவு போடுவது, இலவசமாக உடை, இலவசமாக புத்தகங்கள் வழங்குவது ஆகிய பலவற்றைப் பற்றிச் சொன்னார்கள். நண்பர் மார்ட்டின் அவர்கள் சொன்னார்கள், 'There are libraries without books and laboratories without equipments.' என்று. இப்படிப்பட்டவைகளைத் திருத்துவதற்குத் தேவையான காரியங்களை நாம் செய்ய வேண்டியவர்கள். இவைகளில் ஒன்றையும் மறுக்கவில்லை. எல்லாவற்றையும் மொத்தமாக எடுத்துக்கொண்டு செய்வதா? ஒவ்வொன்றாக எடுத்துச் செய்வதா? எந்த வரிசையில் செய்வது? ஆகிய எல்லாவற்றையும் யோசித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

முற் பகல் 11-30

இதிலே கொஞ்சம் பிரச்சினையிலிருந்து விலகி, ஒரு சிறிய கதையைச் சொன்னால் நீங்கள் பொறுத்துக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். தெனாலிராமன் காலத்தில், மன்னன் பல ஓவியர்களைக் கூப்பிட்டு சிறந்த ஓவியங்களை வரையச் சொன்னாராம். பலர்



1967 மார்ச் 23] [திரு. சி. என். அண்ணாதுரை]

ஓவியம் வரைந்தார்கள். ஓரேயொரு ஓவியன் மட்டும் பல மாதங் கள் எடுத்துக்கொண்டு, ஒரு ஓவியத்தை வரைந்து வந்தார் அதைப் பார்த்துக் கொண்டிருந்த மன்னரிடம் தெனாலிராமன் இந்த ஓவியத்தை எழுதுவதற்கா இத்தனை நாட்கள்? இத்தனை நாட்களுக்குள் எத்தனையோ ஓவியங்களை எழுதியிருக்கலாமே என்று குறிப்பிட்டாராம். மன்னர் தெனாலிராமனிடமே ஓவியம் வரையச் சொன்னாராம். மன்னர் குறிப்பிட்டிருந்த நாட் களுக்குள் ஐம்பது ஓவியம் வரைந்து தருவதாக தெனாலிராமன் சொன்னான். குறித்த நாட்களும் கொடுக்கப்பட்டன. தெனாலி ராமன் வரைந்த ஓவியங்களைப் பார்க்க மன்னர் வந்தார். ஒரு பெரிய திரையைப் போட்டு அதில் ஒரு கண்ணை மட்டும் போட் டிருந்தான். இன்னொரு திரையில் இன்னொரு கண் போட்டிருந் தான். இன்னொரு பக்கம் இருந்த திரையில் ஒரு காலைப் போட்டு இருந்தான். இப்படி ஒவ்வொரு உறுப்பை ஒவ்வொரு திரையில் எழுதி இருந்தான். முதல் ஓவியத்தைப் பார்த்த மன்னன், தென்னாலிராமனைப் பார்த்து. "என்னப்பா" ஒரு கண் இருக்கிறது. இன்னொரு கண் எங்கே?" என்று கேட்டதற்கு, "இன்னொரு கண் அந்தத் திரையில் இருக்கிறது. ஒவ்வொரு திரையிலும் உள்ள உறுப்பை நீங்கள் ஒன்று சேர்த்து ஒரு உருவமாகப் பார்க்கலாம்" என்று சொன்னானாம். அதைப் போல ஒவ்வொரு திட்டத்தையும் தொட்டுத் தொட்டு என்னை விடச் சொல்லுகிறீர்களா? அல்லது எதையாவது ஒன்றை எடுத்து அதைச் செம்மையாகச் செய்யச் சொல்கிறீர்களா? சபை எனக்குக் கட்டளையிட வேண்டும். கல்லூரிகளை ஆரம்பியுங்கள், கட்டிடங்களை கட்டுங்கள். ஆசிரியர் களுக்கு ஊதியத்தை அதிகமாகக் கொடுங்கள். கல்வியை இலவச மாக ஆக்குங்கள் என்று எல்லாவற்றையும் சொல்லி ஒவ்வொன்றை யும் கொஞ்சம் கொஞ்சம் தொட்டுவிடுவதனால் நிச்சயம் பயன் இருக்காது. ஆசிரியர்களில் 20 பேர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்துவிட்டு மற்றவர்களுக்கு கவனிப்போம் என்று சொல்ல முடியாது. ஆங்கிலத்தில் சொல்வதுபோல நமது கோரிக்கைகளை ஒழுங்குபடுத்திக்கொண்டு, எதெதற்கு ப்ரியாரிட்டி கொடுத்துச் செய்வது, எதைஎதை எவ்வெப்பொழுது எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை நாம் வரையறுத்துக் கொண்டாக வேண்டும். இதற்கு நீங்கள் ஆலோசனை கூற வேண்டுமென்பதாக நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் கோரிக்கை களைச் சுலபமாகத் தீர்ப்பதற்கு வழி ஏற்படும். இப்போது நமக்கு இருக்கிற நிலைமையில் பி.யு.சி. கல்வியை இலவசமாக ஆக்குவதனால் நமக்கு அதிகச் செலவு ஒன்றும் ஆகாது. நடைமுறையில் அது நமக்கு தேவை என்றே எடுத்துக் கொள்ளலாம். அப்படி வைத்துக் கொண்டாலும் ஏற்படக் கூடிய செலவு 55 லட்சம்தான் ஆகும், அது ஒரு கோடி ரூபாய்க்கும் குறைவு. 200 கோடி ரூபாய்க்கு மேல் பட்ஜெட் போடுகின்ற நமக்கு இந்த 55 லட்சம் ரூபாய் ஒதுக்குவது கடின மான காரியம் அல்ல. ஆனால் இங்கே என்ன சிக்கல் வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போது இட்டத்தட்ட 1 லட்சம் மாணவர்களுக்கு மேல் எஸ்.எஸ்.எல்.சி.

பரீட்சை எழுதி வருகிருர்கள் இப்படி தேர்ச்சிப் பெறுகிற
பெரும்பாலானவர்கள் கல்லூரியில் சேர முன் வருவார்கள்.
நம்மிடத்தில் இருக்கிற பி.யு.சி வகுப்பிலுள்ள வசதிகளைப்
பார்த்தால் 45 ஆயிரம் மாணவர்களுக்குத்தான் இடம் கொடுக்க
முடிகிறது. இந்த இடத்தில் ப்ரயாரிடி கொடுக்கிறோம். 45 ஆயிரம்
மாணவர்களுக்குக் கல்லூரியில் இலவசமாக படிக்கின்ற வாய்ப்
பைக் கொடுத்துவிட்டு, பாக்கி 50 ஆயிரம் மாணவர்களுக்கு இடம்
இல்லையென்று சொல்வது நியாயமா? 45 ஆயிரம் பேர்களுக்கு இடம்
கொடுத்துவிட்டு, பாக்கியுள்ள 50 ஆயிரம் பேர்களுக்கு இடமில்லை
யென்று மறுத்து அனுப்புகிற நிலைமை இருந்தாலும் பி.யு.சி யை
இலவசப் படிப்பாக ஆக்கத்தான் வேண்டுமென்று நீங்கள் கருது
கிறீர்களா? அது நாட்டுக்குத் தேவையா? சர்க்காருக்குத்
தேவையா? நீங்கள் உங்கள் கருத்தை அருள்கூர்ந்து இந்த
மன்றத்தில் குறிப்பிடாவிட்டாலும் தனிப்பட்ட முறையில்
என்னிடம் வந்து சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.
பி.யு.சி. படிப்பை இலவசமாக்குவதன் மூலம் நாம் 55 லட்சம்
ரூபாயைச் செலவழிப்பதில் எந்தவிதமான கஷ்டமும் நமக்கு
வந்து விடாது. ஒரு லட்சம் மாணவர்களுக்கு மேல்
எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையில் தேறி வெளிவருகிறபோது அவர்
கள் எல்லோருக்கும் கல்லூரி படிப்பு அளிக்க நாம் போதிய கல்லூரி
களை ஆரம்பித்தாக வேண்டும். புதிய கல்லூரிகளை ஆரம்பிப்பதில்
கஷ்டம் இல்லை. ஆனால் அதிலும் ஒரு சிக்கல் இருக்கிறது. அதை
இந்த அவையின்முன் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.
எங்கள் பகுதியில் கல்லூரியை ஏற்படுத்துங்கள், நாங்கள் ஐந்து
லட்சம் ரூபாய் தருகிறோம்; எங்கள் பகுதியில் ஆரம்பியுங்கள்
நாங்கள் 3 லட்சம் தருகிறோம் என்று வாக்களித்து, கல்லூரி துவக்
கின பிறகு, அவர்களில் பலர் வாக்களித்த பணத்தைக் கொடுக்
காமல் இருக்கிறார்கள். எந்தெந்த ஊரில் இவ்வாறு வாக்களித்த
பணத்தை வசூல் செய்து தரவில்லையோ, அந்தந்த இடங்களி
லிருந்து வந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சியை
மறந்து, அந்தப் பணத்தை வசூல் செய்து கொடுப்பதற்கு உதவி
யாக இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்
கிறேன். மூன்று லட்சம் கொடுக்கிறோம் என்று சொன்னவர்கள்
60 ஆயிரம்தான் கொடுத்திருக்கிறார்கள். 1½ லட்சம் தான் கொடுத்
திருக்கிறார்கள். முழுப் பணத்தைச் செலுத்தியவர்களும் இருக்
கிறார்கள். அவர்கள் நமது நன்றிக்கும் வணக்கத்திற்கும் உரித்தான
வர்கள். புதுக் கல்லூரியை ஆரம்பிப்பதில், அந்தப் பெருமக்கள்
தருவதாக நம்மிடத்தில் வாக்களித்த தொகையை விரைவாகவும்,
முழு அளவிலும் வந்து சேருவதற்கு இந்த அவையிலுள்ள
ஒவ்வொரு உறுப்பினரும் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும்.
புதிய கல்லூரி ஆரம்பிப்பது மட்டுமல்ல. அதற்கு சரியான
கட்டடங்கள் தேவை. இப்போதிருக்கிற கல்லூரிகள் எந்த நிலையில்
இருக்கின்றன என்பதையும் குறிப்பிடுவது நல்லது என்று கருது
கிறேன். ஏனென்றால் மாணவர்களுடைய தரத்தைப்பற்றி நான்
பேசுகின்றபொழுது, கல்லூரிக் கட்டிடங்கள் எந்த அளவில் இருக்
கின்றன என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டும். இப்போது
புதிதாகத் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிற 17 கல்லூரிகளின்





கட்டடங்களில் பொன்னேரி, அரியலூர், திருச்சி பெண்கள்
கல்லூரி, மதுரை, ஆகிய இடங்களில் இருக்கிற கல்லூரிக் கட்ட
டங்களில் நிலையான கட்டடங்கள் இல்லை. (semi permanent
nature) கொஞ்சகாலத்திற்கு மட்டுமே தாக்குப் பிடிக்கின்ற நிலை
யில் உள்ளவை. அடுத்து வட சென்னை, கடலூர், தஞ்சையிலுள்ள
பெண்களுக்கான கல்லூரி, பெண்களுக்காக திண்டுகல்லில் இருப்
பது ஆகியவை (unsatisfact pubiic buildings) திருப்தியற்ற
பொதுக் கட்டிடங்களில் இருக்கின்றன. மற்றும் 8 கல்லூரிகள்
(unsuitable private buildings or high schools) இடங்களில் இருக்
கின்றன. இதிலே, ஒரு கல்லூரியின் கட்டடத்தைக் கட்டுவதற்
காக ஆகும் தொகை 11.40 லட்சம். இவைகளுக்கெல்லாம் கட்டடங்
கள் கட்ட வேண்டுமென்று சொன்னால் கிட்டத்தட்ட 137 லட்சம்
ரூபாய் தேவைப்படுகிறது. இந்த இடத்தில்தான் ப்ரயாரிடி
பற்றி உங்களிடம் கேட்க விரும்புகிறேன். பி.யு.சி. கல்வியை
இலவசமாக்குவதன் மூலம் 55 லட்சம் போனால் போகிறது என்று
விட்டுவிடலாம். அப்படியின்றி அந்தத் தொகை வந்தால் இந்தக்
கல்லூரிகளில் கட்டடங்களுக்குப் பயன்படுத்தக் கூடாதா என்
பதை யோசித்து, எதை முதலில் செய்வது, எதை பிறகு செய்வது
என்பதை எண்ணிப் பார்த்து நீங்கள் சொல்ல வேண்டும். கல்லூரி
களுக்குக் கட்டடங்கள் கட்டிவிட்டால் மட்டும் போதாது. ஓர்
உறுப்பினர் சொன்னார், இன்னும் எத்தனையோ பள்ளிக்கூடங்களில்
ஹாஸ்டல்கள் இல்லாமல் இருக்கின்றன. எல்லாப் பள்ளிக்கூடங்
களிலும் ஹாஸ்டலகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதாக.
மாணவர்களுக்கு என்று ஒரு விடுதியை அமைக்க 85 லட்சம்
ரூபாய் தேவைப்படுகிறது. நாம் மாணவர்களுக்கு ஹாஸ்டல்களை
ஏற்படுத்திக் கொடுப்பதா, ஹாஸ்டல் இல்லாவிட்டாலும் பரவா
யில்லை, பி.யு.சி கல்வியை இலவசமாக்குவதன் மூலம் 55 லட்சம்
ரூபாயை இழக்கலாமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.
ஹாஸ்டல் தான் முக்கியம்; பி.யு.சி. கல்வியை இலவசமாக்குவதை
1969-ல் பார்த்துக்கொள்ளலாம், அல்லது 1970-ல் பார்[illegible]க் கொள்ள
லாம் என்று நீங்கள் கருதினால் அதையும் தெரி[illegible] வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்களுக்கு யூனிவர்சிடி கிராண்டு கமிஷன் சிபாரி
சுப்படி ஊதியத்தைக் கொடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.
அதன் காரணமாக, 15 லட்சம் ரூபாய் நாம் அதிகம் செலவழித்தாக
வேண்டும். ஆசிரியர்களுக்கு முதலில் இப்படி சம்பளத்தை உயர்த்
தித் தருவதா? அல்லது அதைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம்
என்று சொல்லி முதலில் இலவசப் படிப்பை ஏற்படுத்துவதா?
இந்த இரண்டிலே எதற்குப் பிரயாரிடி கொடுப்பது என்பதை
நீங்கள் யோசிக்க வேண்டும். அதிலே சில காங்கிரஸ் உறுப்பினர்கள்
'நாங்கள் என்ன சொல்வது? நீங்கள் என்ன செயலாக்குவது'
என்று கூறினால் அவர்களை நான் அரசியல்வாதிகளாக மட்டும்
கொள்வேனே தவிர, நாட்டுப் பற்று உள்ளவர்கள் என்று கூற
மாட்டேன். அவர்கள் நாங்கள் அரசியல்வாதிகள்தான் என்று
சொன்னால் அரசியல் முறையிலேயும் பதில் அளிக்கலாம், அது

எளிதாகவும் இருக்கும். ஆனால் நான் அந்தப் பதிலிலே என் மனதைச் செலுத்த விரும்பவில்லை. நாட்டுப் பற்றுள்ளவர்கள் என்ற முறையில் பிரையாரிடி அளிப்பதற்கு இதிலே நீங்கள் எங்களுக்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென்று நான் மெத்த விரும்புகிறேன். 55 லட்ச ரூபாய் பி.யு.சி.-யில் இலவசக் கல்வியை ஏற்படுத்துவதன் மூலம் குறைகிறது என்றால் உடனே அதை நான் செய்துவிடுகிறேன் என்றும் சொல்லப்போவதில்லை. அடுத்த வருஷத்திலே கவனிக்கப்போவதில்லை என்றும் சொல்லப்போவதில்லை. கூடுமான அளவில், எந்த அளவுக்குச் செய்யவேண்டுமோ அந்த அளவுக்குச் செய்யவேண்டுமென்று கருதுகிறேன். டாக்டர் ஹாண்டே அவர்களுடைய கருத்து கூடுமான வரையில் என்னுடைய கருத்துக்கு உறுதுணையாக இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

முன்னாலே பேசியவர்கள் தரத்தைப்பற்றியும், திரு. கருத்திருமன் அவர்கள் மெரிட்டைப்பற்றியும் சொன்னார்கள். தகுதியைப் பார்த்துத்தானா நீங்கள் சேர்த்துக்கொள்வீர்கள் என்று கேட்டார்கள். தகுதி என்பதற்குத் தவறான அர்த்தம் புகட்டப்படுகிறது. படிப்புக்குத் தகுதி என்று நான் குறிப்பிடுகின்ற நேரத்தில் எதைக் குறிப்பிடுகிறேன் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். படிப்புக்குத் தகுதி என்றால் முன்பு குறிப்பிட்ட குலத்தில் பிறந்தால்தான் தகுதி என்று இருந்தது. அதற்குப் பிறகு தகுதி என்று சொன்னால் பண வசதி படைத்தவர்கள்தான் அதற்குத் தகுதிவாய்ந்தவர்கள் என்று இருந்தது. கிராமத்திலேகூட வேடிக்கையாகச் சொல்வார்கள், நீ படித்து என்ன செய்யப் போகிறாய், கலெக்டர் உத்தியோகமா பார்க்கப் போகிறாய்? என்று கேட்பார்கள், அந்த அடிப்படையிலேதான் தகுதி அமைந்திருந்தது. ஆனால் நான் சொல்கின்ற தகுதி, வகுப்பிலே மிக மிக சுறுசுறுப்பான மாணவனாக இருந்தால் எல்லாவற்றிலும் நல்ல தேர்ச்சிபெற்றவராக இருந்தால் அதுதான் தகுதி. அதைத்தான் நான் தகுதி என்கிறேன். நெடுநாளா[illegible] தகுதி என்று சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள் ஒருவேளை அதையே தகுதியென்று நினைத்துக் கொள்ளலாம். நான் கூட படிக்கும்பொழுது ஸ்காலர்ஷிப் பெற்றுத்தான் படித்தேன். நான் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன்தான். வீட்டிலே உள்ளவர்கள் என்னுடைய படிப்பிற்குப் பணம் கொடுத்து உதவ முடியாத நிலைதான். நான் எப்படி ஸ்காலர்ஷிப் பெற்றேன் என்றால், நான் ஆனர்ஸ் எடுக்கமாட்டேன். பி.ஏ -க்கே போகிறேன் என்று சொன்னபொழுது திரு. சின்னத்தம்பியா பிள்ளை அவர்கள் எத்தனையோ ஸ்காலர்ஷிப்கள் இருக்கின்றன, அதிலே நான் ஸ்காலர்ஷிப் கொடுக்கிறேன் என்று என்னை வற்புறுத்திச் சேர்த்தார்கள். ஏழை மக்கள் ஸ்காலர்ஷிப் இல்லாமல் படிக்கமுடியாது என்பதை நான் உணர்கிறேன். அதே நேரத்திலே தகுதியைப்பற்றியும் நான் மனத்திலே வைத்துக்கொள்ளவேண்டுமென்பதையும் சொல்லிக் கொள்கிறேன். இப்பொழுது இருக்கிற சேர்த்துக்கொள்கின்ற முறை எப்படியிருக்கிறதென்றால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 16 சதவிகிதம்; பிற்பட்ட மக்களுக்கு 25 சத விகிதம்; பொதுவாக இருப்பவர்களுக்கு 59 சத விகிதம் என்று இருக்கிறது. இந்த 59





தைச் சேர்ந்தவர்களின்மேல் அதிகம் அக்கறை கொண்டவர்கள்; திரு. விநாயகம் அவர்கள் என்னைப்போலவே பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களின்மேல் அதிகம் அக்கறை கொண்டவர்கள்; ஆகவே, அவருக்கும் எனக்கும் மகிழ்ச்சி தருகின்ற செய்தி என்னவென்றால், 100க்கு 25 பேர்கள் பிற்பட்ட வகுப்பினருக்கு என்று கைவகப்பட்டு இருந்த அளவை மீறி அதிகமான அளவுக்கு 100-க்கு 47 பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் வருத்தப்படத்தக்க விதத்தில் 100-க்கு 16 பேர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வைத்திருந்தால் அதிலே 100-க்கு 9 பேர்கள் என்ற அளவுக்குத்தான் சேர்ந்திருக்கிறார்கள். சேர்த்துக்கொள்ளப்பட இருப்பது 16, ஆனால் 100-க்கு 9 என்ற அளவுக்குத்தான் சேர்ந்திருக்கிறார்கள். நான் இந்த பி.யு.சி. இலவசக் கல்வியை ஏற்படுத்த வேண்டுமென்பதைப்பற்றி யோசிக்கும்பொழுது, தாழ்த்தப்பட்டவர்களிலே 16 சத விகிதத்திற்கு 9 சத விகிதம் தானே வந்திருக்கிறார்கள், அவர்கள் அதிகமாக வாராததற்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து, அவர்களுக்கு இலவசப் படிப்பு கொடுப்பதோடல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுடைய பிள்ளைகளை கல்லூரிக்கு அனுப்பாததற்குக் காரணமாக என்ன என்ன இக்கட்டுகள் இருக்கின்றன என்பதைப் பார்த்து, அந்த இக்கட்டுகளைப் போக்குகின்ற வண்ணம் அவர்கள் தங்கள் பிள்ளைகளை கல்லூரிகளுக்கு அனுப்பினால் அவர்களுக்கு ஏதாவது போனஸ் கொடுக்கலாமா என்பதைப்பற்றியும் நான் யோசிக்கிறேன். பதினாறு சத விகிதம் என்ற அளவுக்கு அவர்கள் வரவேண்டும். அந்தப் பதினாறைத் தூக்கி தூக்கி 16 போதாது, 26 வேண்டும், பிறகு 26 போதாது என்று இப்படியே தூக்கிக் கொண்டு செல்வதைவிட 16 பேர்களும் நல்லமுறையிலே வருவதற்கான வழிவகைகளைச் செய்தல் நல்லதென்று நினைக்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னபடி பணம் கொடுத்துப் படிக்க வைக்கிறேன் என்று சொல்லக்கூடிய, அல்லது வசதி படைத்திருக்கக் கூடிய கலெக்டர் பிள்ளைகள், மாஜி கவர்னர் பிள்ளைகள், எங்களைப்போன்று பண வசதியில்லாத மந்திரிகளாக இருந்தால் பரவாயில்லை, பணவசதியுடையவர்களாக இருந்தால் அவர்களுடைய பிள்ளைகள் இவர்களிடம் பணம் வாங்காமல் இருப்பது அவர்களை அவமானப்படுத்துவது ஆகும். பி.யு.சி. படிப்பு இலவசம் என்று நாம் அறிவித்தாலும், அவர்கள் தாங்கள் பணவசதி படைத்தவர்கள் என்பதை உலகத்திற்கு அறிவிக்கக் கூடிய வகையிலே நம்முடைய திட்டம் அமையும் என்று நினைக்கிறேன். எதைச் சொல்ல வேண்டுமோ அதைவிட அதிகமாகச் சொல்லிவிட்டேனா என்று நான் பயப்படுகிறேன். நாங்கள் எல்லாத் திட்டங்களையும் ஆராய்ந்து நல்ல காரியங்களைச் செய்வோம் என்று சொல்லி இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு, இது கல்வித் துறை என்பதாலே இதற்கு வெட்டுப் பிரேரணை கொண்டுவந்தார்கள் என்று தப்பாகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கல்விக்காகச் செலவழிக்க வேண்டுமென்று சொல்வதை காங்கிரஸ்காரர்கள் வேண்டாம் என்கிறார்கள் என்று தப்பாகவும் கருதுகின்ற அளவுக்கு வாய்ப்பு அளிக்காமல் நான் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1967, மார்ச் 23

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : திரு. கே. விநாயகம் அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறார்களா என்று கேட்கிறேன்.

* THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir I want the Hon. Chief Minister to be particularly categorical on this point, viz., whether he is going to throw open the P.U.C. education free to all communities? If he wants, he can suggest an amendment that those who can afford to pay the tuition fees should do so and those who cannot afford it, should not pay it.

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I assure the hon. Member that the problem will be dealt with, subject to all the aspects of the problem.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்: இப்பொழுது திரு. விநாயகம் அவர்கள் வெட்டுத் தீர்மனத்தை வற்புறுத்த விரும்புகிறார்களா என்று கேட்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, in view of the moral commitment which the Hon. Chief Minister has made on the floor of this House, I now withdraw my cut motion.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : இந்த வெட்டுத் தீர்மானத்தை அதைக்கொண்டு வந்த உறுப்பினர் வற்புறுத்தவில்லை.

வெட்டுத் தீர்மானம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் கொண்டுவந்த வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறார்களா என்று கேட்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நான் வற்புறுத்தவில்லை.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : முப்பத்தி இரண்டாவது வெட்டுத் தீர்மானத்தை கொண்டு வந்த உறுப்பினர் அதை வற்புறுத்தவில்லை.

வெட்டுத் தீர்மானம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அவைமுன் எஞ்சியுள்ள முழு முதல் தீர்மானம் " கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,83,61,800-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அடுத்து, நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய கோரிக்கை எண் 16-வது ஆகும். இது வேளாண்மையைச் சேர்ந்தது. அதை எடுத்துக்கொள்வதற்கு



1967 மார்ச் 23] [பேரவைத்தலைவர்]

சட்டசபை விதி 199-ன்படி

'No variation in the Order shall be made except on the request of the Leader of the House with the permission of the House.' . . என்று இருப்பதால் 16-வது கோரிக்கையை முதலில் எடுத்துக்கொள்வதற்கு மன்ற முதல்வர் அவர்கள் தீர்மானம் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

XIII—கல்வி

6. அரசாங்கத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

அ. அவை அலுவல் வரிசையில் மாற்றவும்—தொடர்ச்சி.

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, "கோரிக்கை எண் XNI— வேளாண்மை என்பதை மற்றக் கோரிக்கைகளுக்கு முன்னால் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : இந்த 16-வது கோரிக்கையை முதலிலே எடுத்துக்கொள்ள அவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

தீர்மானம் அவை முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. 1967-68-ம் ஆண்டிற்கான முன் மானியக் கோரிக்கைகள் மீது மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் XVI— வேளாண்மை

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : இப்போது வேளாண் மைத் துறைக்காக ரூ. 4,57,36,000-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டுமென்ற தீர்மானத்தைப் பெரு மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி கீழ் கண்ட தீர்மானத்தை அவை முன் வைக்கிறேன்:—

" கோரிக்கை எண் XVI— வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,57,36,000-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்கவேண்டும்.

* THIRU K. RAMAMURTHY : Mr. Speaker, Sir, I move the following cut motion standing in my name :—

'That the allotment of Rs. 4,57,36,000 under Demand No. XVI—Agriculture be reduced by Rs. 100.'—

(to discuss about the failure of the Government to provide for augmentation of agricultural production by means of agricultural fertiliser, manure, seeds and agricultural implements).

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : இப்போது முழுமுதல் தீர்மானமும் வெட்டுத் தீர்மானமும் அவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மீது முதலில் உரையாற்று கின்றவர் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கே. ராமமூர்த்தி.

சேர்ந்த மாணவர்களைவிட இந்தத் தலைமுறையில் இருக்கிற மாணவர்கள் உலகத்துப் பொது அறிவையெல்லாம் பெற்றுக் கொண்டு, உரிமையுணர்ச்சியுடனும் கடமையுணர்ச்சியுடனும் எந்தெந்த நல்ல காரியங்களையெல்லாம் செய்யலாம் என்ற முற்போக்கு உணர்ச்சியுடன் தரமாகவே இருக்கிறார்கள். நீங்கள் எல்லாம் இப்போது எண்ணிக் கொண்டிருப்பது நான் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை மனதில் வைத்துக்கொண்டு பேசுவதாக. ஆனால், சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்ட நேரத்தில் நமது மாணவர்கள் மிகத் தரமாக நடந்து கொண்டார்கள். பாகிஸ்தான் தரப்பிலிருந்து ஆக்கிரமிப்பு எழுந்த போது அதைவிடத் தரமாக நடந்துகொண்டிருக்கிறார்கள். என்.சி.சி-யில் சேர்ந்தும், ஹோம் கார்டுகளாகவும் பணியாற்றும் நல்ல தரத்தைப் பெற்றிருக்கிறார்கள். எல்லா தரத்தையும் விட்டு விடுங்கள். கல்லூரியில் தமிழில் பேசக் கூடாது என்பதாக எங்கள் காலத்திலிருந்தே—இன்னும் விட்ட குறை தொட்ட குறையாக திரு. விநாயகம் இருக்கிறார்களே அந்தமாதிரி இல்லாமல் இப்போது எந்தக் கல்லூரிக்கு வேண்டுமானாலும் போய்ப் பாருங்கள்—அந்த நிலை மாறி எவ்வளவு தரமான தமிழில் பேசுகிறார்கள். எவ்வளவு தரமான தமிழில் எழுதுகிறார்கள். எவ்வளவு தரமான தமிழ் நூல்களையெல்லாம் படிக்கிறார்கள். எங்கள் காலத்தில் மாணவர்களுக்குத் தெரியாத சங்க இலக்கியங்கள் எல்லாம் எவ்வளவு ஐயந்திரிபறத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்வீர்கள். அப்படி தரம் உயர்ந்திருக்கிறது. மாணவர்கள் பேரில் நமக்குள்ள ஏதோ கோபத்தில் தரம் குறைந்து விட்டது தரம் குறைந்து விட்டது என்று எண்ணிக் கொண்டிருக்கிறோமே தவிர, அந்தத் தரம் குறைந்திருப்பதாக நான் கருதவில்லை.

அப்படியே தரம் குறைந்திருந்தாலும், மற்றொரு உறுப்பினர் தம் உரையில் சுட்டிக்காட்டினார்கள். "இப்படி ஆசிரியர்களை நீங்கள் அலைக்கழித்துக் கொண்டிருந்தால், அவர்கள் நிம்மதியாக இருந்து மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்க எங்கே முடியும்?" என்று சொன்னார்கள். ஆகையால், எந்தத் தரமும் நிர்வாகத்தில் இருக்கிறது. ஆசிரியர்களின் வாழ்க்கை நல்ல விதத்தில் செப்பனிடப்படுமானால் அவர்களுக்கு ஊதியம் மற்றொரு கனம் உறுப்பினர் சொன்னதைப்போல, ஆங்காங்கே குடியிருக்க வீட்டு வசதிகளும் செய்துவிட்டோமானால் கல்வியின் தரம் இன்று இருப்பதைவிட மிக நல்ல முறையில் வளரும். பொதுவாக, கல்வியின் தரம் நல்லபடியாக இன்று உயர்ந்திருப்பதற்குக் காரணம் சுற்றிச் சூழ்ந்து கொண்டிருக்கிற நிலைமைகள்தான். என்னை எடுத்துக் கொண்டாலும், எனது நண்பர் திரு. கருத்திருமனை எடுத்துக் கொண்டாலும், 'ரேடியோ' என்ற கருவியையோ, 'ரேடியோ' என்ற வார்த்தையையோ எங்களுடைய 25-வது அல்லது 30-வது வயதில் காதில் கூடகேட்டிருக்கமாட்டோம். காரணம் அப்போது இந்தக் கருவிகள் இல்லை. இப்போது கருத்திருமன் அவர்கள் வீட்டிற்குப் போனால், அவரது குழந்தை 'ரேடியோ வாங்கி வந்தாயா?' என்று கேட்கிறது. சென்னைக்கு எப்போது





டெலிவிஷன் வரும்? என்று கேட்கிறது. 'கம்பியில்லாத் தந்தி என்றால் என்ன? அது எவ்வாறு செயல்படுகிறது?' என்று கேட்கிறது. இந்த அளவுக்கு மாணவர்களிடையே பொது அறிவு வளர்ந்தே இருக்கிறது. மறந்தும் கூட குறைத்து மதிப்பிடக் கூடாது. இப்படிச் சொல்வதனால் கல்வியின் தரத்தை உயர்த்தக் கூடாது என்று நான் சொல்வதாக நினைக்காதீர்கள். இன்று நண்பர்கள் குறிப்பிட்டதைப்போல இன்னும் உயர்த்த வேண்டும் என்பதுதான். ஆகையால், அந்த விஷயத்தில் போதுமான கவனத்தை நாம் செலுத்த வேண்டும். செலுத்துவதற்கு இந்தச் சர்க்கார் உள்ளபடியே முயற்சி எடுத்துக் கொள்ளும்.

நான் கல்வி விஷயத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றால் இன்னும் அதிக அக்கறை காட்டும் என்று சொன்னது பாடத் திட்டங்களை மாற்றியமைப்பதன் மூலம் உலக அறிவையும் பொதுஅறிவையும் அதிகம் கொடுக்கக்கூடிய வகையில் இந்தக் கல்வி மாற்றப்படலாம் என்பதை மனதில் வைத்துத்தான். இப்போது பழைய ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் பழைய முறைப்படியே கற்றுக் கொடுத்து வருகிறோம். பாடங்களைக் கூட பார்க்கலாம் நீங்கள். மகாபாரதக் கதையிலிருந்து, 'கண்ணன் வெண்ணெய் திருடிய கதை' யை ஒருவர் முதுகின் மேல் ஒருவராக நான்கு பேர்கள் நிற்பதை, அவர்கள் மேல் கண்ணனை நிறுத்தி —உரி—உரியின் மேல் வெண்ணெய்த் தாழி—அந்தத் தாழியில் இருக்கிற வெண்ணெயை கண்ணன் எடுத்துத் தின்பதுபோல படத்தைப் போட்டு, அதன் கீழே 'கண்ணன் தின்னும் பண்டம் என்ன? வெண்ணெய்' என்றுதான் காட்டியிருப்பார்கள். புராணம் கூடாது என்பதற்காக நான் பேசுவதாக யாரும் நினைக்க வேண்டாம். மாலை நேரத்திலே மக்களிடத்திலே சொல்வது, இந்தப் பாடம் சின்ன வயதிலே மாணவர்களுக்கு எதைக் கற்றுக் கொடுக்கிறது? பள்ளிக் கூடத்திற்குப் பக்கத்துத் தோட்டத்திலே மாங்காய் இருக்குமானால், அதைப் பறிப்பதற்கு ஏமாளியாகிய பையன்களைக் குனிய வைத்து, அவர்கள்மீது ஏறி நின்று கொண்டும், மாங்காய் பறிப்பதற்குத்தான் நாம் கற்றுக் கொடுக்கிறோம். அப்படிப்பட்ட பாடத் திட்டங்களைத் திருத்தியமைக்கின்ற விஷயத்தில் இது பகுத்தறிவா—சுயமரியாதையா என்று பயப்படாமல் உலக அறிவு என்ற வகையில் கவனம் செலுத்தினால் நல்ல பயன் அதிகமாகக் கிடைக்கும். அந்த வகையில் நாங்கள் பணியாற்ற இருக்கிறோம் என்பதைத் தேர்தல் கூட்டங்களில் எடுத்துச் சொன்னோம்.

பி.யு.சி. வகுப்பைப் பொறுத்தவரையில், இலவசக் கல்வி கொடுக்க வேண்டுமென்ற கருத்தின்மீது டாக்டர் ஹாண்டே குறிப்பிட்டவற்றை மிகவும் பாராட்டி வரவேற்கிறேன். அவருடைய பேச்சைக் கேட்டால், சுதந்திரா கட்சியில் உள்ளவர்கள்மீது இருக்கக்கூடிய தப்பபிப்பிராயம்கூட நீங்கிவிடும். ஒருசமயம் இதைப் போல அவர் அதிகமாக பேசினால், அவரையே வேண்டாமென்று சொல்வார்களோ, அதுவும் தெரியாது. பணக்காரன் ஏன் பணம் கொடுக்கக்கூடாது என்று கேட்டார்கள். நியாயமான கேள்வி.

*திரு. கே. ராமமூர்த்தி : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த வெட்டுத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் நம்முடைய அமைச்சரவை, நம்முடைய அரசாங்கம் விவசாயத் துறைக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்திருக்கிற நேரத்திலே, தரப்படுகின்ற உதவிகள் எல்லாம் வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டிருக்கின்ற பெருங்குடி மக்களுக்கு, விவசாயிகளுக்கு நல்ல முறையில் கிடைப்பதற்கு வழி செய்யப்பட்டிருக்கின்றதா என்பதை இந்த அரசினரின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணமாக, உர விநியோகத்தை எடுத்துக் கொண்டால், அம்மோனியா, யூரியா போன்ற உரங்கள் விவசாயிகளுக்கு தேவையான காலத்தில், தேவையான அளவு கிடைக்கின்றதா என்றால் நிச்சயமாக இல்லை என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. எந்த காலத்திலே உரமிடவேண்டுமோ அந்தக் காலத்திலே விவசாயிகளுக்கு உரம் தரப்படுவதில்லை. இந்த உரத்தைப் பெறுவதற்காக நம்முடைய விவசாயிகள் முதலிலே செல்ல வேண்டிய இடம் தாலுகா அலுவலகங்கள் அல்லது பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்கள்தான். அங்கு சென்று அவர்கள் உரத்திற்கான பர்மிட்டுகளைத் தேடி அலைய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த பர்மிட்டுகளைப் பெறுவதற்காக விவசாயிகள் அதிகாரிகளால் பல முறை அலுவலகங்களுக்கு வரச் செய்து கடைசியில் காலா காலத்தில் பர்மிட்டுகள் கிடைக்க முடியாத நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. அதோடு இந்த பர்மிட்டுக்காக அலுவலகங்களை நாடிச் செல்லுகின்ற விவசாயிகள் கடனுதவியாக உரத்தைப் பெறுவதாக இருந்தால் பர்மிட்டுகள் மிகச் சுலபமாக, சீக்கிரமாகக் கிடைக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் கடன் வேண்டாம், பணம் கொடுத்து வாங்குகிறேன் என்று சொன்னால் அப்படிச் சொல்லுகின்ற விவசாயிகளுக்குப் பர்மிட்டுகள் கிடைப்பதில்லை. இந்தக் கடன் உதவிகளை விவசாயிகள் பெறுகின்றபோது எவ்வளவு பெரிய சிக்கல்களும், சங்கடங்களும் ஏற்படுகின்றன என்பதையும் பார்க்க வேண்டும். ஆகவே, இந்த அரசு உர விநியோக முறையை சீர்தூக்கிப் பார்த்து, கடனுக்காக வருகின்றவர்களுக்கு பட்டும் பர்மிட் கொடுப்பது என்ற முறையை மாற்றி, எல்லோருக்குமே, யார் யாருக்குத் தேவைப்படுகிறதோ அவர்களுக்கெல்லாம் உரம் கொடுக்கும் வகையில் உர விநியோக முறை மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதே நேரத்தில் இன்னொரு சிக்கல் என்னவென்றால் கண்ட்ரோல் விலைக்கு, அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலைக்கு கிடைக்க முடியாத நிலையில் ஊரிலே இருக்கின்ற கடைவீதிகளில் அரசாங்கம் நிர்ணயித்திருக்கின்ற விலைக்கு மேல் இரண்டு மடங்கு மூன்று மடங்கு அதிகமான விலைக்கு விற்கப்படுகின்ற நிலையும், அதை விவசாயிகள் வாங்க வேண்டிய நிலையும் இருக்கிறது. அந்த மாதிரி உரங்கள் விற்கப்படுவது பிடிக்கப்படுவதற்கும், அந்த





மாதிரி விற்கப்படுவதைத் தவிர்ப்பதற்கும் திட்டங்களைத் தீட்டி செயல் படுத்த வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமங்களில், நகரங்களில் இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களில் உர விநியோகம் நடைபெறுகிறது. மாதா மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ஆங்காங்கு இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இந்த உர விநியோகம் நடைபெறுகிறது. விவசாயிகளுக்கு வேண்டிய நேரத்திற்கு முன்னதாகவே, இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே அங்கு உரம் வந்தாலும் அப்போது விவசாயிகள் வாங்கி வைத்துக் கொள்வதில்லை. எப்போது தங்களுக்குத் தேவையோ அப்போதுதான் வாங்க விரும்புகிறார்கள். அந்தக் காரணத்தால் கூட்டுறவுச் சங்கங் களுக்கு அளிக்கப்படுகிற உரங்கள் அந்தச் சங்கங்களின் நிர்வாகி களால் கள்ளச் சந்தையில் விற்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக் கிறது. இந்த நிலை ஏற்படாதவாறு செய்ய தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் தேவைப்படுகின்ற நேரத்தில் உரம் இல்லாத நிலையில் விவசாயிகள் தாலுகா ஆபீசுக்குப் பத்துப் பதினைந்து முறை உரம் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற நினைவுடன் நடந்து நடந்து கடைசியில் உரத்தைக் கள்ள மார்க் கட்டில் வாங்கலாம் என்ற முடிவுக்கு விவசாயிகள் வந்து விடுகிறார்கள். இல்லை என்றால் உரம் இல்லாமலே விவசாயம் செய்ய முற்பட்டு விடுகிறார்கள். இந்தப் பிரச்சினை நல்ல முறையில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, பொறுக்குவிதை, இம்ப்ரூவ்ட் ஸீட்ஸ் பற்றி இரண் நண்பகல்
டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் 12-00
ஏ.டி.டி. 27, ஸி.ஓ. 25 என்று மிகப் பெரிய அளவில், மிக நல்ல விதைகளை அளவில் விளைச்சல் கொடுக்கிற பலன் அளிக்கிற நல்ல மக்களிடம் சர்க்கார் பரப்பி வருகிறது. ஆனால் விநியோக முறை, விம்பர முறை இவற்றை எடுத்துக் கொண்டால் விவசாயிகளிடம் இவை நல்ல முறையில் எட்டியிருக்கிறதா, கிராமப்புறங்களில் பரப் பப்பட்டிருக்கிறதா என்றால் அதற்கும் நான் இல்லை என்ற பதிலைத் தான் சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது. இவற்றின் பயன், இவற்றை பயிரிடவேண்டிய முறை இவற்றைப் பற்றி கிராமங் களிலுள்ள விவசாய மக்களுக்கு எடுத்துச் சொல்லப்படவில்லை. ஆங்காங்கே ஒன்றிரண்டு பெரிய நிலச்சுவாந்தார்கள் இந்த விதை களின் முக்கியத்துவத்தைப் பற்றியும், இதன் அவசியம் பற்றியும் தெரிந்து கொண்டிருக்கலாமே தவிர ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர்கள் என்று வைத்துக் கொண்டிருக்கக் கூடிய சிறிய விவசாயிகளுக்கு இந்த விதைகளின் முக்கியத்துவம் எட்டவில்லை. அப்படி, இந்த பொறுக்குவிதைகள் நல்ல பலன் அளிக்கக் கூடியவை என்று தெரிந்துகொண்டு, விவசாயிகள் இந்த விதைகளை வாங்க முற்பட்டாலும் இந்த விதைகள் எளிதில் அவர்களுக்கு கிடைக் காத முறையில்தான் இன்றையதினம் இதன் விநியோக முறை

[திரு. கே. ராமமூர்த்தி] [1967, மார்ச் 23

அமைந்திருக்கிறது. ஆகவே இந்த முறையை மாற்றியமைத்து, இந்த விதைகளை விவசாயிகள் தேடிக்கொண்டு அலைகிற நிலையை மாற்றியமைத்து விவசாயிகளைத் தேடிக் கொண்டு இந்த பொருக்கு விதைகள் சென்றடையக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தினால் நிச்சயம் விவசாயம் முன்னேறும், அதனால் உணவுப் பிரச்னையும் தீரக்கூடிய வழிவகை ஏற்படும். அடுத்து, விவசாயக் கருவிகள் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்றையதினம் நவீன விவசாயக் கருவிகள் பெரும் அளவில் விவசாயத்திற்கு உபயோகப்படாத ஒரு நிலை இருப்பதற்குக் காரணம் நம் நாட்டிலுள்ள விவசாயிகளில் பெரும்பாலோரும் சிறு நிலச் சொந்தக்காரர்கள். சில தினங்களுக்கு முன்பு கூட நம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நம் நாட்டில் சிறுநிலப் பட்டாதாரர்கள் மிகமிக அதிகம் என்று. ஏறக்குறைய 90 லட்சத்திற்கும் அதிகமாகவே அவர்கள் இருக்கிறார்கள் என்று புள்ளிவிவரம் கூட கொடுத்தார்கள். ஒன்றிரண்டு ஏக்கர்கள் வைத்துக்கொண்டிருக்கும் சிறு நிலச் சொந்தக்காரர்கள் இந்த நவீன விவசாயக் கருவிகளை எப்படி எந்த அளவில் பயன்படுத்த முடியும் என்பதைப் பற்றி அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், சிறுநிலச் சொந்தக்காரர்கள் நவீனக் கருவிகளை உபயோகப்படுத்த முடியாது அல்லது உபயோகப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அந்த விவசாயிகளுக்கு ஏற்படுமானால் அதற்கு வேண்டிய முதலீட்டைச் செய்கிற அளவிற்கு அந்த விவசாயிகளுக்கு ஆதரவோ அல்லது பணவசதியோ இல்லாத நிலையில் இன்றைய தினம் விவசாயிகள் கஷ்டப்படக் கூடிய நிலை இருக்கிறது. அந்த அளவில் இந்த அரசு, இந்த நவீனக் கருவிகள் நல்ல அளவில் விவசாயிகளுக்கு எட்டுகிற அளவிற்கு தங்களுடைய திட்டங்களை மாற்றியமைக்க வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் இந்த நவீன விவசாயக் கருவிகள் மிகக் குறைந்த விலையிலும், நியாயமான விலையிலும் ஆங்காங்கு விவசாய மக்களுக்கு கிடைக்கிற அளவிற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நியாயமான விலையில் கூட வாங்குவதற்கு முடியாத விவசாயிகளுக்கு கடனாகவோ அல்லது வாடகைக்கு விடுகிற அளவிலோ ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி ஆங்காங்குள்ள பஞ்சாயத்துக்களிடம் அவற்றை ஒப்படைத்து வாடகைக்கு விடுகிற ஏற்பாட்டைச் செய்தால் நவீன விவசாயக் கருவிகளின் உதவியைப் பெற்று விவசாயிகள் நல்ல பலனை அடைய முடியும். நவீன விவசாயக் கருவிகள் உதவியாகவோ அல்லது மானியமாகவோ கிடைக்கக் கூடிய நிலையில் ஒரு கொள்கை வகுத்து அந்தந்த பஞ்சாயத்துகளுக்கு உட்பட்ட ஆயக்கட்டுகள் அல்லது அந்தந்த பஞ்சாயத்துக்களுக்கு உட்பட்ட மொத்த நிலத்தின் விஸ்தீரணத்திற்குத் தக்கபடி பஞ்சாயத்துகளுக்கு நவீன விவசாயக் கருவிகளை வாங்கிக் கொடுக்கிற ஒரு நிலையை ஏற்படுத்தவேண்டும். அடுத்து, என் தொகுதி பற்றி ஒரு வார்த்தைக் கூற விரும்புகிறேன். என் திண்டிவனம் தொகுதியிலும், மற்ற பக்கத்து தொகுதிகளிலும் சென்ற நவம்பர் வீசிய கடும் புயல் காரணமாக ஆங்காங்குள்ள பல



1967, மார்ச் 23] [திரு. கே. ராமமூர்த்தி]

ஏரிகள் உடைப்பு எடுத்துக் கொண்டு சென்று இன்று அவை வெறும் வெட்ட வெளியாகவே காணப்படுகின்றன. ஏரிகள் ஏரி களாக இல்லை, நிலம் நிலமாகயில்லை. ஏரிகள் உடைப்பு எடுத்து இன்று வெட்ட வெளியாக காட்சி அளிக்கின்றன. அங்கு தண்ணீர் நிற்க இன்னும் வழிவகை ஏற்படவில்லை. ஏரிகளுக்கு கீழ் உள்ள பாய்ச்சலுக்காக இருக்கிற நன்செய் நிலங்கள் இன்று மண் மேடிட்டு கல்லால் மூடப்பட்டு வரண்ட பூமியாக இருக்கின்றன. இவற்றை மறுபடியும் விவசாயத்திற்கு கொண்டு வருவதற்கான துரிதமான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்றாலும் அந்த ஏற்பாடுகள் இன்னும் மிகத் துரிதமாக நடக்கிற அளவிற்கு தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்குள்ள மிகப் பெரிய ஏரிகளான ஆவணியூர் ஏரி, நொளம்பூர் ஏரி, கீழ்பாளயம் ஏரி, சிங்கனூர் ஏரி இவற்றிற்கு இன்று கரைகளே காணோம். அவை மண்மேடிட்டு இருக்கின்றன. அவற்றை செப்பனிடுவதற்காக இருக்கும் அங்குள்ள அதிகாரிகள் அந்த மராமத்து வேலைகளை எர்த் வொர்க் என்று கூறி மனிதக் கூலி வைத்து மராமத்து செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள். அத்துறையில் ஆட்கள் கிடைக்க கடினம் என்பதோடு அத்திட்டத்தை மனிதக் கூலிகள் வைத்துக்கொண்டு நிறைவேற்றமுடியாது என்ற நிலையை அதிகாரிகள் உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே மெஷினரிகளைக் கொண்டு வந்து, புல்டோஸர்கள், ட்ராக்டர்கள் போன்ற கருவிகளை வைத்துக் கொண்டு அந்த ஏரிகளின் கரைகளை செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் அந்த ஏரிகளின் கீழுள்ள நூற்றுக் கணக்கான ஏக்கர் நன்செய் நிலங்களை நல்லமுறையில் விளைச்சலுக்கும் கொண்டு வர முடியும் என்பதை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதை நம் அமைச்சரவை மனதில்கொண்டு உடனடியாக தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துறையில் அரசின் கவனத்தை ஈர்க்க என் வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன். வணக்கம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, விவசாய மானியம் மிக முக்கியமானதொரு மானியமாகும். ஜீவநாடி போன்ற இந்த உணவு, விவசாயம் விஷயத்தில் காங்கிரஸ் சர்க்கார் சரியான கவனம் செலுத்தாத காரணத்தினால்தான் அந்த சர்க்கார் மீது மிகப் பெரிய அளவிற்கு அதிருப்தி ஏற்படக் கூடிய ஒரு நிலை ஏற்பட்டது என்பதை கவனத்தில் வைத்து இந்த உணவு விவசாயம் எந்த அளவிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்ந்து இதில் தீவிரமாகவும் உடனடியாகவும் கவனம் செலுத்தவேண்டும் என்பதுதான் என் கருத்தாகும். ஆகவே விவசாயத்தை நல்லமுறையில் அபிவிருத்தி செய்வதன் மூலமாகத்தான் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பது நமக்குத் தெரிந்த விஷயம். ஆகவே, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு உடனடி விவசாய அபிவிருத்தியைச் செய்யக் கூடிய தன்மையிலே ஃபுட் அன்ட் அக்ரிகல்ச்சர், உணவு, அதற்காக எந்த அளவுக்குப் பணம் செலவு செய்ய வேண்டிய

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1967, மார்ச் 23

நிலைமை ஏற்படுவதாக இருந்தாலும், கொஞ்சமும் சளைக்காமல், கண்டிப்பாக விவசாய அபிவிருத்தியில் தீவிர கவனம் செலுத்தி யாக வேண்டும்.

மற்ற பிரச்னைகளை விட இந்தப் பிரச்னை துரிதமாக கவனிக்கப் படவேண்டிய பிரச்னை ஆகும். மற்ற பிரச்னைகளையாவது கொஞ்சம் அவகாசம் எடுத்து, சிந்தித்துச் செய்யலாம். ஆனால், உணவு-விவசாயம் சம்பந்தப்பட்ட பிரச்னை நிதானமாக கவனிக்கக் கூடிய பிரச்னை அல்ல ஒரு வீடு தீப்பற்றிக் கொண்டு விட்டால், அதை அணைக்க எந்த அளவுக்குத் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டுமோ, அதைப் போல இது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை என்பதால், தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அப்படி விவசாயத்தை இன்றைக்கு அபிவிருத்தி செய்வதில், இன்றைக்கு இருக்கக் கூடிய விவசாயிகள், நிலம் இல்லாத ஏழை விவசாயிகள், பாடுபடக் கூடிய விவசாயிகள், சர்க்காருக்குச் சொந்தமான தரிசு நிலங்களை, காட்டு இலாகா சம்பந்தப்பட்ட நிலங்களோ அல்லது வேறு இலாகா சம்பந்தப்பட்ட நிலங்களோ, தரிசாக இருக்கக்கூடிய நிலங்களிலே, நீண்ட காலமாக, காட்டு இலாகாவிற்கு எந்த விதத்திலும் உபயோகமே இல்லாமல் இருக்கக் கூடிய ஆயிரக்கணக்கான, லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களிலே கூட பல ஆண்டு காலமாக விவசாயம் செய்து வருகிறார்கள். அப்படி விவசாயம் செய்து வரக்கூடிய நிலங்களிலேயிருந்து கூட திடீர் திடீரென்று அவர்களை அப்புறப்படுத்துவதும், அந்த விவசாயத்தையே நாசப்படுத்துவதும் ஆன காரியங் களினாலே விவசாயிகள் பாதிக்கப்படுவது மாத்திரமல்லாமல், உணவு உற்பத்தியைக் கூட பாதிக்கும் அளவுக்கு இருந்து வருகிறது. உடனடியாகத் தரிசு நிலங்களை, எதெல்லாம் விவசாயத்திற்கு லாயக்கான நிலங்களோ அதையெல்லாம் விவசாயிகளுக்குச் சொந்தமாக்கும் நிலையில், குறிப்பிட்ட அளவுக்கு இத்தனை ஏக்கர் என்று பட்டா செய்துகொடுக்கக் கூடிய நிலையில் "இது நம் நிலம், நமக்குச் சொந்தமான நிலம்" என்று ஏற்படும் அளவுக்கு, பாடு பட்டு இரவு-பகலாக உழைத்து உணவு உற்பத்தியைப் பெருக்கும் அளவுக்கு அவர்களை உற்சாகப்படுத்த முடியும் என்பதைத் தான் நான் இந்த நோக்கில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே போன்று, இன்றைக்கு விவசாயத்தை துரிதப்படுத்தக் கூடிய முறையிலே இன்றைக்கு விவசாயிகள் எதிர்பார்ப்பதெல்லாம் நவீனக் கருவிகள், "அகல உழுவதை விட ஆழ உழு" என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு ஆழமாக உழுது விவசாயம் செய்யக் கூடிய நிலைமை ஏற்படுமேயானால், அதன் மூலமாகத்தான் இன்றைக்கு உணவு உற்பத்தியை அதிகப் படுத்த முடியும் என்பதைத் தான் இந்த நோக்கில் குறிப்பிடு கிறேன். இன்றைக்கு நவீன யந்திரங்கள் என்று சொல்லக் கூடிய நோக்கில், புல்டோசர்கள், ட்ராக்டர்கள், ட்ரில்லிங் மெஷின்கள், வெடி மருந்துகள் ஆகியவைகளில், குறிப்பாக வட ஆற்காடு



1967, மார்ச் 23] [திரு. வி. கே. கோதண்டராமன்]

மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், சோழ வள நாடு சோறு டைத்து என்று சொல்லக்கூடிய தஞ்சை மாவட்டம் உணவு உற்பத் தியைச் செய்வதற்கு அடுத்தாற்போல வட ஆற்காடு மாவட்டம் அதிகமாக உணவு உற்பத்தியைச் செய்கிறது என்றால், அங்கு காவிரி நதி பாய்வதைப் போன்று இங்கு பாலாறு இருந்தாலும், மழை பெய்யக் கூடிய காலத்தில் தான் தண்ணீரே ஒழிய மற்ற காலத்தில் தண்ணீர் கிடையாது. அதைப் போன்று நீர்ப்பாசன வசதி இல்லாத மாவட்டம். நீர்ப்பாசன வசதிகளைக் கட்டுப்படுத் தும் நிலையில் இருக்கிற மாவட்டம். விவசாயத்திற்காகக் கிணறுகள் வெட்டுவது என்றால், எங்கு பார்த்தாலும் பாறையாக இருக்கக் கூடிய பிரதேசம். ஒவ்வொரு விவசாயியும் இரண்டு மூன்று கிணறுகள் வெட்ட பத்தாயிரக் கணக்கான ரூபாய் செலவு செய்யும் நிலைமை இருந்தும் பாடுபட்டு கஷ்டப்பட்டு தண்ணீர் இறைத்து விவசாயம் செய்யக் கூடிய மாவட்டத்தில், கிணறுகளை வெட்டும்போது பாறைகளை உடைக்க வெடி மருந்து இருக்கிறதா என்று பார்க்கும் நோக்கில், பாறைகளை துளை போட ட்ரில்லிங் மெஷின்ஸ் இருக்கிறதா என்று பார்க்கும் நேரத்தில், அவை களெல்லாம் கிடையாது. ஆட்களை வைத்து, கடப்பாறையை வைத்துத் துளை போடவேண்டும். வெடி மருந்து தேவை என்றால், மாவட்ட கலெக்டரிடமோ, போலீஸ் அதிகாரியிடமோ அனுமதி பெற்று மைசூர் ராஜ்யத்திற்குப் போய் வாங்கி வரவேண்டிய நிலைமை இருக்கிறது. அதன் காரணமாக வெடி மருந்தை கள்ள மார்க்கெட்டில் விற்கக் கூடிய நிலைமை இருக்கிறது. மாவட்டத் தில் ஒரு இடத்திலாவது அதை விற்பனை செய்யும் நிலைமையை உண்டாக்க வேண்டும்.

ட்ரில்லிங் மெஷின்கள் போதுமான அளவுக்கு இருக்கும் படியான முறையில் உதவி செய்யவேண்டும். ட்ராக்டர்கள் என்று சொல்லும்போது அதிகப்படியான நிலங்கள் வைத்திருக்கிறவர் களுக்குக் கடன் கொடுப்பதோ, வாங்க அனுமதி கொடுப்பதோ வேண்டாமென்று சொல்லவில்லை. இன்றைக்கு மெரிட்டைப் பார்த்து, எந்தப் பிரச்னையிலும், கல்வியானாலும், எப்படிச் சலுகை அளிக்கும் நிலைமை இருக்கிறதோ, அதே அடிப்படையில் யார் உணவு உற்பத்தி அதிகம் செய்கிறார்களோ அந்த மெரிட் அடிப் படையில் அவர்களுக்கு நவீனக் கருவிகள் கொடுக்க முன் வருவது உதவிகரமாக இருக்கும்.

இன்றைக்கு புல்டோசர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் போது மான அளவு கிடையாது என்பது மாத்திரமல்ல, இருப்பதும் பழுது அடைந்த கருவிகளாக இருக்கின்றன. அதிகப்படியான ரேட்டைக் கொடுக்க வேண்டியிருப்பதால் ஏழை விவசாயிகள் அவைகளை உபயோகப்படுத்த முடியாமல் இருக்கிறது. ஆகவே, நவீனக் கருவிகளை எந்த அளவில் உபயோகப்படுத்த முயற்சி செய்ய முடியுமோ அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். விவசாயத் திற்கு இவைகளெல்லாம் மிக மிக முக்கியமானது.

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1967, மார்ச் 23

இன்றைய தினம் ஆழப்படுத்துவதற்கு, தூர் எடுப்பதற்கு உபயோகப்படுத்தும் கருவிகள் இந்த ராஜ்யத்திலேயே நான்கு கருவிகள் தான் இருக்கின்றன என்று நினைக்கிறேன். அதற்கு புல்டோசர் அவசியம் இல்லை. டிராக்டர் அவசியம் இல்லை. ஏரியை ஆழப்படுத்த, தூர் எடுக்க தனியாகக் கருவிகள் இருக்கின்றன என்று நினைக்கிறேன். அந்தக் கருவிகள் குறிப்பிட்ட ஒன்றிரண்டு மாவட்டத்தில் தான் நீண்டகாலமாக இருந்துகொண்டிருக்கிறது என்பது என் அபிப்பிராயம். அது எல்லா மாவட்டங்களுக்கும் உதவி செய்வதற்காக இருக்கக் கூடியது என்று நான் நினைக்கிறேன். தூர் எடுக்கும் கருவிகளை எல்லா மாவட்டங்களிலும், குறிப்பாக எந்த மாவட்டம் உணவு உற்பத்தி அதிகமாகச் செய்யக் கூடிய நிலைமையில் இருக்கிறதோ அதற்கு முதல் சலுகையாகக் கொடுத்து உணவு உற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டுமென்பது மாத்திரமல்லாமல், மேலும் புதிய ஏரிகளை வெட்டுவதும், நீர்த்தேக்கங்களைக் கட்டுவதும் போன்ற காரியங்களில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, சிறு அணைகளைக் கட்டுவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் வசதி இருக்கிறதா என்று பார்த்தாக வேண்டும். அந்த அடிப்படையில் இன்றைக்கு வட ஆற்காடு மாவட்டத்தில் மோர்தனே அணை என்று சொல்லக் கூடிய சிறு அணையைக் கட்டுவதினால், அதன் காரணமாக பல நன்மைகளைப் பெற முடியும். அந்த நீர்த்தேக்கத்தில் மீன் உற்பத்தி செய்யலாம்—அதுவும் ஒரு உணவுப் பொருள் தான். முடிந்தால் அந்த அணையைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். அதே போன்று விவசாயத்திற்குத் தண்ணீரைப் பயன்படுத்த முடியும். இப்படிப் பல காரியங்களுக்குப் பயன்படுத்தும் நிலைமை இருப்பதால், சிறு அணையாக இருந்தாலும், அதற்கும் மத்திய சர்க்காரிலிருந்து போதுமான அளவு பணம் கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன். அதையும் பெற்றுப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்தவேண்டுமென்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கான கடன் வசதி உடனுக்குடன் கிடைப்பதே கிடையாது. விவசாயிகள் கடனுக்காக எழுதிப்போட்டு மாதக் கணக்கில், ஒரு சிலர் வருஷக் கணக்கில் என்றும் சொல்லலாம், அதற்காகப் பல பேர்களைப் பிடித்து, லஞ்சம் கொடுத்து வாங்கும் நிலைமை இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு விவசாயிக்கு வேண்டிய பம்ப்செட்டுகளோ, அல்லது கிணறு வெட்ட வேண்டுமென்று வரும் நேரத்தில் கிணறு வெட்டுவதோ, இது போன்று பிரச்னைகளில் கடன் கொடுப்பதற்குப் பதிலாக, மழை பெய்து ஆற்றிலே வரும் தண்ணீருக்கும் கூட, அணை கட்டினோம், ஆகவே ஏற்பட்டிருக்கக் கூடிய செலவுத் தொகையை ஈடு கட்டும் முறையில் தண்ணீர்த் தீர்வை போடுகிறோம் என்று சொல்லக் கூடிய முறையில், அதே போன்று, கிணறுகள் வெட்டுவதற்கும், பம்ப்செட்டுகள் கொடுப்பதற்கும், கடனைக் கொடுப்பதற்குப் பதிலாக, 100 ஏக்கர், 200 ஏக்கர் போன்ற நிலங்களுக்குத் தண்ணீர் பாயக்கூடிய அளவிலே, மிகப் பெரிய, பிரம்மாண்ட கிணறு வெட்டி, மோட்டார் யந்திரங்களை வைத்து, அதன் மூலமாகத் தண்ணீர் பாய்ச்சி,



1967, மார்ச் 23] [திரு. வி. கே. கோதண்டராமன்]

அந்தப் பணத்தை அந்த விவசாயிகளிடத்திலே இன்றைக்கு வசூல் செய்தால் அவர்கள் கொடுப்பதற்குத் தயாராக இருப்பார்கள். இந்த அடிப்படையிலே நாம் செயல்படுவதன் மூலமாகத் தான் விவசாய அபிவிருத்தியை மிகப் பெரிய அளவுக்குக் காண முடியும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று விதை விஷயமும் முக்கியமானது. ஏற்கனவே விதைகளைப் பெருக்கவேண்டுமானால், அதற்கு ஸீட் பார்ம்ஸ் என்று இருந்தன. மேலும் அதற்கான மார்க்கெடிங் சொஸைடிகள் கூட விதைகளை வாங்கி குறைந்த விலையில் கொடுக்கும்படியான நிலையும் இருந்தது. இன்றையதினம் மார்க்கெட்டிங் சொஸைடிகள் வாங்கு வதற்குப் பதிலாக புட் கார்பரேஷன் வாங்கலாம் என்றோ, அல்லது வேறு எந்த இடத்திலும் வாங்கலாம் என்றோ, எந்த அடிப்படை யிலோ நமக்குத் தெரியாது, மார்க்கெடிங் சொஸைடிகள் வாங்க முடியாத அளவுக்கு ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் 7 மார்க்கெடிங் சொஸைடி ஆபீஸ்கள் மூடப்பட்டு, நூற்றுக்கணக்கானவர்கள் வேலை இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. மேலும் பல ஆபீஸ்கள் மூடப்படும் என்று கேள்விப்படுகிறேன். தேர்தல் நேரத்தில் அன்று இருந்த முதல் அமைச்சர் அவர்கள் இம்மாதிரி உத்தரவு போட்டார்கள் என்று நான் கருதுகிறேன். இது என்ன என்பதையும் கவனத்தில் கொண்டு, நல்ல விதைகள் கொடுக்கும்படியான அளவுக்கு அதிக முக்கியத்துவத்துடன் கவனம் செலுத்தப்படவேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று உரம் என்று சொல்லக்கூடிய நேரத்தில், பஞ்சா யத்து யூனியன் அதிகாரிகள் உரத்தை விநியோகம் செய்ய வேண்டும் என்கின்ற அளவுக்கு இருந்தாலும், 1,000 மூட்டை உரம் வருகிறது என்றால்; 2,000 மூட்டைகளுக்கு அனுமதிச் சீட்டு கொடுக்கிறார்கள். இதனால் விநியோகம் செய்யக்கூடிய மார்க் கெட்டிங் சொஸைடிகளோ அல்லது வேறு சொஸைடிகளோ மிகப் பெரிய அளவுக்கு பாதிக்கப்படுகின்றன. அது மாத்திரமல்ல. வேண்டுமென்றே பஞ்சாயத்து யூனியனில் இருக்கக்கூடிய அதிகாரி கள் இப்படிக் கொடுப்பதன் மூலமாக பல சிக்கல்களை உண்டாக்கக் கூடிய அளவுக்கும் நிலைமை இருக்கிறது. 1,000 மூட்டைகள் என்று சொன்னால், 1,000 மூட்டைகளுக்கு மட்டுமே அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படவேண்டும். அதே நேரத்தில் விவசாயம் செய்திருக் கிறார்களா இல்லையா என்பதைப் பார்க்காமல், குறிப்பிட்ட நபருக்கு நிலம் இருக்கிறதா இல்லையா என்பதையும் கவனிக்கா மல் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, யார் பெயரில் நிலம் இருக்கிறதோ, நிலம் இருந்தால் மட்டும் போதாது அந்த நேரத்தில் நிலத்தில் விவசாயம் செய்யப்பட்டிருக்கிறதா என்பதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, முறையாக எத்தனை மூட்டைகள் வருகின்றனவோ அந்த அளவுக்கு விநியோகம் செய் யும்படியான நிலையில் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படவேண்டும். உணவு சம்பந்தமான பிரச்னையில், விவசாயம் செய்யக்கூடிய பிரச்னையில் ஊழல்கள் ஏற்படுகின்றன என்றால், அது குறித்து

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1967, மார்ச் 23

சம்பந்தப்பட்டவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு தயங்கக்கூடாது என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாய உணவு உற்பத்தி அதிகரிக்கப்படவேண்டும். இன்றைக்குப் பணம் எதிலே அதிகமாகக் கிடைக்கிறதோ, அதாவது கரும்பு, வாழை, புகையிலை போன்ற பண விவசாயம் தான் அதிகமாக நடக்கிறது. இதை இப்படியே விட்டுவிட்டோம் என்றால், இதனுடைய விளைவு என்ன ஆகும்? உணவு உற்பத்தி அதிகரிக்காது, அதற்குப் பதிலாக உணவு நெருக்கடி ஏற்படும். யாரிடம் நிலம் இருந்தாலும் சரி, குறைந்தபட்சம் பாதி அளவுக்கு உணவு உற்பத்தி கண்டிப்பாகச் செய்ய வேண்டும் என்ற அளவுக்கு அரசாங்கம் உத்தரவு போட்டால் தான், விவசாய உற்பத்தி பெருகுவதற்கு உத்திரவாதமாக இருக்கும் என்பதையும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உணவு சம்பந்தமாக இன்றைக்கு முழுக்க முழுக்க சர்க்கார் ஏற்று நடத்தினால் தான் ரொம்பவும் நலமாக இருக்கும். கொள்முதல் பிரச்னையிலே கூட தீவிரமான முறையிலே கன்ட்ரோட்டத்தைச் செலுத்தவேண்டும். எந்த முறையை அனுஷ்டிப்பது மூலம் கொள்முதலை வெற்றிகரமாக நடத்த முடியும் என்பதை எல்லாக் கட்சியினரும் கொண்ட ஒரு கமிட்டி அமைத்து, நாம் ஒரு திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னால், எது போன்ற திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்பதையும் அந்தக் கமிட்டியினரை கலந்து ஆலோசித்து செய்தால் மிகப் பெரிய அளவுக்கு உதவியாக இருக்கும் என்று சொல்லக்கூடிய அதே நேரத்திலே ஒரு பஞ்சாயத்துக்கு குறைந்த பட்சம் ஒரு நியாய விலைக் கடையாவது உடனடியாக நிறுவப்படவேண்டும். அதே மாதிரிதான் கலப்படமும் உணவு வகைகளில் எல்லாவற்றிலும் கலப்படம் இருக்கிறது. கலப்படம் இல்லாத உணவுப் பொருள் என்பதை சொல்லவே முடியாது. அதன் காரணமாக கண்ட வியாதி வருகிறது. அந்த வியாதி என்ன என்பதை பெரிய டாக்டராலும் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு இன்றைக்கு நிலைமை இருந்துகொண்டு வருகிறது. உணவுப் பொருள்கள் சம்பந்தப்பட்ட மட்டில், அதோடு கலந்திருப்பது கல்லாக இருந்தாலும் சரி, மண்ணை இருந்தாலும் சரி, கடுமையான நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு இந்தப் பிரச்னையில் கூட சர்க்கார் தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரு பிரச்னை. ஏ.டி.டி. 27 விதைகளைப் போடுவதன் மூலமும், உரத்தை அதிகமாகப் போடுவதன் மூலமாகவும் மட்டும் உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்கிவிட முடியாது. அதை எந்த நேரத்தில், எந்த அளவுக்கு கண்காணிக்கவேண்டும் என்ற முறையில் பக்குவமாகக் கண்காணித்து விவசாயம் செய்தால் தான், அந்த அடிப்படையில் தான் உண்மையிலேயே உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய நிலைமை ஏற்பட முடியும். விவசாயிகளை மேலும் ஊக்குவிக்கக்கூடிய நிலைமையில் அது சம்பந்தமாக விவசாய இலாகாவில் விவசாயிகளுக்கு எப்படிப் பயிர்செய்யவேண்டும் என்ற



1967, மார்ச் 23] [திரு. வி. கே. கோதண்டராமன்]

முறையைச் சொல்லிக்கொடுக்க வேண்டும். விவசாயிகளுடைய
ஆலோசனைகளையும் கேட்டு, யார் அதிகமாக உற்பத்தி செய்திருக்
கிறார்களோ, எப்படி அவர்கள் உற்பத்தியை அதிகரித்தார்கள்
என்பது பற்றியும் ஆலோசனை கேட்டு, உணவு உற்பத்தியைப்
பெருக்குவதற்கான முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று தெரிவித்
துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அடுத்து மாண்புமிகு உணவு
அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையின் மீது உரை
யாற்றுவார்கள்.

* மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்: கனம் சபாநாயகர்
அவர்களே, இந்தக் கோரிக்கையின் மீது திண்டிவனம் உறுப்பினர்
கனம் திரு. ராமமூர்த்தி அவர்கள் விவசாய உற்பத்திப் பெருக்கத்
திற்காக உர வகைகள், தரமான வித்துக்கள், விவசாயக் கருவிகள்
ஆகிய இவைகளை இந்த அரசாங்கம் சரியாக அமுல்படுத்த ஏற்பாடு
செய்யத் தவறியதாக இந்த வெட்டுத் தீர்மானத்தை அளித்திருக்
கிறார்கள். இந்த வெட்டுத் தீர்மானத்தை அவர்கள் அளித்தார்
களே தவிர, இந்த அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை
மேற்கொண்டிருக்கிறது என்பதை ஏறக்குறைய ஒட்டியே அவர்கள்
பேசினார்கள். இந்தத் தீர்மானம் வெட்டுத் தீர்மானமாக மட்டுமல்
லாமல், தமிழகத்தினுடைய பொருளாதாரத் திட்டமாக மட்டு
மல்லாமல், நம்முடைய எதிர்காலத்தில் நான்காவது ஐந்தாண்டுத்
திட்டத்தின் மையமாக இருக்கிற ஒரு வெட்டுத் தீர்மானமாகும்.
அனைவரும் நாம் இன்றைக்கு தெரிந்துகொண்டிருப்பதெல்லாம்
மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் விவசாய அபிவிருத்திக்கு
சரியான கவனம் செலுத்தப்படவில்லை, நம்முடைய திட்டங்கள்
விவசாயத் துறையிலே சரியாக அமையவில்லை, விவசாய உற்பத்தி
பெருக்கமாகாத காரணத்தினால் இன்றைக்கு நாட்டில் உணவுப்
பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்பவைதான். மூன்றாவது
ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத் துறையில் நாம் சரியான
கவனம் செலுத்தியிருந்தால் நலமாக இருந்திருக்கும். உரவகை
களை அதிகப்படுத்தல், தரமான விதைகளைக் கொடுத்தல், நவீன
விவசாயக் கருவிகளை வினியோகத்தல் என்பது போன்றவைகள்
நமது விவசாய உற்பத்திக்கு திறவுகோல் என்று இன்றைக்குப்
புதியதாக ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிற இந்த அரசாங்கம்
கருதுகிறது. எல்லாத் தரப்பினர்களும் ஒத்துக்கொள்ளக்
கூடிய உண்மை இது. இதற்கான நடவடிக்கைகள் மிகப்
பிரதானம். விவசாய உற்பத்தியை அடித்தளமாகக் கொண்டு
இந்த அரசாங்கம் அமையும் என்பதை நான் தெரிவித்துக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தரமான விதைகளைப்
பொறுத்தவரையில், இந்த மன்றமும் அறியும், மன்றத்திலுள்ள
அனுபவசாலிகளும் அறிவார்கள், இன்றைக்கு விவசாய
மந்திரியாக பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் அவர்கள் எஸ்டேட்
கமிட்டியில் அங்கத்தினராக இருந்து விதைப் பண்ணைகள் செயல்
முறை பற்றி நல்ல அனுபவம் பெற்றிருக்கிறார்கள். அவர்களு
டைய தலைமையிலே இந்தத் துறை நிச்சயம் சரியான விதைகளை
பெருக்குவதற்கும், அதை அபிவிருத்தி செய்வதற்கும் வழி கோலும்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1967, மார்ச் 23

பிற பகல் 12-20 அதற்கு அடுத்தபடியாக நீர்ப்பாசன வசதிகள் பற்றியும் குடியாத்தம் உறுப்பினர் கனம் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் குறிப்பிட்டார்கள், நமது மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் விவசாய உற்பத்தியைப் பொறுத்த மட்டில் தான் தீவிரமான ஆராய்ச்சி செய்துகொண்டு இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஒன்றை மட்டும் இந்த மன்றத்தின் கவனத்திற்கும், சபாநாயகர் அவர்களே, தங்களுடைய கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன். முன்னால் இருந்த அரசாங்கத்திற்கும் உர வகைகளை உரிய காலத்தில் கொடுக்கவில்லை என்கின்ற குறைபாடு இருந்தது. இன்றைக்குப் பார்த்தால் கூட, உணவைவிட மிக முக்கியமான பிரச்சினை உரவகைகள் தான். உரம் சம்பந்தப்பட்ட மட்டில், மிகத் தெளிவான பற்றாக்குறை இருக்கிறது. இந்தப் பற்றாக் குறைக்கு யாராவது பொறுப்பு என்றால், அது மத்திய சர்க்கார் தான் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கிறது. தமிழ் நாட்டிலே விவசாய மக்களுக்கு உரம் கொடுக்கவில்லை, போதுமான நேரத்தில் போதுமான அளவு கொடுக்கவில்லை என்றால், அதில் மாநில சர்க்காரைவிட உண்மையிலேயே மத்திய சர்க்காருக்குத்தான் பொறுப்பு அதிகம். மத்திய சர்க்காருடைய கொள்கை சரியான முறையில் இதில் செயல் படவில்லை என்பது தான் காரணம். உதாரணமாக, நடப்பு ஆண்டில் நைட்ரஜன் உர வகைகளில் நாம் 135,000 டன் கேட்டு இருந்தோம், ஆனால் நமக்குக் கிடைத்தது 86,000 டன் தான். இதைத்தான் மத்திய சர்க்கார் நமக்கு வழங்கி இருக்கிறது. அதே மாதிரித்தான், பாஸ்பர உரம் சம்பந்தப்பட்டமட்டில் 60,700 டன் நம்முடைய குறிக்கோள் என்றால், அதில் மூன்றில் ஒரு பங்கு, கிட்டத்தட்ட 27,000 டன் தான் பெற்று இருக்கிறோம், உரம் வெகு முக்கியமான அம்சமாக இருந்தும், மத்திய சர்க்காருடைய கொள்கை காரணமாக, நாம் எவ்வளவு நீர்ப்பாசன வசதிகளைச் செய்தாலும் கூட, தரமான விதைகள் கொடுத்தாலும் கூட, நல்லமுறையில் இயங்கும் விதைப் பண்ணைகள் இருந்தாலும் கூட, இந்த உர வகைகள் நமக்கு வேண்டிய அளவு இல்லாததால், இவற்றை சரியாக அமுல் நடத்த முடியாத துரதிர்ஷ்ட நிலை இருக்கிறது. இந்த அரசாங்கம் மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கை இரண்டு அம்சங்கள் கொண்டது. நீண்ட கால திட்டம் ஒன்று: உர உற்பத்திக்கான தொழிற்சாலை அமைக்க வேண்டும். ஆனால், அது உடனடியாக நடக்காது. ஆகவே, மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள், இந்த மன்றத்திலும் சரி, இன்னும் தொடர்ந்தும் ரசாயன உரங்கள் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, மத்திய சர்க்காருடைய கொள்கை மாற்றத்திற்கு வற்புறுத்தி வருவார்கள். இன்றைக்கு ரசாயன தொழிற்சாலைகள் நான்காவது திட்டத்தில் அமைகிற போது, நம்முடைய பிரச்சினை ஓரளவிற்குத் தீரும். ஆனால், இன்றைக்கு நமக்கு இருக்கும் ஒரே ஒரு பரிகாரம், தக்க அளவில் மிக மிக விரைவாக இறக்குமதி செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம். இறக்குமதி செய்ய மத்திய அரசாங்கம் பல்வேறு வகைகளையும் கையாள வேண்டியது அவசியம், அப்படிச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறது. இப்பொழுதுகூட, நான்கு நாட்களுக்கு



1967, மார்ச் 23] [திரு. கே. ஏ. மதியழகன்]

முன்பாகப் பத்திரிகையில் பார்த்தேன். சோவியத் நாடு 10 கோடி ரூபாய் அளவிற்கு உர வகைகளை இந்திய சர்க்காருக்கு நன்கொடையாக, அன்பளிப்பாகக் கொடுக்கிறது என்று பார்த்தேன். 10 கோடி ரூபாய் அளவில் கெமிகல் பர்டிலைசர்கள், உர வகைகளைக் கொடுப்பதாகப் பார்த்தேன். இதிலிருந்து, வெட்டுப் பிரேரணை கொடுத்தவர்களும், மற்றும் எதிர் வரிசையில் இருப்பவர்களும் சேர்ந்து—கனம் முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொன்னது போல எல்லோரும் சேர்ந்து ஏகோபித்த கருத்தாக எடுத்துக் காட்டி—தமிழ் நாட்டிற்கு உர வகைகளை இறக்குமதி செய்ய மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். உறுப்பினர்கள் பேசியதில் ஏகோபித்த கருத்து இருப்பதால், வெட்டுப் பிரேரணை கொடுத்த கனம் உறுப்பினர் ராமமூர்த்தி, தன்னுடைய வெட்டுப் பிரேரணையை வற்புறுத்தாமல், அவர்கள் திருப்பிப் பெறுமாறு கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** அடுத்து மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் பேசுவார்கள். ஆனால், அவர்களுக்கு ஐந்தே ஐந்து நிமிடங்கள்தான் இருக்கின்றன என்பதை வருத்தத்தோடு தெரிவிக்கிறேன்.

***திரு. பி. ஜி. கருத்திருமன்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, (குறுக்கீடு) இந்த விவசாய, உணவு மானியத்தின் மீது நான் கலந்து கொள்வதற்கு ஐந்து நிமிஷங்கள்தான் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) கனம் அமைச்சருடைய குறைபாடு என்னவென்றால், அமைச்சருக்குப் பிறகு நான் எப்படிப் பேசலாம் என்பது. ஆனால் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன், எனக்குப் பிறகு முதல் அமைச்சர் பேச இருப்பதால் - . . .

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** ஐந்து நிமிடங்கள் தான் இருக்கின்றன. கருத்தைப் பற்றிப் பேசுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உணவு அமைச்சர் அவர்கள் இடை
யில் குறுக்கிட்டார்கள், ஆதலால் அதைக் குறிப்பிட்டேன். விவ
சாய இலாகா சம்பந்தப்பட்ட வரையில், அவர்கள் நல்ல காரியங்
களைச் செய்து கொண்டு வருகிறார்கள். எதிர்க் கட்சியில் இருந்
தாலும், நல்ல காரியத்தைப் பாராட்டத்தானே வேண்டும்.
இரண்டு, மூன்று திட்டங்கள் போட்டு இருந்த போதிலும், உற்
பத்தி அதிகமாக இல்லை என்றார்கள். திட்டங்கள் போட்டதில்
குறைபாடு என்பதை ஓரளவுக்கு மறுக்கத்தான் வேண்டியிருக்
கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 55 மில்லியன் டன்
உற்பத்தி செய்தோம் என்றால், மூன்றாவது திட்டத்தின் போது 90
மில்லியன் டன் உற்பத்தி செய்திருக்கிறோம். ஆகவே, ஏதோ
சோர்வு ஏற்பட்டுவிட்டது, உற்பத்திக் குறைவு என்றெல்லாம்
சொல்வது தவறு. வேறு வகைகளில் நமக்கு தொல்லைகள்
ஏற்பட்டிருக்கின்றன. ஜனத் தொகைப் பெருக்கம். 1965-ம்
ஆண்டில் மழை இன்மை. அதன் காரணத்தால் பஞ்சம். ஆகவே,

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967, மார்ச் 23

உணவு உற்பத்தியைப் பொருத்த மட்டில் அது நல்ல முறையில் தான் நடந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒரே ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். காலையிலே அறிவித்ததிலிருந்து, கொள்முதல் விஷயத்தில், 12 லட்சம் பேர்களுக்கு விலக்கு அளிக்கப்படும் என்றும், பாக்கி 8 லட்சம் பேர்களிடமிருந்துதான் கொள்முதல் செய்யப்படும் என்றும் குறிப்பிட்டார்கள். இப்படிப் பட்ட அதிகாரத்தை வைத்துக்கொண்டு,

“வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு”

என்று குறளாசிரியர் குறிப்பிட்டது போன்று, 12 லட்சம் பேர்களுக்கு விலக்கு அளித்துவிட்டு, எந்த அளவில் சர்க்கார் நடத்தப் போகிறார்கள், என்று உடனடியாக ஒரு தீர்மானம் எடுத்தாக வேண்டும். கொள்முதலில் உள்ள கஷ்டங்கள் என்னென்ன என்பதையெல்லாம் பற்றி கவர்னர் உரைமீது பேசும் போது சொல்லலாம் என்றிருக்கிறேன். விவசாயிகளின் தேவைக்குப் போக பாக்கியெல்லாவற்றையும் எடுக்க வேண்டும்; அல்லது ஓரளவு குத்து மதிப்பாக எடுத்து மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும். ஆகவே, இந்தக் கொள்முதலில், அமைச்சர் அவர்கள் சொன்னாலும், இப்படி 12 லட்சம் பேர்கள் தங்கள் இஷ்டம் போல் எங்கே வேண்டுமானாலும் விற்றுக்கொள்ளலாம் என்று விட்டுவிட்டு ஒரு பகுதிப் பேர்களை மட்டும் கொள்முதலுக்கு உட்படுத்தினால், குடியானவன் நிலை என்னவாகும் என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே, ப்ரொக்யூர்மெண்ட் விஷயத்திலே, தயவு செய்து தீவிரமான, திட்டமான கொள்கையைப் பின்பற்ற வேண்டும். சொல்லப்போனால், ஒவ்வொருவருக்கும் எத்தனை இருக்கிறது, எத்தனை டிமாண்ட் என்று பிரசுரித்து, பஞ்சாயத்து மூலம் கொடுத்து, அதன் பிரகாரம் வசூல் செய்தால் கூட ஓரளவு நன்றாக இருக்கும். அதிகமாகப் பேசவேண்டியிருந்தாலும், அதிக நேரம் இல்லாததால் இந்த அளவோடு முடிக்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** இந்த மானியத்தைக் கோரி தீர்மானத்தை அவைக்குக் கொண்டு வந்த மாண்புமிகு முதல் அமைச்சர் இறுதி உரையாற்றுவார்கள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, உணவு அமைச்சர் தந்து விட்ட விளக்கத்திற்குப் பிறகு, நான் தருவதற்கான விளக்கங்கள் அதிகமாக இல்லை என்று கருதுகிறேன். இந்த விவாதத்தில் நம்முடைய மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முதலிலே கலந்துக் கொள்ளாமல் இருந்தார்கள் என்பதைக் கண்டு வருத்தமாக இருந்தது. இவ்வளவு முக்கியமான பிரச்சினையில் அவர்கள் கருத்துத் தெரியாமல் போகிறதே என்று நினைத்தேன். ஆனால் இறுதியில் அவர்களும் தன் கருத்தைத் தெரிவித்தார்கள். அவை களெல்லாம் நாம் மேற்கொண்டிருக்கும் பணிகளை செம்மைப்



1967, மார்ச் 23] [திரு. சி. என். அண்ணாதுரை]

படுத்த வேண்டும் என்கிற நல்ல நோக்கத்தோடு தெரிவிக்கப்படுவதால், அதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உணவுப் பிரச்சினை இன்று நேற்று சிக்கலாகி விட்ட பிரச்சினை அல்ல. அதைச் சுட்டிக்காட்டும் முறையில் உணவு அமைச்சர் ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அதிலே கொஞ்சம் வருத்தம் அடைந்தார்கள். வருத்தப்பட வேண்டியதில்லை என்றாலும், காங்கிரஸ் சர்க்காரையே குறைகூறுவதாக, திட்டத்தைப் பற்றிச் சொன்னால், காங்கிரஸ் சர்க்கார் என்று, வருத்தப் பட்டார்கள் என்று நினைக்கிறேன். காங்கிரஸ் சர்க்காரைக் குறை சொல்லுவதாகக் கொள்ளக் கூடாது என்று அவருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். திட்டம் என்பது, காங்கிரஸ் சர்க்கார் மட்டும் செய்வது அல்ல. அதனுடைய பெருமைகள், சிறுமைகளில் காங்கிரஸ் கட்சி மட்டும் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதல்ல. அது மட்டுமல்ல, காங்கிரஸ் சர்க்காரே கூட திட்டக் கமிஷன் சரியாக நடக்கவில்லை என்று குறைபட்டிருக்கிறார்கள். ஆகையினால், திட்டங்கள் தீட்டப்பட்ட முறையில், முதல் இரண்டு மூன்று திட்டங்களில் விவசாயத்திற்கு போதுமான முதல் இடம் தரப்படவில்லை என்பதுதான் உணவு அமைச்சர் குறிப்பிட்டுக் காட்டியது என்று உணர்கிறேன். அதிலே உற்பத்தி அதிகரிக்கப்படவில்லையா என்பதற்கு அவர்கள் புள்ளி விவரங்களெல்லாம் கொடுத்தார்கள். அதிலே விவரம் தெரிவித்தவர்களாகையால் அதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஐந்தாண்டுத் திட்டங்களைப்பற்றி மதிப்பீடு போடுகிறபோது உணவுப் பிரச்சினையிலே போட்டாலும், நாம் எதிர்பார்த்தது என்ன? அடைந்தது என்ன? ‘டார்ஜெட்’ என்ன? ‘ஆக்சுவல்’ என்ன? அந்த டார்ஜெட்டிலேயே ‘ஃபிஸிகல் டார்ஜெட்’ என்ன ‘ஃபினான்ஷியல் டார்ஜெட்’ என்ன? ‘ஆக்சுவல்’ என்பதிலேயே ‘ஃபிஸிகல் ஆக்சுவல்’ என்ன, ‘ஃபினான்ஷியல் ஆக்சுவல்’ என்ன என்று இவைகளையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோதுதான், விவசாயத் துறையிலே நாம் எதிர்பார்த்த அளவிற்குப் பலன் கிடைக்கவில்லை என்பதனால்தான் இந்த நிலைமைகளெல்லாம் வந்துவிட்டன என்று உணவு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுந்தான் சொல்லுகிறார்கள் என்று அர்த்தம் அல்ல. எல்லோருமே அதை இப்பொழுது ஒப்புக் கொள்ளுகிறார்கள். நிபுணர்களே நிபுணர்களெல்லாம் கூட ஒப்புக்கொள்ளுகிறார்கள். குறைபாடுகளை ஒப்புக்கொள்ளுவதினால், ஒன்றுமே நல்லது நடக்கவில்லை என்று நாமாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. நல்ல பல காரியங்கள் நடந்திருக்கின்றன. ஆனால், நாம் எதிர்பார்த்த அளவிற்கு நடக்கவில்லை என்பதுதான் அவர்கள் எடுத்துச் சொன்னது. அதைக் குற்றச்சாட்டு என்று கருதுவதைவிட மதிப்பீடு என்று கொள்ள வேண்டும். அந்த மதிப்பீட்டில் இன்றையதினம் யாருக்கும் திருப்தி இல்லை.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி முன்னறிவிப்பாக வருகிற அறிக்கையிலே கூட, நாம் போட்டிருக்கிற மதிப்பீடு,

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 23

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலே நாம் போட்ட மதிப்பீட்டின் அளவிற்குக் கிடைக்கவில்லை என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் உணவு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் எடுத்துக்கொள்ள இருக்கிற பல முயற்சிகளுக்கு எல்லோருடைய சிறந்த ஒத்துழைப்பும் கிடைக்கும் என்பதிலேயும், அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதிலேயும் நாம் அனைவரும் மிகுந்த நம்பிக்கை கொள்ள வேண்டும். இந்த நேரத்தில் உணவுத் துறையை எடுத்துக்கொண்ட என்னுடைய நண்பர் அவர்கள் இதிலே மிகுந்த ஆர்வத்தோடு இந்தத் துறையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவிப்பது முறை என்று கருதுகிறேன். அவர்கள் உணவுத் துறையை எடுத்துக்கொண்டபோது எனக்கு மிகுந்த திருப்தி; மிகுந்த மகிழ்ச்சி. அவரைப்போல் உணவுத் துறை நல்ல வலுவாக இருக்கவேண்டும். அதை எடுத்துக்காட்டுகிற வகையிலே அந்த உணவுத் துறை அவர்களிடத்தில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். அவர்களுடைய சிறந்த முயற்சிகளுக்கெல்லாம் இந்த அவையிலே உள்ளவர்கள் எல்லோரும் ஒத்துழைப்பார்கள் என்ற கருத்தோடு, நான் அதிகமாகப் புதிதாக எதுவும் இதிலே சொல்வதற்கில்லை என்பதை எடுத்துச்சொல்லி, எடுத்துச்சொல்லப்பட்ட கருத்துக்களெல்லாம் எங்களுடைய கவனத்திலே இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டு, அவர்கள் வேண்டிக் கேட்டுக்கொண்டதைப் போலவே, இந்த உணவு கொடுப்பதில்தான் வெட்டு கொண்டுவருகிறோம் என்றாலும், மானியத்திலாவது வெட்டாமலிருக்கலாம் என்று உங்களை நான் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானத்தை மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கே. ராமமூர்த்தி அவர்கள் வலியுறுத்துகிறார்களா, அல்லது திரும்பப் பெறுகிறார்களா என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. ராமமூர்த்தி :** ஐயா, அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியின் பேரில், என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்தவில்லை என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வெட்டுத் தீர்மானம், அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பட்டது.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** அவையின் முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் XVI—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் 4,57,36,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்".

கோரிக்கை நிறைவேற்றப்பட்ட மானியத் தொகை வழங்கப் பட்டது.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இப்பொழுது பிற்பகல் மணி 1·00 அடிப்பதற்கு இன்னும் 15 நிமிடங்கள் இருக்கின்றன. விவாதிப்



1967, மார்ச் 23]

பதற்கென்று எடுத்துக்கொண்ட மானியக் கோரிக்கைகளெல்லாம் நிறைவேற்றப்பட்டுவிட்டபடியால், மற்ற மானியக் கோரிக்கைகளையும் ஒவ்வொன்றாக அவையின் முடிவிற்கு விட்டு நிறைவேற்ற வேண்டும் என்று மன்ற முதல்வர் அவர்கள் தீர்மானம் கொண்டு வரலாம்.

6. அரசாங்கத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.
(இ) மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, "முதலில் விடப்பட்ட மானியக் கோரிக்கைகளை இப்பொழுது ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு, அவையின் முடிவிற்கு விட்டு, நிறைவேற்றலாம்" என்ற தீர்மானத்தை அவை முன் நான் வைக்கின்றேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகள் பற்றிய தீர்மானங்கள் பிற்பகல் 1.00 மணிக்கு வாக்கெடுப்புக்கு விடப்படும் என்று முன்னர் அறிவித்திருந்தேன். இப்பொழுது நேரம் 12-45 (பிற்பகல்) என்றாலும், இப்பொழுதே மற்ற மானியக் கோரிக்கைகள் பற்றிய தீர்மானங்களின் மீதும் வாக்கெடுப்பதற்கு இந்த அவை அனுமதிக்கிறது.

5. 1967-68-ம் ஆண்டிற்கான முன் மானியக் கோரிக்கைகள்மீது
மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் III—பொது விற்பனை வரிகளும், ஏனையத் தீர்வைகளும்—நிர்வாகம்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க் கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் III— பொது விற்பனை வரிகளும், ஏனையத் தீர்வைகளும்--நிர்வாகம்—என்ற தலைப்பின் கீழ் 41,65,500 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்"

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் IV -முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க் கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் IV —முத்திரைத்தாள்கள்—நிர்வாகம்— என்ற தலைப்பின் கீழ் 8,15,900 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் V—பத்திரப் பதிவுத் துறை.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் V—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின்கீழ், 23,66,200 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப் பேரவை.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப் பேரவை என்ற தலைப்பின்கீழ் 6,37,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங் கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் VII—தேர்தல்கள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் VII—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ், 6,87,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச் சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் 1,07,05,900 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.



கோரிக்கை எண் IX—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும்

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் IX—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் 3,56,85,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம்

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் 62,43,100 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ், 69,47,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் XII—போலீஸ்

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XII—போலீஸ் என்ற தலைப்பின்கீழ், 3,57,19,900 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

(கோரிக்கை எண் XIII—கல்வி—ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு விட்டது.)

**கோரிக்கை எண் XIV— மருத்துவம்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XIV—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ், 3,86,20,300 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XV—பொதுச் சுகாதாரம்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XV— பொதுச் சுகாதாரம் என்ற தலைப் பின்கீழ், 1,71,78,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

(கோரிக்கை எண் XVI —வேளாண்மை—ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுவிட்டது.)

**கோரிக்கை எண் XVII—மீனளம்.**

பிற் பகல் 1-00

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XVII— மீனளம் என்ற தலைப்பின்கீழ், 31,26,400 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XVIII—கால்நடை வளர்ப்பு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XVIII— கால்நடை வளர்ப்பு என்ற தலைப் பின்கீழ், 1,10,56,900 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங் கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.



**கோரிக்கை எண் XIX—கூட்டுறவு**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XIX— கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ், 87,63,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XX— தொழில்கள்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XX—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ், 66,74,100 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XXI—சின்கோனு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கின்றேன்.

"கோரிக்கை எண் XXI—சின்கோனு என்ற தலைப்பின்கீழ், 10,05,100 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XXII—கதர்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XXII—கதர் என்ற தலைப்பின்கீழ், 6,66,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XXIII—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்:

"கோரிக்கை எண் XXIII— சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ், 2,14,26,400 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XXIV—தொழிற்சாலைகளும், தொழிலாளர் நலனும்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்:

"கோரிக்கை எண் XXIV— தொழிற்சாலைகளும், தொழிலாளர் நலனும் என்ற தலைப்பின்கீழ், 75,39,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XXV— ஆதிவாசிகள், ஹரிஜனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்:

"கோரிக்கை எண் XXV—ஆதிவாசிகள், ஹரிஜனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ், 2,14,19,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XXVI—பாசனம்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்:

"கோரிக்கை எண் XXVI—பாசனம் என்ற தலைப்பின்கீழ், 2,49,53,900 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.



**கோரிக்கை எண் XXVII— பொதுப்பணிகள்—பணிகள்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்:

"கோரிக்கை எண் XXVII— பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ், 2,45,93,400 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XXVIII—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திர சாதனங்களும்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்:

"கோரிக்கை எண் XXVIII— பொதுப்பணிகள்—பணியாளரும் கருவிகளும்—இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ், 92,92,300 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XXIX -பொதுப்பணிகள்—உதவி மானியங்கள்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்:

"கோரிக்கை எண் XXIX— பொதுப்பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின்கீழ், 83,60,500 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XXX —மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்:

"கோரிக்கை எண் XXX—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ், 3,17,79,400 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XXXI— பஞ்சத் தணிப்பு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XXXI— பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின்கீழ், 3,71,400 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XXXII— ஓய்வூதியங்கள்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XXXII— ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின் கீழ், 1,19,11,400 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XXXIII— பல்வகை.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XXXIII— பல்வகை என்ற தலைப்பின்கீழ், 3,46,41,200 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XXXIV— எழுதுபொருள் அச்சுத்துறை.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XXXIV- எழுதுபொருள் அச்சுத்துறை என்ற தலைப்பின்கீழ், 74,04,100 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.



**கோரிக்கை எண் XXXV—காட்டு வளத்துறை.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XXXV— காட்டு வளத்துறை என்ற தலைப்பின்கீழ், 53,31,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XXXVI— ஏனைய இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XXXVI— ஏனைய இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ், 1,86,28,300 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.

**B ரெவின்யூ கணக்குக்குப் புறம்பான மூலதனச் செலவு.**

**கோரிக்கை எண் XXXVII— ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XXXVII—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ், 3,66,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XXXVIII— பொதுச் சுகாதார மூலதனச் செலவு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XXXVIII— பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ், 4,39,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XXXIX— வேளாண்மை மூலதனச் செலவு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XXXIX—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ், 17,58,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XL—தொழில்கள், பொருளாதார வளர்ச்சிக்கான மூலதனச் செலவு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XL—தொழில்கள், பொருளாதார வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ், 2,59,98,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XLI— பாசன மூலதனச் செலவு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XLI— பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ், 2,60,97,100 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XLII—பொதுப்பணிகள் மூலதனச் செலவுகள்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XLII— பொதுப்பணிகள் மூலதனச் செலவுகள் என்ற தலைப்பின்கீழ், 1,28,67,600 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.





**கோரிக்கை எண் XLIII— மோட்டார் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XLIII—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ்; 79;93,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XLIV—காட்டு வள மூலதனச் செலவு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XLIV— காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் 26,27,600 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XLV— ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XLV—ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல் என்ற தலைப்பின்கீழ், 2;36;700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

**கோரிக்கை எண் XLVI—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XLVI—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ், 25,92,35,400 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்—

கோரிக்கை எண் XLVII—மாநில அரசாங்கம் வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XLVII—மாநில அரசாங்கம் வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ், 13,64,80,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப்பட்டது.

7. அறிவிப்பு.

**தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா.**

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவை இந்த அவைக்குக் கொண்டு வருவதற்கும், அதன் மீது விவாதிப்பதற்கும் மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் தமது இணக்கத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்கின்றேன்.

இந்த மசோதாவை மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் அவையின் முன் கொண்டு வருவார்கள்.

8. அரசாங்க மசோதாக்கள்.

**(அ) தமிழ்நாடு, 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நான் இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** இம்மசோதா அறிமுகம் செய்யப்படுகிறது.





**(இ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு மாவட்ட நகராட்சி (திருத்த) மசோதா.**

**மதிப்பிற்குரிய திரு. செ. மாதவன்:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சி (திருத்த) மசோதாவை இந்தச் சபையில் அறிமுகப்படுத்துவதற்கு அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மதிப்பிற்குரிய திரு. செ. மாதவன்:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நான் இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** இம் மசோதா அறிமுகம் செய்யப்படுகிறது.

இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. இந்த அவையின் அடுத்த கூட்டம் 25-3-1967 சனிக்கிழமை அன்று காலை 9 மணிக்கு நடைபெறும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

9. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

**A. Statutory Rules and Orders**

* 111. *Notification issued by the Collector of Coimbatore district, dated the 27th October 1966, relating to the removal of Sri A. N. Rasa Gounder from the office of the President, Anjanur Panchayat in Gobichettipalayam of Coimbatore district. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958)].* 1-28 p.m.

**B. Reports, Notifications and other papers.**

* 16. *Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year 1966-67 (English and Tamil).*

* 17. *Notice of Demands for Grants for Further Expenditure for the year 1966-67 (English and Tamil).*

* 18. *Final Supplementary Estimates, 1966-67—Speech of Hon. Thiru C. N. Annadurai, Chief Minister (English and Tamil).*

---

* Placed on the Table of the House on 21st March 1967.

[1967 மார்ச் 25

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இந்த ஒழுங்குப் பிரச்சினை மீது என்னுடைய தீர்ப்பு. இந்தச் சட்டப் பேரவையின் நடவடிக்கைகள் நம் 249 விதிகளுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். 249 விதிகளுக்கு உட்படவில்லை என்றால் அரசியல் சட்ட 194-வது பிரிவின்படி ஹவுஸ் ஆஃப் காமன்ஸ், இங்கிலாந்திலுள்ள பாராளுமன்றத்தில் என்ன நடைமுறையோ அந்த நடைமுறையை நான் கடைப்பிடித்தாகவேண்டும். அரசியல் சட்டபடி நான் நடப்பேன் என்று நான் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே, நம்முடைய 249 விதிகளுக்கு அப்பாற்பட்டு ஏதாவது ஒரு கருத்து இருக்குமானால், இங்கிலாந்து நாட்டிலுள்ள பாராளுமன்ற நடைமுறைப்படி நான் நடக்க கடமைப்பட்டிருக்கிறேன். அரசியல் சட்ட 194 பிரிவுப்படி லோக் சபாவில், டெல்லியில் என்ன நடக்கிறதோ அதன்படி நடக்க வேண்டும் என்பது அரசியல் சட்டமல்ல. ஆகவே, இந்த மசோதாக்கள் எல்லாம், நடைமுறை எப்படியென்றால் மூன்று முறை இந்தப் பேரவை முன்னால் வைக்கப்படும். முதல் முறை சட்டப் பேரவையின் அனுமதியோடு மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் அதைக் கொண்டுவருவார்கள். அதற்குப் பின்னால் அந்த மசோதாவானது கெஸட்டில் அறிவிக்கப்பட்டு எல்லோருக்கும் வழங்கப்படும். பிறகு இரண்டாவது முறை வாசிப்பு நடக்கும். அப்போது ஒவ்வொரு பிரிவும் தனித்தனியாகவே விவாதிக்கப்படும். மூன்றாவதாக நிறைவேற்றப்படும். இந்த நடைமுறைப்படி இப்போது மாண்புமிகு மன்ற முதல்வர் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானம்—" தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மைகள் தடுப்பு) மசோதாவைக் கொண்டுவர பேரவை அனுமதி அளிக்கிறது " என்பது தீர்மானம்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை முன்னுரைக்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இந்த மசோதா முன்னுரைக்

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, கனம் [illegible]ங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்து என்னவென்றால், முதலில் [illegible]ண்ட்ரட்யூஸ் செய்த பிறகுதான் பப்ளிகேஷன் செய்யவேண்டு[illegible]மென்று விதி சுத்தமாக இருக்கிறது. இருந்தபோதிலும் அங்கத்[illegible]னர்களின் தகவலுக்காக சர்குலேஷன் செய்யும் மற்ற பேப்பர் [illegible] இதையும் [illegible] செய்[illegible]



(திரு. பி. ஜி. கருத்திருமன்) [1967 மார்ச் 25

நல்லதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். விதிகளைத் திருத்தியாவது மசோதாவை முன்னால் கொடுக்கவேண்டும் என்பது கருத்து என்று நினைக்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** மாண்புமிகு நண்பர், எதிர் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பியுள்ளார். அதன் மீது என்னுடைய தீர்ப்பைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு மசோதாவை முதல் முறையாக இந்தச் சட்டப் பேரவையின் முன் கொண்டுவரும்போது எவருமே எதிர்ப்பது கிடையாது. ஆகவே, அதன்படி முதன் முறையாக இந்தச் சட்டப் பேரவையில் மசோதாவைக் கொண்டு வருவதை எதிர்த்துப் பேசுவதற்கு இடம் அளிக்கவேண்டுமென்று கேட்பது சரியல்ல. . . .

**திரு. ரா. கனகசபை :** விதி 92 (1)-ல் பேசலாம் என்று இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மறுத்துப் பேச என்று சொல்லவில்லை. அங்கத்தினர்களுக்கு முதலில் தகவல் கொடுக்கவேண்டுமென்ற நிலை இருக்கவேண்டும் என்கிறார்கள்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இந்த அவையின் முன் கொண்டுவர அனுமதித்து அவைமுன் வைக்கப்பட்ட பிறகு கெஸட்டில் வெளியிடப்பட்டு மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் எல்லோருக்கும் ஒவ்வொரு பிரதி கொடுக்கப்படும். அதுதான் வழக்கம். அதுதான் பேரவையின் விதிமுறை.

**திரு. ரா. கனகசபை :** விதி 92 (1)-ல் இருக்கிறது.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** பேசுவதற்கு அனுமதி மறுக்கவில்லை. மாண்புமிகு மன்ற முதல்வர் அவர்கள் மசோதாவை கொண்டுவந்தபோது எதிர்ப்பதற்கு யாராவது இருந்தால் அவர்கள் பேசியிருக்கலாம். அப்போது பொதுவான விவாதம் வேண்டுமென்று கோரினால் கொடுத்தாகவேண்டும். அதற்காக முன் கூட்டியே அந்த மசோதாவின் பிரதி கொடுக்கவேண்டுமென்று விதிகளில் இல்லை.

### 2. 1966–67-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் துணை அறிக்கை—பொது விவாதம்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** அடுத்து, கடந்த 1966–67-ம் ஆண்டுக்கான செலவு குறித்த—கடந்த ஆண்டு என்று சொல்லும் போது இன்னும் ஒரு வாரத்தில் முடியப் போகும் ஆண்டுக்கு உண்டான செலவு—இறுதித் துணை அறிக்கைமீது இப்போது பொது விவாதமும், அதற்குப் பிறகு மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும் இன்று நடைபெற இருக்கின்றன. மாண்புமிகு அங்கத்தினர்கள் வெட்டுத் தீர்மானங்கள்

1967 மார்ச் 25] [பேரவைத் தலைவர்]

கொடுத்திருக்கிறார்கள். அவர்களின் கருத்துக்களை பொதுவிவாதத்தின்போது பேசி தெரிவித்துவிடும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒரு மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறும்போது அப்போது தங்கள் **கருத்துக்களைப் பற்றி பேசுவதற்கு நேரம் இருக்காது. ஆகவே,** வெட்டுத் தீர்மானம் கொடுத்திருப்பவர்களுக்கு எல்லாம் முன்பே பேச வாய்ப்பு கொடுப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது பொது விவாதம்.

*THIRU M. WILLIAM: Mr. Speaker, Sir, in supporting the Supplementary Demands, I wish to say a few words. The Supple- mentary Demands relate only to past performances and the works which have already been completed and executed. It may be observed by the Hon. Minister for Works that they may be comple- ted in the course of this year. As a Member who belongs to the Congress Party, I am bound to support the several demands that have been made under the Supplementary Grants. But I wish to point out at the very outset that the present Ministry which has already observed strict economy will try to extend the same principle in works that are being done departmentally by the Government or under the contract system. We feel that there has been throughout wasteful expenditure in the several undertakings run by the Government. To avoid such wasteful expenditure, much vigilance is required and, I am sure, the Ministry which embarked on such a policy will do well to apply the same principle in all the works undertaken by them. In this connection, I also wish to point out, that several important items of work which ought to have been done are not being done especially in these days when there is a shortage of food supplies. Some important works which ought to have been completed before, have not been completed. For instance, the Neyyar Left Bank Channel works for which an initial provision of Rs. 42 lakhs was made, an expenditure of Rs. 1 crore has been incurred; yet, the work has not been completed. Some of the Branch Channels have not been opened. Sluices are not put in the proper places in the main channel. Even some of the sluices that are put, are so narrow that they are not sufficient. The result is that the target has not been achieved and I request that at least present Govern- ment will devote its formost attention to this important piece of work.

Another important piece of work which ought to be taken up is the opening of a Branch Channel in the Chittar Pattanamkal from Karingal to Palapallam. This is a Branch Channel which is to be opened under the Pattanamkal Scheme and this work has not been carried out. I hear that this important piece of work is to be dropped on the ground that there may be paucity of water in the dam. The Pattanamkal Scheme was started on the strict understanding that only if there was surplus water, it would be taken to Radhapuram. Sir, Karingal-palapallam branch will



25th March 1967] [Thiru M. William]

bring under cultivation 2,000 acres of paddy lands and it would cost the Government about half a lakh of rupees and if this is to be dropped for the sake of supplying water to dry lands in Radhapuram, I strongly object to this procedure. I earnestly request the Hon. Minister for Works to devote his personal attention to this matter and issue instructions to take up Karingal palapallam branch work.

With regard to procurement, I hear a lot of complaint from the people, especially from the people of the Kanyakumari district. Small landowners owning half an acre or one acre are being compelled to contribute their quota of foodgrains. If such small landowners are treated like this, I am afraid that they may not be encouraged to cultivate their lands and perhaps they may abandon their lands or they may turn to the cultivation of commercial crops. So, in the matter of procurement we ought to be careful and we should not in any way harass the poor ryots. At least a minimum extent of two acres must be exempted from procurement. Surplus paddy should be taken only from the agriculturists who own more than three acres and that may be done on a graded scale.

Also, the family card system is not working properly. My request is that this system must be worked properly or statutory rationing may be introduced. If statutory rationing is not possible, if full ration is not given allow the open market also to function. If the Government do not give full ration and also do not allow the open market to function, the poor people especially the labourers will be put to great hardship especially in the matter of getting food supplies, they may have to face starvation. So, I request the present Ministry to consider all these matters and follow a policy which will bring in prosperity to our land. With these words, I conclude my speech.

*திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, துணை மானியக் கோரிக்கைகளின் மீது பேசும் வாய்ப்புக் கிடைத்ததைப்பற்றி நான் மகிழ்ச்சி கொள்கிறேன்.

அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து கொண்டிருக்கிறது. உதாரணமாக, இப்போது விவசாயத்தை எடுத்துக்கொண்டாலோ ஒரு கோடி ரூபாய்க்கு மேல் விவசாயத் துறையிலே செலவு செய்ய நிதி ஒதுக்கீடு கோருகிறது. அப்படிச் செய்வதிலே எதிர்பார்க்கும் அளவுக்குப் பலன் கிடைக்கிறதா என்பதைப் பற்றி நாம் பார்க்கவேண்டும்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னதாக ஒரு தாலுகா அலுவலகத்திற்குச் சென்றால் ஏதோ ஒரு தாசில்தார் இருப்பார்; அவருக்குத் துணையாக டெபுடி தாசில்தார் என்பவர் இரண்டொருவர் இருக்கக்கூடும். ஆனால், இன்றைக்கு அதே அலுவலகத்திற்குச் சென்று பார்த்தால், ஒன்றுக்கு பத்தாக, தாசில்தார்கள், டெபுடி தாசில்தார்கள், எழுத்தர்கள் எண்ணிக்கை அதிகப்பட்டுக் கொண்டே போகிறது. இவ்வளவு ஆட்களை வைத்துக்கொண்டு

# தமிழக சட்டப் பேரவை

*சனிக்கிழமை, 1967 மார்ச் 25.*

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் திரு. சி. ப. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவைக் கூடியது.*

*[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]*

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இந்தச் சட்டப் பேரவையின் முதல் அலுவல், கேள்விகள் பதில்கள். மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வதற்கு கேள்விகள் இல்லை. ஆகையால், அடுத்த அலுவல், மாண்புமிகு மன்ற முதல்வர், கல்வி அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மைகள் தடுப்பு) மசோதாவைக் கொண்டு வர அனுமதி கோருவார்கள்.

### 1. அரசினர் மசோதாக்கள்

### (அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மைகள் தடுப்பு) மசோதா.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மைகள் தடுப்பு) மசோதாவை முன்னுரைக்க அனுமதி கோருகிறேன்.

**திரு. ரா. கனகசபை :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்த மசோதா சபை முன் வருவதற்குமுன் அங்கத்தினர்களுக்கு முதல் நாளே அதை அனுப்பிவிட வேண்டும்.

If a motion for leave to introduce a Bill is opposed, the Speaker, after permitting, if he thinks fit, a brief statement from the member who moves and from a member who opposes the motion, may put the question thereon.

என்றிருக்கிறது நமது பேரவை விதி. 'அப்போஸ்' செய்வது என்று சொன்னால் மசோதாவின் கருத்து தெரிந்தால்தான் மேலே பேச முடியும். லோக் சபையில் கூட மசோதா முதல் நாளே எல்லா அங்கத்தினர்களுக்கும் அனுப்பப்பட்டு விடுகிறது. ஆகவே, இனிமேல் ஒரு மசோதா மறுநாள் இங்கு சபை முன் வருகிறது என்றால் முன்பே அதை அங்கத்தினர்களுக்கு அனுப்பி விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்] [1967 மார்ச் 25

இந்த நிர்வாகத்தை நடத்துவதிலே என்ன அதிக வேலைகள், அலுவல்கள் வந்துவிட்டன என்று பார்க்கும்போது எல்லாம் ஒரே மாதிரித்தான் இருக்கிறது. அந்தக் காலத்தைவிட இன்று ஒரு பேப்பர் ஒரு இடத்திலிருந்து ஒரு இடத்திற்கு மாறுவது என்ருல், மாதக்கணக்கில், வருஷக்கணக்கில் ஆகிறது. சாதாரணமாக ஒரு நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்கென்று ஒருவர் வாட்டர் டிக்கெட்டிற்கு (Water ticket) விண்ணப்பம் போட்டால், வருஷக் கணக்கில் பைசல் செய்யப்படாமல் இருக்கிறது. எனக்குத் தெரிந்த ஒரு கேஸைச் சொல்ல முடியும். அதனுடைய நடைமுறை, ஃபார்மாலிட்டீஸ், சிவப்பு நாடா இவைகள் போகிற போக்கு, அதைத் தாசில்தாருக்கோ அல்லது கலெக்டருக்கோ அனுப்பிஞல் அங்கே சில மாதங்கள் தங்கி, பி.டபிள்யூ.டி-ல் பல மாதங்கள் தங்கி, அங்கே போய்ப் பார்த்து அனுப்பிஞலும் கலெக்டரிடம் வந்து, அங்கே இரண்டு மாதம் இருந்து, பிறகு ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்குப் போய் இப்படிப் பல மாதங்கள் ஆகின்றன. அதிக உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்தி சம்பளமாக இவ்வளவு தொகையைச் செலவு செய்த பின்னும் ஏன் இவ்வளவு தாமதம்? அதே மாதிரிதான் ஒவ்வொரு துறையிலும் நடக்கிறது. சாதாரணமாக பஞ்சாயத்தை எடுத்துக்கொண்டால், 1958-ல் பஞ்சாயத்துச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்னதாக ஏதோ ஒரு சில பஞ்சாயத்துக்கள் இருந்துகொண்டிருக்கும். பஞ்சாயத்து வரியைக் கொண்டே அந்தப் பஞ்சாயத்து நிர்வாகம் நடந்துவிடும். ஆனல், இப்பொழுது அப்படிப்பட்ட நிலை எல்லாம் இல்லை. சாதாரணமாக பஞ்சாயத்து ஒன்றிப்பு அலுவலகங்களை எடுத்துக்கொண்டால், அதிலே இருக்கின்ற ஆட்கள், சேவகர்கள், உத்தியோகஸ்தர்கள் எண்ணிக்கை கொஞ்சம் நஞ்சம் அல்ல. அத்துணை பேர்களும் என்ன வேலை செய்துகொண்டிருக்கிருர்கள்? முன்பு ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் செய்துகொண்டிருந்த வேலையைத்தான் செய்துகொண்டிருக்கிருர்கள். சாதாரணமாக எதற்கு எடுத்தாலும் ஒரு கட்டுப்பாடு; எதற்கு எடுத்தாலும் ஒரு தடை. ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி ஒவ்வொரு பேப்பரும் தாமதப்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு காரியத்தையும் சீக்கிரம் நடத்தித்தரவேண்டும்; பொது மக்களுக்கு சௌகரியம் செய்து தரவேண்டும்; அவர்களுடைய கோரிக்கைகளை உடனே நிறைவேற்றித் தரவேண்டும். அப்படியில்லாமல் இப்படிப்பட்ட சிவப்பு நாடா காரணமாக பேப்பர்ஸ் தாமதப்படுத்தப்படுகின்றன. நாம் அதிகமாக ஆட்களை நியமித்தும், பணத்தை அதிகமாகச் செலவு செய்தும், பேப்பர்கள் சீக்கிரமாக பைசல் ஆகவில்லை என்ருல் என்ன பிரயோசனம்? ஒரு குடிமகன் ஏதாவது ஒரு கோரிக்கை விடுத்தால், ஏறக்குறைய ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்குள்ளாக அந்த பேப்பர் பைசல் செய்யப்படவேண்டும். அதைவிட்டு விட்டு, ஒரு பேப்பர் பைசல் ஆவதற்கு ஒரு வருஷம் [illegible] இரண்டு வருஷம் ஆனல், நாம் ஏன் இவ்வளவு தொகை [illegible] செய்யவேண்டும், இவ்வளவு உத்தியோகஸ்தர்களை நியமிக்க வேண்டும் [illegible] அரசாங்கம் யோசித்துப் [illegible]



1967 மார்ச் 25] [திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்]

குடிதண்ணீர் வசதிகளைப் பற்றிய சில விண்ணப்பங்களை, மதிப்பிற்குரிய ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். ஒரு முனிசிபாலிடிக்கு—ஒரு பெரிய நகரத்திற்கு—தண்ணீர் எடுத்துக்கொண்டு போவது—பாதுகாப்புத் தண்ணீர் திட்டம் நிறைவேற்றுவது என்ருல் அந்த ஸ்கீமின் மெயின் பைப்—பெரிய குழாய்—போகும் வழியில் உள்ள கிராமங்களுக்குக் குடிதண்ணீர் சப்ளை செய்யவேண்டும் என்பது சர்க்கார் பாலிஸியாக இருந்தும்கூட, நடைமுறையில் எத்தனையோ சிக்கல்கள். திருப்பூர் முனிசிபாலிடிக்குத் தண்ணீர் கொண்டு போகும் வழியில் இருக்கிற அவிஞசி நகரப் பஞ்சாயத்து, திருமுருகன்பூண்டி கிராமப் பஞ்சாயத்து, கருவலூர் பஞ்சாயத்து ஆகிய இடங்களில் ஒரு குழாய், இரண்டு குழாய் என்று பெயரளவில் வைத்துவிட்டு அவர்களிடம் பெருந்தொகை கேட்கப் பட்டிருக்கிறது. கோபிசெட்டிப்பாளையம் முனிசிபாலிடிக்கு மெயின் குழாய்கள் போகும் வழியிலுள்ள லக்கம்பட்டி பஞ்சாயத்து, கரட்டடிப்பாளையம், நல்லகவுண்டன்பாளையம் போன்ற கிராமங்களுக்குத் தண்ணீர் சப்ளை செய்யப்பட வில்லை. வருஷக்கணக்கில் தாமதம் ஆகிறது. கிராமங்களுக்குப் பாதுகாப்புக் குடி தண்ணீர் வசதி அவசியம். இடையிலே உள்ள கிராமங்களுக்குக் குடி தண்ணீர் கொடுக்கிருேம் என்று சொல்லப் பட்டிருந்தாலும், அதற்கு வேண்டிய இன்வெஸ்டிகேஷன்ஸ் பூர்த்தியாயிருந்தாலும் பஞ்சாயத்துக்கள் முன்பணமாகக் கட்டவேண்டிய தொகை கட்டியிருந்தாலும், ரூ. 10,000, 20,000 டெபாஸிட் கட்டவேண்டும், அல்லது கவர்ன்மெண்டிலிருந்து மான்யமாகவோ அல்லது கடனுகவோ பெற்றுத் தரவேண்டும் என்று சொல்லப்பட்டு அம்மாதிரி தொகை வாங்கித்தரப்பட்டும், அந்தக் கிராமங்களில் இன்னும் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படவில்லை. குழாய்கள் வந்து இரண்டு வருஷங்களாக தூங்கிக்கொண்டிருக்கின்றன. கிராமங்களில் குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு இவ்வளவு தாமதம் ஆகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரில் பார்த்து கேட்டும் கூட இன்னும் பேப்பர்கள் நகரவில்லை. இதைத் துரிதமாகக் கவனிப்பதற்கு வழிவகைகள் செய்வது மிகவும் முக்கியம்.

மற்ருெறு முக்கியமான காரியம். கொள்முதலை எடுத்துக் கொண்டால் அதற்குச் செலவழிக்கின்ற பணம் கொஞ்சம் நஞ்சம் இல்லை. அதற்காக இவ்வளவு பெரிய எஸ்டாபிளிஷ்மெண்டு, எவ்வளவோ ஆட்களையும், உத்தியோகஸ்தர்களையும் வைத்துக் கொண்டிருக்கிருேம். மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் ஏழை எளியவர்களைத் தட்டிக் கொடுத்துத்தான் கொள் முதல் செய்யவேண்டும் என்று சொல்கிருர்கள். அவர்களைக் கட்டாயப்படுத்தி கொள்முதல் செய்யச்சொல்லவில்லை என்று ஒரு முறை அல்ல பல முறை அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிருேம். அது மிகவும் வரவேற்கத்தக்கது. இருந்தாலும் கூட ஒரு ஏகரா, இரண்டு ஏகரா, மூன்று ஏகரா, நான்கு ஏகரா [illegible] வைத்துக்கொண்டிருக்கிற [illegible]ர்கள் அதிகமாகத்

[திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்] [1967 மார்ச் 25

துன்புறுத்தப்படுகிறார்கள். 10 மூட்டைகள் வைத்துக்கொண்டிருப்பவர்கள் 5 மூட்டைகள் கொடுக்கவேண்டும், 5 மூட்டைகள் வைத்துக்கொண்டிருப்பவர்கள் 2 அல்லது 3 மூட்டைகள் கொடுத்து விடவேண்டும். அதாவது ஒரு டார்ஜெட்டை வைத்துக் கொண்டு, கொள்முதலை அதிகப்படுத்துவதற்காக கட்டாயமாகக் கேட்கிறார்கள். இம்மாதிரி ஏழை எளிய விவசாயிகள் கஷ்டப்படுத்தப்படுகிறார்கள் என்று எனக்குக் கடிதம் மூலம் தகவல் வந்திருக்கிறது. அம்மாதிரி வந்த கடிதத்தை வேண்டுமானாலும் இந்த மன்றத்தில் படிக்கத் தயாராக இருக்கிறேன். ஏழை எளிய விவசாயிகள் உத்தியோகஸ்தர்களுடைய கண்டிப்புக்கு ஆளாகிறார்கள் என்பது நடைமுறையிலே பிரத்தியட்சமாகத் தெரிந்த விஷயம். மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள், கொள்முதலில் வித்தியாசம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை, எல்லோரையும் ஒரே மாதிரியாக பாவிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அது சாதாரணமாக கொள்கை அளவுக்கு சௌகரியமாக இருக்கலாம். பெரிய நிலச்சுவான்தார்களுக்கும் கட்டாயக் கொள்முதல் இல்லாமல் செய்துவிடுவது மிகவும் நல்லதுதான். 1952-ல் மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் முதல் அமைச்சராக வந்தபொழுது மத்திய சர்க்காருடைய யோசனை அல்லது எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், மத்திய சர்க்கார் உணவு மந்திரி திரு. கித்வாய் போன்றவர்கள் சொல்லியும் கேட்காமல், கொள்முதலை எடுத்துவிட்டார்கள். பிறகு கொஞ்ச நாட்களிலே ரேஷனையும் அமல் நடத்தவில்லை. அதனால் ஜனங்களுக்கு சௌகரியம் ஏற்பட்டது. அந்த முறையில் தாம் படிப்படியாகக் கொள்முதலைத் தளர்த்துவதாகச் சொல்லி, கனம் உணவு அமைச்சர் அவர்கள் ஒரு ஏக்கருக்கு இப்பொழுது கொள்முதல் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள் போலும். முன்பு ½ ஏக்கருக்கு இல்லை ; இப்பொழுது ஒரு ஏக்கருக்கு இல்லை. சாதாரணமாக கைம்பெண்கள், 5 மூட்டைகள் வைத்துக்கொண்டிருந்தால் அதில் மூன்று மூட்டைகளைக் கொள்முதல் செய்துவிட்டால், அவர்கள் சாப்பிடுவதற்கே நெல் போதவில்லை, அரை வயிற்றுக் கஞ்சிக்குத்தான் வருகிறது என்று சொல்கிறார்கள். சாதாரணமாக நாம் இங்கே சொல்வது ஒன்று, உத்தியோகஸ்தர்கள் நடந்துகொள்ளும் முறை ஒன்று. காரியங்கள் நடைமுறையில் வேறு விதமாகத்தான் நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே ரெவின்யூ இலாகா உத்தியோகஸ்தர்களாக இருந்தாலும் சரி, ரெவின்யூ இலாகாவின் கீழ் ப்ரொக்யூர்மெண்டுக்கென்று நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் நடைமுறையில் மிகவும் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும் என்று அரசாங்கம் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கவேண்டும். நடைமுறையில் கஷ்டங்கள் எத்தனையோ இருக்கின்றன. இப் புதிய சர்க்காரிடமிருந்து மக்கள் எவ்வளவோ நல்ல காரியங்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். உணவுப் பிரச்னைதான் மிகவும் முக்கியமான பிரச்னை என்பது நாம் எல்லோருக்கும் தெரியும்.



(திரு. கே. எம். ராமஸ்வாமி கவுண்டர்) [1967 மார்ச் 25

வேறு எத்தனையோ பிரச்னைகள் இருக்கலாம். பி.யு.ஸி. வகுப்பில் இலவசமாகக் கல்வி அளிக்கவேண்டும் என்று எல்லாம் சொல்லிக்கொண்டிருந்தபோதிலும், உணவுப் பிரச்னைதான் உடனே தீர்த்துவைக்கப்படவேண்டிய பிரச்னை. நன்றாகவும் அதைச் செய்ய வேண்டும். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நிறைய இருக்கிறார்கள். சர்க்காரால் நிறைய வரியும் பெறப்படுகிறது. ஆனால் ஜனங்களுக்கு ஹிம்சையும், கஷ்டமும் இருந்துகொண்டிருக்கக் கூடாது. அவர்களுடைய கஷ்டங்களைப் போக்குவதற்குத் துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். சென்னை, கோயம்புத்தூர் போன்ற பெரிய நகரங்களுக்கு சப்ளை செய்ய வேண்டிய ஸ்டாக் மட்டும் வைத்துக்கொண்டு, மற்ற வகைகளில் ஆகின்ற செலவைக் குறைத்து, கொள்முதலை நீக்கி, கிராமப் பகுதிகளில் தைரியமாக ரேஷனை எடுத்துவிடலாம். ஐந்து ஏக்கருக்குக் குறைந்தவர்களுக்கு நில வரியை எடுத்துவிடலாம் என்றெல்லாம் தேர்தல் காலத்தில் ஒவ்வொரு கட்சியினரும் பிரச்சாரத்திற்குச் சொன்னார்கள். நில வரியை எடுப்பது கூட இன்றைய நிலையில் அவ்வளவு அவசரமான பிரச்னை அல்ல. நில வரி ஆய்வுக் குழு அமைப்பதைக் கூட ஒரு வருஷம், இரண்டு வருஷங்களுக்கு ஒத்திவைக்கலாம். பிரத்தியட்சப் பிரமாணமாகப் பார்த்தால், நாம் இந்தச் சபையில் எவ்வளவு சொல்லிக்கொண்டிருந்தபோதிலும் நடைமுறையில் பழைய கருப்பன், பழைய கருப்பனாகவே தான் இருந்து கொண்டிருக்கிறான். உத்தியோகஸ்தர்கள் ஏழை எளிய விவசாயிகளை தொந்தரவு செய்து கொண்டு தான் இருக்கிறார்கள். நாம் உத்தியோகஸ்தர்களையும், மான்யத் தொகையையும் பெருக்கிக்கொண்டிருக்கிறோம். பொது மக்களுக்கு நல்ல முறையில் சேவை செய்வதற்குத் தான் இவைகளையெல்லாம் செய்து வைத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறோம். பொதுஜன சேவை செய்வதாகத் தான் நாம் அத்தனை பெரும் பகீரதப் பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே, 9-30 முற்பகல். நல்ல முறையிலே, பொதுமக்களுக்கு இம்சை இல்லாத வகையில் ரேஷன் கொடுக்கவும், மற்ற வசதிகளைச் செய்து கொடுக்கவும் வழி வகை செய்ய வேண்டும். கிராமங்களில் குடும்பக் கார்டுகள் கொடுத்திருக்கலாம். ஆனால், ஆளுக்கு வாரத்திற்கு அரை லிட்டர் அல்லது 400 கிராம் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கலாம். நகரங்களில் கொடுப்பது எப்படி இருந்தாலும் கூட, கிராமங்களில் இந்த முறை சரிவர நடைபெறவில்லை. ஆகவே, அந்த வகையில் ஏற்படக்கூடிய செலவுகளைக் குறைக்க கனம் முதல் அமைச்சரவர்களும், மற்ற அமைச்சர்களும் கவனம் செலுத்துவார்கள் என்று நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* திரு. வெ. முனுசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1966-67-ம் ஆண்டுக்கான இறுதித்துணை மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய சுதந்திராக் கட்சி உறுப்பினர் கட்டாயக் கொள்முதலை எடுத்து, அதனால் ஏற்படக்கூடிய செலவுகளைக் குறைக்க வேண்டும் என்றார்கள். ஆனால் இன்றைய சூழ்நிலையில், கொள்

*1967 மார்ச் 25] (திரு. வெ. முனுசாமி)*

முதலினால் சிக்கல்கள் ஏற்படுவதை நாம் அறிந்தும், அதை நம்முடைய மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களும், அவருடைய அமைச்சரவையில் இருக்கும் மற்ற அமைச்சர்களும் அறிந்தும் இருக்கிறார்கள். ஆனால், கொள்முதலே வேண்டாம் என்று சொல்லும் அளவிற்கு இன்றையதினம் உணவு உற்பத்தியும் மற்றவைகளும் முறைபடுத்தப்படவில்லை என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். அந்த நிலையில் மதிப்பிற்குரிய முதல் அமைச்சருடைய பேச்சு மூலம் நாம் அறிந்திருப்பது என்னவென்றால், கட்டாயக் கொள்முதல், கட்டுப்பாடு இவைகளை சிறிது காலத்தில் நீக்கி விடலாம் என்பதே. செலவினத்தைப் பொறுத்தவரையில், இந்தச் செலவினங்கள் எப்படி ஏற்பட்டிருக்கின்றன என்பதை இந்த மாமன்றமும், நாட்டிலுள்ள பொதுமக்களும் அறிந்திருக்கிறார்கள். இந்தச் செலவினங்களுக்கு இன்றைக்குஆட்சிப் பொறுப்பு ஏற்றிருக்கும் அமைச்சரவை பொறுப்பில்லை என்றாலும், செலவினங்களைக் குறைக்க அவர்கள் வேண்டிய கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். இப்படிப்பட்ட கட்டாயக் கொள்முதல் வேண்டாம் என்று சொல்லக் கூடிய அளவிற்கு நம்முடைய விவசாயிகள் மனப் பக்குவம் அடையவில்லை. விவசாயிகளுக்கு இருக்கும் சிக்கல்களைப் பற்றி எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறேன். இன்றைய தினம் சாதாரணமாக மில் ஓனர்கள் அசோசியேஷன், மான்யுபாக்சரர்கள் அசோசியேஷன் என்றெல்லாம் இருப்பது போல, விவசாயிகளுக்கு என்று ஒரு சங்கம் கிடையாது. மற்றவர்கள் தங்கள் தங்கள் அசோசியேஷன் மூலமாக, தங்களுக்கு வேண்டிய மூலப் பொருள் முதலியவற்றைப் பெற்றுக் கொண்டு, உற்பத்திச் செலவுகளைப் போட்டு, இவ்வளவு லாபம் வேண்டும் என்று நிர்ணயித்து, 100-க்கு 5 அல்லது வேறு வகையில் லாபத்தை நிர்ணயித்து மார்க்கெட்டுக்குக் கொண்டு வருகிறார்கள். ஆனால், விவசாயிகளைப் பொறுத்த வரையில், அந்த நிலைமை இல்லை. வத்திப் பெட்டி தயாரிப்பவர்கள் கூட அப்படிப்பட்ட முறையில் தான் இயங்குகிறார்கள். அதனால் அவர்களுக்கு கட்டுபடியாகும் விலை கிடைக்கிறது. ஆனால் விவசாயிகள் கதி என்ன? எந்த விதமான உதவியும் இல்லாத துர்ப்பாக்கிய நிலையில்தான் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கென்று ஒரு சங்கம் அமைந்து, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், நான் ஒரு விவசாயி, விவசாயிகளின் கஷ்டம் தெரிந்தவன் என்கிற முறையில் தான் இன்றைக்கு இருக்கும் நிலையில், கண்ட்ரோல் ரேட்டுக்கும் அதிகப்படியான விலை கொடுத்து வாங்கத் தரகர்கள் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, கொள்முதலுக்குக் கொடுக்காத நிலை இருக்கிறது. விவசாயிகளுக்கு வேண்டிய கருவிகள் முதலியவைகள் கண்ட்ரோல் விலையில் கிடைக்கச் செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு வேண்டிய விதைகளையும், உரங்களையும் வாங்க முடியாமல், பல மார்க்கெட்டுகளில் பலதரப்பட்ட விலை இருக்கும் நிலை இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்கு என்று ஒரு அசோசியேஷன்



*1967 மார்ச் 25] [திரு. வெ. முனுசாமி]*

ஏற்படுத்தப்பட்டு, ஃபெர்டிலைசர் என்று சொல்லப்படுகின்ற உரங்களையும், விதைகளையும், அதோடு லேபர் சார்ஜஸ் என்று சொல்லப்படுகின்ற செலவுகளையும் நிர்ணயித்து, ஓரளவிற்கு லாபம் கிடைக்கும் விலையையும் நிர்ணயம் செய்தால், விவசாயிகள் உற்சாகத்தோடு பயிர் செய்து கொள்முதலுக்குக் கொடுப்பார்கள். தானாகக் கொடுக்கும் மனப் பக்குவம் அவர்களுக்கு ஏற்பட்டுவிடவில்லை. அதற்கான செலவினங்கள் அதிகம் என்றால் இன்றைக்கு உள்ள சூழ்நிலையில் அது தவிர்க்க முடியாதது. அதே சமயத்தில் இன்னொன்றையும் தெரிவிக்க வேண்டும். ஒரு சில அதிகாரிகள் நல்ல முறையில் நடந்து கொள்ளுவதும் இல்லை. என்னுடைய செஞ்சி வட்டத்தில் ஏதோ பெரிய மிராசுதார்களை விட்டு விட்டு, சிறிய மிராசுதார்களையே கட்டாயப் படுத்தும் நிலை இருப்பதாக நேற்று முன் தினம் கூட எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அதைப் பற்றி கனம் உணவு மந்திரியிடம் அந்தப் புகார்களைச் சமர்ப்பிக்க இருக்கிறேன்.

இன்றைய தினம் செலவுகள் அதிகமாக இருக்கிறது என்றால் அதற்கு எங்களுடைய பகுதி காரணம் என்பதை வேதனையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். காரணம் என்னவென்றால், 3-11-1966-ல் ஏற்பட்ட புயல், செஞ்சி, திண்டிவனம் பகுதிகளைத்தான் அதிகமாகப் பாதித்தது. அன்றைக்கு அரசோச்சிக்கொண்டிருந்த காங்கிரஸ்காரர்கள், வீட்டிற்கு ரூ. 40 என்ற வகையில், புயல் நிவாரணம் அளித்ததை பொதுமக்கள் அறிவார்கள். அந்த வகையிலும் செலவு கூடுதலாகியிருக்கிறது. இருந்தாலும், அந்த நிவாரணம் ஒழுங்காகக் கொடுக்கப்படவில்லை என்கிற புகார்கள் இருக்கின்றன. அது நடந்துபோன கதை என்றாலும் கூட, அந்தப் புயல் காரணமாக இன்றைக்கும் எங்கள் பகுதிமக்கள், பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏரிகளில் உடைப்பெடுத்து பயிர்கள் நாசமடைந்த வகையில் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

விவசாயிகளுக்கு நலம் ஏற்படவேண்டும் என்பதற்காக கூட்டுறவு முக்கியமாக செயல்படுத்தப் பட்டாலும், விவசாயிகளுக்குத் தொந்தரவு தான் அதிகமாகியிருக்கிறது. கூட்டுறவுத் துறையினால் சாதாரண விவசாய மக்களுக்கு அதிகமான லாபம் எதுவும் கிடைத்துவிடவில்லை. இன்றையதினம் கூட்டுறவுத் துறை அரசியலில் இருக்கிற சிலருக்கு பெரிய கூடாரமாக அமைந்திருக்கிறதே ஒழிய, பொது மக்களுக்கு எந்தப் பயனும் ஏற்படவில்லை. ஒரு சிலர் கையில் வைத்துக் கொண்டு அவர்களுடைய குடும்பத்திற்கு சாதகமாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் இந்த அமைச்சரவையில் இருப்பவர்களுக்குத் தெரியும். நாங்களெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்கள், இவற்றையெல்லாம் அறிந்திருக்கிறோம். நாங்கள் மக்களோடு பேசிப் பழகி தெரிந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் இந்த செலவினங்களுக்கு இந்த அமைச்சரவை பொறுப்பில்லை என்றாலும், அவை அத்யாவசியமானதாகவே இருக்கின்றன. எதிர்க் கட்சியில் இருப்பவர்கள், அமைச்சரவை பேரில் குறைகூற வேண்டும் என்றால்,

[திரு. வெ. முனுசாமி] [1967 மார்ச் 25

அடுத்த ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் வரும்போது குறை கூறலாம். ஆனால் இப்பொழுது அப்படிப்பட்ட குறைகளைச் சொல்லத் தகுதி கிடையாது. காரணம் இந்த அமைச்சரவை பதவியேற்று 19 நாட்கள் தான் ஆகின்றன. இப்படிப்பட்ட நிலையில் குறை கூறுவது சரியாகாது.

பிராஃபிட் அண்ட் லாஸ் என்று சொல்லும் போது, வரவு அதிகமாகி செலவினங்கள் குறைந்தால் பிராபிட் ஏற்படும். ஆகவே, அன்றையதினம் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்ய திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை பாடுபடும். ஆகவே, பொறுத்திருந்து, வருவாய் பெருகுகிறதா என்பதையும் பார்த்துவிட்டு, எதிர்க் கட்சி நண்பர்கள் குறைகூறவேண்டும். ஆகவே, அந்த முறையில் இந்த மானியங்களை ஆதரித்து, இச் சந்தர்ப்பத்தில் பேச இந்த வாய்ப்பினைக் கொடுத்த தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, இந்த மானியங்களை மனதார வரவேற்கிறேன் என்று சொல்லி அமருகிறேன். வணக்கம்.

* திரு. ஆ. கு. சுப்பையா: அவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கக் கூடிய 1966-67-ம் ஆண்டுக்கான செலவு குறித்த இறுதித் தாளை அறிக்கை சம்பந்தமாகச் சில விஷயங்களைச் சொல்லுவதற்கு நான் முன் வருகிறேன்.

இந்த அறிக்கையில் முதலமைச்சர் அவர்கள், வேளாண்மைத் துறைக்கு அதிகமாகச் செலவு செய்யப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வேளாண்மைத் துறைக்கு அதிகமாகச் செலவிட வேண்டியது மிக மிக முக்கியந்தான். 'வேளாண்மை' என்று சொல்லுகிற இந்த சமயத்தில், தமிழ்நாட்டில் இன்றையதினம் எங்கு பார்த்தாலும், உணவுக் கொள்முதல் சம்பந்தமாகப் பரபரப்பான செய்திகளை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதிகமாக உணவு உற்பத்தி செய்து, அதன் மூலமாக நாட்டில் ஏற்பட்டிருக்கக் கூடிய உணவுப் பஞ்சத்தைப் போக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட வேண்டும். நமது இராஜ்யத்தில் லட்சக் கணக்கான எக்கர் தரிசு நிலம் சாகுபடி செய்யப்படாமல் கிடக்கின்றன. அந்த நிலங்களையெல்லாம் எடுத்து சாகுபடிக்குக் கொண்டுவரவேண்டும் என்று பல முறை இந்த மன்றத்தில் வற்புறுத்திச் சொல்லப்பட்டு வந்தும் கூட, அரசாங்கம் ஏனோ தானோ என்று இருந்து வருகிறார்கள். இப்பொழுது பொறுப்பேற்றிருக்கக்கூடிய புதிய அரசாங்கம் ஒரு தீவிரமான திட்டத்தைத் தயார் செய்து, தமிழ்நாட்டிலே விவசாயத்திற்கு லாயக்கான நிலம் தரிசாக எங்கெல்லாம் இருக்கிறதோ அதையெல்லாம் விவசாயத்திற்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தஞ்சை மாவட்டம், இதர மாவட்டங்களைப் போல் அல்லாமல், தண்ணீர் வருகின்ற காலங்கள் நீங்கலாக இதர காலங்களிலே வேறு தொழில்கள் செய்ய முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது.



1967 மார்ச் 25] [திரு. ஆ. கு. சுப்பையா]

தண்ணீர் இல்லாத காரணத்தால் விவசாய் உற்பத்தியும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த ஜில்லாவில தண்ணீர் வசதிக்கு ஏற்பாடு செய்து கொடுத்தோமானால், மூன்று போகம் விவசாயம் செய்ய முடியும். மூன்று போகம் விவசாயம் செய்வதற்குரிய யோசனையை வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் கூறியிருக்கிறார்கள். அவர்கள் தஞ்சை ஜில்லா போன்ற டெல்டாப் பகுதிகளுக்கு வந்து, பரிசீலனை செய்து, யோசனைகளையும் இந்த அரசாங்கத்திற்கு வழங்கி இருக்கிறார்கள். ஆழக் கிணறுகள் தோண்டி, அவற்றின் மூலமாகத் தண்ணீரை எடுத்து விவசாயம் செய்யலாம் என்ற யோசனையை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு செய்தோமானால், தஞ்சை ஜில்லாவில் விவசாயிகளுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பு அளிப்பது மட்டுமல்லாமல், விவசாயமும் தொடர்ச்சியாகவே நடக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும். கிணறு தோண்டுவதிலுங்கூட, 200 அடி, 250 அடி ஆழம் தோண்ட வேண்டியிருக்கிறது. அதற்கான சாதனங்கள் கிடையாது. அதற்குரிய சாதனங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யலாம். அல்லது, நமது அரசாங்கத்திற்குச் சொந்தமாகப் பவர் ட்ரில்கள் இருந்தாலும், அந்தப் பவர் ட்ரில்கள் மூலமாக ஆழக் கிணறுகள் தோண்டுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். பவர் ட்ரில்களைக் கொடுத்து கிணறுகளைச் சீக்கிரமாகத் தோண்டுவதற்குத் துரிதமான நடவடிக்கையை நமது அரசாங்கம் எடுக்குமானால், நமது நாட்டில் நிரந்தரமாக, எல்லாக் காலங்களிலும் தண்ணீர் எடுத்து உபயோகப்படுத்த முடியும்.

இன்றுள்ள உணவு நெருக்கடியைப் போக்குவதற்கு நமது தமிழ்நாட்டிற்கு மாத்திரம் ஏழு லட்சம் டன் உணவுக் கொள்முதல் செய்தால் போதும் என்று நேற்று முன்தினம் உணவு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஏழு லட்சம் டன் உணவுக் கொள்முதல் பண்ணக் கூடிய ஒரு பொறுப்பை ஏஜெண்டுகளிடம் ஒப்படைத்து, அவர்கள் மூலமாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஏஜெண்டுகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டாலும், 20 சத விகிதம் தான் கொள்முதல் செய்யப்படுகிறது. விவசாயிகள் உற்பத்தி செய்யக் கூடிய உணவுப் பண்டங்களினுடைய வியாபாரங்களையெல்லாம் தனியார்கள் செய்து கொண்டிருப்பதால், அவர்கள் தங்களுடைய ஆதாயத்தையே குறிக்கோளாகக் கொண்டு, குறைவான விலைக்கு விவசாயிகளிடத்திலிருந்து தானியங்களைக் கொள்முதல் செய்து, விவசாயிகளுக்குத் தேவையான காலங்களில் அதிக லாபம் வைத்து விற்று முதல் செய்து, கொள்ளை லாபம் அடையக்கூடிய நிலைமை நாட்டில் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும். அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றால், தனியார்களுடைய வர்த்தக வியாபாரத்தை நிறுத்தி, அரசாங்கமே தங்களுக்குத் தேவையான உணவுத் தானியங்களைக் கொள்முதல் செய்து ஸ்டாக் வைத்துக் கொள்ள வேண்டும். அந்த முறையைக் கையாண்டோமானால், அரிசி கொடுக்க முடியவில்லை என்ற பெரிய அளவிற்கு நெருக்கடி நாட்டில் ஏற்படாதிருக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, கொள்முதல் விஷயமாக மூன்று ஏக்கருக்கு உட்பட்டவர்களுக்கு விதி விலக்கு அளிப்பது நியாயமாக இருக்க முடியும். தஞ்சை மாவட்டத்திலே கூட, மூன்று ஏக்கர் விவசாயம் செய்ய வேண்டுமென்றால், 500 ரூபாய் செலவு செய்தால்தான் மூன்று ஏக்கர் விவசாயம் செய்து முடிக்க முடியும். அதில் வரக்கூடிய வருவாயையும் செலவையும் கணக்கிட்டால், மிகக் குறைவான வருவாய்தான் இருக்கும். செலவோ நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அந்த நிலையில், மூன்று ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு விதி விலக்கு அளித்து, மூன்று ஏக்கருக்கு அதிகமாக நிலம் வைத்திருக்கக்கூடியவர்களிடமிருந்து அதிகமான உணவுத் தானியங்களை அரசாங்கமே கொள்முதல் செய்ய வேண்டும். ஏஜெண்டுகள் மூலமாகக் கொள்முதல் செய்யவே கூடாது. ஏஜெண்டுகள்தான் இந்த அளவிற்கு நாட்டிலே உணவு நெருக்கடியை ஏற்படுத்துகிறார்கள். இருக்கக்கூடிய உணவுத் தானியங்களை மறைத்துவைத்து அவர்கள் அதிக லாபம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்கான ஒரு நிலையை அவர்கள் சிருஷ்டி செய்கிறார்கள் என்றுதான் சொல்ல முடியும். அதையும் அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

நகரங்களில் கொடுக்கப்பட்டு வரக்கூடிய அரிசி மிகவும் குறைவாக இருக்கிறது. குறைந்தபட்சம் 12 அவுன்சாவது நகர்ப்புறங்களிலே அரிசி கொடுத்தாக வேண்டும். கிராமங்களிலே கூட சில சமயங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்குத் தானியமாக ஊதியம் கொடுப்பது கிடையாது. ஊதியத்தைக் காசாகக் கொடுப்பார்கள். அவ்வாறு கொடுக்கக்கூடிய காசை வாங்கிக் கொண்டு கிராமங்களிலே இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் அரிசி வாங்குவதற்காக நகர்ப் புறங்களில் சென்று வாங்கி வர வேண்டும். நகர்ப் புறங்களில் சென்று அரிசி வாங்கி வரவேண்டுமென்றால், இவர்கள் போவதற்குள் அங்கே அரிசி விநியோகம் செய்யப்பட்டுவிடுகிறது. இவர்கள் போகும்போது, அரிசி இல்லாத காரணத்தால், அரிசி கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, தேவையான சமயங்களில் கிராமங்களில் குடும்பக் கார்டுகள் வழங்கப்பட வேண்டும். குடும்பக் கார்டுகள் வழங்குவதன் மூலமாகத்தான் தேவையானவர்களுக்கு அவ்வப்போது அரிசி கொடுக்க உதவியாக இருக்க முடியும். இம்மாதிரியான கஷ்டத்தையும் அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். சென்ற ஆண்டு கூட, கிராமப் புறங்களில் அரிசி கிடைக்காமல், எல்லாக் கிராமங்களுக்கும் பஞ்சாயத்து மூலமாகவும், கூட்டுறவு நாணயச் சங்கங்கள் மூலமாகவும் அரிசி வாங்கிக் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதே நிலைமை இந்த வருஷமும் ஏற்படும். ஏனென்றால், நம்முடைய தேவைக்கு அதிகமாக நாம் உற்பத்தி செய்யவில்லை. ஆகவே, இதையெல்லாம் கவனத்தில் கொண்டு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதன் மூலமாகத்தான் இன்றையதினம் உணவு விநியோகத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடியைப் போக்குவதற்கு முடியும்.





வியாபாரிகளை நம்பி, கொள்முதல் பண்ணுவதன் மூலமாக நாட்டிலே நெருக்கடி நிலை ஏற்படுகிறது. வியாபாரிகள் தங்களுடைய ஆதாயத்தையே குறிக்கோளாகக் கொண்டு இத்தகைய காரியங்களில் ஈடுபடுகிறார்கள். அரசாங்கமே எல்லா உணவு வர்த்தக வியாபாரத்தையும் மேற்கொள்ளுவது நியாயமாக இருக்க முடியும். அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

*** திரு. ந. தருமலிங்கம்:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1966-67-ம் ஆண்டுக்கான செலவு குறித்து இறுதித் துணை அறிக்கையின் மீது பேசுவதற்கான வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கடந்த சில நாட்களாக இங்கே நடைபெற்று வருகிற சம்பவத்தைப் பார்க்கிறபோது, ஒரு குறிப்பு எனக்கு நினைவிற்கு வருகிறது. "கொடுத்திருந்த உறுதிமொழிகளையெல்லாம் நீங்கள் காப்பாற்றுங்கள்" என்றெல்லாம் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் இங்கே பேசி வருகிறார்கள். ஆனால், வெளியிலே இருக்கிற, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள், "உறுதிமொழியைக் காப்பாற்றுகிறீர்கள்" என்று பேசி வருகிறார்கள். இப்படி உள்ளே ஒன்றும், வெளியே ஒன்றும் பேசக்கூடிய, எதிர்க்கட்சி என்கிற அந்தஸ்தைப் பெற்றிருக்கிற இவர்களிடமிருந்து இந்தத் தமிழ்நாட்டைக் காப்பாற்றவேண்டும் என்று எல்லாம் வல்ல ஆண்டவன் ஒருவன் இருந்தால் அவனைச் சபாநாயகர் மூலமாகக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, இந்த அவையிலே காட்சியளிக்கிற திருவள்ளுவர் உருவப்படத்தைச் சுட்டிக்காட்டி, திருக்குறளிலிருந்து சிலவற்றை நினைவுபடுத்தினார்கள். பயனுடைய சொற்களையே சொல்லவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், அவர்கள் எந்த அளவிற்குச் சொன்னார்களோ அந்த அளவிற்கு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் கேட்டுக்கொண்டதைப் போல, ஒத்துழைப்பு தரும் வகையில், பயனுள்ள ஆலோசனைகளைச் சொல்லும் வகையில் அவர்களுடைய சொற்கள் இல்லாமலிருப்பதை நாமெல்லோரும் உன்னிப்பாகக் கவனித்து கொண்டு வருகிறோம். புதிதாக உருவாகியிருக்கிற இந்தச் சர்க்கார் கடந்த இருபதாண்டுகளாக ஏற்பட்டுவிட்ட இழி நிலையிலிருந்து மாற்றி, தமிழ்நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு தேடித் தருவதற்காக அயராது பாடுபட்டு வருவதை அவர்கள் உணர்வார்கள். இருப்பினும், கடந்த காலத்தில் ஏற்பட்ட தவிர்க்க முடியாத சில தவறுகளின் காரணமாக, நாம் பல நஷ்டத்திற்கு ஆளாகியிருந்தோம். அதிலிருந்து விடுதலைப்பட வேண்டுமானால், மூழ மூச்சாக இந்த அரசாங்கத்தை ஆதரிப்பதன் மூலமாக நமக்கு நலன் தேடிக்கொள்ள முடியும் என்ற ஒரு குறிப்பை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ந. தருமலிங்கம்] [1967 மார்ச் 25

இந்த அவையில் முதல் பகுதியில், கடைசியோரத்தில் நான் இருக்கிறேன். அதற்குக் காரணம், என்னுடைய பெயரினுடைய தலையெழுத்து 'டி' என்பதனால் அந்த நிலை என்று நான் கருதுகின்றேன். அதைப் போலவே, என்னுடைய தொகுதியாகிய திருத்துறைப்பூண்டி தொகுதி கிழக் கடற்கரையோரமாக ஒரு மூலையில் ஒதுங்கிக் கிடக்கிறது. அதைப் போலத்தான் அதை யடுத்த வேதாரணியம் தொகுதியுமாகும். கடற்கரையோரத்தில் அது ஒதுங்கியிருக்கிற காரணத்தால், சர்க்கார் செய்யும் நல்ல காரியங்களெல்லாம், சர்க்கார் திட்டத்தின் மூலம் ஏற்படும் சில நல்ல முடிவுகளெல்லாம் எனது தொகுதிக்குப் பயனளிக்க முடிவதில்லை. கடற்கரையோரமாக இருக்கும் திருத்துறைப்பூண்டி தொகுதி இருப்பதால் மக்களுக்குப் பலன் இல்லை. ஆனால், தொகுதியிலே ஒரு சிலருக்குப் பலன் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, புதிதாக உருவாகியிருக்கிற இந்த சர்க்காரை, அந்தத் தொகுதிக்கு பல்வேறு திட்டங்களையும் நிறைவேற்றித் தருமாறு கனம் சபா நாயகர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், தொண்டியக்காடு என்ற ஒரு பகுதி உண்டு. அந்தத் தொண்டியக் காட்டுக்கு எந்தவிதமான போக்கு வரத்து வசதியும், மின்சார வசதியும் கிடையாது. தொண்டியக்காடு ஒரு சர்க்கார் செய்கின்ற காரியங்களில் நியாயமான அளவில் ஒரு பங்குகூட பெற முடியாத அளவுக்கு நீண்ட நாளாக ஒதுங்கியிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியினுடைய மக்களின் நல்வாழ்வுக்காக எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடந்த காலத்தில் பாசன வசதிக்காக அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருந்தும்கூட பல இடங்களில் அதைச் செம்மையாகச் செய்யவில்லையென்பதை நாம் நன்றாக அறிவோம். திருத்துறைப்பூண்டியைப் போன்று பல்வேறு இடங்களை எடுத்துக் கொண்டால், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் சாகுபடி செய்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தும், பாசன வசதி இல்லாத காரணத்தால் சாகுபடியின்றி தரிசாகக் கிடப்பதையெல்லாம் இந்த அமைச் சரவைக்குக் கனம் சபாநாயகர் மூலமாக கவனப்படுத்துகிறேன். நீண்ட நாட்களாகப் பிற்பட்டிருக்கிற அந்தப் பகுதிக்கு எந்தெந்த வகையில் காரியங்களைச் செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று சபாநாயகர் மூலமாக அமைச்சரவையைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருத்துறைப்பூண்டி தொகுதியில் இடையூர், அம்மனூர் போன்ற பகுதிகள் இருக்கின்றன. அங்கே தக்க வடிகால் வசதியில்லாத காரணத்தால் நடவுக் காலங்களிலும் அறுவடைக் காலங்களிலும் கிட்டத்தட்ட 6 ஆயிரம் ஏக்கர் நிலம் நீரிலே மூழ்கிக் கிடக்கின்றன. இந்தப் பரிதாப நிலையை அரசாங்கத்திற்கு நினைவூட்ட விரும்புகிறேன். உணவுப் பற்றாக்குறைபற்றிப் பேசுகின்ற இந்த நேரத்தில் சுமார் 7 ஆயிரம் ஏக்கர் நிலம் ஒரு குறிப்பிட்ட பகுதியில் தக்க வடிகால் திட்டத்தை [illegible]



1967 மார்ச் 25] [திரு. ந. தருமலிங்கம்]

கொடுக்காததால், இப்படி நீரிலே மூழ்கிக் கிடக்கின்ற நிலையில் இருப்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதற்கு வேண்டிய திட்டத்தையும் அமைச்சரவை போட்டாக வேண்டும். இதைப் போலவே நம்முடைய சர்க்காரைப் பொறுத்த வரையில், நல்ல காரியங்கள் செய்ய வேண்டுமென்று எதைஎதைச் சொன்னாலும், எதை எதைச் செய்தாலும் அவற்றிற்கு நாங்கள் மனப்பூர்வமாக ஒத்துழைப்புத் தருகிறோம். சர்க்கார் செய்யும் நல்ல காரியங்களுக்கு எதிர்க்கட்சிக்காரர்கள் அவையிலும், வெளியிலும் ஒத்துழைப்பைத் தேடிக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சிக்காரர்கள், அவரது தலைவர் குறிப்பிட்டபடி திருக்குறளை மனதில் வைத்துக்கொண்டு, அந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவோடு நான் முடித்துக்கொள்கிறேன்.

* திரு. வ. ஜார்ஜ்: மதிப்புமிகு அவைத் தலைவர் அவர்களே, முதற்படியாக, தேர்தல் கழிந்த பின்னர் நம் நாட்டிலே அரசியல் சிக்கல் ஏற்பட்டுவிடாதபடி, பிடிவாதமாக இராமல் தங்கள் கொள்கைகளைச் சூழ்நிலைக்குத் தக்கவாறு விட்டுக் கொடுத்து, நாட்டிலே ஒரு நிலையான அரசாங்கத்தை நிறுவியுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது இந்தத் துணை மானியக் கோரிக்கை, புயல் நிவாரணத்திற்காகவும், பொதுத் தேர்தல் செலவிற்காகவும், மற்றும் அரசாங்க அலுவலர்களுக்கு அகவிலைப்படி கூட்டிக் கொடுத்ததன் காரணமாகவும் ஏற்பட்டுள்ள செலவு குறித்து, கொண்டு வந்துள்ளதாக நமது தலைமை அமைச்சர் தம் உரையில் கூறியிருக்கிறார். அதிலே யாரும் குறை சொல்வதற்கு இல்லை. ஆனால் ஒரு சில விஷயங்களை மட்டும் எடுத்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். நமது முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டதற்கு, அவர் பதிலளித்தபோது, "விற்பனை வரி போன்று ஒரு காமதேனுவை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம்" என்று கூறினார்கள். ஒரு காமதேனுவைப் பார்த்து, அதற்குப் பின்னர் விவசாயிகளுக்கு வரி விலக்கு அளிப்பதுபற்றி முடிவு செய்வோம் என்ற முறையில் பதில் சொன்னார்கள். இதைக் கேட்ட மாத்திரத்தில் பொதுமக்கள் அனைவருமே அயர்ந்து இடிந்து போனார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் மானிபெஸ்டோவில் 49-க்கு மேற்பட்ட காரியங்களைச் செய்வதாகக் கூறிக்கொண்டு, மேலும் அதுபோல பல காரியங்களைச் செய்வோம் என்று கூறியிருக்கிறது. இவற்றையெல்லாம் காங்கிரஸ் ஆட்சியிலே செய்ய இயலாமல் இருப்பது பணக் குறைவினால் அல்லவென்று எடுத்துக்கூறி, அபரிமிதமாக மக்களது வாக்குகளைப் பெற்று வந்திருக்கிறார்கள். அந்தத் தலைவர்கள் இன்று பொதுமக்களைப் பார்த்து, நிலவரியை எடுப்பதற்கு ஒரு காமதேனுவைத் தேடிக்கொண்டிருக்கிறோம்

138203

என்று சொல்வதைக்கேட்டு, மக்கள் பெரிதும் ஏமாற்றமும் அதிர்ச்சியும் அடைந்திருக்கிறார்கள் என்று கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக, புகுமுக வகுப்புகளை இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் கொண்டுவர வேண்டும் என்கிறபோது, சுதந்திராக் கட்சித் தலைவர் தங்கள் பாணியிலேயே, 'எல்லோருக்கும் இலவசக் கல்வியை எதற்காக அளிக்க வேண்டும். பணக்காரர்களிடத்தில் ஃபீஸ் வாங்குவதில் தவறு இல்லை' என்று கூறினார்கள். இதைக் கேட்கும்போது எனக்குத் தோன்றியது என்னவென்றால், கல்லூரி படிப்பு படிக்கின்ற காளைப்பருவம்தான் ஒரு மனிதனின் 'கேரக்டர் ஃபாம்' ஆகக்கூடிய பருவம் எலோருக்கும் இலவசக் கல்வி என்ற நிலை ஏற்பட வேண்டும். பணக்காரர்கள் பணம் கொடுத்துப் படிக்கும்போது, 'இவன் பணக்காரன், இவன் ஏழை' போன்ற ஏற்றத்தாழ்வு உணர்ச்சிகள் மாணவர்களுடைய சமுதாயத்திலே ஏற்பட்டுவிடக் கூடாது. மாணவர்களுடைய நல்லுணர்ச்சியை அவர்கள் சமுதாயத்திலே சிருஷ்டிக்க வேண்டும். பணக்காரர்களிடத்திலே பணம் வசூலிப்பதனால் அதிலே பணம் லாபம் என்று நம்முடைய முதலமைச்சர் கருதினாலும், அதைப் புனராலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, நமது அரசாங்க நெல் கொள்முதல் கொள்கையை பற்றிச் சொல்வோமானால், நம் எல்லோருக்கும் ரேஷன் முறையில் உணவு விநியோகம் செய்தாக வேண்டும். எல்லா நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டும். விவசாயிகளைக் கஷ்டப்படுத்தக் கூடாது. பெரிய விவசாயிகளைக் கட்டுப்பாடு செய்தும், சிறிய விவசாயிகளை நாம் தட்டிக் கொடுத்தும் கொள்முதல் செய்ய வேண்டும் என்றும் கூறும் அதே நேரத்தில் கொள்முதல் செய்யச் செல்லும் அலுவலர்களின் பணி அந்த முறையில் அமையவில்லை. அதை இந்த அரசாங்கம் மேலும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கொள்முதல் செய்யும் நேரத்தில் எங்கள் பகுதிகளில், தமிழ்நாட்டில் எல்லோருமே கொஞ்சம் கொஞ்சம் சைகிளில் அரிசி எடுத்துச் செல்கிறார்கள், சிலர் தலைச் சுமையாக தங்கள் சொந்த அவசியத்திற்காக எடுத்துக் கொண்டு போகிறார்கள். இதைக் கள்ள மார்க்கெட்டில் வியாபாரம் செய்வதற்காக அவர்கள் எடுத்துக்கொண்டு போவதில்லை. இன்றையதினம் நம் சமுதாயத்தைப் பொறுத்தவரையில், ஒரு குடும்பத்திலே ஒருவரை விருந்துக்கு அனுப்புவதாக இருந்தால், கொஞ்சம் அரிசியைக் கொடுத்து அனுப்புகிறார்கள். இம்மாதிரி கொஞ்சம் அரிசியைக் கொடுத்து அனுப்புவது நம்முடைய நாட்டினர் பல காலமாகப் பின்பற்றி வரும் ஒரு பழக்கமாக இருந்து வருகிறது. இதில், கெடுபிடி என்ற நிலையில் கொள்முதல் நிர்வாகத்தினர் தலையிட்டு பல இடையூறுகளை விளைவிக்கிறார்கள். தங்கள் குடும்பத்திற்கு எடுத்துச் செல்லும் கொஞ்சம் அரிசியைக் கூடப் பிடுங்கிக் கொள்கிறார்கள் என்பதை நான் மன வருத்தத்





தோடு கூறிக் கொள்கிறேன். இந்தக் குறையை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும். மேலும் கலெக்டர்களிடமிருந்தோ, தாசில்தாரிடமிருந்தோ லைசென்ஸ் பெற்று, அரிசியை எடுத்துச் செல்வது என்பது ஏழை பாமர மக்களுக்குத் தெரியாது. இதைச் சுட்டிக்காட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தங்களுடைய தேர்தல் மானிபெஸ்டோவில், லைசென்ஸ் முறை ஒழிக்கப்பட வேண்டும், சமுதாயத்தினர் தங்களுடைய சொந்தத் தேவைக்கு என தலைச் சுமையாக எடுத்துச் செல்லும் உணவுப் பொருள்களை வழிப்பறி செய்யாமல் இருத்தல், லைசென்ஸ் கட்டுப்பாடுகள் வேண்டாம் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, கெடுபிடிகளை நிறுத்த வேண்டுமென்று நான் இந்த அமைச்சரவையை கேட்டுக்கொள்கிறேன்.

பின்னர், எனது மாவட்டம் கன்னியாகுமரி, கேரளத்திற்குப் பக்கத்தில் அமைந்திருக்கிறது. அதனால் அந்தப் பகுதி வழியாக கேரளத்திற்கு அரிசியைக் கடத்திக் கொண்டு போவதாகச் சொல்லி, அங்குள்ள மக்கள் மிகவும் துன்புறுத்தப்படுகிறார்கள். கரை வழியாக மட்டும் அரிசியைக் கடத்தவில்லை, கடற்கரை வழியாக, 'ஸ்டீம் போட்டில்' எடுத்துச் செல்லப்படுகிறது. அதையெல்லாம் விட்டுவிட்டு, தங்களுடைய சுயதேவைக்காக கொஞ்சம் அரிசியை எடுத்துச் செல்லுகின்ற மக்களைத் துரத்தித் துரத்திப் பிடித்து விரட்டுகிறார்கள் என்பதை இந்த அமைச்சரவைக்கு எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன். ஆகவே, சுயதேவைக்கு அரிசியை எடுத்துச் செல்லும் மக்களை நிர்ப்பந்தப்படுத்த வேண்டாமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு அவர்களுடைய நிர்ப்பந்தத்தைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பத்மநாபபுரம் நகரமானது பழைய திருவிதாங்கூர் ராஜ்யத்தின் தலைநகராக விளங்கிய பட்டினமாகும். அந்த நகரம் இன்று வீழ்ச்சியுற்ற நிலையில் காணப்படுகிறது. அந்த நகரம் தனது பழைய சிறப்பை இழந்துவிடாதிருக்க எந்தவிதமான 10.00 மு.ப.
முன்னேற்றமும் செய்யப்படவில்லை. அந்தப் பட்டினம் தனது சரித்திரப் புகழ் பெற்ற சிறப்பை இழந்துவிடாதிருக்க இந்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நகரில் ஒரு அக்ரிகல்சுரல் இன்கம்டாக்ஸ் ஆபீஸ் இருந்தது. அந்த அரசாங்க அலுவலகத்தைக் கூட கடந்த ½ ஆண்டுக்கு முன்பாக நாகர்கோயிலுக்கு மாற்றிவிட்டார்கள். மேலும் அந்த நகரில் ஒரு சப்-கோர்ட் இருந்தது. அதையும் நாகர்கோயிலுக்கு மாற்றிவிட்டார்கள். அதற்குக் காரணம் அந்த நகரில் அரசாங்க அதிகாரிகளுக்கு வசதிகள் இல்லை என்று கூறப்படுகிறது. குறிப்பாக, அந்த நகரில் ஓர் ஆஸ்பத்திரி இருக்கிறது. இருந்தும் சர்க்கார் ஆஸ்பத்திரி முதல் தரமாக இல்லை, அதன் காரணமாக அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு மருத்துவ சிகிச்சை பெற வசதி இல்லை என்று கூறப்படுகிறது. அதுபோல அந்தப் பகுதியில் கல்லூரி இல்லை, பத்து மைல்களுக்கு அப்பால் தான் இருக்கிறது.

[திரு. வ. ஜார்ஜ்] [1967 மார்ச் 25

அரசாங்க உத்தியோகஸ்தர்களின் குழந்தைகள் படிப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது—என்று இப்படிச் சில காரணங்களைச் சொல்லி அந்த நகரில் இருந்த சர்க்கார் அலுவலகங்களைக் கூட நாகர்கோயிலுக்கு மாற்றிவிட்டார்கள். மக்கள் ஆட்சியில் மக்களுடைய வசதிகள் தான் கவனிக்கப்படவேண்டுமே தவிர—சில சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய நலனுக்காக என்று இப்படிக் காரியங்களைச் செய்வது சரியல்ல. நியாயமும் அல்ல. மேலும் அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு தொழில் துறையில் யாதொருவிதமான முன்னேற்றமும் இல்லை. அங்கே தொழிற் சாலைகளே கிடையாது. இந்த நிலையில் அந்தப் பட்டினத்தைப் பல வகையிலும் புறக்கணிக்க முற்படுவது சரியாகாது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் ரீ-சர்வே நடந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக செட்டில்மெண்டு கேஸ்கள் நிறைய வர இருக்கின்றன. இக்கேஸ்களைப் பரிசீலனை செய்ய இப்போது இன்னும் ஒரு சப்-கோர்ட் தேவைப்படுகிறது என்று அறிகிறேன். அதையாவது மீண்டும் நாகர்கோயிலில் நிறுவாமல், அங்குள்ள மக்களின் வசதியைக் குறித்து தக்கலையில்—பத்மநாப புரத்தில் நிறுவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு கன்னியாகுமரி மாவட்டத்தில் அநேக பாடசாலைகள் ஓலைக் குடிசைகளிலேயே இன்றையதினம் நடைபெற்று வருகின்றன. மழை சமயத்தில் இந்தப் பள்ளிக்கூடங்களின் குடிசைகள் சேதம் அடைந்துவிடும். குறிப்பாக கொல்லங்கோடு, கருங்கல் ஆகிய இடங்களில் உள்ள பள்ளிக்கூடங்களுக்கு உறுதியான கட்டடங்கள் இல்லை. அந்த மாதிரியாக ஓலைக் குடிசைகளில் இருக்கும் பள்ளிக் கூடங்களுக்குக் கட்டிடம் கட்ட சாங்ஷன் செய்யப்பட்டது. ஆயினும் எமர்ஜன்சி காரணமாக அவை நிறுத்தி வைக்கப்பட்டு விட்டன. அதற்காக 3 லட்சத்திற்கு மேல் சாங்ஷன் செய்யப் பட்டும் அந்த வேலை நடைபெறவில்லை. இப்போது எமர்ஜன்சி நீக்கப்பட்டுவிட்டதால் ஓலைக் குடிசைகளில் இருக்கும் பள்ளிக் கூடங்களுக்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்று சிற்றூர், பட்டணங்கால் திட்டம் நிறைவேறி வருகிறது. ஒரு வருட காலத்திற்குள் முடிவு அடைய வேண்டிய நிலையில் இருக்கிறது. ஆயினும் இன்றைக்கு அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு நிலத்தை செப்பனிட்டுக்கொள்ள கடன் வசதி அளிக்கப்படவில்லை. தண்ணீர் விடப்படுகிறபோது தான் கடன்வசதி அளிக்கப்படும் என்றால்—தண்ணீர் விட்ட பிறகு நிலத்தைச் செப்பனிட ஆரம்பித்தால் சாகுபடி செய்ய கால தாமதம் ஆகிவிடும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்குள்ள நிலங்கள் சமபரப்பானவை அல்ல. மேடுபள்ளங்களாக இருக்கின்றன. ஆகவே, அந்த நிலத்தை இப்போதிருந்தே ஒழுங்கு செய்துகொள்ள நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படவேண்டும்.



1967 மார்ச் 25] [திரு. வ. ஜார்ஜ்]

ஆகவே, தண்ணீர்விடும் வரை காத்திராமல் அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு கடன் உதவி வழங்க முன்வரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு குடிநீர் திட்டத்திற்காக மாம்பழத்துறைத் திட்டம் இருக்கிறது. இதன் மூலம் குளச்சல் நகரசபை, பத்மநாபபுரம் நகரசபை, மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்களுக்குக் குடி தண்ணீர் வசதியை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக இந்தத் திட்டம் போடப்பட்டன. ஆனால் அவை அரசாங்கத்தின் ஆலோசனையிலேயே இதுவரை இருந்து வந்திருப்பதைத் தவிர செயல்படுத்துவதாகக் காணோம். வருகிற பட்ஜெட்டிலாவது அந்தத் திட்டங்களை செயல் படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது அரசாங்கத்தின் போக்கைப் பார்த்தால் நம்பிக்கையூட்டுவதாக இல்லை. நமக்கு அதிகமான அளவில் வருமானம் இருக்கிறது. வரி வரி என்று மேலும் வருமானத்தை அதிகப்படுத்திக்கொண்டும், எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங் கத்தையே எதிர்நோக்கிக்கொண்டும் இருந்து வருவது சரியான பாதை அல்ல என்பதை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். சுதந்திரம் கிடைத்ததற்குப் பின்னால் நம் நாட்டு மக்கள் எதற் கெடுத்தாலும் அரசாங்கத்தையே எதிர்நோக்கியிருக்கிறார்கள். மாநில அரசாங்கமோ எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத் தையே எதிர்நோக்கியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கமோ பல வெளிநாட்டு அரசாங்கங்களையே எதிர்நோக்கியிருக்கின்றன. இத் தகைய தன்னம்பிக்கையற்ற நிலையில் தான் நம் நாடு முழுவதுமே இயங்கிக்கொண்டிருக்கிறது. இந்தப் போக்கை—சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையில் வளர்ந்து வந்துள்ள நமது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆட்சியில் மாற்றியாக வேண்டும்; தன்னம்பிக்கையுடன், சுயநம்பிக்கையுடன் செயலாற்றாது—மத்திய அரசாங்கத்தையே நம்பி செயல்பட்டு, அவர்கள் மீது பழியைப் போட்டு தங்கள் பொறுப்பைத் தட்டிக் கழிக்கக் கூடாது. தங்களால் பொதுமக்களிடம் நம்பிக்கையூட்டும் நிலைமையில் செய லாற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கே. வி. சுப்பையா: பெருமதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் கொண்டு வந்திருக் கிற பட்ஜெட்டை நான் வரவேற்று சில குறிப்புகளையும் தெரிவிக்க விரும்புகிறேன். நான் புதுக்கோட்டை பகுதியைச் சார்ந்தவன். புதுக்கோட்டை பகுதி மானம் பார்த்த சீமை. அங்கே மழை பெய்தால் தான் மக்களுக்கு வாழ்வு உண்டு. அந்தப் புதுக்கோட்டை பகுதியையும், அறந்தாங்கி பகுதியையும், கிழக்கு இராமநாதபுரம் பகுதியையும் சேர்த்து பின் தங்கிய பகுதியாக டிக்ளேர் பண்ணி, அதற்கு வேண்டிய தனிச் சலுகைகளை நாங்கள் பெறுமாறு செய்ய வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாக இந்த அரசாங் கத்தை கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. வி. சுப்பையா] [1967 மார்ச் 25

அடுத்தபடியாக, எங்கள் புதுக்கோட்டை பகுதியில் உள்ள தண்ணீர்க் கஷ்டத்தைப் போக்குவதற்கு காவேரியில் இருந்து ஒரு கால்வாய் வெட்டும் திட்டம் கடந்த பல ஆண்டுகளாகப் பேசப்பட்டு வந்திருக்கிறது. அதையும் இந்த அமைச்சரவை நன்கு பரிசீலனை செய்து நிறைவேற்றித்தரவேண்டும் என்பதாகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புதுக்கோட்டையை தனி மாவட்டமாக ஆக்க வேண்டுமென்று காங்கிரஸ் ஆட்சியில் இருந்தே சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். பல காங்கிரஸ்காரர்களும் சொல்லி வந்திருக்கிறார்கள். அதையும் இந்த அரசாங்கம் கவனித்து அதைத் தனி மாவட்டமாகவே ஆக்கித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைவிட சிறிய பகுதியாகிய கன்னியாகுமரி, தர்மபுரி ஆகிய மாவட்டங்கள் தனியாக இயங்கி வருகிறபோது இதைத் தனி மாவட்டமாக ஆக்குவதில் ஒன்றும் சிரமம் இருக்காது. நல்ல முறையில் தனியாக இயங்கும். ஆகவே, புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது கிராமங்களை எடுத்துக்கொண்டால் ஒரு கிராமம் ஒரு ரெவின்யூ வட்டமாகவும் இருக்கிறது. இரண்டு மூன்று கிராமங்கள் சேர்ந்து ஒரு ரெவின்யூ வட்டமாகவும் இருக்கிறது. அப்படியே பஞ்சாயத்துகளை எடுத்துக்கொண்டால் 15 உறுப்பினர்களைக் கொண்ட பஞ்சாயத்தும் இருக்கிறது. ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட பஞ்சாயத்தும் இருக்கிறது. இதை எல்லாம் ஒழுங்குபடுத்தி ஒரே சீரான முறையில் இவற்றை அமைத்துத் தரும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் நிர்வாக வசதிகளுக்கு ஏற்றதாக இருக்கும். பஞ்சாயத்து என்று எடுத்துக் கொண்டால் 50 ஆயிரம் ரூபாய் கிஸ்தி வசூல் செய்யக்கூடிய பஞ்சாயத்து இருக்கிறது; 15,000 ரூபாய் வசூல் செய்யக்கூடிய பஞ்சாயத்தும் இருக்கிறது. இதையெல்லாம் ரி-ஆர்கனைஸ் பண்ணவேண்டும். அப்படிப் பார்க்கின்றபோது பெரிய வட்டங்களில் இருக்கின்ற கிராம உத்தியோகஸ்தர்களுக்கும், சிறிய வட்டங்களில் உள்ள கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் ஒரே மாதிரியான ஊதியம் கொடுக்கப்படுவதை மாற்றியமைக்க வேண்டும். அதே போல் பஞ்சப்படி அளவு மூன்று பஞ்சாயத்துக்கள் இருக்கின்ற வட்டத்தில் இருக்கின்ற கிராம உத்தியோகஸ்தர்களுக்கும், ஒரு பஞ்சாயத்து கொண்ட வட்டத்தில் இருக்கின்ற கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் ஒரே மாதிரியாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த மாதிரி மூன்று பஞ்சாயத்துக்கள் உள்ள வட்டங்களில் இருக்கின்றவர்களுக்கு பஞ்சப்படி வீதம் அதிகப்படுத்தப்பட்டு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உரம் சம்பந்தப்பட்டமட்டில் கிராமங்களில் விவசாயிகளுக்குக் கிடைக்காத நிலை இருக்கிறது. தமிழ் நாட்டில் இருக்கிற உரத்தின் அளவைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அதே சமயத்தில்



1967 மார்ச் 25] [திரு. கே. வி. சுப்பையா]

எவ்வளவு நஞ்சைகள் என்ற கணக்கையும் எடுத்துக்கொண்டு ஒரு ஏக்கர் நஞ்சைக்கு எவ்வளவு உரம் கொடுக்க வேண்டும் என்ற விகிதாசாரத்தில் பிரித்துக் கொடுக்க வேண்டும். தனிப்பட்ட மனிதர்கள் உரத்தை வியாபாரம் செய்யக்கூடாது என்ற உத்தரவையும் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை பகுதி வானம் பார்த்த பூமி. மழை பெய்தால் தான் விவசாயம் செய்ய முடியும். காஸ்ட் ஆப் கல்டிவேஷன் அதிகம். ஆகவே, சி.எம்.பி. கனுல் ஏரியாவில் கொள்முதல் செய்கின்ற அளவு எங்கள் பகுதியில் செய்யாமல் ஐந்து ஏக்கர் வரையில் கொள்முதலில் இருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டத்தின்கீழ் எமர்ஜன்சி பீரியட் என்ற வகையில் விவசாயத்திற்கு எல்லா விதமான முக்கியத்துவத்தையும் கொடுக்கவேண்டும். அந்த முறையில் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். அப்படிச் செய்யும்போது குளங்களை தூர் எடுக்கிறார்கள்; குளங்களை மட்டும் தூர் எடுக்காமல் சப்ளை சானல்களையும் தூர் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேசச் சந்தர்ப்பம் கொடுத்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

* DR. H. V. HANDE: Hon. Speaker, Sir, the Supplementary Demands now before the House exceed the previous estimates to the tune of Rs. 63 crores. These had already been envisaged before the new Ministry came into existence. In other words, what was previously planned, envisaged and accepted is being given legal authority now by bringing them before this House. What is practically *de facto* is going to be made *de jure* by way of sanction of this House. In this connection, I wish to say a few words especially in view of the fact that the principal increase in the Revenue Account is with regard to Police, General Administration, Agriculture, Public Works and Elections.

Sir, I had already expressed my views in this House with regard to certain matters. Now, I want to confine myself specifically to all the things that happened in Fort St. George between 15th February and till the time the new Ministry came into existence—those things are far from satisfactory. For instance, I had brought the missing of a number of files to the notice of this House a few days ago. Sir, it is a well-known fact that since 15th of February there has been a tumbling of a number of important leaders in the elections and that shows the public have bestowed their confidence on the D.M.K. Party and allied parties and not on the Congress Party. The result started pouring in from 22nd to 23rd February and it was obvious that several Congress Ministers in the old Ministry were not going to sit in this House. It was very, very clear on 24th February that that Ministry would not come back to power. Now, Sir, I have got a Government Order,

dated 24th February 1957 and I want the Hon. Minister for Industries to appreciate the point in this particular Government Order. I will read an extract of the Government Order, dated 24th February 1967.

'Establishment of the Director of Industries and Commerce reorganization and redistribution of work among Joint Directors—Proposals of the Director of Industries and Commerce—Orders passed. . . . .'

How can such a major order be passed by the Industries Ministry on 24th February 1967 when the Ministers concerned know clearly that they have lost the mandate of the public? When that was very clear, such a major order should not have been passed, and the matter should have been left to the future Ministry which enjoyed the confidence of the public in abundance.

Why was the announcement of the result of the election of the then Hon. Chief Minister Sri M. Bhaktavatsalam delayed ? I know how frantically we have been telephoning to No. 171 to find out what had happened. The announcement was delayed for two full days. In the meantime telegrams were issued to the Hon. Minister for Industries who was in Thanjavur and he was called to the Fort St. George. There was a rush and a number of Ministers of the then Ministry were brought here. They came to Fort St. George rushing on 23rd February and this order was passed on 24th February.

What happened to the files which were immediately despatched ? I shall tell the House the place where the files are secreted. Those files are secreted in the archives of the Home Ministry of the Union Government, Sri Chavan's Ministry. Files were transferred from the Fort St. George to the Union Ministry with speed. Why should such a thing have been done ? This budget relates to what had happened before and definitely does not relate to what is going to happen hereafter. So the particular subject that I am referring to is relevant to this budget. I take this opportunity to bring to the notice of this House that a proper scrutiny should be made and the Chief Minister Sri C. N. Annadurai should find out the truth. I have information—it may be irrelevant to refer to it in this House—that in some other States also files were secreted in a rush manner. I request the Department and the Ministry concerned to take very serious action to find out the files relating to not only the Hindi agitation but also to other subjects, that were transferred. The orders passed and the major decisions taken by the Cabinet between the 15th March 1967, the date of election, and the 6th April 1967, the date on which the new Ministry assumed office, must be re-examined in the present context and the Ministry must pass fresh orders, ifnecessary.

I wish to bring to the notice of the House only one important point. The present Ministry has good intentions. It wants to do some good to the public by increasing the efficiency of distribution



of food. That is its goal. I appreciate it. The Government have laid down a policy. But the method of implementation of it by the officials concerned is bringing innumerable hardships to untold number of persons. I think the Hon. Minister for Food has gone on tour in connection with this programme. I sympathise with him. But I will not be acting according to the dictates of my conscience if I do not bring to the notice of this House that I have received a number of complaints of harassment by means of telegrams and trunk telephone calls. I am not saying that all of them are well founded. I request the Ministry to go into such complaints. There has been a news item published in the 'Indian Express' under the heading "Police 'zoolum' in procurement raid". In it, statistics are given regarding the number of bags expected to be procured and the number of bags actually procured, and the quantity actually procured is one and a half times the expected procurement. Fortunately or unfortunately I have had to face British autocracy and also the Congress autocracy. I have had experience of police zoolum. I was a member of the Indian Students Congress in 1942 and I have had enough proof of Police zoolum. During the Congress regime also, I had to face the Police. I have to say that the Police will not obey the ministry. The moment a little laxity is given to the Police—I am not at all questioning the good intentions of the Ministry—they are likely to take advantage of this laxity and harass, manhandle and even physically beat the persons. I am not accusing any particular officer. The mind of the Police will work in a particular track, and some of my relatives are working in the Police Department. The moment extraordinary powers and discretionary powers are given to the Police, they are likely to act in a manner which the public will resent very much. I am very much concerned with the future of this ministry and my leader is very much concerned with the future of this ministry. I request the Chief Minister not to mistake me. I am not going into the policy at all. I want an assurance that action will be taken immediately to avoid undue harassment.

My friend talks of the Swatantra Party. I can tell the hon. Member that I have been considered as one of the experts in the principles of the Party. We are not for capitalists, we are not for blackmarketeers, we are not for moneylenders. We are only interested in increased production. We are for any policy that will bring about increased production. We are not against socialism or social justice. But we are against socialism as practised by the previous Congress Ministry which amounted to State capitalism, protected capitalism. We are for a competitive capitalism. Let not Members talk about the principles of the Swatantra Party unless they know what those principles are. The moment there is more production, capitalists will suffer. Therefore a number of capitalists have supported the Congress Party and not the Swatantra Party. I shall not allow any criticism or allegation against the Swatantra Party to go unanswered. We are for the type of capitalism that prevails in Japan and West Germany. We are not for

[Dr. H.V. Hande] [25th March 1967

protected capitalists. I want to make this clear so that such misguided criticism will not be advanced against our party in future. Thank you, Sir.

THE HON. THIRU. C. N. ANNADURAI : With your permission, Sir, I wish to offer an explanation. The hon. Member said that his criticisms were not against the Ministry. I am grateful for that. But if he is so very favourably disposed towards the Ministry, he could have brought individual cases of harassment to my notice instead of making a policy-making speech here.

* **திரு. என். வரதராஜன் :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, பொதுவாக நாம் சென்ற கால வரவு செலவைப் பரிசீலிக்கிறோம் என்று சொல்லும்போது சென்ற காலக் கொள்கைகளையும் நாம் உன்னிப்பாக பரிசீலித்து கவலையோடு கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். பொதுவாக நீர்ப்பாசனம் என்று சொன்னால் லேவாதேவிக்காரன் வட்டிக் கணக்குப் பார்ப்பது போல்தான் சென்ற கால சர்க்கார் பார்த்திருக்கிறது என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்று நீர்ப்பாசனம் செய்வதன் மூலம் அணை அல்லது குளமராமத்து செய்வதன் மூலம் அதிகமாக உணவு உற்பத்தியைப் பெருக்க முடியுமா என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்வதைவிட இந்தப் பணத்திற்கு வட்டி கட்டுமா என்று பார்க்கிற அந்தக் கொள்கையை படிப்படியாக கைவிடவேண்டும். கடந்த பத்து பதினைந்து ஆண்டுகளாக மதுரை மாவட்டம் வேடசெந்தூர் தொகுதியில் கொடவனாறு திட்டம் பற்றி மராமத்து அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அது நீண்ட நாட்களாக கொள்கை அளவில் நின்று கொண்டிருக்கிறது. திட்டம் தீட்டப்பட்டு நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. 10,000-க்கு மேற்பட்ட ஏக்கர் உணவு உற்பத்திக்கு உதவி செய்யும் என்று என்ஜினியர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். அதோடு குளமராமத்துக்கள் போன்றவைகளையும் உடனடியாக கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். கொள்முதல் சம்பந்தமாகவும், விநியோகம் சம்பந்தமாகவும் ஏற்கனவே நம் உணவு அமைச்சர் அவர்கள் தம்முடைய அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள் இந்த மன்றத்தில். அதில்கூட சிலவற்றை மாற்றவேண்டியிருக்கிறது. நம் சமூகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளின் காரணமாக சர்க்கார் அதிகாரிகள் நம் உத்தரவுகளை எப்படி அமல் நடத்துகிறார்கள் என்பது தெரியும். அவர்கள் பெரும் நிலச்சுவாந்தர்களிடத்தில் கொள்முதல் செய்வதற்கு அச்சப்படுவார்கள், பயப்படுவார்கள். ஆகையால் நாம் உறுதியாக ஒரு கொள்கையை அமல்படுத்தியாகவேண்டும். குறைந்தபட்சம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, ஏழை எளிய விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் முறையில் மூன்று ஏக்கரா அல்லது அதற்குக் குறைவாக என்பதுபற்றி உறுதியாகச் சொல்லவேண்டும். ஏற்கனவே அறிவித்த ஒரு ஏக்கர் போதுமானதல்ல, சரியானதல்ல என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அதிகபட்சமாக 20 சத விகிதம் நெல்தான் கொள்முதல்



1967 மார்ச் 25] [திரு. என். வரதராஜன்]

செய்வது என்று சொன்னால் பாக்கியுள்ள நெல்லை எவ்வாறு விநியோகத்திற்கு அனுமதிக்கிறோம் என்ற பிரச்னை வருகிறது. எந்த சாரார் எதைச் சொல்கிறார்கள் என்பதல்ல பிரச்னை. பத்திரிகைச் செய்திகளைப் பார்த்தால் திருச்சியிலுள்ள பெரும் மிராசுதார்கள் கூப்பாடு போட ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களைப் பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. 3½ கோடி தமிழ் மக்களும் நம் பின்னால் நிச்சயமாக நிற்பார்கள். இன்று கால் படி அல்லது அரைப்படி என்பதல்ல பிரச்னை. உணவு கிடைக்கவில்லை, பட்டினி கிடக்கவேண்டும் என்று அமைச்சரவை கேட்டுக்கொண்டால் அதற்கு மக்கள் தயார். தமிழக மண்ணில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்கள் மக்களுக்கு நிச்சயமாக கிடைக்கும். அதற்கு அமைச்சரவை திட்டமிட்டிருக்கிறது என்று சொன்னால் அப்போது இருப்பார்கள். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அரசு தீட்ட முன்வரவேண்டும். நிர்ப்பந்தப்படுத்துகிற முறையைக் கைவிடுவதற்கும், பெரிய மனிதர்கள் என்று சொல்லி லட்சக்கணக்கான மூட்டைகளை மறைத்து வைத்திருப்பவர்களிடம் இருந்து அவற்றை எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைக் கைக்கொள்ள வேண்டும். கிராமப்புறங்களிலுள்ள ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் கூட இன்று ஆண்டு ஒன்றுக்கு ஒன்பது மாதங்களுக்கு தானியங்களை மார்க்கெட்டில் வாங்கி சாப்பிடும்படியான நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் நியாயவிலைக் கடைகள் அல்லது குடும்பக் கார்ட் என்று ஒரு முறையை ஏற்படுத்தி அவர்களுக்கும் உணவு தான்யங்கள் கிடைப்பதற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட உணவுக் கொள்கையை அரசு மேற்கொள்ளவேண்டும்.

அதேபோன்று குடிநீர் பிரச்சினை கிராமப் புறங்களில் சக்கிலியர், பள்ளர், பறையர் என்ற பகுதியினருக்கு ஹரிஜனங்கள் என பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. அதுதான் இருபது வருடங்களில் அவர்களுக்குக் கிடைத்திருக்கும் வெகுமதி. இன்று சாதாரண குடிமகன் குடிநீர் கிடைக்காமல் கஷ்டப்படுகிறான். இன்று பஞ்சாயத்து யூனியன் என்ற பெரும் பூதம் அதற்கு குறுக்கே நிற்கிறது. இந்த ஹரிஜனங்களுக்கு ஏதாவது செய்ய முடியுமா என்று பரிசீலித்து அதை முதலில் கொண்டு வரவேண்டும்.

அதேபோல் இன்றையதினம் வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டில் பெருகி மக்கள் வறுமையால் வாடிக்கொண்டிருக்கிறார்கள். ரெயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்ட் போன்ற இடங்களில் அவர்கள் படுத்துக் கிடக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்யமுடியவில்லை என்றாலும், போலீஸார் முக்காடு கேஸ், சந்தேகக் கேஸ் என்று கேஸ் எடுத்து ஆயிரக்கணக்கானவர்களை சிறையில் தள்ளும் கொடுமை இருக்கிறது. சென்ற காலத்தில் அமலிலிருந்த கொள்கையை இன்று கைவிடவேண்டும். போலீஸார் சந்தேக கேஸ், முக்காடு கேஸ் என்று போடுவதைத் தடுக்கவேண்டும். அதேபோல் சர்க்கார் சிப்பந்திகள், ஸ்தல

[திரு. என். வரதராஜன்] [1967 மார்ச் 25

ஸ்தாபன சிப்பந்திகள், பஞ்சாயத்து யூனியன் சிப்பந்திகள் என்று மூன்று பிரிவுகள்; ஆசிரியர்களிடையே சர்க்கார் பள்ளி ஆசிரியர், தனியார் துறை பள்ளி ஆசிரியர் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர், நகரசபை ஆசிரியர் என்று பல்வேறு பிரிவுகள். போலீஸாரிடம் போலீஸார், தீ அணைக்கும் படை, ஜெயில் வார்டன்கள் என்று பல்வேறு பிரிவுகள். இவர்களிடையே ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன, சம்பள விகிதத்தில்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** இப்போது மணி 10-30. 10-30 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தை நடத்த வேண்டியிருப்பதால், இந்தப் பேரவையின் விதிகளின் 6-வது விதிக்கிணங்க
முற்பகல் 10-30 திரு. அரங்கண்ணல் அவர்களை சேர்மனாக நியமித்து, நான் திரும்ப வருகிற வரையில் அவர் இந்த அவைக்குத் தலைமை தாங்குவார் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது மதிப்பிற்குரிய உறுப்பினர் வரதராஜன் தொடர்ந்து உரையாற்றுவார்.

(திரு. இராம. அரங்கண்ணல் தலைமை)

**திரு. என். வரதராஜன்:** ஆகவே, ஆசிரியர்கள் பகுதியில் இப்படிப்பட்ட பிரிவுகள் இருப்பதை மாற்றி, அனைவருக்கும் ஒரே மாதிரியான சம்பளம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். இன்றைக்குத் தனியார் துறையில் மானேஜ்மெண்ட் ஸ்கூல்களில் இருக்கும் ஆசிரியர்களுக்குச் சரியாகச் சம்பளம் கிடைப்பதில்லை. சம்பளம் 100 ரூபாய் என்று சொன்னால் 70 ரூபாய், 80 ரூபாய் தான் அவர்களுக்குக் கிடைக்கும் நிலை இருக்கிறது. அவர்கள் தங்கள் சம்பளத்தை சர்க்கார் கஜானாவிலிருந்து பெறவோ, அல்லது நேராக மணியார்டர் மூலமாகப் பெறவோ ஏற்பாடுகள் செய்யப்படுமானால் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நகரப் புறத்தில் இருக்கும் நகர சுத்தித் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால், அவர்களை டாக்டர்கள் என்றே சொல்லலாம். இன்றைக்கு நகரங்களிலே அசுத்தமான இடத்தில் இருந்துகொண்டு, அழுக்குப் படிந்தவனை இருப்பவன் சுத்தம் செய்யும்படியான தொழிலைச் செய்துகொண்டு இருக்கிறான். சென்ற காலத்தில் இந்த ஏழை மக்களின் வாழ்வைப் பற்றிப் பரிசீலிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு அது இன்று வரையில் மண்வெட்டியாக இருக்கிறது. அந்தக் கமிட்டியைப் புதுப்பிக்க முடியுமானால் புதுப்பிக்கவேண்டும். இல்லையென்றால் புதிதாக ஒரு கமிட்டி போட்டு நகர சுத்தித் தொழிலாளர்கள் பிரச்னையைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய சர்க்காருடன் உறவு பற்றிய பிரச்னைகளை உரையில் கொண்டு வந்திருக்கிறோம். உரத்திற்கு டில்லியை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. உரம் டில்லியிருந்து வர முடியாது என்று எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். ஏனென்றால், அமெரிக்காவுக்கு எத்தனை சலாம் போடவேண்டுமோ போட்டாகி விட்டது. அமெரிக்கா சர்க்கார் உரத் தொழிற்சாலையை ஏற்படுத்தத் தயாராக



1967 மார்ச் 25] [திரு. என். வரதராஜன்]

இல்லை. அன்னியச் செலாவணி மத்திய சர்க்கார் கையில் குறைந்து இருக்கிறது. மக்களுக்கு வேண்டிய அளவுக்கு உரம் அளிக்க முடியாத நிலையில் இருக்கிறோம். இன்றைக்குச் சாதாரணமாகக் கிடைக்கும் உரத்தை கோவாப்பரேட்டிவ்ஸ் மூலமாக நியாயமாகக் கொடுக்கவேண்டும் என்று சொன்னால், எத்தனை உத்தரவுகள் போட்டாலும் இன்றைக்கு இருக்கும் அமைப்பை வைத்துக் கொண்டு செயல்படுத்த முடியாது. அப்படிப்பட்ட பிரச்சினைகளில் பொது ஜனக் கமிட்டிகள் இருந்தால் நலமாக இருக்கும். அந்தந்த வட்டாரத்தில் இருக்கிற, வளர்ச்சி அடைந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லோரையும் கொண்ட பொது ஜனக் கமிட்டி அமைத்து அவர்கள் வினியோகம் செய்யக் கூடிய அதிகாரிகளோடு உறவு வைத்துக்கொண்டு வினியோகிக்கும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இல்லையென்றால் இந்த சிவப்பு நாடா முறை தொடர்ச்சியாக நீடிக்கும். இதைக் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, எனக்கு இன்றும் நேற்றும் வந்திருக்கிற கடிதங்களை இங்கே நான் படிக்க விரும்பவில்லை. சம்பவம் என்னவென்றால், ஒரு மூட்டை, அரை மூட்டை நெல்லைக்கொண்டு செல்லக் கூடியவர்களை நிர்ப்பந்தப்படுத்தி அரிசி மில்லுக்கு எடுத்துச் செல்லும்போதே பிடித்துக் கொண்டு போகிறார்கள் என்று புகார்கள் வருகின்றன. நமது அமைச்சரவையின் கொள்கை இது அல்ல என்பது தெரியும். அமல் நடத்தும் முறையில் இப்படி அமல் நடத்துகிறார்கள். இதைக் கவனிக்கவேண்டும்.

அதே மாதிரிதான் அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் பற்றியும். முன்பு அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும் போது தொகுதி எம். எல். ஏ.-க்களைக் கூட கணக்கில் எடுத்துக் கொள்ளமாட்டார்கள். தாமாக வருவார்கள். தாமாகப் போவார்கள். நியாயமான சம்பவத்தில் அமைச்சர்கள் கலந்து கொள்வதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் எந்த சம்பவமாக இருந்தாலும், அமைச்சர்கள் கலந்துகொள்ளவேண்டிய அவசியம் இருந்தாலும் இல்லையென்றாலும், அப்படிப்பட்ட சம்பவங்களில் கலந்துகொண்டார்கள். இதை நாம் ஒரு படிப்பினையாகக் கொள்ளவேண்டும். அந்த முறையில் அவர்கள் திறப்பு விழாக்களுக்குச் சென்று இன்று மூடு விழாவில் இருக்கிறார்கள். இது மிகவும் முக்கியமானது. அமைச்சர்கள் செல்ல வேண்டிய விழாக்களுக்குச் செல்லவேண்டும். கவனிக்க வேண்டியவைகளைக் கவனிக்கவேண்டும். அமைச்சர்கள் எப்போதும் சென்னையில் இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. அப்படிப்பட்ட விழாக்களில் பங்கெடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஒன்றை மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நம் திருப்திக்காக மது விலக்குக் கொள்கையைச் சொல்லிக்கொண்டு இருக்கலாமா? அல்லது அதைக் கைவிடு

வதா என்றால், இன்று மது விலக்குக்கொள்கை வெற்றி அடைந்து விட்டது என்று சொல்லவேண்டுமென்றால் என்ன எதிர்பார்க்கிறோம்? மனிதன் குடிக்காமல் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அப்படி நிலைமை இருக்கிறதா? இல்லை. ஊருக்கு 10 கள்ளுக் கடைகள் இருக்கின்றன. அரிஷ்டம் என்ற பெயரால் எல்லா இடங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. எல்லா இடங்களிலும் சாராயம் காய்ச்சப்பட்டு வருகிறது. பல்லாயிரக் கணக்கான ஏழை மக்கள் மது விலக்குத் திட்டத்தின் பெயரால் சிறையில் இருக்கிறார்கள். இதற்காக பல லட்சக்கணக்கான ரூபாய் வீண் விரயம் செய்யப்படுகிறது. மறு பக்கத்தில் பணக்காரர்கள் தங்களுக்குச் சாதகமாக வேண்டிய பர்மிட்டுகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அதோடு அரசுக்குப் பல கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. நேற்றைய தினம் ஈவட்டியில் நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் பத்திரிகை நிருபர்களுக்குக் கொடுத்திருக்கும் பேட்டியில் மது விலக்கு பற்றி நல்ல முறையில் பதிலளித்திருக்கிறார்கள் என்று பார்த்தேன். நிதானமான அப்ஜெக்ட்டிவ் இருக்கிறது என்பதைப் பார்த்தேன். அப்படிப்பட்ட நிலையில் இதை மீண்டும் மறு பரிசீலனை செய்யவேண்டியது அவசியம். நமது மனத் திருப்திக்காக ஒரு கொள்கை வைத்துக்கொள்ளக்கூடாது. அகத்தில் என்ன இருக்கிறது என்பது அல்லாமல் புறத்தில் என்ன இருக்கிறது என்ற முறையில் பார்த்து அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று நமது மாநிலத்தில் தோல் பதனிடும் தொழில் முக்கியமான தொழில். இன்றைய தினம் அந்தத் தொழிலினால் அன்னிய நாட்டுச் செலாவணி சம்பாதிக்கப்படுகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இன்றைக்கு தோல் பொருள்கள் உற்பத்தி செய்வதில் பலபேர்களுக்கு, பல தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பையும் வருமானத்தையும் கொடுக்கும். தோல் பொருள் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லி, முன்னால் இருந்த மந்திரி சபையில் அதை ஏற்படுத்தாமல் விட்டுவைத்திருக்கிறார்கள். அதையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

ஹரிஜனங்கள் என்று சொல்லும்போது, நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கல்வித் துறை மானியக் கோரிக்கையில் பேசும்போது எத்தனை முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்று பார்த்தோம். ஹரிஜனங்கள் பிரச்னை முக்கியமான பிரச்னை. அவர்கள் சாக்கடைக்குப் பக்கத்தில்கூட வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிற குடிசைகளைப் பிரிக்கும் முறையில் எல்லா நகரங்களிலும் கமிஷனர்கள் உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்று அறிகிறேன். வேறு ஒன்றும் செய்யாவிட்டாலும் அந்தக் குடிசைகளைப் பிரிக்கவேண்டாம் என்று சொல்லிவிட்டு, அவர்களுக்கு அவர்களுடைய குடிசைகள் [illegible]



கூடிய இடங்களை ஜாரி செய்வதா அல்லது அவர்களை வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்துவதா என்பதை மறு பரிசீலனை செய்யலாம் என்று கேட்டுக்கொள்ளப் பிரியப்படுகிறேன்.

சர்க்கார் சிப்பந்திகள் சம்பந்தமாக நம் கொள்கையை ஏற்கெனவே அமல் நடத்தியிருக்கிறோம், மீண்டும் அமல் நடத்துவோம் என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் இன்று ஏற்பட்டிருக்கிற சிக்கலான பிரச்னைகளில் கூடுமான வரையில் அவர்களுக்கு உதவியாகப் பணம் ஒதுக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்தச் சந்தர்ப்பம் அளித்த மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். பன்னீர்செல்வம்: பெருமதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே . . .

திரு. ந. வீராசாமி: தற்காலிகத் தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் பேசுகிற நேரத்தில் அரசாங்கத்தால் . . .

மதிப்பிற்குரிய தலைவர் (திரு. இராம. அரங்கண்ணல்): மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம் உரையாற்றுவார்.

திரு. எம். பன்னீர்செல்வம்: பெருமதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில், ஆம்பூர் தொகுதியில் குடிதண்ணீர் பிரச்னைக்காக, ஆறு ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட சர்க்கார் திட்டத்தில் ரூ. 32,98,000 சேர்க்கப்பட்டிருந்தது. அந்தத் திட்டம் இன்றைய வரையில் செயல்படாமல் இருக்கிறது. ஆம்பூர் நகரத்திற்கு முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் வந்தபோது வரவேற்புப் பத்திரத்தில் இதைப் பற்றித் தெரியப்படுத்தியிருக்கிறோம். அகில இந்திய காங்கிரஸ் தலைவர் காமராஜ் அவர்கள் வந்தபோது அவர்களுக்கு அளித்த வரவேற்புப் பத்திரத்தில் தெரிவித்திருக்கிறோம். அதோடு தேர்தல் நடப்பதற்கு முன்பு முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் வந்தபோதுகூட இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். ஆம்பூர் நகர சபையை திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றியதாலோ என்னவோ இந்தத் திட்டம் செயல்படுத்தப் படவில்லை. 40,000 ஜனத்தொகை கொண்டு, ஏழைத் தொழிலாளர்களும், தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களும், பீடித் தொழிலாளர்களும், அங்கே வாசம் செய்வதைப் பார்க்கும்போது, அவர்களெல்லாம் குடி தண்ணீர் பிரச்னையினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆம்பூர், பேர்ணாம்பட்டு தொகுதிகளைச் சேர்க்கும் முறையில் ஒரு ஓவர்பிரிட்ஜ் கட்டவேண்டுமென்று தேர்தல் நடக்கும்போது அங்கு வந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்கள் பொது மேடையில் பேசினார்கள். அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்

டிருக்கிற காரணத்தினால், ஆம்பூர் தொகுதியைச் சேர்ந்தவர்கள் பேர்ணாம்பட்டு செல்ல வேண்டியிருப்பதாலும் பேர்ணாம்பட்டு தொகுதி மக்கள் ஆம்பூர் செல்லவேண்டியிருப்பதாலும், அகரம் பக்கத்தில் இருக்கிற ஆற்றில் ஒரு பாலம் கட்டவேண்டுமென்பதைச் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, அரசம்பட்டு பெரும்பாலும் ஏழைகள் வாழும் பகுதி. அந்த மலைப் பகுதியில் ஒரு அணை கட்டவேண்டுமென்பதைச் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு சார்பாக வினியோகம் செய்யப்படுகிற உரங்கள் விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கிடைக்காமல், பெரிய பெரிய மில் ஓனர்கள், மிட்டா மிராசுகளுக்குத்தான் கிடைக்கிறது. கூட்டுறவு முறையில் ஏழை விவசாயிகளுக்கு கிடைக்க அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இப்பொழுது ரூ. 32,98,000 ஒதுக்கியும் செயல்படாததற்குக் காரணம் என்ன என்பதை இந்தச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன். ஆம்பூர் நகராட்சியில் ஒரு மெம்பர் என்ற தோரணையில் கூறுகிறேன். அங்கு இன்னும் குடும்பக் கார்டு திட்டம் அமுல்படுத்தப்படவில்லை. 20,000 கார்டுகள் அச்சடித்து வைக்கப்பட்ட போதிலும், இன்றுவரையில் கொடுக்கப்படாத காரணம் தெரியவில்லை. எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்குத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, விடைபெறுகிறேன்.

* **திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார்**: அவைத் தலைவர் அவர்களே, முதற்கண் இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது நடக்கும் விவாதத்தில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நான் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு, ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த நாட்டிலுள்ள முக்கியமான பிரச்னை உணவுப் பிரச்னை. ஆளும் கட்சியைப் போலவேதான் மற்ற எல்லா மக்களும் உணவுத் துறையிலே முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். தஞ்சை மாவட்டம் நெற்களஞ்சியம் என்று கூறப்படுகிறது. அங்கு இருக்கும் சில பிரச்னைகளை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தஞ்சை மாவட்டம் இரண்டுவித நிலங்களைக் கொண்டது. வறண்ட பூமியாகிய தெற்கு பகுதி, அதிகத் தண்ணீரினால் தொந்தரவு ஏற்படுகிற வடக்குப் பகுதி ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டது. காவேரி பழைய டெல்டாவில் வரக்கூடிய வடக்குப் பகுதியிலே வடிகால் வசதிக்கு சோழர் காலத்தில் எந்த முறை கையாளப்பட்டதோ அந்த முறைதான் இப்பொழுதும் நீடித்து வருகிறது. அதற்காக உலக பாங்கு கூட ஏதோ தொகை ஒதுக்கியிருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அவர்கள் கொடுக்கிற தொகையை நல்ல முறையில் செலவழித்து வடிகால் பிரச்னையைத் தீர்க்கவேண்டும். அத்துடன் தெற்குப்



பகுதியிலே காவேரி மேட்டூர் பிராஜெக்ட்டின் கீழ்வரும் சில பகுதிகளிலே சில இடங்களில் கடைமடை வரையில், அதாவது டெய் எண்டு வரையில் நல்ல முறையிலே தண்ணீர் போவது இல்லை. ஆனால், அந்த மக்கள் அதற்காக தீர்வை கட்டிக்கொண்டிருக்கிறார்கள். நல்ல முறையில் அவர்களுக்கு எப்பொழுதும் கடைமடை வரையில் தண்ணீர் பாயும் என்ற அளவுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடிமராமத்து. இப்பொழுது குடிமராமத்து பஞ்சாயத்துக்கள் மூலமாகச் செய்வதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் 1961-ம் வருஷம் குடிமராமத்துத் திட்டத்தை ஒரு முன்னோடித் திட்டமாக எடுத்து நல்லமுறையில் செயல்படும் என்று எதிர்பார்த்தோம். அந்த மாதிரியான திட்டமானது இப்பொழுது நாளடைவிலே சில சந்தர்ப்பங்களினால் வெற்றிபெறாமல் இருக்கிறது. பஞ்சாயத்து நிர்வாகத்தை எடுத்து நடத்தும்பொழுது, நிர்வாகம் நல்ல முறையில் நடைபெற்றாலும், அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற ஊராட்சி மன்றமானது, அந்த மன்றத்திலுள்ள அங்கத்தினர்கள், தலைவர் ஆகியோர் மற்றவர்கள் குறை கூறுவார்களே என்ற காரணத்தினால் அதை நல்ல முறையிலே எடுத்துச் செய்வதற்கு தயங்குகிறார்கள். பின்பு அதற்காக ஒரு கமிட்டி போட்டு ஏற்பாடு செய்தோம். அந்தக் கமிட்டியாரும் ஊரில் கெட்ட பெயர் வாங்கக்கூடாது என்பதற்காக அந்தப் பொறுப்பை ஏற்று நடத்த தயங்கினார்கள். 1858-ம் ஆண்டு கட்டாய வேலை திட்ட சட்டத்தின் கீழே (கம்பல்சரி லேபர் ஆக்ட்) குடிமராமத்து நல்ல முறையிலே செய்வதற்கு வழிவகை செய்வது மிகவும் அவசியம்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே ஒரே ஒரு குறை. உணவு உற்பத்தி அதிகமாக பண்ணக்கூடிய பகுதிகளிலே நெல் அதிகம் உற்பத்தி செய்யக்கூடிய பகுதியானது காவேரியினுடைய பழைய டெல்டா பிரதேசம். அந்த இடங்களிலிருந்து உற்பத்தி செய்த பொருள்களை சந்தைகளுக்கு எடுத்துச் செல்லவேண்டுமென்றால், தகுதியான சாலைகள் இல்லை என்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். இரண்டு மைல்களுக்கு நான்கு ஆறுகள், ஒரு மைலுக்கு 10 வாய்க்கால்கள் இம்மாதிரி இருப்பதின் காரணமாக சாலைகள் அமைப்பது என்றால் மிகவும் சிரமம் இருக்கிறது. குறுகிய காலப் பயிராகிய குறுவை நெல்லை சந்தைகளுக்கு உடனடியாக எடுத்துச் செல்லவேண்டுமென்றால், நல்ல சாலை வசதிகள் இல்லை. ஆகவே, பாலங்கள் கட்டவேண்டிய இடத்தில் பாலங்கள் கட்டி அல்லது ஆற்றங்கரைகள் மீது சாலைகள் அமைப்பதற்கு வேண்டிய வசதி செய்து கொடுத்தால்தான், உற்பத்தி செய்த பொருள்களை உடனடியாக சந்தைகளுக்கு எடுத்துச்செல்வதற்கு நல்ல வாய்ப்பு இருக்கும், விவசாயிகளுக்கு ஒரு உற்சாகமும் ஏற்படும்.

[திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார்] [1967 மார்ச் 25

அடுத்தபடியாக ஆறுகள் மேடிட்டுப் போயிருக்கிற காரணத்தினால், ஆறுகளில் தூர் எடுப்பதற்கு ஒரு மாஸ்டர் பிளான் தயாரித்து அமுல் படுத்துவது மிகவும் அவசியமாகும்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மின்சார பம்பு செட்டுகள் இருக்கின்றன. அதற்கான கட்டணத்தைக் குறைக்க வேண்டும். அங்கே ஒரு குதிரை வேகத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 60 குறைந்தபட்சமாக நிர்ணயித்திருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில் ஸ்டேட் எலக்டிரிசிடி போர்டு ஒரு ஹார்ஸ் பவருக்கு ரூ. 15 கட்டணம் நிர்ணயித்திருப்பதாக அறிகிறேன். ஸ்டேட் எலக்டிரிஸிடி போர்டு என்ன கட்டணம் வைத்திருக்கிறார்களோ, அதே கட்டண விகிதம் என்னுடைய மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கும் கிடைக்க வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் கிராப் இன்ஷூரன்ஸ் திட்டத்தை நல்ல முறையில் அமுல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்தின் பீடிகையில் உணவு உற்பத்தி பெருகுகின்ற நேரத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நல்ல முறையில் அமுல்படுத்துவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதுவும் குறிப்பாக நமது நாட்டில் மதசார்பில்லா முகம்மதியர், கிறிஸ்துவர்கள் இந்தத் திட்டத்தை எதிர்த்து வருவதால், அவர்களுக்கு நல்ல முறையில், அவர்களுடைய மதக் கொள்கையிலே குறுக்கிடாத முறையில், எந்த முறையைக் கைப்பற்றவேண்டும் என்பதை அவர்களுக்கு அந்த வகையிலே நன்றாகப் புரியும்படி எடுத்துக்கூறி, அந்தத் திட்டத்தை நல்லதோர் திட்டமாக எடுத்து நடத்துவதற்கு அரசாங்கம் முற்படவேண்டும்.

அடுத்தபடியாக, உர விநியோகம் பற்றி கூறினார்கள். கூட்டுறவு துறை மூலம் உரம் விநியோகம் செய்யப்படுவதிலே சில இடங்களில் நிர்வாக சங்கடங்கள் ஏற்படுகின்றன. பஞ்சாயத்துக் கூட்டுறவு மன்றங்கள் கூட இந்த உர விநியோகத்தை எடுத்துச் செய்வதற்கு முன்வரலாம்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக் கூட்டுறவு மன்றங்களில் இருக்கின்ற விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள், கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரிகள் இவர்கள் யாருடைய கட்டுப்பாட்டில் வேலை செய்கிறார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. ஏனென்றால், இரண்டு அதிகாரிகளின் கீழ் அவர்கள் வேலை செய்வதினால், அவர்களுடைய பொறுப்பைத் தட்டிக்கழிக்க அது சாதகமாக இருக்கிறது. அவர்கள் மாவட்ட விவசாயி அதிகாரிகளின் கீழும், பஞ்சாயத்து கூட்டுறவு மன்ற ஆணையாளர்கள் கீழும் வேலை செய்வதால், அதாவது ஒரே ஆள் இரண்டு அதிகாரிகளின்கீழ் வேலை செய்வதால், யாராவது ஒருவர் கேட்டால், மற்றொருவ



1967 மார்ச் 25] [திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார்]

ருடைய வேலையை கவனிக்கிறேன் என்று மாற்றி மாற்றி சொல்லி, இம்மாதிரி அவர்களுடைய பொறுப்பை தட்டிக் கழிக்கிறார்கள். ஆகவே, எந்த அதிகாரியின் கீழ் அவர்கள் வேலை செய்யவேண்டும் என்பதை திட்டவட்டமாக நிர்ணயித்துக்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, குடிநீர் வசதியைப் பற்றி எனக்கு முன்பு பேசிய ஒரு அங்கத்தினர் அவர்கள் கூறினார்கள். இருபது ஆண்டு காலமாக ஹரிஜன மக்களுக்கு காங்கிரஸ் ஆட்சி குடிதண்ணீர் வசதி செய்துகொடுக்கவில்லை என்று கூறினார். அதிலும் குறிப்பாக 20 ஆண்டு காலமாக ஹரிஜன் என்ற பெயர் தான் வெகுமதியாக இருந்துவருகிறது என்று கூறினார்கள். இந்த நேரத்திலே மகிழ்ச்சியான செய்தி. இந்த 20 ஆண்டு காலத்தில் நான் ஹரிஜனாக பிறக்கவில்லையே ஹரிஜனுக்கு உள்ள சலுகை நமக்கு இல்லையே என்று வருத்தப்பட்டுக் கூறியவர்கள் கூறியது பொய் என்ற உண்மையை இது எடுத்துக்காட்டிவிட்டது.

எனவே, இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், உணவு உற்பத்திக்கு முதல் இடம் கொடுக்கவேண்டும், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே நல்ல சாலைகள் அமைத்துக்கொடுத்து உணவுப் பொருள்களை சந்தைகளுக்கு உடனடியாக எடுத்துப்போவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும், குடி மராமத்து வேலையை நல்லமுறையில் கவனித்து, நல்ல திட்டங்கள் போட்டு நிறைவேற்றவேண்டும், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நல்ல முறையில் அமல் நடத்துவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. எம். கண்ணப்பன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் மீது பேசும் வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்றையதினம், உணவுச் சிக்கலைத் தீர்க்கும் பணியில், அது சம்மந்தமான கொள்கைகளை கடைப்பிடிக்கும் நாம், உணவு உற்பத்தியைப் பெருக்கும் விவசாயிகள் எப்படிப் பட்ட வசதிகளைப் பெற்றிருக்கிறார்கள், எந்த எந்த வசதிகளை நாம் செய்து கொடுக்க வேண்டும் என்று எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அப்படிக் குறிப்பிடும்போது, விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் கடன் திட்டங்கள் இன்றைய தினம் நல்ல முறையில் செயல் படவில்லை. இன்றைய தினம் எடுத்துக்கொண்டால், கிணறு வெட்ட கடன் கொடுத்தாலும் உரம் வாங்க என்று கடன் கொடுத்தாலும், அவை விவசாயிகளுக்கு விரைவில் கிடைப்பதில்லை என்கின்ற குறைபாடு இருக்கின்றது. அப்படிப் பட்ட குறைபாடுகளைக் குறிப்பிடும் போது, கிணறு வெட்ட வேண்டும் என்று கடன் விண்ணப்பம் போட்டால், குறைந்தது ஆறு அல்லது எட்டு மாதங்களாவது காலம் தாழ்க்கப்

பட்டுத்தான் விண்ணப்பங்கள் எடுத்துக் கொள்ளப் படுகின்றன. சாதாரண விவசாயி கிராமத்திலிருந்து பல தடவை அது சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்குப் போய் வர, நடந்தும், பணம் செலவு செய்தும் கடன்களைப் பெற வேண்டிய சூழ்நிலைதான் இருக்கிறது. அதை மாற்றி அமைத்தாக வேண்டும். சுலபமான முறையில் கடன்களை விவசாயிகள் பெறக்கூடிய நிலையை உண்டாக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். அதே மாதிரித்தான் உரம் வாங்க வேண்டும் என்றால், விவசாயிகளுக்கு நியாயமான விலைக்கு எல்லாக் கடைகளிலும் கிடைப்பதில்லை. அப்படி அவர்களுக்குக் கொடுப்பதற்கு வேண்டிய உரங்களை மத்திய சர்க்காரிலிருந்து வற்புறுத்தி வாங்கி, விவசாயிகளுக்குக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நீர்ப்பாசனம் சம்மந்தப்பட்ட வரையில், கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பெரும்பாலும், கிணற்றிலிருந்துதான் பாசனம் செய்யவேண்டும். அப்படி பட்ட கிணற்றுப்பாசனம் தான் அதிகம். அங்கே கிணற்றிலிருந்து இறைக்கும் தண்ணீருக்கு, மின்சாரத்தை உபயோகித்து, மின்சார பம்பு செட்டுகள் வைத்து தண்ணீரை இறைத்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயத்திற்கு இறைத்துக்கொள்ளும் மின்சாரத்திற்கு கட்டணம் அதிகமாக இருக்கிறது. அந்தக் கட்டணத்தையும் குறைக்க வேண்டும். அதோடு டெபாசிட் தொகை என்று இரண்டு ஆண்டுகளாகக் கட்டிக் கொண்டிருக்கிறோம். அதை ரத்து செய்து விட்டு, ஓடும் மோட்டாருக்கு எடுத்துக் கொள்ளும் மின்சாரத்திற்கும் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு கட்டணத்தின் மீது அதிக வரியும் போடுகிறார்கள். அதையும் குறைக்க வழி வகை செய்ய வேண்டும். ஆகவே, இந்த டெபாசிட் தொகையை எடுத்து விடுவதோடு, வரியையும் குறைத்து விவசாயிகளுக்கு சலுகை கொடுக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளுகிறேன். அதோடு விவசாயத்திற்கு வழங்கும் மின்சாரம் 12 மணி நேரம் தான் கொடுக்கப்படுகிறது. பல்வேறு பகுதிகளிலும் இம்மாதிரித்தான் வழங்கப்படுகிறது. அதை மாற்றி விவசாயத்திற்கு என்றால், நாள் முழுவதும், 24 மணி நேரமும், மின்சாரம் வழங்கும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே வேண்டிக் கொள்ளுகிறேன்.

பொள்ளாச்சி, உடுமலை வட்டாரத்திலே, பரம்பிக்குளம்—ஆழியாறு கால்வாய்கள் பூராவும் பாய முடியவில்லை. வாய்க்கால்கள் வெட்டப்படவில்லை. சென்ற 4, 5 ஆண்டு காலமாக, அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் தலையீட்டின் பேரிலும், இன்னும் வேறு கட்சிக் கண்ணோட்டத்திலும், வெட்டப் பட்டிருக்கும் கால்வாய்கள் பெருவாரியாக அந்தப்பகுதி கிராம வாசிகளுக்கு பயன் படாத நிலையில் வெட்டப் பட்டிருக்கின்றன. அதை மாற்றி, அந்தப் பகுதி நிலங்களுக்கெல்லாம் பாயும் வகையில் வாய்க்



கால்களை சீர் செய்து கொடுக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளுகிறேன். அந்தப் பகுதியில் கிணத்துக்கிடவு தொகுதியின் மேற்குப் பகுதி கேரள மாநிலத்தின் எல்லையில் இருக்கிறது. அங்கே ஆயிரக்கணக்கான கிராம மக்கள் எந்த விதமான முன்னேற்றமும் இல்லாமல் இருக்கிறார்கள். தண்ணீர் வசதி மிக மிக மோசமான நிலையில் இருக்கிறது. அந்தப் பிராந்தியங்களைச் செம்மைப்படுத்தி, பரம்பிக்குளம் கால்வாய்களிலிருந்து பாசன வசதி செய்து கொடுத்தால் நல்ல முறையில் இருக்கும். கேரள மாநிலத்தில் இருக்கும் அத்தனை நிலங்களும் வளமாக செழித்துக் கொழிக்கும் அதே நேரத்தில், நம்முடைய மாநிலத்தில் இருக்கும் நிலங்கள் தரிசாகக் கிடைக்கின்றன. ஆகவே, அப்படிப் பட்ட பகுதிக்கு பரம்பிக்குளம் வாய்க்கால் பாசனத்தை விரிவு படுத்தி நீர்வளத்தைப் பயன் படுத்திக்கொண்டு விவசாய முன்னேற்றத்தைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் என்று குறிப்பிடும் போது, நம்முடைய அரசாங்கத்திலிருக்கின்ற அதிகாரங்களை கிராம மக்களுக்கு பயன் படும் அளவில் இன்றைய தினம் விரிவாக்க வேண்டும் என்று இந்த பஞ்சாயத்துக்களும், யூனியன்களும் அமைக்கப்பட்டன. ஆனால் அந்த நோக்கத்தை அந்த பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும், நிர்வகிக்கும் அதிகாரிகள் நிறைவேற்றவிடவில்லை. ஆரம்பத்திலே கொடுக்கப் பட்டிருந்த சில அதிகாரங்கள் கூட பஞ்சாயத்து யூனியன்களுடைய கைகளிலிருந்து பறிக்கப் பட்டு விட்டன. அரசாங்க அதிகாரிகளுடைய கையில்தான் இருக்கிறது. ஆகவே, அப்படிப் பட்ட நிலைகளை உள்ளபடியே மக்கள் ஆட்சி மலரவேண்டும் என்பதற்காக, பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும், அந்தப் பகுதியில் அமையும் யூனியன் தலைவருக்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட தலைவர்களுக்கு அதிகாரங்களை வழங்க வேண்டும் என்பது அவசியம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பஞ்சாயத்துத் தலைவர்கள், யூனியன் தலைவர் என்று குறிப்பிடும் போது, அந்தத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பெரும் பொறுப்பு தனிப் பட்ட பஞ்சாயத்துத் தலைவர்களிடம் இருக்கிறது. அதை மாற்றி, பொது மக்களே நேரிடையாக தேர்ந்தெடுக்கும் முறையைச் செயல் படுத்த வேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களை சிறையிலிருந்து, அந்தத் தியாகிகளை விடுவிக்க உத்தரவு போட்டு விட்டார்கள். அதற்காக இந்த அரசாங்கத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது பொள்ளாச்சியிலே 50-க்கும் மேற்பட்டவர்கள் சுட்டுத் தள்ளப் பட்டார்கள். அதே மாதிரி தமிழகத்திலே இன்னும் பலவிடங்களிலும் சுட்டுத் தள்ளினார்கள். அப்படிச் சுடப்பட்டவர்களுடைய எண்ணிக்கைபற்றி முன்பு குறிப்பிட்டுப்

பேசியிருக்கிறார்கள். அப்படித் துப்பாக்கிச் சூட்டினால் மாண்டவர்களுக்கும், இன்னும், தமிழ் மொழியைக் காக்கவேண்டும் என்று தன் உடலிலே எண்ணெய் வார்த்துக்கொண்டு நெருப்பைக் கொளுத்தி விட்டுக் கொண்ட தியாகிகளை நினைவு கோரும் வகையிலும், யுத்தத்தில் மடிந்தவர்களுக்கு எப்படி நினைவுச் சின்னம் எழுப்பப் பட்டிருக்கிறதோ, அதே வகையில் இந்த தியாகிகளுடைய மறைவிற்காகவும் நினைவுச் சின்னம் சென்னை நகரிலே எழுப்ப வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். அதே மாதிரி, இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்திலே, துப்பாக்கிச் சூட்டினாலும், இன்னும் மற்ற வகையிலும் எத்தனையோ பேர்கள் கைகால்கள் இழந்து அங்க ஹீனர்களாக ஆனவர்கள், அவர்களுடைய குடும்பங்கள், பாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப் பட்டவர்களுக்கும் அரசாங்கத்திலிருந்து உதவித் தொகை வழங்க வேண்டும் என்றும், அவர்களுடைய குடும்பங்கள் இந்த நாட்டின் மொழியைக் காப்பாற்றும் பணியில் இழப்புக்களைத் தாங்கவேண்டியிருக்கிறது என்கின்ற காரணத்தால், அப்படிப் பட்ட இழப்புக்களுக்கு ஈடு செய்யும் அளவிற்கு அரசாங்க உதவி கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இறுதியாக, அரசாங்கச் சின்னம், எம்ப்ளம், அதில் இருக்கும் எழுத்துக்கள் இந்தி எழுத்துக்களிலும், ஆங்கிலத்திலும் தான் இருக்கின்றன. தமிழில் காணப்படவில்லை. அந்தக் குறை நம்முடைய உள்ளத்திலே இருக்கிறது. அப்படிப்பட்ட குறையையும் போக்கும் அளவிற்கு, அந்த சின்னத்தில் இருக்கும், "Gevernment of Madras" என்பதையும், கீழே இருக்கும் இந்தி எழுத்துக்களையும் மாற்றி, அவற்றை தமிழிலே அமைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அவைத்தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

முற் பகல் 11-00

* திரு. கே. போஜன்: அவைத் தலைவர் அவர்களே, இறுதித் துணை அறிக்கையின் மீது சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

பொதுவாக, நம் புது அமைச்சரவை விவசாயத்திற்கு முக்கிய இடம் கொடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு விவசாயமானது முதுகெலும்பு போன்று அத்தியாவசியமானதாகும். விவசாயப் பெருக்கத்திற்கு ஊக்கம் கொடுக்கவேண்டியதன் அவசியத்தைப்பற்றி கனம் உறுப்பினர்கள் பலர் பேசிவிட்டார்கள். ஆகவே, நான் அதைப்பற்றி அதிகமாகப் பேச விரும்பவில்லை. விவசாயத்தைப் பொறுத்த வரையில், நீலகிரி ஜில்லாவில் பெருவாரியான மக்கள் கிழங்கு சாகுபடி செய்து வருகிறார்கள். நீலகிரி விவசாயிகளாகிய நாங்கள் மழையையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. கிழங்கு விவசாயச் சாகுபடி இப்பொழுது இரண்டுங்கெட்டான் நிலையில் இருக்கிறது. மழை





அதிகமாகப் பெய்துவிட்டால் மஞ்சப் பூசண நோயும், லேட் ப்ளைட் என்கிற நோயும் உண்டாகி கிழங்குச் சாகுபடி பாதிக்கப்பட்டு, விளைச்சல் குறைந்துவிடுகிறது. மழை இல்லாவிட்டாலும் விளைச்சல் நசித்துப் போய்விடும் நிலை இருக்கிறது. நீலகிரி விவசாய மக்கள் அதிகச் சிரமத்துடன் கிழங்கு விவசாயத்தை நடத்திக் கொண்டு வருகிறார்கள். கிழங்கு விவசாயத்திற்கு வேண்டிய உரங்களையும், பூச்சிக் கொல்லி மருந்துகளையும் சர்க்கார் காலா காலங்களில் குறைந்த விலையில் கொடுத்து, நீலகிரி விவசாய மக்களுக்கு உதவ முன்வரும்படியாக நான் பணிவன்புடன் அமைச்சரவையைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இரண்டு மூன்று ஆண்டுகளாக நீலகிரியில் மழை இல்லாத காரணமாக அங்கே வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அநேக சிறு விவசாயிகள் கிராமக் கூட்டுறவு சங்கங்களில் கடன்பட்டிருக்கிறார்கள். உரங்களுக்காகவும், பூச்சிக் கொல்லி மருந்துகளுக்காகவும் வாங்கின கடன் தொகையை அவர்கள் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஓரிரண்டு ஆண்டுகள் கழித்து அவர்கள் பட்ட கடனைத் திருப்பிக் கொடுக்க அவகாசம் கொடுப்பதுடன், மேலும் அவர்கள் விவசாயம் செய்ய, எரு வாங்க, பூச்சிக் கொல்லி மருந்து வாங்க ஆகிய இப்படிப்பட்டவற்றிற்குத் தேவையான எல்லா வசதிகளையும் சர்க்கார் செய்துகொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, கல்வியை எடுத்துக்கொண்டால், நம்முடைய அரசாங்கம் கூடிய வரையில் எல்லா மக்களுக்கும் இலவசமாகக் கல்வியளிக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். எல்லோருக்கும் அளிக்க முடியாவிட்டால் ஏழைகளுக்கு மாத்திரமாவது இலவசக் கல்வியளிக்க சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். முடிந்தால் இந்த ஆண்டிலிருந்து புகுமுக வகுப்பிற்கு இலவசமாக ஏழை மக்களுக்கு—கல்லூரிக் கட்டணம் கொடுக்க முடியாத ஏழை மக்களுக்கு—மாத்திரமாவது இலவசக் கல்வி அளிக்க சர்க்கார் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நீலகிரியைப் பொறுத்த வரையில், அங்குள்ள படுக சமுதாயத்தினர் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். தொழிற் கல்வியிலே அவர்களுக்கு அதிகச்சலுகை கொடுத்து, அவர்களுக்கு அதிகமான இடங்களைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது தொழில் கல்லூரிகளில், நீலகிரியில் வசிக்கும் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு இரண்டு அல்லது மூன்று இடங்கள் தான் கொடுக்கிறார்கள். அது மிகவும் குறைவான எண்ணிக்கையாகும். இப்பொழுது அநேக மாணவர்கள் படிக்க முன்வருகிறார்கள். இப்பொழுது இருக்கும் கோட்டா மிகவும் குறைவாக இருக்கிறது. பொதுக் கோட்டாவில் மாணவர்கள் வருவதற்கும் கடினமாக இருக்கிறது. வேறு ஜில்லாக்களிலுள்ள மாணவர்கள், நீலகிரியில் தங்களுக்குச் சொந்தக்காரர்களோ

[திரு. கே. போஜன்] [1967 மார்ச் 25

மற்றவர்களோ உத்தியோகத்தில் இருப்பதைக் கொண்டு, நேடிவிடி சர்டிபிகேட் வாங்கிக்கொண்டு, நீலகிரி கோட்டாவிற்கு மனுப் போட்டு விடுகிறார்கள். அதனால், எங்களுடைய சமூகத்தினர் மற்ற சமுதாயத்தினருடன் போட்டி போட இயலுவதில்லை. அந்த முறையை நீக்கி, படுக சமுதாயத்தினர் பின்தங்கிய நிலையில் இருப்பதால், அவர்களுக்கு அதிகமான இடங்களை அளிக்குமாறு அமைச்சரவையினரை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஆசிரியர்களுடைய வாழ்க்கை நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. விலைவாசி உயர்வினால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆசிரியர்களுக்கு ஜாகை வசதியும், ஊதிய உயர்வும் கொடுக்க அமைச்சரவை ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

உணவுப் பிரச்சினையைத் தீர்க்க நம்முடைய சர்க்கார் அரும்பாடுபட்டுக் கொண்டு வருகிறார்கள். வேண்டிய நடவடிக்கைகளையெல்லாம் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நீலகிரி ஜில்லாவைப் பொறுத்த வரையில் அது நெல் விளையாத ஒரு ஜில்லா. நெல் விளையும் பகுதி என்று சொன்னால், கூடலூர் பகுதியில், ஐந்நாறு ஏக்கரில் ஏதோ கொஞ்சம் நெல் விளையும். பொதுவாக, நீலகிரியில் நெல் விளைவதில்லை. அதனால், உணவு அமைச்சர் அவர்கள் நீலகிரி ஜில்லாவிற்கு ஒரு தனிச் சலுகை கொடுத்து, நீலகிரியில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படாமல் கவனித்துக்கொள்ள வேண்டும். முக்கியமாக, நீலகிரிக்கும் கோவைக்கும் இடையே உள்ள அரிசி நடமாட்டக் கட்டுப்பாட்டை எடுத்துவிடும்படியாகவும் நான் மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மேலும், இந்த அமைச்சரவை, அத்தியாவசியமான பொருள்களின் மீது உள்ள விற்பனை வரியை நீக்கவேண்டும். பொது மக்கள் மறைமுகமாகச் செலுத்தும் இந்த வரியிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கவேண்டியது அவசியமாகும்.

இந்த அவையிலே மானியக் கோரிக்கையின் மீது அன்று பேசிய அங்கத்தினர் ஒருவர் விற்பனை வரி விலக்கு வரம்பை அதிகமாக்க வேண்டும் என்று சொல்லி, 30,000 ரூபாய் வரை விலக்கு அளித்தால் நல்லது என்று சொன்னார்கள். இது ஒரு விஷயத்தில் நல்லதாக இருந்தாலும், மற்ற பல விஷயங்களில் எந்த வகையிலும் அவர்களுக்கு உதவியாக இருக்காது. ஏனென்றால், விற்பனை வரியை வியாபாரிகள் தங்கள் கையிலிருந்து கொடுப்பதில்லை. உபயோகிப்போரிடமிருந்து தான் வசூலித்துக் கொடுக்கிறார்கள். மொத்த வியாபாரிகளுக்கு அதிக வரி போட்டால், சில்லரை வியாபாரிகள் மீதுதான் அவர்கள் அதைப்போட்டு வசூலிக்கிறார்கள். சில்லரை வியாபாரிகளும் பொது மக்களிடத்திலிருந்து வசூலிக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. சிறு வியாபாரிகளுக்கு [illegible]லிருந்து விலக்கு அளிப்பதனால் பொது மக்களுக்கு ஒரு [illegible] நஷ்டமும் ஏற்படாது என்பது என்னுடைய கருத்தாகும்.



1967 மார்ச் 25] [திரு. கே. போஜன்]

கடைசியாக, இந்தப் புது அரசாங்கத்திடமிருந்து பொது மக்கள் அநேக விதமான நலன்களையும் பலன்களையும் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கை வீண் போகாமலிருக்க, நம்முடைய அரசாங்கம் மக்களுக்கு நல்ல பலன் தரக்கூடிய திட்டங்களையெல்லாம் தீட்டி, அதனமூலம் மக்களுக்கு நல்ல பலன்களையும் நல்ல வாழ்க்கையையும் அளிக்க அமைச்சரவை எல்லா முயற்சிகளையும் எடுக்கவேண்டுமென்று அவர்களை மிகப் பணிவோடு கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை எனக்கு அளித்தமைக்காக மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன். வணக்கம்.

* திரு. கி. ஜயராமன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகின்ற துணை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக நான் தங்களுக்கு நன்றி செலுத்திக் கொள்ளுகின்றேன்.

நம்முடைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் மக்களுடைய சக்தியே மகேசுவரன் சக்தி என்பதை உணர்ந்து, அந்த அடிப்படையிலே பெரும்பான்மையான மக்களுக்கு அதிகமான அளவிலே நன்மை செய்யவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலே இந்தக் கோரிக்கைகளையெல்லாம் கொண்டுவந்திருக்கிறார்கள். கடந்தகால ஆட்சியிலே இருந்தவர்கள் பாரபட்சத்தோடு சில முக்கியமான, அவசியமான திட்டங்களையெல்லாம் விட்டுச் சென்றிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் ஆலோசித்து இந்தக் கோரிக்கையின் மீது எழுகிற விவாதத்தில் ஒரு சில கருத்துக்கள் சொல்ல நான் விரும்புகிறேன்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியாகிய சேலம் நகரம் நெசவாளர் பெருங்குடி மக்களை அதிகமாகக் கொண்டதாகும். இங்கே நாம் பல்வேறு காலங்களில் கைத்தறி நெசவாளர்கள் பெருங்குடி மக்களுக்கிருந்த பிரச்சினைகளையெல்லாம் எடுத்துப் பார்த்தோம். கடந்த காலத்தில் எதிர்க்கட்சியாக நாம் இருந்த நேரத்தில், கைத்தறி நெசவாளர் பெருங்குடி மக்களுக்கு, அவர்களுடைய தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பதற்காக நல்ல தீர்மானத்தைக் கொண்டுவந்தோம். ஆனால், அது அமலுக்கு வராமற்போய்விட்டது. இந்த நேரத்திலே அதை அமலுக்குக் கொண்டுவருகிற ஒரு நிலைமையை நமது அரசாங்கம் மேற்கொள்ளும் என்று நான் நம்புகின்றேன்.

கைத்தறித் தொழிலைப் பொறுத்த வரையில், கலர் போட்ட சேலையும், கரை போட்ட வேஷ்டியும் கைத்தறிக்கு என்று ஒதுக்கப்பட்டுப் பாதுகாப்பு கொடுத்துவிடுவதால் மட்டும் கைத்தறி நெசவாளர் பெருங்குடி மக்களுடைய வாழ்வு நிரந்தரமாகத் தொடர்ந்து நல்லமுறையில் அமைந்துவிடும் என்று சொல்ல

முடியாது. கைத்தறியாளர்கள் உற்பத்தி செய்கிற அத்தனை சரக்குகளும் நிரந்தரமாகத் தொடர்ந்து வெளியே விற்கப்படுகிற ஒரு ஏற்பாட்டுக்கு வகை செய்யவேண்டும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற நல்ல பல திட்டங்களை மத்திய அரசினருக்கு வற்புறுத்திச் சொல்ல வேண்டும். கடந்த காலங்களில் இங்கே இருந்தவர்கள் பெரிய பெரிய ஆலை முதலாளிகளை அல்லது மில் தொழிலை முழுவதுமாக ஆதரிக்கின்ற நிலையில் இருந்திருக்கலாம். ஆனல், இன்றைய நிலைமையில், கைத்தறி நெசவுத் தொழிலுக்கும், அதிலே ஈடுபட்டிருக்கக்கூடிய நெசவாளர் பெருங்குடி மக்களுக்கும் நல்லதொரு மார்க்கத்தைத் தேடித் தரவேண்டும் என்று நான் நம்முடைய அரசினருக்கு மிகவும் தெளிவாகவே வலியுறுத்தி சொல்லிக் கொள்ளுவேன். அதற்குரிய சூழ்நிலை இன்று உருவாகியிருப்பதையும் நாம் இப்பொழுது செய்தித்தாள்களிலிருந்து பார்க்கிறோம். குறிப்பாக, ஃப்ரெஞ்சு நாட்டிலே இம்மாதிரியான கைத்தறி ஆடைகளுக்கு நல்ல மார்க்கெட் நிரந்தரமாகக் கிடைக்க கூடும் என்பதற்காக அவர்கள் நம்மோடு ஆலோசித்து வருகிருர்கள் என்று அறிகிறேன். அந்த முறையில், மாநில அரசினர் தங்களுடைய தெளிவான கருத்துக்களைச் சொல்லிவிட வேண்டும்.

அடுத்து, சேலம் மாநகரத்தில் முக்கியமான பிரச்சினையான பாதாளச் சாக்கடைத் திட்டம் பற்றி கடந்த காலத்தில் இந்த மாமன்றத்தில் பலர் பேசினர்கள்; பேசிவிட்டுச் சென்றுவிட்டார்கள். ஆனல், சென்ற மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பாதாள சாக்கடை திட்டத்திற்காக ஏறத்தாழ 25 லட்சம் ரூபாய் வரை மத்திய அரசினர் ஒதுக்கியிருந்தார்கள். சேலம் மாநகரத்தில் பாதாள சாக்கடைத் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவருவதற்காக அந்த தொகையை ஒதுக்கி இருந்தார்கள். ஆனல், பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 25 லட்சம் ரூபாயையும் திடீரென்று திரும்பப் பெற்றுக்கொண்டார்கள், அதற்கு எந்தவிதமான காரணமும் கூறவில்லை. நான் சென்ற காலத்தில் நகர சபை உறுப்பினராக இருந்தபோது, அதற்கான விளக்கங்களைக் கேட்டேன். விளக்கத்திற்குப் பதில் கூட சொல்ல முன்வரவில்லை. ஆனல், "பொதுச் சுகாதாரம், மருத்துவம்" என்ற தலைப்பின்கீழ் இது இருக்கிறது. சேலம் மாநகரப் பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக வருகின்ற அந்த செலவித்திலே ஆராய்ச்சி செய்வதற்கு அதிகமான அளவிலே தொகை ஒதுக்குவது அவசியமாகும் என்று நான் கருதுகிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் அமலுக்கு வரவில்லை. காலம் தாழ்ந்து கொண்டே போகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சென்னை நகரத்தைப் போன்று சேலம் மாநகருக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை உடனே அமல் படுத்த வேண்டும். ஆனல் சிறிய பகுதியான திருமங்கலம் பகுதிக்குக் இம்மாதிரி திட்டத்தை சேர்த்து இருக்கிருர்கள். கூடுமான விரைவிலே, இன்னும் அதிகமான



அளவிலே பணம் ஒதுக்கி, இம்மாதிரியான திட்டங்களை ஏற்று நடத்துவதற்கு இந்த மாநில சர்க்கார் முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி, சேலம் மாநகரிலே குடிதண்ணீர், மெயின் குழாய்கள் அமைப்பதுபற்றிய பிரச்சினைகளைப் பற்றி ஏற்கனவே பலமுறை அதன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், இலாகாவினரையும் நேரில் சந்தித்து எடுத்துச் சொன்னேம். அங்கே முக்கியமாக நெசவாளர்ப் பெருங்குடி மக்கள் தொழிலாளர்கள் முதலியோர் அந்தப் பகுதிகளில் வாழ்கிருர்கள். குடிதண்ணீர், மெயின் குழாய்கள் பற்றியவைகளை நல்ல விளக்கங்களோடு எடுத்துச் சொல்லியுங்கூட அதை அமுலுக்குக் கொண்டுவராமல், பாரபட்ச எண்ணத்தோடு நடந்துகொண்டார்கள் என்பதை இந்த அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். பெரிய பணக்காரர்கள் வசதி படைத்தவர்களுக்கு அல்லாமல், சாதாரண ஏழைத் தொழிலாளர்கள் எங்கெங்கு வாழ்கிருர்களோ அங்கெல்லாம் இந்தக் குழாய்களை அமைத்தால் அந்த ஏழைகளுடைய குடிதண்ணீர் பிரச்சினை எளிதில் தீரும். அதன் மூலம் ஏழைகளுடைய துயரம் தீரும் என்பதை இந்த அமைச்சரவைக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, நம் மக்கள் தொகை அதிகமாக ஆகி, நெருக்கடி அதிகமாக இருக்கிற நேரத்திலே குறிப்பாக குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். குடும்பக் கட்டுப்பாடு திட்டம் நல்ல திட்டந்தான். அதை நடைமுறைக்குக் கொண்டு வருகின்றபோது, இடையிலே பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. பல்வேறு எண்ணங்களோடு அங்கே இருக்கும் அதிகாரிகள் இருக்கிருர்கள். குறிப்பாக. நான் நேரிடையாகச் சென்றிருந்தபோது, ஒரு டாக்டர் ஒரே நாளில் நூற்றுக்கு அதிகமான நபர்களுக்கு ஆபரேஷன் செய்திருக்கிருர்கள். குடும்பக் கட்டுப்பாடு திட்டம் நல்ல திட்டமாதலால் அதை நான் முழுக்க முழுக்க ஆதரிப்பவன். இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து அமல்படுத்துகிருர்கள். திட்டம் நடைமுறையில் வரும்போது இங்குமங்கும் சில சிக்கல்கள் ஏற்படும். இந்தத் திட்டத்திலே எண்ணம் நல்லதாக இருப்பதால், நிர்சயமாக இந்தத் திட்டத்தை, நமது மாநில சர்க்கார் மீண்டும் புனரமைப்பு செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, கூட்டுறவு நாட்டு உயர்வு என்று சொல்கிறோம். இந்த கூட்டுறவு மூலமாகத்தான் ஏழை அல்லது எளிய மக்களுடைய வாழ்க்கைத்தரம் முன்னேற முடியும். கூட்டுறவு என்ற நாட்டு உயர்வு ஏழை மக்களுடைய பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் என்ற சித்தாந்தத்தை நாம் நடைமுறையில் கொண்டு வர வேண்டும். இது நாட்டுக்குத் தேவை என்று எடுத்துச் சொல்கின்ற, நேரத்திலேதான், அந்தக் கூட்டுறவு நிலையங்களில், நிர்வாக ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன என்பது நமக்கு வருத்தத்தை

அளிக்கின்றது. அந்த முறையில் சேலம் நகரத்திலே ஒரு பெரிய கூட்டுறவுச் சாலை இருக்கின்றது. அதில் நடந்துள்ள பல ஊழல்களைப்பற்றி இந்த மாமன்றத்தில் அதிகார பூர்வமாக, ஆணித்தரமாக, பல நிகழ்ச்சிகளை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கூட்டுறவுச் சாலையின் நிர்வாகம் சீர்கேடு அடைந்துவிட்டது அதனால் பல லட்சக்கணக்கான ரூபாய் பாழாக்கப்பட்டுவிட்டது என்று ஆதாரப்பூர்வமாக எடுத்துச் சொல்லியுங்கூட, அதை மறு பரிசீலனை செய்வதற்குக்கூட எந்தவிதமான நடவடிக்கையும் கடந்த காலத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இந்த மக்கள் ஆட்சி மூலமாகத்தான் நீதி ஏற்படும் என்ற அடிப்படையில் இந்த புதிய அமைச்சரவை இந்த கூட்டுறவுச்சாலைகளின், சொசைடிகளின் நிலைமைகளை நிச்சயமாகப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவுச் சாலையில் சர்க்காருடைய உத்தரவுகளுக்கு மாறாக, விதிமுறைகளுக்கு எதிராக சஸ்பென்ஸ் அக்கவுண்ட் என்ற பெயரில் தற்காலிகமாக ஒரு கணக்கு மேற்கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகள் பெயரிலே, அமைச்சர்கள் பெயரிலே எடுத்துச்செல்கின்ற துணிகளை சஸ்பென்ஸ் அக்கவுண்டில் எழுதி வைத்துவிடுகிறார்கள். சஸ்பென்ஸ் அக்கவுண்ட் என்பது கூட்டுறவு எண்ணத்திற்கே விரோதமானது, மாறானது. சஸ்பென்ஸ் அக்கவுண்டை நடைமுறைக்குக் கொண்டுவராமல் தடுக்க சர்க்கார் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கலந்து செய்வார்கள் என்று நம்புகிறேன். அதேமாதிரி, கூட்டுறவு முறையில் ரிபேட் கொடுக்காத காலங்களில், சஸ்பென்ஸ் அக்கவுண்டில் உள்ள சாக்குகளை, ரிபேட் கொடுக்கின்ற நாட்களிலே கணக்குக் கொண்டு வந்து அதற்கும் சேர்த்து ரிபேட்டுகளை வாங்குகிறார்கள். இது விதிமுறைகளுக்கு முரணானது. இம்மாதிரி தனிப்பட்டவர்களின் எண்ணத்திற்கு ரிபேட்டுகளை கொடுப்பதை நிறுத்தி, நிச்சயமாக அதை மீண்டும் புனராலோசனை செய்து உடனடியாக அவைகளுக்குரிய எல்லாப் புத்தகங்களையும் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். கூட்டுறவு நாட்டுக்குச் சிறந்தது என்பதைச் சம்பந்தப்பட்ட இலாகாவினர் உணர்ந்து தக்கவிதமாக நடந்து கொள்ள வேண்டுமென்றும், தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நாம் பல்வேறு நிலைமைகளில் சொல்லி வந்திருக்கிறோம். மாநில அரசாங்கத்தில் வேலை செய்யும் சிப்பந்திகள், மத்திய அரசாங்க ஊழியர்களோடு ஒரே சம நிலையில் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில், மாநில அரசு ஊழியர்கள் சம்பள உயர்வு பற்றியும், அவர்களுக்கு 'சிட்டி காம்பன்ஸேடரி அலவன்ஸ்' கொடுப்பது பற்றியும் சொல்லி வந்திருக்கிறோம். சிட்டி காம்பன்ஸேடரி அலவன்ஸ் அவசியமாகக் கொடுக்க வேண்டிய ஒரு படியாகும். மத்திய அரசு சிப்பந்திகள் சம்பளத்திலும், பஞ்சப்படியிலும் உயர்ந்திருக்கிறார்கள். மேலும் முக்கியமாக இந்தத் தொகை தலைநகரத்திலே நாளுக்குநாள் விலைவாசிகள் அதிகமாக



ஏறிக்கொண்டு செல்லும் காலத்தில் சிட்டி காம்பன்ஸேடரி அலவன்ஸ் ஓர் அவசியமான படியாகும். மத்திய அரசினர் 'பேஸிக் பே'யில், அடிப்படைச் சம்பளத்தில் 12 சதவிகிதம் கொடுக்கிறார்கள். இம்மாதிரி, எல்லாவற்றிலும் நமக்கே பற்றாக்குறை வரவு செலவுத்திட்டத்தில் அதிகமாக இருக்கும் காரணமாக, மாநில அரசாங்கத்தார் ஓரளவு 6 அல்லது 8 சதவிகிதம் கொடுத்தால், அது மாநில அரசு ஊழியர்களுக்கு ஒரு பெரிய காமதேனுவாக அமையும்.

அதேமாதிரி, நம்முடைய சேலம் மாவட்டம் மிகவும் பிற்பட்ட ஒரு மாவட்டம். இந்த மாவட்டத்தில் பெரிய தொழிற்சாலைகள் அமைப்பதற்கு இயற்கை வளங்கள் இருந்தும் சரியான முறையில் சென்ற காலத்தில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. நம்முடைய ஆட்சியின் ஆரம்பகாலத்திலிருந்தே சிறுவகைத் தொழில்கள் நிறுவுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் நம்முடைய அரசினர் மேற்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, உணவுப் பிரச்சினையைப்பற்றிப் பேசுகின்ற நேரத்தில் நம்முடைய அரசினர் பொதுமக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளையெல்லாம் மனதில் கொண்டு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை அறிஞர் அண்ணா அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். மொத்தமாக எல்லாக் காரியங்களையும் செய்யச் சொல்கிறீர்களா அல்லது பிழையின்றி ஒரு காரியத்தை முடித்துத் தரச்சொல்கிறீர்களா என்று கூறும் நமது அண்ணா அவர்கள் எப்போதும் மிக ஜாக்கிரதையாக, எதைச் செய்தாலும் அது நாட்டு மக்களுக்கு அதிகப் பலனைத் தரும் விதத்தில் செய்து தருவார்கள் என்று எண்ணுகிறேன். பற்றாக்குறை உணவுப் பிரச்சினையை படிப்படியாகத்தான் தடுக்க முடியும். மத்திய சர்க்காரிலே உணவு அமைச்சராக இருப்பவர், நாடு பூராவுக்கும், நேஷனல் ஃபுட் பட்ஜெட்டைப் போடுவதற்கு எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அதற்குக் கூட தேசிய உணவு பட்ஜெட்டை எப்படி அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதைச் சிந்தித்து ஒரு நல்ல முடிவை எடுக்க முடியாத ஒரு நிலைமையைத்தான் நாம் இன்று காண்கிறோம். இங்கே ஏற்கெனவே பற்றாக்குறை இருக்கிறது. இன்னும் கொள்முதல் தேவையாக இருக்கிறது. உணவு விஷயத்தில் மிகுந்த பற்றாக்குறை ஏற்படும். முக்கியமாக இந்தப் புதிய அமைச்சரவை மத்திய சர்க்காரோடு உறவு கொண்டு பல்வேறு உதவித் தொகைகளையும் கடன்களையும் பெற்றுத் தருகின்ற நிலவரத்திலே புதிய பட்ஜெட்டிலே வகை செய்ய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். மத்திய சர்க்காரின் நிதியமைச்சர் அவர்கள் உணவுக் கொள்முதல் திட்டத்திற்காக மிகக் குறைவாக தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். ஒதுக்கப்பட்ட தொகையில் சுமார் 10 லட்சம்தான் கிடைக்கும் என்று சாதாரண கணக்கு எடுத்துக்கொண்டு ஒதுக்கியிருக்கிறார்கள். அவைகளை மாற்றுகின்ற வகையிலே மாநில அரசு வழி காணவேண்டும். உணவுக் கொள்முதலிலே இன்னும் நெருக்கடி ஏற்படும். இந்த நெருக்கடி இருக்கின்ற நேரத்தில் நம்முடைய எதிர்க்கட்சிக்காரர்

களும் கட்சி பாகுபாடின்றி, மத்திய சர்க்காரிடத்திலே தங்களுடைய நேசக்கரங்களை நீட்டி, வருங்காலத்தில் நம்முடைய உணவுக் கொள்முதல் திட்டம் திருப்தியாக நடைபெற ஒத்துழைத்து, நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

* திரு. பி. ஜயராஜ்: மதிப்பிற்குரிய இடைக்காலத் தலைவர் அவர்களே, 1966-67 ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். இன்றையத் தினம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற அரசாங்கம் விவசாயத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று எண்ணுகின்றது: காரணம் இந்த நாட்டில் இருக்கிற ஏழை எளிய மக்கள் எல்லோருக்கும் உணவு தேவைப்படுகிறது. அதுவும் ராஜ்யத்தில் உள்ள மற்ற மாவட்டங்களுக்கு எல்லாம் உணவு அளிக்கின்ற மாவட்டமாக இருப்பது தஞ்சை. தஞ்சை மாவட்டத்தில் ஏ.டி.டி. 27 ரக விதை பயிரிடப்பட்டதன் காரணமாக அதிக அளவுக்கு உற்பத்திப்பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாகவும் அது மற்ற ஜில்லாக்களுக்கு உணவு அளிக்கின்ற ஜில்லாவாக இருக்கிற காரணத்தினால் எந்த அளவுக்கு நீர்ப்பாசன வசதி தங்கு தடையின்றி அங்கே கிடைக்கச் செய்ய முடியுமோ அதைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் மேலும் உற்பத்தியை அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது.

அதோடு எங்கள் மாவட்டத்தில் பல தேவஸ்தான நிலங்கள், மடங்களுக்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. திருச்செட்டாங்குடி, திருப்பகலூர் போன்ற தேவஸ்தானம் போன்ற எங்கள் பகுதியில் உள்ள தேவஸ்தான நிலங்களை எடுத்துக் கொண்டால், தனியார் நிலத்தில் விளைவிப்பதை விடக் குறைவாகத்தான் இன்று விளைவிக்கப்பட்டு வருகிறது. காரணம் அந்த தேவஸ்தானங்கள், மடங்களில் உள்ளவர்களுக்கு போதுமான அக்கறை இல்லை. எப்படி கோயில் கட்டடங்களைக் கட்டுவதற்காக நாம் தனியாக என்ஜினியர் போட்டிருக்கிறோமோ அதுபோல தேவஸ்தானங்கள், மடங்கள் இவற்றுக்குச் சொந்தமான நிலங்களிலும் கூட அதிகமாக விளைவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் தனியாக ஒரு ஸ்பெஷல் ஆபீசரைக் கூடப் போடலாம். அடுத்து, இந்தக் கோயில் நிலங்கள், மடங்களுக்குச் சொந்தமான நிலங்கள் இவற்றை ஃபார்மிங் சொஸைடியின் கீழ்க் கொண்டுவந்தார்கள். தனிப்பட்டவர்களின் நிர்வாகத்தில் விடப்பட்டதால், அந்தத் திட்டம் தோல்வியுற்றிருக்கிறது. ஃபார்மிங் சொஸைடியில் 250 ரூபாய் கொடுப்பது அதில் 125 மானியம், 125 கடனைக் கொடுப்பது, இதை ஐந்து வருடம், பத்து வருடத்தில் தருவது என்றெல்லாம் ஏற்படுத்தியும்—இதன் தோல்விக்கான காரணத்தைச் சீர்தூக்கிப் பார்த்து—இந்த நிலங்களில் எல்லாம் எப்படி அதிகச் சாகுபடியை ஏற்படுத்தலாம் என்று கவனிக்க வேண்டும். அப்பொழுது இன்னும் நல்ல பலன் கிடைக்கும்.





இப்போது எங்கள் மாவட்டத்தில் பம்பு செட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவை நல்லமுறையில் வேலை செய்கின்றன. மேலும் பம்பு செட்டுகள் வைக்க முன் வருகிறவர்களுக்குக் கால தாமதம் இன்றி பம்பு செட்டுகள் வழங்கவேண்டும். வடிமுனைக் குழாய்க் கிணறுகளை ஏற்படுத்துவது என்றால் செலவு அதிகம் ஆகிறது. ஆகவே, தண்ணீர் எடுத்துக் கொடுக்கின்ற வரையில் ஆகும் செலவை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும் இன்றையதினம் எங்கள் மாவட்டத்தில் தனியாரிடம் மின்சார விநியோகம் விடப்பட்டிருப்பதனால் மின்சார விஸ்தரிப்பு வேலை நல்லமுறையில் நடைபெறவில்லை. மற்ற இடங்களில் மின்சார போர்டார் எப்படி தனியாரிடம் இருந்து மின்சார விநியோகக் கம்பெனிகளை எடுத்துக்கொண்டார்களோ அதுபோல எங்கள் தஞ்சை மாவட்டத்தில் தனியாரிடம் இருக்கும் மின்சார விநியோக கம்பெனிகளை—மின்சார போர்டாரே மேற்கொண்டாக வேண்டும். அப்போதுதான் விவசாய உற்பத்திக்கு மிக உதவியாக இருக்கும். பொதுவாக, இன்றையதினம் விவசாய உற்பத்தி நல்ல முறையில் பெருகவேண்டும் என்று சொன்னால் விவசாயத்துறை, மின்சாரத் துறை, கூட்டுறவுத்துறை ஆகிய மூன்றும் இன்னும் நல்ல நெருங்கிய முறையில் இணைந்து செயலாற்றவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஜூலை மாதத்தில் விவசாய வேலை ஆரம்பிக்கிறது என்றால் அப்போதே கூட்டுறவு சங்கங்களின் மூலமாக, மார்க்கெட்டிங் சொஸைடி மூலம் உரம் விநியோகிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். காலாகாலத்தில் விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை விநியோகம் செய்தாலே உணவு பற்றாக் குறை நாட்டில் குறையும். புள்ளிவிவர கணக்கில் கூட இப்போது இருக்கிற புள்ளி விவரங்களை நம்பலாமா என்கிற கேள்வி எழுகிறது. என்னைக் கேட்டால் நன்றாக சாகுபடி செய்துள்ள நிலத்தின் ஒரு பகுதியை ஒரு செண்டு நிலப்பகுதி அறுவடை செய்து அந்த அளவில் கணக்கைப் பார்ப்பதைவிட ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று அறுவடை செய்து விளைவைப் பார்த்து கணக்கெடுப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவு உற்பத்தித் துறையில் உண்மையிலேயே நல்ல வளர்ச்சி ஏற்படவேண்டுமென்றால் விவசாய அமைச்சர், கூட்டுறவு அமைச்சர் நீர்ப்பாசன அமைச்சர் ஆகியோர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். நேற்று முதல் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல 'கண்ணன் தின்னும் பண்டம் வெண்ணை' என்கிற கதையைப்போல தெனாலிராமன் கதையைப் போல எதையாவது சொல்லி திசை திருப்பிவிடாமல்—தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் உர விநியோகத்திற்கு சீரான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். பம்பு செட்டுகளை இன்னும் அதிகம் ஏற்படுத்தவேண்டும். அந்தப் பகுதியில் உள்ள மின்சார விநியோகக் கம்பெனிகளை மின்சார போர்டாரே எடுத்துக்கொள்ளவேண்டும் என்பன போன்றவற்றை வற்புறுத்தி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. சொ. கோவிந்தராசன்: கனம் மன்றத் தலைவர் அவர்களே, 1966–67-க்கான இறுதி துணை மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு தாங்கள் அனுமதி தந்ததற்காக நன்றி மன்றத்தினருக்கும என் வணக்கம். எனக்கு முன் பல உறுப்பினர்கள் பேசினார்கள். உணவுத் துறையில் விவசாயிகளுக்கு உரம் வழங்குவது சில நேரங்களில் சரியாக செயல்படவில்லை என்றும், அதனால் விவசாயம் செம்மையாக நடைபெறவில்லை என்றும் கூறினார்கள். விவசாயிகளுக்குக் கூட்டுறவு சங்கங்களின் மூலம் கடன் கொடுக்கப்படுகிறது. அப்போது அதில் கால் பகுதி உரமாகக் கொடுக்கவேண்டுமென்ற உத்தரவு இருக்கிறது. உரமாகக் கொடுக்கப்படும் கால்பகுதி பிண்ணாக்கும், உரப்பொடியும் கலந்து கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் பின்னால் பிண்ணாக்கை விவசாயத்திற்கு உபயோகப்படுத்தக் கூடாது என்று தடை வந்ததின் காரணமாக உரப்பொடியாகக் கொடுக்கப்படுகிறது. அப்படி கொடுக்கப்படும் உரமானது உருப்படியாக காலா காலத்தில் கொடுக்கப்படாமல் அறுவடை சமயத்தில் கொடுக்கபடுவதால் அதை வாங்குகிற விவசாயிகள் வெளியில் கொடுத்து விடுகிறார்கள். அதனால் தான் உரம் ப்ளாக் மார்க்கெட்டிற்கு வந்து விடுகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டும் அல்ல. ரிசர்வ் பாங்கில் இருந்து, சென்னை மாவட்ட கூட்டுறவு பாங்குகளுக்கு பணம் கொடுப்பது, அதில் இருந்து மாவட்ட கூட்டுறவு பாங்குக்கு பணம் கொடுப்பது, அதில் சங்கங்களுக்கு கடன் கொடுப்பது, அவர்கள் விவசாயிகளுக்குக் கொடுப்பது என்கிறபோது ஒவ்வொரு பர்சென்டாக வட்டி விகிதம் கூடி விடுகிறது. மாவட்ட கூட்டுறவு பாங்குகளை (சங்கங்களை) சென்னை மாவட்ட பாங்குகளின் ப்ராஞ்சாக வைத்துக் கொடுத்தால் ஒரு பர்சென்டாவது குறைந்த வட்டியில் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மு.ப. பகல் 11-30 இந்த அமைச்சரவை ஏழை எளியவர்களுக்கு ஒத்தாசை செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கும் காரணத்தால் ஒரு சில கோரிக்கைகளை நான் இந்தச் சபையின் முன்னால் வைக்க விரும்புகிறேன். மதுரை மத்திய தொகுதியில் மாப்பாளையம், திடீர்நகர், மேலவாசல், சுப்பிரமணியபுரம், செல்லூர், ஆத்தோரப் பகுதிபோன்ற பகுதிகளில் இருக்கும் புறம்போக்கு நிலங்களை அந்தப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு, தகுந்தபடி பிரித்துக் கொடுத்து உதவி செய்யவேண்டும். மதுரை திருப்பரங்குன்றம் செல்லும் சாலையில் ரயில்வே பாதைக்கு மேல் ஒரு பாலம் அமைப்பதை நான்காவது திட்ட காலத்தில் எப்படியாவது செயல்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று அலங்காநல்லூர் சமீபத்தில் அமைக்கப்பட்டது. அது செயல்பட்டு வந்திருப்பதில் பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன. பல ஊழல்களுக்குக் காரணமான அந்த போர்டை மாற்ற வேண்டுமென்று காங்கிரஸ்காரர்களே





முயற்சி எடுத்தும் கூட நடைபெறவில்லை. இன்னும் அந்த போர்டு தான் இருந்து வருகிறது. 31–3–1967-ம் தேதியுடன் அந்த போர்டின் பதவிக்காலம் முடிகிறது; அவர்கள் அந்த ஆலையை மூடுவிழா நிலைக்குக் கொண்டு வந்து விட்டார்கள். அவர்கள் மறுபடியும் அதிலே இடம் பெற முடியாதபடி செய்யவேண்டும்.

கூட்டுறவு முனைகளில் உதவி செய்வதில் லாரி உரிமையாளர் சங்கங்களுக்கு இதுவரை சலுகை காட்டப்படவில்லை. இரண்டு ஆண்டுகளாக அதைப் பற்றி சிந்தனை செலுத்தப்பட்டிருக்கிறது. மேட்டுப்பாளையத்திலே நீலகிரி கோவாப்பரேடிவ் ஆட்டமோபைல் ஸ்பேர் பார்ட்ஸ் கம்பெனி என்ற ஸ்தாபனம் 25 மெம்பர்களைக் கொண்டு அமைக்கப்பட்டு இன்று 1,100 பேர்கள் அளவுக்கு உயர்த்தப்பட்டு 20 லட்சம் ரூபாய் டர்ன் ஓவரில் நடந்து வருகிறது. நான்கு பகுதிகளில், கோயம்புத்தூர், மேட்டுப்பாளையம், ஊட்டி, பெள்ளாச்சி ஆகிய பகுதிகளில் நல்ல லாபத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. கூட்டுறவு முறையில் இதுமாதிரியான ஸ்தாபனங்களை உண்டாக்கிக் கொடுப்பதால் லாரி உரிமையாளர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். இவை லாபத்தில் ஓடுகின்றன என்ற நிலை ஏற்பட்டவுடன் திருச்சி மாவட்டம், திருச்செங்கோடு, சேலம் போன்ற இடங்களில் கோவாப்பரேடிவ் ஸ்பேர் பார்ட்ஸ் கம்பெனிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். திருச்சியிலே நல்ல லாபம் கிடைத்திருக்கிறது.

லாரி என்றாலே அவர்கள் ரோட்டிலே போகும்போது ஏற்படுகின்ற இன்னல்கள் ஞாபகம் வருவதாக போக்குவரத்து அமைச்சர் அவர்கள் சொன்னதாக ஞாபகம். லாரி வருகிறது என்று சொன்னாலே பயங்கரமாக இருக்கிறது என்று சொன்னார்கள். இந்த லாரிகளை நடுவழியிலே நிறுத்தி சோதனை போடுவதற்குரிய அதிகாரம் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும் அவர்களுக்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கு மட்டுமே இருக்கக்கூடிய நிலையில் போலீஸ்காரர்கள் ஆங்காங்கு லாரிகளை நிறுத்தி தொந்தரவு கொடுக்கின்ற காரணத்தால் லாரிகளை அவர்கள் மிகவும் வேகமாக ஓட்டிச் சென்று அந்தக் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதோடு மொபைல் கோர்ட் என்று சொல்லி லாரிகள் அங்கே வெகு நேரம் காத்திருக்கக்கூடிய காரணத்தாலும் அவர்கள் அந்த நேரத்தைச் சரிக்கட்ட வேகமாகச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்த மாதிரி நிர்ப்பந்தங்கள் இல்லையெனில் லாரிகளை நிதானமாக, ஒரே சீராக ஓட்டிச் செல்ல முடியும். இன்று லாரி உரிமையாளர்களை எடுத்துக்கொண்டால், ஒரு லாரிக்கு பல உரிமையாளர்கள், அது வாங்கியதிலிருந்து கணக்குப் பார்த்தால் 20 உரிமையாளர்கள் வரை கூட செல்லும். அந்த அளவுக்கு அது கைமாறியிருக்கும். அதற்குக் காரணம் அந்த உரிமையாளர்களிடம் முதல் அதிகம் இல்லாததும், நஷ்டம் வருவது, விபத்துக்கள் ஏற்படுவது போன்றவைதான். அப்படிப்பட்ட லாரி உரிமையாளர்கள் போலீசாரின் இடையூறுக்கும், மொபைல் கோர்ட்டு இடையூறுக்கும் ஆளாகாத வண்ணம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க-

[திரு. சொ. கோவிந்தராசன்] [1967 மார்ச் 25

வேண்டும். சாதாரணக் குற்றங்களுக்குக் கூட லாரி உரிமையாளர்களுக்கு, டிரைவர்களுக்கு பிடி வாரண்டு கொண்டு வரப்பட்டு பயமுறுத்தப்படுகிறார்கள். அந்த மாதிரி சந்தர்ப்பங்கள் எல்லாம் ஏற்படாதவாறு அரசாங்கம் உத்தரவாதம் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. கே. என். குமாரசாமி: கனம் தலைவர் அவர்களே, இந்தச் சபையின் முன்பாக விவசாயிகளுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பல மெம்பர்கள் பல கருத்துக்களைக் கூறினார்கள். நானும் சில கருத்துக்களைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். தேசம் முழுவதும் உணவுப் பிரச்சினைதான் பல வருஷங்களாக இருந்து வந்து கொண்டிருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக பல நடவடிக்கைகளை எடுத்தும் கூட இன்னும் அந்தப் பிரச்சினை வெற்றிகரமாகத் தீர்க்கப்படவில்லை. இந்த நேரத்திலே புதிய அமைச்சரவை தமிழகத்திலே பதவி ஏற்றிருக்கிறது. புதிய அமைச்சரவை இந்தப் பிரச்சினைக்குச் சரியான முறையில் தீர்வு காண்பார்கள் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். கிராமப்புற மக்கள், இந்த அமைச்சரவை உணவுப் பிரச்சினையைத் தீர்க்கும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையில் இருக்கிறார்கள்.

விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற உதவிகள், சலுகைகள் தற்போது விவசாயிகளுக்கு நேரடியாகக் கிடைக்கும் நிலைமை இல்லை. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவோ, அரசாங்கத்தின் மூலமாகவோ கொடுக்கப்படுகின்ற உதவிகள் காலாகாலத்தில் விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. முன்பு விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன்கள் கொடுக்கப்பட்டு வந்தது. தற்போது குறுகிய காலக் கடன்கள் என்ற பெயரில் கொடுக்கப்பட்டு மூன்று மாதத்தில் வசூலிக்கிற நிலை இருக்கிறது.

(மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் தலைமை)

உரத்தை வாங்குவதற்கு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பத்து நடை நடக்க வேண்டியிருக்கிறது, விவசாயிகள் குறுகிய காலக் கடனைப் பெற்று உரங்களையோ அல்லது பூச்சி மருந்துகளையோ வாங்குவதற்குள் காலதாமதமாகி விடுகிறது. இந்தக் கடனை வாங்காவிட்டால் என்ன என்று விவசாயிகள் நினைக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு நீண்ட காலக் கடனைக் கொடுப்பதற்கான ஒரு வாய்ப்பைக் கொடுக்க, ஒரு வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் தங்களுடைய புதிய கிணறுகளுக்கோ, பழைய கிணறுகளுக்கோ மின்சாரம் வேண்டுமென்று கோருகிறார்கள். மின்சார இலாகாவில் டிரான்ஸ்பார்மர்கள் இல்லாமல் இரண்டு மூன்று வருஷங்களாக இழுத்தடிக்கப்படுகிறது. கோவை ஜில்லாவில் பல்லடம் தாலூகா போன்ற இடங்களில் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று கோரி இரண்டு மூன்று வருஷங்கள் ஆகியும் இன்னும் கொடுக்கக் கூடிய நிலைமை ஏற்படவில்லை.



1967 மார்ச் 25] [திரு. கே. என். குமாரசாமி]

காரணம் எலக்ட்ரிசிடி டிப்பார்ட்மெண்டார் டிரான்ஸ்பார்மரில் லோட் இல்லை, கரன்ட் இல்லை என்று காலதாமதம் செய்வதால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அதை நீக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். மின்சார இலாகா மினிமம் டெபாசிட் என்று வசூலிக்கிறார்கள். ஏற்கனவே விவசாயிகள் தாங்கள் ஓட்டிக் கொண்டிருப்பதற்கு மினிமம் சார்ஜ் கொடுக்கிறார்கள். 10 ஹார்ஸ் பவர் வைத்திருந்தால் ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 1,000 ரூபாய் வசூல் செய்யும் அளவிற்கு மின்சார இலாகா டெபாசிட் வசூல் செய்கிறார்கள். இது மிகவும் அநியாயமானது. இதை ரத்து செய்வதற்கு அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடி தண்ணீர் வசதி, பல கிராமங்களில் கிடையாது. இப்போது தேர்தல் முடிந்த நேரம். குடிநீர் பிரச்சினை ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் கிளப்பப்பட்டு வருகிறது. 19 ஆண்டுகளாக காங்கிரஸ் அரசு சிலவிடங்களில் குடிநீர் பிரச்சினைக்கு வழி செய்திருக்கிறார்களே தவிர பலவிடங்களில் குடி தண்ணீர் வசதி ஹரிஜனங்கள் வசிக்கும் பகுதிகளுக்கும், மற்றப் பகுதிகளுக்கும் செய்து கொடுக்கப்படவில்லை. ஆகவே, குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கான எல்லாவித நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ள முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு உற்பத்தி கொள்முதல் தீவிரத் திட்டத்தின் அடிப்படையில் இப்போது கொள்முதல் திட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம். மீண்டும் லெவி முறையைக் கொண்டுவந்து, மீண்டும் ரேஷன் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவருவது என்று சொல்லப்படுகிறது. கிராமப்புறங்களில் மக்களுக்கு ரேஷன் கிடைப்பதில்லை. அவர்களுக்கு குடும்பக் கார்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றின்மேல் தானியங்கள் வழங்குவது கிடையாது. ஏதோ கொடுத்து வைத்திருக்கிறார்கள். ஐந்தாறு மாதங்களாக அவர்களுக்கு தான்யம் கிடைப்பதில்லை. முக்கிய நகரங்களில் ரேஷன் திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறது. முக்கிய நகரங்களில் உள்ளவர்களுக்கு அமுலாக்கி பாக்கியுள்ளவர்களுக்கும் குடும்பக் கார்டுகள் கொடுத்து ரேஷன் சரியாக கிடைக்காமல் செய்வது பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும். ஒன்று, திட்டத்தை அமுலாக்க வேண்டுமென்றால், கிராம மக்கள் எல்லோருக்கும் அமுலாக்கும் திட்டம் இருக்கவேண்டும். இல்லையென்றால், பூர்ணமாக அமுலாக்குவதில் சிரமம் இருக்குமானால், தானிய விநியோக முறையைத் தளர்த்தி எல்லையோரப் பகுதிகளில் மட்டும் வைத்துக் கொண்டு, பிற பகுதிகளில் ஓப்பன் மார்க்கெட்டில் விட்டு விடுவது நல்லது. குடும்பக் கார்டு முறையில் கிராமங்களில் சிலவிடங்களில் அரிசி கிடைக்காமல், சிலவிடங்களில் வாங்கிக்கொண்டும் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பது சரியல்ல. ஒன்று, பூர்ணமாக ரேஷனை அமுலாக்க வேண்டுமென்று சொன்னால் சகல மக்களுக்கும் உணவு தான்யம் கிடைக்கும்படி அதை அமுல் செய்யவேண்டும்.

[திரு. கே. என். குமாரசாமி] [1967 மார்ச் 25

இல்லையென்றால், ரேஷன் திட்டத்தை எல்லையோரப் பகுதிகளில்
மட்டும் வைத்துக்கொண்டு மற்றவிடங்களில் ஜில்லாவிற்கு ஜில்லா
போகிறதில் உள்ள கட்டுப்பாட்டை தளர்த்த வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுவிலக்குப் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினை
யாக இருக்கிறது. அண்டை மாநிலமாகிய கேரளாவில் அதை
எடுத்து விடப் போவதாகக் கூறுகிறார்கள். அதுபற்றி ஒன்றை
**விளக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். சாராயம் போன்ற**
வற்றை விட்டு விட்டு, கள் குடிக்க அனுமதிப்பதில் தவறில்லை என்று
மக்கள் சொல்லுகிறார்கள். கள் குளிர்ச்சியான ஒரு பானம்.
**உஷ்ணத்தைப் போக்கக் கூடியது அது. இப்போது பதநீர் விற்**
கிறார்கள். ஆகவே கள் குடிப்பதில் தப்பு இல்லை. அதைக் குடிப்ப
தற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கிராம
மக்கள் கூறுகிறார்கள். மில் பிரதேசங்களில் க்ஷய நோய் பரவி
வருகிறது. கிட்டத்தட்ட 45 சதவிகித மக்களை அந்த நோய்
**பீடித்திருக்கிறது. அதைப் போக்குவதற்கு சரியான ஆஸ்பத்திரி**
**கள்** இல்லை. அதற்குரிய வசதிகளும் இல்லை. கள் குடித்தால்
குணம் ஏற்படுகிறது என்று தொழிலாளர்கள் மறைமுகமாக
**குடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தொழிலாளர்களைக் கேட்**
**கிறபோது அவர்கள் சொல்கிறார்கள். திருட்டுத்தனமாக கள்ளை**
வாங்கிக் குடிக்கிறோம். அதனால் குணம் ஏற்படுகிறது என்று கூடச்
**சொல்கிறார்கள். பண்டைக் காலத்தில் இருந்தே இந்தப் பழக்கம்**
இருந்துகொண்டு வந்திருக்கிறது என்று புராணங்கள், சாஸ்திரங்
**கள் இவற்றில் எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது.** ஆக, குளிர்ச்சி
யான பானம் இது. இது உடம்பிற்கு நல்லது என்பதால் கள் குடிப்
**பதற்கு அனுமதிப்பதில் தவறில்லை என்று மக்கள் நினைக்கிறார்கள்**
**சாராயம் போன்றவற்றை** அனுமதிக்கக் கூடாது. அதனால் கேடு
விளைகிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையை மறுபரிசீலனை செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்லடம் தொகுதியில் பிரசவ ஆஸ்பத்திரி இல்லை என்று மக்கள்
குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கிருந்து 25 மைல்களுக்கு
அப்பாலுள்ள கோவை நகரத்திற்குத்தான் பிரசவத்திற்குச் செல்ல
வேண்டும். இல்லையென்றால் 15 மைல்களுக்கு அப்பாலுள்ள
திருப்பூருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. பல்லடம் நகரம்
அமைத்துக் கொடுப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ள
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெசவாளர் பிரச்சினை. இது தேசத்தில் ஒரு பெரிய
பிரச்சினையாக இருக்கிறது. எவ்வளவு அலைந்தாலும் ஒரு குடும்பக்
**கிற்கு** மாதம் ஒன்றுக்கு ரூ. 100 கூட வருமானம் **கிடைப்பதில்லை.**
**அவர்களின்** வருமானத்தை அதிகரிப்பதற்கான முயற்சியை இந்த
அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
**இன்னின்ன ரகத் துணிகளைத்தான் நெய்ய வேண்டும் என்று**



1967 மார்ச் 25] [திரு. கே. என். குமாரசாமி]

வைத்து, அதற்கான மார்க்கெட்டைப் பிடித்து அந்தந் தொழிலுக்கு **ஊக்கம் கொடுக்கக் கூடிய முறையில் குறிப்பிட்ட ரகத் துணிகளை** அவர்களுக்கு ஒதுக்குவதால் அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அதற்கு வேண்டிய நிலையை அரசு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக தொழிலாளர்கள் பிரச்சினை பற்றி சில விஷயங்கள் குறிப்பிட விரும்புகிறேன். ஆலை முதலாளிகள் லாபம் இல்லை. **நஷ்டம் வருகிறது** என்று காரணம் காட்டி சில ஆலைகளை மூடி விடு கிறார்கள். தொழிற்சாலைகளை மூடுவதினால் நாட்டின் பொருளா தாரமும் பாதிக்கப்படுகிறது. உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. **உற்பத்தி பாதிக்கப்படாமல் இருக்க தக்க நடவடிக்கைகள் எடுக்க** வேண்டுமென்று கூறுகிறபோது, அதன் பேரில் சமாதானம் செய்து வைப்பதற்குத்தான் சட்டத்தில் இடம் இருக்கிறதே தவிர, அதை **திரும்ப எடுத்து நடத்தச் சொல்ல சட்டப்படி அதிகாரம் இல்லை** என்று சென்ற அரசு சொல்லிவிட்டது. அதன் காரணமாக **சென்ற ஒன்றரை ஆண்டு காலத்தில் பத்தாயிரக்கணக்கான குடும்** பங்கள் வாழ்விழந்திருக்கிறார்கள். ஆலைகளை மூடினால் அதை **எடுத்து நடத்துங்கள்** என்று சொல்ல சட்டப்படி அதிகாரம் **இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.** அப்படிப்பட்டதொரு நிலை இருக்குமானால், ஏன் அரசுக்கு அந்த அதிகாரத்தை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழிற் **சாலைகளை மூடி விடுவது என்பதை தனி நபர்களின் இஷ்டத்திற்கு விடுவதால் இந்த நாட்டிலுள்ள பெருவாரியான மக்கள் பாதிக்கப்** படுகிறார்கள். ஆகவே, சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். எப்படியோ ஆலையை ஓட்ட முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். லாபம் இல்லை என்று **கண்டவுடன் அதை மூடுவதற்கு யத்தனிக்கிறார்கள். நஷ்டம் வரு கிறது** எனக் கண்டால் ஒன்றில் அரசே அந்த ஆலையை ஏற்றெடுத்து நடத்த வேண்டும். இல்லையெனில் அரசு, முதலாளிகள், தொழி லாளர் பிரதிநிதிகள் மூன்று பேர்களும் சேர்ந்து எடுத்து நடத்த முயற்சித்தால், பல பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும்.

இன்று பெரும் பிரச்சினையாகவுள்ளது, உணவுப் பிரச்சினை. உணவுப் பிரச்சினையைத் தீர்க்கும் இந்த அரசு என்று மக்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதாவது ஒரு துறையில் அவர்கள் கேட்கிற பிரச்சினையைத் தீர்த்துக் கொடுக்க அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. டி. மார்ட்டின்:** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் **கொள்கிறேன்.**

[திரு. டி. மார்ட்டின்] [1967 மார்ச் 25

இந்தச் சபையில், இந்தக் கூட்டத் தொடரில் பல அங்கத்தினர்கள் தற்போது ஆட்சியிலிருக்கும் அமைச்சரவை தன்னுடைய செலவைக் குறைத்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதுவும் பெரிய கார் இல்லாது, சின்ன கார் உபயோகப்படுத்துகிறார்கள். சம்பளத்திலிருந்தும் 500 ரூபாய் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதைப்பற்றி நான் ஒரு சில கருத்துக்களைக் கூற வேண்டுமென்று விரும்புகிறேன்.

தேர்தலுக்கு முன்பு 12–2–1967-ல் முழுப் பக்க விளம்பரத்துடன் ஒரு பத்திரிகை தமிழ்நாட்டில் வந்தது. முழுப் பக்க விளம்பரத்துடன் வந்த பத்திரிகையை, அது சினிமா விளம்பரமோ என்று எண்ணிப் பார்த்தேன். அப்படிப் பார்த்தபோது அங்கே "அண்ணாவின் உறுதிமொழிகள்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ரூபாய்க்கு ஒரு படி அரிசி உடனே கொடுப்போம் விவசாயத்திற்கு தொல்லை இல்லாதபடி மற்ற பண்டங்களின் விலைகளைக் குறைப்போம்; விலைவாசிகளைக் குறைக்கும் வரையில் சம்பளம் வாங்காமல் மந்திரி வேலை பார்ப்போம்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. மற்ற இரண்டு உறுதிமொழிகளை விட்டுவிட்டு, மூன்றாவது உறுதிமொழியைப் பற்றி மட்டும் இந்தச் சபையில் குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் பத்திரிகையானது அரசியலையும், அதோடு ஒரு பக்கத்தில் அணங்குகளின் கவர்ச்சிகரமான படங்களையும் ஏந்தி உலவி வரும் பத்திரிகை. நாட்டில் அரசியலில் மாறுதலை ஏற்படுத்திய பத்திரிகை என்று அதைப் பலர் கூறுகிறார்கள்—இருக்கவும் செய்யலாம். அந்தப் பத்திரிகை உண்மையைத் தவிர பொய் ஒரு நாளும் வராது என்று சிற்சில சந்தர்ப்பங்களில் செய்திகளைக் கொடுக்கும்போது கீழே எழுதும். அந்தப் பத்திரிகையின் பெயர் என்ன என்றால், அதுதான் 'தினத்தந்தி'. இந்த அறிக்கை வந்தது அயல் நாட்டுப் பத்திரிகையில் அல்ல; நம் தமிழ்நாட்டில் வருகிற பத்திரிகையில்தான். மறுபடியும், எட்டுத் தலைவர்களின் படங்களோடு, திரும்பவும் உறுதிமொழிகளைக் கூறி முழுப் பக்க விளம்பரம் ஒன்று வந்தது. அதிலும் இந்த மூன்றாவது உறுதிமொழியாகிய, விலைவாசிகளைக் குறைக்கும் வரையில் சம்பளம் இல்லாமல் மந்திரி வேலை பார்ப்போம் என்பதும் வந்திருந்தது. ஆக, அவைத் தலைவர் அவர்களே, பொது மக்கள் முன்பு இன்றைய முதலமைச்சர் அன்று கொடுத்த வாக்குறுதி, விலைவாசிகளைக் குறைக்கும் வரையில் மந்திரி வேலை சம்பளம் வாங்காமல் பார்ப்போம் என்பது. இந்த ஒரு வேலையைச் செய்வதற்கு, சம்பளம் இல்லாமல் அமைச்சராகப் பணியாற்றுவதற்கு, ஒரு வல்லுனர்கள் கமிட்டி அமைத்தோ, அல்லது அதற்கென நிபுணர்கள் கொண்ட குழு அமைத்தோ ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று எண்ண வேண்டியதில்லை. இந்த முடிவைக் காலதாமதம் இல்லாமல் எடுத்திருக்கலாம். காரணம் என்ன என்றால், அது அமைச்சரவைப் பொறுத்த முடிவு. ஆனால், அவர்கள் வந்ததும் தங்கள் சம்பளத்தைப் பாதியாகக் குறைத்துக் கொண்டார்கள். மீதமுள்ள



1967 மார்ச் 25] [திரு. டி. மார்ட்டின்]

பாதியைப் பற்றி எண்ணும்போது, அங்கத்தினர்கள் தங்கள் சம்பளத்தை 100 ரூபாயாகக் குறைத்துக்கொண்டால், 250 ரூபாயாக எங்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொள்வோம் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். அப்படிக் கூறினால், நான் இந்தச் சபையில் கூறிக்கொள்ளுவது என்னவென்றால், அன்று நீங்கள் கொடுத்த உறுதி மொழியில் எந்தவிதமான நிபந்தனையோ, ப்ரொவைசோவோ, ரைடர் க்ளாசோ இல்லாத நிலையில் நேரடியாக விலைவாசியைக் குறைக்கும் வரையில் சம்பளம் இல்லாமல் மந்திரிப் பதவி வகிப்போம் என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள். அப்படிக் கூறிவிட்டு இப்போது . . .

3. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) பேரவையில் பேசும் முறை.

**திரு. இராம. அரங்கண்ணல்** : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், ஏற்கெனவே சபாநாயகராகிய தாங்கள் தெரிவித்திருக்கிறீர்கள், உறுப்பினர்கள் பேசுகிற நேரத்தில் "நீங்கள்", "நீங்கள்" என்று கூறினால் அது உங்களைக் குறிப்பிட்டுப் பேசுவதாக ஆகும் என்று சொல்லியிருக்கிறீர்கள். கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் "நீங்கள்" என்று உங்களைப் பார்த்துச் சொல்லுகிறார்கள். அதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்** : உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கக் கூடிய ஒழுங்குப் பிரச்சினை சரியானது. மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பேசும்போது "நீங்கள்" என்று குறிப்பிட்டால் அது இந்த அவைத் தலைவரைத்தான் குறிக்கும். உறுப்பினர்கள் பேசும்போது அவைத் தலைவரிடமே பேசவேண்டும். முதலமைச்சரையோ, மற்ற அமைச்சர்களைப்பற்றியோ பேசும்போது, முதலமைச்சர் என்றோ, இன்ன அமைச்சர் என்றோ குறிப்பிட்டுப் பேசவேண்டும்.

2. 1966–67-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் துணை அறிக்கை—பொது விவாதம்—(தொடர்ச்சி).

**திரு. டி. மார்ட்டின்** : அவைத் தலைவர் அவர்களே, ஆகவே, இந்தச் சம்பளக் குறைப்பு முடிவை அவர்களே உடனே எடுத்திருக்க முடியும். அமைச்சரவையிலிருந்து அந்த விதமான முடிவு வரும் என்று எதிர்பார்த்திருந்தேன். ஆனால், அந்த விதமான முடிவு வரவில்லை. அதற்குப் பதிலாக அங்கத்தினர்கள் தங்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று கூறியிருப்பது, அதை ஒரு ** நேர்மையான பதிலாகக் கருத முடியாது என்று சபையில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன் . . .

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

### 3. ஒழுங்குப் பிரச்சினைகள்—(தொடர்ச்சி).

### (இ) பேரவையில் பயன்படுத்தக்கூடாத சொற்கள்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், கனம் உறுப்பினர் அவர்கள் ** ஒரு வார்த்தையை உபயோகித்தார்கள். ஏற்கெனவே, சட்ட மன்றத்தில் அந்த வார்த்தையைச் சொல்லக் கூடாது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. தங்களுடைய தீர்ப்பு என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** மதிப்பிற்குரிய உறுப்பினர் அரங்கண்ணல் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி இருக்கிறார்கள். நமது சட்டப் பேரவையின் 235-வது விதியின்படி, இந்த அவையிலே பேசுகிற பேச்சுக்கள் சட்ட மன்றத்தில் பயன்படுத்தக் கூடாத சொற்களாக இருக்கக் கூடாது. அது மட்டுமல்ல, 235-வது விதியின்படி பார்த்தால், அவதூறான சொற்களையும் பயன்படுத்தக் கூடாது. அதோடு, ஆபாசமான சொற்களையும் பயன்படுத்தக் கூடாது. அது மட்டுமல்லாமல் கண்ணியமற்ற சொற்களையும் பயன்படுத்தக் கூடாது. அதுதான் விதி. மதிப்பிற்குரிய உறுப்பினர் கூறிய சொல் கண்ணியமற்றதாக இருப்பதால் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### 2. 1966–67-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் துணை அறிக்கை—பொது விவாதம்—(தொடர்ச்சி).

**திரு. டி. மார்ட்டின் :** நேர்மையான பதிலாகக் கருத முடியாது என்று கூறிக்கொண்டு, அது ஊமையர் கையில் சொல்லும் பதில் போலக் காட்சி அளிக்கிறது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு சாத்தான்குளம் பகுதியைப் பொறுத்தமட்டில், அது மணற்பாங்கான பாலைவனப் பிரதேசம் போன்று காட்சியளிக்கிறது. அங்கே விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டு பயிர் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அங்கே உள்ளவர்களிடத்தில் கொள்முதல் செய்யும்போது ஐந்து ஏக்கர்கள் உள்ளவர்களிடம் கொள்முதல் செய்யாமலிருந்தால் மிகவும் நன்மையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு டவுன் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கும் ரேஷனைப் போன்று மைனர் பஞ்சாயத்துக்களுக்கும் கொடுக்கவேண்டும். அவைகளுக்குள் பாகுபாடு காட்டாமல் ரேஷன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சாத்தான்குளம் தொகுதியில் உடன்குடி பகுதியில் பார்த்தால், சிமெண்ட் கான்க்ரீட் பேஸ்மெண்ட் போட்டு வயலுக்குத் தண்ணீர் பாயக்கூடிய அளவில் பயிர் செய்து வருகிறார்கள். ஏராளப் பணம் செலவு செய்து பம்ப் செட்டுகள் அமைத்து வைத்திருக்கிறார்கள். இன்னும் அவைகளுக்கு மின்சார வசதி செய்து

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.



தரப்படவில்லை. கீழே உள்ள அதிகாரிகளைப் போய்க் கேட்கும்போது அரசாங்க உத்தரவு வரவேண்டுமென்று கூறி தட்டிக்கழித்து விடுகிறார்கள். எனவே, இதை அவைத் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சரவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், கடலோரப் பகுதியாகிய மணற்பாடு, பெரியதாழை கிராமங்களில் புயலால் பாதிக்கப்பட்டுள்ள வீடுகள் இருக்கின்றன. மக்கள் அந்த வீடுகளில் தங்க முடியாமல் வெளியே சென்று குடியேறியிருக்கிறார்கள். அவர்களுக்கும் வீடு கட்டிக் கொள்ள வசதியாகக் கடன் கொடுத்து உதவவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த உப மான்யக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறபோது குறுக்கிட வேண்டாமென்று நான் கருதினேன். ஏனென்றால் ரொம்ப விருவிருப்பாகப் பேசும்போது தடுக்கக் கூடாது என்பது ஒன்று. என்னதான் பேசுகிறார் என்பதை முழுதும் பேசுகிறவரை பார்க்கவேண்டும் என்று எனக்கு இருந்த ஆவல் மற்றொன்று. சென்ற தடவை நான் இங்கே சொன்னது, உறுப்பினர்கள் தங்கள் சம்பளத்தை 100 ரூபாயாகக் குறைத்துக் கொண்டால், நான் இதைக் கவனிக்கிறேன் என்று சொல்லவில்லை. ஆனால், நாங்கள் சம்பளமே இல்லாமல் வேலை செய்கிறபோது, அவர்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளாவிட்டால் மக்கள் தவறாகக் கருதுவார்கள் என்றுதான், அந்த விஷயத்தில் பொது மக்கள் எங்களைப்பற்றி அறிந்து வைத்திருப்பதைப்பற்றிப் பேசும்போது, அவர்களைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்பதையும் கவனிக்கவேண்டும் என்று கூறினேன்.

இன்னும் ஒன்று கனம் உறுப்பினர்களுக்குச் சொல்லுகிறேன். நாங்கள் இன்னமும் சம்பளம் வாங்கவில்லை. என்ன செய்ய இருக்கிறோம் என்பதைப் பொருத்திருந்து பார்க்கவேண்டுமே தவிர, உறுப்பினர் அவர்கள் அவ்வளவு அவசரப்பட வேண்டாம். நாங்கள் கொஞ்சம் விவரம் தெரிந்தவர்கள். (ஆரவாரம்.)

* **திரு. மு. இராமன் :** மன்றத் தலைவர் அவர்களே, 1966-67-ம் ஆண்டுக்கான இறுதி உபமானியக் கோரிக்கைகளின் விவாதத்தின் மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக சார்பில் அமைந்திருக்கும் மந்திரி சபையில் அறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக வீற்றிருக்கும் தமிழகத்தில் ஏழை எளிய மக்களுக்கு எதிர்காலத்தில் நல்ல பல காரியங்களை எடுத்து அமைதியாகவும் திறம்படவும் நடத்துவார்கள் என்பதை இந்த மன்றத்தின் முன்பு தெரிவித்துக்கொள்கிறேன். 12 00 ந.ப.

1957-ம் ஆண்டிலே இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்த மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் என்னுடைய தொகுதியில் பல காலனி வாழ் மக்களுக்கு மனைக்கட்டு தேவை

என்று இந்த சட்டமன்றத்தில் வினா எழுப்பினார்கள். இருபது ஆண்டு காலமாக இருந்த காங்கிரஸ் ஆட்சியில் என்னுடைய தொகுதியில் காலனி வாழ் மக்களுக்கு மனைக்கட்டு வழங்கப்பட வில்லை. வளவனூர் தொந்திரெட்டிப்பாளையம் பகுதியில் மனைக் கட்டு தேவை என்று சொல்லி நான்கில் ஒரு பங்குத் தொகை ரூ. 1,000 சர்க்காருக்கு முன் பணமாகக் கொடுத்தும், காலனி வாழ் மக்களுக்கு காங்கிரஸ் ஆட்சியில் மனைக்கட்டுகள் இன்னும் வழங் கப்படாமல் இருந்த காரணம் தெரியவில்லை. காங்கிரஸ் ஆட்சியில் ஏழை ஆதி திராவிட மக்களுக்கு மனைக்கட்டுகள் வழங்கினோம், குடி தண்ணீர் வசதி செய்து கொடுத்தோம் என்றெல்லாம் பிரமாதமாகப் பேசிக்கொள்கிறார்கள். இதுவரையில் என்னுடைய தொகுதியில் வழுதாவூர், வடவாம்பலம், பூசாரிப்பாளையம், சாலையாம்பாளையம் ஆகிய கிராமங்களில் காலனிவாழ் மக்களுக்கு மனைக்கட்டுகள் கொடுக்கப்பட வேண்டும் என்று 1957-ம் ஆண்டில் இந்தச் சட்ட மன்றத்தில் உறுப்பினராக இருந்த மதிப்பிற்குரிய திரு. கோவிந்த சாமி அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், காங்கிரஸ ஆட்சியில் அது கவனிக்கப்படவில்லை. இப்பொழுது வந்திருக்கும் நமது சர்க்கார் காலனிவாழ் மக்களுக்கு உடனடியாக மனைக்கட்டு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழகத்தில் பஞ்சாயத்து ஒன்றிப்பு மன்றத் தின் கீழ் பணியாற்றும் ஆசிரியர்கள் பலவித அல்லல்களை அனுப வித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களை அடிக்கடி ஒன்றிப்பு மன்றத் தலைவர்களும், சம்பந்தப்பட்ட ஆணையாளர்களும் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அவல நிலையை நீக்கி, ஒன்றிப்பு மன்றத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகள் அனைத்தையும் கல்வி இலாகாவே ஏற்று நடத்தினால் நலமாக இருக்கும், ஆசிரியர் களுக்கு இருக்கும் தொல்லைகள் நீங்கும் என்பதை இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் விக்கரவாண்டி, கண்டமங்கலம் ஆகிய இடங்களில் மருத்துவ விடுதி இல்லாமல் ஏழை மக்கள், பின்தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். 1957-ம் ஆண்டில் இந்த சட்ட மன்றத்தில் பணியாற்றிய திரு. கோவிந்தசாமி அவர்கள் இந்த இடங்களில் மருத்துவ விடுதிகள் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண் டார்கள். ஆனால் இன்றுவரையில் அந்த இடங்களில் மருத்துவ விடுதிகள் ஏற்படுத்தப்படவில்லை. இந்த அரசாங்கம் அதைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது வளவனூர் உயர்நிலைப் பள்ளியில் அரசினர் மாணவர் விடுதி ஒன்று இருக்கிறது. நாற்பத்தைந்து மாணவர்கள் பின்தங்கிய வகுப்பினர்கள், உயர்ஜாதி வகுப்பினர்கள், தாழ்த்தப் பட்ட மக்கள் இலவசமாக உணவு அருந்துகிறார்கள். இருநூறு ஏழை எளிய மாணவர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச்



சேர்ந்த மாணவர்கள் சுமார் ஐந்து மைலுக்கு அப்பாற்பட்ட தூரம் வந்து படிக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் வளவனூர் அரசாங்க மாணவர் விடுதியில் 45 மாணவர்களாக இருப்பதை 75 மாணவர்களாக உயர்த்த சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன் வழுதாவூர், சித்தவம்பட்டு, கண்டமங்கலம் ஆகிய இடங்களில் உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. அங்கும் அரசினர் மாணவர்கள் உணவு விடுதிகளை ஏற்படுத்தித் தந்தால், ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் நல்ல முறையில் படித்து முன் வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வளவனூர் ஏரி தூர் வார வேண்டும். முன்னாள் சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றிய மதிப்பிற்குரிய திரு. கோவிந்தசாமி அவர்கள் தற்பொழுது ஆளும் கட்சி வரிசையில் விவசாயத் துறை அமைச்சராக இருக்கிறார்கள். அவர்கள் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த காலத்திலேயே வளவனூர் ஏரியில் தூர் வார வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தும், அந்த வேலையைச் செய்து முடிக்க முன்பிருந்த அரசு முன்வர வில்லை. வளவனூர் ஏரியில் 6 அடி, 7 அடி தூர் வாரி, நன்றாக கரையைப் பலப்படுத்தினால்தான் சுமார் 20, 25 கிராமங்களுக்கு நல்ல பலன் கிடைக்கும்.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வெள்ளம் அதிகமாக ஏற் பட்டு, பல கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. வடவாம்பலம், கொங்கம்பட்டு, பூவரசங்குப்பம், சின்னமடம், பெரிய மடம் ஆகிய கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பெண்ணை யாற்றுக்குப் பக்கத்தில் மலட்டார் என்ற ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றங்கரை ஓரத்திலுள்ள கிராமங்கள் இவை. ஆகவே, வெள்ளம் உள்ளே புகாமல் தடுப்பதற்கு மலட்டார் கரையோரமாக மதில் சுவர், தடுப்புச் சுவர் எழுப்பி, இந்தக் கிராமங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு தலைவர் அவர் களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள் கிறேன்.

* **திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** கனம் சபாநாயகர் அவர்களே, உப மான்யக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தமைக்கு முதற்கண் வணக்கத்தைத் தெரி வித்துக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டம் அதிக உணவு உற்பத்தி யாகக்கூடிய ஒரு மாவட்டம். அந்த மாவட்டத்தில் வெள்ளக் காலங்களில் விவசாயத்திற்கு அதிகமாக பாதிப்பு ஏற்படுகிறது என்பதை கனம் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். என்னுடைய தொகுதியாகிய திருவாரூர் தொகுதியில் ஓடம்போக்கியாறு, வெள்ளையாறு, பாண்டவையாறு, அடப்பாறு, வாளைவாய்க்கால்,

வெட்டாறு போன்ற ஆறுகள் ஓடுகின்றன. அந்த ஆறுகள் கடற்கரையை நோக்கிப் போகிற காலத்தில், கரைகள் ரொம்ப இடைக்குறுகலாக இருப்பதன் காரணமாக வெள்ளக் காலங்களிலே உடைப்பு ஏற்பட்டு, பல ஆயிரக்கணக்கான நிலங்கள் பாழாகி, விவசாயம் பாதிக்கப்படுகிறது. இந்தக் கரைகளை நல்ல முறையிலே செப்பனிடுவதற்கு, கரைகளைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை உடனடியாக எடுத்துக்கொண்டால்தான், அங்குள்ள விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க முடியும். வெள்ளத்தினால் பயிர்கள் பாதிக்கப்படாமல் மீட்கமுடியும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

வெள்ளத்தினால் பாதிக்கப்படுவது மட்டுமல்ல, வடிகால் வசதி இல்லாமல் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் நீர் தேங்கி பயிர்கள் நாசமாகின்றன என்பதை குறிப்பாக அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். முப்பத்திக் கோட்டகம், வல்லான் கோட்டகம், எறுவகாடு, வாழக்கரை, நீழை யூர், ஈசனூர், சித்தாய்மூர் போன்ற கிராமங்கள் பள்ள கிராமங்க ளாக இருப்பதனால், சரியான வடிகால் வசதி இல்லாமல் கஷ்டமாக இருக்கிறது. பல வருஷங்களாக இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள் சரியான பாசன வசதி இல்லை, வடிகால் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கோரிக்கைகள் விட்டிருந்தபோதிலும், பல அதிகாரிகள் வந்து பார்வையிட்டிருந்த போதிலும், இதுவரை ஒன்றும் வடிகால் வசதி செய்து கொடுக்கப்படவில்லை. நீர்த் தேக்கத்தினால் அந்த இடங்களில் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக் கின்றன, வடிகால் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று குறை பட்டுக்கொண்டபொழுது, அங்கு இருக்கக்கூடிய ஒரு மிராசுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய நிலங்களைச் சர்க்கார் எடுத்துக்கொண்டு வடிகால் வசதி செய்யும்படியான நிலை இருக்கிறது. சர்க்காருக்கு அந்த நிலங்களை இனாமாகக் கொடுத்தால் வடிகால் வசதி செய்து கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். இதுவரையிலும் எந்த நபரும் அதை எதிர்த்ததாகத் தெரியவில்லை. உடனடியாக புதிய அமைச்சர்கள் அதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அம்மாதிரி வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய இடங்களில் வடிகால் வசதி செய்து கொடுத்தால், நிச்சயம் அந்தப் பகுதியில் கரையோரமாக இருக்கக்கூடிய நிலங்கள் பாதுகாக்கப்படும், அதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதையும் அமைச்சர் அவர் களின் கவனத்திற்குத் தலைவர் அவர்கள் மூலமாகக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சர்க்கார் விவசாயப் பண்ணைகள் இருக்கின்றன. அந்தப் பண்ணைகளில் பொறுக்கு விதைகள் தயாரித்து விவசாயி களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்கிற நோக்கத்தோடு வினி யோகிக்கும் முறை இருக்கிறது. ஆனால், அந்தப் பண்ணையில் விதை நெல் நல்ல முறையில், சரியான முறையில் காயவைத்து தயார் செய்வதில்லை. அப்படிச் செய்ய வேண்டிய அளவிற்கு அங்கே ஊழியர்கள் இருப்பதில்லை. உதாரணமாகச் சொல்லப்





போனால், விவசாயிகள் விதை வைப்பதென்றால், அறுவடையான உடனடியே, அதை தலையடி அடித்து, நன்றாகக் காயவைத்து, விவ சாயிகள் விதை தயார் செய்கிறார்கள். ஆனால், இன்றையதினம் சர்க்கார் பண்ணையில் இருக்கும் விதைகள் காலத்தில் அறுவடை செய்யப்பட்டு, காய வைக்கப்படாமல், ஈரமான நெல்லை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் விதை தயாரிப்பது நல்ல முறையில் செய்வது கிடையாது. காலத்தில் அறுவடை செய்வது கிடையாது. நல்ல முறையில் தயார் செய்வதும் கிடை யாது. இனிமேலாவது அப்படிப்பட்ட தவறுகள் ஏற்படக் கூடாது என்று அந்தக் குறைகள் நீங்குவதற்கான நடவடிக்கை களை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு பஞ்சாயத்துக்களுக்குப் பல புறம்போக்கு நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவை அந்தப் பஞ்சாயத்துக்களுக் குத் தேவையானவைகள்தானா என்பதை கவனத்தில் எடுத்துக் கொண்டு, பஞ்சாயத்துக்குத் தேவை, அப்படி அந்த பஞ்சாயத் திற்கு வேண்டிய, அவை செய்யக்கூடிய காரியங்கள், அபிவிருத்தி வேலைகள், விஸ்தரிப்புக்கள் இவற்றிற்குப் போனது போக, மீதம் உள்ள நிலத்தை நிலமற்ற விவசாயிகளுக்கு, விவசாயத்திற்கு லாயக்குள்ள நிலங்களை, சர்க்காரே நேரிடையாக எடுத்துக் கொண்டு, நிலமற்றவர்களுக்குக் கொடுக்க வகை செய்தால் நலமாக இருக்கும். ஆகவே, அப்படிச் செய்ய வேண்டும் என்று அமைச் சரைத் தலைவர் மூலமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். உதாரண மாக, நான் குடியிருக்கும் ஊரில்—நானும் ஒரு பஞ்சாயத்து போர்டு தலைவன்—13 ஏக்கரா நிலம் இருக்கிறது. அது பூராவும் சும்மாவே, தரிசாகவே கிடக்கிறது. நல்ல சாகுபடிக்கு லாயக்கான நிலம். அந்த நிலத்தை விவசாயத்திற்குக் கொண்டு வந்தால் உணவு உற்பத்திக்கு உதவியாக இருக்கும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். சட்டத்தின் மூலமாகச் செய்வதில் சில சிக்கல்கள் இருக்கின்றன என்று தெரிகிறது. அப்படிச் சட்ட சிக்கல்கள் இருந்தால் அவற்றை நீக்க தக்க ஏற்பாடுகள் செய்து, அந்த நிலத்தை உணவு உற்பத்திக்கு, உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் கொண்டு வந்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடி தண்ணீர் வசதி. எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அரிசனங்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்பதைப்பற்றி. அரிசன மானியத்தின் கீழ் தொகைகள் வழங்கப்படுகின்றன, நீர்நிலைத் தொட்டிகள் கட்டுவதற் கென்று. உதாரணமாக, வேதாரணியம் தொகுதியில், கொத்தங்குடி என்கிற கிராமம் இருக்கிறது. அங்கே அரிசன மானியத்தின் கீழ் தொகை வழங்கப்பட்டு நீர்நிலைத் தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. ஆனால், அங்கிருந்த அரிசனங்கள் அந்தத் தண்ணீரை உபயோகிக்க முடியவில்லை. மானியம் வழங்கப்பட்டது அரிசன நலத்தின் கீழ். ஆனால், அந்தப் பயனை அந்த மக்கள் அடைய முடியவில்லை. குடி யிருக்கும் இடங்கள் தனியாருக்குச் சொந்தமானதாக இருப்பதால்

[திரு. பி. எஸ். தனுஷ்கோடி] [1967 மார்ச் 25

அங்கு தண்ணீர்க் குழாய்களைக் கொண்டு செல்ல முடியவில்லை. ஆகவே, நீர்நிலைத் தொட்டி கட்டியும் அந்த அரிசன மக்களுக்கு தண்ணீர் உபயோகப்படவில்லை. இம்மாதிரியான குறைகள் இருக்கும் இடங்களை சர்க்கார் பரிசிலனை செய்து, அதில் கவனம் செலுத்தி, அப்படிப்பட்ட இடங்களைச் சர்க்காரே ஆர்ஜிதம் செய்தாவது, அரிசனங்களுக்குப் பயன்படும் நிலையில் செயல்பட வேண்டும் என்று அமைச்சரை, தலைவர் அவர்கள் மூலம் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்தில் தண்ணீர் ஊற்றுக் குழாய்க் கிணறுகள் அமைக்க திட்டங்கள் பலவிடங்களில் இருக்கின்றன. ஆனால், சில இடங்களில் அந்தத் திட்டம் நடைபெற வில்லை. அப்படி நடைபெருமல் இருப்பதற்குக் காரணம், தண்ணீர் பூமியிலிருந்து கிடைக்கவில்லை என்று கூறுகிருர்கள். அந்த இடங்களில் பெரிய பெரிய குளங்கள் இருக்கின்றன. அவற்றை ஆழப் படுத்தி, அகலப்படுத்தி தண்ணீரைத் தேக்கி வைத்தால் பின்னல் பம்பு செட்டுகளை வைத்து இறைத்துக் கொள்ள எதுவாக இருக்கும் அதே நேரத்திலே அதன்மூலம், பஞ்சாயத்திற்கும் வருவாய் பெருகும். சில பஞ்சாயத்துக்கள் குறைவான வருவாயை உடையவைகளாக இருக்கின்றன. அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு மீன் வளர்ப்பு மூலம் வருமானம் அதிகமாக வருவதற்கு வாய்ப்பும் ஏற்படும். ஆகவே, இவற்றைக் கவனத்தில் கொண்டு அதை நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் எடுத்து, குளங்களை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, அந்த அளவில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிச் செய்வதால் சின்னஞ்சிறு விவசாயிகளும் பயன் அடைவார்கள். அவர்களுக்கும் பஞ்சாயத்து யூனியன் மூலம் பம்பு செட்டுகள் இலவசமாக வழங்க, மானியம் கொடுத்து தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, அரிசனத் தெருக்களுக்கு மின்சார விளக்குகள் கிடையாது. காரணம் என்னவென்ருல், சொந்தத்திற்கு மின் சாரம் எடுத்துக் கொண்டால்தான் தெருவிற்கு விளக்கு போட முடியும் என்கிருர்கள். அந்தக் குறையைத் தீர்க்க, வருங்காலத்திலாவது, அரிசன மானியத்தின் மூலமாக, அரிசனத் தெருக்களுக்கு விளக்குகள் கொண்டு வருவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அமைச்சரை, தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, மருததுவ மனைகள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். திருவாரூர் நகரிலே ஒரு மருத்துவ மனை இருக்கிறது. அங்குள்ள அதிகாரிகள் ஏழை மக்கள் பிரசவ வசதிக்காகச் சென்ருல், தாய்மார்களைப் பார்த்து பலவிதமான வார்த்தைகளை உபயோகிக்கிருர்கள். "எதற்காக ஆஸ்பத்திரிக்கு வருகிறீர்கள்? வீட்டில் ஏன் . . ." தவருன வார்த்தைகளை தாய்மார்களிடம் பேசி, அவர்களை அனுப்பி விடுகிருர்கள். அது போன்று நடக்கக்



1967 மார்ச் 25] [திரு. பி. எஸ். தனுஷ்கோடி]

கூடாது. ஆகவே, நிச்சயமாக மருத்துவத் துறை அமைச்சர் இதைக் கவனித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடனடியாக அடக்க, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மருத்துவ மனைகள் இதற்கு முன்பு இருந்தது போல் இல்லாமல் நல்ல முறையில் பணி செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு சொசைடிகள் மூலமாக கொடுக்கக் கூடிய உரங்கள், விவசாயிகளுக்குக் காலத்தில் கிடைப்பதில்லை. விவசாயம் ஆரம்பிப்பதற்கு முன்பே, இவ்வளவு விவசாயிகள் இவ்வளவு நிலம் குறுவை சாகுபடி செய்கிருர்கள், இவ்வளவு பேர்கள் சம்பா சாகுபடி செய்கிருர்கள் என்கிற கணக்கை எடுத்து, வேண்டிய உரத்தை விவசாயம் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே தேவையான அளவு உரத்தை பொதுவாக வாங்கி, இருப்புக் கட்டி, காலா காலத்தில் கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சரை, தலைவரவர்கள் மூலம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடுகூட, விவசாயத்தைப் பாதுகாக்கும் அளவில், ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும், ஒரு பவர் ஸ்ப்ரே கொடுக்க வேண்டும். பஞ்சாயத்துக்களால் பவர் ஸ்ப்ரேகளை வாங்க முடியவில்லை. அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு மானியம் வழங்கி, ஒரு பவர் ஸ்ப்ரே கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்ருல், வசதி உள்ளவர்கள், சொந்தத்தில் வாங்கிக் கொள்ளுகிருர்கள், அல்லது யூனியன் மூலமாக பெரிய வசதி படைத்தவர்களுக்கு கிராம சேவக்குகள் பயந்துகொண்டு பவர் ஸ்ப்ரேக்களைக் கொடுக்கும் நிலைதான் இருக்கிறது. நான்கு ஏக்கர், ஐந்து ஏக்கர் நிலமுடையவர்களெல்லாம் இந்த வசதி கிடைக்காமல் அவதிப்படுகிருர்கள். ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு பவர் ஸ்ப்ரே உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அமைச்சரவையைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி மருந்து அடிக்கும் கருவி இருந்தால் ஏழை எளிய விவசாயிகளும் ஸ்ப்ரே செய்து கொள்ள வசதியாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொண்டு, பேச சந்தர்ப்பம் கொடுத்த தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

* திரு. பி. ஜி. கருத்திருமன்: கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சபைமுன் வைக்கப்பட்டிருக்கும், உப மானியக் கோரிக்கைகள் ஏற்கனவே இருந்த சர்க்காரால் செலவு செய்யப் பட்ட இனங்களுக்காக. ஆகையால், நான் எந்த விதமான திருத்தமோ அல்லது தவறுகளோ சொல்லத் தயாராக இல்லை. இருப்பினும், நான் இந்த விவாதத்தில் கலந்து கொள்ளுகிறேன் என்ருல், இன்றைக்கு நம்முடைய நாட்டில் நடக்கும் பதுக்கல் வேட்டை அல்லது கொள்முதல் என்னும் நிலையைபற்றிச் சில கருத்துக் களைச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான். அவற்றை உணவு. விவசாயம் என்கிற மானியங்களின்கீழ் பேச முற்படுகிறேன்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 மார்ச் 25

நம் நாட்டில் இருக்கும் பற்றுக்குறை காரணமாக தானியங்கள் கொள்முதல் செய்து, சரியான விலையில் வேண்டிய மக்களுக்கு விநியோகம் செய்ய மேற்கொண்டு இருக்கிறோம். அதேசமயத்தில் ஒன்றை யோசிக்க வேண்டும். 'அவைலபிள் சர்ப்ளஸை' வெளியிலே வரக்கூடிய அதிகப்படியான நெல்லை விவசாயிகளிடத்தில் வாங்கி, தேவைப்பட்ட இடங்களுக்கு, ஸ்டாட்யூட்டரி ரேஷன் ஏரியாவாக இருக்கும் சென்னை போன்ற பட்டணங்களில் விநியோகம் செய்ய வேண்டும் என்பதுதான் ஏற்பாடு. ஆனால், அந்த ஏற்பாடுகளிலே இப்பொழுது சர்க்கார் எடுத்துக்கொள்ளும்படியான நடவடிக்கைகளும் வருகின்றன. பல இடங்களில் பதுக்கல்காரர்களைப் பிடித்திருப்பதாகவும், எந்த எந்த ஜில்லாவில் எத்தனை எத்தனை க்விண்டால் நெல் அல்லது அரிசி பிடித்திருப்பதாகவும் பத்திரிகைகளிலே வரும் செய்திகளையெல்லாம் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். பதுக்கல்காரர்கள் என்று பிடித்திருப்பதைக் குறித்து பல இடங்களிலிருந்து எனக்குப் புகார்கள் வந்திருக்கின்றன. பல இடங்களில் மிகவும் துன்புறுத்தப்படுவதாகவும், போலீசார்கள் வீடுகளிலே புகுந்து தானியங்களை எடுத்துக்கொள்ளுவதாகவும் எனக்குப் புகார்கள் வந்திருக்கின்றன. கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின் மீது பேசும்போதும் நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன். சர்க்காருக்கு நான் ஒரு ஆலோசனை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கொள்முதல் திட்டம் வெற்றிகரமாக நடக்க வேண்டுமானால், உற்பத்தி குறையாமல் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கவேண்டுமானால், அந்தத் திட்டத்தை நல்ல முறையில்—அவசியப்படும் வகையில் மட்டும்—செய்தாக வேண்டும். இப்பொழுது ஏன் விவசாயி, தான் உற்பத்தி செய்யும் நெல்லைக் கொடுக்கமாட்டேன் என சொல்லுகிறான் என்று ஆலோசிக்க வேண்டும். கொள்முதல் செய்யும்படியான நெல்லுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை கொடுக்கப்படுகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். கொள்முதல் விஷயத்தில் விலையைப்பற்றிப் பல விதமான பேச்சுக்கள் இருக்கின்றன. அடிப்படை விலை குறைந்த விலை என்றுதான் சொல்லுகிறார்களே தவிர, அதிகபட்ச விலை என்பது கிடையாது. அதிகபட்ச விலை என்பது 'ப்ளாக் மார்க்கெட் விலை'. அதாவது, வெளியிலே பகிரங்கமாக விற்கக்கூடிய விலை. வெளியிலே அதிக விலைக்கு தானியங்களை விற்க விவசாயி ஏன் முற்படுகிறான் என்று பார்க்க வேண்டும். பற்றுக்குறை இருக்கும்படியான இடத்தில் தேவையான மக்கள், கையிலே பணம் உள்ளவர்கள், வாங்க சக்தி உள்ளவர்கள், அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். இது விஷயத்தில் மறைத்து வைத்துப் பேசுவதில் பிரயோஜனம் இல்லை என்ற கருத்தில் நான் தெளிவாகவே கூறிவிட விரும்புகிறேன். அதாவது, சர்க்கார் நிர்ணயித்திருக்கும் விலையானது வெளி மார்க்கெட்டில் நிலவும் விலைக்குப் பாதிதான் இருக்கிறது என்பதை நான் இந்தச் சமயத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சர்க்காரில் கொள்முதல் விலைக்கும் வெளியிலே நிலவும் விலைக்கும் பெரிய அளவிற்கு வித்தியாசம் இருக்கிறது. சர்க்கார் கொள்முதல் விலையானது



1967 மார்ச் 25] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

வெளி விலையில் (மார்க்கெட் ப்ரைஸ்) பாதிதான் இருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த முறையில் விலை இருப்பதன் காரணமாகத்தான் ஓரளவு தானிய உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது என்றால், அது மிகையாகாது.

பாராளுமன்றத்தில் பேசும்போது, 'The increase in production in food grains is partly due to the plan partly due to the advanced methods of farming and chiefly due to increased price for the food grains.' என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதாவது, உணவுத் தானிய உற்பத்தி அதிகரித்திருப்பதற்கு ஒரு காரணம் திட்டங்கள்; இரண்டாவது காரணம், தீவிர சாகுபடி; மூன்றாவது, நல்ல விலை இருக்கும்படியான காரணமாகத்தான் உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. நான் ஏதோ பணக்காரர்களுக்காக வக்காலத்து வாங்கிப் பேசுகிறேன் என்ற நிலையில் இதைச சொல்வதாக யாரும் கருத வேண்டாம். 'விவசாயி' என்ற முறையில் நான் சொல்லுகிறேன். கொள்முதல் சீராக நடைபெறுவதற்கும், விவசாயிகளுக்குத் தொந்தரவு இல்லாமலிருப்பதற்கும், சர்க்காருக்கும் தொந்தரவு இல்லாமலிருப்பதற்கும் ஓரே ஒரு வழிதான் உண்டு. உணவுத் தானிய வியாபாரத்தை எந்தவிதமான வியாபாரிகளிடமும் ஒப்படைக்காமல், சர்க்கார்தான் எடுத்து நடத்தியாக வேண்டும். ஸ்டேட் ட்ரேடிங் என்ற ஓரே அமைப்பின் கீழ் கொண்டு வந்து, அந்த அமைப்பின்கீழ் இல்லாது வேறு எந்த விதத்திலும் எந்தத் தானியமும் யாருக்கும் போகவில்லையென்ற நிலையை ஏற்படுத்தினால்தான், ஓரளவு கட்டுப்படுத்த முடியும். உணவு தானியத்தின் மொத்த வியாபாரத்தைச் சர்க்காரே ஏற்றுக்கொள்ளுவதன் மூலமாகத்தான் இதிலே ஒரு தீர்வு காண முடியும். அப்படிச் செய்யாமல், வியாபாரிகளிடம் கொஞ்சம் விட்டு, சர்க்காரும் கொஞ்சம் செய்வது என்ற முறையில் செய்தால் எல்லோரும் சேர்ந்து கொடுக்கும்படியான நிலை ஏற்படும்.

கொள்முதல் விஷயத்திலே என்ன நடக்கிறது என்பதைக் குறித்து நான் ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இங்கே பேசும்போது பலரும் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார்கள். கிராமத்திலே கிராம அதிகாரிகளிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைக்கிறார்கள். அவர்கள் டிமாண்டு போட்டு, ஒவ்வொருவரும் இவ்வளவு தரவேண்டும் என்று நிர்ணயிக்கிறார்கள். ஒரு கிராமத்தில் இராமன், கிருஷ்ணன், கோபாலன் என்று மூன்று பேர்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பத்து ஏக்கர் நிலம் இருக்கிறது என்றும் வைத்துக் கொள்ளுவோம். இந்த நிலையில் கிராம அதிகாரி என்ன செய்கிறார் என்றால், 100 க்விண்டால் நெல் கொடுக்க வேண்டும் என்று இராமன் என்பவருக்கு டிமாண்டு அனுப்பிவிடுகிறார். கிருஷ்ணன் என்பவருக்கு 50 க்விண்டால்தான் இருக்கிறது என்று கணக்குக் காட்டுகிறார். கோபாலன் என்பவரிடம் 150 க்விண்டால் இருக்க வேண்டும் என்று சொல்கிறார். இது எந்தவிதமான நியாயத்திற்கும் கட்டுப்படுவதாக இல்லை. இப்படிக் கிராமத்தில் ஓரே

அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளில் ஒருவர் 50 க்விண்டால்
கொடுக்கவேண்டும் என்றும், இன்னொருவர் 100 க்விண்டால்
கொடுக்க வேண்டும் என்றும், இன்னும் ஒருவர் 150 க்விண்டால்
கொடுக்கவேண்டும் என்றும், கிராம அதிகாரி, தம்முடைய விருப்பு
வெறுப்புக்கேற்றபடி டிமாண்டுகள் கொடுப்பதுதான் அதிருப்தி
வருவதற்குக் காரணமாக இருக்கிறது.

கட்டாயக் கொள்முதல், இன்டென்சிவ் ப்ரொக்யூர்மெண்ட்.
என்று சொல்லி, 'அவெய்லபிள் ஸர்ப்ளஸ்'-ஐ எல்லாம் எடுப்பது
என்று சொன்னால், எந்த விதத்திலும் விவசாயத்தைச் சீராகச்
செய்யவே முடியாது. ஒரு விவசாயி பத்து ஏக்கர் நிலம் வைத்
திருக்கிறார் என்றால், அவரிடம் முப்பது ஆட்கள் வேலை செய்வார்
கள். அந்தப் பத்து ஏக்கர் நிலத்தில் விளைவதைப் பூராவும்
கொண்டுபோய் வெளி மார்க்கெட்டில் விற்றால்தான் தவறுகுமே
தவிர தன்னிடம் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு அந்த
நெல்லைக் கூலியாகக் கொடுக்கும்போது அதைத் தடுக்க சட்டத்தில்
இடம் இல்லை. விவசாயிகளுடைய சொந்த உபயோகத்திற்குக் கூட
வைக்காமல் பூரணமாகக் கொடுக்கவேண்டும் என்ற நிலை ஏற்படு
மானால், அவர்கள் பணப் பயிர்கள் (காஷ் க்ராப்ஸ்) மாற்றுக்
கொள்வதற்கும் வகை இருக்கிறது. விவசாயிகள் உற்பத்தி
செய்வது முழுவதையும் கொள்முதல் செய்யக்கூடாது என்பதற்காக
'லெவி' முறையில், குத்துமதிப்பாக ஒரு குறிப்பிட்ட அளவிற்குக்
கொள்முதலுக்காகக் கொடுத்துவிடவேண்டும் என்ற நிலை ஏற்
பட்டது. உற்பத்தி செய்தாலும் சரி, உற்பத்தி செய்யாவிட்டா
லும் சரி, ஏக்கருக்கு இவ்வளவு என்று குத்துமதிப்பாக நிர்ண
யித்து, அதன்படி கொள்முதல் நடந்து கொண்டு வந்திருக்கிறது.
இப்பொழுது மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்கள் சொன்
னார்கள்—சிறு விவசாயிகளுக்கு விலக்கு அளிக்கிறோம் என்று, 12½
லட்சம் பட்டாதார்களுக்கு விலக்கு அளித்துவிட்டார்கள். இந்த
12½ லட்சம் பட்டாதார்களும், தங்களுடைய நிலத்தில் விளைகிற
தானியம் பூராவையும் தங்களுக்கே வைத்துக் கொள்ளுகிறார்கள்
என்றால் ஆட்சேபனை இல்லை. ஆனால், இவர்களுக்கும், விவசாயம்
செய்வதற்கும், மற்ற காரியங்களுக்கும் பணம் வேண்டுமே. ஒரு
விவசாயியினுடைய நிலத்தில் 15 மூட்டைகள் விளைந்தது என்று
வைத்துக்கொள்வோம். அவனுடைய குடும்பத்தில் இரண்டு பேர்
மூன்று பேர் இருந்தால், சில மூட்டைகளைத் தங்களுடைய சொந்த
உபயோகத்திற்கு வைத்துக்கொண்டு, பாக்கி மூட்டைகளை விற்றுத்
தான் ஆகவேண்டும், மார்க்கெட்டுக்குக் கொண்டுபோய்தான் ஆக
வேண்டும். இந்த 12½ லட்சம் பட்டாதார்களிடமிருந்து கொள்
முதல் செய்வதில்லை என்று அவர்களுக்குச் செப்பேட்டுப் பட்டயம்
கொடுத்துவிடுவதாக இருக்கிறது. இதை நான் சொல்லும்போது,
நான் ஏதோ ஏழை விவசாயிகளிடமிருந்தும் வற்புறுத்திக் கொள்
முதல் செய்யவேண்டும் என்று சொல்லுவதாகக் கம்யூனிஸ்டுக்
கட்சி உறுப்பினரோ அல்லது வேறு யாரோ சொல்லக்கூடும். ஏழை
களை வற்புறுத்தவேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஒன்று



மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். நாட்டு மக்கள் உணவுக்
காகக் கஷ்டப்படும்படியான நிலையில், எந்த விவசாயியாக இருந்
தாலும் ஓரளவுக்குத் தியாகம் செய்யவேண்டும் என்ற நிலையில்,
ஒரு ஏக்கர் நிலம் உள்ள விவசாயி ஒரு மூட்டை நெல் தரவேண்டும்;
இரண்டு ஏக்கர் நிலம் உள்ள விவசாயி இரண்டு மூட்டைகளோடு
இரண்டு மூட்டைகள் சேர்த்து நான்கு மூட்டைகள் தரவேண்டும்,
மூன்று ஏக்கர் நிலமுள்ள விவசாயி, ஏக்கருக்கு மூன்று மூட்டை
கள் வீதம் ஒன்பது மூட்டைகள் தரவேண்டும் என்ற முறையில்
'கிரேடெட் லெவி' வைத்துக் கொள்முதல் செய்தால், சர்க்கார்
போட்டிருக்கும் திட்டம் நிறைவேறும்; விவசாய மக்களிடம் எந்த
விதமான அதிருப்தியும் இருக்காது.

கிராமப்புறத்தில் ரேஷன் கார்டு முறை கிடையாது. கிராமப்
புற மக்களைப் பொறுத்த வரையில் தானிய விஷயமாக அரசாங்கம்
எந்தவிதப் பொறுப்பையும் எடுத்துக்கொள்ளவில்லை. கிராமங்களில்
உள்ள குடியானவர்களுக்கும் ஓரளவு கட்டுபடியாகக்கூடிய அள
விற்கு கொடுத்து, கிராமத்திலேயே இஷ்டப்படி வாங்குவதற்கான
நிலைமையையும் உண்டாக்க வேண்டும். எல்லாம் விவசாயத்திலே
ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள். கட்டாயக் கொள்முதல் என்று
சொல்லி, பத்து லட்சம் டன், 12 லட்சம் டன் என்று வாங்கி சர்க்
கார் வைத்துக்கொண்டால், பெரிய பொறுப்பை ஏற்றுக் கொள்ள
வேண்டியதாக இருக்கும், கிராமத்தில் உள்ளவர்கள் தங்களுக்கும்
ரேஷன் கார்டுகள் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, கிராம மக்க
ளுக்கும் ரேஷன் கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்ற நிலை ஏற்
படும். இதெல்லாம் பெரிய பொறுப்பிலே போய்ச் சிக்கிக் கொள்ள
வேண்டிய நிலை இருக்கும் என்பதை நான் ஞாபகப்படுத்துகின்
றேன். கொள்முதல் சீராக நடைபெற வேண்டுமானால், 'லெவி'
முறையில் ப்ரொக்யூர்மென்ட் செய்ய வேண்டும். அதாவது, குத்து
மதிப்பு முறையில் ப்ரொக்யூர்மென்ட் செய்ய வேண்டும். அதை
விட்டு ஸ்டாச்சுடரியாக, கண்டிப்பாகக் கொடுத்துத்தான் ஆக
வேண்டுமென்ற முறையைக் கொண்டுவந்தால் சிரமங்கள் ஏற்படக்
கூடும். உதாரணமாக, என் பகுதியில் ஏ.டி.டி. 27 ரக நெல்லைப்
போட்டார்கள். அது முதல் போகத்திற்கு ஏற்ற நெல். இரண்டாவது
போகத்தில் இரண்டு மூட்டை கூட விளையவில்லை. லெவி
சிஸ்டத்தில் 10 மூட்டை கொடு, எண்பது மூட்டை கொடு என்றால்,
பூமியில் விளைந்தால்தான் கொடுக்க முடியும். விளையாவிட்டால்
கொடுக்க முடியாது. விளைந்தால் கொடுத்துவிடுவார்கள். சில
இடங்களில் விளைச்சல் இல்லாவிட்டால், அங்கும் குத்துமதிப்பு
முறையில் இவ்வளவு மூட்டை கொடுத்துத்தான் தீரவேண்டும் என்ற
நிலையில் விவசாயிகளை அதிகாரிகள் சிரமப்படுத்துகிறார்கள் என்றால்
விவசாயி என்ன செய்வான்? ஒரு விவசாயி தன்னுடைய தொழி
லாளர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதற்காக பத்து,
இருபது மூட்டைகள் வைத்திருந்தால் அதையும் அதிகாரிகள்
எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள் என்றால், அப்பொழுது
அந்த விவசாயி என்ன செய்வான்? இதையெல்லாம் சிந்தித்துப்
பார்க்க வேண்டும்.

விவசாய மக்கள் உணவுத் தானிய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நிலையை உண்டாக்க வேண்டுமானால், உற்பத்தி செய்கிறவர்களுக்குக் கட்டுபடியாகக்கூடிய லாபகரமான விலையை நிர்ணயம் செய்தாகவேண்டும். விவசாய இலாக்காவைச் சேர்ந்த அதிகாரிகள் மட்டும் இதை நிர்ணயம் செய்தால் போதாது; விவசாயத்திலே நல்ல அனுபவம் உள்ளவர்களும் சேர்ந்து, எந்த விலை கட்டுபடியாகக் கூடிய விலை, எந்த விலை இருந்தால் உற்பத்தி பாதிக்கப்படாமலிருக்கும் என்பதையெல்லாம் கணித்து விலை நிர்ணயம் செய்யவேண்டும். ஆகவே, நல்ல விலை, விவசாயிகளுக்கு லாபகரமான விலையைக் கொடுத்தாக வேண்டும். இப்பொழுது இருக்கும்படியான கொள்முதல் விலையிலேயே தானியங்கள் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுவதனால் உற்பத்தி குறையுமே தவிர, அதிகம் ஆவதற்கான எந்தவிதமான ஆதாரவோ, ஊக்கமோ நிச்சயமாக இல்லை.

ஜில்லாவிற்கு ஜில்லா வித்தியாசம் இருக்கிறது. தஞ்சை ஜில்லாவிலுள்ளவர்கள் நிறைய நெல் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். கோயமுத்தூர் ஜில்லா பற்றாக்குறை ஜில்லாவாகும். அங்கு அந்த ஜில்லாவின் தேவைக்கே உற்பத்தி போதுமானதாக இல்லை. அந்த இடத்தில் 'ரெசிஸ்டென்ஸ்' இருக்கத்தான் இருக்கும். அந்த இடத்தில் உள்ளவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு தான் கொடுக்க வேண்டியிருக்கும். மனக் கஷ்டத்துடன்தான் கொடுக்க வேண்டியிருக்கும். எந்த எந்த இடங்களில் அதிகமாகக் கிடைக்கிறதோ அந்த இடங்களில் வாங்க சர்க்கார் முற்பட வேண்டும். எந்த எந்த இடங்களில் பற்றாக்குறையாக இருக்கிறதோ அங்கெல்லாம் தானியங்களை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு போகத் தடங்கல் இல்லாமல் அனுமதிக்க வேண்டும். எனக்கு வந்த புகார்கள் எப்படி இருக்கின்றன என்றால், ஏதோ டிமாண்டு கொடுத்துவிட்டு, வீட்டிலே வைத்திருக்கும் நெல்லையெல்லாம் கொடுக்கவேண்டும் என்று பல இடங்களில் அதிகாரிகள் வற்புறுத்துவதாகச் சொல்லப்படுகிறது. சட்டப்படி 'ரெக்விசிட் நோட்டீஸ்' கொடுக்கவேண்டும். உங்களிடத்திலே எத்தனை மூட்டை நெல் இருக்கிறதென்று கணக்கெடுத்து, அவர்கள் கொடுத்த கணக்கிற்கு
பி.ப 12–30 மேல் அதிகமாக இருந்து, அதை நிரூபணம் செய்தால், அது பதுக்கலாகும். பதுக்கல் என்றால் ஒரு வியாபாரி மூட்டை அரிசியை வாங்கி ரேஷன் விலையைவிட அதிக விலைக்கு விற்றால் அது பதுக்கல். இன்றையதினம் நம் நாட்டில் 12 லட்சம் பட்டாதார்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாகத்தான் கொள்முதல் செய்ய வேண்டும். இந்த 12 லட்சம் பட்டாதார்களுடைய வீட்டிற்கும் சென்று அவர்கள் நெல்லை பதுக்கி வைத்திருக்கிறார்களா என்று சோதனை போட முடியுமா? இவர்களில் சிறுசில விவசாயிகளும் இருக்கிறார்கள். சிறுசில விவசாயிகளிடத்தில் கொள்முதல் இல்லையென்று சொல்லும்போது, பிறருடைய விளைச்சல் நெல் இந்த சிறு விவசாயிகளின் வீட்டிற்குச் சென்றுவிடும். நம்முடைய முதல அமைச்சர் அவர்கள் நன்றாகச் சொன்னார்கள், கொள்முதல் செய்



வதற்கு விவசாயிகளின் ஒத்துழைப்பு தேவை, கொள்முதலுக்கு நெல் தருவது விவசாயிகளுடைய கடமை என்பதை அவர் நன்றாக விளக்கிச் சொல்லியிருக்க வேண்டும். இதற்கு விவசாயிகளுக்கு நல்ல ஊக்கத்தையும், ஒத்துழைப்பையும் அளித்திருந்தால் அவர்கள் அதிகமான உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழி ஏற்பட்டிருக்கும். அவர்கள் உற்பத்தி செய்கிற தானியத்திற்கு நல்ல விலை கொடுத்து சமுதாயத்திற்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தை விவசாயிகளிடத்தில் பரப்பியிருக்க வேண்டும். அவர்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலையை நாம் நிர்ணயிக்கவில்லை. நியாயமான விலையை நிர்ணயித்தாலே, அவர்கள் முழு உற்சாகத்துடன் சாகுபடி செய்து, நமக்குத் தேவைப்படுகின்ற நெல்லைக் கொடுப்பார்கள். பாசன வசதிகளையும் நாம் சரியான முறையில் அமைத்துக் கொடுக்கவில்லை. இந்த வருஷம் மேட்டூர் அணையிலும் போதுமான தண்ணீர் இல்லை. பருவமழை தவறியிருப்பதன் காரணமாக வெள்ளாமை எல்லாவிடங்களிலும் குறைவாகத்தான் இருக்கிறது. நன்றாக விளையக்கூடிய என்னுடைய பூமியிலேயே இவ்வாண்டு, ஒன்றுக்கு முக்கால்தான் விளைந்திருக்கிறது. விவசாயிகளிடம் வாங்கும் விலையை சர்க்கார் நியாயமாக நிர்ணயித்திருந்தால், எந்த விவசாயியும் கொள்முதலுக்கு நெல் கொடுக்க மறுக்க மாட்டான். இன்றையதினம் ஒரு மூட்டை அரைப்பதற்கு 5 ரூபாய், 6 ரூபாய் என்று ரைஸ் மில்களுக்கே கூலி கொடுக்கிறார்கள். நான் ஒரு ஆலோசனையைக் கூடக் கூறுவேன். தனிப்பட்டவர்களுக்கு ரைஸ்மில்லுக்கு அனுமதியே கொடுக்கக்கூடாது. நாம் கொள்முதல் செய்கிற நெல்லை அரைப்பதற்கு ரைஸ்மில்களிடம் கொடுப்பது என்றாலும், டெண்டர் கோரி அதைக் கொடுக்க வேண்டும். காரணம், இன்றையதினம் பத்தாயிரம் மூட்டை அரைத்துக் கொடுப்பதாக ஒரு ரைஸ் மில் முதலாளி சொல்கிறார் என்றால், அதில் அவருக்கு 40 ஆயிரம் ரூபாய் லாபம் இருக்கிறதென்று சொல்லியே செய்கிறார். தன்னுடைய லாபத்திற்கு ஏற்ற வகையில் அவர் வேறு பல காரியங்களையும் செய்துவிடுகிறார். அதனால் அரிசியின் தரம் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. அரிசியின் தரத்தைப் பரிசோதனை செய்வதற்கு ஆந்திர மாநிலத்தில் பெரிய இன்ஸ்பெக்டர்களைப் போட்டிருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் தரப் பரிசோதகர்களை நியமித்திருக்கிறார்கள். அது போல ரைஸ் மில்களிலிருந்து வெளிவருகிற தானியத்தின் தரத்தை அங்கங்கேயே பரிசோதனை செய்து, நல்ல தரமான அரிசிதானா என்பதை சர்ட்டிபை செய்து அனுப்புவதற்கு நாம் ஏற்பாடு செய்தால் அரிசியின் தரத்தைப்பற்றி எந்தவிதமான புகாருக்கும் இடம் இருக்காது.

இன்றையதினம் திருவாரூரில் மத்திய சர்க்காரின் உதவியுடன் அரிசி மில் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அங்கே 100-க்கு 72 வீதம் அரிசி கொடுக்கப்படுகிறது. ஆனால் இங்கு தனியார் ரைஸ் மில்களில் 65 சதவிகிதம் கூட கிடைப்பதில்லை. பிளாக் மார்க்கெட்டிற்கு விவசாயிகளிடமிருந்து அரிசி போவதைவிட இப்படி இடையில் உள்ளவர்களிடமிருந்துதான் போகிறது. நாம்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 மார்ச் 25

வீணாக விவசாயிகளின்மேல் குற்றம் சாட்டிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய ராஜ்யத்தில் 7 ஆயிரம் ரைஸ் மில்கள் இருக்கிறதென்று சொன்னால், அவை எல்லாவற்றையும் சர்க்காரே குத்தகைக்கு எடுத்து விடலாம். அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டு மென்பது கூட இல்லை. அரைக்கின்ற நெல்லுக்குக் கூலி கொடுத்து விடலாம். அப்படியின்றி 10 ஆயிரம் மூட்டை நெல் அரைத்துக் கொடுப்பதற்கு 40 ஆயிரம் ரூபாய் அந்த ரைஸ் மில் சொந்தக்காரர் சம்பாதிக்கிற ஒரு நிலைமையை நாம் விட்டிருக்கிறோம். விவசாயி களுக்கும் கட்டுபடியாகும் நிலையில் நாம் கொடுப்பதில்லை. வாங்கி உண்பவர்களுக்கும் அவர்களுடைய சக்திக்கேற்ற வகையில் வழி செய்யவில்லை. உற்பத்தி செய்கிறவனுக்கும் இல்லாமல், உண்ப வனுக்கும் இல்லாமல் இடையில் உள்ளவர்கள் சாப்பிட்டுப் போகத் தான் நாம் அனுமதிக்கிறோம். ஆகவே, இன்றைக்கு நாட்டிலுள்ள மக்களின் சக்திக்கேற்ற வகையில் உணவுப் பொருள்களின் விலை நிர்ணயிக்கப்படுவது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலையை நாம் நிர்ணயிப் பது. எல்லாக் கட்சிகளிலும் விவசாயிகள் இருக்கிறார்கள் இப்பொழுது விவசாயம் ஓரளவு நடக்கிறது என்றால், வெளி மார்க்கெட்டில் கொஞ்சம் நியாயமான விலை கிடைக்கிறது என்கிற காரணத்தினால்தான். ஆனால் இன்றைக்கு கொள்முதலைத் தீவிரப் படுத்தி, வெளி மார்க்கெட்டிற்கு வருகிற நெல்லை எல்லாம் பிடித்துக் கொள்வதனால் விலை ஏறிக்கொண்டிருக்கிறது. வெளியில் கிடைப்ப தில்லை. கொள்முதலுக்கு நெல் போட்டது போக, சாகுபடிச் செலவுக்கு வாரா வாரம் தேவைப்படுகின்ற பணத்திற்கு ஒரு விவசாயி தன்னிடமுள்ள கையிருப்பை வாரச் சந்தையில்தான் கொண்டுபோய் விற்றாக வேண்டிய நிலை இருக்கிறது. வாரச் சந்தையில் ஒரு மூட்டை, இரண்டு மூட்டை என்று விற்காமல் அவனால் குடும்ப நிர்வாகத்தையும் சாகுபடியையும் செய்ய முடியாது. ஆனால் இன்றையதினம் அவன் வெளியே வர முடிய வில்லை. போலீசாரைக் கண்டு பயம். போலீசார் வேஷம் போடுகிற வர்களைப் பார்த்து பயம், அதிகாரிகளைத் தாஜா பண்ணிக்கொண்டு நடமாட வேண்டிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கொள்முதல் செய்யத்தான் வேண்டும். ஆனால் இந்த முறையில் அல்ல. கொள்முதல் சீராக சிறப்பாக நடப்பதற்கு விவசாயி களுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலையைக் கொடுத்தாக வேண்டும். இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது சர்ச்சில் அவர்கள் சொன்னார்கள்; லண்டன் மாநகரில் குண்டுகள் விழுந்துக் கொண்டிருந்தபொழுது "Give us the tools and we will finish the

போதுமான ஆயுதங்களைக் கொடுங்கள், நான் படையெடுப்பை முறியடிக்கிறேன் என்றார். அதுபோல இன்றைக்கு தமிழகத்தி லுள்ள விவசாயப் பெருமக்களின் சார்பாகச் சொல்கிறேன். எங்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலையை, லாபகர விலையை நீங்கள் கொடுப்பதற்கு முன்வாருங்கள், உங்களுக்கு தேவைப் படுகிற நெல் அவ்வளவையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.



1967 மார்ச் 25]

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** நியாயமான விலை என்ன என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நியாயமான விலை கட்டுபடியாகக் கூடிய விலை என்று சொன்னால் இப்போதுள்ள விலையைவிட இரண்டு மடங்கு கொடுப்பதுதான் நியாயமாக இருக்கும். மற்றப் பொருள்களின் விலைகள் எல்லாம் அவ்வளவு உயர்ந்துவிட்டன. சாகுபடி கூலி உயர்ந்துவிட்டது. இப்போதுள்ள விலையை விட ஒரு 25 சதவிகிதம் அல்லது 50 சதவிகிதமாவது உடனடியாக விலை யைக் கூட்டிக் கொடுத்தால், உங்கள் கொள்முதல் திறம்பட நடை பெறும். முதலமைச்சர் அவர்கள் கூறியதைப் போல 'ஸ்டேட் டிரேடிங்' உணவு தானியத்தைப் பொறுத்தவரையில் முழு அள வுக்கு எடுத்துக்கொண்டு விடுங்கள். வெளி மார்க்கெட்டே வேண்டாம். விவசாயிகளுக்கு நீங்களே நியாயவிலை கொடுக்க முன் வந்தால், உற்பத்தி செய்யும் எல்லா தானியத்தையும் உங்களிடத் தில் கொடுத்து விடுவார்கள். வெளியில் தவறுகக் கூடச் சொன்னார் கள். நண்பர் கருத்திருமன் அவர்கள் ப்ரொக்யூர்மெண்டுக்கு எவ்வளவு நெல் கொடுக்க வேண்டுமோ அவ்வளவு நெல் கொடுத்து விட்டால் ஜில்லாவிலுள்ள மற்றவர்கள் எல்லாம் கொடுத்து விடு வார்கள்' என்று சொன்னார்கள். ப்ரொக்யூர்மெண்டுக்கு நான் கொடுப்பதில்லை போல யாரும் நினைக்கவேண்டாம். என்னிடம் நன் செய் பூமி கிடையாது. கடந்த 45 வருடங்களாக நீங்கள் கணக் கெடுத்துப் பார்க்கலாம். களத்திலிருந்து நெல்லை வீட்டிற்கு கொண்டு போவதற்கு முன் ப்ரக்யூர்மெண்டுக்கு எவ்வளவு தானியம் கொடுக்கவேண்டுமோ அதை முதலில் அளந்து விட்டு மீதியை வீட்டிற்கு கொண்டுபோவேன். குறிப்பிடுகின்ற நெல்லை இவர் என்னடா அளந்துவிடுகிறார்கள் என்று மற்ற விவசாயிகளுக்குக் கூட என்னிடத்தில் கோபம் இருக்கும். ஆனால் ப்ரக்யூர்மெண்டுக்கு அளந்து விட்டுத்தான் என் சொந்த உபயோகத்திற்கு மீதியை எடுத்துக்கொள்வேன். இன்றைக்கு நாம் பாரபட்சம் இல்லாமல், ஒருவருக்கு லாபம் என்றால் எல்லோருக்கும் லாபம் வரும்படியாக, ஒருவருக்கு நஷ்டம் என்றால் எல்லோருக்கும் நஷ்டம் வரும்படி யாக கட்சி வேறுபாடு இல்லாமல் செல்வ வேறுபாடு இல்லாமல், விவ சாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய நியாயமான விலையைக் கொடுத்து அவர்களுடைய தேவைக்குப் போக மிச்சமுள்ள உபரி தானியம் எல்லாவற்றையும் கொள்முதல் செய்வதற்கு முன்வந்தால் நம்முடைய கொள்முதல் திட்டமானது வெற்றிகரமாக நடக்கும் என்று சொல்லிக்கொண்டு நான் என் உரையை முடித்துக்கொள் கிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் பேரில் பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன எல்லாக் கருத்துக்களும்; ஒரு கருத்துத் தவறா மல் தீவிரமாகச் சிந்திப்பதற்கேற்ற கருத்துக்கள் என்பதில் எந்த விதமான ஐயப்பாடும் இல்லை. எனக்கு முன் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் "விவசாயிகளுக்கு கட்டு

படியாகக் கூடிய அளவுக்கு விலையைக் கொடுப்பார்களேயானால், இந்தக் கொள்முதலிலே எந்தவிதமான குந்தகமும் ஏற்படாது; நீங்கள் எதிர்பார்க்கின்ற அளவுக்குக் கிடைக்கும் என்று சொன்னார்கள். விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை என்ன என்பதைப் பற்றியும்; மற்ற விவசாயிகளிடத்தில் கலந்து பேசி அறிவிப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அறிவித்த பிறகு அதைப்பற்றி நிச்சயமாக யோசிக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

நானும் அவருமாகச் சேர்ந்து பத்துப் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னாலே கோபிச்செட்டிப்பாளையத்திலே ஒரு விவசாயிகள் மாநாட்டில் கலந்து கொண்டோம். அந்த மாநாட்டின் தீர்மானங்கள் என்னிடத்தில் இருக்கின்றன. அவர்கள் இப்போது அந்தத் தீர்மானங்களிலிருந்து வெகு தூரம் மாறி இருக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஒன்றை உடனடியாக ஒத்துக் கொள்கிறேன். விவசாயிகள் உற்சாகத்தை இழந்து விடுவார்களேயானால் அதற்குப் பிறகு நாட்டிலே எந்தவிதமான திட்டங்களைப் போட்டாலும் அவை நிறைவேறா என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால் அந்த உற்சாகம் என்பது பணத்தின் மூலமாகத்தான் வரவேண்டுமா, நாட்டுப்பற்று மூலமாக வரக்கூடாதா என்பதுபற்றி மாண்புமிகு கருத்திருமன் அவர்கள்தான் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். விவசாயிகள் இன்றைய தினம் அதிகம் கேட்கிறார்கள் என்று சொல்லும்போது அதிகப் பணத்தைக் கேட்பதாக நான் கருதவில்லை. அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற செலவினங்கள் அதிகரித்துக்கொண்டு வருவதால் அவர்கள் அதிகப் பணம் கேட்கிறார்கள். இந்த இடத்திலேதான் நான் குறிப்பிட்டுச் சொல்வதை விவசாயப் பெருங்குடி மக்கள் சிறிது அக்கறையோடு கவனிக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

ஒன்றைத்தொடர்ந்து மற்றொன்று விலை ஏறிக் கொண்டிருப்பது ஒரு விஷச் சக்கரமாக நம்முடைய நாட்டிலே இருந்து கொண்டு வருகிறது. இதை எந்த இடத்திலே நாம் வெட்ட வேண்டும்? எந்த இடத்திலே வெட்டுவது என்று பார்க்கிறபோது, நம்முடைய நாட்டில் தொழில்துறை ஓரளவு வளர்ந்திருந்தாலும், பொருளாதார அடிப்படை இன்னமும் விவசாயத்திலேதான் அமைந்திருக்கிறது. ஆகையினால் உணவுப் பொருள் விஷயத்தில் நாம் கொஞ்சம் விலையைக் கட்டுப்படுத்தி குறைப்போமானால் அதைத் தொடர்ந்து மற்ற விலைகள் குறையும். அந்த வகையில் பார்க்கும்போது இன்றையதினம் ஏர் விலையில் இருந்து எருதுகள் விலை வரை ஏறியிருக்கிறது. விவசாயக் கூலி ஏறியிருக்கிறது. இந்த நிலையில்தான் விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலை நிர்ணயிக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலை கொடுக்கவேண்டுமென்பதைப் பற்றி முன்னாலே இருந்த சர்க்கார் வெகு தீவிரமாக ஆலோசித்தார்கள். அந்தச் சர்க்காரும் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் கருத்திருமன் அவர்களுக்கு வேண்டிய சர்க்கார்தான். அவர்கள் அவ்வளவு அநியாயமாகத் தீர்ப்பளித்திருப்பார்கள் என்று நான் கருதவில்லை.



அது அநியாயமான தீர்ப்புதான் என்று அவர்கள் என்னிடத்தில் விளக்குவார்களேயானால் நான் மறுபரிசீலனை செய்வதில் எந்த விதமான தவறும் இல்லை.

இது அடிப்படையாக இருக்கின்ற பிரச்சினையாகும். நம் முன்னாலே இருக்கின்ற பிரச்சினை—கடந்த டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் இந்தக் கொள்முதல் விஷயத்தில் அப்போது இருந்த சர்க்கார் போதுமான அளவு தேவை இல்லையென்றோ, அல்லது வேறு ஏதாகிலும் கொள்கையிலே மாற்றம் செய்யலாமென்றோ; எந்தக் காரணத்தாலோ கொள்முதலைத் தீவிரப்படுத்தாமல் விட்டு விட்டார்கள். முன்னாலே இருந்தவர்கள் அவசர அவசரமாக வேறு பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டார்கள் என்று திரு. ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். அதிலே காட்டிய அக்கறையை இந்த விஷயத்திலே, மக்களுக்குத் தேவையான விஷயத்திலே முன்பு இருந்த சர்க்கார் காட்டியிருந்தால் நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற நேரத்தில் இருந்த நிலைமை இருந்திருக்க வேண்டியதில்லை. அந்த நிலைமையைப் பற்றி நீங்கள் யூகித்து அறிந்து கொள்ளலாம். ஆனால் மூன்று மாதங்களாக கொள்முதல் விஷயத்தில் எந்தவிதமான திட்டவட்டமான அறிவிப்பும் இல்லாமல் நெல் விளைந்திருந்த நேரத்தில், கொள்முதல் எளிதாகக் கிடைக்கின்ற நேரத்தில், அதை வாங்குகின்ற காரியங்களிலே முன்னாலே இருந்த சர்க்கார் தயக்கம் காட்டிவிட்டு விட்ட காரணத்தால், நாங்கள் வந்தபோது அந்தக் கொள்முதலைத் தீவிரப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதிலே பல உறுப்பினர்கள், அதிகாரிகள் தவறாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறினார்கள். எந்தெந்த இடத்தில் எந்தெந்த அதிகாரி தவறாக நடந்து கொண்டார் என்று என்னிடத்தில் மெய்ப்பிக்கலாம். அப்படித் தவறாக நடந்து கொண்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள இந்தச் சர்க்கார் தயங்காது என்பதை உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். நேற்று கூட திருச்சியில் போலீசார் தவறாக நடந்து கொண்டார்கள் என்று பத்திரிகையில் செய்தி வந்தது. போலீஸ் உயர்தர அதிகாரி அப்படிப் போலீசார் நடந்து கொள்ளவில்லை என்று மறுப்புக் கொடுத்திருக்கிறார்கள். வேறு யாராவது அப்படி நடந்து கொண்டார்களா என்று விசாரிக்கப்பட்டதில், வேறு இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கொஞ்சம் காரமாக நடந்து கொண்டார் என்ற அளவுக்குத் தகவல் கிடைத்து மேற்கொண்டு விசாரிக்கும்படி நாங்கள் செய்தி அனுப்பியிருக்கிறோம் என்று சொன்னேன்; உத்தரவு அனுப்பினோம் என்று சொல்லவில்லை. அதற்குக் காரணம் முறைப்படி எங்களிடத்தில் எந்தச் சட்டமன்ற உறுப்பினராவது கையொப்பமிட்டுக் கொடுப்பார்களேயானால் முறைப்படி விசாரிக்க வசதியாக இருக்கும். நம்முடைய திருவாரூர் அங்கத்தினர் சொன்னது போல் யாராவது அதிகாரிகள் மரியாதை மறந்து தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள் என்றால், அப்படிப் பட்டவர்கள் உடனடியாகக் கண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான்.

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 25

அந்த அதிகாரியைப்பற்றிய முழு விவரத்தையும், யாரிடத்தில்
எப்போது தவறாக நடந்து கொண்டார் என்று விவரமாக எழுதி
எங்களிடத்தில் மனுக் கொடுத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்
படும் என்பதற்கு உறுதியளிக்க விரும்புகிறேன். நாங்கள் சமூக
விரோத சக்திகள் வெளியிலே மட்டும் இருக்கிறார்கள் என்று கருத
வில்லை, அதிகாரிகளுக்கு உள்ளாகக் கூட சிலர் இருக்கலாம். சமூக
விரோதிகள் எங்கே இருந்தாலும் அவர்களைத் தயவு தாட்சண்யம்
இல்லாமல் கண்டிப்பதிலே இந்தச் சபையில் அரசியல் கட்சி பாகு
பாடு இல்லாமல் நாம் அனைவரும் ஒன்றுபட்டு சமூக விரோதச்
சக்தியை அடக்கி ஆகவேண்டும்.

இந்தத் தொடர்பில் நண்பர் கருத்திருமன் அவர்கள் பதுக்கல்
காரர்கள் விஷயத்தில் நாங்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளைப்
பற்றி மனக் குறையோடு பேசினார்கள். ஒன்றை நான் இந்தச்
சபையில் எடுத்துக் கூற விரும்புகிறேன். பதுக்கல் சமூக விரோத
காரியம். பதுக்குகிறவர்கள் யாராக இருந்தாலும், உணவுப்
பொருள்களைப் பதுக்குகிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை
விட சமூகத்திற்கு ஆபத்தானவர்கள், கேட்டை உண்டாக்கக்கூடிய
வர்கள் வேறு யாருமே இருக்க முடியாது என்பதை நாம் அறிந்து
கொள்ள வேண்டும். ஒரு லாரியில் பதுக்கல் நெல் மூட்டைகள்,
அரிசி மூட்டைகள் ஏற்றிச் செல்லப்படுகின்றன என்றால், ஏற்றிச்
செல்லப்படுவது அரிசி மூட்டைகள் மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான
உயிர்கள் அதிலே ஏற்றிச் செல்லப்படுகின்றன, இலட்சக்கணக்கான
பேரைப் பட்டினி போடுவதற்கான சதித் திட்டங்கள் அதிலே
ஏற்றிச் செல்லப்படுகின்றன என்பதை நாம் அறிவோமானால்,
அப்படிப்பட்ட பதுக்கலை அடக்குவதற்கு நாங்கள் எடுத்துக்
கொண்டிருக்கிற முறை போதாது என்று என்னுடைய மதிப்பிற்
குரிய கம்யூனிஸ்ட் மெம்பர்கள் சொல்வதை வரவேற்க வேண்டிய
வனாகத்தான் இருக்கிறேன். அவர்களுக்கும் சொல்லிக் கொள்
வேன்—இதை நாங்கள் ஆரம்பிக்கின்றபோதே எவ்வளவு புகார்
கள் வருகின்றன என்பதை அவர்கள் எண்ணிப் பார்த்தால்;
ஆங்கிலத்திலே சொல்வார்களே "hasten slowly" என்று;
அதைப் போல் 'வேகம் இருக்க வேண்டும்' அதே நேரத்திலே
நிதானம் இருக்க வேண்டும்' என்று சொல்வார்கள். இந்தச் சர்க்
காருடைய கொள்கை "hasten slowly" என்பதுதான்.
விரைவாகத்தான் செல்வோம், ஆனால் இடறி விழத்தக்க விரைவில்
அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய
கருத்திருமன் அவர்கள் சொன்னதுபோல் பதுக்கல்காரர்களைக்
கண்டு பிடிக்கும்போது அக்கிரமங்கள் நடக்குமானால், விவசாயிகள்
தொல்லைக்கு ஆளாக்கப்படுவார்களேயானால், அவர்கள் அதைப்
பற்றி என்னிடத்திலே அறிவிப்பது மட்டுமல்லாமல், கருத்திருமன்
அவர்களே நேரடியாக விசாரணை செய்து அதைப் பற்றித் தெரி
விப்பார்களானால், அத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுகின்றவர்
களைப் பலமான முறையில் தண்டிக்க இந்தச் சர்க்கார் தயங்காது.

ஆகையினால், மூன்று விஷயங்களை நாம் இந்தச் சபையிலே
ஒத்துக் கொண்டிருக்கிறோம். உணவு நிலைமை நெருக்கடியாக



1967 மார்ச் 25] [திரு. சி. என். அண்ணாதுரை]

இருக்கிறது என்பதை எல்லாக் கட்சிக்காரர்களும் ஒத்துக் கொண்
டிருக்கிறோம். இதுவரை போதுமான அளவுக்குக் கொள்முதல்
செய்யப்படவில்லை; போதுமான அளவுக்குக் கொள்முதல் செய்
தால்தான் பொறுப்புகளை நிறைவேற்ற முடியும் என்பதையும்
ஏற்றுக் கொண்டிருக்கிறோம். பதுக்கல் இந்த நாட்டிலே இருக்
கிறது என்பதையும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இந்த மூன்றை
யும் ஏற்றுக் கொண்டான பிறகு பதுக்கலை அடக்குவதற்கான
முறைகளில் குறைபாடுகள் இருக்குமானால் தாராளமாக சுட்டிக்
காட்டவேண்டும்; குறைபாடுகள் நிச்சயம் நீக்கப்பட வேண்டும்.
கொள்முதலை வெற்றிகரமாக நடத்துவதற்கு ப்ரொக்யூர்மெண்டு
நல்லதா; லெவி முறை நல்லதா என்பதைப்பற்றி நண்பர் கருத்
திருமன் அவர்கள் இங்கே பேசினார்கள். இங்கே சொன்னது
மட்டும் அல்ல, நானும் அவரும் கூட தனியாக அதுபற்றிப் பேசிக்
கொண்டிருந்தோம். லெவி முறையை முதலில் கையாண்டு பார்த்
ததில் அதில் பல குறைபாடுகள் ஏற்பட்ட காரணத்தினால் ப்ரொக்
யூர்மெண்டு முறைக்கு வந்ததாக எனக்கு அறிவிக்கப்பட்டு இருக்
கிறது. ஆனால் அதைப்பற்றியும் பரிசீலனை செய்து பார்க்கலாம்.
அந்த முறை, இந்த முறை என்பதாக பெயர் எப்படி இருந்தாலும்
அது பெரிய பிரச்சினை அல்ல. நாம் சென்னை நகரம், கோவை
நகரம் ஆகிய இடங்களில் ரேஷன் பொறுப்பை ஏற்றுக்கொண்
டிருக்கிறோம். அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அரிசி
வேண்டும். மற்ற இடங்களுக்கு குடும்பக் கார்டு என்ற முறையில்
அரிசி விநியோகம் செய்யவும் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால்
அவற்றுக்கும் தேவையான அரிசி வேண்டும். இன்னும் குடும்பக்
கார்டு என்ற முறையில் அரிசி விநியோகம் செய்வதை வேறு பல
இடங்களுக்கும் விரிவான முறையில் ஏற்படுத்தியாக வேண்டும்
என்று சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அதுவும் புறக்
கணிக்கப்பட முடியாத கோரிக்கை.

இந்தப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான
அரிசியை நாம் கொள்முதல் மூலமே பெற்றாக வேண்டும்.
சர்க்காரிடத்தில் பண்ணைகள் இல்லை. சர்க்கார் கொள்முதல்
முழுவதையும் எடுத்துக்கொண்டு புட் க்ரெய்ன் சம்பந்தப்பட்ட
வியாபாரத்தையே மேற்கொள்ளலாம் என்பது கொள்கை அளவில்
ஒப்புக்கொள்ளப்பட்டதாயினும், அத்திட்டம் எண்ணிப் பார்ப்
பதற்கே வசீகரமானது என்று கருதினாலும்—இன்றையதினம்
நாம் உற்பத்தியில் 20 சதவிகிதம்தான் கொள்முதல் செய்கிறோம்,
இதற்கே மத்திய சர்க்காரிடம் இருந்து பணம் கேட்டு அவர்களும்
அதை உரிய நேரத்தில் கொடுக்காத காரணத்தினால் ரிசர்வ்
பாங்கில் இருந்து ஓவர் டிராப்ட் வாங்குகிறோம் என்கிற
குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருக்கிறோம் என்பதை மன்ற அங்கத்
தினர்கள் உணர்வார்கள். எல்லா நெல்லையும் நீங்கள் கொள்முதல்
செய்து விடுங்கள் என்று நண்பர் கருத்திருமன் அவர்கள் சொல்லும்
போது 'எல்லா நெல்லையும் கொள்முதல் செய்வதானால் இவர்களிடம்
எங்கே பணம் இருக்கிறது? இப்படிச் சொல்லி ஒரு மிரட்டு மிரட்டிப்

பார்ப்போம் என்கிற எண்ணத்தில் சொன்னார்கள் என்று நான்
கருதவில்லை. உண்மை நிலை 20 சதவிகிதம் கொள்முதல்
செய்வதற்கே சர்க்காரிடம் பணம் இல்லை என்பதுதான். சட்டியில்
மாவு இருந்தால்தான் பணியாரம் கிடைக்கும். அவர்கள் கொடுத்த
சட்டியை சுரண்டிச் சுரண்டி எடுத்தாலும் மாவு வரவில்லை.
ஆகையால்தான் இன்று இந்தக் கொள்முதல் நூற்றுக்கு 20 சத
விகிதம் என்ற அளவில் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.
நம்முடைய நடவடிக்கைகளின் மூலம் பதுக்கலைத் தடுப்பதில் எவ்
விதப் பலனும் இல்லை என்று யாரும் கருதத் தேவை இல்லை.
சில இடங்களில் குறைபாடுகள் ஏற்பட்டிருக்கலாம். ஒரு
இருவர் கூட உயர்நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள், சட்டத்
தின் துணையை நாடித் தடைசெய்வதற்கு. சட்டத்திற்குப் புறம்
பாகப் போய் இந்தக் கொள்முதலை செய்யவேண்டுமென்று நான்
விரும்பமாட்டேன். சட்ட மன்றத்திலே மாறுபட்ட கருத்து தெரி
விக்கப்பட்டது என்ற காரணத்தினாலே நாங்கள் செய்தது சட்ட
விரோதமான காரியம் என்றும் எண்ணத் தேவையில்லை. சட்டத்
திற்கு உட்பட்டு செய்கிற காரியத்தில் கூட சில அதிகாரிகள் அவசர
மான முறையில் நடந்து இருக்கலாம். நண்பர் கருத்திருமன்
அவர்களுக்குத் தெரியாதது அல்ல. சிலர் நிதானமாகப் பேசு
கின்றார்கள். சிலர் அதிகமாகப் பேசுகின்றார்கள். விட்டுவிட்டுப்
பேசுகின்றவர்கள்கூட இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு
பாணி இருக்கிறது. அதிகாரிகளில் கூட இந்தப் பாணி இருக்க
லாம். "ஐயா, சமூகத்திற்குத் தேவையான காரியம் இது.
உங்களிடம் இருக்கும் உபரி தானியத்தைக் கொடுப்பது நீர் சமூகத்
திற்குச் செய்கிற சிறந்த தொண்டாகும்" என்று மனதில் படுகிற
படி நயமாகச் சொல்லி கொள்முதல் செய்கிற அதிகாரியும் இருக்க
லாம். இத்தகையவர்கள்தாம் உண்மையான அதிகாரிகள்—தங்கள்
கடமைகளை பொறுப்புணர்ச்சியுடன் ஆற்றக் கூடியவர்கள். அதே
நேரம் வீட்டு வாசற்படியிலேயே நின்று கொண்டு "யார் ஐயா,
மாணிக்கம் செட்டியாரா, வெளியில் வா" என்று சொல்லக் கூடிய
அதிகாரியும் இருக்கலாம். அப்படிப்பட்ட அதிகாரிகளை நீங்கள்
என்னிடம் சுட்டிக் காட்டினால் முதயில் நானே தனிப்பட்ட முறை
யில் அவர்களுக்கு மரியாதை என்ன என்பதைக் கற்றுக்கொடுக்
கிறேன். அதற்குப் பிறகு சட்டப்படி செய்யவேண்டியதையும்
செய்யலாம். நண்பர் விநயகம் அவர்கள் குறிப்பிடுவது போல
வாரண்டு இல்லாமல் போய் எடுத்தார்கள் என்று சொல்லலாம்.
அது கோர்ட்டுக்குப் போய் இருக்கிற விவகாரம். நண்பர் விநாயகம்
சட்டமன்ற உறுப்பினர் மட்டும் அல்ல, வழக்கறிஞர். இந்தச்
சட்டத்தின்படி நீங்கள் தவறு செய்தீர்கள் என்று வாதாடினால்,
அந்தச் சட்டத்தின்படி அது நியாயம் என்று சொல்வார்கள். அது
அவர்களுக்கே உரிய பிரத்தியேக சாமர்த்தியம். கோர்ட்டில் உள்ள
வழக்கு முடிந்த பிறகு அதைப் பார்க்கலாம்.

சட்டத்திற்கு உட்பட்டு கொள்முதல் செய்கிறபோது ஒன்றி
ரண்டு இடங்களில் இப்படி நடந்தது என்று நண்பர் சொன்ன
போது நான் வருத்தப்பட்டேன். அதைக் கவனித்து கண்டிப்பாக





நடவடிக்கை எடுப்பேன். ஆனால் கொள்முதல் செய்வதில் நாம்
தீவிரமாகக் கவனம் செலுத்தத்தான் வேண்டும் என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன். எந்த அளவுக்கு சென்ற வருடங்களில்
இதே நாளில் நம்மிடம் கையிருப்பு இருந்ததோ அந்த அளவுக்கு
இன்று இல்லை. அதுதான் மறைக்க முடியாத உண்மை, வேதனை
தருகின்ற உண்மையும் ஆகும். சாப்பிட்டு வெற்றிலை போட்டுக்
கொண்டு வெளியே வரும்போதுதான் நமக்கு வெளியில் உள்ளவர்
களுடன் பேசவே தோன்றுகிறது. "என்ன ஐயா எப்போது
பிள்ளைக்குக் கல்யாணம்? தேதி வைக்கவில்லையா" என்பதாக
விசாரிக்கவே ஆரம்பிக்கிறோம். பசி எடுக்கிறபோது வருகிறவர்கள்
கூடக் கண்ணில் தெரியாது. சோறு எங்கே என்றுதான் கேட்பார்
கள். இந்தச் சர்க்கார் இன்று பசியோடு இருக்கிறார்கள். முதலில்
அந்தப் பசி அடங்கியவுடன் நண்பர் கருத்திருமன் அவர்கள் குறிப்
பிட்டதைப்போல விவசாயிகள் மகாநாடு. வர்த்தகர்கள் மகாநாடு
எல்லாவற்றையும் கூட்டி. இதுபற்றி நன்கு ஆலோசிப்போம்.
எல்லோரும் உட்கார்ந்து பேசலாம். விவசாய மக்களிடம் பரிவு
காட்டாதவர்கள் எந்தக் கட்சியிலும், யாரும் இல்லை. ஆனால்
இன்றையதினம் கொள்முதலை வெற்றிகரமாக நடத்த வேண்டும்
என்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறேன். அது நியாயம்
என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். யாரும்
கொள்முதல் கூடாது என்று சொல்லவில்லை. முறைத் தவறு
கூடாது. கண்டிப்பு கூடாது, வியாபாரிகளும், விவசாயிகளும்
இழிவாக நடத்தப்படக் கூடாது என்கிறார்கள். இந்த நியாயத்தை
நானும் ஒத்துக்கொள்கிறேன். இவைகள் எல்லாம் அதைச் செயல்
படுத்துகிற முறையில் இடையே ஏற்பட்டுவிடுகிற கறைகளே தவிர
—கொள்முதல் திட்டத்தில் இருக்கிற குறைபாடு அல்ல. சரியான
முறையில் நாம் காரியங்களைச் செய்துகொண்டு போனால் வருகிற
அடுத்த அறுவடை நேரத்தில் நாம் எதிர்பார்ப்பதையும்விட அதிக
அளவு உணவுப் பொருள்கள் மிகுதியாக இருக்கும் என்று கணக்குத்
தரப்படுகிறது.

எ.டி.டி. 27-ஐப் பற்றியும் சொன்னார்கள். நண்பர் கருத்திருமன்
அவர்கள், அதை என்னமோ என்று எண்ணிவிடாதீர்கள், சிலவிடங்
களில் அந்த விதைகளின் மகசூல் குறைவாகவே இருக்கிறது என்று
சொன்னார்கள். ஏ.டி.டி. 27-ஐப் புகுத்தியபோதே எனக்கு அந்தச்
சந்தேகம் இருந்தது. ஏ.டி.டி. 27-ஐக் கொடுத்து, அந்தப் பகுதிக்கு
அதிகமான உரத்தையும் கொடுக்கிறபோது அங்கே அதிக
அளவு விளைகிறது என்றாலும், அந்த அளவுக்கு மற்ற இடங்களில்
உரம் கிடைத்தபோது விளைவு குறையத்தானே செய்யும், ஓரிடத்
தில் அதிகம், ஓரிடத்தில் குறைவு என்கிறபோது இரண்டும்
மொத்தத்தில் சமனாகத்தான் இருக்கும் என்று சொன்னேன்.
அதுபற்றிய சந்தேகங்கள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன.
ஏ.டி.டி. 27-க்கு ரசாயன உரங்கள் அதிகம் தேவைப்படுகிறது. மற்ற
விதைகளுக்கு பசுந்தாள் உரம் அதிகம் தேவைப்படுகிறது. ஆக

நாம் இந்த இரண்டு வகை உரங்களையும் அலட்சியம் செய்வதற்கில்லை. இந்த இரண்டு வகை உரங்களிலும் கவனம் செலுத்தி நல்ல முறையில் சாகுபடி வேலைகள் நடைபெறுவதற்கு உதவியாக இருந்தால் நான்கைந்து வருடங்களிலேயே உணவுத்துறையில் இந்தியாவில் உள்ள மற்றப் பகுதியினர் இந்த உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னாலேயே நாம் தீர்த்து விட முடியும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்த அளவுக்கு கருத்தோடு உழைக்கின்ற விவசாயிகள் நம்மிடம் இருக்கிறார்கள். அவர்கள் பேரில் இனியும் குறை சொல்லிக்கொண்டிருப்பது மோசமான காரியமாகும். புதிய முறையை இன்று கற்றுக் கொடுத்தால் நாளையே அதைக் கையாண்டு செயலாற்றுவார்கள். அந்த அளவுக்குத் திறமை இருக்கிறது.

நெல் விலை கட்டுபடியாகவில்லை என்பதற்காக அவர்கள் கரும்புக்குப் போய்விடுவார்கள், பருத்திக்குப் போய்விடுவார்கள், புகையிலைக்குப் போய்விடுவார்கள் என்று நண்பர் சொன்னபோது நான் வருத்தப்படவில்லை. பயப்பட்டேன். நீங்களே இப்படிச் சொல்வது—தெரியாதவர்களைப் பார்த்து, "நெல் பயிரிடாதீர்கள். லாபம் இல்லை. கரும்பு போடுங்கள், பருத்தி போடுங்கள், புகையிலை போடுங்கள், லாபம் அதிகம் வரும்" என்று தூண்டுவதுபோல இருக்கிறது. அந்த எண்ணத்தோடு அவர்கள் சொன்னார்கள் என்று சொல்லவில்லை. அவர்கள் எனக்கு எச்சரிக்கையாகச் சொன்னார்கள். ஆனால் அது வெளியில் தவறானதாகத் தோன்றும். யார் என்ன சொன்னாலும் விவசாயிகளுக்கு உண்மை தெரியும். அவர்கள் கரும்புக்குப் போய்விடுவார்கள், பருத்திக்குப் போய்விடுவார்கள் என்று நாம் எண்ணிவிடக் கூடாது, அப்படியே போகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். இன்றைக்கு கரும்பு பயிரிடுபவர்கள் குறைவு. அதனால் லாபம் வருகிறது. நாளை எல்லோரும் கரும்பு பயிரிட்டார்கள் என்றால் கரும்பு விலை விழுந்துவிடுகிறது. சப்ளை அண்டு டிமாண்டு நியாயம் தானே இது. எல்லோரும் கரும்புக்கு போனார்கள் என்றால், பருத்திக்குப் போனார்கள் என்றால் அவற்றின் விலை வீழ்ந்து, நெல்லில் கிடைக்கிற லாபம் கூட இல்லாது போய்விடுகிறது. ஆக, நிலம் என்று இருந்தால் அதைப் பயிரிடத்தான் வேண்டும். நிலம் காம்பாகக் கிடந்தால் ஒரு விவசாயி கண்ணீர் விடுவானே தவிர—மாற்றி மாற்றி எதையாவது பயிரிடத்தான் செய்வான்.

சில மிராசுதார்கள் விட்டு விடலாம். விவசாயக் கூலிகளிடத்தில் போடுகிற சண்டையை எண்ணிக் கொண்டு இந்தத் தடவை ஐம்பது ஏக்கர் அப்படியே காயப்போட்டு விட்டேன், எப்பது வேலியை அப்படியே உலரப் போட்டு விட்டேன் என்று சொல்லலாம். அப்படி உலரப் போட்டு விடுவதால் விவசாயி வயிறு மட்டுமல்ல, அந்த நிலத்தின் சொந்தக்கார் கூட அப்படி ஒன்றிரண்டு ஆண்டுகள் உலரப் போடலாம். அதற்குப் பிறகு அவர் மார்பில் போடுகிற சந்தனமானது உலரலாம்—மறுபடியும் அவர் நிலத்திற்கு வருவார். கரும்பிற்கு மாறி விடுவார்கள், பருத்திக்கு மாறிவிடுவார்கள் என்று



சொல்வது மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் அது பயம் காட்டுவது போல் இருக்குமே தவிர அங்கு போனால் இக்கரைக்கு அக்கரைப் பச்சை என்பதுபோல் திரும்ப நிலத்திற்கு வருவார்கள் என்பது மற்றவர்களுக்கும் தெரியும். மதுராந்தகத்தில் சர்க்கரை ஆலை ஒன்று ஆரம்பித்தார்கள். அப்போது எங்கள் ஊரிலுள்ள நெல் பயிரிடுகிற விவசாயிகள் கரும்பு போட்டால் லாபம் இருக்கும், போனஸ் இருக்கும் என்று கரும்பு சாகுபடிக்கு மாற்றினார்கள். அந்த வருடம் கொண்டு போய் கொடுத்தார்கள், ஒழுங்காக போனஸ் வந்தது. அடுத்த ஆண்டு அந்த ஆலையில் இருந்த நெருக்கடி காரணமாக போனஸ் கடன் என்று சொன்னார்கள், பணம் இல்லை. பின்னர் அவர்கள் கரும்பு வேண்டாம் என்று திரும்பவும் நெல் சாகுபடிக்கு வந்து விட்டார்கள். நம் நாட்டு விவசாயிகள் நல்ல யூகசாலிகள். கரும்பு சாகுபடிக்கு போய்விடுவார்கள் என்று சொன்னால் அதற்கு கொஞ்சமாவது பலன் கிடைக்காதா என்று பார்க்கிறார்கள். ஆகவே, அது மிகப் பெரிய பிரச்சினை அல்ல. கரும்பு அல்லது பருத்தி அல்லது புகையிலை இவற்றிற்காக நிலம் போய்விட்டிருந்தாலும் புதிதாக வருகிற நிலத்தின் எண்ணிக்கையும் இருக்கிறது. நிகரத்தில் பார்த்தால் நிலத்தின் அளவும் குறையவில்லை, உற்பத்தியாகிற தன்மையும் குறையவில்லை.

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு நல்ல பொறுக்கு விதைகள், தரமான எரு இவை காலாகாலத்தில் விவசாயிகளிடம் சேருவதில் கவனம் செலுத்தவேண்டும். இதைத்தான் நாங்கள் செய்துகொண்டிருந்தோம். இதைச் செய்ய நீங்கள் வரவேண்டுமா என்று கொஞ்சம் பொறுப்புள்ள காங்கிரஸ்காரர்கள் கேட்கமாட்டார்கள். இதைச் செய்யத்தான் நாங்கள் வந்திருக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். வரக்கூடாதா? நாங்களேதான் செய்வோம் என்று சொல்வது? இராம நாடகத்தில்தான் அது வரும். "கார் உள்ளளவும், கடல் நீர் உள்ளளவும் இந்தா விபூஷணா இலங்கா ராஜ்யம்" என்று இராம நாடகத்தில்தான் பாடலாமே தவிர "நாங்கள் உள்ள வரையிலும், இந்த நாடு உள்ள வரையிலும் இந்த முறைதான், இதைச் செய்ய நாங்கள் இல்லையா?" என்று சொல்வது சரியல்ல. இவ்வளவு ஆண்டுகளில் உங்களுக்கு சலித்திருக்க வேண்டுமே, பத்து நாட்களில் எனக்கே சலிப்பாக இருக்கிறது. எப்படித்தான் சலிக்காமல் ஒரு இருபது ஆண்டுகள் இருந்தீர்கள் என்பதுதான் எனக்குள்ள ஆச்சரியமே தவிர நாங்கள் செய்ததைச் செய்ய நீங்கள் வரவேண்டுமா என்று பொறுப்புள்ள காங்கிரஸ் உறுப்பினர்கள் யாரும் சொல்ல மாட்டார்கள். கொஞ்சம் ஐந்து ஆண்டு காலம் இருந்தால் நமக்கெல்லாம் கூட இடம் கிடைத்திருக்காதா என்ற ஆசை உள்ளவர்கள் வேண்டுமானால் அப்படிக் கூறலாமே தவிர பொறுப்புள்ள, நாட்டுப்பற்றுள்ள காங்கிரஸ்காரர்கள் நாங்கள் செய்ததைத்தான் இவர்கள் செய்கிறார்கள் என்றால் அதில் பெருமைப்பட வேண்டும். இதற்காகத்தான் நீங்களா என்று சொல்வது கொஞ்சம் குத்திவிட்டால் நாங்கள் வேறு செய்கிறோம் என்று சொல்வோம் என்று எண்ணக் கூடாது.

ஜுன், ஜுலை மாதத்தில் வர இருக்கிற பட்ஜட் வரை இப்போது நாங்கள் செய்து கொண்டிருக்கிற காரியங்களை செய்து விட்டுப் போனதை முடித்து வைக்கிற காரியம். அதில்கூட டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்கிற காரியத்தைக் கூட என்னால் செய்ய முடியாது. எல் வளைக்குள்ளே போய்விட்டது என்று சொல்கிறார்கள். என் மனதில் சரி என்று படுவதை தொடர்ந்து செய்ய எல்லோருடைய ஒத்துழைப்பையும் தேவை என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் எங்கள் திட்டங்கள், கொள்கைகள் இவைபற்றியெல்லாம் சொல்கிறபோது—நண்பர் அவர்கள் பேசினார்கள், அவர்கள் இப்போது இங்கில்லை, சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டு போவோம் என்ற திருப்தியோடு போயிருப்பார்கள் என்று கருதுகிறேன். சம்பளம் வாங்கவே மாட்டேன் என்று சொன்னீர்களே என்று சொன்னார்கள். விலையைக் குறைக்கிற வரையில் சம்பளம் வாங்கமாட்டோம் என்று சொன்னதை படித்துக் காட்டினார்கள். வாதத்திற்காக, வேடிக்கைக்காக அவர்கள் பேசுவதற்கு பதில் சொல்லலாம் என்றால், நாங்கள் வந்த பதினைந்து நாட்களில் அரிசி விலை குறைந்தது, ஆகவே சம்பளம் வாங்க லாயக்குள்ளவர்கள் நாங்கள். மேலும் ஏறிவிட்டது என்றால் அதை அடக்கவேண்டும். நாங்கள் வந்தவுடன் விலை குறைந்தது என்பதை எடுத்துக்கொண்டு பார்த்தால், விலை குறைந்து சம்பளம் வாங்குகிறவர் என்று கூடச் சொல்லலாம். இப்படிப்பட்ட வேடிக்கைப் பேச்சுக்களில் நாம் கவனம் செலுத்தக்கூடாது. அன்றையதினம் கூட நான் சொன்னது போல், நாங்கள் சம்பளமே இல்லாமல் வேலை செய்கிறோம் என்றால் "நீங்கள் எப்போதும் வாங்குகிற 250 ரூபாய் சம்பளம் வாங்குகிறீர்களோ என்று மக்கள் உங்களைத் தப்பாக நினைப்பார்களே! ஆகவே 100 ரூபாயாக குறைத்துக் கொள்ளுங்களேன்" என்று கேட்டேனே தவிர 100 ரூபாயாகக் குறைத்தால்தான் எங்கள் திட்டம் என்று இரண்டையும் இணைத்துச் சொல்லவில்லை. அதைப்பற்றி பேசுவதற்கு மேடைகள் இருக்கின்றன. ஆறு மணி முதல் எட்டு மணி வரை இதைவிட வேகமாகப் பேசலாம். சம்பளம் வாங்குகிற அண்ணாதுரை ஒழிக என்று சொல்லலாம். இங்கு வந்து அதைச் சொல்லிக்கொண்டிருக்கலாமா என்பதுதான் வேடிக்கையாகப் பட்டது. நான் வெளியிட்டிருப்பது எங்களுடைய லட்சியத்தின் அளவு. விலைகள் குறைக்கப்படவேண்டும், விலையைக் குறைக்காமல் ஒரு சர்க்கார் அல்லது அதை நடத்துகிறவர்கள் சம்பளம் வாங்குவதில் பொருள் இல்லை என்பதை விளக்குவதற்காகத்தான் சொல்லப்பட்டதே தவிர ஒரு தேதி போட்டு இந்தத் தேதியிலிருந்து என்று அர்த்தம் அல்ல. ஒருவருக்கொருவர் பேசிக் கொள்கிறபோது, வெளியே போகிறபோது, இந்தக் காரியத்தை வியாழக்கிழமைக்குள் செய்து முடிக்காவிட்டால் ஒரு பக்கத்து மீசையை எடுத்து விடுகிறேன் என்று சொல்லிவிடுகிறோம். கனம் உறுப்பினர் விநாயகம் அவர்களைப் போன்றவர்களுக்கு அந்தக் கவலையில்லை. திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்குக் கூட அந்தக் கவலையில்லை. எனக்கும், திரு. கருத்திருமனுக்கும்தான்





என்ன கதியாவது; வியாழக்கிழமை வந்து விட்டதே, எடு ஒரு பக்கத்து மீசையை என்று கேட்பது? நாங்கள் எடுத்துச் சொல்வது, இந்தச் சர்க்காருடைய மூலாதாரமான நோக்கம் விலைகளைக் குறைப்பது. அப்படி விலைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளாமல் சம்பளம் வாங்கமாட்டோம் என்றால் இப்போது நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறோம்.

எந்தவிதத்தில் விலை குறையும்? ஒன்று, உற்பத்தி பெருக வேண்டும். இன்னொன்று, உற்பத்தியாகியிருப்பது சீரான முறையில் பங்கிட்டுத் தரப்படவேண்டும். மூன்றாவதாக, பதுக்கல் இருக்கக் கூடாது. இந்த மூன்று முறைகளால் விலை குறையும். உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டம் என்பது நீண்ட காலத் திட்டம். பதுக்கலை அடக்குவது என்பதில் அதை உடனடியாகச் செய்யவேண்டும். பதுக்கலை அடக்குவது மட்டும்போதாது, பகிர்ந்தளிப்பதிலும் ஒரு முறை இருக்க வேண்டுமென்பதால் உணவு இலாகாவை நாங்கள் திருத்தியமைத்திருக்கிறோம். சென்னை நகரை எடுத்துக்கொண்டால் சென்னை நகரம் முழுவதற்கும் ஒரே அதிகாரி இருந்து பார்த்தால் வேலையில் சிறிது தாமதம் ஏற்படுகிறது என்று இரண்டாகப் பிரித்து இருக்கிறோம். உணவு அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள் வடக்கு சென்னை, தெற்கு சென்னை என்று பிரிப்போம் என்று. பழைய வடக்கு, தெற்கு என்று கருதாதீர்கள். இது புது வடக்கு, தெற்கு வடக்கு, தெற்கு என்று பிரித்து இதிலிருந்து இதுவரை ஒரு அதிகாரி பார்த்துக் கொள்ளவேண்டும் என்று பிரித்து வைத்திருக்கிறோம். அடுத்தபடியாகப் பகிர்ந்தளிப்பது ஒழுங்குபடுத்துகிற காரியம். அடுத்தபடியாக, உற்பத்தியைப் பெருக்குவது. அதை இப்போது துவக்கினால் அடுத்த அறுவடைக்குத் தான் அதன் பலன் தெரியும். ஆகவே விலையைக் குறைக்காமல் சம்பளம் வாங்குகிறீர்களே என்ற நண்பர்கள் அதற்காக வருத்தப்படவேண்டாம். விலையைக் குறைப்பதற்குள்ள மூன்று திட்டங்களில் முதல் திட்டமான பதுக்கலை ஒடுக்கிற திட்டத்தை இந்த அரசு ஆரம்பித்துவிட்டது. அதில் தீவிரமான நடவடிக்கைகளும் மேற்கொண்டிருக்கிறது. அதில் கொஞ்சம் முறை தவறிப் போகக் கூடாது என்று சொல்லத்தக்க அளவிற்கு நடவடிக்கைகள் இருக்கின்றனவே தவிர பதுக்கலை கண்டு பிடியுங்கள் என்று உத்தரவு இட்டு பதினைந்து நாட்கள் ஆன பிறகும் ஒரு மூட்டை கூட பதுக்கல் இல்லை என்று சொல்லத் தக்க நிலை இருக்கிறதா என்றால் இல்லை. பேசிய அங்கத்தினர்களுக்கெல்லாம் தெரியும், பதுக்கல் இருக்கிறது என்பது. எங்குபோய் விட்டிருக்கமுடியும் விளைந்தது? 'மறைவாய்ப் புதைத்த ஓடு மறைந்தமாயம் என்னவோ' என்று திருநீலகண்டர் புராணத்தில் வருவது போன்று இதை மண்ணில் போட்டு புதைத்து வைக்கமுடியாது. எங்கேயோ இருக்கிறது. சில திரு. கருத்திருமனுக்குத் தெரிந்திருக்கலாம், சில எனக்குத் தெரிந்திருக்கலாம், சில திரு. விநாயகத்திற்கு தெரிந்திருக்கலாம். "பயப்படாதே கோர்ட்டுக்கு நான் வருகிறேன்" என்று கூடச் சொல்லலாம். ஆக, எங்கேயோ இருக்கத்தான் செய்கிறது. அதைக் கண்டறிந்து [illegible]ப்பது விலைக் குறைப்பு காரியத்தில் மிக முக்கியமான கட்டம்.

ஆக, பதுக்கலைக் கண்டு பிடிக்க ஈடுபட்டுள்ளதால், நீங்களே பார்த்து சம்பளம் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லவேண்டுமே தவிர இன்னும் ஒரு மாதச் சம்பளம் கூட வாங்குவதற்கு முன்னால் சம்பளம் வாங்காதே என்றால், அப்படி சம்பளம் வாங்காமல் இருந்தால் என்ன நடக்கும் என்று கருதுகிறீர்கள்? நான் இன்னும் கூட சொல்ல முடியும். எங்களுக்கு சர்க்கார் சம்பளம் வேண்டாம், பொதுமக்களே, நீங்கள்தான் சம்பளம் தர வேண்டும் என்று கேட்டு வாங்கும் சக்தி எனக்கு இருக்கிறது. (ஆரவாரம்) குத்திவிட்டு விட்டால் என்ன என்று கருதாதீர்கள், சர்க்கார் சம்பளம் வாங்கப் போவதில்லை, என் செலவிற்கு பணம் கொடுங்கள் என்று கேட்டால் பொது மக்கள் இந்த ஆட்சிக்கும், இந்த ஆட்சிக்கு மட்டும் அல்ல நியாயமாக நடக்கிற யாருக்கும் பணம் தர தயாராக இருக்கிறார்கள். ஆகையால் சம்பளம் விஷயத்தைப் பற்றி பேசிவிட்டோம், அதில் ஒரு பெரிய சாமர்த்தியம் வந்து விட்டது என்று மட்டும் கருத வேண்டாம். இன்றும் இப்போதும் சொல்கிறேன், பதுக்கலை அடக்குகிறோம், பகிர்ந்தளிப்பதில் ஒழுங்குமுறையை ஏற்படுத்துகிறோம். அதற்குப் பிறகு உற்பத்திப் பெருக்கத்திற்கான வழிமுறைகளைக் காண்கிறோம். இதில் நிச்சயமாக விலை குறையும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. இந்த மூன்றையும் நான் செய்து பார்த்து விலை குறையவில்லை என்றால், நிச்சயமாக அப்போது நான் உங்களிடத்திலேயும், மக்களிடத்திலேயும் 'நாங்கள் செய்யக் கூடியதைச் செய்தாகி விட்டது; விலை குறையக் காணோம்; விலையைக் குறைக்கக் கூடியவர்கள் யாராவது இருப்பார்களானால் அவர்களை அழைத்துக் கொண்டு வாருங்கள். சந்தனம், தாம்பூலம் கொடுத்து அழைத்து வரவேண்டும் என்றால், சந்தனக் கிண்ணத்தை என் கையில் கொடுங்கள், நான் கொடுத்து அழைத்து வருகிறேன்' என்று சொல்லுவேனே தவிர, இந்த இடத்தில் உட்கார்ந்துவிட்டதைப் பற்றி, திரும்பத் திரும்பப் பார்த்து இதை விட்டு விடலாமா என்ற எண்ணம் எனக்கு இருக்காது. அந்த விஷயத்தை விட்டுவிட்டு, நண்பர்களெல்லாம் சொன்னது போல, உற்பத்தி பெருக என்னென்ன வழிகள்? விவசாயிக்குக் கட்டுபடியாகக் கூடியது எந்த விலை? பதுக்கலைத் தடுப்பதில் குற்றம் குறைகள் இல்லாது எப்படிப் பார்த்துக்கொள்ளுவது?—இவற்றிற்கு மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விவாதத்திற்கு பதிலளிக்கும்போது, நான் முன்னால் சொன்னதையே மறுபடியும் சொல்ல ஆசைப்படுகிறேன். கன்சல்ட்டேட்டிவ் கமிட்டி அமைக்கும் பணியை இரண்டொரு நாளில் நான் மேற்கொள்ள இருக்கிறேன். அதிலே எல்லாக் கட்சி உறுப்பினர்களும், கட்சியில்லாத சுயேச்சை உறுப்பினர்களாக இருந்தால் விவசாயத்தில் அக்கறை உள்ளவர்கள் இந்த கன்சல்ட்டேட்டிவ் கமிட்டியில் இடம் பெறவேண்டும். மொத்தத்தில் 20-25 பேர்களுக்குள் இந்த கன்சல்ட்டேட்டிவ் கமிட்டி அமையுமானால் இன்னும் சிறப்பாக இருக்கும்; பிரச்சினைகளை ஆராய்ந்து புள்ளி விவரங்களைத் துணைக்கு பக்கத்தில் வைத்துக்கொண்டு பிரச்சினை



களைத் தீர்க்க முடியும். அந்த கன்சல்ட்டேட்டிவ் கமிட்டியை அமைக்கிறேன் என்பதுதான் இந்த விவாதத்திற்கு நான் சொல்லக் கூடிய பதில் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கட்டுபடியாகக் கூடிய அளவில் விவசாயிக்கு உடனடியாக விலையைக் கொடு, கொடு என்றால், கிட்டத்தட்ட ஏழு கோடி ரூபாய் தாண்டிவிழும் பட்ஜெட்டைக் கொடுத்துவிட்டு, விவசாயிக்குப் பணத்தைக் கொடு, கொடு என்று சொல்லும் அளவுக்கு மதிப்பிற்குரிய நண்பர் கருத்திருமன் அவர்களுக்குக் கல் மனம் இல்லை என்று கருதுகிறேன். அந்த விஷயத்தைப் பின்னால் யோசிக்கலாம். கன்சல்டேட்டிவ் கமிட்டி அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த விவாதத்தில் எடுத்துச் சொல்லிய எல்லாவற்றுக்கும் பதில் அளிக்கவில்லை என்றால், அவைகளை யெல்லாம் விட்டு விட்டேன் என்பதல்ல; அவைகளை உரிய காலத்தில் தக்க விதத்தில் கவனிக்கிறேன் என்று வாக்களித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

## 4. 1966–67-ம் ஆண்டில் மேற்கண்ட செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** இப்போது 1-00 மணிக்கு எடுக்க வேண்டிய வாக்கெடுப்பை 1-15 மணிக்கு எடுக்க அவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

ஏறத்தாழ 40 மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் ஒருங்கே சேர்த்து வாக்களிப்பது என்பதற்கு இந்த சட்டப் பேரவை விதிகளில் இடம் இல்லை. ஆனால் வெட்டுத் தீர்மானங்களே இல்லாத மான்யங்களை, ஒரே தீர்மானமாக, இன்ன துறைக்கு இவ்வளவு தொகை என்று ஒவ்வொரு மானியமாகக் குறிப்பிட்டு ஒரே வாக்களிப்பில் நிறைவேற்ற விதிகளில் இடம் இருக்கிறது. அதன்படி இன்று வாக்களிப்பு நடைபெறும் என்று பேரவையின் அனுமதியுடன் அறிவிக்கிறேன்.

முதலில், ஒன்று முதல் 13 வரையில் இலக்கமிட்ட மானியக் கோரிக்கைகளுக்கு வெட்டுத் தீர்மானங்கள் இல்லாத காரணத்தினால் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் இந்த, இந்தத் துறைக்கு இந்த இந்தத் தொகைகளை வழங்கவேண்டுமென்ற தீர்மானத்தை இப்போது கொண்டு வருவார்கள்.

### A. ரெவின்யூக் கணக்கில் செலவு

கோரிக்கை எண் I—நிலவரித் துறை.

கோரிக்கை எண் II—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்.

கோரிக்கை எண் III—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்.

கோரிக்கை எண் V—பத்திரப்பதிவுத் துறை.

கோரிக்கை எண் VII - தேர்தல்கள்.

கோரிக்கை எண் VIII —மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

கோரிக்கை எண் IX—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும்.

கோரிக்கை X—நீதி நிர்வாகம்.

கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள்.

கோரிக்கை எண் XII—போலீஸ்.

கோரிக்கை எண் XIII—கல்வி.

**மதிப்பிற்குரிய திரு சி. என். அண்ணாதுரை:** அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட கோரிக்கைகளை அவை முன் வைக்கிறேன்:—

"கோரிக்கை எண் I—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 17,57,100-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் II—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,00,900-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் III—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,24,600-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் V—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,52,000-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் VII-தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 23,26,100-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 17,56,700-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் IX—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 41,84,200-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,57,700-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 17,62,600-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XII—போலீஸ் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,40,68,600-க்கு மேற்படாத தொகையையும்;



கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 500-க்கு மேற்படாத தொகையையும்;

அரசிற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகைகள் வழங்கப்பட்டன.

**கோரிக்கை எண் XIV—மருத்துவம்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன்:—

கோரிக்கை எண் XIV—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,30,600-க்கு மேற்படாத தொகையை அரசிற்கு வழங்க வேண்டும்."

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டுவர விரும்பவில்லை என்று கருதுகிறேன். எனவே மதிப்பிற்குரிய முதலமைச்சரின் முழு முதல் தீர்மானத்தை அவையின் முடிவுக்கு விடுகிறேன்.

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப்பட்டது.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** இப்போது கோரிக்கை 15 முதல், கோரிக்கை 18 வரையில் உள்ள தீர்மானங்களை மாண்பு மிக்க முதலமைச்சர் அவர்கள் கொண்டுவருவார்கள்.

கோரிக்கை எண் XV—வேளாண்மை.

கோரிக்கை எண் XVI—வேளாண்மை.

கோரிக்கை எண் XVII—மீனளம்.

கோரிக்கை எண் XVIII—கால்நடை வளர்ப்பு.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட கோரிக்கைகளை அவைமுன் வைக்கிறேன்:—

"கோரிக்கை எண் XV—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 400-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XVI—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,20,58,100-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XVII—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 33,60,300-க்கு மேற்படாத தொகையையும்;

[1967 மார்ச் 25

கோரிக்கை எண் XVIII-- கால் நடை வளர்ப்பு எறை தலைப்பின் கீழ் ரூ. 3,71,100-க்கு மேற்படாத தொகையையும்;
அரசிற்கு வழங்க வேண்டும்."

**கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகைகள் வழங்கப்பட்டன.**

**கோரிக்கை எண் XIX—கூட்டுறவு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 400-க்கு மேற்படாத தொகையை அரசிற்கு வழங்க வேண்டும்."

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** இதற்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ள உறுப்பினர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் அந்தத் தீர்மானத்தை அவைமுன் கொண்டுவர விரும்பவில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இப்போது முழு முதல் தீர்மானத்தை அவையின் முடிவுக்கு விடுகிறேன்.

**கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப்பட்டது.**

**கோரிக்கை எண் XX—தொழில்கள்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் XX—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,32,600-க்கு, மேற்படாத தொகையை அரசிற்கு வழங்க வேண்டும்."

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** இதற்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ள திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் அந்தத் தீர்மானத்தை அவைமுன் கொண்டுவர விரும்பவில்லை என்று கருதுகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** அவைத்தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் மின்சார விஸ்தரிப்புத் திட்டத்திற்கு முதலிடம் கொடுக்கும் அவசியம் குறித்து விவாதிக்க, கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை அவைமுன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் XX—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் வழங்கப்படுகிற ரூ. 12,32,600-ல் ஒரு ரூபாய் குறைக்கவேண்டும்."

வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

**கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப்பட்டது.**



1967 மார்ச் 25]

**கோரிக்கை எண் XXI—சின்கோனா.**

கோரிக்கை எண் XXIII--சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

கோரிக்கை எண் XXIV--தொழிற்சாலைகளும் தொழிலாளர் நலனும்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட கோரிக்கைகளை அவைமுன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் XXI— சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,63,700-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XXIII--சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ், ரூ. 400-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XXIV—தொழிற்சாலைகளும் தொழிலாளர் நலனும் என்ற தலைப்பின்கீழ், ரூ. 400-க்கு மேற்படாத தொகையையும் அரசிற்கு வழங்கவேண்டும்."

கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகைகள் வழங்கப்பட்டன.

**கோரிக்கை எண் XXV—ஆதிவாசிகள், ஹரிஜனங்கள், ஏனைய பின் தங்கிய வகுப்பினர் நலன்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் XXV--ஆதிவாசிகள், ஹரிஜனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ், ரூ. 61,64,100-க்கு மேற்படாத தொகையை அரசிற்கு வழங்க வேண்டும்."

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** இந்தத் தீர்மானத்திற்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ள உறுப்பினர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டுவரவில்லை என்று கருதுகிறேன்.

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் XXVI—பாசனம்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் XXVI—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 61,91,800-க்கு மேற்படாத தொகையை அரசிற்கு வழங்க வேண்டும்."

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** இந்தத் தீர்மானத்திற்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ள திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள் அவற்றை அவைமுன் கொண்டுவரவில்லை என்று கருது கிறேன். உறுப்பினர் திரு. ஆ. கு. சுப்பையா அவர்களும் தம்முடைய வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டுவரவில்லை என்று கருதுகிறேன்.

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் XXVII—பொதுப்பணிகள்—பணிகள்.

கோரிக்கை எண் XXVIII—பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும்.

கோரிக்கை எண் XXIX—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள்.

கோரிக்கை எண் XXX—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள்.

கோரிக்கை எண் XXXI—பல்வகை.

கோரிக்கை எண் XXXIII—பலவகை.

கோரிக்கை எண் XXXIV—எழுதுபொருள்—அச்சுத்துறை.

கோரிக்கை எண் XXXV—காட்டுவளத் துறை.

கோரிக்கை எண் XXXVI—ஏனைய இழப்பீடுகளும் ஒதுக்கீடு களும்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் XXVII—பொதுப் பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 47,53,400-க்கு மேற்படாத தொகையையும் ;

கோரிக்கை எண் XXVIII- பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 16,75,500-க்கு மேற்படாத தொகையையும் ;

கோரிக்கை எண் XXIX—பொதுப்பணிகள்—உதவி மானியங் கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,94,700-க்கு மேற்படாத தொகை யையும் ;

கோரிக்கை எண் XXX—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 72,65,000-க்கு மேற்படாத தொகையையும்;



கோரிக்கை எண் XXXI—பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,07,34,200-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XXXIII—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,000-க்கு மேற்படாத தொகையையும் ;

கோரிக்கை எண் XXXIV—எழுதுபொருள்—அச்சுத்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 26,17,100-க்கு மேற்படாத தொகையை யும் ;

கோரிக்கை எண் XXXV—காட்டுவளத் துறை என்ற தலைப் பின்கீழ் ரூ. 6,39,400-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XXXVI—ஏனைய இழப்பீடுகளும் ஒதுக்கீடு களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,15,13,700-க்கு மேற்படாத தொகை யையும்;
அரசிற்கு வழங்கவேண்டும்."

கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகைகள் வழங் கப்பட்டன.

**B. ரெவின்யூக் கணக்கிற்கு புறம்பான மூலதனச் செலவு.**

**கோரிக்கை எண் XXXVIII—பொதுச் சுகாதார மூலதனச் செலவு**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் —பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,97,400-க்கு மேற்படாத தொகையை அரசிற்கு வழங்க வேண்டும்."

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** இந்தத் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை உறுப்பினர் திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் கொண்டு வரவில்லை என்று கருது கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் எழுந்திருந்தார்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** விவாதம் கிடையாது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** நான் விவாதிக்கவில்லை. கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தைப் பிரேரபணை செய்கிறேன்.

" தஞ்சை மாவட்டம், கோட்டூர் தொகுதியைச் சேர்ந்த கூத்தா நல்லூர் லெட்சுமான்குடி நகரத்திற்கு குடி தண்ணீர்த் திட்டத்தை துரிதமாக நிறைவேற்ற வேண்டியதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XXXVIII—பொது சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் வழங்கப்பட இருக்கிற ரூ. 2,97,400-ல் ஒரு ரூபாய் குறைக்க வேண்டும்."

வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிரா கரிக்கப்பட்டது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கிறேன். "நெல்லை மாவட்டத்தில் கோவில்பட்டி நகரத்திற்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தைத் துரிதப்படுத்துவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் NXXVIII-பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் வழங்கப்பட இருக்கிற ரூ. 2,97,400-ல் ஒரு ரூபாய் குறைக்க வேண்டும்."

வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கிறேன். "கிராமப்புறங்களில், குடிதண்ணீர்த் திட்டத்தை அமல்படுத்துவது குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் XXXVIII—மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் வழங்கப்பட இருக்கிற ரூ. 297,400-ல் ஒரு ரூபாய் குறைக்க வேண்டும்."

வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XLI—தொழில்கள் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு.

கோரிக்கை எண் XLII—பாசன மூலதனச் செலவு.

கோரிக்கை எண் XLIII—பொதுப் பணிகள் மூலதனச் செலவுகள்.

கோரிக்கை எண் XLVI—ஓய்வூதியர்களை மொத்தமாக்குதல்.

கோரிக்கை எண் XLVII-அரசாங்க வாணிக திட்டங்களுக்கான மூலதனச் செலவு.

**C கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.**

கோரிக்கை எண் XLVIII—மாநில அரசாங்கம் வழங்கும் கடன்களும், முன்பணங்களும்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட கோரிக்கைகளை அவைமுன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் XLI—தொழில்கள் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,000-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XLII—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 400-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XLIII—பொதுப் பணிகள் மூலதனச் செலவுகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 14,40,000-க்கு மேற்படாத தொகையையும்;





கோரிக்கை எண் XLVI—ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,02,600-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XLVII—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,55,82,900-'க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XLVIII—மாநில அரசாங்கம் வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 600-க்கு மேற்படாத தொகையையும் ;
அரசிற்கு வழங்கவேண்டும்."

**கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகைகள் வழங்கப்பட்டன.**

**5. அறிவிப்புகள்.**

**(அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதா.**

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதாவை இந்த அவைக்குக் கொண்டு வருவதற்கும் அதன் மீது விவாதிப்பதற்கும், மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் தமது இணக்கத்தை தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்கிறேன்.

அதையொட்டி, இப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை, இந்த அவைக்குக் கொண்டுவர அனுமதி கோருவார்கள்.

**1. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.**

**(இ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை முன்னுரைக்க அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, நான் இம்மசோதாவை முன்னுரைக்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** இம்மசோதா முன்னுரைக்கப்படுகிறது.

**5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.**

**(இ) பேரவை அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானங்கள்.**

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில், ஒரு மனதாக நிறைவேறிய தீர்மானத்திற்கு இணங்க, இம்மன்றத்தின் அலுவல்கள் 27-3-1967 முதல் 30-3-1967 வரை இப்போது நான் அறிவிக்கின்ற நிகழ்ச்சி வரிசையின்படி நடைபெறும்.

1967 மார்ச் 25]

**27-3-1967 திங்கட்கிழமை.**

1. இரண்டு மசோதாக்கள் மீது விவாதமும், அவைகளை நிறைவேற்றுதலும்.

(அ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா, (சட்டப் பேரவை மசோதா எண் 1/1967).

(இ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 4/1967).

2. கவர்னர் பேருரை மீது விவாதம் தொடர்ந்து நடைபெறும்.

**28-3-1967 செவ்வாய்க்கிழமை.**

1. இரண்டு மசோதாக்கள் மீது விவாதமும், அவைகளை நிறைவேற்றுதலும்—

(அ) 1967-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 2/1967).

(இ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவை (தகுதியின்மைகள் நீக்கல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/1967).

2. கவர்னர் பேருரை மீது விவாதம் தொடர்ந்து நடைபெறும்.

**29-3-1967 புதன்கிழமை.**

கவர்னர் பேருரை மீது விவாதம்—தொடர்ச்சி.

**30-3-1967 வியாழக்கிழமை.**

கவர்னர் பேருரை மீது விவாதம்—கடைசி நாள்.

இந்த நிகழ்ச்சி நிரல் அச்சிடப்பட்டு உறுப்பினர்கள் எல்லோருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. இந்தப் பேரவையின் கூட்டம் அடுத்து 27-3-1967 திங்கட்கிழமை அன்று காலை 9 மணிக்கு மீண்டும் நடைபெறும்.

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

**6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

**A. Statutory Rules and Orders.**

**112.** Notification issued with G.O. Ms. No. 4898, Industries, Labour and Housing (Industries), dated the 21st December 1966 relaxing certain rules of the Madras Molasses Control and Regulation Rules, 1958, in favour of A.V.R. and Company, Madras, for molasses import and export out of India, published with the Home Department Notification S.R.O. No. A-6743 of 1958, dated the 4th October 1958, at pages 450–456 of the Rules Supplement to the Part I of the *Fort St. George Gazette*, dated the 15th October 1958. [Laid on the Table of the House under section 54(3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).

**B. Report Notification and other Papers.**

*Nil.*

## தமிழகச் சட்டப் பேரவை

**திங்கட்கிழமை, மார்ச் 27, 1967.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் திரு. சி. ப. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் நட்சத்திரக் குறி * இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** முதல் அலுவல் "கேள்விகள் பதில்கள்". மாண்புமிகு அமைச்சர்கள் பதில் கூறுவதற்குக் கேள்விகள் இன்றைக்கு இல்லை. நாளைக்கு இருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

**1. கவன ஈர்ப்பு—கோவை பஞ்சாலைகளில் கதவடைப்பு.**

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** அடுத்து, சட்டமன்றப் பேரவை 41-வது விதிக்கிணங்க அவசரப் பொது முக்கியமான காரியம் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் ஹெச். வி. ஹாண்டே அவர்களும், திரு. சு. துரைசாமி அவர்களும் மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** சபாநாயகர் அவர்களே, சட்ட சபை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த கீழ்க்கண்ட விஷயத்தை மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்:—

"தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், குறிப்பாகக் கோவை மாவட்டத்திலும், பஞ்சாலைகள் மூடிக்கிடக்கின்ற நிலை காரணமாக சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதால், அவைகளை உடனடியாகத் திறப்பது பற்றியும் அதன் மூலம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது பற்றியும்."

**திரு. சு. துரைசாமி:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, "தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், குறிப்பாகக் கோவை மாவட்டத்திலும், பஞ்சாலைகள் மூடிக் கிடக்கின்ற நிலை காரணமாக சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதால், அவைகளை உடனடியாகத் திறப்பது பற்றியும் அதன் மூலம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது பற்றியும்" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

* THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Mr. Speaker, I wish to make the following statement :—

Since the middle of last year, the textile industry in the State has been passing through a difficult time on account of the following factors :—

(i) Accumulation of cloth and yarn due to the unprecedented glut in the market;

(ii) Non-availability of cotton at reasonable prices;

(iii) Financial difficulties arising out of credit squeeze;

(iv) Unprecedented and prolonged power cut in the State for a greater part of last year.

This state of affairs affected the working of a number of mills, particularly the financially weak and uneconomic units. The ways and means position of these mills became very difficult and they found it hard even to pay the wages of the workers. When the mills complained of this position, the Government in September 1965 ordered the postponement of collection of electricity charges from them, by a month. But as the situation worsened, more than a dozen mills, most of them in the Coimbatore district were closed down. Naturally, the closure of these mills caused anxiety to the Government. Though this was an industry-wise malaise, and the State Government could not take up any responsibility for opening these mills or taking them over, the Government are trying to help the industry and the workers and are taking all possible steps in this direction. A series of discussions with the representatives of the mill-owners and the trade unions were held at ministerial level and this was followed up by the Commissioner of Labour who also held discussions with the management and the labour of various mills. These problems were also reviewed at the meeting of the State Labour Advisory Board. As a result of these efforts, most of the mills which had been under closure due to labour difficulties or temporary financial difficulties reopened. In respect of other mills which had serious financial difficulties, the Government constituted an *ad hoc* technical committee consisting of the Director of Handlooms, Madras and the representatives of South India Textile Research Association and Southern India Millowners' Association to make a close study of the technical and financial position of the mills. The Committee went into the affairs of five mills and submitted its report. Based on the recommendations of the Committee, the Government have offered to extend guarantee assistance to the tune of Rs. 25.85 lakhs to Messrs. Cambodia Mills, Janardhana Mills Limited and the Githanjali Mills, Limited. The mills are negotiating the terms and conditions of the loans with their bankers. The Committee has not recommended any assistance to Sri Palamalai Ranganathar Mills and Kaleswarai Mills Limited, as their liabilities are twice as much as their assets.



The Southern India Millowners' Association have also represented that as a measure of relief to the managements of the mills, they may be permitted to pay in instalments commencing from the middle of 1968, the dues towards Employees' Provident Fund, Employees' State Insurance, Electricity dues, etc. I propose to discuss these requests with the representatives of the Southern India Millowners' Association and the officials concerned on 31st March 1967. A conference with the representatives of the trade unions and the managements of the textile industry is also to be held on 3rd April 1967 to discuss the situation.

Thus, it will be seen that all practicable steps have been and are being taken by the Government to mitigate the hardships of the labour affected by the closure of the mills.

## 2. அறிவிப்புகள்.

### (அ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : 1967-68-வது ஆண்டுக்குரிய இப்பேரவையின் மதிப்பீட்டுக் குழுவிற்கு (எஸ்டிமேட்ஸ் கமிட்டி) பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு பதினான்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர்களாவன :—

(1) திரு. எம். சுரேந்திரன்
(2) திரு. செ. பாலசுப்பிரமணியன்
(3) டாக்டர் எச். வி. ஹாண்டே
(4) திரு. ஆ. கு. சுப்பையா
(5) திரு. ஏ. சிதம்பரநாத நாடார்
(6) திரு. எஸ். ராமலிங்கம்
(7) திரு. கே. விநாயகம்
(8) திரு. எம். ராமச்சந்திரன்
(9) திரு. மு. வேதாசலம்
(10) திரு. சி. வி. எம். அண்ணாமலை
(11) திரு. எஸ். முத்துலிங்கம்
(12) திரு. வி. மலைக்கண்ணன்
(13) திரு. மு. சின்னசாமி
(14) திரு. மு. ச. சிவசாமி

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1967-68-வது ஆண்டு மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டதாக நான் அறிவிக்கிறேன்.

அவர்களோடு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், பொதுக் கணக்குக் குழுவின் (பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி) தலைவர் அவர்களும் அவர்களுடைய அலுவல் காரணமாக (எக்ஸ்-அஃபிஷியோ) இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

**மேலும், சட்டப் பேரவையின் 165-வது விதிக்கிணங்க திரு. எஸ்.** ராமச்சந்திரன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(இ) பொதுக் கணக்கு ஆய்வுக் குழுவிற்கான தேர்தல்

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : 1967-68-வது ஆண்டுக்குரிய பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு (பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி) இச் சட்டப் பேரவையின் பதினுன்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு பதினுன்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர்களாவன :—

(1) திரு. எம். பூபதி
(2) திரு. பி. ஜி. கருத்திருமன்
(3) திரு. ஆர். பொன்னப்ப நாடார்
(4) திரு. பி. எம். முனுசாமி கௌண்டர்
(5) திரு. பி. எஸ். மணியன்
(6) திரு. மா. பா. சாரதி
(7) திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்
(8) திரு. எம். சி. பாலன்
(9) திரு. பெ. மலைச்சாமி
(10) திரு. சி. கிருஷ்ணமூர்த்தி
(11) திரு. பெ. சௌந்தரபாண்டியன்
(12) டாக்டர் ஹபிபுல்லா பெய்க்
(13) திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்
(14) திரு. பி. கே. மூக்கையா தேவர்

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1967-68-வது ஆண்டு பொதுக் கணக்கு ஆய்வுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படித் தேர்தெடுக்கப்பட்டுவிட்டதாக நான் அறிவிக்கிறேன். அவர்களோடு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் (எஸ்டிமேட்ஸ் கமிட்டி தலைவர்) திரு. எஸ். ராமச்சந்திரன் அவர்களும், அவர்களுடைய அலுவல் காரணமாக (எக்ஸ் அஃபிஷியோ) இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

மேலும், இச் சட்டப் பேரவையின் 174-வது விதிக்கிணங்க திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.



(உ) கவர்னர் பேருரைக்கான நன்றி அறிவிப்புத் தீர்மானத்திற்குத் திருத்தங்கள்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** கவர்னர் அவர்களின் பேருரைக்கான நன்றி அறிவிப்புத் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொடுத்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அத் திருத்தங்களை, நாளை 28—3—1967, செவ்வாய்க்கிழமை விவாதம் தொடங்குவதற்கு முன்பு முன்மொழியலாம் என்று நான் அறிவிக்கிறேன்.

இச் சட்டமன்றப் பேரவையின் 82-வது விதிக்கிணங்க, ஒரு முக்கியமான காரியத்தைக் குறித்து, அறிக்கை ஒன்றை இப் பேரவையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வெளியிடுவதற்கு நான் அனுமதி அளித்திருக்கிறேன். அதன்படி அவ்வறிக்கையை இப்போது அவர்கள் வெளியிடுவார்கள்.

3. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடக்கும்பொழுது முக்கியமான கொள்கைகள்பற்றி அமைச்சர்கள் வெளியில் அறிக்கைகள் விடுத்தல்.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, with your permission I wish to raise a point of order. Whenever this House is in session of sitting, important statements affecting the general policy of this Government or the administration of this State will have to be generally made by the Hon. Chief Minister as well as his colleagues on the floor of this House which amounts to taking this House into their confidence. We have been sitting here from the 15th of this month and we are going to sit till the end of this month. But I find that the Hon. Ministers are going about the State, making statements at their will and pleasure which affect our administration as well as policies. That is not the usual practice and that is derogatory to the well-established traditional practices and precedents which we have the honour of establishing in this House. For instance, statements have been made by the Hon. Ministers. I am not sure which Hon. Minister has made the statement regarding the release of the prisoners imprisoned in connection with the Anti-Hindi agitation. Hon. Ministers could have been kind enough to make a statement on the floor of this House, that they were going to grant a general amnesty and that all prisoners convicted during that agitation would be released. The second statement related to the probibition policy. I believe when the Hon. Chief Minister had paid a visit to Ootacamund, he seemed to have stated that he was going to reconsider—I do not say that he is going to scrap prohibition—the Prohibition policy. Another statement made by the Hon. Minister for Food Sri Mathialagan, related to the procurement of paddy. He could have made that statement on the floor of this House, a day before it appeared in the Press that the procurement policy was going to be intensified. Then again, after that statement I saw another Press note issued

by the Hon. Minister for Food stating that after the target of 8-lakh tonnes of paddy was Procured, procurement woud be stopped. That statement could have been made on the floor of this House. Another important statement was made I believe by the Hon. Minister for Co-operation. He said . . .

THIRU RAMA ARANGANAL : Sir, on a point of order.

THIRU K. VINAYAKAM : Sir, I have not finished my speech and I am not going to yield.

He said that a High Power Commission consisting of men who have experience in the co-operative movement, would soon be appointed. That statement could have been made on the floor of this House. Yet another statement made by the Hon. Minister for Education was that a Commission consisting of experts, professors and politicians who had some experience would be constituted to go into the reorganisation of the present educational system.

The appointment of the Advocate-General is also a thorny problem and I anticipate that the Hon. Chief Minister is going to make a statement about it on the floor of this House. Then, yesterday the Hon. Minister for Transport had made a statement that he was considering the possibility of reducing the bus fares in the City of Madras. All these statements could have been made here and not on a public platform. It was all right when they were not in power and when they used the meetings in the evening to ventilate their grievances or make charges against the then Ministry. Now, they are in power and they must have taken this House into their confidence and made all those statements here. But they have not done so. I am sorry, Mr. Speaker, that this should not be the practice. ** **

Sir, evidently they do not have any confidence in this House. That is why they make statements outside the floor of this House. Now, the point of order is, how is it that the Ministry should make statements outside the House, when the House is sitting?

THE HON. THIRU C. N. ANNADURAI : Mr. Speaker, Sir, I am really thankful to the hon. Member for reminding us of certain conventions to be followed, but we never lack confidence in the House. If only my hon. Friend had stated the exact dates of those statements, I would prove to him that no statement was made outside the House, before the House itself was taken into confidence. What he means by statements is, certain views expressed in the public meetings. But are these to be construed as statements? My hon. Friend has asked, 'Have you not got confidence in this House ?' I would repeat the question, 'Have you not got confidence in us?" As a friend, he could have told us that

**Expunged as ordered by the Chair.



whenever we issue such statements, those statements should first be made in this House instead of making a dramatic gesture in this way.

As regards the statement alleged to have been made by me about Prohibition, since it could affect the mental make-up of the public itself, I want to present a clarification. In a public meeting or at a public reception at Ootacamund, I was presented with various memoranda and one such memorandum was about prohibition, to be exact, about repealing Prohibition. While replying to the various Memoranda, I said that the Government could not take any policy decision at the moment of receiving a memorandum. I said in a lighter vein at that public meeting, 'Here is a memorandum for lifting prohibition. If the Government are to be stable in their views, they cannot come to a decision immediately on receiving a memorandum. Now, I have received a memorandum that prohibition should be lifted. Suppose I go to Coonoor and there another memorandum may be presented asking the Government to reintroduce Prohibition and I pass orders on that. Then I go to Mettupalayam where another memorandum may be presented that the prohibition should be lifted. If the Government are to act upon every memorandum presented, they could not be a Government'. Unfortunately the Press did not put it in such a cogent manner and did not state that I made those observations in a lighter vein. They stated that I would consider the lifting of prohibition after taking the public into confidence. I am very sorry that the Press should have done so, leaving out the rest of my speech. Possibly, some of the people in the Press are also interested in lifting prohibition and therefore, they stated that I stated that I would consult the public before prohibition was lifted So, my hon. Friend need not think that we lack confidence in the House. We have got implicit confidence and faith in this House. My hon. Friend now says that we do not give respect to this House. It is far from our thought and we have got the greatest respect for this House and for every individual Member of this House, especially for Members like Sri Vinayakam who is so sensitive to all these things. Therefore, I would only repeat that hereafter we will see to it that no statement as statement will be made. But as public men we have to air certain views. My hon. Friend ought to distinguish between the views, conditional statements and statements. If we make a definite statement outside this House that we are going to lift this thing or that thing from the 28th of this month, then perhaps we will be making a statement without taking this House into confidence. But he should expect any public speaker to stick eventually to some of his thoughts in as civilised a manner as possible. Therefore, it is far from our thought to disregard this House. We have the greatest respect for this House. ** **

** Expunged as ordered by the Chair.

** It is the duty of the elder politicians, elder parliamentarians like Mr. Vinayakam to guide us outside the House rather than chastise us inside the House. He is very anxious to know about the release of anti-Hindi prisoners. The same question was raised in the other House. I made a statement there and I repeat it here. Hereafter such statements will emanate from the House rather than from outside.

MR. SPEAKER: Has the Hon. Minister for Law anything to say?

***மதிப்பிற்குரிய திரு. செ. மாதவன் :** கனம் தலைவர் அவர்களே, திரு. விநயகம் அவர்கள் கூட்டுறவு சங்கங்களைப் பற்றி விசாரிப்பதற்கு ஒரு குழு அமைப்பது பற்றியும், இந்தி எதிர்ப்புக் கைதிகளைப் பற்றியும் வெளியில் சொல்லப்பட்ட கருத்துக்களைப் பற்றிச் சொன்னார்கள். கூட்டுறவு சங்கங்களைப் பற்றி ஆராய்வதற்கு ஒரு குழு போடுவதுபற்றிய கருத்து இந்த மன்றம் கூடுவதற்கு முன்னாலேயே தெரிவிக்கப்பட்டதாகும். அப்படி இருக்கும்போது சட்ட மன்றம் நடந்துகொண்டிருக்கும்போது சட்டமன்றத்தில் வெளியிடாமல் வெளியில் சொன்னேன் என்று சொல்வது தவறாகும். அத்தகைய தவறான கருத்தை அவர் இங்கே சொல்வது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: I will give my ruling on the point raised by the hon. Member Thiru K. Vinayakam. First I would draw the hon. Member's attention to Rule 83 (1) that while raising a point of order, the hon. Member should confine himself to stating the point—I am repeating the words from memory and the hon. Member may check up. He should not indulge in arguments. I observed that he used a particular word ** ** and later on he was good enough to withdraw the word. Under Rule 235 of the Assembly Rules, I direct that the word be expunged from the proceedings so that it will not appear either in the official report or in the newspapers.

THIRU K. VINAYAKAM: Is it an unparliamentary word?

MR. SPEAKER: It was withdrawn and expunged. On the point that statements on policies should be made only in this House, the Rules state on what matters statements should be made in the House. For instance, budget must be presented to the House and not to the public. There are no rules prohibiting the Hon. Ministers from making any statement outside the House in a public meeting or anywhere else. They can freely air and express their views. But I would personally request the Hon. Ministers that announcements on important matters of policy be made in this House, while the House is sitting. This is merely a request. It is left to the discretion of the Hon. Ministers and there is no rule binding on them. If circumstances demand, they are free to announce policies even outside the House.

** Expunged as ordered by the Chair.



4. முதலமைச்சரின் அறிக்கை சட்ட அதிகாரிகள் நியமனம்

THE HON. THIRU. C. N. ANNADURAI: Under Rule 82(1) of the Assembly Rules, I wish to make a statement with regard to the recent appointment of the Advocate-General and Pubilc Prosecutor.

The Government announced that the appointments of the Advocate-General and the Public Prosecutor were made on the advice of the High Court. Though, under the Constitution, there is no obligation to consult the High Court in regard to these appointments, the Government did consult the Senior-most Judge of the High Court when the Chief Justice happened to be away at Delhi. A communication was also received from the Judge that the Chief Justice had concurred with the proposed appointments by the Government. After hearing about the denial issued under the authority of the Chief Justice, His Lordship the Chief Justice has been informed of the communication received from the senior-most Judge. The Chief Justice has stated that, in this case, the communication was issued by the Judge without his knowledge or approval.

His Lordship the Chief Justice is thoroughly convinced that the Government acted *bona fide* on the communication received from the Judge. It has to be stated that the Government on prior occasions also had acted on similar communications treating them as authorised communications having the concurrence of the Chief Justice. This is the position under which the Government announced that the appointments of the Advocate-General and the Public Prosecutor had been made on the advice of the High Court. Thus it will be seen that the Government had acted *bona fide* on the communication received from the High Court.

The matter may be allowed to rest here in the interest of maintaining the usual cordial relationship between the Government and the High Court.

5. அரசினர் தீர்மானம்:

சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களைச் சேர்த்தல்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, "1967-68-ம் ஆண்டுக்குரிய சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் சேர்த்துக் கொள்ளுவதற்கென ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்து, அவ்வாறு நியமனம் செய்த உறுப்பினர்களின் பெயர்களை சபைக்கு அறிவிக்குமாறு இச்சபை சட்ட மன்றத்திற்கு பரிந்துரை செய்கின்றது" என்கிற தீர்மானத்தை நான் முன் உரைக்கிறேன்.

**தீர்மானம் அவை முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.**

6. அரசினர் மசோதாக்கள்.

**(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா 1/1967).**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவை (சட்டப் பேரவை மசோதா * 1/1967) இந்த அவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்" என நான் முன் மொழிகிறேன்.

தீர்மானம் அவை முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இரண்டாவது பிரிவும், மூன்றாவது பிரிவும் பேரவை முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பி.ப. அட்டவணை (Schedule) பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு
9-30 நிறைவேற்றப்பட்டது.

நெடுந்தலைப்பு (Long Title) முன்னுரை (Preamble) பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே; "இந்த மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்னுரைக்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, this Madras Appropriation Bill, 1967, is a Financial Bill. It is the well-established custom in this House as well as in any Legislature, that all Financial Bills will have to be tabled or introduced by an hon. Member duly elected to this House by the people.

MR. SPEAKER : Is this a point of order?

இந்த மசோதா, எவ்வளவு பணம் ஒதுக்க வேண்டுமென்பதற்காக இந்த அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது அதைப் பற்றிப் பேசாது வேறு ஏதாவது பேசவேண்டுமென்றால் கவர்னர் உரை விவாதத்தின்போது பேசிக்கொள்ளலாம். இப்போது இவ்வளவு பணம் இந்தத் துறைக்கு ஒதுக்க வேண்டுமென்பதுபற்றிப் பேசுங்கள். மற்றவைகளைப்பற்றிப் பேசுவதற்கு பின்னர் தங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும். உங்களுக்கே இது நன்றாகத் தெரிந்து இருந்தும் இவ்வாறு பேசுவது என்பது எனக்கு விதி முறைகள் தெரியும் என்று சோதனை செய்கிற மாதிரியாக இருக்கிறது.

**திரு. கே. விநாயகம் :** உங்களுக்கு முழு அதிகாரம் இருக்கிறது என்பது தெரியும். எப்போது வேண்டுமானாலும் பேசுகிற அங்கத்தினரை நிறுத்துங்கள் என்று சொல்லலாம், பேசக்கூடாது என்று

* 23-3-1967-ம் தேதிய அரசிதழ் தனி வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது.



சொல்லலாம், பேசியது தவறு 'நீக்கலாம்' என்று சொல்லலாம். ஆயினும் நான் பேசுவது இந்த மசோதாவைக் குறித்துத்தான் பூராவும் சார்ந்திருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

MR. SPEAKER : Is the hon. Member speaking on the Bill?

THIRU K. VINAYAKAM : Yes, Sir, I am speaking on the Bill.

MR. SPEAKER : Let the hon. Member speak on the merits of the Bill.

THIRU K. VINAYAKAM : Sir, if I have given an impression that I am raising a point of order, I am very sorry about it. That is not my intention. I am expressing my views on the Appropriation Bill. Mr. Speaker, Sir, on a former occassion in 1952. I believe, when the Congress Ministry was not in a position to form the Ministry and when it failed to get a majority by 10 members, they brought in the erstwhile retired Governor-General of India, Sri C. Rajagopalachari to head this Government. Then he was kind enough to bear that onerous duty and carried on the Government. But he knew that he did not get himself elected directly by the people. He was elected or nominated to the Upper House by the Governor. He knew that it was not political propriety to handle the Finance portfolio. So, he trained his junior and lieutenant, Sri C. Subramaniam and made him Finance Minister. Now, the point is, how is it politically proper that a Member not elected to this House by the people . . .

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மூன்றாவது வாசிப்பின்போது இந்த மசோதாவினுடைய நன்மை, தீமை இவைகளைப்பற்றிப் பேசலாம். இதைக் கொண்டு வந்த அமைச்சரைப்பற்றி, கொண்டு வருவதற்குத் தகுதி இருக்கிறதா, இல்லையா என்பது பற்றிப் பேசவேண்டுமென்றால் கவர்னர் உரையின்போது பேச உரிமையுண்டு. நீங்கள் இதைக் குறித்து மேற்கொண்டும் பேசினால் நான் அனுமதிக்க முடியாது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, on a point of personal explanation. Sir, let me know clearly whether the Chair is not in favour of continuing my speech or he is ruling my point as out of order. I am at a loss to understand how a Member can be denied this kind of right in the third reading stage.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** ஒரு மசோதாவைப் பற்றிப் பேசும்போது அந்த மசோதாவின் மெரிட்ஸ், சரியானதுதானா, தப்பிதமானதா என்பதைப்பற்றிப் பேசவேண்டும். வேறு ஏதாவது நடைமுறையைப் பற்றிப் பேசுவதாக இருந்தால், அது

[மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்] [1967 மார்ச் 27

பாயின்ட் ஆப் ஆர்டராக இருக்க வேண்டும். உறுப்பினர் அவர்களுக்கு இதைப்பற்றி நன்றாகத் தெரிந்திருந்தும் வேண்டுமென்றே வேறு காரியத்தைப்பற்றி பேசுகிறார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது. அவர்கள் வருந்த வேண்டாமென்று கூறி, என்னுடைய கடமையைச் செய்ய முற்படுகிறேன்.

THE HON. THIRU C. N. ANNADURAI: Mr. Speaker, Sir, if the Chair would permit me, I would like to intervene in this matter because the matter is so important in the sense that the Press would like to take all these aspects into consideration. I would like to present to this House many factors which may clarify the confusion created in the mind of my hon. Friend. Now, my hon. Friend says that people are confused. He has stated that because I am not a Member of this House, I should not or need not—I do not know whether he has used the word 'should' or 'need'—present the Budget or the Financial Bill before this House. Now, there is a definition for the word 'Member'. 'Minister' means 'any Minister'. There is no distinction between the Ministers as far as portfolios are concerned. Therefore, I would place before the House the following information.

The question arises whether the Finance Minister must be a Member of the Legislative Assembly and not a Member of the Legislative Council.

Article 164(1) of the Constitution provides that the Chief Minister shall be appointed by the Governor and the other Ministers shall be appointed by the Governor on the advice of the Chief Minister.

Article 164 (2) states that the Council of Ministers shall be collectively responsible to the Legislative Assembly of the State.

Article 177 provides that every Minister . . . shall have the right to speak in, and otherwise to take part in the proceedings of, the Legislative Assembly of the State or in the Legislative Council.

There is no provision in the Constitution which requires that the Ministers shall be Members of the Legislative Assembly only, much less is there any constitutional provision which requires that the Finance Minister or any other Minister or even the Chief Minister shall be a Member of the Legislative Assembly. It therefore, follows that constitutionally there is no bar or prohibition for a Member of the Legislative Council being appointed as Chief Minister or Finance Minister or any other Minister.

Rule 2 (e) of the Madras Legislative Assembly Rules defines 'Finance Minister' thus:

' "Finance Minister" means the Minister in charge of Finance or any other Minister to whom he may delegate his functions for the purpose of the rules.'



1967 மார்ச் 27] [Thiru C. N. Annadurai]

Rule 2 (k) of the Legislative Assembly Rules provides that a Minister who is not a Member of the Assembly shall be deemed to be a Member for the purposes mentioned in Article 177 of the Constitution. Though he is not technically a member of this House, he shall be deemed to be a member for the purposes mentioned in Article 177 of the Constitution.

The relevant Lok Sabha Rule defines 'Finance Minister' as to include any Minister.

It may also be mentioned that in October 1964 on account of the unavoidable absence of the then Chief Minister, the then Minister for Industries Thiru. R. Venkataraman, Member of the Legislative Council, moved the Demands for Grants for Excess Expenditure for the year 1961–62 and also the Appropriation (No. 7) Bill, 1964. Therefore there is a precedent also. (Thiru K. Vinayakam: Permanent.) My friend is banking upon the words 'permanent' and 'temporary'. What right has he to presume that I will be a Member of the Council for all time to come? I may become a Member of the Assembly later on. It is not a question of impossibility; it is only a question of convenience.

It is clear from the above that a Member of the Council can be a Chief Minister as also a Finance Minister and the fact that he is a Member of the Council does not and cannot inhabit or impede him in the performance of his functions and duties as such but makes it imperative that he should present the budget.

The question still remains whether it is a parliamentary convention that Finance Minister must be a member of the Legislative Assembly.

We were discussing the other day about what the source of the Parliamentary practice is. In England in 1963, Lord Earl Home was appointed as Prime Minister while he was a member of the House of Lords. Nearer home in India recently the Prime Minister Srimathi Indira Gandhi was a Member of the Rajya Sabha. It is not established that in 1952 the Finance portfolio was entrusted to Thiru. C. Subramaniam, a Member of the Assembly, only because it was accepted that it was a parliamentary convention that the Finance Minister must be a Member of the Assembly. It might well be that the Finance portfolio was assigned to him on grounds of convenience and expediency. It may be as my friend put it that Thiru. Rajaji wanted to bring him up and therefore it is that he entrusted the portfolio to Thiru. C. Subramaniam. Therefore, it does not mean that it ought to be followed as a precedent. At any rate, it is not universally acknowledged or established for ever that the Finance Minister must necessarily be a Member of the Assembly. I may add that when once a Minister takes charge as Minister, he has got every right to discharge his duty in *toto* including the presentation of the budget.

[1967 மார்ச் 27

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** அடுத்து, இந்த மசோதா மீது வாக்கெடுப்பு நடத்தவேண்டும். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவைச் சட்டமாக நிறைவேற்ற வேண்டுமென்ற தீர்மானத்தை அவைமுன் வைத்துள்ளார்கள்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்க மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா 4/1967)

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை (சட்டப் பேரவை மசோதா 4/1967) ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று முன் உரைப்பார்கள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** அவைத் தலைவரவர்களே, "1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் முன் உரைக்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 நிறைவேற்றப்பட்டது.

அட்டவணை நிறைவேற்றப்பட்டது.

நெடுந்தலைப்பு, முன்னுரை, பிரிவு 1-இவை நிறைவேற்றப்பட்டன.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவரவர்களே, "இந்த மசோதா நிறைவேற்றப்படவேண்டும்" என்ற தீர்மானத்தை அவை முன் வைக்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## 7. கவர்னர் பேருரையின்மீது விவாதம்:

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** அடுத்த அலுவல், கவர்னர் உரை மீதான விவாதம் தொடர்ந்து நடைபெறும். அன்று கடைசியாகப் பேசிய உறுப்பினர் திரு. ஆர். ராமச்சந்திர துரை அவர்கள் உரையை தொடர்ந்து ஆற்றி முடிப்பார்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, 20-ம் தேதி அன்று மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் உரை மீது பேசிய பேச்சின் தொடர்ச்சியாக இன்று பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்

* 25-3-1967 தேதிய அரசிதழ் தனி வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது.





கிறேன். இதுவரை கவர்னர் அவர்களின் உரை மீதான விவாதம் பட்ஜெட் விவாதம் என வைத்துக் கொண்டு ஆளும் கட்சியில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள். இதை அரசியல் மேடையாகப் பயன்படுத்திக் கொண்டு இதுவரை பேசியிருக்கிறார்கள். அவர்கள் அப்படி பேசிய காரணத்தினால் எதிர் கட்சியினராகிய நாங்களும், அதற்கு பதில் கூறுவதற்கு கடமைப் பட்டவர்களான நாங்களும் அரசியல் மேடையாக, அரசியல் கருத்துக்களை இங்கு கூறவேண்டியிருக்கிறது. தேர்தலுக்கு முன்பாக மக்கள் மத்தியில் பேசுகிற நேரத்தில், அவர்களிடம் வாக்குகளைக் கேட்கிற நேரத்தில், "20 ஆண்டு காலத்தில் நாங்கள் இன்னின்ன சாதனைகளை இந்த ஆட்சியில் செய்திருக்கிறோம், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இன்னின்ன காரியங்களைச் செய்கிறோம்" என்று மக்கள் மத்தியில் நாங்கள் பேசி அவர்களை அணுகியிருக்கிறோம். அதே நேரத்திலே, இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக சட்ட மன்ற உறுப்பினர்கள் மக்கள் மத்தியிலே பல விதமான கருத்துக்களைப் பேசி வாக்குகளைக் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் பேசிய பேச்சிலே, பேப்பர்கள் வாயிலாகப் பார்த்ததும், நேரடியாக நாங்கள் கேட்டதும், இந்த அரிசிப் பிரச்னை இன்னும் நிலவரி ரத்து ஆகிய பல விஷயங்களை அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் நாங்களும் இங்கு இந்த அரிசிப் பிரச்னையையும், மற்றும் இந்த நிலவரி ரத்து போன்ற பிரச்னைகளையும் பற்றிப் பேசுகிறோம். அதற்குக் காரணம் என்னவென்றால், நாங்கள் சட்டசபைக் கூட்டங்கள் முடிவுற்று திரும்பிச் செல்லுகிற நேரத்தில் எங்களுக்கு வாக்களித்த வாக்காளர்கள் எங்களைக் கேட்கிற நேரத்தில், நாங்கள் சட்ட சபையில் இன்னின்ன விஷயங்களை அவர்களிடத்தில் கேட்டோம் என்று கூறுவதற்கு ஒரு சந்தர்ப்பமாக இருக்கும் என்பதால் இம்மாதிரியான அரசியல் கருத்துக்களை இங்கே பேச வேண்டியிருக்கிறது.

அன்று பேசிய மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர் ஆசைத்தம்பி என்று எண்ணுகிறேன், அவர்கள் இங்கு எங்களுடைய ஆட்சியை 25 ஆண்டு காலத்திற்கு அசைக்க முடியாது என்று ஆணவமான தொனியில் பேசினார்கள். அதற்கு இன்றைக்கு எதிர்க் கட்சியாக இருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்கள் கூட தகுந்த பதில் அளித்திருக்கிறார்கள்.

இன்னொரு உறுப்பினர், தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த உறுப்பினர் தனுஷ்கோடி என்று எண்ணுகிறேன், அவர்கள் இந்த 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியிலே ஹரிஜன மக்களுக்காக இந்த ஆட்சி என்ன செய்திருக்கிறது என்று பேசினார்கள். இந்தப் பேச்சைக் கேட்கிற நேரத்தில் நாங்கள் வேதனை அடைவதுடன். அழுவதா, சிரிப்பதா என்று கூடத் தோன்றவில்லை. மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர் தனுஷ்கோடி அவர்களுக்கு ஒன்று கூற ஆசைப்படுகிறேன். அதாவது, இந்தச் சட்ட மன்றத்திலே சுமார் 40 ஹரிஜன உறுப்பினர்கள் இருப்பார்கள் என்று எண்ணுகிறேன். இந்த 40 உறுப்பினர்கள் இங்கு வந்து அமர்ந்து இம்

மாதிரியான கேள்விகளைக் கேட்பதற்குச் சந்தர்ப்பம் கொடுத்ததே இந்த காங்கிரஸ் கட்சி தான் என்பதை ஆளும் கட்சியிலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் இதே முறையில் பேசிக்கொண்டு போவதைக் கொஞ்சம் மட்டுப்படுத்த ஒன்று கேட்பதற்கு ஆசைப் படுகிறேன். இருபது வருஷ காங்கிரஸ் ஆட்சியின் சாதனைகளைப் பற்றி 1962-ல் காங்கிரஸை எதிர்த்த உறுப்பினர் பாத்தியதை கொண்டாடுவது எப்படி என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. கெ. இர. ஞானசம்பந்தம் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், இந்தச் சபைக்கு உறுப்பினராக வந்தது எலெக்ஷன் மூலமாக வந்ததா ? அல்லது காங்கிரஸ் கட்சியின் மூலமாக வந்ததா ? என்று கேட்க விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இது ஒழுங்குப் பிரச்னையே இல்லை. மதிப்பிற்குரிய உறுப்பினர் ராமச்சந்திர துரை அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** கனம் முதல் அமைச்சர் அவர்கள் 1962-ல் காங்கிரஸை எதிர்த்தவன் என்று கூறினார்கள். 1962-ம் வருஷத்திலே, 1957-ம் வருஷத்திலே கூட நான் காங்கிரஸை எதிர்த்தவன்தான். ஆனால் வேறு கட்சியிலிருந்து எதிர்த்தவன் அல்ல; ஒரு சுயேச்சையாக நின்று எதிர்த்தேனே தவிர, காங்கிரஸை எதிர்க்கவேண்டுமென்று எதிர்க்கவில்லை என்று கனம் முதல் அமைச்சர் அவர்களுக்குக் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அதே நேரத்திலே மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர் தனுஷ்கோடி அவர்களுக்கு மற்றொன்று கூறுவதற்கு ஆசைப்படுகிறேன். 19-20 ஆண்டுகளுக்கு முன்பு, ஹரிஜன மக்கள் இந்து கோவில்களிலே நுழைவதற்கு முடியாது இருந்த நிலைமையும் இருந்தது. ஹோட்டல்களில் சமமாக அமர்ந்து உணவு அருந்த முடியாத நிலைமையும் இருந்தது. அவர்கள் இன்று தேவஸ்தானம் என்று சொல்லுகிறார்களே, ஹிண்டு ரிலிஜியஸ் எண்டோமெண்ட்ஸ் அதிலே போர்ட் ஆஃப் ட்ரஸ்டீஸிலே கூட ஹரிஜன மெம்பர்கள் இருக்கிறார்கள் என்பதை அவர்களுக்குக் கூறுவதற்கு ஆசைப்படுகிறேன். இன்றைக்கு இதர வகுப்பினர்கள் என்று சொல்லக் கூடியவர்களுக்கும் உயர்ந்த ஜாதி என்று சொல்லக் கூடியவர்களுக்கும் தேவஸ்தானங்களில் எந்த அளவுக்கு மரியாதை செய்கிறார்களோ அந்த மரியாதைகள் ஹரிஜன மக்களுக்கும் இன்று நடைபெறுகிறது என்றால், அது காங்கிரஸ் ஆட்சியின் சாதனை என்று அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதிபற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நான் நின்று வெற்றி அடைந்த தொகுதி கந்தர்வக்கோட்டை தொகுதி. அந்தத் தொகுதியிலே ஒரு பகுதி நீர்ப்பாசன வசதி உள்ள பகுதியாகவும், இன்னொரு பகுதி





ஆற்றுப் பாசனம் இல்லாத பகுதியாகவும் இருக்கிறது. அந்தத் தொகுதியிலே உளவயல் சானல, கட்டளை சானல் என்று இரண்டு வாய்க்கால்களை வெட்டி அது வல்லம் பகுதி வரை வந்து நின்றிருக்கிறது. உளவயல் சானலும் அரைகுறையாக நின்றிருக்கிறது. இவைகளை இந்தப் பகுதியில் வெட்டுவதற்கு ஏற்பாடு செய்து வாய்க்கால்களை நல்ல முறையில் ஏற்பாடு செய்தால் பல ஆயிரக் கணக்கான நிலங்கள் பயன்படும் என்பதை இந்த அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதற்கு ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கந்தர்வக்கோட்டையிலிருந்து பட்டுக்கோட்டை போகும் வழியில், கந்தர்வக்கோட்டையிலிருந்து ஐந்தாவது மைலில் புதுப்பட்டி என்ற கிராமம் இருக்கிறது. அங்கே 1962-ம் வருஷத்தில் ஒரு போர்வெல் வைத்து, அது நல்ல முறையில் வேலை செய்து 100 ஏக்கர் நிலங்களுக்கு நல்ல முறையில் நீர்ப்பாசனம் நடந்து வந்தது. இப்போது எட்டு மாத காலமாக அது சீர்கேடு அடைந்திருக்கிறது. அதைச் சீர்ப்படுத்தினால் 100 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்க வசதியாக இருக்கும். அதே மாதிரி பக்கத்து கிராமங்களிலும் போர்வெல் போட ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கோனேர்நாடு என்று ஒரு இடம் இருக்கிறது. 10,000 ஜனத்தொகை இருக்கும் அந்த இடத்தில் ஆஸ்பத்திரி வசதி இல்லை. அதற்கும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினராக இருந்தாலும், புதுக்கோட்டையில் பிறந்து, புதுக்கோட்டையில் அந்த மக்களோடு பழகிய காரணத்தினால், புதுக்கோட்டை பகுதியைப் பற்றியும் ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன்.

புதுக்கோட்டையை வெகு நாட்களாக ஒரு ஜில்லாவாக ஆக்க வேண்டுமென்று முன் இருந்த காங்கிரஸ் அரசாங்கம் அதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருந்தது. ஒரு ஜில்லாவாக ஆவதற்கு எல்லாவித வசதிகளும் இருக்கின்றன. பெரிய ஆஸ்பத்திரிகள், பெரிய கோர்ட்டுகள் போன்ற எல்லா வசதிகளும் உள்ள இடமாக இருக்கிறது. இந்த புதுக்கோட்டை பகுதியை ஒரு ஜில்லாவாக ஆக்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டையிலே ஆற்றுப் பாசனம் இல்லாத காரணத்தினால் அங்கு காவிரி ஆற்றைக் கொண்டுவரவேண்டுமென்று பல காலமாக ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தையும் நல்லமுறையிலே இந்த அமைச்சரவை கவனித்து ஆற்றுப் பாசனத்தைக் மு. ப. 10-00
கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்றும் எங்கள் பகுதியிலிருந்து ஒரு சில கடிதங்கள் எனக்கு வந்திருக்கின்றன நெல் கொள்முதல் விஷயமாக. அதாவது சென்ற வருடத்தில் ஒரு நபரிடம் 100 மூட்டை கொள்முதல் செய்திருக்கிறார்கள் என்றால், இந்த வருஷம் அதற்கு மேலாகவும் இன்று

விளைச்சல் குறைவாக இருந்தாலும், அதிகமாக கொள்முதல் செய்திருப்பதாக பல கடிதங்கள் வந்திருக்கின்றன. உதாரணமாக எனக்கு 30 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று வைத்துக்கொண்டால், 5 ஏக்கர் நிலம் விவசாயம் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் 25 ஏக்கர் நிலம் விவசாயம் செய்யப்பட்டு அறுவடை ஆகவேண்டியிருக்கிறது. இந்த 5 ஏக்கர் நிலத்தில் அறுவடை ஆகின்ற நெல்லை முதல் லெவிக்கு கொடுத்து விட்டு வீட்டிற்கு கொண்டு வந்திருந்தும் பாக்கி நெல்லையும் 25 ஏக்கர் நிலத்தில் அறுவடை ஆவதற்கு முன்னாலேயே அந்த நெல்லையும் பறிமுதல் செய்கிறார்கள் என்று எனக்கு பல கடிதங்கள் வந்திருக்கின்றன. ஆகவே, இந்த நெல் கொள்முதலை நல்ல முறையில் செய்யவேண்டும் என்று இந்த அமைச்சர் அவையைக் கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த அவைத் தலைவர் அவர்களுக்கும், சபைக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ம. பொ. சிவஞானம்:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு முதன்முதலாக என்னுடைய சில கருத்துக்களை வெளியிடுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கவர்னர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அவை முன்பு வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தை நான் மனநிறைவோடு ஆதரிக்கிறேன். அதே நேரத்தில், இந்த உரையை வழங்குகின்ற முறையையும், உரையை வழங்குகின்றவர் வைக்கப்பட்டுள்ள நிலையையும், அதன் விளைவாக இந்த மன்றத்தில் பிரதிநிதித்துவம் ஏற்பட்டுள்ள நிலையையும் நினைப்பூட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

கவர்னர் உரை, இந்த மாநிலத்தில் மட்டுமல்ல, எந்த மாநிலத்திலானாலும் புதுமையாக எதுவும் இல்லாவிட்டாலும் அதைப்பற்றி 6 நாட்களுக்கு மேல் விவாதம் நடத்தி, அதற்குத் திருத்தங்களையும் கொடுத்து, அதில் ஏதோ இருப்பதாக நினைத்து அதற்கு நன்றி தெரிவித்து ஒரு தீர்மானமும் நிறைவேற்றுகிறோம். இவ்வளவும் நாம் செய்வதற்குக் காரணம், அந்தப் பதவிக்கு நாம் மரியாதை செலுத்தவேண்டும் என்பதுதான். அதற்காக ஒரு சடங்கை இவ்வளவு பெரிய சடங்கை நடத்துகிறோம். இந்தப் பதவிக்கு மக்களுடைய பிரதிநிதித்துவம் மூலம் நியமனம் செய்யப்படவில்லை. நான் தனியாக கவர்னர் அவர்களைப்பற்றிப் பேசவில்லை, கவர்னர் நியமனத்தைப் பற்றியே பேசுகிறேன்.

கவர்னர் நியமனம் பற்றி அரசியல் சட்டத்தில் இருக்கிற குறையை எடுத்துக்காட்டி நினைவூட்ட விரும்புகிறேன். அரசியல் சட்டம் தயாரித்த பெரியோர்கள் அச் சட்ட நகலில் கவர்னரைப் பற்றிக் குறிப்பிடும்போது, பொதுத் தேர்தலில் சட்ட மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதுபோல, கவர்னரும் வயது வந்தோர்களின் வாக்குகளினால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற விதியை வகுத்தார்கள். அதற்கு மாற்று விதியாக, எந்த மாநிலத்துக்குக் கவர்னர் தேர்ந்தெடுக்கப்படுகிறாரோ, அந்த மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் நான்கு பேர்கள் கொண்ட ஒரு பட்டி



யலைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பட்டியலை குடியரசுத் தலைவருக்கு அனுப்பினால் குடியரசுத் தலைவர் அந்தப் பட்டியலிலுள்ள ஒரு நபரை நியமிக்கவேண்டும் என்ற குறிப்பும் கொடுக்கப்பட்டது. வயது வந்த வாக்காளர்களால் கவர்னர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற ஒரு திட்டமும், அதற்கு ஒரு மாற்றுக் குறிப்பும் இருந்தபோதிலும் அதாவது சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு பேர்கள் கொண்ட பட்டியலில் ஒரு நபரை குடியரசுத் தலைவர் நியமனம் செய்யவேண்டும் என்ற மாற்றுத் திட்டமும் அரசியல் சட்டங்களில் இருந்தபோதிலும், தற்பொழுது அரசியல் சட்டத்திலுள்ள நிலை கவர்னர் அவர்களை குடியரசுத் தலைவர் நியமனம் செய்யவேண்டும் என்பதுதான். அந்த நிலையில் அரசியல் சட்டத்தைத் தயாரித்தவர்களிடையே ஏன் இந்த மன மாற்றம் ஏற்பட்டது என்பதை நாம் நினைவூட்டிப் பார்க்க வேண்டியது ஒரு முக்கியமான விஷயம்.

அரசியல் சட்டம் தயாரித்து ஆண்டுகள் 15 ஆகிவிட்டன. இது ஒரு பழைய விஷயம். கவர்னர் பெருமான் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்து நான் பேசுவது இது இரண்டாம் முறை ஆயினும், எனது புதுமைக் குணம் போகவில்லை. ஆகையால் அரசியல் சட்டத்திலுள்ள குறையை நான் எடுத்துக்காட்டி நினைவூட்ட விரும்புகிறேன். 'ஏன் நாம் இதற்கு இவ்வளவு காலம் செலவழிக்க வேண்டும், இவ்வளவு பணம் செலவழிக்க வேண்டும்' என்று பார்க்கும்பொழுது இதனுடைய பலன் இன்னும் கூடுதலாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம். நான் கவர்னர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தனிப்பட்ட கவர்னரைப்பற்றி நான் பேசவில்லை. கவர்னர் நியமனம்பற்றி அரசியல் சட்டத்திலுள்ள விதியைப்பற்றித்தான் நான் சொல்கிறேன். கவர்னர் அவர்கள் சட்ட மன்றத்திலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக பிரதிநிதித்துவம் வாய்ந்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற முறையில் அரசியல் சட்டம் மாற்றி அமைக்கப்படுவதற்கு மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்களும் பொறுப்புகளும் வேண்டும் என்ற கருத்துக்கு இப்பொழுது பொறுப்பேற்றிருக்கும் புதிய மந்திரி சபை முயற்சிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, குடியரசுத் தலைவர் கவர்னரை நியமிக்க வேண்டும் என்ற விதி இருந்தாலும் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்தான் ஒரு மாநிலத்திற்கு கவர்னராக அனுப்பப்படவேண்டும் என்று சொல்லப்படவில்லை. கவர்னராக நியமிக்கப்படுபவர் அந்த மாநில மக்களுடைய பழக்க வழக்கங்களையும் புரிந்துகொண்டிருப்பவராகவும், மாநில மக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுடைய கோரிக்கைகளைத் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பு உடையவராகவும் இருந்தால்தான் ஜனநாயக வளர்ச்சிக்குப் பயன்படக் கூடியதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

இந்த ராஜ்ய நிர்வாகம் தமிழிலேயே நடைபெற வேண்டும்; ஆட்சி நிர்வாகம் தமிழிலேயே இருக்க வேண்டும்; நீதிமன்றங்கள் தமிழிலேயே நடைபெறவேண்டும்; இந்தச் சட்டமன்ற நடவடிக்

லைகளும் தமிழிலேயே நடைபெறவேண்டும். மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. விநாயகம் போன்றவர்களுக்கு வேண்டுமானால் தமிழில் பேச இன்னும் கொஞ்சம் அவகாசம் தேவையாக இருக்கும். தமிழை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆட்சி தமிழிலே நடைபெறுகிறது. தமிழ் மொழியை அறியாமல் இருக்கிற ஒருவர் கவர்னராக இருக்கிற நிலையில் நிர்வாகத்தில் எவ்வளவு சிக்கல் ஏற்படுகிறது என்பதையும் நினைவுபடுத்தி, திருப்பவும் என்னுடைய கருத்தை சொல்கிறேன் . . .

### 3. ஒழுங்குப் பிரச்சினைகள் (தொடர்ச்சி).

### (இ) கவர்னரைப்பற்றி விவாதத்தில் குறிப்பிடுதல்.

THIRU K. VINAYAKAM : Sir, with your permission, I wish to raise a point of order. Regarding the appointment of the Governor or the Office of the Governor, no hon. Member has got a right to speak on it. This may be stated outside this House but on the floor of the House no hon. Member has a right to question his appointment or salary. So, all these things are quite irrelevant to the matter before the House.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் ஆங்கிலத்தில் சொன்னது என்னவென்றால் கவர்னர் அவர்களைப் பற்றி இந்த அவையிலே பேசக்கூடாது என்ற ஒழுங்குப் பிரச்னை ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். அதற்குரிய விதிமுறை என்னவென்று விளக்க வேண்டும். விதிமுறை என்னவென்றால் கவர்னர் பெருமானைப் பற்றி தனிப்பட்ட முறையில் அவர்களுடைய நடத்தைப்பற்றி பேசக்கூடாது. அதாவது 67-வது விதி 'A member, while speaking must not reflect upon the conduct of the Governor. . .' என்பது. அதாவது கவர்னர் அவர்களுடைய நடத்தையைப்பற்றி பேசக் கூடாதே ஒழிய, அவர்களுடைய நியமனத்தைப்பற்றியோ அவர்களுடைய ஊதியத்தைப் பற்றியோ அல்லது நியமன முறையைப்பற்றியோ பேசலாம். எதைப்பற்றி பேசக்கூடாது என்றால், அவர்களுடைய காண்டக்ட். அவர்களுடைய நடத்தையைப்பற்றி பேசக்கூடாது. மற்றபடி பேசலாம் என்பது என்னுடைய தீர்ப்பு.

திரு. கே. விநாயகம் : 'ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர்' மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் சொன்னது கவர்னர் பெருமான் தங்களுடைய உரையை தமிழிலே ஆற்றியிருந்தால் நல்லது என்று சொன்னது அவருடைய காண்டக்டைக் குறிக்கும். ஆதலால் பாயிண்டு ஆப் ஆர்டர் எழுப்புகிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : நான் தீர்ப்பு வழங்குவதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் இந்த ஒழுங்குப் பிரச்னையின் மீது ஏதாவது கூறிக்கொள்ள விரும்பினால் கூறிக்கொள்ளலாம்.





திரு. ம. பொ. சிவஞானம் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நான் இங்கு பேசிக்கொண்டிருப்பது கவர்னர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்துத்தான். இதை நான் முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். இரண்டாவதாக, ஆதரித்துப் பேசுவது மட்டுமல்ல; ஆதரிக்கின்றபொழுது கவர்னரைப்பற்றி அரசியல் சட்டத்திலுள்ள விதிகளில் உள்ள குறைகளை நினைப்பூட்டுகிறேனே தவிர, கவர்னரைப் பற்றி அல்ல. மூன்றாவதாக, கவர்னர் உரை தமிழிலே இல்லை என்று நான் சொல்லவில்லை. தமிழிலே இருக்கிற வாய்ப்பு எதிர்காலத்தில் ஏற்படவேண்டும் என்ற முறையில்தான் நான் கூறினேன். (ஆரவாரம்).

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : எனவே இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. விநாயகம் அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்னை உண்மையாக எழும்பவில்லை. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சிவஞானம் தொடர்ந்து பேசுவார்கள்.

### 7. கவர்னர் பேருரையின்மீது விவாதம் (தொடர்ச்சி).

திரு. ம. பொ. சிவஞானம் : ஆகவே இந்த நினைப்புகூட வரக் கூடாது என்றால், இந்த உரையைப் பற்றி இத்தனை நாட்கள் நாம் நன்றி தெரிவித்துப் பேசுவதற்கு விஷயமே கிடைக்காது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

இரண்டாவதாக, நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், இந்த நியமன முறைப்படி முன்பு வங்காளத்தில் மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்களைக் கவர்னராக நியமித்தார்கள். வங்காளத்திற்கு ராஜாஜி அவர்கள் கவர்னராகப் போகும்போது அவருடைய நியமனத்திற்கு அங்கே எதிர்ப்பு இருந்தது. தங்களைப் புரிந்து கொள்ளாத ஒருவர் அங்கே கவர்னராக வருவதற்கு எதிர்ப்பு இருந்தது. அதற்குப் பிறகு கவர்னராக நியமிக்கப் பட்ட இரண்டு பேர்களும் வங்காளிகள்—வங்காளத்தைச் சேர்ந்த வர்களைத்தான் மத்திய அரசு நியமித்திருக்கிறது. அந்த நீதியை எல்லா மாநிலங்களுக்கும் வழங்குவதில் எது தடங்கலாக இருக் கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. அதே நேரத்தில் கவர்னர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும் அஞ்சலியையும் கூட தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், கவர்னர் அவர்களுடைய உரையிலே ஒரு வாசகம் இருக்கிறது. "மாநிலங் களுக்குக் கூடுதலான அதிகாரங்களைக் கேட்கவேண்டிய நேரம் வந்துவிட்டது" என்று கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார். குறிப்பாக எடுத்துக்கொண்டால். கூடுதலான அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வேண்டும் என்ற கோரிக்கை அரசியல் சட்டம் இயற்றப்பட்ட பட்டாரத்திலிருந்து அது நடை முறைக்கு வந்த நாளிலிருந்தே—இருந்துகொண்டு வருகிறது என்பதை நினைப்பூட்ட விரும்புகிறேன். இரண்டாவது முக்கிய மான அம்சம், அரசியல் சட்ட நிபுணர்கள் எல்லாம் அடிக்கடி

[திரு. ம. பொ. சிவஞானம்] [1967 மார்ச் 27

கருத்து சொல்கிறபோது, கூடுதலான அதிகாரங்கள் மாநிலங்களுக்கு கொடுத்தாக வேண்டும் என்று சொல்கிறார்கள். இது எல்லாவற்றையும்விட நமக்கு கடந்த 15 ஆண்டு கால அனுபவம் இருக்கிறது. இன்று காங்கிரஸ் அல்லாத ஆட்சி 6 ராஜ்யங்களில் அமைந்திருக்கிற சூழ்நிலையில், உணவுப் பிரச்னையைத் தீர்க்க முடியாமல் துன்பப்படுகின்ற சூழ்நிலையில், அரிசிக்கு அகிலத்திடம் கையேந்தி நிற்கிறது டெல்லி; டெல்லியிடம் கையேந்தி நிற்கிறது சென்னை, சென்னையிடம் கையேந்தி நிற்கிறது சேரி. நாட்டிலுள்ள உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்குக் கூட ஒரு மாநிலத்திற்கு அதிகாரம் இல்லை. பதினைந்து ஆண்டு காலமாக அரசியல் சட்டத்தில் திருத்தம் வேண்டும் என்று சொல்லப்படுகிறது. மாறுதல் வேண்டியது அரசியல் சட்டத்தின் விதியை ஒட்டித்தான். அரசியல் சட்டத்திலே ஒரு மாநிலத்திற்கும் மத்தியத்திற்குமோ அல்லது எல்லா மாநிலங்களுக்கும் மத்தியத்திற்குமோ ஏதேனும் சிக்கல் ஏற்பட்டு, அது தீர்க்கப்பட வேண்டும் என்றால், அதற்கென்று தனியாக ஒரு கவுன்சிலை அமைக்க ஜனாதிபதிக்கு உரிமை உண்டு என்று அரசியல் சட்டத்தில் 263-வது பிரிவு கூறுகிறது. அரசியல் சட்டத்தை திருத்துவதற்கு 368-வது பிரிவில் வழி இருக்கிறது. அப்படி ஒரு கவுன்சில் நியமிக்கப்பட வேண்டும் என்றால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

நம்முடைய ராஜ்யத்தின் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் மாநில சர்க்காருக்கு கூடுதலாக அதிகாரங்கள் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு வருவதைப் பார்க்கிறோம். அப்படி பிரசாரத்திற்காகச் சொல்லிக் கொண்டு இருப்பதைவிட, 263-வது பிரிவைப் பயன்படுத்தி ஒரு கவுன்சிலை அமைக்க வேண்டும், அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற கோரிக்கையை மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் உள்பட எல்லோரும் ஒரு மனதுடன் தீர்மானமாக நிறைவேற்றிச் செய்ய வேண்டிய நேரம் வந்து விட்டதாகவே உணருகிறேன். அப்படிக் கூடுதலான அதிகாரம் வேண்டும் என்று கேட்பது பிரிவினை. உலகத்திலுள்ள சமஷ்டி நாடுகளில் பல ராஜ்யங்களைக் கொண்டு சமஷ்டி ஏற்பட்டிருக்கும் எந்த நாடுகளிலெல்லாம் மத்தியில் அதிகாரங்களைக் குவித்துவிட்டிருக்கும் நிலை இருப்பதாக நான் உணரவில்லை. மத்திய அரசு யஜமானியா அல்லது பெடரலா என்று புரியாத நிலைமை மாறியாக வேண்டும். (மாநில ஆட்சிக்குக் கூடுதலான அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்கிறபோது; அயல் நாட்டு உறவு, தேசப் பாதுகாப்பு, போக்குவரத்து என்கிற மூன்று அதிகாரங்களை மட்டும் மத்திய அரசிடம் விட்டுவிட்டு மற்றவற்றை மாநிலங்களுக்கே கொடுக்கக்கூடிய வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும். கவர்னர் உரையிலே சொல்லப்பட்ட கருத்தை விரிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.) அப்படி அரசியல் சட்டம் திருத்தப்படும்போது, மாநிலங்களுடைய பட்டியல்-மத்திய அரசின் பட்டியல் என்கிற இரண்டையும் அப்படியே விட்டு பொதுப் பட்டியல் உடனடியாக மாநிலங்களுக்கே உரிமையாக்கப்படும் என்று உறுதியாக நம்புகிறேன்.



1967 மார்ச் 27] [திரு. ம. பொ. சிவஞானம்]

அடுத்தபடியாக, நம்முடைய உணவுப் பிரச்னை. அதைப் பற்றி எண்ணுகிற போது 20 ஆண்டு காலம் ஆண்டு விட்டு வெளியேறிய கட்சி தேடிக் கொண்ட பழி இப்பொழுது வந்திருக்கிற அமைச்சரவை மீதும் இருக்கிறது. 'ரூபாய்க்கு மூன்று படி அரிசி கிடைக்க வேண்டும் என்று ஆசைதான். அது இன்றே கிடைக்க வேண்டும் என்கிற அவசரமும் கூட. ஆனாலும் ஆசையும் அவசரமும் அறிவோடு கலக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று ஆட்சியைக் கேட்க உரிமை உண்டு. ஆனால் அதை நிறைவேற்றுவதற்கான சூழ்நிலை இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும். அப்படி இல்லையென்றால், அப்படிப்பட்ட சூழ்நிலையை உண்டாக்குவதற்கு ஆதரவு ஒத்துழைக்க எதிர்கட்சிகள் கடமைப்பட்டிருக்கின்றன என்பதை நாம் மறக்கக் கூடாது. அதோடு கூட வேறு பிரச்னைகளில் நாம் எப்படி நடந்துகொண்டாலும் இந்த உணவுப் பிரச்னையில் கட்சிப் போர் இருக்கக் கூடாது. ஏனென்றால் இது மக்களுடைய சோற்றுப் பிரச்னை. இந்த சோற்றுப் பிரச்னையில் கட்சிச் சண்டைகளை ஒதுக்கி வைத்து விட்டு ஏதேனும் உடனடியாக செய்ய வேண்டியதைச் செய்யத் தலைப்படவேண்டும். 41 சதவிகிதம் காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டுப் போட்டவர்களுக்கும் உள்ள பிரச்னை இது. காங்கிரசுக்கு வாக்களித்தவர்கள் இந்த உணவுப் பிரச்னை இந்த நிலையில் இருப்பது நியாயம் என்று ஏற்றுக் கொண்டு வாக்களித்தார்கள் என்று பொருள் ஆகாது. ஆகவே எல்லோருடைய பிரச்னைதான் இந்தப் பிரச்னை. இதில் யாவரும் ஒத்துழைக்க வேண்டும் என்பது தெளிவு. ஆகவே, இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும் என்பதில், ஆளும் கட்சியின் கரத்தை நாமெல்லோரும் வலுப்படுத்த வேண்டும். நான் அப்படிச் சொல்லும்போது, மத்திய ஆட்சியினர் நேற்று வரை குறிப்பிட்டிருக்கிற வாக்கியங்கள் என் நினைவிற்கு வருகின்றது. அவர்கள் "உணவுப் பிரச்னையைக் கட்சிப் பிரச்னையாக்க வேண்டாம்" என்று கேட்டிருக்கிறார்கள். 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்ற மொழிக்கு இணங்க, இது உயிர்ப் பிரச்னை ஆனதால், இதை கட்சிப் பிரச்னையாக்காமல் இருக்கவேண்டும்.

அடுத்து பதுக்கல் பற்றியும், யார் யார் பதுக்கல் செய்திருக்கிறார்கள் என்பதுபற்றியும் தகவல் கிடைத்து, பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் தானியங்களை வெளிக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கும்போது, பலவிதமான புகார்கள் வருகின்றன. ஆனால், பதுக்கல் இருப்பதால்தான் கிட்டத்தட்ட பல லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள தானியங்கள் வெளிக்கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அப்படி அவ்வளவு தானியம் பதுங்கியதற்குக் காரணம், கடந்த கால ஆட்சி கொள்முதலைச் சரிவரச் செய்யாமல் விட்டு விட்டது தான். கண்டிப்பாக அரசாங்கம் கொள்முதல் நடத்தி ரேஷன் பொருள்களை பங்கீடு செய்ய வேண்டியது அவசியமாகிறது. இந்த மாதிரியான சிக்கலான நிலையில்—உணவுப் பங்கீடு கடைகளுக்கே அரிசி இல்லாத நிலையில்—பதுக்கலை பார்த்துக் கொண்டிருந்தால், அந்த நாட்டில் ஆட்சி இல்லை, 'அனார்க்கி' என்றுதான் பொருள். அப்படி தானியங்களைக் கொள்முதல் செய்ய முயற்சி எடுக்கும்போது, பதுக்கியவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்.

என்கிற பிரச்சினைக்கே இடம் இல்லை. பாரபட்சம் காட்ட முடியாது. ஆனாலும், அப்படிப் பதுக்கலை வெளிக்கொண்டு வரும் போது, ஒரு விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். பத்திரிகையில் பார்த்தோம், புத்தூரில் ஏற்பட்ட நிகழ்ச்சி சம்பந்தமாக. நல்ல வேளையாக, அமைச்சரவர்கள் அதன்பேரில் உடனடியாக நடவடிக்கை எடுத்ததால் போலீசார் விசாரிக்கிறார்கள் என்று அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். அதுமட்டுமல்லாமல், அவரவர்களுடைய பணிகள்பற்றித் தெளிவாக்குவதற்காக ஒரு மாநாடு போட்டு போலீஸ் அதிகாரிகளுக்கு அவர்கள் எந்த எந்த முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்று அறிவிப்பது சிறந்ததாக இருக்கும் என்று நினைக்கிறேன். சாதாரணமாக, எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், பெரிய பெரிய மிராசுதார் களுக்கு அதிகாரிகள் சலுகை காட்டுகிறார்கள் என்ற புகார் இருந்துகொண்டே இருக்கிறது. அது மெய்யோ பொய்யோ தெரியாது. ஆனால் எனக்கும் புகார்கள் வந்திருக்கின்றன "பெரிய புள்ளிகள் இருக்கும் இடங்களுக்கு அதிகாரிகள் போகவே இல்லை, சின்னச் சின்ன சொந்தக்காரர்களிடம்தான் அரிசி மூட்டைகளை எடுத்திருக்கிறார்கள்" என்று அதுபற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உணவுப் பிரச்சினை என்று பார்க்கும்போது, இன்னொன்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இப்பொழுது இருக்கும் ஆட்சிக்கு ஐந்தாண்டு முழுசாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. குறைகளைத் தீர்க்க வேலைகள் செய்ய அவர்களுக்கு முழுதாக ஐந்தாண்டுகள் வேண்டும் என்று சொல்லும்போது, ஐந்தாண்டின் இறுதியில் செய்வது என்று நான் குறிப்பிடவில்லை. அப்படி அவர்கள் முயற்சிகள் எடுக்கும் போது ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அகில இந்தியாவிலும் செல்வாக்கு பெற்று, கிட்டத்தட்ட எல்லா மாநிலங்களிலும் மத்தியிலும் ஆட்சி செய்தது காங்கிரஸ். அவ்வளவு வாய்ப்புக்களும், வசதிகளும் இருந்தும் நிர்வாகத்தில் நல்ல அனுபவம் இருந்தும், இந்த உணவுப் பிரச்னையைத் தீர்க்க முடியவில்லை. அப்படி இந்தப் பிரச்சினையைத் தீர்க்காமலே வெளியேறியிருக்கிறது. ஒரு பயங்கரமான நிலையை விட்டு விட்டுச் சென்றிருக்கிறது. வெளியேறுவதற்கே அதுதான் காரணம் என்றால், இப்போழுது வந்திருக்கும் ஆட்சிக்கு அது ஒரு பாடமாக எடுத்துக் கொள்ளக் கூடியது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, கட்சி பலத்தை மட்டுமே பயன்படுத்திக் கொண்டால் போதாது. அதற்கும் மேலாக எல்லாக் கட்சிகளின் உறுப்பினர்களையும் கொண்ட ஒரு குழுவை அமைத்து--குறிப்பிட்ட காலத்தில் வேலையை முடிக்க வேண்டும் என்று கட்டளை கொடுத்து அதற்காக முயல வேண்டும். இது புகார்களுக்கு இடம் கொடுக்காததாக இருக்கும் என்று எண்ணுகிறேன். அப்படிப்பட்ட பணியில் இந்த அமைச்சரவைக்கு எனது தமிழரசுக் கழகத்தின் மனப்பூர்வமான ஆதரவு இருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறேன்.

மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அந்தக் கோடியிலும், நான் இந்தக் கோடியிலும் இருக்கிறோம். இரு வேறு திசைகளைப் பார்த்துக் கொண்டும் இருக்கிறோம். ஆனாலும், இந்த உணவுப்





பிரச்னையில், மொழிப் பிரச்சினையில், மாநிலங்களுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் கொடுக்க வேண்டும் என்பதில் நாங்கள் ஒரே இடத்தில்தான் இருக்கிறோம்; ஒரே இதயத்தினராக, ஒரே கொள்கையினராக இருக்கிறோம். தேர்தலில் கைகோர்த்து நின்றிருந்தோம். தமிழரசு கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஏற்பட்ட அந்தத் தோழமை இன்னமும் நீடிக்கிறது. அந்தத் தோழமை பயன்படும் என்று நினைக்கிறேன்.

சேலம் இரும்பாலை பற்றி கவர்னர் உரையில் குறிப்பிடப்படவில்லை என்றாலும்; சர்வகட்சி சேலம் உருக்காலை குழுவின் தலைவன் என்ற முறையில் அதுபற்றி நினைவூட்ட விரும்புகிறேன். அது என்ன வயதிலே பிறக்க வேண்டுமோ, அந்த வயதில் பிறக்கவில்லை. பத்து மாதத்தில் பிறக்க வேண்டியது இன்னும் பிறக்கவில்லை. 'எப்படியும் பிறக்கும்' என்றால், உயிரோடு பிறக்கவேண்டுமே என்றுதான் கவலை. "எப்படியும் பிறக்கும்" என்று முன்பு இருந்தவர்கள் சொன்னார்கள். அதில் எனக்குச் சந்தேகமே இல்லை. 'எப்படி பிறக்கும்', என்பதுதான் இப்போது பிரச்சினை. கவர்னர் உரையில் இல்லாவிட்டாலும் கூட, மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களும், மற்றும் தொழில் அமைச்சர் அவர்களும் இதில் பொறுப்பு எடுத்துக்கொண்டு, இரண்டில் ஒன்றைத் தெரிவித்தாக வேண்டும். மாநில அரசாங்கமே எடுத்துக்கொண்டு நிறைவேற்று வதானால், அதில் எனக்குத் தடை இல்லை. தமிழகத்திற்கு நீதி வழங்கப்பட இல்லை. மூன்றாவது திட்டத்திலேயே சேர்த்து, பல லட்சத்தைச் செலவழித்து இடம் வாங்க ஆரம்ப ஏற்பாடு களெல்லாம் செய்து முடித்து, அதற்குப் பிறகும் இன்னும் இது தீர்க்கப்படவில்லையென்றால் நான்காவது திட்டத்திலாவது சேருங்கள். முதல் பந்தியில் குந்த வைத்துவிட்டு, மீண்டும் அவனை இழுத்து எழுப்பிவிட்டுப் 'கடைசிப் பந்தியிலாவது இடம் கிடைக்குமா?' என்று கேட்டால், விருந்தாளிக்கு மதிப்பு இல்லை என்று தான் பொருள். பதினேழு மாநிலங்களைக் கொண்ட இந்தப் பாரதத் திருநாட்டில், முதல் பந்தியில் சேலத்தை குந்த வைத்து விட்டு பின் மூன்றாவது திட்டத்தில் இல்லை என்று எழுப்பிவிட்டு, கடைசிப் பந்தியில் இடம் கிடைக்குமா என்பது சந்தேகம். ஏற்கனவே ஏற்பட்ட அவமானத்திற்கு என்ன பரிகாரம் என்று எனக்குத் தெரியவே இல்லை. இது மத்திய திட்டத்திலேயே சேர்க்கப்பட்டு, மத்தியத்தினுடைய பணத்திலேயே மீண்டும் இதைக் கொண்டுவர முடியுமானால் நல்லது என்று நான் நினைக்கிறேன். இல்லையானால், மத்தியத்தோடு மோதச் சொல்லுவது என்னுடைய கொள்கை அல்ல. ஏற்கனவே அங்கு எல்லாம் பலவீனப் பட்டிருக்கக்கூடிய நிலையில், அந்தப் போராட்டத்தைத் துவக்கும் படி நான்—தேச பக்தியுடைய இந்தியன் என்ற முறையில் சொல்ல மாட்டேன்.

இந்த மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்ற பெயர் இருக்க வேண்டும். கவர்னர் உரையில் அத்தகைய குறிப்பு இல்லை என்ற குறையை நான் பார்க்கிறேன். ஏற்கனவே இருந்த ஆட்சி எடுத்த முடிவு, மொழி அளவில், 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்து

[திரு. ம. பொ. சிவஞானம்] [1967 மார்ச் 27

அழைப்பதோடு வைத்துக்கொண்டுவிட்டது. அரசியல் சட்டத்தில்
தமிழ்நாடு' என்ற பெயர் ஏறவேண்டும் என்று நான் ஏற்கனவே
தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அந்தத் தீர்மானத்தை இந்த
மன்றத்தில் கொண்டுவர அனுமதித்து, இந்த ஆட்சி ஏற்றால் ஏக
மனதாக அனுப்பி வைக்கலாம். இல்லையானால், ஆட்சியின் சார்பி
லேயே அந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டால் நான் அங்கீகரித்
துக் கொள்ளுகிறேன். இங்கு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி
ஜனாதிபதிக்கு அனுப்புவது, பாராளுமன்றத்தில் ஒரு மசோதா
...ப்படுவதற்கு அனுகூலமாக இருக்கும் என்று நான்
...ஆட்சியில் இருந்தவர்கள் ஏன் அதைத்
தள்ளிப்போட்டார்கள் என்று புரியவில்லை. இனியும் தாமதம்
இருக்கக்கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள்.

கடைசியாக, கல்வி விஷயத்தில் பயிற்சி மொழி எதுவாக இருக்க
வேண்டும் என்பதைக் குறித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்பு
கிறேன். "தமிழைப் போதனா மொழியாகக் கொண்டு பயின்றவர்
களுக்கு உத்தியோகத்தில் சலுகை தரப்படும்" என்று கல்வி
அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்காக நன்றி தெரி
வித்துக் கொள்ளுகிறேன். நானும் ஒரு தமிழன், கல்வி அமைச்சர்
அவர்களும் ஒரு தமிழர். எனினும், தமிழில் ஆர்வம் உடையவன்
என்ற முறையில் அவருக்குத் தனியாக நன்றி தெரிவித்துக்
கொள்ளுகிறேன். இனி என்ன நிலைமை என்று தெளிவாக
வேண்டும். கல்வி ஆண்டு நெருங்கிவிட்டது. ஒரு கல்லூரியில்
தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டுவர வேண்டுமானால், முன்
கூட்டியே அது மனுச் செய்திருக்க வேண்டும் பல்கலைக் கழகத்திற்கு
அப்படி மனுச் செய்ய வேண்டிய காலம்கூடக் கடந்து விட்டதாக
நான் கருதுகிறேன். அடுத்து வரும் கல்வி ஆண்டிலாவது தமிழ்
பயிற்சி மொழி ஆகுமா, இல்லையா என்று தெரிந்துகொள்ள
விரும்புகிறேன். ஏற்கனவே ஆட்சியில் இருந்தவர்கள்,
"விரும்பினால் மாணவர்கள் தமிழிலேயே பயிலலாம்" என்று
அனுமதி கொடுத்தார்கள். அது சலுகை.

மிக வேதனையோடு கேட்டுக்கொள்ளுகிறேன். நான் தமிழ்
நாட்டில் வாழ்கிறேன். இங்கு தமிழர்கள்தான் ஆளுகிறார்கள்.
கட்சி மாறிக் கட்சி வந்தாலும், நாம் அத்தனை பேரும் தமிழர்கள்
தான். என்பதில் ஐயப்பாடு இல்லை. அந்த நிலையில், தமிழுக்குத்
தான் உரிமை இருக்க வேண்டும். அன்னிய மொழிக்குச் சலுகை
இருக்க வேண்டும். ஆனால் நிலைமை என்ன? போதனாமொழி
ஆங்கிலம்தான் என்ற விதி நீக்கப்படவில்லை. அதற்கு விலக்காக
"விரும்புவோர் தமிழில் படிக்கலாம்" என்ற சலுகை இருக்கிறது.
உரிமை ஆங்கிலத்திற்கு; சலுகை தாய் மொழிக்கு! இது உலகத்தி
லேயே எங்கும் இல்லாத கொடுமை! இந்த நிலை நீடிக்காமல், தமிழ்
அறிந்த ஒருவர்—தமிழில் பட்டம் பெற்ற ஒருவர்— தமிழகத்தில்
முதன் முதலாகக் கல்வி அமைச்சராக வந்திருக்கிற இந்தப்
பொன்னான நேரத்தில், தமிழ்த் தாய்க்கு ஏற்பட்ட இழுக்கை
அகற்றிவிட வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.



1967 மார்ச் 27] [திரு. ம. பொ. சிவஞானம்]

இரண்டாவது ஒன்று சொல்லுகிறேன்; படிக்கும் மாணவருக்கு எது போதனா மொழி என்றால், ஒருவர் சரித்திரப் பாடத்தைப் படிக்கிறார். விஞ்ஞானப் பாடத்தைப் படிக்கிறார், மருத்துவப் பாடத்தைப் படிக்கிறார். படிக்கிற மாணவருடைய மொழி எது என்று பார்க்க வேண்டும். படிப்பு சொல்லிக்கொடுக்கும் ஆசிரியருக்கும், படிக்கும் மாணவருக்கும் எது பொது மொழியோ, அது தான் போதனா மொழியாக இருக்க வேண்டும் என்பது உலக நியதி. போதிப்பவன் தமிழன். போதிக்கப்படுபவன் தமிழன். கல்லூரி இருப்பது தமிழ்நாட்டில். ஆனால், போதிக்கப்படும் பயிற்சி மொழி ஆங்கிலம். இது எப்படி வந்தது என்பதுதான் வேடிக்கை. ஆனால், அதனை ஆராய்வதும் காலம் கடந்த ஆராய்ச்சியாகும். ஆராயவும் தேவை இல்லை. ஆங்கிலம் எப்போது போகும் என்பதுதான் பிரச்சினை. அதைத்தான் கல்வி அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். ஏற்கனவே இருந்த கல்வி அமைச்சர் 1960-ம் ஆண்டில் ஒரு திட்டம் கொடுத்தார். வெள்ளையறிக்கை சமர்ப்பித்தார். அதில் "1963-ஆம் ஆண்டில் அனைத்துக் கல்லூரிகளிலும் பி. ஏ., பட்டப் படிப்புக்குத் தமிழ்தான் பயிற்சி மொழி, இதை ஏற்காத கல்லூரிக்கு அரசாங்க மானியம் கிடையாது" என்றார்கள். கட்சி மாறாத நிலை இருந்தபோதே—1962-ம் ஆண்டில் அமைச்சர் மாறிய நிலையில்—"இதை நான் ஏற்கமாட்டேன், விரும்புவோர்க்கு விட்டுவிடுங்கள்" என்று கல்வி அமைச்சர் சொன்னார்கள். திரும்பவும் கேட்கிறேன்—1960-ம் ஆண்டு நிலைக்குப் போக வேண்டும். பி.யு.சி. ஐச் சேர்த்து, கலைப் பாடங்களைத் தமிழில் கொண்டு வாருங்கள். எனக்கு ஆசை எவ்வளவோ இருந்தாலும், அனுபவத்தைத் தாண்டிப் போக விரும்பவில்லை. பி.யு.சி.-யிலும், பி.ஏ.-யிலும் கலைப்பாடங்களைத் தமிழில்தான் போதிக்க வேண்டும். இதற்கு விதி விலக்கு விரும்பினால், தமிழர் அல்லாதார்க்கு அளிக்க வேண்டும். பம்பாயிலோ, கல்கத்தாவிலோ இருக்கும் தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை தமிழகத்தில் பிற மொழியினருக்கு நாம் வழங்குவதன் மூலமாகத்தான், அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய முடியும்.

பயிற்சி மொழி விஷயத்தில் கனம் கல்வி அமைச்சர் அவர்கள், விரைவில் "தமிழ்தான் பயிற்சி மொழி தமிழகத்தில்" என்ற நிலையை ஏற்படுத்தவேண்டும். அடுத்த கல்வி ஆண்டில் அதற்கான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். தமிழர் அல்லாதாருக்கு ஆங்கில மொழி மூலம் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பும் வசதியும் செய்து தரப்படலாம்; செய்துதரப்பட வேண்டும். தமிழ் மொழி வளர்ச்சிக்காக மட்டும் நான் இப்படிச் சொல்லவில்லை; படிக்கின்ற மாணவர்களுடைய வசதிக்காகவும் சொல்லுகிறேன். அதோடு மட்டுமல்லாமல், தமிழில் கலைச் சொற்கள் வந்து குவிய வேண்டும் என்று விருப்பத்தோடும் சொல்லுகிறேன். ஒருவர் தாய்மொழியாம் தமிழ் மொழியில் புலமை பெற்றால், அவர் அனைத்துக் கலையிலும் சிறந்து விளங்க வசதி இருக்க வேண்டும். பொது அறிவையும் பெற இது ஒன்றுதான் வழி, ஆதலால், தமிழைப் பயிற்சி மொழியாக்க வகை செய்ய வேண்டும் என்று திரும்பவும் கேட்டுக்கொள்ளுகிறேன்—தமிழைப் பயிற்சி மொழியாக்கித்

தமிழுக்கு வாழ்வு அளிக்க கல்வி அமைச்சர் முன்வரவேண்டும். திராவிட முன்னேற்றக் கழக மந்திரி சபை ஒரு மகத்தான புரட்சிக்குப் பிறகு அமைந்திருக்கிறது. நேற்று எதிர்க்கட்சியினராக இருந்தவர்கள் இன்று ஆளுங்கட்சியாக வந்திருக்கின்றனர். முன்பு ஆளும் கட்சியினராக இருந்தவர்கள் இன்று எதிர்க்கட்சியினராக இருக்கின்றனர். எதிர்க்கட்சி என்னும்போது, காங்கிரஸ் கட்சியானது இந்நாட்டில் அப்பட்டமான எதிர்க்கட்சியாகவும் இல்லை. மத்தியிலே அது ஆளுகிறது. மத்தியில் ஆட்சி நடத்தும் கட்சி இங்கே எதிர்க்கட்சியாக இருக்கிறது. வேறு எங்கும் ஆளுங்கட்சியாக இல்லாத ஒரு கட்சி இங்கே மட்டும் ஆளும் கட்சியாக இருக்கிறது. ஆம், இங்கு எதிர்க்கட்சியாக இருப்பது, மத்தியிலே ஆளுகிறது; இங்கு ஆளுங்கட்சியாக இருப்பது, மத்தியிலே எதிர்க்கட்சியாக இருக்கிறது. இந்த உறவை வைத்துக்கொண்டு காங்கிரசாரும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் கொஞ்சம் நெருங்குவார்களானால், மக்களை நெருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அவர்கள் நெருங்கிச் செயல்பட விரும்புவார்களானால், நாங்கள் கைகொடுக்கக் காத்துக் கொண்டிருக்கிறோம். இவர்களுடைய ஒற்றுமையால், மாநிலத்திற்குக் கூடுதலான அதிகாரம் கிடைப்பதோடு, உணவுப் பிரச்சினைக்கும் பரிகாரம் காண முடியும் என்ற நம்பிக்கையோடு நல்ல எண்ணத்தோடு, சகோதரக் கட்சிகளுக்கு வேண்டுகோள் விட்டு, விடைபெறுகிறேன்.

* திரு. இர. இளம்வழுதி : மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே. கவர்னர் பெருமானுடைய உரையின் மீது நடைபெறும் நன்றி தெரிவிக்கிற இந்தத் தீர்மானத்தில், நான் என்னுடைய முழு ஆதரவைத் தெரிவித்து என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்ல முன்வருகிறேன்.

அவர்களுடைய உரையில், கடந்து முடிந்த பொதுத் தேர்தல் விரும்பத்தகாத சூழ்நிலையின்றி, அமைதியான முறையில் நடைபெற்றதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் கருத்து ஒரு பெரிய நல்ல கருத்தாக இருக்கிறது. பொருந்தன்மையாகவும் இருக்கிறது. கடந்த தேர்தலில் என்னுடைய தொகுதியாகிய கடலூர் தொகுதியில் காங்கிரசுக்காரர்கள் தேர்தலுக்கு முன்பு செய்த சில காரியங்களை இங்கே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொருளாளரும், இன்றையப் பொதுப் பணி அமைச்சருமான கலைஞர் கருணாநிதி அவர்கள் தேர்தலுக்கு முன்பு கடலூருக்கு வந்திருந்தார்கள். கட்சி வேலையாகவும், தேர்தல் வேலையாகவும் அவர்கள் வந்திருக்கும்போது, காங்கிரசுக்காரர்கள் ஜீப்களிலும் கார்களிலும் ஏறிக்கொண்டு, கலைஞர் கருணாநிதி அவர்களைத் துரத்தினார்கள். துரத்தும்போது, பல ஆபாசமான வார்த்தைகளைச் சொல்லியும், கலைஞர் கருணாநிதியை அடிப்பேன், வெட்டுவேன், குத்துவேன், கொலை செய்வேன் என்று பயங்கரமான முறையில் வார்த்தைகளை உதிர்த்ததோடல்லாமல், அங்கே பயங்கரமான ஆயுதங்களை வைத்துக்கொண்டும் மிரட்டினார்கள். ஆனால், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற நல்ல தத்துவங்களை நாட்டுக்குக் கொடுத்துள்ள எங்களுடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்களுடைய வழிவந்த கழகத்தின்





தொண்டர்கள் அங்கே அமைதி காத்தார்கள். தாய்மார்கள் கண்ணீர் உகுத்தார்கள். அந்த பயங்கரமான காரியம் அங்கே நடைபெற்றிருக்குமானால், அல்லது நீடிக்க விடப்பட்டிருக்குமானால், நிச்சயமாக அங்கு பயங்கரமான படுகொலைகள் நிகழ்ந்திருக்கும்; தேர்தலும் அங்கே நடைபெற்றிருக்காது. இங்கே—உறுப்பினர் கனம் காசிநாத துரை என்று கருதுகிறேன்—அவர்கள் பேசும் போது காங்கிரஸ் கட்சி தங்களுடைய சாதனைகளைச் சொல்லி மக்களிடம் வோட்டுக் கேட்டதாகச் சொன்னார்கள். சாதனைகளை மட்டும் சொல்லியிருந்தால் பாராட்டியிருப்போம். ஆனால், வேதனை தரத்தக்க காரியங்களைச் செய்து, பயங்கரமான சூழ்நிலைகளை உருவாக்கி, அடியாட்களைக் கொண்டு பயமுறுத்தி, காங்கிரசுக் கட்சிக்காரர்கள் கடலூரில் ஓட்டு வேட்டையாடினார்கள். ஆனால், நல்ல காலமாக, கடலூரில் இருந்த பொதுமக்கள் அமைதி காத்து, அராஜகமான வேலையைத் தடுத்து நிறுத்தி, திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்கு வெற்றி தேடித் தந்தார்கள்.

கவர்னர் உரையில் இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டிருக் மு.ப.
கிறது. சிற்சில அரசாங்க ஊழியர்கள், பற்றில்லாமலும், பொது 10 30
வான முறையிலும், தேர்தல் காலங்களில் பணியாற்றியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்தும் மிகவும் பொருந்தன் மையான கருத்தாகும். ஆனால், தென்னார்காடு மாவட்ட விளம்பர அதிகாரி என்கிற உத்தியோகத்தில் ஒருவர் இருக்கிறார். அந்த மாவட்ட விளம்பர அதிகாரியை எங்களுக்கு நன்றாகத் தெரியும். காங்கிரசில் இருந்து தேர்தலில் தோற்றவர்கள், இளைஞர் காங்கிரசில் இருந்தவர்கள், வேலை இல்லாமல் இருந்தவர்கள். அவர்களுக் கெல்லாம் காங்கிரஸ் சர்க்கார் சர்வீஸ் கமிஷன் மூலமாக வேலை கொடுக்காமல், தாங்களே நேரடியாக வேலை கொடுத்து, அவர்களை நாட்டிலே விளம்பர அதிகாரிகளாகப் போட்டிருக்கிறார்கள். அந்த விளம்பர அதிகாரிகள் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி செய்யக்கூடிய காரியங்களைச் செய்து வந்தார்கள். தேர்தலிலே காங்கிரஸ் வேட் பாளர்கள் என்ன என்ன காரியங்களைச் செய்வார்களோ, அவைகளையெல்லாம் செய்து வந்தார்கள். காங்கிரஸ் பிரசாரத்திற்காக நடத் தப்பட்ட நாடகங்களுக்கே தலைமை தாங்கினார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டிய மகாநாட்டில் இந் நாடகத்தைப்பற்றி நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். நாம் அதுபற்றி நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார். ஆனால் இதுவரை நட வடிக்கை எடுக்கப்படவில்லை. தேர்தலுக்கு முன்பாக 20-2-1967-ல் நாங்கள் சட்டப்படி ஏற்படுத்தப்பட்டுள்ள நல்ல மரபைக் காத்தோம். காங்கிரஸ் வேட்பாளர்களும் சரி, நாங்களும் சரி எந்தவிதமான ஓட்டு வேட்டையிலும் ஈடுபடாமல் பேசாமல் இருந்தோம். ஆனால், இந்த விளம்பர அதிகாரி இந்த 20—2—1967-லும் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வசதிகளை வைத்துக் கொண்டு கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் சென்று, காங்கிரஸ் சாதனைகள் இவை என்ற முறையில் சினிமாப் படங்களைப் போட்டுக் காட்டி, நீங்கள் காங்கிரசுக்கே ஓட்டுப்போட வேண்டுமென்று பிரசாரம் செய்தார்கள். அதுபற்றியும் எங்களது மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்னோம். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்திருந்

தாலும் கவர்னர், தம் உரையில் மிகப் பெருந்தன்மையாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அலுவலர்கள் பொறுப்புவாய்ந்த இருந்து பணியாற்றியிருக்கிறார்கள் என்று.

அதுமட்டுமல்ல. காங்கிரஸ்காரர்கள் கடந்த பத்தாண்டுக் காலமாக ஏகோபித்துச் சொல்லி வந்தார்கள். நாட்டில் தரமான எதிர்க் கட்சி இல்லை. மாற்றுக் கட்சி இந்த நாட்டில் உருவாகவில்லை என்பதாக காங்கிரஸ் தலைவர் காமராஜரிலிருந்து அன்றையதினம் வரை முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் வரை வெளியிலும் சொல்லி வந்தார்கள் சட்ட மன்றத்திலும் சொல்லி வந்தார்கள். ஆனால் தமிழ்நாட்டு மக்கள் நல்லதொரு மாற்றுக் கட்சி இருக்கிறது, என்பதை நிரூபித்து, காங்கிரஸ் கட்சியினரை நல்லதொரு எதிர்க்கட்சியாக இருந்து செயல்பட ஒரு வாய்ப்பினை அளித்திருக்கிறார்கள். எதிர்க்கட்சிகள் எந்தெந்த முறையில், பணியாற்ற வேண்டும் என்பதை நிரூபித்துக் காட்டுவதற்கு தமிழ் நாட்டு மக்கள் அரியதொரு சந்தர்ப்பத்தைக் கொடுத்திருந்தும், இன்றைய தினம் இந்த மாமன்றத்தில் பேசும் உறுப்பினர்கள் அரிசி விலையைப்பற்றியும், மந்திரிகள் சம்பளத்தைப் பற்றியும் அடிக்கடி பேசுகிறார்களே தவிர, கொள்முதல் திட்டத்தைப்பற்றியோ நெல் பதுக்கல் பற்றியோ பேசுவதில்லை. அதுமட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளிலே பதுக்கி வைக்கப்பட்டிருக்கிற நெல்பற்றி குறிப்பு கொடுக்கிறார்கள். அதுபோல எந்தக் காங்கிரஸ் எம்.எல்.ஏ.யும் சமூக விரோதச் செயல்களாகிய பதுக்கல் கொள்ளையில் ஈடுபடுகிறவர்களைப்பற்றித் தங்கள் தொகுதியில் ஏதாவது குறிப்புக் கொடுத்திருக்கிறார்களா என்றால் இல்லை. நாட்டில் இருக்கிற உணவு நெருக்கடி நிலைமையைத் தீர்ப்பதற்கு உதவி செய்தார்களா என்றால் இல்லை. அவர்களுக்கு இன்னொரு விஷயத்தையும் நான் சொல்லிக் கொள்வேன்.

நம்முடைய தேசிய கொடி இருக்கிறதே, அந்தக் கொடிக்கும் காங்கிரஸ் கட்சிக் கொடிக்கும் நமக்கு அதிகம் வித்தியாசம் தெரிவதில்லை. படித்தவர்களாகிய நமக்கே அதிக வித்தியாசம் தெரியாதிருக்கும்போது, நமது நாட்டில் இருக்கிற பாமர மக்களுக்குத் தெரிவதில்லை என்று குற்றம் சாட்டிப் பயனில்லை. தேசியக் கொடியில் மூன்று வர்ணங்கள் இருக்கின்றன. மத்தியில் சக்கரம் இருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் கொடியிலும் அதே மூன்று வர்ணங்கள் இருக்கின்றன. மத்தியில் ராட்டை இருக்கிறது. அதிக தூரத்தில் இருந்து பார்த்தால், ராட்டையிலும் சக்கரம் இருப்பதால், சக்கரமுள்ள தேசியக் கொடியை காங்கிரஸ் கட்சியின் கொடிபோலவே நினைத்துவிடுகிறார்கள். அதன் காரணமாக, தேசியக் கொடிக்கு கொடுக்க வேண்டிய மரியாதையும், அது காங்கிரஸ் கட்சியின் கொடி என்று மக்கள் நினைத்து மதிப்புக் கொடுக்கத் தவறிவிடுகிறார்கள். சினிமாக் கொட்டகையில் பார்க்கலாம். முடிவிலே தேசியக் கொடி காட்டப்படும்போது, பொதுமக்கள் பெரும்பாலும் அந்தக் கொடிக்கு வணக்கம் செலுத்துகின்ற முறையில் இல்லாமல் வேகமாக வெளியேறி விடுகிறார்கள். இதற்குக் காரணமே அது காங்கிரஸ் கட்சியின்





கொடிபோல இருக்கிறது என்பதுதான். காங்கிரஸ் கட்சியின் கொடிக்கு நாம் ஏன் வணக்கம் செலுத்த வேண்டும் என்ற முறையில் பொதுமக்கள் வெளியேறி விடுகிறார்கள். அதுமட்டும் அல்ல. பொது நிகழ்ச்சிகளில் தேசியக் கொடியை ஏற்றும்போது, அதற்கும் மரியாதை செய்யத் தவறிவிடுகிறார்கள். இன்றையதினம் இதன் காரணமாக காங்கிரஸ் கட்சியைப் பார்த்து, உங்கள் கொடியை மாற்றிக்கொள்ளுங்கள் என்று சொல்ல உரிமையில்லை. ஜனநாயக நாட்டில் எந்தக் கட்சியும் தங்களுக்குரிய கொடியை வைத்துக்கொள்ளலாம். ஆனால், எந்தக் கட்சிக் கொடியையும் ஒட்டியிராமல், தேசியக் கொடி என்பது எல்லோராலும் சுலபத்தில் தெரிந்துகொண்டு மரியாதை செய்வதற்குரிய வகையில் அதை மாற்றியமைப்பதற்கு நாம் எல்லோரும் முனைந்து செயலாற்ற வேண்டும். நீங்களும் மத்திய சர்க்காரிடம் எங்களோடு சேர்ந்து எடுத்துரைக்க வேண்டும். அத்தகைய ஒரு கொடி அமைந்தால், நாட்டு மக்கள் அத்தனை பேரும் அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், தேசியக் கொடிக்கு உரிய மரியாதையைச் செலுத்த முன்வருவார்கள். சென்ற வாரம் பஞ்சாபில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. மந்திரியின் காரிலிருந்த தேசியக் கொடியை காங்கிரஸ் கொடி என்று அகற்றிவிட்டு, ஜனசங்கத்தின் கொடியை மாற்றியமைத்ததற்காக சட்ட மன்றத்தில் கூட புகார் எழுப்பப்பட்டது. இந்தச் சூழ்நிலை பஞ்சாபில் மட்டுமல்ல, ராஜஸ்தானிலும் இருக்கிறது, ஒரிஸாவிலும் இருக்கிறது, கேரளத்திலும் இருக்கிறது. மேற்கு வங்கத்திலும் இருக்கிறது, தமிழ்நாட்டிலும் இருக்கிறது. தமிழ் நாட்டில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் தங்கள் கார்களில் தேசியக் கொடியை பறக்கவிட்டுக் கொண்டு போனால் பொது மக்கள் அதை வரவேற்பதில்லை. யாரோ காங்கிரஸ்காரர் வருகிறார்கள் என்று நினைத்துக்கொள்கிறார்கள். எனவே, தேசியக் கொடியை தேச மக்கள் அனைவரின் விருப்பத்திற்கும் ஏற்ற வகையில் மாற்றியாக வேண்டும். அதற்கு அரசியல் சட்டத்தை திருத்தியாக வேண்டும். இதற்கு எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து இணைந்து பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, காங்கிரஸ் கட்சியில் இருக்கிற நண்பர்கள் இதை மத்திய சர்க்காரிலிருக்கிற நண்பர்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். காங்கிரஸ் கட்சித் தலைவருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். தேச மக்கள் அனைவரும் மதிப்பளிக்கக்கூடிய வகையில் தேசியக் கொடியின் அமைப்பை மாற்றியமைக்க வேண்டுமென்று அருள் கூர்ந்து கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. நாங்கள் ஆட்சியாளர்களுடன் இணைந்து செயலாற்றுவோம், பணியாற்றுவோம் என்று சொன்னார்களே தவிர, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் பேசுகிறார். 'காங்கிரஸ் கட்சி சட்ட மன்றத்தில் சிறுபான்மையாக இருக்கலாம். ஆனால் மேல் சபையில் பெரும்பான்மையாக இருக்கிறோம். ஆகவே கீழ்ச் சபையில் இவர்கள் எதை வேண்டுமானாலும் நிறைவேற்றிக் கொள்ளட்டும். நாங்கள் மேல்சபையில் பார்த்துக்கொள்கிறோம், தடுத்து நிறுத்துவோம் என்ற முறையில் பேசினார்கள். அதைக் கேட்டபோது நாங்கள் மிகவும் வருத்தப்பட்டோம். நம் சபையில்

[திரு. இர. இளம்வழுதி] [1967 மார்ச் 27

எந்த ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் அது மேல் சபையின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்படுகிறது. மேல் சபையினர் அதை ஏற்றுக்கொண்டால் சரி, ஏற்றுக்கொள்ளாது அதை அங்கீகரிக்க மறுத்தால், மறுபடியும் நம்முடைய சபைக்கே அந்தத் தீர்மானம் வந்து, நம்முடைய சபையினால் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விடலாம். இப்படியிருக்க வீணாக எதை எதையோ பேசி, காங்கிரஸ்காரர்கள் நாட்டில் ஒற்றுமையைக் குலைப்பதற்காகத்தான் உதவி செய்கிறார்கள். அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன் தயவுசெய்து அவர்கள் ஆட்சியாளருடன் ஒத்துழைக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, இன்னொரு காங்கிரஸ் கட்சி அங்கத்தினர், காங்கிரஸ் சர்க்கார்தான் ஹரிஜனங்களை சட்ட மன்றத்திற்குத் கொண்டு வந்தது என்று குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் ஹரிஜனங்கள் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பாக நிறுத்தப்பட்ட ஹரிஜன வேட்பாளர்கள் தோற்கடிக்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நின்ற வேட்பாளர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இதிலிருந்தே அவர்கள் கூறும் வாதம் ஒத்துவரவில்லை. உண்மையில் காங்கிரஸ் கட்சிதான் ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டதா? ஹரிஜன முன்னேற்றத்திற்காக டாக்டர் அம்பேத்கார், பெரியார் ராமசாமி, அறிஞர் அண்ணா ஆகியவர்கள் எந்த அளவிற்குப் பாடுபட்டிருக்கிறார்கள் என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஹரிஜனங்களுக்குத் தாங்கள் பாடுபடுவதுபோல காங்கிரஸ் கட்சி சொல்லிக்கொண்டு, அந்த சமூகத்திலுள்ள ஓட்டை 'லம்ப்பாக' ஓட்டு மொத்தமாகப் பெற்று வந்திருக்கிறார்களே தவிர உண்மையிலே அவர்களுடைய முன்னேற்றத்தில் அக்கறை காட்டவில்லை. ஹரிஜன சமூகத்தின் முன்னேற்றத்திற்கு காங்கிரஸ் கட்சிதான் பாடுபட்டது என்பதை மக்கள் ஏற்றுகொள்ளவில்லை. ஆகவே, இது போன்ற பல கருத்துக்களைச்சொல்லி காங்கிரஸ் கட்சியினர், நல்லதொரு எதிர்க்கட்சியாக இல்லாமல், எதிரிக் கட்சியாக இருப்பது பயனில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் அரசியலில் ஈடு பட்டு ஆட்சியில் நெடுங்காலமாக இருந்து வந்திருக்கிறார்கள். நல்ல காரியங்களைச் செயலாற்றக்கூடிய திறன் படைத்தவர்கள். ஆகவே, இனிமேலாவது நல்ல உருப்படியான கருத்துக்களை நல்கி, நாட்டை எதிர் நோக்கியுள்ள உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எங்களோடு தோளோடு தோளாக இணைந்து நின்று பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கரு. சீமைச்சாமி:** பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் உரையை வரவேற்று எனது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடனேயே, உணவுக்



1967 மார்ச் 27] [திரு. கரு. சீமைச்சாமி]

கொள்கையில் ஒரு பெரிய மாற்றம் இருக்கும் என்பதை விவசாயப் பெருங்குடி மக்களாகிய நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் கட்சியினர் எந்தக் கொள்கையை கடைபிடித்து வந்திருக்கிறார்களோ அதே கொள்கையையே திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் பின்பற்றி வருவது விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் கொடுக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால், புதிய கொள்கை உருவாக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட முடியும் என்று சொல்லப்பட்டது. தேர்தல் முடிந்த பிறகு விலை கொஞ்சம் இறங்கியது என்றாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் காங்கிரஸ் கட்சியினரின் பழைய கொள்கையையே பின்பற்றிச் செயல்பட்டு வந்ததன் காரணமாக விலைவாசி மீண்டும் ஏற ஆரம்பித்துவிட்டது. சென்னையில் முதலமைச்சர் அவர்கள் பெரிய நிலச்சுவான்தார்களிடம் கெடுபிடி செய்து கொள்முதல் செய்தாலும், சிறு மிராசுதார்களிடம் அன்புடனும் அரவணைப்புடனும் கொள்முதலைச் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். இப்படிச் செய்வதன் மூலமாக உணவுப் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை. போலீஸ் அதிகாரிகளையும், ரெவின்யூ அதிகாரிகளையும் கொண்டு விவசாயிகளின் வீட்டிற்குச் சென்று நெல்லைச் சூறையாடுவது தவறான கொள்கை என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கட்டாயக் கொள்முதல் மூலமாகத்தான் விலைவாசி இறங்கும் என்கிற கருத்தும் தவறானதாகும். உதாரணமாக, சிமெண்டுக்குக் கண்ட்ரோல் இருந்ததை, எடுத்தவுடன், இரும்புக்குக் கண்ட்ரோல் இருந்ததை எடுத்தவுடன், இன்று கட்டிட வேலைக்குத் தேவையான இரும்பு, சிமெண்டு அதிகமாகக் கிடைக்கிறது. வீடு கட்டுகிறவர்களைத் தேடிக்கொண்டு வந்து கொடுக்கிறார்கள். எதற்கும் கட்டுப்பாடு என்று வந்தவுடன் தான் அதற்குப் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பதுக்கலும் கள்ளச் சந்தையும் ஏற்படுகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, கட்டாயக் கொள்முதல் திட்டத்தை கைவிட வேண்டும். கட்டாய கொள்முதல் திட்டத்தை எடுத்துவிட்டாலேயே ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று இல்லாவிட்டாலும் ஒரு ரூபாய் 35 காசுக்கு அதிகம் போகாமல் நல்ல அரிசி—நல்ல தரமான அரிசி நிச்சயம் கிடைக்கும் என்பதைச் சொல்லுகிறேன், நெல், சம்பந்தமாக இருக்கிற கண்ட்ரோலை எடுத்துவிட்டாலேயே நல்ல தரமான அரிசி கிடைக்குமென்று சொல்லிக் கொள்கிறேன். பணம் கொடுத்தால் அரிசி கிடைக்கிறது என்று சொல்லும்போது, நிச்சயமாக தமிழ் நாட்டில் உணவுப் பற்றாக்குறை என்றாகிறது. நாட்டில் உணவுப் பஞ்சம் இருக்கிறது. கஷ்டம் இருக்கிறது என்று சொன்னால் பணம் கொடுத்தாலும் அரிசி கிடைக்கக்கூடாது. உணவுப்பற்றாக்குறை நம் ராஜ்யத்தில் அப்படியிருக்கும்போது, விளைகின்ற அத்தனை தானியத்தையும் கொள்முதல் செய்ய அரசாங்கத்திடம் பணமே இல்லாதபோது வீணாக கொள் முதலைத் தீவிரப்படுத்தி, விவசாயிகளை பலவிதமான தொந்தரவு

களுக்கு ஆளாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். கடந்த பத்து நாட்களாக நடந்து வரும் சம்பவங்கள் உண்மையிலேயே வேதனை தருகின்றது. கலப்பை பிடித்து உழுவதைத் தவிர வேறொரு தொழில் தெரியாது. ஆனால் இன்றையத் தினம் பதுக்கல் பதுக்கல் என்று விவசாயிகளின் மனம் புண்படும்படியாகச் செய்யாதீர்கள். 'ஹோர்டிங்' என்ற சொல்லுக்கு அவர் கொண்டிருக்கிற கருத்து என்ன என்பதை முதலமைச்சர் திட்டவட்டமாக விளக்க வேண்டும். நெல்லை உற்பத்தி செய்கிறவர்கள், நெல்லை வீட்டில் வைத்துக்கொள்வது, நெல்லைப் பதுக்குகிறார்கள் என்று கருதப்படுமானால் அதைவிட அநியாயம் வேறு ஒன்றும் இல்லை. கடந்த பத்து நாட்களாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளைப்பற்றி நான் ஒரு ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொண்டுவந்தபோதுகூட கனம் சபாநாயகர் அவர்கள் கவர்னர் உரையின்மீது பேசும்போது அதைப்பற்றிச் சொல்லலாம் என்று குறிப்பிட்டுவிட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, போலீஸ் அதிகாரிகளோ, ரெவின்யூ அதிகாரிகளோ, கொள்முதல் செய்கிறபோது தவறாக நடந்து கொண்டார்கள் என்றால், அதை என் கவனத்திற்குக் கொண்டு வரலாம், நான் அதைப் பரிசீலனை செய்வேன். தவறாக நடந்து கொண்டவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வேன் என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு நடந்து வருவது என்ன? பல இடங்களிலே துப்பாக்கி முனையைக் காட்டி போலீசார் அத்துமீறி ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் நுழைந்திருக்கிறார்கள். சாப்பாட்டிற்கு இருக்கிற நெல்லைக்கூட எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். குறிப்பிட்ட சமூகத்தினரை மிகக் கேவலமாகக்கூட பேசியிருக்கிறார்கள். அரசாங்கம் இதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக உசிலம்பட்டியில் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியும். பூட்டுக்களை உடைத்துக்கொண்டு வீடுகளில் நுழைந்து நெல்லை அள்ளியிருக்கிறார்கள். வீட்டுக்காரர் வீட்டில் இல்லையென்று தாய்மார்கள் சொல்லியும், அவர்களை வீட்டைவிட்டே வெளியேற்றிவிட்டு வீட்டை சீல் வைத்திருக்கிறார்கள். இந்த முறையில் அரசாங்கத்தின் கொள்முதல் முறை நடைபெறுமானால் நிச்சயமாக அடுத்து வருகிற உணவுச் சாகுபடி வெகுவாகப் பாதிக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, சென்னையிலும், கோவையிலும் கட்டாய ரேஷன் முறை இருப்பதால் எங்களுக்கு அரிசி தேவை என்று சொன்னார்கள். அதற்கு எந்த அளவு தானியம் வேண்டுமோ, அந்த அளவுக்கு விவசாயிகளிடத்தில் அவர்களுடைய சம்மதத்தின்பேரில் அவர்களிடம் கேட்டே பெற முடியும். அப்படியிருக்க வீடுகளிலே புகுந்து பதுக்கல் என்றும் கள்ள மார்க்கெட் என்றும், விவசாயிகளை வேதனை அடையத்தக்க விதத்தில் துன்புறுத்துவது கொஞ்சங்கூட





சரியல்ல. இன்றைக்கு நம்மிடத்திலே போதுமான பணம் இல்லை. அதற்காக பணக்காரர்கள் வீடுகளிலே புகுந்து அவர்கள் பெட்டியிலே வைத்திருக்கிற பணத்தையெல்லாம் நீங்கள் சூறையாடிக் கொள்ள முடியுமா? பல்லாயிரக்கணக்கான பேர்களுக்குச் சென்னையிலே குடியிருக்க வீடு இல்லை. அதற்காக ஒன்றுக்கும் மேற்பட்ட பணக்காரர்களுடைய வீடுகளையெல்லாம் போலீஸ் துணைகொண்டு ஆக்கிரமித்துக்கொண்டுவிட முடியுமா? அப்படியிருக்க, அநியாயமாக ஏழை விவசாய மக்களை அவர்கள் உற்பத்தி செய்கின்ற தானியத்தை வீட்டில் வைத்திருக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் வீடுகளிலே புகுந்து அவர்களை இழிவுபடுத்துவது, துன்புறுத்துவது மிகமிகத் தவறான காரியமாகும். உசிலம்பட்டியில் துரைசாமி நாடார் என்பவர் சாப்பாட்டுக்காக நெல்லை வைத்திருந்தார், ஆர்.டி.ஓ. அவர்கள் அவருடைய வீட்டை உடைத்து, அவரை அடித்து அவமானப்படுத்திவிட்டு, அந்த நெல்லை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். நிச்சயமாக, அதை என்னால் ப்ரூவ் பண்ண முடியும். செங்கல்பட்டு மாவட்டத்தில் மஞ்சங்காரணை என்ற கிராமத்திலிருந்து எனக்கு இதோ எழுதி அனுப்பியிருக்கிறார்கள். 16-3-1967 காலை பத்து மணிக்கு 5 லாரிகள் நிறைய இரும்புத் தொப்பியணிந்த எஸ்.ஏ.பி. போலீசார்கள் கொண்டுவரப்பட்டு அந்தக் கிராமத்தில் உள்ள வீடுகள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு இரண்டு போலீஸ்காரர்களை காவல் போட்டு வைத்திருக்கிறார்கள். வீடுகளிலே நெல் இல்லை. பதுக்கல் என்ற பெயரைச் சொல்லி களத்துமேட்டிலேயே அன்று அறுவடை செய்யப்பட்ட நெல்லை அடித்து அதை பறிமுதல் செய்துகொண்டு போயிருக்கிறார்கள். அவர்களுக்கு இதுவரை பணம் கொடுக்கப்படவில்லை. நானும் மதிப்பிற்குரிய மூக்கையா தேவர் அவர்களும் கும்மிடிபூண்டிக்கு அழைத்துச் செல்லப்பட்டோம், அங்கு எட்டு நாட்களாக ஒவ்வொரு வீட்டின் முன்னாலும் போலீஸ் இருந்தது. நேற்றுத்தான் போலீஸ் வாபஸ் வாங்கப்பட்டது. 16-3-1967 முதல் 23-3-1967 வரை போலீஸ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் கிராமங்களில் உள்ள பெண்கள் எல்லாம் தங்கள் வீட்டிலிருந்து வெளியே வர முடியாமல் பீதி அடைந்திருந்தார்கள். ஒருவரிடமிருந்து 100 மூட்டை நெல் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு கொடுத்திருப்பது இந்த ரசீது (ஒரு ரசீதைக் காட்டினார்). அவருக்கு இதுவரை பணம் கொடுக்கப்படவில்லை. 1967-ம் வருஷம் மார்ச் மாதம் 14-ம் தேதி பகல் 3 மணிக்கு களத்து மேட்டில் அம்பாரமாகக் குவிந்திருந்த நெல்லைப் பறிமுதல் செய்தார்கள். ராமக்கண்ணு என்பவர் சாப்பாட்டுக்காக வைத்திருந்த 30 மூட்டை நெல்லையும், விதைக்காக வைத்திருந்த 12 மூட்டை நெல்லையும் பறிமுதல் செய்தார்கள். களத்து மேட்டிலிருந்த நெல்லைப் பறிமுதல் செய்திருக்கிறார்கள். களத்துமேட்டிலே எப்படி கணக்குக் கொடுக்க முடியும். கதிர் அறுத்து முடிந்த பிறகு வேண்டுமென்றால் இத்தனை குவிண்டால் என்று கணக்குக் கொடுக்க முடியுமே தவிர, களத்து மேட்டிலேயே எப்படிக் கணக்குக் கொடுக்க முடியும். பத்திரிகையில் வரும் செய்திகள் விவசாயிகளுக்குத் தெரியாது. தண்டோரா மூலமாக இத்தனை மூட்டை நெல் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்து சிவில் சப்ளைஸ் அதிகாரிகள் மூலம் வசூலிக்க வேண்டுமே தவிர,

போலீசை வைத்து மிரட்டக்கூடாது. போலீசை வைத்து மிரட்டு கிறபோது விவசாயிகள் பயப்படுகிறார்கள். விவசாயிகள் செய்த குற்றம் என்ன? அவர்கள் செய்த ஒரே குற்றம், பெரிய குற்றம் நெல்லை உற்பத்தி செய்ததுதான். இதனால் விவசாய மக்களிடையே பெரிய சலசலப்பு ஏற்படுகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். கடன்காரர்கள் களத்து மேட்டில் வந்து நின்று கொண்டு கடனைத் திருப்பிக் கேட்பது போல், போலீசார் களத்து மேட்டிற்குச் சென்று விவசாயிகளைத் துன்புறுத்துகிறார்கள். துரைசாமி நாயுடுவிடம் இருந்து நெல் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது, ராஜ கோபால் நாயுடு என்பவரிடமிருந்து 250 மூட்டை நெல் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டிருக் கிறதே தவிர, இதுவரை பணம் கொடுக்கப்படவில்லை. விவசாயி ஒரு மூட்டை உரத்தை வாங்கவேண்டுமென்றால், பணத்தைக் கையிலே வைத்துக்கொண்டு காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக் கிறது. ஆனால் அவர்களிடமிருந்த நெல் பறிமுதல் செய்யப்பட்டு 10 நாட்களாகியும் கூட, இதுவரை அவர்கள் பணம் பெற முடியாத கேவலமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை நீடித்தால் விவசாய உற்பத்தி பாதிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உடனடியாக அந்த விவசாயிகளுக்குப் பணத்தைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன் உணவு உற்பத்தியைப் பெருக்கிக் கொடுக்கின்ற அந்த விவசாயிகளை அவர்கள் நல்ல முறையில் உற்பத்தி செய்து காட்டிய பிறகு, அவர்களிடமிருந்து துப்பாக்கி முனையில்; கத்தி முனையில் கொள் முதல் செய்வது பரிதாபப்படக்கூடிய விஷயமாகும். நெல் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிக்குத் திருட்டுப் பட்டம், பதுக்கல் பட்டம். இந்த நிலை நீடித்தால் அவர்கள் இதிலிருந்து தப்பித்துக் கொள்ள அவர்கள் வேறு தொழிலை நாடி ஓடக்கூடிய நிலையில் இருக் கிறார்கள். அந்த விவசாய பெருங்குடி மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் வைகைக் கால்வாய்த் திட்டத்தை நவீனமாக்கும் திட்டம் இருக்கிறது, அதைப்பற்றி முன்பு சட்டசபையில் பேசியபோது, 'டெக்னிகல் அப்ரூவலுக்குச் சென்றிருக்கிறது; வந்தவுடனே நிறைவேற்று வோம்' என்று அப்போதைய பொதுப்பணித் துறை அமைச்சர் ராமையா அவர்கள் கூறினார்கள். இப்போதுள்ள பொதுப்பணித் துறை அமைச்சர் கருணாநிதி அவர்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லுக்கு விலையை ஏற்ற முடியாது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது நெல்லுக்குக் கொடுக்கப்படு கிற விலை போதாது. மற்றப் பொருள்களை உற்பத்தி பண்ணுகிற வர்கள் அதற்கு இன்ன விலை என்று கேட்கிற நிலையில், ஒரு





பெட்ரோமாக்ஸ் லைட்டுக்கு இன்ன விலை வேண்டுமென்று கேட்கும் போது, ஒரு கெடிகாரம் விற்கும்போது இன்ன விலை வேண்டு மென்று கேட்கும்போது; நெல்லை உற்பத்தி செய்பவர்கள் மட்டும் அதற்குரிய விலையைக் கேட்கமுடியாத நிலை இருக்கிறது. நெல்லுக் கான விலையை டெல்லி அரசாங்கம் சொல்லி அதைக் கேட்டு மாகாண அரசாங்கம் சொல்லுகிறது, பாடுபட்டு உற்பத்தியைப் பெருக்கிக் கொடுக்கின்ற விவசாய மக்களுக்கு நெல் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, கவர்னர் அவர்கள் உரையை வரவேற்று என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஆர். என். அரங்கநாதன்:** அவைத்தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஒரு சில கருத்துக்களை தெரிவிக்கும் வகையில் முதலில் கவர்னர் பெரு மான் உரையை பாராட்டி வரவேற்கிறேன்.

கவர்னர் உரை என்பது சம்பிரதாயமாக ஏற்பட்ட உரையாகு லும்கூட, அது ஆளும் பொறுப்பில் உள்ளவர்கள் தங்களுடைய கொள்கையை எந்த நடைமுறையில் கொண்டு வரப் போகிறார்கள் என்பதைக் கோடிட்டுக் காட்டும் வகையில் நான் கவர்னர் உரை என்ற சம்பிரதாயம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கவர்னர் உரை யிலே காணப்படுகின்ற கொள்கைகள் உண்மையிலேயே பாராட்டுக் குரியனவாக இருக்கின்றன என்பதைக் காரண காரியங்களோடு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த போன தேர்தலைப் பற்றி கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் கருத்து வரவேற்கத்தக்கது. தேர்தல் சமயத்தில் எல்லா அதிகாரிகளும் பாரபட்சமில்லாமல் நடந்து கொண்டார்கள் என்று கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிட் டிருக்கிறார்கள். தேர்தல் நேரத்தில் பலவிதமான அசம்பாவிதங் கள் நடந்திருந்தாலும்கூட; பாரபட்சமில்லாமல் நடந்தது என்று கவர்னர் அவர்கள் உரையில் கூறப்பட்டிருக்கிறது என்றால், இன்று ஆளும் பொறுப்பில் வந்திருக்கின்ற நாங்கள் எந்தவிதமான பழியையும் யார் மேலும் சுமத்த வேண்டுமென்று வரவில்லை; பண் புடன் வந்திருக்கிறோம்; பக்குவப்படுத்தப்பட்டு இந்தச் சபைக்கு வந்திருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது. முக்கியமாக பாரதத் திலே இன்று இருக்கிற கூட்டாட்சி முறையிலே மத்திய சர்க்கார் மாகாண சர்க்கார் தொடர்பு பற்றி கவர்னர் அவர்களுடைய உரை யில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் கூட்டு ஆட்சி முறையில் இருக்கின்ற காரணத்தால்; மூன்று லிஸ்டின் கீழே— யூனியன் லிஸ்ட், ஸ்டேட் லிஸ்ட், கன்கரண்ட் லிஸ்ட்—அரசாங்கத் திற்கு இருக்கின்ற வரைமுறைகள் அரசியல் சட்டத்திலே வரை யறுக்கப்பட்டிருக்கிறது என்று சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி மெம் பர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஸ்டேட் லிஸ்டில் இருக்கும் விஷயங்களைப் பற்றி மாநில அரசாங்கம் சுலபமாகச் சட்டங்களை இயற்றலாம். ஆனால் மத்திய அரசாங்கம் அவைகளிலும் சில

சந்தர்ப்பங்களில் தலையிடலாம் என்று விதிமுறைகள் இருக்கின்றன. கன்கரண்ட் லிஸ்டை எடுத்துக் கொண்டாலும் வலுவான கரம் மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறதே தவிர; மாநில அரசாங்கத்திற்கு இல்லை. இந்திய அரசியல் சட்டம் சிறுகச் சிறுகத் திருத்தப்பட்டு மாநில அரசாங்கத்திற்கு ஒருவிதமான பலமும் இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாநில அரசாங்கம் சாதாரண பஞ்சாயத்து நிலைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பிளானிங் கமிஷனுக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் ஃபுட் கார்ப்பரேஷன் என்று ஒரு நிறுவனம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் என்ற அமைப்பை ஏற்படுத்தி அந்தக் கவுன்சிலுக்கும் அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கும் அதிகாரம் அதனிடமும் கொடுக்கப்பட்டிருக்கிறது பொதுத் தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் அல்லாத சர்க்கார் ஏற்பட்டிருக்கிற அநேக மாநிலங்கள் மத்திய சர்க்காரோடு போராடி அதிகமான அதிகாரங்களைப் பெறமுடியுமா என்ற பிரச்சினையில் ஈடுபட்டிருக்கிறார்கள். கேரள மாநிலத்திற்கு உணவுப் பொருள் கொடுக்க வேண்டுமென்று கேட்டபோது; நேற்று ஆந்திர முதலமைச்சர் அவர்கள் " Centre will decide what Kerala will get " என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திற்குப் பரிபூரணமான அதிகாரத்தைக் கொடுக்கும் வகையில் பேசியிருக்கிறார்கள். " We want a strong centre." பலமான மத்திய அரசாங்கம் வேண்டுமென்றும், அத்தனை உரிமைகளையும் காங்கிரஸ் அல்லாத சர்க்கார் இருக்கின்ற மாநிலங்களுக்குக் கொடுக்கக் கூடாது என்ற கருத்தைத் தெளிவுபடுத்துகின்ற முறையில் சொல்லியிருக்கிறார்கள். திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் இவ்வாறு சொல்லியிருப்பது மற்ற மாநில மக்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது.

காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசும்போது பொதுவாக ஒன்றை எதிர்பார்த்தேன். ஒத்துழைப்பு தருகிறோம், ஒத்துழைப்பு தருகிறோம் என்று பேசிவந்தார்களே தவிர அவர்கள் சொல்ல மறந்தது, அவர்கள் சொல்லக் கடமைப்பட்டது மத்திய சர்க்கார் எங்கள் கட்சி சர்க்காராக இருந்தாலும் உங்களோடு சேர்ந்து கொண்டு மத்திய சர்க்காரிடம் போராடி மத்திய அரசாங்கத்திலிருந்து வரவேண்டிய நிதிச் சலுகைகள் எல்லாவற்றையும் ஏற்படுத்தித் தருவோம் என்று ஒருவர் கூடச் சொல்லவில்லை. மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது குறிப்பிடுவார்கள் என்று நினைத்தேன். ஒத்துழைப்பு தருவோம் என்று சொன்னார்களே தவிர எந்த வகையில் தருவார்கள் என்பதை தெளிவாகக் காட்டவில்லை. அவர்கள் தரக் கூடிய அல்லது சொல்லக் கூடிய ஒத்துழைப்பு அரசியல் ரீதியில் அரசியல் அகராதியில் அரசியல் வாதிகள் பேசுகிற ஒத்துழைப்பாக இல்லாமல் மன சுத்தியுடன் ஒத்துழைப்பு தந்து மத்திய சர்க்கார் அமைச்சரவையிடம் திருமதி இந்திரா காந்தி அவர்களிடம் நேரிடையாகச் சென்று பேசும்போதோ அல்லது மற்றவர்களுடன் கலந்து பேசும்போது எங்களை தமிழ் நாட்டு மக்கள் வரவேற்கவில்லை என்றால் அதற்குக் காரணம் நீங்கள் எவ்வளவோ அதிகாரங்களை எங்களிடம்

முற்பகல் 11-00



இருந்து பிடுங்கிக் கொண்டபோது எங்கள் அமைச்சரவை மௌனமாக இருந்து விட்டது. அதனால்தான் இன்று மாநில அரசு நிர்வாகம் திராவிட முன்னேற்றக் கழகத்தினிடம் போய் விட்டது என்று கூறி நமக்கு எல்லாச் சலுகைகளையும் பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாநில சர்க்கார்களுக்கு கொடுக்கக் கூடிய மானியங்கள் இரண்டு வகையானவை. ஒன்று ஸ்டாச்சூட்டரி கிரான்ட்ஸ். இன்னொன்று டிஸ்க்ரிஷனரி கிரான்ட்ஸ். டிஸ்க்ரீஷனரி கிரான்ட்ஸ் என்றால் சாதாரணமாக பிளானிங் கமிஷன் மாநிலங்களுக்கு ஒதுக்குகிற நிதியைப் பொறுத்திருக்கிறது. மத்திய அரசு அதிகப்படியான அதிகாரங்களை வைத்திருப்பதனால்தான் பிளானிங் கமிஷன் உறுப்பினர்கள் சென்னை மாநிலத்திற்கு இவ்வளவுதான் முடியும் என்று ஏற்கனவே நான்காவது திட்டத்தில் இவ்வளவு டார்ஜெட் என்று ஏற்படுத்தப்பட்டிருந்தாலும்கூட வர வர ஆண்டொன்றுக்கு டார்ஜெட்டைக் குறைத்துக் கொண்டு போய் அது பாதி அளவிற்கு வருகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்திய அரசியல் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பைனான்ஸ் கமிஷன் மூலம் கொடுக்கப்படுகின்ற ஸ்டாச்சூட்டரி கிரான்ட்ஸ் டிஸ்க்ரீஷனரி கிரான்டை விட மூன்று மடங்கு குறைவாக இருப்பதால்தான் இன்றையதினம் மாநில சர்க்காருக்கு இந்திய அரசியல் சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள அளவிற்கு பைனான்ஸ் கமிஷன் கொடுக்க முடியாத ஒரு பரிதாபகரமான நிலை ஏற்பட்டிருக்கிறது. பைனான்ஸ் கமிஷன் பிளானிங் கமிஷன் இவற்றிடையே எந்தச் சிக்கல் இருந்தாலும் சரி இந்த இரண்டு கிரான்ட்கள் சமநிலைப்படுத்தப்பட்டு மாநில அரசுகளுக்கு கிரான்ட்ஸ் கொடுப்பதில் எந்தவிதமான பாரபட்சமும் இருக்கக் கூடாது. 1967-ம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலையில் மாநில அரசுகளை உதாசீனப்படுத்தினால் அப்படி உதாசீனப்படுத்தி நியாயமாகச் சேர வேண்டிய நிதி வகைகள் கிடைக்காது மாறாக மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்தால் நிச்சயமாக வேறு விதமான போக்குக்கு இந்த மாநில மக்களை அவர்கள் அழைத்துக் கொண்டு போவதாக இருக்கும். கூட்டாட்சியில் இருக்கிற இந்த நடைமுறையை சிறிது மாற்றியமைக்க தவறிவிட்டால் நிச்சயமாக மாநில அரசுகளும் அதன் உணவுக் கொள்கைகளும் நல்லமுறையில் நன்மைகள் ஏற்படாது பயங்கரமான நிலையை ஏற்படுத்தியவர்களாவார்கள்.

(மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் தலைமை)

உணவுக் கட்டுப்பாடாக இருந்தாலும் சரி கொள்முதல் கொள்கையாக இருந்தாலும் சரி உற்பத்திப் பெருக்கக் கொள்கையாக இருந்தாலும் சரி எந்தக் கொள்கையையும் நடைமுறைக்கு கொண்டு வர வேண்டுமென்றாலும் சமஷ்டி அரசாங்கம் என்று உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்ட பின்னர் மத்திய சர்க்காரைத்தான் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. காங்கிரஸ்கார்கள் சொல்லலாம், எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத்தின் மீது குற்றம் சொல்வது என்றால் பொறுப்பை தட்டிக் கழிக்கிறீர்கள் என்று சொல்லலாம். பொறுப்பை எந்த அளவிற்கு ஏற்றுக்கொள்ள வேண்டுமோ அந்தப் பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஏற்றுக் கொள்ளத் தயார். ஆனால் பெரிய பெரிய திட்டங்களை எடுத்து வைத்துக்கொண்டு நான்காவது திட்டத்தில் திட்டக் கமிஷன் இந்த

மாநில அரசுக்கு இவ்வளவு என்று டார்ஜெட் போட்டு வைத்துக் கொண்டு அதை நிறைவேற்றுவதற்கு நிதி கேட்கும்போது உதாசீனப்படுத்துவார்களேயானால் பொறுப்பை மத்திய சர்க்காரிடம் போடாமல் வேறு யாரிடம் போட முடியும்? ஏற்கனவே அரசியல் சட்டத்தில் மத்திய அரசுக்கு இன்னின்ன அதிகாரங்கள இருக்கின்றன என்று சொன்னாலும் மத்திய அரசு டயரக்டிவ் ப்ரின்சிப்பிள்ஸ் என்ற அதிகாரத்தின் கீழ் அநேகவிதமான டயரக்டிவ்ஸை இந்த மாநில அரசுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தவிதமான போக்கு இன்னும் நீடித்துக் கடைபிடிக்கப்படுமானால் நிச்சயமாக இந்த டயரக்டிவ் பிரின்சிப்பிள்ஸ் கீழ் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்தவர்களாவார்கள். சாதாரண செகரட்டரிகள் மட்டுமல்ல மத்திய சர்க்காரில் அந்த அந்த டிப்பார்ட்மெண்டிலுள்ள அதிகாரிகள் மாநில அரசுக்கு டயரக்டிவ்ஸ் என்ற முறையில் அனுப்பிவைக்கிறார்கள். ஒரு பிரச்னை எழுகிறது. இந்தமாதிரியான டயரக்டிவ்விற்கு மாநில அரசு கீழ்படியாமல் உதாசீனப்படுத்தினால் அல்லது அதற்கு மாறாக நடந்து கொள்ள முடியுமா என்ற சட்டச் சிக்கல் ஏற்படுமானால் இந்திய அரசியல் சட்டத்தில் கீழ் படிய வேண்டுமென்று சட்டம் கிடையாது. டயரக்டிவ்ஸை ஒப்புக்கொள்ளாமல் போனால் நிதிப் பிரச்னை ஏற்படும்போது மத்திய அரசு எங்கள் டயரக்டிவ்ஸை ஏற்றுக் கொள்ளவில்லை, உதாசீனப் படுத்தினீர்கள், கீழ்படியாமல் இருந்து விட்டீர்கள், ஆகவே நிதி வசதி செய்ய முடியாது என்று சொல்லும் நிலை ஏற்படும். ஆகவே சமஷ்டி முறையில் நிச்சயமாக நிதி பகிர்ந்தளிப்பதில் சில மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும். அதற்கு கான்ஸ்டிட்டூஷன் அமெண்ட்மெண்ட் இல்லாமலேயே மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒத்துழைத்தால் நிச்சயமாக மாநில அரசுகளுக்கு கொடுக்கக் கூடிய டயரக்டிவ்ஸை கொஞ்சம் குறைத்துக் கொண்டால் போதும், நம் திட்டங்களை சரிவர நடத்தமுடியும் என்று கூறிக்கொள்கிறேன். நமக்கு நிதி ஒதுக்கும்போது நீங்கள் இந்த அமைச்சரவைக்கு வேண்டிய ஒத்துழைப்பைத் தரவேண்டும்.

உணவுக் கொள்கை பற்றி பேசியவர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். சுதந்திரா கட்சி உறுப்பினர் திரு. சீமைச்சாமி அவர்கள் மனம் நொந்து வேகமாகப் பேசினார்கள். கட்டாயக் கொள்முதல் மூலம் போலீஸ் கெடுபிடி நடக்கிறது. அராஜகம் நடக்கிறது என்று உதாரணங்கள் காட்டினார்கள். அவர்களின் தகவல் எந்த அளவிற்கு உண்மையோ அல்லது இல்லையோ என்பது ஒரு விசாரணைக்குப் பின்னால்தான் தெளிவுபடுத்திக் கொள்ள முடியும். அதிகாரிகள் மனோபாவம் இன்னும் மாறாமல் இருக்கலாம். அவர்கள் எந்த முறையில் நடந்து கொள்கிறார்கள் என்பதை சரியாகக் கவனித்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள சிறிது அவகாசம் தேவை. ஆங்காங்கு சிலயிடங்களில் மாறுபட்டிருந்தாலும் அதிகாரிகளின் எந்தவிதமான நடவடிக்கைகளும் சட்டத்திற்கு உட்பட்டதாகத்தான் இருக்கும். 'Madras Paddy and requisitioning Rules' 1964-1966 படியுள்ள இந்த இரண்டு சட்டத்தையும் எடுத்துப் பார்த்தால் 'Not below the rank of Deputy Tahsildar and Sub-Inspector' என்றுதான் இருக்கிறது.





'Not below the rank of Deputy Collector'. என்று ஒரு டெப்டி கலெக்டர் தான் இந்த மாதிரியான கட்டாயக் கொள்முதல் பதுக்கலைப் போய் பிடிக்கலாம் என்று ஏற்படுத்தினால் கொஞ்சம் பொறுப்புள்ள அதிகாரிகளிடம் பொறுப்புக்களை ஒப்படைத்து விட்டு அவர்களை அமைச்சரவை நேரடியாகக் கூப்பிட்டுக் கேட்கவோ அல்லது நடவடிக்கை எடுக்கவோ முடியும். 7-வது ரூலில் Sub-Inspector or any other person authorised by them என்றிருப்பதால் கான்ஸ்டேபில் கூட நேரடியாகப் போய் எந்த வேளையிலும் நடவடிக்கைகள் எடுக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட குற்றச் சாட்டுக்கள் எந்தச் சட்டம் ஏற்படுத்தப்பட்டபோதும் வரும். மதராஸ் ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் ஆக்ட் 41-வது விதியின்கீழ் சேல்ஸ் டாக்ஸ் ஆபீசர்கள் கடைகளில் நுழைகிறார்கள், வீடுகளில் நுழைகிறார்கள், கணக்குப் புத்தகங்களைப் பறிமுதல் செய்கிறார்கள் என்றெல்லாம் குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டன. அதற்குப் பிறகு ஏற்படுத்திய சில திருத்தங்களின் மூலம் அது சமன்படுத்தப்பட்டு எந்தவிதமான சிக்கலும் பிரச்சினையும் ஏற்படாமல் செய்து கொண்டோம். அதேபோன்று நமது உணவுக் கொள்கையிலும் உடனடியாக சில சின்ன திருத்தங்களை செய்து கொண்டால் நிச்சயமாக நல்ல பலனை அடைய முடியும். எஸென்ஷியல் கமாடிட்டீஸ் ஆக்ட் 55 படி மத்திய அரசு ஏற்படுத்திய அந்தச் சட்டத்தின்கீழ் அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கரம்பு நிலங்களைக்கூட சீர்திருத்தி பயிராக்கும் நிலை அதன்கீழ் இருக்கிறது. அந்த ஆக்டை நல்ல முறையில் பிரயோகித்தால், ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா, நாஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் இவ்விரண்டிலிருந்தும் நியாயமாக கிடைக்கவேண்டியது கிடைத்தால் தமிழகத்திலுள்ள கரம்பு நிலங்களை எடுத்து பயிர் செய்யக் கூடிய நிலங்களாக மாற்றியமைத்துக்கொள்ள முடியும். உணவுக் கொள்கைபற்றி பேசும்போது மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் சிறிது ஆத்திரத்தோடு கூட கேட்டார்கள். பதுக்கல் என்பது காங்கிரஸ்காரர்கள் மட்டுந்தான் பதுக்கல்காரர்களா, தி.மு.க.வினரிடம் இல்லையா என்று கேட்டார்கள். அவர்கள் கூறியதிலிருந்து இரண்டு உண்மைகள் தெளிவாகின்றன. காங்கிரசில் பதுக்கல்காரர்கள் இருக்கிறார்கள் என்பது முதல் உண்மை. பிறகு தி.மு.க.வில் பதுக்கல்காரர்கள் இருக்கமாட்டார்களா என்று ஏங்குவதுபோலவும் இருந்தது. பதுக்கல்காரர்கள் சமூக விரோதிகள் என்று எல்லாக் கட்சிக்காரர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி கரை படியாத கரங்களோடு நடவடிக்கை எடுக்க வந்திருக்கிறோம், எங்கள் கட்சியில் இருந்தாலும் தகவல் கொடுத்து பிடிக்கிற நிகழ்ச்சி தெரிந்திருக்கலாம், இல்லாவிடில் சொல்கிறேன், எங்கள் கழகத்தில் ஆதரவாளர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் பதுக்கல்காரர்களாக இருந்தால் அப்படி சந்தேகப்பட்டால் தகவல் கொடுத்து பாகுபாடு இன்றி ஜனநாயக முறையில் நடந்துகொள்ள எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு உங்கள் ஆதரவு நிச்சயமாக இருக்கும் என்றும் நான் நம்புகிறேன்.

மதிப்பிற்குரிய நண்பர் மார்ட்டின் அவர்கள் பேசும்போது—அவர் ஒரு வழக்கறிஞர்—அவரிடம் நான் நிறைய எதிர்பார்த்தேன். ஆனால் அவர் திரும்பத் திரும்ப இந்த சம்பளப் பிரச்னையைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறாரே தவிர, முக்கியமான பிரச்னைகளாக இருக்கிற உணவுப் பிரச்னை போன்ற பிரச்னைகளைப் பற்றிப் பேசவில்லை. இந்தப் பிரச்னைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். ஒத்துழைப்பு என்றால் மற்ற மாநில சர்க்கார்களில், காங்கிரஸ் சர்க்கார்களும் இருக்கின்றன. நமது மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்கள் ஆந்திர மாநிலத்திற்கு வருகிற 30-ம் தேதி போகும்போது மதிப்பிற்குரிய கருத்திருமன் அவர்களோ, மதிப்பிற்குரிய விநாயகம் அவர்களோ, மதிப்பிற்குரிய பொன்னப்ப நாடார் அவர்களோ அமைச்சர் அவர்களின் கூடவேயோ அல்லது தாங்களாகவோ போய் மதிப்பிற்குரிய ஆந்திர முதலமைச்சரான திரு. பிரம்மானந்த ரெட்டியைச் சந்தித்து நமது மாநிலத்திற்கு உணவு தரவேண்டியதன் அவசியத்தை எடுத்துச் சொல்லலாம். மதிப்பிற்குரிய பிரம்மானந்த ரெட்டி அவர்கள் பலம் வாய்ந்த மத்திய சர்க்காரை ஏற்படுத்தவேண்டுமென்று சொன்னாலும் தமிழகத்தின் உணவுப் பிரச்சினை எவ்வளவு முக்கியமானது என்பதைப் பற்றி எடுத்துச் சொல்லலாம். அப்படி நேரடியாகப் போகாவிட்டாலும்கூட எல்லாவிதத்திலும் ஒத்துழைப்பைத் தரலாம் என்று கூறிக் கொள்கிறேன்.

இந்த மூவ்மெண்ட் கண்ட்ரோல் இருக்கிறதே அதாவது ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்கோ அல்லது ஒரே ஜில்லாவில் ஒரு நோட்டிஃபைட் ஏரியாவிலிருந்து இன்னொரு நோட்டிஃபைட் ஏரியாவிற்கோ போவதைத் தடுக்கக்கூடிய முறையில் இருப்பதிலே ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்குப் போவதிலே கட்டுப்பாடு ஏற்படுத்தலாமா, ஒரு நோட்டிஃபைட் ஏரியாவிலிருந்து இன்னொரு நோட்டிஃபைட் ஏரியாவுக்குப் போவதிலுள்ள கட்டுப்பாட்டை எடுத்து விடலாமா என்பதைப் பற்றி யோசிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** கனம் உறுப்பினர் அவர்களிடத்திலே ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். பறிமுதல் செய்வதைப் பற்றி கனம் உறுப்பினர் அவர்கள் தங்கள் கருத்தைக் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பறிமுதல் செய்வதிலே கோர்ட்டில் பறிமுதல் செய்யவேண்டுமா அல்லது அதிகாரிகளுக்குப் பறிமுதல் செய்ய அதிகாரம் வழங்க வேண்டுமா என்ற கருத்தைச் சொன்னால் சிறப்பாக இருக்கும்.

**திரு. ஆர். என். அரங்கநாதன்:** மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் ஆளும் கட்சியின் கருத்தைத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதிகாரிகளுக்குக் கொடுக்கும் அதிகாரங்களைக் கடைசி நிலையில் இருக்கிற அதிகாரிகளுக்குக் கொடுத்துவிட்டால் அவர்கள் எடுக்கிற எந்தவிதமான சட்டவிரோத





நடவடிக்கையும் போக்க முடியாது என்ற காரணத்தினால் டெபுடி கலெக்டர் டெபுடி சூப்பரின்டென்டென்ட் ஆப் போலீஸ் அளவில் உள்ள அதிகாரிகளுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்கலாம் என்று என்னுடைய யோசனையாகத் தெரிவித்தேன். பறிமுதல் செய்வது நல்லதா, கெட்டதா என்பதைப் பொறுத்தவரையில் மதிப்பிற்குரிய மந்திரி சபை எல்லாவற்றையும் யோசித்துத் தீர்மானித்திருக்கிறது, நடைமுறை நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த கூட்டுறவு இயக்கத்தில் நடந்து வருகிற ஊழல்களை எடுத்துக் கோடிட்டுக் காட்டி, கூட்டுறவு சங்கக் கடன்கள் ஏழை மக்களுக்குப் போய் சேரவில்லை என்று கவர்னர் உரையில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இது குறித்து ஒரு குழு அமைப்பது பற்றியும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள அந்தந்த போர்டையும் தலைவர்களையும் 6 மாத காலத்திற்காவது நீக்கி வைக்க, அதாவது குழு தீர்மானிக்கிற வரையில் அவர்களை நீக்கி வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏனென்றால் அநேகக் கூட்டுறவுச் சங்கங்களில் போர்ஜரிகளை விளையாட்டாக எடுத்துக்கொண்டு, நாமினல் லோன்ஸ் என்று சொல்லி, பினாமி லோன்ஸ் என்று சொல்லி, லட்சக் கணக்காக ரூபாய் கையாடப் பட்டிருக்கிறது. அமைச்சரவை நல்ல நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதை நிச்சயமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த நடவடிக்கைகளில், குழு அமைக்கப்பட்டு, உடனடியாக எல்லாவிதக் கூட்டுறவுச் சங்கங்களிலும் வெளியே போயிருக்கிற கடன்கள் எவ்வளவு, அந்தக் கடன்களை உண்மையாக வாங்கியவர்கள் யார், ஃபோர்ஜரி நடந்திருக்கிறதா பினாமி நடந்திருக்கிறதா என்று ஆராய்ந்து முடிக்கிற வரையில், குழு தன்னுடைய அறிக்கையை சமர்ப்பிக்கும் வரையில் கூட்டுறவு சொசைட்டிகள் நடைமுறைக்கு வராமலிருக்க அவைகளை சூபர்ஸீட் செய்து அரசாங்க செக்கரட்டரி போட்டு வைத்தால் குழுவின் பணிக்கு உதவியாக இருக்கும். ஏனென்றால் அவர்கள் பாட்டுக்கு கூட்டுறவுச் சங்கங்களை நடத்திக்கொண்டிருந்தால், அந்த நேரத்தில் குழுவும் தன்னுடைய ஆலோசனையை நடத்திக்கொண்டிருந்தால் அவர்கள் நல்ல முடிவுக்கு வர முடியாத நிலைமை ஏற்படும்.

ஆகவே, இந்த கவர்னர் உரையைப் பாராட்டி, இந்தப் பேரவையில் கவர்னர் அவர்கள் உரை நிகழ்த்தியதற்காக நன்றி செலுத்தி இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்:** இன்னும் 25 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். இனி பேசுகிற உறுப்பினர்கள் பதினைந்து நிமிடங்களுக்கு மேல் போகாமல் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. சி. கோவிந்தராஜன்:** மதிப்பிற்குரிய உதவி சபா நாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையின்மீது நடந்து

கொண்டிருக்கிற இந்த விவாதத்திலே என்னுடைய சில கருத்துக்களை இந்த அவையின் முன்னும், நமது அமைச்சரவையின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

ஒரு நாடு முன்னேற்றம் அடைவதற்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுவது விவசாயத் துறையும் தொழில் துறையும். நம்முடைய கவர்னர் அவர்களுடைய உரையில் அதிகமான அழுத்தம் கொடுத்திருப்பது விவசாயத் துறையைப் பற்றி மட்டும்தான் என்பது குறிப்பிடத்தக்கது. ஒருக்கால் இன்றைக்கு நாட்டில் நிலவும் உணவுத் தட்டுப்பாட்டின் காரணமாக அவர் விவசாயத் துறையில் மட்டும் அதிக கவனம் செலுத்தியிருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன்.

அடிப்படையாக இருக்கக்கூடிய முக்கியமான அரங்கு தொழில் அரங்கு. இது பற்றியும், தொழிலாளர் நலன்கள் ஆகியவைகளைப் பற்றியும் நமது அமைச்சரவையின் கொள்கை என்ன, நிலை என்ன என்பதைப் பற்றித் தெளிவாக விளக்கிவிட வேண்டும் என்று கருதுகிறேன்.

புதிய அமைச்சரவை வந்திருக்கிற இந்தக் காலக்கட்டத்தில், இதற்கு முன்னால் இருந்த காங்கிரஸ் அமைச்சர்கள் இருந்த காலத்தில், தொழிலாளர்கள் குறித்து அவர்கள் நிலை என்ன, அவர்கள் கொள்கை என்ன, எப்படி இருந்தது என்பது பூராவும் யாவரும் அறிந்த விஷயம். பொதுவாக தொழில் சட்டங்கள், ஸ்டாண்டிங் ஆர்டர்கள், இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் என்று இப்படிப்பட்ட சட்டங்கள் இருந்தபோதிலும், அவர்களின் நிர்வாகத்தில் அநேகமாக பாரபட்சம் காட்டும் முறையும், முதலாளிகளைச் சார்ந்திருக்கிற முறையும் இருந்தது. குறிப்பாக தொழில் துறையில். பொதுத் துறையாக இருந்தாலும், தனியார் துறையாக இருந்தாலும், பல்லாண்டு காலமாக வேலை செய்யும் தொழிலாளர்கள் நிரந்தரமாக ஆக்கப்படாமல் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆறு மாதங்களுக்கு வேலை செய்தால் எந்தத் தொழிலாளியாக இருந்தாலும் நிரந்தரமாக ஆக்கப்படவேண்டுமென்று ஸ்டாண்டிங் ஆர்டர் இருந்தாலும் காஷுவல் லேபாராகத் தனியார் துறையிலும், ஏன்? அரசாங்கத் துறையாக இருக்கிற மின்சாரத் துறையிலும், பொதுப் பணித் துறையிலும் பல தொழிலாளர்கள் நிரந்தரமாக ஆக்கப்படாமல் வைக்கப்பட்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், பொதுப் பணித் துறையில் குறிப்பாக ரெவின்யூ டிபார்ட்மெண்டை எடுத்துக்கொண்டாலும் சர்வேயர்கள் 1948-ம் ஆண்டில் வேலைக்கு வந்தவர்கள், 19 ஆண்டுகளாக வேலை செய்து வருகிறவர்கள், இன்று வரையில் நிரந்தரமாக ஆக்கப்படாமல் வைக்கப்பட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 3,200 சர்வேயர்கள் இருக்கிற இடத்தில், கடந்த பிப்ரவரி மாதம், தேர்தல் முடிந்தவுடனே—21-ம் தேதி தேர்தல் முடிகிறது—அப்போது முதலமைச்சராக இருந்தவர் அரசாங்கத்தை விட்டுச் செல்லும் காலத்தில், 22-ம் தேதி ஒரு ஆர்டரை பாஸ் செய்கிறார். அதில் 1.700 சர்வே டிபார்ட்மெண்டைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கு வேலை இல்லை, ஆட்குறைப்பு செய்யலாம் என்று போகும் தருவாயில் ஒரு ஆர்டரை





நிறைவேற்றிவிட்டு போகிறார். இது வருந்தத்தக்க விஷயம். கிட்டத்தட்ட 19 ஆண்டுகளுக்குப் பிறகு, 1,500 பேர்களை நிரந்தரமாக ஆக்கச் சொல்லி, அதுவும் டெம்பரரி ரெகுலரைசேஷன் என்று சொல்லி, 1,700 பேர்களை ஆட் குறைப்பு செய்யலாம் என்று உத்தரவை அவர்கள் போட்டு விட்டுச் செல்லுகிறார்கள். இது சரியல்ல. இதைத் தாற்காலிகமாகவாவது நிறுத்தி வைக்க வேண்டும்; 19 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் எங்கு செல்லுவார்கள்? குறைந்த பட்சம் ரெவின்யூ டிபார்ட்மெண்டில் இல்லாவிட்டாலும் வேறு அரசாங்க இலாக்காக்களில் அவர்களை நியமிக்கவேண்டுமென்று கோரி ஒரு விண்ணப்பத்தை ரெவின்யூ அமைச்சரிடம் கொடுத்து ஒரு முறையீட்டைச் செய்திருக்கிறோம். அவர்களும் ஆவன செய்வதாக சொல்லியிருக்கிறார்கள்.

தனியார் துறையை எடுத்துக்கொண்டால், கணக்கு வழக்கு இல்லாமல், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைப் பாதுகாப்பு இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஃபாக்டரி சட்டம் இருக்கிறது, ஃபாக்டரி இன்ஸ்பெக்டர் இருக்கிறார், லேபர் இன்ஸ்பெக்டர் இருக்கிறார். இதில் வேடிக்கை என்ன என்றால் அந்த அதிகாரிகள் இதிலே முழு கவனம் செலுத்த முடியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வெயிட்ஸ் அண்ட் மெஷர்ஸ் என்ற பொறுப்புகளும் கொடுத்திருப்பதால் அவர்கள் அதில் அதிக கவனம் செலுத்துகிறார்களே தவிர, சட்டங்கள் சரியாக நிறைவேற்றப் படுகிறதா, ஷாப் சட்டங்கள் சரியான முறையில் நிறைவேற்றப் படுகிறதா எங்க எந்த முதலாளிகள் என்னென்ன செய்கிறார்கள் என்று விசாரிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இவைகளைப் பற்றியெல்லாம் நம்முடைய அமைச்சரவை சரியான முறையில் பரிசீலித்து, தொழில் அபிவிருத்தி ஏற்பட்டு வரும் இக் காலத்தில் ஏராளமான தொழிற்சாலைகள் பல்வேறு இடங்களில் தோன்றிக் கொண்டு வருகின்ற இக் காலகட்டத்தில் தொழிற்சட்டங்களை சரியான முறையில் அமுல்படுத்தவேண்டிய அளவுக்குச் செய்ய வேண்டும். இந்த வெயிட்ஸ் அண்டு மெஷர்ஸ் பொறுப்புகள் சம்பந்தப்பட்ட வரையில், அந்த அதிகாரிகளுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிற பொறுப்புகளுக்கு மேலாக உள்ள அதிகப் படியான இப் பொறுப்புக்களை நீக்கி, தொழில் சட்டங்களை அமுலாக்குவதில் அதிக கவனம் செலுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி பொதுப் பணித் துறையை எடுத்துக்கொண்டால், டி.ஸி.ஆர். என்ற ஒரு பகுதி இருக்கிறது. இந்தத் தொழிலாளர்கள் 10, 12 ஆண்டுகளுக்கு மேல் எங்கெங்கு இடத்தில் தார் வார வேண்டுமோ அந்த இடங்களிலெல்லாம் தார் வாரிக்கொண்டிருந் வேலை இன்னும் நிரந்தரமாக்கப்படவில்லை. தாலும், அவர்களுடைய அரசாங்கத் துறையாக இருந்தாலும் சரி, தனியார் துறையாக இருந்தாலும் சரி வேலைக்கு பாதுகாப்பு என்பது கிடையாது. இவ்வளவு ஆண்டுகள் வேலை செய்தபிறகு அவர்கள் நிரந்தரமாக்கப் படவேண்டும். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து, அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டியதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

அடுத்து, தொழில் அரங்கில் சமரச இயந்திரம் செயல்படுவது பற்றி அதாவது கன்ஸிலியேஷன் மெஷினரி சரிவர இயங்க வேண்டும். தொழிலாளர்கள் தரப்பிலும் சரி, முதலாளிகள் தரப்பிலும் சரி சமரச அதிகாரிகளுக்கு எழுதியனுப்பினால், அவர்கள் வந்து உடனே தொழில் தகராறு முற்றாமல் இருக்கக்கூடிய முறையில் சமரசம் செய்துவைக்க வேண்டும். எந்த நோக்கத்திற்காக இண்டஸ்டிரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட், கன்ஸிலியேஷன் மெஷினரி இவைகளெல்லாம் அமைக்கப்பட்டன என்றால், தொழில் தகராறு முற்றவிடாமல் தொழில் அமைதியைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காகத்தான். ஆனால் இந்த சமரச அதிகாரிகள் தொழில் தகராறுகள் நீடிக்கக்கூடிய முறையில் காலம் கடத்தக்கூடிய முறையில் இந்த இயந்திரம் செயல்படுகிறது. இண்டஸ்டிரியல் ட்ரிப்யூனல், லேபர் கோர்ட்டு, கன்ஸிலியேஷன் ஆபீஸர், யாராக இருந்தாலும் சரி, முதலாளிகள் வேண்டும் என்றே அட்ஜர்ன்மெண்டு கேட்கிறார்கள். காலம் கடத்தப்படுகிறது. 15 நாட்களில் அல்லது ஒன்றிரண்டு மாதங்களில் தீரவேண்டிய விஷயம், ஒரு ஆண்டு அல்லது 1½ ஆண்டு வரை காலம் கடத்தப்பட்டு, தகராறு நீடிக்க வைக்கப்பட்டு, இறுதியில் தீர்ப்பு வழங்கினால், அப்பொழுது அந்தத் தொழிலாளி இருக்கக்கூடிய இடமே தெரியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. கன்ஸிலியேஷன் இயந்திரம் துரிதமான நடவடிக்கை எடுக்கிறதா என்றால், இல்லை, எந்த நோக்கத்திற்காக இண்டஸ்டிரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் இருக்கிறதோ, கன்ஸிலியேஷன் மெஷினரி இருக்கிறதோ, அந்த நோக்கமே சீர்குலையக் கூடிய ஆபத்தான நிலைமை தான் இருக்கிறது. தொழில் அமைதி ஏற்பட வேண்டும், தொழில் தகராறுகள் முற்றாமல் தீர்க்கப்பட வேண்டும். அதன் மூலம் உற்பத்தி பெருகவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இந்த இயந்திரம் இயங்காமல், காலம் கடத்தும் போக்கு தான். அதாவது 1 அல்லது 1½ ஆண்டுகள் கழித்து தீர்ப்புக் கொடுக்கும் நிலைமை தான் இருந்துவருகிறது. அதனால் அதிருப்தி அடைந்த தொழிலாளர்களுக்கெல்லாம் தங்களுடைய கோரிக்கைகளை தகராறு முற்றாமல் கன்ஸிலியேஷன் மெஷினரி மூலம் நியாயமான முறையில் தீர்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை போய்விடக்கூடிய ஒரு அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. முதலாளிகள் தொழில் தகராறு விதிகளை வேண்டுமென்றே மீறுவதற்கான சூழ்நிலையும் இருக்கிறது. உதாரணத்திற்கு வேண்டுமென்றால், மவுண்டு ரோட்டில் மை காபி பார் என்று சொல்லக்கூடிய ஒரு ஹோட்டலில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் பல கோரிக்கைகளை வைத்து, இன்று தொழில் கோர்ட்டுக்கு முன்னால் விவகாரம் நடந்துகொண்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு எந்த விதத்திலும் நஷ்டஈடு கொடுக்காமல் இருப்பதற்காக, அந்தக் கட்டடத்துச் சொந்தக் காரரும், ஹோட்டல் முதலாளிகளும் இணைந்துகொண்டு, மை காபி பார் என்ற ஹோட்டலை மூடிவிட்டார்கள். தொழில் கோர்ட்டுக்கு முன்னால் பிரச்னை இருக்கும்பொழுது, க்ளோஷர் கூடாது என்று சட்டத்தில் விதிக்கப்பட்டிருந்தாலும், அங்குள்ள முதலாளியும், கட்டட சொந்தக்காரரும் சேர்ந்து இணைந்து, சதி செய்துகொண்டு, கட்டட சொந்தக்காரருக்கு





பாக்கி என்ற முறையில் ஹோட்டலை மூடியிருக்கிறார்கள். இதனால் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வெளியே தள்ளப்பட்டிருக்கிறார்கள். தொழில் தகராறு சட்டத்தை மீறக்கூடிய விதத்தில் முதலாளிகள் நடந்துகொள்கிறார்கள். அம்பத்தூர் எஸ்டேட் போன்ற இடங்களில் உள்ள கான்டீன்களை அந்தத் தொழிலாளர்கள் எடுத்து நடத்துவதற்காக தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான நஷ்டஈடு கொடுக்கப்பட்டால், அந்த நஷ்டஈட்டுத் தொகையை முதலீடாக வைத்து அந்த மாதிரி எஸ்டேட்களில் கான்டீன்களை எடுத்து நடத்த அந்தத் தொழிலாளர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதை இந்த சமயத்தில் தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தொழில் தகராறுகள் ஏற்படும்பொழுது சமரச அதிகாரிகள் மூலமாகவோ அல்லது லேபர் கமிஷனர் மூலமாகவோ அல்லது லேபர் கோர்ட்டு மூலமாகவோ தகராறுகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, எங்கெங்கு தொழில் தகராறு ஏற்படுகிறதோ அங்கெல்லாம் முதன் முதலில் போலீஸ் காணப்படுகிறது. போலீஸ் வருவது பாதுகாப்பிற்கு, லா அண்டு ஆர்டர் மெயின்டெயின் பண்ணுவதற்காக என்று சொல்லலாம். ஆனால், இதுவரையில் நடந்த விஷயம் என்னவென்றால் தனியார் துறையாக இருந்தாலும் சரி, பொதுத் துறையாக இருந்தாலும் சரி, அங்கு வரக்கூடிய போலீஸ் முதலாளிகளுக்கு ஆதரவாகத் தான் இயங்குகிறதே தவிர, லா அண்டு ஆர்டர் மெயின்டெயின் பண்ணுவதற்காக அங்கு வருவதில்லை. இது கடந்த கால சரித்திரம். ஜனவரி 29-ம் தேதி நெய்வேலியில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள், மூன்று சங்கங்களைச் சேர்ந்தவர்கள், ஏ.ஐ.டி.யு.ஸி.யைச் சேர்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழக சங்கத்தைச் சேர்ந்தவர்கள், அங்கு வேலை பார்க்கின்ற சிப்பந்திகளின் ஸ்டாப் யூனியனைச் சேர்ந்தவர்கள், தங்களுடைய கோரிக்கைகளை வைத்து, ஊர்வலம் நடத்துவதற்காக அனுமதியும் பெற்று, ஊர்வலம் நடத்தக்கூடிய சமயத்தில் திடீரென்று போலீஸ் தலையிட்டு ஊர்வலத்தை நடத்தக் கூடாது என்று தடியடிப் பிரயோகம் செய்து, கண்ணீர் புகை உள்பட பிரயோகிக்கப்பட்டது. தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை நியாயமான முறையில் எடுத்துச் சொல்லி, தங்களுடைய கோரிக்கைகள் சம்பந்தமாக ஊர்வலத்தை நடத்தக் கூடிய ஒரு காலகட்டத்தில் போலீஸ் தலையிடுவது சரியல்ல. அதை எந்த இலாகாவிற்கு விட்டுவிட வேண்டுமோ, அந்த இலாகாவிற்கு விடவேண்டும், அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் வடலூர் தொழிற்சாலையில் தொழில் தகராறு ஏற்பட்டு, போலீஸ் தலையிட்டு, செகரடிரியின் பெயரை குறிஞ்சிப்பாடி போலீஸ் ஸ்டேஷனில் குறித்துவைத்து, எதாவது தகராறு நடந்தால், கே.டி. லிஸ்டில் பெயரை சேர்த்துவிடுவதாக ஒரு சப்-இன்ஸ்பெக்டர் மிரட்டியதாகத் தெரிகிறது. தொழில் தகராறை சமரசமான முறையில் தீர்ப்பதற்கு என்றே அரசாங்க தொழிலாளர் இலாகா இருக்கும்பொழுது, இப்படிப்பட்ட பிரச்னைகளில்

போலீஸார் தலையிடுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டியது அவசியம். மேலும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும்படியான திட்டமும் முக்கியமாக கவனிக்கவேண்டியது.

அடுத்தபடியாக போனஸ் சட்டத்தைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். போனஸ் சட்டத்தில் பல ஓட்டைகள் இருந்தன. அதிலே அரசாங்கம் பல மாற்றங்களைச் செய்தது. இருப்பினும், முதலாளிகள் தங்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய மாக்ஸிமம் போனஸ் என்று சொல்லக்கூடிய ஒரு விதியை மட்டும் வைத்துக்கொண்டு அதிக லாபம் அடையக்கூடிய முதலாளிகளும், போனஸைக் குறைத்துக் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. போனஸ் பிரச்னையில் அதிகப்படியாக தொழில் தகராறுகள் ஏற்பட்ட காரணத்தினால், அதை நிறுத்தவேண்டும், தொழில் அமைதி நிலவ வேண்டும், போனஸ் பிரச்னையினால் தொழில் தகராறு ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தோடு தான் போனஸ் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், போனஸ் சட்டம் ஏற்பட்ட பிறகுதான் அதிகப்படியான தொழில் தகராறுகள் ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இப்போது போனஸ் சட்டம் என்று ஒன்று முழுமையாக இல்லாத காரணத்தினால் கூடுமானவரையில் முதலாளிகளும், தொழிற் சங்க பிரதிநிதிகளும் பேச்சு வார்த்தை நடத்தி, ஒப்பந்தம் காணும்படியான வழிமுறைகளைக் கையாண்டால் தான், சமீபத்தில் நடந்துகொண்டிருக்கிற அல்லது இனிவரக்கூடிய போனஸ் தகராறுகளுக்கு ஒரு சுமுகமான முடிவு காணமுடியும், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் . . . (மணி அடிக்கப்பட்டது).

***திரு.** கா. **வேழவேந்தன்** : மதிப்பிற்குரிய மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது நன்றி அறிவிக்கின்ற தீர்மானத்தின் பேரில் நானும் கலந்து கொள்ள வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கவர்னர் அவர்கள் உரையைப்பற்றி கனம் உறுப்பினர்களெல்லாம் தங்களுடைய கருத்துக்களை நவின்ற நேரத்தில் பல்வேறு முறைகளில், பல்வேறு கோணங்களில் பேசினார்கள். என்னைப் பொறுத்த வரையில் கவர்னர் உரையை மூன்றுவித காரணங்களுக்காக வரவேற்று நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். முதல் காரணம் அன்று தேம்ஸ் நதிக்கரையிலே இருந்தவர்கள் இந்த நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்தினார்கள். அது தொலைக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது. அப்பொழுது அந்த கவர்னர் அவர்கள் தேம்ஸ் நதிக்கரையிலுள்ளவர்களுக்காக வாதாடினார்கள். ஆனால், இன்றைக்கு நம்முடைய கவர்னர் பெருமான் ஆற்றியிருக்கிற உரையில் கங்கை நதிக் கரையிலுள்ளவர்களின் அதிகாரம் குறைக்கப்படவேண்டும். மாநில அரசாங்கங்களுக்கு அதிகமான அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார். இந்த முதல் காரணத்திற்காக நான் அந்த உரையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இரண்டாவது காரணம், இந்த நாட்டினுடைய முதுகெலும்பு போன்று இருக்கும் விவசாயிகளுடைய பிரச்னைக்கு, வேளாண் பக. 1-30
மைத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள்.

மூன்றாவது காரணம் போட்ட 3 திட்டங்களிலே ஏற்பட்ட பயன்கள், நலன்கள் குறைவாக இருக்கின்றன என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, போடப்பட இருக்கிற நான்காவது திட்டத்திலே சேர்க்கப்பட வேண்டிய திட்டங்களைக் கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம், இந்த மாநில அரசின் கொள்கைகளையெல்லாம் இணைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இந்த உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற எங்களுக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், எதிர்தரப்பைச் சேர்ந்தவர்கள், ஒரு காலத்தில் இவர்கள் கவர்னரை எதிர்த்தார்கள், புறக்கணித்தார்கள், இப்பொழுது கவர்னர் உரைக்கு நன்றி கூறி, அதைப் பாராட்டிப் பேசுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் சட்டத்தையும், அதன் விதிகளையும் ஒப்புக்கொண்டு, உள்ளே அமர்ந்திருக்கின்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒரு பெரிய உண்மையை மறந்து விட்டார்கள் என்று எண்ணுகிறேன். இந்திய அரசியல் சட்டத்திற்கு விசுவாசம் தெரிவித்து, பிரமாணம் எடுத்துக் கொண்டு, இந்திய அரசியல் சட்டத்தின் அமைப்புக்கு உட்பட்டுத்தான் அமர்ந்திருக்கிறோம். அந்த அமைப்புப்படி கவர்னர் மாநில அரசின் பெரிய, முதன்மைத் தலைவரானவர் என்று ஏற்றுக் கொண்டு இருக்கிறோம். ஆகவே, தமிழகத்தின், இந்த மாநில அரசின் கொள்கையை மத்திய அரசுக்கு நினைவூட்டுவதை அவர்கள் வாயிலாக சொன்னதற்கு மகிழ்ச்சியோடு போற்ற வேண்டுமே தவிர, வேறொன்றும் இல்லை. இன்றைய நிலையிலே, பேசும் காங்கிரஸ் உறுப்பினர்கள் எடுத்த எடுப்பிலேயே கவர்னர் உரை மீது பேசும்போது குறிப்பிட்டார்கள். புதிய ஆட்சி மலர்ந்தும் ஏன் இன்னும் விலைவாசியைக் கட்டுப்படுத்தவில்லை? ஏன் அரிசியை அதிகமாகக் கொடுக்க வில்லை? ஏன் பல்வேறு பிரச்சினைகளைத் தொடவில்லை? ஏன் இலங்கைப் பிரச்சினையைப் பற்றித் தொடவில்லை என்று பேசினார்கள். எங்களைப் பொருத்தவரையில், நாங்கள் காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்ற வகையில் பேசவில்லை. இன்றைய தினம் நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் பொறுப்பு என்ன? 20 ஆண்டு காலமாக நிர்வாக இயந்திரத்தை காங்கிரசார் நடத்தி வந்திருக்கிறார்கள், அவர்கள் இயக்கியது சரியில்லை என்று மக்கள் மன்றம் ஒதுக்கி, அவர்களிடம் இருந்து பறித்து திராவிட முன்னேற்றக் கழகத்திடம் அறிஞர் அண்ணாவின் தலைமையில் இருக்கும் எங்கள் கட்சியின் கையில் கொடுத்திருக்கிறது. இப்பொழுது தான் இந்த அரசின் கையில் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த இயந்திரத்தைப் பழுது பார்க்கத் தொடங்கியிருக்கிறோம். எந்த எந்த இடங்களில் எண்ணெய் போடவேண்டும், எங்கே சிக்கல்கள் இருக்கின்றன, இது ஓடுமா அல்லது ஓடாதா, எங்கு எங்கு சரிப்படுத்த வேண்டும் என்றெல்லாம் பார்ப்பதற்கே

நீண்ட நாட்களாகும். அதற்கு மேல் இந்த இயந்திரத்தை வைத்துக் கொண்டு இயங்கச் செய்ய வேண்டும். அதற்குள் நண்பர்கள் பொறுக்காமல், இப்படிப் பேசுவது வியப்பாகத்தான் இருக்கிறது.

நம்முடைய மாமன்றத்தைப் பொருத்தவரையில், நாம் வலியுறுத்திப் பேசவேண்டியது ஒன்றுதான். சீர்திருத்தம் தேவை என்று எல்லோரும் சொல்கிறார்கள். ஆளும் கட்சியும், எங்களுடைய கருத்துக்களைச் சொல்கிறோம். முக்கியமாக மத்திய சர்க்காருக்கும், மாநில அரசுக்கும் இருக்கும் இடைவெளி குறைக்கப் படவேண்டும். அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். அதிலே அனைவரும் ஒரு முகமாக இருக்க வேண்டும். இது பற்றி மதிப்பிற்குரிய கனம் ம. பொ. சி. அவர்களும் வரவேற்றிருக்கிறார்கள். சமஷ்டி முறையில் பகிர்ந்து அளிக்கப் படவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்திய அரசியல் சட்டத்தின் இறுதிப் பகுதியாக, 7 ஆம் செடியூல் இருக்கிறது. அந்தப் பகுதியில் மாற்றம் செய்தாலொழிய அதற்குத் திருத்தம் கண்டாலொழிய, உண்மையான பரிகாரத்தைக் காணமுடியாது. ஏழாவது செடியூலில், யூனியன் பட்டியல் என்றும், ஸ்டேட் லிஸ்ட் என்றும் சொல்லப்படுகிற, மாநில பட்டியலும், இன்னும் இரண்டுக்கும் பொதுவான பட்டியல் என்றும் இருக்கிறது. அதைப் பார்த்தால் முக்கியமான துறைகளெல்லாம்; மத்திய சர்க்காருக்கே கொடுக்கப் பட்டிருக்கின்றன. கடல் வளமாக இருந்தாலும், கனி வளமாக இருந்தாலும், வருமானவரித் துறையாக இருந்தாலும் இவைகளிலெல்லாம் முதல் பந்தியில் முதல் இலையை மத்திய அரசு முதலிலே தனக்குப் போட்டுக் கொண்டு விடும் நிலைமைதான் இருக்கிறது. அதே போல அதிகமான வருவாய் வரக்கூடிய வருமான வரியும், சுங்க வரியும், இன்னும் மற்ற வரிகளும் மத்திய சர்க்காருக்கே போய், ஒரு பகுதிமட்டும் நமக்கு வருகிறது. மண்மாதா கொடுக்கும் கனிவளங்கள் எதுவானாலும், நிலக்கரி, இரும்பு போன்ற எதுவானாலும், அதை ஆராய்ச்சி செய்வது, தோண்டி எடுப்பது, ஆலைகள் அமைப்பது இவையெல்லாம் மத்திய சர்க்காரிடம் ஏற்கனவேயே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கடலை எடுத்துக் கொண்டாலும், டெரிடோரியல் வாடர்ஸ் என்று எல்லையைக் கணித்து ஒரு அளவு வரைதான் நாம் மீன்களைப் பிடிக்கலாமே தவிர, தள்ளிப் போய், ஆழத்தில் போய், நம்முடைய வங்காளக் குடாக்கடல் தானே என்று, மீன் பிடிக்க முடியாது. அப்படிச் செய்ய வேண்டும் என்றால், அதற்கு மத்திய சர்க்காருடைய அனுமதி வேண்டும். இன்றைய தினம் உணவு பற்றாக்குறையைப் பற்றி இவ்வளவு காரசாரமாகப் பேசும் நாம், மீன் உணவைப் பெருக்க வேண்டும் என்பதை மட்டும் ஒப்புக் கொள்கிறோம். மீன் உணவைச் சாப்பிட மாட்டோம் என்று மக்கள் சொல்லவில்லை. ஆகவே, மீன் உணவுபற்றி சினிமாவில் சிலைடு மூலம் பிரசாரம் செய்தால் மட்டும் போதாது, என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. ஆகவே மீன் உணவை பரவலான அளவில் அடைந்து, விலை குறைவாக மக்களுக்கு வினியோகம் செய்ய தக்க ஏற்பாடுகள் செய்யப் படவேண்டும். அந்தந்தத் தொழிலை உரிய முறையில் அபிவிருத்தி செய்தால்தான் பலன் கிடைக்கும்.





அறிஞர் அண்ணா சென்ற முறை, 1957-லே வெற்றி பெற்று இந்த மாமன்றத்திலே அமர்ந்திருந்த காலத்திலே, ஒரு அழகான யோசனையைத் தெரிவித்தார்கள். வங்காள விரி குடாவில் ஆழமான பகுதியில் நிறைய 'ஷார்க்' என்று சொல்லப்படும் சுறா மீன்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் பனை மரம், தென்னை மரம் போல இருக்கின்றன. அதிக ஆழத்தில் சென்று அவற்றைப் பிடிப்பதன் மூலம் 'டெரிடோரியல் வாட்டர்' எல்லை என்று சொல்லி மத்திய சர்க்காரிடம் இருக்கும் உரிமையை மாநில சர்க்கார் பெற்று, ஆழ் கடல் மீன் பிடிப்பு, எனப்படும் 'டீப் ஸீ பிஷிங்' திட்டத்தை வகுத்துக் கொண்டால், இயந்திரப் படகுகளையும் மற்ற வசதிகளையும் வைத்துக்கொண்டு நல்ல பலன் அடையலாம்; அதிலிருந்து மீன் உணவு மட்டுமின்றி, ஷார்க் லிவர் ஆயில் என்கிற மருந்துப் பண்டமும் கிடைக்க வசதியாக இருக்கும் என்கிற அழகான யோசனையை அண்ணா சொன்னார்கள். அதைப் பற்றி ஏன் இப்போழுது குறிப்பிடுகிறேன் என்றால், அன்று ஆளும் கட்சியிலிருந்த காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு நினைவு படுத்துவதற்காகவேயாகும். எந்த வகையில் எடுத்துக்கொண்டாலும், இன்றைய தினம் இவற்றையெல்லாம் தீர்மானித்துத்தான் நாம் நம் எதிர்காலத்தைப்பற்றிக் கணக்கிட முடிகிறது.

உணவுக் கொள்கையைப் பொறுத்த வரையில், எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய திரு. சீமைச்சாமி அவர்கள் மிகவும் காரசாரமாகப் பேசினார்கள். குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே தொகுதியைப்பற்றி, அதாவது கும்முடிப்பூண்டி தொகுதியிலே நடந்த நிகழ்ச்சியைப் பற்றி அவர்கள் இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள். இங்கே அவர்கள் சொல்லிய குற்றச்சாட்டுகள், அவர்கள் சொல்லிய பெயர்கள் எனக்கு அறிவிக்கப்படவில்லை. நேற்றுகூட நான் கும்முடிபூண்டித் தொகுதிக்குப் போய்விட்டு வந்தேன். அவர்கள் இங்கே கூறியதற்கு முன்னால் அச் செய்திகள் எனக்கு அறிவிக்கப்படவில்லை. அவர்கள் சொல்லுகிற பட்டியலும், அவர்கள் கையில் வைத்திருக்கிற புகார் மனுக்களும் அவர்களிடம் தரப்பட்டிருக்கின்றனவே தவிர, தொகுதி உறுப்பினராகிய எனக்குத் தரப்படவில்லை; என்னுடைய கவனத்திற்கும் கொண்டுவரப்படவில்லை. நான் மேல் அதிகாரிகளையும் சந்தித்துவிட்டு வந்திருக்கிறேன். அவர்களுடைய கவனத்திற்கும் விவரம் கொண்டுபோகப்படவில்லை. பொதுக்கூட்ட மேடையில் பேசுவதைப்போல், இங்கே காங்கிரஸ் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் நேற்று காலையிலிருந்து இரவு வரை நான் சுற்றிவிட்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டபின் வந்திருக்கிறேன். நானும் விவசாயக் குடும்பத்திலே பிறந்தவன் தான். அவர் சொன்ன அதே மஞ்சங்காரணிக்குப் பக்கத்தில்தான் என்னுடைய கிராமமும் இருக்கிறது. ஆனால் நான் சொன்ன ஊர்களில் இருதரப்பட்ட விவசாயிகளைப் பார்க்க முடிந்தது. ஒரு தரப்பு விவசாயிகள் எங்களிடம் வந்து அணுகிச் சொன்னார்கள். "அதோ பாருங்கள், அவர் நெடுங்காலமாக நெல்லை வைத்திருக்கிறார், அந்த வைக்கோல் போருக்கு உள்ளே தான் 300 மூட்டை நெல் 200 மூட்டை நெல் வைத்திருக்கிறார், எடுத்துப்,

மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்: 25 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். எல்லோரும் பேசவேண்டும் என்ற நிலையிலே, கனம் உறுப்பினர் ஒவ்வொருவரும் பத்து நிமிடங்களுக்கு மேல் பேசவேண்டாம். இந்தக் கட்டளையை கனம் உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி: கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, ஒரு சொந்த விளக்கம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் பேசுகிறபோது, தான் அந்தத் தொகுதியைச் சார்ந்தவராக இருந்தும், தனக்கு எந்தவிதமான தகவலும் வரவில்லை என்றும், எனக்கு மட்டும் அந்தத் தகவல் எப்படிக் கிடைத்தது என்றும் கேட்டார்கள். களத்து மேட்டில் அளந்த நெல்லுக்கு இதுவரை பணம் கொடுக்கப்படவில்லை, அவர்கள் கொடுத்த ரசீது இங்கே இருக்கிறது என்று கனம் உறுப்பினருக்கு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

* திரு. ஏ. சிதம்பரநாத நாடார்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சாதாரணமாக சட்டசபை சம்பிரதாயப்படி ஆளுங் கட்சியில் இருப்பவர்களுக்குப் பேச அதிக வாய்ப்பு வசதி கிடையாது என்பதும், எதிர்க்கட்சியில் வந்தால்தான் அதிக சமயம் கிடைக்கும் என்று சொல்வார்கள். ஆனால், இந்த சபையில் எதிர்க் கட்சியில் வந்திருந்தும்கூட, எனக்கு அதிகச் சமயம் கிடைக்கவில்லை என்பதைக் குறித்து உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். கனம் உதவி சபாநாயகருக்கு என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், ஒவ்வொரு அங்கத்தினரும் பத்து நிமிஷம் பேச வேண்டும் என்று தாங்கள் வகுத்திருக்கும் வரையறையைத் தளர்த்தி எனக்குப் பத்து நிமிஷத்தோடு மேலும் ஐந்து நிமிஷம் பேச அவகாசம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, நான் பேச ஆரம்பிக்கிறேன்.

கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையைப்பற்றி எதிர்த்து ஒரு சில வார்த்தைகள் சொல்லாமல் என்னால் இருக்க முடியவில்லை என்ற நிலையைக் கண்டு உண்மையாகவே வருந்துகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, இந்த நாட்டிலே வந்தவுடனே தேனும் பாலும் ஓடும் என்று நான் உண்மையாகவே நினைத்தேன். (குறுக்கீடு) அதைப்பற்றிப் பிறகு பேசிக் கொள்ளலாம். ஆத்திரப்பட வேண்டாம். மற்ற உறுப்பினர்கள் பேசுவதற்கும் அவகாசம் இருக்கிறது. அப்பொழுது பேசிக்கொள்ளலாம். நான் பேசும்போது குறுக்கிடாமல் இருக்கும்படியாக நான் மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். பொறுமை தான் பிரதானம். மோஸஸ் பிறந்த கானும் தேசத்தில் தேனும் பாலும் ஓடிக் கொண்டிருந்தது என்று சொல்லுவார்கள். அதைப் போல, நமது நாட்டிலும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தேனும் பாலும் ஓடும் என்று அறிந்தவுடனே உண்மையிலேயே சந்தோஷப்பட்டேன். ஆனால் கவர்னர் உரையைக் கேட்டவுடனேயே என் மனம் சற்றுத் திடுக்கிட்டது. எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில், திருநெல்வேலியிலிருந்து நாகர்கோவிலுக்கும், நாகர்கோயிலிருந்து திருவனந்தபுரத்திற்கும் இரயில்



பாதை இழுக்கப்பட வேண்டும் என்பதைக் குறித்து எந்தவிதமான திட்டமும் இதில் குறிப்பிடாததைப்பற்றி நான் உண்மையிலேயே வருந்துகிறேன். இதைப்பற்றி ஏதாவதொரு குறிப்பு கவர்னர் உரையில் இருந்திருக்குமானால், அதைவிடச் சந்தோஷமான செய்தி எங்கள் நாட்டில் வேறு இருக்க முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம் ஆகும்.

அதேபோன்று, எங்களுடைய மாவட்டத்தில் நிறையத் தண்ணீர் இருந்தாலும், தக்கலை நகரசபைப் பகுதியிலும், கொளச்சல் நகரசபைப் பகுதியிலும், இரணியல் கண்ஸர்வென்ஸியிலும் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் பல ஆண்டுகளாக மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் இந்தச் சர்க்காரிடம் பலரும் பல தடவை எடுத்துச் சொல்லிய பிறகும் அதைப்பற்றி ஒருவித உருப்படியான பரிகாரமும் காணாததைப்பற்றி நான் வருந்துகிறேன்.

இந்தச் சபையில் சபாநாயகரைத் தேர்ந்தெடுத்தபோது என்ன நடந்தது என்பதை இச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். பொதுத் தேர்தலில் கூட்டாக நின்று, "நாம் எல்லோரும் செத்தால் ஒன்றாக செத்து மடிவோம், வாழ்ந்தால் ஒன்றாக வாழ்வோம்" என்று அறைகூவல் விட்டு, வெற்றி பெற்றார்கள். ஆனால் அத்தனை பேரும் சேர்ந்து ஒரு சபாநாயகரை ஏகமனதாகத் தேர்ந்தெடுக்க முடியாத காரணத்தால், அதே சபாநாயகரை எதிர்த்து, இன்னொரு நபர் இந்தச் சபையிலே நின்றதை நாம் கண்ணாரக் கண்டோம். உண்மையிலேயே வெற்றி பெற்றவர் இன்று சபாநாயகராக காட்சியளிக்கிறார். என்றாலும், இது முதல் கோணல் என்பதை நாம் மறக்கக் கூடாது. விசேஷமாக மதிப்பிற்குரிய திரு. கருணாநிதி அவர்களிடம் நான் திட்டவட்டமாகச் சொல்லுவேன்; "அது முதல் கோணல்; அது முற்றிலும் கோணலாக மாறிவிடாமல் நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று எச்சரிக்கிறேன்.

திரு. செ. பாலசுப்பிரமணியன்: துணைச் சபாநாயகர் அவர்களே சபாநாயகர் தேர்தலைப்பற்றி சபையில் பேசலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்: சபாநாயகர் தேர்தல் என்பது நடந்து முடிந்துவிட்ட ஒரு நிகழ்ச்சி. அதைப் பற்றிக் குறிப்பிடாமல் இருப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. சிதம்பரநாத நாடார்: தலைவர் அவர்களே, எனக்குக் கொடுத்தது பத்து நிமிஷம். இன்னும் ஒரு ஐந்து நிமிடம் எனக்குக் கொடுக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொண்டேன். இருந்தும் இப்படி என்னைக் குறுக்கிட்டுக் கொண்டிருந்தால், சிதம்பரநாதனைப் பேசவிடக் கூடாது என்ற கெட்ட எண்ணம் இருக்குமானால் நான் நிறுத்திக்கொள்கிறேன். அப்படியில்லாத போது தயவுசெய்து யாரும் குறுக்கிடாதிருக்க வேண்டிக் கொள்கிறேன்.

பார்த்தால்கூட, அத்துப் பூச்சி பறக்கும்; அந்த அளவு நீண்ட நாளாக வைத்திருக்கிறார், இதை ஏன் அதிகாரிகளின் கவனத்திற்கு நீங்கள் கொண்டு போகவில்லை?" என்று ஒரு தரப்பு விவசாயிகள் சொன்னார்கள். இன்னொரு தரப்பு விவசாயிகள்; போகின்ற போக்கிலே குறிப்பிட்டார்கள். "இப்படியெல்லாம் கெடுபிடி செய்கிறார்கள்; கெடுபிடியைக் கொஞ்சம் குறைக்கச் சொல்லுங்கள்; கொள்முதல் செய்த தானியங்களுக்குப் பணம் கொடுக்கவில்லை; பறிமுதல் செய்கிறார்கள், இந்த நிலையை நீடிக்க விடாதீர்கள்" என்று இன்னொரு தரப்பு விவசாயிகள் சொன்னார்கள். அந்த விவசாயப் பெருங்குடி மக்களிடம் நானும், "இருக்கின்ற விதிகளுக்கு இணங்க, இருக்கின்ற சட்ட திட்டங்களுக்கு இணங்க, காலஞ் சென்ற காங்கிரஸ் ஆட்சியாளர் போட்ட சட்ட திட்டங்களுக்கு இணங்கத்தான் நம்முடைய அதிகாரிகள் நடந்துகொள்ளுகிறார்கள்" என்று சொன்னேன். ஆனால் அன்றைக்கிருந்த காங்கிரஸ் எம். எல். ஏ.க்களுக்கும் இன்றைக்கிருக்கும் கழக சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் வேற்றுமை என்னவென்றால், அவர்கள், பெரிய பணக்காரர்கள், பெரிய நிலச்சுவான்தார்கள் ஆகியோர் நெல் பிடிக்கப்பட்டால், 'அது ஏன் பிடிக்கப்பட்டது' என்று கேட்பார்கள். ஏனென்றால், அவர்கள் முதலாளிகளை முழுக்க ஆதரித்தவர்கள். ஆனால், இன்றைக்கிருக்கும் கழக உறுப்பினர்கள், "ஏன், அந்த நெல்லை இன்னும் கொள்முதல் செய்யவில்லை? அந்த ஊரில் மட்டும் அவ்வளவு நெல் பிடிபடாமல் இருப்பானேன்?" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் அவர்களுக்கும் எங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்று சொல்வேன்.

குறிப்பாக, மஞ்சநகாரணி, வண்டிக்காவனூர் ஆகிய இந்த இரண்டு இடங்களைப்பற்றி குறிப்பிட்டார்கள். ஓரிரண்டு புகார்கள் வந்தவுடனே, மேலதிகாரிகளை நானே சந்தித்து, "அதிகமான கெடுபிடி காட்டாதீர்கள், உங்களுக்குரிய அதிகாரத்தை உங்களுக்குரிய வகையிலே நீங்கள் செலுத்துங்கள்" என்று கூறியிருக்கிறேன். இதை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கலாம்; அல்லது போலீஸ் அதிகாரிகளினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கலாம்; அல்லது விஜிலென்ஸ் அதிகாரியினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கலாம். ஆனால், இப்போது பேசுகிற வரையில் அவர்கள் சொல்லவில்லை. இம்மாமன்றத்தில் இருக்கும் கனம் உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் கூட, நேற்று முன்தினம் என்னுடைய தொகுதிக்குப் போய், உணவுக் கொள்கையைப்பற்றி ஒரு பொதுக் கூட்டம் போட்டுப் பேசியிருக்கிறார்கள். குறிப்பாக ஒரு கட்சியைச் சார்ந்தவர் அவர்கள். அவர்கள் தங்களுக்கிருக்கும் கட்சிக் கொள்கையைப் பொதுக் கூட்டத்தில் விவசாய மக்களைக் கூட்டி வைத்துக்கொண்டு, கொஞ்சம் ஆத்திரப்படும் வகையிலே பேசியிருக்கிறார்கள். ஆனால், பேசுவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது என்றாலும், பொதுவான திட்டங்களை நாம் வகுத்துக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது கொள்முதல் செய்யப்பட்டாலொழிய, இப்படியெல்லாம் ஓரளவுக்காவது வற்புறுத்திக் கொள்





முதல் செய்யப்பட்டாலொழிய, நகர்ப் புறங்களில் நாம் கொண்டு வந்திருக்கிற 'ஸ்டாச்சுடரி" ரேஷனிங் முறையை உண்மையிலேயே நிறைவேற்ற முடியுமா என்பதை நாம் கவனிக்க வேண்டும். எனக்கே அதிகமாக உடம்பில் இரத்த ஓட்டம் இருக்குமானால், ஏற்கனவே அடிபட்டு விழுந்திருக்கிறவருக்கு நான் கொஞ்சம் ரத்த தானம் செய்யவேண்டுமேயொழிய, நான் நானாகவே இருக்க வேண்டும் என்று, இன்னும் அதிகமாக இரத்த புஷ்டி உடையவனாக ஆகவேண்டும், இரத்தம் இல்லாதவன் மேலும் கீழே போகவேண்டும் என்று நினைத்தால், உரிய பலன் ஏற்படாது. ஆகவே, இதையெல்லாம் கவனித்து, அந்த விதிகளிலே இருக்கும் கெடுபிடிகளை வேண்டுமானால் ஓரளவு தளர்த்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளவேயொழிய, விவசாயப் பொதுமக்களுடைய ஆத்திரத்தைக் கிளப்பி விடக்கூடாது என்று தலைவர் அவர்கள் மூலமாக நான் கனம் உறுப்பினருக்குக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், மூன்று முக்கியமான செய்திகள் இருக்கின்றன. அவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். முதலாவதாக, பரிதாபத்திற்குரிய என்னுடைய கும்மிடிப்பூண்டி தொகுதியானது ஆந்திர மாநில எல்லையிலே இருக்கிறது. அங்கிருக்கும் நாங்கள் ஆரணியாற்றின் பலனைப் பூராவும் பெறுவோம் என்று முன்னால் சொல்லப்பட்டு வந்தது. ஆந்திரம் பிரிந்த பின்னர், ஆரணியாற்றின் குறுக்கே உள்ள பிச்சாட்டூர் அணையின் பலன் எல்லாம் ஆந்திரத்திற்குப் போய்விட்டது. ஆகவே, என்னுடைய தொகுதி மக்களுக்கு எந்த விதமான ஆற்றுத் தண்ணீர் வசதியோ, மற்றப் பாசன வசதியோ இல்லை. இதை குறித்து ஆந்திரத்தைச் சேர்ந்த அரசியல் அங்கத்திலே இருக்கிறவர்களிடம் நாம் பேசி, ஓரளவு பலன் பெற்றுத்தரவேண்டும் என்று மதிப்பிற்குரிய அமைச்சரவையினரை நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இரண்டாவதாக முக்கியமான பிரச்சினை என்னவென்றால், என்னுடைய தொகுதியில் நெசவாளர் அதிகமாக இருக்கிறார்கள். மாதர்பாக்கம், மாநல்லூர், பாதிரிவேடு, ஆரணி, குயவன்பேட்டை ஆகிய பகுதிகளில் நெசவாளர்கள் இருக்கிறார்கள். வேதனையோடு சொல்ல வேண்டுமானால், முன்பு இருந்த அரசாங்கம் வகுத்துக் கொண்ட கைத்தறிக் கொள்கைக்கு அவர்கள் பலியாகியிருக்கிறார்கள். வண்ணம் மாறும் கைத்தறித் துணி (ப்ளீடிங் மெட்ராஸ்)-க்கு அகில உலக மார்க்கெட்டில் கிராக்கி குறைந்துவிட்டதால், அந்த நெசவாளிகள் வயிற்றின்மேல் ஈரத் துணியைப் போட்டுக்கொண்டு வாழ்கிறார்கள். சொந்த ஊரில் பிச்சை எடுக்க முடியாத காரணத்தால், அவர்கள் வெளியூர்களுக்குப் போய் ஏதோ பிழைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று தான் சொல்லவேண்டும். அவர்கள் மறுபடியும் நல்ல முறையில் வாழ்க்கை நடத்த வழிவகை செய்து கொடுக்க இந்த அரசு முற்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

உணவுக் கொள்முதல் சம்பந்தமாக நான் ஒன்று சொல்ல விரும்பு கிறேன். நாட்டில் எத்தனையோ மாவட்டங்கள் இருக்கின்றன. சென்னை மாநிலத்தில் 14 மாவட்டங்கள் இருக்கின்றன என்று நினைக் கிறேன். பதுக்கல் வேட்டையாடுவதும், கள்ள மார்க்கெட் வேட்டையாடுவதும் மற்ற எந்த மாவட்டங்களிலும் இல்லாத வகை யில் குறிப்பாக, செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டும், நீங்கள் மிகத் தீவிரமாக அதுவும் குறிப்பாக, ஸ்ரீபெரும்பூதூர் தொகுதியில் வேட்டையாடி வருவதன், ரகசியம் என்ன என்பதை அறிய விரும்பு கிறேன். இந்த ஒரு காரியமே, நீங்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று செய்கிறீர்கள் என்பதை எடுத்துக்காட்டப் போதும்.

மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்: சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று செய்வதாகப் பேசுவது இன்சினுவேஷன் ஆகும். அதைக் கனம் அங்கத்தினர் வாபஸ் வாங்க வேண்டும்.

திரு. ஏ. சிதம்பரநாத நாடார்: துணைச் சபாநாயகர் அவர்களே, நீங்கள் எதை வாபஸ் வாங்கச் சொன்னாலும் வாங்கத் தயாராக இருக்கிறேன். நான் சொல்வது என்ன என்பதைக் கேட்டுவிட்டு, நீங்கள், நான் குறிப்பிட்டது இன்சினுவேன்ஷனாகு என்பதை விளக்க வேண்டும்.

மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று செய்வதாக என்று குறிப் பிட்டது உள்நோக்கம் கொண்டு ஒரு காரியம் செய்வதாக கற்பிக் கின்றது. நிகழ்ச்சிகள் எங்கேயும் நடைபெறுகின்றன. மந்திரி சபையினர் கொள்கை அடிப்படையில் காரியங்களை நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆக தனிப்பட்ட யார் மீதோ வெறுப்பு கொண்டு செய்வதாக பேசுவது முறையல்ல. அதை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. சிதம்பரநாத நாடார்: Sir, I withdraw it. நான் சொல்ல வந்த கருத்தைக் கேட்டபிறகு நீங்கள் ரூலிங் கொடுத்தால் அது முறையாகும். பதுக்கல் வேட்டையாடுவது நல்லதுதான். பதுக்கல் வேட்டையாடினால் நாட்டிலுள்ள மக்கள் சுபிட்சமாக வாழ்வார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். நம் மாநிலத்தில் வேறு எத்தனையோ மாவட்டங்கள் இருக்க, செங்கல்பட்டு மாவட்டத்தில் மட்டும் பதுக்கல் வேட்டை தீவிரமாக நடத்து கிறார்கள் என்பது உள்ளொன்று வைத்து . . .

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, the Hon. Member is harping on the same point. It is better that the Chair instructs him not to harp on the same point.

மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்: கனம் அங்கத்தினர் சொல்ல வந்த கருத்தைச் சொல்லி முடிக்கட்டும். முழுவதும் தெரிந்தபின் நான் என்னுடைய உத்தரவை அளிக்கிறேன்.

திரு. ஏ. சிதம்பரநாத நாடார்: நமது மாநிலத்தில் எத்தனை யோ மாவட்டங்கள் இருக்கின்றன. கன்னியாகுமரி இருக் கிறது, தஞ்சாவூர் மாவட்டம் இருக்கிறது. கன்னியாகுமரி என்





பதுக்கல் வேட்டையாடப்படவில்லை? தஞ்சை மாவட்டத்தில் ஏன் பதுக்கல் வேட்டையாடப்படவில்லை? எங்கள் மாவட்டதில், நாகர்கோவிலில், வடிவீஸ்வரம் தளவாய் தெருவில் கூ. சுப்பிரமணிய அய்யருக்கு எத்தனையோ ஏக்கர் நஞ்சை நிலங்கள் இருக்கின்றன. அதுபோன்று கோட்டாற்றிலுள்ள திரு. S.S.D.A. சரவணப் பணிக்கர் பேரிலும் அவர் உற்றார் உறவினர் பேரிலும் எத்தனையோ ஏக்கர் நஞ்சை நிலங்கள் இருக்கின்றன. அது போன்று நாகர் கோவிலில் Dr. மத்தியாஸ் பேரிலும் எத்தனையோ ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. இவர்களை சரியான முறையில் பதுக்கல் வேட்டையாடினால் எங்கள் மாவட்டத்திலுள்ள பற்றாக்குறையைப் போக்க வழி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மணி: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்த மன்றத்தில் இல்லாத தனிப்பட்ட மனிதர்களைப் பற்றி பேசலாமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்: இந்த இடங்களில் எல்லாம் நெல் இருக்கிறது என்கிற தகவலைத்தான் அவர் தெரிவிக் கிறார்.

திரு. ஏ. சிதம்பரநாத நாடார்: இச்சர்க்கார், மேலே நான் சொன்ன காரியத்தைச் செய்ய முன்வருமானால், திராவிட முன் னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. ராஜரத்தினம், எம்.எல்.ஏ., போன்று நாங்களும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் குறிப்பாக இன்றையதினம் எடுக்கப்படுகிற நடவடிக்கைகள் அதுவும் எங்கள் மாவட்டத்தில் ஒன்றாயிருக்கட்டும்.

மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்: கனம் அங்கத்தினர் நாகர்கோவில் தொகுதியில் எந்தெந்த இடத்தில் நெல் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை வைத்திருந்தால் அதை முதலமைச்சர் அவர்களிடம் தெரிவிப்பது நல்லதாக இருக்கும். அதன்றி எடுக்கப்படுகிற நடவடிக்கைகளுக்கு உள் நோக்கம் கற்பிப்பது சரியாகாது.

திரு. ஏ. சிதம்பரநாத நாடார்: இந்தச் சபை யாருக்கும் தனிப் பட்ட சபை அல்ல. எனக்கு வாக்களித்த வாக்காளர்கள் எதற் காக என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்களோ, அந்தக் கடமையை நான் நிறைவேற்றியாக வேண்டும். நாட்டில் எந்த அநியாயம் நடக்கிறதோ அதை இந்தச் சபையில் சொல்லியாக வேண்டும். அப்படிச் செய்யாமல் இருந்தால் நான் என் கடமையி லிருந்தே தவறியவன் ஆவேன். 'நாம் நம்முடைய பிரதிநிதியாக சிதம்பரநாதனைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறோம். அவன் தன்னுடைய கடமையிலிருந்து தவறவில்லை' என்பதாக என்னைத் தேர்ந்தெடுத்த மக்கள் மகிழ்ச்சியடைய வேண்டும் என்பதாக இவற்றை சபைமுன் வைக்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் 19-3-1967-ல் வியாபாரிகளுக்கு ஒரு பேட்டியளித்தார்கள். விளைபொருள்களுக் கான கட்டுப்பாட்டை ரத்து செய்ய வேண்டும் என்று அவர்கள்

கோரி வருகிறபோது, நமது முதலமைச்சர் அவர்கள், ' நீங்கள் ஒரு
ரூபாய்க்கு ஒரு படி அரிசி குடிமக்களுக்குத் தருவோம் என்பதாக
நீங்கள் உறுதியளியுங்கள், நான் மூன்று வருடத்திற்கு உணவுக்
கட்டுப்பாட்டை ரத்துச் செய்து விடுகிறேன்' என்று சொன்னார்.
நண்பர் ஆசைத்தம்பி அவர்கள் சிரிக்கிறார்கள். இது சிரிப்பதற்
குரிய விஷயம் அல்ல. தேர்தலுக்கு முன்னதாக, திராவிட
முன்னேற்றக் கழக கட்சி தங்கள் தேர்தல் அறிக்கையை மக்களுக்கு
முன் சமர்ப்பிக்கும் முன்னதாக, வியாபாரிகளுக்கு முன் வைத்திருந்
தால் நான் வரவேற்று இருப்பேன். மந்திரி சபை அமைக்கப்
போகிறோம் என்பது அவர்களுக்கே தெரியாது. பொறுப்புள்ள
மந்திரிசபை, பொறுப்புள்ள அமைச்சர்கள் இப்படியா பேசுவார்
கள்? 'ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்கிறீர்களா? நான் கட்டுப்
பாட்டை எடுத்துவிடுகிறேன்' என்று பேசுவது, குழந்தைகள்
கிராமப்புறங்களில் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடுவது
12-00 போலிருக்கிறது. உணவுக் கட்டுப்பாட்டைப்பற்றி இந்த மந்திரி
சபைக்கு ஏக அபிப்பிராயம் உண்டா என்று கேட்கிறேன்.
ஸ்ரீமான் கருணாநிதி அழகாகச் சொல்கிறார். அவர் பேச்சைப்
பற்றிச் சொல்வதற்கில்லை. " எங்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள்,
எங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுங்கள், எங்களுக்குச் சாவகாசம்
கொடுங்கள், நாங்கள் ஐந்து வருஷத்திற்குள் ஒரு ரூபாய்க்கு
மூன்று படி அரிசி கொடுப்போம்" என்று அழகாகச் சொல்கிறார்.
நமது முதலமைச்சர் அவர்களோ நான் முன் சொன்னமாதிரியே
சொல்கிறார். உங்களோடு ஒன்றாக தேர்தலிலே ஓடோடி ஓட்டி
நின்ற ம.பொ.சி. அவர்களோ நான் ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று
சொல்லவில்லையென்று கையை விரிக்கிறார். இதுதான் உங்க
ளுடைய அரிசிப் பிரச்சினையின் ஆதாரக் கொள்கையா? அதற்குப்
பிறகு சாணக்கியர் ராஜகோபாலாச்சாரியிடம் பத்திரிகை
நிருபர்கள். . .

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** கனம் உறுப்பினர் பேசும்
போது திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்களை சாணக்கியர்
என்று குறிப்பிட்டார். அதைத் திரும்பப் பெற வேண்டுமென்று
தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்:** ஏற்கனவே ஒரு
தீர்ப்பளிக்கையில் சபையில் இல்லாதவர்களைப்பற்றிக் குறிப்
பிடுவது முறையல்ல என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும்
திரு. ராஜாஜி அவர்களை சாணக்கியர் என்று குறிப்பிட்டதை
வாபஸ் வாங்கிக்கொண்டு, ' திரு ' என்று அடைமொழி கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. சிதம்பரநாத நாடார்:** எதைப் பின் வலிக்கச் சொல்
கிறீர்களோ அதைப் பின்வலித்துக்கொள்ளத் தயாராக இருக்
கிறேன். அதுதான் சபை விதியா, முறையா?

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** சாணக்கியர் என்ற சொல்லுக்கு
ராஜதந்திரி என்றுதான் அர்த்தம். அதை அவதூறாகக் கொள்ள
வேண்டியதில்லை என்று கருதுகிறேன்.





**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்:** தமிழில் சில சொற்க
ளினுடைய பொருள் உயர்ந்ததாக இருந்தாலும், அதை ஆளுகின்ற
முறை, ஆளுகின்ற இடம், ஆளுவோர் ஆகிய தன்மையினால் அது
இழிந்ததைக் கூடக் குறிக்கும். இந்த இடத்திலே சாணக்கியர்
என்ற சொல்லை உபயோகிப்பது நல்ல மரபு அல்ல. ஆளுகின்ற
இடம், அவர் ஆளுகின்ற தன்மை, ஆகியவை குறித்து இந்தச் சூழ்
நிலையில் அந்தச் சொல்லை உபயோகிக்காது வாபஸ் பெற வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். அவருக்கு இன்னும் 4 நிமிஷங்
களே பேசுவதற்கு இருக்கின்றன.

திரு. ஏ. சிதம்பரநாத நாடார்: அந்தச் சொல்லை வாபஸ் பெறு
கிறேன். ஐயா, நான் ஆளும் கட்சியில் இருந்தவன், எதிர்க்கட்சி
யிலும் இருந்தவன். மந்திரியாகவும் இருந்தேன். சட்டம்
தெரிந்தவன். " உனக்கு 4 நிமிஷமே இருக்கிறதென்று " சொன்னால்
சங்கடத்திற்கு உள்ளாக நேரிடுகிறது. ஆகவே கொஞ்சம் காலத்
தைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
திரு. ராஜகோபாலாச்சாரியாரிடம் பத்திரிகை நிருபர்கள், "உங்கள்
கூட்டு என்ன ஆயிற்று?" என்று கேட்டபோது, "எங்கள் தேனிலவு
முடிந்துவிட்டது, இனி ஒன்றும் சொல்வதற்கு இல்லை" என்று
சொன்னார் என்றால், வருங்காலத்தில் உங்களுடைய நிலை எப்படி
இருக்கும் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ள வேண்டும்.

நமது மதிப்பிற்குரிய மராமத்து மந்திரி அவர்களுக்கு ஒன்று
சொல்லலாம் என்று இருக்கிறேன். திரு. கருணாநிதியைப் பற்றிக்
குறைகூறவில்லை. எப்படி இருந்தாலும் நல்லவர்; திறமையுள்ளவர்;
அழகாகப் பேசுவார். அவருடைய பேச்சில் விழாதவன் யாராவது
உண்டானால் அது காங்கிரஸ்காரன்தான் என்பதை அவர் மறந்து
விடக்கூடாது. அவர் பஸ்களை தேசியமயமாக்கிவிடும் கொள்கை
யைப்பற்றிச் சொன்னார். ஒன்று சொல்வேன் திரு. கருணாநிதிக்கு.
காடிக் கதை அவருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். பஸ்களை
தேசியமயமாக்கும் கொள்கை என்பது, தேன்கூட்டில் காடி கை
விட்ட கதைபோல் ஆகிவிடக் கூடாது.

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** பஸ்களை தேசியமயமாக்கு
வது தேன்கூட்டில் கையைவிடுகிற மாதிரி என்று உறுப்பினர்
சொல்வது எங்களுக்குத் தெரியும். தேன்கூட்டில் எப்படி கையை
விடுவது? தேனை எப்படி எடுத்துக் குடிப்பது என்பதிலே நாங்கள்
திறமையுள்ளவர்கள். ஆகையால் தேனைக் கட்டாயம் எடுப்போம்.
குளவி கொட்டாமல் எடுப்போம். கொட்ட வந்தால் கொடுக்கை
நறுக்கி எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. சிதம்பரநாத நாடார்:** தேனை எப்படி எடுப்பது என்பது
தெற்கே உள்ள எங்களுக்கு நன்றாகத் தெரியும். அதுவும் தெற்கே
யுள்ள நாடார்கள் தேன் எடுப்பதில் எப்படிப்பட்டவர்கள் என்பதை
விசாரித்துப் பார்த்தால் தெரியும். குளவியைக் கண்டால் ஏழு
மைல் ஓடுகிற அவர்கள், வீரம் பேச வேண்டாம்.

**திரு. பெ. சீனிவாசன்:** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், மதிப்
பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர்

தெற்கேயுள்ள நாடார்கள் தேன் எடுப்பதில் வல்லவர்கள் என்று சாதி விவகாரத்தை இங்கே கிளப்புவதாகச் சொல்வது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஏ. சிதம்பரநாத நாடார் :** தொழில் கல்லூரிகளுக்கு இடம் கொடுப்பதுபற்றியும் ஒரு வார்த்தை. பழைய காலத்தில் ஜில்லா வாரியாக, பின்தங்கிய வகுப்புவாரியாக இருந்த முறை உங்கள் ஆட்சியிலும் மாறவே கூடாது. அட்வகேட் ஜெனரல் நியமனம் பற்றிய புகாருக்கும் முதலமைச்சர் அவர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். இந்த ஆட்சியில் ஒரு முதலியாரைத்தவிர வேறு ஆளே உங்களுக்குக் கிடைக்கவில்லையா?

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத்தலைவர் :** இந்த மன்றத்தில் சாதி வேற்றுமையைக் கிளப்பக்கூடிய விதத்தில் எதுவும் பேச வேண்டாம் என்று குறிப்பிடுகிறேன்.

**திரு. ஏ. சிதம்பரநாத நாடார் :** மந்திரிமார்களின் சம்பளத்தைப் பற்றிப் பேசும்போது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் நாங்கள் 500 ரூபாய்தானே வாங்குகிறோம். உங்களுடைய சம்பளத்தை 100 ரூபாயாகக் குறைத்துக்கொள்ளத் தயாரா? இது கொடுக்காத இடையன் சினை ஆட்டைக் காட்டின கதைமாதிரிதான் இருக்கிறது. இப்படிப் பேசுவதற்கு திறமையுள்ள, அன்புக்குரிய வந்திருக்கிற உங்களிடத்தில் இதுபோன்ற சொல் வாயிலிருந்து இனி மேலாவது வராமலிருக்க ஆண்டவன் உங்களைக் காப்பாற்றுகை. சினிமாத் தொழிலைப்பற்றி ஸ்ரீமான் கருணாநிதி அவர்கள், தேசிய மயமாக்குவோம் என்று பேசினார்கள். சினிமாத் தொழிலை தேசிய மயமாக்குவதை நான் வரவேற்கிறேன். உங்களுக்கு இந்த வயதில் எவ்வளவு சினிமா ஆசை இருக்கிறதோ, எனக்கும் அந்தக் காலத்தில் இருந்ததுதான். என் வயதில் நான் அன்றைக்கு ஆயிரம் சினிமாக்களுக்குமேல் பார்த்திருப்பேன். அவ்வளவு பிரியம் உண்டு. இன்றைக்கு நீங்கள் சினிமாத்தொழிலை தேசிய மயமாக்கினால், இந்த நாட்டிலுள்ள அனைவரும் திரு. கருணாநிதியைப் பாராட்டுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கரு. ராம. சுரியமாணிக்கம் அம்பலம் :** பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். சினிமாத் தொழிலை தேசியமயமாக்குவதை காங்கிரஸ் கட்சி ஆதரிக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஏ. சிதம்பரநாத நாடார் :** அதை தேசிய மயமாக்க வேண்டும் என்பது என் ஆசை. கட்சிக்கும் அது ஆசையாக இருக்கலாம். திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் ஒரு வார்த்தை பேசினார்கள். இன்றையதினம் அமைச்சர்கள் சின்னக் காரில் போகிறார்கள். சின்னக் காரில் போனால்தான் மக்களோடு நெருங்கிப் பழக முடிகிறது என்று. நான் சொல்கிறேன், சின்னக் காரில் போனால்தான் மக்களிடத்தில் நெருங்கிப் பழக முடியுமா? சின்னக் காரில் போவதைவிட மோட்டார் சைக்கிளில் போகலாம், அதுவும் சைக்கிளில்கூடப் போகலாம். அதை விட்டுவிட்டு நடந்து கூடப் போகலாம். தனிப்பட்ட ஒரு மனிதன் பதவிக்கு வந்தால்





அதைப்பற்றிக் கொஞ்சமும் அக்கறையில்லை. அமைச்சர்கள் சின்னக் கார்களில்தான் போவேன் என்று கூறினால் போகட்டும் . . .

(மணியடிக்கப்பட்டது.)

**திரு. எம். சி. பாலன் :** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும்பொருட்டு நான் இங்கு நின்று கொண்டிருக்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர் சிதம்பரநாதன் அவர்கள் நெல்லை-குமரி ரயில் பாதை இதுவரை வரவில்லை. உடனடியாக ஏற்படுத்துவதற்கு வழி செய்ய வேண்டுமென்று தெரிவித்தார்கள். அவர்கள் கிட்டத் தட்ட 19 ஆண்டு காலமாக எம்.எல்.ஏ.வாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர் அமைச்சராக இருந்தேன் என்றெல்லாம் கூடத் தெரிவிக்கிறார்கள். 19 ஆண்டு காலமாக நெல்லை-குமரி ரயில் பாதையைக் கொண்டு வரப் பாடுபடாத அவர் இன்று நெல்லை-குமரி ரயில் பாதையை இந்த அரசு கொண்டு வரவேண்டும் என்று கூறுகிறார். தான் காங்கிரஸ் கட்சிக்காக 20 ஆண்டுக் காலமாகப் பாடுபட்டு வருவதாக அவர்கள் தெரிவித்தார்கள். நான் இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன் அவர் காங்கிரஸ் கட்சியை மூன்று தடவை எதிர்த்து நின்று தோல்வியடையச் செய்திருக்கிறார். 1956-ல் எங்களுடைய பகுதி தாய்த் தமிழகத்தோடு சேர்ந்த பிறகுதான் அவர் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினரானார். அவர் 1956-ம் மாட்டில் காங்கிரஸ்காரராகத்தான் எங்கள் மாவட்டத்திலிருந்து வந்திருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் பேசும்போது 'தென் பகுதி நாடார்' என்று சொன்னார். அப்போது நண்பர் சீனிவாசன் கூட குறுக்கிட்டு அது பற்றிக் கூறினார். காமராஜ நாடாருக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்டார்கள்; காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டுப் போடுங்கள் என்று சாதனைகளைச் சொல்லி யாரும் ஓட்டுக் கேட்கவில்லை; நாடாருக்கு ஓட்டுப் போடுங்கள் என்றுசொல்லி திரு. சிதம்பரநாதன் அவர்கள் ஊர் ஊராகப் போய் ஓட்டுக் கேட்டார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இங்கு பேசியபோது கூடத் தெரிவித்தார்கள். 'காமராஜ நாடாருக்கு' ஓட்டுப் போடுங்கள் என்ற வகையில் ஓட்டுக் கேட்டார்கள். நாங்கள் மூன்று படி அரிசி என்று சொல்லி ஓட்டுக் கேட்டோம். ஆனால் அவர்கள் . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். திரு. பாலன் அவர்கள் நான் ஓட்டுக் கேட்ட முறையைப் பற்றி இங்கு குறிப்பிடுகிறார்கள். நானும் இந்த அவையின் முன் பிரத்தியட்சமாக இருக்கின்ற சந்தர்ப்பத்திலே, ஜாதியைச் சொல்லியோ, மதத்தைச் சொல்லியோ எந்த விதமாகவும் ஓட்டுக்களைக் கேட்கவில்லை.

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் :** இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

**திரு. எம். சி. பாலன் :** நெல்லை-குமரி ரயில் பாதை அமைக்க சர்வே செய்து நான்கு ஆண்டுகள் ஆகின்றன. கடந்த மூன்று தடவைகளிலும், தேர்தல் நேரத்தில் கன்னியாகுமரி-நெல்லை ரயில்

பாதையைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லித்தான் வாக்குகளைப் பெற்று வந்தார்கள். ஆனால் நடைமுறையில் வருவதற்கு எந்த விதமான முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. நெல்லை-குமரி ரயில் பாதை எங்களுக்கு நிச்சயமாக சீக்கிரத்தில் வர வேண்டும் என்று இந்த மாமன்றத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் 12 மாவட்டங்கள் இருக்கின்றன என்று திரு. சிதம்பரநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் 14 மாவட்டங்கள் இருக்கின்றன. அதிலே தென் ஓரத்திலே இருக்கின்ற மாவட்டத்தில் ரயில் பாதை இல்லாத காரணத்தால் அந்தப் பகுதி மக்கள் இன்னும் கேரளப் பகுதியில் இருக்கும் உணர்ச்சியோடுதான் இருந்து கொண்டிருக்கிறார்கள். ரயில் பாதை இல்லாத காரணத்தால் பல தலைவர்கள் அங்கு வரமுடியவில்லை. அங்குள்ள மக்களில் ரயிலை நேரில் பார்த்தவர்கள் 10 சதமானந்தான் இருக்கும். மற்றவர்கள் சினிமாவிலேதான் ரயிலைப் பார்த்திருக்கிறார்களே தவிர, நேரில் பார்த்ததில்லை. பன்னெடுங்காலமாக வற்புறுத்தப்பட்டு வரும் இந்தப் பிரச்சினையில் இந்த மந்திரிசபையினர் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

எங்களது மாவட்டத்திலும், தஞ்சை போன்ற மற்ற மாவட்டங்களிலும் அரிசிக் கொள்முதல் கெடுபிடியாக இல்லை என்று அவர்கள் தெரிவித்தார்கள். எங்களது மாவட்டத்தைப் பொறுத்த வரை இப்போதுதான் 1,28,000 எக்கர் நிலங்களில் சாகுபடி ஆகிக் கொண்டிருக்கிறது. 'பத்தாண்டுச் சாதனைகள்' என்ற புத்தகத்தைத் தமிழக சர்க்கார் வெளியிட்டிருந்தார்கள். அதிலே கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரை, திருவாங்கூர் கொச்சியில் இருந்தபோது ஏற்பட்ட சாதனைகளைப் பற்றிப் போட்டிருந்தார்களே தவிர, தாய்த் தமிழகத்தோடு சேர்ந்த பிறகு ஏற்பட்ட சாதனைகள் ஒன்றும் இல்லை. 1905-ம் ஆண்டில் ஏற்பட்ட பேச்சிப்பாறை அணையைப் பற்றியும், 1952-ல் திரு-கொச்சியில் இருந்த போது ஏற்பட்ட பெருஞ்சாணி அணையைப் பற்றியும் போட்டிருந்தார்களே தவிர, 1956-க்குப் பிறகு தாய்த் தமிழகத்தோடு சேர்ந்த பிறகு எங்கள் மாவட்டத்திற்கு என்ன சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள் என்று ஒன்றும் இல்லை. ஏதோ குளங்களுக்குக் கரை கட்டப்பட்டன; ஆறுகளுக்குக் கரை கட்டப்பட்டன என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். உருப்படியான திட்டங்கள் எதுவும் கடந்த பத்தாண்டுகளில் ஏற்படவில்லை. திரு. சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பிரைமரி ஸ்கூல்கள் இன்று ஹைஸ்கூல்களாக ஆக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, புதிய ஹைஸ்கூல்கள் இல்லை. அந்தப் பள்ளிக் கட்டடங்கள் எல்லாம் இடிந்துபோன நிலையில் இருக்கின்றன.

எங்களது மாவட்டத்தில் 40,000 எக்கர் நிலங்களில் மரவள்ளிக் கிழங்கு பயிர் செய்யப்படுகிறது. அங்குள்ள மக்களுக்கு முக்கிய உணவாக அது இருந்து வந்தது. அது இப்போது மாவு மில்களில் அரைக்கப்பட்டு பம்பாயிக்குச் சென்று விடுகிறது. இதனால் அங்குள்ள மக்கள் தங்களுடைய முக்கிய உணவான மரவள்ளிக்





கிழங்கை உணவாகக் கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. மரவள்ளிக் கிழங்கை மில்லில் அரைக்கக்கூடாது என்று உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களது மாவட்டத்தில் 400, 500 குளங்கள் தூர்ந்த நிலையில் இருக்கின்றன. அவற்றைப் ஆழப்படுத்த வேண்டும். லிஃப்ட் இரிகேஷனுக்குப் பல திட்டங்கள் போடப்பட்டு, சர்வே எடுக்கப்பட்டு எந்த வேலையும் நடைபெறவில்லை. 'சாகோ' இண்டஸ்ட்ரி ஏற்படுத்தும் திட்டத்தையும் அமல் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு சேரும்போது ஆசிரியர்கள் என்ன சம்பளம் பெற்று வந்தார்களோ அதே சம்பளத்தைத்தான் இப்போது பெற்று வருகிறார்கள். இங்குள்ள ஆசிரியர்கள் சம்பள விகிதம் வேறாகவும் எங்கள் மாவட்டத்திலுள்ள ஆசிரியர்கள் சம்பள விகிதம் வேறாகவும் இருக்கிறது. இந்தப் பிரச்சினையையும் தீர்க்க வேண்டும். எங்கள் ஊரில் பல பள்ளிக்கூடங்களுக்குக் கட்டடங்கள் இல்லை. தெருவிலேதான் நடக்கின்றன. எங்களுடைய மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு சேர்ந்த நேரத்தில், இருக்கின்ற குறைகளை எங்களுடைய எம்.எல்.ஏ.-க்கள் சொன்ன நேரத்தில், அன்றைய நிதியமைச்சர் அவர்கள் 'உங்களை நான் அழைக்கவில்லையே; நீங்கள் ஏன் வந்தீர்கள்?' என்று கேட்டார்கள். இந்த மந்திரி சபை எங்களுடைய இந்தப் பிரச்சினைகளையெல்லாம் கவனித்துத் தீர்க்கும் என்று நம்புகிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார்; அங்கத்தினர்கள் பேசும்போது எந்த விதமான குறிப்பும் இல்லாமல், முன் அறிவிப்பும் இல்லாமல் குற்றச்சாட்டுகளைச் சொல்வது சரியல்ல. பாராளுமன்றத்தில் இந்த மாதிரி குற்றச்சாட்டுகளைச் சொல்லும்போது முன் அறிவிப்பு கொடுக்க வேண்டுமென்று விதிமுறைகள் இருப்பதாக அறிகிறேன். இந்த மாதிரி குற்றச்சாட்டுகளை நாம் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டால் இந்தச் சபை 'சந்தைக் கடை' ஆகிவிடும்.

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் :** கனம் உறுப்பினர் அவர்கள் 'சந்தைக் கடை' என்று சொன்னதை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். கனம் அங்கத்தினர்கள் மற்ற அங்கத்தினர்களைப் பற்றிச் சொன்ன தனிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சபையின் நடவடிக்கைகளில் இருந்து நீக்கிவிடுமாறு யோசனை கூறுகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களின் உரையை வரவேற்று ஒருசில வார்த்தைகள் பேசலாமென்று நினைக்கிறேன். பொதுவாக இரண்டு பக்கத்திலுமுள்ள கட்சிக்காரர்கள் பலவித நல்ல அபிப்பிராயங்களைக் கூறினார்கள். இன்றுள்ள பிரச்னைகளை எவ்வாறு தீர்ப்பது என்பதுபற்றி கூறினார்கள். இப்போதுள்ள நிலையில் யார் எந்தத் திட்டம் கொண்டு வந்தாலும் சரி, அவை நீண்டகாலத் திட்டங்களாகவே இருக்

கின்றன. ஐந்தாண்டுகளுக்குள் நிறைவேற்றி நாம் அதன் பலனைக் காண முடியுமா என்பது சந்தேகமாகவே இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் அரசாங்கத்தில் இருக்கும் காலத்தில் மக்களிடையே நல்ல எண்ணத்தை உண்டாக்க வேண்டுமென்று சொன்னால் ஒரே ஒரு மருந்துதான் இருக்கிறது. நான் சொல்வதை அமைச்சர்கள் நல்ல விதத்தில் ஏற்று நிறைவேற்றினால், நல்லது. சென்னை நகரில் எல்லா அமைச்சர்களும் இருந்து கொண்டு வருகிற மனுக்களை எல்லாம் அல்லது நாட்டில் எங்கும் நடக்கும் குற்றங்களை உடனடியாகத் தீர்க்க முடியுமா என்றால் அது நடைமுறையில் முடியாத காரியம். மனு ஒன்று கொடுத்தால் அதை பார்வேர்டட் என்று சொல்லி கலெக்டர்களுக்கு அல்லது வேறு ஆபிசர்களுக்கு அனுப்பி வைக்கிறோம். அப்படி அனுப்பி சாதாரணமாக முடிவு எடுக்க குறைந்தபட்சம் எட்டு மாத காலமாகிறது. மேலும் அங்குள்ள அதிகாரிகள் தாங்கள் செய்தது தவறு என்று ஒருபோதும் எழுத மாட்டார்கள் என்பதும் நமக்குத் தெரியும். ஆகவே, எல்லாத் திட்டங்களையும் நல்லவிதமாக செயல்படுத்தவேண்டுமென்றால் மினிஸ்டர் வித்அவுட் போர்ட் போலியோ என்று ஒரு அமைச்சரை கண்டிப்பாக போடவேண்டும். அந்த மினிஸ்டர் ஜில்லா வாரியாக அடிக்கடி சுற்றுப்பிரயாணம் செய்து ஸ்பாட் டிஸ்போஸல் கொடுத்தால் எல்லாம் நல்லவிதத்தில் நடக்கும். அப்போது அரசாங்கத்தின் செயல் முறைகள் எல்லாம் நன்கு நடக்கும் என்று தங்கள் மூலம் முதல் அமைச்சர் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, மினிஸ்டர் வித்அவுட் போர்ட் போலியோ என்று ஒருவரைப் போட்டு அவர்கள் வேலையே குறைகளைத் தீர்க்கும் முறையில் அமைக்கப்பட்டு எந்த இடத்தில் எந்தப் பிரச்னை வந்தாலும் அங்கே அவர் சென்று ஸ்பாட் டிஸ்போஸல் கொடுத்தால் அங்கத்தினர்கள் கூறும் குற்றங்குறைகள் உண்மையா இல்லையா; யார் மீது தப்பு இருக்கிறது; அதிகாரிகள் மீது தப்பா அல்லது மனுக் கொடுத்தவர் மீது தப்பா என்பது தெளிவாக அந்த இடத்திலேயே தெளிவாகும்.

அடுத்த படியாக, இன்று முக்கியமான பிரச்னை உணவுப் பிரச்னை. காங்கிரஸ் கட்சி நல்ல கட்சியாக இருந்தாலும் அது தோற்றதற்கு காரணம் என்ன? என் அபிப்பிராயம் என்னவென்றால் அது ஏழைகளின் கட்சியாக இருந்தபோது நன்றாகத் தான் இருந்தது. இன்றையதினம் வியாபாரத்தையும் அரசியலையும் சேர்த்து பெரும் பணக்காரர்கள் உள்ளே புகுந்தவுடன் மக்கள் கட்சி என்பது மறைந்து கொள்கை அளவில் நல்ல கருத்துக்கள் இருந்தாலும் அதை மாற்ற வேண்டிய நிலையில் உள்ளது என்பதை மறுக்கமுடியாது. அதேமாதிரி திராவிட முன்னேற்றக் கழகம் அரசாங்கத்திற்கு வந்தவுடன் குறை கூறுவதில் பிரயோஜனமில்லை. இந்த நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை எடுத்துக் கொண்டது எனக்குக் கூட அவ்வளவாக பிடிக்கவில்லை. கஷ்டமான நிலையில் அரசாங்கத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சியில் பட்ட கஷ்டங்களை எல்லாம் விட நான்கு மடங்கு ஆளுகிற நேரத்தில் படுகிறார்கள் என்பதில் ஐயமில்லை. துரதிருஷ்ட சம்பவம் என்றிருந்தாலும், தெளிவாகச்





சிந்தித்து மினிஸ்டர் வித்அவுட் போர்ட்போலியோ என்று போட்டு மக்களிடம் சென்று குறைகளை அப்போதைக்கப்போது தீர்க்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் நல்ல பெயர் கிடைக்கும். குஜராத், பஞ்சாப் போன்ற மாநிலங்களில் இப்படி ஸ்பாட் டிஸ்போசல்ஸ் கொடுத்திருக்கிறார்கள். ஒரு மனு கொடுத்தால் சில சமயங்களில் நான்கைந்து டிபார்ட்மெண்டுகளுக்குப் போய் கன்கர் ஆக வேண்டியிருக்கிறது. இப்படி ஒரு டிபார்ட்மெண்டிலிருந்து இன்னொரு டிபார்ட்மெண்டுக்குப் போய இப்படியே 10 ஆண்டுகள் கூட ஆகிவிடுகின்றன. ஆகவே ஒரு அமைச்சர் அந்தந்த இடத்திற்குச் சென்று எல்லா கன்சர்ன்ட் ஆபீசர்களையும் வைத்துக் கொண்டு ஸ்பீடி டிஸ்போஸல் கொடுத்தால் உடனடியாக எல்லாம் முடிந்துவிடும். இந்த ஒரு மருந்தைத் தவிர வேறு ஒரு மருந்தும் கிடையாது பிரச்னைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு.

அடுத்தபடியாக, சில நண்பர்கள் இன்ப்ளேஷன் பற்றிச் சொன்னார்கள். இன்ப்ளேஷன் என்பது அண்டர் டெவலப்ட் கன்ட்ரீஸ் டெவலப் ஆகும்போது ஏற்படும் விஷயம் அது. விவசாயம் சம்பந்தமாக அதிகப் பணம் செலவு செய்யாமல் இண்டஸ்ட்ரீஸுக்காக அதிகப் பணம் செலவு செய்தால் ஒரே ஊரில் விவசாயிகளும், தொழிலாளர்களும் இருக்கும் நிலையில் தொழிலாளர்கள் கையில் அதிகமாகவும்—நியாயமான ஊதியமாக இருந்தாலும் சரி—விவசாயிகள் கையில் குறைவாகவும் பணம் வருகிறது. ஒரு கடைக்கு ஒரு பொருள் வாங்கச் சென்றால் தொழிலாளர்கள் தாராளமாக பணம் கொடுத்து வாங்கும் சக்தி அவர்களுக்கு ஏற்படுகிறது. அப்படி விவசாயிகளால் வாங்க முடிவதில்லை. விவசாயிகளின் வருமானம் குறைவாக இருக்கிறது. விவசாயிகள் அதை ஃபீல் செய்கிறார்கள். சேலம் உருக்காலை பற்றி பேசிக்கொண்டிருந்தாலும் அது ஒரு பக்கம் வந்தாலும் கூட இரும்புத் தொழிற்சாலைகள் சம்பந்தமாக உள்ளவைகளை எல்லாம் சிறிது நிறுத்திவிட்டு அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் விவசாய சம்பந்தமான நல்ல தொழிற்சாலைகளை கட்டினால் நன்றாகயிருக்கும். விலைவாசிகள் பற்றி ஒரு சில வார்த்தைகள். நடைமுறையில் 10 சத விகிதம் நாமே ஏற்றும் நிலைமை ஏற்படுகிறது. ரெவின்யூ டிப்பார்ட்மெண்டில், கலெக்டர் அலுவலகத்தில் அட்மினிஸ்ட்ரேட்டிவ் சார்ஜஸ் என்று போடுகிறார்கள். Pool Price என்று போடுகிறார்கள். நியாயமான முறையில் உதவி செய்ய வேண்டும் என்று பார்க்காமல் எல்லாச் செலவையும் மொத்தமாகப் போட்டு அட்மினிஸ்ட்ரேடிவ் சார்ஜஸ் ஏறுகிறது. அரிசியை கொண்டு ஒரு இடத்தில் வைக்கும்போது திடீரென்று இன்னொரு இடத்தில் இல்லாவிட்டால் 100 மைல் களுக்கு அப்பால் இங்கிருந்து அனுப்புகிறார்கள். ஆக திட்டம் போட்டு வேலை செய்யாமல் 300 மைல் அளவிற்கு, சுற்றிச் செல்லும் அளவிற்கு தற்காலிக நிவாரணம் அளிப்பதால் டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ் ஏக்கச்சக்கமாகி விடுகிறது. முன் கூட்டியே எந்தெந்த இடத்தில் எவ்வளவு எவ்வளவு வேண்டுமென்று கடந்த 2 ஆண்டுகளாக கிடைத்த அனுபவத்தை வைத்துக் கொண்டு ஆங்காங்குள்ள கலெக்டர்களிடம் கேட்டு எந்தெந்த இடத்தில் எவ்வளவு

எவ்வளவு வேண்டும் என்று கணக்கிட்டு அப்படி ஸ்டாக் செய்து விட்டால் டிரான்ஸ்போர்ட் சார்ஜலை கூடுமனவரை குறைத்து குறைகளை நிவர்த்தி செய்தால் மிக நன்றாகயிருக்கும்.

அதற்கு அடுத்தபடி ரைஸ் மில்லர்ஸ் பற்றி சொல்ல வேண்டும். ரைஸ் மில்லர்ஸுக்கு லைசென்ஸ் கொடுப்பதில் நமது அரசாங்கம் மிகவும் கட்டுப்படுத்தி வைப்பதால் தான் செலவுகள் குறைய முடியாமல் இருக்கிறது. இன்றைக்கு இருக்கக் கூடிய நிலையில் யார் கேட்டாலும் லைசென்ஸ் கொடுக்கவேண்டும். ரைஸ் மில் லைசென்ஸை கொடுப்பதில் உடனே கொடுத்தால் போட்டா போட்டி ஏற்படும். அரைப்பதற்கு எனக்கு உனக்கு என்று அடிபிடி சண்டைபோட்டு வாங்கிச் செல்வார்கள். அப்போது நமக்கு க்வாலிடி நல்ல விதத்தில் கிடைக்கும். காம்படிஷன் வந்தால் நல்ல க்வாலிடி கிடைக்கும். இதை மனதில் வைத்துக் கொண்டு ரைஸ் மில்களுக்கு தாராளமாக லைசென்ஸ் கொடுக்கவேண்டும் என்பது எனது தாழ்மையான கருத்து.

பிற்பகல்.
12-30 அதற்கு அடுத்தாற்போல், சில கிராமங்களில் குடும்பக் கார்டு கொடுத்து சில கிராமங்களில் இல்லாத நிலை இருக்கிறது. நமது முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், சென்னை நகரத்திலும் கோயம்புத்தூர் நகரத்திலும் ஸ்டாச்சுட்டரி ரேஷனிங் இருக்கிறது, மற்ற இடங்களில் இல்லை என்ற நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். இதிலே மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், உரிமையுள்ள மக்களுக்கு ஒரு இடத்தில் ரேஷன் முறை என்று வைத்தும், ஒரு இடத்தில் ஃபாமிலி கார்ட் என்று வைத்தும் பாரபட்சம் காட்டப் படுகிறது என்று நினைக்கிறார்கள். அதனால் அவர்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட அதிருப்தியைப் போக்கிக் கொடுக்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக இந்த ஒரு விஷயத்தை மட்டும் வலியுறுத்த விரும்புகிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் இலாகா பொறுப்பு இல்லாத ஒரு அமைச்சரை நியமித்து, அவர் எப்போதுமே சுற்றுப் பிரயாணம் செய்கிற மாதிரி ஏற்பாடு செய்து, மனுக்களை அலுவலர்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு உடனுக்குடன் ஸ்பாட் டிஸ்போஸல் கொடுக்கும் முறையில் ஏற்படுத்திக் கொடுத்து ஜனங்களுக்கு நல்ல விதத்தில் நல்வாழ்வை அளிக்க வேண்டுமென்று கூறி, இந்த உணவுப் பிரச்னையையும் தீர்த்துக்கொடுக்கவேண்டுமென்று கூறி, நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். மேத்தா** : பெருமதிப்பிற்குரிய துணை அவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் இன்று உங்கள் முன்னிலையில் பேச நிற்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் பெரிய தியாகங்களுக்கிடையே தான் இந்த மந்திரி சபையை இன்று அமைத்திருக்கிறது உள்ளபடியே கவர்னர் பெருமானுடைய பேருரையிலிருந்து பல பகுதிகளைப் பற்றி நாம் பேசலாம் என்று இருந்தாலும்கூட, இதற்கு





முன் நடைபெற்ற விவாதத்தில்; காங்கிரஸ் நண்பர்கள் பேசிய நேரத்தில், கவர்னர் அவர்கள் எடுத்துக்காட்டியுள்ள முக்கியமான பிரச்னைகளைக் கூட விட்டுவிட்டு, சவால் விடக் கூடிய அளவுக்கு, தேன் எடுக்கும் கதையையும், இந்தப் பக்கத்து நாடார் என்றும் பேசினார்கள். உள்ளபடியே ஜாதிப் பிரச்னையைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டது வருந்தத்தக்கது என்று நான் கூறிக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் எதிர் நீச்சல் போட்டு வளர்ந்த இயக்கம் ஆகும். இதுவரையில் பலப்பல தியாகங்களைச் செய்து குறிப்பாக காங்கிரஸ்காரர்களால் தனிப்பட்ட ரீதியிலும் சரி, அரசியல் ரீதியிலும் சரி, செய்யப்பட்ட கொடுமைகளையெல்லாம் தாங்கி வளர்ந்தவர்கள் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எந்தப் பகுதியைச் சேர்ந்தவரானாலும், இந்தச் சலசலப்புகளுக்கெல்லாம் இந்த பனங்காட்டு நரிகள் அஞ்சாது. 1917-ல் ஆரம்பித்த தென் இந்திய நலஉரிமைச் சங்கமானாலும், 1926—27-ல் பெரியார் ராமசாமி அவர்களால் சுயமரியாதை இயக்கம் தோற்றுவிக்கப் பட்டபோதும் சரி, 1937-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமைத் தளபதியாக இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்ட போதும்சரி, 1947-ல் நாடு சுதந்திரம் அடைந்தபோது பெரியார் கருத்துக்கு மறுப்பு தெரிவித்தபோதும்சரி, 1957-ல் நேரடியாகத் தேர்தலில் ஈடுபட்டபோதும்சரி, எதிர்ப்புக்களை எந்த அளவில் தாங்கிக் கொண்டு வளர்ந்திருக்கிறது என்பதை எங்களது வரலாற்றைப் பார்த்தால், அவர்கள் எதற்காவது பயந்தார்களா என்பது புலப்படும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணித் தலைவர்களைத் தனிப்பட்ட முறையில், தனித்தனியாகக் கொலை செய்ய முயற்சித்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். பாண்டிச்சேரியில் கலைஞர் கருணாநிதி அவர்களை இரவு நேரத்தில் அடித்துக் கொலை செய்ய முயற்சித் தார்கள். அண்ணாமலை நகரில் மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் மதியழகன் அவர்களை அந்த நாளில் தாக்கியிருக்கிறார்கள். அதே போல நாவலர் அவர்களும் தேனியில் தாக்குதலுக்கு ஆளாகியிருக் கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் வாழவேண்டும், வளர வேண்டும், மக்களுக்கு தொண்டு செய்யவேண்டும் என்ற காரணத்தினால் பல துன்பங்களைத் தாங்கித் தாங்கி வளர்ந்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக மந்திரிசபை நல்ல முறையில் மக்களுக்காக உழைக்கவேண்டும் என்ற நினைவோடு, மூன்று படி அரிசி போடுவதாகக் கூறியதற்கு ஒரு படி அரிசியாவது போட வேண்டும் என்ற திட்டத்தில் இருக்கிறது. ரூபாய்க்கு ஒரு படி அரிசியை உடனடியாகப் போடவேண்டும் என்ற காரணத்தினால், நெல் கொள்முதலை கொஞ்சம் கெடுபிடியாகச் செய்யவேண்டியிருக் கிறது. மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பலர் பேசுகிற நேரத்தில் இங்கு அதிகாரிகள் கொள்முதலை கெடுபிடியாகச் செய்தார்கள், அங்கு கெடுபிடியாகச் செய்தார்கள் என்று சொன்னார்கள். ஒரு சில இடத்தில் அம்மாதிரி நடந்திருக்கலாம். குறிப்பாக கெடுபிடிகள் இருக்கவேண்டுமா என்றால், எல்லா விவசாயிகளும்,

எல்லா வியாபாரிகளும் நேர்மையாக அளந்து எடுத்து நெல்லைக் கொடுத்திருக்கிறார்களா? கொள்ளை லாபக்காரர்கள் ஒரு சிலர் தவறுகள் செய்திருக்கிறார்கள். இந்த நடவடிக்கைகளைக் குறித்து நமது முதலமைச்சர் அண்ணா அவர்கள் என்ன கூறினார்கள் என்றால், தவறாக நடந்தார்கள் என்று அதிகாரியைக் குறிப்பிட்டுக் காட்டினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். அந்த முறையில் குறிப்பிட்டுக் காட்டினால் கொடுமைப் படுத்தப்பட்ட விவசாயிகளுக்குத் தக்க உதவிகளைச் செய்யத் தயங்காது, தவறாக நடந்துகொண்ட அதிகாரிகளை கண்டிக்கத் தயங்காது. கொள்முதலில் சிலபல தவறுகள் ஏற்படுகிறது என்றால், அது இயற்கைதான். சில அதிகாரிகள் தவறாக போவதும் இயற்கைதான். வயலுக்குச் சென்று களை எடுக்கலாம் என்றால், அறிந்தோ அறியாமலோ நெல் பயிரில் ஒன்றிரண்டை மிதித்து அது கெடத்தான் செய்யும். நெல் பயிர் கெடுகிறது என்று களை எடுக்காமல் இருக்கமுடியாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தவறாக, நடந்துகொள்ளும் அதிகாரிகள் பேரில் நடவடிக்கை எடுக்க திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் தயங்காது.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதிபற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதி பெரியகுளம் தொகுதி. உள்ள தொகுதிகளிலேயே ரெண்டுங் கெட்டான் தொகுதி அது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் பாதிப்பகுதி மலைப் பகுதியாகவும், பாதிப்பகுதி தரைப் பகுதியாகவும் இருக்கிறது. இப்படி மலைப் பகுதியாகவும், தரைப் பகுதியாகவும் இருக்கிற காரணத்தினால், ஒரு பகுதியில் ஒரு மாதிரியாகவும், இன்னொரு பகுதியில் இன்னொரு மாதிரியாகவும் நடவடிக்கை எடுக்கவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரியகுளத்தில் சோத்துப்பாறை என்ற அணைக்கட்டை கட்டினால் பல ஆயிரக்கணக்கான எக்கர் நிலங்களிலும், கூடலூர், கம்பம் போன்ற பகுதிகளில் எந்த அளவுக்கு நெல் விளைச்சல் நல்லவிதமாக இருக்கிறதோ அந்த முறையில் நெல் விளைச்சல் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் தலைமை.)

அந்த மலைப் பகுதியில் இருக்கும் பெரும் பகுதி கொடைக்கானல் முழுவதுமே, நெல் விளையும் பகுதி அல்ல. அந்தப் பகுதி காய்கறிகள் விளையும் பகுதி. அந்தப் பகுதி மக்கள் பெரிய சிரமத்திற்கு உட்பட்டிருக்கிறார்கள். வட்டம் விட்டு வட்டம் நெல் போகக் கூடாது என்று சொல்லப்படுவதால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படும் நிலையில் இருக்கிறார்கள். மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் சட்ட பூர்வ ரேஷனை அந்தப் பகுதிக்குக் கொண்டு வந்தாலும் அந்தப் பகுதி பிழைத்துக்கொள்ளும் என்று கூறிக் கொள்ளுகிறேன். அந்த மலைப் பகுதி மக்கள் வாழை, காய்கறிகள்,





உருளைக்கிழங்கு போன்றவைகளைத் தவிர வேறு விளைவிப்பது கிடையாது. அந்தப் பகுதி மக்களுக்கு சட்ட பூர்வ ரேஷனையோ, குடும்பக் கார்டு முறையையோ கொண்டு வந்து கூட்டுறவு சங்கங்கள் மூலமாக உணவுப் பொருள்களைக் கொடுத்தால் வசதியாக இருக்கும்.

இரண்டாவதாக, கொடைக்கானல் பகுதியில் பெரும் பகுதியிலே கால் நடையாக நடந்து செல்லவேண்டுமே தவிர அங்கு ரோடு வசதி கிடையாது. ஒரு ஊர் விட்டு இன்னொரு ஊர் செல்ல வேண்டுமென்றால் 7, 8 மைல் கால்நடையாக நடந்துதான் அடுத்த ஊரைப் பிடிக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்பேற்பட்ட மலைப்பகுதிகளில் ரோடு வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கொடைக்கானல் பகுதியில் மருத்துவ மனைகள் கிடையாது. கொடைக்கானல், பண்ணைக்காடு போன்ற சில இடங்களில்தான் மருத்துவ மனைகள் இருக்கின்றனவே தவிர, மேல் மலை, கீழ்மலைப் போன்ற மலைப்பகுதிகளில் மருத்துவ மனைகள் கிடையாது. குறிப்பாக எல்லா ஊர்களிலும் உடனடியாக மருத்துவ மனைகள் அமைக்க முடியாவிட்டாலும்கூட, நான்கு கிராமங்களுக்கு ஒரு மருத்துவமனையாவது அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போலத்தான் மலைப்பகுதியில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் வெள்ளையர் காலத்திலிருந்து அவர்களை நம்பித்தான் வாழவேண்டிய மக்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வாழ வேறு வழி கிடையாது. ஏலனில் வியாபாரம் பண்ணியும், பிற காலங்களில் விவசாயம் செய்து பிழைக்கக்கூடிய ஏழை பெருங்குடி மக்களாக அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அப்பேற்பட்ட மக்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை. உருளைக்கிழங்கு விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக அங்கிருந்த மதுரை கூட்டுறவு பாங்குக்கு டெல்லி சர்க்கார், விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்காக 16 லட்சம் ரூபாய் லோனைக் கொடுத்தது. ஆனால், ஏறத்தாழ ரூ. 3½ லட்சம் தான் கடனை வழங்கப்பட்டிருக்கிறது. 3½ லட்சம் ரூபாய்தான் கடனை வழங்கப்பட்டிருக்கிறது என்றால், டெபாஸிட் கட்டி, மற்றபடி போய்வருவதற்கே ரூ. 500 லோன் வழங்கப்பட்டால், ரூ. 300 செலவாகி விடுகிறது. எஞ்சி இருக்கும் ரூபாய்தான் விவசாயம் செய்வதற்குப் பயன்படுகிறது. மத்திய சர்க்காரால் கொடுக்கப்பட்ட தொகை முழுவதும் ஏன் விவசாயிகளுக்குக் கடனை வழங்கப்படவில்லை என்றால், விவசாயிகளுக்கு பட்டா கொடுக்கப்படவில்லை. நிலம் உள்ளவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 500, ரூ. 1,000 லோன் வழங்க வேண்டும் என்ற விதி இருக்கிறது. ஆனால், 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முடிந்த ரெவின்யூ டிபார்ட்மெண்டு கணக்கின்படி 7-ம் நெம்பர் நோட்டீஸ் அனுப்பப்பட்டு பட்டா வழங்கப்படாமல் இருப்பது ஏறத்தாழ 3,500 ஏக்கர்தான். 3,500 ஏக்கர் நிலங்களுக்கு பட்டா வழங்கப் படவில்லை என்பது ரெவின்யூ டிபார்ட்மெண்டு கணக்குப்படி.

என்னைப் போன்ற குட்டி விவசாயிகள், நான் ஒரு குட்டி விவசாயி என்ற முறையில் பேசுகிறேன், 6 ஏக்கர் விவசாயம் பண்ணினால், அதில் 2 ஏக்கர்தான் ரெவின்யூ டிபார்ட்மெண்டு கணக்கில்வரும். அப்படி கணக்குப் பார்த்தால் ஏறத்தாழ 7,000 ஏக்கர் நிலங்களுக்கு பட்டா வழங்கப்படாமல் இருக்கும் நிலை இருக்கிறது. இந்த நிலங்களுக்கெல்லாம் உடனடியாக ரெவின்யூ டிபார்ட்மெண்டார் பட்டாக்களை வழங்க வேண்டும். இப்படி 7,000 ஏக்கர் நிலங்களுக்கும் பட்டா வழங்கப்பட்டிருந்தால் மத்திய சர்க்கார் வழங்கிய ரூ. 16 லட்சமும் ஏழை விவசாயிகளுக்கு கடனாகக் கிடைத்திருக்கும். உருளைக் கிழங்கு விவசாயம் நல்ல முறையில் நடந்திருக்கும். உத்திரப் பிரதேசத்திலிருந்து உருளைக் கிழங்கு வரவழைத்து விநியோகித்ததில் நமது மாநில சர்க்காருக்கு ரூ. 6,56,000 நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை கொடைக்கானல் பகுதி மக்களுக்கு கடனாகக் கொடுத்திருந்தால் மட்டும், உருளைக்கிழங்கு நல்ல முறையில் விவசாயம் செய்யப்பட்டு, நல்ல முறையில் ஏழை எளியவர்கள் வாழ்வதற்கு வழி ஏற்பட்டிருக்கும்.

குறிப்பாக, மலைப்பகுதிகளில் ஃபாரஸ்டு டிபார்ட்மெண்டிற்கும், ரெவின்யூ டிபார்ட்மெண்டிற்கும் எல்லைத் தகராறுகள் ஏற்பட்டு, கோர்ட்டு வரையிலும் விவகாரம் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. எல்லைத் தகராறுகள் உடனடியாக தீர்க்கப்பட்டு, ஏழை எளிய மக்களுக்கு, அங்கு விவசாயம் பண்ணக்கூடிய மக்களுக்கு, உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற முறையில் எங்கெங்கே யார் கிஸ்தி செலுத்திக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு உடனடியாக பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்தால், அவர்கள் சர்க்காருக்கு மிகவும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இந்தப் பட்டா வழங்குதல் தாமதப்படுவதால், இதன் மூலம் லஞ்சம் என்ற ஊழல் மலிந்து வருவதற்கு வழி ஏற்படுகிறது. வி.எம். அல்லது கர்ணத்திடம் யார் கிஸ்தி செலுத்துகிறார்களோ அவர்களுக்கு உடனடியாக தாமதம் இல்லாமல் பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்து விட்டால், இந்த கீழ்த்தரமான லஞ்ச ஊழல் என்ற பேச்சுக்கு இடமிராது.

இன்னொன்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சி காலத்தில் அரிஜனங்கள் வெகுவாக முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள், அவர்களுக்கு நல்ல வசதிகளெல்லாம் செய்துதரப்பட்டன என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். காங்கிரஸ்காரர்களுடைய பெருமுயற்சியினால்தான் இந்த சட்டமன்றத்தில் 40 எம்.எல்.ஏ.-க்கள் வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதற்கு முன்பு 1946-ல் வெள்ளையர் காலத்தில் இந்தப் பகுதியிலே அரிஜனங்களுக்கு உரிமை வழங்கப்படவில்லையா ? இந்தப் பகுதியிலுள்ள அரிஜனங்களுக்கு மட்டுமல்ல, வெள்ளையர் ஆட்சியிலே இஸ்லாமியர்களுக்கும், கிறிஸ்துவர்களுக்கும் உரிமைகள் வழங்கப்பட்டன. வெள்ளையர் ஆட்சி காலத்தில் 1946-ல் தேர்தல் நடந்தபோது தமிழகத்திலிருந்து பிரிந்துபோன ஆந்திராவையும் சேர்த்து 29 முஸ்லிம் எம்.எல்.ஏ.-க்கள் இருந்தார்கள். அவர்கள் இந்த சட்டமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தார்கள். காங்கிரஸ் கட்சி எந்த அளவுக்கு அவர்களுக்கு உரிமைகளை வழங்கியிருக்கிறது என்று கேட்கிறேன். அதுபோலவே கடந்த காலத்தில் சுயேச்சையாக போட்டியிட்ட திரு. ஏ. ஒய். எஸ். பரிசுத்த நாடார், கிறிஸ்துவ சமூகத்தை சார்ந்தவர், தர்மராஜ் சந்தோஷம் என்பவரை தோற்கடித்து வெற்றிபெற்றார். ஏன் கிறிஸ்துவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கவில்லை ? பொதுவாக ஜாதிப் பிரச்னையைப் பற்றி பேசக்கூடாது என்று சொல்லப்பட்டாலும், அரிஜன் என்று காட்டி வோட்டு வாங்க வேண்டும் என்ற காரணத்தினால் நாற்பது எம்.எல்.ஏ.-க்களை காங்கிரஸ்காரர்கள் கொண்டுவந்தார்கள். யாரிடம் அறிவு, திறமை, எந்த அளவுக்கு இருக்கிறது என்று பார்த்து, ஜாதியின் அடிப்படையில் பாகுபாடு என்ற அளவுக்கு இல்லாமல் இன்று திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்திருக்கிறது. ஜாதியைக் காட்டி வோட்டு வாங்கவேண்டும் என்ற அளவில் திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கவில்லை. காங்கிரஸ்காரர்கள் பொதுவாக ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்குகிறார்களா என்றால் இல்லை. நான் தலைவர்கள் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. யார் அரிஜன், யார் உயர்ந்தவன், யார் தாழ்ந்தவன் என்ற முறையில், ஜாதி அடிப்படையில், திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படவில்லை. முதல் முதலில் திராவிட முன்னேற்றக் கழகம் சென்னை கார்ப்பரேஷன் ஆட்சியைக் கைப்பற்றியபொழுது, உதவி மேயராக ஒரு அரிஜனை தேர்ந்தெடுத்தது. அரிஜனைத்தான் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற விதி கிடையாது. இருப்பினும் கூட, திறமை காரணமாக அரிஜன் மேயர் வேண்டும் என்ற கருத்தில் அவரைத் தேர்ந்தெடுத்தோம். அரிஜன் என்ற பெயரால் அவரைக் காட்டி வோட்டு வாங்கவேண்டும் என்ற கருத்து கிடையாது. எனவே, முன்னேற்றக் கழகம் ஜாதி பாகுபாடு இல்லாமல், அவர்களுடைய சக்தியைப் பொறுத்தோ, அவர்களுடைய திறமையைப் பொறுத்தோ, அவர்களுடைய உழைப்பைப் பொறுத்தோதான் உத்தியோகம் வழங்கியிருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. ஜாதியின் அடிப்படையில் பாகுபாடு என்பது கிடையவே கிடையாது. பாரதியார் அவர்கள் சொன்னது போல் 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்ற முறையில்தான் முன்னேற்றக் கழகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. 'திராவிட' என்ற வார்த்தையே அரிஜன் என்பதை குறிப்பிடுகிறது. என்னுடைய தொகுதியைப்பற்றி மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன், கொடைக்கானல் பகுதியில் உள்ள மக்களுக்கு நான் சொன்னபடி எல்லா வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஒரே ஒரு பிரச்னையை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் அவர்களுடைய உரையில் பஞ்சாயத்து போர்டு உதவியோடு உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. பத்து ஆண்டு காலமாக பண்ணைக்காடு

பகுதியில் பஞ்சாயத்து போர்டு அமைக்கப்படவில்லை. பஞ்சாயத்து அமைக்கப்படாததால், அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள். பணணைக்காட்டில் பஞ்சாயத்து அமைத்து, பணணைக்காட்டு மக்களுக்கு ஜனநாயக முறைப்படி அவர்களுக்கு நல்ல வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவுக்கு என்னை கவர்னர் அவர்களுடைய உரையின்மீது நடக்கும் விவாதத்தில் பேச அனுமதி அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு விடை பெற்றுக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. எஸ். கணேசன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையை ஒட்டி, இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒரு உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய சில கருத்துக்களை இந்த மன்றத்தின்முன் வைக்க விரும்புகிறேன். மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையில் நாட்டினுடைய இன்றைய நிலைமையை தெளிவாக அறிந்து, தேவைகள் இடையூறு இல்லாத அளவுக்குக் கிடைப்பதற்கு வழி காண முற்பட்டிருக்கிற வகையிலே அவர்களுடைய உரை அமைந்திருப்பது உள்ளபடியே வரவேற்கக்கூடியது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். கவர்னர் உரையைப்பற்றி இங்கு பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர்களெல்லாம் பற்றாக்குறையைப் பற்றியும், பதுக்கலைப்பற்றியும் அதிகமாகப் பேசினார்கள். இயற்கையின் காரணமாக அளவுக்கு விளைச்சல் குறைந்திருக்கிறது என்றும், அந்த அளவுக்குப் பஞ்ச நிலை இல்லை என்றும் இங்கே விவாதிக்கப்பட்டது. அது எப்படியாகிலும் நாட்டில் இன்றைய தினம் தட்டுப்பாடு மிக அதிகமான அளவுக்கு உருவாகியிருப்பதற்குக் காரணம் சமூக விரோத சக்திகள். தமிழக மாண்புமிகு முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் நாட்டிலுள்ள நிலைமையை விளக்கிச் சொல்லி, சமூக விரோத சக்திகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்குச் சர்க்கார் தயங்காது என்ற கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அனாலும், இன்றைய தினம் பத்திரிகையில் பார்க்கும்போது, பதுக்கல் மிக அதிகமாக இருக்கிறது என்பது தெரிகிறது. இப்படிப்பட்ட நெருக்கடி நாட்டிலே ஏற்படுவதற்குச் சமூகத் துரோகிகளே காரணம். அப்படிப்பட்ட சக்திகளைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டியது அவசியம். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். பதுக்கல்காரர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட கால அவகாசம் கொடுத்து, அந்தக் காலத்திற்குள் அவர்கள் தங்களுடைய நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும், அந்தக் காலத்திற்கு மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெளிவாக ஒரு முடிவு எடுத்து அதை அறிவித்து விட்டால் நலமாக இருக்கும். சென்ற ஆண்டில் பஞ்சாப் மாநிலத்தில் பதுக்கல்காரர்கள், கலப்படம் செய்பவர்கள் இவர்களுக்கு ஒரு காலவரை ஏற்படுத்தி, அதற்குள் அவர்கள் தங்கள் நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும், இல்லாவிடில், அவர்கள் கௌரவக் குறைவான முறையில், விலங்கிட்டு





வீதிகளில் அழைத்துச் செல்லப்படுவார்கள் என்றிருந்ததைப் போல செய்தால் நலமாக இருக்கும். என்னுடைய தொகுதியான செம்பனார்கோயில் சம்பந்தப்பட்டவரை, அங்கு அதிகமாக நிலங்கள் மடங்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன. தருமபுர ஆதீனத்திற்கும், திருவாடுதுறை ஆதினத்திற்கும்தான் சொந்தமாக இருக்கின்றன. அங்கே விவசாயிகள் குத்தகைக்கு எடுத்து, அந்த வருவாயில் வாழ்க்கை நடத்த வேண்டிய நிலைதான் இருக்கிறது. சென்ற ஆண்டு ஏற்பட்ட பஞ்ச நிலைமை காரணமாக இயற்கைக் கோளாறுகள் காரணமாக விளைச்சல் மிகக் குறைவாகி விட்டது. அவர்கள் மடத்திற்கு அளக்க வேண்டிய நெல்லை அளக்க முடியாமல் இருந்தது. இந்த மன்றத்திலே சென்ற ஆண்டு என்று கருதுகிறேன், தாற்காலிகமாக குத்தகைக்காரர்கள் அளக்க வேண்டிய நெல்லை நிறுத்தி வைக்கலாம் என்று கூறப்பட்டதாக அறிகிறேன் அதற்கான சட்டம் போட்டார்கள் என்றும் நினைக்கிறேன். நெல்லைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்கிற நிலைமைதான் எஞ்சி நிற்கிறது. நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புவது சென்ற ஆண்டிலும், அதற்கு முன்னாலும் உண்டாகியிருக்கும் நெல் பாக்கியை விவசாயிகளுக்கு நிரந்தரமாகத் தள்ளிக் கொடுக்க வேண்டும், அவர்கள் அளக்க வேண்டியதில்லை என்று செய்துவிட வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயிகள் அதிகமாகக் கஷ்டப்படுகிறார்கள். நெருக்கடி காரணமாக, மடத்துக்காரர்கள், இன்னும் மற்ற நிலச்சொந்தக்காரர்கள் செய்யும் நெருக்கடி காரணமாக, விவசாயிகள் தங்களிடம் உள்ள விவசாய உபகரணங்களை, மாடு, வண்டி இவற்றை விற்று பாக்கியைக் கொடுக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையில் அவர்கள் நிலச் சொந்தக்காரர்களுக்குச் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இருக்கும் கொஞ்ச நஞ்ச வசதியும் கையைவிட்டுப் போய்விடக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். தங்களுடைய பொருள்களை இழந்துவிடும் நிலையில் இருக்கிறார்கள். அந்த நிலை மாறவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுவாகக் குத்தகைக்காரர்களுக்கும், மடத்து நிலங்கள் உழுது பயிரிடுபவர்களுக்கும், பம்பு செட்டுகள், மற்றும் விவசாயக் கடன்கள், உரக் கடன்கள் கிடைப்பதில்லை. அதற்கு நம்முடைய சர்க்கார் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மின்சார இணைப்புக்கள் தனியார் துறையில் இருக்கின்றன. தனியார் துறைக்கும் சர்க்கார் துறைக்கும் ஏராளமான வித்தியாசம் இருக்கிறது. விவசாய பம்பு செட்டுக்கு மின்சார இணைப்புக் கொடுப்பதில், தனியார் துறையாக இருந்தால் கிட்டத்தட்ட ரூ. 300 என்று நினைக்கிறேன், அதே நேரத்தில் சர்க்கார் துறையாக இருந்தால் ரூ. 75 தான் என்று நினைக்கிறேன், சரியாக நினைவில்லை. ஆகவே சர்க்கார் துறையில் நடத்தப்படும் மின்சார இணைப்புக்கு தனியார் துறையைக் காட்டிலும் குறைவாகவே இருக்கிறது.

[திரு. எஸ். கணேசன்] [1967 மார்ச் 27

இந்த வேறுபாட்டின் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, தனியார் துறையை ஒழித்துவிட்டு, சர்க்காரிலேயே அதையும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் பகுதியில் விவசாயிகளுக்கு உரம் கொடுப்பதில் இன்னின்ன விவசாயி இன்னின்ன உரந்தான் வாங்கலாம் என்கிற வரம்பு வைத்திருக்கிறார்கள். ஆகவே விவசாயிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட வரம்பை விட்டுவிட்டு, எந்தப் பயிராக இருந்தாலும், விவசாயி தனக்கு வேண்டும் என்கிற உரத்தைப் பெற்றுக்கொள்ள அனுமதி கொடுக்கப்படவேண்டும். இன்னின்ன பயிர்களுக்கு இன்ன உரத்தைத் தான் எடுக்கலாம் என்கிற முறை மாறி அவரவர்களுக்கு தேவைப்படும் அளவிற்கு, உரங்களைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சலுகைகள் என்று பேசும் போது, காங்கிரஸ் உறுப்பினர்கள் எல்லாம், திராவிட முன்னேற்றக் கழகம் இதைச் செய்வேன் அதைச் செய்வேன் என்றது, ஆனால் தான் சொன்னதைச் செய்யவில்லை என்று குறிப்பிட்டுப் பேசினார்கள். ஆனால், முன்பு காங்கிரஸ்காரர்கள் ஆட்சியில் இருந்தபோது கட்சிக் கண்ணோட்டத்துடனேயே, அரிசன நல இலாகா பணி புரிந்து வந்திருக்கிறது. அப்பொழுது நல்ல முறையில் அரிசனங்களுக்கு மனைக்கட்டுகள் வழங்கப்படவில்லை. குறிப்பாக என்னுடைய தொகுதியில் 4, 5 கிராமங்களில் குறிப்பிட்ட கட்சிக்காரர்கள் தான் இருக்கிறார்கள், தோழர்கள் மாற்றுக் கட்சிக்காக உழைக்கிறார்கள் என்கிற காரணத்தினால், சென்ற பல ஆண்டு, காலமாக, குறிப்பாக சென்ற ஐந்தாண்டு காலமாக, நானும் எவ்வளவோ முயற்சிகள் எடுத்தும், அங்கு மனைக்கட்டு கிடைக்கவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் கட்சிக் கண்ணோட்டத்துடன் நடந்து கொண்ட நிலையை மாற்றி, புதிதாக இன்றைக்கு வந்திருக்கும் நம்முடைய சர்க்கார் அக்கறை செலுத்த வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடலோரப் பகுதி மீனவ மக்களுக்குச் சாலை வசதி கிடையாது. குடி தண்ணீர் வசதி கிடையாது. மின் விளக்குகளும் முக்கியமாக தஞ்சை மாவட்ட கடலோரப் பகுதிகளில், அதிகமாக இல்லை. காங்கிரஸ் உறுப்பினர்களெல்லாம், கடந்த 19 ஆண்டுக் காலத்தில் பெரிய பெரிய சாதனைகளைச் செய்துவிட்டோம் என்று வெளிப்படையாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால், தஞ்சை மாவட்டத்தின் கடலோரப் பகுதி மீனவ மக்களுக்கு வாழ்க்கை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. அவர்கள் நிராகரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துச்சொல்லி, அப்படிப்பட்ட கடலோர மீனவ மக்களுக்கு நல்ல சாலை வசதியும், அவர்கள் வசிக்கும் சேரிகளுக்கு மின்சார விளக்கு வசதி, குடிதண்ணீர் வசதியும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தலைவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.



1967 மார்ச் 27]

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** கனம் அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையை வரவேற்று, பாராட்டி, என்னுடைய சில கருத்துக்களை இந்த அவைமுன் வைக்க முன் வருகிறேன். திருநெல்வேலித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு புதிதாக இந்த அவைக்கு நான் அனுப்பப்பட்டிருக்கிறேன். திருநெல்வேலியில் முன்னாள் காங்கிரஸ் அமைச்சரவை நகராட்சியைக் கலைத்தது. திருநெல்வேலி ஒரு காலத்தில் காங்கிரஸ் கோட்டையாக இருந்தது. சென்ற தேர்தலின்போது அங்கே 17 இடங்களிலும் காங்கிரஸ் வெற்றி பெற்று அந்த மாவட்டம் பூராவிலுமே காங்கிரஸ் என்று இருந்தது. அப்படிப் பட்ட மாவட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் நகராட்சியை நடத்துவதா என்று முன்பு இருந்த காங்கிரஸ் அமைச்சரவை திருநெல்வேலி நகர சபையைக் கலைத்தார்கள். அதே போலத்தான் அருப்புக்கோட்டை நகராட்சியையும், காரணம் என்பதற்காக காரணம் காட்டி, முன்னால் இருந்த காங்கிரஸ் அமைச்சரவை கலைத்தார்கள், ஆனால் அவர்கள் கலைத்த அருப்புக் கோட்டை நகராட்சித் தலைவரான சௌடி சுந்தர பாரதியே இன்றைக்கு இந்த மன்றத்தில், அந்தத் தொகுதியின் பிரதிநிதியாக மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டு அமர்ந்திருக்கிறார்கள். யாரைத் தலைவராக இருக்க உரிமை இல்லை என்று அன்று இருந்த சர்க்கார் சொன்னார்களோ அவரே இன்றைக்கு மக்களால் தேர்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் மாபெரும் காங்கிரஸ் கட்சியின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். அதே மாதிரி, திருநெல்வேலி நகரத் திலிருந்து நான் மக்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறேன் என்பதையும் மிக மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த நேரத்திலே புதிதாகப் பதவியேற்றிருக்கும் அமைச்சரவைக்கு நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரி விக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், இந்த நகராட்சி களைக் கலைத்த போக்கு, ஜனநாயகம் காணாத மாபெரும் பாதகம், ஜனநாயக ஏட்டில் பொறிக்கப்பட்ட களங்கம் என்றும், 'political homicide is foreign to the principles of Democracy' ஜனநாயகத்திற்குப் புறம்பான அரசியல் படுகொலை என்றும் சொல்லமுடியும். இன்றைக்கு இருக்கும் அரசு அந்த நகராட்சி களுக்கு உயிர் கொடுக்கும் முறையில், மதிப்பிற்குரிய சட்ட அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் ஒரு மசோதாவைக் கொண்டு வருகிறார்கள். அதற்காக அவர்களையும், இந்த அமைச்சரவையையும் திருநெல்வேலி மக்கள் சார்பிலும், அருப்புக்கோட்டை மக்கள் சார்பிலும் பாராட்டி அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். பிற்பகல் 1-00

அடுத்து, கவர்னர் அவர்கள் உரையில் உணவுப் பிரச்சினைபற்றி அதிகமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அதிர்ஷ்ட வசமாக நண்பர் கருத்திருமன் ஒரு விவசாயியாக இருக்கிறார்கள். நேற்றைக்கு அவர்கள் குறிப்பிடும்போது, ஆளும் கட்சியில் விவசாயிகளே ஒருவரும் இல்லையா என்று தன்னுடைய கருத்தைத் தெரிவித்தார்கள். அவர்களைப்போல் விவசாயப் பெருங்குடி மக்கள் ஆளும் கட்சியிலும் என்னைப் போன்றவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள் என்று நான் அவர்களுக்கு மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

உணவுப் பிரச்னையைப் பொறுத்தும், ஒருசில கருத்துக்களை
நான் இங்கே கூறலாம் என்று கருதுகிறேன். சென்ற அமைச்சரவை
செய்துவிட்டுப்போன அதே உணவுக் கொள்முதல் செய்கிற
ஒரு முறையை, இந்த அமைச்சரவையும் தொடர்ந்து நடத்தும்
என்று தங்களுடைய கொள்கையில் அமைச்சரவையினர் அறிவித்
திருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சரவையினரை
மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். நாட்டிலே இருக்கிற
உணவுப் பொருள்களைக் கொள்முதல் செய்வதன் மூலமாகவும்,
அவற்றை மக்களுக்குப் பங்கிடுவதன் மூலமாகவும் உணவுப்
பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்துவிட முடியாது என்று நான்
மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இப்படிக்
கொள்முதல் செய்வதும், அதை மற்றவர்களுக்குப் பகிர்ந்து தரு
வதும் ஒரு தற்காலிகமான ஏற்பாடாக இருக்கலாமே தவிர,
அதுவே உணவுப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்குரிய
ஏற்பாடாக இருக்கக்கூடாது. உணவு உற்பத்தியைப் பெருக்கு
வதன் மூலமாகத்தான் உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச்
சரியான, நிரந்தரமான பரிகாரம் இருக்கும்.

உணவு உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையிலே, கவர்னர்
பெருமான் அவர்களுடைய உரையில், உணவுப் பொருள் உற்பத்
திக்கு மிக மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதை நான்
மனமார வரவேற்கின்றேன். கவர்னர் பெருமானுடைய உரையில்
மூன்று அம்சத் திட்டத்தை (த்ரீ-ப்ராங்டு ப்ரொக்ராம்) தந்திருக்
கிறார்கள். அந்தத் திட்டத்தின்படி நல்ல விளைச்சலைத் தரக்கூடிய
விதைகளைத் தருவதும் அந்தத் திட்டத்திலே ஒன்றாகும். இன்றைக்
கிருக்கும் விதைகளில், ஐ.ஆர். 25 என்று சொல்லப்படுகிற
விதை பொன்னுருவி என்று சொல்லப்படுகிற காரைப்பயிருக்கு
அதிக நல்ல பலன் தரத்தக்கதாகும். அதிக விளைச்சலைத் தரும்
விதையுமாகும். கார் பயிருக்கு ஏடிடி 27 ரக விதை மிக அதிக
விளைச்சலைத் தருவதாக இருக்கிறது. ஆகவே, இந்த இரு ரக
விதைகளையும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நினைத்த நேரத்
தில் எந்த விதத் தங்கு தடையும் இன்றித் தருவதற்கு இந்த
அமைச்சரவை முயற்சிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளு
கின்றேன்.

ஏடிடி 27, ஐ.ஆர். 25 ஆகிய இந்த இரண்டு ரக நெல் விதைகளும்
நல்ல மகசூலைத் தந்தாலும், இரண்டு வகை நெற் பயிருக்கும் அதிகப்
படியான விவசாய உரங்கள், நவீன விவசாய உரங்கள் மிக மிக
அதிகம் தேவையாகும். குறிப்பாக, நைட்ரஜன் உரங்களும்,
பாஸ்பேட் உரங்களும் மிக மிக அதிகமாகத் தேவைப்படுகின்றன.
கவர்னர் உரையில், "நைட்ரஜன் உர வகைகளை 1.35 லட்சம் டன்
வழங்கும்படிக் கேட்டதற்குச் சுமார் 86,000 டன் மட்டுமே கிட்டி
யுள்ளது; பாஸ்பர உர வகைகளில்கூட, நமது குறிக்கோள் அளவ
60,700 டன் ஆக நிற்க, மொத்தம் 27,000 டன் அளவிற்கே நமக்குக்
கிடைத்துள்ளது" என்று குறிப்பிட்டிருக்கிறார். உணவுப் பொருள்
உற்பத்தியை அதிக அளவிற்குப் பெருக்குவதற்கு இந்த இரண்டு
ரக உரங்களும் மிகவும் அவசியமானவையாகும். அதனால், இந்த



அமைச்சரவையை நான் கேட்டுக் கொள்ளுவது என்னவென்றால்,
வருகிற வேளாண்மை நேரத்திற்குள்ளாக, மத்திய அரசாங்கத்தை
மிக மிக மன்றாடிக் கேட்டு, இப்படிப்பட்ட நமக்குத் தேவைப்படும்
உரங்களை வாங்கிக் கையிருப்பில் வைத்துக்கொள்ளுவதற்கு முயற்சி
எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட நவீன உரங்கள்
கையிருப்பில் இருந்தால்தான் உணவு உற்பத்தி பெருமளவுக்கு
அதிகரிக்க முடியும் என்பதை மிகப் பணிவோடு நான் தெரிவித்துக்
கொள்ளுகின்றேன்.

அடுத்து, நீர்ப்பாசனத் திட்டத்தைப்பற்றியும் கவர்னர் உரையில்
குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேளாண்மைக்கு மிக மிக முக்கிய
மாகத் தேவைப்படுவது தண்ணீர் என்பதை நாம் நன்றாக அறிந்
திருக்கிறோம். விவசாயத்தின் கடைசி நேரத்தில் தேவைப்படும்
தண்ணீர் கிடைக்காததன் காரணமாக, சில நேரங்களில் மகசூல்
குறைந்து விடுவதை நாம் பார்த்திருக்கிறோம். கடைசி நேரத்தில்
தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில், சிறிய
பாசனத் திட்டங்களை இந்த அமைச்சரவை எடுத்துக்கொண்டு
நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக்
கொள்ளுகின்றேன்.

சென்ற முறை எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்த மாண்பு
மிகு அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இப்பொழுது நீர்ப்
பாசனத் துறை அமைச்சராகியிருப்பதை நான் மனதார
வரவேற்கிறேன். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில்,
அங்கிருக்கும் ராம நதித் திட்டம், கடானா நதித் திட்டம், களக்
காட்டில் இருக்கும் பச்சையாறு திட்டம் ஆகியவை சர்வே
நிலைமையில் இருந்துகொண்டிருக்கின்றன. சிறிய நீர்ப்பாசனத்
திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற ஆவன செய்யவேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்னொரு கருத்தையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.
இதற்கு முன்னால் இருந்த அமைச்சரவையானது நிலத்திற்கு
மேலே வருகிற தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதிலே
அதிக அக்கறை காட்டியிருக்கிறதே தவிர, பூமிக்கு அடியில்
இருக்கும் தண்ணீரை (சப்-சாயில் வாடர்ஸ்) வெளிக் கொணர்ந்து,
விவசாயத்திற்குப் பயன்படுத்துவதில் அதிக கவனம் செலுத்த
வில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகின்
றேன். இதைப் பொறுத்தவரையில், என்னுடைய ஒரு திட்டத்
தைத் தரலாம் என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு உணவு
உற்பத்தியைப் பெருக்கும் வகையில், இந்தத் திட்டத்தை நான்
அரசாங்கத்தினுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டுவர
விரும்புகிறேன். அரசாங்கத்திற்குச் சொந்தமாக ஏராளமான
புறம்போக்கு நிலங்கள் தரிசாக கிடக்கின்றன. ஓரிடத்தில் 100, 150
ஏக்கர் அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள்
எங்காவது இருக்குமானால், அந்த நிலங்கள் பூராவையும் செம்மைப்
படுத்தி, 10 ஏக்கருக்கு ஒரு கிணறு வீதம் அரசாங்கச் செலவிலேயே
பெரிய ஆழமான கிணறு தோண்ட வேண்டும். அந்தக் கிணறுகள்

அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கவேண்டும். ஆனால், அந்தக்
கிணறுகளிலிருந்து நீர் இறைத்துக்கொள்ளுகின்ற உரிமை, அந்தக்
கிணறுகளைச் சுற்றியுள்ள விவசாயிகளுக்கு இருக்கவேண்டும். இப்
பொழுது ஒரு கிணறு இருக்கிறது என்றால், அதைச் சுற்றி
யிருக்கும் பத்து ஏக்கர் நிலத்தை, நிலமல்லாத ஐந்து ஏழை
விவசாயிகளுக்குப் பகிர்ந்தளித்தால், அதன் மூலம் உணவு உற்பத்தி
பெருகும். இதனால், மூன்று வித நன்மைகள் இருக்கின்றன.
அரசாங்கத்திற்குச் செலவு அதிகமாக இருக்கலாம். ஆனால், நில
மில்லாத விவசாயிகள் அந்த இடத்திலே நிலத்தைப் பெறுகிறார்கள்,
உணவு உற்பத்தி பெருகுகிறது. பின்பு இருபது, இருபத்தைந்து
வருஷத் தவணை மூலமாக, அரசாங்கம் செலவழித்த தொகையை
அந்த விவசாயிகளிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். இதனால்
அரசாங்கத்திற்கு நஷ்டம் இல்லை; உணவு உற்பத்தியும் பெருகும்,
அதே நேரத்தில் நிலமில்லாத ஏழை விவசாயிகளும் நிலம்
பெறுவார்கள். இந்தத் திட்டத்திலே அமைச்சரவை அதிக
கவனம் செலுத்தவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்
கொள்ளுகின்றேன்.

கடன் வசதியைப்பற்றிக் கனம் உறுப்பினர் திரு. சுப்பையா
முதலியார் அவர்கள் அன்றையதினம் குறிப்பிட்டார்கள்.
இன்றைக்குக் கூட்டுறவுத் துறை ஊழலுக்கு உறைவிடமாக
இருக்கும் நிலைமையைப் பார்க்கிறோம். இன்றைக்கு விவசாயி
தனக்கு உரம் வேண்டும் என்று கேட்டு அலைந்தாலும், கடன் கேட்டு
அலைந்தாலும், பல காலத்திற்குப் பின்னால்தான் உரத்தையோ, கடன்
உதவியையோ பெற முடிகிறதே தவிர, கேட்டவுடனே அவற்றைப்
பெற முடியவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்
கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். ஜப்பானைப் பொறுத்த
வரையில், தாய்லாந்து நாட்டைப் பொறுத்தவரையில், அங்கே
ஒரு விவசாயி தனக்குக் கடன் வேண்டுமென்று அரசாங்கத்திற்கு
மனுச் செய்து, நான்கு மணி நேரத்தில் ரொக்கக் கடன் பெற
முடியும் என்று அயல் நாடுகளுக்குச் சென்று வந்தவர்கள் சொல்லு
கிறார்கள். நாம் அவ்வளவு வேகம் காட்ட முடியாமற்போனாலும்,
நான்கைந்து தினங்களுக்குள்ளாவது கடன் பெற வசதி செய்து
தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் ஒரே ஒரு கருத்தைமட்டும் வலியுறுத்தி உரையை
முடிக்கலாம் என்று நான் கருதுகிறேன். நில வரிப் பிரச்சினை
சம்பந்தமாக என்னுடைய கருத்தை நான் இந்த மன்றத்தின் முன்
னால் வைக்க விரும்புகிறேன். காங்கிரசு உறுப்பினர்கள் எல்லாரும்,
"நில வரியை இந்த அமைச்சரவை நீக்கும் என்று எதிர்பார்த்
தோம். கவர்னர் உரையில் அதைப்பற்றி ஒன்றும் இல்லை" என்று
ஏக்கத்தோடும் வருத்தத்தோடும் குறிப்பிட்டார்கள். அதற்குப்
பதில் சொல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம.
அரங்கண்ணல் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். "சென்ற
முறை காங்கிரஸ் அமைச்சரவை இருந்தபோது, இருக்கும் நில வரியே
காணாது என்று சொல்லி 25 சத வீதம் சர்சார்ஜ் ஏற்றினார்கள்.
இருக்கிற வரியே காணாது என்று 25 சத வீதம் சர்சார்ஜ் ஏற்றிய



வர்கள் இன்று நில வரி ரத்து செய்யப்படவில்லை என்று கேட்பது
விநோதமாக இருக்கிறது" என்று திரு. அரங்கண்ணல் அவர்கள்
குறிப்பிட்டார்கள். அது விநோதம் மட்டுமல்ல, வேடிக்கையாகவும்
இருக்கிறது என்று நான் சொல்லுவேன். ஆங்கிலத்தில் ஒரு பழ
மொழி உண்டு. "சாத்தான் கோட்ஸ் பைபிள்" என்று சொல்லுவார்
கள். அதாவது, "சாத்தான் வேதம் ஓதுகிறது" என்று சொல்லு
வார்கள். அதைப் போல், 25 சத வீதம் வரியை ஏற்றியவர்கள்
இன்றைக்கு நில வரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும் என்று
கேட்பது விந்தையாக இருக்கிறது என்று நான் இந்த நேரத்தில்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நில வரியைப் பொறுத்த
வரையில், ஒரு அடிப்படையான மாறுதல் தேவை என்பதை நான்
இந்த மன்றத்தில் வலியுறுத்த விரும்புகிறேன். இன்றைக்கு நில
வரி விதிப்பு நிலத்தினுடைய தரத்தைப் பொறுத்தும், நிலத்தி
னுடைய வளத்தைப் பொறுத்தும் விதிக்கப்படுகிறது. ஆனால்,
இந்த முறையை மாற்றியமைக்கவேண்டும் என்று நான் மிக மிகப்
பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் நிலத்திற்கு
வரி விதிப்பதைவிட, நிலத்திலிருந்து வருகின்ற விளை பொருள்
களுக்கு வரி விதிப்பது நியாயமான முறையில் விதிக்கப்படுகிற வரி
யாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். உதாரணத்திற்கு எடுத்
துக்கொள்ளுவோம். ஓரிடத்தில் 15 ஏக்கர் நிலம் இருக்கிறது
என்றால், ஒரே தரமான ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு விவசாயி நெல்
பயிரிடலாம்; இன்னொரு விவசாயி அதே ஒரு ஏக்கரில் வாழை
பயிரிடலாம்; இன்னொரு விவசாயி கரும்பு பயிரிடலாம்; இன்னொரு
வர் பருத்தி விளைவிக்கலாம்; இன்னொருவர் மிளகாய்
வைக்கலாம். நெல் பயிரிடுகிற விவசாயிக்கு மிகக் குறைந்த
வருமானம் கிடைக்கிறது. நண்பர் திரு. கருத்திருமன் அவர்கள்
குறிப்பிட்டதுபோல, நெல் பயிரிடும்போது, உற்பத்திச் செலவு மிக
அதிகமாக இருக்கிறது. நெல் பயிரிட்டால் விவசாய உற்பத்திச்
செலவு அதிகம் ஆகிறது. ஆனால், அவனுக்குக் கிடைக்கும்
வருமானமோ மிக மிகக் குறைவாக இருக்கிறது. அது மட்டுமல்ல,
வருமானம் குறைவு. அவன் இந்த அரசாங்கத்தினுடைய கொள்
முதல் கெடுபிடிகளுக்கு ஆளாக வேண்டிய நிலைமையிலும் இருக்
கிறான். ஆகவே, மிகுந்த கஷ்டங்களைப் பட்டுக்கொண்டு ஏழை
விவசாயி நெல் பயிரிடுகிறான். வாழை பயிரிடுகிற விவசாயிக்குக்
கொள்முதல் கெடுபிடி இல்லை, அதிக லாபம் கிடைக்கிறது. அதே
போல், வியாபாரப் பொருள்கள் (கமர்ஷியல் க்ராப்ஸ்) என்று
சொல்லப்படுகிற கரும்பு, புகையிலை, மிளகாய் போன்ற
வற்றைப் பயிரிடுகிறவர்களுக்குக் கொள்முதல் கெடுபிடி இல்லை,
அதிகபடியான லாபமும் கிடைக்கிறது. இன்றைக்கு இன்னொன்றை
இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நில உச்ச
வரம்புச் சட்டம் வந்தபோது அதில் இருந்து கரும்பு விளைகிற
நிலங்களுக்கு ஒரு விலக்குக் கொடுத்தார்கள். அப்படிப் பார்க்கிற
போது தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற பணக்கார விவசாயிகள்
கரும்பாலைகளை ஏற்படுத்தி அந்த ஆலையின் முதலீடாக பாக்டரி
இன்வெஸ்ட்மெண்டாக 15 ஆயிரம், 20 ஆயிரம் என்று நிலத்தை
ஒதுக்கி வைத்து விட்டார்கள். அதன் காரணமாக சட்டத்தின்

பிடியிலிருந்து தப்பிவிட்டார்கள். இப்படி உள்ளவர்களுக்கும், ஒரு
வரி விகிதம், நெல் பயிரிட்டு அதனால் இரண்டு வகை நிர்ப்பந்தத்
திற்கு உள்ளாகிற நிலக்காரர்களுக்கும் ஒரு வரிவிகிதம் என்பது
நியாயமான வரிவிதிப்பு முறையாகாது. ஆகவே, நிலத்தின்
தரத்தைப் பார்த்து வரி விதிப்பதை மாற்றி விளைபொருளுக்கு வரி
விதிக்கக்கூடிய ஒரு முறையைக் கொண்டுவந்தாக வேண்டுமென
இந்த அமைச்சரவையைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறியாளர்களைப்பற்றி ஒரே ஒரு விஷயம். கைத்
தறிக்காரர்கள் அதிகமாகக் கஷ்டப்படுவதாகக் காங்கிரஸ் மெம்பர்
கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு
விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். சுதந்திரா கட்சித்
தலைவர் திரு. ராஜாஜி அவர்கள் கரை போட்ட வேஷ்டியை கைத்
தறிக்கு ஒதுக்கிவிட்டால் கைத்தறியாளர்களுடைய பிரச்சினையை
நல்ல முறையில் தீர்க்க முடியும் என்று முன்பு சொன்னார்கள்.
அதையே நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் திரு. அண்ணா அவர்
களும் ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். ஆகவே, கைத்தறியாளர்
களுடைய பிரச்சினையைத் தீர்க்க கரைபோட்ட வேஷ்டியை கைத்
தறிக்கே ஒதுக்க சட்டபூர்வமான முறையிலாவது வழிவகை செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தைத் தந்த
தலைவருக்கு நன்றி செலுத்தி, நெல்லை நகரசபை, அருப்புக்
கோட்டை நகரசபை ஆகிய இரண்டையும் மீண்டும் துவக்கி வைக்க
வழிவகை செய்திருப்பதற்கு அமைச்சரவைக்கு நன்றி தெரிவித்து
என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* திரு. சௌந்திரராஜ மூப்பனார் : அவைத் தலைவர் அவர்களே,
கவர்னர் பெருமான் உரையைப் பார்க்கும்போது, மக்களுக்கும்,
எதிர்க்கட்சியில் இருக்கிற எங்களுக்கும் ஏமாற்றம் ஏற்பட்டதிலே
ஆச்சரியம் இல்லை. காரணம், கவர்னர் பெருமான் உரையானது,
வருகின்ற ஆண்டுக்கான செயல்முறைத் திட்டத்தையும் செயல்
படுத்துகின்ற முறையையும் விளக்குகின்ற உரையாக இருக்கின்றது.
அந்த உரையில், ஆளும் கட்சியில் இருக்கின்றவர்கள் கூறிய
விரிவான சோஷலிசத்தைப் பார்க்க முடியவில்லை. ஆகவே,
அதைக் கண்டு ஏமாற்றம் அடையாமல் இருக்க முடியாது.

அடுத்தபடியாக, இந்தத் தேர்தல் நல்ல முறையிலே நடை
பெற்றது என்று கவர்னர், தம் உரையிலே கூறியிருப்பதை ஆதரிக்
கிறேன். அதே நேரத்தில், மற்றவர்கள் பேசுகின்ற நேரத்திலே
அதிகாரிகள் எல்லாம் தேர்தலின்போது, அத்துமீறி நடந்து
கொண்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதிகாரிகள் தங்க
ளுடைய கடமையை ஆற்றினார்கள் என்று கூறுவதைத் தவறாக
அத்துமீறி நடந்துகொண்டார்கள் என்று கூறுவது அவர்களுடைய
மதிப்புக்கும் கண்ணியத்திற்கும் நேர்மைக்கும் இழுக்குத் தேடுவ
தாக இருக்கிறது. அடுத்தாற்போல, பேசும்போது காங்கிரஸ்
ஆட்சியிலே குடியே மூழ்கிவிட்டதுபோலவும், இந்தக் குடி முழுக
200 ஆண்டுகள் தேவைப்பட்டது என்றும் இன்னும் 200 ஆண்டுகள்
செப்பனிட்டால்தான் நல்ல முறையிலே அதற்கு நிவர்த்தி செய்ய





முடியும் என்பதுபோலவும் உறுப்பினர்கள் பேசினார்கள். ஆனால்
மக்கள் எல்லாரும் இந்த ஐந்து ஆண்டுகளுக்குள்ளேயே காங்கிரஸ்
ஆட்சியில் செய்த தவறுகளை நீக்கி, விஞ்ஞான சோஷலிசம்
என்பதை ஏற்படுத்தி விடுவார்கள் என்று நம்பிக்கொண்டுதான்
உங்களை இன்று ஆட்சிப் பொறுப்பிலே அமர்த்தியிருக்கிறார்கள்.
அந்த மாதிரியான விஞ்ஞான சோஷலிசம் என்ற நல்ல திட்டம்
உருவாகும் நேரத்திலும், நாட்டு மக்களுக்கு நன்மை தரக்கூடிய
எந்தத் திட்டத்திலும் காங்கிரஸ் கட்சியிலே இருக்கிற நாங்கள்
எங்களுடைய முழு ஒத்துழைப்பைக் கொடுப்பதற்குத் தயங்க
மாட்டோம் என்று கூறுகின்ற நேரத்திலே, நீங்கள் கூறுகின்ற
அனைத்தையும் ஒத்துக்கொள்ளமாட்டோம் என்று கூறிக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில்
விவசாயிகளுக்கு நல்ல முறையிலே இன்று கடன் வசதி திட்டத்தில்
இருந்தாலும், அது நல்ல முறையிலே பயன்படுத்தப்படவில்லை
யென்று கூறினார்கள். கூட்டுறவு முறையோடு 'ஷெட்யூல்டு பாங்கி'
மூலமாகவும், அவர்களுக்குக் கடன் வசதி செய்தால் மிக நலமாக
இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல, 'மத்திய அரசை நன்றாகப் பலப்படுத்த
வேண்டுமென்பதாக' ஆந்திர முதலமைச்சர் கூறியதாக நண்பர்
ஒருவர் கூறினார். ஆந்திர முதலமைச்சர் கூறியதை நான் நன்றாக
ஆதரித்து வரவேற்கிறேன். காரணம், மத்திய அரசாங்கம் பலம்
வாய்ந்ததாக இருக்க வேண்டுமென்பதை யாரும் மறுக்க முடியாது.
ஆனால் அவர் மத்திய அரசாங்கம் காங்கிரஸ் அரசாங்கமாக இருக்க
வேண்டுமென்று கூறியிருந்தால், அதை நாம் கண்டிக்க வேண்டும்.
மத்திய அரசு பலம் பொருந்தியதாக இருக்க வேண்டுமென்பதை
நாம் எல்லோரும் ஒத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் கவர்னர்
பெருமான் உரையிலும், அதை ஆதரித்துப் பேசுகின்றவர்களின்
உரையிலும், 'மத்திய அரசு மாநில அரசாங்கத்தின் முன்னேற்றத்
திற்கெல்லாம் தடையாக, முட்டுக்கட்டையாக இருக்கிறது, மாநில
அரசாங்கத்தின் முன்னேற்றத்திலே தலையிடுகிறது. ஆகவே,
கூடுதல் அதிகாரங்கள் மாநில அரசாங்கத்திற்கு வேண்டும்
என்பதாகக் கூறப்பட்டது. மாநில அரசாங்கத்திற்கு என்னென்ன
சலுகைகள், என்னென்ன முறையில் பெற வேண்டுமோ, அதை
மத்திய அரசிடம் கேட்டுப் பெற நமக்கு உரிமை உண்டு. அதைக்
கேட்பதில் தவறு இல்லை. ஆனால், நாம் நம் சக்திக்கு மீறிய
திட்டங்களையெல்லாம் போட்டு அல்லது நாம் தேர்தல் நேரத்தில்
மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்ற
வேண்டுமென்று ஓர் எண்ணத்தின் அடிப்படையில் திட்டங்களை
யெல்லாம் போட்டு—மத்திய அரசாங்கம் காங்கிரஸ் அரசாங்கமாக
இருக்கிறது. அதனால் வேற்றுமை காட்டுகிறது—என்ற
எண்ணத்தை மக்களிடத்தில் ஏற்படச் செய்தால், இன்று
ஆளும் கட்சியைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச்
சேர்ந்தவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினையை விட்டுவிட்டோம்

என்று சொல்லிக்கொண்டு அரசியல் சட்டத்திற்குட்பட்டு, தேசிய ஒருமைபாட்டைக் காத்துப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டவர்கள் தங்கள் வாக்கை மறந்துவிட்டார்களோ என்று நாம் கருதக் கூடிய அளவில்தான் போய்விடும். தமிழகம் தனித்து இயங்கினால் தான் நல்ல முன்னேற்றம் அடைய முடியும் என்ற கருத்தை மக்களிடத்தில் வளர விடக் கூடாது என்று கேட்டுக்கொண்டு நான் விடைபெறுகிறேன். வணக்கம்.

*** புலவர் பொ. பொன்னம்பலம் :** மதிப்பிற்குரிய தமிழகச் சட்டமன்ற அவைத் தலைவர் அவர்களே, முதலாவதாக, ஆளுநர் அவர்கள் உரையின் மீது பேசுவதற்கு எனக்கு அனுமதி அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, ஒரு சிலவற்றை இங்கே கூறி அமைய விரும்புகிறேன். பொதுவாக இப்போது இருக்கக்கூடிய அமைச்சரவையின் சூழ்நிலையைப் பார்க்கிறபோது, இந்த அமைச்சரவை தமிழக ஆட்சி மன்றத்திற்குப் பொருத்தமான அமைச்சரவையாக அமைந்துள்ளது, அறநெறிகளையும் வாழ்க்கை முறைகளையும் அரசியல் வழிகளையும் இலக்கியமாகப் படைத்துப் போற்றித் தமிழகத்தில் இலக்கிய நெறியோடு அரசியல் நெறியை வளர்த்துத் தந்துள்ள அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் இந்த அமைச்சரவை அமைந்துள்ளது மிகப் பொருத்தமானதாகும். ஆனால், எதிர்க் கட்சியில் வீற்றிருக்கக் கூடிய மதிப்பிற்குரிய நண்பர்கள் அத்தனை பேரும் பேசுகின்ற காலத்தில் எல்லாம் என்ன சொல்கிறார்கள் என்றால், "நீங்கள் மக்களுக்கு இன்ன இன்ன வாக்குறுதிகளைத் தந்தீர்களே, எங்கே உங்கள் வாக்குறுதிகள்? நாங்கள் ஏமாந்து விட்டோம்" என்றே பேசுகின்றார்கள். வெள்ளையர் கையில் இருந்து நாட்டைப் பிடுங்கி, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கையில் கொடுத்துவிட்டோமே என்பதுபோலக் கருதிக்கொண்டு பேசுகின்றார்கள். கிட்டத்தட்ட இருபது ஆண்டுகாலம் நாட்டை ஆண்ட காங்கிரஸ் கட்சிக்காரர்கள்—இருபது நாட்கள் கூட ஆட்சிக்கு வந்து ஒழுங்காக முடியவில்லை என்று சொல்லலாம்—இருபது நாட்கள்கூட ஆகாத இந்த நேரத்தில் "கொடுத்த உறுதிமொழிகள் எங்கே போயின? ரூபாய்க்கு 3 படி அரிசி தருவதாகச் சொன்னீர்களே, ரூபாய்க்கு 3 படி அரிசி எங்கே?" என்று கேட்கத் தலைப்படுகிறார்கள் என்றால் இதை நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்களே சிந்தித்துப் பார்ப்பார்களானால் இந்தக் கேள்வி கேட்க வாய் இராது; அமைச்சரவை பொறுப்பேற்றுக்கொண்டு இருபது நாட்களுக்குள்ளே சமையல் கட்டிற்குள் நுழைந்து எங்கே இலை, எங்கே சாப்பாடு, நாங்கள் உண்பதற்குக் காத்துக்கொண்டிருக்கிறோம் என்று பேசுவதை விட்டு நல்ல திட்டங்களைச் சமர்ப்பித்திருப்பார்கள். கடந்த 20 ஆண்டுக் காலத்தில் எந்தெந்த அளவுக்கு சீரழிவை உண்டாக்க முடியுமோ அந்த அந்த அளவுக்கு உண்டாக்கியிருக்கிறார்கள். அவற்றை ஆட்சிக்கு வந்த மறுகணமே மாற்றிவிட முடியுமா? "எங்கே உங்கள் வாக்குறுதி, நாங்கள் ஏமாந்துவிட்டோம்" என்றால் உண்மையிலேயே மக்கள் ஏமாறவில்லை. சொன்ன வாக்குறுதிகளை நாங்கள் நிறைவேற்றியே தீருவோம் என்ற நம்பிக்கை மக்களுக்கு எங்களிடத்தில் இருக்கிறது. ஆனால் மக்களிடத்தில் ஏமாந்துபோய் இருக்கிற நீங்கள்





இன்றைக்கு எங்களிடம் மக்கள் ஏமாந்திருப்பதாகச் சொல்கிறீர்கள். இப்படிச் சொல்வதைவிட்டு உணவுப் பிரச்சினையைத் தீர்க்க உருப்படியான ஏதாவது யோசனையைச் சொன்னீர்களா? உணவுச் சிக்கலைத் தீர்க்க ஏதாவது யோசனை சொன்னீர்களா? இல்லை, பொதுவாக அவர்கள் சுட்ட சூடு இன்னும் மாறவில்லை, அடித்த அடித் தழும்பு மாறவில்லை, விளைத்த கொடுமைகளின் வேகம் மாறவில்லை. அதற்குத் தக்க அறிவுரை தருவதற்கு மாறாக இந்த அமைச்சரவையை எளனப்படுத்துகின்ற போக்கைப் பார்க்கிறோமே தவிர, நாட்டுச் சிக்கலை நீக்குவதற்கான பிரச்சினையில் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. நான் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன், நாட்டு மக்களின் வாழ்க்கைச் சிக்கலை எண்ணிப் பாருங்கள்; அந்தச் சிக்கலை தீர்ப்பதற்கு என்ன வழி என்று கூறுங்கள்.

மதிப்பிற்குரிய ஆளுநர் உரையில் வேளாண்மையைப் பற்றிச் சொல்லப்படுகிறது. விவசாயத்தை முன்னேற்ற வேண்டும், அப்போதுதான் உணவுச் சிக்கலைத் தீர்க்க முடியும் என்ற கருத்தினைக் காண்கிறோம்.

"சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம்"

என்பதாக ஏருக்கு பின்னால் இந்த உலகம் இயங்குகிறது என்ற கருத்தினில் வேளாண்மைத் துறையை முன்னே வைத்து விவசாயத்துறையை முன்னேறச் செய்ய வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறது இவ்வரசு. இதை அறியாது காங்கிரஸ் கட்சியைப் போல கள்ளத் தன்மைக்குப் பின்னால் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று எண்ணி அவர்களுக்குத் துணைபோகவில்லை. பதுக்கலுக்குப் பின்னால், கள்ளச் சந்தைக்குப் பின்னால் என்ன இருக்கிறது என்பதை ஆராய்ந்து பதுக்கலை ஒழிக்க, கள்ளச் சந்தையினை ஒழிக்க, திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை முற்படுகிற நேரத்தில் பற்பல குறைகளை காங்கிரஸ்காரர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவை குறைகளா? இன்ன இன்ன இடங்களில் பதுக்கல் இருக்கிறது, அந்தப் பதுக்கல் பொருள்களை அப்புறப்படுத்துங்கள் என்று சொன்னால் பாராட்டலாம், செயல்படலாம். அத்தகைய நல்ல காரியங்களை எடுத்துச் சொல்லவில்லை. இருபது ஆண்டுக்காலம் தொடர்ந்து தங்கிய இந்த வீட்டை எப்படி வைத்திருக்கிறார்கள்? வீடு பழையதுதான். ஆனால் ஒரு பக்கத்திலே பெருச்சாளி வளைகள். ஒரு பக்கத்திலே பாம்புப் புற்றுக்கள். அருகில் போவதற்குள் பாம்புகள் படம் எடுத்து ஆடுகின்றன. இந்த நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கிறது. பழைய வீட்டில் உள்ள உறுதியான பொருள்களை எடுத்து வீட்டை புதிதாக எழுப்ப வேண்டிய நிலைமையில் அது இருக்கிறது. இந்த நிலையில் ஆண்டு நல்ல அனுபவம் பெற்றவர்கள் இன்றைக்கு எதிர்க்கட்சியில் இருக்கிறபோது நல்ல உருப்படியான யோசனைகளைக் கூற வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

]புலவர் பொ. பொன்னம்பலம்[ [1967 மார்ச் 27

அடுத்து பொதுவாக சில துறைகளை வைத்துப் பார்க்கிறபோது வேளாண்மைத் துறையை ஒட்டி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பகுதியில் ஆறுகள் இல்லை. தமிழகப் பகுதியை எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட 9 லட்சம் கிணறுகள் இருக்கின்றன. பெரும்பாலும் கிணறுகளையே நம்பி வாழக்கூடிய பகுதி அது. கிட்டத்தட்ட 9 லட்சம் கிணறுகளில் 7 லட்சம் கிணறுகள் நல்ல தண்ணீர் கொடுக்கக் கூடியவையாக இருக்கின்றன. அந்த 7 லட்சம் கிணறுகளுக்கும் நீர் இறைக்கும் கருவிகளைக் கையாளுகின்ற அளவில் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருவது நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். உணவு உற்பத்தியை அதிகப்படுத்த, அத்தனை கிணறுகளுக்கும் தேவைப்படுகிற நீர் இறைக்கும் கருவிகளைத் தயாரிக்கவும் இந்த அமைச்சரவை முன்வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதைச் செய்து விட்டாலே நாம் விவசாயத்திற்கு அந்தப் பகுதியில் மிகவும் உதவியவர்களாவோம். அதோடு இன்றைக்கு நாம் கொடுக்கிற 500 ரூபாயையும் மானியமாகக் கொடுப்பதற்கும் இந்த அமைச்சரவை முற்படவேண்டும். ஆக, ஆண்டு ஒன்றுக்கு 50 ஆயிரம் நீர் இறைக்கும் கருவிகளை நாம் அமைத்துக்கொடுக்க ஆரம்பித்தாலேயே ஐந்து ஆண்டுகளில் நாம் இந்த நாட்டில் நல்ல விளைச்சலை உண்டாக்கி விட முடியும் என்று எண்ணுகிறேன். அதனை இந்த அமைச்சரவை கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மராமத்துத் துறையை எடுத்துக் கொண்டால் எங்கள் தொகுதியில் ஏம்பல்நாடு, இரும்பாநாடு, காரையூர் ஆகிய பகுதிகளுக்கு போய்வரவே சரியான பாதையில்லை. காடுமேடுகளாய் அமைந்திருக்கின்றன. சாலைகள் அமைப்பதாகச் சொல்லி, ஒரு சிலர் மட்டும் பயன் அடைந்திருக்கிறார்களே தவிர, மக்களுக்குப் பயன் ஏற்படத்தக்க வகையில் சாலைகள் அமையவில்லை. அந்தச் சாலையை நல்ல முறையில் மராமத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதையும் செய்துதரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பிற் பகல் 1-30 அடுத்து, இன்றையதினம் கல்வித்துறையில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு இந்தச் சமுதாயத்தில், மன்பதையில் நல்ல மதிப்பு இல்லை. ஆசிரியர்களுடைய ஊதியத்தைப்பற்றிச் சொன்னார்கள். ஊதியம் கொடுப்பது மட்டும் பயன் இல்லை. அவர்களுக்குரிய மதிப்பைக் கொடுக்கவேண்டும். அவர்களுடைய நிலையை உயர்த்த வேண்டும். ஊதியத்தால் மட்டுமின்றி அவர்களுடைய மதிப்பையும் உயர்த்த இந்த அமைச்சரவை முன்வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதுபோல தமிழாசிரியர்களைப் பற்றிய அரசாங்க ஆணைகள் (ஜி.ஓ.) என்ன என்பது தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவதில்லை. மேலே இருக்கக்கூடிய கல்வி அதிகாரிகளுக்கும் தெரிவதில்லை. நல்ல தமிழ் படித்திருக்கிறார்கள், நல்ல பட்டத்தைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் வேலைத் தேடிச் செல்கிறபோது இந்த அரசாங்க ஆணைகள்பற்றி ஒன்றுமே தெரியாத காரணத்தினால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இன்னொன்றையும் சொல்லிக்



1967 மார்ச் 27] ]புலவர் பொ. பொன்னம்பலம்[

கொள்வேன். தனித் தமிழிலே நல்லமுறையில் நான்கு ஆண்டுகள் படித்து வித்துவான், புலவர் பட்டம் பெற்று வருகிறவர்கள் இருக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி-க்கு மேல் தமிழ் எடுத்து பி.ஏ. படித்து வருகிறவர்கள் இருக்கிறார்கள். மன்பதை நிலையில் பார்த்தால் புலவர் பட்டம் பெற்றவர்கள், வித்துவான் பட்டம் பெற்றவர்கள் ஆசிரியர்களாகத்தான் போகவேண்டுமென்ற நிலை இருக்கிறது. கல்லூரிகளுக்குப் போகக்கூடிய சூழ்நிலை இல்லை . . .

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாளைக் காலை தொடர்ந்து அவருடைய உரையை நிகழ்த்தலாம். இத்துடன் இன்றையக் கூட்டம் முடிவடைகிறது. 28—3—1967 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இந்தப் பேரவை மறுபடியும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது. பிற் பகல் 1-3[illegible]

8. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

* 113. *Notification issued with G.O. Ms. No. 3592, Revenue, dated the 31st December 1966, appointing the first day of February 1967, as the date on which certain provisions of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963) shall come into force in the inam estate of Nazarethpettai in Sriperumbudur taluk of Chingleput district. [Laid on the Table of the House under section 73 (5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).]*

* 114. *Notification issued with G.O. Ms. No. 57, L.A., dated the 9th January 1967, appointing the Personal Assistant (Panchayat Development) to the Collector of Ramanathapuram and Collector of Tirunelveli as Special Officers for the disposal of taxation appeals in the Aruppukottai and Tirunelveli Municipal Councils respectively till the Municipal Councils are reconstituted. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]*

* 115. *Notification issued with G.O. Ms. No. 190, Rural Development and Local Administration, dated the 30th January 1967, directing the postponement of the general rivision of assessment books in respect of the Municipalities specified in the schedule which is to take effect on the 1st April 1967 for one half-year so as to take effect from the half-year commencing on and from 1st October 1967. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]*

* Placed on the Table of the House on 25th March 1967.

* 116. *Notification issued with G.O. Ms. No. 40, Rural Development and Local Administration, dated the 6th January 1967, appointing Special Officers for the disposal of taxation appeals to the newly constituted Nellikuppam, Panruti, Kadayanallur and Manapparai Municipalities till the Municipal Councils concerned are constituted by election of Councillors thereto.* [*Laid on the Table of the House under section* 304 (d) *of the Madras District Municipalities Act*, 1920 (*Madras Act V of* 1920).]

* 117. *Notification issued with G.O.P. No.* 3561. *Revenue, dated the* 29th *December* 1966, *making the Madras Land Reforms (Compensation for Surplus Land) Rules*, 1966. [*Laid on the Table of the House under section* 112(2) *of the Land Reforms (Fixation of Ceiling on Land) Act*, 1961 (*Madras Act* 58 *of* 1961).]

### B. Reports, Notifications and other papers.

† 19. *The Madras Appropriation (Vote on Account) Bill*, 1967. (*L.A. Bill No.* 1 *of* 1967).]

‡ 20. *The Madras District Municipalities (Amendment) Bill* 1967 (*L.A. Bill No.* 2 *of* 1967) *with Annexure.*

---

* Placed on the Table of the House on 25th March 1967.

† Despatched to Members on 23rd March 1967.

‡ Despatched to Members on 24th March 1967.

# தமிழக சட்டப் பேரவை

*செவ்வாய்க்கிழமை, 1967 மார்ச் 28.*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள், விடைகள்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இன்றைய அலுவல்களின் தொடக்கத்திலே "வினாக்கள், விடைகள்". நல்ல வேளையாக இன்றைக்கு ஒரு குறுகிய காலக் கேள்வியும், ஒரு சாதாரணக் கேள்வியும் இருக்கின்றன. முதலிலே குறுகிய காலக் கேள்வி.

*Fishermen off the coast*

* *S.N. Q.*—No. 1 Thiru M. C. Balan : Will the Hon. the Minister for Agriculture, be pleased to state :

(a) Whether any complaint was received that a catamaran with four fishermen went off the coast at Colachal and did not return back; and

(b) if so, the action the Government have taken in the matter and for alleviating the grievances of the fishermen in that area?

**மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) ஆம்.

(இ) மீன்துறை நெறியாளர், சென்னை வாணிகக் கப்பல் துறை முதல்வர் அவர்களை குளச்சல் கடற்கரை வழிச் செல்லும் எல்லாக் கப்பல்களையும் காணாமற்போன மீனவர்களைக் கண்டு பிடிப்பதற்கு விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக் கொண்டார். பின்னர் நான்கு மீனவர்களும் கடற்கரைக்குச் சௌகரியமாக வந்து சேர்ந்தனர்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** சட்ட மன்றத் தலைவரவர்களே, மீனவர்கள் பொதுவாக ஆபத்தான தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கின்ற முறையிலே இன்ஷ்யூரன்ஸ் திட்டம் ஒன்றை வகுக்க இந்த சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

**மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி :** அவையின் முன்னால் இப்பொழுதுள்ள கேள்வி மூலக் கேள்விக்குச் சம்பந்தப்பட்ட கேள்வியில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவரவர்களே, மீனவர்கள் குளச்சல் கடற்கரையிலிருந்து கட்டுமரத்தில் ஏறிச்சென்றார்கள் என்றுதான் குறிப்பிட்டு இருக்கிறது. கட்டுமரத்தில் அவர்கள் எதற்காகச்

சென்றார்கள்? எந்தத் தேதியில் சென்றார்கள்? அவர்களுக்கு ஏதாவது சேதம் ஏற்பட்டிருக்கிறதா? அப்படியானால் அதனுடைய விவரம் என்ன?

**மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி**: மார்ச் மாதம் 15-ஆம் தேதி மீன்பிடிப்பதற்காக நான்கு மீனவர்கள் கட்டுமரத்தில் ஏறிச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் பாதுகாப்பாக கடற்கரைக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள், எந்தவிதமான சேதமும் ஏற்படவில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே**: சபாநாயகர் அவர்களே, இம்மாதிரி மீனவர்கள் அடிக்கடி ஆபத்திலே சிக்கிக்கொள்ளாமல் இருப்பதற்கு இனிமேலாவது நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக் கொள்ளுமா?

**மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி**: கடலிலே செல்கின்ற நேரத்திலே எந்த நேரத்திலும் ஆபத்து வரலாம். அதற்காக அரசாங்கம் தனித் திட்டம் மேற்கொள்ள இயலாது.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்**: சார், அடிக்கடி மீனவர்களுக்கு இது போன்ற கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அதனால் அவர்களுடைய குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, ஒரு கணிசமான அளவுக்கு, அவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டால், அவர்கள் குடும்பங்கள் பிழைக்கக்கூடிய வகையிலே அரசாங்கம் ஏதாவது உதவி செய்ய உத்தேசம் உண்டா?

**மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி**: பாதிக்கப்பட்ட மீனவர்கள் குடும்பங்களைப் பற்றி அரசாங்கம் அவ்வப்பொழுது கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

**திரு. கே. விநாயகம்**: இந்தக் குறிப்பிட்ட சம்பவம் நேர்ந்த நாளன்று மீட்டிரியலாஜிகல் டிபார்ட்மெண்டார் இதுபோன்று ஆபத்து ஏற்படக்கூடும் என்று எச்சரிக்கை செய்து அறிக்கை அல்லது விளம்பரம் செய்தார்களா?

**மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி**: அப்படியொன்றும் ஆபத்து இல்லாத காரணத்தாலே விளம்பரம் செய்யப்படவில்லை.

**திரு. கே. பி. எஸ். மணி**: சார், இந்த மீனவர்களுக்கு இம்மாதிரி ஆபத்துக்கள் புயல் காற்றினாலே ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. பன்னெடுங்காலமாக இருந்துவருகிற ஆபத்துக்களைத் தீர்க்க முன்னாலே இருந்த சர்க்கார் ஏதாவது செய்திருக்கிறதா?

**மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி**: ஏற்கனவே இருந்த சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதற்குத் தகவல் இல்லை. இப்பொழுது கேள்வி சம்பந்தப்பட்ட வரையிலே புயல் ஏற்பட்ட நிலைமை இல்லை. தற்செயலாகச் சென்றவர்கள்தான் காணாமற் போனார்கள்.



**திரு. எஸ். ஆறுமுகம்**: இதுபோன்று அடிக்கடி மீனவர்களுக்கு ஆபத்துகள் ஏற்படுவதைத் தடுக்க மீனவர்கள் வாழுகின்ற பகுதியில் உஷார் காவல் பகுதிகள் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

**மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி**: அத்தகைய உத்தேசம் தற்போது இல்லை.

**திரு. கரு. சீமைச்சாமி**: புயல் வரும், மழை வரும் என்ற விவரத்தை வானிலை ஆராய்ச்சி நிலையம் முதலிலேயே தெரிந்து கொள்கிறது. கடற்கரையிலே மீன்பிடிக்கச் சென்றால் ஆபத்து வரும், செல்லக்கூடாது என்று எச்சரிக்கை செய்யப்படுகிறதா? இல்லையென்றால் இனிமேலாவது செய்வார்களா?

**மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி**: இந்தச் சம்பவத்தில் புயல் ஏற்படவில்லை. புயல் ஏற்பட்டால் அப்படித் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள்**: பாதிக்கப்பட்ட மீனவர்கள் குடும்பங்களுக்கு உதவிநிதி வழங்கப்பட்டதா? இல்லையேல் வழங்கப்படுமா?

**மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி**: தனிக்கேள்வி வேண்டும்.

**திரு. ந. வீராசாமி**: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, மீனவர்களுக்காக ஒதுக்கப்படுகின்ற 'போட்'கள் கேரளாவுக்குத் தனிப்பட்ட முறையிலே விற்கப்படுவதாகத் தெரிகிறது. இதைப்பற்றிய தகவல்கள் அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி**: அவையின்முன் உள்ள கேள்விக்கும், மதிப்பிற்குரிய உறுப்பினர் கேட்கின்ற கேள்விக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

**திரு. எம். எஸ். மணி**: மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் மீனவர்களின் பாதுகாப்பிற்காகத் தனித் திட்டம் தயாரிக்கப் போவதாகச் சொன்னார்கள். அப்படியொரு திட்டத்திலே மீனவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கும் விஷயத்தையும் சேர்ப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி**: மீனவர்கள் நலம் என்ற தலைப்பில் தெரிவிக்கப்பட்ட எல்லாவிதக் கருத்துக்களும் பரிசீலனை செய்து முடிவெடுக்கப்படும்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி**: மீனவர்கள் கடலுக்குச் சென்று அவர்கள் உரிய நேரத்திலே திரும்பவில்லையென்று தெரிந்தவுடன் புகார் செய்தால் புகார் எங்கே செய்வது, எந்த இடத்திலே புகார் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மீனவர்களுக்கு அறிவித்து இருக்கிறார்களா?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி: அப்படிப்பட்ட தகவல்களை அடுத்து இருக்கின்ற துறைமுகங்களின் அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் ஃபிஷரீஸ் அவர்களிடம் தெரிவிக்கவேண்டும். அங்கேயிருந்து ஒன்றும் வரவில்லையென்றால் டைரக்டர் ஆப் ஃபிஷரீஸ் அவர்களிடம் தெரிவிக்கவேண்டும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: அப்படிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்ஷ்யூரன்ஸ் திட்டம் ஏற்படுத்த உத்தேசம் உள்ளதா? இல்லையென்றால், அப்படிப்பட்ட திட்டத்தை அமல்படுத்த ஏற்பாடு செய்வார்களா?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி: நான் ஏற்கனவே அறிவித்த பிரகாரம் மீனவர்கள் நலம் கருதி அவர்கள் சொல்லுகின்ற கருத்துக்களை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. எம். சுரேந்திரன்: மீன் பிடிக்கும் வேலை மிகவும் ஆபத்தான வேலையாக இருக்கிறது. ஆகவே, அவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும்பொழுது எவ்வளவு பேர்கள் போனார்கள், எவ்வளவு பேர்கள் வந்து சேர்ந்தார்கள் என்பதைப் பார்க்கக் கூடிய அளவிலே கணக்கு வைத்துக்கொள்ளப்படுகிறதா?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி: மீன்பிடிக்கச் செல்லுகின்றவர்கள் கணக்கு அறிவித்தால் அவர்கள் மீனை பிடிக்க முடியாது.

திரு. ஆர். நாகசுந்தரம்: ஐயா, மீனவர்கள் தொழில் எப்பொழுதும் ஆபத்தாக உள்ளது. அரசாங்கம் அவர்களுக்கெல்லாம் வேறு ஏதாவது தொழில் கொடுத்தால் என்ன?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி: மீனவர்களை வேறு தொழிலில் ஈடுபடுத்தவேண்டுமென்று யோசனை சொன்னார்கள், அப்படியானால் உணவுப் பிரச்னையைத் தீர்க்கமுடியாது.

திரு. கே. பி. எஸ். மணி: அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்பொழுது நல்ல ஒரு திட்டத்தை அரசாங்கம் வகுத்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி வகுக்கும்பொழுது அந்நிய நாடுகளைப்போல மீனவர்களுக்கு இன்ஷ்யூரன்ஸ் திட்டம் பாதுகாப்புத் திட்டம், முன் எச்சரிக்கை திட்டம் போன்ற திட்டங்களையும் ஆலோசனை செய்வார்களா?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி: எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளலாம்.

### பள்ளிகளில் இந்தி பாடம்

*1 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிக்கூடங்களில் ஹிந்தி கற்பது கட்டாயமாக அமுல் செய்யப்படுமா?



(இ) இது குறித்து சர்க்காரின் தற்போதைய கொள்கை என்ன?

மதிப்பிற்குரிய திரு. இரா நெடுஞ்செழியன்: (அ) & (இ) இல்லை. இந்தி 9 முதல் 11-வது வகுப்புகளில் கற்றுக்கொடுக்கப்படுகிறது. இந்தியில் பரிட்சை இருந்தபோதிலும், மதிப்பெண்கள் தேர்வை நிர்ணயிக்க எடுத்துக்கொள்ளப்போவதில்லை. மதிப்பெண்கள் மொத்தத்தில் தேர்வு முடிவை நிர்ணயிக்கத்தான் பயன்படுகின்றன.

திரு. கரு. சீமைச்சாமி: ஸார், ஹிந்தியைப் படிக்க விரும்பாத மாணவர்கள் பிற இந்திய மொழிகளைக் கற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்பொழுது இருக்கின்ற மும்மொழிக் கொள்கையின்படி, முதல் மொழியாகத் தமிழைக் கற்றுக்கொள்ளவேண்டும். இரண்டாவதாக ஹிந்தியையோ அல்லது வேறு இந்திய மொழியையோ கற்றுக்கொள்ள வேண்டும். மூன்றாவதாக, ஆங்கிலத்தையோ அல்லது வேறு நாட்டு மொழியையோ கற்றுக்கொள்ளவேண்டுமென்று இருக்கிறது. ஹிந்தியைப் படிக்கவிரும்பாவிட்டாலும், வேறு இந்திய மொழியை எடுத்துப்படிக்கலாம் என்ற வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி: நமது ராஜ்ய அரசாங்க அலுவலகங்களிலே வேலை பார்ப்பவர்களுக்கு இந்தி போதிக்கப்படுகிறதா?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தக் கேள்வி பயிற்சி மொழி பற்றிய கேள்வி. ஆட்சி மொழி பற்றிய கேள்வி இதில் அடங்காது.

திரு. க. ரா. நல்லசிவம்: இந்திய மொழிகளில் இந்தி மொழி அல்லது வேறு ஒரு மொழி; வெளிநாட்டு மொழிகளில் ஆங்கிலம் அல்லாத வேறு மொழிகளைக் கற்றுக் கொள்ளும் வகையில் கற்றுக் கொடுக்க என்ன ஏற்பாடுகள் இருக்கின்றன?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்: ஒரு மொழியை எடுத்துப்படிக்க குறைந்த அளவு இவ்வளவு எண்ணிக்கை இருக்க வேண்டும் என்ற கணக்கு இருக்கிறது. அந்தக் கணக்கு அளவுக்கு மாணவர்கள் வந்து ஒரு மொழியைப் படிக்க வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தால் கவனிக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: எஸ்.எஸ்.எல்.சி.-யில் இந்தியில் 60 சதவிகிதம் மார்க்குகள் எடுத்தால் அதற்காக வேண்டிய விசேஷமாக கல்லூரிப் படிப்பு படிக்கும்போது 50 ரூபாய் கொடுக்கப்படுகிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இது இந்தியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்பதற்காக மறைமுகமாகத் திணிக்கக்கூடிய ஒரு பிரச்சினை அல்லவா?

[1967 மார்ச் 28

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய தகவல் இல்லை. இப்போது இருக்கின்ற நிலை இந்தி மொழியைப் படிக்க விரும்பாதவர்கள் வேறு ஒரு மொழியைப் படிக்க வேண்டுமென்றால் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள மாணவர்கள் விருப்பம் தெரிவித்தால் அதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, does this policy of compulsory education in Hindi come in conflict with the avowed policy of the Party in power? Also, does the Party accept the three-language policy or the two-language policy which has been adumbrated by the Hon. Minister for Education in a college function?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** மும்மொழிக் கொள்கையில் இந்தி கட்டாயப்படுத்தப்படவில்லை. விருப்பப் பாடமாக இருக்கிறது. மும்மொழிக் கொள்கை பற்றிய திட்டத்தை வகுக்கும்போது அந்த ஆலோசனைக் குழுவில் நானும் உறுப்பினராக இருந்தேன். பயிற்சி மொழிகளாக என்ன மொழிகள் இருக்க வேண்டுமென்பதில் மாணவர்களுடைய அறிவுத் திறமைக்கு வேண்டுமென்று சொல்லுகிற தாய் மொழியும், அறிவில் அகில உலகத் தொடர்பு கொள்ள ஆங்கில மொழியும் முக்கியமாக இருக்க வேண்டுமென்ற கருத்தைத் தான் நான் எடுத்துச் சொன்னேன்.

**திரு. எம். எஸ். மணி:** இந்தியைப் படிக்க விரும்பாதவர்கள் வேறு ஒரு மொழியைக் கற்றுக் கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். வேறு ஒரு மொழியைக் கற்றுக் கொள்ள குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள மாணவர்கள் இல்லையென்றால் இந்தி படிக்க விரும்பாத மாணவர்களின் நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** இது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று.

**திரு. என். சங்கரய்யா:** இந்தி ஆசிரியர்களுடைய வேலை வாய்ப்பு ஏதேனும் பாதிக்கப்படும் நிலைமை இருக்கிறதா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** அப்படிப்பட்ட நிலைமை எதுவும் இல்லை.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** மூலக் கேள்வி 'கட்டாயமாக இந்தி அமல் செய்யப்படுகிறதா, சர்க்காரின் கொள்கை என்ன?' என்பதுதான். அரசாங்க அலுவலகங்களைப் பொருத்தவரை மறைமுகமாக இந்தி கட்டாயப் படுத்தப்படுவது இந்த அரசாங்கத்திற்கு தெரியுமா? அந்த மாதிரி நிலைமை இல்லாமல் இருக்க இந்தச் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கும்?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.



1967 மார்ச் 28]

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இந்தி வளர்ச்சிக்கு வேண்டிய பணம் மத்திய அரசாங்கத்தில் இருந்து வந்து கொண்டிருக்கிறதா? அல்லது மாநில அரசாங்கம் செலவு செய்கிறதா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** இந்தி ஆசிரியர்களைப் பொருத்து வரக்கூடிய தொகை மத்திய அரசாங்கத்தில் இருந்து வருகிறது.

**திரு. ஆர். நாகசுந்தரம்:** தமிழ்நாடு அரசாங்க அலுவலக சிப்பந்திகள் மீது இந்தி திணிக்கப்படுகிறதா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** பள்ளிக்கூட பயிற்சி மொழி பற்றிய கேள்வி இது. ஆட்சிமொழி பற்றித் தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** கிட்டத்தட்ட இரண்டாயிரம் பேருக்கு மத்திய சர்க்கார் பிசிகல் எஜுகேஷன் என்ற பெயரால் பயிற்சி கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் முக்கியமாக 'கமாண்ட்' எல்லாம் இந்தியில் சொல்லக்கூடிய நிலையில்தான் பயிற்சி பெற்று வந்திருக்கிறார்கள். அவர்களுடைய டிரெயினிங்கை பழையபடியே அமல் நடத்தப் போகிறார்களா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. எஸ். ஆறுமுகம்:** மும்மொழிக் கொள்கைத் திட்டத்தை மத்திய சர்க்கார் கேட்டுக் கொண்டதன் பேரில் இந்தி விருப்பப் பாடமாக பள்ளிகளில் வைக்கப்பட்டதா அல்லது மாநில சர்க்காரே ஏற்றுக் கொண்டதா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** மத்திய சர்க்கார் ஆலோசனையின் பேரில் எல்லா மாநிலங்களிலும் மும்மொழித் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கல்வி ஆலோசனைக் குழுவில் முடிவு செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**திரு. கரு. சீமைச்சாமி:** அரசாங்க வேலைகளுக்கு இந்தி மொழி தேர்ச்சி கட்டாயம் என்ற நிலை நீடிக்கும் வரை நமது நாட்டில் இந்தி படிக்காத மாணவர்களுக்குப் பாதகம் ஏற்படும் அல்லவா? அதைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதைப் பற்றிய பிரச்சினை வரும்போது கவனிக்கப்படும். பயிற்சி மொழி பற்றிய கேள்விகளை மட்டும் இதிலே கேட்கவேண்டும்.

**திரு. ந. தருமலிங்கம்:** இவ்வளவு பிரச்சினைக்குரிய இந்தி நமது மாநிலத்திற்குத் தேவை இல்லை என்று தீர்மானம் நிறைவேற்ற உத்தேசம் உண்டா?

[1967 மார்ச் 28

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்: அது இந்தக் கேள்வியின் கீழ் அடங்காது. அது தனியாகச் செய்யப்படக் கூடிய வேறு முயற்சி.

திரு. எம். சுரேந்திரன்: இந்தி பயிற்சி மொழி உற்சாகப் படுத்தப்படாவிட்டால், இந்த ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் மற்ற ராஜ்யங்களில் வேலை பார்க்கத் தடங்கலாக இருக்கும் என்பதைச் சர்க்கார் அறியுமா?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்: அந்த நிலைமைகளைப் பற்றியெல்லாம் ஆராய்ந்துதான் இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற முறைகள் போதும் என்று முன்பு இருந்த அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

திரு. கே. பி. எஸ். மணி: மும்மொழித் திட்டத்தின் கீழ் இந்தி படிக்க விரும்பாத மாணவர்கள் வேறு பிராந்திய மொழிகளைப் படிப்பதற்கு எத்தனை பள்ளிக்கூடங்களில் சவுகரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்: விவரம் இல்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி: இந்தி தெரிந்தால் நம்முடைய ராஜ்யத்தில் தனிச் சலுகை அளிக்கப்படுகிறதா?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்: அப்படி எதுவும் அளிக்கப்படுவதில்லை.

திரு. கரு. சீமைச்சாமி: இந்தியைப் படிக்க விரும்பாதவர்கள் பிற இந்திய மொழிகளைக் கற்றுக் கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவை என்னென்ன மொழிகள்?

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை: மும்மொழித் திட்டம் என்று செய்ததில் மூன்றாவது மொழியாக இந்தி மொழிதான் இருக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லை. "Any Indian Language other than the language of the region". என்றுதான் இருக்கிறது. இந்தி படித்துத் தீர வேண்டுமென்ற நிர்பந்தம் இல்லை. ஆனால், இந்தியல்லாத வேறு பல மொழிகளை தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளைப் பயில போதுமான அளவுக்கு மாணவர்கள் முன் வருவார்களானால் அதற்கேற்ற ஆசிரியர்களை நியமித்துக்கொள்ள சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த மொழிக் கொள்கையிலே ஏதாவது மாறுதல் செய்வதற்கு உத்தேசம் உண்டா?

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை: மொழிக் கொள்கை என்று எதுவும் இல்லை. மொழித் திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற அளவு, மற்றவர்கள் சரியாக நிறைவேற்ற வேண்டுமென்று அறிவுரை கூறுவதில் இந்த அவை முழுவதும் என்னோடு ஒத்துழைக்கும் என்று கருதுகிறேன்.



1967 மார்ச் 28]

திரு. கே. விநயகம்: மூன்று மொழித் திட்டத்தை நாங்கள் வரவேற்கவில்லை என்று சொல்லுகின்ற கட்சி ஆட்சிக்கு வந்திருப்பதால் அவர்கள் விரும்புகிற இரண்டு மொழித் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வர என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை: மூன்று மொழித் திட்டத்தை இந்தச் சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறதா என்பது இன்னும் தீர்மானம் ஆகவில்லை. சர்க்காரிலே இடம் பெற்றிருக்கிறவர்கள் தனிப்பட்ட கருத்தாக இரண்டு மொழிகள் இருந்தால் போதும் என்று பேசியிருக்கிறார்கள். தனிப்பட்ட கருத்தும் சர்க்கார் கருத்தும் பல வேளைகளில் ஒன்றாகப் போவதுண்டு. இதிலே, இரண்டும் ஒன்றுபடவில்லை. சர்க்கார் மும்மொழித் திட்டத்திற்குக் கட்டுப்பட்டிருக்கிறது. மும்மொழித் திட்டம் நம்மால் நிறைவேற்றப்படுகிற அளவுக்கு நேர்மையான முறையில் எல்லா இடங்களிலும் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துவது இப்போதுள்ள சர்க்காருடைய போக்கு.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: இத்துடன் வினா நேரம் முடிவடைகிறது.

[குறிப்பு:—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) பாலாறு பேசின் விதிகளை அகற்றல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: அடுத்த அலுவல், ஒத்தி வைப்புத் தீர்மானங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். "சட்டப் பேரவை விதி 42-ன் படி உணவு உற்பத்தியை பெருக்குவதில் நமது ராஜ்யத்திலே இரண்டாவது ஸ்தானம் வகிப்பது வடாற்காடு மாவட்டமாகும். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்லும் இந்த சமயத்தில் வடாற்காடு மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தி செய்வதற்கு பாலாறு பேசின் விதிகள் முட்டுக் கட்டையாக இருப்பதால் அதை ரத்து செய்ய வேண்டுமென்பதைப்பற்றியும், போதுமான ரசாயன உரம் சப்ளை இல்லாததைப் பற்றியும், நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தாமலிருப்பதைப் பற்றியும் விவாதிக்க இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறியிருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் 42-வது விதியின் கீழ் கொண்டு வந்திருப்பதைப் பற்றி மகிழ்ச்சியடைகிறேன். அதே சமயத்தில் அதைத் தொடர்ந்து 50-வது விதி இருக்கிறது. அதன்படி ஒத்திவைப்புத் தீர்மானம் வருவதாக இருந்தால் அது அண்மையில் நடைபெற்ற—ரீஸன்ட் அக்கான்ஸ்—ஒரு காரியத்தைப் பற்றி இருக்கவேண்டும். அவர்கள் கொடுத்துள்ளது பாலாறு பேசின் விதிகளை அகற்ற வேண்டும் என்பது பற்றியாகும். இந்த பாலாறு பேசின் ரூல்ஸ் என்பது இந்த அரசினர் கொண்டு வந்தது அல்ல, இதற்கு முன்பு

...ராங்கப் **கொண்டு வந்ததுமல்ல.** வெள்ளைக்காரர், பிரிட்டிஷார் ஆளுகிற காலத்தில் வந்த பாலாறு பேசின் ரூல்ஸை அகற்றவேண்டுமென்றால் அதை அவசரத் தீர்மானமாகக் கருத அகற்ற வேண்டுமென்றால் அதை அவசரத் தீர்மானமாகக் கருத முடியாது. அது அண்மையில் நடைபெற்ற காரியமாகவும் கருத முடியாது. ஆகவே, அதைக் கொண்டுவர நான் அனுமதி மறுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (இ) மின்சாரக்குழு எழுப்பும் கடனுக்காக விவசாயிகள், நிர்ப்பந்திக்கப்படுதல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் 42-வது விதியின்கீழ் சட்டசபை நடவடிக்கைகளை ஒத்தி வைக்குமாறு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

" தமிழ்நாடு மின்சாரக் குழுவினர் ரூபாய் மூன்று கோடி கடன் எழுப்புவதில் அதிகாரிகள், விவசாயிகளை நிர்ப்பந்தப்படுத்தி வசூலிப்பதாகத் தகவல் வந்துள்ளது. பணம் கொடுக்க இயலாதவர்களிடம், வற்புறுத்தி கமிஷன் தொகையை மட்டும் விவசாயிகளிடம் வசூல் செய்து கொண்டு உடனே கடன் பத்திரங்களை பாங்குகளில் வைத்து மீதம் ரூ. 85-யையும் பெற்றுக்கொண்டு, கடன் வசூலித்து விட்டதாகக் கூறுகின்றனர். விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது " என்று கொடுத்திருக்கிறார்கள். இது சாதாரண அரசினர் நிர்வாகத்திற்குப் புறம்பானதாகக் கருத முடியாது. ஒத்தி வைப்புத் தீர்மானம் சாதாரண நிர்வாக விஷயத்திற்கு, ஆர்டினரி அட்மினிஸ்ட்ரேஷனுக்குப் புறம்பாக இருக்கவேண்டும். ஆர்டினரி அட்மினிஸ்ட்ரேஷனுக்கு, சாதாரண நிர்வாகத்திற்குப் புறம்பானதாக இருப்பதாக இதைக் கருத முடியாது என்பது மட்டுமல்லாமல் கவர்னர் உரை மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் இன்று பேசியிருக்கிறார்கள். அதில் அவர்கள் இதுபற்றிக் குறிப்பிட வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இந்த இரண்டு காரணங்களினால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. அறிவிப்புகள்.

### (அ) உரிமைக் குழுவிற்கான தேர்தல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இந்தப் பேரவைக்கு நான் தெரிவிக்க வேண்டிய அறிவிப்புகள் சில உள்ளன.

முதலாவதாக, 1967-68-ம் ஆண்டுக்குரிய உரிமைக் குழுவிற்கு ப்ரிவிலேஜ் கமிட்டிக்கு இந்தப் பேரவை 12 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு 12 உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பெயர்களாவன :—

1. **திரு. சி. கோவிந்தராஜன்.**
2. திரு. க. **இராமமூர்த்தி.**
3. திரு. எம். வில்லியம்.



4. திரு. எம். ஆர். கண்ணன்.
5. **திரு. கா. வேழவேந்தன்.**
6. திரு. ஏ. சி. நரசிம்மன்.
7. திரு. க. ந. திவ்யபெருமாள்.
8. திரு. ஈ. எம். நடராசன்.
9. திரு. அ. லெ. சுப்பிரமணியம்.
10. திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி.
11. திரு. பி. வேனுசாமி.
12. திரு. கே. என். குமாரசாமி.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1967–68-ம் ஆண்டு உரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் முதல்வர், (லீடர் ஆஃப் தி ஹவுஸ்) அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், துணைச் சபாநாயகர் அவர்களும் தங்கள் தங்கள் அலுவல் காரணமாக, எக்ஸ் அஃபிஷியோ, குழு உறுப்பினர்களாவர். இந்தப் பேரவை 183 (1)-வது விதிக்கிணங்க துணைச் சபாநாயகர் புலவர் கோவிந்தன் அவர்களை இந்தக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

### (இ) பேரவை உறுப்பினர் வசதிக் குழுவிற்கான தேர்தலும், நியமனமும்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** 1967-68-ம் ஆண்டுக்கான பேரவை உறுப்பினர் வசதிக் குழுவிற்கு, ஹவுஸ் கமிட்டிக்கு, இந்தப் பேரவையில் 11 உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும்பொருட்டு கீழ்க்கண்ட 11 உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பெயர்களாவன :—

1. திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்.
2. திரு. கே. பி. எஸ். மணி.
3. திரு. ரா. ராமச்சந்திர துரை.
4. திரு. ஆர். கருப்பையா.
5. திரு. கோ. பாரதி மோகன்.
6. **திரு. டி. ஏ. ராஜவேலு.**
7. திரு. என். கிட்டப்பா.
8. திரு. கொளத்தூர் கோதண்டம்.
9. திரு. அ. கிருஷ்ணன்.
10. திரு. பு. செ. **முத்துச்செல்வன்.**
11. **திரு. டி. தங்கப்பன்.**

[பேரவைத் தலைவர்] [1967 மார்ச் 28

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1967-68-ம் ஆண்டு உறுப்பினர் வசதிக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதாக நான் அறிவிக்கிறேன். இந்தப் பேரவை 221 (1) விதிக்கிணங்க திரு. ஜே. பெல்லி கௌடர், ஹாஜி ம. மு. பீர் முகம்மது, திரு. வை. சுவாமிநாதன். திரு. எ. ஆர். பெருமாள் இவர்களை இந்தக் குழு உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன். துணைச் சபாநாயகர் அவர்கள் அலுவல் காரணமாக, எக்ஸ் அஃபிஷியோ, இக்குழுவின் தலைவராவர்.

## (உ) பேரவை விதி குழுவிற்கு நியமனம்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டசபை விதி 299 (1)-வது விதிக்கிணங்க கீழ்க் கண்ட உறுப்பினர்களை விதி முறைக் குழு, ரூல்ஸ் கமிட்டி உறுப்பினர்களாக நியமிக்கிறேன் :—

1. மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்.
2. மதிப்பிற்குரிய திரு. கே. எ. மதியழகன்.
3. மதிப்பிற்குரிய திரு. செ. மாதவன்.
4. திரு. து. ப. அழகமுத்து.
5. திரு. ஆலடி அருணா.
6. திரு. கா. வேழவேந்தன்.
7. திரு. ஈ. எம். நடராசன்
8. திரு. வெ. முனுசாமி.
9. திரு. பி. ஜி. கருத்திருமன்.
10. திரு. வை. ஜார்ஜ்.
11. திரு. க. இராமமூர்த்தி.
12. டாக்டர் எச். வி. ஹாண்டே.
13. திரு. என். வரதராசன்.
14. திரு. எ. ஆர் மாரிமுத்து.

பேரவைத் தலைவரான நான் என் அலுவல் காரணமாக, எக்ஸ் அஃபிஷியோ, இந்தக் குழுவின் தலைவராக இருப்பேன்.

## 4. அரசினர் மசோதாக்கள்.

### (அ) தமிழ்நாடு* 1967-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 2/1967).

* THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"That the Madras District Municipalities (Amendment) Bill, 1967* (L.A. Bill No. 2 of 1967) be taken into consideration."

* Published in the *Fort St. George Gazette*, Extraordinary dated 23rd March 1967.



1967 மார்ச் 28]

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1967-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா சட்டப் பேரவை மசோதா எண் 2/1967) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாமா இல்லையா என்பது இந்த அவை முன் வைக்கப்பட்டுள்ள கேள்வி. வாக்கெடுப்பிற்கு முன்னால் உறுப்பினர்கள் பேசுவதற்கு உரிமையுண்டு. மு.ப. 9-30

* THE HON. THIRU. S. MADHAVAN : Sir, Hon. Members are aware that the Municipalities in this State are governed by the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920). Section 41 of the said Act empowers the State Government to supersede a municipal council for a specified period not exceeding two years if in their opinion the council is not competent to perform or persistently makes default in performing the duties imposed on it by law, or exceeds or abuses its powers. That section also enables the State Government to postpone the reconstitution of the council for a period not exceeding six months. It is considered that supersession of a municipal council is drastic in character and in effect will affect the democratic process of local self Government. But there is no provision in the Act enabling the State Government to review the position of the superseded council and to revoke their earlier orders so as to revive the superseded council and restore its original members to office when the situation warrants such an action.

It is therefore considered desirable that if in a particular case, the State Government are of opinion that the supersession of a council needs to be revoked they should have powers to enable them to revive the superseded council and to restore its original members to their offices. It is accordingly proposed to confer necessary power in this regard on the State Government.

Sir, I commend the Bill for the consideration of the House.

* THIRU. R. PONNAPPA NADAR : Sir, I rise to oppose the Bill before the House for amending section 41 of the Madras District Municipalites Act, 1920. The object of this Bill is to revive the superseded council with its original members and restore the members their offices. Under the Act, reconstitution of a superseded council can be effected only by holding fresh elections to the council. But this Bill overlooks that fundamental fact.

The first point that I would like to stress is that the Bill is against the accepted principles of jurisprudence that once a council is susperseded, it ceases to function or becomes *functus officio*. So there can be no revival after it has spent itself out. As an instance I may refer to the proceedings that have come up for consideration regarding the supersession of the Tirunelveli Municipal Council and the Aruppukottai Municipal Council by the then Government. The then Government felt that those municipal councils persistently failed to perform the duties imposed on them by law and

[Thiru R. Ponnappa Nadar] [28th March 1967

that they had also exceeded their powers. Moreover, it was also brought to the notice of the then Government that there was faction in the municipal councils. On these considerations notices were issued to the concerned municipal councils and they have made their representation. The representations were considered by the Government and after due consideration, it was resolved that those councils might be superseded. So, there has been an opportunity given to those councils and they did not mend themselves. So, the Government thought it fit that those councils might be superseded under the powers conferred by section 41 of the District Municipalities Act. The present legislation overlooks that fundamental fact and the Government want to revive the extinct municipal councils which can be revived only by the process of election.

Another point which I wish to point out is that the municipal election will be held in October or November. Because the Council has spent its life out, fresh elections are at hand. So I submit that it will not be proper in the eye of the law for the Government to arm themselves with powers for the revival of those extinct councils.

Another point which I want to emphasise before this House is that the order of supersession of the Tirunelveli Municipal Council came up for judicial consideration before the Honourable High Court. The propriety and the legality of that order have been considered by the Honourable High Court and a Division Bench of the High Court has ruled that there was nothing improper or illegal in the supersession. Overlooking that decision, it may not be proper for the Government to arm themselves with this extraordinary power. It may be argued that similar powers are given in the Madras City Municipal Act. But I submit that these powers need not be given so far as this Bill is concerned.

Another point which I want to emphasise before this House is that this Bill seeks to have retrospective operation. Sub-clause (2) of clause 1 reads : ' It shall be deemed to have come into force on the 12th day of May 1966. ' This Bill does not deal with a financial matter in which Government may have to refund taxes already collected if retrospective operation is not given. Instances may be cited in which similar legislation has been initiated in this House regarding financial matters. Whenever a judicial pronouncement has been made regarding the legality of the imposition of a tax, on the basis of that pronouncement. Bills were brought before the Legislature giving retrospective effect to legalise the imposition and collection of the tax. So far as this amendment is concerned, it is flouting the democratic principles. When once a council has been dissolved, when it ceases to have life, it will not be proper to revive the life of that council. Of course the council can come in by the due process of election, which is a healthy and wholesome procedure, and which may be acceptable to the Hon. the Minister for Law. The Minister for Law, while sitting in the Opposition, has on many occasions opposed the giving of



28th March 1967] [Thiru R. Ponnappa Nadar]

retrospective effect to the legislation which were brought before this House. He will also bear in mind that this particular piece of legislation is sought to be brought in with retrospective effect from 12th May 1966. It may be against the accepted principles and canons of law and I think that on that ground this Bill may be dropped.

Another point which I want to emphasise before this House is that it has been urged that in these two municipal councils (Tirunelveli and Aruppukottai) there has been faction. If these councils are revived, I am afraid that the faction also will be revived. Will it be healthy or wholesome for our Government to arm themselves with powers to revive the superseded councils is a question that may be considered by this House. We will be placing a premium on the faction that was obtaining in those councils and I think it will not be proper to revive those councils.

Another point which I want to emphasise is that, when a judicial pronouncement has been made by the High Court of this State, it may be proper that we abide by the decision, because we have to respect the decision of the High Court whether we like it or not. Of course the State Legislature has got powers to bring in legislation of this kind. I am not questioning the powers of the State Government to bring in legislation. But will it be proper and legal is the question which will have to be considered by this Honourable House.

The supersession of the councils was not done on party considerations. I would invite the attention of this Honourable House to the supersession of certain panchayat unions, namely, the panchayat unions of Sedapatti, Erumapatti and Rajasingamangalam. I think in the first two panchayat unions the Congress was in power. If I remember aright, in Rajasingamangalam the Swatantra Party was in power. It was not on party considerations that these panchayat unions were superseded by the Government.

Of course, the Government have got powers but it may not be proper to view this piece of legislation in a party aspect. It might also be pointed out that that Government were motivated by political considerations and that those considerations weighed with the then Government. But I submit that those considerations are outside the point. So I would emphatically request the Hon. Minister for Law to reconsider this aspect of this matter and I once again submit that this piece of legislation is unnecessary and it flouts the fundamental principles of law and on that ground I oppose this Bill. With these words, I conclude my speech.

* மதிப்பிற்குரிய திரு. செ. மாதவன்: கனம் தலைவர் அவர்களே, ஒரு கருத்தை நான் முதலில் விளக்கிவிட்டால் அதைப் பற்றி அதிக சர்ச்சை இருக்காது என்று நம்புகிறேன். உயர் நீதி மன்றம் கொடுத்த இரண்டாவது தீர்ப்பும், முதல் தீர்ப்பும் முழுக்க முழுக்க இந்த மசோதாவினுடைய கருத்தை ஆதரிக்கின்ற தீர்ப்பு. உயர்நீதி மன்றத்தின் கருத்துக்களின் அடிப்படையில்

தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. உயர்நீதி மன்றம் இது போன்ற ஒரு நிலைமை இருக்கவேண்டும் என்று வற்புறுத்தி இருக்கிறது.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் விநாயகம் அவர்கள் இரண்டு திருத்த தீர்மானங்களை Amendments கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் முதல் திருத்தத் தீர்மானம் இந்த மசோதாவை பொதுமக்களின் கருத்தைத் தெரிந்து கொள்வதற்காக விளம்பரப்படுத்த வேண்டும் என்பது To elicil public opinion அடுத்த திருத்த தீர்மானம் இந்த மசோதாவைக் கூட்டுக் குழுவின் ஆலோசனைக்கு விடவேண்டும் என்பது. (Referring the Bill to a Joint Select Committee அவர்கள் கொடுத்த இரண்டாவது திருத்த தீர்மானமானது விதியின்படி இல்லை. நமது 139-வது விதியைப் பார்த்தால் கூட்டுக் குழுவின் ஆலோசனைக்கு விடவேண்டும் என்று யாராவது ஒரு திருத்தம் கொண்டுவந்தால், அதில் என்ன கூற வேண்டும் என்று விதிமுறை இருக்கிறது. அந்த முறைப்படி இந்தத் தீர்மானம் இல்லையாகையால் இந்தத் தீர்மானம் ஒழுங்கு இல்லை என்று இதை நிராகரித்துவிடுகிறேன். I rule it out of order முதல் தீர்மானம் முறைப்படி இருக்கிறது. அந்தத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் விநாயகம் அவர்கள் அவைக்குக் கொண்டு வருவார்கள்.

Thiru K. VINAYAKAM : Mr. Speaker, Sir, in view of the hectic haste with which this Government have brought forward this Bill before this House. . . .

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: முதலில் மன்றத்தின் முன் அந்தத் திருத்தத் தீர்மானத்தை வைத்து பிறகு பேசுங்கள். First of all, the hon. Member must move the amendment and then speak on it.

Thiru K. VINAYAKAM : Sir, if the House listens to me with patience, they will know what is behind my mind.

திரு. இராம. அரங்கண்ணல்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார், திருத்தத் தீர்மானத்தை முதலில் முன்மொழிய வேண்டும் என்று சொன்னால், முதலில் அந்தத் தீர்மானத்தைப் படித்து, அதை ஒருவர் ஆமோதித்து, அதற்குப்பிறகு கருத்து விளக்கங்கள் சொல்லவேண்டும் என்பது சபையின் முறை. கனம் உறுப்பினர் விநாயகம் அவர்கள் முதலில் பேசுவதற்கு ஆரம்பிக்கிறார்கள். தங்களுடைய தீர்ப்பு என்னவென்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: திருத்தத் தீர்மானத்தை முதலில் முன் மொழியவேண்டும். பிறகு பேசவேண்டும்.

Thiru K. VINAYAKAM : Mr. Speaker, Sir, I am very much alerted by the way in which our hon. Members are vigilant about the rules of procedure but they may not know whether I am going



to move my amendment or not. If I am not moving my amendment, where is the question of my reading the entire amenument? That is why, I say that if they could wait for a few moments, they could understand what is in my mind. In view of the urgency of the Bill as stated by the Government, I do not propose to move my amendment. Now, I think that is very clear to the hon. Member Sri Rama Arangannal.

Mr. Speaker, while reiterating the opinion expressed by the previous speaker, I would like to add only one word. This kind of legislation, though legally brought forward, is undemocratic in spirit. If one Government decide upon an issue on its merits and if another Government which come into power after them are to go back upon the commitments of the previous Government, it would look as if there is no stability, there is no certainty and there is no continuity of the principles governing the administration of a Government. If such is the case, even for the Legislative Assembly of a State which has not been allowed to function and President's rule, has been imposed, another Bill can be brought forward in the Parliament for the purpose of reinstating the entire House and allowing the Members to function once again. Is this the way. . .

திரு. வெ. முனுசாமி: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கனம் உறுப்பினர் அவர்கள் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானத்தின் மீது பேசுகிறார்களா அல்லது அவர்கள் கொண்டு வருகிற திருத்த தீர்மானத்தின் மீது பேசுகிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். சபாநாயகர் அவர்கள், திருத்தம் கொண்டு வருவதற்குத்தான் தாங்கள் அனுமதி தந்தீர்கள்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: திருத்தத்தை அவர்கள் கொண்டு வருவதற்கு எண்ணம் இல்லை என்று ஏற்கனவே தெரிவித்துவிட்டார்கள். இப்பொழுது அவர்கள் பேசிக்கொண்டிருப்பது முழு முதல் மசோதாவின் மீது. அதாவது அசல் மசோதாவின் மீது பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

Tehru K. VINAYAKAM : Mr. Speaker, Sir, most of the points of order are only points of disorder.

Thiru Rama Arangannal rose.

Thiru K. VINAYAKAM : Please sit down, Mr. Speaker, it is very kind of you to have allowed me to speak. . ..

Thiru P. Srinivasan rose.

Thiru K. VINAYAKAM : I am not yielding, Sir.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்ப அவர்களுக்கு உரிமை உண்டு.

திரு. பெ. சீனிவாசன்: ஒரு கனம் உறுப்பினர் எழுந்து நின்று ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பும்பொழுது, பேசிக்கொண்டிருக்கும் உறுப்பினர் "Please sit down" என்று கட்டளையிட உரிமை உண்டா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: இல்லை. மாண்புமிகு உறுப்பினர் யாரும் இன்னொருவரை நின்று கட்டளை போடுவது முறையாகாது. ஆனால், அவர்களை உட்காரச் சொல்லும்படி கேட்டுக்கொள்ள எனக்கு உரிமை இருக்கிறது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் விநாயகம் அவர்கள் தொடர்ந்து பேசுவார்கள்.

THIRU K. VINAYAKAM: Mr. Speaker, Sir, at that rate there will not be any certainty or continuity in the administration. Peace and tranquillity and the well-established principles relating to the functioning of local self-Government on proper lines will be jeopardised if a new Government come into power and simply reinstate certain municipalities by one stroke of a small legislation. With these words, Mr. Speaker, I strongly oppose this Bill.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் அவர்களுடைய திருத்தத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லை. ஆகவே, அந்தத் திருத்தத் தீர்மானங்கள் இரண்டுமே கைவிடப்பட்டன Dropped என்று அறிவிக்கிறேன். இப்பொழுது முழுமுதல் மசோதா, அதாவது அசல் மசோதா மீது விவாதம் நடக்கும். அடுத்து பேசுபவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. லெ. சுப்பிரமணியம் அவர்கள்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: கனம் தலைவர் அவர்களே, இந்த டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடிஸ் ஆக்ட் அமெண்ட்மெண்டு மசோதாவை நான் மனமார வரவேற்று, அதை நிறைவேற்றவேண்டும் என்று வேண்டுகோளை இந்த அவையின் முன்பு வைக்கப் பிரியப்படுகிறேன். இதை எதிர்த்துப்பேசிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பல கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்பு எடுத்துச் சொன்னார்கள். ஒரு காலத்தில் திருநெல்வேலி மாவட்டம் காங்கிரஸ் கட்சியினுடைய கோட்டையாக இருந்தது. சென்ற தேர்தலில் 17 இடங்களுக்கு காங்கிரஸ் கட்சி போட்டியிட்டு 17 இடங்களிலும் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றிருந்தது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே நெல்லை மாவட்டத்தின் தலைநகரான திருநெல்வேலியில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நகரசபை அமைக்கப்பட்டது என்பதை இந்த சபை நன்கு உணர்ந்திருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே காங்கிரஸ் கட்சி கோட்டையில் திராவிட முன்னேற்றக் கழகக் கொடி கட்டி பறப்பதா என்ற ஒரு எண்ணம் முதலிலிருந்த அமைச்சர்களுக்கு எழுந்த காரணத்தினால் திராவிட முன்னேற்றக் கழக நகரசபையை அங்கே கலைத்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அந்த நகரசபையைக் கலைத்ததைப் போல அருப்புக்கோட்டை நகரசபையையும் அதுவும் சுதந்திரக் கட்சி ஆட்சி புரிந்த சபை கலைத்தார்கள். திருநெல்வேலி



நகரசபையைக் கலைத்ததை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது என்று நாம் அறிவோம். அந்த வழக்கை விசாரித்த கனம் நீதிபதி கைலாசம் அவர்கள் நகர சபைக்குச் சாதகமாக தீர்ப்புச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்பது குற்றச்சாட்டுகளை சென்னை அரசாங்கம் நகரசபையின் மீது சாட்டியிருந்தது. ஒன்பது குற்றச்சாட்டுகளில் முக்கியமான குற்றச்சாட்டு நகரசபை சரியான முறையில் இல்லை, அவர்களுக்குள் 'ஃபாக்ஷன்' பிரிவு இருந்தது என்பது. ஆறு குற்றச்சாட்டுகள் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள். அந்தக் குற்றச்சாட்டுகளை கனம் நீதிபதி கைலாசம் அவர்கள் நல்லமுறையில் விசாரித்து இந்தக் குற்றச்சாட்டுகள் கவுன்ஸிலைக் கலைப்பதற்குப் போதுமானவையாக இல்லை, நகரசபையைக் கலைத்தது நியாயமற்றது என்று தீர்ப்புக் கூறினார்கள். அதற்குப் பிறகு அப்பொழுது இருந்த அரசாங்கம், உடனே அப்பீல் செய்தது. அதிலே ஜஸ்டிஸ் அனந்தநாராயணன் அவர்களுடைய தீர்ப்பிலே அப்பீலை ஏற்றுக் கொண்டதற்குக் காரணம், அது அரசாங்கக் கட்டளை, அதாவது, அட்மினிஸ்ட்ரேடிவ் ஆர்டர், அதாவது அட்மினிஸ்ட்ரேடிவ் ஆர்டரில் ஹைகோர்ட் தலையிட உரிமை இல்லை என்கிற டெக்னிகல் கிரௌண்டில்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டது 'ஆன் தி மெரிட்ஸ் ஆப் தி கேஸ்' அந்த அப்பீல் ஏற்றுக் கொள்ளப்படவில்லை, என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். முனிசிபாலிடி சட்டத்திலே இப்படிக் கலைக்க அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. அப்படிக் கலைக்க இரண்டு ஆண்டு காலத்திற்கு மாக்ஸீமம் லிமிட்டாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்திலே அரசாங்கம் நினைத்தால் ஆறு மாதத்திற்கு மட்டும் கூட அந்த முனிசிபாலிடியை இயங்க விடாமல் கலைக்கலாம். ஆனால் முன்பு இருந்த அரசாங்கம் வேண்டுமென்றே மாக்ஸிமம் பனிஷ்மெண்டான இரண்டு வருஷ காலத்தை எடுத்துக் கொண்டது. இரண்டு ஆண்டு காலத்திற்கு நகர சபையைக் கலைத்திருக்கிறது. நெல்லை நகர சபையை மாக்ஸிமம் பனிஷ்மெண்ட் கொடுத்து கலைத்தது அன்றைக்கு இருந்த அரசாங்கம். நீதிபதி, ஜஸ்டிஸ் அனந்தநாராயணன் அவர்கள் இரண்டு ஆண்டு காலத்திற்குக் கலைத்திருப்பது சரியாகாது, தண்டனையைக் குறைக்க வேண்டும் என்று தன்னுடைய ஜட்ஜ்மெண்டின் கடைசி வாக்கியத்தில் சொல்லியிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தின் நினைவிற்குக் கொண்டு வருகிறேன். திருவாளர் பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டபடி, ஹைகோர்ட் டிஸிஷன் தந்திருக்கிறது. அதை முறியடிக்கும் விதத்தில் சட்டம் இயற்றக்கூடாது என்றது சரியாகாது, என்பதை வழக்கறிஞரான அவர்களும், அதே போல வழக்கறிஞரான நானும் அறிவோம். அதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்ற மன்றத்தில், லாண்ட் ஸீலிங் ஆக்ட் என்கின்ற சட்டத்தை நிறைவேற்றினோம், முன்னால் இருந்த மன்றம் நிறைவேற்றிற்று. அந்த லாண்ட் ஸீலிங் சட்டத்தில் ஐந்தாவது செக்ஷனில்தான்

[திரு. அ. லெ. சுப்பிரமணியம்] [1967 மார்ச் 28

30 எக்கருக்கு மேலே வைத்திருப்பவர்களிடமிருந்து அதிகப்படியான நிலத்தைப் பிடுங்கிக் கொள்ளும் சர்க்கார் என்கிற ஷரத்து இருக்கிறது. அந்த செக்ஷன் ஃபண்டமென்டல் ரைட்டை, ஜீவாதார அடிப்படை உரிமையைப் பாதிக்கிறது என்று சுப்ரீம் கோர்ட்டில் அந்த மெட்ராஸ் லேண்ட் ரிஃபார்ம் ஆக்டை ஸ்க்ராப் செய்து, அது செல்லத்தக்கதல்ல என்று தீர்ப்புக் கூறினார்கள். ஆனால் அன்று பாராளுமன்ற முதல் அமைச்சராக இருந்த நேரு அரசியல் சட்டத்தையே திருத்திவிட்டால் போகிறது என்று, கான்ஸ்டிட்யூஷனுக்கே ஒரு அமெண்ட்மெண்ட் கொண்டு வந்தார்கள் என்பதை நண்பர் பொன்னப்ப நாடார் அவர்கள் தயவு செய்து கவனிக்கவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, உயர்நீதி மன்றங்களுடைய தீர்ப்பை எதிர்த்து, தங்களுக்குச் சாதகமாக இருக்கும் முறையில் சட்டங்களைத் திருத்துவது இந்திய சென்ட்ரல் கவர்ன்மெண்ட், கான்ஸ்டிட்யூஷனை அமெண்ட் செய்ததிலிருந்தே தெளிவாகிறது. ஆகவே, இப்படிச் செய்வது ஒன்றும் புதுமையல்ல, ஹைகோர்ட்டின் தீர்ப்பில் குறுக்கிடுவது ஆகாது என்பதையும் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஏனென்றால், மெட்ராஸ் டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடீஸ் ஆக்ட் படி ஒரு கவுன்சிலை சூப்பர்சீட் செய்ய அதிகாரம் இருக்கிறது. அப்படி அதிகாரம் அன்றைக்குக் கொடுத்ததன் நோக்கம், அரசாங்கம் நல்ல முறையிலே நடக்கும் என்கிற புனித நோக்கத்திலே அப்படிப்பட்ட அதிகாரத்தை 1920-ம் வருஷ சட்டத்திலே கொடுத்திருந்தார்கள். அதை இப்படி துஷ்பிரயோகம் செய்வார்கள் என்று அவர்கள் எண்ணியிருக்க மாட்டார்கள். அந்த நோக்கத்தில் சட்டத்தில் அந்த அதிகாரமும் கொடுக்கப்படவில்லை என்று நான் நம்புகிறேன். ஆகவே, அப்படிப்பட்ட சட்டத்தில் இன்றைக்குத் திருத்தம் செய்யப்படுகிறது.

ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுப்பதும் ஒன்றும் புதிது அல்ல என்பதையும் கூறவிரும்புகிறேன். ஆகவே இந்தத் திருத்த மசோதாவை நான் முழு மனதோடு ஆதரிக்கும் விதத்தில் என் ஆதரவைத் தெரிவிக்கிறேன். இன்னொன்றையும் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவில் சில வார்த்தைகளைத் திருத்தினால் நன்றாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அப்படிச் சொல்லும் போது, இரண்டாவது பிரிவின், ஸ்மால் (ஏ) என்கிற பாகம் that is, 2 (a), "The Municipal council shall be deeemd to be reconstituted." என்றிருக்கிறது. reconstituted என்கிற வார்த்தைக்குப் பதிலாக "revived" என்று இருந்தால் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். கான்ஸ்டிட்யூட் செய்வது என்றால் அமைப்பது என்றாகும். ரி-கான்ஸ்டிட்யூட் என்றால் மறுமுறையாக அமைப்பது என்கிற கருத்து ஏற்படுமோ என்று கருதுகிறேன். ஆகவே, "reconstituted" என்கிற வார்த்தைக்குப் பதிலாக உயிர் ஊட்டுவது revived என்கிற வார்த்தை இருந்தால் மிகப் பொருத்தமாக இருக்கும் என்று தோன்றுகிறது.



1967 மார்ச் 28] [திரு. அ. லெ. சுப்பிரமணியம்]

இன்னும், வேறொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். மெட்ராஸ் முனிசிபாலிடிஸ் ஆக்டில் "What are the effects" என்று சொல்லி பலவற்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தலைவராக இருப்பவர் தலைவராகவே இருப்பார் என்றும், உதவித் தலைவராக இருப்பவர் உதவித் தலைவராகவே இருப்பார் என்றும் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், அந்த டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடி ஆக்டின் டிருக்கிறது. ஆனால் அந்த டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடி ஆக்டின் கீழ் Statutory Committee என்ற இரண்டு கமிட்டிகள் இருக்கின்றன. ஒன்று "Contract Committee" இன்னொன்று "Appointments Committee" இந்த இரண்டு கமிட்டிகளும், Statutory Committee அதாவது சட்டத்திலே குறிப்பிட்டபடி அமைக்கப்படுகின்ற கமிட்டிகள். இந்தக் கமிட்டிகளும் அப்படியே, மறுதேர்தல் இல்லாமலேயே நீடிக்க வேண்டுமா என்பதற்கான தெளிவான வாசகங்கள் இல்லை. அந்த Contract Committee and Appointment Committee இரண்டும் இயங்குமா என்பதைத் தெளிவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த மசோதாவை மனமார வரவேற்று என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த மாவட்ட நகராட்சி திருத்த மசோதாவின் மீது இரண்டு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஒரு ஆண்டிற்கு முன்பு மேல் அவையில் இந்த மசோதா பற்றியும் மாநகராட்சிக்கு இருக்கின்ற உரிமைகள் பற்றியும் குறிப்பிடும்போது, மாநகராட்சியின் உரிமைகளை மாநில ஆட்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்று மேல் அவையில் அன்றைக்கு முதல் அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலத்தின் முன்னால் நான் பேசினேன். ஆனால், அப்பொழுது மாஜி முதல் அமைச்சர் கனம் பக்தவத்சலம் அவர்கள், 'அப்படியொன்றும் இல்லை, நாங்கள் செய்தது நியாயம் தான்' என்று சொன்னார்கள். அது மட்டுமல்ல, இந்த விஷயம் ஹைகோர்ட்டிலே எழுப்பப்பட்டபோது, ஹைகோர்ட்டு ஆர்டர் மூலமாக, அரசாங்கம் செய்தது சரி என்று சொன்னார்கள். ஆனால், ஹைகோர்ட் ஆர்டரிலே, அதற்குப் பிறகு சில 'ஸ்ட்ரிக்சர்ஸ்' என்று பாஸ் செய்திருந்தார்கள். அந்த அடிப்படையில், 'கூடிய விரைவில் இந்த மாநகராட்சி 'ரீகான்ஸ்டிட்யூட்' செய்யப்படவேண்டியது மிக மிகத் தேவையானது' என்று அழுத்தம் திருத்தமாக, தெளிவாக சொல்லியிருந்தார்கள். ஹைகோர்ட் ஸ்ட்ரிக்சர்ஸ்லே சொல்லியிருப்பதையும் நாம் கவனிக்கவேண்டும். ஹைகோர்ட் சட்ட அடிப்படையில் தீர்ப்புக் கொடுக்க முடியுமே தவிர, spirit of order என்ற வகையில், அதைப் பற்றி அவர்கள் எதுவும் செய்யமுடியாது. ஆகவே ஹைகோர்ட்டினுடைய ஸ்ட்ரிக்சர்ஸ் என்ற வகையில் அரசாங்கம் செய்தது தவறு என்று கருதினார்கள் என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளலாம். ஹைகோர்ட் ஆர்டர்ஸ் என்ற வகையில் அரசாங்கம் செய்ததை ஏற்றுக் கொண்டு இருந்தாலும், ஸ்ட்ரிக்சர்ஸ் என்ற வகையில் கூடிய விரைவில் அது ரீகான்ஸ்டிட்யூட் செய்யப்பட

வேண்டியாது தேவை என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள், பொதுமக்களுடைய மன்றத்திற்கு இதை விட்டுப் பார்க்கவேண்டும் என்று. பொதுமக்களுடைய தீர்ப்புத்தான் பொதுத்தேர்தல் தீர்ப்பு வந்த அன்றே தெரிந்து விட்டதே? ஆகவே, இந்த மசோதாவின் பேரிலும் அவர்கள் தங்களுடைய தீர்ப்பைத் தெரிவித்துவிட்டார்கள். ஏனென்றால், திருநெல்வேலியில் பொதுமக்கள் எந்த அளவிற்கு இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்பது, மதிப்பிற்குரிய உறுப்பினர் [illegible] அவர்களைப் பொதுமக்கள், அருப்புக்கோட்டை பொதுமக்கள், தங்கள் வாக்குகளை அளித்து அனுப்பிய அன்றே தெரிவித்துவிட்டார்கள். யாராவது இன்னமும் திருப்பி பொதுமக்களுடைய தீர்ப்புக்கு அனுப்ப வேண்டும் என்று விரும்பினால் அது சரியானதா என்பதை யோசிக்க வேண்டும். அது தவறானது, சரியில்லை என்பதை மட்டும் இந்த அவையில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல, சில உறுப்பினர்கள் இது ஒரு ஆட்சியின் உத்தரவை ரீபீல் செய்வதுபோல இருக்கிறது என்று சொன்னார்கள். நாம் மாணவர்களாக இருந்தபோது, பிரிட்டிஷ் ஹிஸ்டரி படித்தோம். அப்பொழுது அந்த நாட்டில் 'பீல்' என்ற பிரைம் மினிஸ்டர் ஒருவர் இருந்தார் என்று படிக்கும்போது நாங்கள் வேடிக்கையாகச் சொல்வது வழக்கம் Peel repealed all previous orders என்று (சிரிப்பு). லார்ட் பீல் என்பவர் ஒரு கட்சியைச் சேர்ந்தவர். அவருக்கு முன்னால் இருந்த பிரைம் மினிஸ்டர் வேறு கட்சியைச் சேர்ந்தவர். ஆகவே, அந்த வகையில் இந்த மசோதாவைக்கொண்டு வந்திருப்பது தவறேயில்லை. அந்த பீல் என்பவர் இரண்டு முறை மசோதாக்கள் கொண்டுவந்து முன்னிருந்த சட்டங்களை ரீபீல் செய்தார்கள். அதைப்பற்றி நாங்கள் வேடிக்கையாகச் சொல்வது வழக்கம். நாமும் இப்பொழுது பிரிட்டிஷ் பார்லிமெண்டரி முறையையே பின்பற்றுவதால் அதை மட்டும் எடுத்துக் குறிப்பிடுகிறேன். பீல் 'ரீபீல்' செய்தார்கள். அதே வகையில் ஒரு கட்சி மாறி மற்றொரு கட்சி ஆட்சிக்கு வரும்போது, பழைய சட்டத்தைத் திருத்துவது வழக்கம், அப்படிச் செய்ய அவர்களுக்கு உரிமையும் உண்டு. அதைப் பார்த்து பழைய சட்டம் பாதிக்கப்படுகிறது, ஆகையினால் பொது மக்களுடைய தீர்ப்பிற்கு விடவேண்டும் என்பது, அந்த ஆட்சியையே தங்க

முற்பகல் 10-00 ளுடைய வோட்டு மூலம் மாற்றியிருப்பவர்களுடைய தீர்ப்பிற்கு விடவேண்டும் என்பது சரியானது அல்ல. பிறகு, "ஹைகோர்ட் தீர்ப்புச் சொன்னது" என்று சொல்வதற்கும் உரிமை இல்லை. ஹைகோர்ட் எத்தனையோ [illegible] சென்னை அந்தந்த [illegible] போட்ட சட்டங்கள் அரசாங்கத்திற்குச் சாதகமாக இல்லை என்பதற்காக அரசாங்கம், நாட்டின் நிர்மாணச் சட்டத்தையே எத்தனையோ தடவை திருத்தியிருக்கிறது என்பதைக் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்பு



கிறேன். அவர்கள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். நிர்மாணச் சட்டமே எத்தனையோ தடவை திருத்தப்பட்டிருக்கிறது. ஹைகோர்ட் தீர்ப்புகளில், சில, காங்கிரஸ் ஆட்சிக்குச் சாதகமாக இல்லை என்று கருதி, தங்களுக்குச் சாதகமாக இல்லை என்ற காரணத்தால், நிர்மாணச் சட்டத்தையே காங்கிரஸ் அரசாங்கம் மாற்றி இருக்கிறது. மாநில அரசாங்கத்துடைய ஹைகோர்ட் 'ஸ்டிரிக்சர்ஸ்' பாஸ் செய்திருக்கிறது. 'ஸ்டிரிக்சர்ஸ்' என்றால், அந்த இடத்திலே அவர்கள் '[illegible]' [illegible] தீர்ப்புக் கொடுக்க முடியாவிட்டாலும், 'ஸ்பிரிட் ஆஃப் தி லா' சரியாகக் கவனிக்கப்படவில்லை, மிகக் கடுமையாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது' என்று ஹைகோர்ட்டாரால் கூறப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர, வேறு எந்த அடிப்படையிலும் கொண்டுவரப்படவில்லை. இதை எதற்குச் சொல்லுகிறேன் என்றால், "ஹைகோர்ட்டார் ஆர்டர் செய்திருக்கிறார்கள்" என்றால், அப்படிச் சொல்லுகிறவர்களுக்கு நான் கூறக்கூடிய பதில் இதுதான். மத்திய அரசாங்கத்தார் எத்தனையோ தடவை நிர்மாணச் சட்டத்திற்குத் திருத்தங்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். நிர்மாணச் சட்டத்தின் பதினேழாவது அமெண்டுமெண்டுக்குப் பிறகு, மற்ற அமெண்டுமெண்டுகளும், கோர்ட்டாரின் தீர்ப்புகள் அரசாங்கத்திற்குச் சாதகமாக இல்லை என்ற காரணத்திற்காகவே அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதை நினைவில் வைத்துக்கொண்டால், இந்த மசோதாவை இப்பொழுது கொண்டுவருவது நியாயம் என்பதை அவர்களே உணர்ந்து கொள்ளுவார்கள் என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நான் இன்னொன்றையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அன்று கொண்டுவந்த சட்டம் சரியான சட்டம் அல்ல, ஜனநாயக உரிமைகளைப் பாதிக்கக்கூடிய அளவில் கொண்டுவரப்பட்ட சட்டம் என்று நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லுகிறேன். ஜனநாயகத்திற்கு விரோதம் என்று எப்படி நான் சொல்லுகிறேன் என்றால், மாநகராட்சியில் அங்கு இருப்பவர்கள், அங்குள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்; அந்த வட்டாரத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஆனால், மாநில அரசாங்கத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பல வட்டாரங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். பல வட்டாரங்களில், எங்கெங்கே காங்கிரசுக்கு மெஜாரிடி இருந்ததோ, அதன் அடிப்படையில் பல பேர்கள் இருந்தார்கள். பல வட்டாரங்களில் உள்ள மெஜாரிடியை வைத்துக்கொண்டு, ஒரு வட்டாரத்திலுள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்பட்ட திருநெல்வேலி நகராட்சி மன்றத்தை, அப்பொழுது ஆளும் கட்சியினராக இருந்தவர்களுக்குப் பிடிக்கவில்லை என்ற காரணத்தால் அவர்கள் அதைக் கலைத்தார்களே தவிர, மற்றப்படி திருநெல்வேலியில் என்ன தவறு நடந்தது? மேலவையில் நான் அப்பொழுது கேள்வி கேட்டு, அதற்கு அரசாங்கத் தரப்பிலிருந்து பதிலும்

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1967 மார்ச் 28

கொடுத்திருந்தார்கள். செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து
பிறப்பிக்கப்பட்ட அரசாங்க உத்தரவின் நகல் மேல்சபையிலே
சமர்ப்பிக்கப்பட்டது என்றாலும், சரியான வகையில் பதில் இல்லை.
எனக்குப் பிறகு பேச இருக்கிற மதிப்பிற்குரிய உறுப்பினர்
திரு. சௌதி சுந்தரபாரதி அவர்கள் தெளிவாக எடுத்துச்
சொல்லுவார்கள். திருநெல்வேலியில் என்ன தவறு நடந்தது
என்று நான் கேட்கிறேன். அங்கே தவறு நடக்கவில்லை. தமக்குச்
சாதகமாக இல்லாத சில கருத்துக்களை ஏற்றுக்கொண்டார்கள்,
தமக்குச் சாதகமாக இல்லாத சில காரியங்களை நடைமுறையில்
கொண்டுவந்தார்கள் என்ற காரணத்திற்காக அப்போதைய
அரசாங்கம் திருநெல்வேலி நகராட்சியைக் கலைத்த ஒரு
செயலானது அன்றிருந்த காங்கிரஸ் அமைச்சரவை செய்த
தவறு என்று நான் மிக அழுத்தந்திருத்தமாக மேலவையிலேயே
எடுத்துச் சொன்னேன். திரும்பவும் அதை இங்கே எடுத்துச்
சொல்கின்றேன். 'ப்ரெடிக்ஷன்' என்று சொல்லுவார்களே அந்த
வகையில் அன்று நான் ஒன்று அப்போதிருந்த காங்கிரஸ் அமைச்
சரவையைக் குறித்துச் சொன்னேன். "1967-க்குப் பிறகு
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் தமிழகத்திலே வரப்
போகிறது. அப்படி வந்தால், மத்திய அரசாங்கத்திலுள்ள
காங்கிரஸ் அரசாங்கத்திற்கு மாநிலத்திலுள்ள திராவிட
முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி பிடிக்கவில்லையென்றால்,
மாநிலத்திலுள்ள மாற்றுக் கட்சி அரசாங்கம் மத்தியிலுள்ள
காங்கிரஸ் அரசாங்கத்திற்குச் சாதகமாக இல்லை என்று கருதினால்,
மாநில அவையையே வேண்டாம், மாற்றுக் கட்சி அரசாங்கமே
வேண்டாம் என்று அதைக் கலைப்பதற்குரிய வகையிலேகூட செயல்
படுவதற்கு, இப்பொழுது திருநெல்வேலி நகராட்சியைக் கலைக்கும்
படியான ஒரு செயல் அடிப்படையாக இருக்கிறது" என்று
நான் அப்போதே சொன்னேன். " It is a complete destruction and
murder of democracy " என்று நான் அப்பொழுது சொன்னேன்.
அப்பொழுது முதலமைச்சராக இருந்தவர் கோபமாகக்கூடப்
பாய்ந்தார்கள். இதையெல்லாம் எதற்காகச் சொல்லுகிறேன்
என்றால், அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் அளவிற்கு
அன்றைக்கு அரசாங்கம் நடந்துகொண்டது என்பதற்காகத்தான்.
இப்பொழுது திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பதை
நான் மிகமிகப் பாராட்டுகிறேன். இந்த அமைச்சரவை பதவி
யேற்றுக் கொண்டவுடனேயே, இவ்வளவு குறுகிய நேரத்திலேயே,
நம் எல்லோருடைய மனத்திலும் நினைத்துக் கொண்டிருக்கும்
ஒரு காரியத்தைக் குறித்து, நல்லதொரு திருத்தத்தைக் கொண்டு
வந்திருக்கும் அமைச்சரவையை நான் பாராட்டக் கடமைப்
பட்டிருக்கிறேன். நண்பர்கள் திரு. விநாயகம் அவர்களும்,
திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் இதை ஏற்றுக்கொள்ளு
வார்கள் என்ற நம்பிக்கையில் என்னுடைய உரையை முடிக்
கிறேன்.



1967 மார்ச் 28]

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** டாக்டர் ஹாண்டே
அவர்கள் தமிழில் பேசியது மிகவும் சிறப்பாக இருக்கிறது என்று
கூறி அவரை நான் பாராட்டுகிறேன்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்ணாண்டோ : மதிப்பிற்குரிய சட்ட
மன்றத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1967-ம் ஆண்டு மாவட்ட
நகராட்சிகள் (திருத்த) மசோதாவை வரவேற்றுப் பேசுவதற்கு
எனக்குச் சந்தர்ப்பம் அளித்தமைக்குத் தங்களுக்கு நான்
முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நெல்லை நகராட்சியைப் பொறுத்த வரையில், அந்த நகராட்சி
நல்ல முறையில் இயங்கி வந்தாலுங்கூட, முன்னாலே இருந்த
காங்கிரஸ் அரசாங்கம், கட்சிக் கண்ணோட்டத்துடன் அந்நகராட்
சியைக் கலைத்திருக்கிறதே தவிர, வேறு எந்தக் காரணமும் இல்லை
என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் ஆகும்.
காரணம் என்னவென்றால், நெல்லை நகராட்சிப் பொறுப்பை
திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொண்ட பின், அங்கே
நல்ல முறையில் அது ஆட்சி நடத்தி வந்தது. காங்கிரஸ்
அரசாங்கம் அந்த நகராட்சியைக் கலைப்பதற்கான பல காரணங்
களில், அநேக கூட்டங்கள் ஒழுங்கான முறையில் நடைபெறவில்லை
என்பதையும் ஒரு காரணமாகக் காட்டியிருந்தார்கள். பல
கூட்டங்களில் போதுமான 'கோரம்' இருந்தாலும் அந்தக்
கூட்டம் நடத்தப்படாமல் இருந்தது என்பதை ஒரு குற்றச்
சாட்டாகக் காட்டியிருந்தார்கள். என்னைப் பொறுத்த வரையில்,
நான் இந்த—மன்றத்திற்கு ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன்.
குற்றச்சாட்டுக்குச் சம்பந்தப்பட்ட ஒரு கூட்டத்திற்குச் செல்ல
வேண்டிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்தக் கூட்டத்
திற்குச் சென்றிருந்த நேரத்தில், மாநகராட்சித் தலைவர் இல்லை;
உப தலைவரும் இல்லை. மாவட்ட நகராட்சிச் சட்டத்தின் கீழ்,
எப்போதுமே நகராட்சித் தலைவர் கூட்டத்திற்குத் தலைமை தாங்க
வேண்டும்; தலைவர் இல்லாத நேரத்தில் உப தலைவர் தலைமை
தாங்கவேண்டும்; இருவரும் இல்லாத நேரத்தில் தலைவரால்
நியமனம் செய்யப்பட்ட ஒரு அங்கத்தினர் அந்தக் கூட்டத்திற்குத்
தலைமை தாங்கவேண்டும் என்பது விதியாகும். ஆனால், அந்தக்
கூட்டத்தைப் பொறுத்த மட்டில், தலைவரும் வரவில்லை; உப
தலைவரும் வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. தலைவர் அவர்கள்
கூட ஒரு உறுப்பினரைத் தலைமை தாங்க நியமனம் செய்ய
முடியாமல் போய்விட்டது. அந்த நேரத்தில் போதுமான
'கோரம்' இருந்தாலுங்கூட, காங்கிரஸ் நண்பர்கள் ஒருவரைத்
தலைமை தாங்க வேண்டும் என்று பிரேரணை செய்தார்கள். ஒருவர்
வழிமொழிந்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த
நண்பர் ஒருவர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த
உறுப்பினர் ஒருவர் தலைமை தாங்க வேண்டும் என்று பிரேரணை
செய்ய, இன்னொருவர் வழிமொழிந்தார். என்றாலுங்கூட,
இப்பேர்ப்பட்ட தேர்தலை [illegible]
சட்டத்திலே தெளிவாகக் குறிப்பிடப்படாதிருந்த காரணத்தால்,

[திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்ணண்டோ] [1967 மார்ச் 28

இத்தகைய நிலைமைகளுக்குச் சட்டத்திலே போதுமான இடம் இல்லாத காரணத்தால், அங்கே குழப்பம் விளைந்தது. போதுமான 'கோரம்' இருந்தாலும், கூட்டம் நடைபெற முடியாமல் போய்விட்டது. இப்படி ஒருசில காரணங்களைக் காட்டி, நெல்லை நகராட்சி மன்றத்தைச் சென்ற காங்கிரஸ் அரசாங்கம் கலைத்திருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே உள்ளவர்கள் அனைவரும் அறிவார்கள். என்றாலும், இந்த அடிப்படையில் பார்த்தால், பல நகராட்சிகள் கலைக்கப்பட வேண்டியிருக்கும் என்று நான் உறுதியாகக் கூறிக்கொள்ளுவேன். நெல்லை மாவட்டத்தில் பாளையங்கோட்டை நகராட்சி, மேலப்பாளையம் நகராட்சி, தூத்துக்குடி நகராட்சி ஆகியவை கலைக்கப்பட்டிருக்கவேண்டும். அவை கலைக்கப்படுவதை நான் விரும்பவில்லை என்றாலும், திருநெல்வேலி நகராட்சியைக் கலைத்த அதே அரசாங்கம், அதே காரணங்களுக்காக, நெல்லை மாவட்டத்திலுள்ள பல நகராட்சிகளைக் கலைக்க வேண்டும் என்றால், இப்படிப்பட்ட நகராட்சிகளைக் கலைத்திருக்கலாம். நான் பாளையங்கோட்டை நகர மன்ற உறுப்பினராக இருக்கிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. எ. எல். சுப்பிரமணியம் அவர்களும் நகர மன்ற உறுப்பினராக இருக்கிறார்கள். பாளையங்கோட்டை நகராட்சி மன்றத்தில் நடந்த பல ஊழல்களைக் குறிப்பிட்டு, இதற்கு முன்னால் ஆட்சியில் இருந்த அரசாங்கத்திற்கு நான் பல முறை எடுத்துச்சொல்லியும், அந்த அரசாங்கம் அதன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அது மாத்திரமல்ல, பக்கத்தில் இருக்கும் மேலப்பாளையம் நகரசபையைப் பொறுத்த வரையில், அங்கிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அங்கே நடந்த பல ஊழல்களை அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லி ஆதாரபூர்வமாக விளக்கிக் காட்டியும் கூட, பழைய அரசாங்கம் அதன்மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இன்னும் சொல்லுவேன், மேலப்பாளையம் நகரசபைத் தலைவர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மூன்று நான்கு மன்ற உறுப்பினர்களைக் காரணமில்லாமல் மூன்று கூட்டங்களுக்கு வரவில்லை என்று தற்காலிகமாக நீக்கி வைத்திருந்தார். அந்த அளவிற்கு அராஜகம் நடந்திருந்தாலுங் கூட, சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அரசாங்கமும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் எதற்காக இதை எடுத்துச் சொல்லுகிறேன் என்றால், முன்னால் இருந்த காங்கிரஸ் அரசாங்கம், கட்சிக் கண்ணோட்டத்துடன், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இருந்த நெல்லை நகரசபையைக் கலைத்ததற்குப் போதுமான காரணம் காட்டவில்லை என்பதற்காகத்தான். அந்த அளவிலேதான், சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 41(ஏ) பிரிவின் கீழ் அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்த காரணத்தால், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, சென்ற அரசாங்கம் நெல்லை நகர சபையைக் கலைத்ததே தவிர, வேறு தகுந்த காரணங்கள் இல்லை. நகரசபையைக் கலைக்க அதே அரசாங்கத்திற்குத் தகுந்த காரணங்கள் கிடைத்தால், அல்லது கலைக்கப்பட்டது தவறு என்று தெரிந்தால், பழைய உத்தரவை



1967 மார்ச் 28] [திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்ணண்டோ]

திரும்பப் பெற்றுக்கொண்டு, உயிர் கொடுக்கக்கூடிய உரிமையும் அதே அரசாங்கத்திற்கு இருக்கவேண்டும் என்று நான் இந்த மன்றத்தின் முன்னாலே தெரிவிக்க ஆசைப்படுகிறேன். ஒரு மாநகராட்சி அல்லது ஒரு நகராட்சி அல்லது ஒரு பஞ்சாயத்து யூனியன் அல்லது ஒரு பஞ்சாயத்தைக் கலைக்கக்கூடிய அதிகாரம் பெற்றிருக்கக்கூடிய அதே அரசாங்கத்திற்கு மேற்கண்ட ஆட்சி மன்றங்களுக்குத் திரும்ப உயிர் கொடுத்து அவற்றை இயங்கச் செய்வதற்கான அதிகாரம் இருக்கவேண்டும் என்பதை நான் வலியுறுத்தி, திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்திருக்கும் இந்த அமைச்சரவையில் மதிப்பிற்குரிய சட்ட அமைச்சராக இருப்பவர் இந்த உரிமையை இந்த அரசாங்கத்திற்கு வழங்குவதற்குரிய ஒரு மசோதாவைக் கொண்டுவந்திருப்பதைக் குறித்து வரவேற்று, பேச எனக்குச் சந்தர்ப்பம் அளித்த சபாநாயகருக்கு நன்றி தெரிவித்து, உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* THIRU. T. MARTIN : Mr. Speaker, Sir, I oppose this Bill. While opposing, I adopt the reasons mentioned by the Deputy Leader of the Congress Legislature Party Mr. R. Ponnappa Nadar and I will give my own reasons also.

First of all, this brings to my mind a case which came up before the High Court in the year 1956 regarding a municipal council in the Tirunelveli District. In that municipal council, 'X' and 'Y' contested for the chairmanship. 'X' got success in the election and he became the chairman of that municipal council. 'Y' was unfortunately defeated. 'X' installed or put up electric lights in a particular street. But in the next election unfortunately 'X' was defeated and 'Y' was installed in power and he became the chairman. After he became the chairman, the first resolution that he got passed was for removing all the street lights put up by the erstwhile chairman 'X'. I wonder whether the State Government should be reduced to the position of the municipal council which came up for justice before the High Court in 1956. There are widespread newspaper reports and public talk that the present ministry is bringing forward this Amending Bill to invest the Government with the power for rescinding the orders of supersession of the municipal councils of Tirunelveli and Aruppukottai. Whatever may be the merits of the case regarding those two municipal councils, my submission is that the subject for discussion before this Honourable House is not the decisions taken by the previous Government.

My learned friend Mr. Hande mentioned that some strictures were passed by the High Court. With great respect to him, I submit that there were no strictures at all. The learned Judge only made some suggestions. There is a vital difference between strictures and suggestions that emanate from the Court. If my learned friend further reads the judgement, he will find that no strictures were passed. The learned Judge has given a pious wish or a suggestion regarding the sentence or punishment that the State Government gave to the Municipal Council.

[Thiru T. Martin] [28th March 1967

Under section 41 of the Madras District Municipalities Act, the State Government gives a notice informing them of the grounds for taking action, namely persistent failure to perform the duties imposed on it by law or gross abuse of the power conferred by the law. After taking into consideration the reply to the notice only, the State Government take action. When the State Government want to review or cancel that order, there should be some grounds, and that there should be some jurisdictional reasons why the present Government want to review or set aside the earlier order passed by the State Government. This Bill gives naked and unlimited power to the Government for setting aside the earlier supersession order. The Amending Bill does not prescribe the conditions under which the power could be exercised subsequent to the order of supersession. Supersession of a council is a drastic matter. It is a very important act. By supersession the State Government is virtually ousting the elected body in a particular locality. Having arrived at a responsible conclusion, the State Government issue the order of supersession. When that order is sought to be reviewed, should we not prescribe some conditions or reasons for exercising the power of review? My submission is that the Bill gives arbitrary and naked power, the exercise of which rests entirly upon the subjective satisfaction of the Government. The wording used is 'If, in the opinion of the State Government, it is necessary to do so, they may cancel any notification suerseding the council.' With great respect to those Members who spoke before me, I wish to remind them that the discussion is not about the validity of the earlier orders of the supersession of the municipal councils passed by the previous Government. The discussion is on the point whether this Bill should be passed into an Act or not. The purpose of bringing forward this Bill is to get rid of the earlier decisions of the previous Government which, I submit, will not be in the interest of the nation or the country. Section 41 itself amply provides for all the contingencies which would arise in the ordinary course of administration of a local authority. With these words I conclude my speech.

* திரு. சௌடி. எஸ். சுந்தர பாரதி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவின் மீது நான் பேச ஆரம்பிக்கையிலே இருக்கக்கூடிய ஒரு முக்கியமான அம்சத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்று கேட்டால் இந்தக் கலைப்பு உத்தரவின் பேரால் பாதிக்கப்பட்டவர்களில் இந்தக் கலைப்பு பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன் என்பதனால் வேண்டுமென்றே சில காரணங்களைச் சொல்கிறேன் என்று சிலர் நினைக்கலாம். போல எனக்கு முன்னால் பேசிய ஆளும் கட்சியில் உள்ளவர்கள் அதை பேசுகையிலே அருப்புக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய மன்றங்களைக் கலைத்தது தவறானதையால், அதைச் செயல்படுத்தாவதே நியாயம் என்று சொன்னார்கள். இன்றைக்கு எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய காங்கிரஸ் தாப்பிலே இருந்து 'பேசுகிறவர்கள் [illegible] இருந்தவர்கள் செய்த ஒரு காரியத்தை எதிர்க்கட்சியாக இருந்த ஒன்று, இன்று [illegible]



1967 மார்ச் 28] திரு. சௌடி. எஸ். சுந்தர பாரதி]

வேண்டுமென்றே மாற்றியமைக்கிறார்கள் என்று கருதலாம். இப்படி அவரவர்கள் தங்களுடைய சொந்த நலனுக்காக செய்வதாகக் கருதப்படும் இத்தகைய அபிப்பிராயங்களுக்கு மத்தியில், நாம் நம்முடைய கடமை என்னவென்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். இதில் பாரபட்சம் இல்லாத முறையில் இந்தத் திருத்த மசோதாவை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பதைக் கேட்டுக்கொள்கிறேன். நான் எந்தக் கருத்தைச் சொன்னாலும், பாதிக்கப்பட்டவன் என்ற முறையில் சொல்வதாக நினைக்காமல், பாரபட்சமற்ற கருத்தைச் சொல்வதாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்பொழுதுள்ள நகராட்சிச் சட்டம், 1920-லே உண்டாக்கப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட சட்டம். அவர்கள் நமக்கு ஏதோ சுயாட்சி முறையில், அதிகாரம் கொடுப்பதுபோல இதை ஏற்படுத்தினார்கள். சுயாட்சி செய்வதற்கு நமக்குத் திறமை இருக்கிறதா, பொறுப்போடு செயல்பட ஆற்றல் இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்வதற்கும், சுயாட்சியை நம்மிடையே ஏற்படுத்துவதற்கும் வாய்ப்பு அளிப்பதற்கு இந்தச் சட்டத்தைக் கொடுத்தார்கள் என்ற நிலை இருந்தது. தங்களுக்கு வேண்டிய ஒரு நோக்கில் இத்தகைய ஒரு நகராட்சி மன்றங்களை கலைத்து விடுவதற்கு அதிகாரம் இருக்க வேண்டுமென்று கருதி, இந்தச் சட்டத்திலேயே நகராட்சி மன்றங்களைக் கலைப்பதற்குரிய அதிகாரங்களையும் வகை செய்தார்கள். 'பொலிடிகல் வெப்பன்' ஆக அரசியல் காரணங்களை வைத்து இப்படி எந்த ஒரு நகராட்சியும் கலைக்கப்படுவதற்குரிய பிரிவை சட்டத்திலேயே செய்திருக்கிறார்கள். நாம் அன்னிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று ஜனநாயக முறையில் வளர்ச்சியடைந்து வருகின்ற இந்த நேரத்தில் அந்தச் சட்டத்தையே நல்ல முறையில் பரிசீலனை செய்து, ஸ்தல ஸ்தாபனங்களுக்கு மேலான அதிகாரத்தைக் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. அதற்கு அரசாங்கம் இப்பொழுது கொண்டு வந்திருக்கிற திருத்த மசோதா மட்டும் போதாது. இதைவிட, இந்த மூலச் சட்டத்தில் இருக்கக்கூடிய எல்லா அம்சங்களையும் பரிசீலனை செய்து அதையே மாற்றியமைக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். இப்போது ஸ்தல ஸ்தாபன கவுன்சில்கள் ஒரு 'அட்வைசரி பாடி' போல, யோசனை சொல்கின்ற ஸ்தாபனம் போல நடைமுறையில் இருக்கிறதே தவிர, திட்டவட்டமாக ஒரு காரியத்தை செய்ய வேண்டுமென்று நினைத்தால், அதைச் செய்ய இயலாத நிலை இருக்கிறது. ஜனநாயகப் பண்பை வளர்த்துக்கொண்டு வரக் கூடிய நாம் இன்னும் அதிகமான அதிகாரங்களை ஸ்தல ஸ்தாபனங்களுக்கு எவ்வாறு கொடுப்பது என்பதைப்பற்றி ஆலோசனை செய்து, இந்த மசோதாவையே மாற்றியமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள் இடையிலே குறுக்கிட்டுச் சொல் [illegible] நீதிமன்றத்தின் தீர்ப்பு இதை மறு பரிசீலனை செய்வது [illegible]

என்று இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இந்தத் திருத்த மசோதாவுக்கு ஆதாரமாக இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று, உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு. அதில் அரசாங்கம் இட்ட உத்தரவு இருக்கிறதே, அதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பும் இந்த திருத்த மசோதாவுக்குச் சாதகமாக இருக்கிறது. மக்களுடைய அரசாங்கம், தான் செய்கிற காரியங்களில் எதாவது தவறு நடந்து விட்டது என்று அறிந்தால், அதைத் திருத்திக் கொள்வதற்குரிய தைரியம் அந்த அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும். அந்தத் தைரியத்தோடு தான் செய்த தவறான காரியத்தைத் திருத்திக்கொள்ள அரசாங்கம் முன்வரவில்லையென்றால், ஹைகோர்ட் இருக்கிறது. அரசாங்கம் செய்தது தவறு என்பதை அது சுட்டிக்காட்ட முடியும். இப்படி உயர்நீதிமன்றம் மூலமாகவும், அரசாங்கம் தன்னுடைய தவறை உணர்ந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது. அதுபோலவே மக்கள் முன்னிலையில் அந்தப் பிரச்சினையை வைக்கலாம். தவறான காரியத்தை அரசாங்கம் செய்திருந்தால், மக்களே தீர்ப்புக் கூறிவிடுவார்கள். இந்த அடிப்படையில், இந்த நகராட்சி மன்றங்களைக் கலைத்தது சம்பந்தமாக, கடந்த பொதுத் தேர்தலிலே மக்கள் நல்ல தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள் என்பதை காங்கிரஸ் கட்சி நண்பர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் செய்த தவறை, அவர்களே திருத்திக் கொள்ளாது விட்டிருந்தாலும், அடுத்து வருகிறவர்கள் அந்தத் தவறைத் திருத்த முன்வரும்போது அதை எதிர்த்துப் பேசுவது நல்லதல்ல என்பதைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். குறிப்பாக, எனக்கு முன்பு பேசியவர்கள் இந்தத் திருத்த மசோதாவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற காலையில் சில வாதங்களைக் குறிப்பிட்டார்கள். ஒன்று, சட்ட சம்பிரதாயமாகச் சொன்னது. இந்தச் சட்டத்திலேயே இதைத் திருத்துவதற்கு இயலாது என்று ஒருவர் குறிப்பிட்டார். இரண்டாவதாக, இந்தச் சட்டத்தில், பின்னுக்குச் செல்லக்கூடிய ஒரு அதிகாரத்தை வழங்க இயலாது என்று குறிப்பிட்டார்கள். இந்த இரண்டு வாதங்களுமே ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு சட்டம் இயற்றும்போது, அந்தச் சட்டம் எந்தத் தேதியிலிருந்து அமலுக்கு வரும் என்பதை நிர்ணயிக்கும் போது, இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பாகவே இருந்து இயற்றப் பட்டதாக அதிகாரம் எடுத்துக்கொள்ளக்கூடிய நிலையை நாம் பார்க்கிறோம். ஆகவே, பின்னுக்குச் செல்லக்கூடிய அதிகாரத்தை வழங்க இயலாது என்கிற வாதம் சரியல்ல. அடுத்து ஒரு கவுன்சில் கலைக்கப்பட்ட பிறகு, அதே கவுன்சிலை நடைமுறைக்குக் கொண்டு வருவது சட்ட விரோதமாக இருக்குமென்று சொன்னார்கள். 'சூபர் ஸீட்' ஆர்டர் என்பது ஒரு கவுன்சில் எந்த வகையில் செயல்பட்டுக் கொண்டு வருகிறதோ, அந்த வகையில் செயல்படுத்த முடியாமல் தடைப்படுத்தும் ஒன்றுதான். அது



எந்த வகையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில் மெம்பர்களுடைய பதவிக் காலத்தை எடுத்துவிடாது என்பது என் கருத்து.

மூன்று வருட காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்களுடைய பதவிக் காலம் இருக்கிறது. இடைக்காலத்தில் அரசாங்கம் கவுன்சிலைக் கலைக்கலாமே தவிர, மறு தேர்தல் வரை அந்தக் கவுன்சிலர்களுடைய பதவிக் காலத்தை எடுத்துவிட முடியாது என்பது என் கருத்து. அரசாங்கம் கவுன்சிலைக் கலைக்க உத்தரவு போடுகிறார்கள். அதை எதிர்த்து ஹைகோர்ட் கவுன்சிலை கலைத்தது தப்பு என்று தீர்ப்பு வழங்கிவிட்டால், அப்போது அதன் நிலை என்ன? அந்தக் கவுன்சில் மீண்டும் தொடர்ந்து இயங்க ஆரம்பிக்கிறது. அதேபோலத்தான் இப்போதும் அந்தக் கவுன்சிலில் பதவிக் காலம் முடியும் வரையிலும் இந்த மசோதாவின் மூலம் இயங்க வைக்க முடியும் என்பது நிலை. அருப்புக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய நகராட்சி மன்றங்களைக் கலைத்ததற்குக் காரணங்கள் என்ன என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். சில காரணங்களை நீங்கள் கேட்டால், உண்மையிலேயே உங்களுக்கு வியப்பாக இருக்கும். முன்பிருந்த அரசாங்கம், இந்த அவையில் அதற்கான காரணங்களைச் சொல்லியிருக்கலாம். நகரசபைகள் அவற்றிற்கு என்ன பதில் அளித்தன என்பதையும் சொல்லியிருந்தால், நன்றாக இருந்திருக்கும். நான் இந்த நேரத்தில் அந்த நகரசபைகளைக் கலைத்ததற்கான காரணங்கள் எல்லாவற்றையும் சொல்லாவிட்டாலும், ஒன்றிரண்டைச் சொல்கிறேன். அந்தக் காரணங்களுக்கு மாநகராட்சி மன்றங்கள் அனுப்பிய பதிலையும் சொல்லிக் கொள்கிறேன். அருப்புக்கோட்டை நகராட்சியைப் பொறுத்தவரையில் குற்றச்சாட்டும், பதில்களும் எனக்கு நன்றாகத் தெரியும். அந்த நகராட்சி கவுன்சிலை ஏன் கலைக்கக்கூடாது என்பதற்கு ஒரு காரணம், 'பப்ளிக் ஹெல்த் டூல் ஷெட்' சரியான முறையில் செப்பனிடப் படவில்லை என்பதாகும். அதற்கு அந்த நகராட்சி மன்றம் கொடுத்த பதில், 'அந்த ஷெட் இருக்கிறது என்பது உண்மை. ஆனால் இந்த ஷெட்டில் இதுவரை எந்தவிதமான ரிப்பேரும் இல்லை. அது நல்ல முறையிலேயே இருக்கிறது. வேண்டுமானால் நீங்களோ, அல்லது மாவட்ட ஆட்சி அதிகாரியையோ அனுப்பிப் பார்வையிட்டால் தெரியும்' என்பதாகும்.

இரண்டாவது காரணம், அங்கே ஒரு 'மெட்டர்னிடி சென்டர்' இருக்கிறது. அதற்கு ஒரு பாயும் தலைகாணியும் வாங்கித் தரவில்லை' என்பதாகும். அந்த மெட்டர்னிடி சென்டர் ஏற்படுத்தப்பட்ட 18 வருடங்களாகவே அங்கே எந்தவிதமான பாயும் தலைகாணியும் வாங்கித் தந்ததில்லை. ஆனால், புதிதாக மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் நகரசபை பொறுப்புக்கு வந்தவுடன் இதை ஒரு காரணமாகச் சொல்லிக் கலைக்க முன் வந்தார்கள். தாய்மார்கள் அங்கே தங்கி சிகிச்சை பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட நிலையம் அல்ல அது. வெளியிலிருந்து வருவார்கள்;

சிகிச்சை பெற்றுக்கொண்டு போய்விடுவார்கள். அல்லது அங்குள்ள அதிகாரிகள் கூப்பிடுகிறவர்களின் வீட்டிற்கே சென்று தாய்மார்களுக்குச் சிகிச்சை செய்து வருவார்கள். இதைப்போலவே, இன்னொரு குற்றம். "அருப்புக்கோட்டையில் இருக்கக்கூடிய 'சானிடரி டிவிஷன்கள்' போதாது, புதிதாக ஒன்றைத் திறப்பது நல்லது" என்பது அந்த நகராட்சி மன்றத்தின் யோசனை. அதற்காக அந்த வருஷத்தில் 'பட்ஜெட் ப்ரொவிஷன்' ஒன்றும் செய்யவில்லை. ஆயினும், இந்த முடிவிற்கு நகராட்சி மன்றம் வந்தபோது அந்த நிதியாண்டில் நான்கு மாதங்களே மீதி இருந்தன. அடுத்த நிதியாண்டில் போதுமான ப்ரொவிஷன் செய்து கொள்ளலாம் என்பதாக நினைத்து இருக்கக்கூடிய டேபிள், மேஜை முதலியவற்றையே வைத்துக்கொண்டு ஒரு புதிய சானிடரி டிவிஷனை ஏற்படுத்தினார்கள்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு நம்முடைய சட்டசபை விதிகள் 95-வது பிரிவைக் கொண்டுவர விரும்புகிறேன்.

'At the second reading, the principle of the Bill and its general provisions may be discussed but not the details.'

இப்போது அவைமுன் இருக்கப்பட்ட திருத்த மசோதா இரண்டாவது வாசிப்புக் கட்டத்தில் இருக்கிறது.
மு.ப. 10-30 நேரத்தில் திருத்த மசோதாவைப் பற்றிப் பொதுப்படையாக மாண்புமிகு உறுப்பினர் பேச வேண்டுமே தவிர, மேஜை, நாற்காலி தலைகாணி-பாய் என்றெல்லாம் விவரங்களுக்குப் போகக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சௌடி. எஸ். சுந்தர பாரதி:** கனம் சபாநாயகர் அவர்களே, நான் எதற்காக அதைக் குறிப்பிட்டேன் என்றால், இத்தகைய காரணங்களுக்காக நகரசபைகள் கலைப்பட்டு இருந்தால், நான் குறிப்பிட்ட காரணங்களுக்காகக் கலைத்திருந்தால், அது தவறு அல்லவா என்பதை யோசிக்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் குறிப்பிட்டேன். இதற்கு முன்னாலே ஒரு அரசாங்கம் செய்த தவறைத் திருத்த முன்வந்ததற்காக நான் இந்த அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். இந்தத் திருத்தத்தை நிறைவேற்றுவதோடு மட்டுமல்லாமல், நகராட்சிச் சட்டத்தை முழுவதுமே மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ம. பொ. சிவஞானம்:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாபற்றிப் புதிதாக நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை, என்றாலும், இந்த மசோதாவின் தார்மீகத் தன்மையை வரவேற்கக் கடமைப்பட்டவர்களில் நானும் ஒருவன் என்ற முறையிலே—இந்த விவாதத்திலே கலந்து



கொள்ளுகின்றவர்களின் பட்டியலிலே என் பெயர் சேர்த்துக் கொள்ளப்படுவது குறித்து பெருமையடைவதிலே நான் முன் நிற்கிறேன். சாதாரணமாக, ஒரு ஆட்சி, அதற்கு வேண்டாத எதையும் அழிப்பதற்குத்தான் முதலிலே வழி தேடி வைத்துக் கொள்ளும். இதற்கு முன்பு இருந்த அரசாங்கம் அப்படித்தான் கார்ப்பரேஷனைக் கலைப்பதற்கு வழியைத் தேடி வைத்துக்கொண்டு, உபயோகப்படுத்தாமல் வைத்துக்கொண்டிருந்தது. இந்த மசோதா, அழிக்கப்பட்ட ஒன்றை ஆக்குவதற்கு என்று கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தப் பண்பாடுதான் எனக்குக் கவர்ச்சிகரமாக இருந்தது. அதனாலேதான் நான் இதை வரவேற்றுப் பேசுகிறேன். நீதிமன்றங்களிலே அளிக்கப்பட்ட தீர்ப்பை நிறைவேற்றாமல் இருப்பதற்குத்தான் இதுவரை மசோதாக்கள் வந்தன. ஆனால், தீர்ப்பிலே உள்ள ஒரு பகுதியை ஏற்க இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இதிலே உள்ள இரண்டாவது அம்சம் என்னவென்றால், ஒரு கட்சியினுடைய ஆட்சி மாறி இன்னொரு கட்சியினுடைய ஆட்சி வந்திருக்கிறது. முன்னாலே இருந்த ஆட்சியினர் கொண்டுவந்த சட்டத் திட்டங்களிலுள்ள வேற்றுமைகளைப் புதிதாக ஆட்சியை ஏற்றுக்கொண்டவர்கள் மாற்றுவதிலே ஒன்றும் வியப்பில்லை, அதுதான் ஜனநாயக முறை. அப்படி வேற்றுமைகள் இருந்ததின் காரணமாகத்தான் மக்களுடைய விருப்பத்திற்கு மாறுபட்டவைகளாய் முன்பிருந்த ஆட்சியினருடைய திட்டங்கள், கொள்கைகள் இருந்ததால்தான்—அவற்றை மாற்றவேண்டுமென்ற நோக்கத்துடன் மக்கள் ஆட்சியை மாற்றியிருக்கிறார்கள். ஆட்சிக்கு வந்தவர்கள் அந்தகைய வேற்றுமைகளை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். மக்களுடைய விருப்பத்திற்கு மாறாகச் சட்டத்திட்டங்கள் இருந்தால், அந்த ஆட்சி மாற்றப்படுகிறது என்பதைக் கண்டோம். அந்த மாற்றம் புரட்சிகரமான ஒரு மாற்றம். அந்த அடிப்படையிலேதான் இன்று இந்த திருத்த மசோதா கொண்டுவரப்படுகிறது. முன்பு இருந்த அரசாங்கத்தினர் ஒன்றைக் கொலை செய்வதற்காக சட்டங்களைத் தயார்படுத்தி வைத்துக்கொண்டார்கள். ஆனால், இன்று ஆட்சியிலே உள்ளவர்கள் கொல்லப்பட்ட ஒன்றை உயிர்ப்பிப்பதற்காகச் சட்டம் தயாரித்திருக்கிறார்கள். இந்த முனிசிபாலிடிஸ் சட்டம் ரொம்ப காலத்திற்கு முன்னாலேயே இயற்றப்பட்டது. அதிலே ஒரு புதிய பலத்தை இப்பொழுது சேர்த்து வைத்துக்கொள்வதிலே தவறு ஒன்றும் இல்லை. இந்த மசோதா திருத்தப்படவேண்டிய காலத்தில்தான் திருத்தப்படுகிறது. எனவே நான் இதை வரவேற்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** அடுத்து, திரு. கோதண்டராமன் அவர்கள் பேசுவார்கள். அவர்களுடைய கட்சியின் சார்பில் யாரும் பேசவில்லை, என்றாலும் அவர்கள் சுருக்கமாகவே பேச வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** தலைவர் அவர்களே, நகராட்சிகளின் திருத்த மசோதாவைப்பற்றி ஆதரித்துப் பேச விரும்புகிறேன். இந்தச் சிறிய திருத்தத்தைக் கொண்டு வருவதின் மூலம்

அந்த அளவுக்கு எல்லாவிதக் குறைபாடுகளையும் போக்கிவிட்டதாக
நாம் கொள்ளமுடியாது. 1957-லே, 1962-லே இந்த நகராட்சிச்
சட்டங்களை மாற்றியமைக்கவேண்டுமென்பதற்காக ஒரு கமிட்டி
போட்டு, பிறகு அந்த நடவடிக்கையைக் கைவிட்டு விட்டார்கள்.
அது கொண்டுவரப்படவில்லை. அந்தச் சட்டம் முழுவதையும்
மாற்றியமைக்கவேண்டுமென்பதை நான் உங்களுடைய கவனத்
திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக, தேர்தலுக்கு
சற்று முன்புதான் நகரசபைகளைக் கலைக்கும் உத்திரவு போடப்
பட்டது. தேர்தலுக்கு முன்பு மட்டுமல்ல, தேர்தல் காலத்திலே
கூட பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன என்பது நமக்குத்
தெரிந்த விஷயம். இது செத்துப்போன விஷயம். இதை
ஏன் எடுத்துக் கொள்ள வேண்டும், என்று காங்கிரஸ்
நண்பர்கள் கூறக்கூடிய அளவுக்கு, நாங்கள் அதைச்
சாகடித்தோம், அதைக் கொலை செய்தோம் என்ற முறையிலே
மறைமுகமாக அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலேதான்
தெரிவித்தார்கள். அவர்கள் கொலை செய்துவிட்டார்கள், அதை
இப்பொழுது திருத்தியமைக்க முன்வந்திருக்கும்பொழுது அதை
மாற்றியமைத்ததற்காகப் பாராட்டிப் பேசியிருக்கவேண்டும்.
திருநெல்வேலி நகரசபை, அறுப்புக்கோட்டை நகரசபை இவற்
றிற்கு அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய சார்ஜஸ், அதாவது
காரணங்களைப்பற்றி யோசிக்கவேண்டும். திரு. சௌடி. சுந்தர
பாரதி அவர்கள் சொன்ன காரணம் நகரசபைக்குக் கொடுத்த
காரணம். நகரசபைக் கூட்டங்கள் ஒழுங்கான முறையில் நடக்க
வில்லை, கோரம் இல்லாத அளவுக்குப் போய் இருக்கிறது.
அப்பாய்ன்மெண்ட் கமிட்டி, கான்ட்ராக்ட் கமிட்டி இவை சரியான
முறையில் கூட்டப்படவில்லை. ஒழுங்கீனங்கள் நடந்து இருக்
கின்றன. இதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். கோரம் இல்லாமல்
எத்தனை நகரசபைகள் நடக்கவில்லை? அது மாத்திரம் அல்ல.
ஒழுங்கற்ற முறையிலே எப்படியெல்லாம் பேசியிருக்கிறார்களென்று
நாம் பத்திரிகையிலே பார்த்திருக்கிறோம். கோரம் இல்லாத நகர
சபை என்று சொல்கிற நேரத்திலே பார்லிமெண்ட்டை எடுத்துக்
கொண்டால், அதைக்கூட அடிக்கடி கலைக்கக்கூடிய நிலைமை
ஏற்படும். எத்தனை தடவைகள் பார்லிமெண்ட் கோரம் இல்லாமல்
நிறுத்திவைக்கப்பட்டது, ஒத்துவைக்கப்பட்டது என்பதைப்
பார்க்கிறோம். ஆகவே, இந்த மாதிரிக் காரணங்களைக் காட்டி
நகரசபையைக் கொலைசெய்யக்கூடிய அளவுக்கு உத்திரவு
இருப்பதை திருத்துவது மிகவும் அவசியம். இந்தத் தேர்தல்
நேரத்தில், நகரசபை அதிகாரிகள் பொறுத்தவரையில் ஒரு தேர்ட்
கிரேட் கமிஷனரை ஃபர்ஸ்ட் கிரேட் கமிஷனராக மாற்றி மார்ச்
மாதம் முதல் தேதியன்று இருந்து அவர் சார்ஜ் எடுத்திருக்கிறார்.
இப்படிப்பட்ட பல விஷயங்கள் நடந்திருக்கின்றன, இதையெல்லாம்
துருவித்துருவிப் பார்க்க வேண்டும். மூன்றாவது கிரேட் கமிஷன
ரான நான் கெஸடெட் ஆபீசர் ஒருவரை இரண்டாவது கிரேட்
கமிஷனராக மாற்ற வேண்டுமானால், சர்வீஸ் கமிஷனைக் கேட்டு



அதனுடைய ஆலோசனைக்குப் பிறகுதான் கெஸடெட் அதிகாரியாக
மாற்றியாகவேண்டும். அப்படியில்லாமல் செய்திருக்கிறார்கள். இது
போன்று எத்தனையோ இருக்கின்றன. திருத்த மசோதாவைக்
கொண்டுவருகின்ற நேரத்தில், அவர்கள் அதையும் கவனிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற சம்பவங்
களுக்குக் கொஞ்சமும் இடம் கொடுக்காமல் கவனம் செலுத்த
வேண்டும். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள்,
பஞ்சாயத்து யூனியன்களைக் கலைக்கவில்லையா, பஞ்சாயத்துப்
போர்டுகளைக் கலைக்கவில்லையா என்று. ஆகவே, நகரசபை
மாத்திரம் அல்ல, பஞ்சாயத்து யூனியன்களையும், பஞ்சாயத்து
போர்டுகளையும் கையாடல் தவறு, ஒழுங்கற்ற முறையிலே நடந்த
தவறு, இவை தவிர மற்றவை எவை இருந்தால் அவைகளை
மீண்டும் இயங்கச் செய்யக்கூடிய அளவுக்குத் திருத்தங்கள்
கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் திருத்
தத்தை ஆதரித்து என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்
கிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத்
தலைவர் அவர்களே, இப்போது அவை முன்னாலே வைக்கப்பட்
டிருக்கின்ற திருத்த மசோதா ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு
விட்ட ஒரு அக்கிரமத்தைத் திருத்துவதற்காகக் கொண்டு வரப்
பட்டிருப்பதாகும். முன்னாலே இருந்த ஆட்சியினருக்குக் கறை
ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு அல்ல; அவர்கள் பேரில்
அவர்கள் செய்த நடவடிக்கையால் ஏற்பட்ட கறையை துடைப்
பதற்காகத்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

திருநெல்வேலி நகராட்சி மன்றமும், அதைப்போல் வேறு பல
நகராட்சி மன்றங்களும் தங்களுடைய வேலைகளைச் சரிவரச் செய்ய
முடியவில்லை என்ற காரணத்தைக் காட்டி அவை எல்லாம் கலைக்கப்
பட்டன. அவைகள் கலைக்கப்பட்ட நேரத்தில், இந்த அவையில்
எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்த திராவிட முன்னேற்றக் கழகத்
தோழர்களும், வேறு கட்சியைச் சார்ந்தவர்களும், "இது ஜன
நாயகத்திற்கு மிகவும் கேடு செய்கின்ற நடவடிக்கை ஆகும்;
உள்ளாட்சி மன்றங்களை வாழவிடாமல் தடுக்கின்ற நடவடிக்கை
ஆகும்; அரசியல் ஆதிக்கத்தை எல்லாத் துறையிலும் புகுத்த
வேண்டுமென்ற அடிப்படையில் அமைந்தது ஆகும்; இந்த விதத்
தில் செய்யப்படுவது தவறான போக்கு" என்றெல்லாம் வாதிட்டிருக்
கிறார்கள். அப்படி வாதிட்டிருப்பது மட்டுமல்லாமல், திருநெல்
வேலி நகராட்சி மன்றம் கலைக்கப்பட்டதற்கு என்ன காரணங்கள்
சொல்லப்பட்டனவோ, அந்தக் காரணங்களைவிட மிகக் கடுமை
யானதும், மிக மோசமானதுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த
நகராட்சிகள் ஆளுகின்ற கட்சியை ஆதரிக்கின்ற காரணத்தால்,
கலைக்கப்படாமல் இருந்த நகராட்சிகள் பற்றி எல்லாம் மதிப்பு
மிக்க நண்பர் கருணாநிதி அவர்கள் இந்த மன்றத்திலே எடுத்துப்
பேசியிருக்கிறார்கள். இவற்றை எல்லாம் ஆளும் கட்சியினர்
காதிலே போட்டுக் கொள்ளாதது மட்டுமல்லாமல், திருநெல்வேலி

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 28

நகராட்சி மன்றத்தினர் வழக்கு தொடுத்த நேரத்திலே அந்த வழக்கிலே முதலிலே திருநெல்வேலி நகராட்சியைக் கலைத்தது தவறு என்று தீர்ப்புக் கொடுத்ததற்குப் பிறகு அப்பீலுக்குச் சென்றார்கள். இப்போது இங்கு பெரிய திரு. பொன்னப்ப நாடார் அவர்கள், "ஹைகோர்ட்டில் முடிவாகி விட்ட பிறகு நீங்கள் அதிலிருந்து மாறுவதற்காக அல்லது விலகுவதற் காக, அல்லது தப்பித்துக் கொள்வதற்காக ஒரு புதிய சட்டத்தை உருவாக்கினால், அது நீதியையே ஒரு பக்கத்திலே திருப்பி விடுவ தாகாதா" என்று கேட்டார்கள். ஹைகோர்ட்டினுடைய தீர்ப்புக்கு நாங்கள் தலைவணங்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் கடைசி நீதிமன்றம் பொதுமக்கள்தான் என்பதை நாம் யாரும் மறந்து விடுவதற்கில்லை. கடைசி நீதிமன்றத்திலே என்ன தீர்ப்பு அளிக்கப் பட்டது என்பதைப் பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் வெகு உருக்கமாக எடுத்துச் சொன்னார்கள். பொதுமக்கள்தான் கடைசி நீதிமன்றம் என்பதை ஏற்றுக் கொள்ளுகின்ற நேரத்தில் பொது மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் இருக் கின்ற சட்டமன்றம், பொதுமக்கள் சார்பில் கடைசி நீதி மன்றமாக அமையும். ஆகையினால் இந்த மசோதா நீதி வழங்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட மசோதாவே தவிர, அளிக்கப்பட்ட தீர்ப்புக் களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகக் கொண்டு வரப் பட்டது அல்ல.

நாம் ரொம்ப நாட்களாக தவறான ஒரு கருத்தை மனத்திலே வைத்திருக்கிறோம். தீர்ப்பு என்றாலே நியாயந்தான் என்று எண்ணிக்கொள்கிறோம். தீர்ப்பு என்பதே நியாயமாக இருக்கு மானால், ஒரு கோர்ட்டால் அளிக்கப்பட்ட தீர்ப்பும் அதற்கு மேல் கோர்ட்டில் அளிக்கப்படும் தீர்ப்பும் ஒரே விதமாக இருக்க வேண்டும்; ஐம்பது வருஷங்களுக்கு முன்பு அளிக்கப்பட்ட தீர்ப்புக்கும், அறுபது வருஷங்களுக்கு முன்பு அளிக்கப்பட்ட தீர்ப்புகளுக்கும் மாறுபாடுகள் இருக்க நியாயமில்லை. ஏனென்றால் நீதி என்பது நிலையானது. ஆகையினால், தீர்ப்பு என்பது அந்த நேரத்தில் நீதிமன்றத்திற்குத் தரப்பட்டிருக்கின்ற தகவல்கள் அடிப்படையில் அவர்கள் எடுக்கின்ற முடிவே தவிர, அதுதான் நீதி, அதற்கப்பாலே நீதி கிடையாது என்று நம்மை நாமே குழப்பிக் கொள்ளக் கூடாது. ஆகையினால் இந்த மசோதாவுக்கும், ஹைகோர்ட்டில் அளிக்கப்பட்ட தீர்ப்புக்கும் முரண்பாடு இருக் கிறது என்றோ, தீர்ப்பை மீறிச் செல்லுகிறோம் என்றோ யாரும் கருதுவதற்கில்லை என்பதைத் திரு. பொன்னப்ப நாடார் அவர் களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு கருத்தும் வாதிக்கப்பட்டது. 'முன்னாலே இருந்த சர்க்கார் செய்ததை எல்லாம் மாற்றுவது என்று தீர்மானித்து விட்டீர்களா?' என்று வாதிடப்பட்டது. இரண்டு நாளைக்கு முன்னாலே, ஏற்கனவே இருந்த சர்க்கார் செய்ததைத்தான் செய்கி றோம் என்று சொல்லும்போது அதையேதான் செய்ய வேண்டுமா என்று வாதிக்கப்பட்டது. இதிலிருந்து, என்னுடைய நண்பர்கள்



1967 மார்ச் 28] [திரு. சி. என். அண்ணாதுரை]

என்ன குற்றம் சுமத்துவது என்று தெரியாமல் கொஞ்சம் திகைப்பில் இருக்கிறார்கள் என்பது விளங்குகிறதே தவிர, மற்றபடி ஒன்றுமில்லை. மாற்ற வேண்டியது எது, மாற்றப்பட வேண்டாதது எது, என்று அறிந்து கொள்ளுகின்ற வேளையிலே ஒரு பக்தர் ஆண்டவனுக்கு வேண்டிகொள் விடுத்தார். அப்பாதிரி நான் உங்க ளிடத்தில் கேட்டுக்கொள்வது, நாங்கள் ஒன்றை மாற்றுகின்ற நேரத்தில் நீங்கள், முன்னாலே இருந்தவர்கள் செய்ததை மாற்று வது என்று எண்ணிக் கொள்ளாமல், மாற்றப்படத்தக்கதா என்பதை மட்டும் ஆராயவேண்டுமென்று கருதுகிறேன். அந்த நேரத்தில் திருநெல்வேலி நகராட்சி மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது என்பதை மறந்து விடுங்கள். அந்த நகராட்சி மன்றத்தைக் கலைக்க வேண்டுமென்ற நடவடிக் கையில் ஈடுபட்டவர்கள் காங்கிரஸ் ஆசிரியர் என்பதைக் கூட மறந்து விடுங்கள். ஒரு நகராட்சி மன்றத்தைக் கலைப்பதற்கும் போதுமான காரணங்களோடு, திருநெல்வேலி நகராட்சி மன்றம் கலைக்கப்பட்டதா என்பதைப்பற்றி இங்கே உட்கார்ந்து என்னை எதிரில் வைத்துக் கொண்டு தீர்ப்பளிப்பது கொஞ்சம் கடினமாக இருந்தால், பிற்பகல் நீங்களே யோசித்துப் பாருங்கள். திருநெல் வேலி நகராட்சி மன்றத்தின் பேரில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டு என்னவென்றால் அது தன்னுடைய நடவடிக்கைகளைச் செம்மையாக நடத்திக்கொண்டு செல்ல முடியவில்லை என்று காட்டப்பட்டது. முனிசிபாலிடிகள் என்னென்ன நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டு மென்பது முனிசிபாலிடி சட்டத்தின்படி பார்ப்பீர்களானால், என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதிலே மிக முக்கியமானவை—

'Duty to maintain water supply, drainage, scavenging, tax collecting and spending'.

இவைகளைச் செய்வதிலே ஒரு முனிசிபாலிடி குந்தகம் ஏற்படுத்தி யிருக்குமானால், அதைக் கலைக்க வேண்டுமென்று சொல்வீர் களானால், அது நியாயத்தின் அடிப்படையில் நடந்தது என்று சொல்லலாம்.

மிகப் பெரிய குற்றச்சாட்டாக திருநெல்வேலி முனிசிபாலிடி யின் மீது சாட்டப்பட்டது அதனுடைய கூட்டங்கள் ஒழுங்காக நடக்கவில்லை என்பது. இந்த மன்றத்தில் நிரம்ப வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள், இரண்டு தரப்பிலும். முனிசிபாலிடி கூட்டம் குழப்பம் இன்றி நடந்து தீரவேண்டும்; அப்போதுதான் அந்த முனிசிபல் நிர்வாகம் அல்லது முனிசிபாலிடி கலைக்கப்படாமல் இருக்க வேண்டுமென்றால், குழப்பம் நேரிட்டால் முனிசிபல் சேர்மன் என்ன செய்யலாம் என்ற விதிகள் முனிசிபல் சட்டத்தில் இருக்க நியாயம் இல்லை. முனிசிபல் கூட்டங்களில் சிற்சில வேளை களில் வேண்டுமென்றே குழப்பத்தை உண்டாக்கினால், குழப்பம் செய்கின்றவர்களை வெளியேற்றலாம் என்ற அதிகாரம் முனிசிபல் நகராட்சி மன்றத் தலைவருக்கு அளிக்கப்பட்டிருப்பதிலிருந்தும், மூன்று கூட்டங்கள், நான்கு கூட்டங்கள் கூட்டத்திற்கு வரக்

கூடாது என்று உத்தரவிடுகின்ற அதிகாரம் தலைவருக்கு அளிக்கப் பட்டிருப்பதில் இருந்தும் நகராட்சிச் சட்டத்தை எழுதியவர்கள் குழப்பங்கள் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்த்திருக்கிருர்கள் என்று தெரிகிறது. நம்முடைய நாடு கொஞ்சம் வெப்பம் அதிகமாக இருக்கும் நாடு; உணர்ச்சிகள் கொஞ்சம் அதிகமாக வரும்; உணர்ச்சிகள் வேகமாக வரும்; நீண்ட நேரம் இருக்கும். குளிர் மிகுந்த நாட்டில் உணர்ச்சிகள் அதிகமாக வாராது. வெப்பம் மிகுந்த நமது நாட்டில் நகராட்சி மன்றங்களில் மட்டுமல்ல; பாராளுமன்றத்திலும் குழப்பங்கள் ஏற்படுகின்றன. குழப்பம் ஏற்பட்டால், கலைக்கப்பட வேண்டுமென்று காங்கிரஸ் அரசு தீர்ப் புக் கொடுத்தால், பாராளுமன்றம் ஒரு மாதத்திற்கு ஆறு தடவை யாவது கலைக்கப்பட வேண்டும். ஆகையினால் திருநெல்வேலி நகராட்சி மன்றத்தைக் கலைத்ததற்கு, நகரசபைக் கூட்டங்கள் நடத்தியதில் குழப்பம் ஏற்பட்டது என்று காட்டப்பட்ட குற்றச் சாட்டை நீதி மன்றத்தில் வாதிட்டதோடு விட்டு விடுங்கள்; ஆனால் சட்டமன்றத்தில் அவைகளுக்கு அடிப்படை விவாதங்கள் எழுகின்றன. அப்படித்தான் குழப்பம் ஏற்பட்டு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கும், மருத்துவ மனைக்கும் அழைத்துச் செல்லப்பட்டார் களா? ஒன்றுமில்லை. அவரவர்கள் கூட்ட நடவடிக்கை முடிந்த வுடன் தோளின் பேரில் கை போட்டுக்கொண்டு 'எப்படி நான் சொன்னது? எப்படி நீ சொன்னது?' என்று பேசிக்கொண்டு ஒழுங்காக வீட்டுக்குச் சென்றுர்களே தவிர, பெரிய விபத்து ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. குறிப்பிட்டிருக்கிற கால அளவில் 53 கூட்டங்கள் நடந்திருக்கின்றன. அதிலே சர்க்கார் கூறியபடி குழப் பங்கள் ஏற்பட்ட கூட்டங்கள் ஏழு. 53 கூட்டங்கள் நடந்ததிலே 7 கூட்டங்களிலே குழப்பம் நடந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக் கிறது. ஆகையினால் இந்த நகராட்சி கலைக்கப்பட வேண்டுமென்று ஒரு அரசு, அதிலும் மதிப்பு மிக்க நண்பர்கள் எல்லாம் இடம் பெற்றிருக்கிற காங்கிரஸ் கட்சியின் அரசு திர்மானித்து முடிவு எடுத்திருக்குமானால், அது காலத்திற்கும் அவர்களுக்குப் பழியாக இருக்குமே, அவர்கள் பேரில் உள்ள அந்தப் பழியைத் துடைப்பது நண்பர்கள் கடமை அல்லவா என்ற முறையில் இந்த மசோதா வருகிறதே தவிர, ஆறு மாதத்திற்குப் பறகு பழைய மெம்பர்களை மறுபடியும் முனிசிபல் கவுன்சிலில் வைத்துக் கண்குளிரப் பார்ப்ப தற்காக என்று யாரும் கருதத் தேவையில்லை.

அதிலிருந்து பல நகராட்சிமன்ற உறுப்பினர்கள் இப்போது நாம் கண்குளிர காண்கிற அளவு சட்டமன்றத்தில் கூட வந்து அமர்ந்திருக்கிருர்கள். இது, நம் அற்ப ஆசைக்காக கொண்டு வருவதல்ல. பின்னால் நம் பேரன்மார் காலத்தில் திருநெல்வேலி நகராட்சிமன்றம் கலைக்கப்பட்டதற்கான காரணங்கள் என்ன என்று படித்துப் பார்ப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். பின்னால் வருகிற சட்டக் கல்லூரி மாணவர்கள் இதைப் படிக்கிருர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். திரு. விநயகம் அவர்களின் பேரனும், திரு. கருத்திருமன் அவர்களின் பேரனும் படித்துப்





பார்த்தால், என் தாத்தா காலத்தில் இந்த அக்கிரமம் நடந்திருக் கிறதே, இவர்கள் வாய் மூடிக் கொண்டிருந்தார்களா என்று பின்னால் வருகிறவர்கள் கேலி பேசுவார்கள் என்பதற்காக, அந்த அக்கிரமத்தைத் துடைக்கிறேமே தவிர, முனிசிப்பாலிட்டியை மறுபடியும் கூட்டிப் பார்ப்பதால், பெரு மகிழ்ச்சி வந்துவிடும் என்பதற்காக அல்ல.

நம் நண்பர் திரு. மார்ட்டின் அவர்கள் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன வாக்கைப்பற்றி திறமையாக வாதாடினுர்கள். அவர்கள் ஒரு வழக்கறிஞர் என்று கருதுகிறேன். நல்ல வெற்றி பெறுவார் வழக்கறிஞர் துறையில் என்று நம்புகிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள், ஸ்ட்ரிக்சர்ஸ் பாஸ் செய்திருக்கிருர்கள் என்று கூறிருர்கள், அப்படிக் கிடையாது என்று அவர்கள் சொல்லியிருக் கிருர்கள். ஹைகோர்ட் தீர்ப்பில் ஸ்ட்ரிக்சர்ஸ் என்று தனியாக ஒன்று கிடையாது. ஹைகோர்ட் ஜட்ஜ்மெண்ட் இது, ஸ்ட்ரிக்சர்ஸ் இது என்று பாகுபாடு செய்து பிரிப்பதில்லை. வழக்கறிஞர்கள்தான் அதை அறிந்திருக்க வேண்டும் என்று அர்த்தமில்லை. வழக்கறி ஞர்கள் அல்லாதவர்கள் கூட சட்டத்தை ஓரளவு அறிந்திருக்க வேண்டும் என்ற முறையில் நான் அறிந்திருக்கிற அளவில், எந்த ஜட்ஜ்மெண்டிலும் இது தீர்ப்பு, இது ஸ்ட்ரிக்சர்ஸ் என்று பிரிப்ப தில்லை. நாம்தான் பிரித்துக்கொள்ள வேண்டும். அதையும் நம் பகுத்தறிவை உபயோகப்படுத்தி இதில் தீர்ப்பு எது, ஸ்ட்ரிக்சர்ஸ் எது என்று நாம் பிரித்துப் பார்த்துக் கொள்ளவேண்டும். டாக்டர் ஹாண்டே அவர்கள் செய்த தவறு கொஞ்சம் பகுத்தறிவோடு அந்த ஜட்ஜ்மென்டை பார்த்தது நான். அதனால் அவர்கள் இதில் ஸ்ட்ரிக்சர்ஸ் ஏராளமாக இருக்கின்றன என்று சொன்னுர்கள். ஸ்ட்ரிக்சர்ஸ் ஏராளமாக இருப்பதை நான் முழுவதையும் படித்துக் காட்டி உங்களுக்கு சலிப்பு உண்டாக்கப் போவதில்லை. ஆனால் வேறு ஒரு உறுப்பினர், ஹைகோர்ட்டில் கொடுக்கப்பட்ட தீர்ப்புக்கு மாருக இந்த மசோதாவைக் கொண்டு வருவதாகச் சொன்னுர்கள். நான் முதலில் சொன்னபடி காங்கிரஸ் அரசுக்கு பழி வரக்கூடாது என்ற நோக்கத்தோடும், உயர்நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் நாம் நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவுந்தான் இந்த மசோதா வருகிறது என்பதை நான் விளக்க விரும்புகிறேன். இந்தத் திருநெல்வேலி நகராட்சிமன்றத்தைப் பொறுத்தவரையில் இரண்டு வழக்குகள். ஒன்று, கீழ்கோர்ட்டில், ஹைகோர்ட்டில் ஒரு கோர்ட்டில் நடந்தது. இன்ஞென்று மேல் கோர்ட்டில் நடந்தது. இதுபற்றி விரிவாக படிக்கவேண்டுமென்ற விருப்பம் உள்ளவர்களுக்கு தெரிவித்துக் கொள்வேன், திருநெல்வேலி நகராட்சிமன்றத்தைக் கலைப்பதற்கு போதுமான காரணங்கள் இருந்தனவா என்றால் விதிவாக ஆராய்ந்து தீர்ப்பளித்த ஒரு தீர்ப்பு, ஜஸ்டிஸ் திரு. கைலாசம் அவர்கள் தீர்ப்பில் அதை விரிவாகப் பார்க்கலாம். எந்த அடிப் சர்க்கார் அதற்கு மேல் அப்பீல் செய்தார்கள். திருநெல்வேலி படையில் அப்பீலுக்கு போனுர்கள் என்றால்,

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 28

நகராட்சி மன்றத்தைக் கலைப்பதற்கு போதுமான காரணங்கள்
இருந்தனவா இல்லையா என்பதல்ல, கலைக்கிற அதிகாரம்
எங்களுக்கு உண்டா இல்லையா என்பது. செக்ஷன் 41 (1) படி
நடந்திருக்கிறோமா இல்லையா என்றுதான் அப்பீலுக்கு
போனார்கள். உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் அந்த
ஒரு பிரச்சினைக்குத்தான் தீர்ப்பை வழங்கக் கடமைப்பட்டவர்கள்.
ஆகவே, இந்த இரண்டு ஜட்ஜ் மென்ட்களையும் ஒன்றாக
படித்துப் பார்ப்பார்களேயானால், அந்த நகராட்சிமன்றம் பற்றிய
முழு வரலாறும் நமக்குக் கிடைக்கும். நீதிபதி திரு. கைலாசம்
அவர்கள் கொடுத்த தீர்ப்பில் திருநெல்வேலி நகராட்சிமன்றத்
தைக் கலைப்பதற்கு போதுமான காரணங்கள் இல்லை என்று,
சொன்னார்கள். அதற்கு மேல் அப்பீல் போனபோது உயர்
நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் அதைப்பற்றி
எங்களுக்கு அக்கறையில்லை, போதுமான காரணம் இருக்கிறதா
இல்லையா அதை இந்த கோர்ட் கவனிக்கத் தேவையில்லை. சர்க்கார்
எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளுக்கு அதிகாரம் இருக்கிறதா
இல்லையா என்று பார்த்து அதிகாரம் இருக்கிறது என்று தீர்ப்
பளித்தார்கள். அதிகாரம் இருக்கிறது என்றுதான் தீர்ப்
பளித்தார்களே தவிர, கலைப்பதற்கு போதுமான காரணம் இருக்
கிறதா என்று என்னைக் கேட்பார்களானால், இல்லை என்றுதான்
நான் சொல்வேன் என்று அந்தத் தீர்ப்பில் இருக்கிறது. அந்தப்
பகுதியைத்தான் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஸ்ட்ரிக்சர்ஸ் என்று
குறிப்பிட்டார்கள். அது இல்லாமல் கூட அந்தத் தீர்ப்பு அமைந்
திருக்கலாம். ஜஸ்டிஸ் அனந்தநாராயணன் அவர்கள் இந்தத்
தீர்ப்பை இதைவிடச் சுருக்கமாகக் கூட கொடுத்திருக்க முடியும்.
செக்ஷன் 41 (1) படி இந்த சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்
கைகளுக்கு இந்த சர்க்காருக்கு போதுமான அதிகாரம் இருக்
கிறது, அதற்கு மேல் குறிப்பிட வேண்டிய அவசியம் எங்களுக்கு
இல்லை என்று இந்தத் தீர்ப்பை முடித்திருக்கலாம். ஆனால் அவர்
கள் இதையும் சொல்லி வைக்கவேண்டுமென்ற எண்ணம் காரண
மாகத்தான், இந்தப் பகுதியையும் புகுத்தியிருக்கிறார்கள். அதைத்
தான் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஸ்ட்ரிக்சர்ஸ் என்று சொன்னார்
கள். அதை நான் படித்துக் காட்டுகிறபோது அது ஸ்ட்ரிக்சர்ஸா
அல்லது ஜட்ஜ்மெண்டாக இருக்கிறதா என்பதை வழக்கறிஞர்கள்
மட்டுமல்லாமல் அந்தப் பாக்கியத்தைப் பெறாத நாம் எல்லோரும்
கூட எண்ணிப் பார்த்துக்கொள்ளலாம். அவர்கள் ஜட்ஜ்மெண்டில்
ஒரு பகுதியில் சொல்கிறார்கள்.

If an objective test were to be attempted, the impugned order of supersession could not be defended. The Municipal Council met sufficiently, frequently and transacted business at a member of meetings so that objectively viewed, the break-up- in disorder of these seven meetings may not be any justification for the drastic step of supersession.

ஜட்ஜ்மெண்டில் அவர்கள் வார்த்தைகளை அதிகமாக உபயோகப்
படுத்த தேவையில்லை.
for the step of supersession

என்று சொல்லியிருக்கலாம்.



1967 மார்ச் 28] [திரு. சி. என். அண்ணாதுரை]

Admittedly, the other two charges are quite minor ones. Hence if the satisfaction of the Court were relevant, the appeals would have to fail. எங்களுக்கு அந்த அதிகாரம் இல்லாததால், போனால்
போகட்டும் என்று விடுகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறதே
தவிர, கோர்ட்டுக்கு அந்த அதிகாரம் தரப்படுமானால், கோர்ட்டின்
கருத்தை அறிந்து கொள்வது பொருத்தமானது என்று கருது
வீர்களானால், The appeals would have to fail. சர்க்கார்
கொண்டுவந்துள்ள அப்பீல் மனு தோற்றுப் போகவேண்டியது
தான் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுதான் ஸ்ட்ரிக்சர்ஸ்.
டாக்டர் ஹாண்டே அவர்கள் ஸ்ட்ரிக்சர்ஸ் என்று சொன்னது
இதைத்தான் மனதில் வைத்து சொல்லியிருக்கிறார்கள் என்று
கருதுகிறேன். இதற்குத்தான் ஸ்ட்ரிக்சர்ஸ் என்ற பொருள்
பொருந்தும். இது போதாது என்று இன்னும் கொஞ்சம் கடுமை
யான வார்த்தையை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். எனக்கே
படிக்க என்னவோபோல் இருக்கிறது. திருநெல்வேலி நகராட்சி
மன்றத்தைக் கலைப்பதற்கு உரிமையாளர்களாக இருந்த சர்க்கார்
தரப்பில் இருந்தவர்கள் படித்தார்களானால், என்னைவிட அவர்கள்
வேதனைப்படுவார்கள். The wisdom or unwisdom of such a measure does not concern the Court. இது புத்திசாலித்தனமான காரியமா,
புத்திசாலித் தனமல்லாத காரியமா என்பதைப்பற்றி இந்தக்
கோர்ட்டுக்கு அக்கறையில்லை. இதைவிட ஸ்ட்ரிக்சர்ஸ் வேறு
என்ன இருக்க வேண்டும்? ஒரு தடவைதான் கன்னத்தில் அடித்
தீர்கள், இந்தக் கன்னம் காலியாகத்தானே இருக்கிறது என்பது
போல், தீர்ப்பு எங்கள் பக்கம்தான் என்று சொன்னால், என்ன
வார்த்தைகள் இருக்கின்றன? The wisdom or unwisdom of such a
measure. ஒரு சர்க்கார் எண்ணி, எண்ணி வெட்கப்பட வேண்டிய
வார்த்தைகள் அதில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

Certainly, the supersession is a drastic step, and it could very well be argued that the material aduced hardly furnished a justification for such a procedure, which would interfere with the democratic process of Local Self-Government, for as long a period as two years. என்று சொல்லிவிட்டு But that is a matter for the State, and it may even now be open to Government to reconsider whether this step is really justified, and essential in the public interest.

இதில் நீதிபதி அவர்கள், இப்போதுகூட காலம் கடந்துவிட
வில்லை, சர்க்கார் இப்போதாவது யோசித்துப் பார்த்து இது
'ஜஸ்டிஃபைடா', நியாயத்தின் அடிப்படையில் உள்ளதா?
essential in the public interest பொது மக்களின் நலனுக்கு
ஏற்றதுதானா என்று பார்த்து சர்க்கார் இப்போதுகூட மறு
பரிசீலனை செய்யலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சர்க்கார்
என்றால் காங்கிரஸ் சர்க்காரை மட்டும் குறிப்பிடாது. சர்க்கார்
என்பது நிரந்தரமானது. ஆகவே, நீதிபதி அவர்கள் எடுத்துச்
சொன்ன அறிவுரையை சர்க்கார் ஏற்றுக் கொண்டு இந்த சர்க்கார்

அதை மறுபரிசீலனை செய்ய சர்க்கார் சில வேளைகளில் தவறாக நடந்து கொண்டாலும் அதை எடுத்துச் சொன்னால் தன்னைத் திருத்திக் கொள்ளும் என்று உலகத்திற்கு மெய்ப்பிப்பதற்காகத் தான் இந்த மசோதாவைக் கொண்டுவருவது. இன்னும் கடைசியில் அவர்கள்

In our opinion, these submissions are relevant, and may be appropriately considered by the Government in due course என்று சொல்லியிருக்கிறார்கள். அதில் கொஞ்சம் காலம் எடுத்துக் கொண்டு மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

We have taken the ' due course '

Due course மட்டுமல்ல.

We have also gone through the due process.

ஆகவே, இப்போது அதை எடுத்துப் பார்த்துக் கொள்வது நியாயத்தின் அடிப்படையில் உள்ளது. அதுவும் எதற்காக என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

For mitigating the severity of the remedy now applied, seeing that the statute clearly gives them the discretion to do so.

அதைச் செய்வதற்கு உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது, போதுமான காலம் தருகிறேன், இந்த அநீதியைத் துடைத்து விடுங்கள் என்று உயர்நீதிமன்றமே நமக்கு அறிவுறுத்தியிருக்கிறபோது அந்த அறிவுரைக்கு ஏற்றபடி நியாயத்தின் அடிப்படையில் அமைகிற அரசு நடக்கவேண்டுமென்ற நல்லெண்ணம் காரணமாகத் தான் இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது.

மு.ப.
11-00

ஆக, இதை மறுபடியும் சுருக்கிச் சொல்லுவதானால், ஒன்று, தவறு நடந்துவிட்டதைத் திருத்துவதற்கு இந்த மசோதா; இரண்டாவது, காங்கிரஸ் அரசாங்கத்தின் பேரில் ஏற்பட்டிருக்கிற பழியைத் துடைக்க இந்த மசோதா; மூன்றாவது, நீதி மன்றத்தார் சுட்டிக்காட்டியிருக்கிற நியாயத்தின் அடிப்படையில் அரசு நடக்க வேண்டுமென்ற பொது நிலைமையை ஒப்புக்கொண்டதற்கு இந்த மசோதா. இந்த மூன்று பெரிய காரணங்களைவிட வேறு காரணங்களைச் சொல்லத் தேவையில்லை என்று கூறி, இந்த மசோதாவை இந்த மன்றம் அந்த நோக்கத்தோடு அணுகவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அவைத் தலைவர் அவர்களே, அடுத்த முனிசிபல் தேர்தல்கள் எப்போது வரப்போகின்றன என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** அடுத்த முனிசிபல் தேர்தல்கள் எப்போது வர இருக்கின்றன என்று கேட்டதற்கு இரண்டு நோக்கங்கள் இருக்கலாம். ஒன்று, எப்போது என்று



தெரிந்துகொள்ளவேண்டுமென்ற நோக்கம் இருக்கலாம். இரண்டாவது, விரைவில் வருவதாக இருந்தால், இது எதற்காக என்று கருதலாம். அடுத்த முனிசிபல் தேர்தல் எவ்வளவு விரைவில் வரும் என்று இன்னும் தீர்மானிக்காமல் இருப்பதால், இது இப்போது தேவை என்று கருதினோம்.

முழுமுதல் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இரண்டாவது பிரிவு, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

முதலாவது பிரிவு, முன்னுரை, நெடுந்தலைப்பு முதலியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU. S. MADHAVAN : Sir, I move—

' That the Madras District Municipalities (Amendment) Bill, 1967 (L.A. Bill No. 2 of 1967) be passed.

தீர்மானம் பேரவையின் குரல்வாயிலான முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது என மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என்று எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதா, இல்லையா என்பதில் மாண்புமிகு எதிர்க்கட்சியினர் வாக்குகளை எண்ணிப் பார்த்து முடிவு செய்ய வேண்டுமென்று கருதுவதால், இப்போது மணி அடித்து, கதவுகளைச் சாத்தி, வாக்குகளின் எண்ணிக்கையைத் தொடங்க வேண்டுமென்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அவரவர்களுக்கு உரிய இடத்தில் உட்கார்ந்து இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். (மணி அடித்து முடிந்த பிறகு) இனிமேல் மாண்புமிகு உறுப்பினர்கள் உள்ளே வர அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவை மண்டபத்தில் கதவுகளையெல்லாம் இப்போது சாத்திவிட வேண்டும்.

தீர்மானம் மறுபடியும் குரல் வாக்கு மூலம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது என மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

வாக்கெடுப்பு கோரப்பட்டு, மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு வாக்களித்தனர் :—

**ஆதரித்த உறுப்பினர்கள்**

1. புலவர் கா. கோவிந்தன்.
2. திரு. மு. அலங்காரம்.
3. திரு. எம். ஆனந்தன்.

4. திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி.
5. திரு. சி. வி. எம். அண்ணாமலை.
6. திரு. வி. டி. அண்ணாமலை.
7. திரு. எஸ். கணேசன்.
8. திரு. அ. ஆறுமுகம்.
9. திரு. எஸ். ஆறுமுகம்.
10. திரு. ஆலடி அருணா.
11. திரு. கு. ஆண்டி என்ற குருசாமி.
12. திரு. எம். சி. பாலன்.
13. திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்.
14. திரு. ஜெ. பெல்லி கௌடர்.
15. சி. கே. சின்னராஜி கவுண்டர்.
16. திரு. மு. சின்னசாமி.
17. திரு. வி. சின்னசாமி.
18. திரு. ந. தருமலிங்கம்.
19. திரு. சு. ம. துரைராஜ்.
20. மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்.
21. மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி.
22. மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்.
23. மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி.
24. மதிப்பிற்குரிய டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து.
25. திரு. து. ப. அழகமுத்து.
26. திரு. இராம. அரங்கண்ணல்.
27. திரு. வி. எஸ். எஸ். மணி.
28. திரு. எஸ். முருகையன்.
29. திரு. எம். எஸ். மணி.
30. திரு. ஆர். என். அரங்கநாதன்.
31. திரு. பழனிவேல் ராஜன்.
32. திரு. கே. ஆர். கோவிந்தன்.
33. திரு. ஆ. துரையரசன்.
34. திரு. கா. வேழவேந்தன்.
35. திரு. கே. கோவிந்தராசுலு.
36. திரு. அ. கோவிந்தராசன்.
37. திரு. டி. இராசரத்தினம்.
38. திரு. இ. ஜயராமன்.
39. திரு. ஆ. கு. மூர்த்தி.



40. திரு. எம். ஆர். கண்ணன்.
41. திரு. எம். கண்ணப்பன்.
42. திரு. ஆ. கருப்பையா.
43. திரு. தே. கேசவலு.
44. திரு. கொளத்தூர் கோதண்டம்.
45. திரு. கு. கிருஷ்ணமூர்த்தி.
46. திரு. சி. கிருஷ்ணமூர்த்தி.
47. திரு. மு. கிருஷ்ணமூர்த்தி.
48. திரு. அ. கிருஷ்ணன்.
49. திரு. நா. கிருட்டிணன்.
50. திரு. ஆர். நல்லமுத்து.
51. திரு. பெ. மலைச்சாமி.
52. திரு. வீ. மலைக்கண்ணன்.
53. திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ.
54. திரு. பி. துரைராஜ்.
55. திரு. இரா. மாணிக்கவாசகம்.
56. திரு. பி. எஸ். மணியன்.
57. திரு. மூ. மாரிமுத்து.
58. திரு. ரா. ரா. முனுசாமி.
59. திரு. ஏ. முனியாண்டி.
60. மதிப்பிற்குரிய திரு. செ. மாதவன்.
61. மதிப்பிற்குரிய திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
62. மதிப்பிற்குரிய திரு. மா. முத்துசாமி.
63. திரு. செ. கோ. விசுவநாதன்.
64. திரு. என். ராஜாங்கம்.
65. திரு. மா. இராசாங்கம்.
66. திரு. ஏ. சுவாரிஸ்.
67. திரு. பு. செ. முத்துசெல்வன்.
68. திரு. நா. நாச்சிமுத்து.
69. திரு. பா. நாகலிங்கம்.
70. திரு. ஆர். நாகசுந்தரம்.
71. திருமதி சு. குப்பம்மாள்.
72. திருமதி வி. ப. பழனியம்மாள்.
73. திரு. இரா. நாராயணன்.
74. திரு. மு. க. து. நடராசன்.
75. திரு. ஜி. நடராசன்.

76. திரு. இ. எம். நடராசன்.
77. திரு. எஸ். பி. பச்சையப்பன்.
78. திரு. சி. பழனி.
79. திரு. ஏ. சி. நரசிம்மன்.
80. திரு. எம். கோபால்.
81. திரு. எம். பன்னீர்செல்வம்.
82. திரு. பி. என். பரமசிவ கவுண்டர்.
83. திரு. பெ. பெரியசாமி.
84. புலவர் பொ. பொன்னம்பலம்.
85. திரு. டி. பொன்னுமலை.
86. திரு. ஏ. எம். ராஜா.
87. திரு. க. மு. ராஜகோபால்.
88. திரு. சு. துரைசாமி.
89. புலவர் க. முருகையன்.
90. திரு. டி. ஏ. ராஜவேலு.
91. திரு. க. ந. ராமச்சந்திரன்.
92. திரு. எஸ். ராமச்சந்திரன்.
93. திரு. மு. ராமன்.
94. திரு. ஒ. பி. ராமன்.
95. திரு. வ. க. இராமராசன்.
96. திரு. இ. ராமசாமி.
97. திரு. ஜே. எஸ். இராசு.
98. திரு. மு. இரத்தினசபாபதி.
99. திரு. கே. என். சாமிநாத கவுண்டர்.
100. திரு. பி. எஸ். சந்தானம்.
101. திரு. என். சங்கரய்யா.
102. திரு. ஏ. ஆர். மாரிமுத்து
103. திரு. க. ரா. நல்லசிவம்.
104. திரு. ஆ. கு. சுப்பையா.
105. டாக்டர் ஹபிபுல்லா பேக்.
106. திரு. ம. பொ. சிவஞானம்.
107. திரு. வி. கே. கோதண்டராமன்.
108. திரு. கோ. பாரதி மோகன்.
109. திரு. கே. என். குமாரசாமி.
110. திரு. செ. பாலசுப்பிரமணியம்.
111. திரு. சோ. அழகர்சாமி.





112. திரு. எம். அப்துல் கபூர்சாகிப்.
113. திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்.
114. திரு. ப. சீனிவாசன்.
116. திரு. எம். பூபதி.
116. திரு. பி. எஸ். தனுஷ்கோடி.
117. திரு. எம். சுரேந்திரன்.
118. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது.
119. திரு. கே. பி. எஸ். மணி.
120. திரு. அ. ப. சண்முகசுந்தரம்.
121. திரு. கெ. இரா. ஞானசம்பந்தன்.
122. திரு. சி. கோவிந்தராஜன்.
123. திரு. பி. வேலுசாமி.
124. திரு. இரெ. இளம்வழுதி.
125. திரு. ஏ. அ. சுப்பராஜா.
126. திரு. கே. வி. சுப்பையா.
127. திருமதி கே. பி. ஜானகியம்மாள்.
128. திரு. வி. எஸ். சண்முகம்.
129. திரு. தொ. க. சிறைமீட்டான்.
130. திரு. மு. ச. சிவசாமி.
131. திரு. ந. சோமசுந்தரம்.
132. திரு. பெ. சௌந்தரபாண்டியன்.
133. திரு. மு. வேதாசலம்.
134. திரு. என். மருதாசலம்.
135. திரு. அ. லெ. சுப்பிரமணியம்.
136. திரு. க. ந. சிவபெருமாள்.
137. திரு. எம். சுப்பிரமணிய கவுண்டர்.
138. திரு. டி. தங்கப்பன்.
139. திரு. தி. சி. திம்மராய கவுண்டர்.
140. திரு. எஸ். கே. வடிவேலு.
141. திரு. என். வரதராஜன்.
142. திரு. ந. வீராசாமி.
143. திரு. சி. வே. வேலப்பன்.
144. திரு. ஏ. வெள்ளத்துரை.
145. திரு. சொ. கோவிந்தராசன்.
146. திரு. வெ. முனுசாமி.
147. திரு. பி. கே. மூக்கையா தேவர்.

148. திரு. டி. எஸ். ஆதிமூலம்
149. திரு. அ. பாலசுப்பிரமணியம்.
150. டாக்டர் எச். வி. ஹாண்டே.
151. திரு. கரு. சீமைச்சாமி.
152. திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்.
153. திரு. கே. போஜன்.
154. திரு. கே. எஸ். கோதண்டராமையா.
155. திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்.
156. திரு. ஏ. ஆர். பெருமாள்.
157. திரு. கே. எம். ராமசுவாமி கவுண்டர்.
158. திரு. ரா. ரெத்தின தேவர்.
159. திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி.
160. திரு. வி. தவமணிதேவர்.
161. திரு. பி. வேங்கடசாமி.
162. திரு. எஸ். அழகுத்தேவர்.

**எதிர்த்த உறுப்பினர்கள்**

1. திரு. பி. ஜி. கருத்திருமன்.
2. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.
3. திரு. கே. விநயகம்.
4. திரு. எஸ். ராமலிங்கம்.
5. திரு. பி. எம். முனிசாமி கௌண்டர்.
6. திரு. எஸ். ஏ. ராஜமன்னர்.
7. திரு. எ. ஒய். எஸ். பரிசுத்த நாடார்.
8. திரு. எ. பட்டாபி நாயுடு.
9. திரு. ஆர். விஜயரகுநாத தொண்டமான்.
10. திரு. ரா. ராமச்சந்திர துரை.
11. திரு. க. இராமமூர்த்தி.
12. திரு. கே. சகாதேவ கவுண்டர்.
13. திரு. அ. செல்லா கவுண்டர்.
14. திரு. எஸ். சிவசுப்பிரமணியன்.
15. திரு. இ. எம். சுப்பிரமணியம்.
16. திரு. பி. ஜயராஜ்.
17. திரு. வை. சுவாமிநாதன்.
18. திரு. பா. தம்பி நாயக்கர்.
19 திரு. ந. தீர்த்தகிரி.
20. திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்.



21. திரு. டி. டி. எஸ். திப்பையா.
22. திரு. ரா. கனகசபை.
23. திரு. கோ. பூவராகன்.
24. திரு. அ. சிதம்பரநாத நாடார்.
25. திரு. இல. பலராமன்.
26. திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்.
27. திரு. வ. ஜார்ஜ்.
28. திரு. மு. கந்தசாமி படையாச்சி.
29. திரு. ஆர். கருப்பையா.
30. திரு. நா. காசிராமன்.
31. திரு. ப. மகாதேவன்.
32. திரு. அ. மாரிமுத்து.
33. திரு. டி. மார்டின்.
34. திரு. க. முருகேசன்.
35. திரு. தோ. மு. நல்லசாமி.
36. திரு. சி. நஞ்சன்.

நடுநிலை வகித்த உறுப்பினர்கள்—எவருமில்லை.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** (இப்பொழுது) இந்த வாக்கெடுப்பின் முடிவை செயலாளர் அவர்கள் என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். அது பின்வருமாறு:

| | |
|---|---|
| ஆதரித்த உறுப்பினர்கள் | 162 |
| எதிர்த்த உறுப்பினர்கள் | 36 |

நடுநிலை வகித்த உறுப்பினர்கள்—எவருமில்லை.

தமிழ்நாடு 1967-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா 2/1967) இந்தப் பேரவையிலே சட்டமாக நிறைவேற்றப்பட்டு விட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**திரு. அ. சிதம்பர நாடார் :** ஒரு ஒழுங்குப் பிரச்சினை, நேற்று தங்களுக்கு ஒரு பாராட்டு விழாவில் . . .

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 83-வது விதியைப் படிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதிலே கூறியிருப்பது, ஒழுங்குப் பிரச்சினை எடுக்கவேண்டுமென்றால், நேற்று நடந்ததைப் பற்றி இன்று எடுக்க முடியாது. இன்று அவையில் நடவடிக்கை நடந்துகொண்டிருக்கும்பொழுது உடனடியாக எடுத்தாக வேண்டும். ஆகையால் நேற்றைய காரியங்களைப் பற்றி பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த அலுவல்.

(இ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மை நீக்கல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/1967).

மதிப்பிற்குரிய திரு. சி. என் அண்ணாதுரை: சட்ட மன்றத் தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மை நீக்கல்) மசோதாவை (சட்டப் பேரவை மசோதா 3/1967) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் ".

என்று நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

## அட்டவணை.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: அடுத்து அட்டவணை, அதற்கு ஒரு திருத்தம் இருக்கிறது. அதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

THE HON. THIRU C. N. ANNADURAI: Sir I move the following amendments:—

In the Schedule, in item 2, for "Whip" wherever it occurs substitute "Government Whip"

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: அரசினர் திருத்தம் 'கொறடா' என்ற சொல் (விப்) வருகிற இடங்களிலெல்லாம் 'அரசினர் கொறடா' என்று திருத்தி வாசித்துக் கொள்ள வேண்டும் என்பது. இந்தத் திருத்தத்தை இப்பொழுது அவை முன்பு வைக்கிறேன். திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டுமா. என்பது கேள்வி.

திருத்தப்பட்ட அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டது.

திருத்தப்பட்ட அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

நெடுந்தலைப்பு, முன்னுரை, முதல் பிரிவு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை: 'தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மை நீக்கல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/1967), திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப்பட வேண்டும்' என்று பிரேரேபிக்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

Published in the Fort St. George Gazette Extraordinary, dated 25th March 1967.





(5) கவர்னர் பேருரையின் மீது விவாதம். —தொடர்ச்சி.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: அடுத்த அலுவல், கவர்னர் உரைமீது விவாதம் தொடர்ந்து நடைபெறும். அதற்கு முன்னால், மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். எஸ். மணி அவர்களின் நன்றி உரைக்குப் பல திருத்தத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. அந்த திருத்தத் தீர்மானங்களை (Amendments) மாண்புமிகு உறுப்பினர்கள் படித்து, அவைமுன் வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. தோ. மு. நல்லசாமி தன்னுடைய திருத்தத் தீர்மானத்தை முன்மொழிவார்.

THIRU T. M. NALLASAMY: Sir, I move—

Add at the end, the following:—

'but regret to note—

(1) that no reference has been made to the abolition of Basic Land Revenue from the next fasli;

(2) that no reference has been made to any scheme for provision of Free Education at University level;

(3) that no concrete measures have been formulated for bringing down the price level as promised; and

(4) that no positive steps have been outlined for solving the Food problem, particularly to reduce the prices of food grains and improve the supplies of food grains to the people.'

THIRU K. VINAYAKAM: Sir. I second the amendment.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, இறுதியில் கீழ்க் காணும் சொற்றொடர்களை இணைக்கவும்:—

'இருப்பினும், இந்தப் பேருரையில் உணவுப் பிரச்சினையும், விலைவாசி உயர்வுப் பிரச்சினையும் நீண்டதொரு இடம் பெற்றிருந்த போதிலும் கூறப்பட்டுள்ள காரணங்களும், பரிகாரங்களும், பழைய கொள்கைகளிலிருந்து தீவிர மாறுதல் இல்லை என்று எடுத்துக் காட்டுகிறது.

பதுக்கலையும், கொள்ளை லாபத்தையும் தடுத்து விலைவாசியைக் குறைக்க மனித சமுதாயம் அறிந்துள்ள ஒரே வழியான, உணவு தானிய மொத்த வியாபாரத்தை அரசினர் ஏற்று நடத்த வேண்டிய அவசியம்பற்றி குறிப்பிடத் தவறியது வருந்துதற் குரியது.'

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, நான் இந்த திருத்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, இறுதியில் கீழ்க் காணும் சொற்றொடர்களை இணைக்கவும்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1967 மார்ச் 28

'விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக உழவர்களுக்கு ஊக்கமளிக்க தீவிரமான திட்டங்கள் அவசியமாகையால், நில உச்ச வரம்பு சட்டம் நபருக்கு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருப்பதை குடும்பத்திற்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று திருத்த வேண்டிய அவசியம் பற்றியும்;

சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம், நியாய வாரச் சட்டம் ஆகியவற்றிலுள்ள குறைபாடுகளைப் போக்குவதுபற்றியும்;

சாகுபடியாளருக்கு குத்தகை பாக்கியைத் தள்ளுபடி செய்வது பற்றியும்;

விவசாயிகளுக்குக் கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவர வேண்டிய அவசியம் பற்றியும்;

குடியிருப்பு மனை பாதுகாப்பு சட்டத்தை நீடித்து, குடியிருப்பு மனையை விவசாயத் தொழிலாளர்களுக்கு சொந்தமாக்க சட்டத்தைத் திருத்துவது பற்றியும்,

குறிப்பிடத் தவறியது வருந்துதற்குரியது.'

**திரு. சோ. அழகர்சாமி**: தலைவர் அவர்களே, நான் இந்த திருத்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா**: தலைவர் அவர்களே, இறுதியில் கீழ்க் காணும் சொற்றொடர்களை இணைக்கவும்:

'இருப்பினும் நமது மாநிலத்தில் பஞ்சாலைகளில் நிலவி வரும், ஆள் குறைப்பு, வேலையின்மை, சம்பள வெட்டு போன்ற கொடுமைகளினால் தொழிலாளர்கள் அனுபவிக்கும் கஷ்டங்களைப்பற்றியும்,

கைத்தறித் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் காரணமாக நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களைப்பற்றியும்,

கவர்னர் உரையில் குறிப்பிடாதது வருந்துதற்குரியது.'

**திரு. சோ. அழகர்சாமி**: தலைவர் அவர்களே, நான் இந்த திருத்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து**: தலைவர் அவர்களே, இறுதியில் கீழ்க் காணும் சொற்றொடர்களை இணைக்கவும்:

'இருப்பினும் நிலவரி ரத்து சம்பந்தமாகத் தெளிவாகக் குறிப்பிடாமலும், நிலமற்ற விவசாயிகள் அனைவருக்கும் மனைக் கட்டுகள் வழங்குவதுபற்றிக் குறிப்பிடாமலும், கள்ள மார்க்கெட், கொள்ளை லாபம், பதுக்கல், கள்ளக் கடத்தல் போன்ற சமூக விரோத சக்திகளை ஒழிக்க என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைக் குறிப்பிடாமலும் விட்டது வருந்தத் தக்கது.

**திரு. செ. பாலசுப்பிரமணியம்**: இந்தத் திருத்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன்.



1967 மார்ச் 28]

***திரு. பி. வேலுசாமி**: தலைவர் அவர்களே, இறுதியில் கீழ்க் காணும் சொற்றொடர்களை இணைக்கவும்:

'இருப்பினும், பஞ்சாலைகளிலும், இஞ்சினியரிங் தொழிற்சாலைகளிலும் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள், தொழிற்சாலைகளை மூடியதன் மூலம் வேலையற்றிருக்கும் நிலைமையை மாற்ற என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் குறிப்பிடத் தவறியது வருந்தத்தக்கது.'

**திரு. செ. பாலசுப்பிரமணியம்**: தலைவர் அவர்களே, இந்த திருத்தத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு சுரேந்திரன் தன்னுடைய இடத்தில் இல்லாததால் அவருடைய திருத்தத் தீர்மானம் கைவிடப்படுகிறது என்று தெரிவிக்கிறேன். இப்பொழுது விவாதம் தொடர்ந்து நடைபெறும். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னம்பலம் தொடர்ந்து பேசுவார்கள்.

* **புலவர் பொ. பொன்னம்பலம்**: பெருமதிப்பிற்குரிய சட்டமன்ற தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய ஆளுநர் உரையின் மீது என் உரையைத் தொடர்ந்து ஆற்றத் தாங்கள் கொடுத்திருக்கும் வாய்ப்பிற்கு நன்றிகலந்த வணக்கத்தை உரித்தாக்கிக் கொண்டு, ஒரு சில கருத்துக்களை இந்த அவைமுன் வைத்து முடிக்கிறேன். நேற்று நான் குறிப்பிட்டபடி, படித்த மேதையாம் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில், புதிதாக இந்த அமைச்சரவை அமைந்திருப்பது பொருத்தமானது என்பதும், வேளாண்மைக்கு உரிய கருவிகளை அமைக்கும் வழியில் மானியம் கொடுத்தால் நல்ல உணவு உற்பத்தியினைப் பெருக்க முடியும் என்பதும் அமையும். அடுத்து, கல்வித் துறையில் ஆசிரியர்களுக்கு நல்ல மதிப்பு இருக்க வேண்டும் என்றும் குறித்தேன். அதைத் தொடர்ந்து ஒரு சிலவற்றைக் குறிப்பிட முற்படுகிறேன்.

வேளாண்மைத் துறையிலே நானும் இன்னும் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இன்றைக்கு உழவர் பெருங்குடிமக்கள் நிலையைப் பார்க்கும்போது, முன்பு இருந்த அரசாங்கம் அவர்கள் மீது கடன் பளுவைச் சுமத்தி வைத்திருக்கிறது. இன்றைக்குப் புதிதாக அமைந்திருக்கும் அரசு அவற்றைத் தளர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆறேகால் விழுக்காடு என்று நினைக்கிறேன், அந்த வட்டி விகிதத்தில், அரசாங்கம் கடன்கள் கொடுத்து இருக்கிறது. வேளாளப் பெருங்குடிமக்களின் தலையில் தங்கும் நிலையில் இப்படிக் கடன்களைச் சுமத்தியிருக்கும் காரணத்தால், அந்த கடன் தொல்லைகளிலிருந்து விடுபடும் நிலையில் அந்தப் பளுவைத் தளர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, வேளாண்மைத் துறைக்கு உரிய நிலையில், வேளாண்மை முன்னேற்றத்திற்கு உரிய வகையில் மானியங்கள் வழங்கப்பட்டு, செயற்பட வேண்டும் என்று சொல்லும்போது,

[புலவர் பொ. பொன்னம்பலம்] [1967 மார்ச் 28

அந்தத் தொகையை எப்படி ஈடு கட்ட முடியும் என்கிற எண்ணம் வரும். நான் ஒரு முறையை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அரசாங்க ஆணை, 2,460 என்று நினைக்கிறேன், அந்த ஆணைப்படி கோழிகளுக்கெல்லாம் மாளிகைகள் கட்டிக் கொடுத்து, கோழி வளர்ப்பு செய்பவர்களுக்கு குடிசைகளைக் கட்டிக் கொடுத்து நிறைய தொகையை வீணாக்கியிருக்கிறார்கள். அதேபோல, மீன் தொட்டிகள் என்றும், இன்னும் மற்றைய திட்டங்கள் அமைத்திருக்கும் வகையிலும் செலவுகள் எல்லாவற்றையும் பார்த்தால், அவை வெறுமனே வீண் செலவுகளாக இருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். அப்படி வீணைக் கூடிய தொகைகளை நிறுத்தி உழவர் பெருங்குடி மக்களுக்கு அவசியமாக வேண்டிய பல நன்மைகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்த நிலையிலே பார்க்கின்றபோது, ஆசிரியர்களைக் குறித்து இங்கே சில கருத்துக்களை எடுத்துச்சொல்ல நான் விரும்புகிறேன். பொதுவாக, நேற்றையதினம் தமிழாசிரியர்களைப்பற்றி நான் குறிப்பிட்ட நேரத்தில், இடையிலே அந்த உரை நின்றுவிட்டது. அந்த வகையிலே பார்த்தால், தமிழ் ஆசிரியர்களைப்பற்றிய சட்ட திட்டங்களை உணராத நிலை, மதில் மேல் பூனை போன்று அமைந்த நிலை இந்தச் சட்டப் புத்தகங்களில் காணப்படுகின்றது. எனவே, அதற்குத் தெளிவான விளக்கம் இருக்க வேண்டும். முதல் நிலை என்றும், இரண்டாம் நிலை என்றும் தமிழாசிரியர்களைப் பகுத்து வைத்திருக்கிறார்கள். முதல் நிலைத் தகுதி பெற்றவர்கள் இரண்டாவது நிலையில் பணியாற்றக்கூடிய இழிநிலை இந்தத் தமிழகத்தில் இருக்கிறது. எனவே, அந்த நிலையை மாற்றக்கூடிய வகையில், இரண்டு நிலைகளையும் ஒரே நிலையாக ஆக்கிவிட வேண்டும்; முதல் நிலையாகவே ஆக்கிவிட வேண்டும். அதற்கு இந்தப் புதிய அமைச்சரவை ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுடைய நிலையைப் பார்க்கின்றபோது, அவர்களை ஊராட்சி ஒன்றியத்திலே இணைத்து வைத்திருக்கிறார்கள். அந்த ஊராட்சி ஒன்றியத்திலே இணைத்து வைத்திருக்கிற காரணத்தினால், எத்தனையோ தொல்லைகளை அனுபவிக்க வேண்டிய நிலை அவர்களுக்கு இருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்திலிருந்து அந்தத் துறையினை விலக்கி, அதற்குத் தனிக் கழகம் அமைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும், கல்வி வளர்ச்சிக்கு ஏற்றதாக இருக்கும், ஆசிரியர்களுடைய தகுதி உயர்வதற்கேற்ற வாய்ப்பாக இருக்கும் என்று விரும்பி வேண்டி நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். ஆசியர்களுக்கு உரிய நிலையில் நல்ல வீட்டு வசதிகளை அமைத்துக் கொடுக்க வேண்டும், இலவச மருத்துவ வசதிகளை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று விரும்பி வேண்டி நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, தொழிலாளர் பெருமக்களுக்கு உரிய நிலையில் ஒரு சில கருத்துக்களை நான் முன்னே படைக்க விழைகிறேன். அந்த வகையிலே பார்த்தால், ஆலைத் தொழிலாளர்கள் இருக்கக்கூடிய நிலையில் உள்ள சட்டத்தை மாற்றியமைத்தால் நன்றாக இருக்கும்.



1967 மார்ச் 28] [புலவர் பொ. பொன்னம்பலம்]

அவ்வாறு மாற்றியமைப்பதற்கான வழிவகையை இந்தப் புதிய அமைச்சரவை எடுத்துக்கொண்டால் நன்றாக இருக்கும் என்று நான் எண்ணுகின்றேன்; அவ்வாறு எடுத்துக்கொள்ளும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. பொதுவாக, ஆலைத் தொழிலாளர்களையோ அல்லது கம்பெனிகளில் வேலை பார்க்கக்கூடிய தொழிலாளர்களையோ எடுத்துக் கொண்டு பார்த்தால், முதலாளிகளுடைய பணமும் தொழிலாளர்களுடைய உழைப்பும் சேர்ந்து மிச்சம் உண்டாகிறது என்ற நிலையை உணர்கின்றோம். அந்த மிச்சத்தில் தொழிலாளர்களுக்கும் பங்கு உண்டு, முதலாளிகளுக்கும் பங்கு உண்டு என்ற நிலை இருக்கிறது. அதனை இப்பொழுது 'போனஸ்' என்ற நிலையிலே வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அதற்கு வரையறை அமைக்க வேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன். முதலாளிகளுக்கு எப்படி மிச்சத்திலே பங்கு இருக்கிறதோ அதைப் போலவே, தொழிலாளர்களுக்கும் அந்த மிச்சத்திலே பங்கு இருக்க வேண்டும். அந்தப் பங்கினை வரையறைப்படுத்தி அமைப்பதற்குச் சட்டத்தில் ஆவன செய்ய வேண்டும் என்ற அந்தக் கருத்தினையும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே, இந்த வகைகளிலே ஆலைத் தொழிலாளர்களுக்கும் மற்ற கம்பெனிகளில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கும் மிச்சத்தில் பங்கு இருக்கும் வகையில் சட்டத்திலே உரிய மாறுதலை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து, கைத்தறித் தொழிலாளர்களுடைய நிலையை எடுத்துக் கொண்டால், இந்தத் தமிழகத்தில் அவர்களுடைய நிலை நல்ல முறையில் சீர்பட வேண்டும். அவர்களுக்கு என்றுத் தனித் தனிப் பகுதியை ஒதுக்கிவிடலாம் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த அளவோடு மட்டும் நில்லாமல், அவர்களுக்கும் மானியம் வழங்கக் கூடிய நிலை இருக்க வேண்டும். அவர்களுக்கு என்று தனித் தொகையை ஒதுக்கி, அவர்களுடைய வாழ்க்கை வசதிகளுக்கேற்ப அவர்களுக்கு வழங்க வேண்டிய அந்த நிலையும் அமைய வேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கும் புதிய அமைச்சரவை ஆவன செய்யும் என்று நம்பிக்கை எல்லோருக்கும் உண்டு. இந்த வகையிலே பார்க்கின்றபோது, தொழிலாளர் பெருமக்களுடைய வாழ்க்கைத்தரம் உயருவதற்கு இந்த அமைச்சரவை நல்ல முறையில் பயன்பட வேண்டும், நல்ல சட்ட திட்டங்களை வகுக்க வேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, வேளாண்மைத் துறையை எடுத்துக்கொண்டு பார்க்கின்ற அந்த நிலையில்,

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தோடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே"

என்று சொல்லுவார்கள். அந்த வகையில், நீரையும் நிலத்தையும் ஒன்றாக இணைத்தவர்கள் உடம்பையும் உயிரையும் ஒன்றாக இணைத் தவர்கள் ஆவர். இந்தக் கருத்தை உணர்ந்தவர்கள்தாம் இன்றைய அமைச்சரவையில் இருக்கக் கூடியவர்கள். அந்த வகையில் நீரையும் நிலத்தையும் இணைக்கின்றபோது, ஆட்சி நிலையும் செம்மையாக இருக்கவேண்டும் என்ற கருத்தும் உணர்த்தப்படு கிறது. முன்னால் ஆண்ட அருமை காங்கிரஸ் அமைச்சரவை யினரும், காங்கிரஸ் நண்பர்கள் அத்துணை பேரும் அந்தக் கருத்தை மறந்துவிட்டிருந்தார்கள்; அதனாலேயே தேர்தலில் அவர்கள் வர முடியாத நிலை ஏற்பட்டது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

"நெல்லும் உயிரன்று நீரும் உயிரன்று
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

என்ற கருத்தும் சொல்லப்படுகிறது. நெல் விளைச்சல் நன்றாக இருந்தாலும், நீர் வளம் நன்றாக இருந்தாலும், இந்த நாட்டு மக்களுடைய நிலையை உயர்த்திவிட முடியாது; நாட்டை ஆளுகின்றவர்களும் நேரிய நிலையில் இருக்க வேண்டும். நாட்டி லுள்ள ஆட்சி செம்மையாகவும், நேரிய நிலையிலும் இருந்தால் தான், நெல் வளமும் நீர் வளமும் பெருகி, இந்த நாட்டு மக்க ளுடைய வாழ்க்கை வசதிகளும் வாய்ப்புக்களும் செம்மை யான வகையில் அமைய முடியும் என்ற அந்தக் கருத்தை உணராத காரணத்தால்தான், சென்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியுற்றது என்பதை இந்த இடத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, அந்த வகையில், புதிதாக வந்திருக்கக் கூடிய நமது அமைச்சரவை இந்தச் செம்மையான வழிவகை களைக் கையாண்டு, நேரிய முறைகளைக் கையாண்டு, வேளாண் மைத் துறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி, மக்களுக்கு ஏற்ற வாய்ப்புக்களும் வசதிகளும் தேடித்தந்து, கல்வித் துறையிலும் நல்ல ஆக்கம் கொடுத்து. தொழிலாளர் பெருமக்களுக்கும் நல்ல வசதியும் வாய்ப்புக்களும் தேடிக் கொடுத்து, இந்த நாட்டு மக்களை முன்னேறச் செய்ய வேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

என்னுடைய திருமயம் தொகுதியை எடுத்துக்கொண்டால், ஏரிகளை அங்கே 'கண்மாய்கள்' என்று சொல்லுவார்கள் அந்தக் கண்மாய்களுக்கு மதகுகள் அமைக்கப்படாத நிலை இருக்கிறது. ஏம்பல் பகுதியிலும், இரும்பா நாட்டுப் பகுதியிலும் உள்ள அந்தக் கண்மாய்களுக்கு மதகுகள் இல்லை. இந்த நிலையில், கரைகளை வெட்டித் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருக்கிறார்கள். அந்த அவல நிலை மாறுவதற்கு, அந்தப் பக்கத்தில் இருக்கும் கண்மாய்களுக்கு மதகுகள் அமைத்துத் தருவதற்கு அது சம்பந்தமான அமைச்சர வர்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, இன்றைய நிலையில் கொள்முதலைப் பற்றியும் மதிப்பிற் குரிய உறுப்பினர்களெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதைப்



பற்றியும் நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கொள்முதல் என்று சொல்லுகிறபோது, இன்றைய நிலையில் எத்தனையோ சிக்கலை உருவாக்கக்கூடிய சூழல் இருந்தாலும், பழைய அமைச்சரவையினால் பயிற்றுவிக்கப்பட்ட, பழைய ஆட்சி யினரால் பயிற்றுவிக்கப்பட்ட காவல் துறையினர் இந்த அமைச்ச ரவையின் கீழுள்ள ஆட்சியிலும் இருக்கிறார்கள். அந்தக் காவல் துறையினரைச் சார்ந்த ஒரு சிலரால் சில தகாத நிகழ்ச்சிகள் நடந்திருக்கக் கூடுமோ என்னவோ. எங்காவது அப்படிப் பழைய ஆட்சியினரால் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் இருந்தாலும், இந்தப் புதிய ஆட்சியினர் வந்திருக்கிற இந்த நேரத்தில், அவர்கள் தங்களுடைய பழக்கத்தை மாற்றிக்கொள்ளவேண்டும். அவர் களுடைய பழைய பழக்கத்தை மாற்றிக்கொண்டு, உரிய வழியில், நேரிய வழியில் கொள்முதலைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதற்கு இந்த அரசினர் ஆவன செய்யவேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இந்த வகையிலே பார்க்கின்றபோது,

"பாலுடனே தேன்கலந்த பான்மை போல
பயின்றிணையும் நல்வாழ்க்கை படியத் தூண்டி
நூலுடனே கலந்துவரும் நயத்தைப் போல
நுண்ணறிவுப் பெருந்தகையார் கருத்துச் சூழ
வேலுடனே எதிர்நின்றான் வேண்டல் போல
விரும்பாத நிலையொன்றும் விளையா வண்ணம்
ஆலுடனே விழுதிறங்கி அமைதல் போல
அறிவாக்கப் பணிபுரியும் அமைச்சர் மன்றம்"

என்றபடி இந்த அமைச்சரவை அறிவாக்கப் பணிபுரியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது, எல்லோருக்கும் இருக்கிறது என்று கூறி, இந்த வகைகளில் இந்த அமைச்சரவை நல்ல முறை யில் பணியாற்றவேண்டும் என்று கூறிக்கொண்டு, எனக்கு ஆளுநர் அவர்களின் உரை மீது பேச வாய்ப்பு அளித்த பெருமைக்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

**திரு. க. ரா. நல்லசிவம்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, "ஓராயிரம் ஆண்டு ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது வந்துதித்த மாமணியைத் தோற்போமோ" என்று பாரதி பாடினார். அரும் பாடுபட்டு நாட்டுக்கு விடுதலையைப் பெற்ற இருபது ஆண்டு களுக்குப் பின்னால் நல்லதொரு ஆட்சி கிடைக்குமா என்று ஏங்கிக் கிடந்த மக்களுக்கு ஆறுதல் கொடுக்கக்கூடிய முறையில் ஒரு புதிய ஆட்சி தமிழகத்தில் வந்திருக்கிறது. அதுவும், சமூகத் தினுடைய அடித் தளத்தில் இருக்கக்கூடிய பெருவாரியான பேர்கள் இங்கே சட்ட மன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர் களாகவும், இருப்பதைப் பார்க்கும்போது, உண்மையிலேயே நான் மிக மிக மகிழ்ச்சி அடைகிறேன். இத்தனை நாட்களாகச் சட்ட மன்றங்களுக்கும் பாராளுமன்றமும் பெரியவர்களுக்கும் வசதி உள்ளவர்களுக்கும், பட்டாதார்களுக்கும், பாளையக்காரர்

[திரு. க. ரா. நல்லசிவம்] [1967 மார்ச் 28

களுக்கும் சொந்தமாக இருந்த நிலை மாறி, நம்மைப் போன்ற மிகச்
சாதாரணமாக இருக்கக்கூடியவர்கள் அமைச்சரவையிலே
உட்கார்ந்திருப்பதைப் பார்க்கும்போது உண்மையிலேயே மனம்
புளகாங்கிதம் அடைகிறது. இது போன்ற சர்க்காரை நான்
மனப்பூர்வமாக வரவேற்கிறேன்; மனப் பூர்வமாகப் பாராட்டு
கிறேன். ஆனால், அதே நேரத்தில் ஒரு பெரிய சிக்கலான
தருணத்தில் புதிய சர்க்கார் அமைந்திருக்கிறது. இதையெல்லாம்
சமாளிப்பது என்பது சாதாரணமான காரியம் அல்ல.
இங்கொன்றும் அங்கொன்றும் பலபடப் பேசக்கூடிய சூழ்நிலையில்
இந்தச் சர்க்கார் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே,
ஜாக்கிரதையாக இருந்து, இப்பொழுது ஏற்பட்டிருக்கக்கூடிய
இந்தப் பெரிய தொல்லைகளையெல்லாம் சமாளிப்பதற்கான நெஞ்சு
உரத்தையும், ஆழ்ந்த திட்டவட்டமான கருத்தையும், அடிப்படை
யையும் வைத்துக்கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழக
மானது இந்தச் சங்கடங்களையெல்லாம் கடந்து, நீந்திக் கரையேற
வேண்டும் என்று உண்மையிலேயே வாழ்த்துக் கூறுகிறேன்.

அடுத்தபடியாக, இருபதாண்டுக் காலமாக காங்கிரஸ் அரசாங்க
மானது எத்தனையோ பல தீங்குகளையெல்லாம் செய்திருக்கிறது.
சென்ற கால ஆட்சியைப் பிரதானமாக நான் குற்றஞ் சாட்ட
விரும்புவதெல்லாம், தமிழக மக்களுடைய, இந்த நாட்டு
மக்களுடைய சுயநம்பிக்கையைச் சென்ற இருபது ஆண்டுகளில்
நாசம் செய்ததைப் போல இந்தியச் சரித்திரத்திலே என்றைக்குமே
பார்க்க முடியாது. அந்த அளவுக்கு இந்த நாட்டு மக்களுடைய
சுய நம்பிக்கையையும் திட ,நம்பிக்கையையும் திட்டவட்டமாகப்
போக்கி, இவற்றையெல்லாம் கடந்த காலத்தில் இருந்த அரசாங்கம்
நாசம் செய்திருக்கிறது. இத் தருணத்தில் நாம் செய்ய வேண்டிய
முதலாவது காரியம் ஒன்று உண்டு. ஒரு வலுவான காரியம் ஒன்று
உண்டு. அது என்னவென்றால், இன்றைக்கு நம்பிக்கையற்
றிருக்கும் இந்த நாட்டு மக்களுடைய உள்ளத்திலே நம்பிக்கை
என்னும் ஒளியை ஏற்படுத்தித் தீரவேண்டும். அதை ஏற்படுத்
துவதன் மூலமாகத்தான், வருகின்ற காலத்தில் இந்த அரசாங்கம்
நிலையான அரசாங்கமாக, வலுவான அரசாங்கமாக, எதையும்
எதிர்த்துத் தாங்கிக்கொண்டு முன்னேறக்கூடிய அரசாங்கமாக
இருக்க முடியும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
அதற்கு ஒரே வழிதான் உண்டு. மின்னலைப்போன்ற பிரகாசம்
மட்டும் தெரிகிறது. அதே நேரத்தில், கடலைப் போன்ற ஒரு
பரந்த புதிய வழியையும் நாம் கடைப்பிடித்துத்தான் தீர
வேண்டும். அதன் மூலமாகத்தான் இப்பொழுதுள்ள நம்பிக்கை
யற்ற நிலையை நாம் போக்க முடியும்; துணிவுமிக்க, பண்புமிக்க,
தீரமிக்க தமிழ்நாட்டை நாம் சமைக்க முடியும். தேவையான
கொள்கையை நாம் வகுத்துக்கொண்டால், அதுபோன்ற ஒரு
நிலையை உண்டுபண்ண முடியும். ஒன்று, சமூக அமைப்பில்
மாற்றத்தை உண்டு பண்ணுவதாக இருக்கலாம். கொள்கை அடிப்
படையில் புதிய பாதையைச் சிந்தித்துக் கருத்தில் வைத்துக்
கொண்டு அதன்மூலமே இன்றைக்கு நாட்டிலுள்ள சிக்கலான
பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முற்பட வேண்டும்.



1967 மார்ச் 28] [திரு. க. ரா. நல்லசிவம்]

இன்று நாட்டில் பிரதான பிரச்சினையாக விளங்குவது உணவுப்
பிரச்சினைதான். இதைத் தீர்ப்பதற்கு என்ன வழி என்று சிந்திக்
கிறபோதே தலை சுற்றும். மயக்கம் கொடுக்கக்கூடிய பிரச்சினையாக
இருக்கிறது. காங்கிரஸ் கட்சி தேர்தலிலே தோற்று, இருக்கு
மிடம் தெரியாமல் போனதற்குப் பல்வேறு பிரச்சினைகள் காரணங்
களாக இருந்தாலும், பிரதான பிரச்சினை உணவுப் பிரச்சினைதான்.
அதிலே தோல்வி கண்டார்கள். இருக்குமிடம் தெரியால் ஒருவர்
இருவாகப் போய்விட்ட பரிதாபகரமான நிலைக்கு இன்று வந்து
விட்டார்கள். உணவுப் பிரச்சினை என்று எடுத்துக்கொண்டால்,
கொள்முதல் செய்வது, மத்திய சர்க்காரிடத்திலிருந்து தானியத்
தைப் பெறுவது, வெளிநாடுகளிலிருந்து தானியத்தைப் பெறுவது
இவற்றின் மூலமாக மாத்திரம் நிச்சயமாக இந்தப் பிரச்சினை
யைத் தீர்க்க முடியாது. உணவுப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டு
மென்றால் ஒரு புதிய பாதையையே வகுத்துக்கொள்ள வேண்டும்.
அப்போதுதான், இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். நீண்ட
நெடுநாளைக்கு ஆட்சியில் இருக்க முடியும் என்பதைச் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குக் கொள்முதல் வேண்டுமா, வேண்டாமா என்பது
ஒரு பிரச்சினை. கட்டாய ரேஷன் ஒருசில பகுதிகளில் மாத்திரம்
இருக்க வேண்டுமா, எல்லாப் பகுதிகளில் கொண்டுவரப்பட
வேண்டுமா என்பது ஒரு பிரச்சினை. இப்படி கொள்முதலைப்
பற்றியும் வினியோகத்தைப்பற்றியுமே விவாதித்துக் கொண்டிருக்
கலாம். ஆனால், இவற்றின்மூலம் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க
முடியாது. கடந்த இருபதாண்டுக் காலமாகக் காங்கிரஸ் கட்சி
உழுபவனுக்கே நிலம் என்ற அடிப்படைத் தத்துவத்தைச்
சொல்லிக்கொண்டு வந்தார்களே தவிர, அதை அமல்படுத்தத்
தவறிவிட்டார்கள். அதன் காரணமாகத்தான், இப்போது
கடுமையான தோல்வியைக் கண்டார்கள். நிலச் சீர்திருத்தம்
சம்பந்தமாகப் பல சட்டங்கள் கொண்டுவந்திருக்கிறார்களே என்று
சொல்லப்படலாம். ஆனால் உண்மையில் உழுபவனுக்கு நிலம்
கிடைத்திருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. கோட்டையிலே
கொண்டுவரப்பட்ட சட்டங்களில் பலவிதமான கோளாறுகள்
நிறைந்திருக்கின்றன. இருக்கக்கூடிய சட்டங்களின் ஓட்டைகளை
அடைப்பதன் மூலம் அவற்றை ஒக்கப் பண்ணுவதன் மூலம்
இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. நிலச் சீர்திருத்
தச் சட்டத்தின் அடிப்படையையே மாற்றியாக வேண்டும்.
இன்று, 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு 30 ஸ்டாண்டர்டு ஏகர்
என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுவும் கூட அமல்படுத்தப்
படவில்லை. நான் ஒரு விவசாயி. நேரிடையாக விவசாயத்தில்
ஈடுபட்டிருக்கிறவன். வேறு தொழிலையோ, வியாபாரத்தையோ
கொண்டிருக்கவில்லை. என்னால் நிச்சயம்
கட்டுத் தரமாகச் சொல்ல முடியும். பத்து ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையில்தான்
ஒரு விவசாயியால் சாகு
படி செய்ய முடியும். இந்தத் தேசத்தில் சரியான முறையில் விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியும்.
ஆகவே 30 ஸ்டாண்டர்டு ஏகர் என்பதை 10 ஸ்டாண்டர்டு ஏகர்

[திரு. க. ரா. நல்லசிவம்] [1967 மார்ச் 28

என்பதாக மாற்றியாக வேண்டும். இன்றைக்கே அதை நீங்கள்
செய்யாவிட்டாலும்கூட, ஆறு மாதமோ, ஒரு வருடமோ சாவ
காசம் எடுத்துக்கொள்ளுங்கள். ஆனால், விவசாயப் பெருங்குடி
மக்களிடத்திலே ஒரு நம்பிக்கை ஒளியை ஊட்ட இப்படிச்
செய்வதையே உங்கள் லட்சியமாக வைத்துக்கொள்ள வேண்டும்.
பத்து ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருந்தால், 2 போக நன்செய்
ஆக இருந்தால் பத்து ஏக்கரா. ஒரு போக நன்சுசய் ஆக இருந்
தால் 20 ஏகரா. புன்செய் ஆக இருந்தால் 40 ஏக்கரிலிருந்து 50
ஏக்கர் வரை வரும். ஆக, ஒருவருக்கு 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு
அதிகமாக இருக்கக்கூடாது என்பதை வருகின்ற காலத்திலாவது
கொள்ள வேண்டும். இப்போதுள்ள சமூகத்தில் ஓர் அசைவை
உண்டுபண்ணினுல் கேரள ராஜ்யத்தில் அந்த சர்க்கார் பட்ட பாடு
நமக்குத்தெரியும். ஆக வேகமாகக் காரியம் செய்தால், மற்றவர்கள்
நம்மை அழித்து நசுக்கிவிடுவார்களோ என்ற அச்சம் அரசாங்
கத்திற்கு ஏற்படுவது நியாயமானது. ஆனாலும்கூட, இவற்றைச்
செய்யாது நாம் விடுவோமேயானுல், இதுவே நம்மை அழிக்கும்
சக்தி வாய்ந்ததாக இருக்கும் என்பதை நான் ஞாபகப்படுத்த
விரும்புகிறேன். தேர்தல் நேரத்திலே ஜனங்கள் இரண்டு பிரிவு
களாக இருந்து வேலை செய்தார்கள். ஒன்று, நசுக்கப்பட்டவர்கள்,
தாழ்த்தப்பட்டவர்கள், சமூகத்தில் எந்தவிதமான அந்தஸ்தும்
இல்லாதவர்கள், மாடி இன்னதென்று தெரியாதவர்கள்,
சமூகத்தின் அடித்தளத்திலே உழன்றுகொண்டிருப்பவர்கள், இந்த
உலகத்தில் அவர்களுக்கென்று வீடு கிடையாது, நிலம் கிடையாது.
இவர்கள் எல்லாம் நம் பக்கத்திலே இருந்து நம்மை ஆதரித்திருக்
கிறார்கள். கொஞ்சம் கொஞ்சம் சொந்த உள்ளவர்களும்கூட நம்
பக்கம் இருந்திருக்கிறார்கள், ஆனால் நேற்றுவரை இருந்த
காங்கிரஸ் சர்க்காரின் துணைகொண்டு, தங்களுடைய வாழ்க்கைத்
தரத்தை பொருளாதார நிலையை உயர்த்திக்கொண்டு மேல்நிலைக்குச்
சென்றவர்கள் தங்களுடைய நிலையைக் காப்பாற்றிக்கொள்
வதற்காக ஒருசேர நின்று நம்மை எதிர்த்ததைக் கண்டோம்.
ஆக, இன்றைக்கு வாழ்க்கையிலே கொஞ்சம் கொஞ்சம் நம்மை
யொட்டி நம்பிக்கை ஒளி பெற்றிருக்கிற ஏழை எளிய பாட்டாளி
வர்க்கத்தினருக்கு நாம் வாழ்வளிக்கும் வகையில் செயல்பட்டாக
வேண்டும்.

கடந்த 8 நாட்களாக நான் கோயம்புத்தூர் மாவட்டத்திலே
சுற்றுப்பிரயாணம் செய்து வந்திருக்கிறேன். எங்கு போனாலும்,
'மூன்று படி அரிசி எங்கே? ஒரு படி அரிசி எங்கே?' என்று
நம்மை எதிர்த்தவர்கள் பிரசாரம் செய்திருக்கிறார்கள். இது ஒரு
அபாய அறிவிப்பு. அவர்கள் சும்மாயிருக்கமாட்டார்கள்.
தங்களைக் காப்பாற்றிக் கொண்டாக வேண்டும் சமூகத்துறை
யிலே, பொருளாதாரத் துறையிலே காப்பாற்றிக் கொண்டாக
வேண்டும். நம்முடைய பலவீனங்களை எடுத்து மக்களைக் குழப்பி
விடுவதற்கும் நேரம் கிடைக்கிறபோது நம்மைத் தாக்கிவெறி
வதற்கும் முயற்சி எடுத்துக்கொண்டேயிருப்பார்கள். ஆகவே
நாம் அவர்களை இந்த உருவத்திலேயே விட்டு வைத்திருக்கக்
கூடாது. நிலச்சுவான்தார்களாக இருக்கலாம், பாளையக்காரர்



1967 மார்ச் 28] [திரு. க. ரா. நல்லசிவம்]

களாக இருக்கலாம், அவர்களை இப்படியே விட்டுவைப்பது
நம்முடைய வாழ்வுக்கு உலை தேடிக்கொள்வதாகத்தான் இருக்கும்.
இன்றைக்கு நெசவாளர்களுக்கு நூல் கிடைக்கவில்லை. ஒரு
கட்டின் விலை 5 ரூபாய் வரையில் ஏறியிருக்கிறது. யார் தவறு
செய்கிறார்கள் என்பது பிரச்சினை அல்ல. ஆனால், இப்படி வாழ்க்
கையின் அடித்தளத்தில் இருக்கக்கூடிய மக்களைச் சுரண்டு
கிறவர்களை அந்த வர்க்கத்தையே அரசியல் ரீதியாகத் தேய்ந்து,
இல்லாமல் போகும்படிச் செய்வதற்கான திட்டத்தை நாம்
ஏற்படுத்தியாகவேண்டும். மெழுவழா என்ற கொள்கையை நாம்
அனுசரித்தால் அவர்கள் நம்மை அழித்துவிடுவார்கள். இன்றைய
தினம் கொள்முதல்பற்றிப் பல்வேறு புகார்கள் கூறப்பட்டிருக்
கிறதே? இவற்றிற்கெல்லாம் அடிப்படையான காரணங்கள்
என்ன? சாதாரண ஏழை எளிய மக்களா? பெரிய பணக்காரர்
களிடம், நிலச்சுவான்தார்களிடம் இருக்கக்கூடிய ஒரு மனப்
பண்பு பெரிய அதிகாரிகள் சிலரிடத்திலும் இருப்பதைப் பார்க்
கிறோம். அவர்கள் இந்தச் சர்க்காருக்கு ஆதரவு காட்டுவதுபோல
நடந்துகொண்டு கெட்ட பெயரை வாங்கிக் கொடுப்பதற்கு கொள்
முதல் விவகாரத்தைப் பயன்படுத்திக் காரியங்கள் செய்துகொண்
டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் கவனத்தில் வைத்துக்கொள்ள
வேண்டும்.

(மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைமை)

அடுத்தபடி இன்னொன்று. தத்துவார்த்த அடிப்படையில்
இன்றைக்குத் தனியார் துறை வேண்டுமா, பொதுத் துறை
வேண்டுமா சோஷலிசத்தை நிர்மாணிக்க பழைய அமைப்பு
முறையையே விட்டுவைக்கப் போகிறோமா என்ற கேள்விகள்
எல்லாம் வரும். சமதர்ம சமுதாயத்தை உருவாக்க வேண்டும்
என்ற கொள்கையை நாம் கொண்டிருக்கிறோம். அதைச் செயல்
படுத்தும் வகையில் நாம் காரியங்களை எடுத்துக்கொண்டாக
வேண்டும். நாளைக்கே நீங்கள் அதிகம் செய்ய வேண்டுமென்று
சொல்லவில்லை, இரண்டு வருடத்தில், மூன்று வருடத்திலாவது
நீங்கள் இந்த லட்சியத்தை அடைந்தாக வேண்டும். ஆனால்
இடைக்காலத்திலே, இதைச் செய்யப் போகிறோம், அதைச்
செய்யப் போகிறோம் என்பதாகக் கொடுக்கிற அறிவிப்புகள்மட்டும்
கொஞ்சம் குறைவாக இருக்கலாம். நான் வேண்டிக்கொள்வ
தெல்லாம், உங்கள் வாயிலிருந்து வருகிற அறிவிப்புகள் குறைவாக
இருக்கவேண்டும், செயல் அழுத்தந்திருத்தமாக இருக்க
வேண்டும். நமக்கு முன்னால் இருந்தவர்கள் பேசிப் பேசியே
காலத்தை கழித்தார்கள். ஜனநாயகத்தைப்பற்றிப் பேசுவார்கள்,
காந்தீயத்தைப்பற்றிப் பேசுவார்ர்கள், ஏழை எளிய மக்களைப்
பற்றிப் பேசுவார்கள், இப்படி அதிகமாகப் பேசுவார்கள், எழுதிக்
கொண்டிருப்பார்கள். அவர்களிடத்திலே இருந்த நாம் எதிர்
மறை முகமாகப் பல விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.
அவர்கள் அதிகமாகப் பேசி வந்தார்கள். நாம் அதிகமாகப்
பேசுவதில் பயனில்லை. அவர்கள் அதிகமாகச் செய்யவில்லை.
நாம் அதிகமாகச் செய்தாக வேண்டும். அவர்கள் ஏழை எளியவர்

களைக் கவனிக்கவில்லை. வசதியுள்ளவர்களுக்கும், மேல் நிலைகளில் இருந்தவர்களுக்குமே துணையாக இருந்தார்கள். நாம் வாழ்க்கையின் அடித்தளத்தில் இருக்கிற சாதாரண ஏழை எளிய மக்களும் வாழ்வில் முன்னேற்றம் அடையச் செயல்பட்டாக வேண்டும். ஆக அவர்கள் அடியோடு வீழ்ச்சியுற்றதற்கான காரணத்தை மனதில் வைத்துக்கொண்டே காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ந பகல் 12-00 அடுத்தபடியாக உணவுப் பிரச்சினை இருக்கிறது. இது பெரிய பிரச்சினை. சாதாரணப் பிரச்சினை அல்ல. இன்றைக்கு இருக்கிற சர்க்கார் இதைத் திட்டவட்டமாக மதிப்பிட்டாகவேண்டும். சென்னை, கோயம்புத்தூர் ஆகிய இரண்டு இடங்களில் கட்டாய ரேஷன் முறை இருக்கிறது. மற்ற இடங்களில் குடும்பக் கார்டு அடிப்படையில் வழங்குகிறார்கள். இதைப்பற்றி நான் நிச்சயமாக ஒரு கருத்தை வற்புறுத்தியாகவேண்டும். சென்னை நகரத்திலே, கோவை நகரத்திலே உள்ளவர்களுக்குக் கட்டாய ரேஷன் அடிப்படையில் ஒரு நபருக்கு எந்த அளவு தானியம் தருகிறோமோ, அதே அளவு மற்றப் பகுதிகளில் உள்ளவர்களுக்கும் குடும்பக் கார்டு அடிப்படையில் கொடுக்கும்போதும் கொடுத்தாக வேண்டும். நீங்கள் ஒரு நபருக்கு எவ்வளவு என்று சென்னையிலே நிர்ணயிக்கிறீர்களோ அதுவே கோவையிலும் கொடுக்கப்பட வேண்டும். திருச்சியிலும் கொடுக்கப்பட வேண்டும். உடுமலைப் பேட்டையிலும் கொடுக்கப்பட வேண்டும். வேண்டுமானால் நீங்கள் மக்களை இரண்டு வகையாகப் பிரியுங்கள். நிலம் உள்ளவர்கள், தானியத்தையே கூலியாகப் பெறக்கூடியவர்கள் ஆகியோர் ஒரு வகையினர். நிலம் இல்லாதவர்கள், நிலத்தில் விளைகிற தானியத்தைக் கூலியாகப் பெறாது, பணமாகக் கூலி பெறுகிறவர்கள் ஆகியோரை ஒரு பகுதியாகப் பிரியுங்கள். முதலில் சொன்னவர்களுக்கு நீங்கள் தானியம் கொடுக்க வேண்டாம். ஆனால் இரண்டாவது வகையினருக்கு நீங்கள் உணவு ரேஷன் வழங்கும்போது, நகரப்புறங்களில் இருப்பவர்களுக்கு ஓர் அளவு, கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்கு ஓர் அளவு என்று பாகுபாடு செய்யாதீர்கள். நிலம் இல்லாத, தானியத்தைக் கூலியாகப் பெறாதவர்கள் அத்தனைபேர்களுக்கும் அவர்கள் சென்னையில் இருந்தாலும் சரி, கோவையில் இருந்தாலும் சரி, மற்ற மற்ற கிராமப்புறங்களில் இருந்தாலும் சரி, ஒரே அளவு தானியத்தை விநியோகம் செய்தாகவேண்டும். நகரத்தில் உள்ளவர்களுக்கு ஒரு படி என்றால் கிராமப்பகுதியில் உள்ளவர்களுக்கு ஒரு பிடி என்கிற முறையில் பாகுபடுத்துவது சரியல்ல. கிராம மக்களை ஒடுக்கி, நகர மக்களின் வாழ்வைச் சிங்காரிக்கும் காரியத்தில் நாம் இறங்கக்கூடாது. இந்நாட்டில் வாழ்கிற மக்கள், அவர்கள் எங்கே வசித்தாலும் நமக்கு ஒன்றுதான். கிராம மக்களின் உழைப்பினால்தான் இன்றைய தினம் நகரங்கள் கொழிக்கின்றன. ஆகவே அரிசி கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் சர்க்காரே அரிசி விநியோகம் செய்யமுன்வருகிறபோது தைரியமாக நிலம் இல்லாத மக்களுக்கு, விவசாயத்தில் ஈடுபடாது மற்ற மற்றத் தொழில்களில்



ஈடுபட்டிருக்கிற மக்களுக்கு, அவர்கள் ராஜ்யத்தின் எந்தப் பகுதியில் இருந்தாலும் ஒரே அளவு தானியத்தைப் பெறும்படியாக நாம் செய்தாகவேண்டும்.

அடுத்து, இப்போது கொள்முதல் சம்பந்தமாக ஒரு ஏக்கருக்குக் குறைந்தவர்களிடத்தில் கொள்முதல் செய்யவேண்டாம், அதற்கு மேற்பட்டவர்களிடத்தில் கொள்முதல் செய்யும்படியாக சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த உத்தரவு இன்னும் தங்களுக்கு வரவில்லை என்பதாக அதிகாரிகள் சொல்கிறார்கள். எப்படி இருந்தாலும், சிறு நிலக்காரர்களுக்குக் கொள்முதலினால் தொந்தரவு இருக்கக்கூடாது என்று அரசாங்கம் கருதுகிறது. ஆனால் அதிகார வர்க்கம் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். சிறு நிலக்காரர்களை விட்டுவிட்டால் நமக்குக் கொள்முதல் சரியாக நடைபெறாது என்பதாக மாவட்ட கலெக்டர்கள் நினைக்கிறார்கள். அதன் காரணமாக 30 சென்ட் நிலம் உள்ளவர்களிடம்கூட கொள்முதல் செய்யப்படுகிறது. போதாதற்கு நம்முடைய மாநிலத்தில் இன்னும் பல இடங்களில் கூட்டுப் பட்டாக்கள் இருக்கின்றன. ஆகவே நான்கு ஐந்துபேர் சேர்ந்த கூட்டுப்பட்டாவை வைத்து ஒரு ஏக்கருக்கு மேல் இருக்கிறது, ஆகவே கொள்முதல் செய்தாக வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்துகிறார்கள். ஒரு கிராமத்திற்குச் சென்றால் இந்தக் கெடுபிடியைப் பெரிய நிலக்காரர்களிடம் காட்டுவது இல்லை. நான் இந்த மன்றத்தில் நிச்சயமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமத்திற்கு அதிகாரிகள் செல்லட்டும். முதலில் அங்குள்ள பெரிய நிலக்காரர்களை அணுகி நீங்கள் இவ்வளவு மூட்டை கொள்முதலுக்குப் போட்டாக வேண்டும் என்று சொல்லட்டும். அந்தத் தானியத்தைக் கொள்முதல் செய்துகொண்டு அப்பால் வருவதற்குள்ளேயே சிறுநிலக்காரர்கள் அவர்களிடத்தில் உள்ள உபரியாக உள்ள தானியத்தை வலிய வந்து இவர்களுக்குக் கொடுத்துவிடுவார்கள். ஆனால் கொள்முதல் செய்கிற முறையில் காட்டப்படுகிற பாரபட்சத்தைத்தான் விவசாயப் பெருங்குடி மக்கள் எதிர்க்கிறார்கள். நாம் ஒரு ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்களை விட்டுவிடுங்கள் என்று சொன்னாலும் அதிகாரிகள் கேட்பது கிடையாது. கூட்டுப்பட்டா முறை வேறு இருக்கிறது. ஆக நான் இந்த அரசாங்கத்திற்கு ஒரு யோசனை தெரிவித்துக்கொள்வேன். ஒரு ஏக்கர் என்பதற்குப் பதிலாக 3 ஏக்கர் வரை நிலம் உள்ளவர்களுக்குக் கொள்முதலில் இருந்து விலக்குக் கொடுத்துவிடலாம். அது சாத்தியமில்லை என்று சொன்னால் லெவி முறையையே ஏற்படுத்திக் கொடுப்பது மிகவும் நன்மையாக இருக்கக்கூடும். இதுபற்றிய உத்தரவை வேகமாக, அவசரமாகப் போடவேண்டும். ஒரு ஏக்கர்வரை விதிவிலக்கு என்கிற உத்தரவாவது உடனடியாக எல்லாப் பகுதிகளிலும் அமுலுக்கு வந்தாகவேண்டும்.

அது மாத்திரம் அல்ல. இந்த வருஷம் பல பகுதிகளில் நோய் விழுந்திருக்கிறது. கோயம்பத்தூர் மாத்திரம் அல்ல. தென்னாற்காடு, தஞ்சாவூர், திருச்சி ஆகிய எல்லா இடங்களிலுமே விளைச்சல்

கண்டுமுதல் குறைவாக ஏற்பட்டிருக்கிறது. அதை அனுசரித்தும் நீங்கள் கொள்முதல் செய்தாகவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு பெரிய கண்டம். இதில் இருந்து நாம் தப்பியாகவேண்டும். உணவுப் பிரச்சினை, விவசாயப் பிரச்சினை, பஞ்சப் பிரச்சினை எல்லாம் ஒன்றோடொன்று பின்னிக் கிடக்கின்றன, ஆக நிலப் பிரச்சினை என்றால் பத்து ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதே உச்சவரம்பாக ஏற்படுத்தப்படவேண்டும்.

அடுத்து, நமது அரசாங்கம் நமது அண்டைய அரசாங்கங்களுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தாவது விரைவாக அந்த மாநிலங்களில் ஓடிக்கொண்டிருக்கும் ஆற்று நீரைப் பயன்படுத்த முயன்றாக வேண்டும். இதுபற்றி மத்திய அரசாங்க அமைச்சரோடு நான் டெல்லி சென்றிருந்தபோது பேசினேன். அவர் இரிகேஷன் கமிஷன் என்று இருக்கிறது. ஆயினும், அதனிடத்தில் போதுமான அதிகாரம் கிடையாது. ஆக அண்டை மாநில ஆற்று நீரைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்றால் அந்த இரண்டு அரசாங்கங்களும்தான் இணைந்துபேசி ஒரு முடிவு கண்டாக வேண்டும் என்பதாக மின்சார அமைச்சரும், உணவு அமைச்சரும் சொல்லிவிட்டார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் எல்லோருடைய கவனத்தையும் நம்பால் ஈர்க்கக்கூடிய ஒரு அமைச்சரவை ஆட்சிப்பொறுப்பை ஏற்று இருக்கிறது. எல்லோரும் நம்மைத் திரும்பிப் பார்க்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. நம் நோக்கத்தை உணர்ந்து செயல்படவேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. இதைப் பயன்படுத்திக் கொண்டாகிலும் நமது அண்டை மாநிலங்களோடு கொடுப்பதைக் கொடுத்தாகிலும் தண்ணீர் பெறுவதற்கு முன்வர வேண்டும். குடி தண்ணீருக்காக மட்டும் அல்ல, பாசனத்திற்காகவும் தண்ணீர் பெறுவதற்கு இந்த அமைச்சரவை நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக மந்திரிகளுடைய சம்பளத்தைப்பற்றி பேச்சு அடிபடுகிறது. சம்பளத்தைக் குறைத்துக்கொண்டதைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. சம்பளமே வேண்டாம் என்கிற நிலை வருமானால், அதுபற்றி நன்றாக சிந்தித்தே இந்த அமைச்சரவை அறிவிப்புக் கொடுக்கவேண்டும். நாம் ஒன்றும் பெரிய லட்சாதிபதி வீட்டுப் பிள்ளைகள் அல்ல. மிகத் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் நாம். சமூகத்தின் பெரிய தொழில் அதிபர் வீட்டுப் பிள்ளையாக இருந்தால், நிலச்சுவான்தார் வீட்டுப் பிள்ளையாக இருந்தால், சம்பளமே வேண்டாம் என்றுகூடச் சொல்லலாம். சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்களின் பிரதிநிதிகளாக, அவர்களைப்போன்ற நிலையில் இருந்தே அவர்களுக்காகப் பணியாற்ற வந்திருக்கிற நாம், சம்பளமே வேண்டாம் என்கிற முடிவை எடுக்கிறபோது கொஞ்சம் யோசித்தே செய்தாகவேண்டும். இதற்குப் பதிலாக நீங்கள் நமது தமிழ்நாட்டில் உள்ளவர்களின் சம்பள வரம்பை, லாப வரம்பை இவ்வளவுதான் என்று நிர்ணயிப்பதற்கு முன்வருங்கள். நான் அதை ஆதரிக்கிறேன். இது சமூகத்தின் ஏற்றத்தாழ்வுப் பிரச்



சினையை, விலைவாசிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவும். மந்திரிகளின் சம்பளத்தை மட்டும் விடுவது சமூகத்தின் பிரச்சினையைத் தீர்க்க உதவாது. ஆகவே, சமூக அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு அல்லது வருடம் ஒன்றுக்கு இவ்வளவுதான் வருமானம் இருக்கவேண்டும் என்று சட்டம் கொண்டுவரவேண்டும். வருமானத்திற்கு எப்படி வரம்பு வைக்கிறோமோ அதேபோல் செலவுக்கும் வரம்பு ஏற்படுத்தவேண்டும். அப்பொழுதுதான் லஞ்ச லாவண்யங்கள் ஒழிக்கப்படும். ஆகவே, அதற்கான சட்ட திட்டங்களைக் கொண்டுவரவேண்டும். கடந்த காலத்திலே, தேர்தல் காலத்திலே உள்ளே அல்ல, வெளியே பல ஊழல்களைப் பற்றி நாம் பேசியிருக்கிறோம். இப்பொழுது அதைப்பற்றியெல்லாம் விசாரிக்க ஏன் ஒரு கமிஷனைப் போடக்கூடாது? அமைச்சர்கள் மாத்திரம் தங்களுடைய கணக்கைக் கொடுத்தால் போதும் என்று நினைக்கக்கூடாது, அங்கத்தினர்களும் கொடுக்க வேண்டும், பெரிய அதிகாரிகளும் கொடுக்கவேண்டும். அங்கத்தினர்கள் என்றால் குறிப்பிட்ட கட்சி அங்கத்தினர்கள் மட்டுமல்ல, எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் கொடுக்க வேண்டும். ஐந்தாண்டுகளுக்கொரு முறையோ அல்லது ஆண்டுக்கொரு முறையோ கணக்குக் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் லஞ்ச ஊழல் ஒழியும். முன்பிருந்த மந்திரிமார்கள், அதிகாரிகள் இவர்கள்மீது நானே பேசியிருக்கிறேன்; நானே பார்த்திருக்கிறேன்; இப்பொழுது இருக்கின்ற உணவு அமைச்சர் அவர்கள் இந்தப் பக்கத்திலிருந்துகொண்டு பேசிய பேச்சுகள் எனக்கு இப்பொழுதும் ஞாபகத்திற்கு வருகிறது. அவற்றையெல்லாம், 10 வருடம் அல்ல, ஐந்து வருஷத்திற்குள் விசாரிப்பதற்கு ஒரு நிரந்தரக் கமிஷனைப் போடவேண்டும். அப்படிச் செய்தால்தான் லஞ்ச லாவண்யங்கள் ஒழியும், அதோடு வருகின்ற காலத்திற்கும் அது அப்படிப்பட்ட சூழ்நிலைகளை ஒழிக்க உதவிசெய்யும்.

அடுத்தபடியாக நான் ஒன்று சொல்லவிரும்புகிறேன், என்னுடைய ஜில்லா என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. பகிரங்க மார்க்கெட்டிலே, செங்கல்பட்டு, சென்னை, திருச்சி, சேலம் போன்ற ஜில்லாக்களிலே அரிசி 1 படி 1½ ரூபாய்க்குமேல் விற்கவில்லை; மீறிப்போனால் 1¾ ரூபாய்க்கு மேல் போகாது. ஆனால் கோயம்புத்தூர் ஜில்லாவிலே மாத்திரம் ஒரு படி அரிசி 3 ரூபாயிலிருந்து 3½ ரூபாய்வரை விற்கிறது. நான் உணவு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் கோயம்புத்தூருக்கு நான் விசேஷச் சலுகை கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை, சென்னை, செங்கல்பட்டு திருச்சி மதுரை தஞ்சாவூர் திருநெல்வேலி ஜில்லாக்களில் 1½ ரூபாய்க்கு மேல் விற்பது கிடையாது. ஆனால், கோயம்புத்தூர் ஜில்லாவில் மாத்திரம் ஏன் அப்படி இல்லை, அந்த துரதிருஷ்டம் என்ன என்று எனக்குத் தெரியாது, அதைப்பற்றி நான் ஆராய விரும்பவில்லை. அங்கே 3 ரூபாய் முதல் 3½ வரை விற்கிறது. ஆகவே, அங்கே தற்காலிகமாக ஏதாவது உடனடியாகச் செய்யவேண்டும். நியாய விலைக் கடைகளுக்கு அரிசிதான் கொடுக்கவேண்டும் என்று சொல்ல

வில்லை, அந்த அரிசி வேண்டும். இந்த அரிசி வேண்டும் என்று சொல்லவில்லை, ஏதாவது ஒரு தானியத்தைக் கொடுங்கள், அங்கேயிருக்கக்கூடியவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள், மனிதன் சாப்பிடக்கூடிய பொருள் ஒன்றை, கம்பு, சோளம் கொடுக்கலாம். ஆனால் அவையெல்லாம் இப்பொழுது கொள்முதல் இல்லை, ஆகவே நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை.

அடுத்து நெசவாளர்கள், மேலும் காய்ந்து கிடக்கின்ற தொழிலாளர்கள் இவர்களுக்கும் உணவு கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். நான் வரும்பொழுது ஒரே கூப்பாடு போட்டார்கள். உங்களைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. நீங்கள் இப்பொழுதுதான் வந்திருக்கிறீர்கள், உடனே எல்லாவற்றையும் குவித்துவிடமுடியாது, அதிலும் கொள்முதலில் வேறு கஷ்டம் வந்திருக்கிறது. நெசவுத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு உணவு தானியம் கிடைப்பதில்லை, விலை ஏறிவிட்டது, அவர்கள் பிழைப்பு நடத்தும் நூல் விலையும் ஏறிவிட்டது, இந்த நிலையில் நெசவாளர்கள் மிகவும் பயங்கரமான சூழ்நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு இரண்டு மாதங்களுக்குப் பிறகு எப்படி உணவு கொடுக்கப்போகிறோம், எப்படி அவர்களைக் காப்பாற்றப் போகிறோம் என்பது எனக்குத் தெரியவில்லை. கோயம்புத்தூரில் பல மில்களை மூடிக்கொண்டிருக்கிறார்கள். அவற்றைத் தீர்ப்பதற்காக இப்பொழுது அமைச்சர் அவர்களும் தொழிற் சங்கத் தலைவர்களும் கூடிப் பேசப்போகிறார்கள் என்ற செய்தியைப் பத்திரிகையில் பார்த்தேன். அது நல்ல ஏற்பாடு. நல்லமுறையில் அதற்கு ஒரு முடிவுசெய்து வேலையில்லாமல் இருக்கின்ற தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முன்பு முதுகுளத்தூரில் ஒரு கலவரம் நடந்தது. அதிலே அரசியல் காரணங்கள்தான் முக்கியமான காரணமாக இருந்தன. அதைப்பற்றி உங்களுக்குத் தெரியும். அதன் காரணமாக இன்று நெடுங்காலமாகச் சிறையில் இருக்கின்றவர்கள், அதிக நாட்களாகச் சிறையிலே உள்ளவர்கள் இவர்களையெல்லாம் விடுதலை செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், இந்தச் சர்க்காருக்கு நாங்கள் எங்களுடைய மனப்பூர்வமான ஆதரவைக் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு இந்த உணவுப் பிரச்சினையை மிகவும் துணிச்சல்கொண்டு எவ்வளவு விரைவாகத் தீர்க்கமுடியுமோ அவ்வளவு விரைவாகத் தீர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும். அதற்கான எதிர்ப்புகள் வந்தால் அதைச் சமாளிப்பதற்கு நாங்கள் உங்களுக்கு உதவியாக இருப்போம் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* THIRU PALANIVEL RAJAN : Mr. Deputy Speaker, Sir th General Elections recently held in our country will go down in th future history of Tamilnad in letters of gold, as a landmark. The elections have proved that democracy has come to stay perm nently in our State. All political experts are agreed that for t





successful functioning of democracy, there must be a two-party system. One Party, however eminent it may be and whatever sacrifices it has made, should not and cannot stay too long in power if democracy is to survive. On this basis, the people of the State have taken a sound political dictum truly to their hearts and minds and given their verdict. As far as the Ruling Party is concerned, this is an hour of triumph but unfortunately this is also an hour of trial. The opportunity to serve this country has come at a most inopportune time. They find on assuming Office, depleted treasury, deficit Budget and all the various problems that a Government cannot hope to solve immediately. Under these circumstances, the Hon. Ministers who are occupying their seats on their Treasury Benches today, are deeply conscious of their responsibility and are indifferent to the pomp and privilege attached to the Office. Our revered Chief Minister has endeared himself to the people of the State by his magnanimity, charity and, above all, humility.

Regarding the Governor's Address, I am surprised to find that some distinguished lawyers who are hon. Members sitting on the Opposition Benches, charged this Government with having accepted the Office of the Governor contrary to the policy of their Party. It is agreed, Sir, that all of us in this House have taken the oath of allegiance to the Constitution not only in this House but also at the time of elections and the Constitution provides for the Office of the Governor. This House has neither the power nor the privilege of removing the Office of Governor under the Constitution. Under the circumstances, I can assure the hon. Members Opposite, that this Gevornment will pay the greatest regard and respect to the Office and the person of the Governor so long as he constitutionally exists. The question, whether the Office of Governor should exist or not, is not an immediate problem. It is not a pressing issue. It is not a burning question of the day. Any Government, worth its name must devote its attention and focus its attention on the priorities of the day. In that respect it can well and truly be said that this Government has laid great emphasis on agriculture and food production in His Excellency the Governor's Address.

Regarding food production, it seems to be agreed by most of us in this House that procurement is a necessary evil in the present context of things. The other day the hon. the Leader of the Opposition was pleased to remark that there had been harassment of certain political parties and he had also specifically stated that Congressmen alone were being harassed. I do not know what he means by the word 'harassment'. If it means that people are being asked to hand over to the Government all the surplus grain they have, I can assure him that there is no discrimination in the matter of procurement. The hon. Leader of the Opposition is a particular friend of mine and also a friend of my family and my family has been associated with the ruling party for generations. I can tell him that every available grain grown in the entire

[Thiru Palanivel Rajan] [28th March 1967

Cumbum Valley by my family has been procured by this Government and no favour has been shown to me or to the members of my family as one belonging to the ruling party. If the hon. Leader of the Opposition will give me the names of those who were given a favourable treatment, I shall be pleased to have them so that I may also approach the Chief Minister with a request for favourable treatment.

Rise in prices is a vicious circle. Nobody knows where it will start and where it will end. All experts are agreed that, the economy of this country being agricultural, the lowering of prices of foodgrains will be a proper starting point for reducing the prices. I was pleased to see the hon. Member Mr. Cheemaichamy making a spirited defence for the cause of the agriculturists. As the Hon. Chief Minister has pointed out, in the present context of things, it is the duty of all of us to make some sacrifice, and the growers of paddy, who form a large percentage of the population of this country, should be the first persons to come forward to make this sacrifice. As a matter of fact, it is agreed that there is ceiling only for agricultural property. I think this Government will duly contemplate the fixing of a ceiling on urban and industrial income also in times to come.

As regards the various measures mentioned in His Excellency the Governor's Address, there can be no two opinions that they are all well-intentioned and well-meaning schemes. But the question is how to secure money for these development schemes. Whether the D.M.K. is in power or the Congress Party is in power, we are forced to go with a begging bowl on a pilgrimage to Delhi asking for more and more funds. I venture to submit that this period is going to be very critical period for the new Administration. In the new Budget which will be announced in a few months, the Hon. Chief Minister will be hard put to find enough resources and fresh avenues of taxation without overburdening the already heavily overburdened taxpayer. I venture to suggest that the Government may start forthwith a department of insurance. Insurance, as we all know, is divided into two fields, life insurance and general insurance. Under Section 30 of the Life Insurance Act, the exclusive privilege of carrying on life insurance in this country is given to the Life Insurance Corporation. But under certain exemptions granted under that Act, every State Government can start life insurance schemes for the benefit of its employees. From the statistics available it is clearly proved that there is a large percentage of insurance-minded people in Tamilnad. I am told on reliable authority that as much as twenty per cent of the premium income of the Life Insurance Corporation represents the funds subscribed by the people of Tamilnad. I, therefore venture to suggest that the Government of Madras will be well advised to start a department of insurance for the benefit of the employees serving under it.

As far as general insurance is concerned, there is no prohibition to the Government competing with private companies. There is in insurance what is called the third party risk against personal



28th March 1967] [Thiru Palanivel Rajan]

damage. The Government is entitled to nationalise that. There are more than one lakh of vehicles plying on the roads of Madras State and the Government are entitled as a matter of policy to nationalise that insurance. I am told that it is contemplated by the Centre to amend the Motor Vehicles Act and to nationalise this field of insurance in which case the Government will be able to earn substantial funds. I have worked out the fingers not in very great detail but roughly and I presume that the Government will be able to realise not less than four to five crores of rupees both from the general and the life insurance field. I submit that this money could be well used for the various development schemes which are pending for paucity of funds in this State. Even otherwise, this money could be well used for the betterment of our fellow brethren who are serving this Government. Any Government which hopes to survive must see to it that its employees are treated in a satisfactory way and that their service conditions are improved from time to time in the context of the rising prices which are spiralling from day to day. If the Hon. Ministers *prima facie* think that there is some sense, that there is some sanity in this proposal, I would be pleased to submit a short note and the Government could very seriously think about the opening of a department of insurance. In this respect no overhead expenditure will be involved, because the Treasury which issues discs to motor vehicles could be entrusted with the task of issuing the insurance policies, and the claims arising out of this insurance could be decided by the District Judges who already act as Tribunals for similar claims.

With these words I heartily endorse the motion of thanks to His Excellency the Governor of Madras.

***திருமதி வி. ப. பழனியம்மாள்:** தலைவர் உயர்திரு சபாநாயகர் அவர்களே, நான் ஆளும் கட்சியின் சார்பில் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு முதன்முறையாகப் பேசுகிறேன். மதிப்பிற்குரிய கவர்னர் பெருமான் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை ஆதரித்து இங்கு பேச விழைகின்றேன். சென்னை நகராட்சியைத் திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றிய உடனே முதல் மேயராக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தொழிலாளரை அவர்களைத் தேர்ந்தெடுத்து தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்குப் பெருமை தேடித் தந்த அறிஞர் அண்ணாவின், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று வந்துள்ளேன்.

தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றம் பற்றி அநேக ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகிறது. அதற்காக ஓரளவு நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதி சரிவர விநியோகிக்கப்படவில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போதிய அளவு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் தகுந்த முறையில் கொடுக்கப்படவில்லை. பிற்பட்ட மக்கள் நிலைமையும் இதே போல்தான்

இருக்கிறது. நமது அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத் தப்பட்ட மக்கள் இவர்கள் முன்னேற்றமும் பெறுக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரிகளில் சேருவதற்குத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் இருந்து போதிய அளவு மாணவர்கள் வந்தால் அந்தச் சமுதா யத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்குப் போனஸ் வழங்குவதாக நமது அண்ணா அவர்கள் கூறியது வரவேற்கத் தக்க செய்தியாகும். அதற்காகத் தாழ்த்தப்பட்ட மக்கள் அத்தனைபேரும் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

கல்லூரியில் சேருவதற்குப் போதிய மாணவர்கள் வரவில்லை என்றாலும், ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேருவதற்கு மிக அதிக மான பேர்கள் வருகிறார்கள்; அவர்களுக்குப் போதிய அளவு இடம் கிடைப்பதில்லை. போதாத முறைப் பள்ளியில் ஆசிரியர் பயிற்சி பெற இடம் கிடைக்காமல் அதிகமான தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகள் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு மேல் வீட்டிலேயே தங்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதையும் கவனித்து அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டெக்னிகல் எக்ஸாமினேஷன் அதாவது டைபால் போன்ற பரீட்சைகளை எடுத்துக் கொண்டால் வருஷத்திற்கு ஒருமுறை தான் பரீட்சை எழுத நேரிடுகிறது. ஒவ்வொரு வருஷத்திலும் மார்ச் மாதந்தான் பரீட்சை நடக்கிறது. மார்ச் மாதத்தில் பரீட்சை நடந்தால் அதன் முடிவு நவம்பர் மாதத்தில் வருகிறது. அதற்கான சர்டிபிகேட் இன்னும் கூட வந்து சேர்ந்தபாடில்லை. மார்ச் மாதத்தில் தேர்வு எழுதி தேறாமல் போகிற பெண்கள் மறுபடியும் பரீட்சை எழுத வேண்டுமென்றால் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரையில் காத்திருக்க நேரிடுகிறது. இடையிலே அவர்களுக்கு ஒரு தேர்வு வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, நம் முக்கிய பிரச்சினையாகிய உணவுப் பிரச்சினை. விவசாயம் பிற்போக்கான நிலையில் இருப்பதால்தான் உணவுப் பிரச்சினை ஏற்படுகிறது. ஒவ்வொரு வட்டத்திலுள்ள தரிசு நிலங் களைக் கணக்கெடுத்து அவற்றைத் தாழ்த்தப்பட்ட விவசாயி
1பி..3 களுக்கும் மற்ற ஏழை விவசாயிகளுக்கும் பங்கிட்டுக் கொடுத்து அவர்களைப் பயிர் செய்யச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன் கலப்பு உரம், ரசாயன உரம் போன்ற உரங்கள் தாராள மாகக் கிடைப்பதில்லை. அப்படி உரங்கள் தாராளமாகக் கிடைப் பதற்குரிய வசதிகளையும் நம் அரசாங்கம் செய்து தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் தாழ்த்தப்பட்ட சமுதா யத்தைச் சார்ந்த விவசாயிகளுக்கு இலவசமாக விதை தானியங் களையும், விவசாயக் கருவிகளையும் கொடுத்து உதவ வேண்டு மென்றும் கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, எதிர்காலத் தலைவர்களை உருவாக்கும் ஆசிரியர்களைப் பற்றியும் நாம் கவனிக்க வேண்டும். நகரப்புறங்களை எடுத்துக் கொண்டாலும், கிராமப்புறங்களை எடுத்துக் கொண்டாலும் ஆசிரியர்களுக்கு தங்குவதற்குப் போதுமான இடவசதி இல்லை என்ற குறை எப்போதுமே இருந்து கொண்டிருக்கிறது. இது பற்றி ஆசிரியர் சமுதாயம் அடிக்கடி முறையிட்டு வந்திருக் கிறார்கள். அவர்களுடைய குறைகளைப்பற்றி இதுவரை செவி சாய்க்கப்படவில்லை. ஆகவே கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நம் அரசு ஆசிரியர்களுக்கு குவார்ட்டேர்ஸ் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி எல்லா ஆசிரியர்களுக்கும் குவார்ட்டேர்ஸ் கட்டிக் கொடுக்க முடியாது என்றால் அவர்கள் வீடுகள் கட்டிக் கொள்வதற்குக் கடன் கொடுத்து தவணை முறையில் வசூல் செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என் தொகுதிபற்றி உள்ள சில குறைபாடுகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கடந்த பத்தாண்டுகளாகத் தாரா புரம் தொகுதி மக்கள் திருப்பூரிலிருந்து தாராபுரம் வழியாக பழனிக்கு ரெயில்வே பாதை அமைத்துக் கொடுங்கள் என்று அப்பகுதிக்கு வந்திருக்கிற எல்லா அமைச்சர்களிடமும் முறை யிட்டிருக்கிறார்கள், அரசினரிடமும் அடிக்கடி கேட்டு வந்திருக் கிறார்கள். டெல்லியில் காங்கிரஸ் ஆட்சி இருந்தும், தமிழ் நாட்டிலும் காங்கிரஸ் கட்சி இருந்தும் கூட அவர்கள் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அக்கறை எடுத்துக் கொள்ளவும் இல்லை. ஆகவே, நமது அரசாங்கமாவது இதுபற்றி மத்திய அரசாங்கத் தினிடம் வற்புறுத்தி எங்கள் ஊருக்கு ரெயில் பாதை அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தாராபுரம் நகரத்தில் நான்கு உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அந்த நான்கு உயர் நிலைப் பள்ளிகளிலும் ஆண்டுக்கு சுமார் 500 மாணவர்கள் உயர் நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு வெளியேறுகிறார்கள். தாராபுரம் நகரத்தைச் சுற்றிலும் பத்து மைல் சுற்று வட்டாரத்தில் பத்துப் பள்ளிகளுக்கு மேல் இருக்கின்றன. இவற்றிலிருந்தும் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு அநேக மாணவர்கள் வெளியேறு கிறார்கள், இவர்களுக்குப் போதிய அளவு கல்லூரிகளில் இடம் கிடைப்பதில்லை. தாராபுரம் பஞ்சப் பிரதேசம் என்பதை எல்லோரும் அறிந்திருப்பார்கள். அங்குள்ள ஏழைகளின் குழந்தைகள் விடுதிகளுக்குச் சென்று பணம் கட்டி படிக்கக் கூடிய வசதி இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குத் திறமை இருந்தும் அநேக மாணவ மாணவிகள் வீட்டிலேயே தங்கவேண்டி யிருக்கிறது. ஆகவே, நமது அரசாங்கம் இதை கவனித்துத் தாரா புரத்தில் ஒரு கல்லூரி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதை அரசாங்கம் கவனிக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. ஏ. ஓய். எஸ். பரிசுத்த நாடார்:** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையில் ஏதோ பெரிய காரியங்கள் இருக்கும் என்று நாங்கள் எதிர்ப்பார்த்தோம். ஆனால் ஏமாந்து விட்டோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஓரளவிற்கு விவசாயம் சம்பந்தமாக அவர்கள் உரையில் குறிப்பிட்டிருந்தாலும் கூட, மற்ற திட்டங்கள் பற்றி எதுவும் அதில் எடுத்துக் காண்பிக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்தவன் என்ற முறையில் சொல்வேன், உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்ற ஊக்கம் எல்லோரிடமும் இருக்கிறது. சர்க்கார் அதிகப் பணம் செலவு செய்தாலும், அதிகப்படியான நிலங்களை ஏற்படுத்தியது தவிர உள்ள நிலங்களில் உற்பத்தியை அதிகமாகப் பெருக்கவில்லை. இதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். ஒரு வியாபாரத்தை எடுத்துக் கொண்டால் ஒரு வியாபாரி முதல் போடும்போது அதில் லாபம் அதிகமாக இருந்தால் அந்த வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும், அதிக லாபம் கிடைப்பதற்கும் வகை செய்கிறார்கள். அதேபோல் விவசாயத்தில் அவ்விதம் வருமானம் அதிகமாக இல்லாததால் மக்கள் அதில் அவ்வளவு ஆர்வம் காட்டுவதில்லை. கடந்த முப்பது ஆண்டுகளாகப் பார்த்தால், ஒரு மூட்டை நெல் ஐந்து ரூபாய், ஆறு ரூபாய் என்று விற்கும்போது அதற்கு வேண்டிய கருவிகள் மற்ற சாமான்களின் விலைகள் எப்படியிருந்தன என்று பார்க்க வேண்டும். அப்போது ஒரு ஜோடி மாடு, உழவு மாடு, ஐம்பது அல்லது அறுபது ரூபாய்க்கு வாங்கலாம், பருத்திக் கொட்டை ஒரு மூட்டை ஐந்து ரூபாய் அல்லது அதற்கு ஒரு ரூபாய் குறைவாக இருக்கும். அப்படி எல்லாவற்றின் விலைகளும் குறைவாக இருந்தது. இன்று ஒரு ஜோடி மாடு வாங்கவேண்டுமென்றால் 350 அல்லது 400 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது, எட்டு மடங்கு அதிகமாக இருக்கிறது. பருத்திக் கொட்டையை எடுத்துக் கொண்டால் நெல் மூட்டை விலைக்கு முக்கால்பங்கு அதிகமாக இருக்கிறது. பின்னர், விவசாயக் கருவிகளின் விலையும் அதிகமாக இருக்கிறது. நல்ல முறையில் உற்பத்தி பெருகவேண்டுமென்றால் தேவையான கருவிகள் விவசாயிகளுக்கு குறைவான விலையில் கிடைக்க வேண்டும். தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டு ரேஷன் ஷாப்களில் மற்ற ஜில்லாக்களில் உள்ளதை விட க்யூ அதிகமாக இருந்தது. விவசாயத் தொழில் செய்பவர்களுக்கு சாதாரணக் கூலி என்னவென்றால் ஆண்களுக்கு இரண்டு மரக்கால் பெண்களுக்கு ஒரு மரக்கால் கொடுப்பார்கள். க்யூவில் நிற்பதற்கு முடியாமல் அரை ரூபாய் கூடுதல் கொடுத்து வெளியே வாங்க நினைக்கிறார்கள் மக்கள். ஆகவே, ப்ளாக் மார்கட்டில் வாங்க நினைக்கிறார்கள். தொழில் துறையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு உள்ள அளவு வாங்கும் சக்தி விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இல்லை. ஆகவே, விவசாய உற்பத்தி பெருகுவதற்கு விவசாயம் கருவிகள் போன்றவை குறைவான





விலையில் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும். விவசாய மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்கச் செய்ய வேண்டும். அப்போது நெல்விலையும் அரிசி விலையும் கூடுதலாகப் போகும். சர்க்கார் தெரிவித்துள்ளபடி குறைவான விலையில் கொடுத்து எப்படி அதனால் வரும் செலவை ஈடுசெய்யப் போகிறார்கள் என்று தெரிவித்தால் நல்லது. எப்படி விலையைக் குறைப்போம் என்று சொல்லிவிட்டால் முன்பிருந்த சர்க்கார் அப்படிச் செய்து அதனால் தங்களுக்குப் பலன் இல்லாமல் போகுமே என்று நினைத்து அப்போது கூறாமல் இருந்தார்களோ என்னவோ தெரியவில்லை.

நான் பல நாடுகளுக்குச் சென்றிருக்கிறேன். தொழில் அதிகக் கவனம் செலுத்தி தொழில்களைப் பெருக்கியிருக்கும் நாடுகள்தான் தலைசிறந்த நாடுகள். தொழில் சம்பந்தமாக இந்த உரையில் எதுவும் சொல்லவில்லை. காங்கிரஸ் சர்க்கார் அமைத்துக் கொடுத்த தொழில்கள் ஐந்தாண்டுகளுக்குப் போதும் என்று நினைக்கிறார்களே தவிர இன்னும் தொழிற்சாலைகள் ஏற்பட்டு நல்ல வழி வகைகளை ஏற்படுத்த வேண்டுமென்ற அக்கறை இல்லை என்று நினைக்கிறேன். அக்கறை இருக்கவேண்டுமானால் வருகிற பட்ஜெட்டிலே முழு விவரம் தெரிவிப்பார்கள் என்று நினைக்கிறேன். முன்னாலே நாம் செய்ய வேண்டியதிலே, உடனடியாக தொழில் அபிவிருத்தி செய்ய வேண்டிய காரியங்களை நாம் செய்யாவிட்டால், மற்ற மாநிலங்களைவிட நல்ல பெயர் பெற்று, தொழிலில் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்ற பெயர் போய், ஐந்து ஆண்டுகள் பின்தங்கி விடுவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். வருகிற பட்ஜெட்டில் தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்படுத்துவதற்கான வழிகள் இருக்க வேண்டும் என்று கூறிக் கொள்கிறேன்.

இப்போது மாணவர்கள் அரசியலில் பங்கு எடுத்துக் கொள்கிறார்கள். அவர்கள் அரசியலில் பங்கு எடுப்பதில் ஓரளவு தேச பக்தி இருக்கலாமே தவிர முழு அளவில் பங்கு எடுத்துக் கொள்ளுவது நல்லதல்ல. மாணவர்கள் நல்ல பிரஜையாக, நல்லொழுக்கம் பெற்று, நாட்டுப் பற்றோடு இருக்கும்படி அவர்களுக்குச் சிறு வயதிலிருந்தே ஊக்கம் கொடுக்க வேண்டும், பயிற்சி கொடுக்க வேண்டும். அதற்குக் காரணமாக இருப்பது சாரணர் இயக்கம். சிறு வயதிலிருந்து குருளையர் என்று சொல்லக் கூடிய "கப்ஸ்" ஆக இருக்கும் முறையில் எல்லாப் பள்ளிகளிலும் சாரணர் இயக்கத்தைப் புகுத்தி, எல்லாப் பிள்ளைகளும் குருளையர்களாக இருக்க வேண்டும் என்ற சூழ்நிலையை ஏற்படுத்தினால், நல்லொழுக்கத்தோடும், நாட்டுப் பற்றோடும் சிறுவயதிலிருந்து வளர்ந்து வருவார்கள். சாரணர் இயக்கத்திற்குச் சம்பந்தமான சங்கத்திற்கு, ரூ. 40,000 அரசாங்கத்திலிருந்து மான்யம் கொடுக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. இது சிறிய தொகை. சாரணர் இயக்கத்தில் 1942-ம் ஆண்டு முதற் கொண்டு ஜில்லா கமிஷனராகவும், இப்போது அஸிஸ்டெண்ட் ஸ்டேட் கமிஷனராகவும் பணியாற்றி வருகிறேன் என்பதால் இதன்

விவரங்கள் ஓரளவுக்கு எனக்கு நன்றாகத் தெரியும். பிள்ளைகளுக்கு நல்ல முறையில் பயிற்சி அளிக்கும் வாய்ப்பு இருப்பதால், அதிகப்படியான மான்யம் கொடுத்து எல்லாப் பள்ளிகளிலும் சாரணர் இயக்கம் ஏற்படுத்த முயற்சி எடுக்க வேண்டும் என்று கூறி, எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்த உபதலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஏ. ஆர். பெருமாள் : மதிப்பிற்குரிய சட்ட மன்ற உபதலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின் மீது பேச வந்திருக்கும் நான் என்னுடைய சில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன்.

இந்த உரையின்மீது எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. பரிசுத்த நாடார் அவர்கள், இந்த உரையிலே நிறைய எதிர்பார்த்ததாகவும், ஏதுமில்லாமல் ஏமாந்துவிட்டதாகவும் எடுத்துக் கூறினார்கள். அவர் மாத்திரமல்லாமல், நேற்றைய ஆளும் கட்சியாகவும், இன்றைய எதிர்க் கட்சியாகவும் இருக்கிற காங்கிரஸ் கட்சியின் பெருமைக்குரிய உறுப்பினர்கள் அத்தனை பேர்களுமே இந்த உரையைப் பற்றி ஏமாற்றம் கொண்டதாகக் கூறினார்கள். கவர்னர் அவர்களுடைய இந்த உரையிலே, என்னென்ன அம்சங்கள் இருக்க வேண்டுமென்று எதிர்பார்த்தோமோ அவைகள் அத்தனையும் இருக்கின்றன என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இந்த உரையின் மீது இங்கு பேசிய பல்வேறு உறுப்பினர்களும் பல தரப்பட்ட கருத்துக்களைக் கூறி விட்டார்கள். அவர்கள் கூறிய கருத்துக்களில் தலையாய கருத்தாக நின்றது, உணவுப் பிரச்னையை இந்த அரசாங்கம் தீர்க்க வேண்டும் என்பதுதான்.

இந்த நாட்டிலே உணவுப் பிரச்சினையானது இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசாங்கம் ஏற்பட்ட பிறகு திடீரென்று ஏற்பட்ட பிரச்னை அல்ல. கடந்த 20 ஆண்டுகளாக இருந்துவந்த காங்கிரஸ் கட்சியின் தவறான கொள்கைகளால் ஏற்பட்ட பிரச்னைதான் இந்த உணவுப் பிரச்னை. அந்தப் பிரச்னையைப் பற்றி, புது அரசாங்கம் வந்து உடனேயே அப்படிச் செய்துவிட வேண்டும். இப்படிச் செய்துவிட வேண்டும் என்று பேசுவதெல்லாம், அரச மரத்தைச் சுற்றிவிட்டு அடி வயிற்றைத் தடவிய கதையாகத் தான் இருக்கிறது. அரசாங்கம் இப்போதுதான் அமைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 20 ஆண்டுகளாக இருந்த காங்கிரஸ் கட்சியின் தவறான கொள்கைகளால் இந்த நாட்டின் உணவுப் பிரச்னை மிகவும் சிக்கலாக ஆக்கப்பட்டிருக்கிறது. எங்கள் அரும் பெருந் தலைவர், தென் பாண்டி மண்டலத்தின் முடிசூடா மன்னர் காலஞ்சென்ற திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், இந்த நாட்டைத் திருத்த முடியாத அளவுக்கு காங்கிரஸ் கட்சி கெடுத்திருக்கிறது என்று அடிக்கடி சொல்லுவார். அப்படித் திருத்த முடியாத அளவுக்குக் கெடுத்திருக்கக் கூடிய இந்த நிலையில் [illegible] சிரமப்பட்டு, கஷ்டப்பட்டு இந்த நிலைமைகளைத்



திருத்த வேண்டியிருக்கிறது என்பதை இந்த நாட்டில் ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, எந்தப் பிரச்னையானாலும் தீர்க்கமாக ஆராய்ந்து மக்களுடைய நலனை அடிப்படையாக வைத்துச் செயல்படும் தலைவர்கள் இன்றைய தினம் பொறுப்பேற்று இருக்கிறார்கள். அவர்கள் நிச்சயமாக உணவுப் பிரச்சினை மாத்திரமல்லாமல், அத்தனை பிரச்னைகளையும் சுமுகமாகத் தீர்த்து வைப்பார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, நான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற காரியாபட்டி தொகுதியைப் பொறுத்த வரையில் சில முக்கிய பிரச்னைகள் இருக்கின்றன. அவை பற்றி இந்தச் சட்ட மன்றத்தில் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் இருந்தால் என்ற ஒரு நதி ஓடுகிறது. அந்த நதி மதுரை தாலுகாவில் தொடங்கி, அருப்புக்கோட்டைத் தாலுகா காரியாபட்டி தொகுதிக்குள் நுழைந்து முதுகுளத்தூர் தாலுகாவை அடைந்து கடலில் சங்கமம் ஆகிறது. இப்பொழுது காரியாபட்டி தொகுதியும், முதுகுளத்தூர் தொகுதியும் இரண்டாக இருந்தாலும், 1952, 1957-ம் ஆண்டு தேர்தல்களிலே ஒரே தொகுதியாக இருந்தது. அந்தத் தொகுதியிலிருந்து எங்கள் தலைவர் தேவர் அவர்கள் தொடர்ந்து வெற்றி அடைந்து வந்திருந்தார். 1952-ம் ஆண்டுத் தேர்தலிலிருந்து இன்று வரையில் காங்கிரஸ் கட்சிக்கு விரோதமாக நின்றார்கள் என்ற ஒரே காரணத்திற்காக காங்கிரஸ் அரசாங்கம் எந்த உதவியும் செய்யாது, அது இன்றைய தினம் ஒரு பாலைவனம் போலக் காட்சி அளிக்கிறது. நான் சொல்லுவதை பெருமையாகச் சொல்லுகிறேன் என்று யாரும் எடுத்துக்கொள்ளக் கூடாது, இருக்கிற நிலைமையைச் சொல்லுகிறேன். மொத்தத் தொகுதிகளான 234 தொகுதிகளில் 1952-ம் ஆண்டு தேர்தலிலிருந்து 1967-ம் ஆண்டு தேர்தல் வரையில் ஒரு தேர்தலிலாவது காங்கிரஸ் நின்று வெற்றி பெறாத தொகுதி இருக்கிறதா என்றால் அந்தத் தொகுதி காரியாபட்டி, முதுகுளத்தூர் தொகுதி. அந்த ஒரே தொகுதியில் நின்று எங்கள் தலைவர் தேவர் அவர்கள் வெற்றி பெற்று வந்தார். கருதமால் நதியை காங்கிரஸ் ஆட்சியில் ஆக்கிரமித்தார்கள். நதியையே ஆக்கிரமித்து காங்கிரஸ்காரர்கள், நடுவில் வீடு கட்டியிருக்கிறார்கள். அதனால் ஓட்டம் தடைப்பட்டிருக்கிறது. அதை நீர்ப்பாசனத்திற்கு உபயோகமாகக் கூடிய நதியாக ஆக்க வேண்டுமென்பது என்னுடைய தலையாய கோரிக்கை. அந்தக் கோரிக்கையைப் பற்றி மதிப்பிற்குரிய பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. கருணாநிதி அவர்களுடைய இல்லத்தில் அவரிடம் ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறேன். நிச்சயமாக இதைக் கவனித்து அந்தப் பகுதி மக்களுக்கு நீர்ப் பாசன வசதி ஏற்படுத்தித் தருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்தபடியாக, காரியாபட்டித் தொகுதியில் கே. கரிஞ்சல் குளம், செவல்பட்டி கண்மாய்க்கு, சென்னம்பட்டி சமீபம் குண்டாற்றிலிருந்து வந்த பழைய கால்வாய் தூர்ந்து போய்விட்டது. மேற்படி கால்வாயை முன்பு இருந்த அமைச்சரவையின் காலத்தில் சிவகங்கை உணவு உற்பத்தி இலாகா, எஸ்டேட் டிபார்ட்மென்ட் மூலம், 1959, 1960, 1961 ஆண்டுகளில் என்ஜினீயர்கள் மூலம் லெவல் எடுத்து, எஸ்டிமேட் போட்டு, சர்க்காருக்கு அனுப்பினார்கள். அப்படி அனுப்பியதை முன்னால் இருந்த அமைச்சரவை சாங்ஷன் செய்யவில்லை. ஏனென்றால், அந்தத் தொகுதி மக்கள் பாரம்பரியமாக எதிர்க்கட்சிக்காரர்களுக்கு, மதிப்பிற்குரிய தலைவர் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு வாக்களித்து வந்ததால் எதுவும் செய்யாமல் இருந்து விட்டார்கள். ஆகவே இந்தப் புது அமைச்சரவை மேற்படி கால்வாயின் எஸ்டிமேட் சர்க்காருக்கு வந்திருப்பதைக் கவனித்து உடனடியாக செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கே. கரிசல்குளம் கிராமத்தில் இனாம்தார் காலத்தில் கட்டப்பட்ட களஞ்சியம், காரைக்கட்டுக் கட்டடம், காலி இடம் உள்பட சுமார் 20,000 ரூபாய் மதிப்புள்ளது. ஜமீன் இனாம்களை எடுக்கிற காலத்தில், ஃபைனல் காம்பென்சேஷன் தொகை நிர்ணயம் செய்து எடுத்துக் கொள்ளும்போது அவ்வூர் கர்ணம் சர்க்காருக்குக் கணக்குக் காட்டவில்லை. சர்க்காரையே மோசம் செய்து மூடியிருந்து வருகிறார். ஆகவே, உடனடியாக சர்க்காருக்குச் சொந்தமான கட்டடத்தை, தனிப்பட்ட ஒருவர் மோசம் செய்து வைத்திருப்பதை எடுத்து, அவ்வூரில் பள்ளிக் கட்டடம் இல்லாமல் தனிப்பட்டவர் வீட்டில் பள்ளி நடைபெறுகிறது, அந்தக் கட்டடத்தை பள்ளிக்கு உபயோகப்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குண்டாற்றுக் கால்வாய், தூர்ந்து போயிருப்பதைச் செப்பனிட்டால், பாப்பாபட்டி, பாஞ்சார்; கல்லுவைச்சேரி, வக்கணங்குண்டு, சிற்று மூன்றடைப்பு; வல்லிக்குளம்; ஆத்திகுளம் கிராமங்களுக்குத் தண்ணீர் பாயும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே உள்ள கண்மாய்களுக்குத் தண்ணீர் பாய்ந்து அந்தப் பகுதிகளில் நீர்ப்பாசன வசதி ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கடைசியாக, 1957-ம் ஆண்டில் தமிழ் நாட்டிலே பூகம்பம் போல் ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது என்பது உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும் எங்கள் தலைவர் முத்துராமலிங்கத் தலைவர் அவர்களுடைய செல்வாக்கை அழிக்க வேண்டும் என்பதற்காக, கடந்த காலத்தில் காங்கிரஸ் கட்சி, முன்பு வீரபாண்டிய கட்டபொம்மனை ஒழிக்க வேண்டும் என்று அவரோடு சேர்ந்த நாயக்க மக்களை விரட்டி விரட்டி சுட்டு ஒழிக்க அன்றைக்கு வெள்ளைக்கார அரசாங்கம் செயல்பட்டது போல, காங்கிரஸ் அரசாங்கமும் செயல் புரிந்தது, 17 பேர்களைச் சுட்டுக் கொன்றது. எங்கள் தலைவர் முத்துராமலிங்க தேவருடைய பிராந்தியத்திலே கலவரத்தைக்



கிளப்பிவிட்டு, கிட்டத்தட்ட 5000 பேர்களை புதுக்கோட்டைச் சிறையில் அடைத்துவைத்து, 836 பொய்க் கேசுகளைப் போட்டு, தேவரை கொலைவழக்கில் சம்பந்தப் படுத்தி கூட்டில் நிறுத்தி வைக்கும் அளவிற்குப் பயங்கர நிலையை காங்கிரஸ் சர்க்கார் உருவாக்கினார்கள். அந்த கேசுகளில் சம்பந்தப்படுத்தப்பட்ட 13 பேர்கள், மறவர்களும், ஹரிஜனங்களும் இன்னமும் சிறையில் இருக்கிறார்கள். அவர்கள் தண்டிக்கப் பட்டவர்கள். அந்த 13 பேர்களையும், மதிப்பிற்குரிய அண்ணா அவர்களுடைய அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதுவே ராமநாதபுரம் மக்களுடைய கோரிக்கை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மற்ற மாவட்டங்களில் காங்கிரஸ் கட்சி ஒன்று, இரண்டு இடங்களையாவது பெற்றிருக்கிறார்கள். ஆனால், ராமநாதபுரம் மாவட்டத்தில் 17 சட்ட மன்ற தொகுதிகளிலும், மூன்று பாராளுமன்றத் தொகுதிகளிலும் காங்கிரஸ் எல்லா இடங்களையும் இழந்திருக்கிறது. அந்தக் காரணத்தினால், அந்தப் பகுதியில் வாழும் மக்கள் நீண்ட நாட்களாக வேண்டி விரும்பிக் கேட்கும் கோரிக்கையை இன்றைக்கு அரசு ஏற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் நிறைவேற்றி, தேவர் அவர்களின் ஆத்மா சாந்தி அடையச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*** திரு. கே. கோவிந்தராசுலு:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேச வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு மீண்டும் மீண்டும் நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொண்டு, பேச முற்படுகிறேன். எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள், இந்தப் புதிய அரசு வந்து 15 நாட்களுக்கு மேலாகியும் இன்னும் இங்கே மூன்று படி அரிசி கொடுக்கவில்லையே என்று சில நண்பர்களும் காரசாரமாகவும், ஆவேசமாகவும் பேசினார்கள். ஆனால், மதிப்பிற்குரிய அந்த உறுப்பினர்கள் ஒன்றை உணர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கடந்த 19 ஆண்டுகாலமாக இந்த ஆட்சியில் இருந்த காங்கிரஸ்காரர்கள் நாட்டுக்கு, இந்த நாட்டு மக்களுக்குச் செய்த நல்ல காரியங்களை இந்தப் புதிய அரசு வரும் ஐந்து ஆண்டுகளில் நிச்சயமாகச் செய்து, மக்களுக்கு நன்மைகள் பல செய்யும், வசதிகளைத் தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதுவும் இரண்டு படி அரிசி ரூபாய்க்குப் போடும் என்று உறுதியை நான் இந்த மன்றத்தில் எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன். அது போக, இரண்டு படி அரிசி கொடுக்க வில்லை, கொடுக்கவில்லை என்று பல உறுப்பினர்கள் பேசியதை கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். கடந்த கால அவையில் அங்கம் வகித்த கனம் ஒருவர் வீட்டில் தனக்குச் சொந்தமான பல நிலங்களை தன்னுடைய சொந்தக்காரர்களுடைய பெயர்களில் வைத்துக் கொண்டு, சென்ற ஆண்டுவரையில் எந்தக் கொள்முதல் அதிகாரிகளுக்கும் கணக்குக் கொடுக்கவில்லை. கேட்டபோது, அந்த கனம் ஒருவர் என்ன கூறினார் என்றால், தனது மதிப்பிற்குரிய காங்கிரஸ்

கட்சியின் தலைவர் காமராஜ அவர்களுடைய பிறந்த தின விழா விற்கு சென்னைக்கு அனுப்பப்பட்டு விட்டது என்று பதில் கூறினர். அதே போல், இன்னொரு காங்கிரஸ் எம்.எல்.ஏ. வீட்டில் பல நூற் றுக்கணக்கான நெல் மூட்டைகளைப் பிடித்து வைத்துக் கொண்டு, கொள்முதல் அதிகாரிகள் மூட்டைகளைப் பிடித்து அளக்க வந்த போது, சில ஆட்களை விட்டு அந்த அதிகாரிகளை விரட்டியடித் தார். அப்பொழுது அந்த அதிகாரிகள் வெளியில் வந்து தங்க ளுக்கு மேல் உள்ள அதிகாரிகளிடம் புகார்களைக் கூறியும் கூட இது வரைக்கும் அந்தக் காங்கிரஸ் எம்.எல்.ஏ. பேரில் எந்தவித மான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை மட்டும் நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அது போக, இன்றைக்குக் கொள்முதல் அதிகாரிகளுக்கு இந்த நம்முடைய அரசாங்கம் நல்ல பாதுகாப்புக் கொடுப்பதுடன், அவர் ளுக்கு இந்தப் புதிய அரசு உறுதுணையாகவும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அது போக, மாநிலத்தை விட்டு மாநிலத்திற்கு உணவுப் பொருள்களைக் கொண்டு போவதைக் கட்டுப்படுத்தியதால் பொது மக்களுடைய பாராட்டுதலை இந்த அரசு பெற்றிருந்தாலும், ஜில்லா விட்டு ஜில்லா கொண்டு போவதைக் கட்டுப்படுத்தியிருப்பதை நீக்க வேண்டும் என்று பொது மக்கள் அரசிடம் சொல்ல வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள்.

அரசாங்கத்தால் உத்தரவு போட்ட பிறகு, அரசாங்க உத்தரவை மதிக்காமல், அதை மீறி கள்ளக் கடத்தில் மூலமாக உணவுப் பொருள்களை எந்த வாகனங்கள் மூலம் கொண்டு போனாலும், அந்த வாகனங்களைப் பறிமுதல் செய்ய வேண்டும், அப்படிக் கொண்டு போகிற நபர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி, அதற்காக மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன்.

தற்போது கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரை, அந்த நகரத்தில் மட்டும்தான் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. மற்ற இடங்களில் அரிசி சுலபமாகக் கிடைக்கிறது. சென்னை போலவே மற்ற இடங்களிலும் விலை குறை வாகியிருக்கிறது. நேற்றையதினம் கூட மார்கெட்டில் அரிசி சுலபமாகக் கிடைத்தது.

இப்பொழுது திங்கட்கிழமை, வியாழக்கிழமைகளில் ஓட்டல் களில் சாப்பாடு போடுவதைத் தடைசெய்திருக்கிறார்கள். அந்த உத்தரவை இந்த அரசு மாற்றி, அதைத் திருப்பிப் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். உணவுப் பொருள்கள் மீது போட்டிருக்கும் வரிகளையும் எடுக்க வேண்டும் என்று உணவு அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடந்த 19 ஆண்டு காலமாகக் காங்கிரஸ் ஆட்சியில் பல இடங் களிலும், பல துறைகளிலும் ஊழல்களும், லஞ்சமும் ஏற்பட்டிருக் கின்றன. ஆஸ்பத்திரியில் படுக்கை வாங்குவதிலிருந்து, மருந்து





வாங்குவதிலிருந்து, மாணவர்கள் சென்னையிலும் மற்ற இடங்களி லும் கல்லூரிகளில் இடம் பிடிக்க வரும் வரையில், ஊழல், லஞ்சம் தான் இருக்கிறது. அதே போல விவசாயிகளுக்குத் தண்ணீர் கொடுப்பதாக இருந்தாலும், அல்லது வேறு எதுவானாலும் லஞ்சம், ஊழல். விவசாயிகள் மாட்டுக்குக் கடன் வாங்குவதிலிருந்து, கிணற்றுக்குக் கடன் வாங்குவதிலிருந்து, உரம் வாங்குவதிலிருந்து, பூச்சி மருந்துகள் வாங்குவதிலிருந்து எல்லா வகைகளிலும் ஊழல் தான், லஞ்சம் தான் நடந்து கொண்டு இருக்கிறது.

அது போக, நகர மன்றங்களில் வேலைக்கு ஆட்கள் அமைப்ப திலிருந்து ஹெல்த் ஆபீஸ் வரையில் ஊழலும் லஞ்சமும் தான் பார்க்கிறோம். இதையெல்லாம் மாற்றி அமைக்க வேண்டும் என்று நம்முடைய இந்தப் புதிய அரசைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

1962-ல் காங்கிரஸ் கட்சி பொதுமக்களிடம், அனாதையான வயதானவர்களுக்கு வாழ்க்கை பணம் கொடுப்போம் என்று பல சுவரொட்டிகள் மூலம் விளம்பரம் செய்து ஓட்டு வாங்கினார்கள். அதன் பிறகு ஜில்லாவிற்கு 4 பேர்கள், 5 பேர்கள் என்று கொடுத் தார்கள். மற்றவர்களுக்குக் கொடுக்கவில்லை. இப்பொழுது இருக்கும் புதிய அமைச்சரவை அதை உடனடியாக பரிசீலனை செய்து, மீதியுள்ள ஏழை அனாதிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கவர்னர் அவர்களுடைய உரையில் மாநில அரசுக்கு மத்திய அரசு போதிய அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத் திலே, சென்னை மாநில அரசு நகரசபைகளுக்குப் போதிய அதிகா ரங்களைக் கொடுக்கவில்லை. புதிய அரசு நகரசபைக்கும் போதிய அதிகாரம் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். எனது கோவை மாவட்டத்தில் ஏழைமக்கள் பலகாலமாக அரசாங்கப் புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வருகிறார்கள். அந்தப் புறம்போக்கு, எந்தவிதமான வசதிகளும் இல்லாமல் இருக்கிறது. அவர்களைத் திடீரென்று நம்முடைய மந்திரிமார்கள் வருவதாக இருந்தால், அவர்களைப் போலீசைக் கொண்டு அப்புறப் படுத்தி விடுகிறார்கள். மறுநாள் அவர்களுக்கு அந்த இடத்தில் குடிசைகள் அமைப்பது என்றாலும், உடனடியாகக் குடிசைகள் போட முடிவதில்லை. பல ரூபாய்கள் செலவாகிறது. ஆகவே, இந்த நம்முடைய புதிய அரசு, பல காலமாகப் புறம்போக்கு நிலத் தில் குடியிருக்கும் மக்களுக்கு அந்த நிலத்தை உரிமை மாற்றம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, கோவை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான நெசவுத் பி. ப. 1-00
தொழிலாளிகள் வெளியூர்களிலிருந்து வந்து குடியேறியிருக் கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. உண்ண உணவும் உடுக்க உடையும், குடியிருக்க இடமும் இல்லாமல் அவர்கள் ஏரிக் கரை மீதும், குளக் கரை மீதும் குடியேறியிருக்கிறார்கள். இரண்டு, மூன்று குழந்தைகளுடனும், தாய்மார்களும் தந்தைமார்களும் தெருத் தெருவாகப் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கோவை மாவட்டத்தில் இந்த நிலை இருந்து கொண்டிருக்கிறது. வேலையற்றிருக்கும் அந்த நெசவுத் தொழிலாளிகளுக்கு இந்த அரசு தொழில்களை அமைத்துக் கொடுப்பதோடு, அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவும் ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கோவை அரசாங்க ஆஸ்பத்திரி பல காலமாக விரிவுபடுத்தப் படவில்லை. அங்கு வரும் டி.பி. நோயாளிகளைப் பத்துப் பதினைந்து நாட்கள் ஆஸ்பத்திரியில் வைத்திருந்துவிட்டு, போதிய மருந்து வசதி இல்லாத காரணத்தால் வெளியே அனுப்பிவிடு கிறார்கள். அவர்களுக்கு மருந்து வசதி செய்து கொடுக்க வேண்டும். ஆஸ்பத்திரியை விரிவுபடுத்த வேண்டும் என்று பல காலமாகத் திட்டம் தீட்டியும், இதுவரையில் அந்த ஆஸ்பத்திரி யைச் செம்மையாக்க சென்ற அரசு ஒன்றும் செய்யவில்லை. சென்ற வாரம் சுகாதார அமைச்சர் அவர்கள் கோவை வந்த நேரத்தில், அவரிடம் அங்குள்ள அதிகாரிகள் புகார் கூறினார்கள். அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளு கிறேன்.

பதினைந்து ஆண்டுக் காலமாக, மூன்று பொதுத் தேர்தலின் போதும், சிறுவாணித் திட்டம் வரும், என்று சொல்லிக் காங்கிரஸ் கட்சி மக்களிடம் ஓட்டு வாங்கியிருந்தும், இதுவரையில் சிறுவாணித் திட்டம் வரவில்லை. கோவை மாவட்டத்திலிருந்து இரண்டு அமைச்சர்கள் வந்திருப்பதால், மற்ற அமைச்சர்களிடம் பேசி, சிறுவாணித் திட்டத்தை உடனடியாக முடித்துக் கொடுக்க வேண்டும்.

அரிசி கேட்ட ஒரு பாவத்திற்காக அர்ஜுனன் என்பவரைச் சென்ற அரசு சுட்டுக் கொலை செய்துவிட்டது. கொலை செய்யப் பட்ட அர்ஜுனனுடைய நண்பர்கள் சிலரைப் பிடித்து வைத்துக் கொண்டு, அவர்கள் மீது கேஸ் போட்டு, இரண்டு ஆண்டுகளாக, சுட்டுத் தள்ளிய அந்த சப்-இன்ஸ்பெக்டருக்கு உடல்நிலை சரியில்லை என்ற ஒரே காரணத்திற்காக வாரத்திற்கு ஒரு தடவை கேஸைத் தள்ளிப் போட்டு, வாரா வாரம் கோர்ட்டுக்கு வரச் சொல்லித் தொந்தரவை கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அந்தக் கேஸை உடனடியாகப் புதிய அரசு வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*** திரு. எம். ஆர். கண்ணன்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல நான் விழை கிறேன். கவர்னருடைய உரையில் குறிப்பாக உணவுப் பிரச்சினை யைப்பற்றி அதிகமாகச் சொல்லப்பட்டுள்ளது. அது மிக மிக அடிப்படைத் தேவை என்பதை யாரும் மறுக்க இயலாது. கவர்னருடைய உரையானது ஏறக்குறைய ஆளும் கட்சியினுடைய கொள்கையை ஒட்டியது என்று கூறலாம். ஆனால், இதற்கு முன்பு நிகழ்த்தப்பட்ட கவர்னர் உரைகளைப் பல ஆண்டு காலமாகக்





கவனித்து வந்த காங்கிரஸ் நண்பர்கள், இன்றைய ஆளும் கட்சி யினருடைய கவர்னர் உரையில் எந்த விதமான நல்ல நோக்கமும் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால், அவர்களுக்கெல்லாம் தெரியும். சென்ற இருபதாண்டுக் காலமாக காங்கிரஸ் ஆட்சி நடந்து வந்திருக்கிறது. இந்த நாடு நல்லதொரு நிலைமைக்கு வராததற்குக் காரணம் காங்கிரஸ் கட்சியினுடைய சென்ற கால ஆட்சிதான் என்பதைக் காங்கிரஸ் கட்சியிலுள்ள அவர்களே உணர் வார்கள். அந்த உணர்வின் அடிப்படையில்தான் மக்கள் எல்லாம் நல்ல முறையில் வாக்களித்து வேறு ஆட்சியை ஏற்படுத்தியிருக் கிறார்கள். இதனுடைய அடிப்படைக் காரணம், மக்களுக்கு நல்லது செய்யவேண்டும் என்ற ஒரு குறிக்கோள்தான். எந்தக் கட்சியினுடைய ஆட்சி இருந்தாலும், அவர்கள் மக்களுடைய நன்மையைக் கருதி ஆட்சி நடத்த வேண்டும். ஆனால், இன்று காணப்படும் நிலை என்ன? கவர்னர் உரையின் மீது காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசும்போது, 'அதிலே ஒன்றும் இல்லை' என்று குறிப்பிட்டார்கள். என்ன என்ன இருக்கவேண்டும் என்று காங்கிரஸ் கட்சியினர் சொல்வதும் அவ்வளவு உசிதமானவையாக இல்லை. காரணம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஒரு வாரத்திற்குள் கவர்னருடைய உரையைத் தயாரிக்க வேண்டிய நிலையில் இருந்தது. இந்தக் குறுகிய காலத் திற்குள் என்ன கொள்கையை ஆட்சிக்கு வந்துள்ள கட்சி வகுக்க முடியும் என்பதை நாம் உணர வேண்டும். அதை மிக மிகத் தெளி வாக முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அடுத்து வரஇருக்கிற பட்ஜெட்டில்தான் இந்தக் கட்சியினுடைய உண்மை யான கொள்கை பிரதிபலிக்கும். ஆனால், இப்பொழுது நடைமுறை சம்பிரதாயத்தையொட்டி கவர்னருடைய உரை தயாரிக்கப்பட் டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருந்தும், அதில் ஏதும் இல்லை, இல்லை என்று சொல்லுவது, ஏதோ எதிர்க் கட்சி, ஆளும் கட்சி என்ற நிலையில் மட்டும் சொல்லப்படுவதாக இருக்கிறதே தவிர, உண்மையிலேயே மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதை அவ்வளவாகப் பிரதிபலிக்கவில்லை என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கவர்னருடைய உரையில் சென்ற தேர்தலைப்பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது. சென்ற தேர்தலானது உலகமே வியந்து பார்க்கக் கூடிய அளவுக்கு இருந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. உலகமே வியந்து பார்க்கக்கூடிய அளவுக்கு இருந்தது என்றால், அதற்குக் காரணம் இந்தியா ஒரு பெரிய ஜனநாயக நாடாகும். உலகத்திலேயே பெரிய ஜனநாயக நாடு என்ற நிலையில் இந்தியா இருந்து கொண்டு வருகிறது. அந்த உண்மையையொட்டி, இருபது ஆண்டுக் காலமாக ஒரே கட்சி ஆட்சியில் இருப்பதால், ஒன்று, மக்களுக்கு ஜனநாயகம் என்ன என்பது நல்ல முறையில் போதிக்கப்படவில்லை, அல்லது அந்தக் கட்சியினுடைய ஆட்சி மிகச் சிறப்பாக இருக்கவேண்டும். இரண்டிலே ஒன்று இருந்தால்தான், ஒரே கட்சி இருபது ஆண்டுக் காலமாக ஒரு நாட்டில் இருந்திருக்க முடியும். அது ஜனநாயக அமைப்பில் சாதாரணமான நல்ல

சர்வாதிகார ஆட்சியில் அது மிக மிகச் சாதாரணம். இருபது ஆண்டுக்கு மேலும் இருக்கலாம்; எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆட்சியில் இருபதாண்டுக் காலம் ஒரே கட்சி ஆட்சியில் இருப்பதை உலகத்திலே வேறு எந்த நாட்டிலும் காணப்படாத ஒரு நிலை என்று பெருந்தலைவர்களெல்லாம் கருதுகிறார்கள். ஆகவேதான், இந்த முறை இந்தியாவில் ஜனநாயக அமைப்பு எப்படி இருக்கிறது என்று பார்த்தார்கள். ஆனால், மக்களுக்கெல்லாம் நல்ல அரசியல் தெளிவை ஏற்படுத்தவில்லை என்று தான் சொல்ல வேண்டும். சென்ற 17 ஆண்டுக் காலமாக இந்தியா ஒரு குடியரசாக விளங்கிக் கொண்டிருந்தும், மக்களுக்கு நல்ல அரசியல் தெளிவைக் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தவில்லை. காங்கிரஸ் கட்சி சென்ற இருபதாண்டுக் காலமாக ஆட்சி நடத்தியதற்குக் காரணம், நமது இந்தியாவில் மக்கள் அரசியல் தெளிவு அதிகம் பெறாததுதான். நமது இந்திய மக்கள் உண்மையிலேயே அரசியல் தெளிவு பெற்றிருந்தால், பத்தாண்டுக் காலம் கூட காங்கிரஸ் ஆட்சி நீடித்திருக்காது; பத்து ஆண்டுக்குள் காங்கிரஸ் ஆட்சி மாறி வேறு ஆட்சி வந்திருக்கும். இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்று பார்க்காமல், எந்தக் கட்சியாக இருந்தாலும் நல்ல ஆட்சியாக இருக்கவேண்டும் என்பதுதான் மிக முக்கியமானது.

கவர்னர் அவர்களுடைய பதவியைப் பற்றி இங்கே பல அன்பர்கள் பேசினார்கள். நாங்கள் எல்லாம் எதிர்க்கட்சியில் இருந்தபோது, 'கவர்னர் பதவி தேவை இல்லை' என்று பேசினதாகச் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது கவர்னர் உரை மீது நடைபெறும் விவாதத்தில் நாங்களெல்லாம் பங்கெடுத்துக்கொண்டு அவருடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசுகிறோம் என்றும் குற்றச்சாட்டாகச் சொன்னார்கள். அது மிக மிகத் தவறான குற்றச்சாட்டாகும். இன்று இயங்கிக்கொண்டிருக்கும் இந்த ஆட்சி, ஒரு சட்டத்தின் அடிப்படையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தச் சட்டத்தின் அடிப்படையில் உள்ள ஆட்சியை விரும்பி ஏற்றுக்கொண்டுள்ள கட்சி சட்ட அடிப்படையில்தான் நடக்க வேண்டும். அந்த நிலையில்தான் கவர்னர் உரையின் மீது நாங்கள் கருத்துத் தெரிவிக்கிறோம்; அதை ஆதரிக்க வேண்டிய நிலையிலும் இருக்கிறோம்.

தமிழரசுக் கழகத் தலைவர் அவர்கள் பேசும்போது, இந்த மாநிலத்தினுடைய மொழி தெரிந்த ஒருவரைக் கவர்னராக நியமித்தால் அது மிக மிக நல்ல முறையாக இருக்கும் என்று குறிப்பிட்டார்கள், அது நல்ல ஜனநாயக முறையாகவும் இருக்கும் என்றார்கள். அந்தக் கருத்தை நான் முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன் கல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதி திரு. பி. பி. முகர்ஜி அவர்கள் பேசும்போது மிக மிகத் தெளிவாகச் சொன்னார்கள். எந்த ஒரு கவர்னரும் அந்த மாநிலத்தினுடைய மொழியை அறிந்திருந்தால்தான், அந்த மாநில மக்களுடன் நல்ல முறையில் பழக முடியும். அந்த வகையில்தான் நல்ல ஜனநாயகம் அமைய முடியும். ஆனால், இன்றுள்ள நிலையில் அவர் ஒரு காட்சிப் பொருளாக இருக்கிறார். அவர் ஏதோ நமக்கெல்லலாம் அப்பாற்பட்டவராகவும், மக்களோடு நெருங்கிப் பழக முடியாத நிலையிலும் இருக்கிறார். அந்த நிலை மாறி, ஒரு மாநிலத்தில் கவர்னராக நியமிக்கப்படுவர், அந்த மாநிலத்தில் வழங்கும் மொழியை அறிந்தவராக இருந்தால் எந்தவிதமான கேடும் இருக்காது. கவர்னராக இருப்பவர் கட்சிச் சார்பற்றவராக இருக்கவேண்டும். இப்பொழுதுள்ள இந்திய அரசு காங்கிரஸ் கட்சியினுடைய மெம்பர்களையே பெரும்பாலும் கவர்னர்களாக நியமிக்கிறது. அந்த நிலை மாறவேண்டும். கட்சிச் சார்பற்ற ஒரு நடுநிலையாளர், அந்தந்த மாநில மொழியைத் தெரிந்தவர்தான் கவர்னராக வர வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் ஆகும்.





ஜனநாயகம் என்றால், மக்களுடைய அதிகாரம் தான் ஆட்சிப் பீடத்தில் உள்ளவர்களை அடக்க இருக்கவேண்டும் என்பது காந்தியாருடைய கருத்தாகும். ஆனால் சென்ற முறை இருந்த காங்கிரஸ் ஆட்சியில் மக்களைத் தங்களுடைய அதிகாரத்திற்குள் அடக்கியாள வேண்டும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்திவிட்டது. அந்த நிலைதான் அந்தக் கட்சியினுடைய தோல்விக்குக் காரணமாகும். தேர்தலைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது கூட, ஜனநாயக முறையில் தேர்தல் என்று சொல்லுகிறார்கள். உண்மையிலேயே ஜனநாயக முறையில் தேர்தல் இருக்கிறதா என்றால், ஏட்டளவில் இருக்கிறதே தவிர, நடைமுறையில் இல்லை. இன்று தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே வந்துள்ள அன்பர்கள் அனைவரும் அவரவர்கள் மனத்திலே கைவைத்துப் பார்த்தால் உண்மையிலேயே தேர்தலுக்கான செலவுக் கணக்கைக் கொடுத்துள்ளது உண்மையிலேயே நியாயமான செலவா என்பதை அவரவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாமெல்லாம் சட்ட மன்றத்தில் சட்டத்தை ஏற்படுத்த வந்திருக்கிறோம். தவறான காரியத்தைச் சொல்ல இல்லை. மனத்தில் பட்டதைப் பேசுவது நல்லது. எப்போதும் பேசவேண்டும். என்னையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். ஒவ்வொருவரும் மனச்சாட்சிப்படி நடந்து கொள்ள வேண்டும். பலரது கணக்கு நியாயமாக இருக்கலாம். பலர் பெரும் கோடீசுவரர்கள். அவர்களெல்லாம் தேர்தலில் நின்றார்கள். அவர்கள் எத்தனையோ லட்ச ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். சட்டத்தை ஏற்படுத்தியவர்கள், சட்டத்தை ஏற்படுத்த இருப்பவர்கள் அதை மீறக் கூடாது. அவர்களே கூட தேர்தல் நேரங்களில் பல தவறுகள் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. அந்த நிலை நாட்டில் இருக்கக் கூடாது. உண்மை நிலையை உணர வேண்டும். அதற்கொப்ப சட்ட திட்டங்களை அமைக்கவேண்டும். அப்படியிருந்தால் நாட்டில் நல்ல ஆட்சி இருக்கும். எந்தக் கட்சி ஆட்சியில் வந்தாலும் நாட்டு மக்களின் நல்வாழ்வுதான் முக்கியம்.

இன்றுள்ள நிலையில் பெருவாரியான மக்களிடத்திலே அறம், ஒழுக்கம், நேர்மை ஆகிய நல்லொழுக்கங்கள் அறவே காணப்பெறுவதில்லை. இன்று நாட்டில், ஒவ்வொரு மாநில முதலமைச்சர்கள் மீதும் ஏதாவது ஒரு தவறான குற்றச்சாட்டு சாட்டப்படுகிறது. இது முதலமைச்சர்கள் மீது ஏற்படுகின்ற ஊழல் குற்றச்சாட்டு, 'கரப்ஷன்' என்பது கீழ்நிலையில் இருந்தால் நீக்கிவிட

லாம். மேல்நிலையில் இருந்தால் எப்படி நீக்குவது? ஒரு நாட்டு மக்களுக்கே உதாரணமாக விளங்கக்கூடிய முதலமைச்சர்கள்மீது இப்படி கரப்ஷன் கேஸ்கள் இருக்கிறதென்றால், அந்த நிலைமைதான் காங்கிரஸ் ஆட்சி வீழ்ச்சியுற்றதற்குக் காரணம். கொள்கையளவில் காங்கிரஸ் கட்சியில் கொள்கை எந்தவிதத்திலும் குறைந்தது அல்ல. ஆனால் அவர்கள் அதை நடைமுறைப்படுத்துவது இல்லை. கொள்கையை நடைமுறையில் கொண்டுவரும்போது அவர்கள் பேசுவதும் ஜனநாயக சோஷலிசம், நாங்கள் பேசுவதும் ஜனநாயக சோஷலிசம்தான். நடைமுறைக்கு வரும்போது அவர்கள் கொள்கையற்றவர்களாக இருந்தார்கள். அதுதான் தோல்வியை ஏற்படுத்தியது. எந்தக் கட்சியாக இருந்தாலும் தாங்கள் ஏற்றுக்கொண்ட கொள்கையை நூற்றுக்கு நூறு சதவிகிதம் நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும்.

(மதிப்பிற்குரிய சபாநாயகர் தலைமை)

மதுவிலக்குச் சட்டத்தைப்பற்றிக்கூட சில அன்பர்கள் பேசினார்கள். இன்று பலர் கண்டதைக் குடித்துச் சாகிறார்கள். இன்று எத்தனையோ பேர் கண்டதைக் குடித்து, நோயுற்று சிகிச்சை பெறுவதற்காக மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். சட்டம் என்று ஒன்று கொண்டுவந்த பிறகு அதை அமல்படுத்துவதில் ஒரு உறுதியான கொள்கையைப் பின்பற்ற வேண்டும். இல்லையென்றால் அந்தச் சட்டத்தையே நீக்கிவிட வேண்டும். மக்களை ஏமாற்றுவதற்காகக் குடியை ஒழித்திருக்கிறோம் என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லிவந்தார்களே தவிர, அது நாட்டு மக்களுக்கு நன்மையைத் தரவில்லை. குடி என்பது தவறானது, தீதானது. உண்மையில் நாம் இதைப் பின்பற்ற வேண்டும் பின்பற்ற முடியா விட்டால் அந்தச் சட்டத்தையே நீக்கி விடவேண்டும். வீண்செலவாக அதை வைத்துக்கொண்டிருக்கக் கூடாது. மேலும் குறிப்பாக அந்நிய ஆட்சி அகன்று நமது சொந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு அதிகாரத்தில் உள்ளவர்கள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உறவினர் என்ற நிலைதான் இருந்து வருகிறது. அதனால் தைரியமாகத் தவறு செய்கிறார்கள். ஆட்சியில் உள்ளவர்களும் அதை ஆதரிக்கிறார்கள். சட்டம்தான் முக்கியமேயொழிய, ஆளைப் பார்ப்பதிலே பிரயோசனம் இல்லை. காங்கிரஸ் சர்க்கார் ஆளைப் பார்த்தே இது வரையில் காரியங்களைச் செய்து வந்திருக்கிறார்கள். வேண்டியவர்கள் என்றால் ஒன்று, வேண்டாதவர்கள் என்றால் ஒன்று என்றே நடந்து வந்திருக்கிறார்கள். இப்படி இருந்தால் நிர்வாகம் எப்படி நல்ல முறையில் நடைபெறும்?

பொதுவாக, சர்க்காரிலே உத்தியோகம் செய்பவர்கள் எந்தக் கட்சியிலும் சேரக் கூடாது. அப்படி ஒரு முறை இருக்கிறது.

(மணியடிக்கப்பட்டது.)

The Speaker has allowed fifteen minutes or twenty minutes to other Members. Please allow me to speak for a few more minutes.



உணவுப் பிரச்சினையைப்பற்றி பலபல கருத்துக்களைச் சொல்லியுள்ளார்கள். அதை நல்ல முறையிலே நிர்வகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

சபாநாயகர் அவர்களே, அருள்கூர்ந்து இன்னும் இரண்டு நிமிஷங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையிலே, குறிப்பாக குடிதண்ணீர்ப் பிரச்சினை இருக்கிறது. எனது தொகுதியாகிய பேசின் பிரிட்ஜ் பகுதி குடிசைகள் நிரம்பிய பகுதி. அங்கு நல்ல முறையில் குடிதண்ணீர் விநியோகிக்கப்படவில்லை. இந்தப் பிரச்சினைக்கு இன்றுள்ள ஆட்சி மிகமிக நல்ல முறையில் தீர்வுகாணும் என்று நம்புகிறேன். சென்னை நகர விஷயத்தைப்பற்றி, இந்திய சர்க்கார் 'கோசலா கமிட்டி'. 'குல் ஹார்த்தி கமிஷன்' போன்ற சில கமிட்டிகளை நியமித்தார்கள். அவர்கள் கிருஷ்ணா, பெண்ணையாறு இணைப்புத் திட்டம் ஒன்றுதான் குடி தண்ணீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்கவல்லது என்று குறிப்பிட்டுள்ளார்கள். காவேரி திட்டத்தை விட அதுதான் சிறப்பாக இருக்கும். இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னையிலே பிச்சைக்காரர்கள் மிகமிக அதிகமாக இருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சியின் ஆரம்பத்தில் எத்தனை பிச்சைக்காரர்கள் இருந்தார்கள், சென்ற வருஷத்தில் எத்தனை பிச்சைக்காரர்கள் இருந்தார்கள் என்ற கணக்குப் பார்த்தால், காங்கிரஸ் சர்க்காரின் சாதனை மிகமிகத் தெளிவாக விளங்கும். உள்ளதை எடுத்துச் சொல்ல அந்தக் கட்சிக்காரர்கள் பயப்படுகிறார்கள். உண்மையைச் சொல்லியே ஆகவேண்டும்.

என்னுடைய பகுதியில் பீடித் தொழிலாளர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் நிலைமை மிகமிகக் கேவலமாக இருக்கிறது. அவர்கள் நிலைமையைச் சீர்ப்படுத்த ஒரு நல்ல சட்டத்தை ஏற்படுத்தினால் அவர்கள் பாதுகாப்பாக வாழ்க்கை நடத்த முடியும்.

கடைசியாக ஒரே ஒரு வேண்டுகோள். சென்னை நகரத்தில், பல கை ரிக்ஷாக்கள் இருக்கின்றன. சைகிள் ரிக்ஷாக்களும் இருக்கின்றன. கை ரிக்ஷாவில் மனிதனை மனிதன் இழுப்பது மிகமிகக் கேவலமான நிலை அதை ஒழித்தாக வேண்டும். ஆகவே, ரிக்ஷாத் தொழிலாளர்களுக்கு இரண்டு பேர் ஏறக்கூடிய சைகிள் ரிக்ஷாக்களை—அமைத்து அவர்களுக்கு சர்க்காரே வழங்க வேண்டும். தினமும் அவர்கள் பக்கத்திலுள்ள எந்தப் போலீஸ் ஸ்டேஷனிலாவது தினம் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் செலுத்தி வரச் சொன்னால் முடிவிலே ரிக்ஷாவை அந்தத் தொழிலாளர்களுக்கே சொந்தமாக்கி விடலாம். இந்த முறையை அனுஷ்டித்தால் அந்த ஏழைத் தொழிலாளர்களுடைய வாழ்வு மலரும். நாம் நம்முடைய ஆட்சியில் ஏழைகளையும் மத்தியதர வகுப்பினரையும் கவனித்தாக வேண்டும். மேல்நிலையில் இருப்பவர்களை அழிக்க வேண்டுமென்பது இல்லை. நிம்மதியாக வாழ்ந்துகொண்டிருக்கிற அவர்கள் இன்றுள்ள

நிலையிலேயே சிலகாலம் இருக்கட்டும் ஏழைகளை உயர்த்தவே நாம்
பல திட்டங்களைத் தீட்டியாக வேண்டும். மேலும் இன்றைய அரசு
ரெபரண்டங்களைப் பற்றி அடிக்கடி பேசி வருகிறது. இந்த
நாட்டிலே எழுத்தறிவு உள்ளவர்கள் மிகமிகக் குறைவாக இருக்
கிறார்கள். ஆகவே, ரெபரெண்டம் வைத்துத்தான் காரியத்தைச்
செய்ய வேண்டுமென்று இல்லை. எல்லாக் காரியத்தையும் மக்க
ளுடைய பிரச்சினையாக எண்ணி இந்த அரசு அருள்கூர்ந்து
கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி
யடிக்கப்பட்டது).

* திரு. நா. காசிராமன் : கனம் சபாநாயகர் அவர்களே,
கவர்னர் பெருமான் அவர்கள் உரையிலே, நாட்டிலே ஏற்பட்டிருக்
கும் உணவுப் பிரச்சினையைப்பற்றிக் கவலையும், அதைத் தீர்ப்பதில்
உள்ள ஆர்வத்தையும் காட்டியிருக்கிறார்கள். உணவுப் பிரச்சினை
யைத் தீர்ப்பதற்கு உணவுத் தானியக் கொள்முதல் செய்வது
அவசியம் என்று சில நாட்களுக்கு முன் நம்முடைய முதலமைச்சர்
அவர்கள், 'Tap the rich and pat the poor' என்று அழகாகச்
சொன்னார்கள். Tap என்ற வார்த்தையை அப்படியே
திருப்பிப் போட்டு Pat என்று அழகாகச் சொன்னார்கள்.
பெரிய நிலக்கிழார்களைத் தட்டிக் கேட்க வேண்டும். சிறு நிலக்
கிழார்களைத் தட்டிக் கொடுத்து வாங்க வேண்டுமென்று சொன்
னார்கள். இப்போது நடைமுறையில் நடைபெற்று வருவதைப்
பார்க்கும்போது, பத்திரிகைகளின் வாயிலாகத் தெரிந்துகொள்ளும்
போது அதிகாரிகளால் நிலைமை தட்டிவிடப்பட்டிருக்கிறது. மக்கள்
தலை பொறி தட்டினாற்போல் இருக்கிறது. அதுமாதிரியில்லாமல்
மிகவும் சங்கடமும் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்
மான சங்கடமும் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

அடுத்தபடியாக கவர்னர் அவர்கள் உரையில் சிறு கைத்
தொழில்களைப்பற்றி எதும் காணக் கிடைக்காமல் இருக்கிறது.
விவசாயிகள் அதிகமாக உள்ள நாட்டிலே சிறு தொழில்களின்
வளர்ச்சிக்கு நல்லாதரவும், ஊக்கமும் கொடுத்தால்தான் மக்களின்
வாழ்க்கைத்தரம் உயரும்.

குறிப்பாக, எங்கள் பிராந்தியத்தில் தஞ்சை ஜில்லாவில்
விவசாயிகள் அதிகம் இருக்கிறார்கள். அங்கு விவசாயிகளுக்குப்
பல குடிசைத் தொழில்கள், சிறுசிறு தொழில்கள் ஏற்படுத்திக்
கொடுக்க இந்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய நாட்டில் உள்ள தொழிலாளர்
களுக்கு மற்ற, மற்ற நாட்டில் உள்ள தொழிலாளர்களைக் காட்டிலும்
தொழில் நுட்பத்திலோ, வேலை செய்யும் ஆற்றலிலோ திறமைக்
குறைவு இல்லை. எந்த விதத்திலும் மற்ற நாட்டுத் தொழிலாளர்
களைவிட நம் நாட்டுத் தொழிலாளர்கள் தாழ்ந்தவர்கள் அல்ல.
நல்ல உழைப்பாளிகள், மற்றவர்களைவிட நல்ல பயிற்சி அனுபவமும்
சீக்கிரத்தில் பெறக்கூடியவர்கள், ஆகவே நிறைய தொழில்வசதி
களை ஏற்படுத்தி கொடுத்தாகவேண்டும்.



அடுத்தபடியாக, இலவசக் கல்வித் திட்டத்தை ஆரம்பப்
பாடசாலை, உயர்தர பாடசாலை, கல்லூரி என்ற மட்டத்தில் மட்டும்
வைத்துக்கொள்வதில் பயன் இல்லை. தொழில்துறையில் பயிற்சி
பெறுவதற்கும் ஏழைப் பெற்றோர்களின் குழந்தைகளுக்கு நாம்
இலவசப் பயிற்சி அளிக்க முன்வரவேண்டும். குறிப்பாக பாலி
டெக்னிக் போன்ற தொழிற் பள்ளிக்கூடங்களிலும் இந்த இலவசக்
கல்வித் திட்டத்தை விஸ்தரித்தாகவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். இதனால் ஏழைப்பெற்றோர்களின் குழந்தைகள்
நல்ல தொழில் கல்வியைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

உணவுக்கு அடுத்தபடியாக தம் நாட்டில் உள்ள பிரச்சினை குடி
தண்ணீர்ப் பிரச்சினை. ஆற்றிலே தண்ணீர் வற்றி, கோடை
ஆரம்பமானவுடனேயே பல நகரங்களில் குடிதண்ணீர்ப் பிரச்சினை
ஏற்பட்டு விடுகிறது. பல பேரூர் பஞ்சாயத்துப் பகுதிகளிலும்
கூட இதைக் காணலாம். திருச்சி, மதுரை, சென்னை, கோவை
என்று இப்படியாக பல பெரிய நகரங்களிலும் இது தலைவலியாக
இருக்கிறது. இதற்கு நிரந்தரமான பரிகாரத்தைக் காணவேண்டு
மென்று சொன்னால் மின்சார போர்டு போல வாட்டர் சப்ளை
டிரைவேஜ் போர்டு என்பதாக ஒன்றை நாம் நிறுவியாக
வேண்டும். அவர்கள் ராஜ்யத்தில் உள்ள இந்த நிலைமையை
நன்றாகப் பரிசீலனை செய்து ஆங்காங்கே நல்ல செயல்முறைகளை
மேற்கொண்டால்தான் நிரந்தரமாக இதற்குப் பரிகாரம் காண
முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பல நகரங்களில் 1961-ம் வருஷத்தில் எடுக்கப்பட்ட
ஜனத்தொகைக் கணக்கையும் இப்போது இருக்கின்ற ஜனத்
தொகைக் கணக்கையும் எடுத்துப் பார்த்தால் எந்த அளவுக்குப்
பல நகரங்களின் ஜனத்தொகை பெருகி இருக்கிறது என்பது
தெரியும். இந்த நகரங்களில் உள்ள மத்திய சர்க்கார் ஊழியர்
களுக்கு, லைப் இன்சூரன்ஸ் கார்ப்பொரேஷன் மற்றும் பாங்கு
ஊழியர்களுக்கு இவர்கள் போன்றவர்களுக்கும் பழைய ஜனத்
தொகை கணக்கின் அடிப்படையிலேயே பஞ்சப்படி கொடுத்து
வருவது நியாயமானதாக இருக்காது. ஒவ்வொரு நகரங்களிலும்
வாழ்க்கைச் செலவுகள் கூடிவிட்டன. விலைவாசிகள் ஏறியிருக்
கின்றன. கும்பகோணம் நகர சபையை எடுத்துக்கொண்டால்
1961-ல் 93 ஆயிரம் சொச்சம் ஜனத்தொகை இருந்ததாகக்
கணக்கிறது. அதன் நகர சபைத் தலைவராகப் பணியாற்றி வரு
வதனால் எனக்குத் தெரியும். சர்க்கரை கார்டு பாமிலி கார்டு வீடு
தோறும் விநியோகம் செய்கிறபோது கவனித்தேன். கிட்டத்
தட்ட லட்சத்து இருபதாயிரம் பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள்.
கொஞ்சம் இது அதிகப்படியாகக் கொடுத்திருக்கலாம் என்பதாக
மார்ஜின் எடுத்துக் கொண்டு குறைத்தாலும் லட்சத்துப் பத்தா
யிரம் மக்கள் நிச்சயமாக இருக்கிறார்கள். இன்னமும் 93 ஆயிரம்
பேர்கள் என்ற பழைய ஜனத்தொகைக் கணக்கின் அடிப்படையில்
அங்குள்ள ஊழியர்களின் பஞ்சப்படி போன்றவற்றை
நிர்ணயிப்பது கொஞ்சங்கூட சரியில்லை. ஆகவே இன்றுள்ள ஜனத்
தொகைக் கணக்கை நல்ல முறையில் தயார் செய்வதற்கு இந்த
அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. நா. காசிராமன்] [1967 மார்ச் 28

அடுத்து, கும்பகோணம் நகரசபையைச் சேர்ந்த ஆஸ்பத்திரியை சர்க்கார் முன்பு எடுத்துக்கொண்டார்கள். ஆனால் அதை அந்த நகரத்தின் ஜனத்தொகை விரிவுக்கேற்ப, அந்த நகரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களின் ஜனத்தொகை விரிவுக்கேற்ப விஸ்தரிக்கவில்லை. அந்த ஆஸ்பத்திரி முன்பு எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில் தான் இன்றும் இருக்கிறது. அதையும் நல்ல முறையில் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தச் சமயத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. செ. கோ. விசுவநாதன் : சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னரின் உரையை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் அவர்கள் தம் உரையில் முக்கியத்துவம் கொடுத்திருப்பது உணவுத்துறை சம்பந்தமாகவும், விவசாயத் துறைக்கு அளிக்கப்படவேண்டிய ஊக்கத்தைப்பற்றியதுமே ஆகும். பொதுவாக உணவு உற்பத்தி பெருகி இருக்கிறது, உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதாக காங்கிரஸ் கட்சியினர்கள் கொடுத்து வந்த புள்ளிவிவரங்கள் எல்லாம் நம்மை ஏமாற்றுகின்ற புள்ளி விவரங்களாகத்தான் இருந்தனவே தவிர நாட்டில் உள்ள சங்கடமான நிலைமையை இப்போது நாம் உணர்கிறோம். விவசாயிகளுடைய கஷ்டங்கள், சாகுபடியில் இருக்கிற சங்கடங்கள், உர விநியோகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற கோளாறுகள் இவற்றைத் தான் நாம் காண்கிறோம்.

பொதுவாக இன்றையதினம் உரவிநியோகம் சம்பந்தப்பட்ட வரை சென்னை மாநிலத்தில் இருக்கிற முறை—ஸ்டாக்கிஸ்டுகள் மூலமாக விவசாயச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. விவசாயச் சங்கங்கள் அங்கங்கே உள்ள விவசாயிகளுக்குப் பகிர்ந்து அளிப்பது என்பதுதான். அப்படி ஏற்படுத்தப்பட்ட முறையில் பல ஊழல்கள் ஏற்பட்டுவிட்டன. இதனால் விவசாயிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, உர விநியோகத்திற்கு ஒரு நல்ல திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்தாக வேண்டும் என்று அபிப்பிராயம். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு 'கோடவுன்' கட்டப்பட்டிருக்கிறது. அந்தந்த வட்டாரத்திற்குத் தேவைப்படுகிற உரம், எவ்வளவு என்று முதலிலேயே கணக்கிட்டு அந்த அளவில் உரத்தை ஸ்டாக்கிஸ்ட் மூலமாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் நாம் அனுப்பிவிடலாம். அந்தப் பஞ்சாயத்து யூனியன்கள் விவசாயிகளுக்கு உரத்தை அளிப்பதன் மூலம் இந்த உர விநியோகத்திலுள்ள ஊழலை ஒருவாறு அகற்ற முடியும் என்று நினைக்கிறேன். பொதுவாக, கிராமத்தில் இருக்கிற விவசாயச் சங்கங்கள் எல்லாம் இன்றையதினம் செயலற்ற முறையில் இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்பட்டுவிட்ட ஊழல், மார்கெட்டிங் சொஸைட்டியில் ஏற்பட்டுவிட்ட ஊழலின் காரணமாக எல்லா விவசாயச் சங்கங்களும் முடங்கிவிட்டன. ஆகவே, விவசாயச் சங்கங்களின் மூலம் உர விநியோகம் செய்யலாம் என்று நினைப்பது சரியாக இராது. கிராம சேவக்குகள் மூலம் ஒவ்வொரு கிராமத்திற்கும் தேவைப்



1967 மார்ச் 28] [திரு. செ. கோ. விசுவநாதன்]

படுகிற உர அளவைக் கணக்கிட்டு, அந்த அளவுக்கு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் நாம் அனுப்பிவிடுவது நல்ல முறையில் வேலை செய்யக்கூடும். இந்தத் திட்டத்தை அரசினர் ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே முறையில், செங்கல்பட்டு மாவட்டத்தில் இருக்கிற மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையானது கடந்த ஏழாண்டுக் காலமாக சர்க்கரை உற்பத்தி செய்து வந்திருக்கிறது. அந்த ஆலையைக் கடந்த 1964-ம் ஆண்டு இச்சபையினுடைய பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி சென்று பரிசீலனை செய்த நேரத்தில், 1962-63-ம் ஆண்டுவரை 28 லட்சம் ரூபாய் நஷ்டத்தில் அது செயல்பட்டுக் கொண்டிருந்தும், அதையடுத்து 1963-64-ல் தொடர்ந்து 2 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு வந்ததும் தெரிய வந்தது. இந்த அளவில் 30 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு அது செயலற்றிருக்கிறது. அங்கு இருக்கிற நிர்வாகிகளைச் சந்தித்து பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி கேட்ட நேரத்தில் அவர்கள் பல காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். முக்கியமாக அரசியல் பிரச்சினை காரணமாக அந்தப் பகுதியினர் அந்த ஆலையை எந்த ஊரில் நிறுவிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்களோ, அந்த ஊரில் ஏற்படுத்தாததன் காரணமாக ஒத்துழைப்பைத் தரவில்லையென்றும் குறிப்பிட்டார்கள். இதன் காரணமாக, அந்தச் சர்க்கரை ஆலையின் உற்பத்தித் திறன் குறைந்து ரூபாய் 30 லட்சம் வரை நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த ஆலை நல்ல முறையில் செயல்படுவதற்கு அதன் நஷ்டத்தை நடுத்து நிறுத்தும் வகையில் இந்தச் சர்க்கார் ஆவன செய்ய வேண்டும். 'போர்டு ஆஃப் டைரக்டர்ஸ்' களையே நல்ல முறையில் மாற்றியமைத்துக் கொடுத்து அந்த ஆலை நல்ல முறையில் செயல்படச் செய்ய வேண்டும். பொதுவாக, சீரிய முறையில், நல்ல முறையில் இது நடைபெறவேண்டுமென்றால் 5,000 ஏக்கர்கள் அளவுக்குக் கரும்புச் சாகுபடி செய்யவேண்டும். ஆனால் 5,000 ஏக்கர்கள் செய்யப் படுவது இல்லை. அதற்குக் குறைந்த அளவில்தான் செய்து பி. ப. 1-00
கொண்டிருக்கிறார்கள். காரணம், சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு கிடைக்கவில்லை. கரும்பு பயிரிடுவோருக்கு மத்திய பாங்கிலிருந்து உதவிகள் குறைந்ததினாலே ஊக்கம் குறைந்துவிட்டது. உற்பத்தியாளர்களுக்குச் சரியாகப் பணம் கிடைக்காததன் காரணமாக அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் (மணியடிக்கப் பட்டது).

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் திரு. செ. கோ. விசுவநாதன் அவர்கள் நாளை காலை 9 மணி அளவில் தொடர்ந்து உரையாற்றுவார்கள். இதுவரை கவர்னர் அவர்கள் உரையின்மீது 65 உறுப்பினர்கள் பேசியுள்ளார்கள். இன்னும் 35 அல்லது 40 உறுப்பினர்கள் வரை பேசவேண்டியிருப்பதால் நாளை காலை 9 மணியிலிருந்து 1 மணி வரை, மீண்டும் மாலை 2-30 மணியளவிலும் கூடுவதற்கு அவை அனுமதியளிக்குமென்று நினைக்கிறேன்.

[மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்] [1967 மார்ச் 28

இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன. நாளை காலை 9 மணியளவில் இந்தப் பேரவையின் கூட்டம் மீண்டும் நடை-
பிற்பகல் 1-31 பெறும் என்பதை நான் அறிவிக்கிறேன்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(6) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

* 118. *Notification issued with G.O. Ms. No. 139, Rural Development and Local Administration, dated the 23rd January 1967 making an amendment to the rules relating to the Issue and Disposal of Audit Reports of Panchayats published with the Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A-123 of 1962, dated the 1st February 1962 (Notification No. 12) at page 68 of Supplement to Part V of the* Fort St. George Gazette, *dated the 14th February 1962. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

### B. Reports, Notifications and other papers.

† 21. *The Madras Legislature (Prevention of Disqualification) Bill, 1967 (L.A. Bill No. 3 of 1967) with annexure.*

† 22. *The Madras Appropriation Bill, 1967 (L.A. Bill No. 4 of 1967).*

* Placed on the Table of the House on 27th March 1967.
Despatched to Members on 25th March 1967.

A

## தமிழகச் சட்டப் பேரவை

புதன்கிழமை, மார்ச் 29, 1967.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில், காலை 9 மணி அளவில், மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர், திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள், விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

துரித பஸ் கட்டணம்.

* குறுகிய காலக் கேள்வி எண் 2.—திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி: மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதிய அரசாங்கம் பொறுப்பு ஏற்றது வரை ஸ்டேட் எக்ஸ்பிரஸ் பஸ் நிறுவனத்தில் லாபமா, நஷ்டமா, எவ்வளவு?

(இ) எக்ஸ்பிரஸ் பஸ்களில் ஒரு கிலோ மீட்டருக்கு தனியார் கட்டணம் எவ்வளவு? அரசு கட்டணம் எவ்வளவு?

(உ) அரசாங்க எக்ஸ்பிரஸ் பஸ் கட்டணத்தைக் குறைப்பதற்கான உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(எ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும்?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** (அ) அரசினர் போக்குவரத்து துறையில் நீண்ட தூர (துரித) பஸ் போக்குவரத்தைப் பற்றி 31-3-1964 வரைத் தனிக் கணக்குகள் வைத்துக் கொள்ளப்படவில்லை. இத்துறையில் சென்னை பிரிவால் நடத்தப்பட்ட சென்னை நகர மற்றும் நீண்டதூர பஸ் போக்குவரத்து ஆகிய இவ்விரண்டுக்கும் சேர்த்தேதான் கணக்குகள் தயாரிக்கப்பட்டன. ஆனால், 1-4-1964 லிருந்து நீண்ட தூர பஸ் போக்குவரத்துக்குத் தனிக் கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன. நீண்ட தூர பஸ் போக்குவரத்தில் 1964–65-ல் ரூ. 3·91 இலட்சமும், 1965–66-ல் ரூ. 6·94 இலட்சமும் இலாபமாகக் கிடைத்தன. நடப்பு ஆண்டின் கணக்குகள் முடிவு பெறவில்லை. இவ்வாண்டில் லாபமா அல்லது நஷ்டமா என்பது கணக்குகள் முற்றுப் பெற்றபின்தான் தெரியும்.

(இ) தனியார் துறையிலுள்ள பல பஸ் சொந்தக்காரர்கள் வசூலிக்கும் கட்டணங்களைப் பற்றிய சரியான விவரங்கள் தற்போது கைவசமில்லை. அரசினர் போக்குவரத்துத் துறையில் கட்டணம், சமவெளிகளில் மைலுக்கு 6 பைசாவாகவும், மலைப் பகுதிகளில் 12 பைசாவாகவும் இருக்கிறது. அரசினர் போக்குவரத்துத் துறையில் பிரயாணிகளுக்கு செய்துள்ள வசதிகள் தனியார் துறையிலுள்ளவற்றைவிட அதிகம்.

[1967 மார்ச் 29

**(உ) & (எ) 1-4-1967 லிருந்து கட்டணத்தை சமவெளிகளில்** மைலுக்கு 6 பைசாவிலிருந்து 5 பைசாவாகவும், மலைப் பகுதிகளில் **12 பைசாவிலிருந்து 10** பைசாவாகவும் குறைக்கும்படி அரசு உத்தர **விட்டிருக்கிறது.**

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** தலைவர் அவர்களே, எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கு கட்டணத்தைக் குறைத்ததுபோல் சிட்டி பஸ்களுக் கும் பஸ் கட்டணங்களைக் குறைக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி : அதுபற்றி யோசிக்கப்பட்டு வருகிறது.

**திரு. கே. விநாயகம் :** சட்டப்படி ஒரு மைலுக்கு 10 பைசா வசூல் செய்யலாம் என்று இருப்பதையொட்டி தனியார் துறையினர் 10 பைசா, 9 பைசா, 8 பைசா என்று இடத்திற்குத் தகுந்தாற்போல் வசூல் செய்கிறார்கள். அதேபோல் நம்முடைய பஸ் கட்டணத்தை யும் உயர்த்தியாவது மேலும் மேலும் பிரயாணிகளுக்கு வசதிகள் செய்யுதா அரசாங்கம் இந்த யோசனையை ஏற்றுக் கொள்ளுமா ?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** இப்போது பிரயாணிகளுக் குச் செய்யப்பட்டிருக்கிற வசதிகள் போதுமானவையாக இருக் கின்றன. இன்னும் பஸ் கட்டணத்தை உயர்த்தினால் பிரயாணி களுக்குச் சங்கடந்தான் ஏற்படும்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** அரசினர் பஸ்களில் கட்டணத்தைக் குறைத்து இப்போது வசூல் செய்கிறோம். அதேபோல் தனியார் பஸ்களிலும் குறைந்த அளவு கட்டணத்தை வசூல் செய்யவெண்டு மென்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி : இந்தக் கேள்வி இதில் எழ வில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சிட்டி பஸ் சர்வீஸ்களில் நிற்கக்கூடிய பாசஞ்சர்களின் தொல்லையால் உட்கார்ந்திருக்கக் கூடியவர்களின் நிலைமை ரொம்ப மோசமாக இருக்கிறது. நிற்கக் கூடிய பாசஞ்சர்களை அடியோடு நீக்க முடியாவிட்டாலும், அதைக் கட்டுப்படுத்தவாவது அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** இப்போது தாற்காலிகமாக பஸ் வசதிகள் குறைவாக இருக்கின்ற காரணத்தாலும், பிரயாணி களில் அதிகம் பேர் பஸ் துணையை நாடுகிற காரணத்தாலும் உறுப் பினர் அவர்களுடைய யோசனையை உடனடியாகக் கவனிப்பதற் கில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : 1—4—1967-ல் இருந்து கட்ட ணத்தைச் சிறிது குறைப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், சென்ற ஆண்டு நெடுந்தூர பஸ்களுக்கு கட்டணத்தை உயர்த்தினார்கள். உயர்த்தப்பட்ட கட்டணத்தை விட தற்போது குறைக்கப்படுகிற கட்டணம் கூடுமா ? குறையுமா ?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி : குறைக்கப்பட்டிருக்கிறது; ஆகவே குறையும்.**



1967 மார்ச் 29]

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : சிட்டி பஸ்களில் நஷ்டம் என்று சொல்லும்போது மிகவும் சிரமமாக இருக்கிறது. இதைத் தவிர்க்க, மாடி பஸ்களை விட்டால் சிரமம் குறையும் அல்லவா? அதைப்பற்றி அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி : அங்கத்தினர் அவர் களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** வேலூரிலிருந்து சர்க்கார் பஸ்ஸை குறைந்த கட்டணத்தில் வாரத்தில் மூன்று நாட்கள் விடுகிறார்கள். தினசரி விடுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படுமா ?

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி : அதுபற்றி நடவடிக்கை எடுக்க முயற்சிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, சிட்டி பஸ் கட்டணத் தைக் குறைக்கும்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் பஸ்களுக்கும் கட்டணத்தைக் குறைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி : இப்போது குறைக்கப் பட்டிருக்கும் கட்டணங்களும் கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் பொருந்தும்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : நெடுந்தூர பஸ்களைப் பொறுத்த வரை தனியாரும் பஸ்களை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் இப்போது பஸ் கட்டணத்தைக் குறைத்திருக்கின்ற அளவுக்கும் குறைவாக தனியார் பஸ் கட்டணங்கள் இருக்கின்றன. இதற்குக் காரணம் அவர்கள் நடத்துகிற பஸ்களில் 54 சீட்டுகள் இருக் கின்றன; நம்முடைய பஸ்களில் 35 சீட்டுகள்தான் இருக்கின்றன. ஆகையினால், சர்க்கார் இந்தத் துறையிலே தனியாரை விடக் கூடாது; அல்லது தனியார் பஸ்கள் நடத்துகிற மாதிரி செகண்ட் கிளாஸ் பஸ் என்று வைத்து சீட்களை அதிகப்படுத்தவேண்டும். இதுபற்றி சர்க்கார் யோசிக்குமா ?

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி : இப்போது இருக்கும் 35 சீட்டுகளை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. வி. ஜார்ஜ் : கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து பூக்களை லக்கேஜ் மூலம் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டில் தற்போது அனுப்பக் கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்பது உண்மையா?**

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி : அது இப்போதுதான்** கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பரிசீலிக்கப்படும்.

**திரு. தி. பொன்னுமலை :** தற்போது பஸ் ஸ்டாண்டில் சர்க்கார் பஸ்களில் ஜனங்கள் ஏற முடியவில்லை. தனியார் பஸ்களில் **ஆங்காங்கு புரோக்கர்களை வைத்து ஜனங்களைக் கூப்பிட்டு ஏற்றிக்**

[1967 மார்ச் 29

கொள்ளுகிருர்கள். சேலத்திலிருந்து வரும்போது ஆத்தூர், கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களுக்குக் கூட பிரயாணிகளை ஏற்றிக் கொள்கிருர்கள். இதனுல் அரசாங்க பஸ்களில் பாசஞ்சர்கள் ஏறு வதில்லை. இந்தப் பிரச்னையைச் சர்க்கார் கவனிக்குமா ?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** பிரயாணிகள் அதிகமாக வருவதற்காகத்தான் கட்டணங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அதிகமாக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** எக்ஸ்பிரஸ் பஸ்களில் லாபம் கிடைத்ததாகச் சொன்னுர்கள். போடப்பட்ட முதலில் எத்தனை சதவீதம் லாபம் ?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** அந்த விவரம் இப்போது கைவசம் இல்லை.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** ஸ்டேட் பஸ்களில் குழந்தைகளுக்கு அரை டிக்கட்' கொடுக்கப்படுவதில்லை. குழந்தைகளுக்கு அரை டிக்கட் வசூல் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** முன்பே இந்தச் சபையில் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது. அது கவனிக்கப்படும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நீண்ட தூர பஸ்களைத் தேசியமய மாக்கும் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா ?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** பஸ் தொழிலைத் தேசிய மயமாக்கவேண்டுமென்பது திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளில் ஒன்று.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** சிட்டி பஸ்களில் நஷ்டம் இருப்ப தாக ஏற்கனவே இந்தச் சபையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சிட்டி பஸ்களில் நஷ்டத்திற்குக் காரணம் போலி டிக்கட்டுகள் நடமாடுவதாக இருக்கக் கூடியதும் இருக்கலாம். ஆகவே, பஸ்களை விட்டு இறங்குகிறபோது பஸ்களில் டிக்கட்டுகளைக் கொடுத்து விட்டுத்தான் செல்ல வேண்டுமென்று ஏற்பாடு செய்வார்களா ? தனி யார் பஸ்களில் அப்படிச் செய்கிருர்கள். அப்படிச் செய்தால் சரி யான டிக்கட்டுகள்தானு என்று பரிசிலனை செய்ய முடியுமாகையால் இதுபற்றி பரிசீலிக்கப்படுமா ?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** இப்படிப்பட்ட மோசடி களை, தவறுகளைத் தவிர்க்க அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்கும்.

**திரு. தோ. மு. நல்லசாமி :** ரயில்வே கட்டணத்தை விட ஸ்டேட் பஸ்களில் கட்டணம் குறைவாக இருப்பதால் ஸ்டேட் பஸ்களில் செல்ல மக்கள் விரும்புகிருர்கள். ஆகவே, குறுகிய தூரத்திற்கும் அரசாங்க பஸ்களை விடுவது பற்றி யோசிக்கப்படுமா ?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** அதுபற்றியும் யோசிக்கப் படுகிறது.



1967 மார்ச் 29]

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, இப்போது ஓடிக் கொண்டிருக்கிற எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கு 30 மைலுக்கு ஒரு தடவைதான் ஸ்டாப்பிங் இருக்கிறது. ஆகவே, இதேபோல் ஃபாஸ்ட் பாசஞ்சர் வண்டிகளை ஆரம்பித்து, ஐந்து மைல் பத்து மைல்களுக்கு ஒரு தடவை நின்று பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்படுமா ?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** இப்போதுள்ள வசதிகளில் அதை உடனடியாக நிறைவேற்றுவதற்கில்லை. பிறகு கவனிக்கப் படும்.

**திரு. பி. வேலுசாமி :** தனியார் பஸ்களில் ஒரே அளவுள்ள தூரத்திற்கு வித்தியாசமான தொகை வசூலிக்கப்படுகிறதா? அதைச் சரி செய்ய முடியுமா ? முடியுமானுல் எப்போது?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** அது இந்தக் கேள்வியில் எழவில்லை.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** போதுமான துணைக் கேள்விகள் கேட்கப்பட்டு விட்டன.

THIRU K. VINAYAKAM : Sir, this is a common problem affecting everybody in the State. In view of the importance of this questior a few more suppleme·tary questions may be allowed I want ask a few more supplementary ·questions.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** நண்பர் அவர்கள் அரை மணி நேர விவாதம் கேட்காமல் கேள்வி மட்டும் கேட்பதற்கு அனுமதி கோரியதுபற்றி நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. விநயகம் :** உயர்திரு அமைச்சர் அவர்கள் எங்கே யாவது இந்த பஸ்களில் பிரயாணம் செய்திருக்கிருர்களா ? எக்ஸ் பிரஸ் பஸ்களில் அதிகப்படியான வசதிகள் செய்யப்பட்டிருப் பதாகவும், தனியார் பஸ்களில் அவ்வளவு வசதிகள் இல்லை என்றும் அவர்கள் சொல்லுகிருர்கள், அது சரியல்ல. அரசாங்க பஸ்களைப் பொறுத்தவரை டெர்மினஸ்களில் லாவட்டரி, ரெஸ்டிங் ரூம் போன்றவை இருக்கின்றன. ஆனுல், தனியார் பஸ்களில் ரேடியோ இருக்கிறது, ஸீட்டிங் அரேஞ்ச்மெட்ஸ் நன்ருக இருக் கிறது. நம் பஸ்களை விட தனியார் பஸ்களில் அவ்வளவு வசதி கள் செய்து வைத்திருப்பதினுல்தான் அந்த பஸ்கள் எப்போதும் 'ஃபுல் 'டு ஃபுல் கப்பாசிட்டி' ஓடுகின்றன. அப்படி நம் பஸ்கள் 'ஃபுல் கப்பாசிட்டியில்' ஓடுவதில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணுதுரை :** திரு. விநயகம் அவர்கள் சொன்ன வசதிக் குறைவுகளுக்குக் காரணம் யார் என்பது அவர்களுக்குத் தெரியும் (ஆரவாரம்). அந்த வசதிக் குறைவுகளை எல்லாம் சரிபடுத்துகிற காரியத்தில்தான் நாங்கள் முனைந்திருக்கி ரேம். மற்ருென்று, "கனம் அமைச்சர் அவர்கள் நெடுந்தூர பஸ்ஸில் பயணம் செய்திருக்கிருர்களா ?" என்று கேட்டார்கள்.

[1967 மார்ச் 29

பல தடவை திருச்சியிலிருந்து சென்னைக்கு நாங்கள் நெடுந்தூர பஸ்களில் பயணம் செய்திருக்கிறோம். ஆனால் ஒரு தடவைகூட திரு. விநாயகம் அவர்களை மட்டும் அங்கு சந்தித்ததில்லை.

**திரு. ந. வீராசாமி :** அநேக பஸ் ஸ்டாண்ட்களில் கூட்டம் அதிகமிருந்தும் பஸ்கள் நிறுத்தப்படாமல் நேராகப் போய் விடுவதால் அதிகக் கஷ்டம் ஏற்படுகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** அப்படிப் புகார்கள் வந்திருக்கின்றன. அவை கவனிக்கப்படுகின்றன.

**திரு. க. இராமமூர்த்தி :** திண்டிவனம் போன்ற பகுதிகளில் அரசினர் பஸ் ஸ்டாண்டுகள், முனிசிபல் பஸ் ஸ்டாண்டுகள் இவை தனித்தனி இடங்களில் இருப்பதால் அரசினர் பஸ்கள் முனிசிபல் பஸ் ஸ்டாண்டுக்குச் சென்று பிரயாணிகளை அழைத்துச் செல்லும் நிலை ஏற்படுமா ? அதற்கு வசதி செய்யப்படுமா ?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** இப்போது அதற்கான திட்டம் எதுவுமில்லை.

**திரு. என். வரதராஜன் :** பஸ் தொழில் லாபகரமாக இருக்கும் போது சென்னையில் ஓடும் பஸ்களைப் பொறுத்தவரையில், சர்க்கார் பஸ்களில் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக சென்ற காலக் கணக்குகள் வந்திருக்கின்றன. அதை அரசு பரிசீலனை செய்யுமா ?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** பரிசீலனை செய்யும் ; உரிய நடவடிக்கைகள் எடுக்கும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சர்க்கார் பஸ்களில் எப்போதும் நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம், அந்த பஸ் நிர்வாகத்தில் இருக்கிற பளு காரணம் என்று சொல்கிறார்கள். அந்த நிர்வாகப் பளுவை மாற்றி மற்றவர்களைப் போல் எளிதாகவும், லாபகாமாகவும் நடத்துவதற்கு சர்க்காருக்கு யோசனைகள் உண்டா ?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** உண்டு.

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** பள்ளி மாணவ மாணவிகளுக்குத் தனியார் துறையில் விடுகிற பஸ்களில் அரைக் கட்டணம் வசூலிப்பது போன்று இங்கும் செய்ய ஆலோசனை இருக்கிறதா ? நடவடிக்கைகள் எடுக்க உத்தேசமுண்டா ?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** முதலிலேயே பதில் சொல்லியிருக்கிறேன். அதுபற்றி யோசிக்கப்படும்.

**திரு. நா. காசிராமன் :** தமிழ்நாட்டில் ஓடுகிற பஸ்களில் ரேடியோ வைக்க அரசாங்கம் அனுமதி கொடுத்திருக்கிறதா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** கொடுக்கப்படவில்லை.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** திரு. கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் " மாடி பஸ்கள் விடுவதற்கு உத்தேசமுண்டா ? " என்ற கேள்வி கேட்டதற்கு, "கவனிக்கப்படும் " என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சமீபத்தில் ஏதோ ஒரு பெரிய கம்பனியோடு மாடி பஸ்கள் விடுவதற்கான ஏற்பாடுகள் செய்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. எவ்வளவு பஸ்களுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்? எந்தக் கம்பனியோடு ஏற்பாடு செய்திருக்கிறார்கள் ?



1967 மார்ச் 29]

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** இன்னும் அதுபற்றி முடிந்த முடிவாக எதுவும் சொல்வதற்கில்லை. அதனால்தான், " யோசிக்கப்படும் " என்று அம்மாதிரி சொன்னேன்.

**திரு. கெ இர. ஞானசம்பந்தன் :** நெடுந்தூரம் ஓடும் தனியார் பஸ்களை விரைவில் சர்க்கார் எடுத்துக் கொள்ள உத்தேசமுண்டா? அப்படியானால், சீக்கிரம் உத்தரவு பிறப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** படிப்படியாகக் கவனிக்கப்படும்.

**திரு. டி. மார்டின் :** படிப்படியாகக் கவனிக்கப்படும் என்றால், பஸ்களைத் தேசியமயமாக்குவது என்றால், அதற்கான காம்பன்சேஷன் தொகை கொடுக்க வேண்டிவரும். படிப்படியாகக் கவனிக்கப்பட வேண்டுமானால் இப்போதிருந்தே நடவடிக்கைகள் எடுத்தால்தானே அதை முடிக்க முடியும் ?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** 'படிப்படியாக' என்றால் படிப்படியாகத்தான். படிப்படியாக எடுக்கும்போது காம்பன்சேஷன் கொடுக்க வேண்டுமா என்பதெல்லாம், படிப்படியாக என்பதோடு முறைப்படி என்று இணைத்துக் கொண்டால் விளக்கம் கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** தேசியமயமாக்குவது என்பது, 1947-48-ம் ஆண்டில் திட்டம் தீட்டப்பட்டு இருபது ஆண்டு களாக பழைய அரசாங்கத்தார் ஏறிய படிப்படியை விட நாங்கள் ஏறுகிற படிப்படி சற்று வேகமாகத்தான் இருக்கும். (ஆரவாரம்.)

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** பஸ்களைத் தேசியமயமாக்கவேண்டும் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு புதிதாக பஸ் ரூட்கள் வழங்குவதில் தனியார்களுக்குக் கொடுக்காமல் அரசாங்கமே நடத்த முன்வருமா ?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** அங்கத்தினர் யோசனையெல்லாம் பரிசீலிக்கப்பட்டு ஊக்கியமாகக் கவனிக்கப்படும்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** இந்த எக்ஸ்பிரஸ் பஸ்கள் கால அட்டவணை. தனியார் பஸ்களின் கால அட்டவணை இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும்போது தனியார் நடத்துகிற பஸ்கள் அரசாங்க பஸ்களுக்கு முன்னால் புறப்படுகின்றன. ஆகவே, நம் பஸ்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே. இந்தக் கால அட்டவணையை உடனடியாக மாற்றியமைக்க ஆவன செய்வார்களா ?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** அதுபற்றிய குறிப்புகள் கேட்கப்பட்டிருக்கின்றன. வந்த பிறகு அது கவனிக்கப்படும்.

[1967 மார்ச் 29

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** ஏறத்தாழ அரை மணி நேரம் இந்தக் கேள்விக்கு ஆகியிருக்கிறது. அடுத்த கேள்வி, எண். 3 உள்ளது.

## 2. உரிமைப் பிரச்சினை.

### பேரவைத் தலைவர்மீது மன்றோரம் என்ற குற்றச்சாட்டு.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். நான் ஒரு கேள்வி கேட்பதற்கு அரை மணி நேரமாகக் கையை உயர்த்திக் கொண்டிருந்தேன். ஆனால், தலைவர் அவர்கள் ஆளும் கட்சி அங்கத்தினர்களுக்குத்தான் கேள்விகள் கேட்பதற்கு சௌகரியம் அளிக்கிறார்களே தவிர, எதிர்க்கட்சியில் இருக்கும் என்னைப் போன்ற நபர்களுக்குக் கேள்விகள் கேட்பதற்கு கையை உயர்த்தினாலும் நீங்கள் கேள்வி கேட்க அனுமதி தரவில்லை என்று வருத்தப்படுகிறேன். இந்த நிலையில் இன்னும் அப்படி இருந்து வரக்கூடாது என்று தாழ்மையோடு கேட்டுக்கொண்டு நீங்கள் ஆளும் கட்சிக்குத்தான் ஆதரவு அளிப்பீர்களா அல்லது எங்களுக்கும் உண்டா என்று தீர்ப்பு கூறும்படி மிகத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்தப் பேரவை நடுவராக இருப்பவரின் தராசுக்கோல் ஒரு பக்கமாகச் சாய்வதாக இப்போது குற்றஞ்சாட்டியுள்ளார். இவ்வாறு டெபுடி ஸ்பீக்கர் அவர்கள் மீதும் ஒருமுறை குற்றஞ் சாட்டியிருக்கிறார். இது இரண்டாவது தடவை. இப்படிப்பட்ட குற்றச்சாட்டு அவையின் கண்ணியத்தைப் பாதிக்கக் கூடியதாக இருக்கின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ப்ரீச் ஆஃப் ப்ரிவிலேஜ், சபையின் கண்ணியத்தைக் குறைத்திருக்கிறார்கள் என்று 'ப்ரைமா ஃபேஸி' மேலெழுந்தவாரியாக எனக்குத் தெரிகிற காரணத்தினால் இந்த உரிமைப் பிரச்னையை ப்ரிவிலேஜஸ் கமிட்டிக்கு, உரிமைக் குழுவிற்கு, 192-வது விதிப்படி நானாகவே, சட்டப் பேரவையின் தீர்மானம் இல்லாமல், என் உரிமையை நான் இதில் பயன்படுத்தி, உறுப்பினர் சபாநாயகர் மீது சாட்டிய மன்றோரம் என்ற குற்றச்சாட்டை நான் உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன் என்று அறிவிக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் எழுப்பிய பிரச்னையில் தயவு செய்து சபாநாயகர் அவர்கள் மீது பாரபட்ச நிலை என்று நினைத்தோ சொல்லவோ இல்லை என்று சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** அருள்கூர்ந்து, ஒன்றைக் கவனிக்க வேண்டும். நான் தீர்ப்புக் கூறிவிடவில்லை. உரிமைக் குழுவானது மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்றுதான் அனுப்பி வைத்திருக்கிறேன். அவையின் தீர்மானம் இல்லாமலேயே, எனக்கு இருக்கிற அதிகாரத்தின்படி நான் நேரடியாக உரிமைக் குழுவிற்கு அனுப்பலாம், என்ற அந்த விதியின்படி அனுப்பிவைக்கிறேன்.



1967 மார்ச் 29]

SRI K. VINAYAKAM A *prima facie* case has got to be established.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** அருள்கூர்ந்து, 192-வது விதியைப் படித்துப் பாருங்கள். 'ஸுவோ மோட்டோ' என்ற முறையில் சபையின் தீர்மானத்திற்கு விடாது, நேரடியாக அனுப்பி வைக்கலாம். சபாநாயகர் ஒருதலைப்பட்சமாக நடக்கிறார் என்று அவையில் குற்றம் சாட்டுவதாக இருந்தால் அதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கவேண்டுமென்ற கடமை இருப்பதால், இதை அனுப்பி வைக்கிறேன்.

## 1. வினாக்கள், விடைகள்.

### *Important Government Files.*

• S.N.C. 3.—DR. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any important files were removed from the Fort St. George, between the 15th February 1967 and the date from which the new D.M.K. Ministry was formed;

(*b*) if so, the details thereof.

(*c*) whether any other important files were removed to the Central Home Ministry during this period; and

(*d*) if so, the details thereof?

THE HON. THIRU C. N. ANNADURAI: (*a*) & (*b*) Certain secret records relating to anti-Hindi agitation were destroyed under the orders of the previous Government;

(*c*) & (*d*) No files were removed to the Central Home Ministry.

DR H. V. HANDE: Sir, will the Hon. Chief Minister be pleased to state, when exactly those files were destroyed?

THE HON. THIRU C. N. ANNADURAI: It is fairly a long list. The previous Chief Minister had given an order for destroying certain files connected with the anti-Hindi agitation. Here is the long list about them :—

(1) File contains police reports and detention orders.

(2) File contains writ petitions, etc., filed by the student, Mr. R. Sethu of the Madurai Medical College before the High Court of Madras.

(3) File contains detention order relating to the detention of Mr. M. Karunanidhi, papers relating to the writ petition, release order and orders regarding sanction of fees to the Advocate-General and Public Prosecutor.

(4) Another file connected with Mr. M. Karunanidhi, containing the letter of the Inspector-General of Police regarding the visit of the Collector's wife to Borstal School to see Mr. Karunanidhi and reports regarding his health condition.

(5) Another file connected with the detention of Mr. Karunanidhi—Question No. 1068 put by Mr. V. R. Nedunchezhian and Mr. K. S. Mani.

(6) File connected with the Hon. Speaker, containing Police report, detention order and release order.

(7) File connected with Dr. Ilakkuvanar, Head of the Tamil Department, Thiagaraja College, Madurai.

(8) File connected with detention in North Arcot in connection with anti-Hindi agitation.

(9) Files connected with detentions in the districts of South Arcot, Chingleput, Coimbatore, Kanyakumari, Madurai North, Madurai Urban, Nilgiris, Ramanathapuram, Salem, Thanjavur, Tiruchirappalli, Tirunelveli and Madras City in connection with the anti-Hindi agitation.

(10) Papers relating to writ petition filed by Elumalai, Madras City.

(11) Petition of Joseph Pallipat, Madras City, requesting release.

(12) Papers relating to writ petition filed by A. Singaram, Balu, against detention order.

(13) Papers relating to writ petition filed by Joseph Pallipat, Madras City, against detention order.

The ex-Chief Minister has issued definite instructions that these files may be destroyed.

DR. H. V. HANDE : Will the Hon. Chief Minister be pleased to state the exact date when the files were destroyed. Also, whether the files were destroyed by fire and also whether they were destroyed inside Fort St. George?

THE HON. THIRU C. N. ANNADURAI : I am not as much interested about the method of destruction but I am more concerned about the very destruction of the file itself.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** தலைவர் அவர்களே, தேர்தலில் தோற்று அதற்கு அப்புறம் பதவியிலிருந்த பிறுமி சர்க்கார் தஸ்தாவேஜுகளை அழிப்பதோ, அகற்றுவதோ சட்ட விரோத காரியம் ஆயிற்றே. சட்ட விரோதமான காரியம் என்று தெரிந்த பிறகு இந்தச் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறார்கள் ?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** அந்த உத்தரவைப் போட்டபோது அவர்கள் சட்டப்படி அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள்.

**திரு. அ. பாலசுப்ரமணியன் :** சபாநாயகர் அவர்களே, இது போல வேறு ஏதாவது ஃபைல்கள் அழிக்கப்பட்டிருக்கின்றனவா? அல்லது டில்லிக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனவா ?



**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** வேறு எந்த ஃபைல்களும் அழிக்கப்பட்டதாகவோ, டில்லிக்கு அனுப்பப்பட்டதாகவோ தகவல் இல்லை.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** தலைவர் அவர்களே, நமது முதல் அமைச்சர் அவர்கள் விவரமாக நல்லமுறையில் அத்தனையையும் இங்கு நமக்கு எடுத்துரைத்தார்கள். இதைப் பார்க்கிறபோது இது படுபயங்கரமான சதித் திட்டமாகத் தெரிகிறது. இதுபற்றி உடனடியாகப் பரிபூர்ணமாக விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுக்க அமைச்சரவைக்கு உத்தேசம் உண்டா?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** இது குறித்து சட்டப்படி என்ன செய்ய முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், இது குறித்து வேதனைப்படுகிற உறுப்பினர்கள் பொது மக்களிடத்தில் இதை விளக்குவார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, இந்தி எதிர்ப்புப் போராட்ட நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களையும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களையும் கண்ட இடத்தில் சுட்டுப் பொசுக்கும்படி உத்தரவு போடப்பட்டதே, தேர்தலுக்குப் பிறகு அந்த ஃபைல்களெல்லாம் இருக்கின்றனவா? கொளுத்தப்பட்டிருக்கிறதா ?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** என்னிடத்தில் கொடுக்கப்பட்ட விவரங்களில் உறுப்பினர் சொன்ன விவரங்கள் இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் பழைய முதல் அமைச்சருக்கு இதுபற்றி விளக்கம் கேட்டு கடிதம் எழுதியிருக்கிறாரா? விளக்கம் கோரியிருக்கிறாரா?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** அப்படி ஒரு மரபு இல்லை.

DR. H. V. HANDE : Sir, will the Hon. Chief Minister be pleased to come forward to call all the officers concerned and make a detailed enquiry and also find out exactly, what are the contents of those files?

THE HON. THIRU C. N. ANNADURAI : I would consider the suggestion very favourably.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஸார், மேற்கு வங்காள சர்க்காரிலே இதுபோன்று ஃபைல்கள் கடத்தப்பட்டதன் மூலம் பல ஊழல்களைச் செய்ததன் காரணமாக அந்த அமைச்சர்கள் மீது நீதிபதிகள் விசாரணைக்கு விட்டு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அந்த அமைச்சரவை முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. அதேபோன்று இங்கேயும் நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்களா ?

[1967 மார்ச் 29

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** நம்முடைய மாநில சர்க்கார் எப்போதும் நிதானத்திற்குப் பெயர் போனது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, எப் போதுமே அரசாங்கத்தில் ஒரு ஃபைல் ஆரம்பிப்பது என்றால், அதை எப்போது முடிக்க வேண்டும் என்பதற்கு தேதி இருக்கிறது. சென்ற ஆண்டு ஆரம்பித்த ஃபைல்கள் இந்த ஆண்டுக்குள் அழிக் கப்பட்டன என்று சொல்கிறபோது, இந்த ஃபைல்களை எப்போது அழிக்கவேண்டும் என்று தேதி நிர்ணயிக்கப்பட்டதா ? எதுவரை யில் வைத்திருக்கவேண்டும், எப்போது அழிக்கவேண்டும் என்ற நடைமுறை இருக்கிறதா ? அப்படி இல்லையென்றால் அதைப்பற்றிக் கவனிப்பார்களா?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** இந்த ஃபைல்களை இத்தனை காலத்திற்கு வைத்திருக்கவேண்டும் என்ற குறிப்புள்ள ஃபைல்கள் உண்டு. சில ஃபைல்கள் அமைச்சர்களால் இதோடு அழித்துவிடவேண்டும் என்று சொல்லப்படுவதும் உண்டு.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, இங்கிருந்து அகற் றப்பட்ட தஸ்தாவேஜுகளைத் திரும்பப் பெற்று அவைகளைச் சபை முன் வைக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** உறுப்பினர் அவர் கள் எனது பதிலைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று நினைக் கிறேன். ஃபைல்கள் அப்புறப்படுத்தப்படவில்லை, அழிக்கப்பட்டு விட்டன.

**திரு. கே. பி. எஸ். மணி :** சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து, அவர்கள் செய்த குற்றத்தை முதலமைச்சரே மன்னிப்பதாகத் தெரிகிறது. இவ்வளவு பெரிய சதியை அம்பலப்படுத்த சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, இதைப் பொதுமக்களிடத்தில் விட்டால் இதைக் காட்டிலும் பயங்கரமாக முடியும் என்று சொல்லி, சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** உறுப்பினர் அவர் கள், இந்த சர்க்கார் மன்னிக்கிறது என்று உபயோகப்படுத்திய வார்த்தை அவ்வளவு ருசிகரமானதாக இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். ரொம்ப பெரிய மனிதர்கள் செய்ததற்கு நாம் வருந்தலாமே தவிர, மன்னிப்பது என்று சொல்லுவது சரியல்ல.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** தலைவர் அவர்களே, அமைச்சர்

பகல் 9–30 களுக்கு எந்த ஒரு ஃபைலையும் மூடிவிடுவதற்கு அதிகாரம் இருக் கிறதே தவிர, அழித்துவிடுவதற்கு அதிகாரம் தரப்படுவதற்கு நியாயம் இல்லை. எனவே, இதைப்பற்றி விசாரித்து அறிய சட்ட நிபுணர்கள் கொண்ட ஒரு கமிட்டியை ஏற்படுத்தி, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க இந்த சர்க்கார் முன்வருமா ?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள், இந்தப் பிரச்சினையைப்பற்றி அதிக விவரங்களைப் பேசப் பேச, முதலில் இதைப்பற்றி நமக்கு ஏற்படுகின்ற எண்ணங்கள்



1967 மார்ச் 29]

மெதுவாகத் தளர்ந்து போய்விடும். அந்த வகையிலே கேள்விகளைக் கனம் திரு. ஆசைத்தம்பி அவர்கள் கேட்டார்கள். ஃபைலை அழிப் பதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு அமைச்சர்களுக்கு அதிகாரம் இருக்கிறதா என்பதில், சுமடன் ஃபைல்கள் இத்தனை காலம் தான் இருக்கவேண்டும் என்ற ஒரு விதிமுறையும், சில ரகசிய தஸ்தாவேஜிகளைத் தேவைப்படும்பொழுது அழித்து விடலாம் என்ற விதிமுறையும் இருக்கிறது.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** முன்பு இருந்த அரசாங்கம் செய்த தவறை மறைப்பதற்காக இந்த ஃபைல்களைக் காலி செய்துவிட்டார்கள் என்று கருதுகிறார்களா ? என்ன காரணங்களுக்காக இந்த ஃபைல்களை மறைத்திருக்கக் கூடும் என்று நினைக்கிறார்கள் ?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** அந்த ஃபைல் களைப் பார்க்கிற பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. அவை எந்தவிதமான ஃபைல்கள் என்று எனக்குத் தெரியாது.

**திரு. சி. வி. எம். அண்ணாமலை :** நீதி தவறி ஒழுங்குக்கு மாறாக செயல்பட்ட அமைச்சர்களின் போக்கை, ஆளுகின்ற சர்க்கார் மன்னிக்கலாம். ஆனால், அந்த மன்னிப்பு அநியாயத்திற்குத் துணை போவதாக அமையாதா என்று அறிய விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்களுடைய மன ஓட்டத்தை நான் வெகுவாகப் பாராட்டு கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதல் அமைச்சர் அவர்களுடைய பதிலை நோக்கினால் எந்த ஃபைலை வேண்டுமானாலும் தேவை இல் லாத சமயத்தில் அழிக்கலாம் அல்லது அப்புறப்படுத்தலாம் என்பது சட்டபூர்வமான நடவடிக்கை என்று அறிகிறேன். அப் படியிருந்தும்கூட, இதைச் சில அங்கத்தினர்கள் சதி என்று சொல் வது பொருத்தமா ? சதி என்ற சொல்லை உபயோகப்படுத்துவது அவ்வளவு பொருத்தமாக இல்லை என்பதைத் தயவு செய்து முதல் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சர்க்கார் சில ஃபைல்களை அழிப்பதற்கும், அப்புறப்படுத்துவதற்கும் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள் என்று நான் சொன்னதைத் தனக்குச் சாதகமாக ஆக்கிக்கொண்டு, அப்படி அவர்கள் செய்திருப்பதை சதி என்று சொல்லலாமா என்று கேட்பதால், அதைப்பற்றி நான் சொல்லவேண்டியிருக் கிறது. அழிக்கப்பட்டிருக்கிற ஃபைல்கள் தேர்தலில் வெற்றி பெற்று அரசை அமைக்கத்தக்க நிலைமையிலுள்ளவர்களைப்பற்றிய ஃபைல்கள் ஆகும். நல்ல பண்பாட்டு முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்றால், அந்த ஃபைல்கள் அழிக்கப்படாமல் விட்டு வைக்கப்பட வேண்டியது நியாயமானதாகும். சுதந்திரம் கிடைத்த உடன் அப்பொழுது இருந்த காங்கிரஸ் பெரிய தலைவர்களுடைய

ஃபைல்களெல்லாம் எரிக்கப்பட்டன என்றும், அப்புறப்படுத்தப் பட்டன என்றும் பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அந்த ஃபைல்களைப் பார்த்தவர்களெல்லாம் பின்னால் அவைகளைப் படித்துப் பார்ப்பவர்கள் வெட்கப்படுவார்கள் என்று அந்த ஃபைல்கள் அழிக்கப்பட்டுவிட்டன என்று சொன்னார்கள். இந்த ஃபைல்கள் வைக்கப்பட்டிருந்தால் எந்தத் தொந்தரவும் ஏற்பட்டிருந்திருக்காது. நான் குறிப்பிட்டதுபோல், திரு. கருணாநிதி அவர்கள் சென்னையிலிருந்து பாளையங்கோட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்டபொழுது என்ன மோட்டாரில் அழைத்து செல்லப் பட்டார், அவர்களுக்கு வழியில் என்ன வாங்கிக் கொடுத்தார்கள் என்ற விவரங்கள் நான் இருக்கும். திரு. கருணாநிதி அவர்கள் என்னிடம் கூறாமல் மறைத்திருந்த விவரங்கள் கூட அதில் இருந்திருக்கும். வழியிலே அவர்களுக்குக் காப்பி கூட வாங்கிக் கொடுக்காமல் வேகமாக மோட்டாரை ஓட்டிக் கொண்டு போனார்கள், மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்த திரு. கருணாநிதிக்கு மிகத் தொல்லை கொடுத்தார்கள் என்பதற்கு ஆதாரம் இருந்திருக்கும் என்று எண்ணுகிறேன். நான் அதைப் படித்துப் பார்த்தால் வருத்தப்படுவேன் என்று அழித்துவிட்டார்கள் என்று நான் எடுத்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, is there any connection between the delayed announcement of the previous Chief Minister's election result and the destruction of these files, and will this Government come forward to place on the table of this House a copy of the entire proceedings relating to the investigation with regard to the missing files which the Hon. Chief Minister has assured us to carry out in future?

THE HON. THIRU C. N. ANNADURAI : I would do what is needed.

**திரு. எஸ். ஆறுமுகம்** : தலைவர் அவர்களே, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது அந்தந்த மாவட்டத்திலுள்ள முக்கியமான திராவிட முன்னேற்றக் கழக ஊழியர்களையும், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபடுகிற மாணவர்களையும் குறிப்பாகப் பார்த்து, அவர்களுக்கு எத்தகைய தண்டனை வேண்டுமானாலும் கொடுக்கலாம், அல்லது சுட்டுத்தள்ளலாம் என்று நேரடியாக அதிகாரிகளுக்கு முன்னால் இருந்த சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்பது உண்மையா? அவர்கள் நேரிடையாகத் தலையிட்டதன் காரணத்தால் அத்தனை பேர்களின் உயிருக்குக் காரணமாக இருந்தது, ஆதலால் வரக்கூடிய சர்க்கார் தங்கள் மீது நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்று பயந்து கொண்டுதான் ஃபைல்களைக் கொளுத்தினார்கள் என்பது உண்மையா?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை** : அது கனம் அங்கத்தினர் அவர்கள் கொண்டிருக்கிற அபிப்பிராயம்.

**திரு. என். சங்கரய்யா** : அந்த ஃபைல்கள் அழிக்கப்பட்டிருந்தாலும்கூட, மொழிக் கிளர்ச்சி சம்பந்தமாகத்தான் அந்த ஃபைல்கள் இருந்தன என்று தெரிவதால், இப்பொழுது இருக்கக்





கூடிய அரசாங்கம் தங்களுடைய அதிகாரத்தையும் வாய்ப்பையும் பயன்படுத்தி, அந்தக் காலத்தில் நடந்த சம்பவங்களைப் பற்றி ஒரு விசாரணை நடத்தி, அதன் முடிவைச் சபைக்கு அறிவிப்பது பற்றி யோசனை செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை** : அந்த நல்ல யோசனையைப் பற்றி நான் யோசித்துப் பார்க்கிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்** : இந்த ஃபைல்களை அப்புறப் படுத்துவதில் மத்திய சர்க்காரின் உள்வேவுத் துறை இலாகாவிற்கு ஏதாவது பங்கு இருக்கிறது என்று இந்த அரசாங்கம் கருதுகிறதா?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை** : இந்த ஃபைல்கள் அழிக்கப்பட்டதற்கும், மத்திய சர்க்காரின் துறைக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. வி. ஜார்ஜ்** : இந்த ஃபைல்களை அழிப்பதற்கு ஒரு முக்கியமான காரணம், அது சம்பந்தமான அரசாங்க அலுவலர்களை வருகிற அரசாங்கம் பழிவாங்கக் கூடாது என்ற நோக்கமாக இருக்கக் கூடாதா?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை** : புதிய அரசாங்கம் பழிவாங்கும் என்று எண்ணம் கொள்வதே தவறு.

**திரு. க. இராமமூர்த்தி** : தலைவர் அவர்களே, நமது முதல் அமைச்சர் அவர்கள் பழைய முதல் அமைச்சர் அவர்கள் பேரில் குற்றம் சாட்டுகின்ற அளவிலே இருப்பதினால், பழைய முதல் அமைச்சர் அவர்களுடைய நிலையைப்பற்றி விளக்கம் தருகிற அளவிலே, அவர் ஒரு விளக்கம் தருவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை நமது முதல் அமைச்சர் அவர்கள் அவர்களுக்கு ஏற்படுத்தித் தரக் கூடாதா என்று அறிய விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை** : இன்று இங்கே இதைப்பற்றி விவாதம் நடைபெற்றதே ஒரு நல்ல சந்தர்ப்பமாக இருக்கிறது. அதைப் பயன்படுத்தி பழைய முதல் அமைச்சர் அவர்களே ஒரு விளக்கம் கொடுத்தால் நல்லதாக இருக்கும்.

**திரு. வெ. முனுசாமி** : முந்திய அரசு ஃபைல்களை அழித்து விட்டார்கள் என்று சொன்னார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து வாய் மூலம் உத்தரவு போட்டார்களா, அல்லது எழுத்து மூலம் உத்தரவு போட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை** : நன்றாகத் தெளிவாகக் கையினாலேயே எழுதி உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : Are the Government aware that, in addition to the destruction of these files, a number of orders were passed by the Interim Ministry in a hurry before the new Ministry

came into power and, if so, what steps the Government are going to take to see that these orders are reviewed and fresh orders are passed?

THE HON. THIRU C. N. ANNADURAI : I am thankful to the hon. Member for bringing this point before this House. Certain orders about transfers and postings of officers have taken place in a sort of hurry. Most of them came for post approval. I have ordered that this post approval business should be put an end to.

THIRU K. VINAYAKAM : Apart from going into the merits and demerits of the destruction of the files at the instance of the previous Chief Minister, will the present Chief Minister agree with me that the Ex-Chief Minister had the constitutional, peremptory right as a Minister to destroy any file as he liked?

THE HON. THIRU C. N. ANNADURAI : I fully agree with our hon. Friend Thiru Vinayakam. But when certain papers are destroyed, motives are apt to be created in the minds of the people. That is why instead of myself raising the question, another hon. Member, who wanted that the Administration should be above board and that Ministers' action should be without the least tinge of irritation, raised the question. As my Friend has said before, if every Minister is given the constitutional right to destroy every paper, we can have our Secretariat in a 12 feet x 10 feet room.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : I wish to know the actual date on which the order was passed, whether it was after 15th February 1967 or before, and whether the Hon. Chief Minister will be pleased to place a detailed report about these files before this House at least during the next session?

THE HON. THIRU C. N. ANNADURAI : The order was passed on 24th February 1967 and it reads thus :

" Records connected with the anti-Hindi agitation need not be kept. This may also apply to all the records kept by the Police."

திரு. சி. கோவிந்தராஜன் : சார், தற்போது அரசாங்கத்திடம் உள்ள தஸ்தாவேஜுகளில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி அதன் தலைவர்கள், தொண்டர்கள் இவர்கள் பற்றிய ஃபைல்கள் இருக்கின்றனவா? முன்னால் இருந்த அரசாங்கம் நடத்திய முறையிலிருந்து மாறுபட்ட முறையில்தானே இந்த அரசாங்கம் அவைகளைப் பார்க்கும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் இடதுசாரி கம்யூனிஸ்டுகள் பற்றிக் கேட்டார்கள். எனக்கும் அவர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் நெருங்கிய தோழமை காரணமாக, அவற்றைப் பார்க்கக் கூட எனக்கு நேரம் இல்லை, அவசியமும் இல்லை.



THIRU T. MARTIN : Sir, having conceded that the previous Chief Minister has got the constitutional right to destroy files, is it fair for this House now to discuss about the motive or the propriety of the action taken by the previous Chief Minister?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, we have been using the words ' constitutional right ' in a generous way. As a matter of fact, in the Constitution, there is nothing for or against it. So, if my hon. Friend wants to depend upon the utilisation of these words and wants to build up his argument, he may keep that argument in this House and not in a Court of law.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்திலே ஏறத்தாழ 500 பேர்கள் சுட்டுக் கொல்லப் பட்டதாக விவரம் இருந்ததாகவும், முன்னாள் அமைச்சர் இந்த சட்ட மன்றத்திலே "50 பேர்கள்தான்" என்று அறிவித்ததாகவும் நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே, அந்த ஃபைல்களில் இருந்த விவரங்களை ஆராய வேண்டும் என்று துப்பு அறியும் இலாகா மூலம் தொகுத்து தயாரித்து, அழிக்கப்பட்ட ஃபைல்களிலிருந்த விவரங்களை இந்தச் சபையில் சமர்ப்பிக்க அமைச்சர் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினருடைய கேள்வியில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று, இதிலே இல்லாத விவரம் குறிப்பிடப்படுகிறது. இந்தி எதிர்ப்பு சம்பந்தமாகத் தனிப்பட்ட தலைவர்கள் சம்பந்தப்பட்ட ஃபைல்கள். அவை அழிக்கப்பட்டதாகத் தெரிவித்தேன். கனம் உறுப்பினர் கேட்ட இன்னொரு கேள்வி, 500 பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது மறுக்கப்பட்டு இங்கே சொல்லப்பட்டது என்பது. அது பற்றிய விவரம் இதிலே இல்லை. அந்த ஃபைல்கள் சம்பந்தமாக இங்கே விவரம் இல்லையென்றாலும், 500 பேர்களைச் சுட்டுக் கொல்லுவதற்கு மனம் வந்தவர்களுக்கு அதை மறைப்பதற்கு மனம் வருவதை நாம் ஆட்சேபித்துக் கொள்வதற்கில்லை. (சிரிப்பு)

திரு. எம். சுரேந்திரன் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் இந்த அரசாங்கம் பொறுமைக்குப் பெயர் போனது என்று குறிப்பிட்டார்கள். ஆனால், பொறுமை எல்லா நேரங்களிலும் நல்லதாக இருப்பதில்லை. சில நேரங்களில் அது தவறான முறைகளைக் கையாளக் காரணமாகி விடுவதும் உண்டு. ஆகவே, இந்த ஃபைல்கள் சம்பந்தப்பட்ட வரையில் சரியான விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை அளித்து மக்களைத் திருப்தி செய்ய முயற்சி எடுப்பார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன அளவிற்கு நான் போவதற்குத் தயாராக இல்லை என்றாலும், இவ்வளவு நேரம் விவாதம் நடந்ததே முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கை தவறானது என்பதை உணர்த்துவதற்குப் போதுமானது என்று கருதுகிறேன்.

## Prohibition

*2 Q.—THIRU K. VINAYAKAM
THIRU K. CHEEMAICHAMY and
THIRU P. MALAICHAMY : } Will the
Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to scrap prohibition of consumption of liquor and toddy and other intoxicated drinks; and

(b) if so, when and in what stages?

THE HON. THIRU C. N. ANNADURAI : (a) No.

(b) Does not arise.

THIRU K. VINAYAKAM : Do the Government propose to reconsider the entire prohibition policy in view of the fact that due to paucity of food, there is a general feeling among the people in the State that toddy may be introduced to substitute the deficiency in food?

THE HON. THIRU C. N. ANNADURAI : My hon. Friend may achieve that in a better way by bringing forward a Non-Official Resolution from his side.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், சென்ற 20 ஆண்டுக் காலமாக இந்த மதுவிலக்கு அமுலில் இருந்து வருகிறது. ஆனால் அது முழுக்க முழுக்கத் தோல்வி அடைந்ததால், அண்டை மாநிலங்களான ஆந்திரா, மைசூர், கேரளா போன்ற மாநிலங்களில் மதுவிலக்கை ரத்து செய்ய முன் வந்திருக்கிறார்கள். ஆனால், மத்தியில் இருக்கும், தமிழ்நாடு மட்டும் அதே நிலையில் இருந்தால், தமிழர்கள் பாதிக்கப்படுவார்கள் என்கிற காரணத்தினால், பொது மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக, என்ன நடவடிக்கை எடுப்பதாக இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணுதுரை:** கனம் சபாநாயகர் அவர்களே, மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகத்தான் மதுவிலக்குத் திட்டம் புகுத்தப்பட்டது. அந்தத் திட்டம் அடியோடு தோற்றுவிட்டதாகத் தனிப்பட்ட முறையிலும் நான் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தச் சர்க்காரும் மதுவிலக்குத் தோற்று விட்டது என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தாலும் பல பேர் குடிப் பழக்கத்தை நிறுத்திக் கொள்ளவில்லை; சில பேர் புதிதாகப் பழகுவதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம், அண்டை மாநிலங்கள் இந்தத் திட்டத்தை அமுல் நடத்துவதில் தீவிரமாக இல்லை என்பது ஊர் அறிந்த விஷயம். ஆகையினால், மதுவிலக்கு வேண்டும் என்பவர்கள் ஒரு பகுதியினர் இருக்கும் அதே சமயத்தில், மதுவிலக்கு வேண்டாம் என்று கருதுபவர்களும் இருக்கிறார்கள். இந்தச் சர்க்காரைப் பொருத்த வரையில் மது விலக்கு இருக்க வேண்டும். இவைகளையெல்லாம் காரணங்களாகக்



காட்டி மதுவிலக்கு மற்ற இடங்களில் தக்க முறையில் செயல் படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்த நினைத்திருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** சார், ப்ரொகிபிஷன் கமிட்டி ரிப்போர்ட்டின் அடிப்படையில் இந்தப் பிரச்சினையை மறு பரிசீலனை செய்து அது சம்பந்தமான 'ரூல்'களை 'ரிலாக்ஸ்' செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணுதுரை:** நான் முன்னால் சொன்ன பதிலை மறுபடியும் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். இந்த மதுவிலக்குப் பிரச்சினையில், அது வெற்றிகரமாக நீடித்து நடக்க வேண்டும் என்று சில யோசனைகளும், மதுவிலக்கு தோற்று விட்டது, ஆகவே அதை எடுத்துவிடலாம் என்று சில யோசனை களும் கொடுக்கிறார்கள். இரண்டாவதாகச் சொன்ன யோசனை களின் அடிப்படையில் இந்தச் சர்க்கார் சிந்தனை செலுத்தவில்லை. முதல் யோசனையின் அடிப்படையில், அது வெற்றிபெறுவதற்கு வழிவகைகளை யார் சொன்னாலும் அதை நன்றி அறிதலோடு ஏற்றுக்கொள்ளுவோம்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைப் பொருத்தவரையில் பழைய மதுவகைகள் அதிக மாக இல்லை என்றாலும், ஆயுர்வேத முறையில் மது கஷாயம் தயார் செய்து விற்கிறார்கள். கடந்த காலத்தில் அது போன்ற மதுகஷாயக் கடையின் ஹெட் ஆபீஸ் ஒன்றை காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் திறந்து வைத்தால், முன்பு இருந்த அரசாங்கம் அதைத் தடை செய்யத் தவறிவிட்டது. இந்திய சர்க்காரும் பழைய பாட்டையே பாடியது. நம்முடைய இந்த சர்க்கார் அந்தப் பொருளைத் தடைசெய்ய தக்க நடவடிக்கை எடுக்க முயற்சிக்குமா?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணுதுரை:** கனம் உறுப்பினர் கேட்ட கேள்வியிலேயே நான் அளிக்க வேண்டிய பதிலும் இருக் கிறது. அரிஷ்டம் தயாரிக்கும் கடையை மதிப்பிற்குரிய திரு. காமராஜ் அவர்கள் திறந்து வைத்தார்கள் (திரு. கே. விநாயகம்: க்வெஸ்சன்) என்றால், அப்படி அவர்கள் திறந்த திலிருந்தே அது மதுவிலக்கிற்கு விரோதமானது அல்ல என்று அவர்கள் கருதியிருக்க வேண்டும்; மதுவிலக்கு கெட்டு விடும் என்றால் அவர்கள் அதைத் திறந்து வைத்திருக்க மாட்டார்கள். இப்பொழுது அந்த அரிஷ்டங்கள் போதை தரும் பொருள் என்று நிபுணர்களைக் கொண்டு நிரூபித்து, அவற்றிற்கு தடை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சதர்:** சபாநாயகர் அவர்களே, மதுவிலக்கில் நல்ல நம்பிக்கை கொண்டுள்ள இந்தச் சர்க்கார் மதுவிலக்கை முற்றிலும் வெற்றிகரமாக நடத்துவதற்கு என்ன என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று அறியலாமா?

[1967 மார்ச் 29

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** முதல் நடவடிக்கை, இந்தச் சர்க்கார் வந்தவுடனே மது விலக்கை எடுத்துவிடும் என்று ஏற்பட்டிருந்த தவறான அபிப்பிராயத்தை நீக்கியது. இரண்டாவது நடவடிக்கை, மதுவிலக்கு வெற்றிகரமாக நடப்பதற்கு உங்களுடைய யோசனைகளையெல்லாம் கேட்பது. மூன்றாவது நடவடிக்கை, மதுவிலக்குச் சட்டம் இருந்தாலும், குடிப்பதற்குத் தங்களுக்கு அனுமதி வேண்டும் என்று கேட்கிற பேப்பர்களை அதற்கான மனுக்களை மிகக் கடுமையான முறையில் பரிசீலித்துக் கொண்டிருப்பது.

THIRU K. VINAYAKAM: Sir, in view of the settled policy of this Government to work prohibition to a successful termination, is the Minister aware of the fact that in border areas like the areas in the Andhra Pradesh adjoining Tiruthani, the Government have permitted toddy shops and liqour shops in large numbers and men from our State keep on visiting those shops, and will he request the Andhra Government not to issue licences for running of shops in the belt areas within their State for a range of ten miles, so as to enable this Government to implement the policy successfully in this State?

THE HON. THIRU C. N. ANNADURAI: I can understand the embarrassment caused to my Friend Vinayakam, because Tiruttani happens to be his constituency. Possibly some of the voters approached him and said "We will vote for you if toddy shops are brought forward in Tiruttani" and he has given a promise. If no such promise has been made, I would request him. . . .

THIRU K. VINAYAKAM: The Hon. Chief Minister is assuming too much.

THE HON. THIRU C. N. ANNADURAI: I have had some of the reports of his speeches in Tiruttani.

As for the suggestion that the Andhra Government should be approached to help us to maintain the prohibition policy by removing the toddy shops within a ten-mile belt within their State, I can answer it in two ways. The craving for drink is so intense that miles do not count. Even if toddy shops are ten miles away, those people who have a craving for drink will walk there, run there and roll there. Therefore the better course will be for the hon. Member of the Opposition, who has got a pull and who ought to have a pull with the Congress Government, to approach that Government and plead on behalf of prohibition which means on behalf of the revered memory of Gandhiji and ask them to desist from running the toddy shops.

**திரு. வி. ஜார்ஜ்:** அவைத் தலைவர் அவர்களே, அரிஷ்டக் கடைகளுக்கு அனுமதி அளித்துவிட்டு, அதற்குப் பிறகு அங்கு சென்று அரிஷ்டம் குடித்துவிட்டு வருபவர்களை மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் போலீசார் பிடித்துத் துன்புறுத்தி வருகிறார்கள். இதை நீக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?



1967 மார்ச் 29]

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** தலைவர் அவர்களே, எந்த நிலையில் இருந்தால் மதுவிலக்குச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட வேண்டும் என்பதற்குச் சில விதி முறைகள் இருக்கின்றன. மது குடித்த பிறகு கண் சிவப்பது, கை கால்கள் தளர்ச்சி அடைவது, வாய் குளறுவது, இவைகளெல்லாம் அரிஷ்டக் குடியினாலே வந்தது என்று அவர்கள் சொல்லுவார்களானால், மதுவிலக்குச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கருதுகிற போலீஸ்காரர்கள் அதை மட்டும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், குடிப்பவர்களுக்கெல்லாம் சிறந்த வசதி இருக்கிறது; நம்முடைய மதிப்புமிக்க வழக்கறிஞர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் போய்த் திறமையாக வாதாடுகிறார்கள். "கண் சிவப்பு ஏற்பட்டது குடியினால் அல்ல; நேற்று இரவெல்லாம் சிந்தித்துச் சிந்தித்துத் தூக்கம் வராமல் இருந்ததாலே அந்தக் கண் சிவப்பு ஏற்பட்டது" என்றெல்லாம் வாதாடுகிறார்கள். வழக்கறிஞர்கள் வாதாடுவதற்குத் துணையாக உள்ள ஒரு விஷயத்தைக் குறித்துக் கனம் உறுப்பினர் அவர்களும் இங்கு அதற்காக வாதாட வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** சபைத் தலைவர் அவர்களே, கள்ளுக்காவது விதி விலக்குக் கொடுத்தால் மிக நன்றாக இருக்கும் என்று நான் மிக மிகப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகின்றேன். நாங்கள் விவசாயத் தொழிலாளர்களிடத்தில் வேலை வாங்கும் போது, முன்பெல்லாம், கள் குடித்துக் கொண்டிருந்த காலத்தில் எல்லாம், தொழிலாளர்கள் நன்றாக திடகாத்திரத்தோடு இருந்தார்கள். ஆனால், இப்பொழுதெல்லாம் டீ போன்றவைகளையும், அதைவிட மிகப் பொல்லாத அரிஷ்டம் போன்றவைகளையும், இன்னும் ஏது எதையோ அருந்தி, விவசாய வேலையில் ஈடுபட முடியாத நிலையில் உடலைப் பாழ்படுத்திக் கொண்டுவிடுகிறார்கள். ஆகவே . . .

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்க விரும்புவதைக் கேள்வி வடிவத்தில் கேட்க வேண்டும்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** ஆகவே, தொழிலாளர்களுடைய உடல் நலத்தைக் காப்பாற்றுவதற்காகவாவது, கள் குடிப்பதற்கு மதுவிலக்குச் சட்டத்திலிருந்து விதிவிலக்குக் கொடுத்தால் மிக நன்றாக இருக்கும்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** கனம் உறுப்பினர் அவர்கள் என்னுடைய மதிப்பிற்கு மிகவும் உரியவர்கள். மது விலக்குச் சட்டத்தை அவர்கள் சொன்ன முறையில் திருத்த வேண்டும் என்ற கருத்தில் அவர்கள் அவ்வாறு சொல்லியிருக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால், அவர் சொன்னதைப் போன்று ஒரு பொதுவான கருத்து நாட்டிலே இருக்கிறது. இந்தக் கள் என்பது குடியிலேயே அதிகமான அளவிற்குத் தீமை தராது என்ற கருத்தைப் பரப்பி இருக்கிறார்கள்,

[1967 மார்ச் 29

கள் குடித்துவிட்ட சமையத்தில் கலவரங்கள் செய்தவர்களை யெல்லாம் நான் சிறுவனாக இருந்த போது பார்த்திருக்கிறேன். வேறு பலவகை மது சாப்பிட்டுவிட்டுக் கலவரம் செய்தவர்களையும் நான் பார்த்திருக்கிறேன். இதிலே ஒன்றும் எனக்கு வித்தியாசங்கள் தெரியவில்லை. ஆனால், கனம் உறுப்பினர் அவர்கள் இன்னென்று சொன்னார்களே, அது உள்ளபடியே நம்முடைய மனப்பான்மை அடிப்படையிலே வருகிறது. வேலை செய்கின்றவர்கள் கள் குடிக்க வேண்டும் என்று நாம் சொல்லுவது—வேலை செய்கின்றவர்கள் கம்புக் கூழ் சாப்பிட வேண்டும், வேலை செய்கின்றவர்கள் கேழ்வரகு சாப்பிட வேண்டும், வேலை செய்கின்றவர்கள் காப்பி குடித்து உடலைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது, வேலை செய்கின்றவர்கள் விடியற்காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்திருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு வந்த அந்தப் பழைய மனப்பான்மையிலேயே, வேலை செய்கின்றவர்கள் கள் குடிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட முறையில் நம் மனப்பான்மையை வைத்துக்கொண்டிருப்பது சரியல்ல. அப்படிக் கள் குடிப்பது உடலுக்குக் கெடுதல் இல்லை என்றால், வேலை செய்கின்றவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களை வேலை வாங்குகிற எசமானர்களுக்குக் கூட நல்லதாக இருக்கலாம். ஆகையால், இதிலே வேலை செய்பவர்கள், வேலை வாங்குபவர்கள் என்று பிரித்து, வேலை வாங்குபவர்களுக்குப் பிராந்தி, வேலை செய்பவர்களுக்குக் கள் என்றால், அதிலே கூடவா பாகுபாடு இருக்க வேண்டும் என்று நான் ரொம்ப வருத்தப்படுகிறேன். நான் விசாரித்த வரையில், வேலை செய்கின்றவர்கள் கள் குடித்தால்தான் திறமை பெற முடியும் என்று எந்த மருத்துவ ஆதாரமும் சொல்லவில்லை.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** நேரம் ஆகிவிட்டபடியால் இதனை அடுத்து, மூன்றாவது இலக்கமிட்ட கேள்வியை நாம் இப்பொழுது எடுத்துக்கொள்ளுவோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் பெயரில் இருக்கும் மூன்றாவது இலக்கமிட்ட கேள்வி இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுகிறது.

## நெய்வேலி-சேலம் உருக்கு ஆலை

* 3 கேள்வி.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஆரம்பிக்கும் விஷயம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

(இ) தாமதத்திற்குக் காரணமென்ன?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) நெய்வேலி சேலம் உருக்கு ஆலை நிறுவுவது குறித்த விஷயம் முன்பு இருந்த அரசாங்கம் விட்டுச் சென்ற நிலையிலேயே இருக்கிறது. அது குறித்து இந்திய அரசின் முடிவு இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது.



1967 மார்ச் 29]

(இ) இந்தத் திட்டம் இந்திய அரசு ஏற்று நடத்தும் திட்டமாதலால் இதைத் துவங்குவதற்கு அந்தச் சர்க்கார்தான் முடிவு எடுக்க வேண்டும். மாநில அரசு இந்திய அரசிடம் இந்தத் திட்டத்தைத் துவங்குவதற்குச் சீக்கிரமே முடிவு எடுக்கும்படி அவ்வப்போது முறையிட்டுக் கொண்டு வருகிறது.

DR. H. V. HANDE : Sir, is the Hon. Minister for Industries aware that even the investigations with regard to the Salem Steel plant are not complete and, if so, what steps is he going to take to complete the investigations?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆராய்ச்சி இன்னும் முடிவுறவில்லை என்று சொல்லுவதற்கில்லை. பல்வேறு வகையிலே ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. நெய்வெலி-சேலம் உருக்காலையை நிறுவுவது என்ற முடிவிலே எந்த மாற்றமும் இல்லை. அந்த ஆலையை நிறுவ முடியும், அது பயன் தரும் என்ற முடிவின் அடிப்படையிலே, இந்திய அரசினுடைய அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால், இந்தத் திட்டத்தை இந்திய அரசுதான் ஏற்று நடத்த வேண்டும் என்ற முடிவோடு சென்ற அரசு இருந்தது. இந்த அரசும் அந்த முடிவிலேதான் இருந்து கொண்டிருக்கிறது. ரூபாய் மதிப்புக் குறைவதற்கு முன்னால் இந்தத் திட்டத்தை ஏற்று நடத்த 95 கோடி ரூபாய் ஆகும் என்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது. எனவே, இந்த முடிவை ஏற்று, இந்திய அரசின் திட்டமாக நிறைவேற்றும் நிலையில்தான் இது இருக்கிறது. இந்தத் திட்டத்தைப்பற்றிய ஆராய்ச்சியெல்லாம் ஏறத்தாழ முடிந்துவிட்டன.

**திரு. ம. பொ. சிவஞானம் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சேலம் இரும்பாலைத் திட்டத்தைக் குறித்து இந்தியப் பிரதமரைத் தமிழ்நாட்டுத் தூதுக் குழு பேட்டி கண்டபோது, "பண நெருக்கடி இருப்பதால் இப்பொழுது இது கவனிக்கப்படவில்லை" என்று சொல்லப்பட்டது. இந்திய அரசாங்கம் சோவியத் நாட்டின் உதவியோடு பொக்காரோவில் இரும்பாலை யொன்றை அமைக்க இருக்கிறது. அந்த இரும்பாலைத் திட்டத்தை நான்கு பிரிவாக்கி, பொக்காரோ, சேலம், ஹாஸ்பெட், துங்கபத்ரா ஆகிய நான்கு இடங்களிலும் வைக்கலாம். தமிழ் நாட்டு அரசாங்கத்திற்கும் செலவு இல்லாமல், மத்திய அரசாங்கத்திற்கும் புதிய பொறுப்பு இல்லாமல், ஏற்கனவே உள்ள திட்டத்தை நான்கு பிரிவாக்கிப் போடுவது நான்கு மாநிலத்தினரையும் திருப்திப்படுத்தக் கூடிய, வெற்றிகரமாக நடக்கக்கூடிய வழி என்பதைக் கருதி, இதைத் தமிழக அரசாங்கம் தங்களுடைய சிபார்சாக மத்திய அரசாங்கத்திற்கு அனுப்புமா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை மத்திய அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும் என்று வற்புறுத்துகிற நிலையில் கனம் உறுப்பினர் அவர்கள் கூறிய மற்றைய கருத்துக்களும், அவர்கள்

பனைத்தைப்பொறுத்துச் சமாதானம் கூறும் வகையில் உள்ள அந்தக் கருத்துக்களும் பயன்படுத்தப்பட்டு, வற்புறுத்தப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

முற்பகல் 10.00 (திரு. வி. கே. கோதண்டராமன் எழுந்தார்.)

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்** : கனம் உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் எழுந்திருந்ததைக் கவனிக்க வில்லை. கடைசியாக, ஒரு துணைக் கேள்வி போட அவரை அனுமதிக்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : சார், சேலம் இரும்பு உருக் காலை மிக முக்கியமானது. நேரம் இல்லாத காரணத்தினால் அதைப்பற்றி அதிக விவரம் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, தயவுசெய்து இதன்பேரில் ஒரு அரை மணி நேர விவாதத் திற்குத் தாங்கள் அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்** : அரை மணி நேர விவாதம் கேட்க மாண்புமிகு உறுப்பினருக்கு உரிமை உண்டு. ஆனால், கவர்னர் உரையின்மீது பொது விவாதம் தொடர்ந்து நடப்பதன் காரணமாக, சேலம் இரும்பு உருக்காலையைப்பற்றி விவரமாக எடுத்துப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால் இதற்கு அரை மணி நேர விவாதம் ஒதுக்க வேண்டியதில்லையென்று கருது கிறேன்.

*Licences to increase cycle rickshaws*

* 4 Q.—THIRU. K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is a proposal to increase the number of cycle rickshaws by issuing more licences?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : ரிக்ஷாக்களை அதிகமாக்க அனுமதி வழங்கும் நோக்கம் அரசினருக்கு இல்லை.

**திரு. கே. விநாயகம்** : இப்போதிருக்கிற சைகிள் ரிக்ஷாக்களில் ஒரு சிலவற்றிற்கு அனுமதி கொடுக்கப்பட்டது என்று சொல்லி, அவைகளுக்கு மஞ்சள் வர்ணம் தீட்டியிருந்தார்கள். அனுமதி கொடுக்கப்படாமல் ஓடிக் கொண்டிருந்த ரிக்ஷாக்களைக் கண்டு பிடித்தவுடன் அவற்றிற்குப் பச்சை வர்ணம் கொடுத்து, தற்காலிக அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இந்த இரண்டையுமே லீகலைஸ் செய்து பச்சை வர்ணம் பூசப்பட்ட வர்ணங்களுக்கும் மஞ்சள் வர்ணமே கொடுத்து எல்லாவற்றையும் சட்டபூர்வமாக அனுமதிக்க இந்த அரசாங்கம் யோசிக்குமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : இப்போது பச்சை வர்ணம் கொடுக்கப்பட்டுள்ள சைகிள் ரிக்ஷாக்கள், அனுமதி பெறாமல் சென்னையில் ஓடிக்கொண்டிருந்த ரிக்ஷாக்களாகும். அவற்றைக் கண்டுபிடித்த பிறகு தற்காலிக அனுமதி வழங்கி, ஓர் அடையாளத்திற்காக பச்சை வர்ணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அனுமதி தொடர்ந்து பல முறை நீடிக்கப்பட்டிருக்கிறது. இப்போதும் நீடிக்கப்பட்டிருக்கிறது.





**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்** : முடிக்க வேண்டிய வினாக் கள் இன்னும் இரண்டு இருப்பதனால், வினா நேரத்தை இன்னும் பத்து நிமிடங்கள் நீடிக்க அனுமதி கொடுக்கிறது என்று கருது கிறேன்.

**திரு. கே. விநாயகம்** : இந்த சைகிள் ரிக்ஷாக்கள் 'சீப் மோட் ஆஃப் டிரான்ஸ்போர்ட்' என்ற வகையில் இருக்கின்றன. பெரிய டாக்சிகளையும், சின்ன டாக்சிகளையும் உபயோகித்துக் கொள் வதற்கு வசதியில்லாத பலர் இன்றையதினம் குறைந்த கட்டணத் தில் ஓடிக்கொண்டிருக்கிற சைகிள் ரிக்ஷாக்களைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். இப்போது சென்னையில் ஆயிரம் சைகிள் ரிக்ஷாக்கள் தான் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்று அறிகிறேன். தயவுசெய்து, 1,500 ஆக உயர்த்தவாவது இந்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : கனம் உறுப்பினர் கொடுத்த தகவல் சரியானது அல்ல. சென்னையில் 2.992 சைகிள் ரிக்ஷாக்கள் இருக்கின்றன. இவை மனிதாபிமானக் கொள்கையை மீறிய செயலாக இருக்கிற காரணத்தாலும், இவற்றினால் போக்கு வரத்திற்கு அதிக இடைஞ்சல் ஏற்படுகிறதென்று போலீஸ் தரப்பி லிருந்து அடிக்கடி வற்புறுத்தப்பட்டு வருவதாலும், இப்போதுள்ள கணிசமான அளவை அப்படியே நீடிக்க விட்டுவிட்டு புதிதாக எதற்கும் அனுமதி வழங்காமல், படிப்படியாக இதனையே குறைத்து விட வேண்டும் என்பதுதான் பழைய சர்க்காருடைய கொள்கை. அதுதான் இப்போதும் இருக்கிறது.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்** : தலைவர் அவர்களே, முன்னால் இருந்த அரசாங்கம் வேகமாக ஓடும் வண்டிகளில் ஏழை எளிய மக்களுக்கெல்லாம் மிகவும் லாபகரமாக இருந்த ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு லைசென்சு கொடுக்காமல் தடுத்திருந்தார்கள். அவைகளுக்கு இனிமேலாவது அதிக அளவில் அனுமதி வழங்க இந்த அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : அது பரிசீலிக்கப்படும்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி** : மனிதரை மனிதர் வைத்து இழுக்கின்ற இந்த பழக்கத்தை ஒழிக்க வேண்டியது அவசியந் தான். என்றாலும்கூட, வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாமல் இருப்பதற்கு சைகிள் ரிக்ஷாக்களை அனுமதிப்பதில் தவறில்லை யென்று கருதுகிறேன். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காகவாவது சைகிள் ரிக்ஷாக்களுக்கு அதிக அனுமதி வழங்குவதோடு, அவற்றில் புதிய முறையில் மோட்டார்களை இணைத்து முன்னேற்றம் காண அரசாங்கம் உத்தேசிக்குமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : சைகிள் ரிக்ஷாக்களை வைத்திருப்பவர்கள் வேலையை இழந்துவிடக்கூடாது என்கிற காரணத்தினால் அவை அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் யாரும் பாதிக்கப்படவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த சைகிள் ரிக்ஷாக்களுக்கு இனிமேல் அனுமதி வழங்குவதற்கு இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லையா என்பதை மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி: அப்படி நான் சொல்லவில்லை. மேலும் கேட்டால், இருக்கிற ரிக்ஷாக்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

திரு. எம். எஸ். மணி: சைகிளுக்கு லைசென்சு இருக்கிறது. ஆனால் சைகிள் ஓட்டுபவர்கள் லைசென்ஸ் பெற வேண்டிய அவசியம் இல்லை. அதுபோலவே சைகிள் ரிக்ஷாக்களுக்கு லைசென்சு இருக்கிறது. ஆயினும், சைகிள் ரிக்ஷா ஓட்டுபவர்கள் லைசென்சு பெற வேண்டியிருக்கிறது. இப்படி இந்த ஏழைத் தொழிலாளர்கள் செலுத்துகின்ற கட்டணத்தை நீக்கி சைகிள் ரிக்ஷா ஓட்டுபவர்களுக்கு லைசென்ஸ் தேவையில்லையென்பதைச் செய்ய அரசாங்கம் யோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி: அது யோசிக்கப்படும்.

திரு. க. இராமமூர்த்தி: சைகிள் ரிக்ஷா இருப்பதனால் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுகிறதென்று நாம் அதை ஒழிக்க முற்படுகிறபோது, ஏற்படுகிற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு அந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு வேறு வகையான தொழில் செய்ய உதவி அளிக்கப்படுமா?

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி: இப்போது அவர்கள் அந்தத் தொழிலில் இருந்து வருகிறார்கள். அந்தத் தொழிலையே அவர்கள் விரும்புவதால், அவர்கள் அதில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க எல்லா வித நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்படும்.

ஹாஜி ம. மு. பீர் முகம்மது: அவைத் தலைவர் அவர்களே, ஆட்டோ ரிக்ஷாக்களையோ, அல்லது டாக்சிகளையோ பயன்படுத்த முடியாத அளவுக்கு மிக ஏழ்மை நிலையில் இருக்கிற மக்கள் அவசியம் அவசரமாகச் செல்வதற்கு உபயோகித்துக் கொள்கிற வாகனமாக இருக்கிற சைக்கிள் ரிக்ஷாக்களை அறவே நீக்கிவிட்டால், ஏழைகள் எதில் ஏறிச்செல்கின்ற வாய்ப்பு ஏற்படும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி: அறவே நீக்குவதாக இங்கே சொல்லப்படவில்லை.

திரு. ஆர். நாகசுந்தரம்: ஐயா, கணவனையும் மனைவியையும் இந்த சைக்கிள் ரிக்ஷாக்கள் பிரித்துவிடுகின்றன. அவர்களை ஒன்று சேர்த்து வைக்கவாவது சைகிள் ரிக்ஷாக்களில் இரண்டு பேரை ஏற்றிச் செல்ல அனுமதி வழங்கப்படுமா? (சிரிப்பு).

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி: அப்படிப்பட்ட நிலைமை வரும்போது அது யோசித்துப் பரிசீலிக்கப்படும்.



திரு. தோ. மு. நல்லசாமி: மனிதர்கள் இழுக்கக்கூடிய ரிக்ஷாக்களையும் சைகிள் ரிக்ஷாக்களையும் ஒழிக்க வேண்டுமென்கிறபோது, போக்குவரத்துக்கு அதிகமாக, அவசியமாகத் தேவைப்படுவதற்கு மாற்று யோசனையாக அரசாங்கத்திடம் என்ன திட்டம் இருக்கிறதென்று அறியலாமா?

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி: இது சம்பந்தமாக 1-4-1967 க்குள் யோசனை தரும்படியாக போலீஸ் அதிகாரிகளிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பதில் வந்தவுடன் சென்னைக்கு மாத்திரமல்ல, எல்லா இடங்களிலும் போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாத வகையில் என்ன மாற்றுத் திட்டத்தை ஏற்படுத்தலாம் என்பது யோசிக்கப்படும்.

*Abolition of hand-pulled rickhaws*

* 5 Q.—THIRU. K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state:—

Whether there is a proposal to completely abolish the plying of hand-pulled rickshaws in the city of Madras?

மதிப்பிற்குரிய திரு. மு: கருணாநிதி: உடனடியாக கை ரிக்ஷாக்களை அறவே அகற்றும் எண்ணம் அரசினர்க்கு இல்லை.

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி: உடனடியாக கை ரிக்ஷாக் ஸ்டேஜ் பை ஸ்டேஜாக எடுத்துவிட வேண்டுமென்பது பழைய அரசாங்கத்தின் கொள்கை. கை ரிக்ஷாக்களைவிட சைகிள் ரிக்ஷா கொஞ்சம் மேலானது. கை ரிக்ஷாக்களை ஒழிக்கிறபோது சைகிள் ரிக்ஷாக்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதுபற்றி அரசாங்கம் கவனிக்குமா?

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி: இந்த இரண்டு கருத்துக் களும் இருக்கிற நிலைமைக்கேற்றபடி கவனிக்கப்படும்.

குடி நீர்த் திட்டம்.

*6 கேள்வி.—திரு. சோ. அழகர்சாமி: மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த கோவில்பட்டி நகரத்துக் கான குடி தண்ணீர்த் திட்டம் எந்நிலையிலுள்ளது?

மதிப்பிற்குரிய திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: கோவில்பட்டி நகராட்சிக்கான குடிநீர் வழங்கு திட்டம் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: தற்காலிக நிவாரணமாக நகரசபை யிலிருந்து 2 லட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக் கிறது. அதை உடனடியாக சாங்ஷன் செய்து, நிறைவேற்றி நிவாரணம் அளிக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்பு கிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா:** இப்போதுள்ள நிலைமையில் 1967 ஜூன் மாதத்திற்குள் அந்தத் திட்டம் முடிந்து விடும் என்று கூறப்படுகிறது. ஆகவே, தற்காலிகத் திட்டம் தேவையில்லையென்று கருதுகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** இத்துடன் வினாக்கள், விடைகள் முடிவடைகின்றன.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 3. ஒழுங்குப் பிரச்சினை.

### உறுப்பினர்மீது மற்றோர் உறுப்பினர் உரிமைத் தீர்மானம்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சார், நான் இந்தச் சபையில் ஒரு ப்ரிவிலேஜ் மோஷன் கொடுத்திருக்கிறேன். அதுபற்றி . . . (மணி அடிக்கப்பட்டது).

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராஜா அவர்கள் ஒரு உரிமைத் தீர்மானத்தை என்னிடம் கொடுத்தார்கள். அந்த உரிமைத் தீர்மானத்தைப்பற்றி அவர் நன்றாக எடுத்து என்னிடத்தில் விளக்குவதற்குரிய வாய்ப்பை என் அறையில் கொடுத்தேன். அவர் சொன்ன கருத்துக்களைக் கேட்டுக் கொண்டு, அதை இந்த அவையில் எழுப்புவதற்குரிய அனுமதியைக் கொடுக்க மறுத்தேன். இப்பொதுள்ள கேள்வி, அவர் கொடுத்த உரிமைத் தீர்மானத்தை இந்த அவையில் நான் வாசித்துக் காண்பிக்க வேண்டுமா? அல்லது, மாண்புமிகு உறுப்பினரையே அவரது உரிமைத் தீர்மானத்தை இந்த அவையில் வாசிக்க அனுமதிக்க வேண்டுமா? அல்லது நான் எனது அறையிலேயே சொன்ன முடிவு இறுதியானதா? என்கிற கேள்விகள் எழுகின்றன. இதுபற்றி ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியுள்ளார்கள். இதில் என்னுடைய தீர்ப்பை நான் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் என்னிடம் கொடுத்துள்ள உரிமைத் தீர்மானம் இந்த அவையிலே உள்ள மற்றொரு உறுப்பினர் மீது ஆகும். உரிமைத் தீர்மானங்களை இரண்டு வகைப்படுத்தலாம். இந்த அவையில் உள்ள ஓர் உறுப்பினர் மற்றொரு உறுப்பினர்மீது குற்றஞ்சாட்டிக் கொண்டு வருகிற உரிமைத் தீர்மானம் ஒரு வகை. மற்றொரு வகை, வெளியார் மீது கொண்டுவருகிற உரிமைத் தீர்மானம். இரண்டையும் வெவ்வேறு கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டும். இந்த அவையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் பற்பல உரிமைகள் இருக்கின்றன. ஆகவே, ஓர் உறுப்பினர் மற்றொரு உறுப்பினர் மீது ஓர் உரிமைத் தீர்மானத்தைக் கொண்டு வரும்போது அதை நான் என்னுடைய அறையிலேயே நன்கு பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. அந்த உரிமைத் தீர்மானத்திற்கு ஆதாரம் இருக்கிறதா என்று முதலில் நான்



பார்த்துக்கொண்டாக வேண்டும். ஆதாரம் இருப்பதாக நான் கருதினால் அந்த உரிமைத் தீர்மானத்தை இந்த அவையில் கொண்டு வர அனுமதி அளிக்கலாம். அப்படி இல்லாதபோது அதை நான் இந்த அவையில் வாசித்துக் காட்டவேண்டுமென்று சொல்வது வழக்குக்கு முரணானது. விதிமுறைகளுக்கும் முரணானது. நம்முடைய அவை விதிகளை எடுத்துப் பார்த்தால், மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போதே சில சொற்களை இந்த அவையில் பயன்படுத்தக் கூடாது. எடுத்துக் காட்டாக வஞ்சகம் என்ற சொல்லை, பொய் என்ற சொல்லை கண்ணியமற்ற சொல்லைப் பயன்படுத்தக் கூடாது என்று இருக்கிறது. இந்த வார்த்தைகள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் கொடுத்துள்ள உரிமைத் தீர்மானத்தில் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது அந்த உரிமைத் தீர்மானத்தை நான் இந்த அவையில் வாசிக்க வேண்டும் என்றோ, மாண்புமிகு உறுப்பினரை வாசிக்க அனுமதிக்க வேண்டுமென்றோ சொல்வது சரியல்ல. மாண்பு மிகு உறுப்பினர் மற்றொரு உறுப்பினர் மீது உரிமை தீர்மானத்தைக் கொண்டுவரும் போது, குற்றம் சாட்டப்படுகிற அந்த உறுப்பினருக்கு உரிமை இல்லையா? ஆதாரமில்லாத ஒரு குற்றச்சாட்டு இந்த அவையில் வரும்போது அவர் மனம் புண்படாதா? அவரது கட்சியைச் சார்ந்தவர்கள் மனம் புண்படாதா? ஓர் உறுப்பினருக்கு மற்றொரு உறுப்பினரைப் புண்படுத்த உரிமை இல்லை. எல்லோருடைய உரிமைகளையும் பாதுகாக்க நான் கடமைப்பட்டவன்.

ஆகவே, என்னுடைய தீர்ப்பு என்னவென்றால் இந்த அவையில் உள்ள ஓர் உறுப்பினர், இந்த அவையில் உள்ள மற்றோர் உறுப்பினர் மீது உரிமைத் தீர்மானம் கொண்டுவருகிறபோது—என்னுடைய அறையிலேயே அதைப்பற்றி உரிமைத் தீர்மானம் கொண்டுவருகிற உறுப்பினரோடு விவாதிப்பேன். முடிவில் அதற்கு நான் அனுமதி அறையில் அளித்தால்—அது இந்த அவையில் வாசித்துக்காட்டப்படும். என்னுடைய அறையிலேயே அனுமதி மறுக்கப்பட்ட உரிமைத் தீர்மானங்கள் இந்த அவையில் வாசித்துக்காட்டப்படமாட்டா. எனினும், வெளியார் மீது உரிமைத் தீர்மானம் கொண்டுவருகிறபோது இந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆக, இப்போது மாண்புமிகு சுப்பராஜா அவர்கள் கொடுத்துள்ள உரிமைத் தீர்மானத்தை இந்த அளவில் வாசித்துக்காட்ட அனுமதிக்க முடியாது. என்னுடைய அறையிலேயே அது நிராகரிக்கப்பட்டு விட்டது. என்று தீர்ப்புச் சொல்லிவிடுகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** அவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்துள்ள உரிமைத் தீர்மானத்தில் . . .

**மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்:** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தங்கள் 'ரூலிங்' கொடுத்த பிறகு அதைப்பற்றிக் கனம் அங்கத்தினர் மீண்டும் இந்த அவையில் எழுப்பலாமா என்பதுபற்றியும் தாங்கள் தீர்ப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** ஒரு பிரச்சினை மீது பேரவைத்தலைவர் தீர்ப்பு அளித்த பிறகு அதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வது தான் முறையேயொழிய அதன்மீது விவாதத்தை எழுப்புவது முறை அல்ல. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையின் நடவடிக்கைகுக் குந்தகம் ஏற்படாமல், கண்ணியக் குறைவு ஏற்படாமல், விதிமுறைகளை ஒழுங்கு முறைகளைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

### 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.
### சிவகாசியில் நெல் மண்டிகள் கதவடைப்பு.

**திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி:** கனம் பேரவைத் தலைவர் அவர்களே, "இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள, சிவகாசியில் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் சிலர் பதுக்கி வைக்கப்பட்ட நெல்லைக் காட்டிக்கொடுத்து, அதன்பேரில் பதுக்கி வைக்கப்பட்ட நெல் கைப்பற்றப்பட்டது என்ற காரணத்திற்காக, மண்டிகளை மூடி, நெல் வியாபாரத்தை நிறுத்தி, அப்பகுதி மக்களைப் பட்டினியால் பரிதவிக்கவிட்டு, அதன்மூலம் கழக ஆட்சிக்குக் கெட்ட பெயர் உண்டாக்கும் நோக்கத்துடன், சிவகாசியில் உள்ள வணிகர்கள், அங்குள்ள எல்லா மண்டிகளையும் கடந்த ஆறு தினங்களாக மூடிவிட்டதால், சிவகாசியிலும் சுற்றுப்புறங்களில் உள்ள கிராமப் பகுதியிலும் உள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள், உணவு கிடைக்காமல் பரிதவித்துப் பஞ்சத்தின் பிடியில் அகப்பட்டுள்ளார்கள். அதனால் அங்கு பெரும் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்நிலை மற்ற இடங்களுக்கும் பரவலாம். இந்தப் பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசர விஷயத்தை விவாதிக்கவும் இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுகிறேன்" என்ற தீர்மானத்தை நான் கொடுத்திருக்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரால் குறிக்கப்பட்டுள்ள காரியம் அரசினரின் அன்றாட சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்டு இருக்கிறது. இரண்டாவது, கவர்னர் உரையின் மீதான விவாதம் தொடர்ந்து நடைபெற்று வருவதால், இதுபற்றிப் பேசுவதற்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது. இந்த இரண்டு காரணங்களுக்காகவும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு நான் அனுமதி மறுக்கிறேன்.

### 5. கவன ஈர்ப்பு

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் பேரவையின் 41-வது விதிப்படி கொடுத்துள்ள அறிவிப்பு நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும் அதற்கு நான் அனுமதி வழங்கியுள்ளேன்.



### சாத்தனூர் தலைக்கால்வாய் உடைப்பும், தண்டராம்பட்டு தொகுதியில் பயிர்ப் பாதிப்பும்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சகாதேவ கவுண்டர் அவர்கள் சட்டசபை விதிகளின் 41-வது விதியின்கீழ் தாம் கொடுத்துள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவகளுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**திரு. கே. சகாதேவ கவுண்டர்:** அவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு தொகுதியில் சாத்தனூர் அணைக்கட்டின் தலைக் கால்வாய் உடைந்து விட்டதால் சுமார் 20,000 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்துள்ள நஞ்சை, புஞ்சைப் பயிர்கள் வாடி வதங்கியுள்ளன. இதனைத் தடுக்க உடனடியாகச் செய்ய வேண்டிய நிவாரண வேலைகள் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** அவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் தலைக்கால்வாயில் விடப்பட்ட நீரளவு தேவைக்கேற்ப அதிகரிக்கப்பட்டது. 17—3—1967 அன்று காலை 6 மணி அளவில் அக்கால்வாயில் 1 மைல் 7 பர்லாங்கு தொலைவில் 20 அடி உயர்முள்ள கரையில் வலது பாகத்தில் 50 அடி நீளத்திற்கு உடைப்பு ஏற்பட்டது. உடைப்பினை மூட உடனே நடவடிக்கை எடுக்கப்பட்டது. 21-3-1967 அன்று தலைமைப் பொறியாளர் உடைப்பு ஏற்பட்ட இடத்தை நேரில் பார்வையிட்டு, பழுது பார்க்கும் பணி திருப்திகரமாக நடைபெற்று வருகிறதென அறிந் தார். இவ்வேலை 26-3-1967 அன்று முடிவடைந்தது, பாசன நீர் கட்டுப்படுத்திய அளவில் வழங்கப்பட்டு வருகிறது. கரை மேலும் வலுவடைவதுடன் நீர் வழங்கல் படிப்படியாக அதிகரிக்கப்படும். கிடைத்த தகவலின்படி பாசனம் பெறும் நஞ்சை நிலம் 7,431 ஏக் கரும், புஞ்சை 13,148 ஏக்கரும் ஆகும். புஞ்சைப் பயிர் பெரும் பாலும் அறுவடை ஆகிவிட்டது. இந்த உடைப்பினால், தற்போது பயிரிடப்பட்ட நிலங்கள் ஒன்றும் சேதமடையவில்லை. அண்மை யில் பெய்த மழை அப்பயிர்களுக்குப் பெரிதும் உதவியுள்ளது. இப்போதைய ஆணைக்கிணங்க 30-4-1967 வரை வினியோகம் நீடிக்கும். ஆயினும் தேவையிருப்பின், அதன்பின்னரும் போதிய காலத்திற்கு வினியோகம் நீடிக்கப்பெறும்.

### 6. அறிவிப்புகள்.

### (அ) உள் சட்ட ஆய்வுக் குழுவினர் நியமனம்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** அடுத்து, இந்தப் பேரவைக் குத் தரிவிக்கவேண்டிய ஓர் அறிவிப்பு உள்ளது. இந்தப் பேரவையின் 209 (1) வது விதிக்கு இணங்க கீழ்க்கண்ட உறுப்பினர்களை

[மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்] [1967 மார்ச் 29

'நான், உள் சட்ட ஆய்வுக் குழுவின் (கமிட்டி ஆன் சபார்டினேட் லெஜிஸ்லேஷன்) உறுப்பினர்களாக நியமிக்கிறேன் :—

(1) திரு. ஆர். என். அரங்கநாதன்.
(2) திரு. நா. கிருட்டினன்.
(3) திரு. கே. ஆர். கோவிந்தன்.
(4) திரு. பழனிவேல் ராஜன்.
(5) திரு. க. ந. சிவபெருமாள்.
(6) திரு. து. ப. அழகமுத்து.
(7) திரு. கே. விநாயகம்.
(8) திரு. டி. மார்டின்.
(9) திரு. கே. போஜன்.
(10) திரு. என். சங்கரய்யா.

இப்பேரவையின் 202-வது விதிக்கு இணங்க திரு. ஆர். என். அரங்கநாதன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

### 7. கவர்னர் பேருரையின்மீது விவாதம் (தொடர்ச்சி).

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** இப்பேரவையின் அடுத்த அலுவல், கவர்னர் அவர்களுடைய உரையின் மீது விவாதம் தொடர்ந்து நடைபெறும். இப்பொழுது இந்த அவையின் கூட்டம் 1 மணிவரை நடைபெற்று, இடைவேளைக்குப்பின் மீண்டும் இன்று மாலை 2-30 மணிக்குத் தொடங்கும். நேற்றுப் பேசத் தொடங்கி, உரையை முடிக்காமலேயே விட்டுவிட்ட திரு. செ. கோ. விசுவநாதன் அவர்கள் இப்பொழுது தொடர்ந்து உரையாற்றுவார்கள்.

**திரு. செ. கோ. விசுவநாதன்:** தலைவரவர்களே, கவர்னர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து நேற்று நான் பேசிய கருத்துக்களைத் தொடர்ந்து சில கருத்துக்களை இன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அண்மையிலே சில மாதங்களுக்கு முன்பாக ஏற்பட்ட புயலின் காரணமாக செங்கற்பட்டு மாவட்டத்திலே இரண்டு கோடி ரூபாய்க்கு மேலாக நஷ்டம் ஏற்பட்டு அங்கேயுள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள் என்பதை நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். விவசாயிகளுடைய தோட்டங்களிலேயுள்ள தென்னைகளும், வாழை மரங்களும் அழிக்கப்பட்ட காரணத்தாலே, அவர்கள் எல்லாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் அளித்திருக்கின்ற கடன்களையும், கூட்டுறவுச் சங்கங்கள் அளித்திருக்கின்ற கடன்களையும் மிகத் துரிதமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே புயலால் பாதிக்கப்பட்ட எங்கள் மாவட்டத்தில் இவற்றை வசூலிப்பதைக் கொஞ்சம் தள்ளிவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, அணு மின்சார நிலையத்தைத் தொடங்குவதற்காக அங்கே நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான்கு ஐந்து கிராமங்களிலுள்ள நிலங்களைச் சர்க்கார் வாங்கி



1967 மார்ச் 29] [திரு. செ. கோ. விசுவநாதன்]

கொண்டிருக்கிறது. அதற்காக சர்க்கார் அளித்துக்கொண்டிருக்கின்ற நஷ்டஈடு சென்ட் ஒன்றுக்கு ரூபாய் 15 என்ற அளவிலேதான் அளிக்கிறார்கள். அந்தத் தொகை அந்தத் தொகுதியிலே உள்ள மக்கள் வேறு ஊருக்குச் சென்று குடியேறவும், அங்கே விவசாயம் செய்வதற்காக நிலங்களை வாங்குவதற்கும் பற்றாத நிலைதான் இருக்கிறது. அந்த அளவுக்கு அந்த நஷ்டஈட்டுத் தொகை குறைந்த அளவிலே இருக்கிறது என்பதை நான் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THIRU K. VINAYAKAM: Mr. Speaker, Sir, I crave your indulgence to permit me to speak a few words in English. I have been called upon to express my views on the Address of His Excellency the Governor to the Joint Session of this Legislature. I am at a loss to understand how the D.M.K. Party including the Leader have reconciled with the post or office of the Governor. There were times when this Party was against the very institution of the Governor. On a former occasion when Mr. Sri Prakasa addressed a joint session of the two Houses of this Legislature, this Party, I believe, boycotted the entire session. Later, when His Excellency Jayachamaraja Wadiyar addressed a joint session, this party co-operated evidently on the pretext that he belongs to a neighbouring State. Could there be such a discrimination between Governors? Our present Governor does not naturally belong to our State.

THE HON THIRU C. N. ANNADURAI: As the hon. Member is making a statement which is not correct, I would like to correct it. The Maharaja of Mysore as Governor never addressed the House.

THIRU K. VINAYAKAM: But discussion took place on the Address and the very same leader took part in the discussion. The point at issue is, when they could not reconcile themselves to the office of Governor then, how does it suit them to reconcile with the position, make the Governor deliver the speech and then take part in the discussion on it. I have known some statements issued by the Leader of the D.M.K. Party that this office is a very unnecessary and superfluous one. Jocularly he even compared this office to the piece of flesh hanging at the neck of the goat just to give the impression that the office was not necessary. I am very glad, Mr. Speaker, that a very colossal political metamorphosis has taken place and it is a change for the better and I congratulate them on the attitude which they are now taking. Now there is a change in the political complexion of the Government and the impact of the State's relation with the Centre will have to be closely watched.

There is nothing spectacular, thought-provoking or fascinating or even nothing to allude to in this Address. This seems to be just like the Address delivered during the regime of the old Ministry. To quote H. G. Wells I do not get any indication of even 'The shape of things to come' in the future.

Mr. Speaker, Sir, our Chief Minister is a versatile genius. He has mastered the art of public speaking and his technique of using words and playing on the credulous and gullible audience has left a very good impression about his future activities. He has raised fantastic, Himalayan hopes and aspirations among the people. He has been propagating pet theories that all the ills are due to the Congress Government and the Ministers concerned. To put it in a lighter vein, if a cow in anybody's house refuses to milk, it is due to the bad Government run by the Congress Party!

THE HON. THIRU. C. N. ANNADURAI: My Friend crediting me with possessing the art of speaking should not credit it with such a funny anecdote. I never said that; if I have said that, I would not deserve the credit for public speaking that he attributes to me.

THIRU K. VINAYAKAM: I said that I was saying it in a lighter vein.

Thus he has collected band of young men around him and they carried on almost a tirade against the Congress Ministry. He has even been telling the people that all the ills would be solved if the Congress Party was out of power. The gullible people, mostly well-meaning people, voted him to power and consequently sent us out of office. My allegation against the party in power is founded only on well-meaning lines. Having created an aspiration, some kind of hope that they would usher in a state of Utopia, a state of Shibboleth where everything will be available for the mere asking, now the party in power is on trial, and it will have to acquit itself properly. It has got to fulfill the pre-election promises. What are those promises?

மு.ப. 10-30 One of the promises oft-quoted is that they would be in a position to supply three measures of rice per rupee and then it was whittled down on the last day just before the elections to the point of stating that at least one measure of rice would be immediately given on the day of assumption of Office. Are they now in a position to implement it properly?

The Hon. Chief Minister must be aware of the difficulties. . . .

THE HON. THIRU C. N. ANNADURAI: If my hon. Friend wants a literal answer, I may state that on the day we took office, one measure of rice was sold for one rupee.

THIRU K. VINAYAKAM : Not by the Government, at any rate, but some interested people who were jubilant over the unusual success of their Party in large numbers should have incurred a definite loss, by purchasing 10 or 15 bags of rice and celebrated the victory of the Party. So the credit for that should not go to the Party in power but it should go to some individual persons who thought that they should celebrate it in such a way. That will not satisfy the public for long.





Mr. Speaker, Sir, another issue is the language issue. The language issue is the most muddled one in our State. The Congress Party accepted the three-language formula but the Party in power is now advocating 14 languages and I have heard one Hon. Minister harping upon the theory that only two languages have got to be developed at the expense of the third language. If this is going to be the state of affairs, I am at a loss to know, what will be the future of our State. Our Hon. Chief Minister has got the unusual capacity of converting any inconvenient position to his advantage like Mark Antony of Rome with his powers of oratory on the funeral occasion of Caesar. He can enthuse the masses, get them to his side for help and at the same time wreak vengeance against his enemies. I only throw a friendly caution to the Hon. Chief Minister that he should not continue to be the Hamlet of politics. Hamlet was always harping on 'To be or not to be'—to quote the Shakespearean language and likewise our Hon. Chief Minister is always saying 'To do or not to do'.

THE HON. THIRU C. N. ANNADURAI : I am very happy to note that there is literary flavour in the speech of my hon. Friend but in that connection, I would like to point out that he has compared a poor person like me to Hamlet but the late Pandit Nehru himself was compared to Hamlet.

THIRU K. VINAYAKAM : I am concerned with the Chief Minister of my State. In this connection, I must point out that Othello found out the causes by saying, 'It is the cause and it is the cause'. He committed the murder of his innocent wife, Destimona. Sir, I do not want the Chief Minister to commit such murders. He must find out the real ills of the society, the real causes and the drawbacks in our society and solve them immediately. To go one step further, like Aladdin, he has created a demon, dangerous giant with marvellous powers, capacity and achievement but if he could not be handled properly, one day, the same demon will devour our Chief Minister.

THE HON. THIRU C. N. ANNADURAI : I have again to correct my hon. Friend. In the story, Aladdin was not destroyed by the demon.

THIRU K. VINAYAKAM : I am well aware of the details of the story and I have never stated that Aladdin was destroyed by the demon. If the Chief Minister does not handle the giant properly in the way he has to be handled, it is likely.

THE HON. THIRU C. N. ANNADURAI: The very fact that the hon. Member is comparing me to Aladdin, should mean that he is comparing me in toto.

THIRU K. VINAYAKAM : Comparison stops at the stage at which the demon was created and there it ends. Mr. Speaker, Sir, the Dravida Munnetra Kazhagam leader has painted an inglorious

[Thiru K. Vinayakam] [1967 மார்ச் 29

picture about us, that we are responsible for all the ills in this country, that the spiralling of prices have all been created by us and that if his party is put in power, they would bring down the spiralling prices to a reasonable level. Now, I want to ask, what are the steps which this Government have taken to bring down those prices. We have yet to know all these details.

Mr. Speaker, Sir, I have also raised the question, with regard to the Chief Minister's entry into this Legislature. He has got the right to sit in this House for six months. But on a former occasion when a predecessor, Mr. C. Rajagopalachari entered the Legislature by nomination in the Council, the very same Chief Minister then stated that it was a backdoor entry. I do not know by what door he is going to enter this Legislature now.

THE HON. THIRU C. N. ANNADURAI: As a lawyer, he should know that he should build a base which is stable. He has now stated that I stated that Rajaji came by the back-door. There was a talk like that in Tamilnad but the hon. Member can never credit such an allegation to me.

THIRU K. VINAYAKAM: As the situation stands to-day, it is a door which is not a proper door. The Hon. Chief Minister must make it a proper door. Either he must face the elections and fight the elections and then come into this House or carry on with the odium which is now attributed to him. To quote his own words, it is not a proper door, if not a back-door.

THE HON. THIRU. C. N. ANNADURAI: I think, the hon. Member is not irritated by my intervention. We are now talking about the door. In that connection, I would like to remind him of the recent statement of the Congress President that even persons defeated at the General Elections can enter the Rajya Sabha. That door is also very small and whether it is forward or backward: he should have to decide.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, I am the last person to get irrigated. I have been a Parliamentation for so many years, Mr. Speaker, Sir, we were both contemporaries in the same college, Pachaiyappas' College. He was in the Final Honours Class and I was in the Third Honours Class. The Secretary of this Department was also in the same Class.

THE HON. THIRU. C. N. ANNADURAI : Mr. Speaker, Sir, for your information, I can say that the hon. Member is not only a good Parliamentarian but he has had experience from both sides.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, I accept that insinuation because I had started my carreer in the Opposition and it is my lot to be in Opposition even during the lean days of my Party. Apart from the lighter-vein talking, I come to the point. The Party



1967 மார்ச் 29] [Thiru K. Vinayakam]

and its leader are sitting on a volcano which is capable of eruption with dangerous consequences. Unless they deliver the goods and unless they put their pre-election promises into concrete action, their days are numbered.

Mr. Speaker, there are so many petty things like the Salem Steel Plant Also, the question of spiralling prices and the problem of food scarcity are confronting him and I want him to take a bold stand in regard to all these things.

THE HON. THIRU C. N. ANNADURAI : The hon. Member may have a dig at us on other points but about the Salem Steel Plant, please do not tell us that it is a petty scheme. It is the one scheme where we have to forget our political differences and fight with the Centre and get it.

THIRU K. VINAYAKAM : In respect of all issues which are capable of solution by the State Government, the State Government should not develop a desire of throwing the blame on the Centre and then wash off their hands by running away from their responsibility. If the Party in power wants our co-operation, we are ready to offer it but as an Opposition Party, we will oppose whenever opportunity arises, we will criticise the Party in power whenever a situation arises and we will embarrass the Government whenever there is scope for it.

THE HON. THIRU C. N. ANNADURAI: If the hon. Member understands the full meaning of the word 'co-operation' and if the Members of his party are sincere in their co-operation, they should not embarrass the Government, they can criticise.

THIRU K. VINAYAKAM: At the same time I will take the opportunity of articulating the people's aspirations on the floor of this House and of embarrassing the Government.

Coming to my constituency, it is a neglected constituency almost forgotten in the history of this State. We have been under the Andhra State for so many years and only in 1960 we came under the purview of this State. There are so many things wanting. I will take the opportunity of consulting the Ministry in private and tell them what they have got to do. They may develop a phobia that I come from the Opposition and even the legitimate demands of my constituency should not be denied on this ground.

I thank you, Mr. Speaker.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: பேரவைத் தலைவர் அவர்களே. நம் கவர்னர் பெருமான் அவர்களின் உரையில் மிக நல்லமுறையில் இன்றைக்கு நாட்டில் இருக்கக்கூடிய உடனடிப் பிரச்னைகளுக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து அதில் பல திட்டங்களைத் தீட்டவேண்டு மென்று குறிப்பிட்டிருப்பதை நான் மனமார வரவேற்கிறேன். அப்படி வரவேற்றுப் பேசுகிற நேரத்தில் எனக்கு முன்னால், குறிப்

பாக முன்னாள் ஆளும் கட்சியில் இருந்த கனம் அங்கத்தினர்களும், அதிலும் குறிப்பாக, எனக்கு முன் பேசிய திரு. விநாயகம் அவர்கள் அவர்களுக்கு என்று ஏற்பட்ட பாணியில், வார்த்தை ஜாலத்தில் முதல் அமைச்சர் அவர்களின் பேச்சில் மயங்கியிருக்கிறார்கள். அந்த மயக்கம் தீராத நிலையில் இங்கு மயங்கிப் பேசினார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உரை எங்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுப்பதாக இருக்கிறது என்று காங்கிரஸ் உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அந்த ஏமாற்றம் என்பது அவர்களுக்குப் புதிதல்ல. கடந்த இருபது ஆண்டுக் காலமாக இந்த நாட்டை ஆளுகிற முறையில் மக்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்காத முறையில், மக்கள் கருத்துக்களை அறிந்து கொள்ளாத நிலையில், மக்களோடு நெருங்கி அவர்கள் விவகாரங்களைப் புரிந்து கொண்டு பணியாற்றாத நிலையில், மக்களின் குறைகளுக்கு நிவாரணம் தேடித் தராத முறையில், அதிகார வர்க்கத்தை மட்டும் அவர்கள் நம்பிக்கொண்டிருந்த காரணத்தினால் தேர்தலுக்கு முன்னால் கூறி வந்தார்கள், இன்னும் இருபது ஆண்டுகளுக்கு நாங்கள் தான் நாட்டை ஆளப்போகிறோம் என்று சொல்லி வந்து கடைசியில் அதில் பெருத்த ஏமாற்றத்தைப் பெற்றார்கள். பிறகு இந்தக் கூட்டணி அமையாது; இது கூடாத கூட்டு என்று சொல்லி இந்தக் கூட்டு, தொகுதி உடன்பாட்டில் உடைந்து விடும், இவ்வளவு கட்சிகளும் ஒன்றாகக் கூட முடியுமா என்று கருத்தில்கொண்டு பிரசாரமும் செய்து வந்தார்கள். அந்தக் கூட்டு நிறைவேறி அதிலும் ஏமாற்றத்தைக் கண்டார்கள். அதற்குப் பிறகு இந்தக் கூட்டு கூடினாலும் இவர்களுக்கு ஐம்பது இடங்களுக்கு மேல் கிடைக்காது என்று கூறினார்கள். இந்த ஐம்பது இடங்களில் மைனஸ் 50 அவர்களுக்குத் தான் கிடைத்தது. அதற்கு மேலாக மக்களின் மதிப்புப்பெற்ற தலைவர்கள், தலைவர்களாக மட்டுமல்லாது ஆட்சி பீடத்திலும் அமர்ந்து மக்கள் ஆட்சியை மலர வைத்து இன்று மாண்புமிகு கட்சியாக உலகமே காணாத அதிசயமாக ஆட்சியை அமைத்திருக்கிறார்கள். அதிலும் இவர்களுக்கு ஏமாற்றம் கிடைத்தது. பிறகு இந்த மந்திரி சபை அமையுமா, இதில் கோளாறுகள் ஏற்படும், குறைகள் ஏற்படும், தகராறுகள் ஏற்படும் என்று கனவு கண்டார்கள். ஏழைகளின் இதயங்களை தம் இதயத்தில் வைத்திருக்கிற முதல் அமைச்சரான அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் உள்ள மந்திரிசபை ஜாதி மத பேதத்திற்கு அப்பாற்பட்டு அதற்கு மேல் பண்பட்ட விதத்தில், கீழ்மட்டத்தில் உள்ள மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கிற முறையில் அமைச்சர்களாக அமர்ந்திருக்கிறார்கள். இதிலும் ஏமாற்றம் கிடைத்தது. நல்லவிதத்தில் எந்தவித விவகாரமும் இல்லாமல், எந்தவித முணுமுணுப்பும் இல்லாமல் அமைச்சரவை அமைந்திருக்கிறது. அதிலும் அவர்களுக்கு ஏமாற்றம். இந்த அமைச்சரவை, சொல்கிற கருத்துக்களுக்கு காது கொடுத்துக் கேட்கவேண்டும், அதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும், அவற்றைத் திட்டமாகத் தீட்டவேண்டும் என்று திட்டவட்டமான முடிவிற்கு வந்திருக்கிறார்கள். கவர்னர் அவர்கள் உரையில் அது பிரதிபலிக்கிறது. குறிப்பாக அத்தனை பக்கங்களையும் வரி தவறாது படித்துப் பார்த்தால் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.





அடுத்தபடியாக, காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் தேன் நிலவு முடிந்து விட்டது என்று கூறினார்கள். பொதுப்பணித் துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்களைப் பார்த்து கனம் உறுப்பினர் சிதம்பரநாத நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள்...

**திரு. வி. ஜார்ஜ் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர். சட்டசபை ஒழுங்குப்படி சட்டசபை அங்கத்தினர்கள் பேசும்போது சட்டசபை அங்கத்தினர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுக் கூறலாமா என்று அறிய விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** தொகுதிகளைக் குறிப்பிட்டு இந்தத் தொகுதியின் உறுப்பினர் என்று சொல்லவேண்டும். அப்படியிருந்தாலும்கூட, தொகுதிகளின் பெயர்களை நினைவில் வைப்பது மிகவும் கடினமாகையால் அவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம் என்று அதை அனுமதிக்கிறேன்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** அவர்கள் சொன்னார்கள், முதல் கோணல் முற்றும் கோணல் என்று பிரித்துப் பேசும் அளவிற்குப் பேசி எங்கள் பிரிவில் சந்தோஷப்படுவதுபோல் பேசினார்கள். ராஜாஜி அவர்களுக்கும் நம் முதல் அமைச்சர் அவர்களுக்கும், ஏன் இரண்டு கட்சிகளுக்கும் இடையிலே நீண்ட நெடுங்காலமாக பொதுப்படையாக இருக்கிற ஒற்றுமை, மக்களுக்குச் சேவை செய்வது என்பதில் ஒன்றுபட்டிருக்கும் நிலை அதிகமாக இருக்கிறது. அது விஷயமாக நம் முதல் அமைச்சர் அவர்களும் கூறினார்கள். நீங்களும் நாங்களும் ஒன்றுபடாத நிலையில் இருப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை, நீங்களும் நாங்களும் ஒன்றுபட்டிருக்கிற நிலையில் வேறுபாடு இருக்கமுடியாது என்று கூறினார்கள். நம் முன்னால் இருப்பது மக்கள் பிரச்னை. அதற்குத் தீர்வு காண வேண்டும். அதற்குத் தீர்வு காண திறமையைக் காட்டி பெருமைபடவேண்டும். ராஜாஜி தேன் நிலவு முடிந்து விட்டது என்று சொன்னார்கள் என்று கூறினார்கள். முதலில் திருமணம் ஆகிறது, பிறகு தம்பதிகள் இருவரும் மனம் விட்டுப் பழக சௌஜன்யமாகப் பழக தனித்திருக்கும் நிலையில் பிரிந்து கொள்கிறார்கள். திருமணம் ஆகி பிறகு தேன் நிலவு அமைந்து, பிறகு குடும்பம் நடத்தும் நிலை ஏற்படுகிறது. குடும்பம் நடத்தும்போது சிறு சிறு சச்சரவுகள் தோன்றுவதுண்டு. அது நிலையானதல்ல. சபாநாயகர் தேர்தலைப் பயன்படுத்தி, பிளவைப் பெரிதுபடுத்தி அதன் மூலம் சந்தோஷப்படலாம் என்று நினைத்ததிலும் அவர்கள் ஏமாற்றம் அடைந்து விட்டார்கள்.

இன்னொன்றும் கூற விரும்புகிறேன். ஒரு படி அரிசி போட முடியுமா என்று கேட்கிறார்கள். எங்கள் ஆட்சியில் பாலும் தேனும் ஓடும் என்று இருபது ஆண்டுகளாகச் சொல்லி இன்று நாட்டில் அத்தனை பேர்களும் பிச்சைக்காரர்களாகக் காட்சியளிக்கும் நிலையில் நாட்டின் நிலையைப் புரிந்து கொள்ளாமல் இருந்தார்கள். ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடுகிறோம் என்று சொன்னார்களே என்று சொன்னதற்கு தேற்றையதினம்கூட முதல்

அமைச்சர் அவர்கள் நன்கு பதில் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக எங்களுக்கு முழு அதிகாரம் கொடுக்கிற நிலைமை ஏற்பட்டால், மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாடு இல்லாத அளவில் எங்களுக்கு மாநில அளவிலே முழு அதிகாரம் கொடுக்கப்பட்டால், அந்த முறையில் சில சூழ்நிலைகள் ஏற்பட்டால் நிச்சயமாகக் கொடுக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குச் சில திட்டங்களை வைத்திருக்கிறார்கள். இப்போதுதான் சர்க்கார் தன்னுடைய உணவுக் கொள்கையை வகுத்துக்கொண்டிருக்கிறது. அந்த நிலையை நாம் பார்க்கத்தான் போகிறோம். இன்று நிச்சயமாக ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்க முடியும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இத்தனை நிலையிலும், பொதுவாக இன்று பல இடைஞ்சல்களைச் செய்து, வெள்ளைக்காரர்கள் நாட்டை விட்டு, அதிகாரத்தை விட்டுப் போகும்போது ஓட்டை ரெயில்வே என்ஜின்களையும், ஓட்டைத் துப்பாக்கிகளையும் விட்டுவிட்டு, பாகிஸ்தான் போன்றவற்றைப் பிரித்து, ரத்தக் களறி ஏற்படுத்தி, நாம் பெற்ற உண்மையான சுதந்திரத்தைச் சுவைக்கின்ற அளவுக்கு இல்லாமல் ஏற்படுத்திச் சென்றதுபோல, இன்றைக்குப் பல பிரச்னைகள் ஏற்பட்டிருக்கின்றன. உதாரணமாக, இப்போது சில ஃபைல்களைக் காணவில்லையென்றால், இன்னும் என்னென்ன இருக்குமோ தெரியவில்லை. ஓரளவுக்குப் பிரித்துப் பார்க்கவேண்டுமென்ற நிலையில் இருப்பதால் நிலைமை இன்னும் சிரமமாகி வருகிறது. வேகத்தோடு செல்லுவதற்கு இயலாத நிலைமை இருக்கிறது. இதைப் பற்றி சதி என்று சொல்லுவதற்கு உறுப்பினர் அவர்கள் வருத்தப்பட்டார்கள். அந்த அளவுக்குக் காரியங்கள் நடந்திருக்கின்றன.

இன்றைக்கு இருக்கிற நிலையில், உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன், வரி விதிப்புகளில் 'டாக்ஸ் எவேஷன்' என்ற முறையில், எத்தனையோ பேர்கள் வரிகளைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். அதை ஒழுங்குபடுத்தும் நிலை வரும்போது நாட்டுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்று பார்க்கும்போது சென்ற ஆட்சியிலே ஒரு அதிகாரியை நியமித்து, விற்பனை வரியை வசூல் செய்வதைப் பற்றி சில ஏற்பாடுகள் நடந்தன. கோடானுகோடி ரூபாய் வருமானம் வந்து, வருமானத்தைத் தேடிப் பிடிக்கும்போது பெரும் பணக்காரர்கள், பெரும் தனக்காரர்கள், அரசாங்கத்திற்கு வேண்டியவர்கள் அத்தனை பேர்களும் பிடிக்கப்பட்டு, கடைசி நேரத்தில் அரசாங்கத்திற்கு மிக வேண்டிய ஒருவர் கையைக் கடிக்கும் நேரத்தில் அந்த அதிகாரியைக் கழற்றி விட்டார்கள். அந்தத் திட்டங்களெல்லாம் இல்லாமல் இல்லை.

இன்று பஸ் டிரான்ஸ்போர்ட்டை நாஷனலைஸ் செய்யவேண்டுமென்று திட்டம் இருக்கிறது. இன்று பஸ் டிரான்ஸ்போர்ட் மூலமாக வரியாக வர வேண்டிய பணம் அத்தனையும், மோசடியாக, போலியாக டிக்கெட் தயார் பண்ணி, இன்வாய்ஸ் தயார் செய்து ஒவ்வொரு நாளும் பெரும் தொகையைப் பல பஸ் கம்பெனிக்காரர்கள் ஒளித்துக்கொண்டு வருகிறார்கள். இந்தத் துறையில் சரியான ஆடிட்டர்களைப் போட்டு, சரியான இன்வாய்ஸ்களை அவர்களுக்காக





அடித்துக்கொடுத்து, அவர்களுடைய கணக்கை அடிப்படையாக வைக்காமல், முன்பு மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் காலத்தில் தமாஷா வரி போடும் நேரத்தில், சினிமா டிக்கெட்டுகளுக்குச் சர்க்கார் அலுவலகத்திலிருந்து ஸ்டாம்ப் ஒட்டிக்கொள்ளவேண்டுமென்று வைக்கப்பட்டதன் மூலமாக நல்ல முறையில் வசூல் ஆகும் நிலைமை ஏற்பட்டதே, அந்த மாதிரி நிலைமைகளை ஏற்படுத்தினால் ரூபாய்க்கு ஒரு படி என்ன, அதற்கு மேலும் சப்ஸிடைஸ் செய்து கொடுக்கக் கூடிய நிலைமை இருக்கிறது.

(மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் தலைமை)

அதையும் திட்டத்தில் வைத்திருக்கிறார்கள் என்பது தெரியும். அந்த மாதிரிப் பல காரியங்கள் இருக்கின்றன.

இந்த நமது அமைச்சரவைக்கு ஒன்று சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். தேர்தலில் வெற்றி பெற்று வந்திருக்கிறோம்;
மக்கள் எல்லோருடைய ஆதரவையும் பெற்று வந்திருக்கிறோம்.
மக்களாட்சி மலர்ந்திருக்கிறது. பழைய ஆட்சியில் இருந்து
இன்றும் அதிகாரிகளாக இருக்கக் கூடியவர்கள், நேற்று வரையில்
காங்கிரஸ் கட்சி வெற்றி பெறவேண்டும் என்று எண்ணியவர்கள்,
காங்கிரஸ் கட்சிதான் திரும்பவும் ஆட்சிக்கு வரும் என்று சொல்லி
யவர்கள், தேர்தல் நேரத்தில் காங்கிரஸ் கட்சிக்காக வீடு வீடாகச்
சென்று ஓட்டுக் கேட்டவர்கள், அப்போது மக்களைத் துன்புறுத்திய
வர்கள், கட்டாயக் கொள்முதல் கொள்கையை அமல் நடத்தும்
பொறுப்பை அதிகாரிகளிடம் கொடுக்கும்போது, அந்த அதிகாரம்
தவறான முறையில் நடந்துகொண்ட அதிகாரிகள் கையில் சிக்கும்
போது, சில அநீதிகள் நடந்து விட்டன. அது மிகவும் வருந்தத்
தக்கது. அரசாங்கம் திட்டத்தை நல்ல எண்ணத்தில் போட்டிருந்
தாலும், கீழே இருக்கக் கூடிய அதிகாரிகள் வேண்டா வெறுப்
பாகக் காரியங்களைச் செய்து, அரசாங்கத்திற்கு வேண்டிய மக்க
ளாக இருப்பவர்களை வேண்டாதவர்களாக ஆக்கித் திடீரென்று
அலுப்பு ஏற்படுத்தவேண்டுமென்று சில காரியங்களைச் செய்திருக்
கிறார்கள். அது மிகவும் வருந்தத் தக்கது. உடனடியாக நமது
உணவு அமைச்சர் அவர்கள் ஓடோடி எந்த எந்தப் பகுதிகளில்
தவறுகள் ஏற்பட்டனவோ அங்கெல்லாம் சென்று அந்தத் தவறு
களைச் சீர்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்
கிறேன். அந்த மாதிரியான அதிகாரிகளை உடனடியாக அந்த இடங்
களிலிருந்து மாற்றியாக வேண்டும். உதாரணத்திற்கு எனது
தொகுதியில் ஏற்பட்டதைப்பற்றிச் சொல்லிக்கொள்கிறேன். அங்கு
நடந்த அக்கிரமத்திற்கு ஒரு அளவு கிடையாது. மூக்கையா தேவர்
நிச்சயம் வெற்றி பெற மாட்டார் என்று சொல்லிக் கொண்
டிருந்தார்கள். சிறு குழந்தைகள் முதற்கொண்டு மூக்கையா தேவர்
அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெறுவார் என்று சொல்லும்
போது, அந்த முறையில் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்போது
அங்குள்ள மக்களிடத்தில் ப்ரொக்யூர்மெண்ட் என்று சொல்லி,
½ படி, ¼ படி அளவுக்கு இருக்கக் கூடியதையும், அவிக்கப் போட்ட
நெல்லைக்கூடப் பிடித்து மக்களைத் துன்புறுத்தியிருக்கிறார்கள்.
திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் கொண்டிருக்கிற முறைக்குத்

கெடுதலேச் செய்கிருர்கள். அவர்கள் செய்வது தவறு என்று சொன்ஞல், 'போய் அண்ணுவிடம் சொல்லுங்கள்; அவர்கள்தான் இந்த உத்தரவு போட்டிருக்கிருர்கள்' என்று இவ்வளவு திமிராகச் சொல்லுகிருர்கள். அதிகாரிகள் அத்தனே பேர்களும் சுத்தமாக இருக்கிருர்கள் என்று சொல்ல முடியாது என்று முதலமைச்சரே சொல்லியிருக்கிருர். இதஞல் ஏற்படும் தீமையைத் தடுத்துக் கொள்ளும் அளவுக்கு அவர்கள் இருக்கும் இடத்திலிருந்து மாற்றியாவது அவர்களுக்குப் புத்தி புகட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல இங்கு ஒரு அங்கத்தினர் கூடச் சொன்ஞர். கும்மிடிபூண்டிக்குப் போய் ஒரு இடத்தில் மக்களேப் பார்த்து ஆறுதல் கூறவேண்டுமென்று முன்பு சபை அங்கத்தினராக இருந்தவர் அழைத்துச் சென்ருர். அப்போது இடம் தவருமல், வீடு தவருமல் போலீஸ் உட்கார்ந்திருந்தது. அதே அங்கத்தினர், திரு. வேழ வேந்தன் என்று நினேக்கிறேன், அவரிடத்தில் வந்து மக்கள் சொல்லியிருக்கிருர்கள். அப்போது அவர் நல்ல விதத்தில் பதில் சொல்லியிருக்கிருர். அப்போதுதான் நமது முதலமைச்சர் அவர்கள் என்ன காரியம் செய்திருக்கிருர்கள் என்று தெரிய வந்தது. 'இன்று சில அரசாங்க உத்தரவுகள் போடப்பட்டிருக்கின்றன, அவற்றில் தயவு செய்து யாரும் தலேயிடாதீர்கள்' என்று கூறியிருக்கிருர். 'அந்த மக்களெல்லாம் ஓட்டு போட்ட மக்கள்தான். சிலர் தவறு செய்கிருர்கள். அவர்களேப் பிடிக்கும்போது சிலர் பாதிக்கப்படலாம். அப்போது யாரும் தலேயிடக் கூடாது' என்று எங்களுக்கு உத்தரவு போட்டிருக்கிருர் என்று சொன்ஞர். அதைக் கேட்டு நான் சந்தோஷப்பட்டேன். சுத்தமான ஆட்சி இருக்க வேண்டுமென்ருல், திறமையான ஆட்சி இருக்கவேண்டுமென்ருல், ஏற்படுகிற தவறுகளே எடுத்துக்காட்டவேண்டுமே தவிர, இடையூருக இருக்கக் கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிருர்கள் என்பது அப்போதுதான் தெரிய வந்தது. இதையெல்லாம் மனதில் வைத்துக் கொள்ளாமல், எந்த நேரத்திலும் மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்பதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இந்த ப்ரொக்யூர்மென்டில் இன்னெரு யோசனே சொல்ல விரும்புகிறேன். இப்போது கம்பல்சரி ப்ரொக்யூர்மென்ட் என்று போடப்பட்டிருக்கிறது. நமது நகரத்திற்கு அதிகமான அளவுக்குத் தேவை இருக்கிறது. உணவு இருப்பானது ஒரு நாள் தேவைக்குப் போதுமானதாகக் கூட இல்லே என்ற நிலேமையில் ஆட்சி மாறி வரும்போது இருந்தது. ப்ரொக்யூர்மென்டிலே நமக்குத் தேவையான அளவுக்குக் கிடைத்த பிறகு டார்கெட் நிறைவேறும்போது இந்த முறையையே நிச்சயமாக எடுப்பார்கள் என்பது தெரியும். நமக்குக் கொடுக்கப்படுகிற தகவலில் இருந்து, மத்திய சர்க்கார் கொடுத்துள்ள தகவலில் கடுமையான பஞ்சம் வரும் என்று மிரட்டுவதாக இருக்கிறது. இப்போது வாலண்டரி ப்ரொக்யூர்மென்ட் முறையைக் கொண்டுவரலாம். இப்போது சர்க்கார் தரப்பிலிருந்து விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிருேம்; அவர்களுக்கு உரம் முதலியவைகள் கொடுக்கிருேம். இன்று நேரடியாகவும், ஒவ்வொரு பஞ்சாயத்து ஆபீஸ் மூலமாகவும், விவசாய ஆபீஸ் மூலமாகவும்





விவசாயக் காலத்தில் விவசாயிகளுக்கு வேண்டிய அத்தனேயையும் சர்க்கார் கொடுக்கிறபோது, சர்க்கார் நிர்ணயிக்கிற விலேயில் அவர்கள் அந்தப் பொருள்களுக்கு உரிய தொகையை மாற்றுப் பண்டங்களாக, நெல்லாகக் கொடுக்கும் நிலேமையை ஏற்படுத்தலாம். இன்று இந்த ஆட்சியினரை உயர்ந்த நிலேக்கு மக்கள் கொண்டு வந்து வைத்திருக்கிருர்கள். இங்கே உள்ள ஒவ்வொருவரும் நேரடியாக மக்களிடத்தில் தொடர்பு கொண்டவர்கள். அவர்களிடத்திலே நிறைய ஊழியர்கள் இருக்கிருர்கள். பல உத்தியோகஸ்தர்கள், திறமையானவர்கள் இருக்கிருர்கள். ஒவ்வொரு பகுதிக்கும் முதலமைச்சர் அவர்களும், மற்றும் மக்கள் மதிப்பைப் பெற்ற அமைச்சர்களும் சென்று, சர்க்காரிலே கணக்கு வைத்திருக்கிருர்கள், எத்தனே ப்ரொடக்ஷன் என்று கணக்கு இருக்கிறது, எவ்வளவு லாண்ட்லார்ட்ஸ் இருக்கிருர்கள் என்று கணக்கு இருக்கிறது, ஒவ்வொரு இடத்திலும் நேரடியாகச் சங்கங்களே அமைத்து மக்களிடத்தில் நெருங்கிப் பழகும் நிலேயில், அதிகாரிகளே வைத்துச் சட்டத்தின் துணையைக் கொண்டு, மக்களின் அனுதாபத்தைப் பெருமல் நடவடிக்கை எடுப்பதற்கு பதில், செல்வாக்கை உபயோகித்து நடவடிக்கை எடுத்தால் நமது தேவைக்கு வேண்டிய அளவுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்த முறையை நல்ல முறையில் கையாள வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மக்களுடைய மதிப்பைப் பெற்ற அவர்கள் எவ்வளவு கேட்டாலும் இல்லே என்று சொல்லாது கொடுக்கத் தயாராக இருப்பார்கள். அதிகார வர்க்கத்தில் இருக்கக்கூடியவர்கள் சிலர் இன்னும் பழைய மனப்பான்மையோடுதான், பழைய நிதானத்தில் இருந்துகொண்டிருக்கிருர்கள். அவர்கள் விஷயத்தில் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டியிருக்கிறது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நாட்டில் நிரந்தரமான திட்டம் கிடை மு.ப. 11-00
யாது, எல்லாம் முடிந்து விட்டது, தண்ணீர் திட்டமே இருக்க முடியாது என்று கடந்த காலத்து அமைச்சர்கள் சொல்லிவந்திருக்கிருர்கள். அது மிகவும் வருந்தத்தக்கது. சில அமைச்சர்கள் தங்கள் தங்கள் தொகுதிக்குச் சில அண்டை மாகாணங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு குறைந்த செலவில் முக்கியமான சில திட்டங்களே நிறைவேற்றிக்கொண்டுவிட்டார்கள். மற்றத் திட்டங்களே அப்படியே விட்டுவிட்டுச் சென்று விட்டார்கள், புறக்கணித்து விட்டார்கள். அவர்கள் விட்டுச் சென்ற திட்டத்தை, புறக்கணித்த திட்டங்களே, பாராமுகமாக இருந்த திட்டங்களே இந்த சர்க்கார் எடுத்து நல்ல முறையில் செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக, மேற்குத் தொடர்ச்சி மலேப் பகுதிகளிலே ஓடுகிற ஆறுகள், 5, 6 ஆறுகள் இருக்கின்றன. அந்த ஆறுகளில் கேரளா அரசாங்கம் தங்களுக்கு வேண்டிய மின்சக்தியையும் பெற்றுக்கொண்டு, அதைப்போல அணைக்கட்டுகளேக் கட்டி, நெல் சாகுபடிக்கு வேண்டிய தண்ணீரையும் உபயோகப்படுத்திக்கொண்டும் இருக்கிருர்கள். 20 ஆண்டுகளுக்கு மேலாக உபயோகப் படுத்திக்கொண்டிருக்கிருர்கள். ஆஞல் அவர்கள் உபயோகப் படுத்தியது போக, இன்னும் சுமார் 5 லட்சம் ஏகரா நிலங்களுக்குப் பாயக்கூடிய

[திரு. பி. கே. மூக்கையா தேவர்] [1967 மார்ச் 29

தண்ணீர் வீணாகி விரயமாக மேற்கு சமுத்திரத்தில் சங்கமம் ஆகிக் கொண்டிருக்கிறது. முன்பிருந்த மந்திரி திரு. ராமையா அவர்கள் முதலில் மறுத்தார்கள். பின்னால் அந்தப் பகுதி மக்கள் பெட்டிஷன் போட்டு, மகஜர்கள் கொடுத்தாலும், தங்களுக்கு உரிமை இருக்கிறது, எங்கே ஆறுகள் ஓடுகின்றனவோ அந்த காச்மெண்டு ஏரியா நமக்குச் சொந்தம். அந்தமாதிரி கேஸ்கள் போட்டு வெற்றி பெற்றிருக்கிறோம் என்று தஸ்தாவேஜுகளையும் அனுப்பி வைத்தார்கள். அதற்கு மேல் மந்திரியும் மந்திரியும் பேசி, என்ஜினியர்களும் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள். அந்த முடிவு நல்ல முடிவாக இருந்திருக்கும் என்று கருதுகிறேன். அதைத் தொடர்பாகக் கொண்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், கிழக்கு ராமனாதபுரம் மட்டுமல்ல, மேற்கு ராமனாதபுரம், மதுரை, திருமங்கலம் மற்றப் பகுதிகளிலும், அந்த ஆறு போகக் கூடிய மதுரை ஜில்லாவிலும் குறைந்தது 2 லட்சம் ஏகரா நிலங்களுக்குப் பாய்வதற்குத் தண்ணீர் வசதி இருக்கிறது என்று அந்த ரிபோர்ட்டில் நிபுணர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நீண்டகாலத் திட்டமாக இருக்கக்கூடிய அந்தத் திட்டத்தை எடுத்து நிறைவேற்றவேண்டும். கேரளாவில் எதிர்க் கட்சியின் ஆட்சி அமைந்திருக்கிறது. கேரள முதல் மந்திரி திரு. நம்பூதிரிபாடு அவர்கள்தான் பரம்பிக்குளம் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருந்தார்கள். நமக்கு உதவி செய்வதற்கும், கலந்து பேசுவதற்கும் அவர் இப்பொழுதும் உறுதுணையாக இருப்பார்கள் என்று கருதுகிறேன். அவர்களுக்கு வேண்டிய கரெண்டு, நெல், அரிசி ஆகியவற்றை நம்மால் முடிந்தவரை கொடுத்துதவத் தயாராக இருக்கிறோம். சகோதரர்கள் என்ற நிலையில் கலந்து பேசும் நிலைமையை உருவாக்க வேண்டும் என்று பேரவைத் தலைவர் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மிக முக்கியமான திட்டம். முன்பு கூட எல்லா அங்கத்தினர்களும் அதைப்பற்றி வற்புறுத்தியிருக்கிறார்கள்.

அதைப் போல ஆந்திர மாகாணத்தில் கிருஷ்ணா, கோதாவரி நதிகளில் அந்தப் பகுதிகளுக்கு வேண்டிய தண்ணீரைத் தேக்கிப் பாய்ச்சியதுபோக, அதற்கு மேல் ஏற்படுகின்ற வெள்ளப் பெருக்கத்தினால், கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு நஷ்டம் ஏற்பட்டு வீணாகத் தண்ணீர் சமுத்திரத்தில் போய்க்கொண்டிருக்கிறது. ஒரு நிபுணர் குழு நமக்கு அதைப்பற்றிச் சிபார்சு செய்திருக்கிறார்கள். அதில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் ஏறக்குறைய 20 ஆண்டுகாலமாக ஆந்திர மாகாணத்தில் ஓடிக்கொண்டிருக்கிற ஆறுகளின் நீர், ஏறக்குறைய 20 லட்சம், 30 லட்சம் ஏகரா நிலங்களுக்குப் பாயக்கூடிய தண்ணீர் வீணாக, விரயமாகப் போய்க் கொண்டிருக்கிறது. ஆந்திர மாகாண அமைச்சர்களுடன் நல்ல முறையில் பேச்சு வார்த்தை நடத்தி, மத்திய சர்க்காரை நல்ல முறையில் அணுகி, நல்லதோர் திட்டத்தை நிறைவேற்றினால், தமிழ் நாட்டிலேயே பஞ்சம் என்பது இருக்காது, நாட்டில் எங்கெங்கு பஞ்சம் இருக்கிறதோ, அங்கெல்லாம் பஞ்சத்தைப் போக்கிச் செல்வம் கொழிக்கும் தமிழ் நாடாக ஆகும். இரு



1967 மார்ச் 29] [திரு. பி. கே. மூக்கையா தேவர்]

திட்டங்களையும் நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு நாங்கள் உறுதுணையாக இருந்து எல்லா வகையிலும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது புதிய திட்டங்களை நல்லவிதத்தில் நிறைவேற்றுவதற்கு ஒரு வாய்ப்பாக நமக்கு உறுதுணையாக இருக்கக் கூடியவர்கள் நமது உத்தியோகஸ்தர்கள். குறிப்பாகச் சமூக நீதியை உறுதி செய்வதிலேயே இந்த அரசாங்கம் தீவிரமாக இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். இதன்படி ஆசிரியர்கள், போலீஸ்காரர்கள், கெஜட் பதிவு பெறாத ஊழியர்கள் இவர்களுக்கு வாழ்க்கை நடத்துவதற்கு ஓரளவுக்கு நிவாரணம் கிடைக்கச் செய்யவேண்டும். அது முக்கியக் குறிக்கோளாக இருக்கவேண்டும். அந்த வகையில் காங்கிரஸ் ஆட்சி அல்லாத முற்போக்கு மாநிலங்களின் அரசு அத்தனையும் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும். குறிப்பாகச் சம்பளத்தையும் பஞ்சப்படியையும் ஒன்றுபடுத்துகிற அளவுக்கு எதிர்க்கட்சியின் ஆட்சி அமைந்திருக்கிற சில மாகாணங்களில் அதிகவேகமாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அதேபோல பஞ்சப்படியின் அடிப்படையிலே சம்பளத்தை உயர்த்துவதற்கும், ஊழியர்களுடைய சம்பள உயர்வு கோரிக்கைகளை 6 மாதங்களுக்கு ஒரு முறை பரிசீலனை செய்து, அவர்களுக்கு உத்திரவாதம் அளிக்கவேண்டிய நிலையில் நாமும் இருக்கிறோம் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாகாணத்தில் நல்ல ஆட்சியை நிறுவவேண்டுமென்றால், ஊழியர்களுடைய ஒத்துழைப்பு நமக்கு அதிகமாகத் தேவை. அவர்களுடைய வாழ்க்கை நிலையை அனுசரித்து ஊழியர்களுடைய ஊதியத்தை அரசாங்கம் நிர்ணயிக்கவேண்டும். அப்பொழுதுதான் இந்த அடிப்படை நீதி மற்ற ஊழியர்களுக்கும், தனிப்பட்டவர்கள் துறையில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்களுக்கும் கிடைக்க வாய்ப்புகள் ஏற்படும். உதாரணமாக மேற்கு வங்காளத்தில் கெஜட் பதிவு பெறாத ஊழியர்கள், போலீசார், ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கு ஊதிய அளவு இந்தியாவில் வேறு மாநில அரசு ஊழியர்களின் சம்பளத்தைவிட அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலை தமிழகத்திலும் உடனடியாக ஏற்படவெண்டும். மத்திய, மாநில அரசு ஊழியர்களிடையே ஊதிய ஏற்றத் தாழ்வைப் பற்றி இன்று இருக்கக்கூடிய முனைப்பு நிரந்தரமாக மறைய எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. THIRU C. N. ANNADURAI: With your permission, I have to bring one point to the notice of my hon. Friend, Mr. Vinayakam. While he was speaking, he frequently used the words 'gullible people'. It is not unparliamentary, I am conscious of that. I looked into the dictionary. Though the word 'gullible' is parliamentary, I find that it is a sort of inconvenient term. At the very beginning I may say that 'gullible' and 'gull' are slangs and now allowed in literature. Gullible comes from the root word 'gull' and 'gull' means a credulous person, a dupe, a simpleton, a fool. If that word is attributed to the public, it is apt to be misunderstood as 'fools'. I do not think my

hon. Friend Vinayagam wants the people to be called as fools. Therefore I request him to reconsider that word. Certain people are apt to give the exact meaning of the word and say, ' Mr. Vinayakam is calling all the people as fools. I do not think that he will welcome such a situation. Therefore I would request him to withdraw that word and ask the Speaker to expunge it from the proceedings.

THIRU K. VINAYAKAM : I know the intention of the Chief Minister and the reason why he is now trying to trap me and paint a wrong picture in the eyes of the public. If I use any word, I find out the exact relevant meaning from the Twentieth Century Chamber's Dictionary. The word 'credulous' means : People who believe easily anything that is said. There is nothing wrong. It is far from my intention and I never meant that the people are fools. People have a tendency to believe speeches because they are well-meaning, credulous people. As the Chief Minister read the meaning of the word from the dictionary, the first word that he read was ' credulous '. Credulous ' means those who easily believe without even thinking.

THE HON. THIRU C. N. ANNADURAI : If my Friend is capable of defending himself before the public, I have no objection.

THIRU. K. VINAYAKAM : What I have said is the meaning given in the Chambers Dictionary.

THE HON. THIRU C. N. ANNADURAI : Usually Chamber's Dictionary is for the colleges and Oxford Dictionary is taken for purposes of Parliamentary usage. My Friend thinks that he can go and defend himself before the public. Well and good. But this is the interpretation or the misinterpretation that can be attributed to that word. He said that 'gullible person' meant one who believed everything easily. If it is literally translated, it will mean in Tamil *Emaligal* and people will not like to be called *Emaligal*, especially when they are the real masters. If he thinks he can face the public, I have no objection.

*மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் :* 'Gullible' என்ற பதத்திற்கு என்ன பொருள் என்பதிலிருந்து அது பொதுவாக பொதுமக்களை இழிவாக எண்ணுவதற்கு இடம் கொடுப்பதாலும், மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் கேட்டுக் கொண்டபடி அதை வாபஸ் பெற உறுப்பினர் மறுத்துவிட்டதாலும் அந்தப் பதத்தைப் பேரவை நிகழ்ச்சியிலிருந்து நீக்கி விடுமாறு . . .

THIRU K. VINAYAKAM : Sir, I am interested in literary discussion. When the Hon. Chief Minister was trying to import a different kind of meaning in the language I used, I was trying to defend myself. But if the Hon. Chief Minister is of the



opinion that both of us should not offend the people at large because they have sent us back to this House, I have no objection to withdraw that word. But under no circumstances, that should be scrapped out of the proceedings of this House.

THE HON. THIRU C. N. ANNADURAI : Mr. Deputy Speaker, Sir, I just want to help my hon. Friend. If he is interested in selfhelp I have no objection to it. I am not objecting to the word but I am only pointing out that there may be occasions when the literal meaning of the word may be given to the public by some speaker or other—of course, I would not be doing it—that the hon. Member, Thiru Vinayakam, has on the floor of the House, called all the people as ' fools ' otherwise, the word can stand.

*மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் :* இப்பொழுது இங்கே
தலைவர்கள், உறுப்பினர்கள் உட்பட 65 பேர்கள் பேச இருக்கிறார்
கள். ஆகவே, தலைவர்கள் ஒவ்வொருவரும் 15 நிமிடமும், உறுப்
பினர்கள் ஒவ்வொருவரும் 10 நிமிடமும்தான் எடுத்துக் கொள்ள
வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. பெ. சீனிவாசன் : மதிப்பிற்குரிய துணை அவைத்தலைவர்
அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்
மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்ததற்காகத் தங்களுக்கு என்னு
டைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

விருதுநகர் சட்டமன்றத் தொகுதி காங்கிரஸ் தலைவர்
திரு. காமராஜ் அவர்களுடைய தொகுதி என்கிற காரணத்தாலும்,
அந்தத் தொகுதி மக்கள் சார்பிலும், இந்தப் புதிய அமைச்
சரவைக்கு என்னுடைய வரவேற்பையும் வாழ்த்துதலையும் தெரி
விக்கத் தாங்கள் அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்ளுகிறேன்.

இந்தத் தேர்தல் ஒரு திடுக்கிடும் விளைவைக் கொடுப்பதாக இருந்
தது, அதிர்ச்சியைக் கொடுப்பதாக இருந்தது. சிலருடைய விஷயத்
தில் என்றாலும், தமிழ் நாட்டு மாணவர்கள் சம்பந்தப்பட்ட வரை
யில் இந்தத் தேர்தலின் முடிவை அவர்கள் இறுதியாக, உறுதியாக
இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிட்டு எதிர்பார்த்துத்தான்
இருந்தார்கள். இந்த முடிவிற்குப் பல காரணங்கள் இருந்திருக்க
லாம். ஆனால், முழு முதற்காரணம் நிச்சயமாக தொகுதிக்குத்
தொகுதி சென்று சுறுசுறுப்போடு பணியாற்றிய மாணவர்களைச்
சாரும் என்பதை அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அந்த
மாணவ சமுதாயம், நிகழ்கால உயிர், எதிர்கால பரம்பரை, இந்த
வெற்றியைப் பிரதிபலிக்கும் சமுதாயம். அந்த இளைஞர்
சமுதாயம் எழுந்து வருகிறது. தளர்ந்து விட்ட சமுதாயத்திற்கு
விடை கொடுத்திருக்கிறது. அதைப் பாராட்டத்தான் இந்த முடிவு
என்று என்னைப் பொறுத்தவரை நினைக்கிறேன். அப்படிப்பட்ட
இளைஞர்களின் தலைமைக்குத் தகுதி வாய்ந்த தலைவரைத் தமிழ்த்
தெய்வமான, தமிழ் தாயின் தவப்புதல்வரான அறிஞர் அண்ணா

வைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தலைமையின் கீழ் இந்த நாடும், இந்த நாட்டு மக்களும் என்றென்றும் பாதுகாப்பாக இருப்பார்கள் என்பதில் மாணவர்களைப் பொறுத்தவரையில் ஐயம் இல்லை.

காங்கிரஸ் நண்பர்கள் இந்தத் தேர்தல் மிகப் பொறுப்பாகவும், அமைதியாகவும் நடந்திருப்பதாகக் கூறினார்கள். காங்கிரஸ் தலைவர்களும் கூறுகிறார்கள். கவர்னர் அவர்களும் சுமுகமாக நடை பெற்றிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். என்றாலும் கூட, என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில்—அந்தத் தொகுதி அகில உலகத்தின் கவனத்தையும் கவர்ந்திருந்தது. அந்தத் தொகுதி அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜர், ஜனநாயக சோஷலிசக் காவலர் திரு. காமராஜர் அவர்களுடைய தொகுதி—அந்தத் தொகுதியில் நடைபெற்ற அக்கிரமங்களை வரிசைப்படுத்திச் சொல்வதானால், அதற்கு நேரமும் இருக்காது, அதனால் மாண்புமிகு உறுப்பினர்களுடைய நெஞ்சத்தில் வேதனையும் நிரம்பிவிடும். ஆகவே, எல்லா நிகழ்ச்சிகளையும் சொல்லாமல், ஒரே ஒரு நிகழ்ச்சியை உதாரணத்திற்காகச் சொல்லப் புகுகிறேன். என்னை ஆதரித்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும், தொண்டர்களும் நாள் தவறாமல் பாதிக்கப்பட்டனர், நான் பயணம் செய்த கார்கள் ஒன்று விடாமல் நொறுக்கப்பட்டன. சின்னஞ்சிறு கிராமத்தில், ஒண்டிப்புலிநாயகனூர் என்கிற கிராமத்தில், சின்னஞ்சிறு விவசாயி தன்னுடைய ஆட்டுக் குட்டிகள் அடைக்கும் குடில்களில் கழகக் கொடியை ஏற்றியிருந்தார். காங்கிரஸ்காரர்கள் எச்சரிக்கை விடுத்தும் அந்தக் கொடியை இறக்க மறுத்துவிட்டார். அதற்காக அவருடைய சின்னஞ்சிறு ஆட்டுக் குட்டிகளைக் கழுத்தை முறித்துக் கொன்றார்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் சர்வ சாதாரணமாக நடந்திருக்கின்றன. மதிப்பிற்குரிய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்களுக்குச் சம்பவங்கள் நடப்பது பற்றி அடிக்கடி தந்தி மூலம் தெரிவித்திருந்தும், இதுவரையில் எந்தவிதமான கண்டனத்தையும் தெரிவிக்காததுபற்றி மிக மிக வருந்துகிறேன். அந்த முறையில் இந்தத் தேர்தலின் அதிகாரத்தையும் பலாத்காரத்தையும், பணத்தையும் முழுக்க முழுக்கப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இதைக் காங்கிரஸ் நண்பர்கள் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்குத் தமிழகத்தில் அறிஞர் அண்ணாவின் ஆட்சியை ஏற்படுத்தியிருக்கிறோம். அந்த ஆட்சியைச் சமுதாயத்தின் எந்தப் பிரிவினரும் மாற்றிவிடலாம் என்று கருதினால் மாணவ சமுதாயம் இடம் கொடுக்காது. அதற்குக் காரணம், இந்த இருபது ஆண்டுக் கால ஆட்சியில் ஏற்பட்ட இந்தித் திணிப்பை எதிர்த்து நின்று துப்பாக்கிச் சூட்டைத் தோழர்கள் மார்பில் தாங்கி, பிணமலையாகக் குவிந்தபோது மாணவர்கள் எடுத்துக்கொண்ட சபதத்தின் விளைவு, அன்றைக்கு அவர்கள் எடுத்த சபதம் அன்றைக்கு இருந்த ஆட்சி ஒழிய வேண்டும், தமிழகத்திற்கு உரிய, முழுக்க முழுக்க உகந்த ஆட்சி ஏற்படவேண்டும் என்று கருதியதால், இந்த ஆட்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, அறிஞர் அண்ணாவின் இந்த ஆட்சிக்கு மாணவர்கள் நிச்சயம் பூரணமான ஆதரவு





கொடுப்பது மட்டுமல்லாமல், இந்த ஆட்சிக்குத் துணையாக நின்று இந்த ஆட்சியைக் காப்பாற்ற மாணவர்கள் தங்கள் உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆட்சிக்கு வந்தவுடனேயே அண்ணா இந்திப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களையெல்லாம் விடுதலை செய்தது தான் பாராட்டத் தக்க விஷயம். இப்படி விடுதலை செய்தது சரியா என்று காங்கிரஸ் தரப்பிலிருந்து நண்பர்கள் கேட்டார்கள். 1942-லே பலாத்காரத்திலே இறங்கிய வெள்ளைக்கார அதிகாரிகளைத் துப்பாக்கிக்கு இரையாக்கிய சிலரைக் காப்பாற்றினார்கள் இவர்கள், வாய்ப்பு வந்தபோது அவர்களைப் பாராட்டினார்கள். அப்படிப் பாராட்டப்பட்டு, காப்பாற்றப்பட்ட தூக்குமேடை ராஜகோபால் என்கிற நண்பரைக் காங்கிரஸ் கட்சி அண்மைக்காலம் வரை தங்களுடைய கட்சிப் பிரசாரத்திற்குப் பயன்படுத்தினார்கள். ஆகவே இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களை பலாத்காரச் செயல் புரிந்தவர்களை சமூக விரோதிகளை விடுதலை செய்யலாமா என்கின்ற கேள்விக் கணைகளைத் தொடுத்து காங்கிரஸ் கட்சியின் பேரில் கொதிப்படைந்திருக்கும் மாணவ சமுதாயத்தை மேலும் புண்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். போராட்டத்தில் ஈடுபட்டு விடுதலை அடைந்தவர்கள் இல்லந்தோறும் அறிஞர் அண்ணாவைக் குடும்பத்தின் தெய்வமாக நினைத்துப் போற்றி வருகிறார்கள்.

அப்படிப்பட்ட மாணவ சமுதாயத்தினருக்கு இரண்டு விதகுறைகள் இருக்கின்றன. அவற்றை மாண்புமிகு அண்ணா அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்ள விழைகிறேன். இந்தி எதிப்புப் போராட்டம் தமிழ் நாட்டில் எந்த அளவிற்கு ஏற்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும், அது ஒரு புரட்சியாகவே எழுந்தது என்பதில் ஐயம் இல்லை. அதற்குத் தக்க மாதிரி இதுவரையில் இல்லாத முறையில் துப்பாக்கித் தோட்டாக்களைத் தாங்கிய அவர்களுடைய தூய்மையான லட்சியத்திற்கு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும் என்று எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல அதே வேண்டுகோளை நம்முடைய அரசாங்கம் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று நானும் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் குறிப்பிட விரும்புகிறேன். அப்படி எழுப்பப் போகும் சின்னம் தமிழகத்தில் வேறு எங்கேயும் இல்லாத வகையில் உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் வருபவர்கள் மனதைக் கவரும் வகையில் மிகவும் சிறப்பாக என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும், மாணவ சமுதாயத்தினர் மகத்தான புரட்சியொன்றை ஜனவரி மாதம் 25ம் நாள் தொடங்கியதை நாம் அனைவரும் அறிவோம். இந்தச் சமுதாய மாறுதலை ஏற்படுத்திய இருபது ஆண்டுகால இருளை அகற்றிய அந்த மாணவர்களுடைய மகத்தான புரட்சியின் நினைவாக ஜனவரி மாதம் 25-ம் நாளை அரசாங்க விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டும் என்ற மாணவர்களுடைய கோரிக்கையையும் நான் இங்கே சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு உயர்நிலைப் பள்ளிகளில் மும்மொழித் திட்டம் இருக்கிறது. இந்த மும்மொழித் திட்டத்தில் முக்கியமான ஒரு மாறுதலை உடனடியாக மாணவர்கள் எதிர்பார்க்கிறார்கள். மற்ற எந்த மொழியை வேண்டுமானாலும் பயிலலாம் என்று சொல்லிவிட்டு இதுவரை இருந்துவந்த அரசாங்கம் இந்தியைத் திணிக்கும் மறைமுகமான முயற்சியில் ஒவ்வொரு பள்ளிக்கும் இந்தி சரியாகக் கூடப் படிக்காத ஆசிரியர்களுக்கு சர்ட்டிபிகேட்டுகளை வழங்கி மாதா மாதம் சம்பளங்களைத் தந்து மாணவர்களைப் பட்டியலில் சேர்த்து இந்தியைப் படிக்கவேண்டிய கட்டாய நெருக்கடியை அவர்களுக்கு உண்டாக்கி, இத்தனை பேர் இந்தி படித்துத் தேறிவிட்டார்கள் என்று பொய்யான புள்ளிவிவரத்தைக் காட்டி ஆட்சி மொழிச் சிக்கலில் பெரும் குழப்பத்தை உண்டாக்கி வந்தார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில், மற்ற திராவிட மொழியையோ அல்லது இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்காக வட நாட்டு மொழியொன்றைப் படித்தாக வேண்டும் என்றால், இலக்கிய வளம் மிக்க வங்காள மொழியையோ அல்லது நவீன இலக்கியங்கள் நிறைந்த மராட்டிய மொழியையோ மூன்றாவது மொழியாக வைக்கலாம். தமிழகத்தின் எல்லைப் புறங்களில் உள்ள, அண்மை மாநில மொழியான மலையாளத்தையோ, கன்னடத்தையோ, தெலுங்கையோ மற்ற மொழியையோ மூன்றாவது மொழியாக ஏற்படுத்தலாம். உயர்நிலைப் பள்ளிகளில் இந்தி வகுப்புகள் நடைபெறுவது, தமிழனுடைய தலைமேல் இந்தியினுடைய ஏகாதிபத்தியம் இன்னும் அமர்ந்திருக்கிறது என்ற இழிவான எண்ணத்தை மாணவர்களுக்கு உண்டாக்குகிறது. மகத்தான போராட்டத்தின் நினைவாக, மாணவர் சமுதாயத்தின் சார்பாக நான் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த அவமானத்தைத் தயவு செய்து உடனடியாக அகற்றிவிடுங்கள் என்று. இதுதான் மாணவர்கள் தற்போது உடனடியாக எதிர்பார்ப்பது.

அடுத்து, தமிழகத்தில் எந்தப் பெயர்ப் பலகையாக இருந்தாலும் அது மத்திய அரசாங்கத்தின் பெயர்ப் பலகையாக இருந்தாலும், மாநில அரசாங்கத்தின் சின்னங்களாக இருந்தாலும், பலகையாக இருந்தாலும், எந்த இடத்திலும் தமிழ் எழுத்துக்களில் தான் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். இந்தி எழுத்துக்கள் எங்கிருந்தாலும், அது இந்திய அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைத் தமிழக அரசாங்கம் ஏற்றுக்கொள்வதைக் குறிப்பதாக இருப்பதால், இந்தி எழுத்துக்களின் சின்னமே தமிழகத்தில் எந்த மூலையிலும் இருக்கக் கூடாது என்பதுதான் மாணவர்களின் இதய கீதமாக இன்றைக்கு இருக்கிறது. அது ஒரு அவமானத்தின் சின்னம்; நம்மை அடிமைகளாக உலகத்திற்கு அறிவிக்கிற சின்னம். ஆட்சிமொழி இந்தி என்று அரசியல் சட்டத்தில் இருக்கிற வரையில், நம்முடைய அன்னைத் தமிழ்நாட்டின் எந்த மூலையிலும்—அது மத்திய அரசாங்கத்தின் இரயில்வே அறிவிப்புகளாக இருந்தாலும், சினிமாச் செய்திகளாக இருந்தாலும்—இந்தி எழுத்துக்கள் இருப்பதை மாணவர்கள் விரும்பவில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.





மாணவர்களுடைய இந்திப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கைது செய்யப்பட்ட அரசியல் தலைவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் சம்பந்தப்பட்ட ஃபைல்களை அகற்றுவதற்கு மதிப்பிற்குரிய மாஜி முதல் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்தது மிகப் பெரும் அநீதி, தமிழக வரலாறுக்கே இழைத்த அநீதி என்று நான் இங்கே குறிப்பிட்டு, என்னுடைய வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்களும் நம்முடைய அமைச்சரவையைச் சார்ந்த அண்ணன்மார்களும் உடனடியாக ஒரு குழுவை நியமித்து, தமிழகத்தில் எந்த எந்த இடத்தில் இராணுவமும் போலீசாரும் நுழைந்து தமிழகத்தையே சுடுகாடாக்கி, ரணகளமாக்கி, இந்த நாட்டிலே ஆயிரக் கணக்கான தாய்மார்கள் தங்களுடைய தாலி பாக்கியத்தை இழக்கக்கூடிய பயங்கரமான சூழ்நிலையை உருவாக்கினார்களோ அப்படிப்பட்ட ஊர்களில் உடனடியாக, அதிகாரப்பூர்வமான நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்து, அதைப்பற்றிய ஒரு தொகுப்பை, ஒரு மாபெரும் வரலாற்று நூலாக, கென்னடியின் கொலை வழக்குக்கு அவர்கள் சமர்ப்பித்த மாபெரும் அறிக்கையைப் போல, அதைச் சமர்ப்பித்தே தீர வேண்டும் என்று நான் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இந்த முறையில் நீங்கள் சமர்ப்பிப்பது, எதிர்காலத்தில் இந்தியை எதிர்ப்பவர்களுக்கு ஒரு உற்சாகத்தையும், இந்தியைத் திணிப்பவர்களுக்கு ஒரு எச்சரிக்கையையும் அளிக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆட்சிக்குக் காங்கிரஸ் நண்பர்கள் ஆறு மாதத் தவணை தந்திருக்கிறார்கள். தேவைதான். காங்கிரஸ் கட்சியினருக்கு ஏற்பட்டுவிட்ட படுதோல்வியைச் சமாளித்துக் கொள்ளுவதற்கு எங்களுக்குத் தேவையோ இல்லையோ, அவர்களுக்கு நிச்சயம் ஆறு மாத அவகாசம் தேவைதான். அந்த வாதத்தையும் அப்படியே திருப்பித் தருகிறோம். ஆறு மாதங்கள் அல்ல; ஐந்து ஆண்டுகள் அல்ல; இன்னும் ஐந்து யுகங்கள் ஆனாலும், தமிழகத்தைப் பொறுத்த வரையில், இந்தியை ஆதரிக்கின்ற மாஜி ஆளுங்கட்சியை மாணவர்கள் எந்த நாளிலும், எந்த முகாமிலும், எந்த இடத்திலும், ஜனநாயக முறையில், முறியடிக்க இன்றுபோல் என்றும் நிற்பார்கள். தமிழ்க் காவலர், தமிழ்த் தாயின் தலைப் புதல்வர், இந்தத் தலைமுறையில் பொற்காலத்தை அமைக்கின்ற அறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சிக்கு அரணாக, உறுதுணையாக, பாதுகாப்பாக, பகைப்புலனை முறியடிக்கும் படைக்கலமாக மாணவர்கள் விளங்குவார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொண்டு, கவர்னர் உரைக்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்து உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

*** புலவர் க. முருகையன்:** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையை முழு மனதுடன் வரவேற்று இரண்டொரு கருத்துக்கள் சொல்லலாம் என்று இங்கே நிற்கின்றேன்.

[புலவர் க. முருகையன்]  [1967 மார்ச் 29

கவர்னருடைய உரையில், நம்முடைய புதிய ஆட்சியில் என்ன
என்ன கருதப்படும் என்பதைக் குறிப்பாக, சூசகமாக, நல்ல
எண்ணம் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். என்றாலும், இங்கே
விவாதத்தில் கலந்துகொண்ட நமது அருமை எதிர்க்கட்சி
நண்பர்கள் பேசும்போது, 'வருந்துகிறோம்', 'வருந்துகிறோம்,
என்றே சென்ற சில நாட்களாகச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள்.
எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள், தன்னுடைய
பேச்சின் தொடக்கத்திலேயே இந்த அவையில் விளங்கும்
திருவள்ளுவர் படத்தைக் காட்டி, அதன் கீழே பொறிக்கப்பட்
டிருக்கிற அருமையான ஒரு குறளையும் நினைவூட்டிப் பேசினார்கள்.
"சொல்லுக" என்று தொடங்கும் குறளைக் குறிப்பிட்டு, "பல
நாட்களாக நான் ஆவலோடு எதிர்பார்த்து இருந்தேன், நான்
எதிர்க்கட்சியில் அமர்ந்திருப்பதைக் குறித்து மகிழ்கிறேன்" என்று
குறிப்பிட்டார்கள். அப்படி அவர்கள் குறிப்பிட்டதற்குக் காரணம்
இருக்கக்கூடும். ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகள்—இடையிலே
ஒரு ஐந்தாண்டுகள் அவர்கள் பாராளுமன்றத்தில் இருந்தாலும்—
இந்த அவையிலே அவர் உறுப்பினராக இருந்த காலத்தில், எதிரிலே
வள்ளுவர் "சொல்லுக, சொல்லுக" என்று சொன்னாலும், அவர்
எதையும் சொல்ல முடியாத நிலையில் இருந்த வேதனையான நிலையை
நினைத்துத்தான். "நான் எதிர்க்கட்சியில் அமர்ந்திருப்பதைக்
குறித்து மகிழ்கிறேன்" என்று சொன்னார் என்று நான் நினைக்
கிறேன். "சொல்லுக" என்று அத்துடன் நிற்கவில்லை;
"பயனுடைய" என்ற சொல்லையும் அத்துடன் வள்ளுவர் இணைத்
திருக்கிறார். இங்கே பேசுகிற நம்முடைய எதிர்க் கட்சி உறுப்
பினர்கள், அந்தப் "பயனுடைய" என்ற சொல்லையும் நன்கு
சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்கள் ஆவார்கள். சொல்லுதல்
யார்க்கும் எளிது, ஆனால், சொல்லிய வண்ணம் செய்வது அரிது.
இதை சென்ற பதினைந்து ஆண்டுக் காலமாக ஆளும் கட்சியில்
இருந்த கனம் உறுப்பினர்கள் உணரவில்லை என்று நினைக்கிறேன்.
இன்றாவது அதை அவர்கள் உணர வேண்டும். "சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்" என்றும் வள்ளுவர் கூறியிருக்கிறார்.
இந்த வாசகத்தையும் அவர்கள் உணர வேண்டும். இந்த நீண்ட
விவாதத்தில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ற முறையில்,
ஒவ்வொருவரும் மும்முறை, நான்கு முறை பேசும் வாய்ப்பைப்
பெற்றார்கள் என்றாலும், அவர்கள் பேசுகையில் மூன்று செய்தி
களைத்தான் மாறி மாறிச் சொன்னார்கள்.

உணவுப் பிரச்சினையைக் குறித்துப் பேசுகையில், "ரூபாய்க்கு
மூன்று படி அரிசி" என்று பல நண்பர்கள் குறிப்பிட்டார்கள்.
சில நண்பர்கள் தாங்கள் பேசுகிற ஆர்வத்திலே "ரூபாய்"
என்பதைக் கூட மறந்துவிட்டு, "மூன்று படி", "மூன்று படி"
என்றே பேசினார்கள். அந்த நேரத்தில் எல்லாம், என்னைப்போல்
கனத்த உடல் படைத்தவருக்குச் சற்று ஆசையாகக் கூட
இருந்தது. ஆளுக்கு மூன்று படியோ என்று கூடக் கருதிக்
கொள்ள இடம் அளித்தது. அவர்கள் மாறி மாறிப் பேசினார்கள்.
இந்த நேரத்தில் அவர்களுக்கு நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட
விரும்புகிறேன். அந்த மூன்று படி நினைவிலேயே அவர்கள்



1967 மார்ச் 29]  [புலவர் க. முருகையன்]

இன்னும் இருந்துகொண்டிருக்கத் தேவை இல்லை. நாட்டுக்கு
நல்லாட்சி ஏற்பட்டிருக்கிறது, நாட்டுக்கு வேண்டிய நல்ல பல
பணிகளை இந்த ஆட்சி நிறைவேற்றுவதற்கான பல நல்ல கருத்துக்
களை நம்முடைய மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தர
வேண்டும்.

"நல்ல எதிர்க்கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இயங்க
வில்லை" என்று பல நாட்களாக காங்கிரஸ்காரர்கள் சுட்டிக்காட்டி
வந்தார்கள். நம்முடைய தலைவர்களும், நாங்களும் கூட எதிர்
பார்த்தோம், நல்ல எதிர்க்கட்சி எப்படி இருக்கவேண்டும் என்பதை
ஒரு முறை காங்கிரஸ் அமர்ந்து நடத்திக் காட்ட வேண்டும் என்று.
அந்த நல்ல காலம் இப்பொழுது வாய்த்திருக்கிறது என்றாலும்,
நம்முடைய அதிருஷ்டவசமாக நல்ல எதிர்க்கட்சி எப்படி இருக்க
வேண்டும் என்பதை நடத்திக் காட்டுகிற நல்ல உறுப்பினர்கள் சிலர்
இங்கு வந்திருந்தாலும், நல்ல எதிர்க்கட்சிக்கு ஏற்ற இலக்கணம்
இல்லாத பேச்சுக்களைப் பேசக்கூடியவர்களும் வந்து, என்னைப்
போன்ற புது உறுப்பினர்களை மிக்க மயக்கத்திலே ஆழ்த்து
கிறார்கள். மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி நண்பர் திரு. சிதம்பர
நாதன் அவர்கள் அன்று பேசிய முறையையும், நடந்துகொண்ட
வகையையும் வைத்துப் பார்க்கும்போது, இப்படித்தான் எதிர்க்
கட்சி நடக்க வேண்டும், இப்படித்தான் சட்ட மன்ற உறுப்பினர்
கள் நடந்துகொள்ள வேண்டும் என்றால், அது நல்ல சட்ட மன்ற
மாக இருக்குமா என்ற ஐயம் தோன்றுகிறது. சபாநாயகர் அவர்
களை விளிக்கிறபோதும், அவர்களுடைய அனுமதியைக் கேட்கிற
போதும் அவர்களுடைய தொனி மிரட்டல் தொனியாக இருந்தது.
இந்தப் பதினைந்து ஆண்டுகளில் காங்கிரஸ் உறுப்பினர்கள்
இப்படிச் சட்ட அவையிலே சொற்களைக் கம்பீரமாகப் பயன்
படுத்தியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, அவர்கள்
சொல்லுவதற்கும், நடை முறையில் நடந்துகொள்ளுவதற்கும்
பெருத்த மாறுதல் இருக்கிறது என்றுதான் சொல்லத் தோன்று
கிறது.

என்னுடைய தொகுதியாகிய திருவையாறு தொகுதியிலே ஏறக் 11- 0
குறைய 30 ஆயிரம் ஹரிஜன மக்கள் வாக்காளர்களாக இருக் மு.ப.
கிறார்கள். அந்த மக்களுக்கு இன்னும் நல்வாழ்வு கிடைக்கவில்லை.
இந்த இருபதாண்டு காங்கிரஸ் ஆட்சியிலே ஹரிஜன மக்களுக்கு
எந்தவிதமான நன்மை கிடைத்தது என்பதைச் சுட்டிக்காட்ட,
இந்த இருபதாண்டு காலத்தில் ஹரிஜன மக்கள் இன்னின்ன
வகையில் நல்வாழ்வு அடைந்தார்கள் என்று சொல்லக்கூடிய
அளவில் காங்கிரஸ் கட்சியில் எந்த ஹரிஜன உறுப்பினரும் இல்லை.
ஹரிஜன மக்கள் அல்லாத ஒருவர்தான் இந்த இருபதாண்டுக்
காலத்தில் ஹரிஜன மக்களுக்கு உரிமை கிடைத்தது என்று
சொன்னார்கள். அதை அவர்கள் ஏற்கவில்லை. என்னுடைய
தொகுதியாகிய திருவையாறுக்கு வந்தால் ஹரிஜன மக்களின்
நிலையை நேரில் நன்றாக அறிந்துகொள்ள முடியும். இருபதாண்டு
காலத்தில் அவர்கள் பெற்ற நல்வாழ்வைக் காண செங்கிப்பட்டி
போன்ற பகுதிகளுக்கு நேரில் வந்து பார்த்தால் தெரிந்துகொள்ள
லாம். என் தொகுதியில் அதுபோன்ற 40 கிராமங்கள் இருக்

[புலவர் க. முருகையன்] [1967 மார்ச் 29

கின்றன. அங்கெல்லாம் பிற்பட்ட வகுப்பினர்களும், ஹரிஜனங்களும் தான் வசிக்கிறார்கள். அந்தத் தொகுதியைப் பார்த்தால் கம்பன் பாடிய கவிதைதான் நினைவுக்கு வருகிறது. கம்பன் தன் பாடலில், கோசலநாட்டில் கொடுப்பார் யாரும் இல்லை. காரணம், அங்கு ஏற்போர் யாரும் இல்லையென்கிறார். கற்றோர் யாரும் இல்லை, காரணம் அங்கு கல்லாதவர்கள் யாரும் இல்லை என்கிறார். திருட்டுக் கொடுப்போர் யாரும் இல்லை, காரணம் அங்கு திருடர்களே இல்லையென்கிறார். இம்மாதிரியாக அவர் சொல்லிக்கொண்டே போகிறார். அதற்கு செங்கிப்பட்டி ஓர் எடுத்துக் காட்டாக இருக்கிறது. ஏனென்றால் அங்கு செல்வர்களே இல்லை, காரணம் அங்கு உள்ளவர்கள் யாரிடத்திலும் செல்வம் இல்லை; அங்கு கல்லாதவர்கள் யாரும் இல்லை, காரணம் கற்றவர்களே இல்லை. பள்ளிக்கூடம் ஊர் தோறும் இருக்க வேண்டுமென்றால், அந்த ஊரிலேயே பள்ளிக்கூடம் என்று ஒன்றும் இல்லை. பள்ளிக்கூடம் என்று சொல்லப்படுவது, கூரையில்லாத கட்டிடம், ஆசிரியர் இல்லாத நாற்காலி, பிள்ளைகள் இல்லாத பெஞ்சாகத்தான் இருக்கிறது. காரணம் அந்த இடங்களை போய்ப் பார்வையிட அலுவலர்கள், ஆய்வாளர்கள், கண்காணிப்பாளர்கள் போன்றோர் அங்கு செல்வதற்குக் கூட—நல்ல சாலைகள் கிடையாது. கிட்டத்தட்ட 40 கிராமங்களுக்கு எந்தவிதமான வைத்திய வசதியும் கிடையாது. காங்கிரஸ் சர்க்கார் மக்கள் பெருக்கம் கூடாது என்பதற்காக எங்கெங்கே, என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டதோ, அவைகள் ஒன்றும் இல்லாமலேயே செங்கிப்பட்டியில் மக்கள் பெருக்கம் இல்லை. நல்ல சுகாதாரம் இல்லை. காலாகாலத்தில் வருகின்ற தொத்துநோய்கள் எல்லோரையும் வாரிக் கொண்டு போகின்றன. இதை நான் முன்பு சொல்ல அஞ்சியதற்குக் காரணம் பாக்கி எல்லா இடங்களிலும் இந்த வழியைப் பின்பற்றலாம் என்று சர்க்கார் நினைத்துவிடுமோ என்பதுதான்.

திருவையாறுக்குப் பக்கத்தில் சாலை இல்லாத ஊர்கள் பல இருக்கின்றன. அங்கே வசிப்பவர்கள் சொல்வார்கள், ஐயாறு இங்கே ஓடுகிறது. ஐயாறு என்று சொன்னாலும். கொள்ளிடம், காவேரி, வெட்டாறு, வின்னாறு, குடமுருட்டி, மணியாறு, வீரசோழியன் அரசலாறு என்று ஏழாறுகள் ஓடுகின்றன. அங்கு ஏழாறுகள் ஓடுகின்றன என்று நாம் சொல்கிறபோது மகிழ்ச்சியுடன் சொல்கிறோம். ஆனால், திருவையாறுக்குப் பக்கத்திலே இருக்கிற உத்தமநல்லூர் கிராமத்து மக்களைக் கேட்டால், ஐயாறு என்று சொல்கிறபோதே, 'ஐயோ ஆறு' என்றுதான் சொல்வார்கள். காரணம், அங்கு ஆறுகளில் நீர்ப் பெருக்கு எடுக்கும்போது மக்கள் எல்லாம் தனித் தனியாகப் பிரிக்கப்பட்டு ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்ல முடியாமல் திகைப்பார்கள். வின்னாறு அந்தத் தொகுதியிலேதான் ஓடுகிறது. களப்பட்டி, கடமங்குடி, மாரநேரி போன்ற இடங்கள் எல்லாம் நீர் வருகின்ற காலம் பூராவிலும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு, அந்தமான் தீவில் வசிப்பவர்களைப்போல திட்டிலேதான் மக்கள் வசிக்கிறார்கள். இருபதாண்டு காலமாக இருந்த சர்க்கார் அங்கு ஒரு பாலம் கட்டிக் கொடுக்கப்படும் என்று உறுதியளித்தது. மக்களும்



1967 மார்ச் 29] [புலவர் க. முருகையன்]

வின்னாறு தொல்லையிலிருந்து விடுபடுவோம் என்று வின்னை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, இதுவரை ஒரு நல்ல பாலமும் கட்டப்படவில்லை. இருபதாண்டுகளிலே நன்மை பெற முடியும், நன்மை பெற முடியும் என்ற நம்பிக்கையில் தான் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

அடுத்தபடியாக, ஏழை ஹரிஜனங்களுக் கென்று 17 ஊர்களிலே குடியிருக்கும் மனைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்த மனைகள் எல்லாம் ஆழமான நன்செய் நிலத்திலே ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மழைக்காலத்தில் நீர் வருகின்ற காரணத்தினால் அந்த இடங்களில் இடுப்பளவுக்கு நீர் தேங்கி விடும். அதுபோல நடுக்காவேரி என்ற கிராமத்தில் நூறு ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டு சிமிண்ட் ப்ளாட்பாரம் போட்டு நிற்கிறது. அந்த இடங்களில் வீடுகள் கட்டப்படவில்லை; ஏழு ஆண்டுகளாகின்றன. மக்கள் இன்னும் அங்கு குடியேற முடியாது ரோடுகளிலே வசிக்கிறார்கள். அந்த இடத்தைச் சுற்றி இடுப்பளவுக்குமேல் தண்ணீர் தேங்கி நிற்கின்றது. ஹரிஜன மக்கள் 'கடயோகம்' பயிலவில்லை. காங்கிரஸ் ஆட்சியில், கடைசி ஐந்தாண்டிலேகூட இதை அவர்களால் கட்டிக் கொடுக்க முடியவில்லை. ஹரிஜன மக்களுக்கு நன்மை செய்தோம் என்று ஏமாற்றுகிறார்கள். ஹரிஜன மக்களுக்கு நன்மை செய்கிறார்கள் என்று பொய் சொல்ல சில நல்ல தரகர்கள் கிடைத்தார்கள் என்பதைத் தவிர ஹரிஜனங்களுக்கு எந்தவிதமான நன்மையும் செய்துவிடவில்லை. (மணியடிக்கப்பட்டது) வசதியற்றவர்களை வாழ்விக்க வகை செய்யவேண்டும் என்ற நம்பிக்கை—அதற்கான குறிப்புகள் கவர்னர் அவர்களது உரையில் இருக்கிறதென்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. என். மருதாசலம் :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இன்று கவர்னர் உரையின்மீது பல அங்கத்தினர்கள் பல கருத்துக்களை எடுத்துரைத்திருக்கிறார்கள். அதேசமயத்திலே என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

என் தொகுதியில் இன்று சர்க்கார் விவசாயப் பண்ணை என்று ஒன்று இருக்கிறது. அந்தப் பண்ணையிலே இன்றைக்குச் சாதாரண விவசாயிகள், விவசாயிக் கூலிகளாக இருக்கிறார்கள். அந்தப் பண்ணையில் பெண்களுக்கு ஒரு ரூபாயும், ஆண்களுக்கு 1 ரூபாய் 50 காசும் கூலிகளாகக் கொடுக்கப்படுகின்றன. இது சாதாரணமாக, வெளியிலே தனிப்பட்டவர்களின் பண்ணையிலே கொடுக்கப்படும் கூலியைவிட மிகக் குறைச்சலாக இருக்கிறது. தனியார் பண்ணையில் அதிகமாகக் கூலி கொடுக்கிறார்கள். சர்க்கார் பண்ணையில் குறைச்சலாகத் தருகின்றார்கள். அதே சமயத்தில் விவசாய தனியார் பண்ணை ஊழியர்களுக்கு சர்க்கார் பண்ணையில் நிர்ணயிப்பதுபோல கிராஜுடி, கேசுவல் லீவ், சிக் லீவ் போன்றவைகளை அமுல்படுத்தி நிரந்தரக் கூலியாக வைத்திருக்கிறார்கள். சர்க்கார் சாதாரண நிரந்தரக் கூலிகளுக்குக் கொடுக்கக்கூடிய கூலியே கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று

கேட்டுக்கொள்கிறேன். அதேசமயத்தில் அந்தப் பகுதியில் யில் கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுடைய கஷ்டம் நூலுக்கு மிகமிக விலை உயர்ந்து கொண்டே போகிறது. நூலுக்கு முன் இருந்ததைக் காட்டிலும் இப்போது விலை அதிகம். 40-ம் நெம்பர் நூல் ஒரு கட்டு 33 ரூபாயாக இருந்தது. இப்போது 45 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. 30-ம் நம்பர் நூலுக்கு 35 ரூபாய் என்றிருந்தது. 35 ரூபாய் 75 பைசாவாக உயர்ந்திருக்கிறது. இதனால் கைத்தறி நெசவாளர்கள் கஷ்ட நஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். இதைச் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கோவைக்கு அருகில் ஏ.சி.சி. சிமெண்டு கம்பெனி இருக்கிறது. அதிலிருந்து புகையும் வண்டலும் வெளிவருகிறது. புகையோடு வண்டலும் கலந்து வெளிவருவதால், சுற்றுப்புறத்தில் ஐந்து மைல் விஸ்தீரணத்திற்கு வேளாண்மை எதுவும் இல்லாமல் போய் விடுகிறது. மாடு கன்றுகள்கூட பிழைக்க முடியாமல் இருக்கிறது. இந்தமாதிரி பல ரிப்போர்ட்டுகள் வந்தது 1959-ம் வருஷத்தில்கூட நான் இதைப்பற்றிக் கூறியிருக்கிறேன். இதை சுகாதார அதிகாரிக்குத் தெரியப்படுத்தி, சுகாதார அதிகாரி நேரிலே வந்து பார்த்துத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனச் சொல்லியும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. வண்டலை உள்ளே இழுத்து, வெறும் புகை மட்டும் வெளியிலே வந்தால் அதனால் எந்தப் பூமியும் பாதிக்காது. பக்கத்தில் இருக்கிற கறும்பப்பாளையம் என்ற ஊருக்குச் சென்று பார்த்தால் தெரியும். புகை மண்டி, வண்டல் சிமெண்ட் ஓடு மாதிரியாக இருக்கிறது. ஆகவே வண்டலைத் தேக்கி, புகையை மாத்திரம் வெளிப்படுத்தினால் அந்தப் பகுதியில் நன்றாக விளைச்சலை உண்டாக்கலாம். ஆடுமாடுகள் வாழ முடியும். ஆகவே, அதற்கான ஏற்பாட்டைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் உணவுப் பிரச்சினைக்கு அடுத்தபடியாக ஒவ்வொரு கிராமத்திலும் இருப்பது குடிதண்ணீர்ப் பிரச்சினை. கிணறுகள் இருக்கும். ஆனால் அதில் தண்ணீர் இருக்காது. அதுவும் ஹரிஜன மக்கள் சாதி இந்துக்களுடைய கிணற்றுக்குப் போகிறபோது—கீழே குடத்தை வைத்துவிட்டு அவர்கள் இழுத்துக் கொட்டுகிற தண்ணீரைத்தான் எடுத்துக் கொண்டுவரவேண்டிய நிலையில் இன்னமும் இருக்கிறார்கள். இந்த மாதிரியான நிலைமை வெள்ளலூரிலிருந்து வாளையாறு வரை இருக்கிறது. அத்தகைய பரிதாபகரமான நிலைமையில் உள்ள ஏழை ஹரிஜன மக்களின் கஷ்டத்தை நீக்க இந்தச் சர்க்கார் முன்வர வேண்டும். அவர்களுடைய குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும்.

கோவை நகரத்தை எடுத்துக் கொண்டால் அதன் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க சிறுவாணித் திட்டம் இருக்கிறது. அது பற்றிய சர்வேயை நம்முடைய சர்க்கார், இந்திய சர்க்கார் ஆகியவை செய்துவிட்டது. அத்திட்டத்திற்காக ஒரு கோடி நாற்பது



லட்சம் ரூபாய் முன்பு சாங்ஷனும் செய்யப்பட்டது. இப்போது இருக்கிற விலைவாசிப்படி அது போதாது என்று சொல்லி அது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. நான் நகரசபை உறுப்பினர் என்ற முறையில் எனக்குத் தெரியும். கோவை நகரத்தோடு சிங்காநல்லூர், ஒண்டிப்புதூர் ஆகியவற்றையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சர்க்கார் சொல்லிற்று. சேர்த்துக்கொண்டால் குடிதண்ணீர் வசதி செய்துதரப்பட வேண்டும். ஆகவே சிறுவாணி திட்டம் வந்த பிறகு சேர்த்துக்கொள்ளலாம் என்பதாக ஒரு தீர்மானம்போட்டு சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நல்ல முறையில் கேரள சர்க்காருடனும் பேசி, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவையில் பல ஆலைகள் மூடப்பட்டு வருவது பற்றிச் சொன்னார்கள். அவை சட்டத்தை மீறிய செயல். இப்படியே பல இடங்களில் முதலாளிகள் சட்டத்தை மீறியே நடக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதாவது தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் 10-ஆம் தேதி சம்பளம் கொடுக்க வேண்டுமென்று சம்பளப் பட்டுவாடா சட்டப்படி இருக்கிறது. அதன்பிரகாரம் கொடுப்பது இல்லை. 20-ம் தேதி, 21-ஆம் தேதிகளில்தான் அதுவும் போராட்டத்தின் மூலமாகத்தான் வாங்க வேண்டியிருக்கிறது. இப்படி குறிப்பிட்ட தேதிக்குள் சம்பளம் கொடுக்காமல் இருக்கிற முதலாளிகள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். இதுபற்றி முன்னால் இருந்த அரசாங்கத்திடமும், மாவட்ட ஆட்சியாளர்களிடத்திலும் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதுமாத்திரம் அல்ல. தொழிலாளர்கள் இன்ஷூரன்ஸ் பணத்தை (பிரீமியம்) முதலாளிகளிடமே கட்டுகிறார்கள். அதை முதலாளிகள் சர்க்காரிடத்தில் ஒப்படைக்க வேண்டுமென்பது விதி. அதன்படி அவர்கள் நடப்பதில்லை. அதன் பேரிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதோடுகூட மில் தொழிலாளர்கள் ஸ்டோர்சுகளில் சாமான்கள் வாங்கிச் சாப்பிடுகிறார்கள். மாதாமாதம் அதற்கான தொகையை முதலாளிகள் சம்பளத்திலேயே பிடித்துவிடுகிறார்கள். ஆனால் அந்தப் பணத்தை மத்திய ஸ்டோர்ஸ்களில் கட்டுவதில்லை. அதனால் மத்திய ஸ்டோர்ஸ் மில் ஸ்டோர்சுகளுக்கு சாமான்கள் அனுப்ப மறுக்கிறார்கள். அதனால் மில் தொழிலாளர்கள் சாப்பாட்டுக்குரிய தானியங்களை மில் ஸ்டோர்சுகளில் வாங்க முடியாது தவிக்கிறார்கள். இந்தவிதமாக சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுகிற மில் முதலாளிகளின் மீது நடவடிக்கை எடுத்து இந்தக் குறைபாடுகளை எல்லாம் அகற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஏழை மக்களுக்குக் கல்வி அறிவைக் கொடுப்பது. தொண்டாமுத்தூர் பக்கத்தில் கண்டப்பாளையம் இருக்கிறது. அங்கே பள்ளிக்கூடம் வேண்டுமென்று பொது மக்கள் எழுதிக் கேட்டிருக்கிறார்கள். அங்கே பள்ளியை ஏற்படுத்தி அந்தப் பகுதி குழந்தைகள் கல்வி அறிவு பெற வகை செய்யவேண்டும்.

[திரு. என். மருதாசலம்] [1967 மார்ச் 29

அடுத்தபடியாக, மேற்கு வங்க சர்க்கார் ஒரு திட்டத்தை வகுத்து இருக்கிறது. இன்றைக்கு சாதாரணமாக ஜன்ம தண்டனை அடைந்த சிறைக் கைதிகள் இருக்கிறார்கள். அவர்கள் இதுவரை நல்லமுறையில் நடந்து வந்திருந்தால் அவர்களுடைய தண்டனை காலத்தைக் குறைத்து விடுதலை செய்வது என்கிற முடிவை எடுத்திருக்கிறார்கள். அதுபோல நம்முடைய சர்க்காரும் செய்ய முடியுமா என்பதை யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச அனுமதி அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். சுப்பிரமணிய கவுண்டர்:** சட்டமன்ற உதவிச் சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய கவர்னர் அவர்களது உரையின் மீது எனக்குப் பேச வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி அறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுயநலம் என்னும் கவசத்தால் தன்னைப் போர்த்திக்கொண்டு செயல்படுகிறவர்கள் தன்னை அறியாமலேயே வாழ்க்கை இன்பங்களை தானே அனுபவிப்பதற்கு முற்படுகிறவர்கள் ஆவார்கள். அந்த முறையில் முன்னால் ஆண்ட காங்கிரஸ்காரர்கள் தாங்கள் தான் ஆளத் தகுதி உள்ளவர்கள் என்று கூறிக் கொண்டார்கள். அதன் வாயிலாக எத்தனையோ நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறியும் கவனம் செலுத்தவில்லை. குறிப்பாக தர்மபுரி பகுதியில் பஞ்சப்பட்டி ஸ்கீம் இருக்கிறது. அதைக் கடந்த 20 வருட காலமாகத் தள்ளிப்போட்டு வந்தார்கள். தர்மபுரி மாவட்டத்திற்கே நல்ல பலனைத் தரக்கூடிய ஸ்கீம் அது. அதன்மூலம் பல்லாயிரக்கணக்கான ஏக்கரா நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவர முடியும். பல லட்சக்கணக்கான விவசாயிகள் பிழைக்க முடியும். வாழ வழி இருக்கிறது. அதை நமது அமைச்சரவை முடித்துக் கொடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். தர்மபுரி பகுதியில் வாழ்கின்ற மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். அந்த மாவட்டத்தில் எந்த விதமான தொழில் வளர்ச்சியும் இல்லை. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஏரிகளைச் செப்பனிட்டும், ஆறுகளுக்குக் கலிங்குகள் கட்டியும், கால்வாய் வசதிகளை நல்லமுறையில் அமைத்துக் கொடுத்தால் நல்ல முறையில் உற்பத்தியைப் பெருக்க முடியும் இப்படிச்செய்து அங்குள்ள விவசாய மக்களை ஊக்குவிகக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரியில் இரண்டு வருடங்களுக்கு முன் காலேஜ் ஏற்படுத்தினார்கள். ஆனால் இன்னமும் பி.ஏ. வகுப்பு துவங்கப்படவில்லை இவ்வாண்டாவது பி.ஏ. வகுப்பைத் துவங்கி அங்குள்ள மாணவர்களுக்கு வசதி செய்து தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன் கட்டிடமும் கட்டித்தரப்பட வேண்டும். பெண்கள் உயர்நிலைப் பள்ளி முப்பது வருடங்களுக்கு முன்னாலே கட்டப்பட்டது, இன்று அங்கே ஷிப்டு முறையிலே குழந்தைகள் சேர்க்கப்பட்டு படித்துக் கொண்டு வருகிறார்கள். ரொம்ப நெருக்கடியான நிலைமையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடங்கள் கட்டி. அவர்களை நல்ல முறையிலே கல்வி பயிலச் செய்வதற்கு



1967 மார்ச் 29] [திரு. எம். சுப்பிரமணிய கவுண்டர்]

ஆவன செய்யும்படி நமது அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதியிலே 3 ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரை உள்ளவர்களுக்கு மின்சார வசதி செய்து கொடுத்து, அதன் மூலமாக சிறு சிறு விவசாயிகள் நல்ல முறையிலே விவசாயம் செய்வதற்கு அரசாங்கம் உதவிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரிக்கு அடுத்தாற்போல் 28 மைலுக்குள் உள்ள ஒகேனக்கல் திட்டம் இன்னும் எடுக்கப்படவில்லை. பல வருடங்களாக அந்த மின்சாரத் திட்டம் பிரச்னையிலேயே இருந்து கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தால் அதிகப்படியான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். அந்தத் திட்டத்தை நல்ல முறையிலே பயன்படுத்தி மின்சாரத்தை தர்மபுரி மாவட்டத்திற்கும் மற்ற மாவட்டங்களுக்கும் கொண்டு போக முடியும். ஆகவே, அந்தத் திட்டத்தை வெகு விரைவிலே அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரியிலே மருத்துவமனைகள் போதுமான அளவு இல்லை. அது புதிதாக ஜில்லாவாக ஆக்கப்பட்ட காரணத்தினாலே பல ஆபீசர்கள் வந்து அங்கு தங்கிவிட்ட காரணத்தாலே அவர்கள் தங்கள் குடும்பத்தினருக்கும், மற்றும் பெருவாரியான ஜனங்களுக்கும் மருத்துவ வசதி செய்துகொள்வதற்கு இடம் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக மருத்துவ மனைகளை கட்டி அங்கேயுள்ள ஏழை எளியவர்கள் போதுமான அளவுக்கு உடனே மருத்துவ வசதி பெறுவதற்கு வார்டுகள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரியின் சுற்றுப் புறங்களிலே பெருவாரியான நெசவுத் தொழிலாளர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் கைத்தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பத்திலே உள்ளவர்களிலே பட்டதாரியாகவோ ஜில்லா கலெக்டராகவோ, வக்கீலாகவோ யாரும் வரவில்லை. அவர்களுக்கு அப்படி வரக்கூடிய வாய்ப்பு வசதிகள் இல்லை.. மேலும் அங்கேயுள்ள நெசவாளர்கள் மிகவும் கஷ்டமான நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தர்மபுரியிலே ஒரு நூற்பாலை ஏற்படுத்தி அங்கேயுள்ள நெசவுத் தொழிலாளர்களின் குடும்பங்கள் வாழ வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரியிலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து தர்மபுரிக்கும் போய் வருவதற்கேற்ற வழியிலே ஸ்டேட் பஸ் இரண்டு விட வேண்டும். தர்மபுரி புதிதாக ஜில்லாக்கப்பட்ட காரணத்தினாலே தர்மபுரி ஜனங்கள் சென்னைக்கு வந்துபோக வசதி செய்துதரும்படி. கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே மலைக் காடுகள், சிறு சிறு குன்றுகள் இருக்கின்றன. அது ஸ்டேட் ஃபாரஸ்ட் ஆகத்தான் இருக்கிறது. ரிசர்வ் ஃபாரஸ்டாக இல்லை. அங்கே வாழ்கின்றவர்கள்

தங்களுடைய விவசாயத்திற்குத் தேவையான உரத்தைத் தயாரித்துக் கொள்ள வசதி செய்து கொடுக்க வேண்டும். முன்பு ஆங்கிலேயர்கள் காலத்தில் எந்தவிதமான தடங்கலும் வெள்ளாடுகள் வைத்துக்கொள்வதற்கு இல்லை. ஆனால், இப்பொழுது வெள்ளாடுகள் வைத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுப்பது இல்லை. முன்பு அப்படி அனுமதிக்கப்பட்ட காரணத்தால் ஒரு பட்டியிலே 20 ஆடுகள் வைத்திருந்து, அவற்றிலே 10 ஆடுகள் குட்டி போட்டால் அந்தக் குட்டிகளை விவசாயிகள் விற்று அதன் மூலம் அவர்கள் தங்கள் விவசாயத்திற்கு வேண்டுகின்ற செலவுகளையெல்லாம் செய்துவந்தார்கள். அவர்கள் அப்பொழுது கடன் வாங்க வேண்டிய அவசியமே இல்லாமல் இருந்தது. அப்பொழுது அவர்கள் கடனாளிகள் ஆகாமல் வாழ்ந்து வந்தார்கள். ஆனால், அவர்கள் எல்லாம் இப்பொழுது சொசைடிகள் வாயிலாகத் தங்களுடைய செலவுகளுக்குக் கடன் வாங்கி அல்லல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். எங்களுடைய பகுதியிலே உள்ள சிறு சிறு குன்றுகளிலே ஆடுகள் மேய்க்க நல்ல வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய பகுதியிலே ராமையம்பட்டி என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தப் பகுதியிலே பல பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. மழை வரும் நேரத்திலே 10, 15 நாட்களுக்கு அங்கே குறுக்கே ஒரு ஆறு இருப்பதால் பஸ் போக்குவரத்துத் தடைபடுகிறது. ஆகவே, அதன் குறுக்கே ஒரு நல்ல பாலம் கட்டிக் கொடுக்கும்படி நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று உட்ரப்பட்டி என்ற இடத்திலேயும் ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றைத் தாண்டிச் செல்ல பல பஞ்சாயத்துக்களிலே வாழ்கின்றவர்கள் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பஸ் போக்குவரத்தும் இல்லை. அதற்குப் பக்கத்திலே கடுத்தூர் என்ற ஊர் இருக்கிறது. அதற்கு பஸ் வருகிறது. ஆகவே, அந்த ஆற்றிலே பாலம் கட்டினால் அங்கே இருக்கும் பல பஞ்சாயத்துக்களுக்கும் பஸ் போக்குவரத்து செய்து கொடுக்க முடியும். அந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுத்தால் உட்ரப்பட்டிருக்கும் பஸ் வசதி செய்து கொடுக்க முடியும்.

தர்மபுரியிலே உள்ள மக்கள் குடிதண்ணீருக்காகக் கஷ்டப்படுகிறார்கள். தர்மபுரிக்கு 13-வது மைலிலே இருமத்தூர் என்ற ஊர் இருக்கிறது. அங்கிருந்து குடிதண்ணீர் கொண்டுவர தர்மபுரி முனிசிபாலிட்டியிலே ஒரு தீர்மானம் போட்டு அந்தத் தீர்மானத்தின் வாயிலாக பல கலெக்டர்கள் வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். தர்மபுரி ஜில்லா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆக இருப்பதால் அங்கே உள்ள மக்கள் குடி நீர்வசதி பெற்றுக்கொள்ள வசதி ஏற்படுத்த குழாய் மூலமாக இருமத்தூர் ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவர வேண்டுமென்று நான் நமது அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி ஜில்லா சேலம் ஜில்லாவோடு சேர்ந்து இருந்தபொழுது ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட் கோர்ட் ஒன்று இருந்தது. அதன் வாயிலாக சிறு சிறு கேஸ்கள், அப்பீல்கள் செய்ய வேண்டுமென்றால்





அவர்கள் கொடுப்பார்கள். ஆனால், இப்பொழுது தர்மபுரி ஜில்லா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆக மாற்றப்பட்டதின் காரணமாக, இடைத் தேர்தலிலே ஜில்லா கொடுக்கிறோம், கொடுக்கிறோம் என்று சொன்ன காரணத்தாலே, தர்மபுரியைத் தலைநகராக ஆக்குகிறோம் ஆக்குகிறோம் என்று சொன்ன காரணத்தினாலே அதைக் கொண்டு வந்தார்கள். ஆனால் அந்த இடத்தில் ஒரு கீழ்க் கோர்ட்டையும், கிருஷ்ணகிரியில் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டையும் வைத்திருக்கிறார்கள். அதை தர்மபுரியில் வைக்கவேண்டும். அல்லது அங்கே ஒரு ஃபர்ஸ்ட் கிளாஸ் மேஜிஸ்ட்ரேட் கோர்டை ஏற்படுத்த வேண்டும். அங்கே உள்ள மக்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் செய்துதர வேண்டும். அது புதிய ஜில்லா ஆன காரணத்தாலே அவர்களுக்கு நமது அரசாங்கம் பல நன்மைகளை உடனடியாகச் செய்துகொடுக்கும்படி கேட்டுக்கொண்டு கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய சொற்பொழிவை முடித்துக்கொள்கிறேன்.

(மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்- தலைமை)

**திரு. பி. எஸ். சந்தானம்:** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் உரைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அவர்களுடைய உரையைப் பின்பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் அவர்களுடைய உரையின் மீது பல அங்கத்தினர்கள் பல கோணங்களிலே இருந்து பேசிக்கொண்டே வந்தார்கள். அப்படிப் பேசுகின்ற நேரத்திலே தொகுதி மக்களுடைய நலன்களைப் பற்றி வலியுறுத்திச் சொல்லி அவர்களுக்கு அவ்வப்பொழுது வசதிகளை நல்ல முறையிலே செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதையொட்டி என்னுடைய கருத்துக்களையும் நான் சொல்லப் பிரியமுடையவனாக இருக்கிறேன்.

இன்று ஆட்சிக்கு வந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத் நண் பகல்
தைப் பற்றிப் பலர் பல கோணங்களிலே பேசுவதைப்பற்றி 12-0
வருத்தப்படக்கூடியவர்களும் அல்ல ; வேதனைப்படக்கூடியவர்களும் அல்ல. அரிசிப் பிரச்சினை பற்றிப் பலர் பல கோணங்களிலே பேசினார்கள். ஆடுவதும் பாடுவதும் ஞானத் தங்கமே ஒரு சாண் வயிற்றுக்குத்தான் என்பது போல் மனிதனுக்கு முதன்மையானது உணவு. அந்தப் பிரச்சினையை எந்த வகையில் தீர்ப்பது என்ற முயற்சியில் இந்த அரசாங்கம் ஈடுபட்டிருப்பது பெருமைக்குரியதாகும். உணவுக் கட்டுப்பாட்டை எந்த வகையில் நிர்ணயம் செய்தால் ஏழை எளிய மக்களுக்கு அரிசி கிடைக்கும் என்ற நிலையை ஆராய வேண்டும். ஏழைத் தொழிலாளிகள், ரிக்ஷா இழுப்போர், கூலி வேலை செய்பவர்கள் தினப்படி தாங்கள் சம்பாதிக்கின்ற ஒரு ரூபாய், இரண்டு ரூபாயை எடுத்துக் கொண்டுபோய்க் கடையில் அரிசி வாங்கிச் சாப்பிட வேண்டுமென்றால் இன்று அவர்களுக்கு அரிசி கிடைப்பதில்லை. எல்லையைத் தாண்டி அரிசி போகாமல் தடுத்து விட்டு, தேவையான அளவுக்கு ப்ரொக்யூர்மென்ட் செய்து விட்டு தாராளமாக அரிசி மாவட்டங்களுக்குள் போகலாம் என்று செய்து விட்டால் அரிசி மக்களுக்குக் கிடைப்பதில்

[திரு. பி. எஸ். சந்தானம்] [1967 மார்ச் 29

கஷ்டமே இருக்காது. செக் போஸ்டுகளைச் சரியான முறையில் கண்காணிக்க வேண்டும். அங்குள்ள அதிகாரிகளை, காவலாளிகளை மாதத்திற்கு இரு முறையாவது மாற்ற வேண்டும். இல்லையென்றால் அந்த காவலாளிகளுக்கும் லாரிக்காரர்களுக்கும் உடன்படிக்கை ஏற்பட்டு 'இன்ன நேரத்தில் நான் இருப்பேன் அப்போது வா' என்று காவலாளிகள் சொல்ல கடத்தல் நடக்கிறது. ஆகவே, மாதத்திற்கு இரு முறை செக் போஸ்டில் வேலை பார்க்கின்றவர்களை மாற்ற வேண்டும். கிராமத்திலுள்ளவர்கள் பத்து படி அரிசியை விற்று பிழைத்து வந்தவர்கள் பிழைக்க முடியாமல் பெரிய பணக் காரர்கள் ஆயிரக்கணக்கான மூட்டைகளைப் பதுக்கி வைத்துக் கொண்டு, அரிசி கடையில் இல்லை என்று தெரிந்தவுடன் ஏழை அரிசி கிடைக்காமல், மூன்று ரூபாய் கொடுக்கிறேன், அரைப்படி அரிசி கொடு என்று கேட்கின்ற அவல நிலை இருக்கிறது. அதைப் போக்க வேண்டுமென்றால் பதுக்கலை ஒழித்துக் கட்ட வேண்டும். பிறகு உணவுக் கட்டுப்பாட்டைத் தமிழகத்தில் நீக்கிவிட வேண்டும். எல்லைக் காவலை நிர்ப்பந்தப்படுத்த வேண்டும். தற் போது குறுவை விளைவு நல்ல நிலையில் இருக்கும் காரணத்தால் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுப்பதை இன்னும் 40 நாட் களுக்குள்ளாகக் கொடுக்கலாம்.

சமீபத்தில் ஏற்பட்ட சூறாவளியின் காரணமாக வட ஆற்காடு மாவட்டத்திலே ஏழை விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை சர்க்கார் உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். செங்கம் வட்டத்தை எடுத்துக் கொண்டால் 50, 60 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. செங்கம் வட்டத்தில் குப்பம் என்ற கிராமத்தில் 300 ஏக்கருக்கு மேற்பட்ட நஞ்சை நிலங்கள் ஏரிக்கரை உடைந்து பாழாகியிருக்கின்றன. எந்த நிலம் யாரு டையது என்று தெரியாமல் விவசாயிகள் தவித்துக் கொண்டிருக் கிறார்கள், அவர்கள் சர்க்காரிடம் தங்களுடைய கஷ்டத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். அது இன்னும் நிவர்த்திக்கப்பட வில்லை. அதை நிவர்த்திக்க வேண்டும். செங்கத்திற்கும் வாழக் கரைக்கும் செல்லுகின்ற பாதையின் நடுவே செய்யாறு ஓடு கிறது. அந்த இடத்தில் செய்யாற்றிலே ஒரு பாலத்தைக் கட்ட வேண்டுமென்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க் கப்பட்டது. ஆனால் இன்னும் கட்டப்படவில்லை. அதற்குக் காரணம், 1957-ம் ஆண்டுத் தேர்தலிலும் 1962-ம் ஆண்டுத் தேர்த லிலும் அங்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் வெற்றி பெற்றதுதான் என்று பொதுமக்கள் கூறுகிறார்கள். அங்கு பாலம் இல்லாமல் விவசாயிகள் தங்களுடைய நிலத்திற்கு உரத்தை கொண்டு செல்லவோ, தானியங்களை எடுத்து வரவோ; மாணவர்கள் பள்ளிக் கூடங்களுக்குச் சென்று வரவோ மிகவும் கஷ்டமாக இருக் கிறது. அதிலே இரண்டு அடி தண்ணீர் இருந்தால் கூட போக்கு வரத்து தடைபட்டு விடுகிறது. அந்தப் பகுதியில் 150 கிராமங் களுக்கு மேல் இருக்கின்றன. அந்தக் கிராம மக்களின் போக்கு வரத்துக்கு வசதி செய்து கொடுக்கும் வகையில் அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள் கொள்கிறேன்.



1967 மார்ச் 29] [திரு. பி. எஸ். சந்தானம்]

செங்கம் தாலுகா வரண்ட பிரதேசம். அது ஜவ்வாது மலையின் அடிவாரத்தில் இருக்கிறது. அங்கு மருத்துவ மனை நல்ல முறை யில் அமையவில்லை. செங்கத்திலிருந்து திருவண்ணாமலைக்குச் செல்ல வேண்டுமென்றால் 24 மைல் வரவேண்டும். செங்கத்தைச் சுற்றி ஏறக்குறைய 300 கிராமங்களுக்கு மேல் இருப்பதால் அந்த மக்கள் பூராவும் செங்கம் மருத்துவ மனைக்குத்தான் வரவேண்டிய நிலைமை இருக்கிறது. அங்கு இருக்கின்ற மருத்துவ மனை போதாது; புதிதாக மருத்துவ மனை கட்ட வேண்டுமென்று செங் கத்தில் இருக்கும் மக்கள் பல ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அங்குள்ள மக்கள் திருவண்ணாமலைக்குச் சென்று வருவது என்றால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அந்தப் பகுதி யில் மருத்துவ மனை கட்டுவதற்காக நிலம் வேண்டுமென்று கேட் டார்கள். அதற்காக நிலம் கூட வாங்கி ஜில்லா மருத்துவ மனை அதிகாரியிடமும், பொதுத் துறை எஞ்சினீயரிடமும் ஒப்படைக் கப்பட்டிருக்கிறது. அந்த நிலத்திலே சர்க்கார் உடனடியாகக் கட்டடங்களைக் கட்டி மருத்துவமனையை விசாலப்படுத்தி மக்க ளுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று நாட்டிலே உணவுப் பிரச்சினை பற்றிப் பெருத்த அளவு பேசப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்திற்குப் பிறகு அடுத்தபடி யாக, வட ஆற்காடு மாவட்டந்தான் உற்பத்தியில் முன்னணியில் நிற்கிறது. அங்கு நீர்ப்பாசன வசதிகள் எதுவும் கிடையாது. மக்கள் தங்களுடைய கடுமையான உழைப்பின் காரணமாக உணவு உற்பத்தியை அங்கே பெருக்கி வருகிறார்கள்.

அங்கு மின்சாரத்தின் உதவி கொண்டு பயிரிடுகிறார்கள். அந்தப் பகுதியில் அவர்கள் கேட்கிற அளவில் மின்சாரம் கொடுத்தால் உண்மையில் தஞ்சை மாவட்டத்தை விட உணவு உற்பத்தியை நல்லமுறையில் அவர்கள் செய்வார்கள் என்ற உறுதியை நான் சர்க்காருக்குச் சொல்கிறேன். செங்கம் வட்டத்தில் புதுப் பாளையம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மின்சாரத்திற் காக கேட்டிருக்கிறார்கள். அவர்கள் எக்ரிமென்ட் செய்திருக் கிறார்கள். ஆனால் போதுமான சாமான்கள் இல்லை என்று நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. புதுப்பாளையம் பஞ்சாயத்து கிராமங்கள் வளமான பூமியை உடையது. அது உழைப்பாளிகள் நிறைந்த பகுதி. அங்கு நல்லமுறையில் மின்சார வசதி செய்யப்படுமானால் நல்லமுறையில் அங்கு உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். ஆகவே அங்கு போதிய மின்சார வசதியைச் செய்து தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். செங்கம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கிராமங்கள்பற்றி ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். தேர்தல் சமயத்தில் ஜனவரி மாதத்தில் நான் தொகுதி வாரியாகப் போகும்போது பார்த்தேன், சூறாவளி காரணமாக ஏற்பட்ட உடைப்புகளினால் அங்கு நடக்கக் கூட பாதை கிடையாது. ப்ளாக் டெவலப்மென்ட் என்ன விதத்தில் எப்படிச் செயல்படுகிறார்களோ தெரியாது பராபரமே. ப்ளாக் டெவலப்மென்ட் அதிகாரிகளுக்காக ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது. பணம் கொடுத்து வாங்கிய காரில்

அங்கு சென்றால் யாரும் வருத்தப்படுவார்கள். 50, 60 ரூபாய் வாடகை கொடுத்து காரை எடுத்துச் சென்றால் எங்கள் முதலாளிக்கு என்ன பதில் சொல்வேன், கல்லில் ஓட்டச் சொல்கிறீர்களே என்று டிரைவர் கண்ணீர் விடுகிறார். ஜீப் என்றால் எங்கும் எந்த நிலையிலும் ஓட்டிச் செல்கிறார்கள். அங்குள்ள பீ. டி. ஓ.-வைக் கேட்டால் எந்த நிலையில் அந்தக் கிராமங்கள் இருக்கின்றன என்று அவர் பார்த்தே இருக்கமாட்டார். ஆகவே அந்தப் பகுதியில் நல்ல பாதைகள் அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாட்டிலுள்ள ஏழை மக்கள் நல்ல ஆட்சி வேண்டுமென்று இத்தகைய முறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுகிறது என்று சொல்வதுபோல் ஹரிஜனங்கள் பற்றி கவர்னர் அவர்கள் உரையில் ஒன்றுமே யில்லையே என்று மாற்றுக் கட்சியினர் சொல்லுகிறார்கள். நான் உண்மையில் வருத்தப்படுகிறேன். இருபது ஆண்டுகாலமாக ஏழைகளுக்குச் சலுகைகள் செய்து தருகிறோம், சலுகைகள் செய்து தருகிறோம் என்று சொல்லி வந்தார்கள். இருபது ஆண்டுகளாக அவர்களை நம்பி வோட்டு அளித்து வந்தார்கள் ஆதித் திராவிட மக்கள் அத்தனை பேர்களும். இப்போது நாற்பது உறுப்பினர்களுக்கு மேல் ஆதித் திராவிட மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வந்திருக்கிறார்கள். திட்டம் இருந்ததே தவிர ஹரிஜன நல இலாகா மூலம் எட்டளவில் திட்டங்கள் இருந்தனவே தவிர உண்மையில் ஒதுக்கப்பட்ட மானியங்கள் ஆதி திராவிட மக்களுக்கு நேராகப் போய் சேராததன் காரணமாகத்தான் இன்று திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் ஆதித்திராவிட உறுப்பினர்கள் 40 பேர்கள் வந்திருக்கிறார்கள். காங்கிரஸ் சர்க்கார் ஏழைகளின் நலனுக்காக எதுவும் செய்யவில்லை என்பதினால்தான் மக்களால் வெறுக்கப்பட்டார்கள். ஏழைகளுக்கு பால் கொடுக்கிறோம், உப்புமா தின்டிப் போடுகிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். 'CARE' என்ற ஸ்தாபனம் இருக்கிறது. அதனால் கொடுக்கப்பட்ட பால் பவுடர், நெய், மக்காச் சோள மா இவை ஏழை மக்களுக்கு நேர்முகமாகப் போய்ச் சேரவில்லை. அந்த அவலநிலையைப் போக்கி அவற்றை நல்லமுறையில் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெறும் விவாதத்தில் நானும் கலந்து கொள்வதற்கான வாய்ப்பைத் தாங்கள் அளித்ததற்காக என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். கவர்னர் அவர்கள் உரை மீது நடக்கிற விவாதத்தில் ஆளும் கட்சியைச் சார்ந்த நண்பர்களும், எதிர் வரிசையில் இருக்கும் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த கனம் உறுப்பினர்களும் மிக உற்சாகமான முறையில், நல்ல முறையில், இந்த விவாதத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள். கவர்னர் அவர்கள் உரை மீது விவாதம் நடை





பெற்றாலும், இன்று நான் பொறுப்பேற்றிருக்கும் உணவுத் துறையைப் பொறுத்தவரையிலும் எல்லா அங்கத்தினர்களும் தங்கள் மேலான கருத்துக்களை இங்கு எடுத்துரைத்தார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரி, எதிர் வரிசையில் உள்ள அங்கத்தினர்களானாலும் சரி, எல்லா உறுப்பினர்களும் இந்த உணவு நெருக்கடி விவகாரத்தில் கொண்டுள்ள பெருங்கவலையினால், அவர்கள் சொன்ன கருத்துக்களுக்காக என் பாராட்டுதலைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். உணவு நெருக்கடியின் முக்கிய தன்மையும் அவசரத் தன்மையும் குறித்து இன்றையதினம் ஆளும் கட்சிக்கு மட்டுமல்லாமல் எதிர்க்கட்சியில் உள்ளவர்களும், மற்ற எல்லா உறுப்பினர்களும் பெரும் முக்கியத்துவத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதிலிருந்து அது இந்தப் பயங்கரமான நெருக்கடியிலிருந்து தப்ப ஆக்கப்பூர்வமானதாக அமையும் என்று நம்புகிறேன். அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் தெளிவாக ஒன்று சொல்வேன் இன்றுள்ள நெருக்கடியில் அபிப்பிராயபேதங்கள் அல்லது ஆளும் கட்சியினர் மீது குற்றம் காட்டுகிறார்கள் என்று ஒருக்காலும் நினைக்கமாட்டேன். வேறு மாதிரி தொனி இருந்தாலும் உணவு நெருக்கடியைச் சமாளிக்க வேண்டும். அதைத் தீர்க்கவேண்டும் என்பதில் இங்குள்ள எல்லாப் பகுதியினரிடையேயும் நல்லதொரு கருத்து நிலவுகிறது. ஆகவே இதில் நாம் வெற்றி பெறுவோம் என்பதற்கு இது ஒரு அடையாளம் ஆகும்.

நான் உணவு அமைச்சர் என்ற முறையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நேரத்தில் எப்படி நிலை இருந்தது என்ற தன்மையை முதலில் விளக்க வேண்டியது என் கடமையாகும். எதிர் வரிசையில் நான் இருந்தபோது அடிக்கடி சொல்லுவதுண்டு. இந்த மாநிலத்தின் உணவு நிலைமை நாசத்தின் விளிம்பை எட்டியிருக்கிறது என்று சொன்னதாக ஞாபகம். அந்த நாசத்தின் விளிம்பைத் தொடாதிருக்கும் ரீதியில், அப்படிப்பட்ட பயங்கரமான பொறுப்பை எனக்கு ஏற்படுத்தி வைத்ததற்காக வருந்துகிறேன்.

இந்த அமைச்சரவை பொறுப்பை ஏற்றுக்கொண்ட அந்த நாளில் சென்னை மாநகரத்தின் நிலை எப்படியிருந்தது என்பதை முதல் அமைச்சர் அவர்கள் மூலம் இந்த மன்றத்தில் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். உதாரணமாக இங்கு நாள் ஒன்றுக்கு விநியோகிக்கவேண்டிய அரிசி 600 டன். அவ்வளவு தேவைப்படுகிறது. நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்ட அந்த நாளில் 500 டன்தான் தானியக் கிடங்கில் இருந்தது. இதை ஒரு உதாரணத்திற்காகக் கூறுகிறேன். இதே காலத்தில் கடந்த ஆண்டு 12,000 டன் நம் தானியக் கிடங்குகளில் இருந்தது என்று சொன்னால் அது இந்த அவை கவனிக்கவேண்டிய ஒன்றாகும். தஞ்சாவூரிலிருந்து ஒரு நாள் அரிசி வரவில்லையென்றால் துரதிருஷ்டவசமாக செங்கல்பட்டில் உள்ள ஒரு பாலம் உடைந்துவிட்டது அல்லது பாதை சரியாகயில்லை என்றால், நம் நகரம்

அந்தமான் தீவு போன்ற நிலையில் பட்டினி கிடக்கிற அவல நிலையில், தானியக் கிடங்குகளை முன்னால் இருந்த ஆட்சி விட்டு விட்டுப் போயிருக்கிறது. நம் மாநிலத்தைப் பொறுத்தவரை முழுவதும் ரேஷனில் கிடையாது. திரு. சுரேந்திரன் அவர்கள், மதுரை திரு. சங்கரய்யா அவர்கள், திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். எல்லோருக்கும் அரிசி கொடுக்க வேண்டும், 12 அவுன்ஸ் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அது அதிகமாக இருக்காது. ஸ்டாச்சுட்டரி ரேஷனிங் ஏரியா, இன்பார்மல் ரேஷனிங் ஏரியா இவற்றிற்காக ஆண்டு ஒன்றுக்கு எட்டு அல்லது ஒன்பது லட்சம் டன் அரிசி தேவைப்படுகிறது. இதற்கு முன்னால் இருந்த அரசாங்கத்தைக் குற்றம் சொல்கிறேன் என்று கருதத் தேவையில்லை. சர்க்கார் மேற்கொண்டிருக்கும் நியாயத்தை இந்த மன்றம் புரிந்துகொள்ள வேண்டும், உண்மை நிலையைத் தெரிந்துகொள்ள வேண்டும். இங்கு சில உண்மைகளை மறைப்பதோ அல்லது ஒளிப்பதோ நான் ஏற்றுக்கொண்டிருக்கும் பொறுப்பிற்கு உகந்ததாக ஆகாது என்ற வகையில் இதைச் சொல்கிறேன்.

இன்றைக்கு எதிர்க் கட்சியில் இருக்கிற உறுப்பினர்கள் யாரும், இவ்வளவு நாளும் ஆட்சி புரிந்த அரசாங்கத்தின்மீது கண்டனம் என்றோ, குற்றச்சாட்டு என்றோ கருதிவிடக் கூடாது என்று தெரிவித்துக்கொள்வேன். சாதாரணக் கடமை என்ற முறையில் வல்லரசின் செய்யுறுக்குக் கொடுக்க 8 லட்சம் டன் அரிசி தேவை என்றால், 80 ஆயிரம் டன் தான் தாங்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்ட நேரத்தில் இருந்தது என்ற ஒன்றைச் சொன்னாலே, எவ்வளவு பயங்கரமானது, எவ்வளவு ஆபத்தானது இந்த நிலைமை என்பதை இந்த மன்றம் புரிந்துகொள்ளும் என்று கருதுகிறேன். யார் இப்படிச் செய்தார்கள் என்றால், மதிப்பிற்குரிய உறுப்பினர் விநாயகம் அவர்கள் சொன்னார்கள், நமது முதலமைச்சர் அவர்கள் வசீகரமானவர், அவர் சொல்லாற்றல் பெற்றவர், சொல் வன்மை பெற்றவர், கல்லும் கூட உருகும் கம்பீரம் கொண்டவர், அவருடைய சொல்லாற்றலினால் லட்சக்கணக்கான இளைஞர்களைத் தம்பிமார்களாகப் பெற்றிருக்கிறார் என்றெல்லாம் வர்ணித்தால், அந்த வர்ணனையினால் மட்டுமல்ல, 20 ஆண்டுகள் இடைவிடாது ஆண்ட அரசு, இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் திறமையான நிர்வாகம் நடைபெறுகிறது என்று பெயர் பெற்று இருந்த இந்த அரசாங்கத்திலிருந்த முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இப்படி விட்டு விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

இன்று பொறுப்பேற்றிருக்கிற அரசாங்கத்திற்கு எவ்வளவு மகத்தான பொறுப்பு இருக்கிறது, அந்தப் பொறுப்பை நிறைவேற்ற மன்றத்தின் ஒத்துழைப்பு எவ்வளவு வேண்டியிருக்கிறது என்பதில் இந்த வார்த்தைகளைச் சமர்ப்பித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தக் காரியத்தை நிறைவேற்றும் முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த கலெக்டர்களின் மாநாடு ஒன்றைக் கூட்டினார்கள். அந்த





விவாதத்தின் விளைவாக, இன்றைக்கு இருக்கிற அலங்கோலமான நிலையில், நாசத்தின் விளிம்பைத் தொடக்கூடிய அளவில் இருக்கிற நிலையில், திட்டவட்டமான கொள்கையை, அவசரம் அவசரமாக, அளித்தெளித்த கோலமாக உருவாக்கினால் வருங்காலத்தில் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும் ஆகையால், உடனடியாகச் சில காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது.

தமிழக அரசின் முழு உணவுக் கொள்கை பற்றி அடுத்த அண்டை மாநிலத் தேவைகள், அண்டை மாநில நிலைமைகள், மத்திய சர்க்காருடைய தொடர்புகள், டில்லி மாநகரத்திலே நடைபெற இருக்கிற முதலமைச்சர்கள் மாநாட்டுக்குப் பிறகுதான் முழு உருவம் அடையும். உணவு நிலைமை நாசத்தின் விளிம்பிற்கு சென்றுவிட்டது என்றால், என் சென்றது என்று கூடக் கேட்க வருவார்கள். அதைத் தடுப்பதற்கான முறையில் தீவிரமான நடவடிக்கைகள் சிலவற்றை இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்டதை இந்த மன்றம் ஏற்கெனவேயே அறியும். அவற்றுள் முதல் நடவடிக்கையாக நமது மாநில எல்லைப்புறங்களில் காவல் நிலையங்களைப் பலப்படுத்தியது மட்டுமல்ல, பூராவும் அடைக்கப்பட்டது என்பது இந்த மன்றத்திற்குத் தெரியும். இதன் காரணமாக தானியங்கள் வெளியே போகாமல் ஏற்படுத்தி எஃபெக்டிவ் சீலிங் செய்யப்பட்டிருக்கிறது என்று நான் பெருமையோடு சொல்லிக்கொள்வேன். இது வெற்றி பெறுமா என்று சொல்வதைவிட, இது முழுமையானதா என்று சொல்வதைவிட, இது நடைபெறுகிருந்தால் என்ன ஏற்பட்டிருக்கும் என்று கணிக்கும்போது, இந்தப் பெரும் காரியத்திற்கு இந்த மன்றம் ஒப்புதல் அளிக்கும் என்று நான் நம்புகிறேன். நமது மாநிலத்தின் தேவை வருஷத்துக்கு 40 லட்சம் டன். அந்த 40 லட்சம் டன் அளவுக்குத்தான் இங்கே உற்பத்தி ஆகிறது என்று வைத்துக்கொண்டால், அதுவும் பக்கத்திலே இருக்கிற சகோதர மாநிலமான கேரள மாநிலத்திற்கும் கொடுக்க வேண்டும் என்பதை வைத்துக்கொண்டால், பக்கத்தில் இருக்கிற சகோதர மாநிலமான ஆந்திர மாநிலத்திலிருந்து சென்னை நகருக்கு அரிசி வருவதில் உள்ள நிச்சயமற்ற தன்மையை வைத்துக்கொண்டால், இவை எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு கணக்கெடுத்ததில் வேறு நிலைமைக்குப் போக முடியாது என்று ஏற்பட்டது.

இன்றைக்குச் சிலர் சொல்லலாம், விவாதிக்கலாம். சர்க்கார் இடைக்கால சர்க்கார், யாரோ கூட இடைக்கால பட்ஜெட் போல இடைக்கால பரிகாரங்களைத் தேடிச் செய்து விட்டுப்போனதற்கு, அதற்கான பரிகாரங்களைத் தேடிப் போய்க்கொண்டிருக்கிற ஒரு அமைப்பு ஆக உடனடியாகக் காரியங்களைச் செய்ய வேண்டி வந்தது. இப்போது சம்பா அறுவடை ஆகிறது. அதிலே இறுதிக் கட்டம் வரப்போகிறது. இந்த நோக்கிலே தானியக் களஞ்சியம் நிறைந்தாக வேண்டும். தேர்தலுக்கு முன்னால் பெரும் பெரும் நிலப் பிரபுக்கள், மிட்டா மிராசுகள் எல்லாம் தங்களுக்கு கட்டுப்பட்டவர்களாக இருக்க

வேண்டும் என்ற காரணத்தினல், அரசாங்கம் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யத் தவறிய காரணத்தினல் இப்போது இப்பேர்ப்பட்ட காரியத்தைச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக அரசாங்கம் மற்ருெரு நடவடிக்கையாக, சில இனங்களாக, உணவு தானியத்தை வைத்திருப்பது பற்றி நம்முடைய சட்டம் அமலில் இருக்கும் நோத்தில், தங்கள் தேவைக்கு அதிகமாக இருக்கிற உணவு தானியங்கள், தேவைக்கு அதிகமாக இருக்கிற மார்க்கெட்டபிள் சர்ப்ளசை வைத்திருப்பதிலே ஏராளமான உணவுத் தானியங்கள் பதுக்கப்பட்டிருக்கின்றன என்று அதையும் வெளிக்கொணர அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது என்பதையும் இந்த மாமன்றம் அறியும்.

இன்னும் இன்றைக்கு புதிய ஒரு இலாகாவாக, என்ஃபோர்ஸ்மெண்ட் செல் என்ற முறையில், கமர்சியல் டாக்ஸ் இலாகாவிலிருந்து ஒரு உயர் அதிகாரியை டெபுடி கமிஷனர், சிவில் சப்ளைஸ் என்று போட்டு, கருப்புச் சந்தை விவகாரங்களைக் கண்காணிக்கவும், விலைகளைச் சமன்படுத்தவும், ஒரு இலாகா செயல்படுவதை இந்த மாமன்றம் அறியும்.

அதே போன்று இன்றைக்கு உணவு இலாகாவில் மக்களுக்குப் புதிய உற்சாகத்தையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தவேண்டுமென்று ஒரு புதுத் தோற்றம், ஒரு புது பார்வை ஏற்படுத்துவதற்கெனவும், சென்னை மாநகரத்தில் [illegible] தோற்றமும், புது உற்சாகமும் இருக்க வேண்டும். இந்தக் கடமைகளைப் புதிதக் கடமைகளாகக் கருத வேண்டும் என்ற முறையில் அதிகாரிகள் மாற்றங்கள், புது அதிகாரிகள் நியமனங்கள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் இரண்டு மண்டலங்களாக, வடக்கு, தெற்கு என்று பிரிக்கப்பட்டு, இன்றைக்கு இருக்கிற ஸ்டேட்டுடரி அதிகாரி ஆகியவர்களெல்லாம் புதிய அதிகாரிகளாகப் போடப்பட்டு, உற்சாகமாகப் பணியாற்றும் முறையில் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த மன்றம் தெளிவாக அறியும். இந்த நடவடிக்கைகள் திருத்தமான நடவடிக்கைகள் என்றே, இவைகள்தான் பரிகாரம் என்றே நாங்கள் கருதவில்லை.

இன்றைக்கு கருத்துக்களைக் கூறுகின்ற நேரத்தில் இந்த அரசைப் பற்றி மன்ற உறுப்பினர்கள் பல்வேறு கோணங்களிலிருந்து பேசினர்கள். இதிலே நன்றியறிந்து திருத்தப் பிரேரணைகளைக் கூடக் கொடுத்திருக்கிறர்கள். நம் சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த புதிதா நகர் உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் மிக முக்கியமான விளக்கங்களை மன்றத்தில் தெரிவித்தார்கள். அவைகளுக்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் கருத்து, இந்த கண்ட்ரோல்களை கூடாது ப்ரொக்யூர்மெண்ட்டே கூடாது, இவைகளை எடுத்துவிடலாம், அப்படி எடுத்து விட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்பது. ஏற்கெனவே நான் விளக்கிக் கூறிய நிலையில் இந்த கண்ட்ரோல்களை எடுத்துவிட்டால் என்ன



ஆகும் என்பது எல்லோருக்கும் தெரியும் என்று கருதுகிறேன். அவர்களுடைய மாபெரும் தலைவர் அவர்களும், என் பெரு மதிப்பிற்குரியவருமான திரு. ராஜாஜி அவர்கள் 1952-ம் வருஷத்தில் வந்தவுடன் கண்ட்ரோலை எடுத்தார்கள் என்று இன்றைக்குக்கூட பெருமையாகச் சொல்லிக்கொள்ளுகிருர்கள். அவர்கள் கண்ட்ரோலை எடுக்கவில்லையா, ஏன் இன்னும் ஜில்லா விட்டு ஜில்லா போகக் கூடாது என்று சொல்லவேண்டும் என்பது அவர்களுடைய வாதம். அவர்களுக்குப் பணிவோடு நான் தெரிவித்துக்கொள்வேன். நாற்பது லட்சம் டன்தான் உற்பத்தியாகும் மாநிலத்தில் ஏறக்குறைய மார்ஜினல் சர்ப்ளசாக இருக்கும் இடத்தில், பக்கத்தில் கேரளா போல பற்றாக்குறையாக இருக்கக்கூடிய மாநிலம் இருக்கும்போது இந்தக் காரியங்களைச் செய்வதில் எவ்வளவு பிரதிகூலங்கள் இருக்கின்றன என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 1952-ம் வருஷத்தில், அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் நிலைமை எப்படி இருந்தது என்பது திரு. ஹாண்டே அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். அதை மீண்டும் கவனப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று இந்தக் காரணங்களைச் சொல்லுகிறேன். மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் இன்றைக்கு இருக்கிற இதே நிலைமையில் இருந்தால் இந்தக் கண்ட்ரோலை அவர்கள் எடுத்துவிட முடியுமா என்பதைப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். அப்படிக் கண்ட்ரோலை எடுத்துவிட வேண்டும் என்று பிடிவாதமாக ராஜாஜி அவர்களே இன்று சொல்வார்களேயானல், அதை பிற்பகல் 12-30
உண்மையிலேயே பிரத்தியட்ச நிலைமைக்கு விரோதமான நிலை என்றுதான் நான் கொள்வேன் என்பதை இந்த மாமன்றத்திற்கு, கனம் சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலமாகச் சொல்லிக் கொள்வேன். 1953-ம் வருடத்தில் கண்ட்ரோலை ராஜாஜி அவர்கள் எடுத்தார்கள் என்றல், அன்றைய நிலைமை தமிழ் நாட்டில் நல்ல உற்பத்தி, ஏராளமான விளைச்சல், அதுமட்டுமல்லாமல் இந்தியாவில் இருந்த எல்லா மாநிலங்களிலும் நல்ல 'பம்பர் கிராப்'. தமிழ் மாநிலத்திலும் நல்ல விளைச்சல், மற்ற மாநிலங்களிலும் நல்ல விளைச்சல், அது மட்டுமல்ல, உலகத்தில் எல்லா இடங்களிலும்கூட நல்ல விளைச்சல், வெளி நாடுகளிலெல்லாம் நல்ல விளைச்சல். அதுதான் முதல் காரணம்.

**திரு. பி. எஸ். ஆதிமூலம்:** அன்ன பாயின்டு ஆப் இன்பர்மேஷன், கனம் அமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால், காங்கிரஸ் சர்க்காரின் உணவுக் கொள்கையை அப்படியாகவே ஆதரிக்கின்றர்களா என்பதைத் தெரியப்படுத்த முழுக்க முழுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்:** அன்றைய தினம் இந்தியாவில் மட்டுமல்லாமல் உலக நாடுகள் எல்லாவற்றிலும் நல்ல விளைச்சல் இருந்தது. இது முதல் அம்சம். அதுமட்டுமல்ல, இரண்டாவது அம்சம், திரு. ராஜாஜி அவர்கள் கண்ட்ரோலை எடுத்த நேரத்தில் நம்முடைய தானியக் களஞ்சியத்தில் ஒரு

ஆண்டுக்குப் போதுமான தானியத்தை நிறுத்திக்கொண்டுதான் கண்டிரோலை எடுத்தார். இன்றைக்கு நான் காண்கிற கிடங்கில் ஒரு வருஷத்திற்குத் தேவையான தானியங்கள் இருக்கவில்லை, காலிக் கிடங்குதான் இருக்கிறது. இது இரண்டாவது அம்சம். மூன்றாவது அம்சம், ராஜாஜி அவர்கள் கண்டிரோல் எடுத்த மாதம் ஜூன் மாதம். அறுவடையெல்லாம் முடிந்துவிட்டது. இப்பொழுது நாம் மார்ச்சு மாதத்தில் இருக்கிறோம். இது மூன்றாவது அம்சம். அப்பொழுது இருந்த நிலை அது. அவர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப்பற்றி குறைத்துச் சொல்வதற்காகவோ அல்லது அதற்கு ஏதாவது பலஹீனம் கற்பிப்பதற்காகவோ நான் முற்படவில்லை. எல்லா இடங்களிலும் அறுவடை முடிந்துவிட்டது. அப்பொழுது ஜூன் மாதத்தில் கண்டிரோலை எடுத்தார்கள். தானியக் களஞ்சியம் நிறைந்திருந்தது. அண்டை மாநிலங்களில் சிக்கல் இல்லை. இந்த மாமன்றத்தில் நான் புள்ளி விவரங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். வரிசையாக நான்கு வருஷங்களுக்குத் தானியங்கள் உபரியாக இருந்தன. உலகம் முழுவதும் உபரியாக இருந்தது. அந்தக் கட்டத்தில் அவர்கள் கண்டிரோலை எடுத்தார்கள். அதைப்பற்றிக் குறை சொல்வதற்காக நான் இன்றைக்குச் சொல்லவில்லை. திரு. அசோக் மேதா அவர்கள் தலைமையிலே ஒரு கமிட்டி போட்டார்கள். அந்தக் கமிட்டியினர் கூட இந்த நிலைமைகளையெல்லாம் மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள், உலகத்தில் எவ்வளவு தானியம் விளைந்தது என்றெல்லாம் விளக்கியிருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்த வரையில் நிலைமையை எடுத்தால், முற்றிலும் பற்றாக்குறை வட்டாரம், தென் வட்டாரம் என்ற நிலைதான் இருக்கிறது. இங்கே விளைச்சல் இல்லை. அண்டை மாநிலங்களிலும் வேறு மாதிரியான நிலை. இப்பொழுது மார்ச்சு மாதத்தில் இருக்கிறோம். ஆகவே, இப்பொழுது கண்டிரோலை எடுப்பது சரிதானா என்பதைக் கனம் உறுப்பினர் ஹாண்டே அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தென் உணவு மண்டலத்தைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அதைப் பற்றி இந்த மாமன்றத்தில் எடுத்துரைத்திருக்கிறார்கள். அந்த ஏற்பாட்டினுடைய விளைவுகளைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்குப் பக்கத்திலே கேரள மாநிலத்தில் உள்ள உணவு நிலை, ஆந்திர மாநிலத்திலிருந்து அரிசி வருவதில் சரியான நிச்சயமற்ற நிலை இவைகளை வைத்துக்கொண்டு, தென் மண்டலம் சரியாக அமையுமா என்பதை நாம் யோசிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தென் மண்டல ஏற்பாட்டை ஒத்துக் கொள்வதில்லை என்பதை மிகத் திட்டவட்டமாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, திரு. ஹாண்டே அவர்கள், அதிகாரிகள் சொல்வதைக் கேட்டுக்கொண்டு செய்கிறார்கள். அதிகாரிகள் சொன்னதையெல்லாம் வைத்துக்கொண்டு, அந்தக் கருத்துக்களின்



அடிப்படையில் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அது சரியான விமரிசனம் அல்ல. திரு. ராஜாஜி அவர்களிடத்தில் பயிற்சி பெற்ற திரு. ஹாண்டே அவர்கள், அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் இப்படி விமரிசனம் செய்வது சரியானதல்ல என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசாங்கம் இன்றைக்குப் பொறுப்பேற்றுக்கொண்டு, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தலைமையில் இயங்குகின்றது என்றால், ஒரு திட்டவட்டமான கொள்கையின் அடிப்படையில், 20 வருடங்களாக இந்தியத் திருநாட்டிலே ஜனநாயகத்தின் அடிப்படையில் 3½ கோடி மக்களிடம் நம்பிக்கை பெற்றிருக்கிறது. அவர்களுடைய நம்பிக்கை மட்டுமல்ல, நம்முடைய கனம் உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சியினுடைய நம்பிக்கையையும் பெற்று இங்கு வந்திருக்கிறது. அதிகாரிகள் அப்படிச் சொன்னார்கள். உடனே இவர்கள் அப்படியே எடுத்துக்கொண்டார்கள் என்று சொல்வது சரியான வாதம் அல்ல என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்களும், மற்றும் சில நண்பர்களும் மூன்று ஏகரா நிலங்கள் வைத்திருப்பவர்களுக்கு இந்தக் கொள்முதலிலிருந்து விலக்கு அளிக்கக்கூடாதா என்று கேட்டார்கள். மூன்று ஏகரா வரை விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்பதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். கொள்கை அளவிலே உண்மையிலே விதிவிலக்கு மட்டுமல்ல, ப்ரொக்யூர் மெண்டு கூட இருக்கவே கூடாது என்றாலும், ஒரு தவிர்க்க முடியாத அத்தியாவசியமான நிலைமையில் இதை ஏற்றுக்கொண்டி ருக்கிறோம் என்பதுதான் இந்தச் சர்க்காரின் கொள்கை. மூன்று ஏகரா நிலம் வைத்திருப்பவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க முடியாதா என்பதற்கு அங்கத்தினர்களுடைய உரிய ஆலோசனை களை இங்கு பல உறுப்பினர்களும், சகோதரி ஜானகி அம்மாள் போன்றவர்களும் எடுத்துரைத்தார்கள். மூன்று ஏகரா நிலம் வைத்திருப்பவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கக்கூடாதா என்று கேட்டார்கள். ஆனால் இன்றைக்கு நம்முடைய மாநிலத்திலுள்ள லாண்டு ஹோல்டிங்ஸ் பற்றிய மொத்தக் கணக்கைப் பார்த்தால், மொத்தத்தில் 20 லட்சம் ஹோல்டிங்ஸ்தான் இருக்கின்றன. அதில் 3 ஏகராவுக்கும் குறைவாக உள்ள நில உரிமையாளர்கள் 15 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். 20 லட்சம் லாண்டு ஹோல்டிங்ஸில் 15 லட்சம் 3 ஏகராவுக்குள் வந்துவிடுகின்றன என்ற நிலைமையில் 3 ஏகரா வைத்திருப்பவர்களை நாம் விட்டுவிடுவோம் என்று சொன்னால், அந்த நிலைமையை நாம் ஒப்புக்கொள்வோமானால் 75 சதவிகிதம் கொள்முதல் செய்கின்ற காரியத்திலிருந்து நாம் விதிவிலக்கு அளிக்கிறோம் என்ற நிலைமைதான் ஏற்படும். ஒரு பக்கம் அரசாங்கத்தினுடைய ஆசை 5 ஏகரா வரையிலும் விதி விலக்கு அளிக்கலாம் என்பதுதான். கனம் முதல் அமைச்சர் அவர் களுக்குக் கூட ப்ரொக்யூர்மெண்டே செய்யவேண்டாம் என்று தான் ஆசை. ஆனால், அதையும் செய்துகொண்டு, விதிவிலக்கை யும் செய்துவிட்டால், இன்னொரு பக்கம் உறுப்பினர்

திரு. சங்கரய்யா அவர்கள் குறிப்பிடுகிறபடி 12 அவுன்ஸ் அரிசி கொடுக்கக்கூடாதா என்று கேட்டால், அதையும் செய்ய முடியாத நிலையிலே இந்த அரசாங்கம் இருக்கிறது. இருந்தபோதிலும், பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் தங்களுடைய உணர்வுகளை, நியாயமான வாதங்களை எடுத்துச் சொன்னார்கள். விவசாயப் பெருங்குடி மக்களிடத்தில் அவர்களுக்கு இருக்கிற அதிகமான அக்கறையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, ஒரு ஏக்கர் வரையில் உள்ள நிலங்களுக்கு விதிவிலக்கு அளிப்பது என்ற ஒரு முடிவை இந்த அரசாங்கம் எடுத்து, அடுத்த பசலியிலிருந்து இது அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டது. இன்றைய தினம் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன், உணவு அமைச்சகம் ஒரு ஏக்கருக்குக் குறைவான நிலம் வைத்திருப்பவர்களுக்கு இந்தப் பசலியிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது.

The Government have decided to exempt from procurement, all holdings with one acre and below.

இந்தப் பசலியிலிருந்தே இன்னும் கொள்முதல் ஆகாத இடங்களில் ஒரு ஏக்கருக்குக் கீழ் கொள்முதல் செய்யவேண்டாம் என்ற தாக்கீதை உணவு அமைச்சரகம் எல்லா கலெக்டர்களுக்கும் அனுப்பியிருக்கிறது என்று நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இம்மாதிரி உறுப்பினர்கள் கொள்முதலைப்பற்றிப் பல கருத்துக்களைச் சொன்னார்கள். தூத்துக்குடி உறுப்பினர் திரு. சிவசாமி அவர்களும்—கருத்து மாறுபாடு இல்லாமல் எல்லா கட்சியைச் சேர்ந்தவர்களும் இதில் அக்கறை காட்டினார்கள்—கொடைக்கானல் அங்கத்தினர் பேதா அவர்களும், இராமேசுவரம் உறுப்பினர் அவர்களும் [illegible]டத்திற்கும் தூத்துக்குடிக்கும் மத்தியில் இருக்கும் காவல் நிலையத்தை எடுத்துவிடவேண்டும், அம்மாதிரி அமைப்பு கூடாது என்று சொன்னார்கள். ஆழ்ந்து பரிசீலனை செய்ததில் அதை எடுப்பது, அங்கே செயல்படுகிற கொள்முதலுக்கு இடையூறாக அமையும் என்று தெரியவருகிறது. தூத்துக்குடி தேவையை சரிக்கட்டுவதற்கு இன்னும் அதிகமாக அரிசியை விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யும்படி உத்தரவு பிறப்பித்திருக்கிறோம் என்பதைக் கனம் உறுப்பினர் திரு. சிவசாமி அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்வதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேமாதிரி இந்த மன்றத்திலே பேசப்பட்டது—கொடுமைப் படுத்தப்படுகிறார்கள், போலீஸ்காரர்கள் புகுந்துவிடுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இந்த மன்றம் நம்பிக்கையும், ஒத்துழைப்பும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கொள்முதல் வேண்டுமா, வேண்டாமா என்பது கூடப் பிரச்சினை அல்ல. இன்றைக்கு 3½ கோடி மக்களைப் பசியால் சாகவிடுவதா, அல்லது அவர்களுக்கு ஏதாவது உண்பதற்குக் கொடுப்பதா





என்பதுதான் பிரச்சினை. மேலும், இன்றைக்கு வேறு மாநிலங்களில் நெருக்கடி நிலை இருக்கிறது. பீகாரைப் பார்க்கிறோம். கடந்த சில நாட்களுக்கு முன்பு கேரள முதல் அமைச்சர் திரு. நம்பூதிரிபாடு அவர்கள் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். உணவு நிலைமையைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள். நான்கு நாட்களுக்கு முன்னர் பீகார் மாநிலத்து உணவுக் காரியதரிசி என்னிடம் இரண்டு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எதற்காக வந்தார்கள்? பீகார் மாநிலத்தில் கடுமையான பஞ்சம், வாய்க்கால்கள் வறண்டு கிடக்கின்றன, வயல்கள் வெடித்துக் கிடக்கின்றன, மாடு கன்றுகள் சாகின்றன—ஒரு கோரமான நிலை—அடுத்த போகத்திற்கு விதை நெல் இல்லை, ஏதாவது நாம் கொடுக்க முடியுமா என்று கேட்கத்தான் வந்தார்கள். இந்த நிலையில் நாம் 4 மூட்டைகள் எடுக்கலாமா, 2 மூட்டைகள் எடுக்கலாமா, நம்முடைய உரிமைகள் பாதிக்கப்பட்டதா என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறோம். நாட்டு மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று, 3½ கோடி மக்களுக்கு விமோசனம் அளித்து, அவர்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்து கொடுத்து நல் வாழ்வு அளிக்கிறோம் என்றால், இந்த மாமன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்கள் உண்மையிலேயே இந்த அரசாங்கம் செய்கின்ற காரியங்களில், காரியங்களில் ஈடுபடுவதிலே தவறுகள் இருக்குமானால், அதை எடுத்துக் கூறினால், அந்தத் தவறுகளை இந்த அரசாங்கம் ஒரு நாளும் மூடி மறைக்காது, ஒரு நாளும் அதை நியாயப்படுத்துவதற்காக முயற்சிக்காது. ஆனால், ஒன்றே ஒன்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த கால அரசாங்கம் சென்ற முறை மார்ச்சு மாதம் 6-ந் தேதிக்கு முன்பு இருந்த நிலையில் இப்படிப்பட்டவர்களிடமிருந்து கொள்முதல் செய்யத் தவறியதன் காரணமாக இன்றைக்கு அந்த முயற்சியிலே இப்பொழுது பதவியேற்றிருக்கும் அரசாங்கம் ஈடுபடவேண்டியது அவசியமாயிற்று.

கனம் அங்கத்தினர் திரு. நல்லசாமி கவுண்டர் அவர்கள் ஒரு யோசனையை எடுத்து உரைத்தார்கள். இந்த அரசாங்கம் தமிழகத்தில் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவில்லை. விலைவாசிகள் ஏறிக் கொண்டே இருக்கின்றன. என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று கேட்டார்கள். மிகவும் மகிழ்ச்சிப்படுகிறேன். "நீங்கள் வந்து நான்கு நாட்களே ஆனாலும், ஏன் இன்னும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவில்லை?" என்று கேட்கிறார்கள். "என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? எடுக்கப்பட்டது? ஒன்றையும் காணோமே" என்கிறார்கள். நான் சொல்லுகிறேன். விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான், கண்டிப்பாக எல்லைகளை அடைத்திருக்கிறோம்; பதுக்கலிலிருந்து தானியங்களைக் கொண்டு வருகிறோம்; வியாபாரிகளைக் கண்காணிப்பது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கலெக்டர்களுக்கெல்லாம், கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு தாக்கீது பிறப்பித்திருக்கிறார்கள்; விலைவாசிகள் உயராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்

[திரு. கே. ஏ. மதியழகன்] [1967 மார்ச் 29

என்றும், யாராவது சமூகத் துரோகிகள், சமூக விரோத சக்திகள் இருந்தால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள். அதைச் சொல்லுகின்ற அதே நேரத்தில் இன்னொன்றையும் இந்த மாமன்றத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு: ஆர்டர் போட்டு விட்டால் குறைந்து விடுமா?) விலைகள் இறங்குமுகமாகத்தான் இருக்கிறது. நம்முடைய புள்ளி விவர இலாகா தயாரித்திருக்கும் புள்ளிவிவரப்படி எறக்குறைய காஸ்ட் ஆப் லிவிங் இண்டக்ஸ் 699-லிருந்து 694-க்குக் குறைந்திருக்கிறது. அதோடு இன்னொன்றையும் இந்த மாமன்றத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு அரிசி விலை மாத்திரமல்ல, மற்ற பொருள்களின் விலைகளும் குறைந்திருக்கின்றன. துணைத்தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியின் பேரில் சில விவரங்களை இந்த அவைமுன் வைக்க முற்படுகிறேன். அதிலிருந்து பார்த்தால் பல உணவு தானியங்களின் விலை இறங்குமுகமாக இருக்கிறது என்பதைப் புள்ளிவிவரங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம்.

'Statement showing the average retail prices of food articles adopted for the cost of living index of the Madras City, Coimbatore and Madurai'

தமிழ்நாடு புள்ளிவிவர இலாகா ஆராய்ச்சியை வைத்து இக்கணக்குகள் தயாரிக்கச் செய்தேன். அதிலிருந்து இந்த மன்ற உறுப்பினர்கள் விலைவாசிகளின் நிலைமையைக் கண்டுகொள்ள எளிதாக இருக்கும். ஆகவே, அந்த விவரங்களைத் தங்கள் அனுமதியின் பேரில் மன்றத்தின் முன் வைக்கிறேன். கறிகாய் (வெஜிடபிள்) விலை 7-1-1967-ல் 91 பைசா பர் கிலோவாக இருந்தது, இன்றைக்கு (18-3-1967) 63 பைசாவாகக் குறைந்திருக்கிறது. இது சென்னை மாநகரத்தில் இருக்கும் விலை. 7-1-67-ல் 91 பைசாவாக இருந்தது, இன்றைக்கு 63 பைசாவாகக் குறைந்திருக்கிறது என்பதை உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். (குறுக்கீடு). அது தாய்மார்களைக் கேட்டால் சொல்லுவார்கள்.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, தயவுசெய்து அமைச்சர் அந்தக் கடை எங்கிருக்கிறது என்று சொன்னால், அங்கே நாங்கள் வாங்கிக் கொள்ளலாம். (சிரிப்பு.) அப்படி விற்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. ஆர்டர் போட்டுவிட்டால் விலை குறையும் என்றால், அப்படிச் செய்யலாமே.

மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்: 7—1—1967-ல் இருந்த விலைக்கும் இன்றைக்கு இருக்கும் விலைக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறிப்பிட்டேன். விலை குறைவதில் ஏன் கனம் விநாயகத்திற்குக் கோபம் வருகிறது என்று தெரியவில்லை (பலத்த சிரிப்பு). விலை குறையக் கூடாது என்று நினைக்கிறாரோ என்னவோ. அவர்களுக்குத் தெரியாவிட்டால், வீட்டில் தாய்மார்களைக் கேட்டால் தெரியும்; கேட்டு நாளைக்கு வந்து அவர்கள் சொல்லட்டும்.



1967 மார்ச் 29] [திரு. கே. ஏ. மதியழகன்]

அடுத்து, மீன் (ஃபிஷ்) 7-1-1967-ல் 40 பைசாவாக இருந்தது, இப்பொழுது 39 பைசாவாக குறைந்து கிட்டத்தட்ட சமநிலையில் இருக்கிறது. அடுத்து, தேங்காய் (கோகநட்) 45 பைசாவிலிருந்து, 43 பைசாவிற்குக் குறைந்திருக்கிறது. அடுத்து, மிளகாய் (சில்லீஸ்) கோயம்பத்தூரிலே ரூ. 4.50-க்கு விற்றது, இப்பொழுது ரூ. 3.75-க்கு இறங்கியிருக்கிறது. சென்னை நகரத்தில் ரூ. 6.46 ஆக இருந்தது, ரூ. 4.25 ஆகக் குறைந்திருக்கிறது. இறங்குமுகமாகத்தான் இருக்கிறது. தனியா (கொரியாண்டர்) சென்னை நகரத்தில் ரூ. 2-95-க்கு விற்றது இன்றைக்கு இறங்குமுகமாக இருக்கிறது. நான் சொல்வதெல்லாம், 7-1-1967-ல் இருந்ததை முதலில் சொல்லி, 18-3-1967-ல் இருப்பதைப் பிறகு சொல்லி ஒத்துப் பார்க்க விரும்புகிறேன். கோகனட் ஆயில் ஒரு கிலோ ரூ. 5.29-லிருந்து, ரூ. 4.95-க்குக் குறைந்திருக்கிறது. நல்லெண்ணெய் (ஜிஞ்ஜிலி ஆயில்) சென்னை நகரத்தில், 20 பைசா ஏறியிருக்கிறது. ரூ. 4.73-லிருந்து 4.95-க்கு உயர்ந்திருக்கிறது. உருளைக்கிழங்கு (பொட்டேடோ) கிலோ ரூ. 1.26-லிருந்து 87 பைசாவாகக் குறைந்திருக்கிறது. பீன்ஸ் கிலோ ரூ. 1.14-லிருந்து 75 பைசாவாகக் குறைந்திருக்கிறது. வெண்டைக்காய் (லேடீஸ் ஃபிங்கர்) கிலோ ரூ. 1.20-லிருந்து 64 பைசாவாகக் குறைந்திருக்கிறது. (திரு. விநாயகம்: இதெல்லாம் அழுகலாக இருக்கும்.) அடுத்து, வெங்காயம் (ஆனியன்) 85 பைசாவிலிருந்து 52 பைசாவிற்குக் குறைந்திருக்கிறது. இப்படிப் பார்க்கும்போது, நம் மாநிலத்தில் உணவுப் பொருள்களின் விலை இறங்குமுகமாக இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இவற்றை நிரந்தரமாக்குவதில் இந்த அரசாங்கம் முயற்சி எடுக்கும். அரிசி விலையைக் குறைக்க, இன்னும் மற்ற விலைவாசிகளைக் குறைக்க, சமூக விரோத சக்திகளைக் கண்டுபிடித்து அடக்க, என்னென்ன முறைகளைக் கையாளுகிறோம் என்பதையும் எடுத்துக் குறிப்பிட்டேன். (குறுக்கீடு) கனம் விநாயகம் திருப்தி அடைய மாட்டார்கள். வாதம் செய்வதற்காக வாதம் செய்வார்கள். அவர்களுக்கு சந்தோஷம் ஏற்படாவிட்டாலும், நல்ல வகையில் இவை செய்யப்படும் என்று தமிழ் மக்கள் பெரும் நம்பிக்கையோடு இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

விலைவாசிகளைக் குறைக்க, கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று திருத்தப் பிரேரணையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தின் பல திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன. விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், சமூக விரோத சக்திகளைக் கடும் தண்டனைக்கு உள்ளாக்குவோம். தானியங்களுக்குக் கடன் கொடுக்க, சில மாதங்களில் நிரம்பஸ்டாக் வைத்துக்கொண்டு, மக்கள் பற்றாக்குறை மாதங்களில் கஷ்டப்படும் போது, கடன் வசதி செய்து கொடுக்க பாங்குகளைக் கட்டுப்படுத்தலாமா என்ற காரியத்திலும் தீவிரமான சிந்தனை செலுத்தப்பட்டு வருகிறது. மணிலா எண்ணெய் சம்பந்தப்பட்ட வரையில், நேற்றைக்குக் கூட கனம் முதல் அமைச்சர் ஒரு விருந்தில் கலந்து கொள்ளும்போது குறிப்பிட்டார்கள். இந்த மாநிலத்திலிருந்து வட நாட்டிற்குப் போகும் மணிலா எண்ணெயப்

போக்குவரத்தைக் கட்டுப்படுத்தலாமா, ஏதாவது கட்டுப்பாடு விதிக்கலாமா என்று தீவிர ஆலோசனையில் இருக்கிறது. அதே மாதிரி உர விநியோகத்திலும், சரியான கொள்கை ஏற்பட காரியங்கள் நன்றாகச் செய்ய முன்வந்தால் விவசாய உற்பத்தி பெருகி, விலைவாசிகள் குறைந்து, நல்வாழ்வுக்கு இடம் ஏற்படும் என்று அந்த வகையில் சர்க்கார் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. இங்கே கனம் உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய பல கருத்துக்களைக் குறித்தெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு பதில் சொல்லுவதற்கு இப்போது நேரம் இல்லாத காரணத்தால், பொதுவாக, சற்று வேகமாகவே, சிலவற்றிற்கு மட்டும் என்னுடைய பதிலைக் கூற விரும்புகிறேன்.

“கரும்பு போன்றவற்றைச் சாகுபடி செய்கிறார்கள்” என்றெல்லாம் இங்கே குறிப்பிடப்பட்டது. அப்படிப்பட்ட பயிர்களைச் சாகுபடி செய்யும்போது, அதன் பேரில் ஏதாவது சர்ச்சார்ஜ் விதிக்கலாமா அல்லது வேறு நடவடிக்கைகள் ஏதாவது எடுத்துக் கொள்ளலாமா என்ற நிலைமை கூட இந்த அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விலைவாசியைக் கட்டுப்படுத்தும் அம்சத்தில், போதிய நெல் அரைவை ஆலைகள் இல்லாததுதான் ஒரு தடங்கலாக இருந்து கொண்டிருக்கிறது. திருவாரூரில் கூட்டுறவுத் துறையில் ஒரு பெரிய அரிசி ஆலை செயல்படுகிறது. அந்த ஆலையின் அரைவையை நம்பித்தான் சென்னை நகரத்தின் அரிசி விநியோகமே இருக்கிறது என்றால், ஏதோ நான் பெருமைக்காகவோ அல்லது முக்கியத்துவத்தை வலியுறுத்துவதாகவோ சொல்லுவதாக ஆகாது. அந்த அளவிற்கு இன்றைக்குப் புதிய புதிய நவீன அரிசி ஆலைகள் பலவற்றை நம்முடைய பொதுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும், நிறுவுவதற்கான காரியங்களை நாம் செய்யவேண்டியிருக்கிறது என்பதற்காகத்தான் குறிப்பிடுகிறேன். தஞ்சை ஜில்லாவில் உற்பத்தியாகும் நெல்லின் மூன்றிலொரு பகுதியை நாம் அரிசியாக்கவேண்டுமென்றால், தஞ்சை ஜில்லாவிலுள்ள எல்லா அரிசி மில்களிலும் வருஷம் பூராவும் அரைத்தால்தான் முடியும் என்ற நிலையில், அரிசி மில்கள் போதாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. நமக்கு நவீன அரிசி ஆலைகள் பல இன்றைக்குத் தேவைப்படுகின்றன. இன்றைக்கு இருக்கும் அரிசி மில்கள் நமக்குப் போதாது. இன்றைய நிலையை நாம் கணக்கெடுத்துப் பார்க்கும்போது, எதிர் காலத்தில் நாம் மிக அதிகமாகச் செய்யவேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. அந்தக் கருத்திலேதான் இந்த அரசாங்கம் விலைவாசிப் பிரச்சினையிலும் அழுந்த கவனம் செலுத்தி வருகிறது என்பதை இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது மாநிலத்தின் எல்லைகளை அரிசிப் போக்குவரத்து சம்பந்தமாக அடைத்த நேரத்தில், அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது போன்று, கோபாவேசத்துடன், “ஏன் போய்ப் பிடிக்கிறீர்கள்?



இதனால், என்ன வந்தது?” என்பது போன்று சிலர் சொல்லுகிறார்கள். புதூர் கிராமம் என்ற இடத்தில் ஏற்பட்ட சம்பவங்கள், நடவடிக்கைகள் குறித்து இங்கே சிலர் எடுத்துத் தெரிவித்தார்கள். மேல் அவையில் ஒரு கவன ஈர்ப்புப் பிரச்சினைக்கு அறிவிப்புக் கொடுக்கப்பட்டு இருக்கிற காரணத்தால், அதற்கான பதிலை இங்கே சொல்லவேண்டாம் என்று நான் கருதுகிறேன். சிவில் அதாரிடியைத் தாண்டி, போலீஸ் அத்துமீறிப் பிரவேசிக்கவில்லை என்ற வாக்குறுதியை மட்டும் இந்த மன்றத்திற்கு நான் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கண்ட்ரோல் வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சினையை எடுத்துக் கொண்டு பார்த்தால், கண்ட்ரோல் என்பது ஒரு கருவிதான். இட் ஈஸ் எ மீன்ஸ், அவ்வளவுதான். இந்த அரசாங்கம் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்த நாட்டிலுள்ள மக்கள் அத்தனை பேருக்கும் சோறு போடவேண்டும் என்கிற மகத்தான பொறுப்பை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணியை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத் தான் கொள்முதல் செய்ய வேண்டியதை ஒரு தவிர்க்க முடியாத கடமையாக இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று இந்த மன்றத்தின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சோஷலிஸ்டிக் கட்சித் தலைவர் திரு. நல்லசிவம் அவர்கள் இப்பொழுது இந்த மன்றத்தில் இல்லை. அவர்கள் மிகவும் உருக்கமாகப் பேசினார்கள். இந்த விவாதத்திலே அவர்கள் கலந்து கொண்டு ஆற்றிய உரையானது மிகத் தலைசிறந்த ஒரு உரையாக அமைந்திருந்தது. இந்த நாட்டிலுள்ள மூன்றரைக் கோடி மக்களுடைய இதய ஒலியைப் பிரதிபலிக்கும் வகையில் அவர்கள் இங்கே பேசினார்கள். இந்த நாட்டிலுள்ள ஏழை எளிய விவசாய மக்களுடைய கோரிக்கைகள் என்ன என்பதை மிகத் தெளிவாக எடுத்துரைத்து, இந்த அரசாங்கத்திற்கு உண்மையிலேயே நல்ல ஆதரவு தருகிற ஒரு ஆக்க பூர்வமான சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அவர்களை நான் இந்தச் சட்ட மன்றத்தில் பல வருஷங்களாகப் பார்த்திருக்கிறேன். ஆனால், அவர்கள் நேற்றைய தினம் பேசிய நோக்கில், தமிழ் நாட்டிலுள்ள பல லட்சக்கணக்கான விவசாய மக்களை இந்த மன்றத்தில் வந்து அவர்களுடைய இதயத்தைத் திறந்து காட்டுவது போல, மதிப்பிற்குரிய சோஷலிஸ்டிக் கட்சித் தலைவர் திரு. நல்லசிவம் அவர்களுடைய உரை அமைந்திருந்தது. அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் பல அரிய கருத்துக்களைச் சொன்னார்கள். நிலத்திற்கு உச்ச வரம்புச் சட்டம் போன்ற சட்டங்கள் வந்திருந்தாலும், பெரும் பெரும் பணக்காரர்களுக்குத்தான் அவை பெரும்பாலும் பயன்பட்டிருக்கின்றனவே தவிர, சமுதாயத்தின் அடித்தட்டிலே இருக்கிறவர்களுக்கு அவ்வளவாகப் பயன்படவில்லை என்றெல்லாம் அவர்கள் சொன்னார்கள். அவையெல்லாம் நம்முடைய கவனத்திற்கு உரியனவாகும்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1967 மார்ச் 29.

அரிசிப் போக்குவரத்து சம்பந்தமாக, வெறும் எல்லைகளை அடைத்தால் மட்டும் போதாது. ப்ளாக்-மார்க்கெட்டிங், ஹோர்டிங் இவைகளுக்கான ஆரம்ப ஸ்தலங்கள், ஊற்று இடங்கள் எங்கெங்கே இருக்கின்றன, இத்தகைய தவறான காரியங்கள் எங்கெங்கே துவங்குவதற்குரிய இடங்களாக அமைந்திருக்கின்றன என்று கண்டுபிடித்து, உற்பத்தி நிலையங்களைத் தடுக்கவேண்டும் என்ற பெரு முயற்சியிலே நான் இந்த அரசு ஈடுபட்டிருக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அரசாங்கத்துடைய கொள்கை, ஏதோ அவர்கள் வேண்டுமென்றே போலீஸ்காரர்களைக் கொண்டுபோக வேண்டும், அல்லது வேறு காரியங்கள் செய்ய வேண்டும் என்பதல்ல. நேற்று முன்தினம் சென்னை உயர்நீதி மன்றத்தில் இது சம்பந்தமான விஷயம் எடுத்துக் கொள்ளப்பட்டதைக் கனம் உறுப்பினர்கள் அறிந்திருக்கலாம். பிடிக்கப்பட்ட தானியங்களுக்குக் கண்ட்ரோல் ரேட்டில் விலை கொடுத்துவிட்டால் வாங்கிக் கொள்ளலாம் என்ற நிலைமை வந்ததையும் கனம் உறுப்பினர்கள் அறிந்திருக்கலாம். இன்றைக்கு 'பாடி ரெக்விஸிஷனிங் ஆர்டர்' இருந்தாலும், இந்த நிலைமையைத் தளர்த்தமாட்டோம் என்று சொன்னாலும், சர்க்காருடைய நோக்கம், ப்ரொக்யூர்மெண்ட் செய்ய வேண்டும் என்பதே தவிர, யாரையும் துன்புறுத்த வேண்டும், தவறான காரியங்களைச் செய்ய வேண்டும் என்பது அல்ல என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த வகையில்தான் இப்பொழுது நாம் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் ஒரு படி அதிகமாகக்கூடச் சொல்ல விரும்புகிறேன். மதிப்பிற்குரிய கனம் திரு. விநாயகம் அவர்கள் சார்ந்துள்ள கட்சியானது அரசாங்கத்தை நடத்திக்கொண்டிருந்த பொழுது பிறப்பிக்கப்பட்ட அந்தப் 'பாடி ரெக்விஸிஷனிங் ஆர்டர்' இன்படி, 40 க்விண்டால் அல்லது 25 க்விண்டால் அரிசி வைத்திருந்தால் கூட, அதில் ஒரு தானிய மணியைக்கூட விடாமல், எல்லாத் தானியத்தையும், எந்த நேரத்திலும், சர்க்காருடைய விலைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலையை முந்திய அரசாங்கமே ஏற்படுத்தி வைத்திருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, யாரையோ துன்புறுத்தவேண்டும், விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தொல்லை கொடுக்க வேண்டும் என்பது இந்த அரசாங்கத்தின் நோக்கம் அல்ல. கொள்முதல் செய்யும்போது, அதற்குரிய கண்ட்ரோல் விலையைக் கொடுக்கலாம் என்று ஹைகோர்ட்டுக்கு இந்த அரசாங்கம் சொல்லியது.

இன்னும் ஒரு விஷயத்தை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ப்ராஸிக்யூஷன் பண்ணி, வழக்குத் தொடர வேண்டும் என்பது இந்த சர்க்காரின் நோக்கம் அல்ல.

The intention is that if all the measures on the part of the Civil Supplies officials fail and where the people are unwilling to disclose the stocks, the police will help. There is no intention to launch prosecution automatically in cases of non-declaration of goods.



1967 மார்ச் 29] [திரு. கே. ஏ. மதியழகன்]

வேண்டுமென்றே ப்ராஸிக்யூஷன் செய்யவேண்டும் என்பது இந்த அரசாங்கத்தின் விருப்பம் அல்ல.

Even for stocks requisitioned, the value for the quantities collected will be paid at procurement prices.

இதை இரண்டாவது கட்டக் கொள்கையாக இந்த அரசாங்கம் வைத்துக்கொண்டிருக்கிறது.

தஞ்சை ஜில்லாவிலுள்ள பெரிய மிராசுதார்கள் கூட என்னிடத்தில் வந்து, கொள்முதலுக்குப் பெரிய அமோகமான ஆதரவு தருவதாகவும், கொள்முதலுக்குத் தாங்கள் கொடுக்க முன்வருவதாகவும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு இந்த அரசாங்கத்தின் கொள்முதல் திட்டத்திற்கு நல்ல ஆதரவு பெருகிக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பயனாக ஏறக்குறைய மூன்று லட்சம் டன் தானியங்கள் கொள்முதல் செய்திருக்கிற அளவிற்குப் பெருமையைப் பெற்றிருக்கிறார்கள். இது மேலும் வளரக்கூடும் என்று இன்றைக்குப் பல நில உரிமையாளர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு பயம் இருக்கலாம், தாங்கள் பாதிக்கப்பட்டு விடுவோமோ என்று. இதைக்குறித்து நான் கனம் முதல் அமைச்சர் அவர்களிடம் கூடப் பேசிக்கொண்டிருக்கிறேன். இன்றைக்குச் சட்டபூர்வமான அதிகாரம் இருந்தாலும் கூட, நம்முடைய பிரதான நோக்கத்தை அமல்படுத்தும் வகையில் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு நாள் குறிப்பிட்டு, பதினைந்து நாள் அல்லது இருபது நாள் என்று ஏதோ ஒரு நாள் குறிப்பிட்டு, அதற்குள், மிராசுதார்கள் பதுக்கி வைத்திருக்கும் தானியத்தைச் சமுதாயத்திற்குத் தந்துவிடக் கூடிய வகையில், சமுதாயத்திற்கு அவர்கள் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய வேண்டும் என்ற முறையில் அறிவிப்பார்கள் என்று நான் கருதுகிறேன். மிராசுதார்கள் ஏன் தங்களுடைய கடமையிலிருந்து தவறவேண்டும், அவர்களும் சமுதாயத்திற்கான கடமையைக் குறிப்பிட்ட நாளுக்குள் செய்து விடவேண்டும் என்று அதற்கான ஒரு நாளை முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்ற மகிழ்ச்சிக்குரிய செய்தியை இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்தக் காரியத்தில் இன்றைக்குப் பெரும் கடமை எதிர்க்கட்சியிலிருக்கும் இருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கனம் எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் 'கொள்முதலுக்கு நான் கொடுக்க வேண்டியதையெல்லாம் கொடுத்துவிட்டேன்' என்று சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்டபடி, அவர்கள் மட்டும் கொடுத்தால் போதாது. இந்த நாட்டில் உள்ள மக்களுக்கு உணவு வழங்க வேண்டும் என்ற பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில், கொள்முதலைத் தீவிரப்படுத்துவதற்கு மக்கள் இயக்கம் நடத்த வேண்டும், மக்களுக்கு நல்ல உணவுப் பொருட்களை விநியோகிக்க

[திரு. கே. ஏ. மதியழகன்] [1967 மார்ச் 29

வேண்டும், நல்ல அரிசி கிடைக்கவேண்டும் என்பதிலே எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். கனம் எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்களுடைய ஒத்துழைப்பான செயலைத் தஞ்சை ஜில்லாவில் உள்ளவர்களும் மற்ற இடங்களில் உள்ளவர்களும் பின்பற்ற வேண்டும் என்பதை அவர்களும் எடுத்துச் சொல்ல வேண்டும், கொள்முதல் திட்டத்தில் பொது மக்களுடைய தீவிரமான பங்கு இருக்கவேண்டும் என்பதையும் இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

ஒன்றை நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்வேன். தேவையான அளவிற்கு மட்டுமே ப்ரொக்யூர்மென்ட் செய்யும் திட்டத்தை அரசாங்கம் வைத்துக்கொள்ளும். தேவையில்லை என்று அரசாங்கம் கருதினால், தேவைக்கு அதிகமாக, ஒரு வினாடி கூட இந்தத் திட்டத்தை அரசாங்கம் மேற்கொள்ளாது. இப்பொழு இருக்கும் ஜில்லாவிற்கு ஜில்லா, தாலுக்காவிற்குத் தாலுக்கா போக்குவரத்தில் தடை என்றெல்லாம் இருப்பது எப்போதுமே இருக்கப் போகிறது என்று யாரும் கருதிக் கொள்ளத் தேவையில்லை. தேவைக்கு மேற்பட்டு ஒரு வினாடி கூட இது வைத்துக் கொள்ளப்பட மாட்டாது என்று முதல் அமைச்சர் அவர்களே உதகையில் அறிவித்திருக்கிறார்கள் என்பதையும் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன். அவர்கள் குறிப்பிட்ட வகையிலேயே, கொள்முதல் திட்டமானது ஒரு நிமிஷம் கூட, தேவைக்கு அதிகமாக நீடிக்காது என்று நான் தெரிவித்துக்கொள்ளுவேன். ஆகவே, பதுக்கி வைத்திருக்கும் உணவுப் பொருள்களை வெளிக் கொணரவே இந்தத் திட்டம் அமல் செய்யப்படுகிறதே தவிர, இதையே ஒரு சாக்காக வைத்துக்கொண்டு நிரந்தரமாக இந்த அரசாங்கம் வைத்துக் கொள்ளும் என்று யாரும் கருதத் தேவையில்லை என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-00

நம்முடைய அரசாங்கம் ஒரு ஏக்கருக்குக் கீழ் நிலம் வைத்திருப்பவர்களிடத்தில் கொள்முதல் செய்யக்கூடாது என்று அறிவித்திருக்கும் அதே நேரத்தில் 10 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களிடத்திலிருந்து 'மார்க்கெட்டபிள் சர்பிளஸ்' அவ்வளவையும், மாவட்ட கலெக்டர்கள் நேரடியாகக் கொள்முதல் செய்ய வேண்டுமென்ற தாக்கீதை நேற்றைய தினம் உணவு அமைச்சரகம் பிறப்பித்திருக்கிறது.

The Government have also decided to permit free movement of rice not exceeding 10 Madras measures or less at a time from any place to any place in order to meet the bona fide requirements of the consumers. However, if such movement is found to take place in an organised and systematic manner, such movement should be checked.

மேலும், 10 மெட்ராஸ் மெஷர்ஸ் அளவுக்குக் கட்டுப்பாடின்றி அரிசியை எடுத்துக்கொண்டு போகலாம் என்றும் உத்தரவிட்டிருக்கிறோம். அவ்வாறு எடுத்துக்கொண்டு செல்வது மக்களுடைய அத்தியாவசியமான தேவைக்காக இருக்க வேண்டுமே யல்லாது, லாப நோக்கத்தோடு—வர்த்தக நோக்கத்தோடு கொண்டு



1967 மார்ச் 29] [திரு. கே. ஏ. மதியழகன்]

செல்ல முயற்சி செய்கின்றவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த முயற்சிக்கு எல்லாக் கட்சியினரும் ஆதரவு அளித்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கன்சல்டேடிவ் கமிட்டி, போடப்போகிறோம் என்ற வாக்குறுதியை அளித்திருக்கிறார்கள். அந்தக் கன்சல்டேடிவ் கமிட்டிக்கான பட்டியலைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் எல்லோரும் சேர்ந்து கொள்ள வேண்டுமென்ற முறையில்தான் கன்சல்டேடிவ் கமிட்டி ஏற்படுத்தப்படுகிறது. அதோடு மாவட்ட அளவிலும் ஒரு அமைப்பை ஏற்படுத்தலாம் என்று உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். 'ப்ரக்யூர்மெண்டு', மக்களுக்கு வினியோகம் ஆகியவற்றைச் செய்யும்போது மக்களோடு தொடர்புகொண்டு எல்லாக் கட்சியினருடைய ஒத்துழைப்புடன் செய்ய வேண்டுமென்றுதான் உணவுக் கொள்கையைப்பற்றி இந்தச் சர்க்கார் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. அந்தக் கொள்கை உருவாக்கப்பட்டவுடன் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்ற பிரச்சினை தீர்க்கப்படும். ஏழைகளுடைய உயிரோடு விளையாடாமல், அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பெரும் புனிதமான காரியத்திற்காக இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

The avowed policy of the present Government is to supply rice to the people at one rupee per measure. It is proposed to ask the First Member of the Board of Revenue to undertake at once a study of the above problem and submit an urgent report with his findings and proposals in one month's time.

ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டவட்டமான கொள்கையை நிறைவேற்றுவதற்காக, முதல் கட்டமாக, அதற்கான சாத்தியக்கூறுகளையும், வழிவகைகளையும் ஆராய்ந்து ஒரு மாதத்திற்குள் ஒரு அறிக்கை தயாரித்து அளிக்கும்படி ரெவின்யூ போர்டு முதல் மெம்பரை இந்த அரசாங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

This Government is committed to the policy of bringing down the price of essential commodities. It is proposed to request the Second Member of the Board of Revenue to undertake at once an urgent study of the above pressing problem and submit his findings and proposals within one month's time.

அவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரையை முடிப்பதற்கு இன்னும் பத்து நிமிடங்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரை முடியும் வரையில் இந்தக் கூட்டம் நீடிப்பதற்கு இந்தப் பேரவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

[1967 மார்ச் 29

**திரு. அ. பாலசுப்பிரமணியன் :** கனம் பேரவைத் தலைவர் அவர்களே இந்த சபை மதியம் 3½ மணிக்குத் துவங்கும் என்பதற்குப் பதிலாக மூன்று மணி என்று வைத்துக்கொள்ளலாமா ?

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** அதைப்பற்றிப் பின்னர் தெரிவிக்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஆன் எ பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன், அமைச்சர் அவர்கள் 10 படி அரிசி. (மணி அடிக்கப்பட்டது.)

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** உட்காருங்கள். நான் எழுந்தவுடனே நீங்கள் அருள்கூர்ந்து உட்கார்ந்துவிட வேண்டும். பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் என்று எதுவும் கிடையாது. பாயின்ட் ஆஃப் ஆர்டர் தான் உண்டு. தகவல் கேட்பதற்கு, மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால், அதைக் கேள்விகளாக அனுப்பலாம். இன்னொரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும் போது யாரும் இடைமறிக்கக்கூடாது நீங்கள் யாராவது விளக்கம் கேட்கத் தேவைப்பட்டால், பேசும் உறுப்பினர் உட்கார்ந்த பிறகு எழுந்து கேட்கலாம். அமைச்சர் அவர்கள் தொடர்ந்து உரையாற்றுவார்கள்.

**மதிப்பிற்குரிய திரு கே. ஏ. மதியழகன் :** அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கான விரிவான ஒரு அறிக்கையை நமக்கு ஒரு மாதத்திற்குள் தயாரித்துக் கொடுக்க ரெவின்யூ போர்டின் இரண்டாவது உறுப்பினர் அவர்கள் தனி அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

It is proposed to ask the Third Member of the Board of Revenue to evolve proposals for converting the single crop lands in the State into double crop lands. He will be asked to submit proposals in one month's time.

ரெவின்யூ போர்டின் மூன்றாவது உறுப்பினர் ஒரு போக நிலங்களையெல்லாம் இரண்டு போக நிலங்களாக ஆக்குவதற்கான திட்டங்களைத் தயாரித்து ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

கனம் பேரவைத்தலைவர் அவர்களே, ப்ரொக்யூர் மெண்டோ, கண்ட்ரோல்களோ, நிரந்தரமான பரிகாரம் அல்ல. தற்காலிக பரிகாரந்தான். உற்பத்தியைப் பெருக்குவது என்பதையே அஸ்திவாரமாகக் கொண்டு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த அடிப்படையில் இந்த அரசாங்கம் கொண்டிருக்கிற கருத்துக்களை மேலோட்டமான சில அடையாளங்களுடன் இந்த மன்றத்தில் நான் குறிப்பிட்டு, என் உரையை முடிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் உணவுக் கொள்கை பற்றி குறிப்பிட்ட 3 கட்ட நடவடிக்கையாகிய உற்பத்திப் பெருக்கம், பதுக்கலைத் தவிர்த்தல், விநியோகத்தை



1967 மார்ச் 29] [திரு. கே. ஏ. மதியழகன்]

ஒழுங்குபடுத்தல் ஆகியவற்றில், பின்பற்றிய ஏற்பாடுகள் தீவிரமாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. ஏற்கனவே தமிழகம் எங்கும் விளைந்து அறுவடையாகிவரும் உணவுப் பொருள்கள் நல்ல முறையிலும், நிலையிலும் பொதுமக்களின் கரங்களுக்குச் சென்று சேர வேண்டும் என்ற இதயபூர்வமான அக்கறையுடன் இந்த அரசு செயல்படுகிறது தமிழக மக்களின் உடனடி உணவுத் தேவைகளை இது ஓரளவுக்கு ஈடு செய்யும் என்றாலும், இந்த முறையை மட்டுமே நம்பி வாழும் நிலையில் இந்த நாட்டு மக்களை நெடுநாட்கள் வைத்திருக்க இந்த ஆட்சி விரும்பவில்லை. எனவேதான், கனம் முதலமைச்சர் அவர்கள் முதலாவதாகக் குறிப்பிட்ட " உணவு உற்பத்திப் பெருக்கம்" என்ற கட்டத்தை நாம் வெகு தீவிரமாக ஆராய்ந்து அமல்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த " உணவு உற்பத்திப் பெருக்கம் " ஒன்றே தமிழகத்தை வளம் நிறைந்த பாதையில் செலுத்தவல்லது. உணவுத் துறையில் தமிழ் நாடு தன்னிறைவு பெற்றால்தான் மற்ற ஆக்கத் துறைகளில் அது முழுமையாக ஈடுபாடு கொண்டு முன்னேற இயலும். எனவே, இந்த (1) "உடனடித் திட்டங்கள்" (2) "குறுகிய காலத் திட்டங்கள்" (3) " நீண்டகாலத் திட்டங்கள் " ஆகிய மூன்று வகையான ஏற்பாடுகளின் மூலமாகவும் உணவு உற்பத்தியை விரிவுபடுத்தத் தீர்மானித்துள்ளது என்ற செய்தியை இந்த மாமன்றத்தின் முன் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

இவற்றுள், முதலாவது ஏற்பாடாகிய 'உடனடித் திட்டங்களின்' கீழ் இந்த 1967–68 நடப்பு ஆண்டில் உணவு உற்பத்தியைப் பெருக்கும் வழிவகைகள் செயல்படுத்தப்படும். தங்கள் நிலங்களில் தொடர்ந்து உணவுப் பொருள்களையே பயிரிட்டு வரும் விவசாயப் பெருமக்களுக்கு சிறப்புச் சலுகைகள் வழங்கப்படும். பரம்பரை பரம்பரையாக உணவுப் பொருள்களையே பயிரிட்டு வந்த விளை நிலங்களில் புகையிலை, பருத்தி போன்ற வர்த்தகப் பயிர்களை விளைவிக்கும் முயற்சிகள் சர்சார்ஜ் போன்ற ஏற்பாடுகளால், கணிசமான அளவுக்குக் குறைக்கலாமா என்பது பரிசீலனையில் உள்ளது. உணவுப் பொருள் விளைநிலங்களுக்குத் தேவையான விவசாயக் கருவிகளும், மின்சார பம்புசெட் வசதிகளும் உடனடியாக வழங்க ஏற்பாடுகள் ஆராயப்பட்டு வருகின்றன. மகசூலை அதிகரிப்பதற்கென உர விநியோகம் துரிதப்படுத்தப்படும். பயிர்த் தொழிலின் பல்வேறு பருவங்களில் தேவைப்படும் நீர்ப்பாசன வசதிகளை உரிய முறையில் அளித்து உதவுவது இந்த ஆட்சியின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக அமையும். விளைந்த பயிர்கள் பூச்சி, புழு, கிருமிகளாலும் எலி முதலியவைகளாலும் சேதம் அடையாமல் இருக்கத் தேவையான ஏற்பாடுகளையும் இந்த அரசாங்கம் தீவிரப்படுத்தும். உணவு உற்பத்திக்கு வேண்டிய நல்ல வீரிய விதைகளை விநியோகிப்பதும் இந்த உடனடித் திட்டத்தின் கீழ்வரும்.

இரண்டாவது ஏற்பாடாகிய குறுகிய காலத் திட்டங்களின் கீழ் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் பலன் தர ஆரம்பிக்கக்கூடிய திட்டங்கள் உருவாக்கப்படும். விதைப் பண்ணைகள் அதிகரித்தல், மாதிரி விவசாயப் பண்ணைகளை முக்கிய இடங்களில் அமைத்தல்,

இயந்திர விவசாய முறைகளை ஊக்குவித்தல், கூட்டுறவு இயக்கத்தின் முழுப் பயனையும் உணவு உற்பத்தியாளர்கள் நேரடியாகவும், உடனடியாகவும் பெறும்படி செய்தல், விவசாயக் கிணறுகளை அதிகப்படுத்தல்—ஆழப்படுத்தல், வடிமுனைக் குழாய் கிணறுகள் நிறுவுதல், நீர்ப்பாசனக் குளங்களையும் ஏரிகளையும் நீர்நிலைகளையும் சீர்படுத்தல், தூர் எடுத்தல், மேய்ச்சல் நிலங்களை அபிவிருத்தி செய்தல், கால்நடைப் பண்ணைகளையும், கோழிப் பண்ணைகளையும் ஊக்குவித்தல், மீன் வளத் துறையின் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கணிசமான அளவுக்கு விரிவுபடுத்தல், பால் உற்பத்தியைப் பெருக்குதல், காய்கறி கிழங்குத் தோட்டங்களையும் பழத் தோட்டங்களையும் பல மடங்கு விரிவு படுத்தல் முதலியனவும், இது போன்ற பிற பலவும் இந்த இரண்டாவது திட்டமாகிய “குறுகிய காலத் திட்டத்தின்” கீழ் இடம் பெறும்.

இனி, மூன்றாவதாகிய “நீண்ட காலத் திட்ட”-த்தின் கீழ், ஏறத்தாழ ஐந்தாண்டு அளவில் பலன் தரத்தக்க பல திட்டங்கள் செயல்படுத்தப்படும். சிறப்பாக தமிழகத்தின் லட்சக்கணக்கான ஏக்கர் பரப்புள்ள ஒரு போக நிலங்களில், குறைந்தது இரு போகமாவது பயிர் செய்ய பெரு முயற்சி எடுத்துக்கொள்ளப்படும். நான்கு நாட்களுக்கு முன்பு கனம் முதலமைச்சர் அவர்கள் விருப்பப்படி தஞ்சை மாவட்டத்திலுள்ள நிலக்கிழார்கள் வந்து சந்தித்தார்கள். ஒரு போக நிலங்களை இரு போக நிலங்களாக ஆக்குவதுபற்றி ஒரு அறிக்கை அளிக்குமாறு கூறியிருந்தேன். அதற்கேற்ப இன்றைக்கு காலையில் தஞ்சை கலெக்டர் ஒரு அறிக்கையை கொடுத்திருக்கிறார். கள் குறுவைச் சாகுபடி 2 லட்சம் ஏக்கரில்தான் நடக்கது. வருகிற பருவத்தில் மூன்று லட்சம் ஏக்கரில் புதிதாக சம்பா சாகுபடியாக இருக்கிறது. இதன் மூலம் மூன்று லட்சம் டன் உணவு தானியம் உபரியாகக் கிடைப்பதற்கான நடவடிக்கைகளில் இந்த அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்தில் கனம் சபாநாயகர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சிங்கிள் கிராப் நிலங்களையெல்லாம் டபிள் கிராப் நிலங்களாக மாற்றுவதற்கு நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் ஒத்துழைப்புக் கொடுத்திருக்கிறார்கள்; அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் 12-ம் தேதியன்று தண்ணீர் விட்டால் மூன்று லட்சம் டன்களை உபரியாக தஞ்சையிலே விளைவித்துக் காட்ட முடியும். அவர்கள் 12-ம் தேதியன்று தண்ணீர் விட ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பயன்படுத்தி 3 லட்சம் ஏக்கரில் இரண்டாம் போகம் சாகுபடிக்கான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகளும், உர வசதிகளுக்கும், விதை வசதிகளுக்கும் தீவிர ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் அவர்களுடைய ஒத்துழைப்போடும், பொதுப்பணித் துறை அமைச்சர் ஒத்துழைப்போடும் அந்தத் திட்டம் செம்மையாக நிறைவேற்றப்படும்.





இதே போல் இப்பொழுது தரிசாக கிடக்கும் மேட்டு நிலங்களில் குறைந்த பட்சம் ஒரு போகமாவது பயிர் செய்ய வழிமுறைகள் பல உடனே வகுக்கப்படும். அதற்குத் தேவையான கிணறுகளை ஆங்காங்கே வெட்டுவதற்கும் உடனடி ஏற்பாடுகள் எடுத்துக் கொள்ளப்படும். கடலில் கலந்து வீணாகும் ஆற்று நீரை முடிந்த இடங்களிலெல்லாம் உணவு உற்பத்திக்குப் பயன்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும். தஞ்சை போன்ற டெல்டாப் பிரதேசங்களில் இருக்கும் கீழ்மட்ட நீரை வெளிக் கொணர்ந்து உணவு உற்பத்திக்குப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மலைச் சாரல்களிலும், மேடுபள்ளமான காட்டுப் பகுதிகளிலும் புல்டோசர் போன்ற இயந்திரங்களைக்கொண்டு சமன் செய்து உணவுப் பயிர்களும், காய், கனி, கிழங்குகளும் பயிரிட வழிவகை செய்யப்படும். மக்களின் அன்றாட உணவுப் பழக்க வழக்கங்களை இன்றைய நிலையின் தேவைகளுக்கேற்ப, முடிந்த அளவிற்கு மாற்றியமைப்பதற்கு விஞ்ஞான விற்பனர்களின் ஆராய்ச்சியும்; விளம்பர துறையினரின் துணையும் விரும்பி வரவேற்கப்படும். நாட்டினரின் தினசரி உணவில் காணப்படும் பற்றாக்குறைகளை ஈடுசெய்ய மருத்துவ, ரசாயன அறிஞர்களின் ஒத்துழைப்புடன் “Synthetic food” “Multi-vitamin Pills” போன்ற புது முயற்சிகள் ஆராயப்படும்.

எப்படி உணவுக் கொள்முதல், பாதுகாப்பு, போக்குவரத்து, பங்கீடு, விநியோகம், பதுக்கலைத் தவிர்த்தல், கள்ளக் கடத்தலைத் தடுத்தல் ஆகியவற்றுக்கு ‘சிவில் சப்ளைஸ் கமிஷனர்’ என்ற உயர் மட்ட அதிகாரியை அமர்த்திச் செயல்படுத்தி வருகிறோமோ, அதே போல மேற்குறித்த “உடனடி உணவு உற்பத்தித் திட்டம்”, “குறுகிய கால உணவு உற்பத்தித் திட்டம்”, “நீண்ட கால உணவு உற்பத்தித் திட்டம்”, ஆகிய மும்முனைச் செயல் திட்டத்திற்கு “Commissioner for Intensified Food Production” என்ற ஒரு உயர் மட்ட அதிகாரியை அமர்த்தி உடனே செயல்படும்படி கேட்டுக் கொள்ள இந்த அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

இந்த நல்லதொரு முயற்சிக்கு—பசியையும், பஞ்சத்தையும் போக்கிட முயலும் இந்த உள்ளத் தூய்மையான ஏற்பாட்டுக்கு—உணவு உற்பத்தியை ஊக்குவிக்க விழையும் இந்த செயற்குறிப்பு சிறப்பாகச் செயல்படுவதற்கு இந்த மாண்புமிகு சபையின் எல்லா வரிசைகளிலிருந்தும் ஏகோபித்த நல்வாழ்த்தும், ஒருமனதான ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்ற பெருநம்பிக்கையுடன் என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்தைப் பற்றி விளக்கம் ஏதேனும் கோரினால் ஒரு கேள்வியாகக் கேட்கலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. விநாயகம் அவர்களுக்கு ஒரு கேள்வி கேட்க அனுமதி கொடுக்கிறேன்.

திரு. கே. விநாயகம்: அமைச்சர் அவர்களுடைய உணவுக் கொள்கையை மனப் பூர்வமாக வரவேற்கக்கூடிய நேரத்தில், ஓரிரு சந்தேகங்களை விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. விநாயகம்] [1967 மார்ச் 29

கொள்முதல் என்ற பெயரில் ஆங்காங்கு இருக்கின்ற உணவுப் பொருள்களை எடுத்துச் சென்று சரிவரக் கணக்குக் கொடுக்கப்படவில்லை. அவைகள் எல்லாம் கான்பிஸ்கேட் செய்யப்படுவதாகத் தெரிகிறது. வழக்குகள் போடப்பட்டன. கான்பிஸ்கேட் செய்யாமல் கொள்முதல் திட்டத்தின் கீழ் சேரவேண்டிய பணத்தைத் தருவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்:** ஏற்கனவே கோர்ட்டில் பெண்டிங்காக இருந்த வழக்குகள் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. திருமழிசையில் சில வழக்குகள் அவ்வாறு முடிவு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த அரசாங்கத்தின் கொள்கை பிராசிக்யூஷன் செய்வதல்ல. கலெக்டர் அவர்கள் அனுமதியோடு அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்பதற்கான புதிய சட்டத்தைப் பற்றியெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாளைக்கு பேசும்போது கூறுவார்கள். அவர்களுடைய இறுதி முடிவுரையின் போது குறிப்பிடுவார்கள். அந்தப் பெரும் காரியத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொள்முதலுக்காக ஒத்துழைப்புக் கொடுத்தது போல் எல்லோருமாகச் சேர்ந்து இந்தப் பெரும் காரியத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்தையொட்டி விளக்கம் கோரும் வகையில் ஒரு கேள்வி கேட்க மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமமூர்த்தி அவர்களுக்கு அனுமதி வழங்குகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** கனம் அமைச்சர் அவர்கள் 10 படி அரிசியை எந்த இடத்திலிருந்து எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் கொண்டு போகலாம் என்று சொன்னார்கள். ஒரு மாவட்டத்தை விட்டு இன்னொரு மாவட்டத்திற்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறதா?

**மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்:** அதுதான் நோக்கம்

The Government have decided to permit free movement of rice not exceeding 10 Madras Measures or less at a time from any place to any place.

சாப்பிடுகிறவர்களுக்குக் கஷ்டம் ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தோடு இது செய்யப்பட்டிருக்கிறது. இதையே லாப நோக்கத்தோடு செய்தால் கண்காணிக்கப்படும்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்தையொட்டி விளக்கம் கோரும் வகையில் ஒரு கேள்வி கேட்க மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. எஸ். ஆதிமூலம் அவர்களுக்கு அனுமதி வழங்குகிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** கொள்முதல் விஷயத்தில் ரொம்பக் கடுமையாக இருக்கிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் கங்கைகொண்டான் பகுதியில் இருக்கும் ஒரு பெரிய நிலச்சுவான்தாருக்கு



1967 மார்ச் 29] [திரு. டி. எஸ். ஆதிமூலம்]

1,000 மூட்டைக்கு டிமாண்ட் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. 300 மூட்டையை அவர் ஏற்கனவே அளந்து விட்டார். மேற்கொண்டு அளந்து கொண்டிருக்கும்போது திடீரென்று ரெவின்யூ அதிகாரிகள் வந்து "நீங்கள் சரியாகக் கணக்குக் கொடுக்கவில்லை; உங்களிடம் இருக்கிற தானியத்தை கான்பிஸ்கேட் பண்ணுகிறோம்" என்று சொல்லி கோடவுனைப் பூட்டிவிட்டுப் போய்விட்டார்கள்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏதாவது விளக்கம் கேளுங்கள். Let the hon. Member Please put the question.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** இந்த மாதிரி கெடுபிடிகள் இல்லாமல் இந்தக் காரியத்தைச் செய்வதுபற்றிப் பரிசீலிக்கப்படுமா?

**மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் சபாநாயகர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். கனம் முதலமைச்சர் அவர்கள் அதைப்பற்றி அறிவிப்பார்கள். 300, 500 மூட்டைகள் வைத்திருக்கின்றவர்கள் சீக்கிரமாக அவர்களாகவே கொடுத்துவிட வேண்டும். கனம் உறுப்பினர் அவர்களும் அவர்களுடைய பங்கை நிறைவேற்றுகின்ற முறையிலே ஏதாவது தெரிந்தால் அதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** நமது பேரவையின் விதிகளின்படி—

"When, for the purpose of elucidating a point during discussion, any member has occasion to ask a question of another member who is speaking, he may ask the question with the permission of the Speaker. . ."

என்று இருக்கிறது. ஆகவே விளக்கம் கேட்பதற்கு ஒரு கேள்வியை அனுமதிக்கலாம்; ஆனால் அதற்காக மாண்புமிகு உறுப்பினர் உரையாற்றத் தொடங்கக்கூடாது.

**திரு. கெ. இர. ஞானசம்பந்தன்:** கனம் சபாநாயகர் அவர்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன். கன்சல்டேடிவ் கமிட்டியை உணவு விஷயமாக அமைக்கப் போவதாக கனம் முதலமைச்சர் அவர்கள் சொன்னதை மீண்டும் உணவு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே மாதிரி லோக்கல் பர்சேஸ் பண்ணுவதற்கு பொது ஜனக் கமிட்டியொன்று போட்டு, அவர்கள் சொல்கின்ற யோசனைகளையும் அந்த அதிகாரிகள் கேட்டு நடந்தால் அது நலமாக இருக்கும். ஆகவே, அது மாதிரிச் செய்வதற்கு கனம் உணவு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

**மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்:** கன்சல்டேடிவ் கமிட்டி மாநில மட்டத்தில் அமையும். ஒவ்வொரு பகுதியிலும் உணவுக் குழுக்கள் அமைக்கலாம் என்ற விஷயம் சர்க்காரின் தீவிரமான பரிசீலனையில் இருக்கிறது.

[1967 மார்ச் 29

திரு. செ. பாலசுப்பிரமணியன் : சார், பற்றாக்குறை ஜில்லாக்களில் ரேஷன் முறை அமல் நடத்தப்படுகிறது. கிராமப் புறங்களில் உணவு தானியம் இனிமேல் நியாயவிலைக் கடைகளின் மூலம் வழங்குவதற்கு சர்க்கார் முயற்சிக்கிறதா ?

மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன் : அரசாங்கத்தினுடைய உடனடியான திட்டம் முதல் கட்டமான ஸ்டாச்சுடரி ரேஷனிங், இன்ஃபார்மல் ரேஷனிங் இவற்றையொட்டி தங்களுடைய கடமையை நிறைவேற்றுவதோடு எங்கெங்கே பற்றாக்குறை ஏற்படுகிறதோ அதையெல்லாம் அவசரத் தன்மையுடன் உணர்ந்து அந்தந்த இடத்திற்குத் தகுந்த மாதிரியான உடனடி நடவடிக்கைகளை சர்க்கார் மேற்கொண்டு வருகிறது.

திரு. பி. எம். முனுசாமி கௌண்டர் : உணவு அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது 10 படி அரிசி தாலுகாவைவிட்டு செல்லலாம் என்று சொன்னார்கள். அதிலே ஒரு விளக்கம் தேவை. அப்படி எடுத்துச் செல்லுகிறவர்கள் சொந்த உபயோகத்திற்காகவோ அல்லது லாபத்தைக் கருதியோ எடுத்துப் போகலாம். லாபத்தைக் கருதி எடுத்துப்போவதை செக்போஸ்ட்டுகள் வைத்து சோதனை செய்கிறார்கள். நான் பத்துப் படி அரிசி சொந்த உபயோகத்திற்காக எடுத்துப்போகிறேன் என்றால் அதைக்கூட போலீஸ் அதிகாரிகள் சோதனை செய்யக்கூடிய தொந்திரவு ஏற்படுகின்ற நிலைமை ஏற்படும் . . .

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அருள்கூர்ந்து ஒரு கேள்வியாகக் கேட்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. எம். முனுசாமி கௌண்டர் : பத்துப்படி விஷயத்தில் ஜில்லாவைவிட்டு ஜில்லா கொண்டுபோகும்பொழுது எந்த விதமான தொந்திரவும் இல்லாமல் இருக்கும்படி அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.

மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன் : ஏற்கனவே தொந்தரவு ஏற்படுகிறது என்ற காரணத்திற்காகத்தான் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து சில வியாபாரிகள் லாபம் சம்பாதிப்பதற்காக முயற்சிக்கிறார்கள் என்பதை கனம் உறுப்பினர் தெளிவாகத் தெரிந்து இருக்கிறார்கள். இந்த நிலை ஏற்படுகின்றபொழுது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தயங்காது.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. மாலை 3 மணியளவில் இன்று மீண்டும் இந்தப் பேரவை கூடும். மேல் அவை (லெஜிஸ்லேடிவ் கவுன்சில்) மாலையில் கூடுவதால் அதற்கு மதிப்பிற்குரிய அமைச்சர்கள் போக நேரிட்டாலும், அமைச்சர்களில் ஒருவராவது இந்தப் பேரவையில் அமர்ந்து இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.



1967 மார்ச் 29] [மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்]

பின்னர் பேரவை பிற்பகல் 3-00 மணி வரை ஒத்திவைக்கப் பட்டது.

(இடைவேளைக்குப் பின்—பிற்பகல் 3-00.)

6. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(இ) மாற்றுத் தலைவர்கள் நியமனம்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : முதலிலே ஓர் அறிவிப்பு. இப்பேரவையின் 6-வது விதிக்கிணங்க கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் முதல் கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairman) நான் நியமிக்கிறேன்.

(1) திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி.
(2) திரு. எம். எஸ். மணி.
(3) திரு. தோ. மு. நல்லசாமி.
(4) திரு. கரு. சீமைச்சாமி
(5) திரு. வி. கே. கோதண்டராமன்.

அடுத்து, கவர்னர் அவர்கள் உரையின் மீதான விவாதம் தொடர்ந்து நடைபெறும்.

திரு. ஆ. கு. சுப்பையா : அவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்களில் ஒருவர்கூட சபையில் இல்லையே.

7. கவர்னர் பேருரையின்மீது விவாதம் (தொடர்ச்சி).

MR. SPEAKER : Now I call upon the hon. Member, Dr. Habibulla Baig to make his speech.

DR. HABIBULLA BAIG : Mr. Speaker, Sir, while supporting the Motion of Thanks moved on the floor of this House, I want to point out that His Excellency the Governor, in his Address, has praised the public servants who have conducted the General Elections, for their 'commendable sense of detachment and impartiality'. But I have to draw the attention of the House to the fact that there was a lot of harassment of the Muslim and the D.M.K. Party workers as well the voters in the various districts of the State. For instance, in Lalpat in the South Arcot district, the Muslims were very much harassed and they were taken to the police stations, beaten and put to a lot of inconvenience. Also, cases were filed against them under the Indian Penal Code and the Criminal Procedure Code. Even on the day of the elections, the Muslims who wanted to exercise their franchise were beaten with lathis, simply because they declared openly their support to the D.M.K. candidate in Lalpat. This only shows that the public servants have not conducted the elections with a sense of detachement and impartiality.

That apart, in my constituency, I had to give protection to the D.M.K. workers for three successive nights in my house. The police wanted to arrest them and so they took shelter in my house. That shows that the elections were not conducted in an impartial manner but were definitely conducted in a partial manner.

The Governor, in his speech, has mentioned about the rising prices of essential commodities and stated that the State Government have no control over the rising prices and that it is in the hands of the Central Government. The rise in prices is due to the very abnormal increase in the price of rice consequent on lesser production. As a result of it, the distribution of rice has been made very difficult and we in this State are facing a food crisis.

So far as food production is concerned, the Hon. Minister for Food has stated that there are only 40 lakh tonnes of food-grains available this year. That shows that we are deficit in foodgrains. As per the statistics given with regard to the food production under the First, Second and Third Five-Year Plans, in the year 1949-50 the area under rice cultivation was 47.69 lakh acres and under millets and other foodgrains 48·54 lakh acres. Rice produced in that year was 17·91 lakh tonnes and millers and other foodgrains 12·56 lakh tonnes. So, the total production of foodgrains in the year before the production of the First Plan, was 30·41 lakh tonnes. But in the year 1955–56 the area under rice cultivation has gone upto 54·56 lakh acres and the millets and other foodgrains to 50·28 lakh acres. The total production of foodgrains has increased to 44·22 lakh tonnes. That shows that in the course of the five years, the production has increased by 14 lakh tonnes. In the same way in the year 1960-61 the area under rice and millets has gone up by more than 10 lakh acres and production has increased to 52·03 lakh tonnes. That only shows that in every five years the area under cultivation is increasing and the production also is increasing. Now, we have been told that we are having deficit in the production of foodgrains and this is attributed to the proportionate increase in population. Even as per statistics given for the year 1964–65 there has been increased production. Now, it has been stated that the production of rice has been 40 lakh tonnes and the millets, etc., twenty lakh tonnes. If 18 ounces of foodgrains, are to be given for a person, that will not be sufficient. So we must have an increased production of 10 lakh tonnes every five years. Also to meet contingencies (like natural hazards, we must have another 10 lakh tonnes of food grains so instead of 60 lakh tonnes, we must have 80 lakh tonnes of foodgrains. So, unless, and until production is increased, we cannot cope up with the supply of foodgrains to all the people in our State. Under these circumstances, control is very essential and between the producer and the consumer, there must be some agency to procure food-grains and supply them to the consumer. So, the Government have to act as an agency to procure rice and supply it to the consumers though the rice is not in surplus. Without procurement, I think we will not be able to supply food to all the people.





So, I appreciate the policy adopted by this Government. Again, the Hon Minister for Food has stated that there are certain districts which are surplus in foodgrains and certain other districts which are deficit in foodgrains. So, the inter-District and inter-State control must be there and we cannot remove it. Apart from that, production must be increased. For that the existing irrigation projects should be improved. Also, certain medium and minor irri-gation schemes should be implemented. As regards minor irrigation in particular, the total area irrigated by tanks is 38 lakh acres and one-fourth of the land is irrigated by the wells. There are about 35,000 tanks and 9½ lakh wells in our State.

All the tanks are not properly maintained. If they are properly maintained, agriculture will be well-off and production will increase.

As far as wells are concerned all the 9½ lakh wells are not fitted with motors. If each well is fitted with a motor it can irrigate five acres of land. Under the First and Second Five-Year Plans only 7 lakhs of wells are fitted with pump-sets. If the other wells also are fitted with pump-sets, the area under cultivation will increase.

Supply of fertilisers is very very essential and the farmers are not getting fertilisers in time and in adequate quantity. Poor landlords are not getting fertilisers because of political pressures. As some of the hon. Members have mentioned some quantity of fertilisers is utilised for fermenting and for alcoholic purposes. This sort of thing must be stopped totally. More quantities of fertilisers must be supplied in time. There are letters from various districts complaining that the position about the supply of fertilisers is very very difficult. First, the farmers have to go to the village headman and get a permit, then go to the panchayat office and get a permit, and then go to the godown and produce the permit. By the time they go to the godown, the godown keeper says that the stock is exhausted. The stock goes into the black-market. This malpractice must be stopped. Farmers have become scientific minded and they have understood the importance of chemical fertilisers. We have to depend upon the Centre for fertilisers. We are not getting the required quantity. We must make alternative arrangements to get fertilisers and supply them to the farmers in time.

Apart from the supply of fertilisers, we must see that small landholders get credit for meeting cultivation expenses in time. They are poor and are always deficit in Finance. There are Cooperative societies and banks. Unfortunately because of their lesser influence, they are not able to get credit from them. Naturally they have to borrow from the bigger landlord, who is a monopolistic person in that village. When they borrow, say two hundred rupees, they not only execute a bond for two hundred

rupees but also undertake to give another two hundred rupees worth of paddy at the time of the harvest. The landholder collects not only the two hundred rupees given to the small farmers but also paddy worth two hundred rupees. Poor farmers are suffering because they are not getting credit facilities at the time of cultivation.

There is also the suffering due to the land lease system. Poor landholders who do not own land, go to the big landholders and get their land on lease. There are no written lease conditions. A rich landlord will not lease out his land on a written lease document, because he wants to safeguard his own interest. The tenant does not know whether land is going to be with him for five years or ten years. So he does not take any interest in making the soil richer by the application of manure and cultivating the land. He simply throws some seeds and is satisfied with whatever yield he gets. He attends to cultivation in a half-hearted manner. So we must safeguard the interest of the tenant also.

By taking all these steps, I think production can be increased and we can reach the production target of 70 lakh tonnes. Sixty lakh tonnes will be sufficient for consumption on the basis of population figures and the remainder will be available for purposes of seed and for meeting situations arising out of drought or other natural causes.

In his Address the Governor has failed to mention about provision of drinking or protected water-supply. More essential than food is water. Not only the City but also the rural areas are not getting sufficient drinking water. As far as the City is concerned, the supply should be thirty gallons per head per day. Unfortunately the Corporation is supplying only thirteen gallons. The City is expanding day by day and the population is growing, and supply of drinking water is a very important matter. Provision of supply of drinking water in rural areas also is very important. The Government must supply adequate water by tapping subsoil water, by installing boring pumps and by utilising the water in the wells.

The Governor has failed to mention about minorities. Unfortunately Muslims, Christians and other minorities have to face a lot of difficulties at the time of college admissions. There must be some reservation of seats for minorities. Otherwise it will be very very difficult for us to secure admission.

As far as the services are concerned some reservation must be there for the minorities so that they may also come up to the level of the other communities, and there should not be any discrimination.

I belong to a constituency where more commercial people are living. Business people are complaining that there is multi-point tax as far as the commercial tax is concerned. On account of





multi-point tax, businessmen have to maintain a number of account books and receipt books. A tax of one per cent becomes a tax of two or three per cent depending upon the number of hands through which the goods pass. In order to avoid keeping accounts, they avoid issuing receipts. By this the Government are also losing revenue which they are entitled to get. By avoiding the keeping of accounts, they are cheating the public and also the Government. The multi-point tax raises a one per cent tax to four or five per cent on account of the levy at every stage of the transaction. This is a nuisance not only to the business people. The consumer also has to pay more tax because of multi-point tax from the factory stage to the stage of reaching the consumer.

So, instead of havig a multi-point tax, it is better to have a single point tax just like the Central Excise tax. Instead of one per cent, it may even be three per cent. So, I request that this aspect of the matter should be taken into consideration by the Government. Of Course, the Government should see that there is no loss to the exchequer and at the same time, they should also see that there is no inconvenience to the business community as well as the consumers. In this connection, I wish to point out that the land tax is proposed to be reduced and the same concession could be extended to the business people also. Really it is not a concession but it is only a sort of convenience provided to them in preparing accounts and other things. With these words, I support the Motion of Thanks to the Governor and also thank you, Mr. Speaker, for the opportunity given to me to speak on it.

*திரு. அ. பாலசுப்ரமணியன்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நான் கவர்னர் உரையை வரவேற்கும் முறையில் இங்கே திற்கிறேன். நான் விரும்பும் எல்லா விஷயங்களும் இதிலே இருக்கின்றன என்ற காரணத்திற்காக அல்ல. அப்படி நினைத்தால் என்னிடம் ஏதோ கோளாறு இருக்கிறது என்று அர்த்தமாகும். மாறாக, திருப்பத்தின் அறிகுறிகள் இந்த உரையிலே இருக்கின்றன என்ற காரணத்தினால்தான்.

(மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் தலைமை.)

குறிப்பாக, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் என்ற மிக முக்கிய மான விஷயத்தை இந்த கவர்னர் உரை வற்புறுத்தியிருக்கிறது. இதை மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் ஏன் எதிர்க்கிறார் கள் என்று எனக்குப் புரியவில்லை. தேசிய இயக்கத்தின் வரலாற்றை அவர்கள் மறந்துவிட்டார்களோ என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது. 1935-ம் வருஷத்தில் வெள்ளையன் ஒரு அரசியல் சட்டத்தை நம் மீது திணித்த காலத்தில், நாடு முழுவதும் ஒரு தேசிய இயக்கம் நடந்த காலத்தில், முழு அதிகாரங்கள் கொண்ட மாநில அரசுகளின் சமஷ்டி அரசாங்கம் என்ற தாரக மந்திரத்தைத் தமிழ் நாடு முழுவதும் பரப்பிய காங்கிரஸ் உறுப் பினர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அப்படிப் பட்ட நிலையில் இருக்கும்போது அந்த அம்சத்தையும் முழு

மனதோடு அவர்கள் ஆதரித்திருந்தால் தேசிய இயக்கத்தின் தன்மையோடு இருக்கிறார்கள் என்று அறிந்துகொள்ள முடியும். அப்படி இல்லாதது வருந்தத் தக்கது.

இந்த உரையிலே குறிப்பிடாதவைகளைப் பொறுத்த வரையில் கொள்கைகளை வகுக்க மேலும் அவகாசம் வேண்டும். அதைக் கூட புரிந்துகொள்ளாமல் யாரும் இருப்பார்கள் என்று நான் நினைக்க வில்லை. அப்படிக் கொள்கைகளை வகுக்கும்போது சில ஆலோசனை களைக் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று நினைவுபடுத்துகிறேன். பாஞ்சாலத்தில் ஏற்பட்டிருக்கிற அமைச்சரவை நான்கு நல்ல காரியங்களைச் செய்து இருப்பதாக எனக்குத் தகவல். ஒன்று, ப்ளாக் டெவலப்மென்ட் ஆஃபீஸ்களை நீக்கிவிட்டார்கள்; இரண்டாவது, ஐந்து ஏக்கர் அளவுள்ள நிலம் உள்ளவர்களுக்கு நிலவரியைத் தள்ளிவிட்டார்கள்; மூன்றாவது, அபிவிருத்தி வரியை முற்றிலும் நீக்கி விட்டார்கள்; நான்காவது, விற்பனை வரியை ஒருமுனை விற்பனை வரியாக மாற்ற ஒப்புக்கொண்டு விட்டார்கள். இந்த நான்கு அம்சங்களும் நமது புது ஆட்சியின் கவனத்தில் இருப்பது நல்லது என்று நான் கருதுகிறேன்.

கவர்னர் உரையில் தேர்தலில் ஜனநாயகம் பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இந்த நாட்டில் நிலவிய தேர்தல் ஜனநாயக முறைக்குப் பாராட்டுக் கூறும் நிலையில் நான் இல்லை. இந்த ஆட்சி தேர்தலில் மாறியிருக்கிறது என்றால், அது இந்த ஜனநாயகத்தின் சிறப்பு அல்ல. அது ஜனங்களின் ஆவேசம்; ஜனங்களின் ஆத்திரம்; 20 ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்த காங்கிரஸ் கட்சியை எதிர்த்து நடந்த போர். அந்த ஆட்சியை மாற்றுவதற்கு உகந்த முறையில் இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கக் கூடிய கட்சியும், மற்ற எதிர்க்கட்சிகளும் ஒன்று சேர்ந்து தொகுதி உடன்பாடு செய்து கொண்டதன் பலனாக இன்றைக்கு ஆட்சி மாற்றப்பட்டிருக்கிறது. எனவே, இது ஜனநாயகத்தின் சிறப்பு என்று இதை ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை.

இன்று நாம் கூடியிருக்கும் நேரத்தில், உணவுக் கொள்கை மிக முக்கியமாக கவனத்தில் இருப்பது நியாயம் தான். அதைப் பற்றி இன்று காலை மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் திரு. மதியழகன் அவர்கள் ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார். ஒரு ஏக்கருக்கு முற்றிலும் விதி விலக்கு—வரவேற்கிறேன். அதை மூன்று ஏக்கர்களாக ஆக்கவேண்டுமென்ற கருத்து எங்களுக்கு இன்னும் உண்டு. கேரளத்தைப் போல பற்றாக்குறை மாநிலமல்ல. இரண்டு ஏக்கர்களுக்கு விதி விலக்கு அளித்திருக்கிறார்கள். பத்து ஏக்கர்களுக்கு மேல் உள்ளவர்களிடம் உபரியையெல்லாம், மார்க்கெட்டில் ஸர்ப்ளஸ்ஸையெல்லாம், கொள்முதல் செய்வது சரியான கொள்கை. அதைத் தீர்மானிக்கும்போது நியாயமான செலவுக்கு இவ்வளவு என்று கறாராக நிர்ணயம் செய்துவிட வேண்டும். அப்படி கறாராக நிர்ணயம் செய்யாவிட்டால், அதற்கு உள்ளே புகுந்து விளையாட இடம் அளித்துவிடும். செலவுக்கு இவ்வளவு என்பதைக் கறாராகத் தீர்மானித்துவிட வேண்டும். போக்கு





வரத்தில் இருக்கும் பல்வேறு தடைகளை எவ்வளவுக்கெவ்வளவு நீக்குகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. பொது ஜனக் கண்காணிப்பு கமிட்டி அமைத்து, அவர்களுடைய ஒத்துழைப்போடு நடத்தினால் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு உதவி செய்வதாக இருக்கும்; அதோடு அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் வராமல் காப்பாற்றிக்கொள்ள பெரும் உதவியாக இருக்கும்.

இது போக, அவர் சமர்ப்பித்த அறிக்கையில் ஒரு விஷயம் தெளிவாக இல்லை. டவுன் பஞ்சாயத்துக்களுக்கு என்ன ஏற்பாடு? அங்கே குடும்பக் கார்டும் இல்லை, ரேஷனும் இல்லை, நியாய விலைக் கடைகளும் இல்லை. இவைகட்கு வழி என்ன? 10 படி அரிசியை சொந்த உபயோகத்திற்கு எடுத்துப் போகலாம் என்று சொன்னார்கள். இந்தப் பகுதி மக்களுக்கு வழி என்ன? அறிக்கையில் தெளிவு இல்லை. அங்கும் நியாய விலைக் கடைகளை விஸ்தரிக்க வேண்டும் அல்லது மாற்று ஏற்பாடு வேண்டும். அதற்கு உடனடியாக கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு உற்பத்தி பெருகவேண்டும். இதற்கு உரம் முக்கியம், விதைகள் முக்கியம், தண்ணீர் முக்கியம், இவைகள் எல்லாவற்றையும் காட்டிலும் உழவன் முக்கியம். உழவனுக்கு ஊக்கம் அளிக்கும் வேலை முக்கியமானது. தரிசு நிலங்களை அவசர கவனத்தோடு பங்கிட்டுக்கொடுக்கும் வேலையில் முதலில் கவனம் செலுத்த வேண்டும். ஏற்கனவே இருக்கும் உச்ச வரம்புச் சட்டத்தை இறுதியாகக் கொள்ளலாகாது. அதனுடைய விளைவுகளை இறுதியாகக் கொள்ளலாகாது. 1956–57-க்குப் பிற்பாடு ஏற்பட்ட பட்டா பிரிவினைகளை அங்கீகரிக்கலாகாது. அவைகளையெல்லாம் புனராலோசனை செய்யவேண்டும். பதினைந்து ஏக்கர்களுக்கு மேல் உச்ச வரம்பு இருக்கக்கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழகமும் நாமும் ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். அந்த அளவில் திருத்தி, 15 ஏக்கர் என்பது ஒரு தனி நபருக்கு அல்ல, ஒரு குடும்பத்திற்கு—அதிலே குறிப்பிட்டுள்ள 13 விதி விலக்குகளின் கீழ் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை மூடி மறைத்திருப்பதைச் சரியாக்கி, உழுபவனுக்கு நிலம் அளிக்கும் ஏற்பாட்டைச் செய்தால், மற்ற எல்லாக் காரியங்களைக் காட்டிலும் அடிப்படைக் காரியமாக அமைந்து, உணவு உற்பத்திக் காரியத்திற்கு உறுதுணை செய்யும் கிராமப் புறங்களில் மறுமலர்ச்சி ஏற்பட இது அடிப்படையான வேலை என்று கருதுகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, அதைச் சுலபமாகத் தீர்த்துவிட முடியும் என்று நான் குறிப்பிட வில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் வளராமல் இருக்கும் வேலையை முதலில் செய்யவேண்டும். முதலில் ஆட்டோமேஷன், அதற்கான கருவிகள் தமிழகத்தில் புகுத்தப்பட மாட்டாது என்று ஒரு அறிக்கை விடுவது நல்லது. கைத்தறியில் விசைத்தறியைப் புகுத்துவதை அறவே தடுக்கவேண்டும். தோல் பதனிடுதல், வறுகடலைத் தொழில் போன்ற தொழில்களில் விசையைப் புகுத்துவது கூடாது. வேலையில்லாத் திண்டாட்டம் என்பது மத்திய சர்க்கார்

உருவாக்கும் கொள்கையிலிருந்து பிரிக்க முடியாத ஒரு அம்சம். மத்திய சர்க்கார் முதலாளித்துவ கொள்கையை 20 ஆண்டுகளாக உருவாக்கி வருகிறது. விலைவாசி உயர்வும், வேலையில்லாத் திண்டாட்டமும் பிரிக்க முடியாதது. முதலாளிகளுக்குச் சாதகமாக எக்ஸைஸ் டியூட்டி போடுவதன் மூலமாக விலைவாசி ஏற்றம் ஏற்படுகிறது. பண வீக்கக் கொள்கை கையாளப்படுகிறது. இப்படிப் பட்ட கொள்கைகளால் விலைவாசி ஏற்றம் ஏற்பட்டு, பாமர மக்கள் உறிஞ்சப்பட்டு முதலாளிகளால் பணம் சேர்க்கப்படுகிறது. அப்படிபட்ட கொள்கை காரணமாக விலைவாசி ஏற்றம் முற்றிலும் தவிர்க்க முடியாதது. அளவுக்கு மாநில ஆட்சிக்கு உட்பட்ட சில காரியங்கள் செய்யலாம். அதே போல வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையில், முதலாளிகள் வளர மேலும் மேலும் புதிய யந்திரங்களைப் புகுத்துவார்கள், ஆட்குறைப்பு ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். அந்தக் கொள்கையை மாற்றி, மத்திய சர்க்கார் அதை உணர்ந்து வேலையைச் செய்தால்தான் இந்தத் திசையில் கணிசமான முன்னேற்றம் காண முடியும் என்று குறிப்பிட விரும்புகிறேன். கைத்தறித் தொழில் மிக சிக்கலில் இருக்கிறது. அதைப்பற்றிய எல்லா அம்சங்களிலும் போக விரும்பவில்லை. ஆனால் இரண்டு விஷயங்களைப் பொருத்தமட்டும்கூற ஆசைப்படுகிறேன். 1962-ம் வருஷத்தில் எக்ஸைஸ் டியூடி நூலுக்கு இருந்தது. அன்று பேலுக்கு ரூ. 5, இன்று ரூ. 96. நூலுக்கு மட்டும் எக்ஸைஸ் டியூடி ரூ. 96. இதை மாற்றுவதற்கு மத்திய சர்க்காரிடம் கோரவேண்டும். இன்னொன்று, நூல் விலைக்கு 'வாலண்டரி பிரைஸ் கண்டிரோல்' இருப்பதாக ஒரு மோசடி நாட்டிலே நடந்துகொண்டிருக்கிறது. மில் முதலாளிகள் நூல் விலையை நிர்ணயம் செய்வார்கள், கட்டுப்படுத்துவார்கள் அவர்கள் ஏஜெண்டுகளுக்கு தருகிறார்கள். இந்த ஏஜெண்டுகள் முதலாளிகளின் இந்தப் பை. அவர்கள் ஹோல்ஸேலர்களுக்குத் தருகிறார்கள். ஹோல்ஸேலர்கள்
பிற் பகல் 3-30 தங்கள் இஷ்டப்படி கணக்கு வைத்தும் கணக்கு வைக்காமலும் பல விலைக்கு வாங்குகிறார்கள். இதைத் தடுக்கவேண்டும். இது மாநில அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டது. இந்தப் போக்கு கூடாது. ஹோல்சேலர்களும், ஏஜெண்டுகளும் கூடாது. மில் முதலாளிகளுக்கும், தறியாளர்களுக்கும் இடையே சர்க்கார் வைக்கும் மார்க்கெடிங் டெப்போ இந்த வேலையைச் செய்தால் கணிசமான அளவுக்கு விலையைக் குறைப்பதற்கும், தறிகளுக்கு நூல் கிடைப்பதற்கும் உத்திரவாதம் ஏற்படும். அதிகச் செலவு இல்லாமல் மாநில சர்க்கார் உத்தரவிட்டுச் செய்யக்கூடிய ஒரு காரியம் இது என்பதை புதிய ஆட்சியின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

விசைத் தறியை புகுத்தலாகாது என்று ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். அதை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

அடுத்து, மில்களையெல்லாம் மூடிக்கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு முக்கியமான விஷயம் சுதந்திராக் கட்சி அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். ஃப்ரீ டிரேட் என்று குறிப்பிட்டார்கள். பருத்தியில் நாட்டில் இன்று ஃப்ரீ டிரேட் இருந்துகொண்டிருக்





கிறது. பெயர் அளவுக்கு ஒரு ஸீலிங் விலை, அந்த விலைக்கு பருத்தி கிடைப்பதில்லை. நிச்சயமாக மத்திய சர்க்காரும் அந்த விலைக்கு வாங்கத் தயாராக இல்லை. மகாராஷ்டிரத்தில் பெரிய பருத்தி வியாபாரிகள் பருத்தியையெல்லாம் கொள்முதல் செய்துவைத்துக் கொண்டு கொள்ளை விலை கேட்கிறார்கள். பருத்தி கிடைக்கவில்லை. நூற்பு மில்களை தமிழ் நாட்டில் மூட ஆரம்பித்திருக்கிறார்கள். ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷ மூலம் பருத்தியை மத்திய சர்க்கார் கொள்முதல் செய்து மில்களுக்கு அலாட் செய்தால்தான், தங்குதடையின்றி மில்களுக்கு பருத்தி கிடைப்பதற்கு வழி ஏற்படும், அதை வைத்துக்கொண்டு அவைகள் உற்பத்தியில் ஈடுபட முடியும். பருத்தியில் ஃப்ரி ட்ரேடிங் தான். ஆனால் நடப்பது என்ன? நாட்டில் மிகப் பெரிய தொழிற்சாலைகள் நூற்பு மில்கள். பஞ்சாலைகள் அனைத்தும் வேலை செய்ய முடியாத அளவுக்கு கஷ்டப்படுத்தக்கூடிய நிலைமை அங்கு இருக்கக்கூடிய வர்த்தகர்களால் செய்யப்படுகிறது என்பது இன்றைக்கு நமது அனுபவம். அப்படிப்பட்ட நிலையில்தான் சட்டென்று தலையிட்டு வெளி நாட்டு பருத்தியையும், உள் நாட்டு பருத்தியையும் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் கொள்முதல் செய்து மில்களுக்கு அலாட் செய்ய ஏற்பாடு செய்தால்தான் நிம்மதியான நிலை ஏற்படும்.

அடுத்து, ஒரு முக்கியமான விஷயம். ஏற்கனவே இருந்த ஆட்சி இண்டஸ்டிரியல் போலீஸ் போர்ஸ் என்று தொழிற்சாலைகளில் போலீஸை வைத்து, தொழிலாளர்களை மிரட்டுவதற்கு ஒரு ஏற்பாட்டை உத்தேசித்திருந்தார்கள், தீர்மானித்திருந்தார்கள். அந்த உத்தேசத்தின் பிரகாரம் இன்றைக்கு அந்த வேலைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். அதை உடனடியாக புதிய ஆட்சி தடுத்துவிட வேண்டும்.

மோட்டார் தொழிலாளர்களுக்காக 1961-ம் வருடத்தில் டெல்லியில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டம் இன்று வரை இந்த ராஜ்யத்தில் அமல் ஆகவில்லை. 1962 மார்ச் மாதத்தில் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று மத்திய சர்க்கார் சொல்லியிருந்தும், இங்கு ஏற்கனவே இருந்த ஆட்சியாளர்கள் அதை அமல்படுத்தாமல் வைத்திருந்தார்கள். 1966-ம் வருஷத்தில் விதிகளை வகுத்தார்கள். இன்றைக்கும் அதிகாரிகள் நியமிக்கப் படவில்லை. ஒரே ஒரு இன்ஸ்பெக்டருக்குத்தான் அதிகாரம் தந்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கீழே இருக்கக்கூடிய லேபர் இன்ஸ்பெக்டர்களுக்கு அதிகாரம் இல்லை. அதற்கான சட்டம் இருக்கிறது. விதிகள் 1966-ல் வந்திருக்கின்றன. ஆனாலும், மோட்டார் தொழிலாளர்கள் அனுகூலத்தைப் பெறமுடியவில்லை. அப்படிப் பட்ட நிலைமை இன்றைக்கு இருக்கிறது. அதை உடனடியாக நாம் திருத்தவேண்டும்.

இது தவிர ஒரு முக்கியமான விஷயத்தை நான் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது நிர்வாகம் சம்பந்தப்பட்டது. ஆட்சிமாறியிருக்கிறது. ஆனால் நிர்வாகம் அது மாறவில்லை. மேலிருந்து கீழே பழைய நிர்வாகம்தான்.

இருக்கக்கூடிய அதிகாரிகளின் அமைப்பு அப்படியேதான் இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது அதன் வேலைகள் நாம் விரும்பியபடி நடக்கவில்லை. திருந்த ஊழியர்களுக்கு கொஞ்சம் காலம் பிடிக்கும். உதாரணமாக எனக்குத் தெரியும்—20, 25, 30 வருஷங்களாக தண்டத் தீர்வை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பட்டா கொடுப்பதில்லை. கொடைக்கானல் பகுதியில் 200, 300 ஏக்கராக்களுக்கு பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படி வசதிபடைத்தவர்கள் விஷயத்திலே வளைந்து கொடுத்துக் கொண்டு போகக் கூடிய நிர்வாகம், ஏழை எளியவர்களை வாட்டி வதைக்கும் நிர்வாகம் அப்படியேதான் இருக்கிறது. அதே பயிற்சி, அதே பழக்கம், அதே வேலை முறை, அது அப்படியேதான் இருந்து வந்திருக்கிறது. அப்படிப் பட்ட நிலைமையில் நிர்வாகத்தின்கீழ் இருக்கக்கூடிய ஊழியர்களின் முழு ஒத்துழைப்பையும் பெற்று இந்த ஆட்சி போடக் கூடிய திட்டங்களை செம்மையாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். அதைச் செய்யவேண்டும் என்றால், முக்கியமான இரண்டு விஷயங்களில் இந்தப் புதிய ஆட்சி கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒன்று, இந்த பெர்சனல் பைல் என்ற சிஸ்டத்தை தொலைத்துவிடவேண்டும். என்.ஜி.ஓ.-க்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கும்படியான இந்த கான்பிடன்ஷியல் ரிப்போர்ட், பெர்ஸனல் பைல்களை உடனடியாக நிறுத்த வேண்டும். புதிய அமைச்சரவை பதவி ஏற்பதற்கு முன்னால், முதல் மந்திரி அவர்கள் பிரமாணம் எடுத்துக்கொண்ட அன்று மாலை ஊழியர்கள் கூட்டத்தில் பேசினார்கள். ‘நான் அண்ணன், நீங்கள் தம்பிமார்கள், நான் குடும்பத் தலைவன், நீங்கள் குடும்பம்’ என்று அழகாக எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகிய ஊழியர்களுடைய பெர்சனல் பைல்களை, அந்த சிஸ்டத்தை உடனே நீக்கிவிடவேண்டும். நம்பிக்கையோடு அவர்களிடத்தில் வேலைகளை ஒப்படைக்கவேண்டும். தவறு இருந்தால் தட்டிக் கேட்போம், கூப்பிட்டுக் கண்டிப்போம். பல் இளித்து வால் பிடிக்கக்கூடிய கூட்டத்தைத் தயார் செய்யக் கூடிய, காக்காய் பிடிக்கும் கூட்டத்தை வளர்க்கக்கூடிய இந்தப் பெர்சனல் பைல் சிஸ்டம் போகவேண்டும். வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டிலுள்ள ஊழியர்களை நம்பாத காலத்தில் ஏற்படுத்திய இந்த சிஸ்டம் நமக்குத் தேவையில்லை. இதை 20 ஆண்டுகளாக வைத்துக்கொண்டிருக்கிறோம். அந்த முறை இன்று கைவிடப்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் லட்சக்கணக்கான என்.ஜி.ஓ.-க்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்பு இந்த ஆட்சிக்குக் கிடைக்கும்.

அடுத்தபடியாக, ‘விஜிலன்ஸ், ஆன்டிகரெப்ஷன் டிபார்ட்மெண்ட்’ இன்று போலீஸ் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. சிவில் ஊழியர்கள்மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு, போலீசார் அவர்களை மிரட்டுவதற்கு, அச்சுறுத்துவதற்கு இது ஏதுவாக இருக்கிறது. இடம் அளிக்கும். ரெயில்வே டிப்பார்ட்மெண்டுக்குள்ளேயே விஜிலன்ஸ் இருக்கிறது. ஜுடிஷியரிக்குள்ளேயே அந்த டிபார்ட்மெண்டு விஜிலன்ஸ் இருக்கிறது. அதைப் போலவே சர்க்கார்





இலாகாவிற்குள்ளேயே, அந்த டிபார்ட்மெண்டிற்குள்ளேயே விஜிலன்ஸ் ஏற்பாடுகள் இருக்கவேண்டும். அதற்கு மாறாக அதை போலீசாரிடம் ஒப்படைத்திருப்பதால், யாராவது இரண்டு பேர்கள் எதையாவது எடுத்துக்கொண்டு புகார் செய்துவிட்டால், அத்துணை ஊழியர்களையும் மிரட்டி, அநியாயமாக பழிவாங்கக்கூடிய வேலைக்கு இது இடம் அளித்துக்கொண்டிருக்கிறது. இதிலே துரிதமான கவனத்தை புதிய ஆட்சி செலுத்தவேண்டும். இதை மாற்றிவிட வேண்டும். அந்த இலாகாவிற்குள்ளேயே விஜிலன்ஸ் ஏற்பாடு இருக்கவேண்டும். விஜிலன்ஸ் ஏற்பாடு வேண்டும் என்பதில் இரண்டு அபிப்பிராயங்கள் இருப்பதற்கு இடமில்லை. ஆனால் போலீசார் சிவில் ஊழியர்களின்மீது அதிகாரம் செலுத்தக்கூடிய, மிரட்டக் கூடிய, ஆதிக்கம் செலுத்தக் கூடிய நிலை அனுமதிக்கப் பட்டால், அதனால் ஆபத்தான விளைவுகள் ஏற்படக் கூடிய நிலைகள் இருக்கின்றன. மேலும் லஞ்ச லாவண்யம் புகுவதற்கு, வளர்வதற்கு அது உதவி அளிக்கிறது.

ஏற்கனவே இருந்த ஆட்சியாளர் அவர்கள் போட்ட சட்ட விதி
களையே அமுலாக்காத சில நிலைமைகளை நாம் பார்க்கிறோம்.
சர்க்கார் ஊழியர்கள் விஷயத்தில், குறிப்பாக 200 ரூபாய்க்கு குறை
வாக சம்பளம் வாங்கக்கூடிய ஊழியர்கள்மீது புகார் இருந்தால்
அந்தப் புகார்களை ட்ரிப்யூனலுக்கு அனுப்பக்கூடாது என்று
விதிகள் இருக்கின்றன. அப்படி இருந்தாலும், அந்த விதிகளை மீறி
ரூ. 200 அடிப்படைச் சம்பளம் வாங்கக்கூடியவர்கள்மீது புகார்கள்
வந்து, அந்தப் புகார்கள் ட்ரிப்யூனலிடம் ஒப்படைக்கப்பட்டிருக்
கின்றன. மாறாக, ரூ. 250, 300 சம்பளம் வாங்கக்கூடியவர்கள்மீது
புகார்கள் வந்தால், அந்தப் புகார்கள் ட்ரிப்யூனலுக்குப் போகத்
தான் வேண்டும் என்று ஏற்கனவே விதி இருக்கிறது. ஆனால் அது
அப்படிப் போகாமல், கலெக்டர்களிடம் ஒப்படைக்கப்பட்டு,
சமாளித்துக் கொள்ளக்கூடிய ஏற்பாடுகள், தகவல்கள், விவரங்கள்
இருக்கின்றன. இதுபோன்ற அநியாயங்களை நீக்கி, பெர்ஸனல்
பைல்களை நீக்கி, விஜிலன்ஸில் போலீஸ் தலையிடாமல், அந்த
இலாகாவிற்குள்ளேயே விஜிலன்ஸ் ஏற்பாடுகள் இருந்தால், பெரிய
அளவுக்கு சர்க்கார் ஊழியர்களுடைய முழுமையான ஆக்கபூர்வ
மான ஒத்துழைப்பை ஆட்சி பெறுவதற்கு உதவியாக இருக்கும்
என்பதை நான் இந்த ஆட்சிக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்து, விவாதத்தில் வந்த பல்வேறு கேள்விகளுக்கு முதல்
அமைச்சர் அவர்கள் பொருத்தமான பதிலைக் கொடுத்திருக்
கிறார்கள். பஸ் போக்குவரத்தை தேசியமயமாக்குவது அவசியம்
என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், புரிந்து கொண்டிருக்
கிறார்கள். அவர்களுடைய கொள்கையை கொஞ்சம் விரைவாக
அமுலுக்குக் கொண்டுவரவேண்டும், அதற்கு அதிக காலதாமதம்
ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது. ஒருபுறத்தில் ஊழியர்
களுக்கு நியாயப்படி கொடுக்க வேண்டும், நிலவரியை குறைக்க
வேண்டும், 5 ஏக்கருக்குக் கீழே நிலவரியை ரத்து செய்யும்
மாநிலங்கள் இருந்தாலும், நம் மாநிலத்திற்கு ஏற்றவாறு அதை

ரத்து செய்யக்கூடிய ஏற்பாட்டில் புகவேண்டும். கீழே சலுகைகள், வருவாய்கள் குறைவு. அதை மாற்றுவதற்கு வருவாய்களைத் தேடுவதில் புகும்பொழுது, கட்டாயம் தமிழ் நாட்டில் முதன் முதலில் செய்யவேண்டிய வேலை பஸ் போக்குவரத்தை தேசியமய மாக்கவேண்டும். இதுபோக, அதிகச் செலவு இல்லாமல் செய்யக் கூடிய சில காரியங்கள் இருக்கின்றன. அந்தக் காரியங்களி லெல்லாம் அவசியமாகவும், துரிதமாகவும் கவனம் செலுத்தினால் நல்லது. ஊர்வலம் நடத்த வேண்டும் என்றால், பொதுக் கூட்டம் நடத்தவேண்டுமென்றால் பெர்மிஷன், லைசென்ஸ் வாங்கவேண்டும். அதற்கு ரூ. 3 கட்டணம் செலுத்த வேண்டும். கேரளத்தில் அப்படி யில்லை. இங்கு எதற்காக? 10 மணிக்குமேல் கூட்டம் நடத்தக் கூடாது, எதற்காக? 10 மணிக்குமேல் கூட்டம் நடத்தினால் என்ன குடிமுழுகிப் போய்விடும்? இரண்டு கட்சிகள் ஒரே இடத்தில் கூட்டம் போடக்கூடாது, அதற்கு வேண்டிய ஏற்பாடு களை மட்டும் செய்து கொள்ளவேண்டும். போலீசார்கள் தொழிலா ளர்கள் தகராறில் தலையிடுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். அதைப்பற்றி கறாரான கொள்கையை புகுத்திவிட வேண்டும், பிரகடனப்படுத்திவிட வேண்டும். இப்படிச் செலவில்லாமல் செய்யக்கூடிய காரியங்களை இந்த சர்க்கார் விரைவில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அந்தக் கண்ரோட் டத்தோடு இந்த அமைச்சரவையை வரவேற்று, அவர்கள் ஆரம்பித் திருக்கும் வேலைகள் வெற்றி பெறவேண்டும் என்று வாழ்த்துகிறேன். மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் கூறினார்கள், hasten slowly என்பதுதான் என்னுடைய கொள்கை" என்று. அது நல்ல கொள்கை. அதிலே நான் 'ஹேஸன்' என்பதைக் கோடிட விரும்பு கிறேன். அதோடு, hasten slowly, but do haste என்று சொல்லி, உங்களுக்கு ஆலோசனைகள் கூறி, துணையாக இருக்கவே நாங்கள் இருக்கிறோம், இடறிவிழச் செய்வதற்கு அல்ல, தோழமையோடு இருக்கிறோம், உதவியாக இருக்கிறோம். ஆகவே, இடறிவிழச் செய்ய வேண்டும் என்கிற நோக்கத்தோடு யோசனைகளைக் கூறாமல், உடனடியாக பாமர மக்களுக்கு நன்மை ஏற்படக்கூடிய நான்கு ஐந்து காரியங்களாவது நடைபெற வேண்டும் என்கிற நல்ல நோக்கத்தோடு சொல்லும் யோசனை என்று கருதி, இவற்றை அவசரமாகக் கவனித்து இந்த சர்க்கார் ஆவன செய்யும் என்கிற நம்பிக்கையோடு என் கருத்துக்களைக் கூறிக் கொண்டு, கனம் உதவி சபாநாயகர் அவர்கள் எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற் காக என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அமருகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி:** கோளாறில் பெர்சனால் லைபைலை எடுத்து விட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. அ. பாலசுப்ரமணியன்:** என்னிடம் தகவல் இல்லை.

* **திரு. ந. வீராசாமி:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர் களே, கவர்னர் பெருமானின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை எடுத்துக்கூற முன் வருகிறேன். தேர்தல் அமைதியாக நடந்தது என்று பொதுவான





கருத்து சொல்லப்பட்டு இருந்தாலும், நான் சார்ந்திருக்கும் ஆர்க்காடு தொகுதியிலும், இன்னும் சோளிங்கபுரம், பரங்கிமலை போன்ற மற்ற தொகுதிகளிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பார்ப்போமானால், நாம் வேதனைப்படும் நிலையில்தான் இருக்கிறது. குறிப்பாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் பல அரிசி மில்கள் காங்கிரஸ்காரர்கள் கையில் இருப்பதால், ரைஸ் மில்காரர்களில் சிலர் பொது மக்கள் நெல் அரைக்கச் செல்லும்போது, அதை அரைத்துக் கொடுக்க மறுக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையை மாற்றியமைக்கவேண்டும். பரங்கிமலையை எடுத்துக் கொண்டால் அங்கே தேர்தலுக்குப் பிறகு ஒரு படுகொலை நடந்திருக்கிறது. பால வாக்கம் என்கிற கிராமத்தில் கத்திக் குத்துக்கு ஆளாகியிருக் கிறார்கள். போலீஸ்காரர்கள் இவற்றின் பேரில் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

அடுத்தாற்போல, அதிகாரிகள், வெகு நாட்களாக காங்கிரஸ் ஆட்சியில் பழக்கப்பட்டவர்களாக இருப்பதால், புதிய ஆட்சிக்குப் பிறகும்கூட தங்களைச் சரிசெய்து கொள்ளவில்லை. அப்படிப்பட்ட அதிகாரிகள் தாங்கள் இருக்கும் நிலையை உணர்ந்து, கட்சி சார்பில் லாமல் நடக்க வேண்டும் என்று வலியுறுத்தி, மீறினால் அத்தகைய வர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதற்காக
கவர்னர் உரையைப் பாராட்டும் அதே நேரத்தில், ஒரு பயங்கர
மான திட்டத்தை முன்னாள் காங்கிரஸ் அமைச்சர்களும் மற்றவர்
களும் தீட்டியிருப்பதாக செய்திகள் கிடைத்திருக்கின்றன.
அதாவது இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் ஆட்சிக்கு கெட்ட பெயர்
உண்டாக்க வேண்டும் என்கிற எண்ணத்தில், ரூபாய்க்கு மூன்று
படி அரிசி எப்படிக் கொடுக்கிறார்கள் பார்ப்போம் என்கிற பிரச்
சினையில் ஈடுபட்டு, குறிப்பாக செங்கல்பட்டு மாவட்டத்தில் பெரிய
பெரிய காங்கிரஸ்காரர்கள், நிலம் வைத்திருப்பவர்கள், நெல் பயிர்
செய்வதை விட்டுவிட்டு வேறு பயிர் செய்ய வேண்டும் என்று திட்ட
மிட்டு இருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. அது உண்மை
யாக இருக்குமானால், இந்த சட்டமன்றத்தின் மூலம் கனம் முதல்
அமைச்சர் அவர்களுக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.
ஏற்கனவே காங்கிரஸ்காரர்கள் காரைக்குடி மாநாட்டிலே ஒரு
முடிவு எடுத்த தீர்மானத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன்.
விவசாயிகள் தாங்கள் செய்யும் பயிரை மாற்றினால், அப்படிச்
சொல்லும்போது, நெல் பயிரை விட்டு கரும்பு முதலிய பயிரை
பயிரிட்டாலோ அல்லது வேறு பணப்பயிரை பயிரிட்டாலோ
அல்லது நிலங்களை தரிசாகப் போட்டாலோ, அத்தகைய விவசாயி
கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள் முடிவு
எடுத்தார்கள். அதற்கு இணங்க அதற்காகவென்று ஒரு தனிச்
சட்டமே கொண்டுவரப்போவதாகவும் சொன்னார்கள். அப்படிப்
பட்ட சட்டத்தை அமுல்படுத்த முற்பட்டாலொழிய இன்றைக்கு
இருக்கும் உணவுப் பிரச்சினையை தீர்க்க முடியாது என்று சொல்ல
விரும்புகிறேன். ஏனென்றால், செங்கல்பட்டு மாவட்டத்தில் அதிக
மாக நெல் பயிரிடலாம், நெல்லைத் தவிர வேறு தானியங்களைப்

பயிர் செய்யக் கூடாது என்று சட்டம் இருந்தாலொழிய விவசாயிகள் பணப்பயிர்தான் பயிர் செய்வார்கள். அதைத் தடுக்க வேண்டும்.

அதற்கு அடுத்து, இன்றையதினம், நான் ஒரு முக்கியமான கருத்தினை இந்த சட்டமன்றத்திலே வலியுறுத்த விரும்புகிறேன். இன்றையதினம் வெளியிட்ட பட்ஜெட்டைப் பார்த்தால் அதில் 760 லட்சம் துண்டு விழுகிறது என்பதைப் பார்க்கிறோம். அப்படி ஏற்படும் துண்டுகளைச் சரிக்கட்ட நிர்வாகத்தில் இருக்கும் பல ஊழல்களைப் போக்க வேண்டும்.

(மதிப்பிற்குரிய தலைவர் திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி தலைமை.)

அரசாங்கத்தின் ஒரு ஆணைப்படி, 1966-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வெளியிட்ட எம். எஸ். 4095 என்று இலக்கமிட்ட அரசாங்க உத்தரவு ஒன்று விவசாய இலாகாவிலிருந்து வெளியிட்டு இருக்கிறார்கள். அந்த உத்தரவு என்னவென்றால், மீன் இலாகாவில், நிர்வாகத்திற்கு உதவி செய்யும் வகையில் ஒரு போர்டு நியமித்தார்கள். அந்த போர்டு மெம்பர்கள், மீனவர் குடும்பத்தில் பிறந்தவர்களாக இருக்கவேண்டும், மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் அன்று இருந்த காங்கிரஸ்காரர்கள் தாங்கள் ஆட்சி செய்தபோது, தேர்தல் நெருங்கிக்கொண்டிருந்தபோது அந்தக் குழுவிலே மீனவர் அல்லாதவர்களை நியமித்திருக்கிறார்கள். உதாரணமாக, கிருஷ்ணாபாய் அம்மையார் என்பவரைப் போட்டிருக்கிறார்கள். அவருக்கு என்ன வேலை? அவர் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர் இல்லை. ஆசிரியராகப் பணியாற்றுகிறவர். இன்னொரு உறுப்பினர் மாரப்பன் மணியக்காரர் என்பவர்.

**மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி:** கிருஷ்ணாபாய் அம்மையார் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான்.

**திரு. ந. வீராசாமி:** அமைச்சரவர்கள் கிருஷ்ணாபாய் அம்மையார் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லுகிறார்கள். இருந்தாலும், ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அடுத்து, அந்த மணியக்காரர் என்பவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். கன்னியாகுமரிக் கமிட்டியில் நியமிக்கப்பட்டிருக்கிறார். அடுத்து மகமது அபூபக்கர் என்பவர் சிலோனில் வியாபாரம் செய்பவர். அவரும் அந்தக் கமிட்டியில் இருக்கிறார். கோவிந்த நாடார் என்பவர் மீனவ சமுதாயம் சம்பந்தப்பட்டவர் இல்லை என்பதற்காக, 'நாடார்' என்பதை 'நாட்டார்' என்று மாற்றி, அந்தக் குழுவில் போட்டிருக்கிறார்கள். செபாஸ்டின் ஃபெர்னான்டோ என்கிற ஒருவரையும் போட்டிருக்கிறார்கள். அவர் ஹோட்டல் வியாபாரி. இப்படிப்பட்டவர்களைப் போட்டு, உண்மையான பலன் மீனவ சமுதாயத்திற்குக் கிடைக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்து, மீனவ சமுதாயத்திற்கு வலைகள் பின்ன என்று நைலான் வாங்கியிருக்கிறார்கள். வாங்கப்பட்ட நைலானில் ரூ. 3 லட்சம் பெறுமானம் உள்ளது கடைசியில் உபயோகமில்லாமல்





போய்விட்டதாகத் தெரிகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட புயல் காரணமாக, இராமேஸ்வரம் புயலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கொடுக்க 28 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் அந்த 28 லட்ச ரூபாயும் நேராக புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்கப்படவில்லை. இது சம்பந்தப்பட்ட விவரங்களோடுதான் நான் பேசுகிறேன். அந்த 28 லட்ச ரூபாயையும் நியாயமான முறையில் வினியோகம் செய்யாததால், அத்தகைய தவறுகள் செய்த அதிகாரிகள் யார் யார், ஏன் வினியோகிக்கப்படவில்லை என்பதற்கான காரண, காரிய விளக்கங்கள் கொடுக்க ஒரு விசாரணைக் குழுவை அமைக்கவேண்டும் என்று இந்தச் சட்ட மன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்ளுகிறேன். பணத்தை வினியோகித்தவர்கள், 13 லட்சம் ரூபாய் மட்டும் கொடுத்து விட்டு, மீதம் 15 லட்சம் வினியோகிக்காமல் சில அதிகாரிகள் தங்களுடைய சொந்தப் பணமாக உபயோகித்திருக்கிறார்கள் என்கிற செய்தியும் கிடைத்திருக்கிறது. அதுபற்றி அக்கௌன்டன்ட்-ஜெனரல் கூட அப்ஜக்ஷன் தெரிவித்திருக்கிறார்கள். ஒரு ரசீது அனுப்பியபோது, ரூ. 18 ஆயிரத்திற்கு பொய் ரசீது என்று அவர் கேட்டதற்கு இதுவரையில் அந்த இலாகாவில் இருந்து எந்தவிதமான பதிலும் இல்லை. இப்படி பல ஊழல்கள் நடந்திருக்கின்றன. பல இலாகாக்களில் இப்படிப்பட்ட ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்படியெல்லாம் ஏற்பட்டிருக்கும் ஊழல்களைக் கண்டுபிடிக்க ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதேபோல, இன்றையதினம் பட்ஜெட்டில் துண்டு விழுகிறது, துண்டு விழுகிறது என்று சொல்லும்போது, பலவிதமான துறைகளில் வரிப் பணம் வசூலிக்கப்படாமலேயே இருக்கின்றன என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதாவது, விற்பனை வரி இலாக்காவின் கீழ், 'ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ்' என்ற அடிப்படையில் ரூ. 5,38,13,000 இன்னும் வசூலிக்கப்படாமல் இருக்கிறது. அப்படி வசூலிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன, இத்தகைய சேல்ஸ் டாக்ஸை யார் யார் கொடுக்கவில்லை என்பதையெல்லாம் அறிந்து அவர்களிடத்திலிருந்து இத்தகைய வரிப் பணத்தையெல்லாம் வசூலிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

உணவு இலாகாவில் ஏறக்குறைய ரூ. 7,20,000 செலவழித்து உருளைக் கிழங்கு வாங்குவதாகச் சொல்லி, கடைசியில் ரூ. 6,56,000 நஷ்டம் ஏற்பட்டதாகச் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட நஷ்டங்களெல்லாம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பல இலாகாக்களில் அதிகமான பொருட்களை வாங்கி வைப்பதன் மூலம் இந்த நாட்டின் பொருளாதாரம் பாழாகிறது, அநியாயமாக வட்டி கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். குறிப்பாக, மின்சார இலாக்காவில் பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பொருட்கள் தேங்கிக் கிடக்கின்றன. நான்கு ஆண்டுகளுக்குத் தேவையான பொருட்களை முன்கூட்டியே வாங்கி வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட செயல்களைத் தடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தும் நான் ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. இன்னும் பல கிராமங்களுக்குச் சாலை வசதிகள் கிடையாது. கலவை, ஆர்க்காடு ஆகிய இடங்களில் ஆஸ்பத்திரி வசதிகள் கிடையாது. குறிப்பாக, திமிரி, விளாப்பாக்கம் போன்ற இடங்களில் குடி தண்ணீர் வசதி இல்லாமல் இருக்கிறது. அந்த இடங்களில் குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு இந்த அரசு உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மின்சார இலாக்காவைப்பற்றி நான் பேசுவதற்கு அதிக உரிமை இருந்தாலும், அந்த இலாக்காவின் பொருள் வருகின்ற நேரத்தில் பேசலாம் என்று நினைக்கிறேன். பொதுவாக, அந்த இலாக்காவில் பணி புரியும் ஊழியர்களுக்கு, யாரிடத்தில் தங்களுடைய குறைகளைச் சொல்லிக்கொள்ளுவது என்று தெரியாத நிலையில் யாரும் கேட்பாரற்ற நிலையில் அந்த இலாக்கா இருந்து கொண்டிருக்கிறது. அந்த இலாக்காவில் பணி புரிகின்ற ஊழியர்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை அமைப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்து, இங்கே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் பேசுகிற நேரத்தில், "நீங்கள் கொடுத்த வாக்குறுதிகளையெல்லாம் காப்பாற்ற வேண்டும், உங்களிடத்திலிருந்து மக்கள் அதிகமாக எதிர்பார்க்கிறார்கள்" என்று இந்த ஆட்சியினருக்குச் சுட்டிக் காட்டிப் பேசினார்கள். அதைப்பற்றி மட்டும் ஒரே ஒரு வார்த்தை குறிப்பிட விரும்புகிறேன். வாக்குறுதிகளை எல்லோருமே கொடுத்தார்கள். காங்கிரஸ்காரர்களும் சில வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள். காங்கிரஸ் வெற்றி பெற்றால் இந்த நாட்டிலுள்ள பாங்குகளையெல்லாம் தேசியமயமாக்குவதாகச் சொன்னார்கள். தப்பித் தவறி, இன்றையதினம் பாங்குகளைத் தேசியமயமாக்குகின்ற அந்த அதிகாரம் பெற்ற மத்திய அரசு காங்கிரஸ் கட்சியால்தான் நிறுவப் பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட காங்கிரஸ் கட்சி நடத்தும் மத்திய அரசினர் ஒரு தீர்மானம் போட்டு, "நாங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டோம், இனிமேல் பாங்குகள் எல்லாம் தேசியமயமாக்கப்படும்" என்று செய்துவிட்டு இங்கே வந்து, எங்களைப் பார்த்து "நீங்கள் உங்களுடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள்" என்று சொன்னால், உண்மையிலேயே நாங்கள் பாராட்ட முடியும். அது மட்டுமல்ல. "அரிசி மூன்று படி எங்கே? எங்கே?" என்று கேட்கிறார்கள். அத்தகைய வாக்குறுதிகளைப் பொறுத்த வரையில், நான் ஒன்றே ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1947-ஆம் ஆண்டு நாம் சுதந்திரம் பெறுவதற்கு முன்னால், காலஞ்சென்ற நேரு அவர்கள் மத்திய அரசாங்க ஊழியர்கள் மாநாட்டில் பேசுகிற நேரத்தில்--கம்யூனிஸ்டு கட்சித் தோழர்களுக்குக்கூடத் தெரியும், "நீங்களெல்லாம் இந்த அளவிற்குப் பரிதாபகரமான நிலையில் இருக்கிறீர்களே; நாடு





சுதந்திரம் அடைந்தால், எங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் என்ன என்ன செய்வோம் தெரியுமா?" என்று கேட்டு பலவற்றைக் குறிப்பிட்டார்கள். அதை மனத்திலே வைத்துக்கொண்டிருந்த அந்தத் தோழர்கள்—மத்திய அரசாங்க ஊழியர்கள்—சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு, ஆகஸ்டு 15ந் தேதிக்குப் பிறகு, அக்டோபர் மாதம், அவர்கள் நேராக நேரு பிரானை அடைந்து, அவரைச் சந்தித்து, "ஐயா! நீங்கள் ஆறு மாதங்களுக்கு முன்னால் எங்களுக்கு வாக்குறுதிகள் அளித்தீர்களே, நினைவிற்கு வருகின்றனவா?" என்று கேட்டு, "ஒருகால் வாக்குறுதிகள் நினைவிற்கு வரவில்லையானால், இப்பொழுது நினைவுபடுத்துகிறோம்" என்று "இதுதான் நீங்கள் சொன்ன வாக்குறுதிகள்" என்ற விளக்கமாகச் சொன்னபோது, "ஓகோ, அதைச் சொல்லுகிறீர்களா? நான் அப்பொழுது சொன்னது வேறு; அப்பொழுது நான் இருந்த நிலை வேறு" என்று நேரு அவர்கள் அவர்களிடம் சொன்னார்கள். "At that time I was an agitator, but at present I am an administrator" என்று சொன்னார்கள். "நான் இப்பொழுது நிர்வாகத்தில் இருக்கிறவன்; முன்பு போராடிய நேரத்தில் உங்களுக்காக அப்படி வாதாடினேன்; இப்பொழுது நிர்வாகத்தில் இருக்கிற காரணத்தால் உடனடியாக எதையும் செய்ய முடியாது" என்று சொன்னார்கள். ஆனால், அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடனே, அரசாங்க ஊழியர்கள் அவர்களை அணுகி, "நீங்கள் இப்படி இப்படி எங்களுக்குச் செய்யவேண்டும்" என்று கேட்கவில்லை. இவர்கள் கேட்பதற்கு முன்னாலேயே, அறிஞர் அண்ணா அவர்கள் முந்திக்கொண்டு, அரசாங்க ஊழியர்களைச் சந்தித்து, "உங்களுடைய பிரச்சினைகள் எனக்குத் தெரியும்; தீர்க்க வேண்டிய முறையில் தீர்ப்பேன்; ஒத்துழையுங்கள்" என்று தெரிவித்தார்கள். ஆகவே திராவிட முன்னேற்றக் கழகம் கொடுத்த வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றும். அதே நேரத்தில், ஏற்கனவே முன்னேற்றக் கழகம் சொல்லிவந்த பிரச்சினை, மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும் இடையே இருக்கின்ற அடிப்படைச் சம்பள பிரச்சினை தீர்க்கப்படும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த ஆட்சி எடுத்துக்கொள்ளும் என்று கூறி, இந்த விவாதத்தில் பேச சந்தர்ப்பம் அளித்த மதிப்பிற்குரிய சட்டமன்றத் தற்காலிகத் தலைவருக்கு நன்றி கூறி, விடை பெற்றுக்கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. மு. கிருஷ்ணமூர்த்தி : மேன்மை தங்கிய சட்டமன்றத் தற்காலிகத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து இரண்டொரு கருத்துக்களை எடுத்துக்கூறுகிற வாய்ப்பினை அளித்தமைக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கடந்த இருபதாண்டுக் காலமாக உணவுப் பிரச்சினையைக் கூடத் தீர்க்க முடியாமல் இந்த நாட்டில் ஆட்சியைச் செலுத்திவிட்டுச் சென்ற காங்கிரஸ் கட்சியானது, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு இன்னும் முப்பது தினங்கள் கூட ஆகாத நிலையில், இந்த

[திரு. மு. கிருஷ்ணமூர்த்தி] [1967 மார்ச் 29

ஆட்சியினர் இங்கே பல பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவில்லையே என்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வருத்தப்படுகிறார்கள். பல பிரச்சினைகளை சென்ற கால ஆட்சியினர் தீர்த்து வைக்காததன் காரணமாகத்தான் மக்கள் ஆட்சியிலே ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். நமது கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல, மக்களின் உண்மையான பல குறைகளை நீக்குவதற்கான கொள்கைகளையும் திட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு இந்தப் புதிய அமைச்சரவை ஆட்சியில் அமர்ந்துள்ளது. ஆனால், இன்று எதிர்க்கட்சியாக அமர்ந்திருக்கும் காங்கிரஸ்காரர்களால் இருபது ஆண்டுகளில் செய்து முடிக்க முடியாததை, இந்த ஆட்சி முப்பது தினங்களுக்குள் செய்து முடிக்கவில்லையே என்று வருத்தப்படுகிறார்கள். அப்படிப்பட்ட எதிர்க் கட்சி அங்கத்தினர்களுக்குத் தங்கள் மூலம் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது இதுதான். அண்ணாவின் மந்திரிசபையானது முன்பு கொடுத்த வாக்குறுதிகளை வலிவோடும் பொலிவோடும் செய்து முடிப்பார்கள் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த உண்மையை மன்றத்திலே வீற்றிருக்கிற நாம் அனைவரும் நன்றாக உணர்ந்து, புதிய அரசுக்கு ஒத்துழைப்பை நல்ல முறையில் தரவேண்டியது நம்முடைய நீங்காத கடமை என்பதையும் அனைவரும் உணர வேண்டும் என்று தங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

விலைவாசி ஏற்றத்தாலும், தேவைக்கேற்ற அளவிற்கு உற்பத்தி பெருகாததால் நாட்டு மக்கள் பட்ட கஷ்டத்தை கடந்த காலத்தில் நாட்டை ஆண்டு வந்தவர்கள் சரியாக உணரவில்லை. நமது கவர்னர் அவர்களுடைய உரையில், உணவு உற்பத்தியைப் பெருக்குவதிலும், உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களை சரியாகப் பங்கிட்டு வழங்குவதிலும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதிலும், நெருக்கடிகளைத் தளர்த்துவதிலும் இந்த சர்க்கார் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று நாட்டு மக்களுக்கு நல்ல உறுதியினை கவர்னர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

உணவுக் கொள்முதல் திட்டத்திலிருந்து தவறி, நாட்டிலே ஏற்பட்டிருக்கிற விலைவாசி ஏற்றத்தையும் கட்டுப்படுத்தாமல், குறிப்பாக விவசாயிகளை முன்னாலே ஆண்டு வந்தவர்கள் கெடுபிடி செய்துவந்தார்கள். பெரு நிலக்கிழார்களுக்குச் சில சலுகைகளைக் கொடுத்து, சிறு நிலக்கிழார்களைக் கெடுபிடிசெய்து வசூலித்ததன் காரணமாக, உணவுப் பொருள்கள் குறிப்பிட்ட அளவிற்குக் கிடைக்காத நிலையில் நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. அந்த அடிப்படைத் திட்டங்களையெல்லாம் தகர்க்கின்ற முறையில், கவர்னர் அவர்கள் அரசாங்கம் கொள்முதல் திட்டத்தைக் கெடுபிடியோடு செயல்படுத்தாது என்ற உத்தரவாதத்தையும் தந்திருக்கிறார்கள். என்றாலும், நான் குறிப்பாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். விவசாயக் குடும்பத்தில் பிறந்தவனாக நான் இருக்கிற காரணத்தினால், விவசாயிகளுடைய நிலைமையை நான் நன்கு அறிவேன். இங்கே பல நண்பர்கள் உணவுப் பற்றாக்குறைப் பிரச்சினையைக் குறித்துத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். உணவ



1967 மார்ச் 29] [திரு. மு. கிருஷ்ணமூர்த்தி]

பெருக்க வேண்டும், அதே நேரத்தில் உணவுப்
உற்பத்தியைப் பொருள்களின் விலையைக் குறைக்கவேண்டும் என்றும் பேசினார்கள்.
அதே எண்ணத்தையும் கருத்தையும் கொண்டவனாக நான் இருந்
தாலும், சிலவற்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இன்
றைக்கு கோயம்புத்தூர் பகுதியிலும், மற்ற மற்ற மாவட்டங்களிலும்
பருத்தி, புகையிலை, கரும்பு போன்றவற்றைப் பயிரிடுகிறார்கள்
அப்படிப் பயிரிடுகிற நேரத்தில், ஏக்கர் ஒன்றுக்கு அதிலே ஆயிரம்
ரூபாயிலிருந்து ரூ. 1,200, ரூ. 1,300 வரைக்கும் கூட வருமானம் வரு
கிறது. ஆனால், ஒரு விவசாயி முறையாக, தீவிர விவசாயத்
திட்டத்தின் அடிப்படையில் நெல்சாகுபடி செய்தாலும், அவனுக்கு
ஏற்படுகிற நிகர வருமானம் கிட்டத்தட்ட 300 ரூபாய்தான். அதை
விட இன்னும் தீவிரமாகச் சாகுபடி செய்ய முடிந்தால்,
350 ரூபாய்க்கு மேல் ஒரு ஏக்கரில் பெற முடியாது. இப்படிப்பட்ட
நிலைமை இருக்கிறபோது, நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால்
இருந்த விலையையும், இன்றுள்ள விலையையும் ஒப்பிட்டுப் பார்த்
தால், ஏழு அல்லது எட்டு ரூபாய்தான் இன்றைக்குச் சர்க்காரிலே
அதிகப்படியான விலை கொடுத்திருக்கிறார்கள் என்பதை உணர்
கிறோம். இப்படி ஒரு சிறு அளவிற்கே விவசாயி உற்பத்தி செய்கிற
நெல்லின் விலை உயர்ந்திருக்கும்போது, அதை உற்பத்தி செய்கின்ற
விவசாயி ஒருவன், தன்னுடைய குடும்பத்திற்குத் தேவைப்படுகிற
துணி மணிகளை வாங்கும்போது, அவற்றின் விலை அதிகரித்திருக்
கிறது. விவசாயத்திற்குத் தேவையான மண்வெட்டி போன்ற
விவசாயக் கருவிகளை வாங்குவதற்குச் சென்றால், அதன் விலையும்
அதிகமாக இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது,
விவசாயி உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு விலையை அதிகமாகக்
கொடுத்தால்தான் உணவு உற்பத்தியைப் பெருக்குகின்ற ஒரு
நிலைமை ஏற்படும். அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறபோது,
ரூபாய்க்கு மூன்று படி போடுங்கள், ரூபாய்க்கு ஒரு படி போடுங்
கள் என்ற கோரிக்கையையும், விவசாயிகள் உற்பத்தி செய்கிற
நெல்லுக்கு நிர்ணயித்திருக்கும் விலையையும் கருத்தில் கொண்டு,
செயல்பட வேண்டும். இதையெல்லாம் நான் குறிப்பிடும்போது,
அரிசி விலையைக் கூட்ட வேண்டும் என்று நான் வாதாடுவதாக
யாரும் கருதிவிடக் கூடாது. சிலோன் போன்ற நாடுகளில்
அங்குள்ள அரசாங்கங்கள் விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய
விலையைக் கொடுத்து தானியங்களை வாங்கி, மக்களுக்கு
குறைந்த விலையில்—மக்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலையில்
கொடுத்து வருகிறார்கள். இதன் காரணமாக உற்பத்திப் பெருக்
கத்தில் விவசாயிகளுக்கு நல்ல ஊக்கம் அளிக்கப்படுகிறது. அது 4-00 பிற்பகல்
போன்ற நல்ல திட்டங்களைக் கொண்டு வந்தால் உணவு உற்பத்தியை
நல்லமுறையில் பெருக்க முடியும் என்று தெரிவித்துக்கொண்டு என்
உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : கனம் தலைவர் அவர்களே, இன்றைக்கு
இந்த மன்றத்தில், குறிப்பாக உணவுப் பிரச்சினையைப் பற்றி நான்
சில கருத்துக்களை எடுத்துக் கூற விரும்புகிறேன். உணவுப்
பிரச்சினை மிகவும் முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது
என்பதில் சந்தேகம் கிடையாது. இன்றைக்கு அரசாங்கம் இந்தப்
பிரச்சினையில் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கைகளை நான்

வரவேற்கிறேன். ரேஷனுக்காக எடுத்துக்கொண்டிருக்கிற பகுதி
களின் மக்களுக்காக 9 லட்சம் டன் அரிசி தேவைப்படுகிறது, அந்த
அளவுக்கு கொள்முதல் செய்ய வேண்டிய நிலையில் அரசாங்கம்
உறுதியாக இருப்பதாக இன்று காலையில் நம்முடைய உணவு
அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் கூறினார்கள். மக்களுக்கு
நாம் உணவு கொடுக்க வேண்டுமென்பதிலே யாருக்கும் ஆட்சேபனை
இருக்க முடியாது. ரேஷன் திட்டத்திற்குள்ளே அகப்படாத பகுதி
யிலுள்ள மக்களின் நிலைகளையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ள
வேண்டும். ரேஷன் அமலில் இல்லாத பகுதிகளில் ஏழை விவசாய
மக்கள், கூலி வேலை செய்பவர்கள் இன்றையதினம் ஒரு படி அரிசி
மூன்று ரூபாய், நான்கு ரூபாய் கொடுத்து வாங்க வேண்டிய துர்ப்
பாக்கிய நிலையில் இருக்கிறார்கள். இந்த நாட்டிலே உள்ள உழைக்
கக்கூடிய, சாதாரண நிலையிலே இருக்கக்கூடிய, சமூகத்தின் அடித்
தளத்திலே பன்னெடுங்காலமாக உணவு இல்லையே என்று வாடும்
மக்களையும் நாம் விட்டுவிட முடியாது. அதற்கான வழிவகைகளைக்
காண வேண்டும். கள்ளக்கடத்தல், பதுக்கல் போன்ற நடவடிக்
கைகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் வர
வேற்கத் தக்கவையென்று குறிப்பிட விரும்புகிறேன். சில நேரங்
களில் நிர்வாகிகள் கஷ்டப்பட நேரிடுகிறது. நாம் இந்தக் காரியங்
களைச் செய்வதற்கு அரசாங்க அதிகாரிகளை மட்டும் நம்பியிராமல்,
சர்வகட்சி கமிட்டிகளை கிராமங்கள்தோறும், நாடு முழுவதிலும்
அமைக்க வேண்டும். தொண்டர் இயக்கம் ஒன்றை அமைக்க
வேண்டும். அந்த வெகுஜன இயக்கமானது, பதுக்கல், கள்ளக்
கடத்தல், கொள்ளை லாபம் போன்ற கொடுமையான நடவடிக்கை
களிலிருந்து மக்கள் விடுபடுவதற்கு உதவியளிக்க வேண்டும். முன்பு
ஆட்சியில் இருந்தவர்கள் அரசாங்க அதிகாரிகளை மட்டும் நம்பிய
தால்தான் இந்த நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. பொதுமக்க
ளுடைய ஒத்துழைப்பு கிடைக்காததால்தான் அவர்கள்
முயற்சியின் பலன் தெரியாமல் போய்விட்டது. மக்களுடைய
ஒத்துழைப்புடன் தான் நிர்வாகத்தை நன்றாக நடத்தி உற்பத்தி
யைப் பெருக்க முடியும், அதேசமயத்தில் சமூகநல விரோதச் சக்தி
களையும் ஒழிக்க முடியும். சர்வ கட்சி தொண்டர் இயக்கத்தையும்
அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் நமது
அரசாங்கமானது இந்தத் திட்டத்தை ஒரு அவசரகாலத் திட்ட
மாக—யுத்தகாலத் திட்டமாக எடுத்துக்கொண்டு வேகமான முறை
யில் முன்னேற்றம் காண வேண்டும். அல்லும் பகலும் உணவு உற்
பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதே நமது நோக்கமாக இருக்க
வேண்டும். தஞ்சை ஜில்லாவிலே 13 லட்சம் ஏக்கரில் நன்செய்
சாகுபடி செய்யப்படுகிறது. அதிலே பெரும்பாலான பகுதிகளில்
ஒரு போகம்தான் பயிரிடப்படுகிறது. இரண்டு போகம் என்று
சொல்வது வெறும் ஏட்டளவில்தான் சொல்லப்படுகிறது. ஒரு
போக நிலத்தை இரண்டு போக நிலமாக மாற்றுவது என்பதில்
பல சங்கடங்கள் இருக்கின்றன. இன்றைக்கு குறுவை சாகுபடி
செய்கிறோம். இந்தக் குறுவை சாகுபடி மேட்டு நிலங்களில்தான்
செய்யப்படுகிறது. பள்ள இடங்களில் இதற்கு வடிகால் வசதி



செவ்வனே செய்து தரப்பட வேண்டும். அதற்கு அரசாங்கம் தக்க
நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். சர்வ கட்சித் தொண்டர்கள் இயக்கம் இருக்கு
மானால் கூர்ந்து கவனித்து அவ்வப்பொழுது கவனம் செலுத்தும்
என்று கூறிக்கொள்கிறேன். மேலும் நாம் பாசனக் கால்வாய்களை
நல்லமுறையிலே செப்பனிட வேண்டும். நிலம் எல்லாம் ஒரே
இடத்தில் இருந்தால் மிகவும் காம்பாக்டாக இருக்கும். குறுவைச்
சாகுபடி புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் நடைபெறுகிறது. அந்தக்
நெல்லை அறுத்து சேர்த்து வைக்க களம் வசதி கிடையாது. தை
மாதத்தில் சம்பா அறுவடைக் காலம். அப்போது களவசதியில்லாத
காரணத்தினால் நெல்லை வயலிலே போட்டு வைப்பதால் நிறைய
நெல் பாழாகிறது. மேலும் நெல்லைக் கொண்டுவர சரியான பாதை
வசதிகள் கிடையாது. அதற்காக அப்ரோச் ரோடுகள் போட
வேண்டும்.

அதுமட்டுமல்ல, இப்போது ஏ.டி.டி., 27 என்ற புதுரக நெல்
கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது நல்ல விளைச்சல் கண்டிருக்
கிறது. ஆகவே, அந்த நெல்லைத்தான் பயிரிட உதவ வேண்டும்.
இரண்டாவது போகம் பயிரிடுவதற்கு 15 நாட்களுக்கு முந்தி
நாற்று நட்டாக வேண்டும். எல்லாவிடங்களிலும் கிணறுகள், பம்பு
செட்டுகள் இவைகளையெல்லாம் அமைத்துத் தரவேண்டும். பட்டுக்
கோட்டையிலும், அறந்தாங்கியிலும், மன்னார்குடியிலும் கீழே
ஊற்றுக் கால்வாய்கள் இருக்கின்றன. கிணறுகள் தோண்டு
வதற்குப் பணம் கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் கிணறுகள்
தோண்டுவதற்கு 20 அடி, 25 அடிகள் தோண்டினாலும் தண்ணீர்
கிடையாது. அம்மாதிரியான இடங்களில் ஊற்றுப் போர் பண்ண
வேண்டும்.

மேலும் நன்செய் நிலங்கள் எல்லாம் பல இடங்களில் சிதறுண்ட
நிலையில் இருக்கின்றன. ஒருவருக்கு பத்து ஏகர் நிலம் இருக்கிறது
என்றால் ஒரே இடத்தில் இருப்பதில்லை. பல இடங்களில் இருப்ப
தால் அந்தந்த இடங்களில் கிணறுகள் வெட்ட வேண்டிய நிலை
ஏற்படுகிறது. ஒரு ஏக்கருக்கு ஒரு கிணறு வெட்டப்படுகிறது.
இதற்கு இரண்டாயிரம், மூன்று ஆயிரம் ரூபாய் என்று செலவா
கிறது. அப்படியில்லாமல் நம்முடைய பணம் சமூகத்திற்காக,
சமூகத்திலுள்ள எல்லா மக்களின் நன்மைக்காக செலவிடப்பட
வேண்டுமென்ற நோக்கத்தில் பத்து ஏக்கருக்கு ஒரு 'கம்யூனிடி
வெல்' என்று ஏற்படுத்தி, அதற்கு பத்தாயிரம், பதினைந்தாயிரம்
ரூபாய் என்று செலவு செய்தால் நல்ல பயன் ஏற்படும். இந்த
கம்யூனிடி வெல்லில் ஒரு பம்பு செட் போட்டால் சாகுபடி செய்வ
தற்கு வசதிகள் ஏற்படும் என்று நம்புகிறேன். துண்டு துண்டு
நிலங்களாக இருப்பதனால் விளைச்சல் கம்மிப்படுகிறது. இதுவரை
இருந்த சர்க்கார் அதில் கவனம் செலுத்தவில்லை. இதே சட்ட
மன்றத்தில் ஒரு சட்டம் கூடச் செய்ததாக அறிகிறேன். ஆனால்
அமுல்படுத்தப்படவில்லை. மக்களிடத்திலே இதுபற்றிய நல்ல
கருத்தை ஏற்படுத்தி பரஸ்பரம் அவர்களே நிலத்தை மாற்றிக்
கொண்டு ஒவ்வொர் இடத்தில் ஒன்று சேர்க்க முன்வரவேண்டும்.

சிதறுண்டு கிடக்கிற ஒரு ஏக்கராவில் உற்பத்தியாவதைவிட, ஒரே இடத்தில் சேர்ந்தாற்போல இருக்கிற ஒரு ஏக்கராவில் அதிகம் உற்பத்தி செய்ய முடியும். சாகுபடிச் செலவும் குறையும். பஞ்சாப் மாநிலத்தில் சிதறுண்ட நிலத்தை ஒன்று சேர்க்க எடுத்துள்ள நடவடிக்கைகளை நம் சர்க்காரும் ஆராயவேண்டும். எத்தனை ஏக்கருக்குக் கீழ் துண்டாடக்கூடாது என்று அவர்கள் வைத்திருக்கிறார்கள் என்றும் அறிய வேண்டும்.

அடுத்து, எங்களுடைய பகுதியில் வி.எம்.பி. கனுவில் ஜூன் 12-ஆம் தேதி வாக்கில் தண்ணீர் விட்டால் வயல்களுக்குப் போய்ச் சேர ஒரு மாதம் ஆகிறது. காரணம் வாய்க்கால்கள் சரியான முறையில் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. சரியான முறையில் மதகுகள் இல்லை. டெம்பாரி பைப்புகள் போடப்பட்டிருக்கின்றன. இந்தச் சர்க்கார் அவற்றை எல்லாம் நல்ல முறையில் சீர்திருத்தியாக வேண்டும். ஏரிகள் மராமத்து செய்யப்படுகிறது. அப்புறம் அவற்றை யாரும் பராமரிப்பதில்லை. அதன் காரணமாக சரியான முறையில் சாகுபடி செய்வதில்லை. அப்படியின்றி ஏரிகளைச் செப்பனிடுவதோடுகூட, அவற்றை இன்னார் பராமரித்து வரவேண்டும் என்றும் ஏற்பாடு செய்து, அந்த ஏரிகளில் உள்ள தண்ணீரைக் கொண்டு கோடைச் சாகுபடிக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். ஆற்றில் நீர் வரும்போது ஏரிகளை நிரப்பி வைத்துக்கொண்டால் அதைக் கோடைச் சாகுபடிக்கே உபயோகப்படுத்தலாம் என்பதாக கோடைச் சாகுபடியை நாம் செய்தாக வேண்டும். இப்போது கோடைச் சாகுபடி என்று செய்வதில்லை. பட்டுக்கோட்டை, அறந்தாங்கிப் பகுதியில் கோடைப் பாசனம் கிடையாது. அதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, இன்றைக்கு ஏராளமான தரிசு நிலங்கள் இருக்கின்றன. நிலம் இல்லாதவர்களிடத்தில் தரிசு கொடுக்கிறோம் என்று கொடுக்கிறார்கள். அந்த நிலத்தைச் செப்பனிடவே முடியாது, நிலம் உள்ளவர்களிடத்திலேயே அதை அந்த விவசாயி விற்றுப் போகக்கூடிய நிலை இருக்கிறது. நமது மாநிலத்தில் இதற்காக என்று நிலப்படையையே அமைக்கவேண்டும். அந்த நிலப் படையிடத்தில் நவீன விவசாய இயந்திரங்களை எல்லாம் கொடுத்து நம் ராஜ்யத்தில் உள்ள எல்லா தரிசு நிலங்களையும் செப்பனிட்டு விவசாயத்திற்குத் தேவையான கிணறுகள், பம்பு செட்டுகள் எல்லாம் வைத்து—நிலம் இல்லாத ஏழை விவசாயிகளிடத்திலே கொடுத்தால் உடனடியாக சாகுபடி செய்ய முன்வருவார்கள். அதனால் நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கிற பிரச்சினையும், உணவு உற்பத்திப் பிரச்சினையும் தீர்க்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மூலம் வேலை வாய்ப்பு பெருகும். நாட்டு மக்களின் செல்வ நிலை உயரும் என்று சொல்லி, பேச அனுமதி அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. க. கோமதிசங்கர தீட்சதர்: தலைவர் அவர்களே, கௌரவம் மிக்க கவர்னர் அவர்களது உரையில் மீது எதிர்க்கட்சியாக விளங்குகிற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நான் சில கருத்





துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். காங்கிரஸ் ஆட்சியில் கவர்னர்கள் ஆற்றிய உரைகள் போலத்தான் இன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கவர்னர் ஆற்றிய உரை இருக்கிறது. காரணம் அநேகமாக காங்கிரஸ் கட்சியின் கொள்கைக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைக்கும் வேறுபாடு இல்லை. காங்கிரஸ் கட்சியின் கொள்கை ஜனநாயக சோஷலிசம். திராவிட முன்னேற்றக் கழகம் விஞ்ஞான சோஷலிசம் என்கிறார்கள். இப்படி கொள்கை ஒற்றுமை இருப்பதனால்தான் கவர்னர் உரையில் வேறுபாட்டைக் காண முடியவில்லை. ஜனநாயகத்தை இந்த நாட்டில் நல்ல முறையில் வளர்த்து வந்திருப்பது காங்கிரஸ் கட்சிதான். ஜனநாயகத்தின் வளர்ச்சியாக—காங்கிரஸ் கட்சியின் கொள்கையில் இருந்து மாறுபடாத, திராவிட முன்னேற்றக் கழகம் மாற்றுக்கட்சியாக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்துள்ளது பாராட்டத் தக்கதாகும். கூட்டணி ஒத்துழைப்புடன் அது பெருமையோடு பதவிக்கு வந்திருக்கிறது. காங்கிரஸ் கட்சி தோற்றுவிட்டது என்பதனால் வீழ்ச்சியுற்றதாக நினைக்க வேண்டாம். தோல்வியே வெற்றியின் அடிப்படை. இன்று தோற்றவர்கள் நாளை வெற்றி பெற்று வரமுடியும். அதுதான் ஜனநாயகம். எங்களுடைய தோல்விக்கான காரணங்களைக் கண்டறிந்து—மக்களுக்கு முழு மூச்சுடன் சேவை செய்வதையே நாங்கள் லட்சியமாகக் கொண்டுள்ளோம். இந்த நான்காவது பொதுத்தேர்தலில் மக்களின் ஆதரவைப்பெற நாங்கள் தவறிவிட்டோம். அதற்குப் பல காரணங்கள் உண்டு. இருந்தும் வெற்றி பெற்ற கட்சிக்கு 39 சத விகிதம் வாக்கு கிடைத்தது என்றால், தோல்வியுற்ற காங்கிரஸ் கட்சிக்கு 41 சத விகிதம் கிடைத்திருக்கிறது. இதிலிருந்தே காங்கிரஸ் தோற்றுவிடவில்லை என்பதைத் தெரிந்துகொள்ளலாம். மக்களுக்கு சேவை செய்யவே நாங்கள் முழுமூச்சாக கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறோம். நல்ல ஆட்சிக்கு நாங்கள் ஒத்துழைப்புத் தரக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கடந்த இரண்டாண்டுகளாக வறட்சியால் ஏற்பட்ட உணவுப் பஞ்சத்தைச் சமாளிக்க நம்மைப் போன்ற தமிழர் ஒருவர் டெல்லியிலே உணவு மந்திரியாக இருந்து மிகவும் சிரமத்துடன் போராடி சமாளித்து வந்திருக்கிறார் என்றால், அதைக்கண்டு தமிழர்களாகிய நாம் பெருமைப்பட வேண்டும். அது தமிழ்நாடே பெருமை அடையத்தக்கது. உணவுப் பிரச்சினை அவ்வளவு சங்கடமானது. ஆகையால் இந்த அரசாங்கம் அப்பிரச்சினையில் தன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்தி, கொள்முதல் விநியோகம், சாகுபடி ஆகிய துறைகளில் தீவிர முறையில் செயல்படுவது என்பது பாராட்டத்தக்கது. இதிலே பெருங் கஷ்டங்கள் இருக்கின்றன. உணவு உற்பத்தியைப்பற்றி எடுத்துச் சொல்லும் பொழுது நீர்ப்பாசனங்களை, சிறிய நீர்ப்பாசனங்களை, பெரு நீர்ப் பாசனங்களை நல்ல முறையிலே செப்பனிட்டு, வேளா வேளைக்கு அவர்கள் பயிர் செய்வதற்கு தண்ணீர் கொடுக்கச் செய்ய நாம் கடமைப்பட்டிருக்கிறோம். என்னுடைய தொகுதியிலே ராமநதி, கடனா நதி என்ற இரண்டு நதிகளில் அணைக்கட்டு வேலைகளும்

பட்ஜெட்டிலே சேர்க்கப்பட்டு அவைகளுக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றுவிட்டது. இரண்டு அணைக்கட்டுகளையும் கட்டிவிட்டால் திருநெல்வேலி மாவட்டத்தில் 6,000 ஏக்கர் மேலாக நிலம் நல்ல முறையில் விளைவை அளிக்கும். ஆகையினால் இந்த இரண்டு வேலைகளிலே அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

உணவு உற்பத்தியில் நாம் விவசாயியினுடைய நிலைமையையும் கவனிக்க வேண்டும். விவசாயி உற்பத்தி செய்வதற்கு, விஞ்ஞான ரீதியில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய நல்ல விதைகள், பூச்சி மருந்துகள், மேலும் அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் எல்லாம் நாம் செய்து கொடுத்து அவர்களுக்கு ஊக்கமளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் கொள்முதல் செய்யும்பொழுது நல்ல முறையிலே கொள்முதல் செய்வதற்கு வழியாக விவசாயியே முன்வந்து கொடுப்பதற்கான ரீதியிலே மிக சுகமாக, நோவு இல்லாமல் கொள்முதல் செய்ய வேண்டும். என்னுடைய தொகுதியாகிய அம்பாசமுத்திரத்தில் 71 மைனர் இனாம்களும், 6 மேஜர் இனாம்களும் சர்க்காரால் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன. 6 மேஜர் இனாம்களில் உள்ள விவசாயிகள், நமக்கு நல்ல காலம் வந்துவிட்டது என்று சந்தோஷப்பட்டு விவசாயத்திலே கண்ணுங் கருத்துமாக ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் மிகவும் செல்வாக்கும், செல்வமும் உள்ள காரணத்தினாலே ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட் என்று ரிட் போட்டிருக்கிறார்கள். இனாம்தார் விவசாயிகளுடைய உரிமைகளைப் பறிப்பதற்கு முயற்சிக்கிறார்கள். சௌந்திபுரம், கோடனங்குளம் போன்ற இடங்களிலுள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதிகாரிகள் விவசாயிகளுடைய பாட்ட நெல்லை அரசாங்கத்திற்கு வாங்கிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது ரிட் போடப்பட்டிருப்பதினாலே நெல்லை யாருக்குக் கொடுக்கவேண்டும் என்று தெரியவில்லை. ஆகையினால் விவசாயிகளுடைய கஷ்டங்களைக் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பங்கீடு பற்றி நாம் மிகவும் ஜாக்கிரதையாகச் செய்தால் தான் மக்களுக்கு உணவு நிச்சயமாகக் கொடுக்கலாம். விக்கிரமசிங்கபுரம் போன்ற இடங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு அரிசி போதுமான அளவு கிடைப்பது இல்லை. அங்கே ஹார்வி மில் தொழிலாளர் கூட்டுறவு சொசைட்டி நல்ல முறையில் பணியாற்றி வருகின்றன. முனிசிபாலிட்டியிலே ஒரு தொழிலாளிக்குக் கிடைக்கக்கூடிய ரேஷனைவிட அங்கே ஹார்வி மில்லிலே வேலை பார்க்கின்ற தொழிலாளிக்கு குறைவான ரேஷன்தான் கிடைத்து வருகிறது. இங்கே 8 அவுன்ஸ், ஆனால் அங்கே 7 அவுன்ஸ்தான் கொடுக்கிறார்கள். ஆகவே விக்ரம சிங்கபுரத்திலே உள்ள தொழிலாளர்களுக்கும், முனிசிபாலிட்டியிலே உள்ள தொழிலாளர்களுக்கு எந்த அளவுக்குக் கொடுக்கிறார்களோ அந்த அளவுக்குக் குறையாமல் ரேஷன் கொடுக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அது மாத்திரமல்ல, உணவுப் பங்கீட்டிலே எந்த ஸ்டோர் ஆகட்டும், நல்ல முறையிலே பங்கீடு செய்வது





இல்லை. அங்கே நெசவுத் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். கிராமங்களிலே உணவுப் பங்கீடு செய்யாமல் போனால் அவர்கள் கஷ்டப்படுவார்கள். ஸ்டாச்சுட்டரி ரேஷனிங் முறை மூலம் கொடுப்பது மாத்திரம் பெரிதல்ல, கிராமங்களிலே உள்ள மக்களுக்கும் உணவு கிடைக்கும்படிச் செய்யவேண்டும். அப்பொழுதுதான் அங்கேயுள்ளவர்கள் ஆதரிப்பார்கள். கிராமத்திலே உள்ள மக்கள் உணவு பெறுவதற்கு ரேஷன் என்ற முறையில் இல்லாவிட்டாலும் வேறு முறையில் உணவு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது.)

**மதிப்பிற்குரிய தலைவர் (திரு. ஏ.வி. பி. ஆசைத்தம்பி):** அடுத்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் . . . .

THIRU GOMATHISANKARA DIKSHIDAR : Sir, I will finish my speech in one or two minutes. அதோடு குடும்பக்கட்டுப்பாடுத் திட்டம், கைத்தறித் தொழிலாளர்கள் மேல் நிலை இவற்றைப்பற்றியெல்லாம் இந்தக் கவர்னர் உரையில் எடுத்துக்காட்டாது போனாலும் அவற்றைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முக்கியமாக சேலம் ஸ்டீல் பிளான்ட், அதோடு திருநெல்வேலி, கன்னியாகுமரி ரயில் பாதை இவற்றை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வந்தனம்

***திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, [கவர்னர் பெருமான் உரையின்மீது, உரையை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல இருக்கிறேன். காங்கிரஸ் ஆட்சியை மாற்றிய பொதுமக்களை மிகவும் பாராட்டுகிறேன். புதிய ஆட்சியையும் அமைச்சரவையையும் நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்] கவர்னர் பெருமான் உரையிலே எலக்ஷன் சுமுகமாக நடந்ததாக குறிப்பிட்டிருக்கிறார்கள் குறிப்பாக என்னுடைய தொகுதியில் என்னை எதிர்த்து நின்ற காங்கிரஸ்காரருக்கு அனுகூலமாகப் போலீஸ் அதிகாரி ஒருவர் லஞ்சம் கொடுப்பதற்கு உடந்தையாக இருந்தார். அது மட்டுமல்ல, அங்கே லஞ்சம் கொடுக்காமல் பார்த்துக் கொள்வதற்காக இருந்த மாணவர்களையெல்லாம் அடித்து, அடித்து துரத்திவிட்டு, வார்டுகளிலே காங்கிரஸ் அபேட்சகர் பணம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தார். தேவகோட்டை நகரில் திராவிட முன்னேற்றக் கழகத்து ஓர்க்கர்களையும், சுதந்திராக் கட்சி ஓர்க்கர்களையும் அவர் அடித்து அடித்து துன்புறுத்தி விரட்டிவிட்டு, லஞ்சம் கொடுப்பதற்கு உடந்தையாக இருந்தார். தேர்தல் முடிந்த இரவு, முப்பையூர் என்ற கிராமத்தில் காங்கிரஸ்காரர்களாலே ஏவப்பட்ட ஆட்களால் எனது ஆதரவாளர்கள் வெட்டப்பட்டு, வேல்கம்பால் குத்தப்பட்டு தொந்தரவு செய்யப்பட்டு, அதனாலே 13 பேர்களை காயப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் ஆஸ்பிடலில் பல நாள் இருந்தார்கள். இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்பொழுது தேர்தல் சட்டப்படி, நியாயமாக நடந்ததாக நாம் சொல்ல முடியாது. ஆகவே தேர்தல் ஒழுங்காக நடந்தது என் தை நாம் ஒப்புக்கொள்வதற்கு

இல்லை. காங்கிரஸ் ஆட்சியை மக்கள் ஒரேயடியாக மாற்றிவிட்டார்கள். நாட்டிலே இருந்த விலை உயர்வு, எல்லாப் பண்டங்களினுடைய விலை உயர்வும் அரசாங்கம் நிர்வாகத்திலே தலையிட்டதும் அந்த ஆட்சி மாற்றப்பட்டதற்குக் காரணம் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆனால் அதே நேரத்திலே மக்கள் மாற்று ஆட்சியிலே விலைவாசிகள் குறையும், ஜனங்களுக்கு சுபிட்சம் ஏற்படும் என்ற நம்பிக்கையிலேதான் ஓட்டளித்து இருக்கிறார்கள். ஆட்சி மாறியதும் விலை படிப்படியாகக் குறைந்தது. ஆனால் இப்பொழுது கொள்முதல் கெடுபிடிக்கேற்ப விலையும் உயர்ந்து கொண்டே போகிறது. இந்தமாதிரி கொள்முதல் கெடுபிடி ஏற்பட்டால் நிச்சயமாக விலை குறையாது. விலை ஏறிக்கொண்டேதான் போகும். விலையைக் குறைக்கவேண்டுமென்றால், கண்ட்ரோலை ரத்து செய்யவேண்டும். இல்லையென்றால் விலை குறைவதற்கு வாய்ப்பே இல்லை. கண்ட்ரோல் இருந்த காலத்திலே எப்பொழுதாவது தானியத்தின் விலை குறைந்ததாக நாம் சரித்திரத்திலே பார்க்க முடியாது. கண்ட்ரோல் என்றாலே விலை ஏறிவிடும். கண்ட்ரோல் எப்பொழுது வரும் என்றே பார்த்துக்கொண்டு இருப்பார்கள். பதுக்கல்காரர்களால் மக்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். விலை இறங்கும் என்று எதிர்பார்த்த மக்கள் விலை உயர்வைப் பார்த்து நம்மை எல்லாம் திட்டிக்கொண்டேதான் இருக்கிறார்களே தவிர, நல்லமுறையிலே வாழ்த்தவில்லை என்பதை நான் கூறிக்கொள்கிறேன். விலை குறையாவிட்டால் தேர்தல் காலத்தில் நாம் சொன்ன வாக்குறுதிகளை நாம் நிறைவேற்றாமல் போய்விடுவோம். விலையைக் குறைக்கிறோம் என்று நாம் வாக்குறுதி கொடுத்தோம். அந்த மக்களுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை, மிகவும் தயக்கமாக இருக்கிறது.

சென்னையிலே நிலைமைகள் ஒன்றும் தெரியவில்லை என்றாலும் கூட, கிராமங்களில் மிகவும் கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நான் அசெம்பிளியில் இருந்து என்னுடைய தொகுதிக்குப் போய்விட்டு மறுபடியும் திரும்பி வந்தேன். தேர்தல் முடிவின்
பிற பகல் 4-30 போது மக்கள் இருந்த நிலைக்கும் இப்போது உள்ள நிலைக்கும் பெருத்த வித்தியாசம் இருக்கிறது. அந்த மக்களுக்கு என்ன பதில் சொல்வது என்பதே புரியவில்லை. எப்படியும் இந்த விலைவாசிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அமைச்சரவை முழு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

விலைவாசியைக் குறைக்க வேண்டுமென்றால் கண்ட்ரோல் இருக்கக்கூடாது; லைசென்ஸ் இருக்கக்கூடாது; கோட்டா இருக்கக்கூடாது; ப்ரொக்யூர்மென்ட் இருக்கக்கூடாது. இதைத் தவிர வேறு எந்த வழியும் விலையேற்றத்தைக் குறைப்பதற்குத் தட்டுப்படவில்லை. ஆகவே, இவற்றை அவசியமாக உடனே கவனித்து விலையேற்றத்தைத் தடுத்து நல்ல பெயர் வாங்கவேண்டுமென்று அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

நிச்சயமாக விலையைக் குறைப்பதற்கு அரசாங்கத்திடம் ஏதாவது மாற்று யோசனை இருந்தால் அதைச் சொல்லுங்கள். இல்லையென்றால் நாங்கள் சொல்லுகின்றபடி கண்ட்ரோலையாவது





ரத்து செய்வதற்கு முயற்சி செய்யவேண்டும். அவ்வாறு செய்தால் தான் நாம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றியவர்களாவோம் என்பதை வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன்.

அரசாங்கத்திடம் வேறு ஏதாவது திட்டம் இருந்தால் இந்த உரைக்குப் பதில் சொல்லும்போது நிச்சயமாக அதைப் பற்றிக் கூற வேண்டும். அப்போதுதான் மக்கள் எல்லாம் அமைதியாக இருப்பார்கள். கண்ட்ரோலைத் தளர்த்தி இருந்தால், இப்போது எதிர்க்கட்சியாக இருக்கின்ற காங்கிரஸ் கட்சி அரிசியைப் பற்றிப் பேசுவதற்கு வழி இல்லாமல் போயிருக்கும். இப்போது அந்தப் பக்கத்தில் இருந்து அரிசி, அரிசி என்று பேசிக் கொண்டேயிருக்கிறார்கள். இருபது வருஷமாக இந்த அரிசியைப் பற்றிக் கவலைப்படாதவர்கள் இந்த 20 நாளிலே அரிசியைப் பற்றிக் கவலைப்படத் தொடங்கியிருக்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், ஒரு வீட்டில் திருடன் புகுந்து திருடிக் கொண்டு ஓடும்போது வீட்டுக்காரர்கள் அவனைத் துரத்தி திருடனைப் பிடியுங்கள் என்று கூறிக் கொண்டு பின்னால் ஓடும்போது, அந்தத் திருடனும் ‘திருடனைப் பிடியுங்கள்’ என்று கூறிக் கொண்டே போவதைப் போலத்தான் இருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

இப்போது எங்கு பார்த்தாலும் பதுக்கல்காரர்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். பதுக்கல்காரர்களைப் பிடிப்பதிலே திராவிட முன்னேற்றக் கழகம் மிகவும் அக்கறை காட்டிக் கொண்டிருக்கிறது. அதிலே விவசாயியும் பிடிபடுகிறான். விவசாயி பதுக்கல்காரனா என்பதை நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். விவசாயியைப் பதுக்கல்காரன் லிஸ்டில் சேர்த்து விட்டால் விவசாயம் எப்படி நல்ல முறையில் நடக்கும்? விவசாயிகளுக்கு எப்படி நமது ஆட்சி மீது நம்பிக்கை ஏற்பட முடியும்? காங்கிரஸ் ஆட்சியில் கூட விவசாயி மீது இவ்வளவு கர்ண கடூரமாக பதுக்கல் வேட்டையாடாமல் இருந்தார்கள். நம்முடைய அரசாங்கம் பதுக்கல் வேட்டையாடி மக்களுக்கு ஏதேனும் கொடுக்க முடியுமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நம்முடைய அரசாங்கம் நல்ல ஆதரவைக் கொடுக்க வேண்டும். அதிகமாக உற்பத்தி செய்வதை ஆதரிக்க வேண்டும். இல்லையென்றால் நல்ல முறையில் விவசாயம் நடக்காது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றப் பொருள்களுக்கெல்லாம் உற்பத்தியாளர்கள் விலையை நிர்ணயிக்கிறார்கள். ஆனால் விவசாயிகளுடைய உற்பத்திப் பொருளுக்கு மட்டும் அரசாங்கம் விலையை நிர்ணயிக்கும் நிலை இருக்கிறது. இது விவசாயிகளுடைய துரதிருஷ்டம் என்றுதான் நினைக்கிறேன். விவசாயிகளுக்குத் தேவையான மற்றப் பொருள்களின் விலை இறங்கவேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான எல்லா பொருள்களுக்கும் அரசாங்கம் விலை வைப்பதாக இருந்தால் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருளுக்கும் அரசாங்கம் விலை வைப்பது நியாயம். விவசாயி மற்ற எல்லாப் பொருள்களையும் பிளாக் மார்க்கெட்டில் வாங்க வேண்டும். அப்படியிருக்கும்போது

விவசாயி கதி என்ன என்பதை நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும். எல்லாப் பொருள்களுக்குமே கண்ட்ரோலை நீக்கி விட்டால் விவசாயம் நல்ல முறையில் நடக்கும்.

விவசாயி வாங்கக்கூடிய மாடு இன்று என்ன விலை விற்கப்படுகிறது என்பதை யோசித்துப் பாருங்கள். அன்று 100 ரூபாய்க்கு வாங்கிய மாட்டின் விலை இன்று 1,500 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டும். அந்த மாட்டுக்குத் தேவையான தவிடு என்ன விலை? விவசாயிகளுக்குத் தேவையான பொருள்கள் எல்லாம் அரிசி விற்ற விலையைப் போல் ஐந்து மடங்கு ஏறியிருக்கிறது. பிண்ணாக்கு விலை ஏறியிருக்கிறது. பருத்திக் கொட்டை விலை ஏறியிருக்கிறது; விவசாயி உரத்தை பிளாக் மார்க்கட்டில் வாங்க வேண்டியிருக்கிறது. பிளாக் மார்க்கட்டில் உரம் வாங்கிப் போடுவது என்றால் விவசாயி மிகவும் பாதிக்கப்படுகிறான்? இவற்றுக்கெல்லாம் சரியான பரிகாரம் காணப்படவில்லை. உணவுப் பஞ்சத்தை அரசாங்கமோ, அதிகாரிகளோ மட்டும் தீர்க்க முடியாது. விவசாயிகள் நினைத்தால்தான் இந்த நாட்டில் இருக்கக்கூடிய உணவுப் பஞ்சத்தைத் தீர்க்க முடியும். விவசாயிகள் உற்பத்தியை அதிகரித்தால்தான் முடியும். விவசாயிகள் நல்ல முறையில் விவசாயம் செய்வதற்கு உருப்படியான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பட்டது.)

* திரு. ரா. ரா. முனுசாமி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் மீது பேச வாய்ப்பு அளித்ததற்காக தலைவர் அவர்களுக்கு முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நடைபெற்ற பொதுத் தேர்தல் நல்ல முறையில் நடந்தது என்று கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். குறிப்பிட்டிருந்தது மட்டுமல்லாமல் பாராட்டும் தெரிவித்தார்கள். பாராட்டுக்குரியவர் நமது அறிஞர் அண்ணா அவர்கள்தான் என்று திருத்தமாகச் சொல்ல வேண்டிய ஒரு நல்ல சூழ்நிலை இருக்கிறது.

இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்த காங்கிரஸ்காரர்கள் இந்தப் பொதுத் தேர்தலின்போது எந்த அளவுக்கு ஜனநாயகத்திற்கு விரோதமாக நடந்து கொண்டார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். செவலப்பேரை என்ற கிராமத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஏற்பாடு செய்திருந்தோம். அந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கக் கூடிய ஒரு தலைவரைக்கூட கடத்திச் செல்லக் கூடிய கட்டத்தில் தேர்தல் வேலை செய்தார்கள். என்னுடைய மேல்மலையனூர் தொகுதியில் காங்கிரஸ்காரர்கள் எந்த அளவுக்கு அராஜகமாக நடந்து கொடுமைகளைச் செய்ய வேண்டுமோ, அந்த அளவுக்குச் செய்தார்கள். எந்த அளவுக்குப் போலீஸ்காரர்களை விட்டு மிரட்டி வாக்குகளைச் சேகரிக்க முடியுமோ, அந்த அளவுக்கு மிரட்டினார்கள். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த வேளத்தி கிராமத்தில் எல். பவுனன் என்ற திராவிட முன்னேற்றக் கழகத் தோழர், டீ கடை வைத்திருந்ததை தாசில்தார் மூலமாக அப்புறப்படுத்த வேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்து தொல்லை கொடுத்





தார்கள். அப்பேர்ப்பட்ட தொல்லைகளை எல்லாம் தாங்கிக் கொண்டுதான் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்கிறது. அப்பேர்ப்பட்ட காங்கிரஸ்காரர்கள் இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினரைப் பார்த்து, 'லட்சியம் எல்லாம் எங்கே போயிற்று?' என்று கேலி கிண்டலாகப் பேசுகிறார்கள். 18-3-1967 அன்று பேசக் கூடிய ஒரு காங்கிரஸ் உறுப்பினர், 'மூன்று படி அரிசி எங்கே?' என்று கேலி பேசும் முறையில் கிண்டல் செய்தார்கள்.

அதற்கு மிக அழகாகப் பேசக் கூடிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் எல்லாம் நல்ல முறையில் பதில் கூறியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு அறிஞர் அண்ணா அவர்களுடன் இங்கிருக்கும் காங்கிரஸ் உறுப்பினர்கள் எந்த அளவிற்கு ஒத்துழைப்பு தரவேண்டுமோ அந்த அளவிற்குத் தந்தால் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய உணவுப் பிரச்சினை, விலைவாசிக் கொடுமை இவற்றை அகற்றும் நல்லதொரு சூழ்நிலை ஏற்படும். அதுமட்டுமல்ல, என் தொகுதியில் பல கிராமங்களில் சாலை வசதியோ, மின்சார வசதியோ சரியான முறையில் இங்கவில்லை. அதுமட்டுமல்ல, என் தொகுதியில் புயலால் பாதிக்கப்பட்ட பல கிராமங்களில் உள்ள ஏரிகள் உடைந்து விட்டன. அதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு, சம்பா அறுவடை கூட செய்ய முடியாத ஒரு கொடுமை ஏற்பட்டு விட்டது. என் தொகுதியில் உள்ள சில குக்கிராமங்களுக்கு நல்ல முறையில் உரம், விவசாயக் கருவிகள் இவை சொசைட்டி மூலம் நல்ல முறையில் வழங்கப்படாததால் நல்ல முறையில் விவசாயம் செய்யமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குறைகளை எல்லாம் நம் அரசு அகற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியில் மேல்மலையனூர் ஏரி, 20,000 ஏக்கர் பாசனம் செய்வதற்கு உதவுவதாகும். ஆனால் அது சரியானபடி மராமத்து செய்யப்படாததால் அதில் தண்ணீர் அதிகமாக தேங்கக் கூடிய சூழ்நிலை இல்லை. அதே போன்று அண்ணமங்கலம் ஏரி, சக்திமங்கலம் ஏரி, கணக்கம்குப்பம் ஏரி போன்ற ஏரிகள் நன்கு மராமத்து செய்யப்படாது, நன்கு செப்பனிடப்படாத நிலையில் இருப்பதால் அவை விவசாயத்திற்குப் பயன்பட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதையும் மாற்றியமைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. அ. பொ. அரசு: தலைவர் அவர்களே, இன்றைய தினம் பெருமதிப்பிற்குரிய கவர்னர் பெருமான் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது ஏறத்தாழ ஒரு வார காலமாக விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. பெருமதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் ஒரு சிலர் கவர்னர் பெருமான் உரையை ஆதரித்தும், ஒரு சிலர் கவர்னர் பெருமான் உரையில் சாரம் எதுவும் இல்லை என்றும், இங்கு விளக்கிப் பேசியிருக்கிறார்கள். என்னைப் பொதுவாக பொறுத்தவரையில், பெருமதிப்பிற்குரிய கவர்னர் பெருமான் உரையில் நல்ல பல அம்சங்கள் இணைக்கப்பட்டு இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நல்ல அம்சங்களை, நல்ல திட்டங்களை வரவேற்கும் அளவிற்கு கவர்னர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையின்

இது வரவேற்கப்படவேண்டிய உரை. அதில் பல திட்டங்களை விவசாயத்திற்கு முக்கியத்துவம் தரப்படவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி உரையாற்றியிருக்கிறார்கள். வரவேற்கத்தக்க உரை. என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்லிக்கொள்வேன், முன்னால் இருந்த அரசு உழவுத் தொழிலுக்கு உரிய இடம் அளிக்காத காரணத்தினாலும், தொழில்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பதில் அக்கறை காட்டிக்கொண்டிருந்தார்களே தவிர, நம் பெருமதிப்பிற்குரிய ‘பாரதி’ அவர்கள் கூறியதுபோல் ‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்’ என்று கூறியிருந்தபோதிலும், உழவிற்கு முக்கியத்துவம் கொடுக்காததுபற்றி பெருமதிப்பிற்குரிய காங்கிரஸ் அங்கத்தினர்கள் கூட பன்னிப் பன்னிப் பேசியிருக்கிறார்கள். உழவுத் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாத காரணத்தினால்தான் இன்று நாட்டில் பற்றாக்குறையும், உணவுப் பிரச்னையில் அக்கறை காட்டவேண்டிய ஒரு அவசியமும் ஏற்பட்டிருக்கிறது. உழவர் திருநாளை பெருநாளாக கொண்டாட வேண்டும் என்று நமக்கு முன்னால் இருந்த அரசாங்கம் அதை கொள்கையாக எடுத்துக்கொண்டிருந்த போதிலும், விவசாயத்திற்கு உரிய இடம் தரப்படாத காரணத்தினால் தான் இன்றையதினம் உணவுப் பிரச்னைபற்றி தீவிரமாக அலசிப் பேசவேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். முன்பு இருந்த அரசு எந்த அளவிற்கு தங்கள் கடமைகளை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று பார்க்கும்போது குறிப்பிட்ட தொழிற்சாலைகளுக்கு முக்கியத்துவம் தந்து தொழில் வளத்தைப் பெருக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தார்களே தவிர, விவசாயம் பற்றி போதிய அக்கறை செலுத்தவில்லை. நிலங்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்படவில்லை. அந்த நிலங்களை எல்லாம் தொழில் வளம் பெருகவேண்டுமென்று சென்னையை அடுத்துள்ள கிண்டி, அம்பத்தூர் போன்ற பகுதிகளில் 4,000 ஏக்கருக்கு மேலாக உள்ள நிலங்களை எடுத்து தொழில் வளத்தைப் பெருக்கவேண்டுமென்று, சிறு சிறு தொழில் கூடங்கள் கட்ட வேண்டுமென்று அந்த நிலங்களை எடுத்துக் கொண்டார்கள். அப்படி எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்கள் ஏறத்தாழ மூன்று போகம் விளையக்கூடிய நல்ல நிலங்களாகும். அதைப் பார்க்கும்போது தெரியவரும், முன்பிருந்த சர்க்கார் விவசாயத்தில் அக்கறை செலுத்தாது தனியார் துறை தொழில்களுக்கு முதல் இடம் கொடுத்து உழவர்களின் பெருமையைக் குறைத்துவிட்டார்கள் என்பது. பாடி கிராமம் போன்ற ஏரிப் பகுதிகளை எல்லாம் தொழில் வளத்தைப் பெருக்கவேண்டும் என்ற ஆர்வம் காரணமாக தனியார் துறைக்காக எடுத்துக் கொண்டு, அங்குள்ள 1,500 ஏக்கர் நிலங்களை ஒரு தனியார் கம்பனிக்கு கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கம்பனிக்காரர் தங்கள் தொழிற்சாலையை அமைப்பதற்கு வேண்டிய இடத்தை வைத்துக் கொண்டு எஞ்சிய நிலத்தை அதிகப்படியான விலைக்கு மற்றவர்களுக்கு விற்றிருக்கிறார்களே தவிர, உழவுத் தொழிலுக்காக அந்த நிலம் பயன்படுத்தப்படவில்லை. ஆக, அவை தொழிற்சாலைக்காகவும் பயன்படுத்தப்படாமல், உழவிற்கும் பயன்படுத்தப்படாமல் போயிருக்கின்றன. அதன் விளைவாக விளைச்சல் நிலங்கள் பல [illegible] பிரித்துக் கொடுக்கப்பட்டு விளைச்சலைக் குறைக்கிற





தன்மையை முந்திய அரசு ஏற்படுத்திவிட்டது. ஒன்று செய்
இருக்கவேண்டும், ஆனால் அதைச் செய்யத் தவறிவிட்டார்கள்.
தரிசு நிலங்கள், சாகுபடிக்கு உதவாத நிலங்கள் அலமாரிக்காடு
என்ற இடத்தில் இருக்கிறது. ஏகப்பட்ட நிலங்கள் அப்படி
சும்மா இருக்கக்கூடிய நிலையில் உள்ளன. அந்நிலங்களை தொழிற்
சாலைகள் கட்டுவதற்காக கொடுக்கப்பட்டிருந்தால் அது வரவேற்கத்
தக்க திட்டமாக இருந்திருக்கும். அடுத்து, ஏரிப் பகுதிகள் சரி
யான முறையில் பராமரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படாத அள
வில் என் தொகுதியில் ரெட் ஏரி என்று ஒன்று இருக்கிறது. அதில்
தூர் வாரப்பட்டு இருபது, இருபத்திரண்டு ஆண்டுகள் ஆகின்றன
என்று ஊர் மக்கள் கூறுகிறார்கள். இந்தத் தவறு காரணமாகவும்,
விவசாயத் துறையில் அக்கறை செலுத்தாத காரணத்தினாலும்
உழவர் உற்சாகம் பெறமுடியாத சூழ்நிலையில் அன்றைய அரசு
நடந்துகொண்டதால்தான் இன்று ஓரளவு உற்பத்தி குறைந்திருக்
கிறது. கவர்னர் அவர்கள் உரையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்
கிறார்கள். “பயிரிடும் குத்தகைக்காரர்களில் இடர்ப்பாடுகளில் நாம்
நாட்டம் செலுத்தினாலொழிய வேளாண்மை உற்பத்தியைப்
பெருக்குவதற்குரிய நமது திட்ட வேலைகள் முழு வெற்றியைத் தர
மாட்டா. தற்போதைய நில வாரச் சட்டத்தில் உள்ள பொத்தல்
களை அடைத்து, பயிரிடும் குத்தகைக்காரர்கள், நடைமுறையில்
நிலையான வார உரிமை பெறுவதற்கு உறுதியான வகை செய்யும்
பொருட்டு அரசாங்கம் அச்சட்டத்தை மறுபரிசீலனை செய்யும்”
என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி தெளிவாகக் கூறப்பட்
டிருந்தும்கூட, பெரிய அம்சங்கள் எதுவும் இல்லை என்று பெரு
மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசினார்கள்.

தலைவர் அவர்கள் மணி அடிக்கப் பார்க்கிறார்கள். வரவேற்கத்
தக்க பல அம்சங்கள் கவர்னர் அவர்கள் உரையில் இருக்கின்றன.
வேறு சந்தர்ப்பம் வரும்போது பேசிக் கொள்கிறேன். என் தொகுதி
யில் செய்யப்பட வேண்டிய சில பல மராமத்து வேலைகள் பற்றி
அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துச் செய்யலாம் என்று கருது
கிறேன். ஒன்றை மட்டும் என்னால் சொல்லாமல் இருக்கமுடியாது.
நம் நாடு புனித நாடு என்று சொல்கிறார்கள். கற்புக்குப் பெயர்
போன நாடு, கற்புக்கரசிகள் வாழ்ந்த நாடு, மங்கையர்க்கரசிகள்
வாழ்ந்த நாடு என்றெல்லாம் பேசி பேசி பூரித்துப்போன முந்திய
அரசு ஒரு விளம்பரம் செய்திருக்கிறார்கள். சினிமாக் கொட்டகை
களில் விளம்பரம் செய்திருக்கிறார்கள், விபசாரம் செய்வது சட்டப்
படி குற்றம். ஆகவே விபசாரம் செய்பவர்களும், அவர்களுக்கு
உதவியாக இருப்பவர்களும், விபசாரத்தைத் தூண்டி விடுகிறவர்
களும் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள்—போலீஸ் கமிஷனர்
என்று விளம்பரம் செய்துகொண்டிருக்கிறார்கள். இதை எண்ணிப்
பார்க்கிற நோக்கில், முன்பு இருந்த அரசு எந்த அளவுக்குப்
பக்குவப்பட்டவர்கள் என்பதையும் யோசித்துப் பார்க்கக்கூடிய
தன்மை பெற்றிருந்தார்களா என்பதையும்பற்றி ஐயுறுகிறேன்.
காரணம், நாட்டின் கற்பை அடகு வைக்கும் அளவுக்கு கற்பை
விலைபேசும் அளவுக்கு, மாற்றார் பார்த்து நகைக்கும் அளவுக்கு,

[திரு. அ. பொ. அரசு] [1967 மார்ச் 29

நமது பெண்டிர் கற்பை அம்பலப்படுத்துவதை வருத்தத்தோடு தெரிவித்து, வேதனையோடு தெரிவித்து, இனிமேலாவது நம் அரசு அப்படிப்பட்ட விளம்பரங்களை போலீஸ் இலாகாவினர் போடாமல் இருக்க என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமோ அவைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்து விடை பெற்றுக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திரு. பி. துரைராஜ்:** கனம் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் உரையின் மீது அதை வரவேற்கும் முறையில் இந்தச் சந்தர்ப்பத்தில் பேச அனுமதி கொடுத்ததற்கு நன்றி. குறுகிய காலத்தில் என் பேச்சை முடிக்க வேண்டியிருப்பதால் சுருக்கமாக நிகழ்த்த ஆசைப்படுகிறேன்.

நடந்த தேர்தலில்—

" இதனை இதனால் இவன்முடிக்கு மென்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற வள்ளுவர் வாக்குக்கு ஏற்ப தமிழக மக்கள், ஆட்சியில் இருக்கக்கூடியவர்கள் ஆளத் தகுதி அற்றவர்கள், ஆளத் தகுதியான ஒரே கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்று தீர்மானித்து, தமிழகத்தின் ஆட்சியைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையில் ஒப்படைத்திருக்கிறார்கள். இதை நாம் வரவேற்க வேண்டும், இதைப்பற்றிப் பெருமைப்பட வேண்டும்.

மேலும், நம் கவர்னர் உரையில் உணவு உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதைப்பற்றிப் பாராட்ட வேண்டும். உணவு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்று கூறுகிற நேரத்தில் நெல்லை மாவட்டத்தில், சங்கரன்கோவில் பகுதியில் கீரியாறுத் திட்டம் என்ற திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புகுத்தப்பட்டு ஆரம்ப வேலைகளை நடத்தி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அந்தத் திட்டம் முடிக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்து நாளடைவில் கைவிட்டு விட்டார்கள். அந்த கீரியாறுத் திட்டம் நிறைவேற்றப்படுமானால், சங்கரன்கோவில், கோவில்பட்டி தாலூகாக்களில் ஒரு லட்சம் ஏக்கர்களுக்குப் பாசன வசதி ஏற்பட்டு ஏராளமான நெல் உற்பத்தியாகும். இந்தக் கீரியாறுத் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசாவது முடித்துதர, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மலையடிப்பட்டி கிராமத்தில் ஒரு கண்மாய் இருக்கிறது. 25 ஆண்டுகளுக்கு முன் நல்ல நிலையில் இருந்தது. இப்போது தூர்ந்துபோன நிலையில் இருக்கிறது. அதையும் பற்றி முன்பு இருந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தும், அந்த நிலங்களைச் சர்வே செய்து அதை நிறைவேற்றாமல் விட்டுவிட்டார்கள். அந்தக் கண்மாயையும் புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 18 மாத காலமாக சங்கரன்கோவில் நகரத்தில் கீதாஞ்சலி மில் மூடப்பட்டிருக்கிறது. அதிலே வேலை செய்யக் கூடிய 500 தொழிலாளர்கள் நல்ல முறையில் வாழ்க்கையை நடத்த முடியாத நிலையில் தங்கள் மனைவிமார்களின் தாலியைக்கூட விற்று,



1967 மார்ச் 29] [திரு. பி. துரைராஜ்]

மேலும் விற்பதற்குக் கூட எதுவும் இல்லாது தொல்லைகளை அனுபவித்து வருகிறார்கள். நம் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கமானது இதில் தீவிர கவனம் செலுத்தி அந்தத் தொழிலாளர்களுக்கு வாழ்க்கைக்கு வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் சங்கரன்கோவில் தொகுதி, தாழ்த்தப்பட்டவர்கள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறேன். ஹரிஜன கிருஸ்தவர்களுக்கும், சாதாரண ஹரிஜனங்களுக்குக் கொடுக்கும் சலுகைகளை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆசிரியர் பிரச்சினை. நான் ஒரு ஆரம்ப ஆசிரியர் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையிலே இரண்டொரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். செகண்டரி கிரேட் ஆசிரியர் எந்த வகுப்பில் கற்றுக் கொடுத்தாலும், செகண்டரி கிரேட் சம்பளம் கொடுக்க வேண்டும். பல இடங்களில் அவர்கள் ஹையர் கிரேட் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளிகளிலும், உயர்தர ஆரம்பப் பள்ளிகளிலும் தொழில் கல்வி கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள் மாதம் 30 ரூபாய் சம்பளம் பெற்றுக்கொண்டு வருகிறார்கள். இந்த விலைவாசி ஏற்றக் காலத்தில் அவர்கள் அதைக் கொண்டு எப்படி வாழ்க்கை நடத்த முடியும் என்று கவனத்தில் கொண்டு, குறைந்தது மாதம் 100 ரூபாய் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரையின் மீது ஒரு சில கருத்துக்களை மாத்திரம் எடுத்துக் கூறுவதற்குள்ள வாய்ப்பு மாத்திரம் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பல கருத்துக்களைப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ளலாம் என்று கருதி, ஒரு சில குறிப்புகளை மட்டும் கூறுவதற்கு நான் முன் வந்திருக்கிறேன்.

கவர்னர் அவர்கள் ஆற்றிய உரை, ஒரு கொள்கையைக் கொண்ட காங்கிரஸ் அரசு ஏறத்தாழ 20 ஆண்டுகள் இந்த நாட்டில் ஆட்சியை நடத்தியபின், மாற்றுக் கொள்கையைக் கொண்ட தி.மு.க. அரசு அமைந்த வேளையில் முதன் முதலாக ஆற்றிய உரை. ஆகவே, மக்கள் இதை ஒரு சந்தர்ப்பமாகக் கொண்டு, கவர்னர் பெருமான் உரையில் புதிய அரசின் கொள்கைகள் என்ன, புரட்சிகரமாக நடத்தப்பட இருக்கிற அவர்கள் திட்டங்கள் யாவை என்பனவற் றையெல்லாம் புதிய அரசு கூறும் என்று எண்ணினார்கள். ஆனால் அதற்கு மாறாக, பொதுமக்கள் இன்று ஏமாற்றம் அடைந்திருக் கிறார்கள். கவர்னர் உரையில் புதிய அரசின் திட்டங்கள், கொள் கைகள் ஒன்றும் காணப்படவில்லை. நான் இதனை எதற்காகக் கூறுகிறேன் என்றால், இன்று ஆட்சியில் அமர்ந்திருக்கிற தி.மு.க. கட்சி, அன்று ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சியின் கொள்கை

கள், திட்டங்கள் பலவற்றை வன்மையாக எதிர்த்துக் கொண்டிருந்தது. உணவுக் கொள்கையை எடுத்துக்கொண்டாலும், மொழிப் பிரச்னையை எடுத்துக்கொண்டாலும், தி. மு. கழகம் காங்கிரஸ் அரசை வன்மையாக கண்டித்துக் கொண்டிருந்தது.

நான் மொழிக் கொள்கையை எடுத்துக் கொள்ளுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகமானது மும்மொழிக் கொள்கையைக் கைக் கொண்டிருந்தது. இன்று நமது முதலமைச்சர் அவர்கள் ஆணித்தரமாகக் கூறுகிறார் இந்த அரசு மும்மொழிக் கொள்கையைக் கைக்கொண்டிருக்கிறது என்று. ஆனால், கல்வி அமைச்சர் அவர்கள் பல்வேறு இடங்களில் கூறியிருக்கிறார்கள், நமது மாணவர்கள் இரண்டு மொழிகளைக் கற்றுக்கொண்டால் போதும், ஆங்கிலமும் தமிழும் போதும் என்று. இந்த விஷயம் இங்கு விவாதத்திற்கு வந்தபோது முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள், கல்வி அமைச்சர் கூறியது தவருக இருக்கலாம் என்று. இங்கே பேசிய தி.மு.க.-வைச் சேர்ந்த விருதுநகர் தொகுதி உறுப்பினர் அவர்கள் இந்தி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பலகைகள்கூட இந்த மாநிலத்தில் எங்கும் இருக்கக்கூடாது என்று கூறினார்கள். இந்தக் கொள்கையில்தான் இந்த மாநில மாணவர்கள் தி.மு.க-வை ஆதரிக்கிறார்கள். அந்த இரு மொழிக் கொள்கையைத்தான் தி.மு. கழகம் கைக்கொண்டிருப்பதாக எண்ணித்தான் மாணவர்கள் தி.மு.க. கட்சிக்குக் கழிந்த தேர்தலில் ஆதரவு கொடுத்தார்கள் என்று அன்னார் கூறினார்கள். ஆகையால் நமது அரசு மொழிப் பிரச்னையில் கொண்டிருக்கும் கருத்து என்ன என்று கூற வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. நான் இதை எதற்காகக் கூறுகிறேன் என்றால், ஆயிரக்கணக்கான மாணவர்கள், வாலிபர்கள் இன்று ஆங்கிலமும் தமிழும் படித்து வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருப்பதை அரசு அறியும். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் கடமையும், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க வேண்டிய பொறுப்பும் இந்த அரசுக்கு இருக்கிறது. ஆங்கிலமும் தமிழும் மட்டும் கற்றுக்கொண்டால், அவர்களுக்கு எங்கே வேலை வாய்ப்பு வாங்கிக் கொடுக்கப் போகிறோம் என்று சிந்திக்க வேண்டும். நமது மாநிலத்தில் படித்து வேலையில்லாமல் இருக்கின்ற வாலிபர்கள் ஏராளம் இருக்கின்றனர். இதைப்பற்றி அரசு ஆலோசிக்கவேண்டும். ஆங்கிலம் படித்திருக்கின்ற மாணவர்களுக்கு இந்த அரசு இங்கிலாந்து தேசத்தில் வேலை வாங்கிக் கொடுக்கப் போகிறதா? அல்லது மற்ற மாநில அரசுகளுக்கு ஆங்கிலம் கற்பிக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பித்து அங்கு வேலை வாங்கிக் கொடுக்கப்போகிறதா என்று திட்டவட்டமாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழும், ஆங்கிலமும் மட்டும் நமது மாணவர்கள் படித்தால் மற்ற மாநிலங்களில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு இராது. ஆனால் இந்தியையும் நமது மாணவர்கள் படிக்க வேண்டுமென்று வற்புறுத்தினால், இந்தியாவில் எந்தப் பகுதியிலும் சென்று பிழைப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, தலைவர் அவர்களே. இந்த மொழிப் பிரச்னையானது மிக முக்கிய பிரச்னையாக இருக்கிறது. வருங்கால சந்ததிகள் வாழ்க்கையை நிர்ணயிக்கும் முக்கிய பிரச்னையில் நமது அரசு திட்டவட்டமாகக் கூற வேண்டிய கடமை இருக்கிறது. ஆகவே





ஒரு வேளை கவர்னர் உரையில் விட்டுவிடப்பட்டிருந்தாலும், முதலமைச்சரோ, அல்லது அவை முதல்வராகிய கல்வி அமைச்சரோ திட்டவட்டமாக விவாதத்திற்குப் பதில் கூறும் போது கூறுவார் என்று எண்ணுகிறேன்.

அடுத்தபடியாக, இன்று உணவுப் பிரச்னையைப்பற்றி அநேக அங்கத்தினர்கள் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். நான் அதில் ஒரு அம்சமாகிய கொள்முதலைப்பற்றி மாத்திரம் எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கொள்முதலைப்பற்றி பேசும் பொழுது, பல அங்கத்தினர்களும் ஆங்காங்கு அதிகாரிகளால் மக்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்ற புகாரை எழுப்பினார்கள். நாம் அறிவோம். சில நாட்களுக்கு முன்பு திருச்சியில்கூட பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. நமது மாநிலத்திலுள்ள 3½ கோடி மக்களுக்கும் உணவு கொடுக்கவேண்டிய பொறுப்பு விவசாயிகளுக்கு இருக்கிறது. இன்றைய தினம் விவசாயி அனுபவிக்கின்ற துன்பங்களுக்கு என்ன காரணம் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு விவசாயி என்றால் பால் கறக்கின்ற பசு போல என்று நான் நினைக்கிறேன். பசுவினுடைய மடுவில் புண் இருக்கும்பொழுது பசு பால் கறக்கவிடாமல் கறவல்காரனின் கைகளைத் தட்டிவிடும். இது சாதாரணமாக நடப்பது. அப்படிச் செய்தால் பால் கறப்பதற்குத் தடங்கலாக பசு நிற்கிறது என்று நினைப்பதற்கில்லை. பசு தனக்கு ஏற்படுகின்ற வேதனையின் காரணமாகத்தான் அந்த மாதிரிப் பால் கறப்பவனுக்கு இடையூறு செய்கிறது. என்பதை நாம் அறிவோம். மடுவிலே எண்ணெய் தேய்த்து, பிறகு பசுவைத் தட்டிக் கொடுத்தால், அதனுடைய வேதனை தீர்ந்ததும், பால் கறக்க அனுமதிக்கும். அது போலத்தான் விவசாயிகளும். அவர்கள் உற்பத்தி செய்கிற உணவுப் பொருள்கள் அத்தனையும் மக்களுக்காகத்தான் என்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுது இருக்கிற சட்டங்களின் சிக்கலினால் அவர்கள் வேதனைப்படுகிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யும் நெல்லுக்கு மாத்திரம் அரசாங்கம் விலை நிர்ணயம் செய்திருக்கிறது. ஆனால் விவசாயிகள் அவர்களுக்குத் தேவைப்படுகிற மற்றப் பொருள்களுக்கு விலை அதிகமாகக் கொடுத்து வாங்க வேண்டிய நெருக்கடி இருக்கிற காரணத்தினால் அவர்கள் மனம் வேதனைப்படுகிறது. முதல் அமைச்சர் அவர்கள் அன்று உணவுக் கொள்கையைப்பற்றி கூறும்போது 'பாட் தி புவர் அண்டு டாப் தி ரிச் (pat the poor and tap the rich) என்று சொன்னார்கள். அதை வைத்துக்கொண்டு அதிகாரிகள் ஒரு வேளை அதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமலோ என்னவோ தெரியவில்லை, ஆங்காங்கு அதிகாரிகள் விவசாயிகளை அதிகமாகத் துன்புறுத்திக் கொள்முதல் செய்ததாக நாம் அறிகிறோம். நமது முன்னாள் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் கொள்முதல் சம்பந்தமாக ஒரு அறிக்கை விட்டபொழுது கூறியது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். 'ப்ரொக்யூர்மெண்ட் வித் அவுட் டியர்ஸ்' (procurement without tears) மக்களை வருத்தப்படுத்தாமல் கொள்முதல் நடத்த வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். ஒரு ஏக்கருக்கு விதி

விலக்குக் கொடுத்திருப்பதாக நமது முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். அது மட்டும் போதாது. தேவைக்கு மிஞ்சிய, அதாவது மார்கெடெபிள் சர்ப்ளஸ் Marketable surplus ) அத்தனையும் கொள்முதல் செய்வதற்கு எனது மனப்பூர்வமான ஆதரவைக் கொடுக்கிறேன். ஏனென்று கேட்டால், அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் நமது நாட்டில், பீகார், ஒரிஸா போன்ற மாநிலங்களில் இன்று பஞ்ச நிலை ஏற்பட்டிருக்கிறது, அண்டை மாநிலங்களுக்கு நாம் உணவு கொடுக்கவேண்டிய தேவை இருக்கிற காரணத்தினால், விவசாயிகளிடம் உள்ள மார்க்கெடபிள் சர்ப்ளஸ் (Marketable surplus அத்தனையும் நியாயமான விலையைக் கொடுத்து கொள் முதல் செய்தால் ஆட்சேபனை இல்லை. ஆகவே தலைவர் அவர்களே, இந்தக் கொள்கையை அரசு கைக்கொள்ளுமேயானால் நமது நாட்டு மக்கள் நன்றாக வாழ்வதற்கு வகையாக இருக்கும் என்று கூறிக்கொண்டு விடை பெற்றுக்கொள்கிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய தலைவர் (திரு. ஏ. வி. பி: ஆசைத்தம்பி):** இந்த மன்றத்தை 5½ மணி வரையில் நடத்தலாம் என்று கருதுகிறேன். இதற்குச் சபை அனுமதி அளிக்கவேண்டும். இனி பேசவேண்டிய அங்கத்தினர் ஒவ்வொருவரும் ஐந்து நிமிடங்கள் பேசினால், இன்னும் கொஞ்சம் அதிகமான உறுப்பினர்கள் பேச முடியும். இதற்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்க விப் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மற்ற அங்கத்தினர்களும் அதன் படியே பேசுவார்கள் என்று நான் கருதி, அடுத்து திரு. தங்கப்பன் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். அங்கத்தினர் அவர்கள் பேசும்போது மடியில் காயம் என்று சொன்னார்கள், காயம் இயற்கையாக வந்ததா, எப்படி வந்தது என்பதை விளக்குவார்களா?

**மதிப்பிற்குரிய தலைவர் (திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி) :** நாகர் கோவிலிலிருந்து உறுப்பினர் அவர்கள் வருவதால், மலையாள உச்சரிப்பு இருந்த காரணத்தினால், அங்கத்தினர் அவர்களுக்கு அது வேறு மாதிரியாகப்படுகிறது என்று கருதுகிறேன். இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை.

***திரு. டி. தங்கப்பன் :** கனம் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடக்கும் விவாதத்தில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கவர்னர் அவர்கள் உரையிலே இப்பொழுது நடைபெற்ற நான்காவது தேர்தல் உலகத்தின் கவனத்தைக் கவரத்தக்க நிலைமையில் நடந்திருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது வரவேற்கத் தக்க ஒன்றாகும். ஒரு கட்சியிடமிருந்து மற்றொரு கட்சிக்கு ஆட்சி இணக்கமான முறையில் மாற்றப்பட்டிருக்கிறது, உண்மையி லேயே மக்கள் ஜனநாயகத்தில் வைத்திருக்கிற நம்பிக்கையையும்,



அவர்களுடைய மகத்துவத்தையும் அது காட்டுவதாக அமைந்திருக்கிறது என்று சொன்னது வரவேற்கத் தக்கதாகவும், பாராட்டத் தக்கதாகவும் அமைந்திருக்கிறது. அதே நேரத்தில் இப்பொழுது நடைபெற்ற தேர்தலில் அரசாங்க ஊழியர்கள் எந்த அளவிலே நடந்துகொண்டார்கள் என்றால், உண்மையிலேயே கட்சி சார்பு இல்லாமலும், எந்தவிதமான வித்தியாசமும் பாராட்டாமலும் நடந்து வந்தார்கள் என்று கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். மற்றத் தொகுதிகளில் அரசு ஊழியர்கள் ஒரு மாதிரியாக நடந்துகொண்டாலும்கூட, எனது தொகுதியைப் பொறுத்தவரையில், அரசு ஊழியர்கள், போலீஸார்கள் உள்பட, நல்ல முறையில் தேர்தலை நடத்தினார்கள் என்று நான் இங்கு குறிப்பிட ஆசைப்படுகிறேன். அவர்கள் இந்தத் தன்மையிலே நடந்துகொண்டால்தான், நல்ல வெற்றியை நாம் அடைய முடிந்தது என்று சொல்லி, அரசு ஊழியர்களுக்கு எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கவர்னர் அவர்கள், உணவு விஷயத்தில் அக்கறை காட்டவேண்டும், விவசாயிகளுக்கு உரம், விதைகள் போன்றவற்றை நல்ல முறையில் கொடுத்து, விவசாயத்தை வளப்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பது உண்மையிலேயே பாராட்டத் தக்கதாக இருக்கிறது. ஆனால், உணவு விஷயத்தை எடுத்துக் கொண்டால், எதிர்க் கட்சியினர்களைவிட, ஆளும் கட்சியைச் சேர்ந்த நபர்கள் மிகுந்த தர்மசங்கடமான நிலையிலே இருக்கிறோம். அதுவும் எனது தொகுதியில் இருக்கிற தொல்லைகள், அங்கே கூறப்படுகிற நிலைமைகளைப்பற்றிச் சொல்கிற விவரங்கள் உண்மையிலேயே வருந்தத்தக்கதாக இருந்தாலும்கூட, ஆட்சிப் பொறுப் பேற்றுக் கொண்டிருக்கிற அமைச்சர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் இன்னும் ஒரு மாதம், இரண்டு மாத காலத்தில் எல்லாத் தன்மைகளையும் ஓரளவுக்குச் சரிகட்டிவிடும் என்ற நிலைமை இருந்து வருகிற காரணத்தினால், உண்மையிலேயே நாம் நம்பிக்கையோடு இருந்துகொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் காங்கிரஸ் நண்பர்கள் அவர்கள் ஆட்சிக் காலத்தில் எதிர்பார்த்ததைவிட, நம்மிடத்திலே அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். அவர்கள்மீது வைத்திருந்த நம்பிக்கையைவிட நம்மிடத்திலே அதிகமாக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது. அவர்கள் நம்மீது நல்ல நம்பிக்கை வைத்திருப்பது குறித்து காங்கிரஸ் நண்பர்களைப் பாராட்டுகிறேன்.

எனது இராமனுதபுரம் தொகுதி என்று சொன்னால், இங்கே இருக்கிற உறுப்பினர்களுக்குத் தெரியும். இராமனுதபுரம் தொகுதி ஒரு பஞ்சப் பிரதேசம். வெகு காலமாக அங்கே எந்தவிதமான நன்மையும் செய்யப்படவில்லை. எந்த விதமான நன்மையும் செய்யப்படாமல் விடப்பட்ட தொகுதியாக இருக்கிறது. சேது செய்யப்படாமல் விடப்பட்ட தொகுதியாக இருக்கிறது. சேதுபதி அவர்கள் எனக்கு முன்பு இங்கு உறுப்பினராக வீற்றிருந்தார்கள். அவர்கள் தொகுதி சம்பந்தமான காரியங்களை இதுவரையில் இந்த மன்றத்தில் எடுத்துச் சொன்னதாக எனக்குத் தெரியவில்லை. வேறு உறுப்பினர் வராத காரணத்தினால், மன்னர் அவர்

கள் இங்கே வீற்றிருக்கிறார் என்ற எண்ணத்திலே தொகுதிக்கு எந்த விதமான நன்மையும் செய்யப்படவில்லை. இராமநாதபுரம் ஜில்லா ஹெட்குவார்டர்ஸ் தலைமை அலுவலகங்கள் எல்லாம் மதுரையிலே அமைந்திருப்பதால், ஒரு மோசமான நிலைமை அங்கே இருந்து கொண்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காங்கிரஸ் ஆட்சியைவிட நல்ல முறையிலே நடைபெறும் என்ற நம்பிக்கையில்தான் என்னை இங்கே அனுப்பியிருக்கிறார்கள். எனவே, இதுபோன்று காங்கிரஸ் ஆட்சியில் செய்யப்படாமல் விட்டுப்போன விஷயங்களைத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே செய்ய வேண்டும் என்று மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கை வீண்போகாது என்பதை எனது தொகுதி மக்களுக்கு சபாநாயகர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனது பகுதியில் விவசாயம் செய்யப்படுகின்ற 7,000 ஏக்கர் நஞ்சை நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கக்கூடிய ஒரு பெரிய கண்மாய் இருக்கிறது. அந்தக் கண்மாய்க்கு வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் வரவேண்டிய நிலைமை இருக்கின்றது. தண்ணீர் வருகின்ற காலத்தில் பயிர் செய்கின்ற காலங்களில் தண்ணீர் வராமல் இருந்துவிடுகிறது. சாதாரணமாக நாற்றுப் பாவக்கூடிய ஆடி மாதத்தில் அங்கு தண்ணீர் வருவதில்லை. அதனால் விவசாயம் பாதிக்கப்பட்டு, மக்கள் மிகுந்த அவஸ்தைக்குள்ளாகி இருக்கிறார்கள். அந்த நிலையில் விவசாய அமைச்சர் அவர்கள் ஆடி மாதத்தில் தண்ணீர் வருவதற்குள் விவசாயிகள் நாற்றுப் பாவுவதற்குத் தேவையான தண்ணீர் வசதி கிடைக்கும்படி ஏற்பாடு செய்து, நல்ல நம்பிக்கையை விவசாயிகளுக்கு ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக . . . .

(மணி அடிக்கப்பட்டது.)

**திரு. எஸ். ராமச்சந்திரன்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்றைய தினம், பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை உணவுப் பிரச்சினைதான். அவர்களுடைய நல்ல காலம் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்டது என்பதுதான். ஏனென்றால் இதற்கு முன்னால் 20 ஆண்டுக் காலம் ஆண்ட காங்கிரஸ் கட்சி உணவுப் பிரச்சினையில் ஒரு நெருக்கடியையே உருவாக்கியது மட்டுமல்லாமல், இன்னும் இரண்டு ஆண்டுக் காலத்தில் உணவுப் பஞ்சமே ஏற்பட்டுவிடும் என்று மத்திய உணவு அமைச்சர் எச்சரிக்கும் அளவிற்கு நிலைமைகள் கெட்டுவிட்டிருக்கின்றன. தமிழ் நாட்டு மக்களுடைய நல்ல காலம், ஒரு திறமை மிக்க அமைச்சரவை ஏற்பட்டதோடு, வெகு திறமையான அமைச்சர்களையும் உணவுத் துறைக்கும், விவசாயத் துறைக்கும், அத்துறைப் பணிகளுக்கு ஏற்ப, தகுதி வாய்ந்த அமைச்சர்கள் நியமிக்கப்



பட்டிருக்கிறார்கள் என்றும் கருதுகிறேன். ஏனென்றால், காங்கிரஸ் சர்க்கார் சென்று, நம்முடைய சர்க்கார் ஏற்பட்ட அன்றைய தினம், சென்னை மாநகரத்தில் 500 டன் அரிசிதான் இருந்தது. காலையிலேகூட எடுத்துச் சொன்னார்கள், சென்னை நகரத்திற்கு 600 டன் அரிசி தேவை என்று. அந்த வகையில் பார்க்கும் போது, எந்த அளவிற்கு உணவுக் கிடங்குகள் காலியாக இருந்தன என்பதை நாம் உணரமுடிகிறது. ஆகவே, உடனடியாக இந்த உணவுப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண வேண்டும் என்று, அந்த முறையில், எல்லை ஓரங்களில் உடனடியாகக் காவல் நிலையங்களை வைத்து உணவுப் பொருள்கள் மற்ற இடங்களுக்குப் போகாமல் பார்த்தும், அதோடு விவசாயிகளிடமிருந்தும், கள்ள மார்க்கெட்டுக்காரர்களிடமிருந்தும், கொள்ளை லாப வியாபாரிகளிடமிருந்தும், தானியங்களைப் பெற்று நாட்டு மக்களுடைய நன்மைக்காகப் பங்கீடு முறையில், அது சம்பந்தப்பட்ட துறையிலும் திறமையான புது அதிகாரிகளைப் போட்டு, நல்ல சீர்திருத்தத்தைச் செய்து வருகிறது இந்த சர்க்கார். மேலும், ப்ரொக்யூர்மெண்ட் அண்டு ரேஷனிங்— அதாவது கொள்முதல், பங்கீடு என்கிற முறைகள்—பற்றிப் பேசும்போது, 'ப்ரொக்யூர்மெண்ட் அண்ட் ரேஷனிங்' விவசாயிகளைப் பாதிப்பதாகச் சொன்னார்கள். நாம் தெரிவிப்பது என்னவென்றால், விவசாயிகள் உணவு உற்பத்தி செய்கிறார்கள். விவசாயிகளுக்கும் தேவைக்குப் போக மீதியை அவர்கள் எப்படியும் வியாபாரிகளிடம் விற்கத்தான் போகிறார்கள். விவசாயிகளைப் பொறுத்த வரை தேவைக்கு அதிகமான உணவுப் பொருள்களை வியாபாரிகளிடம் விற்பதற்குப் பதிலாக, அரசாங்கம் தங்களிடம் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். வேறொன்றும் இல்லை. "Procurement and rationing do not affect either the agriculturists or the consumers, but affect only the blackmarketeers and hoarders." அதாவது, கொள்முதல் விவசாயிகளைப் பாதிக்காது, ஆனால் கொள்ளை லாபக்காரர்களையும், பதுக்கல்காரர்களையும் தான் பாதிக்கும். அது ஏழை எளிய மக்களைப் பாதிக்கும் கொள்கை அல்ல. அதுதான் சமதர்மக் கொள்கையும் ஆகும் என்பதை அனைவரும் உணர்ந்து ஒத்துழைப்பதற்குப் பதிலாக, ஒரு சிலர் உணவுப் பஞ்சத்தை உண்டாக்கும் சமூக விரோத சக்திகளுக்குத் துணை போகிறார்கள் என்று கூறிக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

* Thiru K. S. KOTHANDARAMIAH: Sir, on the Motion of Thanks to the Governor I wish to express a few of my ideas and I take this opportunity to thank the Hon. Speaker for his kindness in allowing me to speak on this occasion.

I welcome the present Ministry as well as the Governor's Address. I find the Address of the Governor interesting and inspiring, because I find some good points in it. A major portion of the Address has been devoted to the most important subject of improving agriculture and increasing food production. In many places the Hon. Ministers have expressed their willingness, earnestness and eagerness to improve the condition of the people to

கள் இங்கே வீற்றிருக்கிறார் என்ற எண்ணத்திலே தொகுதிக்கு எந்த விதமான நன்மையும் செய்யப்படவில்லை. இராமநாதபுரம் ஜில்லா ஹெட்குவார்டர்ஸ் தலைமை அலுவலகங்கள் எல்லாம் மதுரையிலே அமைந்திருப்பதால், ஒரு மோசமான நிலைமை அங்கே இருந்து கொண்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காங்கிரஸ் ஆட்சியைவிட நல்ல முறையிலே நடைபெறும் என்ற நம்பிக்கையில்தான் என்னை இங்கே அனுப்பியிருக்கிறார்கள். எனவே, இதுபோன்று காங்கிரஸ் ஆட்சியில் செய்யப்படாமல் விட்டுப்போன விஷயங்களைத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே செய்ய வேண்டும் என்று மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கை வீண்போகாது என்பதை எனது தொகுதி மக்களுக்கு சபாநாயகர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனது பகுதியில் விவசாயம் செய்யப்படுகின்ற 7,000 ஏக்கர் நஞ்சை நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கக்கூடிய ஒரு பெரிய கண்மாய் இருக்கிறது. அந்தக் கண்மாய்க்கு வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் வரவேண்டிய நிலைமை இருக்கின்றது. தண்ணீர் வருகின்ற காலத்தில் பயிர் செய்கின்ற காலங்களில் தண்ணீர் வாராமல் இருந்துவிடுகிறது. சாதாரணமாக நாற்றுப் பாவக்கூடிய ஆடி மாதத்தில் அங்கு தண்ணீர் வருவதில்லை. அதனால் விவசாயம் பாதிக்கப்பட்டு, மக்கள் மிகுந்த அவஸ்தைக்குள்ளாகி இருக்கிறார்கள். அந்த நிலையில் விவசாய அமைச்சர் அவர்கள் ஆடி மாதத்தில் தண்ணீர் வருவதற்குள் விவசாயிகள் நாற்றுப் பாவுவதற்குத் தேவையான தண்ணீர் வசதி கிடைக்கும்படி ஏற்பாடு செய்து, நல்ல நம்பிக்கையை விவசாயிகளுக்கு ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக . . .

(மணி அடிக்கப்பட்டது.)

**திரு. எஸ். ராமச்சந்திரன்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்றைய தினம், பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை உணவுப் பிரச்சினைதான். அவர்களுடைய நல்ல காலம் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்டது என்பதுதான். ஏனென்றால் இதற்கு முன்னால் 20 ஆண்டுக் காலம் ஆண்ட காங்கிரஸ் கட்சி உணவுப் பிரச்சினையில் ஒரு நெருக்கடியையே உருவாக்கியது மட்டுமல்லாமல், இன்னும் இரண்டு ஆண்டுக் காலத்தில் உணவுப் பஞ்சமே ஏற்பட்டுவிடும் என்று மத்திய உணவு அமைச்சர் எச்சரிக்கும் அளவிற்கு நிலைமைகள் கெட்டுவிட்டிருக்கின்றன. தமிழ் நாட்டு மக்களுடைய நல்ல காலம், ஒரு திறமை மிக்க அமைச்சரவை ஏற்பட்டதோடு, வெகு திறமையான அமைச்சர்களையும் உணவுத் துறைக்கும், விவசாயத் துறைக்கும், அத்துறைப் பணிகளுக்கு ஏற்ப, தகுதி வாய்ந்த அமைச்சர்கள் நியமிக்கப்





பட்டிருக்கிறார்கள் என்றும் கருதுகிறேன். ஏனென்றால், காங்கிரஸ் சர்க்கார் சென்று, நம்முடைய சர்க்கார் ஏற்பட்ட அன்றைய தினம், சென்னை மாநகரத்தில் 500 டன் அரிசிதான் இருந்தது. காலையிலேகூட எடுத்துச் சொன்னார்கள், சென்னை நகரத்திற்கு 600 டன் அரிசி தேவை என்று. அந்த வகையில் பார்க்கும்போது, எந்த அளவிற்கு உணவுக் கிடங்குகள் காலியாக இருந்தன என்பதை நாம் உணரமுடிகிறது. ஆகவே, உடனடியாக இந்த உணவுப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண வேண்டும் என்று, அந்த முறையில், எல்லை ஓரங்களில் உடனடியாகக் காவல் நிலையங்களை வைத்து உணவுப் பொருள்கள் மற்ற இடங்களுக்குப் போகாமல் பார்த்தும், அதோடு விவசாயிகளிடமிருந்தும், கள்ள மார்க்கெட்டுக்காரர்களிடமிருந்தும், கொள்ளை லாப வியாபாரிகளிடமிருந்தும், தானியங்களைப் பெற்று நாட்டு மக்களுடைய நன்மைக்காகப் பங்கீடு முறையில், அது சம்பந்தப்பட்ட துறையிலும் திறமையான புது அதிகாரிகளைப் போட்டு, நல்ல சீர்திருத்தத்தைச் செய்து வருகிறது இந்த சர்க்கார். மேலும், ப்ரொக்யூர்மெண்ட் அண்டு ரேஷனிங்— அதாவது கொள்முதல், பங்கிடு என்கிற முறைகள்—பற்றிப் பேசும்போது, 'ப்ரொக்யூர்மெண்ட் அண்ட் ரேஷனிங்' விவசாயிகளைப் பாதிப்பதாகச் சொன்னார்கள். நாம் தெரிவிப்பது என்னவென்றால், விவசாயிகள் உணவு உற்பத்தி செய்கிறார்கள். விவசாயிகளுக்கும் தேவைக்குப் போக மீதியை அவர்கள் எப்படியும் வியாபாரிகளிடம் விற்கத்தான் போகிறார்கள். விவசாயிகளைப் பொறுத்த வரை தேவைக்கு அதிகமான உணவுப் பொருள்களை வியாபாரிகளிடம் விற்பதற்குப் பதிலாக, அரசாங்கம் தங்களிடம் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். வேறொன்றும் இல்லை. "Procurement and rationing do not affect either the agriculturists or the consumers, but affect only the blackmarketeers and hoarders." அதாவது, கொள்முதல் விவசாயிகளைப் பாதிக்காது, ஆனால் கொள்ளை லாபக்காரர்களையும், பதுக்கல்காரர்களையும் தான் பாதிக்கும். அது ஏழை எளிய மக்களைப் பாதிக்கும் கொள்கை அல்ல. அதுதான் சமதர்மக் கொள்கையும் ஆகும் என்பதை அனைவரும் உணர்ந்து ஒத்துழைப்பதற்குப் பதிலாக, ஒரு சிலர் உணவுப் பஞ்சத்தை உண்டாக்கும் சமூக விரோத சக்திகளுக்குத் துணை போகிறார்கள் என்று கூறிக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

* THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, on the Motion of Thanks to the Governor I wish to express a few of my ideas and I take this opportunity to thank the Hon. Speaker for his kindness in allowing me to speak on this occasion.

I welcome the present Ministry as well as the Governor's Address. I find the Address of the Governor interesting and inspiring, because I find some good points in it. A major portion of the Address has been devoted to the most important subject of improving agriculture and increasing food production. In many places the Hon. Ministers have expressed their willingness, earnestness and eagerness to improve the condition of the people to

do something for their good and to remove their difficulties. I welcome them and I hope they will be able to do some good to the State and also to the country.

With regard to the food problem, I endorse and support the views of my Party. Those views were clearly explained by a Member of my Party and an hon. Member of this House Dr. Hande some days ago with reasons. Our idea is that controls must go. That is our firm belief. From the speech in the Assembly this morning by the Hon. Minister for Food about controls, I understand that the continuance of controls is only a temporary measure and that after some time the Government are going to remove them. From this I gather that their belief is greater in decontrol than control. Therefore, I submit that the difference between the idea of the Swantantra Party and the idea of the present Ministry is not very much. We say that we want the removal of controls immediately because people have become disgusted with controls, soaring prices, scarcity of food-grains, and irregularities in rationing and also bickering and frustration in the process of procurement. Our Hon. Ministers say that they will take some time, first they will remove the defects and afterwards they are going to remove the controls. Anyhow, since I find that they are eager and earnest in their efforts, I extend my support to them.

I want to say a few words with regard to my constituency. I come from Uddanapalle constituency in the Hosur taluk. It is a border taluk. It is a well-known fact that Hosur taluk commands a charming and fine climate and in this respect it is on a par with Bangalore. In spite of the charming climate, in spite of the natural facilities and in spite of the goodness of the people, the taluk is kept in a most backward condition. If you compare the taluk of Hosur with the neighbouring taluks, you find that it is really backward and every village and every place indicates that it is very backward. The backwardness is due to the absence of good roads and bridges and facilities for irrigation. If these things are provided, I am sure, our taluk will be able to make very good pogress and stand on a par with the other taluks.

We require a college and a training school for Telugu women and these are very very urgent necessities.

Supply of fertilisers to agriculturists is very unsatisfactory and the agriculturists are not able to get them from co-operative societies and so they are going to Bangalore and other places. They undergo sufferings and they are made to spend a lot of time in journey and this leads to delay in agricultural operations. Therefore I appeal to the Hon. Ministers to pay their special attention to this backward area and see that it is well developed and brought on a par with the other taluks of this district.

**திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்:** கனம் தற்காலிக சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமானுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது சில வார்த்தைகள் சொல்ல நான் விரும்பு





கிறேன். அவர்களுடைய உரையில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய தேசம் விவசாயத்தையே பெரும்பாலும் முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ள தேசமாக இருந்தபோதிலும், உணவுப் பொருள்கள் பற்றாக்குறையும், அதிலே ஒரு நெருக்கடியான நிலைமையும் இருப்பது உண்மையிலேயே வருந்தத்தக்கதாகும். விவசாயத்தை நல்ல முறையில் அபிவிருத்தி செய்வதற்குக் கவர்னர் அவர்களுடைய அறிவுரைகள் நல்ல வாய்ப்பாக அமைந்திருக்கிறது. விவசாயம் செழித்தால்தான், இன்றைக்கு அரசாங்கத்தை எதிர்நோக்கியிருக்கும் பெரும் பிரச்சினையான உணவுப் பிரச்சனைக்குப் பரிகாரம் காண முடியும். உணவுப் பிரச்சினைதான் நம் முன்னுள்ள மிகப் பெரும் பிரச்சினை யாக இருக்கிறது. இது ஒரு கட்சியினுடைய பிரச்சினை மட்டு மல்ல. இதை ஒரு பெரும் தேசியப் பிரச்சனையாகவே நாம் எல்லோரும் கருதவேண்டும். உணவுப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றால், விவசாயம் நல்ல முறையில் செழித்து ஓங்க வேண்டும்.

விவசாயம் செழிப்புறுவதற்கு முந்தைய அரசாங்கம்—காங்கிரஸ் அரசாங்கம்—பல அபிவிருத்தித் திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி யிருக்கிறார்கள். விவசாயம் வளர்ச்சி பெற்றால்தான் நாட்டிலுள்ள உணவு நெருக்கடியைத் தீர்க்க முடியும் என்பதை உணர்ந்து, கோடிக்கணக்காகப் பணம் செலவழித்துப் பல திட்டங்களை நிறை வேற்றியிருக்கிறார்கள். குறிப்பாக, இந்த நாட்டிலிருக்கும் ஆறு களின் குறுக்கே அணைகளைக் கட்டி நீர்ப்பாசன வசதியைப் பெருக்கியிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல 2,60,000-க்கும் மேற் பட்ட மின்சார மோட்டார்களை இயக்கியிருக்கிறார்கள். உரம், விதை தானியம் வழங்குதல், மேட்டுப்பாங்கான பகுதிகளில் கிணறுகளை வெட்டிக் கொடுத்தல் போன்றவற்றிற்குக் கடனாகவும் மானியமாகவும் பல தொகைகளைச் செலவழித்துப் பல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அப்படிச் செய்தும், இன்றைக்குச் சமுதாயத்தில் வளர்ந்து வரக்கூடிய ஜனப் பெருக்கத்திற்கேற்ற அளவிற்கு உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து, சம நிலை காண முடியாத இக்கட்டான நிலையில் நாம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறோம். இதற்கு முன் இருந்த அரசாங்கம் அதற்காக நிறையச் செலவு செய்தும்கூட, உணவு நிலை யைச் சரிக்கட்ட முடியவில்லை. இந்த நிலையில் விவசாயத்தை நாம் அபிவிருத்தி செய்தாகவேண்டும்; உணவு நெருக்கடியைப் போக்கி யாகவேண்டும். உணவு நெருக்கடியைப் போக்குவதற்கான ஆலோ சனைகளையும் எங்கள் கட்சியைச் சார்ந்த அங்கத்தினர்கள் பலரும் சொன்னார்கள். என்றாலும், "முன்னேற்றக் கழகம் மூன்று படி அரிசி போடுவதாகச் சொன்னார்களே, ஏன் கொடுக்கவில்லை?" என்று பலரும் கேட்பதாகச் சொன்னார்கள். மூன்று படி அரிசி கொடுக்க வேண்டுமென்றால், உணவு அமைச்சரவர்கள் அட்சய பாத்திரமா வைத்துக் கொண்டிருக்கிறார், உடனே வாரி வழங்கி விடுவதற்கு? இன்றுள்ள உணவுப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு வேண்டியது அவசிய பல நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள

மாகிறது. உணவு உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்க
வேண்டும். உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யத்தக்க அள
விற்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அது மட்டும்
போதாது. உற்பத்தி செய்ததைச் சரியாகப் பங்கிட்டுக்
கொடுக்கவேண்டும். பங்கீட்டு முறையையும் சரி செய்தாக
வேண்டும். எல்லோருக்கும் உணவு கிடைக்கக்கூடிய அளவிற்கு
நாட்டிலுள்ள பற்றுக்குறையைப் போக்கி, உற்பத்தி
யைப் பெருக்குவதிலே எல்லோருமே முயற்சி எடுத்துக்கொள்ள
வேண்டும். உணவு அமைச்சர் மட்டுமோ அல்லது அரசாங்கம்
மட்டுமோ இதற்குப் பொறுப்பு அல்ல. நாட்டில் உணவு நெருக்கடி
இருக்கிறது. அதைப் போக்க எல்லோரும் ஒத்துழைக்க வேண்
டும். மூன்று படி அரிசி என்று நாங்கள் சொல்லவில்லை. எங்களுக்
கும் ஓரளவிற்குப் பொறுப்பு இருக்கிறது. நிர்வாகத்தின் நிலைமை
எங்களுக்கும் தெரியும். பொதுமக்களிடம் முன்னேற்றக் கழகத்
தினர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்பதைச்
சுட்டிக்காட்டித்தான் பொறுப்புணர்ச்சியோடு பேசுகிறோமே தவிர,
அதை நாங்கள் வேண்டுமென்றே சொல்வதாக இல்லை. ஆகவே,
உணவுப் பிரச்சினையைத் தீர்க்க விவசாயத்தை அபிவிருத்தி செய்
தாக வேண்டும். விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு உணவுப்
பொருளான நெல்லை அதிகமாக உற்பத்தி செய்தாக வேண்டும்.
நெல் உற்பத்தி செய்பவர்களுக்கு இன்றைக்கு அதிலே அதிக
ஊக்கம் இல்லாமலிருக்கிறது. ஏனென்றால், நெல் உற்பத்தி செய்
வதிலே விவசாயிகளுக்குப் போதுமான வருமானம் கிடைப்பது
இல்லை. அதனால், அவர்கள் பணப் பயிர்களை உற்பத்தி செய்கிறார்
கள். நெல் பயிரிடுவதைவிட, கரும்பு, பருத்தி, புகையிலை, குச்சி
வள்ளிக்கிழங்கு போன்ற பயிர்களைச் சாகுபடி செய்வதன் மூலம்,
விவசாயிக்கு அதிக வருமானம் கிடைக்கிறது. மேற்கண்ட பணப்
பயிர்களைச் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் கூட
வருமானம் கிடைக்கிறது. ஆனால், நெல் சாகுபடி செய்தால்
விவசாயிக்கு ஏக்கருக்கு 100 முதல் 200 ரூபாய் வரையில்தான்
வருமானம் கிடைக்கிறது. இந்த நிலையில், பணப் பயிர்களை விவ
சாயிகள் சாகுபடி செய்வதால் நெல் உற்பத்தி அந்த அளவிற்குத்
தடைப்படுகிறது. ஆகவே, நெல் அதிகமாக நாட்டில் உற்பத்தி
செய்யப்படவேண்டும் என்றால், இன்றைய அரசாங்கம் விவசாயி
களுக்கு ஊக்கம் அளித்தாக வேண்டும், பாதுகாப்பு அளிக்க
வேண்டும், விவசாயிகள் அதிகமாக நெல் சாகுபடி செய்வதற்கு
என்ன என்ன வகையிலே அவர்களை ஊக்குவிக்க முடியுமோ, அந்த
வகையில் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். இதற்கு என்னுடைய
தாழ்மையான அபிப்பிராயம் என்னவென்றால், நெல் உற்பத்தி
செய்வதை ஊக்குவிப்பதற்கு போனஸ் திட்டத்தைக் கொண்டுவர
வேண்டும். மானியத் திட்டமாகக் கொண்டு வந்து, ஒரு ஏக்கரில்
இவ்வளவு நெல் உற்பத்தி செய்தால் இவ்வளவு தொகை வழங்கப்
படும் என்ற திட்டத்தைக் கொண்டு வருவது சிறந்த அம்சமாக
இருக்க முடியும். இந்த வகையில் நெல் உற்பத்தியும் அதிகரிக்கும்,
நாட்டின் தேவையும் ஓரளவு பூர்த்தியாகும் என்று தெரிவித்து,
என்னுடைய உரையை முடிக்கிறேன்.





* **திரு. க. ந. சிவபெருமாள் :** சட்ட மன்றத் தற்காலிகத் தலைவர்
அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையை வரவேற்று, அவர்
களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து,
என்னுடைய கருத்தினை இங்கே எடுத்துச்சொல்ல நான் விரும்பு
கிறேன்.

கடந்த 19 ஆண்டு காலமாக மக்கள் இருள் சூழ்ந்த நிலையில்
வாழ்ந்துகொண்டு வந்தவர்கள் இன்று ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி,
திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சிப் பீடத்தில்
அமர்த்தியிருக்கிறார்கள். அப்படி ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி
யிருப்பது இந்த நாட்டில் ஜனநாயகம் நல்ல முறையில் நிலைநாட்டப்
பட்டிருக்கிறது என்பதற்கும், மக்கள் தங்களுடைய வாக்
குரிமையை நல்லமுறையில் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்ப
தற்கும் ஒரு எடுத்துக்காட்டாகும். இன்றையதினம் ஆளுங்
கட்சியாக இருக்கும் முன்னேற்றக் கழகம் முன்பு எதிர்க் கட்சியாக
வும், இன்றையதினம் எதிர்க்கட்சியாக இருக்கும் காங்கிரஸ்
கட்சி அன்று ஆளுங் கட்சியாகவும் இருந்திருக்கிறது.
முன்னேற்றக் கழகம் அளித்த வாக்குறுதிகள் அத்தனையையும்
நிறைவேற்றும் அளவிற்கும், முன்பிருந்த ஆட்சியிலிருந்து வேறு
பாடு தெரியத்தக்க அளவிற்கும் முன்னேற்றக் கழக அமைச்சரவை
பணியாற்றும் என்று நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல
ஆசைப்படுகிறேன். எந்த எந்த நல்ல காரியங்களை முன்னேற்றக்
கழகம் ஆட்சிக்கு வந்தால் மக்களுக்குச் செய்யும் என்று எதிர்
பார்த்தோமோ, அவற்றையெல்லாம் நிறைவேற்றத்தக்க நிலையில்
இன்றையதினம் முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்திருக்கிறது.
நல்ல எதிர்க்கட்சியாக முன்னேற்றக் கழகம் கடந்த பத்தாண்டுக்
காலத்தில் சட்ட மன்றத்தில் பணியாற்றவில்லை என்று குறைப்
பட்டுக் கொண்டிருந்த காங்கிரஸ்காரர்களெல்லாம் இன்றையதினம்
எதிர்க்கட்சிக்கு உண்டான இலக்கணத்தை அவர்கள் நடந்து
கொள்ளுவதன் மூலமாகச் சொல்லித்தரத்தக்க விதத்தில் அவர்க
ளெல்லாம் அமர்ந்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

கவர்னர் உரையில் விவசாயத் துறைக்கு அதிக முக்கியத்துவம்
அளிக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அப்படி வரவேற்
கின்ற நேரத்தில், உர வகைகள், பொறுக்கு விதைகள் முதலியவை
உரிய நேரத்தில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அளிக்கப்பட
வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
கடன் வசதிகளும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் காலா
காலங்களில் அளிக்கப்படவேண்டும். அயல்நாடுகளில் விண்ணப்பம்
செய்த சில மணி நேரத்திற்குள் அளிக்கப்படுவதாகக் கூறப்படு
கிறது. ஆனால், இங்கே விண்ணப்பம் செய்து பல ஆண்டுகளானா
லும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கிடைக்கவில்லை என்ற
நிலை நீக்கப்பட்டு, விரைவில் கடன் வசதி கிடைக்கச் செய்ய
அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று இந்த அமைச்
சரவையை நான் கேட்டுக்கொள்கின்றேன். மத்திய அரசினிடத்
தில் முன்கூட்டியே அறிவித்து, நல்ல உர வகைகளைப் பெற்றுக்
கையிருப்பில் வைத்துக்கொள்வது மிகவும் சாலச் சிறந்ததாகும்.

நான் தேர்ந்தெடுக்கப்பட்டது சேலம் மாவட்டத்தில் உள்ள ஆத்தூர் தொகுதியாகும். அது விவசாயத்திற்குப் பெயர் பெற்ற இடம்; 90 சத வீத மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தப் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் சிறு பாசன வசதிகள் இல்லாத காரணத்தால் தரிசாகவே இருக்கின்றன என்பதை அமைச்சரவைக்கு இந்த மன்றத்தின் வாயிலாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அங்கேயிருக்கிற ராமநாய்க்கன் பாளையம் தரிசுநிலக் காலனித் திட்டத்தில் ஏழைகளுக்கு ஆயிரம் ஏக்கர் வழங்கப்பட்டிருந்தாலும், அந்த வட்டாரத்திலுள்ள ஏழைகளுக்கு நிலம் வழங்கப்படாமல், பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்த பெரிய நிலச் சொந்தக்காரர்களுக்கும், அங்குள்ள வியாபாரிகளுக்கும் நிலங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்று நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் 500 ஏக்கர் நிலம் இன்னும் தரிசு நிலமாகவே இருந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட 500 ஏக்கர் நிலங்களும் காலனித் திட்டத்தில் சேர்க்கப்படுவது சம்பந்தமாக ரெவினியூ போர்டு அறிவிப்பு ஒன்று வந்திருக்கிறது. அப்படிப்பட்ட அறிவிப்பை ரத்துசெய்து, அடைமானம் செய்யவேண்டும் என்று அமைச்சரவையை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் தொகுதியில் உள்ள செட்டி அணையையும் கட்டித்தரவேண்டும் என்று இன்றல்ல நேற்றல்ல, கடந்த பதினைந்து ஆண்டுகளாகச் சட்ட மன்றத்தில் எடுத்துச்சொல்லப்பட்டு வந்தது. அதையும் இந்த அமைச்சரவை கவனிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் Madras Public Buildings and Licensing Act, 1965 என்ற ஒரு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் பெருவாரியாகச் சேரும் இடத்தில் உள்ள கட்டடங்கள் பழுது இல்லாமல் இருக்கின்றனவா என்பதைப் பார்க்க வேண்டுமென்பதற்காகவும் பழுது ஏற்பட்டால் பெருவாரியான மக்கள் அதனால்
பிற். பகல் 5-30 பாதிக்கப்படுவார்கள் என்ற உள்நோக்கத்தோடுதான் அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்படிப் பார்க்கிறபோது வழக்கறிஞர்கள் அலுவலகங்களும் அதில் சேர்க்கக்கூடும். அப்படிச் சேருகிறபோது வழக்கறிஞர்களுக்கு, விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்றும் ஏற்கெனவே மருத்துவ மனைகளுக்கு இந்த விதிவிலக்கு அளிக்கப்பட்டதென்றும் இந்த நேரத்தில் சொல்லிக் கொண்டு, கவர்னர் அவர்கள் உரையின் மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேச வாய்ப்புக் கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய தலைவர் (திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி):** இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன. நாளை காலை 9 மணியளவில் இந்தப் பேரவையின் கூட்டம் மீண்டும் நடைபெறும் என்பதை அறிவிக்கிறேன்.

**பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.**

## தமிழகச் சட்டப் பேரவை

*வியாழக்கிழமை, 1967 மார்ச் 30.*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### வினாக்கள் விடைகள்

*நட்சத்திரக் குறியிட்ட வினாக்கள்:*

*Free education in Pre-University class*

* 7. *Q.*—THIRU. K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to make education free at Pre-University level from the academic year 1967–68 irrespective of the incomes of the parents and their communities?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** இவ்விஷயம் பரிசீலனையிலிருக்கிறது.

**திரு. கே. விநாயகம்:** இந்தப் பரிசீலனையின் முடிவு தெரிவதற்கு எத்தனை நாட்களாகும்? கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இந்தக் கல்லூரிகள் எல்லாம் ஜூன் மாதத்தில் திறக்கப் போகிறார்கள். ஆகவே, மே மாத கடைசிக்குள் ஆகவாவது சர்க்கார் இதுபற்றி எடுக்கிற முடிவுகளைத் தெளிவாக மக்களுக்கு விளம்பரம் மூலமாகவாவது அறிவிக்க ஏற்பாடுகள் செய்வார்களா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, மே மாத இறுதிக்குள் இதுபற்றி பரிசீலிக்கப்பட்டு ாந்த அடிப்படையில், எந்த வகையில், எந்த முறையில் இலவசக் கல்வி அளிக்கலாம் என்பதுபற்றி தெளிவாக முடிவு எடுக்கப்படும்.

**திரு. எட்மண்ட் பெர்னாண்டோ:** ஹிந்து மதத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்பட்ட வகுப்பினர் ஆகியவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிற சலுகைகள் கிறிஸ்தவ மதத்திலே சேர்ந்துள்ளவர்களுக்கும் கொடுக்க இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்பொழுதே கொடுக்கப்பட்டு வருகிறது என்று அறிகிறேன். இல்லையென்றால் அது பரிசீலிக்கப்படும்.

DR. H. V. HANDE: Mr. Speaker, Sir, every year there is unprecedented rush in the Colleges, especially, at the Pre-University Course level and every year in the month of July whenever the Legislature met, we used to draw the attention of the Ministers to this great rush in Colleges and every year the Chief

Minister used to address the University requesting them to relax the rules and increase the number of seats in these classes. In view of this experience every year in the past, will the Hon. the Minister for Education be pleased to make early arrangements, as a precautionary measure, in advance so that it may be possible for all the students to secure admission in the P.U.C. classes?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** கிட்டத்தட்ட 1,90,000 பேர் பரீட்சை எழுதுகிறார்கள். இதில் பாதி பேராவது வெற்றி பெறுவார்கள் என்று நம்பலாம். புகுமுக வகுப்பில் 45 ஆயிரம் பேர்களுக்குத்தான் இடம் இருக்கின்றது. அந்த இடங்களை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொள்ளும்படி துணைவேந்தர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். மேற்கொண்டும், புதிதாக இரண்டு மூன்று கல்லூரிகளைத் துவக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான் :** சார். ப்ரொஃபஷனல் காலேஜ்களாகிய மெடிகல், இன்ஜினீரிங் கல்லூரிகளில் படிக்கக்கூடிய 'மோஸ்ட்' பேக்வார்டு கிளாஸ் கம்யூனிடி, தாழ்த்தப்பட்ட கம்யூனிடி ஆகியவைகளைச் சேர்ந்தவர்களுக்குத் தனிச் சலுகை கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** இது முதற் கேள்வியோடு தொடர்புடையது அல்லவென்றாலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு, மலைச்சாதி வகுப்பினருக்கென்று 16 சதவிகிதமும், பிற்பட்ட வகுப்பினருக்கு 25 சதவிகிதமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிற்பட்ட வகுப்பினரும். தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் பொதுவான துறையிலும் மார்க் விகிதங்களின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட வாய்ப்பு இருக்கிறது. அதனால் தான் இந்த ஆண்டு பொறியியல் கல்லூரியில் பிற்பட்ட வகுப்பினருக்கு 25 சதவிகிதம் என்று ஒதுக்கப்பட்டிருந்தாலும் மொத்தத்தில் 47 சதவிகிதம் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் தாழ்த்தப்பட்ட மலைச்சாதியினருக்கு முழுச் சம்பள சலுகையும், மற்ற பிற்பட்ட வகுப்பினருக்கு அரைச்சம்பள சலுகையும் தருகின்ற நிலைமை இருக்கிறது. பொதுவாக, இலவசக் கல்வியைப் பெற வேண்டிய நிலையில் இருப்பவர்களுக்கு எல்லாம் சலுகை தரப்பட வேண்டுமென்பதே நமது நோக்கமாகும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** மொத்தமாக பி.யு.சி. வகுப்பினர் அனைவருக்கும் இலவசக் கல்வியை அளிக்க வேண்டுமென்பதாக தமிழ்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் ஏதேனும் அரசாங்கத்திற்குக் கோரிக்கை அனுப்பியிருக்கிறதா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றி விவரம் என்னிடம் இல்லை.



THIRU. K. VINAYAKAM : If in case the Government decides to give free education at the P.U.C. level, the main difficulty which the Chief Minister would be beset with is want of accommodation. Will the Government, therefore, take steps either to introduce the shift system in colleges or at least to provide temporary accommodation so as not to be worried with this difficulty and the necessity of turning away the students?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினர் கூறுகிறபடி புகுமுகவகுப்பில் எல்லோருக்கும் இலவசக் கல்வி தருவது என்று முடிவு எடுப்போமானால், கனம் உறுப்பினர் சொல்லுகிற யோசனையைக் கவனிக்க வேண்டியதாக இருக்கும். அதுபற்றி பரிசீலனை செய்யும்போது இக்கருத்தும் கவனிக்கப்படும்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, இப்போதுள்ள கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் 45,000 பேர்கள் படிக்கத்தான் வசதி இருக்கிறது என்றார்கள். இவ்வாண்டு கிட்டத்தட்ட 2 லட்சம் பேர்களுக்கு மேல் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை எழுதுகிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே, இதுபற்றி பரிசீலனை செய்ய கன்சல்டேடிவ் கமிட்டி அமைக்கப்படும் என்று சொன்னார்களே, அது அமைக்கப்பட்டு முடிவு பரிசீலனை செய்து அறிவிக்கப்படுமா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் முதலமைச்சர் அவர்கள் சொன்னபடி கன்சல்டேடிவ் கமிட்டி போடுவதாகத்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் அதிகம் பரிசீலிக்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இலவசக் கல்வி என்பது கல்லூரிகளில் ஃபீஸ் இல்லாமல் செய்து, ஸ்காலர்ஷிப் கொடுப்பது என்றுதான் இருக்கிறது. ஏழைக் குடும்பத்திலுள்ள பல மாணவர்களுக்கு இன்றையதினம் இந்த உதவி கொடுத்தால்கூட படிக்க முடியாமல் இருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே. உணவு, உடை, இருப்பிடம் என்பதாக இப்படி எல்லாவற்றையுமே இலவசமாக ஏழை மாணவர்களுக்கு வழங்க ஜில்லா வாரியாக தற்சமயம் ஒரு கல்லூரியாவது ஏற்பாடு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போது இலவசக் கல்வி தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மலைச்சாதியினருக்குமே அளிக்கப்படுகிறது. பிற்பட்ட வகுப்பினருக்கு பாதிச் சம்பளம் அளிக்கப்படுகிறது. இதில் 1,500 என்று வருமான வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த வருமான வரம்பை உயர்த்துவதன் மூலமாக இன்னும் அதிகப்படியான பேர்களுக்கு உதவி கிடைக்க வழி ஏற்படுமா என்பதும் பரிசீலனையில் இருக்கிறது. இதுபற்றி விரிவான முறையில் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்.

[1967 மார்ச் 30

**திரு. எஸ். ராமச்சந்திரன்:** மேலைநாடுகளில் உள்ளதுபோல. வருமான வரி செலுத்துவோர்களிடமே எஜுகேஷனல் செஸ் என்பதாக வசூலித்து, அதன்மூலம் இலவசக் கல்வியை அளிக்க உத்தேசம் உண்டா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** இந்த யோசனைகள் எல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** இந்தச் சலுகை அளிப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு எவ்வளவு செலவாகும் என்று சொல்ல முடியுமா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்போதிருக்கிற நிலைமையில் புதுமுக வகுப்பில் எல்லோருக்கும் இலவசக் கல்வியை அளிப்பது என்றால், 75 லட்சத்திற்கு மேல் ஆகுமென்று உத்தேசமாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

**திரு. மு. ச. சிவசாமி:** இப்போது பள்ளிகளில் வசூலித்துவரும் ஸ்பெஷல் கட்டணங்களையெல்லாம் நிறுத்துவதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றி இப்போது எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. விரிவாகப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. எஸ் ராமலிங்கம்:** சர்க்கார் கல்லூரிகளில் கொடுக்கப்படுகிற சலுகைகள். தனியார் கல்லூரிகளிலும் விஸ்தரிக்கப்படுமா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** சர்க்கார் கல்லூரிகளில் என்னென்ன சலுகைகள் கொடுக்கப்படுகின்றன, தனியார் கல்லூரிகளில் என்னென்ன கொடுக்கப்படுகின்றன. கொடுக்கப்படவில்லை என்கிற விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. இது பற்றி பரிசீலனை செய்யும்போது கவனிக்கப்படும்.

THIRU T. MARTIN: Mr. Speaker, Sir, having been informed in this Hon'ble House that the present Ministry is the successor of the old Justice Party, may I request the Minister for Education to state whether the present Ministry will consider the question of reviving the old Communal G.O. which has been declared invalid by the High Court or evolve any other scheme like that for providing proportionate representation with regard to admission in professional colleges?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்பொழுது இருக்கின்ற முறையைப் பொறுத்தவரையில் 16 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று ஒதுக்கியும், 25 சதவிகிதம் பிற்பட்ட வகுப்பினருக்கு என்று ஒதுக்கியும் வரப்படுகிறது இப்பொழுது அதுதான் மேற்கொள்ளப்படும்.



1967 மார்ச் 30]

**திரு. கெ. இர. ஞானசம்பந்தன்:** கனம் சபாநாயகர் அவர்களே இப்பொழுது ஏற்கனவே ஏழு கோடி ரூபாய் வரையிலே துண்டு விழக்கூடிய நிலையிலே அரசு இருக்கும்பொழுது புகுமுக வகுப்பிலே படித்து வருகின்ற ஏழை மாணவர்களுக்குப் பரிபூரணமாகக் கட்டணம் இல்லாமல் செய்து வசதி இருப்பவர்களிடத்திலே அதிகக் கட்டணம் வசூல்செய்வதற்கும் உத்திரவு பிறப்பிப்பதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்பொழுது ஒன்றும் அது முடிவு செய்யப்படவில்லை. இதைப்பற்றிப் பரிசீலனை செய்யும்பொழுது இவையெல்லாம் ஆராயப்படும்.

**திரு. இரா. மாணிக்கவாசகம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கல்விச் சலுகைகள் கவுண்டர் சமுதாயம் ஃபார்வார்டு கம்யூனிட்டியிலே சேர்த்திருப்பதால் அவர்களுக்கு 1,500 ரூபாய்க்கு வருடம் ஒன்றுக்கு வருமானம் குறைந்து இருந்தாலும் கல்லூரிகளிலே அவர்களுக்குச் சலுகைகள் கொடுப்பது இல்லை ஆகவே அதை ஆழ்ந்து பரிசீலனை செய்து, பரிகாரம் தேட அரசாங்கம் முயற்சிக்குமா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** இந்தப் பிரச்னையில் அந்தக் கேள்வி எழவில்லை.

**திரு. கே. போஜன்:** அவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது பின்தங்கிய வகுப்பினருக்கும், மலைச் சாதியினருக்கும் சர்க்கார் கொடுக்கின்ற உதவிப்பணம் விலைவாசி உயர்வின் காரணமாக கட்டுபடியாகவில்லை. ஆகவே அதையும் அதிகமாக்கிக் கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** இதிலே எல்லாம் ஒன்றும் பணமாகக் கொடுக்கும் நிலையில்லை. ஆகவே விலைவாசிப் பிரச்சினை இதிலே வரவில்லை.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** இந்தியாவில் உள்ள மற்ற சர்வ கலாசாலைகளைப்போல் தபால் முறையிலே சென்னை சர்வகலாசாலை மட்டத்திலும் படிப்பதற்கு அனுமதியளித்தால் இந்த இலவசக் கல்விப்பிரச்னை இல்லாமல் இருக்கும் அல்லவா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதை யோசிக்க வேண்டியதும், அதைப்பற்றி முடிவெடுக்கவேண்டியதும் சர்வகலாசாலை தான் அதுதான் உரிமை படைத்தது.

**திரு. பு. செ. முத்துச்செல்வன்:** கனம் சபாநாயகர் அவர்களே, கல்லூரிகளிலே நடக்கின்ற மாலைக் கல்லூரிகளிலே படிக்கின்ற பதிவு செய்யப்படாத அரசாங்க அலுவலர்களுக்கு இலவசக் கல்வி அளிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** இது அவையின் முன் உள்ள கேள்வியுடன் தொடர்பு உடையது அல்ல.

**திரு. தோ. மு. நல்லசாமி :** அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள் இலவசக் கல்வி புகுமுக வகுப்பிற்கு அளிப்பதுபற்றி பரிசீலிக்கப்படும் என்று. அதிகப்படியான மாணவர்கள் அடுத்த கல்வியாண்டில் பி.யூ.சி.-யில் வருவார்கள் என்ற காரணத்தாலே இப்பொழுதுள்ள உயர்நிலைப்பள்ளிகளிலேயே பி.யூ.சி. வகுப்பை விஸ்தரித்து, அதே சமயத்திலே இலவசமாகவும் ஆக்குவதற்கு முன் வருவார்களா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** இதுபற்றி முடிவு செய்யப்படவில்லை. ஏற்கனவே இதைப்பற்றி ஆராயப்பட்டபொழுது, புகுமுக வகுப்பை உயர்நிலைப்பள்ளியோடு சேர்த்து விடுவதா அல்லது கல்லூரி வகுப்பாக வைத்துவிடுவதா என்று ஆராயப்பட்டு, உயர்நிலைப்பள்ளியோடு சேர்ப்பது சரியல்ல என்றும், அது ப்ரீ-யுனிவர்சிடி. கோர்ஸ் என்று இருப்பதால் அது யுனிவர்சிடிக்குக் கீழே வருகின்ற கல்லூரி வகுப்பாகத் தான் இருக்கவேண்டுமென்று அதுதான் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதுதான் தொடரும்.

**திரு. பி. துரைராஜ் :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் படிக்கும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இலவசக் கல்வி, உணவு, உடை, மருத்துவ வசதி ஆகியவை செய்து தருவதற்கு உத்தேசம் உண்டா ?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்பொழுது தரப்படுகின்ற சலுகைகள் தொடர்ந்து தரப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தற்பொழுது மத அடிப்படையில் எந்தக் கல்விச் சலுகையாவது கொடுக்கப்படுகிறதா ? அப்படியிருந்தால் அதை மாற்றி எல்லா மதத்தினருக்கும் ஒரே மாதிரி சலுகை அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** மத அடிப்படையில் எந்தச் சலுகையும் தனியாகத் தரப்படுவதாகத் தெரியவில்லை.

**திரு. எம். பூபதி :** ஹரிஜன மக்கள் கிறிஸ்துவ மதத்திலே சேர்ந்ததின் விளைவாக அவர்களுக்கு ஹிந்து ஹரிஜன மக்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகள் கொடுக்கப்படுகிறதா? சலவைத் தொழிலாளர்கள் கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்திருக்கிறார்கள், அவர்களுக்கும் மற்றவர்களைப்போல் பரிபூரணமான சலுகைகள் அரசாங்கம் கொடுத்து வருகிறதா ?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** சமயம் காரணமாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சலுகைகள் புறக்கணிக்கப்படவில்லை. அதைப்பற்றி ஏதாவது தகவல் கொண்டுவந்தால் அரசாங்கம் அதைக் கவனிக்கும். சலவைத் தொழிலாளர்கள் பற்றிச் சொன்னார்கள், அது தனியாகக் கவனிக்கப்படும்.

**திரு. கே. விநாயகம் :** நான்கு ஐந்து நாட்களுக்கு முன்பாக இங்கே முதலமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, இதனாலே ஏற்படுகின்ற செலவும் நஷ்டமும் 55 லட்சம் ரூபாய் என்று





குறிப்பிட்டார்கள். ஆனால் நான்கு நாட்களுக்குப் பிறகு இன்று கல்வியமைச்சர் அவர்கள் 75 லட்சம் ரூபாய அதனால் நஷ்டமும், செலவும் ஆகும் என்று சொன்னார்கள். ஒரு வாரத்திற்குள்ளேயே 20 லட்சம் அதிகமாகச் சொல்கிறார்கள். அவர் சொன்னது சரியா அல்லது ஐயா அவர்கள் சொல்வது சரியா என்று யோசித்துச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஐம்பத்தைந்து லட்ச ரூபாயிலிருந்து 75 லட்ச ரூபாய் வரையில் ஆகும் என்று சொல்லப்படுகிறது. உத்தேசமாகத்தான் போடப்படும். அதைப் பற்றி நான் திட்டவட்டமாகச் சொல்லவில்லை. ஐம்பத்தைந்து லட்சத்திலிருந்து, 75 லட்சத்திற்கு வரக்கூடும். நான் புதிதாக வருகின்ற எண்ணிக்கையையும் சேர்த்துச் சொன்னேன். அவர்கள் சொல்லும்பொழுது அதைச் சேர்க்காமல் சொன்னார்கள்.

**திரு. வெ. முனுசாமி :** சம்பளச் சலுகை, ஸ்காலர்ஷிப் இவற்றிற்காக வருட வருமானம் 1,500-க்கு குறைந்திருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் அதிலே குமாஸ்தாக்கள் வாங்கக்கூடிய பஞ்சப்படி போன்றவற்றையும் சேர்த்துக்கொள்கிறார்கள். அதனால் அவர்களுக்குச் சலுகைகள் கிடைக்கவில்லை. ஆகவே பஞ்சப்படி போன்றவற்றைக் கழித்து அவர்களுக்குச சலுகை கொடுக்க முன் வருவார்களா ?

(பதில் இல்லை.)

**திரு. கே. ஆர். கோவிந்தன் :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கொடுக்கப்படும் சலுகைகள் இன அடிப்படையை வைத்துக் கொடுக்காமல் ஏழ்மையின் அடிப்படையில் கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா?

(பதில் இல்லை.)

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, கல்விச் சலுகைகளிலே தொழிலாளர்களுடைய சம்பளத்தையும், போனஸையும் ஒட்டுமொத்தமாகக் கணக்கிட்டுக்கொள்வதால் அவர்களுக்கு சலுகைகள் கிடைக்கவில்லை. இதைப் பரிசீலனை செய்து அவர்களுக்கும் சலுகைகள் கிடைப்பதற்கு சர்க்கார் முயற்சியெடுக்குமா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** தனிக்கேள்வி போட வேண்டும்.

### உறுப்பினர்கள் கட்டணமின்றி பிரயாணம் செய்ய அனுமதி

*8 கேள்வி.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கு இந்தியா பூராவும் 1-வது வகுப்பில் ரயிலில் பிரயாணம் செய்ய அனுமதிப்பது போல் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் தமிழ்நாடு பூராவும் ரயிலில் போக அனுமதிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) அத்தகைய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

* 9 கேள்வி.—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாடு பூராவும் ஓடும் சர்க்கார் பஸ்களில் சட்டசபை அங்கத்தினர்கள் கட்டணமின்றி பிரயாணம் செய்ய அனுமதிக்கும் உத்தேசமுண்டா?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : அத்தகைய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

*Arts College in Tiruttani*

* 10 *Q.*—THIRU. K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to start an Arts College in Tiruttani Taluk, Chingleput district from the next academic year 1967-68?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

THIRU K. VINAYAKAM : Sir, in view of the fact that there are about 30 high schools in the Tiruttani taluk and about 30,000 students are coming out of those schools successfully after passing the S.S.L.C. Examination every year and in view of the fact that most of them migrate to the Andhra University because they are denied seats in the Madras City Colleges, will the Government consider the possibility of opening an Arts College there provided the Devasthanam of the Tiruttani Temple or the public come forward to contribute money for the starting of the college?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : திருத்தணிப் பகுதியில் இருந்து ஒரு கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கை இது வரை வந்ததாகத் தெரியவில்லை. அங்கு ஒரு கல்லூரியை வைக்க வேண்டுமென்றால் அதற்கான நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். கனம் உறுப்பினர் அவர்கள் ஐந்து லட்சம் ரூபாயைச் சேர்த்துத் தருவார்களேயானால் அரசாங்கம் அங்கு ஒரு கல்லூரியை வைக்க முயற்சி எடுக்கும். முறைப்படி அவர்கள் விண்ணப்பத்தைக் கொடுப்பார்களேயானால் கவனிக்கப்படும்.

**சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் புது விடுதி.**

*11. கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : மதிப்பிற்குரிய கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கட்டப்படும் தங்கும் விடுதி எப்போது திறக்கப்படும்?



மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : உறுப்பினர்கள் தங்கும் புதிய விடுதி கட்டும் வேலை துரிதமாக நடந்து கொண்டிருக்கிறது. இவ்வேலை இவ்வாண்டு இறுதிக்குள் முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜூன் மாதம் 30-ம் தேதிக்குள் இக்கட்டிடத்தின் தென் பகுதியில் சுமார் 65 அறைகள் கட்டி முடித்துவிட முடியுமென்று நம்புகிறோம்.

திரு. முனு ஆதி : அன்டை மாநிலத்தில் சட்ட மன்றம் நடக்கிற போது உறுப்பினர்களுக்கு விடுதிகள் அறைக்கான கட்டணம் வசூலிப்பதில்லை. அந்த நிலையை நம்முடைய அரசாங்கமும் கடைப்பிடிக்குமா ?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது இல்லை; இனிமேல் அது பரிசீலிக்கப்படலாம்.

திரு. கே. பி. எஸ். மணி : இந்தப் புதிய ஹாஸ்டல் கட்டடத்தில் ஒவ்வொரு ரூமுக்கும் ஃபோன் வசதி, மெம்பர்களுடைய கார்கள் தங்குவதற்கான ஷெட்டுகள் வசதி ஆகியவற்றையும் இதிலே அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : நிதி வசதி இடம் கொடுக்குமானால் செய்யலாம். போகப் போக பரிசீலிக்கப்படும்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : இந்தப் புதிய கட்டடத்தில் எத்தனை அங்கத்தினர்கள் தங்கத்தக்க அளவுக்கு அறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன ?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தப் புதிய கட்டடத்தில், தனி அறைகள் 172, இரண்டு பேர் தங்கக் கூடிய அறைகள் 28, சைவ உணவு சாப்பிடுவதற்கு ஒரு இடம், அசைவ உணவு சாப்பிடுவதற்கு ஒரு இடம், லிப்டுகள் 4, விருந்தினர் தங்கும் அறைகள் 3, காரேஜல் 16, நூல்நிலையம் 1, லாண்டரிக்கு 1, சலூனுக்கு 1—என்ற வகையில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

*Nationalisation of bus transport.*

* 12 *Q.*—THIRU. K. VINAYAKAM :
THIRU. V. K. KOTHANDARAMAN :
THIRU. K. CHEEMAICHAMY : } Will the Hon. the

Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to nationalise the bus transport in the State;

(*b*) if so, how is it proposed to be implemented; and

(*c*) in what stages?

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி : ((அ & இ) சென்னை மாநகரின் பஸ் போக்குவரத்தும் வெளியூர்ப் பகுதிகளில் ஒருசில பஸ் வழித் தடங்களும் (route) ஏற்கெனவே தேசியமயமாக்கப் பட்டுள்ளன. இம்மாநிலத்தில் பஸ் போக்குவரத்தை மேலும் தேசியமயமாக்குவது பற்றித் தொடர்ந்து பரிசீலனை செய்யப்பட்டு வந்திருக்கிறது; இப்போதும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

[1967 மார்ச் 30

**திரு. கே. விநாயகம்** : அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிற பஸ் போக்குவரத்துத் துறையிலே பெரும்பாலும் அதிக நஷ்டம் ஏற்பட்டிருப்பதால் மாகாணத்தில் இருக்கிற பஸ்களை எல்லாம் எடுத்து நடத்தும்போது மேலும் அதிக நஷ்டம் ஏற்படும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அது அரசாங்கத்திற்குத் தெரிந்திருந்தால் இந்த முயற்சியைக் கைவிடுவதற்கு முயற்சிப்பார்களா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : சென்னை நகரில் பஸ் துறையில் ஏற்படக் கூடிய நஷ்டம் வெளியூர் பஸ்களின் மூலம் ஈடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, வெளியூரில் அதிகமான பஸ்களை எடுக்கிற நேரத்தில் இன்னும் லாபம் அதிகமாக வர முடியும்.

**திரு. நா. காசிராமன்** : விபத்துக்கள் ஏற்படும்போது தனியார் துறையில் விபத்துக்குரிய நஷ்ட ஈடு கொடுப்பதோடு தனியார் துறை பஸ்களை இன்ஷூரன்சும் செய்யப்பட வேண்டுமென்று கட்டாயத்தின் பேரில் நஷ்ட ஈடு பெற்று அளிக்கப்படுகிறது. அவ்வாறு சர்க்கார் பஸ் துறையில் இன்ஷூரன்ஸ் செய்து அதற்கேற்ப நஷ்ட ஈடும் அளிக்கப்படுகிறதா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : நஷ்ட ஈடுகள் அளிக்கப்படுகின்றன.

**திரு. வி. எஸ். எஸ். மணி** : அரசாங்க பஸ் போக்குவரத்தில் இந்திய அரசாங்கத்தாரால் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி**: 1965--66 வரை கணக்கு இருக்கிறது.—

1962-63-ம் ஆண்டில்—12.42 லட்சம் லாபம்.

1963–64-ம் ஆண்டில்—28·09 லட்சம் நஷ்டம்.

1964–65-ம் ஆண்டில்—18·24 லட்சம் நஷ்டம்.

1965–66-ம் ஆண்டில்—28·93 லட்சம் நஷ்டம்.

அதற்கு மேல் உள்ள கணக்குகள் இல்லை.

**திரு. எ. பாலசுப்பிரமணியம்** : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் இந்தியா முழுவதும் பஸ் போக்குவரத்தைத் தேசிய மயமாக்கிவிட வேண்டுமென்று டெல்லியில் உள்ள காங்கிரஸ் அரசாங்கம் திட்டமிட்டிருந்தது இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி**: அதற்கான முயற்சியாக 1947–48-ம் ஆண்டிலே சென்னை மாநிலத்திலே தேசிய மயமாக்குவதற்கான கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த வழியில் திட்டங்கள் தீட்டப்பட்டன. என்ன காரணத்தாலோ முடக்கி வைக்கப்பட்டன. இப்போது மறுபடியும் பரிசீலனை செய்யப்பட்டு அந்த வேலை தீவிரப்படுத்தப்படும் என்ற என்னுடைய நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1967 மார்ச் 30]

**திரு. க. இராமமூர்த்தி** : நம்முடைய அரசாங்கம் பஸ் போக்குவரத்துத் துறையைத் தேசிய மயமாக்குவதில் தீவிரமான அக்கறை செலுத்துவதால், தனியார் துறைக்குக் கொடுக்கப்படுகிற புதிய பஸ் ரூட்களைக் கொடுக்காமல் நிறுத்தி அரசாங்கமே நடத்துவதற்கு வழி வகைகளை வகுக்குமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி**: அதை எப்படி எப்படிச் செய்ய வேண்டுமென்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். பிறகு அது பற்றி யோசிக்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்**: கள்ளக்கடத்தலுக்கு பிரதான காரணமாகவும் உதவியாகவும் இருப்பது லாரி டிரான்ஸ்போர்ட் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குந் தெரியும். ஆகவே, அதையும் உடனடியாக இதனுடன் சேர்த்து தேசிய மயமாக்குவதன் மூலம் கள்ளக்கடத்தலைத் தடுக்க முடியும் என்பதால் அதைப் பற்றியும் சர்க்கார் ஆலோசிக்குமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி**: இந்தக் கேள்வியில் அது அடங்கவில்லை.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி** : பஸ்ஸை தேசியமயமாக்குகின்ற நேரத்தில் குறைந்தபட்சம் இத்தனை பஸ் வைத்திருப்பவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்ற திட்டம் உண்டா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி**: திட்டம் யோசிக்கின்ற நிலையில் இருக்கிறது. பிறகுதான் பரிசீலிக்கப்படும்.

**திரு. நா. காசிராமன்**: தனியார் துறையில் விடப்படும் பஸ்களுக்குக் கொடுக்கப்படும் அளவுக்கு மீறிய அளவுக்கு பாசஞ்சர்களை ஏற்றினால் குற்றம் என்று கருதப்படுகிறது. அரசாங்க பஸ்களிலும் அது குற்றம் என்று கருதப்படுகிறதா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : தவறு எங்கு நடந்தாலும் கண்டிக்கப்படும்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி**: சர்க்கார் நடத்துகிற பஸ்களில் நஷ்டம் காட்டப்பட்டிருப்பதை வைத்து இந்த அரசாங்கம் தேசிய மயமாக்கும் கொள்கையை விட்டு விட உத்தேசமுண்டா என்று திரு. விநாயகம் அவர்கள் கேட்டார்கள். இந்த நஷ்டம் நிர்வாகத் தவறினால் ஏற்பட்டதுதான் என்பது தனியாருக்கு லாபம் கிடைப்பதிலிருந்து தெரிய வருகிறது. ஆகவே, படிப்படியாக தேசிய மயமாக்கும் காரியத்தில் இந்த அரசாங்கம் ஈடுபடுமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : படிப்படியாக, நிச்சயமாக, உறுதியாக ஈடுபடும்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்** : இப்போது நடக்கின்ற அரசாங்கத் துறை பஸ்களில் ஏற்படுகின்ற நஷ்டங்களைச் சரிக்கட்டிய பிறகு மேற்கொண்டு தனியார் துறையில் உள்ளதை சர்க்கார் எடுத்துக்கொள்ள முன்வருமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : மேலும் அதிக பஸ்களை எடுத்துக்கொள்ளுகிற காரணத்தால் நஷ்டத்தை ஈடு செய்யலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

[1967 மார்ச் 30

**திரு. இராம. அரங்கண்ணல்** : தமிழ்நாட்டில் இருக்கிற தனிப்பட்ட பஸ் ஆப்பரேட்டர்கள் எவ்வளவு பேர்? அவர்களில் நீண்ட தூர பஸ் ஆப்பரேட்டர்கள் எவ்வளவு பேர்?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : தனிப்பட்ட பஸ் ஆப்பரேட்டர்களின் மொத்த எண்ணிக்கை 1,760. அதிலே—

| | |
|---|---|
| 120 மைலுக்குக் கூடுதலாக உள்ளவர்கள் | 16 |
| 100-ல் இருந்து 120 மைல் வரை | 41 |
| 75 மைல் இருந்து 100 மைல் வரை | 187 |
| 76 மைலுக்குக் குறைவாக | 1,244 |
| டவுன் ரூட்ஸ் | 272 |

ஆக 1,760.

**திரு. சி. கோவிந்தராஜன்** : சென்னை நகரத்தில் இருந்து வெகு தூரத்திலுள்ள எண்ணூர் போன்ற இடங்களில் தொழிற்சாலைகள் இருக்கின்றன. பாரி கம்பெனி போன்ற தனிப்பட்ட தொழிலதிபர்கள் அங்கு இரவு வேலைக்குப் போகக்கூடிய தொழிலாளர்களுக்கு வசதியாக பஸ்களை விடுவதில்லை. ஆகவே, அரசாங்க பஸ்களை எண்ணூர் வரை விஸ்தரித்து இரவு நேரங்களிலும் அவர்களுக்கு பஸ் வசதி ஏற்படுவதற்கான வழிகளைச் செய்வார்களா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

**திரு. ஆர். நாகசுந்தரம்** : இந்த அரசாங்கம் பதவியேற்று ஒரு மாத காலத்திற்குள்ளாகவே துணிச்சலாக பஸ் கட்டணத்தைக் குறைத்ததே; அதைப் பற்றி எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் யாராவது பாராட்டியிருக்கிறார்களா?

(பதில் இல்லை)

**திரு. நா. காசிராமன்** : சர்க்கார் பஸ் போக்குவரத்தை எடுத்துக் கொள்ளும் நேரத்தில் தனியார் சர்வீஸ்களில் உள்ள தொழிலாளர்களை வேலையில் எடுத்துக் கொள்ளவும், அவர்களுக்குக் கொடுக்கப்படும் சகல வசதிகளுடன் கண்டினுவன்ஸ் ஆஃப் சர்வீஸுடனும் அவர்களை வேலையில் எடுத்துக் கொள்ளும் உத்தேசமுண்டா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : திட்டத்தை நிறைவேற்றும் போது அதில் ஏற்படுகிற கேடுபாடுகள் பற்றி பிறகுதான் பரிசீலிக்கப்படும்.

**திரு. பெ. மலைச்சாமி** : மாவட்டம் மாவட்டமாக பஸ்களை தேசீய
மு.ப. 9-30 மயமாக்கும் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : அப்படி ஒன்றும் இப்போது உத்தேசமில்லை.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, having been informed by the Hon. Minister for Transport in this House that nationalisation of bus transport will be done step by step and that too definitely, may I request the Minister to state whether the first step in the nationalisation of bus transport has been taken so far and, if not taken, when the first step will be taken by him?



1967, மார்ச் 30]

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : உரிய சமயத்தில் அறிவிக்கவேண்டிய நேரத்தில் அறிவிக்கப்படும்.

**திரு. கா. வேழவேந்தன்** : அமைச்சர் அவர்கள் பஸ்களை தேசீய மயமாக்குவது பற்றி குறிப்பிட்டார்கள். அப்படி தனியார் துறை பஸ்களை தேசியமயமாக்குவதில் ஆகும் உத்தேசச் செலவைக் குறிப்பிடமுடியுமா? அப்படியானால் மத்திய அரசாங்கம் இந்தத் திட்டத்திற்கு வேண்டிய செலவினங்களுக்கு ஓரளவு அதை ஏற்பதற்கு மான்யம் வழங்குமா என்பதற்கு ஏதாவது விவரங்கள் உண்டா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : அதுபற்றிய விவரங்கள் எதுவுமில்லை. அதுபற்றி யோசித்த பிறகுதான் எதுவும் அறிவிக்கப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி** : சென்ற ஆண்டு தனியார் பஸ்களில் கூட்டப்பட்ட கட்டணத்தைக் குறைக்க உத்தேசமுண்டா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : இந்தக் கேள்வியில் அது எழவில்லை.

**திரு. க. மு. ராஜகோபால்** : பஸ்களை தேசீயமயமாக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் வந்தால் இனிமேல் கொடுக்க வேண்டிய ரூட்களை தனியார்களுக்கு கொடுக்காமல் இருக்கமுடியுமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : எல்லாம் சீர்தூக்கிப் பரிசீலிக்கப்படும்.

**திரு. கே. போஜன்** : கனம் அமைச்சர் அவர்கள் பஸ் துறையில் 1962–63-ம் ஆண்டில் லாபமும் மற்ற மூன்றாண்டுகளில் நஷ்டமும் ஏற்பட்டிருப்பதாகவும் கூறினார்கள். பிந்திய மூன்றாண்டுகளில் நஷ்டம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டுபிடித்து இந்த சபைக்கு தெரிவிப்பார்களா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : பிரயாணிகள் வசதி நிதி, தேய்மான நிதி, வளர்ச்சி நிதி, தொழிலாளர்கள் வீட்டு வசதி நிதி ஆகியவற்றிற்கு வழங்கிய தொகை காரணமாக நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. தேய்மான நிதி, வளர்ச்சி நிதி இவற்றால் எப்படி எப்படி நஷ்டம் ஏற்படுகிறது என்பதை நிர்வாகத் துறையை கலந்த பிறகு அதுபற்றி முடிவு செய்யப்படும்.

**திரு. ந. வீராசாமி** : பஸ்கள் தேசியமயமாக்கப்படுகிற நேரத்தில் கூட்டுறவு துறையில் பஸ் தொழிலை நடத்துகிறவர்களுக்கு விதி விலக்கு அளிக்கப்படுமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : அவை எல்லாம் யோசிக்கப்படும்.

**திரு ஏ. ஆர். பெருமாள்** : படிப்படியாக தேசீயமயமாக்குவதற்கு உத்தேசம் என்றால் படிப்படியாக அரசாங்கத்திற்கு எவ்வளவு வருமானம் வரும் என்று திட்டவட்டமாக உத்தேசிக்கப்படுகிறது? எவ்வளவு வருமானம் வரும் என்று அனுமானமாகவாவது உத்தேசிக்கப்படுகிறது?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** அவற்றை எல்லாம் இப்போது சொல்வதற்கில்லை.

**திரு. கே. விநாயகம் :** நம் மாநிலத்தில் தனிப்பட்டவர்களின் பஸ்களின் எண்ணிக்கை 6,000 இருக்கிறது. இந்த 6,000 பஸ்களை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு நஷ்டஈடு கொடுத்த பிறகு அவற்றை செவ்வனே நடத்தவேண்டும். அதற்கு வேண்டிய வொர்க்ஷாப்ஸ் இவற்றை எல்லாம் செய்யவேண்டுமென்றால் முன்பு இருந்த சர்க்கார் கணக்குப்படி 1,000 கோடி ரூபாய் செலவாகிறது என்று சொல்லி அதிலிருந்து வருகிற வருமானமும் நமக்குப் போய் விடுகிறது என்று தெரிந்துகொண்ட பிறகுதான் இதை கொஞ்சம் காலதாமதப்படுத்தியிருப்பது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியில்லை, துணிச்சலாகச் செய்வோம் என்ற முடிவிற்கு வந்தால் அதில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரையும் அழைத்து அவர்கள் யோசனைகளையும் கேட்டு அதன் பிறகு இத்துணிச்சலான காரியத்தில் இறங்குமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** இந்தக் கேள்வி மூலம், இதை எப்படிச் செய்யப்போகிறோம் என்பதை முன்கூட்டியே தெரிந்துகொள்ள விரும்புகிறார்களென்று நினைக்கிறேன். தனியார் துறை பஸ்கள் 5,462 இருக்கின்றன. சர்க்கார் 1—1—1967 வரையில் எடுத்துக்கொண்ட பஸ்கள் 1,356. அதில் சென்னையில் ஓடுபவை 1,020. கன்னியாகுமரியில் ஓடுபவை 167. நீண்டதூர பஸ்கள், எக்ஸ்பிரஸ் பஸ்கள் 169. இவ்வளவு குறைந்த அளவிற்குத்தான் பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே உடனடியாக 5,462 பஸ்களை எடுத்துக்கொள்வதா அல்லது படிப்படியாகவா என்பதுபற்றி உறுப்பினர் சிந்திக்கவேண்டும்.

**திரு. ஆ. கு. மூர்த்தி :** தனியார் துறையில் பணியாற்றுகிற பஸ் கண்டக்டர்கள், டிரைவர்கள் இவர்களை பஸ் முதலாளிகள் வேண்டுமென்றால் வைத்துக்கொள்கிறார்கள். தேவையில்லை என்றால் தள்ளிவிடுகிறார்கள். அதனால் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களின் குறைகளை நீக்குவதற்கு சர்க்காருக்கு உத்தேசமுண்டா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** இந்தக் கேள்வி முதல் கேள்வியோடு தொடர்பு கொண்டதல்ல.

**திரு. ஆர். கருப்பையா :** தனியார் துறை பஸ்களை தேசியமயமாக்கும்போது அவ்வளவு பஸ்களையும் எடுத்துக்கொள்ளுமா? இல்லை, நஷ்டஈடாக பணத்தைத்தான் கொடுக்குமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** எப்படி எப்படிச் செய்வது என்பது பிறகு கலந்து ஆலோசிக்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** படிப்படியாக பஸ் போக்குவரத்தை சர்க்கார் எடுத்துக்கொள்ளப் போவதாக சொல்வதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் எவ்வளவு மைல்களுக்கு



மேற்கொண்டு முதல்படியாக எடுக்க உத்தேசம்? அதேபோல் படிப்படியாக எடுக்கப்போவதாக சொல்வதுபோல் சர்க்கார் படிப்படியாக பணத்தையும் கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்கு உத்தேசமுண்டா? இருபது வருடத் தவணையில்?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** இவைகள் எல்லாம் பரிசீலனையில் இருப்பதாக முன்பே சொன்னேன்.

THIRU. K. VINAYAKAM : In view of the gravity of this subject and the unusual national interest which this subject has evoked, will the Speaker be pleased to set apart a half-hour debate over this issue?

MR. SPEAKER : I hold that sufficiently large number of supplementary questions have been allowed under this question. We have actually devoted more than twenty-three minutes to this question. We have had nearly a half-hour discussion. I regret I am unable to grant the request.

THIRU. K. VINAYAKAM : One hour is set apart for question time. We have yet got twenty-five minutes. That time can be profitably utilised for this.

MR. SPEAKER : Under Rule 38(2) of the Assembly Rules 'if a sufficient or reasonable number of supplementary questions has already been put in respect of the same question, the Speaker may disallow any supplementary question'. Under that rule I hold that a sufficient number of supplementary questions have already been allowed.

THIRU. K. VINAYAKAM : On a point of personal explanation. I was raising my hand so as to attract your attention to put some more questions. I would like to say that your eye is the most elusive object that God has ever created on the face of the earth. It is very difficult to catch your eye. I tried my best to catch your eye, but it refuses to be caught by me. In view of that only. I asked for a half-hour debate. If the House is pleased to set apart the time, the Speaker also could have been more gracious.

MR. SPEAKER : The hon. Member Vinayakam mentioned very rightly that the Speaker's eye is elusive. The Speaker's eye is bound to be elusive.

இத்துடன் வினாக்கள், விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் நட்சத்திரக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### உணவுப் பங்கீட்டில் குடும்பக் கார்டு முறை

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** திரு. சோ. அழகர்சாமி அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

[பேரவைத் தலைவர்] [1967 மார்ச் 29

"திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி தாலூகாவில், குடும்பக் கார்டு முறை அமுலில் இருந்தும் நகரப்புறங்களில் குறைந்த அளவிலும், கிராமங்களில் விநியோகம் முற்றிலும் நின்று விட்டதால், உணவு தானியம் கிடைக்காமல், மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்று தகவல் வந்துள்ளதால் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க" என்று தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். இது அரசினரின் சாதாரண நிர்வாக இயந்திரத்திற்கு உட்பட்ட காரியம் என்ற காரணத்தினால் அதற்காக அவையை ஒத்தி வைக்க தேவை இல்லை என்று கூறுகிறேன்.

### 3. அரசினர் தீர்மானம்.

### 41 (3) விதியைத் தளர்த்துதல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** அடுத்தாற்போல, இன்று 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மூன்று உள்ளன. ஒரே நாளில் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு மேல் கொண்டு வருவதற்கு விதிகளிலே இடம் இல்லை. ஆகையால் மூன்று தீர்மானங்களைக் கொண்டுவருவதற்கு இந்தப் பேரவையின் விதியைத் தளர்த்தியாக வேண்டும். எனவே, மன்ற முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட விதியை இன்று மட்டும் தளர்த்தவேண்டுமென்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து அதை முன்னுரைப்பார்கள்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 244-வது விதியின்கீழ், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்னுரைக்கிறேன் :—

"சட்டப் பேரவை விதிகளின் 41 (3)-வது பிரிவின்கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு மேற்பட்டு எழுப்பக் கூடாது என்றுள்ள விதியைத் தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

### 4. கவன ஈர்ப்பு

### (அ) திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து கடன் தவணை வசூல் ஒத்திவைப்பு

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** தலைவர் அவர்களே, 1966-ம் வருடம் பருவ மழைக் குறைவினால் திருநெல்வேலி ஜில்லாவில் செங்கோட்டை, தென்காசி, சங்கரன்கோவில் தாலூக்காக்களில் பயிர்கள் காய்ந்து சேதம் ஏற்பட்டதின் காரணமாக அங்குள்ள விவசாய மக்கள் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய பலவிதமான கடன் துறைகளின் தவணைத் தொகை ஒரு வருடத்திற்கு அரசாங்கத்தாரால் ஒத்திவைக்கப்பட்டது (ஜீ.ஓ. எம்.எஸ். நெ. 1162, ரெவின்யூ, 6—4—1966). இவ்வருடம் (1967-ல்) மேற்படி கடன்களை



1967 மார்ச் 30] [திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்]

வசூல் செய்வதற்காக சென்ற வருடம் செலுத்த வேண்டிய தவணைத் தொகை. தவணைப்படி கட்டாததற்கு விதிப்படி அபராதம், இந்த வருட தவணைத் தொகை ஆகியவைகளைச் செலுத்த வேண்டுமென டிமாண்ட் கொடுத்திருப்பதால், அங்குள்ள விவசாய மக்கள் பெரிதும் இன்னலுற்றுள்ளனர். அதற்குத் தீர்வு காண வேண்டிய அவசியம் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன் :** வருவாய்த் துறையின் 6—4—1966 தேதியுள்ள 1162-ம் எண் அரசாங்க ஆணையில், செங்கோட்டை, சங்கரன்கோயில், தென்காசி தாலூகாக்களில் 1374-ம் பசலிக்கு, கடன் தவணைகளையும் நிலவரியையும் வசூலிப்பதில் வலுக்கட்டாய நடைமுறையைப் பயன்படுத்தக் கூடாது என அரசாங்கம் திருநெல்வேலி கலெக்டருக்கு உத்தரவிட்டது. நிலைமை சீர்திருந்தியுள்ள போதிலும், ஏற்கெனவே நிலுவையாயுள்ள கடன் தவணைகளை வட்டியும் சேர்த்துக் கட்டுவதோடு நடப்புக் கடனின் தவணைகளையும் செலுத்துவதென்றால் குடியானவர்கள் இடர்ப்படுவர் என திரு. சுப்பையா முதலியார், எம்.எல்.ஏ. அவர்கள் அரசாங்கத்திடம் இப்பொழுது முறையிட்டுள்ளார். இது குறித்து திருநெல்வேலி கலெக்டருக்கு எழுதப்பட்டது. இந்த ஆண்டு நிலைமைகள் மிகத் திருப்திகரமாயுள்ளனவென்றும், குடியானவர்கள் தங்களது கடன் பொறுப்புகளை அறுவடைக்குப் பின்னர் கூடிய விரைவில் கொடுத்துத் தீர்க்க இயலும் என்றும், இது குறித்து இன்னல்களேதும் இருப்பதாகப் பொது மக்களிடமிருந்து பொதுவாக முறையீடு எதுவும் வரவில்லை என்றும் கலெக்டர் அறிவித்துள்ளார். எனவே, இந்த ஆண்டு கட்ட வேண்டிய நிலவரியையும், கடன் தொகையையும் குடியானவர்கள் தாங்களாகவே செலுத்த முடியுமென அரசாங்கம் நம்புகிறது. எனினும், சட்ட சபை உறுப்பினர் செய்துள்ள தனி முறையீட்டினைக் கருதி கடன் நிலுவைத் தொகையை வட்டியுடன் செலுத்தியுள்ள குடியானவர்கள் நடப்புக் கடன் தவணையைச் செலுத்த முடியாமற் போனால் அவர்களிடமிருந்து கடன்தொகைகளை வசூலிப்பதில் வலுக்கட்டாய நடவடிக்கைகள் எவற்றையும் இப்பொழுது மேற்கொள்ள வேண்டியதில்லை என அரசாங்கம் உத்தரவுகள் பிறப்பித்து வருகிறது.

### (இ) "மை காப்பி பார்" உணவுச்சாலை கதவடைப்பு

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** கனம் சபாநாயகர் அவர்களே, சட்ட சபை விதிகளின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கொண்டுவருகிறேன்.

தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னை மாநகரின் முக்கிய சாலையான மவுண்ட்ரோட்டிலுள்ள "மை காப்பி பார்" ஓட்டல் முதலாளி ஓட்டலை மூடி, தொழிலாளிகளுக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான நஷ்டஈடுகளைக் கொடுக்க மறுத்து வருவதால்

[திரு. எ. பாலசுப்பிரமணியன்] [1967 மார்ச் 30

102 தொழிலாளர்கள் உண்ணுவிரதம் இருக்கிறார்கள். ஓட்டலைத் திறந்து தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பது, அல்லது நியாயமான நஷ்டஈடுகளை அளிப்பதுபற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** சென்னை, "மை காப்பி பார்" நிர்வாகம் 20—3—1967 அன்று தனது 85 ஊழியர்களுக்கு ஓர் அறிவிப்பை அனுப்பியது. உணவுச்சாலை நடந்து வந்த கட்டிடத்தைக் காலி செய்யும்படி உணவுச்சாலை நிர்வாகத்தினருக்கு உயர்நீதி மன்றம் பிறப்பித்த ஆணையின் காரணமாக அவர்கள் உணவுச்சாலையை மூட வேண்டியுள்ளது என்றும், எனவே 15—3—1967 முதல் அந்த ஊழியர்கள் வேலையினின்று நீக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த அறிவிப்பில் கண்டிருந்தது. தொழில் தகராறுகள் சட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு உரிய இழப்பீடு அளிக்கவும் நிர்வாகம் முன்வந்தது.

தொழிலாளர்கள் அதிக ஊதியம் கேட்டதாகவும், அவர்களது வேண்டுகோள் சென்னைத் தொழிலாளர் நடுவர் மன்றத்தின் விசாரணையில் இருப்பதாகவும், தொழிலாளர்களைப் பழி வாங்கவே நிர்வாகம் உணவுச்சாலையை மூட முடிவு செய்துள்ளது என்றும் தொழிலாளர் தரப்பில் அரசாங்கத்திடம் முறையீடு செய்யப்பட்டது. நிர்வாகத்தினர், கட்டிடச் சொந்தக்காரருடன் சதி செய்து, உயர்நீதி மன்றத்திடமிருந்து வெளியேற்ற ஆணையைப் பெற்றுள்ளனர் என்றும் தொழிலாளர் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது குறித்துத் தொழிலாளர் துறை அலுவலர் ஒருவர் விசாரணை செய்தார். நிர்வாகத்தினர், தங்கள் கட்டுக்கு மீறிய சூழ்நிலைகளினால் நிறுவனத்தை மூட வேண்டி வந்தது என்றும், எனவே தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய இழப்பீடு, மூன்று மாத ஊதியத்துக்கு மேற்படக் கூடாது என்றும் மேற்படி அதிகாரியிடம் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது. ஆனால், தொழிலாளர்கள், இழப்பீடு மூன்று மாத ஊதியம் என்று வரையறுக்கப்படக் கூடாது என்றும், வேலை நீக்க முழு இழப்பீட்டுத் தொகையும் கொடுக்கப்பட வேண்டும் என்றும் வாதிடுகின்றனர்.

ஆயினும், சமரச அதிகாரி இருதரப்பினரிடையேயும் உடன்பாடு காண முயன்று வருகின்றார். அவரது அறிக்கை கிட்டியவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** அவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஹோட்டல் முதலாளியை. . . .

**மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்:** அவைத் தலைவர் அவர்களே, கால் அட்டென்ஷன் நோட்டீஸிலே நம் சபையில் கேள்வி கேட்கிற சம்பிரதாயங்கள் கிடையாது . . .



1967 மார்ச் 30]

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** நம்முடைய விதிகளில் ஓரிரண்டு கேள்விகள் கேட்கலாம் என்று இருக்கிறது. . . .

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** அது அமைச்சருக்கும் தெரியும், எனக்கும் தெரியும். கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** ஏற்கெனவே ஹோட்டல் முதலாளியை வெளியேற்ற வேண்டுமென்று கட்டட உரிமையாளர் முயற்சி செய்து இரண்டு கோர்ட்டுகளிலும் உரிமை இல்லை என்று தீர்ப்பாகி இருக்கிறது. வாடகைக்கு எடுத்துக் கொண்டிருக்கும் முதலாளி பக்கம் தீர்ப்பு இருந்தும், அதை மாற்றிக்கொள்ள ரகசிய ஏற்பாடு செய்து, 50,000 ரூபாய் பெற்றுக்கொண்டு. . .

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** விதியைச் சொன்ன காரணத்தினால் அதைப் படித்துக் காட்டுகிறேன்.

'There shall be no debate on such statement at the time it is made. But the Speaker may at his discretion permit one or two questions by the same member.

அருள்கூர்ந்து கேள்வியைக் கேட்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** அந்தத் தகவல் அமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றித்தான் அதிகாரி சமரச உடன்பாடு செய்துகொண்டிருக்கிறார். அது முடியவில்லையென்றாலும், அவருடைய அறிக்கையில் விவரங்கள் இருக்கும் என்று கருதுகிறேன். அறிக்கை வந்தவுடன் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

### (உ) பவானி, ஈரோடு தாலூக்காக்களில் விவசாயிகளிடமிருந்து கட்டாயமாக அபிவிருத்தி வரி வசூல்.

THIRU. A. M. RAJA: Mr. Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Food to a matter of urgent public importance, namely, the precarious condition prevailing in Bhavani and Erode Taluks due to the compulsory collection of betterment tax from the agriculturists at a time when there is no water for paddy fields for the last two years and when there is no income for agriculturists, as a result of which cattle are being sold by them to pay kist and the need for postponement of collection of tax for this fasli and also for letting out water for irrigation from Lower Bhavani.

THE HON. THIRU. K. A. MATHIALAGAN: Mr. Speaker, Sir, the collection of Betterment Levy in respect of lands benefited by the Lower Bhavani Project is being done under the Betterment Levy Act of 1955 as amended by the Amending Act of 1963. The total betterment levy demand for the current fasli in respect of this Project is ascertained to be Rs. 10.32 lakhs in respect of the taluks of Bhavani and Erode. This issue of betterment levy is

applicable not only to Lower Bhavani Project but is also applicable to all other Projects constructed after 1947. The Collector of Coimbatore, in a special report, has stated that there is no clear justification for postponing the betterment levy in these two taluks. However, in view of the fact that four Legislators of this area have represented about the hardship caused to the ryots, the Government are requesting the Commissioner for Land Revenue (Board Member) to make a special study of the position and submit a report to the Government. Pending study of the Board Member's report, the Government are giving directions to the Collector not to collect the betterment levy in these two taluks. With regard to the question of letting out of water from Lower Bhavani, it is presumed that the reference to letting down of water for irrigation from Lower Bhavani is to the extension of supplies to the current crops. As per existing orders supplies will be given only up to 31st March 1967. It has, however, been represented that cultivation under the canal started late and that therefore extension of supplies for a period of three weeks beyond 31st March 1967 was required. It is proposed to concede the request and give extension of supplies up to 21st April 1967.

## 5. அறிவிப்புகள்

### (அ) அரசாங்க உறுதிமொழிக் குழுவிற்கான நியமனம்

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவைக்கு தெரிவிக்க வேண்டிய ஒரு அறிவிப்பு உள்ளது.

இந்தப் பேரவையின் 214 (1)-வது விதிக்கு இணங்க கீழ்க் கண்ட மாண்புமிகு உறுப்பினர்களை அரசினர் உறுதிமொழி குழுவுக்கு (கமிட்டி ஆன் கவர்ன்மெண்டு அஷ்யூரன்ஸஸ்) உறுப்பினர்களாக நியமிக்கிறேன் :—

1. திரு. வி. எஸ். கோவிந்தராசன்.
2. திரு. செ. கோ. விசுவநாதன்.
3. திரு. எஸ். முருகையன்.
4. திரு. ஜி. முருகையா சேதுரார்.
5. திரு. எம். அலங்காரம்.
6. திரு. து. ப. அழகமுத்து.
7. திரு. இ. அ. சிதம்பரம் பிள்ளை.
8. திரு. டி. டி. எஸ். திப்பையா.
9. திரு. கே. எஸ். கோதண்டராமய்யா.
10. திரு. எம். அப்துல்கபூர் சாகிப்.

இந்தப் பேரவையின் 215(1)-வது விதிக்கு இணங்க திரு. இ. அ. சிதம்பரம் பிள்ளை அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.



## 6. கவர்னர் பேருரையின்மீது விவாதம் (தொடர்ச்சி).

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** இப்பொழுது கவர்னர் உரையின் மீது விவாதம் தொடர்ந்து நடைபெற வேண்டும். இன்றைக்கு இறுதி நாள் விவாதம். ஆகையால், கடைசியாக வாக்கெடுப்பு நடைபெறவேண்டும், திருத்தங்கள் மீதும், தீர்மானத்தின் மீதும். அதற்கு முன்னால் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் உரையாற்றுவார்கள். அதற்கு முன்பு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரையாற்றுவார்கள். எனவே, இன்று பேசுகின்ற உறுப்பினர்களுக்கு 10 நிமிடத்திற்கு மேல் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். நமது பேரவையின் விதிகள் 205 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பேரவைக்காக இயற்றப்பட்டன. அந்த விதிகளைக் கொண்டு 235 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பேரவையை நடத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். விதிகள் விரைவிலே திருத்தப்பட இருக்கின்றன. அதுவரையிலும் அருள் கூர்ந்து பொறுத்தருளவேண்டும். பத்து நிமிட விதியை இன்றைக்கு அமுல் நடத்துவதற்காக உங்களுடைய மன்னிப்பை நான் கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. ரா. கனகசபை அவர்கள் உரையாற்றுவார்கள்.

**திரு. ரா. கனகசபை:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த கவர்னர் உரை தேர்தலுக்குப் பின் முதன்முதலாக அரசாங்கத்தின் சார்பாக கொள்கைகளை வெளியிடுவதற்காக நடத்தப்படுகிற உரை. அதிலே அரசாங்கம் இந்த ஐந்து ஆண்டு காலத்தில் என்னென்ன காரியங்களைச் செய்யப் போகிறோம் என்று சொல்வதற்கு வாய்ப்பு இருந்தாலும், அவகாசம் இல்லாத காரணத்தினால், அவர்கள் நாட்டின் முக்கியமான பிரச்னையான உணவுப் பிரச்னையைப் பற்றி அவர்களுடைய உரையிலே அதிகமாகத் தெரிவித்திருக்கிறார்கள். அது ஒரு கட்சிப் பிரச்சினை அல்ல. அது ஒரு நாட்டுப் பிரச்சினை. உணவுப் பிரச்சினையை மக்களுக்கு நல்ல முறையிலே தீர்த்து வைப்பதற்காக அரசாங்கம் அதிலே அதிகமாக கண்ணோட்டத்தைக் காட்டியிருப்பது பற்றி நான் அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால், அதே சமயத்தில் இப்பொழுது தீவிர கொள்முதல் பற்றி சில வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

தீவிர கொள்முதல் எங்கும் இப்பொழுது நடந்துவருகிறது. அதுவும் தஞ்சை ஜில்லா போன்ற இடங்களில் தீவிர கொள்முதல் நடத்திவிட்டதனால் சென்ற ஆண்டு கூட ஜூன் மாதத்தில் அங்கே அரிசி இல்லாமல் பலர் கஷ்டப் பட்டார்கள். தீவிர கொள்முதல் நடத்த வேண்டியது அவசியம். அப்படி நடத்துகின்ற நேரத்தில் அங்கும் விவசாயத்தில் ஈடுபடாத மக்களுக்கு நகர பஞ்சாயத்துக்களிலுள்ள மக்களுக்கு ரேஷன் முறையை அமுலுக்குக் கொண்டு வந்து வைத்துவிட்டால் மிகவும் நலம் என்று நான் நினைக்கிறேன். இல்லாவிட்டால் இந்த ஆண்டு கூட ஜூன், ஜூலை மாதங்களில் உபரி ஜில்லாவாகிய தஞ்சாவூர் ஜில்லா, சிதம்பரம் தாலுகா

முதலிய இடங்களில் கொஞ்சம் அரிசித் தட்டுப்பாடு நிச்சயம் ஏற்படும் என்று இப்பொழுதே அரசாங்கத்தை எச்சரிக்க விரும்புகிறேன். தீவிர கொள்முதல் நடத்தும்பொழுது மார்க்கெட்பிள் சர்பிளஸ் என்னவென்று நிர்ணயிப்பதிலே ஒரு பெரிய கஷ்டம் இருக்கிறது. என்னவென்றால், அங்கு நெல் விவசாயம் செய்கின்ற இடங்கள் சில இருக்கின்றன. மற்றும் பல இடங்களில் அங்குள்ளவர்களின் பலர் செலவுக்காக நெல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது நம் எல்லைக்கு வெளியிலே நெல் போகாமல் தடுத்திருப்பதினால், அவர்கள் வேறு இடங்களில் வாங்க முடியாது, வெளியிலே போக முடியாது. ஆகவே, அவர்களுக்கு அதிகமாக தொந்தரவு கொடுக்காமல் எடுத்துக்கொண்டால் நல்லது. திரும்பவும் சர்க்கார் விற்கவேண்டிய நிலைமை வரும் என்ற காரணத்தினால். அதிகமாக தொந்தரவு கொடுக்காமல் நல்ல முறையிலே கொள்முதல் செய்து நெல்லை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விலையைப்பற்றி எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றுகூட சொன்னார்கள். கொஞ்சம் விவசாயிகளுக்கு நெல்லுக்கு அதிக விலை கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். நான் கொஞ்சம் மாறுபட்ட கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நெல்லுக்கு அதிகமான விலை கொடுத்துவிட்டால், விவசாயிகளுடைய கஷ்டம் தீர்ந்துவிடாது. ஏனென்றால் இன்னும் நாட்டிலே பணவீக்கத்தை உண்டுபண்ணும். நெல்லுக்கு விலை அதிகமாகக் கொடுத்த உடனே, மற்ற சாமான்களின் விலை ஏறி, திரும்பவும் இதே பிரச்னை எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கும். ஆகையால், விலை அதிகமாகக் கொடுப்பதைவிட, விவசாயிகளுக்கு குறைந்த விலைக்கு உரம், மற்ற உபகரணங்கள் எல்லாம் நல்ல முறையில் சரியான காலத்தில் கிடைக்கும்படிச் செய்தால், அது இதைவிட அவர்களுக்கு வசதியாக இருக்கும். நான் அன்று கூட சொன்னேன். கமெர்ஷியல் கிராப் பயிரிடுவதைவிட, நெல் பயிரிட்டால் அதிக லாபம் இல்லை. அமைச்சர் அவர்கள் திண்டிவனம், கன்யாகுமாரி பக்கம் போகும்பொழுது பார்த்தால் பல இடங்களில் நஞ்சை நிலங்களில் தென்னை போடப்பட்டிருக்கும், மற்றும் சில இடங்களில் சவுக்கு முதலியவைகள் போடப்பட்டிருக்கும். நெல் பயிரிடுவதற்குப் பதிலாக அம்மாதிரி மற்ற ஏதாவது பயிர்செய்தால், அவர்களுக்கு அதிக லாபம் வருகிறது, தொந்தரவு இல்லை. ப்ரொக்யூர்மெண்டு தொந்தரவு இல்லை என்ற பல காரணங்களினால், நெல் பயிரிடுவதை மாற்றி மற்ற பயிர்களைச் செய்வதற்கு முற்பட்டுவிடுகிறார்கள் அவர்களுக்கு கொஞ்சம் அதிகமாக மிச்சம் வரும்படியாகச் செய்வதற்கு, விலையை ஏற்றிக் கொடுப்பதால் மட்டும் இந்தப் பிரச்னை தீர்ந்துவிடாது. அவர்களுக்கு வேண்டிய உரம், மற்ற சாமான்கள் எல்லாம் நல்ல முறையிலே காலாகாலத்தில் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை என்று நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.





உணவுப் பிரச்னையைத் தீர்க்கவேண்டுமென்றால், உற்பத்தியை அதிகமாகப் பெருக்குவது தான் உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்குச் சுலபமான வழி. அதற்கு நீண்டகாலத்திய திட்டம் பல இருந்தாலும், குறுகிய காலத் திட்டங்கள் பல இருக்கின்றன. முதலடியாக உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு மராமத்து இலாகா, விவசாய இலாகா, கூட்டுறவு இலாகா மூன்றும் எவ்வளவு தீவிரமாக ஒத்துழைப்புக் கொடுக்கிறார்களோ அந்த அளவுக்குத் தான் உணவு அமைச்சர் அவர்களுடைய வேலை கொஞ்சம் சுலபமாக இருக்கும்.

அதில் முதலிலே மராமத்து இலாகா பற்றிச் சொல்லவேண்டும். மராமத்து என்று சொல்லும்போது இன்னொன்றையும் நினைவு படுத்த விரும்புகிறேன். மத்திய சர்க்கார் இப்பொழுது இந்த ஃபைனான்ஷியல் இயரை மாற்றப் போவதாக யோசித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதை காலண்டர் இயர் ஆகவே மு. ப. 10-00
செய்ய வேண்டும் என்று யோசனையை இந்த சர்க்கார் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மராமத்து இலாகாவைப் பொறுத்தவரையில், மார்ச் 31-ந் தேதி நம்முடைய பட்ஜட் முடிந்த பிறகு ஜூன், ஜூலை உள்ளாக சாகுபடி வேலைகள் நடப்பதற்கு ஏற்றதாக இல்லை. அதன் பிறகு மழை வந்து விடுகிறது. மற்ற வேலைகளும் குந்தகமாகிவிடுகிறது. ஆகவே காலண்டர் மாதமாக வைத்துவிட்டால் விவசாய வேலைகள் நல்ல முறையில் நடைபெற சாதகமாக இருக்கும்.

சிதம்பரம் தாலூகா, தஞ்சை மாவட்டம் முதலிய இடங்களில் சாதாரணமாக சிறு சிறு வேலைகள் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. அங்கெல்லாம் பாய்ச்சலைவிட, ட்ரெயினேஜ்தான் குறைச்சல் ஆகவே, 1,000, 500 ரூபாய் செலவில் செய்து முடிக்கக் கூடிய சின்னச் சின்ன வேலைகள் செய்யப் பட்டால், சாகுபடிக்கு சுலபமாக இருக்கும். பல இடங்களில் ஏரிப்பாசனம் இருக்கும் இடங்களில், பெரிய நிலச்சுவாந்தார்கள், ஊருக்கு மின்சாரம் வந்தும் பம்பு செட்டுகளை வைத்துக்கொண்டு தண்ணீர் எடுத்துக் கொண்டு விடுகிறார்கள். அப்படிச் செய்யப்படுவதால், ஆற்றிலிருந்து வரும் வாய்க்கால்கள் சரியாக வைக்கப் படவில்லை. அதனால் சிறு சிறு விவசாயிகள் பாதிக்கப் படுகிறார்கள். அதற்காகத்தான் இம்மாதிரியான சிறு சிறு வேலைகளைப் பரிசிலனை செய்து அரசாங்கமே, குடிமராமத்து சட்டத்தின்கீழ் வேலைகளைச் செய்து உடனடியாகச் செயல் படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது மார்ச் 20-ந்தேதி வரையில் மேட்டூரிலிருந்து ஜலம் வந்தது. அப்படித் தண்ணீர் வந்தால், எர்லி குறுவை போடுவதற்கு வசதி குறைவாகப் போய்விட்டது. எல்லா வாய்க்கால்களிலும் அதிகமாகத் தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. அது எதனால் என்று தெரியவில்லை. அந்த ஜலத்தை சரியான படி வினியோகித்தால், மேட்டூர் ரிசர்வாயரில் தண்ணீர் இருந்து இருக்கும், முன்னடியே குறுவையைப் போட வசதியாக இருந்திருக்கும்.

அதற்காக அடுத்து, ஏ.டி.டி. 27 நெல்விதையைக் கொண்டு சென்ற ஆண்டு சிதம்பரம் தாலுகாவில் புது முறையாக நாங்கள் செய்தோம். மத்திய பாங்கு ஆதரவில் 25,000 ஏகரில், எரு மற்றவைகளெல்லாம் கொடுத்து, திரும்பவும் நெல்லாக கொள்முதல் வாங்கினோம். ஒரு சிலர் மட்டும் கொடுக்கவில்லை. அப்படி தானியமாக வாங்குவதை ரிசர்வ் பாங்கியும் அனுமதித்து விதி ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். இருந்தும் எங்களிடம் சிலர் நெல் கொடுக்கவில்லை. சென்ற ஆண்டு துரதிர்ஷ்டவசமாக மழையாலும், வெள்ளத்தாலும் மகசூல் குறைந்து விட்டது. ஆனால் இந்த ஆண்டு அதற்கு மாறாக அதிக மகசூல் கிடைக்கும். ஆகவே இப்பொழுது அதிகமான முயற்சி எடுத்துக்கொண்டு, அந்த ஏ.டி.டி. 27 பயிரை, அது ஒரு குறுகிய காலப்பயிர், பயிர் செய்வதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கும் போது, கட்டாய முறையாக வசூல் செய்துவிட வேண்டும். இந்தப் புது முறையில் நோய் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அதற்காக தாங்களே கூட கட்டாயமாக ஸ்ப்ரேயர், மருந்து இவற்றைக் கொடுத்து, அரசாங்கமே மக்களுக்கு எடுத்துச் சொல்லி, எந்த எந்த முறைகளில் மருந்து தெளித்தால் விளைச்சல் கெடாமல் இருக்கும் என்று எடுத்துச் சொல்லி, உற்பத்தியைப் பெருக்க வேண்டும். 25,000 ஏக்கரிலும் நாங்கள் இந்தத் திட்டத்தை எடுக்கும் போது 25,000 டன் உணவு தானியத்தை அடைய வேண்டும் என்றுதான் செய்தோம். அந்த கண்டிஷன் பேரில்தான் கடன்கள் வழங்கப்பட்டன. 10,000 டன் வரை வசூல் செய்தாகி விட்டது. மீதி உள்ளவர்கள் கொடுக்கவில்லை. அதை இந்தத் தடவை நல்ல முறையில் நடத்தி, முயற்சி எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

* **திரு. நா. கிருட்டிணன்:** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே கவர்னர் பெருமகனார் உரையினுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உரையாற்றும் வாய்ப்புக் கொடுத்தமைக்கு என் நன்றியைத் தங்களுக்குத் தெரிவிக்கிறேன். கவர்னர் உரையில் இந்த நாட்டிலே நடைபெற்ற தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்றது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அன்றிருந்து ஆட்சியை மாற்றி அமைக்க வேண்டும் என்று உணர்ந்து செயல் படும் அளவிற்கு மக்களிடம் விழிப்பு ஏற்பட்டிருக்கிறது என்றால், அதற்கு அந்த விழிப்பிற்கு காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த நாட்டைப் பொறுத்தவரையில், பெரும்பாலும் இது விவசாய நாடு. பத்து ஆண்டுகளுக்கு முன்பே நான் பொருளாதாரம் எடுத்துப் படித்தபோதே படித்தேன், இந்த நாடு அத்தகைய நாடு என்று. இந்த நாட்டிலே முதல் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அந்த முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை விவசாயத் திட்டம் என்றார்கள். பிறகு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வந்தது. அந்தத் திட்டத்தை தொழில் வளர்ச்சித் திட்டம் என்றார்கள். அதன் பிறகு வந்த மூன்றாவது திட்டத்தை எடுத்தபோது, தொழிலும் விவசாயமும் பெருக





வேண்டும் என்று, இரண்டுக்கும் முக்கியத்துவம் தந்தார்கள். ஆகவே இப்படி நிலையான கொள்கை இன்மையின் காரணமாக உணவுப் பஞ்சத்திற்கே ஏற்பாடு செய்தார்கள் என்று சொன்னால் அது உண்மையிலேயே பொருந்தும். அந்த நிலையை மாற்றி அமைக்கவேண்டும். உணவுப் பஞ்சம் நாட்டில் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் விளைச்சல் இல்லாததால் அல்ல என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. விளைச்சல் குறைவு என்றால் அதற்காக கொள்முதல் செய்ய வேண்டும். அப்படிக் கொள்முதலைத் தீவிரப் படுத்தும் போது, பெரும் முதலாளிகளிடமிருந்து ஆயிரக்கணக்கான மூட்டைகள் பெறப்படுகின்றன. அதிலிருந்து என்ன தெரிகிறது? விளைச்சல் இருந்து இருக்கிறது. ஆனால், முன்னால் இருந்த சர்க்கார் கொள்முதலைச் செம்மையாகச் செய்யாததால், இன்றைக்கு ஆட்சி ஏற்றுக் கொண்டிருக்கும் சர்க்கார் கொள்முதலைத் தீவிரப்படுத்த வேண்டியிருக்கிறது. இந்த மன்றத்திலே கேட்கிறார்கள், ஏன் மூன்று படி அரிசி போடவில்லை என்று. அவர்கள் ஆட்சியில் இருந்தகாலத்தில் கொள்முதலைச் சரியாகச் செய்திருந்தால், இன்றைக்கு நிச்சயம் கொடுத்திருக்க முடியும். இன்னொன்றும் சொல்லுகிறார்கள். நெல் பயிரிடுவதற்குப் பதிலாக கரும்பு போன்ற இதர விவசாயம் செய்வார்கள் என்று. அப்படி இருக்குமானால் அதைத் தடைச்செய்ய இந்த அரசாங்கம் உரிய முறையில் சட்டம் கொண்டு வந்து, சட்ட பூர்வமான நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும். விவசாயிகளுக்கு உரிய காலத்தில் உரம் வழங்கப்படாவிட்டால், நிலத்தில் கிடைக்க வேண்டிய அளவிற்கு உற்பத்தி இருக்காது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆகவே உர வினியோகம் சரிவர நடைபெற இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். உர வினியோகம் செய்ய தனிப்பட்டவர்களுக்கு பர்மிட்டுகள் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட பர்மிட்டுகளால் தான் வினியோகம் நல்ல முறையில் நடப்பதில்லை. ஆகவே, உர வினியோகத்தை ஊராட்சி மன்றத்திற்கும், ஒன்றிப்பு மன்றங்களுக்கும் கொடுத்து விட்டால் அதன் மூலம் சிறந்த முறையில் உர வினியோகம் நடக்க வசதியாக இருக்கும். மத்திய அரசு இந்த மாநில அரசிற்குக் கொடுக்க வேண்டிய அளவு உரம் கொடுக்க வில்லை என்று தெரிகிறது. நடப்பு ஆண்டில் அப்படியிருந்தாலும், வருகிற காலத்திலாவது துண்டு விழாத அளவிற்குக் கேட்டுப் பெற நம்முடைய மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, கூட்டுறவு முறையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் முறைகளை அரசாங்கம் நல்ல முறையில் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கூட்டுறவு முறையைப் பற்றிக் குறிப்பிடும் போது, நான் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் காஞ்சீபுரம் தொகுதியைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அங்கே நெசவாளர்கள் அதிகம். எங்கள் ஊரில் ஒரு கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால் அங்கு தயாராகும் நூலை

அங்கேயே விற்பனை நிலையங்கள் மூலம் நேரடியாக நெசவாளிகளுக்கு விநியோகம் செய்யாமல் தனிப்பட்ட முதலாளிகளுக்கு அவ்வுரிமையைத் தந்து அவர்கள் நூலைப் பதுக்கி வைத்து விலை ஏறுவதற்கு வழி செய்கிறார்கள். அதனால் அந்த நெசவாளர்கள் அவதிப்படுகிறார்கள். அதன் காரணமாக மக்கள் அவதிப்படுகிறார்கள். ரூபாய்க்கு ஒரு படி கொடுத்தாலும், அதை வாங்க அவர்களுக்குச் சக்தியில்லை. அதையும் இன்னும் மற்றவைகளையும் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான்காவது திட்டத்திலே சேலம் இரும்பாலைத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் முயற்சியை நான் வரவேற்கின்றேன். அதை நிறைவேற்றித் தருகின்ற வகையிலே, உரிய பங்கினை இந்த அரசு அவசியம் கேட்டுப் பெற வேண்டும் என்பதையும் நான் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

திட்டங்கள் தீட்டப்படுகின்ற நேரங்களில் மாநிலங்கள் சரியாகக் கலக்கப்படவில்லை என்று கவர்னர் பெருமானுடைய உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த முறையை மாற்றியமைத்து ஆகவேண்டும். திட்டங்கள் நாடு முழுவதற்குமாகத் தீட்டப்படுகின்றன. அப்படித் தீட்டப்படுகின்ற திட்டங்கள் ஒவ்வொரு பகுதிக்கும் நன்மை பயக்க வேண்டுமானால், அந்தந்தப் பகுதியினரை அரசாங்கம் கலந்து அந்தத் திட்டத்தைத் தீட்ட வேண்டும். அந்த முறையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அரசியல் சட்டத்தில் மூன்று பட்டியல்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசிற்கு என்று ஒரு தனிப் பட்டியல், மாநில அரசிற்கு என்று ஒரு தனிப் பட்டியல், இரண்டுக்கும் பொதுவான ஒரு பட்டியல் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெரும்பாலான அதிகாரங்கள் மாநில அரசிற்கே தரப்பட வேண்டும் என்று இந்த அரசு வற்புறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். மாநிலப் பட்டியலில் 'நிதி' என்ற தலைப்பில் உள்ளதிலும் மத்திய அரசாங்கம் தலையிட்டு, "நீ இவ்வளவுதான் செய்யவேண்டும்" என்று வற்புறுத்தும் நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றியமைக்கும் வகையில், இந்த அரசு மாநில அரசிற்கு உரிய உரிமையைப் பெற்றுக் காரியமாற்றும் நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மத்திய நிதி வளத்தைப்பற்றி கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த நிதி வளமானது, எல்லா மாநிலங்களிலிருந்தும் செலுத்தப்படுகிற பங்குத் தொகையைக் கொண்டது தான். அந்த நிதி வளத்தைப் பங்கிட்டுக் கொடுக்கும் நேரத்தில், அந்தந்த மாநிலத்திற்கு உரிய பங்கினை அவசியம் கேட்டுப் பெற வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





இறுதியாக, கடந்த சட்ட மன்றத்தில் குடியாட்சி மரபுகள் நன்றாக வளர்க்கப்பட்டிருக்கின்றன என்று கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் முன்பு எதிர்க்கட்சியாக இருந்த நேரத்திலே குடியாட்சி மரபுகள் நன்றாக வளர்க்கப் பாடுபட்டிருக்கிறது. இன்று அதே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய காரணத்தால், மேலும் அதை வளர்த்துக் கட்டிக் காக்கும் அளவிற்கு நாங்கள் நடந்து கொள்ளுவோம் என்று கூறி கவர்னர் உரை மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் உரையாற்ற வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

***திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமகனாருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகிற முறையில் நான் அதிக மகிழ்ச்சி அடைகிறேன். அந்த உரை எதைச் சொன்னாலும் சொல்லாவிட்டாலும், விவசாயத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது. விவசாயத் துறை ஒன்றையே அது எடுத்துக் கொண்டிருப்பதாகக் கூடக் கூறிவிடலாம். மற்ற தொழிலாளர்களைப் பற்றியும், தொழில் அதிபர்களைப் பற்றியும் அல்லது வேறு எதைப் பற்றியும் அதிகம் சொல்லவில்லையென்றாலும், அதற்குக் காலம் இல்லை, நேரம் இல்லை என்று தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

கவர்னர் உரையின் மீது நேற்று சொற்பொழிவாற்றிய மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்கள், உணவுத் தானியப் பெருக்கத்தைக் குறித்து விசேஷமாக விவரித்துப் பேசினார்கள். முதலிலே, தஞ்சை ஜில்லாவில் உணவு உற்பத்தி அதிகம் ஆவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருப்பதாகவும், அடுத்த மகசூலிலே ஒரு லட்சம் ஏக்கருக்கு அதிகமாக, மேலும் ஒரு போகம் சாகுபடி செய்து, நெல் அதிகம் விளையக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். இதே சமயத்தில் நானும் ஒன்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் தலைமை.)

கோயமுத்தூர் ஜில்லாவிலும் மிக நெருக்கடியான நிலைமை இருக்கிறது என்று நேற்று பேசிய உறுப்பினர்கள் பலர் சொன்னார்கள். இங்கே சென்னை நகரத்திலே ஒரு படி அரிசி ரூ. 1.50, ரூ. 1.75 என்கிற விலைக்கு மேல் இல்லாதபோது, அதே பட்டணம் படி அரிசி கோவை மாவட்டத்தில் மூன்று ரூபாய், மூன்றரை ரூபாய் அளவிற்கு, அதாவது ஏறக்குறைய இரட்டிப்பு விலைக்கு விற்றுக் கொண்டிருக்கிறது. கோவை மாவட்ட மக்கள் உணவுப் பொருள்கள் கிடைக்காமல் மிகவும் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள்.

இப்பொழுது பவானிசாகர் நீர்த் தேக்கத்தில் நிறையத் தண்ணீர் இருக்கிறது. இரண்டு வருஷங்களுக்கு முன்பு அந்த நீர்த் தேக்கத்திலிருந்து மூன்று போகம் சாகுபடி செய்வதற்கு

தண்ணீர் கொடுக்கப்பட்டது. ஆகஸ்டு 15-ந் தேதி அல்லது செப்டம்பர் முதல் தேதியிலிருந்து டிசம்பர் வரையிலும் ஒரு போகம், பிறகு டிசம்பரிலிருந்து மார்ச் வரையிலும் இன்னொரு போகம் என்று இரண்டு போகங்களுக்குச் சாதாரணமாக நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் விடப்படுவது உண்டு. இன்றைய உணவு நெருக்கடி நிலையை முன்னிட்டு, ஏறக்குறைய நூறு அடிக்கு மேல் தண்ணீர் இருப்பதால், மே முதல் செப்டம்பர் வரையில் அல்லது ஆகஸ்ட் வரையிலுமாவது ஒரு போகத்திற்குத் தண்ணீர் கொடுத்தால் மிகவும் சௌகரியமாக இருக்கும், விளைச்சலும் அதிக மாகும். அதை நமது அமைச்சரவை அவசியம் கவனித்து, பவானிசாகர் நீர்த் தேக்கத்திலிருந்து இந்த மே மாதத்திலிருந்து தண்ணீர் விடுவதற்கு உடனடியாக உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏடிடி 27 ரக நெல்லுக்கு உகந்த போகம். பனியும் குளிரும் இல்லாத வெளிற்காலமாக இருப்பதால் மகசூல் நன்றாக விளையக்கூடிய வாய்ப்பு இருக் கிறது.

அதே மாதிரி, மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்தும் இன்னொரு போகத்திற்குத் தண்ணீர் கொடுக்கலாம். இப்பொழுது மேட்டூர் நீர்த் தேக்கத்தில் தண்ணீர் நிறைய இருப்பதால், கோவை மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்திலும் ஓடுகின்ற கால்வாய்கள் வழியாகத் தண்ணீர் விட்டால், அங்கேயும் ஒரு போகம் சாகுபடி செய்யக்கூடிய பூமியில் இரண்டு போகம் சாகுபடி செய்வதற்கான வசதி ஏற்படும். இவைகளையெல்லாம் கவனித்துச் செய்தால் கோவை மாவட்டத்தில் இருக்கும் உணவு நெருக்கடி ஓரளவு தீரக் கூடும். அதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். மதிப்பிற்குரிய நமது முதல் அமைச்சர் அவர்கள் தங்களுடைய பேச்சிலே 'ப்ரையாரிடி' என்ற வார்த்தையைப் பல முறை குறிப்பிட்டதற்கு இணங்க கோவை மாவட்டத்திற்கு மேலும் தண்ணீர் வசதியைக் கொடுப்பதற்கு முதல் இடம் கொடுக்க வேண்டும். கோவை மாவட்டத்தில் உணவுப் பொருள்களின் விலை விஷம் போல் ஏறிக் கொண்டிருப்பதை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தி, மற்ற மாவட்டங் களில் நிலவும் விலையில், அதாவது பட்டணம் படி ரூ. 1.75 என்கிற விலைக்குக் கிடைக்கச் செய்தாலும் எங்களுக்குப் போதும். ரூபாய்க்கு ஒரு படி அரிசி விற்க வேண்டும், ரூபாய்க்கு இரண்டு படி அரிசி விற்கவேண்டும் என்பது கூட எங்களுடைய பிரச்சினை அல்ல. எங்களுக்கு மற்ற மாவட்டங்களில் அல்லது சென்னை நகரத்தில் வெளி மார்க்கெட்டில் விற்கின்ற விலையின் அளவிற்காவது கோவை மாவட்டத்தில் அரிசி விலை இருக்க வேண்டும். அரிசி விலை இந்த அளவிற்கு அதிகமாக இருந்தால், மக்கள் பிழைப்பதே கஷ்டம். இப்போதே அரைப் பட்டினி, கால் பட்டினி நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். பாலுக்குச் சர்க்கரை வேண்டும் என்று கூடக் கேட்கவில்லை; கூழுக்கு உப்பு வேண்டும் என்று கூடச் சொல்லவில்லை; கூழே இல்லை என்ற நிலைமைதான் இருக்கிறது. சோற்றுக்கே பஞ்சம், அன்ன விசாரம் அதுவே விசாரம் பெரிதாக





இருக்கிறது என்பதை நான் மிக அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இந்த நிலைமையைக் கண்டிப்பாக நிவர்த்தி செய்தாக வேண்டும்.

மாவட்டத்திற்கு மாவட்டம் செக் போஸ்ட் இல்லாமல், மாநிலம் முழுவதிலும் உணவுத் தானியம் தடையின்றி போக வசதி இருக்க வேண்டும் என்று நினைக்கும் நேரத்திலே கோயமுத்தூர் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஈரோடு, பவானி தாலூக்காக் களிலிருந்து மற்ற தாலூக்காக்களுக்கு உணவுத் தானியம் போகக் கூடாது என்ற விதி விதிக்கப்பட்டு, செக் போஸ்ட் வைத்திருப்ப தாகக் கேள்விப்படுகிறோம். இதனால் மக்களுக்கு மேலும் துன்பம் அதிகமாகிக்கொண்டே போகிறது. இவைகளையும் உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய அமைச்சரவை முற்பட வேண்டும்.

நேற்று மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்கள் பேசும் போது, சிவில் சப்ளைஸ் டிபார்ட்மென்டைப் பலப்படுத்துவது, ரெவின்யூ போர்டை விஸ்தரிப்பது அல்லது அந்த போர்டுக்கு அதிக வேலை கொடுப்பது போன்ற பல திட்டங்களைச் சொன்னார்கள். அதே சமயத்தில், இப்பொழுதுள்ள கட்டாயக் கொள்முதலோ அல்லது பங்கீட்டு முறையோ தற்காலிகமானதுதான், இதை யாரும் எப்போதுமே நிலைக்கச் செய்ய வேண்டுமென்ற ஆசை இல்லை என்றும் சொன்னார்கள். 1952-ம் ஆண்டிலே இருந்த நிலை இன்று நமது மாநிலத்திலோ அல்லது நாட்டிலோ இல்லாததனால்தான் இன்று பங்கீட்டு முறையைத் தற்காலிகமாக மேற்கொள்ளுகிறோம் என்றும் சொன்னார்கள். ஆனால், அதே சமயத்தில், விசாரணை செய்ய அதிகாரிகள் நியமிக்கப்படுவது, இதற்காக ஸிவில் ஸப்ளைஸ் டிபார்ட்மென்டைப் பலப்படுத்திக் கொண்டு போவது, இன்னும் பெரிய பெரிய "காமதேனு", "சிந்தாமணி" போன்ற சூபர் மார்க்கெட்டுகளை விரிவுபடுத்திக்கொண்டு போவதெல்லாம் அவசியம் தானா? இதனால் நம்முடைய வரிப் பணம் எவ்வளவு வீணாகிறது, விரயமாகிறது என்பதையெல்லாம் யோசித்து, ஓரளவு அந்தத் திட்டங்களைத் தளர்த்துவதற்கு செலவினங்களையெல்லாம் குறைப் பதற்கு முயற்சிக்க வேண்டும். கொள்முதல் என்பது தற்காலிக ஏற்பாடுதான் என்றால் அடுத்த ஜூன் அல்லது ஜூலை மாதத்தி லாவது இந்தக் கொள்முதல் திட்டத்தை தளர்த்த வேண்டும், எவ்வளவு விரைவில் அதைத் தளர்த்த வேண்டுமோ அவ்வளவு விரைவில் அதைத் தளர்த்த வேண்டும், பங்கீட்டு முறையையும் தளர்த்தவேண்டும். அதல்லாமல், சர்க்காரே வியாபாரம் செய்கிற நிலை வந்தால் பெரிய தொல்லையும் கஷ்டமும் ஏற்படும் என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

குஜராத்தி பாஷையில் ஒரு பழமொழி உண்டு. அதன் மொழி பெயர்ப்பை கீழே கொடுக்கிறேன். "அரசு வாணிகம் செய்ய முற்பட்டால் குடிமக்கள் பிச்சை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும்" சற்றேறக்குறைய சரியான மொழி பெயர்ப்பைத்தான் கொடுத் திருக்கிறேன். அந்த நிலையில்தான் இன்றைய சர்க்கார் இருந்து கொண்டிருக்கிறது. நெசவாளர்களுக்கு வேலை கிடைப்பதில்லை.

அவர்கள் எல்லா வகையிலும் கஷ்டப்படுகிறார்கள். வேலை கிடைத்தாலும் உணவுப் பண்டங்களை வாங்குவதற்கு அவர்களால் முடியவில்லை. கூடுமான வரையில் நாமே வியாபாரத்தை மேற்கொள்வது அல்லது சரக்கை விஸ்தாரமாக வழங்க, ஒருசிலருக்கு மட்டும் லைசென்ஸ் போன்றவைகளை வழங்கி வியாபாரம் செய்ய அனுமதிப்பது சரியல்ல. சரக்கு நயமோ, சுத்தமோ இல்லாது—சரக்கு முடுக்கில்லாது—'செட்டி முடுக்கு' என்ற நிலையில் லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றவர்களிடத்தில்தான் பொருள்களை வாங்க வேண்டிய நிலையில் வைத்துவிடக் கூடாது. இத்யாதி காரணங்களினால்தான் இந்த அரசாங்கம் அவசியம் வியாபாரத்தை தற்காலிகமாக வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு துறையிலும் நாம் கட்டுப்பாட்டை மிக அதிகமாகப் பலப்படுத்திக்கொண்டே போனால் மக்களுடைய கை கால்களை கட்டிப் போடுகின்ற நிலைக்கு மக்களுக்கு கஷ்டமே வந்துவிடுகிறது. மக்களுக்கு சுயநிலை, சுய அறிவு, சுயாட்சி என்பது இருப்பதில்லை. அதற்கு ஒரே ஒரு திருஷ்டாந்தத்தை மட்டும் இங்கு கூறுகிறேன். நம்முடைய தேசப்பிதா 1925-ல் ஒரு கருத்தைச் சொன்னார். அதை மட்டும் சொல்லி நான் முடித்துக்கொள்கிறேன். "அந்நிய சர்க்காராக இருந்தாலும், தேசிய சர்க்காராக இருந்தாலும் சர்க்காரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெறுவதற்காக இடைவிடாது செய்யும் முயற்சியே சுயாட்சி ஆகும். வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தால் சுயாட்சி என்பது பரிதாபத்திற்குரிய விஷயமாகவே முடியும்". அந்த அளவில்தான் முன் இருந்த சர்க்காரும் இருந்தது. இன்று அதையொட்டியே போகிற இந்தச் சர்க்காரின் உத்தரவுகள் மக்களுக்கு இருக்கின்ற கட்டுப்பாடுகள் அப்படியே கொஞ்சம் அதிகமாகக்கூட இருந்துவர வழி வகுத்திருக்கிறது. அதை எப்படியும் தளர்த்தி, விரைவில் சுயாட்சி பெற்று, மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், இந்த அவைக்கும் என்னுடைய இதயங் கலந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். கவர்னர் அவர்கள் 'நடந்து முடிந்த பொதுத் தேர்தலைப்பற்றியும், உற்பத்திப் பெருக்கத்தைப்பற்றியும், நீர்ப்பாசனத் திட்டத்தைப் பற்றியும், உணவுச் சிக்கலைப்பற்றியும், நாட்டின் முன்னேற்றம் காண புத்தாட்சியின் புதுக்கொள்கையைப்பற்றியும் திட்டவட்டமாக நல்ல நம்பிக்கையூட்டும் வகையில் தம் உரையை ஆற்றியிருக்கிறார்கள். அவர்கள் ஊட்டிய நம்பிக்கைக்கு ஆதாரமாகத்தான் நம்முடைய அரசு, சிறப்பாக நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் சிறப்பான பல திட்டங்களை மெதுவாகச் செய்யும் என்ற ஆணித்தரமான உறுதியை இந்தப் பேரவையில் தந்திருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய எதிர்க்





கட்சி உறுப்பினர்கள், கவர்னர் அவர்களின் உரையைத் திட்டவட்டமாக, வரிவரியாக ஆராய்ந்து படிக்காத காரணத்தால், பல குறைபாடுகள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். நீங்கள் கூறிய அத்தனை குறைபாடுகளும் நீக்கப்படும் என்ற உறுதியை கவர்னர் அவர்கள் தம் உரையில் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டில் இன்றைய நிலையில் நாம் செய்ய வேண்டிய சிறந்த செயல் உணவு உற்பத்தியைப் பெருக்குவதுதான். உணவு உற்பத்திக்கு இன்றியமையாத திட்டம் நீர்ப்பாசனத் திட்டம் ஒன்றுதான். நம்முடைய நாட்டில் விளைநிலம் அதிகமாக இருக்கின்றன. பயன்படுத்த முடியாத காட்டு நிலம் அதிகம் இருக்கின்றன. தண்ணீரே பார்க்காத வறட்சி நிலம் ஏராளமாக இருக்கின்றன. அத்தனை நிலங்களையும் விளைநிலமாக ஆக்குவதற்குத் தலைசிறந்த சாதனம் நீர்ப்பாசனத் திட்டம் ஒன்றேதான். அந்த மாபெரும் திட்டத்தை நிறைவேற்றக்கூடிய பொறுப்பு முழுவதும் மத்திய அமைச்சரவையின் கையிலே இருக்கிறது. ஆகவேதான் மாநில அரசு நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் தயங்கித் தடுமாறிக் கொண்டிருக்கிறது. இதைப் போக்க, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மத்திய அரசுக்கு தங்களுடைய கருத்தை எடுத்துக்கூறி, ஆவன செய்யவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நீர்ப்பாசனத் திட்டத்தை மூன்று வழிகளில் நிறைவேற்றலாம். ஆற்றிலே கிடைக்கும் நீரைப் பல்வேறு பகுதிக்கு எடுத்துச் சொல்லலாம், மழைக் காலங்களில் வீணாகும் நீரை மேட்டுப் பகுதியில் செலுத்தி ஆவன செய்யலாம்; ஊற்றுநீரைப் பயன் படுத்தி முக்கிய திட்டங்களைச் செய்யலாம். இந்த மூன்று வகையான நீர்ப்பாசனத் திட்டங்களையும் செய்தால், ஏராளமான நிலங்கள் நீர்ப்பாசன வசதி பெற்றுவிடும். இதன் மூலம் நிச்சயமாக நமது நாடு வளம் பெறும். நீரையே காணாத நிலங்களில் பயிரிட ஏதுவாகும். என்னுடைய தொகுதி கரூர் வட்டத்தில் குடகனாறு திட்டம்பற்றி பல ஆண்டுகளாக பேசப்பட்டு வந்தது. இன்றுவரை அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருந்து வருகிறது. இந்த ஒரு திட்டத்தினால் என்னுடைய தொகுதியில் ஏறத்தாழ 50 ஆயிரம் மக்கள் பயன்பெறுவார்கள். ஏறத்தாழ 1 லட்சம் ஏக்கருக்கு மேல் விளைநிலங்களாக மாறும். இந்தத் திட்டத்தினால் தண்ணீர் காணாத குளங்களில் தண்ணீர் நிரம்ப வழியேற்படும். தண்ணீர் இல்லாத கிணறுகளில் நல்ல ஊற்று நீர் ஏற்பட வழி உண்டாகும். அதனால் விளைநிலம் பெருகும். இந்தத் திட்டத்தைப்பற்றி நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், 1957-ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில், "எங்களுக்குத் தேவையானது குடகனாறு திட்டம் ஒன்றேதான். இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால் நான் என்னுடைய உறுப்பினர் பொறுப்பை

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1967 மார்ச் 30

கூட ராஜினுமா செய்யத் தயார்" என்று மிக அருமையாக எடுத்துக் காட்டினார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரும் வகையில் அவரே அந்தப் பொறுப்பில் இருக்கிறார் என்று எண்ணும்போது மிகமிக மகிழ்ச்சியடைகிறேன். அவருடைய காலத்தில் இந்தத் திட்டம் நிறை வேற வேண்டுமென்றுதான் என்னுடைய தொகுதி மக்கள் பேராவலுடன் எதிர்பார்க்கிறார்கள். என்னுடைய தொகுதியில் வெள்ளியணை பகுதி மக்கள் என்ன கேட்கிறார்கள் என்றால், 'உண்ண உணவில்லை—கொடுங்கள் என்று கேட்கவில்லை, உடுக்க உடையில்லை—கொடுங்கள் என்று கேட்க வில்லை, அவர்கள் கேட்பதெல்லாம் குடிதண்ணீர்தான். இந்த குடகனாறு திட்டம் நிறை வேறினால் அங்குள்ள மக்களின் பிரச்சினை தீரும், விளைநிலம் பெருகும், உழவர்களின் பிரச்சினையும் தீரும் என்ற யோசனையை இந்தப் புதிய அரசாங்கத்திற்குத் தெரி வித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் நான் குறிப்பிட மறந்தால், அது என்னுடைய தொகுதி மக்களுக்கு நான் இழைத்த துரோக மாகும். நான் என்னுடைய தொகுதியில் சின்னமநாய்க்கன்பட்டி என்ற பகுதிக்குச் சென்றிருந்த நேரத்தில், மக்கள் பலர் ஓடோடி வந்தனர். அவர்கள் என்னைப் பார்த்து 'இந்தக் கேணியைப் பாருங்கள் என்றார்கள். நான் கேணிக்கு அருகில் சென்று பார்க் கும்போது பல அடி ஆழம் பாடுபட்டு தோண்டிய கேணியில் நீரே இல்லை. சுற்று வட்டத்திலும் இதே நிலைமைதான் இருக்கிறது. கடந்த இருபதாண்டு காலமாக காங்கிரஸ் ஆண்டபோது மக்களின் குடி தண்ணீர் பிரச்சினைகூட தீர்க்க முடியாமல் இருந்து வந்திருக் கிறது. நம்முடைய பாசனத் திட்டத்தைப் பெருக்கினால்தான் உழவர்களின் வாழ்வு மலரும், விளைநிலம் பெருகும், உற்பத்தியைப் பெருக்க முடியும். உற்பத்தியைப் பெருக்க முதன்மையான வழி நீர்ப்பாசனத் திட்டம்தான்.

என்னுடைய தொகுதியில் பஞ்சப்பட்டி என்ற ஒரு ஊர் இருக்கிறது. அது 'பஞ்சப்பட்டியோ' என்று நினைக்கும் அளவுக்கு அங்கு பஞ்சம் நிறைந்திருக்கிறது. அதைப் போன்ற பகுதிகள் நிறைய இருக்கின்றன. அங்கே இருக்கும் மாபெரும் ஏரியில் ஆண்டு தோறும் மழைக் காலத்தில் நீர் வழிந்து வீணாகப் போய்விடுகிறது. நீர் நிறைய இருந்தும் அதைப் பயன்படுத்த முடியாமல் மக்கள் இருக்கிறார்கள். வயலூர் என்ற பகுதியில் சிறிய அணை ஒன்றைக் கட்டி, பல கண்மாய்களை ஏற்படுத்தித் தந்தால், அந்தப் பகுதியிலுள்ள பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டு, அங்குள்ள மக்கள் பயன் அடைய வழி இருக்கிறது. விவசாயப் பெருநாடாகிய நம் தமிழ் நாட்டில் நீர்ப்பாசனத் திட்டத்திற்கு முதன்மையான இடம் தரப்
10-30 மு.ப. படவேண்டுமென்பது எனது தாழ்மையான வேண்டுகோள். வள்ளுவப் பெருந்தகையார்

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு



1967 மார்ச் 30] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

என்று குறிப்பிட்டுள்ளார்கள். இன்றைக்கு தக்கார்—சான்றோர் கள் ஆட்சியிலே அமர்ந்து இருக்கிறார்கள் தள்ளா விளையுள்—குன்றாத விளையுளைச் செய்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஊக்கத்தை நாம் அளிக்க வேண்டும். தாழ்விலாத செல்வர்களாக விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்வதற்கு நாம் எல்லா வகையான நீர்ப்பாசன திட்டங்களையும் அமைத்துக் கொடுத்தாகவேண்டும். ஆகவே நாட்டில் உணவுப் பஞ்சம் நீக்கப்பட வேண்டுமானால் அதற்கு முதற்கண் நீர்ப்பாசனத் திட்டம்தான். சிறிய சிறிய ஆற்று நீரை எல்லாம் காட்டுப் பகுதியில் திருப்பி, காட்டு நிலங்களை நல்ல விளைநிலங்களாக நாம் மாற்றியாக வேண்டும். மேலும் மழை காலங்களில் கடலில் கலக்கும் நீரைத் தேக்கி மேட்டுப் பகுதி களுக்குத் திருப்பிவிட்டால் அதன் மூலம் நீர் காணாது இருக்கிற மேட்டுப் பகுதிகளை எல்லாம் வளமுள்ள பகுதியாக்க நிறைய வாய்ப்பு இருக்கிறது. இப்படி நீர்ப்பாசனத் திட்டத்தை விரிவு படுத்தி, ஏரிகளை ஆழப்படுத்தி, சிறு சிறு ஆற்று நீரை ஏரி, குளம் குட்டைகளுக்குத் திருப்பி விட்டால் உணவுப் பற்றாக்குறை கண்டிப்பாக நீங்கிவிடும் என்பது எனது தாழ்மையான அபிப் பிராயம். இந்தக் காரியங்களில் நம் அரசாங்கம் கவனம் செலுத்தும் என்பதாக கவர்னர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் நமது அரசாங்கம் பிற்பட்ட பகுதிக்கு அதிக மானியம் ஒதுக்கி, ஆங்காங்குள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிக சலுகை அளித்து அந்தப் பகுதிகள் முன்னேற்றம் அடைய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த விவாதத்திலே பங்கு கொள்ள எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக சட்டமன்றத் தலைவ ருக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. கோ. பாரதி மோகன்:** அவை துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கவர்னர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது இங்கே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்த தற்காக தங்களுக்கு முதலில் நான் நன்றி தெரிவித்துக் கொள் கிறேன்.

இன்றையதினம் நம்முடைய நாட்டிலே ஒரு விஷயத்தைப் பிரதானமாகக் கவனிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். காங்கிரஸ் அரசாங்கம் இந்த நாட்டிலே முன்பு ராம ராஜ்யத்தைப் பற்றியும், நிர்மாணத் திட்டங்களைப்பற்றியும் பேசிக்கொண்டு வந்தது. இந்த நாடு சுதந்திரம் அடைந்த பிறகு உலகம் பூராவிலும் சோஷலிசக் கருத்து செல்வாக்கு பெற்றிருப்பதைத் தெரிந்து கொண்டவுடன் தங்களுடைய நிர்மாணத் திட்டங்களை மாற்றிக் கொண்டு சோஷலிசம் என்று பேசியது. என்றாலும் கடந்த இருபது ஆண்டு காலங்களில் சோஷலிசம் என்ற அடிப்படையில் நிலப் பிரபுத்துவம், முதலாளித்துவம் ஆகியவற்றை ஸ்தாபிக்க வேண்டுமென்றுதான் உறுதியாகச் செயல்பட்டு வந்திருக்கிறது. இந்த நாட்டு மக்களின் அபிப்பிராயம் முழுவதும் இதை எதிர்த்து மாறுபட்டு வருவதைக் கண்டவுடன் அந்த சோஷலிசத்தைக்

கலப்படம் செய்வதற்கு—ஜனநாயக சோஷலிசம் என்று பெயரை மாற்றிப் பேசினார்கள். இந்த நான்காவது பொதுத் தேர்தலில் இவர்களது ஜனநாயக சோஷலிசம் என்ற கொள்கை அடியோடு முறியடிக்கப்பட்டுவிட்டது. ஜனங்கள் அவர்களையே தூக்கி எறிந்துவிட்டார்கள். நேற்று பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இந்தக் கடைசி நேரத்திலும்கூட அதற்கு மாற்றுக் கட்சியாக வந்திருக்கக்கூடிய நம் தலையில் அவர்களது போர்வைத் தூக்கி வைக்க முயற்சி செய்கிறார்கள். நம்முடைய விஞ்ஞான சோஷலிசம்தான் இந்த நாட்டுக்குச் சரியானது என்பதை நாம் நிர்மாணித்தாக வேண்டும். மக்கள் அரிசிக்காகப் போராடினார்கள். அரிசி வேண்டுமென்று கோரினார்கள். அரிசி பிரச்சினைதான் அரசியல் பிரச்சினை என்றும்கூடச் சொன்னார்கள். மகத்தான பிரஞ்சுப் புரட்சியின் அடிப்படையே ரொட்டிப் பிரச்சினைதான் என்பதை எல்லோரும் அறிவார்கள். ரொட்டிப் பிரச்சினைதான் அங்கு அரசியல் பிரச்சினையாயிற்று. இங்கு அரிசிப் பிரச்சினை அரசியல் பிரச்சினையாக இருந்தாலும் தவறு என்ன?

இன்றைக்கு நாட்டு மக்களிடையே முதன்மையாக இருப்பது "பொருள் முதல்வாதமா" அல்லது "கருத்து முதல்வாதமா" என்று பார்க்கவேண்டும். கருத்தை முதல்வாதமாகக் கொண்டு காங்கிரஸ் ஆட்சி தோல்வியுற்றிருப்பதை நாம் அறிவோம். ஆக "பொருள் முதல்வாத" மாகக் கொண்ட நமது விஞ்ஞான சோஷலிசம்தான் நிர்மாணிக்கப்பட்டாக வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தது, விஷயத்திற்கு வருகிறேன். நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன். அங்கே உள்ள நிலங்களை எப்படி ஒரு போகத்தை இரண்டு போகமாக ஆக்கலாம், இரண்டு போகத்தை மூன்று போகமாக ஆக்கலாம் என்பதுபற்றி கவனம் செலுத்தலாம். ஆனாலும், ஒரு விஷயத்தைப் பிரதானமாக வைத்துக் கவனிக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக வறட்சி ஏற்பட்டிருக்கிறது. வெள்ளம் வரும் அல்லது வறட்சி வரும். மேட்டூர் அணையை மட்டும் நம்பி காலாகாலத்தில் சாகுபடி செய்ய முடியாத நிலை இருந்து வருகிறது. ஆக உணவு உற்பத்திக்காக நாம் விரிவான திட்டங்களை அமைக்கிறபோது மேட்டூர் அணையை மட்டும் நம்பி விவசாயம் செய்ய முடியாது என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். ஆக அங்கே விவசாயம் நல்ல முறையில் செய்யப்பட வேண்டுமென்றால் பெரிய பெரிய பம்பு செட்டுகளை எல்லாம் அமைத்துக் கொடுக்க வேண்டும். அவற்றையும் பெரிய பெரிய நிலப் பிரபுக்களுக்குக் கொடுக்காமல் வாய்க்கால்களின் தலைப்பில் வைத்து பொதுவாக அவை இயங்க ஏற்பாடு செய்தால் அந்த வாய்க்காலை ஒட்டியுள்ள எல்லா விவசாயிகளுடைய நிலங்களுக்கும் பாசன வசதி ஏற்படும். கிராமத்தில் உள்ள அத்தனை பேரும் சாகுபடி செய்ய முடியும் என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.





இன்றையதினம் விவசாயிகள், விவசாயிகள் என்று பொதுப் படையாகவே கூறி வருகிறார்கள். தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் இன்றையதினம் நிலம் வைத்திருப்பவர்களைக் காட்டிலும் சாகுபடியாளர்கள்தான் அதிகம். அவர்களுக்கு என்று சொந்த நிலம் கிடையாது. குத்தகைக்கு நிலத்தை எடுத்துப் பாடுபட்டு வருகிறார்கள். அவர்களுக்கு பம்பு செட்டு கொடுப்பதே இல்லை. சாகுபடியாளர்களுக்குப் பம்பு செட்டு கொடுத்தால்தான் சாகுபடி பெருகும். இன்றைய தினம் எங்கள் மாவட்டத்தில் உள்ள தர்மபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆகிய மடங்களை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு மடத்திற்கும் ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலம் இருக்கிறது. அந்தத் திமிங்கிலங்களுக்குச் சொந்தமான நிலங்களை இந்தச் சர்க்கார் தங்களுடைய நேரடிப் பொறுப்பில் எடுத்துக் கொண்டாக வேண்டும். அவர்களின் மூலம் பல லட்சக் கணக்கான பணம் விரயமடிக்கப்படுகிறது. அங்கு இருக்கிற பண்டார சந்நிதிகளை எங்காவது குடிசையைக் கட்டிக் கொடுத்து வேத வேதாந்த விசாரம் செய்ய அனுப்பிவிட்டு, அந்த மடங்களின் சொத்துக்கள் பூராவையும் சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சாகுபடியாளர் சட்டம், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் என்று பல வகையான சட்டங்கள் இருக்கலாம். அவற்றை எல்லாம் ஒன்றாக்க வேண்டும். 1957-க்கு பிறகு ஏற்பட்டுள்ள நியாயமற்ற பாகப்பிரிவினைகள் எல்லாவற்றையும் ரத்து செய்யவேண்டும். பெயர் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் உடையவர்கள் எல்லாம் பத்து ஏக்கர், ஐந்து ஏக்கர், 30 ஏக்கர் என்பதாக பொய்யாக பாகப் பிரிவினை செய்து வைத்திருக்கிறார்கள். அவற்றை ரத்து செய்தாலே நிறைய நிலம் கிடைக்கும். அந்த நிலங்களை நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு, சாகுபடியாளர்களுக்குக் கொடுக்கலாம். தரிசு நிலங்களை ஏழை விவசாயத் தொழிலாளிகளுக்குக் கொடுக்க வேண்டும். காரணம் மனித உழைப்பு இருந்தால்தான் உற்பத்தி பெருகும். நாம் டிராக்டர்களை கொடுக்கலாம், பம்பு செட்டுகள் வைக்கலாம். நவீன இயந்திரக் கலப்பைகளைக் கொடுக்கலாம். ஆனால் மனித உழைப்பு அவற்றோடு சேர்ந்தால்தான் உற்பத்தி பெருகும். நிலம் அற்ற ஏழை விவசாய தொழிலாளிகளின் கையில் நிலம் கொடுக்கப்பட்டாக வேண்டும். இதை ஒரு முறை அல்ல, இரண்டு முறை அல்ல, மூன்று முறை சிவப்பு மையினால் அடியில் கோடிட்டுக் காட்டுகிறேன். இந்த விஷயத்தில் இந்த அமைச்சரவை கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திட்டக் கமிஷனைப் பொறுத்தவரையில் இரண்டாவது திட்டக் கமிஷன் என்று நான் நினைக்கிறேன், அந்தத் திட்டக் கமிஷன் இந்த நாட்டிலே உள்ள நிலச் சீர்திருத்தங்கள் சம்பந்தமாக சில சிபார்சுகளைக் கொடுத்திருக்கிறது. அதற்காகப் போடப்பட்ட நிலச்சீர்திருத்த உப குழு திட்டக் கமிஷனிடம் நிலச்சீர்திருத்தம் சம்பந்தப்பட்ட சிபாரிசைக் கொடுத்திருக்கிறது. ஆனால், அவற்றை இன்னும் அமலுக்குக் கொண்டுவரவில்லை.

அவற்றை உடனடியாக அமலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று நமது ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் தஞ்சையிலே இருக்கிற நிலைமை விளைவை எல்லாம் நாசமாகியிருக்கிறது. இப்பொழுது அங்கேயிருக்கிற குத்தகை சாகுபடியாளருக்கு பாக்கி இருக்கிறது. அதற்காக முனிசீப் கோர்ட்டிலே போட்டு டிகிரி வாங்கி வைத்திருக்கிறார்கள் சாதாரணமாக, வைத்திருக்கக்கூடிய மாட்டை, ஆட்டுக்குட்டியை, மற்ற மற்ற பண்ட பாத்திரங்களையெல்லாம் கூட ஜப்தி செய்யப்படுகிற நிலைமை இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கொடுக்கப்பட்ட கடனுக்காகவும் இன்றைய தினம் வீட்டுக்கு வீடு ஜப்தி செய்யப்படுகிறது. இதனால் தஞ்சை மாவட்டம் ஒரு கொந்தளிப்பான நிலையில் இருக்கிறது. பழைய நினைவிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் இன்னும் அங்கே இருக்கிறார்கள் என்று நான் சந்தேகிக்கிறேன், உறுதியாகச் சொல்ல முடியாது. ஆகவே இப்பொழுது சூட்டோடு சூடு ஏறிக்கொண்டிருக்கின்ற நிலைமையிலே அவர்கள் ஜப்தியையும் செய்து நெருக்கடியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி எனக்கு நிறைய மனுக்கள் வந்திருக்கின்றன; நான் அவற்றை அமைச்சரவைக்கு கொடுத்திருக்கிறேன். அங்கே சாகுபடியாளருக்கு இருக்கின்ற குத்தகை பாக்கி தள்ளுபடி செய்யப்படவேண்டும். கோயில், மடங்களில் உள்ள நிலங்களுக்கான பாக்கியையும் தள்ளுபடி செய்யவேண்டும். சிறு நிலச் சுவான்தார்கள் கஷ்டப்படாமல் இருக்க அவர்களுக்கும் பாக்கியை ஒத்தி வைக்க வேண்டும். பெரிய நிலச்சுவான்தார்களுக்கு கொடுக்க வேண்டிய குத்தகையையும் தள்ளுபடி செய்யவேண்டும், என்பதை நான் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அடுத்தப்படியாக டிரஸ்டி முறை இருக்கிறது, இதிலே ஒரு கோவிலுக்கு ஒரு கட்டளைத் தம்பிரான் இருக்கிறார். அதற்குப் பிறகு ஒரு டிரஸ்டி இருக்கிறார். அம்மாதிரி இல்லாமல் இருப்பதற்காக இந்த டிரஸ்டி முறையையே மாற்றி முறையாகக் கவனிப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

தேரெழுந்தூரிலே கம்பர் விழா நடந்து வருகிறது. அது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக கட்சி விழாவாக அரசியல் விழாவாகத்தான் நடந்தது. அதிலே நாங்கள் தலையிட்டு இலக்கிய விழாவாக மாற்றினோம். இப்பொழுது இந்த ஆண்டு காங்கிரஸ் கட்சியினர் தலையிட்டு அதை நடத்துவதற்கு முயற்சி செய்கிறார்கள். இந்தத் தடவை நாங்கள் முதல் அமைச்சரையோ அல்லது கல்வி அமைச்சரையோ அழைக்க வேண்டுமென்று சொன்னோம். அந்தக் காரணத்தாலே அவர்கள் அதைச் சுருக்கமாக நடத்தவேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்காக கோவில் அறநிலையப் பாதுகாப்புப் பணமும் செலவழிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இதற்காக அதிலேயிருந்து 5,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருப்பதாக தெரி





கிறது. இதை அறநிலைய அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே கம்பருக்கு கம்பர் மேட்டில் ஒரு சிலை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கனம் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். கனம் உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது அது அரசியல் விழாவாக தேரெழுந்தூரில் நடைபெறுகிறது என்று சொன்னார்கள். கம்பன் எல்லாவற்றிற்கும், அரசியலுக்கும் அப்பாற்பட்டவனாக இருக்கிறான். அந்தக் குழுவிற்கு அடியேன் தான் தலைவராக இருக்கிறேன். முதலமைச்சராக இருந்தாலும், கல்வியமைச்சராக இருந்தாலும், அவர்களை அழைப்பதை நான் வரவேற்கிறேன். கம்பன் உலகத்திற்கே பொதுவானவன், ஆகவே, இதைக் குறுகிய நோக்கத்தோடு கவனிக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. கோ. ஆர். கோவிந்தன்:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையை வரவேற்று அதை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முதலாவதாக, நடந்து முடிந்த தேர்தல் நல்ல முறையில் நடைபெற்றிருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது உண்மைதான் என்றாலும், ஒரு சில இடங்களில் நடைபெற்றதை வைத்துப் பார்த்தால், சென்று மறைந்த காங்கிரஸ் ஆட்சியில் காங்கிரஸ் நண்பர்கள் எல்லாம் அவர்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி அராஜகமான, இழிவான செயல்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நாம் சொல்லாமல் இருக்கமுடியாது. ஆனால் அவர்கள் செய்த இந்த அராஜகத்தால்தான், இழிவான செயல்களால்தான் அதைப் பார்த்துப் பொறுக்க முடியாத மக்கள் பெருவாரியான வாக்குகளை நமக்கு அளித்து அமைச்சரவை அமைப்பதற்கேற்ற அளவில் ஒரு நல்ல நிலைமையை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.

மாவட்ட ரீதியில் பார்க்கும்பொழுது சேலம் மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்பதை தமிழகம் அறிந்திருக்கிறது. இதற்கு முன்னாலே இருந்த ஆளுங்கட்சிச் சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த நன்மையான காரியத்தையும் செய்யவில்லை சேலத்திலே. 20 ஆண்டுகளாக சேலம் பின்தங்கித்தான் இருக்கிறது. அதிலும், குறிப்பாக, தாரமங்கலம் தொகுதி மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. அங்கே சிறு சிறு நிலச்சுவான்தார்கள் தங்களுடைய அடிப்படைத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்துகொள்ள முடியாத நிலைமைதான் இருக்கிறது. ஆகவே அங்கே உணவுக் கொள்முதல் திட்டத்தைக் கைவிடும்படி கேட்டுக் கொள்கிறேன். தாரமங்கலம் நகர்ப்புறத்திலோ, மேச்சேரி நகர்ப்புறத்திலோ பெண்கள் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள் இல்லை, ஆகவே ஒரு பெண்கள் ஆசிரியப் பயிற்சிப்பள்ளி ஏற்படுத்தித் தருவார்கள் என நம்புகிறேன். மேச்சேரியிலே அல்லது மேட்டூரிலோ ஒரு கலைக் கல்லூரி ஏற்படுத்துவதற்கான வசதிகள் இருப்பதன் காரணத்தால் அங்கே

[திரு. கே. ஆர். கோவிந்தன்] [1967 மார்ச் 30

ஒரு கலைக் கல்லூரியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேச்சேரி நகரத்திலே உள்ள மக்கள் குடிதண்ணீர் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அங்கே பக்கத்தில் உள்ள நங்கவல்லி என்ற இடத்திலிருந்து குடிநீர் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை நிச்சயமாகச் செய்வார்கள் என்ற நம்பிக்கையும் நான் கொண்டிருக்கிறேன். சென்ற பத்து ஆண்டுகளாகவே காவேரியிலிருந்து அங்கே பைப் லைன் மூலம் தண்ணீர் கொண்டு வந்து விவசாயிகளுக்குப் பாசன வசதி செய்துதர வேண்டுமென்ற திட்டம் பேச்சு அடிப்படையிலேதான் இருந்து வந்திருக்கிறது. செயல் முறையிலே நிறைவேற்றப்படவில்லை, சென்று மறைந்த அரசாங்கம் அதைச் செய்துதரவில்லை, ஆனால் நம்முடைய அரசாங்கமாவது அதைச் செயதுதரும் என்று நம்புகிறேன். நெசவாளர்கள் மேச்சேரியிலும், தாரமங்கலத்திலும் அதிகமாக இருக்கும் காரணத்தினால் விலைவாசியும் அதிகமாகி விட்ட காரணத்தினாலே அவர்கள் உணவிற்காக மிகவும் கஷ்டப் படுகின்ற காரணத்தினாலே நூல் விலையை நிர்ணயம் செய்து அந்த விலைக்கு மேல் விற்கும் வியாபாரிகளை கண்டுபிடித்து கோர்ட்டு மூலம் அவர்களை தண்டிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியப் பெருமக்களுக்கு இந்த அரசாங்கம் நகர அவைக் குழு, புத்தகக் குழு, பஞ்சாயத்து யூனியன் குழு போன்றவற்றிலே பங்கெடுத்துக்கொள்ள எல்லா வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** கனம் துணைச்சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் உரையின்மீது ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் அமைந்தவுடனே கவர்னருடைய உரை நல்ல முறையில் இருக்குமென்று நினைத்தேன்: ஆனால் அதற்குப் பதிலாக என்னைப் போன்ற ஊழியர்களுக்குப் பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. காங்கிரஸ் கட்சி அரசாங்கமானது இந்த நாட்டுக்கு என்னென்ன நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமோ அத்தனை காரியங்களையும் செய்திருக்கிறது என்பது எல்லோரும் அறிந்த உண்மை. இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களில்கூட அதை உணர்ந்திருக்கிறார்கள்.

விவசாயிகளுக்காக முதல் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்திலிருந்தே நல்ல பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன. தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஆறுகளிலும் அணைகளைக் கட்டியிருக்கிறது. இனி அணை கட்ட ஆறுகளே இல்லை என்ற நிலைமையால் எல்லா அணைகளும் கட்டியாகிவிட்டது. இப்போது வந்திருக்கிற அரசாங்கம் அணைகளைக் கட்ட வேண்டுமென்று நினைத்தாலும் ஆறுகள் இல்லை. ஆறுகளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.



1967 மார்ச் 30]

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** இனி எந்த அணையையும் கட்ட வேண்டாமென்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்களா?

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** காங்கிரஸ் அரசாங்கம் செய்ததைத்தான் சொல்கிறேன். விவசாயிகளுக்கு நல்லது செய்வதற்காகத்தான் இந்த அணைக்கட்டுத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தஞ்சைக்கு இணையாக வட ஆற்காடு மாவட்டத்தில் விளைச்சல் பெருகியிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் காங்கிரஸ் அரசாங்கம். ஏராளமான பம்ப் செட்டுகளையும் மின்சாரத்தையும் கொடுத்து பூமிக்கடியில் இருக்கும் நீரைப் பயன் படுத்திக் கொள்ள வசதி செய்து கொடுத்ததுதான். இவ்வாறு காங்கிரஸ் அரசாங்கம் நம்முடைய நாட்டுக்குத் தேவையான அத்தனை காரியங்களையும் செய்து இருக்கிறது என்பதை மக்களும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் தாய்-மொழி, தமிழ் தமிழ் என்று சொல்லிக் கொண்டே மக்களுக்கு வேண்டியதை எல்லாம் செய்து விடலாம் என்றோ, செய்து விட்டதாகவோ நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மொழி சோறு போடுகிறதா? அரிசியை வைத்து அரசாங்கத்தைப் பிடித்த திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கு வேண்டிய காரியத்திலே ஈடுபட்டிருக்கிறார்களா? மூன்று படி அரிசி, இரண்டு படி அரிசி என்று பேசியதற்கு நிச்சயமான ஒரு வழியைக் கண்டு பிடியுங்கள். திட்டம் போட்டுச் செயலாற்றுங்கள். ஒரு கமிட்டி அமையுங்கள். வெளியிலும் படித்தவர்கள் இருக்கிறார்கள், விஷயம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள்; காங்கிரஸ் கட்சியிலும் அறிவாளிகள் இருக்கிறார்கள்; அவர்களையெல்லாம் கலந்து உணவுப் பெருக்கத்திற்கான வழிகளை இந்த அரசாங்கம் ஆராய வேண்டும்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** துணைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாக ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சியின் மகத்தான சாதனைகளைக் கனம் உறுப்பினர் அவர்கள் பாராட்ட ஆரம்பித்தது எந்த வருஷத்தில் இருந்து என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** ஒரு சில அங்கத்தினர்கள் கூறியது போல் கவர்னர் உரையை முன்பு பகிஷ்கரித்து வந்ததை விட்டு விட்டு, இப்பொழுது பாராட்ட வந்துவிட்டார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் திராவிட நாடு பிரச்சனையை விட்டு விட்டோம் என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் கட்சி அங்கத்தினர் ஒருவர் பேசும்போது, திராவிட நாடு பிரச்சினையை விட்டு விட்டாலும் அது எங்கள் கையில் இல்லை; மத்திய அரசாங்கத்தின் கையில்தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதற்கு அர்த்தத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. கனம் முதலமைச்சர் அவர்கள் விட்டு விட்டோம் என்று சொன்னார்கள்; ஆனால்

அங்கத்தினர் அது எங்கள் கையில் இல்லை என்று சொல்கிறார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இதைப் பற்றி விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது நம்முடைய மாகாணத்தில் எஸ். எஸ். எல். சி. பரிட்சை நடந்து கொண்டிருக்கிறது. பரிட்சை பேப்பர்கள் வெளியாகியிருப்பதாகப் பரவலான அபிப்பிராயங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. என்னிடத்திலே கூட நாளைக்கு வரக்கூடிய கேள்வித்தாள் ஒன்று இருக்கிறது.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத்துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் மட்டும் கூறுவது நல்லது என்று கருதுகிறேன். கேள்விகள் முன்கூட்டியே வெளியாவது பற்றிய வதந்திகள் பலவகையில் உலவிக் கொண்டிருக்கின்றன. சிலபல கேள்விகளின் பட்டியல் ஒன்று நேற்றைக்கு முன்தினம் என்னிடம் கொண்டு தரப்பட்டு அதைப் பற்றி ஆராயுமாறு உரிய செயலாளரிடம் கொடுத்தேன். ஆனால் அந்தக் கேள்விகளை மதிப்பிட்டுப் பார்த்து அவர்கள் ஒரு அறிக்கையை எனக்குச் சமர்ப்பித்ததிலிருந்து உண்மையான கேள்வித் தாளுக்கும் அதற்கும் தொடர்பு இல்லை என்பது தெரிய வருகிறது. வதந்திகளின் பேரில் பல கேள்விகள் வருகின்றன என்ற நிலைமை இருக்கிறது. அதைப் பற்றி இங்கு நாமே அதிகமாக எடுத்துச் சொல்வோமேயானால் வதந்திகளைப் பரப்ப நாமே காரணமாக இருந்து பயங்கரமான நிலைமைகள் உருவாக வழி ஏற்படும். ஆகவே கனம் உறுப்பினர் அவர்கள் அதைப் பற்றி என்னிடம் தெரிவித்தால் நான் செயலாளர் மூலமாக விசாரித்து அறிய முடியும். அதைப் பற்றி இங்கு அதிகம் தெரிவித்து விபரீதத்துக்கு வழி வகுக்கக்கூடாது என்ற காரணத்தால்தான் நான் இடை மறித்துச் சொல்கிறேன்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** ஹரிஜனங்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் நல்லது செய்யப் போவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், காங்கிரஸ் கட்சி அரசாங்கம் இருந்த சமயத்தில் ஹரிஜன மக்கள் சார்பாக இரண்டு ஹரிஜன அமைச்சர்கள் போட்டு இருந்தார்கள். இப்போது ஹரிஜனங்கள் சார்பாக ஒரு அமைச்சர்தான் கொடுத்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் சாதனைகளில் இதுவும் ஒன்று. இன்னும் அதிகமாக ஹரிஜனங்களுக்கு அமைச்சரவையில் இடம் கொடுக்கவேண்டும்.

**திரு. பி. எஸ். சந்தானம் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். கனம் அங்கத்தினர் அவர்கள், காங்கிரஸ் அரசாங்கத்தில் ஹரிஜனங்களுக்கு இரண்டு அமைச்சர்கள் கொடுத்திருந்தார்கள் என்று சொன்னார்கள். அத்தகைய முறையில் இதுவரை இரண்டு அமைச்சர்கள் இருந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் சொல்லுகின்ற இரண்டு பேரிலே ஒருவர் தான் ஆதித் திராவிடர்; இன்னொருவர் ஆரியர்.





**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் :** இது ஒழுங்குப் பிரச்சினை ஆகாது.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** நம்முடைய மாநிலத்திலே குறிப்பாக விவசாயச் சட்டங்கள் நிறையப் போட்டிருக்கிறார்கள். அவற்றால் விவசாயிகளுக்கு நல்லது கிடைத்திருக்கிறதா என்றால் இல்லை. விவசாயிகள் துன்பப்படுகிறார்கள். குறிப்பாக, 60-40 என்று வைத்தார்கள். விவசாயிக்கு 60 என்றைக்காவது கிடைத்திருக்கிறதா என்றால் இல்லை. அதற்குப் பதிலாக 30, 35, 40 என்று தான் இருக்கிறது. விவசாயிகள் போலீஸ் உதவியை நாடினால் அவர்கள் உதவி கொடுப்பதில்லை. விவசாயிகள் பக்கம் போலீஸ் இல்லை; மிராசுதார்கள் பக்கந்தான் போலீசார் இருக்கிறார்கள். குமாட்சி பகுதியில் விவசாயிகள் மீது கேஸ் போட்டிருக்கிறார்கள். விவசாயிகள் வாரம் கேட்டால் அதற்கு அவர்கள் சாராயம் குடித்திருக்கிறார்கள் என்று கேஸ் போடுகிறார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் சி.ஐ.டி. ரிப்போர்ட் கேட்டு அந்தப் பகுதியில் இருக்கும் விவசாயிகளுக்கும், மிராசுதார்களுக்கும் இடையே உள்ள நிலைமை என்ன என்று அறிந்து பரிகாரம் காண வேண்டும். இரண்டு பேருக்கும் தகராறு வரும்போது போலீஸ்காரர்கள் விவசாயிகளைப் பார்த்து சிவில் கோர்ட்டுக்குப் போ என்று சொல்லுகிறார்கள். பயிர் வைத்தவர்களா கோர்ட்டுக்குப் போகவேண்டும்? பயிர் வைத்தவன் அறுவடை செய்கின்ற நேரத்திலே விவசாயிகளைப் பார்த்து 'நீ கோர்ட்டுக்குப் போ' என்று சொன்னால் விவசாயிகள் நிலைமை என்ன ஆவது?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் அந்த வழக்குகளைப் பற்றி சி.ஐ.டி. போட்டு விசாரிக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். நான் விசாரித்துத் தெரிந்து கொண்ட அளவுக்கு அவர்கள் இருக்கின்ற பகுதியில் காங்கிரசிலே இருக்கின்ற இரண்டு அரிசன தலைவர்களுக்கிடையே உள்ள போட்டியினால்தான் இந்த வழக்குகள் என்று அறிந்திருக்கிறேன். (ஆரவாரம்.)

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** கோர்ட்டிலே போட்ட வழக்கு
களிலே காங்கிரஸ் கட்சியிலே இருப்பவர்கள் இருக்கிறார்களா முற். பால். 11-00
என்று தெரியவில்லை.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** காங்கிரசிலே இருக்கிற ஹரிஜனத் தலைவர்கள் 'இரண்டு' என்று மட்டும் இப்போது சொல்லி நிறுத்துகிறேன்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** அதை நான் மறுக்கிறேன். என்னுடைய பகுதியில் அதிகமான கிராமங்கள் இன்னும் மின்சார வசதி பெறாத நிலைமையில் இருக்கின்றன. பல கிராமங்களில் மின்சார வசதி இன்னும் ஏற்படவில்லை. அப்படி மின்சார வசதி கிடைத்தாலும்கூட அது ஹரிஜனத் தெருக்களை எட்டிப்பார்ப்பதேயில்லை. அதை ஜாதி ஹிந்து தெருவோடு நிறுத்திவிடுகிறார்கள்.

ஹரிஜனங்களுக்கு நல்லது செய்யப்போகிறோம் என்று சொல்கிற நீங்கள் இதைச் சிறிது கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கவர்னர் அவர்கள் உரையில் சேரி அபிவிருத்தித் திட்டம்பற்றி ஒன்றுமே இல்லை. அது இருந்தால் நிச்சயமாக இதை நான் வரவேற்பேன். ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு மனைகள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆசிரியர்களுக்கு வீடுகள் சில கட்டப்பட்டிருந்தாலும் இன்னும் கட்டப்படவேண்டியது அதிகம் இருக்கிறது. கிராமங்களுக்குச் சென்று பெண் ஆசிரியைகள் குடியேற வேண்டுமென்றால் அவர்களுக்கு வீடு கிடைப்பதில்லை. அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் போனால் அவர்களுக்கு நிச்சயமாக இடம் கிடைப்பதில்லை. நான் ஆசிரியனாக இருந்தவன். ஆசிரியர்கள் கஷ்டம் எனக்குத் தெரியும். ஆசிரியர்களுக்கு வீடுகள் இல்லாத கஷ்டம் பெரிதாக இருக்கிறது. ஆகவே அவர்கள் பத்து மைல்கள் தினம் செல்லவேண்டியிருக்கிறது. அதன் காரணமாக பள்ளிக்கு 9 மணிக்குச் செல்லவேண்டியவர்கள் 10 மணிக்குத்தான் செல்கிறார்கள். அதனால் பள்ளி வேலையும் நிச்சயமாகக் கெடுகிறது. ஆகவே, ஆசிரியர்களுக்கு, வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை நிச்சயமாக இந்த அரசாங்கம் ஏற்று நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THIRU. K. VINAYAKAM : Mr. Deputy Speaker, Sir, arising out of the statement made by the Hon. Minister for Education that if S.S.L.C. questions papers were unauthorisedly distributed before the date of the examination, he would institute an enquiry into the allegations, I am passing on a copy of the questions which are to be given tomorrow in the examination hall. Let the Minister institute an enquiry into the allegation.

Thiru K. Vinayakam passed on the papers to the Hon. Minister for Education.

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் :** எந்த விதியின்கீழ் இந்தப் பேச்சைப் பேசுகிறீர்கள் ?

THIRU K. VINAYAKAM : Whenever a Minister makes a statement, a Member has got the right to elicit information or supply more information.

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் :** அவர் பேசியவுடனே கொடுத்திருக்கவேண்டும்.

**திரு. கே. விநாயகம் :** It is allowed. அப்போது வேறொருவர் பேசிக்கொண்டிருந்தார்.

*** திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** அவைத் துணைத் தலைவர் அவர்களே, கனம் கவர்னர் அவர்களின் பேருரையை ஆதரித்து நானும் என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்



என்னுடைய பழனி தொகுதியானது ஏழை விவசாயிகள் நிறைந்த பகுதியாகும். விவசாயத்தையே நம்பி வாழும் ஏழை தாழ்த்தப்பட்டவர்களும், கூலி விவசாயிகளும் அதிகமாக உள்ள அந்தத் தொகுதி மக்களுக்குக் கடந்த 20 ஆண்டு காலமாக ஆட்சி செய்த காங்கிரஸ் அரசு எந்தவித நன்மையும் செய்யவில்லை.

1903-ம் ஆண்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் சர்வே செய்யப்பட்ட பாலாறு—பொருந்தலையாறு நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று எனது தொகுதி மக்கள் பல தடவை முறையிட்டும் காங்கிரஸ் அரசாங்கம் செயலுக்குக் கொண்டு வரவில்லை. ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்காகத்தான் பக்ரா நங்கல் நீர்த்தேக்கத்திலிருந்து பரம்பிக்குளம் நீர்த்தேக்கம் வரை பல திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம் என்றும், ஒவ்வொரு அங்குல நிலத்திலும் தானியம் விளையவேண்டும், ஒவ்வொரு மணி தானியமும் உயிர்களைக் காக்கும் என்று மறைந்த மாமேதை பெருமதிப்பிற்குரிய பண்டிதர் நேரு அவர்கள் கூறிய பொன் மொழிகளை நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆனால் அவர் கூறிய கருத்துக்கு மாறாக நமது மாநிலத்தை ஆட்சி புரிந்த காங்கிரஸ் அமைச்சர்கள் பாலாறு-பொருந்தலையாறு திட்டத்தை நிறைவேற்றாமல் 1960-ம் ஆண்டு சென்னை மாநில மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவு பொது விபரம் என்ற புத்தகத்தில் 43-வது பக்கத்தில் இதன் விபரத்தை வெளியிட்டார்களேயொழிய அதற்கான வேலைத் திட்டங்களை எடுத்துக் கொள்ளவில்லை. காரணம் 1952 பொதுத் தேர்தலிலும், 1962 தேர்தலிலும் காங்கிரஸ் பழனி தொகுதியில் தோற்கடிக்கப்பட்டதின் காரணத்தினால்தான் இந்தத் திட்டத்தையே கைவிட்டு விட்டார்களோ என்று கருத வேண்டியிருக்கிறது. என்னுடைய தொகுதி மலைவளம் மிகுந்த பகுதி, மழைக் காலங்களிலே பெருக்கெடுத்து வரும் ஆற்று வெள்ளம் நீர்த் தேக்கம் இல்லாத காரணத்தினால் வீணாகக் கடலிலே போய்ச் சேருகிறது. ஆகையால் இந்த பாலாறு-பொருந்தலையாறுத் திட்டத்தை நமது அரசு உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 10,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறவும், தற்போது உள்ள ஏரிகளின் கீழ் உள்ள சுமார் 872 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறும். இன்று நம்முடைய அரசின் முக்கிய குறிக்கோள் அதிக உணவு உற்பத்தியும், மக்களுக்கு வயிறார உண்ண உணவும் கொடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்திற்கு இந்தத் திட்டம் பெரும் உறுதுணையாக இருக்கும் என்று கூறி இந்தத் திட்டம் விரைவில் நிறைவேற ஆவன செய்யவேண்டும் என்று அமைச்சரவையைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்

எனது தொகுதியிலுள்ள ஏரிகள் பல ஆண்டுகளாக ஆழப்படுத்தாத காரணத்தினால் மேடு உண்டாகி நீர் பிடிப்பு பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதால் இரு போகம் விளைய வேண்டிய நன்செய் நிலங்களுக்கு ஒரு போகத்திற்கே தண்ணீர் பற்றாக் குறையாகப் போய் விடுகிறது. ஏரிகளை ஆழப்படுத்தி நீர்

தேக்கினால் இரு போகம் நன்செய் விளைச்சலுக்கும், அதிக உணவு உற்பத்திக்கும் ஏற்றதாக இருக்கும். ஆகவே உடனடியாக ஏரிகள் ஆழ்ப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் குறிப்பாக பாலசமுத்திரம், தாமரைக்குளம் மானூர் இந்த மூன்று கிராமங்களுக்குப் பக்கத்தில் ஓடும் நதிகளின் மீது பாலம் இல்லாத காரணத்தினால் மழைக் காலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து வருகின்ற காலத்தில் பழனி நகருக்கும் மற்றப் பகுதிகளுக்கும் தங்களுடைய விளைபொருள்களைக் கொண்டு வந்து விற்பனை செய்ய முடியாமல் பல கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் ஆளாகிறார்கள். ஆகையால் இந்த மூன்று நதிகளின் மேல் பாலம் கட்டுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு உற்பத்திக்கு உரம் இன்றியமையாதது. உர விநியோகம் சர்க்காருடைய நேரடி நிர்வாகத்தின்கீழ் தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் மூலமாக நிலச் சொந்தக்காரர்களுக்கும், குத்தகை நிலத்தைச் சாகுபடி செய்யும் ஏழை விவசாயிகளுக்கும் நிலத்திற்குத் தக்க அளவு உரம் விநியோகம் செய்வது நல்லது என்று கூறிக் கொள்கிறேன். கலப்பு உரம் தயார் செய்வதற்கு பலருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இவர்கள் தயார் செய்யும் கலப்பு உரங்களில் உணவுக்கு உபயோகிக்கும் உப்பைக் கலந்து விடுகிறார்கள். இதனால் எதிர்பார்க்கப்படும் அதிக உற்பத்திக்குப் பதிலாக விவசாயமே பாழ்பட்டுப் போகிறது. இதில் அரசு தனிக் கவனம் செலுத்தவேண்டும்.

நிலம் ஜாரி செய்யும் விஷயத்தில் ஆற்றோரங்களில் உள்ள சர்க்கார் புறம்போக்கு நிலங்களை அந்த அந்தப் பகுதியில் உள்ள நிலமில்லாத ஏழை விவசாய மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஜாரி செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் பலவிடங்களில், நகரங்களிலும் கிராமங்களிலும் காமராஜபுரம் என்றிருக்கிறது. சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டிக்கொண்டு ஏழைகள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு அந்த இடங்களை ஜாரி செய்து கொடுக்க காங்கிரஸ் அரசு எந்தவித நடவடிக்கையும் எடுத்து எந்தவித நன்மையும் செய்யவில்லை. காமராஜபுரம் என்றிருந்தாலும் அவ்விடங்களை அந்த ஏழை மக்களுக்கு உடனடியாக ஜாரி செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

என் தொகுதியில் பெண்களுக்கு என்று தனியாக ஒரு கல்லூரி இல்லாததால் பெண்களுடைய கல்லூரிக் கல்வி பெரிதும் பாதிக்கப் படுகிறது. ஆகவே பெண்கள் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கும்படி அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவில் பக்தர்கள் வழி படும் நகரங்களில் பழனி ஒரு முக்கிய நகரம். இங்கு நாள் ஒன்றுக்கு 10,000-க்கு குறைவில்லாத பக்தர்கள் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு வேண்டிய சுகாதார வசதியும் குடிதண்ணீர் வசதியும் பழனி நகரசபையே பொறுப்பேற்றுச்





செய்து கொண்டிருக்கிறது. பழனி நகரம் ஏழை மக்கள் நிறைந்த நகரம். இவர்களிடம் வசூல் செய்யும் வரிப் பணத்தைக்கொண்டு யாத்திரிகர்களுக்கு பல வசதிகள் செய்து கொடுப்பதில் பெரும் தொகை செலவாகி விடுகிறது. இதனால் நகரசபை நகர மக்களுக்குச் செய்யவேண்டிய பல நன்மைகளைச் செய்ய முடியாமல் போய் விடுகிறதென்பதை பல ஆண்டுகளாக நகரமன்ற உறுப்பினராக இன்றுவரை இருந்து வருவதால் அனுபவத்தின் வாயிலாக இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்கிறேன். ஆகவே, மாநில அரசு பஸ்ஸுக்கு யாத்திரீகர்கள் வரி விதித்தும், ரயில்வேக்கு யாத்திரீகர்கள் வரி விதிக்க மத்திய சர்க்காருக்கும் சிபார்சு செய்யும்படியும் கேட்டுக் கொண்டு இந்த மன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. இல. பலராமன் :** மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, தற்போது கவர்னர் அவர்கள் உரைமீது சொற்பொழிவாற்ற எனக்கு இந்தச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பாக வேளாண்மைக்கு முக்கியத்துவம் தந்திருக்கிறார்கள். வேளாண்மை எந்த நிலையில் இருக்கிறது? வேளாண்மை செய்பவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்று பார்த்தால் அது வருந்துவதற்குரிய நிலையில் இருக்கிறது. முதல் அமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார்கள், எந்தத் துறையும் ஒருவனுக்கு இல்லையென்றால் அவன் கடைசியாக வேளாண்மைத் துறையை ...க்கொள்கிறான் என்று குறிப்பிட்டார்கள். அத்துறை அபிவிருத்திப் படுத்தவேண்டும் என்று பாடுபடும் எந்த அரசுக்கும் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் மக்கள் சார்பாக நன்றி செலுத்த கடமைப்பட்டவர்களாவோமென்று மக்கள் பிரதிநிதி என்ற நிலையில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கும் மக்களோடு, விவசாயம் செய்யும் மக்களோடு நெருங்கி தொடர்பு கொள்ளும் அதிகாரிகள் என்று சொல்பவர்கள் பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகளாகத்தான் இருக்கமுடியும். அவர்கள் விஞ்ஞான முறையில் உள்ள கருவிகளைப் பயன்படுத்த வேண்டுமென்று கூறும்போது விவசாயிகளுக்குப் போதிய கல்வி அறிவு இல்லாததால் அவற்றை எப்படி உபயோகப் படுத்துவது என்று தெரியாமல் இருக்கிறார்கள். ஆகவே அந்த விவசாய மக்களுக்கு நல்ல போதனைமுறை மூலம் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்றால், நெருக்கமான தொடர்பு வேண்டுமென்றால் அதற்கு இந்த அதிகாரிகள் முறை சரி அல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு பஞ்சாயத்து யூனியன்களில் நிர்வாக அதிகாரியாக இருக்கும் கமிஷனர் பல்வேறு துறைகளிலிருந்து வருகிறார்கள். இந்த முறையை மாற்றி அமைத்து, அவர்களெல்லாம் விவசாயம் படித்தவர்களாக இருக்கும் முறையில், அவர்களைக் கமிஷனர்களாகப் போட்டால் நலமாக இருக்கும் என்று இந்த அவைக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். மற்றப் பிரிவுகளிலிருந்து வந்திருப்பவர்கள் விவசாயத்தைப் பற்றி அக்கறை இல்லாமல், அவர்கள் எந்தப் பிரிவிலிருந்து வந்திருக்

கிறார்களோ அந்தப் பிரிவு பற்றிய காரியங்களிலேயே நாட்டம் காட்டுகிறார்களே தவிர, விவசாயத்தில் அக்கறை காட்டுவதில்லை என்பது எனது அபிப்ராயம். ஆகவே, விவசாயம் தெரிந்த அதிகாரியாக பஞ்சாயத்து யூனியன் அதிகாரி இருப்பது நலம் என்று குறிப்பிடுகிறேன்.

விவசாயத்தை மேலும் அபிவிருத்தி செய்யவேண்டுமென்றால், குறிப்பாக விவசாயிகளுக்குக் கடன் வழங்குதல் போன்றவைகளை மேலும் அபிவிருத்தி செய்யவேண்டும். இப்போது கிணறு வெட்ட சப்ஸிடியாக 2,000 ரூபாய் கொடுக்கிறார்கள். அது ரொம்பவும் குறைந்த தொகை; இன்றைய விலைவாசி ஏற்றத்தில் 2,000 ரூபாயில் கிணறு வெட்ட முடியாது என்று கூற முடியும். அதுவும் வட ஆற்காடு ஜில்லாவில் மிகவும் ஆழமாக வெட்டவேண்டியிருப்பதால், அந்தப் பகுதியில் 2,000 ரூபாயில் கிணறு வெட்டுவது என்பது சாத்தியமானதல்ல. அந்தத் தொகையை 5,000 ரூபாயாக உயர்த்தலாம் என்று நான் கருதுகிறேன். அதற்கு மான்யம் வழங்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

பூச்சி மருந்துகளை விவசாயிகள் இன்றைக்கு எப்படி உபயோகப்படுத்துவது என்று தெரிந்துக்கொள்ளாத நிலையில், மருந்துகளை மான்யமாக வழங்காமல் முழு விலையில் கொடுக்கிறார்கள். அதற்கும் மான்யம் கொடுத்து விவசாயிகளுக்கு விலை இல்லாமல் பூச்சி மருந்துகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயம் மேலும் அபிவிருத்தி அடையவேண்டுமென்றால், விவசாய என்ஜினீயரிங் பகுதியிலிருந்து கிணறுகளுக்கு போரிங் போட வேண்டிய கருவிகளையும், விவசாய டிராக்டர்களையும் அதிகமாக வாடகைக்கு வழங்கினால் நலமாக இருக்கும். அப்படி வாடகைக்கு வழங்கும் நிலையில் அரசாங்கத்திடம் எந்த விதமான டிராக்டர்களும் கிடையாது, கேட்டாலும் தருவதில்லை. அதைப் பரிசீலித்து விவசாய என்ஜினீயரிங் டிபார்ட்மெண்ட்டிலிருந்து வாடகைக்கு தருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஏ.டி.ட்டி. 27 போன்ற நெல் ரகங்கள் நல்ல முறையில் விளைந்தாலும் அந்த விதைகளைச் சர்க்கார் பண்ணைகளில் அதிகாரிகளைக் கொண்டு தயாரிக்கும் நிலையில் சில சமயங்களில் அவைகள் முளைக்காத நிலைமை ஏற்படுகிறது. நல்ல தரமான விதைகளைக் கொடுக்கும் முறையில் ஜில்லாவாரியாக விதைப் பண்ணைகளை ஏற்படுத்துவது உசிதம் என்று கருதுகிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும் முறையில் ஏற்கனவே இருந்த அரசாங்கம் ஒரு திட்டத்தைக் கையாண்டு வந்தது. அதை மேலும் நல்ல முறையில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

என்னுடைய தொகுதியில், வேலூர் தாலூகாவில் கீழரசம்பட்டு கிராமத்தில் ஓர் ஏரி ஒன்று வெட்ட சிபாரிசு செய்திருந்தார்கள். அதை மேலும் கவனம் செலுத்தி வெட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏரிகள் என்று குறிப்





பிடும்போது, மூன்று மாதப் பாசனம் என்று சர்க்கார் பதிவேட்டில் இருக்கும்போது ஏரிகளில் 15 நாட்களுக்கு வேண்டிய தண்ணீர் கூட நிரம்பாமல் தூர்ந்திருக்கின்றன. டீஸில்ட்டிங் ஸ்கீமில் விரைவாகத் தூர்வாருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால் நலமாக இருக்கும் என்று கூறிக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. என். ராஜாங்கம் :** பெருமதிப்பிற்குரிய சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடந்து வருகிற கவர்னர் பெருமான் ஆற்றிய உரைக்கு நன்றி செலுத்தும் தீர்மானம் பற்றிய விவாதத்தில் நான் கலந்துகொண்டு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டொரு அங்கத்தினர்களுக்கு முன்னால் பேசிய மதிப்பு மிக்க நண்பர் சிவசுப்பிரமணியன் அவர்கள் காங்கிரஸ் அரசாங்கம் அத்தனையும் செய்துவிட்டது என்று முதலிலே பொதுவாகக் குறிப்பிட்டு, ஹரிஜனங்களுக்கு காங்கிரஸ் அரசாங்கம் செய்த நன்மைகளையும் குறிப்பிட்டு, விவசாயத்தைப் பொறுத்த வரையில் எல்லா ஆறுகளிலும் அணைகள் கட்டியாகிவிட்டது; மேலும் அணை கட்டுவதானால் ஆற்றைத் தேடவேண்டிய நிலை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால் அணைகளெல்லாம் கட்டிவிட்ட பிறகு தண்ணீர் எங்கே ஓடுவது? கட்டிய அணைகளுக்குத் தண்ணீர் வருவது என்றால், தேவையான நிலங்களுக்குத் தானே பாயவேண்டும்? காங்கிரஸ் அரசாங்கம் கண்ட இடத்தில், எங்கே கட்டுவது, எங்கே தேக்குவது, எங்கே விடுவது என்று பாராமல் அலைந்தார்களா? இதனால்தான் விவசாயத் துறையில் குழப்பம் ஏற்பட்டு, பஞ்சம் ஏற்பட்டது என்பதை அவர்கள் மறைமுகமாக ஒத்துக்கொண்டார்கள் என்று நினைக்கிறேன்.

முன்பு இருந்த அமைச்சரவையில் ஹரிஜனங்களில் மந்திரிகளாக இரண்டு பேர்களைப் போட்டார்கள். இங்கே ஒரே மந்திரியைப் போட்டிருக்கிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். அதிகமாக போடுவதைக் காட்டிலும், இலாகாவின் வேலைகளை நல்ல முறையில் பரிசீலனை செய்து, ஒதுக்கப்படுகிற தொகை நல்ல முறையில் செலவழிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க ஒருவரே போதும். பல ஆட்களை வைத்து ஒரு வேலையும் செய்யாமல் இருப்பதைவிட ஒருவரைப் போட்டே நல்ல முறையில் கண்காணிக்கலாம். இரண்டு பேர்களைப் போட்டோம் என்று சொல்லுவது, வேண்டுமென்றால் கட்சி நலனுக்கு, கிராமங்களில் ஒன்றும் புரியாத மக்களை ஏமாற்றப் பயன்படுமே தவிர, நல்ல காரியம் செய்யப் பயன்படாது என்று தெளிவோடு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிதம்பரம் தாலூகாவில் விவசாய மக்களுக்கு நன்மை செய்தது அரசாங்கம் என்றால், அதில் உள்ளபடியே காங்கிரஸ் கட்சியிலிருந்து பேசுவதைவிட, நண்பர்

சிவசுப்பிரமணியன் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி செய்ததை காங்கிரஸ் அரசாங்கத்திடம் ஏற்றிப் பேசுவது, அந்தக் காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயராலே அல்லது விவசாய சங்கத் தலைவர் என்ற பெயராலே போராடியதைக் கண்டு அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை மறந்துவிட்டு ஒரு அரசியல் கட்சிக்குச் சாதகம் ஏற்படவேண்டுமென்று பேசுவது அவருக்கே நல்லதல்ல என்று குறிப்பிட விரும்புகிறேன். விவசாயிகள் பாதுகாப்புச் சட்டம் தஞ்சையில் ஏற்பட்ட பிறகு, சிதம்பரத்தில் குழப்பம் ஏற்பட்டது. அந்தப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் திரு. சிவசுப்பிரமணியன். அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது, இதே சட்டசபைக்குத் தந்தி மூலமாகப் போலீஸ் பாதுகாப்பு வேண்டும், ஆயிரக் கணக்கான ஹரிஜனங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள், அண்ணன், தங்கை என்று பேதம் கூடக் காட்டாமல் இழுத்துச் செல்லப்படுகிறார்கள் என்று தெரிவித்து அவருடைய மரியாதையை காப்பாற்றியவர்கள் நாங்கள். காங்கிரஸ் அரசாங்கத்தால் மக்களுக்குப் பலன் ஏற்படவில்லை. உள்ளபடியே விவசாய சங்கத்தினால் அவர்களுடைய உழைப்பினால் இந்த நிலைமை உருவாகியது. அப்போது பயந்து காங்கிரஸ் சர்க்கார் சட்டமாக்கியது. கம்யூனிஸ்டுகள் போராடி, காங்கிரஸ் அரசாங்கம் சட்டமாக்க வேண்டுமென்று திரு. ராஜகோபாலாச்சாரியார் முதல் மந்திரியாக இருந்தபோது சட்டம் வந்ததே தவிர, தாங்களாக, விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்று காங்கிரஸ் அரசாங்கம், முழுவதாக, மனமாரக் கொண்டுவரவில்லை என்பதை அவர்கள் மனதைத் தொட்டுப் பார்த்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீடு கட்டும் பிரச்சினையைப்பற்றி மற்றவர்கள் சொன்னார்கள். இருபது ஆண்டு காலமாக வீடு கட்டும் பிரச்சினை இருக்கிறது. இதே சட்டசபையில் போன ஐந்து ஆண்டுகளில் காங்கிரஸ் உறுப்பினர், நல்லெண்ணம் படைத்தவர்கள் செய்த தவறைச் சுட்டிக்காட்டினார்கள். இதை இன்றைக்கு மறந்துவிட்டு 20 நாட்களாக ஆளும் அரசாங்கத்தின் மீது அதிலே குறை காணுவதாகக் கூறுவது சரியல்ல.

இந்த சட்டசபைக்குள் ஜாதி, மந்திரி, இனம் என்று யாரும் பேசுவது நல்லதல்ல, ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல. ஜாதி மத பேதம் இல்லாத சமஷ்டி நம் அரசாங்கம் என்பதை உணர்ந்து பேசவேண்டுமென்று கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. பி. ஜயராஜ்:** கனம் உபதலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பண்ணையாள் பாதுகாப்பு சட்டமோ, வேறு எந்தச் சட்டமோ கொண்டுவரப்படவில்லை என்று சொன்னார்கள். மாயவரம் ஒப்பந்தத்தின் அடிப்படையிலேதான் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜி. நாராயணசுவாமி நாயுடு அவர்களுடைய ஒப்பந்தத்தின் அடிப்படையின்





பேரில்தான் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். ராஜாங்கம்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, காங்கிரஸ் அரசாங்கம் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது உண்மை என்று முதலிலேயே சொன்னேன். ஆனால், அதற்கு அடிப்படை யார் என்பதை விளக்கினேன். மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். காங்கிரஸ் அரசாங்கத்திற்குப் பழி வேண்டுமென்றால், அப்படியே விட்டுவிடவேண்டும், பழி வேண்டாம் என்றால் அதை சட்டமாக்கித் தீரவேண்டும், விவசாயிகளுடைய கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டும், அந்த ஷரத்துக்களை அனைத்தையும் அந்தச் சட்டத்தில் கொண்டு வரவேண்டும் என்று சொன்னார். இன்றைக்கு ஒரு பிரச்சினை வந்தால் சட்டம் கொண்டு வரவேண்டியவர்கள் இந்த அரசாங்கம்தான். ஆனால், இந்தப் பிரச்சினைக்கு உரியவர்கள் யார் என்பதைப் பார்க்க வேண்டும். அதைத் தான் நான் விளக்கினேன்.

* **திரு. என். வரதராஜன்:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய பேருரையிலே நம்முடைய மாநில அரசாங்கம் சில முக்கியமாம பிரச்சினைகளை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் காண்கிறேன். மாநிலத்திற்கு மேலும் அதிகாரம் வேண்டும் என்று சொல்லிவந்தோம். அதை சட்டமன்றத்தில் கவர்னர் அவர்களுடைய பேருரையில் கொண்டு வந்திருப்பது நிச்சயம் வரவேற்கத்தக்கது. அப்படிச் செய்திருப்பதன் மூலம் நம்முடைய மாநிலத்தில் மட்டுமல்ல, பல்வேறு மாநிலங்களில் இருக்கும்படியான காங்கிரஸ் ஆட்சியின் கீழ் இருக்கும்படியான மக்களுக்கு உத்வேகத்தை ஊட்டும் பெருமையை இந்த சட்டமன்றமும், அரசாங்கமும் தேடியிருக்கிறது, இந்த அரசாங்கத்தின் கொள்கையின் காரணமாக. அதைப் போலவே தேர்தலைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே எனக்கு முன்பு பேசிய பல அங்கத்தினர்கள் தேர்தலில் நடந்த சில சம்பவங்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். திண்டுக்கல் தாலூகா ஆத்தூர் தொகுதியில், திண்டுக்கல் தொகுதியில் என்ன நடந்தது என்பதை உங்களுக்குச் சொல்லவேண்டும். அங்கு சாதாரணமாக காங்கிரஸை எதிர்த்து வோட்டு அளிக்கும்படியான ஜனங்கள் பயமுறுத்தப்பட்டார்கள், பல வீடுகள் நொறுக்கப்பட்டன, பலர் வெட்டப்பட்டார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய நண்பர் நடிகர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் போட்டியிட்ட தொகுதியில் குரோம்பேட்டை போன்ற சென்னைக்கு பக்கத்தில் இருந்த பகுதிகளில் கூட ஜனங்கள் உரிமையோடு வந்து வோட்டு அளிப்பதற்கு முடியாமல் பயமுறுத்தப்பட்டார்கள் என்பதை அந்த வட்டாரத்தில் இருப்பவர்கள் சொல்ல கேட்டிருக்கிறேன். திண்டுக்கல் தொகுதியில் காங்கிரசிற்கு விரோதமாக வேலை செய்தவர் வெட்டப்பட்டார். போலீஸில் கேஸ் இருக்கிறது. ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், தேர்தல் முற்றிலும் ஜனநாயக முறையில்

நடந்துவிட்டது என்று கூறப்படுகிறது. தமிழகத்தின் பல பாகங்களில் இம்மாதிரி பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஜனங்கள் உற்சாகத்துடன் தேர்தலில் கலந்துகொள்ள முடியாத நிலை சில இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு மனிதனுக்கு ஒரு வோட் என்ற அரசியல் சட்டத்தில் இருந்தாலும், இன்றைக்கு ஒரு மனிதன் கையிலே நூற்றுக்கணக்கான வோட்டுகளை வைத்துக் கொள்ளக்கூடிய ஒரு சமூக அமைப்பு இருக்கிறது என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர பிரியப்படுகிறேன்.

(மதிப்பிற்குரிய சபாநாயகர் தலைமை.)

பயமுறுத்தலும், பண ஆதிக்கமும் இருந்தாலும், ஜனங்கள் வோட்டு அளித்து, சிறப்பு மிகுந்த தமிழ் நாட்டிலே ஒரு புதிய மந்திரி சபையை அமைத்துள்ளார்கள் என்று கவர்னர் அவர்களின் உரையிலே குறிப்பிடப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டிருக்கிறது. இந்திய சர்க்காருடைய திட்டக் கமிஷன் விவசாயத்திற்கு உதவியாக அணை கட்டுவதோடு அல்லாமல் பூமிக்கு அடியில் இருக்கிற தண்ணீரை உபயோகப்படுத்தி விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக் கிறது. தமிழகத்தில் கூட அப்படிப்பட்ட ஒரு பெரிய வேலையை விவசாய அபிவிருத்திக்காக நாம் மேற்கொள்ளவேண்டும். கிணறு வெட்டுவது என்பது விவசாயியே வெட்டிவிட முடியாது. ஏற்கனவே தமிழகத்தில் இதைப்பற்றி சில அம்சங்கள் பரிசீலிக்கப் பட்டு கைவிடப்பட்டுவிட்டது என்று நான் கேள்விப்படுகிறேன். அரை ஏக்கர் நிலத்தை சர்க்கார் எடுத்துக்கொண்டு அங்கே ஒரு கிணறை வெட்டி, நீரை பக்கத்து விவசாயிகளுக்குக் கொடுத்து, நாம் பணம் வசூல் செய்யவேண்டும், இப்படி நீர் வரி வசூல் செய்ய வேண்டும் என்பதுபற்றி பரிசீலனை செய்து கைவிடப்பட்டது என்று நான் கேள்விப்படுகிறேன். அப்படிப்பட்ட விஷயத்தை நம்முடைய மாநில அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு பரிசீலனை செய்ய வேண்டும். அடிக் கிணறு வெட்டுவது என்பது முக்கியமானது. விவசாயத்திற்கு முக்கியமானது தண்ணீர். அடிக்கிணறு வெட்டு வதற்கு ஏற்கனவே ரூ. 1,000 கொடுக்கவேண்டும் என்று நிச்சயிக்கப் பட்டது. விலைவாசி உயர்ந்திருப்பதன் காரணமாக இந்தப் பணத்தைக்கொண்டு அடிக்கிணறு வெட்டுவதற்கு இயலாது. அந்தப் பணத்தை உயர்த்திக்கொடுப்பதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அணைகளில் பாறைகளை உடைப்பதற்கு சில விஞ்ஞான கருவிகளை உபயோகப்படுத்துகிறார் கள். அப்படிப்பட்ட கருவிகளை அடிக்கிணறுகளை வெட்டுவதற்கு உபயோகப்படுத்தினால் நலமாக இருக்கும், தண்ணீர் பிரச்சினையை ஓரளவுக்கு தீர்க்க முடியும்.

அடுத்தபடியாக, தமிழகத்தில் அதிகமான அளவுக்கு எலக்டிரிக் கரெண்டு வேண்டும் என்றாலும் கூட, ஏற்கனவே எலக்டிரிக் மோட் டார் வாங்கி வைத்து, பம்பு பிட்டிங் செய்துவைத்து, கடன் வாங்கி,





சர்க்காருக்கு அந்தக் கடனைத் திருப்பிக்கொடுக்க ஆரம்பித்த பிறகும் கூட, 2, 3 ஈவுகள் கொடுத்ததற்குப் பின்னால் கூட 2 ஆண்டுகள், 3 ஆண்டுகள் ஆகியும் அவர்களுக்கு எலக்டிரிக் கனெக்ஷன் கிடைக்காமல் பல இடங்களில் பல விவசாயிகள் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலும் அதே போன்ற நிலைமை இருக்கிறது. இரண்டு வருஷம், மூன்று வருஷம் எலக்டிரிக் கரெண்டு வராமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். எலக்டிரிக் மோட்டார் வாங்கி, பம்பையும் பிட் செய்து வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு எலக்டிரிக் கனெக்ஷன் கொடுப்பதற்கு முன்முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

குளம் மராமத்து என்பதைப்பறி பலர் வற்புறுத்தியிருக் கிறார்கள். அதையும் நாம் துரிதமாகக் கவனிக்கவேண்டும். அணைகளைக் கட்டவேண்டும் என்று சொல்லுகிறோம். குடவனாறு அணை சம்பந்தமாக மதிப்பிற்குரிய மராமத்து அமைச்சர் அவர் களுக்குத் தெரியும். ஒரு பெரிய அணை கட்டுவது என்ற நிலை இல்லாவிட்டாலும் கூட, அது ஒரு பெரிய ஜீவ நதி. சாதாரணமாக குறுக்கே ஒரு சுவர் எழுப்பி, தண்ணீரை விவசாயிகளுக்கு உபயோகிக்கும்படி செய்தால் மிகவும் நலமாக இருக்கும். ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் பயனடையும், கிணறுகளுக்கும் குளங்களுக்கும் தண்ணீர் கிடைக்கும், குடிநீருக்கும் அந்தத் தண்ணீரை உபயோகப்படுத்தக்கூடிய நிலை இருக்கும். இதை ஆழ்ந்து சிந்தித்து, மதிப்பிற்குரிய மராமத்து அமைச்சர் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்து, இதைப்பற்றி பரிசீலனை செய்து பார்த்தால் உதவியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு தரிசு நிலங்களை அரசாங்கம் தாழ்த்தப்பட்ட குடி மகனுக்கு, விவசாயிகளுக்கு பிரித்துக்கொடுத்தால் பெரிய உதவியாக இருக்கும். இப்படிப்பட்ட முறையில் விவசாய உற்பத் தியைப் பெருக்குவதற்கு நமது சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும். நான் ஒரு யோசனை கூறுகிறேன். அதை ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு வருடம், இரண்டு வருடங்களுக்கு கடன்களை ஒத்திவைத்து விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டும். அதாவது அவர்கள் கடன் திருப்பிக் கொடுப்பதை ஒத்திவைப்புச் செய்து கொடுத்தால், மிகவும் உதவி கரமாக இருக்கும். உற்பத்தி பெருகிய பின்னர், அந்தக் கடன் தொகையை வசூலிப்பதற்கு சர்க்கார் முயற்சி செய்யலாம்.

அடுத்து, கொள்முதல் விஷயத்திலே நான் ஒன்றை தெளிவு படுத்த விரும்புகிறேன். நகரப் பஞ்சாயத்துக்களின் கீழ் சில கிராமங்கள் இருக்கின்றன. திண்டுக்கல் தாலூகாவில் வேடசந்தூர், சின்னாளப்பட்டி போன்ற இடங்களில் சர்க்கார் அலுவலகங்கள் இருக்கின்றன, பெரிய தொழிற் சாலைகள் இருக்கின்றன. அங்கெல் லாம் ரோஷன் கார்டுகள் கொடுக்கப்படவில்லை, மலிவு தான்யக் கடைகளும் இல்லை, குடும்பக் கார்டுகளும் இல்லை. அரிசி நடமாட்

[திரு. என். வரதராஜன்] [1967 மார்ச் 30

டத்திற்கும் கட்டுப்பாட்டை வைத்திருக்கிறோம். அரிசி கொண்டு போகக் கூடாது என்ற நிலை இருக்கிறது. ஆகவே, இங்கெல்லாம் ஜனங்கள் கள்ளமார்க்கெட்டு பேர்வழிகளிடம் படி அரிசி ரூ. 2, 3 கொடுத்து வாங்கவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். என்னுடைய யோசனையை அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சரவை ஒரு ஏக்கருக்குக் கீழே கொள்முதலிலிருந்து விதி விலக்குக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகள் அந்த இடங்களுக்கு அவர்கள் வைத்திருக்கும் ஒரு மூட்டை, இரண்டு மூட்டை, 10 மூட்டை நெல்லை கொண்டுபோவதற்கு பெர்மிட்கள் வழங்க முடியுமா என்பதைப்பற்றி பரிசீலனை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், அது ஓரளவுக்கு விலையை கட்டுப்படுத்த உதவியாக இருக்கும். விதிவிலக்குக் கொடுத்தவர்களுக்கு மட்டும்தான் இந்தக் முறை என்று தான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே சமயத்தில் கொள்முதல் செய்யப்படும்பொழுது, அதற்குப் பணத்தை கொடுத்து வாங்கிக்கொண்டு போவதுதான் நல்லது. ஒரு வாரத்திற்குப் பின்னால் விவசாயிகள் வந்து அலைந்து பணத்தை வாங்கிக்கொள்ளவேண்டும் என்றால் கஷ்டமான நிலை ஏற்படுகிறது. மேலும் கூடுதலான விலை கொடுக்கவேண்டுமென்று சொல்கிறோம். டெல்டா பிரதேசத்தில் நெல் உற்பத்தி செய்வதற்கும், புஞ்சைப் பிரதேசத்தில் நெல் உற்பத்தி செய்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. புஞ்சைப் பிரதேசத்தில் கிணற்றிலிருந்து நீர் இறைத்துப் பாய்ச்சி நெல் உற்பத்தி செய்யவேண்டியிருக்கிறது. அதனால் பணச்செலவு அதிகமாக ஏற்படுகிறது. அப்படிப்பட்ட பிரதேசத்தில் விலை கட்டுப்படியாகக்கூடிய விதத்தில் கொடுப்பதற்கு நாம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். அங்கெல்லாம் ஓரளவுக்கு விலையைக் கூட்டிக்கொடுத்தால்தான் கட்டுபடியாகும். இதையும் அமைச்சரவை கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொள்முதலில் போலீஸ் அதிகாரிகளுடைய கெடுபிடி என்று சொன்னார்கள். அது எந்த அளவுக்கு இருக்கிறது என்று நமக்குத் தெரியாது. இருந்தாலும்கூட, களத்துமேட்டில் நெல்லை அளக்கும் பொழுது, சிவில் அதிகாரிகள், ரெவின்யூ அதிகாரிகளின் ஒத்துழைப் போடு, அந்த வட்டாரத்தில் இருக்கும்படியான அரசியல் கட்சி நண்பர்களையும் வைத்துக்கொண்டு சுமூகமான முறையில் நெல் கொள்முதல் செய்யவேண்டும். சர்க்கார் கொள்கையை தெளிவு படுத்தியிருக்கிறார்கள். இருந்தாலும் கீழே இருக்கிற அதிகாரிகள் சர்க்கார் கொள்கையை தெளிவாக புரிந்துகொள்ளக்கூடிய நிலைமையில், இல்லை. முக்கியமாக தாசில்தார் அளவிலே இருக்கக் கூடிய அதிகாரிகளைக் கூட்டி நமது ரெவின்யூ அமைச்சர் அவர்கள் ஒரு மகாநாட்டை நடத்தலாம். அல்லது கூட்டுமுறையில் அவர்களுக்கு சர்க்கார் கொள்கையை விளக்கிச்சொல்லலாம். உத்தரவு மூலம் மட்டுமல்லாமல் நேரடியாக அவர்களுக்குச் சர்க்கார் கொள்கை விளக்கப்படவேண்டும். புதிய கோணத்திலிருந்து



1697 மார்ச் 30] [திரு. என். வரதராஜன்]

புதிய அரசு திட்டங்களைப் போட்டு நிறைவேற்றிக்கொண்டு வருகிறது என்பதை இந்த மன்றத்திலே பார்க்க முடிகிறது. ஆனால், கீழே இருக்கும்படியான சிப்பந்திகள் அதைப் பார்த்திருக்க முடியாது. ஏதாவது ஒரு முறையில், பெயர் என்னவேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள், அப்படிப்பட்ட அதிகாரிகளை அமைச்சர் அவர்கள் சந்தித்து அவர்களுக்குக் கொள்கையை தெளிவுபடுத்துவதற்கு முயற்சி செய்யவேண்டும். எப்படியும் நகர மு. ப. 11 30.
சபைத் தேர்தல்கள் நடத்தியே தீரவேண்டும். எந்த மாதம் என்பது பிரச்சினை அல்ல. அப்படி நடத்தும் போது, வார்டுகள் பிரிவினை பற்றி கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணமாக, மதுரை நகரத்தில் ஒன்றுவது வார்டில் சுமார் 15,000 அல்லது 20,000 வோட்டர்கள் இருக்கலாம். அதே நேரத்தில் இன்னொரு வார்டில் 4,000, அல்லது 5,000 வாக்காளர்கள் கூட இருக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட நிலையில் வார்டுகள் இருக்கின்றன. ஹரிஜன் தொகுதி என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அப்படி ஏற்படுத்தப்பட்டிருக்கும் வார்டில் ஹரிஜனங்கள் அங்கே நிறைய இருக்கிறார்கள் என்பதற்காக அல்ல. காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெறவேண்டும். வெற்றிபெற முடியும் என்கிற நிலையில் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். திண்டுக்கல் நகரத்தை எடுத்துக் கொண்டால், 6-வது வார்டு ஹரிஜன வார்டு என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் 15-வது வார்டில் அதிகமான ஹரிஜனங்கள் இருக்கிறார்கள். ஏன் இந்த வார்டு ஹரிஜன வார்டாக இல்லாமல், வேறொரு வார்டு ஹரிஜன வார்டு என்று வைத்திருக்கிறார்கள் என்றால், அங்கே காங்கிரஸ் கட்சி வெற்றி பெறுவதற்கு வசதியாக இருக்கிறது என்பதால் தான். ஹரிஜனங்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பதால் அல்ல. ஆகவே, வார்டு பிரிவினைபற்றி தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே சமயம் மதுரை. கோவை நகரசபைகளைக் கார்ப்பரேஷன் ஆக்க வேண்டுகிறேன்.

*** திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கவர்னர் பெருமான் உரையின் மீது 100 அங்கத்தினர்களுக்கு மேல் கலந்துகொண்டு, 103-வது அங்கத்தினராகப் பேசும் நிலையில் இருக்கிறேன். ஆனால் பேசுவதற்கு அதிகமாக இல்லை என்பதையும் நான் உணருகிறேன். ஏற்கனவே, இடைக்கால பட்ஜட்டின் மீது நடந்த விவாதத்தில் நான் பேசியிருக்கிறேன். இருந்தாலும், எதிர்க் கட்சித் தலைவன் என்கிற முறையில், காங்கிரஸ் கட்சியின் சார்பாக முதன் முதலாக நடைபெறும் இந்த மாபெரும் கவர்னர் உரைக்கு நன்றிசெலுத்தும் முறையில் பேச வேண்டிய நிலையில் இருக்கிறேன். எனக்கு முன்னால் காங்கிரஸ் கட்சியின் சார்பில், எதிர்க் கட்சித் தலைவர்களாக இருந்து பணியாற்றியவர்களை நினைத்துப் பார்த்தால், அவர்களுடைய தகுதிக்கு நூற்றில் ஒரு பங்கு கூட எனக்கு இல்லை என்பதை நினைத்து சற்று அச்சமாகக் கூட இருக்கிறது. இன்றைக்கு ஆளும் கட்சியாக இருப்பவர்கள், நாங்கள் நல்ல எதிர்க்

கட்சியாக இயங்கவேண்டும், நாங்கள் எதிர்க்கட்சியில் இருப்பது புதிது, புதிது என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆனால் நான் சொல்ல விரும்புகிறேன், இது எங்களுக்குப் புதிதல்ல என்பதை ஏற்கெனவேயே குறிப்பிட்டிருக்கிறேன். சுமார் 100 ஆண்டு கால காங்கிரஸ் கட்சி வளர்ச்சியில், 20 வருஷங்கள் தான் ஆட்சிப் பொறுப்பில் இருந்திருக்கிறோம். பாக்கியெல்லாம் எதிர்க்கட்சியாகவே இருந்து பணியாற்றி இருக்கிறோம். மத்திய சர்க்காரிலும் சரி, மாநில சர்க்காரிலும் சரி, தலைவர்கள் புலாபாய் தேசாய், பண்டித நேரு, சத்தியமூர்த்தி போன்றவர்கள் எதிர்க் கட்சியிலிருந்து செய்த வாதத்திறமையை எங்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாது என்று சொன்னால், அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதுதான். அதுதான் உண்மை நிலை. நல்ல எதிர்க் கட்சியாக நடக்க வேண்டும், நடக்க வேண்டும் என்று ஆளும் கட்சிக்காரர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு ஒன்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், நாங்கள் நல்ல எதிர்க்கட்சியாகவேதான் நடப்போம். நிச்சயமாக, அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது நடந்து கொண்டதற்குக் குறைவாக நடக்க மாட்டோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த முறையில் நல்ல ஜனநாயகப் பண்போடு, ஜனநாயக சம்பிரதாயப்படி, எல்லா விதமான வகையிலும், சட்டசபையின் கௌரவத்தையும், கண்ணியத்தையும் காப்பாற்றும் வகையில் நடந்து கொள்ளுவோம் என்பதை எங்கள் கட்சியின் சார்பாக எடுத்துக் கூற விரும்புகிறேன். அப்படி நடந்து கொள்ளும்போது நாங்கள் சில பொருள்களை சபையில் காட்சிப் பொருளாகக் காட்டுவதோ, அனாவசியமாக வெளிநடப்புச் செய்வதோ, செய்ய வேண்டும் என்கிற அவசியம் இல்லை என்பதையும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

கவர்னர் உரையிலே தேர்தல் அமைதியாக நடந்தது என்றும், குறிப்பாக தமிழகத்தில் நன்றாக நடந்தது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதைப் பாராட்டுகிறேன். அதே சமயத்தில், இந்தத் தேர்தலிலே வாக்களித்த பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக தமிழ் மக்கள் நல்ல முறையில் வாக்களித்திருக்கிறார்கள். தமிழகத்தின் பண்பிற்கும் பழக்கத்திற்கும் உகந்த முறையில் வாக்களித்திருக்கிறார்கள். கூட்டணி என்று அமைந்திருந்த போதிலும், அதில் குறிப்பாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, அது தனித்து இயங்கும் நிலையில் பொது மக்கள் வாக்களித்திருப்பதற்கு நம்முடைய நன்றியறிதல்களை, என் கட்சியின் சார்பாகவும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதிலும் பலவிதமான கட்சிகளைக் கொண்ட கூட்டு அமைச்சரவை ஏற்படாமல், தனிப்பட்ட ஒரு கட்சி, திராவிட முன்னேற்றக் கட்சி அமைச்சரவையை அமைக்கும் முறையில் வாக்களித்த வாக்காளப் பெருமக்களைப் பாராட்ட வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்பொழுது சொன்னார்கள், இந்தக் காங்கிரஸ்காரர்களை, உட்கார்ந்துகொண்டு,



ஒட்டிக்கொண்டு, அகற்ற முடியாமல் இருக்கிறார்கள்; அவர்களை ராணுவத்தை வைத்துத்தான் அகற்ற வேண்டும். ஆகவே, அவர்கள் ஆறு மாதத்திற்கு முன்பே ராஜினாமா செய்துவிட்டு இருந்தால் தான், தங்கள் செல்வாக்கையும் உபயோகப்படுத்தாமல் இருப்பார்கள், மக்களும் பயமின்றி ஓட்டுப் போடுவார்கள் என்று சொன்னார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியே ஆண்டுகொண்டு இருந்தும், மந்திரிகளே கூடத் தோற்றுப்போய், மற்றவர்கள் வெற்றியடையும் நிலையில், மக்களுக்கு உரிமை கொடுத்திருக்கிறோம் என்பதைத்தான் காட்டுகிறது. இந்தப் பெருமையை காங்கிரஸ் கட்சிதான் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தேர்தல் அறிக்கையில் கூட குறிப்பிட்டிருந்தார்கள், இப்பொழுது ஆட்சியில் இருக்கும் கட்சிக்காரர்கள்.

"இந்தியாவில் தற்பொழுதுள்ள தேர்தல் முறையில், ஆதரவு தரும் வாக்காளர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்த விகிதப்படி, சட்டமன்றத்திலும் பாராளுமன்றத்திலும் இடங்கள் கிடைப்பதில்லை. எடுத்துக்காட்டாக, சென்ற தேர்தலில் தொடர்ந்து, காங்கிரஸ் கட்சிக்கு 45 சதவீத வாக்குக்கள் கிடைத்த போதிலும், பாராளுமன்றத்தில் 75 சதவீத இடங்களைப் பெற்றது. எனவே விகிதாசார தேர்தல் முறை கையாளப்பட்டால்தான் மக்களின் ஆதரவை சரியாக வெளிப்படுத்தும் விகிதத்தில் ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் சட்ட மன்றங்களில் இடங்கள் கிடைக்கும். விகிதாசார தேர்தல் முறையின் அடிப்படைத் தத்துவம், ப்ரபோர்ஷனல் ரெப்ரசென்டேஷன், ஒத்துக்கொள்ளப்பட இந்த நாட்டுக்கு ஏற்ற வகையில் தேர்தல் முறையை மாற்றியமைக்க கழகம் பெரு முயற்சி எடுத்துக் கொள்ளும்" என்று. ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருக்கும் அந்தக் கட்சி அந்தக் கருத்தை இப்பொழுதும் வலியுறுத்துவார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால், தேர்தல் கணக்குகளைப் பார்த்தால், 1962-ல் திராவிட முன்னேற்றக் கழகம் 27 சதவிகிதம் வாக்குகள்தான் பெற்றது. ஆனால் அது பெற்ற இடங்கள் 50. அதே சமயத்தில், 46 சதவிகிதம் பெற்றிருந்த காங்கிரஸ் 139 ஸ்தானங்களைப் பெற்றிருந்தது. இப்பொழுது, 1967-ல் 41 சதவிகிதம் வாக்குகளே பெற்ற திராவிட முன்னேற்றக் கழகம் 138 இடங்களைப் பெற்றிருக்கிறது. அவர்களைவிட அதிகமாகக் கிடைத்த 41.43 சதவிகித வாக்குகள் பெற்ற காங்கிரஸ் கட்சி 49 ஸ்தானங்களைத்தான் பெற்றிருக்கிறது. அதே நிலையில், பாராளுமன்றத் தேர்தலைப் பார்த்தால். . . .

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி: சதவீதம் பற்றிப் பேசும் போது, 1967-ல் திராவிட முன்னேற்றக் கழகம் 170 இடங்களுக்குத் தான் போட்டிபோட்டது என்பதையும், அதே நேரத்திலே காங்கிரஸ் 234 இடங்களுக்கும் போட்டியிட்டது என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதையெல்லாம் தெரிந்து, உணர்ந்து தான் பேசுகிறேன். பாராளுமன்றத்திற்கு, 1962-ல் 31 ஸ்தானங்களையும், 1967-ல் மூன்றே ஸ்தானங்களையும் பெற்றது. 1967-ல் காங்கிரஸ் பெற்ற வாக்குகள் 41 சதவிகிதம். இதை நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், அவர்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது சரியில்லை என்பதை எடுத்துக்காட்டவேதான். எத்தனை இடங்களுக்கு போட்டி போட்டோம் என்பதல்ல பிரச்சினை. காங்கிரஸ்காரர்களுக்கும் 63 லட்சம் மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். ஆகவே, முழுக்க முழுக்க வாக்காளர்கள் காங்கிரஸ் வேண்டாம் என்று எங்களை பூரணமாக புறக்கணிக்கவில்லை. நாங்களும் 63 லட்சம் வாக்குகள் பெற்றிருக்கிறோம். அப்படி வாக்களித்த மக்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தேர்தல் சுமுகமாக நடந்து விட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். பாராட்டுக்குரிய விஷயம். ஆனாலும், மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பதுபோல, தேர்தல் முடிந்ததற்குப் பிறகும் கூட, பல இடங்களிலும் குற்றங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. ஏகப்பட்ட புகார்கள் வந்திருக்கின்றன. அவற்றை அதிகார பூர்வமாக நான் சர்க்காருக்கு அனுப்புகிறேன். நான் குறிப்பிட விரும்புவது, தேர்தல் முடிந்தவுடனே, ஜனநாயகப் பண்போடு நாம் நடந்துகொள்ளவேண்டும். தேர்தல் சமயத்தில் ஏற்பட்ட கசப்புகளை மறந்து விடவேண்டும். அது எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, அதைப்பற்றி ஆட்சேபனை இல்லை. காங்கிரஸ் ஜெயிக்கலாம்; அல்லது திராவிட முன்னேற்றக் கழகம் ஜெயிக்கலாம்; எந்தக் கட்சி ஜெயித்தாலும் சரி, தேர்தல் முடிந்து விட்ட பிறகு ஒருவருக்கொருவர் நண்பர்களாக இருக்க வேண்டும். தேர்தல் வரும்; ஒருவர் வெற்றி பெறலாம்; இன்னொருவர் தோல்வி அடையலாம்; அதைப்பற்றி அக்கறை கிடையாது. ஆனால், இந்த நாட்டிலே, இந்த உலகத்திலே மக்கள் என்பதற்கேற்ற பண்புடன் வாழ வேண்டும். தேர்தலுக்குப் பிறகு நாம் நண்பர்களாக இருக்க வேண்டும். தேர்தலை உடனே மறந்துவிட்டால்தான் நல்லது. அதுதான் நல்ல ஆட்சி நடப்பதற்கும் வழிவகை செய்யும் என்பதிலே எந்த விதமான ஐயமும் இல்லை. தேர்தல் முடிந்து விட்டாலும், கட்சித் தலைவர்கள் ஒரு பக்கம் இருந்தாலும், அதிலுள்ள ஊழியர்கள்—அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, நடந்துகொள்ளும் முறை அவ்வளவு நல்லதாக இல்லை என்பதை நான் மிக மிகப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தேர்தல் நடந்துவிட்டது; நீங்கள் ஜெயித்து விட்டீர்கள். மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களைப் பணிவோடு நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இனிமேல் தேர்தல் சர்ச்சையைக் கிளப்ப வேண்டாம். ஆட்களை விட்டு அடிக்கச் சொல்ல வேண்டாம். நாட்டின் சுமுகமான நிலை இருக்கவேண்டும். சட்டம், அமைதி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன்.



இம்மாதம் 19-ம் தேதி, திருவள்ளூரில் ராஜாஜி சாலையில் வசிக்கும் திரு. ஏ. பி. சாமி என்பவர், என்ன என்ன காரியங்களிலே அவர்களெல்லாம் துன்புறுத்தப்பட்டார்கள் என்று புகார் எனக்கு அனுப்பியிருக்கிறார். அதோடு மட்டுமல்ல. தேர்தலில் வேலை செய்த காங்கிரஸ்காரர்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கடுமையாகத் தாக்கியதோடு, மேலும் பயமுறுத்திக்கொண்டும் வந்திருக்கிறார்கள் என்று புகார் அனுப்பியிருக்கிறார். அவரவர்கள் கையெழுத்திட்டு எனக்குக் கடிதங்கள் வந்திருக்கின்றன. எந்த நிலையிலே எப்படியெல்லாம் இருக்கிறது என்று விவரித்திருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்ல. தேர்தல் காலத்தில் பெட்டிக் கடைக்கு முன்னால் ஒரு கட்சி விளம்பரத்தை வைத்திருக்கலாம். காங்கிரஸ் கட்சி விளம்பரத்தை வைத்திருந்தால், ஏன் வைத்திருக்கிறார்கள் என்பதுபற்றி எல்லாம் புகார் வருகிறது. இன்றைய ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சியாக முன்பு இருந்தபோது, "போலீஸ் அதிகாரிகள் எங்களுக்கு ஆதரவாக இருப்பது இல்லை, காங்கிரஸ்காரர்களுக்குத்தான் ஆதரவாக இருக்கிறார்கள்" என்று சொல்லி வந்த நிலை இப்பொழுது நேர்மாறாக மாறியிருக்கிறது என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, 'Congressmen attacked severely by D.M.K.—Position stake—Crave protection immediately.' என்று மீஞ்சூரிலிருந்து எனக்குத் தந்தி கொடுத்திருக்கிறார்கள். இம்மாதிரி நிலையில் போனால், நல்ல சூழ்நிலை அமையாது என்பதை தான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, "சிங்காரம், ரத்னம் ஆகியோர் வீண் வம்பு செய்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தீவிர மெம்பர் ரெத்தினம் அவர்களை 17—3—1967 அன்று மாலையில் பலமாக அடித்து விட்டார்கள். மேற்படியாரை நான் திருமானூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பியுள்ளேன். மற்றுமுள்ள காங்கிரஸ்காரர்கள் வீட்டுக்குத் தீ வைப்பதாகவும் சொல்லி மிரட்டிக்கொண்டே இருக்கிறார்கள்" என்றும் எனக்குப் புகார் வந்திருக்கிறது.

இதெல்லாம் சில சமயங்களில் மிகவும் வேதனையையும் வருத்தத்தையும் தரக்கூடிய நிலையாகும். ஆகவே, அமைச்சரவை இதையெல்லாம் கவனித்து, நடந்தது போக, இனிமேல் அம்மாதிரியான காரியங்களில் ஈடுபட வேண்டாம் என்று கழகத்தினருக்கோ அல்லது கழக அனுதாபிகளுக்கோ உத்தரவிட வேண்டும் அல்லது வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை,** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரிடத்தில் அவர்களுடைய கட்சியினர் பல் வேறு இடங்களில் தாக்கப்பட்டதாக வந்திருக்கிற புகார்களை எல்லாம் படித்தார்கள். இப்படி அவர்கள் படிப்பார் என்று தெரிந்திருந்தால், என்னிடத்திலே,

இன்னமும் காங்கிரஸ்காரர்கள் முன்னேற்றக் கழகத்தினரைத் தாக்குவதாகக் கொடுத்திருக்கிற புகார்கள், ஒரு ஏழெட்டு கட்டு இருக்கிறது; எடுத்து வந்திருக்கலாம். ஆனால், அவருக்குப் புகார் வந்ததைப் போல எனக்கும் வந்திருக்கிறது என்று சொல்லி, அது தான் காரணம் என்று சொல்லவில்லை. அவர்கள் இன்றையதினம் வெளியிட்ட அந்தக் கருத்தை—தேர்தல் முடிந்த பிறகு பகை எல்லாம் நீங்க வேண்டும் என்ற கருத்தை—எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து ஒரு பொது அறிக்கையாக மக்களுக்கு அளிக்க வேண்டும். ஆனால் சட்ட மன்றத்தில் பேசுவதற்காகவே புகார்கள் அனுப்பியவர்களை மாலையில் பார்த்து, 'நான் சட்டசபையில் சொல்லி இருக்கிறேன்' என்று அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்று நண்பர் அவர்கள் அவற்றை இங்கே படித்திருப்பார்களானால், நானே இதைவிடப் பெரிய கட்டு நாங்கள் கொண்டு வர முடியும். ஆகையால், உள்ளபடியே அந்தப் பகை நீங்க வேண்டும் என்பதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளைப்பற்றி நான் பேசுகிறபோது சொல்லுகிறேன். ஆனால், எல்லாக் கட்சித் தலைவர்களையும் கொண்டு ஒரு பொது அறிக்கை விடவேண்டும்.

இன்னொன்றும் அவர்கள் சொன்னார்கள். இதுவரை நடந்தது நடந்துவிட்டது; போகட்டும்; இனிமேல் உங்கள் ஆட்களை அடிக்கச் சொல்லாமல் இருங்கள் என்று சொன்னார்கள். உங்கள் ஆட்களை என்று அவர்கள் சொன்னார்கள். இது மிராசுதார்கள் பாஷை. எனக்கு அப்படிப் பேசி பழக்கமில்லை. எங்களிடத்தில் அடியாட்களும் இல்லை. ஆட்களை விட்டு அடிக்கச் சொல்லும் பழக்கமும் கிடையாது. ஆனால், ஆட்களை விட்டு அடிக்கச் சொன்னதாக அவர்கள் சொன்னார்களே, அவையெல்லாம் நடந்து விட்டவை என்று நான் ஒத்துக்கொள்ள முடியாது. என்னிடத்தில் உள்ள புகார்களையும் அவர்களிடத்தில் உள்ள புகார்களையும் நடு நிலையிலே உள்ள மூன்று பேர்களைக்கொண்ட ஒரு குழு அமைத்து விசாரிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். அவரிடத்தில் புகார் கொடுத்தவர்கள் தயாராக இருப்பார்களானால், அதைக் கூட வைக்கலாம். ஆனால், வைத்து அதன் மூலம் பகை வளரத் தேவை இல்லை. எல்லோரையும் உட்கார வைத்து, ஒவ்வொரு ஊருக்கும் சென்று, சமரசமாகப் பேசி, இனி அந்தப் பகை வேண்டாம் என்று நாம் வலியுறுத்துவதை மேற்கொள்ளுவதாக இருந்தால் நான் அதை வரவேற்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்காகச் சொல்லுகிறேன். நான் குறிப்பிட்டது எல்லாம் வாக்காளர் பெருமக்களை உயர்வாகச் சொன்னதே தவிர, மறந்து கூட ஏதாவது சொல்லியிருந்தால், தயவுசெய்து யாரும் அதைக் குறைவாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நான் பேசும்படியான நிலையில் தவறுதலாக ஏதாவது வந்திருந்தாலும் கூட, அவர் தெரிவித்ததற்காக என்னுடைய நன்றியை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் அவர்களுடைய கட்சியினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலமைச்சராக இருக்கிறார். ஏற்கனவே இருந்த சட்ட மன்றத்திலும், இப்பொழுது இருக்கும்படியான சட்ட மன்றத்திலும் சில சட்ட சம்பிரதாயங்களெல்லாம் உண்டு. சட்டம், சம்பிரதாயங்கள் எல்லாம், சட்டசபை நடப்பதற்கோ அல்லது ஆட்சி நடப்பதற்கோ 'கான்ஸ்டிட்யூஷன்' என்னும் நிலையில், அதனுடைய அடிப்படையில், அனுசரிக்கப்பட வேண்டியிருக்கின்றன. ஆனால், சட்டப்படியே நடக்க முடியுமா என்றால், எல்லாவற்றிலும் சட்டப்படியே நடக்க முடியாது. சில சம்பிரதாயங்களும் மரபுகளும் உண்டு. அந்தச் சம்பிரதாயங்களையும் மரபுகளையும் கடைப்பிடிப்பது தான் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு மிக முக்கியமானது என்று நான் கருதுகிறேன்.

கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய திறமையையும், அறிவையும், தகுதியையும் மிக உயர்வாக நினைத்துக்கொண்டிருப்பவன் நான். அவர்கள் இந்தத் தமிழகத்தில் சிறந்த முதலமைச்சராக இருக்க வேண்டும் என்பதிலே எந்த விதமான குறைவான எண்ணமும் என்னிடத்தில் இல்லை. என்றாலும், சட்ட மரபு, சம்பிரதாய மரபு, இந்தச் சட்ட சபையிலும் சரி, மற்ற சட்ட சபைகளிலும் சரி, அனுசரிக்கப்பட்டு வருகிறதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். கட்சிச் சார்பாக ஒருவர் அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கிறார். தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். எந்த சபைக்கும் தேர்ந்தெடுக்கப்படாமலே கூட அவர்கள் ஆறு மாதங்கள் முதலமைச்சராகக் கூட இருக்கலாம். ஆனால், ஆறு மாதங்களுக்குள்ளாக, ஏதாவது ஒரு சபைக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு வரவேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் மேல் சபைக்கு அவருடைய தேர்தல் விண்ணப்பத்தை அனுப்பியிருக்கிறார். நிச்சயமாக அவர் ஜெயிப்பார் என்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. மேல் சபை ஒன்றில் மட்டுமல்ல; இன்று தமிழகத்தில் எந்தத் தொகுதியில் அவர் தேர்தலுக்கு நின்றாலும், நிச்சயமாக அவர் வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கை என்னிடத்தில் இருக்கிறது. (ஆளுங் கட்சித் தரப்பில் ஆரவாரம்) அவர் நிச்சயமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துவிடுவார் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால், முதலமைச்சராக இருக்கும் சமயத்தில், இந்தச் சபையினுடைய உரிமை எங்களுக்குப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிலையிலேதான், ஒரு சில சம்பிரதாயங்கள் காக்கப்பட வேண்டும் என்று நான் சொல்லுகிறேன். ஃபைனான்ஸ் போர்ட்ஃபோலியோவானது, இந்தச் சட்டசபைக்குப் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவருடைய கையில் தான் இருக்கவேண்டும் என்ற ஜனநாயக மரபு இதுவரையில் இந்தச் சபையில் அனுசரிக்கப்பட்டு வந்திருக்கிறது. அதோடு மட்டுமல்ல.

பிரிட்டிஷ் பார்லிமெண்ட்டில் அனுசரிக்கப்படும் சம்பிரதாயங்களையும் மரபுகளையும்தான் நாம் அநேகமாக, ஓரளவிற்கு நடைமுறையில் கொண்டுவந்திருக்கிறோம். அங்கே பிரதமராக வருபவர் ஹௌஸ் ஆப் லார்ட்ஸ்ஸில் இருந்து வந்தாலுங்கூட, அவர்கள் நியாயமாக மறுபடியும் ஹௌஸ் ஆப் காமன்ஸ்ஸால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். இதை உதாரணமாக ஏன் சொல்லுகிறேன் என்றால், அவர்கள் சென்ற தடவை விளக்கம் சொன்னார்கள். 1923-ஆம் வருஷம் லார்டு கர்ஸன் என்பவர் கன்ஸெர்வெடிவ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்; அவர் மேல் சபையிலே இருக்கக்கூடியவர். ஆனால், அப்பொழுது இருந்த மரபுப்படி, மேன்மை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் ஆட்சிக் காலத்தில், எதிர்க்கட்சித் தலைவர் அங்கே பார்லிமென்டில் சொன்னதை இப்பொழுது நான் படிக்கின்றேன். அதாவது

'The Labour Party had indicated that it would be irksome for them, as His Majesty's Opposition, were the Prime Minister to be a member of the Upper House. Balfour had intervened to suggest that Curzon was temperamentally unsuited to guide the destinies of the country in a democratic age. Certain leading Conservatives—Lord Long, Lord Salisbury, Mr. Amery and others—had also conveyed to Buckingham Palace their serious misgivings. The cumulative effect of these representations was to reverse the previous decision. And thus Baldwin drove to Buckingham Palace in Lord Curzon's place.'

கீழ் சபையிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பால்ட்வின் அவர்களைக் கூப்பிட்டு, மந்திரி சபை அமைக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள்.

முதல் அமைச்சரைப்பற்றிப் பிரச்சினை கிடையாது. நம்முடைய நாட்டிலே கூட, திருமதி இந்திரா காந்தி அவர்கள் பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலை எப்பேர்ப்பட்ட நிலை? அந்த நிலை எப்பேர்ப்பட்ட நிலை என்றால், மதிப்பிற்குரிய லால் பகதூர் சாஸ்திரி இறந்து, திருமதி இந்திரா காந்தி இடைக்காலத்தில் வந்த சமயத்தில், எந்த விதமான தேர்தலும் உடனே நடத்த முடியாத ஒரு நிலை. ஆனால், உடனடியாக 1967-ஆம் வருஷத்திலே நடந்த பொதுத் தேர்தலுக்கு நின்றுதான் வந்திருக்கிறார். முதல் அமைச்சராக இருக்கலாம். பிரதம மந்திரியாகக்கூட இருக்கலாம். ஆட்சேபணை இல்லை. பிரதம மந்திரியாக திருமதி இந்திரா காந்தி வந்தவுடனே நிதி இலாக்காவை திரு. டி. டி. கே. அவர்களிடமிருந்து மாற்றின சமயத்தில், பாராளு மன்றத்தில் (லோக் சபா) இருக்கும்படியான திரு. சசீந்திர சௌத்திரிக்குத்தான் நிதி இலாக்காப் பொறுப்பு கொடுக்கப்பட்டது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அது மட்டுமல்ல. நம்முடைய சட்டசபையிலேயே 1952-ஆம் வருஷத்தில் ராஜாஜி அவர்கள் வந்தார்கள். நாங்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பாக அவர்களைத் தேர்ந்தெடுத்தோம். உடனே என்ன ஆயிற்று? நம்முடைய இப்போதைய





முதல் அமைச்சர் மேல் சபைத் தேர்தலுக்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார். அதுகூட இல்லாமல், ராஜாஜி அவர்கள் மேல் சபைக்குக் கவர்னர் நியமனம் மூலமாக வந்தார்கள். அப்பொழுது வந்தபோது, இப்பொழுது ஆளுங் கட்சியில் இருப்பவர்கள் எல்லாம் என்ன என்ன சொன்னார்கள் என்பதை இப்பொழுது நான் ஞாபகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று நான் நினைக்கின்றேன். அவர் வந்தவுடனே இந்தச் சபையில் இருந்த மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்குத்தான் நிதி இலாக்காவை ஒப்படைத்தார்கள். கற்றுக்கொள்ளுவதற்காக சுப்பிரமணியம் அவர்களிடம் ஒப்படைத்தார்கள் என்று சொல்வார்கள். திரு. சுப்பிரமணியம் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டிய நிலைமை இல்லை என்பதை நான் மிகப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என் அண்ணாதுரை:** தனக்கு ராஜாஜி அவர்கள் கற்றுக்கொடுத்ததாக திரு. சுப்பிரமணியம் அவர்களே என்னிடம் சொன்னார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எத்தனையோ விஷயம் கற்றுக் கொடுத்தார். உங்களுக்கும்தானே கற்றுக் கொடுத்திருக்கிறார். இப்பொழுதும் கற்றுக் கொடுத்துக்கொண்டு வருகிறார். அடுத்தபடியாக, திரு. காமராஜ் வந்தார். அவர் வந்தவுடனே, முதலிலே எந்தச் சட்டசபை தொகுதியிலாவது நின்று வெற்றி பெற்று வராது நான் முதலமைச்சராக இருக்க மாட்டேன் என்று சொல்லி, அவருடைய தொகுதி அல்ல; குடியாத்தத்தில் நின்று வெற்றி பெற்று வந்தார்கள் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். நீங்கள் ராஜாஜியிடம் போய் வேண்டுமானாலும் கேட்கலாம். அவர் முதலமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டவுடனே, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து அவருக்கு ஒரு தாக்கீது அனுப்பப்பட்டது. 'நீங்கள் அடுத்த ஆறு மாதத்திற்குள் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டே முதலமைச்சராக இருக்க வேண்டும்' என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவர் எத்தனையோ வேலை செய்கிறார்கள். இதை மறைக்கவா முடியாது.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** கனம் உறுப்பினர் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுவிட்டு, இன்னொரு விஷயத்திற்குப் போவதால், முன்னர் சொன்ன விஷயத்தைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். திரு. காமராஜ் அவர்கள் சட்ட மன்றத் தேர்தலுக்கு குடியாத்தத்தில் நின்றபோது, அப்போது எதிர்க்கட்சியாக இருந்த நாங்கள் அவர் எப்படியும் வெற்றிபெற வேண்டும் என்பதாலே அவரை ஆதரித்தோம். அந்தப் பண்பை நான் கேட்கவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இப்போதுள்ள முதலமைச்சர் அவர்கள் இந்த மாநிலத்தில் எந்த இடத்தில் தேர்தலுக்கு நின்றாலும் நிச்சயம் ஜெயித்து வருவார் என்றுதான் நான் குறிப்பிட்டிருக்கிறேன். அவர் குறிப்பிட்ட பண்பைப்பற்றி அவர் நிச்சயமாக என்னிடத்தில் எதிர்பார்க்கலாம்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 மார்ச் 30

நான் குறிப்பிட வந்தது, நல்ல சம்பிரதாயத்தை நாம் காப்பாற்றியாக வேண்டும். நிதியமைச்சராக இருக்கக்கூடியவர் மக்களால் இந்தச் சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவராகத்தான் இருக்க வேண்டுமென்பது ஒரு சம்பிரதாயமாக இருந்து வருகிறது. திரு. விநாயகம் இந்தப் பிரச்சினையை எழுப்பியபோதே நமது முதலமைச்சர் அவர்கள், "அதை யார் இல்லையென்று சொன்னது?" என்று குறிப்பிட்டார்கள். நான் வற்புறுத்திக் கூறிக்கொள்வது, இந்தச் சட்ட மன்றத்தில் இருக்கிற எங்கள் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். இந்தச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள ஒருவர்தான் நிதியமைச்சராக இருக்கவேண்டுமென்ற சம்பிரதாயத்தை-நல்ல மரபை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மேல்சபை உறுப்பினராக இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்கள், நிதி ஒதுக்கீடு மசோதாவை இந்த மன்றத்தில் கொண்டு வரவில்லையா? என்றார்கள். அப்போது திரு. பக்தவத்சலம் அவர்கள் நிதியமைச்சராக இருந்தார். அமைச்சரவைக்கு ஒரு கூட்டுப் பொறுப்பு உண்டு. திரு. பக்தவத்சலம் அவர்கள் ஊரில் இல்லாத காரணத்தால், அமைச்சரவையில் கூட்டுப் பொறுப்பைப் பெற்றுள்ள திரு. வெங்கட்ராமன் அவர்கள் அந்தப் பணியை ஆற்றினாரே தவிர வேறில்லை. அந்தந்த இலாகா அமைச்சர்கள், அந்தந்த இலாகா சம்பந்தமான காரியங்களைச் செய்ய வேண்டுமென்பது இப்போதுகூட கிடையாது. காரணம் அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு உண்டு. யார் வேண்டுமானாலும் செய்யலாம். மேல்சபை விதிகளில் 154-வது விதி

'No recommendation shall be proposed to any of the clauses of such a Bill which will have the effect of varying the amount or altering the destination of any grant so made or of varying the amount of any expenditure charged on the Consolidated Fund of the State.' என்று இருப்பது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆக, இந்த சட்ட மன்ற உறுப்பினராக உள்ள ஒருவர்தான் நிதி இலாகா பொறுப்பை ஏற்க முடியும் என்கிற சம்பிரதாயத்தை அவர் காப்பாற்றிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, இத்துடன் அந்த விஷயத்தை விட்டு வேறு விஷயத்திற்குப் போகிறேன்.

அடுத்தபடியாக, எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. காங்கிரஸ் கட்சி எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது. சில தவறுகளும் ஏற்பட்டிருக்கலாம். அதைப்பற்றி இப்போது நான் ஒன்றும் சொல்லவில்லை. இன்றைக்கு ஆளும் கட்சியிலுள்ள உறுப்பினர் ஒருவர் பேசியதைப் பார்த்தால், அவர் முன்பு எதிர்க் கட்சியில் இருந்த ஞாபகத்திலேயே இப்பொழுதும் அவர் அப்படிப் பேசுகிறாரோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்கிற குறளை சர்க்கார் தரப்பிலேயிருந்து பேசிய ஒருவர் குறிப்பிட்டார். சொல்லுவது எல்லாம் சுலபம். சொன்னவற்றை



1967 மார்ச் 30] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

யெல்லாம் செயல்படுத்த முற்படுகிறபோதுதான் அதிலுள்ள சிரமங்கள் தெரியும். நாங்கள் அப்படிச் சொல்லவில்லை; இப்படிச் சொல்லவில்லை என்கிற நிலையெல்லாம் ஏற்படும். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருக்கிறார்கள். அதிகாரத்தில் இருக்கிறார்கள். அவர்கள் மக்களுக்கு எத்தனையோ வாக்குறுதிகள் கொடுத்திருக்கலாம். சிலவற்றைச் செய்ய முடியும், சிலவற்றைச் செய்யமுடியாமல் போய்விடும். நான் அதைப்பற்றியெல்லாம் சொல்லவில்லை. ஆனால் ரூபாய்க்கு 3 படி அரிசி என்று குறிப்பிட்ட வாக்குறுதியை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். திரு. ஆசைத்தம்பி அவர்கள் கூட ஒரு ஜோசியக்காரர் குறிப்பிட்டுள்ளதை இங்கே எடுத்துச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிச்சயமாக ரூபாய்க்கு 3 படி நொய்யரிசியாவது கிடைக்கும் என்று சொன்னார்கள். நானும்கூட ஒரு ஜோசியர் கதையை இந்த இடத்தில் சொல்வது தவறாக இருக்காது என்று நினைக்கிறேன். ஒரு ஜோசியர் ஒருவர் வீட்டிற்குச் சென்றார். அந்த வீட்டுக்கார அம்மாளுக்கு அது பிரசவ காலம். ஆக, அந்த வீட்டிலுள்ளவர்கள் அவரைச் சுற்றிக்கொண்டு, என்ன குழந்தை பிறக்கும் என்பதாக ஜோசியம் கேட்டார்கள். நிச்சயமாக ஆண் குழந்தைதான் பிறக்கும் என்று அந்த ஜோசியர் சொன்னார். அதன் பிறகு பெரிய விருந்து எல்லாம் நடந்தது. ஜோசியர் வீட்டிற்குச் செல்லும் போது, ஒரு காகிதத்தில் எதையோ எழுதி, அதை வீட்டுக் கூரையில் செருகிவிட்டு, "இதோ எழுதி வைத்திருக்கிறேன் பாருங்கள். குழந்தை பிறந்த பிறகுதான் அதை நீங்கள் எடுத்துப் பார்க்க வேண்டும்" என்று சொல்லிவிட்டுப் போனார். சில நாட்கள் கழிந்த பிற்பாடு அந்த அம்மாளுக்குக் குழந்தை பிறந்தது. அது பெண் குழந்தை. வீட்டுக் கூரையில் எழுதி வைத்துள்ள காகிதத்தை எடுத்துப் பார்த்தால் அதில் பெண் குழந்தை என்று ஜோசியர் எழுதியிருந்தார். 'என்னய்யா? பெண் குழந்தை பிறந்துவிட்டது?' என்று அந்த ஜோசியரிடத்தில் கேட்டதற்கு, 'உங்களைத்தான் நான் எழுதி வைத்ததைப் பாருங்கள் என்று சொன்னேனே, என்று சொன்னாராம். அப்படித் தேர்தல் அறிக்கையில், எதை எதையோ எழுதிக் கொடுத்துவிட்டு, ஜோசியர் இப்படி சொல்லியிருக்கிறார் என்று சொல்வதில் பயனில்லை. அவர்களது பத்திரிகைகளிலேயே வந்துள்ள செய்திகளிலிருந்து ஒன்றிரண்டு குறிப்பீடுகளைக் குறிப்பிட விரும்புகிறேன். "கழக ஆட்சியில் ரூபாய்க்கு 3 படி அரிசி"—காமராஜருக்கு அறிஞர் அண்ணா பதில் என்கிற தலைப்பில் (25—10—1966 முரசொலி) வந்துள்ளது. "கழகம் ஆட்சிக்கு வந்தால் ரூபாய்க்கு 3 படி அரிசி போட முடியுமா? என்று காமராஜர் கேட்டதற்கு, அறிஞர் அண்ணா அவர்கள், இங்கு நடைபெற்ற நிதியளிப்புத் தேர்தல் கூட்டத்தில் பதிலளித்தார்.

"திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் 3 படி போட முடியுமா—முடியாதா என்பதல்ல பிரச்சினை. போட வேண்டுமா, போட வேண்டாமா என்பதுதான் கேள்வி. போடுகிறோமோ இல்லையா என்பதை அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 மார்ச் 30

ஆலையிலே பாடுபடும் தொழிலாளர்களைக் கேட்கிறேன்—விவசாயிகளைக் கேட்கிறேன்—சிறு கடை வைத்திருப்பவர்களைக் கேட்கிறேன்—அலுவலகங்களில் பணியாற்றுகின்றவர்களை—பல்கலைக் கழகப் பேராசிரியர்களை—ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களை—நடுத்தர குடும்பத்தினரைக் கேட்கிறேன்.

எப்படிக் கிடைக்கும் என்று கேட்பதைவிட—கீழ்த்தரமாக தூற்றுவதைவிட ஆட்சியை 1967-ல் ஒப்படைத்து 1968-ம் ஆண்டு முடிந்து, 1969-ம் ஆண்டு வருகிற நேரத்தில் என்னையோ, அல்லது ஆட்சியில் யார் இருக்கிறார்களோ அவர்களையோ இதே கடலூர் திடலில் நிறுத்தி, அதர்மக்காரனே, அயோக்கியனே, ரூபாய்க்கு 3 படி அரிசி போடுவதாக ஓட்டுக் கேட்டாயே—கொடுத்தோமே, செய்தாயா?' என்று கேட்டால் அது ஆண்மகன் செய்கிற காரியம்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டால் 3 படி அரிசி போட முடியுமா என்று கேட்பீர்களானால், திட்டவட்டமாகத் தெரிவிக்கிறேன். நிச்சயமாகப் போட முடியும். விவசாயப் பெருங்குடி மக்களைக் கெடுக்காமல் நடுத்தர மக்களை வாழ வைக்க முடியும்."

5ண் ழல். -00 **மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை** : கனம் உறுப்பினர் கொஞ்சம் மன்னிக்க வேண்டும். அவர் படித்துக் காண்பிக்க வேண்டிய பகுதியை படித்து காண்பித்து விட்டார் என்று நினைக்கிறேன். அதில் 1967-ல் நாங்கள் ஆட்சிக்கு வந்தால், 1968, 1969-ல் ஒரு வருடம், இரண்டு வருடம் கழித்துப் பாருங்கள். நாங்கள் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றித் தருகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கும். இரண்டு வருடத்திற்குப் பிறகு, இந்தக் கேள்வி வரும்படியான நிலைமை இருக்காது. இந்தக் கேள்வி வரும்படியான நிலைமைக்கு நாங்கள் நடந்துகொள்ள மாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : உங்களிடம் எனக்கு நம்பிக்கை உண்டு. நான் சொல்ல வந்தது என்னவென்றால், எதிர்க்கட்சியினர் ஒத்துழைப்புத் தரவில்லை, ஒத்துழைப்புத் தரவில்லையென்று சொல்கிறீர்களே, கொள்முதலை எடுத்துக் கொள்ளுங்கள், அன்றைய தினமே நான் கொள்முதல் திட்டத்திற்கு ஒத்துழைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் நாங்கள் சொல்வது எல்லாம் நியாயமான முறையில் நடைபெற வேண்டுமென்பதுதான். நியாயமான முறையில் நடைபெறுகிறதா என்றால், இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒரு லிஸ்ட் கொடுத்திருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் வீடாகப் பார்த்து, அவர்களுடைய விரோதிகளுடைய வீடாகப் பார்த்து.

**திரு. இராம. அரங்கண்ணல்** : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், கனம் எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிற குற்றச்சாட்டிற்கு ப்ரூஃப் இருக்கிறதா என்று கேட்கிறேன்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : என்னிடத்தில் நிறைய ப்ரூஃப் இருக்கின்றன. இன்றைக்குக்கூட ஒரு தந்தி வந்திருக்கிறது.



1967 மார்ச் 30] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

" Cheranmahadevi Divisional Officer unlawfully manhandled me and others by using vulgar language, by attempting to tie my hands behind back, by beating my relation and forcibly bringing a woman by hair from kitchen in course of procurement. We possess below one and half acres and agreeing to measure levy paddy. His action highhanded. Pray enquiry and necessary action ".

இப்படி 1½ ஏக்கர் நிலம் இருக்கும்படியான விவசாயியின் வீட்டிலே கொள்முதல் என்ற அடிப்படையில் மிக வருந்தத்தக்க முறையில் நடந்திருக்கிறது. நான் அன்றைக்கே குறிப்பிட்டேன். ஹைகோர்ட்டுக்கு வழக்குப் போயிருக்கிறது என்றார்கள். ஹைகோர்ட்டிலே நியாயமான முறையில் கொள்முதல் செய்யப்பட்டதா, இல்லையா என்பதைப் பரிசீலனை செய்து தீர்ப்புக் கொடுத்தார்களா? அதற்குள் இவர்களே சமாதானமாகப் பேசி வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டார்கள். 237 மூட்டைகளைக் கைப்பற்றியதில் 132 மூட்டைகளை சாப்பாட்டிற்காகவும், விதைக்காகவும், மற்றச் செலவுகளுக்காகவும் அவர்கள் தங்கள் கையிருப்பில் வைத்திருக்கலாம் என்பதாக விடுவித்திருக்கிறார்கள் என்பதாக ஞாபகப்படுத்துகிறேன். கொள்முதல் செய்யும்போதே இந்த நியாயமான முறையில் நடந்து கொண்டிருக்கலாம். ப்ரொக்யூர்மெண்ட் செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், நியாயமான முறையிலே நடைபெற வேண்டுமென்பதைத் தான் நாங்கள் வற்புறுத்திக் கூறி வருகிறோம். முதலமைச்சர் அவர்கள் மிக அழகாகச் சொல்லிவிடுகிறார்கள். நல்ல பேச்சுத் திறன் படைத்தவர்கள், நல்ல எழுதும் திறன் படைத்தவர்கள், பேச்சுத் திறனோ, எழுத்துத் திறனோ எங்களுக்கு இல்லையென்பதை ஒத்துக் கொள்கிறேன். தீவிரமாகக் கொள்முதல் செய்யவேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். நீங்கள் நியாயமான அடிப்படையில் எந்த நடவடிக்கையும் உறுதியாக எடுத்துக்கொள்ளுங்கள், நாங்கள் உறுதுணையாக இருக்கிறோம் என்றுதான் சொல்லிக்கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை** : வேறு விஷயத்திற்குப் போவதால் ஒன்றைக் குறிப்பிட்டுவிட விரும்புகிறேன். அதிகாரிகள் காங்கிரஸ்காரர்களின் வீடாகப் பார்த்து நெல் கொள்முதல் செய்வதாக குறிப்பிட்டார்கள். கொள்முதலுக்கு அரிசி எடுத்ததில் தேர்தலுக்கு நின்ற எங்கள் கட்சியை சேர்ந்த ஓர் உறுப்பினரின் மாமனார் வீடே இருக்கிறது. கொள்முதலுக்கு அரிசி எடுத்தவர்கள் எல்லோரும் காங்கிரஸ்காரர் அல்ல என்பதற்காகக் குறிப்பிடுகிறேன். இப்போது இருப்பது எங்களுடைய ஆட்சியாக இருக்கலாம். ஒரு வருடம், ஒன்றரை வருடத்திற்கு முன்பாக வரி பாக்கிக்காக, கள்ளத்தனமாக பணம் வைத்திருப்பதைக் கண்டுபிடிப்பதற்காக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கட்சியின் ஆட்சியில் நடவடிக்கை எடுத்துக் கொண்டபோது, அதில் சிக்கிக் கொண்டவர்கள், பிடிபட்டவர்கள். கண்டுபிடிக்கப்பட்டவர்கள் மிகப் பெரும்பாலோர்கள் காங்கிரஸ்

காரர்கள்தான் என்பதும், அவர்களில் ஒருவர் இந்தச் சட்ட மன்ற உறுப்பினராகவே இருந்தார் என்பதும் நம் எல்லோருக்கும் தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம் எங்கள் கட்சி ஆட்சியில் இருந்த போது எவ்வளவு நேர்மையாகவும், பாரபட்சம் அற்ற முறையிலும் நடந்துகொண்டிருக்கிறது என்பதைத்தான் விளக்கும்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** அவரது ஆட்சி நேர்மையானதா, பாரபட்சமற்ற முறையில் நடந்துகொண்டதா என்பதைவிட எப்படிப்பட்டவர்கள், எப்படிப்பட்டவர்களை அவர்கள் தங்கள் கட்சியில் வைத்துக் கொண்டிருந்தார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்களும்கூட இன்னும் ஐந்து வருடத்தில் போகப்போக யார் யார் உங்களிடத்தில் இருப்பார்கள் என்று பார்த்துக் கொள்ளலாம். இந்தக் கொள்முதல் சரியாக நடக்க வேண்டுமென்றால் கறுப்பு மார்க்கெட் இல்லாத நிலைமையை செய்தாக வேண்டும். சர்க்கார் இந்த தானிய வர்த்தகத்தையே எடுத்துக்கொள்ள வேண்டும். ரைஸ் மில்களை எல்லாம் சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும். இன்றைக்கு கொள்முதல் கெடுபிடியாக இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு சின்னக் கதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தாராம். அவர் ஓர் உத்தரவு போட்டாராம். "நான் கொடுக்கிற அளவு நெல்லுக்கு அதே அளவு அரிசி கொடுக்கவேண்டும்" என்பதாக. ராஜா உத்தரவு. ஆகவே ஜனங்களும் அவர் கொடுக்கிற நெல்லுக்கு அதே அளவு அரிசி கொடுத்து வந்தார்களாம். தன் மகன் பட்டத்திற்கு வந்தபோது அந்த ராஜா தன் மகனைப் பார்த்து, "நீயும் இந்த வகையில் நீதி பரிபாலனம் செய்யவேண்டும்" என்று சொன்னாராம். மகன் பட்டத்துக்கு வந்தவுடன்—நெல்லை கொடுத்து அதே அளவு அரிசியை பெறுவானேன். நாம் உமியைக் கொடுத்து அதே அளவு அரிசி தரவேண்டும் என்பதாக உத்தரவு போடுவோம் என்று உத்தரவு போட்டானாம். அந்த அளவு முந்திய சர்க்காரைவிட இந்த சர்க்காரில் கொள்முதல் கொள்கை வளர்ந்து இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** வேடிக்கையான முறையில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு சிறு விளக்கம். இந்தக் கதையை மேல் அவையிலும் சொன்னார்கள். இவர் சொல்லி அவர் சொன்னாரா? அல்லது அவர் சொன்னதைக் கேட்டு இவர் சொல்கிறாரா? (சிரிப்பு).

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மேல் சபையில் சொன்னது எனக்கு தெரியாது. கதை சொல்ல எனக்கும் தெரியும் இப்போதுள்ள ஆட்சி அந்த முறையில்தான் இயங்கி வருகிறது.





மாணவ சமுதாயம் நல்ல முறையில் இருக்க வேண்டும். அவர்கள் அரசியலில் கலக்கக் கூடாது, அவர்களை அரசியல் கட்சிகளும் அரசியலுக்கு இழுக்கக் கூடாது. இதை நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றுள்ள நிலையில் அவர்கள் எவ்வாறு இழுத்துச் செல்லப் படுகிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது வருத்தப்படவேண்டிய நிலை இருக்கிறது. கல்லூரி மாணவர்களை விடுங்கள். உயர்நிலைப் பள்ளி மாணவர்களிடத்திலே ஆசிரியர்கள் எந்த வகையில் மனத்தைக் கெடுத்து வருகிறார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ளாது இருக்க முடியாது. கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் குறிப்பாகக் கொண்டு வருகிறேன். இது தற்போது நடந்த விரிட்சை வினாத்தாள். அதுவும் சத்தியமங்கலம் சர்க்கார் உயர்நிலைப்பள்ளியில், 7-வது வகுப்பு 'சோஷியல் ஸ்டடீஸ்' சப்ஜெக்டின் வினாத்தாள். அதிலே உள்ள ஒரு கேள்வியைப் பாருங்கள். "தமிழக அரசியலில் 1967-ம் ஆண்டு நிகழ்ந்த மாறுதல் யாது?" இது ஒரு கேள்வி. இன்னொரு கேள்வியைப் பாருங்கள். "கோபிச்செட்டிபாளையம் தொகுயில் தேர்தலுக்கு நின்று தோற்றுப்போன மத்திய அமைச்சர் பெயர் என்ன? அவரைத் தோற்கடித்தவர் பெயர் என்ன?"

இந்த நிலையில் உயர்தர ஆரம்பப் பள்ளியில் படிக்கிற 7-வது வகுப்பு மாணவனுக்கு ஆண்டு நிறைவுப் பரிட்சையில் கேள்வி கேட்கப்படுகிறது என்றால், நான் பொதுமக்களுக்கு விட்டு விடுகிறேன், படித்த அறிவாளிகளுக்கு விட்டுவிடுகிறேன். இப்படி மாணவ சமுதாயத்தின் மனம் கெடுக்கப்பட்டால் இந்த நாட்டில் ஒரு குழப்பத்தைத் தவிர வேறு ஒன்றும் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதிரிச் செய்ததின் உள்நோக்கம் என்ன? அவர்கள், அதை ஆதரிப்பார்களோ என்ற சந்தேகம் தான் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் தடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆலோசனை. இப்படிக் கொடுக்கப்படுகின்ற தகவல்களையெல்லாம் வைத்து விசாரித்து இனிமேலாவது வளராமல் தடுக்க வேண்டும். கெட்ட எண்ணங்களை மக்களிடத்திலே உருவாக்கக் கூடாது. மத்திய அமைச்சரை தோற்கடித்த நபர் யார், தோற்ற மத்திய அமைச்சர் யார் என்று எல்லாம் கேள்விகள் பள்ளிகளிலே கேட்பது நல்ல முறையில்லை. உலகத்திலே வேறு எந்தப் பகுதியிலும், எந்தக் கல்லூரியிலும், எந்தப் பள்ளியிலும் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்காது. கல்வியமைச்சர் அவர்கள் பாடங்களையெல்லாம் ஏதோ திருத்தியமைக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்படித் திருத்தியமைக்கும்பொழுது இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு அந்தப் பகுதியை விட்டுவிட்டு, வேறு பகுதிக்குப் போகிறேன்.

இப்பொழுது இருக்கின்ற பிரச்னையெல்லாம் நாட்டிலே தொழில் வளர்ச்சியையும், விவசாய உற்பத்தியையும் பெருக்க வேண்டும் என்பதுதான். முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள்.

நாங்கள் விலைவாசியைக் குறைக்கும்வரை சம்பளம் வாங்க மாட்டோம் என்று. எதிர்க்கட்சியிலே இருந்து அதைப்பற்றிக் கேட்டால் பதில் சொல்லவேண்டியது அவர்களுடைய கடமை. ஆனால் அவர்கள் இப்பொழுது சொல்கிறார்கள் "நீங்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று".

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** அதுதான் இல்லை நான் அப்படிச் சொல்லவில்லை. சம்பளம் இல்லாமல் வேலை செய்வோம் என்று சொன்னதை நாங்கள் கவனித்துக் கொண்டிருக்கிறோம். அப்படிச் செய்யவேண்டுமென்று வலியுறுத்துகின்ற நீங்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளாமல்போனால் உங்களைப் பற்றி மக்கள் பரிதாபப்படுவார்கள் என்றுதான் சொன்னேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதலமைச்சர் அவர்கள், மக்கள் எங்களைப்பற்றி அப்படி நினைப்பார்கள் என்று சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்திலே சம்பளம் இல்லாமல் நாங்கள் வேலை செய்வோம் என்று சொன்னார்களே, சம்பளமே இல்லாமல் வேலை பார்க்கிறேன் என்றால், எப்படி ஐயா சம்பளம் இல்லாமல் வேலை செய்வார்கள் என்று பொதுமக்கள் சந்தேகமாகப் பேசமாட்டார்களா ?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** அதைப்பற்றியும் நான் ஒன்று சொல்லவேண்டும். பொதுமக்களிடத்திலே சொல்லி, நான் அவர்களிடத்திலே பணத்தைப்பெற்றுக் கொள்வதற்கான நம்பிக்கை இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அந்தப் பணத்தைப்பற்றித்தான் சொல்கிறேன். முன்பு பாளையக்காரர், திரு. பூவராகன் இவர்கள் எல்லாம் தேர்தல் நிதி வசூல் செய்தார்கள், அதற்காக ரசீது கொடுத்தார்கள். அவர்கள் அப்படி ரசீது கொடுத்தும்கூட அந்த நேரத்தில் அவர்கள் எல்லாம் ஆட்சேபித்தார்கள். அதையே தவறு என்று சொன்னார்கள். ஆனால் இன்று பொதுமக்களிடம் பணம் பெறுவோம் என்கிறார்கள். போலீஸ்காரன்கூட என்னை சும்மா விட்டுவிடுங்கள், நான் எப்படியாவது வாங்கிப் பிழைத்துக்கொள்கிறேன் என்று சொல்லக்கூடும். நான் இங்கே சொல்வது சம்பளத்தைப்பற்றி மட்டுமல்ல, இங்கே வந்திருக்கின்ற எல்லா உறுப்பினர்களும் வசதியுள்ளவர்களா ? ஏழைகளும்கூட வந்திருப்பார்கள். ஆகவே சம்பளம் வாங்கவேண்டும் என்பது கௌரவத்தை ஏற்படுத்தவேண்டுமென்பதற்காகத்தான் இருக்கிறது, இந்த 250 ரூபாயும், 1,000 ரூபாயும் அந்த நோக்கத்தில்தான் தரப்படுகிறது. ஆனால் சம்பளமே வாங்காமல் நாங்களும் அப்படிச்செய்ய வேண்டுமென்றால் ஒவ்வொரு வீட்டிலும் உப்பு, மிளகாய் போன்றவற்றை வாங்கிக்கொள்ள நாங்கள் எல்லாம் தயாராக இருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் தொழிலிலும், விவசாயத்திலும் சிறந்த முறையிலே முன்னேற வேண்டுமானால், மக்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் ஏற்படாமல் நல்ல முறையில் செய்ய வேண்டும்.





**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சம்பளத்தைக் குறைத்துக்கொள்வதினாலே நாட்டிலே பெரிய பிரச்னை தீர்ந்து விடாது. நாட்டு மக்கள் படுகின்ற தொல்லைகளை நாமும் உணர்ந்து இருக்கிறோம் என்று காட்டிக்கொள்வதற்குத்தான் 'ஆஸ் எ டோக்கன்' சம்பளத்தைக் குறைத்துக்கொள்வோம் என்று சொன்னோம், இதை மனிதாபிமானமாகக் கருதவேண்டும். கவர்னர் அவர்கள் சம்பளத்தில் ஒரு பகுதியைக் குறைத்துக் கொண்டார்கள், அட்வகேட் ஜெனரல் அவர்கள் சம்பளத்தில் ஒரு பகுதியைக் குறைத்துக்கொண்டார்கள். பப்ளிக் பிராஸிகியூடர் அவர்களும் மற்றும் உள்ள மத்திய சர்க்காரிலே உள்ள அதிகாரிகளும் சம்பளத்திலே ஒரு பகுதியைக் குறைத்துக்கொண்டார்கள். சம்பளத்திலே குறைத்துக்கொண்ட தொகையுடன், மக்களுக்கு தேவைப் படுகிற பணத்தை வைத்துக் கணக்குப் பார்த்தால் அது ஒட்டுக் குக்கூட வராது. மக்கள் கஷ்டப்படுகிறபொழுது நாமும் அதை உணர்ந்திருக்கிறோம் என்பதைக் காட்டிக் கொள்ளலாம் என்ற மனிதாபிமானத்தோடுதான் அதைத் தெரிவித்தோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படியானால் சட்டசபையிலே அதற்காக ஒரு மசோதா அவர்கள் கொண்டுவந்தால், நாங்கள் அதற்கு பரிபூரணமாக ஒத்துழைப்புக் கொடுப்போம்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** காங்கிரஸ் நண்பர்களுடைய முழு ஆதரவு இருக்குமானால் வருகின்ற ஜூன் மாதத்திலே அதைக் கொண்டுவருவோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாங்கள் அந்த மசோதாவிற்கு ஆதரவு தருகிறோம்.

தொழில் துறையை எடுத்துக்கொண்டால் சென்னை மாநிலத் திலே சிறந்த முறையிலே வளர்ந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. எத்தனையோ பேட்டைகள், எவ்வளவோ அபிவிருத்திகள் பார்க்கிறோம். இந்த ஸ்டேட் டிரேடிங்கை எடுத்து நடத்துங்கள் என்று சொன்னபொழுது முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், "சட்டியிலே ஒன்றும் இல்லை, சுரண்டி சுரண்டி பார்த்தோம், ஒன்றும் இல்லை, இருந்தால் தானே வரும்" என்று சொன்னார்கள். நாங்கள் வெறும் சட்டி யையா வைத்திருந்தோம் ? 10 வருஷத்திற்கு முன்னாலே வருமானம் 60 கோடியாக இருந்தது. இன்று 204 கோடி ரூபாய் வரை உயர்ந் திருக்கிறது. துண்டு விழுகிறது என்று சொன்னார்கள். இதற்கு முன்பெல்லாம் துண்டு விழுகின்றபொழுது இந்தச் சட்டசபையில் அவர்களில் யாராவது இல்லாமலா இருந்தார்கள்? அவர்களுடைய தீர்மானங்களையும் வைத்துக்கொண்டுதானே துண்டு விழுவது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதிலே தவறு, இதிலே தவறு என்று சொல்லாமல் இருக்கவேண்டும். விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்தவேண்டுமானால் விவசாயிகளைக் கௌரவமான முறையிலே நடத்த வேண்டும். 'உண்டி கொடுத் தோரே உயிர் கொடுத்தார்' என்றெல்லாம் சொல்லப்படுகிற

விவசாயிகளுடைய கௌரவம் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். அந்த நிலையிலேதான் அவர்களுக்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் கொடுக்க வேண்டும். என்னுடைய நண்பர் திரு. கனகசபை அவர்கள் சொன்னார்கள், எதிர்க்கட்சித் தலைவர் அதிகமாகச் சொல்வார்கள் என்று; அதிகமாகச் சொல்ல வேண்டுமென்ற ஆசை எனக்கு இல்லை, இருக்கின்ற நிலையைத்தான் எடுத்துச் சொல்லுகிறேன். 3 படி அரிசி வந்தால் சுபிட்சம் வந்துவிடும் என்று சொல்ல முடியுமா? 3 படி அரிசி இருந்த காலத்திலே சுபிட்சம் இருந்ததா என்பதைப் பார்க்க வேண்டும். 1939-40 ஆம் வருடத்திலே 3 படி அரிசிதான் விற்றது. காங்கிரஸ் அல்லாத மந்திரிசபைதான் அமைத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது வங்காளத்திலே 30 லட்சம் பேர்கள் செத்தார்கள்; 3 படி அரிசி விற்றுக்கொண்டிருந்த காலத்திலே (மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை: அதிகமாகச் சாப்பிட்டதாலா?) இல்லை, சாப்பாடு இல்லாததாலே செத்தார்கள். காரணம் என்னவென்றால் மக்களுக்கு வேண்டிய தேவைப்பொருள்கள் கிடைக்கவில்லை. விவசாயம், மிக மிகக் கீழ்நிலையில் இருந்தது. அப்பொழுது உற்பத்திச் செலவு 35 ரூபாய் ஆக இருந்தது. ஆனால் இப்பொழுது 400 ரூபாய்க்கு வந்திருக்கிறது. நாம் அதிகமாகக் கொடுப்பதற்குத் தகுந்தவாறு நியாயமான விலையும் இருக்க வேண்டும். உண்டாக்குபவன் நிலையை வைத்துத்தான் விலை நிர்ணயம் செய்யவேண்டும், உண்பவனுடைய நிலையை வைத்து விலை நிர்ணயம் செய்யக்கூடாது. 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்' என்று பாரதியார் பாடினார். உழவு சிறந்தால்தான் எல்லாமே சிறக்க முடியும் என்பது என்னுடைய கருத்து மட்டுமல்ல, உலகத்திலே உள்ள எல்லோருடைய கருத்தும் அதுதான். அமெரிக்காவுக்கு நான் 1932 ஆம் வருஷத்திலே சென்றிருந்தேன். அப்பொழுது டென்னஸிவேலிக்கு நான் சென்றபொழுது பார்த்தேன், அங்கே சராசரி ஒருவருக்கு வருமானம் 150 டாலர்தான் இருந்தது. அது அப்பொழுது நமக்கு 300 ரூபாய்க்குச் சமமாக இருந்தது. ஆனால் இன்றைக்கு அங்கே 3,000 டாலர் சராசரி வருமானம் வருகிறது. ஒரு தலைக்குச் சராசரி வருமானம் அவ்வளவு அதிகம் எப்படி வந்தது? அங்கேயுள்ள மக்கள் உழைத்தார்கள், உற்பத்தியைப் பெருக்கினார்கள், அரசாங்கம் ஆதரவு கொடுத்ததாலே.

1939-ம் ஆண்டு நிலவரப்படி ஒரு ஏக்கருக்கு 35 ரூபாய் உற்பத்திச் செலவு ஆகும்படியான ஒரு திட்டத்தைக் கொடுப்பார்களேயானால் நாளைக்கே ரூபாய்க்கு 3 படி அளக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். கலியாணம் செய்தால் பைத்தியம் தீரும், பைத்தியம் தீர்ந்தால் கலியாணம் நடக்கும் என்பது போல் இந்தப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. அரிசியை வைத்துத்தான் உலகம் சுற்றிக் கொண்டிருக்கிறது; அரிசி விலையை வைத்துத்தான் பொருளாதாரத் தத்துவம் அமைந்திருக்கிறது என்பது 25 வருஷத்திற்கு முன்பு சரியாக இருந்திருக்கலாம். அரிசியின் விலை எந்த





அளவுக்குக் குறைந்தாலும் மற்றப் பொருள்களின் விலை குறைக்கப்படுவதில்லை. நம்முடைய வியாபாரிகள், நம்மைச் சுற்றி இருக்கும் வர்த்தக சமூகத்தினர் சீக்கிரமாக லாபத்தைப் பெருக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தோடு இருக்கும்படியான காரணத்தால் கெட்ட சூழ்நிலைகள் உருவாகிக் கொண்டிருப்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். முன்பு வியாபாரிகள் மூட்டைக்கு இரண்டணா கிடைத்தால் போதுமென்று நினைத்தார்கள்; இன்று மூட்டைக்கு 20 ரூபாய் கிடைத்தால்தான் லாபம் என்று கருதுகிறார்கள். தொழிலாளர்களிடையே கூட இப்போது உழைப்புக்கு ஊதியம் என்ற நிலை கிடையாது; உழைக்காமலே ஊதியத்தைப் பெற வேண்டுமென்று நினைக்கிறார்கள். கடமையைச் செய்து உரிமையைப் பெற வேண்டுமென்ற நிலை இல்லை; கடமையைச் செய்யாமல் உரிமையைப் பெற வேண்டுமென்று நினைக்கிறார்கள்.

உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொன்னால், விவசாய உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று சொன்னால், கவர்னர் பெருமான் உரையிலே சொல்லப்பட்டிருப்பது போல் அம்மோனியம் சல்பேட்டைப் போட்டு விட்டாலோ, சூப்பர் பாஸ்பேட்டைப் போட்டுவிட்டாலோ உற்பத்தியாகிவிடாது. அதை மட்டும் சொல்லிப் பயன் இல்லை. நான் என்னுடைய விவசாய அனுபவத்தில் இருந்து சொல்லுகிறேன். அம்மோனியம் சல்பேட், சூப்பர் பாஸ்பேட் எல்லாம் போடாமல் மூன்று பங்கு நான் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறேன். கெமிகல் பர்டிலைசர் என்று சொல்லுகிறார்கள். நம்முடைய உடம்பே ஒரு கெமிகல் பர்டிலைசர்தான். மக்களுடைய மலஜலத்தைக் கம்போஸ்ட் உரமாக்கிப்போட்டால், 200 ஏக்கருக்குப் போதுமான அளவுக்கு 150 ரூபாய் மதிப்புள்ள அம்மோனியம் சல்பேட் கிடைக்கும். நான் காந்தியக் கொள்கைத் தத்துவத்தில் இருக்கிறவன். செயற்கை உரங்கள் இல்லாமல், இயற்கை உரத்தைப் பயன்படுத்தி நம்முடைய உற்பத்தியைப் பெருக்குவதன் மூலந்தான் நம்முடைய பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று திட்டமாக, உறுதியாக, அனுபவ வாயிலாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த மாதிரி நிலையில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொன்னால் உணவு உற்பத்திக்கு அடிப்படையாக இருக்கும்படியான அரிசி பாக்கி இருக்கும் செலவுகளைச் சிக்கனப்படுத்த வேண்டும். விலையேற்றத்தை ஒரு இடத்தில் கத்தரித்துத்தான் ஆக வேண்டும். பஞ்சப்படி போன்றவைகளை ஒரு இடத்தில் கத்தரித்துத்தான் ஆக வேண்டும். அதைக் கத்தரிக்க என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன?

இந்த அரசாங்கத்தின் சிக்கன நடவடிக்கை பற்றி ஆராய்வதற்காக ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அந்த அதிகாரியினுடைய அறிக்கை இதுவரை வந்ததாகத் தெரியவில்லை. அதிகாரியின் அறிக்கையை வைத்து எந்தெந்த இடத்தில் சிக்கனம் செய்யவேண்டுமென்று பார்க்கும்போது இரண்டு வகையிலே

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 மார்ச் 30

சிக்கன நடவடிக்கையை மேற்கொள்ளலாம். இப்போது இருக்கும்படியான உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கையைக் குறைத்து மற்றவர்களை ரிட்ரென்ச்மென்ட் செய்யலாம்; இருக்கும்படியான சம்பளத்தைக் குறைக்கலாம். நான் ஒன்று சொல்லுகிறேன். இரண்டும் வேண்டாம். ரிட்ரென்ச்மென்ட் என்று சொன்னால் உடனே உங்கள் கூட்டணியில் உள்ள கம்யூனிஸ்ட் தோழர்கள் உண்ணாவிரதம் ஆரம்பித்து விடுவார்கள். நான் சொல்ல விரும்புவது—சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவு எடுக்க வேண்டும். வேலையைத் திறமையாகச் செய்யவேண்டும்; ஒழுங்காகச் செய்ய வேண்டும்; நன்றாகப் பணிபுரிய வேண்டுமென்ற எண்ணத்தோடு இரண்டு பங்கு வேலை செய்தால் அதுவே சிக்கனத்திற்கு அறிகுறி. முன்பு ஓ.பி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நடந்த ஒன்று எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. செகரடேரியட்டில் ஒருவர் ஒரு நாளைக்கு எத்தனை ஃபைல்களை டிஸ்போஸ் பண்ணுகிறார்கள் என்ற கணக்கைப் பார்த்தபோது ஒரு நாளைக்கு 3 பைல்களை டிஸ்போஸ் பண்ணுவதாகக் கணக்கு வந்தது. காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணி வரை ஒருவர் 3 பைல்களைத்தான் டிஸ்போஸ் பண்ணுகிறார்கள் என்றால் பொதுமக்கள் பணம் எவ்வளவு வீணாகிறது என்பதை நாம் புரிந்து கொள்ளமுடியும். உடனே, முதலமைச்சர் அவர்கள் 20 வருஷ காலமாக காங்கிரஸ் ஆட்சி இருந்ததே, நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கலாம். அப்போது முயற்சி செய்திருந்திருக்கலாம்; தவறியிருக்கலாம். இப்போது இருக்கும்படியான உங்களை அதைத் திறம்பட செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசாங்க அதிகாரிகள் எல்லாம் ஓரளவுக்குச் சுற்றுப் பிரயாணத்தைக் குறைத்துக் கொண்டாலே செலவிலே சிக்கனம் ஏற்படும். ஒரு அமைச்சர் ஒரு இடத்திற்கு வருகிறார் என்றால் சுற்றுப்புறத்திலுள்ள எல்லா அதிகாரிகளும் அங்கே வர வேண்டுமென்ற நிலை இல்லாமல் இருந்தால் ஓரளவு சிக்கனம் ஏற்படும். இந்த மாதிரி சிறிது சிறிதாகச் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்ற கருத்தை இந்த அமைச்சரவை முன் வைக்கிறேன்.

இப்போது இருக்கும்படியான சூழ்நிலையில் கொள்முதல், விநியோகம் பொறுத்தவரை ஒருசில வார்த்தைகளைக் கூறி முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். கொள்முதல் செய்வதை வேண்டாமென்று சொல்லவில்லை. பத்து படி அரிசி வரை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்லலாம் என்று உத்தரவு பிறப்பித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். எல்லோருக்குமே சர்க்கார் விநியோகிப்பதாக இருந்தால் இது தேவையில்லை. விநியோகத்தில் சர்க்காருடைய பொறுப்பு ஓரளவுக்கு மட்டுமே இருப்பதால் அரிசி கிடைக்காத மக்களுக்கு அரிசி கிடைக்கவேண்டுமென்பதற்காகச் செய்த இந்த ஏற்பாட்டை வரவேற்கிறேன். கொள்முதல் செய்வதிலே கம்பல்சரி ப்ரொக்யூர்மென்ட், லெவி சிஸ்டம் என்று இரண்டு முறை இருக்கிறது. கம்பல்சரி ப்ரொக்யூர்மென்ட் என்றால்,



1967 மார்ச் 30] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

தேவைக்குப் போக பாக்கி இருப்பதை எல்லாம் எடுத்துக் கொள்ளும் முறை. அந்த முறை சரியாக நடந்ததாகத் தெரியவில்லை. அதில் தலையிடுவது மூலமாகத்தான் கட்சிப் பாகுபாடு, ஆள் பாகுபாடு, ஏழை பணக்காரன் என்ற நிலை எல்லாம் வருகிறது. அதற்காகத்தான் லெவி சிஸ்டத்தில் கொள்முதல் செய்தால், குத்து மதிப்பாக ஒருவனுக்கு இவ்வளவு ஏக்கர் இருந்தால் இத்தனை மூட்டை கொடுத்து விட வேண்டும் என்று செய்தால் அதிலே சிரமம் இருக்காது. இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஊரிலும் 100 பட்டாதார்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்களுக்குள்ளேயே கருத்திருமன் கொடுத்தாரா, அவர் கொடுத்தாரா, இவர் கொடுத்தாரா என்ற சந்தேகம் அதிகமாகிக் கொண்டே போகும். ஆகவே, ஒவ்வொரு பட்டாதாரரும் இவ்வளவு ஏக்கர் இருந்தால் இவ்வளவு நெல் கொடுத்து விட வேண்டுமென்று மக்கள் அறியும்படி அறிவித்து விட வேண்டும். அப்படிச் செய்து விட்டால் அவ்வாறு கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறதா, எல்லோரும் கொடுத்திருக்கிறார்களா என்று பாரபட்சம் இல்லாமல் மக்கள் பார்த்துக் கொள்வார்கள். இப்போது கொள்முதல் செய்யப்படுகிறதே, ஏன் சர்க்கார் போன மாதங்களில் கொள்முதல் செய்யவில்லை என்று கேட்கலாம். இப்போது அறுவடை கொஞ்சம் அதிகமாகத்தான் வந்திருக்கிறது. சட்டப்படி கணக்குச் சொல்லவேண்டுமென்றால் அறுவடை செய்து அளந்த பிறகுதான் சொல்ல முடியும். அறுவடை ஆகாமலே குத்து மதிப்பாக இவ்வளவு வரும் என்று சரியாகச் சொல்ல முடியாது. ஆகவே, முதலிலே அக்விசிஷன் நோட்டீஸ் கொடுக்கவேண்டும். சட்டப்படி இத்தனாம் தேதிக்குள் விவசாயிகள் தங்களுடைய கணக்கை அறிவித்துவிட வேண்டுமென்று நோட்டீஸ் கொடுக்க வேண்டும். ஒரு மாதத்திற்குள் அளிக்கவில்லை என்றால் பிறகு அக்விசிஷன் அதிகாரிகள் போய எடுத்துக் கொள்ளலாம். அதிலும் முறையாக ரெவினியூ ஆபீசர்கள், தாசில்தார்கள் போய் எடுத்தால் பாதகம் இல்லை. போலீசார் தலையிடாமலிருக்கக்கூடிய சூழ்நிலை இருப்பது நல்லது. மூட்டையை அடுக்கி வைத்து விட்டு பூஜை அறை என்று போர்டு போட்டு விடுவதாகச் சொன்னார்கள். அந்த மாதிரி தவறுகள் நடப்பதற்கில்லை என்று நான் சொல்வதற்கில்லை. அவ்வாறு தவறு செய்கிறவர்கள் பூஜை அறை என்று போட்டு விட்ட காரணத்தால் அங்கு சென்று எடுக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. மனிதனுக்குப் பூஜை இல்லாமல் அந்த பூஜையை நினைத்துப் பயன் இல்லை. அந்த நிலைமையிலும் கண்ணியமாக நடக்க வேண்டும்; கவுரவமாக நடக்க வேண்டும். லெவி சிஸ்டம் ஆப் ப்ரொக்யூர்மென்ட் வைத்து விட்டு மீதியை அவர்கள் வைத்துக் கொள்வதை தடுக்கக்கூடாது. கிராமத்தில் இருப்பவர்களுக்குக் கார்டு கொடுக்கப்படுவதில்லை. இன்று கூலிகள் அதிகமாகியிருக்கின்றன. பாடுபட்டு உற்பத்தியைப் பெருக்கக் கூடிய விவசாயிகளை மிரட்ட வேண்டாமென்று விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற் பகல் 12-30 மக்களின் உணவுப் பஞ்சம் தீரவேண்டும். நம்மால் எவ்வளவு உற்பத்தி செய்யமுடியுமோ அந்த அளவிற்குச் செய்ய வேண்டும் என்று எல்லோரும் நினைக்க வேண்டும். நாட்டு மக்களின் பசி தீரவேண்டும். நமது நாட்டு குழந்தைகளின் வறுமை தீர வேண்டும், மக்களின் அறியாமை தீரவேண்டும் என்பதற்காக நாம் எல்லோரும் ஒத்துழைத்தாகவேண்டும் என்ற நிலையில் கட்சிகளை எல்லாம் மறந்துவிட்டு மக்களின் நலனுக்காக நாம் இருக்கிறோம் என்று நினைத்து எல்லோரும் எல்லாச் செல்வமும் பெற்று வாழ வேண்டும் என்று நினைக்கவேண்டும். எதிர்க் கட்சி என்றால் எதிர்ப்பதற்காக இருக்கவேண்டும் என்பதில்லை. கவர்னர் அவர்கள் உரையில் கூறியுள்ளதை நிறைவேற்ற வேண்டுமென்ற அளவில் நாங்கள் கொடுத்திருக்கக் கூடிய திருத்தங்கள் பிரகாரம் அதை சர்க்கார் நிறைவேற்றிக் கொடுத்தால் எங்கள் முழு ஆதரவையும் கொடுக்கிறோம் என்று சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் உரையின் பேரில் எல்லாக் கட்சிகளிலுள்ள அங்கத்தினர்கள் நல்ல பல கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் கவர்னர் அவர்கள் உரையை வரவேற்று அதற்கு நன்றி தெரிவித்திருக்கிறார்கள். எதிர்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள், "சில திருத்தங்கள் கொடுத்திருக்கிறோம். அந்த திருத்தங்களை இணைத்துக் கொண்டால் நாங்களும் வரவேற்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். கவர்னர் உரை மீது இதுவரை நடைபெற்ற விவாதத்தில் முக்கியமாக எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள் சில தலைப்புக்களின் கீழ் வருகின்றன. அந்தத் தலைப்புக்களின் அடிப்படையில் நான் சில பதில்களைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கான பதில்களை சொல்லிக்கொண்டு வரும்போது வேறு பல கருத்துக்களை பல அங்கத்தினர்கள் சொல்லியிருப்பார்கள் என்றாலும் அவற்றை எல்லாம் நான் புறக்கணித்துவிட்டேன் என்று பொருள் அல்ல. அதற்கெல்லாம் பதில் கூற போதுமான நேரம் இல்லாததால் அந்தக் கருத்துக்களை எல்லாம் எடுத்துப் பேசவில்லையே தவிர எல்லாக் கருத்துக்களையும் நான் மிக்கக் கவனத்தோடு கேட்டுக் கொண்டிருந்தேன். நான் கேட்கமுடியாத நேரத்தில் குறிப்பு எடுத்து வரச் சொல்லி அதையும் படித்துப் பார்த்திருக்கிறேன் என்று சொல்லி அந்தக் கருத்துக்களையும் நிச்சயமாகக் கவனிப்பேன் என்று முதலில் அவையில் உறுதி கூறுகிறேன்.

கவர்னர் உரை இங்கு அவை முன்னால் வைக்கப்பட்டிருக்கிற நேரம் ஒரு பொதுத் தேர்தல் முடிவடைந்து ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் எதிர்க்கட்சியாகவும், எதிர்க் கட்சியில் இருந்தவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறவர்களாகவும் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிற நேரமாகும். இந்த மாறுதல் ஏற்பட்டிருக்கிற நேரத்தில் நம் விவாதம் இவ்வளவு கூட காரசாரமாக இருக்காது என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. என்னைப் பொறுத்த





வரையில் நாங்கள் எல்லாம் எதிர்பார்த்ததை விட காரசாரம் குறைவாக இருப்பது மட்டுமல்லாமல் ஒத்துழைக்கிற மனப்பான்மை மிகுந்திருப்பதற்காக என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் கவர்னர் உரையிலுள்ள கருத்துக்களிலிருந்து பலர் பேசிய பேச்சுக்கள் சிறிது அப்பால் விலகிச் சென்றிருக்கின்றன. முதல் முறையாக இருப்பதால் அப்படி விலகிச் சென்றிருக்கலாம் என்று நினைக்கிறேன். கவர்னர் உரை மீதுள்ள விவாதத்தில் உரையாற்றியவர்களில் பெரும்பாலானவர்கள் அதிலும் குறிப்பாக காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் பெரும்பாலோர் முதலில் கவர்னரைப் பற்றியே பேசியிருக்கிறார்கள். இரண்டாவதாக, என்னைப் பற்றி பேசியிருக்கிறார்கள். மூன்றாவதாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி பேசியிருக்கிறார்கள். நான்காவதாக, அந்த உரையில் எதுவுமே இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஐந்தாவதாக, இதில் புரட்சிகரமான திட்டங்கள் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். ஆறாவதாக, தேர்தல் வாக்குறுதிகள் எல்லாம் என்னவாயிற்று என்று சொல்லியிருக்கிறார்கள். ஏழாவதாக, உணவுப் பிரச்சினையைப் பற்றி பேசியிருக்கிறார்கள். எட்டாவதாக, கொள்முதல் பற்றி பேசியிருக்கிறார்கள். ஒன்பதாவதாக, எங்களுக்கும் மற்ற கட்சிகளுக்கும் உள்ள தொடர்பைப்பற்றி பேசியிருக்கிறார்கள்.

இதிலே, கடைசியில் உள்ளதை முதலில் எடுத்துக்கொள்கிறேன். ஏனென்றால் ரொம்ப வசீகரமான வார்த்தை 'ஹனிமூன்' என்பது. ஆகவே, அதிலிருந்து தொடங்கலாம் என்று கருதுகிறேன். ராஜாஜி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சுதந்திராக் கட்சிக்கும் இருந்த ஹனிமூன் ( It is over ) முடிந்து விட்டது என்று சொன்னதை வைத்துக் கொண்டு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அங்கத்தினர்கள், "ஆஹா, பார்த்தீர்களா! அவர்கள் உறவு முறிந்து விட்டது, முறிந்து விட்டது" என்று பேசினார்கள். வாலிபர்களாக இருக்கிறவர்கள் இந்த ஹனிமூன் காட்சியை படத்தில் பார்த்தால் இன்னும் கொஞ்ச நேரம் நடக்காதா என்று நினைப்பார்கள். வயது ஏற ஏற எவ்வளவு நேரம் இதைப் பார்த்துக் கொண்டிருப்பது, இது முடிந்து தொலைக்காதா என்று எண்ணுவார்கள். அந்த முறையில் சிலர் எங்களுக்குள் இருக்கிற அந்த உறவு முறிந்து போகாதா என்பதில் மிகுந்த ஆவல் கொண்டவர்கள். அவர்கள், எங்கள் உறவு எந்த அடிப்படையில் இருக்கிறது என்று அறிந்து கொள்ளாததால் இந்த உறவு முறிந்து போய்விடும், முறிந்து போய்விடும் என்று பேசிக் கொண்டிருக்கிறார்களே தவிர அந்த உறவு நான் துவக்க காலம் முதற்கொண்டு சொல்லி வருகிறபடி கொள்கை அடிப்படையில் அல்ல, கோட்பாடு அடிப்படையில் அல்ல. இரண்டு கட்சிகளும் ஒன்றாக இணைந்து விடவேண்டுமென்ற அடிப்படையில் அல்ல. ஒரு கட்சி சொல்வதை மற்றொரு கட்சி அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் அல்ல. ஆனால் காங்கிரசை எதிர்க்கிற கட்சிகள் தங்களை ஒன்றுக்கொன்று எதிர்த்துக்கொண்டு காங்கிரசிற்கு கிடைக்கக் கூடிய வலிவினை தங்களை அறியாமலேயே

அதிகமாக்கி விடக்கூடாது என்ற அடிப்படையில்தான் அந்த உறவு ஏற்பட்டது. சுதந்திராக் கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்த உறவு மட்டுமல்லாமல் நிர்வாகத்தில் செம்மை இருக்கவேண்டும் என்ற அடிப்படையிலேயும், ஊழல் ஊதாரித்தனம் அடக்கப்படவேண்டும் என்ற அடிப்படையிலும், இந்தி எதிர்க்கப்படவேண்டும் என்ற அடிப்படையிலும், நேர்மை வளர்க்கப்படவேண்டும் என்ற அடிப்படையிலும் அந்த உறவு வலுப்பட்டிருக்கிறது. சுதந்திராக் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் இவை இரண்டு மட்டுமல்ல, அகில இந்திய முஸ்லீம் லீகும் அந்த உறவின் அடிப்படையில் இணைந்திருக்கிறது. இடதுசாரி கம்யூனிஸ்ட்களும் இணைந்திருக்கிறார்கள். சோஷலிஸ்ட், பிரஜா சோஷலிஸ்டு இவையும் இதே அடிப்படையில் இணைந்திருக்கின்றன. வலதுசாரி கம்யூனிஸ்ட்கள் கூட மொத்தத்தில் இணையவில்லை என்றாலும் மொத்த சரக்கு பிடிக்காவிட்டால் சாம்பிள் சரக்கு மட்டும் வாங்குவதுபோல் சிற்சில இடங்களில் அவர்களுக்கும் எங்களுக்கும் கூட ஒரு உறவு ஏற்பட்டது. ஆனால், இந்த உறவு அவ்வளவும் கொள்கை அடிப்படையில் அல்ல என்பதை திட்டவட்டமாக தெரிவித்தான பிறகு கொள்கை அடிப்படையில் அவர்களுக்கும் எங்களுக்கும் கருத்து வேறுபாடு வந்தால் அவர்கள் எந்த உறவின் அடிப்படையில் இயங்கிக் கொண்டிருக்கிறார்களோ, அது சரியாக நடக்கிறது என்று அதைப் பாராட்டியிருக்க வேண்டுமே தவிர முறிந்து விட்டது, முறிந்துவிட்டது என்று பேசிக் கொண்டிருப்பது அப்படிச் சொல்வதின் மூலம் அது முறியாதா என்ற உங்கள் ஆவலைத்தான் அது காட்டுகிறது. இந்த ஒரு விஷயத்தில் உங்கள் ஆவலை நிறைவேற்ற முடியாதவனாக இருக்கிறேன் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். ராஜாஜி அவர்கள் ஹனிமூன் முடிந்துவிட்டது என்று சொன்னதை வைத்துக்கொண்டு இவர்கள் உறவு முறிந்துவிட்டது என்று சொன்னார்கள். ஹனிமூன் என்றாலே சினிமா முறைப்படி பார்ப்பீர்களானால் காதலனும் காதலியும் நல்ல மலர் தோட்டங்களில் ஓடி ஆடி சிற்றாறுகளில் விளையாடி ஒருவருக்கொருவர் சிந்து பாடி அவர்கள் மகிழ்கிறார்களோ இல்லையோ பார்க்கிறவர்களை மகிழச் செய்கிறார்கள். ஆனால் அந்த ஹனிமூனுக்குப் பிறகுதான் குடும்ப வாழ்க்கை ஆரம்பமாகிறது. குடும்ப வாழ்க்கை ஆரம்பமானால் இவ்வளவுதானா என்ற கேள்வியும், இது போதாதா என்ற களிப்பும், இவ்வளவு நேரமா என்ற கவலை தோய்ந்த கேள்வியும், என்ன செய்வது என்ற பெருமூச்சுக் கேள்வியும் இவை எல்லாம் எழும். அகமும் புறமும் இரண்டையும் அறிந்திருக்கிற கருத்திருமன் அவர்களுக்கு நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. அவர்கள் இப்போதுதான் கம்பர் விழாவிலிருந்து திரும்பி வந்திருக்கிறார்கள். நிரம்ப அங்கு பேசியிருப்பார்கள். ஊடலுக்குப் பிறகு கூடல், அதில்தான் தனி இன்பம் என்று சொல்லியிருப்பார்கள். ஆகவே ஹனிமூனுக்குப் பிறகுதான் குடும்ப வாழ்க்கை என்பதை ஒத்துக்கொண்டால் ராஜாஜி அவர்கள் ஹனிமூன் முடிந்துவிட்டது என்று சொன்னதன் பொருள் விளங்கும். நான் அவர்களை பாராட்டுவது, அவர்கள் எங்களைப் பாராட்டுவது, இதற்காக வாண வேடிக்கை நடத்துவது, விழா நடத்துவது, அவர்கள் சொல்வதை நான் மீறமாட்டேன் என்று அக்கூட்டத்தில் சொல்வது, இவன் நல்லபிள்ளை அப்படித்தான் நடப்பான் என்று அவர் சொல்வது என்றெல்லாம் நடக்கிற அத்தகைய அரசியல் ஹனிமூன் முடிந்து விட்டது. பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறவர்கள் அவரவர்கள் காரியத்தை ஒழுங்காக நடத்துவார்கள், எனக்கு சில கருத்துக்கள் தோன்றினால் அவர்களிடம் சொல்வேன், எவ்வளவுக்கெவ்வளவு ஏற்றுக்கொள்ள முடியுமோ அதை ஏற்றுக் கொள்வார்கள், ஒழுங்கான குடித்தனம் நடக்கும் என்ற பொருளில்தான் ஹனிமூன் முடிந்துவிட்டது என்று சொன்னார்கள். ஒரு உறுப்பினர் அதைப்பற்றிப் பேசினார்கள், அவர் பெயர் நினைவில் இல்லை, பெயர் நினைவில் இல்லாத காரணம் அவர்கள் சொன்ன கருத்து முக்கியமானதல்ல, ஆகவே யார் சொன்னார்கள் என்பது நினைவிலில்லை. முதற்கோணல் முற்றும் கோணல் என்று சொன்னார். ரொம்ப காலமாக இருக்கிற பழமொழி, முதற் கோணல் முற்றும் கோணல் என்பதையே திருப்பினால் இந்த விஷயம் பற்றி இவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிற கருத்தே முதற்கோணலாகயிருக்கிறது. ஆகையினால், முற்றும் கோணலாகத்தான் வாதங்கள் வரும். நான் அந்தப் பழமொழியை அவருக்குத் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். திரு. ராஜாஜி அவர்களிடத்திலே எங்களுக்குத் தொடர்பு இருப்பதைப் போலவே இடதுசாரி கம்யூனிஸ்டுகளிடத்திலே எங்களுக்கு நல்ல தொடர்பு இருக்கிறது. அவர்கள் சொல்லக் கூடிய கருத்துக்களில் மிகப் பெரும்பான்மையான கருத்துக்கள் எங்களுக்கு உடன்பாடான கருத்துக்கள். ஆனால் அவர்கள் சொல்லுகிற கருத்துக்களில் சில எங்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இல்லை. அதனால், எங்களுக்குள் உறவு கெட்டு விட்டது என்று பொருள் அல்ல.



அதே போல, பிரஜா சோஷலிஸ்டுகள், சோஷலிஸ்டுகள், திரு. ம.பொ.சி. அவர்களின் தமிழரசுக் கழகம்—இவர்கள் யாரிடத்திலும் நூற்றுக்கு நூறு கொள்கை அடிப்படையில் சேர்ந்துவிட்டோம் என்றால், இன்றைக்கு இங்கே இந்த அமைப்பு இருக்காது. ஒவ்வொருவரும் தனித்தனிக் கட்சிகளாக இருக்க மாட்டோம்; எல்லோரும் ஒரே கட்சியாக உட்கார்ந்திருப்போம். அவர்கள் தங்கள் தங்கள் தனித் தன்மையை இன்னும் வைத்துக் கொண்டிருப்பதே, நாங்கள் முழுதும் ஒன்றாகிவிடவில்லை. ஒத்துப் போகும் மனப்பான்மையோடு இருக்கிறோம் என்று காட்டுவதாக இருக்கிறது. இதைப் பற்றிப் பேசி, இதிலே முறிவு வந்து விட்டது. இதிலே பிளவு வந்து விட்டது என்று வீணாக மனப்பிராந்தியை வளர்த்துக் கொள்ளத் தேவையில்லை என்று கருதுகிறேன். இந்த மனப்பிராந்தி வந்ததற்குக் காரணம், இந்த அமைச்சரவை ஏற்பட்டவுடன், வேறு கட்சிக்காரர்கள் இல்லையே என்று அரசியல் வட்டாரத்தில் ஆவலாக இருந்தார்கள். சுதந்திராக் கட்சி பங்கு கேட்காதா, முஸ்லிம் லீக பங்கு கேட்காதா, இடதுசாரி கம்யூஸ்டுகள் பங்கு கேட்கமாட்டார்களா, அவர்களிடம் போய் 'என்ன வேலை செய்தீர்களே, பங்கு ஒன்றும் இல்லையா?' என்று

கேட்கலாமா 'ஆமாம் ஐயா' என்று சொல்லமாட்டார்களா, அதைத் தாண்டிவிடலாமா என்று—இங்கே உள்ள அங்கத்தினர்கள் அல்ல, இவர்களுக்கு நிறைய வேலை இருக்கிறது—வெளியே உள்ள கட்சிக்காரர்கள் வேலை செய்தார்கள். உறவு மிக நியாயமான அடிப்படையில் ஏற்பட்டிருப்பதால், அப்படி அணுகியவர்களுக்கே கூட அந்தந்த கட்சித் தலைவர்கள் 'அந்த காரியத்தை நாங்கள் கவனித்துக்கொள்வோம்; நீங்கள் அனுதாபம் காட்டத் தேவை இல்லை' என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு முறிவு ஏற்பட்டு விட்டதோ என்ற மனப்பிராந்தி கொஞ்சம் அடங்கிவிட்டது. அதன் பிறகு சபாநாயகர் தேர்தல் வந்தது. டாக்டர் ஹாண்டே அவர்கள் சுதந்திராக் கட்சியின் சார்பில் வேறொரு உறுப்பினரைத் தேர்தலில் ஈடுபடுத்தினார். உடனே "ஆஹா! ஆஹா! உறவு முறிந்து விட்டது" என்று முடிவு கட்டினார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் சுதந்திராக் கட்சியின் சார்பில் போட்டியிட இன்னொருவரை நிறுத்தியதை நான் வருத்தத்தோடு கவனிக்கவில்லை. மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். அவர்களுடைய மனதிற்கும், அவர்கள் கட்சியின் மனதிற்கும் நாங்கள் மேற்கொண்ட காரியம் சரியல்ல என்று தோன்றியபோது, அவர்கள் தங்களுடைய உள்ளத்திற்கு பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தான் போட்டியிட்டார்களே தவிர, அதிலேயே உறவு முறிந்து விட்டது என்று எண்ணிக் கொண்டிருக்கிறவர்களுக்கு நேற்றைய தினம் இங்கே சுதந்திராக கட்சிக்குத் தலைவராக இருக்கிற திரு. மூக்கையா தேவர் அவர்கள் நல்ல விதமான பதிலைத் தந்தார்கள்.

அது மட்டுமல்ல. இடதுசாரி கம்யூனிஸ்டுகளை எடுத்துக்கொண்டால், முதலிலிருந்தே அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 'பெரும் பலம் பெற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவைக்கு பங்கு கேட்காமல் தக்க ஒத்துழைப்புத் தருவோம். தவறாக நடந்தால் அதையும் கண்டிப்போம்' என்று மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள்.

தமிழரசுக் கழகத் தலைவர் பேசுகிற பேச்சுக்களில், கலந்து கொள்ளுகிற கூட்டங்களில் "திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையை ஆதரிக்கிறேன். ஆனால் அந்த அமைச்சரவை ஏதாவது காரியத்தைச் செய்யத் தவறினால் அதைக் கவனப்படுத்துவேன். ஏதாவது தவறான காரியத்தைச் செய்தால் தடுத்து நிறுத்துவேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விதமான மேற்பார்வை எங்களுக்குத் தேவை. அப்படிப்பட்ட மேற்பார்வை வேண்டுமென்பதற்காகத்தான் தோழமைக் கட்சிகளில் உள்ளவர்களில் சிலரை அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ளத் தேவையில்லை என்று கருதினோம். அவர்களும் எங்களோடு சேர்ந்து உட்கார்ந்துவிடுவார்களானால், மேற்பார்வை பார்க்கிற வேலை, இந்த நல்லவர்கள் இடத்தில் போய்விடும் என்பதற்காகத்தான். தோழமைக் கட்சிகளும் மந்திரி சபையில் சேராமல், அவர்கள் எதிரில் இருந்தால் தான் சில சமயங்களில் நாங்கள் தவறு செய்கிற போது, அன்பான முறையில், அறத்தின் அடிப்படையில், சொந்தத்தின் அடிப்படையில் எடுத்துச் சொல்லுவார்கள் என்பதற்காகத்தான் அவர்கள் அமைச்சரவைக்கு வெளியே இருக்க வேண்டுமென்று கருதினோம். எப்போதும் வீட்டுக்குப் பெரியவர்கள் தெருப்பக்கத்திலேதான் இருப்பவர்கள்; வாலிபர்களாக இருப்பவர்கள் உள்ளே இருப்பார்கள். யாராவது தேடி வந்தால் திண்ணையில் உட்கார்ந்திருப்பவர் சொல்லுவார் 'குளிக்கப் போயிருக்கிறான்; சாப்பிடப் போயிருக்கிறான் போல இருக்கிறது' என்று சொந்தத்தோடு சொல்லுவார். தோழமைக் கட்சிகளெல்லாம், பெரியவர்கள் பாசத்தோடு குடும்பத்தை நடத்திச் செல்வதைப் போல் எங்களை நடத்திச் செல்வார்கள் என்பதற்காகத்தான் அவர்கள் இங்கே இல்லையே தவிர, அவர்களிலே சிலர் அமைச்சரவையில் சேர்வார்களானால், நான் நிச்சயமாக நம்புகிறேன், எங்கள் வேலையும் எளிதாகும், அமைச்சரவையின் தகுதி, அதன் திறமை, அதன் தரம் கூட ஓரளவுக்கு உயரும் என்பதில் என்னைப் பொறுத்த வரையில், என்னுடைய நண்பர்களைப் பொறுத்த வரையில், ஐயத்திற்கு இடமில்லை. கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதாலேயே உறவு முறிந்து விட்டது என்று கருதத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





இந்த விவாதத்திலே முதலிலே பேசப்பட்டதை இப்பொழுது நான் எடுத்துக் கொள்கிறேன். கவர்னர் உரையின் மீதா விவாதம்? திராவிட முன்னேற்றக் கழகமா இதைச் சமர்ப்பிப்பது? இவர்கள் கவர்னரே வேண்டாமென்று சொன்னவர்கள் அல்லவா? கவர்னர் உரையையே திராவிட முன்னேற்றக் கழகம் பகிஷ்கரித்தது என்று மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூடச் சொன்னார்கள். பகிஷ்கரித்தது மட்டுமல்ல, அன்றைக்கு என் நண்பரும், அவர்களுடைய நண்பருமான அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் என் பேரில் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். வராமல் இருந்தது மட்டுமல்ல. போக மாட்டேன் என்று பத்திரிகையில் அறிக்கை கொடுத்ததும், கவர்னர் வடநாட்டிலிருந்து வருவதால் அந்த விழாவில் கலந்துகொள்ளவில்லை என்று எடுத்துச் சொன்னதும் ஒழுங்கை மீறுவதாகும் என்று ஒரு ஒழுங்குப் பிரச்சினையை இந்த மன்றத்தில் 1957-ல் கொண்டு வந்தார்கள். இதை கவனப்படுத்தியதன் காரணமாக நான் இதைச் சொல்லுகிறேன். கவர்னர் உரையை பகிஷ்கரித்ததற்குக் காரணங்கள் இரண்டு. ஒன்று, கவர்னர் பதவியே தேவையற்றது— இது ஒரு காரணம். இன்னொன்று திராவிட நாடு தனி நாடு ஆகவேண்டும் என்ற எண்ணத்தை வைத்துக் கொண்டு இருந்ததால் வடநாட்டிலிருந்து வரும் கவர்னரைத் தமிழகம் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை—இந்த இரண்டு காரணங்களால் அப்போது பகிஷ்கரித்தோம். கவர்னர் உரையை பகிஷ்கரித்தோமே தவிர, அந்த உரையின் மீது நடந்த விவாதத்திலே நாங்கள் கலந்து கொள்ளத் தவறவில்லை. அப்போது கூடக் கேட்டார்கள் "நீங்கள் கவர்னர் உரையை பகிஷ்கரித்து விட்டு, விவாதத்தில் கலந்துகொள்ள வரலாமா?" என்று. கவர்னர் உரை நிகழ்த்த வருகிறார் என்றால், அது ஒரு விழா, அது ஒரு சடங்கு, அது ஒரு சம்பிரதாயம். அதிலே

கலந்து கொள்ளாவிட்டாலும் கவர்னர் உரையிலே கருத்துத் தெரிவிப்பது எங்களுடைய கடமைகளுள் ஒன்று என்ற முறையில் நாங்கள் அதிலே கலந்து கொண்டோம்.

"நீங்கள் எந்தக் காரணத்திற்காக வேண்டுமானாலும் இருக்கட்டும், கவர்னரே வேண்டாமென்று சொன்னீர்கள் அல்லவா? ஆட்டுக்கு கழுத்திலே இரண்டு தொங்குகிறதே அது போல இந்த கவர்னர் பதவி என்று சொன்னவர்கள் அல்லவா?" என்று எங்களைப் பார்த்துக் கேட்டார்கள். ஆனால் அது இந்த அவையில் பேசி நிறைவேற்றப்பட வேண்டியதல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் மேடைகளிலும், கூட்டங்களிலும் கொடுத்துள்ள வாக்குறுதிகளை இந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டும். இந்தச் சபை மூலமாக நிறைவேற்றக்கூடிய வாக்குறுதிகள் சில. இந்தச் சபையில் உங்கள் ஒத்துழைப்போடு நிறைவேற்றக் கூடிய வாக்குறுதிகள் சில. மத்திய சர்க்காரின் ஒத்துழைப்போடு நிறைவேற்றக் கூடிய வாக்குறுதிகள் சில, மத்திய சர்க்கார் ஒத்துழைப்புக் கொடுத்தாலும், இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தித்தான் நிறைவேற்றக் கூடிய வாக்குறுதிகள் சில. கட்சி வைத்துக்கொண்டிருக்கிற கருத்துக்களை எதை எதை எந்த எந்த முறையில் பேசி அதற்கான நடவடிக்கை எடுத்து, அதற்குத் தீர்வு காணவேண்டுமோ அதனை மக்களுக்கு அறிவிக்கத்தான் இவ்வளவும் சொல்லுவதே தவிர, 'கவர்னரை ஒழிப்பதாகச் சொன்னீர்களே, இந்த உரையிலே இல்லையே' என்று சொன்னால், இது கவர்னர் உரை, கவர்னரே வந்து உரையாற்றும் போது 'கவர்னர் பதவி ஒழிக்கப்படும்' என்று கவர்னரேயா அதைப் படிப்பார்? இதிலே இருக்காது. எங்கள் நண்பர்கள், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், பாராளுமன்றத்தில் இருக்கிறார்களே, அவர்கள் அங்கே பேசுவார்கள் கவர்னர் தேவையில்லை என்று. இங்கே என்ன சொல்லுவோம் என்றால், கவர்னர் உரையிலே இன்னின்ன இருக்கவேண்டும் என்று சொல்லுவோம். கவர்னரே வேண்டாமென்று சொன்னவர்கள் கவர்னர் உரையைப் படிக்கலாமா என்று கேட்பது, வேறு ஏதும் சொல்லுவதற்கு இல்லாமல் அலைந்து திரிந்து கொண்டிருந்தவர்களுக்கு இது புளியங்கிளையாக அகப்பட்டது என்றால், இதிலே வாதமும் இல்லை, அரசியலும் இல்லை. ஆனால் அவர்களுக்கு எங்களைப் போல கவர்னர் பதவி வேண்டாமென்று எண்ணம் இருக்குமானால், நீங்கள் அதிகாரப்பற்றற்ற தீர்மானத்தை ஏக மனதாக நிறைவேற்றுவதாக இருந்தால், அதை நான் மத்திய சர்க்காருக்கு அனுப்பி வைக்கத் தயாராக இருக்கிறேன்.

கவர்னரைப்பற்றி இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, பல்வேறு கட்சிகளுக்குமிடையே பலவிதமான கருத்துக்கள் வந்திருக்கின்றன. அந்தக் கருத்துக்களிலே சில நல்ல கருத்துக்களை அன்றையதினம் உறுப்பினர் திரு. ம.பொ. சிவஞானம் அவர்கள் சொன்னார்கள். ஏன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருக்கக்கூடாது? அவர்கள் வெளி இடத்திலிருந்து தான் வரவேண்டுமா? அல்லது தமிழை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்ட பிறகு, அந்தத் தாய் மொழியை அறியாத ஒருவரை நாம் இங்கு அமரவைத்துக் கொண்டிருப்பது சிக்கல்களை உண்டாக்காதா? என்றெல்லாம் கேட்டார்கள். அப்படிப்பட்ட கண்ணோட்டத்தில் சில பேர் இன்றையதினம் கவர்னரைப்பற்றி—தமிழகத்தில் மட்டுமல்ல, வெளி இடங்களிலும் கூட எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். குடியரசுத் தலைவரே கூட இந்தியிலே தான் பேசவேண்டுமே தவிர இந்தியே பேசாத, தெரியாத ஒருவர் குடியரசுத் தலைவராக வருவானேன் என்று பாராளுமன்றத்தில் கேட்கிற காலம் இது. ஆகையால் இன்றைய தினம் பல்வேறு அரசியல் கட்சியினர்கள் கவர்னர் பதவி இருக்க வேண்டுமா, வேண்டாமா? இருக்கவேண்டுமென்றால் எந்த முறையில் இருக்கவேண்டும், எதற்காக இருக்கவேண்டும், என்னென்ன செய்யவேண்டும்? என்று தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருப்பது எனக்கு மகிழ்ச்சி அளிப்பது மட்டுமல்ல, கவர்னர் பதவியே வேண்டாம் என்று முதன்முதலில் திராவிட முன்னேற்றக் கழகம் சொன்ன நேரத்தில், அது ரொம்ப பைத்தியக்காரத்தனம் என்று பேசிக்கொண்டிருந்த அரசியல் வட்டாரத்தில் ஒரு பகுதி இன்றையதினம் அதே கண்ணோட்டத்திற்கு வந்திருப்பதற்காக நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.





கவர்னரைப் பார்த்துவிட்டு, அடுத்தபடியாக என்னிடம் தான் பெரும்பாலோரும் வந்தார்கள். எனக்கு அதில் ரொம்ப மகிழ்ச்சி. கவர்னருக்கு அடுத்தபடியாக எனக்கு அவர்கள் மதிப்பு கொடுத்தார்கள். அதிலும் எனது நண்பர் திரு. கருத்திருமன் அவர்களுக்கு ரொம்ப பாசம் என்னிடம். 'என்னோடு சேர்ந்து அல்லவா நீ அசெம்ப்ளியில் இருக்கவேண்டும், வேறு எங்கேயோ இருக்கின்றாயே?' என்று கேட்டார். அவர்களுடைய தாபத்தை நான் அறிந்து கொள்கிறேன். ஆனால், அவர்களுக்குத் தெரிவிக்கிறேன், அதற்காக நான் அவர்கள் சொன்ன சட்ட நுணுக்கங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. நான் அசெம்பிளியில் உறுப்பினராக ஆகவேண்டும் என்று அவர்கள் அன்போடு அழைக்கிறார்களே, அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், மேலவையிலே உறுப்பினராக உள்ளவர் இந்த அவையிலே அல்லது பொதுவாக அமைச்சராகவோ, முதல் அமைச்சராகவோ, நிதி அமைச்சராகவோ இருக்கக்கூடாது என்று சட்ட திட்டங்கள் இல்லை. சம்பிரதாயம் இருக்கிறதே என்றார். ஆங்கிலத்தில் கன்வென்ஷன் என்பதற்கு அவர்கள் பொருளை பார்ப்பார்களேயானால், அனுசரிக்கின்ற வரையில் கன்வென்ஷன், விட்டுவிட்டால் இல்லை. அதனால் தான் கன்வென்ஷன் என்பதற்கும் ரூல் என்பதற்கும் வெவ்வேறு வார்த்தைகளை வைத்திருக்கிறார்கள். அனுசரித்துத் தீரவேண்டியதாக இருந்தால் ரூல்; அனுசரிக்கலாம் அல்லது அனுசரிக்காமல் விடவும் செய்யலாம் என்று இருப்பது தான் கன்வென்ஷன். நான் கூட ஒரு ஆங்கிலப் புலமை மிக்கவரைக் கேட்டேன். 'கன்வென்ஷன்' என்பது எந்த அடிப்படையிலே வந்தது என்று கேட்டேன். 'கன்வீனியன்ஸ்' என்பதிலிருந்து கன்வென்ஷன் வந்தது என்று அவர்கள் சொன்னார்கள். சரியா,

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 30

இல்லையா என்று நான் பார்க்கவில்லை. சரியாக இருந்தாலும்,
இல்லாவிட்டாலும் ரொம்பச் சுவையாக இருக்கிறது. ஆகையால்
தான் அதை உங்களிடம் குறிப்பிட்டேன். நமக்கு சௌகரியமாக
இருக்கிறவரையிலும் சில சம்பிரதாயங்கள் இருக்கும், நமக்கு
சௌகரியம் இல்லாதபோது அவற்றை நீக்கிவிடலாம். நம்முடைய
ராஜாஜி மண்டபத்தில் போய் பார்க்கிறோம். அப்பொழுதிருந்த
கவர்னர்கள் போட்டுக் கொண்டிருந்த உடைக்கும் இப்பொழுதி
ருக்கிற கவர்னர்கள் போட்டுக் கொண்டிருக்கிற உடைக்கும்,
அப்பொழுதிருந்த அமைச்சர்களுடைய நடையுடைபாவனைக்கும்,
இப்பொழுதிருக்கிற அமைச்சர்களுடைய நடையுடைபாவனைக்கும்
—ஒருவர், இருவர் தவிர மற்றவர்களைப் பற்றி குறிப்பிடுகிறேன்
(சிரிப்பு)—வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அது
ரூலிலே அல்ல, ரெகுலேஷனிலே அல்ல, கன்வென்ஷனில் வருகிறது.
ஆகவே, கன்வென்ஷனை அதிகமாக எடுத்துக்கொண்டு 'நீங்கள்
இங்கே இருப்பது சரியல்ல, நீங்கள் நிதி அறிக்கை படிப்பது சரி
யல்ல' என்று நம்முடைய நண்பர் கருத்திருமன் அவர்கள் பேசி
யிருப்பது அவர்களுக்கு வேறு சுவையுள்ள விஷயங்கள் கிடைக்க
வில்லை என்பதறிந்து நான் வருத்தப்படுகிறேன்.

மூன்றாவதாக திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி
சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று
அமைச்சரவை அமைத்திருக்கிறார்கள். அதற்கு எல்லோரும்
வரவேற்பு சொன்னார்கள். அந்த வரவேற்புக் கெல்லாம் நன்றி
தெரிவித்துக்கொள்கிறேன். ஒத்துழைப்புத் தருவதாகச்
சொன்னார்கள். அதற்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளவேண்டும்.
அந்த ஒத்துழைப்பு எப்படி நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை
நேற்று மாலை கூட பார்த்தோம். ஆகையினால் அந்த ஒத்துழைப்
புக்கும் நன்றி தருகிறோம். ஆனாலும், திராவிட முன்னேற்றக்
கழகம் ஆட்சிப் பொறுப்பிலே வந்தபிறகு ஒன்றை நான் உணர்
கிறேன். அதை நான் சில இடங்களில் கூட சொன்னேன்.
உள்ளபடியே பல பேர்களுக்கு—காங்கிரஸில் உள்ளவர்கள் மட்டு
மல்ல, வேறு அரசியல் கட்சியிலுள்ளவர்கள் மட்டுமல்ல, பொது
மக்களில் சிலர் கூட—இவர்களா வந்து விட்டார்கள் என்ற
வியப்பு அடங்கவில்லை. அந்த வியப்புத் தான் எங்களுடைய
வலிவு. அதைத் தெரிந்து கொள்ளாமல் இவர்களா வந்துவிட்
டார்கள் என்று நீங்கள் சொல்லிக்கொண்டிருப்பதில் பொருள்
இல்லை. இவர்களா வந்துவிட்டார்கள் என்று அரசியல் வட்டா
ரத்தில் சிலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள், அதிலே இருக்கிற
வியப்புத் தான் எங்களுக்கு வலிவு என்று நான் சொன்னதற்குக்
காரணம், நீங்கள் போன தேர்தலில் கூட 'இவர்கள் எங்கே வரப்
போகிறார்கள்' என்று எண்ணினீர்கள், அந்த எண்ணத்தின்
விளைவாகத் தான் நாங்கள் வந்தோம். ரொம்ப அலட்சியப்படுத்
தினீர்கள். அலட்சியப்படுத்தியது மட்டுமல்ல. அவர்களுடைய
பெரிய தலைவர்களெல்லாம் சொன்னார்கள். 'நாங்கள் எப்பொழுதோ
வெற்றி பெற்று விட்டோம். இவர்கள் 5 பேர் வருகிறார்களோ, 10
பேர் வருகிறார்களோ என்று தான் பார்க்கிறோமே தவிர, இவர்கள்



1967 மார்ச் 30] [திரு. சி. என். அண்ணாதுரை]

எங்கே வெற்றி பெறப்போகிறார்கள், மந்திரிசபை எங்கே அமைக்
கப்போகிறார்கள். இவர்களா அமைக்கப்போகிறார்கள்?' என்
றெல்லாம் சொன்னீர்கள். அதிலிருந்து இரண்டு எனக்குத்
தெரிகிறது. உங்களுக்கு உண்மை சீக்கிரம் புலப்படவில்லை
என்பதும், இரண்டாவது, ஜனநாயகத்தில் எப்படிப்பட்டவர்களும்
பொறுப்பேற்க வரலாம் என்ற அடிப்படை. இரண்டும் உங்களுக்
குத் தெரியவில்லை என்பதற்காக நான் உள்ளபடியே வருத்தப்படு
கிறேன். ஆனால், வந்துவிட்ட பிறகு நீங்கள் ஒத்துழைப்புத்
தருவதாகச் சொல்கிறீர்கள். ஆங்கிலத்தில் ஒரு நிகழ்ச்சி எனக்கு
நினைவுக்கு வருகிறது. திரு. கருத்திருமன் அவர்களுக்குப் பாட
மாக இருந்திருக்கும் என்று கருதுகிறேன். ஜான்சன் என்ற பெரும்
புலவர் இங்கிலாந்து நாட்டில், அவர் ஒருவரே தனியாக உட்கார்ந்
துக் கொண்டு கஷ்டப்பட்டு பேரகராதி ஒன்றைத் தயாரித்தார்.
அந்த அகராதியைத் தயாரித்துக் கொண்டிருந்த நேரத்தில் பல
பேருக்கு நன்கொடைக்காக கடிதம் எழுதினார்கள். அதில்
செஸ்டர்பீல்டு பிரபு என்பவரும் ஒருவர். செஸ்டர்பீல்டு பிரபு
பதிலுக்குக் கூட கடிதம் போடவில்லை. ஆனால், எப்படியோ
பாடுபட்டு ஜான்சன் அவர்கள் அந்தப் பேரகராதியை முடித்த
வுடன் செஸ்டர்பீல்டு பிரபுவிடமிருந்து ஒரு அன்பான கடிதம்
வந்தது. அதற்கு ஜான்சன் அளித்த பதில்—நானும், கருத்திருமன்
அவர்களும் இண்டர்மீடியட் வகுப்பில் படித்திருக்கிறோம் என்று
கருதுகிறேன்—" எனக்குத் தேவைப்பட்டபொழுது கிடைக்கவில்லை
அன்பு, எனக்குத் தேவைப்படாத இப்பொழுது கிடைக்கிறது,
வேண்டாம்" என்பதாகும். நான் அதைப்போல—ஜான்சன்
செஸ்டர்பீல்டு பிரபுவுக்கு திருப்பி எழுதியனுப்பியது போல, இப்
பொழுது வேண்டாம் என்று சொல்லவில்லை. இப்பொழுது கூட
எனக்கு வேண்டும். ஆனால், இது இப்பொழுது கிடைப்பது இன்னும்
எவ்வளவு காலத்திற்கு என்பது தான் இதிலே இருக்கிற
பிரச்சினையே தவிர, நீங்கள் தரவேண்டிய நேரத்தில் தரவில்லை,
இப்பொழுது தந்திருக்கிறீர்கள் என்பதற்காக, நான் ஜான்சனை
பின்பற்றி சொல்லவில்லை. ஆனால் நினைவுப்படுத்துகிறேன்.
இருக்கிற அன்பும், மதிப்பும் உரிய காலத்தில் வரவேண்டும், காலம்
கடந்து வருவது ஒருவருக்கு 60-ம் கலியாணம் ஆன பிறகு பிறக்
கின்ற குழந்தை போலத்தான். சில பேருக்கு 60-ம் கலியாணத்
திற்குப் பிறகு குழந்தை பிறப்பது தப்பு என்று நான் சொல்ல
வில்லை. சில பேருக்கு 60-ம் கலியாணத்திற்குப் பிறகு குழந்தை
பிறக்கக் கூடாது என்று சொல்லுவதற்கு இல்லை. எனது நண்பர்
கள் பல பேர் 60-வது கலியாணம் செய்து கொண்டவர்கள். நானும்
இரண்டு வருஷங்களில் செய்துகொள்ள வேண்டியவன். அதற்காக
நான் சொல்லவில்லை. காலம் தவறி குழந்தை பிறந்தால் ஆசை
யாகத் தான் இருக்கும், அன்பாகத்தான் இருக்கும், அழகாகத்
தான் இருக்கும். 'ஆகா!, பையன் வளர்ந்து கல்லூரிக்குப் போய்
பட்டம் பெற்று, பதவி பெற்று, அவனுக்கென ஒருவனைக் தேடிக்
கொண்டு, ஆடிப்பாடி மகிழ்வதை நாம் இருந்து பார்க்கப்போகி
றோமா' என்று பாசமும் ஏக்கமும் கலந்து வரும். அதைப் போல
உங்களை நான் பாசத்தோடும், ஏக்கத்தோடும் பார்க்கிறேன்.

இவ்வளவு அன்பும், ஒத்துழைப்பும் தேர்தல் நேரத்தில் பிரசார அளவிலாவது, இருந்திருக்குமானால், எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்?

தாக்குறைவான பிரசாரங்களைப் பற்றி பேசினார்கள். நான் இந்த மன்றத்தில் முதன்முதலாகச் சொல்கிறேன். அது கூட் கூச்சப்பட்டுக்கொண்டு சொல்கிறேன். "20 வருஷங்களாக காங்கிரஸ் ஆட்சி இருந்தும் நாட்டு மக்களுக்கு நன்மை கிடைக்க வில்லை. ஆகையால் இந்த ஆட்சி மாற்றப்பட வேண்டும்' என்று நான் பேசியதற்கு பதில் அளிக்க, உங்களுடைய காங்கிரஸ் பேச்சாளர்களில் ஒருவர் மேடையிலே பேசி, பத்திரிகையிலே வெளிவந்த செய்தியைச் சொல்கிறேன் '20 வருஷங்களாக காங்கிரஸ் ஆட்சியில் பலன் கிடைக்கவில்லை, ஆகையால் மாற்ற வேண்டும்' என்று அண்ணாதுரை பேசுகிறானே, இவனுக்கு திருமணம் ஆகி வருஷங்கள் 20 ஆகிறது. இன்னும் ஒரு குழந்தை கூட இல்லை, அப்படியானால் அவன் மனைவி ராணிக்கு வேறு ஒரு கணவனைத் தேடலாமா?" சகித்துக்கொண்டிருந்தேன். இன்றைய தினம் நீளம் நீளமாகப் பேசுகிறீர்கள் பண்பைப்பற்றி. ஒரு நாள், "எங்கள் பேரில் கல் போடுவார்களேயானால், திருப்பி நாங்களும் கல் போடுவோம்" என்று சொன்ன எங்களுடைய
1-00 அமைப்புச் செயலாளரை மூன்று லட்சம் மக்கள் கூடியிருந்த கடற்கரை கூட்டத்தில் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளச் சொன்னேன். ஆனால் அப்படிப்பட்ட தாக்குறைவான பேச்சுக்கள் உங்களுடைய மேடைகளில் பேசப்பட்டன; என்றால் மதிக்கப்படும் தலைவர்கள் பக்கத்தில் இருந்தார்கள். அப்பொழுது ஓரளவிற்கு, நீங்கள் கொஞ்சம் அன்பு காட்டியிருந்தால், ஜனநாயகத்தில் இந்தக் குறை ஏற்பட்டிருக்காது. இங்குள்ளவர்களில் யாரும் அப்படிப் பேசவில்லை, அப்படிப் பேசியவர்களில் யாரும் இங்கே வரவும் இல்லை (சிரிப்பு). அதிலே எனக்கு ஒரு திருப்தி. வரவில்லை என்பது மட்டுமல்ல; ஓரிருவர் எங்கள் கட்சியிலும் இருக்கலாம். 'வைலண்டாக' யார் பேசுகிறார்களோ, யார் சூடாகப் பேசுகிறார்களோ, அவர்களைத் தான் மக்கள் விரும்புவார்கள் என்ற தவறான எண்ணம் இருக்கிறது. ஆனால், நாட்டு மக்கள் நம்மைவிட புத்திசாலிகள், தரம் பிரிக்கக் கூடியவர்கள் இல்லையா? உங்களுடைய கட்சியில் யாருடைய பேச்சு பயங்கரமானது என்று கருதப்பட்டதோ யார் பேச்சுக் காதில் விழுந்தால் எதிர்க்கட்சி சுருண்டு விழுந்துவிடும் என்றார்களோ, தேடித் தேடிப் பார்க்கிறேன், அவர்களில் யாரும் இங்கே இல்லை, (சிரிப்பு) இப்பொழுது வந்திருக்கிற ஓரிருவர்களும் அந்தப் பாணியில் போகிறார்கள். வருத்தப்படுகிறேன். ஆனால் நாட்டு மக்கள், உண்மையான, தெளிவான அரசியல் பேச்சைத்தான் விரும்புகிறார்கள். என்னுடைய கட்சியைப் பொறுத்தவரையில், வரம்பு மீறி யாராவது ஒரு வார்த்தை பேசினால், நான் அந்த இடத்தில் இருந்தால், தடுத்து இருந்திருக்கிறேன். நான் குறிப்பிட்ட அந்த வாசகம், காங்கிரஸ் பிரசார மேடையிலே தடுக்கப்படாமல் போய் விட்டது என்பதை நினைவூட்டுகிறேன். இன்





னென்று கேட்கிறேன் : ஒரு நாளாவது, ஒரு கூட்டத்திலாவது, உங்கள் பேச்சாளர்கள், என்னைப் பற்றிப் பேசும்போது, 'அவர்' என்று சொல்லியிருக்கிறார்களா? அவன்! (குறுக்கீடு) நம்முடைய நண்பர் 'நான் சொல்லவில்லை' என்கிறார்கள். தலைவணக்கம் செய்கிறேன், நீங்களாவது சொன்னீர்களே என்று. யார் யாரைப் பற்றியெல்லாம் சொன்னார்கள்? ராஜாஜியைப் பற்றி எவ்வளவு தரக் குறைவான பேச்சுக்கள்? என்னை விடவா உங்களுக்கு அவருடன் கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கும்? நான் முதன் முதலாக சிறைச்சாலைக்குச் சென்றது அவர் முதல் அமைச்சராக இருந்த காலத்தில்; அவர்தான் என்னைச் சிறைச்சாலைக்கு அனுப்பியவர்; மந்திரி சபைக்கும் போகச் சொன்னவரும் அவர்தான். (பலத்த ஆரவாரம்) ஆனால் அவரிடத்திலே பகை இல்லை. ஆனால் எவ்வளவு தூரம் உயர்ந்த அளவில் அப்பொழுது அரசியல் இருந்தது என்பதை கவனப்படுத்த விரும்புகிறேன். நான் வாலிபனாக இருந்த நேரத்திலே காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி அவர்களும், ஜஸ்டிஸ் கட்சியைச் சார்ந்த ராமசாமி முதலியார் அவர்களும் ஒருவரை ஒருவர் எதிர்த்து போட்டி போட்டார்கள். ஒரே தெருவிலே, ஒரே நாளிலே, வெளியிலே ஓட்டுக் கேட்கும்போது இந்த வரிசையாக சத்தியமூர்த்தி ஓட்டுக் கேட்டுக் கொண்டு போவார், அந்த வரிசையாக ராமசாமி முதலியார் ஓட்டுக் கேட்டுக் கொண்டு போவார். தெரு முனையில் இருவரும் கைகுலுக்குவார்கள். " What are your prospects ?" என்று சத்தியமூர்த்தி கேட்பார்கள்; ராமசாமி முதலியார், " I don't think they are bright " என்று சொல்லுவார்கள். சத்தியமூர்த்தி, " No, no. your prospects are bright " என்று உபசாரத்திற்காகவாவது சொல்லுவார். அப்படி இருந்த அரசியல், அந்த அரசியல் எந்த அளவிற்கு சென்றிருக்கிறது? இங்கே என்னுடைய நண்பர் சொன்னார்கள், தேர்தல் முடிந்த பிறகும், கத்திக் குத்து தேர்தல் முடிந்த பிறகும் கல் வீச்சு, என்று. இதற்கெல்லாம் யார் காரணம் என்பதை ஒவ்வொருவரும் ஒரு கணம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். நான் காரணம் என்று ஏதாகிலும் ஒரு துளிச் சம்பவம் கிடைத்தாலும், நீங்கள் என்னிடத்திலே சொல்லுங்கள்.

தமிழரசுக் கழகத் தலைவர், மதிப்பிற்குரிய ம.பொ.சி. காங்கிரசிற்காக அரும்பாடு பட்டிருக்கிறார்கள். ஆனால் அதன் போக்குப் பிடிக்காமல் காங்கிரசை எதிர்த்து, தேர்தலுக்கு நின்றார்கள். நோட்டீஸ் என்ன ஒட்டுவது? "கட்ட பொம்மனைப் பாராட்டிய ம.பொ.சி. எட்டப்பன் ஆகலாமா?" அனுமதித்தீர்களே? எவ்வளவு காலம் உங்கள் கட்சியோடு பழகியவர்கள்? எத்தனை காலம் உங்களோடு சிறைச்சாலைக்குச் சென்றவர்கள்? நானும், மகமது இஸ்மாயில் சாகிப் அவர்களும், ராஜாஜி அவர்களும், ஒன்றாக இருக்கிறோம் என்பதை விளக்குவதற்கு கழுதைமீது உட்காரவைத்துப் படம் போட வேண்டுமா? வேறு படம் கிடைக்கவில்லையா? கழுதையின் மீது போட்டார்கள் என்று ஆத்திரப்படலாமா என்று கேட்கலாம். "வானர சேனையாகப் பயன் படுத்திக் கொள்வேன்"

என்று சொன்னார் என்று, "பார், பார், குரங்கு என்று சொல்கிறார், குரங்கு என்று சொல்கிறார்" என்று சொன்னீர்களே. அப்படிச் சொல்லுகின்ற ஒருவனைக் கேவலப் படுத்தக்கூடாது என்று, கழுதைமீது ஐந்து தலைவர்களைப் போட்டு, ஊர் ஊராக நோட்டீஸ் ஒட்டியபோது, சிறு முணு முணுப்பாவது, எதிர்ப்பாவது இருந்ததா? "அண்ணாதுரை, தெரியாமல் செய்துவிட்டார்கள், அது வல்ல உத்தேசம்" என்று சொன்னீர்களா? இல்லையே? கூட்டத்தில் பேசுவீர்கள்; பக்கத்தில் சுவற்றில் ஒட்டியிருக்கும் இந்தப் படம்; மக்களைக் கூடப் பார்க்காமல், அதையே பார்த்துக் களித்துக் கொண்டு இருந்தீர்கள், நாங்கள் ஏறியது கழுதையோ, குதிரையோ, அது ஆட்சி பீடம் வரையில் வந்துவிட்டது (பலத்த ஆரவாரம்). ஆகையினால் தான் சொல்லுகிறேன், இனிமேலாவது உங்கள் கட்சியில் இருக்கிறவர்களைக் கொஞ்சம் பண்போடு பேசும்படி வேண்டுகோளைச் சொல்லுங்கள். முடிந்தால் செய்யுங்கள், அது முடியாத காரியம் என்றால், வற்புறுத்தவில்லை.

"திராவிட முன்னேற்றக் கட்சிக்காரர்களா ஆட்சிக்கு வரத்தக்கவர்கள், அப்படிப்பட்ட தரக்குறைவானவர்கள் அவர்கள்," என்ற கருத்து உள்ளத்தின் அடிவாரத்தில் இருப்பதால் தான், நீங்கள் பேசுகிறபோது ஒரு அருவருப்பு உணர்ச்சி இருக்கிறது; அந்த உணர்ச்சியின் அடிப்படையிலே நீங்கள் கேட்கிறீர்கள், "என்ன செய்தீர்கள், என்ன செய்தீர்கள்" என்று. எனக்குக் கூட கொஞ்சம் பயமாக இருந்தது. ஒரு சமயம், ரொம்ப நாளாகி விட்டதோ, ஒன்றுமே செய்யவில்லையோ என்று, கணக்குப் பார்த்தேன். மார்ச் 6-ந் தேதி, நாங்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டோம்; 15-ம் தேதி நீங்களெல்லாம் சேர்ந்து பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டீர்கள். 17-ம் தேதி சபாநாயகர் தேர்தல் நடைபெற்றது. ஆகவே, இந்த அரசு முழு அளவோடு இயங்கத் தொடங்கியது மார்ச் 17-ம் தேதியிலிருந்து. இன்றைக்கு 13 நாட்கள் ஆகின்றன. இந்த 13 நாட்களுக்குள்ளே, "ஏன் அது நடக்கவில்லை, ஏன் இது நடக்கவில்லை" என்று கேட்கிறீர்களே? எனக்கு இரண்டு படுகிறது. மூன்று கூடச் சொல்லுகிறேன். ஒன்று நீங்கள் கணக்கைப் பார்க்கவில்லை. ஆகையால்தான் பேசுகிறீர்கள். இது 1967 என்று கவனம் இல்லாமல், 1969 என்று எண்ணிக்கொண்டு, "என்ன செய்தீர்கள், என்ன செய்தீர்கள்" என்று கேட்டு இருக்கலாம். இன்னொன்று, நீங்கள், நாங்கள் 13 நாளில் முடிக்க வேண்டும் என்று சொன்னதற்குக் காரணம், எங்களை அவ்வளவு திறமை உள்ளவர்கள் என்று எங்களிடத்தில் கொண்டுள்ள நம்பிக்கை காரணமாக இருக்கலாம். மூன்றாவது, "என்ன செய்தீர்கள், என்ன செய்தீர்கள்" என்று கேட்க, இப்பொழுதுதான் வாழ்க்கையில் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இருபது வருஷமாகக் கிடைக்காத சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. கிடைத்த சந்தர்ப்பத்தை விடுவானேன் என்று, "என்ன செய்தீர்கள்" என்று கேட்கிறீர்கள். உங்களுடைய நிலையை நான் உணருகிறேன். கடந்த 15 வருஷத்திலே அப்படிக் கேட்கலாமா? கேட்டவுடன், அமைச்சர் திரும்பிப் பார்த்து 'அடுத்த தடவை பார்க்க



லாம்' என்ற முறையில் ஓடியிருக்கும் பார்வை, (சிரிப்பு) ஆகவேதான், காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்று கிடைத்த சந்தர்ப்பத்தை வீணாக்காமல், "என்ன செய்தீர்கள், என்ன செய்தீர்கள்" என்று கேட்டீர்கள். ஆனால் அதைக் கேட்பதற்கு முன்னால், நாம் இதற்கு போதுமான அவகாசம் அளித்திருக்கிறோமா என்று பார்க்க வேண்டும். கொடுத்திருக்கும் அரசு நிலை எந்த அளவில் இருக்கிறது என்று பார்க்க வேண்டும். அதற்காகத்தான் சட்டி உதாரணத்தைச் சொன்னேன். சுரண்டிச் சுரண்டிப் பார்த்தாலும், மாவு கிடைக்கவில்லை என்று சொன்னேன். நண்பர் கருத்திருமன், "சாதாரண சட்டியில்லை. 200 கோடி ரூபாய் வரி இருக்கிற சட்டி." என்று சொன்னார்கள். எத்தனை கடன் இருக்கிற சட்டி? (சிரிப்பு) எத்தனை துண்டு விழுகிற பட்ஜெட் இருக்கிறது? செய்யப்பட வேண்டியவை, செய்யப்படாமல் விட்டவை எவ்வளவு? உணவு நெருக்கடி எந்த உச்சத்தில் இருக்கிறது? இதையெல்லாம் பார்த்தால், கொடுத்திருக்கிற சட்டியில் சுரண்டிப் பார்க்கத்தான் இடம் இருக்கிறதே தவிர வேறொன்றும் இல்லை. இல்லை என்றால், டெல்லிக்கு, மற்ற இடங்களுக்கு போய், பரதேசி போல், "சட்டி காலியாக இருக்கிறது, ஆளுக்கு ஒரு பிடி போடுங்கள்" என்று கேட்டு வாங்கும் சட்டியாகத்தான் கொடுத்தீர்கள். நிம்மதியான ஆட்சியா கொடுத்தீர்கள்? ஆனால், பிடித்துக் கொள்வதற்கு சுலபமாக இருக்கிறது, 15 வருஷமாகத் தொட்டுத் தொட்டு, உங்கள் விரல் அடையாளம் பதிந்து இருக்கிறதினால், சரியாக விரல் வைத்துப் பிடித்துக் கொள்ளுகிறேன். அப்படி இருந்திருக்கிற போது, இந்த சர்க்கார் ஒப்படைக்கப் பட்ட பிறகு இருந்த சிக்கல்களை நீக்குவதற்கு எவ்வளவு காலம் கொடுக்க வேண்டும் என்பதை அறிந்து போதுமான அவகாசம் கொடுத்த பிறகு "என்ன செய்தீர்கள்" என்று பேச வேண்டும்.

நான்காவதாக கவனர் உரையிலே ஒன்றுமே இல்லை என்று சொன்னார்கள். எனக்குக் கூட பயமாக இருந்தது. என்ன, 7, 8 பக்கங்கள் அச்சடித்துக் கொடுத்திருக்கிறார்களே, ஒன்றுமே இல்லை என்று சொல்லுகிறார்களே, ஒரு வேளை அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட புத்தகத்திலே அச்சாபீசில் ஏதாவது அடிக்காமல் விட்டுவிட்டார்களோ என்று கூடப் பயப்பட்டேன்; ஆனால் அடுத்துப் பேசிய இன்னொரு உறுப்பினர், அதிலே ஒன்றுமே இல்லை என்று சொல்வதற்குப் பதில், இதிலே நாங்கள் சொன்னதெல்லாம் இருக்கிறது, நாங்கள் சொன்னதெல்லாம் இருக்கிறது என்று கூறிவிட்டார்கள். அந்த இரண்டையும் பொருத்திப் பார்த்தால் விவரம் விளங்கவில்லை. 'ஒன்றுமே இல்லை' என்று ஒரு உறுப்பினர் சொல்லுகிறார்; அதே கட்சிக்காரர், இன்னொரு உறுப்பினர், 'நாங்கள் சொன்னதெல்லாம் இருக்கிறது' என்று சொல்லுகிறார். ஒரு வேளை "நீங்கள் சொன்னதெல்லாம் ஒன்றுமே இல்லை" என்பதைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்களா என்று சந்தேகப்படத் தோன்றுகிறது. ஆகையால், 'ஒன்றுமே இல்லை' என்று சொல்லுவதற்கில்லை. கவர்னர் உரை என்பது, இந்தச் சர்க்கார் செய்ய வேண்டிய எல்லாக் காரியங்களையும் தொகுத்து வெளியிடு

கின்ற ஒரு பெரிய அறிக்கை அல்ல; கோடிட்டுக்காட்டுகிற அறிக்கை. ஆகையால், அதிலே தொழிலாளர்களைப் பற்றி பேசப் படாமல் இருக்கலாம்; கைத்தறி நெசவாளர்களைப் பற்றிப் பேசப் படாமல் இருக்கலாம்; பொறுக்கு விதைகளைப் பற்றிப் பேசப்படா மல் இருக்கலாம்: என்னுடைய நண்பர் திரு. கருத்திருமன் அவர் கள் கம்போஸ்ட் உரத்தைப்பற்றிக் கூறினார்களே கடைசியில், அதைப்பற்றிப் பேசப்படாமல் இருக்கலாம். ஆனால், இவைகளெல் லாம் தேவை இல்லை என்பதற்காக, அதிலே விடப்படவில்லை. கோடிட்டுத்தான் காட்டுவார்கள். கவர்னர் உரையில் கோடிட்டுக் காட்டியிருப்பதை வைத்துக்கொண்டு, அதிலிருந்து நாம் மற்ற வற்றை யூகித்துக் கொள்ள வேண்டும். "வெற்றிலை பாக்கு போடு கிறீர்களா?" என்று கேட்டால், சுண்ணாம்பு தடவாமல் போட்டுக் கொள்ள வேண்டும் என்பது அர்த்தம் அல்ல. "வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு போடுகிறீர்களா?" என்று யாரும் கேட்பது இல்லை. "வெற்றிலை பாக்கு போடுகிறீர்களா?" என்றுதான் கேட்பார்கள். "போட்டுக் கொள்கிறேன்" என்பார்கள். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மூன்றும்தான் வரும். வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவிப் போட்டுக் கொள்வார்கள். வெற்றிலை, பாக்குத்தானே போட்டுக் கொள்ளச் சொன்னார்கள்? இதோ வெற்றிலை; இதோ பாக்கு, சுண்ணாம்பு வேண்டாம் என்று யாரும் தள்ள மாட்டார்கள் அதே போல், கவர்னர் உரையில் இது இல்லை, இது இல்லை, ஆகவே இதில் எதுவும் இல்லை என்று தள்ளிவிடலாமா? கவர்னர் உரையில் சில குறிப்பிட்ட விஷயங்கள்தான் இருக்கும். அதோடு தொடர் பாக நாம் தான் மற்ற விஷயங்களை யூகித்துக்கொள்ள வேண்டும்.

ஐந்தாவதாக நீங்கள் சொன்னது, "இதிலே தீவிரமான திட்டங்கள் இல்லை" என்பது. தீவிரமான திட்டங்களைக் கவர்னர் உரையில் மட்டும்தானா சொல்ல முடியும் என்று கருதுகிறீர்களா? இந்தச் சர்க்காருடைய மற்ற நடவடிக்கைகளில் தீவிரமான திட்டங்கள் இருக்கக்கூடாதா? அல்லது, எல்லாத் தீவிரமான திட்டங்களையும் உள்ளடக்கிக் கொண்டிருப்பது கவர்னர் உரையாக மட்டும்தான் இருக்க முடியுமா? அப்படித்தான் என்ன தீவிரத்தை நீங்கள் பேசினீர்கள் என்று பார்த்தேன். ஒன்றும் காணோமே எந்தத் தீவிரத்துக்குப் போனாலும், "போகாதே" என்ற குரல் தான் கிளம்பியிருக்கிறதே தவிர, எந்தத் தீவிரத்தைச் சொன் னீர்கள்? கொள்முதல் ஒரு தீவிரமான திட்டம்; சோஷலிசத் திட்டம். "வேண்டாம், இதற்கு மேல் போகாதே" என்கிறீர்கள். ஸ்டேட் டிரேடிங் ஒரு தீவிரமான திட்டம். "அதிலே நஷ்டம் தான் வரும், அதைத் தொடாதே" என்றுதான் சொல்லுகிறீர்களே தவிர, வேறு என்ன சொன்னீர்கள்? தீவிரமான திட்டத்தைக் கவர்னர் உரையிலே காணவில்லை என்று சொல்லுபவர்கள் தீவிர மான திட்டங்களைக் கொடுப்பார்களானால், ஆலோசிக்கத் தயாராக இருக்கிறேன். அந்த நேரத்திலே சொல்லுவார்கள், "பாங்குகளையெல்லாம் தேசியமயமாக்குவதாகச் சொன்னீர்களே, அது எங்கே?" என்று. இது, கொஞ்சம் அதிகமான அளவிற்குப் பாராளுமன்ற வழக்கம் இல்லாதவர்கள் கேட்டால், நான் தாங்கிக்





கொள்ளலாம். ஆனால் பக்குவம் உள்ளவர்கள் கேட்கிறார்கள். பாங்குகளைத் தேசியமயமாக்குவதற்குச் சட்டம் இங்கா போட முடியும்? அது அங்கே போட முடியும். அங்கே யார் இருக்கிறார் கள்? சாட்சாத் நீங்கள். ஆகையால், தீவிரமான திட்டம் உங்களுக்குப் பிடிக்கும் என்றால், நீங்கள் அங்கே கொண்டு வாருங் கள்; எங்கள் கழகத் தோழர்கள் இருபத்துநான்கு பேர்களையும் அதற்கு நான் வாக்களிக்கச் சொல்லுகிறேன். பாங்குக்காரர் களின் பகை நமக்கு ஏன்? என்று நீங்கள் கருதுவீர்களானால், மற்றவர்களைக் கொண்டுவரச் சொல்லுங்கள்; நீங்கள் அதற்கு வாக்களியுங்கள். அங்கே அதற்குச் சூட்சமம் இருக்கிறபோது, நீங்கள் திருச்சியிலே இருந்துகொண்டு தில்லைச் சிதம்பரத்தைத் தேடினால் அதிலே பலன் இல்லை. அப்படியானால், விட்டுவிடுவது தானே? என்று கேட்கிறீர்களா? திராவிட முன்னேற்றக் கழகம் சட்ட சபைக்கு மட்டுமல்ல; பாராளுமன்றத்திற்கும் தேர்தலுக்கு நிற்கிறது. அந்த அறிக்கையிலே பிரித்தா வைப்பார்கள்? "இதெல்லாம் சட்டசபைக்கு, இதெல்லாம் பாராளுமன்றத்திற்கு, இதெல்லாம் முனிசிபாலிட்டிக்கு, இதெல்லாம் ஜில்லா போர்டுக்கு, இதெல்லாம் பஞ்சாயத்துக்கு, இதெல்லாம் சும்மா, இதெல்லாம் பிறகு" என்றா வைப்பார்கள்? வைக்கமாட்டார்கள். நீங்களாகத் தான் பார்த்துக் கொள்ளவேண்டும். ஆகையால், பாங்குகளைத் தேசியமயம் ஆக்கவேண்டும் என்று சொல்லப்பட்ட தீவிரமான திட்டம் எங்கள் தேர்தல் அறிக்கையில் இருக்கிறது என்றாலும், அதை எந்த இடத்தில் வலியுறுத்த வேண்டுமோ அந்த இடத்தில் நிச்சயமாக வலியுறுத்துவோம்.

அதற்குப் பிறகு, அவர்களுக்கு ரொம்ப வலிவான ஒரு காரணம், "நீங்கள் இந்தத் தேர்தல் வாக்குறுதிகளை என்ன செய்யப் போகிறீர்கள்" என்பது. கேட்கக் கூடாது என்று சொல்லவில்லை. ஆனால், கேட்பதற்கு முழு உரிமை பெற்றவர்கள், எங்களுக்கு வாக்கு அளித்தவர்கள். ஏனென்றால், நம்பி எங்க ளுக்கு வாக்கு அளித்தார்கள். அவர்கள் கேட்க வேண்டும். ஆனால், நீங்கள் கேட்கிறீர்கள். பரவாயில்லை. ஏன் 'பரவாயில்லை' என்கிறேன் என்றால், வாக்காளர்களுக்கு அந்த அவநம்பிக்கை ஏற்படவில்லை. ஆகையால் அவர்கள் எங்களை நம்பிக்கொண் டிருக்கிறார்கள். நீங்கள் கேட்கிறீர்கள், "என்ன ஆயிற்று?" "என்ன ஆயிற்று?" என்று. நான் முன்பே சொல்லி இருக்கிற படி, படிப்படியாக, முறையாக, உரிய காலத்தில், உரிய அளவிற்கு நிறைவேற்றப்படும்.

உடனே?

இல்லை.

எல்லாம் மொத்தமாக?

இல்லை.

எதையாவது விட்டுவிட்டீர்களா?

அதுவும் இல்லை.

எல்லாம் நிறைவேற்றப்படும். உரிய நேரத்தில், முறையாக, படிப்படியாக.

அதற்கு என்ன தேவை?

எது முதலில்? எது இரண்டாவது? எது மூன்றாவது? என்ற 'ப்ரையாரிடி' தேவை. ஐந்தாண்டுத் திட்டங்களைப்பற்றி வந்திருக்கிற குறைபாடு எதிலே வந்திருக்கிறது? அவர்கள் செய்ததெல்லாம் தேவையான காரியம்தான். பம்பாயில் ட்ராம்பேயில் அடாமிக் ரிசர்ச் ஸ்டேஷன் தேவை இல்லையா? தேவைதான். திருச்சியிலே கட்டியிருக்கிறீர்களே, டூரிஸ்ட் சென்டர்? தேவை இல்லையா? தேவைதான். மாமல்லபுரத்தில் அமைத்திருக்கிறீர்களே, கற்சிலை வடிக்கக் கற்றுக்கொடுப்பதற்கான பள்ளிக்கூடம்? தேவை இல்லையா? தேவைதான். இதிலே எது முதலில்? எது இரண்டாவது? எது மூன்றாவது? என்ற 'ப்ரையாரிடி' யில்தானே இப்பொழுது தகராறு வந்திருக்கிறது? அதைப்போல்தான் தேர்தல் அறிக்கையில் என்ன என்ன செய்வதாகச் சொல்லியிருக்கிறோமோ அதற்கு 'ப்ரையாரிடி' இல்லையா. எதை முதலில் செய்வது, எதைப் பிறகு செய்வது என்று? அந்த 'ப்ரையாரிடி' யை நாங்கள் வகுத்துக் கொள்ள வேண்டும். அந்த 'ப்ரையாரிடி' யை வகுத்துக்கொண்டு, நாங்கள் வாக்களித்த எதையும் நாங்கள் நிறைவேற்றாமல் இருக்கமாட்டோம். எதையாகிலும் நிறைவேற்ற முடியாவிட்டால், மக்களிடத்திலே அதைப்பற்றி ஒளிவு மறைவு இல்லாமல் எடுத்துச்சொல்லத் தயங்கமாட்டோம்.

அன்றைக்கு ஒரு காங்கிரஸ் உறுப்பினர் "மத்திய சர்க்கார் பேரில் பழி போட்டுவிட்டுத் தப்பித்துக் கொள்ளாதே" என்றார். பழி போடுவது மட்டுமா மத்திய சர்க்கார் பேரில்? சந்தியில் கொண்டுவந்து நிறுத்துவேன். நாங்கள் எடுத்துக்கொள்ளுகிற முயற்சி நிறைவேறவொட்டாமல் மத்திய சர்க்கார் குறுக்கிடுமானால், சந்தைச் சதுக்கத்தில் மக்களுக்கு அது பதில் சொல்லியாக வேண்டும். உங்கள் சர்க்காருக்கும் எங்கள் சர்க்காருக்கும் அதுதான் வித்தியாசம்.

"மத்திய சர்க்கார் பேரில் பழி போடாதே" என்று சொல்லுகிறீர்களே? நான் கேட்கிறேன்; உணவு நெருக்கடி இங்கே இருக்கிறது. நான் பர்மாவிலிருந்தோ, தாய்லாந்திலிருந்தோ தேவையான அரிசி வரவழைக்க வேண்டுமென்றால், அதிகாரம் இருக்கிறதா? அந்த அதிகாரத்தைக் கொடுக்கும்படி மத்திய சர்க்காரைக் கேட்டால் எனக்குத் துணை இருக்க வேண்டுமா? 'பழி போடாதே' என்று சொல்ல வேண்டுமா? நான் இன்னமும் தெளிவாகச் சொல்லுகிறேன். பர்மாவில் இருந்துவிட்டுத் தமிழகத்திற்குத் திரும்பியிருக்கிற தமிழர்களிலே பலர் தங்கள் சொத்துக்களை விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். இன்னும் திருப்பித் தரப்படவில்லை. அந்தக் கணக்கை எடுத்து, அதற்குரியதைப் பணமாகக் கொடுக்காமல் அரிசியாகக் கொடுங்கள் என்று பர்மாவைக் கேட்கிற அதிகாரம் எனக்கு இருக்கிறதா? எனக்கு இல்லாவிட்டால் போகிறது. நண்பர் கருத்திருமன் இங்கே வந்து உட்கார்ந்





தாலும், அவருக்காவது அந்த அதிகாரம் வருமா? வராது. நான் வைத்துக்கொண்டிருக்கிற இலாக்காக்களிலே ஒன்று, "இண்டியன்ஸ் ஓவர்ஸீஸ்"—வெளிநாட்டிலே உள்ள இந்தியர்கள். நான் அதிலே என்ன பார்க்கலாம்? எத்தனை பேர் கப்பலில் வருகிறார்கள் என்று கணக்குப் பார்க்கலாம். வந்தவன் நோயாளியா? அகதியா? என்று பார்க்கலாம். நோயாளியாக இருந்தால் ஆஸ்பத்திரிக்கு அனுப்பலாம். அகதியாக இருந்தால் ஏதாவது ஆசிரமத்திற்கு அனுப்பி வைக்கலாம். 'சோறு இல்லை' என்றால் 'ஏதாவது கம்பர் விழா நடைபெற்றால் அங்கே போய் ஒரு வேளைச் சாப்பாட்டைப் பார்த்துக்கொள்' என்று சொல்லலாம். இதுதான் அந்த இலாக்காவிலே எனக்கு இருப்பதே தவிர, பர்மாவிலிருக்கும் பணத்தைப் பணமாகக் கொடுக்காவிட்டால் போகிறது, அரிசியாகக் கொடுங்கள் என்று கேட்க அதிகாரம் இருக்கிறதா? அந்த அரிசி வந்தால், ஏன் மூன்று படி அரிசி போட முடியாது? மூன்று படி அரிசி எப்படிப் போடுவது? எப்படிப் போடுவது? என்றால், அதற்குத் தேவையானதைச் சொன்னால்தானே? "குழந்தை குட்டியோடு வாழவேண்டும்" என்று ஒரு பெரியவர் ஆசீர்வதித்துவிட்டு முகூர்த்தத்திற்கு நாள் வைக்காவிட்டால் அந்த ஆசீர்வாதத்திற்கு என்ன பலன்? அதைப்போல்தான், மூன்று படி அரிசி போட வேண்டு என்கிறீர்கள். போடுவதாகச் சொல்லுகிறேன். எந்த எந்த இடத்திலிருந்து அரிசி கிடைக்குமோ அங்கிருந்து வாங்கி, நாட்டிலுள்ள நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ளுவதற்கு மாநில சர்க்காருக்கு அதிகாரம் இல்லை. ஆகவே அதை மத்திய சர்க்காரிடத்திலே கேட்க வேண்டும் என்று நான் சொன்னால், "மத்திய சர்க்கார் பேரிலே பழி போடாதே" என்று சொல்வது?

மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு, விலைவாசி உயருகிற நேரத்தில் எல்லாம் சம்பளத்தை உயர்த்துகிறார்கள். அவர்கள் சம்பளத்தை உயர்த்த உயர்த்த, நம்முடைய சர்க்கார் ஊழியர்கள், "எங்களையும் கவனியுங்கள்" என்று கேட்கிறார்கள். நியாயமான கேள்வி, அப்படிப்பட்ட கோரிக்கையைப் புறக்கணிக்க முடியாது. "அவர்களுக்குச் சம்பளத்தை நாம் உயர்த்தினால், எங்களுக்குப் புதிதாக ஏற்பட்ட செலவிற்கு நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும்" என்று மத்திய சர்க்காரை நான் கேட்டால், "முடியாது" என்று மத்திய சர்க்கார் சொன்னால், அதை மென்று தின்றுவிட்டுச் செல்லுகிறீர்களா? மக்கள் முன்னேதான் வைப்பேன். அதற்குத்தான் இந்தச் சர்க்கார் வந்திருக்கிறது. அதற்கு இந்தச் சர்க்கார் வந்திருப்பது மட்டுமல்ல: அதன் மூலமாக, மத்திய சர்க்காருடைய ஒத்துழைப்பு இல்லாமல் மாநில சர்க்கார் எதையுமே சாதிக்க முடியாத அளவிற்கு உள்ள ஒரு அரசியல் சட்டத்திற்கு நாம் இன்றையதினம் ஆட்பட்டிருக்கிறோம் என்று அகில உலகம் அறிந்து கொள்ள வேண்டும். அதற்கும் இந்தச் சர்க்கார் வந்திருக்கிறது. ஆகவே, பழி போடாதீர்கள் என்று சொல்லாதீர்கள். வேண்டுமானால், காட்டிக் கொடுக்காதீர்கள் என்று சொல்லுங்கள். "மத்திய சர்க்காரை காட்டிக் கொடுக்காதீர்கள் என்கிறபோது அங்கே எங்கள் கட்சியைச் சேர்ந்த

தோழர்கள் அமர்ந்திருக்கிறார்கள்" என்று சொன்னால், நியாய மில்லாவிட்டாலும், அந்த வார்த்தையிலே பொருத்தமாவது இருக்கும். பழிபோடாதீர்கள் என்று சொன்னால், அதற்கு யார் பொறுப்பு? இங்கே பாலாடைக் கட்டி கிடைக்கவில்லை, நமக்குப் போதுமான பாலாடைக் கட்டியை டென்மார் கொடுக்கவில்லை என்று சொன்னால், இங்கே போதுமான இறைச்சி கிடைக்கவில்லை —நமக்குப் போதுமான இறைச்சியை ஆஸ்திரேலியா கொடுக்க வில்லை என்று சொன்னால்—இப்படிச் சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பாக்காதீர்கள் என்று சொல்லுங்கள். இது போல டெல்லியில் இருக்கிற சர்க்கார் எங்கோ இருக்கிற சர்க்காரா? நமக்குள்ள உரிமையை டெல்லியிடத்தில் தட்டிக் கேட்க நமக்கு உரிமையில்லையா? அது மத்திய சர்க்கார் என்று சொல் வதாலே அதன் பக்கத்தில் போகக் கூடாது என்று சொல்கிறீர் களா? நான் இன்னொரு அவையில்கூடச் சொன்னேன். அது மத்திய சர்க்காரும் அல்ல. மத்திய சர்க்கார் என்றால், மற்ற மாநில சர்க்கார்களுக்கு எல்லா அதிகாரங்களையும் கொடுத்துவிட்டு, நடுவில் இருக்கிற அதிகாரத்தைமட்டும் எடுத்துக்கொண்டிருப்பதாக இல்லை. எல்லா இராஜ்யங்களுக்கும் மத்தியில் இருப்பதாலே அதை மத்திய சர்க்கார் என்று சொல்லலாம் என்றால், அது ஹைதராபாத்தில் இருக்க வேண்டும்—அந்த வகையிலும் இல்லை. அது இன்றையதினம் சுற்றியிருக்கிற மாநில சர்க்கார்களைப் பார்த்து, "என்னைக் கேட்காதே! என்னைக் கேட்காதே!" என்று சொல்லுகின்ற வகையில்தான் மத்திய சர்க்காராக இருக்கிறதே தவிர வேறு வகையில் இல்லை. ஆக, நாங்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்கின்ற நேரத்தில் நியாயமான முறையில் மத்திய சர்க்கார் எங்களுக்குக் கொடுக்க வேண்டிய ஒத்துழைப்பைக் கொடுக்காவிட்டால் நிச்சயமாக மக்கள் மத்தியில் அதை எடுத்து வைப்பேன் என்று இப்பொழுதே தெளிவுபடுத்துகிறேன். நான் மட்டுமல்ல—கேரள முதலமைச்சர் திரு. நம்பூதிரிபாட் அவர்களும். இதே போக்கில்தான் இருப்பார்கள். நாங்கள் இருவரும் பேசிக் கொண்ட கருத்து அல்ல. எங்கள் இருவருக்கும் இடையில் அந்தக் கருத்து இருப்பதுபோலத்தான் இன்றைய தினம் காங்கிரசல்லாத அமைச்சரவை எந்தெந்த மாநிலங்களில் ஏற்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் இந்தப் போக்கு காணப்படும். ஆக, நாம் மக்க ளுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுக்கிறபோது, மத்திய சர்க்கார் இதற்கு முழு ஒத்துழைப்புக் கொடுக்கவில்லையென்றால், மத்திய சர்க்காரின் போக்கு அம்பலப்படுத்தப்படும், மத்திய சர்க்காரின் போக்கு கண்டிக்கப்படும், மத்திய சர்க்காரின் போக்கு சந்திக்குக் கொண்டு வரப்படும் என்பதை இப்போதே இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த மாதம் 8, 9-ம் தேதிகளில், மத்திய சர்க்கார் அமைச்சர்களை நான் பார்க்கவும் இருக்கிறேன். அவர்களோடு நேரில் சந்தித்துப் பேசுவதற்கு முன்னாலே நான் எப்படிப் பட்டவன் என்பதை அவர்கள் கொஞ்சம் உணர்ந்திருக்க வேண்டும் என்பதற்காகவே, இன்றைக்கே இந்தச் சட்டமன்றத்திலே என்னுடைய இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறேன்.



அதற்குப் பிறகு இந்த மன்ற உறுப்பினர்கள் கொள்முதலைப் பற்றிச் சொன்னார்கள், இதில் தெளிவாக ஒன்று சொல்லுகிறேன். கொள்முதல் காரியத்தில் அக்கிரமமாக எந்த அதிகாரி நடந்து கொண்டாலும் அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப் படும். விவசாயிகள்தான்—வியாபாரிகள்தான்—பகைவர்களைப் போல நடத்தப்படுகிறார்கள்; அதிகாரிகளை நாங்கள் உறவினர் கள் என்று கருதிக் கொண்டிருப்பதாக நினைக்கத் தேவையில்லை. சமூகவிரோதமான காரியங்களை யார் செய்தாலும், அவர்கள் பேரில் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க இந்தச் சர்க்கார் தயங் காது. அப்படி கண்டிப்போடு காரியங்கள் நடத்தப்படும் என்று சொன்னபிறகும், பூசை அறைக்குள் நுழைந்தார்கள், தவறாகப் பேசினார்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பார்களானால், பணி வன்புடன் நான் கேட்டுக் கொள்கிறேன். கொள்முதல் செய்ய அதிகாரிகள் வருகிறபோது, பூஜை அறைக்குள்ளே கொண்டு போய் தானியங்களைப் பதுக்கி வைத்து உள்ளே நுழையக் கூடாது என்று சொன்னால் அதற்கு என்ன வழி? நண்பர் கருத்திருமன் அவர்களே அப்படியும் நடக்கக்கூடும் என்று சொன்னார்கள். பூஜை அறைக்குள் பூட்ஸ் காலோடு போக வேண்டுமென்று நான் சொல்ல வில்லை. கொள்முதல் செய்ய அதிகாரிகள் வருகிறபோது, மக்கள் அவர்களுடன் ஒத்துழைக்கக்கூடிய ஒரு மனப்பான்மை வளர்க் கப்படவேண்டும். ஆக, நான் இந்த மன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வது இதுதான்: கூட்டம் முடிந்து, அவரவர்கள் தங்கள் தொகுதிக்குப் போகிறபோது, கட்சி மாச்சரியத்தை மறந்து, கொள்முதல் நியாயம்தான் என்பதை தானியம் வைத் திருப்பவர்களிடம் எடுத்துச் சொல்லி, கொள்முதல் திட்டம் வெற்றிகரமாக நடைபெற மக்களுடைய ஒத்துழைப்பைத் தேடித் தர வேண்டும். எங்காவது அதிகாரிகள் தவறாக நடந்தால், நீங்களே அவர்களைக் கண்டிக்கலாம். இந்த மன்றத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அந்த அதிகாரம் இருக்கிறது. இந்த மன்றத் தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் எந்த அதிகாரியும் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள். நானேதான் அதிகாரிகளைக் கேட்க வேண்டுமென்று கருதாமல் திரு. கருத்திருமனைப் போன்ற வர்கள் அதிகாரிகளுக்கு யோசனைகூட சொல்லலாம். அவருக்குத் தெரியாத அதிகாரி யார் இருக்கப் போகிறார்கள்? 20 வருஷப் பழக்கம் ஆயிற்றே? எனக்குக்கூட 20 நாள் பழக்கம்தான். எத்தனையோ அதிகாரிகள் அவருடைய சிபாரிசைப் பெற்று அந்த நிலைக்கு வந்திருக்கக்கூடும். ஆர்க்காட்டிலிருந்து ஆரணிக்கும், அந்த ஆரணியிலிருந்து வேலூருக்கும் என்று வந்திருக்கக்கூடும். அந்த அனுபவம் எனக்குக்கூட இல்லை. எந்த அதிகாரி தவறாக நடந்து கொண்டாலும் நிச்சயமாக இந்த சர்க்கார் தயவுதாட்சண்யம் காட்டாது—கண்டிப்பான நடவடிக்கையை எடுத்துக்கொள்ளும். அதேசமயம் கொள்முதல் கட்டாயம் தேவை என்பதை வலியுறுத்தி நீங்களும் பிரசாரம் செய்ய வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்குக்கூட ஒவ்வொரு சமயம், நான் அடைய முடியாததைக் கேட்கிறேனோ என்று ஒருவித மயக்கம்கூட ஏற்படுகிறது.

என்றாலும், இந்த அவையிலுள்ள காங்கிரஸ் உறுப்பினர்கள் அவர்களுக்கு என்னிடத்திலும் சர்க்காரிடத்திலும் இருக்கிற நல்லெண்ணத்தை ஓரளவு அறிந்துகொள்ள முடிந்ததால், நான் கேட்டுக்கொள்கிறேன், வெளியில் உள்ளவர்கள் தங்களுடைய தேவைக்குப் போக மீதம் உள்ள தானியத்தை இந்த நெருக்கடியான நேரத்தில் கொள்முதலுக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்பதை அவர்கள் வலியுறுத்த வேண்டும். நேற்றைய தினம் வேலூருக்குச் சென்றிருந்தேன். என்னிடத்தில் ஒரு கடிதம் எழுதி விண்ணப்பமாகக் கொடுத்திருக்கிறார்கள். அதில் தங்களிடம் இரண்டாயிரம் அரிசி மூட்டைகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டு அந்த அரிசியை சர்க்கார் நிர்ணயித்த விலைக்கே வாணியம்பாடியில் விற்பதற்கு அனுமதி கோரியிருக்கிறார்கள். அந்த வியாபாரிகளின் கையில் இருக்கக்கூடிய அந்த அரிசி சர்க்கார் கணக்கிற்கு வரவில்லை. வீட்டில் புகுந்து எடுக்கிறார்களே என்ற நிலை வந்த பிறகுதான் அவர்கள் தாமாகவே இந்தத் தகவலை என்னிடம் கொடுக்க முன்வந்துள்ளார்கள். "சர்க்கார் நிர்ணயித்திருக்கிற விலையில் வாணியம்பாடியிலேயே இதை விற்றுக்கொள்ள அனுமதி கொடுங்கள்" என்று என்னைக் கேட்டார்கள். "இப்படி விற்றுக்கொள்ள அவர்களுக்கு அனுமதி கொடுத்தால் என்ன?" என்று அதிகாரிகளைக் கேட்டேன். அதிகாரிகள், "நாம் வாணியம்பாடிக்கு குடும்பக் கார்டு முறையில் அரிசி வழங்க பொறுப்பு ஏற்றுக்கொள்ளவில்லை. குடியாத்தத்திற்கு ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இந்த இரண்டாயிரம் மூட்டைகளையும் குடியாத்தத்திற்கு அனுப்பி, அங்கு விற்கலாம்" என்றார்கள். இதை அந்த வியாபாரிகளிடம் சொன்னதற்கு, "குடியாத்தத்திற்குக் கொண்டுபோனால் எங்களுக்கு எடை குறையுமோ!" என்றார்கள். எப்படி எடைகுறையும்? இங்கே எடை குறையாமல் இருக்க என்ன ரகசியத்தைக் கையாளுகிறார்கள் என்பதைத்தான் நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். நான்கூடச் சொல்லிப் பார்த்தேன். "அங்கே கொண்டுபோய், இருக்கிற அளவுக்குப் பணம் வாங்கிக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஏற்படுகிற நஷ்டத்தைப் பாதி பாதியாக ஒத்துக்கொள்ளலாமே" என்று சொன்னேன். அவர்கள் 'முடியாது' என்றார்கள். இதுதான் இங்குள்ள வியாபாரிகளின் மனப்போக்கு. நீங்கள் என்னைப் பார்த்துப் பக்குவமாக நடந்துகொள்ளுங்கள் என்று சொல்கிறீர்கள். நான் எப்போதுமே பக்குவத்திற்குப் பெயர்போனவன். முரட்டுத்தனமாக நடந்துகொள்வேன் என்று நினைக்காதீர்கள். இன்றைக்கு அரிசி இருக்கிறது; விவசாயிகள் தங்கள் அரிசியை வெளியில்விட மனம் அற்றவர்களாக இருக்கிறார்கள். காரணம், நாம் நிர்ணயித்திருக்கிற விலை போதவில்லை என்பது அவர்களுடைய மனக்குறை. வியாபாரிகளிடத்தில் அரிசி இருக்கிறது. அது வெளிவராமல் இருப்பதற்குக் காரணம், இன்றுள்ள விலையைகூட இன்னும் அதிக விலைக்கு கொஞ்சம் நாள் போனால் விற்கலாமே? அதனால் தங்களுக்கு அதிக லாபம் கிடைக்காதா? என்ற எண்ணம். எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது நான் காந்திய வழியில் வந்தவன் என்று சொன்னார். ஆசையை அடக்கு என்று தான் காந்தியார் சொன்னார். ஆசையை அடக்குங்கள் என்று வியாபாரிகளுக்கு நீங்கள் சொல்ல வேண்டும்.



நாட்டு மக்கள் ஒருவேளைச் சோற்றுக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது, நாமும் ஆசையை அடக்கிக் கொள்ள வேண்டும். ஒரு ரூபாய் கிடைத்தால் போதும், இரண்டு ரூபாய் கிடைத்தால் போதும் என்று நம்முடைய ஆசையை அடக்கிக்கொள்ள வேண்டும். சில வருஷங்களுக்கு முன், கோணி கிடைத்தால் போதும் என்று வியாபாரிகள் சுற்றிக்கொண்டிருந்தார்கள். லாபம் கிடைக்கக் கிடைக்க மேலும் அதைப் பெற வேண்டுமென்று நினைப்பதுதான் இயல்பு. பொருளாதார நூலின் அடிப்படையே, Wants areunlimited in number தேவை என்பதற்குக் கணக்கே கிடையாது. 30 ரூபாய், 32 ரூபாய் என்று அன்றைய தினம் ஒரு மூட்டை நெல்லுக்கு விலை நிர்ணயித்தபோது தமிழ்நாட்டு மிராசுதார்கள் சர்க்காருக்கு நன்றி சொன்னார்கள். 'இது நியாயமான விலை; இந்த விலை கொடுத்தால், நாங்கள் ஏன் பதுக்கப்போகிறோம்' என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு 'இது மிகக் குறைவாக இருக்கிறது; கட்டுப்படியாகவில்லை' என்றெல்லாம் சொல்லுகிறார்கள். என்ன விலை நிர்ணயிக்க வேண்டுமென்று நான் கேட்டபோதுகூட, எதிர்க் கட்சித் தலைவர் அதை நான் பின்னாலே சொல்கிறேன் என்று ஜாக்கிரதையாகச் சொல்லிவிட்டார். அதிகப் பணம் விவசாயிகளுக்குக் கொடுப்பதால்கூட கெடுதல் இல்லை. அவர்களிடத்தில் கொடுக்கிற பணம் திரும்பவும் கடைவீதிக்குத்தான் வரும், அதனால் தொழில்கள் வளரும். பல தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். நல்ல பணம் கிடைத்தால் ஒரு விவசாயி தன்னுடைய மகனுக்கு ஒரு சைகிள் வாங்கிக் கொடுப்பான். தனக்கு ஒரு கார் வாங்கிக் கொள்வான். அவனிடத்திலுள்ள பணம் இப்படிக் கடைவீதிக்கு வந்து பல தொழில்கள் வளருவதற்குக் கூட உதவியாக இருக்கும். ஆனால், விவசாயிகளிடத்தில்கூட இன்றைக்கு அந்தப் பணம் போகவில்லை--நடுவிலேயே நின்றுவிடுகிறது. நடுவில் உள்ளவர் லாபகரமாக அந்தப் பணத்தை சேர்த்துக்கொண்டு 6 லட்சத்திலே வீடு கட்டுகிறார். அதைக் கணக்கில் காட்டாமல் இருக்க 6 லட்சத்திலே வீட்டைக் கட்டி, 67 ஆயிரம் ரூபாயில் வீடு கட்டியதாக எழுதிக் கொடுத்திருப்பது இங்குள்ள உறுப்பினர்களுக்குத் தெரியாதா? இவர்களுடைய ஆட்சியில் தானே கணக்கில் வராத பணம் என்று ஒரு இனமே ஏற்பட்டது. இப்படிக் கணக்கில் வராத பணத்திற்கு இந்த லாபம் போகிறதே தவிர, விவசாயிகளிடத்தில் சென்றால் என்னைப்பொறுத்த வரையில் அதை வரவேற்பேன். விவசாயிகளுடைய நிலைமையை உயர்த்த வேண்டுமென்பதில் எனக்கு கருத்து வேறுபாடு இல்லை. விவசாயிகளை உயர்த்த வேண்டுமென்பதற்காகவே கொள்முதல் இருக்கிறது. ஆகவே, விவசாய மக்கள் கொள்முதல் திட்டத்திற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்லி, அதன்மூலம் தான் நாட்டுக்குச் சுபிட்சம் கிடைக்கும் என்று எடுத்துச் சொல்லி இந்தத் திட்டம் வெற்றிபெறும்படியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றபடி வேறு பல கருத்துக்கள் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டன. நேரம் இல்லாத காரணத்தினால் அவை எல்லாவற்றையும் பற்றி நான் பேசுவதாக இல்லை. மேலும் திருப்பித் திருப்பி

பேசி, என்னுடைய நண்பர்களாகிய நீங்கள், "இந்த ஒரு கருத்தை எடுத்துச் சொல்லாமல் இருந்திருந்தால் நன்ருக இருக்கும்" என என்னிடம் மனத்தாங்கல் கொள்ளாதிருக்க நான் அதிகம் பேச விரும்பவில்லை. உங்களுடைய ஒத்துழைப்பைப் பெரிதும் விரும்புகிறேன். பல உறுப்பினர்கள் எங்களிடம் சொன்னதுபோல, "ராஜாஜி அவர்கள் ஒரு புளியமரம். அவருடைய நிழலடியில் நீங்கள் வளர முடியாது" என்று சொன்னதைப் பொய்யாக்கி, "அவர் புளிய மரமும் அல்ல; நாங்கள் பூ, காய் கனியென வளர்வதற்கு தனிச் சக்தி பெற்றவர்கள்" ஆக புளிய மரமும் இல்லை, எந்த நிழலும் இல்லை. இத்தகைய தவருன வாதத்தையே பேசிக்கொண்டிராமல், உங்களுடைய ஒத்துழைப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திரு. சுப்பிரமணியம் அவர்களைச் சந்தித்தபோதுகூட அவருடைய ஒத்துழைப்பைக் கோரினேன். பிரஜா சோஷலிஸ்ட் உறுப்பினர் வெளியூரிலிருந்தே எனக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டார்? "நீங்கள் ஏன் அவருடைய யோசனையைக் கேட்க வேண்டும்?" என்று. நான் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியினுடைய யோசனையையும் கேட்கிறேன். "அவர்களிடம் யோசனை கேட்காதீர்கள்; உங்களைத் தவருன வழியில் தள்ளிவிடுவார்கள்" என்று சிலர் சொல்கிருர்கள். அனுபவத்திஞல் அவர்கள் அப்படிச் சொல்கிருர்களோ, அறியாததனுல் சொல்கிருர்களோ, நான் எப்போதுமே எனது நண்பர்களைப் பரிபூரணமாக நம்புகிறவன். இடதுசாரி கம்யூனிஸ்டுகளையும் பரிபூரணமாக நம்புகிறேன். காங்கிரஸ் தலைவருடைய யோசனையையும் கேட்கிறேன். இரண்டு மூன்று தினங்களுக்கு முன் திரு. காமராஜ் அவர்களை நான் சந்தித்துப் பேசியது திரு. கருத்திருமன் அவர்களுக்கும் தெரியும். "எப்படி இருக்கிறது?" என்று அவர் கேட்டார். "கொஞ்சம் சங்கடமாக இருக்கிறது" என்று நானும் சொன்னேன். "தைரியமாக நடத்திச் செல்லுங்கள், எங்கள் ஒத்துழைப்புக் கிடைக்கும்" என்று திரு. காமராஜ் சொன்ஞர். இப்படி மேலே எல்லாம் சரியாக இருக்கிறது. எதுவுமே மேலே சரியாக இருக்கும். கீழே வரவரத்தான் குறைந்துவிடும். தயிரைக் கடைந்தால் வெண்ணெய் மேலே மிதந்து வருகிறது. வெண்ணெயை எடுத்துவிட்டு, அந்த மோரைச் சிறிது ஆற்றிஞல் நுரை வரும். இப்படி மேல் மட்டத்திலே எல்லாம் சரியாக இருக்கிறது. கீழே உள்ளவர்களுக்கும் நாம்தான் எடுத்துச் சொல்ல வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில புகார்களை இங்கே எடுத்துச் சொன்ஞர்கள். அவரிடம் உள்ள ஃபைலை என்னிடம் கொடுத்து விடட்டும். என்னிடம் உள்ள ஃபைலை அவரிடம் கொடுத்து விடுகிறேன். அவரிடமிருந்து வந்த ஃபைலை நான் படித்துப் பார்க்கிறேன். அவரும் நான் கொடுத்த பெரிய ஃபைலை படித்துப் பார்க்கட்டும். அப்படி ஃபைலைக் கொடுக்கிறபோது சில விவரங்களை அதிலிருந்து அவர்கள் எடுக்க வேண்டிய நிலை ஏற்படும். தனித் தனியாக நாங்கள் தீர்ப்புக் கொடுக்கிறபோது உண்மையை உணர்ந்து கொள்ளலாம். ஆதார





மில்லாத பொய்ப் புகார்கள் பல வருகின்றன. நாம் இன்றைக்கு ஒன்றுபட்டு அரசியல் மாச்சரியங்களை மறந்து பணியாற்றியாக வேண்டும். அப்போதுதான் ஒன்றுபட்ட ஜனநாயகக் கருத்து வளர்க்கப்படும். தமிழ்நாடுதான் மற்ற ராஜ்யங்களுக்கு வழி காட்டக்கூடிய நிலையில் செயல்பட்டாக வேண்டும்.

நண்பர் விஞயகம் அவர்கள் பேசியபோது சொன்ஞர்கள். ஷேக்ஸ்பியர் நாடகத்திலிருந்து மேற்கோள் காட்டினர் என்று நினைக்கிறேன். காலேஜில் ஷேக்ஸ்பியர் நாடகத்தில் நடித்திருப்பார் போல் தெரிகிறது. (சிரிப்பு). நாங்கள் 6-ம் தேதிதான் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டிருக்கிருேம். அவர் உங்கள் பேசும்போது, "Your days are numbered". காலம் முடியப்போகிறது—என்று குறிப்பிட்டார்கள். இது ஒத்துழைப்புக்கு அடையாளம் அல்ல. அதைக் கேட்கும்போது எங்களுக்கு என்ன தோன்றும்? 'இருக்கப் போவதோ கொஞ்ச நாளைக்குத்தான். அதற்குள் நமக்குத் திருப்தி தரக்கூடிய காரியங்களைச் செய்துகொண்டுவிடவேண்டும்' என்ற நினைப்புத் தோன்றலாம். திருப்திப்படுத்தக்கூடிய காரியங்கள் எது? நம்மைக் கொடுமை செய்தவர்களைக் கொஞ்சம் பதம் பார்க்கலாமா?' என்றுதான் தோன்றும். அப்படிக் கருதுகிறவன் நான் அல்ல. சர்க்கார் நிர்வாகம் நிரந்தரமானது. இன்று நான் இருக்கலாம்—நாளை மற்ருெருவர் வரலாம். நியாயப் பண்பை விட்டுவிட்டு நிர்வாகம் நடக்கக்கூடாது. என்னைப் பொறுத்தவரை, பகையற்று, கட்சி உணர்ச்சியற்று, கட்சி மாச்சரியமற்று, இங்கே இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அந்தப் பண்பு தமிழ்நாட்டுக்கு எத்தனை காலம் தேவையோ, அத்தனை காலம் என்னை வைத்திருங்கள். அந்தப் பண்பு வேண்டாமென்று எப்பொழுது நினைக்கிறீர்களோ அப்பொழுது என்னை அகற்றிவிட்டு யாரையாவது வைத்துக் கொள்ளுங்கள்—நண்பர் விஞயகம் இருக்கிருர்; நண்பர் கருத்திருமன் இருக்கிருர்; யாரை வேண்டுமாஞலும் வைத்துக் கொள்ளுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் என்னை நன்ருக அறிந்தவர்கள். இந்தப் பத்து நாட்களுக்குள்ளேயே எனக்கு இந்தப் பொறுப்பு சலித்துப்போய்விட்டது. இங்கே இருந்து சாதிக்கக் கூடியதைவிட அங்கேயிருந்து நான் சாதிக்கக் கூடியது மிக அதிகமாக இருக்கும் என்பது அவருக்குத் தெரியும். நான் ஏதோ மகிழ்ச்சியில் இருப்பதாக எண்ணிக்கொண்டு, "Your days are numbered" என்று விஞயகம் சொன்ஞர். நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். "My steps are measured" அடிக்கு அடி நான் அளவு எடுத்து காலெடுத்து வைக்கிறேன். என்ஞல் காலெடுத்து வைக்க முடியவில்லை யென்ருல், கைதட்டி வலிவு உள்ளவர்களைக் கூப்பிட்டு 'என்ஞல் இனி மேலே செல்ல முடியாது. நீங்கள் பொறுப்பை எடுத்துக்கொள்ளுங்கள். கணக்கைப் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று பொறுப்பைக் கொடுத்துவிட்டுப் போய்விடுவேன். என்னைப் பார்த்து திரு. விஞயகம் அவர்கள் "Your days are numbered" என்று சொன்ஞல்—எனக்கு வருத்தம் அல்ல—பத்திரிகையில்

அந்தச் செய்தி வந்தால், வெளியில் உள்ளவர்கள் உங்களைப்பற்றி
என்ன சொல்வார்கள் என்று எண்ணிப்பாருங்கள். நண்பர்
கருத்திருமன் அவர்கள் நிறையக் கதைகளைச் சொன்னார்கள்.
நானும்கூட ஒரே ஒரு கதையைச் சொல்லி முடித்துக்கொள்
கிறேன். ரொம்ப நாள் குழந்தை ஒன்று பேசாமல் இருந்தது.
ஒரு சோதிடனை அழைத்துக் கேட்டார்கள். இந்த நாளில், இந்தக்
குழந்தை பேசும் என்று அந்தச் சோதிடன் சொன்னான். அந்த
நாளில் அந்தக் குழந்தையைச் சுற்றி, அதன் தாயும் தகப்பனும்,
அத்தையும் உட்கார்ந்து கொண்டு குழந்தை பேசாதா என்று
பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நாழிகை பிறந்தது.
குழந்தையும் வாயைத் திறந்தது. அது என்ன பேசப் போகிறது
என்று தாய் ஆவலோடு கேட்கிறாள். முதல்தடவையாக, வாயைத்
திறந்து அந்தக் குழந்தை பேச ஆரம்பித்தது. "அம்மா, அத்தை
கழுத்து மாதிரி உன் கழுத்து எப்போது இருக்கும்?"
என்று எடுத்த உடனே கேட்டது. அத்தை கழுத்து என்றால்,
அத்தை விதவை. அது போல் ஆகவேண்டும் என்று சொல்லியதாம்
பேசாமல் இருந்த குழந்தை பேசியபொழுது. இந்தக் குழந்தை
'டேஸ் ஆர் நம்பர்டு' என்று சொல்லியிருக்கிறது. அவர்கள்
சொல்லிய கருத்திலே குற்றம் இருக்காது என்று நினைக்கிறேன்.
ஆனால், அப்படிப் பேசியது குழந்தைத்தனமாகப் பேசியிருக்
கிறார்கள் என்ற முறையிலே தெரிவித்துக்கொண்டு இதுவரை
கருத்தளித்த எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு
உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் பர்சனல்
எக்ஸ்ப்ளனேஷன் சார், முதலமைச்சர் அவர்கள் நான் பேசியதிலே
ஒரு வார்த்தை மட்டும் எடுத்துச் சொன்னார்கள். அதோடு
தொக்கியிருக்கிற வார்த்தையையும் சேர்த்துச் சொல்லியிருந்தால்
நன்றாக இருக்கும். சட்டசபை நடவடிக்கைகளிலே கூட பார்த்
தால், நான் பேசியிருப்பது தெரியும். அதையொட்டி
இரண்டையும் சேர்த்து அவர்கள் சொல்லியிருந்தால் நன்றாக
இருக்கும். நான் சொல்லியது என்னவென்றால், 'If they are
incapable of delivering the goods to the people, then their days
are numbered'. நாட்டுக்கு நன்மை செய்தால் ஒன்றும் தொல்லை
யில்லை, இல்லாவிட்டால் தான் அப்படி இருக்கும்--என்று சொன்
னேன். ஆகையினால் இரண்டையும் சேர்த்துத்தான் சொல்ல
வேண்டும்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** ஆங்கில
இலக்கணம் நண்பர் அவர்களுக்குத் தெரியும். ஆங்கிலத்திலே 'if'
and 'but' என்று போட்டாலே அதை அடிப்படைப் பேச்சாக
எடுத்துக்கொள்ள முடியாது. அதோடு நான் இன்னும் ஒன்று
சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன். முன்பு இருந்த கொள்முதல்
கெடுபிடியை நீக்குவதற்காகத்தான் இரண்டு மூன்று நடவடிக்
கைகள் எடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. ஒன்று, 1, 2





ஏக்கர் நிலம் வைத்திருக்கின்றவர்களிடம் கொள்முதல் செய்ய
வேண்டாம் என்பது. இரண்டு, அதிகாரிகள் மரியாதையோடு
நடந்துகொள்ளவேண்டுமென்று கடுமையான உத்திரவு போடப்
பட்டிருப்பது. மூன்று, எந்தவிதமான முன் அறிவிப்பும் கொடுக்
காமல் நெல்லையோ அரிசியையோ கொடுக்கவேண்டுமென்று
நாங்கள் நுழைந்து எடுத்துக் கொள்வதற்கு முன்பாகவே அவர்க
ளாக வந்து கொடுக்கலாம் என்பது. அதை அக்கிரமம் என்று
மக்கள் கருதக்கூடாத அளவுக்கு, அவர்கள் தங்கள் தேவைக்குப்
போக, அவர்களுக்கு எவ்வளவு வந்திருக்கிறது, எவ்வளவு
தேவைக்கு வேண்டும், என்று பார்த்து மீதியிருப்பதை அவர்
களாகக் கொடுக்க முன்வரவேண்டும் என்ற வகையிலேதான்
அதற்கு காலம் கொடுக்க விரும்புகிறேன். கொள்முதல் நடை
பெற்றுக்கொண்டே இருந்தாலும் அதற்கிடையிலே சர்க்காரு
டைய நோக்கம் அக்கிரமம் நடத்தி கொள்முதலைக் கடின
பாக்குவது அல்ல. யாரிடத்திலும் நெல்லாவது அரிசியாவது
இருந்தாலும், அவர்களுடைய குடும்பச் செலவிற்குப்போக,
விவசாயக் கூலி அளவு போக, விதை நெல் தேவைக்கு மேல்
இருப்பதை கொடுக்கக்கூடிய முறையிலேதான் அதை அறிவிப்
பதற்கான காலம் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள்.
அந்தக் காலம் தமிழ் வருஷப் பிறப்பு வரை, அதாவது ஏப்ரல் 14
தேதி வரை காலம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். உணவு
தானியத்தை வைத்துக்கொண்டிருப்பவர்களிடம் நண்பர்கள்
எல்லோரும் எடுத்துச் சொல்லி அவர்களுடைய தேவைக்குப்
போக மிச்சம் இருப்பதை அவர்கள் கொடுக்கிறோம் என்று
அறிவிப்பார்களானால் அதுதான் உண்மையான தமிழ் வருஷப்
பிறப்பு—தமிழனுடைய வருஷப் பிறப்பு--ஆகும். 14-ஆம் தேதி
வரை காலம் இருக்கிறது, அதையும் நம்முடைய நண்பர்கள் மக்க
ளிடம் எடுத்துச் சொல்லவேண்டுமென்று அதற்கு அவர்கள் துணை
செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** கவர்னர் அவர்களின் உரை
மீது விவாதம் முடிந்து விட்டது. ஏனைய நிகழ்ச்சிகளை நடத்து
வதற்கு அவை அனுமதியளிக்குமென்று கருதுகிறேன்.

அடுத்ததாக, திரு. எம். எஸ். மணி அவர்களுடைய நன்றி
அறிவிப்புத் தீர்மானத்தின்மீது வாக்களிக்கவேண்டும். அதற்கு
மூன் திருத்தத் தீர்மானங்கள் இருக்கின்றன. முதலிலே திரு.
டி. எம். நல்லசாமி அவர்களுடைய தீர்மானம். அவர் வற்புறுத்து
கிறார்களா என்று கேட்கிறேன்.

**திரு. தோ. மு. நல்லசாமி:** வற்புறுத்தவில்லை.

(திருத்தத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்
பெறப்பட்டது)

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** அடுத்து திருத்தத் தீர்மானங்
கள் கொண்டு வந்த உறுப்பினர்கள்---திரு. ஆ. கு. சுப்பையா, திரு.
ஏ. ஆர். மாரிமுத்து, திரு. வேலுசாமி ஆகிய மூவரும் அவையில்

## உள்ளடக்கம்.


| | பக்கங்கள். |
|---|---|
| (Personnel of the Government of Madras) .. .. | i |
| தமிழக அரசின் கவர்னரும், அமைச்சரவையும் .. .. | ii, iii |
| தமிழகச் சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. | iv |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழகச் சட்டப் பேரவை உறுப்பினர்களின் (ஆங்கில அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல் .. .. .. .. .. .. | v–x |
| I உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல் | 1–9 |
| II பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.. .. .. | 9–24 |

## PERSONNEL OF THE GOVERNMENT OF MADRAS

(As on 15th March 1967)

### Governor of Madras.

SARDAR UJJAL SINGH

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. THE HON. THIRU C. N. ANNADURAI, *Chief Minister, in-charge of Public, General Administration, Finance, Planning, Police, Elections, Prohibition, Indians Overseas, Refugees and Evacuees.*

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN, *Minister-in-charge of Education (including Technical Education), Official Language, Industries, Textiles, Yarn, Handlooms, Mines and Minerals, Iron and Steel Control, Electricity, Labour, Companies, Religious Endowments and Legislature.*

3. THE HON. THIRU M. KARUNANIDHI, *Minister in-charge of Public Works, Minor Irrigation including S.M.I.P. Works, Housing, Highways, Transport, Nationalised Transport and Ports.*

4. THE HON. THIRU K. A. MATHIALAGAN, *Minister in-charge of Food, Revenue, Board of Revenue, District Revenue Establishments and Commercial Taxes.*

5. THE HON. THIRU A. GOVINDASAMY, *Minister in-charge of Agriculture, Animal Husbandry, Fisheries, Forests and Cinchona.*

6. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU, *Minister in-charge of Harijan Welfare, Information and Publicity, Stationery and Printing, Government Press, Cinematograph Act, Women's and Children's Welfare.*

7. THE HON. THIRU S. MADHAVAN, *Minister in-charge of Law, Co-operation, Courts, Prisons, Registration, Approved Schools and Vigilance Services, Passports, Legislation on Chits, Legislation on Money Lending (Rural Indebtedness) and Legislation on Weights and Measures.*

8. THE HON. THIRU SADIQ PASHA, *Minister in-charge of Public Health, Medicines, Accommodation Control, Orphanages, Beggars, Newsprint Control, Wakf, Prices and Supplies of Goods Act.*

9. THE HON. THIRU M. MUTHUSAMY, *Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Bhoodan and Gramdan, Khadi and Village Industries and Ex-servicemen.*

[பேரவைத் தலைவர்] [1967, மார்ச் 30

இல்லாதலால் விதிகளின்படி திருத்தத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

இப்பொழுது முழுமுதற் தீர்மானம்—திரு. எம். எஸ். மணி அவர்களுடைய தீர்மானம். அதாவது, '1967-ஆம் ஆண்டு, மார்ச்சு திங்கள், 17-ஆம் நாளன்று இரண்டு அவைகளும் சேர்ந்த சட்ட மன்றக் கூட்டத்தில் கவர்னர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு, தமிழ் நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** அடுத்து அறிவிப்புகள். மேலவைத் தலைவரிடமிருந்து கிடைத்துள்ள செய்திகளைப்பற்றி மூன்று அறிவிப்புகள் உள்ளன.

**(இ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள்.**

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவும்—அதாவது 1 இலக்கமிட்ட பேரவை மசோதாவும்—1967-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவும் மதாவது 4 என்ற இலக்கமிட்ட மசோதாவும்—28-3-1967 அன்று எவ்வித மாறுதலும் இல்லாமல் மேலவையில் நிறைவேற்றப்பட்டன என்றும் 1967-ம் ஆண்டு பேரவை—(தகுதியின்மை நீக்கல்) மசோதா—அதாவது 3 என்ற இலக்கமிட்ட பேரவை மசோதா—20-3-1967 அன்று எவ்வித திருத்தமும் இல்லாமல் நிறைவேற்றப்பட்டது என்றும் மேலவையின் தலைவரிடமிருந்து செய்திகள் வந்துள்ளன.

**(உ) பொதுக் கணக்குக் குழுவிற்கு மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல்.**

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** 1967-68-ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்கு ஆய்வுக் குழுவுக்கு பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி—உறுப்பினர்களாகக் கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள செய்தி கிடைத்திருக்கிறது:—

1. திரு. என். ஆர். தியாகராஜன்
2. திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர்
3. திரு. எஸ். ராஜமார்த்தாண்டன்
4. திரு. என். வி. நடராசன்
5. திரு. ஏ. ஆர். தாமோதரன்



1967, மார்ச் 30]

**(எ) மதிப்பீட்டுக் குழுவிற்கு மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல்.**

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** 1967-68-ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவுக்கு—எஸ்டிமேட் கமிட்டி—கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்களை நியமித்துள்ளதாக மேலவையின் தலைவரிடமிருந்து செய்தி கிடைத்துள்ளது.

1. திரு. கே. ராமதாஸ்
2. திரு. எம். அய்யாசாமி
3. திருமதி சரசுவதி பாண்டுரங்கம்
4. திரு. சி. பி. சிற்றரசு
5. திரு. டி. சந்தோஷம்

இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. இந்தக் கூட்டத் தொடர் இன்றுடன் முடிவடைகிறது. கடந்த 13 நாட்களாக 4 மசோதாக்கள், வரவுசெலவுத் திட்டம், கடந்த ஒருட்க் கணக்கு மானியக் கோரிக்கைகள், கவர்னர் உரை; இவற்றின்மீது நடந்த விவாதங்களை மிகச் சிறந்த முறையிலும் உயர்ந்த முறையிலும் கண்ணியமிக்க முறையிலும், பிற மாநிலங்கள் பாராட்டத்தக்க முறையிலும் நடத்தியதற்கு, மாண்புமிக்க உறுப்பினர்கள் எல்லோருக்கும் என்னுடைய பாராட்டுக்களை, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பேரவை மீண்டும் கூடுகிற நாள் குறிப்பிடப்படாமல் (சைனி டை) தள்ளிவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், நாள் குறிப்பிடப்படாமல் பேரவை ஒத்தி வைக்கப் பட்டது.

**(7) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

**A. Statutory Rules and Orders.** பிற

*119. *Notification issued with Memo. No.* 30658/P-III/66-5, பகல்.
*L.A., dated the 2nd January* 1967 *making an amendment to the* 1-50
*Madras Panchayats and Panchayat Unions (Preparation of Plans and Estimates, etc.) Rules,* 1963, *published with Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A-*832 *of* 1963, *dated the* 19*th July* 1963, *at page* 850 *of Part V of the* Fort St. George Gazette, *dated the* 28*th August* 1963, *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 179(4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act* XXXV of 1958.)]

**B. Reports, Notifications and Other Papers.**

**Nil.**

---

* Placed on the Table of the House on 29th March 1967.

## தமிழக அரசின் கவர்னரும், அமைச்சரவையும்.

(1967, மார்ச் 15-ம் தேதியன்று உள்ளபடி)

### தமிழகக் கவர்னர்

சர்தார் உஜ்ஜல் சிங்.

---

### அமைச்சரவையினர்

1. மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை (முதல் அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: பொது, பொது நிர்வாகம், நிதி, திட்டமிடுதல், போலீஸ், தேர்தல்கள், மதுவிலக்கு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

2. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (கல்வி, தொழில் அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: கல்வி (தொழிற் கல்வி உட்பட), ஆட்சிமொழி, தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, மின்சாரம், தொழிலாளர், கம்பெனிகள், சமய அறக் கட்டளைகளும் சட்டப் பேரவையும்.

3. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (பொதுப்பணி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: பொதுப்பணிகள், சிறப்புச் சிறு பாசனத் திட்ட வேலைகள் உட்பட சிறு பாசனம், வீட்டு வசதி, நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, துறைமுகங்கள்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (உணவு, வருவாய்த் துறை அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: உணவு, வரி வருவாய், வருவாய்த்துறைக் கழகம், மாவட்ட ரெவின்யூ நிறுவனங்கள், வாணிக வரிகள்.

5. மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி (விவசாய அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்வளம், காடுகள், சிங்கோனா.

6. மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து (அரிசன நல, செய்தி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: அரிசன நலன், செய்தி-விளம்பரத்துறை, எழுதுபொருள் அச்சுத் துறை, அரசாங்க அச்சகம், சினிமாப் படங்கள் சட்டம், மகளிர்-சிறுவர் நலன்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (சட்டம், கூட்டுறவு அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: சட்டம், கூட்டுறவு, நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், பத்திரப் பதிவு, சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், பயண அனுமதிச் சீட்டுகள், சீட்டு நிதிகள் சட்டம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம், எடைகள்-அளவைகள் குறித்த சட்டம்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (சுகாதார அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: பொதுச் சுகாதாரம், மருந்துகள், இடவசதிக் கட்டுப்பாடு, அனாதை இல்லங்கள், இரவலர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, முகம்மதியர் அறக் கட்டளைகள், சரக்குகளின் விலைகள், வழங்கல் குறித்த சட்டம்.

9. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, பஞ்சாயத்துக்கள், பூதான, கிராமதான இயக்கம், கதர், கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள்.

## தமிழகச் சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர் (சபாநாயகர்).

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் *

### துணைப் பேரவைத் தலைவர் (துணைச் சபாநாயகர்).

புலவர் கா. கோவிந்தன் *

### தலைவர்கள் பட்டியல் †

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி
திரு. எம். எஸ். மணி
திரு. தோ. மு. நல்லசாமி
திரு. கரு. சீமைச்சாமி
திரு. வி. கே. கோதண்டராமன்

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### சட்டப் பேரவைத் துணைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. கே. எம். நாகராஜன், பி.ஏ., எல்எல்.பி.
திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்எல்.பி.
திரு. த. இராதாகிருஷ்ணன், அரசாங்க எஸ்டேட் அதிகாரி.
திரு. ஜி. இராகவன்.

* 17-3-1967-ம் தேதியன்று தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.
† 29-3-1967-ம் தேதியன்று நியமனம் செய்யப்பட்டார்கள்.



## தொகுதிகள் உள்ளிட்ட தமிழகச் சட்டப் பேரவை

### உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். .. .. | இராணிப்பேட்டை. |
| 2 | ஆதித்தனார், சி. பா. (பேரவைத்தலைவர்), | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்னிராஜு, எஸ். .. .. .. | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து. ப. .. .. .. | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. .. .. .. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். .. .. .. | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. .. .. .. | கடலாடி. (செ. வ.) |
| 8 | ஆனந்தன், மு. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. .. | ஸ்ரீவில்லிப்புத்தூர். (செ.வ.) |
| 10 | அண்ணாமலை, சி. வி. எம். .. .. | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. .. .. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். .. .. | சோளிங்கபுரம் |
| 13 | அரங்கண்ணல், இராம. .. .. .. | மயிலாப்பூர் (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. .. .. .. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 | அருணாசலம், வி. .. .. .. | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, ஏ.வி.பி. .. .. | எழும்பூர். (சென்னை மாநகரம்). |
| 19 | ஆதிமூலம், டி.எஸ். .. .. .. | சேரன்மகாதேவி. |
| 20 | பாலன், எம்.சி. .. .. .. | நாகர்கோவில். |
| 21 | பாலகிருஷ்ணன், ஏ.கோ. .. .. | வானூர். (செ.வ.) |
| 22 | பலராமன், இல. .. .. .. | கணியம்பாடி. |
| 23 | பாலசுப்ரமணியன், செ. .. .. | பெருந்துறை. |
| 24 | பாலசுப்ரமணியன், எ. .. .. | திண்டுக்கல். |
| 25 | பெல்லி கௌடர், ஜெ. .. .. .. | கூனூர். |
| 26 | பாரதி மோகன், கோ. .. .. .. | குத்தாலம். |
| 27 | பூபதி, எம். .. .. .. .. | கோயம்புத்தூர்-கிழக்கு. |
| 28 | பூவராகன், கோ. .. .. .. | விருத்தாசலம். |
| 29 | போஜன், கே. .. .. .. .. | உதகமண்டலம். |
| 30 | சீமைச்சாமி, கரு. .. .. | மானாமதுரை. |
| 31 | சிதம்பரம் பிள்ளை, இ.அ. .. .. | தென்காசி. |
| 32 | சிதம்பரநாத நாடார், ஏ. .. .. | கொளச்சல். |
| 33 | சின்னராஜி கவுண்டர், சி. கே .. .. | திருப்பத்தூர். |
| 34 | சின்னசாமி, மு. .. .. .. | ஈரோடு. |
| 35 | சின்னசாமி, வி. .. .. .. | ஏர்க்காடு. (ஆ.வ.ப.) |
| 36 | சித்தன், என். எஸ்.வி. .. .. | திருமங்கலம். |
| 37 | தனுஷ்கோடி, பி.எஸ். .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 38 | தருமலிங்கம், ந. .. .. .. | திருத்துறைப்பூண்டி. |

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |
| 39 | துரைராஜ், சு.ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 40 | துரைபாண்டியன், என். | நாங்குனேரி. |
| 41 | துரைராஜ் ,பி. | சங்கரன்கோவில் (செ.வ.) |
| 42 | துரைசாமி, சு. | திருப்பூர். |
| 43 | துரையரசன், ஆ. | அறந்தாங்கி |
| 44 | எட்மண்ட் பெர்ணண்டோ, ஜி.ஆர். | திருச்செந்தூர். |
| 45 | இளம்வழுதி, இ. ரெ. | கடலூர். |
| 46 | எல்லப்பன், பி.எஸ். | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 47 | கணேசன், எல். | ஒரத்தநாடு. |
| 48 | கணேசன், எஸ். | செம்பனூர் கோவில். |
| 49 | ஜார்ஜ், வ. | பத்மநாபபுரம். |
| 50 | ஞானசம்பந்தன், கே.இரா. | நாகப்பட்டிணம். |
| 51 | கோமதிசங்கர தீட்சிதர், க. | அம்பாசமுத்திரம். |
| 52 | கோபால், எம். | குன்றத்தூர் (செ.வ.) |
| 53 | கோவிந்தன், கே. ஆர். | தாரமங்கலம். |
| 54 | கோவிந்தன், புலவர் கா. (துணைப் பேரவைத் தலைவர்.) | செய்யாறு. |
| 55 | கோவிந்தராசன், சொ. | மதுரை சென்ட்ரல். |
| 56 | கோவிந்தராஜன், சி. | நெல்லிக்குப்பம். |
| 57 | கோவிந்தராசன், வி.எஸ். | புரசவாக்கம். (சென்னை மாநகரம்). |
| 58 | கோவிந்தராசுலு, கே. | கோயம்புத்தூர்-மேற்கு. |
| 59 | கோவிந்தராசன், ஆ. | புவனகிரி. |
| 60 | கோவிந்தசாமி, ஏ. (அமைச்சர்) | முகையூர். |
| 61 | ஹபிபுல்லா பேக் | ஹார்பார் (சென்னை மாநகரம்). |
| 62 | ஹாண்டே, எச்.வி. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்) |
| 63 | இராசரத்தினம், டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 64 | ஜேம்ஸ், ஜே. | திருவட்டார். |
| 65 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. | மதுரை-கிழக்கு. |
| 66 | ஜயராஜ், பி. | நன்னிலம் (செ.வ.) |
| 67 | ஜயராமன், கி. | சேலம்-1. |
| 68 | ஜெயராமன், பி. | பேர்ணாம்பட்டு (செ.வ.) |
| 69 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. | ஜெயங்கொண்டம் (செ.வ.) |
| 70 | கனகசபை, ரா. | சிதம்பரம். |
| 71 | கந்தசாமி கவுண்டர், செ. | அரவக்குறிச்சி. |
| 72 | கந்தசாமி, எம். | குளித்தலை. |
| 73 | கந்தசாமி படையாச்சி, மு. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 74 | கண்ணன், எம்.ஆர். | பேசின் பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 75 | கண்ணப்பன் எம். | இணைத்துக்கடவு. |
| 76 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 77 | கருணாநிதி, மு. (அமைச்சர்) | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |
| 78 | கருப்பையா, ஆ. | கங்கைகொண்டான் (செ.வ.). |
| 79 | கருப்பையா, ஆர். | அரியலூர். |
| 80 | கருத்திருமன், பி.ஜி. | சத்தியமங்கலம். |
| 81 | காசிராமன், நா. | கும்பகோணம். |
| 82 | கேசவலு, தே. | கள்ளக்குறிச்சி. |
| 83 | கிட்டப்பா, என். | மாயூரம். |
| 84 | கோதண்டம், கொ. | மதுராந்தகம். |
| 85 | கோதண்டராமன், வி.கே. | குடியாத்தம் |
| 86 | கோதண்டராமைய்யா, கே. எஸ். | உத்தனப்பள்ளி. |
| 87 | கிருஷ்ணமூர்த்தி, கு. | பழனி (செ.வ.). |
| 88 | கிருஷ்ணமூர்த்தி, சி. | கொடவாசல். |
| 89 | கிருஷ்ணமூர்த்தி, மு. | பேராவூரணி. |
| 90 | கிருஷ்ணன், அ. | மங்களூர் (செ.வ.). |
| 91 | கிருஷ்ணன், இ. ஆர். | சேலம்-2. |
| 92 | கிருட்டிணன், நா. | காஞ்சீபுரம். |
| 93 | கிருஷ்ணசாமி கவுண்டர், ரா. | அவிநாசி. |
| 94 | குமாரசாமி, கே.என். | பல்லடம். |
| 95 | குப்பம்மாள், திருமதி, சு. | போளூர். |
| 96 | மாதவன், செ. (அமைச்சர்) | திருப்பத்தூர். |
| 97 | மகாதேவன், ப. | கன்யாகுமரி. |
| 98 | மலைச்சாமி, பெ. | மேலூர். |
| 99 | மலைக்கண்ணன், வீ. | இளையாங்குடி. |
| 100 | மணி, கே.பி.எஸ். | சீர்காழி. |
| 101 | மணி, எம். எஸ். | திருச்சிராப்பள்ளி-1. |
| 102 | மணி, வி.எஸ்.எஸ். | ஆத்தூர். |
| 103 | மாணிக்கவாசகம், இ.ரா. | தொண்டாமுத்தூர். |
| 104 | மணியன், பி.எஸ். | சோழவந்தான். |
| 105 | மாரிமுத்து, அ. | ஆடுதுறை. |
| 106 | மாரிமுத்து, எ.ஆர். | பட்டுக்கோட்டை. |
| 107 | மாரிமுத்து, மூ. | தலைவாசல் (செ.வ.). |
| 108 | மார்டின், டி. | சாத்தான்குளம். |
| 109 | மருதாசலம், என். | பேரூர் (செ.வ.). |
| 110 | மதியழகன், கே. ஏ. (அமைச்சர்) | ஆயிரம்விளக்கு (சென்னை மாநகரம்). |
| 111 | மெய்யப்பன், சா. | காரைக்குடி. |
| 112 | மேத்தா, எம். | பெரியகுளம். |
| 113 | மூக்கையா தேவர், பி.கே. | உசிலம்பட்டி. |
| 114 | முனுசாமி கௌண்டர், பி.எம். | கிருஷ்ணகிரி. |
| 115 | முனுசாமி, ரா.ரா. | மேல்மலையனூர். |
| 116 | முனியாண்டி, ஏ. | நிலக்கோட்டை (செ.வ). |
| 117 | முனு. ஆதி. | திருப்போரூர். |
| 118 | முருகையன், புலவர் க. | திருவையாறு. |
| 119 | முருகேசன், க. | பாலக்கோடு. |

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 120 | முருகையன், எஸ். | கலசபாக்கம். |
| 121 | முனுசாமி, வெ. | செஞ்சி. |
| 122 | முத்தையா, கே.கே. | கடலூர். |
| 123 | முத்தையா, மு | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 124 | முத்துலிங்கம், எஸ். | வந்தவாசி (செ.வ.). |
| 125 | முத்துசாமி, பா.க.சி. | பெண்ணாகரம். |
| 126 | முத்துசாமி, மா. (அமைச்சர்) | நாமக்கல். |
| 127 | முத்துச்செல்வன், பு. செ. | முசிறி. |
| 128 | நாச்சிமுத்து, நா. | ஒட்டன்சத்திரம். |
| 129 | நாகலிங்கம், பா. | பொன்னேரி (செ.வ.). |
| 130 | நாகசுந்தரம், ஆர். | திருச்சிராப்பள்ளி-2. |
| 131 | நல்லமுத்து, ஆர். | சங்கரி (செ.வ.). |
| 132 | நல்லசிவம், க. ரா. | மொடக்குறிச்சி. |
| 133 | நல்லசாமி, தோ.மு. | கரூர். |
| 134 | நஞ்சன், சி. | கூடலூர் (செ.வ.) |
| 135 | நரசிம்மன், எ.சி. | ஆரணி. |
| 136 | நாராயணன், இரா. | வரகூர். |
| 137 | நடராசன், மு.க.து. | லால்குடி. |
| 138 | நடராசன், ஜி. | காட்பாடி. |
| 139 | நடராசன், ஈ.எம். | அந்தியூர். |
| 140 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர்-அவை முதல்வர்). | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்). |
| 141 | பச்சையப்பன், எஸ்.பி. | சங்கராபுரம். |
| 142 | பழனி, சி. | ஓமலூர் (செ.வ.). |
| 143 | பழனியம்மாள், திருமதி வி.ப. | தாராபுரம் (செ.வ.). |
| 144 | பழனிவேல் ராஜன் | தேனி. |
| 145 | பன்னீர்செல்வம், எம். | ஆம்பூர் (செ.வ.). |
| 146 | பரமசிவ கவுண்டர், பி. என். | பொங்கலூர். |
| 147 | பரமசிவம், எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 148 | பரிசுத்த நாடார், ஏ.ஒய்.எஸ். | தஞ்சாவூர். |
| 149 | பட்டாபி நாயுடு, எ. | காவேரிப்பட்டணம். |
| 150 | பீர் முகமது, ஹாஜி ம.மு. | மேலப்பாளையம். |
| 151 | பெரியசாமி, பெ. | ராசிபுரம். |
| 152 | பெருமாள், எ.ஆர். | கரியாப்பட்டி. |
| 153 | பொன்னம்பலம், புலவர் பொ. | திருமயம். |
| 154 | பொன்னப்ப நாடார், ஆர். | விளவங்கோடு. |
| 155 | பொன்னுமலை, தி. | பனமரத்துப்பட்டி. |
| 156 | ராஜா, ஏ.எம். | பவானி. |
| 157 | ராஜகோபால், க.மு. | உத்திரமேரூர். |
| 158 | ராஜமன்னார், எஸ்.எ. | வாணியம்பாடி. |
| 159 | இராசாங்கம், மா. | கம்பம். |
| 160 | இராசாங்கம், என். | குறிஞ்சிப்பாடி (செ. வ. |
| 161 | ராஜவேலு, டி.எ. | திருச்செங்கோடு. |
| 162 | ராமச்சந்திர துரை, பா. | கந்தர்வக்கோட்டை. |



| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 163 | இராமச்சந்திரன், க.ந. | ஆண்டிமடம். |
| 164 | ராமச்சந்திரன், எம்.ஜி. | பரங்கிமலை. |
| 165 | ராமச்சந்திரன், எஸ். | பண்ருட்டி. |
| 166 | ராமலிங்கம், எஸ். | ஸ்ரீரங்கம் (செ.வ.). |
| 167 | இராமமூர்த்தி, க. | திண்டிவனம். |
| 168 | இராமன், மு. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 169 | ராமன், ஓ.பி. | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 170 | இராமராசன், வ.க. | பவானிசாகர் (செ.வ.). |
| 171 | ராமசாமி, இ. | வால்பாறை (செ.வ.). |
| 172 | ராமசாமி கவுண்டர் கே.எம். | கோபிசெட்டிப்பாளையம். |
| 173 | ராமசாமி நாயுடு, எஸ். | சாத்தூர். |
| 174 | ராமசாமி, எஸ்.ஜே. | அரக்கோணம். |
| 175 | இராசு, ஜே.எஸ். | பெரம்பலூர் (செ.வ.). |
| 176 | இரத்தினசபாபதி, மு. | விளாத்திகுளம். |
| 177 | ரெத்தின தேவர், ரா. | முதுகுளத்தூர். |
| 178 | சாதிக் பாட்சா, எஸ்.ஜே. (அமைச்சர்) | உடுமலைப்பேட்டை. |
| 179 | சகாதேவ கவுண்டர், கே. | தண்டராம்பட்டு. |
| 180 | சாமிநாத கவுண்டர், கே. என். | வெள்ளக்கோயில். |
| 181 | சங்கரய்யா, என். | மதுரை மேற்கு. |
| 182 | சந்தானம், பி. எஸ். | செங்கம் (செ.வ.). |
| 183 | சாரதி, மா. பா. | வேலூர். |
| 184 | சத்தியவாணிமுத்து, டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.). (சென்னை மாநகரம்). |
| 185 | சீனிவாசன், பெ. | விருதுநகர். |
| 186 | செல்லா கவுண்டர், அ. | சேந்தமங்கலம் (ஆ.வா.). |
| 187 | சேனாபதி, அ. | காங்கேயம். |
| 188 | சேதுராமன், சி. | சிவகங்கை. |
| 189 | சண்முகம், மு. | விழுப்புரம். |
| 190 | சண்முகசுந்தரம், அ. ப. | பொள்ளாச்சி. |
| 191 | சண்முகம், வி. எஸ். | விராலிமலை |
| 192 | சிறைமீட்டான், தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 193 | சிவஞானம், ம. பொ. | தியாகராயநகர் (சென்னை மாநகரம்). |
| 194 | சிவபெருமாள், க. ந. | ஆத்தூர். |
| 195 | சிவசாமி, மு. ச. | தூத்துக்குடி. |
| 196 | சிவசுப்ரமணியன், எஸ். | காட்டுமன்னார் கோயில் (செ.வ.). |
| 197 | சோமசுந்தரம், ந. | வலங்கைமான் (செ.வ.). |
| 198 | சௌந்தரபாண்டியன், ந. | ராதாபுரம். |
| 199 | சௌந்தரபாண்டியன், பெ. | இருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 200 | சௌந்தரராஜ மூப்பனார், இரா. | பாபநாசம். |
| 201 | சுந்தரபாரதி, சௌடி எஸ். | அருப்புக்கோட்டை. |
| 202 | சீனிவாசன், சு. | போடிநாயக்கனூர். |
| 203 | சுவாரெஸ், திருமதி எ. | நியமன உறுப்பினர். |
| 204 | சுப்பராஜா, எ.அ. | இராஜபாளையம். |

## உள்ளடக்கம்.


பக்கங்கள்

1. அறிவிப்புகள்—
    (அ) அலுவல் ஆய்வுக்குழு உறுப்பினர்கள் நியமனம் .. 47
    (இ) கவர்னர் பேருரைக்கான நன்றியறிவிப்புத் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொடுத்தல் — .. 132
    (உ) அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானங்கள் .. .. 132–134

2. கவர்னர் பேருரையின் மீது விவாதம் .. .. .. 48–132

3. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. .. 134

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 205 | சுப்பையா, ஆ. கு. | கோட்டூர் (செ.வ.) |
| 206 | சுப்பையா, கே. வி. | ஆலங்குடி. |
| 207 | சுப்பையா முதலியார், ஏ.ஆர். | கடையநல்லூர். |
| 208 | சுப்ரமணியம், ஏ.லெ. | திருநெல்வேலி. |
| 209 | சுப்ரமணிய கவுண்டர், எம். | தர்மபுரி. |
| 210 | சுப்பிரமணியம், இ.எம். | திருக்கோயிலூர். |
| 211 | சுரேந்திரன், எம். | மேட்டூர். |
| 212 | சுவாமிநாத ஒடையார், த. சி. | மன்னார்குடி. |
| 213 | சுவாமிநாதன், வை. | திருவெறும்பூர். |
| 214 | தம்பி நாயக்கர், பா. | வடமதுரை. |
| 215 | தங்கப்பன், டி. | இராமநாதபுரம். |
| 216 | தவமணி தேவர், வி. | சேடப்பட்டி. |
| 217 | தீர்த்தகிரி, ந. | ஹரூர் (செ.வ.) |
| 218 | தீர்த்தகிரி கவுண்டர், தி. | ஊத்தங்கரை. |
| 219 | திம்மராய கவுண்டர், தி. சி. | நாட்ராம்பள்ளி. |
| 220 | திப்பையா, டி.டி.எஸ். | மேட்டுப்பாளையம். |
| 221 | வடிவேலு, எஸ்.கே. | தொட்டியம். |
| 222 | வரதராஜன், என். | வேடசந்தூர். |
| 223 | வேதாசலம், மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 224 | வீராசாமி, ந. | ஆர்க்காடு. |
| 225 | வேலப்பன், சி. வே. | கபிலமலை. |
| 226 | வெள்ளத்துரை, ஏ. | வாசுதேவநல்லூர். |
| 227 | வேலுசாமி, பி. | சிங்காநல்லூர். |
| 228 | வெங்கடாசல தேவர், பெ. | வேதாரண்யம். |
| 229 | வெங்கடசாமி, பி. | ஹோசூர். |
| 230 | வேழவேந்தன், கா. | கும்மிடிப்பூண்டி. |
| 231 | விஜய ரகுநாத தொண்டமான், ஆர். | புதுக்கோட்டை. |
| 232 | விஜயராஜ், தா. | திருவண்ணாமலை. |
| 233 | விநாயகம், கே. | திருத்தணி. |
| 234 | விசுவநாதன், செ. கோ. | செங்கற்பட்டு. |
| 235 | வில்லியம், எம். | இளையூர். |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| தொடர் எண். | பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1 | அண்ணாதுரை, சி. என். (முதலமைச்சர்). |
| 2 | நாராயணசாமி முதலியார், கே. (தலைமை வழக்கறிஞர்). |



# உள்ளடக்கம்.


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல் | 27 |
| 2. | பேரவைத் தலைவர் தேர்தல் | 27–30 |
| 3. | துணைப் பேரவைத் தலைவர் தேர்தல் | 30 |
| 4. | பேரவைத் தலைவருக்கும் துணைப் பேரவைத் தலைவருக்கும் பாராட்டுரைகள் | 30–44 |
| 5. | பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் | 44–45 |

## உள்ளடக்கம்.


| | பக்கம் |
|---|---|
| 1 நீத்தார் நினைவுக் குறிப்பு— | |
| திரு. சண்முக இராஜேஸ்வர சேதுபதி—முன்னாள் உறுப்பினரும் முன்னாள் அமைச்சரும் .. .. | 151 |
| 2 அரசினர் தீர்மானங்கள்— | |
| (அ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல் .. .. .. | 152 |
| (இ) பொதுக் கணக்குக் குழுவிற்கான தேர்தல் .. .. | 153 |
| (உ) உரிமைக் குழுவிற்கான தேர்தல் .. .. .. | 154 |
| (எ) பேரவையினர் வசதிக் குழுவிற்கான தேர்தல்.. .. | 154–155 |
| 3 அறிவிப்புக்கள்— | |
| (அ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல் .. .. .. | 152 |
| (இ) பொதுக் கணக்குக் குழுவிற்கான தேர்தல் .. .. | 153 |
| (உ) உரிமைக் குழுவிற்கான தேர்தல் .. .. .. | 154 |
| (எ) பேரவையினர் வசதிக் குழுவிற்கான தேர்தல் .. | 156 |
| (ஐ) ஒத்திவைப்புத் தீர்மானங்களை அனுமதித்தல் .. | 156 |
| 4 ஒழுங்குப் பிரச்சினை—பேரவையின் முடிவை அறிந்து அறிவிக்கும் முறை .. .. .. .. .. | 155–156 |
| 5 1967–68-ம் ஆண்டு இடைக்கால நிதிநிலை அறிக்கை—பேரவையினமுன் வைத்தல் .. .. .. .. | 157–167 |
| 6 கவர்னர் பேருரையின்மீது விவாதம் (தொடர்ச்சி) .. .. | 167–236 |
| 7 பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. — — | 237 |

## உள்ளடக்கம்

பக்கம்


1 அறிவிப்பு—ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அனுமதித்தல் குறித்த நடைமுறை .. .. .. .. .. 1–2

2 ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

(அ) வருஷநாடு மலைப்பிரதேசத்தில் விவசாயிகள் வெளியேற்றப்படுதல் .. .. .. .. .. 2

(இ) இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றிய கோப்புகள் திடீரென மறைதல் .. .. .. .. 2–3

3 ஒழுங்குப் பிரச்சினைகள்— 3–6

(அ) பத்திரிகையிலிருந்து குறிப்புகள் படித்தல் ..

(இ) பேரவை நடவடிக்கைகளில் "வினா நேரம்" இல்லாமை .. .. .. .. .. .. 6

(உ) உறுப்பினர்கள் அவரவர்க்குரிய இடங்களில் இருந்து பேசுதல் .. .. .. .. .. .. 6–7

4 சொந்த விளக்கம்—வினா நேரம் இல்லாமை குறித்து .. 7

5 1966–67-ம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகள்—பேரவையின்முன் வைத்தல். 7–9

6 1967–68-ம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டம் பொது விவாதம்— 10–89

7 பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்— 90

# உள்ளடக்கம்.

பக்கங்கள்

1. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—
   (அ) கோவை பஞ்சாலைகளில் ஆள்குறைப்பு .. .. 397
   (இ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி உட்கோட்டத்தில் கட்டாய நெல் கொள்முதல் .. .. .. 398
   (உ) கோவை பஞ்சாலைகளில் கதவடைப்பும், தொழிலாளரின் வேலையின்மையும் .. .. .. 398-399

2. அவசர, முக்கியப் பிரச்சினை குறித்து கவன ஈர்ப்பு—
   விலைவாசி ஏற்றம், கள்ளக்கடத்தல், பதுக்கல் ஆகியவற்றைத் தடுத்தல் .. .. .. .. .. 399-403

3. வாக்கெடுப்பு—நடைமுறை விளக்கம் .. .. .. 404

4. ஒழுங்குப் பிரச்சினை—
   சட்டப் பேரவை உறுப்பினர் அல்லாத முதலமைச்சர் நிதி இலாகாப் பொறுப்பை வகித்தல் .. .. 405

5. 1967–68-ம் ஆண்டிற்கான முன் மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—

A. ரெவின்யூக் கணக்கில் செலவு.—
   கோரிக்கை எண் I—நிலவரித் துறை .. .. 406-426
   கோரிக்கை எண் II—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் .. .. .. 427-428
   கோரிக்கை எண் XIII—கல்வி .. .. .. 429-455
   கோரிக்கை எண் XVI—வேளாண்மை .. .. 455-471
   கோரிக்கை எண் III—பொது விற்பனை வரிகளும், ஏனையத் தீர்வைகளும்—நிர்வாகம் .. .. ..
   கோரிக்கை எண் IV—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் .. .. ..
   கோரிக்கை எண் V—பத்திரப் பதிவுத்துறை .. ..
   கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப்பேரவை ..
   கோரிக்கை எண் VII—தேர்தல்கள் .. .. ..
   கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. .. 471-482
   கோரிக்கை எண் IX—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும் .. .. ..
   கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம் .. .. ..
   கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் .. ..
   கோரிக்கை எண் XII—போலீஸ் .. .. ..
   கோரிக்கை எண் XIII—கல்வி .. .. ..
   கோரிக்கை எண் XIV—மருத்துவம் .. .. ..
   கோரிக்கை எண் XV—பொதுச் சுகாதாரம் .. ..
   கோரிக்கை எண் XVI—வேளாண்மை .. ..
   கோரிக்கை எண் XVII—மீனளம் .. .. ..

# உள்ளடக்கம்.


பக்கங்கள்

1 அரசினர் மசோதாக்கள்—

(அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மைகள் தடுப்பு) மசோதா .. .. .. 485–487

(இ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா .. 575

2 1966–67-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் தணை அறிக்கை—பொது விவாதம் .. .. .. .. 487–539, 540–567

3 ஒழுங்குப் பிரச்சினைகள்—

(அ) பேரவையில் பேசும் முறை .. .. .. .. 539

(இ) பேரவையில் பயன்படுத்தக்கூடாத சொற்கள் .. .. 540

4 1966–67-ம் ஆண்டில் மேற்கொண்ட செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு— 567–575

## A. ரெவின்யூக்கணக்கில் செலவு.

| | | |
|---|---|---|
| கோரிக்கை எண் | I—நிலவரித் துறை .. .. | 567–568 |
| கோரிக்கை எண் | II—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் .. .. | 567–568 |
| கோரிக்கை எண் | III—பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் .. | 567–568 |
| கோரிக்கை எண் | V—பத்திரப் பதிவுத் துறை .. | 567–568 |
| கோரிக்கை எண் | VII—தேர்தல்கள் .. .. | 567–568 |
| கோரிக்கை எண் | VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. | 567–568 |
| கோரிக்கை எண் | IX—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் .. .. | 567–568 |
| கோரிக்கை எண் | X—நீதி நிர்வாகம் .. .. | 567–568 |
| கோரிக்கை எண் | XI—சிறைச்சாலைகள் .. .. | 567–568 |
| கோரிக்கை எண் | XII—போலீஸ் .. .. .. | 567–568 |
| கோரிக்கை எண் | XIII—கல்வி .. .. .. | 567–568 |
| கேரரிக்கை எண் | XIV—மருத்துவம் ... .. | 569–570 |
| கோரிக்கை எண் | XV—பொதுச் சுகாதாரம் .. | 569 |
| கோரிக்கை எண் | XVI—வேளாண்மை .. .. | 569 |
| கோரிக்கை எண் | XVII—மீனளம் .. .. .. | 569 |
| கோரிக்கை எண் | XVIII—கால்நடை வளர்ப்பு .. | 569 |
| கோரிக்கை எண் | XIX—கூட்டுறவு .. .. .. | 570 |
| கோரிக்கை எண் | XX—தொழில்கள் .. .. | 570 |
| கோரிக்கை எண் | XXI—சின்கோனா .. .. .. | 571 |
| கோரிக்கை எண் | XXIII—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள முதலியன .. .. | 571 |
| கோரிக்கை எண் | XXIV—தொழிற்சாலைகளும் தொழிலாளர் நலனும் .. | 571 |
| கோரிக்கை எண் | XXV—ஆதிவாசிகள், ஹரிஜனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் .. .. | 571 |

பக்கங்கள்

4 1966-67-ம் ஆண்டில் மேற்கொண்ட செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

A. ரெவின்யூக்கணக்கில் செலவு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் XXVI—பாசனம் .. .. .. 571-572

கோரிக்கை எண் XXVII—பொதுப் பணிகள்—பணிகள்
கோரிக்கை எண் XXVIII—பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும் ..
கோரிக்கை எண் XXIX—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள் .. ..
கோரிக்கை எண் XXX—மோட்டார்ப் போக்குவரத்துத் திட்டங்கள் .. .. } 572-573
கோரிக்கை எண் XXXI—பஞ்சத் தணிப்பு .. ..
கோரிக்கை எண் XXXIII—பல்வகை .. .. ..
கோரிக்கை எண் XXXIV—எழுதுபொருள் அச்சுத்துறை
கோரிக்கை எண் XXXV—காட்டுவளத் துறை .. ..
கோரிக்கை எண் XXXVI—ஏனைய இடப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. ..

B. ரெவின்யூக்கணக்குப் புறம்பான மூலதனச் செலவு.

கோரிக்கை எண் XXXVIII—பொதுச் சுகாதார மூலதனச் செலவு .. .. .. 573-574

கோரிக்கை எண் XLI—தொழில்கள் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு ..
கோரிக்கை எண் XLII—பாசன மூலதனச் செலவு ..
கோரிக்கை எண் XLIII—பொதுப் பணிகள் மூலதனச் செலவுகள் . ..
கோரிக்கை எண் XLVI—ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல் .. .. } 575
கோரிக்கை எண் XLVII—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு .. .. ..

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

கோரிக்கை எண் XLVIII—மாநில அரசாங்கம் வழங்கும் கடன்களும், முன்பணங்களும் .. .. ..

5 அறிவிப்புகள்—
(அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதா .. 575
(இ) பேரவை அலுவல் ஆய்வுக்குழுவின் தீர்மானங்கள் .. 575-576
6 பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 576

உள்ளடக்கம்

பக்கங்கள்

1 கவன ஈர்ப்பு—கோவை பஞ்சாலைகளில் கதவடைப்பு .. 577-579

2 அறிவிப்புகள்— .. 579-580
(அ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல் .. .. .. 580
(இ) பொதுக் கணக்கு ஆய்வுக் குழுவிற்கான தேர்தல் .. 581
(உ) கவர்னர் பேருரைக்கான நன்றி அறிவிப்புத் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் .. .. .. ..

3 ஒழுங்குப் பிரச்சினைகள்—
(அ) சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடக்கும்பொழுது முக்கியமான கொள்கைகள்பற்றி அமைச்சர்கள் வெளியில் அறிக்கைகள் விடுத்தல் .. .. 581-584
596-597
(இ) கவர்னரைப்பற்றி விவாதத்தில் குறிப்பிடுதல் .. 585

4 முதல் அமைச்சரின் அறிக்கை—சட்ட அதிகாரிகள் நியமனம்.

5 அரசினர் தீர்மானம்—சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களைச் சேர்த்தல் .. .. .. 585

6 அரசினர் மசோதாக்கள்—
(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா, 1967 (சட்டப்பேரவை மசோதா 1/1967) .. .. .. .. .. 586-590
(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்க மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா 4/1967) .. .. .. .. .. 590
.. .. .. 590-596

7 கவர்னர் பேருரையின்மீது விவாதம் 597-661

8 பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. 661-662

பக்கங்கள்.

5. 1967–68-ம் ஆண்டிற்கான முன் மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.


. ரெவின்யூக் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் XVIII—கால்நடை வளர்ப்பு ..
கோரிக்கை எண் XIX—கூட்டுறவு .. .. ..
கோரிக்கை எண் XX—தொழில்கள் .. .. ..
கோரிக்கை எண் XXI—சின்கோனு .. .. ..
கோரிக்கை எண் XXII—கதர் .. .. ..
கோரிக்கை எண் XXIII—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன ..
கோரிக்கை எண் XXIV—தொழிற்சாலைகளும், தொழிலாளர் நலனும் ..
கோரிக்கை எண் XXV—ஆதிவாசிகள், அரிஜனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் ..
கோரிக்கை எண் XXVI—பாசனம் .. .. ..
கோரிக்கை எண் XXVII—பொதுப் பணிகள்—பணிகள் .. ..
கோரிக்கை எண் XXVIII—பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும் ..
கோரிக்கை எண் XXIX—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள் ..
கோரிக்கை எண் XXX—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள் .. ..
கோரிக்கை எண் XXXI—பஞ்சத் தணிப்பு .. .. 471–482
கோரிக்கை எண் XXXII—ஓய்வூதியங்கள் .. ..
கோரிக்கை எண் XXXIII—பல்வகை .. ..
கோரிக்கை எண் XXXIV—எழுதுபொருள் - அச்சுத் துறை .. .. ..
கோரிக்கை எண் XXXV—காட்டுவளத் துறை ..
கோரிக்கை எண் XXXVI—ஏனைய இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் ..

B. ரெவின்யூக் கணக்குக்குப் புறம்பான மூலதனச்செலவு—

கோரிக்கை எண் XXXVII—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு .. .. ..
கோரிக்கை எண் XXXVIII—பொதுச் சுகாதார மூலதனச் செலவு ..
கோரிக்கை எண் XXXIX—வேளாண்மை மூலதனச் செலவு .. ..
கோரிக்கை எண் XL—தொழில்கள், பொருளாதார வளர்ச்சிக்கான மூலதனச் செலவு .. .. ..
கோரிக்கை எண் XLI—பாசன மூலதனச் செலவு ..
கோரிக்கை எண் XLII—பொதுப் பணிகள் மூலதனச் செலவுகள் . ..
கோரிக்கை எண் XLIII—மோட்டார்ப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு .. ..




பக்கங்கள்

5. 1967–68-ம் ஆண்டிற்கான முன் மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி


B. ரெவின்யூக் கணக்குக்குப் புறம்பான மூலதனச் செலவுக்கு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் XLIV—காட்டுவள மூலதனச் செலவு .. .. ..
கோரிக்கை எண் XLV—ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல் .. ..
கோரிக்கை எண் XLVI—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு .. .. .. 471–482

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

கோரிக்கை எண் XLVII—மாநில அரசாங்கம் வழங்கும் கடன்களும், முன்பணங்களும் .. ..

6. அரசாங்கத் தீர்மானங்கள்—
(அ) அவை அலுவல் வரிசையில் மாற்றம் .. .. 428–429
(இ) மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு .. 471

7. அறிவிப்பு—
தமிழ்நாடு 1967–ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா .. .. 482

8. அரசாங்க மசோதாக்கள்—
(அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா .. 482
(இ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு மாவட்ட நகராட்சி (திருத்த) மசோதா .. .. .. .. 483

9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 483

## உள்ளடக்கம்


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள், விடைகள் .. .. .. .. .. .. | 663–671 |
| 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்— | |
| (அ) பாலாறு பேசின் விதிகளை அகற்றல் .. .. .. | 671–672 |
| (இ) மின்சாரக் குழு எழுப்பும் கடனுக்காக விவசாயிகள் நிர்ப்பந்திக்கப்படுதல் .. .. .. .. | 672 |
| 3. அறிவிப்புகள்— | |
| (அ) உரிமைக் குழுவிற்கான தேர்தல் .. .. .. | 672–673 |
| (இ) பேரவை உறுப்பினர் வசதிக் குழுவிற்கான தேர்தலும், நியமனமும் .. .. .. .. .. .. | 673–674 |
| (உ) பேரவை விதிமுறைக் குழுவிற்கு நியமனம் .. | 674 |
| 4. அரசினர் மசோதாக்கள்— | |
| (அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 2/1967) .. .. .. .. .. | 674-711 |
| (இ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மை நீக்கல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/1967) .. .. .. .. | 712 |
| 5. கவர்னர் பேருரையின் மீது விவாதம் (தொடர்ச்சி) .. .. | 713–752 |
| 6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. | 752 |

## உள்ளடக்கம்.


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள், விடைகள் ... .. .. .. .. | 753–760<br>761–780 |
| 2. உரிமைப் பிரச்சினை—பேரவைத் தலைவர்மீது மன்றோரம் என்ற குற்றச்சாட்டு .. .. .. .. .. | 760–761 |
| 3. ஒழுங்குப் பிரச்சினை—உறுப்பினர்மீது மற்றோர் உறுப்பினர் உரிமைத் தீர்மானம் .. .. .. .. | 780–782 |
| 4. ஒத்திவைப்புத் தீர்மானம்—சிவகாசியில் நெல் மண்டிகள் கதவடைப்பு .. .. .. .. ... .. | 782 |
| 5. கவன ஈர்ப்பு—சாத்தனூர்த் தலைக்கால்வாய் உடைப்பும், தண்டராம்பட்டு தொகுதியில் பயிர்ப் பாதிப்பும் .. | 782–783 |
| 6. அறிவிப்புகள்— | 783–784 |
| (அ) உள் சட்ட ஆய்வுக் குழுவினர் நியமனம் .. | 841 |
| (இ) மாற்றுத் தலைவர்கள் நியமனம் ... ... .. | |
| 7. கவர்னர் பேருரையின்மீது விவாதம் (தொடர்ச்சி) .. | 784–841<br>841–884 |

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்; விடைகள் .. .. .. .. .. .. | 885–899 |
| 2 ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| உணவுப் பங்கீட்டில் குடும்பக் கார்டு முறை .. .. | 899–900 |
| 3 அரசினர் தீர்மானம்— | |
| 41 (3) விதியைத் தளர்த்துதல் .. .. .. .. | 900 |
| 4 கவன ஈர்ப்பு— | |
| (அ) திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து கடன் தவணை வசூல் ஒத்திவைப்பு .. ... | 900–901 |
| (இ) "மை காப்பி பார்" உணவுச்சாலை கதவடைப்பு .. | 901–903 |
| (உ) பவானி, ஈரோடு தாலுக்காக்களில் விவசாயிகளிடமிருந்து கட்டாயமாக அபிவிருத்தி வரி வசூல் .. | 903–904 |
| 5 அறிவிப்புக்கள்— | |
| (அ) அரசாங்க உறுதிமொழிக் குழுவிற்கான நியமனம் .. | 904 |
| (இ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் .. | 984 |
| (உ) பொதுக் கணக்குக் குழுவிற்கு மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல் .. .. .. .. .. | 984 |
| (எ) மதிப்பீட்டுக் குழுவில் மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல் .. .. .. .. .. .. | 985 |
| 6 கவர்னர் பேருரையின்மீது விவாதம் (தொடர்ச்சி) .. | 905–984 |
| 7 பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. | 985 |

①
N2¹,3 & N16
N67.1,2

தமிழ்நாடு ... 600 008.
B8203

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1 வினாக்கள்; விடைகள் .. .. .. .. .. .. 885–899

2 ஒத்திவைப்புத் தீர்மானம்—
உணவுப் பங்கீட்டில் குடும்பக் கார்டு முறை .. .. 899–900

3 அரசினர் தீர்மானம்—
41 (3) விதியைத் தளர்த்துதல் .. .. .. .. 900

4 கவன ஈர்ப்பு—
(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து கடன் தவணை வசூல் ஒத்திவைப்பு .. ... 900–901
(இ) "மை காப்பி பார்" உணவுச்சாலை கதவடைப்பு .. 901–903
(உ) பவானி, ஈரோடு தாலுக்காக்களில் விவசாயிகளிடமிருந்து கட்டாயமாக அபிவிருத்தி வரி வசூல் .. 903–904

5 அறிவிப்புக்கள்—
(அ) அரசாங்க உறுதிமொழிக் குழுவிற்கான நியமனம் .. 904
(இ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் .. 984
(உ) பொதுக் கணக்குக் குழுவிற்கு மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல் .. .. .. .. .. 984
(எ) மதிப்பீட்டுக் குழுவில் மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல் .. .. .. .. .. .. 985

6 கவர்னர் பேருரையின்மீது விவாதம் (தொடர்ச்சி) .. 905–984

7 பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. 985

①
N27,3 & N67
N67.1,2
தமிழ்நாடு
600 008.